www.padippakam.com

# பெரியார்
# ஈ.வெ.ரா. சிந்தனைகள்

## THOGHTS OF PERIYAR E.V.R.

## 3

பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
நெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி–2
1.07.1974

Nadarajah Straube
Brunsbuetteler 21
Berlin

படிப்பகம்

www.padippakam.com

பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (மூன்றாம் தொகுதி)
முதற் பதிப்பு, வெளியீடு 1-7-1974
பதிப்புரிமை பெற்றது

கபீர் அச்சகம், சென்னை—600005

# THOUGHTS OF PERIYAR E. V. R.

(Speeches and Writings of Periyar E. V. Ramasami)

## VOLUME III

*Compiled and Edited by*
V. ANAIMUTHU

Nadarajah Straube
Brunsbuetteler 21
[illegible]

*Published by*
THINKERS' FORUM
Teppakulam
Tiruchirappalli-2

படிப்பகம்

www.padippakam.com

*Thoughts of Periyar E. V. R.—Volume III*
*First Edition, Published on 1-7-1974*
*All rights reserved*

Kabeer Printing Works, Madras—600005



தம் 95 ஆம் வயதிலும், உருப்பெருக்கி ஆடியின் துணைகொண்டு நூல்களை ஆர்வத்துடன் படிக்கும் தோற்றத்தில்—பெரியார் ஈ. வெ. ரா.

படிப்பகம்

www.padippakam.com



12-12-1973-ல் நன்செய்ப்புகழூர் தவிட்டுப்பாளையத்தில், திருமணத்தில் அறிவுரையாற்றினார், பெரியார்

படிப்பகம்

www.padippakam.com




ஈரோட்டில், 'குடிஅரசு' ஏடு, மற்றும் "ரிவோல்ட்' 'புரட்சி', 'பகுத்தறிவு', ஏடுகள்; குடிஅரசு பதிப்பக
நூல்கள் ஆகியவற்றை வெளியிட்ட—அறிவுப் பட்டறையான 'குடிஅரசு' அலுவலகம்—'தமிழன் அச்சகம்'

படிப்பகம்

www.padippakam.com

[illegible]

1 [illegible]

2 [illegible]

3 [illegible]

4 [illegible]

5 [illegible]

6 [illegible]

படிப்பகம்

www.padippakam.com

## பகுத்தறிவு அகராதி

1. கடவுள் என்பது காட்டுமிராண்டிக் கண்டுபிடிப்பு.
2. வேதம் என்பது சூது நிறைந்தது.
3. இதிகாசம் என்பது சதிமோசமானது.
4. புராணமென்பது புளுகு மூட்டை.
5. அடியார்கள் என்பவர்கள் மடையர்களே ஆவார்கள்.
6. தேவர்—அசுரர் என்பவர்கள் ஆரியர்—திராவிடர்களே யாவார்கள்.
7. சாஸ்திரமென்பது மோசடிக் குவியல்.
8. முனிவர்கள், ரிஷிகள் முட்டாள்களின் தொகுப்பு.

# பதிப்பாசிரியர் முன்னுரை

உலகப் பெருஞ் சிந்தனையாளர் தந்தை பெரியார் அவர்களின் முழு ஒப்புதலோடு—அவர்தம் சொற்பொழிவுகளையும், எழுத்துக்களையும் தொகுத்து வெளியிடும் அரிய பணியினை 1972இல் திருச்சி சிந்தனையாளர் கழகம் மேற்கொண்டது.

அத் தொகுப்பினைப் 'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' என்ற பெயரில் வெளியிடுவதற்கான கையெழுத்துப் படித் தாட்கள் முழுவதையும் வருத்தம் பாராது படித்தும்—படிக்கக் கேட்டும் ஒப்புதல் அளித்த அய்யா அவர்கள், அதனை அச்சு வடிவில், சுமார் 400 பக்கங்களை மட்டும் பார்த்த அளவில், இக் கழகத்தின் முயற்சியினை மனமாரப் பாராட்டினார்கள்.

அப் பேரறிவாளர் எதிர்பாராத வகையில், திடுமென மறைவுற்றமையானது—இக் கழகத்தினர் மேற்கொண்ட முயற்சிக்கு, உலகுக்கு நேர்ந்ததை ஒப்ப—பெரும் பேரிடியென நேர்ந்து விட்டது.

எனினும் அப் பெருந்தகையார்க்கு இக் கழகத்தினர் அளித்த வாக்குறுதியினைக் காக்க உறுதிபூண்டு—அன்னார்க்கு நன்றிக் கடன் ஆற்றும் உணர்வினை மேற்கொண்டு—விடாமுயற்சியுடன் இப் பெருநூல் அச்சிட்டு முடிக்கப்பெற்று, இதன் மூன்று பெருந் தொகுதிகளும் ஒரே சமயத்தில் உலகினோர்க்கு வழங்கப்பட்டுள்ளன.

சுயமரியாதை உலகும், ஆராய்ச்சி உலகமும், திராவிடப் பெருஞ் சமுதாயமும் இப் பெருந் தொகுதிகளை ஏற்றுப் பயன்படுத்தி—கோடானு கோடி மக்களிடையே பெரியார்தம் கொள்கைகள் பரவ ஆவன ஆற்றும் என மனமார நம்புகிறோம்.

இந் நூலின் மூன்று தொகுதிகளுள், இது மூன்றாம் தொகுதியாகும். இம் மூன்றாம் தொகுதியின்கண் கடவுள், மதம், பொருளாதாரம், கிளர்ச்சிகள், செய்திகள், உலகம், தன்னைப்பற்றி, இறுதிச் சொற்பொழிவுகள், Religion என்பனவாகிய ஒன்பது பகுதிகள் (Parts) உள்ளன.

அறியாமையும் அச்சமும் விளைத்ததே கடவுள் நம்பிக்கை என்பதையும், சுயநலக் காரர்களாலேயே கடவுள் நம்பிக்கை வளர்க்கப்பட்டது, பரப்பப்பட்டது என்பதையும் எடுத்து விளக்கி, 'கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை' என்பதைப் பாமரரும் உணரும் வண்ணம் விளக்கியவர் பெரியார். உலக வரலாற்றில், 'கடவுள் ஒழிப்புக் கொள்கை'யைப் பாமர மக்கள் அளவில் செல்வாக்குப் பெறச் செய்தவர் பெரியார் ஒருவரே ஆவர். இத்தன்மையில் அவர் அளித்த விளக்கங்களைக் கொண்டது 'கடவுள்' என்ற பகுதியாகும். இந்துமதக் கடவுள்கள் பற்றிய அவர்தம் தெளிவுரை எவரையும் சிந்திக்க வைப்பவையாம்.

மதம் என்பது ஒழுக்கத்தையோ மனிதாபிமானத்தையோ கற்பிக்கவில்லை என்பதையும்; குறிப்பாக இந்துமதம் காட்டுமிராண்டிக்காலக் கண்டுபிடிப்பு என்பதையும், சாதி அமைப்பையும், பார்ப்பனர் உயர்வையும், பெண்ணடிமையையும் பேணுவதை இலட்சியமாகக் கொண்டது என்பதனையும் காட்டும் அன்னாரின் கருத்துரைகள் 'மதம்' என்ற பகுதியில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இதிகாசங்கள், புராணங்கள் விளைத்த கேடுகளைக் கோடிட்டுக் காட்டும் அவர்தம் உரைகளும் இப் பகுதியில் அடங்கும்.

பொருளாதாரக் கொள்கைகள், சமதர்மம், கம்யூனிசம், இயந்திரமுறைத் தொழில், தொழிலாளர் இயக்கங்கள் பற்றி, இங்கு, 1931 முதல் புரட்சிகரமான எண்ணங்களை

படிப்பகம்

www.padippakam.com



வெளிப்படுத்தியவர் பெரியாரே ஆவார். அவை 'பொருளாதாரம்' என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளன.

சமயத்தின் பேரால் நடந்த படுகொலைகள் தமிழக வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் பல பக்கங்களை இரத்தத்தில் தோய்த்துவிட்டன. அரசியல் உரிமை, தொழிற்புரட்சி இவற்றின் பேரால் 18ஆம் நூற்றாண்டு முதல் குமுறி எழுந்த புரட்சிகள் கொலைக் களங்களில்தான் வெற்றிவாகை சூடின. ஆனால் 2000 ஆண்டு காலமாக திராவிடரைப் பீடித்திருந்த சமுதாய இழிவினையும் கேடுகளையும் கிளர்ச்சிகள் பல நடத்தி அமைதிப் புரட்சிமூலம் அகற்றினார் பெரியார். இந்தி எதிர்ப்பு, கடவுள் நம்பிக்கை ஒழிப்பு, சாதி இழிவுக்குறி அழிப்பு, வடநாட்டு ஆதிக்கத் தகர்ப்பு இவற்றை மையமாகக் கொண்டு அன்னார் மேற்கொண்ட புரட்சிச் செயல்கள் 'கிளர்ச்சிகள்' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளன.

பெரியாரவர்கள் தோழர்கள் பலருடைய முயற்சிகளை ஊக்குவித்து விடுத்த பாராட்டுச் செய்திகளும், தலைவர்கள் பலருடைய மறைவுக்கு மனந்தாளாது விடுத்த இரங்கற் செய்திகளும்; தம் பிறந்தநாள் அறிக்கைகள் பலவும் 'செய்திகள்' என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. 'நாகம்மாள் மறைவு', 'சின்னத்தாயம்மாள் முடிவு' என்பன நெஞ்சை நெகிழவைப்பன; மற்றும் பலவும் உள்ளத்தை உலுக்குவனவாம்.

உலகத்தில் எவருக்கும் முன்னோடியாக, 'சோதனைக் குழாயில் மனிதக் குழந்தை' உருவாகும் என்ற அறிவியல் எண்ணத்தை 1943-ல் உலகுக்கு அளித்தவர் பெரியார். இத்தகு புதுமைக் கருத்துகள் 'உலகம்' என்ற பகுதியில் அமைந்துள்ளன.

பெரியார் அவர்கள் தம்மைப்பற்றி அடக்கத்துடன் அவ்வப்போது அளித்த விவரங்கள், 'தன்னைப்பற்றி' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளன.

தொண்ணூற்றைந்தாண்டு காலம் வாழ்ந்த அப்பெருந்தகை 48 ஆண்டுகாலம் சுழலும் இயந்திரமென ஓடி ஓடி நாத்திகம் பரப்பினார். தம் இறுதி மூச்சு அடங்குவதற்கு நூறு மணி நேரத்திற்கு முன்னருங்கூடப் பல்லாயிரக் கணக்கான மக்களைப் பிணித்து மணிக்கணக்கில் சொன்மாரி பொழிந்து அறிவுரை நல்கினார் அவ் ஏந்தல். இந் நூலைக் கொணரும் பணியினை மேற்கொண்ட சிந்தனையாளர் கழகத்தில், வாழ்நாளிலேயே இறுதி மாநாட்டில், வாழ்நாளில் இறுதி நிகழ்ச்சியில் என அமைந்துவிட்ட அவர்தம் சொற்பெருக்குகள் 'இறுதிச் சொற்பொழிவுகள்' என்ற பகுதியாக உருப்பெற்றன.

கடவுள், மதம், சாதி பற்றி அன்னார் 1928-ல் அளித்த புரட்சிக் கருத்துகள் 'Religion' என்ற ஆங்கிலப் பகுதியில் இம் மூன்றாந் தொகுதியின் இறுதியில் அளிக்கப் பட்டுள்ளன.

இந்நூல் முழுமைக்குமான பெயர்க் குறிப்பு அகராதி, பொருட் குறிப்பு அகராதி ஆகியவை இத் தொகுதியின் இறுதியில் இடம் பெற்றுள்ளன.

இத் தொகுதிகளை வரவேற்றுப் போற்றிச் சிந்தனையாளர் கழகத்தினரை ஊக்குவிப்பதன் வழியாக—தொடர்ந்து மேலும் பல அறிவியக்க வெளியீடுகளைக் கொணர, எங்கட்குத் தமிழ்ப் பேருலகமும், அறிஞருலகமும் பெருந் துணைபுரியும் என நம்புகிறோம்.

அனைவர்க்கும் சிந்தனையாளர் கழகத்தாரின் நன்றி என்றும் உரித்தாகும்.

வாழ்க தந்தை பெரியார் புகழ்!

திருச்சிராப்பள்ளி,
1—6—1974

வே. ஆனைமுத்து
பதிப்பாசிரியர்

# மூன்றாம் தொகுதி

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| | பதிப்பாசிரியர் முன்னுரை | i & ii |

## பகுதி I—கடவுள்

### 1. கடவுளும் மதமும்

| | | |
|---|---|---|
| 1. | கடவுள் சர்வசக்தி உள்ளவரா? | ... 1295 |
| 2. | கடவுளைப்பற்றி | ... 1300 |
| 3. | கடவுளும் நாமும் | ... 1304 |
| 4. | கடவுளை நம்பும் முட்டாள்களே! | ... 1305 |
| 5. | கடவுள் ஒழிப்பு | ... 1306 |
| 6. | கடவுள் என்பது...? | ... 1308 |
| 7. | கடவுள் நம்பிக்கைக்காரர்கள் பற்றிய என் கருத்து | ... 1311 |
| 8. | கடவுள் புரட்டை உணர வேண்டாமா? | ... 1313 |
| 9. | கடவுள் கதை | ... 1313 |
| 10. | கடவுள் பக்தி | ... 1318 |
| 11. | மனிதன் எதற்காகக் கடவுளை வணங்குகிறான்? | ... 1320 |
| 12. | கடவுள்களின் நாசவேலைகள் | ... 1322 |
| 13. | கடவுள்—பிறரும் நாமும் | ... 1323 |

### 2. கடவுள்கள்

| | | |
|---|---|---|
| 1. | சாப்பியடிக்கப்பட்ட கடவுள்கள் | ... 1324 |
| 2. | கடவுள்கள் | ... 1326 |
| 3. | கடவுள்களின் பிறப்பு | ... 1329 |
| 4. | பார்வதி—பரமசிவன் உரையாடல் | ... 1330 |
| 5. | பிள்ளையார் | ... 1332 |
| 6. | சுப்பிரமணியன் பிறப்பு | ... 1335 |
| 7. | அவதாரங்களின் இரகசியம் | ... 1336 |
| 8. | கடவுளைப்பற்றிக் காந்தியாரின் குழப்பம் | ... 1338 |

## பகுதி II—மதம்

### 1. மதம்

| | | |
|---|---|---|
| 1. | மதம் | ... 1347 |
| 2. | இந்துமதம் | ... 1349 |
| 3. | மதப் புரட்டு | ... 1352 |


படிப்பகம்

பக்க எண்

| | |
|---|---|
| 4. இந்துமதக் கொடுமை | ... 1364 |
| 5. இந்து மதத் தத்துவம் | ... 1365 |
| 6. சமயம் | ... 1366 |
| 7. இந்துமத ஆபாசம் | ... 1371 |
| 8. கஷ்டமான பிரச்சினை | ... 1383 |
| 9. பார்ப்பன தர்மம் | ... 1391 |
| 10. சாமியும் சமயமும் சமயாச்சாரிகளும் | ... 1392 |
| 11. சைவ சமயம் | ... 1398 |
| 12. சமரச சன்மார்க்கம் | ... 1400 |
| 13. மதப்போட்டி | ... 1402 |
| 14. மதம் விளைத்த கேடுகள் | ... 1404 |
| 15. மதத்தால் பயன் என்ன ? | ... 1411 |
| 16. ஒழுக்கக் கேட்டுக்குக் காரணம் | ... 1413 |
| 17. மதம் வேண்டுமா ? | ... 1415 |
| 18. அறிவுள்ள மனிதனுக்கு அடையாளம் | ... 1424 |

## 2. இதிகாசங்கள்

| | |
|---|---|
| 1. இராமாயணம் | ... 1431 |
| 2. இராமாயணப் பாத்திரங்கள் | ... 1433 |
| 3. இராமாயண ஆராய்ச்சி | ... 1441 |
| 4. வால்மீகியின் சீதை | ... 1444 |
| 5. இராமன் | ... 1452 |
| 6. இராமாயணம் புனைந்ததன் இலட்சியம் | ... 1454 |
| 7. இன்றும் இராமாயண சம்பிரதாயமா ? | ... 1455 |
| 8. இராமாயண பக்தர்களுக்கு | ... 1463 |
| 9. அதிசயப் பிறவிகள், நம் புலவர்கள் | ... 1468 |
| 10. பாரதக் கதை மெய்யா ? | ... 1469 |
| 11. இதிகாசங்களும் ஒழுக்கமும் | ... 1470 |

## 3. புராணங்கள்

| | |
|---|---|
| 1. அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை | ... 1473 |
| 2. ஒரு யுக்தி ஆராய்ச்சி | ... 1477 |
| 3. புராணங்கள் | ... 1479 |
| 4. கந்தபுராணமும் இராமாயணமும் | ... 1483 |

## 4. புராண ஆபாசங்கள்

| | |
|---|---|
| 1. பெரிய புராணம் | ... 1491 |
| 2. பக்த லீலாமிருதம் | ... 1493 |
| 3. தமிழ் வருடங்கள் | ... 1494 |
| 4. சிவனின் முட்டாள்தனம் | ... 1496 |
| 5. விஷ்ணுவின் ஆபாசம் | ... 1500 |





பக்க எண்

## 5. மூடநம்பிக்கைகளும் பழக்கங்களும்

| | |
|---|---|
| 1. மனிதன் கடவுளை நம்புகிறானா ? | ... 1501 |
| 2. கடவுள்—மதம், நாட்டிற்குக் கேடே | ... 1502 |
| 3. கோயில் வழிபாடு | ... 1504 |
| 4. பிரார்த்தனை | ... 1510 |
| 5. சிலை வணக்கம் | ... 1516 |
| 6. திருவிழா ஏன் ? | ... 1518 |
| 7. சாமி விளையாட்டா ? | ... 1519 |
| 8. நாமம்—விபூதி | ... 1521 |
| 9. புண்ணிய ஸ்தலங்கள் | ... 1522 |
| 10. புரோகிதரும் திதியும்—உரையாடல் | ... 1525 |
| 11. சோதிடம் | ... 1528 |
| 12. பூர்வ ஜென்ம பலன் | ... 1536 |
| 13. முன்கால நடப்பு | ... 1536 |
| 14. குறி, நல்ல நேரம் | ... 1537 |
| 15. வாழ்த்தும் ஆசீர்வாதமும் | ... 1537 |
| 16. உண்ணா விரதம் | ... 1538 |
| 17. உலகமே பொய் | ... 1540 |
| 18. வரவேற்கத்தக்கது | ... 1543 |
| 19. நாமும் பிறரும் | ... 1543 |
| 20. ஆதாரமற்ற நம்பிக்கைகள் | ... 1555 |

## 6. மூடப் பண்டிகைகள்

| | |
|---|---|
| 1. வருஷப் பிறப்பு | ... 1558 |
| 2. சரஸ்வதி பூசை | ... 1559 |
| 3. விநாயகர் சதுர்த்தி | ... 1561 |
| 4. தாரா சசாங்கம் | ... 1563 |
| 5. தீபாவளி | ... 1572 |
| 6. கார்த்திகை தீபம் | ... 1585 |
| 7. வைகுண்ட ஏகாதசி—பூசம் | ... 1587 |
| 8. மகாமக தீர்த்தம் | ... 1588 |
| 9. சிவராத்திரி | ... 1592 |
| 10. ஸ்ரீராம நவமி | ... 1593 |
| 11. மாரியம்மன் பண்டிகை | ... 1594 |
| 12. இவர்கள் மனிதர்களா ? | ... 1596 |

## 7. சாதி

| | |
|---|---|
| 1. சாதி | ... 1597 |
| 2. சாதிகள் நடைமுறை | ... 1602 |
| 3. சாதி ஒழிக | ... 1605 |
| 4. சாதி இருக்கலாமா ? | ... 1611 |


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



பக்க எண்

### 8. சாதி ஒழிய வழி


1. கலப்பு மணத்தால் சாதி ஒழியுமா? ... 1612
2. சாதி ஒழிய வழி ... 1613
3. இந்துமதம் ஒழிக ... 1616
4. சாதிவிகிதப் பங்கு ... 1620
5. கோயில் ஒழிப்பு ... 1625
6. எங்கள் தியாகம் ... 1634


## பகுதி III—பொருளாதாரம்

### 1. பொருளாதாரம்


1. இந்தியப் பொருளாதாரம் ... 1637
2. செல்வம் பெருக வழி ... 1643
3. தரகர்கள் ... 1645
4. கூட்டுறவு ... 1648


### 2. தொழில் வளர்ச்சி


1. சுதேசி ... 1654
2. கதர் ... 1655
3. இனி, கைத்தறி ஏன்? ... 1665
4. குடிசைத் தொழில்கள் ... 1667
5. இயந்திர முறைத் தொழில் ... 1670


### 3. சமதர்மம்


1. செல்வர்—வறியர் ... 1675
2. சமதர்மம் ... 1676
3. சமதர்ம அறிக்கை ... 1677
4. போலி உரிமைகள் ... 1680
5. சமதர்ம இயக்கம் ... 1681
6. அல்லாதார்கள் மாநாடுகள் ... 1682
7. சமதர்மப் பிரசார உண்மை விளக்கம் ... 1686
8. சமதர்ம எண்ண வளர்ச்சி ... 1688
9. ஏழைகள் துயரம் நீங்க ... 1689
10. வேலைத் திட்டம் ... 1690
11. இலட்சியம் ... 1691
12. கத்திவைத்துக் கொள்ளுங்கள் ... 1693
13. மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும் ... 1696
14. நாத்திகமும் சமதர்மமும் ... 1697
15. சமதர்ம வாதியின் கடமை ... 1703


### 4. பொதுவுடைமை


1. பொதுவுடைமை ... 1706
2. மே தினம் ... 1710
3. பொதுவுடைமையா? பொது உரிமையா? ... 1711
4. பொதுவுடைமைக்கு விரோதியா? ... 1714
5. கம்யூனிசம் ... 1714




பக்க எண்

### 5. தொழிலாளர் இயக்கம்


1. தொழிலாளர் சங்கம் ஏன்? ... 1718
2. பார்ப்பனரும் தொழிலாளரும் ... 1721
3. தொழிலாளர் சத்தியாக்கிரகம் ... 1722
4. தொழிலாளர் பிரச்சினை ... 1724
5. இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் ... 1729
6. திராவிடர்கழகம்—தொழிலாளர் நிறுவனமே ... 1732
7. தி. வி. தொ. சங்கம் ஏன்? ... 1733
8. தொழிலாளர் கிளர்ச்சி ... 1738


### 6. தொழிலாளரும் நாமும்


1. தொழிலாளரும் நாமும் ... 1739
2. சாதித் தொழிலாளி—கூலித் தொழிலாளி ... 1748
3. குறிப்பிட்ட தொழில் ஏன்? ... 1750
4. பிறவி முதலாளி ... 1751
5. திராவிடத் தொழிலாளர் என்பது ஏன்? ... 1752
6. தொழிலாளர் நிலை ... 1753
7. முதலாளி—தொழிலாளி தொல்லை ... 1758
8. பாராட்டு ... 1759


## பகுதி IV—கிளர்ச்சிகள்

### 1. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி


1. இந்திப் புரட்டு ... 1763
2. பொதுமொழி இருந்ததா? ... 1767
3. இந்தி—இந்தியப் பொதுமொழியா? ... 1767
4. வடவர் மொழி நமக்கு வேண்டாம் ... 1769
5. இந்தி—தேசிய மொழியா? ... 1772


### 2. இந்தி எதிர்ப்புப்போர்


1. இந்தி எதிர்ப்பு ஏன்? ... 1775
2. இந்தி எதிர்ப்புப் படை ... 1784
3. கட்டாய இந்தி ஒழிந்தது! ... 1787
4. சோதனைக் காலம் ... 1788
5. வாழ்ந்தால் மானத்தோடு வாழ்வோம் ... 1790


### 3. இரண்டாம் போர்


1. நமது போர் முறை ... 1797
2. வாழ்வு அல்லது சாவு ... 1799
3. இந்தி கட்டாயமா? ... 1803
4. இந்தித் திணிப்பு ... 1811
5. அரசியல் கிளர்ச்சி அல்ல ... 1812
6. இந்தி எதிர்ப்பின் பயன்கள் ... 1813
7. நம் போராட்ட நேர்மை ... 1816
8. இந்தி அழிப்புக் கிளர்ச்சி ... 1819
9. இந்தியும் நானும் ... 1823


படிப்பகம்

www.padippakam.com



பக்க எண்

### 4. பிற கிளர்ச்சிகள்


1. கணபதி உருவப் பொம்மை உடைப்பு ... 1826
2. ஆச்சாரியார் கல்வித்திட்ட எதிர்ப்பு ... 1828
3. தேசியக் கொடி கொளுத்தும் தீர்மானம் ... 1833
4. இந்திக் கிளர்ச்சி ... 1834
5. கொடி எரிப்பு ஒத்திவைப்பு ... 1835
6. தேசியக் கொடி எரிப்பு ... 1836
7. கம்யூனிஸ்டுகளும் கொடி எரிப்பும் ... 1838


### 5. இராமன் பட எரிப்பு


1. நமது போராட்டம் ... 1840
2. நேர்மையான எதிர்ப்பு இல்லை ... 1841
3. 'இராமனை'க் கொளுத்தியது குற்றமல்ல ... 1844
4. இராமன் பட எரிப்பு ஏன்? ... 1846


### 6. இழிவு நீக்க அழிப்பு


1. பிராமணாள் அழிப்பு ... 1847
2. நமது இழி நிலை .. 1850


### 7. காந்தி சின்னம் அழிப்பு


1. காந்தி பட எரிப்பு ஏன்? ... 1851
2. காந்தி பொம்மை உடைப்பு ... 1854


### 8. சாதி ஒழிப்புப் போர்


1. அரசியல் சட்ட எரிப்பு ஏன்? ... 1859
2. சட்டத்தைக் கொளுத்துங்கள் ... 1865
3. நேருவின் முட்டாள் தனம் ... 1866
4. பெரியார் கோர்ட்டு வாக்குமூலம் ... 1870
5. சிறை புகுமுன் அறிக்கை ... 1871
6. எங்கள் போராட்டம் ... 1874
7. இராமாயணத்தை எரியுங்கள் ... 1875


### 9. 'தமிழ்நாடு' பெயர் மாற்றப் போர்


1. அபாயச் சங்கு ... 1876
2. தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கு வழி ... 1878
3. தேசப் படத்தைக் கொளுத்துங்கள் ... 1879


### 10. இழிவு நீக்கக் கிளர்ச்சி


1. இழிவு நீக்கக் கிளர்ச்சி ... 1884
2. மூலஸ்தானப் பிரவேசம் ... 1886
3. இழிநிலை நீக்க மாநாடு ... 1887


## பகுதி V—செய்திகள்

### 1. அறிமுகச் செய்திகள்


1. 'ரிவோல்ட்' ... 1891
2. 'முன்னேற்றம்' ... 1892
3. 'சுயமரியாதைத் தொண்டன்' ... 1893




பக்க எண்


4. நூல் முன்னுரை ... 1894
5. ஓர் வேண்டுகோள் ... 1895
6. 'வெடிகுண்டு' ... 1895
7. 'புரட்சி' ... 1896
8. 'பகுத்தறிவு' ... 1897
9. 'விடுதலை' ... 1898
10. நம் ஆயுதம் 'விடுதலை' ... 1899
11. 'திராவிடநாடு' ... 1902
12. 'தோழனு'க்கு வாழ்த்து ... 1902
13. 'உண்மை' ... 1903
14. இந்துமத ஆசார ஆபாச தரிசினி—மதிப்புரை ... 1905


### 2. இரங்கற் செய்திகள்


1. தங்கப்பெருமாள் ... 1906
2. பாஞ்சால சிங்கம் ... 1908
3. நமதருமைத் தலைவர் ... 1909
4. உண்மைத் தோழர் ... 1916
5. நாகம்மாள் மறைவு ... 1917
6. சின்னத் தாயம்மாள் முடிவு ... 1918
7. சர். ஏ. டி. பன்னீர் செல்வம் ... 1922
8. நம். சி. டி. நாயகம் ... 1923
9. காந்தியார் மறைவு ... 1924
10. ஜின்னா இழப்பு ... 1929
11. அழகிரிசாமி ... 1929
12. ஈ. வெ. கிருஷ்ணசாமி ... 1930
13. ஸ்டாலின் மறைவு ... 1932
14. திரு. வி. க. ... 1933
15. டாக்டர். அம்பேத்கார் மறைவு ... 1934
16. டாக்டர். வரதராஜுலு ... 1934
17. நேரு மறைவு ... 1935
18. சாஸ்திரி மறைவு ... 1936
19. அண்ணா ... 1937
20. ரஸ்ஸல் மறைவு ... 1940
21. தி. பொ. வேதாசலனார் ... 1940
22. இராஜாஜி ... 1941


### 3. பிறந்த நாள் செய்திகள்


1. பொதுத் தொண்டு ... 1943
2. சதியை முறியடிப்போம் ... 1950
3. சமதர்மம் தழைக்க உதவுக ... 1953
4. எனது தொண்டு ... 1957
5. எனது விருப்பம் ... 1961
6. எனது விண்ணப்பம் ... 1963
7. கழகத் தோழர்களுக்கு ... 1965
8 எனது நிலை ... 1966


படிப்பகம்

www.padippakam.com




| | | பக்க எண் |
|---|---|---|
| 9. | பிறந்தநாள் செய்தி | ... 1968 |
| 10. | தமிழர்களின் தலையாய கடமை | ... 1969 |
| 11. | எனது வேண்டுகோள் | ... 1971 |
| 12. | எனது சிந்தனை | ... 1973 |
| 13. | எனது அச்சம் | ... 1975 |
| 14. | சுதந்தரமும் சமுதாயமும் | ... 1977 |
| 15. | நமது இலட்சியம் | ... 1980 |


## பகுதி VI—உலகம்

### 1. இனி வரும் உலகம்


| | | |
|---|---|---|
| 1. | இலங்கை உபந்யாசம் | ... 1985 |
| 2. | நாகரிகம் | ... 1998 |
| 3. | இனி வரும் உலகம் | ... 2000 |
| 4. | காலவேகம் | ... 2008 |
| 5. | நான் நோக்கும் முறை | ... 2009 |
| 6. | பகுத்தறிவாளர்க்கு | ... 2010 |
| 7. | உலகம் வளர்ச்சி அடையாததற்குக் காரணம் | ... 2013 |
| 8. | உலகம் ஒன்றாக வேண்டும் | ... 2014 |


## பகுதி VII—தன்னைப்பற்றி

### 1. தன் விளக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நான் இந்துவல்ல | ... 2021 |
| 2. | என் அனுபவம் | ... 2022 |
| 3. | எதிர்ப்பும் இன்னலும் | ... 2023 |
| 4. | நான் யார்? | ... 2025 |
| 5. | நான் எப்படி? | ... 2026 |
| 6. | நான் சொல்லுவது கட்டளையா? | ... 2026 |
| 7. | என் துணிவு | ... 2026 |
| 8. | நான் ஒரு தொண்டன் | ... 2027 |
| 9. | நான் மாறுவது ஏன்? | ... 2027 |
| 10. | என் திருமணம் | ... 2028 |
| 11. | தன்னைப்பற்றி | ... 2035 |


## பகுதி VIII—இறுதிச் சொற்பொழிவுகள்


| | | |
|---|---|---|
| 1. | சிந்தனையாளர் கழகத்தில் | ... 2041 |
| 2. | மாநாட்டில் | ... 2051 |
| 3. | இறுதிச் சொற்பொழிவு (மரண சாசனம்) | ... 2061 |


## PART IX

### Religion


| | | |
|---|---|---|
| 1. | Duties of a Revolutionary | ... iii |
| 2. | Caste | ... viii |




## கடவுளும்—நானும்

கடவுளைப்பற்றி நான் எதிர்ப்பாய் இருக்கிறேன் என்றால், ஏன் அப்படி இருக்கிறேன் என்று ஒரு கடவுள் பக்திக்காரரும் சிந்திப்பதில்லையே.

ஏன்—கடவுள்களை ஒழிக்கவேண்டுமென்கிறேன்?

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



கடவுளை உண்டாக்கிக்கொண்ட எவருமே யோக்கியமான அல்லது யோக்கியத் தன்மையுடைய கடவுளை ஏற்படுத்திக்கொள்ள வில்லையே.

அவரவர் சுயநலத்திற்கேற்ப முட்டாள்தனத்திற்கேற்ப, ஒழுக்க மற்ற, நேர்மையற்ற, சக்தியற்ற கடவுள்களையும்; தங்கள் தங்கள் சுயநலத்திற்கேற்ற கடவுளையும், தன் எதிரிகளை ஒழிக்கவேண்டு மென்கின்ற ஆவலுக்கேற்ற கடவுள்களையும் உண்டாக்கிக்கொண்டால்— அவற்றை, அவற்றால் பாதிக்கப்படுபவர்களும்—(அதை) அறிவாளிகளும் ஏற்றுக்கொள்ளமுடியுமா? சுயநலமற்றவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களா?

உலக மனித சமுதாயத்திற்கு ஒருவன் தொண்டுசெய்ய வேண்டு மானால்—முதல் தொண்டாக இப்படிப்பட்ட கடவுள்கள் ஒழிப்பு வேலை யில் இறங்கினால்தானே அவன் உண்மையான—யோக்கியமான— அறிவாளியான தொண்டனாக இருக்கமுடியும்?

படிப்பகம்

www.padippakam.com

பகுதி I

# கடவுள்



படிப்பகம்

www.padippakam.com

# 1. கடவுளும் மதமும்

## 1. கடவுள் சர்வசக்தி உள்ளவரா?

மனிதன் உலகத் தோற்றத்திற்கும் நடப்பிற்கும் சம்பவங்களுக்கும் காரணம் கண்டு பிடிக்க முடியாத நிலையில் கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்றும் நினைத்துக் கொள்வதும்—உதாரணமாக, அவற்றிற்குக் காரண காரியம் தோன்றிய பின்பு அந்நினைப்பு கொஞ்சங் கொஞ்சமாக மாறிவிடுவதும் சகஜம் என்பதாகக் குறிப்பிட்டு இருந்தோம். இந்த முறையிலேயே கொஞ்ச காலத்திற்கு முன் அனேக விஷயங்கள் கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள் விஞ்ஞான (Science) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டு, அனேக விஷயங்களை மனிதன் செயல் என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

உதாரணமாக, கம்பியில்லாத் தந்தி விஷயத்தை எடுத்துக்கொள்வோம். கம்பி யில்லாத் தந்தி ஏற்படுத்தியிருக்கும் விஷயமும், அது எப்படிச் செய்யப்படுவது என்கின்ற விஞ்ஞான உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால் நாம் இன்னமும் அதை 'ஒரு தெய்வீக சக்தி' என்றும் பழைய காலத்து ரிஷிகள் பேசிக்கொண்டதாய்ச் சொல்லப்படும் 'ஞான திருஷ்டி சம்பாஷணை' என்றுமே சொல்லித்திருவோம். ஆதலால், மக்களுக்கு அறிவும் ஆராய்ச்சியும் வளர வளரக் கடவுள் உணர்ச்சியின் அளவு குறைந்துகொண்டே போகும் என்பது திண்ணம். அதுபோலவே, அறிவும் ஆராய்ச்சியும் குறையக் குறைய, கடவுள் உணர்ச்சி வளர்ந்துகொண்டே வரும் என்பதும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இப்போதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமேதான் அனேகமாகத் தொட்டதற்கெல்லாம் கடவுளும் அவர்தம் செயல்களும் தாண்டவமாடுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் மேலேயே 'கடவுள்' வருவதைப் பார்க்கின்றோம். காட்டுமிராண்டிப் பக்குவமுடையவர் களிடமே அனேகமாகக் கடவுளைப்பற்றிய கதைகள் என்பவைகளும், புராணம் என்பவை களும் மதிப்புப்பெற்று இருப்பதையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக் கதைகளை அப்படியே—அதாவது, கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பியிருந்தவர்கள்கூட, இப்போது அப்படியே நம்புவதற்கு வெட்கப் பட்டுக்கொண்டு தங்களுக்கில்லா அறிவு வளர்ச்சித் தன்மையை மறைத்துக்கொண்டு, 'சயின்ஸின்' மூலம் அக் கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டு கஷ்டப் படுகின்றார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்றால், மக்கள் வர வர இப்போது விஞ்ஞானத் திற்குப் பொருத்தமில்லாததை ஏற்க மறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்துகொண்டிருக் கின்றார்கள் என்பது விளங்குகின்றது.

மழையை வரச்செய்வதும், செத்தவனை மறுபடி பிழைக்கச் செய்வதும், பேசுக் களையும், நாட்டியங்களையும் இயந்திரங்களில் பிடித்துக்காட்டுவதும் போன்ற காரியங்கள் மனிதனால் செய்யக்கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு—மிக்க பாமர ஜனங்களுக்குக் கூட இவை எல்லாம் கடவுள் செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை மறைந்து வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஒரு காலத்தில் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்ட கடவுள் சம்பந்தமான எண்ணங்கள், இனியும் இருந்துதான் தீர வேண்டுமா என்றால், எப்படியும் அது ஒரு அளவுக்காவது இருந்துதான் தீரும் என்றே சொல்லலாம். ஏனெனில் மனிதன், 'தான் எல்லாம் அறிந்தவன்' என்கின்ற ஆணவத்தை

www.padippakam.com



உடையவன் ஆதலால், தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ளச் சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்படமாட்டானாகையால், அங்கு அதாவது, தனக்கு அறிவு கட்டையாய்ப் போனபோது அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும் கடவுள் செயலும் வந்துதான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியமல்ல; பூரண அறிவு வளர்ச்சி பெற்றால்தான் முடியும். அன்றியும், சிலர் உண்மையை அறிந்திருந்தாலும் சுயநலமோ மூடப் பிடிவாதமோ காரணமாக தங்களுக்கே புரியாதவற்றைப் பேசிப் பாமர மக்களை மயக்கிக்கொண்டும் இருப்பார்கள். ஏனெனில், மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே அவர்கள் பிழைக்கக்கூடியவர்களாய் இருப்பதால்தான். எது எப்படி இருந்தபோதிலும் உலகத்தில் கடவுள் சம்பந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்பு குறைந்துவிட்டதால், கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வர வரக் குறைந்து கொண்டுதான் போகும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவ்விதக் குருட்டு நம்பிக்கையும், மூடப் பிடிவாதமும் ஒழிந்த காலத்தில்தான் உலகத்தில் ஒழுக்கமும் சமத்துவமும் நிலைபெறும் என்பது மாத்திரம் உறுதி.

['குடி அரசு'—தலையங்கம்—11-8-1929]

மதமும் கடவுளும் மனிதனை முட்டாளாக்கும் கருவிகள்.

மனிதனுக்குள் கடவுளைப் புகுத்துவது மனிதனை முட்டாளாக்கும் 'டானிக்' (வைட்டமின் சத்து) ஆகும். இதை இன்று பார்ப்பனர்கள், சங்கராச்சாரிகள் கடவுள் பிரச்சாரம் செய்வதில் எடுத்துக்கொள்ளும் முயற்சியிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

கடவுள் மனித நலத்துக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட சாதனம் அல்ல. மனிதனை முட்டாளாக்குவதற்குப் பயன்படுத்தும் சாதனமேயாகும். சூரியனை, சந்திரனை, நெருப்பை, நீரை, காற்றை, கல்லை, மண்ணை எந்த மனிதனும் கண்டுபிடிக்கவில்லை. அவற்றின் பெயர்களைத்தான் மனிதன் தெரிந்துகொண்டான்.

இவற்றிற்கு விளக்கம் தேவையில்லை; காரண காரியங்கள் தேவையில்லை.

மனிதனென்றால் இவைகளை அறிந்தே ஆகவேண்டும். இவற்றின் பலனை அனுபவித்தே ஆகவேண்டும்.

ஆனால், கடவுள் அப்படியல்ல. ஒருவன் சொல்லி, அதுவும் சொல்லுவது மாத்திரமல்ல—நம்பும்படி செய்து; நம்பும்படி செய்வது மாத்திரமல்ல—நம்பும்படி கட்டாயப் படுத்தி, மனித மூளைக்குள் புகுத்தியாக வேண்டும்.

இந்தக் கதி சர்வ சக்தியுள்ள 'கடவுளுக்கு' ஏற்பட்டது பரிதாபம்! மகா பரிதாபம்!

கடவுள் கதை ஒரு முட்டாளுக்குத் தோன்றிய தோற்றம். இது உலக அறிவையே பாழாக்கிவிட்டது. அதாவது, 'சிறு குழந்தையின் கையில் கிடைத்த நெருப்புப் பந்தம் வீட்டையே—ஊரையே எரித்துச் சாம்பலாக்கியது' என்பதுபோல்—கடவுள் எண்ணம் அறிவையே கொன்றுவிட்டது என்று சொல்லலாம்.

கடவுள் என்பது பிடிக்குப் பிடி, 'நமசிவாயம்', 'நமசிவாயம்' என்றால், இங்கு ஒன்றுமில்லை, சூனியம் என்பதுதான் பொருள்.

அது, 'கடவுள்' என்றால் ஒரு 'சக்தி'; சக்திகூட அல்ல, 'ஒரு காரணம்'; 'காரணப் பொருள்'; காரணப் பொருள்கூட அல்ல, அப்படி நினைப்பது; நினைத்துக் கொள்வது மனிதனுக்கு ஒரு 'சாந்தி' என்பதாக—கா. சு. வும் (M. L. பிள்ளை); திரு. வி. க.வும் சொன்ன விளக்கம். இதைப் பழைய 'குடி அரசு' இதழில் காணலாம். ஆனாலும், இவர்கள் விக்கிரக பூசையும், பட (உருவ) பூசையும் செய்து வந்தவர்கள்; கடைசியாக மாற்றிக்கொண்டவர்கள்.



மனிதனுக்கு எதற்காகக் கடவுள் தேவைப்பட்டது என்பது எனக்கு இன்னமும் விளங்க வில்லை. அதிலும் கடவுளை நம்பும் எவனும் அதன் சர்வசக்தியில் நம்பிக்கை வைப்பதே இல்லை. எவனும் சம்பிரதாயத்திற்காக, 'கடவுள் செயல்' என்றானே தவிர, காரியத்தில் மனிதன் செயல் என்றும், தன்செயல் என்றும், இயற்கை யென்றும், 'அகஸ்மாத்து', தற் சம்பவம், (accident) 'ஆக்சிடெண்ட்' என்றும்தான் முடிவுசெய்துகொண்டவனாகிறான்.

'சர்வம் கடவுள் செயல்' என்று சொல்லுகிற எவனும் சர்வத்திற்கும் தற்காப்புச் செய்து கொள்ளாமல் இருப்பதில்லை. 'சர்வம் கடவுள் செயலாயிருக்கும் போது, நாத்திகன்—கடவுள் இல்லை என்பவன் எப்படித் தோன்றினான்?' என்பது பற்றிச் சிந்திப்பதில்லை.

மற்றும், சர்வத்திலும் வியாபகமாக இருக்கிற கடவுள் மக்களுக்கு ஏன் தான் இருப்பதாக, தன்னைத் தானாகத் தெரிந்துகொள்ளச் செய்ய முடியவில்லை என்பதைச் சிந்திக்கவே மாட்டேன் என்கிறான்.

ஒரு கிறிஸ்துவப் பாதிரி இந்தக் கேள்விக்குப் பதிலாக, 'கடவுள் மனிதனுக்கு அறிவைக் கொடுத்து விட்டான். அந்த அறிவைக் கொண்டு கடவுளைத் தெரிந்து கொள்ள வேண்டியது மனிதன் கடமை' என்று சொல்லிவிட்டார்.

'உன் அறிவுக்கு எட்டிய கடவுள்—ஏன் என் அறிவுக்கு எட்டவில்லை?' என்று கேட்ட தற்கு, 'பாப ஜன்மங்களுக்கு எட்டாது' என்று சொல்லிவிட்டார்.

அந்தப் பாப ஜன்மங்களைப் படைத்தது யார்? படைத்தது கடவுளானால் பாப ஜன்மங்களை ஏன் படைத்தார்? கடவுள் பாப ஜன்மங்களைப் படைக்க வில்லையானால், பாப ஜன்மங்களைப் படைத்தது யார்? என்று கேட்டேன்.

'சாத்தான் படைத்தான்' என்றும், மற்றும் அவருக்கே புரியாத எதையெதையோ யோசித்துப் பேசினார்.

இஸ்லாத்தின் கதியும் இப்படித்தான். இந்துவின் கதியோ மும்மூர்த்திகள், ஒங்காளி, மாரி, காத்தவராயன், மதுரைவீரன், கருப்பண்ணன், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமாதி, கல்லுகள், படங்கள், பட்சிகள், மிருகங்கள், மரங்கள், சாணி (முட்டை உருவ) உருண்டைகள் செத்துப்போன மனிதர்கள் முதலிய எத்தனையோ பண்டங்கள்—கடவுளாக, வணங்கத்தக்க வைகளாக இருந்து வருகின்றன.

இவைகளை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஒரு சர்வ சக்தியுள்ள கடவுளுக்குத் தன்னைப்பற்றித் தெரிவித்துக்கொள்ள, தன் உருவத்தை விளக்க சக்தி இல்லை என்பதைக் காட்டத்தான்.

பிறகு, முன்ஜன்மம், பின்ஜன்மம், கருமம், விதி, நரகம், சொர்க்கம், வைகுண்டம், கைலாயம்—இப்படி இன்னும் பல, பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றியதுபோல் உளறல்மேல் உளறல்கள்!

மனிதனுக்குப் பிறப்பு முதல் சாவு வரை எத்தனையோ துன்பமும், தொல்லையும் இருக்க, இந்தக் கடவுள், கருமம், மோட்ச-நரகத் தொல்லைகள் ஒருபுறம் சித்திரவதை செய்கின்றன. (ஜீவகோடிகள்) பிறப்புக்கும், வாழ்க்கைக்கும், சாவுக்கும் இடையில் அனுபவிக்கும் இன்பம், துன்பம், கவலை, தொல்லை முதலிய காரியங்களுக்கு அவசியம் என்ன? காரணம் என்ன? என்பதை எவனாலும் இதுவரை தெரிந்துகொள்ள முடிய வில்லையே! இத்தனைக்கும் கழுதை, குதிரை, நாய், நரி, எருமை, யானை, புலி, சிங்கம், ஈ, எறும்பு முதலான எண்ணிறந்த ஜீவராசிகளைவிட அதிகமான அறிவு (பகுத்தறிவு) படைத்தவனாவான் மனிதன்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் பகுத்தறிவின் பயனால்தான் மற்ற ஜீவப் பிராணிகளுக்கு இல்லாத தொல்லையை மனிதன் அனுபவிக்கிறான். காரணம், இந்தப் பாழாய்ப்போன கடவுளால் தான் அதிகத் தொல்லை என்பேன்.

'உள்ளதைப் பங்கிட்டு உண்பது; உழைப்பைப் பங்கிட்டுச் செய்வது' என்ற நிலை ஏற்பட்டால் கடவுளுக்கு வேலையோ, அவசியமோ இருக்காது.

இப்போது, கையில் வலுத்தவன் காரியமாகவும், அயோக்கியன் ஆதிக்கமாகவும் இருப்பதால்—மனிதன் அறிவு இருந்தும் தொல்லைக்கும் துன்பத்திற்கும் ஆளாகிறான், அடிமையாக வாழ்கிறான்.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

உலகத்தை எல்லாம் உண்டாக்கி அதில் உள்ள எல்லாவற்றையும் நடத்தும் சர்வ சக்தியுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவரால்தான் (அவர் இஷ்டப்படி) உலகம் இயங்கு (நடைபெறு) கின்றது என்று சொல்லப்படுமானால், அவரை நடுநிலைமையுடையவ ரென்று சொல்லுவதைவிடப் பாரபட்சமுடையவரென்று சொல்வதற்கே மிகமிக இட மிருக்கிறது. அவரைக் கருணை உடையவர் என்று சொல்வதைவிடக் கருணையற்றவர் என்று சொல்வதற்கே ஏராளமான பிரத்தியட்ச உதாரணங்கள் இருக்கின்றன.

அவரை நீதிவான் என்று சொல்லுவதைவிட அநீதிவான் என்று சொல்வதற்கே தாராளமான ஆதாரங்கள் அதிகமிருக்கின்றன.

அவரால் உலகுக்கு நன்மை ஏற்படுகிறது என்று சொல்வதைவிட அவரால் அதிகத் தீமையே ஏற்படுகின்றது என்று சொல்லுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன.

அவர் அறிவாளி என்று சொல்வதைவிட மூடர் என்று சொல்வதற்கே போதுமான ருஜு இருக்கின்றது.

(அதுவே முடிந்த முடிவானால்) அப்படிப்பட்டவரை யோக்கியர் என்று சொல் வதைவிட அயோக்கியர் என்று சொல்லுவதற்கே திருஷ்டாந்தங்கள் பல இருக்கின்றன.

அவர் ஜீவன்களுக்கு நன்மையே செய்கிறார் என்பதைவிடத் தீமையே செய்கிறார் என்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன.

அவரால் நன்மை அடைந்தவர்களைவிடத் தீமையடைந்தவர்கள் அதிகமாக இருக் கிறார்கள் என்று சொல்லத் தகுந்த அத்தாட்சிகள் மிகுந்து கிடக்கின்றன.

கடவுள் நாகரிகம் உடையவர் என்று சொல்வதைவிடக் காட்டுமிராண்டி என்று சொல்லுவதற்கே அளவுக்கு மீறிய அனுபவங்கள் காணப்படுகின்றன.

அவர் இருந்தால் நல்லது என்று சொல்லுவதைவிட, அப்படிப்பட்டவர் ஒருவர் இல்லாமல் இருந்தால் நல்லது என்று ஆசைப்படுவதற்கு அனேக காரணங்கள் இருக்கின்றன.

அப்படி ஒருவர் இருக்கிறார் என்று எண்ணிக்கொண்டு வாழ்க்கையை நடத்துவதை விட, அப்படி ஒருவர் இல்லை என்று வாழ்க்கையை நடத்துவதே மனித சுதந்திரத்திற்கு அதிகமான நன்மை பயக்கத் தக்கது என்று கருதுவதற்கு வேண்டிய அவசியங்கள் பல இருக்கின்றன.

சர்வ வல்லமையுடைய கடவுள் ஒருவர் இருந்தால் மனிதனுடைய தேவைக்கும் ஆசைக்கும் தகுந்தபடி நடந்துகொண்டு இருப்பார். அல்லது, கடவுளுக்கு இஷ்டமில்லாத விஷயங்களைப்பற்றி மனிதனுக்குத் தேவையில்லாமலாவது, ஆசையில்லாமலாவது அல்லது நினைப்புக்கே வராமலாவது செய்திருப்பார்.



உதாரணமாக, மனிதன் தனக்கு முகத்தில் மயிர் வேண்டியதில்லை என்று கருதி தினம்தினம் சவரம் செய்துகொள்வதைப் பார்க்கிறோம். ஆனால், கடவுள் அனுக்கிரகத்தால் அது தினம் தவறாமல் முளைத்துக்கொண்டே வருவதையும் பார்க்கின்றோம்.

இது என்ன,' கடவுளுடன் மனிதன் ஏறுக்கு மாறாய் நடந்து போட்டிபோடுகின்றானா? அல்லது, மனிதனுடன் கடவுள் ஏறுக்கு மாறாக நடந்து போட்டிபோடுகின்றாரா? அல்லது, ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் அவரவர் காரியத்தை அவரவர்கள் பார்க்கிறார்களா?

[சித்திரபுத்திரன் கட்டுரை—'குடி அரசு'—6-12-1947]

'கடவுள் நன்மை செய்தவனுக்கு நன்மை செய்வார்', 'கடவுள் தீமை செய்தவ னுக்குத் தீமை செய்வார்' என்று கடவுள் பிரச்சாரகர்கள் சொல்லுகிறார்கள்.

அப்படியானால், மனிதனை நன்மை செய்யச் செய்தவன் யார்? தீமை செய்யச் செய்தவன் யார்? ஒரு மனிதனை தீமை செய்யாமல் இருக்கச் செய்ய முடியவில்லை யானால், கடவுள் எப்படிச் சர்வ சக்தி உள்ளவராவார்?

கடவுள் மனிதனுக்கு அறிவைக் கொடுத்துவிட்டார்; அந்த அறிவைப் பயன்படுத் துவதில் தீமை ஏற்பட்டால் கடவுள் தண்டிக்கிறார்.

அப்படியானால், கடவுளுக்குப் புத்தியிருக்க வேண்டாமா? இவனுக்கு அறிவைக் கொடுத்தால் தீமை செய்வான். ஆதலால், இவனுக்கு அறிவும், சுதந்திரமும் கொடுக்கக் கூடாது என்று அறிவுள்ள கடவுள் சிந்திக்கவேண்டாமா? மனிதனுக்குத்தான் கடவுள் அறிவைக் கொடுத்தார்; விஷமூட்டும் பாம்பு, தேள், கொல்லும் புலி, சிங்கம், சிறு பிராணிகளைத் தின்றே வாழும் பெரிய ஜீவன்கள் ஆகிய இவைகளைக் கடவுள் ஏன் உண்டாக்கினார்?

இதற்குப் பெயர் காருண்யமா? ஒரு நாளைக்கு எத்தனைகோடி பூச்சி புழுக் களைப் பட்சிகள் தின்கின்றன! எத்தனை கோடி பட்சிகளை மனிதர்கள் கொன்று தின்கிறார்கள்! எத்தனைகோடி மீன்களை மக்களும், மற்ற உயிர்களும் கொன்று தின்கிறார்கள்!

எத்தனை கோடி, எத்தனை இலட்சம் ஆடுகள், எத்தனை ஆயிரம் மாடுகள் ஆகியவைகளை உலகில் மக்கள் கொன்று சாப்பிடுகிறார்கள்? சர்வ சக்தியுள்ள—கருணைக் கடாட்சம் பொருந்திய கடவுளுக்கு இதுதான் வேலையா? அல்லது, கடவுள் சம்பந்தமில் லாமல் அவர் சக்திக்கு மீறி இக் காரியங்கள் நடைபெறுகின்றனவா? சர்வ சக்தியுள்ள கடவுள்—ஜீவராசிகள், மரம், புல், பூண்டு வகைகளை எதற்காகத் தோற்றுவிக்க வேண்டும்?

இவைகள் பெரிதும் எல்லாம் அழிந்துதானே போகின்றன? அழியும்போது இம்சை, நோய், வேதனைப்பட்டுத்தானே அழிகின்றன? இப்படிப்பட்ட ஜீவனை உண்டாக்கி, இப்படி அழியச்செய்வதில் கடவுளுக்கு என்ன மகிழ்ச்சி? கடவுள் சக்திக்கு என்ன பெருமை? சர்வ சக்தி என்பதன் தத்துவம் இதுதானா?

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

என்னைப் பொறுத்தவரையில் என் தொண்டின் தன்மை என்ன? மக்களைப் பார்த்து, 'ஏ, காட்டுமிராண்டிகளே!' என்றும், 'மானங்கெட்டவர்களே!' என்றும்தான் கூறுகிறேன். ஒரு இடத்திலாவது, யாராவது எழுந்திருந்து எதிர்த்துக் கேட்கவில்லையே!

கடவுளைப்பற்றி எவ்வளவு கடுமையான கருத்துக்களைச் சொல்லிவருகிறேன். யாராவது மரியாதையாக—ஒழுங்காகப் பதில் சொல்லி இருக்கிறார்களா? கடவுள் பக்திக் காரனைத்தான் கேட்கிறேன்; சொல்லட்டுமே! உண்மையிலேயே, கடவுள் நம்பிக்கை

படிப்பகம்

www.padippakam.com



அற்றவர்கள் யாரென்றால், 'கடவுள் உண்டு' என்று கூறுகின்றவர்கள்தாம். ஏன்? உண்மையிலேயே, கடவுள் சர்வ சக்தி வாய்ந்தவர்; எல்லா மனிதர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார் என்பது உண்மையானால்—இவர்கள் ஏன், 'கடவுள் இருக்கிறார்!' என்று நம்மிடம் கூறவேண்டும். சர்வசக்தி வாய்ந்தவர் கடவுள் என்பது உண்மையானால்—எங்களுக்குக் 'கடவுள் ஒருவர் உண்டு' என்ற நம்பிக்கையைக் கடவுளே உண்டாக்கி இருக்கலாமே!

போலியாக—'கடவுள் உண்டு' என்று பித்தலாட்டமாகப் பேசி நாங்களும் மகானாகவோ, சாயி பாபாவாகவோ ஆகியிருக்க முடியாதா? அப்படி இருக்கும்போது, நாங்கள் ஏன் அனாவசியமாக இந்தக் கடவுளின் பித்தலாட்டங்களை எடுத்துக் கூறிக்கொண்டு இருக்கவேண்டும்?

இந்தக் கடவுள் உணர்ச்சி, மனித சமுதாயத்தைக் கெடுத்ததுபோல வேறு எதுவும் கெடுத்திருக்க முடியாதே! இந்தக் கடவுள் சங்கதி இல்லாவிட்டால் இந்த உலகம் எவ்வளவோ முன்னேறி இருக்கும்! கடவுளை மறந்து மனிதன் சிந்திக்க ஆரம்பித்ததால் தானே இந்த விஞ்ஞானப் புதுமைகள் எல்லாம்?

அய்ந்து வயது சராசரியாக வாழ்ந்த ஒரு இந்தியன் இன்றைக்கு எப்படி 52 வயது உடையவனாக மாறினான்? பெரிய பெரிய நோய்களை எல்லாம் எப்படித் தீர்த்துக்கட்டியிருக்கிறார்கள்? இது மனித அறிவு முயற்சியால்தானே! வெறும் கடவுளைமட்டும் நம்பிக் கொண்டு, 'சிவ, சிவா' என்றால் இந்த வளர்ச்சியைப்பெற்று இருக்கமுடியுமா?

[மாயூரத்தில், 22-9-1972-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-10-1972]

## 2. கடவுளைப்பற்றி

'கடவுளை உண்டாக்கிபவன் முட்டாள்; கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்; கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்று நான் கூறி வருவது கண்டு, பார்ப்பனர் நெருப்பின்மீது நிற்பதுபோல் துள்ளுகிறார்கள்; துள்ளிக் குதிக்கிறார்கள்; அப்பாவிகளையும், கூலிகளையும் பிடித்து நம்மீது ஏவிவிடுகிறார்கள்; பெரும் பெரும் போராட்டங்கள் நடத்தப்போவதாகப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். இதை நான் வரவேற்கிறேன்; எதிர்பார்க்கின்றேன். காரணம், போராட்டம் துவக்கினால் எனது மேற்கண்ட பிரச்சார வேலைக்கு உதவியாகும் என்பதோடு, மேலும் இத் தொண்டு செய்ய உற்சாகமூட்டி ஊக்க மளிக்கும் என்று கருதுவதுதான்.

'கடவுளை உண்டாக்கியவன் முட்டாள்' என்பதற்காகக் கோபித்துக்கொள்ளும் சிகாமணிகளே! நான், கடவுளை உண்டாக்கியவன் முட்டாள் என்றால்—எதற்காக நீங்கள் கோபித்துக்கொள்ளவேண்டும்? 'உண்டாக்கியவன் முட்டாள்' என்றால் உண்டாக்கியவன் யார்? அச் சொல் யாரைக் குறிக்கிறது? கோபிக்கின்றவனே! நீ, 'கடவுள் உண்டாக்கப் பட்டது' என்பதை ஒப்புக்கொள்கிறாயா? 'கடவுளை உண்டாக்கியவன் ஒருவன் இருக் கிறான்' என்பதை ஒப்புக்கொள்ளுகிறாயா? உனது முட்டாள்தனத்தைக் காட்டத்தான் கோபிக்கிறாய்; ஆத்திரப்படுகிறாய்! நிற்க, உன் ஆத்திரத்திற்குக் காரணம், ஆதாரம் என்ன?

முண்டமே! நீ நினைக்கும் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்கிறாயா? அல்லது, அது ஒருவனால் கண்டுபிடிக்கப்பட்டது என்கிறாயா? அல்லது—கடவுள் யாராலும் உண்டாக்கப்படாமல், யாராலும் கண்டுபிடிக்கப்படாமல் தானாக இயற்கையாகக் கடவுள் இஷ்டப்படி—கடவுளே தோன்றிற்று என்கிறாயா? நான் சொல்வதில் உனக்கு ஆத்திரம், கோபம் வருவதாயிருந்தால் எதற்காக வரும்? நான் சொல்வதை—'கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது' என்று நீ கருதினால்தானே—'உண்டாக்கியவனை நான் முட்டாள் என்கின்றேன்' என்று, நீ கோபிக்கவேண்டும்?




1967-ல் தஞ்சை மாவட்டம், விடயபுரம் பயிற்சிக்கூடத்தில், உலகுக்கு அறிவித்த நாத்திகக் கட்டளைகளைப் பெரியார் ஈ. வெ. ரா. எடுத்தியம்புகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



மற்றும், கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்று கருதுகிறவனுக்குத்தானே கோபம், ஆத்திரம் வரவேண்டும்? நீ கோபித்தால் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய் என்றுதானே அர்த்தம்?

அது மாத்திரமல்லாமல், நீ கோபிப்பதால் கடவுளையும் அவமதிக்கிறாய் என்றுதானே கருத்தாகிறது?

இப்போது நீ நினைத்துப் பார்! கடவுள் உண்டாக்கப்பட்டதா? கிரியேஷனா? (Creation); அல்லது, கடவுள் கண்டுபிடிக்கப்பட்டதா? இன்வென்ஷனா? (Invention) அல்லது, கடவுள் இயற்கையாய்த் தோன்றினதா? நேச்சரா? (Nature)—இதை முதலில் முடிவுசெய்துகொள்.

நான் சொல்வதன் கருத்து—கடவுள் கண்டுபிடிக்கப்பட்டது மல்ல; தானாகத் தோன்றியிருப்பதுமல்ல; அது முட்டாளால் உண்டாக்கப்பட்டது என்பதாகும். அதை—அதாவது, 'கடவுளை ஒரு மனிதன் உண்டாக்கினான்' என்பதாக நீ நினைத்தாலோ அல்லது, அதை நீ ஒப்புக்கொண்டாலோதானே கடவுளை உண்டாக்கினவன் முட்டாள் என்றால், நீ கோபித்துக் கொள்ளவேண்டும்?

நீ, இருப்பதாகக் கருதிக்கொண்டிருக்கும் 'கடவுள்—ஒருவராலும் உண்டாக்கப் பட்டதல்ல. தானாக, சுயம்புவாகத் தோன்றியிருக்கிறது' என்பதுதான் இன்று கடவுள் நம்பிக்கைக்காரர்களின் கருத்தாக இருக்கிறது.

ஆகையால், நான் கடவுளை உண்டாக்கியவனை முட்டாள் என்பதோடு, அதற்காகக் கோபிப்பவனை, ஆத்திரப்படுபவனை 'இரட்டை முட்டாள்' என்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இப்படி நான் சொல்வதால், கடவுளால் எவன் பெரிய சாதியாய் இருக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறானோ அவனுக்கும், கடவுள்பேரால் பொறுக்கித் தின்னவேண்டுமென்று கருதிக்கொண்டிருக்கிறவனுக்கும், கடவுளால் தனது அயோக்கியத் தனங்களை மறைத்துக்கொள்ள வேண்டியவனுக்கும்தான் கோபம் வரவேண்டும். அதை நான் சமாளித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, 'கடவுளைப் பரப்புகிறவன் அயோக்கியன்' என்பதற்கு விளக்கமாக இவ் விளக்கம் எழுதப்படுகிறது.

கடவுளைப் பரப்புகிறவன் எவனுமே—'கடவுள் தத்துவத்திற்கு' ஏற்பக் கடவுளைக் கற்பித்துக் கொண்டு பரப்புகிறவன்; அல்லது, பிரச்சாரம் செய்பவன்; அல்லது, கற்பித்துக் கொள்பவன்; அல்லது, கடவுளுக்காகவென்று கதைகள், புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் எழுதினவர்கள்; மற்றும் அதற்காகக் கோவில்கள் கட்டி அவற்றுள் உருவங்கள் வைத்தவர்கள்; கடவுளுக்காகவென்று பூசைகள், உற்சவங்கள், பண்டிகைகள் முதலியவைகளை நடத்துகிறவர்கள், செய்கிறவர்கள் யாவருமே—நாணயத்தையோ, யோக்கியதையையோ, ஒழுக்கத்தையோ ஆதாரமாக வைத்துக் கடவுளைப் பரப்புவதில்லை, நடத்துவதில்லை.

'கடவுளுக்கு உருவமில்லை; குணமில்லை' என்று ஆரம்பித்து, 'கடவுள் சர்வ வல்லமையுடையவர்; 'சர்வத்தையும் அறியக்கூடிய சக்தி (சர்வக்ஞத்துவம்) கொண்டவர்;' 'கருணையே வடிவானவர்'; 'அன்பு மயமானவர்'; 'அவரின்றி ஓர் அணுவும் அசையாது' என்பன போன்ற கடவுளின் எல்லாக் குணங்களையும், சக்திகளையும், தன்மைகளையும் அடுக்கடுக்காகக் கடவுளுக்குக் கற்பித்து மக்களை நம்பச் செய்துவிட்டு, இந்தக் குணங்களுக்கும் தன்மைகளுக்கும் மாறான குணங்களை—தன்மைகளை அதற்கு ஏற்றி, அதற்காகக் கோவில்கள் கட்டியும், உருவங்கள் உண்டாக்கி வைத்தும், நடவடிக்கைகளை ஏற்றியும்—அவைகளை ஆதாரமாய்க் கொண்டு பூசை, உற்சவம், பண்டிகை முதலிய



படிப்பகம்

www.padippakam.com



வைகளைக் கொண்டாடச் செய்வதன் மூலம் கடவுளைப் பரப்புவதென்றால், இக் காரிய முயற்சியில் ஈடுபட்ட மக்கள் அயோக்கியர்களா, அல்லவா என்று சிந்தித்துப் பார்க்கும்படி கேட்கிறேன்.

இக் கூட்டத்தார் மக்களை ஏய்க்கவல்லாமல், வேறு எக் காரியத்திற்காக இக் காரியத்தில் ஈடுபடுகிறார்கள்—ஈடுபடவேண்டியவர்களானார்கள் என்பது சொல்லமுடியுமா?

இவர்கள் தங்கள் சுயநலத்திற்காக, தங்கள் பெருமைக்காக, தங்கள் வாழ்க்கை நலத்திற்காக, தங்கள் பிழைப்பிற்காக இக் காரியங்களைச் செய்யும் அயோக்கியர்களாக முட்டாள்களாக இருந்துவருகிறார்கள் என்பதல்லாமல் வேறு கருத்து, காரணம் என்ன சொல்ல முடியும்?

இன்று இந்தப்படியான அயோக்கியர்களால் பரப்பப்பட்டிருக்கும் எந்தக் கடவுளை எடுத்துக்கொண்டாலும் அதற்கு வீடு, உணவு, பெண்டாட்டி, வைப்பாட்டி, குழந்தை குட்டிகள், நகைகள், சொத்துக்கள், கலியாணம், உற்சவம், ஊர்வலம் முதலியவை செய்து கூட்டத்தைக் கூட்டி ஆயிரம், பல்லாயிரம், இலட்சம், பல இலட்சம் ரூபாய்கள் செலவு ஏற்படும்படியும்; அதுபோலவே மக்களுக்கும் நாள் கணக்கில் மெனக்கேடு ஏற்படும்படியும் செய்வதோடு, கோடிக்கணக்கான மக்களை இழிசாதி மக்களாகவும் இருக்கும்படி செய்கின்றனர்.

'அன்பும், கருணையும், ஒழுக்கமும் உள்ள கடவுள்கள் யுத்தம் செய்ததாகவும், கோடிக் கணக்கான மக்களை, ஆண்களை, பெண்களைக் கொன்று குவித்ததாகவும், வெட்டி வீழ்த்திச் சித்திரவதை செய்து நாசமாக்கியதாகவும், விபச்சாரம் செய்ததாகவும் நடப்பில் நடத்திக்காட்டிப் பரப்புவதென்றால்—இப்படிப் பரப்புகிறவர்கள் அயோக்கியர்களா, அல்லவா என்று மறுபடியும் கேட்பதோடு, இதற்கு இரையாகிறவர்களை—முட்டாள்களாக, மானமற்றவர்களாக ஆக்குகிறார்கள் அல்லவா என்று திரும்பவும் கேட்கிறேன்.

இப்படிக் கடவுளைப் பரப்பும் அயோக்கியர்களால் எத்தனை எத்தனை கோடி மக்கள் மடையர்களாகிறார்கள் என்பதை, அறிவாளிகள் முதலில் சிந்திக்கவேண்டும்.

சாதாரணமாக, இந்தியாவை எடுத்துக்கொண்டால்—சிறப்பாக இந்துக்களை எடுத்துக்கொண்டால், சுமார் 40 கோடி மக்களும்—இந்த விஞ்ஞான காலத்தில் டாக்டர் எம். ஏ., பி. ஏ., (Doctor, M. A., B. A.,) படித்த மக்களும்; புலவர்கள், வித்துவான்கள், மகா மேதாவிகள் என்று கூறப்படும்—கூறிக்கொள்ளும் மக்களும் இக் காரியங்களில் 'பரம முட்டாள்களாக' இருப்பதற்குக் காரணம்—கடவுளைப் பரப்பினவர்களும், பரப்பி வருபவர்களும், இப்படிப்பட்ட கடவுள் கதை எழுதினவர்களும், இந்தக் கடவுள்களுக்குக் கோயில் கட்டி, உருவம், உற்சவம், நடப்பு, தேர், திருவிழா நடத்தும் அயோக்கியர்களுமல்லாமல் வேறு யாராய் இருக்க முடியும்?

இந்த மடையர்கள் எவ்வளவு துணிவோடு ஆண், பெண் கடவுள்களைக் கற்பித்து, அவற்றிற்கு விபசாரத் தன்மைகளை (ஒழுக்க ஈனங்களை)க் கற்பித்துப் பரப்புகிறார்கள் என்றால், இவர்களை எத்தனை முறை அயோக்கியர்கள் என்று கூறவேண்டும்! என்பதை வாசகர்களே தீர்மானித்துக்கொள்ள விட்டுவிடுகிறேன்.

இப்படி நான் எழுதுவதால் 'சிலர் மனம் புண்படாதா?' என்று கேட்கப்படலாம். அயோக்கியர்கள் மனம் புண்படுமே என்று பார்த்தால்—ஒரு சிலரால் முட்டாள்களாக ஆக்கப்பட்ட கோடிக் கணக்கான மக்களை அறிவாளிகளாக ஆக்க வேறுவழி யாராவது சொல்லட்டுமே, பார்க்கலாம்!

'கோவில், கள்ளரின் குகை' என்று கூறிய கிறிஸ்து கொல்லப்பட்டாலும், இன்று அவரை நூற்றுக்கணக்கான கோடிமக்கள் 'கடவுளுக்கு' மேலாகக் கருதுகிறார்கள்.



'கடவுளுக்கு உருவம் கற்பித்து வணங்குகிறவர்கள் முட்டாள்கள், மடையர்கள்' என்று கூறிய முகமது நபியைச் சிலர் துன்புறுத்தினார்கள் என்றாலும்—இன்று அவரைப் பல பத்துக்கோடி மக்கள் கடவுளைவிட மேலாகக் கருதுகிறார்கள். இவ்வளவு ஏன்?

நம் கண் முன்னால், 'கோயில்கள் குச்சுக்காரிகளின் விடுதிகள்' என்று கூறிய காந்தியை, இன்று பார்ப்பனர் உட்பட ஏராளமான மக்கள் 'மகாத்மா' என்கிறார்கள்.

உயிருக்குத் துணிந்து உண்மையை எடுத்துக்கூற மக்களில்லாததால், இன்று நம் நாட்டில் இவ்வளவு முட்டாள்களும், அயோக்கியர்களும், காட்டுமிராண்டிகளும் தோன்றி—இந்த விஞ்ஞான காலத்திலும் இருந்துவர இடமேற்பட்டதே தவிர, வேறு காரணம் என்ன? சிந்தியுங்கள்! மற்றும், இந்தப்படியான நம்மை, உலகம்—அறிவுலகம் எப்படிப்பட்டவர்கள் என்று கருதும் என்பதையும் சிந்தியுங்கள்!

எவ்வளவோ பொறுமைக்கு மேல்தான் இந்த விளக்கத்திற்கு வந்திருக்கிறேன். அடுத்து, 'கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்ற கருத்திற்கு விளக்கம் எழுத ஆசைப்படுகிறேன்.

பொதுவாகச் சொல்கிறேன், உலகிலேயே கடவுளை வணங்குகிற எவனும், கடவுள் என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? அதன் தன்மை என்ன? குணம் என்ன? என்பனவாகிய விஷயங்களை உணர்ந்தோ அல்லது உணர்ந்ததன்படியோ வணங்குவதேயில்லை. மற்றெப்படியென்றால், 'கடவுளை, மனிதனாகவே கருதிக்கொண்டு, மனித குணங்களையே அதற்கு ஏற்றிக்கொண்டு, தான் எப்படி நடந்துகொண்டான், தான் எப்படி நடந்துகொள்ளுகிறான், தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பவைகளைப்பற்றிக் கவலைப்படாமல்—தான் நடந்து கொண்ட கூடாத் தன்மைகளுக்குப் பரிகாரம் (பாவ மன்னிப்பு) தேடும் முறையிலும், நியாயமோ, பொருத்தமோ, விதிதமோ இல்லாமல் தனக்கு வாழ்வில் எல்லாத் துறைகளிலும் உயர்நிலையே வேண்டுமென்கிற பேராசையுடனுந்தான் கடவுளை வணங்குகிறான்.

இப்படிப்பட்டவனை அயோக்கியன் என்று சொல்லாவிட்டாலும்—அறிவாளி என்று சொல்லமுடியுமா?

இப்படிப்பட்ட இவர்கள் வணங்கும் கடவுளை, இவர்களை—இன்றைய நம் ஜனநாயக ஆட்சிக்கும், ஆட்சிப் பிரஜைகளுக்கும், பிரதிநிதிகளுக்கும் ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயொழிய—யோக்கியர்கள், அறிவாளிகள் என்று எப்படிச் சொல்லமுடியும்? இம் மாதிரியான கடவுள்வணக்கம் உலகில் ஏற்பட்டபின், இதன் பயனாக இயற்கையான, யோக்கியமான மனிதன் என்று சொல்லக்கூடிய ஒரு மனிதனாவது தோன்ற முடிந்ததா? இருக்கமுடிந்ததா? பொதுமக்கள் பயமில்லாமல் வாழமுடிந்ததா? அல்லது கடவுள்களோ, கடவுள்கள் வீடு, வாசல், சொத்துக்களோ பயமில்லாமல் வாழமுடிந்ததா? இது பொது விளக்கமாகும்.

இனி, நமது மக்கள் கடவுளை வணங்குவதன் மூலம் எவ்வளவு காட்டுமிராண்டிகள், மடையர்கள் என்பதைப்பற்றி விளக்குகிறேன்.

நான் பந்தயம் கட்டிச் சொல்லுவேன், நம் மக்களில் (இந்துக்கள் என்பவர்களில்) கடவுளை வணங்குகிறவர்களில் ஒருவர்கூட அறிவாளரோ, யோக்கியரோ, உண்மை அறிந்தவரோ இல்லை! இல்லை! இல்லவே இல்லை! என்று கூறுவேன்.

ஏனெனில், எப்படிப்பட்ட கடவுள் பக்தனும் கடவுள் என்று கல்லைத்தான், மனித உருவத்தைத்தான், மாடு, குரங்கு, மீன், ஆமை, பன்றி, கழுகு, யானை முதலிய உருவங்கள்கொண்ட கல்லைத்தான் வணங்குகிறான். அவற்றிலும் மிகமிக முட்டாள்தனமாக வணங்கப்படும் போக்கு என்னவென்றால்—ஒரு தலை, இரண்டு தலைகள், மூன்று தலைகள், நான்கு தலைகள், அய்ந்து தலைகள், ஆறு தலைகள், ஆயிரம் தலைகளும் அவைபோன்ற

படிப்பகம்

www.padippakam.com



கைகளுமுடைய மனித உருவங்களையும்; மற்றும் தலை மனிதன்—உடல் மிருகம்; தலை மிருகம்—உடல் மனிதன் முதலிய உருவங்கள் கொண்ட சிலைகளையும் வணங்குகிறான் என்பதே.

கடவுள் இருப்பதற்கு, இப்படிப்பட்ட தோற்றங்கள் எங்கு இருக்கின்றன? ஒவ்வொரு அயோக்கியனும் ஒவ்வொரு கூற்றைக் கற்பித்தால்—பற்பல மூடர்கள் இதை ஏற்பது என்றால், இது முட்டாள்—காட்டுமிராண்டித்தனமா, அல்லவா என்றுதான் கேட்கிறேன்.

மற்றும், கடவுள்களுக்குப் பெண்டாட்டி, பிள்ளை, வைப்பாட்டி முதலியவைகளுடன் பூசை செய்து வணங்குவது முதலிய காரியங்களும்; கடவுள் மற்றவன் (மனிதனின்) மனைவியைக் கெடுத்தான்; மற்றவனைக் கொன்றான்; மற்றவனை ஏய்த்து மோசம் பண்ணினான்; திருடினான்; அவனுக்குப் பதினாயிரம் பெண்டாட்டிகள்; பதினாயிரம் காதலிகள் என்றெல்லாம் கதைகட்டி, அதைத் திருவிழாவாக்கி வணங்குவதும் காட்டு மிராண்டித்தனமா, அறிவுடைமையா என்று கேட்கிறேன்.

மற்றும், பலர் ஒரு வேளை உணவுக்கும் திண்டாட, தலைக்கு எண்ணெய் இல்லாமல் வருந்த—தினம் அய்ந்து வேளை, ஆறு வேளைகள் பொங்கல், அக்காரவடிசல் முதலியன படைத்தல், பால், நெய், தேன், தயிர், இளநீர், எண்ணெய் அபிஷேகம் என்னும் பெயரால் கற்களின் தலையில் கொட்டிச் சாக்கடைக்கு அனுப்புதல் வடிகட்டிய முட்டாள்தனமா? கடவுள் வணக்கமா? என்று அழுத்திக் கேட்கிறேன். இவற்றால், இந்த முட்டாள்தனமான கடவுள் வணக்கத்தால்—நலம், பார்ப்பனருக்கு அல்லாமல் (மற்ற யாருக்கும் முட்டாள் பட்டம் அல்லாமல்) வேறு பயனுண்டா என்று கேட்கிறேன்.

மேலும், இதற்காக ஏற்படும் பொருட்செலவு, நேரச்செலவு எவ்வளவு? இந்த நிலை ஒருபுறமிருந்தாலும், நம் மக்கள் இப்படியே போய்க்கொண்டிருந்தால்—நமது பின்சந்ததி களின் நிலை என்ன ஆவது என்று கேட்டு இதை முடிக்கிறேன்.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

## 3. கடவுளும் நாமும்

கடவுளைப்பற்றி நான் எதிர்ப்பாய் இருக்கிறேன் என்றால், ஏனப்படி இருக்கிறேன் என்று—ஒரு கடவுள் பக்திக்காரரும் சிந்திப்பதில்லையே.

நான் ஏன் கடவுள்களை ஒழிக்க வேண்டுமென்கிறேன்? கடவுளை உண்டாக்கிக் கொண்ட எவருமே—யோக்கியமான அல்லது யோக்கியத் தன்மையுடைய கடவுளை ஏற்படுத்திக்கொள்ள வில்லையே!

அவரவர் சுயநலத்திற்கேற்ப, முட்டாள்தனத்திற்கேற்ப, ஒழுக்கமற்ற, நேர்மையற்ற, சக்தியற்ற கடவுள்களையும், தங்கள் தங்கள் சுயநலத்திற்கேற்ற கடவுள்களையும், தம் எதிரிகளை ஒழிக்கவேண்டுமென்கிற ஆவலுக்கேற்ற கடவுள்களையும் உண்டாக்கிக் கொண்டால், அவற்றை,—அவற்றால் பாதிக்கப்படுபவர்களும், அறிவாளிகளும் ஏற்றுக் கொள்ள முடியுமா? சுயநலமற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

உலக மனித சமுதாயத்திற்கு ஒருவன் தொண்டு செய்யவேண்டுமானால், முதல் தொண்டாக இப்படிப்பட்ட கடவுள்கள் ஒழிப்பு வேலையில் இறங்கினால்தானே அவன் உண்மையான, யோக்கியமான, அறிவாளியான தொண்டனாக இருக்கமுடியும்?

உதாரணமாக, ஒரு மனிதன் தான் மற்ற மனிதனைவிட மேலான, மேல் பிறவியான உயர்சாதி மனிதன் என்று சொல்லிக்கொண்டு, அதற்காகவென்று ஒரு கடவுளையோ, பல கடவுள்களையோ கற்பித்துக்கொண்டு, அதுவும் அயோக்கியத்தனமான, ஒழுக்கங் கெட்ட கடவுள்களைக் கற்பித்துக்கொண்டு, 'அவைகள்தாம் என்னை-எங்களை உயர்



சாதியாய்ப் பிறப்பித்தது' என்றால்—அந்த உயர் சாதியல்லாத மற்றவன் அதனால், அவற்றால் இழிசாதி, கீழ்ச் சாதியாக ஆக்கப்பட்டவன் அந்த—அவற்றிற்கு ஆதாரமாகக் காட்டப்படும் கடவுளை-கடவுள்களை ஒழிக்க, அழிக்க, சின்னப்படுத்த முன்வராதவன் மனிதனாவானா? அறிவாளியாவானா? மானமுள்ளவனாவானா? தன்னை மனிதன் என்று சொல்லிக்கொள்ளத் தகுதியுடையவன் ஆவானா?

கடவுள் நம்பிக்கைக்காரர்கள் யாராகத்தான் இருக்கட்டுமே, அவர்களை, 'எதற்காகக் கடவுள் ஏற்பட்டது? அதனால் உனக்கு என்ன பலன்?' என்று கேட்டால், என்ன பதில் சொல்லுவான்? அவன் ஏதாவது ஒரு பதிலைச் சொல்லுவானானால் 'அதனால் எல்லா மக்களும் பயனடைகிறார்களா? மகிழ்ச்சியடைகிறார்களா? யாராவது துக்கம், வேதனை, இழிவு, கவலை அடையாமல் இருக்கிறார்களா?' என்றால் என்ன பதில் சொல்லுவான்? மகிழ்ச்சி, நலம், மேன்மையடைந்திருக்கும் எவனும், 'கடவுள் சித்தத்தால்' என்பான். அவை இல்லாதவன், அவற்றிற்கு நேர்மாறான துன்பம், தொல்லை, கவலை அடைந்து கொண்டிருப்பவன் முட்டாளாய் இருந்தால், 'கடவுள் சித்தம்' என்பான். ஏனப்படி யென்றால், 'என் கர்மம்' என்பான். இப்படிப்பட்ட அயோக்கியர்களுக்காக, மடையர் களுக்காக நாமும் இவர்களோடு சேர்ந்து கொண்டு இந்தக் கடவுள்களைக் காப்பாற்றுவதா?

'உயர்' சாதிக்காரன், 'நலன் அனுபவிப்பவன்' கடவுளைக் காப்பாற்றினால்—'தாழ்ந்த' சாதிக்காரன், 'கேடு அனுபவிப்பவன்' கடவுளை ஒழிப்பது என்பதுதானே நியாயமும், நேர்மையுமாகும்; அறிவுமாகும்?

அப்படிக்கில்லையானால், அவன் அடிமை, மானமற்றவன், கூலி, சுயநலக்கார மடையன் என்றுதானே சொல்லப்பட வேண்டும்?

ஆகவே, தோழர்களே!

கவலையும், துன்பமும், இழிவும் உள்ளவர்களே! சிந்தியுங்கள். தங்களுக்கு விமோசனம், விடுதலை, மனிதத் தன்மை—கடவுள் ஒழிப்பிலும், அழிப்பிலும், இழிவுபடுத்து வதிலுந்தானிருக்கிறது.

இதனால், யோக்கியமான, அறிவாளியான யார் மனமும் புண்பட இடமில்லை. சுயநலத்திற்காகச் சிலர் ஆத்திரப்படலாம்; 'மனம் புண்படுகிறது' என்று சொல்லலாம். அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்; சிறிதும் அச்சப்படாதீர்கள். நாம் யாரையும் அவர் மனம் புண்படுவதற்காக இதைச் சொல்லவில்லை; செய்யவில்லை. இதற்காக அறிவற்றவர் களால், சுயநலக்காரர்களால், கூலிகளால் நமக்குத் தொல்லை ஏற்பட்டால், மகிழ்ச்சியோடு ஏற்று, மானத்தோடு பாய்ந்தெழுங்கள்! யார் மீதும் வெறுப்பு, குரோதம் கொள்ளாதீர்கள்!

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

## 4. கடவுளை நம்பும் முட்டாள்களே!

கடவுளை நம்பும் முட்டாள்களே! அதாவது, கடவுள் ஒருவரிருக்கிறார்; அவரே உலகைப் படைத்து, காத்து, நடத்தி வருகிறார்; அவரன்றி ஓரணுவும் அசையாது; அவரே உலக நடப்புக்குக் காரணஸ்தர் ஆவார் என்றெல்லாம் கருதிவரும் முட்டாள்களே!

கடவுளால் உலகத்திற்கு, மனித சமுதாயத்திற்கு, ஜீவகோடிகளுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? கடவுள் இருக்கிறார் என்றால்—ஜீவன்களுக்குப் பசி, தாகம், புணர்ச்சி, உணர்ச்சி, ஆசை, கவலை, நோய், வேதனை, சாவு முதலியவை ஏன் ஏற்படவேண்டும்? பிறப்பு, சாவு, தோற்றம், அழிவு முதலியவை எதற்குத் தேவை? இவைகளால் உலகமோ, மக்களோ, அடைகிற இலாபம் என்ன? கடவுள் தோன்றி எத்துணையோ காலம் ஆகியும், எத்துணையோ காலமாக மக்கள் கடவுளை நம்பியும் வணங்கியும் வந்தும், 'யோக்கிய னாகவோ, கவலையற்றவனாகவோ' ஒரு மனிதனைக்கூடக் காணமுடியவில்லையே, ஏன்?

படிப்பகம்

www.padippakam.com



கடவுள் பாதுகாப்பு இருந்தால்—வீட்டிற்குக் கதவு, தாள் போடாமலும்; பெட்டிக்குப் பூட்டுப் போடாமலும்—அவற்றில் பண்டங்கள் வைக்க முடியவில்லையே, ஏன்?

மனிதன் எதனால் கெட்ட காரியங்களைச் செய்கிறான்?

ஒரு மனிதனால் மற்றொரு மனிதனுக்கு ஏன் 'தீங்குகள்' செய்யப்படுகின்றன?

கடவுள் நம்பிக்கைக்காரர்களிடத்தில் காணப்படும் நற்குணங்கள் என்ன?

மனிதரிடம் காணப்படும் தீய குணத்திற்குக் காரணஸ்தர்கள் யார்?

ஒரு மனிதனுக்கு அவன், 'கெட்ட காரியம்' செய்த பிறகு—செய்துவிட்டு சேத்த பிறகு, அவனுக்குத் தண்டனையைக் கொடுக்கும் கடவுள்—அந்த மனிதனைக் 'கெட்ட' காரியம் செய்யாது தடுக்க முடியாமல்போவது ஏன்?

'கெட்ட' காரியம் செய்தவனுக்குத் தண்டனை கொடுப்பதானாலும்—கெட்ட காரியம் செய்யப்பட்டதால், துன்பம், நட்டம், நோய், மரணம் அடைந்தவனுக்குக் கடவுள் என்ன பரிகாரம் செய்கிறார்?

மனிதனுக்கு நன்மை-தீமை, இலாபம்-நஷ்டம், செல்வம்-தரித்திரம், சுகம்-துக்கம், திருப்தி-அதிருப்தி, கவலை, துன்பம் முதலிய அவஸ்தைகள் எதற்காக ஏற்பட்டும், இருந்தும் வரவேண்டும்?

மனிதன் படும் அவஸ்தைகள் கடவுளுக்குத் தெரியாதா? தெரிந்திருந்தால், இவை கடவுளுக்குத் திருவிளையாடலா?

'நரக'த்தைப் பாவ காரியத்திற்குப் பரிகாரமாக, தண்டனையாகச் சிருஷ்டித்த கடவுளை விட—வேறு அயோக்கியன், கொடியவன், துஷ்டன் உலகில் யாராவது இருக்க முடியுமா?

இப்படிப்பட்டவனை அன்பு உரு, கருணை உரு என்று சொல்லுகிறவனைவிட, வேறு மடையன் உலகில் இருக்கமுடியுமா?

ஏன் இதைப்பற்றி இவ்வளவு சொல்லுகிறேனென்றால், என் அனுபவத்தில் கடவுளால் உலக முன்னேற்றமும், மனித சமுதாய ஒழுக்கமும், மனிதத் தன்மையும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டு விட்டதுடன், கெட்டும் வருகிறது என்று உணர்ந்ததாலும், இதை வெளிப் படுத்த வேறு ஆள் இல்லையென்பதை நான் காணுவதாலும், எனக்கு வயது எல்லைக்கு நெருங்குவதாலும்—நான் உணர்ந்ததை வெளிப்படுத்திவிடலாம் என்று கருதியதாலேயே யாகும்.

ஆகவே, மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் கடவுளை மறுக்கிறானோ—மறக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு சமுதாயமுன்னேற்றம் இருக்கிறது என்பது எனது உறுதி.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

## 5. கடவுள் ஒழிப்பு

இந்த நாட்டில் நாட்டுப்பற்றோ, மனிதப்பற்றோ உள்ள அரசாங்கமானாலும், பொதுத் தொண்டு செய்யும் ஸ்தாபனங்களானாலும் அல்லது தனிப்பட்ட சமுதாயப் பற்றுள்ள மக்களானாலும் அவர்கள் முதலாவது செய்யவேண்டிய காரியம்—நாட்டு மக்களை அறிவாளிகளாகச் செய்து, அவர்களது பகுத்தறிவு ஆராய்ச்சித் தன்மையைப் பெருக்கவேண்டியதாகும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஒரு வழி செய்து, அவர்களுக்குக் கவலையோ, குறைபாடோ ஏற்படுவதற்கு இல்லாமல் பொருளாதார சமத்துவம், சமுதாய சமத்துவம் ஏற்படும்படிச் செய்யவேண்டும்.



இந்தத் தன்மைகளுள்ள நாட்டைத்தான் நாடு என்றும், சுதந்திர பூமி என்றும் சொல்லலாம்; இவையில்லாத நாட்டையும், சமுதாயத்தையும் சிறைக்கூடம் என்றும் அடிமைச் சமுதாயம் என்றும்தான் சொல்லவேண்டும்.

சாதாரணமாக அரசர்களால் ஆளப்படும் நாடுகளும், சமுதாயமும் எப்படி வேண்டு மானாலும் இருக்கலாம். ஏனெனில், அரசனுக்கு ஆட்சிமுறை—மதமும் சாத்திரங்களுமே தாம். மக்களால் ஆண்டுகொள்ளப்படும் நாட்டுக்கு ஆட்சிமுறை—அறிவும், சுதந்திரமுமே தாம்.

மதமும், சாத்திரங்களும் மனிதனின் அறிவையும், சுதந்திரத்தையும் ஒழிப்பதற் கென்றே—மக்களை மடையர்களாகவும், அடிமைகளாகவும் ஆக்குவிப்பதற்கென்றே ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட சாதனங்களாகும். அவைகளும், மக்கள் காட்டுமிராண்டி களாய்—மிருகப்பிராயத்தில் இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டவைகளாகும். எப்படி யென்றால், மக்களுக்குப் பயத்தைக் காட்டியே—அதாவது பேய், பிசாசு, பூதம் என்பவை களைச் சொல்லி எப்படி மக்கள் பயப்படுத்தப்பட்டார்களோ, அதுபோலவேதான் மதத்தையும், சாத்திரங்களையும் கூறி மக்களைப் பயப்படுத்திவிட்டார்கள்.

மதத்திற்கும் சாத்திரங்களுக்கும் கடவுளை எஜமானனாக, மூல கர்த்தாவாக வைத்து உண்டாக்கினார்கள் என்றாலும், கடவுள் வேறு, மதம்-சாஸ்திரம் வேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனெனில், கடவுள் அறியாமையில் இருந்து தோன்றியதாகும்.

மதமும் சாத்திரங்களும் அயோக்கியத்தனத்திலிருந்து—அதாவது, மக்களை மடையர் களாக்கவும், பயப்படுத்தி அடிமைகளாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் மீதும் உண்டாக்கப்பட்டவைகளாகும்.

உலக அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட—குறிப்பிடத்தகுந்த மேல் நாட்டு அறிஞர்களாலேயே இக்கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அதாவது, 'கடவுளைக் கற்பித்தவனை மன்னித்துவிடலாம்; ஏனெனில், அவன் மடையன்; அறிவில்லாத காரணத்தால் கற்பிக்க வேண்டியவனானான்.

ஆனால் மதத்தையும், சாத்திரங்களையும் (ஆத்மா, மோட்சம், நரகம்) கற்பித்தவன் அயோக்கியன். அவனை மன்னிக்கவே முடியாது. அவன் மக்களைப் பயப்படுத்த வேண்டியே இவற்றைக் கற்பித்து இருக்கிறான்' என்பதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

கடவுளைக் கற்பித்தவன், 'உலக உற்பத்திக்கு, நடத்தைக்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டும்; அந்தக் கர்த்தாதான் கடவுள்' என்று உத்தேசத்தின் மீது உறுதிப்படுத்திச் சொல்லுகிறான்.

அதாவது, சந்தேகத்தின் பயனை (பெனிஃபிட் ஆஃப் டவுட்-Benefit of Doubt) கடவுளுக்குக் கொடுக்கிறான்.

ஆனால் மதமும் சாத்திரமும் அப்படி இல்லை. முழுப் பொய்யையே கற்பனை செய்து, மக்களை ஏய்ப்பதற்கென்றே, பயப்படுத்துவதற்கென்றே பாகுபடுத்தி மதத்தையும் சாத்திரத்தையும் அமைக்கிறான்.

இந்த அமைப்பிற்கு (இதை அமைப்பு என்பதற்கு) ஆதாரம் என்னவென்றால் பல மதங்கள், பல சாத்திரங்கள் இருப்பதும், அவை ஒன்றுக்கொன்று (முரண்பாடாக) நேர் மாறாக இருப்பதுமேயாகும்.

மற்றும், இப்படிக் 'கற்பித்தவர்கள்' என்பவர்கள் மனிதத் தன்மைக்கு மேம்பட்ட வர்கள் என்பதும், இந்துமத சாத்திரங்கள் இயற்கைப் பிரத்தியட்ச விதிகளுக்கு மாறுபாடாக இருப்பதும் மற்றொரு ஆதாரமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



இதை நாம், ஏன் குறை கூறுகிறோமென்றால்—இவை, அறிவை மாத்திரமல்லாமல் ஒழுக்கம், நேர்மை, அன்பு, அருள், ஒற்றுமை, சமநிலை முதலியவற்றைப் பாழ் செய்வதோடு, வளர்ச்சியையும் கெடுத்து, விஞ்ஞானத்தை மறைத்து, அஞ்ஞானத்தை வளர்த்து வருகிறது.

இதை உணர நாம் வெகுதூரம் போகவேண்டியதில்லை. 'நமது' மதத்தையும் சாத்திரங்களையும் எடுத்துக் கொண்டாலே போதுமானதாகும்.

நம் (திராவிடர்) தமிழர்களாகிய மக்களுக்கு (கடவுள் உண்டா, இல்லையா என்பது வேறு விஷயம்; ஆனால்) மதமே இல்லை; இந்து மதம் நம் மதம் என்று கருதிக்கொண் டிருக்கிறோம். இதுவே ஒரு மாபெரும் 'இமயமலை அளவு' முட்டாள்தனமாகும். ஏன்? இந்துமதம் என்றால் என்ன? அதற்குப் பொருள் என்ன?

மதம் என்னும் சொல்லுக்கு கிறிஸ்து மதம், இஸ்லாம் மதம் என்பதற்கு உள்ள இலட்சணப்படி, ஆதாரப்படி—இலட்சியம், ஆதாரம், சரித்திரம் ஏதாவதுண்டா? இந்து மத சாத்திரம், வேதம் என்பதாக ஏதாவது இருக்கிறதா?

இந்து மதத்தைப் பார்ப்பனர் வேத மதம் என்கிறார்கள்; பார்ப்பனர் தங்களை ஆரியர் என்று சொல்லிக்கொள்கிறார்கள்; அதனால் அதை ஆரியமதம் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆங்கில அகராதிகளில்—இந்துமதம் என்றால் 'பிராமண மதமெ'ன்றும்; 'கிறிஸ்தவர்—முகமதியர் அல்லாதவர்களுடைய மதம்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

விரிக்கில் பெருகும்; சுருக்கிக் கொள்கிறேன்.

இந்து மதத்திற்கு ஆதாரம் வேதம், சாத்திரம், புராண இதிகாசமே! இந்த மதத்தின்படி நாம் கீழானபிறவி, 4-வது, 5-வது சாதியாராவோம்! அதனால் மேற்கண்ட மத ஆதாரங்களைப் படிக்கத் தகுதியற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம். வேத, சாத்திர, புராண, இதிகாச ஆதாரங்கள் பெரிதும் நம் மக்களை இழி குலமாக்கி, அயோக்கியராக்கிப் பல வழிகளிலும் அவமானப்படுத்தியுள்ளன.

ஆகவேதான், கடவுள் நம்பிக்கை, மதம், சாத்திரம், புராணம், இதிகாசம் ஒழிக்கப் பட்டே ஆகவேண்டுமென்று கூறுகிறோம்.

['விடுதலை'—தலையங்கம்—17-12-1969]

## 6. கடவுள் என்பது......?

கடவுள் என்பது முதன்முதல் யாரால் எப்போது சொல்லப்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லை. திராவிடர்கள் (தமிழர்கள்) ஆகிய நமக்கு ஆரியனால் புகுத்தப்பட்டது என்பதுதான் தெரிய வருகிறது.

நமக்கு (தமிழர்களுக்கு), ஆரியனுக்கு முன் கடவுள் இல்லை என்பதற்கு என்ன ஆதாரம் என்றால், கடவுள் என்பதற்குத் தமிழில் ஒரு சொல்லே இல்லை.

'கந்தழி' என்னும் ஒரு சொல் இருப்பதாகத் தமிழ்ப் புலவர்கள் கூறுகிறார்கள். என்றாலும், 'அது பொருளற்ற சொல்' எனத் தகுந்தபடிதான் அதற்கும் பொருள் கூறப் பட்டிருக்கிறது.

அதாவது, 'ஒரு பற்றுமற்று (உருவமற்றதாய்), அருவாய் தானே நிற்கும் தத்துவம் கடந்த பரம்பொருள்' என்ற பொருளைக் கொண்ட சொல்லாகும். தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை, சுபாவம், பலம், புத்தி முதலிய பல பொருள்கள் கூறப்பட்டிருக் கின்றன. 'இவை கடந்த' என்றால் இல்லாதது, பொய்யானது என்றுதான் பொருள் மிஞ்சும்; நிலைக்கும்.



ஆகவே, தமிழன் 'கந்தழி' என்ற சொல்லைச் சொன்ன காலத்திலேயே அதற்குக் கடவுள் இல்லை என்ற பொருளைப் புகுத்தித்தான் உண்டாக்கி இருக்கிறான். தத்துவம், கடந்த என்பதில் தத்துவம் என்பது தமிழ்ச்சொல் அல்லவென்பது என் கருத்து.

ஆகவே, 'கந்தழி' என்ற சொல்லுக்குத் தமிழில் ஒரு பொருளும் கூறவில்லை. வட மொழியிலும், 'உண்மை அல்லாதது' என்ற பொருளைக் கூறிவிட்டு மற்றும் பஞ்சபூதம் போன்ற தமிழல்லாத சொற்களே அகராதியில் அடுக்கப்பட்டிருக்கின்றன.

மற்றும் தெய்வம், பகவான், ஈஸ்வரன், பராபரன் என்ற சொற்கள் தமிழல்ல என்பது எனது கருத்து.

ஆகவே, கடவுள் என்பதற்குத் தமிழில் சொல் இல்லை என்பது உறுதி.

கடவுள் என்ற சொல்லுக்கும் அகராதியில் குரு, அய்யர், வானவர், புத்தேள் என்பவைதாம் (பொருளாகக்) காணப்படுகின்றன.

புத்தேள் என்பதைத் தமிழாகக் கொண்டால், புத்தேள் என்பதற்கும் தெய்வம், புதுமை, புதியவர், புத்தாள் எனப் பொருள்கள் காணப்படுகின்றன.

ஆகவே, கடவுளுக்கு எப்படிப்பட்ட பொருள் காண்பதானாலும் வடமொழிப் பொருள் களே அல்லாமல் அதுவும் வானவர், தேவர்கள் போன்ற பொருள்களே அல்லாமல் இன்று மக்கள் கொண்டிருக்கும் கருத்துக்கு ஒரு சொல்—தமிழிலோ, வடமொழியிலோ இல்லை என்பது உறுதி.

கடவுள் என்பது தமிழனுக்கு மாத்திரமில்லை என்று நான் சொல்ல வரவில்லை; ஆரியனுக்கும் கடவுள் இல்லை.

ஆரியனுக்கு மூல ஆதாரம் வேதம்; அந்த வேதத்திற்குக் காலம் இருந்தாலும், அந்த சமீப காலத்தில் உண்டாக்கப்பட்ட வேதத்திலகூட (ஆரியனுக்கு) கடவுள் தத்துவப்படி, கடவுள் காணப்படவில்லை; அதில் காணப்படுவதெல்லாம் தேவர்கள்தாம்; அந்தத் தேவர்கள் அனைவரும் இந்திரனுக்குக் கீழ்ப்பட்ட தேவர்கள்தாம். எனவே தமிழனுக்கோ, திராவிடனுக்கோ, ஆரியனுக்கோ கடவுள் என்பது இல்லவே இல்லை.

இருக்கும் கடவுள்கள் எல்லாம் தேவர்களில் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள்தாம்.

அவர்களும் மிகமிகக் கீழ்த்தரமான தன்மையுடையவர்களே; அதாவது, மனிதத் தன்மையிலும் கீழ்த்தரமான குணங்களைக் கற்பிக்கப்பட்டவர்களேயாவார்கள்.

அவர்களில் இன்று தமிழன் கொண்டாடும், வணங்கும் கடவுள் என்பவைகளில் எல்லா மூலாதாரமாகச் சொல்லப்படும் கடவுள்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று பெயர்கள் கொண்டவர்களேயாவர். அவர்கள் தனித் தனியானவர்கள் என்பதாகக் கருதியே அவரவர் பெயரால் மதமும், உயர்வு தாழ்வு சக்திகள் படைத்த சமயநூல் புராணங்களும் ஏற்பாடு செய்து பாவிக்கப்பட்டு வரப்படுகின்றன.

இந்தநிலை கடவுள் நம்பிக்கைக்காரர்களின் கடைநிலை என்று சொல்லப்படுவதாகும்.

ஏனென்றால், இம்மூன்று சமயத்தாரும், மூன்று கடவுள்களுக்கும் உருவம், ஆண்-பெண் தன்மை, இவைகளுக்கு மனிதத் தன்மை, மனித குணம்—அதுவும் மனிதனின் கீழ்த் தரமான குணங்கள் கற்பிக்கப்பட்டு அதன்படி நடந்து வருகிறவர்களாதலால், இந்த மூன்று சமய மக்களும் உலகினரால் காட்டுமிராண்டி மக்கள் என்று சொல்லத் தக்கவர்களாக ஆக்கப் பட்டு விட்டார்கள்.

அது மாத்திரமல்லாமல், கடவுள் நம்பிக்கையுள்ள உலகில் உள்ள மக்கள் யாவருமே மனித குணம் கற்பிக்கப்பட்ட கடவுளைத்தான் வணங்கி வருகிறார்களே தவிர, 'கடவுள் குணம்' என்பதானவற்றைக் கற்பித்த கடவுளை வணங்காதவர்களாகத்தாம் இருந்து வருகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



மற்றும், கடவுளை நம்புகிற, [illegible]கிற மக்களில் ஒன்றுபோன்ற கருத்துடையவர்களும் யாரும் இலர்.

கடவுள் சொன்னதாக—கடவுளுக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும், கற்பிக்கப்படும் ஆதாரங்கள் எவையும் ஒன்றுபோல் இல்லை.

கடவுள் தன்மைகளும் அவைபோலவேதான் அவரவர் இஷ்டப்படி கற்பித்துக் கொள்ளப்படுகின்றன. கடவுள் என்பதாக ஒன்றோ, பலவோ இல்லை என்பதற்கு இந்த விஷயங்களே போதுமான ஆதாரங்களாகும்.

உலகில் இப்போது கடவுள் நம்பிக்கைக்காரர்கள் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறார்கள். இதற்குக் காரணம், மக்களுக்கு அறிவுத் தன்மை, ஆராய்ச்சித் தன்மை, சிந்திக்கும் துணிவு ஏற்படுவதும், வளர்ந்து வருவதுமேயாகும். அதாவது, இப்போது கடவுள் நம்பிக்கையின் அவசியம் சுயநலக்காரனுக்கும் அயோக்கியனுக்குந்தான் அவசியமாகிவிட்டது.

வணங்கும் தன்மை, அறிவற்ற மூடனிடம்தான் அதிகம் காணப்படுகிறது.

இன்று உலக மக்கள் பெரும்பாலோருக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது. ரஷ்யா, சீனா, ஜப்பான், சயாம், பர்மா, சிலோன் முதலிய பலபெரும் ஜனத் தொகை கொண்ட நாடுகள் 100-க்கு 100-ம், 100-க்கு 90-ம், 100-க்கு 75-ம் வீதம் கடவுள் நம்பிக்கை இல்லாத மக்களைக்கொண்ட நாடுகளாக ஆகிவிட்டன.

மற்றும், அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய மேல் நாடுகளில் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் சங்கம் ஏராளமாக ஏற்பட்டு, அவற்றிற்குக் கோடிக் கணக்கான மக்கள் அங்கத்தினர்களாக இருப்பதோடு, இலட்சம், பத்து இலட்சம் கணக்கில் நூல்கள் பிரசுரித்து உலகம் முழுவதும் பரப்பப்பட்டு வருகின்றன.

இதற்குக் காரணம் என்னவென்றால், பொதுவாகவே அறிஞர்களால் மனித சமுதாய வளர்ச்சிக்கு, விஞ்ஞான வளர்ச்சிக்கு, சிந்தனை வளர்ச்சிக்குக் கடவுள் என்ற கருத்து பெரும் தடையாக, கேடாக இருக்கிறது என்ற கருத்து நாளுக்கு நாள் வளர்ந்து வருவதுதான்.

'ஞானிக்குக் கடவுள் இல்லை' என்பது, 2000 ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட ஆத்திகப்பரப்பு நூல்களிலேயே காணப்படும் சொல்லாகும்.

ஞானி என்ற தன்மைக்கும், கடவுள் தன்மை கற்பிக்கப்பட்டுவிட்டபடியால்—ஞானம் ஞானி என்பதுபற்றிக் கடவுள் நம்பிக்கைக்காரர்கள், மூடநம்பிக்கைக்காரர்கள் சிந்திக் காமலேயே போய்விட்டார்கள்.

எண்ணெய் இருந்தால்தான் விளக்கு எரியும் என்பதுபோல சிந்தனை இருந்தால் தான் உண்மை விளங்க முடியும்.

'கடவுள், சிந்தனைக்கு உரியதல்ல. ஏனென்றால்-கடவுள், சிந்தனைக்கும் மனத் துக்கும் எட்டாதவர்; மனம், வாக்கு, காயத்திற்கும் எட்டாதவர்' என்ற நிபந்தனையில் மனிதனுக்குள் கடவுளைப் புகுத்திவிட்டால், மனிதன் எப்படி அறிவு படைத்த ஜீவனாக இருக்கமுடியும்?

இப்போது உலகம் அறிவுத் துறையை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது.

சாதாரணமாக, நமது நாட்டில் இன்று ஆட்சிசெய்கிற அரசு, கடவுள் இல்லை என்ற கொள்கையுடைய பகுத்தறிவு ஆட்சி என்றால், அந்தத் தன்மையில் இந்த ஆட்சி ரஷ்யாவுக்கு அடுத்தபடியான ஆட்சியல்லவா?



மற்றும், நம்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபன ரூபமாய் இந்தியா முழுவதும், உலகம் முழுவதும் இயங்கிவருகிறதென்றால், கடவுள் இல்லை என்ற தன்மையில் அறிவு வளர்ச்சி, சிந்தனா சக்தி என்ற தன்மையில் முன்னேற்றமடைந்து வருகிறது என்பது, கல்லுப்போல் துலங்கவில்லையா? மற்றும், முதலாளித் தன்மை கொண்ட அய்ரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களில், முக்கிய நகரங்களில் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட கடவுளை மறுக்கும் சங்கங்கள் ஏராளமாக இருந்துவருகின்றன; மேலும் ஏற்பட்டு வருகின்றன என்றால் இதன் பொருள் என்ன?

ஒரு கைப் பிடிக்குள் அடங்கும் பாதிரிகளும், முல்லாக்களும், 'டுய்' என்றால் சாக்கடைக்குள் புகுந்து ஒளியும் பார்ப்பனர்களும்—அழியப் போகும், அழிந்துகொண்டு வரும் கடவுளை, அதுவும் இல்லாத கடவுளை 'நிறுத்தி வைத்து ஆணி அடிக்கிறோம்' என்றால், இதில் எப்படி அறிவுடைமை இருக்கமுடியும்?

மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் முயற்சியின் கணக்குப்படி இன்று 300 கோடி உலக மக்களுக்குள் 150 கோடிக்கும் குறைந்த மக்கள்தாம் 'கடவுள் நம்பிக்கைக்காரர்கள்' என்றும், மீதிப் பல கோடி மக்களிலும் முக்கால்வாசிப் பேர் பச்சை நாத்திகர் என்றும், மீதிப் பேர்கள் குழப்பக்காரர்கள் என்றும் மேல்நாட்டு ஆதாரங்களில் குறிப்பிட்டிருப்பதைக் கூறி இதை முடிக்கிறேன்.

['விடுதலை'–தலையங்கம்—5-8-1972]

## 7. கடவுள் நம்பிக்கைக்காரர்கள் பற்றிய என் கருத்து

ஒரு தேவதாசியை விபச்சாரி என்று சொன்னதற்காக அவள் கோபித்துக்கொள்வது போலும்; ஒரு 'வக்கீலை' அவர் காசுக்குப் பேசுகிறவரேயொழிய, நேர்மைக்காகப் பேசு கிறவரல்லர் என்று சொன்னால் அவர் கோபித்துக்கொள்வது போலும்; ஒரு வியாபாரியைப் பொய் பேசுகிறவர் என்று சொன்னால் அவர் கோபித்துக்கொள்வது போலும்—கடவுள் நம்பிக்கைக்காரர்களை 'முட்டாள், அயோக்கியன், காட்டுமிராண்டி' என்று சொன்னால் அவர்கள் கோபித்துக்கொள்கிறார்கள்!

இதற்குக் காரணம் பெருவாரியான மக்கள் இந்த நிலைக்கு ஆளாகியிருப்பது தானாகும்.

இன்றைக்கும் நான் கடவுள் நம்பிக்கைக்காரர்களைக் கேட்கிறேன்; ரூபாய் பதினாயிரம் பந்தயம் கட்டிக் கேட்கிறேன்—அதாவது, 'சர்வ வல்லமையுள்ள கடவுள் என்பதாக ஒன்றிருக்கிறது; அது சர்வ சக்தி, சர்வ வல்லமையுடையது என்பதை நான் என் மனம், மொழி, செய்கையால் நம்புகிறேன்; அதற்கேற்பவே நடந்துகொள்கிறேன்' என்று யாராவது ஒருவர் சொல்லட்டும்; சொல்ல முன்வந்து தன் நடத்தையைக் கொண்டு நிரூபிக்கட்டுமே பார்க்கிறேன்! அப்படி மெய்ப்பித்தால் ரூபாய் பதினாயிரம் தருகிறேன்; யாரிடம் வேண்டு மானாலும் கொடுத்துவைக்கிறேன் என்று கூறுகிறேன். யார் வருகிறார்கள்? எந்தப் பத்திரிகைக்காரர் பக்கத்தில் வரத் தயாராயிருக்கிறார்? எந்தப் பார்ப்பனர் வரத் தயாராயிருக்கிறான்?

வேறு யோக்கியமானவர்கள் யார் வேண்டுமானாலும் வரட்டும் என்று சவால் விடுகிறேன்.

இவ்விஷயத்தில் மக்கள் பெருவாரியாக முட்டாள்கள் என்கின்ற காரணத்தால்—நினைத்த அனாமதேயமெல்லாம் இவ்விஷயத்தில் வாயை வைத்துக் கண்டபடி உளறினால்—கண்டபடி எழுதினால் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் என்பவர்கள் யோக்கியர்களாக, அறிவாளிகளாக ஆகிவிடுவார்களா?

படிப்பகம்

www.padippakam.com



சில காரியங்களில் மக்கள் பொய் சொல்லியாகவேண்டும்; சில காரியங்களில் மக்கள் அயோக்கியர்களாக ஆகித் தீரவேண்டும்; சில காரியங்களில் மக்கள் முட்டாள்களாகித் தீர வேண்டும்; அதுபோல்தான் கடவுள் விஷயத்தில் மக்கள் 'மூன்றும்' ஆகித் தீரவேண்டும். இது எனது 70, 75 வருடத்திய அனுபவம்; கொள்கை; பேசியும் எழுதியும் வருவதுமான விஷயமாகும். இது மாத்திரமா?

உலகில் கடவுள் சம்பந்தமான சர்ச்சைகள் 2, 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடந்துவருகின்றன.

கடவுளைப்பற்றிய பிரச்சாரம் செய்ய- பார்ப்பனர், அவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள்; கிறிஸ்தவர், முஸ்லிம் ஆகியோர் ஸ்தாபனம் வைத்துப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்; கோயில், சர்ச், மசூதிகள் மூலமும் பண்டிகைகள் மூலமும் செய்கையில் பரப்பி வருகின்றார்கள். பார்ப்பனர் முதல் பலரும் கடவுளாலேயே, கடவுள் பிரச்சாரத்தாலேயே வாழ்ந்து வருகிறார்கள்; வயிறு வளர்க்கிறார்கள். இதற்காகப் பல கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள்-வரும்படிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன; பல செல்வர்கள் உதவி வருகிறார்கள். பாதிரி, முல்லா, சங்கராச்சாரி, குருமார், பண்டாரசன்னதி முதலிய பலர் பிரச்சாரம் செய்கிறார்கள். ஏராளமான புத்தகங்கள்-வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இலக்கியம் என்பதாக அனேக புத்தகங்கள் இருக்கின்றன. இவற்றின் பலனால் முட்டாள்கள், அயோக்கியர்கள், காட்டுமிராண்டிகள் இருப்பது மாத்திரமல்லாமல்-உற்பத்தியாகிக்கொண்டும் வருகிறார்கள்.

அறிவாளிகளாக, யோக்கியர்களாக இருப்பவர்கள் தங்கள் சுயநல காரியத்தைப் பார்த்துக்கொண்டு, இந்த முட்டாள்தனங்களைப்பற்றிச் சிந்திக்காமல் கவலையற்றிருக்கிறார்கள். கடவுள் பிரச்சாரகர்கள் அயோக்கியர்களும், மடையர்களுமானதால் காலித்தனமான-பலாத்காரமான காரியங்களில் ஈடுபட்டும் பல கொடுமையான கொலைபாதகங்களில் ஈடுபட்டும் மக்களைக் கொன்று குவித்து இருக்கிறார்கள்.

இதற்கு உதாரணம்—ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்கின்ற பல அயோக்கியர்களும், அவர்கள் சமணர்களையும், பவுத்தர்களையும் கொன்றுகுவித்த அயோக்கிய கொலை பாதகச் செயல்களுக்குத் தேவாரம், பிரபந்தம் முதலிய நூல்களுமே போதிய சான்றாகும்.

தொண்டரடிப் பொடியாழ்வார் என்கின்ற ஒரு வைணவப் பார்ப்பன அயோக்கியன், சமணர்களும் பவுத்தர்களும் கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் ஆனதால் அவர்களது தலையை அறுப்பதே (வெட்டுவதே) அவசியமாகும் என்று பாடியிருக்கிறான்.

அந்தப்படி, ஏராளமான பவுத்தர்களின் தலையை வெட்டியும் இருக்கிறார்கள். இவை இன்று காஞ்சி, செய்யாறு முதலிய இடங்களில் கற்சிலைகளாகவுமிருக்கின்றன. இது போலவே சம்பந்தன் என்னும் ஒரு அயோக்கிய சைவப் பார்ப்பான், 'சமண, பவுத்தர்களின் பெண்களைக் கற்பழிக்க வேண்டும்' என்றும், பல அயோக்கியத்தனமாகவும் கொலை பாதகமாகவும் பாடியிருக்கிறான்.

இன்றும் சீர்காழி, மதுரை முதலிய இடங்களில் சமணரைக் கழுவேற்றும் நிகழ்ச்சி, பண்டிகையாக—உற்சவமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

இப் பாடல்கள் இன்றும் வைணவர்களாலும், சைவர்களாலும் பக்திப் பாடல்களாகப் பாடப்பட்டு வருகின்றன. மற்றும், கடவுள் நம்பிக்கையில்லாதவர்களை மிக இழிவுபடுத்திப் பாடப்பட்ட பாடல்கள் அனேகம் பாடப்பட்டு வருகின்றன; நூல்களும் விற்கப்படுகின்றன.

இந்த நிலையில் கடவுள் நம்பிக்கைக்காரர்களைப்பற்றிச் சொல்லப்படும் கருத்துக்கள்—அதுவும் உண்மையான கருத்துக்கள் எப்படித் தவறானவைகளாகக் கருதப்பட முடியும் என்று கேட்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—11-10-1969]



## 8. கடவுள் புரட்டை உணர வேண்டாமா?

மதத்தின் பேரால், (ஏன், கடவுளின் பேரால், என்றும் சொல்லலாம்) உலகில் உள்ள எல்லா மக்களும், எல்லா நாட்டிலும், மதங்களின் அவ்வக் காலங்களின்போது காட்டுமிராண்டிகளாய், மூட நம்பிக்கைக்காரர்களாய், சிந்தனையற்ற முட்டாள்களாகவே இருந்திருக்கிறார்கள்.

ஆரியர்கள், அவர்கள் இனத்தவர்களான மேல் நாட்டவரை எடுத்துக்கொண்டாலும் கடவுள்-மதம் விஷயமாக இன்று அவர்களும் நாமும் பங்குகொள்ளும் எந்தக் கருத்தும் சுமார் 4,000 அல்லது 5,000 ஆண்டுகட்கு முன் அவைகளுக்கென்றே சொல்லும்படியான சொற்கள் இருந்ததாகவும் தெரியவில்லை; 4,000 ஆண்டுகட்கு முன்னதாக என்று சொல்லும்படியான காலத்திலேற்பட்ட ஆரிய வேதம் என்னும் கற்பனைக் கோவைகளிலும் கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ இன்று குறிப்பிடுவதைப் போன்ற சொற்களைக் காணவும் முடியவில்லை.

வேதம் என்பதில் காணப்படும் ஏதாவது 'கடவுள் தத்துவம்'கூட வேதத்திற்கு வியாக்கியானம் செய்தவர்களான சங்கரர், இராமானுசர், மாத்துவர் முதலிய மத குருமார் என்பவர்கள் தனித் தனியாக அவரவர்களுக்கென்று செய்துகொண்ட வியாக்கியானங்கள் கூட, கடவுளைப்பற்றி ஒன்றுக்கொன்று பொருந்தாத வகையில் உள்ளன. அந்தக் கருத்து வேற்றுமைகள்தாம் இன்று சங்கர, இராமானுச, மாத்துவ மதங்களாக உருப்பெற்றிருக்கின்றன.

இவர்கள் மூவரல்லாத ஒரு பொது மனிதன், வேதத்திற்கு இன்று வியாக்கியானம் செய்வதானால், வேதத்தில் கடவுள்களைக் காட்டவோ, காணவோ முடியாது.

வேதத்தில் பஞ்ச பூதங்களைத்தாம் காணலாம். ஆனால், அந்தப் பூதங்களுக்கு அக்காலக் காட்டுமிராண்டி மவுடீகத்திற்கேற்ப ஒவ்வொரு எஜமானர்களை ஏற்படுத்தி, பிறகு அவர்களே அவைகளாக ஆக்கப்பட்டு, அதனால் அவர்கள் தேவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்திரதேவன், வாயுதேவன், வருணதேவன், அக்கினிதேவன், பூமிதேவன் என்று இவை முறையே ஆகாயம், வாயு, அப்பு, தேயு, பிருதவி என்கிறவையான பஞ்ச பூதங்களைக் குறிப்பிடுபவையேயாகும். இவைகளைச் சேர்த்துவைக்கும் இயற்கைக்குப் பலவாறு பெயரிட்டுக் குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வைந்தின் கூட்டினால் ஏற்பட்ட உலகைத்தான் பிரபஞ்சம் என்று பெயரிட்டு அழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இன்று மதம்—கடவுள் 100-க்கு 97 பேரான 'இந்து' பாமர, பண்டித, பணக்கார மக்களை என்ன செய்திருக்கிறது? எப்படி நடத்துகிறது? என்பதைப்பற்றி எவருக்குமே கவலையில்லை என்பதுடன், மானமும் இல்லாமல் செய்துவிட்டதைச் சிந்திக்கவேண்டாமா?

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

## 9. கடவுள் கதை

கதை சொல்லுகிறவன்: ஒரே ஒரு கடவுள் இருந்தார்.

கதை கேட்பவன்: ஊம்; அவர் எங்கே இருந்தார்?

கதை சொல்லுகிறவன்: ஆரம்பத்திலேயே அதிகப் பிரசங்கமாய்க் கேட்கிறாயே! நான் சொல்லுவதை, ஊம் என்று கேட்டால்தான் இந்தக் கதை சொல்லுவேன்.

கதை கேட்பவன்: சரி, சரி. சொல்லு, ஒரே ஒரு கடவுள். அப்புறம்?

படிப்பகம்

www.padippakam.com



கதை சொல்லுகிறவன்: ஒருநாள் உட்கார்ந்துகொண்டு என்ன செய்வது என்று யோசித்தார்.

கதை கேட்பவன்: சரி; எப்போது?

கதை சொல்லுகிறவன்: பார்; மறுபடியும், இரட்டை அதிகப் பிரசங்கமாய்க் கேட்கிறாயே!

கதை கேட்பவன்: சரி, சரி; தப்பு—சொல்லப்பா சொல்லு.

கதை சொல்லுகிறவன்: உலகத்தை சிருஷ்டிக்கலாம் என்று முடிவு கொண்டார்.

கதை கேட்பவன்: அதற்குமுன் உலகம் இல்லைபோல் இருக்கிறது; உலகம் இல்லாமலே ஒருநாள் உட்கார்ந்துகொண்டு யோசித்திருக்கிறார் போலிருக்கிறது. அந்தரத்தில் உட்கார்ந்திருப்பார், பாவம்! (என்று நினைத்துக்கொண்டு, கொஞ்ச நேரம் பொறுத்து) சரி; அப்புறம்?

கதை சொல்லுகிறவன்: என்ன, இந்த மாதிரி—நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேட்காமல் எங்கெங்கேயோ யோசனையாய் இருக்கிறாயே!

கதை கேட்பவன்: இல்லை; நீ சொல்லுகிறபோதே சில சந்தேகங்கள் தோன்றின. அதைக் கேட்டால் கோபித்துக்கொள்ளுகிறாய்; அதிகப் பிரசங்கி என்று சொல்லி விடுகின்றாய். ஆதலால், மனத்திலேயே நினைத்துச் சமாதானம் செய்துகொண்டேன்.

கதை சொல்லுகிறவன்: அப்படியெல்லாம் சந்தேகம்கூடத் தோன்றக்கூடாது; கதை, பாட்டிக் கதையல்ல; கடவுள் கதையாக்கும்! இதை வெகு பக்தி சிரத்தையுடன் கேட்கவேண்டும். தெரியுமா?

கதை கேட்பவன்: சரி; அப்படியே ஆகட்டும்; சொல்லு பார்ப்போம்.

கதை சொல்லுகிறவன்: எதிலே விட்டேன்? அதுகூட ஞாபகமில்லை, உன் தொந்தரவினால்.

கதை கேட்பவன்: சரி, கோபித்துக்கொள்ளாதே. நீ விட்டது எதிலே என்றா கேட்கிறாய்? இரு; யோசனை பண்ணிச் சொல்லுகிறேன்.

ஒரே ஒரு கடவுள்; அவர், ஒருநாள் உட்கார்ந்துகொண்டு என்ன செய்வது என்று யோசித்தார்; உலகத்தை சிருஷ்டிக்கலாம் என்று எண்ணினார் என்பதில் விட்டாய். அதில் தொட்டுக்கொள். என்னை அதிகப் பிரசங்கி என்றாய்; எனக்காவது ஞாபகம் இருக்கிறது; மகா பக்தனாகிய உனக்கு மறந்து போகிறது—பாவம்! அப்புறம் சொல்லு.

கதை சொல்லுகிறவன்: பாவம், என்ன இழவு; உன்னுடைய தொல்லையில் எதுதான் ஞாபகமிருக்கிறது? அப்புறம் என்ன பண்ணினார் என்பதுகூட மறந்து போய் விட்டது. யோசனை பண்ணிச் சொல்லுகிறேன்; பொறு. (சற்று யோசித்து) முதலில்—'வெளிச்சம் உண்டாகக் கடவது' என்று சொன்னார்.

கதை கேட்பவன்: இருட்டில் உட்கார்ந்து கொண்டா இவ்வளவும் நினைத்தார்? பாவம்—கடவுளுக்கு எவ்வளவு பிரயாசை நம்மால்? அவர் கருணாநிதி என்பதற்கு இதை விட என்ன ருசு வேண்டும்?

கதை சொல்லுகிறவன்: அதையெல்லாம் நீ தெரிந்து கொள்ளுவதற்குத்தானே இந்தக் கதை சொல்லுகிறேன். இந்த மாதிரி கவனமாய்க் கேள்.

கதை கேட்பவன்: சரி, சரி; சொல்லு; உடனே வெளிச்சம் உண்டாய்விட்டதாக்கும்; கடவுளுக்கு ஏதோ போட்டி இருக்கும் போலிருக்கிறது.

கதை சொல்லுகிறவன்: என்ன போட்டி?



கதை கேட்பவன்: இல்லையப்பா; வெளிச்சத்தைத்தான் கடவுள் சிருஷ்டித்தார். அதற்கு முன் இருந்த இருட்டை—எவனோ அயோக்கியப் பயல் கடவுளுக்குத் தொந்தரவு கொடுக்கவேண்டுமென்று, போட்டிக்காக சிருஷ்டித்துவிட்டு ஓடிப்போய்விட்டான் போலிருக்கிறது. கண்டால் நான் அவனை என்ன செய்வேன் தெரியுமா?

கதை சொல்லுகிறவன்: தொலைந்து போகிறது; அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாதே. சொல்லுவதைக் கேள்!

கதை கேட்பவன்: சரி; சொல்லு!

கதை சொல்லுகிறவன்: அப்புறம்—'மேடு பள்ளம் எல்லாம் சமம் ஆக வேண்டும்' என்று கருதினார்; அதுபோலவே ஆயிற்று.

கதை கேட்பவன்: கடவுளுக்கு முன்னால் இருந்த மேடு பள்ளங்களை யெல்லாம் சமன் ஆக வேண்டும் என்று சொன்னாராக்கும்; அதெல்லாம் சமமாகிவிட்டதாக்கும். கடவுள்—நல்ல கடவுள்! எவ்வளவு ஞானமும், கருணையும் உடைய கடவுள்? மேடு பள்ளம் இருந்தால் நம்முடைய கதி என்ன ஆவது? இன்று போல் சமுத்திரமும், மலையும், குழியும், குன்றுமாக அல்லவா ஆகியிருக்கும்! ஆதலால் கடவுள் நல்ல வேலை செய்தார்.

ஆனால், அப்புறம் எவனோ புறப்பட்டு மறுபடியும் பழையபடி இருக்கட்டும் என்று மேடும் பள்ளமும், குழியும் குன்றும் ஏற்படும்படி செய்துவிட்டான் போலிருக்கிறது; இருக்கட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை. கடவுள் செய்த நன்மைகளை நினைத்து மகிழ்ந்து அவருக்கு நன்றி செலுத்துவோம். அப்புறம் என்ன செய்தார்?

கதை சொல்லுகிறவன்: அப்புறம், அதாவது வெளிச்சம் உண்டாகி மேடுபள்ளம் நிரவப்பட்ட பிறகு—மறுபடியும் யோசித்தார்.

கதை கேட்பவன்: சரி; யோசித்தார்.

கதை சொல்லுகிறவன்: அதற்குள் ஒரு நாள் முடிந்துபோய்விட்டது. அடுத்த நாள்—அதாவது இரண்டாவது நாள், 'காற்று உண்டாகக் கடவது' என்று சொன்னார்; உடனே காற்று உண்டாகிவிட்டது.

கதை கேட்பவன்: பிறகு என்ன செய்தார்?

கதை சொல்லுகிறவன்: அதற்கும் ஒரு நாள் ஆகிவிட்டது. பிறகு மூன்றாம் நாள், 'பூமி உண்டாகக் கடவது' என்று நினைத்தார்; பூமி உண்டாயிற்று. அன்றே, 'சமுத்திரம், செடிகள் உண்டாகக் கடவது' என்று நினைத்தார்; உடனே சமுத்திரம், செடிகள் உண்டாயின.

கதை கேட்பவன்: பிறகு?

கதை சொல்லுகிறவன்: இதற்குள் மூன்று நாட்கள் முடிந்துவிட்டன. - நான்காம் நாள் உட்கார்ந்துகொண்டு யோசித்தார்—யோசித்தார்—ரொம்பக் கஷ்டப்பட்டு என்ன செய்வது என்று யோசித்தார்.

கதை கேட்பவன்: அய்யோ, பாவம்! கடவுள் நமக்காக 'எவ்வளவு பாடுபட்டார்; மனிதர்களுக்கு நன்றி விசுவாசம் இருக்கிறதா? போனால் போகட்டும்; அப்புறம் என்ன செய்தார்? சொல்லு சீக்கிரம்!

கதை சொல்லுகிறவன்: அப்புறம் நான்காம் நாள் ஒரு முடிவுக்கு வந்தார். என்ன முடிவுக்குத் தெரியுமா? 'சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவைகள் உண்டாக வேண்டும்' என்று கருதி—'ஒரே அடியாய் இவ்வளவும் உண்டாகக்கடவது' என்று சொன்னார்; உடனே உண்டாகிவிட்டன.

படிப்பகம்

www.padippakam.com



கதை கேட்பவன் : சரி ; சரி. இப்போது புரிந்தது ; அந்தக் கடவுளின் பெருமை. நான் முன்பு சந்தேகப்பட்டதும், குறுக்குக் கேள்வி போட்டதும் அதிகப் பிரசங்கித்தனம் என்பது வெளியாயிற்று.

கதை சொல்லுகிறவன் : பார்த்தாயா, நான் அப்போதே சொல்லவில்லையா ? கடைசிவரை பொறுமையாய்க் கேட்டால் எல்லாச் சந்தேகமும் விளங்கிவிடும் என்று. எப்படி விளங்கிற்று ? சொல்லு பார்ப்போம்.

கதை கேட்பவன் : அந்தக் கடவுளின் பெருமை எனக்கு எப்படி விளங்கிற்று என்றால்—பூமி உண்டாவதற்கு முன்பே மேடு பள்ளத்தையெல்லாம் சமன் செய்தது ஒன்று; மற்றும் சூரியன், பூமி ஆகியவை உண்டாவதற்கு முன்பே நாட்கள் கணக்கு எண்ணவும், முதல் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள் கண்டுபிடிக்கவும் முடிந்ததுபார்—இது எவ்வளவு அற்புதமான செய்கை ! அப்புறம் மேலே சொல்லு. மிகவும் ருசிகரமாகவும் மகிமை பொருந்தியதாகவும் இருக்கிறது—இந்தக் கடவுள் கதை.

கதை சொல்லுகிறவன் : அதற்குள் என்ன தெரிந்து கொண்டாய் ? இன்னும் கேள்—எவ்வளவு அதிசயமாயும் ருசியாயும் இருக்கும் பார் ! அப்புறம் அய்ந்தாவது நாள் ஆயிற்று. ‘மீன்களும், பட்சிகளும் உண்டாகக்கடவது’ என்றார் ; உடனே ஆகிவிட்டன.

கதை கேட்பவன் : இத்தனை கோடி கோடி கோடி மீன்களும் ஒரே நாளில் ஆய் விட்டன என்றால் கடவுள் சக்தியும் பெருமையும் எப்படிப்பட்டது பார் ! அப்புறம் ?

கதை சொல்லுகிறவன் : அப்புறந்தான் விசேஷமான வேலை செய்கிறார். அதாவது ஆறாவது நாள் உட்கார்ந்து யோசித்து, யோசித்துப் பார்த்தார் ; ஒரு முடிவுக்கு வந்து, ‘மிருகங்களும் மனிதர்களும் உண்டாகக் கடவது’ என்றார் ; உடனே மிருகங்களும் மனிதர்களும் உண்டாகி விட்டன.

கதை கேட்பவன் : அப்பாடா ! கடவுள் வெகு பிரயாசைப்பட்டிருக்கிறாரே, ஒரு வாரம் போல் ! 6 நாள் விடாமல் கஷ்டப்பட்டு வெளிச்சம், சமம், காற்று, பூமி, சமுத்திரம், செடிகள், சூரியன், நட்சத்திரம், சந்திரன், மீன்கள், பட்சிகள், மிருகங்கள், மனிதர்கள் ஆகிய எவ்வளவு பண்டங்களையும், ஜீவன்களையும் சிருஷ்டித்திருக்கிறார் ! என்ன கஷ்டம்? இதற்காக அவருக்குக் களைப்பு, இளைப்பு ஏற்படவில்லையா ?

கதை சொல்லுகிறவன் : ஓடாதே—சொல்லுகிறேன் கேள். நமக்கு இருக்கிற புத்தி கடவுளுக்கு இருக்காதா ? ஏழாவது நாள் ஓய்வு எடுத்துக்கொண்டார் ; அதனால்தான் இப்போதும்கூட ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் ஆகக் கருதப்படுகிறது.

கதை கேட்பவன் : சரி ; புரிந்தது. கடவுள் தயவினால்—வேலை செய்யாதவன்கூட இப்பொழுது ஞாயிற்றுக்கிழமை ஓய்வெடுத்துக் கொள்கிறான். கடவுள் எவ்வளவு கருணை உடையவர் ? சரி ; அப்புறம் ?

கதை சொல்லுகிறவன் : மனிதரைக் கடவுள் சிருஷ்டித்தாரென்றால் எப்படிச் சிருஷ்டித்தார் தெரியுமா ?

கதை கேட்பவன் : அதைக் கேட்கவேண்டும் என்றுதான் நினைத்தேன். நீ அதிகப் பிரசங்கிக் கேள்வி என்று சொல்லிவிடுவாயே என்று விட்டுவிட்டேன். ஆனாலும், நல்ல வேளையாய் நீயே சொல்லப் புறப்பட்டுவிட்டதால் அதுவும் அந்தக் கடவுள் செயலாகத்தான் இருக்கவேண்டும் ; சொல்லு, சொல்லு.

கதை சொல்லுகிறவன் : முதல் முதலில் ஒரே ஒரு மனிதனைச் சிருஷ்டித்தார் ; பிறகு அவனுடைய விலாவிலிருந்து எலும்பை எடுத்து, அந்த எலும்பிலிருந்து ஒரு பெண்ணைச் சிருஷ்டித்து இரண்டுபேரையும் ‘ஜோக்காக’ ஒரு நந்தவனத்தில் உலவச் சொன்னார். அந்த நந்தவனத்தில் சில பழச்செடிகள் இருந்தன. அந்தப் பழச்செடிகளில் ஒரு பழச் செடியின் பழத்தைச் சாப்பிடக்கூடாது என்று கடவுள் அந்த ஆண், பெண் இருவருக்கும்



சொல்லிவைத்தார். கடைசியாக அந்த ஜோடி—கடவுள் வார்த்தையைத் தட்டி விட்டு, பிசாசு வார்த்தையைக் கேட்டு அந்தப் பழத்தைச் சாப்பிட்டுவிட்டது.

கதை கேட்பவன் : நில்லு, நில்லு ! இங்கே எனக்குக் கோபம் வருகிறது—அந்தக் கோபம் ஆறினால்தான் மேற்கொண்டு கதை கேட்கமுடியும்.

கதை சொல்லுகிறவன் : என்ன கோபம் ?

கதை கேட்பவன் : அதெப்படி—அங்கே சாத்தான் வந்தான் ? அவனை யார் சிருஷ்டித்தது ? மேற்படி ஆறு நாள் வேலையிலும், கடவுள் சாத்தானைச் சிருஷ்டிக்கவே இல்லையே ! அந்தப் பயலை வேறு எந்தப் பயலோ சிருஷ்டித்தல்லவா கடவுளுடன் போட்டி போட, அந்த நந்தவனத்துக்கு அனுப்பியிருக்கவேண்டும் ? அந்தப் பயலைக் கண்டுபிடித்து அவனுக்குத் தகுந்த புத்தி கற்பிக்க வேண்டாமா ? ஒரு சமயம், கடவுளும் தனது பெருந் தன்மையில்—அந்தச் சாத்தானையும் அவனைச் சிருஷ்டித்த மற்றொரு சாத்தானையும் சும்மா விட்டிருப்பார். நமக்குப் புத்தியும் ரோசமும் வேண்டாமா ? அந்தச் சாத்தானையும் அவனைச் சிருஷ்டித்தவனையும் கண்டுபிடித்துத் தகுந்தபடி புத்தி கற்பிக்காவிட்டால் நமக்கும் மற்ற மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம் ? இதுதான் என்னுடைய ஆத்திரம். இதற்கு ஒரு வழி சொல்லு—எனக்குக் கோபம் வந்து வந்து போகிறது.

கதை சொல்லுகிறவன் : ஆத்திரப்படாதே, நான் சொல்வதைப் பூராவும் கேள். பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

கதை கேட்பவன் : சரி சொல்லித் தொலை ! நமக்கென்ன—மானமா, வெட்கமா, அறிவா—என்ன இருக்கிறது ? எவன் வந்து என்ன செய்தாலும் பொறுத்துக் கொண்டு, சாமி மாடு மாதிரி தலையை ஆட்டவேண்டியதுதானே ! அப்புறம் ?

கதை சொல்லுகிறவன் : அந்தப் பழத்தைச் சாப்பிட்ட இருவருக்கும் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன.

கதை கேட்பவன் : ஆளுக்கு ஒரு குழந்தையா ?

கதை சொல்லுகிறவன் : இரண்டு பேருக்கும் சேர்ந்து இரண்டு குழந்தைகள் பிறந்தன.

கதை கேட்பவன் : சரி ; அப்புறம் என்ன ஆயிற்று ?

கதை சொல்லுகிறவன் : என்ன ஆவது ? பிசாசு பேச்சைக் கேட்டதால் பிறந்த பிள்ளை, யோக்கியமாக இருக்குமா ? அவைகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டு—இளையது மூத்ததைக் கொன்றுவிட்டது.

கதை கேட்பவன் : கலிகாலமல்லவா ? ‘மூத்தது மோழை இளையது காளை’—கொல்லாமல் இருக்குமா ? அப்புறம் ?

கதை சொல்லுகிறவன் : இளையவனை, கடவுள்—‘உன் அண்ணன் எங்கே ?’ என்று கேட்டார். இளையவன், ‘எனக்குத் தெரியாது’ என்று சொன்னான். உடனே கடவுள் கோபித்துக்கொண்டு அந்த ஆதி ஆண்-பெண் ஆகியவர்களிடத்தில் மறுபடியும் ஒரு குழந்தை உண்டாகும்படி செய்தார்.

கதை கேட்பவன் : எப்படியோ செய்தார்—அப்புறம் ?

கதை சொல்லுகிறவன் : இதற்குள்ளாக கொச, கொசவென்று குழந்தைகள் பெருகி விட்டன ; இவைகள் எல்லாம் அயோக்கியர்களாக இருந்தன. இவைகளில் ஒன்று தவிர மற்றவைகள் எல்லாம் இறந்து போயின.

கதை கேட்பவன் : அய்யய்யோ ! அப்புறம் கடவுள் என்ன செய்தார் ?



படிப்பகம்

www.padippakam.com



கதை சொல்லுகிறவன்: என்ன செய்தார்...! மிஞ்சின குழந்தையை ஒரு கப்பல் தயார் செய்யச் செய்து—அதில், கடவுள் முன் உற்பத்தி செய்த பொருள்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு தண்ணீரில் மிதக்கச் சொன்னார். அந்தப்படியே மிதந்தான்; அந்தச் சந்தர்ப்பத்தில் பெரிய மழை பெய்து எங்கும் பிரளயமாக ஆகி உலகமே அழிந்துவிட்டது. அந்தக் கப்பல் மாத்திரம் மிஞ்சிற்று. மீதியான கப்பலினாலும்—அதிலிருந்தவர்களாலும் இப்பொழுது காணப்படுகிற உலகமும் அதிலுள்ள சகலமும் உண்டாயின.

கதை கேட்பவன்: கப்பலில் சந்திரன், சூரியன், நட்சத்திரம் முதலிய எல்லாம் ஏற்றப்பட்டு எல்லாம் மூழ்கிப் போச்சாக்கும்.

கதை சொல்லுகிறவன்: ஆம்; எல்லாம் அடியோடு மூழ்கிவிட்டன.

கதை கேட்பவன்: போதுமப்பா; இன்னும் இதற்குமேல் சொன்னால், என்னால் கேட்கமுடியாது. நல்ல தங்கமான கதை இது.

கதை சொல்லுகிறவன்: சரி, அப்படியானால் இப்பொழுது நிறுத்திவிட்டு, மற்றொரு நாளைக்கு, இன்னொரு கடவுளுடைய கதையை நான் சொல்லுகிறேன். நீ கேள்!

['சித்திர புத்திரன்' உரையாடல்—'பகுத்தறிவு' மலர் 2. இதழ் 1.-1936]

## 10. கடவுள் பக்தி

உலகில் மனிதனுக்குத்தான் கடவுள் கற்பிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, மற்ற ஜீவராசிகளுக்கும், புல், பூண்டு தாவரங்களுக்கும் கடவுள் என்கின்ற உணர்ச்சியே கிடையாது. ஆனால், அவையெல்லாம் மனிதர்களைப் போலவே தோன்றி, வாழ்ந்து, செயல்பட்டு, அழிந்து மாய்ந்து போகின்றன.

தோன்றி, வாழ்ந்து, அழிந்து, மாய்ந்து போவதில் மனிதர்களுக்கும், மற்ற ஜீவராசி, புல், பூண்டு, தாவரங்களுக்கும் மற்ற பொருள்களுக்கும் எவ்வித மாறுதலும் காணமுடிவதில்லை.

பிறவியில் இயற்கையால் உள்ள பேதங்களால் சில மாறுதல்களைக் காண்கிறோம். அம் மாறுதல்களின் அடிப்படையில் பேதம் எதுவும் காண்பதற்கில்லை.

ஜீவ நூல், ஜீவ ஆராய்ச்சி வல்லுனர்கள் ஆதியில், அதாவது உலகம் ஏற்பட்ட, தோன்றிய காலத்தில் மனிதனும், மற்ற மிருகாதி ஜீவப் பிராணிகளும் ஒன்றுபோலவேதான் நடந்து வாழ்ந்துவந்தன என்று குறிப்பிடுகிறார்கள்.

மனிதனுக்கு மற்ற ஜீவராசிகளைவிட அறிவுத் துறையில் சிறிது மாற்றம் இயற்கையில் இருந்து வருகிற காரணத்தால், மனிதனுக்கு ஆசைப் பெருக்கெடுத்து வாழ்க்கையில் பெரும் கவலைக்கு ஆளாகி, அதனால் துக்க சுகத்திற்கும் ஆளாகி உழலுகிறான். ஆசையும் மடமையும் சேர்ந்தே மனிதனுக்குக் கடவுள் கற்பிக்கப்பட்டுப் புகுத்தப்பட்டு அறிவின் பயனைக் கெடுத்துக்கொண்டு, கவலைக்கும், துக்க-சுகத்திற்கும் ஆளாகி அழிகிறான்.

மனித சமுதாயத்தில் கடவுள் கற்பனை புகுத்தப்படாமலிருந்தால், மனிதர் நிலையே இன்று வேறாக இருக்கும்.

அதாவது, கவலையற்ற—துக்கமற்ற வாழ்வு வாழும்படியான நிலையை மனிதன் எய்தி இருப்பான்.

இன்று கவலையும் துக்கமும் இல்லாத மனிதனைக் காண்பதே அரிதாயிருக்கிறது. எந்த உயர்நிலையில் இருப்பவனுக்கும் கவலையும், துக்கமும் குடிகொண்டிருக்கிறது. கடவுள் எண்ணத்தை ஒழித்தவர்களுக்குக் 'கடவுள் இல்லை, எல்லாம் இயற்கை' என்று



எண்ணியிருப்பவர்களுக்குத் துக்கம், கவலை இல்லாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களைத்தான் ஞானிகள்—முற்றும் துறந்த மெய்ஞ்ஞானிகள் என்று சொல்லுவார்கள். அந்த நிலையை மனிதன் எய்துவது எளிதல்ல. ஞானம் தோன்றும்; துறவு தோன்றும். தோன்றியவன் உலகில், மக்களிடையில் வாழ்வதால், அடிக்கடி சறுக்கி விழுந்து, கவலைக்கும் துக்கத்திற்கும் ஆளாகி விடுகிறான். என்றாலும் நாம் அறியாமல், நமக்குத் தெரியாமல் யாராவது ஒரு துறவி இருந்தாலும் இருக்கலாம்.

'மோட்சம்' என்ற சொல்லுக்கும் 'முக்தி' என்ற சொல்லுக்கும் உண்மையான கருத்து (அர்த்தம்) கவலையற்ற தன்மை, துக்கமற்ற தன்மை என்றுதான் பொருள். மோட்சம் (அல்லது முக்தி)—துக்க நாசம். இந்த நிலை கடவுள் (ஒருவர் அல்லது பலர்) இருக்கிறார் என்கின்ற எண்ணமுடையவனுக்கு என்றுமே தோன்றாது.

எவ்வளவுக்கெவ்வளவு கடவுள் கருத்து ஆழமாகப் பதிகிறதோ—உடைத்தானவனாய் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் ஆயுள் பரியந்தம் துக்கமும் கவலையும் கொண்டவனாகத்தான் இருப்பான்; பேராசைக்காரனாகத்தான் இருப்பான். பொதுவாகவே இன்று பார்ப்போமேயானால், கடவுள் பக்தன், கடவுளை வணங்குகிறவன்—அவன் முட்டாளானாலும், அறிவாளியானாலும் எதற்காக வணங்குகிறான்? என்ன எண்ணத்தில் வணங்குகிறான்? ஏதோ ஒரு வேண்டுகோளின் மீதுதானே—எதையோ எதிர்பார்த்து, ஆசைப்பட்டுத்தானே வணங்குகிறான்?

'எனக்கு ஒன்றுமே வேண்டாம்' என்று சொல்பவனாய் இருந்தாலும், 'உன் பாதாரவிந்தம் வேண்டும்' என்றாவது சொல்லித்தானே கும்பிடுவான்? இவன் யாருக்குச் சமம் என்றால் 'எனக்குப் பின்புறம்—பிடரியில் ஒரு கண் இருக்கவேண்டும்' என்று கடவுளை வணங்குகிறவனுக்குச் சமமானவன்தானே!

ஏதாவது ஒன்றை வேண்டித்தானே பக்தி, வணக்கம், பூசை, தொழுகை, பிரார்த்தனை முதலியவை எல்லாம்! ஒன்றும் வேண்டாதவனுக்குக் கடவுளிடம் என்ன வேலை?

அதிலும் தவறு செய்தவன், மோசடி செய்தவன், செய்கிறவன், பேராசைக்காரன் ஆகியவர்களுக்குத்தான்—கடவுள் பக்தி, பூசை முதலியவை அதிகமாக இருப்பதைக் காண்கிறோம்.

எனக்குச் சுமார் பத்து ஜெயில்களில் இருந்த அனுபவம் உண்டு. கொலைக் கைதி முதல் எல்லாக் கைதிகளும் அவனவன் அறையில் ஏதாவது ஒரு சாமி படம், சிலர் ஏதாவது ஒரு புராணம், 'பக்திநூல்' வைத்து, பூசை, பிரார்த்தனை செய்துகொண்டு இருப்பதைத்தான் பார்த்தேன்.

இராஜமுந்திரி (கோதாவரி) ஜெயிலில் ஒரு கைதி—கொலை செய்தவன்; ஆயுள் தண்டனை அடைந்தவன். அவன் காலை 10 மணிக்குக் குளித்துவிட்டு, அரைமணிநேரம் ஒற்றைக் காலில் நின்று, கைகளைத் தலைக்குமேல் தூக்கிக் கூப்பிக் கும்பிட்டுக் கொண்டு, எதையாவது சொல்லிக்கொண்டே நிற்பான். அவன் படித்தவன்; கொஞ்சம் பணக்காரனும் கூட. எதற்காக இவ்வளவு பக்தி, பூஜை என்று கேட்டதற்கு, 'சீக்கிரம் விடுதலையாவதற்கு' என்று சொன்னான். இப்படி எத்தனையோ கைதிகள் குளித்தவுடன் சாம்பலைப் பூசிக் கொண்டு சாமி கும்பிடுவதைப் பார்த்தேன்.

இலஞ்சம் வாங்கும் சைவன், இலஞ்சம் வாங்கும் வைணவன், இலஞ்சம் வாங்கும் முஸ்லிம், இலஞ்சம் வாங்கும் கிறிஸ்தவன் முதலிய இவர்கள்—பெரிதும் பூசை, வணக்கம், தொழுகை, பிரார்த்தனை இவைகளில் மிகக் கண்டிப்பாக—தவறாமல் நடத்துகொள்கிறார்கள்.

அதிக பக்தி, பூசை, தானம், தர்மம், உபயம், கட்டளை உள்ள வியாபாரிகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! ஆகவே, மனிதனிடம் கடவுள் நம்பிக்கை, கடவுள் பக்தி

படிப்பகம்

www.padippakam.com



இருப்பதெல்லாம் ஆசை காரணந்தானேயொழிய, மனிதனை ஒழுக்கமுடையவனாக்கவோ, மற்றவர்களுக்குப் பயன்படும்படி செய்யவோ அல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டுமாய் வேண்டுகிறேன்.

[நூல் : 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

## 11. மனிதன் எதற்காகக் கடவுளை வணங்குகிறான்?

உலகில் மனிதனுக்குக் கடவுள் நம்பிக்கையும், கடவுள் வணக்கமும், கடவுள் பக்தியும், கடவுள் தொண்டும் எப்படி ஏற்படுகின்றன? ஏன் செய்யவேண்டியதாகிறது?

இவற்றை, இவற்றில்பட்ட ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவேண்டியது பகுத்தறிவுள்ள மனிதனின் கடமையாகும். முதலாவதாக, மனிதனுக்குக் கடவுள் நம்பிக்கை எப்படி உண்டாகிறது?

தானாகவே ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் நம்பிக்கை அவன் பிறந்தபோதே உண்டாகிறதா? கடவுள் நம்பிக்கையுடனேயே பிறக்கிறானா? அல்லது, மனிதனுக்குக் குழந்தைப் பருவத்திலேயே கடவுள் நம்பிக்கை புகுத்தப்பட்டதால் ஏற்படுகிறதா? என்பதைச் சிந்திக்கவேண்டும்.

உலகிலேயுள்ள கோடானுகோடி யானை முதல் கிருமி ஈறாக உள்ள ஜீவராசிகளில் மனிதனைத் தவிர, அதுவும் மனிதரிலும் பல பேர்களைத் தவிர, மற்ற எந்த ஜீவராசிக்கும், கோடிக்கணக்கான மனித ஜீவனுக்கும் கடவுள் நம்பிக்கை என்பது அறவேயில்லை. மனிதரிலும், உலகில் பகுதிப்பட்ட மனிதருக்கும் கடவுள் நம்பிக்கை புகுத்தப்படுகிறது, கற்பிக்கப்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில், கடவுள் நம்பிக்கை உள்ள மக்கள் எல்லோருமே ஒரே மாதிரியான கடவுளிடம் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர். எப்படியெனில், கடவுள் நம்பிக்கைக்காரர்கள் ஒரே மாதிரியான, ஒரே பெயருள்ள, ஒரே மாதிரியான எண்ணிக்கை கொண்ட, ஒரே மாதிரி உருவங்கொண்ட கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர்; ஒரே மாதிரி குணங்கொண்ட கடவுள் நம்பிக்கைக்காரர்களும் அல்லர்; ஒரே மாதிரியான கடவுள் தன்மை, ஒரே மாதிரியான கடவுள் சக்தி, ஒரே மாதிரியான கடவுள் செயல் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமல்லர்.

இதற்குக் காரணமென்ன? கடவுள் நம்பிக்கையும், அதன்மேல் சொல்லப்பட்ட பலவாறான தன்மைகளும் மனிதனுக்கு இயற்கையாய்த் தானாகத் தோன்றாமல், மற்றவர்கள் கற்பிப்பதாலும், கற்பிக்க நேருவதாலும், சூழ்நிலையாலும், தான் அனுசரிக்கும்—தான் கட்டுப்பட்ட மதத்தாலும், மத ஆசாரங்களாலும், மதக் கற்பனை, மதக் கட்டுப்பாடு என்பவைகளாலுமே ஏற்படுவதால்—இவைபற்றிய விஷயங்களில் ஒன்றுபோல் நம்பிக்கை கொள்ள முடிவதில்லை.

மேற்கண்ட கருத்துக்கள் சாதாரணமாகக் கிறிஸ்துவ மதக்காரனுக்கு ஒருவிதம்; இஸ்லாம் மதக்காரனுக்கு ஒருவிதம்; இந்துமதக்காரனுக்கு ஒருவிதம்; இந்து மதத்திலேயே சைவனுக்கு ஒருவிதம்; வைணவனுக்கு ஒருவிதம்; சைவ, வைணவத்திற்குள்ளாகவே பல பிரிவுகள்; அப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதம். மற்றும், பல காரணங்களால் பலருக்குப் பல மாதிரி நம்பிக்கை ஏற்படுகிறது. இவற்றிலும் 'கீழ்நிலை' அறிவில் இருப்பவர்களுக்கு ஒருவிதமாகவும், 'மேல்நிலை' அறிவில் இருப்பவர்களுக்கு ஒருவிதமாகவும் தோன்றப்படுகிறது.

இவற்றிற்கெல்லாம் காரணம்—வாய்ப்பு, கற்பிப்பு, சூழ்நிலை, தேவை (சுயநலம்) என்பதல்லாமல் வேறு எதைச் சொல்லமுடியும்?

கடவுளைப்பற்றிக் கற்பித்தவர்கள் யாரானாலும் தாய், தந்தையார், குரு, சமயங்கள், நூல்கள் . எதுவானாலும்—கடவுளை வணங்கினால் நலம் பெறலாம் என்கின்ற ஓர்



இலட்சியத்தை அடிப்படையாக வைத்தே புகுத்தியிருக்கிறார்கள் என்பதோடு—தாங்களும் மற்றவர்களுக்குப் புகுத்தியவர்களும் கடவுளை நம்பினால், வழிபட்டால், பிரார்த்தித்தால் தங்களுக்கு வேண்டிய நலன்கள் கிடைக்கும்; கிடைக்கலாம் என்ற நம்பிக்கையுடனே இருக்கிறவர்களாவார்கள். மற்றும், தங்கள் தவறு மன்னிக்கப்படும்; தங்கள் தகுதிக்கு மேல் பலனடையலாம் என்பவையான எண்ணங்களே, ஆசைகளே, பேராசைகளே நம்பிக்கைக்கும், வழிபாட்டிற்கும், தொண்டிற்கும் காரணமாக இருக்கின்றன.

உண்மையான பொது உடமை மதக்காரனுக்கும் (கொள்கைக்காரன்), சமதர்மக் கொள்கைக்காரனுக்கும், பவுத்தனுக்கும், பகுத்தறிவுவாதி (நாத்திகர்)களுக்கும் இந்த எண்ணங்கள்—அதாவது, சுயநலத்திற்காகக் கடவுளை நம்புதல், கடவுளை வணங்குதல், பிரார்த்தித்தல் முதலிய குணங்கள், எண்ணங்கள் தோன்றுவதில்லை என்பதோடு, தோன்றப்பட்டவர்களையும் முட்டாள்கள் என்றும், பேராசைக்காரர்கள் என்றும், மற்ற மக்களை ஏய்ப்பவர்கள் என்றுமே கருதுகிறார்கள்.

'கடவுள்' என்ற சொல்லும் கருத்தும் உண்மையற்றதும் பொருளற்றதுமாய் இருப்பதால், அவற்றைப் பற்றி ஒரு பொருள், ஒரு தன்மை இல்லாமல் பல ஆயிரக்கணக்கான கருத்துக்கள் ஏற்பட்டுவிட்டன.

எந்த ஜீவனுக்கும்-அதுவும் அறிவற்ற, சிந்தனையற்ற எந்த ஜீவனுக்கும் தேவையில்லாத கடவுள்—பகுத்தறிவுள்ள, சிந்தனையுள்ள, சுதந்திரமுள்ள தனக்கு வேண்டியதையும், தன்னையும், தேடிக் காப்பாற்றிக் கொள்ள, தனது நல்வாழ்வை, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள, தனக்குவரும் கேடுகளைத் தவிர்த்துக்கொள்ள சக்தியுள்ள மனிதனுக்கு, கடவுள் செயல், கடவுள் அருள் எதற்காகத் தேவை என்று கேட்கிறேன்.

கடவுளே அப்படிப்பட்ட எண்ணத்தை ஏற்படுத்தினார் என்றால், கடவுள் மேற்கண்ட வசதியற்ற மற்ற ஜீவராசிகளுக்கு ஏன் ஏற்படுத்தவில்லை என்பதற்குக் கடவுள் நம்பிக்கைக்காரர்கள், கடவுள் அருள் தேடுகிறவர்கள் என்ன பதில், சமாதானம் சொல்ல முடியும்?

மேற்கண்ட கடவுள் தன்மைகள் எல்லாம் மனிதனுக்குப் பாஷைகளைப்போல், நாடுகளைப்போல், மதங்களைப்போல், பிறந்து வளர்ந்த, பழகிய இடங்களுக்கு ஏற்ப ஏற்படும் தன்மையே தவிர, இயற்கையானது, ஜீவ உரிமையானது என்று எந்தக் காரணத்தைக் கொண்டும் சொல்லமுடியாதே!

தேசப் பற்று என்றும், மொழிப் பற்று என்றும், வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் முட்டாள்களும் கற்பித்துக்கொண்டு பலனடையப் பார்ப்பது எப்படியோ, அப்படியே சுயநலக்காரர்களும், முட்டாள்களும் கடவுள் அருள், கடவுள் பக்தி, கடவுள் பற்று, கடவுள்கள் தன்மை, கடவுள்கள் எண்ணிக்கை, கடவுள்கள் உருவம் என்பனவாகியவெல்லாம் கற்பித்துக் கொண்டு, மக்களை ஏய்க்கவும், மடையர்களாக்கவும் கங்கணம் கட்டிக்கொண்டு, மனித சமுதாய வளர்ச்சியைப் பாழாக்குகிறார்கள் என்பதல்லாமல், இவற்றில் எந்தவித உண்மையும் நாணயமுமில்லை.

கடவுள் பணிக்காகப் பாதிரிகள், முல்லாக்கள், சங்கராச்சாரியார்கள், ஜீயர்கள், பண்டார சன்னிதிகள், குருக்கள், பூசாரிகள் முதலிய இந்தக் கூட்டங்கள் மனிதனுக்கு எதற்காகத் தேவை?

இவற்றால் இந்தக் கூட்டத்தினர்தாம் கவலையற்று, உழைப்பற்றுச் சுகபோக வாழ்வு வாழ்கிறார்களேயொழிய இவர்களால் யாருக்கு, எந்த ஜீவனுக்கு என்ன பயன்?

மற்றும், கடவுளை ஏற்படுத்தி, மதத்தை ஏற்படுத்திக் கடவுள் பெயரால், மதத்தின் பெயரால் பல நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி, மக்களை இயற்கைக்கும் நேர்மைக்கும், சுதந்திரத்திற்கும் கேடாக நடக்கும்படி—நடக்க வேண்டியதாய்ப் பல கருத்துக்களைக் கற்பனை செய்து மக்களை வஞ்சிக்கிறார்கள்,

படிப்பகம்

www.padippakam.com



உலகிலாகட்டும், நம் நாட்டிலாகட்டும்—கடவுள், மதம், சாஸ்திரம், தர்மம் என்பவை கற்பிக்கப்பட்டிராவிட்டால், உலகில் ஏழையேது? பணக்காரன் ஏது? பாட்டாளி மகன் ஏது? முதலாளி ஏது? பறையன் ஏது? சூத்திரன் ஏது? பார்ப்பான் (பிராமணன்) ஏது? பட்டினி கிடப்பவன் ஏது? வயிறு புடைக்க உண்டு புரளுபவன் ஏது?

இவ்வளவு கொடுமைகளை, பேதங்களை சமுதாயத்தில் வைத்துக்கொண்டு பரிதாபம், பச்சாதாபம் இல்லாமல் முட்டாள்தனமாக, பித்தலாட்டத்தனமாக, மோசமாக—'கடவுளை நம்பு; கடவுளை வணங்கு; கடவுள் சொன்னபடி நட! உனக்குத் தரித்திரம் நீங்கும்; இழிவு நீங்கும்; அடிமைத்தனம் நீங்கும்' என்றால், இப்படிப்பட்ட இவர்கள்—அறிவும், பரிதாபமும் கொண்ட ஜீவன்கள் ஆவார்களா?

ஆகவே, கடவுள் என்பதும், பிரார்த்தனை என்பதும், கடவுள் அருள் என்பதும் கைதேர்ந்த பித்தலாட்டக்காரர்களின் மோசடி, தந்திரம் என்றுதான் சொல்லவேண்டும். நாம் சமதர்மம் அடைய ஆசைப்பட்டு இறங்கிவிட்டோம். இனி இப் புரட்டுக்கும் முட்டாள் தனத்திற்கும் இடம் கொடுக்கக்கூடாது என வேண்டிக்கொள்கிறேன்.

[நூல்: 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

## 12. கடவுள்களின் நாசவேலைகள்

பெருமழையினால் பயிர்களுக்குக் கேடு, நாசம் என்பது ஒருபுறமிருந்தாலும் மற்றும், ஜீவப் பிராணிகள், கால்நடைகள், வீடுகள் இவைகளுக்குப் பெருஞ்சேதங்களும் ஏற்படு கின்றன. இது போலவே, பூகம்பங்களாலும் மக்களுட்பட ஜீவப் பிராணிகளும் மாள்வதோடு, ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்தும், மறைந்தும் நாசமாகிப் போகின்றன. அதுபோலவே இடி-பேரிடி விழுவதாலும், மக்களுக்கும் ஜீவன்களுக்கும், வீடுகளுக்கும் பெருஞ்சேதங்கள் உண்டாகிவிடுகின்றன.

போதாக்குறைக்குப் பெரும்புயல் காற்றுகள் ஏற்பட்டு இவைபோன்றே பெருங்கேடு களும், சேதங்களும், நாசங்களும் ஏற்பட்டு விடுகின்றன.

இதில், சிந்திக்கும்படியான விஷயம் என்னவென்றால்—மேற்கண்ட கேடுகளில், சேதங்களில், நாசங்களில், ஜீவஅழிவுகளில் எந்த ஒருசிறு அளவுக்கும் ஆறறிவு படைத்த மனித வர்க்கத்தால், எந்தவிதமான பாதுகாப்பும் செய்துகொள்ள முடியாத நிலையில் அனு பவித்தே தீர வேண்டியதாகவும், பலவற்றைப்பற்றி அவை நிகழும்வரை தெரிந்துகொள்ளவே முடியாததாகவும் இருப்பதாகும்.

இந்த நிலைக்குக் காரணம் என்ன? 'கடவுள் சித்தம்' என்பதுதானே? அது உண்மையாயிருக்குமானால் இதிலிருந்து கடவுளையோ, கடவுள் சக்தியையோ எவ்வளவு அயோக்கியத்தனமானவன் என்று கருத வேண்டியிருக்கிறது! இந்நிலையில் கடவுள் இருப்பானேயானால் அவன் உலகத்தைப் படைத்ததே முட்டாள்தனம் அல்லது அயோக்கியத் தனம் என்றுதானே சொல்லவேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்த மாபெரும் உலகத்தைப் படைத்து, அதில் ஏராளமான ஜீவன்களைப் படைத்து, அவைகள் திருப்தியாய் வாழ்வதற் கில்லாமல்—பசி, பட்டினி, நோய், துன்பம், தொல்லை, வேதனைகள் உண்டாக்கி நாச மடையச் செய்வதென்றால், இதில் அறிவுடைமையோ, கருணையுடைமையோ, நேர்மை—ஒழுக்கமுடைமையோ என்ன இருக்கிறது?

இப்படிப்பட்ட கடவுளால், இப்படிப்பட்ட நாசவேலைகள் ஏற்படுவதல்லாமல் நல்ல காரியங்கள் என்று சொல்லப்படுபவைகளில்—எது செய்யப்படுகிறது?

இதை ஏன் எடுத்துக்காட்டுகிறேனென்றால், இந்த நிலையிலுள்ள—ஒரு (இல்லாத) கடவுளுக்காகவென்று ஆறறிவு (பகுத்தறிவு)டைய மனிதனால் எவ்வளவு பொருள், நேரம், ஊக்கம், முயற்சிகள் செலவழிக்கப்படுகின்றன? கடவுள் பெயரைச் சொல்லி எத்தனை மக்கள் முட்டாள்களாக்கப்பட்டு ஏய்க்கப்படுகின்றனர்! இவைகளெல்லாம், முட்டாள்கள் என்பவர்கள் அல்லாமல் B.A., M.A., Doctor, விஞ்ஞான மேதாவி, தத்துவஞான மேதாவி, புலவர், வித்துவான், முதலிய படித்தவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மகான்கள், மகா மேதாவிகள் என்பவர்களால் செய்யப்படுகின்றன; சொல்லப்படுகின்றன; பிரச்சாரம் செய்யப் படுகின்றன என்றால், இவர்களையெல்லாம் எப்படி அறிவாளிகள், யோக்கியர்கள், உண்மை யாளர்கள் என்று கூறமுடியும்? கருதமுடியும்? நம்பமுடியும்?



ஆறறிவுடைய மக்கள் நாட்டில், மனித சமுதாயத்தில் ஒரு கடவுள், அதற்கு வீடு, சோறு, பெண்டாட்டி, பிள்ளை, சேலை, நகை, வைப்பாட்டி, விபச்சாரம் செய்தல், கோபம், தாபம், பழிவாங்குதல், கொல்லுதல், போர் செய்தல், போரில் அடிபடுதல், மூர்ச்சையாதல் மற்றுமெத்தனையோ கீழ்த்தர மக்களது தன்மைகளையெல்லாம் பொருத்தி—அந்தப்படி பொருத்தப்பட்ட கடவுளுக்குத் தேசப் பொருளை, செல்வத்தைக் கோடி கோடியாக செலவழித்துப் பாழாக்கப்படுவதென்றால், கடுகளவு சிந்தனை அறிவுள்ள யார்தான் இதை யோக்கியமான காரியம் என்றோ, உண்மையான நம்பிக்கையுடைய காரியமென்றோ கருத முடியும்?

இந்த நாட்டில் இன்று கல்வியென்னும் பெயரால் பல கோடிக்கணக்கான ரூபாய் களைச் செலவு செய்து, பல்கலைக்கழகம், கல்லூரி, உயர்தரப் பள்ளி என்பதாகப் பல்லாயிரக் கணக்கான பள்ளிகளை வைத்துக் 'கல்வி' கற்பிப்பதைவிட, பகுத்தறிவுப் பள்ளிகள் மாத்திரம் வைத்து, 'நிர்வாணமான' சிந்தனா சக்தி தரும் படிப்பைக் கொடுத்து, மக்களை எதைப் பற்றியும், எந்தப் பற்றுமற்ற வகையில், செல்லும்வரை சிந்தித்து முடிவுக்குவரக் கற்பிப்போமானால், நாட்டில் இன்று வீணாகும் செல்வம், அறிவு, ஊக்கம், நேரம் முதலியவை பெருமளவுக்கு மீதமாகி, மக்கள் வாழ்க்கைத் தர முயர்ந்து, ஒழுக்கம், நேர்மை, நல்லெண்ணம், மனிதாபிமானம், அன்பு, பரஸ்பர உதவி முதலியவை தானாக வளர்ந்து, இவைகளுக்குக் கேடான தன்மைகள் மறைந்து, எல்லா மக்களும் 'குறைவற்ற செல்வத் துடனும்,' 'நிறைவுற்ற ஆயுளுடனும்' வாழ்வார்கள் என்பது உறுதி.

['விடுதலை'-தலையங்கம்—16-12-1969]

## 13. கடவுள்–பிறரும் நாமும்

ஆசிரியப் பெருமக்களே! பெரியோர்களே! மாணவர்களே!

உலகத்தில் 250 கோடி மக்கள் இருக்கிறார்கள். அதில் 100 கோடி மக்களுக்குக் கடவுள் இருக்கிறது; 150 கோடி மக்களுக்குக் கடவுள் இல்லை. ரஷ்யா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருப்பவர்களுக்குக் கடவுள் இல்லை. உலகத்தில் தனித்தனி ஆட்களாகச் சில பேர் கடவுள் நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள். 100 கோடிப் பேருக்கு மதம் வேண்டும், கடவுள் வேண்டும் என்றாலும்—அவர்கள் கடவுள், மதம் எல்லாம் மக்களுக்காக இருக்கின்றன.

நம் நாட்டில் கடவுள், மதங்களை எந்தெந்த அளவுக்கு வைத்துக்கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

நம் கடவுள்கள் எல்லாம் 5, 10 ஆயிரம் வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டவை. மற்றவர்கள் கடவுள்கள் எல்லாம் 2000 வருடங்களுக்குள் கண்டுபிடிக்கப்பட்டவை. நம் கடவுள்கள் 1 இலட்சம், 10 இலட்சம், 1 கோடி யுகங்கள் கொண்டவை. நம் கடவுள்களுக்கு ஆதாரம் மதம்தான்; மற்றவர்களுக்கு அப்படியில்லை. நம் கடவுள்கள் 10 இலட்சம் கோடி வருடம் பார்த்தவர்கள்; 5, 7 சதுர்யுகம் கண்டவர்கள். இப்படிச் சொன்ன கடவுள்களாலே, மதத்தாலே ஒன்றும் மாற்றமடையவில்லை. மற்ற நாட்டிலிருப்பவர்கள் எல்லாம் எவ்வளவோ மாற்றமடைந்துவிட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வளவு கடவுள், மக்களிடமிருந்தும் ஒழுக்கம், நாணயம், மனிதப் பண்பு இல்லாமல் போய்விட்டது. மற்ற நாட்டில் எல்லாம் அவற்றாலே நாகரிகம் நடக்கிறது; அந்தப் பண்பு நமக்கில்லை. ஆனால், மேலான பண்பு என்று நம்மவன் பேசுகிறான்.

மேல்நாட்டில் தெருவில் போய் நின்றால் நம் உயிரை வாங்கிவிடுவார்கள். 'என்ன வேண்டும்? எதற்காக நிற்கிறீர்கள்?' என்று கேட்காமல் எவனும் போகமாட்டான். எகிப்தில் தெருவில் போகிற பெண் கேட்கிறாள், 'ஏதாவது உதவி பண்ண வேண்டுமா உங்களுக்கு?' என்று. ஏதாவது சொல்லிவிட்டோமோ—அங்கே போகவேண்டும்; இன்னது வேண்டும் என்று, உடன் வந்து விட்டுவிட்டுத்தான் போவார்கள்.

அங்கு கடைக்குப் போனீர்களானால் (இங்கே போல) 'ஒரு வீசை கற்கண்டு கொடுங்கள்' என்று கேட்க முடியாது. முன்னால் வந்து யார் நிற்கிறார்கள்? முன்னால் வந்தவர் வாங்கியதைச் சரிபார்த்த பிறகுதான் நாம் வாங்கவேண்டிய முறை. கணக்கு எழுதிக்கொண்டிருக்கிறபோது—சாமான் கொடுத்துக்கொண்டிருக்கிறபோது ஏதாவது கேட்டால் அநாகரிகம், வெட்கம், தண்டனை என்று நினைப்பான். குற்றம் சொல்கிறாற்போல் நடந்துகொள்வதில்லை. அங்கே அப்படி! இங்கே?

[அரவக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியில், 22-4-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-5-1959]

# 2. கடவுள்கள்

## 1. காப்பியடிக்கப்பட்ட கடவுள்கள்

கடவுள் என்பதற்கு ஒரு சொல் வடமொழியிலும் கிடையாது; தமிழிலும் கிடையாது. தமிழில் சொல்லப்படுகிற கடவுள் என்கின்ற சொல்லுக்கு உண்டான கருத்துக்கு ஏற்ற வேறு ஒரு சொல்லும் தமிழில் காணப்படுவதற்கு இல்லை; அதுபோலவே, வடமொழியிலும் சொல் காணப்படுவதற்கு இல்லை.

ஆரியர் (பார்ப்பனர்), 'தேவர்கள்' என்ற சொல்லை வேத காலத்தில் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றனர். அதுவும் மத்திய ஆசியாவிலும் மேல் நாட்டில் அய்ரோப்பாவிலும் வசித்த பழங்கால மக்கள் கற்பனை செய்துகொண்ட பல தெய்வங்களையே தேவர்கள் என்றாக்கி, ஆரியப் பார்ப்பனர் தாங்கள் சொல்லிவந்த வேதங்களில் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மத்திய ஆசிய நாகரிகக் காலத்துக்குப் பிற்பட்டதே ஆரியவேத சகாப்தம் என்பதை நினைவிலிறுத்தவேண்டும். எனவே, மத்திய ஆசியாவில் தோற்றுவிக்கப்பட்ட கடவுள்களைக் 'காப்பி'யடித்தே ஆரியர்கள் கடவுளர் பெயர்களைக் கற்பித்துக்கொண்டுள்ளனர்.

இவற்றிற்கு உதாரணங்களையும், பட்டியலையும் கீழே தருவோம்.

வேதத்தில் காணப்படுகிற அத்தனை தேவர்களும் எகிப்தியர், கிரேக்கர், காக்கேசிய மலைச்சாரலில் வசித்த காக்கேசியர்கள் முதலானவர்கள் வணங்கி வந்ததாகக் கருதப்படும் தெய்வங்களேயாகும் என்பதைப் பட்டியலில் காணலாம்.

ஆரியர்கள் வந்து குடியேறிய பின்பே கடவுள் கருத்துக்களும், தேவர்கள் பெயர்களும் தமிழர்களிடையே நுழைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது வரலாற்றாசிரியர்களின் துணிபு ஆகும்.

மத்திய ஆசியா, தற்போதைய கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில்தான் முதலில் மக்கள் நாகரிகம் தோன்றியிருக்க வேண்டும்.



தீயினிடம் ஏற்பட்ட அச்சத்தால் அதை வணங்கிய ஆரியர், அதற்கு—'சிவந்தவன்' என்ற சொற்பிறப்பால் 'சிவன்' என்று பெயரிட்டழைத்தனர். ஞாயிற்றுக்கும் அப்பெயரிட்டழைத்தனராம்.

பாபிலோன் மக்கள் வழிபட்ட 'தந்தைக் கடவுள்', கிரேக்க நாட்டு மக்களது வழிபாட்டுக் கடவுளை ஒத்திருப்பதைக் காணலாம். அங்குள்ள பழைய நகரம் ஒன்றுக்கு சிவன் என்றே பெயர்; இப்போதும் அப்படியே வழங்குகிறது. எனவே, சிவன் 'காப்பி'யடிக்கப்பட்ட பெயர் என்று கொள்ளலாம்.

சிவன் பாம்பை அணிபவராகக் குறிப்பிடுவதும் மேல்நாட்டுத் தொடர்புடையதே. மொகஞ்சதாரோவிலும் சிவக் கடவுள் பாம்போடு காணப்படுவதும், இடப வணக்கத்தைப் போல் பாம்பு வணக்கமும் இருந்திருக்கிறது. ஞாயிறு வணக்கம், சிவ வணக்கமுள்ள எல்லா நாடுகளிலும் பாம்பு வணக்கமும் காணப்படுகிறதாதலின், பாம்புகள் சிவலிங்கத்தோடு—சிவன் கடவுளோடு தொடர்புடையனவாகவே உள்ளதைக் காணலாம்.

சிவனுடைய கைகளில் இருப்பதுபோன்ற சூலம், மழு (கைக் கோடரி) முதலிய ஆயுதங்கள் மேற்கு ஆசியாவில் கிரேத்தா முதலிய நாடுகளில் வழிபட்ட கடவுள்களின் கையிலுமிருந்திருக்கின்றன.

கையில் சூலம், இடியேறு என்று மூன்று கவை உள்ள நெளிவுடைய ஆயுதம் ஏந்திப் பிடித்திருந்தனராம்.

இந்திய நாடல்லாத மற்றைய நாடுகளின் கடவுளர்கள் யாவும் இரண்டே கைகள் உள்ளவை. இந்தியாவில் மட்டுமே நாலு கை, ஆறு கை, பன்னிரு கை முதலிய பல்வேறு வகைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மொகஞ்சதாரோவிலும் கடவுள் வடிவங்கள் இரு கைகள் படைத்தனவேயாகும்.

மத்திய தரைக்கடலின் கீழ்க் கரையோரமுள்ள சிரியா நாட்டிலே சிவனும், காளியும் வழிபடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்திய நாட்டுச் சிவன் போலவே, சிரியா நாட்டிலும் தந்தைக் கடவுளாகவே அதாந்துவை வணங்கி வந்துள்ளனர்.

கிதைதி என்னும் சின்ன ஆசியா நாட்டிலும் சிவனையே தந்தைக் கடவுளாக வழிபட்டனர் என்பதற்கும் சான்று உள்ளது. கிதைதி நாட்டின் அழிபாடுகளின் சுவர் ஒன்றில் எழுதப்பட்ட தந்தைக் கடவுள் சித்திரம் இடபத்தின் மீது நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

சூரியமுடி அணிந்துள்ள 'தாய்க் கடவுள்' தண்டும் கேடயமும் தாங்கிச் சிங்காசனத்தின் மீது நிற்பதைக் காணலாம். இத் தாய்க் கடவுளுக்கு 'இஸ்தர்' என்று பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். அதுவே 'ஈஸ்வரி' என்று திரிந்திருக்கக்கூடும்.

கிதைதியில் காணப்பட்ட இன்னொரு சிற்பம் முக்கோண வடிவான வில்லைப் பிடித்துக் கொண்டு இடபத்தின் மீது நிற்கிறது. எகிப்தியர் எழுதியுள்ள களிமண் தட்டிலும் இக் கடவுள் பற்றி எழுதப்பட்டுள்ளதாம். இவ் ஆண் கடவுள் நீண்ட காலம் சிரியா நாட்டுப் போர் வீரர்களால் வணங்கப்பட்டதாம்.

இந்தக் கடவுள் என்னும் சொல் தமிழனுக்கு ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் கற்பிக்கப்பட்ட சொல்லேயல்லாமல், பழங்காலச் சொல் என்று சொல்லமுடியாது. இலக்கியங்களும், தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டனவேயாகும்; தமிழனுக்கு ஆதிநூல் என்று சொல்லப்படும் தொல்காப்பியமும் ஆரியர் வருகைக்குப் பிற்பட்டதேயாகும்.

இன்றைய நம் கடவுள்கள் அத்தனையும் பிரம்மா, விஷ்ணு, சிவன், அவனது மனைவி, பிள்ளை குட்டிகள் யாவும் ஆரியக் கற்பனையே. ஆரிய வேதங்களில் அவர்களால் கொண்டுவரப்பட்டவை என்பதல்லாமல் தமிழர்க்குரியதாக ஒன்றுகூடச் சொல்லமுடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



சிவன், விஷ்ணு தமிழருடையதென்று சிலர் சொல்லிக்கொண்டபோதிலும்—அதன் இலக்கணம் வடமொழி முறையேயாகும். லிங்கம்—சதாசிவம் முதலான சொற்கள், அவற்றின் கருத்துக்கள் ஆரிய மொழிகளேயாகும்.

கடவுளர்க்கு ஆரியர் இட்ட பெயரனைத்தும், மேல்நாட்டுக் கடவுளர்க்கு இட்டதை அனுசரித்தே இடப்பட்டிருப்பதைக் கீழ்வரும் பட்டியல் மூலம் அறியலாம்.

| இந்தியக் கடவுள் | மேல்நாட்டுக் கடவுள் | இந்தியக் கடவுள் | மேல்நாட்டுக் கடவுள் |
|---|---|---|---|
| சிவன், இந்திரன் | ஜுப்பிட்டர் | குபேரன்,<br>கிருஷ்ணன் | புளுட்டஸ்,<br>அப்போலோ |
| பிரம்மா | சாட்டர்னஸ் | நாரதன் | மெர்குரியன் |
| யமன் | மைனாஸ் | இராமன் | பர்கஸ் |
| வருணன் | நெப்டியூன் | கந்தன் | மார்ஸ் |
| சூரியன் | சோல் | துர்க்கை | ஜுனோ |
| சந்திரன் | லூனாஸ் | சரஸ்வதி | மினர்வா |
| வாயு | சயோனஸ் | அரம்பை | வீனஸ் |
| விசுவகர்மா | காண்டர் போல்வஸ் | உஷா | அரோரா |
| கணபதி | ஜுனெஸ் | பிருதிவி, ஸ்ரீ | சைபெல்வி, சிரஸ் |

என்கின்ற பெயருடன் இக் கடவுள்கள் மேனாட்டில் இருந்தவையாகும். 'காப்பி' யடித்தே ஆரியர்கள் இங்கு பல்லாயிரம் கடவுள்களைப் பல்லாயிரம் உருவில் உண்டாக்கி, அதன் மூலம் சமுதாயத்தையே அடிமையாக்கிவிட்டிருக்கின்றனர்.

[நூல் : 'கடவுள் ஒரு கற்பனையே'—1971]

## 2. கடவுள்கள்

தலைவரவர்களே! தோழர்களே!

கடவுள்களைப்பற்றிய அபிப்பிராயத்தில், பழைய காலத்தைவிட கிறிஸ்தவர்களில் ஒரு சாராரும் முகமதியர்களும் எவ்வளவோ சீர்திருத்தத்திற்கு வந்துவிட்டார்கள். அவர்கள் ஒரே கடவுள்தான் இருக்க முடியுமென்றும், அக் கடவுள் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதது என்றும், அது பெயரும் குணமும் உருவமும் இணையும் இல்லாதது என்றும், மனிதரில் நன்மையான காரியங்கள் செய்தவர்களுக்கு நன்மையும் தீமையான காரியங்களைச் செய்தவர்களுக்குத் தீமையும் அளிக்கக்கூடியது என்றும் சொல்லி குணம் கற்பிக்கிறார்கள். அப்படிப்பட்ட கடவுளைப்பற்றி இப்போது விவகாரம் பேச வேண்டியதில்லை. இக் கருத்துடன் இணைந்திருக்கும் கடவுளால், 'மனிதன் தீமை செய்யப் பயப்படுவான் என்றும், நன்மை செய்ய ஆசைப்படுவான் என்றும், அது சமுதாய வாழ்விற்கு மிக்க நன்மை அளிக்குமென்றும்' பல அறிஞர்களும் அதை ஒப்புக்கொண்டு காரணம் சொல்லுகிறார்கள். ஆகையால், இன்றைய தினம் இந்துக்களால், குறிப்பாகப் பார்ப்பனர்களால் கற்பிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கடவுள்களை எடுத்துக்கொள்வோம். இந்துக்களுக்கு இத்தனை கடவுள்கள் ஏன்? அவை எப்படி வந்தன? பல்லாயிரக்கணக்கான கடவுள்கள் தவிர மற்றும் என்னவெல்லாம் கடவுளாக்கப்பட்டு இருக்கின்றன, பாருங்கள்! மாட்டு மலம் முதல் மாடு, குதிரை, எருமை, குரங்கு, பெருச்சாளி, கழுகு, காக்கை, பாம்பு, மரம், செடிகள், மண், உலோகம், காகிதம் முதலியவைகளும் மற்றும் பல ஆபாச உருவங்களும்



கடவுளாக வணங்கப்படுகின்றன. காசியில் ஒரு கோயிலில் 2 உயிருள்ள நாய்கள் படுத்திருக்கின்றன. அவைகளுக்கும் பூசை போட்டு வணங்குவதை நேரில் பார்த்தேன். இப்படிச் செய்வதற்குப் பண்டிதர்களால் தத்துவார்த்தம் சொல்லப்படுகிறது. இவ்வளவோடு இல்லாமல் இக் கடவுள்களுக்குப் பெண்டு, பிள்ளை, வைப்பாட்டி, தாசி, விபச்சாரித்தனம், ஆகாரம், உறக்கம், புணர்ச்சி முதலியவைகளும் கற்பிக்கப்படுகின்றன. மற்றும் இக் கடவுள்களுக்குக் கலியாணம், சாவு முதலியனவும் கற்பிக்கப்படுகின்றன.

[நாமக்கல்லில், 12-12-1937-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-12-1937]

தலைவரவர்களே! தோழர்களே!

மனித சமூகத்திலே எங்கு பார்த்தாலும் கடவுள், மத உணர்ச்சி இருந்துவருவதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், சமூகவாழ்வுக்கு இந்தக் கடவுள், மதங்கள் அல்லாமல் இயற்கையே பெரிதும் படிப்பினையாகவும், மனிதனை நடத்துவதாகவும் இருந்துவருகிறது. காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியும் அவனது அனுபவம், அவசியம் ஆகியவைகட்கு ஏற்றபடியும் சமூகவாழ்வின் சவுகரியங்களை மனிதன் அமைத்துக் கொள்கிறான். இக் காரியங்களுக்குக் கடவுள், மதத் தத்துவங்களைப் பற்றியோ, அவைகளைப் பற்றிய கற்பனைகளையோ மனிதன் சிந்திப்பதில்லை; சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்படுவதுமில்லை.

ஆனால், பயமும் சந்தேகமும் பேராசையும் பழக்கவழக்கங்களும் மற்றவர்களின் படிப்பினைகளும் சுற்றுப் புறமும்—மனிதனுக்குக் கடவுள், மத உணர்ச்சிகளை உண்டாக்கி விடுகின்றன. அவை எப்படி இருந்தபோதிலும் எங்களுக்குக் கவலை இல்லை. அந்த ஆராய்ச்சியில் நாங்கள் சிறிதும் காலத்தையோ, புத்தியையோ செலவழிப்பதில்லை. ஆனால், மனித சமூகத்துக்குத் தேவையான தொண்டு என்று நாங்கள் கருதிவரும் தொண்டுகளைச் செய்துவரும்போது, மனித சமூக சுதந்திர சுகவாழ்வுக்குப் பிறவியிலேயே எதிரிகளாகவுள்ள புரோகிதக் கூட்டத்தார், மதத்தின்பேரால்—கடவுள்பேரால் தங்கள் வாழ்க்கையை நிச்சயித்துக்கொண்ட சோம்பேறி மக்கள், எங்கள் தொண்டிற்கு, கொள்கைகளுக்குச் சமாதானம் சொல்லி எதிர்த்து நிற்கச் சக்தியற்ற கோழைகள் கடவுளையும் மதத்தையும் பற்றிக் குழப்பமாய்ப் பேசி, அவைகளைக் குறுக்கே கொண்டுவந்து போட்டுவிடுகிறார்கள்.

மனித சமூகத்தில் பிறவியில் உயர்வு—தாழ்வு, சாதிபேதம் ஒழிந்து, ஆண்டான்—அடிமைத் தன்மை மாறி ஆணும் பெண்ணும் சகல துறைகளிலும் சமசுதந்திரத்துடன் வாழ வேண்டுமென்று நாங்கள் சொன்னால், தீண்டாமையும் சாதிபேதமும் ஒழிந்தால் தமது உயர்வும் தம் பிழைப்பும் கெடுமென்று எண்ணிப் பாடுபடாது வாழ்ந்துவரும் பார்ப்பனர்கள் மதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகளைக் கொண்டுவந்து குறுக்கே போட்டு எங்களைத் தடைப்படுத்தும்போது, அவை எவையாயினும் மனித சமூக ஒற்றுமைக்கும், சமத்துவத்துக்கும், சுதந்திர வாழ்வுக்கும் கேடு செய்வதாக இருந்தால் அவற்றைக் கொளுத்தி ஒழிக்க வேண்டுமெனக் கூறுகிறோம்.

தீண்டாமையைப் பார்ப்பனர்கள் மதத்துடன் சேர்த்துக் கட்டிப் பிணைத்து இருப்பதாலேயேதான், நாங்கள் தீண்டாமை ஒழிய வேண்டுமென்றால் அந்த மதம் ஒழிந்துதான் ஆகவேண்டும் என்கிறோம். தீண்டாமையை அசைக்கும்போது மதமும் ஆடுகிறது. அப்போது மதம், நரகம், மோட்சம் முதலிய பல கற்பனைகளை வெகு நாட்களாக ஊட்டி வந்த பாமர மக்களிடம் உடனே பார்ப்பனர்கள் சென்று, 'மதம் போச்சுது; மதம் போச்சுது' என்று விஷமப் பிரச்சாரம் செய்து எங்களை மதத் துரோகி என்றுகூடத் தூற்ற முடிகிறது.

கடவுள்பற்றிய தத்துவங்களையே எடுத்துக்கொண்டு பார்ப்போம். அதுவும் இப்படித்தான். அதாவது, கடவுளைப்பற்றி விளக்க இதுவரை எத்தனையோ ஆத்ம ஞானிகள், சித்தர்கள், முத்தர்கள் என்போரும், ஆழ்வார்கள், நாயன்மார்கள், அவதாரங்கள்

படிப்பகம்

www.padippakam.com



என்போரும் எவ்வளவோ அரும்பாடுப[illegible]னர். ஆனால் முடிந்ததா? முடிவு இதுதான் எனச் சொல்லப்பட்டதா? [illegible]களைப் பின்பற்றியவர்களுக்காவது புரிந்ததா? புரியவைக்க முடிந்ததா?

'கடவுள் ஆதி இல்லாதது; அந்தமும் இல்லாதது; உருவம் இல்லாதது; அது இல்லாதது; இது இல்லாதது; புரியப்பட்ட சங்கதி எதுவும் இல்லாதது' என அடுக்கிக் கொண்டேபோய்—அப்படிப்பட்ட ஒன்று இருப்பதாக, அல்லது இருக்கும் என்பதாக, அல்லது இருந்தேதான் தீரவேண்டும் என்பதாக, அல்லது இருக்கிறது என்று எண்ணிக் கொண்டுதான் ஆகவேண்டும் என்பதாகச் சொல்லிவிடுகிறார்கள்.

இராமலிங்க சுவாமி என்று சொல்லப்பட்ட பெரியார், அறிவுதான் கடவுள் எனக் கூறினதுடனன்றி சாதி, சமயம், மோட்சம், நரகம், மோட்ச நரகங்களைக் கொடுக்கும் கடவுள்கள் ஆகியவைகள் எல்லாம் வெறும் பித்தலாட்டங்கள் எனப் பச்சையாகச் சொல்லி விட்டார். இவர்கள் எல்லாம் நாத்திகர்களா?

ஒரு மனிதன் கடவுள் உண்டா, இல்லையா என்ற விஷயத்திலே கவலை செலுத்தாது—அதை அறிவதற்கே மெனக்கெட்டுக் குழப்பமடையாது இருப்பதற்காகவே, மனித சமூக வாழ்வுக்கு நன்மையும் அவசியமுமான காரியங்கள், குணங்கள் எவை எவையோ அவை களைத்தான் கடவுள்கள் எனப் பெரியார்கள் சொன்னார்கள். இதைப் பார்த்தாவது மனிதனுக்கு அறிவு வந்து உண்மை உணர்ந்து பேசாமல் இருக்கவேண்டாமா?

ஒரு மனிதன் அறிவுடையவனாகி, உண்மையுடையவனாகி, மக்களிடம் அன்பு காட்டி மனம், வாக்கு, காரியங்களால் தொண்டுசெய்து அவைகளின்படி நடப்பானேயானால், அவன் கடவுள் துரோகியாகக் கருதப்படுவானா? அன்பு, அறிவு, உண்மை இவை தவிர வேறு கடவுள் ஒன்று இருந்தாலும்கூட, அக் கடவுள்—தன்னை இல்லை என்று சொன்ன தற்கும் தன்னை விழுந்து கும்பிடாததற்கும் அப்படிப்பட்டவனைத் தண்டிப்பாரா? உண்மையில் யாரும் அறியமுடியாத ஒரு கடவுள் இருந்தால்—அவரை அறிந்து அவருக்கே பக்தி செய்து வணங்கி வந்தவனைவிட, கடவுளைப்பற்றிக் கவலைப்படாமல், கடவுளுக்கு பக்தி செய்யாமல் அன்பு, அறிவு, உண்மை ஆகியவைகளுடன் நடந்து வந்தவனுக்கேதான் கருணை காட்டுவார். இந்த உணர்ச்சியினாலேயேதான் நான் கடவுளைப் பற்றிய விவாதத்தில் இறங்கிக் காலங் கழிக்காமல், நான் மனித சமுதாயத்திற்கு என்னாலான தொண்டை அறிவு, உண்மை, அன்பு ஆகியவைகளைக் கொண்டு செய்துவருகிறேன்.

நான் கூறின மேற்கண்ட தத்துவங்கள்—மதத் தலைவர்கள், அதிலே நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் ஆகியவர்கள் வாக்கு ஆகும்.

மற்றும் சித்தர்களும் வேதாந்திகளும், இந்த உலகமும் தோற்றமும் எண்ணங்களும் மனிதனுட்பட எல்லாம் மாயை என்று சொல்லிவிட்டனர். ஆகவே, ஒரு மனிதன் தன்னை நிஜஉரு என்று கருதி—கடவுள் உண்டு என்று கண்டுபிடித்தாலும், முடிவு கொண்டாலும் அதுவும் மாயைதானேயொழிய உண்மையாயிருக்க இடமில்லை.

சிலர் உலக நடத்தையைப் பார்த்து அதற்கு விவரம் புரியாமல், 'இதற்கு ஏதோ ஒரு சக்தி இருக்க வேண்டாமா?' என்று கேட்கின்றனர். ஏதோ ஒரு சக்தி இருக்கட்டும்! இருக்க வேண்டியவைகளை யெல்லாம் கண்டுவிட்டோமா? இல்லாதவைகளை யெல்லாம் உணர்ந்து முடிவு செய்துவிட்டோமா? அதைப்பற்றிய விவாதம் ஏன் நமக்கு?

மனித சமுதாயம் ஒற்றுமையாக, ஒழுக்கத்துடன், சமத்துவத்துடன் வாழ, சாந்தி யாய் இருக்க ஏதாவது ஒருவிதமான கடவுள் உணர்ச்சி மனிதனுக்கு வேண்டாமா என்று கேட்கிறார்கள். வேண்டுமென்றே வைத்துக்கொள்வதானால், அப்படிப்பட்ட உணர்ச்சி யானது மக்கள் சமூகத்தில் ஒழுக்கம், ஒற்றுமை, சமத்துவம், சாந்தி அளிக்கிறதா என்பதை முதலில் கவனிக்க வேண்டாமா? ஏனெனில், எந்த உணர்ச்சி காரணமாக மனிதனின்



www.padippakam.com



## கடவுள்கள் உற்பத்தி

**கந்தன்**

நிலத்தில் ஒழுக விடப்பட்ட சிவன் இந்திரியத்தில் உருவானவன்.

**கணபதி**

பார்வதியின் உட(லி)ல் இருந்து திரட்டி எடுத்த அழுக் குருண்டையில் உருவானவன்.

**கிருஷ்ணன்**

விஷ்ணுவின் மார்பு மயிரிலிருந்து உருவானவன்.

**இராமன்**

தசரதன் புத்திரகாமேஷ்டி யாகம் செய்த பிறகு, யாகப் புரோகிதர்களுக்குத் தன் மனைவியைக் கொடுத்த பிறகு அப் புரோகிதர்களால் உண்டாக்கப்பட்ட கர்ப்பத்தால் உண்டானவன்.



வாழ்க்கையில் ஒழுக்கம் ஏற்படும் எனச் சொல்லப்படுகிறதோ—வாழ்க்கையில் நீதி, அன்பு நிலவ மேற்படி உணர்ச்சி தூண்டுகோலாய் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறதோ— அந்தக் கடவுள் உணர்ச்சிக்கும் அந்த உணர்ச்சிகொண்ட மனிதனின் நடத்தைக்கும் ஒருவித சம்பந்தமுமின்றிச் செய்துவிட்டனர். மற்றும், நமது கடவுளைக் கண்ட பெரியார்கள் என்பவர்கள் உலகத்திலே கேடு, கூடா ஒழுக்கம், வஞ்சனை, பொய் முதலியன செய்பவர்களை இந்த மாதிரியான ஒரு கடவுள் உணர்ச்சியைத் தங்களின் மேற்கண்ட காரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளும்படி செய்துவிட்டார்கள். உதாரணமாக, ஆயிரத்தில் பத்தாயிரத்தில் ஒருவராவது கடவுள் உணர்ச்சியின் அவசியத்திற்கு ஏற்றபடி அவர்களது வாழ்க்கையிலே நீதி, நேர்மை, ஒற்றுமை, அன்பு நிலவும்படி நடப்பதை நாம் பார்க்கிறோமா? பெரும்பான்மையோருக்கு அவ்வுணர்ச்சி அப்படிப் பயன்பட்டிருந்தால் உலகிலே துன்பத்துக்கு, வஞ்சனைக்கு இடமேது? எவ்வளவு அக்கிரமம் செய்தபோதிலும் பிரார்த்தனை, கடவுள் பெயர் உச்சரிப்பு, புண்ணியஸ்தல யாத்திரை செய்த மாத்திரத்தில் மன்னிப்பும் பாபவிமோசனமும் கிடைக்கும்–ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு— அதனால் மக்களுக்கு அக்கிரமம் செய்யவே தைரியம் தருகிறதேயல்லாமல் யோக்கியனாக, அன்பனாக நடக்கக் கட்டாயப்படுத்துகிறதா?

இன்று சிறையிலுள்ளோரில் சமரசவாதிகளோ, நாத்திகர்களோ விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே இருப்பார்கள். மற்றையோர் யாவரும் கடவுள் உணர்ச்சியிலே ஒருவித சந்தேகமும் கொள்ளாத ஆத்திகர்களேயாவார்கள். ஆகவே, அவர்கள் சொல்லும் கடவுள் உணர்ச்சியை மனிதனுடைய நடத்தையுடன் ஒப்பிட்டுப் பார்த்து வரவு, செலவு கணக்குப் போட்டு, நஷ்டம், இலாபம் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[ஆட்க்கவுண்டன்பட்டியில், 23-1-1938-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 30-1-1938]

## 3. கடவுள்களின் பிறப்பு

வழக்கத்திலுள்ள கடவுள்களில் எதுவும் தமிழனுக்குச் சொந்தமானது கிடையாது. எல்லாம் வெளி நாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட கடவுள்களேயாகும். சரஸ்வதி, இலட்சுமி, சிவன், விஷ்ணு, பிரம்மா, பிள்ளையார், அரங்கன், நடராசன், கந்தன், சுப்பிரமணியன், இராமன், கிருஷ்ணன் எல்லாம் வடமொழிச் சொற்களே தவிர, தமிழ் மொழியில் பெயருள்ள கடவுள்கள் எதுவுமே கிடையாது. கருப்பண்ணன், காட்டேரி வேண்டுமானால் தமிழ்ப் பெயருள்ளவைகளாக இருக்கலாம். அதுதான் தொலைகிறது. இந்தக் கடவுள்களின் கதைகளாவது நாணயம், நேர்மை, ஒழுக்கமுடையனவாக இருக்கின்றனவா?

இராமன் எப்படிப் பிறந்தான் என்று இராமாயணத்தில் பார்த்தால்—அவன் தகப்பனுக்கு அவன் பிறக்கவில்லை. அவன் தகப்பன் பிள்ளை பெறுவதற்காக யாகம் செய்கிறான். அந்த யாகத்தில் இராமனின் தாய், ஒருநாள் இரவு முழுவதும் வெட்டுண்டு இறந்த குதிரையை ஒட்டவைத்துக்கொண்டு இருந்திருக்கிறாள். அதில் உணர்ச்சி ஏற்பட்டுப் பார்ப்பானால் கர்ப்பம் ஏற்பட்டுப் பிறந்தவன்தான் இராமன் என்று அக்கதை எழுதியவன் எழுதி இருக்கிறான். அவன் மனைவி சீதை, தானே வலிய இராவணனோடு சென்று 3 மாத கர்ப்பமாகி அழைக்கப்பட்டு வந்திருக்கிறாள். அது தெரிந்த இராமன் அவளைக் காட்டிற்கு அனுப்பி இருக்கிறான்.

கிருஷ்ணன் கதை என்னவென்றால், தேவர்கள் எல்லாம் போய், 'உலகில் அதர்மம் அதிகமாகிவிட்டது; இராட்சதர்கள் தொல்லை பொறுக்கமுடியவில்லை. அதைப் போக்க வலிமையுள்ள ஒருவனை எங்களுக்கு அளிக்கவேண்டும்' என்று விஷ்ணுவைக் கேட்டார்களாம். உடனே விஷ்ணு என்ன செய்தார் தெரியுமா? தன் மார்பிலிருந்து இரண்டு மயிரைப் பிடுங்கிக் கொடுத்தான்; அந்த இரண்டு மயிரில் ஒன்று கறுப்பாம்; ஒன்று

படிப்பகம்

www.padippakam.com



வெள்ளையாம். கறுப்பு மயிர் கிருஷ்ணனாகவும் வெள்ளை மயிர் அவன் அண்ணனாகவும்
ஆயின என்று அபிதான கோசத்தில் (ஆராய்ச்சி நூல்) இருக்கிறது. பெண்களை வைத்துக்
கொண்டு சொல்லவே முடியாது. அவ்வளவு அசிங்கம், ஆபாசம்.

கந்தன் பிறப்பு எப்படி என்று இராமாயணத்திலும், காஞ்சி புராணத்திலும், கந்த
புராணத்திலும் இருக்கிறது. தேவர்கள் எல்லாம் போய் சிவபெருமானிடம் கேட்டார்களாம்.
'சிவபெருமானே! உலகத்தில் இராட்சதர் கொடுமை அதிகமாகிவிட்டது. அதைத் தாங்க
எங்களால் முடியவில்லை. அவர்களை அழிக்கக்கூடிய வல்லமையுள்ள ஒரு பிள்ளையைப்
பெற்றுக்கொடுக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்களாம். அதற்கிணங்க சிவபெரு
மான் பார்வதியைத் திருமணம் செய்துகொண்டு பிள்ளைபெற அவளோடு கலவி செய்ய
ஆரம்பித்தாராம். ஆயிரம் வருஷம் தொடர்ந்து சிவனும் பார்வதியும் கலவி செய்து
கொண்டிருந்தார்களாம். ஆயிரம் வருஷமாகியும் பிள்ளை பிறக்காததைக் கண்டு தேவர்கள்,
'இனிப் பிள்ளை பிறந்தால் இந்த உலகமே தாங்காது; அவ்வளவு வலிமையுள்ளதாக
இருக்கும். அது இந்த உலகத்தையே அழித்தாலும் அழித்துவிடும்' என்று பயந்து,
தேவர்கள் எல்லாம் சிவபெருமானிடம் சென்று கலவியை நிறுத்திக்கொள்ளும்படி வேண்டிக்
கொண்டார்களாம். அதற்கு சிவபெருமான், 'நீங்கள் சொல்வதுபோல் நிறுத்திக்கொள்வதில்
எனக்கு ஆட்சேபணை இல்லை; நிறுத்தினால் அதிலிருந்து வரும் வீரியத்தை என்
செய்வது?' என்று கேட்டாராம். உடனே தேவர்கள் அனைவரும் தங்கள் கைகளை ஏந்தி
அதில் விடுமாறு சொன்னார்களாம். அதன்படியே சிவபெருமான் எல்லாத் தேவர்கள்
கையிலும் வீரியத்தை விட்டுக் குடிக்கும்படி சொன்னாராம். தேவர்கள் அனைவரும்
அதனைக் குடித்தனராம். சிவபெருமான் தனது மீதி வீரியத்தைக் கங்கையில் விட்டாராம்.
கங்கை அதைத் தாங்காமல் கொதிக்க ஆரம்பித்துவிட்டதாம். வீரியத்தைக் குடித்த தேவர்
களுக்குக் கர்ப்ப நோய் ஏற்பட்டுவிட்டதாம்; அவர்கள் சிவபெருமானிடம் சென்று வணங்கித்
தங்கள் கர்ப்ப நோய் தீர வழி கேட்டனராம். அவர் காஞ்சீபுரத்தில் இருக்கிற சுரகரீஸ்வரர்
குளத்தில் மூழ்கினால் உங்கள் கர்ப்பம் கலையும் என்று சொன்னாராம். அதன்படி தேவர்கள்
அதில் மூழ்கிக் கர்ப்பத்தையும் கலைத்துக்கொண்டனராம். பூமியில் ஓடிய சிவ வீரியமானது
ஆறு கிளைகளாகப் பிரிந்து ஓடினதால் ஆறு குழந்தைகள் ஆயினவாம். அதனை ஆறு
பெண்கள் எடுத்துப் பால் கொடுத்தனராம். ஆறு பேர்கள் பால் கொடுப்பது சிரமமாக இருக்
கிறது என்று அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து அணைத்தார்களாம்.
அதனால் உடல் ஒன்றாகவும் தலை ஆறு ஆகவும் ஆயிற்றாம். அதுதான் ஆறுமுகத்திற்குக்
கதை. ஸ்கலிதத்திலிருந்து உதித்ததால் 'ஸ்கந்தன்' என்று பெயர் உண்டாயிற்றாம்.
பிரம்மா தன் மகளை மனைவியாக்கிக் கொண்டாராம். இலட்சுமி குதிரையைப் புணர்ந்
தாளாம். நமக்குக் கடவுளாக இருப்பவைகளின் யோக்கியதை இவைதாம்.

[நூல் : கடவுள் ஒரு கற்பனையே—1971]

## 4. பார்வதி—பரமசிவன் உரையாடல்

பார்வதி : எனது பிராண நாதனாகிய ஓ, சிவ பெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற
கருடன் என்கின்ற பட்சியைப் பார்த்துப் பலர் காலையிலும், மாலையிலும் கன்னங் கன்ன
மாய்ப் போட்டுக் கொள்ளுகின்றார்களே, அது எதற்காக, நாதா?

பரமசிவன் : கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் நமது அடிமையாகிய
மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால், விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக்
கண்டால் கன்னத்தில் அடித்துக்கொள்கிறார்கள்.

பார்வதி : ஓஹோ, அப்படியா சங்கதி! சரி; அப்படியானால் நமது அடிமையின்
வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும் போது—நம்முடைய வாகனமாகிய காளை
மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கன்னத்தில் அடித்துக்கொள்வதில்லை? அன்றியும்



செக்கில் கட்டி ஓட்டுகிறார்கள்;
வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள்; ஓட ஓட அடிக்கிறார்கள்;
அடித்துக்கூடத் தின்றுவிடுகிறார்களே, அது ஏன்?

பரமசிவன் : நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை; நன்றாகச்
சாம்பலைப் பூசிக்கொள்ளத்தான் தெரியும்; நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத்
தெரியாது.

பார்வதி : அதுதான் போகட்டும்; நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய
பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னம் கன்னமாய் அடித்துக் கொள்ளாமல் தடியை
எடுத்து அடித்துக் கொன்றுவிடுகிறார்கள்? அய்யோ பாவம்!

பரமசிவன் : கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது.
ஏனென்றால், கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போதும் அவனது வாகனமாகிய கல்லுப்
பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள். அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றிக் கொழுக்
கட்டையை வைப்பார்கள். ஆனால், உயிருடன் காணும்போது ஓடி ஓடி அடிப்பார்கள். நம்
பக்தர்கள் யோக்கியதையே இப்படித்தானே! இந்த வெட்கக் கேட்டை யாருடன்
சொல்லுவது?

பார்வதி : அதுதான் போகட்டும்; தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக்
கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக்கொள்ளாமல் எல்லோரும்—சோடு! சோடு! என்று
விரட்டுகின்றார்களே, அது என்ன காரணம், நாதா?

பரமசிவன் : கண்மணி! அதுவும் பக்தர்களின் அறியாத்தனந்தான். ஆனாலும்,
அது மலம் சாப்பிடுகின்றதல்லவா? அதனால் அதன்மீது சிலர் அசுசிப்படுகின்றார்கள்போல்
இருக்கின்றது.

பார்வதி : என்ன நாதா, வைரவக் கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால், மகாவிஷ்ணு
வின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுசியமான வஸ்துக்களை
யெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல்லாம் அந்தப் பக்தர்கள் மன்னிக்கும்போது, மலம்
சாப்பிடுவதைமாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக்கூடாது? அதுதான் போகட்டும்;
நமது குமாரன் வாகனமாகிய மயிலைக் கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங் கன்னமாய்ப்
போட்டுக்கொள்வதில்லை? அன்றியும், ஆட்டைக் கண்டால் அடித்துத் தின்றுவிடுகிறார்
களே? அவன் கொடியாகிய சேவலைக் கண்டால் அறுத்துத் தின்றுவிடுகிறார்கள்? இது
என்ன அநியாயம்!

பரமசிவன் : அது அந்த பக்தர்களின் பக்திக் குறைவு; அதற்கு நாம் என்ன
செய்யலாம்?

பார்வதி : நாதா! சரி, சரி; இதையெல்லாம் பார்க்கும்போதுதான் எனக்கு மிகவும்
வெட்கக்கேடாயிருக்கின்றது. நமக்குக் கீழ்ப்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம்
உலகத்தில் இவ்வளவு கவுரவமும், அவர் பக்தர்களுக்கு மாத்திரம் இவ்வளவு பக்தியும்
இருப்பதும்; நமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக் குறைவும், நமது பக்தர்களுக்கு
இவ்வளவு பக்திக் குறைவும் இருப்பது எனக்கு வெளியில் தலைநீட்ட முடியவில்லையே!
தவிர, விஷ்ணுவின் பெண்ஜாதியான மகாலட்சுமிகூட இதனாலேயே அடிக்கடி என்னைப்
பார்த்துப் பரிகாசம் பண்ணுகின்றாள். தவிர, நம்முடைய பக்தர்களிலும் பலர் அறிவில்லாமல்
நம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இருப்பதோடல்லாமல்—விஷ்ணு வாகனத்திற்கு
விஷ்ணு பக்தர்களைப் போலவே கன்னங் கன்னமாய்ப் போட்டுக்கொண்டு மரியாதை
செய்கிறார்களே, இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்துப் பாருங்கள்!

பரமசிவன் : என்ன செய்யலாம், சதி? நம் தலையில் பிரம்மன் இப்படி அவமானப்
படும்படியாக விதித்துவிட்டான். விதி யாரைவிட்டது, சொல் பார்ப்போம்! என் கண்மணி!
நீ இதற்காக அழவேண்டாம்; உன்னைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

படிப்பகம்

பார்வதி: சரி, சரி; இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாக்கும்! இனி நீங்கள்வேறா அழவேண்டும்! போனால் போகட்டும்; இம் மாதிரி நம் தலையில் எழுதிய அந்த பிரம்மாவைப் பேசிக்கொள்ளலாம். வாருங்கள்—நம்ம வேலையைப் பார்க்க நாம் போவோம்!

['சித்திரபுத்திரன்' கட்டுரை—'குடி அரசு' 17-6-1928]

## 5. பிள்ளையார்

இந்து மதம் என்பதிலுள்ள கடவுள்களின் எண்ணிக்கை எண்ணித் தொலையாது; ஏட்டிலடங்காது என்பது போல எண்ணிக்கைக்கு அடங்காத கடவுள்கள் சொல்லப்பட்டிருப்பதும், அத்தனை கடவுள்களுக்கும் புராணம், கோவில், குளம், பூசை, உற்சவம், பஜனை, பாட்டு முதலியவைகள் ஏற்படுத்தி இருப்பதும், அவைகளுக்காக நமது இந்திய நாட்டில் வருடம் ஒன்றுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்களும், பலகோடி ரூபாய் பெறும்படியான நேரமும், பலகோடி ரூபாய் பெறும்படியான அறிவும் வெகுகாலமாய்ப் பாழாகிக் கொண்டு வருவதும் எவராலும் சுலபத்தில் மறுக்கக்கூடிய காரியமல்ல.

இந்தக் கடவுள்களில் முதன்மை பெற்றதும், மக்களிடம் மிகவும் செல்வாக்குப் பெற்றதும், இந்துக்கள் என்போர்களில் ஏறக்குறைய எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வணங்கப்படுவதுமான கடவுள் 'பிள்ளையார்' என்பது. இதனைக் 'கணபதி' என்றும் 'விநாயகன்' என்றும் 'விக்கினேஸ்வரன்' என்றும் இன்னும் இதுபோன்ற பல நூற்றுக் கணக்கான பெயர்களைச் சொல்லி அழைக்கப்படுவதும் உண்டு.

நிற்க, இந்தப் பிள்ளையார் என்னும் கடவுளை இந்துக்கள் என்பவர்கள் தங்களுடைய எந்தக் காரியத்திற்கும் முதன்மையாய் வைத்து வணங்குவதும்—கடவுள்களுக்கெல்லாம் முதல் கடவுளாக வணங்குவதுமாக இப்போது அமுலில் இருக்கும் வழக்கத்தை எந்த இந்துவாலும் மறுக்க முடியாது. ஆகவே, இப்படிப்பட்டதானதும், யாவராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதும், அதிகச் செல்வாக்குள்ளதும் முதற்கடவுளென்பதுமான பிள்ளையாரின் சங்கதியைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம். ஏனெனில், கடவுள்களின் சங்கதி தெரியவேண்டுமானால், முதன்முதலாக முதற் கடவுளைப் பற்றித் தெரிவதுதான் நன்மையானதாகும். ஏனெனில், முதற் கடவுள் என்று சொல்லப்படுவதின் சங்கதி இன்னமாதிரி என்பதாகத் தெரிந்தால் மற்ற கடவுள்கள் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாயிருக்கலாம். அன்றியும், எந்தக் காரியம் ஆரம்பித்தாலும் முதலில் பிள்ளையார் காரியத்தை கவனிக்க வேண்டியது முறையென்று சொல்லப்படுவதால், நாமும் கடவுள்களின் கதைகளைப் பற்றி விளக்கப்போவதில் முதல் கடவுளைப் பற்றி ஆரம்பிக்க வேண்டியதும் முறையாகுமன்றோ?

இல்லாவிட்டால், அக் கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு, எடுத்த இக் காரியத்திற்கு விக்கினம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்! அன்றியும் சமீபத்தில் அக் கடவுளின் உற்சவம் (பிள்ளையார் சதுர்த்தி) ஒன்றும் வரப்போவதால் இந்தச் சமயம் ஒரு வேளை பொருத்தமாகவும் இருக்கலாம். ஆதலால் தொடங்குதும்!

பிள்ளையார் பிறப்பு: ஒருநாள் சிவனின் பெண்சாதியான பார்வதி தேவி தான் குளிக்கப் போகையில் குளிக்குமிடத்திற்கு வேறு ஒருவரும் வராமல் இருக்கும்படியாக ஒரு காவல் ஏற்படுத்துவதற்காகத் தனது சரீரத்தில் உள்ள அழுக்குகளைத் திரட்டி உருட்டி அதை ஒரு ஆண்பிள்ளையாகும்படி கீழே போட்டதாகவும், அது உடனே ஒரு ஆண் குழந்தை ஆகிவிட்டதாகவும், (ஆகலாமல்லவா? எப்படி எனில் மாட்டின் மலமான சாணிப் பிண்டமே பிள்ளையாராகின்றபோது பார்வதியின் அழுக்கு-பிள்ளையாராவது அதிசயமா?) அந்த ஆண் குழந்தையைப் பார்த்து, 'நான் குளித்துவிட்டுவரும் வரையில் வேறு யாரையும் உள்ளே விடாதே' என்று சொல்லி அதை வீட்டு வாயிற்படியில் பார்வதி உட்காரவைத்திருந்ததாகவும், அந்தச் சமயத்தில் பார்வதியின் புருஷனான பரமசிவன் வீட்டிற்குள் புகுந்த



தாகவும், அழுக்கு உருண்டையான—வாயில் காக்கும் பிள்ளையார் அந்தப் பரமசிவனைப் பார்த்து, 'பார்வதி குளித்துக்கொண்டிருப்பதால் உள்ளே போகக்கூடாது' என்று தடுத்ததாகவும், அதனால் பரமசிவக் கடவுளுக்குக் கோபம் ஏற்பட்டுத் தன் கையிலிருந்த வாளாயுதத்தால் ஒரே வீச்சாக அந்தப் பிள்ளையார் தலையைவெட்டிக் கீழே தள்ளிவிட்டு குளிக்குமிடத்திற்குள் போனதாகவும், அப்போது பார்வதி சிவனைப் பார்த்து 'காவல் வைத்திருந்தும் எப்படி உள்ளே வந்தாய்?' என்று கேட்டதாகவும், அதற்குச் சிவன், 'காவல்காரன் தலையைவெட்டி, உருட்டிவிட்டு வந்தேன்' என்று சொன்னதாகவும், இது கேட்ட பார்வதி தான் உண்டாக்கின குழந்தை வெட்டுண்டதற்காகப் புரண்டு புரண்டு அழுததாகவும், சிவன் பார்வதியின் துக்கத்தைத் தணிக்கவேண்டி வெட்டுண்டு கீழே விழுந்த தலையை எடுத்து மறுபடியும் ஒட்டவைத்து உயிர் கொடுக்கலாம் எனக் கருதி உடனே வெளியில்வந்து பார்க்க, வெட்டுண்ட தலை காணாமல் போனதாகவும், அப்போது அருகிலிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி, முண்டமாகக் கிடந்த குழந்தையின் கழுத்தில் ஒட்டவைத்து அதற்கு உயிர் கொடுத்துப் பார்வதியைத் திருப்திசெய்ததாகவும் கதை சொல்லப்படுகின்றது. இக் கதைக்கு சிவபுராணத்திலும் கந்தபுராணத்திலும் ஆதாரம் இருக்கின்றனவாம்.

2. ஒரு காட்டில் ஆண், பெண் யானைகள் கலவி செய்யும்போது சிவனும் பார்வதியும் கண்டு கலவி ஞாபகமேற்பட்டுக் கலந்ததால் யானை முகத்துடன் குழந்தை பிறந்தது என்றும் பிள்ளையார் கதையில் கூறுகின்றதாம்.

3. பார்வதி கர்ப்பத்தில் கருவுற்றிருக்கையில் ஒரு அசுரன் அக் கருப்பைக்குள் காற்று வடிவமாகச் சென்று அக் கருச் சிசுவின் தலையை வெட்டிவிட்டு வந்ததாகவும், அதற்குப் பரிகாரமாகப் பார்வதி யானையின் தலையை வைத்து உண்டாக்கிக் குழந்தையைப் பெற்றுக்கொண்டதாகவும் விநாயகர் புராணம் கூறுகின்றதாம்.

4. தக்கனுடைய யாகத்தை அழிப்பதற்காக சிவன் தனது மூத்த குமாரனாகிய கணபதியை அனுப்பியதாகவும், தக்கன் அக் கணபதியின் தலையை வெட்டிவிட்டதாகவும், சிவன் தனது இரண்டாவது பிள்ளையாகிய சுப்பிரமணியனை அனுப்பினதாகவும், அவன் போய்ப் பார்த்ததில் தலை காணப்படாமல் வெறும் முண்டமாய்க் கிடந்ததாகவும், உடனே ஒரு யானையின் தலையை வெட்டி வைத்து உயிர்ப்பித்ததாகவும் மற்றொரு கதை சொல்லப்படுகின்றது. இது 'தக்கயாகப் பரணி' என்னும் புத்தகத்தில் இருக்கின்றதாம்.

இன்னும் பல வழிகள் சொல்லப்படுகின்றன. அவை பற்றியும் பிள்ளையாரின் மற்ற கதைகளைப்பற்றியும் மற்றொரு சமயம் கவனிக்கலாம்.

எனவே, பிள்ளையார் என்னும் கடவுள் சிவனுக்கோ, பார்வதிக்கோ மகனாகப் பாவிக்கப்பட்டவர் என்பதும், அந்தப் பிள்ளையாருக்கு யானைத் தலை செயற்கையால் ஏற்பட்டதென்பதும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமாகும்.

கடவுள் கூட்டத்தில் முதல்வரான பிள்ளையார் சங்கதியே இப்படிப் பலவிதமாகச் சொல்லப்படுவதும், அவைகளிலும் எல்லா விதத்திலும் அவர் பிறரால் உண்டாக்கப்பட்டதாகவும், பிறப்பு வளர்ப்பு உடையவராகவும் ஏற்படுவதுமாயிருந்தால் மற்ற கடவுள்கள் சங்கதியைப்பற்றி யோசிக்கவும் வேண்டுமா? நிற்க, ஒரு கடவுளுக்குத் தாய் தகப்பன் ஏற்பட்டால், அந்தத் தாய் தகப்பன்களான கடவுள்களுக்கும் தாய், தகப்பன்கள் ஏற்பட்டுத்தானே தீரவேண்டும்? (இவைகளைப் பார்க்கும்போது கடவுள்கள் தாமாக ஏற்பட்டவர்கள் என்றால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?) ஆகவே, இந்தக் கடவுள்களும் உலகமும் ஏற்பட்டதற்கு வேறு ஆதாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிருக்கின்றது.

கடவுளைப்பற்றிய விவகாரங்களோ, சந்தேகங்களோ ஏற்படும்போது மாத்திரம், 'கடவுள் ஒருவர்தான்; அவர் நாமரூப குணமற்றவர்; ஆதி அந்தமற்றவர்; பிறப்பு இறப்பற்றவர்; தானாகவே உண்டானவர்' என்று சொல்லுவதும், மற்றும் அது 'ஒரு சக்தி'

www.padippakam.com



என்றும் 'ஒரு தன்மை அல்லது குணம்' என்றும் பேசி, அந்தச் சமயத்தில் மாத்திரம் தப்பித்துக்கொண்டு, பிறகு இம் மாதிரிக் கடவுள்களைக் கோடி கோடியாய் உண்டாக்கி, அவைகட்கு இதுபோன்ற பல ஆபாசக் கதைகளை வண்டி வண்டியாகக் கற்பித்து, அவற்றையெல்லாம் மக்கள் நம்பவும் வணங்கவும் பூசைசெய்யவும் உற்சவம் முதலியன செய்யவும், செய்வதில் எவ்வளவு அறியாமையும் புரட்டும் கஷ்டமும் இருக்கின்றன என்பதை வாசகர்கள்தாம் உணரவேண்டும்.

உதாரணமாக, ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகின்றோம். சிதம்பரம் நடராசர் கோயிலில் யானைமுகங் கொண்ட ஒரு பிள்ளையார் சிலைசெய்து, அதன் தும்பிக்கையை மற்றொரு பெண் சிலையின் பெண்குறிக்குள் புகவிட்டு இக் காட்சியை யாவருக்குந் தெரியும்படியாகச் செய்திருப்பதுடன், இந்தக் காட்சிக்குத் தினமும் முறைப்படி பூசையும் நடந்து வருகிறது. பல ஆண், பெண் பக்தர்கள் அதைத் தரிசித்தும் கும்பிட்டும் வருகின்றார்கள்.

சில தேர்களிலும், ஒரு பிள்ளையார் உருவம் தனது துதிக்கையை ஒரு பெண் உருவத்தின் பெண்குறிக்குள் புகுத்தி அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டிருப்பது போலவும், அந்தப் பெண் இரண்டு காலையும் அகட்டிக்கொண்டு அந்தரத்தில் நிற்பது போலவும் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவைகளைப் பார்த்த யாராவது இது என்ன ஆபாசம் என்று கேட்டால் இவைகளுக்கு ஒரு கதையும், புராணமும் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

அதாவது, ஏதோ ஒரு அசுரனுடன் மற்றொரு கடவுள் யுத்தம் செய்ததாகவும், அந்த யுத்தத்தில் தோன்றிய அசுரர்களையெல்லாம் அந்தக் கடவுள் கொன்றுகொண்டே வந்தும், தன்னால் முடியாத அளவு அசுரர்கள் ஒரு அசுரப் பெண்ணின் குறியிலிருந்து 'புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல்' பல இலட்சக் கணக்காய் வந்துகொண்டே இருந்ததாகவும், அதை அறிந்த அந்தக் கடவுள், பிள்ளையார் கடவுளின் உதவியை வேண்டியதாகவும், உடனே பிள்ளையாரவர்கள் 'ஈசல் புற்றிலிருந்து கரடி ஈசல்களை உறிஞ்சுவது போல்' தனது துதிக்கையை அந்தப் பெண்ணின் பெண் குறிக்குள் விட்டு அங்கிருந்த அசுரர்களையெல்லாம் ஒரே உறிஞ்சாக உறிஞ்சிவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது. எனவே, இம் மாதிரியான காட்டுமிராண்டித் தன்மையான ஆபாசங்களுக்கு—கண்டவைகளையெல்லாம் கடவுள் என்று சொல்லும் ஆத்திகர்கள் என்ன பதில் சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்.

'எவனோ ஒருவன் ஒரு காலத்தில் அப்படி எழுதி விட்டான்' என்று பொறுப்பில்லாமல் சொல்லிவிட்டால் போதுமா? இன்றைய தினமும் அவ்வெழுத்துக் கொண்ட ஆதாரங்கள் போற்றப்படவில்லையா? அன்றியும், பல கோயில்களில் உருவாரங்களாகத் தோன்றவில்லையா? இதை எவனோ ஒருவன் செய்துவிட்டான் என்று சொல்லுவதானால் இவைகளுக்குத் தினமும் பெண்டு, பிள்ளை, வாகனம் முதலியவைகளுடன் பூஜைகள் நடக்கவில்லையா? என்பது போன்றவைகளைச் சற்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்கின்றோம்.

சீர்திருத்தக்காரர்கள், அப்படி இருக்கவேண்டும்; இப்படி இருக்க வேண்டும் என்றும், மதத்திற்கு ஆபத்து; சமயத்துக்கு ஆபத்து: கடவுள்களுக்கு ஆபத்து என்றும் கூப்பாடு போட்டு—மதத்தையும் கடவுளையும் காப்பாற்றவென்று, அவைகளில் 'வக்காலத்துப் பெற்று', மற்ற மக்கள் துணையைக் கோரும் வீரர்கள் யாராவது இதுவரை இந்த ஆபாசங்களை விலக்க முன்வந்தார்களா என்றும் கேட்கின்றோம்.

இவற்றையெல்லாம் பற்றி எந்த ஆத்திக சிகாமணிகளுக்கும் ஒரு சிறிதும் கவலையில்லாவிட்டாலும்—'பிள்ளையார் சதுர்த்தி' என்கின்ற உற்சவம் என்றைக்கு என்பதில் மாத்திரம் வாதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் குறைவில்லை என்று சொல்வதோடு, இந்த ஆபாசங்களை யெல்லாம் ஒழிக்க முயற்சிக்காமல் சும்மா இருந்து கொண்டும், இந்த ஆபாசங்களைப் பிரசங்கம் பண்ணிக்கொண்டும் இருந்துவிட்டு-இதை எடுத்துச் சொல்லு



பவர்களை நாத்திகர்கள் என்று சொல்லிவிடுவதாலேயே எந்தக் கடவுளையும், எந்தச் சமயத்தையும் காப்பாற்றிவிட முடியாதென்றே சொல்லுவோம். இனி அடுத்த கடவுளைப் பற்றிக் கவனிப்போம்.

['பகுத்தறிவு' மலர் 2 : இதழ் 4-கட்டுரை—1935]

## 6. சுப்பிரமணியன் பிறப்பு

சுப்பிரமணியனது பிறப்பைப் பற்றி, இராமனுக்கு விஸ்வாமித்திரன் கூறியது :

சிவபெருமான் உமாதேவியைத் திருக்கலியாணம் செய்து, மோகங்கொண்டு அவளுடன் நூறு தேவ வருஷம் (மனித வருஷத்தில் பல யுகம்) புணர்ந்து கொண்டிருந்தான். அவ்வளவு காலம் கழித்தும் பார்வதி கர்ப்பம் அடையவில்லை. அது கண்டு நான்முகன் முதலிய தேவர்கள் சிவனிடத்தில் வந்து, 'இவ்வளவு காலம் புணர்ந்த உம்முடைய தேஜஸ் ஆகிய விந்து வெளிப்படுமானால் உலகம் பொறுக்க மாட்டாது; உம்முடைய விந்துவைத் தயவுசெய்து, விடாமல் நிறுத்திக்கொள்ளும்' என்று வேண்டவும், அதற்கிசைந்த சிவன் தனது விந்துவை மற்றபடி யார் தரிப்பது, எங்கு விடுவது என்று கேட்க—தேவர்கள் பூமியில் விடும்படி சொல்ல, அந்தப்படியே சிவன் பூமியின்மீது விட்டு விட்டார். பூமி தாங்கமாட்டாமல் பூமி முழுவதும் கொதிகொண்டு எழ, தேவர்கள் அந்த வீரியத்தைப் பூமி தரிக்கமுடியாது எனக்கருதி அக்கினியிடம் சென்று வேண்ட, அக்கினி வாயுவின் உதவியால் அவ் வீரியத்திற்குள் பிரவேசித்து பிரம்மதேவன் கட்டளைப்படி அதைக் கங்கையில் கொண்டு சேர்த்து, அவ் வீரியத்தைப் பெற்று ஒரு குழந்தை பெற வேண்டுமென்று கங்கையை வேண்ட, கங்கையும் அதற்குச் சம்மதித்து அவ் வீரியத்தைப் பெற, அவ் வீரியமானது கங்கை முழுவதும் பரவி நிறைந்துவிட, கங்கை அதைத் தாங்க மாட்டாமல் மறுபடியும் அக்கினியை வேண்ட, அக்கினி மனமிரங்கி கங்கையை நோக்கி, 'ஏ, கங்கையே! நீ அடைந்த சிவனின் வீரியத்தைத் தாங்க முடியாவிட்டால் பனிமலை அருகில் விட்டுவிடு' என்று சொல்ல, கங்கையும் அவ்வாறே அவ்வீரியத்தைப் பனிமலையின் அருகில் விட, அங்கு அது குழந்தையாகத் தோன்ற, அதை இந்திரன் பார்த்து அக் குழந்தைக்குப் பால் கொடுத்து வளர்க்கக் கிருத்திகா தேவிகளை ஏவ, அவர்கள் அதற்குப் பால் கொடுத்து வளர்த்து வரலானார்கள்.

பல இடங்களில் சிவனது வீரியம் ஸ்கலிதமானதன் பலனாக அக் குழந்தை உற்பத்தியானதால், அக் குழந்தைக்கு ஸ்கந்தன் என்றும்; கிருத்திகா தேவிகள் ஆறு பேர்களுடைய பால் சாப்பிட்டதால் கார்த்திகேயன் என்றும்; மேற்கண்ட ஆறு பேரின் முலையிலும் ஆறு முகங்கொண்டு ஏக காலத்தில் பால் குடித்ததால் ஷண்முகன், ஆறுமுகன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

இவ் வரலாறு வால்மீகி இராமாயணத்தில், 'சிவன் பார்வதியைப் புணர்ந்தது' என்று தலைப்புப் பெயர் கொண்ட 36-வது சருக்கத்திலும், 'குமாரசாமி உற்பத்தி' என்கின்ற 37-வது சருக்கத்திலும் காணப்படுகின்றது.

இரண்டாவது வரலாறு : தேவர்கள் சிவனிடம் சென்று அசுரர்களை அழிப்பதற்குத் தகுந்த சக்தி கொண்ட ஒரு குழந்தையைப் பெற்றுத்தர வேண்டுமென்று வேண்ட, சிவன் அருள்கூர்ந்து தனது அய்ந்து முகங்களுடன் மற்றும் ஒரு முகத்தையும் சேர்த்துக்கொண்டு தோன்ற. அவ்வாறு முகங்களிலுள்ள நெற்றிக்கண் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் வெளியாக, அப் பொறிகளைக்கண்டு தேவர்களும் மனிதர்களும் நடுநடுங்கிப் பரமனை வேண்ட, பரமன் அப் பொறிகளைக் கங்கையில் விடும்படி சொல்ல, அவர்கள் அப்படியே செய்ய, கங்கை அதைத் தாங்கமாட்டாமல் அவைகளைக் கொண்டு சரவணத்தில் செலுத்த, அங்கு ஆறு குழந்தைகள் தோன்ற, அந்த ஆறு குழந்தைகளையும் கிருத்திகைப் பெண்கள் அறுவர்களும் பால் கொடுத்து வளர்த்துவந்தார்கள். பிறகு, சிவன் பெண்சாதியாகிய பார்வதிதேவி, இந்த ஆறு குழந்தைகளையும் சேர்த்துக் கட்டி அணைத்து முத்தமிட்டுப்

படிப்பகம்

www.padippakam.com

பாலூட்டுகையில் அந்த ஆறு குழந்தைகளும் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் கொண்ட ஒரே குழந்தையாக ஆகிவிட்டது.

இதற்கு, ஆறுமுகமுடையதால் ஆறுமுகன் என்றும்; கங்கையாறு ஏந்திச் சென்றதால் காங்கேயன் என்றும்; சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணபவன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இது கந்தபுராணத்திலும், முருகன் கதையிலும் உள்ளது.

குறிப்பு: சுப்பிரமணியன் பிறப்புக்கு மேற்கண்டபடி இரண்டு கதைகள் காணப்பட்டாலும், கந்தபுராணத்தின் கதைப்படி பார்த்தாலுமே—வால்மீகி இராமாயணத்தில் விஸ்வாமித்திரர் இராமருக்குச் சொன்னதாகச் சொல்லப்படும் மேற்கண்ட கதைதான் உறுதியாகின்றது.

ஏனெனில், கந்த புராணத்திலும் பார்வதியானவள், தன் மூலியமாய்ப் பிள்ளை பெறுவதைத் தடுத்ததற்காக, தேவர்கள்மீது கோபித்துத் தேவர்களை, 'பிள்ளையில்லாமல் போகக் கடவது' என்று சபிக்கின்றாள் என்று காணப்படுகின்றது. சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறி வெளியாகி அதிலிருந்து பிள்ளை உண்டாகியிருக்கும் பட்சத்தில் பார்வதிக்குத் தேவர்களிடத்தில் கோபம் உண்டாகக் காரணம் ஏற்பட நியாயம் இல்லை. இந்தக் கோபம் உண்டாவதற்குக் காரணம், வால்மீகி இராமாயணத்தில் சொல்லுவது போல்—அதாவது 100 தேவ வருஷம் சிவன் பார்வதியைப் புணர்ந்து கடைசியாக வீரியம் வெளிப்பட்டுக் கருத்தரிக்கும் சமயத்தில் தேவர்கள் குறுக்கிட்டு, சிவனைத் தனது வீரியத்தைப் பார்வதி கர்ப்பத்திற்குள் விடாமல் நிறுத்திக்கொள்ளும்படி வேண்டினதால்—சிவன் அதை எடுத்துக்கொண்டதற்கு பார்வதி கோபித்து வீரியம் ஸ்கலிதமாகும் சமயத்தில் கொடுமை செய்ததற்காக அவர்களைச் சபித்து, அதாவது தன்னைப் போலவே தேவர்களுடைய பெண்சாதிகள் எல்லோரும் பிள்ளையில்லாமல் மலடிகளாக வேண்டுமென்று சபித்ததாகக் காணப்படுவது நியாயமாக இருக்கின்றது.

அன்றியும், பார்வதி தனது கர்ப்பத்தில் விழவேண்டிய வீரியத்தைப் பூமி பெற்றுக் கொண்டதால், பூமியையும் பார்வதி தனது சக்களத்திபோல் பாவித்து அவளையும் (பூமியையும்) பலபேர் ஆளவேண்டுமென்று சபித்ததாகவும், அதனாலேயே பூமிக்கு அடிக்கடி அரசர்கள் மாறுகிறார்கள் என்றும் வால்மீகியில் காணப்படுகின்றதும் பொருத்தமாயிருக்கின்றது.

கந்த புராணமோ—மேற்கண்ட சிவன் 100 வருடம் புணர்ந்த விஷயம் ஒன்றைத் தவிர, மற்றவைகளையெல்லாம் ஒப்புக்கொள்கின்றது.

ஆகவே, சுப்பிரமணியன் என்றும், சண்முகன் என்றும், கார்த்திகேயன் என்றும், ஸ்கந்தன் என்றும் சொல்லப்படும் சாமியானது மேற்கண்ட மாதிரி ஒரு பிறப்பு வளர்ப்புக்கு உட்பட்டது என்பது வைணவப் புராணங்களிலும் சைவப் புராணங்களிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றபடி, இந்த சுப்பிரமணியனுடைய கடவுள் தன்மையையும் செய்கைகளையும் வேறு தலைப்பின்கீழ் விவரிக்கலாம்.

['பகுத்தறிவு' மலர் 2 : இதழ் 4—கட்டுரை—1936]

## 7. அவதாரங்களின் இரகசியம்

தாய்மார்களே! தோழர்களே!

அவதாரங்களை இன்றைக்கு மாத்திரம் நாம் எதிர்க்கவில்லை; பல ஆயிரம் ஆண்டுகளாகவே எதிர்க்கிறோம். உங்களிடம் சரித்திர ஆதாரமில்லை; நாம் சரித்திரமில்லாதவர்கள். ஆனால், நம்மைப்பற்றிய சரித்திர ஆதாரங்கள் வேண்டுமானால் பார்ப்பனர் எழுதிவைத்துள்ள வேதங்களையும், புராணங்களையும் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். விஷ்ணு எடுத்ததாகக் கூறப்படும் பத்து அவதாரங்களிலிருந்து நல்ல ஆதாரங்கள் கிடைக்கின்றன.



விஷ்ணு மச்சாவதாரம் எடுக்கவேண்டிய அவசியமென்ன வந்தது? வேதத்தை, அசுரன் களவாடிச் சென்றானாம். வேதத்தைப் படைத்தவன் யார்? பிரம்மன் தூங்கும் போது அசுரன் வேதத்தைத் தூக்கிக்கொண்டு போனானாம்! அவன் தூங்கலாமா? அப்படியே அவன் தூங்கும்போது அசுரன் தூக்கிப்போனால் என்ன? வேறொரு வேதத்தை எழுதிக்கொள்ளக்கூடாதா? அவன்தானே எல்லாவற்றையும் படைத்தவன்!

தோழர்களே! வேதம் என்பதெல்லாம் அந்தக் காலத்தில் எழுத்து வடிவமாக இல்லவே இல்லை. வேறெப்படி இருந்ததென்றால்—ஓசைதான். அதை யாராவது களவாட முடியுமா? இதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், பார்ப்பான் தவிர மற்றவன் யாரும் வேத ஒலிகளைக் கேட்டு அதன் கருத்தைத் தெரிந்துகொள்ளக்கூடாது என்பதுதான்! இதற்கு மாறாக, அந்த அசுரன் வேதங்களைக் கேட்டு, அதன் கருத்தை அறிய முற்பட்டான். உடனே அவனை அழித்தொழிக்க அவதாரம் என்ற பெயரால் அயோக்கியத்தனம் செய்து அவனை ஒழித்து விட்டார்கள்.

அடுத்தபடியாக, நரசிங்கவதாரம் என்ன என்று கருதுகிறீர்கள்? இரணியன், பார்ப்பனர்களை அவனது நாட்டிலிருந்து வெளியேற்றியிருக்கிறான். இதை, நான் ஆதாரமில்லாமல் சொல்லவில்லை. ஆதாரத்துடன் முன்னமே 'விடுதலை'யிலும், வேறு ஒரு நூலிலும் வெளியிட்டிருக்கிறேன். அவன் சொல்லுகிறான், 'பார்ப்பனர்களைக் கொல்லுங்கள்! கோயில்களை இடித்துத் தள்ளுங்கள்! யாகம் நடத்த விடாதீர்கள்! பார்ப்பனச் சேரியைக் கொளுத்துங்கள்! ஜபதபம் பண்ணுகிறவர்களைப் புதையுங்கள்!' என்றெல்லாம் கட்டளை இட்டிருக்கிறான். இப்படிப்பட்டவனை விட்டு வைப்பார்களா பார்ப்பனர்கள்? போகட்டும். நேராக அவனை எதிர்க்கத்தான் அவர்களால் முடியுமா? ஆகவே தோழர்களே! அவனுடைய மகனைத் தேடிப் பிடித்தார்கள்; அவன் இளைஞன். அவர்கள் மாய்மாலத்திற் சிக்கினான். அவனைத் துரோகியாக ஏற்படுத்திக்கொண்டு இரணியனைக் கொன்று அழித்துவிட்டார்கள்.

ஒரு அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோய்க் கடலில் மறைந்து கொண்டானாம். தேவர்களெல்லாம் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டுக் கொண்டார்கள். உடனே அவன் பன்றி அவதாரம் எடுத்துக் கடலில் குதித்து, அசுரனைக் கொன்றுவிட்டு, பூமியைக் கொண்டுவந்து பழையபடி நிறுத்தினான். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அந்த அசுரன் என்பவன், பார்ப்பனர்களுக்கு இடம் இல்லாமல் செய்திருக்க வேண்டும். பார்ப்பனருக்கு இருக்க இடம் இல்லையென்றால் உலகமே இல்லை என்று சொல்லமாட்டானா? அப்படியே சொன்னார்கள். அதுதான் உலகத்தைப் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோய்க் கடலில் ஒளிந்து விட்டான் என்பது.

இல்லையென்றால் பூமி என்ன, பாயா—அவன் சுருட்டுவதற்கு? அப்படியே சுருட்டினான் என்றால், அவன் எங்கே இருந்து சுருட்டி இருப்பான்? அவனுக்கு மாத்திரம் ஒரு ரோடு வைத்துக்கொண்டு சுருட்டியிருப்பானா? சுருட்டிய பின் கடலில் ஒளிந்தான் என்றால் எப்படி ஒப்புவது? கடலும் பூமியில்தானே இருந்திருக்க வேண்டும்?

ஆகவே தோழர்களே! பார்ப்பானுக்கு இடமில்லை என்று அக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அடுத்தது, அமிர்தம் கடைகிற கதை. அமிர்தம் ஏன் கடையவேண்டி வந்தது; சுகமாக நீண்டகாலம் தேவர்கள் வாழவேண்டும்; அப்படி வாழ்வதற்கு அமிர்தம் வேண்டும். அதற்கு ஆள் வேண்டுமே! அதற்குச் சூத்திரன், அதாவது—அசுரர்கள் ஒரு பக்கமும்; தேவர்கள் மற்றொரு பக்கமும் நின்றுகொண்டு பாற்கடலில் மேரு என்ற மலையை மத்தாகப் போட்டு—வாசுகி என்ற பாம்பைத் தாம்பாகக் கட்டிக் கடைந்தார்கள். எப்படியோ அதிலிருந்து அமிர்தமும் வந்தது. அந்த அமிர்தத்தைச் சூத்திரன் உண்டால் தம்மைப் போல நீண்ட காலம் சுகமாக இருப்பானே என்று யோசித்தார்கள்? உடனே ஏமாற்ற

www.padippakam.com



வழி செய்தார்கள். மகா விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்தான். அவளைப் பார்த்த சூத்திரர்கள் அவளழகில் மயங்கி, அவள் (மோகினி) பின்னால் போய்விட்டார்கள். இவ்வாறு ஏமாற்றி விட்டார்கள். இக் கதையின் கருத்தென்ன? நாம் சுகம் அனுபவிக்கக்கூடாது; பார்ப்பானே எல்லா சுகத்தையும் அனுபவிக்க வேண்டும். நாம் அனுபவிக்கிற வாய்ப்பு ஏதாவது இருந்தால் அதற்கு என்ன அயோக்கியத்தனம் செய்தாவது ஏமாற்றுவது என்பதுதான்.

அடுத்தபடியாக, இராவணன். இவன்தான் பார்ப்பனர்களும் உடலுழைப்புச் செய்தாக வேண்டும் என்று அவர்களுக்கு உடலுழைப்பு வேலை தந்தான். இராமாயணத்திலே கற்பித்திருக்கிறபடி இராவணனுக்கு மூன்றரைக் கோடி வருடம் அவன் ஆயுசு என்றாகிறது. அவ்வளவு காலம் ஒருவன் உயிர் வாழ்ந்திருக்க முடியுமா? இராமாயணம் நடந்தது திரேதா யுகத்திலே. கிரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் ஆகிய எல்லா யுகங்களையும் சேர்த்துக் கூட்டினாலும் 40 இலட்சம் வருஷங்கள்தாம் ஆகின்றன. அதிலே கிரேதா யுகம் 17 இலட்சம் வருஷமும், திரேதா யுகம் 12 இலட்சம் வருஷமும்தான் ஆகிறது. 12 இலட்சம் வருஷம் காலாவதியாகியுள்ள ஒரு யுகத்திலே வாழ்ந்த இராவணன் மூன்றரைக் கோடி வருடம் எப்படி இருந்திருக்க முடியும்?

இராவணனுக்கு பத்துத் தலைகள் என்றிருக்கிறது. பத்துத் தலைகளிருந்தால் பத்து அடி நீளவாக்கில் இருந்திருக்க வேண்டும். அவன் படுத்துக்கொள்ள வேண்டுமென்றால் எப்படி இருந்திருக்கும்? ஒரு பக்கமாகப் படுத்தால் அந்தத் தலைகள் நாலைந்தடி உயரத்துக்கு வரும். அதற்குச் சாதகமாக எத்தனை தலையணைகள் போடவேண்டும்? அவன் தன் மனைவியோடு கொஞ்சுவதெப்படி? எத்தனை தலையணைகளைப் போட்டு அவனுடைய அய்ந்தாவது முகத்தால் முத்தமிடுவது? அவன் சீதையைக் கற்பழிக்கத் தூக்கிச் சென்றானாம்.

இதிலிருந்தெல்லாம் என்ன தெரிகிறதென்றால், இராவணன் மகா நீதிமான்; யோக்கியன்; அவனை ஒழிக்கவேண்டுமென்றால் இலேசில் முடியாத காரியம் என்பதைப் பார்ப்பனர்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். ஆகவே, அவனை ஒழிப்பதற்கு, 'பிறன் மனைவியைத் தூக்கி வந்தான்; கற்பழித்தான்' என்ற பழியால், தமக்கு அவமானம் நேருமே என்பதைக் கருதிக்கொள்ளாமலுங்கூட, அவன்பேரில் குற்றம் கற்பித்து அவனை ஒழித்துக் கட்டினார்கள்.

[பெங்களூரில், 30-11-1958-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-12-1958]

## 8. கடவுளைப்பற்றிக் காந்தியாரின் குழப்பம்

திரு. காந்தியவர்கள் 1928 அக்டோபரில் தமது 'யங் இந்தியா'வில் தம்மை ஒரு நண்பர் கடவுளைப்பற்றிக் கேட்ட சில கேள்விகளைப் பிரசுரித்து, அவைகளுக்குத் தமது அபிப்பிராயத்தையும் எழுதி உள்ளார்.

கேள்வியின் சுருக்கம் யாதெனில் :—

'கடவுளைத்தவிர மற்றதெல்லாம் நிச்சயமற்றதென்றும், சத்தியம்தான் கடவுள் என்றும், துன்பத்தைச் சகித்துக்கொண்டு பொறுமையாய் இருப்பதே கடவுள் என்றும், அயோக்கியர்களை எச்சரிக்கை செய்து அவர்கள் தமக்குத் தாமே கேடு விளைவித்துக் கொள்ளும்படி செய்து விடுகிறார்' என்றும் 'யங் இந்தியா'வில் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

ஆனால், கடவுள் இருக்கின்றார் என்ற உறுதி எனக்கு இல்லை.

ஏனெனில், அப்படிக் கடவுள் என்பதாக ஒன்று இருக்கும்பட்சத்தில் உலகத்தில் சத்தியத்தை நிலை நிறுத்துவதே அவரது இலட்சியமாக அல்லவா இருக்கவேண்டும்?



ஆனால், உலகில் எங்கு பார்த்தாலும் பலவிதமான அயோக்கியர்களும் கொடுமைக்காரர்களும் நிரம்பியிருப்பதுடன், ஒழுக்க நடவடிக்கைகளைப் பற்றிச் சிறிதும் கவலையே எடுத்துக்கொள்ளாத அயோக்கியர்களான அவர்கள் சவுகரியமாகவும், நலமாகவும் வாழ்கிறார்கள்.

அயோக்கியத்தனம் என்பது ஒருவித தொத்து வியாதிபோல் உலகில் தாராளமாய்ப் பரவிக்கொண்டு வருகிறது. இது இப்போதிருக்கும் மனித வர்க்கத்துடன் மறைந்து போவதாக இல்லாமல், இனி வரப்போகும் பின் சந்ததியார்களும் ஒழுக்கமற்றவர்களாகவும், நாணயமற்றவர்களாகவும் நடக்கும்படி செய்கின்றது.

கடவுள் சகலத்தையும் தெரிந்துவரும் சர்வ வல்லமை உள்ளவரா?

அப்படி இருந்தால், தனது சகலத்தையும் அறியும் சக்தியைக்கொண்டு கெடுதியும், கொடுமையும் எங்கிருக்கின்றன என்பதை அறிந்து, தனது சர்வ வல்லமையைக் கொண்டு அவைகளை ஒழித்து, அயோக்கியர்களை வளரவிடாமல் ஏன் செய்யக்கூடாது? அன்றியும் கடவுள் ஏன் கஷ்டங்களை அனுமதித்துக்கொண்டு பொறுமையாய் இருக்கும்படி செய்யவேண்டும்?

அயோக்கியத் தனத்துடனும், நாணயக் குறைவுடனும், மகாக் கொடுமையுடனும் உலகம் நடந்துகொண்டே இருப்பதை அனுமதித்துக்கொண்டே இருப்பாரானால் பிறகு கடவுளுக்கு என்னதான் யோக்கியதை இருக்கின்றது?

தாங்கள் சொல்லுவதுபோல், கொடுமை செய்கின்றவர்கள் தாங்களாகவே கெட்டுப் போகவும், தங்களுக்குத் தாங்களாகவே குழி வெட்டிக்கொள்ளவும் கடவுள் செய்வது உண்மையானால்—அவர் ஏன் கொடியவர்களைக் கொடுமை செய்வதிலிருந்து விலக்கி, கொடுமைகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விடக்கூடாது?

அப்படிக்கில்லாமல், ஒருவனுக்குக் கெட்ட காரியம் செய்யத் தாராளமாய் இடம் கொடுத்துவிட்டு, அக் கெட்ட காரியத்தால் உலகமும், பதினாயிரக்கணக்கான மக்களும் துன்பம் அடையும்படி செய்துவிட்டு, அதன்பிறகு கேடு செய்தவனைத் தானாகக் கெட்டுப் போகும்படி செய்துகொண்டு இருப்பது எதற்காக?

உலகம் நாளுக்கு நாள் கெட்ட தன்மையிலேயே போய்க் கொண்டு இருக்கிறது. ஆதலால், உலகத்தை யோக்கியமாகவும், அயோக்கியர்களை அழித்து யோக்கியர்களை உண்டாக்கவும் செய்வதற்குத் தனது சக்தியை உபயோகிக்காத ஒரு கடவுளிடத்தில் மனிதன் ஏன் நம்பிக்கை வைக்கவேண்டும்?

அயோக்கியர்கள் தங்கள் அயோக்கியத் தனத்துடன் சவுகரியமாகத் தீர்க்காயுளுடன் வாழ்வது என்பது நன்றாகத் தெரியும். அப்பேர்ப்பட்டவர்களால் துன்பம் இல்லாதிருப்பதை முன்னிட்டாவது அவர்கள் ஏன் சீக்கிரம் ஒழிந்துபோகக்கூடாது?

எனக்குக் கடவுளை நம்பவேண்டும் என்கின்ற ஆசை உண்டு. ஆனால், நம்புவற்குக் கொஞ்சமும் ஆதாரம் இல்லவே இல்லை. தயவு செய்து தங்களுடைய 'யங் இந்தியா' பத்திரிகை மூலம் இவற்றிற்குச் சமாதானம் சொல்லி எனக்கு நம்பிக்கை உண்டாக்கவேணுமாய்க் கோருகிறேன்.

இக் கேள்விகளுக்குக் காந்தியார் எழுதிய சமாதானமாவது :—இக் கேள்விகள் மிகப் பழைய கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கு நான் சொல்லக்கூடிய பதில் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. ஆனால், நான் ஏன் கடவுளை நம்புகிறேன் என்பதற்கு மாத்திரம் சமாதானம் சொல்லக்கூடும்.

ருஜுப்பித்துக் காட்ட முடியாது; அதாவது விவரித்துச் சொல்ல முடியாத ஒரு மறைவான சக்தி இருக்கிறது என்பதை நான் காணமுடிவதில்லை; ஆனால், ஒருவாறு

படிப்பகம்

www.padippakam.com



உணருகிறேன். ஆனால், அதை எந்த விதத்திலும் மற்றவர்களுக்கு ருஜுப்பித்துக் காட்ட முடியாததாய் இருக்கிறது. ஏனென்றால், அது எனது புலன்களின் சக்திக்கு மீறினதாய் இருக்கின்றது. வேண்டுமானால் ஒரு அளவுக்கு, கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் காட்டலாம்.

அசாவக', ஒரு சாதாரண மனிதனுக்குத் தன்னை ஆளுகின்ற அரசன் யார் என்பது தெரியாதபோதிலும், ஒரு அரசன் இருந்து ஆண்டுகொண்டுதான் இருக்கவேண்டும் என்பது மாத்திரம் அவனுக்குத் தெரியும். எனவே, ஒரு சாதாரண மனிதனுக்குச் சாதாரண சங்கதி கூடத் தெரியாமலிருக்கின்றது போல், நம்போன்றவர்களுக்கு மகா பெரிய சங்கதியான கடவுள் விஷயம் புலப்படுவது என்பது சாத்தியமான காரியமல்ல. ஆனாலும், இந்தப் பிரம் மாண்டமான உலகத்தைப் படைத்து ஆட்சிசெலுத்தும் சட்டம் ஒன்று இருக்கின்றதாக நான் அறிகிறேன். அந்தச் சட்டம்தான் கடவுள். அதை நான் மறுக்கமுடியாது. ஆனால், அந்தச் சட்டத்தைப் பற்றியாவது, அச் சட்டத்தை வழங்குபவரைப் பற்றியாவது, எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஒரு இராஜ்யத்தை ஆளும் அரசனை மறுப்பதால், அந்த இராஜ்யத்தில் உள்ளவன் எப்படி அந்த ஆட்சியில் இருந்து விடுதலை பெறமுடியாதோ, அதைப்போல் கடவுளை மறுப்பதால் கடவுள் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட முடியாது.

மொத்தத்தில் தெய்வீகமான சட்டம் ஒன்று இருக்கின்றது என்பதை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பணிந்து நடந்து வந்தால் வாழ்வு சுலபமாக நடைபெறும்.

கடவுளை உணர விரும்புவன் உறுதியான நம்பிக்கை கொண்டால்தான் முடியும். அந் நம்பிக்கைக்கு வெளி ஆதாரங்கள் தேடப் புறப்பட்டால் அது முடியாத காரியமாகும்.

கடைசியாக, மேற்கூறிய கேள்விகளுக்கு ஒழுங்குமுறையில் காரணங்கள் காட்டி, மேற்கண்ட கேள்விகள் கேட்டவரைத் திருப்திசெய்யத்தக்க நியாயங்கள் ஒன்றும் என்னிடம் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

கடவுள் நம்பிக்கை காரண காரிய ஆராய்ச்சிக்கு எட்டாதது. ஆனதினால், நான் இக் கேள்விகள் கேட்டவருக்குக் கடைசியாகச் சொல்லுவதென்னவென்றால், சாத்தியப்படாத காரியத்தில் பிரவேசிக்கவேண்டாம் என்பதுதான்.

உலகத்தில் உள்ள கெடுதிகளுக்கும், கொடுமைகளுக்கும் அறிவினால் காரணம் காட்டமுடியாது. ஆனால், கெடுதிகள் இருப்பதையும், அவற்றின் தன்மைகளை அறிய முடியாதது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

கடவுள் பொறுமை உள்ளவர் என்பதற்குக் காரணமே அவர் கொடுமை உலகத்தில் நடக்க அனுமதிக்கிறதினால்தான். கடவுளிடத்தில் கெட்ட குணம் இல்லை என்று எனக்குத் தெரியும். ஆனாலும், உலகில் ஏதாவது கெடுதி இருந்தால் அதற்கு அவரே கர்த்தா. ஆனால், அவருக்கு அதில் சம்பந்தம் இல்லை (இதற்கு அவருடைய ஆங்கில வாசகமானது)

I call God long suffering and patient precisely because He permits evil in the world. I know that He has no evil in Him, and yet if there is evil, He is the author of it and yet untouched by it......' என்று எழுதியிருக்கின்றார்.

எனவே, அவர் சொன்ன பதில்களிலிருந்தாவது, அவர் காட்டி இருக்கும் நியாயங்களில் இருந்தாவது கேள்வி கேட்ட நண்பருக்கு ஏதாவது பதில் இருக்கின்றதா என்பதைக் கவனித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இக் கேள்விகளை எப்படி திரு. காந்தி பழைய கேள்விகள் என்று சொன்னாரோ— அதேபோல், அவருடைய சமாதானங்களும் பழைய கதைகள் என்றுதான் சொல்லவேண்டும்.



என்ன வென்றால், 'கடவுளை அறிவது அசாத்தியம்.'

'அசாத்தியமான காரியத்தில் பிரவேசிக்காமல் இருப்பது நல்லது.'

'கடவுள் நம்பினால்தான் உண்டு.'

'அதுவும் உறுதியான நம்பிக்கை இருந்தால்தான் முடியும்' என்பன போன்ற சமாதானங்கள். ஆனால், ஒரு புதிய உதாரணம் காட்டியிருக்கின்றார். அது என்ன வென்றால் :

சாதாரண மனிதனுக்குத் தங்கள் அரசர் யார் என்பது தெரியாதாம். அதுபோல், தங்களுக்குக் கடவுள் என்பது தெரியவில்லையாம். இது எவ்வளவு அசட்டுத்தனமான சமாதானம் என்பதை வாசகர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

ஏனெனில், அரசன் எல்லோரும் தன்னை அறியும்படி செய்துகொள்ளத்தக்க சக்தி உடையவன் அல்லன். கடவுள் என்பவரோ சர்வசக்தி உள்ளவர் என்பதைக் கேள்வி கேட்ட நண்பர் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறார்.

தவிர, மற்றொரு புதிய விஷயம் கண்டுபிடித்து இருக்கிறார். அதாவது, கடவுள் இருக்கிறார் என்பது விளங்காமல் போனாலும் இருக்கிறார் என்று வைத்துக்கொண்டால் வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடியுமாம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடிகின்ற தற்காக, ஒரு விஷயத்தை—தனக்கு எட்டாததை—தெரியாததை நம்பவேண்டும் என்று சொல்வதனால், வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் நடைபெற வேண்டியதற்குச் சவுகரியமான வேறு அனேக காரியங்கள் செய்யக்கூடுமானால் அவைகளையும் செய்யச் சொல்லுகிறாரா என்பது விளங்கவில்லை.

ஏனெனில், பலவிதமான புரட்டு, பித்தலாட்டம், திருட்டு முதலிய காரியங்கள் செய்து ஏராளமான பணம் சம்பாதித்தவர்களின் வாழ்க்கைப் பிரயாணம் சுலபமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

தனக்குத் தெரியாததான கடவுளை நம்பாமல் நிறையக் கள்ளையும், சாராயத்தையும் குடித்துப் போதை ஏற்றிக்கொண்டு, வாய் குளறிப் பாடிக்கொண்டு, தள்ளாடி நடந்து போகிறவனுக்கு இதைவிட வாழ்க்கை யாத்திரை சுகமாகவும், சுலபமாகவும் கழிகின்றதை நாம் நேரில் பார்க்கின்றோம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் கழிவதே முக்கியமானால்— நாம் ஏன் இவனைப் பின்பற்றக் கூடாது? இந்த மாதிரிப் போதையில் மூழ்கியிருக்கும்போது எவ்வித இன்ப, துன்பமும் தோன்றாமல் வாழ்க்கை கழிந்து விடுகிறதா, இல்லையா? நிற்க;

தீமைகளும் கொடுமைகளும் கடவுளால் அனுமதிக்கப்படுகின்றனவென்றும், அதனாலேயே அவர் பொறுமைசாலி ஆகிறார் என்றும் சொல்லுவதைக் கவனித்தால் இது எவ்வளவு கவலையற்ற பதில் என்பது விளங்காமல் போகாது.

ஏனெனில், கடவுள் பொறுமையால் மற்ற ஜீவன்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதை உணர்ந்து பார்த்தால் விளங்கும்.

மற்றும், கொடுமைகளும் கெடுதிகளும் கடவுளிடம் இல்லை என்றும், ஆனாலும் அக் கெடுதிகளைக் கடவுளே உண்டாக்குகிறார் என்றும், ஆனால், அவைகளில் கடவுளுக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லை என்றும் சொல்லுவது அறியாமையால் சொல்லும் வாக்கியமா, அல்லது ஏதாவது ஒரு சமாதானம் சொல்லிக் கேள்வி கேட்பவர்களை ஏமாற்றிவிடலாம் என்பதாகக் கருதிச் சொன்ன வாக்கியமா என்பது நமக்கே விளங்கவில்லை.

உலகில் மிகப் பெரியார்கள் கூட்டத்திலும், மேதாவிகள் கூட்டத்திலும் சேர்ந்த ஒரு வரும், சதா சர்வ காலம் கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டிருந்தவரும், கடவுள் செயலை அடிக்கடி உணர்ந்து அதன் பயனை அனுபவித்துக்கொண்டே இருப்பதாகச் சொல்லுபவரு



படிப்பகம்

www.padippakam.com



மான ஒருவரே கடவுளைப்பற்றிச் சொல்வது இதுவானால், மற்றவர்களிடம்—அதாவது கடவுள் பெயரையும் சமயத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு வயிறு வளர்ப்பவர்களிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

அன்றியும், கடவுளைப்பற்றிப் பேசுகின்ற ஒவ்வொருவரும், 'கடவுள் பெயரற்றவர், ரூபமற்றவர், குணமற்றவர்' என்பதையும், 'அவர் மனத்திற் கெட்டாதவர், இந்திரியங்களுக்கு அகப்படாதவர்' என்பதையும், அவருக்கு இலட்சணமாகச் சொல்லும்போது—அதற்குமேல் கடவுள் உண்டா இல்லையா என்கின்றது போன்ற கேள்விகளே அனாவசியமானதும், பலனற்றதும் என்பது நமது முடிவு.

அல்லாமலும், அப்படிப்பட்ட ஒரு கடவுள் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி; அதைப்பற்றி நமக்குக் கவலை வேண்டுவதில்லை என்பது நமது முடிவு.

ஆனால், கடவுளைப்பற்றிய விஷயங்கள் வரும்போது நாம் கவலைப்படுவது எதைப் பொறுத்தவரை என்றால், கடவுள் இருக்கிறார் என்று ஒருவன் ஒப்புக்கொள்வதின் மூலம் அவனுடைய அறிவு வளர்ச்சியும் முயற்சியும் கெட்டு, சோம்பேறித்தனம் உண்டாகக்கூடாது என்பதைப் பொறுத்த வரையில்தானே ஒழிய வேறில்லை.

உதாரணமாக, பாதாள லோகம் என்று ஒரு லோகம் இருக்கிறது என்றும், அதில் நாகராஜன் என்கின்ற அரசன் இருக்கிறான் என்றும் ஒருவன் சொல்லிக்கொண்டு திரிவானானால், 'அந்த லோகம் எங்கே? அந்த அரசன் வீடு எங்கே?' என்று கேட்டுக் கொண்டு திரியவேண்டியது ஒவ்வொருவனுடைய வேலை அல்ல.

அதுபோலவே, 'இல்லாத பட்டணம்' என்று ஒரு பட்டணம் ஆகாயத்தில் இருக்கின்றது என்றும், அதற்கு அரூபி என்கின்ற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும், அவனுக்கு அனங்கள் என்கின்ற பூஜ்ஜியம் (0 சைபர்) பெண்கள் இருக்கின்றார்கள் என்றும் ஒருவன் சொல்லிக்கொண்டு திரிவானானால், 'அதைக் காட்டு' என்று கேட்டுக்கொண்டு திரியவேண்டியதும் ஒவ்வொருவனுடைய வேலையுமல்ல.

மற்றென்னவென்றால்,

இம் மாதிரி அரசர்களையும், பெண்களையும்பற்றி எல்லா மக்களும் நம்பாவிட்டால் அதற்காகத் தண்டனையென்று நிபந்தனை ஏற்படுத்தி, 'அந்த நாகராஜாவே உனக்குச் சோறுபோட்டுவிடுவார், ஆகாயக் கன்னியே உனக்குப் பெண்சாதியாய் இருந்துவிடுவாள், மற்றபடி நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே' என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளச் செய்து, மக்களது அறிவையும் நேரத்தையும் பொருளையும் பாழாக்கி, அவர்களை வெறும் அர்த்த மற்ற முறையில் அடிமைப்படுத்தி, பட்டினிபோட்டு வதைப்பதில்தான் கவலையே ஒழிய வேறில்லை.

ஒரு மனிதன் கடவுள் இல்லை என்று சொல்லுவானேயானால் அவன் உலகம் முழுவதும்—'அதற்கு அப்பாலும், இப்பாலும்' என்பவைகளெல்லாம் அறிந்து, நேரில் தேடித்தேடிப் பார்த்துக் காணாவிட்டால்தான் சொல்லவேண்டும் என்பதும் முழுதும் தப்பல்ல. ஆதலால், அதைப்பற்றிய முடிவைப்பற்றி நமக்கு இப்பொழுது ஒன்றும் அவசரம் இல்லை. ஆனால், அதற்கும் மனிதனின் வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம் எவ்வளவு? அதற்காக மனிதனின் அறிவையும் நேரத்தையும் பொருளையும் ஏன் செலவு செய்ய வேண்டும்? இதுவரையில் அனேகர் அப்படிச் செய்து வந்ததன்மூலம் அடைந்த நன்மைகள் எவை? அப்படிச் செய்யாததன்மூலம் ஏற்பட்ட அல்லது ஏற்படப்போகும் கெடுதி என்ன? —என்பன போன்றவைகளே இந் நிலையில் முக்கியமாக ஆராயத் தகுந்த விஷயமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வாசகர்கள் தயவுசெய்து கடவுளைப் பற்றிய நம்பிக்கையும் கவலையுமில்லாத புத்தர் நடந்துகொண்டதையும், கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்து



அவரது அருள் பெற்றவர் என்பவரான சம்பந்தருடைய நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கடவுளை நம்பினால்தான் யோக்கியனாக இருக்க முடியுமா என்பதும், நம்பாதவன் எல்லாம் அயோக்கியனா என்பதும் விளங்காமல்போகாது.

இதை ஏன் வலியுறுத்த நேரிடுகிறது என்றால், நம்மைச் சுற்றியுள்ள மக்கள் படும் கஷ்டங்களும், நமக்கு வெளியில் உள்ள நாடுகளில் உள்ள மக்கள் நிலையும் நடவடிக்கையும் அவர்கள் கண்ட அற்புதக் காட்சியையும் அறிந்து அந் நிலைபெற்று—கஷ்டப்படுகிறவர்களை விடுதலை செய்யவேண்டும் என்கின்ற கருத்துக்கொண்டதே ஒழிய வேறில்லை.

இந் நிலையில் குட்டிச் சமயக்காரர்கள் தங்கள் நிலை என்ன? அவைகளின் அவசியம் என்ன? அதனால் ஏற்பட்ட நன்மை என்ன? என்பவைகளைத் தாங்களே சற்று, தங்களது நடுநிலைமை அறிவைக்கொண்டு யோசிப்பார்களானால்—அவர்களது மடமையும் இதுவரை தங்கள் வாழ்வு வீணானதும் ஒரு சிறிதாவது அவர்களுக்குப் புலப்படாமல் போகாது.

[பிறந்த நாள் மலர் 91; 'விடுதலை'-கட்டுரை—17-9-1969]

படிப்பகம்

www.padippakam.com

பகுதி II

# மதம்

படிப்பகம்

www.padippakam.com

# 1. மதம்

1. மதம்

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததேயாகும். மனித வர்க்கம் விலங்குகளைப்போல் தனித்தனியே காடுகளில் வாசஞ் செய்துவந்த நிலைமை மாறி, குடிசைகட்டிக் கூடிக் குலாவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகிவிட்டன. எப்படி எனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால் உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்கின்ற அவசியம் ஏற்பட்டு விடுகின்றதோ அதேபோல், மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டியதாகிவிட்டது. அக்கொள்கைகள்தாம் இப்போது மதம் எனப்படுவதாக இருக்கின்றன.

ஆனால், இக் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி? எந்த ஆதாரங்கொண்டு என்று பார்ப்போமானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி, மக்களின் அறிவு நிலை—அதாவது, பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித் திறம் முதலாகிய நிலையில், அதாவது கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும், ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேச வர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லாவிட்டால் யாராவது அறிஞர் அல்லது தந்திரக்காரர் அதை மாற்ற நினைக்கும்போது, பாமர மக்கள் மூட நம்பிக்கையின் பலனாய்த் தங்கள் பிடிவாதம் காட்டி மாற்றச் சம்மதிக்காத காலத்தில், பிரிந்து போய்க் கொள்கைகள் வகுத்து, அதாவது முன்னையதைத் திருத்தியோ அல்லது சிலவற்றை மாற்றியோ அல்லது சில புதியவைகளைச் சேர்த்தோ செய்ய நேரிடும்போது—அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டுவிடுகின்றதும் உண்டு. இதனால் பாமர மக்கள், அதாவது குருட்டுப் பிடிவாதமுள்ளவர்கள், ‘என் மதம் பெரிது’, ‘உன் மதம் சிறிது’ என்கின்ற மதச் சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டுவிடுகின்றது.

இன்றையதினம் எந்த மதக்காரனையாவது கண்டு, உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன :—என்றால் சில சடங்கையும் குறிகளையும் மாத்திரந்தான் சொல்லுவானே ஒழிய, அதன் உண்மைத் தத்துவம், அதாவது எந்தக் கருத்தைக்கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அந்தக் கருத்து சற்றும் அறிந்திருக்க மாட்டான். அதோடு, அதற்கு நேர் விரோதமாக அறியாமையும் ஒழுக்க ஈனங்களும் ஏற்பட்டு விட்டன. அன்றியும், சிலர் இவற்றைத் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளவும் கருவியாய் விட்டது. சிறப்பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றிக் கொடுமைப் படுத்திப் பணம் பறித்து, புரோகிதக் கூட்டமும் அரசாங்கமும் செல்வந்தனும் பிழைக்க மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றி, பொதுவாக மனித வர்க்கத்திற்கு அவற்றால் எவ்விதப் பலனும் இல்லாமற் போய்விட்டது.

[‘குடி அரசு’—தலையங்கம்—11-8-1929 ; 23-4-1949]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பொதுவாக சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவைகள் எல்லாம் நல்ல அர்த்தத்தில் எடுத்துக்கொண்டாலும் அவை மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டவைகளாகும்.

படிப்பகம்

www.padippakam.com



மனித வாழ்க்கைக்கேற்ற திட்டங்களேதாம் சமயம் அல்லது மார்க்கம் என்று சொல்லப்படுவதுமாகும்.

ஒரு வாசக சாலையிலே, உல்லாசக் கூட்ட சாலையிலே, ஒரு சங்கத்திலே சேர்ந்திருக்கவேண்டிய அங்கத்தினர்கள் அச் சங்கத்தின் நிர்வாகத்தின் அவசியத்திற்காக என்று தங்களுக்குள் விதிகளை நிர்ணயித்துக்கொள்வதுபோலவே—ஒரு பிராந்தியத்தில் வாழும் மக்கள் தாங்கள் சேர்ந்திருப்பதற்காகவும் தங்கள் வாழ்க்கை தடையின்றி முறையாய் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் நடைபெறுவதற்காகவும் ஏற்படுத்திக் கொண்ட, அல்லது யாராவது ஒரு தலைவனால் அல்லது அறிஞனால் ஏற்படுத்தப்பட்ட விதிகளே சமயக் கொள்கைகளாகும்.

இதுவும் அந்தந்தக் கால தேச வர்த்தமானத்திற்கும், மக்கள் அறிவு நிலைமைக்கும் வளர்ச்சிக்கும் தக்கபடி செய்யப்படுவனவேயாகும். ஆனால், அக் கொள்கைகள் மக்கள் தங்களது நன்மை தீமைகளைக்கூட சரிவர உணர்ந்து நடந்துகொள்ள முடியாத—அறிவு இல்லாத காலத்தில் மக்களைப் பயப்படுத்தி இணங்கச்செய்ய என்று பல கற்பனைகளை உண்டாக்கி, பயப்படுத்தி வைத்து, அப் பயத்தின் மூலமாவது நடக்கும்படி செய்யக் கருதி ஏற்படுத்திய கொள்கைகளும் சேர்ந்தவையாகும்.

அதாவது, எப்படி ஒரு குழந்தையானது, தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சக்தி இல்லாததென்றும், அதைப்பற்றிய விவரங்களை எடுத்துச்சொன்னால் அதை அறிந்து கொள்ள முடியாததென்றும் அதன் பெற்றோர்களோ பாதுகாப்பாளர்களோ கருதினால், அக் குழந்தை வெளியில்போய் நடமாடி ஆபத்தில் பட்டுக் கஷ்டப்படாதிருக்கச் செய்ய வேறுவிதமாக—அதாவது ஒருவித பயம் உண்டாகும்படியான, ‘பூச்சாண்டி பிடித்துக் கொள்வான்’ என்றும், ‘பேய்பூதம் பிடித்துக்கொள்ளும்’ என்றும், ‘துண்டுத் தடிகாரன் பிடித்துக்கொண்டுபோய் அடைத்துவிடுவான்’ என்றும் இன்னும் பல வகையாய்ச் சொல்லுவதோடு, கையையும் முகத்தையும் ஒரு விதமாக ஆக்கிக் காட்டி, அக் குழந்தைக்கு ஒன்றும் புரியாதபடி மிரட்டிப் பயப்படுத்திவைத்து, அதை எப்படி வெளியில் போகாமல் செய்கின்றார்களோ, அப்படிப்போலவே—மக்கள் வாழ்க்கை நலத்திற்கென்று ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளை உணர்ந்து அதன்படி ஒழுகமுடியாத நிலையில் மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கருதப்பட்ட காலத்தில், அப்போதுள்ள ‘அறிஞர்’ என்பவர்கள் அம் மக்களைப் பயப்படும்படியாக ஏதோ அம் மக்களுக்குப் புரியாத ஒன்றைச் சொல்லி, வேறுவித பயத்தை உண்டாக்கி, அக் கொள்கைகளுக்கும் மதக்கட்டுப்பாட்டிற்கும் இணங்கி நடக்கும்படி செய்திருக்கிறார்கள்.

அந்த நிபந்தனை மிரட்டல்களும் கட்டுப்பாடுகளுந்தாம் இன்றைய மோட்சம், நரகம், எமன், அடுத்த ஜென்மம், கர்மம், விதி, செக்கில் போட்டு ஆட்டுவது முதலாகியவைகளாகும்; மற்றும் இவற்றை வலியுறுத்தி எழுதிய சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலியவைகளில் சொல்லப்பட்டவைகளாகும்.

அது மாத்திரமல்லாமல், மேற்கண்ட முறையில் சொல்லுபவைகளையெல்லாம் சொல்லி விட்டும் எழுதிவிட்டுமான பிறகு, அவைகளை மனிதன் சொன்னான்; மனிதன் எழுதினான் என்றால் நம்பமாட்டார்களென்று கருதி, அவைகளையெல்லாம் கடவுள் சொன்னார், பகவான் சொன்னார், ரிஷி சொன்னார், முனிவர் சொன்னார் என்று—அதாவது மனிதத் தன்மைக்கு மீறினவர்களால் சொல்லப்பட்டது என்று சொல்லிக் கட்டாயப்படுத்தி—எப்படியெனில், நம்பினவனுக்கு மோட்சம்; நம்பாதவனுக்கு நரகம்—கழுதை ஜன்மமாய்ப் பிறக்க வேண்டுமென்று சொல்லி நம்பச் செய்வதுமான காரியத்தின்மீதேதான் சமயக் கொள்கைகளை மக்களுக்குள் புகுத்தி இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உண்மையென்று நம்பின பாமர ஜனங்களும், இவற்றினால் பிழைக்க வசதிசெய்துகொண்ட சில பண்டித ஜனங்களும் இந்த மாதிரிக் கொள்கைகள் கொண்ட சமயங்களைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்து, சிறிது



கூட காலத்திற்கும் அறிவின் நிலைமைக்கும் ஏற்றமாதிரி திருந்துவதற்கு விடாமல் முட்டுக் கட்டை போட்டுவந்ததாலேயே, அறிவுக்குத் தகுந்தபடியும் காலத்திற்கு ஏற்றபடியும் பலப் பல சமயங்கள் தோன்றவேண்டியதாயின. அன்றியும், திருத்த இடம் கொடுத்துக்கொண்டு வந்த சமயமெல்லாம் பெருகவும், பிடிவாதமாய் இருந்ததெல்லாம் கருகவுமாய் இருந்து கொண்டு வரவேண்டியதுமாயிற்று.

ஆகவே, இன்றைய தினமும் மக்கள் எந்தச் சமயமானாலும் இந்தத் தத்துவத்தின் மேல் ஏற்பட்டதென்பதை ஒத்துக்கொண்டும், காலதேச வர்த்தமானத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் தகுந்தபடி திருத்தமடைய உரிமையும் சவுகரியமும் உடையது என்று சொல்லப்படுமாயின் அது எந்த மதமாயினும், சமயமாயினும் அறிவுள்ள மனிதன் ஒப்புக்கொள்ள வேண்டியதேயாகும்.

அப்படிக்கில்லாமல், அதாவது மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கு மதம் ஏற்பட்டது என்பதாக இல்லாமல்—அதுவும் காலத்திற்கும் அறிவுக்கும் ஏற்ற மாறுதலுக்குக் கட்டுப்பட்டது என்பதாக இல்லாமல்—மதத்திற்காக மனிதன் ஏற்பட்டான் என்றும்; அந்த மதத்தைக் காப்பாற்றவேண்டியதே மனிதனின் கடமை என்றும்; அது எப்படிப்பட்டதானாலும் அதைப்பற்றிக் குற்றம் சொல்லவோ, திருத்தவோ யாருக்கும் உரிமை இல்லை என்றும் சொல்லும்படியான மதம் எதுவாயிருந்தாலும் அதை அழித்துத் தீரவேண்டியது மனித சமூக சீர்திருத்தத்தைக் கோருகிற ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆகவே, அக் கடமைக்குட்பட்டவைகள்தாம் சமயக் கொள்கைகளாகும்.

[சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சொற்பொழிவு—‘குடி அரசு’ 25-1-1931]

## 2. இந்துமதம்

*அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!*

குறிப்பாகவும் சிறப்பாகவும் கடவுள் என்பது என்ன என்பதைப்பற்றியும், பரிபாலனம் என்பது என்ன என்பதுபற்றியும், மதம் என்பது என்ன என்பது பற்றியும், தர்மம் என்பது என்ன என்பதுபற்றியும், இந்துக்கள் என்போர்களில் ஆயிரத்தில் ஒருவருக்குக்கூட, குறைந்த அளவு ஞானமில்லாமலே இருக்கிறது. இதைப்போல ஒரு ஜனசமூகத்திற்குக் கேடான காரியம் வேறொன்றும் இல்லை. நம்மில் அனேகர் கடவுள் என்றால் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்? கடவுள் நம்மைப் போல மனித உருவத்தோடு இருப்பதாயும்; அதற்குப் பெண்டாட்டி, பிள்ளை, தாய்தகப்பன், வீடுவாசல், சொத்து சுகம் உண்டென்றும்; அதற்கும் கல்யாணம், ருதுசாந்தி, படுக்கை வீடு, சீமந்தம், பிள்ளைப் பேறு உண்டென்றும்; இப்படி ஆயிரக் கணக்கான கடவுள்கள், ஆயிரக் கணக்கான பெயர்களினால் இருக்கிறதாகவும்; அதற்கு அபிஷேகமோ, பூசையோ, தீபாராதனையோ, உற்சவமோ செய்வதுதான் பக்தி என்பதாகவும் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அதுபோலவே, மதம் என்பதையும் நெற்றியில் நாமமோ, விபூதியோ, கோபியோ, சந்தனமோ பூசுவதுதான் இந்துமதம் என்றும்; ஒருவரை ஒருவர் தாழ்ந்த சாதி–உயர்ந்த சாதி என்று சொல்வதைத்தான் இந்துமதம் என்றும் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். உற்சவம் நடத்துவிப்பதையும், இந்த உற்சவத்திற்கு வரும் ஜனங்களுக்கு மடம் கட்டுவதும், சத்திரம் கட்டுவதும், சாப்பாடு போடுவதும் தர்மம் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இவ்விதக் காரியத்தைப் பிரச்சாரம் செய்வதையும், இவ்விதக் காரியங்களை நிர்வகிப்பதையும், இதற்காகப் பொதுஜனங்கள் பொருளைச் செலவு செய்வதையும் பரிபாலனம் என்று நினைக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இந்து சமூகத்திற்கு அடிப்படையான குற்றம்—அதாவது அஸ்திவாரத்திலேயே பலவீனம்—நாம் கடவுளையும் மதத்தையும் அறிந்திருக்கும் பான்மையேதான். இந்தப் பான்மையுள்ள சமூகம் உருப்படியாவதற்கு மார்க்கமே இல்லை. தொட்டதற்கெல்லாம் கடவுள் செயல் என்பதும்; நமது தேவைகளையெல்லாம் பிரயத்தனமில்லாமல் கடவுளை ஏமாற்றி அடைந்துவிடலாம் என்ற பேராசைப் பைத்தியமும் நம்மை விட்டு நீங்கவேண்டும். கடவுள் கைகால், கண், மூக்குடன் மனிதனைப்போல் எங்கோ ஓரிடத்தில் இருக்கிறார்; அவரை நினைத்தாலோ, பணிந்தாலோ, தேங்காய் பழம் உடைத்துப் பொங்கல் வைத்துப் பூசை செய்தாலோ, பூசாரிக்குப் பணம் கொடுத்தாலோ மனிதனாய்ப் பிறந்ததற்குச் செய்ய வேண்டிய கடன் தீர்ந்துவிட்டது; மனிதன் செய்த தப்பிதம் எல்லாம் தீர்ந்துவிட்டது என்று எண்ணுகிற எண்ணத்தைப்போல ஒரு முட்டாள்தனமான எண்ணம் வேறொன்றுமே இல்லை. மனிதர்கள் இவ்வளவு அக்கிரமங்கள் செய்யக் காரணமே, கடவுள் என்பது என்ன என்று உணராததும், உணர்ந்திருப்பதாய் நினைக்கும் பலர் —கடவுளை வணங்கி மன்னிப்புக்கேட்டால் மன்னித்துவிடுவார் என்ற நம்பிக்கையுந்தாம். கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவர் எல்லாவற்றையும் அறிந்துகொண்டுதான் இருக்கிறார் என்ற மக்களிலேயே 1000-த்தில் ஒருவன்கூட தனது காரியங்களைக் கடவுளுக்குவிடுவது அருமையாய்த்தான் இருக்கிறது. இவற்றிற்குக் காரணம்–இயற்கைக்கு விரோதமான கட்டளைகளையும் கடவுள் என்றால் என்ன என்பதையும் அறியாததேதான்.

கடவுளின் கட்டளை என்று சொல்வது ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொருவிதமாக இருந்துவருவதை நாம் காண்கிறோம். இவைகள் எப்படிக் கடவுள் கட்டளையாக மதிக்கப்படும்? அதுபோலவே, பாவபுண்ணியம் என்பது தேசத்திற்கு ஒருவிதமாகவும், மதத்திற்கு ஒருவிதமாகவும், சாதிக்கு ஒருவிதமாகவுந்தான் கருதப்படுகிறது. நமது கலியாணங்களிலேயே மதத்திற்கு மதம் வித்தியாசம்; சாதிக்குச் சாதி வித்தியாசம்.

சிலர் தமது சிறிய தகப்பனார், பெரிய தகப்பனார் புத்திரியை மணக்கிறார்கள்; சிலர் அத்தை, மாமன் புத்திரியை மணக்கிறார்கள்; சிலர் யாரையும் மணக்கிறார்கள்.

ஆகார விஷயத்திலோ, சிலர் பசுவை உண்ணுவது பாவம் என்று நினைக்கிறார்கள்; சிலர் பன்றியை உண்பது பாவம் என்கிறார்கள்; சிலர் கோழியை உண்பது பாவம் என்கிறார்கள். ஐந்துக்களிலேயே, சிலர் பசுவை அடித்துத் துன்புறுத்தி வேலை வாங்கலாம்; ஆனால், பாம்பை அடிப்பது பாவம் என்கிறார்கள். சிலர் எந்த ஜீவனையும் வதைக்கக் கூடாது என்கிறார்கள். சிலர் எல்லா ஜீவன்களும் மனிதன் தன் இஷ்டம்போல அனுபவிப்பதற்குத்தானே படைக்கப்பட்டன என்கிறார்கள்! இந்த நிலையில் எது உண்மை? எது கடவுள் கட்டளை? எது பாவம் என்று எப்படி உணரமுடியும்? இவற்றைப்பற்றி எவராவது ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் உடனே அவரை 'நாத்திகன்' என்று சொல்லுவதும், 'இதெல்லாம் உனக்கு எதற்காகவேண்டும்—பெரியவர்கள் சொன்னபடியும், நடந்தபடியும் நடக்கவேண்டியதுதானே!' என்றும் சொல்லிவிடுவார்கள்.

பெரியவர்கள் யார் என்று யோசிக்கப்போனால், அதிலிருக்கும் கஷ்டத்திற்கு அளவே இல்லை. அன்றியும், அவர்கள் சொன்னதையும், நடந்ததையும் கவனிக்கப் போனால் அதிலுள்ள கஷ்டத்திற்கும் விவகாரத்திற்கும் முடிவே இல்லை.

உதாரணமாக, சிலர் வேதம் என்று ஒன்றைச் சொல்லி அதன்படி எல்லோரும் நடக்க வேண்டும் என்று சொல்வார்கள். 'அதில் என்ன சொல்லி இருக்கிறது—நான் பார்க்கலாமா?' என்றால், 'அது கடவுளால் சொல்லப்பட்டது; அதை நீ பார்ப்பது பாவம், நான் சொல்வதைத்தான் நம்பவேண்டும்' என்பார்கள். உலகத்தில் எத்தனை கடவுள்கள் இருப்பார்கள்? ஒரு கடவுள் என்றுதானே சொல்லுகிறார்கள். அவர் சொல்லியிருப்பாரானால் உலகத்திற்கெல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டதாயிருக்க வேண்டாமா? அப்படியானால்,



கிறிஸ்து, முகமது முதலிய மதங்களும்—இந்தியா தவிர மற்ற தேசங்களும் இதை ஒப்புக்கொள்ளும்படி கடவுள் ஏன் இதைச் செய்யவில்லை? ஆனதனால், இதைக் கடவுள் சொன்னார் என்பது பொய் என்று யாராவது சொன்னால், உடனே அவனை 'வேதப் பிரஷ்டன்' என்று சொல்லிவிடுவார்கள். இவ்வாறு மூடமந்திரமானதும், இயற்கைக்கும் அனுபவத்திற்கும் நாணயத்திற்கும் விரோதமானதுமான கொள்கைகள் நமது நாட்டில் இந்துமதத்தின் பெயரால் இருந்துகொண்டு,ஒரு பெருஞ் சமூகத்தையே தேய்ந்துபோகும்படி செய்வதோடு—இதன் பரிபாலனம் என்னும் பெயரால் தேசத்தின் நேரமும் அறிவும் பொருளும் அளவற்று அனாவசியமாய்ச் செலவாகியும் வருகின்றது.

மதத்திற்கொரு கடவுளா? சாதிக்கொரு கடவுளா? மதத்திற்கொரு வேதமா? மதத்திற்கொரு பாவ புண்ணியமா? கடவுளுக்கும், மோட்சத்திற்கும், நரகத்திற்கும் வேறு ஒரு உலகம் இருக்கிறதா? ஒருக்காலும் அப்படி இருக்கவே முடியாது. பெரியவர்கள் கோயிலில் சாமி கும்பிடும்போது கட்கத்திலிருக்கும் குழந்தை எப்படி ஒன்றும் அறியாமலும், மனத்தில் ஒன்றும் நினைக்காமலும், தானும் கைகூப்பிக் கும்பிடுகிறதோ—அதுபோலவே, நமக்கும் தெய்வம், மதம், தர்மம் என்கிற சொற்கள் மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு அர்த்தமில்லாமல் நமக்குள் பதிந்துவிட்டன.

இதுபோலவே, பக்தி–தொண்டு–அஹிம்சை என்னும் பதங்களும் அர்த்தமில்லாமலேயே வழங்கப்படுகின்றன. யோசித்துப் பார்ப்போமேயானால், நம்மிடையில் இருக்கும் மக்களிடம் காட்டும் அன்புதான் நாம் பக்தி செய்யத் தக்க கடவுள்; அவர்களுக்குச் செய்யும் தொண்டுதான் கடவுள் தொண்டு. அம் மக்களின் விடுதலைதான் மோட்சம். அச் சீவன்களிடம் கருணை காட்டுவதும் அவைகள் வேதனைப்படாமலிருப்பதுந்தான் அஹிம்சை. மாமிசம் சாப்பிடுவதில்லை என்பது மாத்திரமே அஹிம்சையாகாது. பகுத்தறிவுள்ள மக்களைக் கஷ்டப்படுத்தாமல், அவர்கள் மனவேதனை அடையச் செய்யாமலிருப்பதும், அவர்கள் கஷ்டத்தையும் அடிமைத் தனத்தையும் நீக்க உழைப்பதுந்தான் அஹிம்சையாகும். மாட்டு மாமிசம் சாப்பிடாமலிருந்துவிட்டு, மாட்டை வண்டியில் கட்டி, சுமக்க மாட்டாத பாரம் வைத்துத் தினமும் கஷ்டப்படுத்துவது ஒருக்காலும் அஹிம்சையாகாது. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் மற்றொரு ஜீவனுக்கு உபத்திரவமும் கொடுமையும் செய்யாமலிருப்பதுந்தான் அஹிம்சை.

மனிதனுக்கு மனிதன் பார்ப்பது பாவம்; தெருவில் நடப்பது பாவம் என்று சொல்லிக் கொண்டு—பட்டை நாமம் போட்டுக் கொண்டும், பஞ்சக் கச்சம் வைத்து வேட்டி கட்டிக் கொண்டும் வாயால் 'ராம்! ராம்!' என்று ஜபித்துக்கொண்டும் இருந்தால் அது ஆச்சாரமும் பக்தியும் ஆகிவிடுமா?

நம்மைச் சுற்றிக் கோடிக்கணக்கான மக்கள் குடியிருக்க நிழல்கூட இல்லாமலும், இரண்டு நாளைக்கு ஒருவேளைகூடச் சாப்பிடச் சக்தி இல்லாமல் தரித்திரத்தால் வாடிக் கொண்டும் இருக்கும்போது, சோம்பேறிகளும் விபச்சாரிகளும் தங்கும்படி மடங்களும் சத்திரங்களும் கட்டுவதும், வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு 'பாயாசத்திற்குக் குங்குமப்பூ போடவில்லை'; 'பொங்கலுக்குப் பாதாம்பருப்பு போதவில்லை' என்று சொல்லிவிட்டுப் போகும் தடியர்களுக்குப் பொங்கிப் போடுவதும் சமாராதனை செய்வதும் தர்மமாகுமா? இவைகளை உணராமல் சுயநலக்காரர்கள் தங்கள் நன்மைக்கு எழுதிவைத்திருக்கும் ஆபாசக் களஞ்சியங்களை நம்பிக்கொண்டு நமது பொருள், நேரம், அறிவு ஆகியவைகளை வீணாக்குகிறோம்.

இந்துக்கள் என்பார்களோ இந்துமத ஆச்சாரியர்கள் என்பார்களோ சிறிதும் கவலையற்று, தங்களது வாழ்வுக்கு இவற்றைத் தொழிலாய் வைத்துக்கொண்டு காலங் கழித்து வருகிறார்கள். இப்படி நடந்துவருவது சில தனிப்பட்ட நபர்களுக்கும், சில தனிப்பட்ட வகுப்புகளுக்கும் அனுகூலமாக இருப்பதால் இவ்வாபாசங்களை வெளியார்

படிப்பகம்

www.padippakam.com



அறியாமலிருப்பதற்கு அவ் வகுப்பாரின் கட்டுப்பாடான சூழ்ச்சியும், மற்ற வகுப்பாரின் அறியாமையும் உதவி செய்துவருகின்றன.

நமது சென்னை மாகாணத்தில் மாத்திரம் இந்துமத சம்பந்த.சடங்குகள் பெயராலும், மதத்தின் பெயராலும், தெய்வங்கள் பெயராலும், வருடம் ஒன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவாகிவருகிறது என்று சொல்வது அதிகமாகாது. அதாவது, எவ்வளவு யாத்திரை ஸ்தலம், எவ்வளவு வேண்டுதல் ஸ்தலம், எவ்வளவு உற்சவ ஸ்தலம், எவ்வளவு மதச்சடங்குகள்– இவைகளுக்கு ஏற்படும் செலவு, மெனக்கேடு இவைகளைக் கணக்குப் பார்த்தால் எவ்வளவு 10 கோடி ரூபாயாகும்? இதனால் என்ன பலனை அடைகிறார்கள்? மனத்தில் ஏற்படும் ஒரு குருட்டு நம்பிக்கையாலும், இதனால் இலாபமடையும் வகுப்பார்களால் ஏமாற்றப்படுவதாலுந்தானே நமது மக்கள் இவ்விதக் கஷ்ட, நஷ்ட, மெனக்கேடுகளுக்குக் கட்டுப்படவேண்டியிருக்கிறது? அல்லாமலும் இதனால் எவ்வளவு அடிமைப் புத்தி வளர்கிறது?

[ஏழாயிரம் பண்ணையில், 16, 17-5-1926-ல் நடந்த பால்ய நாடார் சங்கத்தின் ஆண்டு விழாவில் சொற்பொழிவு—'குடிஅரசு' 30-5-1926]

## 3. மதப்புரட்டு

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

அரசியலின் பெயரால் அரசியல்காரர்கள், தேசியக்காரர்கள் என்போர்கள் தங்கள் சுயநலத்திற்கு மக்களை எவ்வளவு தூரம் ஏமாற்றிப் பாழ்படுத்தி வருகிறார்கள் என்று சொல்லி வந்தேனோ, அதைவிடக் கொஞ்சமாவது குறைந்ததல்ல இந்தப் புரோகிதர்கள் அல்லது பார்ப்பனர்கள் என்கிற ஒரு கூட்டத்தார், மதத்தின் பேரால் நம்மை ஏமாற்றி, நமது ஒற்றுமையைக் குலைத்து, நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த நமது பொருளையும் கொள்ளை கொண்டு, நமது நாட்டையும் சமூகத்தையும் பாழாக்கி, நம்மைச் சுயமரியாதை அற்ற மனிதர்களாக–நடைப் பிணமாய் வாழும்படி செய்துவருவது.

இதன் இரகசியத்தை நாம் கொஞ்சமும் உணராமல், இம் மாதிரியான வஞ்சகச் செயலுக்கும் நாமே உதவியாயும் இருந்து, நீடூழிகாலம் நம்மையும் நமது பின்சந்ததியையும் நிரந்தர அடிமையாக்க வேண்டியதான ஆதாரங்களையும் சிருஷ்டித்து வருகிறோம். இதை விளக்குகிறபோது உங்கள் மனம் ஒருசமயம் பதைத்தாலும் பதைக்கும். தயவு செய்து கொஞ்சம் பொறுமையோடு கவனித்துக் கேட்டபிறகு, உங்கள் பகுத்தறிவையும் நடுநிலைமையில் இருந்து உபயோகப்படுத்திப் பார்ப்பீர்களானால் அதன் உண்மை—அதாவது நான் சொல்வது சரியா, தப்பா என்பது உங்களுக்கு விளங்காமற் போகாது.

அல்லாமலும், 'நான் சொல்லுவதை நீங்கள் நம்புங்கள்! நான் சொல்லுவது கடவுள் வாக்கு; நம்பாவிட்டால் நரகம் வரும்; நாத்திகர்கள் ஆகிவிடுவீர்கள்' என்ற வேதம், சாஸ்திரம், புராணம் போல நான் உங்களை அடக்குமுறைக்கு ஆளாக்கவில்லை. நான் சொல்வது, 'உங்கள் அறிவு ஆராய்ச்சி, புத்தி, அனுபவம் இவைகளுக்கு ஒத்துவராவிட்டால் தள்ளிவிடுங்கள்; ஒத்துவந்தால் காரியத்தில் கொஞ்சமாவது செய்ய முற்படுங்கள். உங்கள் சகோதரர்களுக்கும் இதைச் சொல்லி அவர்களையும் ஈடேற்றுங்கள்' என்றுதான் நான் சொல்லுகிறேன். இப்படிச் சொல்வதனால் எனக்கு இதில் ஒரு சுயநலப் பலனும் இல்லை என்பதையும் அறியுங்கள்.

நான் எந்த மதக்காரனுக்காவது ஏஜண்டு அல்ல; அல்லது நானும் எந்த மதக்காரனுக்காவது அடிமையும் அல்ல. அன்பு, அறிவு என்கிற இரண்டு தத்துவங்களுக்கு மாத்திரம் ஆட்பட்டவன். ஆதலால், எனக்குப் பட்டதை உங்கள் முன் சொல்லுவதில் எனக்கு ஒரு கடமையும் ஆசையும் மகிழ்ச்சியும் இருப்பதால் சொல்லுகிறேன். மற்றபடி அதைப்பற்றிய



உங்கள் கடமைகளை உங்கள் சுதந்திரத்திற்கே—அதாவது உங்கள் பகுத்தறிவுக்கே விட்டுவிடுகிறேன்.

மதம் என்பது நாட்டிற்கோ ஒரு சமூகத்திற்கோ ஒரு தனி மனிதனுக்கோ எதற்காக இருக்க வேண்டியது? ஒரு தேசத்தையோ சமூகத்தையோ கட்டுப்படுத்தி, ஒற்றுமைப் படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனச் சாட்சிக்குக் கட்டுப்பட்டதா? அல்லது, ஒரு மனிதனின் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தக்கூடியதா? மனிதனுக்காக மதமா? மதத்துக்காக மனிதனா? என்பவைகளைத் தயவுசெய்து யோசித்துப் பாருங்கள்.

இந்த முறையில் நமது மதம் என்பதன் யோக்கியதையைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். முதலாவது, நமது மதமாகிய இந்துமதம் என்பது என்ன என்பது இங்குள்ள எத்தனை பேருக்குத் தெரியும்? இந்து மதஸ்தர்கள் என்போர்களில் எத்தனை பேர்கள் அதன் தத்துவத்தை அறிந்திருப்பார்கள்? இந்து மதம் என்பதாக ஒரு மதம் உண்டு என்று எத்தனை பேர் ஒப்புக்கொள்கிறார்கள்?

முதலாவது, இந்து என்பது எந்த பாஷை வார்த்தை? உலகத்தில் உள்ள எந்த பாஷையிலாவது 'இந்து' என்கிற ஒரு வார்த்தை இருக்கிறதாக யாராவது சொல்லக்கூடுமா? நமது நாட்டிற்கு இந்த வார்த்தை எப்பொழுதுவந்தது? என்று பார்ப்பதானால், நம்முடைய தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆகட்டும், அல்லது சங்ககாலப் பழைய தமிழ் ஆதாரங்களில் ஆகட்டும், அல்லது ஆரிய பாஷை, ஆரிய நாகரிகப் பழக்க வழக்கங்களைக்கொண்ட வேதம், சாஸ்திரம், ஆகமம், சுருதி, ஸ்மிருதி, புராணம், சரித்திரம், கதை முதலிய எவைகளிலாவது—இந்து அல்லது இந்துமதம் என்கிற வார்த்தை இருக்கிறதா? அல்லது ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் என்கிற பெரியோர்களது பாடல்களிலாவது சரித்திரங்களிலாவது இந்த வார்த்தை காணப்படுகிறதா? அல்லது சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள் என்று சொல்லப்பட்டவர்களாவது இம் மாதிரி வார்த்தையை உச்சரித்ததாகவோ, வழங்கினதாகவோ எங்காவது காணக்கிடக்கின்றதா?

மதம் என்பதற்கு நாம் உத்தேசிக்கும் பொருள்தான் என்ன என்று பார்த்தால் ஆராய்ச்சிக்காரர்கள், 'மதம் என்பது கொள்கை' என்று சொல்லுகிறார்கள். அப்படியே வைத்துக்கொள்வதானாலும் இந்துமதம் என்பதற்கு என்ன பொருள்?

'இந்துக் கொள்கை' என்று வைத்துக்கொள்ளலாம் என்றால்,

இந்து என்பதற்குப் பொருள் என்ன? இந்துமதம் என்பதைத் தவிர மற்ற மதங்கள் என்பவைகள் இம் மாதிரி இல்லாமல், மதம் என்பதற்கு முன்னால் ஒரு தனிப்பட்ட மனிதனின் பெயரை வைத்துப் பின்னால் மதம் என்பதைக்கூட்டி, 'கிறிஸ்து மதம்'; 'மகமதிய மதம்'; 'புத்தமதம்'; 'இராமானுஜ மதம்'; 'சங்கராச்சாரிய மதம்' என்பது போலச் சொல்லப்படுகிறது. இம் முறையில் 'இந்து மதம்' என்பது எந்த ஆசாமியை உடையது? யாருடைய கொள்கை என்று பெயர்கொண்டது? ஒன்றுமே இல்லாமல் வெறும் உச்சரிப்பைத் தவிர யாதொரு பொருளுமற்றதான சப்தம்கொண்ட வார்த்தையை நமது மதத்திற்குப் பெயராக வைத்துக் கொண்டிருக்கிறோமா இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இரண்டாவது, மற்ற மதங்களைப்போல இந்து மதத்திற்கு யார் கர்த்தா? அதற்கு என்ன வயது? அதற்கு என்ன கொள்கை? அதற்கு என்ன ஆதாரம்? என்பவைகளை யாவது யோசித்துப் பாருங்கள்.

'இந்துமதம் என்பது வேதமதம்; வேதம் என்பது கடவுளால் சொல்லப்பட்டது' என்று சிலர் சொல்லுவது உண்டு. அந்த ஆபாசத்தையும் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். கடவுளால் சொல்லப்பட்ட வேதமானால் உலகத்தில் உள்ளவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



எல்லோருக்கும் ஒரே வேதமாய் இருக்கக்கூடுமே தவிர—ஒருவர் ஒப்புக்கொள்ளவும், மற்றொருவர் மறுக்கவும், மற்றொருவருக்குத் தென்படக்கூடாததாயும், ஒரு எல்லைக் குள்ளாகவே அடங்கக்கூடியதாகவும் இருக்கமுடியுமா? கடவுளால் சொல்லப்பட்டதானால், அது ஒரு பாஷையில்தானா சொல்லப்பட்டிருக்க வேண்டும்? நமக்குச் சொல்லப்பட்ட வேதமானால் நம்முடைய பாஷையில் சொல்லப்பட்டிருக்காதா? வேதபாஷைக்கும், நமக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? அன்றியும், நமக்காகக் கடவுளால் சொல்லப்பட்டதாயிருந்தால் நாம் அதைக் கேட்கவும், பார்க்கவும், படிக்கவும், அறியவும் கூடாததாயிருக்க முடியுமா? அது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, அய்ந்து, ஆறு வேதம் என்பதாகக் கணக்குக் காரருக்குக் கட்டுப்பட்டதாக இருக்குமா? தவிர, 'பிடித்தவனுக்கெல்லாம் பெண்டாட்டி என்பதுபோல், அதற்கு ஆளுக்கு ஒருவிதமாக அவரவர் இஷ்டப்படி வியாக்கியானம் செய்யவும், ஒவ்வொரு வியாக்கியானத்திற்கு ஒரு கட்சி சேர்க்கவும் தக்கதாயிருக்கக்கூடுமா? ஆகிய இதுபோன்ற அனேக விஷயங்களை யோசித்தால், வேதம் என்று ஒன்று உண்டா? உண்டாயிருந்தாலும் அது உண்மையானதா? உண்மையானாலும் நம்மை அது கட்டுப் படுத்தத் தக்கதா? என்பவைகளைச் சற்று யோசியுங்கள். தவிர, இம் மாதிரியான மத, வேத கடவுளைப்பற்றியும் இதுபோலவே யோசியுங்கள்.

உலகத்திற்கு எத்தனை கடவுள்கள்? அதில் உள்ள எத்தனையோ மதங்களில் ஒரு மதமாகிய இந்துமதம் என்பதற்கு எத்தனை வேதங்கள்? அவைகளுக்கு எத்தனை கடவுள்கள்? இந்தக் கடவுளை ஆராதிக்கிற, வணங்குகிற மக்களுக்கு எத்தனை கட்சிகள்? ஒவ்வொரு கடவுளின் குறிகளுக்கு எத்தனை அடையாளங்கள்? அவைகளுக்காக எத்தனை சண்டைகள்? இந்தக் கடவுள்களுக்கு எத்தனை கோயில்கள்? எத்தனை ஆகாரங்கள்? எத்தனை கலியாணங்கள்? எத்தனை பெண்டு பிள்ளைகள்? எத்தனை அக்கிரமமான நடவடிக்கைகள்? என்பது போன்றதையும் கவனியுங்கள்! இந்தக் கடவுள்களின் பக்தர் களுக்குள் எத்தனை வித்தியாசங்கள்? எத்தனை சாதிகள்? எத்தனை உயர்வு தாழ்வுகள்? இவைகளில் எல்லாம் ஒரே ஒரு வகுப்பார் மாத்திரம் அதுவும் விரல்விட்டு எண்ணிவிடத் தகுந்த வெகு சிலர் மாத்திரம் எல்லாவற்றிற்கும் பெரியவர்கள், உயர்ந்தவர்கள், உரிமை யுள்ளவர்கள் என்கிற நியாயம் ஏன்?

கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர், அவர் எங்கும் உள்ளவர்—என்கிற தத்துவம் நம்முடைய மதத்துக் கடவுளுக்கும் உண்டானால், நாம் கடவுள் கிட்டத்தில் போகக்கூடாது, கோயிலுக்குள் வரக்கூடாது, மற்றொருவர் மாத்திரந்தான் கடவுளைத் தொடலாம், கழுவலாம், வேட்டி, துணி கட்டலாம் என்கிற கொடுமைகள் அதற்கு ஏற்படுத்த முடியுமா?

நாம் இந்த மதத்தை ஒப்புக்கொண்டு, அதில் கண்ட சாமிகளையும் ஏற்றுக்கொண்டு அதற்காகக் கோயிலும் கட்டி, சொத்தும்விட்டு, நாம் வணங்கவும் தினம் போய்வருவதினால் நமக்கு ஏற்படுகிற பலன் என்ன என்பதைப் பற்றிச் சற்று யோசித்துப் பாருங்கள்.

ஒரு இலட்சம், அய்ந்து இலட்சம், பத்து இலட்சம் ரூபாய்கள் என்பதாகச் செலவுசெய்து கோயில் கட்டி, அந்தக் கோயில் 100 வருஷம், 1000 வருஷம், 100000 வருஷம் என்கிற காலம் நிலைத்திருக்கச் செய்வதில், என்ன நிலைத்திருக்கச் செய்கிறோம் என்பதைச் சற்றுப் பொறுமையாய் யோசித்துப் பாருங்கள்! 'இந்தக் கோயிலில் உள்ள சுவாமியிடம் போகக் கூடாத ஒரு நீசன் நான்; அந்தச் சாமிக்கு நேரே பூஜை செய்யக்கூடாத ஓர் இழிந்தவன் நான்; என்னைவிட ஒரு பெரிய சாதி இருக்கிறது; அவர்களைவிடத் தாழ்ந்த சாதியாகிய நான் நிற்பதற்கு இந்த இடம்'—என்று பலப் பலவிதமாக நம்மை நாமே இழிவுபடுத்திப் பிரித்து, அதை ஒப்புக்கொண்டு, 'அந்தக் கல்லும் கோயிலும் கோயிலுக்குள் இருக்கும் சுவாமியும் உள்ளவரை, என்னுடைய இழிவும் நீசத் தனமும் தாழ்வும் நிலைத்திருக்கத் தக்கது; இதற்கு என் பின் சந்ததிகளும் கட்டுப்பட்டிருக்கவேண்டும். இத்தனை இலட்சம் செலவு செய்து, கோயில்கட்டி, கும்பாபிஷேகம் செய்தது மாத்திரமன்றி, என்னைவிட இன்னொரு சாதியான் உயர்ந்தவன் என்பதை நிலைநிறுத்தவும், அவன் பசியினால்



சாகாமல் இருக்கவும், அவனுக்கு உபயோகப்படும்படியாக அந்தச் சாமியின் பெயரால் இத்தனை இலட்ச ரூபாய் சொத்துக்களை எழுதிவைக்கிறேன். இதை அவன் கூட்டத்தார் மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு பிள்ளைபிள்ளைத் தலைமுறையாய்—கர்ப்பகோடி காலத் திற்குக் கல்லும் காவிரியும் புல்லும் பூண்டும் உள்ளவரைக்கும் மேல் சாதியாய் இருந்துவர வேண்டியது' என்று செய்வதாகிறதேயல்லாமல், வேறு என்ன என்பதையும் கவனித்துப் பாருங்கள். இது தவிர, இந்த மாதிரிக் கோயில்களுக்கு மற்றவர்களையும் எவ்வளவு செலவுகள் செய்யச் சொல்லுகிறோம்; அதனால் மக்களுக்கு ஏற்படுகிற செலவுகள் எவ்வளவு என்பதைப் பாருங்கள்.

'சர்க்கார் நம்மிடம் வரி வாங்குகிறார்கள்; கொள்ளை அடிக்கிறார்கள்; அது செய்ய வில்லை, இது செய்யவில்லை, வீண் செலவு செய்கிறார்கள்; மக்களுக்குப் படிப்பு இல்லை; ஒழுக்கம் இல்லை' என்று சத்தம் போடுகிறோமே, அப்படிப்பட்ட நாம் இந்தச் சாமிகள் பெயரால் அடிக்கப்படும் கொள்ளைகளைக்' கொஞ்சமாவது கவனிக்கிறோமா? அல்லது, அவைகளை நிறுத்தவாவது பாடுபடுகிறோமா என்பதை யோசிக்க வேண்டாமா?

திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஒரு 4, 5 கோயில்களை மாத்திரம் கணக்குப் போட்டுப் பாருங்கள். திருநெல்வேலி கோயிலுக்கு வருஷம் ஒன்றுக்கு 70 ஆயிரம் ரூபாய் வரும்படி; சங்கரன் கோயிலுக்கு 50,000 வரும்படி; குற்றாலம் கோயிலுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 40,000; திருச்செந்தூர் கோயிலுக்கு 1½ இலட்ச ரூபாய் வரும்படி. ஆக நான்கு கோயில்களுக்கு மாத்திரம் சுமார் மூன்று இலட்ச ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி வருகிறதாக இந்தத் தேவஸ்தான நிர்வாகிகளால் கேள்விப்பட்டேன். இது தவிர, இந்தக் கோயில்களுக்கு வருகிற பக்தர்கள் போக்குவரவு, தேங்காய், பழம், நெய், தயிர், பஞ்சாமிர்த அபிஷேகம், மேளம், தாளம், தாசி, சதிர், பாட்டுக் கச்சேரி, உற்சவம் முதலியவைகளில் செலவு செய்யும் பணம் எவ்வளவு? இவைகள் எல்லாம் எதற்காக உபயோகப்படுகிற தென்பதையும் யோசியுங்கள். 'நீங்கள் கீழ்சாதி; பூஜை பண்ணுகிறவனும், சிலரும் மாத்திரம் உயர்ந்த சாதி; ஆதலால் நீங்கள் கொடுக்கவேண்டியது, மற்றவன் சாப்பிட வேண்டியது' என்பதல்லாமல் வேறு எதற்கு உபயோகப்படுகிறது என்பதை நன்றாய்க் கவனியுங்கள். இந்த மாதிரி செய்யும்படி உங்களை எந்தச் சாமி கேட்கிறது, அல்லது கட்டளை இடுகிறது?

சில வயிற்றுச் சோற்றுச்சாமி உங்களை ஏமாற்றுவதும், நீங்கள் ஏமாறுவதும் கோவில்களில் உள்ள 'சாமி'கள் 'நமக்கு இப்படியும் முட்டாள் பக்தர்கள் உண்டா?' என்று பல்லைக் காட்டிக்கொண்டு சிரிப்பதும் அல்லாமல் என்ன பலன் கிடைக்கிறது?

[குற்றாலத்தில், 27-8-1927-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 11-9-1927]

அக்கிராசனர் அவர்களே!

சமயச் சீர்திருத்தம் என்பது பற்றிப் பேசுவது என்பது என்னைப்போன்ற ஒருவருக்கு இலேசான காரியமல்ல. அதற்குத் தக்க ஆராய்ச்சி வேண்டும். சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசவும் எனக்குப் போதுமான திறமை இல்லை. நான் சமய ஆராய்ச்சி செய்யவில்லை. கடந்த ஆறேழாண்டுகளாக அரசியலில் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் நடை பெற்றுவந்த காங்கிரசில் நான் உழைத்து வந்தது அன்பர் பலர் அறிவர்.

அரசியலின் மூலம் நாட்டின் சீர்திருத்தத்திற்கு அரும்பாடுபட்டும் யாதொரு பலனும் அடைய இயலாமல் போனதாலும், அதற்குக் காரணம் சமய சம்பந்தமான கொள்கைகளே தடையென்று உணர்ந்ததாலும், அக் குறைகளை நீக்க உழைப்பதுதான் அவசியமெனத் தோன்றிய பின்னர் அவ் வழியில் உழைத்துப் பார்க்கலாமென முற்பட்டேன். சமயத்தின் பெயரால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும், விடுதலைக்கு விரோதமானவை களையும், மக்கள் சுயமரியாதையற்ற வாழ்க்கையில் துன்புறுவதையும் ஒழிக்கவே முதலில் பாடுபடவேண்டும். அப்போதுதான் நாம் விடுதலை அடைய முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



நம் நாடு விடுதலையடைய முடியாததற்கும் சுயமரியாதையற்ற தன்மையில் வாழ்
வதற்கும் நமது சமயக் கொள்கைகள்தான் இடையூறாக இருக்கின்றன. நான் இப்பொழுது
பேசினால் கேட்போரில் சிலருக்கு மனவருத்தமாய்த்தான் தோன்றும். ஏனெனில், நம்
மக்களுக்குச் சமயப்பற்று என்கிற மூடநம்பிக்கையைச் சுயநலக்காரர்கள் அதிகமாய் ஊட்டி
விட்டார்கள். அது நமது இரத்தத்திலும் நன்றாய்க் கலந்துவிட்டது. சுலபமாய், கேட்
போருக்குச் சமாதானம் சொல்லிச் சரிப்படுத்த முடியாத அளவு பதிந்திருக்கின்றது. நாட்டின்
சீர்திருத்தம் என்ற தலைப்பின் கீழ் நான் பேசும் விஷயங்களை உறுதியாய் நம்புகிறேன்.
நம் நாட்டிற்கு என்றுமே விடுதலையில்லாத வழியில் காரியங்கள் சமயத்தின்பேரால் நடை
பெற்று வருவதைத் தெரிவித்தால் சிலர் மனம் வருந்தும்; அதற்குப் பயந்து வெளிப்
படுத்தாமல் போனால் நான் சுயநலம் கருதுபவனாவேன்; அல்லது, பயங்காளித்தனம்
கொண்டவனாவேன். பகுத்தறிவைக் கொண்டு பொது நிலையில் இருந்து ஆராய்ச்சி
செய்தால், நான் சொல்லுவதில் குற்றம் சொல்ல அவசியமிராது. சமய விஷயம் பேசும்
பொழுது அதன் பயனாய் அரசியலிலும் ஏற்பட்ட குற்றங் குறைகளைக் கூறவேண்டியிருக்
கின்றது. அரசியலில் நான் தீவிர வேலை செய்தேன் என்பது இங்குள்ள பலர் அறிவர்.
பின்பு அவ்வனுபவத்தைக்கொண்டு, அது அல்ல விடுதலை அடையப் பாடுபடும் வழியெனக்
கருதியே அதைவிட்டு வெளியேறினேனேயன்றி, மற்றபடி யாராலாவது வெளியேற்றப்
பட்டோ அல்லது சிறு அபிப்பிராயபேதம் ஏற்பட்டோ வெளிவந்தவனல்ல. நான் சாதாரண
நிலையிலிருந்து வெளிவரவில்லை. அரசியலில் ஒரு பொறுப்புள்ள பதவியிலும் உத்தியோகத்
திலுமிருந்தே நான் வெளிவந்தேன். நமது நாட்டுக்கு இவ்வரசியல் இயக்கம் மூலம்
ஒன்றும் ஆகாது என்று கருதியே வெளிவந்தேன். காஞ்சீபுரம் மாநாட்டில்தான் இவ்
வுணர்ச்சிகள் பலப்பட்டு வெளிவந்தேன். அரசியலில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும்
தமிழ்நாட்டுக் காரியதரிசியாகவும் பல ஆண்டுகள் இருந்தேன். அப்பொழுததான் நான்
ஆற்றுந்தொண்டு வீண் தொண்டெனவும், நமது எதிரிகளுக்கு அனுகூலமாய் இருந்து
கொண்டு நாட்டையும் சமூகத்தையும் பாழாக்குகின்றோம் எனவும் கருதி நான் விலகினேன்.

மத சம்பந்தமாகவும் எனது நிலையை நீங்கள் அறிய வேண்டுமானால், 1904-ஆம்
வருடம் முதல் 1927 ஆம் வருடம் ஜுன் மாதம் வரையில் சுமார் 23 வருடகாலமாக
எனது தாலுக்காவாகிய ஈரோடு சர்க்கிள் தேவஸ்தான கமிட்டிக்குக் காரியதரிசியாகவும்
தலைவனாகவுமிருந்தேன். இந்துமத பரிபாலன போர்டாரும் எனது நிர்வாகத்தைப்
பற்றிப் பெருமை பாராட்டியே பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். தற்பொழுது
உண்டாகிய புதிய போர்டார் புதிய கமிட்டியை நியமிக்கவே, அவர்கள் நான்கு தாலுக்
காவுக்கு ஒரு கமிட்டியாக ஏற்படுத்தி, அதில் என்னையும் தேவஸ்தானக் கமிட்டி அங்கத்
தினராக நியமித்திருக்கிறார்கள். தற்கால மந்திரி சபைக்கும் எனக்கும் உள்ள சம்பந்தம்
நீங்கள் அறிந்த விஷயமே. அவர்கள் செய்யும் குற்றங்களைப் பளிங்குபோல் எடுத்துக்
காட்டி வருகின்றவர்களில் நான் ஒருவன்; அப்படி இருந்தும், அவர்கள் என்னை நியமித்
தார்கள். என்னைப் பற்றிய பிராதுகள் பல அவர்களுக்குப் பார்ப்பனர்கள் அனுப்பி,
என்னை நியமிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்கள். அவைகளில் முதல் பிராது
நான் குற்றவாளி என்றும், சிறை சென்றவன் என்றும், இரண்டுமுறை சிறையில் அடைக்கப்
பட்டவன் என்றும் எழுதி அனுப்பினார்கள். அந்தப் பிராது எனக்கே என் பார்வைக்கு
வந்தது. நான் அவர்கள் எழுயதெல்லாம் உண்மைதான்; ஆனால் மூன்றுதடவை சிறை
சென்றேன் என்பதற்குப் பதிலாக இரண்டு தடவை என்று எழுதியதுதான் பிழை என்று
திருத்தி அனுப்பிவிட்டேன்.

மறுபடியும் பல பார்ப்பனரல்லாதாரிடமும் பல பார்ப்பனர்களிடத்திலும் கையொப்பம்
வாங்கி 'இவன் மதத்தை நிந்திக்கிறான்; எப்பொழுதும் பார்ப்பனரையே வைகிறான்;
வேண்டுமானால் சி. அய். டி. ரிப்போர்ட்டர்களின் ரிப்போர்ட்டுகளைப் பாருங்கள்' என்று
ஒரு விண்ணப்பம் சர்க்காருக்கு அனுப்பினார்கள். அதைப் பற்றியும் சர்க்கார் என்னைக்



கேட்டார்கள். நான் அதற்குப் பதில் எழுதியதில், 'நான் ஒரு வகுப்பாரை மாத்திரம்
வையவில்லை; எல்லாரையும் வைகிறேன். என் தொண்டுக்கு எந்தெந்த வகுப்பார் கொள்கை
எதிரிடையாக இருக்கிறதோ அவர்களைக் கண்டிக்காமல் இருக்க என்னால் முடியாது.
எல்லாருக்கும் சம உரிமை வழங்கப்படுவதற்காக உழைக்கிறேனே யல்லாமல் வேறு அல்ல'
என்று அறிவித்தேன். மறுபடியும் என்னை நியமித்தார்கள். சென்னைக்கு வருவதாலும்
மற்றும் வெளியூர்களுக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டதனாலும், எனது
தலைமைப் பதவியைப் பொறுப்பு வாய்ந்த ஒருவருக்குக் கொடுத்து நான் இன்றுவரையில்,
உப தலைவராக இருந்து வருகிறேன். என்னைச் சிலர் நான் செய்யும் உபந்நியாசங்களைக்
கேட்டு 'நாத்திகன்-மதத்தை நிந்திக்கிறவன்' என்றும் 'சுயராஜ்ய விரோதி' என்றும்,
'சர்க்கார்நேசன்' என்றும் குறைகூறி வருவார்கள். சர்க்காருக்கு வேண்டியவன் என்பதற்கு
அறிகுறி ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை. சர்க்கார் அன்று என்னை எப்படிப் பாவித்து
நடத்தி வந்தார்களோ அதுபோலவே இன்றும் என்னை நடத்தி வருகிறார்கள். இன்றும்
எனக்குப் பின்னால் போலீஸ்காரர்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

நான் உங்கள் முன்னிலையில் சொல்ல வந்தது சமயச் சீர்திருத்தம். நான் சொல்லு
வதையெல்லாம் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டுமென்றும், அதன்படி நடக்காவிட்டால்
பாவம் வரும் என்றும் சொல்லி, பார்ப்பனர்களைப் போல் நான் உங்களை ஏமாற்ற
வரவில்லை. நான் சொல்லுவதைப் பொறுமையுடன் கேட்டு, பிறகு உங்கள் பிரியம்போல்
நடவுங்கள் என்று சொல்லிய பின்பே நான் இன்று பேச எடுத்துக்கொண்ட 'சமயச்
சீர்திருத்தம்' என்னும் விஷயத்தைப் பற்றிப்பேச ஆரம்பிக்கிறேன்.

சமயம் என்பதும் மதம் என்பதும் ஒன்றுதான்; சமயச் சீர்திருத்தம் என்றால் மதத்
தைச் சீர்திருத்தவேண்டுமென்பதுதான் பொருள். சமயம் அல்லது மதம் என்றால் பொருள்
என்ன? மதம் வேண்டுமென்கிற உணர்ச்சி எப்போது உண்டாயிற்று? மதம் எதற்காக
வேண்டும்? என்பவைகளை உணரவேண்டும். மதம் என்பது என் சிற்றறிவுக்கு எட்டிய
வரையில் எந்த முறையில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால், மக்கள் கூடி கூட்டமாக வசிக்க
ஏற்பட்டவுடன் அவர்களுடைய நித்திய வாழ்க்கையில் ஒரு கட்டுப்பாடு இருக்கவும் மற்ற
வர்களை மனிதன் துன்புறுத்தாமல் உபயோகப்படுகின்ற முறையில்தான் ஏற்படுத்தப்
பட்டிருக்கவேண்டும். அந்த முறையில் ஏற்படுத்தின காலத்தில் அக் கால மக்களுக்குள்ள
அறிவு, ஆற்றல், நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி முதலியவைகளுக்கு ஏற்றவாறு ஒரு சிறு
கொள்கைகளை அமைத்து உண்டாக்கி இருக்கவேண்டும்; நாளடைவில் அது வளர்ந்து
கொண்டும் தனி மனிதன் பெருமைக்கும், அவன் ஆசைக்கும், பிறகு அரசியலுக்குமாக
சிறிது சிறிதாய் மாறி இப்போதுள்ளவைகள்போல் சமயம் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.
நமது நாட்டில் ஆதியில் சமயம் ஏற்பட்ட காலத்தில் சமயத்திற்கும் அரசியலுக்கும் யாதொரு
சம்பந்தமுமில்லை. அக் காலத்தில் அரசியலில் நம் மக்களுக்கு உணர்ச்சி இல்லை;
உணர்ச்சி உண்டாகவேண்டிய அவசியமும் இல்லை. ஏன்? பதினாயிரக்கணக்கான
ஆண்டுகளுக்கு முன்புள்ள சரித்திரங்களை ஆராயுங்கள். அக் காலத்தில் வேளாண்மை
மிகுதியுமிருந்தது. ஒவ்வொருவனுக்கும் வேண்டிய பொருட்கள் அனைத்தும் இருந்து
வந்ததோடு மிகுதியும் பட்டது.

நெல் வைத்திருப்பவன் பருத்தி வைத்திருப்பவனுக்கு நெல்லைக் கொடுத்து
பருத்தியோ அல்லது துணியோ பெறுவான். இதுபோல் எல்லா சவுகரியமும் உண்டு.
இதுதான் பண்ட மாற்றுதல் என்று பெயர். நம்மவர்கள் ஓய்வு நேரங்களில் சிந்தித்
ததிலேயே சில சட்டங்களும் மற்ற சமயக் கட்டுப்பாடுகளும் ஏற்பட்டன. ஆனால்,
இதுதான் பின்னால் நம் நாட்டிற்கு வந்த பார்ப்பனர்கள்—கவலையற்று இருந்த நம்
மக்களை ஏமாற்றி, தங்கள் நன்மைக்குத் தகுந்தபடி திருப்பித் தங்களுக்கு இவைகள்
எலலாவற்றையும் அடிமையாக்கிக்கொண்டு, இவைகளுக்குத் தாங்களே கர்த்தாவாகவும்
எஜமானர்களாகவும் ஆகிவிட்டார்கள். கொள்கையொன்றும் ஏற்படவில்லை; அவரவர்



படிப்பகம்

www.padippakam.com



இஷ்டம்போல் அனுபவித்தார்கள். முகமதிய மதமும், கிறிஸ்துவ மதமும் வெறும் கடவுளை வணங்குதல் என்பதோடல்லாமல், வரவர அரசியல் கருத்தைக்கொண்டும் தங்கள் தங்கள் மதத்தைப் பொறுத்த வேலை செய்தும், செய்து கொண்டும் வருகிறார்கள். ஆனால், நாம் கட்டுப்பட்டுக் கிடக்கும் சமயத்தையோ, அந்தக் காலத்திலிருந்த நிலையிலே இருக்கவேண்டுமேயல்லாமல் ஒரு சிறிதும் மாற்றக்கூடாது என்கிறார்கள். இதை நம்புகிற வர்களும் பிடிவாதக்காரராய் இருக்கிறார்கள. இங்குதான் அபிப்பிராய பேதம் ஏற்படுகிறது. நமக்கு அவசியமானபடி நாம் மாற்றிக் கொள்ளல் வேண்டும். அப்படி மாற்றுவதில் அடியோடு மாறவும் ஏற்படலாம். நம் மதம் கட்டுப்பாடு உடையதல்ல; ஒரு குறிப்புக்கு ஒத்ததல்ல. இக் காரணமே நம்மை அடிமையாக்கிற்று. ஆனால், இதனை நம் மக்கள் அறியார். இப்படி இருந்தால் நாம் எப்பொழுது முன்னேற்றமடைய முடியும்? நாம் எப்படி அடிமை வாழ்வினின்று நீங்கி சுயமரியாதையுடன் வாழமுடியும்? ஆகையால் ஒரு நாடோ, ஒரு தேசமோ சுயமரியாதையுடன் வாழத் தடுக்கின்றவர்களை அழிக்க உடனே முற்படல் வேண்டும். பிடிவாதக் குணத்தை விட்டொழித்து, மக்கள் நிலைமைக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு காரியங்களை முடித்து, தடைகளை அகற்றிச் சுயமரியாதை அடைந்து விடுதலை பெறவேண்டும்.

சிலர் தங்களை 'இந்து' என்கிறார்கள். ஆனால் அவர்களை, 'இந்து என்றால் என்ன?' என்றால் 100-க்கு 90 பேருக்குத் தெரியாமலிருக்கிறது. அப்படி இருந்தும், நம் மக்கள் மூடநம்பிக்கையால், மதத்தின்பேரால் கொண்டுள்ள அன்பு செப்பத் தரமல்ல. மற்ற மதக்காரர்கள் அவைகளை அறிவதுபோல், நம் மதம் நாம் அறியக்கூடாதவர்களா யிருக்கிறோம். முகமதியர்களில் 100-க்கு 90 பேர் தங்கள் மதத்தைப்பற்றித் தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். நம் மக்களை யாராவது உங்கள் மதம் என்ன? யார் ஏற்படுத்தியது? அதன் காலமென்ன? என்ற இதுபோன்ற வினா எழுப்பினால் பதில் சொல்லுவாரில்லை. முகமதியரையோ அல்லது கிறிஸ்தவர்களையோ அல்லது புத்தர்களையோ வேறு யாரையோ கேட்டால் உடனே பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள். இந்து மதத்திற்கு இவர்களால் கற்பிக்கப்படும் வயது இலேசானதல்ல. அதாவது, கடையிலுள்ள காகிதங்களையெல்லாம் வாங்கி, அதில் ஒன்றுபோட்டு அதன்பின் எத்தனை முட்டைவடிவம் போட்டாலும் அதற்கு மேல் போகுமேயன்றி குறையாது. தலைவர் யார் என்றால் சொல்லும் நிலையில் இல்லை. கடவுளால் ஏற்பட்டது என்பர் சிலர்; ஆதாரம் என்னவென்றால், வேதம் என்பார்கள். அது என்ன சொல்லுகிறதென்றால், 'நீ பார்க்கக் கூடாது; கேட்கக் கூடாது, படிக்கக் கூடாது' என்பார்கள். அதைக் கடவுள் எழுதி இருப்பார் என்று யாராவது நம்பமுடியுமா என்று பாருங்கள். ஒருபொழுதும் முடியாது, ஏனெனில், கடவுள் சொன்ன வேதமானால் உலகத்தார் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். யாரும் பார்க்க வேண்டும். அப்படி யிருக்க நாம் எப்படி அந்த வேதத்தை நம்புவது! அதன்படி நடப்பது? மற்ற மதக்காரர்கள் தங்கள் வேத நூல்களைப் பல மொழிகளில் மொழி-பெயர்த்து, அச்சிட்டுத் தங்கள் மதஸ்தர்கள் அல்லாத ஒவ்வொருவர் கையிலும்கூட கிடைக்கும்வண்ணம் தங்கள் வேதத்தையும் மதத்தையும் பரப்பி வருகிறார்கள்.

முகமதியர்களும் கிறிஸ்தவர்களும் இத்தகைய முயற்சி எடுத்துத் தங்கள் மதங்களை யும், வேதங்களையும் மற்ற மக்களிடம் பரப்பினதால்தான் ஏழரைக்கோடி முகமதிய சகோதரர்களும், ஒரு கோடி கிறிஸ்தவர்களும் நமது நாட்டில் உண்டாக நேரிட்டது. இந்த ஏழரைக்கோடி முகமதியரும் அரபி அல்லது துருக்கி முதலிய தேசத்திலிருந்து வந்தவர்க ளென்று யாராவது சொல்லமுடியுமா? முடியாது. அப்படி வந்தவர்களும் ஒரு கோடிக்கு மேலிருக்க முடியவே முடியாது; மற்ற மக்கள் நம் 'இந்து' மதத்திலிருந்து பிரிந்து சேர்ந்தவர்களேயாவார்கள். கிறிஸ்துவ சமயத்திலும் வெளியிலிருந்து வந்தவர்கள் 2 அல்லது 3 இலட்சம் பேரே இருப்பார்கள்; மற்ற 97 இலட்சம் பேரும் நம் மக்கள்தான். திருவனந்தபுரத்திலே 40 இலட்சம் மக்களுள் பதினாறரை இலட்சம் கிறிஸ்தவர்களும்,



மூன்றரை இலட்சம் முகமதியர்களும் உண்டாகி இருப்பார்களானால் எத்துணை மக்கள் நம் சமயம் விட்டுப் பிற சமயம் புகுந்தார்களென்பது இதில் காணக்கிடக்கின்றது. வாரம் ஒன்றுக்கு இந்துக்கள் என்போர்களில் 4,000 பேர் அன்னிய மதம் புகுகின்றார்கள். காரணம், அவர்கள் மதப் பிரச்சாரம் செய்கிறார்கள். மதப் பிரச்சாரம் செய்து ஏற்றுக்கொண்ட மக்களுக்கு முதலில் மதத்தைப் பற்றியும், கல்வியிலும் பயிற்சியடையச் செய்கிறார்கள். பின்பு அவன் வாழ்க்கையைச் செவ்வனே கழிக்க ஒரு தொழில் ஏற்படுத்திப் பின்பு தங்கள் மதமே உலகத்தை ஆளவேண்டுமென்ற உணர்ச்சியை உண்டாக்குகின்றார்கள். இவ்வளவு காரியத்திற்கும் அவர்கள் வெகு குறைந்த பணத்தைத்தான் மதத்தின் பெயரால் செலவிடு கிறார்கள்; நாம் மதத்தின் பேரால் செலவிடுவதில் 100-ல் ஒரு பங்குகூட அவர்கள் செலவு செய்வதில்லை; நம்மைப்போல் மற்றெந்த மதக்காரர்களும் செலவிடமாட்டார்கள். கிறிஸ்தவர்கள் நம் நாட்டிற்கு வந்து சொற்ப நாட்களுக்குள் நம் மக்களைச் சேர்த்துக் கல்வி கற்பித்து, அவர்களை நமக்கு எஜமானர்களாக்கி இருக்கிறார்கள்; உயரிய நிலைக்கும் கொண்டு வருகிறார்கள்'; 100-க்கு 90 பேர் படிக்கும்படி செய்து வருகிறார்கள்.

ஆனால், கடவுளால் ஏற்படுத்தப்பட்டதென்றும் கோடி கோடி வருஷங்கள் ஆன தென்றும் சொல்லும் நமது மதத்தையோ பெரும்பான்மையான மக்கள் படிக்கக்கூடாது; அப்படி மீறிப் படித்தால் நாக்கை அறுக்கவும், கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவும், படித்துவிட்டால் நெஞ்சை அறுக்கவும், மற்றும் பலவிதமான தண்டனைகள் உண்டு. இதன் பலனாய் வெள்ளைக்கார அரசாங்கம் நமது நாட்டிற்கு வந்து இப்போது கூட 100-க்கு 5 பேர்தான் படிக்க முடிகின்றது. அதிலும் 100-க்கு 90 பேர் பார்ப்பனர்கள். ஆனால் இப்போது சிலர் 'நாங்கள் படிப்பதைக் தடுப்பதில்லை; வேதத்தைத்தான் படிக்கக் கூடாதென்கிறோமேயன்றி வேறில்லை' என்கிறார்கள். வேதகாலக் கல்வி இக் காலத்தைப் போன்று இங்கிலாந்து, அய்ரோப்பா, அரேபியா முதலிய சரித்திரங்களல்ல; மற்றும் ஷேக்ஸ்பியர், மெக்காலே முதலியவர்களால் எழுதின நூல்களுமல்ல. ஆனால், அக் காலத்திய கல்வி என்பது நீதிகளை உணர்வது; நீதிகளோ வேதமாய்விட்டது; வேதமோ நாம் படிக்கக் கூடாதது. இம் முறையில் நாம் 1000-க்கு ஒருவராவது படிக்க முடியுமா? வெள்ளைக்கார ராஜாங்கம் வராதிருந்தால் நம்மில் ஆயிரத்துக் கொருவராவது படிக்க நமது மதம் இடந் தந்திருக்குமா? வேதந்தான் படிக்கக் கூடாதென்றாலும், வடமொழியாவது கற்றல் கூடாதாவென்றால் அதுவும் கூடாது என்பார்கள். ஏன் என்றால், அது வாயில் நுழையாது என்பார்கள். இல்லை, நான் முயற்சி செய்கிறேன் என்று சொன்னால், வேதத்திலுள்ள நீதிகள் அதில் இடை இடையே வருமாதலால் அதைப் படிக்கக் கூடாதென் பார்கள். இம் மாதிரியாகவே மதத்தின் பெயரால் நாம் படும்பாடும் அடையும் இழிவும் செப்பத் தரமன்று; ஆனால், செலவாகும் ரூபாயோ கணக்கிலடங்காது; இவ்வளவு ரூபாய் மற்றெந்த சமயக்காரர்களும் சமயத்தின் பெயரால் செலவிடுவதே இல்லை. மற்ற மதத்துக்கு யாரோ ஒருவர் இருவர் ஆயிரம் பவுன், 4 ஆயிரம் பவுன் கொடுப்பார்கள். அது சமயத்தைப் பரப்புவதற்குப் பயன்படும். சமயம் பரப்புவது என்பது மக்கள் கல்வி அறிவு, மக்கள் நோய் தீரல், அற்புதம் கண்டுபிடித்தல் முதலியவை. ஆனால், நம் சமயத்திலோ ஒவ்வொரு வரும் மத வரி கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமிருக்கிறது. நம் மாகா ணத்தில் மட்டும் சர்க்கார் கணக்குப்படி ஒரு வருஷத்திற்கு 2 கோடி ரூபாய் மதத்தின் பெயரால் கோவிலுக்கும் மடத்திற்கும் மாத்திரம் வரும்படி வருகிறது. இதன்றி தனிமடம், கோவில்களின் வரும்படிகளைக் கணக்குப் பார்த்தால் இப்படி எத்தனையோ பங்கு அதிக மாக முடியும். திருப்பதி கோவிலை மாத்திரம் எடுத்துக்கொண்டால் வருட வருமானம் 20 இலட்சமாகும். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மூன்று அல்லது நான்கு கோவில்களில் மாத்திரம் வருஷத்திற்கு 2, 3 இலட்சம் வரும்படியாகும்.

இன்னும் சிதம்பரம், இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் முதலிய பெருமை பெற்றதென்னும் கோவில்களின் கணக்கைப் பார்த்தால் அதிகமாகவே முடியும். இவைகள் தவிர, கணக்குக்கு

படிப்பகம்

www.padippakam.com



வராத ரூபாய்கள் எவ்வளவு? உதாரணமாக, இங்கிருந்து ஒருவர் திருப்பதிக்கு 2 ஆயிரம் ரூபாய் காணிக்கையாகச் செலுத்தப் புறப்படுகிறார் என்றால், அது தவிர அவருக்கு நேரிடும் செலவு எவ்வளவு? அவன் தன் சுற்றத்தாரை அழைத்துப் போகவேண்டியிருக்கிறது; மஞ்சள் ஆடை தரிக்கவேண்டியிருக்கிறது; மேள வாத்தியங்களுடன் ஊர்வலம் வரவேண்டியிருக்கிறது; வீதிகளில் கோவிந்தா சப்தம் போட்டுப் பிச்சை வாங்கவேண்டி இருக்கின்றது. இவ்வளவும் செய்து 2 ஆயிரம் ரூபாய் காணிக்கை செலுத்துவது எதற்கு என்றால், அது அவரே செய்துகொண்ட பிரார்த்தனையாம். என்ன பிரார்த்தனை என்றால், அவர் முன்பு காயலாவாக இருந்தபோதோ, வேறு கஷ்டமாயிருந்தபோதோ கடவுளை வேண்டிக்கொண்டாராம். கடவுளும் அவர் வேண்டுகோளுக்கிணங்கி, அவரை நோய் வாயினின்றும் நீக்கினாராம்; அவர் நினைத்ததை அனுகூலம் செய்தாராம். அதற்காகப் பிரார்த்தனை ரூபாயில் ஒரு காசுகூடக் குறையாமல் கொண்டுபோய்க் கொட்டவேண்டுமாம். எனவே, இதற்கு மற்ற செலவுகளிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் எவ்வளவு ரூபாய் செலவாகுமென்று சற்று யோசியுங்கள். இதைப் போன்ற எத்தனை மக்கள்—இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ளவர்கள் செல்வார்கள்? உற்சவத்திற்காகவும், காணிக்கை, வேண்டுதலை இல்லாமல் பல மக்கள் செல்லுகிறார்கள். அந்த முறையில் செலவிடும் செலவு எவ்வளவு? எனவே, இவ்வித நம்பிக்கையைப்பற்றி நான் இங்கு சொல்ல வரவில்லை; இப்படிச் செலவு செய்யும் பணத்தின் பலன் என்ன? இது என்ன ஆகின்றது? என்பதற்கே இந்தக் கணக்குச் சொல்லுகின்றேன். இதனால் யார் பலன் அனுபவிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். பச்சரிசி, பாசிப் பயிறு, நெய், பாதாமி, சர்க்கரை இவைகள் வாங்க உதவுகின்றது. இதை யார் சாப்பிடுகின்றார்கள்?

இது தவிர, மதத்தின் பெயரால் சடங்குகளுக்கென்று எவ்வளவு வரி கொடுக்கிறோம்? குழந்தை உற்பத்தி முதல் கடைசி வரையில் கொடுத்துத்தான் தீரவேண்டிய மாதிரியாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இவைகளினால் நாம் அடையும் பலன் என்ன என்று பார்ப்போமானால், நம்மை மிருகத்திலும் கேவலமாய் ஒரு வகுப்பார் மதிக்கும்படி நாமே நம்மை இழிவுபடுத்திக் கொள்ளுகிறோம் என்பதல்லாமல், வேறு ஒன்றுமில்லை. ஒருவன் தனது பிரார்த்தனைக்காகவோ தனது பாபம் தொலையவோ என்று ஒரு கோயிலைக் கட்டுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் அவன் அடைந்த பலன் என்ன? அவனே உள்ளே புக யோக்கியதை இன்றித் தனக்கென ஓர் இடம் வெளியிலே ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கின்றது. நாம் மனிதனாகப் பிறந்தும் மனிதனாக மடிவதற்கில்லையே! நம் சமயக் கொடுமைகளைப்பற்றிப் பல பெரியோர்கள் நமக்கு முன்னும் கண்டித்திருக்கிறார்கள். சீர்திருந்த முறையிலும் இருந்திருக்கிறார்கள். அதனால் ஒரு பலனும் உண்டாகவில்லை. ஆனால் அவர்கள் எல்லாம் இப்போது ஒரு சிலையாக இருந்து பூஜை பெற்று வருகிறார்கள். கடைசியாக நம்மவர்கள், 'பெரியோர்கள் போனவழியே நாமும் பின்பற்றுவோம், நமக்கென்ன?' என்பவர் பலர். அவர்கள் பெரியோர்கள் போன வழியில் மற்றவைகளில் நடக்கிறார்களோ வென்றால் இல்லவே இல்லை. இந்துமத பரிபாலனத்திற்கு என்று ஏற்பட்ட சட்டத்தில்கூட வெறும் கணக்குப் பார்க்கத்தான் சுதந்திரம் உண்டேயன்றி, வரவை யோக்கியமானமுறையில் செலவழிக்க அதிகாரமிருப்பதாக ஒரு வரிகூட இல்லை.

முன் சொன்னபடி ஒருவர் இரண்டாயிரம் ரூபாய் காணிக்கையாக திருப்பதிக்குச் செலுத்தப்போகிறார் என்று தெரிந்த உடனே 'மகந்து' என்கிற ஒருவர் தனது ஆளை இரயிலுக்கு அனுப்பி அவனை அழைத்து வரச்செய்து, 'நீங்கள் சென்னையிலிருந்து வருகிறீர்கள். நீங்கள் 2 ஆயிரம் ரூபாய் காணிக்கையாகக் கொண்டுவந்திருக்கிறீர்களல்லவா?' என்றவுடன், இவனுக்கு, 'இது எப்படி இவருக்குத் தெரிந்தது; எல்லாம் உள்ளது உள்ளபடி உரைக்கின்றாரே!' என்று நம்பி அவரிடம் அதிக பக்தி செலுத்தி விடுகிறான். இதைப் பார்த்து மகந்து, 'நீங்கள் கொண்டுவந்த ரூபாயை இங்கே என்னிடத்தில் கொடுங்கள்.



அங்கு கொண்டு போய்க் கொடாரத்தில் கொட்டினால் சர்க்கார் எடுத்து ஜெர்மனி யுத்தத்தில் பட்ட கடனுக்கு வட்டியாக உபயோகித்துக் கொள்வார்கள்; என்னிடத்தில் கொடுத்தால் நான் நேரிலே கடவுளுக்குச் சேரும்படி செய்வேன்' என்பார். சம்மதித்துக் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுவார். சந்தேகப்பட்டால், 'இதோ பார் இந்தப் படத்தை' என்று ஒரு படத்தைச் சுட்டிக் காண்பித்து, ஒரு காலத்தில் வெங்கடாசலபதிசாமி மகந்துவிடம் சதுரங்கமாடித் தோற்றதாகவும், அதற்கு நிபந்தனையாகக் கடவுள் முதலில் மகந்துவைத் தரிசித்தபிறகுதான் தன்னைத் தரிசிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தாரென்றும், அங்குள்ள மகந்து ஆட்கள் சொல்லுவார்கள். இதை நம்பித்தான் ஆகவேண்டும். நம்பாவிட்டால் 'கங்கையாற்றங் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாபத்திற்காளாவாய். தாயைக்கொன்ற பாபத்திற்காளாவாய்' என்று சொல்லுவான். பிறகு பேசாமல் கலகலவென்று ரூபாயைக் கொட்டிவிடுவான். இந்தப் பணமெல்லாம் மேற்கண்ட 20 இலட்சத்தில் சேராது; இதை அடக்க தேவஸ்தான மசோதாவில் சட்டம் இல்லை.

இதுதவிர, அபிஷேகம் 1000 ரூபாய், அல்லது 5000 ரூபாயில் செய்து வைக்கிறார்கள். அல்லது வெள்ளியில் கலசம், பொன், வெள்ளிரதம் வாகனம் செய்கிறார்கள்; பட்டு, பீதாம்பரம் சாற்றுகிறார்கள்; 50 அல்லது 60 குடம் பால் ஊற்றுகிறார்கள். இதனால் என்ன பலன் என்று அறிய தேவஸ்தான பரிபாலன சட்டத்திலோ மதபரிபாலன சட்டத்திலோ இடமில்லை. 5000 வருடங்களுக்கு முன்பு கோவில்கள் கட்டப்பட்டன என்கிறார்கள். சில கோவில்கள் இதற்கு முன்பிருந்ததாகவும் சொல்லுகிறார்கள். இம் மாதிரியாக நம் தமிழ் அரசர்களாலும் மற்றும் பெரியோர்களாலும் கட்டப்பட்டுச் செலவழிக்கப்பட்ட செல்வம் எவ்வளவு? அவர்கள் செய்த மற்ற தர்மங்கள் எவ்வளவு? அவர்களுடைய குடும்பங்கள் இப்போது எங்கே? யாராவது ஒருவரைக் காண முடியுமா? உதாரணமாக, தஞ்சாவூர் அரசரை எடுத்துக் கொள்ளுவோம். அவர் கட்டிவைத்த பள்ளிக்கூடங்களும் அக்கிரகாரங்களும் மற்றும் பல தர்மங்களும் இன்னும் இருக்கின்றன. அப்படிச் செய்த அந்த அரசாங்கம் இன்று எங்கே? வெள்ளைக்காரன் கையில் போய்ச்சேர்ந்து விட்டது; மீதியுள்ள சொத்துக்களுக்கும் சண்டை உண்டாயிற்று. ஒரு காலத்தில் அம் மன்னவனை க்ஷத்திரியன் என்று வானமளாவப் புகழ்ந்து, அவரிடம் பிச்சை வாங்கி வயிறு வளர்த்த அன்னக் காவடிகளெல்லாம் நேற்று, 'கலியுகத்தில் பிராமணன், சூத்திரன் என இரண்டு சாதிகள்தாம் உண்டு' என்று கோர்ட்டில் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். நம் மக்கள் இன்னமும் இவைகளெல்லாம் செய்தால்தான் புண்ணியமும் மோட்சமும் கடவுள் தயவும் உண்டு என நினைக்கிறார்கள்.

இதைப்பற்றி யாராவது சொன்னால், 'பார்ப்பனர்களை வைகிறார்கள்; நாத்திகம் பேசுகிறார்கள்' என்று நீலிக் கண்ணீர் விடுகிறார்கள்.

இனிச் சடங்குகளைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம். சடங்குக்காக நாம் செலவிடும் பணம் எவ்வளவு? 'சடங்குக்காக மனிதன்' என்று, நம் மக்கள் கருதுகிறார்கள். பிறப்பதற்கு முன்பே நம்மைச் சடங்குச் 'சனி' பிடித்துக்கொள்கிறது. கரு தரிப்பதற்கு முன்பே சடங்கு செய்ய ஆரம்பிக்கிறோம். அதற்குப் புரோகிதன் வேண்டும் என்கிறோம். அவன் வந்து விறகைக் கொளுத்திப் புகைத்துக் கரியாக்க வேண்டும். அவன் நல்ல பிள்ளை பிறக்குமென்றால்தான் நமக்கு நல்ல பிள்ளை பிறக்குமென்று நினைக்கின்றோம்; கர்ப்பத்திலேயே உபதேசம் செய்தால்தான் ஞானம் வரும் என்று நினைக்கின்றோம். அக் குழந்தை கீழே விழுந்ததும் சடங்கு செய்யவேண்டி இருக்கின்றது. சாதகம் பார்ப்பதற்கும், தொட்டிலில் போடுவதற்கும் பாலூட்டுவதற்கும், கோவணம் கட்டுவதற்கும், சவரம் செய்வதற்கும், காது குத்துவதற்கும், பள்ளிக்கூடம் வைப்பதற்கும் சடங்குகள் செய்து தீரவேண்டியிருக்கின்றது. குழந்தைக்குக் காய்ச்சல் வந்ததென்றால் சடங்குதான். இவைகள் எல்லாவற்றிற்கும் பார்ப்பானையே கூப்பிடவேண்டியதுதான். அவனுக்குப். பணம் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. காயலா வந்தாலும் 'சனியைச் சுக்கிரன் பார்க்கிறான்; சாந்தி கழிக்க வேண்டும்' என்கிறான். பணம் கொடுப்பதுதான் சாந்தி. கலியாணச் சடங்கோ, பொருத்தம்

www.padippakam.com



பார்க்கவேண்டியிருக்கிறது. மர[illegible]ம், பாலுக்குப் பால், கயிற்றுக்குக் கயிறு, பட்சிக்குப் பட்சி, எழுத்துக்கு எழுத்து என [illegible]ட்டுப் பொருத்தம் பார்க்கிறான்; இதற்கும் பணம். வேறு ஒருவன் அந்தப் பெண்ணை அடைய ஆசைப்பட்டால் அந்தப் புரோகிதனுக்குச் சாடைசெய்து 1000, 500 ரூபாய் தருகிறேன் என்றால், பொருத்தமிருந்தாலும் இல்லை என்றே சொல்லிவிடுவான். அவன் இஷ்டம்போல் அனேகமாக நாளும் நேரமும் வைத்துக் கொடுக்கின்றான். கல்யாண மந்திரமென்று கருமாதி மந்திரமோ ஏதோ சொல்லி காசு வாங்கிப்போகிறான். சில 10 நாளைக்குள்ளும் அந்தப் பெண் தாலி அறுத்துப் போகிறது; மாமியார் படுத்தும் துன்பமோ சொல்லி முடியாது. புருஷன்படுத்தும் உபத்திரவமோ, தரித்திரமோ கணக்கு இல்லை. இதனை, அந்தப் புரோகிதனை அடுத்து, 'இவ்வளவு பொருத்தம் பார்த்தும் ஏனய்யா இப்படி ஆச்சுது?' என்றால் 'அதன் கர்மம் அப்படி இருக்கிறது. இதற்கு யார் என்ன செய்யமுடியும்!' என்று சொல்லிவிடுகிறான். 'அதற்கு ஏன் இவ்வளவு பொருத்தமும் சடங்கும் செய்து பணம் பெற்றாய்?' என்றால், 'அது உன்னுடைய முட்டாள்தனம்' என்கிறான். பிறகு பிள்ளை பெறாவிட்டால், 'எப்படியாவது பிள்ளை பெற்றுத் தீரவேண்டும், காசிக்குப் போ, இராமேஸ்வரத்திற்குப் போ, தருமம் செய், சாந்தி கழி, ஓமம் பண்ணு, இல்லையேல் 'புத்' என்னும் நரகத்திற்குப் போய்ச்சேருவாய்' என்கிறான். பிள்ளையில்லா வீட்டில் சாப்பிட்டால் பெரிய பாவம் என்கிறான்.

உன் பெண்சாதியை உன் அண்ணன், தம்பிக்காவது விட்டுப் பிள்ளைபெற்றுத்தான் ஆகவேண்டுமென்கிறான். இதன் ரகசியம் என்ன? ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது பின் சந்ததி இருந்தால்தான் இப் பார்ப்பனர்கள் சடங்கு செய்து வாங்கித் தின்பதற்கு வழி உண்டு. இல்லையேல், கொடுப்பாரில்லாமல் அந்தச் சந்ததி போய்விடுமே என்பதுதான். கடைசியாய், சாகும்போதாவது நம்மை விட்டுவிடுகின்றானா? சுங்கச் சாவடிகளில் எப்படிச் சுங்கம் வாங்கினபிறகு வண்டிபோக அனுமதி அளிக்கின்றானோ, அதைப்போல இறந்து போகிறவன் இங்குள்ள பார்ப்பானுக்குச் சுங்கம் கொடுத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது.

இனி, மத ஆச்சாரியார்களையும் மத குருக்களையும் சற்றுக் கவனிப்போம். இவர்களால் மக்களுக்குப் பயன் ஒருசிறிதும் இல்லை. இந்துமதத்தின் பேரால் சங்கராச்சாரியார், சைவ மடாதிபதி, வைணவ மடாதிபதி முதலிய பலர் இருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் யானைகளிலும், ஒட்டகங்களிலும் தன் இனத்தாருடன் வருவதும், ஓரிடத்தில் தங்குவதும், அவ்வூரிலுள்ள தங்கள் இனத்தாரைக்கொண்டே சாமியாருக்குப் பாதபூசை, பிச்சை என்று விளம்பரம் செய்வதும், ஒரு ரூபாய், ஒரு பவுன் கொடுத்து அவன் காலைக் கழுவின நீரை வாங்கி அருந்துவதும், அந்த ஊரில் கறக்கிறவரையில் அங்கே இருந்த பிறகு வேறு வேறு ஊர்களில் தங்குவதும், நம்மிடம் வாங்கின பணத்தைக் கொண்டே சாமியார் சூத்திரனைப் பார்த்ததற்கு ஒரு பிராயச்சித்தமும் ஒரு முழுக்கும், நிழல் மேல்பட்டதற்கு ஒரு பிராயச்சித்தமும் ஒரு முழுக்கும், நீசமொழியாகிய தமிழில் பேசினதற்காக ஒரு பிராயச்சித்தமும் ஒரு முழுக்கும் போடவேண்டியவனாகி விடுகிறான். இம் மாதிரி ஆட்களில் சிலர் 'உலக குரு' என்கிறார்கள்; சிலர் 'குலகுரு' என்கிறார்கள். குலகுரு என்பவர் ஓரிடத்திலிருந்து தனது ஆட்களில் ஓர் ஆளை அனுப்பி தான் வந்திருப்பதாகத் தெரிவிப்பார். சிஷ்யர்கள் மக்களோடும், மனைவியோடும் ஓடோடியும் சென்று அவர் காலில் விழும்படி அவனது மக்களுக்கும் மனைவிக்கும் கட்டளையிட்டுத் தானும் காலில் விழுவான்.

குலகுரு: உனக்கு எத்தனை குழந்தை?

சிஷ்யன்: மூன்று குழந்தைகள், இரண்டிற்கு விவாகம் ஆயிற்று.

குலகுரு: உன் 2 குமாரர்கள் இருதலைக் கட்டு; நீ ஒருதலைக் கட்டு, ஆக மூன்று தலைக் கட்டு. மூவொன்று மூன்று; மூகால் முக்கால்; ஆக மூன்றே முக்காலுக்கு ஒன்றே கால்தான் வைத்திருக்கிறாய்; என்ன?



சிஷ்யன்: சாமி! அடியேனை மன்னிக்க வேண்டும். என் அறியாமைக்கு அபராதம் $1\frac{1}{4}$ காணிக்கையும் சேர்த்து வைத்திருக்கிறேன். ஏனென்றால், என் மக்களிருவரும் உத்தியோகம் செய்யவில்லையே!

குலகுரு: உங்கள் தந்தைதானே தலைக் கட்டுக்கு $1\frac{1}{4}$ கட்டளை யென்று எழுதித் தந்திருக்கின்றார். இதோ பட்டயம் பார்!—என்று சொல்லி பணம் வாங்கிக்கொண்டு, 'சாமிகள் வீடு சிறிது பழுது பார்க்க வேண்டியிருப்பதால் நீங்கள் வந்து அவைகளைச் சீக்கிரம் முடித்துக் கொடுங்கள். சாமிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்' என்று சொல்லி வேறு ஊருக்குக் கொள்ளையடிக்கப் போய்விடுவான். இவன் போன பிறகு யாராவது வந்து சிஷ்யனை 'உன்னுடைய மதம் என்ன அப்பா; நீ பெரிய நாமம் போட்டுக் கொண்டிருக்கிறாயே?' என்றால் ஒன்றுமே பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பான்.

புராணக் கொடுமை: இராமாயணத்தில் இராமருக்கும் சீதைக்கும் ஒருமுறை கலியாணம் செய்திருந்தால்—நாம் ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் வாரத்திற்கு ஒரு முறை கலியாணம் நடத்துகிறோம். வீட்டில் வைத்தால் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் எல்லாம் பறந்து போய்விடுவதோடு, நமக்கு மோட்சமும் கொடுக்குமென்று கருதியே, சீதா கலியாணம் செய்ய சாஸ்திரி காலில் விழுந்து இரண்டு ஜதை வேட்டியும் தருகிறோம். இராமாயணம், இராம பட்டாபிஷேகம், உற்சவம் செய்வதில் கேட்கக் கேட்க இன்பமாகத்தானிருக்கிறது. ஆனால், கடைசியில் படித்தால் நம்மை அடிமைகளென்று சொல்லுவதற்கு ஆதாரம் அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில் ஆற்றங்கரை ஓரத்திலிருந்து, மீன், பாம்பு முதலியவைகளைப் பிடித்து, அதைச் சரியாகச் சுட்டும் சுடாமலும் தின்ற வெள்ளைக்காரர்கள் தற்பொழுது எந்த நிலையில் இருக்கிறார்கள்? அவர்கள் இப்பொழுது ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும் செய்கின்றார்கள். எங்கேயோ இருந்து ஒரு பொத்தானை அழுத்தினால், எல்லா விளக்குகளும் எரிகிறதும், மறுபடியும் அந்தப் பொத்தானைத் தட்டினால் விளக்குகள் நின்று விடுகின்றதும்; மணிக்கு 500 மைல் ஆகாயக் கப்பல் பறக்கின்றதும் போன்ற பல செயல்களையும் செய்து கொண்டு வருகிறார்கள். ஆங்கிலேயரும், 'பெரியோர் போன வழியே நாமும் போவோம்' என்று போயிருந்தால் அவர்கள் இப்பொழுதுள்ள உன்னத நிலைமையிலிருக்க முடியுமா? பாவம் செய்பவன் புரோகிதனுக்குப் பணம் கொடுத்தால், அந்தப் பாவம் அவனைவிட்டு நீங்கிவிடுமென்று நினைப்போமானால் மக்களுக்கு மேலும் மேலும் பாவம் செய்ய வழியேற்படும். பாவத்தை விலைக்கு விற்கும் மூட வழக்கத்தை மூட்டைகட்டி வைத்ததால் அவர்கள் சீரும் சிறப்புமுற்று விளங்குகின்றார்கள். நாமும் அப்படியே விளங்கவேண்டுமானால் சமயமும் மூடவழக்கமும், குருட்டு நம்பிக்கையும் ஒழியவேண்டும்.

இப்போது, நீங்கள் இதையெல்லாம் கேட்டீர்கள். நாளைக்கு ஏதோ சடங்கு செய்ய வேண்டியதாயிருந்தால் புரோகிதனை அழைத்துத்தான் செய்ய முற்படுவீர்கள். காரணம் கேட்டால் பெண்கள்மீது பழி சுமத்துவீர்கள். அதோடு, உம் பெண்களையும் அவன் காலில் விழும்படி தூண்டுவீர்கள். இப் புரோகிதக் கொடுமைகளைப்பற்றி நம் பெண்கள் உணர்வார்களாயின் 'அய்யோ நீ தான் மதியின்றிக் காலில் விழுந்ததுமல்லாமல் என்னையும் விழச் சொன்னாயே' என்று நம்மை இழிவுபடுத்துவார்கள்.

இவற்றையெல்லாம் பெரியோர்களுக்கு என்ன சொல்லியும் பயனில்லை. அவர்களுக்குச் சில நொண்டிச் சமாதானங்கள் இருந்துகொண்டேயிருக்கும். இனிமேல் அவர்களை நம்புவதில் பயனில்லை. நான் வாலிபர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இதுதான்: நீங்கள்தாம் எதிர்காலத்தில் நாட்டை அடிமையிலிருந்து விலக்கப் போகின்றீர்கள். உங்கள் காலத்தில்தான் சுயமரியாதை உதயமாக வேண்டும். நான் உண்மையாய் நினைக்கிறேன்—நீங்கள் நினைத்தால் புரோகிதக் கொடுமை தலைகாட்டா

படிப்பகம்

www.padippakam.com



தொழியும்; நீங்கள் ஆண்பிள்ளைகளாக அடிமைத் தனத்தையும் மூடநம்பிக்கையையும் ஒழியுங்கள்; புரோகிதக் கொடுமைகளுக்கு வழி கொடாதீர்கள். அதுதான் உங்களை அடிமையாக்கி இருக்கின்றது.

[சென்னை பச்சையப்பன் மண்டபத்தில், 21-10-1927-ல் சொற்பொழிவு-'குடி அரசு'—23-10-1927

## 4. இந்துமதக் கொடுமை

இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும், அது பார்ப்பனர்கள் தங்கள் உயர்வுக்கும் வயிற்றுப் பிழைப்பிற்குமாக மூடர்களுக்கு ஏற்றவிதமாகப் பொய்யையும், புளுகையும் எழுதிவைத்து, அதையே மதம் என்றும் வேதம் என்றும் சாஸ்திரம் என்றும் பெயர் வைத்து, நம்மில் சில அயோக்கியர்களையும், அறிவிலிகளையும் இழிதன்மையால் சுவாதீனம் செய்து, அவர்களைக் கொண்டே அதைப் பிரச்சாரம் செய்விக்கச்செய்து, அதையே கலையாகவும் கவியாகவும் செய்வித்துவிட்டார்கள் என்றும், அதனால் இப்போது அவைகள் எங்கு பார்த்தாலும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் சுயநலக்காரர்களுக்கும், தொழிலாகவும் இலாபமாகவும் ஏற்பட்டுவிட்டதென்றும், இதன் பலனாக நாட்டிலுள்ள மக்கள் பெரும்பாலும் அறிவிழந்து, மானமிழந்து, நாணயமிழந்து பயனற்று வாழும்படியாகவும் ஏற்பட்டுவிட்டது என்றும் பலதடவை எழுதியிருக்கிறோம்.

இந்து மதத்திற்கு வக்காலத்துப் பேசும் யோக்கியர்கள் யாராவது சமாதானம் சொல்லுவார்களா என்று கேட்கின்றோம். இராமனைக் குற்றம் சொன்னதினாலும் தங்களுடைய மதமோ, தெய்வமோ மானமோ குற்றம் சொல்லப்படுவதாகக் கருதுபவர்கள் அக் குற்றங்கள் எங்கிருந்து உண்டாக்கப்பட்டன என்பவைகளை உணர்ந்தார்களா என்றுதான் கேட்கின்றோம்.

யோக்கியமும், ஆண்மையும் சுத்த இரத்த ஓட்டமும் உள்ளவர்களானால் அக் குற்றங்கள் உண்மையா இல்லையா என்பதையும், இந்து மதத்தைச் சேர்ந்த கடவுள்கள் என்று சொல்லப்படுபவர்களைப்பற்றிக் காணப்படுவதுதானா அல்லவா என்பதையும் வெளியாக்கி விவகாரம் தொடங்குவார்கள். அப்படிக்கில்லாமல், போக்கிரித் தனமாய் அன்னியர்கள் மீது குற்றம் சுமத்துவது யோக்கியப் பொறுப்புள்ளவர்கள் செய்கையாகுமா என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும், நாமும் நமது பத்திரிகையும் நாத்திகப் பிரச்சாரம் செய்கின்றதாகப் பல அயோக்கியர்கள் எழுதியும், உளறியும் திரிகின்றார்கள். இதைக் கவனிக்கும்போது நாம் கடிந்துகொள்ளாமல் இருக்கமுடியவில்லை. ஏனெனில், நாம் நாத்திகப் பிரச்சாரம் செய்வதாக எழுதுகிறவர்களும் குரைக்கின்றவர்களும், நாத்திகம் என்றால் என்ன என்பதைப்பற்றியும், அதனால் ஏற்பட்ட கெடுதி என்ன என்பதைப்பற்றியும் சொல்ல முன்வந்த பிறகு, அக் குற்றத்தை நம்மீது சுமத்தினால் அதை மனிதத் தன்மையாகக் கொள்ளலாம். அப்படிக் கில்லாது, நாத்திகம் இன்னதென்றே அறிவிக்காமல், மூட ஜனங்களுக்கு நாத்திகம் என்கின்ற வார்த்தையில் ஒருவித வெறுப்பு இருப்பதாக உணர்ந்து, அதை உபயோகித்துக் கொள்வதன் மூலம் நம்மீது அம் மக்களுக்குத் துவேஷம் உண்டாகட்டும் என்கின்ற அயோக் கியத்தனமான எண்ணத்துடன் பல மடையர்கள் அடிக்கடி எழுதினால், யார்தான் சும்மா இருந்துகொண்டிருக்க முடியும் என்றுதான் கேட்கின்றோம்.

நாம் ஏதோ இவ் விஷயத்தில் சற்றுக் கடினமான பதம் உபயோகிப்பதாக நம் வாசகர்கள் கருதலாம். என் செய்வது? நிவர்த்தி இல்லாததால் உபயோகித்தே தீர வேண்டியதாயிற்று என்பதை நமது வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஏனெனில், இதைப்பற்றிப் பல தடவைகளில் நாம் சமாதானம் எழுதியிருக்கின்றோம். அவை கொஞ்சமும் அவ் விலங்கினங்களுக்குப் படும்படியாகச் செய்யமுடியவில்லை. மறுபடியும்



நாத்திகம் என்றும், சீதையைத் திட்டினான் என்றும் மற்றதைத் திட்டினான் என்றுமே எழுதியும் பேசியும் வருகின்றார்கள். ஆனதால் இவர்களின் உண்மை யோக்கியதையை வெளியிட்டே தீரவேண்டியதாகிவிட்டதேயொழிய வேறில்லை.

இனிமேலாவது இந்து மதத்திற்கோ மற்றும் எதற்கோ வக்காலத்துப் பேசி வருகின்றவர்கள் மக்களின் அறியாமையைத் தங்கள் அனுகூலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளாமல்—நாணயமான முறையில் வக்காலத்து வாங்கிப் பேசவரட்டும் என்றே எதிர்பார்க்கிறோம். அன்றியும், நாத்திகம் என்று பேச வருபவர்களும், அதுபோலவே, எது நாத்திகம் என்பதை எடுத்துக்காட்டி வக்காலத்துப் பேச முன்வரட்டும் என்றே எதிர்பார்க்கின்றோம். அதை விட்டுவிட்டு, இம் மாதிரி அயோக்கியத்தனமான வழியில் பிரவேசிப்பது மிகுதியும் ஈனத்தனம் என்றே சொல்லுவோம். இப்படி எத்தனை பேர் புறப்பட்டாலும் நாம் கலங்கப்போவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இப்படித்தான் 'ஜஸ்டிஸ் கட்சி' என்பதையும், 'திராவிடன்' என்பதையும் ஒரு காலத்தில் மக்களின் அறியாமையை உபயோகித்துக்கொண்டு பல அயோக்கியர்கள், பொது மக்கள் அவற்றின்மீது வெறுப்படையவும் செய்து, அதனால் வயிறு வளர்த்து வந்தார்கள். ஆனால், அது எதற்கும் அஞ்சாமல் உறுதியுடன் நின்று உழைத்து வந்ததின் பயனாக இன்று மக்கள் உண்மை உணரும்படிசெய்து, புரட்டர்களின் யோக்கியதையையும் வெளியாக்கி, அவர்களை எல்லாம் மூலையில் உட்காரவைத்துவிட்டது என்பதை யார் மறுக்க முடியும்? எனவே, ஒரு காலத்தில் பாமர மக்கள் ஏமாற்றப்பட்டாலும் ஒரு காலத்தில் உண்மை அறிந்தேதீருவார்கள் என்பது நமது உறுதி.

['குடிஅரசு'-கட்டுரை—24-6-1928]

## 5. இந்துமதத் தத்துவம்

திருப்பதியில், திருப்பதி 'தேவஸ்தான பண்டில்' நடைபெறும் ஒரு பள்ளிக் கூடத்தில் சமஸ்கிருத வியாகரண வகுப்பில் பார்ப்பனரல்லாத பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்று பள்ளிக்கூட அதிகாரிகள் மறுத்துவிட்டார்களாம். பொது ஜனங்கள் இதைப்பற்றித் தேவஸ்தான அதிகாரியாகிய மகந்துவிடம் சொன்னதில், அவர் தமக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டாராம். மிஸ். மேயோ, இந்திய மக்கள் கல்வி அறிவில்லாமல் இருப்பதற்குப் பார்ப்பனர்களே காரணம் என்று—தமது, 'இந்தியத் தாய்' என்ற புத்தகத்தில் எழுதியதற்கு—அதைச் சுட்டி—'தேசியத் தலைவரான' திரு. சத்தியமூர்த்தி, பனகல் ராஜாவை சமூகத் துரோகி, தேசத்தைக் காட்டிக்கொடுத்த தேசத் துரோகி என்ற பொருள்படக் கூறினார். மற்றொரு தேசியத் தலைவர், மிஸ். மேயோவை 'குப்பைக்காரி' என்று கூறினார்.

இவர்கள் திருப்பதிப் பள்ளிக்கூட நடவடிக்கைகளுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள் என்று கேட்கின்றோம்.

சமஸ்கிருதம் தேவ பாஷை, பொது பாஷை, மத பாஷை, அறிவு பாஷை என்று சொல்லி, அதற்குப் பார்ப்பனரல்லாதார் பணத்தில் பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதும், அதில் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகள் படிக்க ஆசைப்பட்டால் மறுப்பதுமான அயோக்கியத் தனத்தை ஒழிக்கவோ, கண்டிக்கவோ இதுவரை எந்தத் தேசியத் தலைவர்கள் முன் வந்தார்கள் என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர்களின் புன்சிரிப்புக்குப் பயந்துகொண்டு அவர்கள் காலுக்கு முத்தமிட்டு வரும் 'தேசிய வீர முழக்கம்' இப்போது எங்கேபோய் ஒளிந்துகொண்டது என்று கேட்கின்றோம்.

செத்த பாம்பை ஆட்டுவதுபோல், 'செத்துச் சுட்டுச் சாம்பலாக்கி ஆற்றில் கரைத்து விட்டுக் காடாற்றுக் கருமாதியும்' நடந்துவிட்ட சைமன் கமிஷன் பகிஷ்காரத்தைப் பற்றி



படிப்பகம்

www.padippakam.com



யும், சூழ்ச்சியும் தந்திரமும் பார்ப்பன [illegible]களும் வயிற்றுச் சோற்றுத் தேச பக்தர்களின் பிழைப்புக்கு மார்க்கமும் நிறைந்த [illegible] திட்டத்தைப்பற்றியும் கூக்குரலிட்டுக் கூலி வாங்குகின்றார்களே ஒழிய இந்த விஷயத்தில் யாராவது கவலை செலுத்திவருகிறார்களா என்று கேட்கின்றோம்.

'வேதம்'தான்—சூத்திரர்கள் என்கிற 'வேசி' மகனும், பார்ப்பனர் 'தாசி' மகனுமாகிய—பார்ப்பனரல்லாதார் படிக்கக்கூடாது என்றால், வியாகரணம் என்கின்றதான பொதுவான இலக்கணமும்கூடப் பார்ப்பனரல்லாதார் படிக்கக்கூடாது என்று சொல்லுவது எவ்வளவு அயோக்கியத்தனமானது என்பதை நாம் விளக்கவேண்டியதில்லை. எந்தப் படிப்பைப் பார்ப்பனரல்லாதார் படிக்கக்கூடாதோ அந்தப் படிப்புக்குப் பார்ப்பனரல்லாதார் பணத்தை உபயோகப்படுத்தலாமா என்று கேட்பதுடன், சற்றாவது மானமோ, வெட்கமோ, சுயமரியாதையோ, சுத்த இரத்த ஓட்டமோ உள்ள கூட்டமானால் இந்தக் காரியம் செய்ய முடியுமா என்று கேட்கின்றோம்.

இனியாவது சர்க்காரோ அல்லது இந்து மத பரிபாலன போர்டாரோ அல்லது பொது ஜனங்களோ இந்தக் காரியத்தில் பிரவேசித்து, இந்த மாதிரி பொது நன்மைக்கல்லாத தனிப்பட்டவர்களின் நன்மைக்கு ஏற்றதுமான காரியங்களுக்குப் பொதுமக்களின் பணத்தை உபயோகப்படுத்தாமல் பார்த்துக்கொள்ளக்கூடுமா என்று கேட்பதுடன், சுயமரியாதை என்றால் என்ன என்று விழிப்பதுடன், தூங்கிக்கொண்டிருப்பது போன்ற விதண்டாவாதிகளுக்கு இதிலிருந்தாவது சுயமரியாதை என்பது இன்னதென்று புரியுமா என்று கேட்கின்றோம்.

['குடிஅரசு'—கட்டுரை—19-8-1928]

## 6. சமயம்

நமது மதமென்பதோ, வேதமென்பதோ, சாமிகள் என்பனவோ சமீபகாலத்தில் ஏற்பட்டதாகச் சொல்லுவதற்கில்லை. யுகம், சதுர்யுகம், மகாயுகம், கற்பம் என்பவைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு—சரித்திர ஆராய்ச்சிப்படி பார்த்தாலும் 5000, 6000 வருஷ காலத்திற்குக் குறையாது என்று சொல்ல இடமிருக்கின்றதென்பதில் ஆராய்ச்சிக்காரர்களுக்குள் அதிகமான அபிப்பிராய பேதமில்லை. உலகத்தில் தோன்றி இப்போது ஜீவனுடனிருக்கும் மற்ற சமயங்களெல்லாம் அதைவிடக் குறைந்த காலத்தைக் கொண்டதாகவே இருப்பதுடன், அந்த நாடுகளும் தலைசிறந்து விளங்குகின்றன. அப்படியிருக்க, நம் தேசம் மாத்திரம் இந்நிலையிலிருக்கக் காரணம் என்ன என்பதற்கு மேற்கண்ட சமயவாதிகள் என்ன பதில் சொல்லுகின்றார்கள்?

இதற்காக அரசாங்கத்தைப்பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லி அரசாங்கத்தை வைதுவிட்டால் அதுவே போதுமான சமாதானமாகுமா என்று கேட்கின்றோம்.

மற்றும், சமயத்தையே ஆதாரமாகக் கொண்ட இராமன், கிருஷ்ணன் போன்ற விஷ்ணு அவதார அரசர்களும்; மீனாட்சி-சொக்கலிங்கர் போன்ற சிவ அவதார அரசர்களும்; மற்றும் சேரன், சோழன், பாண்டியன் போன்ற தெய்வத் தன்மை தாண்டவமாடிய அரசர்களும் ஆண்டகாலத்தைவிட—இப்போதைய அரசாங்கமோ அல்லது ஜனப்பிரதிநிதி அரசாங்கமோ எந்தவிதத்தில் மோசமானது என்பதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட சிறு உதாரணம் சொல்லக்கூடுமா என்று கேட்கின்றோம்.

எனவே, ஆயிரக்கணக்கான வருஷங்களாக மக்களின் நிலைகுலைந்து வருவதையும், தேசம் அடிமைப்பட்டு வருவதையும், தொடர்ச்சியாகக் கேட்டும், பார்த்துவந்தும்—கொஞ்சமாவது அறிவு என்பதை உபயோகப்படுத்தி, இதன் காரணங்கள் என்ன என்பதைக் கவனிக்காமலும், அக்கம் பக்கம் எப்படி இருக்கின்றது என்பதை ஒரு சிறிதும் திரும்பிப் பாராமலும் மக்களைப் பாழும் சமயம்—சமயாச்சாரி—சாமி என்பதையே குரங்குப் பிடியாய்ப்



பிடித்துக்கொண்டே நாசமாய்ப் போகும்படி செய்வதால் யாருக்கு என்ன நன்மை விளையக்கூடும் என்று கேட்கின்றோம்.

சாமியின் மூலமும், சமயத்தின் மூலமும், சமயாச்சாரிகளின் நடத்தையின் மூலமும் மக்களுக்கு ஒழுக்கத்தையும் வாழ்க்கை நலத்தையும் கற்பிக்கலாம் என்று யாராவது சொல்ல வருவார்களானால்—அவற்றையெல்லாம் விட்டுவிட்டு நேரே ஒழுக்கத்தையும், வாழ்க்கை நலத்தையும் கற்பித்தால் என்ன நஷ்டம் விளைந்து விடக்கூடும் என்று கேட்கின்றோம்.

இதுகால பரியந்தம்—அதாவது குறைந்தது 5000 வருடகாலம் இந்த வேலையைச் செய்து பார்த்தாகிவிட்டதல்லவா? இனி ஏன் புதுமுறை கண்டுபிடிக்கக் கூடாது? சாதாரணமாக வைத்திய சிகிச்சையில், வியாதிக்குத் தக்க மருந்தை இரைப்பைக்கு அனுப்பி அங்கு அது ஜீரணக் கருவிமூலம் ஜீரணிக்கச் செய்து, சக்கையை மலத்தின் மூலம் கழித்து, சத்தை இரத்தத்தோடு கலக்கும்படி செய்து வியாதியைக் குணமாக்க முயற்சிப்பதைவிட, மருந்தின் உண்மையான சத்தை எடுத்து நேரே இரத்தத்தில் சேர்த்து வேலை செய்யும்படி செய்வதுபோல் (இன்ஜெக்ஷன்) ஒழுக்கங்களையே கற்பிப்பதில் என்ன நஷ்டம் என்று கேட்கின்றோம்.

ஒரு சமயம் அந்தத் தொழில் பழகாத சில வைத்தியர்களுக்கு வேறு தொழில் கற்றுக் கொள்ளும் வரையில் வயிற்றுப் பிழைப்புக்குக் கஷ்டமாயிருக்கலாம். இதற்காக மக்கள் வியாதியோடு கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதா என்பதை யோசித்துப் பார்த்தால், சிலரது வயிற்றுப் பிழைப்புக் கஷ்டம் அவ்வளவு பெரிதாகத் தோன்றாது! நிற்க,

பொது ஜனங்களில் சிலர் இக் கூட்டத்தினர்களின் யோக்கியதையையும் உண்மையையும் அறியாமல், நாம் ஏதோ சற்று அளவுக்குமீறி வேகமாய்ப் பேசுவதாகக் கருதுகிறார்கள்போல் தெரியவருகின்றது. ஆனால், அவர்கள் அப்படிக் கருதுவதற்கு ஆதாரமோ நியாயமோ ஒன்றும் எடுத்துக் காட்டாமல்—'இருந்தாலும் இவ்வளவு கடினமாகப் போகலாமா?' என்கின்ற ஒரு பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். அதனுல்தான் நாமும் அவற்றை ஒரு சிறிதும் இலட்சியம் செய்வதில்லை. ஏனெனில், நேற்றுவரை 'அமிதவாதி'களாக இருந்தவர்கள் அந்தக் கொள்கையுடனேயே நம்மால் 'மிதவாதி'கள் என்று சொல்லப்படுபவர்களாகி விட்டார்கள். காரணம் என்னவென்றால், நாம் அவர்களைவிடச் சற்று வேகமாய்ப் போவதாக ஜனங்கள் நினைப்பதுதான்.

இதே முறையில் வெகு சீக்கிரத்தில் நாமும் மிதவாதிகள் என்று கருதப்படக்கூடியவர்களாக ஆனாலும் ஆகலாம் என்பதே நமது முடிவு.

நம்மைவிட வேகமாய்ப் போகக்கூடிய வாலிபர்கள் முளைப்பதை, வளருவதை நாம் நேரிலேயே பார்க்கின்றோம்.

அதாவது, எவ்வளவு கொடுமையை அனுபவிப்பதானாலும். பலாத்காரம் என்றால் இன்னமும் நமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கின்றது. நியாயத்தையும், வாதத்தையும் எடுத்துச்சொல்லி மெய்ப்பித்துப் பார்க்கலாம்; முடியாவிட்டால் இன்னமும், பொறுக்கலாம் என்கின்ற எண்ணமே தோன்றுகின்றது.

ஆனால், நமது இளவல்களுக்கோ, 'இன்னமும் எத்தனை நாளைக்கு இந்தப் புரட்டுகளுக்கும் பித்தலாட்டங்களுக்கும் சுயநலத்திற்கும் கொடுமைகளுக்கும் இடம் கொடுத்துக்கொண்டிருப்பது; இரண்டில் ஒன்று பார்க்கவேண்டியதுதான்' என்கின்ற துடிதுடிப்பு கொழுந்துவிட்டு எழுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் காலத்தில் நாம் அவர்களால் மாத்திரமில்லாமல் பொதுமக்களாலும் மிதவாதிகள் என்றும், பழம்பிடுங்கல்கள் என்றும் குற்றம் சொல்லப்படுவோம் என்கின்ற உறுதி நமக்கு உண்டு. எனவே, இந்த விஷயத்தில் அதிகமாகப்போவதும், நிதானமாகப் போவதும் அவரவர்கள் மன உணர்ச்சியைப் பொறுத்ததே தவிர வேறல்ல,

படிப்பகம்

www.padippakam.com



உதாரணமாக, பண்டிதர் திரு. வேதாசலம் அவர்கள் இராயப்பேட்டையில் காந்தி நிலைய ஆண்டுவிழா தலைமைச் சொற்பொழிவில் அவர் நிகழ்த்தியதாகக் காணப்பட்டவைகளில் ஒன்று, 'சைவத்தைக் குற்றம் சொல்பவனை இன்னமும் விட்டுவைத்திருக்கின்றீர்களா? உங்கள் சரீரத்தில் சைவ இரத்தம் ஓடவில்லையா?' என்பதாகச் சொன்னதாகக் காணப்பட்டது. (அது ஒருவாறு மறுக்கப்பட்டது). அவர் அப்படியே சொன்னதாக வைத்துக்கொண்டாலும், அது சட்டப்படி குற்றம் என்று சொன்னால் சொல்லலாமேயொழிய, அவரது உணர்ச்சிப்படி அது எப்படிக் குற்றமாகும்?

ஒரு சமயம் அதிலிருந்து பண்டிதர் சரீரத்தில் சைவ இரத்தம் ஓடிற்றா இல்லையா என்ற கேள்வி வேண்டுமானால் கேட்கலாமே ஒழிய, அந்த உணர்ச்சி மக்களுக்குத் தோன்றுவது இயல்பே என்பது எனது அபிப்பிராயம். தற்கால நிலையில் இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்கள் மிக்க வேகமாகச் சிலருக்குப் பட்டாலும் படலாம். அதற்காக, மக்களின் உணர்ச்சி, காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அவ்வளவும் பயனளிக்காது என்றே சொல்லுவோம்.

மக்களின் சுதந்திரத்திற்கும் அறிவிற்கும் சுயமரியாதைக்கும் உலகம் போகின்ற போக்கில் நாம் இருக்கும் நிலை எவ்வளவு பிற்பட்டது என்பதையும், நமது போக்கு எவ்வளவு அசைவற்றதும், நிதானமுமானது என்பதையும் யாராவது கவலையுடன் சிந்தித்துப் பார்த்தால் கடுகளவு கவலை இருந்தாலும், மதமும் சாமியும் மத ஆச்சாரிகளும் அவர்கள் கதைகளும் நம்மை ஒரு சிறிதும் தடைப்படுத்தவே மாட்டாது என்றே துணிந்து சொல்லுவோம். ஆனால், அவற்றில் ஒரு சிறிதும் கவலையில்லாமல் தங்கள் வாழ்வும் அறிவுமே பிரதானம் என்பவர்களுக்கு உலகம் தெரியாதென்றுதான் சொல்லவேண்டும்.

ஆதலால், பொதுமக்கள் இனித்தான் சற்று ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

['குடி அரசு'–தலையங்கம்—30-9-1928]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மதத்தைப்பற்றி நான் சொல்லுவதைச் சிலர் மதத் துரோகம் என்கிறார்கள். பிறவியின் காரணமாக மனிதனுக்கு மனிதன் ஒரு நீதியும், ஆணுக்கு ஒரு நீதியும், பெண்ணுக்கு ஒரு நீதியும் உள்ள எந்த மதமானாலும் சரி–அது, கடவுளை நேரே கொண்டு வந்து காட்டி, மோட்சத்திற்கு அழைத்துச் செல்லச் செய்யும் மதமாயிருந்தாலும் சரி, அதை அழிக்க வேண்டியதும், அழிக்க முடியாவிட்டாலும் அந்த அழிக்கும் வேலையில் உயிரைவிட வேண்டியதும் உண்மையான மனிதனது கடமை என்றுதான் நான் தீர்மானித்துக் கொண்டிருக்கிறேன். இதில் சிறிதும் ராஜிக்கு இடமில்லை என்பதைக் கண்டிப்பாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதலில் மதம் சம்பந்தமான என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், எந்த மதமானாலும்—அதன் கொள்கைகள் எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராயமுடையவையானாலும் அம் மதமும் கொள்கைகளும் மனிதனுடைய இவ்வுலக வாழ்க்கைக்கு—அவனுடைய பிரத்தியட்ச அனுபவத்திற்காக வகுக்கப்பட்ட கொள்கைகளுடையவைகள் என்றால் அதைப்பற்றி யோசிக்க நான் எப்போதும் தயாராயிருக்கிறேன். அப்படிக்கின்றி, மதமும் அதன் கொள்கைகளும் 'மேல் லோகத்திலோ' அல்லது 'கீழ் லோகத்திலோ' அல்லது செத்தபிறகு 'சூட்சும' சரீரத்துடனேயோ அனுபவிக்கும் அனுபவத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டது என்றால்—அது எப்படிப்பட்ட மதமானாலும்—யார் செய்ததானாலும்—அதற்கு என்ன ஆதாரம் சொல்லுவதானாலும்—அதனால் என்ன விளைவதானாலும் நான் அதைக் கணநேரம் கூடத் திரும்பிப் பார்க்கமாட்டேன். இது விஷயத்தில், என்னைப்பற்றி யார் எப்படி நினைத்துக்கொண்டாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.. ஏனெனில்,



இந்தப்படி நினைப்பதற்கு எனக்குப் பூரண சுதந்திரம் இருக்கின்றது என்று நினைத்திருக்கின்றேன். அதோடு, எந்த லோகத்திலானாலும் இந்த உலக வாழ்க்கை அனுபவத்திற்கு விபரீதமான பலன் இருக்கமுடியாதென்றும் கருதுகிறேன்.

நாங்கள் ஜெயிலிலிருந்து வெளிவந்ததும் திரு. காந்தி கைது செய்யப்பட்டுச் சிறை சென்றுவிட்டதால், இந்தச் சமயத்தில் ஒத்துழையாமையை விட்டுப் போகக்கூடாது என்று சில பார்ப்பனத் தலைவர்கள் கேட்டுக்கொண்டதால் மறுபடியும் காங்கிரஸ் வேலையைச் செய்தோம். பிறகு குருகுல நடவடிக்கையையும், அது சம்பந்தமாகப் பார்ப்பனத் தலைவர்கள் மனப்பான்மையையும், அவர்களது உள் எண்ணத்தையும் தெரிந்தபிறகு 'இந்து' மதமே அடியோடு அழிக்கப்படவேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்துவிட நேர்ந்தது. அதன் பேரில் இந்து மதத்தை விட்டாலும் பிறகு தங்களுக்கு ஏதாவது ஒரு மதம் இருந்துதான் தீரவேண்டுமென்று கருதும் மக்களுக்குக் கிறிஸ்துவ மதத்தைச் சிபாரிசு செய்யலாமா, முகமதிய மதத்தைச் சிபாரிசு செய்யலாமா என்று கருதி யோசித்துப் பார்த்தேன். கடைசியாக கிறிஸ்துவ மதமும், நமது நாட்டில், நான் பார்த்தவரை அதுவும் மற்றொரு பார்ப்பனீய மதமாகவே காணப்பட்டது. கிறிஸ்துவ மதப் பிரச்சாரத்தின் கருத்தெல்லாம் அரசியல் விஷயத்தை அடிப்படையாகவும், அந்தரங்க இலட்சியமாகவும் கொண்டு செய்யப்படுகின்றதே ஒழிய, மக்கள் சமத்துவத்தையோ ஒற்றுமையையோ கொண்டதாகத் தெரியவில்லை என்கின்ற முடிவிற்கு வரவேண்டியதாயிற்று. எப்படி என்றால், இன்றைய தினமும் கிறிஸ்துவ மதத்தில் பறைக் கிறிஸ்தவன், சக்கிலிக் கிறிஸ்தவன், வேளாளக் கிறிஸ்தவன், உடையார் கிறிஸ்தவன், நாயுடு கிறிஸ்தவன், நாடார் கிறிஸ்தவன், பார்ப்பனக் கிறிஸ்தவன் என்கின்ற பாகுபாடுகளும்—குடியிருப்பு வசதி வித்தியாசங்களும்—சர்ச்சு முதலிய பிரார்த்தனை இடங்கள் வித்தியாசமும் காணப்படுவதைப் பார்த்தால் நன்றாய்த் தெரியவரும். ஆகையால், முகமதிய மதத்தைத் தழுவுவதால்தான் தீண்டாதவர்களுக்கு இது சமயம் சீக்கிரத்தில் உடனேயே சமூக சமத்துவத்தை அளிக்கமுடியும் என்று கருதுகிறேன். இந்த நிலைமை நமக்கு ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக நான் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தேன்.

[பாலக்காட்டில், 9-5-1929-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-5-1929]

நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு எப்படிப் பிறவியின் காரணமாகவே சாதி ,கற்பிக்கப்பட்டு, அந்தச் சாதியின்பேரால் அவன் அழைக்கவும்பட்டு, அந்த மனிதனும் அதை ஒப்புக்கொண்டு தன்னை இன்ன சாதியான் என்று ஒப்புக்கொள்கின்றானோ; அதுபோலவே மதமும் ஒரு மனிதனுக்குப் பிறவி காரணமாகவே கற்பிக்கப்பட்டு, அவனும் அந்த மதத்தின் பேரால் அழைக்கப்பட்டு, தானும் அதை ஒப்புக்கொண்டு தன்னை இன்ன மதத்தினன் என்றே எண்ணிக் கொண்டு வருகின்றான்.

ஆனால், சாதியானது பிறவியின் காரணமாக ஏற்படுகிறதென்று சாதியைக் கற்பிக்கும் சாஸ்திரங்கள் என்பவைகளால் சொல்லப்பட்டு வருவதால் பிறவியின் காரணமாக சாதி நிர்ணயிக்கிறவர்களுக்கு மேற்கண்ட ஆதாரங்களைச் சொல்லிக்கொள்ள இடமுண்டு. ஆனால், மதமானது பிறவியின் காரணமாக ஏற்படுவதாக இன்றுவரை எந்த மதமும் இது சம்பந்தப்பட்ட சாஸ்திரமும் சொல்லவே இல்லை. மதம் என்பது கொள்கை என்றும், அந்தக் கொள்கையானது எந்த மனிதனாலும், எப்பொழுது வேண்டுமானாலும், ஏற்றுக்கொள்ளவும் தள்ளவும் உரிமையுடையது என்றுமேதான் சொல்லப்பட்டு வருவதுடன்—அந்தப்படியே அனேக மனிதர்கள் அடிக்கடி மதம் மாறிக்கொண்டும் வருகிறார்கள். அதாவது, இந்துக்கள் என்பவர்கள் கிறிஸ்தவர்களாகவோ, முகம்மதியர்களாகவோ, பவுத்தர்களாகவோ, பிரம்மசமாஜிகளாகவோ, நாத்திகராகவோ மாறுவதும், ஒரு கிறிஸ்தவர் முகமதியராகவோ, இந்துவாகவோ, பவுத்தராகவோ, நாத்திகராகவோ மாறுவதும்; ஒரு முகமதியர் இந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ, பவுத்தராகவோ, நாத்திகராகவோ

படிப்பகம்

www.padippakam.com



மாறுவதும்; ஒரு பவுத்தர் இந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ, முகமதியராகவோ, நாத்திகராகவோ மாறுவதும்; ஒரு நாத்திகர் இந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ, முகமதியராகவோ, பவுத்தராகவோ மாறுவதும்; உள்பிரிவு மதக்காரர்களாக—அதாவது, சைவன், வைணவனாகவும்; வேளாளன், சைவனாகவும்; சைவன் சமணனாகவும்; சமணன் சைவனாகவும்; மற்றும் இதுபோலவே அடிக்கடி மாறுவதும் சர்வசாதாரணமாகப் பார்த்துவருகின்றோம். இந்த முறையில்தான் இன்றையதினம் உலகத்தில் சுமார் 2000 வருஷத்திற்குமுன் ஏற்பட்டதான பவுத்த மதத்தில் 55 கோடி மக்களும், 2000 வருஷத்திற்குமுன் ஏற்பட்ட கிறிஸ்துவ மதத்திற்கு 50 கோடி மக்களும், 1300 வருஷத்திற்குமுன் ஏற்பட்ட முகமதிய மதத்திற்கு 23 கோடி மக்களும், காலமே குறிப்பிட முடியாததான அவ்வளவு பழைய இந்து மதத்திற்கு 20 கோடி மக்களும்; இம் மதங்களுக்கு முன்னால் இருந்துவந்த யூத மதத்திற்கு ஒரு கோடி மக்களும், மதம் குறிப்பிட இயலாத மக்கள் 17 கோடி பேர்களும் இருந்துவருகின்றார்கள். இவர்கள் இந்தப்படி—எப்படி, எப்படி உண்டாகி இருக்கமுடியும்? அனேகமாக இவ்வளவு ஜனங்களும் ஏதோ ஒரு மதத்திலிருந்தோ அல்லது மதமே இல்லாதவர்களாயிருந்துதான்—புதிதாக ஏற்பட்ட மதப் பிரச்சாரங்களின் மூலமாக அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இன்றையதினம் இருக்கவேண்டும். இந்தப்படி பார்த்தாலே மக்களுக்கு மதம் பிறவியின் காரணம் அல்லவென்றும் அவரவர்கள் மனப்பான்மையும் மற்றவர்களின் பிரச்சாரமும் காரணமென்று விளங்கும். அன்றியும், இந்தக் கொள்கைப் படியே இனியும் உலகத்தில் எத்தனை மதம் வேண்டுமானாலும் உற்பத்தியாகலாம் என்பதும், அவைகளுக்கெல்லாம் இப்போதிருக்கும் மக்களேதான் பெரும்பகுதியும் போய் அப் புது மதங்களில் சேர்ந்தாகவேண்டுமென்பதும் நன்றாய் விளங்கும். எனவே, இந்து மதத்தையும் சாதியையும் இரண்டையும் பார்க்கும்போது, மதத்தைவிட சாதியே அதிக பலமுடையதாகும். ஏனெனில், சாதி பிறவியில் உண்டாவது, அது மாற்றமுடியாதது என்று சொல்லப்படுவது. ஆனால், மதமோ கொள்கையின் மூலம் ஏற்படுவது; அது மன உணர்சிக்கும், அறிவு உணர்ச்சிக்கும் தக்கபடி அடிக்கடி மாற்றிக்கொள்ள உரிமையுடையது என்பதாகும். ஆகவே, பிறவியினால்தான் ஏற்படுகின்றது என்று சொல்லும்படியான சாதியை அடியோடு அழித்து, எல்லா மக்களையும் ஒன்றுசேர்த்து, ஒற்றுமையையும் சகோதரத் தன்மையையும் உண்டாக்கவேண்டும் என்பதாகக் கூறப்படும் மக்களின் முயற்சியை ஒப்புக்கொண்டு, ஆதரவளிக்கச் சம்மதிப்பதாகச் சொல்லும் மக்கள்—கேவலம் கொள்கையாலும் அறிவு உணர்ச்சியாலும் இருக்கும் மதத்தை அழித்து மக்களை ஒன்றுசேர்க்க முயற்சிப்பதில் என்ன ஆட்சேபணை இருக்கக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. மனிதன் அறிவு வளர்ச்சியின் மூலமும், ஆராய்ச்சித் தெளிவின் மூலமும் அசவுகரியத்தின் மூலமும், சுயநலத்தின் மூலமும் அடிக்கடி மாற்றிக்கொள்ளச் சுதந்திரம் இருக்கும் மதத்தைப் பற்றிப் பிடிவாதம் காட்டுவதற்கு யாருக்கு உரிமை உண்டு என்பதும் நமக்கு விளங்கவில்லை. அனேகமாக மதங்களை இன்றைய தினம் வலியுறுத்துபவர்களில் அனேகர் தங்கள் மதத்திற்குச் சொல்லும் ஆதாரங்கள் எல்லாம் மதத்தை உண்டாக்கின மதத் தலைவர்—'பெரியர்' என்றும், அவர்கள் அனேக 'அற்புதங்கள்' செய்த பெரியர்கள் என்றும், தங்கள் தங்கள் மதம் இன்ன இன்ன பரீட்சைக்கு நின்று வெற்றிபெற்றது என்றும் சொல்வதன் மூலம் அவைகளைப் பெருமைப்படுத்திப் பேசுகிறார்களே அன்றி—அவைகளில் ஏதாவது ஒன்று, இன்றையதினம் நடைபெற முடியுமா என்பதுபற்றிக் கேட்போமானால் கோபித்துக்கொள்கிறார்களேயொழிய, வேறு சமாதானம் கிடையாது. அதுதான் போகட்டும் என்றாலோ, அம் மதக்கொள்கைகளைப் பற்றியும், அதே மாதிரி மதத்திற்காகக் கொள்கைகள் என்று சொல்லப்படுவதல்லாமல்—கொள்கைக்காக மதமென்றோ, சவுகரியத்திற்காகக் கொள்கைகள் என்றோ, பகுத்தறிவுக்கு ஒப்புகின்றதா என்றோ ஒரு காலமும் சொல்லமுடியாதவைகளாகவே இருக்கின்றன.

இந்த நிலையில் மதத்திற்காகக் கொலைகளும், கொள்ளைகளும், யுத்தங்களும் உயிர்விடத்தக்க வீரங்களும் நாட்டில் மலிந்துகிடக்கின்றன. அதுதான் போகட்டு



மென்றாலோ, மதத்திற்காகச் செலவாகும் பணங்களும், நேரங்களும், அறிவுகளும், ஊக்கங்களும் கணக்குக்கு அடங்காதவைகளாகவே இருக்கின்றன.

இந்து மதம் என்பதைப் பொறுத்தவரை ஏற்படும் செலவுகள் சகிக்க முடியாததாயிருப்பதோடு, அதனால் நாட்டிற்கு ஏற்படும் தொல்லைகள் அளவிட முடியாததாகவும் இருக்கின்றன.

['குடிஅரசு'-தலையங்கம்—3-11-1929]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

ஒரு நாட்டின் மதக் கொள்கைக்கும், ஆட்சியின் தன்மைக்கும் அளவுகோல் அந்த நாட்டு மக்களின் கல்வி அறிவேயாகும். நமது நாட்டில் 100-க்கு 93 பேர் கல்வி இல்லாத தற்குறிகள். நூற்றுக்கு 99 பேர் கல்லில் முட்டிக்கொள்ளும் மூடர்கள். இப்படிப்பட்ட இந்த நாடு எப்படி அறிவுள்ள ஒரு சுதந்திரமான நாடாகும்? இந்த நாடானது சமீப காலம்வரை எல்லா மக்களும் கல்வி கற்கக்கூடாது, எல்லா மக்களும் அறிவாளிகளாக இருக்கக்கூடாது, எல்லா மக்களும் சுதந்திரமாக இருக்கக்கூடாது என்கின்ற கொள்கைகளையுடைய மத ஆதிக்கத்திற்கு அடிமையாய் இருந்த அரசர்களாலேயே ஆளப்பட்டு வந்திருக்கிறது. அதனால்தான் 100–க்கு 97 வீதமுள்ள மக்கள் தற்குறிகளாயிருக்க ஏற்பட்டது.

[கொடைக்கானலில், 20-7-1930-ல் சொற்பொழிவு 'குடிஅரசு' 27-7-1930]

## 7. இந்துமத ஆபாசம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

என்னைப்போல ஒரு சாதாரண மனிதன் பேசுவதினாலோ, தனக்குத் தோன்றுவதை எழுதுவதினாலோ, கடவுள்–மார்க்கம்–சமயம் போய்விடும் என்று பீதி அடைவீர்களானால் உங்கள் கடவுளுக்கும் மார்க்கத்திற்கும் உள்ள யோக்கியதையைக் கவனியுங்கள். நீங்கள் உங்கள் கடவுள் உறுதியானவரல்ல, உண்மையானவரல்ல என்றும்; உங்கள் சமயம் உறுதியானது அல்ல, உண்மையானது அல்ல என்றும் நீங்களே கருதியிருக்கிறீர்களாவீர்கள். நாங்கள் உங்கள் கடவுளையோ, சமயத்தையோ இல்லையென்று சொல்லுவதற்காக இங்கு வரவில்லை. நீங்கள் சொல்லுவதற்கு, நீங்கள் பின்பற்றுவதற்கு ஆதாரமென்ன? அது உங்கள் பகுத்தறிவுக்குப் பொருத்தமாய் இருக்கின்றதா? அனுபவத்திற்கு ஒத்து வருகின்றதா? என்று யோசித்துப் பாருங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுவதுதான் எனது வேலையாகும். அவைகளுக்கு இடம் கொடுப்பதாலேயே உங்கள் கடவுளோ, மதமோ, ஆதாரமோ போய்விடுமென்று நினைத்தீர்களேயானால் அவைகளைப் பற்றி மறுபடியும் வெளியில் பேசுவது வெட்கக்கேடான காரியமல்லவா?

இப்படி ஆராய்ச்சி செய்வதாலேயே மறைந்துபோகும் மார்க்கமும், ஆண்டவனும் பிறகு என்ன காரியத்திற்குத்தான் பயன்படக்கூடும் என்பதை ஆத்திரப்படாமல் சிந்தியுங்கள். 'எங்கள் கடவுள் சர்வசக்தி உள்ளவர்; எங்கும் உள்ளவர்' என்று கருதிக் கொண்டு—'அவரால் ஏற்பட்டது எங்கள் மார்க்கம்' என்று சொல்லிக்கொண்டு இருக்கும் நீங்கள், அப்படியானால்—'சற்று ஆராய்ச்சிசெய்து அறிவிற்குப் பொருத்தமாயிருக்கின்றதா வென்று பார்க்கலாமா?' என யாராவது கேட்டால், உடனே இம் மாதிரிப் பயந்தால் அப்படிப் பயப்படுகின்ற ஆட்களுக்குக் கடவுள் சர்வசக்தி உள்ளவர் என்கின்ற விஷயத்திலும், அவர் எங்குமுள்ளவர் என்கின்ற விஷயத்திலும், தங்கள் மதம் அவரால்தான் ஏற்பட்டது என்கின்ற விஷயத்திலும் நம்பிக்கையிருக்கின்றதா என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

மனிதனின் அறிவிற்குப் பயப்படும் கடவுளும் மார்க்கமும் உலகத்தில் யாருக்கு என்ன பயனை அளிக்கக்கூடும்? அறிவையும் ஆராய்ச்சியையும் கண்டால் ஏன் பயந்து

படிப்பகம்

www.padippakam.com



ஒடுகின்றீர்கள்? அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் மதிப்புக் கொடுக்காத காரணமே—இன்று; இந்தியா உலகிலுள்ள நாடுகளிலெல்லாம் அடிமையான நாடாகவும், இழிவான மக்களாகவும் இருக்க வேண்டியதாகிவிட்டது. கடவுள் என்றால் குருட்டு நம்பிக்கை, மதம் என்றால் மூட நம்பிக்கை என்கின்ற தீர்மானம் ஏற்பட்டுவிட்டது. இந்நிலையைத் தவிர கடவுளுக்கும் மதத்திற்கும் வேறு அவமானம் வேண்டியதே இல்லை. இந்த மாதிரி அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பயந்த கடவுளையும் மதத்தையும் வைத்திருக்கின்றவனைவிட—கடவுள் மதம் இவைகளைப் பற்றிக் கவலைப் படாதவனோ, இல்லையென்று கருதிக் கொண்டிருக்கிறவனோ வீரனென்றே நான் சொல்லுவேன். ஏனெனில், கவலைப்பட்டு—உண்டு என்று சொல்லிக் கொண்டு—மெய்ப்பிக்கத் திண்டாடிக் கொண்டும், நடுங்கிக் கொண்டும் திரிவது பயங்கொள்ளித்தனமாகும்.

கடவுள் போய்விடும் என்று பயந்த மக்களால் வேறு என்ன வேலையாகும்? அவர்களைவிடப் பயங்கொள்ளிகள் யார் இருக்கக்கூடும்? கடவுளுக்கும் சமயத்திற்கும் அடிமையான நாடு ஒருநாளும் சுதந்திரத்திற்கு அருகதை இல்லை.

சமாதை வணங்கவேண்டாம், பூசை செய்யவேண்டாம் என்றால் உங்கள் மார்க்கம் போய்விடுமா? அப்படியானால் இந்து மதத்திற்கும் இஸ்லாம் மதத்திற்கும் வித்தியாசமென்ன? இந்துமத சம்பந்தமான கோவில்களெல்லாம் பெரிதும் சமாதுதான். அந்தக் கடவுளெல்லாம் அனேகமாய் அந்தச் செத்துப்போன ஆட்களே என்பதுதான் எங்கள் ஆராய்ச்சிக்காரர்கள் முடிவு. அதனால்தான் பல புண்ணிய ஸ்தலங்களும் பல கடவுள்களும் ஏற்பட வேண்டியதாயிற்று. அதை ஒழிப்பதற்குத் தோன்றியதுதான் இஸ்லாம் மார்க்கமாகும்.

இஸ்லாம் மார்க்கத்தில்தான் ஒரே ஒரு கடவுள் என்பதும், அதற்கு உருவமில்லை என்பதும், அதைத் தவிர மற்றதை வணங்கக்கூடாதென்றும் சொல்லப்படுகிறது. அது மாத்திரமல்லாமல், அல்லாசாமி பண்டிகையிலும், கூண்டு முதலிய திருவிழாக்களிலும் இஸ்லாமியர் சிலர் நடந்துகொள்வது மிகவும் வெறுக்கத் தக்கது. இவைகளையெல்லாம் ஒரு மார்க்கக் கட்டளை என்று சொல்லுவதானால் அந்த மார்க்கம் ஒருநாளும் அறிவு மார்க்கமாகவோ, உண்மையில் நன்மை பயக்கும் மார்க்கமாகவோ இருக்கமுடியவே முடியாது. அதோடுமல்லாமல், மார்க்கத் தலைவருக்கும் மார்க்க வழிகாட்டியாருக்குங்கூட இது அவமானமும் வசைச் சொல்லுமாகும். இன்று இந்துவும் கிறிஸ்தவனும் பகுத்தறிவைக் கண்டால் பயப்படுகிறார்கள். இஸ்லாம் மார்க்கத்தில்தான் தங்கள் மார்க்கம் பகுத்தறிவுக்கு ஏற்றது என்று பந்தயம் கட்டுகிறார்கள். ஆனால் சமாது வணக்கமும், பஞ்சா வணக்கமும், கொடி வணக்கமும், கூண்டு உற்சவமும், அல்லாசாமி பண்டிகையும் கொண்ட மக்களை ஏராளமாய் வைத்துக்கொண்டு—அவற்றையும் மார்க்கக் கொள்கைகளோடு சேர்த்துக் கொண்டிருக்கின்றவர்களையும் சேர்த்துவைத்துக்கொண்டு இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்கம் என்று எப்படிச் சொல்ல இயலும்? கோபிப்பதில் பயனில்லை. மற்ற மதங்களை விட இஸ்லாம் மதம் மேலானது என்பது எனது அபிப்பிராயம். ஆனால், அதில் இனிச் சிறிதுகூடச் சீர்திருத்தம் வேண்டியதில்லை என்பவர்களுடன் நான் முரண்பட்டவன். ஏனெனில், நான் கண்களில் பார்ப்பதைக் கொண்டுதான் சொல்லுகிறேன்.

இன்று இஸ்லாம் மதச் சடங்குகள் சீர்செய்யவேண்டியவை என்று துணிந்து கூறுவேன். நீங்களும் சீர்திருத்த வழிதேடுங்கள். எக்காலத்திற்கும் ஏற்ற மதமென்றால்—காலத்திற்கு ஏற்றபடி தானாகவே மாறவோ, மாற்றிக்கொள்ளவோ சவுகரியமாயிருக்கும் என்பதில் பயமோ, அவநம்பிக்கையோ கொள்ளாதீர்கள்! இருட்டானால் விளக்கைப் பற்ற வைத்துக்கொள்ளுங்கள், பகலானால் விளக்கை அணைத்துவிடுங்கள் என்றுதான் பகுத்தறிவுள்ள மார்க்கம் சொல்லியிருக்கும். ஆகவே, காலப்போக்குடன் கலந்துகொள்ளப் பயப்படாதீர்கள்.



சகோதரர்களே! களக்காடு ஊரின் கோயில் தேரையும் கோபுரத்தையும் பார்க்கும்படி கூப்பிட்டதினால் சென்றோம். அங்கு பார்த்த ஆபாசங்களைச் சொல்ல வெட்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. காட்டுமிராண்டிகள் காலத்தில்தான் சாமிகளும், கோயில்களும் ஏற்பட்டன என்று சொன்னால் யாராலும் மறுக்கமுடியாதபடி அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் சித்திரித்து வைக்கப்பட்டிருக்கும் உருவங்கள் மிகமிக ஆபாசமானவையாய்க் காணப்பட்டன. அவைகளுக்கு என்னதான் தத்துவார்த்தம் சொல்வதானாலும், மனிதப் பெண்ணைக் கழுதை சம்போகம் பண்ணுவதுபோலும் இதுபோன்ற மற்றும் பல உருவங்களைச் சித்திரித்து வைத்திருப்பதை எப்படி ஒப்புக்கொள்வது? கோபுரங்களில் உள்ள பொம்மைகளில் பெண்களைப் படுத்துகின்றபாடும், காம விவகாரங்களை அதில் எடுத்துக்காட்டியிருக்கும் முறையும் அநியாயம்! அநியாயம்! இவைகளை எல்லாம் நெருப்புவைத்துக் கொளுத்தி, இடித்து எறிந்து, இவற்றிற்கு ஆதாரமான சாஸ்திரங்களை எல்லாம் பொசுக்கிச் சமுத்திரத்தில் கரைத்துவிட்டாலொழிய, இதைச் சேர்ந்த மனிதர்கள் மனிதர்களாகக் கருதப்பட முடியவே முடியாது.

சுயமரியாதைக்காரர்கள் புராணக் குப்பைகளைக் கிளறிக் கிளறி வெறும் ஆபாசங்களைப் பேசுகின்றார்கள்—எழுதுகின்றார்கள் என்று பேசுகின்றார்கள்; எங்கள்மீது வெறுப்பும் கொள்ளுகின்றார்கள். ஆனால், இந்தக் கோயில்களுக்கெல்லாம் போய் தேங்காய் பழம் உடைத்து வைத்தக் காசும் கொடுத்து இந்த உருவங்களைப் பார்க்க வருகின்றவர்கள் மனிதர்களா? நாங்கள் எழுதுவதையும் பேசுவதையும் கண்டு வெறுப்புக் கொண்டு என்ன செய்வது? இவ்வளவு பேசியும் எழுதியும் இந் நடவடிக்கைகள் நின்றனவா? அவற்றை நிறுத்த யாராவது பாடுபட்டீர்களா?

காரமடைத் தேரில் இதைவிட அசிங்கமாகப் பார்த்தேன். திருவொற்றியூர், மதுரை ஆகிய ஊர்களில் சொல்லவே தேவையில்லை. ஆனால், இந்த ஊர்க் கோபுரம் எல்லாவற்றையும் மீறிவிட்டது. இதில் சாமிகளாகவும், முனிவர்களாகவும், ரிஷிகளாகவும் காணப்பட்டவை இன்னும் மோசமாய் இருக்கின்றன. இவையெல்லாம் பற்றி அன்னிய மதக்காரர்கள் கேவலம் பண்ணமாட்டார்களா என்கின்ற எண்ணமே இல்லாமல் போய்விட்டது. இதை நிறுத்த வேண்டாமா? இதுவரை யாரும் இவர்களைத் திரும்பிப் பார்த்தார்களா? போதாக்குறைக்குப் பணம் படைத்தவர்கள் இவற்றை 'ரிப்பேர்' செய்கிறார்கள். சிறிதும் ஈவு இரக்கமின்றி ஏழைகள் பணத்தைக் கொள்ளை அடித்து, அவர்களைப் பட்டினி போட்டுவிட்டு இம் மாதிரி மனிதப் புணர்ச்சிகளுக்குப் பொம்மைகள் செய்து சாயம் அடித்துப் பூசனை செய்வது என்பது எவ்வளவு இழிவானதும்—திமிர் பிடித்த தனமுமாகும்! இந்த இலட்சணத்தில் நாங்கள் கோயிலுக்குள் போகாமல் போலீஸ் காவல் போட்டிருக்கின்றார்களாம். நாங்கள் எந்த ஊருக்குப் போனாலும் அங்குள்ள கோயில்காரர்கள் எல்லாம் இப்படியேதான் செய்கின்றார்கள். ஆகவே, இந்துக்கள் என்பவர்கள் இவற்றிற்கெல்லாம் என்ன பதில் சொல்லுகின்றார்கள்? இந்த இந்து மதத்தை இன்னும் எத்தனை நாளைக்குத்தான் காப்பாற்றப் போகிறீர்கள்? மதம், சாமி, கோயில் என்றால் முட்டாள்தனம், அயோக்கியத்தனம், ஆபாசம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. வருந்தப்பட்டுப் பயனில்லை; வெட்கப்பட வேண்டும். அப்போதுதான் அறிவு, ஒழுக்கம், நாகரிகம் விளங்கும்.

[களக்காட்டில், 23–12–1930-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 1-2-1931]

இந்துமதம் இஸ்லாமானவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் கொள்கையில் எவ்வளவு கெடுதியோ அதைவிடப் பலமடங்கான கெடுதிகளை இந்துமதம் பார்ப்பனரல்லாத மக்களுக்குக் காரியத்தில் விளைவிக்கின்றது. அதைவிடப் பன்மடங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் காரியத்தில் விளைவிக்கின்றது. இஸ்லாமானவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இந்து மதத்தால் யாதொரு கெடுதியுமில்லை என்றுகூடச் சொல்லலாம். இஸ்லாமியரையும்



படிப்பகம்

www.padippakam.com



கிறிஸ்தவரையும் இந்துக்கள் வேறாகக் கருதுகின்றார்கள்; தங்கள் சமூகத்திற்கு எதிராய்க் கருதுகின்றார்கள் என்பதைத் தவிர வேறில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பலனாய் அவர்கள் பார்ப்பனரொழிந்த இந்துக்களைவிடச் சற்று அதிகமான நிலையில் இலாபமே அடைந்திருக்கிறார்கள். ஆனால், இந்துமதம் காரணமாகப் பார்ப்பனரல்லாதாரும், தீண்டாதாரும் இழிவாய் நடத்தப்படுவதுடன் சுயமரியாதை இல்லாத முறையிலும், சுதந்திரமில்லாமலும் நடத்தப்படுகிறார்கள். மேலும், இவர்களைப் பார்ப்பனர்கள் அடிமையாக்கிக் கொண்டும் இவர்களது கஷ்டத்தின் பயனை அனுபவித்துக்கொண்டும், இவர்களை (பார்ப்பனரல்லாதாரையும், தீண்டாதாரையும்) தலையெடுக்கச் செய்யாமலும் செய்துவருகிறார்கள். இந்துமதம் என்பதாக ஒன்று இருப்பது இஸ்லாமானவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மற்றொரு விதத்தில் இலாபகரமானதென்றே சொல்லலாம். எப்படியெனில், மேற்கண்ட இரண்டு மதங்களும் இரண்டு சமூக எண்ணிக்கையிலும் பெருக்கமேற்படுவதற்கு இந்து மதமே காரணமாய் இருக்கின்றது. இந்தியாவில் இந்துமதமில்லாமல் புத்தமதம், கிறிஸ்துவ மதம் இருந்திருந்தால் இஸ்லாம் மத சமூக எண்ணிக்கை இவ்வளவு பெருகியிருக்காது. அது போலவே, வேறுமதங்கள் இருந்திருந்தால் கிறிஸ்துவமத சமூக எண்ணிக்கையும் இவ்வளவு பெருகி இருக்காது. ஆகவே, அவ்விஷயத்தில் இந்துமதம் இருப்பது முஸ்லிம்—கிறிஸ்துவ மதங்களுக்கு இலாபமேயாகும். ஆகையால், இந்து மதத்தை ஒழிக்க வேண்டுமென்பது இந்திய பார்ப்பனரல்லாத மக்களுக்கும் அவர்களில் தீண்டப்படாதார் என்கின்ற மக்களுக்குந் தான் மிகவும் அவசியமானது என்று சொல்லுவோம். இதோடு ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்குங்கூட சமத்துவமும் பொது உடைமைத் தத்துவமும் ஏற்பட வேண்டுமானால், முதலில் இந்துமதம் ஒழியவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

['குடிஅரசு'—கட்டுரை—7-6-1931]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பொதுவாக உலகத்தில் அனேகமான மக்களுக்கு 'மதம்' பிரதானம் என்று கற்பிக்கப்பட்டிருக்கின்றதே தவிர, மதம் என்றால் என்ன, அது எதற்கு என்கின்ற அறிவே—மத பக்தர்கள், மதத்திற்காக உயிரையும் கொடுக்க இருக்கின்றவர்கள் என்பவர்களிலுங்கூட ஆயிரத்தில் ஒருவருக்கும் தெரியாதென்றே நான் தைரியமாகச் சொல்லுவேன். என்னைப் பற்றியே மதஞானமில்லாத மக்கள் பலவிதமாகப் பேசுவதையும் எழுதுவதையும் கவனித்துத் தான் வருகிறேன்.

மதத்தைப்பற்றி நான் பேச ஆரம்பித்த காலத்திலேயே, நான் நன்றாய் விளக்கிவிட்டே பேசுகின்றேனே யொழிய, பேசிவிட்ட பிறகு தத்துவார்த்தம் சொல்ல வருவதில்லை.

ஒரு பொதுச் சங்கமோ, ஒரு வாசகசாலையோ, ஒரு வியாபாரச் சங்கமோ என்பதாக ஒரு ஸ்தாபனமிருந்தால்—அந்த ஸ்தாபனத்திற்குச் சில விதிகள் இருக்கவேண்டியது அவசியமேயாகும். அவ் விதி அந்த ஸ்தாபன மக்கள் நன்மைக்கும், ஸ்தாபனம் சரிவர நடந்தேறுவதற்கு அனுகூலமானதாகவும், அந்த ஸ்தாபனக்காரர்களால் ஏற்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்பதுபோலவே, கூடிவாழ நினைக்கும் மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கும் ஏதாவது விதிகள் வேண்டும் என்பதில் குற்றமில்லை. அவ் விதிகளுக்குப் பெயர் கொள்கை என்றாலும், திட்டம் என்றாலும், மதமென்றாலும், மார்க்கம் என்றாலும் ஒன்றேதான்.

நமது நாட்டில் பல பாஷைகள் வந்து கலந்துவிட்டதால் கொள்கைகளுக்கு மதமென்றும், சமயமென்றும், மார்க்கமென்றும் சொல்லுவதாகப் பண்டிதர்கள் சொல்லுகின்றார்கள். ஆதலால், அந்த அளவில் நான் எந்த மதத்துடனும் தகராறுக்கு வரக்கூடியவனல்லன். இதில் ஒன்றும் ஒளிமறைவோ, தத்துவார்த்தமோ இல்லை; வெளிப்படையாகவே சொல்லுகிறேன்.



ஆனால், மதம் மனிதனுடைய ஆத்மார்த்தத்திற்கு ஏற்பட்டது; அது கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது; கடவுளைக் காண்பதற்கும், அடைவதற்கும் ஒரு சாதனமாயிருப்பது; அதை உண்டாக்கினது கடவுள், அல்லது கடவுள் அவதாரம், அல்லது கடவுள் மகன், அல்லது மனிதத் தன்மைக்கு மேற்பட்ட ஒரு தெய்வீகத் தன்மை; அதில் என்ன சொல்லியிருந்தாலும்—அது மனிதனுக்குப் புரியாவிட்டாலும், அது பயன்படாவிட்டாலும், மனிதனால் பின்பற்ற முடியாவிட்டாலும் அதை மனிதன் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்; அதன்பேரால் ஏற்பட்ட சாஸ்திரங்களையும் நம்பித்தானாக வேண்டும்; தனக்கு விளங்காததை எல்லாம் நம்பித்தான் ஆகவேண்டும்; அதில் ஒரு விஷயத்தைத்கூட நழுவவிடக்கூடாது; மாற்றவும் கூடாது; புதியதையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பன போன்ற நீதியையும், நிபந்தனைகளையும், கட்டளைகளையும் கொண்டதுதான் 'மதம்' என்று சொல்லப்படுமானால்—நான் என்னைப் பொறுத்தவரை அதைச் சிறிதும் ஒப்புக் கொள்ளாதவன் என்பதோடு, அப்படிப்பட்ட மதம், மனித சமூகத்தின் வளர்ச்சிக்கும் சுதந்திரத்திற்கும் முற்போக்கிற்கும் சுயமரியாதைக்கும் விரோதமானது என்று சொல்லுவதோடு கூட, மனித சமூக நன்மையை உத்தேசித்து அது அழிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் கூறுவேன்.

அன்றியும், நான் எந்த மதம் என்பதைப்பற்றிப் பேசும்போதும் இந்த விஷயங்களுக்கு மாறாக நான் எப்போதும் பேசியதே கிடையாது. நான் பவுத்த, இந்து, இஸ்லாம் மதத்தைப் பற்றி எல்லாம் பேசும்போது இந்த முடிவின் பேரிலேயே பேசுகிறேன். இந்த உண்மையின் பேரில்தான் நான் எந்த மதத் தலைவர்களைப்பற்றியும் பேசுகிறேன்.

திரு. முகமது நபியைப்பற்றி யார் எப்படி நினைத்துக்கொண்டாலும், நான் அவரை ஒரு மனிதர் என்றும், மனிதரைப் போலவே தாயும் தகப்பனும் கூடி கருத்தரித்துப் பிறந்தவர் என்றும் கருதித்தான் அவரால் செய்யப்பட்டதாகச் சொல்லும் விஷயங்களில் அனேகத்தை நான் புகழ்கிறேன். அதற்காகவே அவரையும் நான் பாராட்டுகிறேன். அப்படிச் சொல்லப்படுபவைகளே அந்த மார்க்கத்திற்கு ஒரு பெருமை என்றும் நினைக்கிறேன். புத்தரும் அப்படித்தான்; ஆனால், மற்ற மதத்துக்காரர்களோ தங்கள் மதத் தலைவரை ஒரு மனிதர் என்றாலே கோபித்துக் கொள்கிறார்கள்.

கழுதை, நாய், குதிரை இவற்றினுடைய வயிற்றிலிருந்து பிறந்தார் என்றாலும் ஒப்புக்கொள்கிறார்கள். மனிதனுக்குப் பிறந்தார் என்றால் அதில் கவுரவம் இல்லை என்று கருதுவார்கள். மனிதத் தன்மைக்கும் மனித அறிவிற்கும் மேற்பட்டதாக, மக்களுக்குப் புரியாத ஏதாவது ஒன்றைச் சொல்லாமல் ஒரு மதத்தை நிர்ணயிக்க அனேக மக்கள் சம்மதிப்பதே இல்லை.

நான் இந்து மதத்தைப் பற்றியோ, இஸ்லாம் மதத்தைப் பற்றியோ பேசுவது என்பதில் இரண்டு மதத்தினுடையவும் ஆதாரங்களை ஆராய்ச்சிசெய்து பேசுவதாக யாரும் கருதிவிடாதீர்கள். அந்த வேலையை ஒரு பரீட்சை மாணவனுக்குக் கொடுத்துவிடுங்கள். அதில் என்ன இருக்கின்றது என்பதில் எனக்குக் கவலை இல்லை. ஆனால், நான் பேசுவது என்பது, இரண்டு மதங்களைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரும்பான்மை மக்களிடை இருந்துவரும் பிரத்தியட்சக் கொள்கைகள் சம்பந்தமான காரியங்களையும், அதனால் அவரவர்கள் பிரத்தியட்சத்தில் அடைந்துவரும் பலன்களையும் பற்றித்தான் பேசுகிறேன்.

அந்தந்த மதங்களில் மக்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள்? அதனால் சமூகம் என்ன பயனடைந்திருக்கிறது? என்பன போன்றவைகள்தாம் மதத்தின் மேன்மையை அளக்கும் கருவியாகும். அப்படிப் பார்ப்போமானால் அனேக விஷயங்களில் இந்து மதத்தைவிட இஸ்லாம் மதமே மேன்மையுடையது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இஸ்லாம் மக்களிடத்தில் தங்களுக்குள் சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, அன்பு முதலிய குணங்கள் இருக்கின்றன. வீரம் இருக்கின்றது. வீரம் என்றால் இலட்சியத்திற்கு உயிரைவிடத் துணிவது என்பதுதான்.

இஸ்லாம் மதத்தில் உயர்வு தாழ்வு இல்லை. அவர்களுக்குள் தீண்டாதவன் இல்லை. அவர்களது தெருவில் நடக்கக்கூடாதவன், குளத்தில் இறங்கக்கூடாதவன், கோவிலுக்குள் புகக்கூடாத மனிதன் இல்லை. இதை யோக்கியமான இந்துக்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இஸ்லாம் மார்க்கக் கடவுளுக்கு 'ரூபம்' கற்பித்து வணங்குவதில்லை. அதற்குப் பெண்டுபிள்ளை, வைப்பாட்டி கற்பிப்பதுமில்லை அதற்குப் பூசை, நைவேத்தியம், உற்சவம், நகை, துணிமணி முதலியவற்றிற்குக் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்வதில்லை. மற்றும், அவர்களது பெண்களுக்குச் சொத்துரிமை, கலியாண ரத்து, விதவை மணம் ஆகியவைகளும் உண்டு. அவர்களுக்குள்ள அன்பையும் வீரத்தையும் பார்த்து நாம் அவர்களை முரடர்கள் என்கிறோம். அதுபோலவே, இந்துக்களுக்குள் ஒருவருக்கொருவர் உள்ள துவேஷத்தையும், பயங்காளித்தனத்தையும் நாம் பார்த்து அவற்றைச் சாதுத் தன்மை என்கிறோம். ஒரு கிராமத்தில் ஒரு இஸ்லாமானவனை இந்து அடித்தால் 100 இஸ்லாமானவர்கள் வந்து விழுந்துவிடுகின்றார்கள். இதைத்தான் நாம் முரட்டுத்தனம் என்கிறோம். ஒரு இந்துவை ஒரு இஸ்லாமானவன் அடித்தால் மற்ற இந்துக்கள், 'அவன் யாரோ அடிபடுகிறான்; நமக்கென்ன கவலை?' என்று சொல்லிச் சும்மா இருந்துவிடுகிறார்கள். இல்லாவிட்டால் அடிக்குப் பயந்துவிடுகிறார்கள். இதைத்தான் சாதுத் தன்மை என்று பெருமை பேசிக்கொள்கிறோம். அன்பும் சகோதரத் தன்மையும் 'இந்து'விடம் எங்கிருக்கிறது? ஆடு, கோழி தின்னாதே என்று சொல்லுவதில் மாத்திரம் இருக்கிறது. மக்களை இழிவாய்க் கருதுவது, பிறவியின் பேரால் தாழ்த்தி இம்சிப்பது ஆகிய காரியங்களைச் செய்துகொண்டிருப்பவர்கள்—அன்பு, ஜீவகாருண்யம் என்று பேசுகிறார்கள். அன்பின் உண்மையை அறியவே இல்லை. இஸ்லாம் கொள்கையில் வேறு எங்கு, எப்படி இருந்தாலும் சமூக வாழ்விலும், 'ஆண்டவன் முன்னிலை' என்பதிலும் மனிதனை மனிதனாய்க் கருதப்படுகின்றது.

இந்துக் கொள்கையில் வேறு எங்கு ஒற்றுமையாய் இருந்தாலும்—சமூக வாழ்விலும் 'கடவுள்' முன்னிலை என்பதிலும் மனிதன் மிருகத்தைவிடக் கேவலமாய் நடத்தப்படுகின்றான். இதை நேரில் காண்கின்றோம். இதைத்தான் அன்பு மதம், சமத்துவ மதம் என்று இந்துக்கள் தைரியமாய்ச் சொல்லுகின்றார்கள்.

மதத் தத்துவ நூலை–வேதம் என்பதை இஸ்லாம் மத செருப்புத் தைக்கும் சக்கிலியும், மலம் அள்ளும் தோட்டியும் படித்தாக வேண்டும்; பார்த்தாக வேண்டும்; கேட்டாக வேண்டும். இந்துமத வேதம் என்பதை ஒரே ஒரு சிறு கூட்டம் தவிர—பார்ப்பனன் தவிர—மற்ற யாவரும் அவன் பிரபுவானாலும், ஏழையானாலும், யோக்கியனானாலும், அயோக்கியனானாலும் சரி ஒருவனுமே படிக்கவும் பார்க்கவும் கேட்கவும் கூடாது. இதைத்தான் சமத்துவநோக்கம் கொண்ட மதம் என்று இந்துக்கள் இன்னமும் சொல்லிவருகின்றார்கள்.

இஸ்லாம் கொள்கை மக்களை ஒன்று சேர்க்கிறது. இந்தியாவில் கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு கோடியைவிடக் குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லிம்கள்—இன்று 8 கோடி மக்களாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இன்று யாவரையும், எப்படிப்பட்ட இழிவானவர் என்று இந்து மார்க்கத்தாரால் கருதப்பட்டவர்களையும் தனக்குள் சேர்த்துக்கொள்ளக் கையை நீட்டுகின்றது. இந்துக்களின் கொள்கையோ எப்படிப்பட்ட மேலானவன் என்று மதிக்கப்பட்டவனையும் உள்ளேவிட மறுத்து வாசற்படியில் காவல் காக்கின்றது; தன்னவனையும் வெளியில் பிடித்துத் தள்ளுகின்றது.



கள் குடியைப்பற்றி வாய்த் தப்பட்டை அடிக்காத இஸ்லாம், 100-க்கு 99 பேர்களைக் குடியிலிருந்து விலக்கி இருக்கின்றது. குடிக்கக் கூடாதென்று சதா வாயில் தப்பட்டை அடித்துக்கொண்டு, ஓட்டு வேண்டியபோது கள்ளுக் கடையில் நின்று மறியல் செய்யும் இந்துக் கொள்கையானது—இந்துக்களில் 100-க்கு 51 பேர்களுக்கு மேல் குடிகாரர்களாக ஆக்கி யிருப்பதோடு, கடவுளுக்கும் குடிவகைகள் வைத்து—கோயில்களில் பெரிய பெரிய சாதியார் என்பவர்களால் நைவேத்தியம் செய்து, பிரசாதமாய்ச் சாப்பிடப்படுகின்றது.

கொள்கையை இஸ்லாம் வலியுறுத்தி நின்ற காரணத்தாலேயே இஸ்லாமியர்கள் அதிகமாயுள்ள நாடுகள் இஸ்லாம் அரசர்களால் ஆளப்படுகின்றன. கொள்கையை இந்து வலியுறுத்துகின்ற காரணத்தாலேயே இந்துக்கள் அதிகமாயுள்ள நாட்டை 'அன்னியர்கள்' ஆளுகின்றார்கள்!

இந்தப்படியாக, வெளிப்படையாய்த் தெரியும் கொள்கைகளாலேயே இந்துக் கொள்கையைவிட இஸ்லாம் கொள்கைகள் எவ்வளவோ மேன்மையான பலன் கொடுத்திருப்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்தப்படி நான் சொல்லுவதற்காகக் கோபிக்கும் சகோதரர்கள் முதலில் நான் சொல்லுவது உண்மையா, அல்லது அடியோடு பொய்யா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

ஆதித் திராவிடர்களை நான், 'இஸ்லாம் மதத்தில் சேருங்கள்' என்று சொன்னதற்காக அனேகம் பேர் என்மீது கோபித்துக்கொண்டார்கள். அவர்களைப்பற்றி நான் கோபித்துக்கொள்ளவில்லை. அவர்களுக்குச் சொந்த அறிவும் இல்லை; சொல்வதைக் கிரகிக்கச் சக்தியும் இல்லை. சிலருக்குத் தங்கள் மேன்மை போய்விடுமே—தங்களுக்கு அடிமைகள் இல்லாமல் போய்விடுமே என்கின்ற சுயநல எண்ணம். ஏனெனில், மோட்சம் அடைவதற்காக என்று நான் ஆதித் திராவிடர்களை இஸ்லாம் கொள்கைகளைத் தழுவுங்கள் என்று சொல்லவில்லை; அல்லது 'ஆத்மார்த்தத்திற்கோ' 'கடவுளை அடைவதற்கோ' நான் அப்படிச் சொல்லவில்லை. ஆதித் திராவிடர்களின் தீண்டாமையைப் போக்குவதற்குச் சட்டம் செய்வது, சத்தியாக்கிரகம் செய்வதுபோலவே இஸ்லாம் கொள்கையைத் தழுவுவது என்பதும் ஒரு வழி என்றே சொன்னேன்; இனியும் சொல்கின்றேன்.

சட்டம் செய்வது கஷ்டம்; செய்தாலும் நடைமுறையில் வருவது கஷ்டம். சத்தியாக்கிரகம் செய்வதும் கஷ்டம்; செய்தாலும் வெற்றிபெறுவது சந்தேகம். இவற்றால் துன்பமும் தோல்வியும் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால், ஆதித் திராவிடர்களுக்கு—இஸ்லாம் கொள்கையை ஏற்றுக்கொண்டேன் என்று சொல்வதில் என்ன கஷ்டம்? அதில் தோல்வியோ துன்பமோ ஏதாவது உண்டா? அல்லது, அன்னியருக்கு ஏதாவது கஷ்டம் உண்டா? அவன் ஆத்திகனாய் இருந்தால் என்ன? நாத்திகனாய் இருந்தால் என்ன? உண்மை இஸ்லாம் ஆனால் என்ன? பொய் இஸ்லாம் ஆனால் என்ன? யாருக்கும் எவ்விதக் கஷ்டமும் இல்லாமல்—வேண்டுமானால் எவ்வித மனமாறுதல் கூட இல்லாமல், தன்னுடைய இழிவையும் கஷ்டத்தையும் விலக்கிக்கொள்ள ஆசையும் அவசரமும்பட்ட ஒரு மனிதன் மாலை 5 மணிக்கு இஸ்லாம் மதக் கொள்கையை ஏற்றுக்கொண்டதாய்ச் சொல்லி, 5-30 மணிக்கு தீண்டாதவன் என்கின்ற இழிவிலிருந்து மீண்டு, தெருவில் நடக்க உரிமை பெற்று மனிதனாவதில் என்ன மற்றவர்கள் ஆட்சேபிக்க வேண்டும்? கேவலம் வயிற்றுச் சோற்றுக்காக 100-க்கு 90 மக்கள் என்னென்னமோ–அவரவர்களாலேயே இழிவான குற்றமான காரியம் என்று சொல்லப்படுவதை எல்லாம் செய்கின்றார்கள். அப்படி இருக்க, இதில் என்ன இழிவோ குற்றமோ இருக்கின்றது? உலகில் மதங்கள் ஒழிக்கப்படும்போது இஸ்லாம் மதமும் ஒழியும்.

ஏன் கிறிஸ்து மதத்தைத் தழுவக் கூடாது? ஆரிய சமாஜத்தைத் தழுவக் கூடாது? கிறிஸ்து மதக் கொள்கைகள் புத்தகத்தில் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. நேரிடையில் பறை கிறிஸ்தவன், பார்ப்பாரக் கிறிஸ்தவன், வேளாளக்

படிப்பகம்

www.padippakam.com



கிறிஸ்தவன், நாயுடு கிறிஸ்தவன், கைக்கோளக் கிறிஸ்தவன், நாடார் கிறிஸ்தவன் என்ப தாகத் தமிழ்நாடு முழுவதும் உள்ளனர்.

இஸ்லாம் மார்க்கத்தில் இவ்வித வேறுபாடுகள் இருக்கின்றனவா? கிறிஸ்தவ சகோ தரர்கள் கோபிக்கக்கூடாது; வேண்டுமானால் வெட்கப்படுங்கள் என்று வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரிய சமாஜம் என்பதும் ஒரு வேஷந்தான்.

உதாரணமாக, வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஆரிய சமாஜத் தீயர்களையும் கிறிஸ்துவப் புலையர்களையும் தெருவில் நடக்கவிடவில்லை. இஸ்லாமானவன் தாராளமாய் விடப்பட்டான். பாலக்காட்டிலும் அப்படியே நடந்தது. ஒரு நாள் பாலக்காட்டில் 'செருமான்' என்கின்ற இழிவுபடுத்தப்பட்ட சாதியாயிருந்த தீண்டப்படாதவன் ஒருவன், இஸ்லாம் ஆகி, தடுக்கப்பட்ட தெருவழியாகப் போனான். அப்போது அவனை சவுளிக்கடைப் பார்ப்பனரும், வெற்றிலைக்கடை நாயரும் தெருவுக்கு வந்து நின்று பார்த்தார்கள். உடனே அங்கு இருந்த மாப்பிள்ளை (இஸ்லாம்) 'எந்தடா? பன்னிக் கூத்தச்சி மகனே, அவனே நோக்குன்னு?' என்று கேட்டான். அதாவது 'என்னடா பன்றித் தேவடியாள் மகனே, அவனைப் பார்க்கிறாய்?' என்று கேட்டான். செருமானாயிருந்த முஸ்லிம் சிரித்துக் கொண்டே போனான். பார்ப்பனரும், நாயரும் தலை குனிந்து கொண்டார்கள். இது உண்மையில் நடந்த சம்பவம்.

ஆகவே, இஸ்லாம் மார்க்கம் செய்கின்ற நன்மை இந்து மார்க்கம் செய்வதைவிட அதிகமா, இல்லையா?

ஆனால், நான் இஸ்லாம் மதக்கொள்கைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டதாகவோ அவைகள் எல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்பதாகவோ யாரும் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோதமான கொள்கைகளைப் பார்க்கிறேன். இந்து மதத்தில் எதை எதைக் குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்கம், பாமரத் தன்மை என் கின்றோமோ அவை போன்ற சில நடவடிக்கைகள் இஸ்லாம் மதத்திலும் சிலர் செய் கிறார்கள். சமாதி வணக்கம், பூசை, நைவேத்தியம் முதலியவைகள் இஸ்லாம் சமூகத் திலும் இருக்கின்றன. மாரியம்மன் கொண்டாட்டம்போல், இஸ்லாம் சமூகத்திலும் 'அல்லாசாமி பண்டிகை' நடக்கின்றது. மற்றும் நாகூர் முதலிய 'ஸ்தல' விசேஷங்களும், சந்தனக்கூடு, தீ மிதி முதலிய உற்சவங்களும் நடைபெறுகின்றன. இவைகள் குர் ஆனில் இருக்கின்றதா, இல்லையா என்பது கேள்வியல்ல. ஆனால், இவைகள் ஒழிக்கப்பட்ட பின்புதான் எந்தச் சமூகமும் தங்களிடம் மூடநம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொள்ள முடியும். உலகமெல்லாம் ஒரு கொள்கையின்கீழ் வரவேண்டுமானால் இஸ்லாம் கொள்கையும் இணங்கவேண்டும். உலகம் சீர்திருத்தத்துக்கு அடிமைப்பட்டது என்பதை மறவாதீர்கள்!

மனிதன் காலதேச வர்த்தமானத்திற்குக் கட்டுப்பட்டவனாவான். மனிதனது மார்க்கமோ, கொள்கையோகூட அதில் பட்டதேயாகும். ஏனென்றால், 'மார்க்கம் என்பது மனிதன் வாழ்க்கைக்கு வழிகாட்டி' என்பதைக் கொண்டு சொல்கிறேன். வழி என்பது அடிக்கடி மாறக்கூடியதேயாகும். கால்நடை வழி, ஆடு, கழுதை, குதிரைமூலம் செல்லும் வழி, கட்டைவண்டி வழி, மோட்டார் வழி, இரயில் வழி, ஓடம், கப்பல் வழி, ஆகாய விமான வழி ஆகிய ஒவ்வொரு காலத்திற்குத் தகுந்ததுபோல் வழி திருத்தப்படவேண்டும். அது போலவே மனித வாழ்க்கை வழியும் காலத்தின் கோலமாய்—தேசத்தின் தன்மையாய்—சந்தர்ப்பத்தின் அவசியமாய் மாறியே ஆகவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். மாறுதலுக்கு இடம் கொடுக்கும் என்கின்ற மார்க்கமே சரியான மார்க்கம்.

உதாரணமாக, இஸ்லாம் மார்க்கத்தை எடுத்துக் கொண்டால் துருக்கி இஸ்லாம் சமூகத்தின் நடவடிக்கையும், ஆப்கானிஸ்தான் இஸ்லாம் நடவடிக்கையும், இந்திய இஸ்லாம் நடவடிக்கையும் ஒன்று என்று சொல்ல முடியாது. இந்தியாவில் ஈரோட்டுக்கும், தஞ்சைக் கும், சாத்தான்குளத்திற்குமே அனேக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இவர்கள்



அனைவரும் சேரும்போது பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டியிருக் கிறது. நான் சொல்லும் மாற்றமெல்லாம் நடை, உடை, பாவனைகளையேயாகும். மன மாற்றத்தைப்பற்றி நான் சொல்லவில்லை. அது அவரவர்கள் சொந்தச்சொத்து. மற்றவர் களுக்குத் துன்பமோ, தொல்லையோ இல்லாத வழியில், எவ்வித அபிப்பிராயத்தையும் கொள்ள யாருக்கும் உரிமை உண்டு.

[சாத்தான் குளத்தில், 28-7-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 2-8-1931]

**சகோதரிகளே! சகோதரர்களே!**

இஸ்லாம் மார்க்கம் மக்களுக்கு உபதேசிப்பதிலும் வேதவாக்கியங்களிலும் மேன்மை யானதாய் இருக்கின்றது–என்கின்ற திருப்தியானது மனித சமுதாயத்திற்கு எல்லாப் பயன் களையும் அளித்துவிடாது. ஆனால், அதன் தத்துவத்துக்கு ஒப்பக் காரியத்தில் அதன் பயனை உலகத்தில் மேன்மையுறச்செய்து மக்களுக்கு நல்ல வழிகாட்டியாக்கி உலக மக்களை ஒன்றுபடுத்தவும், அனைவரையும் சகோதரத் தன்மையுடன் இருக்கவும்—பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் சுதந்திரத்துடன் வாழவும் செய்யவேண்டும். எந்தக் கொள்கைக் காரனும் புத்தகத்தில் இருப்பதைக்கொண்டு—தங்கள் முன்னோர்கள், பெரியார்கள் சொன் னார்கள் என்பதைக் கொண்டு இனி உலகத்தை ஏய்க்க முடியாது. உலகம் பகுத்தறிவுக்கு அடிமையாகி எதையும் நேரிடை அனுபவத்தைக் கொண்டு பரீட்சித்துச் சரிபார்க்க வந்து விட்டது. செட்டி முடுக்கு செல்லாது; சரக்கு முடுக்காய் இருந்தால்தான் இனிச் செலாவணி யாகும். 'என் சரக்கைப் பரீட்சிக்கலாமா?' என்கின்ற அடக்குமுறை இனிப் பலிக்காது. 'அவர் ஒஸ்த்தின்னு சொன்னார்'; 'ஆண்டவன் சொன்னான்' என்பவையெல்லாம் அனுபவத்திற்கு நிற்காவிட்டால், காரியத்தில் நடந்துகாட்டாவிட்டால் இனி மதிப்புப் பெற முடியாது. ஆதலால், எந்தச் சரக்கின் யோக்கியதையையும் கையில் வாங்கிப் பார்த்துத்தான் மதிக்க வேண்டியதாகும். அந்தமுறையில் இஸ்லாம் கொள்கை என்பதும், முஸ்லிம் மக்களின் நடத்தையைக் கொண்டும் அவர்களது பிரத்தியட்ச பயனைக் கொண்டுந்தான் மதிக்கப்பட முடியும்.

இந்துக்கள் தேர் இழுப்பதைப் பார்த்து முஸ்லிம்கள் பரிகாசம் செய்துவிட்டு, முஸ்லிம்கள் கூண்டுகட்டிச் சுமந்து கொண்டு கொம்பு, தப்பட்டை, மேளம், பாண்டு, வாண வேடிக்கை செய்துகொண்டு தெருவில் போய்க் கொண்டிருந்தால்—உலகம் திருப்பிச் சிரிக்காதா? இந்துக்கள் காசிக்கும், இராமேஸ்வரத்திற்கும் போய்ப் பணம் செலவழித்து விட்டு, 'பாவம் தொலைந்து விட்டது' என்று திரும்பி வருவதைப் பார்த்து முஸ்லிம்கள் சிரித்துவிட்டு, முஸ்லிம்கள் நாகூருக்கும், மக்காவுக்கும், முத்துப்பேட்டைக்கும் போய்விட்டு வந்து தங்கள் பாவம் எல்லாம் தொலைந்து விட்டது என்றால் மற்றவர்கள் சிரிக்கமாட்டார் களா? மக்கள் மார்க்கத்தைக் காப்பாற்றுவதென்றால்—கொள்கைகளைப் பகுத்தறிவுக்கு இணங்கி இருக்கும்படி ஜாக்கிரதையாய் பார்த்துப் பயன்படுத்த வேண்டும். 'தீர்க்க தரிசிகள் பகுத்தறிவுக்கு விரோதமாய்ச் சொல்லி இருக்கமாட்டார்கள்' என்று கருதி அவற்றைத் தன் இஷ்டப்படி அர்த்தம் செய்துகொண்டு, பிடிவாதமாய் இருப்பது மூட நம்பிக்கையைவிட மோசமானதாகும். அம் மாதிரி மூடநம்பிக்கைகளின் பயனாய்த் தீர்க்க தரிசிகள் என்பவர்கள் சொன்னதன் கருத்தையும், உண்மையையும் அறிந்துகொள்ள முடியாமலும் போகும்.

நமக்குப் பகுத்தறிவையும், நடு நிலைமையையும் எதிலும் பயன்படுத்த உறுதியும் துணிவும் இருந்தால்தான் உண்மையைக் காணமுடியும். நாம் அறிவை உபயோகப் படுத்தாமல் நபிகள் வாக்கியத்திற்குப் புரோகிதர்கள் சொல்லுகின்றபடி தப்பர்த்தம் செய்துகொண்டு 'இதுதான் நபிகள் சொன்னது' என்று சொன்னால் நபிகளுக்கு மரியாதை செய்ததாகுமா? மஞ்சள் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்தால் எல்லாம் மஞ்சளாக இருக்கும்; சிவப்புக் கண்ணாடிக்குச் சிவப்பாகவும், பச்சைக் கண்ணாடிக்குப் பச்சையாகவுந்

படிப்பகம்

www.padippakam.com

தான் தெரியும். நல்ல, சுத்தமான, எந் நிறமும் இல்லாத கண்ணாடி கொண்டு பார்க்க வேண்டும். அது போலவே, பகுத்தறிவுடன் சுத்தமான நடு நிலைமை மனத்துடன் எதையும் பார்க்கவேண்டும். கண்ட உண்மையைத் தைரியமாய் வெளியில் எடுத்துச் சொல்லவேண்டும். அப்படிக்கில்லாமல், தங்களுக்குத் தெரிந்த தப்பிதங்களை மூடி வைத்திருந்தால் கடைசியாக 'ரிப்பேர்' செய்யமுடியாத அளவு மோசமானதாகி விடும். நீங்கள் பார்க்கின்ற கண்ணும், நீங்கள் செய்கின்ற அர்த்தமும், நீங்கள் அறிந்த மாதிரியும், யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்திப் பாராமல், எல்லாம் சரியானதாகத்தான் இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள். உங்களைப் போன்ற மற்றவர்கள் எப்படி நினைத்தார்கள், நினைக்கின்றார்கள் என்று பாருங்கள்.

நபி அவர்கள் உபதேசங்களைத் துருக்கியர் எப்படி மதிக்கின்றார்கள்? எப்படி அர்த்தம் செய்கின்றார்கள்? அவர்கள் என்ன பலன் அடைகின்றார்கள்? என்பவை போல உலகத்தில் முஸ்லிம்களின் நடப்பு முழுவதையும், அழுலையும், பலனையும் நன்றாய்க் கவனித்துப் பார்க்க வேண்டும். உங்கள் 'எதிரி' மதத்தைப் பரிசோதிப்பதுபோல், எதிரி ஆதாரத்தை எந்தெந்த வழியில் பரிசோதித்து நியாயம் அநியாயம் சொல்லுவோமோ அந்த நோக்கத்துடன்—உங்கள் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். கண்ட உண்மையை வீரத்துடன் வெளியிட்டு, குற்றமிருப்பின் திருத்த வேண்டும். மனிதன் முடிவு பெற்ற முற்போக்கானவன் என்று யாரும் கருதிவிடக் கூடாது. உலகமும் முழு முற்போக்கை அடைந்துவிட்டதாகக் கருதிவிடாதீர்கள். திருத்தம் அவசியமானால் திருத்தியாக வேண்டும். திருத்தம் சரியென்று பட்ட வழியில் மனம் திரும்பப் பயமோ, வெட்கமோ அடையக் கூடாது.

நபி அவர்கள் தோன்றிய காலத்தில் அராபிய தேசம் எப்படி இருந்ததென்று மவுல்வி சாயபு அவர்கள் சொன்னார்களோ அப்படியேதான் இன்னமும் இந்தியாவில் இந்துக் கொள்கைகள் இருந்துவருகின்றன. அரேபியர்களிடத்தில் பெண் குழந்தை பிறந்தால் துக்கப்பட்டுக் கொல்லுகின்ற வழக்கம் இருந்ததாக மவுல்வி சாயபு அவர்கள் சொன்னார்கள். இந்துக்களிடத்திலும் பெண் குழந்தை பிறந்தால் துக்கப்படும் வழக்கம் இன்னும் இருக்கின்றது. சமீபகாலம்வரை பெண்களை—பெரிய பெரிய பெண்களை, புருஷன் இறந்து போனால் பக்கத்தில் உயிருடன் வைத்து நெருப்புக்கொளுத்தும் வழக்கம் இருந்துவந்தது. இன்றும் பெண்களை அதைவிடக் கேவலமாய் விதவை என்று சொல்லி—சகுனத் தடையாகப் பாவித்துக் கொடுமைப்படுத்தும் முறை இருந்துதான் வருகின்றது. அரேபியர் பல கடவுளை வணங்கினதாகச் சொன்னார்கள். அதுபோலவே, இன்றும் இந்துக்கள் கோடிக் கணக்கான கடவுள்களை—உருவத்துடன் மாத்திரமல்லாமல் பெண்டு, பிள்ளை, வைப்பாட்டி, ஆடு, மாடு, குதிரை, யானை, எலி, பெருச்சாளி, மயில், கருடன், பாம்பு ஆகிய உருவங்களுடன் வணங்குகிறார்கள். இவையெல்லாம் மேல்சாதி-கீழ்சாதி அனைவரிடமும் உள்ளன. ஆதலால், முகமது நபி தோன்றுவதற்கு முன் அரேபியா பாலைவனம் எப்படிப் பட்ட காட்டுமிராண்டித்தனத்தில் இருந்ததோ, அதுபோலவேதான் இன்றையவரையில் இந்தியாவின் இந்து சமூகம் இருந்துவருகிறது. இந்த இலட்சணத்தில் இதை எடுத்துச் சொன்னால் இந்துக்களுக்கு வரும் கோபத்திற்கு அளவே இல்லை. இந்த மாதிரியான மத சம்பந்தமான முக்கிய நாள் என்பதற்கு உங்களைப்போல் இந்துக்கள் என்னைக் கூப்பிடவும் மாட்டார்கள்; ஏதாவது சொன்னால் பொறுக்கவும் மாட்டார்கள்; என்னை வைவதையே மதப் பிரச்சாரமாய்ச் செய்கிறார்கள்.

ஆகவே, மக்களிலேயே பிறவியில் வித்தியாசமில்லை என்று சொல்லும் கொள்கையில் இடத்திற்கு இடம் வித்தியாசம் கற்பிக்கப்பட்டு இருக்காது. ஆனால், இந்துக் கொள்கைகள் என்பவற்றில் ஒரு மனிதன் எவ்வளவு அயோக்கியனாக இருந்தாலும், கொலை செய்தாலும், திருடினாலும், நம்பிக்கைத் துரோகம், வஞ்சகம் முதலிய காரியம் செய்தாலும் ஒரு ஊரை நினைத்தால், ஒரு ஊருக்குப் போனால், ஒரு ஊரிலுள்ள குளத்துத் தண்ணீரைத் தலையில்



தெளித்துக்கொண்டால் பாபம் பரிகாரமாகிவிடும், மோட்சமடைந்துவிடுவான் என்று எவ்வளவோ அடியோடு பொய்ப் பெருமைகளைக் கற்பித்து—மூடநம்பிக்கை உண்டாக்கி—அங்குள்ள சோம்பேறிகள் பிழைக்க ஸ்தல யாத்திரை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஸ்தல யாத்திரைப் புரட்டுகள் எல்லாம் பகுத்தறிவுக்கு விரோதமானவை, மூடநம்பிக்கையில்பட்டவை என்று சொல்லும்போது, மற்றவர்கள் யாராவது அதுபோலச் செய்தாலும் அந்தத் தலைப்பின்கீழ் வருமல்லவா?

[ஈரோட்டில், 2-8-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 9-8-1931]

தலைவரவர்களே! தோழர்களே!

மதம் என்பது மனிதனின் கூட்டு வாழ்க்கைக்கும், அதற்கேற்ற ஒழுக்கத்திற்கும் ஏற்ற விதிகளைக் கொண்டதேயாகும் என்று சொல்லப்படுமானால், அம் மாதிரி மதங்களைப் பற்றிச் சுயமரியாதை இயக்கம் அதிகக் கவலைப்படுவது கிடையாது. அதற்கு இயக்கம் அவசியமானால் உதவியும் செய்யும். மற்றும், மனிதனின் ஆத்மா என்பது கடவுள் என்பதை அடைவதற்காக மதம் ஏற்பட்டது என்றால் அதைப்பற்றிச் சுயமரியாதை இயக்கம் கவலைப்படுவதில்லை. அப்படிப்பட்ட அபிப்பிராயக்காரனும், அவனுடைய மதமும் இப்போது எப்படியோ போகட்டும் என்று விட்டுவிடுவோம். ஏனெனில், அது தனிப்பட்ட மனிதனைப்பற்றிய காரியம். அதைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஆனால், மனித சமூகத்தின் அறிவைப் பாழ்படுத்தவும், தன்மான உணர்ச்சி அறவே இல்லாமல் செய்யவும், மக்களைப் பிரித்துவைத்து உயர்வு தாழ்வு கற்பித்து, மனித சமூக ஒற்றுமையைக் கெடுத்து, பொது முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும் தடுக்கும்படியான மதம் எதுவானாலும் அதை ஒழிக்கச் சுயமரியாதை இயக்கம் பாடுபட்டுத்தான் வந்திருக்கிறது. இன்று அனுபவத்தில் இருக்கும் நூற்றுக்கணக்கான—பல மதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றுள் அன்னிய மதம் என்பதைப்பற்றி நாம் இப்பொழுது பேச வேண்டாம். 'நம்முடைய மதம்' என்று இந்துக்கள் என்பவர்களால் சொல்லப்படுகிற 'இந்து மதம்' என்பதையே எடுத்துக்கொள்வோம்.

இந்தியர்களாகிய நாம் இவ்வளவு பிரிவினராய் இருப்பதற்கு இந்த இந்து மதமில்லாமல் வேறு எது காரணம்? பொதுவாக இந்துக்கள் இத்தனை சாதிகளாக—அவற்றிலும் உயர்வு தாழ்வாக—பார்ப்பான், பறையன் என்பதாகப் பிரிவுபடுத்தப் பட்டிருப்பதற்கு இந்துமதமல்லாமல் வேறு என்ன காரணம்? இந்த 20-வது நூற்றாண்டில் நேற்றுச் சென்னையில் மகாமேதாவிகளான பி. ஏ., பி. எல்., சாஸ்திரிகள், மகாபண்டித சாஸ்திரிகள் ஒன்றுகூடிக்கொண்டு, 'கீழ்ச் சாதியானை மேல்சாதியான் தொடுவது என்பது செத்தால்தான் போகுமேயொழிய இந்த ஜென்மத்தில் சாதிபேதம் போக்கடிக்கப்பட முடியாது' என்று பேசியிருக்கிறார்கள். இதற்கு ஆதாரம் இந்துமத சாஸ்திரமும் வேதமுந்தான் என்று பேசியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையில் இம் மாதிரி மதம், சாஸ்திரம், வேதம் என்பவைகள் ஒழிக்கப்படாமல் தீண்டாமையும், சாதிபேதமும் போக்கடிக்கப்படமுடியுமா? இதுவரையும்—இந்துமதம் விட்டு வேறு மதம் மாறாத—முக்கியமாக முஸ்லிம் ஆகாத எந்தப் பார்ப்பனரல்லாதவருக்காவது தங்களது சமூகத்தில் தீண்டாமை போயிருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள். மற்றும், பார்ப்பனருக்குள்ள சவுகரியமும் சுதந்திரமும் சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் மற்ற வகுப்பாருக்கு இருந்து வருகின்றனவா? இப்படிப்பட்ட மதம் ஒழிக்கப்பட வேண்டியதுதான் என்பதற்கு இதைவிட வேறு என்ன காரணம் வேண்டும்? மதம் என்றவுடன் ஒருவித வெறி ஏற்பட்டுவிடுகிறதாய் இருக்கிறதே ஒழிய, மதம் மக்களுக்குச் செய்துவரும் நன்மை என்ன? அதனால் மக்கள் அடையும் பயன் என்ன? என்பதை மதவெறியர்கள் சிந்திப்பதில்லை. கள்ளினால் உண்டாகும் வெறியைவிட இம் மாதிரி மதங்களால் ஏற்படும் வெறி அதிகமான கேட்டைத் தருகிறது. கள், குடித்தவனைக் கெடுக்கிறது; மதம், மனத்தில் நினைத்தவனையே கெடுக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



சோம்பேறி வாழ்வுக்கு மதந்தானே காரணம்! சமுதாய வாழ்வில் மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்கிறது மாத்திரமல்லாமல், பொருளாதாரத்தில் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கும் மதம் மூலகாரணமாய் இருக்கிறது. உண்மையில் நீங்கள் யோசித்துப் பாருங்கள்! உடல்வலிக்கப் பாடுபட ஒருசாதியும், நோகாமல் உட்கார்ந்துகொண்டு சாப்பிட ஒரு சாதியும் மதம் சிருஷ்டிக்கவில்லையா? உலக செல்வமும், போக போக்கியமும் சரீரப் பாடுபடும் மக்களுக்கு இல்லாமற்போகவும்–சோம்பேறி வாழ்க்கை யாருக்கும், சரீரப் பாடுபடாதவர்களுக்கும் போய்ச்சேரவும் காரணம், மதக் கொள்கை அல்லாமல் வேறு என்ன? பாட்டாளிகள் தரித்திரர்களாகவும், வயிற்றுச் சோற்று அடிமையாகவும், கீழ்சாதியாராகவும், கீழ்மக்களாக இருக்கவும்; பாடுபடுவதும் சரீர உழைப்பு உழைப்பதும் தோஷம் என்று ஏற்படுத்திக்கொண்டவர்கள் கவலையற்ற வாழ்வு வாழவும், செல்வம் பெருக்கிக்கொள்ளவும் மற்றவர்களை அடக்கி ஆளவும் மதம் அல்லாமல் வேறு காரணம் என்ன?

பகுத்தறிவற்ற பட்சி, மிருகம், புழுக்கள் தங்களுக்குள் சாதிபேதம், கீழ்மேல்நிலை, அடிமைப்படுத்தும் உணர்ச்சி ஆகியவை இல்லாமல் இருக்கும்போது, பகுத்தறிவுள்ள மனிதனுக்குள் சாதி–பேதம், உயர்வு–தாழ்வு, எஜமான்–அடிமை உணர்ச்சி ஏற்படக் காரணம் என்ன?

மிருகங்களுக்குள் சாதி வித்தியாசம் உண்டா? கழுதையில், நாயில், குரங்கில், எருமையில் பறைக் கழுதை, பறை நாய், பறைக் குரங்கு, பறை எருமை என்றும்—பார்ப்பாரக் கழுதை, பார்ப்பார நாய், பார்ப்பாரக் குரங்கு, பார்ப்பார எருமை என்றும் இருக்கின்றனவா? மனிதனில் மாத்திரம் இப்படி இருப்பதற்குக் காரணம் மதம் அல்லாமல் வேறு என்ன? இந்த மதம் ஏற்பட்டு எத்தனை காலமாயிற்று? இதுவரை மனித சமூகத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன? கடவுள் அவதாரமான இராமனது இராஜ்யம் என்னும் காலத்தில் இருந்த கீழ்ச் சாதியும், சத்திய கீர்த்தி அரிச்சந்திரன் இராஜ்யம் என்னும் காலத்தில் இருந்துவந்த சுடுகாட்டுப் பறையனும் பெண்சாதி விற்பனையும், பதினாயிரக்கணக்கான வருஷங்கள் ஆகியும் இன்னும் ஒழியவில்லை என்றால், மதத்தினால் மக்கள் முன்னேறுகிறார்கள் என்று எப்படிச் சொல்லமுடியும்?

மதம் மனிதனுக்கு முட்டாள்தனத்தைக் கற்பிக்கிறது, பாருங்கள்! செத்துப் பொசுக்கப்பட்டு, அந்தச் சாம்பலைத் தண்ணீரில் கரைத்துவிடப்பட்ட மனிதனுக்கு–பசி தீரவும் சுகமடையவும் அரிசி, பருப்பு, காய், கறி, செருப்பு முதலியன பார்ப்பான் மூலம் மேல் லோகத்துக்கு அனுப்பக் கொடுப்பதென்றால் மனிதனுக்குச் சிறிதாவது பகுத்தறிவு இருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? பெற்றோர்களை—இறந்து போனவர்களை மதிக்கவேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லை. அதற்காகப் பார்ப்பானுக்கு ஏன் அழவேண்டும்? அவன் காலில் ஏன் விழவேண்டும்? அவன் கால் கழுவின தண்ணீரை ஏன் குடிக்கவேண்டும்? மாட்டுச் சாணியும், மூத்திரமும் கலக்கி ஏன் குடிக்கவேண்டும்? இது மதக்கட்டளை, மதத் தத்துவம் என்றால் இப்படிப்பட்ட மதம் ஒழியவேண்டாமா?

கருமாதி, கலியாணம், கல்லெடுப்பு முதலிய சடங்குகள் பார்ப்பனனுக்கு அழவே கற்பிக்கப்பட்டிருக்கின்றனவே ஒழிய அவற்றினால் வேறு பலன் என்ன இருக்கிறது?

மற்ற மதக்காரரும் உலகில் உள்ள மற்ற நாட்டு மக்களும் இப்படியா நடந்துகொள்கிறார்கள்? நமக்குப் புத்தியும் இல்லை, வெட்கமும் இல்லை என்றால்—கண்ணும் இல்லை, காதும் இல்லை என்றுதானே அர்த்தம்? இதற்குப் பேர், 'மாமிச பிண்டம்' என்றுதானே சொல்ல வேண்டும்? எங்கள்மீது கோபித்து என்ன பிரயோசனம்? மனிதனுக்கு இன்று இருக்கும் கேவல நிலைக்குக் காரணம் மதமா? அரசாங்கமா? என்று சிந்திக்கவேண்டுமென்பதற்காகவே இதைச் சொல்லுகிறேன்.

மதத்தால் மக்களைச் சுரண்டிக் கொள்ளை அடித்து, நோகாமல் வயிறு வளர்த்துப் போக போக்கிய மனுபவிக்கும் சோம்பேறி அயோக்கியக் கூட்டம், நம்மை மதத்தைப் பற்றிச் சிந்தித்து, திருத்தப்பாடு செய்துகொள்வதற்குக்கூட இடம் கொடாமல், நம் ஈன நிலைக்கு அரசாங்கத்தை—வெள்ளையரைக் கைகாட்டிவிட்டுத் தப்பித்துக்கொள்கிறது. இது சாமர்த்தியமுள்ள திருடன் திருடிவிட்டு, 'அதோ, திருடன் ஓடுகிறான்!' என்று வேறு ஒருவனைக் கைகாட்டி தப்பித்துக்கொள்வது போலவே இருக்கிறது.



[நாமக்கல்லில், 12-12-1937-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-12-1937]

## 8. கஷ்டமான பிரச்சினை

ஆத்திகன் : மதங்கள் கடவுளால் உண்டாக்கப்பட்டவை.

பகுத்தறிவுவாதி : அல்ல; அவைகள் மனிதர்களால் உண்டாக்கப்பட்டவை.

ஆத்திகன் : ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

பகுத்தறிவுவாதி : மதங்கள் எத்தனை உண்டு?

ஆத்திகன் : பல மதங்கள் உண்டு.

பகுத்தறிவுவாதி : உதாரணமாகச் சிலவற்றைச் சொல்லும்.

ஆத்திகன் : எடுத்துக் காட்டாக—இந்து மதம், புத்த மதம், கிறிஸ்துவ மதம், முகமதிய மதம், சீக்கிய மதம், பார்சி மதம், ஜொராஷ்ட்டிர மதம் முதலியவைகளும் இவற்றுள் பல உட்பிரிவுகளும் உண்டு.

பகுத்தறிவுவாதி : கடவுள் எத்தனை உண்டு?

ஆத்திகன் : ஒரே கடவுள்தான் உண்டு.

பகுத்தறிவுவாதி : இவ்வளவு மதங்களும் யாருக்காக உண்டாக்கப்பட்டவை?

ஆத்திகன் : மனித வர்க்கத்துக்காகத்தான்.

பகுத்தறிவுவாதி : மதத்தால் ஏற்படும் பயன் என்ன?

ஆத்திகன் : மனிதன் கடவுளை அறியவும், கடவுளுக்கும் தனக்கும் சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவும், ஆத்ம ஞானம் பெறவும், கடவுள் கருணைக்குப் பாத்திரனாகவும் பயன்படுவதாகும்.

பகுத்தறிவுவாதி : அப்படியானால் ஒரே கடவுள் ஒரே மனிதவர்க்கத்துக்கு இத்தனை மதங்களை ஏற்படுத்துவானேன்?

ஆத்திகன் : இது மிகவும் சிரமமான கேள்வியாக இருக்கிறது. பெரியவர்களைக் கண்டு பேசியபிறகு பதில் சொல்லுகிறேன்.

பகுத்தறிவுவாதி : அதுதான் போகட்டும்! இந்து மதம் என்பது என்ன? அது கடவுளால் எப்படி ஏற்படுத்தப்பட்டது?

ஆத்திகன் : இந்து மதம் என்றால் வேத மதம் என்று பெயர்.

பகுத்தறிவுவாதி : வேதம் என்றால் என்ன?

ஆத்திகன் : ரிக்கு, யசூர், சாமம், அதர்வணம் என 4 வேதங்கள் உண்டு; அவ்வேத முறைதான் இந்து மதம் என்பது.

பகுத்தறிவுவாதி : இவ்வேதங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டவை?

ஆத்திகன் : வேதங்கள் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை.

பகுத்தறிவுவாதி : வேதங்கள் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை என்று யார் சொன்னது?

படிப்பகம்

www.padippakam.com



ஆத்திகன்: வேதங்கள் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை என்று வேதம் சொல்லுகிறது; வேதம் கடவுள் வாக்கு என்று வேதம் சொல்லுகிறது.

பகுத்தறிவுவாதி: இதற்கு ஏதாவது சாட்சியோ, ஆதாரமோ உண்டா?

ஆத்திகன்: வேதத்துக்கும், கடவுள் வாக்குக்கும் ஆதாரமோ, சாட்சியோ கேட்பது என்றால் அது பாவமான காரியமேயாகும்.

பகுத்தறிவுவாதி: அது பாவமாக இருக்கலாம்; ஆனால், ஆதாரம், ருசு இல்லாமல் ஒன்றை ஒருவன் நம்புவது என்றால் அது குற்றமாகாதா?

ஆத்திகன்: இதுவும் கஷ்டமான பிரச்சினையாகத்தானிருக்கிறது; பெரியவர்களைக் கேட்டுப் பார்க்கவேண்டும்.

பகுத்தறிவுவாதி: சரி; புத்தமதம் என்றால் என்ன?

ஆத்திகன்: புத்தர் என்கிறவர் காலத்தில் ஏற்பட்டது.

பகுத்தறிவுவாதி: அதற்கு என்ன ஆதாரம்?

ஆத்திகன்: புத்தர் என்கிறவர் சொன்னதாகச் சொல்லப்படும் வாக்குகள்தாம்.

பகுத்தறிவுவாதி: புத்தர்தான் சொன்னார் என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆத்திகன்: புத்தர் சங்கதி சரித்திரத்தில் பட்டதாய் இருக்கிறது. அன்றியும், அதில் இன்றைய நிலையில் மற்ற மதங்களைப்போல் கடவுள், கடவுள் வாக்கு, பல அற்புதங்கள் முதலியவை இல்லை என்பதோடு—ஆலோசனைக்கும், அறிவுக்கும் பொருத்தமானதை எடுத்துக்கொண்டு மற்றவைகளைத் தள்ளி விடுவதில் பாவமோ, குற்றமோ, கடவுள் தண்டனையோ இல்லையாகையால் அதற்கு ஆதாரம் தேடிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

பகுத்தறிவுவாதி: சரி; ரொம்ப நல்ல மாதிரி சமாதானம் சொன்னீர்கள். அப்படியானால் அம் மதத்தைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. கிறிஸ்துவ மதம் என்பது என்ன?

ஆத்திகன்: கிறிஸ்துவ மதம் என்பது, கிறிஸ்துவால் சொல்லப்பட்ட கொள்கை.

பகுத்தறிவுவாதி: அது எது?

ஆத்திகன்: பைபிள்.

பகுத்தறிவுவாதி: கிறிஸ்து என்பவர் யார்?

ஆத்திகன்: கிறிஸ்து கடவுள் குமாரர்.

பகுத்தறிவுவாதி: அப்படி என்று யார் சொன்னது?

ஆத்திகன்: கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

பகுத்தறிவுவாதி: ஒருவர் தன்னை இன்னார் என்று நிரூபிக்க அவரது வாக்கு மூலமே போதுமா?

ஆத்திகன்: ஏன் போதாது?

பகுத்தறிவுவாதி: அப்படியானால் இப்போது ஒருவன் வந்து உம்மிடம், 'நான்தான் கடவுள்' என்று சொன்னால் ஒப்புக்கொள்ளுவீரா?

ஆத்திகன்: இதுவும் கஷ்டமான பிரச்சினைதான், பெரியவர்களைக் கேட்க வேண்டும்.

பகுத்தறிவுவாதி: முகமதிய மதம் என்றால் என்ன?

ஆத்திகன்: முகமது நபி என்பவரால் சொல்லப்பட்ட கொள்கைகளை உடையது.



பகுத்தறிவுவாதி: அதற்கு என்ன ஆதாரம்?

ஆத்திகன்: குரான் என்னும் நூல்.

பகுத்தறிவுவாதி: அது யாரால் சொல்லப்பட்டது?

ஆத்திகன்: கடவுளால், முகமது நபி அவர்கள் மூலம் வெளியாக்கப்பட்டது.

பகுத்தறிவுவாதி: அப்படி என்று யார் சொன்னது?

ஆத்திகன்: நபி அவர்கள் சொன்னார்.

பகுத்தறிவுவாதி: அப்படி என்று யார் சொன்னது?

ஆத்திகன்: குரான் வாக்கியங்களில் இருக்கிறதுடன், வேறு பல சாட்சியங்களும் இருக்கின்றன.

பகுத்தறிவுவாதி: வேறு பல சாட்சியங்கள் என்பவை எவை?

ஆத்திகன்: அந்தக் காலத்தில் நபி அவர்களுடன் இருந்த பல பெரியவர்கள் வாக்கு இருக்கிறது.

பகுத்தறிவுவாதி: அவை உண்மை என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆத்திகன்: அந்தப்படி இருக்கும் ஆதாரங்களை நம்பவேண்டியதுதான்.

பகுத்தறிவுவாதி: மற்ற மதங்களும் இதுபோல்தானே?

ஆத்திகன்: ஆம்.

பகுத்தறிவுவாதி: அனேகமாக, கடவுள் வாக்கு, கடவுளால் அனுப்பப்பட்டவர்கள், கடவுள் அவதாரங்கள் என்பவர்கள், அவர்களது வாக்குகள் சம்பந்தப்பட்ட மதங்களின் தத்துவம், பலவிதக் கடவுள் தன்மை பெற்றவர்கள் ஆகிய எல்லோரையும்—ஒரே கடவுள் சொன்னார், சிருஷ்டித்தார் என்பதும் நியாயமாகுமா? ஆதலால், இம்மாதிரி மதம் என்பது வியாபாரம்; மதகர்த்தர், வேதம், புராணம் என்பவைகள் வியாபாரச் சரக்குகள் என்பது பகுத்தறிவுக்காரர்களுக்குப் படும் விஷயம். இது ஒரு சமயம் தப்பாக இருந்தாலும் இருக்கலாம்.

ஆத்திகன்: ஆம்; எல்லாம் இப்படிப்பட்டதுதான்.

பகுத்தறிவுவாதி: அப்படியிருக்க, இவ்வளவு மதங்களையும் ஒரே கடவுள் உண்டாக்கி இருப்பார் என்று நீரே நம்புகிறீரா? அதனால்தான், இவைகள்—ஒவ்வொரு சீர்திருத்தக்காரர்களால், அறிவாளிகளால் முன்பின் ஆராய்ந்து பார்த்து மனித சமூகத்துக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கவலை கொண்டவர்களால் (மனிதர்களால்) உண்டாக்கப்பட்டது என்று எண்ண வேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாமல், ஒரே கடவுள் இருந்து அவரே இவ்வளவு மதத்துக்கும், மதகர்த்தருக்கும் ஆதார புருஷர் என்றால்—அப்போது கடவுளின் மேன்மைக் குணம் பாதிக்கப்படவில்லையா? யாரோ சில மனிதர்களுக்கு மேன்மை கொடுப்பதற்காகக் கடவுளை முட்டாளாக்குவதும், பல கடவுளைச் சிருஷ்டிப்பதும், பல வேதங்களைச் சிருஷ்டிப்பதும் சரியா?

நாம் இருவரும் இவ்விஷயங்களில் ஒரே கருத்துடையவர்களாகி இவைகள் எல்லாம் சற்று நேரத்திற்கு உண்மை என்றே ஒப்புக்கொள்வோம். அதாவது, இந்துமதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பதையும்; வேதம் கடவுள் வாக்கு என்பதையும்; கிறிஸ்து கடவுள் அவதாரம் என்பதையும்; முகமது நபி கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதையும்; குரானையும மற்ற மதத்தையும் ஒப்புக்கொள்வோம். ஆனால், அவைகள் எல்லாம் இன்று ஒன்றாய் இல்லாமல், வேறு அபிப்பிராயங்களாகவும்—சில முரணானவைகளாகவும் ஒரு மதத்துக்கும், ஒரு மதத் தத்துவத்துக்கும், மற்ற மதத் தத்துவத்துக்கும், மற்ற தலை

படிப்பகம்

www.padippakam.com



வருக்கும் மாறாக இருப்பானேன்? ஒன்றுக்கொன்று இன்றைய அனுபவத்தில் அதிருப்தி, வெறுப்பு, துவேஷம் உடையவைகளாக இருப்பானேன்?

ஆத்திகன்: இதுவும் சிரமமான பிரச்சினையாகத்தானிருக்கிறது. பெரியவர்களைக் கேட்கவேண்டும்.

பகுத்தறிவுவாதி: சாவகாசமாய்ப் பெரியவர்களைக் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம். ஆனால், இன்று நாம் எதை நம்பி எப்படி நடந்துகொள்வது?

ஆத்திகன்: இவைகள் எல்லாம் உண்மை என்றோ, அல்லது உண்மை அல்ல என்றோ எப்படியோ இருக்கட்டும்! அதற்காக நாம் கவலைப்பட வேண்டாம். உலகில் மனிதன் உயிருள்ளவரை—நல்லது எண்ணு, நல்லது செய், அவ்வளவுதான்.

பகுத்தறிவுவாதி: நல்லது எது? தீயது எது என்பதற்கு அளவு கருவி என்ன?

ஆத்திகன்: இது மிகவும் கஷ்டமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது; ஆனாலும், பெரியவர்கள் நடந்து காட்டியது, சொல்லியிருப்பது இவைகளைக் கண்டு தெரிந்துகொள்ள வேண்டியதுதான்.

பகுத்தறிவுவாதி: பெரியவர் யார் என்பதற்கு அளவு கருவி என்ன? ஒருவர்—ஒருவரைப் பெரியவர் என்றால்—மற்றொருவர் அவரை ஒப்புக்கொள்வதில்லை. அவருக்கு மாறாக அல்லது வேறொன்றைச் சொன்னவர்களைப் பெரியவர்கள் என்கிறான். இதற்கு ஒரு பரீட்சைக் குறிப்பு வேண்டுமே?

ஆத்திகன்: இதுவும் கடினமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. இதற்கெல்லாம் உம்முடைய சமாதானந்தான் என்ன, சொல்லும் பார்ப்போம்.

பகுத்தறிவுவாதி: என் சமாதானம் என்ன? நான்தான் மதத் துவேஷி, பார்ப்பனத் துவேஷி, நாத்திகன், சுயமரியாதைக்காரர்கள் என்றெல்லாம் பெயர் வாங்கினவனாகி விட்டேனே! என் பேச்சை யார் கேட்பார்கள்? நீ ஆத்திகனாயிற்றே, உமக்குத் தெரியும் என்றும், தெரியாவிட்டாலும் உம்முடைய உள்ளத்தில் சதா குடி கொண்டிருக்கிற கடவுள் உணர்த்துவார் என்றும் கருதி உண்மையான சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காகக் கேட்டேன். நல்ல வேளையாக நீர் பதில் சொல்லாவிட்டாலும் என்னைத் திட்டாமல் பெரியவர்களைக் கேட்டுச் சொல்லுகிறேன் என்று சொன்னீரே—அதுவே எனக்கு ரொம்ப திருப்தி! ஆத்திகர்களில் இப்படிப்பட்டவர்கள் அருமை; மிக அருமை. சந்தேகம் கேட்டால் அடி, உதை, நாத்திகன், பிராமணத் துவேஷி, ஆரியத் துவேஷி,....என்றெல்லாம் வெறிபிடித்தவர்கள் போல் ஆடுவார்கள். ஆதலால், உம்மைப் பற்றிக்கூட எனக்குச் சந்தேகந்தான்.

ஆத்திகன்: என்ன சந்தேகம்?

பகுத்தறிவுவாதி: நீர் ஆத்திகரோ என்னமோ—என்று.

['சித்திரபுத்திரன்' உரையாடல்—'பகுத்தறிவு' மலர் 2; இதழ் 12—1938]

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

உண்மையிலேயே நம்மைப் பொறுத்தவரையில், அதாவது திராவிட நாட்டில் உள்ள திராவிடர்களைப் பொறுத்தவரையில் மதசம்பந்தமாகப் பேசவேண்டுமானால் இங்குள்ள திராவிடர்களுக்குள் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்பவர்களைத் தவிர மற்ற மக்களுக்கு மதம் என்பதால் ஒரு குறிப்பிட்ட கொள்கையோ, கருத்தோ ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், கிறிஸ்தவர், இஸ்லாமியர், பின் தங்கின திராவிடர்களுக்கு மதம் என்கின்ற பெயரால் தங்களுக்குள் பல பிரிவாகப் பிரிந்து சாதி



வகுப்புப் பேர்கள் சொல்லிக் கொண்டு, ஒருவரை ஒருவர் இழிவாக நடத்துவதும், இழிவாகக் கருதுவதும், அதற்காக என்று ஏதோ ஒரு உயர்வு தாழ்வான பெயர்களைச் சொல்லிக் கொள்வதும், அதற்கென்று நடத்தையில் அர்த்தமற்ற வேஷத்தையும், குறிப்பையும் அணிந்துகொள்வதல்லாமல் வேறு பொதுவான கொள்கையோ, காரியமோ கருத்தோ இருப்பதாகச் சொல்லுவதற்குச் சரியான ஆதாரமோ அத்தாட்சியோ இல்லை என்றேகூறலாம்.

இஸ்லாம், கிறிஸ்தவர் அல்லாத மக்களைப் பொதுவாக இந்துக்கள் என்று பெயரளவில் சொல்லுவதைத் தவிர, அந்த 'இந்து' என்பது சமுதாயப் பெயரா, இனப் பெயரா, மதப் பெயரா என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை. இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச் சொல் என்பதல்லாமல் அதற்கு வேறு கருத்து எதுவும் இருக்க இடமில்லை. அரபு தேசத்தவனை 'அரப்' அல்லது 'அரபு' என்பது போலவும், ரஷ்யனை 'ரஷ்ஷி' என்பது போலவும், ஒரு சிந்தியனை—அதாவது சிந்து மாகாணத்தவனைச் 'சிந்தி' அல்லது 'சிந்து' என்பது போலவும், இந்திய நாட்டானை அதாவது இந்தியனை 'இந்து' என்று அழைக்கப்படுகிறது என்பதல்லாமல், இந்து என்கின்ற சொல்லில் மத சம்பந்தம் இருப்பதற்கு இடமே இல்லை. அன்றியும், இந்து என்கின்ற சொல்லுக்கு ஆராய்ச்சியாளர்கள் பல கருத்துக்கள் சொல்லுகிறார்களே தவிர, அது மதம் என்பதில்லை. இந்து என்பது ஒரு மதத்திற்கு என்று சொல்லப்படுமானால், அதற்கு ஏதாவது ஆதாரமோ அல்லது மத சம்பந்தமான இலட்சணமோ இருந்திருக்க வேண்டும்; அல்லது இருந்தாகவேண்டும். அந்த முறையில் இந்து மதம் என்பதற்கு எவ்விதமான மத இலட்சணமும் இல்லை. பவுத்தம், கிறிஸ்து, முகமது முதலிய மதங்களுக்கு மத கர்த்தாக்களின் பெயர்கள் இருக்கின்றன. சைவம், வைணவம் என்னும் மதங்களுக்குச் சிவன், விஷ்ணு என்ற மதக் கடவுள்கள் பெயர்கள் இருக்கின்றன. வைதீக மதம், ஸ்மார்த்த மதம் என்பவற்றிற்கு வேதம், ஸ்மிருதி என்ற நூல்கள் இருக்கின்றன. மத கர்த்தாக்கள் பெயர் இல்லாமல், கடவுள்கள் பெயர் இல்லாமல், சம்பந்தப்பட்ட நூல்கள் இல்லாமல், குறிப்பிடத் தகுந்த ஆதாரம் இல்லாமல் ஒரு மதம் இருக்கிறது என்றால், அதுதான் இந்து மதம் என்றால், இந்த இந்து என்ற சொல் மதத்தைக் குறிப்பது என்று யார்தான் ஒப்புக்கொள்ள முடியும்?

தவிரவும், இந்து மதம் என்ற சொல் எந்த மத ஆதாரங்களிலும் காணப்படுவதே இல்லை. இந்து மதத்தின் கொள்கை இன்னதென்று சொல்வதற்கும் ஆதாரங்கள் கிடையாது. சரியாகவோ, தப்பாகவோ, சூழ்ச்சியாகவோ, முட்டாள்தனமாகவோ ஏற்பட்டுப் பழக்க வழக்கத்தில் தந்திரசாலிகளுக்கு அனுகூலமாகவும், அறியாத பாமர மக்களுக்குக் கேடாகவும் இழிவாயும் தலையெடுக்க வசதியில்லாததாயும் இருக்கிற ஒரு நடவடிக்கைக்கு இந்து மதம் என்ற பெயர் இருக்கிறது என்று சொல்லுவதற்கு அல்லாமல் வேறு என்ன பொருளில், என்ன பயனுக்கு இந்து மதம் இருக்கிறது என்று யாராவது சொல்லமுடியுமா? இந்து மதத்தால் மேன்மையும் பயனும் அடைகின்ற 'பிராமணர்கள்' என்னும் பார்ப்பனர்கள், 'இந்து மதம் என்பதாக ஒரு மதம் கிடையாது; ஆரியர் கொள்கைகளும் பழக்க வழக்கங்களுந்தான் இந்துமதம் என்பது; ஆகையால் ஆரியமதமே இந்துமதம்' என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள்.

மற்றொரு பார்ப்பனச் சாரார், 'வேதமும் ஸ்மிருதிகளும் புராணங்களுந்தான் இந்து மதம் என்பதோடு மனுதர்ம சாஸ்திரம்தான் இந்து மதத்திற்கு சாஸ்திரம் (சட்டம்)' என்றும் சொல்லி, அதை நடப்பாக்கி வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், வருணாசிரம தர்மம் என்பதாக ஒருமுறை இல்லாவிட்டால் மற்றபடி இந்துமதம் என்று சொல்ல இடம் இல்லை என்றே சொல்லலாம். அம் மதத்தில் கடவுளைப்பற்றிய கவலையோ நிர்ப்பந்தமோ கிடையாது என்பதோடு, ஆச்சார அனுஷ்டான பழக்க வழக்க நடை உடை பாவனை என்பவைகளுக்கும் எவ்வித நிர்ணயமோ நிர்ப்பந்தமோ கிடையாது என்றும் சொல்லலாம்.

படிப்பகம்

www.padippakam.com



உதாரணமாக, எதை வணங்குபவ [illegible] வணங்காதவனும், ஒரு கடவுள்காரனும், பல கடவுள்காரனும்தானே கடவுள் என்கின்ற ஸ்மார்த்தனும்; கடவுளே கிடையாது என்கின்ற நிரீச்சுரவாதியும்; சுவர்க்க-நரகம், பாவ-புண்ணியம் இல்லை என்கின்ற லோகாயதவாதியும்; எல்லாம் பொய் என்கின்ற மாயாவாதியும்; ஆண்-பெண் குறிகளே கடவுள் என்கின்ற சக்திவாதியும், மற்றும் மத சம்பந்தமாய் எந்த விதமான கொள்கை கொண்டவனும் (அதாவது தான் கிறிஸ்தவனல்ல, முகமதியனுமல்ல என்று சொல்லி விடுவானேயானால்) எவனும் இந்துவே ஆவான். அதனால்தான் நான் மேலே 'இஸ்லாம்-கிறிஸ்தவன் அல்லாத மக்களைக் குறிப்பிடும் சொல் இந்து என்ற சொல்லாக இருந்து வருகிறது' என்று குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட இந்து என்கின்ற மதம் இருக்கும் காரணத்தாலேயே நாட்டில் மதச் சண்டை நடக்கின்றது என்பதல்லாமல், மற்றபடி இந்த நாட்டில்—இந்தியாவில் மதச் சண்டை ஏற்படச் சிறிதும் இடமே இல்லை. ஆகையாலேயே இந்துக்கள் என்றழைக்கப்படுகிற திராவிட மக்கள் இந் நாட்டின் நலங்கருதியும், நாட்டின் விடுதலையையும், மக்கள் சுயமரியாதையையும் கருதியும், பெரும்பாலான மக்களுக்குப் பிறவியின் காரணமாகவே சுமத்தப்பட்ட இழிவு ஒழிக்கப்படவேண்டும் என்பது கருதியும் முதலாவதாகச் செய்யப்பட வேண்டிய வேலை—இந்துமதம் என்கின்ற புரட்டை விளக்கி, மக்களுக்குத் தெளிவுஏற்படுத்தி, அந்தச் சிறையிலிருந்து வெளியேறும்படி செய்வதேயாகும்.

இன்று இந்திய மனித சமுதாயத்திற்கு, சிறப்பாகத் திராவிட நாட்டிற்கும் சமுதாயத் திற்கும் இருந்துவரும் பெரும் நோய் இந்து மதம் என்பதேயாகும். இந்த இந்து மதம் என்ற பெருநோய் திராவிடர்களுக்குச் சயரோகம் என்றும், குஷ்ட நோய் என்றும் உறுதி யாகச் சொல்லலாம். இந்து மதம் இல்லாவிட்டால் 4-ம், 5-ம் சாதி (பிறவி) மக்களும் அவற்றால் ஏற்பட்டு வந்த, வருகிற, வரும்படியான கேடுகளும் இருக்க, நடக்க, ஏற்பட இடம் உண்டா என்று யோசித்துப் பார்க்க வேண்டுகின்றேன்.

இப்படி நான் சொல்லுவதால்தான்—இதைச் சுமார் 25 வருடகாலமாக முரட்டுத் தனமாக அச்சமின்றிப் பிரச்சாரம் செய்துவருவதால்தான்—மத விரோதி, மதங்களை ஒழிப் பவன், கடவுள் விரோதி, கடவுள் இல்லை என்பவன் என்றெல்லாம் என்மீது பழி சுமத்து கிறார்கள். மதமும் கடவுளும் இல்லை என்று ஒருவன் உண்மையாகவே சொல்லு வதானாலும், அதனால் உலகத்துக்கு எப்படிப்பட்ட கேடும் வந்துவிடாது. மதம் தோன்றிய காலம் முதல் மதப் போராட்டமும், கடவுள் கண்ட காலம் முதல் கடவுள் மறுப்பும் நடந்து தான் வந்திருக்கின்றன. அதனால் உலகம் அழிந்து மறைந்து எங்கும் நாத்திகமும், பொதுவுடைமையும் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால், சில பித்தலாட்டங்கள், சில வஞ்சகங்கள் ஒரு அளவுக்காவது பலமற்றுவருகின்றன என்பது மாத்திரம் உண்மை. ஆதலால், ஏமாற்று தலில்-வஞ்சகத்தில் பிழைக்கும் மக்களுக்கு நம்மீது ஆத்திரம்வந்து, அவர்கள் பாமர மக்களையும் மூடர்களையும் கிளப்பிவிட்டு, நம் பிரச்சாரத்தை அடக்கவேண்டியவர்கள் ஆகிறார்கள்.

[கீழக்கரையில், 4-2-1947-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 22-2-1947]

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை. வேலூர் என்று ஓர் ஊர் இருந்தாலல்லவா அந்த ஊருக்குப் போக முடியும். அதேபோல, இந்துமதம் என்று ஒரு மதம் இல்லை என்கிறேன். இந்துமதம் என்பதாக ஒரு மதம் இருப்பதாக யாராவது சொல்லமுடியுமா? இதுதான் இந்துமதம்; உண்டாக்கியவர் இன்னார்; இதனுடைய சட்டதிட்டங்கள் முறைகள் இன்னின்னவை-என்று யாராவதுசொல்லமுடியுமா? அப்படி இருந்தாலல்லவா சொல்வதற்கு! இதைப் பெரிய பெரிய ஆட்கள் எல்லாம்—காந்தியார்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்துமதம் இன்னது என்று 1 வரி, 2 வரி எழுத ஆளில்லை. ஒரு சீக்கியனைக் கேட்டால் சொல்ல முடியும். குருநானக் தலைவர், அவர் சொன்னது சீக்கிய மதம். ஒரு ஆதாரம்,



ஒரு தலைவன், சரித்திரம் இருக்கிறது. அதுபோல; முஸ்லிம் என்றால் குரான் ஆதாரம், முகமது நபி தலைவர், இத்தனை வருடத்திற்கு முன் பிறந்தவர்; இறந்தவர் என்று சரித்திரம் உண்டு. மதசம்பந்தமான ஆதாரங்கள் எப்படி இருந்தாலும் சரித்திர ஆதாரம் இருக்கிறது. அதைப்போல, கிறிஸ்தவனுக்கு பைபிள் இருக்கிறது. அவர்களது தலைவன் ஏசு. இன்றைக்கு 1956 ஆண்டுக்கு முன் ஆகிறது. அவர் பிறந்தது எங்கு? எத்தனை வருடத்திற்குமுன் பிறந்தார்? என்பதற்குச் சரித்திர ஆதாரம் இருக்கிறது. அதுபோல இந்து மதத்தில் இன்னார், இன்ன வருடத்தில் இன்ன காலத்தில், இன்னது செய்தார் என்று சொல்ல என்ன ஆதாரம்? எவனை எடுத்துக்கொண்டாலும், யுகா யுகங்கள், கோடிகோடி வருடம் முன்னால் 15 கோடி, 20 கோடி வருடங்கள் வாழ்ந்ததாகச் சொல்லக்கூடிய விதத்தில்தான் இருக்கிறது.

[வேலூர் நகராட்சி மன்றத்தில், 28-10-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை 8-11-1956]

நாம் 'கடவுளை' வணங்குகின்றோம் என்றாலும், பல 'கடவுள்களை' வணங்கு கின்றோம். இவைகளுள் உயர் கடவுள்கள் மூன்று. அவர்கள் சிவன், விஷ்ணு, பிரம்மா (மும்மூர்த்திகள்) ஆவார்கள். இம்மூவருள் இருவரையே சிறந்தவர்கள் ஆகக்கொள்ளப்பட்டு இருக்கின்றது. அவர்கள் சிவன், விஷ்ணு என்பவர்கள் ஆவார்கள். அவர்கள் இருவர்களே ஆனாலும் அவ்விருவர்களும் பல உருவங்களையும், பல பிறவிகளையும், பல பெயர்களையும் கொண்டவர்கள் ஆவார்கள்.

அவர்கள், அதோடு கூடவே பல தனிப்பட்ட செயல்களைக் கொண்டு அவற்றிற்கு ஏற்ற உருவங்களைக் கொண்டவர்கள்.

இவ்விரு கடவுள்களும் அவைகள் சம்பந்தப்பட்ட ஆதாரங்களின்படி ஒருவரோடு ஒருவர் போட்டி, பொறாமை, ஒருவரைவிட ஒருவர் பெரியவர் என்கின்ற அகம்பாவக் கருத்துக் கொண்ட விரோதபாவம் உடையவர்களாகவே இருந்து இருக்கிறார்கள். அவை மாத்திரம் அல்லாமல், இவர்களைக் கடவுள் என்று சொல்லும்படியான இலட்சணத்திற்குச் சிறிதும் பொருத்தமில்லாததான—பல எதிரிகளைக் கொண்டு எதிரிகளோடு போர் புரிந்தும், பலரைக் கொன்றும், பல ஒழுக்கமற்ற காரியங்களைச் செய்தவர்களாகவும் ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். இவர்களது வாழ்வும் ஒரு சாதாரண மனித வாழ்வாகவே இருந்துவருவதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட நிலையிலேயேதான், நமது நாட்டில் இருந்து வருகின்ற பல்லாயிரக் கணக்கான கோயில்களில் அமைத்திருக்கும் கடவுள்கள் இருக்கின்றனவே அன்றி, கடவுள் தன்மைக்கு ஏற்ற இலட்சணத்தோடு கூடியதாக ஒரு கோயிலாவது அமைக்கப்படவே இல்லை.

ஆகவே நாம் வணங்கும் இப்படிப்பட்ட கடவுள்கள், சிறு தெய்வங்களா?' துஷ்ட தேவதைகளா? அல்லது, உண்மையான தெய்வங்களா? என்பது விளக்கப்பட வேண்டியதாகிறது.

இன்றையக் காலம் விஞ்ஞான காலம்; விஞ்ஞான காலம் என்பதோடு அறிவு ஆராய்ச்சிக் காலமுமாகும். 'மக்கள் சமுதாயத்திற்கு ஒரு கடவுள் இருக்கவேண்டியது என்ற தத்துவத்திற்கு ஏற்பக் கடவுள் உணர்ச்சியை மக்களுக்குள் ஏற்படும்படி செய்ய வேண்டியது இன்றியமையாதது' என்றால்—இன்றைய மனித நிலைமைக்கு ஏற்றபடி அதை மக்களுக்கும் பழக்கினால் ஒழிய மற்றபடி, அந்தத் தத்துவம் நிறைவேறுவதோ, பயன்படுவதோ எளிதான காரியமாகாது என்பதே எனது கருத்து.

இது சமய ஆச்சாரியர்களால் அவசியம் கவனிக்கப்படவேண்டிய காரியமாகும். அப்படிக்கில்லாமல், மேற்கண்ட மாதிரியான கடவுள்கள் தன்மைக்குத் தத்துவார்த்தங்கள்



படிப்பகம்

www.padippakam.com



சொல்லுவதும்—சமய சம்பிரதாயங்களைச் சொல்லுவதுமான (வலியுறுத்துவதுமான) காரியங்களில் பயத்தைக் கொண்டும் பேராசையைக் கொண்டும் பெரும்பான்மையான மக்களை மேற்கண்ட கடவுள் தன்மைகளை ஏற்கவும் நம்பவும் செய்வது என்பது கஷ்ட சாத்திய மான காரியமாகவே முடியும் என்று கருதவேண்டி இருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, கோயில்களில் கடவுள் பூசைகளில்—இரு குறைபாடுகள், மக்களுக்குப் பெரும் மானக் கேடான காரியங்களாக இருந்து வருகின்றன.

அவை: ஒன்று கடவுள் பூசைகளின்போது சொல்லப்படும் தோத்திரச் சொற்களைத் தமிழில் சொல்லாமல் நாட்டுக்கும், நாட்டு மொழிக்கும் சம்பந்தம் இல்லாத சமஸ்கிருத மொழியில் சொல்வதும்;

மற்றொன்று: வழிபடுகின்றவர்களைக் கடவுள் இருக்கும் அறைக்குள் சென்று வழிபட அனுமதிக்காமல், வெளியில் நின்றே வழிபட வேண்டும் என்று சொல்லி இழிவு படுத்துவதும் ஆகும்.

பின்னையதானது முன்னையதைவிட மிகவும் சிந்திக்க வேண்டிய காரியமாகும். ஏனெனில், பின்னையது—அதாவது கடவுள் இருக்கும் அறைக்குள் வழிபடுபவர்—பக்தர் செல்லக்கூடாது என்று தடை விதித்திருப்பது—வெறும் பிறவியைக் காரணமாய் வைத்துத் (சாதியைக் காரணமாய்) தடுப்பதைத் தவிர, வேறு காரணம் ஒன்றும் இருப்பதாகக் கொள்ள முடியவில்லை.

ஏனெனில் பூசாரிக்கும், பக்தனுக்கும் உள்ள பேதம் என்னவென்று பார்த்தால்—பிறவியை, சாதியைத் தவிர எதுவும் தடையாக இருக்கவில்லை. எந்த விதத்தில்—பூசாரி, பக்தனைவிட உயர்ந்தவனாக இருக்கின்றான்? ஒழுக்கத்திலோ, நாணயத்திலோ, உடல் சுத்தத்திலோ மேம்பட்டவன் என்று யாராவது—எந்தப் பூசாரியையாவது குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? அன்றியும், இந்தப் பழக்கம் வடநாட்டுக் கோயில்கள் பலவற்றில் இல்லாமல் இருக்கின்றதையும் கண்டு வந்து இருக்கின்றேன்.

நாம், மக்களுள் பிறவியால் உயர்வு-தாழ்வு இல்லை என்பதையும், இருப்பதாகக் காணப்படுவதை ஒழிக்க வேண்டுமென்பதையும் கொள்கையாகக் கொண்டவர்கள் என்பதோடு—பலர், கடவுளுக்கு முன்னால் மக்கள் யாவரும் சமம் என்கின்ற கொள்கை உடையவர்களாகவும் இருக்கின்றோம். இந் நிலையில் பிறவி உயர்வு-தாழ்வு (சாதி) முறையைக் காப்பாற்றவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற காரியமான கோயிலில் கடவுள் அறைக்குள் ஒரு சாதி மக்கள் போகக்கூடாது என்று தடுத்து வைத்திருப்பதை எதற்காகப் பொறுத்துக்கொண்டு, தாங்கள் கீழ் பிறவி (சாதி) மக்கள் என்று தங்களை ஆக்கிக்கொண்டு இருப்பது என்பது—அதுவும் இன்றைய நிலையில் இருப்பது என்பதைச் சிறிது சிந்தித் தாலும், அது ஒரு மாபெரும் மானக்கேடான விஷயமாகவே எனக்குக் காணப்படுகிறது.

இந்தப் பிரச்சினையினை நான் வலியுறுத்துவதில்—இதில்—கடவுள் உண்டா, இல்லையா என்கின்ற பிரச்சினை சிறிதும் சம்பந்தப்படவில்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். அது ஒவ்வொரு மக்களுடைய சொந்த விஷயம்; ஆனால் மானக்கேடு என்பது எல்லா மக்களையும் பொறுத்த விஷயமாகும்.

இந்த நிலையில், பக்தர்கள் கோயிலுக்குப்போவது என்பதை நான் தடுக்க ஆசைப் படவில்லை; ஆனால் கடவுளை வணங்கக் கோயிலுக்குப் போவதனாலேயே தன்னுடைய பிறவியை இழிபிறவியாக ஆக்கிக்கொள்ளத் துணிகின்றானே என்பதைப் பற்றித்தான் நான் கவலைப்படுகின்றேன்.

கடவுளைக் கும்பிட—வணங்க—பிரார்த்திக்கக் கோயிலுக்குப் போகவேண்டும் என்கின்ற அவசியம் என்ன? அவரவர் வீட்டிலேயே இருந்துகொண்டு ஏன் வணக்கம் பிரார்த்தனை செய்யக்கூடாது? உருவக் கடவுள் வேண்டுமென்றாலும் கூட அதையும் வீட்டி



லேயே வைத்துக்கொள்ளலாமே! நீ கடவுள் அறைக்குள் வந்தால் கடவுளுக்குத் தீட்டு ஏற்பட்டுவிடும்; தீட்டுக் கழிக்கும் காரியம் செய்யாவிட்டால் கடவுள் சக்தி போய்விடும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கோவிலுக்கு ஏன் போகவேண்டும்? அப்படியே போகிறவன், 'மானம் இல்லை; ஈன உணர்ச்சி இல்லை; நான் ஈனப் பிறவி இழிமகன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்; கீழ் மகனாக, மானமற்றவனாக இருக்கச் சம்மதிக்கிறேன்' என்று துணிவு கொண்டவனாவான் என்பதைத் தவிர வேறு என்ன கருத்தைக் கொண்டவனாவான்?

'பழி என்றால்—மானக்கேடு என்றால்—இழிவு என்றால் உயிர் விடவும் வேண்டும்' என்ற நீதிக்கு ஆளாகவேண்டிய தமிழ் மகன்—வலியப்போய் இழிவையும், பழியையும், மானக்கேட்டையும் சம்பாதித்துக்கொண்டே இருக்கின்றான் என்றால், இதற்குச் சமயத்தின் பேரிலும் கடவுளின்பேரிலும் சாக்குச் சொல்லுவதென்றால் அது எப்படி அறிவுடைமை யாகும்? இதைப் பக்தர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்!

['விடுதலை'-கட்டுரை—28-1-1960]

## 9. பார்ப்பன தர்மம்

இந்து மதத்தைப் பற்றிப் பார்ப்பன குருவான சங்கராச்சாரியார் கூறியது என்ன வென்றால்—(27–2–1969 'தினமணி' பத்திரிகையில் உள்ளது.)

'இந்து மதம் பழமையானது. உலகம் தோன்றிய காலத்திலேயே தோன்றியது. இந்து மதத்தின் தர்மம் அவரவருக்கு விதித்தபடி நடந்து சனாதன தர்மத்தை நிலை நிறுத்தவேண்டியது' என்று சொன்னார்.

மேலும், 'மதம் என்றால் ஒருவர் தனக்கென்று நிச்சயித்துக்கொண்ட சிந்தாந்த (கருத்து) முடிவு. இந்து மதத்திற்கு ஆதி கிடையாது. இதர மதஸ்தர்கள் அவர்கள் மதங்களைக் கடவுள் மகன் உண்டாக்கினார் என்றும் கூறுவர்; தூதர் உண்டாக்கினார் என்றும் கூறுவர். ஆனால், இந்துமதம் எப்பொழுது உண்டானது என்று கூறமுடியாது. வேதம் உண்டான காலத்தில் ஏற்பட்டது. வேதம் எப்பொழுது உண்டாயிற்றென்று சொல்ல முடியாது. வேத காலத்தைப்பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுவார்கள்' என்றும் சொல்லி இருக்கிறார்.

ஆகவே, இந்துமதம் யாரால், எப்போது உண்டாயிற்றென்று சொல்ல முடியாது என்பதை சங்கராச்சாரியாரே ஒப்புக்கொள்வதோடு, அது உலகம் உண்டான காலத்திலேயே உண்டானது என்றும் சொல்லுகிறார்.

உலகம் உண்டான காலம் எவ்வளவு காட்டுமிராண்டிக் காலமாக இருந்திருக்க வேண்டும்?

'அந்தக் காலத்தில் ஏற்பட்ட தர்மங்கள், முறைகள், நடப்புகள் இன்றும் நடைபெற வேண்டும். அந்தப்படி நடக்காவிட்டால் பாவம், கேடு ஏற்படும்' என்றால் இதில் அறிவு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

எனவே, இந்துமதம் என்பது பெரிய புரட்டு.

இந்துமதம் என்பதாக எந்த ஆதாரமும் இல்லை.

அதற்கு எந்த முறையும் எந்தத் திட்டமும் கிடையாது.

பார்ப்பனர் சக்திக்கு ஏற்ப—பார்ப்பனரல்லாதவர்களின் முட்டாள் தன்மைக்கும், மானமற்ற தன்மைக்கும் ஏற்ப அவ்வப்போது உண்டாகும்—உண்டாக்கிக்கொள்ளும் திட்டங் களும், கருத்துக்களுமேயாகும்.

அதுவும் தேசத்திற்கு ஒருவிதம், நாட்டுக்கு ஒருவிதம், ஊருக்கு ஒருவிதம், சமயத்திற்கு ஒருவிதம், சந்தர்ப்பத்திற்கு ஒருவிதம், ஆளுக்கொருவிதம் என்றெல்லாம் சொல்லலாம்,

படிப்பகம்

www.padippakam.com



இராஜாஜி 'பஞ்சமர்' வீட்டில் சாப்பிடுவார்; சங்கராச்சாரி பஞ்சமனைக் கண்டதற்குக் குளிப்பார்; சிலர் நிழல் பட்டதற்குக் குளிப்பர்; சிலர் தொட்டதற்குக் குளிப்பர்; சிலர் 'பஞ்சம' ஆணையோ, பெண்ணையோ திருமணம் செய்துகொண்டு பார்ப்பனராகவே இருப்பார்கள்.

'பலித்தவரை' என்பதுதான் பார்ப்பனீயமும், இந்து மதமுமாகும்.

கடவுளும் அப்படித்தான். ஒரே கடவுள் கோயிலுக்குள் இருந்தால் பார்ப்பானைத் தவிர யார்தொட்டாலும், கிட்டேபோனாலும் தீட்டு ஆகிவிடும். அதே கடவுள் ஆலமரத்தடி யிலோ, தெருவிலோ, திண்ணையிலோ இருந்தால் யார் வேண்டுமானாலும் தொடலாம்; நாய்கூட நக்கிச் சுவைக்கலாம். கோயிலுக்குள் இருந்தாலும் எலி, கரப்பான், பூச்சி, பூனை உலாவலாம்; மேலேறி விளையாடலாம்.

தமிழ்நாட்டு சிவனும், தமிழ்நாட்டு விஷ்ணுவும், உலகில் 'சிறந்த' ஸ்தலங்களான காசியிலும் பண்டரிபுரத்திலும் ஜகநாதத்திலும் இருந்தால் யாரும் தொட்டுக் கட்டித் தழுவிக் கும்பிடலாம்.

பஞ்சாபில் உள்ள ஆரிய சமாஜத்தார் வேதத்தை 'பஞ்சமர்' உட்பட நாய், கழுதை, குதிரைகளுக்கெல்லாம் கேட்கும்படி வரட்டுக் கத்து கத்தலாம். தமிழ்நாட்டில் வேத சப்தம் நம் காதிலேயே விழக்கூடாது என்பார்கள்.

பார்ப்பன ஆச்சாரம் 1900-ல் ஒரு விதம்; 1940-ல், ஒரு விதம்; 1940-க்குப் பின் ஒரு விதமாகத்தான் இருக்கிறது.

1930-ல் கோயிலுக்குள் பஞ்சமர் போகக்கூடாது. மலையாளத்தில் 'நாலாவதர்' களிலும் சிலர் போகக்கூடாது. அங்கு, இன்று எல்லோரும் 'செரமர்' உட்பட எல்லா மக்களும் போகலாம்; இதனால் எந்தக் கடவுளும் ஓடிப்போய்விடவில்லை.

இன்றைய தினமும் சில ஸ்தலங்களில் கலவி சுகம்கொடுக்கப் பார்ப்பனப் பெண்களும் இருந்துவருகிறார்கள். அதற்குப் பார்ப்பன இளைஞர்களே தரகர்களாக இருக்கிறார்கள். சில இடங்களில் அர்ச்சகர்களில் சிலர் தங்களுக்கென்று ஒரு மனைவியும், பக்தர்களுக்கென்று ஒரு மனைவியும் உடையவர்களாக இருக்கிறார்கள். அர்ச்சகர்கள் என்றால் அவர் களைப் பார்ப்பனர்கள் இழிவாய் நினைத்த காலம் ஒன்று இருந்தது. இன்று அவர்கள் 'சரியான' பார்ப்பனர்களாகவே ஆகிவிட்டார்கள்.

வைணவ அர்ச்சகர்களும், சைவ குருக்களும் கொஞ்ச காலத்திற்கு முன்பு மலையாளி களைப்போல் முன்குடுமிகள் வைத்துக்கொண்டிருந்தார்கள்; இப்போது அந்தப் பேதமே போய்விட்டது.

இன்று பார்ப்பனருக்கு எது எப்படிப் போனாலும் தங்களுக்குப் பெரியசாதி என்கின்ற பட்டம், அந்தஸ்து இருந்தால் போதும்; அதற்காக எந்தக் காரியத்தையும், எப்படியும் நடத்திக்கொள்ளலாம் என்பதை உயர் தர்மமாகக் கொண்டிருக்கிறார்கள்.

['விடுதலை'-தலையங்கம்—4-3-1969

## 10. சாமியும், சமயமும், சமயாச்சாரிகளும்

தேவர்கள் என்றும் தெய்வங்கள் என்றும் அவதாரமென்றும் ரூபமென்றும் அதற்காக மதம் என்றும் சமயமென்றும், அதற்காக மதாச்சாரியர்கள் என்றும், சமயாச்சாரிகள் என்றும் கட்டியழுபவர்கள்—ஒன்று வயிற்றுப் பிழைப்புப் புரட்டர்களாயிருக்க வேண்டும்; அல்லது பகுத்தறிவில்லாதவர்களாகவாவது இருக்க வேண்டும் என்பதே நமது அபிப் பிராயம் என்பதாகப் பலதடவைகளில் வெளிப்படுத்தி இருக்கின்றோம்.



அதுபோலவே, சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ சொல்லப்படு பவையும் ஒரு 'சாமி' என்றோ அல்லது ஒரு ஆசாமி என்றோ அல்லது ஒரு உருவ மென்றோ கொள்ளுவதும் ஞானமற்றவர்களின் கொள்கையென்றே சொல்லுவோம்.

உலகத் தோற்றத்தையும், அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்வு அழிவு என்பவை களான பலவகைத் தன்மைகளையும், மேற்படி 'சாமி'களோ 'ஆசாமி'களோ ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக் கொண்டிருப்ப வர்களும் ஆச்சார ஞானமற்றவர்கள் என்றே சொல்லலாம்.

மற்றபடி, மேற்கண்ட ஒவ்வொரு தன்மைக்கு மேற்கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப் பட்டிருக்கின்றது என்றும் அது ஒரு உருவமல்ல, ஒரு உருப்படி அல்ல என்றும், உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும் அத் தன்மைக்கு ஆதாரமான குற்றங்களையுந்தான் கடவுள் என்றோ, ஆண்டவன் என்றோ கருதுகிறோம் என்பதாகவும், 'தானாகத் தோன்றிற்று', 'தானாக வாழ்ந்தது', 'தானாக அழிகின்றது' என்கின்ற யாவும் இயற்கை யென்றும், அந்த இயற்கைக்குத்தான் 'கடவுள்', 'ஆண்டவன்', 'சாமி', 'தெய்வம்' என்றும் சொல்லுகின்றோம் என்பதாகவும், மற்றும் அந்த இயற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்கவேண்டுமே என்றும், அந்தக் காரணத்திற்கோ சக்திக்கோதான் கடவுள், 'சாமி', 'ஆண்டவன்', 'தெய்வம்' என்கின்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக்கொண்டு மாத்திரம் இருப்பவர் களிடத்தில் நமக்கு இப்போது அவ்வளவாகத் தகராறு இல்லை என்று சொல்லிக்கொள் கின்றோம்.

ஆனால், அந்தக் கடவுளுக்குக் கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண்–பெண் தன்மை, பெண்சாதி புருஷன், குழந்தைக் குட்டி, தாய் தகப்பன் முதலியவைகளைக் கற்பித்து, அதனிடத்தில் பக்தி செய்யவேண்டும் என்றும், அதற்குக் கோவில் கட்டி கும்பா பிஷேகம் செய்து தினம் பல வேளைகள் பூசை செய்யவேண்டும் என்றும், அச் சாமிகளுக்குக் கலியாணம் முதலியவைகள் செய்வதோடும், தேவடியாள் வீட்டிற்குக் கடவுள் சென்றார் என்று அழைத்துக் கொண்டு போவதோடும், அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான 'திருவிளையாடல்கள்' முதலியவைகள் செய்து காட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டும் என்றும், அக் கடவுள்களின் பெருமையைப்பற்றியும், திருவிளையாடல்களைப் பற்றியும் பாடவேண்டும் என்றும், அப் பாடல்களை 'வேதமாக', 'திருமுறை'யாக, 'பிரபந்தமாக', கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரமாகக் கொள்ளவேண்டும் என்றும், அப் பாடல்களைப் பாடினவர்களே 'சமயாச் சாரியர்'களாக, 'ஆழ்வார்'களாக 'சமயக்குரவர்'களாக, 'நாயன்மார்'களாக, பல அற்புதங்கள் செய்தவர்களாகக் கொள்ளவேண்டும் என்றும், இதுபோன்ற இன்னும் பல செய்தால் அக் கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும், மற்றும் நாம் செய்த—செய்கின்ற—செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும், அயோக்கியத்தனங் களையும், கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் 'சொல்லப்படுபவைகளான மூட நம்பிக்கையும், வயிற்றுப் பிழைப்புச் சுயநலப் பிரச்சாரமும் ஒழியவேண்டுமென்பதுதான் நமது கவலை.

ஏனெனில், இந் நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப்படுத்துவதற்கும், மற்ற நாட்டார்கள்போல நம் நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவு விசாலப்பட்டு, மற்ற நாட்டவர்களைப்போல் விஞ்ஞான (சயின்ஸ்) சாஸ்திரத்திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அன்னிய ஆட்சிக் கொடுமையிலிருந்து தப்ப முடியாமல், வைத்த பளுவைச் சுமக்க முதுகைக் குனிந்துகொடுத்துக் கொண்டிருப்பதற்கும் இம் மூடநம்பிக்கையும், சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரச்சாரமும், இவை களினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களும் செலவுகளுமேதான் காரணங்கள் என்பதாக

படிப்பகம்

www.padippakam.com



நாம் முடிவு செய்துகொண்டிருக்கிறோம். நாமும் நமது நாடும் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கும், ஒருவரை ஒருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொடுமைப்படுத்தி ஒற்றுமையில்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல் பாழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும், சிறப்பாக மக்களிடம் ஒழுக்கங்கள் குன்றி, மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும் மேற்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும், அதன் சமயமும், சமயாச்சாரியர்கள் என்பவர்களும், அவர்களது பாடல்களும் நெறிகளுமே முக்கிய காரணம் என்பதைத் தூக்குமேடையிலிருந்தும் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

நிற்க, இக் கடவுள்களின் பொருட்டாக நம் நாட்டில் பூசைக்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கலியாணம் முதலிய உற்சவத்திற்கும், பஜனை முதலிய காலட்சேபத்திற்கும், இக் கடவுள்களைப்பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த ஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும், இக் கடவுள்களின் அவதார மகிமைகளையும், 'திருவிளையாடல்களையும்', அவைகளைப்பற்றிய பாட்டுகளையும் அச்சடித்து விற்கும் புஸ்தகங்களை வாங்குவதற்கும், மற்றும் இவைகளுக்காகச் செலவாகும் பொருள்களிலும், நேரங்களிலும் நம்முடைய ஒரு நாட்டில் மாத்திரம் சுமார் 20 கோடி ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருடா வருடம் பாழாகிக்கொண்டு வருகின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இந்த இருபது கோடி ரூபாய்கள் இம் மாதிரியாக வீணாக்கப்படாமல் மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (Science) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ செலவாக்கப்பட்டு வருமானால் நம் நாட்டில் மாத்திரம் வாரம் இலட்சக்கணக்கான மக்களை நாட்டை விட்டு அன்னிய நாட்டிற்குக் கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா? அன்றியும், தொழிலாளிகள் கஷ்டத்திற்குள்ளாவார்களா? தீண்டக் கூடாத—நெருங்கக்கூடாத—பார்க்கக்கூடாத என்கிற மக்கள் என்போர்கள் கோடிக்கணக்காய் பூச்சி, புழு, மிருகங்களுக்கும் கேவலமாயிருந்துகொண்டிருக்க முடியுமா? 100-க்கு மூன்று பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100-க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசி மக்கள், தாசி மக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக்கொண்டு, இரத்தத்தை அட்டை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சிக் கொண்டும் நம்மையும், நம் நாட்டையும் அன்னியனுக்குக் காட்டிக்கொடுத்து நிரந்தர அடிமைகளாக இருக்கும்படி செய்துகொண்டும் இருக்கமுடியுமா என்று கேட்கின்றோம். நமக்குக் கல்வி இல்லாததற்கு சர்க்கார்மீது குற்றம் சொல்லுவதில் கவலை கொள்ளுகின்றோமே யல்லாமல், நம் சாமியும், பூதமும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளைகொண்டிருப்பதைப்பற்றி யாராவது கவலை கொள்ளுகின்றோமா என்று கேட்கின்றோம்.

நிற்க, 'அன்பையோ, அருளையோ, ஒழுக்கத்தையோ, உபசாரத்தையோ மாறு பெயரால் கடவுள் என்று கூப்பிடுகின்றேன். அதனால் உனக்கு என்ன தடை?' என்று யாராவது சொல்ல வருவார்களானால் அதையும் (அதாவது அக் குணங்கள் என்று சொல்லப்பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும்படியான குணங்களாகவோ, 'கடவுள்'களாகவோ தான் இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றோமே ஒழிய, வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயம் இல்லை என்றே சொல்லுவோம்.

இதுபோலவேதான் 'மதம்' என்பதும் 'சமயம்' என்பதும் 'சமய நெறி' என்பதும். மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய நடையைப்பற்றிய கொள்கைகளைக் கொண்டது என்பவர்களிடத்திலும் நமக்கு அவ்வளவாகத் தகராறு இல்லை. 'அன்பே சிவம்', 'சிவமே அன்பு' என்பதான சிவனிடத்தில் நமக்குச் சண்டையில்லை. அன்பு என்னும் குணம்தான் 'சிவம்'; அந்த அன்பைக் கைக்கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவதுதான் சைவம்—என்பதானால் நாமும் ஒரு சைவன் என்று சொல்லிக்



கொள்ள ஆசைப்படுகின்றோம். அதுபோலவே, ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கு உதவி செய்வது ஆகிய குணங்கள்தாம் விஷ்ணு; அக் குணங்களைக் கொண்டு ஒழுகுவதுதான் வைணவம்—என்பதான விஷ்ணுவிடத்திலும் வைணவனிடத்திலும் நமக்கு அவ்வளவாகத் தகராறு இல்லை என்று சொல்வதோடு, நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக்கொள்ளும் நிலைமை ஏற்படவேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம். நமக்கும் மற்றும் உள்ள மக்களுக்கும் அச் 'சைவத் தன்மை'யும் 'வைணவத் தன்மை'யும் ஏற்படவேண்டும் என்றும் தவம் கிடக்கின்றோம்.

அப்படியில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டதுதான் கடவுள் எனவும், அதை வணங்குகின்றவன்தான் 'சைவன்' என்றும், அப்படி வணங்குகிறவன் இன்ன மாதிரியான உடை பாவனை கொண்டவனாகவும் இன்னமாதிரி 'குறி' இடுகிறவனாகவும் இருப்பதுதான் சைவம் என்றும், இன்ன பேருள்ள கடவுள்களைப் பற்றிப் பாடின—எழுதின ஆசாமிகளையும் புஸ்தகத்தையும் வணங்குவதும் மரியாதை செய்வதும் தான் சைவம் என்றும், மற்றபடி வேறு எந்த உருவமோ பேரோ உள்ள 'கடவுள்' என்பதை வணங்குகிறவர்களையும் வேறு குறி இடுகின்றவர்களையும் யாதொரு குறியும் இடாதவர்களையும் சைவரல்லாதவர் என்று சொல்லுவதுமான கொள்கைக்காரரிடமே நமக்குப் பெரிதும் தகராறு இருக்கின்றது என்று சொல்வதுடன், அக் கொள்கைகளையும் அச் சமயங்களையும் அக் கடவுள்களையும் சுட்டுப் பொசுக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றோம்.

அன்றியும், பல சமயப் புரட்டர்கள் இம் மாதிரி விவகாரம் வரும்போது, 'நான் கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துவோ, ஒரு குணமோ இருப்பதாகச் சொல்லவில்லை' என்றும் மலைதான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்திரந்தான் கடவுள், மரம் செடிதான் கடவுள், புஷ்பம்தான் கடவுள், அதன் மணம்தான் கடவுள், அழகுதான் கடவுள், பெண்தான் கடவுள், அதன் இன்பந்தான் கடவுள், இயற்கைதான் கடவுள், அத்தோற்றந்தான் கடவுள் என்பதாகத் தமக்கே புரியாமல் உளறுவதும்; மறுபடியும் சிவன்தான் முழு முதற் கடவுள்; மற்றபடி விஷ்ணுவும், பிரம்மாவும் அவரது பரிவார தேவதைகள்; சைவ சமயந்தான் உண்மைச் சமயம், அதுதான் 'முக்தியளிக்க வல்லது' என்பதும், வைணவ சமயந்தான் உண்மைச் சமயம், அதில்தான் பரத்திற்கு மார்க்கம் உண்டு என்பதும், 'அச் சிவனையோ, விஷ்ணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக் கடவுள்களையும் அச் சமயங்களையும் பாடினவர்கள்தாம் கடவுள் நெறியையும் நிலைமையையும் உணர்த்திய பெரியார்கள், சமயாச்சாரிகள் என்பதுமாக மக்கள்முன் உளறிக்கொட்டி, அவர்களது மனத்தைக் குழப்பிச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களது புரட்டையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கி மக்களைக் குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்கவேண்டுமென்றுதான் சொல்லுகின்றோம்.

உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனத்தில் விவரப்படுத்திக் கொள்ளாமலே கடவுளைப்பற்றிய தர்க்கங்களும், தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றன. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங்கூடச் சொல்லுவோம்.

எனவே, மக்களின் பாரம்பரியமானதும், எங்கும் பரவியிருக்கும்படியானதுமான மடமைக்கு இதைவிட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம்.

ஏனெனில், இந்த விவகாரம் பாமர மக்களிடையில் மாத்திரம் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுவதற்கில்லை. இது, பெரும்பாலும் படித்தவன், ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையேதான் பெரிதும் (இந்த அறியாமை) இடம்பெற்று உரம் பெற்றிருக்கின்றது.

நிற்க, 'சர்வ வல்லமையுள்ள' என்று சொல்லப்படுவதான ஒரு 'கடவுள்' இருக்கின்றார் என்பதை (அது இன்னது என்று புரியாவிட்டாலும்) விவகாரமில்லாமல் ஒப்புக்கொள்ளுவதாகவே வைத்துக் கொண்டாலும், மனிதனின் வாழ்க்கைக்கு அக் கடவுளின்

படிப்பகம்

www.padippakam.com



சம்பந்தமோ, வழிபாடோ அவசியமா? அல்லது மனிதனுக்குச் சில குணங்களைக் கைக்கொண்டு அதன்படி ஒழுகும் தன்மை அவசியமா? என்பதே நமது கேள்வி. அன்றியும், அப்படிப்பட்ட ஒரு கடவுள் தன்னை மக்கள் வழிபட வேண்டும் என்றாவது, தனக்குக் கோவில் கட்டவேண்டு மென்றாவது, பூசை, அபிஷேகம், தேர், திருவிழா, உற்சவம் முதலியவைகள் செய்யவேண்டு மென்றாவது ஆசைப்படுமா? அல்லது, மக்கள் சில குணங்களைக் கொண்டு மற்ற ஜீவன்களிடத்தில் இன்ன இன்ன விதமாய் நடந்துகொள்ள வேண்டும் என்பதை விரும்புமா என்பதை யோசித்தால், 'கடவுள்' என்பது வாழ்க்கைக்கு வேண்டுமா, வேண்டாமா என்பது விளங்காமல் போகாது. அன்றியும், சர்வ வல்லமையுள்ள சாமிகளை மக்களுக்கு அறிமுகப்படுத்த இவ்வளவு ஆசாமிகளும், சமயங்களும் வேண்டுமா என்றும், அந்தச் சாமிகளை இல்லை என்பவர்களுக்கு ருசுப்படுத்த இவ்வளவு வக்கீல்கள் வேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

இதுபோலவே, ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமாக உலகத்திற்கும் மக்களுக்கும், கடவுளுக்கும் சம்பந்தம் கற்பிக்கப்பட்டிருந்தாலும், புத்தமதம் என்பதில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்கங்களைத் தவிர, வணக்கம் என்பதை அம் மதத் தலைவர் ஒரு சிறிதும் வலியுறுத்தியிருப்பதாகக் காணப்படவில்லை.

அன்றியும், அவர் கடவுளைப் பற்றியோ, கடவுளை வணங்குவதைப் பற்றியோ, கடவுள் நெறி உணர்த்திய பெரியார்களை மரியாதை செய்வதைப் பற்றியோ கவலை கொண்டு, ஒரு கடுகளவு நேரமாவது செலவழித்திருப்பதாகவும் காணக் கிடைக்கவில்லை. அன்றியும், அதைப்பற்றின வார்த்தைகளையாவது அவர் எங்காவது உபயோகித்திருப்பதாகச் சொல்லுபவர்களும் காணக் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை மதத் தலைவராகவும், அக் கொள்கையை, அம் மதத்தை, அச் சமயத்தை இன்றைய தினம் உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல்–50 கோடி மக்களுக்குமேல் தம் மதமாகவும் ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும், அப்படிப்பட்ட புத்தரைத் தங்கள் கடவுள் அவதாரமென்றும், தீர்க்கதரிசி என்றும், பகவான் என்றும் சொல்லிக்கொண்டிருக்கின்ற ஜனங்கள் இந்து மதம் என்பதிலேயே, சைவ மதம் என்பதிலேயே, வைணவ மதம் என்பதிலேயே பல கோடிக்கணக்கானவர்கள் இருப்பதோடு, அதற்குப் பல ஆதாரங்களும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை யாராவது மறுக்க முன்வருகின்றார்களா?

மனிதனுக்கு ஏதாவது ஒரு மதமோ, சமயமோ வேண்டியது அவசியம் என்று யாராவது சொல்ல வருவார்களானால், புத்தமதம் என்பதும், உலகாயத மதம் என்பதும், சூன்ய மதம் என்பதும், இயற்கை மதம் என்பதும் 'மதங்கள்' என்றுதானே சொல்லப்படுகின்றன? அப்படியிருக்கையில் அம் மதங்களில் ஏதாவது ஒன்றைக்கொண்டவர்கள் பலர் இருக்கலாம். எனவே, அது எப்படிக் குற்றமுடையதாகும்? எப்படிப் பல மதங்களுக்கும், சமயங்களுக்கும் தலைவரும் காலமும் இல்லாமல் இருக்கின்றனவோ, அதுபோலவே இம் மதங்களில் சிலவற்றிற்கும் காலமோ தலைவரோ இல்லாமலிருக்கலாம்.

ஆகவே, ஒரு மனிதன் எந்த மதக்காரனாகவோ, எந்த சமயக்காரனாகவோ, இன்ன கடவுளை வணங்குகிறவனாகவோ இருக்கவேண்டும் என்பதாகக் கட்டளையிடவும், இன்ன மதக்காரனாக இருக்கக்கூடாது என்று நிர்ப்பந்திக்கவும் யாருக்கு உரிமை உண்டு என்று கேட்கின்றோம்.

மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது அந்தந்த மனிதனின் தனி இஷ்டத்தைப் பொறுத்ததா, அல்லது மற்றவனுடைய நிர்ப்பந்தமா என்று கேட்கின்றோம். 'துறவி'க்கு மதம் ஏது? 'ஞானி'க்குச் சமயம் ஏது? கடவுள் ஏது? 'வேதாந்தி'க்கு 'மதம்' ஏது? கடவுள் ஏது? சகலத்தையும் துறந்தவர்தானே—முற்றும் துறந்த முனியல்லவா, 'துறவி'? சகலத்தையும் சரி என்று எண்ணுகிறவர்தானே 'ஞானி'?



சகலமும் 'மித்தை, பொய், மாய்கை' என்று எண்ணுகிறவன்தானே 'வேதாந்தி' என்பவன்? இவைகளை உலகம் ஒப்புக்கொள்கின்றதா, இல்லையா? அங்ஙனமாயின், இம் மூவர்களும் 'நாத்திகர்'களா என்று கேட்கின்றோம்.

உலகத்தில் 'துறவி' ஆவதற்கோ, 'ஞானி' ஆவதற்கோ, 'வேதாந்தி' ஆவதற்கோ எவனுக்கு உரிமையில்லை என்று கேட்பதோடு, எந்தப் புஸ்தகத்தைப் படித்துவிட்டு, யாரிடம் உபதேசம் பெற்று அல்லது எந்தச் சமயத்தை ஏற்று, எந்தக் கடவுளைத் தொழுது துறவியாகவோ வேதாந்தியாகவோ ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தமுண்டா என்று கேட்கின்றோம். இந்த விஷயங்களை நாம் வலியுறுத்துவதால் பல நண்பர்களுக்குச் சற்று மனக் கசப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும், நம் நாட்டின் விடுதலை, கண்டிப்பாய் இந்த விஷயங்கள் விளக்கமாவதில்தான் இருக்கின்றதே ஒழிய, வெள்ளைக்காரரிடமும் பார்ப்பனர்களிடமும் நேரில் முட்டிக்கொள்வதால் ஒரு பயனும் இல்லை என்றே சொல்லுவோம்.

வெள்ளைக்கார அரசாங்க முறையும், பார்ப்பனர்களின் ஆதிக்கமும் நமது மானத்திற்கும், அடிமைத் தனத்திற்கும், தரித்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கின்றன என்பது சத்தியமானாலும் அவ் வக்கிரமமும் ஆட்சியும் ஆதிக்கமும் இந்துமதம், கடவுள், சமயம் என்பவைகளான மூடக் கொள்கைகளின் பேரில்தான் கட்டப்பட்டிருக்கின்றன என்பது நமது முடிவு. இம் மூடக் கொள்கைகளை வைத்துக்கொண்டு வெள்ளைக்காரர்களையும் பார்ப்பனர்களையும் பூண்டோடு அழிக்க நம்மால் முடிந்து விட்டாலும், மறுபடியும் வெள்ளைக்காரர்களும் பார்ப்பனர்களும் வேறு எங்காவதிருந்தோ அல்லது நமக்காகவே உற்பத்தியாகியோ நம்மை அடிமைகளாக்கி, ஆதிக்கம் செலுத்திக் கொண்டுதான் வருவார்கள் என்பதை ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு அன்னிய அரசாங்கமோ இல்லாமல் நம் நாட்டார்கள் என்போர்கள் அரசாண்டு வந்த காலத்திலேயே நாம் ஏன் அடிமைகளாக, தற்குறிகளாக, தாசி மக்களாக, தீண்டப்படாதவர்களாக இருந்து வந்திருக்கின்றோம் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டிக்கொள்கின்றோம்.

எண்ணிப் பார்க்க ஏதாவது கஷ்டமாயிருந்தாலும் நம் நாட்டு மக்களால் 'சாமுண்டீஸ்வரி' பேராலும், 'பத்மநாபசாமி' பேராலும், 'கிருஷ்ணசாமி' பேராலும் ஆளப்படும் மைசூரையும், திருவாங்கூரையும், கொச்சியையும் தயவுசெய்து சற்றுத் திரும்பிப் பாருங்கள் என்று வேண்டிக்கொள்கின்றோம்.

ஆட்சிமுறைக் கொடுமையும், பார்ப்பன ஆதிக்கமும் வெள்ளைக்கார அன்னிய அரசாங்கத்தைவிட உள்நாட்டு மக்களால் ஆளப்படும் சுயராஜ்ய அரசாங்கத்தில் அதிகமா, கொஞ்சமா என்பதைக் கவனித்தால், வெள்ளைக்காரரும் பார்ப்பனர்களும் தாங்களாகவே தங்கள் பலத்தால் அக்கிரமங்களைச் செய்கின்றார்களா, அல்லது இந்த மதமும் கடவுளும் மத நெறியும் இவ்வித அக்கிரமங்கள் செய்ய இடம் கொடுக்கின்றனவா என்பது சுலபத்தில் விளங்காமல் போகாது என்றே எண்ணுகின்றோம்.

எனவே, நம் நாட்டிற்கு இப்போது அவசியமாக வேண்டியது என்னவென்றால் மூட நம்பிக்கை ஒழியவேண்டும்; அறிவுக்குச் சுதந்திரமும், விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சிபெற வேண்டும்; சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும். இம் மூன்றும் ஏற்பட வேண்டுமானால் மதமும், சாமியும், சமயாசச்சாரிகளும் சந்திக்கு வந்தே தீர வேண்டுமேயல்லாமல் இதற்கு வேறு பர்த்தியோ, ராஜியோ இல்லை.

['குடி அரசு'-தலையங்கம்—1-7-1928]



படிப்பகம்

www.padippakam.com



# 11. சைவ சமயம்

கொஞ்ச காலமாக சைவ சமயத்தின் பேரால் சிலர் போடும் கூச்சல் அளவுக்குமேல் போகின்றது.

சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாகவேண்டும் என்று அவர்கள் கட்சி சேர்க்கிறார்களாம். அரசியல் பிழைப்புக்காரர்கள் சிலர் அப்படித்தான்—அதாவது, 'சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாகவேண்டும்; அதை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யம் தடை பட்டுப் போகும்' என்று கூச்சல் போட்டார்கள்; கூலி கொடுத்தும் கூச்சல்போடச் சொன்னார்கள். அவ்வளவு கூச்சலையும் அடக்கிக்கொண்டு இப்போதும் நமது இயக்கம் தலை நிமிர்ந்து நிற்கின்றதையும் அரசியல்காரர்களில் பெரும்பாலோரும் இதை ஆதரிப்பதையும் பார்த்து ஒருவாறு அடங்கிவிட்டார்கள். இப்போது சைவ சமயத்தார்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் கிளம்பி சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்கவேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். இந்தச் சைவ சமயத்தார்கள் என்பவர்கள்—சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பனர்களையும் கண்டிக்கும்பொழுதும், வைணவ சமயத்தையும் வைணவர்களையும் கண்டிக்கும்பொழுதும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு, நம்மீதும் சுயமரியாதை இயக்கத்தின்மீதும் புகழ் புராணமும், கவியும் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அதாவது, பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டித்து சங்கராச்சாரியாரைத் தாக்கி வரும்போது நமக்கு உதவியும் செய்தார்கள். பிறகு வைணவப் புராணங்களின் வண்டவாளங்களை வெளியாக்கும்போதும் நமக்கு உதவிசெய்து வந்தார்கள். இது மாத்திரமல்லாமல், இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும், இந்துமதம் என்று சொல்லப்படுவது பார்ப்பன ஆதிக்கக் கொள்கைகள் கொண்டது என்றும் சொல்லும்போதும் அதை ஆதரித்து அதற்கு வேண்டிய ஆதாரங்கள் உதவி வந்தார்கள்.

கடைசியாக, சைவ மதப் புராணங்கள் என்பவைகளின் முறையில் அவற்றின் யோக்கியதைகளை வெளியாக்க நேரிட்டபோது மாத்திரம், 'சுயமரியாதை இயக்கம் சமயங்களுக்கு ஆபத்து விளைவிக்கின்றது, மோட்சத்திற்குத் தடையாய் நிற்கின்றது' என்று சொல்ல வந்துவிட்டார்கள். எனவே, சைவமதம் என்றால் என்ன? அது பார்ப்பன மதமல்லாது வேறு தனி மதம் என்றோ, அல்லது தமிழ் மக்கள் மதம் என்றோ யாராவது சொல்லமுடியுமா என்பதை முதலில் கவனிக்க விரும்புகின்றோம்.

நம் நாட்டுச் சைவர்கள் பெரும்பாலும், 'நாங்கள் பார்ப்பன மதத்தை வெறுக்கின்றோம்' என்கின்றார்கள். அன்றியும், பார்ப்பனர்களது மத ஆதாரம் என்பவைகளாகிய நான்கு வேதங்கள் என்பவற்றையும் சைவர்கள் தங்களுக்குச் சம்பந்தப்பட்டதல்ல என்கின்றார்கள்.

பார்ப்பனர்களின் 'மோட்ச' சாதனமான வேள்விச் சடங்குகளையும் தாங்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்கிறார்கள். மற்றும் புராணங்கள் என்பவைகளையும் ஆரிய சாஸ்திரங்கள் என்பவைகளையும் தாங்கள் ஒப்புக்கொள்ளமுடியாது என்பதுடன், அவைகள் பொய் யென்றும் கற்பனை யென்றும் சொல்ல முன்வந்திருக்கின்றார்கள். பார்ப்பன ஆச்சாரியார்களும் அதாவது சங்கராச்சாரி போன்றோர்களும் தங்களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் அல்லரென்றும் சொல்லுகின்றார்கள்.

மற்றும் எவ்வளவோ—அதாவது 'ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!' என்று ஆரியத்தையும் தமிழையும் பிரித்து, ஆரியத்திற்கும் தங்களுக்கும், தங்கள் சைவ மதத்திற்கும் சம்பந்தமில்லை என்றும்; தாங்கள் 'தனித் தமிழ்ச் சமயத்தார்' என்றும் சொல்லிக் கொள்ளுவதுடன், அதற்கு வேண்டிய ஆதாரங்களையும் கண்டு வைத்திருக்கின்றார்கள். உதாரணமாக, 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றும் பிரித்துச் சொல்லுகின்றார்கள். எனவே இந் நிலையில் சைவ மதம் என்றால் என்ன?



முதலாவதாக, கற்பனை என்றும், பொய் என்றும், ஆபாசமென்றும், அசம்பாவிதம் என்றும் சொல்லும்படியான கந்தபுராணம், சிவ மகாபுராணம் முதலாகிய புராணங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், சிவனுக்கோ சைவத்திற்கோ ஏதாவது கடுகளவு இடம் இருக்கின்றதா என்பதைக் கூர்ந்து நோக்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இரண்டாவதாக, இந்துமதத்தையோ, வைணவ மதத்தையோ, சைவ மதத்தையோ தனித் தனியாகவோ, பொதுவாகவோ எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், அவைகளிலுள்ள பொதுவான கடவுள்களும், வைணவ–சைவக் கடவுள்களும் 'சுரர்கள்' என்னும் 'தேவர்'களின் வேள்வி என்னும் யாகத்தை அழித்துவந்த 'அசுரர்கள்' என்னும் 'அரக்கர்களை'க் கொன்று வென்று, யாகத்தைக் காக்க வந்தவை என்கின்ற அஸ்திவாரம் தவிர, வேறு மார்க்கத்தில் வந்த கடவுள்கள் ஏதாவது எங்காவது இருக்கின்றனவா என்று பார்க்கும்படி வேண்டுகிறேன்.

அல்லது, 'பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்களின் வேதத்தை ஒப்புக்கொள்ளாததினாலோ, நிந்தித்ததினாலோ, உலகில் நீதியும் ஒழுக்கமும் கெட்டுப் போய்விட்டன' என்று சொல்லிக்கொண்டு அவதாரம் செய்ததாகவோ, தோன்றியதாகவோ அல்லாமல், வேறு வழியில் வந்த ஏதாவது கடவுள்களுண்டா? இருக்கின்றனவா?

இந்து, வைணவ, சைவ சமய சம்பந்தமான எந்தப் புராணமும் இதைத் தவிர வேறு என்ன காரணங்களாவது கற்பிக்கின்றனவா?

உதாரணமாக, சைவ சமயாச்சாரியார்கள் என்பவர்களும், 'வேத வேள்வியை மக்கள் நிந்தனை செய்ததால் தோன்ற வேண்டியவர்களானார்கள். வேத வேள்வியை நிந்தனை செய்த மக்களையும் அழித்து, வேத வேள்விச் சமயத்தையும் கடவுள்களையும் ஆதரிக்க வேண்டியவர்களானார்கள்' என்பதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும், வேதத்தையும் வேள்வியையும் தள்ளிவிட்டு, அவற்றைக் காப்பாற்ற வந்த கடவுள்களையும் தள்ளிவிட்டு, ஆரியர்களால் புனையப்பட்டது என்கின்ற புராணங்களையும் தள்ளிவிட்டால், தேவாரத்திற்கோ, திருவாசகத்திற்கோ மற்றும், 'தமிழ் மறை'க்கோ எங்காவது இடமிருக்கிறதா என்று கேட்கின்றோம்.

சைவம், சிவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்கின்ற வார்த்தைகளும் ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டவை என்னும் வழக்கைச் சுலபத்தில் தள்ளிவிட முடியாது. மற்றும், சைவக் கடவுள்கள் பெயரும், அக் கடவுள்களின் பெண்சாதிப் பிள்ளைகளின் பெயரும் அனேகமாய் முழுதும் ஆரியமொழிப் பெயர்களே தவிர வேறில்லை. மற்றும், அப் பெயர்களுக்கு ஏற்ற காரணங்களும் அக் காரணங்களுக்கு ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட கதைகள்தாம் ஆதாரமேயொழிய வேறில்லை. மற்றும் அப் பெயர்களுக்கும் கதைகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட புராணங்கள் என்பவைகளும் பெரிதும் ஆரிய மூலத்திலிருந்து மொழிபெயர்த்ததாகச் சொல்லப்படுபவைகளேயல்லாமல் வேறல்ல.

நிற்க, சைவ சமயம் தென்னாட்டில் பரவி இருக்கின்ற அளவு மற்ற நாட்டில், அதாவது வடநாட்டில் பரவியிருப்பதாகச் சொல்லமுடியுமா? வடநாடு முழுதும் ஏறக்குறைய வைணவ மதம் என்றே சொல்ல வேண்டும்.

தென்னாட்டில் மாமிசம் சாப்பிடாதவனுக்கு எப்படி சைவன் என்று சொல்லப்படுகின்றதோ அதுபோல்—வடநாட்டில் மாமிசம் புசிக்காதவனுக்கு வைணவன் என்று சொல்லப்படுவதுண்டு.

தென்னாட்டிலும் சமயத்தை ஏற்றுக்கொண்டவர்கள் சிலர் என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும், சைவ சமயத்தார்களோ, சைவ சமயம் இன்னது என்று அறிந்தவர்களோ வெகு சிலர் என்றுதான் சொல்ல வேண்டும். பாக்கி உள்ள மக்கள்—அதாவது

படிப்பகம்

www.padippakam.com



100-க்கு 90 பேர்கள் மாரி, கருப்பன், மாடன், மதுரைவீரன், பேச்சி என்பன போன்ற கடவுள் வணக்கக்காரரும், மற்றும் ஒரு சிலர் சைவ வைணவக் கடவுள்களையும் இக் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறவர்களுமே தவிர வேறல்லர்.

ஏதோ பழைய காலத்து அரசர்கள் தங்கள் மடமையினால் கட்டிவைத்த கோயில்களும், அவர்கள் விட்ட சொத்துக்களால் நடக்கும் உற்சவங்களும், இப்போது சில கொடுமைக்காரர்கள் மக்களிடமிருந்து அநியாய வழிகளில் கொள்ளையடித்துச் சம்பாதித்த பணத்தைக்கொண்டு கீர்த்திக்கும், தங்களை உயர்த்திக் கொள்வதற்கும், சிலர் தாங்கள் செய்த கொடுமையினால் ஏற்படும் பாவத்தைத் தொலைப்பதற்கும் என்று பழுதுபார்ப்பதும் புதுப்பிப்பதும் இல்லாவிட்டால், இவ்வளவு பெருமைகள்கூட, சொல்லிக் கொள்ள வகை இருக்காது என்றே சொல்லலாம்.

சமயம் என்பதும், வைணவம் என்பதும், சைவம் என்பதும் என்ன என்று பொதுவாக யோசிக்குமிடத்தில்—பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு தங்களை அறியாமல் பார்ப்பனீயத்திற்கும், பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உழைக்கும் சாதனங்களா அல்லவா என்பதை நிதானித்து நடுநிலைமையில் இருந்து பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

எனவே, இப்படிப்பட்ட சைவத்தைப் பற்றியோ சமயத்தைப் பற்றியோ ஏதாவது எழுத நேரிடுவதால் நாட்டின் நலத்திற்கோ, மக்களின் மோட்சத்திற்கோ எவ்விதமான ஆபத்துக்கள் எப்படி நேரிட்டுவிடும் என்பதைப் பற்றி விருப்பு வெறுப்பின்றி நிதானமாய் யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

['குடி அரசு'—தலையங்கம்—7-10-1928]

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

வைஷ்ணவ மத நாலாயிர பிரபந்தமும், சைவ மத தேவாரமும் மற்றும் இவை போன்றவை தோன்றியதற்குக் காரணமெல்லாம் புத்தருடைய கொள்கையை ஒழித்துக் கட்டி—சாதி, மத, கடவுள் வித்தியாசத்தை நிலைநாட்டும் வேதசாஸ்திர புராண இதிகாசங்களைக் காப்பாற்றவும், அதற்காகக் கற்பிக்கப்பட்ட கடவுள்களையும் கடவுள் தன்மைகளையும் கடவுள் செய்கைகளையும் காப்பாற்றவுமேதாம்.

இந்த மாதிரி ஏற்படுவது—நாமம் போடுவதும், சாம்பல் அடிப்பதும் நம் நாட்டிலே தான் ஏற்பட்டிருக்கிறதே அன்றி, மற்ற எந்த நாடுகளிலும் இருப்பதாகச் சொல்ல முடியாது. பக்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் இங்கு மாதிரி மற்ற மேல்நாடுகளில் தோன்றியும் இருக்கமுடியாது.

ஆகவேதான், இந்த நாட்டில் சாதிமதக் கோட்பாடுகளுக்கு இருந்த பலமான ஆதரவால்தான், சாதியை ஒழிக்கவேண்டுமென்று தோன்றியவர்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். மடங்கள் இடிக்கப்பட்டதும், கொளுத்தப்பட்டதும், மக்கள் கழுவேற்றப்பட்டதுமான சரித்திரங்கள்—கொண்டாட்டங்கள் இதை மெய்ப்பிக்கும்.

[சென்னை திருவொற்றியூரில், 19-2-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை.' 21-2-1952]

## 12. சமரச சன்மார்க்கம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

சமரச சன்மார்க்கம் என்பது வாயால் சொல்லக் கூடியதே தவிர காரியத்தில் நடக்க முடியாததாகும். ஏனெனில், எது எது சமரச சன்மார்க்கம் என்கிறோமோ அவற்றிற்கு நேர் விரோதமாகவே மனித வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கின்றது. இது நம்நாட்டில் மட்டுமல்ல; உலகம் முழுவதிலும் இவ்வாறே அமைக்கப்பட்டிருக்கின்றது.



முதலாவது கடவுள், மதம், விதி, சாதி, பணம், தொழில் முதலியவைகள் இயற்கைக்கு மாத்திரமான சமரச சன்மார்க்க மல்லாமல்—நியாய பூர்வமான சமரச சன்மார்க்கத்திற்கும் விரோதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் ஒருவன் சமரச சன்மார்க்கத்தைப்பற்றிப் பேசவேண்டுமானால் மேற்கண்ட கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு சமரச சன்மார்க்கம் ஏற்படவேண்டும் என்கின்ற முறையில் யோக்கியர்களாலோ, அறிவாளிகளாலோ பேசமுடியாது. ஏனெனில், அவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட தத்துவத்தில் அமைக்கப்பட்டிருப்பவைகளாகும்; அதோடுமாத்திரமல்லாமல், சமரசமும் சன்மார்க்கமும் கூடாது என்னும் தத்துவத்தின்மீதே அமைக்கப்பட்டுள்ளவைகளாகும்.

மேற்கண்டவை சம்பந்தமான கட்டுப்பாடுகளையெல்லாம் அடியோடு அழிப்பதுதான் சமரச சன்மார்க்கம் என்று சொல்வேன். இது உங்களில் பலருக்கும் உங்கள் பாதிரிமார்கள், எஜமானர்கள், அக்கம் பக்கச் சாதியார்கள், சாமிகள், மதக்காரர்கள் ஆகியவர்களுக்கு வருத்தமாயும் விரோதமானவைகளாயும் இருக்கும். நான் உண்மையான சமரச சன்மார்க்கம் அடைந்த தேசத்தார்—அடைந்த சமூகத்தார் அடைந்த தனிமனிதர்கள் யார்யாரைக் கருதுகின்றேனோ அவர்கள் எல்லாம் மேற்கண்ட இடையூறானவைகளைத் தகர்த்தெறிந்துதான் சமரச சன்மார்க்கம் அடைந்தார்கள்; இவைகளில் சிறிது தாட்சண்யப்பட்டவர்கள்கூட தோல்வியடைந்து விட்டார்கள்.

கடவுளையும், மதத்தையும், பணக்காரனையும் வைத்து சமரச சன்மார்க்கம் செய்ய முடியாதென்று கருதித்தான் ரஷியர்கள் பாதிரிமார்கள் தொல்லைகளையும், சர்ச்சுகளையும் பணக்காரத் தன்மைகளையும் அழித்துத்தான் சமரசம் பெற்றார்கள்.

தற்போதைய ரஷியச் சரித்திரத்தில் சமரசத்திற்குப் பாதிரிமார்கள் எதிரிகளென்றே தீர்மானிக்கப்பட்டு, அவர்களை அழித்துவிட்டார்கள். அழித்துவிட்டார்கள் என்றால் கொன்றுவிட்டார்கள் என்பது கருத்தல்ல. ஏதோ சிலரை, அதாவது சமரசத்திற்கு எதிர்ப் பிரச்சாரம் செய்தவர்களில் சிலரைத்தவிர மற்றவர்களைப் பட்டாளத்தில் சேரச்செய்தார்கள்; சிலரை விவசாயத்தில் போட்டார்கள்; சிலரை வைத்தியத்தில் போட்டார்கள்; வேறு காரியங்களுக்கு உதவாதவர்களைக் காவல் காக்கப்போட்டார்கள். அதுபோலவே, சர்ச்சுகளை தொழிற்சாலை, பள்ளிக்கூடம் முதலியவைகளாக மாற்றினார்கள். இவைகளுக்கு உதவாத போக்குவரத்துக்கு இடையூறானவைகளை இடித்தார்கள். பணக்காரர்களின் சொத்தைப் பிடுங்கி பொதுஜன சொத்தாக்கி, பூமி இல்லாதவர்களுக்கு பூமி, தொழிலில்லாதவர்களுக்குத் தொழில்; படிப்பில்லாதவர்களுக்குப் படிப்பு முதலாகியவைகள் கொடுப்பதற்கு உபயோகப்படுத்தினார்கள். கலியாண முறையை ஒழித்துப் பெண் அடிமையை நீக்கினார்கள். கண்டபடிப் பன்றிகளைப்போல் பிள்ளை பெறும் முறையை நிறுத்தச்செய்து, அளவுபடுத்தி ஆண் பெண் இன்ப வாழ்க்கைக்கு வழி செய்தார்கள். இன்னும் பல காரியங்கள் செய்தார்கள். ஆனால், நமக்கு இவை பொருந்துமா என்று சிலர் கேட்பார்கள். யார் கேட்பார்களென்றால், பணக்காரன், பாதிரி, உயர்ந்த சாதிக்காரன், அரசன் ஆகியவர்கள்தான் கேட்பார்கள். இவர்கள் நமது நாட்டு ஜனத் தொகையில் 100-க்கு 5 அல்லது 6 பேர்களே இருப்பார்கள். ஆதலால் குறைந்த எண்ணிக்கையுடையவர்கள்—அதிலும் தங்கள் சுயநலத்திற்கு என்று சில கட்டுப்பாடுகள் இருக்க வேண்டுமென்றால் யார் சம்மதிப்பார்கள்? முதலாவது, இவர்கள் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ளுகிறீர்களா? இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றீர்களா? என்ன சொல்லுகின்றீர்கள்? ஆகவே, கடவுள், மதம், பணக்காரன் இம்மூன்றும் இன்றே ஒழியவேண்டும் என்கின்ற ஆத்திரமுமில்லை. ஏனெனில், இன்னும் அனேக நாடுகள் இருக்கின்றன. அவை இப்போதுதான் முயற்சிக்கின்றன. ஆகையால், வரிசைக் கிரமத்தில் அந்த முறை நமக்கு வரும் என்கின்ற தைரியம் உண்டு. ஆனால், இங்கு மற்ற நாட்டில் இல்லாத சாதி முறை என்பது இச் சன்மார்க்கத்திற்கு விரோதமாய் இருக்கின்றது. அதை அழித்தே ஆகவேண்டும். நீங்கள் இவற்றிற்கெல்லாம் எத்தனை காலமாய் அடங்கி வந்திருக்கிறீர்கள்? என்ன பலன் அடைந்துள்ளீர்கள்? இன்றைய நிலையேதான் உங்கள்

படிப்பகம்

www.padippakam.com



வாழ்க்கையின் பலன் என்று நினைத்தால், எதற்காக நாளைய தினம் வரை உயிருடன் இருக்கின்றீர்கள்?

மனிதன் வாழ ஏதாவது இலட்சியம் இருக்கவேண்டும். சும்மா அறைத்த மாவை அறைத்துக் கொண்டிருப்பதுபோல், வெறும் ஆகாரம் உட்கொள்ளவும் உண்டதை மலமாக்கவும் என்பதற்காகவும் அறிவற்ற உயிர்கள் இருக்கின்றனவே! இவை போதாவா? இனி, மனிதன் பகுத்தறிவுள்ளவன் என்றும் சொல்லிக்கொண்டு, பண்டிதன் என்றும் பணக்காரன் என்றும் கடவுளை அடையும் மார்க்கங்களையும் பின்பற்றி, கடவுளென்று பணத்தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் செலவுசெய்கின்ற மனிதனும்—நல்ல ஆகார வஸ்துக்களை மலமாக்குவதற்காக வாழவேண்டுமா? இவ்வித மனித சமூகம் அழிந்துபோவது ஜீவகாருண்யத்தை உத்தேசித்தாவது மிகவும் அவசியம்.

உங்கள் இலட்சியங்களை அடைய முயலுங்கள்; மற்றொரு 'பிறவிக்கு என்று அயோக்கியர்களின் வார்த்தைகளை நம்பி எதிர்பார்த்துக்கொண்டு வீணாய் ஏமாந்து போகாதீர்கள். முன்பிறவி சங்கதி ஏதாவது ஒன்று, உங்கள் சரீரத்திலிருந்து உதிர்ந்த ஒரு மயிர்த்துண்டாவது உங்களுக்கு இந்தப் பிறப்பில் ஞாபகமிருந்தால் அல்லவா இந்தப் பிறவியின் காரியங்களை அடுத்த பிறவியில் அனுபவிக்க முடியப்போகின்றது? அன்றியும், கடவுள் உங்களை இப்படிச் செய்துவிட்டார் என்று முட்டாள்தனமாய்க் கருதி உங்கள் துன்பத்தை நிலை நிறுத்தாதீர்கள்! உணர்ச்சியும் அறிவும் அற்ற சோம்பேறிகளுக்குத்தான் கடவுள்செயல் பொருத்தமாக இருக்கும். நீங்கள் ஏன் சோம்பேறியாய் இருக்கின்றீர்கள்! கடவுளுக்குக் கோயில்கட்டி, உருப்படிகளை அதிகமாக்கி நமது குறைகளையும் கஷ்டங்களையும் முறையிட்டு, முறையிட்டு அழுதுவந்தது போதும். இனி அந்தப் பக்கம் திரும்பிப் பாராதீர்கள். உங்கள் அறிவையும் மனிதத் தன்மையையும் திரும்பிப் பாருங்கள்; அது சொல்கின்றபடி நடவுங்கள்; அதனிடம் நம்பிக்கை வையுங்கள். ஆகையால், மற்றநாட்டு வர்த்தமானங்களை உணர்ந்து நீங்கள் நடுநிலைமையில் இருந்து உங்கள் அறிவுக்கே பூசை போட்டீர்களானால், வந்துவிட்டது அன்றே சமரசம்! சன்மார்க்கம்! விடுதலை! இதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

[பெருந்துறை சமீபம் கிரேநகரில், 26-1-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-2-1931]

## 13. மதப்போட்டி

மதங்கள் என்பவைகளுக்கெல்லாம் ஒரு கடவுள் இருந்தாகவேண்டும்; மோட்சம் நரகம் இருந்தாகவேண்டும்; கடவுள் தன்மை பொருந்திய அவதார புருஷர்கள், குருமார்கள் இருந்தாகவேண்டும்.

இவை இல்லாமல் உலகில் எந்த மதமும் இருக்கமுடியாது. இந்து மதத்துக்கோ இவைகள் மாத்திரம் போதா. அதாவது, பல கடவுள்கள் வேண்டும்; பலவிதமான மோட்சங்கள், பலவிதமான நரகங்கள் வேண்டும்; மற்றும் பலவிதமான பிறப்புகள், முன்-பின் ஜன்மங்கள் வேண்டும்; பலவிதமான அவதாரங்கள், பலவிதமான குருமார்கள் வேண்டும். இவ்வளவும் போதாமல் கடவுளை நேரில் கண்டு மோசத்திற்குப்போன பலவிதமான பக்தர்கள் வேண்டும்.

இந்தக் காரியங்கள் சிறப்பாக இந்து மதத்தின் உட்பிரிவு மதங்களான சைவ மதம், வைணவ மதம் என்று சொல்லப்படும் இரண்டிலும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருந்து வருகின்றன.

பெயர்களைப் பொறுத்தவரையில் சில மாறுதல்கள் இருக்கலாமே ஒழிய, காரியங்களைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பியடித்தது போலவேதான் இருக்கிறது.



உதாரணமாக, வைணவத்தில் இராமாயணம் ஏற்பட்டதற்குக் காரணம் விஷ்ணுவும் அவரது மனைவியாகிய இலட்சுமியும் கலவி செய்ததிலிருந்தே ஏற்பட்டது என்றால்; சைவத்துக்கு, கந்தபுராணம் ஏற்பட்டதற்குக் காரணம் சிவனும் அவரது மனைவியாகிய பார்வதியும் கலவி செய்ததிலிருந்தே ஏற்பட்டது.

எப்படியெனில், விஷ்ணுவும் இலட்சுமியும் பகல் நேரத்தில் கலவியிலிருந்தபோது சில ரிஷிகள் படுக்கை அறைக்குள் பிரவேசித்து விஷ்ணுவைக்காண ஆசைப்பட்டதாகவும், துவார பாலகர்கள் தடுத்ததாகவும், அதற்காக அவர்களை ரிஷிகள் சபித்ததாகவும், அந்தச் சாபம் தீரவேண்டியதற்காகவே இராமாயணம் முதலியவை ஏற்படவேண்டியதாக ஆயிற்றாம்.

அது போலவே, பரமசிவன் பார்வதியோடு பலநூறு வருஷங்கள் விடாமல் கலவி செய்துகொண்டு இருந்ததாகவும், அதனால் ஏற்படும் வீரியமும், கர்ப்பமும் மிகக் கொடுமையான காரியத்தைச் செய்யக் கூடியதாகிவிடும் என்று தேவர்கள் முறையிட, கலவி முற்றுப் பெறுவதற்கு முன்பாகவே கலவியை நிறுத்திக் கொள்ளவேண்டியதாகி, அதனால் இந்திரியம் நிலத்தில் விழுந்து, பிறகு என்னென்னமோ ஆபாசமாகி, கடைசியாக 'சுப்பிரமணியர்' தோன்றி கந்தபுராணம் ஏற்பட வேண்டியதாயிற்று என்றுமே கதைகள் இருக்கின்றன.

அன்றியும், பூபாரம் தீர்க்கவும், இராட்சதர்களை அழிக்கவும் விஷ்ணு இராமராய்த் தோன்றினார்.

அதுபோலவே, பூபாரம் தீர்க்கவும், அசுரர்களை அழிக்கவும் சிவன் சுப்பிரமணியனாகத் தோன்றினார்.

இராமன் பிறப்பதற்காக தேவர்கள் விஷ்ணுவை வேண்டினார்கள்.

சுப்பிரமணியன் பிறப்பதற்காகவும் தேவர்கள் சிவனை வேண்டினார்கள்.

இராமன் இராட்சதர்கள் என்பவர்களைக் கொன்றான்.

சுப்பிரமணியன் அசுரர்கள் என்பவர்களைக் கொன்றான்.

இராமன் இராட்சதர்களைக் கொல்லும்போது (மூலபலம்) கொல்லக் கொல்ல உற்பத்தியாகிக் கொண்டே வந்தது.

சுப்பிரமணியன் அசுரர்களைக் கொல்லும்போது கொல்லக்கொல்ல அசுரர்களின் தலைகள் முளைத்துக்கொண்டே வந்தன.

இராமன் பெண்சாதி சீதை ஒரு வளர்ப்புப் பெண், சமுத்திரத்தில் கண்டெடுக்கப்பட்டவள்.

சுப்பிரமணியன் பெண்சாதியும் ஒரு வளர்ப்புப் பெண்; வள்ளிச் செடிக்கடியில் கண்டெடுக்கப்பட்டவள்.

சைவத்துக்கும் வைணவத்துக்கும் இனியும் அனேக விஷயங்களில் கடவுள்களைப் பற்றிய கதைப் பொருத்தங்களைக் காணலாம்.

அதுபோலவே சைவ, வைணவ ஆச்சாரியார்கள் விஷயங்களிலும், சைவத்துக்கு நாயன்மார்களாகவும்—வைணவத்திற்கு ஆழ்வாராதிகளாகவும் ஏற்படுத்தப்பட்டிருப்ப தோடல்லாமல், பல பக்தர்களையும் அவர்கள் செய்த காரியங்கள்—அதன் பயனாய் அவர்கள் அடைந்த முக்திகள் ஆகிய விஷயங்களிலும் ஒன்றுபோலவே கதைகள் கற்பிக்கப் பட்டிருப்பதையும் காணலாம்.

வைணவ பக்தர்கள் விஷயத்துக்கு, 'பக்த லீலாமிருதம்' என்னும் புத்தகம் போலவே—சைவ பக்தர்கள் விஷயத்துக்கு 'பெரிய புராணம்' என்னும் புத்தகம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



வைணவ பக்தரில் ஒரு குயவர் இருந்தால், சைவ பக்தரிலும், ஒரு குயவர் இருக்கிறார்.

எப்படியெனில், வைணவக் குயவர் கோராகும்பராய் இருந்தால், சைவக் குயவர் திருநீலகண்டராய் இருக்கிறார். இரு குயவ பக்தர்களுடைய கதையும் ஒன்று போலவே—அதாவது கோராகும்பரும் தன் பெண்சாதியுடன் பேசாமலிருந்து, கடைசியாக மகாவிஷ்ணுவே இருவரையும் பேசும்படிசெய்து சேர்த்துவைக்கிறார்.

திருநீலகண்ட குயவனாரும் தன் பெண்சாதியோடு பேசாமலிருந்து, கடைசியாக சிவபெருமான் வந்தே இருவரையும் பேசும்படிசெய்து சேர்த்துவைக்கிறார்.

மற்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பதிலும் வைணவ மதத்துக்கு சொர்க்கமாலா என்கின்ற தீண்டாதசாதி பக்தர் ஒருவர் இருந்து, அவரைக் கோயிலுக்குள் விடாமல் தடுக்கப்பட்டு, கனவு கண்டு கடைசியாக விஷ்ணு வந்து அழைத்துப்போகிறார்.

சைவத்திலும் தீண்டப்படாத வகுப்புக்கு நந்தன் என்பதாக ஒருவர் இருந்து, பரமசிவன் வந்து கனவில் சொல்லி சாமி தரிசனம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இரண்டு மத புராணங்களிலும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் ஒரே மாதிரியான உயர்வும், மற்றவர்களுக்கு இழிவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு, சாதிப் பாகுபாடுகளைப் பற்றி ஒரேமாதிரியாகவே குறிப்பிடப்பட்டுப் பலப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

இவற்றுள், சைவத்தைப் பார்த்து வைணவர்கள் காப்பி அடித்தார்களா, அல்லது வைணவர்களைப் பார்த்துச் சைவர்கள் காப்பி அடித்தார்களா என்பது ஒரு ஆராய்ச்சி வேலையாக இருக்கலாம்.

அதில் பிரவேசிக்க நமக்கு இஷ்டமில்லை. ஏனெனில், தமிழ்நாட்டில்தான் சைவத்தைப்பற்றிப் பிரபலமாய்ப் பேசப்படுகின்றதே ஒழிய, மற்றபடி இந்தியாவின் வடபாகம் முழுவதும், ஆந்திரதேசம் உட்பட வைணவமே மேலோங்கி இருக்கிறது. வடநாட்டில் வைணவர் என்றால்தான் மாமிசம் சாப்பிடாதவர் என்று அர்த்தமாகும்.

ஆகையால், இவை இரண்டிற்கும் மதக் கிரந்தங்கள், மதக் கதைகள் மத பக்தர்கள், மதக் கடவுள்கள் என்பவைகளில் ஒன்றை ஒன்று 'காப்பி' அடித்தோ அல்லது இருவரும் ஒன்றாய் உட்கார்ந்து கூடிப் பேசியோ ஒரு முடிவுக்கு வந்துதான் இப் பெரும் புளுகு மூட்டைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது அறியக்கிடக்கின்றது.

['பகுத்தறிவு' மலர் 1. இதழ் 4-கட்டுரை—1935]

## 14. மதம் விளைத்த கேடுகள்

நம் நாட்டிலுள்ள மக்களிடையே சாதி காரணமாகவும், மதம் காரணமாகவும், கட்சி காரணமாகவும் மற்றும் அந்தந்த சாதி, அந்தந்த மதம், அந்தந்த இனம் அவற்றிற்குள்ளாகவே உள்ள சச்சரவுகள் இவற்றின் காரணமாகவும்—பல போராட்டங்களும் சந்தேகங்களும் வெறுப்புணர்ச்சி, துவேஷ மனப்பான்மை இத்தியாதி தீய குணங்களும் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. இதை வீணாக மறைத்துப் பேசுவதில் பயனில்லை. ஏதோ ஒரு சாதியைச் சேர்ந்தவன்—ஏதோ ஒரு மதத்தைச் சேர்ந்தவன்—ஏதோ ஒரு கட்சியைச் சேர்ந்தவன் காந்தியாரைக் கொலை செய்து விட்டான் என்பதாகக் கொண்டு நாட்டில் பெரும்பாலான மக்கள் அந்தச் சாதியின் மீது, அந்த மதத்தின்மீது, அந்தக் கட்சியின்மீது வெறுப்புக்காட்டி வருகிறார்கள். எதனால் இப்படி ஒரு பெரியாரைச் சுட்டுக் கொல்லும்படியான நிலை ஏற்பட்டது என்று யாரும் சிந்திக்கவில்லை. காந்தியாரைச் சுட்டது எது? இதுபோன்ற கொடுமை இனியும் நடவாமல் இருக்க நாம் என்ன பரிகாரம் செய்யவேண்டும்? என்று யாரும் யோசிப்பதில்லை.



பார்ப்பான் ஒருவன் சுட்டான் என்ற காரணத்திற்காக அந்தப் பார்ப்பனரைத் திட்டி விடுவதாலோ, அல்லது அந்தப் பார்ப்பன சமூகத்தையே அழித்துவிடுவதாலோ, எத்தகைய உருப்படியான பலனும் ஏற்பட்டுவிடாது. நான் கூறுகிறேன்: சுட்டது பார்ப்பான் அல்லன், சுட்டது கைத் துப்பாக்கி. அதற்காகப் பார்ப்பான்மீது கோபித்துக் கொள்ளுவதாயிருந்தால் அந்த அளவுக்கேனும் அந்தப் பார்ப்பானின் கைக் கருவியாக இருந்த அந்தத் துப்பாக்கியின்மீது நாம் கோபித்துக்கொண்டாக வேண்டும்; அதை முதலில் துண்டு துண்டாய் உடைத்துத் தூள்தூளாக ஆக்கவேண்டும். காந்தியாரைச் சுட்டுக்கொல்ல உதவியாயிருந்த துப்பாக்கியின்மீது நாம் எவ்வளவு கோபப்படலாமோ, எவ்வளவு பழிக்கலாமோ—அந்த அளவுக்குத்தான் அதை உபயோகப்படுத்திய பார்ப்பான்மீதும் நாம் கோபித்துக்கொள்ள முடியும்; பழிக்க முடியும். அவனைப் பழிப்பதாயிருந்தால் அதே அளவுக்கேனும் அவன் பின்னாடி இருந்துகொண்டு, அவனுக்கு ஆதரவாய் இருந்த மற்றவர்களையும் பழிக்க நாம் சித்தமாயிருக்கவேண்டும். அவனும் அந்தத் துப்பாக்கிபோல் அவர்களுக்கு ஒரு கருவியாகத்தான் அமைந்துவிட்டான்.

மதத்தின் பேரால் உள்ள மூட நம்பிக்கைக் கருத்துக்களும், சாதியின் பேரால் உள்ள ஆசார அனுஷ்டானங்களும், மற்றும் கடவுள்-சாஸ்திரம் இவைகளின் பேரால் உள்ள அறியாமையுந்தான் இம் மாதிரிக் காரியத்தைச் செய்யும்படி அவனைச் செய்துவிட்டன. இனியேனும் இப்படிப்பட்ட காரியம் நடவாமல் இருக்கவேண்டும். அவனைத் தூக்கில் போட்டுவிடுவதாலோ, அல்லது அவன் சேர்ந்திருந்த ஸ்தாபனத்தைக் கலைத்துவிடுவதாலோ, அல்லது அவனுக்காக ஆதரவாயிருந்த அத்தனைபேரையும் அழித்துவிடுவதாலோ இப்படிப்பட்ட காரியம் நின்றுவிடாது. இவை வெறும் தற்கால சாந்தியாகத்தான் இருக்க முடியும். இது ஒருபோதும் நிரந்தரமான சாந்தியாகிவிடாது. இப்படிப்பட்ட கொலைகாரர்கள் தோன்ற எது ஆதாரமாயிருந்ததோ அதை அழித்து ஒழிக்கவேண்டும்.

ஒருவனுக்கு மலேரியா காய்ச்சல் வருமானால் அவனுக்கு 'கொயினா' மருந்து கொடுப்பது தற்காலிக சாந்தியாகத்தான் இருக்கமுடியும்; கொசு வலையிட்டுக் கொசுக்களினின்று பாதுகாத்துக்கொள்வதும் ஒரு தற்கால சாந்தியாகத்தான் இருக்கமுடியும். ஆனால், அந்தக் கொசுக்களின் உற்பத்திக்கே காரணமாயிருக்கும் கசமான சாக்கடை நீர்த்தேக்கங்களைச் சுத்தப்படுத்திவிடுவதுதான் நிரந்தர பரிகாரமாக இருக்கும். அதே போல், கொசுக்களான இக்கொடிய கொலைபாதகர்களின் உற்பத்திக்குக் காரணமாயிருப்பது மதமும் அதற்கு ஆதாரமாயிருந்துவரும் சாஸ்திரங்களும், புராணங்களுந்தாம். இக் கொசுக்களின் முயற்சியால்—இவர்களின் இடைவிடாத துவேஷப் பிரச்சாரத்தால் உண்டாக்கப்பட்டவன்தான் மதவெறிகொண்ட கோட்ஸே. இவன், மேலே கூறப்பட்ட மலேரியா காய்ச்சலுக்கு ஒப்பாவான். ஆகவேதான், அவனைக் கொன்றால் பயனில்லை என்றும், அவன் உற்பத்திக்குக் காரணமாயிருந்த மதத்தையும், கடவுளையும் அதற்கு ஆதாரமாய் இருந்துவரும் அனைத்தையும் ஒழிக்கவேண்டும் என்றும் நாம் கூறி வருகிறோம். இம் மதக் கொடுமைக்குக் காந்தியார் மட்டுமல்ல—நாம் எல்லோருமே பல நூற்றாண்டுகளாக ஆளாகியிருக்கிறோம். ஒரு சமுதாயத்தையோ, அல்லது ஒரு கூட்டத்தையோ, அல்லது ஒரு சாதியையோ அப்படியே அழித்து விடுவதால் இக் கொடுமை மறைந்துபோகாது.

காந்தியாரைக் கொன்றது ஒரு பார்ப்பான் என்று கூறப்படுகிறது. சித்தானந்தரைக் கொன்றது ஒரு முஸ்லிம் என்று கருதப்படுகிறது. இந்தப் பார்ப்பானோ அல்லது முஸ்லிமோ தனியாகத் தோன்றி இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து விட்டதாக நாம் கூறிவிட முடியாது. இம் மாதிரிச் சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன என்பதற்குச் சரித்திர ஆதாரங்களே இன்றும் இருந்து வருகின்றன.

மதுரை மாநகரில் 8000 சமணர்கள் சைவத்தை எதிர்த்ததற்காகக் கழுவேற்றப் பட்டார்கள். அவர்களைக் கழுவேற்றியவன் பார்ப்பான் அல்லன். ஒரு முஸ்லிமும் அல்லன்.



படிப்பகம்

www.padippakam.com



பின் யார்? அன்றைய மதக் கருத்துப்படி அரசன் அவர்களைக் கழுவேற்ற ஆணையிட்டான். ஆகவே, அவனல்லன் கழுவேற்றியது; அவன் தழுவியிருந்த மதந்தான் அவர்களைக் கழுவேற்றும்படி அவனைத் தூண்டியது.

அத்தகைய கொடுங் கருத்துக்கள் நம்நாட்டில் அன்னியன் (பிரிட்டிஷ்காரன்) ஆட்சியால் மேலும் வளரமுடியாமல் கொஞ்சகாலம் தடைப்பட்டிருந்தது. அவன் இப்போது போய்விடவே, மறுபடியும் மதம் தன் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டது. அது எந்த ரூபத்திலேனும் ஆதிக்கம் செலுத்திவருமே அல்லாது சுலபத்தில் அழிந்து போகாது. மதம்—அரசியலின் பேரால் ஒரு சமயத்திலும், சமுதாயத்தின் பேரால் மற்றோர் சமயத்திலும், மொழியின் பேரால் வேறோர் சமயத்திலும் தனது ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கும். இப்படியாக வெவ்வேறு 'ஷாப்புகளை' மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு மதக் கர்த்தர்கள் அந்த மதத்தை வளர்க்கப் பாடுபடுவார்கள். அதை அடியோடு—வேரோடு கல்லி எடுத்து அதன் ஆதாரமே ஒன்றுகூட இல்லாமல் செய்தால்தான் மதம் அழியும்.

நமது சமுதாயம் இனிமேலும் சாந்தியோடு வாழ வேண்டுமானால், மதம் அற்ற ஒரு புது உலகத்தை நாம் சிருஷ்டிக்க வேண்டும்.

இந்தக் காலம் மிக நாகரிகக் காலமென்று மக்களால் கருதப்படுகிறது. ஆனால், இந்தக் காலத்தில்தான் காட்டுமிராண்டிக் காலத்தில்கூட இருந்திராத மூர்க்கத்தனமும் அயோக்கியத் தனமும் இருந்துவருகின்றன. இப்படிப்பட்ட மூர்க்கர்கள், அயோக்கியர்கள் வாழும் காலத்தை எவனாவது நாகரிகக் காலமென்று கூறுவானா? அப்படிக் கூறுவானாகில் அவனை ஓர் அறிவாளி என்றுதான் நம்மால் ஒப்புக்கொள்ள முடியுமா? அல்லது, இவைகள் இல்லையென்றாவது யாராவது கூற முடியுமா?

காந்தியாரின் உபதேசம் என்றாவது பலாத்கார உணர்ச்சியை ஊட்டும்படியாக இருந்ததுண்டா? அவர் என்றாவது பொய் வார்த்தை கூறும்படியோ, பித்தலாட்டம் செய்யும்படியோ, அயோக்கியத்தனமாக நடந்துகொள்ளும்படியோ உபதேசித்ததுண்டா? அல்லது, அம் மாதிரி இழிதன்மையில் நடந்துகொண்டவர் என்று மக்கள் கருதும்படியாக வாவது அவர் ஏதாவது செய்திருக்கிறாரா? அப்படி ஒன்றும் இல்லையே! உலக மக்களில் 100 க்கு 90 பேரால்—ஓர் உத்தமர் என்றும், மனிதருள் மேலானவர், தெய்வீகத் தன்மை பொருந்தியவர் என்றும், அறிவையே—அன்பையே—சத்தியத்தையே உபதேசித்து வந்தவ ரென்றும் கருதப்பட்டு மரியாதை செய்யப்பட்டு வந்தவர்தானே அவர்! அப்படிப்பட்டவரால் கூட 30 வருட இடைவிடாத பிரச்சாரத்தால் இந்நாட்டு மக்களை முன்னேற்றமடையச் செய்ய முடியவில்லை; சீர்திருத்தம் செய்ய முடியவில்லை என்றால், அதற்குக் காரணம் என்ன? அப்படிப்பட்ட உத்தமரையே உயிர்க் கொலைசெய்யும்படி நேர்ந்த இன்றைய இப் பழிக்குக் காரணமாக்கப்பட்டுள்ளவன் யார்? அவன் கல்வியறிவில்லாத முட்டாளா? அல்லது கீழ்சாதி மக்களென்று கருதப்படும் அதாவது (lower order) ஏழை மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனா? அல்லது உணர்ச்சியற்ற பைத்தியக்காரனா? இல்லையே!

கொலை செய்தவன், சமுதாயத்தில் உயர்சாதியைச் சேர்ந்தவன்; அதுவும் சகல தத்துவமும் அறிந்த படித்த கூட்டத்தைச் சேர்ந்தவன். அவன் தழுவியிருந்த ஸ்தாபனமோ மற்ற மதங்களுக்கும் மேலாகத் தத்துவார்த்தமும் தெய்வீகத் தன்மையும் போதிக்கும் ஸ்தாபனம். இப்படியான கூட்டத்தைச் சேர்ந்த அவனை ஓர் காட்டுமிராண்டி என்றோ, கீழானவன் என்றோ கூறமுடியுமா?

படித்தவன்—உயர்சாதிக்கு நன்மை செய்ய ஏற்பட்ட ஸ்தாபனத்தைத் தழுவி நின்றவன்—அப்படிப்பட்டவனே இப்படிக் கொலை செய்தான் என்றால், அந்தக் காலத்தை நாகரிகக் காலமென்று எப்படிச் சொல்லமுடியும்? நீங்கள் சிந்திக்க வேண்டும்—இதை எங்காவது, எவனாவது, நாகரிகக் காலமென்று கருத முடியுமா என்று!



உலகம் இன்று மூர்க்கத்தனத்தில் பொருந்திவிட்டது. இன்று மக்களிடையே அன்பில்லை; நம்பிக்கையில்லை; விசுவாசமில்லை. 100 வார்த்தைகள் பேசினால் அதில் இரண்டோரு வார்த்தைகூட உண்மையான வார்த்தையாக இருக்கவில்லை. இன்றைய உலகில் மக்கள் நாணயமாக நடந்துகொள்ள வசதியில்லை. அப்படி நாணயமாக நடந்து கொள்பவர்களுக்கு உலகில் இடமில்லை. அன்பையும் அகிம்சையும் போதிப்பவர்களுக்கு உலகில் இடமில்லை. காந்தியாரின் முடிவே இதற்குப் போதிய சாட்சியாகும்.

மதத்தின் பேரால், கடவுளின் பேரால், சாஸ்திரத்தின் பேரால், நீதியின் பேரால், தெய்வீகத் தன்மையின் பேரால் நாளுக்கு நாள் அநாகரிகமும், அயோக்கியத்தனமும் அளவில்லாமல் வளர்ச்சியடைந்து வருகின்றன. ஒரு கடுகளவுக்குக்கூட உண்மையோ நாணயமோ நமக்குக் காணக் கிடைக்கவில்லை.

மக்களெல்லோரும் மூர்க்கர்களாகிவிட்டார்கள். காட்டுமிராண்டிக் காலத்தில் ஒருவனை ஒருவன் கொன்றுகொள்ளும் அளவுக்கு மூர்க்கத்தனம் இருந்ததென்றால், இன்றைய விஞ்ஞான காலத்தில் ஒருவனே—ஏன், ஒரு சிறு அணுகுண்டேகூட பல இலட்சக்கணக்கான மக்களைக் கொல்லக்கூடுமான அளவுக்கு அழிவு சக்தி மேலோங்கி இருக்கிறது. இதுவா நாகரிகம்? மக்களை எப்படிச் சுலபமாய் அழிப்பது என்று கவலை எடுத்துச் சிந்தித்துவரும் காலமா நாகரிகக் காலம்?

படிப்பினால் நாணயம் ஒழுக்கம் வளர்கிறது என்று யாராவது கருதமுடியுமா? படித்துப் பட்டம் பெற்றவரில் 100-க்கு இரண்டு பேராவது நாணயஸ்தர்களாக இருக்கிறார்களா? அரசன் நாணயமாக இருந்தால் மந்திரி நாணயமாக இருப்பான்; மந்திரி நாணயமாக இருந்தால் அவர் இலாக்காவில் வேலை பார்க்கும் சிப்பந்திகள் நாணயமாக இருப்பார்கள். ஆகவே, சிப்பந்தியின் நாணயக் குறைவுக்கு அவனல்ல காரணம்—அவனது எஜமான்களே காரணம் என்பது பெறப்படுகிறதா, இல்லையா?

இதேபோல், இந்தக் காட்டுமிராண்டித்தனத்திற்கு ஆதாரம் எங்கே இருக்கிறதென்று மக்கள் தேடிப்பிடிக்க வேண்டும். அந்த வாதங்களை அழித்து மக்கள் ஒரு புதிய உலகத்தைச் சிருஷ்டிக்க முயற்சிக்கவேண்டும்.

இன்றைய உலகம் நமக்குப் பயனில்லை; இது அடியோடு அழிக்கப்பட வேண்டும். படர் கள்ளிப்பூச்சி எப்படி உலகிலிருந்த படர் கள்ளிகளையெல்லாம் அழித்து நிர்மூல மாக்கிற்றோ அதேபோல், இன்றைய மக்களின் காட்டுமிராண்டித்தனத்திற்கு ஆதாரமாய் இருந்துவரும் அனைத்தையும் அழித்து நிர்மூலமாக்கவேண்டும். இன்றைய மனித சமுதாயத்தில் வளர்ந்து தழைத்து படர்ந்து கிடக்கும் மதக் கள்ளிகளை மக்கள் ஒழிக்க வேண்டும். ஒழுக்கத்தின் மூலம் மக்களிடையே நம்பிக்கை ஏற்படச்செய்தல் வேண்டும்.

பாதுகாப்பில் போதிய கவலையும் கவனமும் செலுத்தப்படவேண்டும் என்று போராடினோம்; விடுதலை வேண்டுமென்று கூப்பாடு போட்டோம். அதன் பயனாக இன்று சுதந்திரம் வந்துவிட்டது என்றாலும் பயமின்றி நம்மால் தனித்துத் தெருவில் நடமாட முடியவில்லை. ஒவ்வொருவனும் எந்த நேரமும் தன் உயிரைப் பற்றி—தன் பொருளைப் பற்றி—தனது மானத்தைப் பற்றிக் கவலையோடு இருக்கவேண்டியிருக்கிறது. எந்த நிமிடத்தில் இவற்றிற்கு ஆபத்து வந்துவிடுமோ என்று ஒவ்வொருவனும் கவலை கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையை எப்படி நாகரிக நிலை என்று நம்மால் கொள்ளமுடியும்? இன்றைய மனிதத் தன்மைக்கு—இன்றையக் கடவுள் சக்தி யின் கேவலத் தன்மைக்கு—இதுவரை காந்தியார் செய்துவந்த உபதேசத்தின் பயனற்ற தன்மைக்கு காந்தியாரின் பரிதாப முடிவே ஒரு மாபெரும் எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது.

இன்றையக் கடவுள் ஒரு ஒற்றைக் காசுக்குக்கூடப் பிரயோசனமில்லை. இன்றைய் மதம் ஒரு ஒற்றைக் காசுக்குக்கூடப் பிரயோசனம் இல்லை. இன்றைய மதம் ஒரு கடுகள

படிப்பகம்

www.padippakam.com



வுக்குக்கூட நமக்குப் பிரயோசனம் [illegible] நமக்கு வேறு மதம், வேறு கடவுள், வேறு கட்டளை வேண்டும்.

உங்களுக்கு வேண்டுமானால் இது சற்று அதிகமாகப்படலாம். ஆனால், இதை ஒப்புக்கொள்வது உங்களுக்கு எவ்வளவு கசப்பாயிருந்த போதிலும் இதுதான் உண்மை. இன்றைய நிலைமை மாறியாக வேண்டும். இன்றேல் சுயராஜ்யப் பித்தலாட்டத்தைப் போலவே மற்ற பித்தலாட்டங்கள் நாட்டில் வளர்ந்து கொண்டுதானிருக்கும்.

இன்றையக் கோயில், குளங்கள், சாஸ்திரங்கள், சட்டங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சாதிகள், சமயங்கள் ஆகிய சகலமும் மாற்றப்பட்டாகவேண்டும். இப்படிப் பரிதாபகரமான முடிவெய்திய காந்தியார்கூட மதத்தைக் காட்டி—கடவுளைக் காட்டி—மக்களிடம் அன்பையும் அஹிம்சையையும் வலியுறுத்தி வந்தார் என்றாலும், இத்தகைய மாறுதல்களுக்கும் அவர் தனக்குள் பல இரகசியமான வழிகளும் திட்டங்களும் வைத்துக் கொண்டுதான் இருந்தார். இதில் அவருக்குக் கவலை இருந்துவந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தகைய மாற்றங்கள் ஏற்பட அவர் சாவகாசம் கொடுக்க வேண்டும் என்றார்; அவசரப்படக்கூடாது என்று கூறிவந்தார். ஆகவே, கொள்கையில் ஒன்றும் அபிப்பிராய பேதம் இல்லை; அக்கொள்கையை நிறைவேற்றி வைப்பதற்கான முறையில் தான் எங்களுக்குள் வேற்றுமை இருந்துவந்தது.

காந்தியாரும் எங்களைப் போல் மதத்தில் சில குறைபாடுகள் கண்டு அவற்றை ஒழிக்க முயன்றார். ஆனால், அவரது முயற்சி பலிக்கவில்லை. அதற்குக் காரணம், அவர் குற்றங்களை முழுவதும் உணராமையும், அவற்றைப் போக்க அவசரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமையுமாகும். சுமார் 23 வருடங்களுக்கு முன்பு எனக்கும் காந்தியாருக்கும் நடந்த சம்பாஷணை ஒன்று சமீபத்தில் 'விடுதலை'ப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அதைப் படித்துப் பார்த்தால் நீங்கள் அறிவீர்கள்—நான் மேலே கூறிய உண்மையை. இது இப்போதுதான் வெளிவந்ததில்லை; இதற்கு முன்பே இரண்டு மூன்று தடவைகள் காந்தியார் உயிருடன் இருந்தபோதே 'குடிஅரசி'லும், 'பகுத்தறிவி'லும் வெளிவந்திருப்பதாகும். அவற்றிலிருந்துதான் இதுவும் எடுத்துப் போடப்பட்டிருக்கிறது. அதில் காணலாம்—அவர் எவ்வளவு தூரம் இதில் கவலை கொண்டிருந்தார் என்பதும், எந்த அளவுக்கு எங்கள் கருத்தும் மாறுபட்டிருந்தது என்பதும்.

உங்கள் அனைவருக்கும் தெரியும்—காந்தியார் ஒரு நாத்திகர் அல்லர் என்பது. அவர் கடவுளைப்பற்றிய தமது கருத்தைப் பலமுறை வெளியிட்டிருக்கிறார். சாதாரண மக்கள் அறிந்துகொள்ளக்கூடிய தன்மையில் கடவுளைப்பற்றித் தனது கொள்கை என்ன என்று அவர் கூறியிருப்பது இசைத் தட்டாக எடுக்கப்பட்டு இன்றும் இருக்கிறது. அதில் சுமார் 15 வருடத்திற்குமுன், 'எனக்குக் கடவுள் என்பதாக ஒரு வஸ்து இருக்கிறது என்பதில் நம்பிக்கை இல்லை (I have no belief in personal God)' என்று தெளிவாகக் கூறி இருக்கிறார். அப்படியானால், பின் ஏன் அவர் 'கடவுள்', 'கடவுள்' என்று சாகும் வரை கத்திக்கொண்டிருந்தார் என்று நீங்கள் கேட்கலாம். அவர் சத்தியத்தைத்தான்—உண்மையைத்தான் கடவுள் என்று நம்பி இருக்கிறார் (Truth is God). அந்த சத்தியத்தைத்தான்—அவர், மனிதன் பயப்படத்தக்கதென்றும்—ஜாக்கிரதையாகப் பின்பற்றத்தக்கதென்றும் கூறி வந்தார். சத்தியந்தான் கடவுள்; அன்புதான் கடவுள்; அறிவுதான் கடவுள் என்று அவர் போதித்தார். அப்படிப்பட்ட கடவுளைக் கல்லாக்கி, உருவாக்கி அதை எல்லோரும் நம்பவேண்டுமென்று கூறி, அதை மக்கள் மனத்தில் புகுத்தி அவர்களை மடையர்களாக்கியது, அதன் பேரால் கொள்ளையடித்து வாழும் கூட்டந்தான். இன்று கடவுளைத் தொழுபவர்களில்—பூஜிப்பவர்களில் 100-க்கு 90 பேர் அயோக்கியர்களாக இருக்க—மூட நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கக் காரணம் உருவமுள்ள கடவுளை ஒப்புக்கொண்டிருப்பதுதான். அதனால்தான், மிருகங்களிடையே இல்லாத, பட்சிகளிடையே இல்லாத, மரங்கள், செடி கொடிகள் இவற்றினிடையேகூட இல்லாத சாதி வேற்றுமைத் துவேஷங்கள்



ஆறறிவு பெற்றுள்ள மக்களென்று பெருமையடித்துக் கொள்ளும் நம்மிடம் இருக்கின்றன. கடவுளைப்பற்றிய நம்முடைய கருத்துதான் நம்மைக் கீழான மக்களாக வைத்திருக்கிறதே ஒழிய, புத்திக் குறைவினாலல்ல நாம் கீழ்மக்களாயிருப்பது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உள்ளத்தில் கடவுளைப் புகுத்த வேண்டுமென்றால்—அவரை, சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து நீதிவழங்கும் நீதிபதியைப் போலவோ, மன்னிப்பளிக்கும் மகாராஜாவைப் போலவோ நாம் சித்திரித்துக் கொள்ளக்கூடாது. உள்ளத்தில் கடவுளைச் சித்திரித்துக் கொள்ள வேண்டுமானால் ஒழுக்கமாக நடக்கவேண்டும்; அன்பாக நடக்கவேண்டும்; சத்தியமாக நடக்கவேண்டும். இந்த உயர்குணங்களைக் கடவுள் தன்மையாகச் சித்திரித்துக் கொள்ளவேண்டும் என்பதைத்தான் காந்தியார் கூறிவந்தார். ஆனால், அவ்வப்போதைய நிலைக்கேற்ப வேறு எதை எதையோ புகுத்தி அதைக் குழப்பிவிட்டார் என்று சொல்லலாம்.

கடவுள்தான் சத்தியம் என்றுகூட அவர் கூறவில்லை. 'சத்தியமே கடவுள்' என்றுதான் அவர் கூறினார்; அன்புதான் கடவுள்; அறிவுதான் கடவுள் என்றுதான் அவர் கூறிவந்தார். அப்படித்தான் எந்த மதத் தலைவரும் இதுவரை கூறிவந்திருக்கின்றனர். என்றாலும் அவை ஒன்றுகூடப் பலனுக்கு வரவில்லை. காரணம், கடவுளுக்கு ஒரு உருவமும் அத்துடன் அதற்கு அளவற்ற சக்தியும் கொடுத்து, அதற்கு எந்தப் பாவத்தையும் மன்னித்துவிடும் உரிமையும் அளித்துவிட்டதுதான். பிரார்த்தனை செலுத்திவிட்டால் எந்தக் குற்றத்திற்கும் மன்னிப்புக் கிடைத்துவிடும் என்ற நினைப்பினால்தான், மக்கள் மேலும் மேலும் ஒழுங்கின்றி நடந்துகொள்ள ஆரம்பித்துவிட்டனர்.

எப்படி இலஞ்சம்வாங்கும் நீதிபதியும், அதற்கேற்ற போலீஸ் அதிகாரிகளும் நாட்டில் இருப்பார்களானால் அட்டூழியங்கள் அதிகரிக்குமோ அதேபோல்—கடவுள் மன்னித்து விடுவார், அவருக்கு விருப்பமான பிரார்த்தனையைச் செலுத்திவிட்டால்—என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படவும், முதலில் ஒரு குற்றமும்செய்ய அஞ்சியவன் பிறகு நாளடைவில் பயமின்றிப் பல குற்றங்களைச் செய்ய முற்பட்டுவிடுகிறான். தான் ஒரு தவறுசெய்தால் அது தன்னையே பாதிக்கும் என்பதில் நம்பிக்கையற்று, அனைவரும், தான் வாழ்வது தான்முக்கியமென்றும்—அதற்கு எதையும் செய்துவிட்டுப் பிறகு வேண்டுமானால் பாவ மன்னிப்புப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கருதி, எந்த அக்கிரமத்தையும் துணிந்துசெய்ய முற்பட்டு விட்டனர்.

ஆரம்பத்தில் அறியாமல் தப்பு செய்துவிட்டதாகக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறான். அடுத்த தடவை அவசரத்தில் தவறு செய்துவிட்டதாகக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறான். பிறகு பழக்கத்தால் மூன்றாவது தவறு, நான்காவது தவறு செய்கிறான். இது வழக்கமாகி விடுகிறபோது மன்னிப்பே தேவையற்றுப் போய்விடுகிறது. இப்படி மனித சமுதாயமே மதத்தின் பேரால் தவறுதலாக நடத்தி வரப்பட்டது. இதனால் தான் மிருக சாதிகள், பட்சி சாதிகள் இவற்றினிடம் இல்லாத வித்தியாச விரோத பாவங்களும், வஞ்சக துவேஷ குரோத மனப்பான்மைகளும் நம்மிடையே நிறைந்திருக்கின்றன. இவை ஏன் மக்களிடம் இருக்க வேண்டும்? இவற்றைப் போக்காத—இக் கவைக்குப் பயன்படாத கடவுளை ஏன் நாம் வணங்க வேண்டும்? மனிதனை யோக்கியனாக நடத்த முடியாத கடவுளும், வேத புராணங்களும் நமக்கேன்? காசு வாங்கிக்கொண்டு மன்னிப்புக் கொடுத்து விட்டு, மேலும் மேலும் நம்மை அக்கிரமம் செய்யத் தூண்டும் கடவுள் ஏன் நமக்கிருக்க வேண்டும்? பாடுபடும் பாட்டாளி மக்களேன் கீழ்சாதி? பாடுபடாத சோம்பேறிப் பார்ப்பான் ஏன் மேல் சாதி? மேல் சாதிக்காரன் சுகவாழ்வுக்கு ஏன் கீழ் சாதிக்காரன் உழைக்கவேண்டும்? இந்நிலை இனி மாறித்தான் ஆகவேண்டும்.

உயர்வு-தாழ்வு கற்பிக்க இடமில்லாத—ஏமாற்றதலுக்கும், வஞ்சகத்திற்கும் இடமில்லாத மாதிரியில் ஒரு புது அமைப்பு ஏற்படவேண்டும். மனித சமுதாய வாழ்க்கை

படிப்பகம்

www.padippakam.com



நிலையில் அவர்களுடைய திட்டங்களில்—அவர்களுடைய எண்ணங்களில் ஒரு மாற்றம் ஏற்படுதல் அவசியம். அதற்கான என் கருத்தைப் பல முக்கியஸ்தர்களுக்கும் தெரிவித்திருக் கிறேன். இன்றுள்ள குறைபாடுகள் நீங்கவேண்டும்; மதம் அடியோடு திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று தெளிவாகக் கூறியிருக்கிறேன். இத் தகைய சீர்திருத்தங்களால் தம் பெருமையும் தம் உயர்வும் தம் வரும்படியும் இல்லாமற் போய்விடுமே என்று நினைக்கும் சுயநலக் கும்பல்தான் இவைகளை எதிர்க்குமே அல்லாது, வேறு எந்த அறிவாளியும் இவைகளை மறுத்துக் கூறமாட்டான். இந்த முக்கியஸ்தர்களுக்கு எனது யோசனையைக் கவனிக்க நேரமிருக்குமோ, இல்லையோ என்றாலும் இவர்கள் யாரும் இன்றில்லையானாலும் இன்னும் கொஞ்ச காலத்திலாவது இந்தக் கருத்துக்கு வந்துதான் ஆகவேண்டும். ஏதோ உயிர் வாழ்கிறோம் என்று வாழ்ந்துவிட்டால் மட்டும் போதியதாக ஆகிவிடாது. வாழ்வில் சக்தி இருக்க வேண்டும்; திருப்தி இருக்க வேண்டும். சதாகாலமும் கவலையோடும் குழப்பத்தோடும் வாழ்வது ஒருபோதும் வாழ்வாகிவிடாது. அப்படி வாழ அல்ல—நாம் ஆறறிவு பெற்றிருப்பது. திராவிடர் கழகத்தின் வேண்டுதல் இதுதான்.

திராவிடர் கழகம் கலகத்திற்கோ, கொள்ளைக்கோ, பலாத்காரத்திற்கோ இருந்துவர வில்லை. அதுவும் திராவிடர் கழகம் எனது கைக்கு வந்தது முதற்கொண்டு, அதில் சேர்ந்து நான் தொண்டாற்றிவந்த நாள் முதற்கொண்டு இந்த நாள் வரைக்கும்—அதை எந்தவிதமான பலாத்காரத்திற்கோ பழிவாங்குவதற்கோ உபயோகப்படுத்தியவன் அல்லன்; அத்தகைய செயலுக்கு அனுமதி கொடுத்தவனுமல்லன். திராவிடர் கழகத்தில் பலாத்காரத் திற்கு இடமில்லை. பலாத்கார உணர்ச்சி வேண்டுமென்று கருதிய சிலரையும்கூட திராவிடர் கழகத்தைவிட்டு நீக்கித் தண்டித்திருக்கிறோம், பலாத்காரத்திற்காக மட்டுமல்ல— நடத்தைக் குறைவுக்காகவும், ஒழுக்கக் குறைவுக்காகவும்கூடப் பலரைக் கழகத்தைவிட்டு வெளியேற்றி இருக்கிறோம். கழகத்தின் தலைவன் என்கிற முறையில் அதை மக்களின் அன்பிற்கும், நல்லெண்ணத்திற்கும் பாத்திரமான ஸ்தாபனமாக்கக் கவலையோடு நான் அதை நடத்திவருகிறேன்.

எங்கள் கழகத்தவர் பிறரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டபோதும், மதுரையில் எங்கள் கொட்டகைகளுக்கு நெருப்பு வைத்து போலீஸ் பந்தோபஸ்தில் கொளுத்தப்பட்ட போதும், சேலத்தில் எங்கள் ஊர்வலத்தின்மீது போலீஸார் முன்னிலையிலேயே கல்லும், சோடாப் புட்டியும் வீசப்பட்டபோதும், அண்ணாமலை நகரில் எங்கள் கழக மாணவர்கள் போலீஸ் பாதுகாவலிலேயே அறை அறையாகப் புகுந்து அடிக்கப்பட்டபோதுங்கூட தற்காப்புக்காக என்றுகூட எங்கள் கழகத்தவர் எதிர்த் தாக்குதல் செய்ததில்லை. அத் தகைய பேச்சுக்கே இடமில்லாத முறையில்தான் எங்கள் கழகத்தவர் இன்றுவரை நடந்து வந்திருக் கிறார்கள். இன்றும் நேற்றும் அது அடக்கத்தில்தான் இருந்து வந்திருக்கிறது; இனியும் அப்படித்தான் இருந்துவரும். எனக்கு வரும் 'தபாலை'ப் பார்த்தால் தெரியும்—எங்கள் கழகத் தோழர்கள் எவ்வளவு கவலையோடு, ஜாக்கிரதையோடு, அமைதியாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று. எங்காவது கலவரம் ஏதாவது ஏற்படுமானால் உடனே தபால் வரும், எனக்குக் கழகத் தோழர்களிடமிருந்து. 'நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை. பத்திரிகையில் பார்த்துவிட்டு எங்கள்மீது வீணாகக் கோபித்துக்கொள்ளப் போகிறீர்கள். வேண்டுமானால் தயவுசெய்து வந்து நேரில் விசாரித்துக்கொள்ளுங்கள். நாங்கள் உங்கள் உத்தரவுப்படி எப்போதும்போல் அமைதியாகத்தான் நடந்துவருகிறோம்' என்று. அம் மாதிரி ஜாக்கிரதையாக நாங்கள் நடந்துகொண்டு வருவதால்தான் எங்கள் கழகம் இன்றுவரை உயிர்வாழ்ந்து வர முடிகிறது.

எங்கள் கழகம் அரசாங்கத்திற்கு விரோதி; மதத்திற்கு விரோதி; கடவுளுக்கு விரோதி; கம்யூனிஸ்டுகளுக்கு விரோதி; சமதர்மவாதிகளுக்கு விரோதி. எங்களுக்குள் ளாகவே எங்கள் கழகத்திற்கு எத்தனையோ விரோதிகள். சுருங்கச் சொன்னால், சுயநலமிகள் கூட்டம் அத்தனை பேருக்கும் எங்கள் கழகம் விரோதி. அத்தனை பேர்



எங்களை எதிரிகளாய்ப் பாவித்துவந்தும், ஒரு துறையில்கூட—கொள்கையைப் பொறுத்த வரையில் நாங்கள் யாருக்கும் பின்வாங்கிவிடவில்லை; யாருக்கும் விட்டுக் கொடுத்துவிட வில்லை. அப்படியிருந்தும், கழகத்தின்மீது நாளுக்கு நாள் மக்களுக்கு ஒரு பற்றுதலும், மரியாதையும் ஏற்பட்டு வருவது கண்கூடு. நாளுக்கு நாள் எங்கள் கொள்கைக்கு ஆதரவு பெருகி வருகிறது. இப்படிப்பட்ட எதிர் நீச்சல் வேலை புரியும் எமது கழகத்திற்கு எப்படி மக்களிடையே செல்வாக்கு ஏற்பட்டது; ஏற்பட்டு வருகிறது என்று நீங்கள் கேட்கக்கூடும். எங்கள் கழகம் யாரையும் விரோதிகள் என்று நினைப்பதில்லை. காரணம்—இன்று நமக்கு எதிர்ப்பாயுள்ளவர்கள் அனைவரும் நம்மவர்கள் என்பதை நாங்கள் நன்றாய் உணர்ந் திருக்கிறோம்.

[சன்னாநல்லூரில், 19-2-1943-ல் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1948]

## 15. மதத்தால் பயன் என்ன?

'மதமே மக்களுடைய நாகரிக வாழ்க்கையை வெளிப்படுத்தும் கருவி. மதமே மக்களைச் சிறந்த வாழ்க்கையில் வாழச்செய்வது. மதமே மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப் பது. மதமே மக்கட் சமூகத்தை ஒழுங்குபடுத்தி, ஒரு கட்டுதிட்டத்தில் அடங்கி நடக்கும்படி செய்கின்றது. மதம் இன்றேல் மக்கள் வாழ்க்கை மிருக வாழ்க்கையாகிவிடும். ஒருவரும் கட்டுக்குள் அடங்க மாட்டார்கள்; நன்மை தீமைக்குப் பயப்படமாட்டார்கள். மனிதனை மனிதன் அடித்துச் சாப்பிடக்கூடியதான அலங்கோல நிலை தாண்டவமாடும். அதனால் மனித சமூகத்தின் வளர்ச்சியை–கட்டுப்பாட்டை–ஒழுக்கத்தை–முன்னேற்றத்தைக் கருது பவர்கள் மதத்தைப் பரவச் செய்யவேண்டியது அவசியமாகும்' என்று, உண்மையில்— மதத்தைக்கொண்டு பாமர மக்களை அடிமைப்படுத்தி வயிறு பிழைக்க எண்ணும் போலிப் புரோகிதக் கூட்டத்தார் கூறுகின்றனர். இக்கூற்று எவ்வளவு தூரம் உண்மையென்பதைச் சிறிது ஆராய்வோம்.

மனித சமூகத்தில் குற்றங்கள் நிகழ்வதற்குக் காரணங்கள் என்ன வென்பதை ஆராய்ந்தால், மதம் மனித சமூகத்தைக் காப்பாற்றிவருகின்றது என்பதன் உண்மை நன்கு வெளியாகும்.

திருட்டு என்பது எல்லா நாட்டினராலும், எல்லாச் சமூகத்தாராலும் இப்பொழுது குற்றமாகக் கருதப்படுகிறது. ஆனால், திருட்டுக்குக் காரணம் என்ன என்று கண்டு, அக் காரணத்தை அழித்தால் திருட்டு நிகழாமல் இருக்க முடியும் அல்லவா? 'மற்றவரைப்போல் தானும் வாழவேண்டும்' என்பதே பொதுவான மனித உணர்ச்சியாகும். மற்றவன் அனுபவிக்கும் சுகத்தைப்போல் தானும் சுகமனுபவிக்க வேண்டும் என்றே ஒவ்வொரு மனிதனும் நினைக்கின்றான்.

'தன்னைக் காட்டிலும் கீழ்நிலையில் இருந்து துன்புறுபவர்களைக் கண்டு, தனது நிலையும் இன்பமும் உயர்ந்தவை என மகிழ்ச்சியடையவேண்டும்' என்று நீதி நூல்களும் மதக் கொள்கைகளும் கூறுகின்றனவாயினும், அதை அனுசரிப்பார் அறிவுடையார் கூட்டத்தில் ஒருவரும் இருக்கமுடியாது என்பது திண்ணம்.

ஏனெனில், இதை நம்பி எந்த அறிவுடையாரும் 'போதும்' என்ற திருப்தியுடன் சும்மாயிருப்பதையோ, தமது முயற்சியை இன்னும் விரிவுபடுத்தாமலிருப்பதையோ நாம் பார்ப்பதில்லை. ஆனால், அக்கொள்கை சிந்தனா சக்தியற்ற பாமர மக்களை முன்னேற விடாமல் அடக்கிவைத்து, அவர்களுடைய உழைப்பின் பயனை அறிவுடைய கூட்டம் நோகாமல் அடைவதற்கு மாத்திரம் ஓரளவு—ஏன் முழுவதும் உபயோகமாகிறது என்று சொல்லிவிடலாம்.

அறிவுபடைத்த கூட்டமே, சுக வாழ்க்கை மோகத்தால் எந்தவிதமான பொய் பித்தலாட்டங்களைச் செய்தாவது பொருள் சேர்த்து வாழவேண்டும் என்று நினைக்கின்ற

படிப்பகம்

www.padippakam.com



போது, அம் மாதிரியே அறிவுடைய மக்களில் பெரும்பாலானவர்கள் வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம், அரசியல், பொது ஊழியம் ஆகிய எல்லாக் காரியங்களிலும் சுயநலத்தை முதன்மையாக வைத்து அவைகளை நடத்திப் பொருள் சம்பாதித்து வரும் போது—சாதாரண நிலைமையில் உள்ள சோற்றுக்கும் வழி இல்லாத தரித்திரர்கள் என்ன செய்யமுடியும்? தங்கள் வயிற்றுப் பசியைத் தணித்துக்கொள்வதற்கு வேறு வழியில்லாத போது திருடவேண்டும், அதாவது பிறர் பொருளை அவர்கள் அறியாமல் கவர்ந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குத் தோன்றுவது இயல்புதானே! இந்த இடத்தில் அவர்களுக்கு வயிற்று உணவுக்கு வழியில்லாத வகையில் மதம் எவ்வாறு அவர்கள் குற்றத்தைத் தடுக்கமுடியும் என்பதைச் சிந்தியுங்கள்!

இதுபோலவே, பொய், கொலை, சூது முதலான கெட்ட காரியங்கள் என்று கருதப் படுபவைகள் பலவும் நடைபெறுவதற்குக் காரணம், மேற்போக்காகப் பார்ப்போர் வேறு பல காரணங்களைக் கூறினும்—வறுமையே அதாவது உணவுக்கு—சுக வாழ்வுக்கு வழி யில்லாமையே முதற் காரணம் என்பதை யாரும் மறந்துவிடுதல் கூடாது. இன்று குற்றங்கள் செய்து, அக் குற்றங்கள் உண்மையென மெய்ப்பிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை பெறுவோரின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், அவர்களில் ஆயிரத்துக்குத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பதின்மர் வறிய நிலைமையில் வாழும் மூன்றாந்தர வகுப்பைச் சேர்ந்தவர்களே என்பதை அறியலாம். இப்படிப்பட்ட மூன்றாம்தர வகுப்பினர் களுக்கு மதம் எந்த வகையிலும் உதவிசெய்வதாகக் கூறமுடியாது.

மக்கள் சமூகத்தில் உயர்தர வகுப்பினராகக் கருதப்படுகின்ற பணக்கார வகுப்பினர் செய்யுங் குற்றங்கள் சட்டத்தில் அகப்படாதவை. சட்டத்திற்குக் கட்டுப்பட்ட குற்றங்களை அவர்கள் மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ செய்தாலும் அவற்றினின்றும் தப்பித்துக் கொள்வதற்குப் பல வசதிகள் இருக்கின்றன. மனிதனுடைய உடலையும் உயிரையும் வைத்துவிட்டு இரத்தத்தை மாத்திரம் உறிஞ்சுவதுபோல, ஏழை மக்களின் உழைப்பையும், அதன் பயனையும் கொண்டு அவர்களை நடமாடும் பிணங்களாகத் திரியச் செய்யும் பணக்காரர்களின் செயல் சட்ட சம்பந்தமானதாகவும், மத சம்பந்தமானதாகவும் கருதும்படி செய்யப்பட்டிருக்கிறது. 'வேலைக்குத் தகுந்த கூலி' என்ற கருத்துக்கொண்ட 'கர்ம பலன்' என்ற சொல்லை முன்பிறப்பில் அனுபவிப்பது என்ற பொருளில் மதவாதிகள் அமைத்துக்கொண்டதால் வந்த ஆபத்து இது. இதனாலேயே பணக்கார வகுப்பினர் நோகாமல் உலக இன்பங்களையெல்லாம் ஆண்டு அனுபவிக்கும் வாழ்வைப் பெற்றிருக் கின்றனர்.

இனி நடுத்தர வகுப்பினரோ, முதல்தர வகுப்பினரின் ஆதிக்கத்துக்கு அடங்கி நின்று தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்பவர்களாக இருக்கிறார்கள். தாங்களும் முதல் தர வகுப்பினராக—அதாவது முதலாளிகளாக ஆகவேண்டுமென்ற ஆசையினால் அவர்கள் மூன்றாந்தர வகுப்பினரை அடக்கிவைப்பதற்கும், காட்டிக்கொடுப்பதற்கும், அவர்களுடைய உழைப்பைக் கொள்ளைகொள்வதற்கும் முதல்தர வகுப்பினரின் கையாட்களாக இருக் கின்றனர். இவர்கள் தங்கள் நிலையிலிருந்து சுலபத்தில் மாறாதவர்களாக இருப்பதற்குக் காரணம், மதமும் மதக்கோட்பாடுகளும் என்பதில் ஐயமில்லை. பெரும்பாலும் நடுத்தர வகுப்பினராலேயே மதங்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்று கூறிவிடலாம். இந்த நடுத்தர வகுப்பினரே எந்த நாட்டிலும் மூன்றாந்தர வகுப்பினரின் எழுச்சிக்குத் தடைக் கல்லாக இருக்கின்றவர்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஆகவே, முதல்தர வகுப்பினரும், இரண்டாந்தர வகுப்பினரும் தங்கள் சுயநலத்திற் காகப் போற்றிப் பாதுகாத்துவரும் மதங்களால் மூன்றாந்தர வகுப்பினர் துன்புறுத்தப் படுகின்றார்கள் என்பது பகுத்தறிவாளர்களின் கொள்கையாகும். இது ஆராய்ந்து பார்ப் போருக்கு உண்மையென்று தோன்றாமலும் போகாது.



இந்த நிலைமையில் வறிய நிலையில் வாழும் சமூகத்தில் எப்படிக் குற்றங்கள் நிகழாமல் எதிர்பார்க்கமுடியும்? மதம் ஒன்றுதான் மனித சமூகத்தை முன்னேற்றக்கூடியது என்று சொல்லக்கூடியது குருட்டுவாதம். அது எப்படி உண்மையாக இருக்கமுடியும்? எந்த மதம் மனித சமூகத்தின் வறுமையைப் போக்க உதவிசெய்கிறது? பெரும்பாலான சமூகத்தின் உழைப்பை ஒரு சிறிய கூட்டத்தின் கையில் ஒப்படைப்பதற்காக மாத்திரம் மதம் உதவி செய்துகொண்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

கிறிஸ்தவர்கள் மதத்தின் பெயரால் செலவழிக்கும் பொருளில் ஓரளவு மக்களுடைய கல்விக்கும், வைத்திய உதவிக்கும் செலவழித்து வருவதை நாம் பார்க்கின்றோம். ஆனால், இந்துக்கள் என்று சொல்லுகின்றவர்கள் தங்கள் மதத்தின் பெயரால் செலவிடுவதில் ஒரு காசுகூட ஏழைகளுக்குப் பயன்படுவதில்லை; நாட்டின் நன்மைக்கும் உபயோகப்படுவ தில்லை என்பது உண்மையாகும்.

ஆதலால், மக்களின் பசித் துன்பத்தைப் போக்க உதவி செய்யாதவரையில் உலகில் எந்த மதம் இருந்துதான் என்ன பயன் என்று கேட்கின்றோம். இப்படிப்பட்ட உலக நன்மைக்கு எள்ளளவும் உதவிசெய்யாத மதங்களைக் கட்டிக்கொண்டு அழுவதில் ஏன் மக்கள் இன்னும் தங்கள் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்க வேண்டும்? இதுவரையிலும் மதங்களைக் கட்டிக்கொண்டு அழுதது போதும்; இனியாவது அவைகளைத் தகர்த்தெறிய முன்வருவது நன்றல்லவா? 'கஞ்சி', கஞ்சி! என்று பரிதபிக்கும் பரிதாபத்துக்குரிய மக்களின் துயரைக் களைந்து, அவர்களின் சந்தோஷ ஆரவாரத்தைக் கண்டு உள்ளங் களிக்க மனங்கொண்டு ஒன்றுகூடி உழைப்பது அறிவாளர் கடமை அல்லவா?

மக்கள் 'கஞ்சி', கஞ்சி! என்று கதறி மடியும்போது கோயில் கட்டுவதும், கல்லின் தலையில் அரும்பண்டங்களைக் கொட்டி வீணாக்குவதும், உற்சவம் நடத்துவதும், மதப் பிரதிநிதிகளைப் பல்லக்கில் வைத்துப் பிணத்தைச் சுமப்பதுபோல் சுமந்து திரிவதும் அறிவுடைய கூட்டம் செய்யக்கூடிய காரியங்களா?

['குடிஅரசு'-தலையங்கம்—15-10-1949]

## 16. ஒழுக்கக் கேட்டுக்குக் காரணம்

இன்று நம் நாட்டில் பெரும் ஒழுக்கக்கேடு நிலவிவருகிறது. இனியும் வளரும்போல் தெரிகிறதேயொழிய குறைகிற வழி காணப்படவில்லை.

இதன் காரணம் நமது மதம் என்னும் இந்து (ஆரிய) மதந்தான்.

உலகத்தில் இந்துமதத்தில் மத, வேத, சாஸ்திர, புராண, இதிகாச ஆதாரங்களில், மதக் கடவுள்களிடத்தில், மத சம்பந்தமான கற்புக்கரசிகள் முதலிய பெண்களிடத்தில் காணும்படியான பொய், பித்தலாட்டம், ஏமாற்றம், விபச்சாரம், பலாத்காரம் ஆகிய காரியங்கள், நடப்புகள் வேறு மதத்தில்—மத ஆதாரங்களில் காணப்படுவதில்லை.

ஒழுக்கக்கேடான, முட்டாள்தன்மான காரியங்களை எல்லாம்கூட மதம் என்பதன் பெயரால் நாம் பாராட்டுகிறோம்; பண்டிகையாகக் கொண்டாடுகிறோம்; விரதமாக அனுஷ்டிக்கிறோம்; புண்ணிய சரித்திரங்களாகக் கொள்கிறோம்; நடிப்பு, நாடகம் சினிமா சங்கீதம், ஓவியம், இலக்கியம் ஆகிய துறைகளில் கையாண்டு ரசிக்கிறோம். இவற்றை வெறுப்பதைக்கூட வெறுக்கிறோம்! 'கடவுள், மதம் போய்விட்டதே! ஒரு வகுப்பாரைத் தூஷிக்கிறோமே!' என்று கூப்பாடு போடுகிறோம். இந்த நிலையிலுள்ள மக்கள் எப்படி ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்கமுடியும்?

மனிதனை மனிதன், 'ஒழுக்கமுடையவனாக இருக்க வேண்டும்' என்று சொல்லு வதற்கு, மனிதத் தன்மை—அல்லது மத, சமுதாய அனுபவங்கள், ஆதாரங்கள் முதலிய வைகளைக் கொண்டாவது சொல்லவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



நமது மனிதத் தன்மை, மனிதனை மனிதன் ஏமாற்றுவதே! அதாவது, மேல்சாதி–கீழ்சாதி, மோட்சம்–நரகம்–சடங்கு முதலியவையாகும். நமது அனுபவ ஆதாரங்கள் என்று சொல்லப்பட்டவைகளோ, ஆண்–ஆண் புணர்ச்சி, மனித–மிருகப் புணர்ச்சி, முறைகேடான, உரிமைக்குக் கேடான புணர்ச்சி ஆகிய இவைகளைக் கண்டு, கேட்டு, படித்து, ரசித்து உழல்பவருக்கு எப்படி ஒழுக்கம் ஏற்பட முடியும்? அதிலும், எவ்விதமான அயோக்கிய, ஒழுக்கமற்ற தன்மைக்கும் மிகமிக எளிதான பிராயச்சித்தமும் இருந்து விட்டால், எப்படி மனிதனுக்கு ஒழுக்கத்தில் கவலையோ, பயமோ, ஒழுக்கமற்ற தன்மையில் வெறுப்போ இருக்கமுடியும்? அதிலும் நம் நாட்டுச் சாதி அமைப்பானது 'கீழ்ச் சாதியை' மடையனாகவும், மானமற்றவனாகவும் ஆக்கிவிடுகிறது. மேல் சாதியைப் பச்சை அயோக்கியனாகவும், கல் நெஞ்சனாகவும், ஏமாற்றித் தீர வேண்டியவனாகவும் ஆக்கி விடுகிறது. ஒரு முஸ்லிமிடமோ, ஒரு கிறிஸ்தவனிடமோ இருக்கின்ற 'மனஇளக்கம்'—மனிதனை மனிதனாக மதிக்குந் தன்மை, இன அன்பு, உதவி—இந்து என்பவனிடம் இல்லை. அதிலும் ஆரியன் என்பவனிடம் அவன் மதக்காரனுக்குக் காட்டுவதுகூட இல்லவே இல்லை. பழிவாங்க நினைக்கிறான். அதிலும் ஒரு மனிதனை மற்றொரு மனிதன் கீழ்ப் பிறவியாகக் கருதவேண்டும் என்றும், ஒரு பிறவியை மற்றொரு பிறவி ஏமாற்றலாம் என்றும், ஒரு பிறவியின் உழைப்பை, மற்றொரு பிறவி உழைக்காமல் ஏமாற்றி, வஞ்சித்துப் பிழைப்பது தர்மம் என்றும் கருதி நடப்பதனால் ஒழுக்கம் எப்படி இருக்கமுடியும்? குறைந்த அளவாவது இத் தன்மைகளை மக்கள் வெறுக்காமலும், வெறுப்பவர்களுக்கு ஆதரவு அளிக்காவிட்டாலும், தடை செய்யாமலாவது இருக்காமலும்; தடை செய்தாலும் அதை 'ஒரு மாபெரும் பாதகச் செயல்' என்று சொல்லாமலாவது, எண்ணாமலாவது இருக்க வேண்டாமா?

மனிதனை மனிதன், 'ஒழுக்கமாக நடக்கவேண்டும்' என்று சொல்வதற்கு அரசாங்கம் தண்டனையிடுவது தவிர, ஆதாரம் இல்லை. அரசாங்கம் இடும் தண்டனையும் இலஞ்சம், சிபாரிசு, வரும்படி—ஆகியவைகளுக்கு அடிமை. பிறகு ஒழுக்கம் எங்கிருந்து குதிக்கும்?

['விடுதலை'—கட்டுரை—3-8-1956]

மதம் என்று ஒன்று இருந்தால் அதில் ஒழுக்கம் இருக்கும். நம் நாட்டில் இருக்கின்ற இந்த இந்து மதத்தில் என்ன ஒழுக்கம் இருக்கிறது? என்ன நாணயம் இருக்கிறது? மகா பாரதத்தையும் இராமாயணத்தையும் ஏன் ஆதரிக்கிறார்கள்? திருடுவதும் விபச்சாரம் செய்வதும் கலை என்று சொல்வதுபோல், பார்ப்பனர் செய்கின்ற அயோக்கியத்தனத்திற்கும் கலை என்று பெயர். அந்தக் கலைகள் முழுவதும் இந்த இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் இருக்கின்றன. இந்த இரண்டிலும் எந்த இடத்திலாவது ஒழுக்கம், நாணயம் என்பது சிறிதளவாவது இருக்கிறதா? இராமாயணப் பாத்திரங்களின் யோக்கியதை என்ன? இராமாயணத்தில் இராமனுக்கும் இலட்சுமணனுக்கும் மான் ஒரு இராட்சதன் என்று நன்றாகத் தெரியும். பின் ஏன் சீதையைத் தனியே விட்டுவிட்டுப் போகிறான்? என்று பார்த்தால், இப்படித் தனியே விட்டுவிட்டுப் போனால்தான் இராவணன் வந்து சீதையைத் தூக்கிக்கொண்டு போவான் என்பதாலேதான். அப்படித்தான் இராவணன் சீதையை அணைத்துத் தூக்கிப்போனானே, என்ன ஆச்சு? இராமாயணத்தில் இப்படி! பாரதத்தில் என்ன வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார்கள்! எப்படி, யார் நடந்துகொண்டாலும் தங்கள் காரியம் மட்டும் நடந்துவிட வேண்டும். இந்தக் கதையை நம் முட்டான்கள் போய் காலட்சேபத்தில் உட்கார்ந்து கேட்டிருந்துவிட்டு வருகிறார்களே! முட்டான்களாக இல்லா விட்டால் இந்தக் கதையைச் சினிமாவில் காட்டுவானா? இவர்கள் போய்ப் பார்ப்பார்களா? ஏதோ இரண்டணா கள்ளைக் குடித்துவிட்டு வீட்டில் விழுந்துகிடந்தால் ஒழுக்கமில்லையாம்! சிறுபிள்ளையில் இருந்தே சினிமா பார்த்துக் கெடுவது ஒழுக்கமாம்!

[சென்னையில், 5-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 8-8-1956]



## 17. மதம் வேண்டுமா?

மதமானது இன்று உலகில் மனித சமுதாயத்தின் வாழ்வைத் துக்க மயமாக்கி, ஜீவ ராசிகளில் மனிதனுக்கென்றுள்ள பகுத்தறிவை அடிமையாக்கி, ஒற்றுமையைக் குலைத்து, மனிதனுக்கு மனிதன் வெவ்வேறு இனம் என்று எண்ணும்படி செய்துவருகின்றது.

தேசிய சிங்கங்களான அலி சகோதரர்கள் ஒரு காலத்தில், 'நாங்கள் முதலில் முகமதியர்கள், பிறகுதான் இந்தியர்கள்'—அதாவது, முதலாவது மதம், பிறகுதான் தேசம் என்றும்; உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி, 'நானே இந்துமதத்தின் உருவம்; நான் மூச்சுவிடுவதும் வாங்குவதும் இந்துமதத்திற்காகவே; நான் உண்பதும் உயிர் வாழ்வதும் இந்துமதத்திற்காகவே; மதத்தைக் காப்பாற்றவே நான் சுயராஜ்யம் கேட்கிறேன்—அதாவது, இந்துமதந்தான் எனக்கு முதலும் கடைசியும்' என்றும்; பழைய காங்கிரஸ்வாதி மாசற்ற தேசாபிமானி, ஒப்பற்ற தியாகி என்று சொல்லப்பட்ட பண்டித மதன் மோகன மாளவியா—'எனது மதத்தையும் சாதியையும் காப்பதே எனது முதல் வேலை. வருணாசிரமத்தைக் காப்பாற்றத்தான் நான் தேசியவாதி' என்றும் சொல்லும்படி செய்துவிட்டது.

பெருத்த தேசாபிமானிகள் தேசத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்கள் என்று சொல்லும்படியான இவர்களே அவரவர்களின் மதத் தத்துவத்தை உள் எண்ணமாக வைத்து, அவற்றின் கொள்கைகளைக் காப்பதற்காகவே அவர்களது தேசாபிமானமும் உயிர்வாழ்வும் இருந்துவருகின்றன என்றால் மற்ற சாதாரணமான பாமர மக்களின் யோக்கியதையைப்பற்றி விளக்கவேண்டுமா?

வட்டமேசை மகாநாடு உடைந்துபோனதும்; அரசியல் சீர்திருத்தத்தில் இந்திய மக்கள் ஒன்றுபடாமல் போனதும்; இந்து-முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் நம்பாமல் தனித் தொகுதி வேண்டுவதற்கும்; காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஒன்றுக்கொன்று வேறு பட்டிருப்பதற்கும்; தீண்டப்படாதார் தனித்தொகுதி கேட்பதற்கும்; மக்களை மக்கள் தீண்டப்படாதவராய்—கீழ்மேல் சாதியராய்க் கருதப்பட்டுவருவதற்கும் மதமே காரணமாய் இருந்துவருகின்றது. மற்றும் மனித சமூக வாழ்க்கைக்கு ஏற்ற சீர்திருத்தங்கள் முன்னேற்றங்கள் என்பவைகளில் பெரும்பான்மையான மக்களால் அவசியமென்றும், அறிவிற்கு ஏற்றது என்றும் கருதப்படும் அனேக விஷயங்களைப் பற்றிச் சட்டங்கள் செய்யவோ; சட்டங்கள் செய்தாலும் அமுலுக்குக் கொண்டுவரவோ தடையாய் இருந்து வருவதற்கும் மதங்களே காரணமாகச் சொல்லப்படுகின்றதா, இல்லையா என்று கேட்கிறேன். ஆகவே, மனித வாழ்க்கைக்கு மதங்கள் இதைவிட வேறு என்ன கொடுமைகள் செய்ய வேண்டும்?

இப்படிப்பட்ட இந்து மதம் ஒன்று இரண்டு என்று இல்லாமல் நூற்றுக்கணக்காய் இருந்துகொண்டு, பலவிதக் கடவுள்களை உண்டாக்கிப் பலவித மேல் உலகங்களையும், மோட்ச—நரகங்களையும் கற்பித்து, அவரவர்கள் கடவுள்களுக்குத் தனிப்பட்ட குணங்களும், அவரவர்கள் மேலுலகங்களுக்குத் தனிப்பட்ட பூகோளங்களும், அவரவர்கள் மோட்ச நரகங்களுக்குத் தனிப்பட்ட வருணனைகளும் கற்பித்து மக்களை மயக்கி வருவதோடு—வாழ்க்கை, ஒழுக்கம், நடத்தை என்பவைகளும் அவரவர் மதத்துக்கு ஒவ்வொரு விதமாய்க் கற்பிக்கப் பட்டு நடந்துவருவதும் அறிஞர்கள் அறியாததா?

இப்படிப்பட்ட மதத்தை மக்களுக்குள் பிரச்சாரம் செய்வதற்காக ஒரு சில நபர்கள் 'பாதிரி' என்றும், 'முல்லா' என்றும், 'தம்பிரான்' என்றும், 'சங்கராச்சாரி' என்றும், 'ஜீயர்' என்றும், 'சாமியார்' என்றும் பெயர்கள் வைத்துக்கொண்டு, உலகச் செல்வத்தில் தனிப் பெரும் பாகத்தை வீணாக்கி, மக்களுக்குப் போதையூட்டி வருவதானது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்பது சுய அறிவோடு பரிசுத்தத் தன்மையிலிருந்து யோசிப்பவர்களுக்கு விளங்கும்.

படிப்பகம்

www.padippakam.com



1. மதம் என்பது இவ்வுலக மானிட வாழ்வுக்கு ஏற்ற சட்டதிட்டங்கள் என்று சொல்லப்படுமானாலும், 2. மதம் என்பது இவ்வுலகில் மக்கள் கூடி வாழ்வதற்கு ஏற்ற ஒழுங்கு முறைகளைக் கொண்டது என்று சொல்லப்படுமானாலும், 3. மதம் என்பது மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களைக் காட்டுவது என்று சொல்லப்படுமானாலும் அவைகளைப் பற்றியெல்லாம் நாம் அதிகக் கவலை கொண்டு மதங்களை எதிர்க்க ஆசைப்படுவதில்லை. அப்படிக்கெல்லாம் அல்லாமல், 1. மதமானது மனிதனுடைய ஜட சம்பந்தத்தை விட்டு விட்டு, ஜடம் நீங்கின ஆத்மாவைப் பொறுத்த தென்றும், 2. மதமானது இவ்வுலக வாழ்வை, இன்ப துன்பத்தைத் துச்சமாக மதித்துவிட்டு மேலுலக வாழ்வை முக்கியமாகப் பொறுத்ததென்றும், 3. மதமானது கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவதைப் பொறுத்ததென்றும், 4. மதமானது பஞ்சேந்திரியங்களுக்கு விளங்கக்கூடிய வஸ்து என்ற தத்துவத்தை—அசரீரியை அடிப் படையாகக் கொண்டது என்றும், 5. மதமானது உலகபோக போக்கியம் இன்ப துன்பம் ஆகியவைகளை அலட்சியம் செய்து, கடவுளின் பாதாரவிந்தத்தை அடையவும், மோட்ச சாம்ராஜ்யத்தைப் பெறவும் ஏற்ற மார்க்க மென்றும் சொல்லப்படும் மதங்களையும்—மதத் தத்துவங்களையும் பற்றியே நாம் பேசுகின்றோம். என்றாலும், முதலில் கூறப்பட்ட அதாவது :

மதம் மானிட வாழ்க்கைக்கு ஏற்ற சட்ட திட்டங்களுக்கோ, மனிதனின் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஏற்ற ஒழுங்கு முறைக்கோ ஏற்பட்டது என்கின்ற விஷயங்களிலும்கூட நமது ஆட்சேபணையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதாவது, இன்று மதங்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவைகளில் மேற்கண்ட குணங்கள் இருக்கின்றனவா, இல்லையா என்பது ஒரு புறம் இருந்தாலும், இந்தக் காரியங்களுக்காக மக்கள் செலவில் நடைபெறும் அரசாங்க நிர்வாகமும், சிவில்–கிரிமினல் சட்ட திட்டங்களும், அவைகளை நிறைவேற்ற நியாயஸ்தலம், தண்டனை, சன்மானம் ஆகிய முறைகளும் இருந்துவரும்போது, இவைகள் அல்லாத ஒரு சாதனம், அதாவது மதம் என்கின்ற ஒரு விஷயம் எதற்காக இருக்க வேண்டும்?

அரசாங்கம், சட்டதிட்டம், நீதி நிர்வாகம், தண்டனை, கண்டனை இல்லாமல் மனித சமூகம் எப்படிப்பட்ட மதத்தினாலாவது கூடி ஒழுங்கு முறையுடன் வாழமுடியுமா என்பதை யோசித்தால், மதம் மேற்கண்ட காரியங்களுக்கு உண்மையாய்ப் பயன்படுகின்றதா என்பது விளங்கும். இன்று எந்தத் தேசத்திலும், எந்த மதத்திலும், எந்தச் சமூகத்திலும் உள்ள மக்களின் சொத்தும் சரீரமும் காப்பாற்றப்படுவது மதத்தினாலா, அரசாங்கச் சட்ட திட்டங்களினாலா என்பதை யோசித்துப் பார்த்தாலே, மதத்தின் காப்பும்நடப்பும் எப்படிப் பட்டது என்பது சுலபத்தில் புரிந்துவிடும்.

'மதம், எல்லா ஜீவராசிகளிடமும் அன்பாய்—காருண்யத்துடன் இருக்கவேண்டும் என்று கற்பிக்கின்றது' என்று மதக்காரர்கள் சொல்லக்கூடும். ஆனால் மனிதன், மனிதனைத் தவிர மற்ற எல்லா ஜீவராசிகளையும்பற்றிக் கவலைப்படாமல் மற்ற ஜீவராசி களைக் கொல்லவும், தின்னவும், இம்சிக்கவும், தனக்கு இடையூறு என்று கருதினால் அழிக்கவும் செய்கிறான். ஆனால், மனிதனை மாத்திரம் அந்தப்படி செய்வதில்லை. இதற்குக் காரணம்—மதமா, அல்லது அரசாங்க சட்டதிட்டமா என்று கேட்கிறோம். மனிதனை அந்தப்படி எங்கோ ஒன்று இரண்டு சமயம் செய்வதாக வைத்துக்கொண்டாலும் அதற்காகத் தண்டனையை அடைகின்றான்.

ஆதலால், மதம் எங்கே பொதுவான ஒழுங்கு முறையை, ஒழுக்கத்தைக் காப்பாற்று கின்றது என்று கேட்கின்றேன்.

மதம் மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களைக் காட்டுவது என்று சொல்லப்படுவதும் மிகுதியும் பொருத்தமற்றதே என்று கருதுகிறேன்.



மனிதனுக்கும் மற்ற ஜீவ வர்க்கத்திற்கும் உள்ள வித்தியாசம் எந்தத் துறையினாலும் அறிய வேண்டுமானால்—பிராணிவர்க்கத் தத்துவம்கொண்ட நூல்களைப் பார்த்தால், தாராளமாக மதச் சம்பந்தம் இல்லாமலே அவைகளைத் தெரிந்துகொள்ளலாம். அப்படி யில்லாமல், மதத்தின் மூலம் அறிந்த ஜீவ தத்துவங்கள் இன்று சிரிப்புக்கு இடமாகத்தான் இருந்துவருகின்றன.

மதம்—மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் கற்பிக்கின்றது; மிருகங்களை, பறவைகளை, பூச்சிகளை, புல்பூண்டுகளை மனிதனைவிட உயர்வாய் மதிக்கின்றது; ஒரு மிருகத்தை உயர்வாய், ஒரு மிருகத்தைத் தாழ்வாய்க் கற்பிக்கின்றது. இந்த விஷயங் களுக்குப் பிராணி சாஸ்திரமே முக்கியமானதும், சரியானதுமே தவிர, மதத்தின் மூலம் அறியக்கூடியதாய் இருக்கும் தன்மை மிகவும் மோசமானதும், மூர்க்கத் தனமானதும், முட்டாள்தனமானதும் என்றே சொல்லலாம்.

மேற்கண்ட 1, 2, 3 விஷயங்களைப் பற்றியாவது மதத்தை ஒப்புக்கொள்ளச் செய்யலாமா என்று பார்த்தாலுங்கூட, அதுவும் அறிவிற்குப் பொருத்தமற்றதும், மூர்க்கத் தனம் கொண்டதுமான கருத்துக்களால் பாதகமடைகின்றது. அதாவது, எந்த மதக்காரனும் தன்தன் மதத்தைப் பற்றிய ஆதாரங்களும் கொள்கைகளுமே எந்தத் தேசத்திற்கும், எந்தக் காலத்திற்கும் பொருத்தமானவை என்றும்; அவைகளில் ஒரு முற்றுப்புள்ளி, குறிப்புக் கோடுகூட மாறக்கூடாது என்றும்; தன்தன் மதத்திற்குத் தலைவன் என்பவன் எவனோ அவனே உலக மதத் தலைவனாக இருக்கவேண்டுமென்றும் செய்யப்படும் பிடிவாதங்களும், முரட்டுத்தனங்களும்—எந்த மதத்தையும் மனித சமூக வாழ்வுக்கு வழிகாட்டி என்று ஒப்புக் கொள்ள முடியாமல் செய்கின்றது.

ஆகவே, மனித சமூகக் கூட்டு வாழ்விற்கும், ஒழுக்க முறைக்கும் மதங்களைவிட, அரசாங்கத் திட்டங்களையே ஆதாரமாகக் கொள்ளுவதுதான் அறிவுடைமை என்று கூறுவோம். அதுதான் இன்று உலகமெங்கும் அனுபவத்தில் இருக்கின்றது என்றும் சொல்லுவோம். ஏனெனில், அவைகளில் காலத்துக்கும், தேசத்துக்கும், ஒத்தபடி—அனுபவத்திற்கும் அறிவுக்கும் ஏற்றபடி மாற்றிக்கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் உரிமை இருக்கின்றது. மதங்களில் அவை காணவே முடியாது. அப்படி ஏதாவது முயற்சித்தாலும் கலகம், கொள்ளை, கொலை முதலியவைகளை உண்டாக்கி விடுகின்றது.

எனவே இந்த விஷயங்களே, –அதாவது இந்த உலகப் பிரத்தியேக மனித வாழ்வு சம்பந்தப்பட்ட இந்த விஷயங்களே– மதத்தின் பயனாக இப்படியிருந்தால்—இனி 'மேலுலக'—அதாவது, மனிதனுடைய கண்ணுக்கும், மனத்துக்கும் பஞ்சேந்திரியங் களுக்கும் எட்டாத விஷயங்களைப்பற்றி மத போதனைகள் என்ன பயனைக் கொடுக்கக் கூடியவையாக இருக்கும், எப்படிப்பட்டவையாக இருக்கும் என்பதைப்பற்றி நான் விளக்க வேண்டுமா என்று கேட்கிறேன்.

மற்றபடி 'மதம், ஜடசம்பந்தத்தை விட்டுவிட்டு ஆத்மாவைப் பொறுத்தது' என்று சொல்லப்படுவதைப்பற்றியோ என்றால்—இந்தக் காரணத்துக்காகவே மதங்களையெல்லாம் அடியோடு ஒழிக்க வேண்டும் என்று சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஆத்மா என்பதை இதுவரை ஒரு மனிதனும் அர்த்தத்தோடு உறுதிப்படுத்தவே இல்லை.

4+3=10 என்று சொல்லிவிட்டு, அந்தப் பத்தைப் பற்றியே விவகாரித்துக் கொண்டிருப்பதுபோலவே—அதாவது, '10-யை யார் யாருக்கு எப்படி எப்படிப் பங்கிடுவது? எங்கு எங்கு வைப்பது? என்று வேண்டுமானால் பேசு; அதற்கு மேல் 4+3 எப்படி 10 என்று மாத்திரம் கேட்கக்கூடாது' என்கின்ற நிலையில்தான் இன்று ஆத்மா தத்துவம் இருந்து வருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



அதாவது ஆத்மா, என்றால் என்ன? அது எப்படிச் சரீரம் பெற்றது? அதற்கு எப்படிக் கருமம் ஒட்டிற்று? அதன் நடத்தைக்குக் காரணம் என்ன? அது எப்படி மோட்சம் போகிறது? அது எப்படி மறுபடியும் சரீரம் பெற்று எழுகிறது? மனித ஆத்மா, மிருக ஆத்மா, பறவை ஆத்மா, புழு பூச்சி ஆத்மா ஆகியவைகளில் உள்ள வித்தியாசம் என்ன? ஆகிய இவைகளைப்பற்றியெல்லாம் பேசலாம், விவரிக்கலாம், 'வால்யூம் வால்யூமாக' புத்தகம் எழுதலாம்! ஆனால், ஆத்மா என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? அப்படி ஒன்று இருக்க விஞ்ஞான சாஸ்திரம் (Science) அல்லது ஜீவ தத்துவ சாஸ்திரம் இடம் கொடுக்கின்றதா? என்பதைப்பற்றி யாரும் எவ்விதக் கேள்வியும் கேட்கக்கூடாது. ஆத்மா இருப்பதாக அவர் சொன்னார்—கிறிஸ்து சொன்னார்; கிருஷ்ணன் சொன்னார்; புத்தர் சொன்னார்......என்று சொல்லிவிடுவதும், ஆத்மாவை நம்பாதவன் கடவுளை நம்பாத நாஸ்திகனைவிடக் கேடானவன், மடையன், மட்டி என்றும்; 'கடவுளை நம்பாவிட்டாலும் ஆத்மாவை நம்பித்தான் ஆகவேண்டும்' என்றும் சொல்லிவிடுகிறார்களே ஒழிய, காரண காரியங்களுடன் அறிவு அனுபவங்களுடன் பேசுகின்றவர்களே காணக் கிடைப்பதில்லை.

இது ஒருபுறமிருந்தாலும், ரூபம் இல்லாத வஸ்து, தத்துவமில்லாத—மனத்துக்குப் புரியாத விஷயத்துக்காக இவ்வுலக பிரத்தியேக வாழ்க்கையையும், அடையும் இன்பதுன்பங்களையும்பற்றிய கவலை கூடாதென்றோ, அல்லது இக் கவலையைவிட 'ஆத்மா' கவலையே பிரதானமென்றோ, பெரியதென்றோ—சொல்லப்படுமானால், அப்படிப்பட்ட மதத்துக்கு உலகில் மனித ஜீவன்கள் இடம் கொடுக்கலாமா என்றுதான் கேட்கின்றேன்.

நிற்க; 'மதமானது மேல் உலக வாழ்விற்கு ஆதாரமானது' என்று சொல்லப்படுமானால், முதலாவதாக மேல் உலகம் என்பது என்ன என்பதைப்பற்றி இதுவரை யாராவது எங்காவது விளக்கியிருக்கிறார்களா என்று கேட்கிறேன்.

பூகோள சாஸ்திர நிபுணர்கள் பூமியின் கீழ் மனத்திற்கு எட்டக்கூடிய அளவு வரையும்; பூமியின் மேல் ஆகாய மார்க்கமாக மனத்திற்கு எட்டக்கூடிய அளவு வரையிலும், ஆராய்ந்து பார்த்து—இலட்சக்கணக்கான மைல்—(ஏன்) கோடிக்கணக்கான மைல் தூரம் வரையில் ஆராய்ச்சி செய்து மேல், கீழ் நிலைமையை விளக்கியிருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு நிபுணத்துவர்கள் என்கின்ற நிலைமையிலும், அனேக வருட காலம் அதற்காகப் பாடுபட்டு உழைத்து, அனேக கருவிகளின் உதவி கொண்டு கண்டுபிடித்துச் சொன்ன பிரத்தியட்ச அனுபவ—மெய்ப்பிக்கக் கூடிய உண்மைகளே ஒழிய, 'ஞான திருஷ்டி'—அதாவது ஒரு மனிதனுடைய புத்திக்குத் திடீரென்று தோன்றிய விஷயம் என்று சொல்லப்படுவதுபோல் சொல்லப்பட்டதல்ல. அன்றியும், பள்ளிக்கூடங்களில், அல்லது பூகோளப் புத்தகங்களில் முறையே கற்பிக்கப்படாததும் காணப்படாததுமான விஷயங்களுமல்ல.

அப்படியிருக்கும்போது, இந்தப் பிரத்தியட்ச உலக விஷயத்தை விட்டுவிட்டு, மேல் உலக விஷயத்தைப்பற்றிப் பேசுவதென்றால், அதில் அடங்கியிருக்கும் பேதைத் தன்மைக்கு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இதுவரையில் மனிதன் மேல் உலகத்தை எப்படிக் கண்டு பிடித்தான், அதன் விஸ்தீரணம், தன்மை என்ன என்பவைகளைப் பற்றிய உண்மை எதுவும் சொல்லப்படாமல், 'மேல் உலகத்தை நம்பு; பிறகு எப்படி வேண்டுமானாலும்—அதாவது, மோட்சம் எப்படிப் பட்டது? நரகம் எப்படிப்பட்டது? தண்டனை எப்படிப்பட்டது? அது யாருக்குச் சொந்தம்? பரமபிதாவா—அல்லாவா? வைகுண்ட நாதரா? கைலாச வாசரா? யார் அதற்கு எஜமான்? என்பதைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் வாதம் செய்' என்று கற்பிக்கப்பட்டதாய் இருப்பதைத் தவிர, வேறு என்ன உண்மை அல்லது அறிவுடைமை மேல் உலக விஷயத்தில் இருக்கிறது என்று கேட்கிறேன்.



அதுபோலவே, 'மதம் கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது' என்று சொல்லப்படும் வார்த்தையும் அர்த்தமற்றதாகவே இருக்கிறது.

கடவுளைப்பற்றி—அதாவது, கடவுள் என்றால் என்ன என்பதைப்பற்றி, இதுவரை ஆஸ்திகனாவது, அல்லது கடவுள் தன்மைகள் பெற்ற பெரியார்களாவது விளக்கினவர்களே இல்லை.

கடவுள் என்றால், கண்ணுக்கும் மனத்துக்கும் எட்டாதது; ரூபமும் குணமும் இல்லாதது; சர்வ சக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ளது என்று சொல்லிவிடுவதும்—அதைச் சொல்லுகின்றவர்களே அந்தக் கருத்தை நம்பாமல் இருப்பதும், பிறகு அதற்கு முரணாகப் பேசுவதுமான காரியங்களே இதுவரை கடவுளைப்பற்றிய வாதங்களின் முடிவாய் இருந்து வருகின்றன.

மனத்துக்கு உட்படாத கடவுளைப்பற்றி மனிதன் எப்படி, எந்த இந்திரியத்தினால் உணர்ந்தான் என்று கேட்டால்—பதிலேயில்லை. குணமும், ரூபமும் இல்லாத வஸ்துவுக்கு செய்கை எது என்று கேட்டால்—அதற்கும் பதிலேயில்லை. சர்வ சக்தி, சர்வ வியாபகம் உள்ள கடவுள் செயலில் நன்மை—தீமை, இன்பம்—துன்பம், மேல்—கீழ், சுகம்—துக்கம், மோட்சம்—நரகம் எப்படி உண்டாயின என்று கேட்டால்—அதற்கும் பதில் இல்லை. 'அதைப்பற்றி யெல்லாம் யாரும் கேட்கக்கூடாது. கடவுளை நம்பித்தான் ஆகவேண்டும். நம்பாதவன் நாத்திகன்; நம்பாவிட்டால் நரகம், அரச தண்டனை, ஆத்திகர்கள் தண்டனை கிடைக்கும்' என்று மிரட்டுவதும் உருட்டுவதும் தவிர கடவுளைப்பற்றி வேறு விளக்கமே இல்லை.

சர்வ சக்தியுள்ள, சர்வ வியாபகமுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான்—ஏன் கடவுளை அறியமுடியவில்லை? ஏன் கடவுள் இல்லையென்று சொல்லுகிறேன்? என்று ஒருவன் கேட்டால்—'அது உன்னுடைய அகம்பாவம்; உன்னுடைய மடமை; உன்னுடைய பாவச் செய்கை' என்று சொல்லி, கடவுளைவிட அவனைப் பெரியவனாக மதித்து இகழ்வதாயிருக்கின்றதே தவிர, வேறு சமாதானமில்லை.

இப்படிப்பட்ட தத்துவங்களைக் கொண்ட மதங்களைப்பற்றி மக்கள் வேற்றுமை உணர்ச்சி கொண்டு, ஒருவரை ஒருவர் வெறுத்து, பலாத்காரச் செய்கையில் ஈடுபட்டு மக்களைத் துன்புறுத்துவதென்றால், மதத்தை ஒழிக்காமல் இருக்க யாருக்குத்தான் மனம் வரும் என்று கேட்கிறேன்.

மதத்தின் பயனாக நமது வாழ்வில் எவ்வளவு துன்பங்கள், தொல்லைகள் அடைய நேரிடுகின்றது என்பதை உணர்ந்தால்—மேலும் மேலும் மதங்களிடம் வெறுப்புத் தோன்ற இடமேற்படுகிறதேயொழிய, சிறிதாவது அதைச் சகிக்க இடமே இல்லாமல் இருக்கின்றது.

கிறிஸ்துவ மதத்தைப்பற்றி எழுதினோம் என்பதற்காக 'குடி அரசு' பத்திரிகை நிறுத்தப்பட்டுப் போயிற்று. முகமதிய மதத்தைப்பற்றி எழுதியதற்காக 'புரட்சி' பத்திரிகை நிறுத்தப்பட்டுப்போயிற்று.

இந்து மதத்தைப்பற்றி எழுதுகிறோம் என்பதற்காகத் தினந்தோறும், நிமிடந் தோறும் அடைந்து வரும் தொல்லைகளும் நசுங்குச் சேஷ்டை உபத்திரவங்களும் கணக்கு வழக்கில் அடங்காது. பார்ப்பனர்களை உத்தியோகஸ்தர்களாகக் கொண்ட போலீஸ் இலாக்கா, போஸ்டல் இலாக்கா, இரயில்வே இலாக்கா, நீதி இலாக்கா, நிர்வாகம் மற்றும் அனேக துறைகளில் கீழேயிருந்து அய்க்கோர்ட் நிர்வாக சபை வரையில்—ஆங்காங்குள்ள மதக் காப்பாளர்களான பார்ப்பனர்களால் நாம் அடைந்து வரும் கஷ்டம், சித்திரவதைக் கொப்பாக இருந்துவருகின்றது.

நாம் மாத்திரமல்லாமல் நம்மைப்போல் கஷ்டப்படும் மக்கள் கோடிக்கணக்காக எல்லா மதங்களிலும் இருந்துவருகின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

படிப்பகம்

www.padippakam.com



மதமானது பணக்காரத் தன்மையைப் பிரதாபித்துக்கொண்டும், அதை ஆதரித்துக் கொண்டும் இருந்துவருகின்ற சாதனமாய் இருப்பதால் அதற்கு இவ்வளவு ஆதிக்கம் இருந்துவருவதில் அதிசயமில்லை. ஆதலாலேயேதான், மதங்கள் ஒழிக்கப்படுவதாலேயே மனித சமூகத்துக்கு ஒற்றுமையும், சாந்தியும் ஏற்படும் என்று கருதுவதோடு, பணக்காரத் தன்மையின் கொடுமையும் ஒழியுமென்று கருதுகிறோம்.

ஒரு கிறிஸ்தவன் முகமது நபியைப்பற்றி ஏதோ எழுதிவிட்டால் முகமதியர்களுக்கு ஆத்திரம் வருகின்றதும்; ஒரு முகமதியன் கிறிஸ்துவைப்பற்றி எழுதிவிட்டால் கிறிஸ்த வனுக்கு ஆத்திரம் வருவதும்; இதுபோலவே இந்துகளுக்கும், கிறிஸ்துவ, முகமதியர் களுக்கும் நேருவதும், அதற்காகக் கொலை, கொள்ளை கொடுமைகள் நடப்பதுமான காரியங்கள்—அதுவும் இன்று நேற்றல்லாமல் ஆயிரக்கணக்கான வருஷங்களாக; அதுவும் இந்தியாவில் மாத்திரமல்லாமல் அய்ரோப்பா, அரேபியா, ஆப்பிரிக்கா முதலிய எல்லா நாடுகளிலும் நடந்துவருகின்றன என்றால் மதம் மக்களுக்குக் கூட்டு வாழ்க்கையையும், ஒற்றுமையையும், சகிப்புத் தன்மையையும், வாழ்க்கை ஒழுங்குகளையும், ஒழுக்கங்களையும் போதித்து வருகின்றதா என்று கேட்கிறேன்.

இந்து மதமும் இஸ்லாம் மதமும் ஒழுக்கத்தைப்பற்றிப் போதிப்பதில் ஒன்றுக் கொன்று—தானே சிறந்த ஒழுக்கத்தையுடையது என்று—போட்டி போடுகின்றன. ஒழுக்க யீனங்களில் எல்லாம் மிகக் கேடானதாக,—குற்றங்களில் எல்லாம் மிக இழிவான குற்ற மாகவும் கருதப்படும் குற்றமாகிய பெண்களைப் பலாத்காரம் செய்து கற்பழித்தல், மான பங்கம் செய்தல் என்னும் குற்ற விஷயத்தில் இரு மதஸ்தர்களும் வங்காள மாகாணத்தில் எப்படி நடந்து இருக்கிறார்கள் என்பதைக் காட்ட, 'மாடர்ன் ரிவியூ' (Modern Review) பத்திரிகையில் வெளியாகியுள்ள ஒரு புள்ளி விவரத்தை இங்குக் குறிப்பிட்டுவிட்டு இதை முடிக்கிறேன்.

'இஸ்லாம் மூர்க்கர்களால் பலாத்காரமாகக் கற்பழிக்கப்பட்ட பெண்கள் விவரம்'

| வருஷம் | இந்துப் பெண்கள் | முஸ்லிம் பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1926 | 113 | 481 | 594 |
| 1927 | 122 | 576 | 698 |
| 1928 | 104 | 460 | 564 |
| 1929 | 114 | 676 | 790 |
| 1930 | 104 | 531 | 635 |
| 1931 | 125 | 573 | 698 |

'இந்து மூர்க்கர்களால் பலாத்காரமாகக் கற்பழிக்கப்பட்ட பெண்கள் விவரம்'

| வருஷம் | இந்துப் பெண்கள் | முஸ்லிம் பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1926 | 194 | 9 | 203 |
| 1927 | 201 | 3 | 204 |
| 1928 | 198 | 10 | 208 |
| 1929 | 236 | 8 | 244 |
| 1930 | 234 | 6 | 240 |
| 1931 | 197 | 3 | 200 |

மதம் ஒழுக்கத்தை, 'கூட்டு வாழ்க்கை ஒழுங்கு முறையை, மனிதர்களிடத்தில் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய தன்மையை எங்கே, எப்படிக் கற்பித்து இருக்கின்றது என்று மத பக்தர்களைக் கேட்கிறேன்.

['பகுத்தறிவு'-தலையங்கம்—9-9-1934]



மக்கள்வாழ்கை நாகரிகமாய் நடத்தப்பட மதம் வேண்டும் என்பது மதக்காரர் களுடைய வாதமாகும்.

இப்படிப்பட்ட வாதமும், தங்கள் தங்கள் மதந்தான் மனித சமூக நாகரிக வாழ்க்கைக்கு ஏற்றது என்பதும் ஒவ்வொரு மதக்காரர்களின் பிடிவாதமுமாகும்.

மதம் இல்லாமல் உலகில் எவ்வளவோ ஜீவகோடிகளும் பல மக்களும் வாழ்க்கை நடத்தவில்லையா என்று கேட்போமேயானால், அதற்குப் பதில், 'சாதாரண அசேதன வாழ்க்கை வாழலாமே ஒழிய, நாகரிகமானவாழ்க்கை நடத்தமுடியாது' என்றும், அதற்காகத்தான் மதம் இல்லாவிட்டால் மக்கள் நாகரிக வாழ்க்கை நடத்தமுடியாதென்று சொல்லப்படுவதாகவும் சொல்லுவார்கள்.

அதற்காக வேண்டியே மதவாதிகள் மதத்தைப்பற்றிப் பிரச்சாரங்களும், விளம்பரங் களும் செய்துவருகிறார்கள். இப்படிப்பட்ட விளம்பரங்களும் பிரச்சாரங்களும், புராணங் களாலும் படங்களாலும் கதைகளாலும் நடிப்புகளாலும் கோவில்களாலும் மற்றும் பல சாதனங்களாலும் செய்துவருகிறார்கள்.

இவ்வளவோடு நிற்காமல் கடவுள் அற்ற, மதமற்ற உலகத்தில் மக்கள் பல கொடுமை களையும், தீமைகளையும், ஹிம்சைகளையும் அடைவதுபோலவும், அசுர ஆட்சியே நடை பெறுவதாகவும், கட்டுகள் கட்டி மக்களைப் பயப்படுத்துகிறார்கள்.

மேலும், கொள்ளைநோய்களும் துஷ்டதேவதைகளின் கோபத்தின் பலன் என்றும், வால்நட்சத்திரத்தின் வாயில் இருந்து கக்கப்படும் தீப்பொறிகளின் விளைவு என்றும் மக்களை ஒருவித பயத்துக்குள்ளாக்கினார்கள்.

நம் நாட்டு அரசியல் மேதாவிகளும் இப்படித்தான்—அதாவது பூகம்பத்தால் விளையும் கேடுகளும், வெள்ளத்தாலும் நெருப்பாலும் ஏற்படும் கொடுமைகளும், கடவுள் கோபத்தால் ஏற்பட்ட விளைவின் பயன் என்றும் சொல்லி மக்களை மிரட்டுகிறார்கள்.

மனிதர்கள் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கச் சட்டம் என்பதெல்லாம் அந்தந்த சமூகநிலையை அனுசரித்து ஏற்படுத்தப்படவேண்டியதேயல்லாமல், மனிதர்கள் மேல் உலகத்துக்குப் போவதற்குத் தகுந்தபடியும், அங்கு சென்றபின் நடக்கவேண்டிய காரியங் களுக்குத் தக்கபடியும் அமைக்கவேண்டியதில்லை.

மதம் இல்லாவிட்டால் மக்கள் கோவிலுக்குப் போக மாட்டார்களே என்றோ, கோவிலுக்குப் போகாவிட்டால் மக்கள் ஒழுக்கமாக நடந்துகொள்ள மாட்டார்களே என்றோ யாரும் பயப்படவேண்டியதில்லை.

உதாரணமாக வேண்டுமானால், கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டவர்களிட மிருந்தே அவர்களது விகிதாச்சாரத்திற்குக் குறைவில்லாத அளவு குற்றங்கள் குறைந்து கொண்டு வந்து இருப்பதை அனேக ஆதாரங்கள், புள்ளி விவரங்களோடு காட்டலாம்.

மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று நாம் சொல்ல ஆரம்பித்தாலேயே ஏன் சொல்லுகின்றோம், அதற்காக என்ன அவசியத்தைக் காட்டுகின்றோம் என்பதைச் சிந்திக் காமலேயே, சிந்திக்காவிட்டாலும் நமக்குக் காதுகூட கொடுக்காமலேயே, ஏதோ ஒரு பெரிய அபாயம் வந்து விட்டதுபோல மிக்க கவலையாகச் சிந்தனைசெய்யத் தொடங்கிவிடு கின்றார்கள்.

இதற்குக் காரணம் எல்லாம் அவர்கள் ஒழுக்கம் கெட்டுவிடுமே என்பதுகூட இல்லாமல்—நரகம் சித்தித்துவிடுமே என்பதும், மேல் லோக வாழ்க்கை பெருத்த மோசமான தாகிவிடும் என்பதுமே ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com



ஏனெனில், குருக்கள்மார் மதத்தை மக்களுக்குள் புகுத்துவதற்காகவும், மக்கள் மனத்தில் என்றென்றும் மதம் நிலைத்து இருப்பதற்காகவும் நரகத்தைப்பற்றி அவ்வளவு அதிகமாக வருணித்து, அவ்வளவு அதிகமான பயத்துக்கு ஆளாக்கி வைத்திருக்கிறார்கள்.

பொதுவாகவே, கடவுள் உதவி வேண்டுமானால் மதம் வேண்டும் என்பதும், மதம் வேண்டுமானால் குருக்கள் வேண்டும் என்பதுமே மதத்தின் அவசியத்துக்குக் காரணமாக்கி, அதன்மூலம் குருக்கள்மார் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி இருக்கிறார்கள்.

சாதாரணமாகப் பார்த்தாலும், மனித சுபாவமானதும், மனித சக்தியானதும் மதத்தைக்கொண்டேதான் வெளிப்படக்கூடியதென்றோ, நிலைநிற்கக்கூடியதென்றோ சொல்லுவது சுத்தத் தப்பான அபிப்பிராயமாகும்.

கோவிலையும் மதத்தையும் மிகப் பிரமாதமாய்க் கருதாதவர்களும், அதில் கவலையில்லாதவர்களும் அவற்றில் அனுதாபமோ, நம்பிக்கையோ இல்லாதவர்களுமான மக்களுக்குள்ளாகவே எத்தனையோ பேர் தங்கள் தங்கள் சுபாவங்களையும், சக்திகளையும் உணர்ந்துகொண்டு எவ்வளவோ மேலான நல்ல தன்மையுடனும், அதிமேதாவித்தனமான அறிவுடனும் உடல், பொருள், ஆவி ஆகியவற்றை மக்கள் நல்வாழ்க்கைக்குப் பயன் படுத்தியவர்களாகவும் இருக்கிறார்கள்.

மதத்தினாலும், பக்தியினாலுந்தான் மக்கள் தங்கள் சக்தியை உணரலாம் என்பதும், நன்மையான காரியங்களைச் செய்யலாமென்பதும், மேலான அறிவைப் பெறலாம் என்பதும் மெத்த பலமற்ற வாதமாகும்.

ஒழுக்கத்துக்காகவும், சமுதாய ஒழுக்கத்துக்காகவும் மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது மிகமிக பலமற்ற வாதமாகும்.

வரப்போகின்ற காலத்தில் மதக்கோட்பாடுகளைப்பற்றிப் பிரமாதப்படுத்துவதும், அதற்காகப் பல காரணங்களையும் கட்டுக்கட்டி மக்களுக்குள் புகுத்துவதும், அவற்றை எல்லாம் நம்பும்படி செய்வதும் இனி முடியாது என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

எப்படித்தான் பாடுபட்டுப் புகுத்தினாலும் உண்மையான நம்பிக்கை ஏற்படுவதற்கு இடமில்லாமல் போனால் அவை எப்படி மதிப்புப் பெறமுடியும்? ஜனங்களைக் கோயிலுக்குப் போகும்படி செய்தல், ஒரு விஷயம்; அவர்களை நரகத்திலோ, அல்லது மற்ற புராதனக் கொள்கைகளிலோ நம்பிக்கைகொள்ளச் செய்வது வேறு விஷயம்.

சிறிது யோசித்தாலும் நரகத்தின் அடிப்படை முழுவதும் பொய்யாகிவிடும். கோயிலுக்குப் போகாததாலேயே நாம் கெட்டுப்போய்விடமாட்டோம். நாம் கோயிலுக்குப் போவது குறைந்துபோய் இருந்தாலும் நாம் நாளுக்குநாள் முன்னேற்றம் அடைந்தே வருகிறோம். நமது காலத்தைப்பற்றி உரிய காலத்தில் சரித்திர சம்பந்தமாகவும், சமுதாய சம்பந்தமாகவும் ஆராய்ச்சி செய்வோமானால் ஏராளமான உண்மைகளும் புள்ளி விவரங்களுமே, 'நாம் முன்னேற்றமடையவில்லையா?' என்ற சந்தேகங்களை அறவே ஒழித்து விடும். தற்காலத்தைவிட முற்காலத்தில் குற்றங்களும், பலாத்காரங்களும், அக்கிரமங்களும் உலகத்தில் அதிகமாகவே இருந்தன. முற்காலத்தவர் நம்மைவிட அதிக சுகஜீவிகளாய் இருந்ததில்லை. அவைகளைப் பற்றி நாம் நிச்சயமான புள்ளி விவரங்களைக் காட்டலாம்.

மதக்காரர்கள், நம்மைப்பற்றி—நாம் மடுவில் மூழ்கி இருக்கின்றோம் என்று கருதுகின்றார்கள். அதாவது, நாம் அநீதியை வளர்க்கிறோம் என்பதாகக் கருதுகின்றார்கள். இதற்கு ஆதாரமான புள்ளி விவரங்கள் ஒன்றும் இல்லை. ஆகவே, இந்த அபிப்பிராயம் அர்த்தமற்றது. பத்திரிகைகளில் தோன்றும் விபச்சார விஷயங்களையும், குற்ற விவரங்களையும் பார்த்து அத்தகைய அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். ஆதிகாலத்தில் இத்தகைய பத்திரிகைகளின் விளம்பர முறைகள் இருந்ததில்லை என்பதை மக்கள் மறந்துவிடுகிறார்கள். ஆயினும், அக் காலத்திலும் விபச்சாரங்களும் குற்றங்களும் இருந்தே வந்திருக்கின்றன.



நவீன உலகம் தனக்கென்று சொந்தமாகச் சட்டங்கள் செய்து கொள்ளவேண்டும். குற்றங்களைப் பற்றியும் பலவந்தத்தைப் பற்றியும் பயப்படவேண்டாம். ஜனங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் மணவாழ்க்கை விஷயமாக ஜன சமூகம் தன் சமுதாய நன்மைகளைப் பாதுகாத்துக்கொள்ளும். சமுதாயத்தைப் பாதித்து யாருக்கும் தீங்கு செய்யாத தனிப்பட்ட நபர்களின் காரியங்களைக் கோவில்கள் அடக்கி ஆள முடியாது. இனி வருங்காலத்தில் அதைப்பற்றிய உண்மையை நாம் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். அது ஒரு பெரிய விஷயம்.

இனி மதத்தை எப்படித் திருத்தினாலும் அதை எப்படிக் கலைத்து அமைத்தாலும், அதை—ஒழிந்து போவதினின்றும் தடுக்கமுடியாது; அதன் கொள்கைகளில் ஒன்றாவது கண்டனத்திற்குட்படாமல் இருக்கமுடியாது; எல்லா மக்களையும் ஒப்புக்கொள்ளும்படி இனிச் செய்யமுடியாது.

சிலர் எல்லா மதக் கோட்பாடுகளையும் விட்டு, ஒழுக்க அபிவிருத்திச் சங்கங்களை மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்கிறார்கள். இது எப்படி ஒரு பெரிய மதமாகிவிடும் என்பதைப் பற்றிச் சுலபமாய்ப் பரீட்சித்து விடலாம். சென்ற நூறு வருடங்களாக உலகில் பல இடங்களில், சிறப்பாக அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும்கூட மதாபிமான வைதீகச் சங்கங்களும் கோவில்களும் இருந்து வந்திருக்கின்றன. அவைகளில் அனேகம் மதக்கோட்பாடுகள் இல்லாமலே இருந்து வருகின்றன. சமீப காலத்திலிருந்து ஒழுக்காபிவிருத்தி சங்கங்களும் இருந்து வருகின்றன. அவைகள் நீதி விஷயங்களின் சம்பந்தம் மட்டும் பெற்று இருக்கின்றன. மேலே கூறப்பட்டவைகளில் ஒன்றும் பொது மனிதர்களால் போற்றப்படுவதில்லை. கோவிலுக்குப் போகாத ஆறுகோடி அமெரிக்கர்களும் மூன்று கோடி பிரிட்டிஷ்காரர்களும் அத்தகைய சபைகளின் கூட்டங்களுக்குப் போவதே கிடையாது.

நம்முடைய காலத்திற்கு 'ஞாயிற்றுக் கிழமை கூட்டம்' தேவையில்லை; அதற்குத் தெய்வ வணக்கமோ அதற்குப் பதிலாக வேறு எதுவுமோ தேவை இல்லை.

நவீன நாகரிகத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கும் நாடுகளின் நிலைமை என்ன? அங்குள்ள மக்களில் மூன்றில் இரண்டு பாகத்தவர் கோவிலுக்குப் போவதில்லை. இவர்களில் வீடுகளில் யாரும் கடவுளை வணங்குகின்றார்கள் என்றும்—யாரும் சொல்லமுடியாது. இந்தத் தேசங்களில் இலட்சக்கணக்கான குருக்கள் ஜனங்களைக் கோயிலுக்குப்போகும்படி நியாயம் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். மனைவிமார்களும், குமாரத்திகளும் தங்கள் தங்கள் ஆடவர்களை அதற்குக் கட்டாயப்படுத்தும்படியும் தூண்டப்படுகிறார்கள். கோவில் பூசை முறைகளைக் கூடியவரையில் கவர்ச்சி உள்ளதாக ஆக்குகிறார்கள். குறிப்பிட்ட கிழமைகளின் நீண்ட பூசை காலத்திற்குப் பதிலாக இனிமையான மாலைப் பூசைகளைக் கிழமைகள்தோறும் நடத்துகிறார்கள். சங்கீதம் அதிகமாகவும், பிரசங்கம் கொஞ்சமாகவும் உள்ள கூட்டங்களை நடத்துகிறார்கள். உற்சாகத்தை உண்டாக்கத் தக்க மதக் கற்பனைகளைப்பற்றிய தலையங்கங்களைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். சமுதாய ஊக்கம் உண்டாகிறது. கோவில் சம்பந்தத்தோடு சமுதாய வாழ்வு அபிவிருத்தி செய்யப்படுகிறது. ஆடல், பாடல், ஆடும் படக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. புதிய மதங்களான கிறிஸ்துவ, விஞ்ஞான, ஒழுக்க அபிவிருத்தி, 'தியாசபி' முதலியவை பழையவைகளோடு போட்டிபோடுகின்றன. முடிவு என்ன? உண்மை விஷயம் என்ன? நவீன நாகரிகத்தில் ஜனத்தொகையில் பாதி அல்லது முக்கால் பாகம் இவைகளையெல்லாம் அசட்டை செய்து கோவிலுக்குப் போக மறுக்கிறது. மதக் கோட்பாடுகள் குறைந்ததற்கு ஏற்பக் குறைந்த ஜனங்களே போகிறார்கள்.

கோவிலுக்குப் போகும்படி ஜனங்களை யாரும் நிர்ப்பந்தம் செய்யவில்லையென்று வைத்துக் கொள்வோம். பத்து வருடங்களுக்குக் குருமார்கள் எல்லோரும் உலகத்தில் தங்கள் வேலையை நிறுத்திவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். முடிவென்ன

படிப்பகம்

www.padippakam.com



வாகும்? நீங்களே யதார்த்தமான பதில் கூறுங்கள்! நான் என் அபிப்பிராயத்தை இங்கு வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால், அப்பொழுது இன்னும் எத்தனை பேர் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிடுவார்களோ என்பதை நினைக்க ஆச்சரியமாய் இருக்கிறது.

மனிதனுக்கு இயற்கையிலேயே மதப் பற்றுக் கிடையாது என்பது வெளிப்படை. நாகரிக மக்களின் தொகையில் பாதிக்கும் குறைந்தவர்களை மதப் பற்று உள்ளவர்களாக வைத்துக்கொள்ள பத்து லட்சத்திற்கு மேற்பட்ட பாதிரிகளின் மிகுந்த முயற்சி தேவையாக இருக்கிறது.

இயற்கை மதப் பற்றைப்பற்றி பேசும் ஆசிரியர்கள் ஒரு தவறு செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பழைய காலத்தையே கவனிக்கிறார்கள்; தற்காலத்தைப்பற்றி அறியாது இருக்கிறார்கள். முன் காலத்தில் ஒரு மதம் போனால் வேறு மதம் உண்டாயிற்று. ஆசியாவில் இருந்ததுபோல, படித்தவர்கள் பல நூற்றாண்டுகளாக மதம் ஒன்றும் இல்லாமலேயே இருந்துவருகிறார்கள். எப்படி இருந்தாலும், நமது காலம் ஒரு புதிய காலமேயாகும். உலக சந்தர்ப்பங்கள் முழுவதும் மாறிவிட்டன.

இருபதாவது நூற்றாண்டில் என்ன நேரிடும் என்று யாரும் கூற முடியாது. மதத்தைப் போற்ற நமது தலைமுறையில் அரசியல் நிர்ப்பந்தத்தையும் உண்டாக்க முடியாது. சென்ற பதினைந்து நூற்றாண்டுகளாக அப்படித்தான் நடந்துவருகிறது. மதப் பற்று மனிதனுக்கு இயற்கையல்ல என்பதைக் கண்டுபிடித்தோம். அனேகர் மதத்தை விட்டுவிட்டார்கள். மதப் புத்தகத்தை யாரும் படிப்பதில்லை. நமது மதப் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் மதக் குறிப்புகள் காணப்படுவதில்லை. மேடைகளில் மதங்கள் கேவலமாய்ப் பேசப்படுகின்றன. அதைக் கேட்டு வேடிக்கை பார்ப்பவர்கள் நகைக் கின்றார்கள். ஆடும் படக் காட்சிகளில் மதத்தை ஒப்புக்குச் சேர்த்து இருக்கிறார்கள். அது கண்டு ஜனங்கள் புன்சிரிப்புக் கொள்கிறார்கள். மதம் மெதுவாக இறந்து கொண்டிருக்கிறது.

அதனால் வாழ்வும் மனமும் கெட்டுப் போகுமா? மதத்தை அலட்சியம் செய்த அனேக இலட்சம் இலண்டன் வாசிகளுடைய மனமும் வாழ்வும் கெட்டுப்போகவில்லையே! இவர்களைப்பற்றி நான் நன்கு அறிவேன். இவர்களுக்கு மதம் கிடையாது. இவர்கள் மதத்தைப்பற்றியும் நினைப்பதில்லை. வாழ்வு கெட்டுப்போகுமென்பதும், அவநம்பிக்கையால் அபாயம் என்பதும் சாதுர்யமான கட்டுக் கதைகளே ஆகும். வாழ்வு நல்லது; அது ருசிகரமானது. இலட்சாதிலட்சம் பேர் அனுபவித்து ஆனந்திக்க முடியும். பக்தி மிகுந்த முற்காலத்தில் அவர்கள் அடைபட்டுக்கிடந்தார்கள்.

மக்களின் விருப்பத்திற்கேற்பக் கலைகள் இருக்கின்றன. அறிஞர்களுக்கு விஞ்ஞானம் இருக்கிறது, இலக்கியம் இருக்கிறது. பெருமை மிக்க தேசமும் கடலும் இருக்கின்றன. நகரத்தில் 1001 வேடிக்கை வினோதங்கள் இருக்கின்றன. மக்கள் வாழ்வு வேகமாய் மாறுதலடைந்து வருகிறது. சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. ஆகவே, மதமின்றி மக்கள் வாழமுடியாது என்று மதப் பிரச்சாரகர்கள் பயப்பட வேண்டியதில்லை.

['குடி அரசு'-கட்டுரை—30-7-1949; 'விடுதலை' 13-8-1972]

## 18. அறிவுள்ள மனிதனுக்கு அடையாளம்

உலகில் மதங்கள் ஏற்பட்டுப் பல ஆயிரக்கணக்கான வருடங்கள் ஆகியிருந்தாலும் மதங்களை ஏற்படுத்தினவர்கள் எல்லாம், அல்லது மதங்களின் மூல புருஷர்கள் எல்லாம் தெய்வீக சக்தி பொருந்தியவர்களாகவும் தெய்வ சம்பந்தமுடையவர்களாகவும் தீர்க்க தரிசன ஞானமுள்ள மகாத்மாக்களாயும் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டும், எல்லா மதக்



கட்டளைகளும் தெய்வங்களாலேயே மூலபுருஷர்கள் மூலம் உலகத்திற்கு இறக்கப்பட்டவை என்று சொல்லப்பட்டும் இருந்தாலும்—சதா சர்வ காலமும் அந்த மதப் பிரச்சாரம் செய்யப்படாவிடில் மதம் ஒழிந்து போய்விடுமே என்கின்ற பயம் எல்லா மதங்களிடமும் இருந்துதான் வருகின்றது. இந்தக் கருத்திலும், காரியத்திலும்—உலகில் இன்ன மதம் உயர்வு, இன்ன மதம் தாழ்வு என்று சொல்லுவதற்கில்லை.

சாதாரணமாக, ஒரு கோடி ரூபாயோ அல்லது இரண்டு கோடி ரூபாயோ கையில் வைத்துக்கொண்டு, ஆயிரம் ஆட்களோ அல்லது இரண்டாயிரம் ஆட்களையோ நியமித்து, 5, 6, மொழிகளில் பத்திரிகைகளையும் வைத்துக்கொண்டு, ஏதோ ஒரு தாழ்த்தப்பட்ட மிருகத்தின் பேரால் ஒரு மதத்தைக் கற்பித்து, அம் மிருகத்துக்குச் சில தெய்வீகத்தன்மைகளைக் கற்பித்து—அது பல 'அற்புதங்கள்' செய்ததாகக் கதைகள் கட்டிவிட்டுப் பிரச்சாரங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டால்—கண்டிப்பாகச் சில வருட காலத்திற்குள் இலட்சக்கணக்கான மக்களை அம் மதத்தைப் பின்பற்றுபவர்களாகச் செய்துவிடலாம். பிறகு அந்த மதத்தை எவனாவது குற்றம் சொல்லுவானேயானால், அவன் தண்டிக்கப்படவோ, திட்டப்படவோ, கொலைசெய்யப்படவோ ஆளாகும்படியும் செய்துவிடலாம்.

மதங்களும் அதுபோலவேதான். தன்னை ஒரு மதக்காரன் என்று காட்டிக் கொள்ள வேண்டுமானால் மதக் குருக்கள் அல்லது மதக் கர்த்தாக்கள் அல்லது மதப் பிரச்சாரக்காரர்கள் என்றும் சொல்லப்படுபவர்கள் என்ன சொல்கின்றார்களோ, எப்படி நடந்தால் மத பக்தி உடையவன் என்று சொல்வார்களோ அந்தப்படி நடக்கத்தான் ஒவ்வொரு மதபக்தனும் ஆசைப்படுகிறான்.

மதம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதென்றும்; 'சயின்ஸு'க்கும் மதத்துக்கும் சம்பந்தம் பார்க்கக் கூடாதென்றும்; பகுத்தறிவு வேறு, மதக் கோட்பாடுகள் வேறு என்றும்; இந்தக் காலம் வேறு, அந்தக் காலம் வேறு என்றும்; பெரியவர்கள் நியமனங்களுக்குக் காரண காரியங்கள் தேடக்கூடாது என்றும்; ரிஷிமூலம், நதிமூலம் பார்க்கக் கூடாது என்றும் எல்லா மதக்காரர்களும் சொல்லிவிடுவதால்—உலகில் எந்த மூடனும் எதையும் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்கின்ற தைரியத்தின்மீதே மத ஆபாசமும் மத அயோக்கியத்தனங்களும் உலகில் நிலைத்துவருகின்றன.

இந்த இலட்சணத்தில் உள்ள மதங்களுக்கு ஆள் பிடிக்கவேண்டும் என்கின்ற ஆர்வத்தின்மீது மதமாற்றப் பிரச்சாரங்களும் நடந்துவருகின்றன என்றால்—இது, 'புழுத்ததின்மீது நாய் விட்டைவிட்டது' என்கின்ற பழமொழிப்படி, மனிதர்களை மேலும் மூடர்களாக்குவதாகவே இருந்துவருகிறது. சாதாரணமாக, இந்திய மக்களில் 100-க்கு 92 பேர்கள் தற்குறிகள்; எழுதப் படிக்கத் தெரியாத மூடர்கள். இவர்களிலும் 100-க்கு 90 பேர்கள் நல்ல ஜீவனத்துக்கு மார்க்கமில்லாமல் வயிற்றுப் பிழைப்புக்கு எதையும் செய்யலாம் என்று கற்பிக்கப்பட்டிருக்கிறவர்கள். இப்படிப்பட்ட இவர்களிடத்தில் எது சொன்னால் ஏலாது? எழுத்து வாசனை அறியாத மூடர்களுக்கு என்ன சொன்னாலும் நம்பும் சக்தி அதிகம். ஆதலால், இப்படிப்பட்ட ஜனங்களிடம் மதப் பிரச்சாரம் செய்து மத மாற்றுதல் வேட்டை ஆடுவது என்பது யாவருக்கும் சுலபமான காரியமாகும்.

இந்திய மக்களின் கல்வியறிவு வாசனை அற்ற தன்மையும், பாமரத் தன்மையும், அடிமைத் தன்மையும், எல்லாம் சேர்ந்து உலகத்தில் வேறு எந்தத் தேசத்திலும் இல்லாத அவ்வளவு மதங்களும், மத வேற்றுமைகளும், மத மாற்றமும் தாண்டவமாடுகின்றன.

இந்தியாவில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பவுத்தர்கள், யூதர்கள், பாரசிகர்கள், சீக்கியர்கள், ஆரிய சமாஜிகள், வைணவர்கள், சைவர்கள், ஸ்மார்த்தர்கள் முதலிய கடவுள் மாறுபாடுள்ளவர்களும்; மதக் கர்த்தாக்கள் மாறுபாடுள்ளவர்களும், மதக்கோட்பாடுகளின் அர்த்த மாறுபாடுள்ளவர்களுமாக எத்தனையோ பிரிவினைகள் இருந்துகொண்டு, வெகுகாலமாகவே மதமாற்றப் பிரச்சாரம் செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், இந்த மதங்களின் மனித வாழ்க்கைத் தத்துவத்தில்—ஏதாவது ஒன்றுக்
கொன்று பிரமாத வித்தியாசங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால் ஒன்றுமே காண
முடியாத நிலையில்தான் இருந்துவருகின்றன.

எல்லா மதத்துக்குமே, ஒரு கடவுள் உண்டு: மேல் லோகமுண்டு; மோட்ச நரக
முண்டு; ஆத்மா உண்டு.

செத்த பிறகு இந்த ஆத்மா அல்லது மனிதன் அவனவன் நன்மை தீமைக்கு ஏற்ற
விதம் மோட்ச–நரகம் அனுபவிப்பான் என்கின்ற கொள்கைகளில் கருத்து வித்தியாசம்
இல்லாமலே இருந்து வருகின்றது.

எல்லா மதங்களிலும்—ஏழைகள், பணக்காரர்கள் இருக்கிறார்கள்; எஜமான்,
கூலியாள் இருக்கிறார்கள்; உற்சவம், பண்டிகை இருக்கின்றன; வணக்கம், தொழுகை,
பிரார்த்தனை, ஜபம், தபம் இருக்கின்றன. எல்லா மதக் கடவுள்களும் தொழுகை, பிரார்த்
தனை, வணக்கம், பூசை ஆகியவைகளுக்குப் பலன்கள் கொடுக்கின்றன.

பிரத்தியட்ச அனுபவத்திலோ எல்லா மதத்திலும் 'அயோக்கியர்கள்', 'யோக்கியர்கள்'
இருந்து வருகிறார்கள்.

எல்லா மதக் கடவுள்களும் கண்களுக்குத் தோன்றாததும், மனத்திற்குப் படாததும்;
ஆதி, அந்தம், ரூபம், குணம், பிறப்பு, இறப்பு முதலியவைகள் இல்லாதவைகளுமாகவே
இருக்கின்றன. எல்லா மதங்களும் கண்களுக்கும் மனத்திற்கும் தோன்றக்கூடிய எந்த
வஸ்துவுக்கும் ஒரு கர்த்தா இருக்கவேண்டும் என்றும், ஆனால் கண்களுக்கும் மனத்திற்கும்
எட்டாத ஒரு வஸ்துவாகிய கடவுளுக்கு ஒரு கர்த்தா இல்லையென்றும்தான் சொல்லுகின்றன.

ஒரு மதமாவது—'என் கடவுள் கண்ணுக்குத் தெரியக்கூடியது என்றோ; என்
வேதமாவது தனது கோட்பாடுகளெல்லாம் மக்கள் எல்லோரும் ஏற்று நடக்கக்கூடியதாய்
இருக்கின்றது, அல்லது நடக்கக்கூடியதாய்ச் செய்ய சக்தி உள்ளதாய் இருக்கிறது என்றோ,
சொல்ல யோக்கியதை உடையதாக இல்லை. எல்லா மதக்காரர்களுக்கும் பசி, தாகம்,
நித்திரை புணர்ச்சி, இன்பம், துன்பம் ஒன்றுபோலவே இருக்கின்றன. எல்லோருடைய
வேதமும், கடவுளாலும் கடவுள் தன்மை உடையவர்களாலும்தான் உண்டாக்கப்பட்டதாய்ச்
சொல்லப்படுகின்றது. எல்லா மதக்காரர்களுக்கும் ஒவ்வொருவித அடையாளம் இருக்
கின்றது. இந்த நிலையில், மதப் பிரச்சாரத்தால் மனிதர்களுக்கு என்ன இலாபம் என்பது
விளங்கவில்லை.

சாதாரணமாக, இந்தியவில் 10 கோடி முஸ்லிம்கள் இருக்கிறார்கள்; 1 கோடி கிறிஸ்த
வர்கள் இருக்கிறார்கள்; சுமார் 10 கோடி வைணவர்கள் இருக்கிறார்கள்; 5 கோடி
சைவர்கள் இருக்கிறார்கள்.

மற்றும் கலப்பு மதம் உள்ளவர்கள், மதக் குறிப்பு இல்லாதவர்கள் ஏராளமாய் இருக்
கிறார்கள் என்று உத்தேசமாகச் சொல்லக்கூடுமானாலும்—இவர்கள் பெரும்பான்மையோர்
சமீப காலங்களில், அதாவது சுமார் 1000, 2000 வருடங்களுக்குள் மதமாற்றமடைந்தவர்கள்
என்று சொல்லலாமானாலும், இவர்களின் வாழ்க்கையில் உயர்வு தாழ்வு என்ன என்பதை
நன்றாய்ப் பார்ப்போமானால், ஒருவித மேன்மையும் எந்த ஒரு தனி மதக்காரருக்கும்
இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அதாவது, அரசியலிலாகட்டும், பொருளியலிலாகட்டும், அறிவியலிலாகட்டும்,
சமுதாய வாழ்க்கையியலிலாகட்டும், ஆண்–பெண் தன்மையிலாகட்டும், எல்லோரும் ஒரு
மாதிரியாகவேதான் இருந்துவருகின்றார்கள்.

ஆகையால், இந்தியாவுக்கோ, அல்லது உலகத்துக்கோ இனி மதம் ஒழிப்புப்
பிரச்சாரம் வேண்டுமா என்பதை ஒவ்வொரு அறிவாளியும் யோசிக்கவேண்டியது முக்கிய
கடமையாகும்.



மதப் பிரச்சாரக் காரியங்களால் சமீப காலத்திற்கு முன்பு உலகிலும், குறிப்பாக
இந்தியாவிலும்—சிறப்பாகத் தென்னிந்தியாவிலும் நடந்த முட்டாள்தனமான, மூர்க்கத்
தனமான பலாத்காரக் கொடுமைச் செயல்களும், கலகங்களும், அடிதடிகளும், குத்து.வெட்டு
களும், கொலைகளும், சித்திரவதைகளும் எவ்வளவு என்பதற்குச் சரித்திரங்கள்,
புராணங்கள், பிரட்தியட்ச அனுபவங்கள் எத்தனையோ மலிந்துகிடக்கின்றன. இவைகளை
யெல்லாம் உத்தேசித்தாவது, இனிவரும் சுயமரியாதை–அறிவியக்க–சமதர்ம உலக
ஆட்சியில் மத விஷயத்தைப்பற்றி ஆதரித்த எவராவது தெருவில் நின்று பேசினாலும்,
தெருவில் புஸ்தகங்கள் வைத்து விற்பனை செய்தாலும், பத்திரிகைகளில் எழுதினாலும்
அவர்களெல்லாம் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்று சட்டம் செய்யப்படு
மானால்—உலக மக்கள் பிரிவினையற்று, குரோதமற்று, மடமையற்றுத் தோளோடு தோள்
புனைந்து தோழர்கள்போல வாழமுடியும் என்பதோடு, மதத் தத்துவங்களின் பலனால்
இன்று உலக மக்கள் அனுபவிக்கும் உயர்வு தாழ்வு நிலை ஒழிந்து, சகல துறைகளிலும்
சமத்துவத்துடன் வாழமுடியும் என்றும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

இந்த அபிப்பிராயமானது மதங்கள் தெய்வத்தினாலும், தெய்வாம்சம் பெற்றவர்
களாலும் உண்டாக்கப்பட்டவை என்கின்ற நம்பிக்கையை உறுதியாயும் உண்மையாயும்
உடையவர்களுக்கு விரோதமாய் இருக்காது என்றும் கருதுகிறோம். ஏனெனில், அப்படிப்
பட்ட மதங்கள், மதப் பிரச்சாரம் இல்லாவிட்டால் மறைந்துபோகும்—அழிந்துபோகும்
என்று மதவாதிகள் (பக்தர்கள்கூட) பயப்படமாட்டார்கள்.

['விடுதலை'–கட்டுரை—9-2-1948]

சாதாரணமாக, திராவிடமக்களின் சமுதாய இழிவுக்கு ஆரிய கலாசாரங்களும், ஆரியக்
கலைகளும், ஆரிய வேத–சாஸ்திர–புராண–இதிகாசங்களுந்தான் காரணம் என்பதை
எந்தத் திராவிடனும் மறுக்கமாட்டான். திராவிடன் எவனாவது மறுத்தாலும் உலகில் வேறு
எந்த மார்க்கக்காரனும் மறுக்கமாட்டான். அப்படிக்கு இருந்தும், ஆரிய கலாசாரத்தைப்
பரப்பும் வேலையில்—ஆரியக் கலாச்சார சாதனங்களான சாஸ்திர–புராண–இதிகாசங்களைப்
பரப்பும் வேலையிலேயே—அதாவது அவைகளைத் தெய்வீகமாக்குவது, அவைகளை
இலக்கியமாக்குவது, அவைகளைக் காலட்சேபம் செய்வது, அவைகளைப் புதுப்பிப்பது,
அவைகளுக்குப் புதுப் புது ஆரியத் தத்துவார்த்தம் கண்டுபிடித்துக் கூறிப் பணம் சம்பா
திப்பது, புலமைப் பெருமை அடைவது, அவற்றை நடத்தையில் பின்பற்றுவது மூலம்
பெருமையும் வாழ்க்கைக்கு நலனையும் பெருக்கிக்கொள்வது முதலாகிய அறிவற்ற,
மானமற்ற காரியங்களைத் திராவிடன் செய்துவந்திருக்கிறான்.

ஒரு இனம் ஈனப் பிறவி என்று சொல்லுவதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு
தேவை இல்லை.

இன்று திராவிடநாட்டில், குறிப்பாகத் தமிழ்மொழி பேசும் திராவிடமக்களுக்குள்
ஆரிய–திராவிட கலாசார, இன உணர்ச்சிப் போராட்டம் இதுவரையில் எங்கும் எப்போதும்
கண்டிராத அளவுக்குக் கிளப்பப்பட்டுவருகிறது. அது அடியோடு வீண்போகாமல் ஒரு
சிறு அளவுக்காவது பயன்பட்டுவருகிறது. அந்தக் கிளர்ச்சியினாலேயே திராவிட சமுதாயத்
தில் உள்ள 'காலிப் பயல்கள்,' 'தாசி வேசிமக்கள்,' 'இழிபிறவி மக்கள்' என்று சொல்லப்
படுகிறவர்கள் முதற்கொண்டு புலவர்கள், செல்வர்கள், அதிகாரிகள், பண்டார சன்னிதிகள்
என்பவர்களாகியவர்கள் வரை பயனடைந்து வருகிறார்கள்.

சாதாரணமாக 'ஈனப் பிறவி' என்றால் எனது அகராதிப்படி, 'இனத்தைக் காட்டிக்
கொடுத்துப் பிழைப்பவன்' என்பதாகும். 'காலிப் பயல்' என்றால், 'தன் சுயவாழ்வுக்காக
மான ஈனத்தைப்பற்றிக் கவலைஇல்லாமல் எதையும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருப்பவன்'
என்பதாகும். காலி என்றாலே ஒன்றும் இல்லாத வெறும் ஆள்—அதாவது 'ஒரு பை

படிப்பகம்

www.padippakam.com



வால்மீகி இராமாயணத்தை, வால்மீகி கதை முகமாய் எழுதியதால் வர்ணனைக்கு ஆகவும் சிலவற்றைக் கற்பனையாகச் சேர்க்கவேண்டியதாகச் சேர்த்து—ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும் ஆகிவிட்டது. பண்டிதர்கள் வக்கீல்களைப் போல் உண்மையைப் பற்றிய இலட்சியமில்லாமல் தங்கள் வெற்றியையே குறிவைத்தும் சில அற்புதக் குறிப்புகளை எடுத்துக்கொண்டும், மனச் சாட்சிக்கு விரோதமாய்க் கூச்சல் போட்டு, 'தேவ, அசுரர்'களை உறுதிப்படுத்துகிறார்கள் என்பதல்லாமல் வேறு உண்மை என்ன இருக்கிறது? புராணங்கள், இதிகாசங்கள், தேவசாஸ்திரங்கள், ஸ்மிருதிகள் என்பவை களுட்பட ஆரியர்கள் தங்கள் உயர்வுக்கும்—திராவிடர்களை இழிவுபடுத்தவும் செய்து கொண்டவைகளே தவிர வேறில்லை. அக் காலத் தமிழர்கள் ஒரு சமயம் பாமர மக்களாக இருந்திருக்கலாம். ஆதலால் சமய, சரித்திர ஆதாரங்களைக் கொண்டு நாம் நம்மைக் கவனிக்காமல் தற்கால அறிவைக் கொண்டு—நிலையைக் கொண்டு பார்ப்பதுதான் பயன் தரக்கூடியதாகும்.

['குடி அரசு'-'சித்திரபுத்திரன்' கட்டுரை—20-9-1947]

## 4. வால்மீகியின் சீதை

இராமாயணத்தைக் காவியமாக எழுதியது (சொன்னது) வால்மீகி முனிவர் என்று சொல்லப்படுகிறது. வால்மீகி முனிவர் என்பதாக ஒருவர் இருந்தாரா? இருந்திருக்க முடியுமா? என்று சிந்தித்துப் பார்ப்போமேயானால், 'இருந்திருப்பார்' என்று கருதுவது மிகவும் மூடநம்பிக்கையில் பட்டதேயாகும்.

ஏனெனில், வால்மீகியின் பிறப்பு, வளர்ப்பு, இருப்பு பகுத்தறிவுக்குச் சிறிதும் பொருத்தமற்ற—அசாத்தியமான காரியமாக இருக்கிறது.

ஆதாரங்களின்படி பார்த்தால், வால்மீகி ஒரு பார்ப்பனர்; அதிலும் அவர் ஒரு ஒழுக்கம் கெட்ட பார்ப்பனர்; அவர் திருட்டினாலும், வழிப்பறியினாலும் வாழ்வு நடத்தி வந்தவர். அப்படிப்பட்ட அவருக்கு ஒரு முனிவர், வால்மீகிமீது கருணைவைத்து ஞானோபதேசம் செய்ய 'ராம மந்திர'த்தைப் போதித்ததாகவும்—அந்த உபதேசத்தை ஏற்றுக் கொள்ளத்தக்க அறிவு இல்லாததால்—அதாவது வால்மீகி 'ராமா' என்று உச்சரிக்கக்கூடத் தெரியாமல்—முடியாமல் இருந்ததாகவும், முனிவரானவர் காட்டில் இருந்த மரா மரம் என்னும் மரத்தைக் காட்டி அதன் பெயர் என்ன என்று கேட்டதாகவும், அதற்கு வால்மீகி அதற்கு மரா மரம் என்று சொன்னதாகவும், முனிவர், வால்மீகியை அந்தச் சொல்லையே உருப் போட்டு ஜபித்துக்கொண்டு இருக்கும்படி சொல்லிப் போனதாகவும்—வால்மீகி என்ற கள்வன் அந்தப்படியே 'மரா மரா' 'மரா மரா' என்று ஜபித்துக் கொண்டிருக்கையில் அவர்மீது ஒரு பெரிய புற்று வளர்ந்து, அவரை மண் மூடிவிட்டதாகவும்; பிறகு ஒரு வேடன் ஒரு பட்சியை வில்லால் அடித்துக் கொல்லுகையில், புற்றிலிருந்து வெளிப்பட்டு அந்த வேடனை அவர் சபிக்கத் தொடங்குகையில் அந்த சாபச் சொல் சுலோகமாக வெளிப்பட்டு, அது—'இராமாயணமாக' (இராம கதையாக) முடிந்தது என்றும் காணப்படுகின்றது. வால்மீகிக்கு ஆயுள் பல ஆயிரம் ஆண்டுகளாகக் காணப்படுகிறது.

இந்தக் கதையை நம்பினால்தான் வால்மீகி இருந்ததாகக் கொள்ளமுடியும். இதன் உண்மை எப்படியோ இருந்தாலும், இராமாயண காவியத்தை யாராவது ஒருவர்—அவர் முனிவரானாலும் சரி, மனிதரானாலும் சரி, ஒருவர் உண்டாக்கி இருக்கவேண்டும். அதோடு இராமாயணத்தை உண்டாக்கினவர் ஒரு ஆரியராக—அதுவும் வேதியராக, பார்ப்பனராகத் தான் இருக்கவேண்டும்.

ஆரிய நூல்களில் எதை எடுத்துக் கொண்டாலும், அது மனிதர்களால் மனிதத் தன்மையோடு மாத்திரம் இருந்தவர்களால் வற்புறுத்திச் செய்ததாகக் காணமுடியாது. ஏதாவது ஒரு தெய்த் தன்மை-ஒரு அசாத்தியத் தன்மை உடையவர்களால்தான் உண்டாக்கப்



பட்டதாகக் காணப்படும். காரணம் என்னவென்றால், அவைகளில் உள்ள சங்கதிகள் நம்பமுடியாதவையாயும் நீதி, நேர்மை, ஒழுக்கம், மனிதத் தன்மை அற்றவையாயும் பெரிதும் இருக்கும். அப்படிப்பட்டதை மக்கள் எளிதில் நம்பமாட்டார்கள். ஆதலால், மக்களை நம்பச்செய்ய, அந்நூல்களை உண்டாக்கினவர்கள்—'தெய்வத் தன்மை உடையவர்கள்' என்றும் அதைச் சொன்னவர்கள்—'தெய்வங்கள்'—'மனிதத் தன்மைக்கு மேம்பட்டவர்கள்' என்றும் கூறி மக்களை நம்பச்செய்து விடுவார்கள். அந்த முறையில்தான் இராமாயணம் வால்மீகியால் சொல்லப்பட்டது என்று சொல்லப்படுவதாகும்.

இராமாயணம் யாரால் உண்டாக்கப்பட்டதாக இருந்தாலும், இராமாயணத்தை உண்டாக்கியவருக்கு, அதன் கதா நாயகர்களான இராமனையோ, இலட்சுமணனையோ, சீதையையோ அவர்களது குடும்பத்தையோ சிறிதுகூடத் தெய்வீகத் தன்மை உடையவர்களாக ஆக்க மனம் இருந்ததாகத் தெரியவில்லை. அதுமாத்திரம் அல்லாமல், அவர்களை நேர்மை, ஒழுக்கம், யோக்கியம் உடையவர்களாகச் சித்திரிக்கவும் மனம் இல்லாதவராகவே இருந்திருக்கிறார் என்று நன்றாய்த் தெரியவருகிறது.

எடுத்துக்காட்டாக, இராமனின் தந்தையான தசரதனை ஒரு காமாந்தகாரனாக, நேர்மையற்றவனாக, வஞ்சகம்-துரோக எண்ணம் உள்ளவனாகச் சித்திரித்து இருக்கிறார்.

தாயாகிய கோசலையை, மிகப் பேராசை உடைய ஒரு சாதாரண இழிகுலப் பெண்ணாகச் சித்திரித்து இருக்கிறார்.

தம்பியாகிய இலட்சுமணனை, ஒருவித நேர்மையும் அற்ற மூடனாகவும், எதையாவது செய்து தனது ஆசையை நிறைவேற்றிக்கொள்ளும் ஆர்வம் உடையவனாகவும் சித்திரித்து இருக்கிறார்.

இராமனையும், ஒரு தந்திரக்காரன், சுயநலக்காரன், துரோக வஞ்சக எண்ணத்திற்கு ஆதரவு-உடந்தைக்காரன்—சிறிதும் உண்மையோ உள்ளன்போ இல்லாத ஒரு வெகு சாதாரண மனிதன் என்பதாகச் சித்திரித்து இருக்கிறார்.

கடைசியாக, சீதையை ஒரு தாழ்ந்த குலப்பெண்ணாகவும், கற்பின் தர்மப்படியான கற்பு இல்லாதவளாகவும், கற்பு அழிந்தவளாகவுமே பச்சையாகச் சித்திரித்து இருக்கிறார்.

இராவணனிடத்தில் இருக்கும்போது இராவணன் சீதையைத் தொட்டு எடுத்து மடியில் வைத்து அணைத்துக்கொண்டு போனதாக வால்மீகி எழுதியிருக்கிறார்.

இராவணன், சீதையை இந்தப்படி இலங்கைக்கு எடுத்துப்போய், தனது மாளிகையில் சேர்த்தவுடன் சீதை சோகமும் மோகமும் கொண்டு இருந்தாள் என்று எழுதியிருக்கிறார். பிறகு உடனே இராவணன் பலாத்காரமாய் அனுபவித்தான் என்கின்ற குறிப்பைக் காட்டி, அதன்மீது சீதை வெட்கப்பட்டதாகவும் துக்கப்பட்டதாகவும் காட்டி—இராவணன் இதற்குச் சமாதானமாக ஆறுதல் சொல்லுவதாகவும்—இது, தெய்வச் செயல் ஏற்கக்கூடியது என்று சொன்னதாகவும் எழுதியிருக்கிறார்.

பின்பு, இராவணனைக் கொன்று சீதையை மீட்டதில்—சீதையின் நிலையைப் பார்த்ததும் இராமன் சீதையின்மீது சந்தேகம் கொண்டு, சீதையை 'ஏற்றுக் கொள்ளமாட்டேன்' என்று சொன்னதாகவும் எழுதி இருக்கிறார்.

வால்மீகி இராமாயணத்தில் அதன் ஆதிமூலக் கற்பனைகளைப் பின்னால் நாளாவட்டத்தில் அதில் உள்ள இப்படிப்பட்ட குறைகளை நீக்கப் பல மாறுதல்கள் செய்யப்பட்டதாகக் காணப்பட்டாலும்—அம் மாறுதல்களால் அதன் மூலத்தின் கருத்தைச் சரியானபடி மறைக்கமுடியாமலே போய்விட்டது.

இந்த வியாசத்தில் எடுத்துக்கொண்ட விஷயமான சீதையைப் பற்றியே இனிச் சொல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com



சீதையை, அவளது திருமணத்தின்போது அவளை உத்தமமான பெண்ணாகச்
சித்திரிக்காமல், ஒரு சாதாரணப் பெண்ணாக ஆக்கிவிட்டார்.

திருமணத்திற்குப் பிறகும் அப்படியே செய்தார்.

இராமன் முடிசூட்டல் தவறிய காலத்திலும் அப்படியே செய்தார்; காட்டிலும்
அப்படியே செய்தார்.

கடைசியாக, இராவணனுடன் இருந்த காலத்தில் சீதையை அடியோடு கெடுத்து
விட்டார்.

இந்த வியாசம் வால்மீகி இராமாயணத்தில் காணப்படும் விஷயங்களைக் கொண்டே
எழுதப்படுகிறதே தவிர, உத்தேசமோ கற்பனையோ கலந்து எழுதப்படுவதில்லை.

சீதை-இராமன் சம்பாஷணைகளில் இராமனைப் பார்த்து, சீதை 'ஆம்! நீ
சொல்லுவது சரிதான்; நான் என்ன செய்வேன்? நான் ஒரு பெண்; பலமற்றவள். அவன்
ஓர் ஆண்; பலசாலி. என் தேகம் அவனிடம் சிக்கி இருந்தபோது நான் என்ன செய்ய
முடியும்? ஆனால், என் மனத்தில் அவனை விரும்பவில்லை. வாயால் அவனுக்குச்
சம்மதிக்கவில்லை. தேகத்தால் நடந்த காரியங்களுக்கு நான் எப்படிப் பொறுப்பாளேன்?'
என்று கூறியதாக எழுதிவிட்டார்.

இராமன் சீதையை நெருப்பில் இறங்கி, தனது கற்புத் தன்மையைக் காட்டும்படி
கேட்டதற்கு, சீதை நெருப்பை வளர்த்து அதில் இறங்குகையில்—'நான் மனத்தினால்,
வாக்கினால் தவறு செய்திருந்தால்-கற்பு கெட்டிருந்தால், தீயே, என்னைச் சுடு!' என்று
தான் சொல்லுகிறாளே தவிர, 'உடலால் கற்புக் கெட்டு இருந்தால், சுடு!' என்று சொல்ல
வில்லை என்பதாகக் கூறி இருக்கிறார்.

அதை அனுசரித்தே கம்பனும்; 'மனத்தினால் வாக்கினால் மறு உற்றேன் எனில்
என்னைச் சுடு தீச்செல்வா' என்று சீதை சொன்னதாகவே பாடி இருக்கிறார்.

இவைகள் யாவும் இந்தப்படி இருக்க,

இராமன் இராவணனைக் கொன்று சீதையுடன் அயோத்திக்குத் திரும்பிவந்த பிறகு
இவர்கள் வாழ்க்கை நடத்தத் துவங்குகையில்,

இராமன், சீதை கர்ப்பம் உண்டாகி இருப்பதைக் கண்டவுடன் வருத்தப்பட்டு,
அப்பொழுதே அவளைக் காட்டுக்கு அனுப்புவதாகத் தீர்மானித்து, அடுத்தநாள்
காலையிலே அனுப்பிவிட்டார் என்று கொள்ளும்படியாகவே எழுதித் தீர்த்துவிட்டார்.

இதை வால்மீகி இராமாயணத்தில் உள்ளபடியே குறிப்பிடப்படுகிறது.

இராமாயணம் உத்தரகாண்டம் சி. ஆர். சீனிவாச அய்யங்கார் மொழிபெயர்ப்பு—
சருக்கம் 41, பக்கம் 161-ல் காணுவது:

இராமன், இராவண ஜெயங்கொண்டு, மனைவியுடன் அயோத்திக்கு வந்து அனுமார்
முதல் புஷ்பக விமானம்வரை அனுப்பிவிட்டு உடனே இராஜ்யபாரத்தில் ஈடுபடுகிறார்.

அப்பொழுது ஒருநாள் பரதன் இராமனைப் பார்த்து, 'ஸ்வாமி பரதெய்வமான
தாங்கள் இராஜ்ய பரிபாலனம் செய்ய ஆரம்பித்து ஒரு மாசமாகிறது. பிராணிகள்
யாதொரு குறைவில்லாமல் சந்தோஷத்தை அடைந்து இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சக்கரவர்த்தி எங்களை எப்பொழுதும் பரிபாலித்துக்கொண்டு இருக்க
வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்' என்று கூறுகிறார்.

இராமன் ஒருநாள் பகலில் இராஜ்ய காரியங்களைக் கவனித்து மத்தியானத்துக்கு
முன்பகலில் அந்தப்புரத்திற்குச் சென்றார்.



சீதை, இராமனிடம் வந்தாள். இராமன் நல்லது, நல்லதென்று சிலாகித்து
அவளுடைய முகத்தைக் கவனித்துப் பார்த்து, 'சீதே! ஒரு புத்திரன் உண்டாகப்
போகிறான் என்று உன் தேக லட்சணங்களால் எனக்குத் தெரிகின்றது. உன் மனத்தில்
தோன்றும் விருப்பத்தைச் சொல்' என்றார்.

சீதை வெட்கம் அடைந்து, 'நான் மறுபடியும் புண்ணியாச்சிரமங்களைப் பார்க்க
வேண்டும். கங்கைக் கரையில் இருக்கும் மகரிஷிகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை
உண்டாகி இருக்கிறது' என்று பிரார்த்தித்தாள்.

இராமன், 'நாளைக்கே புறப்பட்டுப் போகலாம்' என்று சொல்லிக்கொண்டு நடுக்
கட்டுக்கு வந்தார்.

அப்பொழுது சிலர் விசித்திரமான கதைகளைச் சொல்லி இராமனைச் சிரிக்கும்படி
செய்தார்கள்.

விஜயன், மதுதத்தன் முதலியவர்கள் இராமனுக்கு அனேக பரிகாசக் கதைகள்
சொன்னார்கள். அப்பொழுது; இராமன், 'மித்திரர்களே! நகரத்திலும் தேசத்திலும்
என்ன விசேஷம்? ஜனங்கள் என்னையும் சீதையையும்பற்றி என்ன சொல்லிக்கொள்ளு
கிறார்கள்?' எனக் கேட்டார்.

இந்த இடத்தில் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க கருத்து, இதன் கீழே காணப்
படுகிறது. அதாவது:

...'சீதையைக் காட்டுக்கு அனுப்பவேண்டிய—அதற்கு ஒரு வியாஜ்யமாக (காரணம்
தேட) இராமர், இராஜ்ய விருத்தாந்தத்தை விசாரிக்கிறார்' என்ற வாசகம் இருக்கிறது.
இது பிராக்கட்டுக்குள் இருப்பதால், உரை ஆசிரியர் கருத்தாக இருக்கலாம்.

இதுபோலவே இன்னொரு விஷயமும் பிராக்கட்டுக்குள் காணப்படுகிறது. அதாவது
'இராமர் சீதையைப் பார்த்துக் குலவிக் கர்ப்பத்தைக் கண்ட காலம்—வானரர்
அயோத்தியைவிட்டுச் சென்ற பிறகு ஒரு வருடமாயிற்றே என்று தெரிகிறது' என்று
உரையாசிரியர் தன் கருத்தைத் தெரிவிக்கிறார்.

மற்றொரு உரையாசிரியர் உரையில், 'இராமன் அயோத்தியைப் பதினாயிரம் வருடம்
பரிபாலித்த பிறகு—ஒரு நாள் சீதையின் கர்ப்பத்தைக் கண்டார்' என்று எழுதி
இருக்கிறார். இது, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் உரையில் காணப்
படுவது. மற்றொரு உரையாசிரியரும் அதாவது—கோ. க. சீனிவாசாச்சாரியார் எழுதிய
உரையில்:

'பதினாயிரம் ஆண்டுகள் இருவரும் கூடிவாழ்ந்தபின் ஒரு நாள் சீதை கர்ப்பமுற்
றிருப்பதை இராமன் கண்டான்' என்பது.

ஆனால், நடேசய்யர் உரையில் சீதையைக் காட்டிற்கனுப்பிய பின் 10 ஆயிரம்
ஆண்டுகள் ஆண்டார் என்று கருதப்படுகிறது.

காலம் எவ்வளவு ஆனாலும் சரி, பரதன் சொன்னதுபோல், இராமன் திரும்பி வந்து
ஒரு மாத காலத்தில்தான் சீதை 5 மாதக் கர்ப்பமுற்றிருந்ததை இராமன் கண்டான் என்பது
தான் இராமாயணக் கதைகளின்படி உறுதியாகின்றது.

ஏனெனில், இராமன் சீதையின் கர்ப்பத்தைப் பார்த்தவுடன் மனவேதனை அடைந்
தான் என்பதும்—அப்போதே சீதையைக் காட்டுக்கு அனுப்பத் தீர்மானித்து விட்டான்
என்பதும் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. எப்படி எனில், சீதை கர்ப்பத்தைக் கண்ட
வுடன், இராமன் நடுக் கட்டுக்கு வந்துவிட்டான்; வந்தவன் மனச் சங்கடத்துடன் வந்தான்
என்பது விளங்கவே இராமனுக்கு அங்குள்ளவர்கள் பல 'விசித்திரமான கதைகளைச்
சொல்லி இராமனைச் சிரிக்கும்படி செய்தார்கள்' என்றும்;

படிப்பகம்

www.padippakam.com



விதூஷகர்கள், 'இராமனுக்கு அனேக பரிகாசக் கதைகளைச் சொன்னார்கள்'
என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அன்றியும் சீதையைவிட்டுப் பிரிந்து மண்டபத்திற்கு
வந்தவுடன் மனவேதனைக் குறியுடன் இருந்த இராமன்—'என்னையும் சீதையையும்
பற்றித் தேச மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?' என்று ஏன் கேட்க வேண்டும்?
முன்னமேயே காண்கிறோம்—இராமன் ஆட்சியைப் பற்றி மக்கள் மகிழ்ச்சி அடைந்து
இருக்கிறார்கள்—என்று பரதன் சொன்னதாக.

அன்றியும் உரையாசிரியர் நடேசய்யரே எழுதுகிறார் :
இராமன் இராஜ்ய விருத்தாந்தத்தை அறியவேண்டும் என்று சொன்ன காரணம்
சீதையைக் காட்டுக்கு அனுப்ப ஒரு சாக்குத்தேடவே என்று. அன்றியும் இராமனும்
சீதையும் கூடி 10 ஆயிரம் வருஷம் வாழ்ந்தபின் இந்த அபவாதம் சீதைக்கு வந்தது
என்றால்—10,000 வருடத்திற்குப் பிந்தி வாழ்ந்த மக்களுக்கு இராவணனிடம் சீதை
வாழ்ந்தது எப்படித் தெரியும்? அதுவும் 10 ஆயிரம் வருடத்திற்குப் பிறகு யார் தான் குறை
கூறுவார்கள்? இவளுக்கு 10 ஆயிரம் வருடம் வரை ஏன் கர்ப்பம் உண்டாக வில்லை?

இவைகளிலிருந்து விளங்குவது என்னவென்றால்—சீதையை இராமன் காட்டிற்கு
அனுப்பியதற்கும் உலக அபவாதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதும், மற்றும்
சீதை அயோத்திக்கு வரும்போதே கர்ப்பமுற்று இருந்தாள் என்பதும் ஆகும்.

இந்தப்படி இந்தக் கதை நடந்ததல்ல என்று சொல்லுவதானாலும் இராமாயணம்
எழுதியவனுடைய நோக்கம் என்ன? அதாவது, சீதையைக் குற்ற மற்றவளாக—கற்புடைய
வளாகச் சித்திரிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் சிறிதும் அவருக்கு இல்லை. சீதைக்கு
கற்புத் தன்மை கொடுக்கக் கூடாது என்று கருதியே ஒவ்வொரு இடத்திலும் குற்றம் காட்டி
இருக்கிறார்.

திருமணம் ஆன உடனே பரதனுடைய அதிருப்தியைப் பெற்றுவிட்டாள்.

'பரதனுக்கு என்னைப் பிடிக்காது; ஆதலால் நான் அவனுக்கு நல்லவளாக நடக்க
முடியாது' என்கிறாள்.

இராமனும் சீதையை 'நீ பரதனால் போற்றத்தக்கவள் அல்லள்' என்று சொன்னான்.

புருஷனாகிய இராமனைப் பார்த்து, 'தங்கள் மனைவியைப் பிறருக்குப் பயன்படுத்
திப் பிழைக்கும் கூத்தாடிகள்போல் என்னை நீயாகவே பிறருக்கு விட்டுக்கொடுத்துப் பயன்
பெறக் கருதுகிறாயே!' என்றாள்.

கணவனை 'நீ ஆண்மையற்ற பேடி' என்றாள்.

கணவனுடைய சந்தேகத்திற்கு ஆளானவளாகவே இருந்து இருக்கிறாள்.

இதை சீதையே ஒப்புக்கொள்கிறாள்.

'இராமா, உன்னிடத்திலேயே அன்பாய் இருந்தும்—எத்தனை தரம் சத்தியம் செய்
தாலும் என்னை நம்பாமல் சந்தேகப்படுவது ஏன்?' என்கிறாள். கணவன் சொல்லியும்—
மாமி சொல்லியும் கேளாமல் தான் ஆடம்பரமாக, நகை உடை அணிந்துகொண்டு அவர்
களுக்கு அதிருப்தியை உண்டாக்குகிறாள்.

சீதையை, அவள் மாமி, 'நீ பதிவிரதையைப்போல் நடந்துகொள்' என்று கூறு
கின்றாள்.

இராம இலட்சுமணர்கள் மரஉரி உடுத்திக்கொண்டபோது சீதையானவள் உடுத்திக்
கொள்ள மறுக்கிறாள்.

சீதை இலட்சுமணனால், 'கெட்ட நடத்தை உள்ளவள்' என்று சொல்லப்படுகிறாள்.



இராவணன் சீதையை மடிமேல் வைத்து அணைத்துக்கொண்டு போகையில்,
மேலாடையை எடுத்து—நகைகளைக் கழற்றி எறிந்துவிட்டு முண்டக் கட்டையாய்—அரை
நிர்வாணமாகப் போகிறாள்.

இராவணன் மாளிகைக்குப் போனவுடன், 'மோக'மாகிவிட்டாள்.

அங்கு இராவணன் சீதையைக் கலவிக்கு அழைக்கும்போது, 'சீதை கண்களை
மூடிக்கொண்டுவிட்டாள்.'

உடனே ஏதோ நடந்து இருக்கிறது.

ஏனெனில், உடனே இராவணன் 'சீதே, உனக்கும் எனக்கும் ஏற்பட்ட இந்தச்
சம்பந்தம் தெய்வ கதியால் ஏற்பட்டது; இது முனிவருக்குச் சம்மதமானது' என்று சொல்லு
கிறான்.

இதன் மத்தியில் சீதை இராவணனைப் பார்த்து, 'நீ என் உடலை எப்படி ஆனாலும்
கட்டிக்கொள்; எனக்கு இந்தத் தேகத்தைக் காக்கவேண்டிய அவசியம் இல்லை. நான் தவறி
நடந்து கொண்டேன் என்கிற அபவாதம் மாத்திரம் எனக்கு வரக்கூடாது' என்று சொல்லி
இருக்கிறாள்.

இதை உறுதிப்படுத்தும் வகையில், இராமனிடம் சீதை சொன்ன பதிலும் இருக்கிறது.
அதாவது, 'இராவணன் உன்னை அனுபவிக்காமல் விட்டு இருப்பானா?' என்றபோது,
'ஆம்! நான் என் செய்வேன்? என் சரீரம் அவன் வசப்பட்டு இருந்தது; நான் மன விருப்
போடு குற்றமாக நடந்து கொள்ளவில்லை; தெய்வ சங்கற்பத்தால் நேர்ந்து விட்டது'
என்று சொல்லுகிறாள்.

இந்தச் சொல்லும் உண்மை அல்ல. சீதை இராவணனுக்கு மனப் பூர்த்தியாகவே
இணங்கி இருக்கவேண்டும் என்பதற்கு இராமாயணத்திலேயே ஆதாரக் குறிப்பு இருக்கிறது.

அதாவது, இராவணன் கையால் தொடும் பெண்களோ, அவன் கலவி செய்யும்
பெண்களோ யாராய் இருந்தாலும்—இராவணனிடம் அந்தப் பெண்களுக்கு மனப்பூர்வமான
காதல் இல்லாதிருக்குமானால், 'இராவணன் தலை பலநூறு துண்டுகளாகச் சிதறிப் போகக்
கடவது' என்பதாக ஒரு சாபம் இருக்கிறது.

இந்தச் சாபமானது இராவணனுக்கு நளகூபன் என்பவனால் கொடுக்கப்பட்டது
ஆகும். ஆதலால், இராவணன் எந்தப் பெண்ணையும் அவர்கள் சம்மதம் இல்லாமல்
தொடுவதே இல்லை. அனுமானே இதை ஒப்புக்கொண்டு, இராமனிடம் சொல்லுகிறான்.
அதாவது :—

'இராவணனுடைய அந்தப்புரத்தில் பல அழகான பெண்கள் சயனித்துக்கொண்டு
இருப்பதைக் கண்டேன்.'.

அவர்கள் அத்தனை பேரும், இராவணன் மீது காதல் கொண்டு இராவணனைத்
தேடிவந்தார்களே ஒழிய, தன்மீது காதல் இல்லாத எந்தப் பெண்ணையும் இராவணன்
விரும்புவதில்லை. விரும்பித் தொடுவதும் இல்லை' என்று சொல்லுகிறான். கம்பரும்
இதைப் பாடி இருக்கிறார். அதாவது,

'கருதிலான் தொடுதல் காணில் சிரம் எண்ணருங்கூறாய் மாய்தி என்னுமோர்' சாபம்
உண்டு என்பதாகப் பாடி இருக்கிறார்.

அந்தக் காரணத்தினாலேதான் கம்பர், இராவணனன் சீதையைப் பர்ணசாலை
யுடன், அதாவது;

'மண்ணோடு பெயர்த்துச் சென்றான்' என்று பாடி இருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வளவு சங்கதிகளைத் தாண்டிக்கொண்டு எப்படி சீதை தப்பிவந்து கற்புடையவளாக ஆக முடியும்?

இவ்வளவும் நடந்து, கடைசித் தடவை, கடைசி வாய்ப்பாக ஒன்றுசேர நேர்ந்த காலத்தில் சீதை கற்புடையவள் என்று காண்பதற்குச் சீதையைச் சத்தியம் செய்யும்படி கேட்கிறான்; சீதை சத்தியம் செய்யாமல் இறந்துபோகிறாள்.

அதாவது, ஒரு குழியில் விழுந்து விடுகிறாள். மேலேயே சொன்னேன். இப்படியெல்லாம் காரியம் நடந்து இருக்குமா என்பதில் நமக்கு நம்பிக்கை இல்லை—என்பதாக.

எப்படி இருந்தாலும் இந்த வியாசத்தின் கருத்து—வால்மீகிக்கு சீதையைக் கற்புடையவளாக, குற்றமற்றவளாக, ஒரு நல்ல பெண் பிறவியாகக் காட்ட எந்த இடத்திலும்—எந்தச் சந்தர்ப்பத்திலும் இஷ்டப்படாமல், குற்றம் சுமத்தும் நோக்கத்துடனேயே இராமாயணக் கதையில் கையாண்டு இருக்கிறார்.

இப்படிப்பட்ட நூலும், அதில் வரும் இப்படிப்பட்ட பாத்திரங்களும் நமக்கு எப்படி 'தெய்வமாக் கதை' நூல்களாகவும்—படிப்பினை நூல்களாகவும் இருக்க முடியும்?

இதற்கும்—திராவிட மக்களாகிய, தென்னாட்டு மக்களாகிய, தமிழ் மக்களாகிய, நமக்கும் என்ன சம்பந்தம்? நம் இனத்தை—நமது பெண்களை இழிவுபடுத்திக் கொடுமைப்படுத்தி இருப்பதாக அல்லாமல், வேறு நலமான—பயன்படும்படியான காரியம், குணம் என்ன இருக்கிறது?

வால்மீகியின் போக்குப்படி, அவர் எழுதி இருக்கிற எழுத்துப்படி பார்த்தால்—இராமாயணத்தில் இராமன் சம்பந்தமான—அவனுக்கு அனுகூலமாக நடந்து கொண்ட எந்தப் பாத்திரத்தையும் யோக்கியனாக, நாணயஸ்தனாக, மற்றவர்கள் பின்பற்றத்தக்க நடத்தை உள்ளவனாக வால்மீகியே காணமுடியாதபடியே இருந்துவருகிறது.

அது மாத்திரம் அல்லாமல், இராமனுடைய எதிரிகளாகக் கற்பிக்கப்பட்டவர்களின் குணங்கள் பல, போற்றத் தக்கதாக இருந்து வருகின்றன. வாலி மனைவி, இராவணன் மனைவி முதலிய பெண்களுக்கு மிகவும் ஏற்றம் கொடுத்து இருக்கிறார்.

எனவே, இந்த வியாசம் 'வால்மீகியும்—சீதையும்' என்று தொடங்கப்பட்டதாதலால் சீதையோடு முடிக்கப்படுகிறது. மற்றவர்களைப்பற்றி மற்றொரு சமயம் ஆராய்வோம்.

['குடி அரசு'-கட்டுரை—13-1-1951]

மாரீசன்தான் மான் உருவம்கொண்டு வந்துள்ளான் என்ற செய்தி தெரிந்தும், அந்த மானைப் பிடிக்க சீதை தன் கணவனைக் கட்டாயப்படுத்தி அனுப்புகிறாள்.

இலட்சுமணன், 'இராமனுக்கு ஆபத்து வராது; ஆகவே, உன்னைத் தனியே விட்டுப் போகமாட்டேன்' என்று தடுத்துக் கூறியும், அவனைக் கண்டபடி திட்டிப்பேசி அந்த இடத்தைவிட்டு அகலச் செய்கிறாள். இதன் மர்மம் தான் தனியே இருக்கவேண்டும்; அங்கு இராவணன் வரவேண்டும் என்ற முடிவை முன்கூட்டியே தீர்மானித்துக்கொண்டு, தன் கணவனையும், கொழுந்தனையும் துரத்திவிட்டுத் தான்மட்டும் தனியே இருக்கிறாள்.

இராவணன் காமப் பித்தனைப்போல் சீதையை வர்ணிக்கிறான்; உடல் உறுப்புகள் அத்தனையையும் ஒன்றையும் விடாது அவைகளுக்கு ஒப்புவமை கூறுகிறான்.

ஆடையினுள் மறைந்திருக்கவேண்டிய அங்கங்களாகிய தொடை, பின்தட்டு, ஸ்தனங்கள் இவைகளுக்கும் அங்க உவமை கூறும் அளவுக்கு அந்த அங்கங்கள் இராவணனுக்குத் தெரிந்திருக்கின்றன.



இத்தனையும் பேசிய இராவணனுடன் புறுமுறுவல் கொண்டு பேசுகிறாள்; அமுது படைக்கிறாள்; 'உள்ளே வாருங்கள், உட்காருங்கள், சாப்பிடுங்கள்' என்று உபசாரம் செய்கிறாள்.

அவள் அவனுக்கு உபசரிக்கும்பொருட்டு, 'வாயிற்படியின் வழியே தன் கணவனும் கொழுந்தனும் வருகிறார்களா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே உபசரிக்கிறாள்' என்று கூறப்படுகிறது.

பிறகு, இராவணன் 'வா என்னுடன்' என்கிறான். அவள் சம்மதித்தே அவனுடன் சென்றாள் என்பதற்கு ஆதாரங்கள் பல உண்டு.

அவளுக்கும் அவனுக்கும் நடந்த மேற்கண்ட சம்பாஷணைகளும், காட்சிகளும் மட்டும் அல்ல;

'தனக்கு எவ்வளவோ மரியாதை செய்து உபசரித்துப் பிரியமாய்ப் பேசின சீதையிடத்தில் ஆசை மேலிட்டு, புதன் ரோகிணியைப் பிடிப்பதுபோல் இடது கையால் சீதையின் தலைமயிரையும், வலது கையால் தொடைகளையும் சேர்த்துப் பிடித்தெடுத்தான்'. (சி. ஆர். சீனிவாசய்யங்கார் மொழிபெயர்ப்பு, ஆரண்ய காண்டம், சருக்கம் 49. பக்கம் 151) மேலும், 'தொடைகளைத் தூக்கிப் பிடித்து எடுத்து இரதத்தில் வைத்தான்' என்று 157-ம் பக்கத்திலும்; மற்றும், 'சீதையை ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் ஜடாயுவை அறைந்தான்' என்று 165-ம் பக்கத்திலும் காணப்படுகிறது.

இவ்விதம், இராவணன் சீதையைத் தொட்டு எடுத்தான் என்பதற்கு ஆதாரம் உள்ளது. தொட்டு எடுத்திருப்பானாகில் சீதை இராவணனுக்கு உடன்பட்டவள் என்றே பொருள்படும்.

காரணம், இராவணன் தன்மேல் இஷ்டப்படாத பெண்ணைத் தொடுவானாகில், அவன் தலை சுக்கலாகிவிடும் என்று ஒரு சாபமும், உடம்பு தீப்பற்றி எரிந்துவிடும் என்று மற்றொரு சாபமும் இருக்கின்றன. அந்தச் சாபங்கள் ஒன்றாகிலும் இராவணனைப் பாதிக்காமல் இருக்குமானால், அவள் இஷ்டப்பட்டாள் என்றுதான் பொருள்படும். அதன்படியே இராவணனுக்குத் தலை வெடிக்கவும் இல்லை; உடல் தீப்பற்றி எரியவும் இல்லை. ஆகவே, சீதை இராவணனுடன் செல்வதற்கு உடன்பட்டாள் என்றே பொருள்.

மேலும், சீதை இராவணனுடன் செல்லுகையில், அவனுடைய மடியின்மேல் அவள் உட்கார்ந்திருக்கையில் அவளுடைய முகம், 'காம்பறுந்த தாமரை மலரைப்போல் இருந்தது. அவளுடைய ஆடைகள் காற்றால் அடிக்கப்பட்டு இராவணன்மேல் புரண்டன,' (பக்கம் 167) என்று கூறப்படுகிறது.

இலங்கைக்குக் கொண்டு சென்றபின் தன் அந்தப்புரத்தில் வைத்தான் (பக்கம் 173) என்று கூறப்படுகிறது.

'விசித்திரமாக அமைக்கப்பட்ட தங்கப் படிக்கட்டுகளில் இராவணன் சீதையுடன் ஏறும்போது துந்துபி அடிப்பதுபோல் சப்தம் உண்டாயிற்று. (பக்கம் 155, சருக்கம் 55)

குறிப்பு: எனவே, இருவரும் மாடியில், அந்தப்புரத்திற்குச் சென்றடைந்து விட்டனர். அதுவும் இருவரும் மாடியில் ஏறும்பொழுது துந்துபி அடிப்பதைப்போல் இருந்ததாம். இருவர் நடையும்—அதாவது, இராவணன் எவ்வளவு சந்தோஷமாகவும், ஒய்யாரமாகவும், ஆனந்தமாகவும் கம்பீரநடையுடன் காலடி எடுத்து வைத்தானோ அதே போல், சீதையும் ஒய்யார நடையுடன் இருவரும் ஒருவர் தோளின்மேல் ஒருவர் கையைப் பிடித்து அணைத்துக்கொண்டு ஏறி இருக்கவேண்டும். அந்தக் காலடியின் சப்தம் துந்துபி அடிப்பதைப்போல் இருந்திருக்கிறது. அன்றியும் இனியும் மேலே நடப்பதைக் கவனிப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



பார்த்துக்கொள்வோம்;
இராவணனைப் பார்த்துச் சீதை, 'பிறகு வருவதைப் பார்த்துக்கொள்வோம்;
இப்பொழுது கிடைக்கும் சுகமே பெரிதென்று நினைக்கிறாயோ?' (பக்கம் 171) என்று
கேட்கிறாள். இதனால் இராவணன் சீதையிடம் சுகம் அனுபவித்துவிட்டான்; ஆராய்ந்து
பார்த்தால் அவளிடம் சுகம் அனுபவிக்கும் நேரத்தில் இவ் வார்த்தைகளைச் சீதை
இராவணனிடம் கூறுவது நன்கு விளங்கும்.

அதற்கு இராவணன் சமாதானம் கூறுகையில், 'சீதே, அக்னி சாட்சியாக உன்
கையைப்பிடித்த கணவனைக் கைவிடுவது அதர்மமென்றெண்ணி வெட்கப்படுகிறாயோ?
நம் இருவருக்கும் நேர்ந்த சம்பந்தம் தெய்வ கதியால் ஏற்பட்டது. இது ரிஷிகளால் ஒப்புக்
கொள்ளப்பட்டது' (பக்கம் 177) என்று சமாதானம் கூறுகிறான். (சீதை வருத்தப்படுவ
தாகவோ, ஆத்திரப்படுவதாகவோ கூறவில்லை; வெட்கப்படுகிறாளாம். விருப்பம்
இல்லாவிட்டால், வெட்கப்படுவதுதான்—'விருப்பமில்லை' என்பதைக் காட்டும் அறிகுறி
போலும்! ஆத்திரமோ, கோபமோ கொண்டிருப்பாளாகில் விருப்பம் இல்லை என்று
கூறலாம்.)

எனவே, சீதையிடம் இராவணன் செய்த காமலீலைகளுக்கும் அவள் உடன்
பட்டிருக்கிறாள். ஆனால், பெண்களின் இயற்கைக் குணப்படி வெட்கப்பட்டிருக்கிறாள்.

மேலும், ஆரண்யகாண்டம் 55-வது சருக்கம் 678-வது பக்கத்தில், தாத்தா
தேசிகாச்சாரியார் மொழிபெயர்ப்பில் கூறப்படுவதாவது:—'இனி நீ நாணமுறற்க. இதனால்
தர்மலோபமொன்றுமிலது. உனக்கும் எனக்கும் இப்பொழுது தெய்வத்தினாலே சேர்க்கை
நேர்ந்தமையின் இதுவும் தர்மமேயாகும். இது ரிஷிகளாலும் உகக்கப்பட்டது' என்று
கூறப்படுகிறது.

'இனி நீ நாணமுறற்க'—இதன்படி என்னவென்றால், 'இனிமேல் எதற்காக வெட்கப்
படவேண்டும்? உனக்கும் எனக்கும் தெய்வ கதியால் சேர்க்கை நேர்ந்துவிட்டது'
என்கிறான். அதாவது, காரியம் முடிந்துவிட்டது; இனிமேல் வெட்கப்பட்டு என்ன பலன்
என்ற கருத்தில் இராவணன் கூறுகிறான். எனவே, இருவருக்கும் சேர்க்கை நேர்ந்தது
என்பதை இதன்படி உறுதிப்படுத்தலாம்.

மேலும், இராவணன் கூறியதாக அதே மொழிபெயர்ப்பாளர் இந்தச் சம்பவத்திற்குக்
குறிப்பு தருகையில் 'இராவணன் பிராட்டியாரை முன்போலவே தாசனாகச் செய்து
கொள்ளும்படி விண்ணப்பம் செய்தான்' என்கிறார். அதாவது 'முன்போலவே' என்பதைக்
கவனிக்கவேண்டும். அதாவது, இருவருக்கும் சம்பந்தம் ஏற்பட்ட முன் சம்பவத்தைப்
போலவே இனிமேலும் இருக்கவேண்டும் என்ற கருத்தில் வேண்டினான் என்கிறார்.
ஆகவே, மொழிபெயர்ப்பாளரின் ஆராய்ச்சியின்படியும் சீதைக்கும் இராவணனுக்கும்
சம்பந்தம் ஏற்பட்டுவிட்டதுஎன்பது உறுதி.

['விடுதலை'—27-5-1956]

## 5. இராமன்

இராமன் தமிழன் அல்லன்; இராமன் தமிழ் நாட்டவனுமல்லன்; அவன் வடநாட்டான்;
இராமன் கொன்ற மன்னன் இராவணனோ—தென்னாட்டவன்.

இராமனிடம் தமிழர் பண்பு (குறள் பண்பு) என்பது சிறிதும் இருந்ததாக இல்லை;
இராமன் மனைவியும் அதுபோலவே வடநாட்டவள்.

அவளிடம் தமிழ்ப்பெண் பண்பு இல்லவே இல்லை.

அதில் தமிழ்நாட்டு ஆண்களைக் குரங்கு, அரக்கன் என்று குறிக்கப்பட்டு
இருக்கிறது.



தமிழ் நாட்டுப் பெண்களை அரக்கி என்று குறிக்கப்பட்டு இருக்கிறது.

இராமாயணப் போராட்டத்தில் ஒரு பார்ப்பனர்கூட சிக்க (கிடைக்க)வே இல்லை.
போரில் ஒரு வடநாட்டானோ, ஆரியனோ, பார்ப்பானோ (தேவரோ) சிக்கவே இல்லை.

கொல்லப்பட்டவர்கள், செத்தவர்கள் எல்லோரும் தமிழ் நாட்டவர்களே ஆவார்கள்.

இராவணன், இராமன் மனைவியைக் கொண்டுபோனதற்காக இலங்கைக்கு ஏன் நெருப்பு வைக்கவேண்டும்? இராமாயணக் கதை தமிழனை இழிவுபடுத்துவது தவிர, அதில் வேறு கருத்து இல்லை. தமிழ்நாட்டில் இராமாயணத்தையோ, இராமனையோ வைத்திருப்பதானது மனித சுயமரியாதைக்கும், இன சுயமரியாதைக்கும், தமிழ் நாட்டுச் சுயமரியாதைக்கும் மிகமிகக் கேடும், இழிவுமானதாகும்.

இராமாயண இராமன், சீதை ஆகியவர்களைப் பொறுத்தவரைக்கும் கடுகளவாவது கடவுள் தன்மை என்பது காணப்படவில்லை. நாடு சுதந்திரம் பெற்றவுடன் நாட்டிலுள்ள இடங்களுக்கும், பல ஸ்தாபனங்களுக்கும் வெள்ளையர் பெயர்களை மாற்றி இந் நாட்டவர் பெயர்களை வைத்தது போலும்;

வெள்ளையர் உருவங்களைப் பெயர்த்து அப்புறப்படுத்தியிருப்பதுபோலும்;

தமிழன் சுயமரியாதை உணர்ச்சி பெற்றபிறகு தமிழர்களை இழிவுபடுத்திக் கீழ்சாதி மக்களாக்கிய ஆரியச் சின்னங்களையும், 'ஆரியக்' கடவுள்கள் என்பதான உருவங்களையும் அழித்து ஒழிக்க வேண்டியது சுத்த இரத்த ஓட்டமுள்ள தமிழன் கடமையாகும்.

['விடுதலை'—அறிக்கை—29-7-1956]

தலைவரவர்களே! தோழர்களே!

இராமன் செய்த பெருத்த அநீதி—இராமாயணத்தில் சூர்ப்பனகையை இலக்குவனை ஏவிவிட்டு—இராமன் மூக்கு, முலை முதலிய அங்கங்களை அறுக்கச் சொல்கிறானே, இவனை விளக்கு மாற்றால் அடித்தால் என்ன? அவளே இவனை வலிய வந்து கூப்பிட்டால்தான் என்ன? வர முடியாது என்று சொல்வதுதானே? அவளை மானபங்கம் செய்யும் அளவுக்கு இவர்களுக்குச் சக்தியிருக்கும்பொழுது அவளை ஏன் ஒரு மரத்தில் பிடித்துக் கட்டியிருக்கக் கூடாது? அவள் திராவிடர்களின் அக்காள், தங்கை அல்லவா? உங்கள் வீட்டுப் பெண்களை இப்படிச் செய்து பார்த்தால்தானே தெரியும்!

[திருவல்லிக்கேணியில், 5-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-8-1956]

இராமாயணம் தவறாக மக்களிடம் விளக்கப்பட்டு வந்திருக்கிறது. அதில் வரும் முக்கிய பாத்திரமான இராமன் ஓர் அயோக்கியன், துரோகி, வஞ்சகன். அயோத்திப் 'பேரரசு' (இராஜ்யம்) இராமனுக்கோ, அவன் தந்தைக்கோ உரியதன்று; தசரதனின் மனைவிகளில் ஒருத்தியான கைகேயிக்கே அது உரியது. அவளுடைய தந்தை சில காரணங்களைக் காட்டி பெண் தர மறுத்தான். 'அரசே! உனக்கு மனைவியர் பலர். அவர்களுள் இவளும் ஒருத்திதானே? எப்படி இவள் வயிற்றுப் பிள்ளை ஆட்சிக்கு வரவியலும்? முதல் மனைவியின் தலைமகன்தானே அரசனாவன்; எனவே, பெண் தர மாட்டேன்' என்றான் கைகேயியின் தந்தை. 'இன்றைக்கே தந்துவிடுகிறேன்; என் அரசுரிமை எல்லாம் அவளுக்குத்தான். அவள் பெற்ற பிள்ளைக்கே அரசு' என்று வாக்களித்தான் தசரதன். எனவே, அயோத்திப் பேரரசு தசரதனுக்குச் சொந்தம் இல்லை; அவன் மகன் இராமனுக்கும் இல்லை; பரதனுடையதேயாகும். ஆனால், வஞ்சகமாய் இராமனுக்கு முடிசூட்ட தசரதன் தீர்மானித்திருந்தான்; இன்று நினைத்து நாளைக்குப் பட்டம் சூட்டப் போகிறான். இச்சூழ்ச்சி இராமனுக்குத் தெரியும்; அவன் குரு வசிஷ்டனுக்குத் தெரியும். எல்லா வீதிகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன, இராமனுடைய பட்டாபி



படிப்பகம்

www.padippakam.com



ஷேகத்தின் பொருட்டு. ஆனால், கைகேயி இருக்கும் தெருமட்டும் அலங்கரிக்கப்பெற வில்லை; பொலிவிழந்திருந்தது. இராமனுடைய முடிசூட்டுவிழாபற்றி கைகேயி அறியாள்; அறிவிக்கப்பெறவும் இல்லை. இதற்கு முன்னமேயே பரதனைத் தனது பாட்டன் வீட்டிற்கு வஞ்சகமாக அனுப்பிவிட்டிருந்தான் தசரதன். ஆனால் திரை கிழிந்தது; சாயம் வெளுத்தது. கூனி தசரதன் சூழ்ச்சியைக் கைகேயிக்கு விளக்கிவிட்டாள். கைகேயி மனம் குமுறினாள்; அழுதாள்; ஆத்திரப்பட்டாள். தனக்குக் கொடுத்த உறுதியைக் காப்பாற்றும்படி தசரதனை வேண்டினாள். கடைசியாக இராமன் 'காடுறை வாழ்க்கை' எய்தினான். பாட்டன் வீட்டிலிருந்து தாய் வீட்டிற்கு வந்தான் பரதன்; இராமன் தந்தையின் ஆணையை மேற்கொண்டு காடு சென்றதாக அறிந்தான். பரதன் மன இரக்கம் உடையவன்; தசரதன் இராமன் ஆகியோரின் பித்தலாட்டமும் புரட்டும் அவனுக்குத் தெரியாது. எனவே அண்ணனை அழைத்துவரக் காட்டிற்குச் சென்றான்; இராமனைக் கண்டான்; நாட்டுக்கு மீண்டும் வர வேண்டினான். 'நாட்டை நீ வந்து ஆள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். அதற்கு இராமன் 'முன்னாளில் உன் அன்னையைத் தந்தை மணந்துகொள்ளும்போது உன் அன்னைக்கு ஒரு வாக்களித்திருந்தார். உனக்கு அரசு உரிமை உடையதாகும்படி வாக்குத் தந்துள்ளார்' என்று முன்னாளில் கைகேயிக்குத் தந்த தசரதனின் வாக்குறுதியைக் கூறினான். 'அப்பா எனக்குத் தந்தார்; நான் உனக்குக் கொடுத்து விடுகிறேன்' என்றான் பரதன்.

[சேலத்தில், 10-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 15-8-1956]

## 6. இராமாயணம் புனைந்ததன் இலட்சியம்

இந்நாளில் வெளியிடப்படும் வால்மீகி இராமாயணங்களின் புதிய பதிப்புக்களில் மாறுதல்கள் செய்துகொண்டு வருகிறார்கள். உண்மையை மறைத்து விடுகிறார்கள். இராமாயணத்தின் உட்கருத்து என்ன? ஆரியர்கள் தமக்கு உரிமையில்லாத நாட்டில் தாம் வாழ்வதற்கு வழிதேட முயன்றதைப்போலவே இராமாயணம் அமைந்திருக்கிறது; பார்ப்பனர்—ஆரியர்கள் மானம்—அவமானத்துக்குக் கவலைப்படுவதாகவோ, நேர்மை, ஒழுக்கம், நீதியுடைய மக்களாகவோ இராமாயணத்தில் சுட்டிக்காட்டப்பெறவில்லை. மானத்தை விற்றேனும் உயிரைக் காப்பாற்ற வேண்டும்; வாழ்க்கை நடத்தவேண்டும் என்றே பார்ப்பனரைச் சித்திரித்து எழுதிவைத்துள்ளனர். இராவணனைக் கொல்ல வேண்டுமானால்—அவனைச் சீதைமூலம் சுவாதீனப்படுத்த வேண்டும்; சீதையைக் கெடுத்தவன் என்ற காரணத்தைக் காட்டி அவனைத் தொலைக்க வழி வகுக்கலாம் என்று முன்கூட்டியே தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இராமன் ஒரு பேடியே. நேர்மை, ஒழுக்கம் இவற்றால் காரியம் சாதிக்க வழி கிடையாது என்பது அவர்கள் கருத்து. பேடித் தனமாக, சூதாக-மறைந்து நின்றே இராமன் தாடகையைக் கொன்றிருக்கிறான். வாலி யையும் மறைந்திருந்தே-மரத்தின் மறைவில் ஒளிந்திருந்தே கொன்றிருக்கிறான். இராவணனையும் அப்படித்தான்; இராவணனுடைய அந்தரங்க விஷயங்களையும் (மறை பொருளையும்) இன்னும் பிற செய்திகளையும் விபீஷணன் மூலம் அறிந்துகொண்ட பிறகே, இராவணன் தம்பியான விபீஷணனுக்கு இலஞ்சத்தைக் (நாட்டாட்சி) கொடுத்தே— இராவணனைக் கொன்றிருக்கிறான். இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போர் நேருக்கு நேர் நின்று சண்டையிட்ட போர் என்பதற்கில்லை. பார்ப்பனர் ஏமாற்று வாழ்வு, தங்கள் நன்மைக்காக ஒழுக்கக் கேடான காரியங்களைச் செய்துகொள்ளலாம்; சுயநல வாழ்வுக்கு வேண்டிய புரட்டுகளை—பித்தலாட்டங்களை ஒரு மார்க்கமாக அமைத்துக்கொள்ளலாம் என்பதே அவர்களது குறிக்கோள். அதற்காகவே கடவுள்களைப் படைத்து, அவைகளுக்குப் பல அவதாரங்கள் உண்டு என்று புளுகித் தாம் எழுதியவற்றைப் புண்ணிய சரித்திரம் எனச் சொல்லித் தமிழர்களை ஏமாற்றி வாழ்ந்துவருகின்றனர். வேத



சாஸ்திர புராண இதிகாசம் அனைத்தும் இயற்கைக்கு மாறானவை. அவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்ப்பதும்—பகுத்தறிவைக்கொண்டு ஆராய்வதும் மதத்துக்கு விரோதம், வகுப்புத் துவேஷம், நாத்திகம் என்று நம்மேல் பழி சுமத்துகிறார்கள்.

34 ஆண்டுகளுக்கு முன்பே சொன்னோம்—திருப்பூரில் 1922-ல் காங்கிரஸ் மாநாடு நடந்தது; வாசுதேவ அய்யர் தலைமை தாங்கினார். நான் அப்போதுதான் தமிழ்நாடு காங்கிரசின் தலைவனாக ஆக்கப்பட்டேன். அதுவரை தமிழ்நாடு காங்கிரசின் காரியதரிசி யாக இருந்தேன். அம் மாநாட்டில் நான் ஒரு தீர்மானம் கொண்டுசென்றேன். 'இந்து மதத்திலே சாதி வேற்றுமையும், தீண்டாமையும் இடம் பெறுகின்றன; இவற்றை நீக்க வழி செய்யவேண்டும்' என்ற தீர்மானத்தைக் கொண்டுசென்றேன். அத் தீர்மானத்தைப் பல வகையில் பார்ப்பனர்கள் தடைசெய்ய முயற்சி செய்தார்கள். இந்து மதத்தில் சாதி இடம் பெறுவதாக ஒப்புக் கொள்ளவில்லை. இராமாயணத்தில் பல இடங்களில் சாதி குறிப்பிடப் படுகிறது. சூத்திரன் தவம் செய்ததற்காகக் கொல்லப்படுகிறான். பார்ப்பான் என்று 1000 இடங்களுக்குமேல் இராமாயணத்தில் வருகிறது.

[அங்கேரிபாளையத்தில், 11-8-1956-ல் சொற்பொழிவு 'விடுதலை'—17-8-1956]

இராமாயணத்தில் அவரவர் சாதிகளையும், பிரிவுகளையும்தானே நிலைநாட்டுகிறது. ஒரு இடத்தில் அனுமார் இராமன் காலில் விழுகிறான். இராமன் அனுமாரைத் தூக்கிப் பிடித்துகொண்டு மன்னிப்புக் கேட்கிறான். 'நீயோ ஒரு பிராமணன், நான் க்ஷத்திரியன். என் காலில் வந்து விழலாமா? இந்தப் பாவத்தை நான் எங்கே போய்த் தீர்ப்பேன்?' என்று கூறுகிறான். இராமன் அயோத்தியிலிருந்து காட்டுக்குப் புறப்படும் சமயம், 'என் பணத்தையும், சொத்துக்களையும், என்னிடத்தில் இப்போதிருக்கும் மாடுகளையும் கொண்டுவாருங்கள். முழுவதையும் பிராமணருக்குக் கொடுத்து விடுகிறேன்' என்பதாகச் சொல்லுகிறான். சீதை, 'என் நகைகள் முழுவதையும் கொண்டுவாருங்கள்; பிராமண னுக்குக் கொடுத்துவிட்டுப் போனால் புண்ணியம்' என்பதாகச் சொல்கிறாள். சூர்ப்பனகை, 'என்னைத் திருமணம் செய்துகொள்' என்று கேட்கும்போது, 'நீ ஒரு சாதி; நான் ஒரு சாதி; எப்படித் திருமணம் செய்து கொள்வது?' என்கிறான். ஒரு இடத்தில் தாடகை மகனை இலட்சுமணன் கொன்றுவிட்டு, 'இந்தப் பாவத்திற்கு என்ன செய்வேன்?' என்று வருத்தப்பட்டுக் கொள்கிறான். அதற்கு இராமன், 'சூத்திரனைத்தானே கொன்றாய், அதனால் பாவமில்லை. கவலையை விடு' என்று கூறுகிறான். சம்புகன் ஒரு சூத்திரன். அவன் தவம் செய்ய உரிமையில்லை என்று கூறி அவனைக் கண்டங் கண்டமாக வெட்டி விடுகிறான். இப்படி எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வருணாசிரம தர்மம் தாண்டவமாடுகிறது. இப்படி இருக்கும் இராமாயணத்தைக் கொளுத்தவேண்டும் என்பதில் என்ன தப்பு? ஓட்டுக் கேட்க இதைக் காட்டி உங்களை ஏமாற்றுகிறோமா? இதைச் செய்து யாராவது வயிறு வளர்க்கிறோமா?

[மேலகற்கண்டார் கோட்டையில் சொற்பொழிவு—'விடுதலை' 13-9-1956]

## 7. இன்றும் இராமாயண சம்பிரதாயமா?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

திருவள்ளுவருடைய கொள்கைகளையும், அவருடைய பாட்டின் அருமையையும், அவற்றால் திராவிட நாடு பெற்றிருக்க வேண்டிய பலனையும் கம்பனது இராமாயணம் அடியோடு கெடுத்துவிட்டது. பார்ப்பனச் சூழ்ச்சிக்குப் பலியான கம்பனால் இந்நாட்டில் நிலவியிருந்த திராவிட கலாச்சாரமே பாழாக்கப்பட்டுப் போய்விட்டது. ஆரியப் பண்பு களையும், ஆரிய நடைமுறைகளையும் போற்றிப் புகழ்ந்து அவற்றைத் திராவிட மக்கள் ஏற்கும்படி அழகுறத் தமிழில் பாடி மக்களை 'ஏய்த்து விட்டான் கம்பன். இராமாயணம்,

படிப்பகம்

www.padippakam.com



பாரதம், கீதை இன்னோரன்ன ஆரிய நூல்கள் யாவும் திராவிடப் பண்புகளை மறுக்க
இயற்றப்பட்ட நூல்கள்தாம் என்பதை ஆராய்ச்சி அறிவுள்ள எவரும் ஒப்புக்கொள்வார்கள்.

இவ்வாரிய நூல்களில் வலியுறுத்தப்பட்டுள்ள ஆரியப் பண்புகளுக்குத் திராவிடநாடு
ஆட்பட்டிருந்த சமயத்தில்—திராவிடர்களை அதனின்று விடுவிக்கத் திராவிடப் பெரியார்
ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட நூல்தான் திருக்குறள் ஆகும். ஆரியப் பண்புகள் எப்படித்
திருக்குறளால் மறுக்கப்பட்டுள்ளன என்பதை விளக்கமாக எடுத்துக்காட்ட, முதலில்
இராமாயணத்தைப் பற்றியும் இதர ஆரிய நூல்களைப்பற்றியும் பேசச் சிறிது நேரம்
எடுத்துக்கொள்கிறேன்.

மக்கள் யாவரும் ஒரே சாதி என்கிறது குறள்; 4 சாதியைச் சேர்ந்தவர்கள் என்று
பாகுபடுத்திச் சொல்கின்றன இராமாயணமும், கீதையும். அறிவுக்கு மாறான—இயற்கைக்கு
மாறான பல காட்டுமிராண்டித்தனமான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு
இலங்குகின்றன ஆரிய நூல்கள். அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக் கூடியன
வும், இயற்கையோடு விஞ்ஞானத்திற்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்
களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள். ஆரிய நூல்களில் காணப்படும்
நிகழ்ச்சிகள் பெரும்பாலும் நடந்திருக்கக் கூடாதனவாகவும், இன்று நடத்திக்காட்ட
முடியாதனவாகவும், சாத்தியமற்றதாகவும் இருக்கின்றன. திருக்குறளில் காணப்படும்
நீதிகள், அறிவுரைகள் நடக்கக்கூடியதும், நடந்தால் உற்ற பலன் தரக்கூடியதும் ஏற்கக்
கூடியதாகவும் இன்று நம்மால் நடத்திக் காட்டக்கூடியவையாகவும் இருக்கின்றன.

நாம், இராமாயணத்தைக் கொளுத்தவேண்டு மென்று திட்டம் போட்டால், அத்
திட்டத்தை இன்றும் நம்மவரைக் கொண்டுதான் எதிர்க்கிறது பார்ப்பனீயம். நம்மவர்கள்
ஆரியத்தின் கையாட்களாகத்தான் நமக்குத் தொல்லைகொடுக்க முன்வருவார்களே யொழிய
—தாமாக இராமாயணம் கொளுத்தப்படுவது பற்றிக் கவலைப்படமாட்டார்கள். இராமா
யணப் பிரச்சாரமும், கம்பர் விழாவும் முதலில் துவக்கப்பட்டதே, நம்மிடமிருந்து சுயநலத்
துக்காக ஆரியருக்கு அடிமையான திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளையால்தான்.
அவரால் இராமாயணப் பிரச்சாரம் செய்யப் பார்ப்பனர்கள் முன்வந்தார்கள். பிறகு
இப்போது மந்திரிகளே முன்வந்து விட்டார்கள். இதில் ஓமாந்தூர் ரெட்டியார் முதன்மை
யானவர். அவர் இராமாயணத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்யட்டும், மற்றொரு
ஆழ்வாராக ஆக இஷ்டமிருந்தால். ஆனால், மந்திரியாக இருந்துகொண்டு அவ்
வேலையைச் செய்வது தவறு என்றுதான் நான் சொல்கிறேன். கம்பர் விழாவிற்குப்
பணம் கொடுத்து உதவியவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகத்தான் இருந்திருக்க
வேண்டும்; இந்த விபீஷணர்கள் அவர்களின் தயவுக்காக அந்த விழாவில் கலந்து
கொண்டு ஏதேதோ உளறிவிட்டார்கள்; அவ்வளவுதான். கலியாணங்களில் காலட்சேபங்
களின் மூலமும், நாடக மேடைகளில் நாடகங்களின் வாயிலாகவும், சினிமாக்களில்
படக்காட்சிகளின் மூலமும், பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களின் மூலமும் இந்த
இராமாயண, பாரதக் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுவிட்டதன் பயனாய்—இன்னும்
வலியுறுத்தப்பட்டு வருவதன்பயனாய் நாடாளும் அரசன் முதற்கொண்டு, காட்டிலேயே
இருந்து மாடுமேய்த்துப் பிழைக்கும் மாட்டுக்காரப் பையன் வரையும் எல்லோருக்கும்
இராமனையும் சீதையையும் பற்றித் தெரிந்திருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இப்படியாக
உயர் தத்துவங்களும் அறிஞர்க்கான அறிவுரைகளும் அடங்கிய நூல் பொதுமக்களுக்குள்
பரவவிடாமல் மறைக்கப்பட்டு—இராமாயணமும், பாரதமும் எல்லோருக்கும் தெரியும்படி
விளம்பரப்படுத்தப்பட்டுவிட்டன. திராவிடர்களை இழி மக்களென்று வலியுறுத்தும்
நூல்கள் போற்றத்தக்க தன்மையைப் பெற்றுவிட்டன. திராவிடர்களைப்பற்றிப் புகழ்ந்து
கூறும் நூல்கள் மறைந்திருக்கும்படி செய்யப்பட்டுவிட்டன. என்னே ஆரிய சூழ்ச்சி,
என்னே நம்மவர் விபீஷணத் தன்மை!



இராமாயணத்தையும், பாரதத்தையும் எடுத்துக்கொண்டால் இவற்றுள் பாரதந்தான்
முந்திய நூலாக இருக்கவேண்டும் என்று நான் கருதுகின்றேன். சிலர் இராமாயணந்தான்
முந்தியது என்று கருதுகிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். பாரதத்திற்கும்
முந்திய நூல்தான் கந்த புராணம். கந்த புராணத்தையொட்டிச் சற்றுச் சிறியதாகப்
படைக்கப்பட்டதுதான் பாரதம் என்று நான் நினைக்கிறேன். ஆரியத்தின் முதல் மத நூல்,
கந்த புராணந்தான். அது ஆரியத்திற்கு ஏற்பட்ட முதல் நூல். கந்த புராணத்தில் காணப்
படும் இழிதன்மைகளை அதிகப்படுத்தியும், மனித வாழ்க்கைக்குச் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி
களைச் சற்று அதிகமாகச் சேர்த்தும் எழுதப்பட்டதுதான் பாரதம். கந்த புராணம் சைவ
முறையின்பாற்பட்டது; பாரதம் வைணவ முறையின்பாற்பட்டது. கந்த புராணத்திலும்,
பாரதத்தில் உள்ளதைக் காட்டிலும், அதிகமாக இயற்கைக்கு மாறான பிறவிகள் காணப்
படுகின்றன. அநாகரிகமும் சற்று அதிகமாகவே காணப்படுகிறது. இவையிரண்டிற்கும்
பிறகு சிலகாலம் கழித்து எழுதப்பட்ட நூல்தான் இராமாயணம். எனவேதான், மேற்கண்ட
இரண்டு நூல்களில் காணப்படும் அநாகரிகமும், அமானுஷியமும் இயற்கைக்கு மாறான
பிறவிகளும் சற்றுக் குறைவாக இராமாயணத்தில் காணப்படுகின்றது. அடிப்படையில்—
கதைப் போக்கில் கந்த புராணமும், இராமாயணமும் ஒன்றாகத்தான் காணப்படுகின்றன.
கந்தபுராணத்தில் கந்தனும், இராமாணயத்தில் இராமனும் ஆரியத் தலைவர்களாகச்
சித்திரிக்கப்படுகிறார்கள். இரண்டும், தேவர்கள் அசுரர்கள் என்கிற இருகட்சிகளை அடிப்
படையாக வைத்துத்தான் எழுதப்பட்டுள்ளன. ஆனால், கந்த புராணத்தில் காட்டு
மிராண்டித்தனம் மிகமிக அதிகமாகக் காணப்படுகின்றது. பெரும்பெரும் புளுகுகளும்
அதில்தான் அதிகம் காணப்படுகின்றன. அதில்தான் வைக்கோலிலிருந்து பட்டாளங்கள்
தோன்றியதாகவும், நெற்றியிலிருந்து மனித உருவம் பெற்ற குழந்தைகள் தோன்றிய
தாகவும் பகிரண்டப் புளுகுகள் எழுதப்பட்டிருக்கின்றன.

கடவுள்பேரால் எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று தம் இஷ்டம்போல் எதை
எதையோ புளுகிவைத்து விட்டார்கள். பாரதமோ இன்னும் மோசம். ஒருத்திக்கு
5 புருடர்கள் இருந்ததாக எழுதிவிட்டு அவளையே பதிவிரதையாகவும் கற்பித்துவிட்டார்கள்.
அந்தப் புருஷர்களும்—அந்தப் பஞ்சபாண்டவர்களும் யார் யாருக்கோ, எந்த எந்தவித
மாகவோ பிறந்ததாகத்தான் கதை எழுதப்பட்டிருக்கிறது. அக் கதையில் காணப்படும்
குழந்தைகளில் பெரும்பாலானவற்றிற்குத் தகப்பன்மாரைக் கண்டறிவது கஷ்டமாகவேயிருக்
கிறது. அக் காலத்தில் ஆரிய நாகரிகம் அப்படித்தான் இருந்ததுபோலும்!

கந்தபுராணமும் இராமாயணமும் எப்படி ஒரே அடிப்படைக் கதையை வைத்துக்
கொண்டு எழுதியவை என்று விளக்கிக் காட்டுகிறேன் பாருங்கள். கந்த புராணத்தில்
சுப்பிரமணியன் கடவுளாகவும், இராமாயணத்தில் இராமன் கடவுளின் அம்சமாகவும் குறிக்
கப்பட்டிருக்கிறது. இவர்கள் பெண்டாட்டிமார் இருவருமே காட்டில் கண்டெடுக்கப்பட்டு
வளர்க்கப்பட்டவர்கள். பெற்றோர்கள் யார் என்று தெரிவிக்கப்படாதவர்கள். அனுபவத்
திற்கு ஒட்டிப் பார்த்தால் யாரோ திருட்டுத்தனமாகப் பெற்றுப் போட்டுவிட்டுப் போன
குழந்தைகள் என்றே கொள்ளத்தக்கவைகள். இராமனும், கந்தனும் இருவருமே தேவர்
களின் முறையீட்டால்—அவர்களை, அசுரர்-இராட்சதர்களிடமிருந்து காப்பாற்றுவதற்குத்
தோற்றுவிக்கப்பட்டவர்கள். இருவருக்கும் விரோதிகள் சூரனும், இராவணனும் ஆகிய
அசுரர்கள்தாம். (அசுரர் என்றால் மதுவருந்தாதவர்கள்; இராவணன் என்றால் கறுத்தவன்)
இருவருடைய தங்கைமார் இருவருமே மேலே கூறப்பட்டவர்களின் தம்பிமார்களால்
மூக்கும், முலையும் அறுபடுகிறார்கள். இராமனுக்கு அனுமார் கிடைத்ததுபோல்—
கந்தனுக்கும் ஒரு வீரபாகு என்கிறவன் கிடைக்கிறான். இலங்கை எரிக்கப்பட்டதுபோல்—
சூரனுடைய நகரமும் எரிக்கப்பட்டிருக்கிறது. சூரன், தேவேந்திரன் மனைவியைச் சிறை
பிடிக்க ஆசைப்பட்டு, அவன் மகனைச் சிறையில் வைத்தான். இராவணன், இராமன்
மனைவியைச் சிறைபிடித்தான். இன்னும் பல நடப்புக்கள் ஒன்றுபோலவே—பேர்கள்தான்

படிப்பகம்

www.padippakam.com



மாறியிருக்கின்றனவே யொழிய—கதைப் போக்கில் எவ்வித முக்கிய மாறுதலும் காணப் படாமல் அமைந்துள்ளன.

கந்தபுராணத்தில் கந்தனைக் தெய்வமாகவே 'காட்டப்பட்டிருக்கிறது. இராமா யணத்தில் கொஞ்சம் அது குறைவாக்கப்பட்டு—அதாவது இராமன் கடவுள் அவதாரமாக மட்டுமே காட்டப்படுகிறான்; சில இழிதன்மைகளையும் சுமத்தப்படுகிறான். ஆனால், திருவள்ளுவர் குறளோ இவற்றை—ஆரியத்தை—ஆரிய தர்மத்தை. அப்படியே மறுக்க எழுதப்பட்ட நூலாகக் காணப்படுகிறது. கடவுள் வாழ்த்தில்கூட வள்ளுவர் ஒழுக்கத்தையும், அறிவையும், பற்றற்ற தன்மையையும்தான் கடவுளாகக் காட்டியுள்ளார். கடவுளை அறிஞன் என்கிறார்; ஆசை அறுந்தோன் என்கிறார். அவர் ஒரு இடத்திலாவது கடவுளை அயோக்கியனாகவோ, ஒழுக்க ஈனமுடையவனாகவோ, வஞ்சகனாகவோ, விபச்சாரியாகவோ சிருஷ்டித்திருக்கவில்லை.

ஆனால், ஆரிய நூல்களில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள கடவுள் தன்மையிலுள்ள ஆபாசக் கேட்டிற்கோ அளவு சொல்ல வேண்டியதில்லை. கீதை போற்றும் கிருஷ்ணனைப் போன்ற விபசாரக்காரனை—வஞ்சகனை—கீழ்க்கண்ட தன்மையை ஆரியர்கள் தவிர்த்த யாரும் கடவுளாக, நீதியாகச் சிருஷ்டித்திருக்கமாட்டார்கள். அவன் ஒரு விபச்சாரியை அல்ல, இலட்சக்கணக்கான பெண்களைக் கெடுத்து விபச்சாரிகளுக்கும், குடிப்பெண்களுக்கும் காமுகனாய், காதலனாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். பிறந்தது முதற்கொண்டு சாகும் வரையில் அவன் ஒரு சந்தர்ப்பத்திலாவது, ஒழுங்காக நடந்துகொண்டிருப்பதாக யாராலும் காட்டமுடியாது. அவன் நடத்தைகள் லீலைகளாக்கப்பட்டிருக்கின்றன. இராமனை எடுத்துக்கொள்ளுங்களேன்! இராமனை எடுத்துக்கொண்டால்—அவன் யாருக்கோ பிறந்த தாகத்தான் காட்டப்பட்டிருக்கிறதேயொழிய, தசரதனுக்கே பிறந்ததாக இல்லை. அவன் பெண்டாட்டியை இழந்து அலைவதற்குக் கூறப்படும் காரணமோ அதைவிடப் படுமோசம். அதாவது, மகாவிஷ்ணு எந்தப் பெண்மீதோ மோகங்கொண்டாராம்; மோகத்தைத் திருப்தி செய்ய அவள் இடம் கொடுக்கவில்லையாம். எனவே, அம் மகாவிஷ்ணு அவளுடைய புருஷன் இறக்கும் தறுவாயைப் பார்த்துக்கொண்டேயிருந்து இறந்ததும் அவனுடைய உடலில் தான் புகுந்துகொண்டு அப் பெண்ணை அடைந்து கூடி இன்புற்றுக்கொண் டிருந்தாராம். அந்தப் பெண், எப்படியோ, தன் புருஷனுடைய உயிரல்ல அவ்வுடலில் வேலைசெய்வது என்று அறிந்தவுடனே உண்மையைக் கேட்டுணர்ந்து, மகாவிஷ்ணு மறு ஜென்மமெடுத்து தன் மனைவியைப் பிறன் கையில் விட்டுத் தன்னைப்போல் கற்புக் கெட்டவளாக வேண்டும் என்று சாபம் கொடுத்தாளாம். அதையொட்டித்தான் இராமன் அவதாரம் ஏற்பட்டு—சீதையை இராவணனுக்குப் பறிகொடுக்கவேண்டி ஏற்பட்டதாம். என்னே தெய்வத் தன்மை! பிறன் மனைவிமீது மோகிப்பதும், வஞ்சகமாக அவளை அனுபவிப்பதும் இவைதான் ஆரிய முறைப்பட்ட தெய்வத் தன்மைகள்! ஆண்கள் தன்மை இப்படியென்றால் ஆரியப் பதிவிரதைகளைப்பற்றிப் பேசினால் நமது பெண்கள் சகிக்க மாட்டார்கள்.

இதே இராமாயணத்திற்குக் கூறப்படும் மற்றொரு கதையைப் படித்தால் இன்னும் அசிங்கமாயிருக்கும். ஒருநாள் நண்பகலில் மகாவிஷ்ணு தன் மனைவியான இலட்சுமியிடம் கூடிக் கலவி செய்து கொண்டிருந்தாராம்.

அதைத் துரதிர்ஷ்ட வசமாகத் துவார பாலகர்கள் பார்க்க நேர்ந்து விட்டதாம். உடனே மகாவிஷ்ணு கோபங்கொண்டு, 'அசுரர்களாகப் பிறக்கவேண்டும்' என்று அவர் களுக்குச் சாபம் கொடுத்து விட்டாராம். அவர்கள் பகலில் படுத்து இன்புற்றதற்காகத் துவார பாலகர்களா தண்டனையடைவது? அப்படித்தான் பகலில் கூடுவதாயிருந்தாலும் காவற் காரர்கள் வெளியில் இருக்கிறார்களே, ஏதாவது அசந்தர்ப்பத்தில் வந்துவிடப்போகிறார்கள் என்று கதவையாவது மூடிக்கொள்ள வேண்டாமா? அவ்வளவு அறிவு கூடவா இல்லை அந்த



ஆரியக் கடவுள்களுக்கு! இவ்வளவு முட்டாளையா தெய்வம் என்று கூறுவது? என்னே மடத்தனம்!

ஒரு தசரதனுக்கு—60,000 மனைவிகளா? கிட்டத்தட்ட ஒரு முனிசிபாலிட்டியே அவனுடைய மனைவிகளுக்கு மட்டும் வேண்டியிருக்குமே? அவர்களுக்கு ஆள், அம்பு வேறு என்றால்—ஒரு கோயம்புத்தூர் முனிசிபாலிட்டியே போதாதே? மற்றும் குழந்தை, குட்டி என்றால் ஒரு பெரிய சென்னை கார்ப்பரேஷனே மக்களுக்குத் தேவையாகிவிடுமே? அவன் ஒரு பெண்டாட்டியிடம் ஒருநாள் வீதம் இருப்பதாக வைத்துக்கொண்டால்கூட— மறுபடி அதே பெண்டாட்டியைச் சந்திக்க,—ஒரு ரவுண்டு வர, 165 வருடமாகிவிடுமே! இத்தனை பேரையும் யாருடைய பணத்தைக் கொண்டு காப்பாற்றி இருப்பான், அந்த அரசன்? இந்த தர்பார், ஹிந்துஸ்தான்—ஆரிய தர்பாரை விட மிஞ்சிவிட்டதே! குடிமக்கள் வரிப் பணத்தைக் கொண்டுதானே இந்த போக போக்கியம்? எந்த யோக்கியனாவது, குடி மக்களின் வரிப் பணத்தை இப்படி வீணாக்குவானா? அப்படி வீணாக்குபவனிடத்துக் குடி மக்களுக்குத்தான் பற்றுதல் இருக்குமா? எவ்வளவு அயோக்கியத்தனம் செய்திருக்கிறான் இந்த தசரதன்? 60,000 போதாது-பட்ட மகிஷிகளோடு (60,002-ம்) போதாது என்று, 60,003-வதாக ஓர் இளம் மங்கையைக் கலியாணம் செய்துகொடுக்கும்படி கேகய மன்னனைக் கேட்கிறானே! அவன், தசரதன் கிழவன் ஆகிவிட்டான் என்று மறுத்தும் அதற்கு ஒப்புக் கொள்ளாமல்—தன்னுடைய பட்டணத்தையே அப் பெண்ணுக்கு (கைகேயிக்கு)த் தாரை வார்த்துக் கொடுத்து, அவளை மணந்து கொண்டு அவளுடைய பிரதிநிதியாக இருந்து ஆட்சி புரிகிறானே! இவ்வளவு நடந்திருந்தும் பின்னர் கைகேயியையும், பரதனையும் வஞ்சித்து இராமனுக்குப் பட்டம் சூட்டவேண்டுமென்று—குருவோடு, புரோகிதரோடு மந்திரி மார்களோடு சதிசெய்து சகல ஏற்பாடுகளையும் செய்கிறானே! எங்கு கேகய மன்னனுக்குத் தெரிந்தால் சண்டைக்கு வந்துவிடுவானோ என்று அவனுக்குச் சொல்லாமல்—தன் மகனும் உரிமையாளனுமான பரதன் இல்லாத சமயம் பார்த்துக் கைகேயிக்கும் தெரியாமல் பட்டத்தைக் கோசலையின் மகனான இராமனுக்குக் கொடுக்கச் சூழ்ச்சி செய்கிறானே! கடவுள் அவதாரமாகக் கருதப்படும் இராமனும் இவ்வளவு சங்கதிகள் தெரிந்திருந்தும் தகப்பனுடன் சேர்ந்துகொண்டு சூழ்ச்சி செய்கிறானே, பரதனுக்குச் சொந்தமான பட்டத்தை யடைய. இந்த நடத்தையை இராமனே ஒப்புக்கொள்கின்றானே, தான் காட்டில் இருக்கும்போது.

இவ்வளவு வஞ்சக நெஞ்சம் படைத்த இராமனைக் கடவுள் அவதாரமென்று புகழ் கிறானே கம்பன், சற்றும் மானம் வெட்கமின்றி! பரதனின் வேலைக்காரி இதில் தலையிடா திருந்தால்—பட்டம் சூட்டிக்கொண்டிருப்பானே இராமன்! பட்டாபிஷேகம் நடக்கவேண்டிய தினத்தன்று காலை தனக்குப் பட்டம் இல்லையென்று அறிந்ததும், தலையில் அடித்துக் கொண்டு அழுகிறானே! 'இது வேண்டாம்', 'அது வேண்டாம்' என்று ஒதுக்கித் தள்ளு கிறானே! விதி தவறுமா என்று அழுகிறானே! காட்டுக்கு விரைந்து சென்றுவிட்டால் பரதன் அழைத்ததும் பிறகு தந்திரமாகத் திரும்பி வந்துவிடலாம் என்று தாயாருடன் மறுபடியும் சூழ்ச்சிசெய்கிறானே! இவ்வளவையும் கூலிக் காசுக்காகப் பாடிய கம்பன் மறைத்து விட்டானே!

அரசு கிடையாது என்று இராமன் கேள்விப்பட்டதும், 'அன்றலர்ந்த செந்தாமரையை வென்றதம்மா அவன் முகம்' என்று பாடிவிட்டானே கூலிக்காரக் கம்பன்; இனத் துரோகி கம்பன்!

பார்ப்பனரின் பிச்சைக் காசுக்காக இராமாயணப் பிரச்சாரம் செய்யத் துவக்கிய தோழர்கள், துணிவிருந்தால்—இவற்றை மறுக்கட்டுமே பார்ப்போம்! எதையாவது தவறு என்று காட்டட்டுமே! நாங்கள் புத்தகங்களில் எழுதியிருக்கிறோமே, இவ்வுண்மைகளை விளக்கமாக. யாரோ ஒரு கம்ப பக்தன்கூட முன்வரக் காணோமே, எங்கள் கூற்றை மறுக்க,

படிப்பகம்

www.padippakam.com



மற்றொரு ஆரிய இதிகாசமாகிய பாரதத்தில் ஒருத்திக்கு அய்ந்து கணவன்மார் இருக்க, இராமாயணத்தில் ஒருத்திக்கு ஒரே கணவன் என்ற நியதி காணப்படுவானேன்? இடையில்—குறள் வந்து குறுக்கிட்டதுதானே!

குறளுக்குச் செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில்தான் கம்பனுக்குக் கூலி கொடுத்துக் கவி பாடும்படி செய்துவிட்டனர், ஆரியப் பார்ப்பனர்கள். வால்மிகி இராமாயணத்தைத் தன் இஷ்டம்போல் மாற்றிவிட்டான் கம்பன். எனவேதான் அவனைச் சாடவேண்டியிருக்கிறது.

வால்மீகி, ஒரு 'அரேபியன் நைட்ஸ்' கதையைப் போல்தான் இராமனுடைய கதையையும் பாடி இருக்கிறார். தசரதனுடைய குடும்பத்தை ஒரு சாதாரணக் குடும்பமாகத்தான் குறிப்பிட்டுள்ளார். அவன் வீட்டுப் பெண்களை மீன்கண்டம் விற்கும் பெண்டிர்களைப் போன்றுதான் வர்ணித்துள்ளார். மேலும், சீதையின் கற்பில் சந்தேகம் கொள்வதற்கான பல கருத்துக்களை அவர் இராமாயணத்தில் இடையிடையே கொடுத்துள்ளார். தன் மனைவி மீது சந்தேகம்கொண்டு, கர்ப்பகாலத்தில் அவளைக் காட்டிற்குக் கொண்டுபோய் விட்டு விட்டு வருவதுபோன்ற—அதாவது, சாதாரண மனிதன்கூட வெட்கம்கொள்ளக் கூடியதான பல சேதிகளை அவர் கொடுத்துள்ளார்.

திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களுள் ஒன்றேனும் ஒழுக்கக் குறைபாடுள்ளதாகக் காணப்படாது. அறிவுள்ளவர் யாரும் மறுக்கமுடியாத—வெறுக்கமுடியாத கருத்துக்களை அமைத்துத்தான் அவர் குறளை இயற்றியுள்ளார். குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கிவிடுகிறது.

அன்பர் கலியாணசுந்தரனார் திராவிடநாடு வேறு; ஆரியநாடு வேறு; ஆரியப் பண்பு வேறு என்று தெரிவித்தது போல் திராவிடநூல் வேறு; ஆரியநூல் வேறுதான். திராவிடர்கள், எப்போதுமே ஆரியர்களை—ஆரிய கலாச்சாரத்தை வெறுத்தே வந்திருக்கிறார்கள். திராவிடநாட்டை ஆரியர்களின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றப் பெரிதும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். இதனுண்மையைக் கந்தபுராண ஆரம்பத்தில் காணலாம்.

சிவபெருமானுடைய கலியாணத்தின்போது தேவர்களும், ரிஷிகளும் வந்து தென்னாடு உயர்ந்துவிட்டதென்றும், வடநாடு தாழ்ந்துவிட்டதென்றும் அதற்குப் பரிகாரம் உடனடியாகச் செய்யப்பட வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்கிறார்கள். இதிலிருந்து தென்னாட்டினர் உயர்வு, ஆரியர்களால் எவ்வளவு வெறுக்கப்பட்டது என்பது இனிது புலனாகிறது. சிவன் யார் கெட்டிக்காரன் என்று ஆலோசித்துப் பார்த்து—அகத்தியனை அனுப்பியிருக்கிறார் பரிகாரம் செய்ய. மிக மட்டமான—அதாவது சூழ்ச்சியில், தந்திரத்தில் வஞ்சகத்தில் கைதேர்ந்த ஒருவனை அனுப்பிவைக்கிறார். அவன் விந்திய மலையருகில் வரவும் அங்கு காவல் செய்துவந்த வாதாபியும், வில்வலனும் அவனைத் தடுத்து விடுகிறார்கள். அவர்கள் கந்தபுராணத்தில் சித்திரிக்கப்படுகிற சூரனுடைய தங்கையின் மக்கள் ஆவார்கள். அவர்கள் வடநாட்டிலிருந்து யார் வந்தாலும் அவர்களைக் கொன்று தின்றுவிடுகிறதாகக் கூறப்படுகிறது. அதேமாதிரியே அகத்தியனையும் தின்றுவிட்டதாகவும்—ஆனால், அவனை ஜீரணம்செய்ய முடியவில்லையென்றும், அவனுடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு அகத்தியன் வெளிப்பட்டுச் சென்றான் என்றும், அவ்வாறு சென்று தமிழ்வளர்த்தான் என்றும் வருணிக்கப்படுகிறது.

இந்தத் தமிழ்ப் புலவர்களும் ஆராய்ந்தறியாமல், அதையொட்டி, 'அகத்தியன் வளர்த்த தமிழ் என்று புகழ் பாடி விட்டனர். அகத்தியன் இங்கு வந்து, பாதிரிகள் போல் தமிழ் கற்று, நமது தர்மங்களை-ஒழுக்கங்களை மாற்றியமைத்து இருக்கக்கூடும்.

இதற்கு அவனுக்கு நன்றி காட்டும் அவ்வளவு நன்றியுடையவர்கள், நமது மடப் புலவர்கள்! நாய் நன்றி காட்டுவதெல்லாம் அன்னியனிடத்துத்தான் என்பதுபோல், பழங் காலத்து அப் பண்டிதர்களும் அன்னிய அகத்தியனுக்கே மரியாதை செய்துவிட்டனர். அந்த அகத்தியன், முதலில், தமிழ் நாட்டிலிருந்து இராவணனைத் துரத்திவிட்டதாக வேறு காணப்படுகிறது. இதற்கும்—இராவணனுடைய தம்பிக்கு இராமன் பட்டம் வாங்கிக் கொடுத்ததற்கும் ஏதேனும் பொருத்தம் இருக்கிறதா என்பதும் தெரியவில்லை. இக் கதைகளெல்லாம் 'அபிதான சிந்தாமணி'யில் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்துப் பாருங்கள்! அப்போது தெரியும்—ஆரியர் திராவிடர் போராட்டம் எப்போது, ஏன் துவங்கியது என்று!



இப்போது எப்படிச் சில திராவிடர்கள்-அறிவிழந்து ஆரிய வடவர்களையே தமது அரசியல் தலைவர்கள் என்று கொண்டு, தாம் பணியாற்றும் வகையில் ஏனைய திராவிடர்களையும், எப்படி அவர்களை நிரந்தர அடிமைகளாக வைத்திருக்க முயற்சிக்கின்றனரோ அதுபோல் வால்மீகி காலத்திலும் சில திராவிடர்கள் இருந்திருப்பதை நாம் அவரது இராமாயணத்தைப் படிப்பதன் மூலம் நன்கு அறியலாம். வாலி கொல்லப்பட்ட பிறகு, விபீஷணனைக் கொண்டுவந்து அனுமார் சேர்க்கிறார். அப்போது சுக்ரீவன் கேட்கிறான், 'அண்ணனுக்கே துரோகம் செய்யும் இவன்—நாளை உனக்கு மட்டும் துரோகம் செய்ய மாட்டான் என்று எப்படி நம்புவது?' என்று. அதற்கு இராமன் என்ன சொல்லுகிறான் பாருங்கள்.

'என் இலட்சியத்திற்கு அதைப் பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. இராவணன் தோல்விதானே—அவனது முடிவுதானே எனக்கு வேண்டியது! அதற்கு உதவி செய்யத் தகுந்தவன் யாராக இருந்தால்—எப்படிப் பட்டவனாக இருந்தால் என்ன? அவனை நண்பனாகக் கொள்ளவேண்டியதுதானே! மேலும் அவன் எப்படி எனக்குத் துரோகம் செய்யமுடியும்? அவனுக்கு வேண்டுவது அண்ணனுடைய இராஜ்யமன்றோ! அண்ணன் செத்தால்தானே அவனுக்கு இராஜ்யம் வரும்? ஆதலால், தனது அண்ணனை ஒழிக்க நமக்கு வழி கூறி உதவி செய்துதானே தீருவான்? இந்த விஷயத்தில் அவன் நமக்குத் துரோகம் செய்ய முடியாதே! அதன் பிறகு என்ன துரோகம் அவனால் நமக்குச் செய்ய முடியும்? இவனை விட்டால் இராவணனை எமக்குக் காட்டிக்கொடுக்கக்கூடிய வேறு ஆள் ஏது?' என்று சொல்லி விபீஷணனை ஏற்றுக்கொள்கிறான்.

இதேமாதிரித்தான், தம் இலட்சியத்தையே குறிக்கோளாகக் கொண்டு இன்றைப் பார்ப்பனர்களும் மானாபிமானமற்று தம் கட்சிக்கு ஆள் தேடித்திரிகிறார்கள். நமக்கு எவன் துரோகம் செய்கிறானோ அவன்தான் பார்ப்பனர்க்கு ரொம்பவும் வேண்டியவன்; மகாதேச பக்தன்; அவர்களுடைய போற்றுதலுக்கு உரியவன்—புகழ் பெறுபவன். நம்முடைய துரோகிகள் மூலந்தான் அன்று தொட்டு இன்று வரையும் அவர்கள் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். இதை இந்த நாசமாய்ப்போன துரோகம் செய்பவர்கள் உணர்ந்தால் தானே! தோழர்கள் இராமநாதனும், கே. வெங்கிடசாமி நாயுடுவும் நமது கட்சியினின்று நீங்கிச் சென்றபோது—இவர்களைக் காந்தியாருக்கு அறிமுகம் செய்தபோது, இராஜகோபாலாச்சாரியார்—அன்று அனுமார் இராமனிடம் விபீஷணனை அறிமுகம் செய்து வைத்ததுபோன்றே செய்தாரே! 'இராமநாதன் வந்துவிட்டார்; பழையபடி அந்த சரணாகதிக்கு நீங்கள் மனமிரங்கி இடமளிக்கவேண்டும். இராமர் எப்படி விபீஷணனுக்கு அபயமளித்தாரோ அதேபோன்று இவருக்கும் தாங்கள் அபயமளித்தல்வேண்டும்' என்று.

இராவணனை விட்டு விபீஷணன் நீங்கியதற்கும் சுயமரியாதைக் கட்சியைவிட்டு இராமநாதன் நீங்கியதற்கும் ஒப்புதல் காட்டி விட்டாரே இராஜகோபாலாச்சாரியார். இது போலவே வெங்கடசாமி நாயுடு விஷயத்திலும் சொன்னார். இந்த 'இராமாயண சம்பிரதாயம்' தானே அன்றுமுதல் இன்றுவரைக்கும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது!

நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! பார்ப்பனர்கள் குறளுக்கு எவ்வளவு மரியாதை செய்கிறார்கள் என்பதை? அவர்கள் பகவத் கீதையை அச்சுப் போட்டு இனாமாக வழங்கி



படிப்பகம்

www.padippakam.com



வருவதும், அதைப்பற்றிப் பெருமையோடு எங்கும் பேசிவருவதும் உங்களுக்குத் தெரியாதததல்லவே! இது ஏன் என்று நீங்கள் சிந்தித்தது உண்டா? கிருஷ்ணன் கீதையின் மூலம் நாலு சாதிமுறை உண்டென்பதையும்; அதில் பார்ப்பனர்களே முதல் சாதியினர் என்பதையும்; கடவுளுக்கும் பெரியவர் பார்ப்பனர் என்ற தத்துவத்தையும் கூறியிருப்பதோடு, எப்படியும் அதர்மம் செய்பவர்களுக்கு மன்னிப்பு உண்டு—வருணதர்மம் செய்பவர்களுக்கு மன்னிப்பு இல்லை 'என்று ஒப்புக் கொண்டிருப்பதுதான் அதற்குக் காரணம் என்பதை உணருங்கள்!

வேதாந்திகளுக்கும், பார்ப்பனர்களுக்கும் கீதையில் 1000 வரி தெரிந்திருப்பது ஏன், குறளில் 2 வரி கூடத் தெரியாதது ஏன் என்பதையும்; காவி வேட்டி கட்டிக்கொண்டு சில திராவிடர்கள் கூட கீதைப் பிரச்சாரம் செய்துவருவது ஏன் என்பதையும் யோசித்துப் பாருங்கள்! கீதை எவ்வளவு அக்கிரமத்திற்கும் முக்காடு போட்டுவிடும்—காவியுடையைப் போல். ஏன்? கீதைக்குத் தலைவனான கிருஷ்ணனே—அக்கிரமத்தின் தலைவனான காரணத்தால்.

தோழர்களே! நாம் எதிர்க்கும் நான்கு சாதி முறையைக் கடவுளின் பேரால் வலியுறுத்தத்தான் கீதையும், கிருஷ்ண பஜனையும் என்பது நினைவிருக்கட்டும்.

கீதை படிப்பவர்கள் எத்தகைய தர்மத்தையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், 'பகவானே இதைச் செய்துள்ளபோது சாதாரண மனிதனான நான் எம் மாத்திரம்?' என்றோ, 'எல்லாம் பகவான் செயல் என்றோ'—'நான் ஏன் பார்ப்பான் என்று கிருஷ்ணனிடம் கேட்டுத் தெரிந்துகொள்' என்றோ சுலபமாகப் பதில் கூறிவிடலாம். ஆனால், குறளைப் படித்தாலோ—தர்மத்தின்படி நடக்கவேண்டும்; பித்தலாட்டம் செய்ய முடியாது; பித்தலாட்டம் செய்பவரைக் கண்டாலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

குறளிலும் இன்றைய நிலைக்குப் புறம்பான கருத்துக்கள் சில இருக்கலாம். அவற்றை மாற்றிவிட வேண்டியதுதான். அத்தகைய மாற்றத்திற்கு இடந்தருவதுதான் குறள்.

குறளை முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் உட்பட யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். மாமிசம் சாப்பிடுவது மறுக்கப்பட்டிருக்கிறது என்னலாம். காய்கறி, தானியம் இவை அபரிதமாகக் கிடைக்குமானால் மாமிசம் தின்னவேண்டிய அவசியம்தான் என்ன இருக்கிறது? முகமது நபியவர்களால் கூறப்பட்டுள்ள பல கருத்துக்களைக் குறளில் அப்படியே காணலாம். முஸ்லிம்களுக்கு எதிராக அதில் ஒன்றுமே காணமுடியாது. அது மனு தர்மத்துக்கு உண்மையான விரோதி நூல் என்றே திடமாகச் சொல்லலாம். மனுதர்ம சூத்திரங்களுக்கு நேர்மாறான கருத்துக்களைக் கொண்ட குறள் அடிகளை ஏராளமாகத் திருக்குறளிலிருந்து எடுத்துக் காட்டலாம்.

மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறி யூட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள்.

எனவேதான், அதன் ஆசிரியரைக்கூட சில மதத்தினர் 'தம்மவர்' என்று உரிமை பாராட்டிக் கொள்கிறார்கள். ஜைனர் தம்மவர் என்று கூறி அவரை மொட்டைத் தலையராக்கிக் காட்டுகிறார்கள். சைவர்கள் அவரைத் தம்மவர் என்று கூறி ஜடாமுடியுடன் விபூதிப் பட்டையுடன் காட்டுகிறார்கள். அவரோ எம்மதமும் இல்லாதவராகவே தோன்றுகிறார். ஒரு இடத்தில், 'மயிரும் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை; மொட்டையும் அடித்துக்கொள்ள வேண்டியதில்லை-யோக்கியனாய் இருக்க வேண்டுமானால்' என்று கூறி இருக்கிறார். அப்படியான பெரியாரை வைணவர்கள் தம்மவர்தான் என்று கூறிக்கொண்டு, வடகலை நாமம் போட்டுக் காட்டுகிறார்கள். அவரை ஆழ்வார்களில் ஒருவராகவும் ஆக்கி விடுகிறார்கள். அவருக்கு வடகலை நாமம் போட்டது மகா மகாக் கொலைபாதகத் தனமாகும்.



திருவள்ளுவர் தவிர்த்த வேறு யாரையும் மற்ற மதத்தவர் இம் மாதிரி மதிப்பதில்லையே! இதிலிருந்தே தெரியவில்லையா—குறளில் காணப்படும் திராவிடப் பண்பு எத்தகையது என்று! இப்படிப்பட்ட திருக்குறளை விரும்புவதை விட்டு நம் நாட்டவர்கள் இராமாயணத்தை வைத்துக்கொண்டு கூத்தடிக்கிறார்களே, நியாயமா?

எவளோ ஒருத்தி சொன்னாளாம்: 'பன்னாடைக்குப் பிறந்ததெல்லாம் பந்தம் பிடிக்கிறது; பண்டாரத்துக்குப் பிறந்தது எல்லாம் மணியம் பார்க்கிறது' என்று. அதாவது மதிக்கப்படவேண்டியது மதிக்கப்படாமல்—மதிக்கப்படக்கூடாதன மதிக்கப்படுகின்றன வென்று அர்த்தம். மேற்படிப் பழமொழி எப்படி வந்ததென்றால், முன்பெல்லாம் மிராசுதார்கள் கூத்திகளை வைத்துக்கொள்வார்கள். அவர்கள் கூத்தியோடு இருந்தால் அவர்கள் மனைவிமார் ஊர்ப் பண்டாரத்தைத் துணைக்கு வைத்துக்கொள்வார்கள். தாசி வீட்டில் மிராசுதார்களுக்குப் பிறக்கும் குழந்தை தாசி மக்கள் தொழிலையொட்டி கோயிலில் பந்தம் பிடிக்கும். ஆனால், மிராசுதாரர் பேரால் பண்டாரத்திற்கு அவர்வீட்டில் பிறந்த குழந்தைகள் மிராசு பார்க்கும் என்று கற்பனைக் கதை சொல்வார்கள். இதைக் குறிப்பதுதான் இந்தப் பழமொழி.

அதுபோல், உண்மைத் திராவிடன் தீட்டிய திருக்குறள் குப்பையிலே கிடக்க—திராவிடத் துரோகி தீட்டிய இராமாயணமும், ஆரியர் தீட்டிய கீதையும் அதிகாரத்தில் இருந்துவருகின்றன.

இந்த இழிதன்மையை-மானமற்ற தன்மையை-கவலையற்ற தன்மையை உங்களிடம் முறையிட்டுக்கொள்ள வேண்டித்தான் வள்ளுவர் படத்தைத் திறந்துவைக்க ஒப்புக் கொண்டேன். குறளுக்குள் நான் இன்று புகவில்லை; மற்றொரு சமயம் எடுத்துக் காட்டுகிறேன்.

குறள், இந்து மதக் கண்டனப் புத்தகம் என்பதையும்; அது சர்வ மதத்திலுமுள்ள சத்துக்களை எல்லாம் சேர்த்து எழுதப்பட்டுள்ள 'மனித தர்மநூல்' என்பதையும் எல்லோரும் உணரவேண்டும்.

ஒவ்வொருவனும், 'நான் இந்துவல்ல; திராவிடனே-திருக்குறள் விரும்பியே' என்று கூறிக்கொள்வதில் பெருமையடையவேண்டும்; விபூதியையும், நாமத்தையும் விட்டொழிக்க வேண்டும்; புராணங்களைப் படிக்கக்கூடாது. 'நீ என்ன மதம்?' என்றால்—'குறள்மதம்' 'மனித தர்ம மதம்' என்று சொல்லப் பழக வேண்டும்.

யார் எதைச் சொல்லிய போதிலும், எது எத்தன்மையுடையதாயிருப்பினும் ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்த்து, பிறகே எது உண்மை என்பதை முடிவு செய்யவேண்டும்.

சுயஅறிவே பிரதானம் என்ற, 'வாலறிவன் நற்றாள்' என்ற வள்ளுவர் கருத்துப்படி அனைவரும் நடக்க வேண்டும். உருவ வழிபாட்டை ஒதுக்கி விடவேண்டும்.

[ஈரோட்டில், 23, 24-10-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 5-11-1948]

## 8. இராமாயண பக்தர்களுக்கு

நம் பண்டிதர்கள், 'கம்பன் தமிழபிமானமுள்ளவன்' என்றும், தமிழர் தன்மை, தமிழர் நாகரிகம், தமிழர் ஒழுக்கம், தன்மானம், நீதி முதலிய தமிழர் உயர் குணங்களை வெளிப்படுத்தவே இராமாயணம் கம்பனால் பாடப்பட்ட தென்றும் முழங்குகின்றார்கள்.

எனவே, கம்பனின் சுயமரியாதையையும் தமிழத் தன்மையையும் வெளிக்காட்ட இந்தப் பாட்டுகள் பயன்படுமென்று காட்டுகின்றனர்.

இராமனுக்கு தசரதன் முடிசூட்ட நினைத்து அதற்கு வேண்டிய காரியம் நடத்தும் போது ஆட்சிமுறைக்குரிய சில நீதிகளைக் கூறிவிட்டு, வசிட்டரை நோக்கி, 'தவத்தின்

படிப்பகம்

www.padippakam.com



களஞ்சியமே! தாங்கள் சென்று இராமனை, நாளை, இந்த நாட்டைக் காக்கும்பொருட்டு இன்றிரவு உபவாசம் இருக்கச்செய்யுங்கள்' என்று தசரதன் கூறியதாகவும், வசிட்டர் அவ்வாறே இராமனிடம் சென்று இராமனையும், சீதையையும் உபவாசம் இருக்கச் செய்த தாகவும் வால்மீகி கூறுகிறார்.

ஆனால், கம்பரோ—தசரதன் வசிட்டரை அழைத்து, 'இராமனுக்கு வேண்டுவன செய்து அரச நீதிகளை உரைத்தருள்க' என்றதாகவும், அவ்வாறே வசிட்டர் இராமனிடம் சென்று, கீழ்க்கண்டபடி நீதிகள் உரைத்தாகவும் கூறுகிறார். இதுதானா தமிழருக்கு நீதி பண்டிதர்களே கருணைகாட்டிக் கூறுங்கள்.

1. 'கரியமாலினும் கண்ணுத லானினும்
உரியதாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோரைந்தினும் மெய்யினும்
பெரியரந்தணர் பேணுதி யுள்ளத்தால்'

அதாவது, திருமால், சிவன், நான்முகன், அம்பூதம், வாய்மை ஆகியவர்களைக் காட்டிலும் அந்தணர்கள் பெருமையுடையவர்கள்; ஆகையால் அவர்களை உள்ளன்போடு வழிபடுவாயாக என்றும்,

2. 'அந்தணாளர் முனியவு மாங்கவர்
சிந்தையாலருள் செய்யவுந் தேவரில்
நொந்துளாரையும் நொய் துயர்ந்தாரையும்
மைந்த எண்ணவரம்பு முண்டாங்கொலோ'

அதாவது, அந்தணர்களின் கோபத்தால் அழிந்தவர்களையும், அந்தணர்கள் அருளினால் செல்வாக்குப் பெற்றுயர்ந்தவர்களையும் கணக்கிட முடியாது என்றும்;

3. 'அனையராதலினைய விவ் வெய்யதீ
வினையினீங்கிய மேலவர் தாளிணை
புனையுஞ் சென்னியையாய்ப் புகழ்ந் தேத்துதி
இனிய கூறி நின்றேயின செய்தியால்'

அதாவது, அந்தணர்கள் இத் தன்மையுடையவராக இருத்தலினால், தீவினை செய்யாது உயர்ந்தவர்களாகிய அவ்வந்தணர் பாதங்களில் உன் தலை படும்படியாக வணங்கி, அவர்களைப் புகழ்ந்து, அவர்களிடம் இனிய சொற்களைக் கூறி, அவர்களிடும் கட்டளைப்படி நடப்பாய் என்றும்,

4. 'ஆவதற் கும்மழிவதற் கும்மவர்
ஏவதிற் கும்விதியு மென்றாலினி
யாவதெப் பொருளிம்மையு மம்மையுந்
தேவரைப் பரவுந்துணை சீர்த்ததே'

ஒருவன் செல்வமடைவதற்கும் அழிவதற்கும் காரணமான விதியும், அந்தணர்களின் கட்டளைப்படியேதான் நடக்கும். ஆகையால் இப் பிறப்பிற்கும், மறு பிறப்பிற்கும் (அவர்களை விடுத்தால்) வேறு பயன் ஏது? எனவே, அந்தணர்களை வணங்குதல் தேவர்களை வணங்குதல் போலச் சிறந்ததாகும் என்றும் கூறி அந்தணர் பெருமையை இவ்வாறு கூறுகிறார்.

போதுமா? இன்னமும் வேண்டுமா?

['குடிஅரசு'—கட்டுரை—12-2-1944]



'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது ஒரு பழமொழியாகும். இது இரு கட்சி யாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய பழமொழியாகும்.

எந்தெந்த இரு கட்சியார் என்றால், பஞ்சேந்திரியங்களுக்குப் புலனாவதைத் தவிர வேறு வஸ்து கிடையாது என்கின்ற முடிவைக்கொண்ட 'மெடீரியலிஸ்டு' (Materialist) என்னும் கட்சியாரும்; பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாத ஒரு வஸ்து இருக்கிறது என்கின்ற முடிவைக்கொண்ட 'ஸ்பிரிச்சுவலிஸ்ட்' (Spritualist) என்னும் கட்சியாரும் ஆகிய இரு கட்சிக்காரர்களும்—அதாவது 'நாத்திகர்களும்', 'ஆத்திகர்களும்' ஆகிய இரு கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய பழமொழியாகும்.

இந்தப் பழமொழியின் கருத்து என்னவென்று தெரிந்திருக்கின்றோமென்றால், அன்னியருக்குக் கேடு செய்ய வேண்டுமென்றோ, கேடு உண்டாக்க வேண்டுமென்றோ நினைப்பவன் கெட்டுப்போவான் என்பதாகும்.

இதை ஆத்திகர்கள் எந்த முறையில் ஒப்புக்கொள்கின்றார்கள் என்றால், மனிதர் களில் ஒவ்வொருவருடைய நடவடிக்கைகளையும் எண்ணங்களையும் தனித்தனியே கவனித்து, அந்தந்த நடவடிக்கைக்கும் எண்ணத்துக்கும் தகுந்த பலனைக் கொடுப்பதற்கு சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் என்பதாக ஒரு ஜீவனோ ஒரு சக்தியோ உண்டு என்றும்; அது, பிறருக்குக் கேடு செய்தவனையும் கேடு நினைத்தவனையும் அறிந்து அப்படிப்பட்டவனுக்குத் தண்டனையாகக் கெடுதி செய்வதனால்—அவன் கெடுவான், கெட்டுப்போவான் என்றும் கருதுகிறார்கள்.

நாத்திகர்கள், அதாவது சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் என்பதாக ஒரு ஜீவனோ அல்லது வஸ்துவோ ஒரு ஆவியோ இருந்துகொண்டு, மனித சமூகத்தின் ஒவ்வொரு மனிதனின் நடவடிக்கைகளையும், எண்ணங்களையும் கவனித்து அதற்கேற்ற பலன்களை அவர்களுக்குக் கொடுத்து வருகிறார் என்பதை முழுதும் நம்பாதவர்களின் வர்க்கம், இந்தக் கெடுவான் கேடு நினைப்பான் என்கின்ற பழமொழியை எப்படி ஒப்புக் கொள்கின்றார்கள் என்றால்,—சமூகவாழ்வில் பிறருக்குக் கேடுசெய்கின்ற மனிதனும் கேடு நினைக்கின்ற மனிதனும் பிற மனிதர்களால் கேடு செய்யப்படுவதும் மற்றும் இவனது கெட்ட செய்கையைக் கண்ட, கேட்ட பிறரால் ஒதுக்கப்படுவதும், துவேஷிக்கப்படுவதும் பெரிதும் சகஜமான சம்பவங்களல்லவா? ஆகவே, பிறருக்குக் கேடுசெய்ய நினைத்து, பிறரால் வெறுக்கப்படவும், துவேஷிக்கப்படவும் ஆன மனிதன் கேட்டிற்கு ஆளாவதும் சகஜமாகும்.

'பெருமையும் சிறுமையும் தான்தர வருமே' என்ற பிரத்தியட்சப் பழமொழிப்படியே, 'நன்மையும் தீமையும் தான்தர வருமே' என்பதும் யாராலும் ஒப்பமுடிந்த விஷயமாகும்.

ஆனால், இந்த வியாசத்தில் இப் பழமொழிக்கு நாத்திக சம்பிரதாயமான கருத்தை ஆதாரமாய் எடுத்துக்கொள்ளாமல், ஆஸ்திக சம்பிரதாயமான கருத்தை ஆத்திகர்கள் என்பவர்களே சரியானபடி ஏற்றுக்கொள்கின்றார்களா என்ற பிரச்சினையை முக்கியமாய் வைத்து, வேடிக்கைமுறையில், இராமாயணத்தின் நடவடிக்கை எப்படிப்பட்டது; அதைப் பிறர் எப்படி மதிக்கிறார்கள் என்கின்றவைகளை எடுத்துக்காட்டவும், இந்தப் பழமொழி ஆத்திக சம்பிரதாயப்படி பார்ப்பவருக்கு இராமாயணம் என்பது ஒரு படிப்பினையாகும் என்பதைக் காட்டவும் எழுதப்பட்டதாகும்.

இராமாயணக் கதைப்படி, 'தசரதனும், இராமனும் பரதனுக்குக் கேடு நினைத்ததால் கெட்டார்கள்' என்பது வியாசத்தின் கருத்தாகும்.

இராமாயணக் கதைப்படிக்கு, தசரதனுக்கு நான்கு ஆண் பிள்ளைகள். அவர் களுள் இராஜ்ய பட்டமானது பரதனுக்குச் சொந்தமானது. எப்படியெனில், பரதனுடைய தாயாராகிய கைகேயியை தசரதன் மணக்க ஆசைப்பட்டு, கேகய ராஜனிடம் சென்று

www.padippakam.com



அவனது பெண்ணான கைகேயியைத் தனக்குத் தரும்படி கேட்க, கேகய மன்னன் தசரதனின் யோக்கியதையையும், நடத்தையையும் தெரிந்து, 'உனக்கு ஏற்கனவே பல ஆயிரக் கணக்கான மனைவிகள் இருப்பதால் நான் என் மகளை உனக்குக் கொடுக்கமுடியாது' என்று மறுத்துவிட்டான். இதற்கு தசரதன், அந்தப் பெண்மேல் உள்ள ஆசையால் கேகய மன்னனிடம் வணங்கி, 'அய்யா, எனக்கு எத்தனை மனைவிகள் இருந்தாலும் உனது மகளையே நான் பிரதான மனைவியாய்க் கொள்வேன்; உனது மகள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே இராஜ்ய பட்டாபிஷேகம் செய்வேன்' என்று வாக்குத் தத்தம் செய்து கொடுத்து கைகேயியை மணந்துகொண்டான்.

அந்தப்படி மணந்துகொண்ட தசரதன் கைகேயியையே பிரதான நாயகியாக அனுபவித்துவந்து, அவள் மூலம் ஒரு ஆண் குழந்தையையும் (பரதனை) பெற்று அது வளர்ந்து பெரிதாகிப் பட்டத்துக்கு யோக்கியமானவுடன், தசரதன் கெட்ட எண்ணங் கொண்டு, அதாவது இராஜ்ய பட்டாபிஷேகத்தை பரதனுக்குக் கொடுக்காமல் இராமனுக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைத்துவிட்டான்.

இவ்விதமான கெட்ட எண்ணம் தசரதனுக்கு உண்டாகும்படியாகவே இராமனும் மிக்க தந்திரமாக யோக்கியன் போலவும், தகப்பனாருக்கு மிகவும் வேண்டியவன் போலவும் நடந்துவந்ததுடன், தகப்பனாரின் ஆசைக்கு ஏற்றவண்ணமாகவும் நடந்து வந்திருக்கிறான்.

இருவரின் கெட்ட எண்ணங்களும் முதிர்ந்து, கடைசியாக ஒருநாள் பட்டத்துக்கு (தசரதன் வாக்குறுதிப்படி) உரியவனாகிய பரதனை அவனது பாட்டனார் ஊருக்கு அனுப்பி விட்டு, அவன் இல்லாத சமயம் பார்த்துத் திடீரென்று ஒரு நாளில் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாய் ஏற்பாடு செய்து, அவசர அவசரமாய் (திருட்டுத்தனமாய்)ப் பட்டாபிஷேகக் காரியங்கள் செய்ய தசரதன் சூழ்ச்சி செய்துவிட்டான். இராஜ்ய பட்டமானது பரதனுக்கு வெகு காலத்துக்கு முந்தியே தன் தகப்பனால் வாக்குக் கொடுக்கப் பட்டாய்விட்டது என்பது இராமனுக்குத் தெரிந்திருந்தும், அதைச் சிறிதாவது இராமன் இலட்சியம் செய்து தகப்பனிடம் மறுத்துக் கூறாமலும்—அதுதான் போகட்டும் என்றாலும் சரியொத்த சகோதரனான பரதன் ஊரில் இல்லாதபோது அப்படிப்பட்டதொரு முக்கியமான காரியத்தைச் செய்வது யோக்கியமான காரியமாகாது என்றாவது தகப்பனுக்குப் புத்தி கூறாமலும், தான் புத்தி கூறியும் தகப்பன் ஒரு சமயம் இராமனின் யோசனையை ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று சொல்லி இருந்தபோதிலும்கூட—'பட்டத்துக்கு உரியவனும் எனது அன்புள்ளவனுமான சகோதரன் பரதன் இல்லாமல் இப்படிப்பட்ட காரியத்துக்கு நான் சம்மதிக்கமாட்டேன்' என்று இராமன் ஒரு வார்த்தையாவது சொல்லாமலும், ஆளில்லாத சமயம் பார்த்துத் திடீரென்று தகப்பன் சொன்னவுடன் தானும் சம்மதித்துப் பேராசையுடன் பட்டம் கட்டிக்கொள்ள இசைந்தான் என்றால், அவ்விருவரும் அதாவது தசரதனும் இராமனும் பரதனுக்காகக் கேடு நினைத்தார்கள் என்ற முடிவின் பேரில், ஆத்திகர்கள் கொள்கைப்படியே, கேடு நினைத்தவர்கள் கெடாமல் இருக்க முடியாது என்பதை ஆத்திகர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அன்றியும், இந்தச் சூழ்ச்சியை அறிந்த கைகேயியானவள், அதாவது பரதனுடைய தாயாரானவள், தன் புருஷனான தசரதனுக்குப் பலவிதங்களில் எடுத்துச் சொல்லியும், பிடிவாதம் செய்தும், ஒன்றும் கேட்காமல் தசரதன் இவ்வுண்மைகளை மறைத்து, கைகேயியைக் கெட்டவளாக்கி, உலகம் முழுவதும் கைகேயியை நிந்திக்கும்படி செய்து, தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முயற்சிக்கிறான்.

இச் சூழ்ச்சியும், பிடிவாதமும் எல்லாம் இராமன் அறிந்திருந்தும் பட்டாபிஷேகத்தை ஒத்திவைக்கக்கூடத் தகப்பனுக்கு யோசனை சொல்லாததால், கடைசியாகக் கேடு நினைத் தவர்கள் கெடவேண்டியதாகவே நேர்ந்துவிட்டது.



அதாவது எவ்விதம் என்றால், தசரதன் தனது சூழ்ச்சி வெளிப்பட்டுவிட்டதால், இனி தான் அரசனாய் இருந்து ஆட்சி புரிவதில் உலகம் தன்னை மதிக்காது என்றும், இகழும் என்றும் கருதித் தற்கொலை செய்துகொண்டு இறக்கவேண்டியவனாகிவிட்டான்.

இராமனுடைய பேராசையையும் சூழ்ச்சியையும் நன்றாய் அறிந்த கைகேயி, இராமனை இராஜ்யத்திற்குள் இருக்கவிட்டால் பரதனுக்கு ஏதாவது கேடு செய்து விடுவான் என்று கருதி, இராஜ்யத்தை விட்டு வெளியேறும்படி செய்துவிட்டாள். ஆனால், இராமன் அந்தப் பழியுடன் வேறு எங்கும் போய் வாழ்வதற்கு முடியாமல் காட்டிற்குப் போக வேண்டியதாய் முடிந்துவிட்டது. காட்டிற்குப் போனவனும் அங்கும் சும்மா இல்லாமல் மறுபடியும் எப்படியாவது அயோத்திக்கு வந்து அரசாளவேண்டும் என்கின்ற ஆசையை வைத்துக்கொண்டு, அதற்கு வேண்டிய சூழ்ச்சிகளையெல்லாம் செய்து, பரதனையும் மோசம் செய்து, தனது செருப்புகளைக் கொடுத்தனுப்பி அந்த செருப்புகளை வைத்துத் தன் பேரால் அரசாள வேண்டும் என்று சொல்லி, இராஜ்ய சுதந்திரத்தைத் தனக்கு ஆக்கிக் கொள்ள நினைத்ததால், காட்டிலும் இராமனுக்குப் பல தொந்தரவுகள் ஏற்பட்டதோடு இராமனால் கைகேயிக்கு எவ்வளவு கெட்ட பெயர் ஏற்பட்டதோ அதைவிட அதிகம் கெட்ட பெயரும் இழிவும் இராமன் பெண்சாதியான சீதைக்கும் ஏற்பட்டது.

சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போனதும், இராமன் இராவணனைச் சூழ்ச்சியால் கொன்றதும் எப்படி என்றால், இராவணனைக் கொன்று விட்டால் அந்தப் பட்டத்தை இராவணன் தம்பியாகிய விபீஷணனுக்குக் கொடுப்பதாகவும், வாலியைக் கொன்று அந்தப் பட்டத்தை வாலியின் தம்பி சுக்ரீவனுக்குக் கொடுப்பதாகவும் இப்படியெல்லாம் 'தில்லு முல்லு' செய்து ஜெயித்து தன் பெண் சாதியை (சீதையை) அழைத்து வந்ததும், அவளை இராமன் வைத்து வாழமுடியாமல் இராமனாலேயே சீதைக்கு விபசார தோஷம் கற்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டும், பிறகு அதைக்கூட இலட்சியம் செய்யாமல் சேர்த்துக்கொண்டும், அப்படிச் சேர்த்துக் கொண்டதும் விபசார தோஷத்தைப் பொருட்படுத்தாமலோ, அல்லது விபசார தோஷத்துக்கு சீதை ஆளாக வில்லை என்ற பரிசுத்த எண்ணத்தோடல்லாமல், தான் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்போது பெண் சாதி இல்லாமலும் அல்லது பெண் சாதியை விபச்சார தோஷத்திற்காக வெளிப்படுத்திவிட்ட இராமன் என்கின்ற பழியுடன் இருக்கக்கூடாது என்றும் கருதி, தனக்குப் பட்டாபிஷேகம் ஆகும்வரை கூட வைத்திருப்பது போல் பாசாங்கு செய்து, பட்டாபிஷேகம் ஆனபின் சீதையினது கர்ப்பத்தைச் சந்தேகப் பட்டுத் தானாய் தள்ளினதாய் இருக்கக்கூடாது என்று கருதி, அதற்கும் ஒரு சூழ்ச்சி செய்து, அதாவது சீதையின் கர்ப்பத்தைப்பற்றி ஒரு வண்ணான் குற்றம் சொன்னதாக ஏற்பாடுசெய்து—ஏனென்றால் அந்தப்புரத்தில் ஸ்தீரிகள் கர்ப்பவதியாய் இருக்கும் செய்தி வெளியில் முதல்முதல் வண்ணார்களுக்குத்தான் தெரியுமாதலால் அந்த வண்ணான்தான் சொன்னான் என்றால் உலகோரும் சீதையும் நம்புவார்கள் என்று அவன்மீது பழிபோட்டு—பெண்சாதியைக் கர்ப்பத்துடன் காட்டுக்கு அனுப்பவேண்டியதாகி, காட்டில், அந்தம்மாள் (சீதை) இராமன் இல்லாமலேயே, 'ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பதுபோல மற்றொரு பிள்ளையும் பெற்றுக்கொள்ள நேர்ந்து, அந்த இரண்டு பிள்ளைகளாலேயே இராமன் யுத்தத்தில் தோல்வி அடைந்து, கடைசியாக இவ்வளவு வியாகூலங்களுடன், கஷ்டங்களுடன், பழிகளுடன் இராமன் சாகவேண்டியதாக ஏற்பட்டது.

இராமன் என்றைய தினம் பரதனை ஏய்த்து, இராஜ்யப் பட்டாபிஷேகம் பெற வேண்டுமென்று நினைத்தானோ, அன்று முதல் சாகும்வரை துக்கத்தையும், அவமானத்தையும், கஷ்டத்தையுமே அதிகமாய் அடைந்தானென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே, 'கெடுவான் கேடு நினைப்பான்' என்னும் பழமொழியை ஆத்திக தர்மப்படி நம்புகின்றவர்கள், இராமாயணக் கதையை இப் பழமொழிக்கு ஒரு உதாரணமாய்க்கொள்ள ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படியில்லாவிட்டால், இக் கேடு நினைத்த தசரதன், இராமன்

படிப்பகம்

www.padippakam.com



இருவரும் ஏன் கேடு அடைந்தார்கள் என்பதற்குச் சமாதானம் சொல்லவேண்டும். தசரதனும் இராமனும் கேடு நினைக்கவில்லையென்றால், கதையில் உள்ளபடியான கேடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் அவர்களுக்கு ஏன் ஏற்பட்டன என்பதற்காகவாவது சமாதானம் சொல்லியாக வேண்டும்.

['விடுதலை'-கட்டுரை—10-3-1953]

## 9. அதிசயப் பிறவிகள், நம் புலவர்கள் !

தங்கள் இனத்தை இழிவுபடுத்துவதற்கென்றே (இன) எதிரிகளால் இயற்றப்பட்ட கற்பனைக் கதைகளில் வரும் பாத்திரங்களைத் தங்கள் கடவுள்களாகவும்; அவற்றின் நடத்தைகளைத் தாங்கள் பின்பற்றும் கொள்கைகளாகவும்; அவற்றைத் தங்கள் இலக்கியங்களாகவும் கொண்டு போற்றும், பின்பற்றும் அவற்றில் புலவர்களாகப் பெயர் பெற்று வாழும் இழிமக்களை—இந்த இந்திய நாடு, தமிழ்நாடு தவிர்த்து வேறு எந்தக் காட்டுப் பிரதேசங்களிலுங்கூடக் காணமுடியாது.

இந்திய மக்களுக்கு அறிவில்லாமல் போனதுடன் மான, ஈன உணர்ச்சிகூட இல்லாமல் போனதற்கும், இந்திய மக்கள் 20 ஆம் நூற்றாண்டில் காட்டுமிராண்டிகளாய் இருப்பதற்கும் காரணம் இந்த இழி குணங்களேயாகும்.

நம் நாட்டில் தேவதாசி என்ற முறை இருந்தபோது அந்த இனத்தைச் சேர்ந்த ஒருவன், 'எங்கம்மா உங்களைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னார்கள்' என்பான்.

மற்றொருவன், 'எங்க அக்காள் உங்களைப் பிடியாய்ப் பிடித்துக் கூட்டிவரச் சொன்னாள்; இதோ கடிதம் கொடுத்தனுப்பியிருக்கிறாள்' என்பான்.

மற்றொருவன், 'என் மகள், நீங்கள் வரவில்லை என்று மூன்று நாட்களாகச் சாப்பிடவேயில்லை; படுத்த படுக்கையில் கிடக்கிறாள்; நீங்கள் வந்தால்தான் சோறு தின்பேன் என்று பட்டினி கிடக்கிறாள்; இந்தாங்கோ அவள் கொடுத்தனுப்பிய கடிதம்' என்று கடிதம் கொடுத்துக் கெஞ்சுவான்.

இந்தப்படியான காரியம் சர்வ சாதாரணமாக இருந்தது—அக் காலத்தில். ஆனால், அதைச் சொன்னாலே இக் காலத்தில் அந்தப்படி நடந்தவர் எல்லோரும் வெட்கப்படுவார்கள். கோபித்துக்கொள்வார்கள். அக் காலத்தில் அத் தேவதாசிகளின் தம்பியும், மகனும், அப்பனும் நடந்துகொண்டது போலவேதான் இன்றைய நம் 'தமிழறிஞர்களும்,' 'புலவர்களும்,' 'மேதாவிகளும்' நடந்து கொள்கிறார்கள். அப்படி நடந்துகொள்வதிலுங்கூட, ஒரு சிறிது கூட வெட்கப்படுவதில்லை; அதிலுள்ள இழிவுகளைப் பற்றி இலட்சியம் செய்வதேயில்லை.

எப்படியென்றால், இராமாயணத்தை ஆரியர்-திராவிடர் போராட்டம் என்றும்; 'இராமாயணக் கதை திராவிடரை இழிவுபடுத்துவதற்காகவே ஆரியர்களால் கற்பனை செய்யப்பட்ட கட்டுக்கதை' என்றும்; 'இராமாயணக் கதை ஆரியருக்குத் திராவிடர்கள் மீது இருந்த வெறுப்பைக் காட்டுவதற்கென்றே ஆரியரால் (பார்ப்பனரால்) புனையப்பட்ட கதை' என்றும்; 'இராமன் ஆரியத் தலைவன்—இராவணன் திராவிட அரசன்' என்றும்; மற்றும் 'இராமாயணம் புத்தனுக்குப் பின் கற்பனைசெய்து பார்ப்பனரால் எழுதப்பட்டது' என்றும்; 'இராமாயணம் நடந்த கதையல்ல, சரித்திரத்தில் பட்டது அல்ல, நீதியும் அல்ல' என்றும்; 'இராமாயணம் பார்ப்பனத் தர்மத்துக்கு எடுத்துக்காட்டு' என்றும்; 'இராமாயணம் பார்ப்பனர்கட்கு அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைத் தொகுப்பு' என்றும்—

மற்றும் பலவாறாகச் சரித்திர ஆசிரியர்கள் முதல் ஆய்வாளர்கள் உட்படப் பார்ப்பனராலும், வெளிநாட்டு அறிஞர்களாலும், சுயமரியாதை உணர்ச்சியுள்ள தமிழறிஞர்களாலும் ஆதாரங்களுடன் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு ஆதாரங்களும் நம்மிடம் இருக்கின்றன. அவைகட்கு அன்றுமுதல் இன்றுவரை எந்த அறிவாளியும்—தமிழறில் எந்தப் புலவரும் ஆட்சேபணையோ, மறுப்போ கூறியது கிடையாது.



மற்றும், இந்த இராமாயணத்தைப் பற்றி அதில் காணப்படும் ஆபாசங்களுக்கு, ஒழுக்கக்கேடான காரியங்களுக்கு, அநீதிகளுக்கு நானறிந்தவரை எந்தப் புலவரும் மறுப்புக் கூறியதும் கிடையாது.

இப்படிப்பட்ட நிலையிலுள்ள இராமாயணத்தைக் கடவுள் கதையாகப் பாவித்து, பாமர மூடமக்களிடம் புலவர்கள் புகுத்தி அதில் பயன் பெறுகிறார்கள் என்றால்—இதற்கு எதை ஒப்பிடுவது? இப் புலவர்களுக்கு எதை உதாரணமாக்குவது?

தோழர்களே! சிந்தியுங்கள்! நன்றாய்ச் சிந்தியுங்கள்.

புலவர்களுக்குப் புத்தி, மானம் இல்லாவிட்டாலும் நீங்களாவது கொளுத்துங்கள் கம்ப இராமாயணத்தை!

['விடுதலை'-தலையங்கம்—27-10-1972]

## 10. பாரதக் கதை மெய்யா?

இன்றைய இந்துக்களுக்கும், திராவிடர்களுக்கும் (தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளிகளுக்கும்) பாரத, இராமாயணக் கதைகள்தாம் மதமாக, ஆத்திகமாக, கடவுள் நம்பிக்கையாக இருந்து வருகின்றன.

பாரதம், இராமாயணம் என்பவை கடவுள் (விஷ்ணு), தேவர் அல்லாத மக்களை, 'அசுரர்களை', 'இராட்சதர்களை'க் கொல்லுவதற்காக மீன், ஆமை, பன்றி, சிங்கம், பார்ப்பனன், சத்திரியன், 'சூத்திரன்' (இடையனாக) முதலிய பிறவிகளாய் அவதரித்த நிகழ்ச்சிக் கதைகளில் இரண்டு கதைகளாகும். ஆனால், இந்த ஒன்பது, பத்துக் கதைகளில் இராமாயணம், பாரதம் என்பவையும் இராமன், கிருஷ்ணன் என்பவர்கள் மாத்திரமும் எப்படி இவ்வளவு பிரபலமடையவும், அந் நிகழ்ச்சிகளே இந்து மதக்காரர்களுக்கு முக்கிய தர்ம வழிகாட்டியாயும் இவர்கள் கடவுள்களாகவும் இருக்கக் காரணம் என்ன என்பதை இதுவரை யாருமே விளக்கவில்லை. இவற்றின் காலம் யுகக் கணக்காய் பத்து இலட்சக் கணக்கான காலமாகும். இவைகளுக்கு ஆதாரம் என்ன, சாட்சியம் என்ன என்பதற்கு எந்த ருஜுவுமே கிடையாது. இவைகள் சம்பந்தப்பட்ட கதைகள் ஆதாரங்கள் பலப் பல. அவையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை.

இந்த நிலையிலுள்ள பாரத இராமாயணக் கதைகளுக்கு சுமார் 2000, 3000 ஆண்டுகளுக்கு உட்பட்ட சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இராமாயணத்தில் சாதிகள், சாதி தர்மங்கள், சோழ அரசர், பாண்டிய அரசர், மதுரையம்பதி, இலங்கை, புத்தன் முதலியவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதுபோலவே பாரதத்திலும் பல தமிழரசர்களும், நகரங்களும், நிகழ்ச்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் பாரதக் கதை நடந்ததாகவே மக்களால் கொள்ளப்படுகிறது. அதுவும் இராமாயணக் கதைக்குப் பின்னிட்டுக் கலியுகத்திற்கு முன்னால், அதாவது 5,500 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக் கதையில் சிவன், விஷ்ணு, பிர்மா முதலியவர்களும் நாரதன், வசிஷ்டன் அகத்தியன் முதலியவர்களும் சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மற்றும் ரிஷிய சிருங்கர், நளகூபன் முதலியோர் சம்பந்தப்பட்ட கதைகளும் பாரதத்திலும், இராமாயணத்திலும் இருக்கின்றன.

பாரதக் கதையில் பாண்டவர்கள் சாதாரண மனிதர்களாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அதில் வரும் கிருஷ்ணனுக்கு மனிதத் தன்மைக்கு மேற்பட்ட அசாத்தியமான, அற்புதமான காரியங்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



பாண்டவர்கள் சூரியன், யமன், வாயு, இந்திரன், அஸ்வினி, தேவர்கள் முதலியவர்களுக்குப் பிறந்ததாகக் கூறப்படுகின்றது. இவர்கள் எந்த உலகத்தில் இருப்பவர்கள்? பாண்டவர்கள் பிறப்புக் கதையோ, பராசரன் மகன் வியாசன்; வியாசன் பேரன்மார்கள் பாண்டவர்கள் என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பராசரன் வசிஷ்டன் பேரன்; வசிஷ்டன் பிரமன் மகன், வசிஷ்டன் பறைச்சியை மணந்து (அந்தக் காலத்தில் பறைச்சி, பறைச் சாதி இருந்ததா:) கொண்டான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது (விரிக்கின் பெருகும்!. இவைகளையெல்லாம் நம்பினால்தானே பாரதக் கதையை நம்பமுடியும்?

பராசரன் மகன் வியாசன் என்றால் மச்சகந்தி கதையை நம்பவேண்டும்.

வியாசன் எழுதிய பாரதம் என்றால் வியாசன் சொல்லக் கணபதி எழுதினான் என்பதை நம்பவேண்டும்.

கணபதியை நம்பவேண்டுமானால் கணபதி பிறப்புக் கதையை நம்பவேண்டும்.

இவ்வளவையும் நம்பினால்தான் பாரதம்; பாரதத்தை நம்பினால்தான் கிருஷ்ணன்; கிருஷ்ணனை நம்பினால்தானே கீதை முதலியவை மெய்யாகவேண்டும்? மற்றும், தமிழர்களின் இலக்கியங்களான குறள் முதல் எல்லா இலக்கியங்களிலும் மேற்கண்ட இராமாயணம், பாரதம் முதலிய கதைகள் புகுத்தப்பட்டிருக்கின்றனவே!

இவை மாத்திரமல்லாமல், இன்று சைவர், வைணவர் என்று சொல்லிக் கொள்ளுகிற தமிழர் எல்லோராலும், 'தமிழ் மறை' என்று பாராட்டி ஸ்தோத்திரம் செய்யப்படுகிற தேவாரம், திருவாசகம், பிரபந்தம் முதலிய யாவும் பெரிதும் மேற்கண்ட இராமாயணம், பாரதம் முதலிய கதைகளில் சம்பந்தப்பட்ட கதா நாயகர்களையும் அவர்கள் செய்கைகளையும், நடப்புக்களையும் பற்றிக் குறிப்பிட்டுப் பாடப்பட்ட பாடல்களாகத்தானே இருக்கின்றன?

இந்த நிலையில் நாம் எப்படி நம்மை சூத்திரர்கள் அல்ல என்று சொல்லிக்கொள்ள முடியும்?

நம் புலவர்களால் நமது சமுதாயத்திற்கு இதுவரை ஏற்பட்ட பயன் என்ன? வையாபுரி பிள்ளை, சேதுப்பிள்ளை, வரதராஜன், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஏ. சி. செட்டியார் மற்றும் மறைமலை அடிகள் முதலிய எவ்வளவோ பெரும் புலவர்களும், வித்தகர்களும் இருந்தும் நம் சமுதாயத்திற்கு எந்தச் சிறு முன்னேற்றமும் நன்மையும் ஏற்படவில்லையே!

['விடுதலை'-தலையங்கம்—21-1-1969]

## 11. இதிகாசங்களும் ஒழுக்கமும்

இதிகாசங்களில் சிறந்தவையாக இராமாயணமும், பாரதமும் விளக்கப்படுகின்றன.

இவை பக்தியை அடிப்படையாய்க் கொண்டவையா? அல்லது மனிதன் நடந்து கொள்ள வேண்டிய நடத்தைகளை, ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையா? என்று சொல்லமுடியாத தன்மையில்—இரண்டிற்கும் பயன்படாத தன்மையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விரண்டு நூல்களில் எது முந்தியது? எது பிந்தியது? என்பது விவாதத்திற்குரியதாகவே இருந்துவருகிறது.

(Evolution-Theory) எவலுஷன்-தியரி என்னும் வளர்ச்சிக் கொள்கைப்படிப் பார்ப்போமானால், பாரதக் கதை முந்தியதாகவும், இராமாயணக் கதை பிந்தியதாகவும் தான் சொல்லியாக வேண்டும்.



ஆனால், எந்தக் காரணத்தாலோ இராமாயணக் கதை முந்திய நடத்தையாகவும், பாரதக் கதை பிந்திய நடத்தையாகவும் புனையப்பட்டு விட்டது.

இந்தக் கட்டுரையில் அதைப்பற்றிய விவாதத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, அந்தக் கதைகளால் ஏற்படும் பயன் என்ன என்பதைப் பற்றி ஆராயலாம் என்றே கருதி இதை எழுதுகிறேன்.

இதை வலியுறுத்த விஷ்ணுவுக்கு—விஷ்ணு மனிதனாகப் பிறப்பதற்குப் பல சாபங்களைப் பல சம்பவங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அச் சம்பவங்கள் யாவும் ஒழுக்கம் அற்றவையாகவே கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், விஷ்ணுவுக்குக் கடவுள் தன்மையோ, இராமனுக்கு மனிதத் தன்மையோ இராமாயணத்தில் கற்பிக்கப்படவில்லை என்று உறுதியாய்க் கூறலாம். எப்படியெனில், விஷ்ணு மனிதனாகப் பிறப்பதற்குப் புராணங்களில் பல காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில்,

விஷ்ணு ஒரு கற்புள்ள அசுரப் பெண்ணைக் கற்பழித்து விட்டதால், அந்தப் பெண்ணின் சாபத்தால் மனிதனாகப் பிறந்தான். (இது கந்தபுராணம் தக்க காண்டத்தில் உள்ளது.)

மற்றொன்று: விஷ்ணு தன் மனைவியுடன் ஒரு பிரதோஷ வேளையில் சுகித்துக் கொண்டிருக்கும் போது (புணர்ந்து கொண்டிருக்கும் போது) அற்புதர்க்கன் என்னும் சிவகணங்களின் தலைவன் அங்கு சென்று, 'என்ன, நீ இப்படிச் செய்கிறாய்?' என்று கேட்டான். அதற்கு விஷ்ணு, 'நீ யாரடா இப்படிக் கேட்பதற்கு?' என்றான். இதை அந்த சிவகணத் தலைவன் நந்தியிடம் தெரிவித்தான். நந்தி உடனே விஷ்ணுவுக்கு—பூமியில் பிறந்து மனைவியைப் பிரிந்து தவிக்கும்படி சாபம் கொடுத்தான். (இது 'சிவரகசிய'த்தில் இருக்கிறது.)

மற்றொன்று: இதுபோலவே மாலை நேரத்தில் விஷ்ணு தன் மனைவியைப் புணர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்த பிருகு முனிவர்—மேலும் சென்ற போதும் விஷ்ணு நீங்காமலும், முனிவரை வரவேற்காமலும் இருந்ததால் பிருகு முனிவர் சாபமிட்டார். (இதுவும் 'சிவரகசி'யத்தில் இருக்கிறது.)

மற்றொன்று: ஒரு முனிவன் மனைவியை விஷ்ணு கொன்றுவிட்டான். அதனால் அந்த முனிவன் விஷ்ணுவுக்குத் (இராமன்) தன் மனைவியை இழந்து வருந்தும்படி சாபமிட்டான் (இது இராமாயணம், உத்திர காண்டத்திலும்; ஸ்கந்த புராணம் உபதேச காண்டத்திலும் இருக்கிறது.) இந்தச் சாபங்கள் பலவிதமாகும்; தேவர்களுக்காக அதைப் பயன்படுத்திக் கொண்டு மனிதனாகப் பிறந்தார் என்பது இராமாவதாரக் கருத்து.

இந்தப் பிறப்பு—'தசரதனுக்குப் பிள்ளை' என்னும் பெயரால், 'யாகப் புரோகிதப் பார்ப்பனருக்குத் தன் தாய் கர்ப்பமடையப் பிறந்தான்.' அப்படிப் பிறப்பதிலும் பல இழிதன்மை நடப்புக்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. உலக க்ஷேமத்திற்காக இராமனாக விஷ்ணு வந்தான் என்றால் இப்படி ஒழுக்கக் கேடும், இழிவும், அவமானகரமானதும், அசாத்தியமானதுமான நடத்தைகள் ஏன் ஏற்பட்டிருக்க வேண்டும்? இந்த மாதிரி நூல்களால் (அவதாரங்களால்) மக்களுக்கு என்ன நன்மை ஏற்படும்? மற்றும், இராமன் யாகக் கொலையைத் தடுத்த தாடகையைக் கொல்லுவது எதற்காக? இதனால் மக்களுக்கு ஏற்படும் படிப்பினை என்ன? மற்றும், இராமன் எதற்காக நாடு கடத்தப்பட்டுக் காட்டுக்குப் போனான்? அவன் நாடு கடத்தப்பட்டதற்குக் காரணம், இராமனின் துரோகமும் இழிதன்மையுமான காரியமும்தானே—இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

அதாவது, அயோத்திய அரசு தசரதனுக்குப் பின் தனக்கு இல்லை என்பதும், அது பரதனுக்கு உரித்தாக்கப்பட்டது என்பதும் இராமனுக்குத் தெரியும். அப்படியிருக்க, அயோத்தியின் ஆட்சியை இவன் (இராமன்) இச்சிக்கலாமா?

படிப்பகம்

www.padippakam.com



தகப்பன் அயோக்கியத்தனமாய் நடந்துகொண்டாலும் அவதார புருஷனாகிய இவன் (இராமன்) தகப்பனுக்குப் புத்திசொல்லித் திருத்தவேண்டாமா?

இவன் எப்படி ஆசைப்படலாம்? இந்த ஆசையால் மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன? மற்றும், அரசு கிடைக்காமல் போய்விட்டதே என்று விசனப்படலாமா? அதற்காக உரியவனாகிய தம்பியையும் தம்பியின் தாயையும் குறை கூறலாமா? வசவு மொழி கூறலாமா? இந்தச் செய்கையால் மக்களுக்கு என்ன படிப்பினை கிடைக்கும்?,

இராமன் காட்டில் வசிக்கையில், 'முனிவர்களுக்கு—பிராமணர்களுக்கு எதிரானவர்களைக் கொல்லத்தான்—நான் காட்டுக்கு வந்தேன்' என்று சொல்லுகிறானே, இதனால் மக்களுக்கு என்ன படிப்பினை உண்டாகும்?

வாலியை முதுகுப்புறம், அவனுக்குத் தெரியாமல் நின்று, அவன் வேறு ஒருவனிடம் போராடிக்கொண்டிருக்கும்போது, அம்பை எய்து கொன்றானே—இதனால் மக்களுக்கு என்ன படிப்பினை, ஒழுக்கம், வீரம், ஏற்படக்கூடும்?

தன் ஆட்சியில் உள்ள குடிமகன் ஒருவன் (சம்புகன்), 'பார்ப்பானைக் கடவுளாக வணங்காமல்—கடவுளை நேரில் வணங்கிப் பயன் பெற முயற்சித்தான்' என்று அவனைத் துண்டு துண்டாக வெட்டிச் சித்திரவதை செய்தானே, இதனால் மக்களுக்கு என்ன படிப்பினை ஏற்படக்கூடும்?

இராமனால் கொல்லப்பட்ட ஒரு மனிதனின் தாயாரை, அவள் 'தன்னைப் புணரும்படி கேட்டாள்—பலாத்காரத்தில் பிரவேசித்தாள்' என்று ஒரு இராஜ ஸ்திரீயை—மூக்கும், முலையும், காதும் அறுக்கச் செய்தானே, அதனால் மக்களுக்கு என்ன ஒழுக்கம், படிப்பினை ஏற்பட முடியும்?

இராவணனோடு சீதை பத்து மாதம் அவன் அரண்மனையில் அந்தப்புரத்தில் இருந்ததும், அவனுக்குச் சீதை கர்ப்பமாகி இருந்தது தெரிந்ததும், அவளைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்து—பிறகு அவளைக் கண்ணைக் கட்டி ஆளில்லாத காட்டில் கொண்டுபோய் விட்டுவரச் செய்ததால் மக்களுக்கு ஏற்படும் படிப்பினை என்ன?

கடைசியாக, இராமன் எல்லா மக்களைப் போலவே ஆற்றில் இறங்கிச் செத்து, மேல் உலகம் போனான் என்பதனால் மக்களுக்கு ஏற்படும் படிப்பினை என்ன?

இவ்வளவு பயனற்றதும் கேடானதுமான கருத்தை வைத்து ஒரு கதையை—அதுவும் மற்றொரு (கந்த புராண) கதையிலிருந்து எடுத்துக் கொண்ட கதையைக் கடவுளுடன் சம்பந்தப்படுத்தி மத நூலாக்கி, இலக்கியமாக்கி கடவுள் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தி, உலக மக்களையே மடையர்களாக்கி—அதை வேதசாரம் என்று கூறி 'பக்திக்காக', ஒழுக்கத்திற்காக—மக்கள் படிக்க வேண்டும் என்றால், இது எவ்வளவு பெரிய மோசடியான காரியம் என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

மேலும், இராமன் மனிதனாகப் பிறந்தான்; சீதை மனுஷியாகப் பிறந்தாள், இராமன் தம்பிமார் மனிதராகப் பிறந்தார்கள் என்று எழுதிவிட்டு இவர்கள் 1000 வருஷம் 10,000 வருஷம் வாழ்ந்தார்கள், அரசு செலுத்தினார்கள் என்று அதில்—இராமாயணத்தில் எழுதி இருப்பது எப்படிப் பொருத்தமானதும் உண்மையானதுமாக இருக்கமுடியும்? அறிவாளிகள் சிந்திக்கவேண்டும்.

['விடுதலை'-தலையங்கம்—22-6-1972]



www.padippakam.com



# I புராணம்

'புராணம்' என்ற சொல்லுக்குப் பழங்கதை என்பது பொருள். 'புராணா' என்றால் பழையது என்பதுதான் அகராதிப் பொருள்.

இந்தி மொழியிலும் வடமொழியிலும் நூதனம்–நூதனமானது என்ற சொற்களுக்குப் புதியது, புதியவை என்பதுதான் பொருள். அதுபோலவே புராதனம்–புராதனமானது என்ற சொற்களுக்குப் பழையது, பழமையானது என்பதுதான் பொருளாகும்.

இந்தக் கருத்தில்தான் நமது புராணங்கள் எல்லாம் ஆக்கப்பட்டிருக்கின்றன. நமது புராணங்கள் எல்லாமுமே சுமார் 2000 அல்லது 3000 ஆண்டுகளுக்கு உள்ளாகக் கற்பிக்கப்பட்டவைகளேயாகும். அவை பெரிதும் நமது கடவுள்களைப் பற்றியவையேயாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# 3. புராணங்கள்

## 1. அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை

ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுகிறபோது முழுதும் உண்மையாய் இருக்காது என்று சந்தேகப்படுகிற காலத்தில் 'அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி சொல்வதுண்டு. அது எப்பொழுது ஏற்பட்டது, எதற்காக ஏற்பட்டது என்கின்ற விவரம் அனேகமாய் நமது தமிழ் மக்களுக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். தெரியாதென்று நினைப்பதால் அதைப்பற்றி நான் கண்டுபிடித்த முடிவைச் சொல்லுகிறேன்.

'அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை' என்பதானது அய்ந்து விஷயம் சொன்னால் அதில் இரண்டாவது பொருத்தமாயிருக்கும்; அப்படி இருந்தாலே போதும் என்கிற கருத்துக் கொண்டே இப் பழமொழி வழங்கப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது என்று பார்ப்போமானால், ஆரியர்கள் நமது நாட்டில் வந்து பொய்யும் புரட்டும் புளுக ஆரம்பித்த காலத்தில் அப் புரட்டுகளை யாராவது கண்டுபிடித்துக் கேட்க ஆரம்பித்தால், அய்ந்துக்கு இரண்டு பழுதில்லாமல்—அதாவது முன் சொன்னதுபோல்—அய்ந்தில் இரண்டு விஷயங்கள் நிஜமாயிருந்தாலே போதுமென்றும் அதை நம்பவேண்டியதுதான் என்றும் சொல்லி ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தினார்கள்.

அந்தப் பழமொழியின் ஆகாரத்தைக்கொண்டுதான் ஜனங்கள் இப்பொழுதும் சாஸ்திரம், புராணம், சாதகம், ஆருடம், சகுனம், சாந்தி, ஓமம், யாகம், சாமியாடி வேண்டுதலை அல்லது பிரார்த்தனை, அருள்வாக்கு என்பவைபோன்ற மூடக்கொள்கைகளெல்லாம் நாட்டில் பரவலாயின. ஏனெனில், இவைகளில் எவ்வளவு பாகம் பொய்யாய்ப் போய்விட்டாலும், அதை நம்பிக் கெட்ட மூடர்கள் பார்ப்பனர்களைச் சமாதானம் கேட்க ஆரம்பித்தால்—அதனால் பிழைக்கும் அயோக்கியக் கூட்டத்தார் 'அய்ந்துக்கு இரண்டு பழுதில்லாமல் இருக்கிறதா, இல்லையா—என்று பார்க்கவேண்டுமே யொழிய ஒவ்வொன்றையும் பரிசோதிப்பது நாத்திகத் தன்மை ஆகிவிடும்; கடவுளிடத்தில் நம்பிக்கையற்ற தன்மையாகிவிடும்' என்று சொல்லி ஏமாற்றிவிடுவார்கள்.

ஆனால், 'அவற்றுள் 'அய்ந்து' என்ற எண்ணிக்கையும் 'இரண்டு' என்ற எண்ணிக்கையும் எப்படிக் குறிப்பாய் வந்தன; வேறு எண்களைச் சொல்லக் கூடாதா?' என்று சிலர் கேட்கக்கூடும். இம் மாதிரிக் கேள்விகளுக்கெல்லாம் பதில்சொல்வது அனாவசியமாகும். ஏனெனில், ஏதாவது இரண்டு எண்களைச் சொல்லித்தானாக வேண்டும். அப்படிச் சொல்லும்போது இந்த இரண்டு எண்களைமட்டும் சொல்லக்கூடாது என்பதற்கு யாதொரு நிபந்தனையும் இல்லை. ஆனாலும், இந்த இரண்டு எண்களுக்குக் குறிப்பான சமாதானம் இல்லாமல்போகவுமில்லை.

அதாவது, பார்ப்பன மொழியில் ஒரு தோத்திர ஸ்லோகமுண்டு. என்னவென்றால், 'அகல்யா, துரோபதா, சீதா, தாரா, மண்டோதரி, ஸ்மிருதா பஞ்சகன்யாஸ்மரே நித்தயம் மகாபாதக நாசனம்.' இதன் கருத்து: 'அகல்யை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி ஆகிய அய்ந்து கன்னிகைகளைத் தினம் நினைத்தால் மகாபாதகமெல்லாம் நாசமாய்விடும்' என்பதே. இதில் ஏற்பட்ட விவகாரத்திற்காகத்தான், 'அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி உண்டாக்கப்பட்டது. விவகாரத்தின் தன்மையாவது :—

கோபமில்லாமல் பகுத்தறிவோடு கேட்கவேண்டும். ஏனென்றால், கோபம்வந்தால் பார்ப்பான் ஏமாற்றிவிடுவான். கோபமில்லாவிட்டால்தான் அதிலிருக்கும் இரகசியம் விளங்கும். நான் கிளப்பப்போகும் விவாதம் இந்த ஸ்லோகத்தை எந்தப் பார்ப்பான் எழுதினானோ அந்தப் பார்ப்பான் எழுதிவைத்த சங்கதியைத்தான் சொல்லப்போகிறேன். ஆதலால், நான் என் உத்தேசப்படி சொல்லப்போவதாக நினைத்து ஏமாந்துபோகாதீர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இதில் கண்டிருப்பது வாஸ்தவமா, இல்லையா என்று ஒவ்வொரு பார்ப்பானையும் கேளுங்கள். உண்மை அல்லவென்று சொன்னால் என்னைக் கேளுங்கள். முதலாவது, அந்த ஸ்லோகத்தில் மேற்கண்ட அய்ந்து பெண்களையும் கன்னிகைகள் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. கன்னி என்றால் கலவி அறியாதவள்—அதாவது புருஷர்கள் சகவாசம் தொடங்காதவள்—கலியாணமில்லாதவள்—இன்பத்தைப் பருகாதவள் என்பது பொருள். ஆகையால் அந்த ஸ்லோகம் முன்னுக்குப்பின் முரணானது என்று சொல்லுவேன்.

ஒரு சமயம் பார்ப்பனர்கள் இதற்கு, 'இந்த ஸ்லோகத்தில் மேற்படி பெண்களைக் குறிப்பிட்டு நினைக்கும்படி சொன்னதின் கருத்து, கன்னித் தன்மையை உத்தேசித்தல்ல; அவர்களுடைய கற்புத் தன்மையைப் பற்றியதே' என்று சமாதானமாகச் சொல்ல வருவார் களானால் அதையும்பற்றிச் சிறிது யோசிப்போம்.

இந்த அய்ந்து பெண்களையும் நான் (1) தாரை, (2) அகலிகை, (3) துரோபதை, (4) சீதை, (5) மண்டோதரி என்கின்ற வரிசையில் எடுத்துக்கொள்கிறேன்.

தாரை என்பவள் தேவ குருவாகிய பிரகஸ்பதியினுடைய பெண்சாதி. இந்த அம்மாளைப்பற்றிய விவரம் அறிவதற்குக் கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு காதம் காதமாய் ஊர்ப்பயணம் போகவேண்டியதில்லை. இன்றைக்கும் தெருத்தெருவாய் தாரையும் சந்திரனும் படுத்து உருளுவதும் நிர்வாணமாய் நின்றுகொண்டு சந்திரனுக்கு எண்ணெய் தேய்ப்பதுமான சத்காலட்சேபத்தைத் தினம்தினம் பார்த்து வருகிறோம். தாரையம்மன் புருஷனே சங்கதி தெரிந்து இரண்டுபேருக்கும் சாபமிட்டதும், இவர்கள் இரண்டுபேருக்கு மாகப் பிறந்த குழந்தை 'புதன்' என்பவன் இருப்பதுவும் மேற்படி பார்ப்பனர்களின் சாஸ்திரங்களிலேயே இருக்கிறது.

ஆகவே, குருவின் யோக்கியதை, குருபத்தினியின் யோக்கியதை, சிஷ்யனின் யோக்கியதை, ஆஸ்ரமத்தின் யோக்கியதை, ஆரிய நாகரிகத்தின் யோக்கியதை ஆகிய இவ்வளவுக்கும் தாரையம்மாள் உதாரணமாக விளங்குகிறாள். இதையெல்லாம்விடக் கற்பின் இலட்சணத்திற்கும் இது ஓர் ஆரிய இலக்கியமாய் விளங்குகின்றது.

இரண்டாவதான அகலியை அம்மாள் விஷயம். இவள் கவுதம முனிவர் என்கின்ற ஒரு ரிஷியின் பெண்டாட்டி. தெய்வராஜனான இந்திரன் இந்த அம்மாள்மேல் ஆசைப் பட்டு, மாறுவேஷம் பூண்டு, வீட்டிற்குள் நுழைந்ததாகவும், பிறகு ஒருவருக்கொருவர் இன்னார் என்று தெரிந்துகொண்டு இரண்டுபேரும் சுகித்ததாகவும், ரிஷிக்கு இந்த விஷயம் தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும், அத் தண்டனையால் இந்திரனுக்குச் சரீரமெல்லாம் பெண்குறியாகவும், அகலியை கல்லாகவும் ஆகிவிட்டதாகவும் பார்ப்பன சாஸ்திரங்கள் என்பவைகளே சொல்லுகின்றன. அதுவும் தெருவில் போகின்ற சாஸ்திரங்கள் சொல்ல வில்லை. 'அய்ந்தாம் வேதம்' என்று சொல்லப்படுவதாகிய இராமாயணம், பாரதம் முதலியவைகளில்தான் இந்த உண்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் தேவர் கவின் அரசனின் யோக்கியதையும், ரிஷி பத்தினிகளின் யோக்கியதையும் விளங்குகின்றன.

மூன்றாவதாக துரோபதையம்மன் சங்கதி. இந்த அம்மாள் முதலில் ஒரு புருஷனை மாத்திரம் கட்டிக்கொண்டு, பிறகு மாமியார் இஷ்டப்படி மற்றும் நால்வருக்கும் பெண்டாட்டி யாக இருந்துவந்திருக்கிறாள். அய்ந்துபேர்களிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனையும் மனத்தில் நினைத்து, நினைத்து வருந்தியிருக்கின்றாள் என்பதைத் தானே ஒப்புக்கொண்டதல்லாமல்—உலகத்தில் பெண்கள் பதிவிரதைகளாக இருக்கவேண்டுமானால் ஆண்மக்களே இருக்கக்கூடாது என்று தீர்ப்பும் கூறிவிட்டாள். இதனால் அக் காலத்திய கற்புக்கு இலட்சணம் புருஷனும், மாமியாரும் யாரிடம் போகும்படி சொன்னாலும் போய்த் தான் ஆகவேண்டுமென்பதும், அதுவும் கற்பில் சேர்ந்ததுதான் என்பதும், பிறகு தன் இஷ்டப்படி யாரை ஆசைப்பட்டாலும் அதுவும் கற்புடன் சேர்ந்ததுதான் என்பதும் அக் கால வழக்கத்தில் இருந்ததாய் விளங்குகின்றது. ஆகவே, அய்ந்து கன்னிகைகளில் மூன்று



பேர் சங்கதி இப்படி இருக்கின்றதே என்று கேட்கப்படும் கேள்விகளுக்குத்தான் பார்ப் பனர்கள் அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை என்று சொல்ல—அதிலிருந்து இந்தப் பழமொழி ஏற்பட்டது.

இந்த இரண்டில் ஒன்றும் குற்றமில்லையா என்று பார்த்தால் அதிலும் ஒன்றைக் கழிக்கவேண்டியதாகத்தான் இருக்கின்றது. அடியோடு கழிக்காவிட்டாலும் சந்தேகத்திலா வது வைத்துத்தீரவேண்டியதாகத்தான் இருக்கிறது.

நாலாவதான சீதையம்மாள் சங்கதியைப் பார்த்தால், முன்சொன்ன கதைகளின் படிக்கு அவ்வளவு இல்லாவிட்டாலும் 'உத்தம ஸ்திரீ' என்றோ, முழுதும் பரிசுத்தமானவ ளென்றோ, கற்புக்கரசி என்றோ சொல்லுவதற்கில்லை. குணவிசேஷத்தைப் பற்றியோ வென்றால் மாயமானைத் துரத்திக்கொண்டு இராமன் போனகாலத்தில் வெகுநேரம்வரை திரும்பி வராதது கண்டு புருஷனைப்போய்ப் பார்த்துவரும்படி சீதை இலட்சுமணனுக்குச் சொல்ல, இலட்சுமணன், 'போகவேண்டிய அவசியமில்லை; இராமர் எப்படியும் திரும்பி வருவார்' என்று சொன்னதற்கு, 'அண்ணன் செத்தால் என்னைக் கைப்பற்றலாம் என்று பார்க்கின்றாயா?' என்று சொன்னதிலிருந்தே இலட்சுமணனிடம் பழகிய சீதைக்குப் போதிய அறிவும், உயர் குணமும், விஷயத்தை அறியும் சக்தியும் இல்லையென்கின்ற தத்துவமும் நன்றாய் விளங்குகின்றது. தவிர, சீதையிடம் வெகுகாலம் நன்றாய்ப் பழகிய அவள் புருஷனாகிய இராமனும் பல தடவை சீதையின் கற்பில் சந்தேகப்பட்டிருக்கின்றான். அதாவது, இராவணனைக் கொன்றபின் முதன்முதல் சீதையை ஒரு தடவை சந்தேகப்பட்ட போது சீதையிடம் என்ன சொல்லுகின்றான் என்றால் 'ஏ, சீதை! நான் உன் மேல் ஆசைப்பட்டு உன்னை மீட்டுக்கொண்டு போவதற்காக இராவணனிடம் யுத்தம் செய்ய வில்லை. பின் என்னவென்று கேட்பாயானால், ஒருவன் பெண்சாதியை மற்றொருவன் அடித்துக்கொண்டு போய்விட்டால் அவனைச் சும்மா விட்டுவிடுவது வீரனுக்கு அழகாகுமா என்கின்ற ரோஷத்தின்மேல்தான் சண்டை போட்டு அவனைக் கொன்றேன். மற்றபடி ஒரு துஷ்டன் வீட்டில் அதுவும் அவனுடைய அதிகாரத்துக்கும் பலத்திற்கும் கட்டுப்பட்டு 10 மாதம் வசித்த தன் பெண்சாதியை சுயமரியாதையுள்ள எவனாவது மறுபடியும் சேர்த்துக் கொள்வானா?' என்று சொன்னதோடல்லாமல் 'சகல வசத்திலும் அவனுடைய சுவாதீனத்தி லிருந்த நீ அவனுக்கு வசப்படாமலிருந்திருக்க முடியுமா? ஆதலால் நீ எங்கே வேண்டுமா னாலும் உன் இஷ்டப்படி போகலாம். உன்னை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். கோபத்தால் சொல்லவில்லை; நெடுநேரம் ஆலோசித்து செய்த முடிவு இது' என்று சொன்னான். (இந்த இடத்தில் இராமன் உலக அபவாதத்திற்குக் கட்டுப்பட்டு இப்படிச் சொல்லவில்லை. தானே சந்தேகப்பட்டு ஒருவித முடிவு செய்துகொண்டு சொல்லுகிறான் என்றுதான் அர்த்தம்). அதோடு 'பத்து மாதம் எதிரி வீட்டில் வசித்த நீ' என்றதால் இதுவரை 'உயிர் வைத்திருந்தாயே' என்கிற கருத்தும் தொக்கியிருக்கின்றது.

இதற்கு சீதை சொல்லும் பதில் என்னவென்றால், 'ஏ! ராமா! நீ சொல்லுவது உண்மை! அதற்கு நான் என்ன செய்யட்டும்! நானோ ஒரு பெண். ஒண்டியாயும் அனாதையாயும் இருந்தவள். இராவணனோ இராட்சதன்; அளவற்ற பலசாலி. என்னால் கூடியவரை தடுத்துப் பார்த்தேன். எனக்கு எள்ளளவாவது அவனுடன் போகவேண்டும் என்கின்ற ஆசை இருந்ததா? விதியை நோகவேண்டியதே தவிர என்னைக் குற்றஞ் சொல்லக்கூடாது. என் தேகந்தான் பிறருக்கு வயப்பட்டதே ஒழிய, என் இருதயம் அப்பொழுதும், இப்பொழுதும், எப்பொழுதும் உன்னிடத்திலேயே இருந்தது; இருக் கின்றது. சுதந்திரமற்ற நான் என்ன செய்ய முடியும்? நீ அனுமானை அனுப்பி நான் இருக்குமிடத்தையும், ஸ்திதியையும் அறிந்துவரச் சொன்னதின் மூலம் நான் இலங்கையில் இராவணனுடைய வீட்டில் இருப்பதாகத் தெரிந்த உடனே என்னை ஏன் தள்ளிவிடவில்லை?' என்றுதான் சொன்னாள். (இது வால்மீகி இராமாயணம் யுத்த காண்டம் 117, 118-வது சருக்கங்களில் காணப்படுவது.)

படிப்பகம்

www.padippakam.com



இந்த இடத்தில் இராமன் சீதையைப் பார்த்து, 'நீ கற்பழிந்துவிட்டாய் என்று நான் தீர்மானித்துவிட்டேன்' என்று வெளிப்படையாய்ச் சொல்லிக் காட்டியதற்கு, சீதை ஏன், 'அப்படி ஒன்றும் நடக்கவில்லை' என்று தைரியமாய்ச் சொல்லி இருக்கக்கூடாது என்கின்ற கேள்விக்கு—பதில் இல்லை. அதோடு, 'என் சரீரம் அவன் வயப்பட்டு விட்டது; ஆனால், அப்போதும் மனம் உன்னிடம்தான் இருந்தது. விதியை நோக வேண்டுமேயொழிய, என்னை நோகக்கூடாது. இராவணன் வீட்டில் இருந்ததையும் என் ஸ்திதியையும் அனுமான் பார்த்துவிட்டு வந்து சொல்லி இருப்பானே—அப்போதே ஏன் என்னைத் தள்ளி விட்டதாகச் சொல்லியனுப்பவில்லை?' என்பதாகவெல்லாம் சீதை சொல்லுவதனால் விஷயம் சந்தேகத்திற்காவது இடமுண்டாகின்றதா, இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஒரு சமயம் இராவணன்மீது அதிகமான பழியைச் சுமத்த, வால்மீகி வேண்டுமென்றே இப்படி எழுதி இருக்கக்கூடும் என்று சொல்வதானால், அது வேறு விஷயம். என்னவென் றால், அது இராவணன் சங்கதியைப்பற்றிப் பேசும்போது கவனிக்கவேண்டிய விஷயம்.

இந்த இடத்தில் கற்பைப்பற்றிப் பரீட்சிப்பதால், வால்மீகி வார்த்தையில் இருந்தும், சாத்தியத்தில் இருந்துந்தான் பேசவேண்டும்.

கொஞ்ச தவிர, மற்றொரு தடவை, வண்ணான் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு, முங்கூட முன்பின் யோசிக்காமல் திடீரென்று இலட்சுமணனைவிட்டு சீதையை நடுக்காட்டில் கொண்டுபோய் விட்டுவந்ததும் அங்கு சீதை தன் கற்பைப்பற்றி யார் என்ன சொல்லிவிடப் போகிறார்களோ எனப் பயந்து 'இலட்சுமணா இதோ பார்! நான் இப்பொழுது கர்ப்பமா யிருக்கிறேன்' என்று சொன்னதும்; காட்டில் இரட்டைப் பிள்ளைகள் பெற்றதாக ஓர் இராமாயணத்திலும்; தர்ப்பையைக் கிள்ளிப் போட்டு வால்மீகி ஒரு பிள்ளையை உண்டாக் கினார் என்று மற்றொரு இராமாயணத்திலும் சொல்லப்பட்டாலும் இந்தப் பிள்ளைகளை இராமன் ஒப்புக்கொள்ளாமல் வால்மீகி முதலிய எவ்வளவோ பெரிய தவசிரேஷ்டர்கள் என்போர்கள் பிரமாணம் செய்தும் ஒப்புக்கொள்ளாமல்—மறுபடியும் சீதையை நெருப்பில் இறங்கும்படி சொன்னதும், அதற்குச் சீதை கட்டுப்படாமல், உலக அபவாதத்தை நிவர்த்தி செய்யவேண்டாமா என்கின்ற கவலையில்லாமல் பூமியைப் பிளக்கச் செய்து, பூமியில் இறங்கி மறைந்து விட்டாள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இன்னமும் என்னென்னவோ இருந்தாலும் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இதுவே போதும்.

எனவே, சீதையின் விஷயமானது சந்தேகப்படுவதற்கில்லாமல் போகவில்லை என்ப தோடு, சீதையின் இலட்சுமித் தன்மையும் இராமனின் விஷ்ணுத் தன்மையும் எப்படிப்பட்ட தென்று விளக்கவும், ஆரியர் பழக்க வழக்கங்களும், அக் காலத்திய ஆண் பெண்கள் வாழ்க்கை நிலையையும் வெளியாக்கவும் உதவுகின்றது.

கடைசியாக, மீதி இருப்பது அய்ந்தாவதான மண்டோதரி அம்மாள். இந்த அம்மாள் விஷயத்தில் ஒரு தகராறையும் காணோம். கம்பராமாயணத்தில், புருஷன் பிரிந்தவுடன், 'செத்து விட்டான்' என்கின்ற சங்கதி தெரிந்து அழுது உயிர் விட்டு விட்டதாகக் காணப் படுகின்றது.

தவிரவும், செத்துப்போன இராவணனைப் பார்த்து, அழும்போது 'சீதை குலத்திலாவது, ரூபத்திலாவது, குணத்திலாவது, சாமர்த்தியத்திலாவது என்னைவிடச் சிறந்தவளா?' என்று மாத்திரம் கேட்டிருக்கின்றாள். இது, சீதையின் குணத்தை 10 மாதம் நேரிலிருந்து பார்த்தவள் கேட்டிருப்பதால், இதில் மண்டோதரிபேரில் குற்றம் சொல்வதற் கில்லை. ஆனால், சீதையின் குணந்தான் வெளியாக்கப்பட்டதாக வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆதலால், மண்டோதரியின்பால் மாத்திரம் குற்றம் சொல்ல ஏதுமில்லை. அவள் கற்புள்ள பெண்என்றே சொல்லலாம். இது திராவிட நாகரிகத்துக்கும், திராவிடர் சிறப்புக்கும் இலக்கியமாக வைத்துக்கொள்ளலாம்.



பொதுவாக 'பஞ்ச கன்னிகை'களின் யோக்கியதையைப் பார்க்கின்றபோதும் கற்பு இலக்கணங்களைப் பார்க்கின்றபோதும், குரு, அரசன், ரிஷி, கடவுள் என்கின்றதைப் பார்க்கின்றபோதும், நன்றாய்க் கவனித்தால் இதன் ஆபாசங்கள் விளங்குவதோடு—அய்ந்துக்கு இரண்டாவது சுத்தமாய்த் தேறுகின்றதா என்பது வெளியாகும்.

முதலாவது விஷயம், குருபத்தினியின் சங்கதியையும்—சிஷ்யனின் யோக்கி யதையையும் வெளியாக்கிற்று. இரண்டாவது விஷயம், தேவர்களுக்கெல்லாம் அரசனா யிருக்கிறவன் யோக்கியதையையும், ரிஷி பத்தினியின் யோக்கியதையையும் வெளியாக் கிற்று. இந்த இரண்டு விஷயங்களும் புருஷர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பதை யாவது காட்டின. மூன்றாவது விஷயமோ, புருஷனும் ஒப்புக்கொண்டான்; மாமியும் ஒப்புக்கொண்டாள்; சகோதரர்களும் ஒப்புக்கொண்டார்கள்; உலகமும் ஒப்புக்கொண்டது என்பதைக் காட்டிற்று. நாலாவது விஷயம், அவதாரங்கள் என்பதின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று.

மிஞ்சியது 'இராட்சசர்கள்' என்றும், 'இராட்சச ஸ்திரீகள்' என்றும்—ஆரியர்கள் எப்பேர்ப்பட்டவர்களைச் சொல்லுகின்றார்கள், சொல்லி வந்திருக்கின்றார்கள் என்பதை யும்; ஒரு திராவிடப் பெண்ணின் கற்பின் நிழலுக்குள் ஆரியர்கள் எப்படி வந்து கலந்து கொள்ளுகின்றார்கள் என்பதையும் வெளியாக்கிற்று. இந்தப் பழமொழி ஒன்று, உலகத்தை ஏமாற்றச் செய்திருக்கவேண்டும்; அல்லது இது அவர்களின் பழக்க வழக்கமாய் இருக்க வேண்டும். ஆகவே, அய்ந்துக்கு இரண்டுகூட அவர்கள் சொற்களில் உண்மையில்லை என்பதும், ஏதாவது உண்மையிருந்தால் அதுவும் நம்முடைய விஷயங்களில்தான் என்பதும் இந்த விஷயத்தினால் வெளிப்படுத்துகின்றேன்.

இப்பொழுது எப்படி அவர்கள் அக்கிரமங்களை மறைத்துக்கொண்டும், பெருமையாய்ப் பிரச்சாரம் செய்துகொண்டும் நம்முடைய யோக்கியமான காரியங்களைக் குற்றம் சொல்லிக் கொண்டும், அதற்கு நம்மவர்களையே கூலிகளாக அமர்த்திக்கொண்டும் வேலை செய்து வருகிறார்களோ—இதுபோல்தான், இந்தப் பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்கள் முன் காலத்திலும் செய்துவந்திருக்கின்றார்கள் என்பதோடு, நம்முடைய பாமர ஜனங்கள்—இவர்களை அப்போதும், இப்போதும் நம்பி ஏமாந்து வருகிறார்கள் என்பதும் அய்ந்துக்கு இரண்டு பழுதில்லை என்னும் வியாசத்தின் மூலம் உண்மை வெளியாக்கப்பட்டது.

['சித்திரபுத்திரன்' என்ற பெயரில் கட்டுரை–'குடி அரசு'—11-12-1927]

## 2. ஒரு யுக்தி ஆராய்ச்சி

மனுதர்ம சாஸ்திரக் கொள்கைகளையும், ஆரிய ஆதிக்கக் கொள்கைகளையும் கதை ரூபமாகவும், பக்தி ரூபமாகவும், கடவுள் செய்கை, கடவுள் வாக்குகள் ஆகியவை என்பதன் மூலமாகவும் திராவிடர்களுக்குள் புகுத்தச் செய்யப்பட்ட சாதனங்கள் தாம்—புராணங்கள், இதிகாசங்கள் முதலியவைகளும்; தேவார திருவாசகங்கள், பிரபந்தங்கள் ஆகியவைகளும் ஆகும் என்பது எமது கருத்து. இந்தக் கருத்துக்கு உதாரணங்கள் அவைகளிலேயே இருக்கின்றன.

அவதாரம்: விஷ்ணு அவதாரங்கள் அத்தனையும் ஆரியர்களின் எதிரிகளை அதாவது, மனுதர்மத்துக்கு விரோதமாகவும் ஆரிய ஆதிக்கத்தை ஒடுக்கவும் தடுக்கவும் முயற்சித்தவர்களைக் கொல்லவும் அழிக்கவும் சதி செய்யவும் ஏற்பட்டவைகள். அது போலவே சிவன் அவதாரமான சுப்பிரமணியனும், மற்றவர்களும் அதுபோலவே ஆரியரின் எதிரிகளை அழிக்க ஏற்பட்டவைகள். சுருங்கச் சொல்லவேண்டுமானால் சுரர் என்போர் அசுரர், அரக்கர், இராட்சதர் என்கின்றவர்களைக் கொல்ல, அழிக்க வந்தவர்கள் என்றே சொல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com



ஆரியர்களின் தனிக் கடவுள் உற்பத்திகளில் சிவன் முதற்கடவுள்; அதாவது முதலில் சிருஷ்டிக்கப்பட்ட கடவுளாகவும், ஸ்கந்தம் முதலில் உற்பத்தி செய்யப்பட்ட புராணமாகவும் இருக்கவேண்டும். இவை விஷ்ணுவுக்கும் இராமாயணத்திற்கும் முந்தியவையாகவும் இருக்கவேண்டும். இராமாயணம் சமீபகாலத்தில் கந்தபுராணத்தைப் பார்த்துச் சற்றுத் திருந்திய காலத் திருத்தத்தோடு எழுதியதென்றே சொல்லலாம். பாரதம்கூட இராமாயணத்திற்கு முந்தியதாகவே இருக்கவேண்டும்.

எப்படி ஆயுதங்களில் கல், கவண், ஈட்டி (வேல்), வில், துப்பாக்கி, பீரங்கி, வெடி குண்டு, விஷப் புகை ஆகியவை ஒன்றிற்குப்பின் ஒன்று வரிசைக் கிரமமோ அது போலத்தான்.

முதலில் சிவன் கந்தபுராணம்; பிறகு விஷ்ணு சம்பந்தமான புராணங்கள்—பாரதம், இராமாயணம் ஆகியவை என்று சொல்லவேண்டும். சுரர், அசுரர் என்பவையெல்லாம், ஆரியர்—ஆரியரல்லாதார் என்பதற்கு முதலில் ஏற்படுத்திக் கொண்ட (இட்ட) பெயர்களாகவும்; தேவர்கள், இராட்சதரர்கள் என்பவை பின்னால் ஏற்படுத்திக் கொண்ட பெயர்களாகவும் தெரிகின்றன.

சிவன் முதற் கடவுள் என்பதற்கும், கந்தபுராணம் முதல் புராணம் என்பதற்கும் உதாரணம் என்னவென்றால்,

சிவன் கற்பிதம் மிகப் பழைமையான, காட்டுமிராண்டி காலத்தியதாக இருக்கின்றது. அதாவது, தலை சடையாகவும்; ஆடை மிருகத்தின் தோலாகவும்; அணி (நகை) பாம்புகள், எலும்புகளாகவும்; புஷ்பம் கொன்றை, எருக்கம் பூக்களாகவும்; பாத்திரம் மண்டை ஓடும்; ஆகாரம் தேன், தினைமாவு, கொழுக்கட்டையாகவும்; ஆயுதம் 1-வது மழு, 2-வது சூலம்; இடம் மலை; விளையாடுவது சுடலை; பூசிக்கொள்வது சாம்பல்; ரூபம் (சாயல்) அகோரம்; வாகனம் மாடு; குணம் வெளிப்படையான ஹிம்சை; நடனம் காட்டுமிராண்டி ஆட்டம்; சங்கீதக் கருவி உடுக்கை; பெண்சாதி இதுபோன்ற கோர ரூபமுள்ள காளி; அவள் வாகனம் சிங்கம்; பிள்ளைகள் ஒன்றுக்கு ஆறுமுகம், மற்றொன்றுக்கு யானைத் தலை—விகாரரூபம்.

இந்த மாதிரியாகக் காட்டுமிராண்டித் தன்மைக்கு ஏற்றபடியாகவும், காட்டுமிராண்டி காலத்திய எண்ணங்களின்படியாகவும் கற்பிக்கப்பட்டிருக்கிறபடியால்—சிவன்தான் முதலாவதாகச் சித்திரிக்கப்பட்ட கடவுளாக இருக்கவேண்டும் என்பது விளங்கும்.

அதுபோலவே, கந்தபுராணம் என்பதும் வைணவ புராணங்களைவிட முந்தியதாகவே இருக்கவேண்டும். ஏன் எனில், கந்தனின் உற்பத்தியை ஆபாசமான முறையில் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

ஆயிரதேவ வருஷம் (அதாவது பலயுக காலம்) சிவன் புணர்ந்ததால் ஏற்பட்டான் என்றும்; இந்திரியத்தை ஆற்றில் விட்டதால் ஏற்பட்டான் என்றும்; அந்த மிஞ்சின இந்திரியந்தான் என்றும், நெற்றிப் பொறியில் தோன்றினான் என்றும் மற்றும் பலவித ஆபாசமானதும், அசம்பாவிதமானதும், சிறிதும் அறிவற்றதுமான வழியில் உற்பத்தியானதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

கந்தபுராணத்தில் வரும் பாத்திரங்கள் அக்கினிமுகன், சிங்கமுகன், ஆட்டுமுகன் முதலியன இயற்கைக்கு மாறுபட்டவைகள். யுத்தமுறை—இந்திரன் குயிலாக மாறினான்; சூரன் சக்ரவாகப் புள்ளாக (குருவியாக) மாறினான்; இந்திரன் மயிலாக வந்தான்; தீ, காற்று முதலிய உருவுடன் தோன்றினான்; வேலால் குத்துதல்—சேவலாக ஆகிவிடுதல் முதலியவை எல்லாம் காட்டுமிராண்டிக் காலத்திய கற்பனைகளேயாகும்.

இந்திரனுடைய நிலைமையும், இராமாயணத்தில் காட்டப்பட்டிருக்கும் இந்திரனை விடக் காட்டுமிராண்டித் தன்மை கொண்டதாகவும் சித்திரிக்கப்பட்டு இருக்கின்றது.

['குடி அரசு'-கட்டுரை—1-7-1944]



## 3. புராணங்கள்

நம் நாட்டில் நமது இனத் துரோக-ஈன வயிற்றுப் பிழைப்புக் கூத்தாடிகள் பலர், புராணங்களை நாடகமாக நடித்து நம் சமுதாயத்துக்கே பரம எதிரிகளான பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் வாழும் இழி தன்மையையும்; பாடகர் என்போர் பலர் புராணக் கதைகளின் கருத்துக்களையே பாட்டுக்களாகப் பாடி வயிறு பிழைப்பதையும் பார்த்து வருகிறோம். இப்படிப்பட்ட மக்கள் நம் திராவிட சமுதாயத்தில்தான் பலர் இருக்கிறார்களே யொழிய மற்றபடி பார்ப்பன சமுதாயத்திலோ, இஸ்லாம் சமுதாயத்திலோ, மற்ற சமுதாயத்திலோ இல்லை. இந்த இழிநிலையை மாற்றாது—பொருள் வருவாயே நோக்கமாகக் கொண்டுள்ள நாடக முதலாளிகளும், நடிகர்களும் நாட்டுக்குக் கேடுதான் செய்கிறார்கள்.

திராவிடப் பொதுமக்கள் மனம் வைத்தால் புராண நாடகம், சினிமா ஆகியவற்றைப் பார்ப்பதை நிறுத்த வழி ஏற்படும். எப்படி ஒரு பார்ப்பனனைச் 'சாமி' என்று கூப்பிடுவதும், அவனைக் கண்டால் நாமாகவே கையெடுத்து அவனுக்கு முன்னதாகக் கும்பிடுவதும், நம் மனத்திற்கு மிகமிக அவமானமாகவும் கஷ்டமாகவும் காணப்படுகிறதோ—இதுபோல், சுயமரியாதை உணர்ச்சி, மானமுள்ள திராவிடமக்கள் புராண நாடகங்களுக்குப் போவதை நிறுத்தி, இன உணர்ச்சி ஊட்டும் நாடகம், சினிமாக்களுக்குச் செல்லுவதென்று வைத்துக்கொண்டால் இரண்டொரு வருடத்தில் நாடக உலகமும், இசை உலகமும் நல்ல பகுத்தறிவும் சுயமரியாதையும் ஊட்டும்படியான பல கிருஷ்ணன்களையும் இராதாக்களையும் உண்டாக்குமென்பதில் அய்யமென்ன!

மேலும், நமது பெண்களுக்கு நகையிலும் துணியிலும் சிங்காரிப்பிலும் இருக்கிற உணர்ச்சி, அவர்களது இழிவு நீங்குவதிலும் மானத்திலும் சிறிதாவது ஏற்பட்டு, புராணக் கதை, நாடகம், சினிமாக்களுக்குப் போகாமலும் சீர்திருத்தமான நாடகங்கட்குச் செல்லுவதுமான காரியங்களில் திரும்புமானால்—வெகு சீக்கிரத்தில் திராவிட சமுதாயம் நல்ல மானமுள்ள சமுதாயமாக ஆகிவிடுமென்பதில் தடையென்ன இருக்கமுடியும்?

வால்மீகி இராமாயணத்துக்கும் கம்பராமாயணத்துக்கும் மிகுந்த வேறுபாடுகள் இருக்கின்றன. வால்மீகி—இராமன், சீதை, இலட்சுமணன் ஆகியவர்களை மிகவும் கீழ்த்தரமாகவும் இழிவாகவும் சிருஷ்டித்திருக்கிறார். இதை மாற்றவே, பார்ப்பனர், கம்பன் என்னும் இனத்தைக் காட்டிக்கொடுத்து வயிறு பிழைக்கக் கருதிய ஈனப் பிராணியைப் பிடித்து—இப் பாத்திரங்களை உயர்ந்தவர்களாக மாற்றச்செய்து, திராவிட மக்களை அடிமையாக்கினார்கள். இக் காரணத்தால்தான் நாங்கள் கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென்றும், வால்மீகி இராமாயணத்தின் சரியான மொழிபெயர்ப்பைப் படிக்கவும், நடிக்கவும் சங்கீதமாகப் பாடவும் வேண்டும் என்றும் சொல்லி வருகிறோம்.

கம்பன் மறைத்த செய்திகள் சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டலாம். தசரதன் கைகேயியை மணஞ்செய்து கொள்ளும்போதே, அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அயோத்தியைக் கொடுத்துவிடுவதாக உறுதி செய்து கொடுத்து விட்டு—பரதன் இல்லாத போது தசரதன், வசிஷ்டர், இராமன் ஆகிய மூவருமே சூழ்ச்சி செய்து பரதனை ஏமாற்றிச் சதி செய்ததையும்; இராமனைக் காட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டவுடன் இராமன் மிகவும் துக்கங்கொண்டு, கோசலை சீதை ஆகியோருடன் விசனப்படுவதையும்; சீதை காட்டுக்குப்போக விரும்பாமல் வருந்துவதையும்; கைகேயி செய்த கட்டாயத்தின் பேரில் இராமன் சீதையைக் கூட்டிக்கொண்டு போவதையும்; சீதையை இராவணன் கலவி செய்து விட்டதாகவே நன்றாக விளங்கும்படிக் குறிப்புக் காட்டி இருப்பதையும் கம்பன் மறைத்துக் காட்டி—இராமன், சீதை, தசரதன் முதலிய பாத்திரங்களை உயர்த்திக்காட்டி மக்களை ஏய்த்து விட்டான்.

படிப்பகம்

www.padippakam.com



மேலும், புராண நாடகக் கதைகளில் உள்ள முட்டாள்தனமான, முரணான கற்பனை களுக்கும் சில எடுத்துக்காட்டுக்கள் பார்க்கலாம். நல்லதங்காள் பதிவிரதை என்பதைக்காட்ட, அவள் பச்சை வாழை மட்டையை விறகாக வைக்க—அது பற்றி எரிந்தது என்று காட்டு வார்கள். அப்படிப்பட்ட பதிவிரதை வாழ்ந்த நாட்டில் பன்னிரெண்டு ஆண்டுகள் மழை யில்லாமல் பஞ்சம் வந்திருப்பதாயும், அதனால் நல்லதங்காள் கணவன், குழந்தைகளுடன் நாடு விட்டுப் பிழைக்க வந்ததாகவும் குறிப்பிட்டு—நல்லதங்காள் பதிவிரதையல்ல வென்றும், அவளிருந்த ஊரில் ஒரு பதிவிரதைகூட இல்லை என்று முடிவுகட்டும்படி அதே கதையில் சித்திரித்திருக்கிறார்கள்.

அதுபோலவே, சாவித்திரி–சத்தியவான் கதையைச் சித்திரித்தவன், சாவித்திரியின் கற்பினால்—பதிவிரதாத் தன்மையினால் இறந்துபோன தன் கணவன் உயிரை, எமனுடன் போராடிப் பெற்றுத் தான் விதவையாக ஆகாமல் மாங்கல்ய ஸ்திரீ ஆனதாகச் சித்திரிப்பதில்—இந்த நாட்டில் கணவனைச் சாகக்கொடுத்த அத்தனை பெண்களும் பதிவிரதைகள் அல்லர் என்றும், இன்று நம்நாட்டில் இருக்கும் விதவைகளில் ஒரு பதிவிரதைகூட இல்லை யென்றும், அதனாலேயே சாவித்திரிபோல ஒருத்திகூட எமனுடன் போராடி செத்துப்போன தன் கணவர் உயிரைக் கொண்டுவரமுடியவில்லை என்றும் பிறர் கருதும்படி முட்டாள் தனமாகக் கதை சித்திரித்துவிட்டான்.

மற்றும், 'குசேலோபாக்கியானம்' என்னும் குசேலர் கதையில்—குசேலருக்கு 27 பிள்ளைகள் என்றும், 27 பிள்ளைகள் பெற்று குசேலர் தரித்திரத்தில் துன்பப்பட்டு 27 குழந்தைகளை அழைத்துக் கொண்டு கிருஷ்ணன் (கடவுள்) இடத்தில் சென்று பிச்சை கேட்டதாகவும், கடவுள் ஏராளமாகச் செல்வம் கொடுத்ததாகவும் கதை சித்திரித்த ஆசிரியர் சிறிதுகூடப் பகுத்தறிவைப் பயன்படுத்தவில்லை. ஒருவனுக்கு 27 குழந்தைகள் இருந்தால் அவன் வருஷத்துக்கு ஒரு குழந்தைபெற்று இருந்தால், இருபது வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் நிறைந்த குழந்தைகள் எட்டாக இருந்திருக்கும். இந்தக் குழந்தைகளும் சோம் பேறித் தடியன்கள்போல் ஒரு வேலைக்கும் இலாயக்கில்லாத மாமிசப் பிண்டங்களாகவா இருந்திருக்கக் கூடும்? இப்படி இருபது வயதுக்கு மேற்பட்ட மக்களை வீட்டிலே வைத்துக் கொண்டு ஒருவன் பிச்சைக்குப் போயிருந்தால், அந்த நாட்டில் மற்றவர்களும் இது போலிருந்திருக்க வேண்டாமா? அப்படி இருந்தால், அந்த நாடு எப்படி உருப்படி ஆகி இருக்கும்? இப்படிப்பட்ட சோம்பேறித் தடியர்களுக்குக் கடவுள் செல்வம் கொடுக்கலாமா? இப்படி ஒரு கூட்டம் நம்மிடம் வந்து பிச்சை கேட்டால் நாம் என்ன சொல்லுவோம் என்பதைச் சிந்தியாது, இவ்வளவு முட்டாள்தனத்தைக் கடவுள்மீது ஏற்றின ஆசிரியர் எவ்வளவு அறிவற்றவராக இருக்கவேண்டும்? அற்புதங்கள், அதிசயங்கள் நடந்ததாக எழுதுகிற புளுகு முட்டாள்தனம் ஒருபுறம் இருக்க, இப்படி நியாயமான அறிவு, சிந்தனை, குற்றம் கூறாமல் இருக்கும் தன்மைகூட இல்லாமல் மிகமிக முட்டாள்தனமானதும் குற்ற மானதும் மக்களுக்கு இழிவைத் தருவதுமான கதைகளைச் சித்திரித்தவர் காட்டுமிராண்டிக் காலத்தில் சுய நல இழிதன்மையால் சித்திரித்தார்கள் என்றாலும்—விஞ்ஞான காலத்தில், பகுத்தறிவு வளர்ச்சி காலத்தில் மான உணர்ச்சி, இன உணர்ச்சி தாண்டவமாடுங் காலத்தில் இப்படிப்பட்ட கதைகளை அதுவும் திராவிட மக்களிடையில் திராவிட மக்களாலேயே நடிப்பதும் இசைபாடுவதும்—இதனால் திராவிட மக்களில் பலர் வயிறு வளர்ப்பதும் என்றால், திராவிட மக்களைச் சூத்திரன், அடிமை, தாசி மகன், சுதந்திரத்தையும் மானத்தையும் சிந்திக்கக்கூடாத இழிபிறப்புக் கடைமகன் என்று ஆரியன் எழுதி வைத் திருப்பதை இவர்கள் மெய்ப்படுத்துகிறார்கள் என்றுதானே அர்த்தம்?

இந்தவிதமான நம் இழி தன்மையால், அதாவது இப்படிப்பட்ட காரியங்களுக்கு நாம் இடம் கொடுப்பதால் நம் பொருள், ரோசம், மானம், அறிவு எவ்வளவு கெடுகிறது என்று கணக்குப் பாருங்கள். இப்பொழுது திராவிட நாட்டில் நாடகக் கொட்டகை, சினிமாக் கொட்டகை, 'டெண்டு' (கூடாரம்) ஆகியவைகள் சுமார் ஒரு ஆயிரத்துக்கு மேலாகவே



புராணக் கதைகள், ஆரிய ஆதிக்கக் கதைகள் நடப்பனவாக இருக்கும். ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்கான மக்கள் இரண்டு தரம் மூன்று தரம் கூடுவார்கள்; 3–மணி நேரமாவது நடத்துவார்கள். தினம் குறைந்தது 5–இலட்சம் ரூபாயாவது செலவாகும். 30 நாளைக்கு ஒன்றரைக் கோடி ரூபாய் இந்த அக்கிரமத்திற்குச் செலவாகின்றது. வருடத்திற்கு 18 கோடி ஆகிறது. இதுபோல் புராணக் கதைகள், இலக்கியங்கள், கதா காலட்சேபங்களுக்கு எத்தனை கோடி? இது—அறிவுள்ள நாட்டிற்கு, மானமுள்ள சமுதாயத்திற்கு ஏற்றதா? சிந்தித்துப் பாருங்கள்! இந்தப் பணத்தில் ஒரு பாகம் கண்காட்சிக்கும் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் செலவு செய்யப்படுமானால் இந்த நாட்டு மக்களாகும் நாம், எவ்வளவு உயர் நிலையில் இருந்திருப்போம்! மேல்நாடுகள் நமக்கு எவ்வளவு பின்னணியில் இருந் திருக்கும்! நாம் இன்னும் இந்தக் காலத்திலும் சூத்திரர்களாய் நாலாவது சாதியாய் இருந்திருக்க முடியுமா? இனி மதம், கடவுள், உற்சவம், பண்டிகை, சடங்கு சனியன் என்பனவாகியவைகளுக்கு எத்தனை கோடி ரூபாய், எவ்வளவு நேரம், எவ்வளவு ஊக்கம் செலுத்தப்படுகின்றது என்று பாருங்கள்! இவைகளை நிலைநிறுத்தத்தானே இந்தப் புராணக் கதை, நடிப்பு, இசை, காலட்சேபம், படிப்பு பயன்படுகின்றன! அரசியல், பொருளாதார இயல் என்பவைகளைப் பிரதானமாகக் கருதாதீர்கள். அறிவியல், மானவியல், சரிப்பட்டுவிட்டால் அரசியல் கஷ்டம், பொருளாதார இயல் கஷ்டம் தலைகாட்டவே காட்டாது. இந்த இழிவுகளில் ஊக்கம், ஆற்றல், செல்வம் முதலியவைகளை அதிகமாகச் செலுத்தி எதிர்காலத்தைப் பாழ்செய்து கொள்ளாதீர்கள். நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலையில் இருந்து நியாயத் தீர்ப்பு நியாயாதிபதிபோல் கவலையுடன் சிந்தித்துப் பாருங்கள்.

பதவியும், வயிறு வளர்ப்புமே மனித வாழ்வின் இலட்சியமல்ல. மலத்தில் இருக்கும் புழுவும் உயர்வாக இருக்கிறது; தினத்துக்குத் தினம் வளர்ச்சி அடைகிறது; மற்ற ஜீவன் களுக்கு ஏற்படும் இயற்கைக்கு ஆளாகி இயற்கை எய்துகிறது. மனிதனும் அதுபோல் தானா? வாழ்வதும் வளர்வதும்தானா மனித இலட்சியம்? அல்லது, அதுதானா மனிதர் களின் இயற்கை முடிவு. சிந்தித்துப் பாருங்கள்! சிந்தித்துப் பாருங்கள்! மனிதத் தன்மையையும் மான உணர்ச்சியையும்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்!

இரணியன் கதையானது வைணவ மயமாய்ச் செய்யப்பட்ட கதை. இது இராமாயணக் கதை செய்யப்பட்ட காலத்துக்கு முன்பாகச் செய்யப்பட்டதாகும். இது பாகவதம் என்னும் புராணத்தில்தான் விரிவாகக் காணப்படுகிறது. புராணங்களில் முதலாவது அல்லது முன்னது கந்தபுராணம் என்பதுதான் எனது கருத்து. அதைப் பார்த்துத்தான் இராமாயணம் ஆக்கப்பட்டதாகும். இன்னும் சொல்லவேண்டுமானால், மும்மூர்த்திகள் என்று சொல்லப்பட்ட மூன்று கடவுள்களில் முதல் கடவுள் சிவன்தான். சிவன்தான்—ஆரியர் கற்பனை மாத்திரமல்லாமல், பரிணாமத் தத்துவப்படி பார்த்தாலும்—முதலாவதாகக் கற்பிக்கப்பட்ட கடவுளாக இருக்கவேண்டும். ஏனெனில், சிவன் காட்டுமிராண்டிக் காலத் தில் கற்பிக்கப்பட்ட கடவுள்.

சிவனைப் பாருங்கள்! சடைமுடி, தாடி; கையில் மழு; மிருகம்—காட்டுமிருகம்; தோல் ஆடை; பாம்பு, எலும்பு நகை; மண்டை ஓடு பாத்திரம்; கோரரூபம்; சுடுகாடு இருப்பு; சாம்பல் மேல்பூச்சு; உடுக்கை வாத்தியம்; பழக்கொட்டைகள் விசேஷ அணி; வாகனம்–மாடு; முக்கியமாய் இருப்பது–மலைமேல்; மலையில் இருந்து வடியுந் தண்ணீரைச் சிவன் தலையில் இருந்து வருவதாகக் கற்பனை; ஆகாயத்தில் இருக்கிற சந்திரன், சிவன் தலையில் இருப்பதாகக் கற்பனை; கிரணத்தோடு காணப்படும் சூரியன்–சிவன் கண்களாகக் கற்பனை; இவையெல்லாவற்றையும் காட்டிலும், சிவன் பெண்டாட்டியும் காளி! காலப்போக்குப்படி பார்த்தால் முதலில் கற்பிக்கப்பட்ட கடவுள் கற்பிதந்தான் சிவன் என்பது சாதாரணமாகப் புரியும்.

படிப்பகம்

www.padippakam.com



பிறகுதான் விஷ்ணு கற்பனை என்பதற்கு ஆதாரம் என்னவென்றால்—விஷ்ணு சிறிது நாகரிகம் ஏற்பட்டபிறகு கற்பிக்கப்பட்ட கடவுள் ஆவார். எப்படி என்றால், விஷ்ணுவிற்கு இருப்பிடம் நாடு; உடை (பீதாம்பரம்) உயர்ந்த ஆடை; நகை—உயர்ந்த பொன், மாணிக்கங்கள்; தலையில் கிரீடம்; இலட்சுமி என்கிற செல்வச் சீமாட்டி—மனைவி; சந்தனக் காப்பு; குரங்கு, கருட ஆழ்வார் வாகனம்; பாற்கடலுள் இருப்பு, சயனம்; இந்தப்படியும், இதுபோன்ற மற்ற காரியங்களும் முந்தியதைவிடச் சற்று நாகரிகமாகவே கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

பிரம்மா என்கின்ற கடவுள் இன்னும் பிற்காலத்தில் கற்பிக்கப்பட்டது என்பதற்கு முன்னையவை இரண்டையும்விடச் சற்று முற்போக்காகவே இருந்துவருவது காரணமாகும். சிருஷ்டிக் கிரமம், கலை அறிவு, கல்வி அறிவு முதலியவைகள் மிகமிக நாகரிகமேற்பட்ட பிறகே தோன்றியிருக்கவேண்டும். இந்தக் கண்கொண்டு—ஜாக்கிரதையாக இந்துக் கடவுள்கள் தன்மையைப் பார்த்தால் கடவுள்கள், புராணங்கள், முதலியவைகளின் பரிணாமத் தன்மை விளங்கும். எனவேதான், முதல் கற்பிதக் கடவுளாகிய சிவனைப் பற்றிய புராணக் கதைகள் காட்டுமிராண்டித் தன்மையாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் கந்தபுராணம் எடுத்துக்காட்டு.

பொதுவாகவே கந்தபுராணம், விஷ்ணு சரித்திரப் புராணங்கள் யாவும் ஒரே அடிப் படையைக் கொண்டவையாகும். அதாவது, தேவர்கள்—சூரர்கள், தேவர்கள்—அசுரர்கள், சுரர்கள்—அசுரர்கள், தேவர்கள்—இராட்சதர்கள், தேவர்கள்—தஸ்யூக்கள் என்பதாகச் சரிசம, இரண்டு இனப் போராட்டமே தவிர, வேறு நல்ல சங்கதி மிகவும் அருமையாகத்தான் இருக்கும். எல்லாப் புராணக் கதையும், யுத்தம், நாசம், கொலை ஆகியவைகளின் வருணனைகளையே அதிகமாகக் கொண்டிருக்கும். சைவப் புராணங்களைவிட, வைஷ்ணவப் புராணங்கள், காவியங்கள், மனுதர்ம சாஸ்திரத்தையும் வருண தர்மங்களையும் அவைகளைக் காப்பாற்றப் பெரிய முயற்சிகளையும் அதிக அதிகமாக வலியுறுத்தும்தன்மை கொண்டனவாகக் காணப்படும். சூழ்ச்சி, வஞ்சம், தந்திரம் ஆகிய குணங்களையும் சைவப் புராணங்களைவிட, வைஷ்ணவப் புராணங்கள், கதைகள், தெய்வத் தன்மை, ஆகியவை அதிகமாகக் கையாடி இருக்கும். சிவன் கடவுளைக்கூட முதல் உருவக் கற்பனையில் குழவிக் கல் (லிங்கம்) போல் கற்பிக்கப்பட்டு, பிறகு விஷ்ணு கற்பிக்கப்பட்டார். மனித உருவம், நாகரிகமான மனித உருவம்—அதிலும் சிறப்பாகப் பார்ப்பனன் உருவம் என்ப தாகப் படிப்படியாக உயர்ந்துவந்து இருப்பதைக் காணலாம்.

இந்த நிலையில் சைவ, வைணவப் புராணக் கற்பனைகளில் இருக்கும் சில ஒற்றுமை யையும் கவனித்துப் பாருங்கள். இதற்குக் கந்த புராணத்தையும் இராமாயணத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். இரண்டு கதைகளுக்கும் உள்ள பொதுக் கருத்துக்கள் பல உண்டு.

மேலும், இந்தப் புராணங்கள் செய்ததன் உட்கருத்து ஆரியர்—திராவிடர்கள் என்ற இரு பெரும் இனத்தைப் பொறுத்துச் செய்யப்பட்டதேயாகும் என்பதற்கு மேலும் சிலச் சில எடுத்துக்காட்டுகள் கூறுகிறேன். ஒரு காலத்தில் தேவர்கள் எல்லோருங் கூடி, தென்னாடு உயர்ந்து விட்டதென்றும் வடநாடு தாழ்ந்து விட்டதென்றும்—இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்றும் யோசித்து, அதைச் சமனாக்க அகத்தியரைத் தென்னாட்டுக்கு அனுப்புகிறார்கள். அகத்தியர் தென்னாடு வந்து இராவணனைத் தென்னாட்டை விட்டு ஓட்டி, இரு நாட்டையும் சமனாக்குவிக்கிறார் என்பது தொல்காப்பியக் கதையில் காணப்படுவது.

இதைவிட முக்கியமான கருத்தொன்று காணப்படுவது யாதெனில்—கயிலையில் சிவபெருமானுக்குத் திருமணம் நடக்கும்போது தென்னாடு உயர்ந்தும், வடநாடு தாழ்ந்தும் இருப்பதைக் கண்டு, சிவபெருமான், அதைச் சரிப்படுத்த அகத்தியரைத் தென்னாட்டுக்கு அனுப்புகிறார். அகத்தியர் தென்னாடு நோக்கி வருகையில் விந்தியமலை தடுக்கின்றது.



அந்த விந்திய மலையானது தேவர்களில் யாரையுந் தென்னாட்டுக்குள் விடாமல் தடுத்து வருகிறதாகத் தேவர்களும் அகத்தியரிடம் முறையிடுகிறார்கள். அகத்தியர் விந்தத்தை அடக்கி, தென்னாடு வந்து இராவணனைத் தென்னாடு ஆளாமல் கட்டிப் பிணித்தார் என்று புராணங் கூறுகிறது.

இதற்கு மத்தியில் மற்றொரு கதை. அதாவது, தென்னாட்டு எல்லையில் வாதாபி, வில்வலன் என்ற இரு அசுரர்கள், அதாவது பத்மாசூரனின் தங்கையான அசமுகியின் புத்திரர்கள் தென்னாட்டுக்குள் பிரவேசிக்கும் வேதியர்கள் (ஆரியர்கள்) முதலியவர்கள் எல்லோரையும் உள்ளே விடாமல் கொன்றுகொண்டே இருக்கிறார்கள் என்பதையும் வேதியரும் ரிஷிகளும் அகத்தியரிடம் முறையிடுகிறார்கள். அகத்தியர் இதற்குப் பரிகாரமாக வாதாபியைக் கொன்றுவிட்டு, வில்வலனை அடக்கி வெற்றி கொண்டு, ஏராளமான பொருள்களை அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டு தென்னாடு நுழைகிறார் என்பதாக இதிகாசங்கள் கூறுகின்றன.

இப்படியாக இன்னும் பல சம்பவங்கள்—அதாவது தேவர்களுக்குப் பல அசுரர்கள் விருத்திகர், சூரன், சம்பரன், சம்பார் சூரன் முதலிய பல அசுரர்கள் தேவர்களை வருத்தியவர்கள் என்றும்; அயக்கிரீவாசுரன், இரணியன், இராவணன், சுந்தோட சுந்தன் முதலாய எண்ணிறந்த அசுரர்கள், அரக்கர்கள், இராட்சதர்கள் எல்லோரையும் ஒரு பக்கமாகவும்—தேவர்களை ஒரு பக்கமாகவும் வைத்து எழுதப்பட்டவைகளேயாகும்.

இதில் சைவம், வைணவம் என்கின்ற கருத்து வேற்றுமையே இடையே இல்லாமல் ஏற்படுத்திக் கற்பிக்க வாய்ப்புச் செய்து கொண்டு கற்பிக்கப்பட்டவைகளேயாகும். இவைகளின் கருத்தையே உதாரணமாகப் பிரமாதமாகக் கொண்டு ஆரிய நீதிசாரத் திரட்டுகளும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

திராவிடர்கள் இவற்றின் உள் தத்துவத்தைக் கண்டு அதற்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டுமென்பதே நம் கட்டுரையின் கருத்தாகும்.

['பொன்னி' பொங்கல் மலர்—சனவரி, 1948]

## 4. கந்தபுராணமும் இராமாயணமும்

இது, கந்தபுராணமும்—இராமாயணமும் ஒரே கற்பனைக் கதையைச் சைவம், வைணவம் ஆகிய இரு சமயக்காரர்களும் தங்கள் தங்கள் மதச் சார்பாக ஏற்படுத்திக் கொண்ட புராணங்களேயாகும் என்பதை, விளக்குவதற்காக எழுதப்பட்டதாகும். 'புராணம்' என்ற சொல்லுக்குப் 'பழங் கதை' என்பதே அகராதிகளில் காணப்படும் பொருளாகும். பொதுவாகப் புராணங்களை எழுதியவர் வியாசர் என்று—அதாவது 'புராண கர்த்தா வியாசர்' என்று புராண ஆதாரங்கள் பலவற்றிலும் அறியக்கிடக்கின்றது.

இவற்றுள் கந்தபுராணம் (காந்தம்) என்பது—சிவமூர்த்தி நந்திக்குச் சொன்ன தாகவும், நந்தி சனத்குமாரர்க்கு உபதேசித்ததாகவும், அவர் வியாசருக்கு உபதேசித்த தாகவும், வியாசர் சூதருக்கு உபதேசித்ததாகவும், இறுதியாக சூத முனிவரால் எழுதப் பட்டவை புராணங்கள் என்றும் முடிகிறது.

பொதுவாக வியாசன் என்றால், 'வியாசம் எழுதுபவன்'; 'வியாசத்திற்கு உடையவன்'—வியாசன் என்பது தத்துவப்பொருள். இந்தக் கருத்தை வடமொழிப் புலவரான திரு. கே. எம். முன்ஷி பாரத இதிகாச சமிதி நூல்களில் குறிப்புக் காட்டி இருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



பொதுவாகப் புராணம் என்கிற வடமொழிச் சொல்லுக்குப் பொருள், 'பழங்கதை' என்பது மாத்திரமல்லாமல், புராணம் என்றாலே 'மிகப் பழைய' என்ற பொருளுமாகும். மற்றும், 'நவ' என்பதற்கு நேர் எதிர்மறைச் சொல் 'புராண' என்பதாகும். நவ (நவம்) என்றால் புதியது; புராண (புராணம்) என்றால் பழையது என்பதுதான் வடமொழி அகராதிப்பொருள். ஆகவே, பழங்கதை என்கின்ற முறையில் சைவ மதபரமாகத் தொகுக்கப்பட்ட ஒரு பழங் கதையை—அதற்குப் புராணம் என்பதாகப் பெயர் சூட்டி வடமொழியில் ஸ்காந்தம்–காந்தம் என்றும்; தமிழில் கந்தபுராணம் என்றும் பெயர் ஆக்கப்பட்டுவிட்டது.

கந்தபுராணத்து மூலக் கதாநாயகனாகிய கந்தன் அல்லது ஸ்கந்தனுக்கு அந்தப் பெயர் வந்ததற்குக் காரணம் என்னவெனில், ஸ்கந்தம், கந்தம் என்றால் 'இந்திரியம்' என்ற பொருளும் காணலாம். கந்தன் பிறப்பு, சிவனுடைய ஒழுகிப்போன இந்திரியத்தில் இருந்து உற்பத்தியானவன் என்பதாகப் புராண ஆதாரம் இருப்பதால், அவனுக்குக் 'கந்தன்' என்று பெயரிடவேண்டியதாயிற்று எனலாம்.

இப்படியாக, இந்தக் கந்தனை உண்டாக்கி, அவன் பெயரால் ஒரு கதையெழுதி, அதற்குக் 'காந்தம்'—'கந்தபுராணம்' என்று பெயர் கொடுக்கவேண்டிய அவசியம் ஆரியருக்கு ஏற்பட்ட காரணம் என்ன என்று பார்த்தால், ஆரியர் சிந்து நதிக்கு இப்புறம் வந்து நிலைபெற்று, தங்கள் உயர்வுக்கு ஏற்றபடி ஆதாரங்கள் ஏற்படுத்திக் கொண்ட தன்மைகளை எதிர்த்துப் போராடிய போராட்டங்களில் தாங்கள் வெற்றிகொண்டதைத் தங்களிஷ்டப்படி பாராட்டிக் கொண்டும், போராடிய மக்களாகிய திராவிடர்களைத் தங்கள் ஆத்திரத்திற்கேற்ப இழித்துக் கூறியும், மற்றும் தங்களை எதிர்ப்பவர்களை மிரட்டுவதற்காகவும் ஏற்படுத்திக்கொண்ட தொகுப்புகளேதாம்—ஸ்கந்தம், ஸ்காந்தம், கந்தபுராணம் என்பவைகளாக ஆக்கப்பட்டுவிட்டன. மற்ற புராணங்களும், அவதாரக் கதைகளும் இப்படிப்பட்டவைகளேயாகும்.

இந்தக் கந்தபுராணம் தொகுக்கப்பட்ட காலம் முழுக் காட்டுமிராண்டிக் காலமேயாகும். இதை எப்படிக் கண்பிடிக்க முடிந்தது என்றால், கந்தன் பிறப்பைப் பற்றியும், அவனது போராட்டங்களைப் பற்றியும் ஆரியர் கற்பித்துக்கொண்ட தன்மையைப் பார்த்தால் நன்றாய் விளங்குகிறது.

கதைக்கு மூலகாரணம் தேவர்களை அசுரர்கள் கொடுமைப்படுத்தியதாகக் காரணம் வைத்து, அசுரர்களை ஒழிக்கச் சிவனின் உதவியைத் தேவர்கள் கோரியதாகவும், சிவன் தான் ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொடுப்பதாகவும், அந்தப் பிள்ளை அசுரர்களை அழிக்கக் கூடியவனாவான் என்றும் கூறி—ஒரு பிள்ளையைப் பெறுவதற்காகத் தனது மனைவி பார்வதியிடம் கூடிக் கலவி துவக்கியதாகவும்; அக் கலவி தேவ வருஷத்தில் ஆயிரம் ஆண்டுகள் (நமக்கு ஒரு ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாள்; இந்த நாள் 360 கொண்டது தேவர்களுக்கு ஓராண்டு; இந்தப்படியாக ஆயிரம் ஆண்டு என்றால் 3,60,000—மூன்று இலட்சத்து அறுபதினாயிரம் நாட்கள்) நடந்ததாகவும், அதுவரையில் கூட பார்வதிக்குச் சினை (கர்ப்பம்) ஏற்படவில்லை என்றும்; பிறகு தேவர்கள் வேண்டுகோளால் கலவியை நிறுத்தி இந்திரியத்தைப் பூமியில் விட நேரிட்டதாகவும்; அது ஆறாய் ஓடிக் கங்கையில் விழுந்து 6 பிரிவுகளாய்க் கங்கையில் மிதந்ததாகவும்; அதை ஆறு பெண்கள் எடுக்க, அது ஆறு குழந்தைகளாக ஆகி, ஆறு பெண்களிடமும் முலைப் பால் அருந்தியதாகவும்; பிறகு அவற்றை ஒன்றுபடுத்தியதில் ஆறு உடல்கள் ஒருடலாகித் தலை மாத்திரம் ஆறு தலைகளாக இருந்து, அந்த ஒருடலில் ஒட்டிக்கொண்டதால், அது 'ஆறு தலைக் குழந்தை'யாகி ஆறுமுகனானான் எனவும் கதை கட்டிக் கொண்டார்கள். இதன்படியும், இன்னும் கதையில்வரும் மற்ற சம்பவங்களின்படியும் பார்த்தால், இந்தக் கதை கற்பனை செய்து கொண்ட காலத்தில் ஆரியர்களுக்கிருந்து வந்த புத்தி, காட்டுமிராண்டித்தனமான புத்தி, அறிவு என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.



இப்படிப்பட்ட காட்டுமிராண்டிக் கருத்துக்கொண்ட கந்தபுராணத்தை, வெகு காலத்திற்குப் பிறகு வைணவர்கள் தங்கள் சமயபரமாக ஆக்கிக்கொள்ள விரும்பி, கந்த புராணக் கதைப் போக்கையே மூலமாகக் கொண்டு, பெயர்களையும், சம்பவங்களையும் மாற்றி அதற்குக் கதா புருஷன் இராமன் என்றும், இராமன் விஷ்ணுவின் அவதாரம் என்றும் காட்டி, அந் நூலுக்கு இராமாயணம் என்றும் பெயர் வைத்துக் கற்பித்து விட்டார்கள்.

கந்தபுராணம் எழுதியவனும் மனிதன்தான்; இராமாயணம் எழுதியவனும் மனிதன் தான்; இருவரும் ஆரியர்களேயாவார்கள்.

ஆனால், கந்தன் கதையைக் கந்த புராணம் என்று பெயர் வைத்து, ஸ்காந்தம் என்பதாகக் கூறி, புராணத்தோடு சேர்த்துவிட்டார்கள். இராமன் கதைக்கு இராம புராணம் என்று பெயர் வைத்தால் புராணம் 18 என்பதனுள்சேராது என்றும், சேர்ந்தால் புராணங்கள் 19 என்று மாற்றவேண்டியிருக்குமே—அம் மாற்றத்திற்குச் செல்வாக்கு இருக்காதே என்றும் கருதி, அதற்கு 'இராமாயணம்' என்று பெயர் வைத்து, அதை 'இதிகாசங்கள்' என்னும் கூட்டத்தில் சேர்த்துவிட்டார்கள். ஆனாலும், 'இதிகாசம்' என்னும் சொல்லுக்கும் பழங் கதை என்பதுதான் பொருள்; தொன்றுதொட்டு வழங்கும் கதையென்று அகராதி கூறுகிறது.

'இதிகாசங்கள்' என்பதில் பாரதமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. புராணங்கள் 18 என்றால், இதிகாசங்கள் மூன்றுதான். அவை இராமாயணம், பாரதம், சிவ இரகசியம் என்பவைகளேயாகும். இவை 18 புராணக் கற்பனை காலத்திற்குப் பின்பு சமீபகாலக் கோவை ஆதலால் தனித்து நிற்கவேண்டி வந்தது எனலாம்.

இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் 18 புராண காலங்களுக்கு வெகு நாளைக்குப் பிற்பட்டவைகளென்று சொல்லுவதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் என்னவென்றால், வெகு நாளைக்குப் பிற்பட்ட கால சரித்திரங்களில் கண்டுள்ள விஷயங்கள், இவைகளில் (பாரத, இராமாயணங்களில்) மலிந்து காணக் கிடக்கின்றன.

உதாரணமாக, பவுத்தர்களைப் பற்றியும், சேர, சோழ, பாண்டியர்கள் பற்றியும் அவர்கள் கொள்கைகளைப் பற்றியும்; நாடு, நகரங்களைப் பற்றியும்; பார்ப்பனர்களின் உயர்வைப் பற்றியும்; மற்றும் பல நவீனங்களைப் பற்றியும்; வருண தர்மங்களைப் பற்றியும்–மிகுதியாகவும், பரவலாகவும் காணக்கிடக்கின்றன. மற்றும், கந்தன் உற்பத்தியைப் பற்றி இராமாயணத்தில், அதுவும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இழிந்த முறையில் காணக்கிடக்கின்றன.

தேவ—அசுரர்கள்; திராவிட—ஆரியர்கள்; பிராமண—சூத்திரர்கள்; பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதவர்கள் என்கின்ற வேற்றுமையான விஷயங்களின் தோற்றமே முதன் முதலாகக் கந்த புராணத்தில்தான் காணப்படுகின்றது. இராட்சதர்கள் என்ற சொல்கூட கந்த புராணத்தில் காணமுடிவதில்லை. மற்றும், விஷ்ணுவின் 10 அவதாரங்களைப்பற்றிய சேதிகளில் 2, 3 அவதாரம் தவிர மற்றவற்றை, இந்தப் புராணங்களில் காணமுடிவதில்லை. பல ரிஷிகள், முனிவர்கள் பெயர்கள், நடத்தைகள் கூட கந்தபுராணத்தில் காண முடிவதில்லை.

இந்தப்படியாக, இன்னும் பல உண்மைகளைக் கொண்டு பார்த்தால், கந்த புராணத்தைவிட பாரத, இராமாயணங்கள் வெகு பிற்பட்ட காலக் கற்பனை என்பது விளங்கும்.

இவை மாத்திரமல்லாமல், கந்தபுராணத் தமிழாக்கம், இராமாயணத் தமிழாக்கம் ஆகிய இரண்டையும் எடுத்துக் கொண்டால், கந்த புராணத் தமிழ்க் காவியம் தான் முதலில் செய்யப்பட்டது; இராமாயணத் தமிழ்க் காவியம் பின்னால் ஆக்கப்பட்டது என்பதாகவும் ஆராய்ச்சியில் தெரிய வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com



அதாவது, கச்சியப்ப சிவாச்சாரியார் என்பவர் கந்த புராணத்தைத் தமிழில் காவியமாக ஆக்கிய பிறகே—கம்பர், இராமாயணத்தைத் தமிழில் கவி ரூபமாய்ப் பாடி இருக்கிறார் என்று கொள்ளத்தக்க ஆதாரங்கள்தான் இருக்கின்றன.

ஆகவே, கந்தபுராண உற்பத்தி முன்னையது என்றும், இராமாயணம் அதன் பின்னால் அதைப் பார்த்து—அதே கருத்தை வைத்து மாற்றி அமைத்துக் கொண்ட நூல் என்றும், அதுபோலவே தமிழில் காவியமாக்கியதிலும் முதலில் கந்தபுராணமும், பிறகு அதைப் பார்த்து இராமாயணமும் செய்யப்பட்டது என்பதும், அதிலும் அதன் ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியாரும், இராமாயண ஆசிரியர் கம்பரும் கோயில் பூசாரிகள் என்றும், இருவரும் 'கடவுள் அருள் பெற்றுப் பாடினார்கள்' என்றுமே காணப்படுகிறது.

ஆகவே, இரண்டும் ஒன்றுதான் என்பதற்கும், ஒன்றைப் பார்த்து மற்றொன்று 'காப்பி' அடிக்கப்பட்டது என்பதற்கும் ஆதாரம் காட்டவே இதை எழுதுவதுடன், இரண்டிற்கும் உள்ள பொருத்தத்திற்கும் ஏராளமானவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுகிறோம்.

மற்றும், கவிகளை எடுத்துக்கொண்டாலும், ஒருவரே இரண்டையும் பாடினார் என்று சொல்லும்படியாகப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்படி ஒரு பொய்யான, மோசடியான கற்பனைக் கதைகளையும், காவியங்களையும்—நமது மடமைத் தமிழ்ப் புலவர்களும், காட்டுமிராண்டி மக்களும் எவ்வளவு தூரம் நம்பி இழிமக்களானார்கள் என்பதைக் காட்டவே இது எழுதப்பட்டதாகும்.

[நூல் : 'கந்தபுராணமும்-இராமாயணமும் ஒன்றே'—முகவுரை-2-ஆம் பதிப்பு 1961]

கந்த புராணம், இராமாயணம் ஆகிய இரண்டிற்குமுள்ள ஒற்றுமை :—

1. கந்த புராணமும்—இராமாயணமும் வடமொழியில் உள்ள மூலக் கதைகளைக் கொண்டவையாகும்.

2. இரண்டு மூலங்களும் ஆரியர்களால் உண்டாக்கப்பட்டவையேயாகும்.

3. இரண்டு கதைகளும் ஆரிய சமயக் கொள்கைகளை வலியுறுத்துவதைக் கருத்தாய்க் கொண்டு, ஆரியக் 'கடவுள்களைப்' பெருமைப்படுத்த ஏற்படுத்தியவையாகும்.

4. இரண்டு கதைகளும், தேவர்கள் என்பவர்களுக்கும் அசுரர்கள் என்பவர்களுக்கும் நடந்த போராட்டங்கள் என்ற பாவனை வைத்துக் கற்பிக்கப்பட்டவைகளாகும்.

5. இரண்டு கதைகளும், தேவர்கள் என்பவர்களை உயர்த்தியும்; அசுரர்கள்—இராக்கதர்கள் என்பவர்களைத் தாழ்த்தியும், இழித்தும் காட்ட ஏற்பட்டவை என்பதோடு, இரண்டு கதைகளுக்கும் இந்திரன் பிரதானப்பட்டவனாகிறான்.

6. இரண்டு கதைகளின் தமிழ் மொழிபெயர்ப்புக் காவியங்களும் இரண்டு கோயில் அர்ச்சகர்களால்-கோவிலில் பூசை செய்யும் பூசாரிகளால் பாடப்பட்டவைகளாகும். கந்த புராணம் கச்சியப்ப சிவாச்சாரி என்னும் அர்ச்சகராலும், இராமாயணம் கம்பன் என்னும் பூசாரியாலும் தமிழில் பாடப்பட்டவை.

7. இரண்டு கதைகள் உற்பத்திக்கும் காட்டப்பட்ட காரணங்கள்—அசுரர்களின் தொல்லைகள் பொறுக்கமாட்டாமல் தேவர்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் கடவுள்களைப் பிரார்த்தித்துத் தங்கள் துன்பங்களைத் தீர்க்கும்படி வேண்டிக் கொண்டவைகளாகும்.

8. இராமாயணக் கதைக்கு விஷ்ணு இராமனாக அவதரித்துக் கதாநாயகனாகவும், –கந்த புராணத்திற்கு சிவன் கந்தனாகப் (சுப்பிரமணியனாக) பிறந்து கதாநாயகனாகவும் இருக்கிறார்கள்.



9. இரண்டு கதாநாயகர்களுடைய பிறப்பும் அருவருக்கும் தன்மையாகவே—அதாவது இராமனது தாய் கோசலை, யாகத்தின்போது குதிரையுடன் ஓர் இரவெல்லாம் கட்டித்தழுவிப் படுத்திருந்து, பகலெல்லாம் யாகப் புரோகிதனுடன் சேர்ந்து கர்ப்பமாகி இராமன் பிறந்ததாகவும்; கந்தன்–தன் தகப்பன் (சிவன்) தன் தாயைப் (பார்வதியை) பல 'தேவ' ஆண்டுகள் இடைவிடாமல் புணர்ந்து, தேவர்கள் விருப்பப்படி இடைவெளியில் வீரியத்தை விட்டு, அது கங்கையில் சேர்ந்து, அங்கு பல பிரிவாகிக் குழந்தை உருக்கொள்ள, அதைப் பல பெண்கள் வளர்க்க, அதனால் ஆறுமுகம் பெற்று ஆறுமுகமானான்; கார்த்திகேயனானான், (இந்தச் சேதிகளை இராமாயணமே கூறுகிறது) என்பதாகவும் இருக்கிறது.

10. இவ்விரண்டு கதாநாயகர்கள் (இராமன்—கந்தன்) மனைவிமார்களும் தங்கள் பிறப்பை அறிய முடியாதவர்கள். அதாவது, இராமனின் மனைவி சீதையை யாரோ பெற்று பூமியில் போடப்பட்டு, புழுதியில் மறைந்து கிடந்து, ஓர் அன்னிய அரசனால் கண்டெடுத்துவந்து வளர்க்கப்பட்டவள்.

கந்தன் மனைவி வள்ளியும் யாராலோ—ஒரு மானிடத்தில் ஒரு ரிஷியால் சினை ஆகிப் பெறப்பட்டு, காட்டில் ஒரு குழியில் கிடத்தப்பட்டு, ஒரு வேட அரசனால் கண்டெடுத்துக் கொண்டுபோய் வளர்க்கப்பட்டவள்.

11. இராமனுக்கு—சீதை (விஸ்வாமித்திரன் என்னும்) ஒரு ரிஷியினால் கூட்டி வைக்கப்படுகிறாள்; கந்தனுக்கு—வள்ளி (நாரதன் என்னும்) ரிஷியினால் கூட்டிவைக்கப் படுகிறாள்.

12. இராமனுக்கு எதிரி (இராவணன் என்னும்) தேவர்கள் விரோதி; தேவர்களை அடக்கி ஆண்டவன். கந்தனுக்கு எதிரி (சூரபத்மன் என்னும்) தேவர்கள் விரோதி; தேவர்களை அடக்கி ஆண்டவன்.

13. இராமனுக்கு ஆயுதம் வில்; கந்தனுக்கு ஆயுதம் வேல்.

14. இராவணனும் மகா தவசிரேஷ்டன்; மகா பலசாலி; வீரன்; மாபெரும் வரப்பிரசாதி. சூரபத்மனும் மகா தவசிரேஷ்டன்; மகா பலசாலி; வீரன்; மாபெரும் வரப்பிரசாதி.

15. இராமனுக்கு இலட்சுமணன் என்கின்ற ஒரு சகோதரன் உதவி செய்கிறான்.

கந்தனுக்கு கணபதி, வீரபாகு என்கிற சகோதரர்கள் உதவி செய்கிறார்கள்.

16. இராவணனுக்கு சூர்ப்பனகை என்ற ஒரு தங்கை இருக்கிறாள்.

சூரபத்மனுக்கு அசமுகி என்கின்ற ஒரு தங்கை இருக்கிறாள்.

17. இராவணனுக்கு இந்திரசித்து என்னும் (மேகநாதன் என்ற) மகன்; இவன் மகா பலசாலி; வீரன்.

சூரபத்மனுக்கு பானுகோபன் என்கின்ற ஒரு மகன்; இவன் மகா பலசாலி.

18. இராவணனுக்கு விரோதமாக இராவணன் தம்பி விபீஷணன் என்பவன் இருந்துகொண்டு, எதிரியைப் புகழ்ந்து, சீதையை விடும்படி கூறி, எதிரிக்குக் காட்டிக் கொடுக்க நாட்டை விட்டுப் போய்விடுகிறான்.

சூரபத்மனுக்கு விரோதமாக சூரபத்மன் தம்பி சிங்கமுகன் என்பவன் எதிரியைப் புகழ்ந்து பேசி, சயந்தனை சிறைவிடும்படி கூறி, எதிரிக்கு அனுகூலமாக நாட்டைவிட்டுப் போய்விடுகிறான்.

19. இராவணன் மகன் இந்திரசித்து, இராமனைப் புகழ்கிறான்.

சூரபத்மன் மகன் பானுகோபன், கந்தனைப் புகழ்கிறான்.

படிப்பகம்

www.padippakam.com



20. இராவணனிடம் தூதனாக அனுமான் சென்று இலங்கையை அழித்துவிட்டு வருகிறான்.

சூரபதுமனிடம் தூதுவனாக வீரபாகு சென்று வீரமகேந்திரத்தை அழித்து விட்டு வருகிறான்.

21. இராவணன் தங்கையின் மூக்கையும், காதையும் இலட்சுமணன், அவள் தலை மயிரை இழுத்துக் கீழே போட்டு அழுத்தித் துண்டிக்கிறான்.

சூரபதுமன் தங்கை அசமுகியின் கைகளை மாசானன் என்பவன், அவள் மயிரை இழுத்துக் கீழே போட்டு அழுத்தித் துண்டிக்கிறான்.

22. சூர்ப்பனகை சீதையை இராவணனிடம் சேர்க்க முயற்சிக்கிறாள்.

அசமுகி இந்திராணியை சூரபதுமனிடம் சேர்ப்பிக்க முயற்சிக்கிறாள்.

23. சூர்ப்பனகை மூக்கு, காது அறுபட்டவுடன் அண்ணன் இராவணனிடம் போய் 'என்னை இப்படிச் செய்துவிட்டானே, உனக்கு வெட்கமில்லையா!' என்று கூறி அழுகிறாள்.

அசமுகி கைகள் அறுபட்டவுடன் அண்ணன் சூரபதுமனிடம் போய், 'என்னை இப்படிச் செய்துவிட்டானே, உனக்கு வெட்கமில்லையா!' என்று கூறி அழுகிறாள்.

24. அதற்காகக் கோபப்பட்டு, இராவணன்—இராமனுடன் சண்டைக்குப் போகிறான்.

அதற்காக வேண்டியே சூரபதுமன் ஆத்திரப்பட்டு கந்தனுடன் சண்டைக்குப் போகிறான்.

25. இராமனுக்கு சுக்கிரீவன், அனுமார், அங்கதன், நீலன், சம்புவந்தன் முதலியவர்கள் உதவி செய்கிறார்கள்.

சூரனுக்கு நவ வீரர்கள் உதவி செய்கிறார்கள்.

இராமனை மூலபலம் எதிர்க்கிறது என்றும், சூரனுக்கு ஓர் அரக்கி வயிற்றில் வெட்ட வெட்ட அசுரர்கள் பிறக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

26. சூரப்பனகை, உற்றார் உறவினரை ஓலமிட்டு அழைத்தாள்.

அசமுகி, உற்றார் உறவினரை நினைந்து ஓலமிட்டாள்.

27. சூர்ப்பனகை, 'வெள்ளிமா மலையை அசைத்த மன்னவா! என் மூக்கை அறுத்த பகைவனை நோக்காயோ?' என்று இராவணனிடம் ஓலமிட்டாள்.

அசமுகி, 'கதிரவனை சிறைசெய்த மன்னவா! யான்பட்ட குறையினை அறியாயோ?' என்று சூரனிடம் அழுதாள்.

28. சூர்ப்பனகை, 'யான் அடைந்த அவமானத்திற்குப் பழிவாங்க வாராயோ?' என்று அழுதாள்.

அசமுகி சூரனிடம், 'பழி பூண்டு நின்றாயே!' என்றழுதாள்.

29. சூர்ப்பனகை அழுதுகொண்டு இராவணன் சபை புகுந்தாள்.

அசமுகி அழுதுகொண்டு சூரன் சபை புகுந்தாள்.

30. இராவணன் கோபம் கொண்டு வருந்தி, சீதையை அடையக் கருதினான்; அடையத் துணிந்துவிட்டான்.

சூரன் கோபங் கொண்டு மனம் கொதித்து, இந்திராணியை அடையக் கருதினான்.

31. இராவணன் சீதையைத் தூக்கிவந்து சிறைவைத்தான்.



சூரபதுமன், இந்திராணி ஒளிந்து கொண்டதால் அவள் மகன் சயந்தனையும், சுற்றத்தார்களையும் சிறை செய்தான்.

32. சீதை சிறையில் வாடி, வதங்கி அழுதாள்.

சயந்தன் சிறையில் வாடி அழுதான்.

33. சீதை, சிறையில் இராமன் வந்து விடுதலை செய்ய வேண்டுமென்று எண்ணினாள்.

சயந்தன், கடவுள் வந்து தன்னை விடுதலை செய்யவேண்டுமென்று எண்ணினான்.

34. சீதை அழுது எண்ணியதால் இராமன் விற்படை இலங்கைக்கு வந்தது.

சயந்தன் எண்ணி அழுததால் வீரமகேந்திரத்திற்கு வேற்படை வந்தது.

35. இராம தூதனாக—அனுமான் இலங்கைக்கு வந்தான்.

முருக தூதனாக—வீரபாகு வீரமகேந்திரத்துக்கு வந்தான்.

36. இலங்கை, வீரர்களாலும் சூரர்களாலும் கனல்கக்கும் கண்ணீராலும் நிறைந்திருந்தது. இலங்கையில் பசி இல்லை; ஏழ்மை இல்லை; பிணி இல்லை; கவலையில்லை.

வீர மகேந்திரத்தில் உள்ளவர் வரத்தில் பெரியர்; வண்மையில் பெரியர்; உரத்தினில் பெரியர். அங்கு—வீரமகேந்திரத்தில் நலிந்து, மெலிந்து, நரை, திரை கொண்டு பசி கொண்டவர் இல்லை.

37. இலங்கையில் வானவர் பணிந்து பணிசெய்தனர்; காவல் காத்தனர்; பணியாளராய் நின்றனர். இதை அனுமான் பார்த்தான்.

வீரமகேந்திரத்தில் வானவர் வணங்கி ஏவல் புரிந்தனர்; மீன் கொண்டு வந்து கொடுத்தனர்.

38. இராவணனது பெருமையையும், அவனது தவத்தையும் அனுமான் வியந்து போற்றினான்.

சூரனின் தவத்தின் பெருமையை வீரபாகு வியந்து புகழ்ந்தான்.

39. அனுமான், சீதை சிறை இருந்த அசோகவனம் சென்று சீதையைக் கண்டு அவள் சோகத்தைத் தேற்றினான்.

வீரபாகு, சயந்தன் சிறையிருந்த இடம் சென்று அவனைத் தேற்றினான்.

40. அனுமான் இராவணன் முன் அழைத்துச் செல்லப்பட்டான்.

வீரபாகு சூரன் முன் சென்றான்.

41. அங்கே அனுமான், இராமன் பெருமையைச் சொல்லுகிறான்.

அங்கே வீரபாகு, முருகன் பெருமையைச் சொல்லுகிறான்.

42. அனுமான், இராவணனிடம், 'ஆதியும் அந்தமுமில்லாத பரம்பொருளே இராமனாய்த் தோன்றினான்' என்கிறான்.

வீரபாகு, 'தன்னிகரில்லா இறைவனே முருகனாகத் தோன்றினான்' என்கிறான்.

43. அனுமான் சொன்னது இராவணன் செவியில் ஏறவில்லை.

வீரபாகு சொன்னது சூரன் செவியில் ஏறவில்லை.

44. அனுமான், 'உன் செல்வம் சிதையாமல், உன் வாழ்வு குலையாமல் இருக்க வேண்டுமானால் சீதையை விட்டுவிடு' என்று இராவணனுக்குச் சொன்னான்.

படிப்பகம்

www.padippakam.com



வீரபாகு, 'நின் சேனையோடு நீ நெடிது வாழ வேண்டுமானால் வானவரைச் சிறையினின்றும் விடுக; ஆறுமுகன் அடிபணிக' என்று சூரனுக்குச் சொன்னான்.

45. அனுமான் இலங்கையை எரித்தான்.
வீரபாகு மகேந்திர நகரை அழித்தான்.

46. அனுமான், அரக்க வீரரை அழித்தபின் இராமனிடம் சென்றான்.
வீரபாகு, அசுரன் சேனையைச் சிதைத்தபின் அதைவிட்டுச் சென்றான்.

47. இராவணன் மந்திரிசபை கூட்டினான்; அனுமான் செய்ததை எடுத்துரைத்து வருந்தினான்.
சூரன் மந்திரிசபை கூட்டினான்; வீரபாகுவின் ஜெயத்தை மந்திரிகளுக்குச் சொல்லி வருந்தினான்.

48. இராவணனின் சேனைக் காவலன், மகோதரன் எழுந்து வீரம் பேசினான்.
சூரனின் ஆட்களான காலசித்தனும், சூரனின் மகனாகிய பானுகோபனும் வீரம் பேசினார்கள்.

49. இராவணன் தம்பி விபீஷணன் எழுந்து இராவணனுக்குப் புத்தி கூறினான்.
சூரன் தம்பியாகிய சிங்கமுகன் சூரனுக்குப் புத்தி கூறினான்.

50. இராவணன் மகிழ்ச்சியும், தீரமும் கொள்கிறான்.
சூரன் மகிழ்ந்து ஊக்கம் கொள்கிறான்.

51. 'இராமன் கடவுள்' என்றும், 'நீ வாழ வேண்டுமானால் சீதையை விட்டுவிடு' என்றும் விபீஷணன் கூறுகிறான்.
சிங்கமுகன், 'முருகன் ஆதிபரம் பொருள்' என்றும், 'நீ வாழ வேண்டுமாயின் வானவரை விட்டுவிடு' என்றும் சொல்லுகிறான்.

52. இராவணன், எதிரியைப் புகழ்ந்த விபீஷணனைக் கண்டிக்கிறான்.
சூரன், எதியைப் புகழ்ந்த சிங்கமுகனை வெறுக்கிறான்.

53. இராவணன், இராமனை ஏளனம் பேசி இழிவுபடுத்திச் செல்லுகிறான்.
சூரன் சுப்பிரமணியனை ஏளனம் பேசி, அலட்சியமாய்க் கருதிச் செல்லுகிறான்.

54. இராவணன், விபீஷணன் மீது குற்றம் சாட்டித் திட்டுகிறான்.
சூரன், சிங்கமுகன் மீது குற்றம் சாட்டித் திட்டுகிறான்.

55. விபீஷணன் வருந்தி, நாட்டை விட்டகலுகிறான்.
சிங்கமுகன் வருந்தி நாட்டை விட்டகலுகிறான்.

56. போர் நடக்கிறது. முதல்நாள் போரில் இராவணன் தோற்று மீளுகிறான்.
போர்நடக்கிறது. முதல்நாள் போரில் சூரன்மகன் பானுகோபன் தோற்று மீளுகிறான்.

57. இராமன்—இராவணனை, 'இன்றுபோய் நாளை வா' என்கிறான்.
முருகன்—பானுகோபனை, 'இன்று உன்னைப் போகவிடுகிறேன்' என்கிறான்.

58. இராமன் இராவணனை, 'இப்பொழுதாவது சீதையை விடுத்துப் பிழைத்துப் போ' என்று எச்சரிக்கிறான்.
முருகன் இரண்டாம் நாள் போரில் சூரனை, 'இப்பொழுதாவது வானவரை விடுத்தால் உயிர்வாழ்வாய்; இல்லையேல் மடிவாய்' என்று எச்சரிக்கிறான்.



59. இராவணன் மறுமொழி கூறாது அரண்மனை சென்றான்.
சூரன் மறுமொழி கூறாது அரண்மனை அடைந்தான்.

60. இந்திரசித்தன் போருக்குச் சென்று, தோல்வியடைந்து தந்தையிடம் வந்து, 'இராமனை வெல்லமுடியாது; சீதையை விட்டுவிடு; உயிர்வாழ்வோம்' என்கிறான்.
பானுகோபன் போரில் தோற்று, தந்தையிடம் வந்து, 'வானவரை விட்டுவிடு; உயிர்வாழலாம்' என்கிறான்.

61. இராவணன் தன் மகன்மீது கோபங்கொண்டு, 'உயிரைவிடுவேனே ஒழிய, சீதையை விடமுடியாது; மானம் பெரிதே ஒழிய, உயிர் பெரிதல்ல' என்கிறான்.
சூரன் தன் மகன்மீது கோபித்து, 'உயிரைவிட்டாலும் விடுவேன்; வானவரை விட்டு, வசைக்கு ஆளாகி வாழமாட்டேன்' என்கிறான்.

62. இராவணன் மகன் இந்திரசித்தன், 'கேடுவரும் பின்னே; மதிகெட்டுவரும் முன்னே' என்று கருதி இலக்குவனோடு போர்தொடுத்து மாண்டான்.
சூரன் மகன் பானுகோபன் போருக்குச் சென்று மடிகிறான்.

63. இராவணன் இராமனுடன் போரிட்டு மடிந்தான்.
சூரன் முருகனுடன் போரிட்டு மடிந்தான்.

64. இராவனன் மனைவி மண்டோதரி, புலம்பி உடன்கட்டை ஏறினாள்.
சூரன் மனைவி பதுமை, புலம்பி உடன்கட்டை ஏறினாள்.

இப்படியாக, இன்னும் பல பொருத்தங்கள் காணப்படுகின்றன. ஆகவே, கந்த புராணத்தைப் பார்த்து நகல்படுத்திய கதையே இராமாயணம்.

[நூல் 'கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே'—2-ஆம் பதிப்பு 1961]

# 4. புராண ஆபாசங்கள்

## 1. பெரிய புராணம்

பெரியபுராணத்தில் உள்ள செய்திகள் உண்மையாய் நடந்தவைகளா? அல்லது மக்களுக்குச் சிவபக்தி உண்டாக வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு சைவ சமய வாதிகளால் கற்பனை செய்யப்பட்ட செய்திகளா?

சிவனுக்கு மனித உருவமும், மாட்டு வாகனமும், பெண்சாதி பிள்ளைகளும் உண்மையாகவே இருந்துவருகின்றனவா? அல்லது, சிவபக்தர்கள் கற்பனை செய்த கருத்துக்களா?

சிவன்தான் முழுமுதல் கடவுள் என்றால்—முழுமுதல் கடவுள் என்பதற்கு உருவம், பெண்டு, பிள்ளை கற்பிப்பது பொருத்தமாகுமா?

கயிலாயம் முதலிய இடங்கள் உண்மையிலேயே இருக்கின்றனவா? அல்லது, சைவ மதவாதிகள் கற்பனையா?

உண்மையாய் கயிலாயம் என்கின்ற இடம் ஒன்று இருக்குமானால், சாஸ்திரப்படி அதற்கு ஆதாரம் இருக்கிறதா?

சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலியவர்கள், உண்மையிலேயே அவர்களைப் பற்றிச் சொல்லப்படுகிற பெரியபுராணம் முதலிய மத ஆதாரங்களின்படி இருந்தவர்களா? அல்லது, மதவாதிகளால் கற்பிக்கப்பட்டவர்களா?

படிப்பகம்

www.padippakam.com



அகஸ்தியனென்றும், நாரதனென்றும் மற்றும் மனிதத் தன்மைக்கும் விஞ்ஞான உண்மைக்கும் மேற்பட்டவர்கள் என்றும் சொல்லப்பட்டவர்களை எல்லாம் உண்மையாய் இருந்தவர்கள் என்றும், அவர்கள் சங்கதி எல்லாம் உண்மையாய் நடந்தவைகள் என்றும் பெரிய புராணக்காரர்கள் நம்புகிறார்களா?

பெரியபுராணச் செய்திகள் உண்மையாக நடந்தவைகள் என்றால், ஒரு ஆயிரம் வருஷங்களுக்குள்ளாகக் கடவுள்கள் நேரில் வந்து காட்சி கொடுத்ததாக அர்த்தமாக வில்லையா?

கயிலாயத்தில் இருந்து மாட்டின்மேல் வந்து பக்தனையும் அவன் மனைவியையும் அந்த மாட்டின்மேல் ஏற்றிக்கொண்டு கயிலாயத்திற்குப் போய்விட்டார் என்றால், அது உண்மையாகவே நடந்திருக்குமா?

மாடு இரண்டாகி வந்ததும், மாடு ஆகாயத்தில் ஏறிச் சென்றதும் கற்பனையா? அல்லது, உண்மையா?

அது உண்மையானால்—கடவுள் தன்மைக்கு அது ஏற்றதா? அல்லது மனிதத் தன்மைக்கு ஏற்றதா?

இந்த மாதிரிக் கடவுள் அற்புதங்கள், பக்தர்கள் அற்புதங்கள் எல்லாம் இப்போது சைவத்தில் நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

சாயிபாபா, இராமகிருஷ்ணர், ரமணரிஷி, காந்தியார், சொரக்காய் சாமியார், பாம்பன் சாமியார், மெய்வழி ஆண்டவன், மவுன சாமியார், பட்டினத்தார், பத்திரகிரியார், அருணகிரியார் முதலியவர்களைப்பற்றிச் சொல்லப்படும் அற்புதங்கள் எல்லாம் பெரிய புராண பக்தர்களது அற்புதங்களோடு சேர்ந்தவைகளா? அல்லது, அதைவிட மட்டரக மானவையா? அல்லது, கற்பனைகளா?

அற்புதங்கள் இல்லாத கடவுள்களோ – மதமோ – பக்தர்களோ – மதித்து வணங்கத் தக்கவர்களோ சைவத்தில்–பெரியபுராணத்தில் ஏன் இருப்பதில்லை?

பெரியபுராணம் நிஜமானால் பக்த லீலாமிருதமும் நிஜமாய்த்தான் இருக்க வேண்டுமா? அல்லது, இது கற்பனையா?

சிவன் என்கின்ற ஒரு கடவுள் ரிஷப வாகனத்துடன் பார்வதி சமேதராய்க் கயிலாயத் தில் இருக்கிறார் என்றால், விஷ்ணு என்பதாக ஒரு கடவுள் கருட ஆருடராய், இலட்சுமி சமேதராய் வைகுண்டத்தில் இருக்கிறார் என்பது மெய்யா? அல்லது, கற்பனையா?

நாயன்மார்கள் நால்வருடைய கதையும் மெய்யானால் ஆழ்வாராதிகள் பன்னிரு வர்கள் கதைகளும் மெய்யா, கற்பனையா?

தேவார திருவாசகங்களுக்கும், நாலாயிரப் பிரபந்தங்களுக்கும் என்ன வித்தியாசம்? எது முந்தியது? எது உண்மை? எது சிறந்தது?

பெரியபுராணம் இன்றைய சைவர்களுக்குப் பொருத்தமானதா? இன்று அது சைவர் களுக்குள் பரப்பப்படுவது கடவுள் பெருமை, பக்தர் பெருமை ஆகியவை தெரிவதற்கா கவா? அல்லது, அதைப் பின்பற்றச் செய்வதற்காகவா? பெரியபுராணம் ஒழுக்க நூலாகுமா? பெரியபுராண சிவன் முழுமுதற் கடவுளாக இருக்கமுடியுமா? முழுமுதற் கடவுள் என்பதற்கு ஏதாவது இலட்சணம் உண்டா? அந்த இலட்சணப்படி பெரியபுராண சிவன் இருக்கிறாரா? சிவபெருமான் முழுமுதற் கடவுள் என்பதை–கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஒப்புக்கொள்கிறார்களா? அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் வைணவர், மாத்துவர், ஸ்மார்த்தர்களாவது ஒப்புக்கொள்கிறார்களா?

['குடி அரசு'–கட்டுரை—2-10-1943]



## 2. பக்த லீலாமிருதம்

இது, சைவர்களுக்குச் சைவ நாயன்மார்கள் கதையாகப் பெரியபுராணம் இருப்பது போல், வைணவர்களுக்கு வைணவ பக்தர்கள் (ஆழ்வாராதிகள்) கதைகளைத் தொகுத்து 'பக்த லீலாமிருதம்' என்பதாக இருந்துவருகிறது. இதிலுள்ள பக்தர்கள் கதைகளும் பரமசிவன் பார்வதிக்குச் சொன்னதாகவே ஆரம்பிக்கப்படுகின்றன. பெரிய புராணத்தில் உள்ள பக்தர்கள் நடந்துகொள்வதுபோலவும் அதில் காணப்படும் அற்புதங்கள்போலவுமே அதே கொள்கைகளை வைத்து வேறு ஆட்களையும், வேறு சங்கதிகளையும் கொண்டு சொல்லப்படும் புராணமே பக்த லீலாமிருதமாகும் என்பது தொடர்ந்து வரும் கதைகளால் விளங்கும்.

பெரியபுராணத்தில் சிவபெருமான் பெருமைகள் எப்படி இருக்கின்றனவோ, அவர் எப்படி பக்தர்களிடம் நடந்துகொண்டாரோ, எப்படி பக்தர்களைச் சோதித்தாரோ, அது போலவே இதிலும் மகாவிஷ்ணுவின் சங்கதிகளும் விளங்குகின்றன. பெரியபுராணத்தில் 63 நாயன்மார்கள் இருந்தால்–பக்த லீலாமிருதத்தில் 82 பக்தர்கள் பெயர்கள் இருக்கின்றன. இவை தவிர, சைவ–வைணவத்தில், நால்வர்களைப்போல–ஆழ்வாராதிகளும்வேறு புத்தகங் களில் அதாவது குருபரம்பரை முதலியவைகளில் இருக்கின்றனர். நாயன்மார்களால் பாடப் பட்ட பாடல்பெற்ற சிவ ஸ்தலங்களைப் போலவே, 'ஆழ்வாராதிகளின் மங்களாசாசனம்' பெற்ற–அதாவது ஆழ்வாராதிகளால் பாடப்பட்ட விஷ்ணு ஸ்தலங்கள் பல இருக்கின்றன. சைவர்களுக்குப் பல மடங்கள், மடாதிபதிகள் இருப்பது போலவே வைணவர்களுக்கும் பல மடங்களும் மடாதிபதிகள் பலரும் இருக்கின்றனர்.

இரு சார்பிலும் ஆபாசக் கதைகள், ஆபாச சம்பவங்கள், அற்புதங்கள் ஒன்று போலவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆதலால், சைவ, வைணவ இரு சமயங்களிலும் எது சற்று மேன்மையானது என்று சொல்வது மிக மிகக் கஷ்டமான காரியமாகும்.

இவற்றில் பக்த லீலாமிருதத்தைப் பார்த்து பெரியபுராணம் உண்டாக்கப்பட்டதா, பெரிய புராணத்தைப் பார்த்து பக்த லீலாமிருதம் உண்டாக்கப்பட்டதா என்பது ஆராய்ச்சிக்காரர்கள் முடிவுகட்ட வேண்டியதாகும். பக்த லீலாமிருதத்தில் உள்ள ஒரு முதல் கதையை வாசகர்களுக்கு மாதிரி காட்டுகிறேன். இது பதும புராணத்தில் உள்ளதை ஸ்ரீதரர் விளக்கி ஆக்கிய சரித்திரம் என்று அப் புராணத்தில் காணப்படுகின்றது. இது பெரிய புராணத்தைவிடச் சிறந்ததாகும். ஏனெனில், பெரிய புராணத்திற்கு சேக்கிழார்தான் கர்த்தாவாக இருக்கிறார். சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார் பாடியிருக் கிறார். சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்ததற்கு சேக்கிழார்தான் சாட்சி. பெரிய புராணக் கதைகளுக்கும் சேக்கிழார்தான் 'பிரம்மா'. அவற்றை நிரூபிக்க 'திருத் தொண்டத் தொகை'யை விட வேறு சரியான ஆதாரங்கள் கிடையாது.

உதாரணமாக, 'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' என்ற ஒரு வாக்கியத்தை வைத்து—சேக்கிழார், 'சிவபெருமான் ஒரு அயோக்கியப் பார்ப்பானாக வந்து இயற்பகை நாயனாரின் மனைவியைக் கேட்டார்; அவர் தன் மனைவியைக் கூட்டி விட்டார். சிவன் வந்து கணவனுக்கும் மனைவிக்கும் காட்சி தந்து மோட்சத்திற்கு அழைத்துப் போனார்' என்று அதைப் பெருக்கிச் சித்திரித்துக் காட்டியிருக்கிறார். ஆனால் இக்கதைக்கு அகச் சான்று, புறச் சான்று கிடையாது; ஆனால், பக்த லீலாமிருதத்தில் உள்ள இந்தக் கதை 'பதும புராணத்தில்' உள்ளதாம்.

மற்ற புராணங்களை நம்புகிறவர்கள் இதை மறுக்க முடியாது. இக் கதை சைவ, வைணவர்—ஒருவரையொருவர் வைவதற்கு ஏற்படுத்திக்கொண்டதற்கல்ல; விஷ்ணுவின் மகாத்மியம் விளங்க ஆரிய வைணவர்களாலேயே போற்றப்படுவதாகும்.

1686—188

படிப்பகம்

www.padippakam.com



கதை விவரம்: சிவனை உமாதேவி வணங்கி, 'மகாவிஷ்ணு பண்டரிபுரத்தில் வாசம் செய்வது யாது காரணத்தால்?' என்று கேட்டாள். அதற்கு சிவபெருமான் சொல்லுகிறார் என்று துவக்கப்படுகிறது :

திருமாலானவர் வைகுந்தத்தில் இருக்கும்போது இந்திரனின் மனைவி இந்திராணி அங்கு வந்தாள். அவள் உடனே திருமாலின் அழகைக் கண்டு மயங்கி, 'ஓ! திருமாலே, உமது மடியின்மேல் இருக்கவேண்டுமென்று எனக்கு ஆசை உண்டாகிவிட்டது' என்றாள்.

திருமால் மனமிரங்கி, 'ஓ! இந்திராணியே, நீ பூலோகத்திற்குப் போய் 60 ஆயிரம் வருஷம் தவம் செய்வாயானால், நான் துவாரகாபுரியில் கிருஷ்ணனாய் அவதரிக்கிறேன். அப்போது நீ என் மடிமீது இருக்கலாம்' என்று சொன்னார்.

இந்திராணி அதைப்போலவே பூலோகத்திற்கு வந்து தவம் செய்தாள். அதன் பயனாய் இந்திராணி கோகுலத்தில் இராதையாய்ப் பிறந்தாள். திருமால் கண்ணனாய்ப் பிறந்தார். இருவரும் கூடி விளையாடிக் கொண்டார்கள். பிறகு கண்ணன் கோகுலத்தை விட்டுத் துவாரகைக்குப் போய்விட்டார்.

இராதை, கண்ணன் பிரிவு சகியாமல் துவாரகை வந்து கண்ணன் கோவிலில் நின்று கதறினாள். கண்ணன் வந்து இராதையைத் தன் மடிமேல் இருத்திக்கொண்டார்.

இதைக் கண்ட ருக்குமணி, கண்ணன்மீது கோபித்து இராதையைத் துரத்தி விட்டாள். இராதை திண்டீரவனம் வந்து கண்ணனை அடைய மறுபடியும் தவம் செய்கிறாள். கண்ணன் (மகா விஷ்ணு) இராதையின் பிரிவு சகிக்கமாட்டாதவராய், ருக்குமணியை விட்டுவிட்டு இராதையைத் தேடித் தேடி அலைந்தார். இராதை காணாததால் கண்ணன் துறவியாகி, அலைந்து திரிந்து இராதை தவம் செய்யும் சோலையை அடைந்து அவளுக்கெதிரில் நின்று, 'என்னைத் தவிக்கவிட்டு வெற்றுடம்பாக்கிவிட்டு இங்கு வரலாமா?' என்று பலவிதமாய் இராதையைப்பற்றி விசாரித்தார். இதைக் கண்ட இராதை அத் துறவியைக் கண்ணன் என்று அறியாது, 'நீ யாவன்? இங்கு நீ எப்படி வரலாம்?' என்று கோபித்தாள். அதற்குக் கண்ணன், 'நான் உன் கணவன்' என்றார். அதற்கு இராதை, 'என் கணவனுக்கு எண்ணற்ற மனைவிகள் உண்டு. அவர் என்னைத் தேடி வரமாட்டார். நீ பித்தலாட்டக்காரன், போய்விடு' என்றாள். கண்ணன் இராதையைச் சமாதானம் செய்து அவளை அடைவதற்காக அவள் முன்னால் 28 துவாபரயுக காலம் நின்ற வண்ணமே தவம் செய்துகொண்டு இருக்கிறார். அந்தத் தவக்காட்சிதான் திண்டீரவனம் என்னும் பண்டரிபுரத்தில் இன்றளவும் நின்றிருக்கும் காட்சியாகும் என்பதாக சிவபெருமான் உமைக்குச் சொன்னார் என்று இருக்கிறது.

எனவே, ஆரியர் கற்புக்கும் கடவுள்களின் ஒழுக்கத்திற்கும், கடவுள் தன்மைக்கும், ஆரியர்களின் காப்புக் கடவுளாகிய இந்திரனின் சுயமரியாதைக்கும், பதும புராணத்தில் உள்ள இக் கதை எடுத்துக்காட்டாகும். (இது 1921-ல் 'ரிப்பன் பிரஸில்' அச்சடித்த ஸ்ரீ பக்த லீலாமிருதம் 2, 3, 4, 5 பக்கங்களில் உள்ளது) பிறகு, இந்தக் கதையில், ஆரியர் வழக்கம்போல்—அசுரனைத் தேவர்களுக்காக விஷ்ணு கொல்லுகிறார் என்று முடிகிறது.

['குடி அரசு'-கட்டுரை—5.2.1944]

## 3. தமிழ் வருடங்கள்

ஆரிய சம்பந்தமான கதைகள், சேதிகள் ஆகியவைகள் எதை எடுத்துக் கொண்டாலும் அதில்.ஆபாசம், அசிங்கம், விபச்சாரம், இயற்கைக்கு மாறான மடத்தனமான சங்கதிகள் முதலியவைகள் இல்லாமல் இருப்பது மிகமிக அதிசயமாகும்.



தமிழ் வருஷப் பிறப்புக் கதை நாகரிகமுள்ள மக்களால் எழுதப்பட்டிருக்க முடியுமா? இதைப் படித்துப் பார்க்கும் அன்னியன் இந்தக் கதை சம்பந்தப்பட்ட மக்களை என்னவென்று நினைப்பான்?

கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஒரு முக்கிய சம்பவத்தை ஞாபகப்படுத்தக் கூடியதாகவும், சரித்திரத்திற்குப் பயன்படத் தக்கதாகவும், நாகரிகமுள்ளதாகவும் உள்ள வருஷக் கணக்குகள் இருக்கின்றன. உதாரணமாக, அவர்களது வருஷங்களுக்கு கி.மு., கி.பி., 'ஹிஜிரி' என்கின்ற பெயர்களும் அவற்றுக்கு நல்ல ஆதாரமுள்ள கருத்துக்களும் இருக்கின்றன.

ஆனால், தமிழனுக்கு—நாதியற்ற தமிழனுக்கு என்ன வருஷம் இருக்கிறது? அதற்கு என்ன கருத்து என்று பார்ப்போமேயானால், தமிழர் என்கின்ற பெயர் வைத்துக்கொண்டு இந்த நாட்டில் வாழ்வதற்கு வெட்கமில்லையா என்றுதான் தோன்றும். தமிழனின் நிலையை ஆரியர்கள் தங்கள் சாமர்த்தியத்தால் மானங்கெட்ட காட்டுமிராண்டி, லம்பாடி சமூகமாக ஆக்கிவிட்டதால், இவ்வளவு விழிப்பு ஏற்பட்ட இந்தக் காலத்திலும் தமிழனுக்குச் சூடு சொரணை ஏற்படுவதில்லை.

கோயிலுக்குத் தேவதாசிகளை விட்டவன் தமிழனே என்றால்—மற்றபடி தமிழனால் ஆக்கப்படவேண்டிய இழிசெயல் வேறு என்ன இருக்கிறது?

இது மாத்திரமா? மோட்சம் என்றால் தமிழன் எதையும் செய்ய முன்வருகின்றான்.

'ஆயபயன் அய்ந்து' என்று சொல்லிக்கொண்டு மாட்டு மூத்திரம், சாணி எல்லாவற்றையும் காசு கொடுத்து வாங்கிக் குடிக்கின்றான். நாம், நம் வருஷப் பிறப்புக்குத் தமிழ் வருஷப் பிறப்பு என்று சொல்லிக் கொள்கிறோம். இது நியாயமா? 'தமிழ்' வருஷப் பிறப்புக் கதையைப் பாருங்கள்!

நாரதர் பிரம்ம ரிஷி. அவருக்கு ஒரு நாள் காம இச்சை ஏற்பட்டதாம். எங்கு போனால் இது தீரும் என்று ஞானதிருஷ்டியினால் பார்த்து, சாட்சாத் கிருஷ்ணபகவானிடம் போனால் தமது காம இச்சை தீரும் என்று கருதி, கிருஷ்ணனிடம் ஓடினாராம். கிருஷ்ணபகவான், 'நாரத முனிசிரேஷ்டரே எங்கு வந்தீர்?' என்றாராம். அதற்கு நாரதர், 'ஒன்றும் இல்லை' என்று தலையைச் சொரிந்துகொண்டு பல்லைக் காட்டினாராம். கிருஷ்ணபகவான், 'சும்மா சொல்லும்!' என்றாராம். நாரதர், 'எனக்கு எப்படியோ இருக்கிறது. உமக்கு அறுபது ஆயிரம் கோபிகள் (வைப்பாட்டிகள்) இருக்கிறார்களே—அதில் ஒன்று கொடுங்களேன்!' என்று கேட்டாராம். உடனே கிருஷ்ணபகவான், 'இதுதானா பிரமாதம், இன்று இரவு எனது அறுபது ஆயிரம் கோபிகளில்—நான் இல்லாத ஒரு கோபியின் வீட்டிற்குப்போய் அங்குள்ள கோபியை அனுபவித்துக் கொள்ளுங்கள்' என்றாராம். உடனே நாரதப் பிரம்மம், 'கிருஷ்ண பகவானுக்கு ஒன்று போக—தனக்கு 59999 கோபிகள் கிடைத்ததாகக் கருதிக்கொண்டு, மகிழ்ச்சிப் பெருக்குடன் கோபிகள் வீடு நோக்கிச் சென்றாராம். அங்கு சென்று எந்த வீட்டைப் பார்த்தாலும் கிருஷ்ணபகவான் கோபியுடன் படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு வெட்கப்பட்டு, வெகு கோபத்துடன் கிருஷ்ணபகவானின் வீட்டிற்கு வந்தார். வழியில் என்ன நினைத்துக்கொண்டு வந்தார் என்று யோசித்தால், அது மிகவும் வேடிக்கையானது. அதாவது, 'இப்படி நம்மை மோசம் பண்ணின கிருஷ்ணனையே இன்று அனுபவிப்பது' என்றுதான் கருதிக்கொண்டு வந்தார் என்று தெரியவருகிறது.

அதாவது, 'பகவானே! நான் சென்ற கோபி வீட்டில் எல்லாம் நீர் இருந்தீர்; ஆதலால் சும்மா வந்துவிட்டேன். அதன் நிமித்தம் நான் தேவரீரையே அனுபவிக்க ஆசைப்படுகிறேன்' என்று நாரதர் சொன்னதோடு, பகவானைப் பெண்ணாகக் கொண்டு அனுபவிக்க அழைத்தால் ஒரு சமயம் வரமாட்டாரோ என்று கருதிப் போலும், 'பகவானே

படிப்பகம்

www.padippakam.com



என்னைப் பெண்ணாய்க் கொண்டு தாங்கள் அனுபவிக்க எண்ணங் கொண்டேன்' என்று கெஞ்சினார். பகவான் உடனே கருணை கொண்டு ஸ்ரீமதி நாரத அம்மாளை அனுபவித்தார். இந்த 'நாரத அம்மை'யுடன் 60 ஆண்டுகள் லீலை செய்தார். அப்புறம் என்ன ஆயிற்றென்றால், ஆணாய் இருந்தாலென்ன பெண்ணாய் இருந்தாலென்ன—பகவான் கிரீடை செய்தால் வீணாகப் போகுமா? போகவே போகாது. எனவே, 60 வருஷ லீலைக்கும் 'நாரத அம்மாளுக்கு' 60 பிள்ளைகள் பிறந்தன. இந்த 60 பிள்ளைகளும் தகப்பனைப் பிடித்துக் கொண்டு, 'எங்களுக்கு என்ன கதி?' என்று கேட்டன. பகவான் அருள் சுரந்து, 'நீங்கள் 60 பேரும் 60 வருஷங்களாக ஆகி ஒவ்வொருவர் ஒவ்வொரு வருஷத்திற்கு உலகை ஆளுங்கள்' என்று கருணை சாதித்தார். அதிலிருந்து 60 வருஷங்கள் ஏற்பட்டு அவைகளுக்கு இந்த 60 பிள்ளைகள் பெயர் வைக்கப்பட்டு, வருஷந்தோறும் அப்பெயர்கள் மாறி மாறி வருகின்றன.

ஆகவே, இந்த 60 வருஷங்கள்—'பகவானும்' 'ரிஷியும்' ஆன ஆணும் ஆணும் ஆண்-பெண்ணாகச் சேர்ந்து பிறந்த குழந்தைகள். இதற்காகத்தான் நாம் வருஷப் பிறப்பு கொண்டாடுகின்றோம்.

இப்படி ஆணும் ஆணும் சேர்ந்ததால் பிறந்த அதிசயமான பிள்ளைகளானாலும்—இந்த வருஷப் பெயரையோ எண்ணிக்கையையோ கொண்டு 60 வருஷத்திற்கு மேற்பட்ட காலத்தைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. அதனால்தான், தமிழனுக்குச் சரித்திரமில்லை என்பதோடு—தமிழர் சரித்திர காலத்திற்கு விவகாரம் இல்லாமலும் இல்லை.

ஆசையால், இனியாவது தமிழர்கள் இந்த 60 வருஷ கால முறையைக் காரித் துப்பி விட்டு 'கி.பி.யையோ, 'ஹிஜ்ரி'யையோ, கொல்லத்தையோ (கொல்லம் ஆண்டு), விக்ரமாதித்தனையோ, சாலிவாகனனையோ அல்லது வேறு ஏதாவது ஒரு 'சனியனை'யோ குறிப்பு வைத்துக்கொள்வார்களா? அவ்வளவு சூடு சொரணை தமிழனுக்கு உண்டா என்றும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம்.

['குடி அரசு'–'சித்திரபுத்திரன்' கட்டுரை—8-4-1944]

## 4. சிவனின் முட்டாள்தனம்

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

நம் கடவுள்களைப்போல் முட்டாள்களையும், அயோக்கியர்களையும் மனித ஜென்மங்களில் கூடக் காண்பது அதிசயமாக இருக்கின்றது.

ஆனால், கடவுள் என்பவர் அப்படி முட்டாளாகவும், அயோக்கியனாகவும் இருக்க முடியாது என்பது உண்மையான, யோக்கியமான கடவுள் நம்பிக்கைக்காரர்களின் கருத்தாகவே இருக்க வேண்டும் என்றே கருதுகிறேன்.

மற்ற கடவுள்களைச் சிருஷ்டித்து, அவர்களை அயோக்கியர்களாக, மடையர்களாகக் கற்பித்து, சாஸ்திர புராண இதிகாசங்கள் ஏற்படுத்தியவர்கள்தாம் முட்டாள்களாக, அயோக்கியர்களாக இருந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

மக்களில் இந்த முட்டாள்தனமும், அயோக்கியத்தனமும் சில மதவாதிகள் இடத்தில்தான் இருக்கிறதாகக் காணப்படுகிறதே ஒழிய, எல்லா மக்களிடமும் இருந்ததாகக் காண முடியாது.

உண்மையாகவே, நம்நாட்டு முன்னேற்றம் இந்த மடையர்களாலும், அயோக்கியர்களாலுமே மிகமிகத் தடைப்பட்டுவிட்டது என்று சொல்லலாம். உலகத்தில் இன்று எவ்வளவோ அதிசயங்கள், அற்புதங்கள் விஞ்ஞான அறிவால் கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளை நாம் நம் பஞ்சேந்திரியங்களாலும் அனுபவிக்கிறோம்.



அப்படிப்பட்ட அதிசயங்கள், கண்டுபிடிப்புகள் நம் நாட்டவர்களால் அல்லது நம் நாட்டில் ஏதும் நடைபெற்றதாகக் காணமுடியவில்லை. காரணம், நம் மதம், நம் கடவுள்கள், நம் மத ஆதாரங்கள், நம் கடவுள் செயல்களும், நம் தத்துவ ஆராய்ச்சிகள் முதலானவைகளுமேயாகும்.

நம் நாட்டில் நல்ல வைத்திய முறை இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் போகர், அகஸ்தியர், சித்தர், தன்வந்திரி முதலான பல—அதுவும் புராண இதிகாச காலத்துக்கு முந்திய—அதிசய மனிதர்கள்பேரால் ஏடுகளில், கர்ணபரம்பரையில் இருந்து வரும் சில முறைகள் தவிர, புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட முறை எதுவும் எளிதில் காண முடியவில்லை. ஏனெனில், மக்களுக்கு வரும் நோய்கள் கடவுள்களால் ஏற்பட்டவைகளாகும் என்பதும், அவர்களுக்கு அந்நோய் வரக் காரணங்கள் மக்களின் முற்பிறவி வினைப் பயனால் உண்டானவை என்பதும் நம் அறிஞர்களின் முடிவு. உதாரணமாக, ஜோசியத்தில், இந்த மனிதனுக்கு இந்த வயதில் இன்ன நோய் வரும்; அதற்கு இன்ன பிராயச்சித்தம், இன்ன சாந்தி, இன்ன அர்ச்சனை, இன்ன ஸ்தல யாத்திரை, இன்ன தீர்த்த ஸ்நானம் செய்தால் நோய்தீரும் என்பதாக நந்திதேவர் நாரதமுனிக்குச் சொன்னார் என்று சோதிடன் சொல்லிவிடுகிறான். உடனே நோயாளியை மந்திரவாதி, அர்ச்சகன், ஸ்தல யாத்திரைத் தரகர், சாமியாடிகள் சூழ்ந்து கொள்கிறார்கள். இதனால் மருந்து சிகிச்சை முறைகள் கண்டுபிடிக்கவோ, செய்யவோ, வைத்தியம் செய்யவோ தூண்டுதல் ஏற்படுவதில்லை.

அதனாலேயே, 'ஜோசியன், மந்திரவாதி, சாமியாடி (சாமி பிடித்தவன்), அர்ச்சகன், வைத்தியன் ஆகிய அய்வரும் பித்தலாட்ட வாழ்வு என்னும் ஒரு மரத்தின் வெவ்வேறு கிளையில் காய்த்த காய்கள்' என்று பெரியவர்கள் சொல்லுவது வழக்கம். இப்படியாக ஏற்பட்ட கற்பனைகளுக்கு ஏற்பத்தான் கோயில், குளம், மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் முதலாகியவைகள் உண்டாக்கப்பட்டும் இருக்கின்றன.

இந்தக் காலத்திலும் நோய்களுக்குச் சாந்தி செய்வதும், தீர்த்தமாடுவதும், ஸ்தல யாத்திரை செய்வதும், அரசர், ஜமீன், மிராசு, வியாபாரி முதலிய செல்வர்களும்; பி.ஏ., எம் ஏ., சயின்ஸ், மெடிகல்துறை நிபுணர்கள் உள்பட கற்ற அறிஞர்கள் என்பவர்களும் இவைகளுக்கு அடிமைப்பட்டு நடந்துவருகிறார்கள்.

இந்தப் புரட்டும், முட்டாள்தனமும் ஆன காரியங்களை உடல் நோய்களுக்கு மாத்திரமல்லாமல், மக்களின் ஒழுக்கத்திற்கும் நடத்தைக்கும் கூட சம்பந்தப்படுத்தி ஒழுக்கம்கெட்ட, யோக்கியமும் நாணயமும் அற்ற, தீய வஞ்சகக் காரியங்களுக்கும் பரிகாரமாக மூர்த்தி-தீர்த்த-ஸ்தலங்களைக் கற்பித்து மக்கள் ஒழுக்கத்தைப் பாழாக்கி இருக்கிறார்கள்.

சைவ சாமிகளுக்கு அருணாசல புராணம் என்பது மிகவும் உவப்பானது. அந்தப் புராணத்தை ஆதாரமாகக் கொண்டதுதான் திருவண்ணாமலை, அண்ணாமலைநாதர், கார்த்திகை தீபம் முதலியவைகளாகும். இந்தக் கோயில் முதலியவைகளுக்கு ஒரு கோடிக்கு மேற்பட்ட ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் உண்டு. கோடிக்கணக்கான பக்தர்கள் உண்டு. பூசை, திருவிழா, நாள், நட்சத்திரம் ஆகியவை ஏராளமாக உண்டு. அவைகளுக்காக ஆண்டுக்கு இலட்சக்கணக்கில் மக்கள்வந்து குவிந்து இலட்சக்கணக்காகப் பணம் செலவிடுவதுண்டு.

அந்த ஸ்தல விசேஷத்தைப் பார்த்தால் அது எவ்வளவு 'மோசமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பது விளங்கும்.

அருணாசலபுராணம் தீர்த்தச் சருக்கம் 13-ம் பாட்டு: 'தென்திசை தருமதீர்த்த குளத்திற் செறிந்து மூழ்கில் பொன்திகழ் வடிவமாகும் உடற்பிணி பொடிபட்டோடும்.' அதாவது, திருவண்ணாமலைக்குத் தெற்கே யமதீர்த்தம் என்று ஒரு தீர்த்தம் இருக்கிறது. அதில் மூழ்கினால் உடல் பொன்னிறமான வடிவினதாகும். உடலில் உள்ள நோய்கள் எல்லாம் பொடிப்பொடியாகி அழிந்து போகும் என்பது இதன் பொருளாகும்.

படிப்பகம்

www.padippakam.com



ஒரு குளத்தில் நீராடினால் சொறி பிடித்த உடல் பொன்னிறமாகி—நோய் கொண்ட உடல் நலமாகி விடுகிறது என்று கடவுள் பெயரில், ஸ்தலத்தின் பெயரில், குளம் பெயரில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது எவ்வளவு முட்டாள்தனமும் அயோக்கியத்தனமுமான காரியம் என்பதை ஆத்திகர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஓர் அழுக்குப்பிடித்த, அதுவும் புழுவும், கொசுவும் நிறைந்த நாற்றமுள்ள ஆபாசக் குளத்திற்கு இந்த மாதிரியான சக்திகளைக் கற்பித்துவிட்டால்—இதை நம்பும் மூடர்கள் அதில் குளித்தும், நீர் அருந்தியும் அதிகமான நோயை உண்டாக்கிக்கொள்வார்களே ஒழிய நோய் குணமடைய முடியுமா? இதுதான் போகட்டும் என்றால், மனிதர் தாம் செய்த பாவங்களைப் போக்கிக் கொள்வதற்காக மதவாதிகள் கற்பித்து இருக்கும் மார்க்கமானது எவ்வளவு அயோக்கியத்தனமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்துப் பாருங்கள். தீர்த்தச் சருக்கம் 36-ம் பாட்டு:

காக முன் பலி பீடத்திம் பலித
    னைக் கவரும் போதில்
ஆக மார் சிறகைக் கீழே புடைத்
    தாலை யத்தி னூடே
ஓகையால் நமது கோயில் விளக்கிய
    தென உட்கொண்டு
பாக சாதனனார் வாழும் பதியினைப்
    பரமன் ஈந்தான்

இதன் பொருள்:—ஒரு காக்கையானது திருவண்ணாமலைக் கோயிலில் உள்ள பலிபீடத்தில் வைத்திருந்த சோற்றைத் தின்னும்போது தன் சிறகை விரித்து அசைத்தது. அதனைக் கண்ட பரமசிவன் இந்தக் காக்கை நமது கோயிலைச் சுத்தம் செய்தது என்று மகிழ்ந்து அதற்கு உடனே தேவேந்திரன் வாழும் உலகத்தைக் கொடுத்தார் என்பதாகும். மேற்படி சுருக்கம் 37-ஆம் பாட்டு:

மூடிக மொன்று கோயில் முளை
    யினைக் கிளறும் போது
தேடரு மணி யொன்றங்கே சிதறி
    யோர் விளக்கிக் காட்ட
ஆடிய பெருமான் தீபம் அளித்த
    தென் றதற்கு நல்ல
வீடுயர் நெறியுங் காட்டி விரைந்து
    சாலோக மீந்தான்.

இதன் பொருள்:—ஒரு பெருச்சாளியானது (மூஷிகம்) கோயிலில் வளைதோண்டும் போது அது பறித்துத் தள்ளிய மண்ணிலிருந்து ஒரு இரத்தினமானது சன்னதியில் விளக்கு போல் ஒளி மின்னியது. அதைக் கண்ட சிவபெருமான் அந்தப் பெருச்சாளி தன் சன்னதிக்குத் தீபம் போட்டது என்று கருதி, மோட்ச வழியைக் காட்டி சாலோசப் பதவியைக் கொடுத்தார் என்பது. மேற்படி சருக்கம் 38-ஆம் பாட்டு:

சிலந்தி யொன்றொருநாள் அந்தத்
    திருமலை யிடத்து நூலைக்
கலந்துடன் இழைக்க
    ஈதுகலை நமக்களித்த தென்று
நலந்திகழ ரசனாக்கி அதற்கு நல்
    லறிவு நல்கி
உலர்ந்தபின் நெடிய மாயன்
    உலகினை உதவி னானே.



இதன் பொருள்: திருவண்ணாமலையில் ஒரு நாள் ஒரு சிலந்திப் பூச்சியானது தன் வாய் நூலால் ஒரு கூடு கட்டியது. அதனை சிவபெருமான், அச் சிலந்தியானது தனக்கு நல்ல வஸ்திரத்தை நெய்து கொடுத்ததாகக் கருதி அதை இராஜாவாக ஆக்கி, நல்ல ஞானம் உண்டாக்கி, அது இறந்த பிறகு வைகுந்தலோகத்தைக் கொடுத்தார் என்பதாகும்.

வாசகர்கள் இம் மூன்று பாட்டினையும் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். காக்கை சிறகை ஆட்டினதினால் அது குப்பையைக் கூட்டிச் சுத்தம் செய்ததாக எவனாவது கருதுவானா? பெருச்சாளி தோண்டிய மண்ணில் ஒரு ஒளி மின்னும் கல் காணப்பட்டால் அதை அந்தப் பெருச்சாளி விளக்கேற்றியது என்று கருதுபவனைவிட பெரிய மூடன் இருக்கமுடியுமா? சிலந்திப்பூச்சி கூடுகட்டியதைக் கண்டு அது தனக்கு வேட்டி நெய்து கொடுத்ததாகக் கருதுவது கடுகளவு புத்தியுள்ளவனுக்காவது பொருந்துமா?

எனவே, இப் பாட்டுக்களிலிருந்து பரமசிவனை எவ்வளவு முட்டாளாக்கி இருக்கிறார்கள், இந்தப் புலவர்களும் மதவாதிகளும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இவ்வளவு முட்டாள்தனமான புலவர்களும் மதவாதிகளும் எழுதும் கருத்து என்ன என்று பார்ப்போமானால், எந்த முட்டாளாவது இதை நம்பி காசு கேட்காமல் குப்பை கூட்டவும், விளக்குப் போடவும், துணிவாங்கித் தரவும் முன்வர மாட்டானா என்பதுதானே? அதற்கு ஏற்றாற்போலவே இப்படிப்பட்ட முட்டாள்தனமான கூற்றுகளை நம்பித்தானே அனேக மூடர்களும், அங்கு விளக்குப் போடவும், குப்பை கூட்டவும், சாமிக்கென்று துணி வாங்கிப்போடவும் முன் வருகிறார்கள். இதைப் பார்க்கும்போது இது போன்ற புராணங்கள் எல்லாம் எவ்வளவு பித்தலாட்டமாக, மூடத்தனமாக எழுதப்பட்டு இருக்கவேண்டுமென்பது விளங்கவில்லையா? சுயநலக்காரர்களும், பித்தலாட்டக்காரர்களும் செய்யும் இப்படிப்பட்ட காரியங்களால் மக்கள் ஏமாறுவது ஒருபுறமிருந்தாலும், இதனாலெல்லாம் தங்கள் பாவம் தீர்ந்துவிடும், தாங்கள் எவ்வளவு அயோக்கியத்தனம் செய்தாலும் மோட்சம் கிடைத்துவிடும் என்று கருதி, தீயகாரியங்களுக்குப் பயப்படாமல் மேலும் மேலும் அயோக்கியத்தனம் செய்வது ஒருபுறம் இருந்தாலும், இதனால் கடவுள்கள் எவ்வளவு மடையர்களாகவும், ஒழுக்கத்திற்கும், நல்ல குணங்களுக்கும் பொறுப்பற்றவர்களாகவும் ஆக்கப்படுகிறார்கள் என்பதை அறிவுள்ள மக்கள் உணரவேண்டும்.

இம் மாதிரிக் கடவுள்களை முட்டாள்களாக ஆக்கிவிட்டு எவனாவது இந்த முட்டாள்தனத்தை எடுத்துக்காட்டினால், 'அய்யோ! கடவுளைக் குற்றம் சொல்கிறானே! கடவுள்களின் நடத்தைகளைக் குறைகூறுகிறானே! மதத்தை இழிவுபடுத்துகிறானே!' என்று கூக்குரலிடுவதில் அறிவுடைமை ஏது?

ஆகவே, மதவாதிகளும், புலவர்களும், சுயநலக்காரர்களும் செய்த காரியங்களால் தான் இன்று கடவுள்கள் சந்தி சிரிக்கப்படுகிறார்களே ஒழிய சுயமரியாதைக்காரர்களால் அல்ல என்பேன்.

[சித்திரபுத்திரன் என்ற பெயரில் கட்டுரை—'விடுதலை' 10-3-1950]

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இராமாயணந்தான் ஆபாசம் என்றால் பாரதத்தின் யோக்கியதைதான் என்ன? எல்லோருக்கும் இராமாயணம், பாரதம், பாகவதம், கந்தபுராணம் முதலிய நூல்களைப் பற்றியும், அவற்றில் வரும் பாத்திரங்களைப் பற்றியும் 'புண்ணிய நூல்கள்' என்கின்ற தன்மையில் நன்றாகத் தெரிந்திருக்கும். ஆனால், இந்தப் புண்ணிய நூல்களின் தன்மை என்ன? அவைகளிலே கற்பிக்கப்படும் ஒழுக்கம் என்ன என்று பார்த்தால், மக்களை அயோக்கியர்களாக்குவதற்கு—முட்டாள்களாக்குவதற்குத்தான் அவைகள் பயன்படுகின்றனவே தவிர பகுத்தறிவுக்கோ, நல்வாழ்வுக்கோ, ஒழுக்கத்துக்கோ வழிகாட்டுகிறதா? மக்களுடைய வாழ்க்கைக்கு—பகுத்தறிவுக்காக எழுதப்பட்டிருக்கும் திருக்குறளைப் பற்றி

www.padippakam.com



நம்மவர்கள் அறியவில்லை; அறியமுடியாமல் செய்துவிட்டார்கள். நாடகத்தில், சினிமாவில், காலட்சேபத்தில் எல்லாவற்றிலும் இந்தக் கதைகளைப் புகுத்தி மக்களை ஏய்த்தார்கள். இந்தக் கதைகளைத் 'தெய்வீகம்' பொருந்தியவை என்று நம்பும்படி செய்துவிட்டார்கள்.

மகா பாரதத்தை அய்ந்தாவது வேதம் என்று கூறுகிறார்களே, அந்தக் கதையிலே வருகின்ற பெண்மணிகளில் யாராவது 'பத்தினி' என்று காட்டமுடியுமா? துரோபதையைப் பற்றி எடுத்துக்கொண்டால் அந்த அம்மாள் ஒரு 'Unlimited company.' அய்ந்து கணவர்கள் இருந்தும் ஆறாவதாகக் கர்ணனையும் காதலித்தாள் என்று அந்த அம்மாள் வாயால் சொன்னதாகக் காணப்படுவதுடன், உலகிலேயே பத்தினி இருக்க முடியாது என்று சொல்லிவிட்டாள்.

பாண்டவர்களின் தாய்மார்களைப் பற்றியும் அதே மாதிரி. ஒருவன் சூரியனுக்குப் பிறந்தான்; இன்னொருவன் எமதர்மனுக்குப் பிறந்தான்; அடுத்தவன் வாயுவிற்குப் பிறந்தான்; மற்றவன் இந்திரனுக்குப் பிறந்தான்; ஒருவன் வருணனுக்கு, ஒருவன் அக்கினிக்கு என்று கதைபோகும். இத்தனைக்கும் தனியாக, பாண்டு மன்னன் வேறு, அக்கினி சாட்சியாய் இவளைக் கல்யாணம் செய்து கொண்டவனாவான். இவர்கள் தாயின் கதை இப்படி; பெண்டாட்டி கதையும் இப்படி என்றால் இவர்கள் பாட்டிமார்கள் கதை மிகமிக மோசமாகும். இப்படி ஆபாச வாழ்க்கை இருந்தாலும் இவர்களெல்லாம் பத்தினிகளாம். இதுதான் ஆரியர் கொள்கைக்கு எடுத்துக் காட்டுப்போலும்!

[திருவல்லிக்கேணியில், 7-5-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-5-1950]

## 6. விஷ்ணுவின் ஆபாசம்

தோழர்களே!

ஒரு சமயம் பாற் கடலிலே அமிர்தம் கடைந்து எடுக்கப்பட்டதாம். ஒரு பக்கம் தேவர்களும் இன்னொரு பக்கம் அசுரர்களும் நின்று கடைந்தனராம். கடைந்து எடுப்பதற்கு உபயோகித்த சாமான்களைக் கேட்டாலே—இவை அபாண்டமான புளுகு மூட்டைகள்தாம்! இருந்தாலும் கடைந்தெடுத்தாய் விட்டது. ஆனால், பங்குபோட வேண்டுமே! தேவர்கள் நினைத்தார்கள்—அசுரர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று. எனவே, அதற்கு வழி என்ன என்று பார்த்தபோது, கடைசியில் மகா விஷ்ணு பெண்வேடம் போட்டு, அசுரர்களைப் பங்கிட்டு முறையில் ஏமாற்றிவிடுகிறார். அத்தனையையும் தேவர்களே குடித்தனர்.

கொஞ்சமாவது யோக்கியத் தன்மையிருந்தால் கதையை அதோடாவது நிறுத்தியிருக்க வேண்டாமா? அதுவுமில்லாமல் இன்னும் வளர்த்துக்கொண்டே போகிறார்கள்.

அமிர்தம் பங்கிட்டு வழங்கியதைக் கேள்வியுற்ற சிவன், மகா விஷ்ணுவைப் பாராட்டும் பொருட்டு வருகிறான். சிவன், மகா விஷ்ணுவிடம் சங்கதியைக் கேட்க, மகா விஷ்ணு தன்னுடைய சாமர்த்தியத்தைக் கூறுகிறான். அதைக் கேட்ட சிவன், 'அந்தப் பெண் வேடத்தைத் திரும்பவும் எடு; எல்லோரும் பார்க்கட்டும்' என்கிறான். உடனே மகா விஷ்ணு பழையபடி பெண்வேடம் தரித்தான். அதைக் கண்ட சிவன் அந்தப் பெண்மேல் மையல் கொண்டு மதிமயங்கி பெண்ணைத் துரத்துகிறான். அவள் ஓடுகிறாள்; சிவன் ஓடி ஓடிக் களைத்துவிட்டான். அதிக தூரம் காம இச்சையுடன் ஓடவே, சிவனுடைய வீரியம் தரையில் கொட்டிக்கொண்டே போயிற்று. எந்த எந்த இடங்களில் சிவனுடைய வீரியம் கொட்டியதோ, அந்த இடங்கள் எல்லாம் இன்று தங்கமும் வெள்ளியும் விளையும் பூமி என்று கூறி முடிக்கிறார்கள். தங்கமும் வெள்ளியும் வீரியம் என்றால், நாம் நகை அணிவதுகூட ஆபாசம்தானே!



எனவேதான், அன்றைய தினம் கதை எழுதியவர்களுக்குக் கொஞ்சமாவது புத்தி இருந்து இருக்கிறது என்று சொல்லமுடியாது என்கிறோம். எவ்வளவு முட்டாள்தனமான கதை, இது? இதையும் நாம் நம்புகிறோம் என்றால் இதைப்போல் மடத்தனம் வேறு என்ன வேண்டும்?

[பறங்கிமலையில், 13-4-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 19-4-1952]

# 5. மூடநம்பிக்கைகளும் பழக்கங்களும்

## 1. மனிதன் கடவுளை நம்புகிறானா?

மனிதனுக்குள் புகுத்தப்பட்ட (கற்பிக்கப்பட்ட) கடவுள் சர்வ சக்தியுள்ளது; எல்லாம் வல்லது; யாவுமாயிருப்பது; கடளன்றி அணுவுமசையாது; கடவுளன்றி உலகில் எந்தக் காரியமும் நடவாது; யாவற்றையும் கடவுளே நடத்துகிறார் என்றெல்லாம் கடவுளைப் பற்றிக் கூறித்தான் மனிதனுக்குக் கடவுள் புகுத்தப்பட்டிருக்கிறது. மனிதனும் இந்தத் தன்மைகள், சக்திகளிருக்கின்றன என்கிற 'உண்மையோடு' கடவுள் நம்பிக்கைக் காரனாகிறான்.

ஆனால், வாழ்வில் மனிதன் எந்தத் துறையிலாவது, நடப்பிலாவது இந்தப்படி நம்பி நடந்துகொள்கிறானா?

மனிதன், மற்றும் ஜீவராசிகள் யாவும் ஆண், பெண் சேர்க்கையால்தான் சூலாகிப் பிறக்கின்றன. இதில் எவனும் கடவுளை நம்புவதுமில்லை; கடவுளை எதிர்பார்ப்பதுமில்லை.

மனித ஜீவன் பிள்ளை பெற மருத்துவம் வேண்டியிருக்கிறது; அந்தப் பிள்ளைக்குத் தாய், பாலூட்ட வேண்டும்; பிறகு சோறூட்ட வேண்டும்; பெரியதானால் துணி வாங்கி உடுத்த வேண்டும்; பள்ளிக்கனுப்ப வேண்டும்; உபாத்தியாயர் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டும்; பையன் கஷ்டப்பட்டுக் கவலை கொண்டு படிக்க வேண்டும்; பரீட்சையில் பையன் தேற வேண்டும்; பிரமோஷனாக வேண்டும்; அவைகளைப் படிப்பிக்க வேண்டும். இப்படியாக ஒரு துறையில் இவ்வளவு வேலைகள் பெற்றோர் செய்தாக வேண்டும். இப்படி மனிதனுக்கு வாழ்வில் எத்தனை துறைகள் இருக்கின்றனவோ அத்தனை துறைக்கும் பெற்றோர்களும், பிள்ளைகளும் அவரவர்கள் முயற்சித்துப் பாடுபட்டுச் செய்தால்தான் வாழ முடிகிறது.

மற்றும், மனிதன் உண்ணல், மலஜலம் கழித்தல், உறங்கல், கலவி செய்தல் முதலிய ககல காரியங்களும் அவனே முயற்சித்துப் பாடுபட்டுப் பக்குவப்படுத்திக் கொண்டுதான் வாழ்கிறான். இப்படியே, நோய் வந்தாலும் அதற்குப் பரிகாரம் அவனே செய்துகொள்ள வேண்டும். நோயில் பரிகாரத் தன்மைக்கேற்பக் குணமடைவது, சாவது முதலியவை மனிதனால் அல்லாமல் இவ்வளவு காரியங்களுக்கும் எவன் கடவுளை நம்பிக் கை கட்டிக்கொண்டிருக்கிறான்? ஆனால், வாழ்வில் எல்லா நிலையிலும் அறிவற்றதனமாயும் 'கடவுள் செயல், கடவுள் செயல்' என்று சொல்லிக் கொண்டு தனது முயற்சிக்கெல்லாம் கடவுளை வேண்டுவதுபோல் நடித்துக் கொண்டும் இருக்கிறானென்பதல்லாமல், எந்த மனிதன், எந்தச் சிறு காரியத்திற்குக் கடவுளை நம்பி எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறான்? நடந்து கொள்கிறான்?

மனிதனுக்கு மனிதன் கண்டால், 'வாங்க, வாங்க, சவுக்கியமா?' என்று கேட்பது போலும், 'மகராஜனாய், நீடுழி வாழவேண்டும்!' என்று ஆசி கூறுவது போலும், தொட்ட



படிப்பகம்

www.padippakam.com

தற்கெல்லாம்—'கடவுள் செயல், கடவுள் செயல்' என்கின்ற சொல் ஒரு சம்பிரதாயச் சொல்லாக ஆகிவிட்டது. அதே மாதிரித்தான், மனிதன் கோவிலுக்குப் போவது, கும்பிடுவது பழக்கத்தில்—சம்பிரதாயத்தில் பட்டுவிட்டது.

அப்படியேதான், கோவிலுக்குப் போகும்போது தேங்காய், பழம், மற்ற பொருள் ஆராதனை முதலியவையும் ஏற்பட்டுவிட்டன.

சாமிக்கு வைக்கும் 'நைவேத்தியம்', 'ஆராதனைப் பொருள்களை'—சாமி சாப்பிடுகிறதென்றோ, சாமிக்குப் பயன் படுகிறதென்றோ எந்த அறிவாளியாவது, மடையனாவது சொல்லமுடியுமா? அப்படியேதான் சாமிக்கு உருவங்கள் கற்பிக்கப்பட்டவையும். சாமிக்கு உருவம் உண்டு என்று சாமியைக் கற்பித்தவன் சொல்லவே இல்லையே! சாமிக்கு உருவமில்லை, குணமில்லை, பிறப்பில்லை, இறப்பில்லை, ஆதியில்லை, அந்தமில்லை என்பதாக, ஒன்றும் இல்லை—இல்லை—இல்லை என்று சொன்னானே தவிர, சாமிக்கு ஏதாவது இருக்கிறது என்று எவன் சொன்னான்? இப்படியிருக்க, பிறகு எப்படி, சாமி (கடவுள்) மனிதனைப்போல நன்மை செய்தவர்களுக்கு நல்லது செய்வான்; கெட்டது செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பான் என்பது?

பிரார்த்தனை செய்தவர்களுக்கு நல்லது செய்வான், செய்யாதவர்களைக் கவனிக்க மாட்டான் என்பதும்; பாவம், புண்ணியம் என்பதும்; (கடவுள்) மன்னிப்பு என்பதுமான இப்படிப்பட்ட காரியங்கள் எப்படிக் கடவுளுடன் சம்பந்தப்படுத்தப்பட்டன? மற்றும், உருவமே இல்லாதவனுக்கு, மனித உருவம்; வேண்டுதலே இல்லாதவனுக்கு—பெண்டாட்டி, வைப்பாட்டி, பிள்ளை, வீடு, நகை, கலியாணம் முதலியவை எப்படி ஏற்பட்டன?

கருணைசாலி, யாரையும் காப்பாற்றும் உதார குணசாலி என்பவனுக்குக் கத்தி, வேல், வில், சக்கரம், மழு இவை எதற்கு? மற்றும், அவனைக் கொன்றான், இவனைக் கொன்றான், கோடிக்கணக்கான பேர்களைக் கொன்றான் என்பது எதற்காக? மற்றும், அவனை மோட்சத்தில் வைத்தான்; இவனை நரகத்தில் வைத்தான் என்பதெல்லாம் எதற்காகச் சொல்வது?

மற்றும், கடவுள் ஒழுக்க சீலன் என்று சொல்லிவிட்டு, 'அவன் பெண்டாட்டியைக் கெடுத்தான், இவன் பெண்டாட்டியைப் பலாத்காரம் செய்து ஏமாற்றிக் கெடுத்தான்'; இரண்டு பெண்டாட்டி, மூன்று பெண்டாட்டி, ஆயிரம் பெண்டாட்டி, பத்தாயிரம் பெண்டாட்டி, பல்லாயிரம் பெண்களிடம் சுகமனுபவித்தான் என்பதெல்லாம் எதற்கு? இவை, மனிதனுக்குள்ள கடவுள் நம்பிக்கையைக் காட்டுகின்றனவா? மனிதன் கடவுள் நம்பிக்கையால் சுத்த காட்டுமிராண்டி ஆகிவிட்டான்—ஆகிவருகிறான் என்பதைக் காட்டுகின்றனவா? இவற்றைக் கடவுள் பிரச்சாரக்காரர்கள் உணர வேண்டும். கடவுள் நம்பிக்கையிருந்தால்—மானம், வெட்கம், அறிவு, தெளிவு இருக்கக்கூடாது என்பது நிபந்தனையா என்று கேட்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—4-12-1969]

## 2. கடவுள்—மதம், நாட்டிற்குக் கேடே

தேவர்கள் என்றும், பல தெய்வங்களென்றும், அவற்றின் அவதாரமென்றும், உருவமென்றும், அதற்காக மதமென்றும், சமயமென்றும், மதாச்சாரியார்களென்றும், சமயாச்சாரியார்களென்றும் கட்டியழுபவர்கள்—ஒன்று பகுத்தறிவில்லாதவர்களாகவாவது அல்லது வயிற்றுப் பிழைப்பிற்குப் புறப்பட்ட புரட்டர்களாகவாவது இருக்க வேண்டும்.

அதுபோலவே, சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ அல்லது ஒரு ஆசாமி என்றோ அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் உண்மை-ஞானமற்றவர்களின் கொள்கையாகும்.



ஆதலால், உலகத் தோற்றமும் அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்விப்பு, அழிப்பு என்பவைகளான மூவகைத் தன்மைகளையும் மேற்படி சாமிகளோ, ஆசாமிகளோ, ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறானென்றோ, அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கிறானென்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களை 'விசார ஞானம்' அற்றவர்கள் என்றே சொல்ல வேண்டும்.

அந்தக் கடவுள் என்பவைகளுக்குக் கண், மூக்கு, வாய், கால், கை, தலை; பெயர், ஆண்–பெண் தன்மை, பெண்சாதி–புருஷன், வைப்பாட்டி, தாசி, குழந்தை குட்டி, தாய்–தகப்பன் முதலியவைகளைக் கற்பித்து—அவைகளிடத்தில் பக்தி செய்யவேண்டுமென்றும்; அவற்றிற்குக் கோயில் கட்டி, கும்பாபிஷேகம் செய்து தினம் பல வேளை பாலாபிஷேகம், படைப்பு, பூசை முதலியன செய்ய வேண்டுமென்றும்; அச் சாமிகளுக்குக் கலியாணம் முதலியவைகள் செய்வதோடு அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான 'திருவிளையாடல்கள்' முதலியவைகள் செய்துகாட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டுமென்றும்; அக் கடவுள்களின் பெருமையைப் பற்றியும் திருவிளையாடல்கள் பற்றியும்—'திருமுறை'யாக, 'பிரபந்த'மாகப் பாடவேண்டும் என்றும்; அப்படிப்பட்ட கடவுள்கள் உண்டு என்பதற்கு அவற்றை ஆதாரமாகக் கொள்ளவேண்டுமென்றும்; இதுபோன்ற இன்னும் பல செய்தால் அக் கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும்—மற்றும், நாம் செய்த–செய்கின்ற–செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும், அயோக்கியத் தனங்களையும், கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகள் மூடநம்பிக்கை—வயிற்றுப் பிழைப்பிற்கான சுயநலப் பிரச்சாரமே.

ஏனெனில், இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப் படுத்துவதற்கும் மற்ற நாட்டார்கள் போல நம்நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவு விசாலப்படாமல், மற்ற நாட்டார்களைப்போல விஞ்ஞான சாஸ்திரத்திலே (Science) முன்னேற்றமடையாமலிருப்பதற்கும் இம் மூட நம்பிக்கைகளும், சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரச்சாரமும் இவைகளினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களும் செலவுகளுமேதான் காரணங்களாகும்.

ஒருவருக்கொருவர் உயர்வு–தாழ்வு கற்பித்துக் கொடுமைப்படுத்தி, ஒற்றுமை இல்லாமல் செய்திருப்பதற்தும்; மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல் பாழாவதற்கும்; மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும்—சிறப்பாக மக்களின் ஒழுக்கங்கள் குன்றி மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும், கடவுள் என்பதும், அதன் சமயமும், சமயாச்சாரியார்கள் என்பவர்களும் அவரது பாடல்களும், நெறிகளுமே காரணம் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

நிற்க; இக் கடவுள்களின் பொருட்டாக நம் நாட்டில் பூசைக்கும், அபிஷேகத்திற்கும் அவற்றின் கலியாணம் முதலிய உற்சவங்களுக்கும், பஜனை முதலிய காலட்சேப நேரக் கேட்டிற்கும், இக் கடவுள்களைப் பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த ஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும் இக் கடவுள் அவதார மகிமைகளையும், திருவிளையாடல்களையும், இக் கடவுள்களைப்பற்றிப் பாடின பாட்டுக்களையும் அச்சடித்து விற்கும் புத்தகங்களை வாங்குவதற்கும்—மற்றும், இவைகளுக்காகச் செலவாகும் பொருள்களாலும், நேரங்களாலும் நம் நாட்டில் பல கோடி ரூபாய்களுக்கும் குறைவில்லாமல் வருடா வருடம் பாழாகிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பலகோடிக் கணக்கான ரூபாய்கள் இம் மாதிரியாகப் பாழுக்கிறைக்காமல் மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (Science) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ செலவாக்கப்பட்டு வருமானால்—நம் மக்கள் இன்னும் காட்டுமிராண்டிகளாகவும், உடலுழைப்புக் கூலிகளாகவும் இருக்கமுடியுமா? அன்றியும், தீண்டக்

www.padippakam.com



கூடாத, நெருங்கக் கூடாத, பார்க்கக் கூடாத மக்கள் என்போர்கள் கோடிக்கணக்காய் இருக்கமுடியுமா? 100-க்கு 3 பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100-க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசி மக்கள், தாசி மக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக்கொண்டு, அட்டைகள் இரத்தத்தை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சிக்கொண்டிருக்க முடியுமா என்று கேட்கிறோம்.

கடவுள்–மத மூடநம்பிக்கைகள் ஒழியச் செய்யும் காரியத்தை நாத்திகமென்றும், பாப காரியமென்றும் கூறுவது பகுத்தறிவற்ற பாமர மக்களை ஏமாற்றிச் சுரண்டிப் பிழைப் பவர்களின் சுயநலப் புரட்டேயாகும்.

[‘விடுதலை’–தலையங்கம்—9-12-1969]

## 3. கோயில் வழிபாடு

சென்னை மாகாணத்தில் தேவஸ்தானங்களும், தர்ம ஸ்தாபனங்களும், இந்துமத ஸ்தாபனங்களும் மொத்தத்தில் கோடிக்கணக்கான வரும்படி உடையவைகளாயிருந்தும், அவைகள் குறிப்பிட்ட காரியங்களுக்கு உபயோகப்படாமல் பெரும்பாலும் பிராமணர்களும், தாசி, வேசி முதலிய விபசாரிகளும், வக்கீல்களும் அனுபவிக்கவும்; தேவஸ்தான ‘ட்ரஸ்டி’ என்போர்களும் மடாதிபதியென்போர்களும், சமயாச்சாரி என்போர்களும் லோககுரு என்போர்களும், மகந்துகள் என்போர்களும் சுயமாய்த் தங்கள் இஷ்டம்போல் அனுப விக்கவும்; கொலை, களவு, கள்குடி, விபச்சாரம் முதலிய பஞ்சமா பாதகங்களுக்கு உபயோகப்படுத்தவும், சோம்பேறிகளுக்கும், விபச்சாரத் தரகர்களுக்கும் பொங்கிப்போடவும் உபயோகப்படுத்திக்கொண்டு வருவதைத் தென்னிந்தியர்கள் வெகுகாலமாய் அறிந்து வந்திருக்கிறார்களென்பதை நாம் கூறத் தேவை இல்லை.

அதன் பலனாய் ‘காங்கிரஸ் கான்பரன்ஸ்’ என்று சொல்லப்படும் ராஜீய ஸ்தாபனங் களின் மூலமாயும், பல சமய சபைகள் மூலமாயும், இவ் வக்கிரமங்களையெல்லாம் அடக்கிக் கோடிக்கணக்கான வரும்படியுள்ள சொத்துக்கள் ஒழுங்காய்ப் பரிபாலிக்கப்படவும், அதன் வரும்படிகள் குறிப்பிட்ட விஷயங்களுக்குக் கிரமமாய் உபயோகிக்கப்படவும் மீதி இருந்தால் இந்துமத சம்பந்தமான ஒழுக்கங் கற்பிக்கப் பொதுஜனங்களுக்கு உபயோகப்படவும் தக்க தான ஒரு சட்டம் செய்யவேண்டியது நமது அரசாங்கத்தின் முக்கிய கடனென்றும், கொஞ்சமும் காலதாமதம் செய்யாமல் உடனே செய்யப்படவேண்டியது மிகவும் அவசியமான தென்றும், இதுவரை செய்யாமல் அரசாங்கத்தார் கவலையீனமாய் இருந்தது பெரிய குற்ற மென்றும், இதற்குமுன் இதற்காக 1817-லும், 1863-லும் அரசாங்கத்தாரால் செய்யப் பட்டிருக்கும் இந்துமத தர்ம சொத்துக்கள் பரிபாலனச் சட்டம் போதுமான அளவு பந்தோபஸ்து அளிக்கக்கூடியதாய் இல்லை என்றும், பல தீர்மானங்களைச் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுமிருக்கிறது.

உதாரணமாக, ஈரோட்டில் 1915-ம் வருஷம் ஜூலை மாதம் 24, 25 தேதிகளில் டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடந்த கோயமுத்தூர் ஜில்லா இரண்டாவது கான்பரன்ஸ் என்னும் ராஜீய மாநாட்டில் 8-வது தீர்மானமாக அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதாவது, ‘தர்ம ஸ்தாபனங்கள் மத சம்பந்தமான தேவாலயங்கள் சரவரப் பரிபாலனம் செய்யப்படாததால் கிரமமாய் நடக்கும் வண்ணம் இப்போதிருக்கிற சட்டத்தைக் கொஞ்சமேனும் தாமதிக்காமல் சீர்திருத்தம் செய்து மாற்றிவிடவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இக் கூட்டம் வற்புறுத்துகிறது’ (இந்தத் தீர்மானத்தை ஸ்ரீமான் பி. வி. நரசிம்ம அய்யர்தான் பிரேரேபித்திருக்கிறார் என்பது நமது ஞாபகம்) இவற்றை அனுசரித்தே சர்க்காரிலுள்ள இதுசம்பந்தமான அதிகாரம், ஒரு இந்திய மந்திரியின் கைக்கு வந்ததும் அதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்து ‘சென்னை இந்துமத பரிபாலன மசோதா’ என்னும் பெயரால் ஒரு சட்டத்தைஇயற்றிப் பொதுமக்கள் பிரதிநிதி



யென்றுசொல்லும் சட்டசபை அங்கத்தினர்களின் சம்மதம்பெற்று நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமானது மேலே குறிப்பிட்டபடி தர்ம சொத்துக்களை அதன் கிரமமான உபயோகத்திற்கு அன்றி, தங்களுடைய சுயநலத்துக்காக உபயோகித்துக்கொண்டு வந்த சில மடாதிபதிகளுக்கும், பொதுமக்கள் தர்ம சொத்தைத் தங்கள் வகுப்பார்களே உண்ணவேண்டும் என்னும் கருத்தின்பேரில் சூழ்ச்சி செய்து பொது மக்களிடம் பணம் பறித்துத் தங்கள் வகுப்பார்களுக்கே பொங்கிப் போட்டுக்கொண்டிருந்த சில சமயாச்சாரிகளென்போரான சில பிராமணர்களுக்கும், அதன் பலனாய்த் தின்று கொழுத்துத் திரிந்துகொண்டிருக்கும் சில திண்ணைத் தூங்கிகளுக்கும், இவர்களின் தீச் செயல்களுக்கு அனுகூலமாய் இருந்து பணம் பறித்துக்கொண்டிருந்த வக்கீல்கள், பஞ்ச மகாபாதகத் தரகர்கள் முதலியவர்களுக்கும் விரோதமாயிருந்த படியாலும் இக் கூட்டத்தார் பெரும்பாலும் பிராமணர்களென்று சொல்லப்படுவோராயிருந்து விட்டபடியாலும் இவை களுக்கு ஏராளமான சொத்துக்கள் விட்டவர்களும் இன்னமும் கொடுத்துக் கொண்டிருக்கிற வர்களும் பிராமணரல்லாதாயிருப்பதனாலும் இந்தச் சட்டமானது பிராமணர்களுக்கு விரோதமாகவும், பிராமணர் அல்லாதார்களுக்கு அனுகூலமாயும் இருப்பதாக ஏற்பட்டுப் போய்விட்டது.

இதனால் இக் கூட்டத்தைச் சேர்ந்த பிராமணர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து, இந்தச் சட்டமானது மதத்திற்கு விரோதமானது என்றும், மதமே போய்விட்டதென்றும், சர்க்காரார் இந்துமதத்தில் பிரவேசித்து விட்டார்களென்றும், ஜஸ்டிஸ்கட்சி மெம்பர்களும் மந்திரிகளும் இச் சட்டத்தை உண்டாக்க அனுகூலமாய் இருந்தார்களென்றும், பொய்யழுகை அழுதும், பொய்ப் பழி சுமத்தியும், தங்கள் சாதிப் பத்திரிகைகளான ‘இந்து’ ‘சுதேசமித்திரன்’ ‘சுயராஜ்யா’ முதலிய பிராமணப் பத்திரிகைகள் மூலமாய்ச் சூழ்ச்சிப் பிரசாரம் செய்தும், பிராமணரல்லாதாரான சில அப்பாவிகளை ஏமாற்றியும், பிராமண கீர்த்திக்கு ஆசைப்பட்ட சில பயங்கொள்ளிகளைச் சுவாதீனம் செய்துகொண்டும் இச் சட்டத்தை ஒரேயடியாய்த் தொலைத்துவிடத் தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்து பார்த்தார்கள். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள், மெம்பர்கள் முதலானவர்களுடைய உறுதியினாலும், முயற்சியினாலும்; ஸ்ரீமான்களான ஈ. வெ. இராமசாமி நாயக்கர், வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் இந்தச் சட்டத்தின் அனுகூலத்தைப் பொதுஜனங்களுக்கு எடுத்துக்காட்டி, இந்து மதத்திற்கும் இந்து மத பரிபாலனத்திற்கும் இச் சட்டத்தால் யாதொரு கெடுதியும் உண்டாகாது என்றும் ஆனால் ‘ஊரார் முதலைத் தின்று வாழ்வதுதான் தர்ம’மென்ற கொள்கையை உடைய பிராமண மதத்திற்குத்தான் ஒருசமயம் ஆபத்து வந்தாலும் வரலாம் என்று பத்திரிகை மூலமாகவும், பிரசங்க மூலமாகவும் பொது ஜனங்களுக்கு வெளிப்படுத்தியதின்பேரில், பிராமணர்களின் விஷமப் பிரச்சாரம் ஒருவாறாய் வெளிப்படையாய்க் குறைந்தது என்றாலும், இன்றைக்கும் ரகசியத்தில் எவ்வளவோ தந்திரங்களும் மந்திரங்களும் நடந்து கொண்டுதான் வருகின்றன. இதற்கு அனுகூலமாய் நமது மடாதிபதிகளும் மகந்துகளும் பொது ஜனங்களின் தர்மப் பணத்தை அள்ளி, புளியங்கொட்டைபோல் இறைத்துக் கொண்டுதான் வருகிறார்கள். அய்க்கோர்ட்டிலும் இச் சட்டம் சட்டப்படி செல்லாதென்றும் இதைத் தள்ளிவிட வேண்டு மென்றும் வியாஜ்யம் தொடுத்திருக்கிறார்கள். இச் சட்டத்தில் என்ன கெடுதல் இருக்கிறது என்பதையாவது, இந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவின்படி இந்து மதத்திற்கோ தர்ம பரிபாலனத்திற்கோ என்ன ஆபத்து இருக்கிறது என்பதையாவது இதுவரை எந்தப் பிராமணரும் எடுத்துச் சொன்னதே இல்லை.

‘மதம் போச்சு; தர்மம் போச்சு; இந்து மதத்தில் சரக்கார் பிரவேசிக்கிறார்கள்’ என்று பொய்யழுகை அழுகிறது தவிர வேறொன்றும் சொல்வதே கிடையாது.

எந்த உலகத்தில் மத விஷயங்களை அரசாங்கத்தார் திருத்த பிரவேசிக்காதிருக் கிறார்கள்? 1817-லும் 1863-லும் பிரவேசித்த காலத்தில் இந்தச் சாதியார் எங்கு போயிருந் தார்கள்? அரசாங்கத்தார் தாமதமின்றி உடனே பிரவேசித்து தக்கது செய்யவேண்டும் என்று

படிப்பகம்

www.padippakam.com



காங்கிரசிலும் கான்பரசிலும் தீர்மானித்த காலத்தில், இந்தச் சாதியார் எங்கு போனார்கள்? 'சட்டம் செய்யும் அதிகாரம் நம் கைக்கு வந்துவிடும். நம்மிஷ்டம்போல் நம் சாதிக்கே எல்லா உரிமைகளும் இருக்கும்படியாகச் சட்டம் செய்துகொள்ளலாம்' என்று நம்பி இருந்தார்கள்போலும். அல்லது, பிராமணரல்லாதார் இவற்றைக் கவனியாமல் இன்னும் பிராமணர்களே ஏகபோகமாய் உண்ணும்படி விட்டுக்கொண்டிருப்பார்கள் என்று நினைத்தார்கள் போலும்.

எந்தக் காரியத்திற்கு நாம் அரசாங்கத்தாரிடம் போகாமல் இருக்கிறோம்? நம்முடைய சாமிக்கு வைக்கும் நாமம் வடகலையா, தென்கலையா என்பதை சர்க்காரிடம் போய்த்தான் தீர்மானித்துக்கொள்கிறோம்; மடாதிபதியார்— இவரா, அவரா என்று தீர்மானிக்க சர்க்காரிடம்தான் போகிறோம்; நாம் கோவிலுக்குள் போகலாமா, வேண்டாமா என்பதற்கு சர்க்காரிடம்தான் போகிறோம்; என் சாதி பெரியதா, உன் சாதி பெரியதா என்பதற்கு சர்க்காரிடம்தான் போகிறோம். ஏழ்மைப்பட்ட தேசத்துப் பொது ஜனங்களின் பணம் வருஷம் ஒன்றரைக்கோடி ரூபாய்க்குமேல் மதத்தின்பேரால் வசூலித்து அயோக்கியர்களுக்கும், பஞ்சமா பாதகத்துக்கும் உபயோகப்படுத்துவதைக் கவனிக்க ஒரு சட்டம் வந்தால், அது கூடாது என்று சொல்லுபவர்கள் யோக்கியர்களா? நமக்குள் நாமே பார்த்துக் கொள்ளக்கூடாதா என்றால், இது விஷயத்தில் நமக்குள் என்ன யோக்கியப் பொறுப்பு இருக்கிறது? '10 லட்சம், 20 லட்சம் போட்டு நீ கோயில் கட்டிக்கொடுத்துச் சொத்தும் விட வேண்டும்—நான் செங்கல்லை அடுப்பில் போட்டுச் சூடேற்றி ஈரத் துணிமேல் போட்டு, ஆவியுண்டாக்கி, சுடுசாதம் என்று வெறும் பாத்திரத்தைச் சாமிக்கு வைத்து ஆராதனை செய்யவேண்டும்; அது சாதத்தின் ஆவியா, சுடுசெங்கல் ஆவியா என்பதைக்கூட நீ பார்க்கக்கூடாது; பார்த்தால் பாவம்' என்று சொல்லுகிற ஜனங்களை வைத்துக்கொண்டு நமக்குள் எப்படிச் சரிசெய்து கொள்ளுகிறது? வைக்கத்தில் தெருவில் நடக்க எத்தனை பேர் ஜெயிலுக்குப்போக வேண்டி வந்தது? கல்பாத்தில் தெருவில் நடக்க 144 யார் வேண்டுகோளின்பேரில் போடப்பட்டது? அதற்காக சர்க்காரிடம் யார் போனது? 'நமக்குள் சரிப்படுத்திக்கொள்ளக்கூடாதா' என்கிற யோக்கியர்கள் இந்தச் சமயம் ஏன் சர்க்காரிடம் போகவிட்டார்கள்? பொது ஜனங்கள் பணத்தில் நடத்தப்படும் வேதபாடசாலைகளில் பிராமணன்தான் படிக்கலாம்; சூத்திரர்கள் படிக்கக்கூடாது என்று சொல்லுகிறபோது 'நமக்குள் சரிப்படுத்திக் கொள்ளக்கூடாதா' என்கிற பிரபுக்கள் எங்கே போயிருந்தார்கள்?

இவற்றை, பிராமணரல்லாதார் தயவுசெய்து கருத்தாய்க் கவனிக்க வேண்டும். பிராமணரல்லாதாருக்குள் கொஞ்சம் பிளவு ஏற்பட்டவுடன் சட்டசபையால் இந்து தேவஸ்தான சட்டத்தை மாற்றப் பிராமணர்களால் தீர்மானம் கொண்டுவந்தாய்விட்டது.

இனி வரப்போகும் சட்டசபைக்கும், தேவஸ்தான சட்டத்தை மாற்ற சம்மதிக்கும் அங்கத்தினர்களுக்குச் சாதகமாய்ப் பிரச்சாரம் செய்யவும், அவர்கள் செலவுக்குப் பணம் கொடுக்கவும், மகந்துக்களும் மடாதிபதிகளும் இப்போதிருந்தே ஏற்பாடுசெய்து வருகிறார்கள். சுயராஜ்யக் கட்சிப் பிரச்சாரத்திற்கு இந்தப் பணம்தான் தாண்டவமாடும். சில பிராமணரல்லாதாரும் இப்பொழுது இருந்தே இதற்குச் சம்மதம் கொடுத்து, சில மகந்துக்கள் தயவையும், மடாதிபதிகள் தயவையும் சம்பாதித்துக்கொண்டு வருகிறார்கள். பிராமணரல்லாத ஓட்டர்களே! ஜாக்கிரதை! ஜாக்கிரதை! கோட்டையை விட்டீர்களானால் பிறகு வெகுநாளைக்குப் பிடிக்க முடியாது.

['குடிஅரசு'-தலையங்கம்—22-11-1925]

நமது நாட்டிலிருக்கும் அரசியலின் பெயராலும், மதத்தின் பெயராலும், மதச் சடங்கின் பெயராலும் நமக்கு இழைத்துவரும் கேடுகளுக்கும், தொல்லைகளுக்கும் அளவே இல்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் இக் கொடுமைகளில் சிக்கிச் சீரழிந்து சுயமரியாதை, மானம், மரியாதை, வெட்கமற்று அல்லல்படுகிறோம். இவைகளிலிருந்து



வெளியேற நாம் பிரயத்தனப்படும் இக் காலத்திலேயே—மேலும் மேலும் நமக்கு இழிவை உண்டாக்கித் தொல்லைப்படுத்துகின்றார்களென்றால் மற்றபடி நாம் சும்மா இருந்தோமானால் நமது கதி என்னவாகும்? 'அன்ன நடைக்கு ஆசைப் பட, உள்ளநடையும் போயிற்று' என்பது போல—கோயில்களில் நமக்கென்று தனி இடமும் பார்ப்பனர்களுக்கென்று தனி இடமும் கூடாது என்று நாம் சொல்ல ஆரம்பித்த பிறகு—'நீ கோயிலுக்கு வரவே கூடாது' என்று சொல்லவும், கோயிலை மூடிக் கதவைத் தாள்போட்டுக்கொள்ளவும் ஆரம்பித்துவிட்டார்கள். தெலுங்கில் ஒரு பழமொழியுண்டு. 'காலானிக்கி வேஸ்தே மூலானியாக்கி வஸ்துடு' என்பார்கள். அதன் அர்த்தம் '10-க்கு அடிப்போட்டால் 5-க்கு வருவான்' என்பது. அதுபோல, கோயிலுக்குள் வரவேண்டாம் என்பதாகவே சொல்லி விட்டால்—'கும்பிட்டுவிட்டாவது போய்விடுகிறேன்' என்று சொல்ல வருவான்; இல்லாவிட்டால் சம உரிமை கேட்பான் என்று நினைத்து, போகிறபக்கமெல்லாம் கதவைச் சாத்துகிறார்கள். கோவிலில்போக உரிமை கிடைத்தவருக்கு, சாமி கும்பிட உரிமையுண்டா, இல்லையா? சுவாமி கும்பிட உரிமை உள்ளவனுக்கு, சுவாமிக்குத் தேங்காய் பழம் உடைத்து வைக்க உரிமை உண்டா, இல்லையா? இந்த உரிமைகளைக்கூட இந்தப் பார்ப்பனர்கள் அபகரிப்பார்களேயானால், இவர்களைவிட வெள்ளைக்காரர்கள் எந்த விதத்தில் கெட்டவர்கள்? நமது நாட்டுப் பார்ப்பனர்களைவிட தென் ஆப்பிரிக்க வெள்ளைக்காரர்கள் ஆயிரம் மடங்கு யோக்கியர்கள் என்று சொல்லுவோம். இந்தப் பார்ப்பன ஆட்சியிலும், அடக்கு முறையிலும் இருப்பதைவிட அந்த வெள்ளைக்காரர்கள் ஆட்சியே மேலென்பதாகச் சொல்லிவிடலாம். நம் நாட்டில் வரவர இந்தப் பார்ப்பனர்கள் எவ்வளவு அக்கிரமங்கள் செய்யத் துணிந்துவிட்டார்கள் என்பதை நினைக்கும்பொழுது நமது இரத்தமே கொதிக்கிறது; குலை நடுங்குகின்றது. பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளை என்பது போல், நாம் கட்டின கோயிலைக்கொண்டு வயிறு வளர்க்க ஏற்பட்டவர்கள் இப்போது நம்மை வெளியில் தள்ளிக் கதவைச் சாத்துவதென்றால் நமது மானங்கெட்ட தன்மைக்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்! சுவாமியைத் தொட்டுக் கும்பிடுவதும், சுவாமி பக்கத்தில் போய்க் கும்பிடுவதும் ஆகிய விஷயங்கள் இருக்கட்டும்; வெளியிலிருந்து தேங்காய் பழம் உடைத்துவைத்து சாமி கும்பிடுவதில் இந்தப் பார்ப்பனர்களுக்கு ஆட்சேபணை என்ன? இதைப் பார்ப்பனர்களின் எந்த வேதம், சாஸ்திரம், ஆகமங்களுக்கு விரோதம் என்று சொல்லக்கூடும்? கைவலுத்தவன் காரியமாயிருக்கிறதேயல்லாமல் இதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? நாம் தேங்காய் உடைப்பதால் கோயில் வரும்படி குறைவதாக இருந்தால் அவர்கள் கேட்பதைத் தரத் தயாராக இருக்கின்றோம். பார்ப்பனர்கள் வரும்படி குறைந்துவிடுகிறது என்பதாகச் சொல்லுவதானாலும் அவர்களுக்கும் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றாம். மற்றபடி, இவர்கள் ஆட்சேபிக்கக் காரணம் என்ன? மதுரைக் கோயிலில் ஸ்ரீமான் இராமநாதனை உள்ளே வைத்து அடைத்ததும்—அவரைத் தேங்காய் உடைக்காமல் தடுத்ததும் எதைக் காட்டுகிறது? திருவண்ணாமலைக் கோயிலில் ஸ்ரீமான் கண்ணப்பரையும் மற்றவர்களையும் உள்ளேவிடாமல் கதவை மூடிய விஷயம் கோர்ட்டில் இருப்பதால் அது முடியட்டும். மற்றபடி, மதுரை விஷயத்தைப்பற்றி நமக்கு ஏற்பட்ட அவமானம் பொறுக்கக்கூடியதல்ல. இதுபோலவே, கொஞ்ச நாளைக்கு முன் தென்காசி கோயிலிலும் தேவாரம் படித்த பிறகு பிரசாதம் வாங்குவது தங்களுக்கு அவமானம் என்பதாகக் கருதி, அங்குள்ள பார்ப்பனர்கள் கோயில்களை விட்டுப் போய் விட்டதுமல்லாமல், சுவாமி எழுந்தருளும்போது கதவை மூடிக்கொண்டார்களாம். தேவாரம் படிக்கக் கேட்பதும் அதற்குப் பிறகு பிரசாதம் வாங்குவதும் இந்தப் பார்ப்பனர்களுக்கு அவமானமாய்த் தோன்றினால், நம்மைத் தேங்காய் பழம் உடைத்து வைத்துக் கும்பிட வேண்டாமென்றால் அது எவ்வளவு பெரிய இழிவு என்பதை அவர்களே சொல்லட்டும். ஒவ்வொரு அர்ச்சகனுக்கும் சுவாமி பூசை செய்யச் சம்பளம் உண்டு. அது கோயில் கட்டினவர்களே இத்தனை வேளை பூசை என்றும், அதற்கு இன்ன சம்பளமென்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மற்றவர்கள் செய்யும் பூசைக்கும் இவர்களுக்கும்

www.padippakam.com



எவ்வித சம்பந்தமுமில்லை. அனேக இடங்களில் பக்தர்களே பூசை செய்வது இன்னும் வழக்கமாகத்தான் இருக்கிறது. இது வரையில் எவ்வித வழக்கத்தையும் யாரும் ஆட்சேபித்தது கிடையாது. இதை இப்படியே விட்டுவிட்டால் பம்பாயில் புரோகிதச் சட்டம் வந்ததுபோல்—அதாவது பார்ப்பானுக்குப் பணம் கொடுத்துத்தான் திதிசெய்ய வேண்டுமென்று சொன்னது, இங்கும் ஆகிவிடுமென்றே சொல்லலாம். அங்காவது பார்ப்பானுக்குப் பணம் கொடுத்துவிட்டுத் தாங்களாக திதி செய்து கொள்வதில் ஆட்சேபமில்லை என்பதாக ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இங்கு பார்ப்பானுக்குப் பணம் கொடுத்தாலும் நாம் செய்துகொள்ளப் பாத்தியமில்லை என்ற சட்டம் இருக்கிறதுபோல் இருக்கிறது.

நாம் தேங்காய் உடைத்தால் மீனாட்சியம்மனும் சொக்கலிங்க சுவாமியும் கோயிலை விட்டு ஓடிவிடுவார்களா? அல்லது, உலகம் முழுகிப்போகுமா? அல்லது, பாவமூட்டை ஏற்பட்டுவிடுமா? என்பது நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. எல்லா மக்களுக்கும் சமத்துவ உரிமை வேண்டுமென்றும், யாவரும் கோயிலுக்குள் போய்ச் சுவாமியை தரிசிக்கும் உரிமை வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கும் இக் காலத்தில்—ஏற்கனவே உரிமையுள்ள காரியங்களையும் விட்டுக்கொடுப்பதனால் நாம் சமஉரிமை அடைய யோக்கியமானவர்களாவோமா? தேங்காய் உடைப்பதால் என்னதான் ஏற்பட்டுவிடும்? பார்ப்பனர்கள் சர்க்காரிடம் போய்த்தான் 144 உத்தரவு வாங்கி வரட்டுமே? அதையும் பார்த்துவிட்டிருக்க வேண்டுமேயல்லாமல் அதைத் தடுத்தது நமக்குத் திருப்தியளிக்கவில்லை.

கலகம் நடத்தவேண்டும் என்னும் எண்ணத்தோடு நாம் சொல்ல வரவில்லை. நாம் சரி என்று மனப்பூர்வமாய் யோசித்து, தீர்மானித்துச் செய்யுங் காரியங்களுக்கு ஒரு சிறு தடை ஏற்பட்டால், உடனே பின்வாங்கிக்கொள்கிறதென்று ஆரம்பித்துவிட்டால் எப்படி முன்னேற முடியும்? நமக்குப் பின்னால் யாராவது பிரயத்தனப்படுபவர்களுக்கும் இது பெருத்த குந்தகமாய் வந்து முடியும் என்றுதான் பயப்படுகிறோம். ஒரு காரியத்திற்குப் போகக்கூடாது; கிரமம் என்று நினைத்துத் தலையிட்டு விட்டால் அதைச் சுலபத்தில் விட்டுவிட்டு ஓடவும் கூடாது. ஆதலால் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் யோசித்து, சீக்கிரத்தில் ஏதாவது ஒரு வசதிசெய்யக் கோருகிறோம். இன்னும் மற்ற ஊர்களிலும் இந்தவிதமான தடைகள் இல்லாமல் அவரவர்கள் தங்கள்தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்ற விரும்புகிறோம்.

['குடிஅரசு'–தலையங்கம்—13-2-1927]

நமது நாட்டிலுள்ள எல்லாக் கெட்ட காரியங்களுக்கும் 'நமது நாட்டுக் கடவுள்'களே வழி காட்டிகளாக இருக்கிறார்கள். அதாவது சூது, வாது, வஞ்சகம், பொய், புரட்டு, திருட்டு, விபசாரம், குடி, கூத்தி, கொலை, ஜீவ இம்சை முதலிய எந்தக் கெட்ட தொழிலை எடுத்துக்கொண்டாலும்—சில கடவுள்களிடத்தில் இவை யாவும் மொத்தமாகவும், சில சில கடவுள்களிடத்தில் தனித்தனியாகவும், சில்லரையாகவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப் பார்த்து வருகிறோம். இதே குணங்கள் நமது கடவுள்களுக்கு இருப்பதாக நாமே தினப் படியும், மாதப் படியும், வருஷப் படியும், காலக்ஷேபம் மூலமாகவும், நடிப்பு மூலமாகவும், பூஜை மூலமாகவும், பஜனை மூலமாகவும், திருவிழாக்கள் மூலமாகவும் நடத்திக் காட்டிக்கொண்டும் வருகிறோம். இவைகளுக்காகவே நமது பெரியவர்களும் ஏராளமான சொத்துக்களையும்விட்டு, இவைகள் தவறாமல் நடந்துவரச் செய்திருக்கிறார்கள். தற்கால 'தர்ம பரிபாலனம்' என்பதும் பெரும்பாலும் இக் காரியங்களைப் பரிபாலனம் பண்ணுகிறவைகளாகவே இருக்கின்றன.

இந்த நிலையில் ஏற்படுத்திய கடவுளை வணங்கும் மக்களுக்கு ஒழுக்கம் எப்படி உண்டாகக்கூடும்? இம் மாதிரியான தர்மங்களைப் பரிபாலனம் செய்யும் மக்கள், எப்படி ஒழுக்கமாக இருக்கமுடியும்? கடவுள்களும், கடவுள்களைப்பற்றிய கதைகளும், புராணங்களும் மற்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளும் மக்களுக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் உண்டாக்குவதற்கு உண்டாக்கப்பட்டனவேயன்றி, இம் மாதிரிப் பலன்களுக்கு உண்டாக்கப்பட்டதாக யாரும் ஒப்புக்கொள்ள முடியாது.



மேற்கண்ட அனேகவிதமான ஒழுக்கக் குறைகள் கடவுள் பெயரால் நடப்பவைகளுள் இதுசமயம் சுவாமியின் பெயரால் பெண்களுக்கு விபசாரித்தனத்திற்கு அனுமதிச் சீட்டு (பொட்டுக் கட்டுதல்) என்னும் 'லைசென்ஸ்' கொடுக்கப்படுவதைப் பற்றி மாத்திரம் இவ் வியாசத்தில் எடுத்துக்கொள்வோம்.

கோயில்களுக்குத் தாசிகள் என்னும் விலை மாதர்கள் எதற்காக வேண்டும்? மேளமடித்தல், மணியடித்தல் முதலிய காரியங்கள் எதற்காகப் பூசைக்கு உபயோகப்படுகிறது என்று யாராவது கேட்டால், 'சுவாமிக்குத் தீபாராதனை ஆகும்போது வேறு சப்தங்கள் காதில் விழாமல் இருக்கும்பொருட்டு மணி சப்தங்களும், மேள வாத்தியங்களும் செய்யப்படுகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியோ தப்போ, அதைப்பற்றி நாம் இப்போது விவரிக்க வரவில்லை. வேறு சப்தங்கள் காதில் படாமல் இருப்பதற்கு மணியும், மேளமும் வைத்திருப்பதனால், விலை மாதர்களான விபச்சார ஸ்தீரிகளைக் கோவிலில் நிறுத்தி இருப்பதன் காரணமென்ன? என்று இந்த முறையில் யோசிப்போமானால், சுவாமி தீபாராதனையின்போது பக்தர்களுக்கு வேறு சாமான் கண்களில் படாமல் இருப்பதற்கு இந்தச் சாமான்களை (விபச்சாரிகளை) நிறுத்தி வைத்திருப்பதாகத்தான் கொள்ள வேண்டும். இதை, யாராவது அறிவாளிகளின் வேலையென்று சொல்லக்கூடுமா?

நமது நாட்டில் விபச்சாரத்திற்காகப் பொட்டுக்கட்டிக்கொள்ளும் தாசிகள் எல்லோரும் ஒவ்வொரு சுவாமியின் பெயரால்தான் தங்களைப் 'பொது மகள்' என்று முடிவுகட்டி விளம்பரப்படுத்திக் கொள்கிறார்களேயல்லாமல், 'வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழி இல்லாததால் இந்த வியாபாரத்திற்குப் போகிறேன்' என்று யாரும் சொல்வதே இல்லை. இந்த மாதிரி அனுமதிச் சீட்டு கொடுக்கும் கடவுள், வேறு எந்த மதத்திலாவது இருக்கிறதாவென்பதை யோசித்துப் பார்த்தால், நமது அறியாமையும் நமது கடவுள்களுக்கு நாம் செய்யும் இழிவும் புலப்படாமல் போகாது.

தவிர, வேறு விவகார முறையில் பேசுவதானாலும், அதாவது 'கடவுளுக்குப் பணி செய்ய இவர்கள் கோவிலில் நியமிக்கப்படுகிறார்கள்' என்று சொல்வதானாலும், 'இருந்திருந்து கடவுள்களுக்குப் பணிசெய்ய இந்த வியாபாரத்தில் ஈடுபட்டவர்களைத்தானா நியமிக்கவேண்டும்? வேறு யோக்கியமான தொழிலில் உள்ள பெண் மக்கள் உங்கள் சமூகத்தில் இல்லையா?' என்று யாராவது கேட்டால், அதற்கு இவர்கள் என்ன பதில் சொல்லக்கூடும்? இம் மாதிரி ஒவ்வொரு முக்கிய கோயிலிலும் பூசை காலத்தில் 10, 20, 30; சில கோயில்களில் 100, 150 வீதம் விபச்சாரப் பெண்கள் தங்களை அலங்கரித்துக்கொண்டு—கோயிலுக்குத் தரிசனத்திற்காக வரும் பக்தர்கள்முன்னிலையில் நடமாடினால் அந்த பக்தர்களின் கதி என்ன ஆவது? கிராமாந்தரங்களில் எந்தக் கோயிலில் பார்த்தாலும் உள்ளதுக்குள் நன்றாய்க் கொஞ்சம் அழகாய் இருக்கிற தாசிகள், முதலாவது தர்மகர்த்தாவுக்கு அல்லது அவர்கள் மக்களுக்கு, அதற்கடுத்ததுதான் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு என்பதாகிய வழக்கமாயிருக்கிறது.

கிராமாந்தரங்களில் உள்ள கோயில்களின் கதி இப்படியென்றால், சில பெரிய பட்டணங்களிலும், முக்கிய ஸ்தலங்களிலும் உள்ள கோயில்களின் சங்கதி கேட்கவேண்டியதில்லை. விசேஷ ஸ்தலங்களில் உள்ள கோயில்களின் தாசிக்கு பெரும்பான்மையும் அந்தந்தக் கோயில் அர்ச்சகர்கள் முதலியவர்களே தரகர்களாகி விடுகிறார்கள். அவர்கள் சுவாமிக்கும் நமக்கும் இடையில் எப்படித் தரகர்களாயிருக்கின்றார்களோ, அதுபோலவே, இந்த 'அம்மன்'களுக்கும் நமக்கும் தரகர்களாக இருந்துகொண்டு, யாத்திரைக்கார வாலிபர்களைப் பாழாக்கிவிடுகிறார்கள். சுவாமி பக்திக்காகக் கோயில்களுக்குப் போகும் பக்தர்கள் நாளாவட்டமாய்ப் பழகி தாசி பக்தர்களாகி விடுவதை நாம் எத்தனையோ பார்த்திருக்



படிப்பகம்

www.padippakam.com



கிறோம். இந்த அநாகரிகமும் கெடுதியுமான காரியங்கள் மதத்தின் பெயராலும் சுவாமியின் பெயராலும் நடைபெறுவதானது நமது சமூகத்திற்கே இழிவு என்று சொல்லாமலிருக்க முடியவில்லை. 'சாஸ்திரங்களிலிருக்கிறது; அதற்கு நாம் என்ன செய்வது?' என்று சிலர் சொல்லலாம். 'வெகு காலமாய் வழக்கத்தில் வந்து விட்டது; அதற்கு நாம் என்ன செய்வது?' என்று சிலர் சொல்லலாம். இதெல்லாம் முட்டாள்தனமான சமாதானமாகுமே தவிர அறிவுள்ள சமாதானமாகாது. நம்முடைய சாஸ்திரத்தில் இல்லாத அயோக்கியத்தனம் உலகத்தில் ஒன்றுகூட இல்லை என்பதாக நம்மால் மெய்ப்பிக்கலாம். அதையெல்லாம் இன்றைய தினம் நாம் செய்வதென்றால் நம்மைப்போல மூடர்கள் உலகத்திலிருக்கவே முடியாது.

அந்த சாஸ்திரங்கள் என்பவைகளை எழுதினவர்கள் யார்? அவர்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக இப்படியெல்லாம் எழுதினார்கள்? இம்மாதிரி வேறு தேசத்தில், வேறு மதத்தில், வேறு சாஸ்திரத்தில் எங்கேயாவது இருக்கிறதா? என்பவைகளை யோசித்துப் பார்த்த பிறகு, இவற்றைக் கவனிக்க வேண்டுமேயல்லாமல், எவனோ தனக்குத் தொழில் வேண்டும், வயிற்றுப் பிழைப்பு நடக்கவேண்டும் என்பதாக ஏதாவது ஒன்றை எழுதிவைத்து நமக்குக் காட்டினால், அதுவே நமக்குக் கடவுள் வாக்காகிவிடுமா? அல்லது ஆதாரமாகிவிடுமா? மனிதனுக்குப் பகுத்தறிவு எதற்காக இருக்கிறது? இப்பொழுது வரவர அனேக கோயில்களில் இந்தத் தாசி வழக்கத்தை எடுத்தாகிவிட்டது. உதாரணமாக, மைசூர் கவர்ன்மெண்டார் தங்கள் ஆட்சிக்குட்பட்ட கோயில்களுக்கு, 'எங்கும் தாசி உத்தியோகம் இருக்கக்கூடாது' என்பதாக ஓர் உத்தரவு போட்டு, தங்கள் சாமிகளை விபச்சாரத் தனத்திலிருந்து மீட்டுவிட்டார்கள். அதன் மூலம் அந்த சமஸ்தானத்துக் கோயில் தாசிகள் எல்லாம் நீக்கப்பட்டாய்விட்டது. மைசூர் சமஸ்தானத்துச் சுவாமிகளுக்கு வெட்கம் வந்து, தங்களுக்கு இனிமேல் தாசிகள் வேண்டியதில்லை என்று அந்த கவர்ன்மெண்டுக்குச் சொல்லிவிட்டது போல, நமது நாட்டுச் சுவாமிகளுக்கும் என்றைக்காவது வெட்கம் வந்தோ, அல்லது கிழப் பருவம் வந்தோ இனிமேல் தங்களுக்குத் தாசிகள் வேண்டியதில்லை என்று தேவஸ்தான போர்டாரிடமாவது, கமிட்டியாரிடமாவது, தர்மகர்த்தாக்களிடமாவது சொல்லிவிடக்கூடாதா என்பதாக நமது நாட்டுச் 'சாமி'களைக் கேட்டுக்கொள்கிறோம்.

['சித்திரபுத்திரன்' என்ற பெயரில் கட்டுரை—'குடிஅரசு' 4-9-1927]

## 4. பிரார்த்தனை

பிரார்த்தனை என்பது இன்று உலகில் மக்கள் சமூகம் எல்லோரிடத்திலும்—அதாவது கடவுளால் மக்கள் நடத்தப்படுகிறார்கள் என்று நம்பும் எல்லோரிடத்திலும் இருந்துவருகிறது. இது எல்லா நாடுகளிலும் எல்லா மதக்காரர்களிடத்திலும் இருந்து வருகிறது.

பிரார்த்தனை என்பதற்கு ஜபம், தபம், வணக்கம், பூசனை, தொழுகை முதலிய காரியங்களும் பெயர்களும் சொல்லப்படுவதுண்டு.

இவை எல்லாம் கடவுளை வணங்கித் தங்களுக்கு நன்மை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதேயாகும்.

தனக்கு வேண்டியவற்றை எல்லாம்—அதாவது இம்மையில்—இவ்வுலகில் புத்தி, செல்வம், சுகம் இன்பம், ஆயுள், கீர்த்தி முதலியவைகளும்; மறுமையில்—மேல் லோகத்தில் பாவ மன்னிப்பு, மோட்சம், நல்ல ஜென்மம் முதலியவைகளும் கிடைக்கவேண்டும் என்கின்ற ஆசையே பிரார்த்தனையின் முக்கிய நோக்கமாக இருந்துவருகிறது.

இந்தப் பிரார்த்தனையின் அஸ்திவாரம், உலகத்தைப் படைத்துக் காத்துவரும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதும்; அவர் சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், சர்வமும் அறியும் ஞானமும் உடையவர் என்பதும், அப்படிப்பட்ட அக் கடவுளை வணங்குவதால்



ஒருவனுக்கு வேண்டிய சகல காரியங்களிலும் சித்தி பெறலாம் என்பதுமானவைகள்தாம் பிரார்த்தனைக்காரர்களின் கருத்தாயிருக்கின்றது. இப்படிப்பட்ட பிரார்த்தனைக்கு அக் கடவுளை வணங்குவது, தோத்திரம் செய்வது, புகழ்வது, பஜனை செய்வது முதலிய காரியங்கள் ஒருபுறமிருக்க, பொருள்களைக் கொண்டும் கடவுளைத் திருப்திசெய்து அவற்றால் பயன்பெறலாம் என்பதும் இந்தப் பிரார்த்தனையில் சேர்ந்ததாகும்.

அதாவது, கடவுளுக்கு இன்ன இன்னது செய்வதாக நேர்ந்துகொள்வது, ஜீவப் பலி கொடுப்பது, கோவில் கட்டுவது, உற்சவம் செய்வது முதலிய காரியங்கள் செய்யப் படுவனவாகும்.

ஆகவே, இப்படிப்பட்ட பிரார்த்தனை என்பதற்கு வேறு வார்த்தையில் ஒரு மாறு பெயர் சொல்லவேண்டுமானால் 'பேராசை' என்றுதான் சொல்லவேண்டும். பேராசை என்றால் தகுதிக்குமேல் விரும்புவது, வேலை செய்யாமல் கூலி பெறுவது என்பதே ஆகும்.

படித்துப் 'பாஸ்' செய்யவேண்டியவன் பிரார்த்தனையில் பாஸ் செய்வது என்றால்; பணம் வேண்டியவன் பிரார்த்தனையில் பணம் சம்பாதிக்க வேண்டுமென்றால்; மோட்சத்துக்குப் போகவேண்டும் என்கின்றவன் பிரார்த்தனையில் மோட்சத்துக்குப் போக வேண்டும் என்றால் இவைகளெல்லாம் பேராசை என்று சொல்லுவதோடு, வேலை செய்யாமல் கூலி கேட்கும் பெரும் சோம்பேறித்தனமும் மோசடியும் ஆகும் என்று சொல்லுவதுதான் மிகப் பொருத்தமாகும்.

பேராசையும், சோம்பேறித்தனமும், ஏமாற்றும் தன்மையும் இல்லாவிட்டால் பிரார்த்தனைக்கு இடமே இல்லை.

மற்றும், முன் குறிப்பிட்ட தேவைகளுக்காகப் பிரார்த்தனை செய்வதும், பிரார்த்தனையில் அவைகளை அடையப் பார்ப்பதும், முன் குறிப்பிட்ட சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ள கடவுளைச் சுத்த முட்டாள் என்று கருதி அவனை ஏமாற்றச் செய்யும் சூழ்ச்சி என்று கூடச் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

எந்த மனிதனும் தகுதியினால் எதையும் அடையலாம். அதற்கு வேண்டிய காரியங்கள் செய்து தகுதியாக்கிக்கொண்டு பலனடைய எதிர்பாராமல்—காரியத்தைச் செய்யாது பிரார்த்தனையில் பலன் அனுபவிக்க வேண்டும் என்று கருதினால், கடவுள் வேலை செய்யாமல் கூலி கொடுக்கும் ஒரு அறிவாளி என்றும், தன்னைப் புகழ்வதாலேயே வேண்டியதைக் கொடுக்கும் ஒரு தற்புகழ்ச்சிக்காரனென்றுந்தானே சொல்லவேண்டும்!

தவிர, இந்தப் பிரார்த்தனையின் தத்துவமானது மனிதனைச் சோம்பேறியாக்குவதோடு, சகலவித அயோக்கியத்தனமான காரியங்களுக்கும் 'லைசென்சு' (அனுமதிச் சீட்டு) கொடுப்பது போலாகிறது. விதை நட்டுத் தண்ணீர் பாய்ச்சாமல் அறுப்பு அறுக்க அரிவாள் எடுத்துக் கொண்டு போகிறவனுக்கும், யோக்கியமான காரியங்களைச் செய்யாமல் கடவுள் கருணையை எதிர் பார்ப்பவனுக்கும் என்ன வித்தியாசம் என்பது விளங்கவில்லை.

ஏனென்றால், சகல காரியங்களும் கடவுளால்தான் ஆகும் என்று நினைத்துக் கொண்டு, கடவுள் யாருடைய முயற்சியும் கோரிக்கையும் இல்லாமல் அவனவன் செய்கைக்கும் எண்ணத்திற்கும், தகுதிக்கும் தகுந்தபடி பலன் கொடுப்பதற்குத் தகுந்த ஏற்பாடும் செய்து விட்டார் என்றும் (அதாவது விதியின்படிதான் முடியும் என்றும்) தெரிந்திருக்கும் ஒருவன் அந்தத் தெளிவில் நம்பிக்கை இருந்தால் பிரார்த்தனை செய்வானா என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

சாதாரணமாக, மக்களில் 100-க்கு 90 பேர்களிடம் பிரார்த்தனை வெகு கேவலமான—அறிவற்ற வியாபாரத்தனமான முறையில் இருந்து வருகிறது.

அதாவது, 'எனக்கு இன்ன பலன் ஏற்பட்டால் உனக்கு நான் இன்ன காரியம் செய்கிறேன்' அல்லது 'உனக்கு நான் இன்ன காரியம் செய்கிறேன்; அதற்குப் பதிலாக நீ

படிப்பகம்

www.padippakam.com



இன்ன காரியம் எனக்குச் செய்' என்கின்ற முறையிலேயே பிரார்த்தனை இருந்து வருகின்றது.

இவர்கள் எல்லோரும்—அதாவது இந்தப் பிரார்த்தனைக்காரர்கள் எல்லோரும் கடவுளைப் புத்திசாலி என்றோ, சர்வசக்தி உள்ளவன் என்றோ, பெரிய மனிதத் தன்மையுடையவன் என்றோ கருதவில்லை என்றுதான் சொல்லியாகவேண்டும்.

சிலர் சொல்லுகிறார்கள், 'மனிதன் பாபி; அவன் பாப கர்மத்தைச் செய்துதான் தீருவான்; ஆதலால் மன்னிப்புக்கேட்டுத்தான் தீரவேண்டும்' என்று.

'நான் பாபம் செய்துதான் தீருவேன்; நீ மன்னித்துத்தான் ஆகவேண்டும்' என்று பிரார்த்திப்பதைக் கடவுள் ஏற்றுக்கொள்ளுவதானால், மனிதன் எந்தப் பாவத்தைச் செய்வதற்கும் ஏன் பயப்படவேண்டும் என்பது நமக்குப் புலப்படவில்லை. பாபத்துக்கு எல்லாம் மன்னிப்பு இருக்குமானால் புண்ணியம் என்பதற்கு அர்த்தம்தான் என்ன?

ஆகவே, 'கடவுள்' கற்பனையைவிட இந்தப் பிரார்த்தனைக் கற்பனையானது மிகமிக மோசமானது என்றுதான் சொல்ல வேண்டும். பிரார்த்தனைக் கற்பனை இல்லாவிட்டால் கடவுள் கற்பனை ஒரு பிரயோசனத்தையும் கொடுக்காமல் போய்விடும்.

மனிதன் பூசையும், பிரார்த்தனையும் செய்வதற்குத்தான் கடவுள் ஏற்படுத்தப்பட்டதே ஒழிய, கடவுளுக்காகப் பூசையும், பிரார்த்தனையும் ஏற்படுத்தப்படவில்லை.

குரு (பாதிரி), புரோகிதன் (பார்ப்பனன்) ஆகியவர்கள் பிழைப்புக்காகவே பிரார்த்தனையும் கடவுள் மன்னிப்பும் ஏற்படுத்தப்படவேண்டியதாய்விட்டது.

இந்த இரண்டு காரியங்களும் இல்லாவிட்டால் பாதிரிக்கோ, முல்லாவுக்கோ, புரோகிதனுக்கோ ஏதாவது வேலை உண்டா என்பதை யோசித்துப் பாருங்கள். ஆத்திகர்கள் கொள்கைப்படி, மனிதனுடைய செய்கையும் எண்ணமும், 'சித்திர புத்திரனுக்கோ' 'கடவுளுக்கோ' தெரியாமல் இருக்கவே முடியாது. இதற்காகப் பலன் கொடுக்கத் 'தீர்ப்பு நாளும்', 'எமதர்ம ராஜாவும்' இருந்தே இருக்கிறார்கள்.

மத்தியில் பிரார்த்தனை, பூசனை என்பவை—மேற்கண்ட இரண்டையும் ஏமாற்றவா அல்லது குருவும், புரோகிதனும் பிழைக்கவா என்பது யோசித்தால் விளங்காமல் போகாது.

பிரார்த்தனையில் செலவாகும் நேரத்தைப்போல் மனிதன் வீணாய்க் கழிக்கும் நேரம் வேறு இல்லை என்றே சொல்லுவோம். சில சோம்பேறிகள் பிழைப்பதற்காக மக்கள் புத்தி எவ்வளவு கெடுகிறது? மக்களுக்கு அயோக்கியத்தனமானவைகளைச் செய்ய எவ்வளவு தைரியம் ஏற்பட்டு விடுகிறது? பொருள்கள் எவ்வளவு நாசமாகின்றன என்பவைகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்தால் பிரார்த்தனை என்பது ஒரு புரட்டான காரியம் என்றோ, பயனற்ற காரியம் என்றோ, அறிவீனமான காரியம் என்றோ விளங்காமல் போகாது.

['பகுத்தறிவு' மலர் 1, இதழ் 9—1935]

'கடவுள்' என்ற வார்த்தை ஒரு குறிப்பற்றதாய் இருந்துவருகிறது.

'கடவுள்' என்ற வார்த்தை தோன்றி எவ்வளவு காலம் இருக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது.

அப்படி இருந்தும் 'கடவுள்' என்றால் என்ன? என்று இன்று எப்படிப்பட்ட ஆத்திகனாலும் சொல்ல முடிவதில்லை. ஆகவே, ஒவ்வொரு ஆத்திகனும் தனக்குப் புரியாத ஒன்றையே தன்னால் தெரிந்துகொள்ள முடியாததும், பிறருக்கு விளக்கமுடியாததுமான ஒன்றையே குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, 'கடவுள்' என்று கட்டி அழுகிறான்.



கடவுளுக்கு இலட்சணமோ, இலக்கியமோ, குறிப்போ ஏதாவதொன்று விளக்கமாய்ச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருந்தால், இவ்வளவு காலத்துக்குள்ளாகக் கடவுள் சங்கதியில் இரண்டில் ஒன்று—அதாவது உண்டு, இல்லை என்கின்ற ஏதாவது ஒரு முடிவுக்கு உலக மக்கள் வந்திருப்பார்கள்.

மக்களுள் பெரும்பாலோரும் ஆத்திகர்கள். எல்லோரும், தங்கள் குற்றங்களுக்கும், தங்கள் துர்க் குணங்களுக்கும் தங்கள் தரித்திரத்திற்கும் துன்பத்துக்கும் தாங்களே காரணம் என்றும் வருந்தி அவற்றைப் போக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள்.

இந்துக்கள் கடவுளை ஒரு மனிதனைப்போலவே கற்பித்துக்கொண்டு, அதிலும் ஒரு செல்வம் பொருந்திய மனிதனாய்க் கற்பித்துக்கொண்டு, அதற்கு மனிதனைப்போலவே வீடு, வாசல், பெண்டு, பிள்ளை, பல பெண்டுகள், பல வைப்பாட்டிகள், உடை, ஆகாரம், வாகனம் ஆகியவைகளைக் கொடுத்துவருகிறார்கள்.

மற்ற கிறிஸ்து, முஸ்லிம் ஆகிய மதத்தவர்களும் கடவுளை மனிதன்போலவே கற்பித்து, அக் கடவுளுக்கு நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், கோபம் ஆகிய குணங்களைக் கற்பித்து, தன்னை வணங்காதவனுக்கும், தன் இஷ்டப்படி நடக்காதவனுக்கும், தீமையளிப்பதுமான குணத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.

சர்வ சத்தியுடைய—பூர்ண தன்மை பெற்று, எங்கும் நிறைந்திருக்கிற கடவுளுக்கு மோட்சம்—நரகம் எதற்கு?

கடவுள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும்படியான சந்தர்ப்பம் மனிதனுக்கு எப்படி வரும்?

உலகத்தில் தீமை எப்படி உண்டாயிற்று? அதை யார் கற்பித்தார்கள்? தீயகுணம் மனிதனை அடையக் காரணம் என்ன?

தீயதைச் செய்துவிட்டுக் கடவுளை வணங்குவதாலோ, பிரார்த்திப்பதாலோ அதன் பயன் எப்படி அதிகரிக்கப்பட்டுவிடும்? தீமையினால் துன்பம் அடைந்தவனுக்குப் பரிகாரம் எப்படி ஏற்படும்? தீமைசெய்தவர்கள் கடவுளை வணங்கிப் பிரார்த்திப்பதன் மூலம், தீமைக்குண்டான பலனை அனுபவிக்க முடியாமல் போய்விடுவார்கள் என்றால், தீமை எப்படி, எப்பொழுது உலகைவிட்டு அகல்வது?

எத்தனையோ கோடிக்கணக்கான வருடங்களாகக் கோடிக்கணக்கான மக்கள் தீமைக்காக மன்னிக்கப்பட்டும், தீமைக்காகத் தண்டிக்கப்பட்டும், உலகத்தில் இன்றும், நாளையும், இனியும், இனி வெகு காலத்துக்கும் தீமை இருந்துகொண்டே வருகிறது, வரும் என்றால் இதுவரையும் தண்டனையும், மன்னிப்பும் என்ன பலனைக் கொடுத்து வந்திருக்கின்றன?

தீமையின் கொடுமையை மக்கள் அனுபவிக்காமல் இருப்பதற்கு என்னதான் வழி?

தீமையைச் செய்தவன் மன்னிப்பு பெற்றோ, தண்டனை அடைந்தோ, தன் செய்கைக்குப் பரிகாரம் பெற்றுக்கொள்ளுகிறான் என்றே வைத்துக் கொள்ளவேண்டும்.

தீமையை அடைந்தவனுக்கு இந்தக் கடவுள் என்ன பரிகாரம் செய்கிறார் என்பது விளங்கவில்லை.

தீமையை அடைகின்ற மனிதன் கடவுள் சித்தத்தால்தான் தீமை அடைகின்றான் என்றுதானே சொல்லவேண்டும்? அப்படி இல்லாவிட்டால், கடவுளின் காவலை மீறி, ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் தீமை செய்துவிட முடியுமா?

ஆகவே, கடவுள் சித்தத்தால் ஒரு மனிதன் தீமையை அடைகின்றான் என்றால், பிறகு தீமை செய்தவனுக்குத் தண்டனை எப்படி வரும்? அவன் எதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்?

படிப்பகம்

www.padippakam.com



கடவுள் சித்தம் இல்லாமல், தனிப்பட்டமுறையில், தன் சொந்தத்தில் ஒரு மனிதன் ஒரு காரியத்தை இன்னொருவருக்குச் செய்துவிட முடியுமா?

கடவுள், மனிதன் மூலமாகவே தன்னுடைய ஆட்சியை நடத்துகிறார் என்பதே பெருமித ஆத்திகர்கள் முடிவு. அதனாலேயே, பிச்சை பெற்றவனும் உதவி பெற்றவனும் உத்தியோகம் பெற்றவனும் கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறார்கள். ஏதாவது ஒரு கூட்டத்தில் நெருக்கடியிலிருந்து தப்பியவனும் கடவுள் தப்பித்துவிட்டார் என்று சொல்லுகிறான்.

ஆகவே, எந்த நன்மைக்கும், தீமைக்கும் மனிதன்மீது பொறுப்பைச் சுமத்துவது எப்படி முடியும்?

அன்றியும், கடவுள் சர்வ வியாபியாய் இருக்கும்போதும், மனிதனுடைய ஒவ்வொரு எண்ணத்தையும், காரியங்களையும் கவனித்து வருகின்றவனாய் இருக்கும்போதும், மனிதனுக்குத் தனிப்பட்ட பிரார்த்தனை எதற்கு? அதற்காக இடம், பொருள், நேரம் எதற்காகச் செலவு செய்யவேண்டும்?

அவர் தெரிந்துகொள்ள முடியாத எந்தக் காரியத்தைப் பிரார்த்தனையினாலும், ஜபத்தினாலும், தொழுகையினாலும் அவருக்கு அறிவிக்கமுடியும்? பிரார்த்தனைக்கும், ஜபத்திற்கும் இரங்குபவர் என்றால் கடவுள் தற்பெருமைக்காரரா? அல்லது, பிரதிப் பிரயோசனம்பெறும் வியாபார முறைக்காரரா?

இவ்வளவுகாலப் பிரார்த்தனையும், ஜபமும், தொழுகையும் மனிதனுக்கு ஏதாவது ஒருவழியில் யோக்கியமாய் நடப்பதற்குப் பயன்பட்டிருக்கின்றனவா?

நன்மைக்கும் தீமைக்கும் கடவுளே கர்த்தராய் இருக்கும்போது, உலகில் நன்மை, தீமை இல்லாமல் இருக்கச்செய்ய முடியாதா? அவற்றை எவராவது சில மக்கள் அடைந்து தான் தீரவேண்டுமா?

அன்றியும், நமது பிரார்த்தனையும் தொழுகையுமாவது நமக்குத் தீமை அணுகாமல் செய்யமுடியுமா? அப்படிச் செய்தாலும் அத் தீமை, உலகில் உள்ளவரையில் யாராவது ஒரு மனிதனையாவது அணுகித்தானே தீரவேண்டும்? ஆகவே, மனித சமூகம் பொதுவில் தீமையிலிருந்து எப்படித் தப்பமுடியும்?

தீமையினால் மக்கள் கஷ்டப்படுவார்கள், துன்பப்படுவார்கள் என்பதைக் கடவுள் அறிந்திருக்க மாட்டார் என்று யாராவது நம்பமுடியுமா?

அப்படி இருக்கும்போது, சர்வ சக்தியும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்ட கடவுள், உலகத்துக்குத் தீமையை ஏன் சிருஷ்டித்தார்?

விஷப் பூச்சி, விஷக் கிருமி, விஷரோகம், தரித்திரம், துன்பம், கொலை, கொள்ளை, திருட்டு, பொய், வஞ்சகம், விபச்சாரம், கஷ்டமான வேலை, அடிமைத் தனம், கொடுங்கோல் ஆட்சி, இராஜத் துரோகப் பிரஜைகள், கடவுளை மறுப்பது, கடவுளை வைத்து வைவது முதலாகிய தீமைகள் என்னும் விஷயங்களை எல்லாம் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்?

இவற்றால் யாராவது ஒருவர் கஷ்டப்படுகின்றாரா, இல்லையா? இவற்றால் கடவுளுக்கு என்ன இலாபம்?

பூகம்பம், எரி மலை வெடிப்பு, புயல் காற்று, கடு மழை ஆகிய காரியங்களை ஏன் சிருஷ்டித்தார்?

கெட்ட மனிதர்கள் துன்பமனுபவிக்க என்று சொல்லப்படுமானால், கெட்ட மனிதர்களை ஏன் சிருஷ்டித்தார்?



நல்ல மனிதன்—கெட்ட மனிதன் என்று சொல்ல முடியாத நிலையிலுள்ள குழந்தைகள் ஜீவன்கள் ஆகியவைகளும் துன்பம் அடையும்படி ஏன் செய்தார்?

இவைகளுக்கெல்லாம்—சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சர்வ தயாபரத்துவமும் உடைய ஒரு கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்து நடத்திவருகின்றார் என்று சொல்லும் ஆத்திகர்கள் என்ன சமாதானப் பதில் சொல்லக்கூடும்?

இந்தக் கேள்விகள் வெகு காலமாகவே இருந்து வருகின்றன என்று பதில் சொல்லி விட்டால் போதுமா?

['குடிஅரசு'-கட்டுரை—9-7-1949]

கடவுள் வழிபாடு என்பது-வழி படுவது தானே? என்னை வழிபடுகிறார்கள் என்றால் என்னுடைய கொள்கைகளை உண்மை என்று உணர்ந்து நம்பி, பின்பற்றுபவர்கள் என்னை வழி படுகிறார்கள்—என் வழி நடக்கிறார்கள் என்று தான் பொருள்.

உண்மையான கருத்துக்களைச் சொல்லுகின்றவனை வழிபடுவதில் அதாவது பின் பற்றுவதில் என்ன தவறு? ஒன்றுமில்லை.

கிறிஸ்தவர்கள் ஏசு கிறிஸ்துவை வழிபடுகிறார்கள் என்றால் கிறிஸ்து சொன்னதைப் பின்பற்றுகிறார்கள் என்றுதான் கருத்து.

முஸ்லிம்களும் அதுபோலவே நபிநாயகம் இன்னின்ன உண்மைகளைச் சொன்னார் என்பதற்காகவே அவர் சொன்னதை வழிபடுகிறோம் என்று சொல்லுகிறார்கள்.

புத்தமதத்தவர்களும், 'கடவுள் ஏது?' என்று சொன்ன புத்தரைத்தான் அதாவது புத்தியைத்தான் வணங்கி வழிபடுகிறார்கள்.

கடவுளுக்கு வழிபாடு முறை ஏது? இந்து மதத்தான் ஆடு, மாடு, பன்றிகளை வெட்டி கடவுளுக்குப் பூசை செய்தால்தான் வழிபாடு என்கிறான். முஸ்லிமோ பன்றியைத் தொட்டால் பாவம் என்கின்றான். கிறிஸ்தவன் ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்தல் பாவம் என்கின்றான். அன்றைக்குத்தான் கடவுளை வழிபடவேண்டும் என்கிறான். எதைத்தான் கடவுள் வழிபாடு முறை என்பது?

நமது சுயமரியாதை முறை—அறிவு வழிபாடு என்பதுதான். அதுதான் கடவுள் வழிபாடு என்று வழிபடவேண்டுமே தவிர, கல்லை வழிபடுவது கடவுள் வழிபாடு ஆகுமா?

[புத்தகத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது]

தலைவரவர்களே! தோழர்களே!

மக்கள் சாப்பிடக்கூடிய பால், தயிர், தேன், பழச்சாறு, பழச் சத்து முதலியவைகளைக் கல்லின் தலையில் குடம் குடமாய்க் கொட்டி, சாக்கடைக்குப் போகும்படி செய்து வேடிக்கை பார்ப்பது எதற்கு? இந்தச் சாமிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறும்படியான நகைகள் எதற்கு? பட்டு, பீதாம்பரத் துணிகள் எதற்கு? இலட்சம், பத்துலட்சம், கோடி பெறும்படியான 6, 7 மதில்கள் உள்ள கட்டிடங்கள், கோபுரங்கள் எதற்கு? தங்கம், வெள்ளி வாகனங்கள் எதற்கு? இவை யெல்லாம் நாட்டுப் பொதுச் செல்வங்கள் அல்லவா? இவைகளைக் கற்களுக்கு அழுது விட்டு—சோம்பேறி, சூழ்ச்சிக்காரன்—பார்ப்பான் வயிற்றை நிரப்பி அவன் மக்களை I.C.S, அய்க்கோர்ட் ஜட்ஜ், திவான்களாக ஆக்கிவிட்டு, இதுதான் 'கடவுள் தொண்டு' என்றால், இந்தக் 'கடவுள்'கள் இருக்கவேண்டுமா?

[நாமக்கல்லில், 12-12-1937-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 19-12-1937]

www.padippakam.com



## 5. சிலை வணக்கம்

'விக்ரக ஆராதனை (சிலை வணக்கம்)யைக் கண்டித்துத் தாங்களும், இயக்கத் தோழர்களும் அடிக்கடி பேசியும் எழுதியும் வருகிறீர்கள். திராவிடர் கழகம் ஒரு அரசியல் கட்சி இயக்கம்; சுயமரியாதை இயக்கத்தைப் போல், வெறும் சமுதாயச் சீர்திருத்த இயக்கமல்ல. அரசியல் கட்சியில் பல்வேறு கொள்கைகளையுடையவர்களும் இருப்பார்கள்; இருக்கின்றார்கள். ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரே இப்போது திராவிடர் கழகமாக மாறியிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரால் ஒரு 10-20 பேர் தனியாகப் பிரிந்துபோனாலும், அவர்களைப்பற்றி மக்கள் கடுகளவுகூட அக்கறையெடுத்துக் கொள்வதில்லை. அந்தப் பத்து இருபது பேர்களிலேயே ஒரு சிலர் மெள்ள மெள்ள திராவிடர் கழகத்திற்குள் வழுக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாதிரி நிலைமையில் தாங்கள் சிலை வணக்கத்தைப்பற்றிக் கண்டிக்காமலிருப்பதே நல்லது என்று யோசனை கூறுகிறேன். நம்முடைய கழகமானது பலவிதமான ஆறுகள் வந்து விழக்கூடிய பெருங்கடலாக இருக்க வேண்டுமென்பதே எனது ஆசை. ஆகையால் தயவுசெய்து சிலை வணக்கத்தைக் கண்டிப்பதை நிறுத்திவிடக் கோருகிறேன்.'

இந்தக் கடிதம் நமது இயக்கத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவரால் நமக்கு எழுதப்பட்டதாகும். இதை எழுதியவர் நம்மோடு நெருங்கிப் பழகுபவரும், பல ஆண்டுகளாய்த் தோழராய் இருந்து வருபவருமாவார்.

இவரைப் போன்றே இன்னும் பல தோழர்கள் அடிக்கடி கடித மூலமாகவும், நேரிலும் இதே சந்தேகத்தைக்கேட்டு வருகிறார்களாதலால் இக் கடிதக்காரருக்கும் பிறருக்கும் பதில் கூறவேண்டியது நம் கடமையாகிறது.

அது மட்டுமல்ல; இம் மாதிரியான காரணங்களைக் கூறியே நம் எதிரிகளும், கட்சியை விட்டுச் சிதறிப்போன தோழர்களில் இரண்டொருவரும் தமிழ் மக்களிடையே விஷமப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

திராவிடர் கழகம் அரசியல் கட்சிதான்; அதுவும் இனிமேல் தென் இந்தியாவில் முதல்தரமான அரசியல் கட்சியாக விளங்கப்போகிற கட்சியுங்கூட. பல கொள்கைக்காரர்கள் இக் கட்சியில் கலந்திருக்கிறார்கள். ஆனாலும், இந்துக்கள் அல்லாதவர்கள் என்று கூறப்படும் வேறு மதத்தினரும், வேறு பிரிவினரும் தங்களுக்கெனத் தனித் தனிக் கட்சிகளை வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக, இந்தியக் கிறிஸ்தவர்கள் தனிக் கட்சியாக இருக்கின்றனர்; முஸ்லிம்களும் தனிக் கட்சியாக இருக்கின்றனர்; ஆங்கிலோ இந்தியர் தனிப் பிரிவாக இருக்கின்றனர்; தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் சிலர்கூட தங்களுக்கென 'ஷெடியூல்டு வகுப்பு பெடரேஷன்' என ஒரு தனி அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும், பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் திராவிடர் கழகத்தில் இரண்டறக் கலந்திருக்கின்றனர் என்பதும் பகிரங்க இரகசியம்.

ஆகவே, திராவிடர் கழகத்தின் அடிப்படையான தத்துவங்களில் நம்பிக்கை வைத்து அதன் முக்கிய குறிக்கோள்களில் கவலையும் வைத்திருக்கும் ஆரியரல்லாத 'இந்துக்கள்' என்பவர்களே இக் கழகத்தில் அங்கத்தினராக இருந்து வருகின்றனர் என்பதை மறுக்க முடியாது. ஆனாலும், அநேக முஸ்லிம் தோழர்களும், கிறிஸ்துவ நண்பர்களும், பிறரும் திராவிடர் கழகத்தின் அனுதாபிகளாக இருந்து உதவி செய்து வருகின்றனர் என்பதையும் நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தென் இந்திய சமுதாய அமைப்பில் ஆரியரல்லாத நம் இனத்தவர் இப்போதுள்ள இழி நிலையை அடைந்திருப்பதற்குக் காரணம், இந்து மதம் என்று கூறப்படும் ஆரிய மதமேயாகும் என்பதைச் சரித்திரம் படித்தவர்கள் உணர்வர். இந்து மதத்தில் இருக்கும்



சாதி வேற்றுமை, சிலை வணக்கம், மூடநம்பிக்கைகள் முதலியவற்றைக் கண்டு வெறுத்தே பலர் பிற மதங்களைத் தழுவியிருக்கின்றனர்; இன்னும் தழுவி வருகின்றனர் என்பதையும் யாராவது மறுக்கமுடியுமா? இந்த உண்மையை உணர்ந்திருக்கும் நாம், 'இந்துமதத்தை விட்டு விலகவேண்டும், அதாவது, நாம் இந்துவல்ல—திராவிடர்' என்று முடிவு செய்திருப்பதில் தவறென்ன என்று கேட்கிறோம். இந்துவல்ல என்று கூறுவதற்கே துணிந்திருக்க வேண்டிய திராவிடர்—இந்துமதத்திற்கே தனிப்பட்ட உரிமை என்று கூறப்படும் சிலை வணக்கத்தை விட்டொழிப்பதில் தாமதமோ, தயக்கமோ, வெட்கமோ, பயமோ, இருக்குமானால் நாம் அடிப்படைக் கொள்கையையே சிலர் சரியாக உணர்ந்துகொள்ளவில்லையென்றுதான் கூறவேண்டும்.

சிலை வணக்கத்தை ஒழிப்பதென்பதும் இதர மூட நம்பிக்கைகளைக் கைவிடுவதென்பதும், இந்துக்களல்லாதவர்களின்—அதாவது திராவிடர்களின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று. இதனால் 'தனிப்பட்ட கடவுள் நம்பிக்கை கூடவா, இருக்கக் கூடாது?' என்று சிலர் கேட்கலாம். அதைப்பற்றி நாம் எதையும் வலியுறுத்துவதில்லை. இந்த விஷயம் அவரவர் சொந்த அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் முதலியவற்றைப் பொறுத்தது. தனிப்பட்டவரின் நம்பிக்கையைப் பற்றியோ, நம்பிக்கையில்லாத உணர்ச்சியைப் பற்றியோ நமக்குக் கவலையில்லை. ஏனெனில், ஒருவருடைய தனிப்பட்ட ஆத்திக—நாத்திகக் கொள்கையானது பொதுநல விஷயங்களைப் பாதிக்காது. ஏனெனில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்கிறார். அதைப்பற்றி யாரும் இலட்சியம் செய்வதில்லை. ஆனால், சிலை வணக்கம் என்பது அப்படியல்ல. திராவிடர் பொருளைச் சுரண்டுவதற்குக் காரணமாயிருந்ததும்—இன்று வரையில் காரணமாய் இருந்துவருவதும் சிலை வணக்கமேயாகும். ஆரிய நச்சு மரத்திற்கு எருப்போட்டு, நீர் ஊற்றி வருவது இந்தச் சிலை வணக்கமேயாகும். திராவிட அறிஞர்களில் பலர் இன்று ஒரு சோம்பேறி ஆரியனிடம் தலை வணங்கி, வாய் பொத்தி நின்று 'பிரசாதம்' வாங்கும்படியான மானமற்ற அடிமைத்தனமான காட்சியைக் காணும்படியான நிலையில் திராவிட இனத்தைத் தாழ்த்தி வைத்திருப்பதும் இச் சிலை வணக்கமேயாகும். தமிழ் வளர்ச்சி என்னும் பேராலும் திராவிடர் செல்வத்தை நல்ல வழியில் பயன்படுத்த முடியாமல், தேர்த் திருவிழாக்களிலும், கோவில் கட்டுவதிலும், பஜனைக் கூடங்களிலும் கொட்டிப் பாழாக்குவதற்குக் காரணமாயிருப்பதும் இந்தச் சிலை வணக்கமேயாகும்.

சுருக்கமாகக் கூற வேண்டுமானால், சிலை வணக்க முறையை ஒழித்துவிட்ட அதே நேரத்தில் ஆரிய நச்சு மரத்தின் ஆணிவேர் ஆட ஆரம்பிக்கும். நம் அனுபவத்திலிருந்தும், பல வரலாற்று ஆதாரங்களிலிருந்துமே நாம் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இந்த நமது முடிவுக்கு ஒரே ஒரு உரைகல் தருகிறோம். சிலை வணக்கத்தை ஆதரித்துப் பேச்சளவிலும் எழுத்தளவிலும் ஆவேச உணர்ச்சியுடன் பேசியும் எழுதியும் வருகிற ஆரிய இனத்தைச் சேர்ந்த எவராவது—கோவில் கட்டுவதற்கும், வாகனம் வாங்குவதற்கும், சிலைகளுக்கு நகைகள் வாங்குவதற்கும், சாப்பாடு படைப்பு முதலியவைகளுக்கும் பணம், நிலம் தந்திருக்கிறதாகக் கேள்விப்படுகிறோமா என்பதை நமது நிருபர் ஆர அமர ஆலோசித்துப் பார்க்கட்டும். இந்த விஷயத்தில் நம்மைவிட அவர்கள் புத்திசாலிகள்தான். இதில் வெட்கப்பட்டுப் பலன் என்ன? காரியத்தில் அல்லவா அறிவுடைமையைக் காட்ட வேண்டும்?

இறுதியாக, அரசியல் கட்சியில் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையைக் கலக்கலாமா? என்ற சந்தேகத்தைப் பற்றியும் ஒரு வார்த்தை. அரசியல் என்பதே சமுதாயக் கோளாறுகளை ஒழிப்பதற்காக ஏற்பட்டுள்ள ஒரு சாதனம் என்பதுதான் நம் கொள்கை. சமுதாய வேலையைக் கலக்காத ஒரு அரசியல் மனித சமுதாயத்திற்கு எதற்காக வேண்டும்?



படிப்பகம்

www.padippakam.com



அரசியலையும் சமுதாயத் துறையையும் பிளந்து கூறுபோட்டு விற்கும் அரசியல் வியாபாரிகள் இந்நாட்டில் பெருகியிருப்பதற்குக் காரணம், ஒரே இனத்தவர், மற்ற இனத்தவரை அழுத்திவைத்துச் சுரண்டிக்கொண்டு இருப்பதற்காக—மறைமுகமாக ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கும் ஏற்பாடேயாகும். இந்த உண்மை ஆரியர் விஷயத்தில் மட்டுமல்ல; ஆங்கிலேயர் விஷயத்திலும் பொருந்தும்.

ஆனால், இச் சந்தர்ப்பத்தில் மற்றொரு முக்கிய விஷயத்தையும் வற்புறுத்திக் கூறிவிட விரும்புகிறோம். இச் சமயம் இதுவிஷயமாய் நாம் செய்யும் பிரச்சாரம்—சிலைகளை அடியோடு அகற்றுவதோ, அழிப்பதோ அல்லது சிலை வணக்கம் செய்வோரின் மனத்தைப் புண்படும்படியாகச் செய்வதோ அல்ல என்றும், கண்டிப்பாக அல்ல என்றும், மற்றபடி மக்களை இதுபற்றிச் சிந்திக்குமாறு செய்வதும் அதுபற்றிய செலவை வேறு நல்ல வழிக்குத் திருப்புவதும் நம் வேலை என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

இச் சமயத்தில் ஒரு மகிழ்ச்சியான சேதியைத் தெரிவிக்கிறோம். அதாவது, இன்றைய மந்திரிகள் கோவில் மடங்களில் மீதியாய் இருக்கும் செல்வத்தைக் கல்விக்குச் செலவு செய்யச் சட்டமியற்றப் போகிறார்களாம். அவர்கள் இவ்விஷயத்தில் சொல்வதுபோல் நடந்தால், கடவுள் கோபித்துக்கொண்டாலும் மக்களுக்கு நலம்தான். ஆனால், ஆரியர்கள் அவர்களை அப்படிச் செய்ய விடுவார்களா? என்றாலும், பார்ப்போம்—சொன்னபடி நடப்பார்களா என்று!

['குடிஅரசு'—தலையங்கம்—29-6-1946]

## 6. திருவிழா ஏன்?

திருவிழா கொண்டாடுவதும், நல்ல நாள், கெட்ட நாள், பண்டிகை கொண்டாடுவதும் எதற்காக? மதத்தாலே ஏற்பட்ட சாதியை—புராணத்தினால் புகுத்தப்பட்ட சாதியை ஒவ்வொருவர் உள்ளத்திலும் திரும்பத் திரும்ப ஞாபகத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தனித்தனியாகப் பிரசங்கம் செய்வதற்குப் பதிலாக,—பண்டிகைகள், நல்ல நாள், கெட்ட நாள் மூலம் பிரச்சாரம் செய்வதே தவிர, அதனால் எந்தவிதமான பலனும் இருப்பதாகக் கூறமுடியுமா?

மதுரை, இராமேஸ்வரம், பழனி, திருப்பதி ஆகிய இடங்களில் பெரும் பண்டிகைகள் நடக்கின்றன என்றால் அதன் அர்த்தம் என்ன? பத்து வருடங்களுக்கு முன்னே இருந்த கல்தான் இன்றும் இருக்கிறது; பத்து வருடங்களுக்கு முன் அந்தக் கல்லைக் கழுவிய குடும்பமே இன்றும் கழுவுகிறது; இதுவரை அதில் ஒரு மாற்றமும் இல்லை. என்றாலும் கூட, அங்கே போய் வருவதன் நோக்கம் என்ன? அங்கே போய் வருதன் மூலம் மதப் பிரச்சாரந்தான் நடக்கிறதே தவிர வேறு என்ன?

எனவே, இந்த மாதிரியாக சூர சம்ஹாரம், இராமன் பிறப்பு, கிருஷ்ணன் பிறப்பு, பிள்ளையார் சதுர்த்தி, கந்தர் சஷ்டி, அது, இது—என்று வருகிற பண்டிகைகள் அனைத்தையும் ஒழிக்க வேண்டும்.

ஏன் இத்தனை தூரம் பலவந்தமாகக் கூறுகிறேன் என்றால், பார்ப்பனியமாகிய சாதியானது—மதமானது எந்த விதத்தில் நம்மை அடிமை கொண்டு இருக்கிறது என்றால், ஆயுத பலத்தினாலோ—துப்பாக்கிக் குண்டு, பீரங்கியாலோ அல்ல. நான் இதற்கு முன் எதை எதை ஒழிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறி இருக்கிறேனோ, அவைகளால்தான் நம்மை அடிமையாக்க நேர்ந்தது.

ஆகையால், இத்தனை பேரும் இன்றைய தினம் சாதியை ஒழிக்கவேண்டுமென்று கூறிவிட்டுச் சும்மா இருந்துவிடுவதானால்—ஒரு பலனும் இந்த மாநாட்டில் ஏற்பட முடியாது. இந்த மாநாடு நல்ல முறையிலே கூட்டப்பட்டு இருக்கிறது. அந்த முறையிலே இன்றி



லிருந்து நம்முடைய மக்களில் ஒவ்வொருவரும், தங்கள் தங்களுடைய சாதி இழிவைப் போக்கிக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பெண்களும் இம் முயற்சியில் முன்வருவார்களானால், கண்டிப்பாகச் சாதி ஒழிந்தே போகும் என்று தைரியமாகக் கூறலாம். ஏனென்றால், சாதியைப் பற்றிக் கெட்ட நம்பிக்கைகள் அவர்களிடம்தான் சீக்கிரத்தில் குடி புகுந்துகொள்கின்றன.

எனவே, பெண்கள் அந்த நம்பிக்கைகளையெல்லாம் அடியோடு விட்டுவிடவேண்டும். இந்த மாதிரி நடக்கும் மாநாடுகளுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் தாங்கள் வருவதோடு அல்லாமல், தங்கள் புருஷனையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும்.

சில ஆண்கள் பெண்களின்பேரிலே குறைகூறுவது உண்டு. அதாவது 'நான் சீர்திருத்தக்காரனாகிவிட்டேன்; ஆனால், என் வீட்டிலே உள்ளவர்கள் சரியில்லை' என்று கூறுவது உண்டு. இது நியாயமா?

நான் கூறுகிறேன், உண்மையில் இவர்களே பெண்களை 'மூடர்களாக்கி' விடுவார்கள். இவர்கள் மாத்திரம் தனியாகக் கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் போய்க் கருத்துக்களை அறிந்கொண்டு வருவது வழக்கமாக இருக்கின்றதேயன்றி, தங்களுடன் தங்கள் மனைவிமார்களையும் அழைத்துக்கொண்டு வந்து இம்மாதிரியான கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வதின் மூலம் பெண்களுடைய பழைய மூட நம்பிக்கைகளை மாற்ற வழிகாண்பது கிடையாது.

[திருவொற்றியூரில், 17-2-1952-ல் நடந்த சாதி ஒழிப்பு மாநாட்டில் சொற்பொழிவு—'விடுதலை' 22-2-1952]

## 7. சாமி விளையாட்டா?

நமது சின்னஞ்சிறு குழந்தைகள் 'சாமி' வைத்து விளையாடுவதைப் பார்க்கின்றோம். சிறு கற்களை இரண்டு வரிசையாக அடுக்கி அதன்மேல் குச்சிகளைப் பரப்பி அதற்குமேல் துணி, இலை, காகிதம் முதலியவைகளைப் போட்டு மூடி, ஓர் அறைமாதிரியாகச் செய்வார்கள். அதன் பிறகு சிறு ஓடுகளை முக்கோணமாகத் தேய்தோ அல்லது பொம்மைகளையோ அவ் வறைக்குள் சாமிகளாக வைத்து ஒரு குழந்தை அர்ச்சகராகவும், மற்றக் குழந்தைகள் 'பக்தர்'களாகவும் நடிப்பதுண்டு. இதுதான் குழந்தைகளுடைய கோயில். இவைகளுக்குத் திருவிழாக்களும் உண்டு. சிறு காய்களில் துடைப்பக் குச்சிகளைக் கோர்த்துத் தேர்மாதிரி செய்து, அடியில் குச்சிகளைப் பரப்பி அதன்மேல் முக்கோணமாய்த் தேய்க்கப்பட்ட ஓட்டுத்துண்டை வைத்து இழுத்துக்கொண்டு போவது உண்டு. அந்தக் கூட்டத்தில் மிகவும் சிறு குழந்தையாய் இருப்பவர்கள் ஓட்டைத் தகரங்களை 'மேள'மாக உபயோகப்படுத்துவார்கள். 'இந்துக்கள்' என்றும், சைவர்கள், வைணவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளும் எல்லாருடைய வீடுகளிலும் பெரும்பாலும் குழந்தைகள் இவ்வாறு விளையாடுவதுண்டு.

ஆனால், இப்போது பட்டணங்களிலுள்ள 'இந்து'க் குழந்தைகள் இவ்வாறான விளையாட்டு விளையாடுவது கிடையாது. அவர்கள் பட்டண வாழ்க்கையில் அதிகமாய்க் காணப்படும் மோட்டார், இரயில் முதலியவைகள் மாதிரி வைத்து விளையாடுகிறார்கள். ஏனெனில், கிராமத்துக் குழந்தைகளுக்குக் கடவுளின்மேலிருக்கும் அவ்வளவு 'பக்தி' பட்டணத்துக் குழந்தைகளுக்கு இருக்கச் சந்தர்ப்பம் கிடையாதல்லவா? 'சாமி' வைத்து விளையாடும் குழந்தைகள், பெரியோர்களாகிய நாம் செய்வதைப் பார்த்துத்தான் செய்கின்றன. ஆனாலும், அக் குழந்தைகள் விளையாடுவதை ஓரளவுதான் நாம் பொறுத்துக்கொண்டிருக்கிறோம்; பொறுத்துக்கொள்ளவும் முடிகிறது. உதாரணமாக, மிகவும் செல்லப்பிள்ளையாய் வளரும் ஒரு குழந்தையை 6 முதல் 8 அல்லது 10-வது வயது வரை 'சாமி' வைத்து விளையாடுவதைப் பொறுத்துக்கொண்டிருப்போம். சாதாரணமாக,

படிப்பகம்

www.padippakam.com



3 வயது முதல் 6 வயது வரைதான் இவ்வித விளையாட்டுகளுக்கும் மதிப்பு இருக்கும். அதுவும்கூட ஓர் அளவு வரையில்தான். 7 வயதுக் குழந்தை 'சாமி' விளையாடுவதற்காக பள்ளிச் சம்பளத்துக்கு வைத்திருக்கும் பணத்தை எடுத்துக் கற்பூரமும், கலர் காகிதமும் வாங்கினால் கன்னத்தில் ஒரு அறை கொடுத்துக் காதைப்பிடித்து இழுத்து அப்புறம் விடுவதைப் பார்த்திருக்கிறோம். அல்லது, 13 வயதுப் பையன் 'சாமி' விளையாட ஆரம்பிப்பதைக் கண்டோமானால் 'அடே, குட்டிச் சுவரே! அரைக் கழுதை வயதாகி இன்னமும் சாமி வைத்து விளையாட வெட்கமில்லையா?' என்று கடுத்த முகத்தோடு கேட்கிறோம். அதையும் மீறிச் செய்தால் அக் குழந்தைகள் சிறு சிறைச்சாலை வாழ்க் கையைக்கூட அனுபவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இச் சிறு அனுபவம் எல்லாருக்கும் தெரிந்ததுதான்.

ஆனால், மேலே சொன்ன எல்லா விஷயங்களிலும் அக் குழந்தைகளே நம்மைத் திருப்பிக் கேட்குமானால் நாம் என்ன சொல்வோம்? அவர்களைப் பார்த்து, 'அடே, அதிகப் பிரசங்கி!' என்பது தவிர உண்மையான பதில் ஏதாவது நம்மால் சொல்ல முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

வருடா வருடம் நமது நாட்டில் நூற்றுக்கணக்காகக் கோயில்களும் தேர்களும் கட்டப் பட்டு, ஆயிரக்கணக்கான உத்ஸவங்களும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு திருவிழாவுக்கும், இலட்சக்கணக்கான மக்கள் போய்க்கொண்டே இருந்தால் இன்னும் சில வருஷங்களில் இந்தியாவினுடைய செல்வமெல்லாம், குட்டிச் சுவர்களிலும், குழவிக் கற்களிலும், குடை, பீதாம்பரங்களிலும் தான் இருக்குமே ஒழிய, மக்களுக்குப் பிரயோசனப்படக்கூடிய முறையில் ஒரு தம்பிடிகூட இருக்காது என்பது திண்ணம்! இன்னும் மதுரை, திருநெல்வேலி, திருவாரூர், சீரங்கம், திருச்செந்தூர், திருவானைக்காவல் முதலிய ஊர்களில் மக்களுக்கு வீடுகட்டிக்கொள்ளக்கூட இடமில்லாதபடி சரிபாதி ஊரைக் கோவில் அடைத்துக்கொண் டிருக்கிறது. உயிரில்லாச் சாமி ஒன்றுக்கும், உயிருற்ற 'சாமிகள்' தோசை, வடை, புளியோதரையை விழுங்கிவிட்டு ஜட்கா வண்டிக் குதிரை புரளுவது மாதிரி நெளிந்து கொண்டு ஏப்பம் விட்டு மல்லாந்து கிடப்பதற்கு மாத்திரம் ஊரில் பாதியை அடைத்துக் கோவில்கட்டினால், நமது புத்திசாலித்தனத்தைக் கண்டு மேல்நாட்டுப் பெண்மணிகள் புஸ்தகம் எழுதாமல் வேறு என்ன செய்வார்கள்?

நமக்குக் குட்டிச் சுவர் மாதிரி 5 கழுதை வயது ஆயிற்றே ஒழிய, 'சாமி' விளையாட்டு மாத்திரம் போகவே இல்லை. திருப்பதி போகலாமா, திருச்செந்தூர் போகலாமா என்பதும், காசி போய்விட்டு இராமேசுவரம் போகலாமா அல்லது இராமேசுவரம் போய்விட்டுக் காசி போகலாமா என்பதும்; அனுமார் வாகனத்திற்குத் தங்கமுலாம் பூசலாமா அல்லது தங்கத் தகட்டினாலேயே செய்துவிடலாமா என்பதும்; ஜம்புகேஸ்வரருக்குப் பூச் சக்கரக் குடை செய்வதற்குப் பட்டுவிசேஷமா, 'வெல்வெட்டு' விசேஷமா என்பதும்; மாரியம்மனுக்கு வெள்ளியில் கண்கவசம் செய்யலாமா, தங்கத்தில் செய்யலாமா? கலியாண உற்சவம் வருஷத்துக்கு இரண்டுதடவைகள் நடத்தலாமா என்பதுமே பெரிய ஆராய்ச்சியா யிருக்கிறதே தவிர, நமது நித்திய வாழ்க்கைக்குச் சவுகரியமான ஏற்பாடுகளைச் செய்வதில் நமது யுக்தியானது சிறு பிள்ளைகளைவிட ஆயிரம் மடங்கு கீழாகவேதான் இருக்கிறது. சாமிக்குப் போனவருடம் நடந்த கலியாணம் என்ன ஆயிற்று? எந்தக் கோர்ட்டில் ரத்து ஆயிற்று? அல்லது, மனைவி ஓடிப் போனாளா? தம்பதிகளில் யாராவது ஒருவர் செத்துப் போனார்களா? என்று யோசிப்பதில்லை.

பள்ளிக்கூடச் சம்பளத்தை எடுத்துக் கற்பூரம் வாங்கி தன் 'சாமி'க்குக் கொளுத்தும் பிள்ளையாண்டானுக்கும், ஆஸ்பத்திரி, கல்விச்சாலை, சுகாதாரம் முதலியவைகளுக்குப் பணமே இல்லாமலிருக்கும்போது பெரிய தொகையைச் செலவுசெய்து 'சாமி' விளையாட்டு விளையாடும் பெரியோர்களுக்கும்—புத்தி சம்பந்தப்பட்ட மட்டிலும் ஏதேனும் வித்தியாச மிருக்கிறதா என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்கட்டும்.



இவ்வுலக வாழ்விற்கு அவசியமான கல்வியையும் அதன்பிறகு தெரியவேண்டிய பல விஷயங்களையும் கற்றுக்கொள்ளவேண்டிய வயதில், 'சாமி'வைத்து விளையாடுவதும்—அதுவும் வீட்டுப் பணத்தைச் செலவழிப்பதும் அறிவீனமென்றும் அதைத் தடுக்காவிட்டால் பிள்ளையாண்டான் கெட்டுப்போவதோடு குடும்பத்துக்கும் கெடுதியுண்டாகும் என்றும் பெற்றோர்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே, நமது உலக முன்னேற்றத்தில் ஈடுபடவும் நமது வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்ளவும், அதற்கு வேண்டிய முயற்சிகளைப் பல துறைகளிலும் செய்யவும் வேண்டிய காலத்தில்—நமது பெரியோர்கள் 'சாமி' வைத்து விளையாடுவதும் அதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய் களைச் செலவழிப்பதும் நமது மக்களைச் சோம்பேறிகளாக்கிவிடுவதோடு நமது நாட்டையும் பாழ்படுத்திவிடும் என்ற கவலையால்தான் நாமும் நமது பெரியோர்களுக்குப் புத்திகூற வேண்டியது கடமையாகின்றது. பெற்றோருக்கு அடங்காப்பிள்ளை 'சாமி' விளையாடிக் கொண்டே இருந்து வீணாய்ப்போவதுண்டு. ஆனால், தைரியமுள்ள பெற்றோர் தமது பிள்ளையைக் கெடுக்க விரும்புவதில்லை; அறைக்குள் கட்டிப்போட்டாவது புத்தி புகட்டுவது வழக்கம். அவ்வாறே, அறிவியக்கத்தார்களாகிய சுயமரியாதை இயக்கத்தவர் களுக்குச் சந்தர்ப்பமும், சவுகரியமும் கிடைக்குமானால் மேற்கண்ட முறையைக் கையாண் டாவது நமது பக்தர்களுக்குப் புத்திபுகட்டாமல் இருக்கப்போவதில்லை. ஆனால், அதற் குள்ளாக நமது பெரியோர்களும், 'பக்தர்களும்' நல்ல பிள்ளைகளாக ஆகிவிடவேண்டும் என்பதே நமது கோரிக்கை.

['பகுத்தறிவு' மலர் 2, இதழ் 10-கட்டுரை—1937]

## 8. நாமம்—விபூதி

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இன்றைய தினம் நமது நாட்டிலே அனேகம் பேர் விபூதி போடுவதும், நாமம் போடு வதும் வழக்கமாக இருக்கிறது. இது எல்லோருக்கும் தெரிந்த காரியந்தான். இது, பார்ப்பனர்கள் இங்கே வருவதற்கு முன்னே இருந்ததில்லை என்பதும் தெரிந்ததே. அப்படியிருந்தும் வெட்கமில்லாமல் சுவரில் வெள்ளையடிப்பதுபோல் நாமம், விபூதி போட்டுக் கொள்கிறார்கள். சாம்பலை ஏன் அப்படி நம்பிவிட்டார்கள் என்றால், பார்ப்பனர்கள் செய்த மாபெரும் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

தன் தாயாருக்கு—தன்னைப் பெற்ற மாதாவுக்குப் பிள்ளை கொடுத்தாலும்கூட, இந்தச் சாம்பல் பூச்சால் அவனுக்கு மோட்சம் கிடைக்கும் என்று கூறிவிட்டனர்; நாமம் போட்டால் இதற்காக நரகம் கிடைக்காது என்று கூறிவிட்டனர். ஆகையால், இந்த மடச் சாம்பிராணிகளும்—தங்கள் மண்டையில் (நெற்றியில்) விபூதி என்றும், நாமம் என்றும் போட்டுக் கொள்கிறார்கள். இன்றைய தினம் இதையெல்லாம் மிகமிகக் கேவலம் என்றும், இழிவு என்றும் நாம் கூறிய பின்னர் சற்று மானத்திற்கு அஞ்சியவர்களும் படித்தவர்களும் இதற்குக் காரணம் காட்டுகிறார்கள்.

'குளித்த பிறகு, சாம்பலை மண்டையிலே போட்டால் மண்டையிலேயிருக்கிற நீரை எல்லாம் எடுத்துவிடும் இந்தச் சாம்பல்; அதனால்தான் நாங்கள் விபூதி போடுகிறோம்' என்று கூறுகிறார்கள். இதேபோல்தான், நாமம் போடுகிறவர்களும் காரணம் காட்டுகிறார்கள். இவ்வாறெல்லாம் கூறி, அந்தக் காலத்திலேயே இதை நம்பும்படி செய்துவிட்டனர், ஆரியர்கள்.

ஆகையால், அதை ஒழிப்பதற்கு மனது இல்லாமல் 'சால்சாப்பு' கூறுகிறார்கள். இன்றையதினம், சில பெரிய ஆட்களும்கூட திருநீறு, நாமம் போடுவதை நான் பார்த்திருக் கிறேன். நம்மை யாராவது கண்டுவிட்டால் உடனே அவர்கள் போட்டு இருக்கும் நாமத்தை அழித்துக்கொள்கிறார்கள். இது நான் கண்ணால் பார்த்தது; எத்தனையோ தடவைகள்

படிப்பகம்

www.padippakam.com

கண்டிருக்கிறேன். ஏன்? நம்மைக் கண்டால் ஒரு வெட்கம்; ஆனால், அதே சமயம் மத சம்பிரதாயங்களுக்குப் பயம்.

[சென்னை-மயிலையில், 3-9-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-9-1951]

## 9. புண்ணிய ஸ்தலங்கள்

பண்டரிபுரம்—வைணவர்களுக்கு மிகவும் முக்கியமான ஸ்தலம். அந்த ஸ்தல புராணத்தில் ஒருசமயம் அந்த முக்கியத்துவத்திற்கு ஏற்ற காரணம் ஏதாவது குறிப்பிட்டிருக்கக்கூடுமோ என்பதாகச் சந்தேகப்படக்கூடுமானாலும், வைணவ பக்தர்களின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும் 'பக்தவிஜயம்' என்னும் புத்தகத்தின் சுருக்கமாகிய 'பக்த லீலாமிருதம்' என்னும் புத்தகமானது, சைவர்களுக்கு எப்படி சைவ பக்தர்களின் சரித்திரத்தைச் சொல்லக்கூடியதான சைவ புராணமாகிய 'பெரிய புராணமோ' அதுபோல்—ஏன், ஒருவிதத்தில் அதைவிட முக்கியமானதென்றுகூடச் சொல்லலாம். எப்படியெனில், பெரியபுராணம் என்பது சுந்தரமூர்த்தி சுவாமி என்கிற ஒருவர் பாடிய ஒரு பாட்டிலிருந்து பக்தர்களின் பெயரைத் தெரிந்து அதற்கு ஆதாரமாக—நம்பியாண்டார் நம்பி என்பவர் பாடிய ஒரு சில—அதாவது ஒரு நூறு பாட்டைக்கொண்டு நாலாயிரத்துச் சில்லரைப் பாட்டுகளாக்கி, அவற்றிற்கு வேண்டிய சங்கதிகளை சேக்கிழார் தமது சொந்த அபிப்பிராயமாக நுழைத்துப் பாடிய புத்தகமாகும். அதுவும் சமணர்களுக்கு விரோதமாய் அவர்கள் மீதும், அவர்களது குற்றமற்ற நூல்களின்மீதும் உள்ள துவேஷத்தாலும், தமது சமய வெறியாலும் கற்பிக்கப்பட்டது என்றுகூடச் சொல்ல இடமுள்ளதாகிய நூல். பக்தவிஜயமோ அப்படியில்லாமல் எவரோ ஒரு முனிவர், யாரோ ஓர் ஆசாமிக்கு எல்லா சங்கதிகளும் சொன்னதாகவும் எழுதிய புத்தகம். ஆனதால் சேக்கிழார் என்கின்ற ஒரு மனிதன் சொன்னதைவிட 'சிவன்' 'முனிவர்' என்கின்றவர்கள் சொன்னவை என்பவை உயர்ந்தவை என்பதில், இவற்றை நம்பும் பக்தர்களுக்குச் சிறிதும் சந்தேகமிருக்க நியாயமில்லை.

எனவே, இப்பேர்ப்பட்ட புத்தகத்தில் உள்ளதையேதான் எடுத்து எழுதி இருக்கிறோமே ஒழிய மற்றபடி நமது அபிப்பிராயம் என்பதல்ல. அதாவது:

தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் மனைவியான இந்திராணி, திருமால் என்கின்ற சாமியின்பேரில் காதல் கொண்டதாகவும், சாமியும் அதற்குச் சம்மதித்து பூலோகத்திற்குப்போய் 60 ஆயிரம் வருடம் தவம்செய்யச் சொன்னதாகவும், அதற்குப் பிறகு சாமி கிருஷ்ணனாக அவதரித்ததாகவும், இந்திராணியும் இராதையாகப் பிறந்ததாகவும்; பிறகு இருவரும் கூடினதாகவும், அதைக்கண்ட கிருஷ்ணனின் சொந்தப் பெண்சாதியாகிய ருக்மணி கோபம் கொண்டதாகவும், அதன் நிமித்தம் இராதை கிருஷ்ணனைத் தனக்கே புருஷனாக்கிக்கொள்ளக் காட்டிற்குத் தவத்திற்குப் போனதாகவும்; அந்தச் சமயத்தில் கிருஷ்ணன் இராதையைப் பிரிய நேர்ந்ததால், துறவி வேஷம் பூண்டு காடு காடாய்த் திரிந்து ஏதோ ஒரு காட்டில் இராதையைத் தவக் கோலத்தில் கண்டுபிடித்ததாகவும்; இராதை கிருஷ்ணனைப் பார்த்து, 'நீ ஒரு வஞ்சகன், என்முன் நில்லாதே' என்று கோபித்ததாகவும்; கிருஷ்ணன் மதிமயங்கி மூக்கில் கை வைத்துக்கொண்டு 28 துவாபரயுக காலமாய் நின்று கொண்டிருக்கின்றதாகவும்—அந்தக் காட்சியே பண்டரிநாதன் என்றும், மற்றும் இதுபோல ஆபாசக் கதைகளும் எழுதப்பட்டு, பண்டரிபுரத்திற்கு ஆதாரமாகச் சொல்லப்படுகிறது. எனவே, இம் மாதிரி ஆபாசமும், புளுகும் கொண்டதான பண்டரிபுரத்தை ஒரு பெரிய புண்ணிய ஸ்தலமாகக் கருதி மக்கள் ஏராளமாகப் பணம் செலவுசெய்து கஷ்டப்பட்டு யாத்திரை போவதுடன் பட்டை பட்டையாய் நாமமும் போட்டுக்கொண்டு, 'பண்டரி நாதா விட்டல்லே! பாண்டுரங்கா விட்டல்லே!' என்று கூப்பாடு போட்டுக்கொண்டு, குதித்துக்கொண்டு போவதையும் கருதினால் எவ்வளவு பைத்தியக்காரத்தனமாகவும் கஷ்டமாகவும் இருக்கும் என்பது சுலபத்தில் வெளிப்படுத்தக்கூடியதாயில்லை என்பதுபற்றியும் முன்பே எழுதப்பட்டிருக்கின்றது.



ஜகந்நாதம் என்பதைப் பற்றிச் சிறிது ஆராயலாம். ஜகந்நாதம் என்பது இந்தியாவில் உள்ள புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் மிக முக்கியமானது என்று சொல்லப்படுவது. இந்துக்கள் என்போர்களில் தென்னாட்டில் உள்ள சைவர்களில் யாரோ ஒரு சிலரால் மதத்துவேஷம் காரணமாக ஜகந்நாதம் ஒரு சமயம் அலட்சியமாகக் கருதப்பட்டாலும்—இந்தியாவில் உள்ள பெரும்பாலோரான இந்துக்கள் என்பவர்கள் எல்லோராலுமே முக்கிய ஸ்தலமாகக் கருதப்படுவது. அந்த ஸ்தலத்தின் முக்கியத்துவத்திற்கு உதாரணம் என்னவென்றால், அந்த ஜகந்நாதம் என்கின்ற ஊரின் எல்லைக்குள் சாதி வித்தியாசம் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார்கள். அதற்கு உதாரணமாக, அந்தக் கோவிலில் பூசை பண்ணுகிறவர்கள் அந்தப் பக்கத்திய நாவிதர்கள். அவர்கள் குளத்தருகில் அடைப்பத்துடன் நின்றுகொண்டு சவரம் செய்வார்கள். பிறகு கோவிலில் பூசாரிகளாகவும் இருப்பார்கள். அந்தக் கோவிலில் பூசைசெய்யும் உரிமையே அந்த ஊரிலுள்ள நாவித வகுப்பைச் சார்ந்தவர்களுக்குத்தான் உண்டு என்கிறார்கள். அங்கு, சுவாமிக்கு முன்னால் சாப்பாட்டை மலைபோல் குவித்து ஆராதனை செய்வார்கள். அந்தச் சாதத்தைப் பூசாரிகள் பங்கு பிரித்து எடுத்துக்கொண்டு வெளியில் வந்து விற்பார்கள். யாத்திரைக்காரர்கள் யாராயிருந்தாலும் அதை வாங்கிச் சாப்பிடவேண்டும். மற்றபடி கடையிலும் சாதத்தைச் சட்டியில் வைத்து விற்பார்கள். சாதி வித்தியாசம் என்பதில்லாமல் யாவரும் வாங்கிச் சாப்பிடுவார்கள். தவிர, அந்த ஸ்தல எல்லைக்குள் எச்சில் வித்தியாசம் பார்க்கக்கூடாது என்பார்கள். இலையில் உள்ள சாப்பிட்ட மீதியை எடுத்துத் திரும்பவும் சட்டிக்குள் போட்டுக்கொள்வார்கள். கடைகளில் விற்பனைக்காக வைத்திருக்கும் சாதச்சட்டியில் யாரும் கைவிட்டுச் சாதத்தை எடுத்து வாயில் போட்டுப் பார்த்து மீதியைச் சட்டியிலேயே போட்டுவிடலாம். அதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

ஜகந்நாதத்திலுள்ள அந்த ஜகந்நாதர் கோவிலுக்குள் யாரும் போகலாம்; சாமியைத் தொடலாம்; காலைத்தொட்டுக் கும்பிடலாம்; அதுமாத்திரமல்லாமல், அந்த எல்லைக்குள் யாரும் திதி, விரதம், தர்ப்பணம் முதலிய அனுஷ்டானங்கள் ஒன்றும் செய்யக்கூடாதாம்; செய்தால் பாவமாம். அன்றியும், அங்குள்ள சாமிகள் கிருஷ்ணன், பலராமன், சுபத்திரை ஆகிய மூவர்கள்; அதாவது, மற்ற இடங்களைப்போல் சாமி புருஷன், பெண்சாதியுடன் இல்லாமல் அண்ணன், தம்பி, தங்கை ஆகிய மூன்று பேர்களும்—தங்கையாகிய சுபத்திரையை நடுவில் வைத்து அண்ணன்மார் இருவரும் இரு பக்கங்களில் நிற்கின்றார்கள். அதுவும், மரக் கட்டையில் அரைகுறையாய்ச் செய்த உருவங்கள்தான்—விக்கிரகங்கள்.

அந்த ஊரைப்பற்றிச் சொல்லும்போது 'சர்வம் ஜகந்நாதம்' என்று சொல்லுவது ஒருவழக்கம். அதாவது, எந்தவிதமான வித்தியாசமும், அதாவது சாதி, மதம், எச்சில், விரதம், முறை முதலிய வித்தியாசம் அந்த எல்லைக்குள் இல்லை என்பதைக் காட்டுவதற்காக அப்படிச் சொல்வது. இதற்கு ஆதாரமாக இரண்டுவிதமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஒன்று, விஷ்ணு என்னும், முழுமுதற் கடவுளின் அவதாரமாகிய கிருஷ்ணன் என்னும் கடவுள் இறந்த பிறகு, அந்தக் கடவுளின் பிணத்தைத் துவாரகைச் சுடுகாட்டில் வைத்து தகனம்செய்து—அது எரிந்து கொண்டிருக்கையில் திடீரென்று சமுத்திரம் பொங்கியதால் துவாரகை முழுவதும் தண்ணீருக்குள் ஆழ்ந்துவிட்டபோது, அந்தக் கடவுளின் பிணமும், எரிந்து கொண்டிருந்த சுடுகாடும் தண்ணீருக்குள் மூழ்க நேரிட்டதால் அரைகுறையாய் வெந்த பிணக் கட்டையானது தண்ணீரில் மிதந்து கரை ஓரமாய் ஒதுங்கியதாகவும், அந்த ஊருக்கு ஜகந்நாதம் என்று சொல்லப்பட்டதாகவும், அந்த ஊரார் அந்தக் குறைபிணத்தை எடுத்து, அதன் சக்தியை ஒரு மரக்கட்டையில் ஏற்றி, அம் மரக்கட்டையில் இருந்து குறைபிணம் போலவே ஓர் உருவம் செய்து, அதை வைத்துப் பூசித்து வருவதாகவும் அந்த ஸ்தலத்தின் சரித்திரம் சொல்லுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

மற்றொன்று, கிருஷ்ணபகவானின் லீலா விநோதங்களில் ஒன்றாகிய—கோபிகளுடன் கூடிக் குலாவி வருவதைக் கிருஷ்ணபகவானின் தங்கையாகிய சுபத்திரை பார்த்துப் பொறாமைப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் சென்று, 'ஓ, அண்ணாவே! நீ எவ்வளவோ அழகாகவும், பெருமை உள்ளவனாகவும் இருக்கின்றாய். உன்னுடன் கூடி அனுபவிக்கும் பெருமை கோபிமார்கள் எல்லோரும் பெற்று அனுபவித்துவருகின்றார்கள். ஆனால், நானோ உனக்குத் தங்கையாகப் பிறந்து விட்டதின் காரணத்தினால் அந்தச் சுகபோகத்தை அடைய யோக்கியதை இல்லாதவளாய்ப் போய்விட்டேனே' என்று துக்கப்பட்டதாகவும்; கிருஷ்ணபகவான் அவளைப் பார்த்து, 'உலகத்திலேயே மிகவும் புண்ணிய பூமியாகிய ஜகந்நாதம் என்கின்றதாக ஒரு ஸ்தலம் இருக்கின்றது; அங்கு எந்தவித வித்தியாசமும் கிடையாது. எந்தவிதமான செய்கைக்கும் பாவம் கிடையாது. ஆதலால், அந்த ஜகந்நாதத்திற்குப் போய் எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிக்கலாம்' என்பதாகச் சொல்லி ஜகந்நாதத்திற்கு வந்த—கிருஷ்ணன், சுபத்திரை, பலராமர் ஆகிய சகோதர சகோதரிகள் ஒன்றுசேர்ந்து இருப்பதாகவும் ஒரு கதையை ஜகந்நாத 'பண்டாக்கள்' ஸ்தல மகிமையைச் சொல்லும் முறையில் சொல்வதுண்டு.

எனவே, இந்தக் கதையும் பொருத்தமானதாயிருக்கலாம் என்கின்ற மாதிரிதான் அங்கு மற்ற விஷயங்களும் இருக்கின்றன. அதாவது தீட்டு இல்லை; சாதி வித்தியாசமில்லை; விரதாதி அனுஷ்டானம் இல்லை; எச்சில் வித்தியாசம் இல்லை என்பதுபோன்ற பல விஷயங்கள் இருப்பதுடன்–அண்ணனும் தங்கையும் ஒன்றாய் இருந்தாலும் இருக்கலாமாம்.

அன்றியும், அந்த ஸ்தலத்திற்கு அதிகமான யோக்கியதை கொடுக்கவேண்டும் என்கின்ற எண்ணத்தின்பேரில் அப்படி ஒரு கற்பனை செய்து இருந்தாலும் இருக்கலாம். சாதாரணமாக, சைவ சமயத்திலும், ஒரு ஸ்தலத்தையோ தீர்த்தத்தையோ ஒரு சாமியையோ பெருமைப்படுத்துவதில் இதுபோன்ற அல்லது இந்தத் தத்துவம் கொண்ட கதைகள் சொல்லப்படுவதையும் பார்க்கின்றோம். அதாவது, திருவிளையாடல் புராணத்தில் ஒருவன் தன் தாயைப் புணர்ந்ததுடன், தகப்பன் கண்டு கோபித்ததற்குத் தகப்பனையும் கொன்றுவிட்ட பாவத்தைச் சிவன் போக்கியிருப்பதாகவும், அந்த ஸ்தலத்திற்கும் தீர்த்தத்திற்கும் அந்தக் கடவுளுக்கும் இன்னமும் அந்தச் சக்திகள் இருப்பதாகவும் கருதும்படி சொல்லப்படுகிறது. ஆதலால், இப்படிப்பட்ட கதைகள் கட்டுவது ஓர் அதிசயமல்ல. எனவே, இந்தக் கதை எப்படி இருந்தாலும் முதல் கதையைப்பற்றி யோசிப்போம்.

கடவுள் அவதாரமாகிய கிருஷ்ணபகவான் எவ்வளவோ அற்புதங்களைச் செய்தவர். கடவுளான அவர் செத்துப்போனார் என்பதும், அவர் பிணம் கொளுத்தப்பட்டது என்பதும் நெருப்பில் வெந்துகொண்டிருக்கும்போது ஜலப்பிரளயம் ஏற்பட்டு அந்தப் பிணம் சரியாய் வேகாமல் தண்ணீரில் மிதந்துகொண்டுவந்து ஜகந்நாதத்தைச் சேர்ந்த கடற்கரையில் ஒதுங்கியது என்பதும் ஆகிய விஷயங்களை யோசித்துப் பார்த்தால், கிருஷ்ணனிடத்தில் கடவுள் தன்மை இருந்திருக்கும் என்று நம்ப இடமுண்டா? நம்புவதானாலும் செத்தபிறகு அந்தப் பிணத்திற்கு, அதுவும் நெருப்பில் கருக்கப்பட்ட அரைகுறைப் பிணத்திற்கு ஏதாவது சக்தி இருந்திருக்குமா? அந்தச் சக்தியை மரக்கட்டையில் ஏற்ற முடியுமா? அந்த மரக்கட்டையும் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றபோதெல்லாம் அந்த சக்தி மாறி மாறி அதில் வருமா?

தவிர, மற்றும் ஓர் அதிசயம் சொல்லுகிறார்கள். அதாவது, கோவிலில் இருக்கும் மரக்கட்டைக்குச் சக்தி குறைந்துபோனால் அந்தச் சமயம் அதாவது 10 அல்லது 20 வருஷங்களுக்கு ஒருமுறை—மறுபடியும் சமுத்திரத்தில் ஒரு கட்டை முன்பு பிணம் மிதந்துவந்தது போல் மிதந்து வருமாம். அதை எடுத்து மறுபடியும் விக்கிரகம் செய்து வைத்துவிடுவதாம். இவற்றின் யோக்கியதைகளை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.



முன்புவந்த குறைப் பிணம் ஜலப்பிரளயத்தால் வந்தது என்று சொல்லப்படுகின்றது. அதுபோல், இப்போது வந்துகொண்டிருக்கும் மரக் கட்டைக்கும் ஏதாவது ஜலப்பிரளயம் கற்பிக்கப்படுகின்றதா? எனவே, புண்ணிய ஸ்தலங்களிலெல்லாம் சிறந்த புண்ணியஸ்தலமான ஜகந்நாதத்தின் நிலையை அந்த ஸ்தல சரித்திரப்படியே யோசித்துப் பாருங்கள்!

இந்த இலட்சணத்தில் அங்கு ஒரு தீர்த்த மகிமையும் சொல்லப்படுகின்றது.

இவ்வளவையும் ஒப்புக்கொண்டு அந்த ஸ்தலத்திற்கு யாத்திரை போகின்றவர்களுக்கு ஏதாவது விசேடஞானம் ஏற்படுகிறதா? அல்லது, அந்த ஸ்தல சரித்திரத்தின் யோக்கியமான கற்பனையையாவது மதித்து ஏதாவது ஒழுக்கத்தைப் பெறுகின்றார்களா? ஒன்றுமே இல்லாமல்—இரயில் செலவும், பூசாரி, பார்ப்பான் முதலியவர்களுக்குச் செலவும் செய்வதல்லாமல் வேறுபலன் என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி.

['சித்திரபுத்திரன்' என்ற பெயரில் எழுதிய கட்டுரை—'குடி அரசு' 30-9-1928]

## 10. புரோகிதரும் திதியும்–உரையாடல்

புரோகிதர்: ஓய் சுப்ரமண்ய முதலியாரே! நாளைக்கு எட்டாம்நாள் உங்கள் அப்பனுக்குத் திதி வருகின்றது. திதியை அதிகாலையிலே முடித்துவிட்டால் நன்றாயிருக்கும்; ஏனென்றால் நான் அன்று காலை பத்துமணிக்கு நாயக்கர் வீட்டுக்குப் போகவேண்டும்; அங்கு கர்ணபூஷண முகூர்த்தம்; அல்லாமலும், அதிகாலையில் திதி செய்வது மிகவும் விசேஷமானது.

முதலியார்: சரி, சாமி! அப்படியே ஆகட்டும். தாங்கள் மாத்திரம் அதிகாலையிலே வந்துவிடுங்கள்; நாங்கள் ஸ்நானம் செய்துவிட்டு சாமக்கிரியைகளுடன் தயாராய் இருக்கின்றோம். (முதலியார் தம் மனைவியை அழைக்கின்றார்) அடீ!

அண்ணியார்: (பெரிய வீட்டுப் பெண்களை அண்ணியார் என்றுதான் கூப்பிடுவது) ஏனுங்க!

முதலியார்: சாமி, சொன்னதைக் கேட்டியா?

அண்ணியார்: ஆமாம்! நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்.

முதலியார்: இன்றைக்கு எட்டாம்நாள்—ஞாபகமிருக்கட்டும்! காலமே நேரமே ஸ்நானம் செய்துவிட்டு, சாமிக்குக் கொடுக்கும் சாமான்கள் எல்லாம் தாராளமாய், ரெடியாய் வைத்து இருக்கவேண்டும்.

தம்பி: (பக்கத்தில் இதைக் கேட்டுக்கொண்டிருந்த முதலியார் மகன் எஸ். எஸ். எல். சி. படிக்கிறவர்) என்னப்பா, என்னமோ சொன்னீர்களே? என்னத்துக்காகத் தாராளமாய், ரெடியாய் இருக்கவேண்டும்?

முதலியார்: உங்கள் தாத்தாவுக்கு எட்டாம்நாள் திதி! சாமி, காலமே எங்கேயோ போகணுமாம். அதற்காகக் காலையிலே எல்லாம் தயாராக இருக்கவேண்டும் என்று சொன்னேன்; காலம் பஞ்சகாலம்; சாமிக்குத் தாராளமாய்க் கொடுப்போமே! இவர் 2, 3 மாதங்களுக்காவது சாப்பிடட்டும்.

தம்பி: அதற்கு, இந்த ஆசாமி என்னத்துக்கு வந்தாரு? எதற்காகக் கொடுக்கிறது? யாருக்குப் பஞ்சம்?

முதலியார்: அடே, அவர் சாமிடா, அப்படி எல்லாம் சொல்லாதே! மரியாதையாய்ப் பேசு.

தம்பி: என்னப்பா? கோவிலிலே இருக்கிறதும் சாமி; இந்தத் தடியனும் சாமியா? அப்படியென்றால் கோவிலிலே இருக்கிற சாமிக்குத்தான் என்ன மரியாதை இருக்கிறது?



படிப்பகம்

www.padippakam.com



ஒரு நாயை 'முதலியாரே,' 'முதலியாரே' என்று கூப்பிட்டால் நமக்குக் கோபம் வராதாப்பா? அதுபோல், இந்தப் பிச்சை எடுக்கிற மனிதனைச் 'சாமி'ன்னு கூப்பிட்டால் கோவிலில் இருக்கிற சாமி கோபித்துக்கொள்ளாதா?

முதலியார்: என்னடா, அதிகப் பிரசங்கிப் பயலே! இப்படி ஆய்விட்டாயே, இதெல்லாம் எங்கேயடா படித்தே? இந்தச் சுயமரியாதைக்காரப் பயல்களோடே சேர்ந்து கெட்டுப்போயிட்டாப்போலே இருக்கிறதே! மட்டு, மரியாதை, மனுஷாள், கினுஷாள் ஒன்னும் இல்லாமல் போச்சே! இனிமேல் இப்படியெல்லாம் பேசினால் பார்த்துக்கோ— அப்புறம் என்ன நடக்கும் என்று!

தம்பி: கோபிச்சுக்காதீங்கோ, அப்பா! இவனைப் போய்ச் 'சாமி'ன்னு கூப்பிடறதுக்கு வெட்கம் இல்லையாப்பா? இன்னும், நம்மளாட்டம் மனுஷன்தானப்பா? என்னத்துக்காக மனுஷனைச் 'சாமி'ன்னு கூப்பிடறது? பிச்சைக்காரன்தான் பிச்சை கேட்கிறதுக்குச் 'சாமி'ன்னு கூப்பிடுவான்! பிச்சை வாங்குபவனைப் பிச்சை கொடுப்பவர்கள் யாராவது சாமின்னு கூப்பிடுவார்களா? அப்படியெல்லாம் அவர்களைக் கூப்பிட்டால் அவர்கள் நம்மை என்னவென்று கூப்பிடுவார்கள்? மரியாதைக்குக் கூப்பிடவேண்டுமென்றால், அவர்கள் நம்மை 'சாமி' என்றால்—நாமும் அவர்களை 'சாமி'ங்கலாம். நம் வீட்டுக்கு, நம்மை ஏமாற்றிப் பணம் அடிச்சிக்கிட்டுப் போக வந்திருக்கிறான்; அவனைப் போய்—'சாமி'ன்னு கூப்பிடுறீங்களே! அதனாலேதான் அவன் நம்மைச் சூத்திரன் என்கிறான்; அம்மாளை சூத்திரச்சி என்கிறான். நம்மையெல்லாம் 'எட்டி நில்லு; மேலே படாதே' என்கிறான்!

முதலியார்: (அய்யரைப் பார்க்கிறார்)

அய்யர்: முதலியாரே, இது கலிகாலம்; இங்கிலீஷ் படிப்பு ஒரு பக்கம், மேல்நாட்டு நாகரிகம் மற்றொரு பக்கம், நாசமாய்ப்போன சுயமரியாதை இயக்கம் இன்னொரு பக்கம். அதைப் பார்த்து புதுப் புது டிராமா, கிருஷ்ணன்—மதுரம், ராதா, அண்ணாதுரை—டிராமா, டி. கே. எஸ் பிரதர்ஸ் நாடகக் கம்பெனி, விகடம் முதலிய சனியன்கள் வேறொரு பக்கம். இவையெல்லாம் சேர்ந்து இப்படி ஆகிவிட்டது. உங்கள் பையன் மாத்திரமல்ல, ஊர்ப் பையன்களே கெட்டுக் குட்டிச்சுவர் ஆகிவிட்டதுகள். வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த பெண்கள் சிலதுகள் இப்படியே ஆகிவிட்டதுகள். போனால் போகட்டும்—இது சிறு பிள்ளை. அதற்கு இன்னமும் உலகம் தெரியாது; அது என்ன வேணுமானாலும் சொல்லி விட்டுப் போகட்டும். இதற்கெல்லாம் நான் வருத்தப்படமாட்டேன். எல்லாம் பகவான் செயல்! நீங்கள் வருத்தப்படாதீர்கள்; எல்லாம் கொஞ்சநாளில் சரியாய்ப்போய்விடும். நீங்கள் மாத்திரம் அன்றைக்கு எல்லா சாமக்கிரியைகளுடன் ரெடியாய் இருங்கள். பஞ்சகாலம் என்று சொன்னீர்களே, அது சரியாய்ப் போச்சு. அந்தப் பகவான்தான் தங்கள் வாக்கில் இருந்துகொண்டு அப்படிச் சொல்லச் சொன்னார். என்னமோ, நான் ஏழை; பெரிய குடும்பம் பார்த்துக்கோங்கோ. (அய்யர் தம்பியைப் பார்த்து) அடேய் தம்பி! நீ இப்படியெல்லாம் இனிமேல் பேசாதேடா? இது நல்லதல்லடா; தெரிந்ததா? உங்கள் குடும்பம் பெரிய குடும்பம். அதற்குக் கேடு வருத்திக்காதேடா!

தம்பி: (அய்யரைப் பார்த்து) யாரையடா அடேய் என்கிறாய்? என்னடா தெரியறது? உனக்குக் கொடுக்காவிட்டால் என்ன கேடடா வரும்? திதியன்னைக்கு வாடா, எங்க வீட்டுக்கு. அப்போது நான் இந்த மாதிரி வாயால் பேசப் போறதில்லையடா! உன் முன்னங்கால் சில்லியைப் பேத்துப் பல்லைப் பிடுங்கிக் கொடுத்து அனுப்புகிறேன்டா! உனக்கு நான் 'அடே தம்பியா!' என்ன ஆனாலும் சரி; அன்னைக்கு உன்னை நான் பார்த்துவிட்டுடறேன்; கலிகாலமாம்—கலிகாலம்!—அது யாருக்கு என்று அன்னைக்குத் தெரியும். 'கிரஸ்னாயில் டாங்கு' மாதிரி இருந்துக்கிட்டு, பஞ்சமாம்? யாருக்குப் பஞ்சம்?

முதலியார்: டேய்! டேய்! தம்பி, கெட்டுப் போகாதேப்பா, கெட்டுப்போகாதே.



தம்பி: கெடறதென்ன, பிழைக்கிறதென்னப்பா? நீங்களும் அம்மாவும் வேறு எங்கேயாவது போய் அவனை சாமின்னு கூப்பிட்டு, அவன் காலில் விழுந்து கும்பிடுங்களேன்! இந்த வீட்டுக்குள் இவன் வந்தால் நான் அவனைக் கட்டாயம் உதைக்காமல் விடமாட்டேன். வேணுமானால் பாருங்களேன்! ஒரு தூசு கூட அவனுக்குக் கொடுக்கப் படாது. பாடுபடுகிறவனுக்கு இந்தக் காலத்திலே ரூபாய்க்கு ஒருபடி அரிசி சிக்குகிறதில்லை. இந்தத் திருட்டுப் பசங்களுக்கு—சோம்பேறிகளுக்குக் கடுகு, மிளகு, சீரகம், உப்பு புளியோடு கலம் கலமாகப் படைப்பீர்! நமக்கு 400 வேலி இருந்தும் கொக்கு மாதிரி இருக்கோம்; இவனுக்குக் கழுத்து இருக்கிறதா பாருங்கோ! தலையும் உடம்பும் ஒன்றாய்ப் பூசிய மாதிரி இருக்கின்றன! இது என்ன அக்கிரமம்! எப்படித்தான் இந்தப் புரட்டையும், திருட்டையும் அனுமதிக்கிறது? பார்க்கலாம்—வருவது வரட்டும்! நம்ம குடும்பமே கெட்டாலும் சரி; அவன் மாத்திரம் அன்னைக்கு வரட்டும், இங்கே!

முதலியார்: சாமி நீங்க போங்க! இப்போ நேரம் சரியாய் இல்லைங்கோ.

தம்பி: என்னங்க அப்பா! மறுபடியும் இவனைச் 'சாமி'ங்கிறிங்கோ?

அய்யர்: சின்ன முதலியார்வாள் கோபித்துக்கொள்ளாதீங்கோ. நான் இனிமேல் உங்கள் வீட்டிற்கு வரவில்லை; வந்தால் உங்கள் காலில் போட்டிருக்கிறதிலே அடியுங்கோ.

தம்பி: வீட்டிற்கு வருவதில்லேங்கிறதென்ன? இனிமேல் இந்த வீதியிலேயே நடக்கப் படாது, தெரியுமா?

அய்யர்: அப்படியே, சின்ன முதலியார்வாள்; நான் இன்றைக்கு எவன் முகத்தில் விழித்தேனோ, தெரியவில்லை.

தம்பி: எவன் முகத்தில் விழித்தால் என்ன? சங்கராச்சாரி முகத்திலேதான் விழித்து விட்டு வாயேன், அப்போது என்ன நடக்கிறது என்று பாரு! என்ன அக்கிரமம்! ஒரு கூட்டத்துக்கு இதே பிழைப்பா? நினைத்தால் வயிறு எரிகிறதே! மடப் பசங்கள், கொடுக்கிறதையும் கொடுத்து உன்காலில் விழுவதும், உன்னைச் 'சாமி' என்று கூப்பிடுவதும், உன்னிடம் சூத்திரப்பட்டம் வாங்கிக் கொள்வதும் சகிக்க முடியலையே! யார்தான் இந்த அக்கிரமத்தையும், அயோக்கியத்தனத்தையும் கேட்பது? அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பிகூட உதவமாட்டான் என்பது உங்கள் இனத்துக்கு மிகவும் பொருத்தமானது. ஆகவே இனி உதையப்பர்தான் இதைக் கேட்கவேண்டும். போ, வெளியிலே!

அய்யர்: நமஸ்காரம், சின்ன முதலியார்வாள்! போய்வருகிறேன்.

தம்பி: திரும்பிப் பார்க்காமலே போ!

அய்யர்: சின்ன முதலியார்வாள், நீங்கள் கூப்பிட்டுத்தான் பாருங்களேன். நான் திரும்பிப் பார்க்கிறேனா, என்று.

தம்பி: சரி, சரி, போன்னாக்க, மறுபடியும் பேசறியே!

(அய்யர் போய்விட்டார்)

முதலியார்: என்னடா தம்பி, இந்த மாதிரி ஆகிவிட்டாய்? இதெல்லாம் நமக்கு கெட்ட காலத்துக்கு அறிகுறியடா?

தம்பி: சரி, போதுமப்பா, இப்போது உங்களுக்கு மகா நல்ல காலமாச்சும். 400 வேலி நிலம் வைத்துக்கொண்டு பெரிய மிராசுதாராக இருந்துகொண்டு, இந்தப் பிச்சை எடுக்கவந்த பயலைச் 'சாமிகளே' என்று கூப்பிட்டு எழுந்து நின்று கும்பிடுகிறீர்களே— இதுதான் உங்களுக்கு மகா நல்ல காலமோ? இதைவிட இன்னும் என்ன கெட்ட காலம் வரப்போகிறது?

படிப்பகம்

www.padippakam.com



'ஒரு பெட்டி காலியாகிவிட்டது' காலியாகிவிட்டது,' 'ஒரு குடும்பம் காலியாகிவிட்டது,' 'ஒரு பெட்டி காலியாகிவிட்டது' என்று என்பதுபோல் அவனுக்கு என்று அவனிடம் ஒன்றும் இல்லாத 'வெறும்ஆள்' என்று அர்த்தம். திராவிட—ஆரிய கலாசார இனக் கிளர்ச்சியால் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நல்ல பயனடையும்படியான அவ்வளவு நிலை ஏற்பட்டும் யாருக்காவது இன உணர்ச்சி, தன்மான கலாசார உணர்ச்சி ஏற்பட்டதா என்றால், பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்கவேண்டி யிருக்கிறது.

மதத் துறையில் பணக்காரன், படித்தவன் முதல் மேற்சொன்ன 'இழி பிறப்பு' மக்கள் என்பவர்கள் வரையில், ஆரிய கலாசார வேஷம் போட்டுக்கொண்டு வாழவே ஆசைப் படுகிறார்கள். தாசி வேசிகள், பஞ்சமர்கள் என்பவர்கள் கூட்டம் முதல், சைவத் திரு மேனிகள் வரை அப்படியே நடந்துகொள்கிறார்கள். ஆனால், இந்தக் கிளர்ச்சியினால் முதலில் பயனடைகிறவர்கள் இந்தக் கூட்டத்தாரேயாவர்.

ஆரிய கலாசார எதிர்ப்புக்கு, அவற்றின் உண்மையான அஸ்திவாரபூர்வமான எதிர்ப் புக்குத் திராவிட மக்களுக்குள் ஆள் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. இது மாத்திர மல்லாமல், இராமாயணம், பாரதம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், தேவாரம், திருவாசகம், பிரபந்தம் என்பனவாகிய இதிகாசங்களை, நூல்களைச் சமய உண்மைக ளாகவும், இலக்கியமாகவும் கருதி, பிரச்சாரம் செய்கிறார்கள். இதுதான் இன்றையத் திராவிடரின் (தமிழ் மக்களின்) பிறப்பு நிலை.

பாகவதம், இராமாயணம், கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம், சிவ பக்த விலாசம், சகஸ்ரநாமம், திருவிருத்தம் முதலிய ஆரிய கலாசாரத்தை, ஆரிய உயர்வை வலியுறுத்தும் வடமொழி நூல்களைப் பற்றிய உபன்யாசங்கள் பார்ப்பனர்களால் தினமும் நடத்தப்படு கின்றன. மற்றும் சங்கீதம், நாட்டியம் முதலிய கலைகளின் மூலம் பல; ரேடியோ மூலம் பல; மற்றும் பள்ளிகளில் ஆசிரியர்கள் மூலம் ஏராளம்; பிறகு கோவில் உற்சவம் முதலியவை மூலம் அளவிட முடியாதவை; இப்படியாகவும் இன்னமும் அரசியல் மூலமும், முதல் மந்திரி முதல் பலராலும் பிரச்சாரங்கள் நடைபெற்றுவருகின்றன.

ஆனால், திராவிடன்—தமிழன் என்ன செய்கிறான்? பார்ப்பான் காலை நக்கிச் சுவைக்கப் போட்டி போடுகிறான். நாளுக்குநாள் துரோகிகள் பட்டியல் பெருகுகிறது. இதற்கு ஏற்றவண்ணம் பார்ப்பன ஆதிக்கம் வளருகிறது. பட்டாபி சீத்தாராமய்யா—கவர்னர்; சந்தானம் அய்யங்கார்—கவர்னர்; இராதாகிருஷ்ணன்—'அம்பாசிடர்'; விஜய லட்சுமி—தூதுவர்; கிருஷ்ண ராவ்—மந்திரி; வரதாச்சாரி—குட்டி மந்திரி; அந்த அய்யங்கார்—'ஏஜண்ட் அண்ட் மேனேஜர்'; இந்த அய்யர்—'அட்வகேட் ஜெனரல்'; அந்த அய்யர்—'பாக்டரி ஏஜண்ட்'— இந்த அய்யர்; 'கம்பெனி ஏஜண்ட்'; இந்த அய்யர்—இந்திய 'சீப் ஜட்ஜ்'; அந்த அய்யர்—'சீப் இஞ்சினியர்'; இந்த அய்யங்கார்— 'அய். ஜி.'—என்பவை போன்ற அதிகாரங்களையும் ஆதிக்கங்களையும் கைப்பற்றி இலட்சம், பத்து இலட்சம், கோடிக்கணக்கில் கொள்ளையடித்துக்கொண்டு, இனநலத்தைப் பெருக்கிக்கொண்டு, பலம்தேடி நம்மை அழுத்திக்கொண்டு வருகிறார்கள்.

திராவிட அறிஞர்கள், புலவர்கள், செல்வர்கள் என்பவர்கள் பார்ப்பான் தின்று வெளியில் எறிந்த எச்சிலையை நக்குவதற்கு ஒருவரையொருவர் கடித்துக்கொள்கிறவர் களாக இருக்கிறார்கள். இவைதாம் இன்று ஆரியர்—திராவிடர் நிலையாக இருக்கின்றது.

நம்மவர்களில் யார் இந்தப் பார்ப்பனர்கள்போல் 'திராவிடர் (தமிழர்) கலைப் பிரச்சாரம்', கலாசாரப் பிரச்சாரம் (வேலை) செய்கிறார்கள்? புலவர் இல்லையா? தமிழ்ப் புலவன் என்றால்—தலை சிறந்த அயோக்கியன், இனத் துரோகி, மானம் ஈனம் அற்ற இழிமகன் என்றல்லவா சொல்லும்படி நடந்துகொள்கிறார்கள்!

இன்று மானமுள்ள, இன உணர்ச்சியுள்ள தமிழ்ப் புலவன் யார் என்பதாக ஒரு விரலை மடக்க முடியுமா என்று கேட்கவேண்டியிருக்கிறது!



மறைமலை அடிகள் இருந்தார். அவரும் ஆரியக் கலை, இலக்கியங்களையே பெரிதும் தமிழ்க் கலை மாதிரிப் பிரசங்கிப்பார். அவருக்குப் பின் 'தமிழ்ப் புலவன்' இல்லை; 'இருப்பதாகச் சொல்லிக்கொள்ளுபவன் ஆரியக் கலையைப் பரப்பிப் பணம் சம்பாதிக்கவும், பதவி பெறவும் அலைகிறான்.

பள்ளி, காலேஜ் புலவர்கள், 'பென்ஷன்' வாங்கிய தமிழ் அறிவுள்ளவர்கள்—ஏன் வாரத்தில் 2 நாட்களாவது தமிழ்க் கலை, கலாச்சாரப் பிரச்சாரம் செய்யக்கூடாது? பள்ளி, காலேஜ் நிர்வாகிகள்—ஏன் இவர்களை அனுமதிக்கக்கூடாது? ஏன் இவர்களுக்கு இப்படிக் கட்டளை இடக்கூடாது?

['விடுதலை'—தலையங்கம்—15-7-1952]

மனிதன் என்பவன் பகுத்தறிவு உடையவன்; சிந்தனா சக்தியோடு எந்தக் காரியத் தையும் செய்யக்கூடிய சக்தி உடையவன்; இன்று நல்ல அனுபவங்களையும் வளர்ச்சித் தன்மையையும் பெற்று நாளுக்குநாள் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருப்பவன்.

ஒரு மணிக்கு 1000, 2000, 3000 மைல் வீதம் ஆகாயத்தில் பறக்கிறவனாக இருக் கிறான்; பத்தாயிரம் மைலுக்கப்பாலுள்ள மனிதனிடம், பக்கத்தில் இருப்பவனிடம் பேசுவதுபோலப் பேசுகிறான்.

அது மாத்திரமல்லாமல், அப்படிப் பேசுகிற மனிதனை நேருக்குநேராகக் காணு கிறவனாக இருக்கிறான்; சூரிய மண்டலத்தை அளந்துவிட்டான்; சந்திரமண்டலத்துக்குப் போய் வந்து கொண்டிருக்கிறான்.

அனேக வியாதிகளுக்கு மருந்துகள், சிகிச்சைமுறைகளைக் கண்டுபிடித்துவிட்டான்.

சராசரி அய்ந்து வருஷம், பத்துவருஷமே வாழ்ந்த மனிதர்கள்—இப்போது சராசரி 50 வயது முதல் 75 வயது வரை வாழ்கிறார்கள்.

இப்படிப்பட்ட மனிதனுக்கு இவை எல்லாம், இந்த சக்திகளெல்லாம் இல்லாத காட்டு மிராண்டிக் காலத்தில்—அதாவது 1000, 1500, 2000, 3000 வருஷங்களுக்கு முன்னால் இருந்த மூடமக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட—கடவுள், மதம், வேதம் இவைகளைக் கற்பித்துக்கூறிய தலைவர்கள், இனியும் இன்றைக்கும் வேண்டுமா? அவைகளால் ஏதாவது பலன் உண்டா?—என்பவைகளைப் பற்றி மனிதன் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முதலாவது 'கடவுள் என்றால் என்ன?' என்று தெரிந்தவன்—யாராவது, ஒருவனாவது இருக்கிறானா?

'கடவுள் தன்மை இன்னது' என்று தெரிந்தவர்களில் ஒருவனாவது அதை நம்பி, அதைப்போல் நடக்கிறவன் ஒருவனாவது இருக்கிறானா? மனிதன் கடவுள் செயலை (விதியை) நம்புகிறானா? அல்லது, தன்செயலை (மதியை) நம்புகிறானா? வரையறுத்துக் கூறமுடியுமா?

'கடவுள் எங்கும் இருக்கிறான்' என்ற சொல்லுகிற அறிவற்றவர்களே—கடவுளுக்குக் கோயில் (இருப்பிடம்) கட்டுகிறார்கள்.

'கடவுளுக்கு உருவமில்லை' என்று சொல்கிற புத்தி ஈனனே—அந்தக் கடவுளுக்கு உருவம், அதுவும் பல்வேறு உருவங்கள் கூறியிருக்கிறான்.

'கடவுளுக்கு ஒன்றும் வேண்டியதில்லை' என்ற சொல்லுகிற முட்டாள்களே—அந்தக் கடவுளுக்குச் சோறு, பெண்டாட்டி, வைப்பாட்டி முதலியவைகளை அமைக்கிறார்கள்.

'கடவுள் யோக்கியர்' என்று சொல்லுகிற முட்டாள்களே—அந்தக் கடவுள் அவனைக் கொன்றார், இவனைக் கொன்றார், திருடினார், விபச்சாரத்தனம் செய்தார், அவன்



படிப்பகம்

www.padippakam.com



மனைவியைக் கெடுத்தார், இவர் மனைவியை அபகரித்தார் என்றெல்லாம் கூறிப் பண்டிகைகள் நடத்துகிறார்கள்.

இவை யாவும், இவை போன்றவையும் ஒருபுறமிருந்தாலும், இப்படிப்பட்ட கடவுளால் மனிதன் அடையும் பயன் என்ன என்று சிந்தித்தால் என்ன பதில் கிடைக்கிறது?

கடவுளினால் ஒன்றும் பயனில்லை என்பது ஒருபக்க மிருந்தாலும் மேற்கண்ட முட்டாள் தனமான, காட்டுமிராண்டி அயோக்கியத்தனங்கள் ஒழிக்கப்படுவதற்காகவாவது கடவுள்-மதம் ஒழிக்கப்படவேண்டாமா என்று கேட்கிறேன்.

ஒழுக்கத் துறையில், அறிவுத் துறையில் இவ்வளவு கேடுகள் இருப்பது மாத்திர மல்லாமல்—பொருளாதாரத் துறையில் எவ்வளவு கேடுகள், நட்டங்கள் ஏற்படுகின்றன? இந்தக் கேட்டிற்குப் பயன் என்ன?

அயோக்கியர்கள், மடையர்கள், சோம்பேறிகள் பிழைக்கிறார்கள்—மக்களை ஏய்க்கிறார்கள் என்பதில்லாமல் நற்பயன் என்ன என்று கேட்கிறேன்.

இவை மட்டுமா?

சமுதாயம் எவ்வளவு பிரிவுற்று, சின்னாபின்னப்பட்டுக் குதறிக்கிடக்கிறது?

எதற்காக 'இந்து'; எதற்காகக் 'கிறிஸ்தவம்'; எதற்காக 'முஸ்லிம்' முதலிய மதங்கள் வேண்டும்? இவர்களுக்குத் தனித்தனி வேதம், வேஷம், செய்கைகள் முதலியன எதற்காகத் தேவையாக இருக்கின்றன? இவைகளால் பிரிவினை உணர்ச்சியல்லாமல் சமுதாயத்திற்கு நலனென்ன என்று கேட்கிறேன்.

கடவுளாலும், இந்த வேதங்களாலும் பிரிவினை உணர்ச்சி தவிர வேறு பலன் என்ன என்று கேட்கிறேன்.

இவைகளெல்லாம் ஒருபுறமிருந்தாலும், இவற்றால் மனிதனின் அறிவுகெட்டு, வளர்ச்சி பாழாகி—இந்த இருபதாவது நூற்றாண்டிலும் மனிதன் அறிவிற்கும், சிந்தனைக்கும் ஏற்றபடி வளராமல் தேங்கிக் கிடக்கிறான். இது எவ்வளவு பெரிய கேடு? மனித வாழ்வினால் எந்த மனிதன் கவலை, தொல்லை, அடிமைத்தனம் இல்லாமல் இருக்க முடிகிறது? ஏன் பிறக்கவேண்டும்? ஏன் சாகவேண்டும்? இவை இரண்டுமில்லாமல் செய்துகொள்ள மனிதனால் முடியாதா? பாழும் 'கடவுளால்'தான் இது முடியாததாக இருக்கிறதே!

பிறப்பித்தல், சாகடித்தல் (ஆக்கல், அழித்தல்) என்ற இரண்டைத் தவிர, 'கடவுள்' வேறு வேலை எதைப் பார்க்கிறானாம்? இந்தக் காரியத்திற்கு 'ஒரு கடவுள்'—'பல கடவுள்கள்' ஏன்?

ஆகவே, தன்னைப் பகுத்தறிவுள்ள மனிதன் என்று உணர்ந்த எவனும் மனித சமுதாயத்துக்கு ஏதாவது தொண்டு செய்யவேண்டும் என்றால், தன் வாழ்நாளில் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தோம் என்று கூறிக்கொள்ளவோ வேண்டுமானால் கடவுள் மதம் வேதங்கள் ஒழிக்கப்படத் தன்னால் கூடியதைச் செய்யவேண்டும்.

இதுதான் அறிவுள்ள மனிதர்க்கு அடையாளம் என்பது என் கருத்து.

['விடுதலை'–தலையங்கம்—18-10-1972]



# 2. இதிகாசங்கள்

## 1. இராமாயணம்

இராமாயணம் என்பது சூரிய குல அரசர்களின் சரித்திரங்களில் ஒன்று என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், இராமாயணம் என்னும் பெயரால் பல நூற்றுக்கணக்கான இராமாயணங்கள் இருந்ததாகவும், அவைகள் காலப்போக்கில் பல 'தெய்வீகக் காரணங்களால் மறைந்துபோய்விட்டன' என்றும், ஆனாலும் இப்போது 24 விதமான இராமாயணங்கள் இருப்பதாகவும், அவற்றைத் தோழர் கோவிந்த தாஸ் அவர்கள் வடஇந்தியாவிலுள்ள ஒரு மடத்தில் தாமே நேரில் பார்த்ததாகவும் தாம் எழுதிய 'இந்துமதம்' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

அதை அனுசரித்தே சென்னை மயிலாப்பூர் 'இராமயண விலாசம்' என்னும் கிருகத்தில் உள்ள இராமாயணப் பிரசுரகர்த்தாவாகிய திரு. சி. ஆர். சீனிவாசய்யங்கார் என்பவரால் எழுதப்பட்டு, 1928ஆம் வருடத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கும் 'இதர இராமாயணங்கள்' என்னும் புத்தகத்தில் மேற்கண்ட விஷயங்கள் விளக்கப்பட்டு, முதல் தடவையாக நான்கு இராமாயணங்கள் அதில் விவரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. அப் புத்தகத்தின் விலை ரூபாய் ஒன்று. அவையாவன—ஜைன இராமாயணம், பவுத்த இராமாயணம், யவன இராமாயணம், கிறைஸ்த இராமாயணம் என்பவைகளாகும்.

இவற்றுள் யவன இராமாயணம், கிறைஸ்த இராமாயணம் ஆகியவைகள் பெரும்பாலும் இராமாயணக் கதையைப் போன்ற போக்கில் இருந்தாலும், கதைகளில் வரும் பாத்திரங்களின் பெயர்களும் மற்ற சில்லறை விஷயங்களும் பெரிதும் மாறுபட்டு அந்தந்த மொழிக்கு ஏற்ற பெயர்களாக இருப்பதால் அதை நாம் இதில் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு உபயோகித்துக்கொள்ள விரும்பவில்லை.

ஆனாலும், மற்ற இரண்டும்—அதாவது ஜைன, பவுத்த இராமாயணங்கள் பெரிதும் கதைப் போக்கிலும் பெயர்களிலும் எல்லாம் பொருத்தமாக இருக்கின்றன. ஆனால், சில்லறை விஷயங்களில் மாத்திரம் பல விஷயங்கள் மாறுபட்டிருக்கின்றன.

அதில் ஜைன இராமாயணம் என்பது இப்போதும் அடையாற்றுப் புத்தக சாலையில் வைக்கப்பட்டிருப்பதாகப் பதிப்பாசிரியரே எழுதியிருக்கிறார். அதில் தசரதன், இராவணன் முதலியவர்களுடைய சந்ததிக் கிரமம், பிறப்பு, வளர்ப்பு முதலியவைகள் சிறிது வித்தியாசப்பட்டாலும் மூல புருஷனாகிய தசரதனை அப்படியே ஏற்றுக்கொண்டு, அவனுக்கு நான்கு மனைவிகள் என்றும் அவர்களின் பெயர்கள் (1) அபராஜிதை, (2) சுமத்திரை, (3) கைகேயி, (4) சுப்ரபை என்றும் குறிப்பிட்டுவிட்டு, கைகேயிக்குத் தசரதன் கொடுத்த இரண்டு வரங்களையும் அப்படியே குறித்திருப்பதுடன் அபராஜிதைக்கு இராமன் பிறந்ததாகவும், சுமத்திரைக்கு இலட்சுமணன் பிறந்ததாகவும் கைகேயிக்குப் பரதன் பிறந்ததாகவும், சுப்ரபைக்குச் சத்துருக்கன் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுபோலவே, சீதையை ஜனகராஜனுடைய மகள் என்றும், வில்லை வளைப்பவனுக்கு ஜனகன் சீதையைக் கொடுப்பதாக நிபந்தனை வைத்திருந்தானென்றும், ஆகவே வில்லை வளைத்தே இராமன் சீதையை மணந்தான் என்றும் இலட்சுமணனுக்கு 18 பெண் சாதிகள் என்றும் பரதனுக்கு ஜனகனுடைய சகோதரரின் குமாரத்தி கொடுக்கப்பட்டாளென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

மற்ற பட்டாபிஷேகக் கதையும் வால்மீகி இராமாயணத்தைப் போலவே இருந்தாலும், சிறு சிறு மாறுதல்களுடன்-தபசு செய்ததற்காகச் சம்புகன் வதைக்கப்பட்டதும் குறிக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டிருப்பதோடு—இராமனுக்கு நான்கு பெண்சாதிகள் என்றும் அவர்களின் பெயர்கள் (1) சீதை, (2) பிரபாவதி, (3) ரதினிபா, (4) ஸ்ரீதாமா என்பவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் வால்மீகி இராமாயணத்திலும்கூட இருக்கிறது.

பவுத்த இராமாயணத்திலும் தசரதனுக்குப் பதினாயிரம் மனைவிகள் என்றும் அவர்களில் மூத்தவளுக்கு இராமன், இலட்சுமணன் என்பவர்களான இரண்டு ஆண்களும், சீதை என்று ஒரு பெண்ணும் ஆக மூன்று குழந்தைகள் பிறந்தன என்றும்; அடுத்த மனைவிக்குப் பரதன் என்ற ஒரு ஆண் குழந்தை மாத்திரம் பிறந்தது என்றும்; அரசன் பரதனுக்குப் பட்டங் கொடுப்பதாய் இளைய மனைவிக்கு வாக்குக் கொடுத்திருந்தான் என்றும்; ஆனால், அரசன் அப்படிச் செய்யாமல் இராமனுக்குப் பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்தான் என்றும்; இளைய மனைவி கட்டாயப்படுத்தினதால் பரதனுக்குப் பட்டம் கொடுத்துவிட்டு—இராமன், இலட்சுமணன், சீதை ஆகிய சகோதர சகோதரியைப் பரதன் கொன்றுவிடுவான் எனப் பயந்து காட்டுக்கனுப்பி விட்டான் என்றும்; பரதன் தமையனைத் தேடிக் காட்டுக்குப்போய் இராமனையே ஒப்புக் கொள்ளச் சொன்னதாகவும்; இராமன் தன் தகப்பனார் இறந்த பிறகுதான் தன் நாட்டிற்குத் திரும்பி வரமுடியும் என்றதாகவும்; அது வரை—அவனது பாதரட்சைகளையும் மற்ற சகோதர சகோதரியையும் அனுப்பும்படி பரதன் கேட்டு வாங்கி அழைத்து வந்ததாகவும்; பன்னிரண்டு வருடங்களானபின் தசரதன் இறந்து போனதாகவும்; பிறகு இராமன் அயோத்திக்கு வந்ததாகவும்; வந்தவுடன் ஊர் ஜனங்கள் இராமனுடைய தங்கையாகிய சீதையை அவளது தமையனாகிய இராமனுக்குக் கலியாணம் செய்வித்துப் பட்டங் கட்டினதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இவைகளை மெய்ப்பிக்கத் தோழர் அய்யங்கார்—அந்தக் காலத்தில் அண்ணனும் தங்கையும் கலியாணம் கொள்ளும் வழக்கம் உண்டு என்றும், எகிப்து தேச ராஜதர்மமே சகோதரியை மணப்பதுதான் என்றும், இதை அறிந்துதான் ரிக்வேதம் 10-வது மண்டலத்தில் 10, 12 சுலோகங்களில் சகோதரியை மணப்பது கண்டிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதற்கு முன் அவ்வழக்கம் இருந்துவந்ததற்கு மேலும் ஆதாரமாகச் சூரியனும் அக்கினியும் தங்களது தங்கைகளையே மணந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கின்றார்.

தோழர் சி. ஆர். சீனிவாச அய்யங்கார் தாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வால்மீகி இராமாயணம் பின்பகுதிக் குறிப்பு 431-ம் பக்கத்தில், சீதை தசரதனுடைய மகள் என்றும் அவளை தசரதன் ஜனகனுக்குத் தானம்கொடுத்தார் என்றும், அவள் பூமியில்பட்டால் பூமி இழுத்துக்கொள்ளும் என்றும், ஆதலால் பூமியில்விடாமல் காப்பாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் தசரதன் கொடுத்தான் என்றும், ஜனகன் இல்லாதபோது ஒருநாள் சீதை பூமியின்மீது நின்றுவிட்டாள் என்றும், அதனால் அவள் பூமிக்குள் மறைந்துபோய் விட்டாள் என்றும், பிறகு கொஞ்சகாலம் பொறுத்து ஜனகன் பூமியை உழும்போது சீதை பூமிக்குள்ளிருந்து கலப்பையில் தட்டுப்பட்டு ஜனகனால் எடுத்து வளர்க்கப்பட்டாள் என்றும், ஆனால் ஜனகனுக்கு—அவள்தான் முன்பு வளர்த்துவந்த சீதை என்று தோன்றவில்லை என்றும், ஆகவே அவனது தமையனாகிய இராமனுக்கு அவளைக் கலியாணம் செய்துகொடுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுவிட்டு, இந்த விஷயம் வசிஷ்ட புராணத்திலும் ஸ்கண்டோத்திர புராணத்திலும் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அன்றியும், இதே தோழர் சீனிவாசய்யங்கார், 'ஏவனொருவன் தன்னுடைய தங்கையை மணம் செய்துகொள்கின்றானோ அவனது மனைவியைத் தூக்கிக்கொண்டு போவதால் உனக்கு மரணமுண்டு' என்று இராவணனுக்கு ஒரு காலத்தில் நாரதர் சாபம் கொடுத்திருந்ததாகவும், அந்தச் சாபத்தின் பலனாய் இராவணனானவன், இராமன் தன் தங்கையாகிய சீதையை மனைவியாக மணந்துகொண்ட விஷயம் தெரியாமல் சீதையைத் தூக்கிக்கொண்டு போனதாகவும், அதனாலேயே இராவணன் இராமனால் கொல்லப்பட்டதாகவும், இராவணனுக்கு உண்மையில் இராமன் தன் தங்கையைக் கட்டிக்கொண்டிருப்பது தெரியாதென்றும், தெரிந்திருந்தால் சீதையைத் தொட்டிருக்கமாட்டான் என்றும், இந்த உண்மைகள் 'பார்க்கவ புராணத்தில்' இருப்பதாகவும் மேற்கண்ட 431-ம் பக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றார்.



மற்றும், இதே தோழர் சீனிவாசய்யங்கார் அதற்குக் கீழேயே, சீதை இராவணன் மகள் என்றும் அவள் பிறந்த கால தோஷத்தால் தகப்பனுக்கு (இராவணனுக்கு) ஆபத்து விளையும் என்று நாரதர் இராவணனுக்குச் சொன்னதாகவும், அந்தக் காரணத்தால் இராவணன் தன் மகளாகிய சீதையை ஒரு பெட்டியில் வைத்து சமுத்திரத்தில் கொண்டு போய் எறிந்துவிட்டதாகவும், அது ஜனகனது இராஜ்யத்தில் ஓடும் ஆற்றிலடித்துக் கொண்டு வரப்பட்டதாகவும், அதை ஜனகன் கண்டெடுத்து வளர்த்து இராமனுக்குக் கொடுத்ததாகவும், இராமனும் சீதையும் வனத்திலிருக்கும்போது சீதையைத் தன் மகள் என்று தெரியாமல் இராவணன் எடுத்துக்கொண்டு வந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுவிட்டு, இந்த உண்மை 'மவுட்கலிய இராமாயண'த்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவைகள் உண்மையாய் இருக்கலாம் என்பதற்கு அவர் ஒரு யுக்திக் காரணமும் சொல்லுகின்றார். அதாவது, 'சீதையின் பிறப்பைப் பற்றியோ அவளது பழைய சந்ததியைப் பற்றியோ வால்மீகர் எங்கும் ஒரு வரி கூட எழுதவில்லை. ஆதலால் இந்தக் கூற்றுகள் உண்மையாக இருக்கலாம் என்கின்றார்.

எனவே, சீதை தசரதனுக்கு மகள் என்பதற்கும் இராமனுக்குத் தங்கை என்பதற்கும் இதுவரை 4, 5 ஆதாரங்களும், இராவணனுக்கு மகள் என்பதற்கு இரண்டு ஆதாரங்களும் கிடைக்கின்றன. இன்னமும் மற்ற இராமாயணங்களில் என்னென்ன பந்தத்துவங்கள் இருக்குமென்று ஊகிக்கக்கூடவில்லை.

['ஆனந்த விகடன்' வருஷ அனுபந்தம்; 'குடிஅரசு' 3-3-1929;–'பகுத்தறிவு' 1-5-1936]

## 2. இராமாயணப் பாத்திரங்கள்

இராமாயணக் கதையில் முக்கிய பாத்திரங்களாக விளங்கும் தசரதன், இராமன், சீதை, இலட்சுமணன் முதலியவர்களின் யோக்கியதையைச் சற்று ஆராய்வோம்.

இராமாயணத்தில் யாகத்துக்கு அடுத்தாற்போல் தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும் சேதி குறிப்பிடத் தக்கதாகும். இதில் தசரதன் 'அவனுடைய பிள்ளைகள், மனைவிமார்கள், மந்திரி, குரு முதலானவர்களுடைய தன்மைகள் இன்னவை என நன்கு விளங்கும்.

1. தசரதன் : தசரதன் கைகேயியை மணக்கும் போதே 'கைகேயியின் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அயோத்தியைக் கொடுக்கிறேன்' என்பதாக வாக்குக் கொடுத்துஇருக்கிறான். மற்றும் கதை வாசகப்படி பார்த்தால், தசரதன் தனது விவாகத்தின்போதே கைகேயிவசம் நாட்டை ஒப்புவித்துவிட்டு, கைகேயிக்காகக் கைகேயிக்குப் பிரதிநிதியாய் இருந்து நாட்டை ஆண்டுவந்தானென்றே தெரிகிறது.

2. அதாவது, கைகேயிக்குத் தசரதன் அயோத்தியை 'சுல்கமாக'க் கொடுத்து விட்டான் என்று மூலத்தில் இருக்கிறது.

3. இந்தச் சங்கதி இராமனுக்கும் கோசலைக்கும் தெரியும். 'என்றைக்குப் பரதன் அவன் மாமன் வீட்டுக்குப் போனானோ அன்று முதல் உன் பட்டாபிஷேகத்துக்குத் தக்க காலம் என்பது எனது கருத்து' என்று இராமனிடம் வெளிப்படையாய் தசரதன் சொல்லுகிறான். பரதனை நாடுபெறச் செய்யாமல் ஏமாற்றுவதற்காகவே அவனை அவனது பாட்டனார் வீட்டில் தசரதன் பத்து வருட காலம் விட்டுவைத்திருக்கிறான்.

4. திடீரென்று ஒரு நாள் நினைத்துக்கொண்டு குடிகளுக்குச் சமாதானம் சொல்லி, அடுத்த நாளே இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்கிறான்.

படிப்பகம்

www.padippakam.com



5. இந்தத் துரோகமான காரியத்திற்கு மந்திரிகளும் வசிட்டன் முதலிய குருமார்களும் இராமனும் சம்மதிக்கிறார்கள்.

6. கோசலையும் இராமனுக்குப் பட்டம் கிடைக்க சதா தபசு செய்கிறாள்.

7. பரதனுக்கும் சத்துருக்கனனுக்கும் ஜனக மன்னனுக்கும், கேகய மன்னனுக்கும் கைகேயிக்கும் தெரிவிக்காமலும் இவர்களுக்கு அழைப்புகள்கூட அனுப்பாமலும் இவ்வளவு முக்கியமான முடிசூட்டை அவசர அவசரமாக நடத்த ஏற்பாடு செய்கிறான்.

8. இராமனிடம் தசரதன் தனிமையில் பேசும்போது, 'பட்டாபிஷேகம் நடைபெறாமல் தடைசெய்ய வேண்டிய அவசியம் பரதனுக்கு இருந்தாலும், அது முடிந்துவிடுமாயின், பிறகு பரதன் வந்தாலும் தகராறு செய்யாமல் அதற்குச் சம்மதித்துச் சும்மா இருந்து விடுவான். ஏனெனில், பரதன் சாது; நல்லவன்; நடந்துவிட்ட காரியத்தை ஒத்துக்கொள்ளுவது உயர்ந்த குணம் படைத்தவர்களின் கடமை. ஆதலால் சீக்கிரம் முடிய வேண்டும்' என்கிறான்.

9. இந்தப் பட்டாபிஷேகச் சேதி அறிந்து, கைகேயி இராஜ்யத்தைத் தன் மகன் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றும் அந்த முடி பரதனுக்கு நிலைக்கச்செய்ய இராமன் காட்டுக்குப் போகவேண்டுமென்றும் சொல்லும்போது, கைகேயியை ஏமாற்ற தசரதன் அவள் காலில் விழுந்து கெஞ்சுகிறான்.

10. 'எவ்வளவோ ஏற்பாட்டுடன் செய்த காரியத்தைக் கெடுத்து விட்டாயே' என்கிறான். ஆனால், நாடு மூத்த மகனாகிய இராமனுக்குத் தானே உரிமை என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லவே இல்லை. தசரதனுக்குக் கைகேயி இணங்காமல் போன பின்பு, தசரதன் இராமனை அழைத்து, 'இராமா! நான் புத்தி சுவாதீனம் இல்லாத சமயத்தில் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாக ஒப்புக்கொண்டுவிட்டேன்; என்றாலும் நீ அதற்குக் கட்டுப்படவேண்டியதில்லை. என்னைப் பட்டத்திலிருந்து தள்ளிவிட்டு நீ இராஜ்யத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்து கொண்டிரு' என்று துர்யோசனையைச் சொல்லிக்கொடுக்கிறான்.

11. இவையெல்லாம் பயன்படாமல் போகவே, தசரதன் சுமந்திரனை அழைத்து, 'இராமனுடன் நாட்டிலுள்ள பொக்கிஷம், தானியக் களஞ்சியம், குடிகள், படைகள், வியாபாரிகள், வேசியர்கள் ஆகிய எல்லாவற்றையும் காட்டிற்கு அனுப்பிக் கொடுத்துவிடு' என்கிறான்.

12. இதைக் கைகேயி ஆட்சேபித்தவுடன் தசரதன், 'நீ நாடுதான் கேட்டாயே ஒழிய இவைகளை எல்லாம் சேர்த்துக் கொடு என்று கேட்கவில்லையே' என்று அடா வழக்குப் பேசுகிறான்.

13. பிறகு பொக்கிஷத்தில் உள்ள நகைகளை எல்லாம் வாரி சீதைக்குக் கொடுத்து விடுகிறான்.

14. தனது மற்றொரு மகன் இலட்சுமணன் காட்டுக்குப் போவதைப் பற்றித் தசரதன் துக்கப்படவில்லை.

['குடி அரசு'-கட்டுரை—18-12-1943]

இராமன் தன்மையைச் சற்று ஆராய்வோம்.

1. கைகேயியை மணம் செய்து கொள்ளும்போதே தசரதன் நாட்டைக் கைகேயிக்கு 'சுல்கமாக'க் கொடுத்துவிட்டதும், அதனால் நாடு பரதனுக்குச் சொந்தமாக வேண்டியது என்பதும் இராமனுக்கு நன்றாய்த் தெரியும்.

2. நாட்டைக் கைப்பற்றவே இராமன் தகப்பனுக்கும், கைகேயிக்கும், குடிகளுக்கும் நல்ல பிள்ளையாக நடந்துவந்திருக்கிறான்.



3. பரதன் ஊரில் இல்லாத சமயத்தில் பட்டாபிஷேகம் செய்ய தசரதன் செய்யும் சூழ்ச்சிகளுக்கெல்லாம் சம்மதித்து முடிசூட்டிக் கொள்ள முனைகிறான்.

4. இலட்சுமணன் பொறாமைப்பட்டு ஏதாவது செய்து கெடுத்துவிடுவானோ என்று கருதி, இலட்சுமணனை ஏய்க்க, 'இலட்சுமணா, உனக்காகத்தான் நான் முடிசூட்டிக் கொள்கிறேன்; நீதான் நாட்டை ஆளப் போகிறாய்' என்று 'தாஜா' செய்கிறான்.

5. பட்டாபிஷேகம் நடக்குமோ, நடக்காதோ என்று ஒவ்வொரு நேரமும் கவலைப் பட்டுக்கொண்டே இருந்திருக்கிறான்.

6. 'நாடு உனக்கு இல்லை; நீ காட்டுக்குப் போகவேண்டும்' என்று தசரதன் சொன்னவுடன் மனதுக்குள் துக்கப்படுகிறான்.

7. 'நாட்டை இழந்து, சுகத்தை இழந்து, நல்ல மாமிசப் பட்சணங்களை இழந்து, காட்டிற்குச் சென்று காய்கறிகளைப் புசிக்கவேண்டியவனாகி விட்டேனே' என்று தாயாரிடம் சொல்லிச் சங்கடப்படுகிறான். (ஆனால், காட்டில் பெரிதும் மாமிசத்தையே சாப்பிடுகிறான்.)

8. 'என் கைக்குக் கிடைத்த இராஜ்யம் போனதோடல்லாமல் நான் காட்டுக்கும் போகவேண்டியதாயிற்றே' என்று தாயிடத்தும் மனைவியிடத்தும் சொல்லித் துயரப் படுகிறான்.

9. 'எந்த மடையனாவது தன் இஷ்டப்படியெல்லாம் நடந்துவரும் மகனைக் காட்டுக்கனுப்பச் சம்மதிப்பானா?' என்று இலட்சுமணனிடம் தன் தகப்பனைக் குறை சொல்லித் துயரப்படுகிறான்.

10. இராமன் பல மனைவிகளை மணந்திருக்கிறான். (இதை மொழிபெயர்ப்பாளர்களான தோழர் சி. ஆர். சீனிவாசய்யங்காரும், தோழர் மன்மதநாத் தத்தரும் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இராமாயணத்தில் பல இடங்களில் 'இராமன் மனைவியர்கள்' என்றே வாசகங்கள் வருகின்றன.)

11. இராமனிடம் கைகேயி எப்பொழுதும், சிறிதும் சந்தேகிக்க முடியாத அன்போடு இருந்தும், இராமன் அவளிடம் வஞ்சகமாக இருந்துவருகிறான்.

12. 'கைகேயி தீய குணமுடையவள்;

13. அவள் என் தாயைக் கொடுமை செய்வாள்.

14. அவள் என் தகப்பனைக் கொன்றாலும் கொன்றுவிடுவாள்' என்று சொல்லி இருக்கிறான்.

15. காட்டில் தனக்கு ஆபத்து நேரிடும் என்று கருதக்கூடிய சம்பவம் ஏற்படும் போதெல்லாம், 'கைகேயி எண்ணம் ஈடேறிற்று; கைகேயி திருப்தி அடைவாள்' என்று பல தடவைகள் சொல்லியிருக்கிறான்.

16. தனக்கு ஆபத்து வரப்போவதாக நினைத்த மற்றொரு சமயத்தில், 'இனி, பரதன் ஒருவனே அவனது மனைவியுடன் எவ்வித எதிர்ப்புகளும் இன்றிச் சுகமாய் அயோத்தியை ஆளுவான்' என்றெல்லாம் தனது கெட்ட எண்ணமும், நாட்டு ஆசையும், பொறாமையும் விளங்கும்படி பேசியிருக்கிறான்.

17. கைகேயி இராமனிடம், 'இராமா! அரசர் நாட்டைப் பரதனுக்கு முடிசூட்டுவதாகவும், நீ காட்டுக்குப் போகவேண்டும் என்பதாகவும் உன்னிடம் சொல்லச்சொன்னார்' என்று சொன்னபோது இராமன், 'அரசர் நாட்டைப் பரதனுக்குக் கொடுப்பதாக என்னிடம் சொல்லவில்லையே' என்று சொல்லுகிறான்.

18. தந்தையை மடையன், புத்தி இல்லாதவன் என்று சொல்கிறான்.

படிப்பகம்

www.padippakam.com



19. தந்தையை, 'நீ யாருக்கும் பட்டம் கட்டாமல் நீயே ஆண்டுகொண்டிரு; நான் காட்டுக்குப் போய் வந்து விடுகிறேன்' என்று சொல்லி, பரதனுக்கு முடிசூட்டுவதைத் தடுக்கிறான்.

20. 'எனக்குக் கோபம் வந்தால் நான் ஒருவனே எதிரிகளைக் கொன்று, என்னை அயோத்திக்கு அரசனாக்கிக்கொள்வேன். உலகத்தார் பழிப்பார்களே என்றுதான் சும்மா இருக்கிறேன்' என்கிறான். இதனால் இவன் தர்மத்தையோ, சத்தியத்தையோ இலட்சியம் செய்யவில்லை என்பதைக் காட்டிக்கொள்கிறான்.

21. தன் மனைவி சீதையைப் பார்த்து, 'நீ பரதன் மனங் கோணாமல் அவனிஷ்டப்படி நடந்துகொள்; அதனால் பின்னால் நமக்கு இலாபம் ஏற்படும்' என்கிறான்.

22. இராமன் காடு சென்ற சேதிகேட்டு மனம் வருந்தி, பரதன் இராமனைக் கூப்பிடக் காட்டிற்குச் சென்று இராமனைக் கண்டபோது, 'பரதா! குடிகள் உன்னை விரட்டிவிட்டார்களா? தந்தைக்குப் பணிவிடை செய்ய இஷ்டமில்லாமல் வந்துவிட்டாயா?' என்று கேட்கிறான்.

23. மற்றும் 'உன் தாய், அவளது எண்ணம் நிறைவேறி சுகமாய் இருக்கிறாளா?' என்றும் கேட்கிறான்.

24. பரதன் இராஜ்யத்தை இராமனுக்குக் கொடுத்துவிட்டதாகக் காட்டில் வாக்குக் கொடுத்த பிறகே—தசரதன் நாட்டை கைகேயிக்கு ஏற்கனவே 'சுல்க'மாகக் கொடுத்து விட்ட செய்தியை பரதனுக்குச் சொல்லுகிறான்.

25. பரதன் இராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு, இராமனுடைய பாதரட்சையை வாங்கி வந்து சிம்மாசனத்தில் வைத்து, தான் துறவியாக 14 வருஷ காலம் இருந்து, குறிப்பிட்ட காலத்தில் இராமன் வரவில்லையே என்று ஏங்கி, நெருப்பில் விழத் தயாராக இருப்பவனை, இராமன் சந்தேகப்பட்டு—அனுமானை விட்டு, 'நான் படைகளோடும் விபீஷணன், சுக்ரீவன் ஆகியவர்களோடும் வருகிறேன் என்று சொல்! அப்போது அவன் முகம் எப்படி இருக்கிறது, இதைக் கேட்டவுடன் அவன் என்ன நடவடிக்கை செய்கிறான், என்பவைகளைக் கவனித்து வந்து சொல்! ஏனெனில், எல்லாவகை இன்பங்களும் போகபோக்கியங்களும் நிரம்பி இருக்கும் நாட்டின்மீது யாருக்குத்தான் ஆசை இருக்காது?' என்று சொல்லிப் பார்த்துவிட்டு வரச் சொல்லுகிறான்.

26. மனைவியிடம் சதா சந்தேகமுடையவனாகவே இருக்கிறான். மனைவி நெருப்பில் குளித்துவிட்டு வந்தபிறகும், பாமர மக்கள்மீது சாக்குப் போட்டு, அவள் கர்ப்பமானதைப்பற்றிச் சந்தேகப்பட்டு—அவளிடம் பொய் சொல்லிக் கர்ப்பத்தோடு காட்டில் கொண்டுபோய்க் கண்ணைக் கட்டி விட்டுவிடச் செய்கிறான்.

27. 'சீதை கற்புடையவள்' என்று வால்மீகி சத்தியம் செய்தும் இராமன் நம்பவில்லை. அதனாலேயே அவள் சாகவேண்டியதாயிற்று.

28. தமையனைக் கொல்லச்செய்து இராஜ்யத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று கருதி, துரோக சிந்தனையோடு வந்த சுக்கிரீவன், விபீஷணன் ஆகிய அயோக்கியர்களை அவர்கள் அயோக்கியர்கள் என்று தெரிந்தே நண்பர்களாகச் சேர்த்துக்கொள்கிறான்.

29. தனக்கு யாதொரு குற்றமும் புரியாத வாலியை, சகோதர துரோகிக்காக வேண்டி மறைந்து இருந்து திடீரென்று கொல்லுகிறான்.

30. விபீஷணனை ஏற்கும்போது தன்னை அறியாமலே தனது கெட்ட எண்ணத்தையும் வஞ்சகத்தையும் தானே வெளிப்படுத்திவிடுகிறான். அதாவது—'தனக்கு மூத்தவன் தீயவனாக இருந்தாலும் அவனுக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டும் என்கின்ற அறத்தை, எல்லோரும் கைக்கொள்ள மாட்டார்கள்; உடன் பிறந்தவர்கள் எல்லோரும் பரதனைப்போல் ஆவார்களா?' என்கிறான். இதில், தான் தீயவன் என்பதை ஒருவாறு ஒப்புக்கொள்ளுகிறான்.



31. வாலியைக் கொன்றதற்குச் சமாதானமாக, 'மிருகங்களிடத்தில் தர்மத்தை அனுசரிக்க வேண்டியதில்லை' என்று வாலிக்குச் சொல்லிவிட்டு, அதே வாலி மனிதர்களைப் போல் தர்மத்தை அனுசரிக்கவில்லை என்பதற்காகவே அவனைக் கொன்றிருக்கிறான். வாலிமீது சுமத்தப்பட்ட குற்றத்திற்குக்கூட வாலியைச் சமாதானம் கேட்காமல், இராமன் தன்னலம்கொண்ட சுக்ரீவன் பேச்சைக் கேட்டே கொன்றிருக்கிறான்.

32. இராமன் பல பெண்களை மூக்கு, முலை, காது ஆகியவைகளை அறுத்து அங்கஈனமாக்கிக் கொடுமைசெய்யச் செய்திருக்கிறான்.

33. பல பெண்களைக் கொன்றிருக்கிறான்.

34. பெண்களிடம் பொய்பேசியிருக்கிறான்.

35. பெண்களைக் கேவலமாய் மதித்திருக்கிறான்; 'பெண்களை நம்பக்கூடாது' என்கிறான்; 'மனைவியிடத்தில் இரகசியத்தைச் சொல்லக்கூடாது' என்கிறான்.

36. அதிக காமாந்தகாரனாக இருக்கிறான்.

37. அனாவசியமாக உயிர்களைக் கொன்றும் தின்றும் இருக்கிறான்.

38. தான் அரக்கர்களைக் கொல்வதற்கென்றே காட்டிற்கு வந்ததாகவும், அரக்கர்களைக் கொன்று மடிவிப்பதாகத்தான் யாருக்கோ வாக்குக் கொடுத்துவிட்டுக் காட்டிற்கு வந்ததாகவும் சொல்லியிருக்கிறான்.

39. அரக்கர்களோடு வலிய சண்டைக்குப்போகவேண்டும் என்கிற ஏற்பாட்டுடனே, சீதை தடுத்தும் வலிய இராவணனது எல்லைக்குள் சென்றிருக்கிறான்.

40. கரனோடு போர்புரியும்போது, 'உங்களையெல்லாம் கொல்லுவதற்கே நான் காட்டிற்கு அனுப்பப்பட்டேன்' என்கிறான்.

41. ஒருவித யோக்கியதையும் இல்லாத—துரோகியாகிய சுக்ரீவனிடம் இராமன் தன்னலத்துக்காகச் சரணமடைகிறான். 'என்னை ஆட்கொள்ளவேண்டும்; கருணை காட்டவேண்டும்' என்கிறான்.

42. இலங்கையை விபீஷணனுக்குப் பட்டம்கட்டிவிட்டு, சீதையை விட்டுவிட்டால் இராவணனுக்கு இலங்கையை விட்டுவிடுவதாக அங்கதனிடம் இராமன் சொல்லியனுப்புகிறான். இதிலிருந்து இராவணன்மீது வேறு குற்றமில்லை என்று தெரிகிறது.

43. பரதனும், கைகேயியும், குடிகளும், குருவும் காட்டுக்கு வந்து இராமனை நாட்டுக்கு வரும்படி வருந்தியும் 'சத்தியாக்கிரகம்' செய்தும் அழைத்தபோது, 'தந்தை சொல்லைக் காப்பாற்றுவேனே ஒழிய வேறு யாருடைய பேச்சையும் கேட்கமாட்டேன்' என்று சொல்லி நாட்டுக்கு வர மறுத்துவிட்ட இராமன்—அதே தந்தை சொல்லுக்கு விரோதமாய், அயோத்தியைப் பட்டம் கட்டிக்கொள்ள மாத்திரம் எப்படிச் சம்மதிக்கிறான்!

44. சம்மதித்தது மாத்திரமல்லாமல், தந்தை இராமனைக் காட்டுக்குப் போகச் சொன்ன நேரம் முதல் திரும்பி அயோத்திக்கு வந்து முடிசூட்டிக் கொள்ளுகிறவரை—அதே கவனமாக, ஆசையாக, நம்பிக்கையாக இருக்கிறான்.

45. தபசு செய்ததற்காகச் சூத்திர வாலிபனைக் கொன்றிருக்கிறான்.

46. கடைசியாக, சாதாரண மனிதர்களைப் போலவே, இராமன், இலட்சுமணனையும் தள்ளிவிட்டுத் தானும் ஆற்றில் விழுந்து சாகிறான். பிறகு, உப இந்திரனாக ஆகிறான். (தோழர் சி. ஆர். சீனிவாசய்யங்கார் மொழிபெயர்ப்பு அயோத்தியா காண்டம் சருக்கம் 8, பக்கம் 28, 36-வது பாயிண்டுக்கு உதாரணமாக.)



படிப்பகம்

www.padippakam.com



இலட்சுமணன்: இலட்சுமணனைப்பற்றி ஆராய்ந்து பார்த்தால், இவனிடம் குறிப்பிடத்தக்க மேலான விஷயமாக ஒன்றுகூடக் கிடைப்பதில்லை. இராமனுடன் கூடவே இருக்கிறான் என்கிற ஒரு விஷயத்தினால்தான் இலட்சுமணன் பெயர் இராமாயணத்தில் அடிபடுகிறது. இலட்சுமணன் பொதுவாக சராசரி மனிதத் தன்மைக்கு மேம்பட்டவனாக எங்கும் காணக் கிடைப்பதில்லை. இவன் எப்படித்தான் 'இளைய ஆழ்வார்' ஆனானோ தெரியவில்லை.

1. இராமன், பரதனுடைய இராஜ்யத்தை அபகரிக்கச் செய்த சூழ்ச்சிக்கெல்லாம் இலட்சுமணனும் உடந்தையாகவே இருந்திருக்கிறான்.

2. இராமன் இலட்சுமணன்மீது சந்தேகப்பட்டு, 'இலட்சுமணா! பட்டாபிஷேகம் எனக்கு ஆனபோதிலும் நீதான் நாட்டை ஆளப் போகிறாய்' என்று சொன்னவுடன்— நாட்டை இராமன் கைப்பற்ற எல்லாவிதமான அக்கிரமங்களையும் செய்யத் துணிகிறான். சுமத்திரையின் மக்களான இலட்சுமணன் சத்துருக்கனன் இருவரும் எந்தக் காரணம் கொண்டும் நாடு தங்களுக்குக் கிடைக்காதென்று கருதித்தான்—இலட்சுமணன் இராமன் பக்கமும், சத்துருக்கனன் பரதன் பக்கமும் சேர்ந்திருக்கிறார்கள்போலும்!

3. இலட்சுமணன் தன் தந்தையாகிய தசரதனை வைகிறான்; அவனை அயோக்கியன் என்கிறான்.

4. தந்தையை, 'சிறையில் வைக்கவேண்டும்' என்கிறான்.

5. தகப்பனைக் கொல்லவேண்டும் என்கிறான்.

6. 'தந்தையைக் கொல்லுவது மனுதர்மம்' என்றுகூடச் சொல்லுகிறான்.

7. 'பரதனையும், பரதனுக்கு வேண்டியவர்களையும் பூண்டில்லாமல் அழித்து விடுகிறேன்' என்கிறான்.

8. இராமன், 'தனக்கு நாடு கிடைக்காமல்போனது கடவுள் செயல்' என்று வருந்துகிறபோது—இலட்சுமணன், 'பேடிகளும், மடையர்களுந்தான் கடவுள் செயலைப் பற்றிப் பேசுவார்கள்' என்கிறான்.

9. 'கைகேயியும், தசரதனும் முன்னதாகப் பேசிவைத்துக்கொண்டு உன்னை ஏமாற்றவே இந்தப்படி அபிப்பிராயப் பேதப்பட்டவர்கள்போல் நடிக்கிறார்கள்' என்கிறான்.

10. 'தசரதனையும் கைகேயியையும் இப்போதே காட்டுக்குத் துரத்திவிட்டு நான் உனக்குப் பட்டம் சூட்டுகிறேன், பார்' என்கிறான்.

11. 'உனக்குப் பட்டம் சூட்டிக்கொள்ள இஷ்டமில்லையானால் நான் நாட்டைக் கைப்பற்றி நானே அரசாளுகிறேன்' என்கிறான்.

12. நாட்டைவிட்டுப் போகும்போது, 'வேசையர்களால் அலங்கரிக்கப்பட்ட அயோத்தியை ஆளுபவர்களே பாக்கியசாலிகள்' என்றும்,

13. 'நாம் திரும்பவும் அயோத்திக்கு வருவோமா?' என்றும் பிரலாபிக்கிறான்.

14. வணங்கியும், பிரார்த்தித்தும் இராமனை முடிசூட்டிக்கொள்ள நாட்டுக்கு அழைத்துப்போகக் காட்டுக்கு வந்த பரதனைக் கண்டவுடன், 'இதோ, நான் அவனைக் கொல்லப்போகிறேன்!' என்கிறான்.

15. காட்டில் விராதன் என்கின்றவனைக் கண்டவுடன், 'இராஜ்யம் போய்விட்டதற்காக பரதன்மீது இருக்கும் ஆத்திரத்தை இவன்மீது காட்டுகிறேன்' என்று சொல்லுகிறான்.

16. சூர்ப்பனகையிடம், 'சீதை கெட்ட நடத்தையுள்ளவள்; வயிறு (கொங்கை) சரிந்தவள்' என்கிறான்.



17. சீதை சந்தேகிக்கும்படியாகவும்; சீதையை அனுபவிக்கக் காதல் கொண்டிருப்பவனாகவும் கருதும்படி நடந்துவந்திருக்கிறான்.

18. 'சீதையை எவன் எடுத்துப்போனால்தான் என்ன? அவள் செத்தால்தான் என்ன? கேவலம் ஒரு பெண்ணுக்காக நாம் வருந்தலாமா?' என்று தமையன் மனைவியை அலட்சியமாய்ப் பொறுப்பில்லாமல், அவனிடமே பேசுகிறான்.

19. தாடகை, சூர்ப்பனகை, அயோமுகி ஆகிய பெண்களைக் காது, மூக்கு, முலை ஆகியவைகளைக் கொய்து கொடுமைப்படுத்தினான்.

20. சுக்ரீவனிடம், 'சோகத்தால், புத்தி தடுமாறி இருக்கும் இராமன் உன்னைச் சரணமடைய வந்திருக்கிறான்; கருணை காட்டவேண்டும்' என்று சொல்லி அடைக்கலம் புகுகின்றான்.

21. பிறகு அந்த சுக்ரீவனையே, 'கொன்றுவிடலாம்' என்று இராமனிடம் அனுமதி கேட்கிறான்.

22. இராமன் பேச்சைக் கேட்டு, சீதையிடம் பொய் சொல்லி, வஞ்சித்து, கர்ப்பத்துடன் அவளை அழைத்துப்போய்க் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டுவிட்டு வருகிறான்.

23. இலட்சுமணனுக்கு இராமனும், பரதனும் அண்ணன்மார்கள் ஆவார்கள். அப்படி இருக்க, இராமனுக்கு அடிமையாகவும் பரதனுக்கு எதிராகவும் நடந்துகொள்கிறான். அதுபோலவே, கோசலையிடம் அன்பாகவும், கைகேயியிடம் வெறுப்பாகவும் நடந்து கொள்கிறான். இதன் காரணம் நாட்டாசை யல்லாமல் வேறு என்ன?

['குடி அரசு'–கட்டுரை—8-1-1944]

இனி பரதன், சத்துருக்கனன், கோசலை, சுமத்திரை, கைகேயி, சுமந்திரன், வசிஷ்டர், அனுமன், வாலி, சுக்ரீவன், அங்கதன், விபீஷணன், இராவணன் ஆகியவர்களின் சேதிகளைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

பரதன்: பரதனிடத்தில் எவ்வித பெருங் குணமும் இல்லை.

1. பாட்டன் வீட்டில் 10 வருஷ காலம் விளையாட்டுப் பிள்ளையாய் இருந்து கொண்டான்.

2. கூட்டி வர ஆள் அனுப்பப்பட்ட பிறகே அயோத்திக்கு வருகிறான். தாய், தந்தை, வீடு ஆகியவைகளைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

3. பாட்டன் வீட்டிலிருந்து வந்தவுடன், இராமன் காட்டுக்கு அனுப்பப்பட்டான் என்று கேள்விப்பட்டதும், 'இராமன் எந்தப் பெண்ணையாவது கற்பழித்துவிட்டானா?' என்று கேட்கிறான்.

4. தனக்கு நியாயமான முறையில் கிடைக்கவேண்டிய இராஜ்யத்துக்காக எவ்வளவோ பாடுபட்டு இராஜ்யம் தேடிவைத்த தன் தாயாரை, விஷயம் தெரிந்து கொள்ளாமல் மடத்தனமாக, 'சண்டாளி, பாவி, தீயவளே, தகாத ஒழுக்கமுள்ளவளே, பேயே, நீ கெட்ட நடத்தை உள்ளவள்; நீ செத்துப் போ! இராஜ்யத்தை விட்டு ஓடிப் போ, உன் வயிற்றில் பிறந்தேனே!' என்று முட்டாள்தனமாகவும், அயோக்கியத்தனமாகவும் பேசிக் கடிந்துகொண்டு மிகக் கேவலமாக அவளை நடத்துகிறான்.

5. தன் தந்தையைக் 'கொடியவன்' என்று சொல்கிறான்.

6. இராமனிடம் காட்டில் பேசும்போது, 'அந்தப்புரப் பெண்கள் களிக்கும்படி முடி சூட்டிக்கொள்' என்கிறான்.

படிப்பகம்

www.padippakam.com



7. பரதனுக்கும் பல மனைவிகள் இருந்திருக்கிறார்கள்.

சத்துருக்கனன் : இவன் மகா மூடன்.

1. தனது சிற்றன்னையாகிய கைகேயியை வைகிறான்.

2. உண்மையை ஆதிமுதல் தெரிந்து தனது எஜமானியாகிய கைகேயிக்கு நியாயம் செய்யவேண்டும் என்று பாடுபட்ட மந்தரையைக் கீழே தள்ளி, கால்கள் முறியும்படி அடித்துக் கொடுமை செய்கிறான்.

[குறிப்பு : தகப்பனையும் தாயையும் இவ்வளவு இழிவாய்ப் பேசிக் கேவலப்படுத்திய பரத சத்துருக்கனன்கள், தமையனிடத்தில் மாத்திரம் இவ்வளவு பக்தி காட்டியிருப்பது பொருத்தமற்றதாகும்.]

கோசலை: கோசலை ஒரு கீழ்த்தரக் குடும்பத்துச் சக்களத்தி போலவே நடந்து கொண்டிருக்கிறாள்.

1. எப்படியாவது தன் மகனுக்குப் பட்டம் கிடைக்கவேண்டுமே என்கின்ற ஆத்திரம் சதா இருந்து வந்தது.

2. கைகேயிமீது பொறாமையும் துவேஷமும் இருந்துகொண்டே இருக்கிறது.

3. 'நான் கிழவி ஆகிவிட்டேனே; என் சரீரம் தளர்ந்துவிட்டதே; அரசர் என்மீது பிரியமாய் இருக்கமாட்டாரே!' என்று துக்கப்படுகிறாள்.

4. கணவனை மிகக் கேவலமாகவும் அலட்சியமாகவும் பேசி யிருக்கிறாள்.

சுமித்திரை : சுமித்திரை ஒரு அநாமதேயமாகவே இருந்திருக்கிறாள்.

1. இவளுக்குத் தன் மகனுக்குப் பட்டம் கிடைக்காது என்பது தெரிந்ததால்—இராமனுக்கு நாடு கிடைக்க வேண்டுமென்று ஆசை அதிகம்.

2. 'இராமன் 14 வருடங்கள் பொறுத்து நாட்டுக்கு வந்து ஒரு நொடிப்பொழுதில் பரதனை வென்று இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொள்வான், கவலைப்படாதே' என்று கோசலைக்குச் சொல்லுகிறாள். ஆகவே, பரதனை மோசம் செய்யவேண்டுமென்கிற கெட்ட எண்ணம் இருவருக்கும் இருந்திருக்கிறது என்பது இதனால் விளங்குகிறது.

கைகேயி : 1. வீரமுடையவள். அழகுள்ளவள்; பட்டத்து அரசியாய் இருந்தவள்.

2. இரண்டு தடவை புருஷனின் உயிரைக் காத்தவள்.

3. புருஷன் உயிரைக் காத்தவளாதலாலும், தசரதன் தன் கலியாணத்தின்போதே நாட்டைக் கைகேயிக்குக் கொடுத்துவிட்டதாலும் ஆகிய இரண்டு காரணங்களாலும் நாடு கைகேயிக்குச் சொந்தமாகி இருக்கிறது.

4. அப்படி இருந்தும் பரதன், 'நாட்டை இராமனுக்குக் கொடுத்துவிடுகிறேன்—கொடுத்துவிட்டேன்' என்று சொன்னபோதெல்லாம் கைகேயி சிறிதும் ஆட்சேபிக்கவில்லை.

5. தனக்கு உள்ள பாத்தியதையைக் காப்பாற்றப் பாடுபட்டாளே தவிர, யாதொரு கெட்ட எண்ணமும் கொள்ளவில்லை; கெட்ட காரியமும் செய்யவில்லை.

சுமந்திரன் : மந்திரியாக இவன் யோக்கியமாய் நடந்துகொள்ளவில்லை.

1. தசரதனின் சூழ்ச்சிக்கு அனுகூலமாக நடந்து, துர்மந்திரியாகவே இருந்திருக்கிறான்.

2. அரசன் மனைவியான கைகேயியைக் கேவலமாகப் பேசியிருக்கிறான்.

3. பொய்யும் பேசியிருக்கிறான்.



வசிஷ்டர் : குருவான வசிஷ்டர் சாதாரண புரோகிதன் போலவே நடந்து கொண்டிருக்கிறார்.

1. நாடு பரதனுக்குப் பாத்தியதைப்பட்டுவிட்டது என்பது இவருக்குத் தெரிந்திருந்தும், இராமனது முடிசூட்டுக்கு இசைந்து சூழ்ச்சி செய்கிறார்.

2. அவசரம் அவசரமாகப் பொய்யான முகூர்த்தம் வைத்துக்கொடுக்கிறார்.

3. இவர் பட்டாபிஷேகத்துக்கு வைத்த முகூர்த்தம் வனவாசத்துக்கு முடிந்தது.

அனுமன் : இவன் ஒரு சாதாரணமான ஆள்; புத்திசாலித்தனமான காரியம் என்று ஒன்றும் செய்துவிடவில்லை. இவனது பெருமை யெல்லாம் பகுத்தறிவுக்கு ஒவ்வாததும்—அசாத்தியமானதுமான காரியங்கள் பல செய்ததாகச் சொல்லப்படுவதேயாகும். ஒரு நல்ல—பரிசுத்தமான அடிமைபோல் நடந்துகொண்டிருக்கிறான். மற்றும், நீதிக்கு ஒவ்வாததுமான காரியங்கள் பலவும் செய்திருக்கிறான்.

1. அக்கிரமமாக—நடு இராத்திரியில் இலங்கைக்குத் தீ வைத்து நிரபராதிகளைக் கொன்றும் நஷ்டப்படுத்தியும் இருக்கிறான்.

2. சீதையிடம் கெட்ட வார்த்தைகளைப் (ஆண்குறியைப் பற்றிக்கூட) பேசியிருக்கிறான்.

வாலி : வாலி எவ்விதக் குற்றமும் செய்யவில்லை.

1. தம்பியைக் கொல்லவேண்டும் என்றும் கருதவில்லை.

2. சுக்ரீவனே வாலியிடம் வலியச் சண்டைக்கு வந்திருக்கிறான்.

3. சுபாவத்திலும் வாலியிடம் குற்றம் இருந்ததில்லை.

4. தம்பியைக் கொல்லவில்லை என்று மனைவியிடம் வாக்குக்கொடுத்துவிட்டுப் போருக்கு வந்தான்.

5. மிகப் பொறுமையும் வலிமையும் உடையவன்.

6. மிக்க நீதிமான்.

7. நியாயமான முறையிலோ—யோக்கியமான முறையிலோ இவனை யாரும் வெல்ல முடியாது.

8. இவன் அனேக பெரியோர்களுக்கு நண்பன்.

9. இராமனை யோக்கியன் என்று நம்பினவன்.

10. இவன் செத்த பிறகு சுக்ரீவன், வாலியின் பெருமையைக் கூறி, 'இப்படிப்பட்ட தமையனை இழந்தபின் நான் உயிர் வாழமாட்டேன்; நெருப்பில் விழுந்து சாவேன்' என்கிறான்.

இப்படிப்பட்டவனைக் கொன்றதற்கு இராமன், 'மிருகங்களைக் கொல்லுவதில் நீதியைக் கவனிக்க வேண்டியதில்லை' என்கிறான். வாலியா மிருகம்?

சுக்ரீவன் : தமையனுக்குத் துரோகம் செய்தவன். தமையனைக் கொல்வதற்காகவே இராமனுக்கு அடிமை ஆனான்.

['குடி அரசு'—கட்டுரை—15-1-1944]

## 3. இராமாயண ஆராய்ச்சி

இராட்சதர்கள் தபசு செய்தார்கள்; வரம் பெற்றார்கள்; அந்த வரத்தைக்கொண்டு அக்கிரமம் செய்தார்கள்—என்பனவெல்லாம் இந்நாட்டுப் பழங்குடி மக்களையும் அவர்கள் தலைவர்களையும் இராட்சதர்கள் என்று சொல்லிக்கொள்வதற்குக் கடவுள்களும் தேவர்களும் என்ற பெயர்கொண்ட ஆரியர்கள் வழிதேடிக்கொண்ட ஒரு சாக்கே அல்லாமல், அவர்களது வரம் எதுவும் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் யார்? எப்போது உண்டானார்கள்? எப்படி உண்டா
னார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? என்பதற்கு ஒரு ஆதாரமும்
கிடையாது.

அதுபோலவே—தேவர்கள் யார்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்?
ஏன் வந்தார்கள்? உலகிற்கு அவர்களால் என்ன பயன்? என்பதற்கும் ஆதாரம் கிடையாது.

இவர்கள் எல்லாம் இமயமலைக்கு இப்புறம் தான்—அதாவது 'இந்தியக் கண்டம்'
என்னும் பிரதேசத்தில் இருந்தார்களே ஒழிய மற்ற இந்தியாவுக்கு அப்பாற்பட்ட அய்ந்து
கண்டங்களிலும் இருந்ததாகவோ, அந்தக் கண்டங்களைப்பற்றி இவர்கள் ஏதாவது தெரிந்
திருந்ததாகவோ சரியான தகவல்களைக் காணோம்.

கீழ் ஏழு லோகம், மேல் ஏழு லோகம் கண்டுபிடித்தவர்கள்—ஆப்பிரிக்கா'
அமெரிக்கா, ஆசியா, அய்ரோப்பாவைப்பற்றிய ஒன்றையும் கண்டுபிடித்ததாகவோ அல்லது
அங்குள்ளவர்கள் இந்தியாவையும் சிவ, விஷ்ணு, தேவர், அசுரர்-இராட்சதர், சூரன்
ஆகியவர்களை அறிந்ததாகவோ தகவல்களையும் காணமுடியவில்லை. அவர்கள் அறிந்த
வாழ்க்கையில் உள்ள இடம், மலை, ஆறு, கடல், ஊர், வீடு, வாசல் எல்லாம் இந்தியாவில்
இருப்பவைகளைத்தான் சொல்லப்படுகின்றனவே ஒழிய—மற்ற நாட்டு மலை, காடு,
வானம், நதி, சமுத்திரம் எதுவும் சொல்லப்படவில்லை. கடவுள்களும், தேவர்கள் வாழ்க்கை
களில் காணப்படும் 'பூலோகமே' இந்தியாவாகத்தான் கருதப்பட்டிருக்கின்றதே தவிர
வேறு ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்த', இந்தியக் கண்டத்தின் பூர்வ நிலை—
அதாவது ஆரியர் வருவதற்கு முன் இருந்த நிலையையும் யோசித்துப் பார்த்தால் சிவன்,
விஷ்ணு அல்லது சேயோன், மாயோன்—மற்றும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய
வற்றில் வரும் 'உலகம்' முதலியவை, பெரும்பாலும் இந்தியாவுக்குள் ஆரியர் வந்தபிறகு
ஏற்பட்டவைகள்தாம் என்பதும் அவை இந்தியாவைப் பொறுத்தவைதாம் என்பதும்
சாதாரணமாய் விளங்கும். அவைகளைப்பற்றித்தான் மற்ற வேறு ஆதாரங்களும் விளக்கு
கின்றன.

சிந்து நதி தீரத்தைப்பற்றியும், அங்கு மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்
களில் கண்டுபிடிக்கப்பட்ட பூர்வ சின்னங்களைப் பற்றியும் பேசுவதில்—ஆரியர்களுக்கு முன்
தமிழர்கள் அங்கிருந்தார்கள் என்றும், இந்தியக் கண்டம் பூராவும் தமிழர்கள் இருந்தார்கள்
என்றும்தான் சொல்லப்படுகிறது.

ஆனால் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் இன்றைக்கு 6000, 7000 ஆண்டு
காலத்துக்கு முந்தியது என்றும் சொல்லப்படுகிறது.

ஆரியர்களுக்கு முன்பே இந்த இடங்கள் நாகரிகமாய் இருந்திருந்தால் ஆரியர் இங்கு
எப்படி வந்திருக்க முடியும்? இந்தியக் கண்டம் முழுவதும் சமயம், சமுதாயம், கலை, பழக்க
வழக்கம் முதலிய யாவும் ஆரிய மயமாய்—ஆரிய ஆகமம், ஆரிய ஆச்சாரம், தர்மம், ஆரியக்
கதை ஆகியவைகளே கொண்ட இலக்கண-இலக்கியம், சரித்திரம், காவியம் ஆகியவை
எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?

கோவில்கள் எல்லாம் தமிழர்களுடையவையா, ஆரியர்களுடையவையா என்று
பார்த்தாலும் அவற்றிற்குப் பணம் செலவு செய்தவனும், கட்டடம் கட்டினவனும், அதற்கு
மானியம், மடப்பள்ளி விட்டவனும் தமிழனாக இருக்கலாம்; சந்தேகமே இல்லை. ஆனாலும்
சொந்தக்காரனும், கோவில் ஆகமக்காரனும், கடவுள் தன்மைக்காரனும் ஆரியனாகத்
தானே இருக்கிறான்?

இக் கோவில்களில் உள்ள உருவங்கள்—அதன் தோற்றத்திற்கு ஆன கதைகள்-பூசை
உற்சவ முறைகள்-நைவேத்திய சாதனங்கள் ஆகியவை ஆரியர்களுடையதாகத்தானே



இருந்து வருகின்றன? அந்தக் கோவில்கள் கட்டப்பட்ட காலத்திலும் அப்போதுள்ள
அரசர்கள் ஆட்சியிலும், ஆரிய ஆதிக்கம் தலைசிறந்து உச்ச ஸ்தானத்தில் இருந்தது என்
பதற்கு முதல், இடை, கடைச் சங்கங்களும் அப்போதிருந்த புலவர்களும், அரசர்
களும், அரச நீதியும் அவர்கள் கைக்கொண்டிருந்த சமயங்களும் உதாரணமாக இல்லையா?

இந்த நிலையில் அசுரர், இராட்சதர்கள் யாராக இருந்திருக்க முடியும்? அவர்கள்
எங்கிருந்து வந்திருக்க முடியும்? அதுவும் இந்தியாவிற்குள் உள்ள அயோத்தி, மதுரை,
டெல்லி, மிதிலை, காந்தாரம், விராடம், விதர்ப்பம், தண்டகாரண்யம், கோதாவரி, சித்திர
கூடம் ஆகிய இடங்களும்—அங்கும் அதற்குப் பக்கத்திலுமே தாடகை, கரன், சூர்ப்பனகை,
மாரீசன்—முதலியவர்களும் இருந்தார்கள் என்றால் இவர்கள் யாராக இருந்திருக்க முடியும்?
இதைக் கண்டுபிடிக்கப் பெரிய பெரிய புராண, சரித்திர, இலக்கிய, காவியநூல் ஆராய்ச்சி
ஏன் வேண்டும்?

இவை பொய்க் கதைகளாக—கற்பனைக் கதைகளாக இருந்தால் கவலை வேண்டாம்.
மெய்க்கதை—சிறிதாவது நடந்த கதை என்றால்—கோதாவரி நதிக்குப் பக்கத்திய தேசத்தில்
தான் இராவணன் தங்கை சூர்ப்பனகை, இராவணன் தம்பி கரன் முதலியவர்கள் இருந்திருக்
கிறார்கள். அவர்களைப் பார்த்து, 'உங்களைக் கொல்லவே நான் வந்தேன்' என்று இராமன்
சொல்லுகிறான். முனிவர்களும், 'பக்கத்தில் ஜனஸ்தானம் இருக்கிறது; அங்கு
இராட்சதர்கள் இருக்கிறார்கள்' என்கிறார்கள்.

இந்தியக் கண்டத்தின் பாகத்தைக் கடல் கொண்ட காலம் பதினாயிரம் வருஷங்
களுக்கு முற்பட்டது என்கிறார்கள். ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தது 6000 வருடத்திற்கு
உட்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பே தமிழர்கள் இந்தியாகண்டம் பூராவும் பரவி
இருந்ததோடு, தமிழர் ஆட்சியும் அங்கெல்லாம் பரவி இருந்தது என்றும் சொல்லி—
அஸ்ஸாம் கண்டுபிடிப்புக்களையும், சிந்து கண்டுபிடிப்புக்களையும் உதாரணம் காட்டு
கிறார்கள்.

மீனக் கொடியோனாகிய—தெற்கத்திய 'சம்பாரன்' என்னும் 'அசுர' அரசனுடன்,
சண்டைபோட்டதாகவும் வால்மீகி இராமாயணத்தில் இருக்கிறது. சம்பாரன் என்னும் ஒரு
பாண்டிய மன்னன் இருந்ததாகவும் இலக்கியம் கூறுகிறது.

கதையை வளர்த்துவதற்காக, 'இராமன் சீதையை அங்கு போய்த் தேடினான்'
என்று சொல்லப்பட்டிருக்கிறதே அல்லாமல், சீதை காணாமல்போன சிறிது காலத்துக்
குள்ளாகவே, இராவணன்தான் தூக்கிக்கொண்டு போனான் என்பதும், அவன் தெற்கே
போனான் என்பதும் தெரியும்.

அன்றியும், இராவணன் சீதையின் பக்கத்திலேயே இருந்து இலட்சுமணன் வெளியில்
சென்றவுடன் தூக்கிவந்திருக்கிறான். மாரீசன், தாடகையின் மகன் பக்கத்திலேயே
வசித்திருக்கிறான். சூர்ப்பனகை தனது மூக்கு அறுபட்ட உடனே இராவணனிடம் சென்று
இரத்தச் சிந்தலோடு முறையிட்டிருக்கிறாள். இராவணன் உடனே மாரீசனோடு அதைப்
பற்றிப் பேசுகிறான். விஸ்வாமித்திரன் யாகம் செய்ததும்—தாடகை அதைக் கெடுத்ததும்—
இந்தியாவில் இன்னும் வடக்கில் என்றாலும் சமீபமாகத்தான் காணப்படுகிறது. சுக்கிரீவன்
அனுமார் முதலியவர்களையும் பர்ணசாலைக்குச் சமீபத்திலேயே சந்திக்கிறான். ஜடாயு
இரத்தம் காயாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போதே இராம இலட்சுமணர்கள்
காண்கின்றார்கள். இராமன், 'நான் புத்தியில்லாமல் இராட்சதர்களை விரோதித்துக்
கொண்டேன்' என்று வருந்துகிறான்.

ஆகையால், வால்மீகி கதைப்படி, இராட்சதர்கள்-இராட்சத அரசர்கள் என்று
சொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் திராவிட நாட்டிற்குள் அல்லது நமக்குச் சமீபத்திற்குள்
தான் இருந்திருக்கவேண்டுமே ஒழிய அவர்கள் வெளி நாட்டார்கள் என்றோ, வேறு இனத்
தார்கள் என்றோ சொல்லுவதற்குத் தக்க ஆதாரம் எதுவும் அதில் காணப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



முதலியார்: அடே பைத்தியக்காரப் பயலே, இதெல்லாம் பெரியவாள் காலம் முதற் கொண்டே நடந்துவரும் வழக்கமடா?

தம்பி: சரி அப்பா, அந்த மடப் பெரியவாள் வழக்கம் இதுவரையில் போதும். இனி பகுத்தறிவுச் சிறியவர்கள் பழக்கம் அமுலுக்கு வரவேண்டியது ஆகும்—தெரியுமா? இனிமேல் அவர்கள் இந்த வீட்டுக்குள் நுழையப்படாது. அவன் நம்மை எல்லாம் சூத்திரன் என்கிறான். அதற்கு அவனுக்கு அரிசி, பருப்பா? அப்படி என்றால், 200 வேலி எனக்குப் பிரித்துக் கொடுத்துவிடுங்கோ!

அண்ணியார்: தம்பிகிட்டே பேசாதீங்கோ! திவசமும் வேண்டாம், ஒரு கல் லெடுப்பும் வேண்டாம். அப்படிக் கொடுக்க வேணுமுன்னா—'காசி, கீசி; கயா, கியா' போய் அங்கு கொடுத்துவிட்டு வருவோம். தம்பிகிட்டே கலகம் வேண்டாம். குடும்பம் கலைந்து போகும். நான் அப்பவே மீட்டிங்குக்கு-கூட்டத்துக்கு நம் தம்பியை அனுப்ப வேண்டாம்னு சொன்னேன். படுங்கோ; நிறுத்துங்கோ இந்தப் பேச்சை, இவ்வளவோட! யாராவது வரப்போறா!

['சித்திரபுத்திரன்' உரையாடல்–'குடிஅரசு'—27-11-1343]

## 11. சோதிடம்

இந்தியாவில் இந்துக்கள் சாமியாடுதல், வாக்குச் சொல்லுதல்; பூதம், பேய், பிசாசு என்பவை மனிதனை அடித்தல், மனிதனைப் பிடித்தல்; மந்திரம், மந்திரித்தல், பில்லி சூன்யம்செய்து மக்களுக்குத் துன்பம், சாவு முதலியவை உண்டாக்குதல்; குட்டிச்சாத்தான், கருப்பு முதலியவைகளைக் கொண்டு சித்து விளையாடுதல், வசியம் செய்தல்; முன்பிறவி, மறுபிறவி உண்டெனல்–ஆகியவைகளில் நம்பிக்கைகொண்டு தங்கள் வாழ்க்கை நலத்திற் கென்றும், எதிரிகளின் கேட்டிற்கென்றும், எப்படித் தங்கள் பணத்தையும் நேரத்தையும் உபயோகிக்கின்றார்களோ அதுபோலவே—தங்கள் வாழ்க்கைக்குச் சோதிடம் என்னும் விஷயத்திலும் அதிக நம்பிக்கை வைத்துப் பணத்தையும், நேரத்தையும் செலவுசெய்து வருகின்றார்கள். இதனால், மக்களின் வாழ்க்கைக்கு எவ்வளவோ கெடுதிகளும் ஏற்பட்டு வருவதைக் கண்கூடாய்ப் பார்க்கிறோம். எப்பொழுதுமே சோதிடன், மந்திரவாதி, கோயில் குருக்கள் ஆகிய மூவரும் மக்களின் பேராசைக்கும் முட்டாள்தனத்திற்கும் பங்கு தாயாதி களேயாவார்கள்.

எப்படியெனில், முதலில் சோதிடன், ஒருவனுடைய சாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்லுவதன்மூலம் கண்டம் நீங்க சாந்தியும், கிரகதோஷ பரிகாரத்திற்குச் சாமிகளுக்கு அர்ச்சனை செய்யும்படியும் சொல்லுவான். இதைக்கேட்ட மனிதன் தன் ஆசைக்காகவும், பயத்திற்காகவும் மந்திரவாதியைக் கூப்பிட்டு சாந்தி கழிக்கச் சொல்லுவான். இந்த மந்திர வாதிகள் அனேகமாய் வைத்தியர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் சாந்தி கழிக்கக் கடைச் சாமான்கள் பட்டியல் போடும்போதே—ஒரு மண்டலம் (48 நாள்), அரை மண்டலம் நவக் கிரகங்களுக்கோ அல்லது குறிப்பிட்ட சனி, செவ்வாய் முதலிய ஏதாவது ஒரு கிரகத் திற்கோ ஒரு சாமிக்கோ அர்ச்சனை; எள்ளு, பருத்திக்கொட்டை முதலிய தானம்; விளக்கு வைத்தல், அபிஷேகம் செய்தல் ஆகியவைகளையும்; ஏதாவது புண்ணிய புராணம் படித்தல் முதலியவைகளையும் சொல்லிவிடுவான். இவைகளையெல்லாம் செய்வதால் மந்திர வாதிக்கும், அர்ச்சகனுக்கும் வரும் வரும்படியில் ஒரு பாகம் சோதிடனுக்கும் சேர்ந்துவிடும்.

இந்தப்படியே எங்கும் நடப்பது வழக்கம். ஆகவே, இந்த விஷயத்தில் மந்திரம், அர்ச்சனை ஆகியவைகளைப் பற்றி விசாரிக்கும்முன் சோதிடம் என்பது பற்றி ஆராய்வோம்.

சோதிடம் என்றால் என்ன? அது உண்மையா? அப்படி என்று ஒன்று இருக்க முடியுமா?



சோதிடம் என்பது உலக வழக்கில், அனுபவத்தில் ஒரு மனித ஜீவனுடைய பிறந்த காலத்தை ஆதாரமாய் வைத்து அந்த மனிதனின் வாழ்க்கை, அதன் சம்பவம், பலன் ஆகிய வைகளை மொத்தமாய் வருஷப் பலனாயும், மாதப் பலனாயும், தினப் பலனாயும், நிமிஷப் பலனாயும் சொல்லுவதும்; அவற்றுள் துன்பம் வரத் தக்கது ஏதாவது நேர்ந்தால் அதற்கு ஏதாவது பரிகாரம் செய்து தடுத்துக்கொள்வதும்; இஷ்ட சித்திக்கு ஏதாவது விரோதமாய் இருந்தால் அதற்கு ஏதாவது பரிகாரங்கள் செய்வதன் மூலம் விரோதத்தை நீக்கி சித்தி யடைய முயற்சிப்பதும் ஆகிய காரியங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதாகும். இந்தச் சோதிடம் முன்சொன்னது போல், பிறந்த காலத்தைக் கொண்டு சொல்வதோடு, மற்றும் வேறு பல வழிகளிலும்—அதாவது பேர் நாமத்தைக் கொண்டும், கேட்கப்பட்ட நேரம், கேட்பவரின் இருப்பு நிலை, கேட்ட சங்கதி, சோதிடனுக்கு எட்டும் நேரம், கேட்பவரின் தாய் தகப்பன், சகோதரம், பந்து முதலானவர்களின் பிறந்த கால சாதகம் முதலிய வைகளைக் கொண்டும் பலன் சொல்லுவதுண்டு. இன்னும் இதுபோன்ற பலவகை—அதாவது, ஏதாவது ஒரு எண், ஒரு பூ, ஒரு எழுத்து ஆகியவைகளைக் கேட்டல்; ஒரு அங்கத்தைத் தொடுதல் முதலியவைகளின் மூலமும் பலன் சொல்லுவதுமுண்டு. ஆகவே, மேற்கண்ட எல்லாவற்றின் மூலமும் பலன் சொல்ல முடியுமா என்பதைப் பற்றி யோசிப்பதில் முதலாவதாக ஜீவன் பிறந்த காலத்தை ஆதாரமாக வைத்துப் பலன் சொல்லக்கூடுமா என்று பார்ப்போம்.

பிறந்த காலம் என்பது வயிற்றுக்குள் இருக்கும்போது ஜீவன் (உயிர்) ஏற்பட்ட காலமா? அல்லது வயிற்றிலிருந்து பிறக்கும் காலமா? அப்படிப் பிறக்கும் காலத்தில் தலை வெளியில் தெரியும் காலமா? அல்லது, ஒருநாள் அரைநாள் அக் குழந்தை கீழே விழாமல் கஷ்டப்படும் காலத்தில் தலை வெளியாகி, நிலத்தில்பட்டு, கால் நிலத்தில் விழாமல் தாய் சரீரத்தில் பட்டுக்கொண்டிருக்கும் காலமா? அல்லது, கால் தலை ஆகிய எல்லாம் மருத்துவச்சி கையில் விழுந்த காலமா? அல்லது, மருத்துவச்சி கையிலிருந்து கீழே விழுந்த நேரமா? என்பனவாகிய கேள்விகள் ஒருபுறமிருக்க—ஜீவனுடைய சரீரமெல்லாம் பூமியில் விழுந்த நேரம் என்பதாக வைத்துக்கொண்டே பார்ப்போமானாலும், அந்த நேரத்தைச் சரியாக எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? குழந்தை கீழே விழுந்ததும் அது உயிருடன் இருக்கிறதா, இல்லையா? ஆணா, பெண்ணா? போன்றவைகளைப் பார்க்கச் சிறிது நேரமாவது செல்லும். பிறகு அந்தச் சேதியைக் கொண்டுவந்து வெளியிலிருக்கும் ஆண் களிடம் சொல்லச் சிறிது நேரமாவது செல்லும்; அந்தச் சேதியைக் கேட்டவன் நேரத்தைக் குறிக்க அங்கேயே அவனுக்குக் கடிகாரம் வேண்டும்; அந்தக் கடிகாரம் சரியான மணி காட்டுவதா என்பது தெரியவேண்டும்; கடிகாரமில்லாவிட்டால், வானத்தைப் பார்த்து நேரம் கண்டுபிடிப்பதாயிருந்தால் அதற்குப் பிடிக்கும் நேரம் முதலியவை; அல்லது அக்கம் பக்கத்திலுள்ள கடிகாரம், அதுவுமில்லாவிட்டால், உத்தேச சுமார் நேரம் ஆகியவைகளின் தாமதங்களும், பிசகுகளும் எப்படி நேராமல் இருக்கமுடியும்? இவை ஒருபுறமிருக்க, அந்த நேரத்தால் பலன் சொல்லுவதானால் அந்த நேரத்தில் உலகத்தில் பிறக்கும் ஜீவன்கள் எவ்வளவு இருக்கக்கூடும்? மற்ற ஜீவன்களையெல்லாம் தள்ளிவிட்டு, வெறும் மனித ஜீவனை மாத்திரம் எடுத்துக்கொண்டாலும், உலகத்தில் 170 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்ற கணக்குப்படி பார்ப்போமானால், சென்னை முதலிய பட்டணங்களின் சாதாரண அனுபவங் களின்படிக்கு உலகத்தில் நாள் ஒன்றுக்கு 226666 குழந்தைகள் பிறப்பதாகக் கணக்கு ஏற்படுகின்றது. இதைத் தவிர கணக்குக்கு வராத விதவைகளின் குழந்தைகள், கலியாணம் ஆகாத பெண்களின் குழந்தைகள், புருஷன் சமீபத்தில் இல்லாத பெண்களின் குழந்தைகள் இவைகளைச் சேர்த்தால் இன்னமும் இந்தக் கணக்கு அதிகமாகும். இது ஒருபுறமிருக்க, மேற்படி சாதாரணக் கணக்குப்படிக்குப் பார்த்தாலே ஒரு நாளைக்குப் பிறக்கும் குழந்தை களைப் பங்கிட்டுப் பார்த்தால் ஒரு நிமிடத்திற்கு சுமார் 160 குழந்தைகள் வீதம் பிறப்ப தாகக் கணக்கு ஆகிறது. இதில் 33 கோடி கொண்ட இந்தியாவுக்கு மாத்திரம் கணக்குப் பார்த்தால் நிமிஷத்துக்கு சுமார் 33 குழந்தைகள் வீதம் பிறக்கின்றதாகக் கணக்கு. ஆகவே,

படிப்பகம்

www.padippakam.com

இந்த 33 குழந்தைகளுக்குமாவது சாதகப் பலன் ஒத்திருக்க முடியுமா? இவைகளுக்குச் சரியான நேரம் கண்டுபிடிக்க முடியுமா?

நிமிஷக் கணக்கே இப்படி—அதாவது நிமிஷத்திற்கு 33 குழந்தைகள் பிறப்பதாக இருக்கும்போது, சோதிடம் சொல்லுவதற்குப் போதுமான காலமாகிய ஒரு 'லக்கினம்' 'நட்சத்திரம்' ஆகியவைகளின் காலத்திற்குள் எத்தனை குழந்தைகள் பிறக்கக்கூடும்?

சாதாரணமாய், ஒரு சாதகமென்பது வருஷம், மாதம், தேதி, கிழமை, மணி, அந்தச் சமயத்தின் லக்கினம், நட்சத்திரம் ஆகியவைகளைக் குறித்துள்ளதேயாகும். உதாரணமாக, பிரமாதி வருஷம், புரட்டாசி மாதம் புதன் கிழமை காலை சுமார் 10 மணிக்கு, விருச்சிக லக்கினத்தில், அஸ்த நட்சத்திரத்தில் ஒருவன் பிறந்தான் என்பதாக ஒரு துண்டுச் சீட்டில் எழுதி ஒரு சோதிடனிடம் கொடுத்துவிட்டால், இதன்பேரில் சோதிடம் சொல்லக்கூடும். ஆகவே, இந்த விருச்சிக லக்கினம் என்பது $5\frac{1}{4}$ நாழிகையுடையதாகும். ஒரு மணிக்கு $2\frac{1}{2}$ நாழிகை. இந்த நேரத்திற்குள் அதாவது 126 நிமிஷ நேரத்திற்குள் உலகத்திலே 20,160 குழந்தைகள் பிறந்திருக்க வேண்டும். இது ஒருபுறமிருக்க, மேலும் இந்த 'லக்கினத்தில்' நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன ஆகிய—பூதக் கண்ணாடிப் பூச்சி முதல் யானை வரையிலுள்ள உயிர்களின் குழந்தைகள் பலகோடிக்கு மேல் பிறந்திருக்கவேண்டும்.

இந்தியாவில் மாத்திரம் அந்த 'விருச்சிக லக்கினத்தில்' முன் சொல்லப்பட்ட கணக்குப்படிக்கு 4,158 குழந்தைகள் பிறந்திருக்கவேண்டும். ஆகவே, அன்றைய தினம் அந்த 'விருச்சிக லக்கின'த்தில் பிறந்த காரணத்திற்காக மேற்படி 4,158 பேருக்கும் வாழ்க்கையில் ஒரேவிதமான பலன் அனுபவமிருக்க முடியுமா? அந்தப்படி இருக்கின்றதா?

தவிர, இந்தப் பலன் அனுபவங்கள் மனிதனுக்குத் தானாக ஏற்படுவதா? அல்லது, இரட்சிக்கிற கடவுள்களின் தன்மையால் ஏற்படுவதா? அல்லது, முன் பிறவியில் செய்த கருமத்தின் பலனாய்ப் பலன் ஏற்படுவதா? அல்லது, விதியின் பயனாய்ப் பலன் ஏற்படுவதா?

இந் நான்கிலும் மனிதனுக்குப் பலன் அவனது சொந்த திஷ்டத்தால், செய்கையால் தற்சம்பவமாய் ஏற்படுமானால் மேல்காட்டியவைகளில் அது தவிர மற்றவைகள் மூன்றும் அடிபட்டுப் போகும். கிரகங்களின் தன்மையால் ஏற்படும் என்றால் இதைத் தவிர, மற்ற மூன்றும் அடிபட்டுப் போகும். முன்ஜென்ம கர்மத்தின்படி என்றால் இது தவிர மற்ற மூன்றும் அடிபட்டுப் போகும். ஆகவே, மனிதனுடைய அனுபவ பலனுக்கு இவற்றுள் ஏதாவது ஒன்றுதான் காரணமாய் இருக்கமுடியுமே தவிர, இந்நான்கும் சேர்ந்து குழப்பிக் கொண்டிருக்க முடியாது. இன்ன இன்ன கிரகம் இன்ன இன்ன வீட்டில் இருப்பதாலும், இன்னின்ன காலத்தில் இன்னின்ன கிரகங்கள் இன்னின்ன கிரகங்களைப் பார்ப்பதாலும்—இந்த சாதகன் இன்ன இன்ன காரியம் செய்து இத்தனை தடவை சிறைக்குப் போவான் என்பதாக, ஒரு சரியான பிறந்த காலத்தைக் கண்டுபிடிக்கப்பட்ட சாதகன் ஒருவனுக்கு சரியான கெட்டிக்காரச் சோதிடன் ஒருவன் பலன் சொல்லுகிறான் என்பதாக வைத்துக் கொள்வோம்.

இவற்றுள் இந்த சாதகன் இன்ன வேளையில் இன்னாரைக் கொன்று ஜெயிலுக்குப் போவான் என்று இருந்தால், அந்தக் கொல்லப்பட்டவனுடைய சாதகத்திலும் இன்ன வேளையில் இன்னாரால் கொல்லப்பட்டுச் சாவான் என்று இருந்தால் ஒழிய, ஒருகாலமும் பலன் சரியாக இருக்கமுடியாது. இந்த இரண்டு சாதகர்களுடைய பலனும் இருவருக்கும் தெரிந்துவிட்டதாகவே வைத்துக் கொண்டாலும், இவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டாவது தப்பித்துக்கொள்ள முடியுமா என்றால் ஒருகாலமும் முடியாது. ஏனெனில், தப்பித்துக்கொண்டால் சோதிடம் பொய்யாகிவிடும். ஒரு சமயம் தப்பித்துக்கொள்வதாகவே வைத்துக்கொண்டால் அந்த இருவர்கள் சாதகத்திலும் அந்த முடிவும் இருக்கும். அப்படி இருக்குமானால், இந்த விஷயத்தை அவர்கள் இருவரும் தெரிந்து ஜாக்கிரதையாய் இருந்தாலும், தெரியாமல் கவலையற்று அஜாக்கிரதையாயிருந்தாலும் இவ்விருவருக்கும் கொலை



யும் சிறைவாசமும் கிடைக்க முடியவே முடியாது என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில் சாதகத்தில் ஏற்கனவே இருக்கின்றபடி நடந்துதானே தீரும்!

இதற்குச் சாந்தி, தோஷ பரிகாரம் என்பவைகள் செய்வதன் மூலமாவது ஏதாவது பலனை மாற்றிவிட முடியுமா என்பதையும் யோசிக்கலாம். அதாவது, இன்ன கிரகம் இன்ன வீட்டில் இருப்பதால் இன்ன கெடுதியான பலன் ஏற்படும்; ஆதலால் இன்ன தோஷ பரிகார சாந்தியும், இன்ன கிரக தேவதைக்கு இத்தனை நாள் அர்ச்சனை செய்தால் நிவர்த்தியாகும் என்று சோதிடன் சொல்வானானால் இந்த சாந்தியின் மூலமாகவோ அர்ச்சனை மூலமாகவோ அந்தக் கிரகங்களை அந்தக் காலத்தில் அந்த வீட்டைவிட்டு மாற்றமுடியுமா? அல்லது, அவைகள் மாறுமா என்பதைக் கவனிக்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல், இம் மாதிரி சாந்தியோ, பரிகாரமோ செய்வதன்மூலம் தப்பித்துக்கொள்வான் என்றும் அதில் இருந்தாக வேண்டாமா? அப்படிக்கில்லாதபட்சம், எந்தவித சாந்தியாலும் தோஷம் பரிகாரமாக முடியாது. முடிந்தால் சோதிடம் பொய்யென்றே ஆகிவிடும்.

முடிவாக, எந்தக் காரணத்தைக் கொண்டாவது சோதிடம் உண்மை என்றாகிவிட்டால், எந்த மனிதன்மீதும் எந்தக் குற்றமும் சொல்லுவதற்கு இடமுண்டா? சாதகப் பலன்படி நடவடிக்கை நடந்தால் அதற்கு சாதகன்மீது குற்றம் சொல்லுவது மடமையும் யோக்கியதைப் பொறுப்பற்ற தன்மையும் ஆகாதா? ஒரு மனிதனுக்கு இன்ன காலத்தில் திருடரால் பொருள் இழப்பு ஏற்படும் என்று இருந்தால், அதே நேரத்தில் மற்றொரு மனிதனுக்கு 'திருட்டுத் தொழிலில் பொருள் இலாபம் கிடைக்கும்' என்று சாதகப் பலன் இருந்துதான் ஆகவேண்டும். அதுமாத்திரமல்லாமல், திருட்டுக் கொடுத்தவனுக்குப் பணம் கொடுத்து யார் யார் நஷ்டமடைந்தார்களோ, அவர்கள் சாதகத்திலும்—இன்ன காலத்தில் இன்னாருக்குப் பணம் கொடுத்து அது திருட்டுப்போய் அதனால் நஷ்டமடைய வேண்டும் என்று இருந்தே ஆகவேண்டும். ஆகவே, இந்தப்படியெல்லாம் சோதிட உண்மை இருந்துவிட்டால் பிறகு கடவுள் செயல் எங்கே? மோட்ச நரகம் எங்கே? தலைவிதி எங்கே? முன்ஜென்ம வினைப்பயன் எங்கே? இவைகளுக்கு வேலை ஏது?—என்பதைப்பற்றி யோசித்தால் இவை அவ்வளவும் பொய்யாகவே முடியும்.

இவைகளெல்லாம் நேரமும் இடமும் சம்பாதித்து மெய்ப்படுத்தக் குழப்புவதாக வைத்துக் கொண்டாலும், கண்டிப்பாக ஒரு மனிதனின் நடவடிக்கைகளுக்கு அந்த மனிதனுடைய பொறுப்பையாவது அடியோடு விட்டுத்தானாக வேண்டும்.

['குடி அரசு'-தலையங்கம்—6-7-1930]

சோதிடம் என்பது ஒரு மனிதனுடைய பிறந்த நேரத்தைக் கொண்டு, அந்தச் சமயம் கிரகங்கள் இருந்த நிலைமைக்கேற்ப மனிதனுடைய பலாபலன்களைக் குறிப்பதென்பதாகும்.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மனிதனின் வாழ்க்கை, அவனது பிறப்பு, இறப்பு; இன்பம், துன்பம்; சுகம், அசவுக்கியம்; செல்வம், தரித்திரம்; தொழில், மேன்மை, கீழ்மை; புத்திரகளத்திரத் தன்மை—எண்ணிக்கை, ஆயுள் முதலியவைகளைக் குறிப்பதாகும்.

இதைக் கூர்ந்து பார்ப்போமானால், மேற்கண்ட பலன்கள் சோதிடத்தின்மூலம் உணரலாம் என்பது உண்மையாய் இருக்குமாயின், ஒரு மனிதனின் பிறந்த நேரத்தைக் கொண்டு அப்போதிருந்த கிரகங்களின் நிலையை அறிந்து பலன்களைக் கணிப்பது என்பதில், குறிப்பிட்ட சாதகனுடைய பலன் மாத்திரமல்லாமல் அவனது பலாபலனுக்குச் சம்பந்தப்பட்ட மற்ற அனேகருடைய பலன்களும் அதில் அத்துபடி ஆகிவிட வேண்டும் என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனென்றால், ஒரு சாதகனுக்குச் செல்வம் வரவேண்டுமானால், வியாதி வரவேண்டுமானால், உத்தியோகம் வரவேண்டுமானால், சாவு வர வேண்டுமானால்—அவை வருவதற்கு

படிப்பகம்

www.padippakam.com



ஹேதுவான மாற்றங்களும் இந்தச் சோதிடத்தின் மூலம் அறிந்ததாக வேண்டும். இவனால், மற்றவர்களுக்கு ஏற்படும் இலாப நஷ்டங்களும், இவனுக்கு மற்றவர்களால் ஏற்படும் இலாப நஷ்டங்களும் கணிக்கப்படும்போது, இவனது பலாபலன்களைப் போலவே மற்றவர்களது பலாபலன்களும் ஏற்கனவே அவனவன் சாதகப் பலனின் பயனாய் ஏற்பட்டதாகத்தான் இருக்கவேண்டும்.

எந்த ஒரு சாதகனுடைய பலனைக் கவனித்தாலும் அந்தப் பலனுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா மனிதர்களுடையவும் ஜீவராசிகளுடையவும் அந்தந்தப் பொருள்களுடையவும் சாதகமும் சம்பந்தப்படாமல் ஒரு காரியமும் நடக்காது.

மனிதன் பிறக்கும்போது உள்ள நேரத்தைக் கொண்டு அந்த மனிதனின் வாழ்வின் பலாபலன் சொல்லப்படுகிறது போலவே, வஸ்துக்கள், தாவரங்கள் முதலியவைகளுடைய பிறந்த நேரத்தைக் கொண்டும் பலாபலன்களைச் சொல்லலாம் அல்லவா?

உதாரணமாக, ஒரு விக்ரகம் செய்யப்பட்டால் அது செய்யத்தொடங்கிய நேரத்தையோ, செய்து முடிந்த நேரத்தையோ கொண்டு அதன் வைபவத்தைக் குறிக்கலாம் என்று சோதிடர்கள் கூறுகிறார்கள்.

அது உண்மையானால், இந்தப் பலன் என்பது விக்ரகங்களுக்கு மாத்திரமல்லாமல் உலகத்தில் செய்யப்படும் எல்லாப் பொருள்களுக்கும் பொருத்தமானது என்றுதானே சொல்லவேண்டும்?

ஒரு கடிகாரம், ஒரு லாந்தர், ஒரு பாத்திரம், ஒரு நாற்காலி முதலியவைகளில் ஏதோ ஒன்றை வைத்துக்கொள்வோம். அது செய்யத்தொடங்கிய நேரமோ அல்லது செய்து முடிந்த நேரமோ, அல்லது வாங்கிய நேரமோ குறித்துக்கொண்டால் அந்த நேரத்தில் இருந்த கிரக நிலைக்கேற்ப மற்றும் அதனுடைய சலனத்துக்கு ஏற்ப பலன்கள் குறிப்பிடக் கூடியதாகவே இருக்கவேண்டும்.

ஏனெனில், மனிதனுக்கும், விக்கிரகத்துக்கும் வாழ்க்கை எப்படி இருக்கின்றதோ அப்படித்தான் மற்ற ஜீவன், புல், பூண்டு சாதாரண வஸ்துக்கள் ஆகியவைகளுக்கும் இருந்துவருகின்றது.

ஒரு குதிரை பட்டத்துக் குதிரையாய் இருந்து பெருத்த சுகபோகமும் பெருமையும் அடைகின்றது; அதோடு கூடப்பிறந்த மற்றொரு குதிரை ஜட்காவண்டியில் தினமும் கட்டப்பட்டு முதுகுப்பட்டை வாங்கப்படுவதோடு 'ரெயின்ஸ்' கயிற்றால் விதரில் அடிவாங்கி விதர்வீங்கிக் கஷ்டப்படுகிறது.

இது அவற்றின் பிறந்தநேர 'கிரகாச்சார'ப் பலன் என்றுதானே சொல்லவேண்டும்?

இதுபோலவே ஒரேபாறையில் உடைத்த இரண்டு பாளக்கற்களில் ஒன்று விக்ரகமாகி பொன், வைர ஆபரணங்கள் அணிந்து, தினம் ஆறுகால பூசை, சதிர், பாட்டு, வைபவம், இரண்டு மூன்று பெண்சாதிகள், தாசிகள், வருஷா வருஷம் கலியாணம், பெரிய ஆலயம், திருவிழா முதலிய வைபவங்களைப் பெறுகின்றது; அதோடு பிறந்த மற்றொரு கல் முனிசிபாலிடி கக்கூசுக்கு பாவப்பட்டு தினம் நூற்றுக்கணக்கான பேர் செருப்புக் காலால் மிதித்து அதன்மீது ஏறி மலஉபாதை கழிக்கவும், சதா விளக்குமாறுபோட்டு அடித்துக் கழுவவும், போகின்ற வருகின்றவர்கள் காரி உமிழவுமான பலனை அடைகின்றது. இதுவும் அந்தக் கல் பிறந்த நேரத்தின் பயனும் அப்போதிருந்த கிரகநிலைக்கு ஏற்ப ஏற்பட்ட பலனும் என்றுதானே சொல்லவேண்டும்.

அதுபோலவே, ஒரே தொழிற்சாலையில் ஒரேநேரத்தில் செய்யப்பட்ட இரண்டு கடிகாரங்களை எடுத்துக்கொண்டால் ஒன்று மகாராஜா கையில் கட்டப்பட்டுச் சிறிதும் ஆட்டம் அசைவு இல்லாமலும் சரியாய் மணிகாட்டிக் கொண்டு மேன்மையாய் இருக்கின்றது.



மற்றொன்றோ ஒரு கூலிக்காரன் கையில் சிக்கி கண்டபடி அடிபட்டுச் சாமான்கள் முறிந்து, கடிகாரமே கெட்டு, மூன்றாம் நாளே குப்பைத்தொட்டியில் எரியும்படியாக ஆகி விடுகின்றது. இதுவும் அந்தக் கடிகாரம் பிறந்த நேரத்திலோ அல்லது வாங்கப்பட்ட நேரத்திலோ கிரகங்கள் அமைந்திருந்தமையைக் கொண்டும் அதன் சஞ்சாரங்களைக் கொண்டும் ஏற்பட்ட பலன் என்றுதானே சொல்லவேண்டும்?

இதுபோலவே யாவரும் வெறுக்கும் மலம் முதற்கொண்டு ஒவ்வொரு வஸ்துக்கும் அதனதன் பிறந்த நேரத்தின் பயனாய் பலாபலன் இருந்து வந்தால்தான், சாதகம் என்பதாக ஒன்று இருக்க முடியுமே யொழிய, மனிதனுக்கு மாத்திரம்தான் சாதகம் சொல்ல முடியும் என்றால் அதை யார் ஒப்புக் கொள்வார்கள்?

சிலர் குதிரைக்கும் யானைக்கும் சாதகம் வைத்திருப்பதும் பார்ப்பதும் நாம் பார்த்திருக்கிறோம்.

மனிதனுக்குச் சாதகப் பலன் சொல்ல முடிகின்ற போது, குதிரைக்கும், யானைக்கும், நாய்க்கும், கழுதைக்கும் சொல்ல முடியாது என்று சொன்னால் அது நியாயமாகுமா?

அதுபோலவே குதிரைக்கும், யானைக்கும், நாய்க்கும் சாதகப் பலன் சொல்வதாய் இருந்தால்—கோழிக்கும், குருவிக்கும், பாம்புக்கும், தேளுக்கும், ஓணானுக்கும், பல்லிக்கும், ஈக்கும், எறும்புக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், கிருமிக்கும், பன்றிக்கும் சாதகப் பலன் சொல்லமுடியாது என்று யாராவது சொல்ல முடியுமா?

கோழிக்கும், குருவிக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும் அதனதன் பிறந்த நேரத்தைக் கொண்டு பலன் சொல்லலாம் என்றால் மரத்துக்கும், செடிக்கும், புல்லுக்கும், பூண்டுக்கும் அது முளைத்த நேரத்தைக் கொண்டு ஏன் பலன் சொல்ல முடியாது?

ஆகவே, 'வஸ்து' என்று ஒன்று ஏற்பட்டு, அது பிறப்பதற்கோ தோன்றுவதற்கோ ஒரு நேரமும் இருந்து அந்த நேரத்தைக் கொண்டு அப்போதிருந்த கிரகநிலையை அறியக் கூடிய எல்லாவற்றிற்கும் சோதிடம் சொல்லலாம் என்பதுதான் சோதிடத்தின் தன்மையாக இருக்கவேண்டும்.

இந்த முடிவு எப்படியோ ஆகட்டும். முதலாவதாக, ஒரு மனிதனுடையவோ, ஜீவனுடையவோ பிறந்த நேரத்தை எப்படிக் கவனிக்க முடியும்? பிரசவ காலத்தில் வயிற்றுவலி ஏற்பட்ட நேரம் முதல் சிசுவானது கொஞ்சம் கொஞ்சமாய் வெளியாகிறது. உருவம் வெளிப்பட்டு, தலையோ, காலோ தெரிந்து வெகுநேரம் சென்றதும் சில சிசுக்கள் மணிக்கணக்கில் கீழே விழாமல் சிக்கிக் கொண்டும் இருக்கின்றன. கீழே விழுந்த நேரத்தையே எடுத்துக்கொள்வதாய் இருந்தாலும் பெரும்பான்மையான சிசுக்கள் விஷயத்தில் எப்படிச் சரியான நேரத்தை கண்டுபிடிக்க முடியும்?

ஒரு நாளைக்கு 16 முகூர்த்தங்கள்; ஒரு முகூர்த்தத்திற்கு $3\frac{3}{4}$ நாழிகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு லக்கினத்திற்கும் $4\frac{1}{4}$ முதல் $5\frac{1}{2}$ நாழிகையும், ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் சுமார் 60 நாழிகையும் உண்டு.

இதற்குள் பிறக்கும் குழந்தைகள் எல்லாவற்றிற்கும் கிரகம், நட்சத்திரம் என்பவை ஒன்றாகவேதான் இருக்கமுடியும். உலகில் ஏற்படும் பிறப்பு இறப்புகள் எல்லாம் இந்த லக்கினத்துக்குள்ளும் இந்த நட்சத்திரங்களுக்குள்ளும்தான் வந்தாக வேண்டும்.

அந்தப்படியே வந்து அதைக் கொண்டே பலன் சொல்லக்கூடும் என்றே வைத்துக் கொண்டாலும், மனிதனுடைய நித்திய வாழ்க்கை, அனுபவத்துக்கும் பிறந்தபோது கிரகங்கள் வந்த நிலைக்கும் எப்படிச் சம்பந்தம் இருந்துவர முடியும்? எப்படி இருக்கக் கூடும் என்பதை எந்த வானசாஸ்திரியாவது, நட்சத்திர சாஸ்திரியாவது, ஜீவ தத்துவ சாஸ்திரியாவது, உடல் தத்துவ சாஸ்திரியாவது, பொது விஞ்ஞான சாஸ்திரியாவது ஒப்புக் கொள்கின்றார்களா?



படிப்பகம்

www.padippakam.com



இவைகளுக்கெல்லாம் விஞ்ஞான சாஸ்திரம் இடம் கொடுக்கின்றதா? விஞ்ஞானத்திற்கு, அதாவது பஞ்சேந்திரியங்களால் அறியக்கூடிய தன்மைக்கு விரோதமாய் ஒரு காரியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்படுமானால் பிறகு உலகில் விஷயங்களை எப்படித்தான் நிர்த்தாரணம் செய்ய முடியும்?

ஒரு வஸ்து நிர்ணயத்துக்கோ, ஒரு விஷய நிர்ணயத்துக்கோ ஏதாவது ஒரு முறை அல்லது விதி இல்லாவிட்டால் பிறகு எப்படித்தான் விஷயங்களை நிர்த்தாரணம் செய்ய முடியும்?

இந்த விஷயங்கள் ஒரு புறமிருக்க, இந்த சாதகப் பலன்கள் மனிதனுக்கு இந்தப்படியெல்லாம் அமைவதற்கு ஒரு காரணமும் வேண்டியிருக்கிறது. ஏனெனில், மனித வாழ்க்கையின் தன்மையும் பலன்களும் அனுபவமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாய் இருப்பதை இயற்கை என்று ஒப்புக்கொள்ளாமல் இருப்பதால், அவற்றிற்குக் காரணம் மற்றும் கிரக பலன்களில் நம்பிக்கை உள்ளவர்களும் 'கிரகங்கள் அந்தப்படியெல்லாம் அமைவதற்கே' காரணம் சொல்லுகிறார்கள். அதாவது, ஒவ்வொருவருடைய 'கிரகாச்சார' பலனும் சாதகன் பிறப்பதற்கும் முன்னே அமைக்கப்பட்டதற்கு, அந்த சாதகர்களின் 'முன்ஜென்ம கர்மத்தின் பலன்' என்றும், அல்லது அவனுடைய முன்ஜென்ம நடத்தைக்குத் தக்கபடி கடவுளால் விதிக்கப்பட்ட விதி என்றும் சொல்லப்படுகிறது.

சோதிடத்தை ஒப்புக்கொள்கின்றவர்களோ, நம்புகின்றவர்களோ முன்ஜென்மம், முன்ஜென்ம கர்மம், அதை அனுசரித்துக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட விதி முதலியவைகளை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் யாதொரு பழிபாவம் அறியாத ஒரு ஜீவன் தான் பிறக்கும் போது நிஷ்காரணமாய், யதேச்சையாய், இயற்கையாய், அமைந்திருந்த கிரகங்களின் பயனாய்ப் பலன்களை அடைவதென்றால் அதையும் இயற்கை என்று சொல்லாதவர்கள் அதற்கு ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லித்தானே ஆகவேண்டும்?

ஆகவே, அந்தக் காரணந்தான் முன்ஜென்ம கர்மத்தின் பலனாகவும், தலைவிதியாகவும் சொல்லப்படுவதாகின்றது. இதை ஒப்புக்கொள்வதானால் இதில் மற்றொரு பெரிய பிரச்சினை வந்து புகுந்துகொள்கின்றது. அதாவது, இம் மாதிரி அமையப்பட்ட கிரகங்களின் பலனாக, அல்லது முன்ஜென்ம கர்மத்தின் பலனாகவோ தலைவிதியின் பயனாகவோ கடவுள் சித்தத்தின் பலனாகவோ ஏற்பட்ட, அல்லது ஒரு சாதகனால் செய்யப்பட்ட காரியங்களுக்கு மறுபடியும் பலன்கள் உண்டா என்பதும், அதற்கு அந்த சாதகன் பொறுப்பா என்பதும், அது அந்த சாதகனை எப்படிக் கட்டுப்படுத்தும் என்பதுமேயாகும்.

உதாரணமாக, ஒரு சாதகன் ஒரு மனிதனைக் கொலை செய்வதாக வைத்துக் கொள்வோம். இந்தக் கொலையானது 'இந்த சாதகன் இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதி, இன்ன கிழமை, இன்ன மணிக்கு. இன்ன ஊர் இன்ன ஆளை இன்ன விதமாய்க் கொலை செய்வான்' என்று கொலை செய்தவனுடைய சாதகத்திலும்; 'இன்ன வருஷம், இன்ன மாதம் இன்ன தேதி, இன்ன கிழமை, இத்தனை மணிக்கு, இன்ன மனிதனால் இன்ன விதமாய்க் கொலை செய்யப்படுவான்' என்று கொலை உண்டவன் சாதகத்திலும் கர்மத்தின் பயனாலோ, கடவுள் சித்தத்தாலோ ஏற்பட்டில்லாமல் இக்கொலை எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?

அந்தப்படி விதி ஏற்பட்டிருக்கும்போது, கொலை செய்பவன் இந்தக் கொலையைச் செய்யக்கூடாது என்று எவ்வளவுதான் கருதினாலும் அவனால் கொலைசெய்யாமல் இருக்க முடியுமா? அதுபோலவே, கொலை உண்டவனும் தான் எவ்வளவுதான் ஜாக்கிரதையாய் இருந்தாலும் ஒரு தண்டவாளப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தாலும் கொலையிலிருந்து தப்பித்து இருக்க முடியுமா?

படிப்பகம்

www.padippakam.com

Reg No M 3066 1935- டிசம்பர் 1.
PAHUTHARIVU ("REASON")
(இதழ் 8.)




பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 1935 மே திங்களில் துவக்கப்பட்ட 'பகுத்தறிவு' மாத இதழ்—முகப்பு அட்டை



'அன்றெழுதினவன் அழித்தெழுதுவானா?'

'விதியை யாரால் வெல்ல முடியும்?'

'அவனவன் முன் ஜென்ம கர்மத்தின் பயனை அவனவன் அனுபவித்தே தீர வேண்டும்' என்றபடி, விதியில் உள்ளது போல் நடந்துதானே தீரும்! இந்தப்படி விதியினாலோ, முன்ஜென்மத்தின் பலனாலோ, சாதக ரீதியாகச்செய்யப்பட்ட இந்தக் கொலைக்கும் கொலையுண்டானதற்கும் இந்த சாதகன் எப்படி ஜவாப்தாரியாக முடியும்? சாதகனை எப்படிக் குற்றம் சொல்ல முடியும்? இதற்காக சாதகனுக்குப் பாவமோ நரகமோ கர்மத்தின் பயனோ எப்படி ஏற்படும்?

இந்த சாதகனுக்குப் பாவமோ நரகமோ எப்படி ஏற்படும் என்பது மாத்திரமல்லாமல், மக்கள் விதியின்படியோ, முன்ஜென்ம கர்மத்தின் விளைவின்படியோ செய்யப்பட்ட காரியங்களுக்குப் பாவம் என்றோ புண்ணியம் என்றோ எப்படிச் சொல்லலாம்? அதற்காக நரகமோ, மோட்சமோ, அடுத்த ஜென்மத்தில் அடையவேண்டிய பயனோ எப்படிச் சித்திக்கும்?

ஆகவே, மனிதன் செய்யுங் காரியங்கள் எல்லாம் சாதகப் பலன்படியும்; சாதகப் பலன்கள் எல்லாம் விதிப்படியும்; விதி எல்லாம் முன்ஜென்ம கர்மத்தின் பலன்படியும் நடப்பதாய் இருக்கையில்—பாவ புண்ணியம் என்ற பாகுபாடும், நற்செய்கை, துர்ச்செய்கை என்கின்ற பெயரும் எப்படிப் பொருந்தும்? மோட்சத்திற்கும், நரகத்திற்கும் அவசியம் தான் ஏது? அவை எதற்காக இருக்கவேண்டும்?

கடவுளாகத்தானாகட்டும்—இந்தச் செய்கைகளுக்குத் தீர்ப்புகளோ, விசாரணையோ, சன்மானமோ, தண்டனையோ—எப்படிச் செய்ய முடியும் என்பவைகளை யோசித்தால் சோதிடம் என்பதாக ஒன்று இருக்க முடியுமா? அது, பிறந்த நேரத்தைக் கொண்டு மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பயனும் சொல்ல முடியுமா?

அப்படி ஒரு சாஸ்திரம் இருக்க பகுத்தறிவின்படி, 'சயின்ஸ்'படி இடம் இருக்கிறதா என்பவைகளை யோசித்துப் பார்க்க வேண்டும்.

சோதிடம் என்பதைப்பற்றி இந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர்கள் முதல் எல்லா ஆத்திகர்களுக்கும் நம்பிக்கை இருந்து வருகின்றது.

சிற்சில மனிதர்கள் ஆத்திகர்களாய் இல்லாதவர்களும் சோதிடத்தை நம்புகிறார்கள். ஏனெனில், அது சாஸ்திரமென்றும், அதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லையென்றும், சோதிடம் விஞ்ஞான பரீட்சையால் நிர்ணயிக்கக் கூடியதென்றும், ஆதலால், அது பிறந்த நேரத்தையும், நட்சத்திரங்களையும், கிரகங்களையும் பொறுத்ததென்றும் நட்சத்திரங்களும் கிரகங்களும் உண்மை ஆனதனாலும், பிரத்தியட்சப் பிரமாணமானதனாலும், அதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், அனுபவத்திற்கு ஒத்திருக்கின்றதென்றும், இப்படிப் பலவாறாய்ப் பேசி அதை ஒப்புக்கொள்கிறவர்களும் நம்புகிறவர்களும் சமாதானம் சொல்லுகின்றார்கள்.

இந்தச் சமாதானங்களைப்பற்றிப் பின் ஆலோசிப்போம். இப்போது இந்தப்படி ஒரு சாஸ்திரமோ பலனோ இருக்க நியாயம் உண்டா என்பதைப் பற்றி மாத்திரமே இவற்றைக் கொண்டு ஆராய்ந்தோம்.

['பகுத்தறிவு' மலர் 1, இதழ் 4-கட்டுரை—1935]

படிப்பகம்

www.padippakam.com



## 12. பூர்வஜென்ம பலன்

சகோதரிகளே! சகோதரர்களே!

உங்களில் பலர் உங்களைவிட உயர்ந்த சாதியார் என்று சொல்லிக்கொள்ளும் அய்யர், கவுண்டர், நாயுடு முதலிய சாதியார் உங்களைத் தாழ்மையாய்க் கருதுவதை மாத்திரம் நினைத்து வருத்தப்படுகின்றீர்களேயல்லாமல்—பறையர், சக்கிலியர் என்பவர்களை நீங்கள் உங்களிலும் தாழ்ந்த சாதியாகக் கருதி அவர்களை உங்களுக்குச் சமமாய் நினைத்துச் சுதந்திரம் கொடுக்க மறுக்கின்றீர்கள். இதற்கெல்லாம் காரணம் உங்கள் மத உணர்ச்சியும், உங்கள் கடவுள் உணர்ச்சி, விதி உணர்ச்சியுமேயாகும்.

மத சம்பிரதாயப்படி நீங்கள் சக்கிலியரை, பறையர்களைவிட உயர்ந்த சாதியாராகவும் கடவுள் அந்தப்படி உங்களைப் படைப்பித்ததாகவும், அதற்குக் காரணம் உங்களுடைய பூர்வஜென்ம கர்மத்தின் விதியென்றும் கருதுகிறீர்கள்.

உங்களைத் தாழ்ந்த சாதியாய்க் கருதியிருப்பவர்களும் அப்படியேதான் மத ஆதாரத்தாலும், கடவுள் செயலாலும் பூர்வ ஜென்மாந்திர கர்மவிதியாலும் அப்படிப் பிறந்ததாகக் கருதியிருக்கின்றார்கள். இந்த மாதிரியான மதம், கடவுள், ஜென்மாந்திர விதி ஆகிய மூன்றையும் நம்பியிருக்கின்றவன்—இம் மூன்றையும் பாதுகாக்க விரும்புகின்றவன் எப்படி மற்ற மக்களைச் சமமாகக் கருதக்கூடும்?

பணக்காரனும்—தான் பணக்காரனாயிருப்பதற்கு இதே காரணந்தான் கருதிக் கொண்டிருக்கிறான். திருடனும்—தான் திருடனாயிருப்பதற்கும், அயோக்கியனும்—தான் அயோக்கியனாயிருப்பதற்கும், அரசனும்—தான் அரசனாகயிருப்பதற்கும், கூலியும்—தான் கூலியாயிருப்பதற்கும், ஏழையும்—தான் ஏழையாயிருப்பதற்கும், கொடுங்கோலாட்சியில் கஷ்டப்படும் குடிகளும்—தாங்கள் கஷ்டப்படுவதற்கும் இவ்வாறே மத சம்பிரதாயத்தையும், கடவுள் சித்தத்தையும், பூர்வஜென்ம கர்மவிதியையும் காரணமாய்க் கருதித் தங்கள் நிலையில் திருப்திகொண்டு இருக்கின்றார்கள். இந்தமாதிரி மக்களையுடைய தேசத்தில் எந்த மாதிரியான முன்னேற்றத்தைக் காணமுடியும்? இந்தத் தேசத்தை மனிதத் தன்மை உடைய தேசமாகவும், மானமுள்ள தேசமாகவும், சுயாதீனமுள்ள சமத்துவ தேசமாகவும் ஆகச் செய்ய வேண்டுமானால் மேற்கண்ட மூன்றும்—அதாவது கடவுள், மதம், விதி ஆகிய மூன்றும் அடியோடு ஒழிக்கப்பட்டாகவேண்டும். அந்தப்படியில்லாதபசட்சம் வெறும் பேச்சுத்தான் நடைபெறுமேயொழிய, காரியத்தில் ஒரு சிறிதும் பயனடைய முடியாதென்பது உறுதி.

[இருகூரில், 3-1-1931-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 11-1-1931]

## 13. முன்கால நடப்பு

தலைவரவர்களே! தோழர்களே!

இன்றைய வரையிலும், சரித்திரத்திலே, நாங்கள் செய்கிற காரியத்தை இதற்குமுன் செய்து இருக்கிறார்களா என்றால்—செய்திருக்கிறார்கள். புராணங்களைப் பார்த்தால் இதைக் கண்டு கொள்ளலாம். இரணியன், இராவணன், சூரபத்மன் போன்றவர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். இந்த முயற்சிகளையெல்லாம் ஒழித்ததாகப் பார்ப்பனர்கள் தந்திரமாக எழுதி முடித்துவிட்டார்கள். இவர்கள் எல்லாம் மேல் லோகத்தில் கொடுமைப் படுத்தப்பட்டு ஒழிக்கப்பட்டுப் போனார்கள் என்றுதான் முடித்திருக்கிறார்களே தவிர, வேறு நல்ல முறையிலே இருக்காது. ஏன் இப்படிச் செய்துவிட்டார்களென்றால் மற்ற எவனும், எப்போதும் மறுபடியும் அம் மாதிரி முயற்சிக்கக்கூடாது என்பதற்காகத்தானாகும்.

[குன்றத்தூரில், 27-2-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 8-3-1951]



## 14. குறி, நல்ல நேரம்

கோயிலில் போய் பூப் போட்டுக் கேட்கிறோமே—சிறிதாவது சிந்திக்க வேண்டாமா? நீ போய் தங்கையையும், அண்ணனையும் சொல்லிப் பூப் போட்டுக் கேட்டால்—இது வேண்டாம் என்று அந்தச் சாமி கூறுமா? ஒரு கழுதை பிறந்த நேரத்தை சாதகம் குறித்துக் கேட்டால், 'இது கழுதையின் சாதகம்; வேண்டாம்' என்று கூறுமா? அம்மான்-மகள் இருவருடைய பெயரையும் எழுதி அவர்களுடைய மகனுக்குக் கட்டலாமா என்று கேட்டால் அந்தச் சாமி என்ன செய்யும்? 'இருவருமே இலாயக்கில்லை' என்று கூறுமா? இரண்டில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொடுத்துவிடும்!

மற்றும் குருவி, கழுகுகளிடம் சோதிடம் பார்ப்பது என்பதெல்லாம் மிகவும் மடத்தனமான காரியமாகும். சாதகம், பொருத்தம், நல்ல நேரம் என்று பார்த்து நம்முடைய வசதியைக் கெடுத்துக்கொள்கிறோம். நல்ல நேரம், இராகு காலம், எமகண்டம் என்று பார்க்கிறார்களே—இவர்களுக்குக் கோர்ட்டில் ஒரு கேஸ் விசாரணை இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கு நல்ல கொளுத்த, இராகு காலம் என்று சொல்லப்படும் நேரத்தில் அவன் 'இராமசாமி! இராமசாமி!' என்று கூப்பிட்டால், இவன், 'இப்போது இராகு காலம்; நான் வரமாட்டேன்' என்று கூறுவானா? துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு குடு குடு என்று—எங்கே சீக்கிரம் போகாவிட்டால் வழக்கைத் தள்ளிவிடப் போகிறானோ என்று ஓடிப்போய், 'வந்தேன்!' என்றுதானே கூறுவான்? அப்பொழுது எங்கே போயிற்று இராகு காலம்?

எமகண்டத்திலே இரயிலும் பஸ்ஸும் புறப்படுகிறது. 'கொஞ்சம் இரு; இப்பொழுது இராகுகாலம்' என்று கூறினால் அது நிற்குமா? அதில்தானே ஏறிச்செல்கிறான்? இதையெல்லாம் நன்றாகச் சிந்தித்துச் செயலாற்றவேண்டும்.

[மருடஞ்சாவடியில், 27-12-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-1-1960]

## 15. வாழ்த்தும் ஆசீர்வாதமும்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நமதுநாட்டில், ஆசீர்வாதம் அனேகமாய் ஒரு சாதிக்கே உரியதென்றும், அதுவும் அவர்களிடமிருந்து பணத்திற்கு விலைகொடுத்து வாங்கக்கூடியது என்றும் கருதியிருக்கிறோம். அனேகமாக, 'ஆசீர்வாத சாதி' பிச்சை எடுப்பதற்கு இதை உபயோகப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

நம்மை மகாராஜனாகவும், க்ஷேமமாகவும் இருக்கும்படி ஆசீர்வாதம் செய்து பணம் வாங்குகிறவனுடைய ஆசீர்வாதம்—யோக்கியமுடையதும் உண்மையுடையதுமானால் தன்னையே ஆசீர்வாதம் செய்துகொண்டு செல்வவானாய், சீமானாய் இருக்கும்படி செய்து கொள்ளலாமல்லவா? நம்மிடம் பிச்சைக்கு வருவானேன்?

தவிர, வாழ்த்துவதும் அர்த்தமற்றதேயாகும். ஒருவன் வாழ்த்துவதினாலேயே ஒரு காரியமும் ஆகிவிடாது. வேண்டுமானால், மணமக்கள் இன்பமாய் வாழ ஆசைப்படலாம். ஆனால், அவ்வித ஆசைப்படுகின்றவர்களுக்கு ஆசைக்கேற்ற கடமை உண்டு. அக் கடமை என்னவென்றால், ஆசைப்படுகின்றவரின் ஆசை நிறைவேற உதவியாய் இருப்பதுதான்.

[விருதுநகரில் சொற்பொழிவு—'குடிஅரசு' 13-7-1930]

www.padippakam.com



# 16. உண்ணா விரதம்

நாட்டில் 'உண்ணா விரதம்' என்பது இதற்குமுன் இருந்ததைவிட அதிகமாகச் செல்வாக்குப் பெற்றுப் பரவி வருகிறது. இதன் தத்துவம் என்னவென்றால், நாட்டு மக்கள் நாளாவட்டத்தில் கீழ்த் தரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதுதானாகும்.

இந்தக் கீழ்த்தரச் செய்கை முதன்முதல் காந்தியாரால் துவக்கப்பட்டதால் அதற்கு மரியாதை ஏற்படவேண்டியதாயிற்று. அதுவும் அவ் வுண்ணாவிரதம் பெரிதும் பார்ப்பனர் நலத்திற்கு ஆதரவானதாக அமைந்ததால் பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளாயிருந்தவர்களும் பார்ப்பனப் பத்திரிகைகளும், பார்ப்பன 'அரசியல்' வாதிகளும் பிரமாதமாய்ப் பிரச்சாரம் செய்து விளம்பரம் தந்ததால் மூடப் பாமர மக்கள் இடையில் மிகச் செல்வாக்குப் பெற்றுவிட்டது.

என்றாலும், நான் அவ் வுண்ணாவிரதத்தை 1926 முதலே 'சண்டித்தனம்' என்றே எழுதிக் கண்டித்து வந்திருக்கிறேன்; வருகிறேன்.

இன்று அவ் வுண்ணாவிரதமென்பது மிக்க கீழ்த் தர மக்களுக்கெல்லாம், அநாமதேயங்களுக்கெல்லாம் விளம்பரம் தரத் தக்கதும்; இந்தச் சேதியை ஆதாரமாகக் கொண்டு காலிகள், கலவரம், குழப்பம், நாசவேலைகள் செய்யவும்—ஏன் சில ஓட்டுகள் பெறவும் பயனளிக்கக் கூடியதாய் இருப்பதால், இந்த உண்ணாவிரதங்கள் மக்களிடையில் செலாவணியாகி வருகின்றன. பொதுவில் கணக்குப் பார்த்தால் இதுவரை நடந்த உண்ணா விரதங்களில் 100-க்கு 5 வீதம்கூட வெற்றி பெற்றது என்கின்ற கருத்துக்கு இடமில்லாமல், வெறும் விளம்பரத்துடன்தான் முடிவடைந்திருக்கின்றன.

இப்போது சங்கராச்சாரியார் உண்ணாவிரதமும் அவருக்கு விளம்பரத்திற்குத்தான் பயன்படுமே ஒழிய, மற்றபடி காதொடிந்த ஊசியளவு பயனும் ஏற்படப்போவதில்லை என்பது உறுதி. மிருகங்கள் கொல்லப்படுவதில், மனிதனைத் தவிர மற்ற பிராணிகள் எதற்கும் பெறுமானத்தைத் தவிர, வேறு எதிலும் பேதம் காண எந்தவித காரணமும் இல்லை.

பசுவைக் கொல்லுவது என்பதை மாத்திரம் (ஒருதனி) கூடாதது என்பதற்கு என்ன அவசியம் என்பது நமக்குப் புரியவில்லை. பசு எனில் பால்கறக்கும் பெண் மாட்டை யாரும் நல்ல நிலையில் இருப்பதைக் கொல்லுவதில்லை; ஆண் மாட்டையும் வேலைக்கு லாயக்காக இருக்கும் எதையும் அனேகமாய் நம் நாட்டில் யாரும் கொல்லுவதில்லை.

இது எப்படியோ இருந்தாலும், உலகில் பொதுவாக 100-க்கு 95 மக்களுக்குப் பசு ஒரு ஆகாரப்பண்டமாய் இருந்து வருகிறது.

குறிப்பாக, இந்தியாவில் உள்ள 46 கோடி மக்களில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் 10 கோடி போக, ஆதித் திராவிடர்கள் சுமார் 6 கோடி மக்கள் போக, சுமார் 30 கோடி மக்கள் மாத்திரமே பசுமாமிசம் சாப்பிடாதவர்களாக இருக்கலாம். எனவே, இந்தியாவில் 3-ல் ஒரு பாகம் மக்களுக்கு—100-க்கு 33 பேர்களுக்கு உணவுக்கு ஆகாரமாய் இருக்கும் ஒரு ஜீவனைக் கொல்லக்கூடாது என்றால், இதில் ஆணவம் தவிர, கூடாது என்பதற்கு என்ன சமாதானம் சொல்ல முடியும்? உலகில் உண்மையாய் மாமிசம் சாப்பிடாதவர்கள் (300 கோடியில்) 20 இலட்சம் பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். இவர்களுக்காக இவர்கள் மனம் 'புண்படும்' என்பதற்காக, அல்லது இவர்கள் மத சம்பிரதாயத்துக்கு விரோதம் என்பதற்காக, 'யாரும் மாட்டைக் கொல்லக் கூடாது என்று சட்டம் செய்யவேண்டும்' என்று ஒருவர் உண்ணா விரத மிருந்தால், அவரைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைத்துத்தான் காப்பாற்ற வேண்டும்.

நான் எனது 25 வயதிலிருந்தே மாட்டு மாமிசம் சாப்பிட்டு இருக்கிறேன்; பல தடவை மக்களை மாட்டு மாமிசம் சாப்பிட வேண்டும் என்று எழுதி வந்திருக்கிறேன்.



இன்றைய நிலைமையில் ஏழைகள் மாமிசம் சாப்பிட வேண்டுமானால் மாட்டுமாமிசந்தான் மலிவாகக் கிடைக்கக் கூடியதாய் இருக்கிறது. மாட்டு மாமிசத்தில் நாம் சாப்பிடும் மற்ற மாமிசத்தைவிட உணவுச் சத்து அதிகமாக இருக்கிறது. மற்றும் பன்றி, கோழி, மீன் பட்சிகளைப்போல் மலம், பூச்சி, புழு முதலிய அசிங்கத்தை மாடு சாப்பிடுவதில்லை. ஆதலால் 'மாடு வதை கூடாது' என்பது ஒரு நாளும் அறிவுடைமை ஆகாது என்பதோடு அதை வலியுறுத்துகிறவர்கள் யாராயிருந்தாலும் அரசாங்கமானாலும் அவர்கள் மரியாதையாய் வேறு நாட்டிற்குப் போய்விடுவதே மானமுள்ள காரியமாகும்.

['விடுதலை'—தலையங்கம்—17-10-1966]

சங்கராச்சாரி கைது செய்யப்பட்டதைப் பெரிதாக்கி மக்களைக் கிளப்பிவிட்டு, மற்றொரு 'டில்லி 7-ஆந் தேதிக் காலித்தனத்'தை உண்டாக்கலாம் என்றே பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும், பத்திரிகைக்காரர்களும், காங்கிரஸ் எதிரிகளும், ஓட்டு வேட்டைக்காரர்களும் கருதுகிறார்கள். சங்கராச்சாரி என்றால் பூதமா? முனியா? பிசாசா? அவர் ஒரு சாதாரண மனிதன்தானே! சாதாரண மனிதத் தன்மைக்கு மேம்பட்ட குணம், தன்மை அந்த மனிதனிடம் என்ன இருக்கிறது?

'கடவுளை'க் கொளுத்துகிறார்கள்; உடைக்கிறார்கள்; உருக்கி விற்கிறார்கள். இந்தக் கடவுள்கள் எல்லாம் கல்லாய், மரமாய், காரையாய், உலோகமாய், காகிதமாய் இருந்து உருவானவைதானே! அவைகளுக்காவது 'மந்திரசக்தி' ஏற்றிக் கும்பாபிஷேகம் செய்து, கோடிக்கணக்கான—நாட்டின் எல்லா மக்களால் பூசைசெய்து, பக்திகாட்டி வரப்படுகிறது.

இந்த சங்கராச்சாரிகள் யார்? ஒரு சாதாரண மனிதன்! பள்ளிக்கூடத்துப் பையன்களாய், சாதாரணப் பரம்பரையில், வெகு சாதாரண குடும்பத்துப் பிள்ளைகள் சிலர் மனிதராகி, பிழைப்புக்குத் திண்டாடி, சிலர் திருட்டு முதல் புரட்டுவரை பல தொழில்கள் செய்து பிழைத்து, ஒரு பரீட்சையுமில்லாமல் திடீரென்று பட்டம் சூட்டப்பட்டவர்கள் சங்கராச்சாரிகள்! பிறகு மக்களுக்குப் பூச்சாண்டி காட்டுவதுபோல் சங்கராச்சாரி ஆக்கி, சங்கராச்சாரி சுவாமிகள் ஆக்கிவிடுகிறார்கள்!

சட்டம் மீறுதலும், உண்ணாவிரதம் முதலிய காரியங்களில் நேரிடையாக ஈடுபடுவதும், வீட்டுக்கு நெருப்புவைக்கிற காலித்தனங்களுக்கு—'குண்டாயிசத்து'க்கெல்லாம் பங்குபெறுவதும் ஆனகாரியத்தில் ஈடுபட்டபிறகும் 'சங்கராச்சாரியார் சுவாமிகள்' என்று அந்த மனிதனை அழைப்பதென்றால், இது ஏமாற்று வித்தையல்லாமல் இதில் உண்மையோ, யோக்கியமோ என்ன இருக்கமுடியும்?

மற்றும், எனக்குத் தெரிந்த உண்மை அனுபவத்தைச் சொல்லுகிறேன். சேலத்தில் சைக்கிள்திருடி தண்டனையடைந்த ஒரு பார்ப்பான் வடநாடு சென்று, இதுபோலவே 'சங்கராச்சாரி சுவாமிகள்' ஆகிவிட்டான்! 'குடிஅரசு' பத்திரிக்கையைப் பார்த்தால் அந்த 'சங்கராச்சாரி சுவாமிகள்' பாரியான் பெயர் சகிதம் விளக்கம் தெரியும்.

இந்த 'சங்கராச்சாரி சுவாமிகள்' என்கின்ற—இப்போது கைது ஆக்கப்பட்ட பார்ப்பனரும், சங்கராச்சாரியாக ஆவதற்கு முன்பு சந்திரசேகர திவிவேதி என்னும் பார்ப்பனராக இருந்து, பத்திரிகை ஆசிரியராய் இருந்து, பிழைப்பு நடத்திவந்து, பிறகு காசியில் ஒரு பத்திரிகைக்கு 3 ஆண்டு ஆசிரியாக இருந்துவந்தவர்—எப்படியோ சங்கராச்சாரியாராகி விட்டார். இவர் இதற்குமுன்பும் ஒருமுறை கைது ஆக்கப்பட்டவர்.

இப்படிப்பட்ட இவர், 'சட்டம் மீறினால் என்ன நடக்கும்' என்பதை அறியாதவர் என்று சொல்ல முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



மீறிவிட்டு, அதுவும், தாம் பட்டினி கிடந்து செத்தால் என்ன கேடு ஏற்பட்டுவிடும் என்பது தெரியாதவரா? தான் 'பட்டினி' கிடப்பது மூலம் மக்களுக்கு ஒரு வெறியை உண்டாக்கி, அந்த வெறி மூலம் அரசாங்கத்திற்குத் தொல்லை ஏற்படுத்தலாம் என்கின்ற எண்ணத்தைத் தவிர, மற்றபடி இவர் பட்டினிக்கு வேறு என்ன யோக்கியமான காரணம் இருக்க முடியும்?

இவர் பட்டினிக்காக அரசாங்கம் இணங்கிவிட்டால், பிறகு இந்த ஆட்சி எப்படி 45 கோடி மக்களை அடக்கி ஆளமுடியும்?

அரசாங்கத்தின் சட்டத்தை மீறி, அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுப்பதானால்—அதாவது அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுப்பதற்காகவே, அதுவும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகவே இப்படிப்பட்ட கீழ்த்தரமான காரியங்களை யார் செய்வதானாலும், ஒரு காலத்தில் அதாவது ஆச்சாரியார் புகுத்திய கட்டாய இந்திக்கு எதிர்ப்பு நடத்திய போது, சத்தியமூர்த்தி அய்யர், இந்தி எதிர்ப்பாளர்களை—குறிப்பாக என்னையே, 'ட்ரீஸன்' (Treason) என்னும் குற்றத்தைச் சாட்டிச் சுட்டுக்கொல்லவேண்டும் என்று சொன்னதுபோல், அரசாங்கம் காரியம் செய்யவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

அதுவும், என்னுடைய உயிரையும் தூசியாக நினைத்துச் சொல்லத் தோன்றுகிறது.

இந்த மாதிரிப் பார்ப்பனரால் விளம்பர மூலமாய் அல்லாமல், வேறு ஒரு தனி யோக்கியதையுமில்லாமல், தனது விளம்பரத்தைப் பயன்படுத்தியே ஓர் அரசாங்கத்தை அதுவும் ஜனநாயக ஆட்சியைக் காலித் தனங்களின் மூலம்—'குண்டாயிசத்'தின் மூலம் கவிழ்த்து விட்டு இப்படிப்பட்ட காலிகள் கைக்கே ஆட்சியைச் செலுத்துவதா? இதற்காக என்று துணிந்தால், இந்தத் துணிவுக்குப் பரிகாரம் சுட்டுக் கொல்லுவதைத் தவிர, உலகில் எந்த அரசாங்கந்தான் வேறு என்ன வேலை செய்யமுடியும்?

காந்தியை இந்தக் கூட்டந்தானே கொன்று தீர்த்தது? அந்தத் துணிச்சல்தானே காமராசரைக் கொல்ல அவர் வீட்டிற்கு, அவர் தூங்கும்போது நெருப்பு வைத்தது? நெருப்பு வைத்த கொலைகாரத்தனத்தை மறைக்க, மக்களின் ஆத்திரத்தை வேறு வழியில் திருப்புவதற்காக இந்த 'உண்ணாவிரத' (பட்டினி) வித்தை காட்டப்பட்டிருக்கிறது என்பதல்லாமல், இதில் யோக்கியமான காரணம் எதுவும் காண முடியவில்லை.

இந்தக் கூட்டத்தினர் மற்றும் வேறு பல வழிகளில் எத்தனைதான் பித்தலாட்டங்கள் செய்தபோதிலும், அவை காமராசரைக் கொலை செய்ய முயற்சித்ததை மறைக்கத் தக்க காரியமாக ஆக முடியுமா? இந்தக் கொலை முயற்சிக்கு 100 சங்கராச்சாரி, 1000 சாதுக்கள், 1000 பார்ப்பனர்கள் பட்டினி கிடந்து செத்தாலும் மறைக்கத் தக்கதான முயற்சி ஆகப் போவதில்லை. இது காந்தி கொலைபோல் எளிதில் மறைத்துவிடக் கூடியதல்ல.

இது என்னவாய் முடியப்போகிறது என்பதை என்னால் சிந்திக்கவே முடியவில்லை.

இயற்கையின் முடிவு எப்படியாகுமோ?

['விடுதலை'—தலையங்கம்—24-11-1966]

## 17. உலகமே பொய்

உலகத்தை உண்டுபண்ணிய கடவுள் என்பதாக ஒன்றும் இல்லை; எல்லாம் பிரம்ம மயம். பஞ்சபூத சேர்க்கையால் உலகப் பிரபஞ்சம் தோன்றிற்று.

மதத்தின் பேரால் (ஏன் கடவுளின் பேரால் என்றும் சொல்லலாம்) உலகிலுள்ள எல்லா மக்களும் எல்லா நாட்டிலும் மதங்களின் அவ்வக் காலங்களின்போது காட்டுமிராண்டிகளாய், மூடநம்பிக்கைக்காரர்களாய், சிந்தனையற்ற முட்டாள்களாகவே இருந்திருக்கிறார்கள்.



தென்னாட்டில் தமிழர்களிடத்தில் இன்றைய மதசம்பந்தமாக இருந்துவருகிற காட்டுமிராண்டித்தனங்களும் மூடத்தனங்களும் இருந்ததாகத் தெரியவில்லை.

எப்படி, எதனால் சொல்லுகிறேன் என்றால், இன்றைய தினம் நம் நாட்டில் மத சம்பந்தமாக நடமாடும் சொற்களுக்குத் தமிழில் வார்த்தைகள் காண்பது மிக்க கஷ்டமாகவே இருக்கிறது. மதத்திற்கோ, கடவுளுக்கோ, இவற்றின் ஆதாரங்களுக்கோ நடப்புகளுக்கோ சொல்லப்படும் சொற்களுக்கும், செய்யப்படும் காரியங்களுக்கும் அவற்றையே குறிப்பதற்கான சொற்களைக் காண்பதும் மிகச் சிரமமான காரியமாகத்தான் இருக்கிறது.

மற்றும், ஆரியர்களை—அவர்கள் இனத்தார்களான மேல் நாட்டாரை எடுத்துக் கொண்டாலும், கடவுள் மதம் விஷயமாக இன்று அவர்களும் நாமும் பங்குகொள்ளும் எந்தக் கருத்தும், சுமார் 5000 அல்லது 4000 ஆண்டுகளுக்குமுன் அவைகளுக்கென்றே சொல்லும்படியான சொற்கள் இருந்ததாகவும் தெரியவில்லை. 4000 வருஷத்திற்கு முன்னதாக என்று சொல்லும்படியான காலத்தில் ஏற்பட்ட ஆரியவேதம் என்னும் கற்பனைக் கோர்வைகளிலும் கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ இன்று குறிப்பிடுவதைப் போன்ற சொற்களைக் காணவும் முடியவில்லை.

வேதம் என்பதில் காணப்படும் ஏதாவது 'கடவுள் தத்துவம்'கூட வேதத்துக்கு வியாக்கியானம் செய்யப்பட்ட சங்கரர், இராமானுஜர், மாத்துவர் முதலிய மதகுருமார் என்பவர்கள் தனித்தனியாக அவரவர்களுக்கென்று செய்துகொண்ட வியாக்கியானங்கள்—கடவுளைப் பற்றி ஒன்றுக்கொன்று பொருந்தாத வகையில் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்தக் கருத்து வேற்றுமைகள்தாம் இன்று சங்கர, இராமானுஜ, மாத்துவ மதங்களாக உருப்பெற்றிருக்கின்றன.

இவர்கள் மூவர் அல்லாத ஒரு பொது மனிதன் வேதத்திற்கு இன்று வியாக்கியானம் செய்வதானால், வேதத்தில் கடவுளைக் காட்டவோ, காணவோ முடியாது.

வேதத்தில் பஞ்சபூதங்களைத்தான் காணலாம். ஆனால், அந்தப் பூதங்களுக்கு அக் காலக் காட்டுமிராண்டி மவுடீகத்திற்கேற்ப ஒவ்வொரு எஜமானர்களை ஏற்படுத்தி, பிறகு அவர்களே அவைகளாக ஆக்கப்பட்டு. அதனால் அவர்கள் தேவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்திரதேவன், வாயுதேவன், வருணதேவன், அக்கினிதேவன் பூமிதேவன் என்று இவை முறையே ஆகாயம், வாயு, அப்பு, தேயு, பிருதிவி என்கின்றவையான பஞ்சபூதங்களைக் குறிப்பிடுபவையேயாகும். இவைகளைச் சேர்த்து வைக்கும் இயற்கைக்குப் பலவாறு பெயரிட்டுக் குறிப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வைந்தின் கூட்டினால் ஏற்பட்ட உலகத்தைத்தான் பிரபஞ்சம் என்று பெயரிட்டு அழைத்துக்கொண்டார்கள். இதற்கு ஓர் எஜமான்—கடவுள் வேண்டுமென்று யார் நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் சங்கராச்சாரி—அதாவது 'சங்கர மதம்' சிறிதுகூட நினைக்கவே இல்லை. எப்படியென்றால், இன்றுகூட சங்கர மதத்திற்கு 'கடவுள் ஒன்று இருக்கிறது' என்ற கொள்கையே இல்லை.

சங்கர மதத்திற்கு 'அத்துவைத மதம்' என்று பெயர். அதாவது 'காணப்படும் உலகத்தைத் தவிர, அதை உண்டாக்கிய ஒருவன் இல்லை' என்பது.

அதனால்தான் சங்கர மதக்காரர்களை, 'தானே கடவுள் எனும் பாதகத்தவர்' என்று 'சமயாச்சாரியார்கள்' அழைக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல; சங்கராச்சாரிக்கு இன்றும் மற்ற மதக்காரர்கள் இட்ட பெயர் 'பிரசன்ன பவுத்தர்' என்பதாகும். அதாவது, பச்சை நாத்திகர் என்பது. எப்படியெனில், புத்த மதத்திற்குக் கடவுள் இல்லை என்பது மாத்திரமல்லாமல் 'ஆத்மா' என்பதும் இல்லை (அனாத்மன்) என்பது கொள்கையாகும்.



படிப்பகம்

www.padippakam.com



'துவைதம்' என்பது 'கடவுள், ஆத்மா ஆகிய இரண்டு உண்டு' என்பதாகும். 'அத்துவைதம்' என்பது 'இரண்டு இல்லை; ஒன்றுதான். அதுவும் பஞ்சபூதச் சேர்க்கையால் காணப்படும் தோற்றந்தான்; அதுவும் பொய்த் தோற்றமே; மாறக் கூடியதே. இல்லாமல் போகக்கூடியதே' என்பதுதான் அத்துவைதம். அதனால்தான், இந்த சங்கர மதத்திற்கு உலகில் பின்பற்றுகிறவர் மிகமிகக் குறைவு.

இந்த சங்கராச்சாரிக்கு சிஷ்யர்கள் பார்ப்பனரில் வைணவர்கள், மாத்துவர்கள், சைவர்கள், வடமர்கள் என்கின்ற பலவகைப் பார்ப்பனர்கள் சங்கராச்சாரியைக் குருவாக ஒப்புக்கொள்வதில்லை; பார்ப்பனர்களில் ஒரு சிறிய, மிகச் சிறிய கூட்டமாகிய ஸ்மார்த்தர்கள் என்பவர்களுக்கு மாத்திரம் இவர் குருவாவார். இவர்கள் எண்ணிக்கை நம் நாட்டில் 4 அல்லது 5 இலட்சம் கூட இராது.

இந்த ஸ்மார்த்தர்கள் இத்தனை பேருக்கும் கடவுள் கிடையாது; 'தானே கடவுள்' என்று சொல்லிக்கொள்பவர்கள்.

இந்த சங்கராச்சாரியை இந்துக்கள் என்பவர்களிலேயே மற்ற மதத்துக்காரர்கள் வெறுப்பார்கள்; ஏராளமான கண்டனங்கள் செய்வார்கள்; அதற்கு அனேக ஆதாரங்கள் இன்றும் இருக்கின்றன; இவர் முகத்தில் விழித்தாலே தோஷமென்று சில மதஸ்தர்கள் கூறுவார்கள்.

சுயமரியாதை இயக்கம் தோன்றி எல்லா மதங்களையும் ஒழிக்க முற்பட்டபின்பு எல்லா மதக்காரர்களும் முஸ்லிம், கிறிஸ்தவர்கள் உட்பட இன்று ஒன்று சேர்ந்து விட்டார்கள்.

எதுபோல் என்றால், சமதர்மம்தான் காங்கிரஸ் கொள்கை என்று ஆக்கினவுடன் நாட்டில் உள்ள அரசியல், மதிஇயல், பொருள் இயல், வியாபார இயல், 'பார்ப்பனன்' 'சூத்திரன்' 'பறையன்' என்கின்ற எல்லா சாதி இயல்காரர்களும், ஏன், காங்கிரசிலேயே பல மந்திரிகளும், காங்கிரஸ் கதர் பக்தர்களும் எப்படி ஒன்றுசேர்ந்து காமராசரைக் கொல்லவே அவரவர்களாலானவற்றைச் செய்து உதவுகிறார்களோ, அதுபோல சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க ஒன்று சேர்ந்து அவரவர்களால் ஆன உதவி செய்து வருகிறார்கள்!

இதில் 100-க்கு 90 பேர்களான பாமர மக்களுக்கு ஒன்றும் கவலை இல்லை என்றாலும், மதம் என்கின்றபெயரால் போர்துவக்கி இருப்பதால் நமக்கு எதிரான கட்சிகளையே அவர்கள் ஆதரிக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

இன்று மதம் 100-க்கு 97 பேரான 'இந்து' பாமர, பண்டித பணக்கார மக்களை என்ன செய்திருக்கிறது, எப்படி நடத்துகிறது, என்பதைப்பற்றி எவருக்குமே கவலை இல்லை என்பதோடு, மானமும் இல்லாமல் செய்துவிட்டதே என்று சிந்திப்பதே இல்லை.

இன்று மதம் ஒழிந்தால்—மனித சமுதாய உயர்வு தாழ்வு ஒழிந்து ஒன்றாகிவிடும்; செல்வத்தில், அறிவில், அந்தஸ்தில், வாழ்வில் உள்ள பேதங்களும் ஒழிந்து கவலையற்ற சமநிலை ஏற்பட்டுவிடும்.

இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இன்று பார்ப்பனரும், பணக்காரர்களும் மதப் பூச்சாண்டி காட்டிப் போர்தொடங்கி இருக்கிறார்கள் என்பதை மக்கள் உணரவேண்டுகிறேன்.

'மதம்', 'சங்கராச்சாரி', 'பசுப் பாதுகாப்பு', 'பணக்காரர்', 'பார்ப்பனர்கள்' ஆகியவைகள்பற்றி 30, 35 வருடங்களுக்கு முன்பு, 'குடி அரசு' ஏட்டில் பல கட்டுரைகள் வெளியாக்கப்பட்டிருக்கின்றன. அவை இன்றைய நிலைக்கு மிகமிகப் பொருத்தமுடையவையானதால் அவைகளை மறுபடியும் பிரசுரிக்கலாம் என்று கருதுகிறேன். தோழர்கள் ஊன்றி வாசிக்க வேண்டுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்— 23-11-1966]



## 18. வரவேற்கத்தக்கது

***சங்கராச்சாரியைக் கைது செய்ததற்காக டில்லி அரசாங்கத்தினைப் பாராட்டுகிறேன்.***

**காரணம், எப்படி நாட்டில் இன்று, பார்ப்பான், பணக்காரர்கள், பெரிய மனிதர்கள் மாத்திரமல்லாமல் உண்மையான தன்னலமற்ற பொதுத்தொண்டர்கள் என்பவர்கட்கும் கூட, மதிப்புப்போய்விட்டதோ அதேபோல், சங்கராச்சாரி கூட்டத்திற்கும் மதிப்பு ஒழிய வேண்டியது அவசியமேயாகும்.**

***சங்கராச்சாரி என்பது ஒரு மூடநம்பிக்கைதானே!***

**சமதர்மம் என்றால் மனிதனின் நடத்தைக்கும் எண்ணத்திற்கும், நற்றொண்டிற்கும் தான் மதிப்பு இருக்கவேண்டுமேயொழிய அந்தஸ்துக்கும், பதவிக்கும் மதிப்பு இருக்கக் கூடாது. ஆகையால், அரசாங்கத்தின் இந்தக் காரியத்தை நான் வரவேற்கிறேன்.**

**எனது தோழர்கள் நாடு முழுவதும் சர்க்கரை, மிட்டாய், பப்பர்மின்ட் முதலியவைகளை மக்களுக்கு வழங்கவேண்டுகிறேன்.**

**குன்றக்குடி மடாதிபதிக்கு அபராதம்போட்டுத் தண்டித்தபோது சும்மாயிருந்து, மகிழ்ச்சியடைந்த மக்கள் யோக்கியர்களாய் இருந்தால், இதற்கும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது யோக்கியமாகும்.**

**அரசாங்கம், சட்டம் மீறுகிறவர்கள் யாராய் இருந்தாலும் ஒன்றுபோல் நடத்தப் படுவார்கள் என்பதைக் காட்டிக்கொண்டதற்காகப் பாராட்டுகிறேன்.**

['விடுதலை'—24-11-1966]

## 19. நாமும் பிறரும்

*அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!*

அக்கிராசனர் அவர்கள் என்னைப்பற்றி மிக அதிகம் கூறிவிட்டார்கள். அவர் கூறிய அவ்வளவு புகழுக்கும் பெருமைக்கும் நான் யோக்கியதையுடையவனல்லன். என்மீது உள்ள ஏதோ அன்பாலேயே அவ்விதம் கூறியிருக்கக்கூடும். ஆனால், அப் புகழுரைகள் எனது கொள்கைக்கும், தத்துவத்திற்கும், திட்டத்திற்கும் அதிக ஆதரவு தருவன எனும் அளவில்—ஒருவாறு அவைகளை ஒப்புக்கொள்கிறேன். இப் புகழுரைகளால் எனது திட்டத்திற்கு உயர்வு கொடுக்கிறீர்கள் எனும் முறையிலிருந்து அதற்குத் தேசத்தில் எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளுதல் கூடும். எனது தொண்டினையும் அதன் கருத்துக்களையும் அக்கிராசனர் அவர்களும், நண்பர் சிவலிங்கச் செட்டியார் அவர்களும், எடுத்துச் சொன்னார்கள். எனது கொள்கையை எடுத்துரைக்கவே நானும் இங்கு வந்தேன். மூடத்தனமான பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் ஒழிக்கவேண்டுமென்பதே எனது கொள்கை.

நான் சொல்லுவதில் சில, தவறென உங்களுக்குத் தோன்றலாம்; ஆனால் அதிலுள்ள தன்மைகளை எடுத்துக்கொள்ள வேண்டியதே உங்கள் கடமையாகும். எனது தொண்டினை நாட்டின் பல பாகத்திலுமுள்ள பெரியோர்கள் ஆதரித்து வருகிறார்கள். இத்தொண்டு அவசியமென்பதற்கு, ஆரம்ப காலத்திலிருந்து இப்போதுவரை அதிக ஆதரவு கிடைத்து வருகிறதே சான்றாகும். அப் பிரச்சாரத்தை இந்த நாட்டில் செய்யவேண்டுமென்பது எனது நீண்ட நாள் அவா. இங்குள்ள பிரபலஸ்தர்கள் பன்முறை அழைத்தும் இப்பொழுதுதான் வரும் சந்தர்ப்பம் கிடைத்தது. இத் தனவைசிய நாட்டில், எனது கொள்கையை ஒப்புக்கொண்டு அதை அனுஷ்டான முறையிலும் கொண்டுவர ஆரம்பித்து விடுவார்களானால்—அதனால் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, இந்த மாகாணத்திற்கே பெரும் பயனும் நன்மையும் விளையுமென்று நம்புகிறேன். இந் நாட்டவராகிய நீங்கள் அவ்வளவு தூரம் முக்கியஸ்தர்களாக இருக்கின்றீர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



நீங்கள் இதுவரையில் உங்கள் பணத்தாலும், அறிவாலும், ஆற்றலினாலும், பக்தியினாலும் செய்து வந்ததைப்பற்றிக் குறைகூறுவதாக நினைக்கலாம். இவ்வளவு காலமாய் தெரிந்தோ, தெரியாமலோ நீங்கள் செய்துவந்த ஒரு தொண்டினைக் குற்றம் சொல்வதெனக் கருத வேண்டாம். நான் சொல்வதில் மாறுபட்ட அபிப்பிராயமுடையவர்கள் பலர் இருக்கலாம். நாம் எல்லோரும் ஒன்றுபட்டுப் பேசி, அதன் பின்பே ஒரு நன்முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

சிலரின் அருவருப்புக்கோ, கோபத்திற்கோ பயந்து நான் திட்டத்தை மாற்றிக் கொள்ளும் சுபாவமுடையவனல்லன். அவ்விதம் செய்வது பயத்தாலும், சுயநன்மையாலுமே யாகும். நான் சொல்வதில் குறை இருப்பதாகக் கருதும் கனவான்கள் அதை எடுத்துச் சொல்லவேண்டும். எனது அனுபவத்தில் இதுவரை செய்துவந்த தொண்டில் பெற்றதைக் கொண்டு இந்தக் கொள்கைகளை உங்களுக்குக் கூறுகிறேன். ஆதலால், சகலரும் தங்கள் தங்கள் சொந்த புத்தியைக்கொண்டு ஆலோசித்து நியாயமென்று ஒப்புக்கொண்டவை களைச் செய்கையில் செய்யுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது பிரசங்கத்தைக் கேட்டு நீங்கள் ஒருக்கால் பதட்டமடையக்கூடும். அய்ந்து ஆறு வருடத்திய தேசத்தொண்டே என்னை இந் நிலையில் கொண்டுவந்து விட்டது. நமது கஷ்டத்துக்கும் தாழ்ந்த நிலைமைக்கும் ஆங்கில சர்க்கார்தான் காரணம் என்று எண்ணி வந்தேன். அக் காலத்தில் ஏற்பட்ட பெரும் கிளர்ச்சியில் சேர்ந்து ஆங்கில சர்க்காரைத் திருத்த நானும் ஏதோ செய்துபார்த்தேன். அதற்காக, மகாத்மா காந்தியடிகள் காங்கிரஸ் மூலமாய்ச் சொன்ன ஒவ்வொரு திட்டத்தையும் என்னால் கூடியவரை பிரச்சாரம் செய்துவந்தேன். அக் காலத்தில் தேசம் மகத்தான தியாகம் செய்து கஷ்ட நஷ்டங்களையும் சகித்துவந்தது. அதனால், என்னபயன் அடைந்தோம்? நாம் யாருக் காக, எவருடைய விடுதலைக்காக அப் பெரும் போராட்டத்தை ஆரம்பித்தோமோ—யாருக்காக இன்னும் தொண்டுசெய்ய விரும்புகின்றோமோ—அத் தகைய நிர்பாக்கியமான நிலையிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு என்ன பலன் ஏற்பட்டது? அப் பெருங் கிளர்ச்சியின் பலனையும், பெயரையும் வைத்துக்கொண்டு, படித்த ஒரு சிறு கூட்டத்தார் பதவியும், பட்டமும், பெயரும், பெரும் பணமும் பெற்றார்கள் என்பது தவிர, எதற்காக அவ்வளவும் நடந்ததோ அதற்காக அவ் வியக்கத்திற்குக் கொஞ்சமும் நன்மை ஏற்பட வில்லை. கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் தயாராக இருந்து நடத்திய நமக்கு, அதன் பலனை அடைய மார்க்கமில்லாமல் போனதற்குக் காரணம் என்ன என்று சற்று ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

நமது இன்றையத் தளர்ச்சிக்குக் கேவலம், சர்க்கார் மட்டும் காரணமல்ல. அரசியல் கொடுமையைவிட மத சம்பந்தமான கொடுமைகள் மிக அதிகமாக இருப்பதே அதற்குக் காரணம். நமது வறுமைக்கும் அடிமைத் தனத்துக்கும் காரணம் நாமேயாவோம். மதத்தின் பெயரால் ஒரு சிலர் சுயநன்மையால், சுயமரியாதையற்ற முறையில் நாம் கஷ்டப்பட்டு வருகிறோம். நாம் மீளவேண்டுமானால்—சுயமரியாதை பெற்று மக்களாக வாழ வேண்டுமென்று நினைத்தால்—அடிமைப்படுத்தும் மூடநம்பிக்கைகளையும், குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களையும் முதலில் விட்டுவிடவேண்டும். அரசியல் கொடுமையைப் பின்பு பார்த்துக்கொள்வோம். பார்ப்பனர்கள், மதத்தின் பெயரால் இதுவரை செய்துவந்த பழக்க வழக்கங்களைத் தகர்க்கும் வன்மை நமக்கு வந்துவிட்டால்தான், ஆங்கில சர்க்காரிடம் நியாயத்தை எதிர்பார்க்க அருகதையுள்ளவர்களாவோம். இவர்களின் பூட்டிலிருந்து தப்பும் நமக்கு, ஆங்கில சர்க்காரை எதிர்ப்பது ஒரு பெரிதல்ல. இதுவரை எங்கும் உள்ள கனவான்களும், சங்கங்களும், சபைகளும், பல பொது ஸ்தாபனங்களும் எனது தொண்டு நியாயமானது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; இன்னும் ஒப்புக்கொண்டும் வருகிறார்கள்.



மதத்தின் பெயரால் குருட்டுத்தனமான மூடநம்பிக்கையில் ஒவ்வொரு நாடும் அடிமைப்பட்டிருந்தது. சுயமரியாதையைப் பெற்ற அந்த நாடுகள், முதலில் அனுஷ்டித்த மூடமுறைகளுக்கு வெட்கப்பட்டு அவற்றை உதறித்தள்ளி, அதன் பின்பே சுயமரியாதை யையும், சுயராஜ்யத்தையும் பெற்றிருக்கின்றன. இன்று முற்போக்கடைந்ததாகச் சொல்லிக் கொள்ளும் ஒவ்வொரு நாடும்—சுயராஜ்யம் பெற்று சுயேச்சையாக இராஜ்யம் நடத்திவரும் ஒவ்வொரு நாடும்—முதலில் மத சம்பந்தமான குருட்டுப் பழக்க வழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும் விட்டொழித்த பின்புதான் இராஜ்யம் நடத்தும் நிலையை அடைந் திருக்கின்றன. உலகில் மூன்றில் ஒரு பங்கை ஆளுபவர்களும், 33 கோடி மக்களுள்ள நம் நாட்டில் ஆளுகின்றவர்களுமாகிய இங்கிலீஷ்காரர்களை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்—நாம் எவ்வளவோ உயர்ந்த நாகரிகமும் முற்போக்கும் பெற்றிருந்த காலத்தில், ஆங்கிலேயர்கள் மிக மோசமான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அக் காலத்தில், நம்மைவிட மிக மோசமாக மத சம்பந்தமான பழக்க வழக் கங்களை அனுஷ்டித்து வந்தார்கள். அக் காலத்தில் அவர்கள் நிலை, இன்றைய நமது கேவல நிலையைவிட மிக மோசமாகவும், மானக்கேடாகவுமே இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக, அக் காலத்தில் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெற ஒரு சுலபமான முறையைக் கடைப்பிடித்து நம்பிச் செய்துவந்தார்கள். இன்று நமது நாட்டில் புரோகிதர்களால் நாம் ஏமாற்றப்படுவது போலவே, அங்குள்ள பாதிரிமார்களால் அவர்கள் ஏமாற்றப்பட்டு வந்தார்கள்.

அதாவது, ‘பாவமன்னிப்புச் சீட்டு’ வாங்குவது என்பதாகும். ஒருவன் எத்தகைய தீச் செயலையும் செய்துவிட்டுப் பாதிரியாரிடம் சென்று, ‘அய்யா! நான் இன்ன பாவம் செய்தேன். அதற்கு ‘மன்னிப்பு டிக்கட்’ வேண்டும்’ என்று கேட்டதும் உடனே பாதிரியார் அந்தந்தப் பாவத்தின் நிலைக்குத் தக்கபடி கிரயம் போட்டு பணம் வாங்கிக்கொண்டு டிக்கட் கொடுத்துவிடுவதும் அங்கே இருந்தது. அந்த டிக்கட்டுகளை கடைகளிலும், சந்தைகளிலும் கட்டுக்கட்டாகக் கட்டிப் போட்டுக்கொண்டு விற்று வந்தார்கள். சந்தைகளில் மற்ற சாமான்கள் விற்பதுபோல பாவமன்னிப்பு டிக்கட்டுகளும் விசேஷமாக விற்கப்பட்டுவந்தன. இம் மூடக் கொள்கையிலிருந்து ஜன சமூகத்தை விழிக்கச் செய்ய அனேக சீர்திருத்தக் காரர்கள் அக் காலத்தில் தோன்றினர்.

ஒரு பாதிரியார், முக்கியஸ்தர். ஒரு சீர்திருத்தக்காரர் அப் பாதிரியாரிடம் சென்று, ‘இதுவரை செய்த பாவங்களுக்குத்தான் மன்னிப்புக் கொடுக்கின்றீர்களே! இனிமேல் புதிதாகச் செய்யப்போகும் பாவங்களுக்கும் மன்னிப்புச் சீட்டு இருக்கிறதா?’ என்று கேட்ட தற்கு அப் பாதிரியார் ‘ஆம்! இருக்கிறது’ என்று கூறி ‘இனிமேல் செய்யப்போகும் பாவத்தை மன்னிப்புச் செய்வதற்காக’ என்று பணம் வாங்கிக்கொண்டு ஒரு டிக்கட்டைக் கொடுத்தார். அந்த டிக்கட்டை அச் சீர்திருத்தக்காரர் வாங்கி வைத்துக்கொண்டு ஒரு இடத்தில் நின்றுகொண்டிருந்தார். சந்தையில், அப் பாதிரி டிக்கட்டுகளை எல்லாம் விற்று விட்டுப் பணத்தை மூட்டை கட்டிப்போட்டுக் கொண்டுவரும் வழியில், அவனை அடித்து அவனிடமிருந்த பணத்தை யெல்லாம் பிடுங்கிக் கொண்டார். அச் சீர்திருத்தக்காரரைப் பார்த்து பாதிரியார், ‘நான் பாவ மன்னிப்பு டிக்கட் விற்பவரல்லவா? உலகிற்கே நன்மை செய்யும் என்னை இவ்விதம் துன்பப்படுத்திப் பணத்தையும் பிடுங்கிக் கொள்வது பெரும் பாவமல்லவா?’ என்று கேட்டதற்கு—அச் சீர்திருத்தக்காரர், ‘கோபித்துக் கொள்ளாதீர்கள். தவறாக நான் ஒன்றும் செய்துவிடவில்லை. இதோ இந்தப் பாவத்திற்கும் மன்னிப்பு டிக்கட் வைத்திருக்கிறேன். அது, உம்மிடம்தான் முதலில் வாங்கினேன். நீர்தானே—இனிமேல் செய்யும் பாவத்தையும் இந்த டிக்கட் மன்னித்துவிடும் என்று கூறினீர்’ என்று சொன் னாராம். அவ்வளவு மோசமான நிலையில் இருந்த அவர்கள் பாதிரிமார்களின் ஆதிக்கத்தை ஒழித்த பின்பே சுயமரியாதை பெற்றுத் தங்கள் நாட்டைத் தாங்களே ஆளுந்திறமையுடன் மட்டுமல்லாமல், உலகிலேயே பெரும் பகுதியை ஆளும் நிலைமையையும் பெற்றுள்ளார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இதைப்போலவே, ஜப்பான் முதலிய நாடுகளெல்லாம் முதலில் மதக் கொடுமைகளை ஒழித்து, அதன் மூலம், சுயமரியாதையற்று வாழும் தம் ஜனங்களையும் கண் விழிக்கச் செய்த பின்பே தம் நாட்டையாளும் யோக்கியதையை அடைந்திருக்கின்றனர். இதை நாம் செய்யாமல் சும்மா காங்கிரஸ், தேச விடுதலை, சுயராஜ்யம் என்று கூறுவது பொருந்துமா? சுயராஜ்யத்தையடையுமுன் அதை வைத்து நிர்வகிக்கச் சக்தியை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மகாத்மா காந்தியடிகளால் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்க காலத்தில், நாம் எதை அனுஷ்டான முறையில் செய்யாமல் இருந்தோம்? எத்தகைய பெரியார்களும் இளைஞர்களும் அதில் சேர்ந்துகொண்டு செய்தார்கள். கோடிக்கணக்கான பணம் கொடுத்தார்கள்; எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்குஆளாக வேண்டுமோ அவ்வளவிற்கு ஆளாகியும் பயன் இல்லாமல் போனதன் தத்துவம் என்ன? வேகமாகப் போகும் ஒரு மோட்டாரானது, எதிரிலுள்ள சுவரில் திடீரென முட்டிக்கொண்டால், அதன் கதி என்ன ஆகின்றது? பக்குவப்படுத்தாத ஜன சமூக எழுச்சியால் அக் காலத்திய முற்போக்கு அழிந்ததுமன்றி, மிகவும் பிற்போக்கான நிலைக்கும் நம்மைக் கொண்டுவந்து விட்டுவிட்டது.

இன்றைய நிலையில் முட்டுப்பட்ட மோட்டார் நிலையைத்தான் நாம் அடைந்துள்ளோம். சமூகச் சீர்திருத்தமும், முற்போக்கும் இல்லாததே அத் தடைக்குக் காரணம். குருட்டுத்தனமாக—மதம், மதம் என்ற பெயரால் எக் கொடுமையையும் செய்யப் பழக்கப்பட்டிருக்கிறோம். 'உயிரைவிட மதமே பிரதானம்' என்று எண்ணுகிறோம். இந்த உணர்ச்சி நமது இரத்தத்திலேயே ஊறி இருக்கிறது. ஆனால், ஒரு சிறிது நேரமாவது, 'மதம் என்றால் என்ன? அதற்கு நாம் செய்துவரும் பழக்க வழக்கங்களால் ஏற்படும் நன்மை எவ்வளவு?' என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதே இல்லை. ஒருவன் நம்மை, 'நீ எந்த மதம்?' என்றால், 'இந்து மதம்' என்கிறோம். 'இந்து மதமென்றால் என்ன?' என்று கேட்டால் அதைப்பற்றிய விஷயம் ஒன்றும் தெரியாது.

நமது நாட்டில் எத்தனையோ மதங்களிருக்கின்றன. சிறப்பாக முகம்மதிய மதம், கிறிஸ்தவ மதம், புத்த மதம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஒரு முகமதியரிடம் சென்று, 'அய்யா! உங்கள் மதம் எப்பொழுது உண்டாயிற்று? அதன் காலமென்ன? அதன் தலைவர் யார்? அதன் தத்துவமும், முறையும் என்ன?' என்று கேட்டால், அது முகமது நபிநாயகம் காலத்தில் இருந்து, சிறப்புற்று விளங்க ஆரம்பித்தது என்றும், குரான் என்பதே வேதம் என்றும், அதன் கால வரையறையையும், கொள்கையையும் குறிப்பிட்டு விடுகிறார். அதைப்போலவே ஒரு கிறிஸ்தவரிடம் சென்று கேட்டால் தக்க பதில் தருகிறார். அதைப் போன்றே பவுத்த மதஸ்தரிடம் சென்று அதன் ஆதாரங்களையும் முடிவையும் தெரிந்து கொள்ளலாம். அதற்குச் சவுகரியங்கள் இருக்கின்றன.

ஆனால், இந்துமதம் என்றால் என்ன? எப்பொழுது உண்டாயிற்று? அதன் பிரமாணம், தத்துவம், ஆதாரம் என்னவென்று யாரையும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது. இந்துமதத்தின் பெயரால் மதம் என்று சொல்லிக்கொண்டு ஒருவருக்கொருவர் சண்டை போடுகிறோம். உட்பிரிவுகளாகிய சைவ, வைணவ சமயங்களின் பெயரால் ஒருவருக்கொருவர் சண்டையிடப் பழக்கப்பட்டு இருக்கிறோம். இதில் ஒரு கடவுள் பெரிது; மற்றொரு கடவுள் சிறிது என்றும், ஒரு கடவுள்காரர் மற்ற கடவுளை வணங்குதல் பாவம் என்றும், ஒரு மதஸ்தனை மற்றொரு மதஸ்தன் பார்ப்பது பாவமென்றும் சண்டையிடுகிறோமே யல்லாமல்—இந்துமதம் என்றால் அது என்ன என்பதை நம்மில் ஒருவரும் அறிவதில்லை. இந்து மதம் எப்பொழுது உண்டானது என்றால், அது அனாதி மதம், வேத காலம்தொட்டு இருக்கிறது என்கிறார்கள். வேதம் எப்பொழுது யாரால் உண்டானது என்றால், அதுவும் அனாதியானது, கடவுளால் உண்டாக்கப்பட்டது என்கிறார்கள். 'அய்யா, வேதம் என்பது கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று சொல்லுகிறீரே! கடவுள் எல்லோருக்கும் சமமானவர்தானே, அதை நான் பார்க்கலாமா?' என்றால்—'ஆகா, மோசம் வந்துவிடும்; நீ பார்க்கக்கூடாது; நீ சூத்திரன்—அதைப் பார்த்தால் கண்ணைப் பிடுங்கிவிட வேண்டும்; படித்தால் நாக்கை அறுத்துவிட வேண்டும்; யாராவது படிக்கும்போது கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்' என்கிறார்கள்.



அது போகட்டும். இந்த 'இந்துமதம்' என்ற வார்த்தையாவது நமது தமிழ் நூல்களில் எதிலாகிலும், எங்கேனும் இருக்கிறதா? இல்லை. ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட தமிழ் நூல்கள் பல இருக்கின்றனவே, அவற்றில் ஏதாகிலும், எந்த இடத்திலாகிலும் இந்துமதம் என்ற வார்த்தை பெயருக்காவது இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. இந்து மதத்தின்—பெயரின் இரகசியமே நமக்குத் தெரியவில்லை. இது எவ்வளவு மானக்கேடான நிலையாக இருக்கிறது? இந்து என்கிற வார்த்தை 'பெர்சியன்' பாஷையில்தான் வழங்கப்படுகிறது. அதற்கு அர்த்தம் என்னவென்றால், 'திருடன்' என்பது பொருள். ஒரு சமயம், குறிப்பிடும் 'இந்து' என்கிற வார்த்தைக்குப் பொருள் அது இல்லையென்று வைத்துக்கொண்டாலும்—ஆராய்ச்சிக்காரர்கள், சிந்து நதிக் கரையில் ஆரியர்கள் முதல் முதல் நமது நாட்டில் குடியேறினவர்களாதலினால் அந்த நதியின் பெயரால் அவர்கள் அழைக்கப்பட்டு, 'சிந்து' என்பது 'இந்து' வாகி—'இந்தியர்' என்று மாறிவிட்டது என்று சொல்கிறார்கள். அதற்கு ஆதாரமாக, ஆங்கில அகராதிகளிலும் இந்து என்றால் ஆரியன் என்றும்; இந்துமதம் என்றால் பார்ப்பன மதமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆங்கில அகராதிதான் அப்படிச் சொல்கிறது என்பதாக, அதன்மீது நாம் குறை சொல்வதாக இருந்தாலும்—ஆரியர்களாலேயே எழுதப்பட்டதும், ஒப்புக்கொள்ளப்பட்டதுமான வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமம் இவைகளின் பாஷியம், புராணம் என்பனவற்றில் ஒரு ஆதாரத்திலாவது 'இந்து', 'இந்துமதம்' என்ற வார்த்தைகள் கிடையவே கிடையாது.

இந்து மதத்தின் ஆதாரங்கள் ஒரு யோக்கியதையில் இருந்தாலும் அதன் பழக்க வழக்கங்களைப் பற்றிச் சற்று யோசித்துப் பாருங்கள். இந்து மதத்தின் பேரால் எத்தனை கடவுள்கள்? பதினாயிரக் கணக்கான கடவுள்களும், ஒவ்வொரு கடவுளுக்கும் பல பெயர்களும், ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு வித ஆதாரமும், இவ்வளவும் உள்ளன. மேலும் அந்தக் கடவுள் பெயரால் மனிதர்கள் தங்களுக்கு இட்டுக் கொள்ளும் குறிகளில் வித்தியாசமிருப்பதோடு மாத்திரமல்லாமல், கடவுள் நெற்றியில் இடும் குறிகளுக்கு ஒருவருக்கொருவர் சண்டையும், அச் சண்டையைத் தங்களுக்குள்ளாகவே தீர்த்துக் கொள்ளப் போதிய ஆதாரமின்மையும், மதாச்சாரியார் என்பவர்களுக்குச் சக்தி இல்லாமையும், நமது மதத்திற்கே சம்பந்தமில்லாதவரும் நமது மதத்தைப் பரிகாசம் செய்கின்றவரும், நமது மதத்தை அழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அதற்காகவே பிரச்சாரம் செய்பவர்களுமான ஆங்கிலேயர்களிடம் தீர்ப்புக்காகக் காத்திருப்பதும் ஏற்படுகிறது.

உதாரணமாக, சீரங்கத்திலிருக்கும் ரெங்கநாதப் பெருமாளுக்கு எவ்வளவு பெரிய கோயிலிருந்தும், எவ்வளவோ பெரிய பக்த கோடிகள் இருந்தும், எவ்வளவு சொத்துக்கள் இருந்தும், அந்தச் சுவாமியின் நெற்றியில் வைக்கும் குறியான நாமமென்பது—வடகலையா, தென்கலையா என்பது பற்றிச் சத்தம் போட்டுக் கொள்வதும், ஒன்றை நீக்கி மற்றொன்றைத் திருட்டுத்தனமாக வைப்பதும், இந்தக் கலகத்தை நமக்குள்ளாகவும், நம்முடைய மதாச்சாரியார்களுக்குள்ளாகவும் தீர்த்துக்கொள்ள யோக்கியதையில்லாமல் வெள்ளைக்கார நீதிபதிகளிடம் போய், வாயாடி வக்கீல்களை வைத்துக் கொண்டு, தங்கள் தங்கள் கட்சியைச் சண்டப் பிரசண்டமாகக் கூறுவதும்; நீதிபதிக்கு ஒன்றும் புரியாமல், வீட்டிலுள்ள 'பட்லர்'களைக் கொண்டு விஷயம் தெரிந்து கொள்ள முயற்சிப்பதும், அப் 'பட்லர்'கள் வட கலைக் குறி என்பது ஆங்கிலத்தில் 'யூ' (U) போல் இருக்குமென்றும், தென் கலைக் குறி 'ஒய்'(Y) எழுத்துப் போல இருக்கும் என்றும் சொல்வதும்—ஜட்ஜு, 'இப் பைத்தியக்காரர் யூ-க்கும் ஒய்-க்கும் சண்டை பிடித்துக் கொண்டுதானா—இவ்வளவு

படிப்பகம்

www.padippakam.com



பணம் செலவு செய்துகொண்டு நம்மை வந்து உபத்திரவப் படுத்துகிறார்கள்? இதைப்பற்றி நமக்கென்ன தெரியும்; நாம் எப்படித் தீர்ப்புச் சொல்வதென்று தெரியவில்லை. ஆதலால், பூ-வையும் ஒ-யையும் இரண்டு சீட்டில் எழுதிக் குலுக்கிப் போட்டு ஒன்றை எடுத்துக் கொடு' என்று சொல்லவும், 'பட்லர்' எடுத்துக் கொடுத்ததைக் கொண்டு கோர்ட்டில் தீர்ப்புச் சொல்வதும் இருப்பதோடு மாத்திரமல்லாமல்—இன்னமும், நமது மத நடவடிக்கைகளிலும் கோயில் சம்பந்தமான நடவடிக்கைகளிலும் கோர்ட்டு மூலியம் நடவடிக்கைகளில் அனேக காலம் கஷ்டப்படுவதுமாக இருக்கிறோம். இவை ஒருபுறமிருக்க, கடவுள்களிலேயும் ஒரு கடவுளுக்கு ஒரு கடவுள் வித்தியாசங்கள் கற்பித்துக்கொண்டு நடத்துகின்றார்கள். உதாரணமாக, பிள்ளையார் என்ற கடவுளை யார் வேண்டுமானாலும் தொடலாம், யார் வேண்டுமானாலும் பூசை செய்யலாம் என்பதும்; காசியில் இருக்கும் கோயிலை யார் வேண்டுமானாலும் தொடலாம், யார் வேண்டுமானாலும் கர்ப்பக் கிரகத்திற்குப் போகலாம் என்றும்; நம் ஊரில் அதே பேரில் உள்ள கோயில்களில் அவன் போகக்கூடாது, இவன் போகக்கூடாது என்றும்; இவன் பூசை செய்யக்கூடாது, அவன் பூசை செய்யக்கூடாது என்றும்; இன்னான்தான், இன்னவன்தான் பூசை செய்ய வேண்டும்; இன்னின்ன பாஷையில்தான் தோத்திரம் சொல்லவேண்டுமென்பதுமான புரட்டுக்களும் கொடுமைகளும் நடந்து வருகின்றன.

நமது மதத்திற்காகவும், சாமிகளுக்காகவும், இந்தக் கோயில்களுக்காகவும் நாம் செய்கிற செலவைப் பற்றியதோ—நாம் சர்க்காருக்குச் செலுத்துகிற வரியைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகவும் செலுத்துவதோடு, அந்தவரி—சர்க்கார் செலவு செய்கிற அக்கிரமத்தைவிட அதிகமான அக்கிரமத்திலும், நமது சமூகத்திற்கு இழிவை நிலைநிறுத்தும் வகையிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த உலகத்தில் வேறு எந்த மதத்தாரும் செலவு செய்யாத அவ்வளவு பணச் செலவும் மானக்கேடும் கஷ்டமும் அடைகிறோம்.

சாதாரணமாக, திருப்பதி வெங்கடாசலபதி என்கிற ஒரு கடவுளுக்கு மாத்திரம்—வருடம் ஒன்றுக்கு 20 இலட்ச ரூபாய் வரும்படி வருவதாக அந்தத் தேவஸ்தானக் கணக்கு மூலமாகவே ஏற்படுகிறது; கணக்குக்கு வராத பணம் 20 இலட்சத்திற்கு மேலாகவே இருக்கலாம். அதாவது, யாத்திரைக்காரர்களும், வேண்டுதல்காரர்களும் கொண்டுபோகும் பணத்தை 'மகந்து' என்கிற ஒரு சன்னியாசி—தான் கடவுளைவிடப் பெரியவர் என்றும், வெங்கடாசலபதிக்கு வேண்டுதலைக்காகக் கொண்டு வந்திருக்கும் பணத்தை கோயில் உண்டியல் பெட்டியில் போட்டால், சர்க்காரார் ஜெர்மன் யுத்தத்திற்காகப் பட்டிருக்கும் கடனுக்கு வட்டியாக உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்றும், தன்னிடம் கொடுத்தால் நேரே கடவுளுக்குப் போய்ச் சேருமென்றும் சொல்லி ஏமாற்றிப் பிடுங்கிக்கொள்கிற பணம் இவ்வளவென்று சொல்லமுடியாது. இவ்வளவு பணமும் எந்த வகையில் செலவாகிறதென்றால் ஒரு பகுதி, பச்சரிசி, நெய், பாசிப் பயறு, குங்குமப் பூ, பச்சைக் கற்பூரம், சர்க்கரை, பாதாமி, பால் இவைகளுக்குச் செலவாவதும்; அதை ஒரு கூட்டத்தாரே வயிறு வெடிக்கத் தின்பதற்கும், பணம் கொடுத்த கூட்டத்தார் கண்ணால் பார்த்தால் தோஷம் என்று சொல்வதற்கும் உபயோகப்படுவதோடு—மற்ற ஒரு பகுதியோ வேதபாடசாலை என்பதற்கும், சமஸ்கிருதப் பாடசாலை என்பதற்கும் செலவு செய்யப்படுகிறது. பணம் கொடுத்த கூட்டத்தார் வேத பாடசாலையில் படிக்கலாமோ என்று கேட்டால், 'நீ சூத்திரன், வேதம் படிக்கக்கூடாது' என்று சொல்வதும்; சமஸ்கிருத பள்ளிக்கூடத்திலாவது படிக்கலாமா என்று கேட்டால், 'அது சூத்திரன் வாயில் நுழையாது; நுழைந்தாலும் அதில் வேத சம்பந்தமான சங்கதிகள் வரும்; ஆதலால் அதுவும் படிக்க முடியாது' என்றும் சொல்லி நம்மை இழிவுபடுத்துவதற்கே செலவு செய்யப்படுகிறது.

இந்த மாதிரி இன்னமும் எத்தனையோ கோயில்கள் நம் நாட்டில் இருக்கின்றன. கோயில்கள்தாம் இப்படி என்றாலோ, மதத்தைப் பரவச் செய்யும் மதஸ்தாபனங்களான மடங்களும், மடாதிபதிகளும், மத ஆச்சாரியார்களும் செய்யும் அக்கிரமங்களைப் பாருங்கள்!



தருமபுரம், திருவாவடுதுறை முதலிய பல சைவ மடங்களும், பல வைணவ மடங்களும், சிருங்கேரி, கும்பகோணம் முதலிய ஸ்மார்த்த மடங்களும்—அய்ந்து இலட்சம், பத்து இலட்சம், இருபது இலட்சம், முப்பது இலட்சம், அய்ம்பது இலட்சக்கணக்காய் வரும்படி பெற்று என்ன செய்கிறார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். மதப் பிரச்சாரம் ஏதாவது உண்டா? மதத்தின் தன்மை இன்னதென்று மக்களுக்கு அறிவிக்கிறார்களா? சிருங்கேரி மடாதிபதி என்கிற சங்கராச்சாரியார் என்பவர் 'லோக குரு' என்பதாகப் பெயர் வைத்துக் கொண்டு பல்லக்கு, யானை, குதிரை, ஒட்டகம், மாடு, வண்டி, ஆள், சிப்பந்திகளுடன் வந்து இறங்குவதும், அந்தந்த ஊரிலுள்ள பிரபுக்களை அந்தந்த ஊரிலுள்ள பார்ப்பன உத்தியோகஸ்தர்கள் தயவால் நய-பயத்தில் சுவாதீனம் செய்துகொண்டு ஆளொன்றுக்கு 100, 200, 500, 1,000, 5,000, 7,000, 10,000 என்பதாக வசூல் செய்து—தினம் ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர் என்பதாகப் பார்ப்பனர்களுக்கே பொங்கிப் போட்டுவிட்டு, மிஞ்சிய பணத்தை மூட்டை கட்டிக்கொண்டு மற்றொரு ஊருக்குப் புறப்பட்டு விடுகிறார்கள்.

இவர்களால் ஏதாவது உபதேசம் உண்டா? ஒழுக்கப் பயிற்சியுண்டா? ஒன்றும் இல்லாததோடு, நம்மைக் கண்டால், நம்மோடு பேசினால், நம் பாஷையை உச்சரித்தால்—முறையே 'சண்டாள தரிசனம்', 'சூத்திர சம்பாஷணை', 'மிலேச்ச பாஷை உச்சரிப்பு' என்பதாகச் சொல்லி, நம் பணத்திலேயே பார்ப்பனருக்குத் தானம் கொடுப்பதும், பிராயசித்தம் செய்துகொள்ளுவதும், ஸ்நானம் செய்து வாயைக் கழுவுவதுமாகச் செய்கிறார்கள். நம்முடைய பணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பிரதியாய் அவர்களது காலைக் கழுவின தண்ணீரைக் குடிக்கச் சொல்லுகிறார்கள். இதுதவிர வேறு என்ன நடக்கிறது? இப்படிப்பட்ட சங்கராச்சாரியார் என்பவர், மனத்தில் நினைப்பதுதான் கடவுள் என்று கூறி—வெளியில் பூசை செய்வது ஒரு பெண் தேவதை; மேலில் வேஷம் போட்டுக் கொள்வது சைவப் பூச்சு. ஆகவே மதம் வேறு, கிரியை வேறு, வேஷம் வேறு என ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத ஒருவரை, பெற்ற பணத்தையெல்லாம் பார்ப்பனர்களுக்கே உபயோகப் படுத்தி, நம்மை இழிவுபடுத்தி அதை நிரந்தரமாய் நிற்கும்படி செய்துகொண்டு வருகிற ஒருவரை—நாம் கடவுளுக்குச் சமமாக நினைத்துக் காலில் விழுந்து கால் கழுவிய தண்ணீரைக் குடித்து ஆயிரம் பதினாயிரமாகக் கொட்டிக் கொடுக்கிறோம்.

இதைப்பற்றி ஒரு சிறிதும் கவனிப்பதில்லை. இந்தப் பணத்திற்குக் கணக்குக் கேட்பதில்லை. கேட்டால் நாத்திகம், வேதத் துவேஷம், பிராமணத் துவேஷம் என்று சொல்லி அடக்குமுறை போட்டு விடுகிறார்களேயொழிய கொஞ்சமாவது யோசிக்கவிடுவதே இல்லை. மற்ற மதக்காரர்கள் செய்வதைப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் வேறு தேசத்தி லிருப்பவர்கள்; அவர்கள் மதத்தை நமது வீட்டில் பரப்ப எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்? எவ்வளவு பணச்செலவு செய்கிறார்கள்? 6,000 மைல் கடந்து அவர்களது சீதோஷ்ண ஸ்திதி சவுகரியங்களைவிட்டு நமது நாட்டுக்கு வந்து, அவர்களது வேதங்களை நமது பாஷையில் அச்சிட்டு நமது வீடுகளிலும், சந்தைகளிலும், திருவிழாக்களிலும் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். நம மக்களுக்கு உபதேசம் செய்ய பாதிரியார் என்பதாக ஆட்களை ஏற்படுத்திப் பிரச்சாரம் செய்து, தினமும் நூற்றுக்கணக்கான நம் மக்களை தங்கள் மதத்தில் சேர்க்கிறார்கள். நமது மதப் பிரச்சாரம் என்பது தினமும் பல நூற்றுக்கணக்கான மக்களை முகமதிய மதம் முதலிய அன்னிய மதங்களில் சேர்க்கச் செய்வதாகத்தான் இருந்து வருகிறது. இன்றையதினம் நமது நாட்டில் இருக்கும் ஒரு கோடி கிறிஸ்தவர்கள் யார்? ஏழு கோடி முஸ்லிம்கள் யார்? என்று பார்ப்பீர்களானால் நமது மதக் கொடுமையால் மதாச்சாரியர்களால் அன்னிய மதத்திற்கு அனுப்பிக் கொடுக்கப்பட்ட, நம் சகோதரர்களே யல்லாமல் வேறு என்ன? அவர்கள் அத்தனை பேரும் எருசலத்தில் இருந்தோ, அரேபியாவிலிருந்தோ வந்தவர்களா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இம் மாதிரியான பெருந்தொகைகளுக்குக் கணக்குக் கேட்பதற்காகப் பார்ப்பனரல்லாதார் கட்சி மந்திரிகளால், 'இந்து பரிபாலன மசோதா' என்பதாக ஒரு சட்டம் ஏற்படுத்தப்



படிப்பகம்

www.padippakam.com



பட்டால், தங்களது வயிற்றுப் பிழைப்புப் போய்விடுமே என்று பயந்துகொண்டு, அதைக் கெடுக்க எண்ணங்கொண்ட நமது பார்ப்பனர்கள்—' ஜஸ்டிஸ் கட்சியார், மதத்தில் சர்க்கார் புகும்படியாகச் செய்துவிட்டார்கள்'; 'மதம் போச்சுது! மதம் போச்சுது!' என்பதாக விஷமப் பிரச்சாரம் செய்து, வேண்டுமென்றே அக் கட்சியின் மீது மக்களுக்குத் துவேஷமுண்டாக்க இதை ஒரு தந்திரமாகக் கைக்கொண்டு விட்டார்கள். அந்தச் சட்டத்தினால் மதம் எப்படிக்கெட்டுப்போய் விட்டதென்றாவது, சர்க்காரார் எப்படி மதத்தில் பிரவேசித்து விட்டார்கள் என்றாவது ஒரு வார்த்தைகூடச் சொல்லவேயில்லை.

இவர்கள் தந்திரத்திற்கு ஒரு சிறு கதை சொல்லுகிறேன். ஒரு பெரிய வெள்ளத்தில் ஒரு நரி அடித்துக்கொண்டு வரப்பட்டுவிட்டது. கரையின்மேல் இருந்த ஜனங்களைப் பார்த்து அந்த நரி, 'உலகம் போச்சுது! போச்சுது!' என்று கத்திக்கொண்டே வெள்ளத்தில் மிதந்து கொண்டுபோகும்போது, கரையில் இருந்தவர்கள் உலகத்திற்கே ஏதோ பெரும் ஆபத்து வந்துவிட்டதாய்க் கருதி, நரியைக் கரைசேர்த்து அதன் மூலம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பதாய் நினைத்து, கஷ்டப்பட்டு நீந்தி அதைக் கரையேற்றிய பின்பு, நரியைப் பார்த்து, 'உலகம் போச்சுது என்று சொன்னீர்களே! அதன் கருத்து என்ன? அதற்காக நாங்கள் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டார்கள். அதற்கு, அந்த நரி ஓடுவதற்கு வழிபார்த்துக்கொண்டு, கேட்டவர்களைப் பார்த்து, 'அட பைத்தியக்காரர்களே! இது உங்களுக்குத் தெரியவில்லையா? என்னை நீங்கள் தண்ணீரில் விழுந்து கஷ்டப்பட்டுக் கரை சேர்த்திருக்காவிட்டால் வெள்ளம் என்னை அடித்துக்கொண்டுபோய்க் கொன்று இருக்குமல்லவா? அந்தப்படி நான் செத்துப்போயிருந்தால்—எனக்கு உலகம் போய் விட்டதாய் இல்லையா? அதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். இதுகூடவா உங்களுக்குத் தெரியவில்லை?' என்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்துவிட்டது.

அதுபோல், நமது பார்ப்பனர்கள் மதம் போச்சு என்றால், என்ன மதம் போச்சு! கல் சுவாமிகளை எடுத்துவிட்டு ஜார்ஜ் சக்கரவர்த்தியை அந்த இடத்தில் வைக்கப் போகிறார்களா? அல்லது, பனகால் ராஜாவை அங்கு வைக்கப்போகிறார்களா? அரிசிச் சாதத்திற்குப் பதிலாக, மண் சாதம் வைத்துப் பூசை செய்யப்போகிறார்களா? அல்லது, இங்கிலீஷிலாவது, ஜெர்மனியிலாவது மந்திரம் சொல்லப்போகிறார்களா? ஒன்றும் மாறுதல் இல்லை; பழையபடிதான் நடக்கும். ஆனால் மதம் போய்விட்டது என்பது—யார் மதம், என்ன மதம் என்பது உங்களுக்குத் தெரியுமா? நாம் கொடுக்கிற பணத்தால் நெய்யும், பச்சரிசி, பாதாமியுமாய்த் தின்று கொழுத்து—அதனால் ஏற்படுகிற மதம்தான் பார்ப்பனர்க்குப் போய்விடும் என்கிற பயமே அல்லாமல், வேறு எந்த மதமும் போய்விடவில்லை.

முதலாவது, பார்ப்பனர்கள். நமக்கு ஒரு மதம் இருப்பதாக அரசாங்கத்தில் ஒப்புக் கொள்ளச் செய்திருக்கிறார்களா என்பதை யோசித்துப் பாருங்கள். சர்க்காரில் கிறிஸ்துவ மதமும், முகமதிய மதமும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பார்ப்பனர்கள் சொல்லும் இந்துமதத்தை ஒப்புக்கொள்ளவேயில்லை. உதாரணமாக, அரசியல் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட சட்டசபை ஸ்தானங்கள் 128-ல் முகமதிய மதத்தின் பேரால் முகமதியர்களுக்கு 13 ஸ்தானங்களும்; கிறிஸ்துவ மதத்தின் பேரால் கிறிஸ்தவர்களுக்கு 6 ஸ்தானங்களும் கொடுத்திருக்கிறார்கள். தேசத்தின் பேரால் ஐரோப்பியருக்கும், சமூகத்தின் பேரால் சட்டைக்காரருக்கும் ஒதுக்கிவைத்தார்கள். 'இந்து' மதத்தின் பேரால் 'இந்து'க்களுக்கு ஏதாவது ஸ்தானம் ஒதுக்கிவிட்டார்களா? ஒன்றும் இல்லை. ஒதுக்காவிட்டாலும் தொலைந்துபோகட்டும்; நமது மதத்தையாவது ஒப்புக்கொண்டார்களா? அதுவும் இல்லை. பின்னை என்ன செய்தார்கள் என்றால்—'முகமதியரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானம்' என்பதாகப் பிரித்து ஒதுக்கி, அதை, நம்மை எடுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். நாமும் அதை ஒத்துக்கொண்டுதான், 'முகமதியரல்லாதார்' என்கிற பெயரால் சட்டசபை மெம்பராயிருக்கிறோம். இதோ, இங்கு என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும்



எனது நண்பர் ஸ்ரீமான் திவான்பகதூர் அ. மு. முருகப்ப செட்டியார் எம். எல். சி. அவர்கள் 'முகமதியரல்லாதாராய்' சட்டசபையில் ஸ்தானம் பெற்றிருக்கிறாரே அல்லாமல்—இந்துவாய் ஸ்தானம் பெறவில்லை; ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் மாத்திரம் அல்ல.

'மதம் போச்சே!' மதம் போச்சே! என்று நீலிக் கண்ணீர்விட்ட வருணாசிரமத் தலைவரான ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியாரும், இந்தியக் காங்கிரஸ் தலைவரான எஸ். சீனிவாசய்யங்காரும் 'முகமதியரல்லாதார்' என்கிற பெயரினாலேதான் இந்திய சட்ட சபையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நமக்கு உண்மையாய் ஒரு மதம் இருந்திருந்தாலாவது அல்லது அந்த மதத்திற்குக் கடுகளவு சுயமரியாதை இருந்திருந்தாலாவது அல்லது நமது சமூகத்திற்குக் கடுகளவு மானம், சுயமரியாதை இருந்தாலாவது நாம் நம்மை 'முகமதியரல்லாதார்' என்று பதிந்துகொள்ள முடியுமா? பார்ப்பனரல்லாதார் என்று சொன்னால் சில பேருக்கு எவ்வளவு ரோஷமும், வேதாந்த தத்துவ ஞானமும் உண்டாய் விடுகிறது? ஆனால் இதைப்பற்றிய உணர்ச்சி மாத்திரம் ஒரு சிறிதும் உண்டாவதில்லை. 'முகமதியரல்லாதார்' என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒரு முகமதிய நண்பர் சொல்ல நான் கேட்டிருப்பது என்னவென்றால்—முகமதியரல்லாதாரை, முகமதியர்கள் 'காபர்' என்று கூப்பிடுகிறார்கள்; காபர் என்றால் நாத்திகனுக்குச் சமானம். ஆகவே, நாம் நாத்திகர் என்கிற முறையில் இன்று அரசாங்கத்தாரால் கருதப்படுகிறோம். இப்படி 24 கோடி மக்களைக் கொண்ட இம் மாதிரியான சமூகம் மதத்தின் பேரால் எப்படி மதிக்கப்படுகிறது? முகமதியன் நம்மை—'காபர்' ஆகவும், கிறிஸ்தவர் நம்மை 'அஞ்ஞானி' எனவும், வெள்ளைக்காரன் நம்மைக் 'கூலி' எனவும், சட்டைக்காரன் நம்மைக் 'காட்டுமிராண்டிகள்' எனவும், பார்ப்பான் நம்மை 'சூத்திரன்' (தனது வைப்பாட்டி மகனும், அடிமையும் என்பதான பொருள்கொண்டு) எனவுமாய் அழைக்கும் நிலையில் வாழ்கிறோம். இந்த வாழ்வைப்பற்றி நாம் வெட்கப்படுவதில்லை. இன்னமும் நமது மதத்தின் பேரால் நாம் சில பொது ஸ்தலங்களுக்குப் போக உரிமை இல்லாமலும், நமது சகோதரர்கள் பலர் நாய், கழுதை, பன்றி; மலம், மூத்திரம் நடமாடும்—கிடக்கும் தெருக்களில்கூட நடக்க உரிமையில்லாதவராகவும் கொடுமைப்படுத்தப்பட்டு இருப்பதைப் பற்றி நினைக்கிறோமா? அதைப்பற்றிக் கொஞ்சம்கூட நினைத்துப் பார்ப்பதேயில்லை.

வெள்ளைக்காரனையும் நம்மையும் ஏமாற்றிப் பார்ப்பான் உத்தியோகம் பெறுவதற்காக, பார்ப்பனர்கள் ஏதாவது கூப்பாடு போட்டால், நாமும் கூடவே கூப்பாடு போட்டு அவர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விடுகிறோமேயல்லாமல், பகுத்தறிவை நாம் உபயோகிப்பதே இல்லை. தென்னாப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்கள்—நமது நாட்டிலிருந்து அவ் விடத்திற்குக் குடியேறின நம்மவர்களை, அவர்கள் வசிக்கும் தெருவில் நடக்க விடுவதில்லை என்பதாகப் பார்ப்பனர்களுடன் சேர்ந்து நாமும் கூப்பாடு போட்டோம். இதன் பயனால் மகா கனம் சீனிவாச சாஸ்திரி என்கிற பார்ப்பனர் ஒருவருக்கு மாதம் 3000, 4000 ரூபாய் சம்பளமும், வருமானமுமுள்ள உத்தியோகம் ஒன்று கிடைத்தது. அதனால் நமக்கு என்ன பலன் கிடைத்தது? வாய் வலிக்கக் கத்தியதுதான் மீதி. தென்னாப்பிரிக்காவைப்பற்றிக் கூப்பாடு போடுவதற்குமுன், நமது நாட்டைப்பற்றி யோசிக்கிற புத்தியே நமக்குக் கிடையாது. தென்னாப்பிரிக்க வெள்ளையர், நம்மை மிரட்ட—நம்மைக் கொடுமைப்படுத்த, அவர்களுக்குச் சவுகரியமும் சக்தியும் இருக்கிறது. அதை எதிர்க்க நமக்குச் சவுகரியமும் சக்தியும் இல்லை.

என்னவெனில், அவர்கள் ஆகாசக் கப்பல், பீரங்கி, வெடிகுண்டு, பட்டாளம் முதலியவைகளை வைத்துக்கொண்டு நம்மை வீதியில் நடக்கவேண்டாம் என்கிறார்கள். நமது நாட்டுப் பார்ப்பனர்கள் நம்மிடம் பிச்சை வாங்கிப் பிழைப்பதைத் தொழிலாக உடையவர்கள் நம்மூருக்கு வந்து, நம்மை—நமது சகோதரர்களை, அவர்கள் வாழும் தெருவில் நடக்கக்கூடாது என்கிறார்கள். வெள்ளையருக்காவது துப்பாக்கி, பீரங்கி முதலியவைகள் உண்டு. இந்தப் பார்ப்பனர்களுக்கு என்ன ஆயுதம் உண்டு? வெறுங் கிழிந்த

படிப்பகம்

www.padippakam.com



பஞ்சாங்கத்தையும், காய்ந்த தர்ப்பைப் புல்லையும் கையில் வைத்துக் கொண்டு நம்மை விரட்டி அடித்து விடுகிறார்கள். இந்தக் கிழிந்த பஞ்சாங்கத்திற்கும், காய்ந்த தர்ப்பைப் புல்லுக்கும் பயந்து கொண்டு அந்த வீதியில் நடக்க உரிமை இல்லாமல் இருக்கிற நாம்—தென்னாப்பிரிக்கா வீதியில் நடக்க உரிமை கேட்பது கேலிக் கூத்தாக இல்லையா? இந்த மாதிரி ஜனங்களுக்கு ஆண்மையாவது, சுயமரியாதையாவது உண்டு என்று வெள்ளைக்காரன் நம்புவானா? நமது கூப்பாட்டையாவது நமது தீர்மானங்களையாவது இலட்சியம் செய்வானா என்பதை யோசித்துப் பாருங்கள். இப்படியேதான் நமது சுயராஜ்யக் கிளர்ச்சி என்கிற பித்தலாட்டமும் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த யோக்கியதையில் இனி இந்து மதச் சடங்கு என்பதைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். ஒரு மனிதன் தான் இந்து என்று ஒப்புக் கொள்வதானால்–அவன் பார்ப்பனர்களுக்காகவே பிறக்கவும், பார்ப்பனர்களுக்காகவே வாழவும், பார்ப்பனர்களுக்காகவே சம்பாதிக்கவும், பார்ப்பனர்களுக்காகவே சாகவும் வேண்டியவனாகின்றான். மதச் சடங்குகளின் பெயரால் கொடுக்கவேண்டிய வரி எவ்வளவு என்பதைக் கவனித்துப் பாருங்கள்!

ஒரு இந்து 'கர்ப்பதான முகூர்த்தம்' செய்வதிலிருந்தே பார்ப்பனர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதாவது, பார்ப்பான் வந்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் உட்காரவைத்து சமஸ்கிருத மந்திரம் சொல்லி இருவரையும் படுக்கை வீட்டுக்குள் கொண்டுபோய் விட்டு, அவன் கைப்படக் கதவைச் சாத்திவிட்டுப் போனால்தான் நல்ல குழந்தை பிறக்குமென்று நினைக்கிறோம். ஆதலால், அப்பொழுதே பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. பிறகு அந்தச் சடங்கின் மூலம் ஒரு கர்ப்பம் ஏற்பட்டு வயிற்றில் பிண்டம் உண்டாய்விட்டதோ இல்லையோ, 'சீமந்தம்' என்பதாகப் பெயர் வைத்துப் பார்ப்பானுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பிறகு குழந்தை பிறந்தவுடன் அதற்கு சாதகமெழுதவும், பாலூட்டவும், தொட்டலிலிடவும், நகைபோடவும், சோறூட்டவும் பார்ப்பானுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. குழந்தைக்கு ஆயுள் வளர வேண்டுமென்கிற எண்ணத்துடன் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருஷமும் 'ஆயுள் ஓமம்', 'ஆண்டு நிறைவு' என்பதாகப் பார்ப்பனர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

பிறகு, குழந்தையைப் படிக்க வைப்பதற்கு ஆரம்பிக்கும்போதும் பார்ப்பனுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அக் குழந்தை வாலிபனாகிக் கலியாணம் முதலியவைகளைச் செய்யவேண்டுமென்றாலும், பொருத்தம் கேட்டு, கலியாணம் செய்வது, மறுபடியும் சாந்தி செய்வது முதலிய காரியங்களுக்குப் பார்ப்பனுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. கலியாணம் நடந்து, அவன் பிள்ளை குட்டிகள் பெற்றுப் பெரியவனாகிக் காயலா முதலிய கஷ்டங்கள் வந்தாலும்—சோதிடம் பார்க்கவும், கிரகதோஷம் பார்க்கவும், சாந்தி கழிக்கவும் பார்ப்பனுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. கடைசி காலமாகிய சாகப்போகும் காலத்திலும் பிராணன் விடுவதற்கு நாலு நாழிகை இருக்கும்போதே, சுங்கக்காரன் சுங்கம் வாங்கிக்கொண்டு வண்டியை ஊருக்குள் விடுவது போலப் பார்ப்பானும்—சாகப்போகிறான் என்று தெரிந்தவுடனே வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு, சாகப்போகின்றவனைப்பற்றி நமக்கு ஏற்படும் துக்கத்தையும், கஷ்டத்தையும் கூடக் கவனிக்காமல்—தனக்கு மாடு வாங்கித் தானம் கொடுத்தால்தான் சாகின்றவன் ஜீவன் மோட்சத்திற்குப் போகுமென்றும்; இல்லாவிட்டால் பேய், பிசாசாய் உலகத்தில் அலைந்து கொண்டு இருக்குமென்றும் சொல்லிப் பசு வாங்கிக்கொண்டு போய்விடுகிறான். அதை வாங்கிக்கொண்டு போய் வீட்டில் கட்டிவிட்டு—அதற்குள் காயலாக்காரன் செத்துப்போயிருப்பான் என்று தீர்மானம் செய்துகொண்டும், தனக்கு நல்ல வேட்டை கிடைக்குமென்று எண்ணிக்கொண்டும் காயலாக்காரன் வீட்டுக்கு வருகிறான். அவன் வருவதற்குள் காயலாக்காரன் சாகாதிருந்தால், இன்னும் சாகவில்லையே என்று பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டு சீக்கிரம் சாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறான்.



இவனுடைய பிரார்த்தனைப்படி செத்துப் போனவுடன், உள்ளே வந்து புகுந்து கொண்டு, 'இந்தக் கருமம் செய்யவேண்டும்; அந்தக் கருமம் செய்யவேண்டும்; இந்த தானம் கொடுக்கவேண்டும்; அந்த தானம் கொடுக்கவேண்டும்' என்பதாகச் செத்தது முதல் 16-வது நாள் வரையிலும் இழவுக்கு வந்தவர்களை விசாரிக்கக்கூட நேரம் கொடுக்காமல், அவன் வேலை கொடுத்து தொந்திரவு செய்துகொண்டு இருப்பதுடன், அந்தப் பார்ப்பனரது குடும்ப வாழ்க்கைக்குச் சாமான்களை—அரிசி, புளி, பருப்பு, உப்பு, பண்டம், பாத்திரம், பலகை, குடை, செருப்பு, வேட்டி முதலியவைகளும் செலவுக்குப் பணமும்; சிற்சில இடங்களில் வீடுவாசல் பூமி வகையறாக்களையும் வாங்கிக்கொள்வதோடு, ஒவ்வொரு மாதமும் 'மாசியம்' என்பதாகவும் வந்து இதேமாதிரி கொள்ளையடித்துக் கொண்டு போய் விடுகிறான். இவ்வளவோடாவது விட்டுவிடுகிறானாவென்றால்—செத்துப்போன நாள் தினத்தை எழுதிவைத்துக்கொண்டு, 'இன்ன மாதம், இன்ன வருடம், இன்ன நட்சத்திர தினத்தில் இந்தத் தேதியில் உங்களய்யா செத்துப்போய்விட்டார். ஒரு வருடமாச்சுது; வைபழையபடி அரிசி, பருப்பு, வேட்டிக்காகப் பணம்' என்று உயிரை வாங்கிவிடுகிறான். ஒவ்வொரு வருடமும் ஒரு பெரிய தோட்டம் வாங்கியதுபோல் நினைத்து, வெள்ளாமை அறுவடை செய்கின்றவன் போல் வந்து வசூல்செய்து கொண்டு போய்விடுகிறான்.

பிள்ளை பெறுவதனால் இவ்வளவு கஷ்டமிருப்பதாக நினைத்துப் பிள்ளையைப் பெறாமல் இருந்தாலும் அப்பொழுதும் பார்ப்பனர்கள் அவர்களை விடுவதில்லை. 'பிள்ளை இல்லாவிட்டால் நரகத்துக்குப் போய்விடுவாய்; என்ன தருமம் செய்தாலும் பிள்ளை இல்லாதவனுக்கு மோட்சம் கிடையாது; எப்படியாவது ஒரு பிள்ளையைப் பெற்றுத்தான் ஆகவேண்டும். காசிக்குப் போ, இராமேசுவரம் போ, அந்த ஓமம் பண்ணு, இந்த யாகம் பண்ணு; இந்தக் கோயிலைக் கட்டு, அந்தக் குளத்தை வெட்டு' என்பதாகச் சொல்லி, அவன் பணத்தையெல்லாம் உறிஞ்சிப் படாதபாடு படுத்தி—எப்படியானாலும் ஒரு குழந்தை உண்டானால் போதுமென்று யோசிக்கும்படி செய்துவிடுகிறார்கள். தீர்த்த ஸ்தலங்களிலும், மூர்த்தி ஸ்தலங்களிலும் நடக்கும் அக்கிரமங்களையும், அங்குள்ள புரோகிதப் பார்ப்பனர்களின் கொடுமையையும், அவர்களுடைய இழிதொழிலைப் பற்றியும் எடுத்துச் சொல்வதென்றால்—அதுவே ஒரு பெரிய உபந்நியாசமாக முடியும். ஆகவே, இந்து மதச் சடங்குகள் மூலியமாய் இவ்வளவு கஷ்டமும், நஷ்டமும் படுவதில் பார்ப்பனர்கள் பிழைப்பு நடப்பதுதவிர செய்தவர்களுக்காவது, செய்த குடும்பத்திற்காவது ஏதாவது நன்மையேற்படுகிறதா? தானம் என்பதும் தர்மம் என்பதும் பார்ப்பனர்களுக்குக் கொடுத்தால்தான் பிரயோஜனமுண்டென்று சொல்லுகிறார்களே தவிர, கஷ்டப்படுகிற மக்களுக்கோ–நொண்டி, முடம், கூன் குருடு, செவிடு இவைகளால் உழைத்துச் சாப்பிடமுடியாமல் பட்டினிகிடந்து பரிதவித்து உயிர்விடும் ஜீவன்களுக்கோ ஏதாவது உதவுவது என்கிற காரியம் தர்மத்திலும் சேர்க்கப்படவில்லை; தானத்திலும் சேர்க்கப்படுவதில்லை. ஆயிரம் பிராமண போஜனம், பதினாயிரம் பிராமண போஜனம், இலட்சம் பிராமண போஜனம் என்று சமாராதனை செய்வதும், ஊரிலிருக்கிற, நாட்டிலிருக்கிற சோம்பேறிப் பார்ப்பனர்களும், அயோக்கியப் பார்ப்பனர்களும், எந்தவிதத்திலும் அங்கவீனமில்லாது உழைத்துச் சாப்பிடக்கூடிய தடிப் பார்ப்பனர்களும் வந்து உட்கார்ந்து மூக்குப் பிடிக்கச் சாப்பிடுவதும்; சாப்பிட்டுவிட்டுப் போகும்போது, 'என்ன சமாராதனை செய்துவிட்டான்; சுத்த சிகாமணி, லட்டுக்கு பச்சைக் கற்பூரம் போதவில்லை; பாயசத்திற்கு குங்குமப் பூ போதவில்லை; இவனை யார் இப்பேர்க்கொத்த சமாராதனை செய்யச் சொன்னார்கள்?' என்று வைதுகொண்டு போவதும், அடுத்த வேளை சாப்பாட்டுக்கு மார்க்கமில்லாமல், தாசிகளுக்கு மாப்பிள்ளை தேடிக்கொடுத்துத் தரகு வாங்குவதுமாகிய இம் மாதிரியான அக்கிரமங்களை எவ்வளவோ பார்த்துவருகிறோம். பார்ப்பனர்களுக்குக் கொடுப்பது புண்ணியமாய் இருந்து, அதனால் அக் குடும்பங்களுக்கு நன்மை ஏற்படுவதாக இருந்தாலும்—முன்னே தர்மம்செய்த பெருங் குடும்பங்களெல்லாம் இன்று எங்கே போய்விட்டன? இம் மாதிரிப் பார்ப்பனர்களுக்குத்

தர்மம் செய்ததன் பயனாய்க் கெட்டுப்போன குடும்பங்கள், கெட்டுப்போன அரசாங்கங்கள் எத்தனையோ கண்ணால் பார்க்கிறோம்.

உதாரணமாக, தஞ்சாவூர் இராஜாவைப்போல் தென்னாட்டில் பார்ப்பனர்களுக்கு அள்ளிக்கொடுத்த 'அமுத இராஜாங்கம் வேறொன்றிருப்பதாக நமது தகவலுக்கு எட்ட வில்லை. அவர்கள் கட்டிய அக்கிரகாரங்களும், பார்ப்பனர்களுக்காக வெட்டிய குளங்களும், விட்ட மானியங்களும், ஏற்படுத்தின பள்ளிக்கூடங்களும் இன்னும் இருந்துகொண்டே இருக்கின்றன. அவர்கள் சத்திரத்தில் தின்று அவர்கள் பள்ளியில் படித்த பார்ப்பனர்கள் குடும்பம் இன்னமும் இருந்துகொண்டுதானிருக்கின்றது. அவர்கள் அய்க்கோர்ட் ஜட்ஜ், நிர்வாகசபை மெம்பர், திவான், சட்ட அறிஞர் முதலிய வேலைகள் பார்த்துக்கொண்டு, மாதம் 1000, 5000, 10000 ரூபாய் வீதம் சம்பளம் சம்பாதித்துக்கொண்டும்; பஞ்சாங் கத்தையும், தர்ப்பைப் புல்லையும் வீசி எறிந்துவிட்டுத் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டும், மாட்டுக் கறி சாப்பிட்டுக்கொண்டும், பங்களா, மோட்டார் கார் பெங்களூர் பட்டு, வைர நகைகள் முதலிய போகபோக்கியங்களுடன் வாழ்ந்துகொண்டுமிருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்குத் தர்மம் செய்த தஞ்சாவூர் இராஜ குடும்பம் பேர்சொல்லுவ தற்குக்கூட சந்ததி இல்லாமற்போய்—விவகாரங்களின் மூலம் பார்ப்பனர்களின் வாலைப் பிடித்திருந்து வயிற்றிற்கு மார்க்கமில்லாமல் அலைந்துகொண்டிருக்கிறது.

ஒரு கோர்ட்டு நடவடிக்கையில் இந்த இராஜ வம்சத்தார் தாங்கள் க்ஷத்திரியர்கள் என்று ருஜு செய்ய வேண்டியிருந்த சமயத்தில், அவர்களிடம் அதுவரை பொறுக்கித் தின்று வயிறு வளர்ப்பதற்காக அந்த இராஜாவை க்ஷத்திரியர் என்று சொல்லி வந்த பார்ப்பன குடும்பத்தார்களே—பெட்டிமேல் ஏறி—'இவர்கள் சூத்திரர்கள்' என்று சொல்லிவிட்டார்கள். பார்ப்பனர்களுக்கு அள்ளிக் கொடுப்பது மோட்சத்திற்கு வழி அல்ல என்பதற்கும், தர்மம் அல்ல என்பதற்கும், அப்படி அள்ளிக் கொடுத்த குடும்பம் கெட்டுப்போய் இருக்கிறதென் பதற்கும் இதைவிட நல்ல சான்று வேறு என்ன வேண்டும்? இதனாலேயே பார்ப்பனர் களுக்கு ஒன்றும் கொடுக்கக் கூடாதென்று சொல்ல நான் வரவில்லை. கஷ்டப்படுகிறவர் களுக்கு அவர்கள் யாராக இருந்தாலும் தம்மாலான உதவியை நாம் செய்யவேண்டியதுதான் மனிதத் தன்மை.

ஒரு நாய் பட்டினியால் அவஸ்தைப்படுவதாக இருந்தால் ஒரு மனிதன் அதைப் பார்த்துக் கொண்டு தன் வயிற்றை மாத்திரம் நிரப்பிக் கொள்வது ஆண்மை அல்ல வென்பதும், சுயமரியாதையல்ல வென்பதும் நமது அபிப்பிராயம். ஆகவே, கஷ்டப்படுகிற வர்களுக்கு உதவி செய்யுங்கள்! பார்ப்பனர் மாத்திரம் உயர்ந்தவர்களென்றும், அவர்கள் பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்றும், நாம் பிறவியிலேயே தாழ்ந்தவர்களென்றும் எண்ணிக்கொண்டு மூடநம்பிக்கையில் இதுவரையில் வாழ்ந்தது போதும். இனியேனும் நாமும் மனிதர்கள் தானென்பதையும், நம்மிடம் பிச்சை வாங்கித்தின்று கொண்டு வாழும் ஒருசிறு கூட்டத்தார்—நம்மைச் சூத்திரரென்றும், தேவடியாள் மகனென்றும், பார்ப்பானின் வைப்பாட்டி மகனென்றும், நம்மைத் தொடக் கூடாதென்றும், நடக்கக் கூடாதென்றும், பார்க்கக் கூடாதென்றும் கூற—இத்தகைய இழிவு முறையில் நாம் நடத்தப்படாமல் இருக்க வேண்டுமானால் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் சுயமரியாதையைப் பெற முயல வேண்டும். அதைப் பெறாமல் மானமின்றி வாழ்வதைவிட உயிர் துறப்பதே மேலென்ற எண்ணம் உண்டாக வேண்டும்.

நீண்ட நேரம் உங்களைத் தாமதித்து வைக்க விரும்பவில்லை. ஒவ்வொரு இடங் களிலும் சுயமரியாதை உணர்ச்சி யுண்டாகப் பாடுபடுங்கள். உங்களைப் பல ஆயிரக்கணக் கான வருடங்களாக மிதித்து அடிமைப்படுத்தி வாழும் வழக்கத்தை—உங்கள் மயிர்க் காம்பு களிலெல்லாம் கூடித் தடிப்பேறிய மானமற்ற வாழ்க்கை நிரப்பிய உணர்ச்சியை—உடனே உதறித் தள்ளுங்கள்! குருட்டுத்தனமான, மூடநம்பிக்கையுள்ள, புரோகிதக் கொடுமை



களைக் களைந்து ஆண்மையுடன் நீங்களும், உங்கள் பின் சந்ததியாரும் வாழத் தக்க முறையில் உங்கள் வாழ்க்கையைத் திருத்தியமைத்துக் கொள்ளுமாறு உங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

[நூல் : 'வைக்கம் வீரர் சொற்பொழிவு': குமரன் அச்சகம், காரைக்குடி-1925]

## 20. ஆதாரமற்ற நம்பிக்கைகள்

ஒரு விஷயத்தை ஒருவன் கூறுகிறான் என்று வைத்துக்கொள்வோம். உடனே நாம் என்ன செய்கிறோம்?

'அது உனக்கு எப்படித் தெரியும்? அது உண்மை என்று நாங்கள் ஏன் நம்ப வேண்டும்? அது உண்மையென்று நம்ப ஆதாரம் என்ன?' எனப் பொதுவாக மூன்று கேள்விகளைக் கேட்கிறோம்.

பிரதி தினமும் நாம் எத்தனையோ விஷயங்களை அறிகிறோம். அவைகளில் பலவற்றை நாம் கண்ணை மூடிக்கொண்டு நம்பிவிடுகிறோம். 'அது உண்மையா? உண்மையென்பதற்கு ஆதாரம் என்ன?' என்பன போன்ற விஷயங்களை நாம் கவனிப்பதே இல்லை.

நமது நம்பிக்கைகளில் பலவற்றை ஆராய்ந்து பார்த்தால், அவற்றிற்கு ஆதாரமே இல்லையெனத் தோன்றாநிற்கும். ஒரு காலத்திலே ஒரு விஷயம் உண்மையென்று யாரோ ஒருவர் சொன்னார்; அல்லது, ஆராய்ந்து பாராமலேயே அதை நாம் உண்மை என நம்பிக்கொண்டோம்; அல்லது, அது உண்மையாகத்தான் இருக்குமென்று சுளுவில் நம்பிக்கொண்டோம்.

ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் நாம் முதலிலே கூறிய மூன்று கேள்விகளையும் கேட்டால் எந்த விஷயத்தின் உண்மையையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

உண்மையாராய்ச்சியில் தோல்வி அடைந்த பிறகும் ஒரு விஷயத்தை நாம் உண்மை யென நம்புவோமானால், அந்த நம்பிக்கை பகுத்தறிவுக்குப் பொருந்தாததென்றே ஏற்படும்.

யாரேனும் ஒருவரது இலேசான தூண்டுதலின் பேரில் முதலில் ஒரு விஷயத்தை உண்மையென நம்புகிறோம். அந்த நம்பிக்கை காலக் கிரமத்தில் வலுப்பெற்றுவிடுகிறது. இப்பொழுது அது நமது சர்வ சாதாரண நம்பிக்கைகளில் ஒன்றாகிவிட்டது. யாரோ ஒருவர், ஏதோ ஒரு இடத்தில், எப்பொழுதோ ஒரு காலத்து ஒரு விஷயத்தை நம்மிடம் சொன்னார். இதை ஆராய்ந்து பாராமலே நாம் ஒப்புக்கொண்டு நம்பிவிட்டோம். நம்மிடம் கூறப் படுகிறவைகளைப் பற்றிக் கேள்வி கேட்கும் சக்தி நமக்கு உண்டாகாதிருந்த இளம்பருவத் திலேயே, அந்த விஷயத்தை நாம் கேட்டிருக்கலாம். நமது உறுதியான நம்பிக்கைகளில் பல, அப்பொழுது ஏற்பட்டவைகளாகும். நாம் பக்குவ தசை அடைந்திருக்கும் இப்பொழுது அது உண்மையா அல்லவா என்று கேட்கக்கூட நாம் துணிவு கொள்வதில்லை. அது தெளிவான உண்மையென்றே நமக்குத் தோன்றுகிறது. எனவே, அதைப்பற்றிக் கேள்வி கேட்பதே பைத்தியக்காரத்தனம் என்று நாம் உணருகின்றோம்.

ஒரு தீவிர வைஷ்ணவனையும், ஒரு தீவிர சைவனையும் இளம்வயதிலேயே இடம் மாற்றி வளர்த்தால்—அதாவது தீவிர வைஷ்ணவனைத் தீவிர சைவப் பெற்றோரும்; தீவிர சைவனைத் தீவிர வைஷ்ணவப் பெற்றோரும் இளமை முதற்கொண்டே வளர்க்கும் படி செய்தால் அவர்களது பழக்க நம்பிக்கைகள் எல்லாம் நேர்மாறாகவே அமையும். அவர்களில் ஒவ்வொருவனும் தனது நம்பிக்கையே—பழக்க வழக்கமே மெய்யென்று நம்புவான். சமயத்துறையில் மட்டுமின்றி இதர துறைகளிலும் இதே நிலைமையே ஏற்படும். பலதார மணம், சிசுஹத்தி, நரபலி, மாட்டுச் சண்டை, குத்துச் சண்டை, கோழிப்

www.padippakam.com



போர் முதலியவைகள் அமுலில் இருக்கும் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு— அவை தீயவை என்றே தோன்றா; சர்வ சாதாரணப் பழக்க வழக்கமாகவே தோன்றும். அவர்களுக்கு, அவை அசாதாரணமான பழக்கங்கள் என்றோ ஒழுக்கத்துக்கு முரணான பழக்கங்கள் என்றோ தோன்றமாட்டா.

குற்றப் பரம்பரையினர் வாழும் நகரத்தின் ஒரு பகுதியிலே, குற்றப் பரம்பரையினருக்கு இடையிலே, ஒருவர் வளர்ந்து வந்தால் அவருடைய பழக்க வழக்கங்கள் ஏனையோர் பழக்க வழக்கங்களுக்கு மாறுபட்டனவாகவே இருக்கும். ஒரு ஆங்கிலப் பெண்ணை ஒரு ரஷ்ய மாது ஸ்வீகாரம் செய்து, ரஷ்யக் குடும்பத்தில் ரஷ்யப் பழக்க வழக்கப்படி வளர்த்தால், அவளுடைய பழக்க வழக்கங்களும் உணர்ச்சியும் ரஷ்யப் போக்கிலேயே இருக்குமே ஒழிய, ஆங்கிலப் போக்காக இருக்காது. இதுபோலவே நமது அனேக அதிதீவிர நம்பிக்கைகளுக்குக்கூட நமது வளர்ப்பு முறையே காரணமாகும்.

இளமைப் பருவம் கடப்பதுடன் புதுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் குணமும் உண்மையில் நின்றுவிடுவதில்லை. நம்மையறியாமலேயே நமது வாழ்நாள் முழுவதும் புதுப்புதுக் கருத்துக்களை பிரதிதினமும் ஏற்றுக்கொண்டே இருக்கிறோம். இதற்குப் பத்திரிகைகளும் விளம்பரங்களுமே காரணம். பொதுவாக அனேக விஷயங்களைப்பற்றி நுட்பமாகச் சிந்தனை செய்வதே இல்லை. நாம் பெரிதும் கிளிகள் மாதிரியே நடந்து வருகிறோம்; பிறர் சொல்லுவதை நம்புகிறோம்; பிறர் செய்வதைப் பின்பற்றுகிறோம்.

இளமைப் பருவம் கடந்த பிறகும்—நாம் ஏற்கனவே பெற்றிருக்கும் கருத்துக்களுக்குப் பொருத்தமான கருத்துக்களைத்தான் ஒப்புக்கொள்கிறோம்; மற்றவைகளை நிராகரிக்கிறோம்.

'எல்லோரும் அப்படியே சொல்கிறார்கள், அதனால் நம்புகிறோம்' என்ற ரகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு தனியிடம் வகுக்க வேண்டியதுதான். அவை தெளிவான உண்மைகள் ஆக மாட்டா. அப்பேர்ப்பட்ட விஷயங்கள் ஒரு குறிப்பிட்ட தனிமனிதன் கூறியவைகளாயிருக்க மாட்டா. அவை யாரோ ஒருவராலோ, பலராலோ கூறப்பட்டு—பரம்பரையாய் நம்பப்பட்டு வந்தவைகளாக இருக்கலாம். அல்லது, மக்களின் 'ஐதீக நம்பிக்கை'களாகவும் இருக்கலாம். அப்படியானால் அவை 'வாரிசு உரிமைப்படி' நாம் பெற்ற சமூக (சொத்து)—நம்பிக்கைகளாகும். எனவே, ஒரு நம்பிக்கை மிகவும் பழமையானது என்ற ஒரே காரணத்தினால்மட்டும் அது ஆதாரமுடைய உண்மையாகிவிடமாட்டாது.

சந்தேகத்துக்கு இடமில்லாதபடி, வெளிப் பார்வைக்கு உண்மையாகத் தோன்றுபவைகள் விஷயத்தில் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

'ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதே ஆபாசமானது, அனாவசியமானது—துரோகமானது' என்ற உணர்ச்சி மக்களுக்கு இருக்குமானால் அந்த விஷயம் பகுத்தறிவுக்கு முரணானது என்றுதான் கூறப்படும்.

'அது தெளிவான பொது உண்மை. அதைப்பற்றிச் சந்தேகம் கொள்வதோ, ஆராய்ச்சி செய்வதோ அனாவசியம்' என ஏற்படுமானால், மக்கள் அறிவு வளர்ச்சியின் சரிதம் முழுவதிலும் அப்பேர்ப்பட்ட தெளிவான பொது உண்மைகளே நிறைந்திருக்கின்றன. ஆராய்ச்சியில் அவை ஆதாரமற்றவை என்றும் வெளியாகியிருக்கின்றன. உதாரணமாக, அடிமை வர்த்தகம் இயற்கையானது, நியாயமானது. இன்றியமையாதது என்றே வெகு காலமாக நம்பப்பட்டு வந்தது. மக்களில் பல வகுப்பார் இயல்பாக அடிமைகளாகவே இருந்துவருகின்றனர்; அடிமை வாழ்க்கையையே பெரிதும் விரும்புகின்றனர். அதைப்பற்றிச் சந்தேகம் கொள்ளவே இடமில்லை.

மற்றும், வட்டமாக அன்றி இதர முறைகளில் கிரகங்கள் சுற்றுகின்றன என்று நம்புவது வெகுகாலமாக அசாத்தியமாகவே இருந்து வந்தது. வட்ட வடிவம் அல்லது



மண்டலம் மேற்பார்வைக்கு ஒரு பூர்ணமான உருவம்; எனவே கிரகங்கள் எல்லாம் வட்டமாகச் சுற்றுகின்றன என நம்புவதே இயற்கையானது; சாத்தியமானது. ஆனால், இந்த நம்பிக்கையை ஒழிக்க அநாதி காலமாக நடந்துவந்திருக்கும் போராட்டம் சரித்திரத்திலேயே மிகவும் அற்புதமானதாகும்.

உணர்ச்சிக்கு இருதயமே ஆதாரமென்றும் மூளை அல்ல என்றும் முன்னோர் நம்பி வந்தனர். இன்றோ பெரும்பாலோர் மூளையின் உதவியினால் நாம் சிந்தனை செய்வதாகவே நம்புகிறார்கள். மூளையின் உதவியின்றி மனிதனுக்குச் சிந்திக்கவே முடியாதென்றே தற்காலத்தவர்களில் பெரும்பாலோர் கூறுகிறார்கள். எனினும் முன்னோர் மாறாகவே நம்பினார்கள்.

பூமி பரப்பானதென்பது தெளிவான உண்மையாகத் தோன்றியதினால் வேறு விதமாக அபிப்பிராயப்படுகிறவர்கள் கேலி செய்யப்பட்டார்கள்—தூற்றப்பட்டார்கள்.

பளுவான பொருள்கள் இலேசான பொருள்களைவிட விரைவாக விழுமென இரண்டாயிர வருஷகாலம் தடையின்றி நம்பப்பட்டு வந்தது. அதற்கு அரிஸ்டாட்டில் அபிப்பிராயமும் மேற்கோளாகக் காட்டப்பட்டது. உண்மை வேறுவிதமானதென்று கலிலியோ நிரூபித்துக் காட்டும்வரை மக்கள் அவ்வாறே நம்பி வந்தனர். ஆராய்ந்து பாராமல் கண்மூடித்தனமாக நம்பப்படுபவைகள் எல்லாம் ஆதாரமுடைய உண்மைகளாகிவிடமாட்டா. அத்தகைய தப்பு நம்பிக்கைகளை உடைத்தெறிவதிலேயே அறிவு வளர்ச்சியடைகிறது.

சுயநலப்பற்றினால் பல நம்பிக்கைகள் அமுலில் இருந்து வருகின்றன. தற்கால மனோதத்துவ சாஸ்திரப்படி பார்த்தால், இவ்விஷயத்தில் சந்தேகத்துக்கே இடமில்லை. சில விஷயங்களை நம்புவது நமக்கு இலாபகரமாயிருப்பதினாலேயே அவைகளை நாம் நம்பி வருகிறோம். பொதுஜன மதிப்பைப் பெறுவதற்காகவும் நாம் பல விஷயங்களை நம்புகிறோம்; அல்லது நம்புவதாகப் பாவனைசெய்கிறோம். ஆனால், அரசியல் அபிப்பிராயங்கள் உட்பட சகல அபிப்பிராயங்களும் சுயநலம் பற்றியவை என்றும் கூறிவிட முடியாது. எனினும், நம்பிக்கைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் சுயநலமும் ஒரு காரணமென்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது.

'சுயநலம்' என்பது பொதுவாக, மக்களது ஜீவனோபாயத்துக்குரிய வழிகள், பணம் தேடுதல் முதலியவைகளையே குறிக்கும். ஆனால், சமூக வாழ்வில் ஒருவனுக்கு ஏற்படும் நலத்தையும் நாம் சுயநலத்தோடு சேர்க்கலாம். பொதுஜன மதிப்பைப் பெறும் பொருட்டும் நாம் பல விஷயங்களை நம்புவதாக அல்லது பாவனை காட்டுவதாக ஏற்கனவே கூறியிருக்கிறோம். இதுவும் சுயநலம் பற்றியதாகும். ஒருவனது வாழ்நாளின் வெற்றியே பொதுஜன மதிப்பைப் பொறுத்திருக்கிறது. சில ஸ்தாபனங்களையோ இயக்கங்களையோ ஆதரிப்பதனாலோ, நடத்துவதனாலோ சிலருக்கு பொதுஜன மதிப்பும் வாழ்க்கை வெற்றியும் ஏற்படுகிறது. சமூக வாழ்வில் தாம் பெற்றிருக்கும் ஸ்தானம் அல்லது பதவிகள் காரணமாக சிலர் அனேக விஷயங்களை நம்பவேண்டியதாக ஏற்படுகிறது. அவ்வாறு நம்பவில்லையானால் அவர்களுடைய மதிப்பும் ஒழிந்துபோகும்; வாழ்வும் நஷ்டமாகும்.

தனது இயல்பான குணத்துக்கு ஆதாரம் தேடும் பொருட்டும், தனது நிலைமையைக் காப்பாற்றும் பொருட்டும், தனது நடத்தை நியாயமென நிரூபிக்கும் பொருட்டும் சிலர் வேண்டுமென்றே சில விஷயங்களை அல்லது கொள்கைகளை நம்புகிறார்கள்; அல்லது நம்பும்படி ஏற்படுகிறது. சோம்பேறிகளும் பித்தலாட்டக்காரர்களுங்கூடத் தமக்கு ஆதரவாகச் சில அபிப்பிராயங்களையோ கொள்கைகளையோ காட்டக்கூடும். நமது உபதேசிகளிலும், பிரச்சாரகர்களிலும் பெரும்பாலோர் வாலிழந்த நரிக்கு ஒப்பானவர்களே.

வீண் அபிமானம் காரணமாகவும் பலர், ஆதாரமற்றவைகளை உண்மையென நம்புவதுண்டு. ஆளையோ, சம்பவத்தையோ, ஸ்தாபனத்தையோ பற்றிய அபிமானத்தினாலும் துவேஷத்தினாலும் ஆதாரமற்றவைகளைப் பலர் மெய்யென நம்புவதுண்டு.



படிப்பகம்

www.padippakam.com



சிறுவயதில் பெற்றோர்களுக்கு அடங்கி நடக்காத பிள்ளைகள் பெற்றோர் அபிப்பிராயங்களுக்கு அல்லது நம்பிக்கைகளுக்கு முரணாகவே நடந்து வருகிறார்கள். அதுபோலவே பெற்றோரை நேசிக்கும் பிள்ளைகள் அவர்களது தப்பு அபிப்பிராயங்களையும் ஆதரிக்கின்றனர்; நம்புகின்றனர்.

வயதுவந்த பிறகு சொடிய பிணக்கினால் சிலருடைய அபிப்பிராயங்கள் மாறுபடுவதுண்டு. ஒருவன் பேரிலுள்ள பகை அவனது அபிப்பிராயங்களையும் பாதிக்கிறது. நம் எதிரிகளின் அபிப்பிராயங்களைத் தகர்த்தெறிவதில் நாம் பெரிய மகிழ்ச்சி கொள்வதில்லையா? அதுபோலவே, ஒருவன் மீதுள்ள நட்பினாலும் அவனது அபிப்பிராயங்களை ஆதரிப்பதில் நாம் பெரிய மகிழ்ச்சியடைகிறோம்.

சிலர் காலப்போக்கையொட்டி சில அபிப்பிராயங்களையும் நம்பிக்கைகளையும் ஆதரிப்பதுண்டு. ஆனால் காலப்போக்கு மாறுந்தோறும் நாம் அபிப்பிராயங்களைப் பொதுவாக மாற்றிக்கொள்வதில்லை. வெகு சீக்கிரத்தில் நமது மனோநிலை உறுதியடைந்து விடுகிறது.

ஒரு அபிப்பிராயத்தை ஒப்புக் கொண்டு விட்டால் அது அப்படியே நிலைத்து வருவதே சகசமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட முறையில் சிந்தனை செய்வதனால் அம் மாதிரி செய்வதே சுளுவாகத் தோன்றுகிறது.

சிலர் கதை சொல்லுவதில் நிபுணர்களாயிருக்கிறார்கள். சிலர் ஒரு குறிப்பிட்ட அபிப்பிராயங்களை அல்லது வாதங்களை விளக்குவதில் சமர்த்தர்களாயிருக்கிறார்கள். 'கிராமபோன்' மாதிரி வேலை செய்யும் பல புருஷர்களும், பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் பழங்கதைகளைத் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டே இருப்பார்கள். ஏதாவது ஒரு விஷயத்தைக் கிளப்பிவிட்டால் போதுமானது—அவர்கள், அதைப்பற்றி மூச்சுவிடாமல் பேசிக்கொண்டேயிருப்பார்கள்.

பொதுவாக எல்லா நம்பிக்கைகளும் அபிப்பிராயங்களும் அப்பேர்ப்பட்டவைகளே. சில காலங்களுக்குப் பிறகு அவை நமது உள்ளத்து உறைந்துவிடுகின்றன. இளமையாயிருக்கும்போது பழைய கருத்துக்களை மாற்றிப் புதப்புதுக் கருத்துக்களைச் சம்பாதித்துக் கொள்கிறோம். வயது முதிர முதிர புதுக் கருத்துக்களை நாம் அவ்வளவாக நாடுவதில்லை. நாம் பழமைக் களஞ்சியமாகி விடுகிறோம்.

['பகுத்தறிவு' மலர் 2, இதழ் 5-கட்டுரை—1936]

# 6. மூடப் பண்டிகைகள்

## 1. வருஷப் பிறப்பு

இங்கிலீஷ் புதுவருடம் பிறந்தது என்று மக்கள் அதை ஒரு பண்டிகைபோல் கொண்டாடினார்கள். 'புதிய வருடம் உங்களுக்கு ஒரு சந்தோஷகரமான வருஷமாய்க் கழிய வேண்டும்' என்று ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்லிக்கொண்டார்கள்.

தமிழ் வருடப் பிறப்புக்குங்கூட சில இடங்களில் இம் மாதிரி வாழ்த்துச் சொல்லிக் கொள்வதும், சன்மானம் வழங்கிக் கொள்வதும் உண்டு.

இவை ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக்கொள்ளும்போது தலைப்பில் 'மகா-ா-ா-ஸ்ரீ' என்று போடுவதும்; மேல் விலாசம் எழுதும்போதும் ஒருவருக்கொருவர் 'மகா-ா-ா-ஸ்ரீ' என்று போடுவதும் எப்படி ஒரு பத்ததியாகவும் வழக்கமாகவும் இருந்து வருகின்றதோ, அதுபோல்தான் புத்தாண்டு வாழ்த்தும் இருந்துவருகின்றது.



அனுபவத்தில் எவ்வித வாழ்த்தும் மக்களுக்கு யாதொரு பயனும் அளிப்பதில்லை. அவனவனுடைய நிலைமையில் இவ் வாழ்த்துக்களால் எவ்வித மாறுதலும் ஏற்படுவதில்லை.

ஆகவே, இவ் வாழ்த்துக்களையும், புது வருடப்பிறப்புக் கொண்டாட்டங்களையும் பலவித மூடப் பழக்கவழக்கங்களில் ஒன்றாகத்தான் கருதவேண்டுமே ஒழிய—மற்றபடி இதில் எவ்வித உபயோகமும் இல்லை. ஆதலால், நாம் இதைக் கொண்டாடவில்லை என்பதோடு, புது வருடப் பிறப்புக்காக நாம் யாரையும் வாழ்த்தவும் போவதில்லை.

['பகுத்தறிவு'-தலையங்கம்—6-1-1935]

## 2. சரஸ்வதி பூசை

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

சரஸ்வதி பூசை என்பது ஓர் அர்த்தமற்ற பூசை. கல்வியையும் தொழிலையும் ஒரு பெண் தெய்வமாக்கி—அதற்கு சரஸ்வதி என்று பெயர் கொடுத்து, அதைப் பூசை செய்தால் கல்வி வரும், வித்தை வரும் என்றும் சொல்லி, நம்மைப் பார்ப்பனர்கள் ஏமாற்றி, கல்வி கற்கச் சொந்த முயற்சி இல்லாமல் சாமியையே நம்பிக்கொண்டு இருக்கும்படி செய்துவிட்டு, நாம் அந்தச் சாமி பூசையின் பேரால் கொடுக்கும் பணத்தைக்கொண்டே அவர்கள் படித்துப் பெரிய படிப்பாளியாகிக்கொண்டு நம்மைப் படிப்பு வரமுடியா 'மக்குகள்' என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

முதலாவது, சரஸ்வதி என்னும் சாமியின் சொந்த யோக்கியதையைக் கவனித்தால், அது பார்ப்பனர்கள் புராணக் கதைகளின்படியே மிக்க ஆபாசமானதாகும். அதாவது, சரஸ்வதி என்கிற ஒரு பெண் பிரம்மனுடைய சரீரத்தில் இருந்து உண்டாக்கப்பட்ட பிறகு அழகைக் கண்டு அந்த பிரம்மனாலேயே மோகிக்கப்பட்டு அவளைப் புணர அழைக்கையில், அவள் பிரம்மனைத் தகப்பன் என்று கருதி அதற்கு உடன்படாமல் பெண் மான் உருவெடுத்து ஓடவும், பிரம்மன் தானும் ஓர் ஆண் மான் உருவெடுத்து அவளைப் பின் தொடர்ந்து ஓடவும், சிவன் வேட உருவெடுத்து ஆண் மானைக் கொல்லவும், பிறகு சரஸ்வதி அழுது சிவபிரானால் மறுபடியும் உயிர்ப்பிக்கச் செய்து பிரம்மனுக்கு மனைவியாகச் சம்மதித்ததாக சரஸ்வதி உற்பவக் கதை சொல்கிறது. அதாவது, தன்னைப் பெற்றெடுத்த தன் தகப்பனையே மணந்துகொண்டவள் சரஸ்வதி என்று ஆகிறது.

மற்றொரு விதத்தில் பிரம்மாவுக்குப் பேத்தி என்று சொல்லப்படுகிறது. அதாவது, பிரம்மா ஒரு காலத்தில் ஊர்வசியின்மீது ஆசைப்பட்டபோது வெளியான இந்திரியத்தை ஒரு குடத்தில் விட்டுவைக்க, அக் குடத்திலிருந்து அகத்தியன் வெளியாக, அவ்வகத்தியன் சரஸ்வதியைப் பெற்றான் என்று சொல்லப்படுகின்றது. அதனால் பிரம்மாவுக்கு சரஸ்வதி, மகன் வயிற்றுப் பேத்தி ஆகிறாள். எனவே, சரஸ்வதியின் பிறப்பும் வளர்ப்பும் நடவடிக்கையும் மேற்படி பார்ப்பனப் புராணப்படி மெத்த ஆபாசமும் ஒழுக்க ஈனமுமானதாகும்.

நிற்க, இந்த யோக்கியதையுடைய அம்மாளை எதற்காக மக்கள் பூசைசெய்கிறார்கள் என்பது இதைவிட மிகவும் வேடிக்கையான விஷயமாகும். அதாவது, சரஸ்வதி வித்தைக்கு அதிபதியான தெய்வமாதலால் வித்தையின்பயன் தொழிலென்றும், தொழிலுக்கு ஆதாரமானவை ஆயுதங்கள் என்றும் கருதிக்கொண்டு—சரஸ்வதிபூசை என்றும் ஆயுதபூசை என்றும் ஒரு நாளைக் குறித்துக்கொண்டு, அந்தநாளை விடுமுறையாக்கி, புத்தகங்களையும் ஆயுதங்களையும் வைத்துப் பூசை செய்கிறார்கள். இந்தப் பூசையில் அரசன் தனது ஆயுதங்களையும், வியாபாரி தனது கணக்குப் புத்தகங்களையும் தராசு, படிக்கல், அளவு மரக்கால், படி, உழக்கு, பெட்டி முதலியவைகளையும், தொழிலாளிகள் தங்கள் தொழில் ஆயுதங்களையும், இயந்திரக்காரர்கள் இயந்திரங்களையும், மாணாக்கர்கள் புத்தகங்களையும், குழந்தைகள் பொம்மைகளையும், தாசிகள் தங்கள் ரவிக்கை, சேலைகளையும்,

படிப்பகம்

www.padippakam.com



நகைகளையும், வாத்தியக்காரர்கள் வாத்தியக் கருவிகளையும் மற்றும் இதுபோலவே ஒவ்வொருவரும் அவரவர்கள் இலட்சியத்திற்கு ஆதாரமாக வைத்திருக்கும் சாமான்களை வைத்துப் பூசை செய்கிறார்கள்.

இதனால் அந்தத் தினத்தில் தொழில் நின்று அதனால் வரும்படிகளும் போய், பூசை, ஓய்வு முதலிய ஆடம்பரங்களுக்காகத் தங்கள் கையில் இருக்கும் பணத்திலும் ஒரு பாகத்தைச் செலவு செய்தும், போதாவிட்டால் கடன்வாங்கியும் செலவு செய்வதைவிட யாதொரு நன்மையும் ஏற்படுவதாகச் சொல்லுவதற்கே இல்லாமல் இருக்கின்றது. ஆயுதத்தை வைத்துப் பூசை செய்துவந்த—வருகின்ற அரசர்கள் எல்லாம் இன்றைய தினம் நம் நாட்டில் ஆயுதத்தை வைத்துப் பூசை செய்யாத வெள்ளைக்கார அரசனுடைய துப்பாக்கி முனையில் மண்டிபோட்டு சலாம் செய்துகொண்டே 'இஸ்பேட் ராசாக்களாக' இருந்து வந்தார்களே ஒழிய, ஒரு அரசனாவது சரஸ்வதிபூசை, ஆயுதபூசை ஆகிய பூசையின் பலத்தால் தன் காலில் தான் தைரியமாக நின்றவனாகக் காணோம்.

சரஸ்வதிபூசை செய்யும் ஒரு வியாபாரியாவது சரஸ்வதிக்குப் பயந்து பொய்க் கணக்கு எழுதாமலோ, தப்பு நிறை நிறுக்காமலோ, குறை அளவு அளக்காமலோ இருக்கிறார்களா என்று சொல்லமுடியாது. அதுபோலவே, கைத்தொழிலாளிகளும் தங்கள் ஆயுதங்களிடத்தில் வெகு பக்தியாய் அவைகளைக் கழுவி, சந்தனம், குங்குமம், பொட்டு முதலியவைகள் போட்டு விழுந்து கும்பிடுவார்களே தவிர—ஒருவராவது நாணயமாய் நடந்து கொள்கின்றார்கள் என்றாவது அல்லது அவர்களுக்குத் தாராளமாய் தொழில் கிடைக்கின்றது என்றாவது சொல்லுவதற்கு இல்லாமலே இருக்கின்றார்கள். அதைப்போலவே, புத்தகங்களையும், பென்சிலையும், கிழிந்த காகிதக் குப்பைகளையும் சந்தனப் பொட்டு போட்டுப் பூசை செய்கின்றார்களே அல்லாமல்—காலோ கையோ பட்டுவிட்டால் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கும்பிடுகிறார்களே அல்லாமல்—நமது நாட்டில் படித்த மக்கள் 100-க்கு 5 பேருக்குள்ளாகவே இருந்து வருகின்றார்கள். இவ்வளவு ஆயுத பூசை செய்தும், சரஸ்வதி பூசை செய்தும், இவ்வளவு விரதங்கள் இருந்தும் நமது அரசர்கள் அடிமைகளாக இருக்கின்றார்கள்; நமது வியாபாரிகள் நஷ்டமடைந்து கொண்டு வருகின்றார்கள். நமது தொழிலாளர்கள் தொழிலில்லாமல் பிழைப்பைக் கருதி வேறு நாட்டிற்குக் குடிபோகின்றார்கள்; நமது மக்கள் 100-க்கு 5 பேரே படித்திருக்கின்றார்கள். சரஸ்வதியின் சாதியைச் சேர்ந்த பெண்கள் ஆயிரத்துக்கு 9 பேரே படித்திருக்கிறார்கள். இதன் காரணம் என்ன?

நாம் செய்யும் பூசைகளை சரஸ்வதி அங்கீகரிக்க வில்லையா? அல்லது, சரஸ்வதி தெய்வத்திற்கும் இந்த விஷயங்களுக்கும் ஒன்றும் சம்பந்தமில்லையா? அல்லது, சரஸ்வதி என்கின்ற ஒரு தெய்வமே பொய்க் கற்பனையா? என்பவையாகிய இம் மூன்றில் ஒரு காரணமாகத்தான் இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் இவைகள் சுத்த முட்டாள்தனமான கொள்கைகள் என்பதே எனது அபிப்பிராயம். வெள்ளைக்காரத் தேசத்தில் சரஸ்வதி என்கின்ற பேச்சோ கல்வித் தெய்வம் என்கின்ற எண்ணமோ சுத்தமாய்க் கிடையாது.

அன்றியும், நாம் காகிதத்தையும் எழுத்தையும் சரஸ்வதியாய்க் கருதித் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டும், நமக்குக் கல்வி இல்லை. ஆனால், வெள்ளைக்காரன் மல உபாதைக்குப் போனால் 'சரஸ்வதியைக்' கொண்டே மலம் துடைத்தும்—அவர்களில் 100-க்கு 100 ஆண்களும் 100-க்கு 60 பெண்களும் படித்திருக்கிறார்கள். உண்மையிலேயே சரஸ்வதி என்ற ஒரு தெய்வம் இருக்குமானால் பூசை செய்பவர்களைத் தற்குறிகளாகவும், தன்னைக் கொண்டு மலம் துடைப்பவர்களை அபார சக்தி வாய்ந்த அறிவாளிகளாகவும் கல்விமான்களாகவும் செய்யுமா என்பதைத் தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

உண்மையிலே யுத்த ஆயுதம், கைத்தொழில் ஆயுதம், வியாபார ஆயுதம் ஆகியவைகள் சரஸ்வதி என்னும் தெய்வ அம்சமாய் இருக்குமானால்—அதைப் பூசை செய்யும்



இந்த நாடு அடிமைப்பட்டும், தொழிலற்றும், வியாபாரமற்றும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கவும்—சரஸ்வதியைக் கனவிலும் கருதாது, சரஸ்வதி பூசை செய்கின்றவர்களைப் பார்த்து முட்டாள்கள், அறிவிலிகள், காட்டுமிராண்டிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் நாடு சுதந்திரத்துடனும், வியாபாரிகள் அரசாட்சியுடனும்—தொழிலாளர் ஆதிக்கத்துடனும் இருக்க முடியுமா என்பதையும் யோசித்துப் பாருங்கள்! இந்தப் பூசையின்மூலம் நமது முட்டாள்தனம் எவ்வளவு வெளியாகின்றது, பாருங்கள்!

இராசாக்கள் கொலுவிருப்பது, பொம்மைகள் கொலுவிருப்பது, சாமிகள் கொலுவிருப்பது, இதற்காக ஜனங்கள் பணம் செலவு செய்வது, அறிவு செலவு செய்வது, பத்து இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குப் பொம்மைகள், சந்தனம், குங்குமம், கற்பூரம், சாம்பிராணி, கடலை, பொரி, சுண்டல், வடை, மேளவாத்தியம், வாழைக் கம்பம், பார்ப்பனர்களுக்குத் தட்சணை, சமாராதானை, ஊர்விட்டு ஊர் போக இரயில் சார்ஜ்—ஆகியவைகள் செலவாகின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். இவைகள் எல்லாம் யார் வீட்டுப் பணம்? தேசத்தின் செல்வமல்லவா என்றுதான் கேட்கின்றேன். ஒரு வருஷத்தில் இந்தப் பூசையில் இந்த நாட்டில் செலவாகும் பணமும் நேரமும் கோடி ரூபாய் பெறுமானது என்று கணக்குப் பார்த்தால், மற்ற பண்டிகை, உற்சவம், புண்ணிய தினம், அர்த்தமற்ற சடங்கு என்பவைகளின் மூலம் செலவாகும் தொகை சுலபத்தில் விளங்கிவிடும். இதை எந்தப் பொருளாதார இந்திய தேசிய நிபுணர்களும் கணக்குப் பார்ப்பதே இல்லை.

[ஈரோடு உண்மைநாடுவோர் சங்கத்தில் சொற்பொழிவு—'குடி அரசு' 20-10-1929]

## 3. விநாயகர் சதுர்த்தி

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இன்றைய தினம் நம் மக்களெல்லாம் வெகு மும்முரமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பண்டிகை விநாயகர் சதுர்த்தி. இது எவ்வளவு காட்டுமிராண்டித்தனம்! இதன் ஆபாசமான கதைகளைத் தெரிந்தால் இவர்கள் அப்படிச் செய்வார்களா?

விநாயகர் என்னும் கடவுள் இந்த நாட்டிலே உற்பத்தியான கடவுள் என்றும் சொல்லமுடியாது. வடநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டு இங்கே இவ்வளவு கூத்தடிக்கப்படுகின்றது. ஆற்றங்கரையோரம், அரசமரத்தின்கீழ், குளத்தங்கரையிலும் வீதிகளின் சந்தியிலும் வைக்கப்பட்டு இருக்கும் இந்தக் கடவுளின் யோக்கியதையைச் சொல்லப் போனால் அது நம் 'கடவுள்'களுக்கே வெட்கக்கேடாகும். அதாவது, இவருடைய பிறப்பு—பின் வரலாறு அந்தப் பார்ப்பனர்களாலேயே எழுதப்பட்ட புராணங்களிலிருந்தும் பார்த்தாலும் கூட, மிக மிக மோசமான கதை. விநாயகர் பிறந்த வரலாறு மூன்று விதமாக இருக்கிறது. இவற்றிலிருந்து இது உண்மையில் கடவுள் என்று சொல்ல முடியுமா என்பதை அறிந்து கொள்ளமுடியவில்லை நம் மக்களுக்கு.

சிவன் என்ற கடவுளின் மனைவி பார்வதி குளிக்கச் சென்றாளாம். தான் குளிக்கின்றபோது யாராவது அந்த அறைக்குள் புகுந்துவிடக்கூடாதே என்று பயந்து, குளிக்கும் அறைக்கு வெளியிலே காவல் வைப்பதற்கு ஒரு உருவத்தை உற்பத்தி செய்தாள். அந்த உருவத்தை எப்படி உற்பத்தி செய்தாள் என்பதுதான் கடவுள் தன்மையை விளக்கும் அதிசயம்.

முதலாவதாக—பெண்கள் குளிக்கும்போது அந்த அறைக்கு ஆண்கள் போவது அங்கு சர்வசாதாரணமாக இருந்திருக்கவேண்டும். இல்லாமலிருந்தால் யாராவது வந்து விடுவார்களே என்ற பயம் தேவையில்லை. காவலுக்கும் ஆள் தேவை இல்லை. அந்தபடியாக, ஆண்கள் யாராவது வந்து விடுவார்கள் என்ற பயம் இருந்தால், விநாயகர் என்று செய்யப்பட்ட அந்த உருவம் ஆண் உருவம் தானே! ஆண்கள் வந்துவிடக் கூடாதென்ற

படிப்பகம்

www.padippakam.com



நினைப்பினால் ஒரு ஆணையே சிருஷ்டித்துச் சதா நேரமும் பார்த்துக்கொண்டு இருக்கச் செய்தது எவ்வளவு புத்திசாலித்தனம்? குளிப்பதற்காகச் சென்ற பார்வதி தன் உடம்பின் மேல் உள்ள அழுக்கை உருட்டி ஒரு உருண்டை பிடித்து அதை வாசல்படியில் வைத்து உயிர் கொடுத்தாள் என்று கூறப்படுகிறது. இதுதான் விநாயகர்.

ஆகவே, ஒரு மனிதனுடைய எடைக்கு ஏற்றவாறு அத்தனை பெரிய அழுக்கு பார்வதியின்மேல் இருந்தது என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியுமா? அதுவரை ஒருநாளாவது பார்வதி குளித்து இருப்பாளானால் அந்த மாதிரியான அழுக்குப் பிடிக்குமா? ஆகவே, அவர்கள் சுத்த ஆபாசமும் அசுத்தமும் நிறைந்தவர்கள் தாம் என்று கருத வேண்டியது இருக்கிறது. அடுத்தபடியாக அவள் குளிக்கும்போது அங்கே வருகிறார் சிவன்! சிவனைக் கண்டதும் உமா கேட்கிறாள்; 'இங்கே எப்படி வந்தீர்? நான் குளிக்கும் போது நீர் வரலாமா? ஒரு ஆளை நடையில் காவல் வைத்து இருந்தேனே, அவனை எப்படித் தட்டிக் கழித்துக்கொண்டு வந்தீர்?' என்று. அதற்கு பரமசிவன் கூறுகிறார்: 'நான் வரும்போது நடையிலே ஒருவன் நின்றுகொண்டு என்னை வழிமறித்தான். நான் இங்கே வரவேண்டும் என்று கூறினேன். அதற்கு அவன்–விடமாட்டேன்; யாராய் இருந்தாலும் சரி; கணவனாய் இருந்தால்கூடப் பாதகம் இல்லை. விடவேமுடியாது என்று தடுத்தான். ஆகையால் என் கை வாளால் அவன் தலையைச் சீவினேன். பின்னர் தடையின்றி வந்தேன், உன்னைக் காண' என்று கூறுகிறார்.

இதிலே, குளிக்கும் பெண் தன் மனைவியாக இருந்தாலும் கூட அவனுக்கு அங்கே என்ன வேலை? இரண்டாவதாக, அதற்காக ஒரு மனிதனையே கொலை செய்து கொண்டு போகவேண்டிய அவ்வளவு பெரிய சங்கதி என்ன வந்துவிட்டது? மூன்றாவதாக, அவள் கணவன் என்று தெரிந்தபின்னும், அவன் பரமனை வழிமறிப்பது எவ்வளவு முட்டாள் தனம்? இதையெல்லாம் யோசனைசெய்தால் இது ஒரு அண்டப் புளுகு என்று, அல்லது முட்டாள்தனமான நடவடிக்கை என்பது விளங்கவில்லையா?

மேலும், இதை அறிந்த பார்வதி துடிதுடித்துக் கொண்டு ஓடிவந்து பார்க்கிறாள். தலை துண்டாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், துண்டாக்கப்பட்ட தலையைக் காண வில்லை. உடனே பரமனை நோக்கி, 'நாதா! என் அருமைச் செல்வம்—என் குழந்தை போன்று நான் உற்பத்திசெய்த அந்த அருள் செல்வத்தை எப்படியாவது எனக்குத் தந்து தான் தீரவேண்டும். இல்லையேல் என்னால் பொறுத்துக்கொண்டு இருக்கமுடியாது!' என்று கூறுகிறாள்.

பின்னர், இதைக்கேட்ட பரமன் என்ன செய்வதென்று யோசித்துக் கடைசியாக ஒரு யானையின் தலையைக் கொய்து அந்த முண்டத்தின் மேல் வைக்கிறார். உடனே அந்த முண்டம் யானைத் தலை உடைய விநாயகர் என்ற பெயருடன் உருப் பெறுகிறது. விநாயகர் பிறந்த வரலாற்றில் இது ஒன்று.

மற்றொன்று; பரமனும் பார்வதியும் ஒருநாள் வனத்திற்குச் சென்றபோது ஒரு ஆண் யானையும் ஒரு பெண் யானையும் கூடிக்கொண்டு இருந்ததைப் பார்வையிட்டனர்; உடனே அதே ஆசையால் பரமனும் பார்வதியும் கூடவே பிறந்ததுதான் விநாயகர் என்று கூறு கிறார்கள்.

இன்னொன்று; ஒருநாள் பார்வதியும் பரமனும் போய்க்கொண்டிருக்கையில் ஒரு யானையின் உருவம் (பொம்மை) ஒன்றைக் கண்டார்களாம். ஆகவே அதன்மேல் மோகம் கொண்ட பார்வதிக்கும் அதுபோல் பிள்ளை பிறக்கவேண்டும் என்று நினைத்தாளாம். ஆகவே அப்படிப் பிறந்ததுதான் விநாயகர் என்று கூறுகிறார்கள். ஆகவே, இந்த மூன்று கதைகளையும் தெரிந்த மக்களே இந்தப்படி மண்டையை உடைப்பார்கள் என்றால், இவர்களின் புத்தி கெட்ட தன்மையை– முட்டாள்தனத்தைப் பொறுத்துக்கொண்டு இருக்க முடியுமா? இந்தப்படியாக ஆபாசமான கதைகளை எழுதி நம்மை நம்பும்படி செய்து



விட்டனர், பார்ப்பனர்கள். ஆகவே, இது சிவனும் சுப்பிரமணியனும் வந்த காலத்திலே வந்தது. வடநாட்டான் இங்கு கொண்டுவந்து விளம்பரம் செய்துவிட்டான். அது இப் பொழுது பெரிய கடவுளாக மதிக்கப்பட்டு எல்லாக் காரியங்களுக்கும் முன்னேவைக்கும் ஸ்தானத்தைப் பெற்றுவிட்டது. ஆனதால்தான் பிள்ளையார் சதுர்த்தி-விநாயகர் சதுர்த்தி என்று ஆடம்பரமான நாளைக் கொண்டாடுகிறார்கள்.

ஆகவே, இதை எல்லாம் அறிவைக் கொண்டு ஆராய்ந்தால்—பகுத்தறிவைப் பயன் படுத்திப் புகுந்து பார்த்தால் மனிதனுக்கு இதன் உண்மை புலன் ஆகிவிடும். ஆனால் நாம் அப்படிச் செய்வது இல்லை. இதைத்தான் நாங்கள் கண்டிக்கின்றோம்.

[3-9-1951-ல், மயிலை திருவள்ளுவர் கழக ஆண்டுவிழாவில் சொற்பொழிவு—'விடுதலை' 12-9-1951]

## 4. தாரா சசாங்கம்

ராமசேஷன்: அடே, ஜோசப்! இன்று நல்ல டிராமா என்று நோட்டீஸ் பார்த்தேன்; போகலாமென்றிருக்கிறேன்; நீயும் வருகிறாயா?

ஜோசப்: அது என்னடா அப்பா, அப்பேர்ப்பட்ட நல்ல டிராமா? கொஞ்சம் சொல்லு பார்க்கலாம்.

ராமசேஷன்: அதா? தாரா சசாங்கம்; நல்ல சீன்களும், நல்ல பாட்டுக்களுமுடையது.

ஜோசப்: என்னடா என்னமோ கொசமுசாங்கம் என்று சொல்லுகிறாய்; அதன் கருத்து என்ன?

ராமசேஷன்: உனக்கென்னடா தெரியும்? நீயோ தற்குறி; அது உன் வாயிலேயே நுழைவதில்லை; அதற்கு யார் என்ன செய்வார்கள்?

ஜோசப்: அந்த கிரகமெல்லாம் உன் வாயிலேயே நுழையட்டும்; நல்ல வேளையாக என் வாயில் நுழையவேண்டாம்; அதன் கருத்தென்ன சொல்லு பார்ப்போம்.

ராமசேஷன்: தாரா சசாங்கம் என்றால், தாரை சந்திரனுக்கு நிர்வாணமாய் எண் ணெய் தேய்க்கும் பாகத்தை நாடக ரூபமாய்—பிரத்தியட்சத்தில் காட்டுவார்கள்.

ஜோசப்: அப்படியா? தாரை என்றால் என்ன? சந்திரன் என்றால் என்ன? இரண்டு பேருக்கும் என்ன சம்பந்தம் என்பதை முதலில் சொல்லு. அப்புறம் நிர்வாணத் தைப்பற்றியும், எண்ணெய் தேய்ப்பதைப் பற்றியும் கவனிக்கலாம்.

ராமசேஷன்: இனி உனக்கு அஸ்திவாரத்திலிருந்து சொல்லியாக வேண்டும்போல் இருக்கிறது.

ஜோசப்: சும்மாதானா, ஒரு மனிதன் நிர்வாணத்தைப் பார்க்க வருகின்றது? அது இன்னது என்றுகூடத் தெரியவேண்டாமா?

ராமசேஷன்: சொல்லுகிறேன்; கேள்!

ஜோசப்: சொல்லப்பா சொல்லு.

ராமசேஷன்: தேவர்களுக்கெல்லாம் குருவாக பிரகஸ்பதி என்பதாக ஒரு தேவகுரு உண்டு.

ஜோசப்: பொறு, பொறு; யாருடைய தேவர்களுக்கு?

ராமசேஷன்: எங்கள் தேவர்களுக்கு.

ஜோசப்: சரி, சரி. அதுதான் கேட்டேன், எல்லோருடைய தேவர்களுக்கும்—என்று எங்கே சொல்லிவிட்டாயோ என்னமோ என்றுதான் கேட்டுப் பார்த்தேன். அப்புறம்?

படிப்பகம்

www.padippakam.com



ராமசேஷன் : அந்தத் தேவகுருவுக்கு, தாரை என்கின்ற ஒரு பெண்சாதி உண்டு. தேவர்களுடைய குழந்தைகளையெல்லாம் அந்த பிரகஸ்பதியிடம் கொண்டுவந்து விட்டுத் தான் கல்வி கற்பிக்கின்றது வழக்கம்.

ஜோசப் : நிறுத்து, நிறுத்து. அப்படியானால் அந்த பிரகஸ்பதி யென்கின்றவர் ஒரு வாத்தியாரா ?

ராமசேஷன் : ஆமாப்பா, குரு என்றால் என்ன ? வாத்தியாரென்றால் என்ன ? இரண்டும் ஒன்றுதானே ; உனக்கு இதுகூடத் தெரிவதில்லையே ; உன்னோடு எப்படி அழுவது ?

ஜோசப் : இரு அப்பா இரு ; அதுக்குள்ளே கோபித்துக் கொள்ளவேண்டாம். குரு என்றால், இந்தப் பல்லக்கில் ஆனை, குதிரை, ஒட்டகை, மேளம், வாத்தியம் இதுகளுடன் மிரவணை, (ஊர்வலம்) வந்து கரண்டியில் தண்ணீர் விற்றுப் பணம் கொள்ளையடிக்கிறானே, அந்த ஆசாமியோ என்னமோ,—அவனுக்குச் சொந்தப் பெண்டாட்டி இல்லை என்று சொல்லுகிறார்களே,—அப்படியிருக்க நீ இந்தக் குருவுக்குப் பெண்டாட்டி இருப்பதாகச் சொல்லுகிறாயே, என்னப்பா அதிசயமாயிருக்குது என்றுதான் யோசிக்கிறேன்.

ராமசேஷன் : அடே இந்த குரு வேறயடா ; நீ ஒன்றும் தெரியாமல் உளறாதே !

ஜோசப் : அப்படியானால் அந்தக் குருவுக்கு என்ன பேர் ?

ராமசேஷன் : அவர்களுக்கும் குரு என்றுதான் பெயர். அவர்களெல்லாம் சமயாசாரியார்கள், மடாதிபதிகள், லோககுரு, குலகுரு, ஆச்சாரியார், பண்டார சன்னதிகள், சுவாமிகள் என்றும் பலவிதமாகச் சொல்லப்படுவார்கள். நான் சொல்லுகின்ற இவர் தேவ குரு. அதாவது தேவர்களுக்கு உபாத்தியாயர் என்று சொல்லப்படுபவர்.

ஜோசப் : நில்லு நில்லு ; அவசரமாகப் போகாதே ; எனக்குப் புரியவேண்டாமா ? முன் நீ சொன்னாயே லோக குரு என்று, அந்த லோக குரு என்பவர் எந்த லோகத்திற்குக் குரு ?

ராமசேஷன் : என்னப்பா உன்னோடு பெரிய தொல்லையாயிருக்கின்றது ? ஒவ்வொன்றும் உனக்குச் சொல்லித் தொலைக்கவேண்டும்போலிருக்கிறது !

ஜோசப் : சும்மாதானா—நிர்வாணத்தைப் போய்ப் பார்க்கின்றது ? அது இன்ன நிர்வாணம் என்று புரியவேண்டாமா ?

ராமசேஷன் : கேலி பண்ணாதே, விவரமாய்ச் சொல்லுகிறேன் கேள் ; எங்கள் 'ரிலிஜனை' (மதத்தை) நீ படித்தால்தானே தெரியும் ! நடுவில் புகுந்துகொண்டு கேட்டால், சுலபத்தில் புரியும்படி சொல்ல முடியுமா ?

ஜோசப் : ஓ, ஓஹோ ! இதெல்லாம் உங்கள் 'ரிலிஜனை' (மதத்தை)ச் சேர்ந்ததா ? அப்படியானால் கவனமாய்க் கேட்கிறேன் ; சொல்லு பார்ப்போம்.

ராமசேஷன் : லோக குரு என்பது, ஒரு பட்டப்பெயர். அவர் பார்ப்பனர்களில் ஒரு கூட்டத்தாருக்கு மாத்திரம் சாமியார். அந்தக் கூட்டத்தாரின் செல்வாக்கினாலும் மற்ற மக்களின் அறிவீனத்தினாலும் அவரை எல்லோருக்கும் குரு என்று சொல்லிப் பணம் சம்பாதிக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இப்படிப் பல பேர்வழிகள் உண்டு. அது போலவே, ஒவ்வொரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒவ்வொரு சாமியார் என்பவர் உண்டு. அவர்களையெல்லாம் இம் மாதிரிக் கவுரவமான பெயர்களால் அழைக்கின்றது எங்கள் வழக்கம். ஏனென்றால், ஒரு வகுப்புச் சாமியாரை, வேறு ஒரு வகுப்பார் பரிகாசம் பண்ணினால் அப்புறம் அந்த வகுப்புச் சாமியாரை மற்ற வகுப்பார் பரிகாசம் செய்வார்கள். அப்புறம் ஒருவருக்கும் யோக்கியதையில்லாமல் போய்விடும். ஆதலால், ஒருவருக்கு ஒருவர் மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக் கொள்ளுகின்றது வழக்கம். இந்த முறையில்



அவர்களுக்கு அந்தப் பெயர் கிடைத்திருக்கின்றது. ஆதலால், தேவகுரு என்பவர் இதில் சேர்ந்தவருமல்ல ; இந்த லோகத்தில் இருப்பவருமல்ல.

ஜோசப் : சரி, இந்தச் சாமியார்களால் உங்களுக்கு என்ன இலாபம்—சொல்லு பார்க்கலாம்.

ராமசேஷன் : இலாபமென்ன ; நஷ்டந்தான். வருஷா வருஷம் வந்து வரி வசூல் செய்வதுபோல் பணம் கொள்ளையடித்துக்கொண்டு போகின்றது ; அல்லது, மடத்துக்கு முன்னோர்களால் விடப்பட்ட சொத்துக்களின் வரும்படிகளை அவர்கள் இஷ்டப்படி அனுபவிப்பது ஆகிய காரியங்கள் தவிர அவர்களால் மக்களுக்குச் சாதிக்கப்படுவது ஒன்றும் கிடையாது.

ஜோசப் : எனக்கு நேரமாய்விட்டது ; இந்தச் சாமியார்களைப்பற்றி மற்றொரு நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். இப்போது நிர்வாண காட்சிக்குச் சம்பந்தப்பட்ட அந்தத் 'தேவகுரு' சங்கதியைச் சொல்லு ; சீக்கிரம் முடியட்டும் !

ராமசேஷன் : மேலே சொன்ன அந்த பிரகஸ்பதி என்கின்ற தேவகுருவுக்கு, தாரை என்கின்ற ஒரு பெண்சாதி உண்டு ; அந்த அம்மாள் ரொம்பவும் அழகு வாய்ந்தவள் ; யவ்வனப் பருவமுடையவள். அந்த பிரகஸ்பதி என்கின்ற குரு தாடியும் மீசையும் முளைத்துப் பார்க்கின்றதற்கு 'கிழப் பிசாசு'போல் இருப்பார். இப்படியிருக்கும் நாளையில் அந்தத் தேவகுருவிடம் படிப்பிக்க சந்திரனை அவன் தாய்தந்தையர்கள் பிரகஸ்பதியிடம் கூட்டிவந்து விட்டார்கள்.

ஜோசப் : ஓடாதே, ஓடாதே ! கொஞ்சம் நில்லு ; சந்திரன் என்று இப்போது சொன்னாயே, அது யார் ?

ராமசேஷன் : அட முட்டாளே ! சந்திரன் என்றால் யார் என்றுகூடவா தெரியாது ! வானத்தில் தெரிகின்றதே—இராத்திரியில் வெளிச்சம் கொடுக்கின்றதே அந்தச் சந்திரன் தான். இதுகூடவா சொல்லித் தொலைக்க வேண்டும் ?

ஜோசப் : கோபித்துக்கொள்ள வேண்டாமப்பா ! சும்மாதானா நிர்வாணத்தைப் பார்க்க வருகிறது ? வானத்தில் தெரிகின்ற சந்திரனா—ஒருவருக்குக் குழந்தையாகப் பிறந்து பிரகஸ்பதி என்கின்ற குருவிடம் படிக்கக் கொண்டுவந்து விடப்பட்டான் ?

ராமசேஷன் : ஆமாம், ஆமாம், ஆமாம். உனக்கு நூறுதரம் சொல்லித்தொலைக்க வேண்டுமாக்கும்.

ஜோசப் : தெரியாதவனுக்கு—என்னைப்போல் தற்குறிக்குத் தெரியும்படியாய்ச் சொல்ல வேண்டாமா ? அப்படியானால் நீ சொல்லுகிற சந்திரன் பிறப்பதற்கு முந்தி, வானத்தில் சந்திரன் இருந்ததா, இல்லையா ? தவிர, பிரகஸ்பதியிடம் படித்துக் கொண்டிருந்த காலத்தில், வானத்தில் என்ன இருந்தது ? எப்போதும் அமாவாசையாகவே இருந்ததா ? சற்று விளக்கு, பார்ப்போம்.

ராமசேஷன் : என்னப்பா இழவு, நீ கிறிஸ்தவன் என்பது சரியாய் இருக்கின்றது.

ஜோசப் : திடீரென்று அப்படிச் சொல்லிவிடாதே. இதை உன் தம்பி கேட்பதாகவே நினைத்துக் கொண்டு சமாதானம் சொல்லி விளங்கப்பண்ணப்பா !

ராமசேஷன் : என் தம்பி இந்த மாதிரி கேள்விகள் கேட்பானேயாகில்—அப்போதே அவனை நன்றாய் உதைத்து, இனிமேல் இம்மாதிரி அதிகப் பிரசங்கித்தனமானதும் நாத்திகமானதுமான கேள்விகளைக் கேட்கவேண்டாமென்று. சரியானபடி புத்தி கற்பித்திருப்பேன்.



படிப்பகம்

www.padippakam.com



ஜோசப் : என்னடப்பா, கடைசியாக இப்படிச் சொல்லிவிட்டாய்! ‘நிர்வாண நாடகம் பார்க்க வா’ என்று வெகு ஒழுங்காய்க் கூப்பிட மாத்திரம் உனக்கு அறிவிருக்குது; அந்தக் கதையின் யோக்கியதை என்னவென்று கேட்டால் இப்படிச் சொல்லுகிறாயே! இதுதானா உன்னுடைய மதத் தத்துவம்?

ராமசேஷன் : இல்லையப்பா—அதற்காக நான் சொல்லவில்லை. இம் மாதிரி கேள்விகள் கேட்பதெல்லாம் தப்பு. அதாவது, இதனால் ஒரு மதத் தத்துவத்தை (இன்சல்ட்) அவமானப்படுத்தியதுபோல் ஏற்படுகின்றது. இதையெல்லாம் அறிந்துதான் பெரியவர்கள்—பெரியவாள் சொன்னதையும், எழுதி வைத்ததையும் அப்படியே நம்பவேண்டுமென்றும்; நம்பாமல் கேள்வி கேட்பது நாத்திகம் என்றும், பாவம் என்றும் எழுதி வைத்திருக்கின்றார்கள். அதோடு, இப்படித் தர்க்கம் செய்பவனைச் சித்திரவதை செய்து கொன்றுவிட வேண்டும் என்றும் வேதம் சொல்லுகின்றது.

ஜோசப் : நல்ல வேளையாக வெள்ளைக்கார அரசாங்கம் இருப்பதால், நீ கூட என்னைக் கொல்லாமல் விட்டாய்போலும்! வெள்ளைக்கார அரசாங்கம் வேறுவகையில் எவ்வளவோ மோசமானதென்று சொல்லிக் கொள்ளப்படுவதாயிருந்தாலும்—இந்தக் காரியத்துக்காகவாவது இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்கவேண்டுமென்றே எனக்குத் தோன்றுகின்றது. அதிருக்கட்டும்; இதையாவது சொல்லு பார்ப்போம்.

ராமசேஷன் : எதை?

ஜோசப் : அதாவது, எப்பொழுது சந்திரன் பிள்ளையாய்ப் பிறந்தான்? எந்த உருவத்தோடு பிறந்தான்? எப்படி, வானத்திற்கு (ஆகாயத்திற்கு)ப் போனான்? அதையாவது சொல்லு பார்ப்போம்!

ராமசேஷன் : இதுவும் அந்த மாதிரிக் கேள்விகளைச் சேர்ந்ததுதான். தெய்வ மூலம், ரிஷி மூலம், நதி மூலம் ஆகியவைகள் ஒன்றும் கேட்கப்படாது என்பதும்; கேட்பதும் அதைத் தெரிய விரும்புவதும் பாபம் என்பதும் எங்கள் வேதத்தில் சொல்லப்பட்ட கட்டளையாகும். ஆதலால், நான் இவைகளைப் பற்றிக் கவலை எடுத்துத் தெரிந்துகொள்ள முயற்சிக்கவேயில்லை. மற்றபடி, இவைகளை உனக்குச் சொல்லக்கூடாது என்கின்ற நிர்ப்பந்தம் ஒன்றும் எனக்கு இல்லை.

ஜோசப் : சரி; அப்படியானால் அந்த வேதத்தை நீ பார்த்திருக்கின்றாயா? அதில் இம் மாதிரி எழுதியிருப்பது உனக்கு நேரில் தெரியுமா?

ராமசேஷன் : அதை நான் பார்க்கவில்லை; எங்கள் வேதத்தை எல்லோருமே பார்த்துவிட முடியாது.

ஜோசப் : அதென்ன, அப்படி?

ராமசேஷன் : அப்படித்தான்; அதைச் சிலர்தான் பார்க்கலாம். அவர்கள் தவிர மற்றவர்கள் பார்த்தால்—பார்த்தவர்களின் கண்ணைக் குத்த வேண்டும் என்றும்; அதில் உள்ளதைக் காதால் கேட்டால் அந்தக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்றும்; வாயால் படித்தால் படித்த நாக்கை அறுக்க வேண்டும் என்றும்; மனத்தில் பதிய வைத்து விட்டால் அந்த நெஞ்சைப் பிளந்து அதை வெளியாக்கிவிட வேண்டும் என்றும் நிபந்தனை இருக்கின்றது.

ஜோசப் : அது எதில் இருக்கின்றது?

ராமசேஷன் : அதுவும் அந்த வேதத்தில்தான் இருக்கின்றது.

ஜோசப் : அதையாவது நீ பார்த்தாயா?

ராமசேஷன் : நான்தான் பார்க்கக்கூடாது என்று முன்னமே சொன்னேனே!



ஜோசப் : பின்னே, உனக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது?

ராமசேஷன் : பெரியோர்கள் சொல்லித் தெரிந்தது.

ஜோசப் : அப்படியானால், வேதத்தில் உள்ளது உனக்கும் தெரிந்து—இப்போது எனக்கும் தெரிந்துவிட்டதே! நீ சொல்லுகின்ற வேத நிபந்தனைப்படி பார்த்தால்—உன் காதிலும் என் காதிலும் ஈயத்தைக் காய்ச்சிவிட்டு, உன் நெஞ்சையும் என் நெஞ்சையும் பிளந்தல்லவா ஆகவேண்டும்?

ராமசேஷன் : நீ என்னப்பா, தொட்டதற்கெல்லாம் குதர்க்கவாதம் பேசுகின்றாய்? இப்படியே பார்த்துக்கொண்டு போனால், உலகத்தில் எந்த மதமும்—எந்த வேதமும் நிலைக்க இடம் இருக்காது. இந்த விஷயங்களை யெல்லாம் நம்பித்தான் ஆகவேண்டும். ஒரு மாதிரியாகத்தான் பார்க்க வேண்டும்.

ஜோசப் : மற்ற மதங்களையும் வேதங்களையும்பற்றி நீ ஒன்றும் கவலைப்படாதே; அவைகள் எப்படியோ போகட்டும். அவைகளைப்பற்றி இது முடிந்தவுடன் கவனிக்கலாம். இப்போது உன் சங்கதியை—அதாவது உன் தலைமேல் இருக்கும் பாரத்தைப்பற்றி, நீ உணர்ந்திருப்பதை எனக்குச் சொல்லு; அதாவது நீ இப்போது சொன்ன ‘வேதம்’ என்பது யாரால் உண்டாக்கப்பட்டது?

ராமசேஷன் : அது கடவுளால் உண்டாக்கப்பட்டது.

ஜோசப் : அந்த வேதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று யார் சொன்னார்கள்?

ராமசேஷன் : அந்த வேதத்தில்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜோசப் : வேதத்தில் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்று உனக்கு யார் சொன்னார்கள்?

ராமசேஷன் : வேதம் பார்த்த பெரியோர்கள் சொன்னார்கள்.

ஜோசப் : அந்தப் பெரியவர்கள்—அந்த வேதத்தில் உள்ளதைக் கேட்கவும் பார்க்கவும் படிக்கவும் யோக்கியதை இல்லாத உனக்கு எப்படிச் சொன்னார்கள்?

ராமசேஷன் : இதெல்லாம்தான் அதிகப் பிரசங்கித்தனம்—குயுக்தி வாதம்—தர்க்க வாதம்—நாத்திகம் என்று சொல்லுவது.

ஜோசப் : சரி சரி; கோபித்துக் கொள்ளாதே. நிர்வாணக் கதையையாகிலும் சொல்லித் தொலை. ‘சந்திரனை’ அவன் பெற்றோர்கள் பிரகஸ்பதியிடம் படிப்புச் சொல்லிக் கொடுக்கக் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; அப்புறம்?

ராமசேஷன் : அப்படிக் கேள்; சொல்லுகின்றேன். கூட்டிக்கொண்டு வந்தார்களா? சரி; கூட்டிக்கொண்டு வந்தார்கள். பிரகஸ்பதியும், சந்திரனைத் தனது மாணாக்கனாக ஏற்றுக் கொண்டார்.

ஜோசப் : சரி; அப்புறம்?

ராமசேஷன் : சந்திரனுக்கு, பிரகஸ்பதி படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நாளையில் ஒருநாள் அவசரமாக தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் பிரகஸ்பதியைக் கூப்பிட்டனுப்பினான்.

ஜோசப் : சரி, கூப்பிட்டனுப்பினான். அப்புறம்?

ராமசேஷன் : பிரகஸ்பதி, தன் சம்சாரமாகிய தாரையைக் கூப்பிட்டுச் சந்திரனை சரியாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கும்; தன் மாணாக்கனாகிய சந்திரனைக் கூப்பிட்டுத் தாரையைச் சரியாகப் பார்த்துக் கொள்ளும்படிக்கும் கட்டளை இட்டு விட்டு, தேவலோகத்திற்குப் போய்விட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



ஜோசப் : சரி சரி; கொஞ்சம் நில்லு; இங்கே ஒரு சின்ன சந்தேகம். என்ன வென்றால், அந்தப் பிரகஸ்பதி தேவலோகம் போய்விட்டார் என்று சொன்னாயே—அப்படி யானால், இது, அதாவது—அப்போது சந்திரன், தாரை, பிரகஸ்பதி ஆகியவர்கள் இருந்து வந்தது எந்த லோகம்?

ராமசேஷன் : இதுதானே அதிகப் பிரசங்கித்தனம்,—நாத்திகம் என்பது.

ஜோசப் : சரி, சரி; கோபித்துக் கொள்ளாதே. பிரகஸ்பதி தேவலோகம் போய் விட்டார். அப்புறம் சொல்லு.

ராமசேஷன் : அப்புறமா? அப்புறந்தான் உன்னிடம் அதைப்பற்றிச் சொல்லுவது சரியல்லவென்று நினைக்கிறேன்.

ஜோசப் : 'தாரை, சந்திரனுக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்ப்பதை நேரில் பார்க்கலாம் வா!' என்று கூப்பிடுகின்ற நீ—அந்தக் கதையைச் சொல்ல வெட்கப்படு கின்றாயே! இதுதானா உன்னுடைய மத பக்தி, ஆத்திகம், என்னைக் கூப்பிட்ட யோக்கியதை?

ராமசேஷன் : சரி; சொல்லித் தொலைக்கிறேன் கேள்!

ஜோசப் : சொல்லப்பா, சொல்லு! பிரகஸ்பதி தேவலோகத்துக்குப் போய்விட்டார்; அப்புறம்?

ராமசேஷன் : போய்விட்டாரா.........!

ஜோசப் : சரி, போய்விட்டார். அப்புறம் சொல்லு!

ராமசேஷன் : அப்புறமென்ன? அதைக் கூடச் சொல்லவேண்டுமா? சந்திரன் நல்ல அழகு உள்ளவன் என்பது உனக்குத்தான் தெரியுமே; ஆகாசத்தைப் பார்த்தாலே தெரியாதா?

ஜோசப் : ஆகாயத்தில் உள்ள சந்திரனின் அழகுக்கும்-பிரகஸ்பதி வீட்டில் உள்ள அழகுக்கும் என்ன சம்பந்தம்?

ராமசேஷன் : இதுதானே அதிகப் பிரசங்கித்தனம்!

ஜோசப் : இல்லை; இல்லை சொல்லு. சந்திரன் நல்ல அழகானவன்; அப்புறம்?

ராமசேஷன் : அதோடு வாலிபப் பருவம் உடையவன்; அதுபோலவே தாரையும் நல்ல அழகும் வாலிபப் பருவமும் உடையவள். இப்படிப்பட்ட இரண்டுபேர்கள் ஒரு இடத்தில் இருந்தால் அப்புறம் சொல்ல வேண்டுமா?

ஜோசப் : அதையும் சொல்லித் தொலை!

ராமசேஷன் : சந்திரன்மேல் தாரைக்கு ஆசை உண்டாய் விட்டது.

ஜோசப் : இது சகஜம்தான்; மாணாக்கர்மீது—வாத்தியாரைப்போலவே, வாத்தி யார் சம்சாரத்துக்கும் ஆசை இருப்பது வழக்கந்தான். ஆதலால் என்ன?

ராமசேஷன் : அந்த மாதிரி ஆசையல்லடா! சந்திரன்மேல் தாரைக்குக் காதல் உண்டாய் விட்டது.

ஜோசப் : அப்படிச் சொன்னால் எனக்கு விளங்கவில்லையே?

ராமசேஷன் : உனக்கு நன்றாகச் சொல்லவேண்டுமாக்கும். காதல் என்றால் சந்திரனைத் தனது ஆசை நாயகனாகக் கொண்டு, அவனிடத்தில் கலவி இன்பம் அனுப விக்கவேண்டும் என்கின்ற ஆசையும் காம விகாரமும் தாரைக்கு உண்டாய் விட்டது.



ஜோசப் : தேவர்களுக்கெல்லாம் குருவாயிருக்கும் தேவகுரு பெண்சாதிக்கு, தன் புருஷனிடத்தில் படிக்க வந்த மாணாக்கன்மேல் இந்தக் காம விகாரம் உண்டாய் விட்டது என்றா சொல்லுகின்றாய்?

ராமசேஷன் : ஆம்; ஆம்.

ஜோசப் : அப்புறம்!

ராமசேஷன் : சந்திரன் அதற்குச் சம்மதிக்காமல் அவளைத் தடுத்துவிட்டான்.

ஜோசப் : அப்புறம்!

ராமசேஷன் : ஒருநாள் தாரையானவள், தான் குரு பத்தினி என்கின்ற முறையில்—சந்திரனை மாணாக்கன் என்கின்ற முறையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது போல் ஒரு ஏற்பாடு செய்து, சந்திரனை உட்காரவைத்து எண்ணெய்க் கிண்ணத்தைத் தன் காலடியில் வைத்துத் தனது துகில், எண்ணெய் தேய்க்கத் தேய்க்க அவிழ்ந்துவிடும்படி யாக—அவ்வளவு தளர்வாகக் கட்டிக்கொண்டு எண்ணெய் தேய்க்க ஆரம்பித்தாள்.

ஜோசப் : சரி; ஆரம்பித்தாள். அப்புறம்?

ராமசேஷன் : எண்ணெய் தேய்க்கும் சந்திரன் தலை குனிந்துகொண்டிருந்ததால் எண்ணெய்க் கிண்ணத்திற்குள் குரு பத்தினியுடைய அவயவ உருவங்களெல்லாம் நிழலில் தெரியும்படியாக இருந்தது. அப்படியே இருக்கும்போது சந்திரனுடைய புத்தியும் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சபலப்பட்டுக்கொண்டே வந்தது.

ஜோசப் : யாருக்கு?

ராமசேஷன் : மாணாக்கனுக்கு!

ஜோசப் : சரி; சபலப்பட்டுவிட்டது; அப்புறம்?

ராமசேஷன் : இதே சமயத்தில் தாரைக்கும் மெள்ள மெள்ள அவளுடைய ஆடை அவிழ்ந்து கீழே விழுந்துவிட்டது. தாரை நின்றுகொண்டு எண்ணெய் தேய்த்துக்கொண் டிருக்கும்போது, ஆடை கீழே விழுந்ததைப் பார்த்த சந்திரன் தலை நிமிர்ந்து பார்த்தான்.........

இதுவரையில்தான் நாடகக் கொட்டகையில் சீன் நடக்கும். இதற்கு மேல்கொண்ட சங்கதிக்கு, நாடக மேடையில் உடனே திரையைப் போட்டுவிடுவார்கள். இதைத்தான் தாரா சசாங்கம் என்று சொல்லுவது. இதைப் பார்க்கத்தான் உன்னைக் கூப்பிட்டேன்; வருகிறாயா, இல்லையா சொல்லு. நீ வராவிட்டால் நானாவது போகிறேன். இன்று நல்ல பாட்டு, நல்ல சீன், நல்ல காட்சி—மிகவும் வேடிக்கையாக இருக்கும். பெண்கள்கூட அனேகம் பேர் வருவார்கள்.

ஜோசப் : சரி, சரி; இந்தக் கதையைக் கேட்க எனக்கு எப்படியோ வாந்தி வருகின் றதுபோல் இருக்கின்றது. இந்த இலட்சணத்திற்கு—இதைப் பார்க்கப் பெண்கள்கூட வரு வார்கள் என்றாயே, அது வேறயா இந்த அழகுக்கு? அவர்கள் எதற்காக வருவார்கள்?

ராமசேஷன் : முதலாவது, இது எங்கள் மதத்தைச் சேர்ந்த ஒரு பக்தி மார்க்கக் கதை. இக் கதையைக் கேட்டவர்களுக்கு மோட்சம் உண்டு என்று எங்கள் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டாவது, இது ஒரு வேடிக்கைக் கதை.

ஜோசப் : என்ன வேடிக்கைக் கதை—இது?

ராமசேஷன் : தாரை சந்திரனைக் கட்டாயப்படுத்தி இழுப்பது; அவன் சம்மதிக்க மாட்டேன் என்று வாதாடித் தப்பித்துக்கொண்டு ஓடுவது; சந்திரனை தாரை பலவந்தப் படுத்துவதன் மூலம் இருவரும் கட்டிப்புரளுவது; சிற்றின்பமான பாட்டுக்கள் பாடுவது; கடைசியாக நிர்வாணக் காட்சி காட்டுவது ஆகிய வேடிக்கைகளைப் பார்க்கக்கூடும். ஆதலால் எங்கள் பெண்களும் வருவார்களென்று சொன்னேன்.

படிப்பகம்

www.padippakam.com



ஜோசப் : இவ்வித நடவடிக்கை நடக்கும்—இம் மாதிரிக் காட்சிகள் காட்டப்படும்—இம் மாதிரி பாட்டுக்கள் பாடப்படும் என்கின்ற விஷயங்கள் எல்லாம் தெரிந்த பிறகுதானா, உங்கள் ஸ்திரீகளும் ஏராளமாய்ப் போகிறார்கள் என்கின்றாய்?

ராமசேஷன் : ஆம். தாரா சசாங்க நாடகம் என்று சொல்லிவிட்டால், நாடகக்காரன்கூட இன்ன இன்ன காட்சி—இன்ன இன்ன வேஷம்—இன்ன இன்னார் போடுவார்கள் என்பதை, ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகம் தெரியும்படியாக விளம்பரம் செய்வான்.

ஜோசப் : உங்கள் ஆண்கள் இதெல்லாம் தெரிந்துமா, உங்கள் பெண்களை அனுப்புகிறார்கள்?

ராமசேஷன் : ஆம்; ஏனென்றால் ஆண்கள் நாடகத்திற்குப் புறப்படும்போது பெண்களும் அவசர அவசரமாய்த் தங்களைச் சிங்காரித்துக்கொண்டு புறப்படுவார்கள். ஆண்கள் இந்தக் காட்சியைப் பார்க்க வருகின்ற பல பெண்களைப் பார்க்கலாம்; அவர்களைப் பார்த்துச் சிரிக்கலாம் என்றே வருவார்கள். இது எல்லாப் பெண்களுக்கும் தெரியும். ஆதலால், ஆண்கள் தங்கள் பெண்களை வரவேண்டாமென்று சொன்னால்—அவர்கள் இந்த இரகசியத்தைச் சொல்லி ஆண்களைக் கண்டித்துவிடுவார்கள். தவிர, சில ஆண்களுக்குப் பெண்களை வீட்டில் தனியாய் விட்டுவிட்டுப் போவதற்கும் சந்தேகம்; எனவே இருவரும் போவார்கள். அன்றியும், இப்படிப் போவதில் இன்னும் ஒரு இலாபம் இருக்கின்றது. அதாவது, மேற்கண்ட மாதிரியான காமாதுரமான பாட்டும் காட்சியும் செய்கையும் நாடகத்தில் காணப்படும்பொழுது பெண்களுக்கும், ஆண்களுக்கும், காம விகாரமேற்பட நேரும். அப்போது அவரவர்கள் புருஷனும் பெண்சாதியுமாயிருந்தால் அவரவர்களுடைய சொத்தை அவரவர்கள் பார்த்து ஒரு விதத்தில் திருப்தி அடையக்கூடும். அப்படிக்கில்லாவிட்டால் அச் சமயத்தில் வேறு ஒருவர் சொத்தை—ஒருவர் பார்க்க நேரிடும். அதோடு இருவரும் போனால் ஒருவொருக்கொருவர் பயந்து கொண்டு வேறு ஒருவரைப் பார்த்துக்கொள்ளவும் மாட்டார்கள். ஆதலால் புருஷனும் பெண் சாதியுமாகப் போவதே—தனியாய்ப் போவதைவிட மேலானது என்பது எனது அபிப்பிராயம்.

ஜோசப் : அது எப்படியோ போகட்டும். மேற்கொண்டு கதையின் முடிவு என்ன?

ராமசேஷன் : கதை முடிவு இதுதான் விசேஷபாகம். மற்றது சாரமில்லாதது.

ஜோசப் : சாரமில்லாவிட்டாலும்—சற்றுச் சொல்லு, கேட்போம்!

ராமசேஷன் : பிறகு ஒருவரை ஒருவர் கூடுகிறார்கள். பிரகஸ்பதி வருகின்றவரை இதே வேலையாய் இருக்கிறார்கள். இதனால் தாரைக்குக் கர்ப்பம் தரித்து விடுகின்றது. பிறகு தேவ குரு பிரகஸ்பதி வந்து, ஞான திருஷ்டியால் தெரிந்து, கோபித்துக்கொண்டு சந்திரனை 15 நாள் தேயும்படியாகவும்—15 நாள் வளரும்படியாகவும் சபித்துவிடுகின்றார். அதுதான் வளர்பிறை—தேய்பிறை என்பது. தாரை மீதும் ஏதோ கோபித்துக் கொள்ளுகின்றார். தாரைக்கு புதன் என்கின்ற பிள்ளையும் பிறக்கின்றது. தேவகுருவும் சந்திரனைச் சபித்துவிட்டுத் தன் பெண்சாதியைக் கடைசியாக மன்னித்து விடுகிறார். அதோடுகூட தாரையை உலகிலுள்ள கற்புள்ள ஸ்திரீகள் அவ்வரில் ஒருத்தியாகச் சேர்த்துவிடுகிறார். தாரையை நினைத்தால்—நினைத்தவர்களுக்குச் சகல பாவமும் உடனே தீரும்படியான சக்தியையும் அவர்களுக்கு ஏற்படுத்திவிடுகிறார். அதுபோலவே இன்னும் உலகத்தில் தினமும் கோடிக்கணக்கான பேர்கள் இந்தத் தாரையை நினைப்பதன் மூலம் தினந்தோறும் அவரவர்கள் செய்யும் பாவங்கள் மன்னிக்கப்பட்டுப் புதிது புதிதான பாவங்கள் செய்யவும் மக்களுக்கு எவ்வளவோ தைரியம் கொடுக்க உபகாரமாகவு மிருக்கின்றது. இதுதான் தாரா சசாங்கக் கதையின் தாத்பரியம்.

ஜோசப் : இக் கதையினால் உங்கள் குரு பெண்சாதிமார்கள் சங்கதியும், சீஷப் பிள்ளைகளின் சங்கதியும் நன்றாய்த் தெரியவந்தது. அதோடு, உங்கள் கற்புக்கும் அர்த்தம் தெரிந்தது. இவ்வளவே எனக்குப் போதும். நீ சொன்னதிலிருந்தே, இந்த 'கோசமுசாங்கக் கதை'யை நேரில் பார்த்ததுபோலவே ஆகிவிட்டது. இதை நீயும் உங்கள் பெண்களுமே நன்றாகப் பார்த்து மோட்சத்திற்குப் போங்கள்! உங்கள் உபாத்தியாயர் பத்தினிமார்களும் இந்தக் கண்காட்சியை நன்றாகப் பார்த்து, அந்தப்படியே நடந்து, மாணாக்கர்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டுப் பஞ்ச கன்னிகைகளோடு சேர்ந்து, அவர்களை நினைத்தவர்களுக்கெல்லாம் மோட்சத்தைக் கொடுத்துவரட்டும்! மாணாக்கர்களாகிய நீங்களும்—அவர்களுக்கு சீஷப் பிள்ளைகளாகச் சேர்ந்து சந்திரனைப் போலவே தினமும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு 'புதன்'களைப் பெற்றுக்கொண்டிருங்கள். நம்மை மாத்திரம் அந்த மோட்சக் காட்சிக்குக் கூப்பிடாதீர்கள்.



ராமசேஷன் : இதையெல்லாம் நீ எங்கிருந்து படித்துக்கொண்டாய் என்பது எனக்குத் தெரியும். 'குடிஅரசு' என்கின்ற அந்த நாத்திகப் பத்திரிகையை, நீ தினம் படிக்கின்றதை, நான் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். அது உன்னை இம் மாதிரி, ஆக்கிவிட்டது. நீ என்ன செய்வாய்; உன்மீது தப்பிதமில்லை.

ஜோசப் : குருபத்தினி சீஷப்பிள்ளைக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்ப்பதைப் பார்க்க இஷ்டமில்லை என்று சொன்னால்—அது 'குடிஅரசை'ப் பார்த்ததனால் வந்த கேடாக்கும்? நாத்திகமாக்கும்? போதும் போதும்! உங்கள் ஆத்திகத்தை மூட்டை கட்டி வையுங்கள். இனி என்னிடம் விரிக்காதீர்கள். எனக்கும் நேரமாச்சுது; நான் போய் வருகிறேன். மற்றொரு நாளைக்கு உங்கள் வேதத்தைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம்.

'குட் பை'—Good-bye.

['குடிஅரசு'-சித்திரபுத்திரன் என்ற பெயரில் எழுதிய உரையாடல்—8-7-1928]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

புரட்டாசி சனிக்கிழமை உற்சவங்களும், திருப்பதி முதலிய நூற்றுக்கணக்கான 'சனிக்கிழமைப் பெருமாள்கள்' உள்ள ஊர்களின் உற்சவங்களும் சனிக்கிழமை பிடிப்பதன் மூலம் அவரவர்கள் வீட்டில் ஏராளமாய் சமைத்துக்கொண்டு, சோம்பேறிகளையும் அயோக்கியர்களையும் மெனக்கெட்டுத் தேடிப்பிடித்து வந்து, அவர்களுக்கு வயிறு நிறையவும் போட்டு—மற்றும் மூட்டை கட்டிக்கொண்டும் போகக்கூடிய அளவு மேற்கொண்டும் போட்டு—கஞ்சாவுக்கோ, கள்ளுக்கோ, சூதாடவோ கையில் பணமும் கொடுத்து—இவ்வளவும் போதாமல் அந்த நாளெல்லாம் பட்டினி கிடந்து—அந்தச் சோம்பேறிகளின் காலிலும் விழுந்து, மாலை 3 மணி, 4 மணி சுமாருக்குச் சாப்பிடும் பண்டிகையிலோ, விரதத்திலோ, கடுகளவு அறிவு இருக்கின்றதா என்று கேட்கின்றேன். புரட்டாசி சனிக்கிழமை வந்தால் எத்தனை பேர்கள் தங்களுக்கும் பட்டை நாமம் போட்டுக்கொண்டு, சொம்புக்கும் நாமத்தைக் குழைத்துப் போட்டுக்கொண்டு, துளசி, அரளிப் பூவையும் அந்தச் சொம்புக்குச் சுத்திக்கொண்டு, 'வெங்கிடாசலபதி கோவிந்தா' என்றும் 'நாராயணா கோவிந்தா' என்றும் கூப்பாடு போட்டு—அரிசியோ, காசோ வாங்கிக்கொண்டு போவதில் ஏதாவது பலனுண்டா என்றுதான் கேட்கிறேன்.

மற்றும், 'திருப்பதிக்குப் போகிறேன்' என்று சொல்லிக்கொண்டு தலை மயிரும், தாடி மயிரும் வளர்த்து வெறும் மஞ்சள் நனைத்த துணி கட்டிக்கொள்வதும், மேளம் வைத்துக் கொள்வதும், பெண் பிள்ளைகள் சுற்றத்தார்களை அழைத்துக்கொள்வதும், வருஷமெல்லாம் பணம் உண்டியலில் போட்டு மொத்தமாய்ப் பணம் சேர்ப்பதும், அல்லது வேண்டு தலையின்மேல் இவ்வளவு பணம் என்று கடன் வாங்கியாவது எடுத்துக்கொள்வதும், அல்லது வியாபாரத்திலோ அல்லது வேறு வரும்படியிலோ இலாபத்தில் இத்தனை பங்கு என்று கணக்கு வைத்து எடுத்துச் சேர்த்துக்கொள்வதும், ஆன பணமூட்டையைக் கட்டிக் கொண்டு, கடைவாயிலும் நாக்கிலும் வெள்ளிக் கம்பியைக் குத்திக்கொண்டு—போதாக்

www.padippakam.com



குறைக்குத் தெருவில் கூட்டமாய் 'கோவிந்தா, கோவிந்தா, கோவிந்தா' என்று கூப்பாடு போட்டு—வீட்டுவீட்டுக்கு, கடை கடைக்குக் காசு பணம் வாங்கி, ஒரு பகுதியை இரயிலுக்குக் கொடுத்து திருப்பதி போவதும், அங்கு முழங்கால் முறிய மலை ஏறுவதும், ஆண்களும் பெண்களும் தலை மொட்டை அடித்துக்கொள்ளுவதும், அந்த மலைச் சுனைத் தண்ணீரில் குளிப்பதும், அங்கு பட்டை நாமம் போட்டுக்கொள்வதும், கொண்டுபோன பணத்தைக் கடாரத்தில் காணிக்கையாகக் கொட்டுவதும், ஆண்களும் பெண்களும் நெருக்கடியில் இடிபடுவதும், பிடிபடுவதும்—வெந்ததும் வேகாததுமான சோற்றைத் தின்பதும், மற்றும் பல சோம்பேறிகளுக்கும் மேகவியாதிக்காரருக்கும் வேகவைத்தோ விலைக்கு வாங்கியோ போடுவதும், விறகுக் கட்டைகளிலும் வேர்களிலும் செய்த மரமணி மாலைகளை வாங்கிக் கழுத்தில் போட்டுக்கொள்வதும், மலைக் காய்ச்சலோடு மலையை விட்டு இறங்கிவருவதும், வீட்டுக்கு வந்து 'மகேஸ்வர பூசை', 'பிராமண சமாராதனை' செய்வதும் தவிர மற்றபடி இவைகளால் ஏதாவது செய்தவனுக்கோ, கூடப்போன மக்களுக்கோ, நாட்டுக்கோ, ஒழுக்கத்திற்கோ, மதத்திற்கோ கடுகளவு நன்மை உண்டாகின்றதா என்று கேட்கிறேன்.

திருப்பதிக்குப் போய்வந்த பிறகாவது, யாராவது தங்கள் துர்க் குணங்களையோ கெட்ட செய்கைகளையோ விட்டுவிட்டதாக—அல்லது திருப்பதி யாத்திரையானது இம் மாதிரிக் குணங்களை விடும்படி செய்ததாகவாவது—நம்மில் யாராவது பார்த்திருக்கின்றோமா என்று கேட்பதுடன், இம் மாதிரியான அறிவீனமான காரியத்திற்கு நமது நாட்டில் வருடத்திற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகின்றது என்பதை எந்தப் பொருளாதார இந்தியத் தேசிய நிபுணராவது கணக்குப் போட்டார்களா என்று கேட்கின்றேன்.

[ஈரோடு உண்மை நாடுவோர் சங்கத்தில் பேருரை—'குடி அரசு' 20-10-1929]

## 5. தீபாவளி

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

தீபாவளிப் பண்டிகை என்று கஷ்டமும் நஷ்டமும் கொடுக்கத்தக்க பண்டிகையொன்று வந்துபோகின்றது. அதிலும் ஏதாவது அறிவுடைமை உண்டா என்று கேட்கிறேன். தீபாவளிப் பண்டிகையின் கதையும் மிக்க ஆபாசமானதும், இழிவானதும், காட்டுமிராண்டித் தனமானதுமாகும். அதாவது, விஷ்ணு என்னும் கடவுள் பன்றி உருக்கொண்டு பூமியைப் புணர்ந்ததன் மூலம் பெறப்பட்டவனான நரகாசுரன் என்பவன், வருணனுடைய குடையைப் பிடுங்கிக்கொண்டதால் விஷ்ணுக் கடவுள் நரகாசுரனைக் கொன்றாராம். இதைக் கொண்டாடுவதற்காகத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறதாம்.

சகோதரிகளே! இதில் ஏதாவது புத்தியுள்ள தன்மையோ அறிவோ இருக்கிறதா என்பதைப் பாருங்கள்! விஷ்ணுக் கடவுள் பூமியைப் புணரமுடியுமா என்றாவது, பூமியைப் புணர்வதால் பிள்ளை பிறக்குமா என்றாவது யோசித்துப் பாருங்கள்! இப்படிப் பொய்யான பண்டிகையினால் எவ்வளவு கஷ்டம், எவ்வளவு கடன், எவ்வளவு அறியாத்தனம், எவ்வளவு பிரயாசை என்பவைகளை நம் மக்கள் நினைப்பதேயில்லை. அப் பண்டிகையைக் கொண்டாட ஒவ்வொருவனும் தேவைக்குமேல் செலவுசெய்து துன்பப்படுகிறான். தன்னிடம் இல்லாவிட்டாலும், கடன்வாங்கியாவது—கடன் என்றால் ஒன்றுக்கு ஒன்றரைப் பங்கு வட்டி ஏற்பட்டுவிடுகின்றது. பட்டாசு கொளுத்துவது எவ்வளவு துன்பம் என்றும், இதனால் பலவித அபாயங்கள் தோன்றி உபாதைகள் ஏற்பட்டு விடுவதும், துணியில் நெருப்புப் பிடித்து உயிர்போதலும், பட்டாசு சுடும்போது திடீரென வெடிப்பதால் உடல் கருகி, கண், மூக்கு, கை, கால் ஊனம்வருவதும் அல்லாமல், இந்தப் பண்டிகை கொண்டாடுவதற்கு அறிகுறியாக எவ்வளவோ பேர்கள் சாராயம் குடித்து மயங்கித் தெருவில்விழுந்து



புரண்டு மானம்கெடுவதும், மேலும் இதற்காக இனாம் என்று எத்தனை பாமரர் பிச்சை எடுப்பது அல்லது தொந்தரவு கொடுத்துப் பணம் வசூல் செய்வது ஆகிய இந்தக் காரியங்களினால் எவ்வளவு பணம், எவ்வளவு நேரம், எவ்வளவு ஊக்கம், எவ்வளவு அறிவு செலவாகின்றது என்றும் எண்ணிப் பாருங்கள்! இவைகளை எந்த இந்தியப் பொருளாதார—தேசிய நிபுணர்களாவது கவனித்தார்களா என்று கேட்கிறேன்.

[ஈரோடு உண்மை நாடுவோர் சங்கத்தில் சொற்பொழிவு—'குடி அரசு' 20-10-1929]

நமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருட்டுப் பற்றுதலால், தீபாவளியின்போது ஏராளமான பொருள்கள் நமது நாட்டில் வீண் விரயமாக்கப்படுகின்றன.

அப்படிப்பட்ட வீண் செலவுகளில் பட்டாசு முதலிய வெடிகள் சுடுதல், பலகார வகைகளை அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடுதல், புதுத் துணிகள் வாங்குவதில் தன் நிலைமைக்கு அதிகமாகச் செலவு செய்தல் முதலியன முக்கியமாகும். இவற்றில் வெடிகள் சுடுவதன் மூலம் நமது நாட்டுப் பொருள் சீனா முதலிய அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவ்வன்னிய நாடுகளில் நமது நாட்டிலுள்ள மூடமக்கள் தேவைக்கு வெடிகள் செய்வதென்று மனித நன்மைக்கு உபயோகமில்லாத ஒரு தொழில் வளர்க்கப்பட்டு வருகிறது. தீபாவளியில் தின்பண்டங்கள் தின்னவேண்டும் என்றிருக்கும் வழக்கத்தால் மக்களிடையே நோய் விருத்தியாகிறது. தின்பண்டங்களை ஒவ்வொருவரும் தனது தேக நிலைக்குத் தகுந்த அளவு நிரந்தரமாகப் புசித்துவரவேண்டுமேயொழிய—வருஷத்தில் சில தினங்களில் மாத்திரம் பண்டிகைகள் கொண்டாடும் விசேஷ தினங்களென ஏற்படுத்திக்கொண்டு—அந்த நாட்களில் மாத்திரம் அதிகமாகப் புசித்தால் நோயடைவது நிச்சயம். தமிழ்நாட்டில் அஜீரணத்தால் ஏற்படும் 'காலரா' என்னும் தொத்துநோய் ஒவ்வொரு வருஷமும் ஆரம்பமாவது தீபாவளி காலத்தில்தான் என்பதை அனைவரும் அறிவர்.

தீபாவளியில் புதுவஸ்திரம் கட்டியாக வேண்டியிருக்கும் வழக்கம் மேற்கண்ட மற்ற இரண்டு தீங்குகளைவிட மிகவும் பாதகமானது. மக்களுக்குத் துணி அவசியம் எனக் கொண்டாலும் ஒவ்வொருவரும் தனக்கு வேண்டிய துணிகளை நாளடைவில் அந்தந்தச் சமயத்திலுள்ள தேவைக்குத் தக்கவாறும், தனது பொருள் நிலைமைக்குத் தக்கவாறும் வாங்கிக்கொள்ளவேண்டும். பழைய துணிகள் கிழியாமல் வேண்டிய அளவு இருக்கும்போது, புதிதாய் வாங்கவேண்டியதில்லை. பொருள் கஷ்டம் ஏற்படும் காலத்தில் கிழிந்த ஆடைகளைக் கூடியவரையில் மறுபடியும் செப்பனிட்டுத் தைத்து உபயோகப்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டுமேயொழிய, புதுப் புதுத் துணி வாங்கித்தான் ஆகவேண்டுமென்ற நியதியைக் கைக்கொள்ளக்கூடாது. ஆனால் தீபாவளிக் கொண்டாட்டம் என்னும் மூடசம்பிரதாயத்தின் காரணமாய் ஒருவன் தன்வசத்தில் ஏராளமான ஆடைகள் ஏற்கனவே வாங்கி வைத்திருந்தபோதிலும்—தற்சமயம் அவசிய செலவுக்கே பணமில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தபோதிலும், பண்டிகை காலத்தில் புத்தாடை வாங்கி உடுத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறான். இதன் பயனாய் ஏழைமக்கள் தங்களுக்கு வேண்டிய துணிகளைத் தீபாவளிச் சமயத்தில் தவிர வேறு சமயங்களில் வாங்காமலிருக்கிறார்கள். துணி வியாபாரத்தில் ஒரு வருஷத்திய வியாபாரம் முழுவதும் ஒரு தினத்தில் நடத்தவேண்டியிருப்பதால் ஒரு நெருக்கடி ஏற்பட்டுத் துணிவிலை அதிகப்பட்டு, ஏழைகளுக்கு நஷ்டமுண்டாகிறது. ஆகையால், நமது நாட்டு மக்கள் இவ்வித நெருக்கடியிலும், கஷ்டத்திலும் பட்டு உழலாமலிருக்க வேண்டுமானால் தீபாவளிப் பண்டிகையைக் கைவிட வேண்டிய தவசியம். தேசநலத்தை விரும்புகிறவர்களும்—ஏழை மக்களின் அறியாமையை அகற்றப் பாடுபடுபவர்களும் தங்கள் செய்கையில் தீபாவளியைக் கொண்டாடாமல் மற்றவர்களுக்கு வழிகாட்டுவதிலும்—தீபாவளியைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனப் பொதுமக்களிடையே தீவிரப் பிரச்சாரம் செய்வதிலும் முன்னிற்க வேண்டியது அவசியமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



பொது நன்மையைக் கோரும் அறிவாளிகளிடத்தில் இவ் விஷயத்தைப்பற்றி அபிப்பிராய பேதமிருக்க வேண்டியதில்லை.

['குடி அரசு'-தலையங்கம்—1-11-1931]

தீபாவளியின் பெயரால் ஏறக்குறைய 20 கோடி மக்களாவது பண்டிகை கொண்டாடி இருப்பார்கள். இவர்கள் பண்டிகை கொண்டாடியதன் பயனாய் சுமார் 10 கோடி ரூபாய்க்குக் குறையாமல் பாழ்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த 10 கோடியும் அனாவசியமாய்—துணி வாங்கிய வகையிலும், பலகாரங்கள் செய்த வகையிலும், பட்டாசு வாங்கிப் பொசுக்கிப் புகையும் கரியுமாக ஆக்கிய வகையிலும் செலவாகி இருக்கும் என்பது மட்டும் அல்ல; பண்டிகை நாளில் வருத்தமின்றிக் களித்திருக்கவேண்டும் என்பதைக் கருதி ஏழை மக்கள் கள், சாராயம், பிராந்தி, விஸ்கி, ஜின், ஒயின், பீர், ராமரசம் முதலிய வெறி தரும் பானங்களைக் குடித்துக் கூத்தாடிய வகையிலும் ஏராளமான பணம் செலவழிந்திருக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்தப் பண்டிகையினால் வெற்று நாளில் மறந்துபோயிருந்த—சாமிக்குப் படையல் போடத் தூண்டும் புராணக் கதை, மூட நம்பிக்கை மக்கள் மனத்தில் மறுபடியும் வந்து குடி புகுந்ததோடு அவர்களுடைய செல்வமும் கொள்ளை போகும் நிலை ஏற்பட்டது.

இவ்வளவு மாத்திரமல்ல; தீபாவளிப் பண்டிகைக்கு விடுமுறை விட்டதன் பயனாய்த் தினக் கூலிக்கு வேலை செய்யும் ஏழை மக்கள் கூலியை இழந்ததோடல்லாமல், கடன் வாங்கி நஷ்டமடைந்தது எவ்வளவு? வேலை நடக்கும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு அதனால் தடைப்பட்ட காரியங்கள் எவ்வளவு? தீபாவளிக்கு முன் சில நாட்களும், தீபாவளிக்குப் பின் சில நாட்களும், தீபாவளியைக் கருதி மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் விளையாட்டுக்களிலும், வேடிக்கைகளிலும் கவனம் செலுத்திய காரணத்தால் அவர்கள் படிப்புக்கு நேர்ந்த கெடுதி எவ்வளவு? அரசியல் காரியங்கள் நடைபெறுவதில் இதனால் தடைப்பட்ட காரியங்கள் எவ்வளவு!

['குடிஅரசு'-தலையங்கம்—22-11-1931]

சகோதரர்களே! சிறிதும் யோசனையின்றி, யோக்கியப் பொறுப்பின்றி, உண்மைத் தத்துவமின்றி, சுயமரியாதை உணர்ச்சி இன்றி, சுயமரியாதை இயக்கத்தின்மீது வெறுப்புக் கொள்கின்றீர்களேயல்லாமல்—மற்றும் சுயநலப் பார்ப்பனர் வார்த்தைகளையும், மூடப் பண்டிதர்களின் கூக்குரலையும், புராணப் புத்தக வியாபாரிகளின் விஷமப் பிரச்சாரத்தையும் கண்டு மயங்கி—அறிவிழந்து ஓலமிடுகின்றீர்களேயல்லாமல், மேலும் உங்கள் வீடுகளிலும், அண்டை அயல்களிலும் உள்ள கிழங்களுடையவும், அழுக்கு மூட்டைகளுடையவும், ஜீவனற்ற தன்மையான 'பழைய வழக்கம்', 'பெரியோர் காலம் முதல் நடந்து வரும் பழக்கம்' என்கிறதான வியாதிக்கு இடம் கொடுத்துக் கொண்டு கட்டிப்போடப்பட்ட கைதிகளைப் போல் துடிக்கின்றீர்களேயல்லாமல், உங்கள் சொந்தப் பகுத்தறிவைச் சிறிதுகூடச் செலவழிக்கச் சம்மதிக்கமுடியாத உலுத்தர்களாய் இருக்கின்றீர்கள்.

பணத்தையும் மானத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத் தயாராயிருக்கின்றீர்கள். சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் விட்டுக்கொடுக்கத் தயாராயிருக்கின்றீர்கள். ஆனால், உங்கள் பகுத்தறிவைச் சிறிதுகூடப் பயன்படுத்தத் தயங்குகிறீர்கள்! அது விஷயத்தில் மாத்திரம் ஏன் வெகு சிக்கனம் காட்டுகின்றீர்கள்? பார்ப்பனரல்லாதார்களில், சில பண்டிதர்கள் மாத்திரம் வயிறு வளர்த்தால் போதுமா? புராணப் புத்தக வியாபாரிகள் சிலர் மாத்திரம் வாழ்ந்தால் போதுமா? கோடிக் கணக்கான மக்கள் ஞானமற்று, மானமற்று கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வகையற்று அலைவதைப்பற்றிய கவலை வேண்டாமா என்று கேட்கின்றேன்.



புராணக் கதைகளைப்பற்றிப் பேசினால் கோபிக்கின்றீர்கள். அதன் ஊழலை எடுத்துச் சொன்னால் காதுகளைப் பொத்திக்கொள்கின்றீர்கள். ஆனால், காரியத்தில் ஒரு நாளைக்கு உள்ள 60 நாழிகை காலத்திலும் புராணத்திலேயே மூழ்கி மூச்சு விடுவது முதல் அதன்படியே செய்து வருகின்றீர்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் புராணப் புரட்டை உணர்ந்தவர்களாவார்களா? புராண ஆபாசத்தை வெறுத்தவர்களாவார்களா? நீங்களே யோசித்துப் பாருங்கள்!

பண்டித, பாமர, பணக்கார ஏழைச் சகோதரர்களே! எவ்வளவு பண்டிகை கொண்டாடினீர்கள்? எவ்வளவு யாத்திரை செய்தீர்கள்? இவற்றிற்காக எவ்வளவு பணச்செலவும் நேரச்செலவும் செய்தீர்கள்? எவ்வளவு தேகப் பிரயாசைப்பட்டீர்கள் என்பதை யோசித்துப் பார்த்தால், நீங்கள் புராணப் புரட்டை உணர்ந்து—புராண ஆபாசத்தை அறிந்தவர்களாவீர்களா? வீணாய்க் கோபிப்பதில் என்ன பிரயோசனம்? இந்த விஷயங்களை வெளியில் எடுத்து விளக்கிச் சொல்லுகின்றவர்கள்மீது ஆத்திரம் காட்டி அவர்களது கண்ணையும், மூக்கையும், தாடியையும், தலைமயிரையும் பற்றிப் பேசுவதால் என்ன பயன்? 'நீ ஏன் மலத்தில் மூழ்கி இருக்கின்றாய்?' என்றால், அதற்கு, 'நீ தமிழ் இலக்கணம் தெரியாதவன்' என்று பதில் சொல்லிவிட்டால் மலத்தின் துர்நாற்றம் மறைந்துபோகுமா? இதைப் பார்ப்பனரல்லாத மக்கள் 1000-க்கு 999 பேர்களுக்கு மேலாகவே கொண்டாடப் போகின்றீர்கள். பெரிதும் எப்படிக் கொண்டாடப் போகின்றீர்கள் என்றால், பொதுவாக எல்லோரும்—அதாவது துணி தேவை இருக்கின்றவர்களும், தேவை இல்லாதவர்களும் பண்டிகையை உத்தேசித்துத் துணி வாங்குவது என்பது ஒன்று; மக்கள் மருமக்களை மரியாதை செய்வதற்கென்று தேவைக்கும், யோக்கியதைக்கும் மேலானதாகவும், சாதாரணமாக உபயோகப்படுத்துவதற்கு ஏற்றதல்லாததுமான துணிகள் வாங்குவது என்பது இரண்டு; அர்த்தமற்றதும் பயனற்றதுமான வெடிமருந்து சம்பந்தப்பட்ட பட்டாசுவகைகள் வாங்கிக் கொளுத்துவது மூன்று; பலர் இனாம் என்றும், பிச்சை என்றும் வீடு வீடாய்க் கூட்டங் கூட்டமாய்ச் சென்று பல்லைக் காட்டிக் கெஞ்சிப் பணம் வாங்கிப் அதைப் பெரும்பாலும் சூதிலும், குடியிலும் செலவழித்து நாடு சிரிக்க நடந்து கொள்வது நான்கு; இவற்றிற்காகப் பலர் ஊர்விட்டு ஊர் பிரயாணம் செய்து பணம் செலவழிப்பது அய்ந்து; அன்று ஒவ்வொரு வீட்டிலும் அமிதமான பதார்த்த வகைகள் தேவைக்கு மிகுதியாகச் செய்து அவைகளில் பெரும்பாகம் கண்டவர்களுக்குக் கொடுப்பதும், வீணாக்குவதும் ஆறு; இந்தச் செலவுகளுக்காகக் கடன்படுவது ஏழு; மற்றும் இதுபோன்ற பல விஷயங்கள் செய்வதன் மூலம் பணம் செலவாகின்றது என்பதும், அதற்காகக் கடன்படவேண்டியிருக்கிறது என்பதுமான விஷயங்களொரு புறமிருந்தாலும்—மற்றும் இவைகளுக்கெல்லாம் வேறு ஏதாவது தத்துவார்த்தமோ 'சயின்ஸ்' பொருத்தமோ—சொல்லுவதானாலும் தீபாவளிப் பண்டிகை என்றால் என்ன? அது எதற்காகக் கொண்டாடப்படுகிறது?—என்கின்றதான விஷயங்களுக்குச் சிறிதுகூட எந்த விதத்திலும் சமாதானம் சொல்ல முடியாது என்றே சொல்லுவோம். ஏனெனில், அது எப்படிப் பார்த்தாலும், பார்ப்பனீயப் புராணக் கதையை அஸ்திவாரமாகக் கொண்டதாகத்தான் முடியுமே ஒழிய, மற்றபடி எந்த விதத்திலும் உண்மைக்கோ, பகுத்தறிவுக்கோ, அனுபவத்துக்கோ சிறிதும் ஒத்ததாக இருக்க முடியவே முடியாது. பாகவதம், இராமாயணம், பாரதம் முதலிய புராண இதிகாசங்கள் பொய் என்பதாகச் சைவர்கள் எல்லாரும் ஒப்புக் கொண்டாய் விட்டது. கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவைகள் பொய் என்று வைணவர்கள் எல்லாரும் ஒப்புக்கொண்டாய்விட்டது. இவ்விரு கூட்டத்திலும் பகுத்தறிவுள்ள மக்கள் பொதுவாக இவை எல்லாவற்றையும் பொய் என்று ஒப்புக்கொண்டாய்விட்டது. அப்படியிருக்க, ஏதோ புராணங்களில் இருக்கின்ற கதைகளைச் சேர்ந்த பதினாயிரக் கணக்கான சம்பவங்களில் ஒன்றாகிய, தீபாவளிப் பண்டிகைக்கு மாத்திரம் மக்கள் இந்த நாட்டில் இவ்வளவு பாராட்டுதலும் செலவுசெய்தலும், கொண்டாடுதலும் செய்வதென்றால் அதை என்னவென்று சொல்லவேண்டும்?

படிப்பகம்

www.padippakam.com



தீபாவளிப் பண்டிகையின் தத்துவத்தில் வரும் பாத்திரங்கள் மூன்று. அதாவது நரகாசுரன், கிருஷ்ணன், அவனது இரண்டாவது பெண்சாதியாகிய சத்தியபாமை ஆகியவை களாகும். எந்த மனிதனாவது கடுகளவு மூளை இருந்தாலும் இந்த மூன்று பேரும் உண்மையாய் இருந்தார்கள் என்றாவது, அல்லது இவர்கள் சம்பந்தமான தீபாவளி நடவடிக்கைகள் நடந்தவை என்றாவது, அவற்றிற்கும்—நமக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டு என்றாவது, அதற்காக நாம் இந்த மாதிரியான ஒரு பண்டிகை—தீபாவளி என்று கொண்டாடவேண்டுமென்றாவது ஒப்புக்கொள்ள முடியுமாவென்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார்கள், தங்களை ஒரு பெரிய சமூகக்காரர்கள் என்றும் கலைகளிலும், ஞானங்களிலும், நாகரிகங்களிலும் தேர்ச்சிபெற்றவர்கள் என்றும் தட்டிப் பேச ஆளில்லா விடங்களில் சண்டப்பிரசண்டமாய்ப் பேசிவிட்டு, எவனோ ஒரு மூடனோ அல்லது ஒரு அயோக்கியனோ, ‘காளைமாடு கன்று போட்டிருக்கிறது’ என்றால், உடனே, ‘கொட்டத்தில் கட்டிப் பால் கறந்து கொண்டு வா’ என்று பாத்திரம் எடுத்துக் கொடுக்கும் மடையர் களாகவே இருந்துவருவதைத்தான் படித்த மக்கள் என்பவர்களுக்குள்ளும், பாமர மக்கள் என்பவர்களுக்குள்ளும் பெரும்பாலும் காண்கின்றோமே ஒழிய, ‘காளைமாடு எப்படிக் கன்று போடும்?’ என்று கேட்கின்ற மக்களைக் காண்பது அரிதாகவே இருக்கின்றது. மற்றும், இம் மாதிரியான எந்த விஷயங்களிலும் கிராமாந்தரங்களில் இருப்பவர்களைவிடப் பட்டணங்களில் இருப்பவர்கள் மிகுதியும் மூடத்தனமாகவும்; பட்டணங்களில் இருப்பவர் களைவிட சென்னை முதலிய நகரங்களில் இருப்பவர்கள் பெரிதும் மூடசிகாமணிகளாகவும் இருந்துவருவதையும் பார்க்கின்றோம். உதாரணமாக, தீபாவளி, சரஸ்வதி பூசை, தசரா, பிள்ளையார் சதுர்த்தி, ஆடிப் பதினெட்டு, அவிட்டம் முதலிய பண்டிகைகள் எல்லாம் கிராமாந்தரங்களைவிட, நகரங்களில் அதிகமாகவும் மற்ற நகரங்களைவிட சென்னையில் மிக அதிகமாகவும் கொண்டாடப்படுவதைப் பார்க்கிறோம். இப்படிக் கொண்டாடும் ஜனங்களில் பெரும்பான்மையோர் எதற்காக ஏன் கொண்டாடுகின்றோம் என்பதைத் தெரியாதவர் களாகவே இருக்கின்றார்கள். சாதாரணமாக, மூடபக்தியிலும், குருட்டுப் பழக்கத்தினாலும், கண்மூடி வழக்கங்களைப் பின்பற்றி நடக்கும் மோசமான இடம் தமிழ் நாட்டில் சென்னையைப்போல் வேறு எங்குமே இல்லையென்று சொல்லிவிடலாம். சென்னையில் எங்குபோய்ப் பார்த்தாலும் ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலும் சரீரமில்லாத ஒருதலை உருவத்தை மாத்திரம் வைத்து—அதற்கு நகைகள் போட்டுப் பூசைகள் செய்துவருவதும், வீடுகள்தோறும் இரவு நேரங்களில் பாரத, இராமாயணக் காலட்சேபங்களும், பெரியபுராண, திருவிளையாடல் புராணக் காலட்சேபங்களும், பொது ஸ்தாபனங்கள்தோறும் சத்கதா காலட்சேபங்களும் நடைபெறுவதையும் இவற்றில் தமிழ் படித்த பண்டிதர்கள் ஆங்கிலம் படித்த பட்டதாரிகள்—கவுரவப் பட்டம் பெற்ற பெரிய மனிதர்கள்—பிரபலப்பட்ட பெரிய உத்தியோகஸ்தர்கள்—மற்றும் பிரபுக்கள், ‘டாக்டர்கள்’, ‘சயின்ஸ் நிபுணர்கள்’, ‘புரபசர்கள்’ முதலியவர்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். பார்ப்பனரல்லாதார்களில் இந்தக் கூட்டத்தார்கள் தாம், ‘ஆரியர் வேறு–தமிழர் வேறு’ என்பாரும், ‘புராணங்களுக்கும், திராவிடர்களுக்கும் சம்பந்தமில்லை’ என்பாரும், ‘பார்ப்பனரல்லாத சமூகத்தாருக்கு நாங்கள்தான் பிரதிநிதிகள்’ என்பாரும், மற்றும், ‘திராவிடர்களின் பழைய நாகரிகத்திற்கு மக்களை அழைத்துச் செல்லவேண்டும்’ என்பாரும் பெருவாரியாக இருப்பார்கள். ஆகவே, இம் மாதிரியான விஷயங்களில் படித்தவர்கள், பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள் என்கின்றவர்கள் போன்ற கூட்டத்தாரிடம் அறிவு, ஆராய்ச்சி சம்பந்தமானகாரியங்களை எதிர்பார்ப்பதைவிட, உலக அறிவுடைய சாதாரண மக்களிடம் எதிர்பார்ப்பதும், பிரச்சாரம் செய்வதும் பயன் தரத்தக்கதாகும்.

அன்றியும், இத் தீபாவளிக் கதை எவ்வளவு பரிகாசத்திற்கு இடமாயிருக்கின்ற தென்பதை உணரும் பொருட்டு அதனையும் கீழே தருகிறேன்.



தீபாவளியின் கதைச் சுருக்கம் :

ஆதிகாலத்தில் நரகாசுரன் என்று ஒரு அசுரன் இருந்தானாம். திருமாலுக்கும், பூமாதேவிக்கும் பிறந்த அவன் தேவர்களையெல்லாம் பலவாறு தூஷித்து இம்சித்து வந்தானாம்.

தேவர்கள் இதைப்பற்றி அவன் தகப்பனாகிய திருமாலிடம் முறையிட்டார்களாம். உடனே திருமால் நரகாசுரனைக் கொல்லுவதாக வாக்களித்தாராம். அதற்காகவேண்டி திருமால் கிருஷ்ணனாகவும், பூதேவி சத்தியபாமையாகவும் அவதாரமெடுத்து உலகத்துக்கு வந்து நரகாசுரனைக் கொன்றுவிட்டார்களாம்.

நரகாசுரன் சாகும்போது தான் செத்த தினத்தை உலகத்தார் கொண்டாட வேண்டு மென்று கேட்டுக்கொண்டானாம்.

கிருஷ்ணன், ‘அப்படியே ஆகட்டும்’ என்று வாக்களித்தாராம்.

அதற்காக வேண்டி மக்கள் எல்லோரையும் கொண்டாடும்படி கடவுள் செய்து விட்டாராம்.

ஆதலால் நாம் கொண்டாடுகிறோமாம்; அல்லது கொண்டாட வேண்டுமாம்.

இதை நமது பகுத்தறிவுக்குப் பொருத்திப் பார்ப்போம். முதலாவதாக, இந்தக் கதை உண்மையாய் இருக்க முடியுமா?

‘எல்லா உலகங்களையும் உண்டாக்கிய நான்முகனைப் பெற்றவரும், உலகங்களை எல்லாம் காத்துவருபவரும், தேவர்கள் தலைவருமாகிய திருமாலுக்கும் பூமிதேவிக்கும் எப்படிக் குழந்தை பிறக்கும்? (பூமிதேவி என்றால் பூமி அல்லவா?) பிறந்தவன் எப்படி அசுரனானான்? அத் தகைய மேம்பாடுடைய கடவுளுக்குப் பிறந்தவன் எப்படித் தீய செயல்களைச் செய்தான்? அப்படித்தான் செய்தாலும், அவனைப் பெற்றவனாகிய திருமால் தனது மகனைத் திருத்தாமல் ஏன் கொன்றான்? அப்படி இருந்தாலும், தானே வந்துதான் கொல்ல வேண்டுமா? மேற்படி நரகாசுரனைக் கொன்றபோது, அவன் தாயாகிய பூமிதேவியும் சத்தியபாமையாகப் பிறந்து உடனிருந்ததாகக் கதை கூறுகிறது. என்னே தாயின் கருணை! இவள்தான் உலகத்தையெல்லாம் காப்பாற்றுகிறாளாம்! உலக மக்கள் செய்யும் பாவங்களையெல்லாம் பொறுத்துக்கொள்கின்றாளாம்! ‘பொறுமையில் பூமி தேவிபோல்’ என்று உதாரணத்திற்குக்கூடப் பண்டிதரும் பாமரரும் இந்த அம்மையாரை உதாரணமாகக் கூறிவருகின்றனரே! இத்தகைய பூமிதேவியார் தனது மகனைக் கொல்லும் போது, தானும் உடனிருக்க வேண்டுமென்று திருமாலைக் கேட்டுக்கொண்டாளாம்! என்னே தாயின் பாசம்!

தமிழர்களாகிய நம்மையே அசுரர்களென்றும் ஆரியராகிய பார்ப்பனர்கள் தாங்களே தேவர்களென்றும் கற்பித்துக் கதைகட்டியிருக்கிற, தேவ–அசுரப் போராட்டத்தோடு சம்பந் தப்பட்டிருக்கிற இந்தக் கதையைத் தமிழ் மக்களாகிய நாமே கொண்டாடுகிறோம்! நாமே சிறந்த நாளாகக் கருதுகிறோம்! அந்தோ என் செய்வது? நம்மை ஏமாற்றி நம்மையே பழிக்கும் பார்ப்பனர்களின் கட்டுக் கதையை உண்மையென நாம் நம்பி, நாமே கொண்டாடி வீண் செலவு செய்வதென்றால், நமது சுயமரியாதையை என்னென்பது? நமது பகுத்தறிவை என்னென்று சொல்வது?

புராணங்களில் கண்டபடியே இந்தக் கதையை உண்மையென்று ஒப்புக்கொண்டு தமது பகுத்தறிவையிழந்து, இந்தத் தீபாவளியைக் கொண்டாடும் நமது தமிழ் மக்களின் அறியாமையை என்னென்று கூறுவது?

சென்றது போக, இனிமேலாவது தீபாவளியை—அர்த்தமற்ற மூடப் பழக்கத்தை—நம் தலையில் நாமே மண்ணைப் போட்டுக்கொள்ளும் செயலைக் குறித்து ஒரு காசாவது,

படிப்பகம்

www.padippakam.com

ஒரு நிமிஷ நேரமாவது செலவு செய்யவேண்டாமென்று திராவிட மக்களாகிய உங்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

['பகுத்தறிவு' மலர் 2, இதழ் 7 கட்டுரை—1936]

தீபாவளி என்கின்ற வார்த்தைக்கு விளக்கு வரிசை—அதாவது விளக்குகளை வரிசையாக வைத்தல் என்பது பொருள். இது கார்த்திகை தீபம் என்னும் பெயருள்ள பண்டிகை நாட்களில் செய்யப்பட்டு வருகிறது. வடநாட்டில் விளக்கு வரிசை வைத்துத்தான் தீபாவளி கொண்டாடப்படுகிறது. தீபாவளிப் பண்டிகை தினத்தை, 'நரக சதுர்த்தசி' என்றும் சொல்வதுண்டு. இதற்குக் காரணம், நரகாசுரன் என்பவன் விஷ்ணுவால் கொலை செய்யப்பட்ட நாள் என்பதாகும். இந்தக் கதை விளக்கம் என்னவென்றால், அது மிகவும் ஆபாசமானது என்றாலும் ஆரியர்களின் இழிநிலைக்கும் 'தமிழர்களின் முட்டாள்தனத்துக்கும் ஆதாரத்துக்காக அதையும் ஆரியப் புராணப்படியே சற்றுச் சுருக்கமாக விளக்குவோம்.

இரண்யாட்சன் என்ற இராட்சதன் ஒருவன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு சமுத்திரத்தினடியில் போய் ஒளிந்துகொண்டானாம்.

மகாவிஷ்ணு என்னும் கடவுள் அவனைச் சமுத்திரத்திலிருந்து வெளியாக்கி, பூமியைப் பிடுங்குவதற்காகப் பன்றி உருவமெடுத்துப் போய் இராட்சசனைப் பிடித்துப் பூமியைப் பிடுங்கி விரித்து விட்டுவிட்டாராம். அந்தச் சமயத்தில், அந்தப் பன்றியைப் பூமாதேவி கலவி செய்ய விரும்பிக் கலந்தாளாம்.

அக் கலவியில் ஒரு குழந்தை பிறந்ததாம். அக் குழந்தைக்குத்தான் நரகாசுரன் என்று பெயராம்.

இவன் 'கசேரு' என்பவளை யானை உருவத்துடன் சென்று பலவந்தமாய்ப் பிடித்து வந்து மணம் செய்துகொண்டானாம். மற்றும் இவன் தேவர்களுக்கு இடையூறு செய்து வந்தானாம். தேவர்கள் விஷ்ணு இடத்தில் முறையிட்டார்களாம்.

விஷ்ணு கிருஷ்ணாவதாரத்தில் அவனைக் கொன்றாராம். நரகாசுரன், தனது சாவு நாளை உலகம் கொண்டாடவேண்டும் என்று விஷ்ணுவைக் கேட்டுக் கொண்டானாம். அதற்காக விஷ்ணு அந்த நாளை உலகம் கொண்டாடும்படி செய்தாராம்.

இதுதான் தீபாவளியாம்!

தோழர்களே! ஆரியரின் கதை சோடிக்கும் சின்னப் புத்தியைப் பாருங்கள்! அதை நம்பி விழாக் கொண்டாடும் உங்கள் மடப் புத்தியை எண்ணி வெட்கப்படுங்கள்! ஏனெனில், பூமியை இராட்சசன் பாயாகச் சுருட்டினான் என்றால் அப்போது எங்கிருந்து கொண்டு சுருட்டி இருப்பான்?

சமுத்திரத்திற்குள் போய் ஒளிந்துகொண்டான் என்றால் அப்போது சமுத்திரம் எதன்மேல் இருந்திருக்கும்? கடவுளுக்குச் சக்தி இருந்தால் பூமியையும், நரகாசுரனையும் 'வா' என்று அழைத்தவுடன் வந்திருக்காவா? அப்படித்தான் வரவில்லையானாலும் நல்ல ஆகாரம் சாப்பிடும் 'ஜீவஉரு' எடுக்காமல், மலம்சாப்பிடும் ஜீவஉரு எடுப்பானேன்?

அந்த அழகைப் பார்த்துப் பூமிதேவி அவனைக் கலவிசெய்ய ஆசைப்பட்டாள் என்றால் பூமிதேவியாகிய பாரதத் தாயின் யோக்கியதை எவ்வள்வு இழிவானது? நம் பாரதத் தாயின் கற்புக்கும் காமத்திற்கும் எதை உதாரணமாகச் சொல்லுவது? அவளுடைய புத்திரர்கள் பரிசுத்த ஆவியினுடைய புத்திரர்களைக் காட்டிலும் எவ்வளவு மோசமானவர்களாக இருந்திருக்க வேண்டும்? பூமிதேவியும் சமுத்திரமும் என்றால் இந்தியாவில் உள்ள இந்துக்களின் பாரததேவியும் அரபிக்கடலும், வங்காளக்குடாக் கடலுந்தானா? இதை அன்னியர்கள் கேட்டால் என்ன சொல்லுவார்கள்? நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இவற்றையெல்லாந் தமிழர்கள்—பண்டிதர்கள் முதல் பாமரர்கள் வரை உணர்ந்திருந்தும்



தீபாவளிப் பண்டிகை கொண்டாடினால்—ஆரியர்கள், தமிழர்களைத் தாசிமக்கள், மடையர்கள், கண்டதைப் புசிப்பவர்கள், புறமுதுகிட்டு ஓடியவர்கள், அடிமைகள் என்றெல்லாம் இன்னும் என்னென்னமோ சொல்வதில் உண்மை இருக்கிறது என்றுதானே அர்த்தமாகும்? அப்படித்தானே.அன்னிய மக்கள் நினைப்பார்கள்?

ஆகவே, பாமர மக்களுக்குப் புத்தி இல்லாவிட்டாலும், மற்ற தமிழ்ப் பண்டிதர்களும், தங்களை உண்மைத் தமிழ்மக்கள் என்று கருதிக்கொண்டு இருப்பவர்களுமாவது இவற்றை நன்றாய்க் கவனித்துப் பார்த்து, பண்டிகை கொண்டாடாமல் இருந்து, மற்ற பாமர மக்களுக்கு வழிகாட்ட வேண்டாமா?

இந்தி ஆரியமொழி என்றும், ஆரியப் புராணங்களைத் தமிழர்களுக்குப் படிப்பித்து ஆரியக் கதைகளைப் புகுத்தி ஆரியஆதிக்கத்தை நிலைநாட்டவே இந்தியை ஆரியர்கள் கட்டாயமாய்ப் புகுத்துகிறார்கள் என்றும் சொல்லிக்கொள்வது உண்மையானால்—அதற்காகத் தமிழ்மக்கள் அதிருப்தியும் மனவேதனையும் படுவது உண்மையானால் தமிழ்மக்கள் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும் பண்டிதர்கள் தீபாவளி கொண்டாடலாமா?

['குடி அரசு'—கட்டுரை—31-10-1937]

டேவிஸ்: டேய், ராமானுஜம்......எங்கடா போகிறாய்?

ராமானுஜம்: எங்குமில்லை; பிரின்ஸ்பாலைப் பார்த்து—எனக்கு இரண்டு நாள் லீவு கேட்கப் போகிறேன்.

டேவிஸ்: எதற்கு லீவு?

ராமானுஜம்: 21-ம் தேதி பண்டிகை லீவு; 22-ம் தேதி சனிக்கிழமை 23-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை. ஆக 3 நாள் காலேஜ் இல்லை. இன்னும் ஒரு இரண்டு நாள் அதை ஒட்டி லீவு கிடைத்தால் ஊருக்குப் போய், 5 நாள் சாவகாசமாய் இருந்துவிட்டு வரலாம் என்று கருதி இன்னும் இரண்டு நாள் லீவு கேட்கிறேன்.

டேவிஸ்: என்ன பண்டிகை?

ராமானுஜம்: தீபாவளிப் பண்டிகை.

டேவிஸ்: தீபாவளி என்றால் அது ஒரு பண்டிகையா?

ராமானுஜம்: ஆம்.

டேவிஸ்: அதற்காக லீவு எதற்கு?

ராமானுஜம்: பண்டிகை கொண்டாடுவதற்கு.

டேவிஸ்: எப்படிக் கொண்டாடுவது?

ராமானுஜம்: அதிகாலையில் எண்ணெய் தேய்த்து முழுகி, புதிய உடை அணிந்து, பலகாரம் சாப்பிட்டுப் பட்டாஸ் சுடுவது.

டேவிஸ்: குளித்து முழுகி, புதிய உடை அணிந்து பட்டாசு சுடுவது ஒரு பண்டிகையா? இதற்காக நீ ஊருக்குப் போகவேண்டுமா? அதை அனுசரித்து சனி, ஞாயிறு, வருவது போதாமல் மேற்கொண்டும் இரண்டு நாள் தேவையா? இதென்னப்பா நாட்களைக் கொலைசெய்யும் பண்டிகையாக இருக்கிறது! லீவுக்கு—கேள்வி கேட்பாடு இல்லையா? வாரத்துக்கு இரண்டுநாள் சனி, ஞாயிறு லீவு; வருஷத்தில் 2, 3 மாதம் வெயில் கால லீவு; வருஷத்தில் 15 நாள் ஜனவரி லீவு, பிறகு என்ன என்னவோ லீவு. இந்த 2, 3 மாதத்தில் பல லீவுகள்; பற்றாக் குறைக்கு நாணய மாற்று லீவு; இப்படி நாட்கள் பாழாகின்றன. நமக்குப் படிக்கும் நேரமோ ஒரு நாளைக்கு 5 மணி நேரம்தான் தேறுகிறது. அப்படித் தேறும் நாட்களில் இப்படிக் கணக்கு வழக்கு இல்லாத நாட்கள் பாழாகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



அன்னிய ஆட்சி போய் சுய ஆட்சி வந்து கூடவா இந்தத் தொல்லை? நாட்கள் எல்லாம் இப்படி லீவு ஆகிவிட்டால்அப்புறம் படிப்புதான் எப்படி வரும்?

ராமானுஜம் : நீ என்னப்பா? தீபாவளிப் பண்டிகை ஒரு வருஷத்துக்கு ஒரு நாளைக்கு வருகிறது; அதுகூட உனக்குப் பொறுக்கவில்லை. மனிதனுக்கு ஓய்வு வேண்டாமா?

டேவிஸ் : வருஷத்துக்கு ஒரு நாளாக ஒவ்வொரு நாளும்தான் வருகிறது; அதற்காக எல்லா நாளும் லீவு விடுவதா? ஓய்வுக்கு என்ன குறை—சனி, ஞாயிறு போதாதா?

ராமானுஜம் : சனி, ஞாயிறு நமக்குப் போதும். வீட்டிலே குடும்பத்துடன் கொண்டாட ஒரு ஓய்வு நாள் வேண்டாமோ? சனி, ஞாயிறுகளில் வீட்டில் உள்ளவர்களுக்கு என்ன ஓய்வு?

டேவிஸ் : என்ன ஓய்வோ, என்ன கொண்டாட்டமோ, எனக்கு ஒன்றும் புரியவில்லை. இந்தப் பண்டிகைகளின் பேரால் நாட்கள் பாழாகின்றன.

ராமானுஜம் : நீ என்ன கறுப்புச் சட்டைக்காரன்போல் தோன்றுகிறது. பண்டிகைகளை இப்படி வெறுக்கிறாய்?

டேவிஸ் : கறுப்புச் சட்டையும் இல்லை; ஒரு இழவும் இல்லை. என்ன பண்டிகை? நாசமாய்ப் போன பண்டிகைகள், இப்படி மாதா மாதம் வந்து உயிரை வாங்குகின்றன?

ராமானுஜம் : அப்படிச் சொல்லாதே! பண்டிகைகள் எல்லாம் மத சம்பந்தமானவைகள், கடவுள் சம்பந்தமானவைகள். நாம் மதத்தைச் சேர்ந்தவர்களாகவும், கடவுள் நம்பிக்கை உடையவர்களாகவும் இருந்தால் இந்த மாதிரிப் பண்டிகைகளைக் குறை கூறக் கூடாது. மனிதனுக்கு மதமும் கடவுளும் தான் முக்கியமே ஒழிய—இந்த காலேஜ் படிப்பு முக்கியமல்ல. இந்தப் படிப்பு என்பதெல்லாம் மதத்தைச் சரிவரப் பின்பற்றிக் கடவுளைச் சரிவர அறிந்து பக்தி செய்யத்தான். ஆதலால் இப்படி எல்லாம் பேசாதே!

டேவிஸ் : என்னப்பா பூச்சாண்டி காட்டுகிறாய்? பண்டிகை எதற்கு என்றால் லீவுக்கு என்கிறாய்; லீவு எதற்கு என்றால் ஓய்வுக்கு என்கிறாய். சனி, ஞாயிறு போதாதா என்றால், குடும்பத்தோடு ஓய்வு பெற என்கிறாய். படிப்புக் கெட்டுவிடுகிறதே என்றால்—மதத்துக்காகவும், கடவுளுக்காகவும் பண்டிகை கொண்டாடுவதாகவும் சொல்லிக் கொண்டு, இதைத் தவறு என்று சொன்னால் என்னைக் கறுப்புச் சட்டைக்காரன் என்கிறாய். முடிவாக, 'படிப்பைவிட மதம், கடவுள்தான் பெரிது; அதற்காகத்தான் படிக்கிறது' என்கிறாய். இது என்ன சமாதானம்? மேலும், ஒரு மனிதன் பிறக்கும் போதே மதம் அவன் கூடவே பிறக்கிறது. கடவுளும், ஒரு மனிதன் பிறப்பதற்கு முன்பு இருந்தே அவன் கூடவே இருந்து அவன் சாகும்வரை அவனை நடத்துகிறது. இந்த இரண்டு கெட்டியான சங்கதிகளுக்கு ஒரு மனிதன் படிக்க வேண்டியது எதற்கு? அதுவும் காலேஜிலே படிக்கவேண்டும் என்பது எதற்கு? அப்படியானால், காலேஜிலே படிக்காதவர்களுக்கு எல்லாம் மதமும், கடவுள் அறிவும், பக்தியும் இல்லையென்றும்—வராது என்றுமா சொல்லுகிறாய்?

ராமானுஜம் : நீ கறுப்புச் சட்டைக்காரன் தான்—சந்தேகமேயில்லை. உன்னோடு பேசிப் பயனில்லை.

டேவிஸ் : கோபித்துக் கொள்ளாதே. உன் பண்டிகையை அறிய வேண்டுமென்றுதான் கேட்டேன்; சங்கதி எங்கெங்கோ போய்விட்டதே! தீபாவளி என்ன பண்டிகை? எதற்காகக் கொண்டாடுவது? மதத்தை எப்படி அறிந்திருக்கிறாய்? அதில் கடவுள் பக்தி எப்படி ஏற்படுகிறது? சொல் பார்ப்போம்.

ராமானுஜம் : அப்படிக் கேள் சொல்லுகிறேன். தீபாவளி என்பது, உலகத்துக்குக் கேடு விளைவித்த ஒரு அசுரன்—கடவுளால் கொல்லப்பட்ட நாளை மக்கள் கொண்டாடுவதாகும். அதை நீயும் கொண்டாடலாம். இப்பொழுது வெள்ளையன் ஒழிந்த நாளை நாம், சுதந்திர நாளாகக் கொண்டாடவில்லையா—அது போல்.



டேவிஸ் : அப்படியா! அந்த அசுரன் யார்? அவன் எப்படி உலகுக்குக் கேடு செய்தான்? அந்தக் காலத்தில் அணுகுண்டு இருந்திருக்காதே! இந்தக் காலத்தில் அணுகுண்டு வைத்திருப்பவனையும், இன்னும் மக்கள் சமுதாயத்துக்கு என்ன என்னமோ கேடு செய்கிறவர்களையும் பற்றி நாம் ஒன்றுமே பேசுவதில்லை. அப்படி இருக்க அவன்—அசுரன் யார்? அவன் என்ன கேடு செய்தான்?

ராமானுஜம் : அந்த அசுரன் பெயர் நரகாசுரன். அவன் பூமியிலிருந்து பிறந்தவன். அவன் தகப்பன் மகாவிஷ்ணு. நரகாசுரன் தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து, தேவர்களின் பெண்களுக்கும் தொல்லை கொடுத்தான். அதனால் மகாவிஷ்ணுவும் அவர் மனைவியும் சேர்ந்து அவனைக் கொன்று விட்டார்கள். இனி எவரும் தேவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்பதை மக்களுக்கு ஞாபகப் படுத்துவதற்காக அவன் செத்த நாளைக் கொண்டாடுவது, தெரிந்ததா? இதுதான் தீபாவளித் தத்துவம்.

டேவிஸ் : தெரிந்தது. ஆனால் அதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று என் மனம் ஆசைப்படுகிறது. அதாவது, அவன்–மகாவிஷ்ணுவுக்கும் பூமிக்கும் எப்படிப் பிறக்கமுடியும்? பூமியானது மண்கல உருவத்தில் இருந்தது. மகாவிஷ்ணுவுக்குப் பூமியுடன் எப்படிக் கலவி செய்ய முடிந்தது? பூமி எப்படிக் கர்ப்பம் தரிக்கும்? அதற்கு எப்படி பிள்ளை பிறக்கும்? எனக்குப் புரியவில்லையே!

ராமானுஜம் : அட, பைத்தியக்காரனே! மகாவிஷ்ணு, நேராகவா போய்க் கலவி செய்வார்? அதற்கு அவர் மனைவிகள் இல்லையா? ஆதலால் அவர் நேராகக் கலவி செய்யவில்லை. மகாவிஷ்ணு பன்றி உருவமெடுத்தார்.

டேவிஸ் : பொறு, பொறு. இங்கே கொஞ்சம் விளக்கம் தேவை! மகாவிஷ்ணு பன்றி உருவம் ஏன் எடுத்தார்?

ராமானுஜம் : அதுவா—சரி, சொல்கிறேன் கேள்! இரணியாட்சதன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலுக்குள் போய் ஒளிந்துகொண்டான்.

டேவிஸ் : பொறு, பொறு; ஓடாதே; இங்கே எனக்கு ஒரு மயக்கம்.

ராமானுஜம் : இதிலென்னப்பா மயக்கம்? நான்தான் தெளிவாகச் சொல்கிறேனே—'பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு சமுத்திரத்துக்குள் ஓடி ஒளிந்து கொண்டான்' என்று.

டேவிஸ் : சரி, அது அர்த்தமாச்சுது.

ராமானுஜம் : பின்னே எது அர்த்தமாகவில்லை? சும்மா தொல்லை கொடுக்கிறாயே?

டேவிஸ் : தொல்லை ஒன்றுமில்லை. உன் சங்கதிதான் என் மூளைக்குத் தொல்லை கொடுக்கிறது; தலை சுற்றுகிறது. அதாவது—'ஒரு இராட்சதன்'—அப்படீன்னா என்ன? அது கிடக்கிறது. அவன் பெயர் இரண்யாட்சதன்—அதுவும் போகட்டும். அவன் கதை அப்புறம் கேட்போம். அந்த இராட்சதன் பூமியை எப்படிச் சுருட்டினான்? பூமிதான் பந்துபோல் இருக்கிறதே! அவன் அதை உருட்டுவதானால் ஒரு சமயம் உருட்ட முடியுமே ஒழிய, சுருட்ட முடியாது; அதுவும் போகட்டும். சுருட்டினான் என்கிறாய்! சுருட்டினான் என்றே வைத்துக் கொள்வோம். சுருட்டினானே, அவன் சுருட்டும்போது—தான் எங்கே இருந்துகொண்டு சுருட்டினான்? சுருட்டிக்கொண்டு ஓடினானே, எதன் மேல் நடந்து ஓடினான்? ஆகாயத்தில் பறந்து கொண்டே சுருட்டி இருக்கலாம்; ஆகாயத்தில் பறந்துகொண்டே ஓடி இருக்கலாம். கருடன்—மகாவிஷ்ணுவையும் அவர் பெண்டாட்டியையும் தூக்கிக்கொண்டு பறப்பதுபோலப் பறந்து இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com



ஆனால், அவன் சமுத்திரத்திற்குள் ஒளிந்துகொண்டான் என்கிறாயே—அந்தச் சமுத்திரம் எதன்மேல் இருந்தது? பூமியின்மேல் இல்லாமல் அதுவும் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டோ அல்லது பறந்துகொண்டோ இருந்தது என்றால், சமுத்திரம் தண்ணீர் ஆயிற்றே—அது ஒழுகிப்போய் இருக்காதா? அப்போது அடியில் ஒளிந்து கொண்டிருப்பவன் தொப்பென்று கீழே பூமியுடன் விழுந்திருக்கமாட்டானா? அல்லது, அது வேறு உலகம்; இது வேறு உலகமா? நமக்கு ஒன்றும் புரியவில்லையே! இதை எனக்குப் புரியவைக்க வேண்டும். நானும் நீயும் பி. ஏ. இரண்டாவது வருஷம். பூகோளம், வானநூல், சயின்ஸ் படித்தவர்கள்; ஆதலால் இந்தச் சந்தேகம் வருகிறது. நாம் படிக்காத 'மடையர்களாய்' இருந்தால் குற்றமில்லை. சற்றுச் சொல்லு பார்ப்போம்!

ராமானுஜம்: இதெல்லாம் பெரியோர்கள் சொன்ன விஷயம்; சாஸ்திரங்கள் சொன்ன விஷயம்; மதத் தத்துவம். ஆதலால், இவைகளை இப்படியெல்லாம் கேட்கக் கூடாது. நாத்திகர்கள் இப்படிக் கேட்பார்கள். கறுப்புச் சட்டைக்காரர்கள்தான் இப்படிக் கேட்பார்கள். இத்தனை ஆயிரம் காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்களே—ஒரு ஆள் இப்படிக் கேட்பாரா? சோஷியலிஸ்டுகளில் ஒரு ஆள் இப்படிக் கேட்பானா? நீதான் இப்படிக் கேட்கிறாய். நீ கறுப்புச் சட்டைக்காரன்தான்—சந்தேகமில்லை.

டேவிஸ்: நீ என்னப்பா இப்படிப் பேசுகிறாய்? பி.ஏ. படிக்கிறவனாகத் தெரிய வில்லை. பூமிக்குப் பிறந்தான் என்கிறாய்; பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போனான் என்கிறாய். எப்படிப் பிறந்தான்; எப்படித் தூக்கிக்கொண்டு—எப்படிப் போனான் என்றால்—கோபத்துக்கு வருகிறாய்! இந்தக் கதையைப் பண்டிகையாக வைத்துக் கோடிக்கணக்கான மக்கள் கொண்டாடுகிறார்கள் என்கிறாய்! சர்க்கார் இதற்கு லீவு விடுகிறது; பல இலட்சம் பிள்ளைகள் அன்று படிப்பதை விட்டுத் தெருச் சுற்றுகிறார்கள். இவ்வளவு பெரிய சங்கதியைக் கேட்டால், என்னைக் கறுப்புச்சட்டை என்கிறாய். கறுப்புச் சட்டை போடாதவனுக்குப் புத்தியே இருக்கக்கூடாதா? புத்தி—கறுப்புச் சட்டைக்குத்தான் சொந்தமா? சரி; அது இருக்கட்டும். அப்புறம்—அவன் ஓடிப்போய்ச் சமுத்திரத்தில் ஒளிந்துகொண்டான்; அப்புறம்?

ராமானுஜம்: ஒளிந்துகொண்டான்; பூமியில் இருந்தவர்கள் எல்லாம் போய் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார்கள்.

டேவிஸ்: இரு, இரு; பூமியைச் சுருட்டினபோது பூமியில் இருந்தவர்கள் ஓடிவிட்டார்களோ? நோட்டீஸ் கொடுத்துவிட்டுத்தான் சுருட்டினானோ?

ராமானுஜம்: நீ என்னப்பா, சுத்த அதிகப் பிரசங்கியாக இருக்கிறாய்? ஓடிப்போய் முறையிட்டார்கள் என்றால், 'எப்படிப் போனார்கள்?' 'வெங்காயம் வீசை என்ன விலை?' 'கருவாடும் கத்தரிக்காயும் போட்டுக் குழம்பு வைத்தால் நன்றாக இருக்குமா?' என்பது போன்ற—அதிகப் பிரசங்கியான கேள்விகளை, முட்டாள்தனமாகக் கேட்கிறாயே!

டேவிஸ்: இல்லை, இல்லை; கோபித்துக்கொள்ளாதே. சரி, சொல்லித் தொலை. முறையிட்டார்கள்; அப்புறம்?

ராமானுஜம்: முறையிட்டார்கள். அந்த முறைக்கு இரங்கி, பகவான் மகாவிஷ்ணு உடனே புறப்பட்டார்; சமுத்திரத்தினிடம் வந்தார்; பார்த்தார் சுற்றி; எடுத்தார் பன்றி அவதாரம்; குதித்தார் தண்ணீரில்; பாய்ந்தார் நிலத்துக்கு; கண்டார் பூமியை; தன் கொம்பில் அதைக்குத்தி எடுத்துக்கொண்டு வந்து விரித்தார் பூமியைப் பாயாக—புரிந்ததா?

டேவிஸ்: புரியாவிட்டால் கோபித்துக்கொள்கிறாய்! அதிகப் பிரசங்கி என்கிறாய்! சரி புரிந்தது; விரித்தார் பூமியை—பிறகு என்ன நடந்தது?

ராமானுஜம்: பிறகா—பூமியை விரித்தவுடன் அந்தப் பூமிக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது; ஒரு 'குஷால்' உண்டாயிற்று. பூமி, அந்தப் பன்றியைப் பார்த்தது—அந்தப்



பன்றி, இந்தப் பூமியைப் பார்த்தது. அந்தச் சமயம் பார்த்து மன்மதன் இரண்டு பேரையும் கலவி புரியச் செய்துவிட்டான். அப்புறம் சொல்ல வேண்டுமா—கலந்தார்கள்; பிறந்தது பிள்ளை.

டேவிஸ்: சரி; இங்கே என் சொந்த சங்கதி கேட்கிறேன். கோபித்துக்கொள்ளாதே.

ராமானுஜம்: சரி, கேள்.

டேவிஸ்: வராகம் என்பது பன்றி; அது ஒரு மிருக ரூபம்; சரிதானா?

ராமானுஜம்: சரி.

டேவிஸ்: கல், மண் உருவம்; சரிதானா?

ராமானுஜம்: சரி.

டேவிஸ்: இது இரண்டும் எப்படிக் கலவி புரியும்? எப்படிக் கருத்தரிக்கும்?

ராமானுஜம்: பாத்தியா, பாத்தியா; இதுதான்—போக்கிரித்தனமான கேள்வி என்பது. கடவுள் பார்த்து எப்படிச் செய்யவேண்டுமானாலும் செய்யலாமல்லவா?

டேவிஸ்: என்னப்பா, ராமானுஜம்? பாத்தியா, பாத்தியா என்று சாயபு மாதிரி—'பாத்தியா' கொடுக்கிறாய்? இது ஒரு பெரிய சயின்ஸ்—செக்சுவல் சயின்ஸ் சங்கதி. இதைக் கேட்டால் போக்கிரித்தனமான கேள்வி என்கிறாய். சரி; இதைப் பற்றிப் பிரின்ஸ்பாலைக் கேட்கலாம். அப்புறம் அந்தப் பிள்ளை என்ன ஆயிற்று?

ராமானுஜம்: அந்தப் பிள்ளைதான் நரகாசுரன்!

டேவிஸ்: இந்தப் பெயரை அதற்கு யார் இட்டார்கள்? தாய் தந்தையர்களா?

ராமானுஜம்: யாரோ 'அன்னக் காவடிகள்' இட்டார்கள்? அதைப்பற்றி என்ன பிரமாதமாய்க் கேட்கிறாய்? எனக்கு அவசரம்—என்னைப் போகவிடு.

டேவிஸ்: சரி, போகலாம்; சீக்கிரம் முடி. அப்புறம்?

ராமானுஜம்: அந்த நரகாசுரன், தேவர்களுக்குத் தொல்லை கொடுத்தான்; அவனை மகாவிஷ்ணு கொன்றார்.

டேவிஸ்: அட, பாவி! கடவுளுக்குப் பிறந்தவனா தேவர்களுக்குத் தொல்லை கொடுத்தான்? அப்படியென்றால் தேவர்கள் என்ன அவ்வளவு அயோக்கியர்களா?

ராமானுஜம்: இல்லையப்பா. இந்த நரகாசுரனின் பொல்லாதவேளை—தேவர்கள் கிட்டே அவன் வாலாட்டினான். அவர்கள் சும்மா விட்டுவிடுவார்களா?

டேவிஸ்: அதற்காக, தகப்பன் மகனுக்குப் புத்தி சொல்லாமல் ஒரே அடியாகக் கொன்றுவிடுவதா?

ராமானுஜம்: அது அவர் இஷ்டம்! அதைக் கேட்க, நாம் யார்? 'தேவரனையர் கயவர், அவரும் தாம் மேவன செய்தொழுகலான்' என்று நாயனார் சொல்லி இருக்கிறார். ஆதலால், நாம் அது ஏன், இது ஏன் என்று கேள்வி கேட்கலாமா?

டேவிஸ்: சரி; கொன்றார்! அதற்கும் தீபாவளிக்கும் என்ன சம்பந்தம்?

ராமானுஜம்: அதைக் கொண்டாட வேண்டிய அவசியம் ஏன் என்றால், இனிமேல் எவனும் தேவர்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்பதற்காக அதை ஞாபகத்தில் வைப்பதற்கு—அதை நினைவூட்டுவதற்கு நாம் அடிக்கடி கொண்டாட வேண்டியது.

டேவிஸ்: தேவர்கள் எங்கிருக்கிறார்கள்?

ராமானுஜம்: வான் தேவர்கள்—வானத்தில், (மேல் லோகத்தில்) இருக்கிறார்கள்; பூதேவர்கள் இந்தப் பூமியில் இருக்கிறார்கள்!

www.padippakam.com



டேவிஸ்: இந்தப் பூமியில் இருக்கும் தேவர்கள் யார்?

ராமானுஜம்: அட, முட்டாள்! அதுகூடவா தெரியாது? அதுதான் பிராமணர்கள். பிராமணர்கள் என்றாலே பூதேவர்கள்தானே! அகராதியைப் பார்.

டேவிஸ்: பிராமணர்கள் என்பவர்கள் என்ன வகுப்பு?

ராமானுஜம்: என்ன வகுப்பு? நாங்கள்தான்.

டேவிஸ்: நீங்கள் என்றால், நீ அய்யங்கார். நீங்கள்தானா?

ராமானுஜம்: நாங்கள் மாத்திரம் அல்லப்பா; நாங்களும்—அய்யர், ஆச்சாரி, சாஸ்திரி, சர்மா, தீட்சதர் முதலியவர்கள் எல்லாரும்.

டேவிஸ்: அப்படி யென்றால் பார்ப்பனர்கள் யாவரும் பூதேவர் என்கிறாய்?

ராமானுஜம்: ஆமாம்; ஆமாம்! கல்லாட்டமா, ஆமாம்!

டேவிஸ்: சரி; தொலைந்து போகட்டும். நீங்கள் தேவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். உங்களுக்குத் தொல்லை கொடுக்க அசுரர், இராட்சதர் ஒருவரும் இந்த உலகத்தில் இல்லையே? இங்கிருப்பவர்களை எதற்காகப் பயப்படுத்தத் தீபாவளி கொண்டாட வேண்டும்?

ராமானுஜம்: இங்கேயா அசுரர், இராட்சதர் இல்லை என்கிறாய்? இந்தக் கறுப்புச் சட்டைக்காரர்கள்–சுயமரியாதைக்காரர்கள்–திராவிட கழகத்தார்கள் இவர்கள் எல்லாம் யார்? பிராமணர்களைப் பார்த்துப் பொறாமைப் படுகிறார்கள்—குறை சொல்கிறார்கள். அவர்களைப் போல் வாழ வேண்டுமென்பவர்கள்; வேத, சாஸ்திர, புராண, இதிகாசங்களைப் பகுத்தறிவில் ஆராய்ச்சி செய்கிறவர்கள்—முதலிய இவர்கள் எல்லோரும் இராக்கதப் பதர்கள்; இரக்கமே இல்லாத அரக்கர்கள்—தெரிந்ததா? அவர்களுக்குப் பயம் உண்டாவதற்காக—தேவர்களுக்கு இடையூறு செய்தால் நாசமாய்ப் போய் விடுவாய் என்று அறிவுறுத்துவதற்காகத்தான், தீபாவளி கொண்டாடுவதாகும்; இதுதான் இரகசியம். மற்றபடி, கதை எப்படி இருந்தால் என்ன?

டேவிஸ்: அப்படியா நீங்கள் 100-க்கு 3 பேர்; நீங்கள் அல்லாதவர்கள் 100-க்கு 90 பேர். எப்படி, எத்தனை நாளைக்கு இப்படி மிரட்டமுடியும்?

ராமானுஜம்: அதைப் பற்றிக் கவலைப்படாதே. காங்கிரஸ் ஸ்தாபனம் இருக்கிறது. அந்தத் தொண்ணூறு பேர்களில் ஒரு பகுதி விபீஷணர்களாக–அனுமார்களாக இருக்கிறார்கள். பிராமணத் தொண்டாற்றவும், எதிரிகளை ஒழிக்கவும், அவர்கள் பயன்படுவார்கள். மற்றும் பண்டிதர் கூட்டம்; படித்துவிட்டு உத்தியோகத்துக்குக் காத்துக் கிடக்கும் கூட்டம்; கோவில், மடம், தர்ம ஸ்தாபனத்தில் இருக்கும் கூட்டம்; புத்தகக் கடைக் கூட்டம்; பூசாரிக் கூட்டம்; பிரபுக் கூட்டம்; மந்திரிக் கூட்டம்; சினிமாக் கூட்டம்; நாடகப் பிழைப்புக் கூட்டம்; கலை வித்துவான்கள் கூட்டம்; அரசியல் பிழைப்புக்காரக் கூட்டம்; தேச பக்தர்கள் தியாகிகள் கூட்டம்—இப்படியாக இடறி விழுந்தால் அவர்கள் மீது விழும்படி சர்வம் ‘பிராமண அடிமையாம்’ என்பது போல் இருக்கும் போது, 100-க்கு 3 — 100-க்கு 90 என்ற கணக்கு முட்டாள்தனமான கணக்கு ஆகும்.

டேவிஸ்: ஓகோ! அப்படியா? சரி; சரி. தீபாவளி என்பதன் தத்துவமும் இரகசியமும் தெரிந்து கொண்டேன். நன்றி; வணக்கம்.

ராமானுஜம்: சரி; நமஸ்தே! ஜெய் ஹிந்த்!

[சித்திரபுத்திரன் உரையாடல்—‘விடுதலை’ 19-10-1953]



# 6. கார்த்திகை தீபம்

கார்த்திகை தீபப் பண்டிகை ஒரு தெய்வீகம் பொருந்திய சிறந்த நாளாகக் கருதி இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதை இந்து மதத்தில் உள்ள சைவர், வைணவர், வீர சைவர், ஸ்மார்த்தர் முதலிய எல்லாப் பிரிவினரும் கொண்டாடுகின்றனர்.

சாதாரணமாக, கார்த்திகை நட்சத்திர தினத்தை ‘சுப்பிரமணியன்’ என்னும் சாமிக்கு உகந்த சிறந்த நாளாகக் கருதியே, ‘பக்தர்கள்’ என்பவர்கள் விரதங்களும், பூசைகளும் நடத்தி வருகின்றனர். சாதாரணமாக, மற்ற மாதங்களில் வரும் கார்த்திகைகளைவிட, கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகையே மிகவும் சிறந்த பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு திருவண்ணாமலை முதலிய பல ஊர்களுக்கு யாத்திரை போய்ப் பணத்தைச் செலவு செய்துவிட்டுத் திரும்பும்போது—அங்கிருந்து வாந்திபேதியைக் கொண்டுவருகின்றனர். ஒவ்வொரு மாதமும் கார்த்திகைக்காக, வைத்தீஸ்வரன் கோயில், குன்றக்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமி மலை முதலிய ஊர்களுக்கு மக்கள் சென்று செலவுசெய்யும் செல்வங்களே பதினாயிரக்கணக்காகவும், இலட்சக்கணக்காகவும் ஆகும்போது, பெரிய கார்த்திகை என்று பெயர்பெற்ற கார்த்திகை மாதப் பண்டிகை நாளில் செலவாகும் பொருள் கோடிக்கணக்கில் குறைவுபடுமா? இதில் எவ்வாறு பொருள் வீணாகிறது என்பதை நினைத்துப் பாருங்கள்!

வீடுகளுக்குள்ளும், வெளிப்புறங்களிலும், காடுகளிலும், மேடுகளிலும், குப்பைகளிலும், கூளங்களிலும் எண்ணற்ற இலட்சக்கணக்கான விளக்குகளைக் கொளுத்தி வைப்பதன்மூலம் செலவாகும் நெய், எண்ணெய்ச் செலவு எவ்வளவு? கோயில்கள் என்பவைகளுக்கு ‘சொக்கப்பனை’ கட்டி நெருப்பு வைப்பதற்குச் செலவு செய்யும் நெய், எண்ணெய், விறகு முதலியவைகளுக்காகும் செலவு எவ்வளவு? கார்த்திகைப் பண்டிகைக்காக திருவண்ணாமலை முதலிய ஊர்களுக்குப் பிரயாணம் செய்வதன் மூலமாகும் ரொக்கப் பணச் செலவு எவ்வளவு? அங்கு கூம்புக்குச் செலவாகும் விறகு, கற்பூரம், வெண்ணெய், நெய் ஆகியவற்றிற்காகும் செலவு எவ்வளவு? இதனால் நாட்டிற்கு கடுகளவாவது பயனுண்டா?

இதனால் மக்களுக்கு உண்டாகும் மூடநம்பிக்கையையும் அதனால் உண்டாகும் மூடப்பழக்க வழக்கங்களையும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! கார்த்திகை தீபத்தைப் பற்றி வழங்கும் புராணக் கதைகள் இரண்டு.

ஒன்று: ஒரு சமயம் அக்கினி தேவன் என்னும் கடவுள் சப்தரிஷிகளின் மனைவிமார்களைப் பார்த்து மோகங் கொண்டானாம். அதை அறிந்த அவன் மனைவி சுவாகா தேவி என்பவள், அந்த ரிஷிகளின் மனைவிகளைத் தொந்தரவு செய்தால் அவர்களால் தன் கணவன் சபிக்கப்படுவான் என்று எண்ணினாளாம். அதனால் அவள் வசிஷ்டரின் மனைவியாகிய அருந்ததி உருவத்தை மாத்திரம் விட்டுவிட்டு மற்ற 6 ரிஷிகளின் மனைவிமார்களைப் போல உருவம் கொண்டு தன் கணவன் ஆவலை நிறைவேற்றினாளாம். இவ்வாறு சுவாகாதேவி கொண்ட 6 உருவத்திற்கும் கார்த்திகை என்று பெயராம். இவைகள் தாம் கார்த்திகை நட்சத்திரமாகக் காணப்படுபவையாம். இந்த நட்சத்திரப் பெண்கள்தாம் சுப்பிரமணியன் என்னும் சாமி குழந்தையாக இருந்தபோது அதை எடுத்து வளர்த்தார்களாம்.

இக் கதையினால்தான் கார்த்திகை நட்சத்திரத்திற்குப் பெருமை. இக் கதை நமது மக்களுக்குக் கற்பிக்கும் மூடநம்பிக்கையைப் பாருங்கள். பிறர் மனைவிமேல் ஆசைப்பட்டு விபச்சாரம் பண்ணுவது குற்றமில்லை என்பது, ஒன்று; மனைவி தன் கணவன் எந்தத் தகாத காரியத்தை விரும்பினாலும், அதை எப்பாடுபட்டாவது பூர்த்தி செய்துகொடுக்கும் அடிமைக் கருவியாக இருக்கவேண்டும் என்பது, இரண்டு. இவைமட்டும் அல்லாமல், இயற்கைப் பொருள்களின்மேல் எல்லாம் ‘தெய்வீகம்’ என்னும் மூடநம்பிக்கையை

படிப்பகம்

www.padippakam.com



உண்டாக்கும் துர்ப்போதனை, மூன்று. ஆகவே, இவற்றை ஆராயும்போது இக் கதையும் இதன்மூலம் ஏற்பட்ட விரதம், பண்டிகை முதலியனவும் புரட்டு என்று உணரலாம்.

இரண்டாவது கதை: ஒரு காலத்தில் பிரம்மா என்னும் கடவுளும், விஷ்ணு என்னும் கடவுளும் தாம் தாமே ஆதிமூலக் கடவுளர் எனக் கூறிக்கொண்டதனால் இருவருக்கும் முதலில் வாய்ச் சண்டை உண்டாகி பிறகு அது கைச் சண்டையாக மூண்டு ஒருவரோடு ஒருவர் அடிபிடி சண்டை செய்தனராம். அவர்களுடைய சண்டை சீக்கிரத்தில ஒரு முடிவுக்கு வரவில்லையாம். ஆகையால் பரமசிவன் என்னும் கடவுள் அப்போது அவர்கள் மத்தியில் ஒரு பெரிய சோதி உருவத்தோடு வானத்திற்கும் பூமிக்குமாக நின்றாராம். உடனே சண்டைக்காரக் கடவுள்கள் இருவரும் ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றார்களாம். அப்போது சோதி உருவாக நின்ற பரமசிவக் கடவுள் 'ஏ, பிரம்ம, விஷ்ணுகளே! இந்த சோதியின் அடி, முடிகளை யார் முதலில் கண்டு வருகிறாரோ அவர்தான் உயர்ந்தவர்' என்று ஒரு அனாமதேய வார்த்தை சொன்னாராம். உடனே விஷ்ணு பன்றி உருவங் கொண்டு அடியைக் காணப் பூமியைத் தொளைத்துக்கொண்டு வெகுதூரம் சென்றும் காண முடியாமல் திரும்பி வந்து விட்டாராம். பிரம்மன் அன்னப் பறவை உருவங்கொண்டு சோதியின் முடியைக்காணப் பறந்து மேலே செல்லும்போது வழியில் கீழ்நோக்கி ஒரு தாழம்பூ வந்துகொண்டிருந்ததாம். அதைக்கண்டு பிரம்மன் 'தாழம்பூவே, எங்கிருந்து, எவ்வளவு காலமாக வந்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்க; அது 'நான் பரமசிவனுடைய முடியிலிருந்து கோடிக்கணக்கான வருஷங்களாக வந்து கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிற்றாம். உடனே பிரம்மன், 'நான் சிவனுடைய முடியைப் பார்த்துவிட்டதாக அவனிடத்தில் எனக்காகச் சாட்சி சொல்லுகிறாயா?' என்று கேட்க—அதுவும் சம்மதிக்க, இருவரும் பரமசிவனிடம் வந்து, முடியைக் கண்டுவந்ததாகப் பிரம்மன் கூற—தாழம்பூவும் அதை ஆமோதித்ததாம். அது கண்ட சிவன் கோபங்கொண்டு இருவரும் பொய் சொன்ன தற்காக 'பிரம்மனுக்கு இவ்வுலகில் கோயில் இல்லாமற் போகக்கடவது' என்றும், 'தாழம்பூ தனக்கு இனிமேல் உதவாமல் போகக் கடவது' என்றும் சாபம் கொடுத்தாராம். பிறகு பிரம்மாவும் விஷ்ணுவும் தங்கள் கர்வம் ஒழிந்து பரமசிவனே பெரியவர் என்று எண்ணி, இருவரும் அவரை வணங்கி, எங்கள் வழக்கைத் தீர்த்துவைத்ததற்கு அடையாளமாக இந்த மலையின்மேல் ஒரு 'சோதி' உருவாக இருக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார் களாம். பரமசிவனும் அதற்குச் சம்மதித்து, 'ஒவ்வொரு வருடத்திலும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகைப் பண்டிகையில் நான் இந்த மலையின் உச்சியில் சோதியாகக் காணப்படுவேன்' என்று சொன்னாராம். இதுதான் திருவண்ணாமலைப் புராணமாகிய அருணாசல புராணத்தில் சொல்லப்படும் கார்த்திகைப் பண்டிகைக் கதை.

இக் கதையை ஆதாரமாகக் கொண்டுதான் இன்றும் 'சைவப் பெரியார்கள்' என்பவர்கள் சிவன் என்பவரே மற்ற கடவுள்களைவிட உயர்ந்தவர் என்று சண்டை போடுகின்றனர். இந்தக் கதையைக் காட்டிச் சிவனை உயர்த்தியும், மற்றவர்களைத் தாழ்த்தியும் பாடாத சைவப்.புராணங்களும், தேவாரங்களும், திருவாசகங்களும், தோத்திரங் களுந் இல்லை. இதற்கு எதிராக மற்ற மதத்தினர்கள் எழுதி வைத்திருக்கும் கதைகள் பல. இவ்வாறு மதச் சண்டையை உண்டாக்குவதற்கு இக் கதை முதற்காரணமாக இருப்பதை அறியலாம். இந்தக் கதையில் தாழம்பூ பேசுவது வேடிக்கை. கடவுள்களுக்குள்ளேயே சண்டை வந்தது விந்தை. இதுபோல ஆராய்ந்தால் பரிகாசத்திற்கும் வேடிக்கைக்கும் இடமாக இக் கதையில் அனேக செய்திகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு இரண்டு முரண்பட்ட வேடிக்கைக் கதைகளை ஆதாரமாகக் கொண்ட இந்தக் கார்த்திகைப் பண்டிகையினால் நமது மக்கள் மனத்தில் குருட்டு பக்தியும் மூடநம்பிக்கையும், முட்டாள்தனமும் அதிகப்படும் என்பதில் சந்தேகம் உண்டா? இது நிற்க; மேலே கூறிய கதைகளில் இரண்டாவது கதையைச் சைவர்கள்தாம் சிவனுக்குப் பெருமை கற்பிக்கிறது என்று நம்பிக் கார்த்திகைப் பண்டிகை கொண்டாடுகிறார்கள்



என்றால்—வைணவர்களும் கொண்டாடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? வைணவர்களின் கடவுளை மலந்தின்னும் பன்றியாக்கிக் கேவலப்படுத்தியிருப்பதுடன் சிவனுடைய பாதத்தைக் காணமுடியாத அவ்வளவு சக்தியற்ற தெய்வம் என்று இழிவுபடுத்தியிருப்பதை அறிந்தால் அவர்கள் இந்தப் பண்டிகையைப் பெருமையாகக் கொண்டாடச் சம்மதிப்பார்களா? இவர்கள் போகட்டும்; ஏதாவது ஒரு கடவுளாவது இருக்கிறார் என்ற நம்பிக்கையில்லாத, தானே கடவுள் என்னும் கொள்கையுடைய ஸ்மார்த்தர்களும் இக் கதையை நம்பிப் பண்டிகை கொண்டாடுகிறார்களே, இதில்தான் என்ன அர்த்தமிருக்கிறது? இவற்றையெல்லாம் யோசிக்கும்பொழுது இவர்கள் முட்டாள்தனம் காரணமாகவாவது, வீண் ஆடம்பரம் காரணமாகவாவது இப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள் என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. அறிந்தோ அறியாமலோ நமது மக்கள் மனத்தில் பண்டிகைகள்—புண்ணிய நாட்கள், அவற்றைக் கொண்டாடுவதால் புண்ணியம் உண்டு; கொண்டாடாவிட்டால் 'பாவம்' என்னும் குருட்டு நம்பிக்கை குடிகொண்டிருக்கிறது.

ஆகவே, இதுபோன்ற பண்டிகைகளால் நமது நாட்டில் பொருள் செலவும், வறுமையும், மூடநம்பிக்கையும், வீண்காலப் போக்கும் நிறைந்திருப்பதை எடுத்துக்கூறத் தொடங்குகிறவர்களுக்கு உடனே பகுத்தறிவற்ற, வைதீக மூடர்கள், 'தேசத் துரோகி,' 'மதத் துரோகி,' 'வகுப்புவாதி,' 'நாத்திகன்' என்ற பட்டங்களைச் சூட்டிவிடுகின்றனர். சிறிதேனும் பொறுமைகொண்டு—சொல்லும் விஷயத்தைப் பகுத்தறிவுகொண்டு ஆராய்ந்து பார்க்கிறவர்கள் இல்லை.

['குடி அரசு'-தலையங்கம்—22-11-1931]

## 7. வைகுண்ட ஏகாதசி—பூசம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மார்கழி மாதம் வந்தால், வைகுண்ட ஏகாதசி என்று கூட்டம் கூட்டமாய் சீரங்கம் முதலிய ஊர்களுக்குப் பணச் செலவு செய்துகொண்டு போவதும், தை மாதம் வந்தால் பூசம் என்று காவடிகளைத் தூக்கிக்கொண்டு பழனி முதலிய மலைகளுக்குப் போவதும், பொய்யையும், புளுகையும் காவடிக் கதையாய்ச் சொல்வதும், அறுத்துச் சமைத்த பாம்பும் கோழியும், மீனும் உயிர் பெற்றுவிட்டன என்பதும், மண் சர்க்கரையாகிவிட்டது என்பதும், வெட்டித் துண்டாக்கப்பட்ட குழந்தை உயிர் பெற்று விட்டது என்பதும் இன்னும் இவை போல பல பொய்களை வெட்கமில்லாமல் சொல்வதும், அழுக்குக் குளங்களில் குளித்து—அழுக்குத் தண்ணீரைக் குடித்து—பஞ்சாமிர்தம் என்னும் ஒரு அசிங்கமான வஸ்துவைக் கண்டபடி சாப்பிட்டு வயிற்றுப் போக்கெடுத்து காலரா ஏற்பட்டு, திரும்பிப் போகும் வழியில் சாவதும்; சிலர் அந்தக் காலராவைத் தங்கள் தங்கள் ஊருக்குக் கொண்டுபோய்ப் பரவவிட்டு அங்குள்ளவர்களைக் கொல்லுவதும்; அவர்கள் நதி, வாய்க்கால் ஓரங்களில் குடி இருந்தால் அந்தக் காலரா அசிங்கம் வாய்க்கால்களில் கலந்து கரை ஓரங்களில் இருக்கும் ஊர்களிலெல்லாம் பரவி—மக்கள் நூற்றுக் கணக்காகச் சாவதுமான காரியங்கள் வருஷந்தோறும் நடைபெறுகின்றன. சாதாரணமாக, சீரங்கம் வைகுண்ட ஏகாதசி உற்சவத்திலும், பழனி தைப் பூச உற்சவத்திலுமே ஏற்பட்ட சுகாதாரக் கெடுதியால் ஒவ்வொரு வருஷமும், அங்கு முதல் முதல் காலரா உற்பத்தியாகி, பிறகு 2, 3 மாதங்கள் தென்னாடெல்லாம் பரவி, வருஷம் 1-க்கு 2, 3 ஆயிரம் பேருக்குக் குறைவில்லாமல் கொள்ளை கொண்டு போகின்றது. இதன் உண்மையை ஒருவரும் அறியாமல், 'பேதியாயி', 'காளியாயி', 'ஓங்காளியாயி' ஊருக்கு ஒரு குடம் எண்ணெய் கொண்டுவந்து—ஆளுக்கு அரைக் கரண்டி கொடுத்து விட்டாள்' என்று சொல்லி—ஊரிலுள்ள மக்களில் சிலபாகம் செத்து—காலரா தானாக ஒடுங்கிய பின் ஓங்காளியின் பொங்கலும், காளிபூசையும் செய்து பேதியை நிறுத்தி விட்டதாக வெட்கமில்லாமல் பேசிக்கொள்வதும், அன்றியும்;

www.padippakam.com



கிராமங்களிலெல்லாம் மார்கழி, தை மாதங்களிலேயே மாரியம்மன் பண்டிகை கொண்டாடி—வெந்ததும் வேகாததுமான பொங்கலும், பச்சை மாவும், சரியாய்ச் சுத்தம் செய்யப்படாத—வேகாத மாமிசமும் கண்டபடி புசிப்பதால் அஜீரணம், காலரா முதலிய வியாதிகள் உண்டாவதையும் பார்க்கின்றோம். பொதுவாகவே, நம் நாட்டில் கூட்டம் சேர்ந்தாலே அசுத்தம் உண்டாகி வியாதிகள் ஏற்படுவதை அனுபவத்தில் பார்த்து வருகின்றோம்.

[ஈரோடு உண்மை நாடுவோர் சங்க விழாவில் சொற்பொழிவு—'குடி அரசு' 20-10-1929]

## 8. மகாமக தீர்த்தம்

மகாமகம் அல்லது மாமாங்கம் என்பதாக ஒரு பெரிய திருவிழா இந்த மாதம் 25-ந் தேதியில் கும்பகோணத்தில் நடத்த ஏற்பாடுகள் வெகுதுரிதமாக நடைபெற்று வருகின்றது. சுமார் ஒரு இலட்சம் ஜனங்களுக்கு மேலாகவே வந்துகூடுவார்கள் என்று கணக்கிடப்பட்டு இரயில்வேக்காரர்கள் பல பிளாட்பாரங்களையும், கொட்டகைகளையும் போடுகிறார்கள். அதற்குத் தகுந்தபடி கூட்டங்களை வரவழைக்க அனேகவித சித்திரப் படங்களை அச்சடித்து இரயில் நிலைய மேடைகளிலெல்லாம் கட்டித் தொங்கவிட்டும், பத்திரிகைகளுக்குப் பணம் கொடுத்துப் பிரசுரிக்கும்படி செய்தும், மற்றும் பல வழிகளிலும் விளம்பரம் செய்கிறார்கள்.

சாதாரணமாக, கும்பகோணமானது ஒரு அழகான பட்டணம் என்றோ, சுகாதார வசதியான பட்டணமென்றோ, வேறு ஏதாவது ஒரு வழியில் மக்கள் அறிவுக்கோ, தொழிலுக்கோ பயன்படத் தகுந்த விசேஷம் பொருந்திய பட்டணமென்றோ யாரும் சொல்லிவிட முடியாது. அது ஒரு புராதனமான பட்டணம் என்பதோடு, நாளுக்கு நாள் க்ஷீணதசை அடைந்துவரும் தோற்றமுடைய பழங்காலமுறைக் கட்டடங்களையும் உடைய ஊராகும். அதில் வசிக்கும் மக்களோ பெரும்பாலோர் பாப்பனர்களும், 'மேல்சாதி' மிராசுதாரர்களுமாவார்கள்.

'கும்பகோணம் பார்ப்பனர்கள் என்றால், மிகத் தந்திரசாலிகள்' என்பார்கள். கும்பகோணம் மாத்திரமல்ல, தஞ்சாவூர் ஜில்லா முழுவதுமே உள்ள பார்ப்பனர்கள் பழைய இராஜாவின் தர்மத்தினாலும், மற்றும் தஞ்சை ஜில்லாவிலேயே ஏற்பட்டிருந்த இரண்டு முதல்தர காலேஜ்களினாலும் சாப்பாடும் கல்வியும் சுலபமாய்—இருக்குமிடத்திலேயே கிடைக்கக் கூடிய நிலைமை இருந்ததால் படித்துப் பட்டம் பெறவும், அதற்கேற்ற உத்தியோகங்கள் பெறவும் சவுகரியம் ஏற்பட்டு இந்த மாகாணத்தில் அவர்களே முக்கிய மானவர்களாய் இருந்து வந்திருக்கிறார்கள்.

சுமார் 30–40 வருஷங்களுக்கு முன் தமிழ்நாடு மாத்திரமல்ல, மற்ற மாகாணங்களிலும் கூட—தஞ்சை ஜில்லா பார்ப்பனர்களே திவான்களாகவும், பிரபல வக்கீல்களாகவும், முன்சீப், ஜட்ஜு, டிப்டி கலெக்டர், சூப்பரிண்டெண்டுகளாகவும், மற்றும் பல பெரிய பதவி உடையவர்களாகவும் ஆக நேர்ந்து பிரபலமாகி விட்டார்கள். இக் காரணங்களால் 'கும்ப கோணம் பார்ப்பனர்களுக்கு' அதிகமான விளம்பரம் ஏற்பட வசதியாகி விட்டது. அங்குள்ள மிராசுதார்களும் ஏறக்குறைய பார்ப்பனர்களைக் 'காப்பி' அடித்துத் தங்களையும் மேல் சாதிக்காரர்கள் என்று விளம்பரப்படுத்திக் கொள்வதோடு நின்று விட்டார்களே தவிர, கல்வியில் அவர்களுடன் போட்டிபோடவோ, உத்தியோகம் பெறவோ முடியாதபடி பார்ப்பனர்கள் செய்துவந்த சூழ்ச்சியை வென்று முன்னேற முடியவில்லை. ஆதலால், பணம் சேர்ப்பதிலும் பூமியைப் பெருக்குவதிலும் மாத்திரம் கவலை கொண்டு, ஆள் ஒன்றுக்கு 1000 வேலி, 2000 வேலி என்பதாக நிலத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். இரண்டு கூட்டமும் சரீரத்தினால் உழைக்காமல் ஏழைகள், உழைப்பாளிகள் ஆகியவர் களின் பாட்டினாலேயே வாழ்ந்து வருகிறார்கள். இதைத் தவிர, மற்றபடி அந்த ஜில்லா வுக்கும், கும்பகோணத்துக்கும் வேறு உண்மையான யோக்கியதை ஒன்றும் கிடையாது.



ஆனால், மற்றொரு யோக்கியதை உண்டு. அது, மேற்சொன்னவைகளைவிட மிகவும் மோசமான யோக்கியதையாகும். அதென்னவென்றால், தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு விசேஷ ஸ்தலமாகவும்; பாடல் பெற்ற ஸ்தலமாகவும், பூலோக வைகுண்டமாகவும், பூலோக சுவர்க்கமாகவும் மற்றும் இந்தியாவில் உள்ள முக்கிய புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய தீர்த்தங்கள், புண்ணிய மூர்த்தங்கள் என்பவைக ளெல்லாம் தஞ்சை ஜில்லாவிலேயே ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொன்று பிரதிபலிப்ப தாகவும் கதைகளும், புராணங்களும், கர்ண பரம்பரை விசேஷங்களும் உண்டு.

தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் படித்துவிட்டு வெளி ஊர்களுக்குச் சென்று ஆங்காங் குள்ள செல்வங்களைக் கொள்ளை கொண்டுபோய்ச் சேர்ப்பது, ஒன்று; கிராமங்கள்தோறும் புண்ணிய க்ஷேத்திரங்களும் பாடல் பெற்ற க்ஷேத்திரங்களுமாய் இருப்பதால் மற்ற ஊர்களில் இருக்கும் மூடர்கள் எல்லாம் பாடுபட்டுத் தேடிய பணத்தை மூட்டை கட்டிக் கொண்டுபோய் அந்த ஜில்லாவில் அழுதுவிட்டு வரும் மடத்தனம், இரண்டு—ஆகிய இவை களால் மாத்திரமல்லாமல், மைசூர், குடகு நாடுகளில் இருந்துவரும் காவேரியானது சேலம், கோயமுத்தூர் ஜில்லா வழியாக வந்தாலும், சேலம் ஜில்லாக்காரர்களுக்குக் குடிப்பதற்குக் கூட மார்க்கமில்லாமல் செய்துவிட்டும், கோயமுத்தூர் ஜில்லாக்காரருக்கு ஒரு செண்டு பூமிகூட பயிராவதற்கு உதவாமலும் ஏமாற்றிவிட்டு எல்லாத் தண்ணீரும் நேரே தஞ்சை ஜில்லா சென்று—ஜனங்கள் வெளிக்குப் போவதற்குக்கூட இடமில்லாமல் எல்லா நிலமும் நஞ்சைப் பயிராகும்படி செய்துகொண்ட சூழ்ச்சியால் ஏற்பட்ட இலாபம், மூன்று.

இந்தப்படியாக, 'இயற்கை' வளம் பெற்ற தஞ்சை ஜில்லாவுக்கு மகாமக விசேஷம் என்னும் ஒரு புரட்டு யோகமும் சேர்வதில் அதிசயமொன்றுமில்லை. ஆனால், இப்போது நாம் இதை ஏன் எடுத்துக்காட்ட வருகிறோம் என்றால், நமது மக்கள் இத்தனை காலம் தான் மூடர்களாய், மடையர்களாய், கடையர்களாய் இருந்து, இவ்விதப் புரட்டுகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் ஆளாகி, நஷ்டமும், கஷ்டமும், இழிவும், ஏமாற்றமும் அடைந்து வந்தோம் என்றாலும், இனியும் பாரம்பரியமாய்—தலைமுறை தலைமுறையாய் அடைய வேண்டுமா என்பதை ஞாபகப்படுத்தவே இதை எழுதுகின்றோம்.

தோழர்களே! மகாமகம் என்றால் என்ன என்பதைச் சற்று விசாரித்துப் பாருங்கள். இதை அறிவதற்காக நாம் ஆவல்பட்டுத் தேடினோம்; கும்பகோணம் ஸ்தல புராணம் என்பதில் இருப்பதாக அறிந்தோம். அதை வரவழைத்துப் பார்த்தோம்; அதில் உள்ளதை வெளியிடுகிறோம்:

'கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவிரி, சிந்து, கோதாவரி, சரயு, தாமிர பரணி ஆகிய ஒன்பது நதிகளும் ஒன்பது கன்னிகளாக வெளிவந்து வெள்ளியங்கிரிக்குச் சென்று பரமசிவனை அடைந்து—'உலகில் உள்ள மக்கள் எல்லோரும் எவ்வளவோ கொடியதாகிய பாவங்களைச் செய்துவிட்டு, எங்களிடத்தில் வந்து ஸ்நானம் செய்து அவர்களது பாவங்களை எங்களுக்குக் கொடுத்துத் தீர்த்துக்கொண்டு போய் விடுகிறார்கள்; அந்தப் பாவங்களையெல்லாம் பெற்றுக்கொண்ட நாங்கள் எப்படி அவைகளைப் போக்கிக் கொள்ளுவது?' என்று கேட்டார்கள். அதற்குப் பரமசிவனார், 'கும்பகோணத்திலே தென் கிழக்கிலே ஓர் தீர்த்தம் உண்டு; 12 வருஷத்துக்கு ஒருமுறை மாசி மாதம் மகாமக நாளன்று அதில் குளிப்பீர்களானால் உங்கள் பாவங்கள் தொலைந்து போகும்' என்று சொன்னார். அதற்கு 9 கன்னிகைகளும், 'கும்பகோணம் எங்கே இருக்கின்றது?' என்று கேட்டார்கள். அதற்கு பரமசிவனார், அந்த 9 கன்னிகைகளையும் பார்த்து, 'நீங்கள் காசிக்குப் போயிருங்கள். அங்கிருந்து நான் விஸ்வேஸ்வரன் என்னும் பெயருடன் உங்களைக் கும்ப கோணத்துக்கு அழைத்துப் போகிறேன்' என்று சொன்னார். அந்தப்படியே கன்னிகைகள் காசிக்குப் போயிருந்தார்கள். பரமசிவனார், அவர்களை காசியிலிருந்து கும்பகோணத் துக்கு அழைத்துச் சென்று மகாமகக் குளத்தைக் காட்டிக் குளிக்க வைத்தார். பிறகு



படிப்பகம்

www.padippakam.com



சிவபெருமானும் அந்தக் கன்னிகைகளும் கும்பகோணத்திலேயே கோவில் கொண்டு விட்டார்கள்! ஆதலால், அந்தக் குளத்தில் குளித்தவர்களுக்குச் சர்வ பாவமும் தொலைந்து சர்வ மங்களமும் உண்டாகும்' என்று இதில் கண்டிருக்கிறது.

தோழர்களே! இதுதான் கும்பகோண ஸ்தல மகத்துவமும், தீர்த்த மகத்துவமும் ஆகும். இதற்கு அப்புறம், அந்தக் குளத்தில் எப்படிக் குளிப்பது, அதற்காகப் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனப் பெண்களுக்கும் எப்படி—எவ்வளவு பணம் கொடுக்க வேண்டியது என்கிற விஷயங்களும், எந்தெந்த இடத்தில் குளிப்பது, எந்தெந்தச் சாமியை எப்படி எப்படிக் கும்பிடுவது என்கிற விஷயமும் இருக்கின்றன.

இந்தக் கதையை ஆதாரமாக வைத்த இந்த மகாமக உற்சவத்திற்காக எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள், எவ்வளவு விளம்பரங்கள், எவ்வளவு பணச் செலவுகள், எவ்வளவு கஷ்டங்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இந்துக்கள் மடையர்கள், அஞ்ஞானிகள், மூடர்கள் என்று ஒருவன் சொன்னால் உடனே கோபப்பட்டுக் கொள்ளத்தான் கற்றுக் கொடுக்கப்பட்டு இருக்கின்றோமே அல்லாமல்—அறிவைக் கொண்டு பார்க்கின்றோமா?

இந்தக் கும்பகோணத்துக்கும் அங்குள்ள மாமாங்கக் குளத்திற்கும் உள்ள விசேஷம் போலவே உலகத்தில் உள்ள அனேக சாக்கடைகளிலும், பட்டிக்காடுகளிலும் குப்பை மேடுகளிலும் உள்ள குழவிக் கல்லுகளுக்கும், நீரோடைகளுக்கும், குளங்களுக்கும் எல்லாம் புராணங்களும், அய்தீகங்களும் இருந்து வருகின்றன. பொதுவாக எந்தக் காரியங்களுக்கும் விசேஷம் என்பதெல்லாம் இரண்டே இரண்டு வாக்கியங்களில்தான் அடங்கி இருக்கின்றன.

அதாவது:—

1. சர்வ பாபங்களும் நிவர்த்தியாகி விடும்;
2. வேண்டியதெல்லாம் அடையலாம்—என்கின்றவைகளேயாகும்.

இந்த இரண்டு காரியங்களும் யோக்கியமான காரியங்களாயிருக்குமா என்பதை யோசித்துப் பாருங்கள். மனிதன் செய்கின்ற பாவமெல்லாம் இந்த மாதிரியான காரியங்களால் தீர்ந்து போவதாயிருந்தால் உலகத்தில் எந்த மனிதனாவது பாப காரியங்களைச் செய்யத் தவறுவானா, தயங்குவானா என்று யோசித்துப் பாருங்கள்!

மனிதனுக்கு வேண்டிய—அவன் ஆசைப்படும்படியான காரியங்கள் எல்லாம் இந்த மாதிரியான சிறு காரியங்களால் கைகூடிவிடுவதாய் இருந்தால், மனிதனுடைய முயற்சி-நடத்தை-ஒழுக்கம் என்பவைகளுக்கெல்லாம் அவசியமும் நிபந்தனையும் வரையறையும் எதற்காக வேண்டும் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

நிற்க, பாவமுள்ள மனிதர்கள் நதிகளில் ஸ்நானம் செய்ததால் நதிகளுக்கு அந்தப் பாவங்கள் ஒட்டிக்கொண்டது என்பதில் ஏதாவது அறிவோ, உண்மையோ இருக்கமுடியுமா, அந்த நதிகள் அந்தப் பாவத்தைத் தொலைக்க மற்றொரு தீர்த்தத்தில் போய்க் குளிப்பது என்று மகாமக தீர்த்தத்துக்கு வந்து குளிப்பதனால்—இதில் ஏதாவது புத்தி இருக்கின்றதா? நாணயம் இருக்கின்றதா என்று யோசித்துப் பாருங்கள். இத்தனைப் பாவங்களையும் ஏற்றுக்கொண்ட மகாமகத் தெப்பக்குளம், அதன் பாவத்தைத் தீர்க்க—எந்த உருவெடுத்து, எந்தக் குளத்தில் போய்ப் பாவத்தைத் தீர்த்துக் கொள்ளும் என்பதையும் யோசித்தால் கடுகளவு அறிவுள்ளவனாவது இதை ஏற்க முடியுமா என்று பாருங்கள்.

இதையெல்லாம் கவனித்தால் மதத்தின் பேரால்—பாவ புண்ணியத்தின் பேரால்—கடவுள் பேரால்—தீர்த்தம், ஸ்தலம், மூர்த்தி என்னும் பெயர்களால் மக்கள் எவ்வளவு தூரம் ஏய்க்கப்பட்டுக் கடையர்களாய், மடையர்களாய் ஆக்கப்படுகிறார்கள் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.



மற்றும், அந்தப் புராணத்திலேயே இந்த மகாமகக் குளத்துக்குள் வடக்குப் பாகத்தில் ஏழு தீர்த்தங்கள் இருப்பதாகவும், கிழக்குப் பாகத்தில் நான்கு தீர்த்தங்கள் இருப்பதாகவும், நடு மத்தியில் 66,00,00,000 (அறுபத்தாறு கோடி) தீர்த்தங்கள் இருப்பதாகவும் இந்த மகாமகக் குளத்தில் இத்தனைத் தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைக்குமென்றும் எழுதி, அந்தப்படி ஒரு சித்திரமும் வரையப்பட்டிருக்கின்றது. இது எவ்வளவு பரிகசிக்கத் தக்க விஷயம் என்று பாருங்கள். இதை எழுதியவன் எவ்வளவு அயோக்கியன் அல்லது எவ்வளவு மூடன் என்பதல்ல இப்போதைய நமது கேள்வி; மற்றென்னவென்றால், இதைப் படித்துப் பார்த்து இதன்படி நடப்பார்கள் என்று நம்பிய மக்களை இவன் எவ்வளவு முட்டாள்களாகவும் அடிவண்டலாகவும் கருதி இருக்கவேண்டும் என்பதுதான் நமது கேள்வியாகும்.

தீர்த்தம் என்றாலும் நதி என்றாலும் குளம் என்றாலும் என்ன என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்! நதி என்றால் மழைபெய்வதால் ஏற்படும் வெள்ளங்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும் ஓடை அல்லது நீர்ப் போக்காகும்.

குளம் என்றால் இந்தமாதிரி ஓடையில் இருந்து வழிவைத்துத் தண்ணீர் நிரப்புவதோ அல்லது மழை வெள்ளத்தால் ஊரில் உள்ள அசுத்தங்களையும் கசுமாலங்களையும் அடித்துக்கொண்டுவந்து குளத்தில் விழுந்து தேங்கியிருப்பதோதான். மற்ற குட்டித் தீர்த்தங்கள் என்பதும் கிணற்றுக்கு நீர் ஊற்றும் போன்ற ஊற்றேயாகும். இந்தத் தண்ணீர்களுக்கு எல்லாம் அந்தந்த இடத்தை அனுசரித்த குணங்களேதான் உண்டு. மற்றபடி அவற்றில் ஒரு மனிதன் செய்யும் பாவம் என்பதைப் போக்கவோ, அவன் ஆசைப்பட்டதைக் கொடுக்கவோ ஆன சக்திகள் எப்படி இருக்கக்கூடும் என்பது ஒரு மனிதனுக்குத் தெரியாதா என்றுதான் கேட்கின்றோம்.

மாமாங்கக் குளம் என்பது மேற்கண்ட மாதிரியான ஒரு சாதாரண தெப்பக்குளம். மகாமக சமயத்தில் அதில் உள்ள தண்ணீர் அவ்வளவையும் இறைத்துவிட்டு வெறும் அடிவண்டலையும் சேற்றையும் மாத்திரம் மீதிவைத்து அதிலும் கந்தகப்பொடியைக் கலக்கி விடுவார்கள். அந்தச் சேறானது கருப்புக் களிமண்போல் இருக்கும். அந்தக் குளத்தின் விஸ்தீரணமோ சுமார் 500 அடி சதுரம் இருக்கலாம்; அடிமட்டம் சுமார் 200 அடி சதுரம் இருக்கலாம். இதில் இலட்சம் பேர்கள் குளிப்பது என்றால் எப்படிச் சாத்தியமாகும்? அந்தக் குளத்தில் இறங்கி அந்தச் சேற்றில் கொஞ்சம் எடுத்துச் சரீரத்தில் பூசிக்கொள்ள வேண்டியதுதான். பிறகு இந்த அசிங்கம் போவதற்கு வேறு குளத்தில் குளிக்கவேண்டியதுதான். இதுதான் வழக்கமாம். ஒரு கிறிஸ்தவரோ, ஒரு முகமதியரோ இப்படிச் செய்தால் அதை நாம் பார்க்க நேர்ந்தால் அப்போது நாம் என்ன என்று சொல்வோம்?

மிஸ். மேயோ (Miss. Mayo) நமது பழக்க வழக்கங்களைப்பற்றியும், சடங்குகளைப்பற்றியும், தீர்த்தங்களைப்பற்றியும் எழுதியதைப் பார்த்துக் கோபித்துக் கொண்டோம். ஆனால், இந்த மாதிரி சேற்றில் குளிப்பதால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று கருதி இருக்கிற முட்டாள்தனமான பேராசைக்காக நாம் வெட்கப்படுவதில்லை என்றால், பிறகு எந்தவிதத்தில் நாம் அறிவாளிகள், யோக்கியர்கள், மனிதத் தன்மையுடையவர்கள் என்று யோசித்துப் பாருங்கள். இந்த மாமாங்கத்தால் எத்தனை இலட்ச ரூபாய் பார்ப்பான் கொள்ளையடிக்கப் போகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இவை ஒரு பக்கம் இருப்பதோடு, கூட்ட நெருக்கடியில் உயிர்ச்சேதம் எவ்வளவு; திருட்டு எவ்வளவு? இவை தவிர இப்பொழுதே அங்கு கும்பகோணத்தில் காலராவும், அம்மையும் வரத் துவங்கிவிட்டது. இதற்காகத் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் ஏற்பாடாகிவிட்டது; 'பிளேக்கும்' பரவலாம். இந்த வியாதிகளும் தங்கள் பாவத்தைப் போக்கிக்கொள்ள அங்கு வரப்போகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



கும்பகோணத்துக் கொசுக்களை[illegible]ப் பார்ப்பனர்களையும் குச்சுக்காரிகளையும் விட எத்தனையோ பங்கு மோசமானவை என்று சொல்லலாம். ஏனெனில், இவை அவர்களைவிட மோசமாக வெளியில் இருந்து வருகின்றவர்களின் இரத்தத்தை உறிஞ்சக் காத்துக்கொண்டிருக்கின்றன. மாமாங்கத்துக்குப் போய் வந்தவனுக்கு வரப்போகின்ற மலேரியா காய்ச்சல்—அடுத்த மாமாங்கம் வந்தாலொழிய தீராது. இந்த நிலையில் உள்ள மகாமகம் என்ன புண்ணியத்தைக் கொடுக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

['விடுதலை'—கட்டுரை—13-2-1956]

## 9. சிவராத்திரி

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மாசி மாதம் வந்தால் சிவராத்திரி என்று கண்டபடி கிழங்கு வகைகளையும், தானிய வகைகளையும், பலகார வகைகளையும் ஒரே நாளில் செய்து, அளவுக்கு மேல் தின்று, குழந்தைகளையும் தின்னச் செய்து அஜீரணத்தையும் வயிற்று வலியையும் உண்டாக்கிக் கொள்வதோடு, இதனால் ஏற்படும் செலவு எவ்வளவு என்பதை யாராவது யோசித்துப் பார்க்கின்றார்களா என்று கேட்கின்றோம். இப்படியே ஒவ்வொரு மாதமும் உற்சவம், பண்டிகைகளும், விரதங்களும், சடங்குகளும் ஏற்பட்டு மொத்தத்தில் வருஷத்தில் எவ்வளவு கோடி ரூபாய்கள் செலவு, எவ்வளவு வியாதிகள் வரவு, எவ்வளவு உயிர்கள் போக்கு என்பவைகளை யார் கவனிக்கிறார்கள்? இந்தப் பணமெல்லாம் தேசியப் பணமல்லவா? ஏழை தேசம், தரித்திர தேசம், அடிக்கடி பஞ்சம் வரும் தேசம், வேலையில்லாமல்—தொழிலில்லாமல் கூலிக்காரர்கள் கும்பல் கும்பலாய்ப் பட்டினி கிடந்து மடிவதுடன், பெண்டு பிள்ளை குழந்தைகளுடன் வெளிநாட்டிற்குக் கூலிக்காகக் கப்பலேறும் தேசம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நாம் எத்தனை நாட்களை, எத்தனை ரூபாய்களை, எத்தனை ஊக்கங்களை இந்தப் பாழும் அர்த்தமற்ற—பொய்யான—ஒரு காசுக்கும் உதவாததான—நமக்கு இழிவையும் அவமானத்தையும் தருவதான பண்டிகைக்கும், உற்சவத்திற்கும், பூசைக்கும், சடங்குக்குமாக ஒவ்வொருவரும் செலவு செய்கின்றோம் என்பதைக் கவனித்தால் இந்த நாடு பணமில்லாத நாடா என்பது நன்றாய் விளங்கும்.

எனவே, இப்படிக்கெல்லாம் சொல்வதைப் பார்த்தால் இந்தப் பண்டிகைகளையும், உற்சவங்களையும் ஏற்படுத்தியவர்கள் எல்லோரும் அறிவில்லாதவர்களா என்ற கேள்வி பிறக்கலாம். நான் அவர்களை அறிவில்லாதவர்கள் என்று சொல்ல இஷ்டப்படமாட்டேன். மற்றபடியோ என்றால், பெரும்பாலும் அவர்கள் சுயநலக்காரர்களும் தந்திரக்காரர்களுமே ஆவார்கள் என்பேன்.

என் புத்திக்குட்பட்ட வரையில் இந்தப் பண்டிகை, உற்சவம் எல்லாம் புரோகிதர்களான பார்ப்பனர்களும், ஆட்சிக்காரர்களான அரசர்களும் கலந்து கண்டுபிடித்துச் செய்த தந்திரம் என்பதே எனது அபிப்பிராயம். உலகத்தில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அறியாமைக்கும் கொடுமைக்கும் புரோகிதர்களும் அரசர்களுமே சேர்ந்து கூட்டுப் பொறுப்பானவர்களாவார்கள்.

இவ்விருவர்களும் சேர்ந்து ஜனங்களை ஏய்த்து ஆதிக்கம் செலுத்த வகை கண்டு பிடிக்கவேண்டிய அவசியமுடையவர்கள்.

அந்தப்படி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வாழவேண்டுமானால் அந்த மக்களை அறிவினாலும், செல்வத்தினாலும் தாழ்மைப்படுத்தி வைத்திருந்தால்தான் முடியும். ஒரு மனிதன் அறிவுடையவனாக இருப்பானானால், புரோகிதனுக்கு ஏமாறமாட்டான்; செல்வமிருக்குமானால், அரசனுக்குப் பயப்படமாட்டான். ஆகையால் அறிவும், செல்வமும் இல்லாமல் செய்வதற்கே கோயில், உற்சவம், பண்டிகை, சடங்கு ஆகியதான—



செலவுக்கு ஏற்ற வழிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மக்கள் சம்பாதிக்கும் பணங்களில் கணக்குப் பார்த்தால் பெரும்பாகமும் இவைகளுக்கே செலவுசெய்யும்படியாகவும், மேற்கொண்டு மீதி ஆவதெல்லாம் இவர்கள் சமூகத்திற்கே பயன்படும்படியாகவும் நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பங்கள் கடன்காரர்களாக இருக்கவுமே முடியும். எனவே, நமது நாடு என்றைக்காவது அறிவுள்ள நாடாகவும், செல்வமுள்ள நாடாகவும், சுயமரியாதை உள்ள நாடாகவும் இருக்க வேண்டுமானால்—முதலில் உற்சவம், பண்டிகை, சடங்கு, கோயில், பூசை ஆகியவைகள் ஒழிந்தாக வேண்டும்.

[ஈரோடு உண்மை நாடுவோர் சங்க விழாவில் சொற்பொழிவு—'குடி அரசு' 20-10-1929]

## 10. ஸ்ரீராம நவமி

இருபது இலட்ச வருடங்களுக்கு முன் இராமன், அயோத்தி இருந்தனவா?

இந்த நாள், கோள் இருந்தனவா? இராவணன் இருந்தானா?

பார்ப்பனர்கள் ஸ்ரீராம நவமி என்று ஒரு போலி நாளை மக்களிடம் விளம்பரப் படுத்திக்கொண்டு ஆண்டுக்கு ஒரு முறை கொண்டாட்டம் நடத்துகிறார்கள்.

இதை அரசாங்கம் அனுமதிப்பது மாத்திரமல்லாமல் சில இடங்களில் அரசாங்கத்தில் ஓய்வுநாள் (லீவு) விடப்படுகிறது. இராமன் பிறந்த நாள் என்று சொல்லப்படுவது இன்றைக்கு 20,00,000 (இருபது இலட்சம்) வருஷங்களுக்கு மேலாகிறது. இந்த 20 இலட்சம் வருஷத்தில் எத்தனையோ பிரளயம் ஏற்பட்டிருக்க வேண்டும். பிரளயம் என்றால் உலகமே மாற்றமடைவதும், உள்ளதெல்லாம் நாசமடைவதும் முதலிய காரியங்கள் நடப்பதாகும். அப்போது மனித சமுதாயம், உலக பூகோளம், மலை, சமுத்திரம், காடு, நாடு முதலிய யாவும்—அழிவும் மாற்றமும் அடைந்துவிடும். இது யாவருமே அறிந்ததும், புராணக் கூற்றும், சரித்திர உண்மையுமாகும்.

இப்படிப்பட்ட நிலையில் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் அயோத்தி என்ற ஒரு ஊரும், தசரதன் என்ற ஒரு அரசனும் அவனுக்கு அனேக பெண்டாட்டிகளும் இருந்தனர்; அவனுக்கு இராமன் என்று ஒரு பிள்ளை பிறந்தான்; அதற்கு வருஷம், மாதம், தேதி, நாள், கோள் இன்ன இன்னது என்பதும்; அவை மாத்திரமல்லாமல் அந்த 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் திராவிட நாடு, பாண்டிய நாடு, இலங்கை (ஈழ) நாடு முதலியவை எல்லாம் இருந்தன என்பதும் எப்படி உண்மையாக இருக்கமுடியும்?

20 இலட்சம் வருடங்களாக கோள்கள் மாறாமல் மறையாமல் இருக்க முடியுமா? பார்ப்பனர்கள் தங்கள் சுயநல வாழ்வுக்காக எதையும் சொல்லுவார்கள், செய்வார்கள் என்று இருந்தாலும் பார்ப்பனரல்லாத மற்ற மக்கள், அறிவாளிகள், பூகோளம், விஞ்ஞானம் படித்த சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் இவற்றை எப்படி நம்புகிறார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

இந்தக் கற்பனைப் புளுகை நமது மாணவர்கள் எப்படி நம்புகிறார்கள் என்பதும் அதிசயமாக இருக்கிறது.

எனக்குப் பல தொல்லை, பல வேலை, உடல் கோளாறு முதலியவை இருப்பதால், இவைகளைக் கவனித்து அவ்வப்போது இதன் புரட்டுகளை வெளியாக்க ஏற்பாடு செய்ய நேரமும் வசதியுமில்லை. பொது வாழ்வின் பேரால் பணமும் பதவியும் கொள்ளை அடிக்க, திருட நினைக்கும் சீர்திருத்த வேஷம் போட்ட மக்கள்—புலவர் எவரும் இதைப்பற்றி ஏதும் சிந்திப்பதும் இல்லை.

வடநாட்டில் இராவணனைக் கொளுத்தினார்கள் என்றால், தென்னாட்டில் ஏன் இராமனைக் கொளுத்தக் கூடாது? ஒரு பொய்யான கற்பனைக் கதையில் இருந்து தென்

படிப்பகம்

www.padippakam.com



னாட்டு மக்களை அவமானம், [illegible]
செய்தால்—அதற்கு அவர்களு[illegible]கும் காரியத்தைப் பார்ப்பனரும் வடநாட்டாரும்
புத்தி வரும்படியான காரியத்[illegible] இருந்தால், அதற்குப் பதிலாக அவர்களுக்குப்
படியான காரியத்தை நாம் ஏ[illegible] அதுபோல துவேஷம் கொண்டது என்று படும்

இன்று, ‘ஸ்ரீராம நவமி[illegible]கூடாது?

இந்தக் கருத்து தோன்றிற்று, [illegible] பத்திரிகையில் பார்த்தேன். உடனே எனக்கு
மாணவர்களுமாவது இந்தப்[illegible], இனிமேலாவது நம்முடைய இளைஞர்களும்,
படுத்தும் இதுபோன்ற காரிய[illegible]தநலாட்டங்களில் ஏமாறாமலும் நம்மை இழிவு
வேண்டுமென்று தோன்றிற்று. [illegible]கொள்ளாமல் இருக்கவும் நாம் ஏதாவது செய்தாக

ஆதலால், மாணவர்கள், [illegible]கள், திராவிடர் கழகத் தோழர்கள் கட்டாயமாகச்
சிந்தித்து நல்லபடி யோசித்[illegible]
அவசியம் என்றும் தோன்[illegible] என்றே அல்லாமல் தங்களுக்குச் சரி என்றும்
தற்குப் பதில்—என்று, இரா[illegible]—இராவணன் படத்தை, உருவத்தைக் கொளுத்தின
கொள்கிறேன். [illegible]தைக் கொளுத்தவேண்டும் என்று தெரிவித்துக்

நமது (பார்ப்பனரல்லா[illegible]
போன்ற (பார்ப்பனப்) பிரச்சா[illegible] ஆதரவு பார்ப்பனர்களுக்கு இருப்பதால் இது
உணர்ச்சியுடன் கட்டுப்பாடா[illegible]ரு நாள் வளர்ந்து வருகிறது. பார்ப்பனர் இன
மிரட்டுதலாலும் நம்மவர்களை[illegible]மையுடன் செய்கிறார்கள்; தாட்சணியத்தாலும்

இந்த ஆண்டுக்கு இது [illegible]ஆக்கொள்கிறார்கள்.

[‘விடுதலை’-கட்டுரை—19-4-1956]

## 11. [illegible]ம்மன் பண்டிகை

நமது நாட்டில் நம்மா[illegible]
என்பதைப்பற்றிய உண்மை[illegible]படும் கடவுள்கள் எல்லாமுமே ஆரியக் கடவுள்கள்

இந்தக் கடவுள்கள் ஆரி[illegible]மே மறுப்பு இருக்காது.

ஆண் பெண் கடவுள்கள், [illegible]கள் என்பது மாத்திரமல்லாமல், இக் கடவுள்கள்—
யாவுமே ஒழுக்கக் கேடு, [illegible]மனைவி மக்கள், அவதாரங்கள், மூர்த்தி கரங்கள்
உட்பட்டவையாகவே இருந்து [illegible], கற்புக்கேடு ஆகிய இழிவான குற்றங்களுக்கு

இந்த விஷயங்களில் [illegible]ார்.

அவர்கள் அந்த நடத்தைக[illegible]ரு மானம், வெட்கம், இழிவு இல்லையானதால்,
விட்டார்கள். [illegible]ரு உற்சவங்களாகக் கொண்டாடும்படியும் செய்து

இந்தப்படியான கடவு[illegible]
‘குடி அரசு’விலும், ‘விடுதலை[illegible]ங்கள், பண்டிகைகள் ஆகியவைகளைப்பற்றி
முதலிய புத்தகங்களிலும் விவ[illegible]மற்றும் புராண ஆபாசம், கடவுள் நடத்தைகள்

இப்போது இந்தக் கே[illegible]ராம்.

பண்டிகை என்பதாக ஒரு [illegible] பருவத்தில் தமிழ்நாட்டில் எங்கும் மாரியம்மன்
தேவதை என்று பெயர் இரு[illegible] நடந்து வருகிறது. மாரியம்மன் கடவுள்—கிராம
மனைவி ரேணுகா தேவி, மாரி [illegible]அது ஆரியக் கதைப்படி, ஜமதக்கினி முனிவரின்
இல்லை. மாரி, கிராம தே[illegible]ள். இந்த மாரி இல்லாத கிராமமே தமிழ்நாட்டில்
விட்டாள். [illegible]ால், பாமர மக்கள் எல்லோருக்கும் கடவுளாகி

இந்த இரேணுகை எ[illegible]
தக்கதாகும். [illegible]ரியம்மனின் சரித்திரம் மிகவும் இழிவாகக் கருதத்



இந்த இரேணுகை என்னும் மாரி ஜமதக்கினி முனிவரின் மனைவி. அவள் ஒரு அன்னிய புருஷன்மீது இச்சைப்பட்டு—அதாவது, அவள் நீராடக் கங்கைக்குச் செல்லும் போது, எதிர்ப்பட்ட சித்ரசேனனைக் கண்டு மோகித்துக் கற்புக் கெட்டுவிட்டாள். அதை அறிந்த கணவன் ஜமதக்கினி அவளைக் கொன்றுவிடும்படி தன் மகன் பரசுராமனுக்குக் கட்டளையிட்டார். பரசுராமன், இரேணுகையை வேறு யார் தடுத்தும் கேளாமல் கொன்று விட்டான். கொன்றுவிட்டு வந்து, தாயைக் கொன்று விட்டோமே என்று துக்கப்பட்டுக் கொண்டிருக்கையில்—தகப்பன் ஜமதக்கினி அதை அறிந்து மகனுக்காக மாரியைப் பிழைப்பிக்க இசைந்து, மந்திர நீர் தந்து எழுப்பி வரும்படி மகனை அனுப்பினார்.

தாயைப் பிழைப்பிக்கச் சென்ற பரசுராமன் கொலைக் களத்துக்குச் சென்று தாயின் தலையை எடுத்து முண்டத்துடன் ஒட்டவைக்கையில்—கொலைக் களத்தில் பல முண்டங்கள் வெட்டுப்பட்டுக் கிடந்ததால் அடையாளம் சரிவரத் தெரிந்து கொள்ளாமல், ஏதோ ஒரு முண்டமாகக் கிடந்த உடலை எடுத்துத் தலையுடன் ஒட்டவைத்து அழைத்து வந்து தகப்பனிடம் விட்டான். கணவன் அவளைப் பார்த்து, ‘நீ இங்கு இருக்க வேண்டாம்; கிராமங்களுக்குப் போய், அங்கு வாசம் செய்து, கிராம மக்களுக்கு நோய் வந்தால் பரிகாரம் செய்து கொண்டு இரு’ என்று கூறி அனுப்பி விட்டார்.

அதுமுதல், மாரி கிராமங்களில் வசிக்கத் தொடங்கினாள். கிராமவாசிகள் இந்த விஷயமறிந்து மாரியம்மன் தலையை மாத்திரம் வணங்கிப் பயன் அடைய முன் வந்து, தங்கள் ஊர்களில் மாரிக்குக் கோயில் கட்டி—மாரியின் தலையை மாத்திரம் வைத்து வணங்கி வருகிறார்கள். இது ஒரு புராணம்.

மற்றும் சிவ புராணத்தில், அந்த மாரி, கார்த்த வீரியனை மோகித்துச் சாபமடைந்தாள் என்று காணப்படுகிறது.

மற்றொரு புராணத்தில், அவள் புருஷன் ஜமதக்கினி கொல்லப்பட்டதால் அவள் அவனுடன் உடன்கட்டை ஏறினாள். இதை இந்திரன் ஒப்புக் கொள்ளாமல் மழை பெய்யச் செய்ததும் அவளது உடல் அரை வேக்காட்டுடன் நின்று விட்டது. அதனால் அவள் எழுந்து பக்கத்தில் உள்ள பஞ்சமத் தெருவில் நிர்வாணத்தோடு வேப்பிலையால் மானத்தை மறைத்துக் கொண்டு ஓடினாள். அதைக் கண்ட பஞ்சமர்கள் பச்சை மாவும், பழமும், இளநீரும் கொடுத்து உபசரித்தார்கள்; ஒரு வண்ணாத்தி சேலை கொடுத்து ஆதரித்தாள். இந்த அய்தீகம்தான் இன்று மாரியம்மன் பூசையாக நடத்தப்படுகிறது. பூசை, உருவம், உணவு முதலியவை எப்படி இருந்தாலும்—இந்த மாரியம்மன் மீது இரண்டு விபச்சாரக் குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

1. சித்திர சேனனை மோகித்துக் கற்பு இழந்தது;

2. கார்த்த வீரியனை இச்சித்துக் கற்பு இழந்தது.

இரண்டிலும் புருஷன் ஜமதக்கினியால் கண்டுபிடிக்கப்பட்டு, அவள் தண்டிக்கப்பட்டிருக்கிறாள்.

இதற்குப் புராண ஆதாரங்கள் இருக்கின்றன.

நமது கடவுள் நம்பிக்கையிலும், கடவுளை வணங்குவதிலும் நமக்குள் எவ்வளவு மடமை இருந்தாலும்—நாம் வணங்கும் கடவுள்களை இவ்வளவு மோசமான—நாணயம், ஒழுக்கம், நாகரிகம் என்பவை இல்லாமல், இவை யாவும் காட்டுமிராண்டித்தனமாக இருப்பது பற்றிக் கவலைப்பட வேண்டாமா? என்றுதான் கவலைப் படுகிறேன்.

[‘விடுதலை’-கட்டுரை—25-3-1960]

படிப்பகம்

www.padippakam.com

## 12. இவர்கள் மனிதர்களா?

இந்துக் கடவுள்கள், அவற்றின் புரா[illegible]நகள் எவ்வளவு பெரிய முட்டாள் தனமான கற்பனைகள்!

20ஆம் நூற்றாண்டில் அவைகளை நடப்பு மூலம் செய்து காட்டுவதென்பது மேலும் எவ்வளவு காட்டுமிராண்டித்தனம் என்று கேட்கிறேன். ஒரு மனிதன் (அசுரன்) பூமியைப் பாயாகச் சுருட்டித் தூக்கி எடுத்துக்கொண்டுபோய் சமுத்திரத்துக்குள் ஒளிந்துகொண்டான் என்றால், எழுதியவன் எவ்வளவு மடையன்; அதை நம்புகிறவன் எவ்வளவு மடையனும், காட்டுமிராண்டித்தன்மை கொண்ட அயோக்கியனுமாயிருக்க வேண்டும்!

பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப்பற்றிப் பார்ப்பனர்கள் நெருப்பில் நிற்பவர்களைப் போலத் துடிக்கிறார்கள்; பதறுகிறார்கள். 'கடவுளை—மதத்தை நிந்தனை செய்கிறார்கள்' என்றால்—இந்தக் கடவுள்களையும், இந்தக் கதைகளைக்கொண்ட மதத்தையும் நிந்தனை செய்வது தப்பிதமா? நிந்தனை செய்து அழித்து ஒழிக்காமல் இருப்பது தப்பிதமா?

தாய் என்றும் மகள் என்றும் பேதத்தை உணர்ந்த மனிதர்களைக் கேட்கிறேன், பத்து நாட்களுக்குமுன்—அப்பனும் மகளும் கணவன் மனைவியாக வாழும் கடவுள்களின் கதையைப் (சரஸ்வதி பூசை) பண்டிகையாகக் கொண்டாடினார்கள். அதை முட்டாள்கள்—பூமியைப் பாயாகச் சுருட்டிய கதையையும், பூமிதேவி என்னும் கடவுள், விஷ்ணு என்ற கடவுளைப் பன்றி உருவத்தில் கலவிசெய்து ஒரு பிள்ளையைப் பெற்று அப் பிள்ளையையே விஷ்ணு என்னும் கடவுளும் அதன் பெண்டாட்டியும் (அதாவது அப் பிள்ளையின் தாயாரும்) சேர்ந்து கொன்றார்கள்; அப்படிக் கொன்ற நாளை மகிழ்ச்சி நாளாக—பண்டிகை கொண்டாடப் போகிறோம் என்றால் இந்தக் கொண்டாட்டக்காரர்கள் மனிதர்களா, மனிதப் பிறவிகளா என்று கேட்கிறேன்.

கடவுள், மதம், கடவுள் கதைகள் (புராணங்கள்) என்னும் பெயரால் மனிதன் எக் காலத்திற்கும் மடையனாய், முட்டாளாய், அயோக்கியனாய், காட்டுமிராண்டியாகவே இருக்கவேண்டும் என்றால்—அதற்கு, மனிதன் ஏன் தன்னை மனிதன் என்று சொல்லிக் கொள்ளவேண்டும்? மனிதன் பகுத்தறிவுவாதி என்றாலும் அந்தப் பகுத்தறிவின் மூலமே நாளுக்குநாள் சகல துறைகளிலும் மாற்றமடைந்து, வளர்ச்சியடைந்து கொண்டு வரும்போது காட்டுமிராண்டிக் காலத்து அயோக்கியக் கற்பனைகளைப்பற்றிக்கூடச் சிந்திப்பது அக்கிரமம் என்றால், இப்படிச் சொல்லும் கூட்டத்தினிடம் ஆட்சியிருக்குமானால் நம் கதி என்ன ஆவது?

கடவுளின் பெயரால் நம் பெண்களில் சிலர் பார்ப்பானுக்குத் தாசியாய் இருக்க வேண்டும்; அவர்களது உயிர் வாழ்விற்கு விபசாரம் செய்து காசு சம்பாதித்துச் சாப்பிட வேண்டும் என்று அயோக்கியர்கள் ஏற்பாடு செய்திருந்ததை நாம் மாற்றப் பார்த்தோம். அதைக்கூடப் பல அயோக்கியர்கள்—'இது, மத சம்பந்தமான காரியத்தில் கை வைப்பதாகும்; கடவுள் தொண்டைத் தடை செய்வதாகும்' என்று காரணம் கூறித் தடுத்தார்கள். தடையை மீறி திராவிடர் கழகம் (ஜஸ்டிஸ் கட்சி) அந்த முறையை ஒழித்ததுடன், அந்த நடத்தையை கிரிமினல் குற்றமாக ஆக்கிச் சட்டம் செய்தார்கள். அதனால், இப்போது மதத்திற்கோ அல்லது ஏதாவது ஒரு கடவுளுக்கோ ஒரு கெடுதியும் வந்துவிட வில்லையே! அந்த விபசாரத் தொழிலுக்கு 'இசைப்பு வேலை' செய்து வந்த சாதிக்குத்தான் வரும்படி குறைந்ததே தவிர வேறு என்ன கேடு ஏற்பட்டது?

இந்தக் கடவுளையும், மதத்தையும், மதக் கதைகளையும் சாக்காகக் காட்டித் தமிழ் மக்களை இனியும் எத்தனை நாளைக்கு மடையர்களாக—மானங்கெட்ட இழி மக்களாக ஆக்கி, அதன்மூலம் வயிறு பிழைக்கலாம், உயர்வாழ்வு வாழலாம் என்று அயோக்கியர்கள் கருதியிருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை!



அடுத்து, வரும் நவம்பர் மாதம் 4ஆம் தேதி அன்று இந்த—'நரகாசுரனைக் கொன்ற நாள்' என்னும் பெயரால் தீபாவளி எனும் பண்டிகை வரப்போகிறது. இதற்கு அரசாங்கத்தார் விடுமுறை விடுவது என்பது நீண்டநாளாய் இருந்துவருகிறது. இந்தப் பண்டிகையால் மக்களுக்கு எவ்வளவு மானக்கேடு, இழிவு, மெனக்கெடு, பணச் செலவு முதலியவை இருந்தாலும்—மக்களின் அறிவு எவ்வளவு தூரம் பாழாக்கப்பட்டு, மக்கள் மடையர்களாகிறார்கள் என்பதும், பின் சந்ததிகளான குழந்தைகள், இளைஞர்கள் எவ்வளவு தூரம் அறிவுகெட்டு மூடநம்பிக்கைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதும் பற்றிச் சிந்தித்தால் மனம் பதறுகிறது.

இது மாத்திரமா? இச் செய்கையை நம்மால் நிறுத்த முடியவில்லையென்றால் நாம் எவ்வளவு தூரம் சமுதாயத்திலும் அரசியலிலும் அடிமைகளாக இருக்கிறோம் என்பது புலனாகிறது.

பி. ஏ., எம். ஏ., பொது அறிவில் டாக்டர் பட்டம் பெற்றவர்களெல்லாம்—இந்த மடமையான காட்டுமிராண்டிச் செயலுக்கு அடிமைகளாக இருக்கின்றார்கள் என்றால், இன்றையக் கல்வி எவ்வளவு தூரம் அறிவை, மானத்தை உண்டாக்க முடியாத, அறிவுக்குப் பயனற்ற கல்வியாக இருக்கிறது என்பதைக் கருதி வேதனைப்படுகிறோம். அரசாங்கமும், 'இன்றையக் கல்விக்குத் தகுதி, திறமை இல்லை என்றுதான் கவலைப்படுகிறதே தவிர—கல்வியினால் அறிவு ஏற்படவில்லையே' என்று எந்த அரசாங்கமுமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை. எனவே, இதன் மூலம் நமது இயக்கத் தோழர்களை—கூடுமானால் பகுத்தறிவு இயக்கத் தோழர்களை ஒன்று வேண்டிக் கொள்கிறேன்.

என்னவென்றால், தமிழ் நாட்டில் ஆங்காங்குள்ள கழகப் பகுத்தறிவு இயக்கத் தோழர்கள், வசதியுள்ளவர்கள் ஒவ்வொரு ஊரிலும் 'தீபாவளி கண்டன நாள்' என்று ஒரு நாள் ஏற்படுத்திக்கொண்டு, அன்று பொதுக்கூட்டம் கூட்டியும், வீடு வீடாகச் சென்றும், தீபாவளிப் பண்டிகை என்னும் முட்டாள்தனத்தை—காட்டுமிராண்டித்தனத்தை விளக்கிச் சொல்லிப் பிரச்சாரம் செய்யவேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'–தலையங்கம்—26-10-1972]

# 7. சாதி

## 1. சாதி

ஒரேநாட்டு மக்கள் பிறவியில் பல சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது இந்தியாவில் தான் இருக்கின்றதே தவிர வேறு எங்கும் இல்லை.

பொதுவாக 'சாதி' என்பது, இந்துக்கள் என்பவர்களுக்குள்—ஆரியக் கொள்கைகளுக்கு அடிமைப்படுபவர்களுக்குள் மாத்திரம்தான்–'கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது' என்கின்ற கொள்கையின்மீது நாலு சாதிகளாக, அதுவும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவை முறையே ஒன்றுக் கொன்று தாழ்ந்ததாகவும்—கடைசி சாதி மிக்க இழிவானதாகவும் கருதப்படுவதாகக் குறிக்கப்பட்டிருக்கின்ற விவரம் யாவரும் அறிந்ததேயாகும். இப்படி இருந்தாலும், இப்போது அனேக சாதிகள் இருப்பதற்கு என்ன காரணம்? அதாவது, 'ஆதியில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு வருணத்தாரும் தங்களில் சாதிமுறை தவறிக் 'கலப்பு,' 'விபச்சாரம்' செய்துகொண்டதால் ஏற்பட்ட பிரிவுகளென்றும் அப்படிப்பட்ட பிரிவுகளுக்குப் பஞ்சம சாதியார்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் ஆதாரங்களில் இருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



அப்படிச் சொல்லப்படுவதிலும் இப் 'பஞ்சம சாதிகள்' என்பது, இப்போது நமது நாட்டில் பெரும்பான்மையாய் இருக்கும் பல முக்கியமான சாதிக்காரர்கள் என்பவர்களே—பெரிதும் இந்த விபச்சாரப் பெருக்கால் ஏற்பட்ட பஞ்சம சாதிகள் என்றே காட்டப்பட்டிருக்கின்றது. ஆகவே, அதில் உதாரணமாக இன்று தமிழ்நாட்டில் பிரபல சாதியும் பிரமுக சாதியும் என்று சொல்லிக்கொள்ளப்படுவதான வேளாள சாதியார் எனப்படுபவர்களே பஞ்சம சாதியில். சேர்ந்தவர்கள் என்றும், பஞ்சம சாதியிலும் பிராமணன், க்ஷத்திரியப் பெண்ணைச் சோரத்தால் கலந்ததால் பிறந்தவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இவர்களில்—இந்தப்படியான வேளாளர் என்பவர்களில், விவசாயம் செய்பவர்களாக இருந்தால் அவர்களுக்குக் 'காணியாளர்' என்றும், பதவிகளில் இருந்தால் 'வேளாண் சாமந்தர்' என்றும் குறிக்கப்பட்டிருப்பதுடன், இவற்றிற்கு ஆதாரம் சுப்ரபோதகம், பிரம்ம புராணம், வைகாநசம், மாதவியம், சாதிவிளக்கம் என்கின்ற நூல்கள் என்றும் உள்ளது.

பிராமணன்–வைசியப் பெண்ணுடன் கலியாணத்தால் பிறந்த பிள்ளை அம்பட்டன் என்றும், சோரத்தால் பிறந்த பிள்ளைகள் குயவர், நாவிதர் என்றும் உள்ளது.

அதுபோலவே, பிராமணன்–சூத்திரப் பெண்ணுடன் கலியாணத்தால் பிறந்த பிள்ளை 'பரதவர்' அல்லது 'செம்படவர்' என்றும், சோரத்தால் பிறந்த பிள்ளை 'வேட்டைக்காரன்' அல்லது 'வேடுவர்' என்றும் உள்ளது.

அதுபோலவே, பிராமணன் க்ஷத்திரிய சாதிப் பெண்ணை விவாகம் செய்துகொண்டதால் பிறந்த பிள்ளைகளே 'சவர்ணர்' எனவும் 'தெலுங்கர்' எனவும் உள்ளது.

பிராமணப் பெண்ணுடன் சூத்திரன் விபச்சாரம் செய்ததால் பிறந்தவர்கள் 'சண்டாளர்கள்' என்றும் உள்ளது.

பிராமணகுலப் பெண்ணுடன் சண்டாளர் கூடிப்பிறந்த பிள்ளைகள் 'சருமக்காரர்' அதாவது 'சக்கிலியர்' என்றும், க்ஷத்திரிய குலப்பெண்ணுடன் சண்டாளர்கள் சேர்வதால் பிறந்த மக்கள் 'வேணுகர்' (வேணுகானம் செய்பவர்கள்), 'கனகர்' (தங்கவேலை செய்பவர்), 'சாலியர்' (நெசவு வேலை செய்பவர்) ஆவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாதிரி, கீழ்–மேல் சாதிகள் கலந்துகலந்து வந்ததால் ஏற்பட்ட சாதிகளில் ஒன்றாகிய 'அயோவகச் சாதி'ப் பெண்ணிடம், நிடாதனுக்குப் பிறந்த பிள்ளைகள் 'பார்க்கவர்கள்' என்றும் உள்ளது. இந்தப்படியே, இப்போது அமுலில் உள்ள சாதிகளெல்லாம் குறிக்கும்படியாகவே இன்னும் அனேக விஷயங்கள் காணப்படுகின்றன. அபிதான கோசம், அபிதான சிந்தாமணி முதலிய—எல்லா இந்துப் பண்டிதர்களாலும் ஆதாரமாய்க் கொண்டாடப்படும் புத்தகங்களிலும், மற்றும் பல சாதிகளை இதைவிடக் கேவலமாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றதோடு நான்கு சாதிகள் தவிர, மற்ற சாதிகள் எல்லாம் மேற்கண்ட நான்கு சாதிக்குள் மேல்கீழாகவும், கீழ்மேலாகவும் கலியாணம் செய்தும், விபச்சாரம் செய்தும் பிறந்த பிள்ளைகளாக ஏற்பட்டவர்கள். செட்டியார், ஆச்சாரியார் இவர்களைப்பற்றியும் மிகமிக இழிவாகக் கூறப்படுகின்றது.

ஆகவே, சாதியைக் கட்டிக்கொண்டு அழுவது இவ்விழிவுகளை மறைமுகமாய் ஏற்றுக் கொள்வதையே ஒக்கும்.

['குடி அரசு'–தலையங்கம்—16-11-1930]

சாதியைக் காப்பாற்றும் பலசாதி அபிமானிகளே! ஆதியில் ஏற்பட்ட நான்கு சாதிகள், 4000 சாதிகளாகப் பிரிந்ததற்குக் காரணம்—ஒரு சாதியும், மற்றொரு சாதியும் மாறிமாறிக் கலந்ததால் ஏற்பட்டது என்று குறித்தோம். அப்படி இருந்தும் இன்னும் நம்மவரிலேயே ஒரு கூட்டத்தார் அதாவது, தங்களை 'வேளாளர்' என்று சொல்லுபவர்களில் ஒருசிலர்—மேற்படி சாதிக் கிரமத்தை—அதாவது 'ஆதிசாதி' என்பவைகளான பிராமணன்,



க்ஷத்திரியன், வைசியன், பஞ்சமன் என்கின்ற கிரமத்தை ஒப்புக்கொண்டு—தங்களை மாத்திரம் 'சற்சூத்திரர்' என்று அழைத்துக் கொண்டும், மற்றொரு சிலர் அச் சாதிக் கிரம வார்த்தைகளை வடமொழிப் பெயர்களால் சொல்லாமல் தென்மொழிப் பெயரால் சொல்லிக் கொண்டு—அதாவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்கு ஆகப் பிரித்து—அவை தமிழ் நாட்டில் ஆதியிலேயே–அதாவது ஆரியர் வருவதற்கு முன்னாலேயே இருந்தன வென்றும், அவற்றிலும் தாங்கள் நாலாம் சாதி என்றும், ஒரு கற்பனையைக் கற்பித்துக் கொண்டு அப்படிப்பட்டவர்களான தாங்கள் நால்வருக்கும் தொண்டு செய்ய—அடிமையாய் இருக்க வேறுபல சாதிகள் ஏற்பட்டு இருப்பதாகவும் அவர்கள்தான் 'பள்ளு, பறை பதினெட்டுச் சாதிகள்' என்பது என்றும் ஒரு புதிய ஏற்பாட்டைச் சொல்லி ஒரு வழியில் திருப்தி அடைந்து வருகிறார்கள்.

அந்தப்படிக் கூறப்படும் 'பள்ளு, பறை பதினெண் குடிமக்கள்' என்பவர்களைக் குறிக்கும் முறையில் பணிசெய்யும் பதினெண்வகைச் சாதியார் என்னும் தலைப்பின் கீழ் குறிக்கப்பட்டிருப்பது என்னவென்றால்—இலை வாணிகன், உப்பு வாணிகன், எண்ணெய் வாணிகன், ஒச்சன், கல்தச்சன், கன்னான், குயவன், கொல்லன், கோயிற்குடியன், தச்சன், தட்டான், நாவிதன், பள்ளி, பறையன், பாணன், பூமாலைக்காரன், வண்ணான், வலையன் என்று அகராதியில் உள்ளது.

ஆனால், இதே பதினெண் மக்களை 'அபிதானகோசம்' என்னும் ஆராய்ச்சி நூலில் காண்கின்ற விவரப்படி குறிக்கின்றதென்ன வெனில், ஏவலாள்களாக சிவிகையர், குயவர், பாணர், மேளக்காரர், பரதவர் செம்படவர், வேடர், வலையர், திமிலர், கரையார், சான்றார், சாலியர், எண்ணெய் வாணிகர், அம்பட்டர், வண்ணார், பள்ளர், புலையர், சக்கிலியர், எனப் பதினெண் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, வேளாளர்களிலும் பல பிரிவுகளைக் காட்டியிருப்பதென்ன வெனில்—'சூத்திரருள்ளே வேளாளர் தலையாயினரர்; அவருள்ளே முதலிகள் தலையாயினார்; இவர்களுக்கு அடுத்தபடி வேளாஞ்செட்டிகள்—இவர்கள் சோழபுரத்தார், சித்தக் காட்டார், பஞ்சுக்காரர் முதலிய பல திறப்பட்டவர்கள். இதற்கு அடுத்த படியிலுள்ளோர் கார்காத்தார்; அடுத்த வரிசையிலுள்ளோர் சோழிய வேளாளர்—இவர்கள் சைவர்களாவார்கள்—சமபந்தி போசனத்திற்கும் உரியவர்கள். இதற்கு அடுத்த படியிலுள்ளவர்கள் சோழிய, துளுவ, கொடிக்கால் முதலிய பலவகை வேளாளர்களாவார்கள். இவரில் தாழ்ந்தோர் அகம்படியர்; அவரில் தாழ்ந்தோர் மறவர்; அவரில் தாழ்ந்தோர் கள்ளர்; அவரில் தாழ்ந்தோர் இடையர்; இவர்களுக்கடுத்தபடியிலுள்ளோர்–கவரைகள், கம்மவர்கள்.'

இவற்றுள் எதிலும் பிராமணர்கள் விஷயத்தில் எவ்விதமான பாகுபாடும், தாழ்வுக் கிரமமும் சந்தேகமோ, ஆட்சேபணையோ சொல்லுவதற்கு இடமில்லாமல் செய்துகொள்ளப் பட்டிருப்பதைக் கவனித்தால், சாதியின் சூழ்ச்சித் தத்துவம் நன்றாய் விளங்கும். மற்றபடி க்ஷத்திரியர்களிலும் வைசியர்களிலும் இருக்கும் சண்டைகளும், ஆட்சேபணைகளும்—க்ஷத்திரியர், வைசியர் என்று சொல்லிக்கொள்ளுவதில் எவ்வித உயர்வுத் தத்துவமும் இல்லாமல் ஒருவருக்கொருவர் தங்களில் வீண் வழக்காடிக்கொண்டு, பொதுஜனங்களாலும் ஒப்புக்கொள்ளப்படாமல் ஒருவரை ஒருவர் இழிந்துரைத்துக் குறைவுபடுத்தி வருவதும் அனேக இடங்களில் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். மற்றும், ஒவ்வொரு சாதியாரும் தங்கள் தங்கள் சாதிகளைப்பற்றி எவ்வளவு மேன்மை ஆதாரங்கள் கற்பித்துக்கொண்டாலும்–கண்டுபிடித்தாலும், எந்தவிதத்திலும் பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களுக்கு மற்றவர்கள் எல்லாம் கீழ்ப்பட்டவர்கள்தான் என்பதை நிலைநிறுத்துவதற்கு மாத்திரம் அவ்வாதாரங்கள் பயன்படுகின்றனவே தவிர, மற்றபடி எந்தக் கருத்தைக் கொண்டு கஷ்டப்பட்டு இவ்வித ஆதாரங்கள் கற்பிக்கப்பட்டதோ—கண்டுபிடிக்கப்பட்டதோ அவற்றிற்குச் சிறிதும் பயன்படுவதில்லை,

படிப்பகம்

www.padippakam.com



எனவே, இந்த நிலையில் இன்று நமது நாட்டில் பார்ப்பான் ஒருவனைத்தவிர மற்றவர்கள் தாழ்ந்த சாதியர்கள்—அதாவது பார்ப்பனனால் தொடவும், சமபந்தி போஜனம் பண்ணவும் மற்றும் சில பொது உரிமைகள் பெறவும் கூடாத சாதியார்கள் என்பதும்; அவனுக்கு அடிமையாய் இருக்கவும் 'விபசாரம்', 'கீழ் மேல் சாதிக் கலப்பு' என்று சொல்லும்படியான இழிவுத் தன்மையில் பிறந்தவர்கள் என்பதும் இன்றைய நமது சாதித் தத்துவமாக இருக்கின்றது.

மற்றபடி, இவற்றிற்கு எவ்வித தத்துவார்த்தம் சொல்லுவதானாலும் அதை மூடர்கள் முன்னால் மாத்திரம் சொல்லிக்கொள்ளக்கூடுமே தவிர, சாதிக்கும் சாதியைக் கற்பித்த மதத்திற்கும், இவ்விரண்டிற்கும் ஆதாரமான வேதம், சாஸ்திரம், தர்மம் என்று சொல்லப்பட்ட ஆதார நூல்களில் இருக்கும் உண்மைகளுக்கும் எவ்வித ஆட்சேபணையும் எவ்வித தத்துவார்த்தமும் சொல்லமுடியாது என்பதையும் யாதொரு பதிலும் சொல்லாமல், பேசாமல் இழிவை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டியதாகும்.

இவை ஒருபுறமிருக்க, இந்தச் சாதிக் கிரமத்தில் பார்ப்பனர்களைத்தவிர மற்றவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் யோக்கியதைகளையும் உரிமைகளையும் பார்ப்போமானால் கடுகளவு பகுத்தறிவோ, மானமோ இருக்கின்ற மனிதர்கள் ஒருகாலமும் தங்கள் சாதிப்பேரைச் சொல்லிக்கொள்ள முடியாதபடியும், அதைக் கனவிலும் நினைக்கமுடியாதபடியும் இருப்பதை நன்றாய் உணரலாம். அதாவது, நாலாவது சாதியர்களாக—சூத்திரர்கள் என்று சொல்லப்படும் வகுப்பாருக்குப் பார்ப்பனர்கள் ஏற்படுத்தியிருக்கும் உரிமையானது எப்படி இருக்கின்றது என்று பார்த்தால்—இப்போது 'பாரம்பரியமாய்க் குற்றம்புரியும் வகுப்பார்' என்று சொல்லக்கூடியவர்களுக்குச் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிர்ப்பந்தத்திற்கும் சட்ட திட்டங்களுக்கும் அவர்களை நடத்துகின்ற மாதிரிக்கும் குறைவில்லாமல் நடத்துகின்ற மாதிரியாகவே ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

உதாரணமாக, தர்ம சாஸ்திரம் என்று சொல்லப்பட்ட சட்டங்களில் உள்ளதையே சொல்வோம்; 'ஸ்நாதமஸ்வம் கஜமத்தம் ரிஷபம் காமமோஹிதம் சூத்தரம க்ஷரசம்யுக்தம் தூரதப் பரிவர்ஜ்ஜையேல்'—அதாவது, 'குளிப்பாட்டிய குதிரையையும், மதங்கொண்ட யானையையும், காமவிகாரங்கொண்ட காளை மாட்டையும், எழுத்துத் தெரிந்த சூத்திரனையும் பக்கத்தில் சேர்க்கக்கூடாது' என்பது கருத்தாகும்.

'ஜப, ஸ்தப, தீர்த்த யாத்திர பிரவர்ஜ்ஜய, மந்தரசாதனம் தேவராதனம் சசய்வஸ்தீரீ சூத்திர பததானிஷள்'—அதாவது 'ஜபம், தவசு, தீர்த்த யாத்திரை, சன்னியாசம், கடவுள் தோத்திரம், ஆராதனை இந்தக் காரியங்கள் பெண்களும் சூத்திரர்களும் ஒருபோதும் செய்யக்கூடாது.'

'நபடேல் சமஸ்கிருதம் வாணீம்'—'சூத்திரன் சமஸ்கிருதம் படிக்கக் கூடாது' என்பதாகும்.

'நைவ சாஸ்திரம் படேநைவ சுருணுயாத் வைதிகாக்ஷரம், நஸ்நாயாது தயால்பூர்வம் தபோ மந்திரஞ் சுவர்ஜ்ஜயேல்'—அதாவது, 'சூத்திரன் ஒருக்காலும் சாஸ்திரம் படிக்கவோ, வேதத்தைக் கேட்கவோ கூடாது. அவன் சூரிய உதயத்திற்குமுன் குளிக்கவும், மந்திரம் ஜெபிக்கவும், தபசு செய்யவும் கண்டிப்பாய்க் கூடாது.'

'இதிகாச புராணானி நபடேச்ரோது மர்ஹசி'—'இதிகாச புராணங்களுங்கூட சூத்திரன் படிக்கக்கூடாது. ஆனால், பிராமணர்கள் படிக்கக் காதால் கேட்கலாம்.

'சாதுர்வர்னியம் மயாசிருஷ்டம், பரிசரியாத்மகம் கர்மம் சூத்ரஸ்ஸியாபி பாவனாம்' (கீதை)—'நான்கு வருணங்களும் என்னால் சிருஷ்டிக்கப்பட்டவை; அவற்றுள் சூத்திரனுக்கு பிராமண சிசுருஷைதான் தர்மம்' என்பது.



இதுபோல் ஆயிரக்கணக்காக எழுதிக்கொண்டே போகலாம். இவைகள் எல்லாந்தான்—நமது சாதிமத ஆச்சார அனுஷ்டானங்களாக இருக்கப்படவேண்டியவை என்று வேதங்கள், தர்ம சாஸ்திரங்கள், பகவான் வாக்குகள் என்று சொல்லப்படுவைகளில் சொல்லப்பட்டவைகளாகும்.

எந்தக் காரணத்தாலோ இந்துமத தர்மத்தை அனுஷ்டித்துத் தீரவேண்டியதல்லாத ஓர் ஆட்சி இந்த நாட்டுக்கு ஏற்பட்டதன் பலனால் நம்மில் சிலராவது இந்தத் தர்மங்கள் முழுவதும் வலியுறுத்தப்படாமல் இருக்க முடிகின்றது. ஆனால், இந்த நிலையாலும் நாம் மறுபடி நமது சாதியையும் மதத்தையும் காப்பாற்றும் கவலைகொண்டு ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு என்று மதத்தையும் சாதியையும் சொல்லி அவற்றை நிலைநிறுத்திக் கொண்டே போவோமானால், பின்னால் நமது நிலை என்னாகும் என்று யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இந்துக்கள் என்பவர்களுக்குள் சாதிப் பிரிவு இருக்கும்வரை உயர்வு–தாழ்வு போகாது என்பது கண்டிப்பாகும்.

இன்றையதினம் தேசியவாதிகளாக இருக்கின்றவர்கள் இந்தியா சுதந்திரம் அல்லது பூரண சுயேச்சை அடையவேண்டுமென்கின்ற உண்மையான ஆசையுடையவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் வெள்ளைக்கார ஆட்சி இருக்கும்போதே சாதி வித்தியாசங்கள் எல்லாம் ஒழியும்படியான ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டியதுதான் அறிவுள்ள வேலையாகும். அதை விட்டுவிட்டு, 'முதலில் நீ போய்விடு! நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், என்று சொன்னால் அது, தான் சாவதற்குத் தானே மருந்து குடித்தது போல்தான் ஆகுமே தவிர, வேறொரு பலனும் தராது. ஏனெனில், இந்தியாவில் இந்துக்களில் 1000-க்கு 999 பேருக்குக் குறையாமல் சாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுமென்று எண்ணமில்லாதவர்களாய் இருப்பதோடு, ஒவ்வொருவரும் மேல் சாதி ஆகவேண்டுமென்று ஆசைப்படுபவராகவும் தனக்குக்கீழ் பல சாதிகள் இருக்கவேண்டுமென்ற உணர்ச்சி உள்ளவர்களாகவுமே இருக்கின்றார்கள். இன்றைய தினம் இந்த நிலையில் இருக்கும் பல சவுகரியங்களை ஒழித்துவிட்டு, வருணாசிரமக் கொள்கையும், சாதி ஆதிக்கமும் உடையவர்களான மக்களிடம் ஆட்சி வந்துவிட்டால் பிறகு எவ்விதத்திலும் சாதிக் கொடுமைகள் ஒழியா.

['குடி அரசு'–தலையங்கம்—30-11-1930]

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

மனிதனுக்குக் கடவுள் உணர்ச்சி தோன்றிய காலந்தொட்டே, இந்த நாட்டில் மேல்சாதி–கீழ்சாதி உணர்ச்சி தோன்றி விட்டது. கடவுள் பேராலேயே மேல்–கீழ் சாதி உணர்ச்சிகள் காட்டப்பட்டிருக்கின்றன. இந்துமதம் என்பதில் வைணவத்திலாவது, சைவத்திலாவது சாதிப் பிரிவு, உயர்வு–தாழ்வு காணப்படாத கடவுள்களோ, அவதாரங்களோ, திருவிளையாடல்களோ, கடவுள்களைக் காட்டிய பெரியோர்களோ, தத்துவம் புராணங்களோ, இதிகாசங்களோ ஏதாவது ஒன்றைக் காட்ட முடியுமா? 64 நாயன்மார்களும் 64 சாதிக்காரர்களாய்ப் பிறந்திருக்கிறார்கள். 12 ஆழ்வார்களும் 12 சாதிக்காரர்களாய்ப் பிறந்திருக்கிறார்கள். இந்து மதத்திற்கு ஆதாரமான, சட்டமான மனுதர்ம சாஸ்திரம் முதலியவைகளை எடுத்துக்கொண்டால் அவைகளில் அளவில்லாத சாதிகளும், அதற்குத் தாரதம்மியமும் காணப்படுவதை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே, எந்த நிலையில் எந்த ஆதாரத்தைக் கொண்டு—இன்று உங்கள் மத நம்பிக்கைக்காரனும் அதைச் சேர்ந்த கடவுள் நம்பிக்கைக்காரனும் அது சம்பந்தமான வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாச நம்பிக்கைக்காரனும் உங்களிடம் வந்து சாதிப் பாகுபாடும் சாதி வித்தியாசமும் இல்லை என்று சொல்ல முடியும்?

படிப்பகம்

www.padippakam.com



இந்துமத சம்பிரதாயப்படி சாதி இல்லை என்று உங்களிடம் யார் சொல்ல வந்தாலும் அவர்களை மூடர்களென்றோ, மோசக்காரர்கள் என்றோதான் நீங்கள் கருதவேண்டும். மற்றும் சிலர், 'தொழில் பாகுபாட்டைக் கொண்டு சாதி வகுக்கப்பட்டதே ஒழிய—பிறவியைக்கொண்டு பிரிக்கப்படவில்லை. ஆதலால் தொழில் பிரிவு இருக்கத்தான் வேண்டும்' என்று சொல்லி, 'கீதையில் பகவான் சொல்லுகின்றார்' என்று உங்களை ஏய்க்கக்கூடும். தொழிலுக்காக வந்தாலும்—ஏன் பாகுபாடு இருக்க வேண்டும்? ஒரு மனிதன் காலையில் தச்சனாகவும், மத்தியானம் வியாபாரியாகவும், இரவில் உபாத்தியாயராகவும் ஏன் இருக்கக்கூடாது? அவனே மறுநாள் காலையில் உழுகின்றவனாகவும், பகலில் நெய்கின்றவனாகவும், மாலையில் விற்கின்றவனாகவும், இரவில் காவற்காரனாகவும் ஏன் இருக்கக்கூடாது?

இந்தப்படி ஒரு முறையும் நமக்கு வேண்டியதில்லை என்றும் சொல்வேன். அது மக்களுக்கு எந்த முறையிலும்—எந்த அர்த்தத்திலும் பயன் விளைவிக்கவே இல்லை. இவையெல்லாம் உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை முதலிய கொடுமைத் தன்மைகளைத்தான் உண்டாக்கப் பயன்படுகின்றனவே ஒழிய மக்கள் சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்கும் சிறிதும் பயன்படவில்லை.

[இருகூரில், 3-1-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 11-1-1931]

## 2. சாதிகள் நடைமுறை

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று இம் மாநாட்டைத் திறந்து வைப்பது என்னும் முறையில் இந்த மாநாடு சம்பந்தமாய் நான் ஏதாவது சில வார்த்தைகள் பேசவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயமாய் என்னுடைய அபிப்பிராயம் நீங்கள் தெரிந்ததேயாகும். தாழ்த்தப்பட்ட மக்களை அவர்களுக்கு, மற்றவர்கள் இழைத்து வரும் கொடுமையிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்பதை உண்மையான கருத்துடன் பார்த்தால் அது புரட்சி வேலையே ஆகும். ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை ஒரு பெரிய அஸ்திவாரத்தின்மீதே கட்டப்பட்டிருக்கின்றது.

எப்படி என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் கீழ்ச்சாதி மக்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் எல்லாம் பிறவியிலேயே கீழ்மைத் தன்மை அடைந்தவர்கள் என்றும்; அவர்கள் கடவுளாலேயே அந்தப்படி பிறப்புவிக்கப்பட்டவர்கள் என்றும்; அதற்கு மதங்களும், மத சாஸ்திரங்களுமே ஆதாரங்கள் என்றும்; கடவுள் செயலையோ, மதவிதிகளையோ யாரும் மாற்றக்கூடாதென்றும்; அவை மாற்றுதலுக்குக் கட்டுப்பட்டவையல்ல என்றும் சொல்லப்படக்கூடிய ஒரு பலமான அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவம் பெறுவதும், தீண்டாமைத் தத்துவம் மனித சமூகத்திலிருந்து விலக்கப்படுவதும் வெறும் வாய்வார்த்தையாலோ பிரசாரத்தினாலோ, மேல் சாதிக்காரர்களைக் கேட்டுக் கொள்வதினாலோ ஆகக்கூடிய காரியம் என்று யாராவது நினைத்தால் அவர்களது வாழ்வு வீண் வாழ்வு என்றுதான் சொல்வேன். தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்களில் சிலர் தாங்கள் ஏதோ குளித்து முழுகிவிட்டு, விபூதிப் பூச்சோ, பட்டை நாமமோ விதிப்படி அணிந்து, வைதிகர்கள்போல் வேஷமணிந்து, மது மாமிசம் சாப்பிடுவதில்லை என்று சொல்லிக்கொண்டு, ஸ்வாமி என்று பெயர் வைத்துக்கொண்டு திரிந்தால் தங்கள் நிலை உயர்ந்துவிடும் என்றும், தீண்டாமை ஒழிந்துவிடும் என்றும் கருதியிருக்கிறார்கள்.

இது மற்றவர்களை ஏமாற்ற நினைத்துத் தங்களையே ஏமாற்றிக்கொள்ளும் பைத்தியக்காரத்தனமேயாகும். இந்தப்படி வெகுபேர் தாழ்த்தப்பட்ட மக்களில்—ஆதித் திராவிடர்களில் வெகுகாலமாகவே வேஷம் போட்டுப் பார்த்தாய்விட்டது. அதற்குப் பல



புராண சரித்திர ஆதாரங்கள் உண்டு. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பிருந்து நாளதுவரை தீண்டாமை விலக்கு விஷயத்தில் ஒரு காரியமும் முடிந்ததில்லை என்று தைரியமாய்ச் சொல்லலாம். ஏதோ சில பாஷாண்டிகள் செய்த காரியங்களால் தங்கள் சுயநலத்துக்குப் பயன் ஏற்படுத்திக்கொள்ளத்தான் முடிந்திருக்குமே ஒழிய, அப்படிப்பட்ட வேஷத்தாலும் பக்தியாலும் காரியத்தில் ஏதும் ஆகியிருக்காது; ஆவதற்கும் நியாயமில்லை.

ஏனெனில், அதன் அஸ்திவாரம் அப்பேர்ப்பட்டதாகும். தீண்டாமை விஷயம் ஒருபுறமிருக்கட்டும். எவ்வளவோ காலமாகப் போராடி வந்தும், எப்படிப்பட்டவர்கள் எல்லாம் பாடுபட்டும்—சூத்திரப்பட்டம், அதுவும் 100-க்கு 3 பேர்களல் 100-க்கு 97 பேர்கள் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் சூத்திரப்பட்டம் ஒழிக்கப்பட முடிந்ததா? சூத்திரர்களில் சிலர் மகாத்மா, ரிஷி, முனிவர்கள், ஆழ்வார்கள், தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள் என்றெல்லாம் கூட ஆக்கப்பட்டிருக்கிறார்கள், என்றாலும்—மனித சமூகத்தில் ஒரு பெருங் கூட்டத்தை 'சூத்திரன்' என்பதாகக் குறிக்க ஏற்படுத்தப்பட்ட கலம் (column) இன்னும் அழிக்கப்படவே இல்லை; அது சுலபத்தில் அழிக்கப்படக் கூடியதாயும் இல்லை. நேற்று இவ்விடம் உங்கள் ஆதித் திராவிட மாநாட்டைத் திறந்தவரும், அதற்குத் தலைமை வகித்தவரும், இருவரும் மேல்சாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர்கள்தாம். அதாவது மந்திரியார் கனம், பி. டி. இராஜன் அவர்களும், உங்கள் ஜில்லாபோர்ட் பிரசிடெண்டு தோழர் சாமியப்ப முதலியார் அவர்களும் சைவ வேளாளர்—அதுவும் தொண்டைமண்டல சைவ வேளாளர்கள் ஆவார்கள்; பார்ப்பனர்களுக்கு அடுத்த சாதியார் என்பதோடு, அவ்வகுப்பில் சிலர் பார்ப்பனர் வீட்டில்கூட சாப்பிடமாட்டோம் என்பார்கள். அப்படியிருந்தும் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?' என்றுதான் பார்ப்பனர்கள் கேட்பார்கள்.

அதுமாத்திரமல்லாமல், அவர்கள் எல்லோரையுமே சூத்திரன் என்கின்ற கலத்தில்தான் பார்ப்பனர்கள் பதிவார்களே ஒழிய, நான்கு வருணம் என்பதில் தொண்டைமண்டல வேளாளர் என்பதற்கு வேறுகலம் இல்லவே இல்லை. எத்தனையோ தொண்டைமண்டல வேளாளர்—தாங்கள் சூத்திரர்கள் அல்லவென்றும், தங்களுக்கும் வருணாசிரமத்திற்கும் சம்பந்தமில்லையென்றும் வெகுகாலமாகவே கூப்பாடு போட்டிருக்கிறார்கள். மற்றும் பலர் தங்களை சாதாரண சூத்திரர்கள் அல்லவென்றும், 'சற்சூத்திரர்கள்' என்றும் 'பட்டுக் குஞ்சம் கட்டிக் கொள்வதுபோல' சொல்லிப் பார்த்திருக்கிறார்கள்; என்ன செய்தும் அதை மாற்ற முடியாமலே போய்விட்டது. அப்படியிருக்க, அய்யோ பாவம், உலக வாழ்க்கையில் எவ்வளவோ கீழான நிலையில் வைக்கப்பட்டு—எவ்வித ஆதரவும் சவுகரியமும் இல்லாத நீங்கள் பறைத்தன்மையை ஒழித்துவிடுவதோ, மறைத்துவிடுவதோ என்றால், அதுவும் மதசம்பந்தமான வைதீக வேதத்தைப் போட்டுக்கொண்டு ஒழித்துவிடுவது என்றால்—அது 'சமுத்திரத்தைச் சிட்டுக்குருவி வற்றடிக்க முயற்சித்தது போல்'தான் ஆகுமே ஒழிய வேறில்லை. வருணங்கள் என்பது 'கடவுளால்' சிருஷ்டிக்கப்பட்டதாகும். எப்படி எனில், கீதையில் பகவான் கிருஷ்ணன் 'நான்கு வருணத்தையும் நான்தான் சிருஷ்டித்தேன்' என்று சொல்லியிருக்கிறார். சாதிகள் என்பது மதத்தினால் ஏற்பட்டதாகும். எப்படி எனில், மனுதர்ம சாஸ்திரத்தில் சண்டாளசாதி உற்பத்திக் கிரமம், மற்ற சாதிப்பிரிவு உற்பத்திக் கிரமம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, கடவுளும் மதமும் அதற்கு ஆதாரமான கீதையும் மனுதர்ம சாஸ்திரமும் காப்பாற்றப்படுவதாய் இருந்தால் சூத்திரப்பட்டமும், கீழ்ச் சாதித் தன்மையும் எப்படி மாற்றப்படமுடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

தோழர் காந்தியார் தீண்டாமையை ஒழித்துவிட வேண்டும் என்று வரட்டுக் கத்து கத்திப்பார்த்து விட்டார்; பல இலட்ச ரூபாயும் வசூலித்து மேல் சாதிக்காரர், மேல் வருணக்காரர் என்பவர் கையில் ஒப்படைத்து விட்டாரே தவிர, மற்றபடி தீண்டாமையின் ஒரு சிறு தூசியைக்கூட அசைக்க முடியவில்லை. ஏனென்றால், அவர் மற்றொரு பக்கம் கீதையையும் மனுதர்ம சாஸ்திரத்தையும், வருணத்தையும், சாதிக் கிரமத்தையும் ஆதரித்து வருகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



இன்று தீண்டாமை விலக்கு வேலையிலும், சாதி வித்தியாச ஒழிப்பு வேலையிலும் ஈடுபட்டிருப்பவர்களில் 100-க்கு 100 பேரும் கீதை, மனுதர்ம சாஸ்திரம்ஆகியவற்றை நம்பும்–ஆதரிக்கும் சோணகிரிகளே ஆவார்கள். இவர்கள் எவ்வளவு நாளைக்குப் பாடுபட்டாலும்—அடியற்ற ஓட்டைக் குடத்தில் தண்ணீர் இறைக்கும் மூடர்களுக்கு ஒப்பானவர்களே யாவார்கள். ஆகவே, தீண்டாமை ஒழிப்புக்கோ, சாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழித்தாக வேண்டும். மதத்தை ஒழிக்க உங்களால் முடியவில்லையானால் மதத்தைவிட்டு நீங்களாவது விலகியாக வேண்டும். உங்கள் மதம் போகாமல் ஒரு நாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ, பறைத் தன்மையோ ஒழியவே ஒழியாது என்பது கல்லுப் போன்ற உறுதி. உதாரணம் வேண்டுமானால், இதுவரையில் தீண்டப்படாதவர்களாயிருந்து மனித சமூகத்தில் தீண்டக் கூடியவர்களாக ஆன எவரும் தீண்டப்படாதவர்களாய் இருந்த போது அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த மதத்தை உதறித் தள்ளிவிட்ட பின்புதான், தீண்டத்தக்கவர்கள் ஆகி இருக்கிறார்கள். இதற்குக் கோடிக்கணக்கான மக்களை ஊர், பெயருடன் புள்ளி விவரத்தோடு காட்டலாம்.

ஆதலால், மதத்தைக் காப்பாற்றிக்கொண்டு தீண்டாமையை விலக்கி விடலாம் என்று நினைத்து ஏமாற்றமடையாதீர்கள். தோழர் காந்தியார் ஒரு மதவாதியே யொழிய, 'மனிதஜீவ அபிமான வாதி' அல்லவே அல்ல. அவர் தனது இந்து மதம் காப்பாற்றப்படுவதற்காகத்தான் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி வந்திருக்கிறாரே ஒழிய தீண்டப்படாத மக்களின் கொடுமைகள் தீரவேண்டுமென்பதை முக்கியமாய்க் கொள்ளவில்லை. காங்கிரசுக்காரர்களுக்கும் தீண்டாமையைப்பற்றிய கவலை கிடையாது. ஏனெனில், அவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள். அனுபவத்தில் தீண்டாமை ஒழிப்பை அவர்கள் கையாடுவதானால் முடிவில் அவர்களே தீண்டத்தகாதவர்களாக ஆகிவிட நேரிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில், தீண்டாமை ஒழியும்போது பார்ப்பனர்களின் மேல் சாதித் தன்மையும் ஒழிந்துவிடும். மேல் சாதித்தன்மை ஒழிந்து விட்டால் பிறகு பார்ப்பனர்களை யார் சட்டைசெய்வார்கள்? ஆகவே, தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கு ஏதாவது விடுதலை வேண்டுமானால் அரசாங்கத்தைக் கொண்டுதான் செய்து கொள்ள முடியும். அரசாங்கம் மனித சமூகத்தில் உள்ள கொடுமைகளையும், ஒருவரை ஒருவர் கொடுமையாய் நடத்தும் கொடுமையையும் ஒழிப்பதற்காகவே இருந்துவர வேண்டியதாகும். அதோடு மாத்திரமல்லாமல், இன்று இருந்துவரும் அரசாங்கம் தீண்டாமையை அனுசரிக்கும் அரசாங்கம் அல்ல. தீண்டப்படாதவரைப் பொறுத்தவரை நல்ல காலத்தின் அறிகுறியாக இந்தியாவின் ஏக சக்ராதிபத்தியமானது இந்திய அரசர்கள் கையில் இல்லாமல், ஒரு அன்னிய கண்ட அரசரிடத்தில் இருக்கிறது. இதை இந்தியர்கள் ஆட்சிக்குக் கொண்டுவரத்தான் காங்கிரஸ் முயற்சிக்கிறதாம்; முயற்சியும் நடக்கின்றது.

அப்படியானால், அதற்குள்ளாகவே உங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள நீங்கள் முயற்சி செய்யுங்கள். உங்களால் கூடுமானவரை—இன்றைய ஆட்சியைப் பார்ப்பன ஆட்சியாகச் செய்வதற்குச் செய்யப்படும் முயற்சியை எதிர்த்து நில்லுங்கள். சுயராஜ்யம், சுய ஆட்சி என்பது—இராமராஜ்ய ஆட்சி, கீதை ஆட்சி, மனுமுறை ஆட்சி என்றெல்லாம் சொல்லப்படுவது நீங்கள் அறிந்ததேயாகும். மநு ஆட்சிக்கோ, இராமராஜ்ய ஆட்சிக்கோ இந்தியா போய்விடுவதானால் இந்தியா பூகம்பத்தினாலோ, சண்டமாருதத்தாலோ, காட்டு வெள்ளத்தாலோ அழிந்து போவதே மேலானதாகும். ஆதலால், நீங்கள் பிரிட்டிஷ் ஆட்சியிலேயே உங்களது விடுதலைக்கு முயற்சி செய்யுங்கள். பழைய ஆட்சிகள் எதுவும் தீண்டாமையை ஒழிக்க முடியவே இல்லை. இந்த ஆட்சியால் நீங்கள் கலெக்டர்களானீர்கள்; ஜட்ஜுகளானீர்கள்; வக்கீல்களானீர்கள்; டாக்டர்களானீர்கள்; உபாத்தியாயர்களானீர்கள்; சட்டசபை மெம்பர்களானீர்கள்; ராவ்பகதூர், திவான் பகதூர்களானீர்கள்; மந்திரிகளுமாகப் போகிறீர்கள். ஆகவே, உங்களுடைய குறைகள் கவனிக்கப்படவும், உங்கள் சமூகம் முற்போக்கடைந்து மற்ற மக்கள்போல் பாவிக்கப்



படவும், பிரிட்டிஷ் ஆட்சியில்தான் இடம் உண்டே ஒழிய—இந்து மதத்தில் இந்து ஆட்சியில், இராம ராஜ்யத்தில், மனுநீதி ஆட்சியில், கீதையில், சுதேச மன்னர்கள் ஆட்சியில் இடம் இல்லை என்பதை உங்களுக்கு வலியுறுத்துகிறேன்.

மற்ற வகுப்பாருடைய அரசியல் கிளர்ச்சிகளில் நீங்கள் பட்டுக்கொள்ளாதீர்கள். அதெல்லாம் பணக்காரனும், மேல்சாதிக்காரனும், படித்த கூட்டமும் இன்னமும் அதிகமாய் ஆதிக்கம் செலுத்தவே பாடுபடும் கிளர்ச்சியாகும். உங்களுக்கு அந்த மூன்றும் இல்லை. அவற்றைப்பெற நீங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தையே எதிர்பாருங்கள். மற்றவர்களெல்லாம், பிரிட்டிஷ் அரசாங்க பக்தராய், இராஜ விசுவாசிகளாய் இருந்துதான் இன்றைய மேல்பதவி அடைந்து இன்னும் மேல்பதவிக்குக் கிளர்ச்சி செய்கிறார்கள். நீங்களும் அதுபோலவே இருந்து சம பதவியாவது அடைந்து பின்னால், வேண்டுமானால் கிளர்ச்சி செய்து மேல்பதவிக்கு வர முயலுங்கள்.

தோழர்களே, உங்கள் விஷயத்தைப் பொறுத்தமட்டில் என்னுடைய அபிப்பிராயம் இதுவேயாகும். பிறகு நீங்கள் யோசித்துப் பார்த்து உங்களுக்குத் தோன்றியபடி நடவுங்கள்.

[சீர்காழியில், 10-7-1935-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-7-1935]

## 3. சாதி ஒழிக!

சகோதரிகளே! சகோதரர்களே!

உங்களை நீங்கள் எந்தச் சாதியில் சேர்த்துப் பேசிக்கொண்டாலும் அதனால் ஒருவித நலனும் ஏற்படாது. இப்பொழுது அருகே உட்கார்ந்திருக்கும் கனம் மந்திரி அவர்கள் நம் மாகாணத்திற்கே முதன் மந்திரியாய் இருந்தபோதிலும், நம் இந்திய நாட்டிற்கே மந்திரியாக இருக்கக்கூடிய யோக்கியதை அவருக்கிருந்தபோதிலும், அவர் ஒரு பெரிய வேளாளர் குலத்தவராய் இருந்தபோதிலும் அவரைத் தாழ்ந்த குலத்தவராகச் சேர்த்திருக்கிறார்கள். இவருக்குமேல் இன்னும் மூன்று குலங்களிருக்கின்றன. இவருடைய சாதி 'சூத்திரர்' சாதி என்றுதான் கூறப்படுகின்றது. ஒரு சாதியின் பெயரைக்கொண்டு அழைத்துக்கொள்கிறவரையில் உயர்வு, தாழ்வு வித்தியாச உணர்ச்சி போகவே போகாது. இந்த வித்தியாசம் ஒழிவதற்குச் சாதிப் பெயர்களும் உணர்ச்சியும் தொலைய வேண்டும்.

சகோதரர்களே! மிக்க காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற வேண்டியிருக்கிறது. மாநாடும் சீக்கிரம் முடிவுற வேண்டியதாகவுமிருக்கிறது. ஆகையால் இன்று காலையில் சொன்னதன்படி முகவுரையாகச் சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்தமாதிரி மாநாடு இப்போது நாடெங்கும் நடந்துவருவதைக் காண்கிறோம். இந்த நாடு பலசாதி, பல வகுப்பார் அடங்கியதாக இருக்கிறது. எப்போது நமது நாட்டில் சாதி வகுப்பு ஏற்பட்டு அதனுள் உயர்வு தாழ்வு அமைக்கப்பட்டுப் போய்விட்டதோ அன்று முதலே தனிச் சாதி மாநாடு கூடவேண்டியது அவசியமேற்பட்டுவிட்டது. ஒவ்வொரு சாதியாரும் தனித் தனியாக மாநாடுகள் நடத்திக்கொண்டிருந்தால் எப்போதுதான் ஒன்று சேருவது என்று பலபேர் குற்றஞ்சொல்வதைக் கேட்டிருக்கிறேன். சிலர் இத்தகைய மாநாடுகளை 'வகுப்பு மாநாடுகள்' என்று சொல்லி மாநாட்டிற்கு வரமுடியாதென்று மறுக்கவும் பார்த்திருக்கிறேன். இத்தகைய காரணங்களைக்கொண்டு வகுப்பு மாநாடு கூட்டுவோரைக் குறைகூறமுடியாது. இத்தகைய மாநாடுகள் கூட்டவேண்டியது மிகவும் அவசியமாகவே இருக்கிறது. ஒரு வகுப்பார் தாங்கள் தாழ்ந்த நிலைக்குள்ளாக்கப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு வருவதை உணராதிருக்கும் வரையில் ஒருவித ஏற்பாடும் செய்யாமல்



படிப்பகம்

www.padippakam.com



தான் இருப்பார்கள். அவர்களுக்குத் தாங்களும் மனிதர்கள், தாங்களும் மற்றோருக்குச் சமமானவர்களே, தங்களைத் தாழ்ந்தவர்களெனக் கூறுவது சுயநலக் கூட்டத்தாரின் பொறுக்கமுடியாத கொடுஞ்செய்கை என்று உணர்ச்சி ஏற்பட்டுவிட்டால் சமத்துவத்தை அடைவதற்கே முயற்சி செய்வார்கள். 'தேவேந்திரகுல வேளாளர்' என்று உயர்ந்த பதத்தால் கூறப்படினும், தாழ்த்தப்பட்டுத் தொடுவதற்கு அருகதையற்றுக் கிடப்பதால், சுயமரியாதை உணர்ச்சி வந்துவிட்ட பிறகு சமத்துவத்தை அடைவதற்கே முயற்சி செய்வான். இப்போதிருக்கும் கஷ்டமெல்லாம் தாழ்ந்த சமூகத்தவரென்று எல்லோராலும் இகழப்பட்டு அமுந்தி வைக்கப்பட்டிருப்பதால், இதிலிருந்து எழும்பவேண்டியது முக்கியமானதாக இருக்கிறது.

இதுபோன்ற மாநாடுகளின் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமென்ன? மாநாட்டின் ஆடம்பரத்தைப்பற்றியும், காட்சியைப்பற்றியும் பெருமை பேசிக்கொண்டிராமல் என்ன செய்திருக்கிறார்கள்; என்ன முடிவு கூறியிருக்கிறார்கள்; என்ன தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள் என்று கவனித்து, அதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ, எப்படியெப்படி நடக்க வேண்டுமோ அப்படி அப்படிச் செய்து நடக்க முயன்று பாடுபடவேண்டும்.

உலகப் போட்டிப் பந்தயத்திற்கு நாம் லாயக்கற்றவர்களாய்ப் பிற்போக்கிலிருக்கிறோம். எல்லாரையும் வரிசையாய் நேராக நிறுத்திவைத்துப் பந்தயம் விட்டால் நாம் ஒரு கை பார்த்துவிடலாம். அதல்லாமல், ஒருவர்பின் ஒருவர் நிற்கும் வரிசையில் தேவேந்திர குலத்தார் கடைசியிலிருக்கிறார்கள். நிர்ப்பந்தப்படுத்திப் போட்டி போடச் சொன்னால், எவ்வளவுதான் முயன்றாலும், கடைசியிலிருப்பவர் கொஞ்சம் கடைசியில்தான் போவார். நமக்குக் கல்வி வசதியும், பொருளாதார வசதியும் குறைவாகவே இருக்கிறது. படிப்பதற்கு முயற்சியும், அறிவும், கவலையும் நமக்கு இல்லை என்பதாகச் சிலர் சொல்லக்கூடும். படிப்பதற்கு அறிவும், முயற்சியும், கவலையுமில்லாதவன் எவனுமிருக்கமாட்டான். படிக்க முடியாமலும், அதன் மூலம் பொருளாதார வசதியைச் செய்துகொள்ள முடியாமலும் நம்மைக் கட்டிப்போட்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கட்டை அவிழ்த்துவிட்டால் நாம் போட்டியில் ஒரு கை பார்க்கலாம்.

தேவேந்திரகுல வேளாளர் என்போர் தொடக்கூடாதவர் என்று சிலர் நினைத்துக்கொண்டிருந்தாலும் அவர்களும் வேறு சிலரால் சூத்திரன், அதாவது விபச்சாரி மகன் என்று தள்ளி வைக்கப்பட்டுத்தானிருக்கிறார்கள். இவ்வாறு வேசி மக்கள் என்று எல்லோரையும் இழிவாகக் கருதிக்கொண்டிருக்கும் பார்ப்பான்கூட தென்னாப்பிரிக்காவில் வெள்ளைக்காரர்களால் தாழ்ந்தவனென்றே குறைகூறி ஒதுக்கப்படுகிறான்; தெருவில் வசிப்பதினின்றும் நடப்பதினின்றும் தடுக்கப்படுகிறான். ஆதலால் உலகம் முழுதும் ஒவ்வொருவரும் தாழ்ந்தவர்களாகத்தானிருந்து வருகிறார்கள்.

பிறர் உங்களைப் பள்ளர், பறையர் என்று சொல்லி நீங்கள் கேவலமானவர்கள் என்று கருதப்பட்டால், அவர்கள் அதைவிடக் கேவலமானவர்கள் என்றே சொல்லுவேன். அவ்வாறு உங்களைக் கேவலமாகக் கருதுகிறவர்களுக்குள்ள பெயரைவிட உங்கள் பெயர் கேவலமானதல்ல. யாரேனும் என்னைப் பள்ளன், பறையன் என்று அழைப்பது மேலா, சூத்திரன் என்று அழைப்பது மேலா என்று கேட்டால், சூத்திரன் என்று அழைக்கவே கூடாது; பள்ளர், பறையர் என்று அழைப்பதுதான் மேல் என்று சொல்லுவேன். ஏனென்றால், சூத்திரன் என்னும் பெயர் அந்தப் பெயர்களைவிட மிகமிக இழிந்ததாகும். ஜனத்தொகை எடுக்கும்போது நான் பள்ளர், பறையர் என்றுதான் சொல்லுவேன். பள்ளர், பறையர் என்பவர்களாகிலும் சொந்தத் தாய் தகப்பன்மார்களுக்குப் பிறந்தவர்களாகிறார்கள். ஆனால், சூத்திரர் என்பவர்களோ, பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள் என்று அமைக்கப்பட்டுப் போய்விட்டது. இப்பொழுதுள்ள ராஜாங்கத்துறையின் வித்தியாசத்தால் வேண்டுமானால் அப்படி இல்லை என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனால், பழைய இராமராஜ்யம் வருமானால் அப்படித்தானிருந்தாக வேண்டும். இன்றைக்கும் இராமராஜ்யம் நடக்குமிட



மாகிய திருவாங்கூரில் இப்பொழுதும் அப்படித்தான் இருக்கிறது. அங்குள்ள ஒரு பக்கா நாயரைக் கூப்பிட்டு, 'நீ யாருடைய மகன், உன் தகப்பன் பெயர் என்ன?' என்றால் அவன், 'இன்ன நம்பூதிரியின் மகன், இன்ன நம்பூதிரிக்குப் பிறந்தவன்' என்றுதான் சொல்லுவான். இன்ன நாயரின் மகன் என்று சொல்லிக்கொள்ளவே கூசுவான். இவ்வாறு அவன் சொல்லிக்கொள்ளக் கூசுவதன் காரணம் அங்கு 'இராம ராஜ்யம்' நடப்பதன் பயனேயாகும். உண்மையான இந்து ராஜ்யத்தில் அப்படித் தகப்பனை மாற்றிச் சொல்லவும், தாய் மற்றொருவனின் இஷ்டப்படி பலர் மனைவியாய் இருக்கச் செய்யவும் செய்கிறது. அதைப் போலவேதான் இங்கே 'சூத்திரன்' என்ற வார்த்தைக்கும் அர்த்தம்.

நீங்கள் உங்களை வேளாளர்கள் என்று அழைத்துக்கொள்ள ஆசைப்படுகிறீர்கள். வன்னியர்கள் தங்களை க்ஷத்திரியர்கள் என அழைத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். செட்டியார்கள் வைசியர்களென அழைத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். இதெல்லாம் எதற்காக? நீங்களே உங்களைத் தாழ்மைப்படுத்திக் கொள்வதற் கொப்பாகிறதே என்றால், 'என்ன அய்யா! இப்பொழுதுதான் எங்கள் பெற்றோர்களைத் திருத்திக்கொண்டிருக்கிறோம். அதற்குள் இப்படிக் கீழே தள்ளுகிறீர்களே?' என்கின்றனர். நாடார் பெருமக்களும் ஆரியர் வழியைப் பின்பற்றுவதுபோன்று குறுக்கே பூணூல் போட்டிருந்தனர். அவைகளை எல்லாம் அறுத்தெறியுங்கள் என்றபோது ஓர் அன்பர், 'ஏனய்யா, இவ்வளவு காலம் போராடி இந்தப் பூணூல் போடுவதற்கு இவ்வளவு காலமாயிற்று. அந்த நூலில் அழுக்கு ஒட்டுவதற்குமுன் அறுத்தெறியச் சொல்லுகிறீர்களே' என்று வருந்தினார். இவ்வாறு க்ஷத்திரியர் என்றும், வைசியரென்றும், வேளாளர் என்றும் அழைத்துக்கொள்ள ஆசைப்படுவதும், பூணூல் முதலியன போட்டுக்கொள்ள ஆசைப்படுவதும் தன் சாதியைத்தவிர தனக்குமேல் பெரிய சாதி இருக்கிறது என்று ஒப்புக்கொண்டு, தாங்கள் அந்தச் சாதிக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதையும் ஒப்புக்கொண்டவர்களாகிறார்கள். எல்லாருக்கும் உயர்ந்த சாதியான் என்று கூறிக்கொள்ளுகிறவன், க்ஷத்திரியரை வைசியனுக்குமேல் உயர்ந்தவனென்றும், வைசியனைச் சூத்திரனுக்கு மேலானவனென்றும் பாகுபடுத்திக் கூறினாலும் அவன் இந்த இரண்டு பேரையுமே ஒரே கண்ணுடன் பார்த்து, ஒரே முறையில்தான் நடத்துகிறான். ஆகவே, இந்த மூன்று பேர்வழிகளுக்குள் அவனுக்கு யாதொரு வித்தியாசமுமில்லை. இரயில்வே முதலிய சிற்றுண்டிசாலைகளுக்கும், சாப்பாட்டு விடுதிகளுக்கும் சென்று பார்ப்போர் இதை உணருவதில்லையா? அங்கே சாப்பிடுவதற்கு இரண்டு பாகங்கள் தானிருக்கின்றன. ஒன்றில் பார்ப்பான் சாப்பிடுவதற்கும், மற்றொன்றில் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய எல்லோரும் சாப்பிடுவதற்குமே இருக்கின்றன. ஆகவே, இதில் என்ன வித்தியாசத்தைக் காண்கிறீர்கள்? உண்மையில் அவன் மட்டும் உயர்ந்தவனாகவும், மற்ற மூன்றுபேரும் அவனுக்கு ஒரேமுறையில் தாழ்ந்திருப்பதாகவே தானே அவ்வறைகள் உணர்த்துகின்றன? பிறகு எதற்காக நீங்கள், 'நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் வேளாளன்' என்று உயர்வு தாழ்வு பேசுகிறீர்கள்? இதெல்லாம் உங்களை ஒற்றுமையில்லாதிருக்கச் செய்யும் சூழ்ச்சிமுறை என்பதை நீங்கள் உணருகிறீர்களில்லையா? ஆகையால் சாதிப் பிரிவினையால் ஒரே ஒரு கூட்டத்திற்குத்தான் சவுகரியம்; மற்றையோருக்கு ஒற்றுமைக் குறைவு ஏற்படுவதுதான் லாபம்.

ஆகையால், முதலில் சாதி வித்தியாசம் என்கிற கொடுமைத் தன்மை என்பது இந்த நாட்டைவிட்டு ஒழியவேண்டுமா, வேண்டாமா என்ற முடிவு தெரிந்துவிட வேண்டும். இரண்டாவதாக, ஒரு மனிதனுக்குக் கீழோ, மேலோ சாதி என்பது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தாகவேண்டும். அதற்குமேல், சாதி வித்தியாசத்திற்கு ஆதாரமாயுள்ளவைகளை அடியோடு அழிக்க முயலவேண்டும். அப்படிச் செய்யாமல், உயர்வு தாழ்வைப் போக்கிவிடலாமென்று கருதுதல் நுனிமரத்தில் நின்றுகொண்டு அடிமரத்தை வெட்டுகிற மனிதனின் முட்டாள் செய்கையையே ஒக்கும். சாதி ஆசாரம் என்பவை மதம் என்னும்

படிப்பகம்

www.padippakam.com



மரத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன. சாதியை மதத்திலிருந்து பிரித்துக் கல்ல வேண்டும். இப்படிப் பிரிப்பதற்கு முடியாதவரையில் சாதியும் மதமும் ஒன்றோடொன்று இறுகப் பின்னிக் கொண்டிருக்குமேயானால் அந்த இரண்டையும் வீழ்த்தியேயாகவேண்டும். முன்னிருந்த அந்த உயர்ந்த சாதிக் கபடர்கள் அவ்வளவு தந்திரமாக ஒன்றைஒன்று பிரிக்க முடியாத வகையில் சாதியையும், மதத்தையும் பிணைத்துப் பின்னிக் கொண்டிருக்கும்படி இறுகக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆகையால், சாதியை அழிக்கத் தலைப்படுகையில் மதமும் வெட்டப்படுகிறதே என்று பயப்படாமல் சாதி மரத்தையும், மத மரத்தையும் சேர்த்து நெருப்புவைத்துச் சாம்பலாக்க வேண்டியது தடுக்கமுடியாத அவசியமாகும். இதிலும் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது, மதமானது வேதம், புராணம் என்பவைகளுடன் கட்டிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இந்த வேதம், புராணங்களிலிருந்து மதத்தைப் பிரிக்கவேண்டும். இதிலும் பிரிக்கமுடியாதபடி கட்டு பலமாக இருந்தால், இங்கும் இரண்டையும் சேர்த்து நெருப்பு வைக்கவேண்டியதுதான். ஆனால் இந்த வேதம், கடவுளுடன் சேர்த்துக் கட்டிவைக்கப்பட்டிருக்கிறது. இதிலும் பிரிக்கமுடியாத பிணைப்பு இருந்தால் அந்தக் கடவுள் என்பதன் தலையிலும் கை வைத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. வேதத்தை இழுத்தால் கடவுளுக்கும் அசைவுதான் கொடுக்கும். இதில்தான் பெருத்த சங்கடப்படக்கூடும். கடவுளை அசைப்பதா என்று பயப்படக்கூடாது. எனவே சாதி, மதம், வேதம், கடவுள் எல்லாவற்றையும் ஒழித்துத்தான் ஆகவேண்டு. இவற்றில் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்துவராது. இப்படி நாம் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கமுடியாமல் எல்லாவற்றையும் சேர்த்துக்கொளுத்தும்போது, உண்மையில் ஏதாவது சத்து இருந்தால் அது அழியாது. இப்படி நாம் சாதி வித்தியாசத்தை ஒழிக்க முற்படுகையில் மதமென்பதும் ஒழிந்துபோகுமேயென்றால் அந்த மதம் நமக்கு வேண்டாம். அது இப்போதே அழிந்து போகட்டும். மதத்தைப் பொசுக்கும்போது வேதமும் பொசுங்கிப் போவதாயிருந்தால் அந்த வேதம் என்பதும் இப்போதே வெந்துபோகட்டும். வேதத்தை ஓட்டும்போது கடவுளும் ஓடிவிடுவாரென்றால் அந்தக் கடவுள் என்பதும் இந்த நிமிஷத்திலேயே ஓடி விடட்டும். அப்பேர்ப்பட்ட கடவுள் நமக்கு வேண்டவே வேண்டாம்.

சாதியின் கொடுமையால், நாற்றமெடுத்த மலத்தைவிட மனிதன் கேவலப்படுத்தப் படுகிறான். இது உண்மை; வாய்ப் பேச்சுக்காக நான் சொல்லவே இல்லை. எப்படி என்றால், மல உபாதைக்குச் சென்றவன் அந்த பாகத்தைமட்டும் ஒரு சொம்பு தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்கிறான். மலத்தைக் காலில் மிதித்துவிட்டால் அந்தக் காலைமட்டும் தண்ணீரைவிட்டுக் கழுவிவிட்டால் அந்தக் குற்றம் போய்விடுகிறதாகக் கருதப்படுகிறது. ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தொட்டுவிட்டால் அவனைத் தொட்டதால் ஏற்பட்ட தோஷம், தன்னுடைய உடலை உச்சிமுதல் உள்ளங்கால்வரை குளிர, நனையக் குளித்தாலொழியப் போவதில்லை என்கிறார்கள். ஆகவே, மலத்தைவிட மனிதன் எவ்வளவு கேவலமாக மதிக்கப்படுகிறான் என்பதைப் பாருங்கள். மனிதனை மனிதன் தொடுவதால் ஏற்படுகிற கெடுதலென்ன? தோஷமென்ன? குற்றமென்ன? எதுவுமில்லை. ஆனால், பிறகு ஏன் தோஷம் கூறப்படுகிறது? ஒருவரை ஒருவர் ஏமாற்றி வாழ்வதற்காகவே கூறப் படுகிறது. இதைவிட வேறு இரகசியமில்லை.

இக் குலத்தவர்கள் குளித்துச் சுத்தமாய் இருக்கவேண்டுமெனச் சிலர் கூறுகிறார்கள்; கள் குடிக்கக்கூடாதென்கிறார்கள்; மாமிசம் சாப்பிடக்கூடாதென்கிறார்கள். இப்படிக் கூறுகிறவர்கள்தான் சீர்திருத்தக்காரர்களாம். நான் இவர்களைச் சுத்தமாய் இருக்கக் கூடாதென்று சொல்லவில்லை; கள், சாராயம் குடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. மாமிசம் தின்னவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், கேவலம் செய்வதற்காக இந்தக் காரணங்களைச் சொல்லுவது அடாது. இப்படி அவர்கள் மீது குற்றம் கூறி கேவலமாகப் பேசுகிறவர்கள், கள் சாராயம் குடிப்பவர்களையும், மாமிசம் தின்னுகிறவர்களையும், குளிக்காமலிருப்பவர்களையும் தொடாமல்தானிருக்கிறார்களா என்று கேட்கிறேன். இவர்கள்



தொட்டுக் கொண்டும் அளவளாவிக் கூடிக் குலாவுவோரெல்லாம் தினம் குளிப்பவர்கள் தானா? மாமிசம் தின்னாதவர்கள்தானா? கள், சாராயம் குடிக்காதவர்கள்தானா? நான் வாரத்திற்கு இரண்டொரு முறைதான் குளிக்கிறேன். சுற்றுப் பிரயாணம் செய்வதால் வாரத்திற்கு ஒருமுறைதான் குளிப்பதற்குச் சாத்தியப்படுகிறது. என்னைப்போலவே எண்ணிறந்தோரும் இருந்து வருகிறார்கள். இப்பேர்க்கொத்தவர்களை அவர்கள் தொட்டுக் கொள்ளுவதில்லையா? உலகத்தில் நூற்றுக்கு 99 பேர்கள் மாமிசம் சாப்பிடுகிறவர்களாயிருக்கிறார்கள். குடிப்பதும் எல்லா சாதியாரிடமும்தான் இருந்துவருகிறது. இவர்களை எல்லாம் இவர்கள் தொட்டுக்கொள்ளுவதில்லையா?

நம் நாட்டிலே உற்பத்தியாகிற கள்ளும், கொலை செய்யப்படுகிற மாமிசமும் இந்தத் தீண்டாதவர்களெனப்படுவோர் வயிற்றுக்குள்தானா போய்விழுகிறது? சிலர் இவர்கள் மாட்டு மாமிசத்தைத் தின்னுகிறார்களே என்கின்றனர். நம் நாட்டை அரசாண்டு வருபவர்கள் மாட்டு மாமிசத்தை முழுக்க முழுக்கத் தின்பவர்களாயிருக்கிறார்கள். மாட்டு மாமிசம் சாப்பிடுகிறவனின் ஆளுகைக்குட்பட்டு அவனது பிரஜையாக இருக்கச் சம்மதிக்கிற நாம்—நமது சகோதரன் ஒரு போதாத கொடுமையால் மாட்டிறைச்சி தின்றால் என்ன முழுகிப்போய்விடுகிறது? என்ன நீசத்தனம் வந்துவிடப்போகிறது? இவையெல்லாம் வெட்கக்கேடா, விதண்டாவாதக் கொழுப்பா? முகமதியர்கள்கூட மாட்டு மாமிசம் சாப்பிடுகிறவர்கள்தான். இதனால் அவர்களிடம் ஏன் மோதிக் கொள்வதில்லை?

வேறு சிலர், செத்த மாட்டைத் தின்னுகிறார்களே என்கிறார்கள். இதனால் என்ன தீட்டு, எந்த உருவாக வந்து அவர்களிடம் ஒட்டிக்கொள்கிறது? பதறப் பதற, கதறக் கதற மாட்டை அறுத்துச் சாப்பிடுவது பாவமா; மாண்டு மடிந்து மண்ணுக்குள் போவதை—இல்லாத கொடுமையால் வயிற்றுக்குள் போடுவது பாவமா? புழுத் தின்னும் கோழியையும், மலந்தின்னும் பன்றியையும்விடப் புல்லையும் பிண்ணாக்கையும் தின்னும் மாடு கேவலமானதா?

குளிப்பதற்கு வசதி வாய்க்கப் பெறாதவன் எப்படிக் குளிக்க முடியும்? மகந்துகளையும், மடாதிபதிகளையும் ஒரு வீட்டுக்குள் போட்டுக் குளிக்கவும், பல் விளக்கவும் தண்ணீர் கொடுக்காமல் ஒரு மாதம் வரை பூட்டி வைத்திருந்து திறந்துவிட்டால், அவர்களுடைய வாய் நாறாதா? உடம்பில் துர்வாடை வீசாதா? துணி அழுக்காயிருக்காதா? இப்படியாவதன் காரணமென்ன? தண்ணீர் வசதி செய்து கொடாமையினாலா, பிறவியிலேயா என்று கேட்கிறேன். குடிப்பதற்கே தண்ணீர் கொடுபடாமலும், மொண்டுகொள்ள விடப்படாமலும் தவிக்கும் தீண்டத்தகாதாரென்போர் உடம்பு குளிக்கவில்லை என்பது என்ன மதியீனம்? இறைச்சி வாங்கித் தின்பதற்குப் பணவசதியில்லாமலடித்து அவனது உழைப்பிலிருந்துவரும் உணவுப் பொருட்களை அவனது வயிற்றுக்குப் போகாதவாறு பிடுங்கிக்கொண்டால், அவன் செத்த மாட்டையும் செத்த ஆட்டையும் தின்னாமல் என்ன செய்வான்? காடு மேடெல்லாம் அலைந்து, இரவு பகலென்றும் பாராமல், தண்ணீரில் நனைந்து, வெயிலில் காய்ந்து, வியர்வையில் குளித்து விவசாயம் செய்வோன் தனது அலுப்புத் தெரியாது என்பதற்காகக் கள் குடிப்பதால் அவன் கேவலமாகி விட்டானா?

இந்த ஊர்களில் எப்படியோ எனக்குத் தெரியாது—எங்கள் ஊர்களுக்குப் பக்கத்தில் மாடு குளிப்பாட்டும் குட்டையிலும் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் கிணற்று வாய்க்காலிலும்கூட இந்த வகுப்பாரைத் தண்ணீர் எடுக்க விடுவதில்லை. ஆகையால், இந்தவிதக் காரியங்களுக்கெல்லாம் யார் பொறுப்பாளி? இதுவும் பிறவியோடு வந்ததா? சாதித் திமிரால் செய்யப்படும் தீவினைகளா?

நியாயமாகவும் மதக் கட்டுப்பாட்டின்படி, சாஸ்திரக் கட்டளைப்படி, கடவுள் பக்திப் படி, நாம் முன்னேறுவதற்கு எப்படி எப்படி அடங்கி ஒடுங்கிப் பொறுமை காட்டி நடக்க வேண்டுமோ, அவ்வாறெல்லாம் இதுவரை நடந்து காட்டியாகிவிட்டது. சாந்தமாகவும்,

படிப்பகம்

www.padippakam.com



அமைதியாகவும் மத வேதக் கடவுளுக்குக் கட்டுப்பட்டு எவ்வளவு பிரயத்தனங்கள் செய்ய வேண்டுமோ அவ்வளவு பிரயத்தனங்களும் செய்து பார்த்து விட்டோம். பொறுமைக்கும், சாந்தத்துக்கும் அளவுண்டு. அந்த அளவு இப்போது தாண்டிப்போய்விட்டது. இனி, மதம், வேதம், கடவுள் என்று பார்த்துக்கொண்டிருந்தால் ஒன்றும் ஆகப்போவதில்லை.

நந்தனுக்கு மோக்ஷம் கொடுத்ததாகவும், பாணனை ஆழ்வாராக்கியதாகவும் கூறும் புராணங்களைக் குற்றங்கூறாதீர்கள் என்கிறார்கள். வாஸ்தவம், இதோ வாயைப் பொத்திக் கொண்டோம்! நந்தனுக்கு மோக்ஷம் கொடுத்தது உண்மையானால் அந்த நந்தனுடைய பேரனை ஏன் உள்ளே விடக்கூடாதென்கிறார்கள்? பாணனை ஆழ்வாராக்கியது வாஸ்தவமானால் பாணனின் பேரன் கோயிலுக்குள் போவதை ஏன் தடுக்கிறார்கள்? நந்தனுக்கு ஒரு கல்லும் பாணனுக்கு ஒரு கல்லும் நட்டு, அவற்றின் பேரால் பொங்கல் அபிஷேகம் செய்து, காசு சம்பாதிக்கப் பிரயத்தனப்படுகிறார்களே ஒழிய, அவர்கள் பேரைச் சொல்லி வேறு என்ன செய்கிறார்கள்? நந்தன் போனபோது நாம் ஏன் போகக்கூடாது என்றால், நீங்கள் சொல்லுகிற நந்தன் வேறு நபர் என்று சொல்லி, 'அந்த நந்தன் உள்ளே வருவதற்கு முன் நெருப்பில் குளித்து வந்தான். நீங்களும் அப்படி வாருங்கள்' என்கிறார்கள். நாம் உள்ளே போக வேண்டுமானால் இவர்கள் சொல்லுகிற பிரகாரம் முதலில் நெருப்பில் குளித்துச் சாம்பலாகவேண்டும்; அதற்குமேல்தான் போகமுடியும்.

ஆகவே, சாதி வித்தியாசத்தையே அழித்தாக வேண்டும். சாதி வித்தியாசத்தைப் போக்குவதற்கு எல்லாவிதமான தியாகத்தையும் செய்வதற்கு முன்வரவேண்டும். இந்த மாநாட்டில் செய்கிற தீர்மானங்களைச் செய்கையில் நிறைவேற்றி, அதன்படி நடக்க எல்லோரும் முன்வரவேண்டும். 'பள்ளர்' என்று அழைப்பதா, 'வேளாளர்' என்று அழைத்துக் கொள்ளுவதா என்பதில் காலத்தை விருதாவாக்கி அடித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை; அது கூடவே கூடாது. மேல்நாட்டில் ஆராய்ச்சி செய்வதில் அடித்துக் கொள்கிறார்கள். நாம் பெயருக்காக அடித்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் தேவேந்திர குலப் பிராமணர் என்று வைத்துக் கொண்டாலும் சரி; பிராமணர்கள் என்று தங்கள் சாதிப் பெயர்களை வைத்துக்கொண்டு திண்டாடுவோரின் யோக்கியதை எனக்குத் தெரியும்; விஸ்வப் பிராமணர், தேவாங்கப் பிராமணர், சவுராஷ்டிரப் பிராமணர் என்று தங்களை அழைத்துக் கொள்வதால் அவர்களுக்குப் புதிதாக முளைத்திருக்கும் யோக்கியதையை நான் அறிவேன். ஆதித் திராவிடன் எல்லார் வீட்டிலும், எவ்வளவு பாடி (வைது) இட்டாலும் தின்றுவிடுகிறான்; எந்த இடத்தில் வைத்து ஊற்றினாலும் குடித்துவிடுகிறான். ஆனால், விஸ்வப் பிராமணர் என்னும் பிராமணர்கள் வீட்டில் பச்சைத் தண்ணீரைக்கூடத் தொட மறுக்கிறான். இதன் காரணமென்னவென்று கேட்டால், நாங்களெல்லாம் வலக் கையர்கள், விஸ்வப் பிராமணர்கள் இடக் கையர்கள் என்கிறார்கள். இம் மாதிரிதான், பிராமணர் பட்டத்தைத் தாங்கியவர்களெல்லாம் இருக்கின்றனர்.

தேவேந்திர குலம் என்பதும் எனக்கு இழிவாகத்தான் தோன்றுகிறது. என்ன காரணத்தின் பொருட்டு இந்தப் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறீர்களோ அது எனக்குத் தெரியாது. ஆனால், 'தேவேந்திரன்' என்றால் எனக்குப் பெருத்த அசிங்கமாகயிருக்கிறது. ஏனென்றால், தேவேந்திரனைப் பற்றிக்கூறும் புராணக் கதைகள் தேவேந்திரனை அவ்வளவு இழிவாகக் கூறுகின்றன. அவன் வேசி மகனிலும் இழிந்த ஜென்மன் என்பதாகவே அவைகள் உரைக்கின்றன. பல்வேறு பெயர்களைக்கொண்டு சாதி பிரிந்துபோவது கூடாது. நாயக்கரிலும் பல வித்தியாசம்; செட்டியிலும் வித்தியாசம்; பிள்ளையிலும் வித்தியாசம். பட்டணத்தில் பறையனும் பிள்ளையென்று வைத்துக்கொள்கிறான்; பள்ளனும் பிள்ளை என்று வைத்துக்கொள்ளுகிறான் என்று சொல்லிப் பட்டணத்திற்குப் போகும் பிள்ளைகளும் அங்கு இருக்கும் பிள்ளைகளும் ஆகாயக் கப்பல் வேகத்தில் தங்கள் பெயர்களை முதலியார்களாக மாற்றி வருகின்றனர். எனவே, இந்த விதமான பேச்செல்லாம் கூடாது. சாதி வித்தியாசம் என்கிற எண்ணத்தையே அடியுடன் இடித்துத் தள்ள வேண்டும். நாம்



பிறந்த சாதியை இழிவாக மதித்து இன்னொரு சாதியை உயர்வாக மதித்து, அதனிடம் அடைக்கலம் புகுவதைவிட இழிவு வேறொன்றுமில்லை. இவ் வழியில் இறங்கவே கூடாது.

இத்தோடு எனது முகவுரையை முடித்துக் கொள்கிறேன். வரவேற்புக் கமிட்டியினுடைய வரவேற்புக்கும் உபசாரங்களுக்கும் எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவற்றை எனது முடிவுரையில் தெரிவிக்கிறேன்.

[திருச்சியில், 29-9-1929-ல் சொற்பொழிவு-'திராவிடன்' தினசரி—5-10-1929]

## 4. சாதி இருக்கலாமா?

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

பம்பாயில் போய் ஒருவனைச் சூத்திரன் என்றால் அவனுக்குக் கோபம் வராது; அவமானம் வராது. அதே மாதிரி பஞ்சாபில், அய்க்கிய மாகாணத்தில் போய் ஒருவனைச் சூத்திரன் என்று சொன்னால் இதை மறுத்து அவன் ஏன் என்று சொல்லமாட்டான். ஆனால் திராவிட நாட்டான்தான் சூத்திரன் என்பதை இழிவு என்று கருதுகிறான். சூத்திரன் என்பதை இழிவு என்று கருதுகிறவன் ஒருவன்; அதை ஒப்புக்கொள்கிறவர்கள் ஒன்பது பேர்.

இப்படி இருந்தால், அதை எப்படி நமது ஆட்சி என்று சொல்லமுடியும்? எப்படி நமது இழிசாதி நீங்கும்? நமக்கு ஏதாவது வசதி செய்யவேண்டும் என்று நினைத்தார்களா அவர்கள்! பார்லிமெண்டில் உட்கார்ந்துகொண்டு பேசினார்களே, டில்லியிலே! பெரிய பெரிய அறிவாளிகளாகிய டாக்டர் அம்பேத்கார் முதற்கொண்டு, நம்முடைய நாட்டில் இருந்து சென்ற பஞ்சம சாதியைச் சேர்ந்த தோழர்கள் சிலர் முதற்கொண்டு ஒரு வார்த்தை பேசியிருப்பார்களா?

'சுதந்திரம் அடைந்த நாட்டிலே பார்ப்பனர்கள் ஏன் இருக்க வேண்டும்? சூத்திரர்கள் ஏன் இருக்க வேண்டும்? பஞ்சமர் ஏன்?' என்று கேட்டிருக்கிறீர்களா? அப்படிக் கேட்டால் வகுப்புத் துவேஷமா? கூறுகிறார்களே வகுப்புத் துவேஷம் என்று!

ஜனவரி 26ஆம் தேதி முதற்கொண்டு பார்ப்பான் இருக்கக்கூடாது; இருந்தால் ஆறு மாதம் கடுங்காவல் என்ற சட்டம் எழுத வேண்டாமா? இன்றும் பார்ப்பான் தன்னைப் பார்ப்பான் என்று பூணூல் போட்டுக்கொண்டு இருக்கிறான்!

சாதியை ஒழிக்கத் திட்டம் எழுதுகிறார்களே, சர்க்கார்! இனிமேல் சாதியைக் குறிக்கும் சின்னத்தை ஒழிக்கவேண்டும் என்று கூறவேண்டாமா? அதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டாமா? இன்னமும் ஏன் பூணூல் இருக்கிறது? ஏன் இன்னமும் பூணூலை ஒப்புக் கொள்ளவேண்டும், இந்த சர்க்கார்?

போலீஸ்காரனைக் கூப்பிட்டு—'நம்முடைய நாட்டிலே சாதி ஒழிந்துவிட்டது; இனி பூணூலை எங்கே கண்டாலும் வெட்டு' என்று கையில் கத்தரிக்கோலைக் கொடுத்திருக்க வேண்டாமா, இந்த சர்க்கார்? ஏன் செய்யவில்லை?

சமத்துவம் ஏற்பட்ட பிறகு இந்த நிலை இருக்கலாமா? சுயராஜ்யம் ஏற்பட்ட பிறகு இந்த நிலை இருக்கலாமா? நாங்கள் கூறினால் பார்ப்பனர்களைத் திட்டுகிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால், காப்பி ஓட்டலிலே, 'பிராமணாள் கிளப்' என்று எழுதி இருக்கலாமா?

சாதியை வைத்துக்கொண்டு, அதற்கு ஆதாரமாகக் கோயில்களைக் காப்பாற்றுவதற்கு வசதியைத் தேடிக்கொண்டு, சாஸ்திரத்தையெல்லாம் பள்ளியில் பாடமாக வைத்துக் கொண்டு, சாதியை ஒழித்துவிட்டோம் என்று கூறினால்—பாமர மக்களை ஏமாற்றத்தானே இந்த மாதிரி செய்திருக்கிறார்கள்?

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே, இந்த ஆட்சி சமத்துவ ஆட்சி அல்ல; சுதந்திர ஆட்சி அல்ல; ஒரு சுரண்டல் ஆட்சி என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். எங்கள் நாடு எங்களுக்கு வந்து விடுமேயானால் கட்டாயம் இன்றைய தினம் நாங்கள் சொல்லுகின்ற இந்த உத்தரவைப் போடுவோம். இந்த நாட்டிலே எவனாவது பிராமணன், சூத்திரன், பஞ்சமன் இருந்தால் ஒரு வருடம் ஜெயில் என்று சட்டம் செய்வோம்.

[செங்கற்பட்டில், 5-11-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-11-1950]

# 8. சாதி ஒழிய வழி

## 1. கலப்பு மணத்தால் சாதி ஒழியுமா?

தலைவரவர்களே! தோழர்களே!

எனக்கு முன்னால் பேசிய சில தோழர்கள் சொன்னார்கள்—ஏதோ கலப்புக் கலியாணம் (கலப்பு மணம்) செய்துகொண்டால் சாதி ஒழிந்துபோகும் என்று! கலப்பு மணம் செய்வதால் சாதி ஒழிந்துபோகும் என்று சொல்ல எனக்குத் தைரியமில்லை. அதையே ஒரு சாதியாக ஆக்கிவிடுவார்கள்! எப்படி என்றால், 'கலப்பு மண சாதி' என்றுதான் கடைசியில் சொல்லமுடியுமே தவிர சாதி அடியோடு போய்த் தொலைய முடியாது. அதுவும் சம சாதியில்தான் கலப்பு மணம் நடைபெறும். பறையன், சக்கிலி, பள்ளன் முதலிய சாதிகளில்—'மேல்' சாதியான் இலேசில் மணம் செய்யமாட்டான்.

நம் நாட்டிலே எத்தனையோ தாசிகள் இருக்கிறார்கள்; நாமாவது ஒரு கலப்பு மணத்தைச் சொல்லுகிறோம், இவர்கள்' ஆயிரம் கலப்பு மணம் செய்து பிள்ளைகள் பெறுகிறார்களே—அந்தச் சாதிக்குள்கூட சாதி போவதில்லையே! அதிலும் பல சாதிகளாக்கு கிறோம். அவர்களும் மேல்சாதி ஆகத்தானே பார்க்கிறார்கள்! பட்டிக்காட்டுத் தாசிகள் சாதி பார்த்துத்தான் புழங்குகிறார்கள். இதனால் கலப்பு மணத்தால் சாதி போய்விட்ட தென்று கூறமுடிகிறதா?

இப்போது நானும்தான் கலப்பு மணம் செய்து இருக்கிறேன். தோழர் சாமி சிதம்பரனார், தோழர் சா. குருசாமி, தோழர் எஸ். இராமநாதன் முதலியவர்களுந்தான் கலப்பு மணம் செய்து இருக்கிறார்கள். அதனால் சாதி போய்விட்டதா? ஏதோ வசதி இருப்பதால் மக்கள் ஒன்றும் சொல்லாமல் சும்மா இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் எங்களுக்குக் குழந்தைகள் இருந்து அவர்களுக்குக் கலியாணம் ஆகவேண்டுமானால் அப்போது தகராறுதான். 'கலப்புச் சாதியைச் சேர்ந்தவர்கள்' என்றுகூறி கலப்பு சாதியார்கள்தாம் ஒருவருக்குள் ஒருவர் செய்துகொள்ளுவார்கள். அன்றியும், எங்களுக்கு மதம், கடவுள், சாதி என்ற மூன்றைப்பற்றியும் கவலை இல்லை. அதனால்தான் மறுசாதி மணம் செய்துகொள்ளவும், அதனால் தைரியமாக இருக்கவும் முடிகிறது.

எனவே, இந்தக் கொள்கையையும் பரீட்சைசெய்து பார்க்க வேண்டுமானால், நம்மிடம் அரசாங்கம் வந்தபிறகு சாதி ஒழிப்புக்கு ஏதாவது சட்டம் செய்யலாம். மத சாஸ்திரங்களை வைத்துக்கொண்டு சாதியை ஒழிப்பது கஷ்டம்.

[திருவொற்றியூரில், 17-2-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 27-2-1952]

பேரன்புமிக்க தோழர்களே! தாய்மார்களே! மணமக்களே!

நாம் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தான் திருமணம் செய்கிறோம். அதில் ஒன்றும் மாறுதல்—கலப்பு இல்லை. கலப்பு என்பது ஒருவித மயக்கம்தான்.



சாதியை வைத்துக்கொண்டு சாதிக் கலப்பு என்கிறார்கள். படையாச்சி, பிள்ளை, கவுண்டர், நாயடு, பறையன், சக்கிலி என்பவர்கள் எல்லாம் ஒரே சாதிதான்—அதாவது சூத்திரர்கள்தாம். சிலர் தங்களைச் க்ஷத்திரியர்கள் என்று கூறிக்கொள்வதெல்லாம், சூத்திரன் என்று கூற வெட்கப்பட்டுக்கொண்டு கூறுவதாகுமே தவிர மற்றபடி அனைவருமே சூத்திரர்கள்தாம்.

இரண்டே சாதிகள் உண்டு; பார்ப்பான் ஒரு சாதி—மற்றவர்கள் கீழ்த்தர சாதி. இந்த இரு சாதிகள்தாம் உண்டு. கடவுள், மதம், சாஸ்திரம், அரசாங்கச் சட்டம் இவற்றில் எல்லாம் இந்த இரு சாதிகளும்—அதாவது பார்ப்பனர் சாதியும், சூத்திர சாதியும் கலப்பது தான் கலப்பு மணம் என்பது ஆகும். இந்தவிதமான திருமணத்திற்குத்தான் சட்டத்திலும் சில சலுகைகள் உண்டு. மற்றபடிஉள்ளதைக் கலப்பு மணம் என்று கூறினால் அதற்குச் சலுகை கிடையாது.

நம்மில்தான் சாதிப் பிரிவுகளை வைத்துக் கொண்டு இழிவுபடுத்துகின்றோம்.

பார்ப்பானை எடுத்துக்கொள்ளுங்கள்; அவர்களில் மராட்டி மொழி பேசும் மராட்டியப் பார்ப்பான், தெலுங்கு பேசும் பார்ப்பான், ராவ், அய்யர், அய்யங்கார் என்ற பல பிரிவுகள் இருப்பினும்—அனைவரும் ஒரே சாதியினர் என்று கருதுகின்றனர். நாம் செய்யும் கலப்பு மணத்தால் ஒருநாளும் சாதி ஒழியாது. இப்படி எவ்வளவோ திருமணங்கள் நடை பெற்றனவே—எங்கேயாவது சாதி ஒழிந்ததா? ஏதோ இதனால் சிறிது நல்வாய்ப்பு ஏற்படலாம்.

பெண்களையும் ஆண்களைப்போல் நன்றாகப் படிக்கவைத்து, இருவரையும் ஒத்த தகுதி உடையவர்களாக ஆக்கிவிட்டால்—குறுக்கே ஒன்றும் இருக்காது. பெண்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்பட்டுத் தொழில்செய்து பிழைக்க வசதியாகும்படி செய்யவேண்டும். பெண்களைத் தனக்கு வேலைசெய்யும் அடிமைகளாய் நினைத்துப் பெண் எடுப்பதால் வசதி எனப் பார்த்து அளவு எடுக்கிறான். மற்றபடி, பெண்கள் தாமாக வாழ வசதி ஏற்படுத்திவிட்டால் கலப்பு தானாகவே நடக்கும்; நாம் ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமே இல்லை. இங்கு பேசியவர்கள் நல்ல குலம், குடும்பம் என்று பார்க்கவேண்டும் என்றார்கள். நான் அது கூடத் தேவையில்லை என்கிறேன். நாம் கட்டிக்கொள்ளப் போகும் ஆண் பெண் ஒழுக்கமானவர்களா என்று பார்த்தால் போதும். ஒழுக்க ஈனமானவர்களாய் இருக்கும் குடும்பத்தில் தங்கமான பெண் இருக்கும்; சில இடங்களில் பெற்றோர்கள் ஒழுங்காக இருந்தால் அந்தப் பெண் ஒழுக்க ஈனமானதாக இருக்கும். எனவே, பெற்றோர்களின் ஒழுக்கம், தரம் என்பதைப்பற்றிக் கவலைப்படக்கூடாது. இதையெல்லாம் பார்த்தால் காரியம் கெட்டுப்போகும்.

[மருடஞ்சாவடியில், 27-12-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-1-1960]

## 2. சாதி ஒழிய வழி

ஸ்தல ஸ்தாபனங்களின் வாக்காளர் பட்டியலிலும், சர்க்கார் 'ரிக்கார்டுகள்', கல்விச் சாலை, கோர்ட் முதலிய 'ரிக்கார்டுகள்' ஆகியவற்றிலும் சாதி உட்பிரிவின் பெயர்களைக் குறிக்க வேண்டியதில்லையென்று அய்க்கிய மாகாண சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்த உத்தரவு பாராட்டப்படக்கூடியதுதான். இனிமேல் வாக்காளர்கள் யாவரும் 'இந்து', 'முஸ்லிம்', 'சீக்கியர்' என்ற பெரும் பிரிவுகளிலேயே அடக்கப்படுவர் என்று இந்த உத்தரவு கூறுகின்றது.

முஸ்லிம்களின் அரசியல் கிளர்ச்சி அதிகப்பட்ட பிறகும்; மதமாற்றம் செய்யும் வேலைகளும், மக்களைக் குடியேற்றும் முயற்சிகளும் தீவிரப்பட்ட பிறகும்; தாழ்த்தப்பட்ட மக்கள் முஸ்லிம்கள் ஆவதா அல்லது சீக்கியர்களாவதா என்ற பெரிய பிரச்சினை கிளம்பிய



படிப்பகம்

www.padippakam.com



பிறகுதான் காங்கிரஸ் தலைவர்கள் இந்து மதத்தை எப்படிக் காப்பாற்றுவது என்பதுபற்றி ஆலோசிக்கத் தொடங்கியிருக்கின்றனர். ஆனாலும், சர்க்கார் மட்டும் இவ் விஷயத்தில் குறட்டையிலிருந்து எழும்பாமலே படுத்துக்கொண்டிருக்கிறது!

காங்கிரஸ் இயக்கம் சாதியை ஒழிக்கும் முயற்சியில் தலையிடுவதேயில்லை. சுயராஜ்யக் கூச்சலைவிடக் கஷ்டமான பிரச்சினை இது என்பது, காந்தியாருக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும், அவருக்கு முன்பிருந்தவர்களுக்கும் நன்றாகத் தெரியும். சாதியை ஒழிப்பதைக் காட்டிலும் சுளுவான முறையில், 'தேசபக்தர்' பட்டமும், 'வீரர்' பட்டமும், 'தியாகி' பட்டமும் கிடைக்கும் வழிகள் எத்தனையோ இருக்கும்போது, செங்குத்தான மலைமீது தலை கீழாக ஏறுவது போன்ற சாதி ஒழிப்பு வேலையை காங்கிரஸ்காரர்கள் ஏன் ஏற்றுக் கொள்வார்கள்? காங்கிரஸ்காரர் மட்டுமல்லர், பொருளாதார சமத்துவம் உண்டாக்க வேண்டும் என்று போராடும் கட்சிகள்கூட சாதி ஒழிப்பைப்பற்றிக் கனவுகூடக் காண்ப தில்லை; வெளியே கூறவும் நடுங்குகின்றன! மனிதனுக்கு மனிதன் பொருளாதாரத்தில் அடிமைப்பட்டிருந்தால் என்ன? அல்லது சாதியால் அடிமைப் பட்டிருந்தால் என்ன? என்ற உண்மை—இந்தப் பொருளாதார சமத்துவக் கிளர்ச்சிக்காரர்கள் சிந்தனையில் படுவதே யில்லை.

காங்கிரஸ்காரர்களோ, 'வெளி நாட்டானின் ஏகாதிபத்தியம் ஒழிந்தால், எல்லாம் பிறகு சரிப்பட்டுவிடும்' என்று கூறி வருகிறார்கள். இந்த நாட்டில் வெளி நாட்டான் எவனும் நுழைவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, இந்தச் சாதிக் கொள்கை இருந்து வருகிறதென்பதையும், இது ஒழிந்தவுடனேயே வெளி நாட்டான் தானாகவே ஓட ஆரம்பிப் பானே என்பதையும் இவர்கள் உணர்வதில்லை.

சாதியை ஒழிக்கும் வேலை சாமான்யமானதல்ல. ஐக்கிய மாகாண சர்க்காரின் உத்தரவு அற்ப அளவுக்குத்தான் பயன்படுமே தவிர, சாதியை அறவே ஒழிப்பதற்குப் பயன்படாது என்பது உறுதி.

எப்படியெனில், சாதியை ஒழிப்பதற்குப் பல அடிப்படையான முறைகள் இருக் கின்றன. சாதிப் பட்டங்கள் (அய்யர், முதலியார், பிள்ளை, அய்யங்கார், செட்டியார், நாயுடு, நாயக்கர், ரெட்டியார், நாடார் முதலியன) சட்ட பூர்வமாகத் தடுக்கப்பட வேண்டும்! புதிதாக மணம் புரிவோர் அத்தனை பேரும் கலப்பு மணம் செய்யுமாறு தூண்டக்கூடிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். ஒரே வகுப்பில், ஒரே சாதிப் பிரிவில் திருமணம் செய்ப வர்களுக்குப் பல கஷ்டமான நிபந்தனைகளையும், கட்டுத் திட்டங்களையும் விதித்து, அத்தகைய திருமணம் புரிபவர்களுக்குச் சமுதாயத்தில் செல்வாக்கில்லாமல் செய்ய வேண்டும். சாதிகளைக் குறிக்கும் நெற்றிக் குறி, உடை, பூணூல் முதலிய சின்னங் களையும் சட்டபூர்வமாகத் தடுக்கவேண்டும். இவ்வாறு செய்தால்தான் சாதிகள் அடியோடு ஒழியும்.

இவை மட்டுமல்ல; சாதிக்கு அடிப்படையாயிருப்பது எது? 'இந்து' மதம். அதை ஆதரித்து நிற்பவைகள் எவை? வேதம், இதிகாசம், சாஸ்திரம், புராணம் முதலிய கட்டுக் கதைகள். இவைகளுக்கு அடிப்படையாக உள்ளவைகள் எவை? இந்து மதக் கடவுள்கள் என்று கூறப்படும் முழுக் கற்பனைகள்.

எனவே, இவ்வளவையும் ஆணிவேருடன் பிடுங்கி எறிந்தாலொழிய, சாதியை எப்படி ஒழிக்க முடியும்? இவ்வளவையும் காப்பாற்றுவதற்காகவுள்ள ஒரு சமுதாயமான பார்ப்பனர்களின்—வைதிகர்களின் மனப்பான்மையை மாற்றியாக வேண்டும்; அல்லது அவர்களைத் தனியாகப் பிரித்து நீக்கி வைக்கவேண்டும்! ஏன்?

சாதிகள் ஒழிவதனால் பாதிக்கப்படுபவர்கள் பார்ப்பனர்களேயாவர். 'சாதி உயர்வு' என்ற அடிப்படையிலேயே அவர்கள் எல்லாத் துறைகளிலும் முன்னணிக்கு வந்திருக் கிறார்கள். இல்லாவிட்டால், கால்நடைகளை ஓட்டிக்கொண்டு, கால்நடையாக வந்த இந்தக்



'கால்நடை'கள், இன்று இந்நாட்டுக் குடிமக்கள் எல்லாரையும்விட ஆயிரம் மடங்கு உயர்ந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் என்ன? அது மட்டுமா? இன்று பெரிய பெரிய புரட்சிக் காரன் முதல், மகா கனம் போன்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கைக்கூலி வரையில்—எல்லா இயக்கங்களிலும் பார்ப்பனர்கள் இருக்கிறார்களேயொழிய, சாதிகளை ஒழிப்பதென்பதைக் கொள்கையாகக் கொண்டு இடைவிடாத தொண்டாற்றக்கூடிய ஒரு பார்ப்பனராவது இன்று இந்த நாட்டில் இருப்பதாக யாராவது எடுத்துக் கூறமுடியுமா என்று அறைகூவிக் கேட்கிறோம்.

இந்துமதம் ஒழிந்தால்தான் சாதி ஒழியும்; இந்துமதம் ஒழிந்தால் பார்ப்பனீயமும் அதே நேரத்தில் அழிந்துபோகும். இதைப் பஞ்சமா பாதகம் செய்யும் பார்ப்பான்கூட விரும்பமாட்டான்!

'இங்கிலீஷ் அரசியலமைப்பு' என்ற நூலை எழுதிய புரொபசர் டிசே என்பவர் 'புரட்சி மனப்பான்மையுடையவன், போப் ஆகவேமாட்டான்; போப் ஆகும் மனிதன் புரட்சி செய்ய விரும்பமாட்டான்' என்று கூறியிருக்கிறார். அது போலவே, பார்ப்பனாகப் பிறந்தவன் சாதிப் புரட்சிக்காரனாக ஆகவே மாட்டான். ஏனெனில், போப்புக்குள்ள அதிகாரம் அதிகம்; அவைகளைக் காட்டிலும் நூறுமடங்கு அதிகமாக இந்நாட்டுப் பார்ப்பனர்களுக்கு இருக்கின்றது. இவர்கள், இதர சாதிகளைத் தூண்டிவிட்டு, 'பார்! கழுதையும் குதிரையும் ஒன்றாகுமா? அய்ந்து விரல்களும் சரியாகுமா?' என்று கூறிப் பிரித்து வைத்துக் கொண்டேதான் இருப்பார்கள். ஒரு கடைசிப் பிராமணன் இந்நாட்டி லிருக்கும் வரையில் (இங்கிலீஷ்காரரைப் பின்பற்றி) இந்தப் பிரித்தாளும் பித்தலாட்ட வேலையைச் செய்துகொண்டுதான் இருப்பான்!

சாதிப் பிரிவுகள் பகுத்தறிவுக்கு முரணானவை என்பதையும் பார்ப்பனர் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில், பகுத்தறிவுக்கு இந்து சாஸ்திரங்கள் 144 உத்தரவு பிறப்பித்திருக்கின்றன.

'எந்தப் பிராமணன் தர்க்க சாஸ்திர பலத்தைக் கொண்டு வேதத்தின் உண்மையைப் பற்றிச் சந்தேகிக்கிறானோ, அப்பேர்ப்பட்ட வேத நிந்தகன் சாதுக்களால் நாத்திகன் என்று பகிஷ்கரிக்கப்படுகிறான்' என்று மகா பாரதம் கூறுகிறது. எனவே, பார்ப்பான் மட்டுமல்ல; எந்த 'இந்து'வுமே பகுத்தறிவுக்கு இடந்தரமாட்டான்; இடந்தர முடியாது. இடந்தந்தால் இந்துவாக இருக்கமுடியாது!

'யார் என்ன சொன்னாலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாயுள்ள இந்துமதத்தை அசைக்க எவராலும் முடியாது. எத்தனையோ எதிர்ப்புக்களையும் கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு உயிரோடிருக்கிறது நமது இந்து மதம்' என்று சர். இராதா கிருஷ்ணன் (?) போன்ற மேதாவிகள் கூறலாம். உயிரோடிருப்பதனால் மட்டும் ஒரு விஷயம் உயர்வானதாகிவிடுமா? எவ்வளவோ எதிர்ப்புக்களுக்கிடையே எலி, கொசு, ஈ, தேள், பாம்பு, மூட்டைப்பூச்சிகள் கூடத்தான் உயிரோடிருக்கின்றன! மனித சமுதாயமே எதிர்த்துவரும் குடி, விபச்சாரம் கூடத்தான் உயிரோடிருக்கின்றன. இவைகளெல்லாம் இந்து மதத்தைவிடப் புனிதமானவைகளா? அதிகப் பலன் தரக்கூடியவைகளா என்று கேட்கிறோம்.

இறுதியாக ஒன்று கூறுவோம். சாதியை ஒழிக்க விரும்புவோர் மேடைப் பிரசங்கம் மட்டும் செய்தால் போதாது! கலப்பு மணத்தைத் தவிர—வேறு சுயசாதி மணம் செய்யவே கூடாது. புத்தரும், குரு நானக்கும் கூறியதுபோல் வேதமும் சாஸ்திரங்களும் முழுப்பொய் என்று பச்சையாகவே கூறவேண்டும்.

இவ்வளவைச் செய்யக்கூடிய ஆற்றலும், துணிவும், தியாக உணர்ச்சியும் படைத்த இளைஞர்களால்தான் சாதியை ஒழிக்கமுடியும்! இந்த வேலையைச் செய்பவைகள்தாம் திராவிடர் கழகமும், சுயமரியாதை இயக்கமும்.

['விடுதலை'-தலையங்கம்—10-1-1947]

படிப்பகம்

www.padippakam.com



தாய்மார்களே! தோழர்களே!

வருணாசிரமம் ஒழியவேண்டுமானால் என்ன செய்ய வேண்டுமென்றால், இந்து மதத்தை ஒழித்தால்தான் வருணாசிரமம் ஒழியும். வருணாசிரம தர்மத்தை ஒத்துக் கொள்ளாதவன்—அதாவது, சாதிமுறையை ஒத்துக்கொள்ளாதவன் இந்துவாக இருக்க முடியாது. அதாவது, இந்துவாக இருக்கிற ஒவ்வொருவனும் சாதி முறையை ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும் என்பதாக இந்துச் சட்டத்தைப் புதுப்பித்த டாக்டர் முல்லா எழுதியிருக்கிறாரென டாக்டர் அம்பேத்கார் டெல்லி சட்டசபையில் கூறினார்.

ஆகவே, சாதிகள் ஒழியவேண்டுமென்றால், இந்துமதம் அழிக்கப்பட வேண்டும். இந்துமதத்திற்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் இருக்கிற கடவுள்களையும், சாஸ்திர புராணங்களையும் ஒழித்துக்கட்டவேண்டும். அடிப்படியில்லாமல், வருணாசிரமம் இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, சாதிகளும் ஒழிய வேண்டுமென்று யாராவது சொன்னால்—ஒன்று, அவர்கள் பித்தலாட்டக்காரர்களாக இருக்கவேண்டும்; அல்லது, முட்டாள்களாக இருக்கவேண்டும்.

[வாடிப்பட்டியில், 20-5-1951-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-5-1951]

## 3. இந்துமதம் ஒழிக!

கேள்வி: சாதியை ஒழிக்க நீங்கள் என்ன வழி சொல்லுகிறீர்கள்?

பதில்: பொதுவாக, இரண்டு வழிகள் உண்டென்று சொல்லலாம். ஒன்று, சட்ட வரம்புக்குட்பட்ட முறையில் போராடுவது; மற்றொன்று, சட்டத்தைப்பற்றி இலட்சியம் செய்யாது சட்டத்தை மீறிக் கிளர்ச்சி செய்வது.

இவற்றில் நீங்கள் எந்த வழியைப் பின்பற்றத் தயாராக இருக்கிறீர்கள் என்பதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால், என்னுடைய இயக்கத்தைப் பொறுத்தவரை நாங்கள் சட்ட வரம்புக்கு மீறிய வகையில் பல கிளர்ச்சிகளை நடத்திக்கொண்டு வருகிறோம். நீங்கள் நம்முடைய கீழ்சாதித் தன்மை நீங்கவேண்டுமானால் அவசியம் பின்வரும் முறைகளை யாவது பின்பற்றவேண்டும்.

1. எந்த இந்துக் கோயிலுக்கும் நீங்கள்—பிற்படுத்தப்பட்ட, கீழ்சாதி மக்கள் யாரும் போகக்கூடாது.

2. இந்துமதக் கடவுள்களைக் கும்பிடக்கூடாது.

3. இந்துமதப் பண்டிகைகளைக் கொண்டாடக் கூடாது.

4. நெற்றியில் எந்தவிதமான குறிகளையும் சின்னங்களையும் அணியக்கூடாது.

5. உச்சிக் குடுமியை—'சோட்டி'—யாரும் வைத்துக்கொள்ளக்கூடாது.

6. வைதீகச் சடங்குகள் எதையும் செய்யக்கூடாது.

7. எந்தவிதமான சடங்குகள், நிகழ்ச்சிகள் ஆகியவைகளுக்கும் பார்ப்பானை அழைக்கவே கூடாது.

8. இந்துக் கடவுள்களின் படங்களை உங்கள் வீட்டில் எங்கும் மாட்டக்கூடாது.

9. பார்ப்பனர்களால் நடத்தப்படும் உணவுச்சாலை, சிற்றுண்டிச் சாலைகளுக்குப் போகக்கூடாது.

கேள்வி: இந்துமதத்தை மதிக்கக் கூடாது என்று குறிப்பிட்டீர்களே; அது சரி; ஆனால், கலியாணம் முதலிய சடங்குகளுக்கு எப்படிப் பார்ப்பானை அழைக்காமலிருப்பது? உங்கள் பக்கத்தில் எவ்வாறு நடத்துகிறீர்கள்?



பதில்: எங்கள் பக்கத்தில நாங்கள் எந்தவிதமான நிகழ்ச்சிகளுக்கும், சடங்குகளுக்கும் பார்ப்பானை அழைப்பதேயில்லை. திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பெரும்பாலும் என்னை அழைப்பார்கள்; அல்லது எங்கள் கட்சித் தோழர்களை அழைப்பார்கள்; அல்லது அந்தந்த வகுப்புப் பெரியவர்களை அழைப்பார்கள்; அவர் தலைமை தாங்கி மணமக்களின் சம்மதம் கொண்ட உறுதிமொழியைப் படிப்பார்கள்; மாலை மாற்றிக் கொள்ளுவார்கள். சில இடங்களில் தாலியும் அணிவிப்பதுண்டு. அதுபோல நீங்களும் செய்யலாம்; அல்லது உங்கள் குடும்பங்களிலுள்ள வயதான பெரியவர்களை வைத்து நடத்தலாமே!

கேள்வி: 'ரிபப்ளிகன் கட்சி'யாகிய எங்கள் கட்சியோடு சேர்ந்து வேலை செய்வீர்களா? எங்களுக்கு உதவி செய்ய முடியுமா?

பதில்: எந்த வகையான உதவியை நீங்கள் சாதியொழிப்பிற்காக வேண்டுகிறீர்களோ, எங்கள் மாகாணத்திலுள்ள எங்களால் முடிந்த அளவு செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால், உங்கள் கட்சித் தலைவர்கள் எனப்படுபவர்களுக்கு, சட்டசபையையும், பார்லிமெண்ட்டையும் கைப்பற்றுவது எப்படி என்பதுதான் குறிக்கோள். ஆகவே, அதற்கெதிராக இருக்கின்ற எங்களை அவர்கள் விரும்புவதில்லை.

கேள்வி: நாம் இப்படிப் பார்ப்பானையும், இந்துமதத்தையும் புறக்கணிக்கும் படியான பிரச்சாரம் செய்தால் வெற்றிகாண முடியும் என்று நம்புகிறீர்களா!

பதில்: ஆகா! தாராளமாக எனக்கு அதில் நம்பிக்கையுண்டு; 10 வருடகாலத்திற்குள் கட்டுப்பாடான இடைவிடாத பிரச்சாரத்தின் மூலம் நாம் அந்த நிலையை அடைவோம் என்ற நம்பிக்கை உண்டு; அந்த உணர்ச்சியை மக்களிடையே அடைய முடியும்.

கேள்வி: சாதியையொழிக்க வேண்டுமென்றால் அரசாங்கத்தை ஒழிக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்களே, இது அரசியல் பிரச்சினையாகாதா? அரசியல் கட்சியாக இருந்தால்தானே இந்த அரசியல் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்?

பதில்: நல்ல கேள்வி. முதலாவது, அரசியலில் ஒருவன் நுழைகிறான் என்றாலே அவன் எப்படிப்பட்ட யோக்கியனாக இருந்தாலும், உடனே அவனது நாணயம், ஒழுக்கம் கெட்டுப்போய் விடுகின்றன; அவன் புரட்டு, பித்தலாட்டம் செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்படுகிறான். அது நானாக இருந்தாலும், பாபாசாகிப் அம்பேத்காராக இருந்தாலும் சரி; அப்படித்தான் ஆகிவிடுவோம்; அது அப்படி ஆக்கிவிடும்.

இரண்டாவது, இன்றைய அரசியல்—சட்டப்படி நடைபெறும் ஒன்று; அரசியல் சட்டத்தில் மாற்றமுடியாத வகையில் சாதிக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது; யார் போனாலும் சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப்படி நடக்க வேண்டியவர்களே தவிர, அதை எதிர்த்து ஒன்றும் செய்யமுடியாது. சிலர் சொல்லுவார்கள், 'ஒன்றும் செய்ய முடியாவிட்டாலுங்கூட அங்கு போனால் இதை எடுத்துச் சொல்லலாம்' என்று. அதற்கு அங்கு போகவேண்டும், என்பது அவசியமில்லையே! பொதுக் கூட்டம் போட்டு எடுத்துச் சொன்னாலே அது அரசாங்கத்திற்குச் செல்லுகிறது!

கேள்வி: நாம் அரசாங்கத்தைக் கைப்பற்றலாமே, கைப்பற்ற முடியாதா?

பதில்: அது முதுகில் மூன்றாவது கை முளைத்து அதனால் சொறிந்து கொள்ளலாம் என்பது.

கேள்வி: நாமும் எலெக்ஷனுக்கு நிற்கலாமே; வயதுவந்த எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறதே!

பதில்: எலெக்ஷனில் நின்று ஜெயித்து மெஜாரிட்டியாகி அரசாங்கத்தைப் பிடிப்பது என்பது நம்மால் ஆகாத காரியம். ஏனென்றால், பெரும்பாலான ஓட்டர்கள் முட்டாள்கள்;

படிப்பகம்

www.padippakam.com



எதற்காக ஓட்டுப்போடுவது என்பது தெரியாதவர்கள்; பெரும்பாலான அபேட்சகர்கள் பணம் செலவு செய்யாமல் எலெக்ஷனில் நின்று ஜெயிக்க முடியாது. ஒரு இடத்திற்கு நின்று போட்டி போட்டு ஜெயிக்க வேண்டுமென்றால் 10,000, 20,000, 30,000 ரூபாய்--சில சமயத்தில் இலட்ச ரூபாய்கூட செலவு செய்யவேண்டும். நீங்களோ ஒற்றைக் காசும் கையிலில்லாத (Penniless People) மக்கள்; எப்படிச் செலவு செய்ய முடியும்? பார்லிமெண்ட்டுக்குப் போகவேண்டும்; மெஜாரிட்டி அடைய வேண்டுமென்றால் தலைக்கு 300 (500-ல்) தேவை. அதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகும்? இந்த வசதி இன்றைக்குக் காங்கிரஸ் கட்சிக்குத்தான் இருக்கிறது. பெரிய முதலாளிகள், டாடா, பிர்லா, டால்மியா, முந்திரா போன்றவர்களிடம் சென்று கோடி கோடியாகப் பணம் வசூலித்து, பணத்தைத் தண்ணீர் பட்டபாடாகச் செலவு செய்து வெற்றியடைகிறார்கள்.

அவர்களும் கேட்டவுடன் சர்க்கார் (ஆளுகிற) கட்சியாக இருப்பதை அனுசரித்துத் தங்களது சுயநலத்தையெண்ணி வாரிவாரிக் கொடுக்கிறார்கள்; அதுபோல் நம்மாலாகுமா?

அப்படியே மீறி, காங்கிரசைத் தோற்கடித்து—கேரளத்தில் (மலையாளிகள் ராஜ்யம்) கம்யூனிஸ்ட்காரர்கள் ஆளுகிறார்கள் என்றால் அது பெயரளவிற்குத்தானே கம்யூனிஸ்ட் ஆட்சி? மீதியெல்லாம் டெல்லி அரசாங்கம் உத்தரவிடுவதுபடிதானே நடக்கிறது? ஒரு உதாரணம்—அந்தக் கேரள முதன்மந்திரி ஒரு கலப்புமணச் சங்கத்தில் பேசும்போது சொன்னார்: 'நான் எனது ஆட்சியில் சாதியை ஒழிக்கப் பாடுபடுவேன். தீவிரமாகப் பாடுபட்டுச் சாதியை ஒழிக்க வேண்டும்' என்பதாக. உடனே, 'இந்து' பத்திரிகையில் ஒரு பார்ப்பனர், 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்ற பகுதியில் எழுதினார்: 'அரசியல் சட்டத்தில் சாதி பாதுகாக்கப்பட்டிருக்கிறது; அது மூலாதார உரிமை; அதையொழிக்க இந்த அரசாங்கத்தால் முடியாது; தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் நம்பூதிரிபாத் பேசலாமேயொழிய—ஆட்சியையோ, அதிகாரத்தையோ இதற்குப் பயன்படுத்த உங்களால் முடியாது' என்று எழுதினார். அதற்கு நம்பூதிரிபாத் பதில் சொல்லவே இல்லையே!

கேள்வி: அதுபோல பல மாகாணங்களிலும் எதிர்த்து நாம் அரசாங்கம் அமைக்க முடியாதா?

பதில்: நான் ஒன்று உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். சென்ற 1952 ஆம் வருட எலெக்ஷனில் எங்கள் நாட்டில் நான் முயற்சி செய்து காங்கிரசைத் தோற்கடித்தேன்; காங்கிரஸ் மைனாரிட்டியாக ஆயிற்று. காங்கிரஸ் அல்லாதவர்கள் (மொத்தம் 500 பேரில்) சுமார் 300 பேர் இருந்தும் அவர்களால் அரசாங்கத்தைக் கைப்பற்ற முடியவில்லையே!

திரு. இராசகோபாலாச்சாரியார் முதன் மந்திரியாக வந்தார்—நாமினேஷன் மூலம். அப்போது அவருக்கு 200 மெம்பர்கள்தாம் இருந்தார்கள். வந்தவுடன் எதிரிகளில் சிலரை விலைக்கு வாங்கித் தன் ஆட்சியை மெஜாரிட்டியாக ஆக்கிக்கொண்டார். எப்படிப் பலரை எதிர்க் கட்சியிலிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டார்? தனக்கு நிலைமை வசதியானதும் தன்னிஷ்டப்படி, மனுதர்ம முறைப்படி காரியம் செய்ய ஆரம்பித்துப் பதவிகளையும் உத்தியோகங்களையும் பார்ப்பனர்களுக்குக் கொடுத்தது மட்டுமின்றி, 'அவனவன், சாதித் தொழிலைத்தான் செய்யவேண்டும்' என்ற ஒரு வருணாசிரம தர்ம கல்வித் திட்டத்தையும் புகுத்தினார். நான் 30 நாள் தவணை கொடுத்து, 'நீங்கள் அதை ஒழிக்கா விட்டால் பலாத்காரத்தில் இறங்குவோம்' என்று தெரிவித்த பிறகுதான், அவர் பதவியை விட்டுப்போனார். சட்டசபையால் அவரையொன்றும் அசைக்க முடியவில்லை. பிறகு காமராசர் அந்த இடத்திற்கு வந்து சாதிக் கல்வித்திட்டத்தை ஒழித்தார். அதனால்தான் அவர் காங்கிரசுக்காரராக இருந்தபோதிலும் அவரை ஆதரிக்கிறோம்.

கேள்வி: எப்படியும் நாமிந்த அரசாங்கத்தைக் கைப்பற்றித்தானே ஆகவேண்டும்?

பதில்: அதற்காகத்தான் நாங்கள் சொல்லுகிறோம்: 'சாதியையொழிக்க விரும்பாத—சாதிக்குப் பாதுகாப்பு அளிக்கும் உனது அரசாங்கத்தோடு இருக்க விரும்பவில்லை. தனியே பிரிந்து செல்லுகிறோம். எங்கள் நாட்டிற்குச் சுதந்திரம் வந்தால் நாங்கள் சாதியை உடனே ஒழித்துவிட முடியும். உனது ஆட்சி அதற்கு இடம் கொடுக்காததால் விலகிவிடுகிறோம்' என்று. அதற்காகத்தான், 'சுதந்திரத் தமிழ் நாடு' கிளர்ச்சி இருக்கிறது. அது ஒரு நாட்டைக் கொளுத்தும் பிரச்சினையல்ல; நமக்கு வேண்டாத ஆட்சியை வெறுக்கிறோம் என்றுதான் அர்த்தம். அதுபோல நீங்களும், உங்களுடைய ஆட்சி வேண்டாம் என்று பிரிந்து சென்றுவிடலாமே! நீங்களும் இந்தக் கொடுமையான—பார்ப்பன சாதி நாயகமான அரசாங்கத்தினின்றும் பிரிந்துவிடலாம். அதற்குத்தான் பட எரிப்புப் போராட்டம் நடத்தப்போகிறோம்.



கேள்வி: ஏன், இந்தியா பூராவும் அப்படி உணர்ச்சியை உண்டாக்கமுடியாதா?

பதில்: அதெப்படி? தமிழ் நாட்டில் அந்த உணர்ச்சி பலமாக இருக்கிறது. இந்தியா பூராவும் பரவவேண்டுமானால், அது ரொம்பவும் கஷ்டமான ஒன்றாகும். மேலும் சர்க்காரும் நம்மைப் பலமாக அடக்குகிறார்கள். நான் போனமாதம் பெங்களூரில் ஒரு மாநாட்டிற்கு–இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது, இதைத்தான் நான் அங்கு சொன்னேன். 'நீங்கள் இந்த ஆட்சியிலிருந்தே விலகிக்கொள்ளுவதைத் தவிர, வேறு வழியில்லை' என்பதாகக் குறிப்பிட்டேன். அங்கு கூடியிருந்த பாதிப்பேர் அதைக் கைதட்டி வரவேற்றார்கள்; பாதிப்பேர் அந்த உணர்ச்சியைப் பெறவில்லை.

கேள்வி: நீங்கள் கேட்கும் சுதந்திரத் தமிழ் நாட்டில் சிலோனையும் சேர்த்தா கேட்கிறீர்கள்?

பதில்: இல்லை; நான் அப்படிச் சொல்லவில்லை; சுதந்திரத் தமிழ்நாடு இலட்சியத்திற்குப் பாடுபடும் 'நாம் தமிழர்' இயக்கத்தார் ஆரம்பத்தில் அப்படிச் சொன்னார்கள்; நான் அவர்களிடமே அதை எதிர்த்துச் சொன்னேன்—'அது வேறு ஒரு சர்க்கார்; அதுபற்றி நமக்குக் கவலையில்லை' என்பதாக. அதுதான் எங்களுக்கும், அவர்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடுகளில் ஒன்றாகும்.

கேள்வி: நீங்கள் புத்த மார்க்கத்தில் சேரச் சொல்லுகிறீர்களோ?

பதில்: ஆம்; நேற்றே பொதுக்கூட்டத்தில் சொன்னேன். இன்னொரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் அம்பேத்கார் அவர்களைச் சந்தித்தபோது அவர் என்னிடத்தில் ஒரு பாரத்தை நீட்டி—'போடு கையெழுத்தை; நாமிருவரும் புத்த நெறியில் சேருவோம்' என்றார். அதற்கு நான் சொன்னேன், 'நீங்கள் சேருங்கள்; நான் மாறாமல் இருந்து—'இந்து' என்பவனாகவே இருந்தால், இந்துமத வண்டவாளங்களை எடுத்துப் பிரச்சாரம் செய்ய வசதியாக இருக்கும்' என்றேன். மேலும், 'இப்போது செய்கிற வேலையைத் தொடர்ந்து செய்ய வசதியாக இருக்கும்; நான் புத்த மார்க்கத்தில் சேர்ந்துவிட்டால்—இப்போது கடவுள்கள், உருவச் சிலைகள் முதலியவற்றை உடைத்துக் கிளர்ச்சி செய்தது போல் செய்யமுடியாததாகிவிடும்' என்றேன்.

கேள்வி: ஒரு மனிதனுக்கு மதம் தேவையில்லையா?

பதில்: புத்த மார்க்கம் ஒரு 'கொள்கை'யே தவிர, அது ஒரு மதம் கிடையாது.

கேள்வி: புத்த மதம் அகிம்சையைப் பற்றிக் குறிப்பிடுகிறதே, அதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்: அது புத்திக்கு முக்கியம் தந்த ஒரு மார்க்கம்; அவ்வளவுதான். அகிம்சை என்பது புத்த மார்க்கத்தின் கொள்கையல்ல (Principles); அது புத்தருடைய அபிப்பிராயமாய் இருக்கலாம் என்பதுதான் என் கருத்து. ஆகவே, நாம் புத்திக்கேற்ப நடக்கலாம்; அதுதான் புத்த மார்க்கம் என்பது.

கேள்வி: நீங்கள் ஏன் கறுப்பு உடை அணிகிறீர்கள்?

படிப்பகம்

www.padippakam.com



பதில்: நாம், இப்போது இழிசாதி மக்களாகவும், சூத்திரர்களாகவும், தாழ்த்தப்பட்டிருக்கிறோம் என்ற இழிவை உணர்த்துவதற்காகக் கறுப்பு உடை அணிகிறோம். எங்கள் கொடியின் நடுவில் 'வட்டச் சிவப்பு' இருப்பது—அந்த இழிவிலிருந்து நாம் நாளாவட்டத்தில் மீண்டுவருகிறோம் என்பதைக் காட்டுகிறது.

[கான்பூர் ரிபப்ளிகன் கட்சி ஊழியர்களிடையே 9-2-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-2-1959]

## 4. சாதி விகிதப் பங்கு

இந்த நாட்டில் இன்று இரண்டே சாதிகள்தாம் சாஸ்திரத்தில்—சட்டத்தில் இருந்து வருகின்றன. அவை. (1) 'பிராமண சாதி', (2) 'சூத்திர சாதி'. அதாவது, மேல்சாதி, கீழ்சாதி.

மற்றும் நாட்டு மக்களிடையில் சாதிகள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் அந்த இரு சாதிகளின்—அதாவது, 'பிராமண சாதி,' 'சூத்திர சாதி' என்பதன் உட்பிரிவுகள் தாமே அல்லாமல், தனிப் 'பிறவி சாதிகள்' அல்ல. உதாரணமாக, 'பிராமணரில்' அய்யர்; அய்யங்கார்; ராவ்; ஆச்சாரி; சாஸ்திரி என்பவர்கள் எல்லாம் பிராமணன் என்ற ஒரே சாதியைச் சேர்ந்தவர்களே ஆவார்கள். இவர்களுக்கு 'இந்து' சாஸ்திரங்களிலும் 'இந்து' சட்டங்களிலும் ஒரே அந்தஸ்துதானே யொழிய தனித்தனி உயர்வு தாழ்வு அந்தஸ்து கிடையாது.

அதுபோலவே, 'சூத்திரர்'களிலும் வேளாளன், நாயக்கன், படையாட்சி, செட்டி, ஆசாரி, நாடான், வண்ணான், நாவிதன், குயவன், செம்படவன், பள்ளன், பறையன், சக்கிலி என்று சொல்லப்படும் பிரிவுகளும், மற்றும் முதலியார், பிள்ளை, கவுண்டர், தேவர், கள்ளர், மறவர், உடையார், அகமுடையர், தேவாங்கர், செங்குந்தர் முதலிய பிரிவுகளும், பட்டங்களும், எல்லாம்—சூத்திர சாதியின் உட்பிரிவுகளே தவிர, 'பிறவி சாதி'களில் சேர்ந்தவைகள் அல்ல.

மற்றும், ஒரு பிரிவினுள் பல உட்பிரிவுகளும் உண்டு. இவை பெரிதும் உழைப்பு, தொழில் ஆகியவற்றில் ஈடுபட்ட கோஷ்டிகள் பற்றி ஏற்பட்ட பிரிவுகளே அல்லாமல் பழகுவதற்கு, கொள்வினை, கொடுப்பினை செய்வதற்கு—சட்டத்தால் சாத்திரங்களால் தடையும், தனித்தனி நீதி நியமம் ஆசார அனுஷ்டானமும் ஏற்படுத்தப்பட்ட சாதிகள் அல்ல.

எனவே, இன்று ஒழிக்கப்படவேண்டிய சாதிகள்—மேற்கண்ட 'பிராமணன்', 'சூத்திரன்' எனப்பட்ட சாதிகளேயாகும். அதாவது, இந்த இரு சாதிகளுக்கும் இருந்து வரும் சமூகக் குறைபாடுகளும், வாழ்க்கை நலத் தடைகளுமேயாகும்.

சமூகக் குறைபாடு என்பது இன்று காணப்படும் தன்மைகளில் சில. அதாவது, மிகமிகச் சாதாரணத் தன்மையான—'கடவுள்' என்ற பெயரால் நட்டுவைக்கப்பட்டிருக்கும் ஒரு கல் அறைக்குள் பிராமணன்தான் போகலாம்; பிராமணன்தான் அந்தக் கல்லுக்குப் பூசை செய்யலாம்; பிராமணன்தான் அந்தக் கல் 'சாப்பிட' சோறு சமைக்கலாம்; பிராமணன்தான் அந்தக் கல்லைக் குளிப்பாட்டலாம்; பிராமணன்தான் அந்தக் கல்லைத் தொடலாம்' என்பன போன்ற நிர்ப்பந்தங்களைச் சாஸ்திரங்களின் பேரால், ஆகமங்களின் பேரால் ஏற்படுத்திக்கொண்டு, அதைக் காப்பாற்ற கிரிமினல் முதலிய சட்டங்களில் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொண்டிருப்பதும், இவை போன்ற வேறு வசதிகள் பிராமண சாதிப் பெருமைக்கும் நன்மைக்கும் சுக வாழ்வுக்கும் ஏற்றபடி அமைத்துக் கொண்டிருப்பவைகளுமாகும்.

இந்த அமைப்புக்கு அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டிருப்பதுமாகும்.



இவற்றின் பயனாய், வாழ்க்கையில் 'பிராமணன்' எல்லாத் துறைகளிலும் மேன்மையும் சுகமும் அனுபவிப்பதோடு, உடலுழைப்பும் இல்லாமல் ஊரார் உழைப்பில் சுக வாழ்வு, உயர்வாழ்வு வாழ நல்வாய்ப்பு இருப்பதும் ஆகும். மற்றும், இந்த நிலை காப்பாற்றப்படுவதற்காகவே பொதுக் கல்வி என்ற துறையில் 'பிராமணன்' 100-க்கு 100 பேரும் கல்வி உடையவனாய் இருப்பதும், 'சூத்திரன்' 100-க்கு பத்து பேர் கூட அதுபோன்ற கல்வி அறிவில்லாத மக்களாக இருப்பதும்; பொதுச் சேவை என்னும் 'நம் சர்க்கார்' பதவிகளில் 'இழி தொழில்', 'இழி நிலை' சேவகன், காவல்காரன் அதாவது 'அடா' என்று கூப்பிடத்தக்க இழி நிலையில் 100-க்கு 100 பேரும் இருந்துவரவும்; 'உத்தியோகம்', 'பதவி', 'உயர் பதவி' என்பவைகளில்—தலைமையில் 100-க்கு 100 பிராமணரும், மற்றும் மாதம் ரூ. 1000 முதல் ரூ. 5000 வரையும் அதற்கு மேலும் சம்பளம் வாங்கும் பதவிகளில் 'பிராமணர்'—அதாவது மொத்த ஜனத் தொகையில் 100-க்கு 3 பேர்களே உள்ள சாதியைச் சேர்ந்தவர்கள் ஏகபோகமாய் 100-க்கு 75-க்கு மேற்பட்ட பதவிகளில் இருந்து வரவும், மற்ற இடை நிலைப் பதவிகளிலும் 'பிராமணர்' 100-க்கு 50-க்கு மேல் அனுபவித்து வரவுமான தன்மை ஏற்படுத்திக் கொண்டு, 100-க்கு 97 விகிதம் உள்ள 'சூத்திரர்'கள் இத் துறைகளில் தலையெடுக்க விடாமல் அழுத்திவரப்படுகிறது. இந்தப்படியான சமூகக் குறையையும் வாழ்க்கை முறையையும் சரி நிலை, சரி பங்கு அடைய முடியாத தடைகளையும் ஒழிப்பதன் மூலமே சாதிக் கேட்டை ஒரு பெரும் அளவு ஒழிக்க முடியும்.

இதற்கு அரசாங்க அரசியல் கிளர்ச்சி என்பதன் மூலம் செய்யப்படவேண்டிய காரியம் ஏதாவது இருக்கிறதா என்றால் ஒரே ஒரு காரியந்தான் உண்டு. அதாவது,

1. இரண்டு சாதி மக்களுக்கும் சரிசமத்துவ விகிதத்தில் எல்லாப் படிப்பும் கிடைக்கும்படிச் செய்தல்;

2. இரண்டு சாதி மக்களுக்கும் உத்தியோகம், பதவி, ஆட்சித் தலைமை ஆகியவைகளில் ஜனத்தொகை எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதப்படி, சாதிவாரி உரிமையளித்து அந்தப்படி அந்தந்தச் சாதியை அமர்த்துதல்.

இந்த இரண்டு காரியமும் செய்வதற்கு மக்கள் சட்டசபைக்கோ, பார்லிமெண்டுக்கோ போவதால் சாதிக்கக்கூடியதாகி விடாது. இதற்காக அங்கு போய்ச் செய்யவேண்டிய காரியம் இன்று சாத்தியமானதல்ல. சட்டசபையும், பார்லிமெண்டும் இந்தக் காரியம் செய்யமுடியாத நிபந்தனைக்கு, கட்டுப்பாட்டுக்கு அடிமைப்பட்ட இடங்களாகும்.

ஆனால், ஆட்சியை இந்த இரண்டு காரியங்களையும் செய்யக்கூடாது என்று அரசியல் சட்டம் தடுப்பதில்லை; செய் என்று நிர்ப்பந்தப்படுத்தக் கூடாதபடிதான் அவைகள் அமைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எதுபோல் என்றால், ஒரு பார்ப்பானை அவனது சாதி அந்தஸ்தைக் காட்டும் உச்சிக் குடுமியையும், பூணூலையும் எடுக்கும்படி சொல்ல நமக்கு அதிகாரம் இல்லை; ஆனால், அவன் தானாக உச்சிக் குடுமியைக் கத்தரித்துக் கொள்வதையும் பூணூலை அறுத்து எறிந்துவிடுவதையும் செய்வதில் அவனுக்கு ஒரு தடையும் இல்லை. இதற்கு நாம் என்ன செய்யமுடியும்? நாம் உச்சிக் குடுமியும், பூணூலும் போட்டுக்கொண்டால் அவைகளுக்கு மரியாதை கிடைத்துவிடுகிறது. ஆகவே, நாம் செய்யக்கூடியதெல்லாம் அவைகளுக்கு மதிப்பில்லாமல், அவைகளைக் கண்டால் மக்கள் வெறுக்கும்படி செய்தால்—அவைகளை, அவர்களே—பார்ப்பனர்களே எடுத்துவிடுவார்கள்; அல்லது மறைத்துக்கொள்ளுவார்கள். அதுபோல் சட்டசபை, பார்லிமெண்டுப் பதவிகளைப் பகிஷ்காரம் செய்து பதவிகளுக்கு மதிப்பில்லாமலும், போகிறவர்களை மக்கள் பரிகசிக்கும்படியும் வெறுக்கும்படியும் செய்வோமானால் அப் பதவியில் ஆதிக்கத்தோடு இருப்பவர்கள் அப் பதவிக்கு மரியாதை சம்பாதிப்பதற்கு ஆசைப்படுவார்கள். மற்றும், எதனால் மக்கள் பரிகசிக்கிறார்களென்பதை எளிதிலுணர்ந்து தங்களுக்கு வசதிப்பட்ட அளவிற்கு மக்கள் குறையை நீக்கித் தேவையை நிறைவேற்ற முயற்சிப்பார்கள்; இதுதான் இயற்கை நியதி ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com



மற்றும், இன்று நம் மக்கள்—தமிழர்கள் என்பவர்களுக்கும் இந்தச் சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதும்; அதற்காக முதலாவதும் முக்கியமானதுமான காரியங்களாக எல்லோருக்கும்–இரு சாதிகளுக்கும் சமஅளவு, சமவிகிதம், சமஅந்தஸ்து, சமதரம் உள்ள கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பேன். இதற்கு, 100-க்கு 3 பேர் உள்ள–எண்ணிக்கையில் சிறு சாதியான பார்ப்பான்தான் எதிர்ப்பும் தொல்லையும் கொடுப்பானேயொழிய, மற்ற சாதியான் எதிர்க்கவோ, தொல்லை கொடுக்கவோ கண்டிப்பாக வெளி வரமாட்டான்.

அதுபோலவே, எல்லாச் சாதியானுக்கும் சர்க்கார் உத்தியோகம், பதவி, ஆதிக்கம் ஆகியவைகளில் எண்ணிக்கை விகிதம் முன்பின் பாராமல் கிடைக்க முயற்சிக்க வேண்டும். இதையும் பார்ப்பானைத் தவிர வேறு எவனும் தடுக்க வரமாட்டான். இதற்கு–இக் காரியங்கள் செய்யப்படுவதற்குக் கிளர்ச்சிதான் வேண்டுமே தவிர சட்டசபை, பார்லிமெண்டு தேவை இல்லை.

உண்மையான பொதுத் தொண்டு ஆர்வமுள்ள மனிதன் தனது முயற்சி, உழைப்பு, செல்வம், ‘தியாகம்’, ஆகியவைகளை இதற்காகச் செலவழிப்பதுதான் நாணயமும் ஒழுக்கமும் யோக்கியமும் ஆன காரியமாகுமே தவிர, மற்ற எந்தக் காரியத்திற்குச் செலவழிப்பதும் மேற்காட்டிய குணங்களுக்கு எதிர்மறைக் குணங்களேயாகும்.

‘இந்தக் காரியங்களில் சாதி ஒழிந்து விடுமோ?’ என்று, தங்களை ‘அறிவாளிகள்’ என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் கேட்கலாம். அப்படிப்பட்டவர்களை நான் கேட்பதாவது: ‘தம்பீ! நீ சாதி ஒழிக்கப்பட வேண்டியது முக்கியமும் முதலாவதுமான காரியம் என்று நினைக்கிறாயா?’ என்பது தான்.

‘ஆம் நினைக்கிறேன்’ என்றால், ‘அதற்காக இதுவரை நீ செய்தது என்ன? அதற்கு ருஜு என்ன? அதனால் ஏற்பட்ட பலன் என்ன?’ என்பதே எனது தாழ்மையான அடுத்த கேள்வியாகும்.

‘அதற்காக நான் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து, பாடுபட்டு சட்டசபைக்குப் போனேன்; பார்லிமெண்டுக்குப் போனேன்’ என்று சொல்லக்கூடும்.

‘சரி, நீ போனாய்; அங்குபோய் சாதியை ஒழிக்க நீ என்ன செய்தாய்? கேள்வி கேட்டாயா? மசோதா கொண்டு போனாயா?’

‘கேள்வி கேட்டேன்; மசோதா கொண்டுபோகவில்லை’ என்று நீ சொல்லக்கூடும். என்றாலும், இரண்டும் உன்னால் ஆகக்கூடிய காரியமல்ல. ஏனென்றால், சட்ட சபையில் சாதிப் பேச்சுக்கே இடமில்லை; ஆதலால் அங்கு கேட்டிருக்க முடியாது; கேட்டாலும் பயன் இல்லை.

பார்லிமெண்டில் மசோதா கொண்டு போயிருக்கலாம். அங்கு காங்கிரஸ் தவிர பல கட்சிகள் உண்டு. அதற்கு வேண்டிய தகுதி, திறமை, வசதி, வாய்ப்பு உனக்கில்லாவிட்டாலும் உள்ளவர்கள் கொண்டு போயிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்குக் கிடைத்த பயன் (பதில்) என்ன தெரியுமா உனக்கு? அதுதான்,

‘சட்டத்தால் சாதியை ஒழிக்க முடியாது’ என்பதுதான். அத்தோடு தீர்ந்துவிட்டது அந்தப் பேச்சு.

[‘விடுதலை’—13-12-1960]

நாட்டில் சாதிப் பிரிவு நாளுக்கு நாள் வளர்த்து ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு, நிர்வாகக்கேடு, ஆட்சிக்கேடுகள் ஏற்பட்டுப் பெருகிவருகின்றன. இதற்குக் கடுமையான சட்ட மூலமான பரிகாரம் தேடாதவரை வெளிப்படையான அராஜகமும், உயிர்ச் சேதங்களும் பண்டிகைகளாகவும், உற்சவங்களாகவும் காட்சி அளிக்கப்போவது உறுதி! உறுதி! உறுதியேயாகும்!



ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், நாட்டில் நடைபெறும் நிர்வாகமுறையும், காலித்தனங்களும், சாதி ஆதிக்க இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு நடந்து வருவதாலேயும், அனுமதிக்கப்பட்டு வருவதாலேயுமாகும். இதன் வளர்ச்சி, ஆயுதப் பிரயோக வெறியாட்டமாகத்தான் முடியவேண்டியதாகும். இதற்கு என்ன ஆதாரம், எடுத்துக்காட்டு என்று சிலர் கேட்கக்கூடும்.

அப்படிக் கேட்பவர்கட்கு இன்று இந்திய பல தலைமை நாடுகளில் நடந்த, நடைபெற்றுவருகிற கொலை, கொள்ளை, நாசவேலைகள் முதலியவைகளே போதிய சான்றாகும். இவையெல்லாம் சாதி உணர்ச்சிக்கு, சாதி ஆதிக்க உணர்ச்சிக்கு ‘மைக்ராஸ்கோப்’ வைத்துப் பார்க்க வேண்டிய அளவுக்குச் சிறிய எண்ணிக்கையுடைய சாதியார்—உள் ஆளாய் இருந்து உசுப்படுத்தி வருவது என்பது அல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும்?

‘இக் காலித்தன நாசவேலைகளுக்குக் காரணம் பார்ப்பனத் தலைவர், (பார்ப்பனப்) பத்திரிகைகள், பணக்காரர்கள்’ என்று ஆட்சியாளர்களால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சொல்லப்பட்டும், காலித்தன நாசவேலைகளால் பல உயிர்களும், பல பத்து இலட்சக் கணக்கான ரூபாய்கள் பெறுமான சொத்துக்கள், கட்டடங்கள், காரியாலயங்கள், வண்டி வாகனங்கள் கொளுத்தப்பட்டும், நாசமாக்கப்பட்டும் கொள்ளை அடிக்கப்பட்டும் இன்று வரை ஒரு பார்ப்பான், ஒரு பணக்காரன், ஒரு பத்திரிகைக்காரன் மீதுகூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், இத்தொழில்கள் நாடுமுற்றும் பரவுவதற்கும், இதற்கு அடுத்த படிக்கு (ஸ்டேஜுக்கு)ச் செல்வதற்கும் என்ன தடை இருக்க முடியும்?

இதுவரை நாசவேலைக்காரர்களால் நடைபெற்ற காரியங்களைப் பார்த்தால், இனி நடைபெறவேண்டியது மந்திரிகளைக் கொல்லவேண்டியதும், அய்க்கோர்ட் ஜட்ஜுகளைக் கொல்லவேண்டியதும் போன்ற காரியங்கள்தானே பாக்கி என்று சொல்ல வேண்டியதாய் இருக்கிறது. மற்றும், அதற்கு அடுத்தபடியான வேலையாகச் சாதிக்குச் சாதி கொன்று குவிக்கும் வேலையில்தானே இது முடிவுபெற வேண்டியதாய்த் தீரும் என்று தோன்றுகிறது.

இந்த நிலை ஏற்பட்ட பிறகு இனி என்ன ஜனநாயகம், வெங்காய நாயகம் பேச இந்த நாட்டிற்கு யோக்கியதை இருக்கிறது என்று கேட்கத் தோன்றுகிறது. மற்றும் பல ஸ்தாபனங்களில், சட்டசபைகளில், பாராளுமன்ற (பார்லிமெண்ட்) சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் என்பவர்கள் நடந்துகொள்ளும் தன்மைகளைப் பார்த்தால் ஜனநாயகத்தின் யோக்கியதை விளங்கவில்லையா? ஓட்டர்கள், தெரிந்தெடுக்கப்பட்டவர் யோக்கியதை என்ன என்பதும் விளங்கவில்லையா?

பொதுவாக, இந்திய ஜனநாயக ஆட்சியை எடுத்துக்கொண்டால் கொள்கைகளால், திட்டங்களால், விளைந்த, விளைந்து தீரவேண்டியவைகளான சில நன்மைகள், வளர்ச்சிகள் என்பவைகள் தவிர, மனித சமுதாயத்திற்கு ஏற்பட்ட நீதி என்ன? நாணயம் என்ன? யோக்கியம் என்ன? பாதுகாப்பு என்ன? அமைதி என்ன? கையில் வலுத்தவன் காரியம் என்பதல்லாமல் பாமர மக்களுக்குப் பாதுகாப்பு, உரிமை என்ன ஏற்பட்டது என்று சொல்ல முடியும்?

இவ்வளவுக்கும்—அதாவது இந்த சாதிப் பிரிவினால் ஏற்பட்ட கேட்டிற்குக் காரணம், சின்ன (எண்ணிக்கையுடைய) சாதியார்கள் பெரிய (எண்ணிக்கையுடைய) சாதியார்களை யோக்கியமான முறை அல்லாமல் தந்திரத்தால், சூழ்ச்சியால், கூடா நட்பால் ஆதிக்கம்பெற்று, என்றென்றும் தலையெடுக்க விடாமல் அடக்கி ஆள நினைத்து, ஆண்டு வருவதால்தானே ஒழிய வேறில்லை. இதற்குப் பரிகாரம் தேடியே ஆகவேண்டும். தேடாவிட்டால் பெரிய (எண்ணிக்கையுடைய) சாதி மக்கள், சின்ன (எண்ணிக்கையுடைய) சாதி மக்களை அழித்து ஒழித்துக்கட்டும் நாள் நெருங்கிவிடும் என்றே எச்சரிக்கை செய்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



ஏனென்றால், 'அக்கிரமத்தை அக்கிரமத்தால்தான் பரிகாரம் செய்ய முடியும்.' மற்ற 'வழி' எல்லாம் பேச, கேட்க அழகாய் இருக்குமே ஒழிய, காரிய சாத்தியமானதாகுமா? 'அரசு யோக்கியமாய் நடவாதபோது, தற்காப்புக்குத் திட்டம் கிடையாது; எது சாத்தியமோ, அதுதான் திட்டம்' என்கின்ற ஆப்த மொழிபோல் பரிகார நிலை பயங்கரமாகத்தான் காணப்படுகிறது.

இந்த நாட்டுக்கு ஜனநாயகம் என்பது பித்தலாட்ட நாயகமாகத்தான் இருக்க முடியும். எப்படியெனில், யோக்கியமான ஜனநாயகம் இருக்குமானால் 'ஷெடியூல் வகுப்புக்கு 100-க்கு 16 ஸ்தானங்கள்' என்று ஒதுக்கி இருக்கவேண்டிய அவசியமே வந்திருக்காதே! இந்திய நாடு பிறவியால் என்று பலசாதி, பலவகுப்பு, பலதரம் என்பவையான பல பிரிவுகளைக் கொண்ட நாடாகும். இவைகளில் சில 'கடவுள், மத, சாஸ்திர, தர்ம' சம்பிரதாயங்களைப் பொறுத்து ஏற்பட்டவை என்று உரிமை கொண்டாடப்படும் நாடு. நமது ஜனநாயகச் சட்டத்தில் 'இந்து உரிமைகள் பாதுகாக்கப்படும்' என்பதற்கான ஆதாரங்கள், அறிகுறிகள்தான் காணப்படுகின்றனவே ஒழிய, 'இந்த உரிமைகள் ஒழிக்கப்பட்டது—ஒழிக்கப்பட்டு விடும்; யாவருக்கும் எதிலும் சம உரிமை உண்டு; சம உரிமை ஏற்படுத்திக் கொள்ளலாம்' என்கிற அறிகுறியே இல்லையே? அந்த உரிமை சட்டத்தில் இல்லை என்பதற்கு ஆதாரந்தான்—அறிகுறிதான்—ஷெடியூல் வகுப்புக்கு மாத்திரம் 100-க்கு 16 எண்ணிக்கையும், மற்றபடி 100-க்கு 3 பேராய் இருக்கிற ஒரு சின்ன சாதியான, பல வகையிலும் முன்னேற்றம் அடைந்து, முன்னணியில் ஆதிக்கத்தில் இருக்கிற பார்ப்பன சாதிக்கு எவ்வளவு வேண்டுமானாலும் அவர்கள் அனுபவிக்க எடுத்துக்கொண்டது போக மீதிதான்—மற்ற மீதி உள்ளவர்களான 100-க்கு 81 பேர்களானவர்களுக்கு என்று—'சட்டத்தில் இல்லாவிட்டாலும், இதுதான் சட்டத்தின் கருத்து என்று' வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் கூறும் தீர்ப்புப்போல் சுப்ரீம் கோர்ட் (வேத வாக்கிய) தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது.

இன்று தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு, அதாவது, 100-க்கு 60 பேராக உள்ள சமுதாயத்திற்கு 25 மாத்திரம் ஒதுக்கி வைத்துவிட்டு, மீதி உள்ள 59 ஸ்தானங்களை 100-க்கு 26 உள்ள முற்படுத்தப்பட்டுள்ள சமுதாயத்திற்கு என்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தப்படி, 100-க்கு 26 உள்ள மக்கள், 59 வீதம் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்றாலும், இந்த 59-ல் வெகு சின்ன சாதியாகிய 100-க்கு 3 வீதம் உள்ள பார்ப்பான் 30-க்கு மேல் எடுத்துக்கொண்டு, 29-தான் 100-க்கு 56 வீதம் உள்ள பார்ப்பனரல்லாத மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டு விட்டது. இதிலும் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் பார்ப்பனரல்லாதார் போராடவேண்டி இருக்கிறது. எப்படி என்றால், ஒரு பார்ப்பனரல்லாத அபேட்சகன் பதவிக்குத் தேவையான அளவில் யுனிவர்சிட்டி பாஸ் செய்திருந்தால் மாத்திரம் போதாது. 'பரீட்சைக்கு உள்ள மொத்த மார்க்கில் 100-க்கு 50ஆவது வாங்கி இருக்க வேண்டும்.' இந்த விகிதம் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களாகிய 41, சில இடங்களில் 50 வரையும் உள்ள அபேட்சகர்களுக்குத் தேவை இல்லை. மீதி உள்ள 59 பேர்களில் சர்க்கார் ஒப்புக்கொண்ட அளவுக்குள்ளாகவே இருக்கும் பிற்பட்ட வகுப்பார்கள் எண்ணிக்கை சுமார் 40 விகிதம் இருக்கும். இவர்கள் கதி என்ன ஆவது? இதன் பயனாய் நாட்டில் சாதிக்கு ஒரு கட்சி ஏற்பட்டு அரசாங்கத்துடன் மோதுவதும், உள் கலகத்தை உண்டாக்குவதும், பள்ளிக்கூடங்கள், தொழில் ஸ்தாபனங்கள், சர்க்கார் காரியாலயங்கள் முதலிய எல்லா ஸ்தாபனங்களிலும் கலவரம், கீழ்ப்படியாமை, மேலிருப்பவன் கீழிருப்பவனை அழுத்தி வைத்தல், அனுபவத் தகுதிக்குமேல் தூக்கிவிடுதல் முதலிய தொல்லைகள் ஏற்பட்டவண்ணமே இருந்துவருகிறது. உதாரணமாக, என். ஜி. ஓ. சங்கத்தில் உள்ள அங்கத்தினர்களில் 100-க்கு 95 பேர்கள் சர்க்காருக்கு விரோதிகள்; கீழ்ப்படியாதவர்கள்; பொறுப்பும் கவலையும் அற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். காரணம், அவர்கள் மனக்குறைதான்.



பெரிய அதிகாரிகளும் இப்படித்தான். ஆசிரியர்கள் 100-க்கு 90 பேர்கள் இப்படித்தான். இவர்களுக்கு எல்லாம் சம்பளமாக—படியாக எவ்வளவு பணம் சேர்த்துக் கொடுத்தாலும் சர்க்காரிடம் விசுவாசம் என்பது அறவே ஏற்படுவதில்லை.

இதில் மந்திரிகள் செய்யும் தொல்லை ஒருபுறம்; அவர்களுக்கு வேண்டியவர்களைத் தூக்கி விடுவது, வேண்டாதவனை அழுத்துவது ஆகிய பல தொல்லைகள் விளைகின்றன. ஆகவே, இந்திய ஜனநாயகம் என்பது, இந்த சாதித் தொல்லைகளுக்கு நீதியான, விகிதாசாரமான உரிமைப் பரிகாரம் ஏற்படாதவரை—ஜனநாயகம், காலிகள் நாயகமாகத்தான் காட்சி அளிக்கும் என்பதோடு, மற்றும் முன் குறிப்பிடப்பட்ட கொலை, கொள்ளை முதலிய நாசவேலைகளுக்குப் பயிற்சி செய்யும் கலாசாலையாகத்தான் முடியும் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

குறிப்பு :

தமிழ்நாடு : பார்ப்பான், சைவன்—பார்ப்பனரல்லாதவர்கள் போராட்டம்.

கேரளா : நாயர்—ஈழவர் போராட்டம்.

ஆந்திரா : பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார், வெலமா—கம்மா போராட்டம்.

கன்னடம் : பார்ப்பான்—லிங்காயத்து, ஒக்கிலிகர்—குரும்பர் போராட்டம்.

பம்பாய் : மராட்டி, குஜராத்தி, மார்வாரி, பார்சி முதலிய போராட்டம்.

பஞ்சாப் : சீக்கியர்—பஞ்சாபிகள் போராட்டம்.

வங்காளம் : பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் போராட்டம்.

அஸ்ஸாம் : அஸ்ஸாமி—வங்காளி போராட்டம்.

மத்திய பிரதேசம் : வங்காளி—பீகாரி போராட்டம்.

உத்தரப் பிரதேசம் : காஷ்மீரி பார்ப்பனர்—உத்தரப் பிரதேசப் பார்ப்பனர்—உள்நாட்டுப் பார்ப்பனரல்லாதார் போராட்டம்.

மற்றும் இதுபோல பல என்பதோடு முஸ்லிம்—முஸ்லிம் அல்லாதார்; கிறிஸ்தவர் போராட்டம் மற்றும், பார்ப்பனரால் தூண்டிவிடப்படும் சில சாதிகள் தொல்லை—இப்படியாகக் கொள்கைக் காரணமில்லாமல், சாதிக் காரணமாகவே கலவரம், காலித்தனங்கள் உண்டாகின்றன.

இப்போது எல்லா சாதிக்கும் படிப்பு ஏற்படுத்தப்பட்டபடியால், இனி எல்லாச் சாதி, பெரு வகுப்புகள், எல்லா மதங்களுக்கும், பிரிவினை விகிதம் ஏற்படுத்திவிட்டுவிட்டால், காலித்தனங்கள் கண்டிப்பாய் அடங்கிவிடும்.

['விடுதலை'-தலையங்கம்—7-11-1966]

## 5. கோயில் ஒழிப்பு

உலகத்தில் உள்ள மக்கள் இந்த 20-வது நூற்றாண்டிலே எவ்வளவோ அதிசயங்களைச் செய்து இன்னும் எவ்வளவோ அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்ய முயற்சி செய்துகொண்டிருக்கிற காலத்தில் நாம் என்ன செய்கிறோம் என்றால், இப்போதுதான் சாதி ஒழியவேண்டும் என்று பேசுகிறோம்.

நீங்கள் நன்கு நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தச் சாதி என்பதே நமக்குத் தெரிய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குக் குறைவில்லாத காலந்தொட்டு இருந்துவருகிற இழிசின்னம் ஆகும். அதை, இன்றைக்குத்தான்—இவ்வளவு வேகமாக ஒழிக்கவேண்டும் என்று பேசுகிறோம் என்றால் வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. காரணம், மானம் உடையவனுக்குத்தான் மனிதன் என்று பெயர். 'மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு'

படிப்பகம்

www.padippakam.com



என்று சொல்கிறோம். இந்த இரண்டும் உ[illegible]ருக்கு இன்றைக்கு இந்த வேலையைச் செய்யும் நிலைமை ஏற்பட்டதென்றால்—இதுவரை இந்த சமுதாயத்திற்கு மான உணர்ச்சியோ, அறிவு உணர்ச்சியோ இல்லை என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது என்றுதான் நான் கருதுகிறேன். தப்பாக நினைக்கக்கூடாது. நமக்குப் போதிய மானம் இல்லை; இதைப் பார்க்கிறபோது இரத்தம் கொதிக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டுச் சரித்திரம் எதை எடுத்துக்கொண்டாலும், இன்று போடுகிற கூப்பாடு ஒரு அம்பது வருஷத்திற்கு முன்புகூட இருந்ததாகச் சொல்ல முடியவில்லை; 1900 ஆண்டுவரைகூட இல்லை. இப்போதுதான் இந்த அம்பது அறுபது வருஷத்தில்தான் சாதி ஒழியவேண்டும் என்ற பேச்சு—எண்ணம்கூட வருகிறது! சாதி ஒழியவேண்டும் என்ற எண்ணம் இதுவரை மக்களிடம் இருந்தது என்பதற்கு ஆதாரமே இல்லை. ஏதோ, சிலர் வேண்டுமானால் வீட்டிற்குள் இருந்துகொண்டு பேசியிருக்கலாம்; ஆனால், காரியத்தில் ஏதாவது மேற்கொண்டார்களா என்றால் இல்லை; இல்லாதது அதிசயம் அல்ல; நம் பரம்பரை அப்படியாகிவிட்டது.

நம்முடைய முன்னோர்களான அரசர்கள் அனைவரும் சாதியைக் காப்பாற்றினார்கள். நம் முன்னோர்களான மூவேந்தர்கள், அய்ந்து வேந்தர்கள்—வெங்காய வேந்தர்கள் எல்லாம் சாதியைக் காப்பாற்றித்தான் புகழ் பெற்றுள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் என்ன உயர்ந்த பட்டம் என்றால், 'மனுநீதி தவறாத குணசீலர்கள்' என்பது. இதை யாரும் மறுக்கமுடியாது. மனுநீதிக்குப் புறம்பாக அரசன் ஆண்டதாக இல்லை. ஏதோ புராணக் கதைகளைப் பார்த்தால் இரணியன் ஆண்டான், இராவணன் ஆண்டான், சூரபதுமன் ஆண்டான் என்று வருகிறது. ஆனால், அவர்களையெல்லாம் கொன்று குவித்து விட்டனர்; அவர்களை உலகத்தில் தலைசிறந்த அயோக்கியர்கள் என்று மனிதர்கள் சொல்லும் நிலைமையை ஏற்படுத்தி விட்டனர்.

சும்மா அவர்களைச் சொல்வதில் நாணயம் இல்லை. நம் யோக்கியதை என்ன? இனியாவது நமக்குப் புத்தி வருமா? மானம் வருமா? இரண்டாயிரம் வருஷங்களாக சாதியைக் காப்பாற்றும் அரசர்கள், கடவுள், மதம், சாதியைக் காப்பாற்றும் சாஸ்திரங்கள், சாதியைக் காப்பாற்றுகிற கடவுள் கதைகள், சாதியைக் காப்பாற்றுகிற சமுதாய அமைப்பு இவைகளில் மூழ்கித்தான் இருந்தோமே தவிர—எதிர்த்தவர்கள் யார்? சந்நிதானம் (குன்றக்குடி அடிகளார்) சமயம் சாதியைக் காப்பாற்றவில்லை என்று சொல்லுகிறார்கள். ரொம்பசரி; அது எந்த 'சமயம்' என்று எனக்கு இன்னும் தெரியவில்லை. அந்த சமயம் மக்களிடம் புகுந்திருக்கவில்லை. சாதியைக் காப்பாற்றுகிற சமயம் தானே இன்று நமக்குச் சட்டத்தில், சாஸ்திரத்தில், அரசாங்கக் கொள்கையில் எல்லாம் இருக்கின்றது?

சாதியைக் காப்பாற்றுகிற கடவுளைத்தானே இன்று நாம் கும்பிடுகிறோம்? நாம் கும்பிடுகிற கடவுள், சாதியைக் காப்பாற்றும் கடவுளல்ல என்று யாராவது சொல்லட்டுமே! நண்பர் ஆசைத்தம்பி சொல்லுகிறார், சுயராஜ்யம் வந்து 14 வருஷம் ஆகியுங்கூட சாதி போக வில்லை என்று! சுயராஜ்யம் வந்தால் சாதி போகும் என்று யார் சொன்னார்கள்? சாதியைக் காப்பாற்றுவதற்கென்றுதானே அவர்கள் சுயராஜ்யம் கேட்டார்கள்? அப்படியில்லாமல், சுயராஜ்யம் வந்தால் சாதி போய்விடும் என்று யாராவது சொல்லி நம்மை ஏமாற்றியிருந்தால் பரவாயில்லை; அப்படி யாரும் ஏமாற்றவில்லை. 'சுயராஜ்யம் என்றால் என்ன?' என்று காங்கிரசிலே தீர்மானம் போடுகிற காலத்திலேயே, 'சாதி மதங்களைக் காப்பாற்றுவது' என்று அவர்களே தீர்மானம் போட்டிருக்கிறார்களே! சாதியைக் காப்பாற்றுகிற சுயராஜ்யம் என்று சொல்லித்தானே முட்டாள் பசங்கள் கேட்காமல் கை தூக்கினார்கள்? 40 வருஷங்களாகக் காங்கிரசை விட்டு வெளியில் வந்தவுடனே, 'அது, சாதி காப்பாற்றுகிற சுயராஜ்யம்; வெள்ளைக்காரனாலும், முஸ்லிம்களாலும் போடப்பட்ட சதி; இதைக் காப்பாற்றத்தான் சுயராஜ்யம்'—என்று சொல்லி வருகிறேன். சுயராஜ்யத்தில் எலும்புத் துண்டு நிறைய இருந்ததால் ரொம்பப் பேருக்கும் அதிக ஆசை வந்தது.



என் அருமை நண்பர் இராஜாஜி சொல்கிறார்; 'யார் சொன்னார்கள் சாதி ஒழியும் என்று? எதிலே இருக்கிறது சாதி ஒழியும் என்று?' என்பதாக. அவர் நன்றாகக் கேட்கிறார்; கேட்பதில் தப்பு இல்லை. நாம் முட்டாள்களாக இருந்தோம். நான் 1931-லேயே எடுத்துக் காட்டியிருக்கிறேன்—'இன்னுமா புத்தி வரவில்லை?' என்று 'குடி அரசு' பத்திரிகையில் நான் எழுதியிருக்கிறேன். அப்போதே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; 'சுயராஜ்யம் என்பது சாதி, மதம், தர்மம் இவைகளைக் காப்பாற்றுவதே' என்று. இப்போது அவர்கள் கேட்பதில் தப்பு இல்லை; நாம் முட்டாள்களாகவே இருந்துவந்திருக்கிறோம். தெரியாமல் வயிற்றுச் சோற்றுக்காக முட்டாள் ஆனவர்கள் கொஞ்சம்; தெரிந்து முட்டாளானவர்கள் கொஞ்சம். இந்தக் கேட்டால் வந்ததே தவிர, எதிரியின்மேல் ஒரு குற்றமும் இல்லை.

சாதியைக்–காப்பாற்ற மனுதர்மத்தைக் காப்பாற்ற–புராண ஆட்சியை உண்டாக்கத் தான் என்று கூறி சுயராஜ்யம் கேட்டார்கள். அதிலே போனால் 'எலும்பு' கிடைக்கிறது என்று அனேகம் பேர் போனார்கள். ஆகையால் அது ஏமாற்றம் அல்ல. நமக்கு அறிவு, மானம் இல்லை; அவைகளை விற்று வயிறுவளர்க்கிறோம்; அதற்கேற்ற சந்தர்ப்பங்களை உண்டாக்குகிறோம். இவையெல்லாம் இருக்கிறவரையில் சாதிபோகும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

நம் கடவுள் — சாதி காப்பாற்றும் கடவுள்
நம் மதம் — சாதி காப்பாற்றும் மதம்
நம் அரசாங்கம் — சாதி காப்பாற்றும் அரசாங்கம்
நம் இலக்கியம் — சாதி காப்பாற்றும் இலக்கியம்
நம் மொழி — சாதி காப்பாற்றும் மொழி

இதை உயர்ந்தமொழி என்கிறார்கள். என்ன வெங்காய மொழி? இரண்டாயிரம் வருடங்களாக இருக்கும் தமிழ்மொழி, சாதியை ஒழிக்க என்ன செய்தது? மொழிமீது என்ன இருக்கிறது? ஏதோ மொழிமீது நம்முடைய பற்று; விவரம் தெரியாமல் சிலருக்குப் பற்று. எந்த இலக்கியம் சாதியை ஒழிக்கிறது? நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்–வெங்காயம் என்று பாடியிருக்கிறான்; இந்த மடையனும் தினமும் படிக்கிறான். அது, முதல் பக்கத்தில் இருந்து கடைசிப் பக்கம்வரை சாதியைக் காப்பாற்றுவதுதானே? அதை அனுசரித்துத்தானே புலவன் பாடியிருக்கிறான்? கோபித்துக் கொள்ளாதீர்கள்; நிலைமை அப்படி நம் மக்களை நெருக்கடியில் வைத்து, கீழே அதை எதிர்ப்பதற்கில்லாமல் ஏற்பாடு செய்தார்கள்; எதிர்த்தவர்களைக் கொன்றார்கள்; ஒழித்துக் கட்டினார்கள். எதிர்த்தால், 'இரணியனைப் பார்த்துக் கொள்'; 'இராவணனைப் பார்த்துக்கொள்'; 'சூரபதுமனைப் பார்த்துக்கொள்!' என்று சொல்லி மக்கள் எல்லோரையும் மடையர்களாக்கிவிட்டார்கள். அதிலிருந்து வெளியில் வர யாரால் முடிந்தது? வெளியிலே வந்தால் அவர்கள் எல்லாம் நாத்திகர்கள்! துவேஷிகள்!

சந்நிதானம் (குன்றக்குடி அடிகளார்) சொன்னார்கள், 'நாத்திகம்' என்றால் 'ஆராய்ச்சி' என்று. ஆராய்ச்சி என்றால் நாத்திகம்; ஆராய்ச்சிதான் பகுத்தறிவு. ஆகவே, பகுத்தறிவு என்றாலே நாத்திகம் என்று பெயர். ஆராய்ச்சிக்கு—பகுத்தறிவு, நாத்திகம் என்று பெயர் வைத்து விட்டதால் அறிவைப் பயன்படுத்தப் பயந்தார்கள்; துணிச்சல் இல்லை.

சகலமும் மேல் சாதிக்காரனின் ஆயுதம். கடவுள் அவனுடைய ஆயுதம்; மதம் அவன் உண்டாக்கியது. இவைகள் எல்லாம் எதற்கு என்றால் நமக்குத் தெரியாதென்றாலும், அவற்றிலே நமக்குக் குரங்குப் பிடி!

இன்று இங்கு பேசிய அறிஞர்கள், பெரியோர்கள் எல்லாம் உயர்ந்த வைத்தியர்கள். சாதி என்ற கொடுமையான நோயை ஒழிக்க நல்ல மருந்து கொடுத்தார்கள். அவர்கள் சொன்னவற்றில் நான் தப்புச் சொல்லவில்லை. அந்த நோய்க்குப் பரிகாரம் அவ்வளவுதான்.

படிப்பகம்

www.padippakam.com



மலேரியா நோய்க்குப் பரிகாரம் 'கொய்னா' சாப்பிட்டால் போதும்; அல்லது டாக்டரிடம் ஒரு 'டோஸ்' மருந்து சாப்பிட்டால் போதும்; அல்லது ஒரு தடவை ஊசி குத்திக் கொண்டால் போதும். அது ஒன்றும் தப்பு இல்லை—இவை யெல்லாம் உண்மையான மருந்து என்றே வைத்துக்கொள்ளுங்கள். இவையெல்லாம் நோயைப் போக்குமே தவிர, நோய் வராமல் தடுக்குமா? நோய் வந்தவனுக்கு மருந்து கொடுத்தால் சவுகரியமாகும்; சந்தேகமே இல்லை. ஒருவர் யூனானி வைத்தியர்; மற்றொருவர் ஹோமியோபதி வைத்தியர்; இன்னொருவர் சித்த வைத்தியர். எல்லோரும் நல்ல வைத்தியர்கள் தாம். இவர்களால் நோய் தீரும். ஆனால், வராமல் இருக்க வேண்டுமே? வந்துகொண்டே யிருந்து—தீர்த்துக்கொண்டேயிருந்தால் என்ன இலாபம்?

நல்ல வைத்தியர் என்று சொன்னால் நோய், நொடி பார்த்தால் போதாது. நோய் வந்த சங்கதி எப்படி என்று பார்க்க வேண்டும். அதற்கென்று ஒரு இலாக்கா தனியாக இருக்கிறது. அந்த இலாக்காவில் ஆராய்ச்சி செய்கிறார்கள்—மலேரியா எப்படி வருகின்ற தென்று. நோய் தீருவது பற்றி அந்த இலாக்காக்காரர்களுக்குக் கவலையில்லை. இந்த நோய் எதிலிருந்து வருகிறதோ, அதை ஒழிக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்துவர்.

அதுபோல, மதம் என்பது ஒரு நோய்; எல்லோரையும் பிடித்துவிடுகிறது. நான் சாதியைத் தொலைத்துவிட்டேன். என் பிள்ளைக்கும் அது போய்விட்டது. நான் இருக்கிற வரை இது பற்றிச் சொல்வேன். நான் செத்துப்போனால் சாதி, மதம் எல்லாம் பொய் என்று சொல்லுவதற்கு யார் இருக்கிறார்கள்? மறுபடியும் நோய் வந்துவிடுமே? சாதியைப் புகுத்துகிற மற்ற சாதனங்கள் எல்லாம் இருக்கின்றனவே? மலேரியா வராமல் தடுப்பது எப்படி என்று பார்த்துத் தடுக்க வேண்டும். அப்போதுதான் நிற்கும். மருந்து மட்டும் கொடுத்தால் வராமல் இருக்காது. அது வந்ததற்குப் பரிகாரம்; வராமல் இருக்க, தடுப்புச் செய்ய வேண்டுமானால் ஆராய்ச்சி ஸ்தாபனம் வைத்தால்தான் முடியும்.

அடுத்த வருடம் நம் நாட்டிலே மலேரியா இருக்காது என்று ஒரு பத்திரிகையில் பார்த்தேன். வராமல் இருக்க என்ன செய்தார்கள்? மலேரியாவிற்குக் காரணம் கசுமாலமும், அதில் பிறக்கும் கொசுவும். கொசுவிற்குக் காரணம் குப்பை; குப்பையில் கொசு முட்டை யிடுகிறது; குஞ்சு பொரிக்கிறது. அதன்மூலம் மலேரியா வந்துவிடுகிறது. அதுபோல, சாதி ஒழிப்புக்காரர்கள் அங்கே போகவேண்டும்; எங்கே கொசு உற்பத்தியாகிறதோ அங்கே போகவேண்டும். சாதிக்குக் கசுமாலம் கடவுள்; அதற்குக் கசுமாலம் சாஸ்திரம்—புராணம்; சாதிக்குக் கசுமாலம் அதன் பாதுகாப்பாளர்கள். இத்தனை பேரையும் ஒழித்தால் தானே கொசு (சாதிநோய்) வராமலிருக்கும்? கடவுளை வைத்துக்கொண்டு கொசுவை (சாதியை) ஒழிக்கவேண்டும் என்றால் எப்படி ஒழிக்கமுடியும்?

இராமனை—சாதி இல்லை என்கிறீர்களா? விஷ்ணுவை—சாதி இல்லை என்கிறீர்களா? பிள்ளையாரை—சாதி இல்லை என்கிறீர்களா? சிவனை—சாதி இல்லை என்று சொல்லு கிறீர்களா? எந்த சாஸ்திரத்தைச் சொல்கிறீர்கள்—சாதி இல்லையென்று? உபநிஷத்தைச் சொல்கிறீர்களா? ஸ்மிருதிகளைச் சொல்கிறீர்களா? இவைதவிர உங்களுக்கு என்ன தெரியும்? சந்நிதானத்திற்குத் தெரியும் வேறு சங்கதிகள். அவர்கள் சொல்லுகிற சிவம் வேறு; நாம் எல்லோரும் நம்பிக்கொண்டிருக்கிற சிவம் வேறு. அவர் சொல்லுகிற சமயம் வேறு; நம்மைப் பிடித்து ஆட்டுகிற சமயம் வேறு. இராமாயணத்தைப் படித்தால் சாதி போய் விடுமா? சிவபுராணத்தைப் படித்தால் சாதி போய்விடுமா? இவைதவிர நமக்கு வேறு என்ன இருக்கிறது? அதை யார் படிக்கிறார்கள்? யார் எடுத்துச் சொல்கிறார்கள்? இவ்வளவு பெரிய நாட்டிற்கு ஒரேயொரு சந்நிதானம்தான் எடுத்துச்சொல்லுகிறார்கள். எவ்வளவு நாளைக்கு? அவருக்கு ஒரு 20 ஆயிரம் ஆயுள் இருந்தால் நம் ஜனங்களுக்குப் புத்திவரலாம்.

அரசியல் என்று பேசுகிறார்கள்; அது பைத்தியக்காரப் பேச்சு. நம் நாட்டில் அரசியலே இல்லை. நாட்டில் இருப்பது சாதியைக் காப்பாற்றும் சாதனமே. ஒருவன்



சுதந்திரம் என்கிறான்; மற்றொருவன் அரசியல் என்கிறான்; ஒருவன் வெங்காயம் என்கிறான். இதுதவிர, செயலில்—சிந்தனையில் சாதியை ஒழிப்பதே இல்லை. இல்லை என்பது மாத்திரமல்ல; சாதியைக் காப்பாற்றுவது என்றே இருக்கிறது.

ஒருவர் எவ்வளவுதான் சட்டத்தை, சாஸ்திரத்தை வெறுத்தாலும் சட்டசபைக்குப் போனவுடன், 'சாஸ்திரத்திற்குக் கட்டுப்படுகிறேன்' என்று சொல்லிவிட்டுத்தான் உட்கார முடிகிறது. 'சாதி, மத சம்பிரதாயங்கள் எல்லாம் தனி மனிதன் உரிமைகள்; அவற்றைக் காப்பாற்றுவதுதான் சுதந்திரம்; இந்தச் சுதந்திரத்தின் (சட்டத்தின்) மூலமாக மக்களுக்கு இவைகளைக் காப்பாற்றுகிறோம்' என்று உறுதிகூறுகிறார்கள். ஆகையால், நாம்தான் ஏமாந்தவர்கள்; இல்லாவிட்டால் பித்தலாட்டம் பேசுகிறவர்கள். எப்படிச் சாதியை ஒழிக்கிறவர்கள் என்பவர்களுக்குக் கடவுள் இல்லையோ—சாஸ்திரம், மதம் இல்லையோ—அதே மாதிரிதான் சாதியை ஒழிக்கிறேன் என்கிறவர்களுக்கு அரசாங்கம் இல்லை. அதே மாதிரி அமைந்துவிட்டது.

ஆழ்வார்கள், நாயன்மார்கள் எல்லாம் சாதிப்படி நடந்தவர்கள்தாமே? இல்லா விட்டால் அவர்களுக்கு ஆழ்வார்கள், நாயன்மார்கள் பட்டம் ஏது? ஏன் சொல்லுகிறேன் என்றால், சுற்றி இருக்கும் அமைப்புகள் எல்லாம் நம்மை அமுத்தவே இருக்கின்றன. ஆகவே, நாம் சாதாரண முறையில் சாதியை ஒழிக்க முடியாது. மதிப்பிற்குரிய நண்பர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் சொன்ன வழியெல்லாம் மருந்து. தனிப்பட்ட மனிதனுக்குச் சாதகமாகும். உடனே நம் பிள்ளைக்கு வந்துவிடும்.

ஆனதினாலே, நாம் ஏதாவது காரியம் செய்யவேண்டும் என்றால் நம் மதத்தை, கடவுளை, சாஸ்திர, புராண இதிகாசங்களை நெருப்பு வைத்துக் கொளுத்தத் தயாராக இருக்க வேண்டும். கடவுள்களையெல்லாம் சிதறுகாய் போடவேண்டும். எல்லாக் கடவுள் களும் சாதியைக் காப்பாற்றும் கடவுள்கள்—சாதிக்கு விரோதமாக நடந்தவர்களைக் கொல்லும் கடவுள்கள். இது தவிர வேறு என்ன வேலை இந்தக் கடவுள்களுக்கு? எதற்காக சுப்பிரமணியம் வந்தார்? எதற்காக அவதாரம் எடுத்தார், விஷ்ணு? அவர் கொன்ற ஆள் யார்? விஷ்ணு கொன்ற அத்தனை பேரும் சாதிக்கு விரோதிகள்; சாதியை ஒழித்தவர்கள்; பார்ப்பானை ஒழித்தவர்கள்; சாஸ்திர சம்பிரதாயங்களை அலட்சியம் செய்தவர்கள்; அவர்களை ஒழிக்கத்தான் இந்த அவதாரம். அந்த அவதாரத்திற்குக் காரணம், 'ஆரிய தர்மத்தைக் காப்பாற்ற அவதாரம் எடுத்தார் கடவுள்' என்பதைத் தவிர, எந்தக் கடவுளாவது உலகத்தைக் காப்பாற்ற வந்திருக்கிறார்களா?

தர்மம் என்றால் என்ன? உனக்குப் புத்தியில்லா விட்டால்—இராஜாஜி சொல்கிறார்: 'சாதி தான் தர்மம்' என்று. சாதி என்றால் என்ன? 'அவரவர்கள் குலத் தொழிலைச் செய்வதுதான் சாதி தர்மம்' என்று அவர் பச்சையாகச் சொல்கிறார். நமக்கு ஒரு சவுகரியம், நம் எதிரி யார் என்று தெரிந்து கொள்ள வசதி ஏற்பட்டிருக்கிறது.

நம்முடைய கட்சி என்ன? சாதியை ஒழிக்கவேண்டும் என்பது. அவர்கள் கட்சி என்ன? சாதியைக் காப்பாற்றவேண்டும் என்பது. அவர்கள் பக்கத்தில் ஒரு கூட்டம் அவர்களுக்குக் கையாளாக இருக்கிறது. இது தவிர, இன்று அரசியல் என்ன? ஒரு அரசியல் சாதி காப்பாற்றப்படவேண்டும்—அதற்கு மாறாக இருக்கிற கட்சியை ஒழிக்க வேண்டும் என்பது.

பச்சையாகச் சொல்கிறார் இராஜாஜி: 'சாதியைக் காப்பாற்றுவதுதான் என் வேலை; அதற்காகத்தான் மூச்சு விடுகிறேன்; இல்லாவிட்டால் பொது வாழ்வு எனக்கு அவசியம் இல்லை; தர்மம் கெட்டுவிட்டது. இன்றைய ஆட்சி—தர்மத்தை அழிப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது' என்று. இது உங்களுக்குத் தெரியவில்லை. அவ்வளவு யூகம் இல்லை. அவர்களுக்குத் தெரிகிறது—'இன்றைய ஆட்சி, தர்மத்தை ஒழிக்கிறது' என்று. 'நீண்ட நாட்களாக இருந்துவந்த தர்மத்தை, இந்த ஆட்சி கெடுக்கிறது. சீக்கிரமாக—



படிப்பகம்

www.padippakam.com

அதிலும் சமீப காலத்தில் தலைகீழாய்க் கெடுக்கிறது. ஆனதால், அதை ஒழித்துத் தீர வேண்டும்'—இப்படி, 'தின மணி'யில் வருகிறது. மற்ற பத்திரிகைகளிலும் இருக்கிறது.

ஆகவே, இன்றையப் போராட்டமே சாதியைக் காப்பாற்றுவது என்பதும், சாதியை ஒழிப்பது என்பதும்தான். உண்மை எப்படியோ—போராட்டத்தின் வெளிப்படையான தத்துவம் இதுதான். உங்களுக்குப் புரியாவிட்டால் நம் எதிரி சொல்லுகிறார்; அதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். இதிலே நம் கடமை என்ன என்று, யாருக்குத் தெரியும்? இது தவிர, 'அரசியல், அரசியல்' என்றால், அரசியல் புரியாத பைத்தியம்தான்.

நமது மூவேந்தர்களைப்பற்றிச் சொன்னால் சிலருக்குக் கோபம் வரும்; வெள்ளைக் காரனைப்பற்றிச் சொன்னாலும் சிலருக்குக் கோபம் வரும்; சுயராஜ்யத்தைப்பற்றிச் சொன்னாலும் சிலருக்குக் கோபம் வரும். உண்மையாகச் சொல்லுகிறேன்—நம்நாட்டில் பழைய காலத்தை விட்டுவிடுங்கள். மூவேந்தர் காலத்தில் யாராவது படித்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை. 'ஏதோ புலவர்கள் சங்கம்' என்று சொல்கிறார்கள். அதிலே ஏதோ கொஞ்சம் பேர் இருந்திருப்பார்கள். எப்படியோ அவர்கள்பேரில் குற்றம் சொல்ல வேண்டாம்; தள்ளிவிடுங்கள். வெள்ளைக்காரன் வந்து 150 வருட ஆட்சி இந்த நாட்டில் நடந்த பிறகும் போனவாரத்தில் வந்த பத்திரிகையிலிருந்து சொல்கிறேன்:

சர்க்கார் கொடுத்த கணக்குப்படி 1901-ல் 100-க்கு 7 பேர் படித்திருக்கிறோம் நாம். ஆனால், அன்று பார்ப்பானோ 100-க்கு 100 பேர் படித்திருக்கிறான். என்ன நம் இராஜாக்கள் யோக்கியமாக ஆண்டிருக்கிறார்கள்? ஒரு இராஜாவும் பள்ளிக்கூடம் கட்டியதாகக் காணோம். ஆனால், பார்ப்பனர்களுக்குப் பாடசாலை கட்டியிருக்கிறார்கள். அதற்காகச் சத்திரம் இருக்கிறது. சமஸ்கிருதம் சொல்லிக்கொடுக்கப் பள்ளிக்கூடம் கட்டியிருக்கிறார்கள். தமிழுக்குப் பள்ளிக்கூடம் வைத்துத் தமிழ் சொல்லிக்கொடுத்தார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே! 'சூத்திரன் படித்தால் பாவம்; அவனுக்குச் சொல்லிக்கொடுத்தால் நரகம்.' ஆகவே, இரண்டும் தவறு. சூத்திரன் படித்தால் பார்ப்பானுக்கு ஆபத்து. ஆதலால் சூத்திரன் படிக்காமல் அரசன் பார்த்துக்கொள்ள வேண்டும். இது மனு தர்மம். அதற்குக் கட்டுப்பட்டவர்கள் அரசர்கள். ஏதோ மருந்து சாப்பிட்டால் போதுமா? வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே? அதற்கு அஸ்திவாரத்தைத் தோண்டியல்லவா செய்யவேண்டும்? இன்று தப்பித்துக்கொண்டால் நாளைக்கு மாட்டிக் கொள்ளுகிறோம்.

நம்முடைய நாட்டில் கிளர்ச்சிகள் வரும். அதற்குத் தக்கபடி மேல்சாதிக்காரர்கள் தங்களைத் தணித்துக்கொள்வார்கள். காரம் போனவுடன் பழையபடி அதைக் கொண்டு வந்து விடுவார்கள். இந்த மாதிரியான நெருக்கடி நிலைமை நாட்டில் சாதியைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறது. நமக்கு இன்று ஒன்றும் குறைவு இல்லை. சாதி தவிர, வேறு எவ்விதமான குறைபாடும் இருக்க இடமில்லை. ஏற்பட்டிருக்கிற குறைபாடு என்று எதைச் சொன்னாலும்—சாதியைத்தான் சொல்லவேண்டும். நாம் படிக்கவில்லை என்றால் —புத்தியில்லாமல் அல்ல; நாம் படிப்பது தர்மத்துக்கு விரோதம் என்றால், எப்படி நாம் படிக்கமுடியும்?

நமக்கு வெள்ளைக்காரன் படிப்புச் சொல்லித் தரவில்லை என்றால்—படிக்கமாட்டோம் என்பதற்காகவா சொல்லிக்கொடுக்கவில்லை? பார்ப்பானுக்கு விரோதமாக நடப்பதில்லை என்று ஒரேயடியாக வெள்ளைக்காரனிடம் எழுதி வாங்கிக்கொண்டார்கள்—காந்தியிடம் எழுதி வாங்கிக்கொண்டு அவருக்கு 'மகாத்மா' பட்டம் கொடுத்த மாதிரி.

'நான் இந்து. எனக்குக் கடவுள் அவதாரங்களில் நம்பிக்கை உண்டு; மறு பிறப்பில் நம்பிக்கையுண்டு; பார்ப்பனர்களின் ஆயுதங்கள் எல்லாவற்றையும் காப்பாற்றுகிறேன்' என்று சத்தியம் செய்த பிறகே, காந்திக்கு மகாத்மா பட்டம் கொடுத்தார்கள். அதை மீறினார்; உடனே கொன்று தீர்த்துவிட்டார்கள். இதே மாதிரி நம் ஆழ்வார்கள், நாயன்



மார்கள் எல்லோரும் அவர்களுக்கு எழுதிக்கொடுத்தார்கள். வெள்ளைக்காரனும் இப்படி எழுதிக்கொடுத்தான்—'உங்கள் தர்மங்களில் கை வைப்பதில்லை' என்று; கை வைத்தார்கள்—ஒழித்துக்கட்டிவிட்டனர். அவ்வளவுதான்! ஆகவே, நமக்கு இருக்கிற கஷ்டம் என்னவென்றால், சாதி போக வேண்டும் என்று சொன்னால் போதாது. எதிலிருந்து சாதி வருகிறதோ அதை ஒழிக்க வேண்டும். அதற்குத் தைரியம் வேண்டும்.

சிவனையும், விஷ்ணுவையும், கிருஷ்ணனையும் ஒழித்தால் கடவுள் போய்விடாது. இராமன் போய்விட்டால் கடவுள் போய்விடும்; கிருஷ்ணன் போய்விட்டால் கடவுள் போய் விடும் என்பது முட்டாள்தனம். அவர்கள் கடவுள் என்று எதிலே கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. வெறும் புளுகுப் புராணக் கதையில் கண்டு பிடித்த சங்கதிதான். இராமாயணம் இல்லையென்றால், இராமன் இல்லை; கந்தபுராணம் இல்லையென்றால் கந்தன் இல்லை; விஷ்ணு புராணம் இல்லையென்றால் விஷ்ணு இல்லை. இந்தமாதிரி புராணங்களிலிருந்து உற்பத்தி செய்து நம் தலையில் போட்டு அவனுடைய படங்களை ஏற்கச் செய்துவிட்டான் என்றால் அதற்கும், கடவுளுக்கும் என்ன சம்பந்தம்? எந்த மடையனாவது இவர்களைக் கடவுள் என்று சொல்ல முடியுமா? பார்ப்பான் எழுதி வைத்திருக்கிற கதைப்படி பாருங்களேன்! நாம் அவ்வளவு முட்டாளாக இருந்தால் எப்படிப் போகும்? எதற்காக இராமன் பிறந்தான்? தர்மத்தைக் காப்பாற்ற. என்ன தர்மம்? 'பார்ப்பான் கடவுளுக்குச் சமானம்; சூத்திரன் மலத்திற்குச் சமானம்!' என்பது. இந்தக் கதையையே நாம் பார்ப்பது; பாராயணம் செய்வது; அதையே நாம் கும்பிடுவது; அப்புறம் சாதி ஒழியவேண்டும் என்பது. இந்தச் 'சாதி' இவ்வளவு நாள் நிலைத்திருப்பதற்குக் காரணம் அதற்குப் பாதுகாப்பாக இந்தச் சாதனங்கள் இருந்துவருகிறதால்தான். அதற்கு ஏற்ப ஆட்சியும் அவன் கையில் இருந்துவருகிறது. அவன் கையைவிட்டு ஆட்சியைப் பிடுங்கி விட்டால் போதுமா?

சந்நிதானம் முயற்சி எடுக்கிறபடி கோயில், குளங்களில் நம் ஆதிக்கம் வந்தால், நாம் சாமியை வேண்டுமானால் பிறகு மாற்றிக்கொள்ளலாம். ஆதிக்கம் அவனிடத்தில் இருக்கிறதே, எப்படி மாற்றுவது? இன்னமும் அவனுடைய தர்மம்தான்; ஆட்சிதான்.

என்ன முன்னோர்கள்? கழுதைக்குப் பிறந்தவன், நாய்க்குப் பிறந்தவன், கோட்டானுக்குப் பிறந்தவன். இந்த முன்னோர்கள்தாம் வேதம் எழுதினார்கள்; புராணம் எழுதினார்கள்; வெங்காயம் எழுதினார்கள். உபநிஷத் எழுதியவன் யார்? மனிதனுக்கும்–குதிரைக்கும் குழந்தை பிறந்திருக்குமா? இவனையெல்லாம் பெரிய ரிஷி என்கிறார்கள். சாஸ்திரம் இவன் எழுதினான்; புராணம் இவன் எழுதினான். எழுதிய பயல்களைப் பார்த்தால், எல்லாம் அயோக்கியப் பயல்கள்! மனிதனுக்குப் பிறந்தவர்கள் அல்லர். இவர்களைத் தவிர வேறு முன்னோர்கள் இல்லை. இதைச் சொல்லியே நம்மை மிரட்டுகிறார்கள். இராஜாஜி சொல்கிறாரே, 'நம் முன்னோர்கள் நல்லபடி யோசனை செய்து உலக க்ஷேமத்திற்காகத்தான் தர்மத்தை எழுதினார்கள்' என்று. அதற்கு நேரு பதில் சொல்கிறார், 'நம் முன்னோர்கள் யார்? காட்டுமிராண்டிகள்தானே? ஒரு காட்டுமிராண்டி இன்னொரு காட்டுமிராண்டிக்கு எழுதி வைத்தது, இன்றைய மனிதனுக்குப் பொருந்துமா?' என்று கேட்கிறார். ஏன் சொல்லுகிறேன் என்றால், இதுதானே இன்று போராட்டமாக இருக்கிறது?

சாதியை ஒழிக்கிறார்களோ, இல்லையோ—நான் என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். நம் அரசாங்கம் இன்று சாதியை ஒழிக்கிறோம் என்று சொல்கிறது—வாயளவிலாவது சொல்கிறது. அதற்கு வேண்டிய காரியங்கள் செய்கிறோம் என்று சொல்கிறது. இதற்காகப் 'பறையருக்கு வீடு கட்டுகிறோம்; படிப்பு சொல்லித் தருகிறோம்; உத்தியோகம் தருகிறோம்; மற்ற சாதிக்காரர்களுக்குச் சமமாகச் செய்வதற்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ, அவைகளையெல்லாம் செய்கிறோம்' என்று சொல்லுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



'சாதி ஒழியாத சுயராஜ்ய[illegible]ம்!' என்று ஆசைத்தம்பி கேட்டார். காமராசரும் அதைத்தான் கே[illegible]சொல்லிவிட்டார்; 'சாதியை நம் நாட்டில் வைத்துக்கொண்டு வெளிநாட்டில், பேசப் பேச வெட்கமாக இருக்கிறது' என்று சொல்கிறார். அந்த அளவிற்காவது அவர்களுக்குப் புத்தி வந்திருக்கிறது என்றால், உங்கள் கடமை என்ன? இவர்களை ஒழித்துவிட்டுப் பார்ப்பான் கையில் அதிகாரத்தைத் தருவதா உங்கள் கடமை? மனிதன் புத்தி எவ்வளவு மோசமாக இருக்கிறது?

இன்று சாதியை ஒழிக்கிற நிலைமை வந்துவிட்டது; உங்களால் வரவில்லை—எப்படியோ அந்தச் சூழ்நிலை வந்துவிட்டது. இன்று சாதி இல்லை. எங்கே இருக்கிறது சாதி? பலாத்காரத்தில் மனிதனை அடக்கச் சாதி இருக்கிறதே தவிர, இயற்கையில் எங்கே இருக்கிறது?

மதிப்பிற்குரிய கி. ஆ. பெ. விசுவநாதம் சொன்னார். அவர் சொன்னபடி, எல்லோரும் எல்லோர் வீட்டிலும் இன்று சாப்பிடுகிறார்கள்; கலப்பு மணமும் சுளுவாக இருக்கிறது. நேருக்கு நேர் தெரியாவிட்டாலும் பலவிதத்தில் நடந்துகொண்டிருக்கிறது. சாதி போகாமல் எங்கேயாவது இருக்கிறதா? போகாமல் எங்கேயாவது இருக்கிறது என்று அடையாளம் காட்ட வேண்டுமென்றால், சந்நிதானம் சொல்லுகிற—கடவுள் இடத்தில் பார்ப்பான் இருக்கிறான். மற்றபடி எங்கே இருக்கிறது? ஆனால், அதன் சலுகையால் கிடைக்கும் அனுகூலத்திற்காக, 'அதில் கை வைக்காதே!' என்று தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து மீள முடியவில்லை. இப்படியாக எப்படியோ அவர்களால் வந்தது. அதிகார ஸ்தானம் அவர்கள் கைக்குப் போய்விட்டது. அரசியல் ஸ்தாபனம் அவர்கள் சொன்னபடி நடப்பதாகப் போய்விட்டது. நமக்கு நாதி இல்லை. 20, 30 வருட வேலையின் பயனாக, இன்றுதான் சாதி ஆணவக்காரன் கையிலிருந்த ஆட்சி, சாதியின் கீழ்மகன் கைக்கு வந்திருக்கிறது. இது பெரிய போராட்டமாகப் போய் விட்டது. இந்த அளவுக்கு வந்ததை வைத்துக்கொண்டு எவ்வளவோ காரியங்கள் செய்ய முடிந்தன.

இராஜாஜி, தர்ம ராஜ்யம் இருக்கவேண்டும் என்கிறார். சாதியைக் காப்பாற்றுவது தானே மனுதர்ம ராஜ்யம்! அதை ஒழிக்கவேண்டும் என்பது மனித தர்ம ராஜ்யம். நம் போராட்டம் 30, 40 வருஷங்களாக மனித தர்ம ராஜ்யத்திற்காகத்தான். அவர்கள் மனுதர்ம ராஜ்யத்தைக் காப்பாற்றுகிறார்கள்; அதற்காகத் தனிக்கட்சியை ஏற்படுத்த வேண்டாமா? ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்று, யார் யார் காமராஜ் ஆட்சியை எதிர்க் கிறார்களோ அவர்கள் எல்லாம் சாதியைக் காப்பாற்றத்தான் முயற்சி செய்கிறார்கள். சாதியை ஒழிக்கிறார் காமராசர். அவர்பேரில் ஆத்திரம் உள்ளவன் எவனாக இருக்க முடியும்? எந்தக் காரணத்தை முன்னிட்டும் காமராசரை எதிர்ப்பவன் சாதியைக் காப்பாற்று கிறவனே! பொதுஜனங்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால் உங்கள் கடமை என்ன என்று நீங்கள் சிந்திக்கவேண்டும். சாதி ஒழிக்கப் பாடுபடுகிறோம் என்றால், அதை–சாதியை ஒழிப்பவனை ஒழிப்பதற்குப் போட்டிபோடுவதா? இது பச்சைத் துரோகமல்லவா?

இந்த மாதிரியான வாய்ப்பு நமக்கு இலேசில் வராது. உங்கள் ஆதரவு இருக்கு மானால், நீங்கள் எல்லாம் போதுமான அறிவு உணர்ச்சி பெற்றிருக்கிறீர்கள் என்று உங்களிடம் ஆட்சியாளர்களுக்கு நம்பிக்கை இருக்குமானால்—கண்டிப்பாக சாதி, கடவுள், மதத்தை, சாஸ்திரங்களை எங்களுக்குமுன் ஆட்சியாளர்களே கொளுத்திவிடுவார்கள். உங்களுக்குத் தைரியமிருந்தால் பார்ப்பான்கூட கடவுளை ஒழிக்கிறேன் என்று வந்து விடுவான்! அந்த அளவுக்கு நிலைமை வந்துவிடும். நீங்கள் எல்லாம் ஓட்டர்கள். உங்கள் 'ஓட்' பெற்றுத்தான் பதவிக்கு வரவேண்டும்; உங்கள் உணர்ச்சி எப்படியிருக்கிறதோ அந்த மாதிரிதான் அவர்கள் நடந்துகொள்வார்கள்.



இந்த மாநாடு, சாதி ஒழிப்பு மாநாடு என்று சொல்லுவதோடு, நாம் நாளைக்குப் போடும் 'ஓட்'–சாதி ஒழிப்புக்காகப் போடுகிற ஓட் என்று ஆக்கிக்கொள்ளவேண்டும். அரசியல் ஓட்டாக வைத்துக்கொள்ளக்கூடாது. இந்த மாதிரி வாய்ப்பு நமக்குக் கிடைக்காது. எனக்குள்ள கவலையெல்லாம் இந்த ஒரு தடவை இந்த ஆட்சி பிழைத்துவிட்டால் பிறகு இலேசில் சாகாது. நான் அரசியல் உணர்ச்சியை மனத்தில் வைத்துக்கொண்டு நமக்கு இலாபம் எப்படிவரும் என்று எதிர்பார்த்துச் சொல்லவில்லை. எனக்கு என்ன தேவை? எனக்கு என்ன வேண்டும்? எனக்கு வேண்டியதெல்லாம் சாதி ஒழியவேண்டும்; அதற்குச் சம்பந்தமான கடவுள், மதம் ஒழியவேண்டும் என்பதுதான். பணம் காசு ஆசை இருக்கும். ஆனால், இது என் பெண்டு, பிள்ளைகளுக்கு அல்ல. எனக்குப் பின்னால் இந்தக் காரியம் நடக்க பந்தோபஸ்துக்குப் பணம் எதிர்பார்ப்பேன். ஆனதால், நல்ல சந்தர்ப்பத்தை நீங்கள் இழந்துவிடாதீர்கள்.

இராஜாஜியின் சுபாவம், அவருடைய குயுக்தி, குறிக்கோள் எல்லாம் ஒவ்வொரு சமயத்திலும் மனுதர்மம் காப்பாற்றப்படவும், நாம் தலையெடுக்காமல் ஒழிவதும்தான். என்றைக்கு நம்மைக் காப்பாற்றினார் அவர்? எதிலே காப்பாற்றினார்? அவர் தந்திரம் எல்லாம் நம்மை எப்படி ஒழிப்பது என்பதுதான்—நான் இருந்து அனுபவப்பட்டுச் சொல்லு கிறேன். நாலு வருடம், அய்ந்து வருடம் அவருக்குக் கையாளாக—சி. அய். டி. யாக இருந்து சங்கதி தெரிந்ததும் விட்டு ஓடி வந்து, நாம் செய்த தப்புக்குப் 'பிராயச்சித்தம்' செய்யவேண்டும் என்று சொல்லுகிறேன். நான் இராஜாஜியோடு போய்ச் சேர்ந்தால், நான்தானே சுதந்திராக் கட்சிக்குத் தலைவன்! எனக்குப் பதவி கிடைக்காதா? அவர் சொன்னபடி நான் ஒத்துக்கொண்டால் அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? காந்திக்கு மகாத்மா பட்டம் கொடுத்ததுபோல், எனக்கும் 'பகவான்' பட்டம் கொடுப்பார்கள்; 'பகவான் இராமசாமி' என்று என்னைச் சொல்வார்கள்! பார்ப்பனர்களை எல்லாம் அப்படியே தவறாமல் சொல்லச் செய்வார்கள்! பார்ப்பான் பத்திரிகையில் எல்லாம் எழுது வார்கள்; பார்ப்பான் கடைகளில் எல்லாம் என்னுடைய படத்தைத் தொங்கவிடச் செய் வார்கள். அவர்கள் கடவுள் எல்லாம் அப்படி வந்த கடவுள்தானே? இவ்வளவையும் வெறுத்துவிட்டுக் காரியம் செய்கிறோமே தவிர, நமக்காக என்ன செய்கிறோம்?

இன்றையப் பிரச்சினை சாதி ஒழிப்பு. இது நேருக்கு நேர் உங்களுக்குப் புரியாது. 'எது செய்தால் சாதி ஒழியும்?' என்று நினைக்க வேண்டுமே தவிர, 'எந்த மருந்து சாப்பிட்டால் ஒழியும்' என்று நினைக்கக்கூடாது.

நமக்குக் கடவுள்மீது பைத்தியம்; சாஸ்திர புராணங்களில் நம்பிக்கை. சிலர், 'இராமசாமி சொல்வதெல்லாம் சரி; ஆனால், இராமாயணத்தைக் குற்றம் சொல்கிறாரே, அதுதான் பிடிக்கவில்லை. நான் பெரியார் தாசன்; ஆனால், அவர் சுப்பிரமணியரையும், கந்த புராணத்தையும் திட்டுகிறாரே!' என்கிறார்கள். அப்படிப்பட்டவனின் தைரியம் எதில் சேர்ந்தது? அவைகள்தானே அவர்கள் ஆயுதம்? நம் ஆள் எவன் போய்க் கொண்டு வந்தான், சுப்பிரமணியரை? நம் ஆள் எவன் உண்டாக்கினான், இராமனை? அவனுடைய மதம், சாஸ்திரம் எல்லாம் இன்னமும் உயிரோடு இருக்கின்றனவே! இவைகளை நீங்கள் சிந்தித்து எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்யவேண்டும்.

சாதியை ஒழிக்கவேண்டும் என்றால் கண்டிப்பாகச் சமயம் தேவையில்லை என்று நினைக்க வேண்டும். நாம் ஒழுக்கமாக நடந்தாலே போதும், கோயிலுக்குப் போகக் கூடாது; செத்தாலும் போகக்கூடாது. அங்கே என்ன இருக்கிறது—குழவிக் கல்லைத் தவிர? யாராவது சொல்லுங்களேன் சாமி இருக்கிறது என்று?

எங்கேயும் இருக்கிற சாமிக்கு அங்கே தனியாக—ஒரு இடத்தில் என்ன வேலை? எல்லாமாய் இருக்கிற சாமிக்கு குழவிக் கல்லாய் இருக்கவேண்டும் என்று என்ன 'தலை

படிப்பகம்

www.padippakam.com



எழுத்து'! எவனாவது சாபம் கொடுத்தானா? இருந்தாலும், கோயிலுக்கு ஒரு நாள் போனால் போதுமே? தினம்தினம் போய் என்ன வாழுகிறது?

இந்தக் காரியத்தை நான் சொன்னேன் என்று ஒத்துக்கொள்ளாமல், அறிவைக் கொண்டு ஆராய்ந்து பாருங்கள்!

[நூல்: 'சாதி ஒழிப்பு' 1961—சென்னையில், 16-9-1961-ல் சொற்பொழிவு]

## 6. எங்கள் தியாகம்

பேரன்புமிக்க தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

நாங்கள் சாதி ஒழிப்பிற்காக அரசியல் சட்டத்தைக் கொளுத்திச் சிறைக்குச் சென்றோம். தோழர்கள் சென்னை மாவட்டத் தலைவர் சண்முகம், செயலாளர் லோகநாதன் இப் பகுதித் தலைவர் பக்தவத்சலம், வேலாயுதம் போன்ற 3000, 3500-க்கு மேற்பட்டவர்கள் ஒரே நாளில் சிறைக்குச் சென்றோம். 6 மாதம், 9 மாதம், ஒரு வருடம், 2 வருடம், 2½ வருடம், சிலர் 3 வருடம் என்று இப்படிக் கடுங்காவல் தண்டனை அடைந்தோம். சிறையிலும், வெளியிலுமாக 15 தோழர்களுக்குமேல் செத்துமடிந்தார்கள்.

ஆனால், நாங்கள் இவற்றையெல்லாம் காட்டி, எங்கள் தியாகத் தழும்புகள் என்று கூறி—மற்ற கட்சிக்காரர்கள் மாதிரி உங்களிடம் ஓட்டுக்கு வருகின்றோமா? வேறு பிரதிப் பிரயோசனமாவது கருதுகின்றோமா?

நாங்கள் சிறைக்குச் சென்றது—எங்களுக்கு மட்டும் இருக்கும் சாதி இழிவு ஒழிய வேண்டும் என்பதற்காக அல்லவே! இந்த பக்தவத்சலம், காமராசர்—மற்றும் எந்த எந்தக் கட்சியில் தமிழன், சூத்திரன் என்பவன் உள்ளானோ அத்தனை பேர்களின் சாதி இழிவுகள் போகவேண்டும் என்பதற்காகத்தானே?

நம் போராட்டத்தைப் பார்த்து, 'காட்டுமிராண்டித்தனம்', 'நான்சென்ஸ்' என்று கூறிய இந்தியப் பிரதமர் நேருவே—நம் போராட்டத்திற்குப் பிறகு—இப்போது அடிக்கடி, 'சாதிமுறை இருப்பது காட்டுமிராண்டித்தனம்' என்றல்லவா கூறுகின்றார்!

[அயன்புரம், குயப்பேட்டை, சூளை ஆகிய இடங்களில், 11, 12, 13-2-1960-ல் சொற்பொழிவு—'விடுதலை' 5-3-1960]

# பகுதி III

# பொருளாதாரம்

படிப்பகம்

www.padippakam.com

# 1. பொருளாதாரம்

## 1. இந்தியப் பொருளாதாரம்

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பொருளாதாரம் என்கின்ற வார்த்தை நம் நாட்டில் தற்காலம் உள்ளதுபோல் முன் காலத்தில் இருந்ததாகச் சொல்ல முடியாது. முன் காலத்தில் எல்லாம் பொருளை உடைத்தா யிருக்கவும், பணம் காசைக் கையாளவும் சிலருக்கே உரிமை இருந்தது. மற்றவர்களுக்குத் தானியம் தவிர, வேறு ஒன்றும் பெற உரிமை கிடையாது. நாட்டு வழக்கிலும் பணம், காசு. கிடையாது. எல்லா வாழ்க்கையும் பண்ட மாற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது. ஒரு பண்டத்தைக் கொடுத்து, மற்றொரு பண்டத்தை வாங்கிக் கொள்வார்கள். கூலியாட்கள், கைத்தொழில் செய்வோர், ஏவலாள் ஆகியோருக்கும் தானியமே கொடுப்பது வழக்கம். மந்திரிகளுக்கும் அரசன் பூமி மானியம் விடுவதே தவிர, பணமாக ஏதும் கொடுப்பதில்லை.

பெருத்த மிராசுதார்களிடம் பார்த்தாலும்—தானியத்தைத்தான், பூமியில் பெரிய பெரிய குழிகள் ஆழமாக வெட்டிப் போட்டு வைத்திருப்பார்கள். பண்ட மாற்றைத் தவிர, சாதாரண மக்கள் பணத்தைப் பார்ப்பது மிக்க அபூர்வமாகவே இருக்கும்.

ரூபாய், நாணயம் இவை நம் நாட்டு மொழியல்ல, 'சின்னப் பணம்' அதாவது ரூ. 1-க்கு 10 கொண்டதாக இருக்கும். விலை பேசுவதிலும், 'எத்தனை பணம்!' என்று தான் கேட்பார்கள். செல்வமுள்ளவனையும் பணக்காரன் என்றுதான் சொல்லுகின்ற வழக்கம் இன்றும் உண்டு. அரசியல் அபராதம் முதலியவைகளிலும் 100 பணம்–200 பணம் என்று—பணக் கணக்கில்தான் கணக்குச் சொல்லுவார்கள். சமீப காலம் வரைகூட மலையாளத்தில் திருவாங்கூர், கொச்சி இராச்சியத்தில் சிவில் கோர்ட்டில், 'ரூபாய்' என்று 'பிராது' போடுவதில்லை. 10 ஆயிரம் ரூபாய்க்குப் பிராது போடுவதானாலும் அதைப் பணமாகப் பெருக்கி, அந்தப் பண எண்ணிக்கையைக் காட்டித்தான் பிராது போடும் வழக்கம் இருந்து வந்தது.

ஆகவே, 'ரூபாய்' என்பதும், 'பவுன்' என்பதும் வெளிநாட்டு நாணயங்கள். அவை நம் நாட்டிலே புழங்கக்கூடிய நிலை ஏற்பட்டதே, பொருளாதார நிலையில் நம் நாடு முன்னையைவிடச் சற்று உயர்வடைந்தது என்பதைக் காட்ட அறிகுறியாகும். எனவே, பொதுவாகப் பார்த்தால், பொருளாதாரம் நம் நாட்டில் குறைவு என்று நான் சொல்ல மாட்டேன். மற்ற நாட்டைவிட இந்த நாடு பொருளாதாரத்தில் குறைந்ததல்ல. இந்தியாவை நம்பி அனேக நாடுகள் தங்கள் வாழ்வை நிச்சயித்துக்கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் பொருளாதாரத்தில் நாட்டமில்லையானால் வெள்ளைக்காரனுக்கு இங்கு வேலையில்லை. இதுபோலவே இதற்குமுன் வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டுக்கு வந்த அரசர்களுக்கும் அவர்களுக்கு முன் வந்த ஆரியர்களுக்கும் இந்த நாட்டில் வேலையில்லை.

சாமி, பூசை, உற்சவம், புண்ணியம், யாத்திரை ஆகியவைகளின் பெயரால் தனித் தனிச் செலவும், அவற்றிற்காக நடைபெறும் பொது ஏற்பாட்டுச் செலவும், கணக்குப் பார்த்தால் மனிதனின் மொத்த வரும்படியில் ஒரு குறிப்பிட்ட பாகம் வீணாவதைக் காணலாம். மற்றும் மனிதன் வாழ்க்கையில் பிரவேசிக்கும்போதே பெரும்பான்மையோர் அவர்களது கல்வி, கலியாணம் முதலியவைகளால் ஏற்பட்ட கடனின் பேரிலேயே வாழ்க்கையைத் தொடங்க வேண்டியிருக்கிறது. இவைகள் எல்லாம் சேர்ந்து அவசியமான

1686—206

படிப்பகம்

www.padippakam.com



காரியங்களுக்குப் பொருள் இல்லாமல் கஷ்டப்படும்படி செய்து விடுவதுடன், சதா தரித்திரர்களாகவும், கடன்காரர்களாகவும் இருக்கவேண்டியதாய் இருக்கின்றது.

இவை மாத்திரமல்லாமல், நாட்டின் பொருளாதார நிலையை விருத்தி செய்ய அவசியமான பொதுத் தொழிற்சாலைகள், இயந்திர சாலைகள் முதலியவைகள் ஏற்பாடு செய்வதற்கும் மார்க்கமில்லாமல் பொருட்களை எல்லாம் மேற்கண்ட சடங்குகளும், வாழ்க்கை முறைகளும் கவர்ந்து கொள்வதோடு கோவில் கட்டுதல், சாமிக்கு நகை, வாகனம் முதலியவைகள் செய்து வைத்தல், மற்றும் உற்சவம் பூசை ஆகியவைகளுக்குப் 'பண்டு', பூமிகள் முதலிய சொத்துக்கள் ஒதுக்கி வைத்தல் ஆகிய காரியங்கள் பெரும்பெரும் தொகைகளைக் கவர்ந்து கொள்ளுகின்றன.

ஆகவே, இந்த மாதிரியாகவெல்லாம், எல்லாப் பொருள்களும் வீணாகிக் கொண்டிருக்கையில் இந்த நாடு எந்தக் காலத்தில்தான்—எந்த வகையில்தான் பொருளாதாரத்தில் சீர் அடைய முடியும்? நம் நாட்டுப் பொருளாதாரக் கஷ்டத்திற்கு மற்றொரு காரணத்தையும் கவனியுங்கள். நம்முடைய வாழ்க்கைத் தன்மையை, மேல் நாடுகளைப் பார்த்து—நாளுக்கு நாள் செலவை அதிகரித்து வருகின்றோம்; வசதிகளை அதிகப்படுத்திக் கொள்ளுகின்றோம். முன்னைவிட அதிக ஆடம்பரங்களை விரும்புகின்றோம். இவையெல்லாம் நமக்குத் தகாதென்றோ, குற்றமென்றோ சொல்லவில்லை. ஆனால், மேல்நாட்டார் எப்படிப் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டே தமது வாழ்வின் சுக போகத்தையும் உயர்த்திக் கொள்கிறார்களோ, அதுபோலவே நாமும் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டு, வாழ்க்கைத் தன்மையின் அவசியத்திற்கேற்ற வருவாய்க்கு வகை செய்து கொண்டுதானே அதில் பிரவேசிக்க வேண்டும்? அதுவும் இல்லாமல், இதுவும் இல்லாமல் வெறும் மனப்பால் குடிப்பதில் என்ன பயன்? மேல் நாட்டான் குறைந்த நேரத்தில் அதிக வேலை செய்து பன்மடங்கு இலாபம் அடைகிறான். அதனால் அவர்கள் சுகமனுபவிக்க மார்க்கம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆகவே, இவ்வளவு உயர்ந்த பொருளாதார நிலையுடைய இந்திய நாடு—இந்த நாட்டுப் பெரும்பான்மையான மக்கள் வயிறார உண்ணவும், இடுப்பார உடுக்கவும், மானத்தோடு பிழைக்கவும் முடியாதபடி வேறு பல காரியங்கள் கொடுமைப் படுத்துகின்றன. அவைகளில் முக்கியமானவை மதமும் கடவுளும் அடுத்த ஜென்மமுமேயாகும்.

மனிதன் எவ்வளவு சம்பாதித்தாலும், அனேகமாய் எல்லாவற்றையும் மேற்கண்ட மூன்றுமே அபகரித்துக் கொள்ளுகின்றன. அதிலும் உலகத்தில் வேறு எப் பாகத்திலும் காண முடியாத மாதிரி இந்த நாட்டில் இம் மூன்றினாலும் பிழைப்பதற்கென்றே—'பிறவி'யை ஆதாரமாகக் கொண்டு சில வகுப்புகள் ஏற்பட்டு, அந்த நிலைகளைக் காப்பாற்றிக் கொண்டு பாடுபடாமல் வயிறு வளர்ப்பதோடு சகல போக்கியங்களையும் தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டதால், இந்த உலகம் உள்ள வரை இந்தியாவின் பொருளாதாரம் இப்படியே இருக்கும்படியாக ஆகிவிட்டது. அது மாத்திரமல்லாமல், இந்த நாட்டில் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருக்கும் முறையும், மிராசுதாரனுக்கும் குடியானவனுக்கும் இருக்கும் முறையும், படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும் இருக்கும் முறையும், மேல்சாதிக்காரனுக்கும் கீழ் சாதிக்காரனுக்கும் இருக்கும் முறையும் பார்த்தால் இந்த நாட்டு மக்களில் 100-க்கு 90 பேர்களுடைய பொருளாதார நிலை இன்றைய நிலையைவிடக் கடுகளவுகூட மாறி முன்னேற்றமடைய முடியவே முடியாது என்பது உறுதி.

நமது பொருளாதாரக் கஷ்டமெல்லாம்—முதலாவது அனாவசியச் செலவுகளுக்கும் அவற்றிற்கும் அதிகச் செலவுகளுமேயாகும். 100-க்கு 90 பேர்களுடைய சம்பாதனைகள் அனாவசியமானவைகளுக்கும், குருட்டுப் பழக்கம், மூடநம்பிக்கையானவைகளுக்கும், சோம்பேறியாய் வாழ்கின்றவர்களின் சுக போகத்திற்கும் செலவு செய்யப்படுவதினாலேயே வீணாகி விடுகின்றன.



இரண்டாவது, சுலபத்தில் ஒரே பக்கத்தில் பொருள்களெல்லாம் போய்ச் சேரும்படியாகவும் விடுகின்றன.

மூன்றாவதாக, மனிதனுக்கு உள்ள நேரமும் சக்தியும் குறைந்த வரும்படிக்கே செலவிடும்படியான முறைகளே இங்கு வெகு காலமாக இருந்து வருகின்றன. அதாவது, புத்தியைச் செலவழித்துக் குறைந்த நேரத்தில் அதிகமான வேலைகள் நடைபெறவும், அதனால் அதிக சம்பாதனை அடையும் மார்க்கம் தேடவுமான துறையானது அடியோடு அடைபட்டுப் போய்விட்டது. இத்தியாதி காரணங்களே இந்தியாவின் பொருளாதாரக் குறைவிற்குக் காரணமாகும்.

[களக்காட்டில், 27-12-1930-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 18-1-1931]

சகோதரிகளே! சகோதரர்களே!

இந்திய நாட்டின் விடுதலைக்கு இன்று இராஜ்யத்துறை அவ்வளவு முக்கியமானதல்லவென்றும், மற்றவர்களின் வரிசைக் கிரமத்தில் அரசியல் சீர்திருத்தம் என்பது எவ்வளவோ பின்னால் இருக்க வேண்டியது என்றும் கருதுகிறவன் நான். நமக்கு இருக்கும் வேலை எல்லாம்—நாம் செய்யவேண்டிய முதல் வேலை எல்லாம் சமுதாய சம்பந்தமானதே தவிர அரசியல் வேலை அல்ல.

ஏனெனில், சமூகத் துறையில் நமது நிலைமை என்ன? நமது அடிமைத்தனத்தின் கொடுமை எவ்வளவு? இவைகளுக்குக் காரணம் என்ன?—என்பதை நினைத்துப் பார்த்தால் அறிவும் மானமும் உள்ள மனிதன் அரசியல் தன்மையைக் கொஞ்சமும் பெரிதாகக் கருதி இலட்சியம் செய்யமாட்டான் என்றே கருதுகிறேன். உங்களில் யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் சரி, என்னைப் பொறுத்தவரை நமது நாட்டு மத சம்பந்தமான—சமூக சம்பந்தமான அடிமைத்தனத்தால்தான் நாம் சுதந்திரம் இழந்து, மானமிழந்து, இழி சாதியாய் வாழ்கின்றோமே தவிர அரசியல் அடிமைத்தனத்தினால் அல்ல. நான் இப்போது அரசாங்க ஆட்சியின் சுதந்திரத்தை முதன்மையானதாகக் கருதவில்லை; உத்தியோகத்தை முக்கியமாகக் கருதவில்லை; அதிகாரத்திற்கு ஆசைப்படவில்லை.

என்னுடைய நாட்டு மனிதன் ஒருவன் தன்னை ஒரு மனிதனாய்க் கருதவேண்டும்; அவன் என்னைப் பிறவியில் சமமாய் நினைக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன். இந்த இழிவுத்தன்மையும் அவமானமும்தான் என்னை வருத்துகின்றது; நினைத்தால் வயிறு பற்றி எரிகின்றது; நெஞ்சம் குமுறுகின்றது. இதற்கு ஏதாவது மாறுதல் ஏற்பட இன்றைய அரசியல் ஏதாவது இடையூறாயிருந்தால் சொல்லுங்கள்! அப்பொழுது அந்த அரசியலைப்பற்றிக் கவனிப்போம்; அதை ஒழிப்போம். இல்லாவிட்டால், வேறு எது இடையூறோ, யார் இடையூறாய் இருக்கின்றார்களோ அவற்றையொழிக்க ஒன்று சேரலாம் வாருங்கள்! அதை விட்டுவிட்டு, இவ்வளவு பெரிய அக்கிரமத்தையும் கொடுமையையும் மூடி வைத்துக்கொண்டு, 'அரசியல், அரசியல்' என்றால் என்ன அர்த்தம்? இது யாரை ஏமாற்றுவது? இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே காலத்தைக் கடத்துவது?

அரசியலைப்பற்றிக்கூட நமக்குக் கவலையில்லை. அன்னியனை ஒழிக்க வேண்டாமா என்று சிலர் கேட்கின்றார்கள். இதிலும் உண்மையோ, அறிவுடைமையோ இருப்பதாக நான் கருதவில்லை. ஏனென்றால் யார் அன்னியன் என்பதை முதலில் யோசித்துப் பாருங்கள்!

நமது மக்கள் 100-க்கு 90-பேர்கள் மூடமக்களாக இருந்து வருகின்றார்கள்; கல்வியறிவு வாசனை இல்லை; இருந்தாலும், அறிவுச் சுதந்திரம் இல்லை. இவர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு யார் என்ன பேசினாலும் கை தட்டுவார்கள்; கூடவே கோவிந்தா போடுவார்கள். ஆகவே, சரி எது, தப்பு எது என்று தெரிந்து கொள்ளும் அறிவு இல்லாதவர்கள்—இவர்கள் முன் எதைச் சொன்னால்தான் என்ன என்கின்ற முறையில் தேசத்தில் எத்தனையோ புரட்டுகள் நடக்கின்றன. இதைப் பார்த்துக் கொண்டே, இந்த நிலைமையை

படிப்பகம்

www.padippakam.com



மாற்ற வேண்டியதே நமது முதல் வேலையாய் இருக்கவேண்டும் என்பதை, யாருமே கவனிப்பதில்லை; எந்தத் தலைவருமே நினைப்பதில்லை. இப்படியே காலங்கடந்தால் நமக்கு எப்போது விடுதலை கிடைக்கக்கூடும்?

பொருளாதாரத் துறையில் நாம் அடிமைகளாய் இருக்கின்றோம். நமது பொருள் கோடிக்கணக்காக வெளியில் போகின்றது. 'அதை நிறுத்த வேண்டாமா?' என்கின்றார்கள் மற்றொரு அரசியல் கூட்டத்தார். இதையும் என்னால் இலட்சியம் செய்யவோ ஒப்புக் கொள்ளவோ முடியவில்லை. ஏனென்றால், பொருள் நஷ்டம் என்பது இப்போது நமது நாட்டில் யாருக்கிருக்கிறது?

நமது நாட்டில் சமூகத் துறையிலேயே, பிறவியிலேயே பொருளாதார உரிமை அனேக மக்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக, புரோகிதன், உத்தியோகஸ்தன், வக்கீல், வியாபாரி, முதலாளி, ஜமீன்தாரன், மிராசுதாரன் ஆகியவர்களின் கூட்டங்களுக்குத்தான் பொருளாதார உரிமை இருக்கின்றதேயொழிய—மற்ற மக்களுக்கு வயிற்றுக்கு எவ்வளவு வேண்டும் என்கின்ற அளவுக்குட்பட்ட அடிமை உரிமைதானே இருந்து வருகின்றது? முற்கூறிய கூட்டங்களுக்குப் பொருளாதார உரிமை என்பது பிறவியிலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதுடன் மற்றவர்கள் அதற்கு அருகரல்லாமல் இருக்கும்படியான நிர்ப்பந்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, ஒரு இட்லிக் கடைப் பார்ப்பானுடைய மகன் அய்க்கோர்ட் ஜட்ஜாக வரலாம்; ஒரு பஞ்சாங்கப் பார்ப்பனன் மகன்—மந்திரியாகலாம்; ஆனால், ஒரு தோட்டியினுடைய மகன் அய்க்கோர்ட் ஜட்ஜாக வரமுடியுமா? யோசித்துப் பாருங்கள்! சாதியின் பேரால் வகுக்கப்பட்டிருக்கும் பிரிவானது இம் மாதிரி சிலருக்கு நன்மையையும், சிலருக்குத் தீமையையும் செய்து வருகின்றது. இனிமேல் இந்தப்படி செய்யாமலிருக்க நமது அரசியல் சுயராஜ்யத்தில் எவ்விதத் திட்டமும் இல்லை என்பதோடு, இந்த முறையைக் காப்பாற்றவும் திட்டம் போடப்பட்டிருக்கிறது என்றால் அறிவுள்ள மனிதன் எப்படி இந்த அரசியலை ஒப்புக்கொள்ள முடியும்?

[திருச்செங்கோட்டில், 1-9-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 6-9-1931]

இந்திய நாடு எவ்விதமான வளத்திலும் குறைந்தது அல்ல. இந்தியாவில் இராஜாக்கள், ஜமீன்தார்கள், மடாதிபதிகள், ஆச்சாரிய பீடங்கள், கோடீஸ்வரர்கள் மற்ற நாட்டிலுள்ளவர்களுக்குக் குறையாமல் உள்ளார்கள். வியாபாரிகளும் வியாபாரப் பொருட்களும் மற்ற நாடுகளைப் போலத்தான் இருந்து வருகின்றன.

விவசாயத் துறையிலும் ஏராளமான பூமிகள் இருப்பதும், அவற்றிற்கு அனுகூலமாக நீர் வசதிகள் இருப்பதும், ஒவ்வொரு மிராசுதார்கள் 1000 ஏக்கர், பதினாயிரம் ஏக்கர், சிலர் இலட்சம் ஏக்கர் நிலங்களை உடையவர்களாக இருப்பதும், விவசாயம் செய்யப்பட வேண்டிய பூமிகள் இன்னும் எவ்வளவோ இருப்பதுமான நாடாக உள்ளது.

இப்படிப்பட்ட பல்வளமும் பொருந்திய இந்திய நாடு ஏன் தரித்திரமான நாடு என்றும், அடிமையான நாடு என்றும், ஏழைகள் பெருத்த நாடு என்றும் சொல்லப்பட்டு வருகின்றது?

முதலாவது, மேற்கண்ட வளமுள்ள செல்வம் எல்லா மக்களும் அடையத்தக்க மாதிரியான சமூக அமைப்பு இல்லாமல்—செல்வங்கள் சில வகுப்பு மக்களுக்கே உரியவையாகவும் அனுபவிக்கத் தக்கவையாகவுமான சமூக அமைப்பு முக்கிய காரணமாகும்.

அதாவது, வருணாசிரம தருமப்படி—இன்ன இன்ன வகுப்புக்கு இன்ன இன்ன தொழில், இன்ன இன்ன உரிமை என்பதான திட்டமே நாட்டின் செல்வம் எல்லோருக்கும் பரவுவதற்கில்லாமல் தடை படுத்திக் கொண்டிருக்கிறது என்பது முதல் காரணம்.



இரண்டாவது, ஒரு வகுப்பு மக்கள்—அதாவது 100-க்கு 90 பேர்களுக்கு மேலாகக் கொண்ட சமூக மக்கள், அவர்களது வயிற்றுக்குப் போதுமான அளவுக்குமேல் பெற முடியாத நிபந்தனைக்குள்ளாக்கி வைக்கப்பட்டதுடன் அவர்கள் கையில் தங்கள் வயிற்றுக்கு வேண்டிய ஆகாரத்தின் அளவுக்கு மேற்பட்ட எந்தப் பொருளையும் வைத்திருக்க உரிமை இல்லாதவர்களாக்கப் பட்டிருக்கின்றது என்பது இரண்டாவது காரணம். இந்த உண்மைக்கு ஆதாரம் மனுதர்ம சாஸ்திரத்தில் நன்றாய்க் காணலாம்.

அதாவது, 'சூத்திரன் பொருள் சேர்த்து வைத்திருந்தால் பிராமணன் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொள்ளலாம்', 'சூத்திரன் பொருளைப் பிராமணன் எப்படி வேண்டுமானாலும் கொள்ளை அடிக்கலாம்', 'அடிமையான சூத்திரன், பொருள் வைத்திருக்க உரிமை உடையவனல்லன்' என்கின்ற அனேக ஆதாரங்கள் இந்துமத சாத்திரங்களில் இருக்கின்றன.

இந்த மாதிரியான திட்டங்களை ஏற்படுத்த ஆதாரமாய் இருந்தது வருணாசிரம தர்மமேயாகும்.

வெள்ளைக்கார அரசாங்கத்தின் பயனாய் இந்தத் தர்மங்கள் சிறிது சிறிது மாற்றமடைந்து ஏதோ நூற்றில் ஒருவர், ஆயிரத்தில் ஒருவர் செல்வவான்கள் ஆகவும், வருண முறை தவறிப் பணம் சம்பாதிக்க உரிமை உடையவர்களாகவும் ஆனாலும்கூட, அந்தப் பணமானது மனுதர்ம சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல்—அதாவது, 'சூத்திரன் செல்வத்தைப் பிராமணன் எந்தவிதத்திலானாலும் கொள்ளை அடிக்கலாம்' என்கின்ற தர்மப்படி, சூத்திரன் செல்வத்தைக் கொள்ளை கொள்ளவே ஸ்தலம், கோவில், குளம், புண்ணியம், பாவம், சடங்கு முதலிய காரியங்களின் மூலம் கொள்ளை அடிக்கப்பட்டு விடுகின்றன.

இந்தக் காரணத்தாலேயே சூத்திரர்களில் 100-க்கு 75 பேர்கள் கடன்காரர்களாகவே இருக்க நேரிட்டு இருக்கின்றது. இவை ஒருபுறமிருந்தாலும், இன்று பொருளாதாரக் கஷ்டத்தையே பெரும்பாலும் எடுத்துச் சொல்லி அதை நிவர்த்திப்பதற்காக இந்தியாவுக்கு சுயராஜ்யம் வாங்கித் தருகின்றதாகச் சொல்லும் அரசியல் தலைவர் திரு. காந்தி அவர்களும், இந்த வருணாசிரம முறையை அடிப்படையாகக் கொண்டு, சுயராஜ்யமே வேண்டுமென்று சொல்லிப் பாடுபட்டு வருகின்றார்.

ஆனால், இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒரு மயக்கம் ஏற்படலாம். அதாவது, திரு. காந்தியவர்கள் வருணாசிரம தர்மத்தைப்பற்றிப் பேசும்போது, தனது வருணாசிரம தர்மம் வேறு என்று சொல்லி வருகின்றதால் அது வேறாய் இருக்கலாம் என்று கருதலாம். அது எப்படி இருந்தபோதிலும் அதாவது, சாதி, உயர்வு தாழ்வு சம்பந்தமான காரியம் எப்படி இருந்தாலும், வித்தியாசம் இருக்கவேண்டும் என்பதிலும் அவனவனுடைய பரம்பரைத் தொழிலையே அவனவன் செய்ய வேண்டுமென்பதிலும் அவர் சந்தேகத்திற்கு இடம் இருக்கும்படியாகக்கூடப் பேசாமல்—தெளிவாகவே சாதிப் பாகுபாடுகளும், தர்மமும் (அவனவன் தொழில்) கண்டிப்பாய் அனுஷ்டிக்க வேண்டும் என்றே சொல்லுகின்றார். (அவர் எழுதியுள்ள 'பகவத் கீதை' மொழிபெயர்ப்பு 18-ம் அத்தியாயம், 41 முதல் 43 ஸ்லோகங்கள்)

இவை ஒருபக்கம் இருந்தபோதிலும், சமீபத்தில் பரோடா சமஸ்தானத்தில் அவர் பேசியபோதும் இக் கருத்தையே வலியுறுத்திப்பேசியிருக்கிறார். அதாவது, 'கிராமவாசிகள் செருப்புத் தைத்தல், ஆடுமாடு மேய்த்தல் முதலிய தொழில்களைச் செய்யவேண்டும்; அவர்கள் பெட்டிகளில் அதிகப் பணம் வைத்திருக்கக்கூடாது; அவர்கள் பம்பாய் வியாபாரிகளைப்போல் பணக்காரர்களாக இருக்க நினைக்கக்கூடாது' என்று பேசியிருக்கின்றார். ஆகவே, காந்தியவர்களால் கேட்கப்படும் சுயராஜ்யத்தில் இந்திய மக்களின் பொருளாதார நிலை எப்படி முன்னுக்குக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்?

படிப்பகம்

www.padippakam.com

மேலும், நமது மக்களின் மதத் த[illegible]மே இவ்வுலக வாழ்க்கை 'பொய்' என்பதும் 'மாய்கை' என்பதும்; செல்வத்தை [illegible] இடம்பிடித்து வைக்கவும், அடுத்த ஜன்மத்தில் நல்ல பிறவியாய் பிற[illegible]துகொள்ளவும் செலவழிக்கவேண்டும் என்கின்றதுமான எண்ணங்கள் [illegible]ளைப் பாழாக்கிவிடுகின்றன. அன்றியும், பாடுபடுகின்ற மக்களுக்குத் தங்கள் மதக் கடமை, சாதிக் கடமை என்பது மாத்திரமல்லாமல் முன் ஜென்மக் கர்மத்தின் பயன் என்றும் எண்ணும் எண்ணங்களையே புகுத்தப்பட்டு, தங்கள் கஷ்டங்களையும் தரித்திர நிலைமையையும் உணராமல் இருந்து வருகின்ற குணமும் தகுந்த பயனை அடையமுடியாமல் செய்துவிடுகின்றன. இவை தவிர, நம் நாட்டு தர்ம ஸ்தாபனங்கள் ஏராளமான செல்வங்களைத் தம்முடையதாக்கிக்கொண்டு அவைகள் மக்களுக்குப் பயன்படாமல் வீணாக்கப்படுகின்றன.

சாதாரணமாக, சென்னை மாகாணத்தின் சர்க்காரார் வரி எவ்வளவு இருக்குமோ, அதில்—4-ல் 1 பங்குக்குக் குறையாமல் இம் மாகாணத்தில் வரும்படி வரத்தக்க சொத்துக்கள் கொண்ட தர்மஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவற்றின் மற்ற செலவுகளுக்கென்று நமது மக்களால் செய்யப்படும் செலவுகளின் மொத்தம், நாம் செலுத்தும் வரித் தொகைக்குக் குறையாதென்றே சொல்லலாம். இவை இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படாததோடு வீண் செலவினமாகவே ஏற்பட்டுவிடுகின்றன.

அன்றியும், தர்ம ஸ்தாபனங்களில் வரும்படி இல்லாமல் வெறும் முடக்கமாய் இருக்கும் சொத்துக்கள் தங்கம், வெள்ளி, கல் நகைகள், இடங்கள் முதலியன கோடிக்கணக்கான ரூபாய் வரும்படி வரக்கூடிய அளவு உள்ள சொத்துக்கள்—யாதொரு பிரயோசனமும் இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றன.

இவை ஒரு புறமிருக்க, 'இராஜாக்கள்' என்றும், 'ஜமீன்தார்கள்' என்றும் ஏற்பட்ட கூட்டங்கள் அனுபவிக்கும் பொருள்கள்—மற்றும் அவர்கள் நகை, பொக்கிஷம், புதைத்து வைத்திருப்பது முதலிய செல்வங்களின் அளவு நூற்றுக்கணக்கான கோடி என்றே சொல்லலாம்.

இவ்வளவும் தவிர, இந்திய மக்களின் வருமானம் என்பதோ அவர்கள் தங்களது தொழில் முறைகளைச் சிறிதும் மாற்றிக் கொள்ளாததால் பிரயாசை அதிகமும், சாமான் யோக்கியதைக் குறைவும், உற்பத்திக் குறைவும் இதனால் வரும்படி குறைந்ததுமாக இருப்பதுடன், மனிதனுடைய தேவைக்கும், போக போக்கியங்களுக்கும் வேண்டியவை களுக்கெல்லாம் ஏழை முதல் செல்வவான், மகாராஜாக்கள் வரை, வெளிநாட்டுப் பொருள்களையே உபயோகிக்க வேண்டியவர்களாகி—அதன்மூலம் செல்வம் ஏராளமாய் வெளியில் போய் விடுவதால் ஒருவித நஷ்டத்தையும் அடைய வேண்டியதாக ஏற்பட்டு விடுகின்றது.

ஆகவே, இத்தியாதி காரணங்களால் நாட்டில் பெரும்பாகமான மக்கள் ஏழைகளாக—தரித்திரர்களாக இருக்கக் கடமைப் பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

பொருளாதாரத் துறையில் இந்திய நாடு முற்போக்கடைய வேண்டுமானால் அதன் அஸ்திவாரமான காரணங்களையெல்லாம் கவனிக்காமல், மக்களுடைய மதியீனத்தையும் பகுத்தறிவற்ற தன்மையையும் ஆதரவாய் உபயோகித்துக் கொண்டு, வெளிநாட்டுத் துணியை மறியல் செய்வதாலும், கதரை வாங்கிக் கட்டுவதாலும், கள்ளுக் கடைகளை மூடி விடுவதாலும் பொருளாதாரத் துறையை சரிப்படுத்திவிடலாம் என்று சொல்லுவது ஒரு நாளும் நாணயமானதோ, அறிவுடைமையானதோ, காரியத்தில் பயன் கொடுக்கக் கூடியதோ என்பதாகச் சொல்லிவிட முடியாது.

இந்தியாவின் பொருளாதாரத் துறையைச் சீர்படுத்துவதற்கு முதலாவது வருணாசிரம முறை ஒழிய வேண்டும்; இரண்டாவது, மதசம்பந்தமான எண்ணங்கள் அகற்றப்பட வேண்டும்; மூன்றாவது, கோவில், குளம், சடங்கு, சாத்தான்—'சனி விலக்கு' ஆகிய

படிப்பகம்

www.padippakam.com



கோயம்புத்தூர் புனைவெட்ட மோட்டார் கட்டடத்தில், 3–10–1965-ல் நடந்த நிகழ்ச்சியில், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு,
தொழில் மேதை G.D. நாயுடு மாலை அணிவிக்கிறார். பெரியாருக்கு (வலப்பக்கம்) அறிவியல் அறிஞர் சர் சி.வி. இராமன் அமர்ந்துள்ளார்.



எண்ணங்கள் அழிக்கப்பட வேண்டும். பிறகு அரசன், ஜமீன்தாரன் முதலிய தத்துவங்கள் அழிக்கப்பட்டாக வேண்டும்.

['குடி அரசு'—தலையங்கம்—13-9-1931]

## 2. செல்வம் பெருக வழி

தலைவரவர்களே! தோழர்களே!

நம்மிடத்தில் நமக்குப் போதுமான பொருள் இல்லையா? இல்லாதிருக்குமானால் அதற்குக் காரணம் என்ன என்பவைகளை யோசனை செய்து பாருங்கள்!

நாம் பொருள் சம்பாதித்துக் கடவுளைக் கும்பிடுகிறோமே ஒழிய—எந்த விதத்தில் பாடுபடவேண்டும், எதனால் பொருள் கிடைப்பதில்லை—என்று யோசிப்பதில்லை. நாம் கல்விக்கு எப்படி சரஸ்வதி என்ற ஒரு தெய்வத்தை உண்டாக்கி வணங்கி வருகின்றோமோ அதுபோலவே தான், நமது நாட்டுச் செல்வத்துக்கு ஒரு பெண் தெய்வமாகிய இலட்சுமியைத் தெய்வமாக உண்டாக்கி வணங்குகின்றோம். ஆகையால், ஒருவன் தான் ஏழையாக இருந்தால் தனக்கு இலட்சுமி கடாட்சம் இல்லை எனச் சுலபமாக எண்ணிக் கொண்டு, இலட்சுமி கடாட்சத்தையடையக் கையில் உள்ளதையும், கடன் வாங்கியும் செலவு செய்கிறான். பணக்காரனாய் இருப்பவனும் தனக்கு இலட்சுமி கடாட்சம் இருப்பதாக நினைத்துக்கொண்டு அதற்கே தனது சொத்தைச் செலவு செய்து வருகிறான்.

ஓர் ஏழை ஒரு நாள் முழுவதும் கஷ்டப்படுகிறான். அவன் காலை ஆறு மணிக்கு மண்வெட்டியைப் பிடித்தானானால் பகல் ஒரு மணிக்குத்தான் கீழே வைக்கிறான். கொஞ்சம் ஏதாகிலும் ஆகாரம் உட்கொண்டு மீண்டும் ஒன்றரை மணிக்கு மண் வெட்டியைப் பிடித்தானானால் மாலை ஆறரை அல்லது ஏழு மணிக்குத்தான் கீழே வைக்கிறான். இவ்வாறு அவன் ஓய்வு இல்லாமல் கஷ்டப்பட்டும், அவனுடைய வேலைக்குத் தகுந்த கூலி கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் கடவுளின் 'கிருபை' எனவும், தனக்கு இந்த வேலையையே செய்து பிழைக்கத் தலையிலே பிரமன் எழுதி விட்டான் என்றும் கருதிக் கொண்டு, வாழ் நாள் கழிய மண் வெட்டியை நம்பிக்கொண்டு இருக்கிறான்.

அதுபோலவே, சிறிதும் பாடுபடாமல் ஒருவன் பணக்காரனாய் இருக்கின்றானே எனக் கேட்டால், 'இலட்சுமிதான் போட்டு விட்டாள்' என்பதாகச் சொல்லுகிறான். ஆகவே, இந்த இரண்டுவித நிலைமைகளுக்கும் ஒரே காரணத்தை உரைக்கின்றார்களே யல்லாமல், நாம் உண்மை அறிய ஆராய்வதில்லை.

மேல் நாட்டுக்காரர்கள் தங்களுடைய அறிவைத் தினம் தினம் விருத்தி செய்து கொண்டே வருகின்றார்கள். பல துறைகளையும் ஆராய்ந்து, பலவித தந்திரங்களையும் அத் துறைகளில் ஆராய்ச்சி செய்து மென்மேலும் முன்னேறிக் கொண்டே இருக்கின்றார்கள். தங்கள் தொழில் முறையைத் தாங்களாகவே மாற்றுகிறார்கள். ஒரு தொழிலிலிருந்து மற்ற தொழிலுக்குத் தாராளமாய்ப் பிரவேசிக்கிறார்கள். தங்கள் முன்னேற்றத்திற்கும் தங்களையே பொறுப்பாக்கிக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள். தலைவிதியையும் நல்ல காலத்தையும் எதிர் பார்த்து அவர்கள் சும்மா இருந்து விடுவதில்லை. உதாரணமாக, முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட மோட்டாருக்கும், இப்போது கண்டுபிடிக்கப்பட்ட மோட்டாருக்குமுள்ள வித்தியாசங்களை நாம் கவனித்தோமானால், மேல்நாட்டுக்காரன் தொழில்முறையில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்து இருக்கிறான் என்பது புலப்படாமல் இராது.

ஆனால், நாமோ ஆதிகாலத்தில் உண்டாக்கப்பட்ட கட்டை வண்டிகளினின்றும் இன்னும் சிறிதும் முன்னேற்றம் அடையாமல் இருக்கின்றோம். வேண்டுமானால் இரும்பு ஆணிகளுக்குப் பதிலாக வெள்ளி முலாம் பூசிய ஆணிகளை உபயோகிப்பதில் மட்டும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



தொழிலில் நாம் முன்னேற்றம் அடையாததற்குக் காரணம், அதில் மக்களை நான்கு வருணங்களாகப் பிரித்து அதாவது—பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரரென நான்கு வருணங்களாகப் பிரித்து—100-க்கு 90 பேர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தைச் சூத்திரர்கள் எனத் தாழ்த்தி, சூத்திரர்களுக்கு வயிற்றுக்கு மட்டும் உண்ணப் போதுமான உணவிருந்தால் அதுவே அவர்களுக்குப் போதுமெனவும், அவர்கள் மற்ற மூன்று வருணத்தாருக்கும் தங்களுடைய சரீரத்தால் பாடுபட்டு உழைக்க வேண்டும் எனவும் எழுதிவைத்துக்கொண்டு, அதற்கு அத் தருமங்களின்படி நாம் நடந்து கொள்ள வேண்டும் எனவும், அதனின்றும் தவறக்கூடாதெனவும், தவறினால் பாபமெனவும் உரைக்கப்பட்டு வந்ததோடு, அரசர்களும் இந்தச் சட்டத்தைக் காப்பாற்றி வந்ததே நாம் தொழில்விருத்தி இல்லாமற் போனதற்குக் காரணமாகும்.

இவ்வித நிலைமையின் பயனாய்—பணம் சம்பாதிப்பவர்கள், சீர்படுபவர்கள் யார் என்பதை யோசித்துப் பாருங்கள். பிராமணர்களுக்கும், சத்திரியர்களுக்கும், வைசியர்களுக்குமேதான் பணம் மென்மேலும் சேருமேயாதலால் இந் நிலையில் யார் எவ்வளவு பாடுபட்டாலும் தொழிலாளிகளாகிய 'சூத்திரர்'களிடம் ஒரு நாளும் பணம் சேராது என்பதோடு, வயிற்றுக்கு வேண்டிய அளவுகூட உணவு கிடைப்பதும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

இவ்வித நிலையில்தான் மக்கள் தங்களுடைய முயற்சியில் கவலையற்றவர்களாய் இருந்து, கடவுள்மீது பொறுப்பைப்போட்டு அடுத்த ஜென்மத்தில் பணக்காரர்களாகப் பிறப்பதற்குத் தங்கள் குறைந்த வரும்படியான பணத்தையும், நேரத்தையும் செலவு செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். கடவுள் உணர்ச்சியேதான் அவர்கள் விடுதலை அடைவதைத் தடுத்துக்கொண்டே இருக்கிறது.

ஆகவே, பொருளாதாரத் துறையில் நாம் விடுதலை அடைந்து முன்னேற்றம் அடைய வேண்டுமானால்—நாம் கவலை உள்ளவர்களாகி, நம்மை ஏமாற்றிச் 'சூத்திரர்' களாக்கியவர்களுடன் சண்டை போட்டேதான் தீரவேண்டும். ஆதலால், நாம் அதற்காகக் கவலையில்லாமல் இருந்தாலும், அக் கட்டுப்பாட்டை ஒழிக்காமலிருந்தாலும் ஒருநாளும் முன்னேறவே முடியாது.

'நமது பெரியவர்கள் எப்படி இருந்து வந்தார்களோ அப்படியே இருக்கவேண்டுமே ஒழிய புதிய மாதிரியில் நடக்கலாமா' என்று நாம் கருதிக்கொண்டு இராமல், 'இரண்டு அணாவில் இருந்து இரண்டு ரூபாய் எவ்வாறு சம்பாதிக்க முடியும்? ஏன் சம்பாதிக்க முடியாது? மற்றவர்கள் எப்படிச் சம்பாதிக்கின்றார்கள்? மற்ற நாட்டில் உள்ளவர்கள் என்ன செய்கிறார்கள்? எப்படிச் சம்பாதிக்கிறார்கள்?' என்பவைகளை யோசனை செய்து, முன்னேறும் மார்க்கங்களைக் கண்டு பிடித்து, அவற்றை நடைமுறையிலும் கொண்டு வந்தால்தான் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியும்.

ஒருவன் இரண்டு மாடுகள், ஒரு வண்டி, ஒரு மனைவி, இரண்டு குழந்தைகளையுடையவனாக இருந்தால் அவன் வண்டி யோட்டிச் சம்பாதிக்கும் பணத்தால் 6 பேர்களைக் காப்பாற்ற வேண்டியவனாக இருக்கிறான். இவ்வாறு கஷ்டப்படுவதினின்றும் விடுதலை அடைய வேண்டுமானால் இயந்திரங்களினால் எவ்வளவுக் கெவ்வளவு நம்முடைய வேலையைச் சுருக்கிக் கொண்டு, குறைந்த நேரத்தில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக விருத்தி செய்யமுடியுமோ அவ்வாறு செய்தால் மட்டுந்தான் நாம் விருத்தி அடைய முடியும்.

[சித்தையன் கோட்டையில், 22-6-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-6-1931;
'விடுதலை' 8-10-1951]



# 3. தரகர்கள்

தரகர்கள் என்பது பெரும்பாலும் வியாபாரிகள் என்பதையே குறிக்கும். வியாபாரிகள் என்பவர்கள் அனேகமாக சரக்குகளை உற்பத்தி செய்யும் விவசாயக்காரர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கும்—அச் சரக்குகளை வாங்கி உபயோகிக்கும் பொது ஜனங்கள் என்பவர்களுக்கும் இடையில் இருந்துகொண்டு குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்று இலாபம் சம்பாதிப்பவர்களேயாவார்கள்.

பணம் சம்பாதித்து முதலாளிகளாக ஆவது என்பதற்கு அல்லாமல் வேறு எந்தக் காரியத்துக்கும் இந்தக் கூட்டத்தார்கள் உலகிற்குத் தேவையில்லை.

இவர்களினாலேயேதான் விவசாயம் செய்யும் விவசாயியும் சாமான்கள் செய்யும் தொழிலாளியும் என்றென்றைக்கும் ஏழைகளாகவும் தரித்திரர்களாகவும் இருக்கவேண்டியிருக்கிறது. ஆனால், இந்த இருதரத்தாருமேதான் உலகம் நடைபெறுவதற்கு ஆதாரமாய் இருந்துவருகிறார்கள். அப்படியிருந்தும், இவர்களது குறைந்த அளவு தேவைகளையோ, நலனையோ கூடக் கவனித்து உலகில் எந்தமதமும் எந்த அரசாங்கமும் நாளதுவரை கவலையெடுத்துக் கொண்டதேயில்லை.

மனிதன் எப்பொழுது இயற்கைக்கு விரோதமாக வாழ்க்கை நடத்த நினைத்தானோ அல்லது இணங்கினானோ அன்றுமுதல் மனிதன் பாடுபட வேண்டியவனானான். ஆதலால், மனிதன் பாடுபடுவதைப் பற்றி நாம் பரிதாபப்படவில்லை. ஆனால், அந்த பாட்டின்—உழைப்பின் பயனை அந்த உழைப்பாளி அடையாமல், சும்மா இருக்கும் (உழைக்காத) சோம்பேறி அடைவதென்றால் இது எந்தமுறையில் நியாயமாகும்?

இங்கு இந்தச் சாக்கில் பொது உடைமையைப் பற்றிப் பேசவோ, சமதர்மத்தைப் பற்றிப் பேசவோ நாம் வரவில்லை. நீதி, நியாயம் என்பது வேண்டாமா என்றுதான் கேட்கின்றேன்.

உழைப்பாளிக்கும், விவசாயிக்கும், பண்டங்களைச் செய்யும் பாட்டாளிக்கும் வீடில்லை; கல்வியில்லை; சரீர சவுக்கியமில்லை; உடலில் வலிவு இல்லை; அறிவும் இல்லை என்றால் அவர்கள் உலகத்தில் ஏன் இருக்கவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

விளைபொருள்கள் 100-க்கு 100 விலை அதிகம் விற்று கொள்ளை இலாபம் வந்தாலும் விவசாயக் கூலியானவன் பஞ்சகாலத்தில் வாழ்வதுபோல் வாழவேண்டி யிருக்கின்றதைப் பார்க்கின்றோம். அபோலவே, உற்பத்திசெய்த சாமான்கள் 100-க்கு 100 பங்கு இலாபத்துக்கு விற்று இலாபம் பெற்றாலும் தொழிலாளி கைக்கும் வாய்க்கும் கணக்கு சரியாகும்படிதான் வாழ்கின்றான். இவை கவனிக்கப்பட வேண்டியதுதான்-அரசியல்வாதிகள், சமுதாய இயல்வாதிகள் கடமை என்பதோடு, ஒரு நல்ல அரசாங்கத்தினுடையவும், ஒரு உண்மையும் யோக்கியமும் பொருந்திய மதத்தினுடையவும் கடமையாகும் என்பது நமது அபிப்பிராயம்.

அதை விட்டுவிட்டு, இதெல்லாம் கடவுள் செயல் என்று சொல்லி விட்டு, இதற்காக யாதொரு காரியமும் செய்ய வேண்டியதில்லை யென்றும் சொல்லப்படுமானால்—தூக்கு மரங்களையும், சிறைக் கூடங்களையும் பெயர்த்து அழித்து விட்டு, கொலைகளையும், திருட்டுகளையும் பற்றி யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் அவைகளையும் கடவுள் செயல் என்று ஏன் சொல்லிவிடக் கூடாது என்று கேட்கின்றோம்.

இந்தக் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காகப் பிரமாதமான முறை எதையும் சொல்ல வரவில்லை. உண்மையிலேயே விவசாயிகள்—பூமிக்குச் சொந்தக்காரர்களாய் இருக்கின்றவர்கள் முதற்கொண்டு வாரத்துக்கு, குத்தகைக்கு உழுபவர்கள் உட்பட விவசாயக் கூலிகள் வரையில்—கடன்காரர்களாகவே தரகர்களுக்கும் லேவாதேவிக்காரர்களுக்கும் உழைத்து, உழைத்துப் போட்டுவிட்டு பட்டினி கிடப்பவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் ஏன் இப்படி இருக்கவேண்டும், தொழிலாளிகளும் ஏன் இப்படியே இருக்க வேண்டும் என்பதைச் சிறிது கவலையுடன் யோசித்து, தக்கது செய்யுங்கள் என்றுதான் சொல்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



அதற்கு நாம் சொல்லும் மார்க்கம் மிக மிகச் சுருக்கமானதும் சுலபமானதும் ஆகும். இதில் பலாத்காரமோ சமாதான பங்கமோ இருக்கவோ, ஏற்படவோ இடம் இல்லை.

அதாவது, விவசாயக்காரன் சர்க்காரிலேயோ அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்களிலேயோ தவிர வேறு எங்கும் கடன் வாங்க மார்க்கம் இல்லாமலும், அவனுக்கு வேறு தனிப்பட்ட நபர் யாரும் கடன் கொடுக்காமலும் செய்யவேண்டியது முதன்மையான காரியமாகும். அதோடு, விவசாயத்தில் ஈடுபட்ட கூலியாட்களுக்குக் கூலி தவிர விவசாயத்தில் ஒருபங்கு இருக்கும்படி செய்யவேண்டும்.

பிறகு விளைபொருள்கள், அதாவது ஆகார சாமான்கள், கூட்டுறவு பண்டகசாலைகளே விலைக்கு வாங்கி, அதாவது விவசாயிக்குக் கட்டும்படியான விலைக்கு வாங்கி அக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவே வாங்குபவர்களுக்குக் குறைந்த இலாபத்தில் விற்பனை செய்யவேண்டும். இதனால் யாருக்கும் கஷ்டம் ஏற்படாது. அதிக இலாபம் வைத்து விற்பதானாலும் அந்த இலாபம் சாமான்கள் விற்ற விவசாயிகளுக்கு, வாங்குகின்ற மக்களுக்கும் உபயோகப்படும்படியே செய்யவேண்டும்.

இதன்படி செய்வதாயிருந்தால் மிடில்மென் (Middle men) அதாவது தரகர், வியாபாரி என்கின்ற கூட்டங்களுக்கு நாட்டில் தேவையே ஏற்படாமல் போய்விடும். அப்போது அனாவசியமாக ஏராளமான பணக்காரர்கள் உற்பத்தியாக மாட்டார்கள் என்பது மாத்திரமல்லாமல், உண்மையிலேயே விவசாயக்காரர்களுக்கு நஷ்டமும்கஷ்டமும் இல்லாமல் போவதுடன் மனிதத் தன்மைக்கு வேண்டிய சகல காரியங்களும், விகிதாச்சாரப்படி அவனும் அடைய சவுகரியம் ஏற்பட்டுவிடும்.

தொழிலாளர்கள் விஷயத்திலும், மனித சமூகத்திற்கு வேண்டிய அனுபவ சாமான்கள் யாவும் இக் கூட்டுறவு முறையினாலேயே செய்யப்பட்டு இக் கூட்டுறவு முறையினாலேயே விநியோகிக்கப்படுமானால் மில் முதலாளிகள் என்கின்ற கூட்டம் எப்படி உற்பத்தியாகும்? அவர்களுக்கு வேலைதான் ஏது? ஒரு வஸ்துவின் இலாபத்தை அந்த வஸ்துவைப் பாடுபட்டுச் செய்தவனாவது அல்லது பாடுபட்ட பணத்தைக் கொடுத்து வாங்குபவனாவது அனுபவிக்க வேண்டுமே யல்லாமல், சும்மாயிருக்கும் சோம்பேறித் தரகன் ஏன் அனுபவிக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேனே ஒழிய, யாரையும் நான் தூக்கில் போடும்படியோ சிறையில் வைக்கும்படியோ சொல்லவில்லை. பிறகு தொழிலாளிகள் இருக்கும் இடங்களில் குறைந்தது அய்ந்துமைல் சுற்றளவு தூரத்திற்காவது கள்ளுக் கடைகளோ, மார்வாடிகளோ, நாட்டுக்கோட்டையார்களோ இல்லாமல் இருக்கும்படி செய்துவிட்டு, அவர்களுக்குத் தேவையான பணத்தைத் தொழிற்சாலை நிர்வாகிகளிடமே வாங்கிக் கொள்ளும்படி செய்துவிட்டு, இலாபத்தில் ஒரு பகுதியோ, அல்லது அத் தொழிலாளிக்கும் போதிய அளவு தாராளமான கூலியைக் கொடுத்து, அக் கூலியைச் சாமான்மீது வைத்து விற்கும்படியாகவோ செய்துவிட்டால் தொழிலாளிகளைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமே இருக்காது.

இந்த இரண்டு காரியங்கள், அதாவது விவசாயி விஷயமும், சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழிலாளி விஷயமும் இந்த முறையில் முடிவு செய்யப்பட்டு விட்டால் உலகில் வேறு எவ்விதமான நெருக்கடிகளும் இருக்காது என்பதோடு, அரசியல் நிர்வாகத்துக்கும் இவ்வளவு கஷ்டமும் பளுவும் இருக்க நியாயம் இல்லாமல் போய்விடும்.

இதற்காக இப்போது நமது அரசாங்கம் செய்யவேண்டிய வேலைகளெல்லாம்—கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பலப்படுத்தி, அவைகளை இன்னும் சற்று அதிகக் கவனத்துடன் மேற்பார்வை பார்த்து நிர்வகிப்பது என்ற ஒன்றே போதுமானது என்று சொல்லுவோம். இன்று இந்த நாட்டில் S.S.L.C., B.A., M.A. படித்துவிட்டு மக்கள் ஆயிரம், பதினாயிரக்கணக்காய் வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றதை நேரில் பார்க்கின்றோம்.



இவர்களில் அனேகர் போலீஸ் கான்ஸ்டபிள் வேலைக்குக்கூட வரத் தயாராய் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யாமல் எத்தனை நாளைக்கு விட்டு வைத்துக் கொண்டிருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

மேலும், இந்த நாட்டில் ஏதாவது அரசியல் கிளர்ச்சி உண்மையில் இருக்கின்றது என்று சொல்லப்படுமானால்—இந்த மாதிரி வேலையில்லாத ஆட்களுடைய கஷ்டமே அப்படிப்பட்ட அரசியல் கிளர்ச்சிக்குக் காரணமாகும். ஆதலால், அப்படிப்பட்ட தொல்லைகளும் ஒருவாறு ஒழிந்து, மக்கள் சமாதானத்தோடு வாழ்வதற்கும் அனுகூலமாயிருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

இன்று நடக்கும் கூட்டுறவுச் சாதனங்கள் என்பவை தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கிரிமினலுக்கு இடமில்லாமல் நடைபெறுகின்றன என்பது ஒரு அளவுக்கு திருப்தியானாலும், ஆந்திர தேசத்தில் பெரும்பாலும் மோசடியாகவே நடைபெற்று அனேக வழக்குகள் கிரிமினலுக்குப் போவதாகக் கேள்விப்பட்டோம்.

ஆதலால், கூட்டுறவு இலாக்கா சற்று விரிவடைந்து இன்னமும் அனேக துறைகளில் பிரவேசித்துத் தக்க மேற்பார்வையுடனும் உண்மையான நல்ல எண்ணத்துடனும் ஏழை மக்களுக்கும் பாடுபடும் உழைப்பாளி மக்களுக்கும் உதவும்படியாகவும் நடைபெறச் செய்ய வேண்டும் என்கின்ற ஆசையினால் இதை எழுதுகின்றோம்.

['பகுத்தறிவு'-கட்டுரை—2-12-1934]

தோழர்களே!

நம் நாட்டிலுள்ள விற்பனை வரியினால் இயற்கையாகவே மனிதனின் ஒழுக்கம் தானாகவே கெட்டுவிடுகிறது. நம் சர்க்கார் ஜனநாயக ஆட்சி நடத்துகிறது. நாம் ஒழுக்கமுடன் நடக்கவேண்டும்; ஒழுக்கத்தை உத்தேசித்து விற்பனை வரியை எப்படியாவது அடியோடு ஒழித்துக்கட்டவேண்டும். உலகில் 100-க்கு 90 நாடுகளில் விற்பனை வரியே கிடையாது. இதற்கு வேண்டிய பரிகாரம் பற்றி நன்றாக யோசித்துச் செயல்முறைக் கமிட்டி (Action Committee) ஒன்றை ஏற்படுத்தவேண்டும். வெற்றிபெற்றவர்கள் எந்தவிதக் கிளர்ச்சிகளைக் கையாண்டனரோ அந்தவிதக் கிளர்ச்சிகளையே நாமும் பின்பற்றவேண்டும். எந்தவிதக் கஷ்ட நஷ்டங்களுக்கும் நாம் தயாராக இருக்கவேண்டும். நம் தீர்மானத்தின் போக்கு, பேச்சாளர்களின் வேகமான பேச்சு, இவைகளைக்கண்டு சர்க்கார் உள்ளபடியே பயப்படவேண்டும். 'விற்பனை வரியை நீக்காவிட்டால் 15 நாட்கள் வரை கடைகளை அடைப்போம்' என்று சர்க்காருக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படியும் சர்க்கார் பணியவில்லையானால் 16-ம் நாள் மறுபடியும் ஒரு நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அதாவது, 'விற்பனைவரியை நீக்காவிட்டால் இரயில் தண்டவாளங்களைப் பெயர்ப்போம்' என்று! அவ்வளவு தூரத்துக்கு முடியுமா என்றால், இந்தப்படி சொல்லுவதற்காவது நமக்குத் துணிச்சல் வேண்டும்.

தோழர்களே! விற்பனைவரி ஒழுங்கானதல்ல; யாரையும் விட்டதல்ல; எல்லா மக்களும் இவ்வரியால் பாதிக்கப்படுகின்றனர். உங்களுக்குக் கிளர்ச்சிகளில் உதவிசெய்ய ஏராளமான பொதுமக்கள் உள்ளனர். மற்றும், கட்சிச் சார்பற்று ஒரு பொதுப்பணியை ஏற்கப் பலர் காத்திருக்கின்றனர்.

சும்மா வெறுமனே 'ஒரு முனை விற்பனை வரி போடு' என்று வீதிகளில் அட்டை தாங்கிச் சென்றால் மட்டுமே பிரயோசனம் இல்லை; சர்க்காரும் நம்மை மதிக்காது. நாம் கவலையோடு அனைவரும் ஒன்றாகக் கூடிக் கிளர்ச்சி செய்தால் வெற்றி நிச்சயம் பெறுவோம்.

மேலும், வரிபோடுவது என்றால் ஜனங்கள் வேதனைப்படாமலிருக்கிற மாதிரி வரி போடவேண்டும். Direct and Indirect tax போடவேண்டும். வரிகட்டுபவனுக்கு

படிப்பகம்

www.padippakam.com



வரிகட்டுவது தெரியாத மாதிரி—அதாவது அவன் [illegible]கிற வரி அவனுக்கு ஒரு சுமையாக இல்லாதமாதிரி வரிபோடவேண்டும்.

வருமான நிலையங்களை சர்க்கார் மேற்கொள்ளவேண்டும்.

எல்லா மில்களையும், மற்றும் பெரிய கம்பெனிகளையும், எவை எவை பொது மக்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனவோ அவைகளையெல்லாம் சர்க்கார் தைரியமாய் மேற்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால், ஒருவன் கொள்ளை இலாபம் அடிப்பதை நிறுத்த முடியும். மற்றும், அப்படிச் செய்வதால் சர்க்கார் வரவு செலவு நிலையை நல்ல தன்மையில் வைத்திருக்கவும், மக்களுக்கும் தொல்லை ஏற்படாமலிருக்கவுமாக இருக்க முடியும். அப்படிச் செய்யாமல், இன்று சர்க்கார் நடப்பில் பெரிய முதலாளிகளுக்குத் தனிச் சலுகைகளையெல்லாம் காட்டி, அவர்களைக் கொள்ளையடிக்க விட்டுவிட்டுப் பொது மக்கள் உயிரை வாங்குகிறது.

[ஈரோட்டில், 27-12-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-12-1953]

## 4. கூட்டுறவு

தலைவரவர்களே! தோழர்களே!

நான் (கோவாப்பரேடிவ்) கூட்டுறவு சங்கங்கள் என்ற விஷயத்தில் ஆதியில் கொஞ்சம் அக்கறை கொண்டவனாய் இருந்தவன். முதன்முதலில், நம்முடைய சென்னை ரிஜிஸ்ட்ரார் தோழர் இராமச்சந்திர ராவும், அதுசமயம் டிப்டி கலெக்டராக இருந்த தோழர் நாராயணசாமி அவர்களும் இங்கு கோவாப்பரேடிவ் ஸ்தாபனம் ஏற்படுத்த என்னிடமே வந்தார்கள். எங்கள் வீட்டில்தான் கூட்டம் கூட்டப்பட்டது. பாங்குப் புத்தகத்தைப் பார்த்தாலும் நான்தான் முதல் பங்குக்காரனாக இருப்பது தெரியவரும். அதற்காகப் பெரிதும் நானும் அந்தக் காலங்களில் உழைத்திருக்கிறேன். என்றாலும், இன்றைய நிலைமையானது நான் கோவாப்பரேடிவ் சொசைட்டிகளிலிருந்து சிறிது விலகி அலட்சிய அபிப்பிராயமுடையவனாக இருக்கிறேன். ஏனெனில், எங்கு பார்த்தாலும் கட்சியும், சுயநலத்துக்கு ஸ்தாபனங்களை உபயோகித்துக்கொள்வதும், அதன் உத்தேசங்களுக்கு விரோதமாகப் பணக்காரர்கள் ஆதிக்கம் செலுத்துவதுமாய் இருந்து வருவதுமேயாகும். தோழர் கணபதி அய்யர் அவர்கள் சிறிது நேரத்துக்கு முன்பு என்னிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது நம்முடைய நிலைமையானது இப்படித்தான் இருக்கமுடியும் என்று குறிப்பிட்டார். அது மிக உண்மையேதான். ஏனெனில், நம்நாட்டில் நிலைபெற்றுள்ள பல்வேறு விஷயங்களையும், முறைகளையும் அடியோடு மாற்றாமல் நம்முடைய ஜன சமூகத்திற்கு நன்மையைக் கொண்டுவந்துவிடுவது என்பது கொஞ்சமும் முடியாத காரியமாகும்.

ரஷ்ய நாட்டின் கூட்டுறவு முறைகளைப்பற்றிப் பேசுவேன் என்று உங்களுக்குத் தலைவர் எடுத்துச் சொன்னார். சர்வ விஷயத்திலும் அய்க்கியபாவமான கூட்டுறவு முறையானது சாத்தியப்படுமா என்று ஒரு காலத்தில் கருதியிருந்தேன். ஆனால், எனது மேல்நாட்டு அனுபவங்களினால்—அதுவும் குறிப்பாக ரஷ்யாவின் கூட்டுறவு முறைகளைக் கவனித்துப் பார்த்ததினால் கூட்டுறவு முறையைப்பற்றிய எனது எண்ணம் சாத்தியமாகக் கூடியதென்று மிக்க பலமாக உறுதிப்பட்டது.

என்னைப் பொறுத்தவரையில் என்னைப்பற்றி யார் என்ன நினைத்துக்கொண்டிருந்தபோதிலும் எனது முடிவான இலட்சியம்—அதாவது, எனது எண்ணம் ஈடேறுமானால், அது உச்ச ஸ்தானம்பெற்ற உயரிய கூட்டுறவு வாழ்க்கை முறையாகத்தானிருக்கும் என்பதுதான் எனது அபிப்பிராயம். கூட்டுறவு என்கிற உயரிய—சரியான நிலையானது நம்முடைய நாட்டில் ஏற்பட்டுப்போனால் ஜனசமூகமானது கவலையற்று, சஞ்சலமற்று



நாளைக்கு என்செய்வோம் என்று ஏங்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும் நிலைமையற்று நிம்மதியாக—சவுக்கியமாக—குதூகலமாக வாழவழி ஏற்பட்டுவிடும்.

நம்முடைய நாட்டில் ஏதாவது ஒரு சங்கம் ஏற்பட்டால் அதைப்பற்றி நம்முடைய மக்கள் என்ன கருதுகிறார்களென்றால்—அதில் தங்களுக்கு எவ்வளவு தூரம் இலாபமிருக்கிறதென்றும், அதைத் தங்கள் பெருமைக்கும், வாழ்வுக்கும் எவ்வளவு தூரம் (சுயநலத்திற்கு) பிரயோஜனப் படுத்திக் கொள்ளலாமென்றும்தான் கருதிக்கொண்டு, அதில் சம்பந்தம் வைத்துக்கொள்ளுகிறார்களே ஒழிய, அதனால் உலக நன்மைக்கு—ஜனசமூக மேம்பாட்டிற்குப் பாடுபட வேண்டுமென்பதைப் பற்றிய கவலையை அறவே விட்டு விடுகின்றார்கள்.

அதுபோலவே, நம்முடைய கோவாப்பரேடிவ் ஸ்தாபனங்களிலும் இருந்து வருகிறது. அந்த ஸ்தாபனத்திலுள்ள மக்களுக்குள்ளாகவே கூட்டுறவு உணர்ச்சி கூடக் கிடையாதென்றே உறுதியாகச் சொல்லலாம். ஆனால், ஏதோ சிலர் அவரவர்கள் தங்களுடைய நன்மைக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும், கவுரவத்திற்காகவும் ஏதோ சம்பந்தம் வைத்திருப்பதனால் மாத்திரம் என்ன பலன் ஏற்பட்டு விடும்?

சாதாரணமாக, இந்த ஊர்க் கூட்டுறவு ஸ்தாபனத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் 2000, 3000 பேர்கள் வரை பங்குதார மெம்பர்களாக இருக்கின்றார்கள். ஆனால் ஸ்தாபனத்தினால் உருப்படியாகப் பொதுமக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டு விடுகிறது? ஒரு சில—சொற்பப் பேர்கள், ஏதோ எப்படிக் கடன் பெறலாமென்று பெருத்த பிரயாசை எடுத்துக் கொள்பவர்களே சில அனுகூலங்கள் அடைகிறார்கள். இவர்களுக்கு மேற்படி ஸ்தாபனத்தைப் பற்றிய கவலையே இல்லை. இன்றைய உலக எல்லா வாழ்க்கையும் இப்படித்தான் இருக்கிறது; வெறும் குற்றத்தையே பேசுவதால் பயனில்லை. ஆனாலும், இவைகள் தக்க படிப்பினையாக இருக்க உதவ வேண்டும். கூட்டுறவு வாழ்க்கையென்றால் பிறருக்கு நாம் எவ்வாறு சகாயம் செய்வது, எவ்வாறு உதவி செய்வது என்கிற விஷயங்களே நமது வாழ்க்கையின் முக்கிய இலட்சியமாய் இருக்கவேண்டும். இவைகளில் தனித்தனி மனிதனைப் பொறுத்த தத்துவம் என்பதே கூடாது.

சாதாரணமாக, நாம் நம்மிடையே ஒருவரைப் புதிதாகக் கண்டால், அதாவது சந்தித்தால் அவருடைய நிலை என்னவென்றும், உத்தியோகம் என்னவென்றும் வினவ ஆசைப்படுகிறோம். அவர் ஒரு பெரிய உத்தியோகஸ்தராகவோ, பணக்காரராகவோ இருந்தால் ஒரு தனி மதிப்பும்; ஒரு குமாஸ்தாவாக இருந்தால், கூலியாக இருந்தால் ஒரு தனி மதிப்புந்தான் கொடுக்கின்றோம். இதுதான் நம்முடைய நாட்டில் ஒரு மனிதனை மதிப்பதைப்பற்றிய முறையாகும். ஆனால், ரஷ்யாவிலோ இங்குள்ள இதுபோன்ற கேள்விகளை அங்கு யாரும் கேட்பதில்லை. அங்கு ஒருவருடைய உத்தியோகத்தைப் பற்றியோ, செல்வத்தைப் பற்றியோ சிறிதும் யோசிப்பதே இல்லை; விசாரிப்பதுமில்லை. ஒருவனைக் கண்டதும் அவன் (Social service) 'சமுதாய சேவை என்ன செய்திருக்கிறான்?' என்று மட்டுமேதான் பிரதானமாக்க் கவனிப்பார்கள்; அதைத்தான் கேட்பார்கள். ஒருவர் பிறருக்கு என்ன நன்மை புரிய ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதுதான் மனிதனை அறிய முக்கிய தத்துவமாகும்; அதுதான் அங்கு அவருடைய பெருமையைக் காட்டுவதாகும். அங்கு உத்தியோகத்தைப் பற்றிய பேச்சோ, வருமானமோ, மேல் கீழ் வரும்படி என்பது போன்ற பேச்சோ, எங்கும் எவ்வித ரூபத்திலும் கிடையாது. அங்கு எங்கும் யாவரும் சமுதாயவேலை செய்வோரேயாவர்.

நான் ரஷ்யாவில் இருந்த காலத்தில் ஒரு நியாயஸ்தலத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு ஒரு குற்றவாளியை விசாரிக்கக் கண்டேன். அவன் ஒரு விசேஷ நாளில் குடித்து வெறியனாகிக் கலகம் செய்தான் என்பதான குற்றவாளி. அவனை அந்த விசாரணை ஸ்தலத்தில் என்ன கேள்வி கேட்டார்கள் என்றால் 'உன்னுடைய (Social Service Work) சமுதாய ஊழிய வேலை என்ன?' என்பதேயாகும். அவன் அதற்கு

படிப்பகம்

www.padippakam.com



எனக்கு (Social Service) சமுதாய வேலை இல்லை யென்றான். இதைக் கேட்டதும் நியாயாதிபதியும், ஜூரியான ஒரு பெண்ணும், “உனக்குச் சமுதாய வேலையில்லாமல் போய்விட்டது என்கிறாயே, வெட்கமில்லையா? ‘என்னை உலகுக்கு உபயோகப்படுத்திக் கொள்ள வகையற்றவனாக இருக்கிறேன்’ என்று சொல்லுவது அவமான கரமானதாகத் தோன்ற வில்லையா?” என்று கடிந்தனர். அதற்கு அவன், ‘எல்லா சோஷியல் சர்வீசையும் சிறு பிள்ளைகளாகிய ‘கமசமால்’ கூட்டத்தார் எடுத்துக்கொள்ளுகிறார்கள், நான் என்ன செய்வது?’ என்றான். அந்தம்மாள், ‘வெட்கம், வெட்கம்’ என்றாள். இவைகளைக் கேட்ட பிறகுதான் சோஷியல் சர்விஸ் (Social Service) என்பவைகளைப் பற்றி அதிகம் அறிய விசாரணை செய்தேன். சமூக ஊழியம் செய்வதுதான் தங்கள் வாழ்க்கையின் கவுரவம் என்பதை முதலாவதாகவும், அடுத்தபடி கூட்டுறவு வாழ்க்கையே மேலானதாகவும் அவர்கள் கருதி நடக்கிறார்கள்.

ரஷ்யர்களுடைய வாழ்க்கையானது உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்குக் காரணம் அவர்கள் சோஷியல் சர்விசும், கூட்டுறவு வாழ்க்கையும் நடத்த முனைந்து நிற்பதேயாகும். அவர்கள் வாழ்க்கையில் மேற்போட்டுக்கொள்ளும் இந்த வேலையானது—மனிதனுக்குக் கவலை, துன்பம், மனச் சோர்வு என்பவைகளே இல்லாமல் செய்துவிடுகிறது. அங்குள்ள சர்வ ஜனங்களுடைய எண்ணமெல்லாம், ‘பிறருக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்யவேண்டும்’ என்றே குடி கொண்டிருக்கிறது. இந்த நோக்க மில்லாத மனிதனை மனிதனல்லன் என்று வன்மையாக அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டில் உத்தியோகத்தின் பேராலும், மற்ற பதவிகளின் பேராலும் 1000, 2000, 5000, 7000 ரூபாய்களைக் கொள்ளை கொள்வது போன்ற கொடுமைகள் ரஷ்யாவில் கிடையாது. அங்கு உள்ளவர்களுக்குத் தனக்கு வேண்டிய அளவுக்குமேல் வரும்படி—இலஞ்சம்—இலாவண்யம் என்பன போன்றவைகளே அடியோடு கிடையாது. அங்கு ரூபாய் 10, 20 கூட கடன் கொடுக்கும் முறையோ, கடன்படும் முறையோ கிடையாது. அது குற்றமாகும்.

ஆனால், அந்த முறைகள் எல்லாம் நம்முடைய நாட்டின் இன்றைய நிலைமைக்குச் சாத்தியமில்லை என்று சொன்னாலும், நம் நாட்டு நிலைமைகளை எல்லாம் அடியோடு மாற்றி அமைத்துத்தான் ஆகவேண்டும். இக் கருத்தைத்தான் நான் வலியுறுத்திக் கூறுகிறேன். இது, சிறிது சிறிதாய் கோவாப்பரேடிவ் ஸ்தாபனங்களின்மூலம் செய்யலாம். நம்முடைய நாட்டில் அளவுக்குமிறிய செல்வச்செருக்கு கொண்டவர்களையும், கல்நெஞ்சம் படைத்த கனத்த முதலாளிகளையும் ஒரு பக்கத்தில் பந்தோபஸ்தாய் வைத்துக்கொண்டிருக்கின்றோம். மற்றொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டக்காரர்களையும், பிச்சைக்காரர்களையும் வைத்துக் கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் ஏன் இப்படி இருக்கின்றன? இதுபோன்ற நிலைமை ரஷ்யாவில் இல்லையே! ஆதிக்கக்காரனுக்கும்–ஆதிக்கத்திற்கும் கொஞ்சமாவது இடமிருக்கிறவரையிலும் தொல்லைப்படுகிறவர்களும்–தொல்லையும், தரித்திரமும், ஏழ்மையும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்யும்.

இன்று காலை முதல் மாலை வரையிலும் என்னிடம் வந்து 5, 6 பேர்கள்வரை வந்து, ‘வேலை கொடு, வேலை கொடு’ என்று வருந்தினார்கள். ஒருவருக்கு, கலெக்டருக்கு சிபாரிசுக் கடிதம், தாசில்தாருக்கு சிபாரிசுக் கடிதம் எழுதித் தரவேண்டுமாம்; ஒருவர், தனது குழந்தைகளுக்கு அம்மை போட்டிருக்கிறது, சம்சாரத்திற்கு உடல் நோவு; நான் என்ன செய்வேன்? 4 மாதமாக வேலையில்லையே, காப்பாற்றுவாரில்லையே என்று கதறினான். நான் அவருக்கு 2 படி புழுங்கல் அரிசி கொடுக்கும்படி வீட்டிற்குச் சீட்டுக்கொடுத்தேன். இதுபோன்ற கொடுமைகளின் தன்மையை இன்று என்னுடன் தங்கியிருந்த நண்பரும் நன்கறிவார். எங்கும் வேலையில்லை என்ற கூக்குரல் அதிகரித்துவிட்டது. ஏன் வேலையில்லாமல் போய்விட்டது? வேலையில்லாமை எப்படி ஏற்படும் என்று யோசித்துப் பார்த்தீர்களா?



ஒரு வேலைக்காரன் காலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை வேலை செய்கின்றான். ஒரு தையல்காரன் 3 மெஷின்களை வைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு 5 ரூ., 10 ரூ. சம்பாதிக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒருவன் அதிகநேரம் வேலை செய்து, அதிகப் பணம் ஒருவனே சம்பாதிப்பது எதற்கு? இவைகளையெல்லாம் கணக்குப்போட்டு, ஒரு ஒழுங்கு முறைப்படுத்தி ஒரு கூட்டுறவு முறையில் அமைத்தால்—அவனவனுக்குத் தேவையான அளவுக்கு ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாகப் போதிய பலன் கிடைக்கும்.

நம்முடைய நாட்டில் அடிப்படையான மாறுதல் செய்யாவிட்டால் கூடிய சீக்கிரத்தில் நாம் என்ன கதிக்கு ஆளாகவேண்டிவரும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

நாம் செலவழிப்பதில் வகைதொகையற்ற முறையில் வீண் செலவு செய்து வருகின்றோம். கூட்டுறவு முறையில் நமது வாழ்க்கையை நடத்தினால் இன்றைய நமது செலவில் எட்டில் ஒரு பாகம்தான் செலவு ஏற்படும்; பாக்கி இன்னும் 7 பேருக்கு உதவும். உதாரணமாக, ரஷ்யர்களின் சாப்பாட்டு முறையைக் கவனியுங்கள். அங்கு சாப்பாடும் கூட்டுறவு முறையில்தான். அங்கு ஓர் இடத்தில் நாளொன்றுக்கு ஒரு வேளைக்கு நாற்பதினாயிரம் பேர்கள் சாப்பிடுமிடத்தைக் கண்ணுற்றேன். ஆனால், இங்குள்ள நிலைமை என்ன? ஒரு வீட்டில் சமையல் செய்வதென்றால் தேவைக்குமேல் அதிகமாய்த்தான் போட்டுச் சமைக்கிறார்கள். 4, 5 பேர்களுள்ள ஒரு குடும்பத்திற்கு, ஒரு பெண் கண்டிப்பாகச் சமையலுக்கென்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு குடும்பச் சமையலுக்கு என்றும் ஒரு தனி அறையும், பாக்கி வசதிகளுக்கென்று கொள்ளை கொள்ளையான இடமும் ஒதுக்கிவைத்துக் கொண்டு என்ன அக்கிரமமான தீங்குகளை வசதியற்ற எளியவர்க்கு உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்!

ரஷ்யாவிலுள்ள மேற்சொன்ன பொதுச் சமையல் சாலையில் (General kitchen) 970 பேர்தான் வேலையிலீடுபட்டிருக்கிறார்கள் என்று நான் கணக்குக்கேட்டுத் தெரிந்தேன். நம்முடைய நாட்டில் 4 பேர்களுக்கு ஒரு பெண்வீதம் சமையலுக்கு வைத்துக்கொண்டிருக்கிற கணக்குப்படி 40000 பேர்களுக்கும் எத்தனை பெண்களை ஒதுக்கித் தள்ளிக் கொடுமைக்கு ஆளாக்குவது என்றுதான் யோசித்துப் பார்க்கும்படி கோருகிறேன். நம்முடைய சமையலைப்பற்றி ஏதாவது பந்தோபஸ்து உண்டா? அங்கு சமையலறையையும், சாப்பாட்டு சாமான்களையும்—சமைத்த பிறகும், தினம் டாக்டர் சரியான பரிசோதனை செய்கிறார். ஒரு பெரிய எம்.டி., (M.D.) டாக்டர் அதற்கென்றே ஒவ்வொரு கூட்டுறவு சமையலுக்கும் உண்டு. இங்கு நாம் என்ன செய்கிறோம்? சல்லிசான சரக்குகளை வாங்கிப் போட்டு வெந்தும் வேகாமல் அவித்துத்தின்று, சாப்பாட்டின் காரணமாகவே பெரும்பாலும் நோய் அடைகின்றோம். மேல் நாட்டின் வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டக் குறைவு, அனுகூலம், மிச்சம், சுகாதாரம், சவுக்கியம் ஆகியவைகள் கவனிக்கப்படுகிறதென்பதை யோசியுங்கள். அங்கு ஒரு ரொட்டிக் கிடங்கில் (Bakery) நாள் ஒன்றுக்கு 250 டன் ரொட்டிகள் ஒரே சமயத்தில் செய்யப்படுவதைப் பார்த்தேன். கூட்டுறவு முறையினால் நாள் ஒன்றுக்கு ஒரு இடத்தில் இருபதாயிரம், முப்பதாயிரம் வீதம் ‘ஷர்ட்டு’கள், ‘டிரவுசர்’கள், ‘ஜாக்கட்டு’கள் தயாரிக்கப்படுகின்றன. அங்கு அத்தனை பேரும் வேலையிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள்; அங்கு மிகக் குறைந்த செலவுதான்.

இங்கு நாம் துணிவாங்கிக் கொடுத்தால் காலே அரைக்கால் பாகம் திருட்டும் சேதமுமாகின்றதென்றும் சொல்லலாம்; அங்கு அப்படியில்லை. துணியை அப்படியே 200, 300 வீதம் மடிப்பு மடித்து முதலிலேயே சின்ன வேலைக்காரன்வைகளுக்கு அதாவது பாக்கெட், கழுத்துப் பட்டை, கைப் பட்டை முதலியவைகளுக்கு, ரம்பத்தில் அறுப்பதுபோன்ற மிஷினில் அறுத்து எடுத்துக்கொண்டு, பாக்கியை அப்படியே சேதாரம் இல்லாமல் முழுதும் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ரஷ்யாவில் 2000—3000 ஜனங்கள் சந்தோஷமாக, சவுக்கியமாக, போதிய சுகாதாரத்தோடு ஒரே கட்டிடத்தில் நிரம்பி வாழ்வதைப் பார்த்தேன். இங்கு நம்முடைய ஒரு வீட்டை என்ன அனாவசியமாக 3, 4 அடுக்கு மெத்தைகளுடன் கட்டுகிறோம்; அதில் பகுதிபாகம் நாம் உபயோகப்படுத்துவதுகூட இல்லை; அப்படி உபயோகப்படுத்தும் பாகத்தில் சுத்தம், சுகாதாரம் இருப்பதில்லை. நம்முடைய வீட்டைநிரப்புவது ஒடிந்துபோன மத்து, கெட்டுப்போன நாற்காலி, மரம், கூடை, கிழிந்துபோன பாய், அவிந்துபோன குப்பைகளால்தான். இந்த முட்டாள்தனத்திற்காகவா வீடு வைத்துக்கொண்டு வாழுகிறோம்? யோசித்துப் பாருங்கள். அங்கு எப்படி வீட்டுவசதி முறை இருக்கின்றதெனக் கேட்கலாம். சர்வாதிகாரியான ஸ்டாலினுக்கும் சாதாரணத் தொழிலாளிக்கும் சுமார் 10, 16 அடி அளவுள்ள ஓர் இடந்தான். அங்கு ஒரேமாதிரி சாதிக்காய்க் கட்டிலும், மேசையும் சிறப்பாக இருக்கும். அங்கு ஒரு சிறு 4×4 உள்ள கக்கூசு நூற்றுக்கணக்கானவர்களுக்கு உபயோகப்படுகிறது; தோட்டியே கிடையாது; அது கக்கூசா என்று நாம் சந்தேகப்பட்டே போய்விடுவோம்; அவ்வளவு சுத்தம்! அதில் எவ்வித வாடையும் இருக்காது; அழகு, ஒழுங்கானமுறை எல்லாம் சேர்ந்திருக்கிறது. இங்கு ஒரு வீட்டுக்கு 5 பேருக்கு ஒரு கக்கூசாக இருக்கிறது. அதற்கு எவ்வளவு இடம்? அப்படியிருந்தும் என்ன சகிக்கமுடியாத சுகாதாரக் குறைவு? இங்கு 300 பேர்களுக்கு ஒரு தோட்டி வீதம் இருப்பானென்று நம்புகிறேன். இந்த 30,000 பேர்களுள்ள ஈரோட்டில் எத்தனை தோட்டிகள்? எத்தனை வீடு, தெருக் கூட்டுகிறவர்கள்? எத்தனை வேலைக்காரர்கள்? இப்படியிருந்தும் இங்கு அசுத்தம்; அசுத்தம்தானே என்றும் அதி அக்கிரமமாக இருக்கிறது! அங்கு கக்கூசுக்குப் பக்கத்திலேயே படுக்கையறை இருக்கும்; அங்குள்ளமுறை கஷ்டத்திற்கே இடமில்லை; வழியுமில்லை.

ஒவ்வொரு கூட்டுப் பண்ணையிருக்கும் இடத்திலும்—ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒரு நல்ல (Park) பார்க், சினிமா, விளையாட்டு இடம், டிராமா, சுகாதார வசதி சாலை எல்லாம் அமையப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு ஸ்தாபனத்திலுமுள்ள 5000 பேருக்கும், 1000 கூட்டுறவு பேருக்கும் முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டுச் சம்பளம் ஒரே அளவுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. மேல்கொண்ட மீதியை அக் கூட்டுப் பொதுஜனங்களுடைய நன்மைக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இங்கு ஒரு மனிதனுக்கு ஒரு வண்டி இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதில் அவன் எப்பொழுதும் போய்க்கொண்டிருக்கிறானா? 10 மணி நேரத்திற்கும் வீணே தீனிபோட்டு 3 மணி நேரத்திற்கும் குறைவாகவே வேலை வாங்குகிறான்; 3 மணி நேரத்திற்கு அனுபவிப்பதினால் பாக்கி 7 மணி நேரக் கூலியும், செலவும் வீணாகிறது. இப்படியேதான் தனிப்பட்டவர்கள் தன்மையால் உண்டாகும் நாசங்கள் அனேகம். நம்முடைய நாட்டில் தேசச் செழிப்பும், அனுபவப் பொருள்களுற்பத்தியும் ஒன்றுக்கு எட்டாக விளங்குகிறதா, இல்லையா? ஆனால், மக்களின் கஷ்டத்திற்குக் காரணம் என்ன? தனித்தனி என்னும் உணர்ச்சி ஒழியவேண்டுமா, வேண்டாமா? கவலையற்று வாழ்வதுதான் சிறந்தது; அதற்குக் கூட்டுறவு முறையேதான் பெரிதும் தேவையானது.

இந்த ஈரோடு முனிசிபாலிட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். அது ஒன்று சேர்க்கப்பட்டுப் பலருக்கும் வாழ்க்கை வசதிகளைப் பூர்த்திசெய்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் எவ்வளவு பிரயோசனப்படும்? எவ்வளவு செலவு மிச்சமாகும்? எவ்வளவு அனுகூலம்? எவ்வளவு இலாபம்? எல்லாவற்றிலும் நன்மையேதான் ஏற்படும். அப்படிக்கின்றித் தனிப்பட்டவர்கள் நன்மைக்கு மாத்திரம் ஏன் எதுவும் இருக்கவேண்டும்? ஒரு ஹோட்டலைப் பொதுவாகப் பல குடும்பங்களுக்குச் சேர்த்துவைத்து நடத்தினால், இரண்டணாவுக்கும் கீழாகவே நல்ல சாப்பாடு போடலாம்; அது சத்துள்ளதாகவும், சுகாதார முறைப்படியும் இருக்கும். நம் வீட்டில் சமையல் என்னும் பேரால் சரிபாக சாமான் வீணாய்ப் போகின்றது. நம்முடைய நாட்டில் என்ன பொதுப் பிரியம் இருக்கிறது?



பொது அலுவல்களில் டாக்டர் பரீட்சை செய்து என்ன சவுக்கியமாக எத்தனை காரியங்களைச் செய்யலாம்? இதுபோலவே வியாபாரத்திலும், கடையில் பேரம் செய்யும்போது கிராமக் குடியானவனிடம் 9 சாக்கு போட்டுவிட்டு 10 சாக்கு என்று பித்தலாட்டம் செய்வது தெரியும்; ஒன்றுக்கு ஒன்றரையாய் எடுத்துக்கொள்வது தெரியும்; இது நானும் செய்திருக்கிறேன். நம்மிடம் நிறைந்திருப்பது பொய்; சரக்கோ கலப்படம்; உபயோகிப்பதோ முக்கால் அளவுள்ள படிதான்; இவைகளினாலெல்லாம் எவ்வளவு நஷ்டம்? இவைகளையெல்லாம் கூட்டுறவு முறையில் இலட்சியம்கொண்ட ஜனத் தலைவர்கள் என்பவர்கள் ஏன் கன்ட்ரோல் (Control) செய்து அடக்கித் தடுக்கக்கூடாது? ஒவ்வொரு தனிப்பட்டவனையும் ஒன்றுபடுத்தி, ‘நீயும் வா; எல்லோரும் ஒரு காரியத்தைச் செய்வோம்; எல்லோரும் இலாபம் பெறுவோம்; அதிக இலாபமும், அதிக ஓய்வும் எடுத்துக்கொள்வோம்’ என்று ஏன் கூட்டுறவுத் தன்மையைப் பிரயோகிக்கக்கூடாது.

இம்முறைகள் என்றைக்காவது தலைதூக்கித்தான் ஆகவேண்டும். இதற்காகப் பொது உடைமை வேண்டுமா? பொது உடைமைப் பேச்சே வேண்டியதில்லை. ஆனால், இன்றே கூட்டுறவுத் தன்மையைக் கைப்பற்றுங்கள். வட்டி விஷயத்திலும் பாங்குகளில் ஏராளமான ரூபாய் தூங்குகிறது. இங்கு வட்டி ரூ. 10-க்கு மாதம் கால் ரூபாய் வாங்குகிறானே; என்ன கொடுமை? ரஷ்யாவில் லேவாதேவியும் செய்யக்கூடாது. ஒருவனுக்கு 5 ரூபாய் கடன் கொடுத்தால், அது அங்கு திருட்டு ஆகிவிடுகிறது. ஆபத்தில் உதவுவதென்றால்—கஷ்டத்துக்காக இருக்கும் என்றால்—‘ஏன் ஆபத்தும் கஷ்டமுமான நிலைமை ஏற்படும்?’ என்பதுதான் அங்குக் கேட்கப்படும் கேள்வியாகும்.

ஜன சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை–கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். நான் அதிகமாகச் சொல்ல வரவில்லை; இவைகளைத்தான் சொல்ல நினைத்தேன். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும்; சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும்; பலருடைய நன்மைக்கும் என்று கருதி இறங்க வேண்டும். ‘இவற்றைச் சர்க்கார் செய்ய வேண்டியதா? பொதுஜனங்கள் செய்ய வேண்டியதா?’ என்பது—ஆத்திகர்கள், ‘விதி பெரிதா? மதி பெரிதா?’ என்று தர்க்கிப்பதை ஒத்ததாகும். இவ்விவகாரங்களில் வலுத்தவன், வாய்ப் பேச்சுக்காரன்தான் ஜெயமடைவான்.

சர்க்கார்தான் ஜனங்கள்; ஜனங்கள்தான் சர்க்கார் என்பதை உணருங்கள். நமது சரீரத்தில் கஷ்டமேற்பட்டால் நமக்கென்னவென்று இருப்போமா? அதுபோல், நமது உணர்ச்சிகள் இருக்கவேண்டும். சிப்பியானது திறந்திருக்கும்பொழுது மழைத்துளி விழும்போதுதான் முத்தாகிறது. அதுபோல்தான், நமது உணர்ச்சிகளைப் பக்குவப்படுத்தி, சரிப்படுத்தி வைத்துக்கொண்டு தயாராகவே இருக்கவேண்டும்; அப்பொழுது கண்டிப்பாகப் பலன் ஏற்பட்டுவிடும். நம்முடைய அபிப்பிராயந்தான் ஜனசமூக அபிப்பிராயம் என்று தன்னம்பிக்கையுடன் நாம் வேலை செய்யவேண்டும். நமது உடலிலுள்ள பழைய ‘தனித் தனித் தத்துவ’ இரத்தத்தை எடுத்துவிட்டுக் கூட்டுறவுத் தன்மை என்ற இரத்தத்தைப் பாய்ச்சச் (Inject) செய்யவேண்டும். இது நம்மால் முடியுமா என்றிருக்கக் கூடாது; கண்டிப்பாய் இது முடியாமல் போய்விடாது.

நம்முடைய மக்கள் மடத்தனத்தில் இருக்கின்றார்கள்–அதனால் முடியாது என்றோ; அறியாமை அந்தகாரம் சூழ்ந்திருக்கிறது—அதனால் முடியாதென்றோ சொல்லிவிட முடியாது. 1914–18-ஆம் வருஷத்தில் நடந்த கொடிய மகா யுத்தத்தைக்கூடக் கேள்விப்படாத ரஷ்யர்களே இருக்கிறார்கள். இப்பொழுதும் (Czar) ஜார் அரசன் இருந்து அரசாளுகிறான் என்றே கருதிக்கொண்டிருக்கும் காட்டுமிராண்டிகளும் அங்கு இருக்கத்தான் செய்கின்றார்கள். இதனால் எல்லாம் அங்கு தகித்துக்கொண்டிருந்த கூட்டுறவுத் தன்மை போய்விட்டதா? எப்படிக் காய்ந்த, தீய்ந்த சருகில் அதிவேகமாய் நெருப்புத் தீப்பற்றிக்கொள்ளுகிறதோ, அப்படியேதான் அங்கு மதம் ஒழிந்து, கடவுள் மாய்ந்து, அரசர்கள் மண்ணாங்



படிப்பகம்

கட்டிகளாகி, செல்வவான்கள் பனிக் [illegible] மழை பெய்தாலும், வெயில் அடித்தாலும் கெடுவதுபோல் கெட்டு, 16 கோடி [illegible] ற்றவு வாழ்க்கைக்காரராக ஆகிவிட்டனர் என்பதை நீங்கள் ஞாபகத்தில் நன்கு பதிய வைத்துக்கொண்டு, இந்நாட்டுக் கொடுமை ஒழிப்புக்குத் தைரியங்கொண்டு, திடங்கொண்டு போராடி உழையுங்கள்! உங்கள் உணர்ச்சிகள் இவைகளுக்கு எப்பொழுதும் அனுகூலமாகவே இருக்கட்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[ஈரோட்டில், 4-11-1933-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 12-11-1933]

# 2. தொழில் வளர்ச்சி

## 1. சுதேசி

மக்களுக்கு ஓர் எழுச்சியையோ, உற்சாகத்தையோ, ஆத்திரத்தையோ உண்டாக்கி விட்டுவிட்டு, அவர்களுக்குத் தகுந்த வேலை கொடுத்துக் கொண்டிருக்காவிட்டால் அது தாறுமாறாகக் கண்ட கண்ட பக்கங்களில் எல்லாம் போய் முட்டச்செய்யும் என்பது இயற்கையேயாகும். நம்மைப் பொறுத்தவரை—சுயமரியாதை இயக்கத்திற்கும் அரசியல் சம்பந்தமான கிளர்ச்சிக்கும் மத்தியில் சரியான தடைச் சுவர் இருக்க வேண்டும் என்பது நம் முடிவான அபிப்பிராயமாகும்.

நாம் இப்படிச் சொல்லுவதாலேயே இன்றைய அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டு அதனிடம் வாலாட்டிக் கொண்டு அடிமையாய் இருக்க வேண்டுமென்று நாம் சொல்ல வரவில்லை. நம்மைப் பொறுத்தவரை, திரு. எஸ். இராமநாதன் அவர்களை வைத்துக் கொண்டே நாம் திரு. காந்தியவர்களிடம் 1927ஆம் ஆண்டிலேயே—இந்தியா விடுதலை யடைய வேண்டுமானால், சுயமரியாதை அடையவேண்டுமானால்—'இந்து மதமும் காங்கிரசும் ஒழிந்தாகவேண்டும்' என்று சொல்லிவிட்டு வந்தவர்களாவோம். அந்த நிமிடமே 20 அடி தூரத்தில் நின்று கொண்டிருந்த திரு. இராஜகோபாலாச்சாரியாரிடமும் சொல்லிவிட்டே வாசல் கடந்தோம்; அது முதலே அந்தப் பிரச்சாரமும் செய்தோம். இந்த அபிப்பிராயம் 1920-ல் நடந்த கிளர்ச்சி அனுபவத்திலேயே ஏற்பட்டதாகும். இந்து மதம் என்பது அழிய வேண்டும் என்கின்ற அபிப்பிராயமும் நமக்குச் சுமார் 25, 30 வருஷத்திற்கு முன்னாலேயே ஏற்பட்டதாகும். 5, 6 வருஷ காலமாகவே அரசியல் கிளர்ச்சியும், தியாகத் தின் பயனும் பாமர மக்களை—ஏழைகளை—தொழிலாளிகளை—கூலிகளை நசுக்கிப் பிழியவே உபயோகிக்கப்படப் போகின்றன என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகம் இருந்த தில்லை.

இது போலவே 'சுதேசிப் பொருள்', 'பரதேசிப் பொருள்' என்பதிலும் உள்ள புரட்டுகளை நாம் அறிவதில்லை. சுதேசிப் பொருளை ஏன் ஆதரிக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்றது என்று பார்ப்போமானால், 'சுதேசிப் பொருளை ஆதரித்தால் தொழிலாளிக்குத் தொழில் கிடைக்கும்' என்று சொல்லப்படுகின்றது. அந்தப் பேச்சில் சிறிதுகூட நாணயம் இல்லவே. இல்லை. ஏனெனில், இந்த நாட்டில் தொழிலாளிக்கு ஒருவிதப் பாதுகாப்பும் கிடையாது. பணக்காரர்கள் அடையும் இலாபத்திற்கோ அளவு கிடையாது. எவ்வளவு இலாப மடைந்தாலும் அது அவனது 'யோகமாய்', 'அதிர்ஷ்டமாய்'ப் போய் விடுகிறது. 'இன்ன இலாபத்திற்கு மேல் முதலாளி இலாபமடையக் கூடாது' என்ற நிபந்தனையே கிடையாது. ஆனால், தொழிலாளி வயிற்றுக்குப் போதவில்லை என்று வேலைநிறுத்தம் செய்தால், கூலி போதாது என்று கேட்டால் அவனை சர்க்காரிடம் சொல்லித் துப்பாக்கியால் சுடச் செய்யவேண்டியது, 10, 10 வருஷம் தண்டிக்கவேண்டியது;



அவர்கள் வீடுகளில் நெருப்புவைத்துக் கொளுத்தவேண்டியது ஆகிய காரியங்களே தொழி லாளிகளின் நிலை. இதற்குச் சமாதானம் அவர்களது 'தலை எழுத்து' என்பதைத் தவிர வேறில்லை.

இந்த நிலையில் எதற்காகச் சுதேசிப் பொருளை ஆதரிப்பது, எதற்காக கள்ளுக் கடைமறியல் செய்வது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த நிலையில் ஏழை மக்களுக்கு எது சுலபமோ அதை வாங்கிக் கொள்ள அனுமதி கொடுக்கவேண்டியதுதான் சமதர்மமாகும் என்பது நமது சொந்த அபிப்பிராயம்.

முதலாளி, தொழிலாளி நிலையை வரையறுத்த பிறகுதான், சுதேசிப் பொருள் பேச்சும் பிரச்சாரமும் பயன்படுமே தவிர இந்த நிலையில் ஒன்றும் பயன்படாது. முத லாளிகள் கொள்ளை அடிக்கத்தான் சுதேசிப் பிரச்சாரம் உதவும்.

இன்னும் உதாரணம் வேண்டுமானால் கதரை எடுத்துக்கொள்ளுவோம். கதர்ப் பிரச்சாரம் நாமே செய்தோம். 'கதர் கட்டாதவன்—தேசத் துரோகி; நரகத்துக்குப் போவான்' என்றெல்லாம் சொன்னோம்; கதர்சாலை ஏற்படுத்தினோம்; ஏழைகளையும் பிச்சை எடுத்தாவது வயிற்றை வாயைக் கட்டியாவது கதர்கட்டும்படி பிரச்சாரம் செய்தோம். கதர் சம்பந்தமான அனேக காரியங்களுக்கு நாம் பொறுப்பாளி என்று சொல்லிக்கொள்ள நமக்குப் பல உரிமைகள் உண்டு. கடைசியாக என்ன பலன் ஏற்பட்டது? கோயம்புத்தூர் மால்மில்லின் நாலரை முழம் வேட்டி 4-க்கு ரூ. 1-12-0-க்கு திரு. செங்கோட்டையா விற்கிறார்; ஆனால் நாலரைமுழம் கதர்வேஷ்டி 2-க்கு 1-12-0-க்கு கொடுத்து சுதேசி கைத்தொழிலை ஆதரிக்க வாங்குகிறோம். அதாவது, 7 அணா வேட்டிக்கு, 14 அணா கொடுத்து வாங்கு கின்றோம். இப்படிப்பட்ட இந்த நிலையை ஆதரிப்பதுதான் நம் சுதேசி கைத்தொழில் ஆதரிப்பு என்றால், கண்டிப்பாய் இந்தமாதிரி ஆதரிப்பு ஒழிந்துதான் ஆகவேண்டும். 'இந்தப்படிக்கு ஆதரிக்காவிட்டால், ஏழைகளுக்கு ஜீவனத்திற்கு மார்க்கமில்லை' என்று சொல்வார்களேயானால், அப்படி வேலையில்லாமல் இருக்கும் ஆட்கள் பட்டினிகிடந்து, வேதனைப்பட்டு, பணக்காரர்கள் மீது பாய்ந்து—அவர்களது பணத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும் திட்டத்தில் ஈடுபட்டு ஜெயிலுக்கு வேண்டுமானாலும் போய் உட்கார்ந்துகொண்டு, அங்கு ஏதோ தன்னாலான வேலையைச் செய்துவிட்டு ஜெயில் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருப்பது மெத்த நாணயமும் பொதுநலமுயற்சியும் கொண்ட யோக்கியமான வேலையுமாகும். அந்தப்படிக்கு இல்லாமல் பம்பாய், ஆமதாபாத் மில் சொந்தக்காரர்கள் சுதேசிப் பிரச்சாரமும்; மாதம் 100, 200 வாங்கும் கதர் இலாக்காக் காரர்கள் கதர்ப் பிரச்சாரமும், சட்டசபைக்குப் போய் கள்ளை நிறுத்துகிறவர்கள் கள்ளுப் பிரச்சாரமும் செய்வதென்றால் இதில் என்ன நாணயம் இருக்கிறது? பெரிய பெரிய மிராசுதார்கள் ஆயிரக்கணக்கில் ஏக்ரா பூமியை வைத்துக்கொண்டு, உழுகிறவனுக்கு உணவு கிடைக்காமல்படி நசுக்கிப் பிழிந்து 2-8-0 ரூபாய்க்கு ஒரு ஜதை கதர் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு, 'கனவான்களே! கதர் கட்டுங்கள், ஏழைகள் பிழைப்பார்கள்' என்றால் அவர் பெரிய தேசாபிமானிகளா, ஏழை பங்காளிகளா என்கிறோம்.

['குடி அரசு'-தலையங்கம்—7-12-1930]

## 2. கதர்

முதலாவதாக, பொருளாதாரத் துறையை எடுத்துக் கொண்டு கதர் எந்த விதத்தில் அதற்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதை யோசித்துப் பார்ப்போம். பஞ்சு விலை எவ்வளவுக்கெவ்வளவு குறைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு விவசாய மக்களுக்குக் கஷ்டம் இருந்தாலும் பஞ்சு விலையைப் பற்றிய—அதாவது, மூலப் பொருள் களைப் பற்றிய இலட்சியமே இல்லாமல் கதரின் உற்பத்தி, நூற்பு நெசவு ஆகியவற்றின் செலவுகளே, அதாவது அசல் விலையே மிகவும் கூடுதலாகவே அடங்கும்படியாக ஆவதோடு

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

அந்த உற்பத்தி செய்யும் ஒவ்வொரு நிலையும் கஷ்டமானதும் முன்னேற்றத்திற்கு உதவாததுமாகவே இருக்கின்றது.

அதாவது, யார் எவ்வளவு பாடுபட்டாலும் கதர் நூல் விஷயத்திலும், நெசவு விஷயத்திலும், துணி ரகம் விஷயத்திலும் இன்று காணப்படும் தன்மையிலிருந்து இனி சாதாரணத்தில் எவ்வித மாற்றத்தையாவது செய்துவிடக்கூடும் என்று சுலபத்தில் எண்ணுவதற்கில்லை. ஏதாவது ஒரு சிறு மாற்றமாவது–ரகம் முற்போக்குத் தன்மையில் செய்யலாம் என்றாலோ—அதற்கேற்படும் கூலி முற்போக்கின் தகுதிக்கு மேற்பட்டதாகச் செலவழித்தாக வேண்டி வரும். இதைத் தவிர, விலை விஷயத்தில் இனி இதைவிடக் குறைக்கும்படியான நிலைமை சுலபத்தில் ஏற்படப் போவதில்லை.

ஏனெனில், கதர்த் தொழிலோ கதர் வியாபாரமோ மக்களின் சாதாரணப் பழக்கத்தில் உள்ள தொழிலாயும் வியாபாரமாயும் இல்லாமல் வேறு ஏதோ தத்துவத்திற்காக—தியாகம் செய்து தீரவேண்டிய முறையில்—மற்றவர்கள் நிர்ப்பந்தத்தின்மீது நூற்றல், நெய்தல், விற்பனை, வாங்கிக் கட்டுதல் ஆகியவைகள் முழுதும் நடைபெற வேண்டியதாக இருக்கின்றது. இவ்வளவு கஷ்டப்பட்டும் உத்தேசித்த காரியமாகிய பொருளாதாரம் என்பது—வாங்கி விற்கின்ற மத்திய மனிதன் என்கின்ற முதலாளி தவிர மற்ற யாருக்கும் அது சிறிதும் பயன்படாததாயிருப்பதுடன் உண்மையிலேயே, வாங்கிக் கட்டுகிறவன் அதிகப் பொருள் அதாவது, 100-க்கு 250 பங்கு நஷ்டமடைவதற்கும் தயாராக இருக்கவேண்டியனாகிறான். அப்படிச் செய்தும் தொழிலாளியாகிய நூற்புக்காரன் ஒரு மணிக்கு ஒரு தம்பிடி பெற முடிகின்றது. நெசவுக்காரனும் சாதா மில் நூல் நெசவு நெய்வதை விட இரண்டு பங்கு கஷ்டமும் கவனமும் செலுத்தி வேலை செய்து பழைய கூலியையேதான் பெற வேண்டியதாயிருக்கின்றது.

ஆகவே, பொருளாதாரத் துறையில் கதர் எந்த விதத்தில் பயன் அளிக்கின்றது என்பது இதிலிருந்தே அறியத் தக்கதாகும். இனி, கதர் தத்துவம் கைத்தொழில் துறையில் எப்படிப் பயன்படுகின்றது என்று பார்ப்போம்.

கதர் கைத்தொழில், உலகக் கைத்தொழில் முறைக்கு நேர் விரோதமாக இருக்கின்றது. எப்படியெனில், கைத்தொழில் என்பது வேலை செய்கின்றவன் கொஞ்ச நேரத்தில் அதிக சரக்கு உற்பத்தி பண்ணக் கூடியதாகவும்—அதுவும் சரீரப் பிரயாசை தேவையின் பாகம் நாளுக்கு நாள் குறைந்து கஷ்டமில்லாமல் செய்யக் கூடியதாகவும்—சாமான் மாதிரியும் நாளுக்கு நாள் உயர்ந்த தரமானதாகவும் இருக்க வேண்டியதோடு, அதை வாங்கி உபயோகிக்கும் மக்களுக்கு அந்தச் சாமான்கள் அதிக சரசமாய் இருப்பதாகக் காணக் கூடியதோடு, அச் சாமானின் வேலைப்பாடானது மக்களை வாங்கும்படி தூண்டக்கூடியதாகவும் இருக்கவேண்டியதாகும். இந்த முறையில் பார்த்தாலும் கதர் தத்துவம் முதல் பிரிவுக்குச் சொல்லப்பட்ட காரணங்களால் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு நிலையிலும் விபரீதமாகவே இருந்து வருகின்றது.

மூன்றாவதாக, வியாபாரத்துறையில் பார்த்தாலும் மூலப் பொருளை அதிகமாகச் செலவு செய்து—அதாவது ஒரு வேட்டிக்கு எவ்வளவு மூலப்பொருள் (பஞ்சு) வேண்டுமோ, அதற்குமேல் இரண்டு அல்லது மூன்று பங்கு வீதம் பஞ்சைச் செலவு செய்து (முரட்டுத்தனமாக இருப்பதால்) அது சம்பந்தப்பட்ட தொழிலாளிகளையும் கசக்கிப் பிழிந்து, விற்கின்றவனையும், வாங்குகின்றவனையும் வேறு காரணத்திற்காக, அதாவது வியாபாரத்தில் நம்பிக்கையோ, விருப்பமோ இல்லாமல் நிர்ப்பந்தத்தின் பொருட்டு ஜனங்கள் இந்த விற்றல், வாங்கல், வியாபாரம் செய்யும்படியாக இருப்பதால் கதர் தத்துவம் வியாபார முறைக்கும் அதன் முற்போக்குக்கும் நேர்விரோதமாகவே இருக்கின்றது.

தவிர, ஒரு நாட்டின் பொருளாதாரம், கைத்தொழில், வியாபாரம் ஆகியவை மூன்றும் முற்போக்கடைய வேண்டுமானால் இம்மூன்றும் மற்ற நாடுகளில் எப்படி முற்போக்கடைந்து இருக்கின்றன? நமது நாட்டுக்கும், மற்ற நாட்டுக்கும் உள்ள—வியாபாரம், உற்பத்திச் சவுகரியம் எப்படி இருக்கின்றன? அதன் போட்டியின் தத்துவம் என்ன? உலகப்போக்கு என்ன? என்பவைகளை யோசித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு நாடும் முற்போக்கடைவது நவீன ஆராய்ச்சி, இயந்திர சவுகரியம், வியாபார தந்திரம் ஆகியவைகளைக் கொண்டேயொழிய—பண்டையக் காலத்தின் கைத்தொழில் முறையையே புதுப்பித்ததாலோ, ஆராய்ச்சியை அலட்சியம் செய்து இயந்திரங்களை வெறுத்ததாலோ, அல்லது மறியல் செய்து நிர்ப்பந்தப்படுத்தி வியாபாரம் செய்யச் செய்ததினாலோ அல்லவென்பது விளங்கும்.



இந்தியா தேசத்தின் மக்களைச் சாதிவாரியாகப் பிரித்து, ஒவ்வொரு சாதிக்கு இன்ன, இன்ன தொழில் என்று கற்பித்து, அந்தந்தத் தொழிலை அந்தந்தச் சாதி தலைமுறை தலைமுறையாகச் செய்ய வேண்டியதுதான் மனித தர்மம் என்கின்றதான நிர்ப்பந்தம் இங்கு இருந்து வருவதாலும்; இந்தத் ‘தொழிலாளி’ சாதியல்லாதவர்களே இந்நாட்டின் நலத்தைக் கோருகின்ற தலைவர்கள் என்பதாக ஆகிவிட்டதாலும்—அதுமாத்திரமல்லாமல் இந்த மாதிரியான வருணாசிரம தர்மத் தொழில்முறையில் நம்பிக்கை உள்ளவர்களும் அதை மேலும் நிலைநிறுத்தப் பாடுபடுகின்றவர்களுமே தொழில் முறையைச் சீர்திருத்தம் செய்கின்றவர்களாக இருப்பதினாலும், பண்டையத் தொழில் முறையைப் புதுப்பிக்க வேண்டுமென்றும், புதிய நாகரிக இயந்திரங்கள் கூடாது என்றும், ஒவ்வொருவரும் ஓய்வு நேரத்தில் வேலைசெய்யவேண்டும் என்றும், அவனவனுக்கு வேண்டியதை அவனவனே செய்துகொண்டு தனித்தனித் தொழிலாளியாய் இருக்க வேண்டுமே தவிர, கூட்டுத் தொழிலாளியாய் இருக்கக்கூடாதென்றும் சொல்ல வேண்டியதாயிற்று.

ஏனெனில், இந்தப்படி ஒவ்வொருவனும் தனித்தனித் தொழிலாளியாக இருந்தால்தான், அதோடு அவனவனுக்கு வேண்டியதை அவனவனே செய்து கொள்ள வேண்டும் என்கின்ற வேலையில் அமர்ந்திருந்தால்தான் தொழிலாளிகள் ஒன்று சேரவோ, அவர்கள் நிலையைப் பற்றிக் கலந்து ஆலோசிக்கவோ, அல்லது தங்களது யோக்கியதையைச் சற்று உயர்த்திக்கொண்டு தொழிலாளி தன்மையில் இருந்து நழுவிக் கொள்ளவோ, அவர்களது பரம்பரை தர்மத்தில் இருந்து விலகவோ முடியாததாயிருக்கும் என்று கருதியே இச்சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆதலாலேயேதான், புதிய நாகரிகமும், இயந்திர சவுகரியமும், கூட்டு வேலையும், தொழிலாளிகள் முன்னேற்றமும் கதர் தத்துவத்தில் சிறிதும் இல்லாமலிருக்க வேண்டியதாகிவிட்டது.

ஆகவே, வருணாசிரமக் கட்டுப்பாட்டை உடைத்து, மனித வர்க்கத்தின் சரீரப் பிரயாசையைக் குறைத்து, குறைந்த நேரத்தில் அதிகக் கூலி கிடைக்கும்படி செய்து, மூலப் பொருள்களை வீணாக்காமல் விவசாயிகளுக்கும் அதிகப் பணம் வரும்படி செய்து எல்லா மனிதரும் எல்லாவிதத் தொழில்களைச் செய்யவும், எல்லாவிதப் பதவிகளை அடையவும் தகுந்தபடியாக அவர்களை ஆக்கவேண்டும் என்றால், கண்டிப்பாக இத்தகைய கதர்த் திட்டம் ஒழிந்தே ஆக வேண்டும் என்பது நமது அபிப்பிராயமாகும்.

தவிர, இந்தியாவுக்கு எந்தவிதமான ஆட்சி முறையோ அல்லது சுயேச்சையோ, அல்லது ‘ராம ராச்சியமோ’, ‘தர்ம ராச்சியமோ’ வருவதானாலும் இந்தியா உலக முற்போக்கில் கலந்து கொள்ளவும் புதிய ஆராய்ச்சியின் பயன்களை அனுபவித்து மனித சமூகம் இன்பமும் திருப்தியும் அடையவும் தகுந்ததாக ஆவதற்குத் தக்கதாய் இருக்க வேண்டுமேயொழிய—மற்றபடி அவனவன் வயிற்றுப்பாட்டிற்கும் அவனவனுக்கு வேண்டிய இன்றியமையாத அவசியங்களுக்கும் அவனவனே அவனவனது வாழ்நாள் நேரம் முழுவதையும் செலவு செய்து கொண்டிருக்கும்படியான தத்துவங்கள் கொண்டதாக இருக்கக்கூடாது.

இந்தக் காரணங்களாலேயே, திரு. காந்தியவர்களின் தத்துவமானது இந்தியாவை ஒரு நாளும் விடுதலையுள்ள நாடாகவோ மனித சமூகத்தின் முற்போக்கிற்கும் நாகரிக

படிப்பகம்

www.padippakam.com

# பெரியார்
# ஈ.வெ.ரா. சிந்தனைகள்

## THOGHTS OF PERIYAR E.V.R.

## 3(II)

Nadarajah Straube
Brunsbuetteler ?
Berlin

பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து

சிந்தனையாளர் கழகம்
தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி—2
1.07.1974

படிப்பகம்

www.padippakam.com



## 6. திராவிடர் கழகம்—தொழிலாளர் நிறுவனமே!

தலைவரவர்களே! தோழர்களே! பெரியோர்களே!

இக் கூட்டம் தொழிலாளர்களின் தற்காலப் பிரச்சினையாகிய 'பக்கிங்ஹாம்-கர்நாடிக் மில் ஸ்ட்ரைக்' சம்பந்தமாக, திராவிடர் கழகத்தாரால் கூட்டப்பட்ட கூட்டம் என்று தோழர் என். வி. நடராசன் சொன்னார். 'தொழிலாளர்களுக்கும்—திராவிடர் கழகத் தாருக்கும் அதிக ஒற்றுமையில்லை; திராவிடர் கழகத்தார் தொழிலாளிகளை சரிவரக் கவனிப் பதில்லை' என்பது ஒரு புகார். இது தொழிலாளர்களின் தெரியாத்தனமேயாகும். தொழி லாளிகளும், தொழிலாளர் இயக்கங்களும்—பெருவாரியாய் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், 'புராண பிரசிங்கிஸ்ட்' ஆகிய ஸ்தாபனங்களோடுதான் அதிக சம்பந்தம் வைத்துக்கொண்டு அவைகளை ஆதரித்து வருகிறார்களே தவிர, திராவிடர் கழகத்தினிடம் தொழிலாளர் களுக்குப் பற்றில்லை. இது எனது 20–25 வருஷ அனுபவம். என்றாலும், நான், தொழி லாளர்கள் நம்மை ஆதரிக்கவில்லையே என்று ஒரு காலத்திலும் கவலைப்பட்டதில்லை. அதற்காக அவர்களைப் பிடிக்க நான் வலை வைத்ததுமில்லை. எங்கள் தொண்டு யாவும் தொழிலாளர்களுக்காகவேதான்; நாங்களும் தொழிலாளிகள்தாம். ஆகவே, வாய்ப்பினால் மாத்திரம் தொழிலாளிகளில்லாமல் பிறவியினால், சட்டத்தினால், சாஸ்திரங்களால், கடவுள்களால், கடவுள் சிருஷ்டியினால் நாங்கள் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள்தாம் திராவிடர்கள். இப்போது தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகளில் உண்மைத் தொழிலாளிகள் 1000-த்தில் ஒரு பாகமாகத்தான் இருப்பார்கள்.

தொழிலாளி என்கின்ற பதத்துக்கு அர்த்தம் என்ன? வேலை செய்கிறவன் என்று அர்த்தமாகும். 'யாவருந்தான் வேலை செய்கிறார்கள். அப்படியிருக்க ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் தொழிலாளி என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பானேன்?' என்றால், பிறருக்காகத் தொண்டுசெய்து மனுதர்ம சாஸ்திரப்படி தொழிலாளியாகவே வாழ்பவர்கள், தொழிலாளி என்று அழைக்கப்படுகிறார்கள். அந்தக் கருத்தில் பார்த்தால், திராவிடர்களாகிய நாம் யாவரும் தொழிலாளர்கள் அல்லவா என்று கேட்கிறேன். இயந்திரங்களின் முன்னால் நிற்பவர்கள் மாத்திரம்தானா தொழிலாளர்கள்? வண்டி ஓட்டுகிறவர்கள், வண்டி இழுக்கிற வர்கள், வீதி கூட்டுகிறவன், கக்கூசுக்காரன், வண்ணான், நாவிதன், குயவன், உழுபவன், விதைப்பவன், தச்சன், கொல்லன், சக்கிலி, பறையன், செக்கு ஓட்டுகிறவன், நெசவு நெய்பவன் முதலியவர்கள் சரீரத்தாலுழைத்து, வயிற்றுக்கு, வாழ்வுக்கு மாத்திரம் சம்பாதித்து அன்றாட வாழ்க்கைக்கு அன்றாட வரும்படி எதிர்பார்த்து நிற்கும் யாவரும் தொழிலாளி அல்லவா என்று கேட்கிறேன்.

இன்று, இம் மாதிரித் தொழிலாளர்கள் யார்? பிராமணர்களா? சத்திரியர்களா? அல்லவே! சூத்திரர்கள்தானே இந்த மாதிரித் தொழிலாளிகளாய் இருக்கிறார்கள்? அந்தச் சூத்திரர்கள் யார்? திராவிடர்களாகிய நாம்தானே—'சூத்திரர்' என்கின்ற பட்டியலில் சட்டப்படியும், சாஸ்திரப்படியும், கடவுள் சிருஷ்டிப்படியும் காரியத்தில் நடப்புப்படியும் இருந்துவருகிறோம்! இதை எந்தத் தொழிலாளியாவது மறுக்கமுடியுமா? நான் மேலே சொன்ன தொழில்களில் ஒரு 'பிராமணன்' இருக்கிறானா? ஆகவே, சரீரத்தினால் பாடுபடும் வேலை அவ்வளவும் சூத்திரர்கள் என்று அழைக்கப்படும்—ஆக்கப்பட்டிருக்கும் திராவிடர்களாகிய நம் கையிலேயே இருப்பதால், திராவிடர் இயக்கம் தொழிலாளர் இயக்கம் என்று சொல்லுகிறேன்.

எதற்காகத் திராவிடர் இயக்கம் வேலை செய்கிறது என்றால், திராவிடர் நாலாவது சாதியாக இருக்கக்கூடாது; தொழிலாளர் சாதியாக இருக்கக்கூடாது என்பதற்காகவே யாகும்.



சில தொழிலாளர் தலைவர்கள் என்பவர்கள் என்மீது குரோதம் கொண்டிருக் கிறார்கள். என்னைப்பற்றி விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். நீங்கள்—வாயில்லாப் பூச்சி, அறிவில்லா ஜந்து என்கின்ற மாதிரி, அந்த வஞ்சகப் பேச்சுக்குக் காது கொடுத்து பைத்தியக்காரர்களாக இருந்து வருகிறீர்கள். என்னவென்றால்,

'ராமசாமி நாயக்கர் மதத்தில், கடவுளில் பிரவேசிக்காவிட்டால் நான் அவருடன் நேசமாக இருப்பேன். ஆனால், அவர் நாத்திகம், மதத் துவேஷம் பேசுகிறார். ஆகையால் ஜாக்கிரதையாயிருங்கள்!' என்று உங்கள் தலைவர்களில் சிலர் சொல்லி, உங்களை என்னிடம் அணுகவிடாமல் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், உங்களை ஏய்க்க இப்படிப்பட்ட பேச்சுப்பேசும் உணர்ச்சி உள்ளவர்கள் தொழிலாளர்களுக்குத் தலைவர்களாக இருக்க யோக்கியதை உண்டா என்று கேட்கிறேன். இவர்களை நம்பினவர்கள் முன்னுக்கு வரமுடியுமா என்று கேட்கிறேன்.

எது மதம், எது கடவுள் என்பது இந்த அன்னக் காவடிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். நான் எந்த மதத்தை, எந்தக் கடவுளை ஒழிக்கவேண்டும் என்று சொல்லு கிறேன் என்பது இந்தத் தற்குறிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்.

எந்த ஒரு மதம்—ஒரு மனிதனைப் பிராமணனாகவும் ஒரு மனிதனைச் சூத்திர னாகவும் அதாவது தொழிலாளியாகவும், பாட்டாளியாகவும், பறையனாகவும் உண்டு பண்ணிற்றோ, அந்த மதம் ஒழியவேண்டும் என்று சொல்லுகிறேன். ஒழிய வேண்டுமா, வேண்டாமா? ('ஆம், ஒழிய வேண்டும்' என்ற பேரொலி) எந்தக் கடவுள் ஒருவனுக்கு நிறையப் பொருள் 'கொடுத்தும்', ஒருவனுக்குப் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழ உரிமை கொடுத்தும்; மற்றொருவனை உழைத்து உழைத்து ஊரானுக்குப் போட்டுவிட்டுச் சோற்றுக்குத் திண்டாடும்படியும், இரத்தத்தை வேர்வையாய்ச் சிந்தி உடலால்உழைத்த வண்ணமிருந்து கீழ்மகனாய் வாழும்படி செய்கிறதோ—அந்தக் கடவுள் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறேன். அந்தக் கடவுள் ஒழியவேண்டுமா, வேண்டாமா? ('ஆம்! ஆம்! ஒழிந்தேயாகவேண்டும்' என்கின்ற பேரொலி). ஆகவே, தோழர்களே! இது சொன்னால், நான் நாத்திகனும்—மதத் துவேஷியுமா? 'ஆம், ஒழிய வேண்டும்' என்று சொன்ன நீங்கள் மதத் துவேஷிகளா, நாத்திகர்களா? தோழர்களே, நம்மை நாத்திகர்கள் என்கின்ற இந்தப் பாஷாண்டங்கள்தாம் நாத்திகர்களாவார்கள்.

[சென்னையில், 30-6-1946-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-7-1946]

## 7. தி. வி. தொ. சங்கம் ஏன்?

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்கிறதான ஒரு அமைப்பு, திராவிடர் கழகத்தின் சார்பிலே இருக்கவேண்டும் என்று எனக்குத் திருச்சியிலே நினைப்புத் தோன்றியது. அந்தப்படிதான் இன்று திராவிடர் கழகத்தின் சார்பாக, திராவிட விவசாயத் தொழிலாளர் கழகங்களை நாடெங்கும் ஏற்படுத்தி வருகின்றோம்.

இந்தப்படியான ஒரு அமைப்பை, அதாவது திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தைத் துவக்க வேண்டுமென்பதாக ஏன் தோன்றியது என்றால், இன்றைய தினம் விவசாயம் செய்கிறவர்கள் நிலத்திலேயே இறங்கிப் பாடுபடுகிறார்கள். பண்ணையாள், கூலியாள் முதலியோரும்—அதே மாதிரி நாட்டின் எல்லாத் தொழில்களை—அதாவது மில்லில் வேலை செய்வது, மூட்டைதூக்குவது, கல்லுடைப்பது, வண்டி இழுப்பது இன்னும் இதுபோன்ற உடலுழைப்பு வேலை [illegible] எல்லாம் திராவிட மக்கள்தாமே தவிர வேறு யாருமல்லர். பார்ப்பானுக்கும் [illegible]க்கும் வெகு தூரம். இந்தப்படி



படிப்பகம்

www.padippakam.com



இருக்கும்போது, இந்த நாட்டுத் திராவிட மக்களின் நலனுக்குமாகவே பாடுபட்டுவரும் திராவிடர் கழகம் இந்தத் துறையிலே வேலை செய்ய வேண்டியது; அந்தத் தொழிலாளிகளுடைய வாழ்வை முற்போக்கு அடையச்செய்ய வேண்டியதில் முழுப்பங்கு எடுத்துத் தொண்டாற்ற வேண்டுவது அவசியமாகும்.

அதோடு, இன்றைய தினம் விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று பாடுபடுவதற் காகப் பல கட்சிகள் இருந்துவருகின்றன. கம்யூனிஸ்டுகள் விவசாய சங்கம் என்பதாக ஒரு அமைப்பு ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்து வருகிறார்கள். அதுபோலவே, சோஷிய லிஸ்டுகள் கிசான் சங்கம் என்பதாக ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே, காங்கிரசுக்காரர்களும் விவசாயிகள் சங்கம் வைத்துக்கொண்டிருக் கிறார்கள். மற்றும், பல தொழிலாளர் சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப்படி விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஆக வேலை செய்துவருகிற எந்தக் கட்சியாரும், திராவிடர் கழகத்தின் கொள்கைகளை ஒத்துக்கொள்ளாதவர்கள்.

இன்றையத் தொழிலாளர், விவசாய சங்கத்தை அமைத்துக் கொண்டிருப்பதைக் குறித்துப் பொதுவாக எனக்குத் தோன்றும் கருத்து என்னவென்றால், இந்தப்படியான ஸ்தாபனங்களை வைத்துக்கொண்டு—ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கட்சிக் காரியத்துக்கு இவைகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதுதான். மற்றபடி, இன்றையத் தொழி லாளிகளின் இழி வாழ்க்கைத் தன்மை ஒழியவோ, வேறு வசதியான நிலை அவர்களுக்கு ஏற்படவோ யாரும் பாடுபடுவது இல்லை.

இந்த நாட்டிலே இன்றைய தினம் இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் கூலிக்காரர் களாக இருப்பது இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. பாரம்பரியமாக, வழி வழியாக இவர்கள் தொழிலாளர்கள் தான்.

அன்றாடக் கஞ்சிக்காக—அன்றாடம் வேலை செய்து, கூலி பெற்று, அந்தப்படி பெற்ற கூலியை, அன்றையக் கஞ்சிக்கே செலவு செய்துவிட்டு, அடுத்த நாள் கஞ்சிக்கு யாரிட மாவது வேலைக்குப் போய்க் கூலி வாங்கித்தான் வழி செய்து கொள்ள வேண்டும் என்ற தன்மையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைய தினம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட கிளர்ச்சிகள் நடக்கின்றன என்றால் எதற்காக நடக்கின்றன? அவனுடைய தொழிலாளித் தன்மை ஒழிவதற்காகவா? இல்லவே இல்லை.

ஒரு மாதம், இரண்டு மாதம் 'ஸ்ட்ரைக்' செய்து, அடிதடிப்பட்டு, பல கஷ்ட நஷ்டங் களை யேற்று கிளர்ச்சி செய்தால் இரண்டணா கூலி உயர்வு தரப்படுகிறது. ஆனால், கூலி உயர்வு தரப்படுகிறதே தவிர, அவனுடைய தொழிலாளத் தன்மை அப்படியேதான் இருக் கிறது. அவ்வளவு கஷ்டப்பட்டுக் கூலி உயர்வு சம்பாதித்த தொழிலாளி, அந்தப் பணத் தினால் ஏதாவது இலாபம் பெறுகிறானா என்றால் அதுவும் இல்லை.

கூலி உயர்வு பெற்றவுடன்—தொழிலாளி, எங்கே தேர்த் திருவிழா நடக்கிறது? எந்தச் சாமிக்கு 'அர்ச்சனை' செய்யலாம், என்பதிலேதான் கவனத்தைச் செலுத்துகிறான். கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம், அவனிடத்திலே குவிந்திருக்கும் முட்டாள் தனத்தின் காரணமாகக் கல்லுச் சாமிக்கும், திருவிழாக் கூத்துக்கும் போய் விடுகிறது.

அதுமட்டுமல்ல; தொழிலாளிக்கு முதலாளி, இரண்டணா கூலி கூட்டிக்கொடுப் பதினால் முதலாளிக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்பட்டுவிடுவதில்லை; அவனுடைய தன்மைக்கும் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படுவதில்லை. அதற்குப் பதிலாக, கூலி உயர்வு கொடுத்து, தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற முற்போக்கு உணர்ச்சிகளை மழுங்கச் செய்து, அவனுடைய முதலாளித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்கிறான்.



அதோடு, முதலாளி என்ன செய்கிறான் என்பதை நீங்கள் கவனித்துப் பார்த்தால் தெரியும்.

தொழிலாளிக்குக் கூலியில் இரண்டணாவை அதிகப்படுத்தினவுடனேயே, முதலாளி தன் பண்டங்களின் விலையின்மீது இரண்டணாவைக் கூட்டி உயர்த்தி வைக்கிறான். இதனால் பொருள்களின் விலையேற்றத்தால் பொதுமக்கள் பாதிக்கப் படுகிறார்கள். அதோடு, தொழிலாளியும் தான் முதலில் ஓரணாவுக்கு வாங்கிக்கொண்டிருந்த அதே சாமானை, கூலி உயர்வு கிடைத்தபின் ஒன்றேகால், ஒன்றரை அணா கொடுத்து வாங்க வேண்டியவனாகிறான்.

எனவேதான், நான் சொல்லுகிறேன்: 'இந்தக் கூலி உயர்வுக் கிளர்ச்சியும், அதற்காகத் தொழிலாளர்களுக்கு அடி, உதை, துப்பாக்கிக் குண்டு சாவு வாங்கிக் கொடுப்பதும் வெறும் கேலிக் கூத்து ஆகும்' என்று.

தொழிலாளி உயரவேண்டுமென்றால் தொழிலின் இலாபத்தில் அவனுக்கும் பங்கு வேண்டும்; தொழிலின் நிர்வாகத்தில் அவனுக்கும் பங்கு இருக்கவேண்டும். இந்தப் படியாகக் காரியம் செய்தால்தான் தொழிலாளி நிலைமை ஒழிந்து மனித வாழ்க்கையில் சம நிலைப் பங்காளிநிலை ஏற்படுமே தவிர—கூலிக்குக் கிளர்ச்சி என்பது, தொழிலாளி தொழிலாளியாகவுமே, ஏழை ஏழையாகவுமே, பணக்காரன் மேலும் பணக்காரனாகவுமே இருப்பதற்கு—அதாவது முதலாளி, முதலாளியாகவுமே இருப்பதற்குத்தான் உதவுமே தவிர வேறு எதற்கும் இல்லை. அன்றியும், தொழிலாளிக்குப் பாடுபடுகிறவர்கள் சர்க்காரிடம் நேரிடை நடவடிக்கை எடுத்துச் சட்ட திட்டம் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒத்துக்கொண்டு அந்தப்படிக் காரியம் செய்தால்தான் 'தொழிலாள நிலை' ஒழிந்து சமநிலை காணமுடியும் என்பேன்.

உதாரணமாக, நான் ஒரு தொழிலாளியைப் பார்த்து, 'நீ ஏழையாய் மற்றவர் களுக்கு உழைத்துப் போட்டுவிட்டு, நீ ஏன் ஒன்றும் இல்லாமல் இருக்கிறாய்?' என்று கேட்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்தத் தொழிலாளி என்ன நினைப்பான்?

'அவன் (முதலாளி, பணக்காரன்) மகாராஜன்—போன ஜன்மத்திலே புண்ணியம் செய்திருப்பான்; நானென்ன பாவம் செய்தேனோ, இந்த ஜன்மத்தில் இவ்வளவு கஷ்டப் பட!' என்றுதான் சொல்லுவான். இது, இந்த நாட்டில் மற்றெல்லா நாட்டைவிட அதிக மாகும். ஆதலால், இந்த நாட்டுத் தொழிலாளர் நலம் பெற, தொழிலாளிகளைப் பார்ப்பா னிடமும் முட்டவிட வேண்டும்.

அன்றியும், இன்று தொழிலாளிகளுக்குப் பாடுபடுவதாகச் சொல்லுகிற ஸ்தாபனங்கள் எல்லாம் தொழிலாளிக்கு நாத்திகம் தேவையில்லை; அவன் சாமி கும்பிடுவதையோ, கோயில் குளங்களுக்கு, திருவிழாக்களுக்குப் போவதையோ தடுக்க வேண்டிய அவசிய மில்லை என்பதாகவெல்லாம் சொல்லுகிறார்கள். அந்தப்படி இருப்பதினால், நான் முன்னே சொன்ன மாதிரி தொழிலாளி தனக்குக் கிடைக்கும் பணத்தை இந்த மாதிரிக் கோவில், குளம், திருவிழாக்களிலே செலவிட்டு, மூடத்தனத்திற்கும், முட்டாள்தனத்திற்கும் பலியாவானே தவிர—சேர்த்த பொருளை மீத்தாமல் கண்டதுக்கு, கண்மூடித்தனத்துக்குச் செலவிடுவானே தவிர, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவோ, வாழ்க்கைத் தேவைகளைச் சரிக் கட்டிக் கொள்ளவோ முடியாதவனாக ஆகிவிடுகிறான்.

இந்தப்படி இருக்கிற யதார்த்தமான நிலைமையைப்பற்றி, யாரும் எடுத்துச் சொல்வ தில்லை. என்ன காரணத்தாலோ ஏதோ முதலாளிக்கும் தொழிலாளிக்கும் சண்டையை உண்டாக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, தொழிலாளிக்கு அடி, உதை பெறும் படியாகச் செய்வார்கள். பார்ப்பானிடமும் முட்டவிடத் தயங்குவார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



அதுமட்டுமல்லாமல் மற்றொரு சங்கதியையும் நீங்கள் கவனிக்க வேண்டும். தொழிலாளர்கள் சார்பாகப் பேசுபவர்கள் எல்லோரும் முதலாளியைத் திட்டியும் தொழிலாளிக்கும், முதலாளிக்கும் இருக்கிற பேதாபேதத்தையும் சுட்டிக் காட்டியும்தான் பேசுவார்களே தவிர, முதலாளி–தொழிலாளி தன்மைக்குப் பாதுகாப்புத் தருகிற சர்க்காரை—பார்ப்பானை ஒன்றும் செய்யமாட்டார்கள். அதாவது, முதலாளியின் முதலாளித் தன்மைக்கு ஆபத்து வராமல் தொழிலாளியைச் சுரண்டிப் பெறும் உடைமையை அனுபவிக்க அவனுக்கு உரிமை கொடுத்து, அந்தப்படி அவன் அனுபவிக்கிற பொருளுக்கு எந்த விதமான தீங்கும் நேராமலும் தனி உடைமை அனுபவிப்புக்குப் பாதுகாப்பு அளிக்கும் சர்க்காரை இவர்களிலே யாரும் ஒன்றும் செய்வதில்லை. அதை விட்டுவிட்டு, தொழிலாளிக்கு, முதலாளியிடம் வெறுப்பையூட்டி, முதலாளியின் பொருளைப் பலாத்கார நடவடிக்கையின் மூலமாகக் கொள்ளையடிப்பது, தீ வைப்பது, நாசமாக்குவது போன்ற காரியங்களைச் செய்ய ஏவிவிடுகிறார்கள். தொழிலாளி அந்தப்படி செய்கிறபோது, முதலாளி தன்னுடைய நிலைமைக்கு அனுமதி அளித்தும், பாதுகாப்பு அளித்தும் வரும் சர்க்காரிடம் உதவிக்குப் போகிறான். சர்க்காரும் உள்ளே புகுந்து தொழிலாளியை அடக்குகிறது. இதுதான் இன்றைய தினம் முதலாளி—தொழிலாளிப் போராட்டத்தின் பிரத்தியட்ச நிலைமையாய் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

எனவேதான் நான் சொல்லுகிறேன்: 'இன்றைய பேத நிலைமைக்குக் காரணமாக இருக்கிற அமைப்பும், அந்தப்படியான அமைப்புக்கு ஆதரவளித்துப் பாதுகாப்பாக இருக்கும் சர்க்காரும் ஒழிக்கப்படவேண்டும். தொழிலாளிகளிடையில் இந்தப் பிரச்சாரமே அதிகமாக இருக்கவேண்டும்.

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தை நான் துவக்குவதற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு.

இன்னொன்று சொல்லுகிறேன். உதாரணமாக, சோஷியலிஸ்டுகள் தொழிலாளர் சங்கம் என்பதாக வைத்துக்கொண்டு வேலை செய்து வருகிறார்கள். எலெக்ஷன் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்த எலெக்ஷனில் நாம் ஒரு ஆளை நிறுத்துகிறோம் அல்லது நிற்கிற யாரையாவது ஆதரிக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த எலெக்ஷனில் தொழிலாளர் சங்கம் வேறு ஆளை ஆதரிக்கிறது அல்லது நிறுத்துகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது திராவிடர் கழகத்தில் இருக்கும் தொழிலாளி யாருக்கு ஓட்டுப்போடுவான்?

திராவிடர் கழகத்திலிருந்தாலும் தொழிற் சங்கத்துக்காரன், தொழிலாளி என்கிறதால் தொழிற் சங்கம் ஆதரிக்கிற, நிறுத்துகிற ஆளுக்குத்தான் ஓட்டுப்போடுவான். அப்போது நாம் ஆதரிக்கிற ஆள் என்ன ஆவது? நமக்குச் சட்டசபை சம்பந்தமே வேண்டாமா?

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் நாம் ஏற்படுத்தி இருப்பதுபற்றிப் பலர் குற்றம் சொல்லலாம். கம்யூனிஸ்டுகளும் நம்மை, 'முதலாளிகளின் கையாட்களாகிய இவர்கள் இப்படிச் செய்கிறார்கள்' என்று சொல்லலாம்.

சோஷியலிஸ்டுகள், 'இதனால் எல்லாம் ஒன்றும் காரியம் நடக்காது' என்பதாகக் குற்றம் சொல்லலாம். மற்றவர்கள் நம்மைப்பற்றிச் சொல்லுகிற குறையைப்பற்றி நமக்குக் கவலையில்லை. திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தை நாம் ஆரம்பித்தது மற்றவர்களுக்குப் போட்டியாகவோ அல்லது மற்ற கட்சிக்காரர்கள் காட்டுகிற தப்புகளுக்கோ அல்ல என்பதை நம்முடைய பின் நடத்தையின் மூலம் அவர்களே தெரிந்துகொள்வார்கள்.

அதோடு மற்றொரு சங்கதியையும் நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது, கம்யூனிஸ்ட் கட்சியோ, சோஷியலிஸ்ட் கட்சியோ இந்த நாட்டுக் கட்சிகள் அல்ல. அவற்றுக்குத் தலைமை இங்கு இல்லை. மேலிருந்து—ஹைகமாண்டிலிருந்து என்ன உத்தரவு வருகிறதோ அதை நிறைவேற்ற வேண்டியதே இங்கு இருக்கிற ஆட்களுடைய கடமையாகும். அதுவும் கம்யூனிஸ்ட் கட்சி உலகம் பூராவுக்கும் சம்பந்தப்பட்ட கட்சியாகும்.



எனவே, அந்தக் கட்சிகளின் மேலிடத்திலிருந்து வரும் உத்தரவுகள் எல்லாம் நம்முடைய நல்லதுக்கு ஏற்றபடியே—நலத்துக்காகவே வரும் என்று எப்படிச் சொல்லமுடியும்?

அதோடுமட்டுமல்லாமல், திராவிடர் கழகம்தான் இந்த நாட்டினுடைய தேசிய ஸ்தாபனம் ஆகும். மதத்திலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் பார்ப்பனர்களுக்கும் வடநாட்டார்களுக்கும் அடிமைப்பட்டிருக்கும் இந்த நாட்டைப் பார்ப்பனர், பனியாக் கூட்டத்தினிடமிருந்து விடுவித்து, சுதந்திர நாடாக்கும் விடுதலைக் கிளர்ச்சி ஸ்தாபனம் தான் திராவிடர் கழகம். திராவிடர் கழகத்தினால்தான்—இந்த நாட்டை விடுதலை செய்து, இங்கு சுயமரியாதையுடன் கூடிய நல்ல நிலைமையை—உயர்ந்த பண்பை—சவுகரியமான வாழ்வை அமைக்கமுடியுமென்று நாம் கருதுகிறோம்.

அந்தப்படி கருதி நாம் ஆற்றிவரும் தொண்டில், நாம் நாலணா அளவுக்குத்தான் காரியம் சாதித்திருக்கிறோம். இதற்குள்ளேயே எத்தனையோ துரோகத்துக்கும், அய்ந்தாம் படைக்காரர்களின் சதிக்கும் தப்பிக் காரியம் சாதித்திருக்கிறோம். பல பார்ப்பனர்கள், பல பணக்காரர்கள் கம்யூனிசத்தில் இருப்பதுபோல நடித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் பணக்காரர்கள் ஆதிக்கம் இல்லை என்றாலும் இவைகளுக்கெல்லாம் தலை கொடுத்துக்கொண்டுதான் இந்த நாட்டிலே காரியம் செய்ய வேண்டியிருக்கிறது.

இன்னமும் திராவிடர் கழகத்தின் இலட்சியங்கள் நிறைவேறவும், இந் நாட்டு மக்கள் உயரவும் பார்ப்பனர்கள் தவிர மற்ற மக்கள் அனைவரும் திராவிடர் கழகத்தில் பங்கு கொண்டு காரியம் ஆற்ற வேண்டியிருக்கிறது. எனவேதான், நாம் நம் இனத்தைச் சேர்ந்த அனைவரின் பிரச்சினையையும் கவனித்துக் காரிய மாற்றும் வேலையில் இறங்கி, திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் ஏற்படுத்தியிருக்கிறோமே தவிர, மற்ற கட்சிக்காரர்கள் நினைப்பதுபோல் போட்டிக்கு அல்ல; மற்றவர்களுடன் சண்டை போடுவதற்கு அல்ல.

தோழர்களே! இன்னமும் சொல்லுகிறேன்: திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தின் திட்டம் இத்தோடு முடிந்துவிடுவதல்ல. இந்த நாட்டின் சகல துறைகளிலேயும் விஞ்ஞான ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், தனி உடைமையை ஒழித்து அனைவருக்கும் அனைத்தும் என்கிறதான நிலையை ஏற்படுத்தவும், அப்படி ஏற்படுத்த இருக்கும் மற்ற கட்சிகளுடன் தாராளமாக—ஏன் வலியவும் ஒத்துழைக்கவும் விரும்புகிறது என்றும் சொல்லுகிறேன்.

இந்த நாட்டு விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், 2000 வருடங்களுக்கு முன் வயல் வேலைகளில் எப்படிப்பட்ட முறைகள் இருந்துவந்தனவோ—எந்த விதமான ஏர், கலப்பை உபயோகப்படுத்தப்பட்டு வந்தனவோ–எப்படி உழுவது, விதைப்பது, வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதிலேயிருந்து அறுவடைக் காரியம் வரை செய்துவந்தார்களோ—அதே முறைகள்தாம் இன்றும் இருந்துவருகின்றன. போதுமான முற்போக்கும் காணப்படவில்லை. இந்தத் துறைகளில் பாட்டாளி சிறிதும் நலம் பெறவில்லை.

மேல்நாடுகளைப் பார்த்தால் இங்கு 10 ஏகராவில் செய்கிற வெள்ளாமை, விளைச்சலை அங்கே 4 ஏக்கரிலேயே விளைக்கிறான். இங்கு 2 ஏகராவுக்குச் செலவழிக்கப்படும் உழைப்பை அங்கே 10 ஏகராவுக்குச் செலவழித்து நலம் காண முடிகிறது விஞ்ஞான முறையில். இங்கே காலங்காத்தாலே—கோழி கூவும்போது எழுந்துபோய் சூரியாஸ்தமனம் வரையிலும் கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு வந்தும் கஷ்டப்பட்டதற்கு ஏற்ற விளைச்சலைக் காணமுடிவதில்லை.

மேல்நாடுகளில் மற்ற துறைகளில் வளர்ச்சியடைந்தது போலவே இந்தத் துறையிலேயும் வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைய விவசாய முறைகளிலேயும் விஞ்ஞானத்தின் அடிப்படைப்படி மாற்றம் காணவேண்டும்.

மேல்நாட்டில் நிலத்திலே வேலை செய்கிறவனுக்கு விளைச்சலில் பங்கு உண்டு, ஆனால், இங்கு அப்படியல்ல. நிலத்துச் சொந்தக்காரன் எங்கோ இருந்துகொண்டு

படிப்பகம்

www.padippakam.com



நிலத்தை வாரத்திற்கு விட்டுவிட்டு, அந்தப்படி வாரத்திற்கு நிலத்தைப் பெற்ற குத்தகைக் காரன் நிலத்தைப் பண்படுத்தி உழுது விளைச்சல் எடுத்துக்கொடுக்க, சும்மா உட்கார்ந் திருந்த நிலத்துச் சொந்தக்காரன் பெரும் பகுதியை எடுத்துக்கொள்வான். குத்தகைக் காரனுக்கு முட்டுவழிச்செலவு, ஆட்கள் கூலிச் செலவு போக, கடைசியில் ஒன்றும் இல்லாத வனாக—'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிச்சமில்லை' என்ற மாதிரியில், ஆற்றுப் பாசனமில்லாத மிராசுதாரன் நஷ்டப்படவேண்டியிருக்கிறது. இந்த முறையினா லேயே அவன் பாட்டாளிக்குச் சரிவரக் கொடுக்கமுடியாமலும், ஏதும் மீத்த முடியாமலும் போகிறது. பாட்டாளி அன்றாடக் கூலிக்காரனாகவே—ஒரு சில பெரு நிலப் பிரபுக்கள் தவிர, மற்றவர்கள் இருந்து வழிவழியான கூலிக்காரனாக வாழவேண்டியிருக்கிறது.

இந்த நிலைமையேற்படாமல் முதலாளி எப்படி மீத்து வைக்கிறானோ அப்படியே தொழிலாளியும் விவசாயியும் மீத்து வைக்கும்படியானபடி அனைவருக்கும் தொழிலின் இலாபத்தில் பங்கு இருக்க வேண்டுமானால் தொழில்முறையும் விஞ்ஞான ரீதியில் முன்னேற வேண்டும்.

சீக்கிரத்திலேயே ஒரு காலம்வரும். என் காலத்திலேயே வந்தாலும் வந்துவிடும் என்று தான் நான் கருதுகிறேன். அதாவது, பூமி பூராவும் ஏராளமாக ஒரு மனிதன் வசமே தேக்கப்பட்டிருக்கக் கூடாது. அனைவருக்கும் அவரவர்கள் அளவுக்குப் பிரித்துக் கொடுக்கும் காலம் வரும். அந்தப்படியான காலத்தை விரைவில் ஏற்படுத்த நாம் வழி காட்டிகளாயிருக்க வேண்டும். 20 ஆண்டுகளுக்கு முன்பே இந்தப்படியாக நான் சில திட்டங்கள் வகுத்து இருக்கிறேன். அவை இன்று செல்வாக்குப் பெற்று வருகின்றன.

இன்றைய விவசாயத் தொழிலாளர்களின் துயரைப் போக்கி தொழிலாளி—முதலாளி என்கிற, நிலத்துக்குச் சொந்தக்காரன்—நிலத்துக் கூலிக்காரன் என்பதான சொல்லே அகராதியில் இல்லாதபடி செய்ய வேண்டும் என்பதுதான் திராவிடர் கழகக் குறிக்கோள்.

இந்த நிலைமையெல்லாம் நாட்டிலே மலரவேண்டுமென்றால் நாடெங்கும் திராவிட விவசாயத் தொழிலாளர் கழகங்கள் ஏராளமாக ஏற்படுத்தப்பட வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் அதிலே ஏராளமாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[தாதம்பட்டி, சிவதாபுரம் சொற்பொழிவுகள்—'விடுதலை' 22-3-1952]

## 8. தொழிலாளர் கிளர்ச்சி

தோழர்களே!

தொழிலாளர் கிளர்ச்சியே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. மக்கள் உள்ளத்திலே முதலாளித்துவப் பாதுகாப்பு சர்க்கார்—பேத அமைப்புக்குப் பாதுகாப்புத் தேடுகிற சர்க்கார் எதற்காக என்கிறதைத் தெளிவாக்கவேண்டும். இந்தப்படி இருக்கிற இந்த சர்க்காரை ஒழித்தாகவேண்டும் என்கிற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டவேண்டும். அதற்காக என்று சர்க்கார் கொடுக்கும் தொல்லையைச் சகித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மாறுதல் ஏற்படும். இதைத்தான் நாங்கள் கூறுகிறோம்—எங்கள் கழகம் கூறுகிறது.

இப்போது தொழிலாளர் கிளர்ச்சி என்பது எப்படியாகிவிட்டதென்றால், முதலாளி யோடு சண்டை போடுவதுதான் என்பதாகிவிட்டது. நான் சொல்லுகிறேன்: முதலாளிக்கும், முதலாளித்துவ முறைக்கும் பாதுகாப்புத் தரும் சர்க்காருடன் நாம் போராடவேண்டும்.

இந்த நாடு திராவிடநாடு; இந்த நாட்டுத் தொழிலாளர் இயக்கம் திராவிட நாட்டுத் தொழிலாளர் இயக்கமாகத்தான் இருக்கும். உலகத் தொழிலாளர் இயக்கம் என்பதாக இருக்கிறது. அதைப்போலவே அந்தந்த நாட்டுக்கு—அந்தந்த நாட்டின் பெயரால்



தொழிலாளர் இயக்கங்கள் இருக்கின்றன. அதாவது, இங்கிலாந்து தொழிலாளர் இயக்கம், அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம், இந்தியத் தொழிலாளர் இயக்கம் என்று இருப்பது போல, திராவிடநாட்டு விவசாய சங்கம், தொழிலாளர் இயக்கம்—திராவிட விவசாயத் தொழிலாளர் இயக்கமாக இருக்கிறது. அதோடு, மற்ற நாட்டுத் தொழிலாளர் இயக்கங் களுக்கும் இந்த நாட்டுத் தொழிலாளர் இயக்கத்துக்கும் ஒரு பெருத்த வேற்றுமை உண்டு. அதாவது, மற்ற நாடுகளில் பணக்காரன்—ஏழை என்கிற பேதத்தோடு நின்றுவிடும். ஆனால், இங்கோ பணக்காரன்—ஏழை என்கிற பேதத்தோடு மாத்திரமல்லாமல், அந்தப் பேதத்துக்குப் பாதுகாப்புத் தருகிற பார்ப்பான்—சூத்திரன், பறையன் என்கிற அதைவிடக் கொடுமையான பேதமும் உள்ளது. நாம் அந்தப் பேதத்தையும் களைந்தாக வேண்டும். எனவே, மற்ற நாட்டு முறைதான் இங்கும் சிலாக்கியமானது என்று விவாதிப்பது என்ப தானால், அது ஒன்று அறியாமையாய் இருக்கவேண்டும்; அல்லது வடிகட்டின பித்தலாட்ட மாக இருக்கவேண்டும்.

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்கிற ஸ்தாபனம் இப்போது சமீபத்தில் தான் திருச்சியில் ஆரம்பித்தோம். சாதாரணமாக இப்போது இந்தத் தமிழ்நாடு முழுவதும் திராவிடத் தொழிலாளர்கள் பலர் தங்கள் தங்கள் தொழிலின் பேரால் திராவிட விவசாயிகள் கழகம் என்றும், திராவிடத் தொழிலாளர்கள் கழகம் என்றும், திராவிட தையல் தொழிலாளர் கழகம் என்றும், திராவிட சலவைத் தொழிலாளர் கழகம் என்றும், திராவிட மருத்துவத் தொழிலாளர் கழகம் என்றும் இன்னும் இதுபோன்ற தொழிலாளர் கழகங்கள் பலவற்றை நாடு பூராவும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இத்தனை நாள் இல்லாமல், திராவிடர் கழகம் இன்று ஏன் இந்தத் துறையிலே தனியான ஸ்தாபனத்தின் பேரால் சேவை செய்ய ஆரம்பித்தது என்று நீங்கள் கேட்பீர் களானால், ஏறக்குறைய இந்த 25 ஆண்டுகளாக எங்களுடைய போராட்டங்கள், பிரச்சாரங்கள், சேவைகள் எல்லாம் தொழிலாளர்கள் சங்கதியையே—அதாவது கீழ்சாதி மக்களுடைய—பாடுபடுகிற பாட்டாளி மக்களுடைய—சூத்திர, பஞ்சம மக்களுடைய நல்வாழ்வுக்கு என்றே அமைக்கப்பட்டிருந்தாலும்; சுயமரியாதை இயக்கம், சமதர்ம இயக்கம், ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் என்பன போன்ற பல ரகங்களால் வேலை செய்து வந்தாலும், தொழிலாளர்கள் மத்தியிலே தனி ஸ்தாபனமாக வேலை செய்யவில்லை' பொதுவில்தான் காரியங்களைக் கவனித்துவந்தோம். அவ்வப்போது வேண்டிய உதவி களைச் செய்துவந்தோம். பல நேரங்களில் நாங்களும் நேரடியாகக் கலந்துகொண்டோம்.

[பூந்துறையில், 13-9-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7-10-1952]

# 6. தொழிலாளரும் நாமும்

## 1. தொழிலாளரும் நாமும்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நம்முடைய முயற்சிகள், தொழிலாளி—முதலாளி ஆகியோர் கூட்டாளிகள் என்கிற தான தன்மை ஏற்பட வேண்டும் என்பதற்கே. அதற்குப் பலாத்காரம்தான் சாதனம் என்பது அல்ல! அல்லது ஸ்ட்ரைக் செய்துதான் அந்தக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்ற தன்மை இருக்கக்கூடாது. வேறு முறைகளைக் கையாள வேண்டும். முதலாளிகளை மிரட்டுவது என்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கக் கூடாது. முதலாளி முறை ஆட்சியிலுள்ள வரையில் முதலாளிகளை நம்மால் ஒன்றும் செய்துவிட முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



சில ஆயிரம் ரூபாய்கள் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும்படி செய்வதால் அவர்கள் இணங்கிவிட மாட்டார்கள். கூட்டுக் கம்பெனிக்கு–'லிமிடெட் கம்பெனிக்கு' முதலாளியே கிடையாது. நிர்வாகிகளோடு செய்யும் போராட்டம் கல்லிலே முட்டிக்கொள்வது போன்றதே யாகும். அவர்களோடு போராடுவதால் அவர்களுக்கு நம்மீது பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றும்; நம் கஷ்டங்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டும் என்கிற புத்தி தோன்றாது; இது இயற்கை. இந்த இடத்தில் நமக்குத்தான் அதிகப் பொறுப்பும் சரியான வழியும் தேவையாக இருக்கின்றன.

அடிக்கடி சோஷலிஸ்டுகள் 'இரயில்வே பொது ஸ்ட்ரைக்' என்று சர்க்காரை மிரட்டுவதும், அதனால் தங்களுக்கு வசதியும் பெருமையும் சம்பாதித்துக் கொள்வதுமாய் இருக்கின்றனரே, இதை சர்க்கார்தான் மதிக்குமா? மற்ற கட்சிகள்தாம் மதிக்குமா? பொது மக்கள்தாம் மதிப்பார்களா? சில கட்சிகளுக்கு இது ஒரு பிஸினெஸ் (Business) வியாபாரமாகப் போய்விட்டது என்பதாகத்தானே ஆகி விட்டது? 'ஸ்ட்ரைக்' முறை தொழிலாளிகளுக்கு வெற்றி தரவில்லை என்பதை அனுபவ மூலமாக இந்த 25 ஆண்டுகளில் உணர்ந்து விட்டோம்.

மற்றும், அடுத்தபடியாக இன்று பார்த்தால் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் பரஸ்பரம் நல்லுறவு என்பதே கிடையாது; ஒருவருக்கொருவர் துவேஷமும் வெறுப்பும் இல்லாதபடி நடந்துகொள்ள முடியவில்லை. தொழிலாளியைக் கண்டால் முதலாளிகள், மேலதிகாரிகள் 'உர்' என்று இருப்பதும் மேலதிகாரிகளைக் கண்டால் தொழிலாளர்கள் கொடூரமாக இருப்பதுமாகவே எங்கும் இருந்துவருகிறது. இந்த நிலை யாருக்கும் நல்லதல்ல; நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் செல்வ வளர்ச்சிக்கும் கேடானது. ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பு, நல்லெண்ணம் இருக்கவேண்டும்; ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையில் தாக்கிக் கொள்ளக்கூடாது; கலவரத்தை உண்டாக்கிக் கொள்ளக்கூடாது. இரயிலில் இருப்பவர்கள் எங்கள் சிற்றப்பன், பெரியப்பனல்ல! எல்லாம் கடைந்தெடுத்த பார்ப்பனர்கள்தாம். பின், ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், கலவரத்தையும் பலாத்காரத்தையும் நாமே பழக்கித் தந்தால் மக்கள் கதியும், நாட்டின் பொது நிலையும் என்னாவது?

மற்றும் சொல்லுகிறேன். தொழிலாளர்களுக்குள் நல்ல ஒற்றுமையும், கட்டுப்பாடும் வேண்டும். குறிப்பாக எடுத்துக் கொண்டால், தொழிலாளிகள் அனைவரும் ஒரே சாதி மக்கள் என்ற உணர்ச்சிவேண்டும். தொழிலாளிகள் என்றால் யார்? எல்லோரும் திராவிட மக்கள்தாமே! திராவிட மக்கள்தாம் உழைக்கும் மக்களாய், பாடுபடும் பாட்டாளிகளாய் இருக்கிறார்களே தவிர எந்தப் பார்ப்பான் தொழிலாளியாய் இருக்கிறான்?

தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்லுகிறவர்களெல்லாம் இந்தச் சங்கதியை, பேதத்தை அதாவது 'திராவிட மக்கள்தாம் தொழிலாளிகள்'; திராவிட மக்களாய் இருப்பதாலேயே சமுதாயச் சூழ்நிலையும், விதி மத சாஸ்திர முறையும் அவர்களைத் தொழிலாளியாக்கி வைத்திருக்கிறது; அது போலவே, பார்ப்பானாய் இருப்பதாலேயே முதலாளி சாதி மகனாய், உட்கார்ந்து சாப்பிடும் வசதி வாய்ப்பு உடையவனாய், மேல் சாதிக்காரனாய் இருக்கும்படியாகக் கடவுள், மத, சாஸ்திர அமைப்பும், சமுதாய நடப்பும், தன்மையும் இருக்கின்றன—என்கிறதை யாரும் எடுத்துச் சொல்லவில்லை; சொல்லாததோடு மட்டுமல்ல—இந்தச் சங்கதி தொழிலாளி மகனுக்குத் தெரியக்கூடாது என்றும் நினைக்கிறார்கள். இன்றைய தினம் இருக்கிற இந்தப் பேதத்தை மாற்றுவதற்கு முயலாமல், தொழிலாளிகளின் கவனத்தை அடிதடி, கலவரம், கூலி உயர்வு என்று சொல்லி சூழ்ச்சியாய் வேறு பக்கம் திருப்பிவிட்டு விடுகிறார்கள். ஜெயப்பிரகாச நாராயணன், எஸ். குருசாமி, பி. ராமமூர்த்தி, ஆர். வெங்கட்டராமன் முதலிய தொழிலாளர் தலைவர்கள் பார்ப்பனர் (பிறவி முதலாளிகள்) என்பதை மறந்துவிடாதீர்கள்! V. V. கிரியும், கிருஷ்ண



ராவுமான தொழிலாள மந்திரிகள் பார்ப்பனர்கள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்! சர்க்காருக்கு இந்தத் துறையில் இவர்கள் உள் ஆட்கள் ஆவார்கள்!

அதனாலேயே, சமுதாயத் துறையைப்பற்றி ஒரு தொழிற் சங்கம்கூட கவலை எடுத்துக்கொள்ளவில்லை. ஏன் ஒரு சாதி மக்கள் மட்டும் உடலுழைப்புக்காரர்களாகவே இருக்கவேண்டும்? ஏன் ஒரு சாதி மக்கள் அதற்கு மாத்திரம் தகுதியுடையவர்கள்; மற்ற காரியங்களுக்குத் தகுதி அற்றவர்கள் என்று யார் கேட்டார்கள், எங்களைத் தவிர? காங்கிரஸ் கேட்டதா? சோஷியலிஸ்ட் கேட்டதா? அல்லது இந்த கம்யூனிஸ்ட் வீரர்கள் தானாகட்டும் கேட்டார்களா? இல்லையே! கம்யூனிஸ்டுகள் இதைப்பற்றி நாம் சொல்லப் போனால், 'சே! சே! இது பிற்போக்கு சக்தி; நாங்கள் முற்போக்கு வீரர்களாக்கும்; எங்கள் கண்ணுக்கு இந்தச் சிறிய சங்கதியெல்லாம் தெரியாது' என்று போய்விடுவார்கள். அதேபோல் மற்றவர்கள் இதை வகுப்பு வாதம் என்று சொல்லிவிடுவார்கள்.

இதைப்பற்றி நாங்கள்தான் கவலை எடுத்துக்கொண்டு காரியம் செய்து வருகிறோம். ஏன்? இது எங்கள் நாடு; எங்கள் முதல்; தொழிலாளிகள் எங்கள் சாதி—இவை மூன்றும் பார்ப்பனருக்குக் கிடையாது; அறவே கிடையாது.

திராவிட மக்கள் அனைவரும் தொழிலாளிகள்; திராவிட மகனாய் இருக்கிறதாலே அவன் தொழிலாளியாகவும்; பார்ப்பானாய் இருக்கின்றதாலே இன்னொருவன் முதலாளியாகவும், முதலாளி சாதியாகவும் இருக்கிறான் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள். இந்தப் பேதம் இருக்கக் கூடாது. தொழிலாளிகளின் கவனம் ஸ்ட்ரைக், சம்பள உயர்வு, அடிதடி என்கிற பக்கத்திலே செலுத்தப்பட்டதே தவிர, இந்தப் பேதத்தை ஒழிக்கும் முயற்சியிலே திருப்பி விடப்படவில்லை என்பதைத் திரும்பவும் கூறுகிறேன். உள்ளபடி சொல்லுகிறேன். இந்த இரயில்வே தொழிலாளர்கள் மட்டுமாவது இந்த இன உணர்ச்சியோடு, பார்ப்பான்–திராவிடர் என்ற உணர்ச்சியோடு அதைப்பற்றிக் கவலை எடுத்துக் கொண்டு பாடுபட்டிருப்பார்களேயானால், இந்நேரம் இந்த இரயிலே நமக்கு ஆகி இருக்குமே!

நம்முடைய தொழிலாளி தன்னுடைய சம்பளத்தைப்பற்றிக் கவலைப்படுகிறானே தவிர, இந்த 2000, 3000 ஆண்டுகளாக நாம் ஏன் அடிமைகளாக, இழிந்த சாதி மக்களாக இருக்கிறோம்; பார்ப்பான் எப்படி 2000, 3000 வருடங்களாக உயர்ந்த சாதிக்காரனாக—முகத்திலே பிறந்த முதல் சாதிக்காரனாக—உழைக்காமல் சாப்பிடுகிற உயர்ந்த சாதிக்காரனாக இருக்கிறான் என்பதைப்பற்றிக் கவலையே படுவதில்லையே! ஏன்? நம்முடைய மக்கள் படிக்கவேண்டும் என்று சொன்னால் தகுதியில்லை, திறமையில்லை என்று சொல்லப்படுகிறதே! இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமா? 1000 வருடமாகவா ஒரு சமுதாயத்து மக்கள் 'தகுதி', 'திறமை' இல்லாதவர்களாக இருப்பார்கள்? இப்படியே இருந்து கொண்டிருந்தால் இவற்றையெல்லாம் யார் கவனிப்பார்கள்? மேல் படிப்பு என்பதெல்லாம் அவர்களுக்கே! அதே போல அந்தச் சாக்கில் உத்தியோகம், மேல் உத்தியோகம் எல்லாம் பார்ப்பனர்களுக்கேதான்.

இவற்றைப் பற்றி யார் கவனித்தார்கள்—எங்களைத் தவிர? தொழிலாளி மகன் எப்படி எஸ். எஸ். எல். சி., எஃப். ஏ., பி. ஏ. படிப்பது? படித்தால்தானே குமாஸ்தாவாக வரவது வரமுடியும்? இதை யார் கவனிக்கிறார்கள்?

நான் சொல்கிறேன், நம்முடைய தொழிலாளர்களுக்கு ஒன்றும் பெரிய வேலை கொடுக்கப்படாவிட்டாலும், கொடுக்கிற சம்பளமாவது அதிகமாகக் கொடுக்கக் கூடாதா? நல்ல வசதியான அறையிலே 'Fan'-னுக்குக் கீழே உட்கார்ந்து கொண்டு, மேஜை நாற்காலியோடு வேலை செய்கிற குமாஸ்தாவுக்கு 100 ரூ. சம்பளம்; நெருப்பிலே உழன்று சம்மட்டி அடிக்கிற தொழிலாளிக்கு 30, 50 ரூபாய்தானா?



படிப்பகம்

www.padippakam.com



கொடுக்கிற வேலைக்குத்தான் தகுதி, திறமை பார்க்கிறாய்! வாழ்க்கைக்குக் கூடவா தகுதி திறமை? சம்பளத்திலாவது சரி சமன் செய்யக் கூடாதா? தகுதி, திறமை உடையவன் அதிகமாகச் செலவழிக்கவும், தகுதி, திறமை இல்லாதவன் குறைவாகவுமா செலவழிக் கிறான்? எதற்குச் சொல்கிறேன் என்றால், ஒரு பெரிய சமுதாயத்தை நிரந்தரமாகத் தலை முறை, தலை முறையாக அடிமைகளாகவே வைத்திருப்பதற்கு எவை எவைகளின் பேரால் சூழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டத்தான். பள்ளிக் கூடத்துக்குப் போய் எம். ஏ. பட்டம் வாங்காததால், அவன் மனித சமுதாயத்திலே மதிக்கப் படத் தகாதவனாக ஆகி விடுவானா? வாழ்வில் சராசரித் தேவைகள் வசதிகள் கூட அற்ற வனாக வாழ வேண்டுமா? இப்படியெல்லாம் செய்து, அவன் மேலுக்கு வரமுடியாதபடி அமுத்தி அமுத்தி வைத்துக் கொண்டே 'நீ எம். ஏ. படி; உனக்குத் தகுதி திறமை இருக்கிறதா? அப்படியானால் தருகிறேன்'—என்கிறாய்! கொடுப்பதே சோற்றுக்குக் கணக்குப் பார்த்துத்தானே! அப்புறம் எப்படி அவர்கள் முன்னுக்கு வரமுடியும்? இரண்டரை அணாவுக்கு வேலை செய்த ஆள் இன்றைக்குக் கூலி ஒன்றரை ரூபாய் கேட் கிறான். ஏனென்று கேட்டால், 'சாமி! தவசம் என்ன விலை விற்கிறது என்று பாருங்கள்; சோற்றுக்குக் கணக்குப் பார்த்துக் கொடுங்கள்,' என்கிறான். 'பத்து அணாவுக்கு விற்ற புல்கட்டு என்னம்மா ஒரு ரூபாய் சொல்லுகிறாய்?' என்று கேட்டால், 'கம்பு, சோளம் என்ன விலை விற்கிறது என்று பார்த்துக் கொடுங்கள், சாமி!' என்று தானே பதில் வருகிறது. அந்தத் தன்மை மாறவேண்டும். சோற்றுக்குப் போய் கணக்குப் பார்த்து வரும்படி என்பது போய் வாழ்வுக்கு, வசதிக்குத் தேவையான வருமானம் என்கிற நிலைமை ஏற்படவேண்டும்.

அதை விட்டு விட்டு சும்மா ஜன்னல் வைப்பது, நாலாவது வரை சம்பளமில்லாமல் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லித் தருவது, ஆஸ்பத்திரி கட்டிவிடுவது—இது போன்ற சாதாரண வசதிகளைத் தொழிலாளிகளுக்குச் செய்து கொடுத்து விட்டு, பெரிய பிரச்சினை களிலே, உரிமைக் கிளர்ச்சியிலே, அவர்களின் கவனம் செல்ல வொட்டாமல் தடுக்கப் படுகிறது.

நம்முடைய தேவை அதுவல்ல; நம்மால் செய்யப்படுகிற கிளர்ச்சியும் அதற்காகவல்ல. நம்முடைய தேவையெல்லாம் அடிப்படையில் மாற்றம் ஏற்படவேண்டும். அதாவது, தொழி லாளிகளுக்கு இலவச (Free) காலேஜ் வேண்டும். அதில் தொழிலாளிகள் மக்கள் 2000 பேராவது எப்போதும் இலவசமாய்ப் படித்து, ஆண்டுக்கு 200 பேர் வெளியாக வேண்டும். அவர்கள் மேல் வேலைக்குத் தகுதி ஆக வேண்டும். இப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட வேண்டும்.

முக்கியமாக எந்தக் காரணம் கொண்டும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இன்றைக்கு இருக்கிற மாதிரி 'ஏழாம் பொருத்தம்' இருக்கக் கூடாது; இருவருக்குள்ளும் பரஸ்பரம் நல்லெண்ணமும், சுமுகமான உறவும் கூட்டுப் பொறுப்பும் ஏற்படவேண்டும். இந்தத் தன்மை ஏற்பட அடிப்படையில் மாறுதல் ஏற்பட வேண்டும். முதலாளியும் தொழிலாளியும் பங்காளிகள், கூட்டாளிகள் என்கிற நினைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

தொழிலாளி என்றால் யார்? முதலாளி என்றால் யார்? எவனொருவன் தன் வயிற்றுப் பிழைப்புக்காகத் தனது உழைப்பை மாற்றுப் பண்டமாகப் பிறருக்குக் கொடுக்கிறானோ அல்லது பிறர் இஷ்டப்படி நடக்க வேண்டியவனாகிறானோ அவன்தான் தொழிலாளி அல்லது வேலையாள் ஆவான். எவனொருவன் தன் உழைப்பைத் தன் இஷ்டமான விலைக்கு, பிரதிப் பிரயோசனத்திற்கு மாற்றுப் பண்டமாக விலை பேசுகிறானோ அவன் முதலாளி அல்லது எஜமான் ஆவான். இவைதாம் தொழிலாளி என்பதற்கும் முதலாளி என்பதற்கும் அடிப்படைக் கருத்துக்கள் ஆகும்.

ஒரு வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் முதலாளிதான்—எப்படி? அவன் சாமா னுக்குச் சொன்ன விலையைக் கொடுத்து நாம் வாங்குவோம். அது போலவே, தட்டுக்



கடைக்காரனும் இன்னும் செருப்புக் கடைக்காரனும் முதலாளிகளே யாவார்கள். இவர்களில் யாரும் தங்களுடைய உழைப்பைத் தங்கள் வயிற்றுக்குத் தேவையான அளவுக்குப் பிறர் இஷ்டத்திற்கு செலவழிப்பவர்களல்லர். அவர்கள் சொல்கிற விலைக்குச் சாமான்கள் வாங்கிக் கொள்ள வேண்டும். நாம் அவர்களிடத்தில் சேவிப்பதானால், சோற்றுக்குக் கணக்குப் பார்த்து அவர்கள் கொடுப்பதை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்று அவர்கள் வியாபாரம் செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம். அவர்களை ஏன் செய்ய வில்லை, ஏன் இவ்வளவு அதிக விலை சொல்கிறார்கள், குறைந்த கூலி கொடுக்கிறார்கள் என்று கேட்க முடியாது.

எவ்வளவு பெரிய சம்பளம் வாங்குகிறவனாக இருந்தாலும், மாதம் 100, 200 என்று சம்பாதித்தாலும்—சம்பளத்துக்காக அவன் தன் உழைப்பைப் பிறர் இஷ்டத்திற்குச் செலவழிக்கிறான். ஆகவே, அவன் தொழிலாளிதான். இதுதான் முதலாளி–தொழிலாளி நிலைமையே தவிர, பணக்காரனெல்லாம் முதலாளி; ஏழையெல்லாம் தொழிலாளி என்பதல்ல.

ஆதலால், நம் கிளர்ச்சி வெறும் கூலிக்காக மட்டுமல்லாமல் உரிமைக்காக இருக்க வேண்டும். இதுதான் இந்தச் சங்கத்தின் குறிக்கோள் ஆகும்.

பொதுவாக, தொழிலாளர்கள் உலகத்திலும், முதலாளிகள் உலகத்திலும் பொதுநலத் தன்மை பற்றிய பொறுப்பு இல்லை. முதலாளி நினைப்பதென்ன? 'சம்பளத்துக்குத்தானே தொழிலாளி வேலை செய்கிறான். அவன் எப்படி நடத்தப்படுவதும் சரிதான்' என்று நினைக்கிறான். அதுபோலவே தொழிலாளியும், 'சும்மாவா கூலி கொடுக்கிறான்—வேலை செய்கிறோம், கூலிகொடுக்கிறான், இவனென்ன பெரியவன்?' என்று முதலாளியைப் பற்றி நினைக்கிறான். இப்படி, இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் இந்த மாதிரிக் கணக்குப் போட்டுக் கொண்டிருப்பதால் தொழிலின்மீது பொறுப்பு இல்லாதவர்களாகவும், தொழிலுக்கு நல்ல பலன் கிடைக்க முடியாதபடி செய்துவிடுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

முதலாளி எந்நேரமும் எப்படி இந்தத் தொழிலாளர்களுக்குக் குறைவாகச் சம்பளம் கொடுத்து அவர்களை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பது என்று திட்டம் போட்டுக்கொண்டே இருக்கிறான். அதுபோலவே தொழிலாளியும், இவன் கொடுக்கிற சம்பளத்திற்கு இந்த வேலை போதும் என்று தன் வேலையைக் குறைத்துக்கொள்வதிலேயே கவனமாக இருக்கிறான். இப்படி ஒருவருக்கொருவர் ஏமாற்றிக் கொள்கிறதனால் நமக்கு என்ன என்றால், பொதுநிலையில் எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது? பொதுத்தன்மை கெட்டுப் போவதுமட்டுமல்லாமல், முதலாளியும் தொழிலாளியும் கீரியும் பாம்பும் போல எப்போதும் சண்டை போட்டுக்கொண்டிருப்பதால் உற்பத்திக் குறைச்சலும், விலைவாசி உயர்வும் ஏற்பட்டு மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கின்றன? முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருசாராருக்கும் பொறுப்பும் நாணயமும்—ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நல்லெண்ணம் நல்லுறவு இல்லாத வாழ்வுபெருகுவது, பொதுநலத்திற்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் கேடே யாகும். இருசாராருமே தாங்கள் பொதுமக்களின் தர்மகர்த்தாக்கள் என்பதாகக் கருதுவதோடு, தங்கள் தொழிலின் காரியத்தைத் தங்கள் தங்கள் சொந்தக் காரியம் போல் பொறுப்புடன் கருதும்படியான நிலை ஏற்படவேண்டும். அப்போதுதான், நாட்டில் செழிப்பும், மக்களுக்குத் திருப்தியான வாழ்வும் ஒழுக்க உயர்வும் ஏற்படமுடியும்.

சாதாரணமாக, இரயிலைக் கவிழ்க்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். இரயில் விழுவதால் யாருக்கு என்ன நஷ்டம்? இரயில்வே பெரிய உத்தியோகஸ்தர்களில் ஒரு பார்ப்பான் அதைப்பற்றிக் கவலைப்படுவானா? அல்லது வடநாட்டு ஆட்சி கவலைப்படுமா? அவனுக்கென்ன? இரயில் விழுந்தால் நம்முடைய பணத்திலிருந்து வேறு இரயில் வரவழைத்துக் கொள்கிறான்; அதில் தரகு பெறுகிறான். நட்டத்தைச் சரிக்கட்டிக் கொள்கிறான். நமக்கு அப்படியா? எவ்வளவு பொருள் நட்டம்! உயிர் நட்டம்! பார்ப் பனர்கள் நம் உயிரைப்பற்றிக் கவலைப் படுவார்களா? அவர்களுக்கென்ன கவலை?

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமானால் விழுந்திறந்து கிடக்கிறவர்க[illegible]னை பேர் திவசம் பண்ணுகிறவர்கள் என்று பார்ப்பான்; வண்டிவண்டியாகப் பிணம் போனாலும் பார்ப்பானுக்குத் திவசம் பண்ணுவதிலேதானே கண்!

அதோடு மட்டுமல்ல; இவ்வளவு விஞ்ஞான காலத்திலே—நாகரிக காலத்திலே சோற்றுக்காக – கூலியை உயர்த்திக் கொள்வதற்காக இரயிலைக் கவிழ்ப்பதா? 'இந்த டிபார்ட்மெண்ட்டிலே இந்த மேலதிகாரி உன்னை, வேலை சரியாகச் செய்யவில்லை என்று கூறித் திட்டினானா? சரி, இன்றைக்கு இராத்திரி ஒருவருக்கும் தெரியாமல் போய், அந்த மிஷினை உடைத்து விடு' என்று தொழிலாளியைத் தூண்டிவிடுவதா? இது பொறுப்புள்ள யோக்கியன் செயல் ஆகுமா? கொஞ்சமாவது நாட்டைப்பற்றியும், பண்டத்தைப் பற்றியும், மக்களைப் பற்றியும், தொழிலைப் பற்றியும், பொது நிலையைப் பற்றியும் கவலைப்படவேண்டாமா? இன்று ஒரு தொழிற்சங்கத்திற்கும் இந்தக் கவலை இல்லையே!

சாதாரணமாக, நெருப்புப் பிடித்துக்கொண்டால், 'நெருப்பு எவ்வளவு அழகாக எரிகிறது பார், பார்!—அடுத்த வீட்டுக்குத் தாவுகிறது! இன்னும் பிடிக்கிறது! அடடா—அதற்குள் அணைத்து விட்டார்களே!' என்று சத்தமிட்டு, சிறு பையன்கள் நெருப்புப் பிடித்து எரிவதைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டும், நெருப்பு பரவுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தும், நெருப்பு அணைக்கப் படுவதைப் பார்த்துத் துக்கப்படுவது போலவும் அல்லவா சில தொழிற்சங்கங்கள் நடந்துகொள்ளச் செய்யப்படுகின்றன? சிறு பையன்களுக்கு என்ன பொறுப்பா? கவலையா? அந்த மாதிரிச் சிறு பையன்கள் போல், பொறுப்பற்ற முறையிலா இவர்கள் நடந்து கொள்வது? நாட்டைப்பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும், மனித உயிரைப் பற்றியும் இப்படியா பொறுப்பற்ற முறையில் கவலையற்று நடந்து கொள்வது?

இந்த நாட்டில் பஞ்சம், பண நெருக்கடி இருக்கிறது என்றால் ஏன்? தோழர் ஆச்சாரியார் அவர்கள் சொல்கிற மாதிரியான மழையில்லாததாலா? அல்லவே அல்ல.

மற்றென்ன வென்றால், ஆச்சாரியார் அவர்கள் விவசாயச் சட்டம் செய்வதற்குக் காரணம் சொன்னாரே அதுதான். அதாவது, 'விவசாயி—பண்ணையார் தகராறில் உற்பத்தி சரிவர ஆவதில்லை' என்று சொன்னாரே அதேதான். உற்பத்திப் பெருக்கக் கவலை இருவருக்கும் கிடையாது. இருவரும் 'இலாபமும் கூலியும் அதிகமாக வேண்டும்' என்ற கருத்தில் ஒருவரையொருவர் ஏமாற்றுவதிலேயே கவலை செலுத்துகிறார்களே தவிர, காரியத்தில் கொஞ்சங்கூடக் கவலைப்படுவதில்லை. அடிக்கடி வேலை நிறுத்தம் செய்வது; இரண்டு மாதங்கள் மூன்று மாதங்கள் என்று தொழில் நிலையங்கள் வேலை செய்யப் படாமல் சும்மா பூட்டியே கிடப்பது! அப்புறம் எப்படித் தொழில் வளர்ச்சியும் உற்பத்திப் பெருக்கமும் ஏற்படும்?

இப்போது எடுத்ததற்கெல்லாம் 'ஸ்டிரைக்' ஆரம்பித்து விடுகிறார்கள். இதில் பெரும்பான்மை ஸ்டிரைக்குகள்—சங்கங்களை நடத்துகிற ஆட்களின், ஸ்தாபனங்களின் சொந்த நலனுக்கும், மற்றபடி தங்கள் சொந்தக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளவுமே செய்கிறார்கள்.

ஸ்டிரைக்கினால் ஏற்படுகிற விளைவுகள் என்ன? நான் முன் சொன்னது போல் தொழில் வளர்ச்சி கெட்டு, உற்பத்தி குறைவதோடு மட்டுமல்ல; பொது மக்களுக்கும் எவ்வளவு தொந்தரவு ஏற்படுகிறது?

இரயில்வேயில் 'அனைத்து இந்திய ஸ்டிரைக்' இரண்டு மாதம் செய்து சம்பளத்தில் 5–10 ரூபாய் உயர்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பண்டித நேருவோ தோழர் கிரியோ தங்கள் வீட்டுக் காசிலிருந்து கொடுக்கிறார்களா? இல்லை. 'சரி, இவர்களுக்குச் சம்பளம் 10 ரூபாய் உயர்த்திக் கொடுத்து விட்டு, 2-வது 'கிளாஸ்' மைலுக்கு 6 தம்பிடி 'சார்ஜ்' உயர்த்து; 3-வது 'கிளாஸ்' 2 தம்பிடி உயர்த்து' என்று சொல்லி விடுகிறார்கள். இதனால் யாருக்கு நட்டம்! இரயிலில் ஏறுகிற மக்களுக்குத்தான். இந்த அதிகப்படியான பணத்தைப் பொதுமக்கள்தாம் கொடுக்கிறார்கள்.



அது போலவே, மில் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்தால் அவர்களுக்குக் கூலியை உயர்த்திக் கொடுத்துவிட்டு, அதைச் சரிக்கட்ட, துணியில் கெஜத்துக்கு இரண்டு அணா உயர்த்துகிறான். 10 ரூபாய் அதிகச் சம்பளம் பெற்ற இரயில்வே தொழிலாளி, மில் தொழிலாளர்கள் ஸ்டிரைக்கால் உயர்த்தப்பட்ட விலையைத் துணிக்குக் கொடுக்கிறான். அதே மாதிரி ஸ்டிரைக் செய்து அதிகச் சம்பளம் பெற்ற மில் தொழிலாளி, ஸ்டிரைக்கால் உயர்த்தப்பட்ட 'சார்ஜ்' கொடுத்து இரயிலில் போகிறான். அதுபோலவே 'ட்ராம்வே' தொழிலாளி ஸ்டிரைக் செய்தால் 'ட்ராம்' நிர்வாகம், சார்ஜில் 3 தம்பிடியை உயர்த்தி விட்டு, 'ட்ராம்' தொழிலாளிக்குச் சம்பளத்தை உயர்த்தி விடுகிறது. இந்த உயர்த்தப்பட்ட 'சார்ஜை' யார் கொடுப்பது? பொது மக்களும், இரயில்வேத் தொழிலாளியும், மில் தொழிலாளியும் போன்றவர்கள்தாமே! இப்படியாக ஸ்டிரைக் செய்வதன் மூலமாக வேலை மெனக்கெடுவதோடு இருசாராரும் தொல்லை, துயரத்துக்கு இலக்காகி விலைவாசிகளும் உயரும் தன்மை இருக்கிறது. இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? அதோடு இந்த மாதிரி 'ஸ்டிரைக்', பலாத்காரம், நாசவேலை முதலிய காரியங்களால்தானே போலீஸ் படையும், எம். எஸ். பி., எஸ். ஏ. பி. என்றும் ஏற்பட்டது! இப்படியா செய்வது! இவ்வளவு தொல்லை, துயரப்பட்டா பரிகாரம் காணுவது? மற்றும், இவ்வளவு கஷ்டத்திற்குக் காரணம் அரசாங்கம் என்பதைத் தெரிந்தும் தொழிலாளர் தலைவர்கள் என்பவர்கள் அரசாங்கத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல், வாயில்லாப் பூச்சிகளாகிய தொழிலாளர்களைக் கஷ்டத்திற்குள்ளாக்கிப் பெருமை, பயன் அடைகிறார்கள்.

இந்த நாட்டுக்கு ஏற்ற மாதிரியில்—இந்த நாட்டுத் தன்மைக்கு ஏற்ற மாதிரியில் தொழிலாளர் பிரச்சினைகளை அணுக வேண்டும். மற்ற நாடுகளில் நடந்ததுபோல் இங்கும் நடத்த வேண்டும் என்பதும் அந்த முறையிலேதான் போக வேண்டும் என்பதும் அவசியமற்றதாகும்.

மற்ற நாட்டிலே இருக்கிற நிலைமை வேறு; இந்த நாட்டு நிலைமை வேறு. அதாவது, இந்நாட்டில் தொழிலாளிகள் என்பவர் பிறவித் தொழிலாளிகள் ஆவார்கள். இப்படிப் பிறவித் தொழிலாளி யாக்கி வைத்து, அவர்களைத் தலையெடுக்க வொட்டாமல்—மாற்ற மடையச் செய்யாமல் பார்த்துக் கொள்கிறவர்கள் மற்றொரு சாதியார். அந்தச் சாதிதான் இன்று ஆட்சியிலும் தொழிலாளர் தலைமையிலும் இருந்துவருகிறது. இன்று தொழிலாளர் நலமாக இருவரின் 'சதிதான்' இருந்து வருகிறது.

இந்த நிலை மற்ற நாடுகளில் இல்லை. மார்க்ஸும், லெனினும் 'சதிக்கென்று' ஒரு சாதி இல்லாத நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆதலால் அவர்கள், சதிகாரர்களின் சதிச் செயலுக்கும், தொழிலாளர் சாதி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அழுத்தப்பட்டுக் கிடப்பதற்கும் பரிகாரம் சொல்லவேண்டிய அவசியமில்லாதவர்களாய் இருந்திருக்கிறார்கள்.

ஆதலால், தொழிலாளி பேதம் மட்டுமல்லாமல் முதலாளித் தன்மையில் சாதி உயர்வு-தாழ்வு பேதம் நடப்பு இருக்கிற போதும், அதைப் பாதுகாக்க ஒரு சாதி இருக்கிற போதும், அவர்கள் தொழிலாளர் கிளர்ச்சியை நடத்துகிற போதும்—'மார்க்ஸ் சொன்னபடிதான் செய்யவேண்டும்; லெனின் என்ன சொன்னாரோ அந்தப்படிதான் செய்யவேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இது சதிகார சாதிக்குத்தான் அனுகூலம், மார்க்ஸேதான் தொழிலாளர் பிரச்சினைக்கு முடிவானவரா? அல்லது லெனினே கடைசியானவரா? நாளுக்கு நாள் நடப்பும் கருத்தும் மாறிக் கொண்டே வருகின்றனவே! சாதியின் பேரால் தொழிலாளர் சமுதாயம் இருக்கக் கூடாது என்கின்ற கிளர்ச்சியே 1925-ல் தானே துவக்கப்பட்டது—கண்டு பிடிக்கப்பட்டது! இந்த நிலையில் மார்க்ஸும் லெனினும் முக்காலமுணர்ந்த தீர்க்க தரிசிகளா, அவர்களுடையதே முடிவு என்று சொல்ல? மதவாதிகள்—?

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனர்கள் எப்படி மகாவிஷ்ணு, பரமசிவன் என்று சொல்கிறார்களோ அப்படியா பகுத்
தறிவு வாதிகள், மார்க்சிஸ்டுகள் சொல்லுவது? காலம் வேறு; ஆட்சி வேறு. அங்கு முதலாளி
ஆளுகிறான்; இங்கு பார்ப்பான் ஆளுகிறான். பண்டித நேருவும் இராஜாஜியும், இராம
மூர்த்தியும் யார்? கிரியும், கிருஷ்ணராவும் ஜெயப் பிரகாசும், குருசாமியும் யார்? மற்றும்
இரயில்வே மந்திரியும், தட்சிண இரயில்வேக்களின் எஜண்டும் யார்?

இதற்கும் தொழிலாளர் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை என்று யாராவது சொன்
னால் அவர்களை யோக்கியர்கள் என்றோ அல்லது அறிவாளி என்றோ ஒரு நாளும் சொல்ல
முடியாது. ஏன் இப்படிச் சொல்கிறேன்? இந்த மாதிரித் தொழிலாளிக்குச் சம்பந்தப்பட்ட
எல்லா ஸ்தானங்களிலும்—ஆட்சிக்குச் சம்பந்தப்பட்ட எல்லாத் தலைமைகளிலும்
பார்ப்பனனே இருக்கவேண்டிய அவசியமென்ன? இது அகஸ்மாத்தாக ஏற்பட்டதா?

அல்லது, பார்ப்பனர்தான் இருக்கவேண்டும் என்கின்ற அவசியத்தினால் ஏற்பட்டதா
கம்யூனிஸ்டுகள்தாம் இதற்குப் பதில் சொல்லட்டுமே! 'சாதிபற்றி—வகுப்புபற்றி—பார்ப்பான்
சதியைப்பற்றிப் பேசுவது பிற்போக்குச் சக்தி' என்று சொல்லி விடுவதே இவற்றிற்குப்
பரிகாரமாகிவிடுமா? அல்லது மார்க்ஸ், லெனின் சொன்னபடிதான் தொழிலாளர்கள் ஏற்றுக்
கொள்ளவேண்டும் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

மார்க்ஸ் நினைத்திருப்பாரா, இந்த நாட்டில் பார்ப்பனர்கள் என்கிற சதிகாரர்கள்
செய்து வருகிற கொடுமைகளையும், புரிந்து வருகிற ஆதிக்கத்தையும், நடத்துகிற சதித்
திட்டங்களையும்—மற்றும் இந் தநாட்டின் சொந்த மக்கள் பிறவிச் சூத்திரர்களாக்கப்பட்டு,
வேசி மக்களாய்க் கருதப்படுகிற நிலைமையையும் பற்றி? அதற்கு ஏற்ற மதம்,
சாஸ்திரங்கள் கடவுள்கள் பற்றி? ஆதலாலேயே, அவர் அந்த நாட்டிற்குத் தகுந்த மாதிரி
நிலவி வந்த முதலாளித்துவம், அதன் ஆதிக்க முறைகள், அவைகளுக்கு மதம் அளிக்கும்
ஆதரவு பற்றிச் சொல்லிப்போனாரே தவிர, இந்த நாட்டைப்பற்றி—பாவம், அவர் என்ன
கண்டார்?

ரஷ்யாவில் என்னை அதிசயமாகக் கேட்டார்களே! ரஷ்யாவிலே ஒரு மாணவன்
என்னைப் பார்த்து, 'என்ன, உங்கள் நாட்டிலே மகாராஜாக்கள் இருக்கிறார்களாமே!
அதுபோலவே, பறையர் இருக்கிறார்களாமே! அவர்களெல்லாம் எப்படி இருப்பார்கள்?'
என்று அதிசயமாகக் கேட்டான். (அதாவது மகாராஜா, பறையர் இருக்கிறார்களாமே
என்று) நான் சொன்னேன்—'அதோடு மட்டுமல்ல—பார்ப்பானும் அதாவது பிராமணான்
என்பவனும் எங்கள் நாட்டில் இருக்கிறான்' என்றேன்.

அவனைப்பற்றியும் சொன்னேன். அதற்கு அவன் ஆச்சரியப்பட்டுப் போய்
விட்டான். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், அந்த நாட்டிலே இதைப்பற்றித்
தெரியாது. அப்படி இருக்கும்போது அதுதான் 'வேத வாக்கு' 'ஞான சூத்திரம்' என்று
சொன்னால், என்ன அர்த்தம்?

இவ்வளவு பாடுபட்டும் இன்னும்—இந்தக் காலத்திலும் பார்ப்பான் இருக்கிறான்;
சூத்திரன் இருக்கிறான்; பறையன் இருக்கிறானே! இந்தக் காலத்திலா இத்தகைய
பேதங்கள் இருப்பது? அந்தச் சாதிகளில் ஒன்றுதானே தொழிலாள சாதி! பாழும்
சுயராஜ்யம் வந்தும் ஒரு பார்ப்பான் குறையவில்லை; ஒரு பார்ப்பான் ஆதிக்கமும் குறைய
வில்லை. சூத்திரன் குறையவில்லை; பறையனும் குறையவில்லை; அவர்களது இழி
நிலை, பாட்டாளித் தன்மை குறையவில்லை. இவை குறையவில்லை என்பதோடு மட்டு
மல்ல—இந்தப் பேதங்கள் இந்த சுயராஜ்யக் குடியரசிலே இன்னும் அதிகமாகப் பலப்
படுத்தப் படுகின்றனவே!

இதைப்பற்றிக் கொஞ்சமாவது, தொழிலாளர்களுக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக்
கொள்ளும் இந்த வீரர்கள் கவலைப்பட வேண்டாமா? இந்த நாட்டுக்கு இது ஒரு முக்கிய
மான சங்கதி. இத்தனை நாளும் யாரும் இதைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்ள



வில்லையே, எங்களைத் தவிர! வீராதி வீரர்கள் என்றெல்லாம் 'விருது' பெற்ற 'சூரர்கள்' இதைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லியிருக்கிறார்களா? சும்மா தொழிலாளர்களை உசுப்பிவிட்டு அடி உதை வாங்கி வைப்பதில்தானே அவர்கள் கவனம் செலுத்தினார்கள்? தொழிலாளிக்கு அடி உதை; அதோடு மட்டுமா? தொழிலாளர் குடும்பப் பெண்கள் எத்தனை பேர்கள் கற்பழிக்கப்பட்டார்கள்? எத்தனை பெண்களைக் குடுமியைப் பிடித்துக் கொண்டு தெருவிலே கொண்டு வந்து போட்டு அடித்தார்கள்? இவ்வளவு பாடுகள் படச் செய்தா இரண்டணா கூலி உயர்த்தித் தருவது? குறைந்த கஷ்ட நஷ்டத்தில் அதிகப்படியான இலாபத்தை அல்லவா பெற வேண்டும்? இதை நினைத்தால் எனக்கு மனம் பதறுகிறது. நம் மக்கள் இப்படி ஏமாற்றப்படுகிறார்களே என்கின்ற ஆத்திரத்தில் சில சமயங்களில் இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. எத்தனை நாளைக்கு இப்படி நடந்தாலும் சூத்திரன் (தொழிலாளி) சூத்திரனாகவும் பார்ப்பான் (பிறவி முதலாளி) பார்ப்பானாகவும்தானே இருப்பர்?

நியாயமாக—எந்தவிதமான ஒளிவு மறைவுகளன்னியில்—எந்தவிதமான கட்சி சுயநலமன்னியில்—வெளிப்படையாக—பலாத்காரம் இல்லாமல் காரியம் செய்தால், இந்தத் தொல்லைகள் படவேண்டிய அவசியமே இல்லை. இன்றைய தினம் தொழிலாளிகள் நாள் தவறாமல் சோறு தின்னாவிட்டாலுங்கூட, அடி, உதை தின்று கொண்டிருக்கிறார்களே, இந்த நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும். மாற்றியமைக்கிறேனா இல்லையா என்று பாருங்கள்.

நாங்கள் இந்த 25 ஆண்டுகளாக பார்ப்பன ஒழிப்புப் பிரச்சாரம் செய்து வருகிறோமே! எவ்வளவு பேசியிருக்கிறோம்? அதனால் இதுவரை ஏதாவது கலவரம் உண்டாயிற்றா? ஒரு பார்ப்பானுக்காவது ஒரு சிறு அடியாவது பட்டிருக்குமா? ஒரு பார்ப்பனப் பெண்ணின் உடம்பிலாவது, கை மேலே பட்டிருக்குமா? மற்றும் எந்தப் பார்ப்பான் வீட்டிலாவது நாங்கள் புகுந்து கலவரம் செய்தோமா? பார்ப்பனர்களுடைய கொள்கைகளை அவற்றின் சூதுகளைத் திராவிட மக்களுக்கு எடுத்துக் காட்டி, அவர்கள் விடுதலை பெற வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வந்தோமே தவிர, வேறு என்ன செய்தோம்?

சமுதாயத்தில் அவர்கள் வேறு; நாம் வேறு. நம் விடுதலைக்கு—முற்போக்குக்கு நம் மக்கள் நடந்து கொள்ள வேண்டியதை நாம் பேசுகிறோம்; விஷயங்களை எடுத்துச் சொல்கிறோம். கொள்கையின் அடிப்படையிலே பேதப்படுத்துகிறோம் என்ற—நாகரிகமான முறையில் இருக்கிறோமே தவிர, 'குத்து, வெட்டு, கொலை, பலாத்காரம், நாசம், ஒழுங்கு மீறிய காரியம் செய், கொள்ளையடி'! என்றா சொல்லிக்கொண்டு திரிந்தோம்? அப்படியெல்லாம் செய்யாததால் எங்கள் கருத்து சிறிதும் வெற்றி பெறாமலா போய்விட்டது?

கம்யூனிஸ்டுகளுடைய கஷ்டமே தீர்ந்தது என்றால், எப்படித் தீர்ந்தது? 'புத்தி வந்தது, இனிமேல் நாங்கள் பலாத்காரத்தில் ஈடுபடமாட்டோம்; 'பார்லிமெண்டரி' முறையிலேயே இருக்கிறோம்; 'அண்டர் கிரவுண்ட்' வேலையெல்லாம் வைத்துக் கொள்வதில்லை'—என்றெல்லாம் சர்க்காரிடத்தில் சொல்லிக்கொண்டதால்தானே, அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்! அவர்கள் மீதிருந்த 'வாரண்ட்'களெல்லாம் ரத்து செய்யப்பட்டன? சிறையில் இருந்தவர்கள் விடுதலையடைந்தார்கள்; வழக்குகள் சில வாபஸ் வாங்கப்பட்டன. நான், அதை ஒன்றும் கேவலமாகச் சொல்லவில்லை. பலாத்காரத்தை விட்டுவிட்டு எந்தக் காரியத்தையும் நேரிடையாகச் செய்ய ஆரம்பிப்பது என்றாலே அதிலே நிச்சயம் ஜெயம் உண்டு. அதை யாரும் மறுக்க முடியாது.

[பொன்மலையில், 10-9-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-9-1952]

படிப்பகம்

www.padippakam.com



## 2. சாதித் தொழிலாளி—கூலித் தொழிலாளி

இந்த நாட்டில் விவசாயத் தொழிலாளி, உழவர், வேளாளர் ஆகிய சாதியைச் சேர்ந்தவர்; நெசவுத் தொழிலாளி, கைக்கோளர், தேவாங்கர், சாலியர், பட்டுநூல்காரர் முதலிய சாதிகளைச் சேர்ந்தவர்கள்; உலோக, மரத் தொழிலாளிகள், விஸ்வகர்ம ஆச்சாரி வகுப்பைச் சேர்ந்தவர்கள்; சிற்பத் தொழிலாளிகளில் உலோகம், மரம், கல், மண் கட்டடம் ஆகியவைகளுக்கு விஸ்வகர்மாக்களுடன் மற்றும் உப்பாரன் என்னும் உப்பிலியர், ஒட்டர், கொல்லத்துக்காரர் முதலிய சில சாதிகளைச் சேர்ந்தவர்கள்; இவர்களைத் தவிர்த்து மற்றும் குடிமக்கள் என்னும் பேரால் மனித சமூக வாழ்க்கைக்கு அவசியமான பல தொழில் களுக்கும் குடிமக்கள் என்னும் தலைப்பில் பலவகை வாணியர், வலையர் குயவர், வண்ணார், நாவிதர்; இன்னும் மக்களுக்குப் 'போக இன்பம்', நாட்டிய இன்பம் அளிக்கும் தொழில்களை மேற்கொண்ட தொழிலாளர் மக்கள்—எல்லோருமே நம் நாட்டில் 'இந்து சமயம்' காரணமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாதியின் பேராலேயே வகுக்கப் பட்டிருக்கிறார்கள்.

இந்துமத ஆதாரப்படி-இந்துமத தர்ம சாஸ்திரங்களின் விதிப்படி இத்தொழிலாளிகள் இவ்வளவுபேரையும் உழவர், நெசவர், வாணியர், பல தொழில் தச்சர்கள் உட்பட யாவரையும் வருணாசிரம சாதி முறையில் நாலாம்சாதி—சூத்திர சாதியாய் ஆக்கி; மற்றும் அதனுள்ளும் கீழ்-மேல் படி வைத்து, ஒருவருக்கொருவர் உண்பன, தின்பன, தொடுதல்-நெருங்குதல் கூட இல்லாமல் இருக்கும்படியான இழிவுகளை உண்டாக்கி—ஒருவரை ஒருவர் இழித்துக் கூறிக்கொள்ளும்படியாகச் செய்துவைத்து, இந்த முறையும்கூட நாட்டுக்கு ஒருவிதமாய் நட்பிலிருக்கும்படியாக ஆக்கிக் கீழ்மைப்படுத்தி—அவர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் நலனுக்கும், மேன்மைக்கும் முயற்சிசெய்ய வழி இல்லாமல் செய்துவைக்கப்பட்டிருக்கிறது.

இது ஒருபுறம் கல்லின்மேல் எழுத்துப்போல் ஆதாரத்திலும் அநுபவத்திலும் இருந்துவந்தாலும்—இந்தத் 'தொழிலாளர் சாதியார்கள்' ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தனி சாதியையும், வகுப்பையும் உயர்வாகப் பேசிக்கொள்வதிலும் வழிதேடிக்கொள்வதிலும் எவரும் இளைத்தவர்கள் அல்லர்!

உண்மையில், பகுத்தறிவுப்படி இந்தியனாகவோ, இந்து சமயத்தானாகவோ இல்லாமல் உலகப் பொதுமகனாக இருந்து ஒருவன் நோக்கினானேயானால், இவ்வளவு தொழிலாளர் சமூகமும், இன்னும் இதில் குறித்திராத பள்ளு, பறை, சக்கிலி, தோட்டி என்று சொல்லப்படும் சமூகங்களும் யாவரும் பிறவியில் பேதமில்லாத மனித சமூகம் ஆவார்கள்.

மொத்தத்தில் தொழில் என்பது மக்களின் சமுதாய வாழ்க்கைக்கு இன்றியமையாத தொன்றாகும். மனிதன் காட்டுமிராண்டி வயதில் தன்னந்தனியாய்—மிருகங்களைப்போல் காடுகளில் திரிந்த காலத்தில் இம் மாதிரித் தொழில்முறைகள் தேவை இருக்காது. ஆனால், சமுதாயமாகச் சேர்ந்து கூட்டு வாழ்க்கை வாழ ஆரம்பித்த பின்—காலம் செல்லச் செல்ல—அறிவு பெருகப் பெருக, தேவைகள் வலுக்க வலுக்க பல தொழில்கள் செய்யவேண்டியது மனிதனுக்கு அவசியமாயிற்று. அதிலிருந்து நிலைமைக்குத் தக்கபடி தொழில்களும், தொழில் செய்யவேண்டிய அவசியமும் மக்களுக்கு ஏற்பட்டன. அவற்றை ஒவ்வொரு மனிதனும் அவனவன் உடல் சக்தி, அறிவு சக்தி ஆகிய காரணங்களுக்குத் தக்கபடி செய்து வருகின்றான். இதற்குச் 'சாதியோ', 'வகுப்போ' இல்லாமல், அவரவர்கள் சவுகரியம் இச்சை ஆகியவைகளுக்குள்ளாகவே தொழில்கள் சார்ந்துவிட்டன. அந்த முறைதான் இன்றளவும் உலக முழுதும் நடந்துவருகின்றது. கஷ்டமானதாகவோ, அசவுகரியமான தாகவோ ஒரு தொழில் இருக்குமானால் அந்தத் தொழில் நாளாவட்டத்தில் கஷ்டக் குறை வாகியும், அசவுகரியக் குறைவாகவும் செய்யப்படவேண்டியதுதான் அறிவுடைமையே தவிர—தொழில்களில் உயர்வு தாழ்வு கற்பித்து நிலைநிறுத்துவதோ, தொழில்களுக்குத் தத்துவார்த் தங்கள் கண்டு பிடிப்பதோ, அவற்றை மற்றவர்கள் தலையில் போடப் பார்ப்பதோ,



தொழிலாள சாதியர்கள் தங்கள் தொழிலை மாற்றாமல் சாதியை உயர்த்திக்கொள்ள நினைப்பதோ எவ்வித பயனும் அளிக்காது.

உழவுத் தொழிலாளியும், விஸ்வகர்மத் தொழிலாளியும் ஒன்று என்பதுதான் நமது அபிப்பிராயம். சாதிப் பிரிவால் பேதப்படுத்தப்பட்டுவிட்டதல்லாமல் மனித சமூக வாழ்வுக்கு இவர்கள் யாவரும் சமுதாயத்திற்கு அஸ்திவாரம் போன்று இன்றியமையாதவர்கள்; ஒரே விதமாகத் தொண்டாற்றுகிறவர்கள். இவர்களில் எதற்காகப் பேதம் காணவேண்டும்? சமயத்தில், சாஸ்திரத்தில் சொல்லும் பேதங்கள் அல்லாமல் பிரத்தியட்சத்தில் என்ன பேதம் காணமுடியும்? ஆதலால், தொழில்களில் உயர்வு-தாழ்வுகளையும், தொழிலாளி சமூகங் களில் உயர்வு-தாழ்வுகளையாக்கும் சாதிபேதங்களையும் அழிப்பதற்கு முயற்சிப்பதுதான் தொழிலாளர் முன்னேற்றமாகும். ஒரு தொழிலாளிக்கு மற்றொரு தொழிலாளி எவ்வளவு உயர்ந்த சாதியானாலும், சாதி முறையில் அவன் மற்றொரு சாதிக்குக் கீழ்ப்பட்டவனாக ஆகித்தான் தீருவான். ஆதலால், அவைகளை வலியுறுத்தும் சமயமும், சாஸ்திரமும் முதலில் அழிக்கப்படவேண்டும். அப்படியில்லையானால், கல் தச்சனும், நெசவாளியும் பிராமணனாக முயற்சித்தால் மற்றொரு தொழிலாளி ரிஷியாக முயற்சிக்கிறான். இதன் பயனாய், பிராமணன் என்பவன் உயர்ந்தவன் என்பதும், ரிஷிகள் என்பவர்கள் உயர்ந் தவர்கள் என்பதும், தேவர்கள் என்பவர்கள் உயர்ந்தவர்கள் என்பதும்தான் நிலைநிறுத்தப் பாடுபட்டதாக ஆகுமேயல்லாமல்—தொழில் முறைக்கோ, தொழிலாளி சாதி இழிவு என்பதற்கோ யாதொரு பயனும் ஏற்படப்போவதில்லை.

நாட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டானாலும் சரி—பாடுபட்டு உண்கின்றவனும், பாடுபடாமல் உண்கின்றவனுமான இரண்டு பிரிவுகள் உள்ளவரை மனிதனில் மேல்-கீழ் நிலைமை இருந்துதான் வரும். இது உலகமெல்லாம் இருந்துதான் வருகிறது. பாட்டாளி, அன்னியன் கையை எதிர்பார்க்க வேண்டியவனாய் இருக்கிறான். இது மாறவேண்டு மானால், பாட்டாளிகளின் ஒற்றுமைப் பலத்தினால்தான் முடியும். பாட்டாளிகளுக்குள் முதலில் சாதிபேதம் இருக்கக்கூடாது; தொழில்களை உயர்வு தாழ்வாய்க் கருதக்கூடாது.

எல்லோரும் ஒன்றுசேர வேண்டும். பேதமும்-இழிவும் கற்பிக்கும் சமய சாத்தி ரங்களை அழிக்கவேண்டும்; அரசியலைக் கைப்பற்றவேண்டும். உயர்ந்த சாதியார் என்பவர்களையோ, சோம்பேறிகளாய் உடலுழைப்பு இல்லாமல் வாழ்கிறவர்களையோ, எதிரிகளாகக் கருதி—அக் கொள்கைகளை நிர்மூலமாக்கவேண்டும். ஒவ்வொரு தொழிலாளி வகுப்பும், 'தங்களால்தான் உலகம் இருக்கிறது; தங்களால்தான் மக்கள் வாழமுடிகிறது; மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்குத் தாங்களே அஸ்திவாரமானவர்கள்' என்பதை உணரவேண்டும். உணருவது மாத்திரமல்லாமல், 'அப்படிப்பட்ட தொழிலாளர் சமூகம் சமுதாயத்தில் கீழ்நிலையில் இருப்பானேன்? இது நம்முடைய அறிவீனமும் ஒற்றுமையற்ற தன்மையும் அல்லவா?' என்று சிந்திக்கவேண்டும். இந்த இரண்டும் இல்லாததனாலேயே தொழிலாளர்களுக்குப் பொதுத் தலைவர் இல்லை; பகுத்தறிவு இல்லை; முன்னேற்றத் திட்டம் இல்லை. சோம்பேறிகளுக்கு-ஊரார் உழைப்பில் வாழ்பவர்களுக்குக் கை ஆயுதமாய் அவர்கள் இருக்க நேரிட்டது.

இந்த நிலையை மாற்றுவதற்கே இன்று இந் நாட்டில் இருக்கும் பிராமணர்—பிராமணர் அல்லாதார் போராட்டம் என்பது ஏற்பட்டதே ஒழிய, வேறு எந்தக் காரியத்திற் காகவும் ஏற்பட்டதல்ல. இதைத் தொழிலாளி மக்கள் உணராமல் சோம்பேறி வாழ்க்கைப் பிரியர்களான பார்ப்பனர்களுக்குக் கையாட்களாக ஆனதின் பயனாலேயே—தொழிலாளி களுக்கும், தொழில் முறைக்கும் நாளதுவரை எவ்வித முற்போக்கும் ஏற்படவில்லை. 'பார்ப்பனர் அல்லாதார் கட்சி' என்னும் 'ஜஸ்டிஸ் கட்சி' தனக்கு அரசியல் ஆதிக்கம் சிறிதளவும் கிடைத்த காலத்திலும்—அது இந்த சாதி உயர்வு-தாழ்வு பேதத்தை ஒழிக்க எவ்வளவோ வேலை செய்தது. பெரும்பாலும் அதனுடைய வேலைப்பயன் தொழிலின்



படிப்பகம்

www.padippakam.com



காரணமாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில், பழ்படுத்தி வைக்கப்பட்ட மக்கள் விஷயத்தில்
எவ்வளவோ முன்னேற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. தொழிலாளிகள் என்பவர்கள்
யாராய் இருந்தாலும், 'சாதித் தொழிலாளி'யானாலும், 'கூலித் தொழிலாளி'யானாலும்
சரீரத்தால் பாடுபடுகிறவர்கள் என்றால் அவர்கள் அத்தனைபேரும் பார்ப்பனரல்லாதவர்
களாகவே இருக்கிறார்கள். அவர்களைத் தவிர்த்த மற்றவர்கள் பெரிதும் சாதியால் பார்ப்
பனர்களாகவும் சிலர் அவர்களைப்போல் பாடுபட இஷ்டப்படாத சோம்பேறிகளாகவும்
இருப்பவர்கள். இவர்களும் தங்களை ஒரு வித மேல் (சாதியார்) வகுப்பார் என்று சொல்லிக்
கொள்பவர்களாக இருப்பார்கள். ஆனாலும், பார்ப்பனர் தவிர மற்றவர்கள் சூத்திரர்களாக
இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

['விடுதலை'-தலையங்கம்—16-2-1940]

## 3. 'குறிப்பிட்ட தொழில் ஏன்?'

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நான் 1927-லேயே சொன்னேன், கூலி உயர்ந்தால்—அதுவே தொழிலாளருக்குப்
போதாது; அவன் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும் என்று. இதெல்லாம்
தொழிலாளருக்குத் தெரியாது. தவறிக் காலின்மேல் கோடரியைப் போட்டுக் கொண்டால்
கூட 'இது கடவுள்செயல்' என்று கூறிக்கொள்வான்; முதலாளி 40 இலட்சம் சம்பாதித்தால்
30 இலட்சம் வரியாகக் கொடுக்கவேண்டும். அரசாங்கம் 30 இலட்சம் வரியாக வாங்குவதை,
5500 தொழிலாளர்கள் வேலைசெய்தால் அவர்களின் பிள்ளைகள் 4500 பேர் படிக்க வசதி
செய்ய 7, 8 இலட்சம் அதிலிருந்து செலவு செய்யவேண்டும். தொழிலாளியின் மகனைப்
படிக்கவைத்தால் அவன் முன்னேற வழி உண்டு. படித்தபிறகு அவனும் கோடரி, மண்வெட்டி
எடுக்கவேண்டிய நிலை ஏற்படாது; 'பிச்சை எடுத்தாகிலும் வயிற்றைப் பார்த்துக்
கொள்வேன்' என்று கூறுவானே தவிர, பரம்பரைக் கூலியாகவே இருக்கமாட்டான்.
பரம்பரைத் தொழிலாளி நிலை மாறவேண்டும். மேலும், இந்த நாட்டில் நாற்று நடுதல், ஏர்
உழுதல் போன்ற வேலைகள் குறிப்பிட்ட ஒரு சாதியாருக்கு, சூத்திரருக்கு என்று
இருக்கிறது. மனிதன் செய்யும் தொழில் என்று இருக்குமானால் குறிப்பிட்ட ஒரு சாதியார்
மட்டும் ஏன் செய்யாமல் இருக்கவேண்டும்? எந்தப் பார்ப்பான் ஏர் உழுகிறான்? எந்தப்
பார்ப்பனத்தி நாற்று நடுகிறாள், புல் விற்கிறாள்? பார்ப்பனத்திகளுக்குச் சாமான் கழுவத்
தெரியாதா? நம் பெண்கள் அந்த வேலையைச் செய்யவேண்டும் என்பது என்ன
சம்பிரதாயம்? நம் பெண்கள் சாமான் கழுவ கல்லூரிபோய்ப் படித்துவிட்டு வந்திருக்
கிறார்களா? பார்ப்பனத்தி, பார்ப்பான் என்றைக்கு அந்த வேலையைச் செய்கிறார்களோ
அன்றுதான் அது தொழிலாளி செய்யும் வேலை ஆகும். சிறிது நாட்களுக்கு முன்
பார்த்தோமே, நம் பெண்கள் சதிர் ஆடினார்கள்; அவர்களைத் தேவடியாள்கள் என்று
கூறினார்கள் பார்ப்பனர். அவர்களே ஆட ஆரம்பித்தார்கள்; உடனே அது பரதநாட்டியம்
என்று சொல்லிவிட்டார்கள். பார்ப்பனர்கள் துணி சலவைசெய்தல் முதலிய வேலைகளைக்
கட்டாயம் செய்தே ஆகவேண்டும். இந்த மாதிரி அமைப்பு ஏற்பட்டால்தான் தொழிலாளி
களுக்குள் இருக்கும் வேறுபாடுகள் மறையும்; இல்லாவிட்டால் மறையாது. பிராசுதார்
களுக்கும் இன்று இல்லாவிட்டாலும் நாளைக்குச் சட்டம் வந்துவிடும். ஆகவே, அவர்களும்
பரவாயில்லை என்று சொல்லத்தக்க அளவில் நடந்துகொள்ள வேண்டும். தொழிலாளர்
களும் கட்டுப்பாட்டோடு இருக்கவேண்டும். மற்றவர் பேச்சைக் கேட்டுக் கலகத்தில்
இறங்கக்கூடாது. கூடிய சீக்கிரத்தில் தொழிலாளருக்கு இலாபம் ஏற்படும்படியான
நிலைமை வரும்.

[புகளூரில், 26-7-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை'-10-8-1956]



## 4. பிறவி முதலாளி

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

பெரியவன்–சின்னவன், பணக்காரன்–ஏழை, எஜமான்–அடிமை, நிலப்பிரபு–கூலி என்னும் வேறுபாடுகள் இருக்க வேண்டுமென்பது நீண்ட நாளாக உலகத்திலே இருந்துவருகிற சம்பிரதாயம்; விதி. ஆனால், இந்தப்படியான அமைப்புகள் எதற்காக இருக்க வேண்டும்?

மனித சமுதாயத்தில் இம் மாதிரியான பேதங்கள் இருந்துவர வேண்டியதன் அவசியம் என்ன? இந்த அமைப்புமுறை மாறிவிடுவதனால் சமுதாயப் பொதுநிலைமைக்கு என்ன நட்டம், பங்கம் வந்துவிடும்? இந்த மாதிரியான ஒரு அமைப்புமுறை இருந்து வருவதனால் ஒரு பெரும் ஜனக்கூட்டம் கஷ்டப்படவும், தங்களுடைய சராசரித் தேவைகளைக்கூடப் பெற முடியாமல் நசித்துக்கொண்டு போகவுமான நிலைமைதான் வளருமே தவிர, இன்னொரு கூட்டம் ஏழைகள்மீது குதிரையேறிக் கொண்டிருக்கத்தான் பயன்படும் என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டறிந்து, நிலைமையை மாற்றியமைக்கக் கிளர்ச்சி செய்யப்பட்டது.

இந்த மாதிரியான பணக்காரன்-ஏழை, முதலாளி–தொழிலாளி, நிலப்பிரபு–பண்ணையாள் என்பதான முறை ஆண்டவனாக, கடவுளாகப் பார்த்து மனித சமுதாய வாழ்வுக்காக வகுத்துவைத்தது என்கிற எண்ணமே—நம்பிக்கையே நீண்டநாளாக, பேதம் உள்ள அமைப்பை இருக்கும்படி செய்துவிட்டது. இது கடவுள் செயல் அல்ல; சில சுயநலக்காரர்கள் தங்களின் வாழ்வு ஆதிக்கத்துக்காக ஏற்படுத்திக்கொண்ட முறைதான் இது என்று மக்கள் தெளிந்த பிறகுதான்—கிளர்ச்சி ஏற்பட்டு, மேல் நாடுகளில் மாறுதல் ஏற்பட்டது. இந்த மாதிரியான கிளர்ச்சிகள் மற்ற நாடுகளிலேதான் வெற்றிபெற்றனவே தவிர, இன்னும் இந்த நாட்டில் பேதம் இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த நாட்டிலே பார்க்கிறோம் முதலாளி–தொழிலாளி மற்றும் இதுபோன்ற பேதங்கள் இருப்பதை. இந்தப் பேதங்கள் மாத்திரமல்லாமல், இன்னும் இதைவிடக் கொடுமையாய், இந்த நாட்டிலே, பார்ப்பான்–சூத்திரன்–பறையன் என்பதான பிரிவுகள் இருக்கின்றன. மற்ற நாடுகளில் ஏழை–பணக்காரன் என்ற பேதம் இருந்ததே தவிர, பார்ப்பான்–பறையன் என்ற பேதம் அங்கு எல்லாம் இல்லை. ஆனால், இங்கு பணக்காரன்–ஏழை என்கிற பேதத்தோடு மட்டும் இல்லாமல் பிறவியிலேயே உயர்சாதிக்காரப் பார்ப்பானும், இழி சாதிக்காரப் பறையனும் இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், ஏழை–பணக்காரன் என்பது, எப்படிக் கடவுள் அமைப்பு என்று சொல்லப்பட்டு வந்ததோ, அதைப்போலவே இந்தச் சாதி உயர்வு–தாழ்வுத் தன்மை கடவுளின் பேரால் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

முதலாளி என்பவன் பரம்பரை பரம்பரையாக வருபவனல்லன். இன்றைக்கு ஒருவன் முதலாளியாக இருக்கலாம்; நாளைக்கே அவன் 'இன்சால்வென்ட்' கொடுத்து 'பாப்பர்' ஆகிவிடலாம். அதுபோலவே, இன்று கஞ்சிக்குத் திண்டாடியவன் அடுத்த நாள் பெருத்த முதலாளியாக வரலாம். ஆனால், பார்ப்பான் என்பது அவன் உயர் சாதிக்காரன், கடவுளுக்கு நேராகத் 'தந்தி' சொல்கிறவன் என்பது பரம்பரை பரம்பரையாக—வாழையடி வாழையாக வருவது ஆகும். அழுக்குப் பிடித்த பார்ப்பான் ஆனாலும், குஷ்டம் பிடித்து அழுகிய பார்ப்பான் ஆனாலும், அயோக்கியப் பார்ப்பான் ஆனாலும் பார்ப்பார சாதியிலே பிறந்து விட்டதால், அவன் உயர்ந்த சாதிக்காரன் ஆகிவிடுகிறான்; அவன் மற்றவர்களால் மரியாதை செய்யப்பட வேண்டியவனாகி விடுகிறான். அதேபோல, எவ்வளவு அறிவாளியாய் இருந்தாலும், திறமைசாலியாய் இருந்தாலும், ஒரு சாதியில் பிறந்ததாலேயே அவன் பறையன், சூத்திரன், தேவடியாள் மகனாகக் கருதப்பட்டு, மேல்சாதிக்காரர்களுக்கு கை கட்டிச் சேவகம் செய்து வாழ வேண்டியவனாகக் கருதப்படுகிறான்.

படிப்பகம்

www.padippakam.com



முதலாளியாவது, நிலப் பிரபுவாவது அசையும் சொத்து, அசையாச் சொத்து என்பவைகளை வைத்துக்கொண்டு, முதல் வைத்துக்கொண்டு உயர்வுத் தன்மை படைத்தவனாக வாழ்கிறான்.

ஆனால், இந்தப் பார்ப்பானோ கை முதலே இல்லாமல் கடவுளைக் காட்டி, மதத்தைக் காட்டி, தர்ப்பைப் புல்லைக் காட்டி மேல்சாதிக்காரனாக உழைக்காமல் உண்டு கொழுப்பவனாக வாழ்கிறான்.

இந்த விசித்திரமான நிலைமை பாழாய்ப்போன இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இல்லை. உள்ளபடியே சொல்லுகிறேன்,—இன்று ஏன் நாம் தொழிலாள மக்களாய் இருக்கிறோம்? சாதி அமைப்பின் காரணமாகத்தானே!

சூத்திர சாதி என்பதால் நாம் பார்ப்பானுக்கு உழைத்துப்போட வேண்டியவர்கள். பார்ப்பனர்கள் என்பதால், அவர்கள் எல்லாவற்றையும் தங்கள் வயிற்றுக்கே வாய்க்கால் வெட்டி விட்டு உயர் வாழ்வு வாழ்கிறவர்கள். இன்னும் சொல்லப்போனால், சாதி உட்பிரிவுகள் இருக்கின்றனவே, அவைகள் எதற்காக ஏற்படுத்தப்பட்டன? பார்ப்பன பாஷைப்படி எடுத்துக்கொண்டால்கூட, தொழிலுக்குத்தானே சாதிப் பிரிவு? பறையடிக்கிறவன்—பறையன்; வெளுப்பவன்—வண்ணான்; மண்பாண்டம் செய்கிறவன்—குயவன். ஆனால், வேதம் ஓதுகிறவர்—அய்யர், இப்படித்தானே! இதில் பார்ப்பனரைத் தவிர மற்றையோரெல்லாம் உடலுழைப்புக்காரர்கள், சாதியின் முறைப்படியே—சமுதாயத்தின் அமைப்புப்படியே! எனவேதான் சொல்லுகிறேன்—இன்றைய அமைப்பு முறை, பேதத் தன்மை, ஏழ்மை-உயர்வு நீங்க வேண்டுமென்றால் இந்த நாட்டிலே முதலாளியை ஒழித்தால் மட்டும் போதாது; பார்ப்பன உயர்வுத் தன்மை, அதற்குக். கடவுள் மத சாஸ்திரத்தின்மீது கட்டப்பட்டுள்ள பலமான பாதுகாப்பு—இவைகளை ஒழித்தால்தான் முடியும்.

1000 முத்தையா செட்டியார்களும் சரி,—ஒரு சங்கராச்சாரிப் பார்ப்பானும் சரி. நாளை எல்லோருக்கும் நிலம் பொதுவானது என்று பிரித்துக் கொடுத்து விடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். வருஷம்தோறும் சிரார்த்தம், திவசம் என்பவைகளின் பேரால் பார்ப்பான் கறந்துகொண்டுதானே இருப்பான்! கடவுளின் பெயரால் அர்ச்சகப் பார்ப்பான் சுரண்டிக்கொண்டுதானே இருப்பான்! எனவே, இந்த நாட்டுப் பேதங்கள் நிலைநிறுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம் எல்லாம் கடவுள், மதம், சாஸ்திரம் என்பவைகளும், அவைகளின் பேரால் வாழுகிற கூட்டமும்தான் என்பதை உணர்ந்து இவைகளை ஒழித்தால்தான், 'எல்லார்க்கும் எல்லாமாய்' என்று சொல்லுவார்களே—அந்த நிலைமை இங்கு ஏற்படும்.

[குளித்தலை-வதியத்தில் சொற்பொழிவு—'விடுதலை' 2-7-1952]

## 5. திராவிடத் தொழிலாளர் என்பது ஏன்?

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்த மாநாடு திராவிடத் தொழிலாளர் மாநாடு. விவசாயத் தொழிலாளர் கழகங்கள் ஏராளமாக உண்டு. அவைகள் இருந்தும் ஏன் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படவில்லை? அவர்கள் விடுதலைக்கு வேண்டிய கொள்கைகளைச் சொல்லலாமென்றுதான் திராவிடத் தொழிலாளர் சங்கம் என்று வைத்தோம். இதன் பலன் தெரிந்துகொண்டு திராவிட கம்யூனிஸ்ட் கழகம் வைக்கலாம் என்று இருக்கிறோம். திராவிடம் என்ற சொல்லை ஏன் புகுத்துகிறோம்? பொதுவாக இருக்கவேண்டிய கழகத்திற்கு, ஏன் திராவிடர் கழகம் என்று வைத்தோம்! பொதுவுடைமை என்பதற்கு ஏன் திராவிடப் பொதுவுடைமை என்று வைக்க ஆசைப்படுகிறோம்?



இந்த நாட்டில் விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரும் திராவிடர்கள்தாம்; மங்கோலியரோ, நீக்ரோக்களோ, ஆரியரோ அல்லர். திராவிடர்தான் பாட்டாளிகளாய், விவசாயிகளாய் வாழ்கிறார்கள். சாதாரணமாக விவசாயி, தொழிலாளி என்பது ஒரு பொது நிலைமை. அதில் திராவிட சம்பந்தமில்லை. பொதுவான பெயரே போதுமென்று மற்ற கழகங்கள் கருதுகின்றன. ஆனால், திராவிடனாக இருப்பதால்தான் தொழிலாளியாக இருக்கிறான் என்று நாங்கள் கருதுகிறோம். சரீரத்தால் பாடுபடும் சமுதாயம் திராவிட சமுதாயந்தான். திராவிடரல்லாதவர்கள் யாரும் தொழிலாளியாக இல்லை. கடவுளால் தொழில் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்ட பிறவி திராவிடன் என்று சாத்திரத்தில் எழுதி வைத்துவிட்டார்கள். திராவிடர்களாய் இருப்பதால்தான் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்ற நிலைமையை உணர்த்துவதற்காகத்தான் திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்று வைத்தோம்.

[கள்ளக்குறிச்சியில், 4-10-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 8-10-1953]

## 6. தொழிலாளர் நிலை

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

எனக்குத் தெரிந்து விக்டோரியா மகா ராணி, ஜார்ஜ் எட்வர்ட், அய்ந்தாம் ஜார்ஜ். ஆறாம் ஜார்ஜ், இப்பொழுது எலிஸபெத் ஆளுகிறார்கள். இவர்களின் அரசாட்சியே போய் விட்டது. நம் நாட்டில் உள்ள இராசாக்கள், ஜமீன்தார்கள் எல்லாம் சட்டத்தினால் அடிபட்டுப் போய்விட்டார்கள். ஏன், இவர்கள் நினைத்தால் வெற்றி அடைய முடியாதா? ஏன் போய்விட்டார்கள்? மக்களின் மனது மிகவும் மாறிக்கொண்டு வருகிறது. யாரை யார் ஆள்வது என்ற உணர்ச்சி! பணக்காரர் மட்டும் என்ன மிஞ்சப்போகிறார்கள்? பணக்காரன் இலாபத்துக்கும் அரசாங்கம் சட்டம் போட்டது. அவன் ஒரு ரூபாய் சம்பாதித்தால் 12 அணா வரியாகக் கொடுக்கவேண்டும். பூமியை வேறு பிடுங்கிக்கொள்ளப் போகிறோம் என்று அரசாங்கத்தார் கூறுகிறார்கள். இது தேர்தல் தந்திரப் பேச்சு. நேரு காலத்தில் சிறிது தாமதமானாலும் ஆகலாம்; நேருவிற்குப் பிறகு சீக்கிரம் பிடுங்கிக்கொள்வார்கள். அப்படி அரசாங்கத்தார் பிடுங்கிக்கொள்ளாமல் விட்டால் மக்களே பிடுங்கிக்கொள்வார்கள். அரசாங்கம் கொடுத்தது; கடவுள் கொடுத்தார்; பார்ப்பனர் செய்த மந்திரத்தால் வந்தது என்று சொன்னதெல்லாம் என்ன ஆச்சு? தொழிலாளர் சமபங்காளியாக வேண்டும். தொழிலாளரைப் பற்றிய என் கொள்கையை நீண்டநாட்களாகவே நான் சொல்லிவருகிறேன். 'தொழிலாளருக்குப் பாடுபட்டோம்' என்று சொல்லும் சிலர் தங்களால்தான் கூலி உயர்ந்து விட்டதென்று கூறலாம். ஆனால், கூலி வேலை செய்பவன், தோல் வேலை செய்பவன், வண்டியோட்டுபவன், புல் விற்பவன் இன்றைக்கு முன்பைவிட நான்கு மடங்கு அதிகமாகக் கூலி சொல்கிறானே! அவனுக்காக யார் பாடுபட்டார்கள்? எந்தக் கட்சி பாடுபட்டது? அரிசி மூட்டை ரூ. 10 விற்றது; இப்பொழுது (1956) 45 ரூபாய் விற்கிறதே; அவர்கள் எந்தச் சங்கம் வைத்து விலை ஏற்றினார்கள்? சில அரசியல் கட்சியினர் வேண்டுமென்றே ஒன்று மறியாத தொழிலாளரிடம், 'நாங்கள்தான் பாடுபட்டோம்' என்று சொல்லி ஏமாற்றுகிறார்கள். காலம், சூழ்நிலை இவைகளால் தானாகவே பொருள்களின் விலை அதிகமாயிற்று; கூலியும் அதிகமாயிற்று. மில்லில் 100 ரூபாய் என்று ஒரு பங்கு இருந்தால் அதற்கு 120 ரூபாய் கொடுக்கிறான்; 20 ரூபாய் இலாபம். இது கம்யூனிஸ்டுகளுக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் முதலாளிகளிடத்தில் பிச்சைக் காசு வாங்கிக்கொண்டு தொழிலாளிக்கு இலாபத்தில் பங்கு கேட்பதில்லை. முதலாளி, தொழிலாளிக்கு உதை கொடுக்காமல் சும்மா நாலணா அதிகமாகக் கொடுக்கமாட்டான். நான் ஒருவன்தான் கேட்டேன்; 'முதலாளிக்கு ஏற்படும் இலாபத்தில் சரிபங்கு தொழிலாளிக்கும் கொடுக்க வேண்டும்; தொழிலாளர்களால்தானே இலாபம் ஏற்பட்டது? ஆகவே, தொழிலாளிக்கும் இலாபம் கொடுக்கவேண்டும்' என்று. மேலும், தொழிலாளியின் கூலி உயர்ந்தால் மட்டும்

படிப்பகம்

www.padippakam.com



போதாது. அவன் அந்தஸ்து உயரவேண்டும். இரண்டு ரூபாய் உயர்ந்தால் கோவிலுக்கும், சினிமாவிற்கும், குடிக்கும் பாழாக்கிவிடுகிறான். ஆறுமாத சம்பளம் போனசாகக் கொடுத்தால் காசி, இராமேஸ்வரம், தேர்திருவிழாவுக்குப் போகிறான். கேட்டால் சாமி கொடுத்தது என்கிறான்.

[புகளூரில், 26-7-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-8-1956]

தோழர்களே! தாய்மார்களே!

என்னுடைய அனுபவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்தத் தொழிலாளர் இயக்கங்கள் நாட்டில் ஏற்பட்ட பிறகுதான் தொழிலாளர்களின் ஒழுக்கமே கெட்டுப்போய் விட்டது. அவர்கள் ஒழுக்கம் மட்டும் அல்லாமல் முதலாளிகளின் ஒழுக்கமும் கெட்டு, அதனால் மக்களுக்குப் பெருந்தொல்லையும் ஏற்பட்டுவிட்டது. அப்படியானால், தொழி லாளர் சங்கமே கூடாது என்பதல்ல. இன்று தொழிலாளர்கள் இயக்கங்கள், தொழிலாளர்கள் கையில் இல்லை. தொழிலாளர்களாக இல்லாதவர்கள் கையில்—அதாவது அதைக்கொண்டு வயிறு வளர்ப்பவர்கள் கையில்தான் உள்ளது. தொழிலாளர் சங்கம் ஏற்பட்ட நாள் தொட்டு, அரசியல் கட்சிக்காரர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிற்சங்கம் என வைத்துப் பதவிப் பலன் பெற்றுப் பொறுக்கித் தின்கின்றார்கள்!

எனது 50 ஆண்டு அனுபவத்தின் பயனாகக் கூறுகின்றேன். அந்தக் காலத்தில் காங்கிரசுக்காரர்களே (பார்ப்பனர்கள்) தொழிலாளர்களைப் பயன்படுத்திப் பிழைக்கவும், பெருமையடையவும் தொழிலாளர்களை வேட்டையாட ஆரம்பித்தார்கள். இந்தநிலை அன்னி பெசன்ட் காலத்தில்தான் முதன்முதல் ஏற்பட்டது எனலாம். மற்றும் வாடியாவுக்கு (Wadia) என்று ஒரு தொழிற்சங்கம்; திரு.வி.கவுக்கு என்று ஒரு தொழிற்சங்கம்; பிறகு ரெங்கசாமி அய்யங்காருக்கு ஒன்று; சத்தியமூர்த்திக்கு ஒன்று, வரதராஜுலு (நாயுடு)வுக்கு ஒன்று என இப்படியாக ஏற்பட்டுவிட்டது.

இன்று தொழிற்சங்கம் என்றாலே, 'முதலாளிகளுடன் சண்டை பிடிக்கக்கூடிய ஸ்தாபனம்' என்றுதான் இயங்கிக்கொண்டு வருகின்றது. இதனால் உற்பத்தி குறை கின்றது; இந்தத் தகராறு முதலாளி–தொழிலாளி இருவர்களோடு மட்டும் போகாமல் பொதுமக்களுக்குப் பாதகமாகவும் முடிகின்றது.

நல்ல தொழிலாளர் சங்கம் என்ற ஒன்று இருக்கவேண்டுமென்றால், அது முதலாளி இடத்தில் விசுவாசம்—சொந்தப் பொறுப்புபோலக் கருதித் தொழில் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது, முதலியவற்றைக் கொள்கைகளாகக் கொண்டிருக்கவேண்டும்.

அதுபோலவே, சிறந்த முதலாளிகள் என்பவர்களும் தொழிலாளர்களைத் தங்கள் சொந்தப் பிள்ளைகள்போல் பாவித்து அவர்கள் நன்மையில், மேம்பாட்டில் நாட்டம் செலுத்த வேண்டும்.

நான் சிறிய முதலாளியாக இருந்தவன். எங்கள் அய்யா பெரிய முதலாளி, கணக்கப் பிள்ளைக்கு ரூ. 7 தான் அப்போது சம்பளம்; காரியஸ்தருக்கு 6 தான் மாதம் கொடுப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 4, 5 பிள்ளை குட்டிகள் இருக்கும். அவர்கள் வாங்கும் சம்பளம் சாப்பாட்டிற்குத்தான்; மற்றபடி பிள்ளைகள் படிக்க, புத்தகம், துணிமணிகள், கலியாணம் எல்லாவற்றிற்கும் முதலாளிகள் தனியாகப் பணம் கொடுத்துப் பெருமையாக நடத்துவார்கள். சண்முகம் பிள்ளை என்ற என் குமாஸ்தா கலியாணத்திற்கு, சதிர்க் கச்சேரியுடன், சாரட்டில் ஊர்வலம் வைத்தேன். அவர் என் 'குடி அரசு' ஆபீஸிலும் 1945 வரை இருந்து, 40 வருஷம் உழைத்துச் செத்தார். 'விடுதலை' ஆபீசு வாட்சுமேன் பழனி என்பவர் 35 வருஷமாக என்னிடம் இருக்கிறார்.

தொழிலாளர்களைக் கெடுத்தது தொழிலாளர்கள் சங்கங்கள்—தலைவர்கள் மட்டு மல்ல; அரசாங்கமும் கெடுக்கின்றது. அவர்கள் சட்டம் எந்த நல்ல தொழிலாளியையும் கெடுத்துவருகிறது.



தொழிலாளி மகன் தொழிலாளியாக இருக்கக்கூடாது என்பது எனது இலட்சியச் சொல். 'கம்பாசிட்டர்' மகன் கம்பாசிட்டராகவே இல்லாமல், சிறு அச்சு ஆபீஸ் வைத்து நடத்துபவராக ஆகவேண்டும்; அல்லது ஆபீஸ் மானேஜர் அல்லது குமாஸ்தாவாகவாவது ஆகவேண்டும்.

தொழிலாளி மகன் பரம்பரை பரம்பரையாகத் தொழிலாளி என்பது இல்லாமல் மறையவேண்டும். மேலும், இந்த நாட்டில் தொழிலாளியே இருக்கக்கூடாது. அப்படி யானால், தொழிலாளி இல்லாவிட்டால் தொழில் எப்படி நடக்கும் என்று கேட்கலாம். அது பற்றி உங்களுக்கு என்ன கவலை? எப்படியாவது போகிறது; அவசியம் உள்ளவன் செய்துகொள்கிறான். கக்கூஸ் எடுப்பவன் பரம்பரை பரம்பரையாகக் கக்கூஸ் எடுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டுமென்றால் என்ன நியாயம்? அவன் எடுக்கமாட்டேன் என்றால் கட்டாயப்படுத்த முடியுமா? இப்படி எடுப்பதற்கென்றே ஓர் சாதி இருப்பதுதான் ஜனநாயகமா? அதுபோல் தொழிலாளி என்ற ஓர் பரம்பரை இருக்கலாமா?

நான் தொழிலாளி கூடாது என்பதெல்லாம்—அவர்கள் பரம்பரையாகத் தொழிலாளி களாக இருக்கக் கூடாது என்பதற்காகவே! தொழிலாளர்கள் தொழிலில் பங்குதாரர்கள் ஆகவேண்டும்.

என் கருத்து என்னவென்றால், தொழிலாளிக்கு இலாபத்தில் பங்கு கிடைக்க வகை செய்யவேண்டும்; தொழிலாளி தொழிற்சாலையில் பங்குதாரர்போல என்பதேயாகும்.

[சென்னை, தினத்தந்தி அலுவலகத்தில், 14-4-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 18-4-1959]

தோழர்களே! தாய்மார்களே!

நான் ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், போர்ச்சுக்கல், ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக் கெல்லாம் சென்று அங்குள்ள தொழிலாளர் ஸ்தாபனங்களின் நடை முறையைப் பார்த்து வந்தேன். தொழிற் சங்கங்களின் சிபாரிசின்பேரில்தான் ஒரு நாடு விட்டு மற்றொரு நாட்டுத் தொழிற் சங்கங்களுக்குச் சென்றேன். நான் போய்ப் பார்த்த அத்தனை ஊர்களிலும் நான்கண்ட கருத்து, முதலாவதாக தொழிலாளர்கள் பெரிதும் நாத்திகர்கள். ரஷ்யாவில் அந்நாட்டு இயற்கையே நாத்திகம்; ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் தொழிலாளர்கள் நாத்திகர்கள்தாம்.

நாத்திகர்கள் என்றால் அறிவுவாதிகள்–பகுத்தறிவைப் பயன்படுத்துபவர்கள் என்று அர்த்தம். இரண்டு காரியங்கள்: முதலாவதாக, அந்தத் தொழிற் சங்கத்தின் மீது பாதிரி மார்கள் போராட்டம் செய்கிறார்கள். இரண்டாவதாக, அரசாங்கத்தினிடம் போராட்டம். அதனால் அரசாங்கம் எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் சி. அய். டி. போட்டிருக்கிறார்கள். சில ஊர்களில் தொழிற் சங்கங்களின் சார்பாக நான் இறங்கிய காரணத்தால் என்னுடைய 'பாஸ் போர்ட்டைப்'ப் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள்; பிறகு கஷ்டப்பட்டு வாங்கினேன்.

நம் நாட்டில் தொழிலாளர் ஸ்தாபனங்களை உருவாக்கி அதற்குத் தலைவராக இருப்ப வர்கள் கம்யூனிஸ்டுகள் என்றால், அந்தக் கம்யூனிஸ்டுகள் தங்களால் நடத்தப் படுகின்ற தொழிலாளர் இயக்கங்களில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது இல்லை. பகுத்தறிவுக்கு அவர்களைப் பக்குவப்படுத்தி, நாத்திகர்களாக ஆக்குவதில்லை.

தொழிலாளி நாத்திகனாக ஆனால்தான், தான் ஏன் தொழிலாளி ஆனான் என்பது தெரிய முடியும்.

அடுத்தபடியாக, வாழ்க்கையின் செலவைச் சிக்கனமாகச் செய்து பழக வேண்டும்; வரவுக்கு அடங்கிய முறையில் செலவு செய்து காசை மீதியாக்க வேண்டும். இந்தக் கடவுள், மதம், சாஸ்திரம், புராணம் சம்பந்தப்பட்ட மதச் சடங்குகள் போன்ற காரியங்களுக்கு—சம்பிரதாயங்களுக்குக் கண்டிப்பாய்ச் செலவு செய்யக் கூடாது என்ற அறிவைக் கற்றுத்தர

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். அவர்கள் கண்டபடி ஒன்று இரண்டுக்கு மேல் பிள்ளைகள் பெறக் கூடாது. ஆனால், இங்குள்ள தொழிலாளர் ஸ்தாபனத் தலைவர்களிடமும், தொழிலாளர்களிடமும் இந்தக் குணம், நடப்பு இல்லவே இல்லை. அதன் பலன் என்னவென்றால், எவ்வளவுதான் சம்பளவு உயர்வு வந்தாலும் அது போதாது என்ற நிலைதான் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களிடையேயும், தொழிலாளர்களிடையேயும் ஒழுக்க ஈனம் தான் வளரும். பேராசை ஒரு புறம் இருப்பினும் வரவுக்கு மீறிச் செலவு செய்வது என்பது, ஒழுக்கக் கேட்டைத் தான் வளர்க்கும்.

அதனால்தான் கண்டிப்பாக நாங்கள் அவர்களையும் நாத்திகர்களாக ஆக்க முயலு கிறோம். எங்களோடு சம்பந்தப்பட்ட வரையில் உள்ள தொழிற் சங்கங்களில் உள்ளவர்கள் அனைவரும் 100-க்கு 90 பேர் நாத்திகர்களே ஆவார்கள்.

கடவுள் கொடுக்கிறார் என்று கூறிக்கொண்டு கடவுளை வணங்குவது வெறும் வேஷம்; முட்டாள்தனம் ஆகும். முதலாளி என்பவன் மூட்டை அடிக்கிறான்—எனவே அவன் ‘கடவுள் கொடுத்தார்’ என்று கூறி மக்கள் தன்மேல் ஆத்திரப்படாமல் இருக்கக் ‘கடவுளை’ வணங்குகிறான். தொழிலாளியாக உனக்கு நாளைக்குச் சோற்றுக்கு வழியில்லை. கடவுள் நம்பிக்கை உனக்கு இருக்குமானால்—கடவுள் என்று ஒன்று இருக்கு மானால் அந்தக் கடவுள் உன்னைத் தொழிலாளியாக—மறுவேளைச் சோற்றுக்கு வழி இல்லாதவனாக உண்டாக்கியிருக்குமா? நிறையச் சோற்றுக்கு வகை இருப்பவனுக்கு மேலும் பணம் கொடுக்குமா? என்று சிந்திக்கவேண்டும். தொழிலாளர் நிலை வளராமல் இருப்பதற்கு இதுதான் காரணம்.

எப்பாடு பட்டாவது தன் மக்களைப் படிக்கவைத்து வசதிசெய்து கொடுத்து, தகப்பன் வேலையை விட்டு, சாதி வேலையை விட்டு, வேறு வேலைக்கு அனுப்ப வேண்டும். எந்தத் தலைமுறையும் தன் சாதி வேலைக்கே வராமல் செய்வதுதான் முக்கிய கடமை ஆகும் என்று கூறிப் பாடுபட்டு வருகிறோம்.

தொழிலாளி என்றால் என்ன? முதலாளி என்றால் என்ன? தொழிலாளி என்று கூறுபவன் தன்னுடைய அருமையான புத்தியை, தொழிலின் திறமையை வெறும் சோற்றுக்கு விற்பவன்; வயிறு வளர்ப்பதற்காகத் தன்னுடைய அறிவை—தொழிலை மாற்றுப் பண்டமாக விற்கிறவன். எவ்வளவுதான் புத்திசாலியாக—திறமையுடையவனாக இருந்தாலும், கூலி உயர்வு கேட்கும்போது தன் முதலாளியிடம் தன்னுடைய வேலைத் திறமையை எடுத்துக்கூறி—வயிற்றுக் கொடுமையை எடுத்துக்கூறி—‘எனவே, சம்பளம், கூலி அதிகமாகவேண்டும்’ என்றுதான் கேட்பான். அதாவது, ‘தாங்கள் தரும் சம்பளம், என் குடும்பத்திற்குப் போதுமா? நான் பிள்ளை குட்டிக்காரன் ஆயிற்றே! சாமானின் விலை என்ன? அரிசி என்ன விலை விற்கிறது? வீட்டுவாடகை எவ்வளவு? பையன்கள் வேறு படிக்கவேண்டி இருக்கிறதே, ரூ. 50 போதாது; ரூ. 75 சம்பளம் தாருங்கள்’ என்று கேட்பான். தனது சாமர்த்தியத்தைக் கூறி, இந்த வேலைத் திறமைக்குச் சம்பளம் போதாது அதிகமாகத் தரவேண்டும் என்று கேட்காமல், வயிற்றுச் சோற்றுக்குக் கணக்குப் பார்த்துக் கேட்பான்.

அதேபோல், ஒரு சக்கிலியிடம் செருப்பு விலை கேட்டால் ரூ 4-50, என்பான். உடனே நாம், ‘என்னப்பா, ரூபாய் இரண்டுக்குத் தரக் கூடாதா?’ என்றால், ‘என்ன சாமி, அரிசி என்ன விலை விற்குது? கேழ்வரகின் விலை என்ன? இப்படிக் கேட்கிறாயே?’ என்றுதான் கூறுவானே தவிர, செருப்பின் இன்றியமையாத தன்மையைக் கூறி விலை கேட்கமாட்டான். சிறு பெட்டிக்கடை முதலாளியிடம், ‘ஒரு கட்டு பீடி என்ன விலை?’ என்றால், ‘மூன்றணா’ என்பான். ‘என்னப்பா, அதிகமாகக் கூறுகிறாயே?’ என்றால், ‘பேச நேரமில்லை; வாங்கினால் வாங்கு; வாங்கா விட்டால் போ’ என்று தான் இஷ்டப்பட்ட விலையைக் கூறுவானே தவிர, அவன் வீட்டு வாடகை சாமான்களின் விலை உயர்வு பற்றிக் கணக்குப் போட்டுக் கூறமாட்டான்.



முதலாளி–தொழிலாளி இருவரும் ஒன்று சேர்ந்தால்தான் உற்பத்தி செய்யமுடியும். உற்பத்தி நடக்கவேண்டுமென்றால் பணம்—தொழில் இரண்டும் தேவை. உற்பத்தி, மக்கள் நலனுக்கு—உலக நலனுக்கு மிகமிக அவசியம் ஆகும் என்றாலும் முதல் (பணம்) இருந்தால்தான் உற்பத்தி தலை காட்டமுடியும்.

முதலாளி–தொழிலாளி இருவர்களும் கணவன்–மனைவி போன்றவர்கள் ஆவார்கள். கணவனும் மனைவியும் குடும்பம் நடத்திப் பிள்ளை பெறுவதுபோல்தான் முதலாளியும், தொழிலாளியும் சேர்ந்து தொழில் நடத்திப் பண்டங்களை உற்பத்தி செய்வதாகும். கணவன், மனைவி ஒற்றுமையாக இருக்கவேண்டும். நம் நாட்டில் முன்பு இருந்த முறை, கணவனுக்கு மனைவி அடிமையாகத்தான் இருக்கவேண்டும். கணவன் மனைவியை அடித்தால்கூட ஏன் என்று கேட்பதற்குக்கூட உரிமை கிடையாது. அதுதான் ‘பிராமணன்–சூத்திரன்’ தன்மை. அந்த முறையில்தான் தொழிலாளி–முதலாளிப் பிரச்சினையும் இருந்தது. ஆனால், இன்று என்ன ஆயிற்று? கணவன்–மனைவி சினேகிதர்கள் போன்ற வர்கள்; எஜமான்–அடிமை என்ற முறையில்லை; இருவருக்கும் சம உரிமை என்ற நிலைக்கு வந்துவிட்டது.

கணவன்–மனைவி நிலை மாறியதுபோல் எஜமான்–தொழிலாளி நிலை மாற வேண்டும்; இருவரும் சம உரிமை உள்ள கூட்டாளிகள் என்ற நிலை வந்தாகவேண்டும். அதற்கு இருவரும் விறைத்துக் கொண்டிருந்தால் முடியுமா? கணவன்–மனைவி நிலை மாறியதுபோல் எஜமான்–தொழிலாளி நிலை மாறி, சம உரிமை உள்ள கூட்டாளிகளாக ஆவதை நடக்காமல் தடுத்து வருகின்றனர், இந்தத் தொழிலாளி ஸ்தாபனங்களை நடத்திச் செல்லும் தலைவர்கள்.

தொழிலாளர்களிடையே நாணயம், ஒழுக்கம், பொறுப்பு, கடமை இவை ஏற்பட வேண்டும்; இவை ஏற்பட்டு வளரவேண்டுமென்றால் அதற்கு எஜமான்–அடிமை; முதலாளி–தொழிலாளி என்ற நிலை இருக்கக்கூடாது. இந்த நிலைமை இருக்குமளவுக்கு இவை வளராது. அதற்குக் காலம் வரவேண்டுமானால், தொழிலாளர்கள் தன்மை ஆள வேண்டும். நம்நாட்டிலே அந்தத் தன்மை வரத் தொழிலாளர் தலைவர்கள் முதலில் பாடுபட வேண்டும்.

நம்முடைய அரசாங்கம் தொழிலாளர்கள்மீது கவலை எடுத்துக் கொள்கிறதா என்றால், இல்லை. சும்மா அவர்களைத் திருப்திப்படுத்த ஏதோ மேலுக்குச் செய்கிறார்கள்.

உண்மையில், அரசாங்கம் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக் கருதினால் தொழிலாளர் ஸ்தாபனங்கள் நடத்துவதைத் தனிப்பட்டவர்களிடம் கொடுத்திருப்பதை மாற்றி, அரசாங்கமே தொழில் ஸ்தாபனத்தை நடத்தவேண்டும். அரசாங்கம் நடத்துகிறது என்றால், பொதுமக்கள் நடத்துவதாகத்தான் அர்த்தம். 10 மணி நேரத்தை 8 மணி வேலை நேரமாகக் குறைப்பதும், 8 மணி நேரத்தை ஏன் 6 மணி நேரமாக ஆக்கக்கூடாது என்று கேட்பதும்; மூன்று ரூபாய் சம்பளம் அய்ந்து ரூபாயாகக் கேட்பதும், பின்பு அய்ந்து ரூபாய் என்ன—அதை ஏன் ஆறு ரூபாயாகத் தரக்கூடாது என்பதிலும்தான் இன்று தொழிலாளிகளின் விருப்பம் போய் நிற்கிறது. அதாவது—‘நீ எவ்வளவு எடுத்துக் கொண்டாலும்சரி, எனக்குக் கவலை இல்லை; எனக்கு இவ்வளவுதான் என்று ஒதுக்கி விடு’ என்று கேட்கும் மனோபாவம்தான். முதலாளியும் எப்படியாவது இவனுக்குப் பங்காளி உணர்ச்சி வராமல் இருந்தால் போதும் என்று நினைத்துக் கூலி உயர்வு சிறிது ஏற்றித் தந்து ஏமாற்றிவிடுகிறான்.

தொழிலாளர்கள் பகுத்தறிவுவாதிகளாக ஆகவேண்டும். கடவுள், மதம், சாஸ்திரம், சம்பிரதாயம் முதலிய காரியங்களில் நம்பிக்கை இல்லாமல் இருக்கவேண்டும். மனிதத் தன்மையிலும், மானத்திலும், ஒழுக்கத்திலும் நம்பிக்கை இருக்கவேண்டும்.

1686—221

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளி என்றால் கீழான சாதி என்றும்; முதலாளி என்றால் மேல்சாதி என்றும் தான் அர்த்தம். பாடுபடுகின்ற தொழிலாளி கீழ்ச்சாதி, பாடுபடாத முதலாளி மேல்சாதி. தொழிலாளியின் உழைப்பின் பயனாய்வரும் பணத்தைக்கொண்டு சுகபோகமாய் வாழும் முதலாளி, மேல்சாதி. அதாவது, சூத்திரன்–பிராமணன் என்பது மாதிரியான நிலைமை. சூத்திரன் எவ்வளவுதான் உயர்ந்தவனாகவும், திறமைசாலியாகவும் புத்திக் கூர்மை உள்ள வனாகவும் இருந்தாலும் சூத்திரன், சூத்திரன்தான். அவன் மேல்சாதியாக–பார்ப்பானாக ஆகமுடியாது. அதுபோல், எவ்வளவுதான் இழிகுணம்–இழிநிலை உடைய பார்ப்பானாக இருந்தாலும் அவன் மேல்சாதி–மேல்சாதிதான், பார்ப்பான்தான். அதுபோல, இதிலே அந்தமுறை இருக்கிறது. அதாவது, தொழிலாளி என்றுமே தொழிலாளிதான். அதை விட்டு, அவன் எவ்வளவு திறமையுடையவனாக இருப்பினும் மாறமுடியாது. தொழிலாளி என்ற முறை மாறவேண்டும்; சமுதாயத்தில் உள்ள சாதி முறையும் மாறவேண்டும்; நாலாவது சாதியான் சூத்திரன் தொழில்செய்து பிழைக்க வேண்டியவன் ஆகும். அன்றாடக் கூலிபெற்றுச் சாப்பிட்டுவரக்கூடிய தன்மை உடையவன்; அவன் கையில் காசு சேர்த்து வைத்துக்கொள்ளக்கூடாது; இப்படித்தான் இந்த நாட்டில் சாதியமைப்பு முறை இருக்கிறது. இதை மாற்றினால் தொழிலாளியின் நிலை இப்படியே இருக்காது; நிச்சய மாகத் தானாகவே மாறிவிடும்.

தொழிலாளி பகுத்தறிவு பெறக்கூடாது—பெற்றுவிட்டால், தான் அந்தத் தொழில் ஸ்தாபனத்தின் மூலம் சம்பாதிப்பது பாதிக்கப்படும் என்ற காரணத்தால் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்களை–சம்பளம் போதாது என்ற பிரச்சினையிலேயே தூண்டி விடுகிறார்களே தவிர, ஏன் இந்த இழிநிலை—அதாவது அவன் ஏன் முதலாளி, நான் ஏன் தொழிலாளி–என்று கேட்பது கிடையாது. அதற்கு மாறாக நம்மைப் பார்த்து மிகப் புத்தி சாலித்தனமாகக் கேட்கிறார்கள், ‘கக்கூஸ்காரன் மகன் படித்து வேறு வேலைக்குப் போய் விட்டால், பிறகு யார் மலம் எடுப்பது? அந்தத் தொழில்செய்ய ஆள் வேண்டாமா?’ என்று. மலம் எடுப்பதற்கு என்று ஏன் வேறு ஆள்? மலம் கழிக்கிறவனே எடுக்கட்டுமே! ஒரு மனி தனின் மலத்தை எடுப்பதோடு இழிமகனாகவும் இருக்கவேண்டுமா? தொழிலாளர் நலத்துக் காகப் பாடுபடுகிறவர்கள் இந்த மலமெடுப்பவர்கள் விஷயத்தில் என்ன செய்தார்கள்?

[பெங்களூரில், 1-5-1961-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 9-5-1961]

## 7. முதலாளி – தொழிலாளி தொல்லை

தோழர்களே! தாய்மார்களே!

இன்று பொதுவாகவே உலகம் முழுவதும் ஒரு தொல்லை இருக்கிறது. அந்தத் தொல்லை பல்வேறு உருவங்களில் காட்சியளிக்கின்றது. அந்தத் தொல்லை என்ன வென்றால், மனித சமுதாயத்தில் உடையவன்–இல்லாதவன் என்ற தொல்லை. இந்தத் தொல்லை உலகம் முழுவதும் நீக்கமற நிறைந்துள்ளது. மனிதன் இயற்கையாகவே ஆசை குடிகொண்டுள்ள ஜீவன். அதன் பயனாகத்தான் உலகில் உடையவன்–இல்லாதவன் என்கின்ற இரண்டுவித நிலைமைகள் உண்டாகிவிட்டன. இந்த நிலைமைகளை மதமும், கடவுளும் பாதுகாத்து வருகின்றன. அதற்கு ஏற்ப அரசாங்கமும் அமைந்துவிடுகிறது.

ஆனால், நம் நாட்டைப் பொறுத்தவரையில் உடையவன்–இல்லாதவன் என்கின்ற கவலையோடு மற்றொரு கவலையும் சேர்ந்துகொண்டது. அதுதான் சமுதாயத்தில் மேலான சாதி, கீழான சாதி என்று பாகுபடுத்தப்பட்டுள்ள தொல்லை. இந்தத் தொல்லை உலகில் வேறெங்கும் இல்லாத தொல்லை. இதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. நம் மக்களிடம் குடிகொண்டுள்ள முட்டாள் தனத்தினாலும் மானமற்ற தன்மையினாலும் இந்தத் தொல்லை நீண்டநாட்களாக நம்மிடையே இருந்துவருகிறது. உடையவன்–இல்லா தவன் என்ற தொல்லையை ஒழிக்க உலகில் போராட்டம் நடந்தபடியே உள்ளது. அதைக்



காக்க சட்டம், வெடிகுண்டு, ஆகாயக் கப்பல், அணுகுண்டு ஆகிய அனைத்தும் உண்டு. ஆனால், மேல்சாதி–கீழ்சாதி என்ற குறை அஸ்திவாரம் இல்லாமலேயே வளர்ந்தது. நம் மக்களின் முட்டாள்தனமும், மானமற்ற தன்மையும் சேர்ந்துதான் அதை வளர்த்து நம் நாட்டில் நிலைநிறுத்தி வைத்துள்ளன. அதை நீக்க நாம் முயலவேண்டும். உடை யவன்–இல்லாதவன் என்ற தொல்லை நீங்க உலகில் கிளர்ச்சிகள் நடந்தபடியே உள்ளன. தொழிலாளர்கள் கிளர்ச்சி, விவசாயிகள் கிளர்ச்சி ஆகிய கிளர்ச்சிகளெல்லாம் முதலாளித் துவம் நிலைக்க உபயோகப்படுகின்றனவே ஒழிய அடிப்படையை மாற்றியமைக்கவில்லை. நம் நாட்டிலுள்ள மேல்சாதி–கீழ்சாதிக் கொடுமை அஸ்திவாரம் இல்லாததும் மூட நம்பிக் கைகளை அடிப்படையாகக் கொண்டதுமாக இருப்பதால் கிளர்ச்சிகள் செய்ய முடியாதபடி தந்திரமாக அமைந்துள்ளது. இங்கு சாதித் தொல்லைகளை ஒழிக்கப் பாடுபடவேண்டியது தான் முதல் தேவை என்பது என் கருத்து.

முதலாளி–தொழிலாளி என்கிற பிரச்சினை எங்கிருந்து வந்தது? மூடநம்பிக்கை யிலிருந்து வந்ததல்ல. அந்தப் பிரச்சினை ஆதாரத்தோடுதான் உள்ளது. எப்படி இருக் கிறான் முதலாளி? சட்டத்தின்படி இருக்கிறான். அரசாங்கத்தின் பாதுகாப்பின்படி இருக் கிறான். அரசாங்கத்தின் சலுகையால்தான் அவன் முதலாளியாக வாழமுடிகிறது. ஆகை யால், முதலாளி கூடாது என்றால் அவனைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் மீது திரும்ப வேண்டும். முதலாளிமீது பாய்வதால் பலன் ஏதுமில்லை. முதலாளிமீது போராட்டம் துவக்கி, தொழிற் சங்கங்கள் இந்த அய்ம்பது வருட காலமாகச் சாதித்தது என்ன?

[பொன்மலையில், 27-9-1953-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 3-10-1953]

## 8. பாராட்டு

சேரன் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர்களுக்கு முதலீட்டிலும், நிர்வாகத்திலும் பங்கு அளிக்க எடுத்திருக்கிற துணிச்சலான ஒரு திட்டத்தைப் பற்றி அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன், தி. மு. க. அரசாங்கம் சாதித்துவரும் பெரும் மவுனப் புரட்சிகளில் இது சரித்திர சாதனை என்பேன்.

நான் கடந்த நாற்பது ஆண்டு காலமாக இதை என்னுடைய கொள்கையாகக் கூறி வருகிறேன்.

1944-ல் சேலத்தில் நடத்திய மாநாட்டில், ‘இலாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு வேண்டும்; அவர்களுக்கு நிர்வாகத்திலும் உரிமை வேண்டும்’ என்னும்படியாக ஒரு தீர்மானமே நிறைவேற்றி இருக்கிறோம்.

இது ஒன்றுதான் வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்ற எல்லா வகையான கெடுதல் களுக்கும் முடிவான மருந்தாகும்; இது தொழிலாளிகள் நடுவில் கட்டுப்பாட்டு உணர்ச் சியையும் பொறுப்பையும் ஏற்படுத்தும்.

தொழிலாளி வர்க்கத்தை இனி யாரும் சுரண்ட முடியாது.

நம்முடைய சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கும், ஆற்றலும் சொல் திறனும் ஒருங்கே அமைந்த நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கும், என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதேபோல துடிப்பும், திறமையும் வாய்ந்த இளைஞர் நம்முடைய போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு எஸ். இராமச்சந்திரன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

இதுபோன்ற செயற்கரிய காரியத்தை மற்றவர்களும் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

[‘விடுதலை’–பாராட்டுச் செய்தி—5-5-1973]

படிப்பகம்

www.padippakam.com



அதை யார்தான் நிலைத்திருக்க விட்டுக்கொண்டிருக்க முடியும்? எந்த மாதிரியான மூடக் கடவுள்களும், எந்த மாதிரியான அயோக்கியக் கடவுளும் மனிதரில் ஒருவரை மேல் சாதியாக்கி, பாடுபடாமல் ஊரார் உழைப்பில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்படிக்கும், மற் றொருவரைக் கீழ்சாதியாக்கி, பாடுபட்டுச் சோம்பேறிகளுக்கு அழுதுவிட்டுப் பட்டினியாய், நோயாய், கட்டக் கந்தையற்று, இருக்க இடமற்றுத் திரியும்படியும் சொல்லி இருக்கவே இருக்காது.

இந்தக் காரியங்களுக்குக் கடவுளைப் பொருத்துகின்றவர்களை யோக்கியர்கள் என்றோ, அறிவாளிகள் என்றோ யாராலும் சொல்லமுடியாது.

ஊரார் உழைப்பைக் கொள்ளை கொள்ளாமல் எவனும் பணக்காரனாக முடியாது.

இங்கு நாட்டுக்கோட்டையார்கள் 10 லட்சம், 20 லட்சம் கோடிக்கணக்கான ரூபாய் சொத்து உள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்தப் பணம் ஏது? இவர்கள் படும் பாட்டிற்கும், இவர்கள் அனுசரிக்கும் முறைக்கும், இவர்கள் நடந்துகொள்ளும் மாதிரிக்கும், எந்தக் கடவுளாவது இவ்வளவு பணம் கொடுத்திருக்க முடியுமா?

ஏதோ இதெல்லாம், அவரவர் பிரயத்தனத்தினால், தொழில் முறையினால், மன வலிமையினால், சம்பவங்களால் ஏற்பட்டதென்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்?

இவ்வளவு பணம் இவர்களுக்குச் சேருவதற்கு ஆதாரமாய் இருந்த முறையை யார் தான் சரியானமுறை என்று சொல்லிக்கொள்ள முடியும்? இவ்வளவு பணம் இவர்களுக்குக் கொடுத்தவர்களில் பெரும்பான்மை மக்கள் இன்று இருக்கும் நிலையை யார்தான் நல்ல நிலை என்று சொல்லமுடியும்? இதையெல்லாம் மாற்றவேண்டும் என்று சொல்லும்போது கடவுளையும், மதக் கொள்கைகளையும் கொண்டுவந்து குறுக்கே போட்டால், அக் கடவுளையும் மதத்தையும் ஒழிக்காமல் எப்படி இருக்கமுடியும்?

மற்றும், கடன்பட்டு வட்டிகொடுத்த மக்களுடையவும், பாடுபட்டுப் பயனைக் கொடுத்த மக்களுடையவும் மனமும் வயிறும் வாயும் பற்றி எரிய எரிய, அப் பணங்களைக் கோவில் கட்ட, வாகனம் செய்ய, சாமிக்குக் கிரீடம் செய்ய, கலியாணம் செய்ய, தாசி வீட்டுக்குப்போக, தாசிகளை வைத்து உற்சவம்—வாண வேடிக்கை செய்யப் பாழ்பண்ணப் படுமானால்—யார்தான் சகித்துக்கொண்டு இருக்கமுடியும்? இந்த அக்கிரமங்களைப் பார்த்துக்கொண்டு எந்தக் கடவுள்தான் இருக்கமுடியும்?

அப்படியும் ஒரு கடவுள் இருக்கிறது என்று சொல்லப்படுமானால்—அப்படிப்பட்ட கடவுளை அழித்து ஒழித்து விடுவதில் யாருக்கு என்ன நஷ்டம் வரும்?

அப்படிப்பட்ட கடவுளை யாரும் ஒழிக்கமுடியாது என்று சொல்லப்படுமானால், அது ஒழிந்துபோகுமே என்று ஒருவராவது ஏன் வருத்தப்படவேண்டும்?

இதையெல்லாம் பார்க்கும்போது, கடவுளைக் கற்பித்தது நல்ல எண்ணம் கொண்டு என்பதாக நம்ப நம்மால் முடியவில்லை.

சோம்பேறிக் கொள்ளைக் கூட்டங்கள், கொடுங்கோன்மைக்காரன், பேராசைக்காரன் முதலிய கூட்டத்தாரின் சுயநலத்துக்குத்தான் பயன்படுகின்றதே ஒழிய வேறு காரியத் துக்குக் கடவுள் பயன்படுவதேயில்லை.

இதுவரை எந்தக் கடவுளால்—யாருக்கு—எப்படிப்பட்ட ஒழுக்கம் ஏற்பட்டது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

கடவுளைச் சதாகாலம் கட்டியழுது, அதனாலேயே ஜீவனம் நடத்தும் அர்ச்சகர்கள், குருக்கள் ஆகியவர்கள் முதலில் ஒழுக்கமாய் இருக்கிறார்களா? இவர்களுடைய ஒழுக்கக் காரியங்கள் நமக்குத் தெரியாதா?

Nadarajah Straube
Brunsbuetteler 21
Berlin



கடவுளுக்காக இலட்சம், பத்து இலட்சம் பணம் போட்டுக் கோவிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து, அய்ந்து வேளை, ஆறு வேளை பூஜை செய்து மானியம் விட்ட கடவுள் பக்தர்களில் எவராவது ஒழுக்கமாய் யோக்கியமாய் நடக்கிறார்களா? கடவுளுக் காகவே சந்நியாசியாய், குருவாய், சங்கராச்சாரியாராய், தம்பிரானாய், 'முல்லா'வாய், 'மவுலானா'வாய், பாதிரியாய், பெரிய குருவாய் இருக்கின்றவர்களிலாவது எல்லோரும் ஒழுக்கமானவர்கள் என்று சந்தேகமறச் சொல்லத்தக்கவர்களாய் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? இவர்கள் நிலையே இப்படி இருக்க, கடவுள் நம்பிக்கை உள்ள சாதாரண பாமர மக்களிடத்தில் எப்படி ஒழுக்கம், யோக்கியதை எதிர்பார்க்க முடியும்?

எப்படியானாலும் கடவுளைப்பற்றிய எண்ணமே யாருக்கும் இருக்கக்கூடாது என்ப தற்காக நான் கூறவில்லை என்பதோடு, மனித சமூக சமதர்ம வாழ்வுக்குத் தடையாய் எந்தக் கடவுளும் இருக்கக்கூடாது என்றும், அப்படிப்பட்ட கடவுளை இருக்க விடக் கூடாது என்றும் நான் வற்புறுத்திக் கூறுகிறேன். மனித வாழ்க்கைக்கும் பேதா பேதங் களுக்கும் கடவுள் சம்பந்தமில்லை என்று சொல்லும் பட்சம் அக் கடவுளைப் பற்றி நமக்கு என்ன கவலை?

['குடிஅரசு'-கட்டுரை—18-6-1949]

## 15. சமதர்மவாதியின் கடமை

இந்தியாவில் உழைப்பாளி—சுகபோகி என்கிற இரண்டு வகுப்புகள் இருக்கின்றன. இந்த இரண்டு வகுப்புகளுமே பெரிதும் ஏழை என்பதாகவும், பணக்காரன் என்பதாகவும் சமுதாயப் பிரிவுகளைப் பரிணமிக்கச் செய்கின்றன.

எனவே, உண்மையான சமதர்மம் இந்தியாவில் நிலைநாட்டப்படவேண்டும் என்று விரும்புகின்றவன் மேற் கூறப்பட்ட நிலைமையை மறக்காமல் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது.

ஒருவன் சமதர்மத்துக்கு உழைப்பதானால் அவன் முதலில் ஒரு உண்மையை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். உழைப்பதற்கென்றே பிறந்திருக்கும் வகுப்பு ஒன்று, இவர்களது உழைப்பின் பயனை அனுபவித்துக்கொண்டு சுகபோகியாய் வாழ்வதற்கென்றே பிறந்திருக்கும் வகுப்பு ஒன்று என்று இருப்பதை ஒழிக்கவேண்டும்—கிள்ளி எறியவேண்டும் என்பதே அந்த அடிப்படை நிலை. இதைச் செய்யாத வரையில் எந்தவிதப் பொருளாதார சமதர்மத்திட்டமும் இந்த நாட்டில் அரை வினாடி நேரமும் நிலைத்து நிற்காது என்பதைச் சமதர்மம் பற்றிப் பேசுவோர்—நினைப்போர்—ஆசைப்படுவோர் மனதில் கொள்ளவேண்டும்.

நம் நாட்டின் சமூக—பொருளாதார நிலையை நன்றாக அறிந்தபின்னும் பணக் காரனை மட்டுமே குறைகூறும் சமதர்மம் வெறும் பொறாமைச் சமதர்மமேயாகும்.

ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், இந்த நாட்டின் சமுதாய அமைப்பானது, பிறவியின் காரணமாகவே, ஏழையையும் பணக்காரனையும் அதாவது, உழைப்பாளியையும் சுகபோகியையும் உண்டாக்கியிருக்கிறது.

உதாரணமாக, இன்றைய சுகபோகிகள் பெரும்பாலும் மேல் சாதிக்காரர்களாகவும், பாட்டாளிகள் அல்லது உழைப்பாளிகள் அனைவரும் கீழ் சாதிக்காரர்களாகவும் இருப் பதைக் காணலாம்.

இன்றைய தினம் ஏதோ ஒரு புரட்சி மூலமோ ஒரு சர்வாதிகாரி மூலமோ இந்த நாட்டில் பொருளாதார சமதர்மப் பிரகடனம் ஏற்பட்டு விட்டதாகவே வைத்துக்கொள்வோம்; அந்தப் பிரகடனத்தின்படி, இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் இந்த நாட்டில் உள்ள பொருட்கள் அனைத்தையும் பங்கிட்டுக் கொடுத்து விட்டதாகவே வைத்துக் கொள்வோம்.

படிப்பகம்

www.padippakam.com



பிறகு நடப்பது என்ன என்பதை யோசித்துப் பார்த்தால் என்ன விளங்கும்? மறுபடியும் பழைய நிலையே ஏற்படுவதற்கான காரியங்கள் நிகழ்ந்துகொண்டேபோய், ஒரு சில வருடங்களுக்குள் பொருளாதார உயர்வு–தாழ்வுகள் தாமாகவே பழையபடி ஏற்பட்டுவிடும் என்பதில் சிறிதும் ஆட்சேபணை இருக்காது.

ஏனெனில், பிரகடனத்தில் பொருளாதார சமதர்மம்தான் ஏற்படுமே ஒழிய அதுவும் தற்கால சாந்தியாய் அல்லாமல், சமூக - சமுதாய - சமதர்மம் ஏற்பட இடமில்லை. அது பிறவியின் பேராலேயே தங்கிவிடும்; அது தனது காரியத்தை எப்படிப்பட்ட பொருளாதார சமதர்மத்திலும் செய்துகொண்டுதான் இருக்கும்.

அதுவும் மதத்துக்கும், சாதிக்கும் பெயர்போன இந்த நாட்டு மக்களுக்குள்–கல்வி அறிவற்று மூடநம்பிக்கையில் ஆழ்த்திவைக்கப்பட்டிருக்கும் இந்த நாட்டுப் பாமர மக்களுக்குள் பிறவிபேதம் நீக்கப்படாதவரை எப்படிப்பட்ட பொருளாதார சமதர்மமும் கடுகளவு மாற்றத்தையும் உண்டாக்கிவிடாது.

மற்றும், பார்ப்பனரல்லாத சமூகத்தில் கீழ்சாதிக்காரர்கள் என்பவர்கள் எவ்வளவு செல்வம் தேடியபோதிலும் சாதி–மத சம்பிரதாயம் காரணமாக அடிக்கடி சறுக்கி விழுந்துகொண்டுதான் இருக்கிறார்கள்; அவ்வளவோடு மாத்திரமல்லாமல், சமூகத்தில் தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறார்கள். ஒரு சிலர் செல்வவான்களாய், கோடீஸ்வரர்களாய் இருந்தாலும்கூட, அவர்கள் சமூகத்தில் கீழ்சாதிக்காரர்களாய்த்தான் இருந்துவருகிறார்கள்.

சமதர்ம வாசனையே சிறிதும் இல்லாதவர்களும் சமதர்மத்துக்குப் பிறவி எதிரிகளாய் இருப்பவர்களுமான பார்ப்பனர்கள் எவ்வளவு ஏழைகளாகவும் எவ்வளவு ‘பாப்பர்’களாகவும் இருந்தாலும், எவ்வளவு சோம்பேறிகளாகவும் எவ்வளவு உழைக்காதவர்களாகவும் இருந்தாலும் மக்களின் சராசரி வாழ்க்கையைவிட மேலாகவும் மனித சமூகத்தில் மேல் நிலையை உடையவர்களாகவும் தானே இருந்துவருகிறார்கள்!

இதனால்தான், பார்ப்பனர்கள் சமுதாய சமதர்மக்காரர்களைக் கண்டால் காய்ந்து விழுவதும் சமுதாய, சமதர்ம இயக்கங்களைக் கண்டால் அவற்றை ஒழிக்கச் சூழ்ச்சி செய்வதுமாய் இருப்பதோடு, பொருளாதார சமதர்மக்காரர்கள் என்பவர்களை வரவேற்பது போலவும், பொருளாதார சமதர்ம ஸ்தாபனங்களை ஆதரிப்பது போலவும் காட்டிக்கொள்கிறார்கள்.

ஏனெனில், வெறும் பொருளாதார சமதர்மம் பார்ப்பனரை ஒன்றும் செய்துவிடாது. மேலும், பார்ப்பனருக்குப் பொருளாதார சமதர்மம் அனுகூலமானதேயாகும். எப்படி என்றால், இப்போது அவர்களால் பிச்சை வாங்கப்படும் நபர்கள் ஒரு பங்காய் இருந்தால் பொருளாதார சமதர்மத்தில் பார்ப்பனருக்குப் பிச்சை கொடுக்கும் நபர்கள் 10 பங்காக ஆகிவிடுவார்கள். அப்போது அவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) சமதர்மத்தில் பகிர்ந்து கொடுக்கப்படும் சொத்துக்கள் தவிர, மற்றும் சாதி, மத சடங்குகள் காரணமாக அதிகப் பிச்சையும் சேர்ந்து ஒவ்வொரு பார்ப்பனரும் ஒவ்வொரு சங்கராச்சாரி, மடாதிபதியாக சுலபத்தில் மார்க்கம் ஏற்பட்டுவிடும். இந்த நிலை மறுபடியும் வெகு சீக்கிரத்தில் பழைய நிலையை அதாவது இன்றைய நிலையை உண்டாக்கிவிடும்.

இந்த நாட்டில் சாதியும், மதமும், சிறப்பாகச் சாதி ஒரு கடுகளவு மீதியிருந்தாலும் எப்படிப்பட்ட சமதர்மமும் ஒரு நிமிட நேரத்தில் கவிழ்ந்து போகும் என்பதை சமதர்மிகள் என்பவர்கள் கருத்திலிருத்தவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மற்றும், சமுதாய சமதர்மத்துக்கு, அதாவது சாதிகளை ஒழிப்பதற்கு என்றால் பணக்காரன் சேருவான். ஏனெனில், எவ்வளவு பணக்காரனாய் இருந்தாலும் 100-க்கு 97 பேர் இன்றைக்குக் ‘கீழ் சாதிக்காரர்’களாகவே இருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் சேருவார்கள்.



ஆனால், பணக்காரனை ஒழிக்கப் பார்ப்பனர் சேரமாட்டார்கள். சேர்வதாய் இருந்தாலும் சாதி இருப்பதன் பலனாய் மீண்டும் பணக்காரனை உண்டாக்கிக் கொள்ளலாம் என்று கருதியே சூழ்ச்சித் திறமாய்ச் சேருவான்.

இந்த நாட்டுக்கு–இந்த நாட்டு மக்களுக்கு நன்மைவேண்டும் என்று கருதுகிறவர்கள் இந்த நாட்டின் நிலை என்ன என்பதை உணர்ந்து அதற்கு ஏற்றபடி நடக்கவேண்டுமே ஒழிய, மேல் நாட்டைப்பற்றிப் படித்துவிட்டுப் புத்தகப் பூச்சியாய் இருப்பது வீண் பிரயாசையே ஆகும்.

சாதியை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, சாதி முறையின் ஆணிவேராக இருக்கும் பார்ப்பனனை ஒழிக்கும் முயற்சியே சமதர்மவாதிகளின் முதற் கடமை என்பது நமது அபிப்பிராயமாகும்.

['விடுதலை'–தலையங்கம்—4-9-1973]

சமதர்மம் என்றால் சாதாரணமாக பாரபட்சமற்ற நீதி, சமத்துவம், உயர்வு–தாழ்வு இல்லாதநிலை என்பதாகும். ஆனால், இன்றைய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் அதாவது சாதியில், கல்வியில், செல்வத்தில், வாழ்க்கை அந்தஸ்து நிலையில் மேல்–கீழ்நிலை இருந்து வருகிறது. இவற்றை ஒழித்து யாவற்றிலும் சமத்துவம், சமத்துவத்தை நிறுவுவதற்குச் சமதர்மக் கொள்கை ஆட்சி அவசியம் என்றால், மதக்காரர்களுக்கும், கடவுள் நம்பிக்கைகொண்ட ஆத்திகர்களுக்கும் கஷ்டமாக இருக்கிறது.

உழைப்பாளி மக்கள் உடல்வருந்தி உழைத்த பின்னும், குடிக்கக் கூழ் இன்றியும், கட்டக் கந்தையின்றியும் பரிதவிக்கும்போது, எந்தவிதமான வேலையும் செய்யாது, பணக்காரனாகத் தொழிலாளியைக் கொடுமைப் படுத்திக்கொண்டு, டம்பாச்சாரித்தனமாக வாழ்வது சரி அல்ல.

சாதாரணமாக, இன்று ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கொரு வேலை செய்து சமமாக உண்டு உடுத்திக் களிப்புடன் வாழ்க்கை நடத்துவது இல்லையா? அதுபோலவே ஒரு கிராமம், ஒரு மாவட்டம், ஒரு மாநிலம் அல்லது தேசத்தில் உள்ள சகல மக்களும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும், உள்ள பூமியும் பொருளும் எல்லாம் குடும்பப் பொதுச் சொத்து என்பதுபோலவும், எல்லா மக்களுக்கும் பொதுவாகி அக் குடும்பத்துக்குச் சொந்தமே அன்றி தனித்தனியாக அவனவன் இன்பம்போல் அனுபவிக்கும் தனி உரிமை யாருக்கும் இல்லை.

இந்தச் சமத்துவமான வாழ்க்கை வேண்டும் என்று கூறும்போது சமதர்ம விரோதிகளான மதவாதிகளும்; ஆத்திகர்களும் துள்ளிக் குதித்து ‘அது கடவுளுக்காகாது; அவனவன் முன் பிறவியில் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்றாற்போல் சுகமான வாழ்க்கையோ கஷ்டமான வாழ்க்கையோ நடத்துகிறான். பணக்காரனாகவோ, ஏழையாகவோ இருப்பது கடவுள் சித்தம். அவன் கடாட்சத்தால் அவனுக்கே தனி உரிமைகொடுக்கப்பட்ட பொருள்களைப் பொதுவுடைமை ஆக்குவது அநீதி’ என்று கூப்பாடு போடப்படுகிறது.

ஏற்றத் தாழ்வுகள் மலிந்த இந்தச் சமூக அமைப்பு ஏற்பாட்டால் யாருக்காவது வாழ்க்கையில் பூரண இன்பமோ அமைதியோ ஏற்படமுடியுமா?

இருப்பவன் அதோடு திருப்தி அடையாது மேலும் மேலும் பணக்காரனாகவேண்டும் என்று கருதுகிறான்.

இந்த மனப்பான்மைக்குக் காரணம் என்ன வென்றால், கஷ்டப்பட்டு உழைக்காது சுக வாழ்வு நடத்துவதும், தேவைக்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சொந்தக்காரனாக இருப்பதும் ஒரு கவுரவம் என்றும், தனி மதிப்புக்குரிய பாத்திரமானது என்றும் கருதுகின்ற ஒரு மூடநம்பிக்கையே தவிர வேறில்லை. இந்த மூடநம்பிக்கையின் பயனாகத்தான் மனிதன் தேவைக்கு மேற்பட்ட பொருள் போகங்களைத் தானும் அனுபவியாது, பிறரையும்

www.padippakam.com



அனுபவிக்கவிடாது, வைக்கோல் போர்க் காக்கும் நாய்போல் வாழ்கின்றான். இத் தனி உரிமையினால் வாழ்க்கையில் பலகோடிக்கணக்கான மக்களுக்குக் கிடைக்கவேண்டிய பல பொருள் சாதனங்கள் வீண் விரயம் செய்யப்படுகின்றன.

எனவே, தனிமனிதச் சொத்துரிமை ஒழியவேண்டும். பிறர் உழைப்பில் படோடோப வாழ்க்கை நடத்துவதும் அதிகப்படியான பொருள்களுக்கு அதிபதியாய் இருப்பதும் பெருமையான வாழ்க்கை என்று கருதப்படுகின்ற மூடநம்பிக்கை ஒழியவேண்டும். இதில் கவுரவமும் மரியாதையும் இல்லை என்பது தெளிவாக்கப்படவேண்டும்.

['விடுதலை'-தலையங்கம்—8-10-1973]

# 4. பொதுவுடைமை

## 1. பொதுவுடைமை

பொதுவுடைமை என்கின்ற வார்த்தையானது மக்களின் காதுகளில் படும்பொழுதே அது ஒரு பயங்கர சப்தம்போல் கருதப்படுகின்றது. கொஞ்ச காலத்திற்கு முன் நாத்திகம் என்ற வார்த்தையும் இந்தப்படிதான் மக்கள் காதுகளுக்கு ஒரு பெரிய அதிருப்தியானதும், வெறுப்பானதுமான சப்தமாகக் கருதப்பட்டு வந்தது. என்றாலும், இப்போது அது ஒரு தர்க்கவாதத்துக்கு ஏற்றதாகவும், சிலர் அதை ஒரு நாகரிகமாகக் கருதவும், சிலர் அவ் வார்த்தையின் கருத்தை, சாதாரண நோக்கத்தோடு கவனித்து 'அது அவரவர்கள் அபிப் பிராயம்' என்பதாகவும்; சிலர் ஜன சமூக வாழ்க்கைக் கட்டுப்பாட்டிற்கு 'அந்தப்படி (கடவுள் என்பதான) ஒரு அபிப்பிராயம் இருந்தால் நல்லது' என்றும் கருதும்படியாகவும் இருந்துவருகின்றது.

நாத்திக விஷயத்தில் இப்போது ஆத்திரங் காட்டுபவர்கள் எல்லாம்—மதப் பிரச்சாரத் தினால் வாழலாம் என்று கருதுகின்றவர்களும், மதப் பிரச்சாரத்தைத் தங்களது வாழ்க் கைக்கு ஆதாரமாய்க் கொண்டவர்களும் தவிர, மற்றவர்களுக்கு அதைப்பற்றிச் சிறிதும் கவலையே இல்லாமல் இருந்துவருகின்றது. பொது ஜனங்களில் நாத்திகத்தைப்பற்றி எந்தக் கூட்டத்திற்காவது சிறிது அதிருப்தி இருக்கும் என்று கருத வேண்டுமானால்—அது, போதிய கல்வி அறிவு பெறாத சமூகமும், முரட்டுக் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவரும் பிடிவாத சமூகமும், தங்களைத் தவிர வேறுவித உலக அபிப்பிராயம் இருக்கின்றது என்று கூட உணர முடியாமல் வைக்கப்பட்டிருக்கும் பாமர கூட்ட சமூகமும் ஆகியவர்களுக் குள்ளாக இருந்துவரலாம்.

பொதுவாக 100-க்கு 10 அல்லது 12 பேரே படித்த மக்களும்; 100-க்கு 80, 90 பேர்கள் தற்குறிகளாகவும் இருக்கும் ஒரு தேசத்து மனித சமூகத்தில் நாத்திகத்தை வெறுக்கும் ஜனங்கள் சிலராவது இருக்கிறார்கள் என்பதில் அதிசயமொன்றுமில்லை. ஏனெனில், நாத்திகம் என்பது அறிவு வளர்ச்சியினாலும், ஆராய்ச்சித் திறத்தினாலும், சுதந்திர உணர்ச்சியாலும் ஏற்பட வேண்டிய விஷயமேயொழிய, கடவுள் சொன்னார் என்று எழுதப்பட்ட புத்தகங்களில் என்ன சொல்லியிருக்கிறது என்றும், தங்களைக் கடவுள் அவதாரமாகவோ, தூதர்களாகவோ, குருமார்களாகவோ சொல்லிக்கொண்டவர்கள் என்ன சொன்னார்கள் என்றும், பெரியோர்கள், ரிஷிகள், நபிமார்கள், நாயன்மார்கள், தீர்க்க தரிசிகள், ஆழ்வார்கள், சித்தர்கள், ஞானிகள், மகாத்மாக்கள் என்று சொல்லப்பட்டவர்கள் என்ன சொன்னார்கள் என்றும், அவர்கள் சொன்னதாக ஏற்பாடு செய்த ஏடுகளிலும், புத்தகத்திலும் என்ன எழுதியிருக்கிறது என்றும் கவனித்து அவைகளுக்கெல்லாம் அடிமை யாகியிருக்கும் அது விஷயத்தில் சுதந்திரமும், சுய அறிவும் இல்லாத மக்களுக்கு விளங்கக் கூடிய காரியமல்ல.



ஆகையால், அறிஞர்கள் அவ்வித மக்களின் கூப்பாடுகளை இலட்சியம் செய்யாமல் இருந்து வருவதுடன் ஆராய்ச்சியையும், சுயபுத்தியையும் பற்றிப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ஆதலால்தான், இப்போது நாத்திகம் என்னும் வார்த்தையானது மிகச் சாதாரண வார்த்தையாகவும், நாகரிக ஆராய்ச்சி அபிப்பிராயமாகவும் கொள்ளப்பட்டு வருகின்றது என்று சொன்னோம்.

அதுபோலவே, பொதுவுடைமை என்னும் வார்த்தையானது அதுபற்றிய ஆராய்ச்சியே இல்லாத காரணத்தாலும்; சுயநலத்தின் காரணமாய் அவ் வார்த்தைக் கெதிராகவே பிரச்சாரங்கள் நடைபெறுவதாலும் பொது ஜனங்களுக்குப் பொதுவுடைமை என்றால் வெறுப்பாயும், பயமாயும், தப்பிதமாயும் தோன்றலாம். எந்தப் புதிய கொள்கையும், அபிப்பிராயங்களும் ஆரம்ப காலத்தில் பாமர மக்களிடை வெறுப்பாகவும், கஷ்டமாகவுந்தான் தோன்றும். இதற்கு உதாரணங்கள் நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஏனெனில், புதிய அபிப்பிராயங்களையும், கொள்கைகளையும் கொண்டுவந்து புகுத்தியவர்களின் சரித்திரங்கள் என்பவைகளைப் பார்த்தால் இதுதானாகவே விளங்கிவிடும். ஆகவே, பொது வுடைமை என்னும் வார்த்தையும், கொள்கையும் பொதுஜனங்களால், பாமர மக்களால், சுயநலங்கொண்ட சோம்பேறிக்கூட்டங்களால் ஆதரிக்கப்படுகின்றதா, வரவேற்கப்படு கின்றதா, வெறுக்கப்படாமல் இருக்கின்றதா என்பவைகளைப்பற்றிக் கவனிக்காமல் அது விஷயமாய் நமக்குத் தோன்றியதை எழுதலாம் என்றே கருதுகிறோம்.

பொதுவுடைமை என்பது ஒரு குடும்பத்திலுள்ள சொத்துக்கள், வரும்படிகள், தொழில்கள், இலாப நஷ்டங்கள், இன்ப துன்பங்கள், போகபோக்கியங்கள், பொறுப்பு, கவலைகள் முதலாகியவை எல்லாம் எப்படி அக் குடும்ப மக்களுக்குப் பொதுவோ, அதுபோல் தான், ஒரு கிராமத்திலோ, ஒரு பட்டணத்திலோ, ஒரு மாகாணத்திலோ, ஒரு தேசத்திலோ, ஒரு கண்டத்திலோ, ஒரு உலகத்திலோ உள்ள மேற்கண்டவைகள் எல்லாம் ஆங்காங்குள்ள அவ்வளவு பேருக்கும் பொதுவானது என்பதாகும். சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால், பொதுவுடைமைக் கொள்கையின் கட்சி இலட்சியம்–உலகம் பூராவும் ஒரு குடும்பம்; உலக மக்கள் எல்லோரும் சகோதரர்கள்; உலகத்திலுள்ள செல்வம், இன்பம், போக போக்கியம் முதலியவை எல்லாம் அக் குடும்பச்சொத்து; குடும்ப மக்கள் (உலக மக்கள்) எல்லோருக்கும் அக் குடும்பச் சொத்தில் (உலகச் சொத்தில்) சரிபாகம் என்கின்ற கொள்கையேயாகும். ஆகவே, பொதுவுடைமை என்பது ஒரு கணக்குப் பிரச்சினை (Mathematic Problem) ஆகும்.

ஆகவே, இப்படிப்பட்ட கருத்துக்கொண்ட பொதுவுடைமைக் கொள்கையை வெறுக்கவோ, எதிர்க்கவோ நியாயமான முறையில் யாதொரு காரணமும் இருப்பதாய் நமக்குத் தோன்றவில்லை. ஆனால், சகோதரனுடைய பங்கை மோசம் செய்து சகோதர துரோகத்தின்மூலம் அதிகப் பங்கை ஆசைப்படுகிற மனப்பான்மை உள்ளவனும், குடும்ப வேலைகளில் தனக்குள்ள சரிபாகப் பொறுப்பைத்தான் ஏற்றுக்கொள்ளாமல் மற்ற சகோதரர் களையே அதிகமாய் உழைக்கச்செய்து தான் சோம்பேறியாயிருந்து, அதிகப் பங்கை யடைந்து, மற்றவர்களுக்குப் போதுமான அளவு கூலி கொடுக்காமல் வஞ்சித்து ஏமாற்ற வேண்டும் என்கின்றதான மனப்பான்மை உள்ளவனும்தான் பொதுவுடைமைக் கொள் கையை வெறுக்கவும் எதிர்க்கவும் கூடும். பக்கம் 1708 (PTO)

நிற்க, மற்றொரு விதத்திலும் பொதுவுடைமைத் தத்துவம் என்பது எல்லா ஜனங் களாலும் மதிக்கத்தக்கது என்கின்றதான வேதாந்த தத்துவம் என்பதுமாகும். எப்படி யெனில், எல்லா சரீரத்திலும் வசிக்கும் ஆத்மா ஒன்றேயென்றும்; எப்படி ஒரே சூரியன் பதினாயிரம் குடம் தண்ணீரில் பதினாயிரம் சூரியனாகக் காணப்படுகின்றதோ, அதுபோல் கோடானுகோடி ஜீவராசிகளிலுள்ளும் கோடானுகோடி ஆத்மாவாகக் காணப்படுகிறது என்று சொல்லப்படுகின்றது. ஆதலால், ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறு ஆத்மாவாக

படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறதென்றோ, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் வெவ்வேறுவித சைதன்னிய—அதாவது ஞானமோ, வேற்றுமை உணர்ச்சியோ இல்லை என்கின்ற தத்துவமே வேதாந்தமாகும். ஆதலால், அப்படிப்பட்ட வேதாந்தக் கொள்கைக்குப் பொதுவுடைமைத் தத்துவம் எவ்விதத்திலும் விரோதமானதல்ல.

மதக் கொள்கைகளுக்கும் பொதுவுடைமைத் தத்துவம் விரோதமானதாக இல்லை. எப்படியெனில், எல்லா மதமும் மக்கள் யாவரும் சகோதரர்களென்றும், ஒருவருக்கொருவர் சகோதர உணர்ச்சியுடனிருக்க வேண்டுமென்றும், எல்லோரையும் எல்லோருமே சகோதரர்களாகப் பாவிக்கவேண்டும் என்றும், எல்லோருமே ஒரேவித இன்பத்தையும், ஒரேவித செல்வத்தையும் அடையவேண்டும் என்றும் கற்பிக்கின்றதாகச் சொல்லப்படுகிறது. ஆதலால், பொதுவுடைமைத் தத்துவம் எந்த மதக் கொள்கைக்கும் விரோதமானது என்று சொல்லிவிட முடியாது.

மற்றும், பொதுவுடைமைத் தத்துவமானது ஆத்திகம் என்பதற்கும் விரோதமானதல்ல. ஏனெனில், ஆத்திகமென்பது கடவுள் என்பதாக ஒன்று இருக்கின்றதென்றும், அது பாரபட்சமற்றதென்றும், சர்வசக்தியும் சர்வவியாபகமும் உடையது என்றும், அதுவே உலகத்தையும் உலகத்திலுள்ள வஸ்துக்களையும் ஜீவர்களையும் சிருஷ்டித்தது என்றும், உலகமும் உலக வஸ்துக்களும் அந்த ஜீவர்களுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டன என்றும் கருதுவதேயாகும். ஆகவே, அப்படிப்பட்ட கருத்துக்கு எல்லா மக்களும் சகோதரர் என்ற கொள்கையும், எல்லாப் பொருள்களும் இன்ப துன்பங்களும் எல்லா மக்களுக்கும் சரிசமமான பொது என்பதையும் எந்த ஆத்திகர்களும் ஆட்சேபிக்கவோ, எதிர்க்கவோ முடியாது என்பது விளங்கும்.

மேலும், மகாத்மாக்கள் என்பவர்களுக்கும் பொதுவுடைமைத் தத்துவம் வெறுப்புாகவோ, விரோதமாகவோ இருக்க நியாயமில்லை. ஏனெனில், மகாத்மா தத்துவம் என்பது எல்லா ஜீவர்களையும் சரிசமமாய்ப் பார்ப்பதும், எல்லா ஜீவர்களிடத்திலேயும் ஒரே ஆத்மா பரிணமிக்கின்றது என்பதை உணருகின்றதுமான வர்க்கமாகும். ஆதலால், அப்படிப்பட்ட தத்துவமுடையவர்களுக்குப் பொதுவுடைமைத் தத்துவம் என்பது ஆட்சேபிக்கத் தக்கதாவதற்கு இடமில்லை. இவை தவிர கிருஷ்ணர், புத்தர், ஏசு, முகமது, குருநானக், இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி என்று சொல்லப்படுபவர்களான அங்கீகரிக்கப்பட்ட மதத் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள் என்பவர்களுடைய கொள்கைகளுக்கும், இலட்சியங்களுக்கும், எல்லா மக்களும் சகோதரர்கள்; எல்லாச் சொத்துக்களும் பொதுவானது என்னும்படியான கொள்கைகொண்ட பொதுவுடைமைத் தத்துவம் விரோதமாகவோ, ஆட்சேபிக்கத் தக்கதாகவோ இருக்கும்என்று சொல்லுவதற்கில்லை.

மற்றும், தேசியம் என்பதற்கோ, தேசியவாதிகள் என்பவர்களுக்கோ பொதுவுடைமைத் தத்துவம் விரோதமானது என்று சொல்லுவதற்கும் இடமிருக்கக் காரணமில்லை. ஏனெனில், தேசியவாதிகளுடைய கொள்கையெல்லாம் தங்கள் தேசத்துச் செல்வத்தை மற்றொரு தேசத்தார் கொள்ளை கொள்ளக்கூடாது என்பதும், தங்கள் தேச ஆட்சியை மற்றொரு தேசத்தார் ஆளக்கூடாது என்பதுமே முக்கியமானதாகும். ஆதலால், இதே கொள்கைகொண்டதான, அதாவது—ஒருவனுடைய உழைப்பின் பயனை மற்றவர்கள் கொள்ளைகொள்ளக் கூடாது என்பதும், ஒருவர்மீது ஒருவர் ஆதிக்கம் கொள்ளக்கூடாது என்பதும், எல்லோரும் சமமாய் உழைக்கவேண்டும், எல்லோரும் சமமாய் அடையவேண்டும், எல்லோருக்காகவும் எல்லோரும் ஆட்சிசெலுத்த வேண்டும் என்னும் கொள்கை கொண்ட பொதுவுடைமைத் தத்துவத்தை ஆட்சேபிக்க நியாயமேயில்லை. மற்றபடி சமூகசேவைக்காரருக்கோ, பொதுநலச் சேவைக்காரருக்கோ, நீதிக்கோ பகுத்தறிவுக்கோ, பொதுவுடைமைத் தத்துவம் மாறானதென்றோ, ஆட்சேபிக்கத் தக்கதென்றோ சொல்வதற்கு எந்தவிதத்திலும் ஆதாரம் இருப்பதாய்த் தெரியவில்லை.



ஆனால், யாருக்கு விரோதமாகவும், ஆட்சேபிக்கத் தக்கதாகவும், கெடுதி தரத் தக்கதாகவும் இருக்கும் என்று பார்ப்போமேயானால் சுயநலம் கொண்ட மக்களாகிய சக்கரவர்த்தி, அரசர், பாதிரி, குரு, முதலாளி, ஜமீன்தாரன், மிராசுதாரன், மேல்சாதிக்காரன் (பார்ப்பான்) என்று சொல்லப்படுபவர்களுக்கும்; இவர்களுக்குக் கூலிகளாய் இருப்பதினாலேயே உயர்வான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றவர்களுமான மக்களுக்கும் ஆட்சேபணையாய் இருக்கலாம். இவர்களுடைய ஆட்சேபணைகளை நாம் இலட்சியம் செய்யவேண்டியதில்லை.

ஏனெனில், இவர்கள் யோக்கியதைகளை நன்றாய் உணர்ந்து, இவர்களால் மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் இழிவுகளையும் அறிந்து, இவர்கள் தன்மைகளை ஒழிக்க வேண்டும் என்றும், மாற்றவாவது வேண்டுமென்றும் மக்கள் வெகு நாட்களாகவே பாடுபட்டு வருகிறார்கள். உதாரணமாக, ஏகாதிபத்தியத் தன்மை கூடாதென்றும், தனிப்பட்ட நபர்களான அரசர்களுடைய ஆட்சிகள் கூடாதென்றும் கிளர்ச்சிகள் வெகுகாலமாகவே நடந்து வருகின்றன. இதன் பயனாகவே சில ஏகாதிபத்தியங்கள் ஒழிந்து, சில அரசாட்சிகளும் வீழ்ந்து, பொதுஜன ஆட்சியென்றும், குடிகளுடைய ஆட்சி என்றும் சொல்லும்படியான ஆட்சிகள் ஏற்பட்டும் இருக்கின்றன; இனியும் ஏற்படுத்தும் முயற்சிகளும் நடந்து வருகின்றன. ஆதலால்தான், அவற்றைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதில்லை என்றோம். மற்றபடி, மேல்சாதிக் கொடுமையையும் நன்றாய் உணர்ந்து அதை ஒழிக்கவேண்டும் என்று முயற்சி செய்ததோடு சிலவற்றை ஒழித்தும் வருகிறோம். மற்றபடி, ஜமீன் முதலாளி முதலியவர்களுடைய கொடுமைகளையும், அநீதியான வழியில் அவர்கள் செல்வம் பெருக்குவதையும் நன்றாய் உணர்ந்து அவர்களது கொடுமைகளை ஒழிக்கவும், அவர்களது அநீதிகளில் இருந்து மீளவும் முயற்சிகள் செய்துகொண்டுதான் வருகிறோம். கடைசியாக, குருமார்கள், பாதிரிமார்கள் என்று சொல்லுகின்ற கூட்டத்தார்களின் யோக்கியதைகளும் அறிஞர்கள் உணர்ந்ததேயாகும். எப்படியெனில் குரு, பாதிரி, முல்லா, புரோகிதர்கள் என்கின்ற கூட்டத்தார்கள், அரசர்கள் செல்வவான்கள், சோம்பேறிகள் ஆகியவர்களுடைய 'லைசென்சு' பெற்ற கூலிகளேயாவார்கள். இவர்களுடைய உழைப்பின் பயன் எல்லாம் அரசர்களுக்கும், செல்வந்தர்களுக்கும், சோம்பேறிக் கூட்டத்தார்களான மதப் பாஷாண்டிகளுக்குமே பயன்படத்தக்கதாதலால் அவர்களது அதிருப்தியைப்பற்றியோ, அழுகையைப் பற்றியோ நாம் சிறிதும் கவலைப்படவேண்டியதில்லை.

இருந்தபோதிலும், இந்தக் கூட்டத்தாரும் சாவதானமாய் இருந்து நல்லறிவைக் கொண்டு யோசித்துப் பார்ப்பார்களானால் பொதுவுடைமைத் தத்துவம் என்பது தங்கள் கூட்டத்தாருக்குக் கெடுதியில்லை என்பது விளங்கும். எப்படியெனில், பொதுவுடைமைத் தத்துவத்தினால் மனித ஜீவனுக்கு ஏற்படப்போகும் முக்கியமான மாறுதலும் அனுகூலமும் என்னவென்றால், மனிதனுக்குக் கவலை என்பது 100-க்கு 90 பாகத்துக்கு மேலாகவே குறைந்து போகும். இது தவிர, அதிருப்தி, பொறாமை என்று சொல்லும்படியான இயற்கைக் குணங்கள் என்பவைகள் எல்லாம் குறைந்துவிடும். இவைகளில் ஏதாவது ஒரு அளவும், பொதுவுடைமைத் தத்துவத்திலும் இருக்கும் என்று தர்க்கத்துக்காகச் சொல்ல வந்தாலும் அதுவும் பொதுநலத்தை உத்தேசித்து இருக்குமேயொழிய சுயநலத்தை உத்தேசித்து இருக்க முடியவே முடியாது. அதுபோலவே, மனிதனுக்குத் துக்கம் என்பது பெரும்பாகமும் மறைந்து போகும்.

இப்போது மேற்குறிப்பிட்டதான கவலை, அதிருப்தி, ஆசை, பொறாமை, துக்கம் முதலிய குணங்கள் தனி மனிதனில் ஆகட்டும், மனித சமூகத்திலாகட்டும் எந்த நிலைமையில் இருக்கின்றவர்களுக்கும் இருந்துதான் வருகின்றது. அரசனுக்கோ, செல்வவானுக்கோ, குருவுக்கோ, பார்ப்பானுக்கோ, மற்றும் பெரும் பதவியில் இருக்கின்றவன் என்பவனுக்கோ இக் குறைகள் இல்லை என்று சொல்லிவிடமுடியாது. இவர்களுக்குள்ள பெருமையெல்லாம் அன்னியர்கள் இவர்களைப் பெருமையாய் நினைக்கின்றார்கள் என்பதைத் தவிர தங்கள்



படிப்பகம்

www.padippakam.com



தங்களுக்குச் சொந்தத்தில் துக்கமும், கவலையும் இல்லாதவர்கள் இல்லவேயில்லை. மத சம்பந்தமான ஆதாரங்களில் காணப்படும் மோட்சத்திற்கும், முத்திக்கும் சொல்லப்படும் கருத்தெல்லாம் கவலையும், துக்கமுமற்ற தன்மை என்றுதான் சொல்லப்படுகின்றதே யொழிய, மற்றபடி வேறு ஒரு லோகத்தில் போய்—'வெல்வெட்' மெத்தையில் சதா தூங்கிக் கொண்டிருப்பது என்று சொல்லப்படவில்லை. ஆனால், இப்படி எங்காவது ஒன்று, இரண்டு இடத்தில் சொல்லப்படுவதாய்ச் சொல்லப்பட்டாலும் அது புரோகிதர்களுடையவும், முல்லாக்களுடையவும், பாதிரிகளுடையவும் அவர்களுடைய கூட்டத்தாருடையவும் வயிற்றுப் பிழைப்பிற்காகக் கற்பித்துக்கொண்ட புராணப் பிடுங்கல், கற்பனை என்பதை—எல்லா தத்துவஞான அறிஞர்களும் ஒப்புக்கொள்கின்றார்கள். ஆகையால், பகுத்தறிவுள்ள மனித ஜீவர்கள் வாழ்க்கையில் கவலையும் துக்கமுமில்லாத ஒரு நிலையை ஒருநாளும் வெறுக்கவோ, மறுக்கவோ முடியவே முடியாது.

ஆகவே, பொதுவுடைமை என்பது பொது மனித தர்மமென்றும்; சகோதரத் தன்மையும், சமத்துவத் தன்மையும் கொண்டதென்றும்; வேதாந்த தத்துவத்துக்கும், ஆத்திகத் தன்மைக்கும், தத்துவத்திற்கும் ஏற்றது என்றும்; மதத் தலைவர்களுக்கும், தேசியத்துக்கும், நீதிக்கும், பகுத்தறிவுக்கும் ஒத்ததென்றும்; அரசர்களுக்கும் செல்வவான்களுக்கும் பாதிரிப் புரோகிதக் கூட்டங்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதென்றும்; பொதுவுடைமைத் தத்துவமேதான் மோட்ச நிலை என்பதும், முத்திநிலை என்பதுமாகும் என்றும் ஒருவாறு சுருக்கமாய் விளக்கிக் காட்டியிருக்கிறோம்.

['குடிஅரசு'—தலையங்கம்—10-9-1933]

## 2. மே தினம்

1933ஆம் வருடம் மே மாதம் 21-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை, சுயமரியாதையோரால் 'மே தினம்' தமிழ்நாடு முழுமையும் கொண்டாடப்படும்.

உலகெங்கும் கடந்த 50 வருஷமாக மே தினத்தை ஒரு பெருநாளாகத் தொழிலாளர், கிருஷிகள் முதலியோர் கவனித்து வருகின்றார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப் பட்டவர்களுக்கும், ஏமாற்றப்பட்டவர்களுக்கும் இந்நாள் ஒன்றே உயர்ந்த தினமாகும்.

இந்நாளில் கோடான கோடி மக்கள் தாங்கள்படும் கஷ்டங்களையும், குறைகளையும் தெரிவிப்பான் வேண்டி, ஆங்காங்கு கூட்டங்கள் போடுவதும், ஊர்வலம் விடுவதும், உபந்யாசங்கள் செய்வதும் வழக்கமாயிருந்து வருகிறது. இவ் வருஷம் 'மே' தினமாகிய சென்ற திங்களில் (1933, மே 1) ஆங்கில நாட்டிலும் (England), பிரான்சு (France), ரஷ்யாவிலும் (Russia), ஜெர்மனி (Germany), இத்தாலி, (Italy), அமெரிக்காவிலும் (America), இந்தியாவிலும் (India), ஜப்பானிலும் (Japan)—மற்றுமுள்ள தொழிலாளர், முதலாளி தேசங்களிலும் கோடானுகோடி மக்கள் தம்தம் குறைகளைத் தெரிவித்தும், குறைகளுக்குப் பரிகாரம் தேடியும், யோசித்தும் பற்பல தீர்மானங்கள் செய்தும் வந்திருக்கின்றனர்.

இந்த வருஷம், பாரிஸ் பட்டணம், இந்நாளைத் தொழிலாளர் விடுமுறை நாளாகக் கொண்டாடியது. சமதர்ம நாடாகிய சோவியத் ரஷ்யாவில் 16 கோடி ஆண், பெண், குழந்தைகள் அடங்கலாக யாவரும் ரஷ்ய தேசமுழுமையும் இத் தினத்தைக் கொண்டாடினார்கள். சமதர்மிகளாகிய நாமும் இத் தினத்தைக் கவனிக்காமலிருப்பது பெருங்குறையேயாகும். இம் மாதம் முதல்நாள் கடந்துவிட்ட போதிலும் வருகிற ஞாயிற்றுக்கிழமை மே மாதம் 21ஆம் தேதி சுயமரியாதை சமதர்ம சபைகள் யாவும், சமதர்மக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட சங்கங்கள் யாவும், அத் தினத்தைப் பெருந் தினமாகக் கொள்ளல் மிக்க நலமாகும். அன்று காலையிலும், மாலையிலும் அந்தந்தக் கிராமங்களிலும், பட்டணங்களிலும்—சமதர்மிகள் ஊர்வலம், சமதர்ம சங்கீதங்களுடன் வரலாம்; ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி சமதர்மம் இன்னதென்றும், தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் விளக்கமுறச் செய்யலாம்; துர்ப்பழக்க ஒழுக்கங்களை ஒழிக்குமாறு பல தீர்மானங்களைச் செய்யலாம். இவ்விதமாக ஒழுங்காகவும், நியாய முறைப்படி கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.



['குடி அரசு'-அறிக்கை—14-5-1933]

சர்வ தேசங்களிலுமுள்ள தொழிலாளர்கள்—ஆண்களும், பெண்களும் மே மாதம் 1ஆம் தேதியைத் 'தொழிலாளர் தின'மாகக் கொண்டாடி வருகிறார்கள்.

ரஷ்ய சமதர்மத் தொழிலாளர்கள், தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதின் சந்தோஷத்தையும், பூரிப்பையும் அதன் பலனையும் எடுத்துக் காட்டுகிற தோரணையில் மே தினத்தை ரஷ்யாவில் கொண்டாடுகிறார்கள்.

பிற தேசங்களில், தொழிலாளர்களின் குறைபாடுகளைப் பகிரங்கப்படுத்தி, பரிகாரம் வேண்டுகிற முறையிலும்; தொழிலாளர்களின் சுபீட்ச வாழ்க்கை, சமதர்ம முறையாலும், தொழில் நாயக அரசாலும் (Ergotacracy) அதாவது—தொழிலாளர் குடி அரசாலுமே (Proletarian democracy) சித்திக்குமெனத் தீர்மானிக்கும் முறையிலும் 'மே தினம்' கொண்டாடப்படுகிறது.

இந்தியாவிலும் சில வருஷங்களாக, 'மே தினம்' இங்கொரு இடத்திலும் அங்கொரு இடத்திலுமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற வருஷத்தில் இந்தியாவில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டிலோ மே மாதம் முதல் தேதி கொண்டாடப்பட்டது. பின், நமது பிரத்தியேக வேண்டுகோளின்படி மே மாதம் 21 ஆம் தேதி தமிழ் நாடெங்கணும் கொண்டாடப்பட்டது.

சுயமரியாதை வீரர்களே! சமதர்மிகளே! தொழிலாளர்களே! தொழிலாளர்களின் தோழர்களே! இந்த வருஷத்தில் மே தினத்தை மே மாதம் முதல் தேதியில் தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள நகரங்கள்தோறும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைத் திரட்டி வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டுகிறேன்.

தேசம், மதம், சாதி என்கின்ற தேசிய உணர்ச்சிகளை மறந்து, உலகத் தொழிலாளர் எல்லாம் ஒரே சமூகமாய் ஒன்றுபட்டு எல்லா தேச, மத, சாதி மக்களுக்கும் வாழ்க்கையில் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படி கொண்டாட வேண்டும் என்றும்; தொழிலாளர் சம தர்ம இராஜ்யம் ஏற்பட வேண்டும் என்னும் ஒரே அபிப்பிராயம் ஏற்படும்படி தொழிலாளர்களிடையில் பிரச்சாரம் செய்யவும், வேறு சாதகங்கள் பெறவும் இம் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['குடி அரசு'-அறிக்கை—28-4-1935]

## 3. பொதுவுடைமையா? பொது உரிமையா?

தமிழ்நாட்டில் பொதுவுடைமைப் பிரச்சாரகர்கள் பெரிதும் பார்ப்பனர்களாய் இருப்பதால், நாம் அவர்களிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? காங்கிரஸ் என்றாலும், பொதுவுடைமை என்றாலும், இந்து மதம் என்றாலும் அல்லது வேறெந்த பொதுநலப் பேரை வைத்துக்கொண்டாலும் பார்ப்பனர்கள் செய்யும் பிரச்சாரம் எல்லாம் ஜஸ்டிஸ் கட்சியையும், சுயமரியாதைக் கட்சியையும் பற்றி விஷமப் பிரச்சாரம் செய்வதல்லாமல் அவர்களால் வேறு என்ன செய்யமுடியும்?

படிப்பகம்

www.padippakam.com



இலண்டன் பார்லிமெண்டில் சென்ற மாதம் ஒரு மெம்பர் இந்தியா மந்திரியை ஒரு கேள்வி கேட்டார். அதாவது:—

'உலகத்திலேயே எல்லா மக்களையும்விடத் தங்களை உயர்ந்த பிறவிகள் என்று சொல்லிக்கொண்டும்—மற்றவர்களை விட்டு விலகி தனித்து இருந்துகொண்டும்—பாடு படாமல் இராஜபோகம் அனுபவிக்கும் இந்தியப் பார்ப்பனர்கள் இந்த நாட்டுப் பொதுவுடைமைக்காரர்களுடன் சேர்ந்திருக்கிறார்களே, இதன் அர்த்தமென்ன? என்று ஒரு கேள்வி கேட்டார். இதற்கு இந்தியா மந்திரி சிரித்தாராம்!

அதுபோல், பார்ப்பனர்கள் பாடுபடாமலும், எவ்விதக் குறைபாடு இல்லாமலும் வாழ்ந்துகொண்டும் மற்றவர்களுக்கு மேலானவர்களாக இருந்துகொண்டும் பொதுவுடைமைப் பிரச்சாரத்தில் காங்கிரசையும், பார்ப்பனியத்தையும் கண்டிக்காமல்—அவற்றைக் கண்டிக்கும் ஜஸ்டிஸ் கட்சியையும், சுயமரியாதைக் கட்சியையும் ஏன் குறை கூறுகிறார்கள் என்றால்—இந்த இரண்டு கட்சிகளும் வருணாசிரம காங்கிரசுக்கும், பார்ப்பனியத்திற்கும் விரோதமாக இருப்பதால்தானே ஒழிய வேறில்லை.

பார்ப்பனர்களுக்கே நன்றாய்த் தெரியும்! என்னவென்றால், வருணாசிரமத்தையும், பார்ப்பனியத்தையும் பத்திரப்படுத்திவிட்டு எப்படிப்பட்ட பொதுவுடைமையை ஏற்படுத்தி விட்டாலும், திரும்பவும் அந்த உடைமைகள்—வருணாசிரமப்படி பார்ப்பானிடம் தானாகவே வந்து விடும் என்றும்; சாதி இருக்கிறவரையில் எப்படிப்பட்ட பொதுவுடைமைத் திட்டம் ஏற்பட்டாலும் பார்ப்பனர்களுக்கு ஒரு கடுகளவு மாறுதலும் ஏற்படாமல் அவர்கள் வாழ்வு முன்போலவே நடைபெறும் என்றும் தைரியம் கொள்ளத்தெரியும்.

ஆதலால், பார்ப்பனர் பேசும் பொதுவுடைமை, 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதால்' அவர்களுக்கு நட்டம் ஒன்றும் இல்லை என்பதோடு, உடைபட்ட தேங்காயும் அவர்களுக்கேதான் போய்ச்சேரும். அதனால்தான் பார்ப்பனர்களுக்குப் பொதுவுடைமைப் பிரச்சாரத்தில் அவ்வளவு உற்சாகம் ஏற்படக் காரணமாகும்.

நம் தொழிலாளி மக்களும், ஏழை மக்களும், பொறுப்பற்ற வாலிபர்களும் யோசனை அற்றவர்களாதலால் இதில் சுலபத்தில் ஏமாந்து மயங்கி விடுகிறார்கள்.

பொதுவுடைமை வேறு; பொது உரிமை வேறு. பொதுவுடைமை என்பது சமபங்கு என்பதாகும்; பொது உரிமை என்பது சம அனுபவம் என்பதாகும்.

இந்நாட்டில் பார்ப்பனியத்தால்—சாதியால் கீழ்ப்படுத்தப்பட்ட மக்களுக்கு சம உடைமை இருந்தாலும் சம உரிமை (அனுபவம்) இல்லை என்பது குருடனுக்கும் தெரிந்த சங்கதியாகும். அதனாலேயே அவர்கள் உடைமை கரைந்துகொண்டே போகிறதுடன் உடைமைக்கு ஏற்ற அனுபவமும் இல்லாமல் இருக்கிறார்கள்.

உதாரணமாக, இராஜா சர். அண்ணாமலை செட்டியார் கோடீஸ்வரர்; சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் பல இலட்சங்கட்கு அதிபதி; இருவரும் பெரும் தனி உடைமைக் காரர்கள். இவர்களுக்கு ஒரு சாதாரண பிச்சைக்காரப் பார்ப்பானுக்கு இருக்கும் பொது உரிமை இல்லை என்பதை அவர்களே ஒப்புக்கொள்வார்கள். ஆனால், தனி உரிமை உள்ள ஒரு கீழ்த்தரப் பிச்சைக்காரப் பார்ப்பானுக்கு உடைமையே அடியோடு இல்லாவிட்டாலும் அவனுடைய போக போக்கியம் குறைவு படுவதே இல்லை. அன்றியும், பாடுபடாமல்—கை முதல் இல்லாமல்—தனக்குள்ள தனிஉரிமை காரணமாகவே தன் மகனை அய். சி. எஸ். படிக்க வைத்து, 'ஜில்லா கலெக்டர்', 'ஜில்லா ஜட்ஜ்', ஏன்—'அய்க்கோர்ட் ஜட்ஜா'கவும், 'சங்கராச்சாரி', 'ஜீயர்' ஆகவும் ஆக்க முடிகிறது.

இந்த நிலையில் தனிஉரிமையை முதலில் ஒழித்துவிட்டோமானால், தனிஉடைமையை மாற்ற அதிகப்பாடுபடாமலே இந்த நாட்டில் பொதுவுடைமை ஏற்பட வசதி உண்டாகும். உண்மையான பொதுவுடைமையும் நிலைத்து நிற்கும்.



குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சாதி காரணமாகத்தான் பலர் மேன்மக்களாய்—பணக்காரர்களாய் இருக்கிறார்கள்; இருக்கவும் முடிகிறது. சாதி காரணமாகத்தான் எல்லோரும் கீழ் மக்களாய், ஏழைகளாக இருக்கிறார்கள்; இருக்கவும் வேண்டியிருக்கிறது. இது இன்றையப் பிரத்தியட்சக் காட்சியாகும்.

ஆங்கிலத்தில் 'கேஸ்ட்', 'கிளாஸ்' (caste, class) என்ற இரண்டு வார்த்தைகள் உள்ளன. அதாவது தமிழில் சாதி—வகுப்பு என்று சொல்லப்படுவனவாகும். சாதி—பிறப்பினால் உள்ளது; வகுப்பு-தொழில் அல்லது தன்மையினால் ஏற்படுவது.

தொழிலும், தன்மையும் யாருக்கும் ஏற்படலாம். சாதிநிலை, அந்தந்தச் சாதியில் பிறந்தவனுக்குத்தான் உண்டு; பிறக்காதவனுக்குக் கிடையவே கிடையாது.

மேல் நாட்டில் சாதி இல்லாததால், அங்குப்பொதுவுடைமைக்கு முதலில் வகுப்புச் சண்டை துவக்கவேண்டியதாயிற்று. இங்கு சாதி இருப்பதால் பொதுவுடைமைக்கு முதலில் சாதிச் சண்டை துவக்கவேண்டியதாகும்.

பார்ப்பானும், பார்ப்பனிய உணர்ச்சியும் உள்ள மக்கள் பொதுவுடைமை வேஷம் போடுவதால் சாதிச் சங்கதியை மூடிவிட்டு, ஆகாத காரியமான—ஆனாலும் தங்களுக்குக் கேடில்லாததான வகுப்பு (class) உணர்ச்சியைப்பற்றிப் பேசி—சாதியை ஒழிக்கப் பாடுபடும் கட்சிகளோடு ஏழைகளை மோதவிடுகிறார்கள்; சாதியை ஒழிக்கச் செய்யப்படும் முயற்சியையும் அழிக்கப் பார்க்கிறார்கள்.

பார்ப்பனர்களுக்கும் மற்றும் மேல் சாதிக்காரர்களுக்கும் இருக்கும் உயர்வை முதலில் ஒழித்தாகவேண்டும். இதிலேயே அரைப் பாகம் பொதுவுடைமை ஏற்பட்டுவிடும். அதாவது, சாதியினால் அனுபவிக்கும் ஏழ்மைத்தன்மையும், சாதியினால் சுரண்டப்படுபவர்களாக இருக்கும் கொடுமையும் நம் பெரும்பான்மை மக்களிடமிருந்து மறைந்துவிடும்.

பொது உரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடைமை மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம்தான் போய்ச் சேர்ந்துகொண்டே இருக்கும் என்பது பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் பாலபாடம் என்பதை மக்கள் உணரவேண்டும்.

இன்றுள்ள கோயில், குளம், உற்சவம், சடங்கு, பண்டிகை, சுபகாரியம், அசுப காரியம் என்பவைகள் எல்லாம் பிறவி காரணமாகவே சிலருக்கு அதிக உரிமை இருப்பதாலும்—சிலர் சுரண்டுகிறவர்களாய் இருப்பதாலும் ஏற்பட்டு இருந்து வருபவைகளே ஒழிய—அவர்களுக்காகவே இருந்து வருபவைகளே ஒழிய இவற்றிற்கு வேறு காரணம் ஒன்றுமே இல்லை. ஆகவே, சுரண்டப்படும் சாதியாரிடத்தில் உள்ள சாதி இழிவை, மடமையை ஒழிக்க சுரண்டும் சாதியார் முயற்சிப்பார்களா? அல்லது ஒழியத்தான் சம்மதிப்பார்களா?

திராவிடநாடு பிரிந்து—கிடைத்து, சுரண்டும் சாதி ஒழிக்கப்பட்டு, சம உரிமை எல்லோருக்கும் ஏற்படும்படியான உணர்ச்சி வந்துவிட்டால், பிறகு நாம் சுலபத்தில் எதுவும் செய்துகொள்ளமுடியும். அந்தக் காரியத்திற்காகத்தான் சுயமரியாதைக் கட்சி முயலுகிறது. இந்தக் கட்சியில் இன்று மேல்சாதியானுக்கோ அல்லது சாதிப் பேய்—பார்ப்பனியப் பேய் பிடித்த பெரிய மனிதர்கள் என்பவர்களுக்கோ எவ்வித அதிகப்படியான செல்வாக்கோ, ஆதிக்கமோ இல்லை என்பதையும், இக் கட்சி சாதியிலேயே தொழிலாளர்களாகவும், உண்மைத் தொழிலாளர்களாகவும் ஏழைக் கூலி மக்களாகவும் உள்ள பெரும்பான்மையான மக்களுடைய கட்சி என்பதாகவும் மக்கள் உணரவேண்டும்.

['குடிஅரசு'-தலையங்கம்—25-3-1944]

படிப்பகம்

www.padippakam.com



## 4. பொதுவுடைமைக்கு விரோதியா ?

நம்முடைய மக்களின் குறைபாடுகளை உணராமல், நமக்குள்ளே ஒற்றுமை
இல்லாமல், பார்ப்பனர்மீது குறைகூறுவதில் என்ன இலாபம் ? இவ்வளவு காலம் எடுத்துக்
கூறியும் மதத் துறையிலே—கடவுள் துறையிலே—சாதித் துறையிலே யார் அறிவோடு
நடந்துகொள்கிறார்கள் ? கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வதோ, தேர்த் திருவிழா
உற்சவம், கலியாணம், கருமாதி செய்வதோ நின்றதா ? மகாமகக் குளத்திற்குப் போய்ச்
சேற்றைப் பூசிக்கொள்வது குறைந்ததா ? இந்த ஊழல்களைக் கவனியாமல் நாடு ஏழை
நாடு, மக்கள் படிக்காதவர்கள் என்றால் என்ன நியாயம் ? இந்த நாடு ஏழை நாடா ?
டாட்டாக்களும், பிர்லாக்களும் ஒரு மீனாட்சியம்மனிடத்தில் பிச்சை வாங்க வேண்டாமா ?
படிக்க வசதியில்லை. குடிக்கக் கஞ்சியில்லை ! ஆனால், குழவிக் கல்லுக்குத் தங்க ஓடு ;
செப்புச் சிலைக்கு வெள்ளித் தேர் ; அதை இழுப்பதற்கு ஆயிரம் முட்டாள்கள்-என்ன நீதி ?

இம் மாதிரியான அறிவுக்குப் பொருத்தமற்ற செயல்களை நீக்கவேண்டும். சிலர்
நம்மீது குற்றஞ் சாட்டுகிறார்கள், நாம் பொதுவுடைமைக்கு விரோதிகள் என்று. இவர்
களுக்குத் தெரியுமா, இந்த நாட்டில் யார் பொதுவுடைமைத் தத்துவத்தை முதலில் பேசிய
தென்று ? 14-11-1935-ல், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் ஒப்புக்
கொள்ளப்பட்ட என்னுடைய 15 திட்டங்களை இவர்கள் படித்துப் பார்க்கவேண்டும் ;
பிறகு கூறட்டும்—இவ்வளவு அரிய பெரிய திட்டங்களையுடைய பொதுவுடைமைக் கட்சி,
ஏதாவது உண்டா என்பதை !

[தஞ்சை மாவட்டத்தில், 26-11-1944 முதல் 30-11-1944 முடிய சொற்பொழிவு—'குடி அரசு' 9-12-1944]

## 5. கம்யூனிசம்

தலைவரவர்களே ! தோழர்களே ! தாய்மார்களே !

கம்யூனிசம் என்பதற்குத் தமிழிலே பொதுவுடைமை என்பார்கள். இன்றைய தினம்
உடைமை என்று கருதப்படுவதெல்லாம் தனித்தனி மனிதனுக்குச் சொந்தம். பொது
வுடைமையென்றால் எந்தச் சொத்தும் எந்த மனிதனுக்கும் சொந்தமல்ல. பொதுவுடைமை
நாட்டில் அந்த நாட்டுச் சொத்துக்கள் எல்லாம் சர்க்காருக்கு (பொது மக்களுக்கு)ச்
சொந்தம். நிலமாக இருந்தால் எல்லா மக்களும் பாடுபட்டுப் பயிர் செய்வது ; தொழிற்
சாலையாக இருந்தால் எல்லோரும் தொழில் பண்ணுவது ; பாடுபட்டு வரும் பொருளை
எல்லோரும் அனுபவிப்பது.

உதாரணமாக, இந்த உறையூர் ஓர் பொதுவுடைமை நாடாக ஆகின்றது என்று
வைத்துக் கொள்வோம். உறையூர் மக்கள் எல்லாம் ஒரு குடும்பம் போன்றவர்கள். எப்படிக்
குடும்பத்தின் சொத்தானது குடும்பத்திலுள்ள அத்தனை பேருக்கும் பொதுவானதா
கின்றதோ, குடும்பத்தின் எல்லா மக்களும் எப்படிப் பாடுபட்டு உழைக்கின்றார்களோ, பிறகு
வரும் வருவாயைக் குடும்பத்திலுள்ள எல்லோரும் எப்படி அனுபவிக்கின்றார்களோ,
அதுபோலத்தான், பொதுவுடைமை நாடு என்பதும்.

நாட்டு மக்கள் எல்லாம் ஒரு குடும்பம்போல ; எல்லா மக்களும் பாடுபடவேண்டும் ;
வருகின்ற இலாபம்—விளைபொருள் முதலியவற்றை எல்லா மக்களுக்கும் பகிர்ந்தளிப்பது.
இதுதான் பொதுவுடைமையாகும்.

இதன் அடிப்படைத் தத்துவம் என்ன ? இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏன் நடத்தப்படு
கின்றது ? என்பனவற்றையெல்லாம் புரிந்துகொண்டால்தான் பொதுவுடைமைத் தத்து
வத்தின் சிறப்பு விளங்கும். மனிதன் அறிவைக் கொண்டு வசதிகளைப் பெருக்கிக்
கொள்ளலாம். ஆனால், மனிதனென்றால் கவலை உள்ளவனாகவே இருக்கின்றான்.



பிரதமரானாலும், முதன்மந்திரியானாலும் அவர்களுக்கும் கவலைதான் ; 'கோடீசுவரன்'
ஆனாலும் அவனுக்கும் கவலைதான் ; நாட்டை ஆளுபவர்களுக்குப் பல பிரச்சினைகளைச்
சமாளிக்கவேண்டிய கவலை நிலை உண்டாகிறது.

'கோடீஸ்வர'னுக்கு—எப்படித் தனது ஒரு கோடி ரூபாயைக் காப்பது என்பது
கவலை ; அத்தோடு நின்று விடுவதில்லை ; தனக்கு ஒரு கோடி ரூபாய்தானே உள்ளது—
அடுத்தவனுக்கு 2 கோடி இருக்கின்றதே என்று தம்மிலும் மேம்பட்டவனைப்பற்றிக் கவலை
யடைகின்றான்.

ஏழை தனக்குச் சாப்பாட்டிற்கு வழியில்லையே—அவன் நல்வாழ்வு வாழ்கின்றானே
என்ற வேதனையடைகின்றான். குச்சு வீட்டுக்கும் வழியில்லாத ஒருவன், வசதிபடைத்த
ஒருவன் பங்களாவில் வாழ்வதைப் பார்த்து மனம் புழுங்குகிறான். இதுபோலக் கவலை,
மனக் குறையென்பது எல்லாத் துறைகளிலும் இருக்கின்றது.

பெண்டு பிள்ளைகள் மட்டும் சும்மாவா ? சும்மா இருக்கின்ற மனிதன் ஒருத்தியைக்
கட்டிக்கொண்டு எவ்வளவு வேதனையும் கவலையும் படுகின்றான் ? கட்டிக் கொண்டவளைக்
காப்பற்றணும் ; மற்றவன் கண்ணடிக்காமல் பார்த்துப் பாதுகாக்கணும் ; அவள் குட்டிகள்
போட்டால் அவைகளைப் பாதுகாக்கணும் ; படிக்கவைக்கணும் ; கலியாணம் செய்யணும்.
அப்புறம் கல்வி ; இரண்டாவது, உத்தியோகம்—வேலை தேடிக் கொடுக்கணும். பிறகு,
'பிரமோஷனு'க்குப் பிறசிடம் பல்லைக் காட்டிக் கெஞ்சணும் ; மாற்றலானால் 'கேன்சல்'
பண்ணிச் சொந்த ஊருக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் எனக் கெஞ்சணும். இப்படி
யாக சதா கவலை, மனக் குறைவு உடையவனாகவே மனிதன் இருக்கின்றான். இந்தக்
கவலைகளை, மனக் குறைகளை எல்லாம் பொதுவுடைமை ஒன்றினால்தான் நிவர்த்திக்க
முடியும்.

பொதுவுடைமை என்று கூறுவதன் அடிப்படைத் தத்துவமே, மனிதன் கவலையற்ற
வாழ்வு வாழவேண்டும் என்பதுதான். சொந்த உடைமை என்பது கவலை நிறைந்த
வாழ்வாகும்.

மனிதனுக்கு உணவுப் பண்டம் பற்றவில்லையானாலும், சற்றுக் குறைவாக இருப்ப
தனாலேயே குறைகூறமாட்டான். ஒருவனுக்கு அதிகம் ; இன்னொருவனுக்குச் சும்மா—
ஒன்றுமில்லை என்றிருந்தால்தானே குறைபாட்டுக்கு—எதிர்ப்பதற்கு இடமேற்படும் !

மனிதனுடைய கவலைக்கும் குறைபாட்டிற்கும் பரிகாரமாக, முடிந்த முடிவாக
அறிஞர்களால் பலகாலும் சிந்திக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டதுதான் பொதுவுடைமைத்
தத்துவம்.

இதன்மூலம் சந்தோஷமான, கவலை—துக்கமற்ற, தெளிவுள்ள வாழ்க்கை மக்களுக்குக்
கிட்டுகின்றது. மனிதன் சிந்தித்து அறிவை வளர்த்துக்கொண்டே போனால் அங்குதான்
(பொதுவுடைமையில்தான்) கொண்டுபோய்விடும்.

இன்றைக்கு இந்தக் கொள்கையினை ஏற்றுக்கொண்ட மக்கள் 100 கோடிகளுக்கு
மேல் உலகில் வாழ்கின்றார்கள். ரஷ்யா பொதுவுடைமை நாடு ; அங்கு 25 கோடி மக்கள்
வாழ்கின்றார்கள். அடுத்து சீனா ; அங்கும் கம்யூனிஸ்ட் ஆட்சிதான், 75 கோடி மக்கள்
வாழ்கின்றார்கள். இவை இல்லாமல் அங்கேரி, போலந்து, செக்கோஸ்லோவேக்கியா,
ஆஸ்ட்டிரியா, கிழக்கு ஜெர்மனி—இன்னும் அனேக கம்யூனிஸ்ட் நாடுகளும் உலகில்
உள்ளன. ஏராளமான மக்கள் அங்கும் வாழ்கின்றார்கள்.

இந்த நாடுகளில் மக்களுக்குக் கடவுளோ, மதமோ, சாஸ்திரமோ, முன்னோர்கள்
நடப்போ ஒன்றும் கிடையாது ; அறிவுதான் பிரதானம்.

படிப்பகம்

www.padippakam.com



நம் நாட்டிலும் கம்யூனிஸ்டுக்காரர்கள் இருக்கிறார்கள்; இவர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு மட்டும் பொதுவுடைமையைச் சாதனமாகப் பயன்படுத்திக்கொள்கின்றார்களே ஒழிய, பொதுமக்கள் கடைத்தேற ஒன்றும் செய்யவில்லை; பொதுவுடைமை என்றால் மக்களுக்கும் ஒன்றும் தெரியாது.

எனவே, நாட்டில் பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்ட அரசாங்கம் ஏற்பட்டு முயன்றால்தான், மக்களின் குறைபாடுகள் நீங்குமே ஒழிய, பொறுக்கித் தின்னும் இந்தக் கம்யூனிஸ்ட்டுகளின் காலித்தனம், பலாத்காரத் தூண்டுதல் மூலம் ஒன்றும் முடியாது. அரசாங்கத்தைக் கைப்பற்ற ஆட்சி இந்தத் துறையில் ஈடுபட்டால்தான் மார்க்கம் ஏற்படும். ஒருவன் சட்டைப் பையில் இருப்பதை இன்னொருவன் எடுப்பதுபோல், ஒருவன் நிலத்தில் மற்றொருவன் பிரவேசிப்பதால் இது ஆகிவிடாது.

மோட்சம், முக்தி என்ற வார்த்தைக்கு 'துக்கநாசம்' 'சுகப் பிராப்தி' என்பது பொருள்.

இந்தத் துக்க நிவர்த்திக்கும், குறைபாடுகள் ஒழிப்பிற்கும் பரிகாரம்—பொது வுடைமைதான் ஆகும்.

குறைபாடு இரண்டு விதங்களில் உண்டு. போதவில்லை என்பது ஒன்று—அதாவது கால்படி அரிசி தேவையானால் அதற்கும் குறைவாகக் கிடைக்கின்றதே என்பது.

இரண்டாவது, போதுமான அளவுக்குமேல் வேண்டும் என்று ஆசைப்படுவது. உதாரணமாக ஒரு 'ரூமில்' வசிப்பவன் இரண்டு ரூம்கள் இருந்தால் நன்றாய் இருக்கும் என்று ஆசைப்படுவது.

இப்படி ஆசையினால் ஏற்பட்ட குறையும் தேவையினால் ஏற்பட்ட குறையும் பொது வுடைமையினால் தீர்ந்துவிடும்.

இருக்கின்ற உணவுப் பொருள் எல்லோர்க்கும் பகிர்ந்து கொடுக்கப்படும்போது, ஒரே விதமாக எல்லோருக்கும் உணவுப் பொருள் கிட்டுவதால், தமக்குக் குறைவு என்ற எண்ணம் ஏற்படாது; எல்லோருக்கும் ஒரு 'ரூம்'தான் என்று எண்ணி சமாதானம் அடைந்து கொள்வான்.

இதனாலேயே, போட்டி பொறாமை ஏற்பட வழி இருக்காது; கவலை ஒழிந்து எல்லோரும் மன நிறைவோடு வாழச் செய்யும்.

ரஷ்யாவில் புருஷனும் மனைவியுமாக வாழ்கின்றவர்களுக்கு வசிக்க அறை கொடுக்கின்றார்கள்; மற்ற வசதிகளும் செய்துகொடுக்கின்றார்கள். இருவரும் இஷ்டப் பட்டுச் சேர்ந்து வாழுகின்றனர்; இஷ்டம் இல்லாதபோது பிரிந்துகொள்கின்றனர்.

இருவரும் ஆபீசுக்குப் போகும்போது முத்தம் கொடுத்துவிட்டுப் போகின்றனர். திரும்பி வந்து பார்த்தால் 'டேபிளில்' ஒரு கார்டு இருக்கும். 'இதுவரைக்கும் நாம் இருவரும் இஷ்டப்பட்டுக்கூடி சந்தோஷமாக வாழ்ந்தோம். இனி எனக்கு இஷ்டம் இல்லை; பிரிந்து கொள்வோம்' என்று இருவரில் யாராவது ஒருவர் எழுதிவைத்து இருப்பார்கள்; ஒரு தகராறும் இல்லாமல் பிரிந்துகொள்வார்கள். அதனால் ஏதாவது விவகாரம் ஏற்படும் என்றால்—அது, இருவருக்கும் பிறந்த குழந்தைகளைப் பற்றியேயாகும்; 100-க்கு 90 பங்கு அவர்களே அதை 'பைசல்' பண்ணிக்கொள்வார்கள்—'இந்தப் பிள்ளை உன்னோடு இருக்க வேண்டியது; இது என்னோடு இருக்கவேண்டியது' என்று. தகராறு ஏதாவது ஏற்பட்டால்,அதற்கு என்று சில 'கோர்ட்டு'கள் இருக்கின்றன; அவைகள் அதைத் தீர்த்து வைக்கும்.

அங்கு. ஒருவன் மனைவியை இன்னொருவன் அனுபவித்தான் என்பது பற்றிய பேச்சே வராது; அனுபவிக்கப் பலாத்காரம் பண்ணினான் என்றால்தான், 'கேஸ்'.



அங்கு பிள்ளைகளைத் தாய் தந்தையர்தான் காப்பாற்றவேண்டும், வளர்க்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. அரசாங்கமே ஏற்று வளர்த்துக்கொள்கின்றது. இங்கு நம்மவர்கள் 'எதற்கடா குழந்தை?' என்றால், 'செத்த பிறகு கொள்ளிவைக்க, ஈமக்கடன் செய்ய' என்கின்றான்; மற்றும் 'அந்திய காலத்தில் எங்களைக் காப்பாற்ற, கஞ்சி ஊற்ற அவசியம் குழந்தை வேண்டும்' என்கின்றான்; 'என் சொத்துக்கு வாரிசாக வேண்டும்' என்கின்றான்.

ரஷ்யாவில் அப்படியல்ல. அவன் உடலில் வலுவுள்ளவரைக்கும் உழைத்துச் சாப்பிடுகின்றான்; வயோதிகம் வந்தால் அரசாங்கம் அவனுக்கு உணவு முதலிய வேண்டிய சவுகரியங்கள் எல்லாம் செய்துகொடுத்துக் காப்பாற்றுகின்றது. அங்கு தனி மனிதனுக்குச் சொத்து வைத்துக்கொள்ள உரிமையில்லாத காரணத்தினால், தம் சொத்துக்கு வாரிசு—பிள்ளை இருந்தாகவேண்டும் என்ற அவசியமுமில்லை.

தோழர்களே! பொதுவுடைமை நாட்டில் கடவுளோ, மதமோ, சாஸ்திர நம்பிக்கையோ இல்லை. அங்கு உயர்ந்தவன், தாழ்ந்தவன்; உயர்ந்த உத்தியோகஸ்தன், தாழ்ந்த உத்தியோகஸ்தன் என்கின்ற நிலையுமில்லை. எல்லோரும் சமமானவர்கள்; எல்லோருக்கும் சம்பளம் (வாழ்க்கை வசதி) ஒன்றுதான்—வேலைதான் வேறு, வேறு. அங்கு பெரிய வேலையை ஒத்துக்கொண்டால் பொறுப்புக்கள் அதிகம் என்று கருதுவான்.

எனவே, அங்கு மேல், கீழ் என்று பாராட்டப்படுவதேயில்லை.

இதனால் அங்கு உற்பத்தி பெருகுகின்றது. இங்கு 100 பங்கு விளைகின்றதென்றால் அங்கு 150 பங்கு, 200 பங்கு விளைகின்றது.

அங்கு ஒரு ஆள் இத்தனை மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டுமென்றும், இவ்வளவு வேலை செய்தாக வேண்டுமென்றும் உள்ளது. 'டைம்' முடிந்தால் நம் நாட்டுத் தொழிலாளர்கள்போல அவர்கள் ஓடமாட்டார்கள்; அதிகப்படியாகக் கொஞ்சநேரம் வேலை, அவனாக முன்வந்து செய்வான். இப்படிச் செய்கின்றவர்களின் வேலைகளையும் நேரத் தையும் கணக்கிட்டு, வருஷமோ, மாதமோ ஆன பிறகு அவர்களுக்குப் பட்டம் கொடுத்து மரியாதை பண்ணுவார்கள்.

தோழர்களே! அங்கு இந்த மரியாதையினைத்தான் எதிர்பார்ப்பானேயொழிய அதிகப்படி பணத்தை எதிர்பார்க்கவேமாட்டான். அங்கு புரட்டோ, திருட்டோ ஏமாற்று வதோ அடியோடு கிடையாது.

அங்குக் கழிப்பிணித்தனம் அவமானமாகக் கருதப்படும்; நாணயம் என்பது மக்களிடம் கரைபுரண்டு ஓடும். அங்கு, நான் கூறியதுபோல—மக்களுக்கு எந்தவிதமான குறைபாடுகளோ, கவலைகளோ இல்லை. இதன் காரணமாக மக்கள் அங்கு 100 வயதிலும் 120 வயதிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் வாழ்கின்றார்கள்.

அங்கு 1915-ல் புரட்சி ஏற்பட்டது; 1920-ல் சோவியத் ஆட்சி என்று பிரகடனப் படுத்தினார்கள்; இன்றைக்குச் சுமார் 54 வருஷங்கள் ஆகின்றன. இந்தக் காலத்துக் குள்ளாக எவ்வளவோ மேம்பாடு அடைந்து இருக்கின்றது. எனவே, இங்கு எனக்குத் தோன்றிய பொதுவுடைமை என்பதுபற்றிச் சுருக்கமாகக் கூறினேன்.

[ திருச்சி சிந்தனையாளர் கழகச் சார்பில், உறையூரில், 9-1-1972-ல் ஆற்றிய சொற்பொழிவு—
'உண்மை'-பிப்ரவரி, மார்ச் 1972]



படிப்பகம்

www.padippakam.com



# 5. தொழிலாளர் இயக்கம்

## 1. தொழிலாளர் சங்கம் ஏன்?

அக்கிராசனர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நான் இதுவரை எந்தத் தொழிலாளர் சங்கத்திலும் பேசியதே இல்லை. டாக்டர் வரதராஜுலு நாயுடுவுடன் இரண்டொரு சங்கங்களுக்குப் போயிருக்கிறேன். ஈரோட்டில் கூடிய தொழிலாளர் மாநாட்டில் உபசரணைத் தலைவராக இருந்து இரண்டொரு வார்த்தைகள் பேசி இருக்கிறேன்.

பொதுவாக, 'தொழிலாளர் சங்கம்' என்றாலே எனக்கு அதனிடத்தில் விருப்பம் இருப்பதில்லை. அதில் ஒரு சத்து இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை. சில, வெறும் வெளி ஆசாமிகள் அதைத் தம் நன்மைக்கும் கீர்த்திக்கும் ஏற்படுத்திக்கொண்ட சாதனமென்பதே என்னுடைய வெகுநாளைய அபிப்பிராயம். அல்லாமலும், நமது நாட்டில் உண்மையான தொழிலாளிகளே கிடையாது.

நமது நாட்டில் இப்போது தொழிலாளிகள் என்று சொல்லப்படுவோரெல்லாம் தொழி லாளிகளல்லர். அவர்கள் எல்லாம் கூலிக்காரர்கள்தாம். தொழிலாளி என்பவன்—நாட்டின் நன்மைக்காக ஒரு தொழிலைக் கற்று அத்தொழிலைத் தானாகவே சுயேச்சையுடன் செய்து அதன் பலன் முழுவதையும் தானும் தன் நாட்டு மக்களும் அடையும்படியான முறையில் தொழில் செய்பவன்தான் தொழிலாளி. நீங்கள் அப்படியில்லை. ஏதோ ஒரு முதலாளியின் கீழ் தினக் கூலிக்கமர்ந்து உங்களுக்கு எவ்வித சுதந்திரம் இல்லாமல் முதலாளி சொல்லு கிறபடி செய்துவிட்டு, அதன் பலன் முழுவதும் அவரே அடையும்படி செய்து, உங்கள் ஜீவனத்திற்குக்கூட போதுமானதாயில்லாத கூலியை வாங்கிப் பிழைக்கிறீர்கள். ஒரு முதலாளிக்குக் கீழ் வேலை செய்து கூலி வாங்குபவன் எவ்வளவு பெரிய கூலிக்காரனா னாலும் அவன் கூலிக்காரன்தான்; அடிமைதான்.

தொழிலுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? தொழிலின் பலனுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? தொழிலின் அருமை, உங்களுக்கு ஏதாவது தெரியுமா? காலையில் பட்டறைக்குள் நுழைந்தால் மாலை வரை அவன் சொல்லுகிறபடி உழைக்க வேண்டியது! வாரம் ஒரு முறை கூலி வாங்கிக்கொள்ள வேண்டியது! தெருக்களில் கூலிக்கு மூட்டை தூக்கி அவ்வப்போது கூலி வாங்கும் நபருக்கும், உங்களுக்கும் என்ன வித்தியாசம்? அவர்கள் தங்களுக்குக் கூலி போதாது, அதிக பாரமாயிருக்கிறது இன்னும் சேர்த்துக் கொடு என்று முதலாளியைக் கேட்பதற்கும்—நீங்கள் சங்கம் என்று பெயர் வைத்துக் கொண்டு செய்யும் தீர்மானங்களுக்கும் என்ன வித்தியாசம்? சில சமயங்களில் கூலிக்கார னாவது தான் தூக்கும் பாரத்தையும், தூக்கிக்கொண்டு செல்லும் தூரத்தையும் அறிந்து கூலி அதிகம் கேட்கிறான். நீங்கள் அதுகூட இல்லை. உங்கள் தொழிலின் அருமை இன்னதென்றுகூட உங்களுக்குத் தெரியாமல், முதலாளியைப் பார்த்து, 'நீ இவ்வளவு ரூபாய் கொள்ளையடிக்கிறாயே; நீ இவ்வளவு சுகப்படுகிறாயே!' என்ற பொறாமையின் மேல்—'ஏன் எனக்கு இன்னும் கொஞ்சம் கூலிசேர்த்துக் கொடுக்கக் கூடாது?' என்று பல்லைக் காட்டிக் கெஞ்சுகிறீர்கள். தனித் தனியாய்க் கெஞ்சுவதற்குப் பதில் நாலுபேராய்ச் சேர்ந்து கெஞ்சுவதைத் தொழிற்சங்கம் என்கிறீர்கள். அதுவும் உங்களுக்குக் கெஞ்சிக்கேட்க சக்தி இல்லாமல்—உங்கள் தொழிலிலோ, கஷ்டத்திலோ கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத ஒருவரை, உங்கள் சங்கத் தலைவராயும், காரியதரிசியாயும் சில சமயங்களில் நிர்வாகஸ்தர்களாகவும் வைத்துக்கொண்டு கூலியை உயர்த்தும்படி கேட்கிறீர்கள்.

ஒரு முதலாளியிடம் வேறு ஒருவன் போய், 'அய்யா, உங்களிடம் உள்ள கூலிக்காரர் களுக்குக் கூலிபோதவில்லை; கொஞ்சம் சேர்த்துக் கொடுங்கள்' என்று கேட்டால்—அந்த முதலாளிக்கு, கூலிக்காரர்களிடம் என்ன மதிப்பு இருக்கும்? அதுபோலவே, உங்கள்



சவுகரியத்திற்கு வேறொருவன் போராடுகிறான் என்றால் உங்களுக்கு உங்களுடைய தேவை இன்னதென்று கூடத் தெரியவில்லை என்பதுதானே பொருள்? பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் உபாத்தியாயரிடம் போய், 'எனக்கு வயிறு வலிக்கிறதென்று எனது தாயார் சொன்னார்கள்; ஆதலால் இன்று எங்களுக்கு லீவுகொடுங்கள்' என்று கேட்பதுபோலவே—நீங்கள் வேறொருவரை உங்கள் சங்கத்திற்குத் தலைவராக வைத்துக்கொண்டு காரியங் களைச் செய்வதும், உங்களுக்குச் சம்பந்தமில்லாதவைகளைப் பின்பற்றுவதுமாகும். வெளியிலிருந்து உங்களுக்குத் தலைவராய் வருபவர்களுக்கு—முதலாவது உங்கள் வேலையி லுள்ள கஷ்டமும், உங்களுக்கு இருக்கும் கஷ்டமும் எப்படித் தெரியும்?

உதாரணமாக, இதுசமயம் நமது நாட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர்களை எடுத்துக்கொள்ளுங்கள். யாருக்காவது உங்கள் தொழிலின் அருமை தெரியுமா? உங்கள் கஷ்டத்தின் கொடுமை தெரியுமா! அவர் தனது கீர்த்திக்காக உங்களுக்குத் தலைவராய் இருப்பார். அவர் ஒரு தொழிலும் செய்யாமல் மாதம் 500, 1000, 5000, 10,000 என்று பொதுஜனங்களின் பணத்தை உங்கள் முதலாளிகளைப் போலவே கொள்ளையடித்துக் கொண்டு, சுகபோகம் அனுபவித்துக்கொண்டு, தனது சுயநலத்தை நாடிக்கொண்டிருப்பவரா யிருப்பார். அவர்களால் உங்களுக்கு எந்தவிதத்தில் அனுகூலம் கிடைக்கக்கூடும்? அவர்களைக் கண்டால் உங்கள் முதலாளிகள் எப்படி மதிக்கக்கூடும்? இதே முகாந்திரங் களால்தான் நமது நாட்டுத் தொழிலாளர் சங்கங்கள் இதுவரை உருப்படியாகாமல் போயின.

அனேக இடங்களில் வேலை நிறுத்தம் (Strike)—வெளியேற்றம்(Lock-out) நிகழ் கின்றன. இவைகள் ஏற்பட்டு என்ன பலன் கிடைத்தது? எவ்வளவு தொழிலாளிகளுக்கு வேலைபோய் கஷ்டம் உண்டாயிற்று? இவற்றை எந்தத் தலைவர் கவனித்தார்? எவ்வளவு தொழிலாளிகள் தம் தலைவர்களின் வார்த்தைகளைக் கேட்டதின் பலனாய், வயிறாரக் கஞ்சி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்? மற்றும் பல தலைவர்கள் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு உங்கள் முதலாளிமார்களிடம் உத்தியோகம் பெற்றுக் கொண்டு தானிருக்கிறார்கள். விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவதைப்போல, வெளியார் களை உங்கள் சங்கத் தலைவர்களாக வைத்திருக்கின்றீர்கள்.

இது மாத்திரமல்ல, உங்கள் சங்கதியே உங்களுக்குத் தெரியாமல் இப்படித் திண்டாடும் போது, சூதாட்டத்திற்குச் சமமான அரசியல் கட்சிகளில் உங்கள் சங்கங்களை நுழைத்துக் கொள்கிறீர்கள்; தனித் தனியாகவும் நுழைகிறீர்கள். கூலிக்காரனுக்கும் அரசியலுக்கும் வெகு தூரம். அரசியல் என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் வயிற்றுக்குக் கூலிகேட்கவே உங்களுக்குத் தெரியவில்லையானால், உலகத்துக்குத் தேவையை நீங்கள் அறிவது எப்படி? உங்களுக்கு இருக்கும் வியாதிகள் இன்னதென்று உங்களுக்குத் தெரியாமலிருக்கும்போது, நீங்கள் ஊராருக்கு வைத்தியம் செய்வதென்பது சிரிப்பாயிருக்க வில்லையா? உங்களுடைய அரசியல் என்ன! முதலியாரை வண்டியில் வைத்து இழுக்க லாமா; நாயுடுவை வண்டியில் வைத்து இழுக்கலாமா; அய்யங்காரை வண்டியில் வைத்து இழுக்கலாமா; நாயக்கரை வண்டியில் வைத்து இழுக்கலாமா என்பது போன்றவையும்—யாரைச் சட்டசபைக்கு அனுப்பலாம்; யாருக்கு 'ஜே' போடலாம்; யாருக்கு ஓட்டுச் செய்யலாம் என்பதுதானே? நீங்கள் வண்டிசவாரி செய்யலாமா? நீங்கள் சட்டசபைக்குப் போய் உங்கள் தேவைகளைக் கவனிக்கலாமா—என்கின்ற கவலையே உங்களுக்கில்லையே! எப்பேர்ப்பட்ட உண்மைத் தலைவர்கள்—மகாத்மா போன்றவர்கள் அரசியல் என்பதை உதறித் தள்ளிவிட்டு ஏழைகள் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டும்; ஒடுக்கப்பட்டவர் களையும், தாழ்த்தப் பட்டவர்களையும் விடுதலை செய்யவேண்டும் என்று தனியே இருந்து இரவும் பகலும் உழைக்கும்போது—உங்களுக்கென்ன அரசியல் அழுகின்றது?

இப்போது அரசியலில் உழலும் யாருக்காவது விடுதலை என்றால் என்ன? உரிமை என்றால் என்ன? சுயராஜ்யம் என்றால் என்ன? தொழிலாளர் விடுதலை என்றால் என்ன

படிப்பகம்

www.padippakam.com



என்பது தெரியுமா? எப்பொழுதாவது வாயைத் திறந்து சொல்லி இருக்கிறார்களா? வயிற்றுப் பிழைப்பிற்கும் உத்தியோகத்திற்கும் 'உரிமை, உரிமை', 'சுயராஜ்யம், சுயராஜ்யம்', 'தொழிலாளர், தொழிலாளர்' என்று கத்தினால் நீங்களும் அதில் சேர்ந்து கத்துவதா? உங்கள் நிலைமையை இன்னதென்று அறியாமல் இப்படி மோசக் காரர்களுடன் சேர்ந்து, அவர்களை உங்கள் தலைவர்களாக்கிக் கொண்டு, அவர்கள் பின்னால் திரிந்தீர்களானால், நீங்கள் மற்றவர்களை வண்டியில் வைத்து இழுக்கவும், உங்கள் கழுத்தில் கயிறுகட்டிச் சந்தைகளில் கொண்டுபோய் விற்கவும்தான் ஆவீர்களே தவிர, ஒருக்காலும் நீங்கள் மனிதர்களைப்போல வாழமுடியாது.

கண்டிப்பாய் நீங்கள் அரசியலில் சேரவேகூடாது. அரசியல் உங்களிடம் வந்து சேரட்டும், அரசியல்காரர் உங்களைத் தலைவர்களாகக் கொள்ளட்டும். அப்பேர்ப்பட்ட நாளை எதிர்பாருங்கள்!

உங்கள் சங்கங்களுக்கெல்லாம் நீங்களே தலைவர்களாகுங்கள். உங்கள் நாட்டுத் தொழிலாளர் சங்கங்கள் எல்லாரையும் ஒன்றுசேருங்கள். பிறகு தொழிலாளர் கட்சி என்று ஒரு பொதுக்கட்சியை ஏற்படுத்துங்கள். அதில் உங்கள் தொழிலின் பலன் முழுவதையும் நீங்களே அடையத் தக்கதாகவும், தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மைகளையும், பொது மக்களுக்கு வேண்டிய நன்மைகளையும் கொள்கையாக வைத்துப் பரப்புங்கள். அதில் எல்லோரையும் வந்து சேரும்படி செய்யுங்கள். தொழிலாளர் கட்சி நாட்டை ஆளும்படி செய்யுங்கள். அதை விட்டுவிட்டு, எடுப்பார் கைக் குழந்தையாகத் திரிவது தொழிலாளர் உலகத்திற்கே மானக்கேடு. உங்கள் நிலை என்ன? மாடு, கன்றுகள் வளர்க்கிறவர் களாவது, அவைகளிடம் வேலை வாங்கிய பின்னர் நிழலில் கட்டுகிறார்கள்; வேளா வேளைக்குத் தண்ணீர் காட்டுகிறார்கள். உங்களுக்கு அந்த சவுகரியங்கூட எங்கே இருக்கிறது? பகலெல்லாம் உழைக்க வேண்டியது; கூலி வாங்க வேண்டியது; அதை குடிக்கோ, கூத்திக்கோ, சூதுக்கோ செலவு செய்ய வேண்டியது; பட்டினி கிடக்கவேண்டியது; பெய்யும் மழையும் அடிக்கும் வெயிலும் உங்கள் மேலேயே படவேண்டியது என்கிற கேவல நிலைமையிலிருக்கின்றீர்கள். உங்களில் இரண்டொருவர் சுகப்படுவதை நினைக்காதீர்கள். பெரும்பான்மையாய் எப்படி இருக்கிறீர்கள்? இதைப்பற்றி யாருக்கும் கவலை இல்லை. உங்கள் ஓட்டுக்கு மாத்திரம் அதிகக் கிராக்கி; யாராவது பணம் கொடுத்து அல்லது யாருக் காவது பணம் கொடுத்து உங்கள் ஓட்டுகளை வாங்கிப் பதவியைப் பெற்று விடுகிறார்கள்.

ஆதலால், இன்று முதல் அரசியலையும், அரசியல்காரரையும் மறந்துவிடுங்கள். உங்கள் சங்கத்திற்கும், வருஷாந்திரக் கொண்டாட்டங்களுக்கும் தொழிலாளர்களையே தலைவர்களாக ஏற்படுத்துங்கள். அவர்களுக்குச் சக்தி இல்லையே என்று குறை கூறாதீர்கள். அது உங்களுக்கு அவமானம். அதைவிட மோசமானவர்களை நீங்கள் தலைவர்கள் என்கிறீர்கள். அயோக்கியர்களைவிட முட்டாள்கள் நல்லவர்கள் என்றே சொல்லுவேன். இருக்கிறவர்களை வைத்துக் கொண்டு காரியங்களை நடத்துங்கள். கூடிய சீக்கிரம் எல்லாம் சரிப்பட்டுப் போகும்.

நான் ஒரு சிறுகதை கேள்விப்பட்டிருக்கின்றேன். ஒரு குளத்திலுள்ள தவளைகள் ஒன்று சேர்ந்து தங்களுக்கு ஒரு தலைவர் வேண்டுமென்று கடவுளைக் கேட்டதாகவும், கடவுள் ஒரு மரக்கட்டையைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அம் மரக்கட்டை ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளிடம் எங்களுக்குக் கொடுத்த தலைவர் உபயோகமில்லையென்றும் வேறு தலைவர் வேண்டுமென்றும் கேட்டதாகவும், கடவுள் ஒரு பாம்பைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அப் பாம்பு தினம் 10 தவளை களைத் தின்று வந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளை நோக்கித் தங்களுக்குக் கொடுத்த தலைவரை எடுத்துக்கொள்ளும்படி வேண்டி, தங்கள் காரியத்தை வேறொரு தலைவரில் லாமல் தாங்களே பார்த்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது.



அதுபோல, உங்களிலேயே உங்களுக்குத் தலைவர்களும், காரியதரிசியும், நிர்வாகி களும் கிடைக்க வில்லையானால் கண்டிப்பாய் உங்களுக்குச் சங்கம் வேண்டாம். இந்த நிலையில் நீங்களும், சங்கம் வைத்து நடத்தச் சக்தியற்றவர்கள். உங்களுக்குள் தலைவர் ஏற்பட்டு நடத்த சக்தி ஏற்படும் வரை முதலாளிகளை அனுசரித்தே பிழையுங்கள். வீணாக, 'குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு விட்டதுபோல்' உங்கள் உழைப்பால் உங்கள் முதலாளிமார் பிழைப்பதோடல்லாமல்—உங்களால் மோசக்காரர் பிழைக்கும்படி செய்து நீங்கள் கஷ்டப்படாதீர்கள். நீங்கள் என்னைக் கூப்பிட்டபோதே இதைத்தான் சொல்லலாம் என்று நினைத்தேன். இதுதான் உங்கள் சம்பந்தமான எனது அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, நீங்கள் கதரை ஆதரிக்கவேண்டும். தொழிலாளராயிருப்பவன் முதலாவது செய்யவேண்டிய வேலை மற்றொரு தொழிலாளியை ஆதரிக்க வேண்டியது தான். ஆதலால், கிராமத்துப் பெண்மணிகள், நமது சகோதரிகள் தொழிலற்று—கூலியு மற்று—தமக்கும் தமது பிள்ளை குட்டிகளுக்கும் ஆகாரமில்லாமல் பட்டினி கிடந்து—விபசாரம் செய்யத்தக்க நிலையில் இருக்கும்போது, நீங்கள் அவர்களை அலட்சியம் செய்து, அவர்களது தொழிலை ஆதரிக்காமல் மல் துணிகளையும், மில் துணிகளையும் ஆதரிப்பதானது மிகவும் பாதகமான காரியமாகும். கதரை ஆதரித்தால் நீங்கள் காலக் கிரமத்தில் கூலிக்காரர்கள் என்ற பெயர் மாறி உண்மையான தொழிலாளியாவீர்கள்.

[நாகையில், 25-5-1926-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 30-5-1926]

## 2. பார்ப்பனரும் தொழிலாளரும்

சென்னைப் பார்ப்பனத் தலைவர்கள் தாங்கள்தாம் தொழிலாளர்கள் விஷயத்தில் அதிக அக்கறையுள்ளவர்களென்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய சகல சவுகரியங்களும் தங்களால்தாம் செய்யக் கூடுமென்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய பிரதிநிதித்துவங்க ளெல்லாம் தாங்கள்தாம் வாங்கிக்கொடுக்கக் கூடுமென்றும் சொல்லி, இதுகால பரியந்தம் தொழிலாளர்களை ஏமாற்றி, அவர்களுடைய ஓட்டுகளைப் பெற்றுப் பதவிபெற்று வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே. சென்ற வருஷத்திய முனிசிபல் தேர்தல்களிலும், சட்ட சபைத் தேர்தல்களிலும், அதற்குமுன் நடந்த தேர்தல்களிலும் இப் பார்ப்பனர்களின் சூழ்ச்சி களை அறியாமல் ஏமாந்து, தொழிலாளர்கள் தங்களுடைய ஓட்டுகளையெல்லாம் பார்ப்பன அபேட்சகர்களுக்கே கொடுத்து, பார்ப்பனரல்லாதாரைத் தோற்கடிக்கச் செய்ததும் யாவ ருக்கும் தெரிந்த விஷயமே. இப்படியிருக்க, இப்போது மேற்படி தொழிலாளச் சகோதரர் களில் தங்களுக்குத் தாங்களே பிரதிநிதியாய் இருக்கலாம் என்பதாகக் கருதி, வரப்போகும் சென்னை முனிசிபல் தேர்தலுக்குத் தங்கள் சகோதரர்களிலேயே இரண்டொருவரை அபேட்சகர்களாய் நிறுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இதை அறிந்த மேற்படி பார்ப் பனர்கள் தொழிலாளர்களை ஏமாற்றப் புதியதாய் ஒருவழி கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அது என்னவென்றால், தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றால், அவர்கள் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியில் சேரவேண்டுமாம்; இல்லாவிட்டால் அவர்கள் நிற்கக்கூடாதாம். இது எவ்வளவு வஞ்சகமானதென்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டும். என்னவெனில், காங்கிரசிலோ சுயராஜ்யக் கட்சியிலோ தொழிலாளர்கள் சேருவதானால் தொழிலாளிகளின் முதலாளிமார்கள் அவர்களை எப்படியாவது கெடுத்துவிடக்கூடும்; அதனால் தொழிலாளிகள் காங்கிரசில் சேரமுடியாமல் போய்விடலாம்; இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு, தொழிலாளிகளைச் சுலபமாகத் தள்ளிவிடலாம் என்பதுதான். தொழி லாளிகளுடைய ஓட்டுப்பெறும்போது மாத்திரம் யாரையாவது பிடித்து அவர்களை ஏமாற்றி அவர்களுடைய ஓட்டுகளைப் பெற்றுவிடலாம் என்கிற தந்திரத்தின்பேரில் பார்ப்பனர்களின் 'தொழிலாளர் அனுதாபம்' நிற்கிறது. நமது தொழிலாள நண்பர்களோ இந்தச் சூழ்ச்சிகளை அறியாமல் 'எடுப்பார் கைக் குழந்தை'களாயிருக்கின்றார்கள். இவைகளை எல்லாவற்றையும்

படிப்பகம்

www.padippakam.com



அறிந்தேதான், நாம், தொழிலாளிகள் அரசியல் சம்பந்தமான எந்தக் கட்சியிலும் சேரக் கூடாது என்றும் அவர்கள் தங்கள் கால்களிலேயே நிற்கக்கூடிய சக்தியைப் பெறவேண்டுமென்றும், அது கொஞ்ச காலம் தாமதமானாலும் குற்றமில்லை என்றும் பேசியும் எழுதியும் வந்தோம். நாம் இப்படிப்பேசி, எழுதி வந்ததைப்பற்றிப் பல 'தொழிலாளர்கள் தலைவர்களுக்கும்' நம்மீது மனஸ்தாபம் ஏற்பட்டதும் நமக்குத் தெரியும். ஈரோட்டில் கூடிய தொழிலாளர் மாநாட்டு உபசரணைத் தலைவர் முறையிலும் இதையே சொன்னோம்; 'மித்திரன்' அதைப்பற்றி மிகுதியும் கோபம் கொண்டது. ஆனபோதிலும் இன்னமும் நாம் அதே கொள்கையுடன்தான் இருக்கிறோம்.

இப்போது சென்னை காங்கிரஸ் கமிட்டியில் முனிசிபல் தேர்தலுக்கு அபேட்சகர்கள் நிறுத்தும் விஷயத்தில் ஸ்ரீமான்கள் சிங்காரவேலு செட்டியாருக்கும், சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் முதலியவர்களுக்கும் நடந்த சம்பாஷணை, அடிதடி சண்டை முதலியவைகள் நடந்திருப்பதையும்; தொழிலாளர் கூட்டத்தில் ஸ்ரீமான்கள் சிவராவ், கலியாணசுந்தர முதலியார் முதலியவர்கள் பேசிய பேச்சுகளிலிருந்தும் பார்ப்பனத் தந்திரங்கள் நன்றாய் விளங்குகின்றன. இனியாவது நமது தொழிலாள சகோதரர்கள் இவ்வரசியல் புரட்டுகளின் மாய்கையில் இருந்து விலகுவார்களா என்பதுதான் நமது கோரிக்கை. அப்படி அவர்கள் விலகித் தனிப்பட்ட ஓதாவில் தொழிலாளி என்கிற முறையில் தேர்தலுக்கு நிற்பார்களானால், நாமும் நம்மாலானதைச் செய்யத் தயாராய் இருக்கிறோம் என்றும், எந்தக் கட்சி எதிர்த்தாலும் அதை ஒரு கை பார்த்துவிடலாம் என்றும் நமது தொழிலாளர் சகோதரர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

['குடி அரசு'-தலையங்கம்—24-4-1927]

## 3. தொழிலாளர் சத்தியாக்கிரகம்

சகோதரர்களே!

தொழிலாளர்கள் குறைகள் உண்மையானவை என்பது எனது அபிப்பிராயம். இரயில்வேக்காரர்கள், திடீரென்று மூன்று, நான்கு ஆயிரம் பேர்களை வேலையிலிருந்து விலக்கவேண்டும் என்று சொல்லுகின்றார்கள். அது உண்மையான சிக்கனத்தை முன்னிட்டாவது அல்லது இலாபம் கட்டவில்லை என்பதற்காவது, அல்லது ஜனங்களின் நன்மைக்காக இரயில் சார்ஜைக் குறைப்பதற்கென்றாவது இத்திட்டத்தை அனுசரிப்பதானால் எனக்குச் சந்தோஷமே.

அப்படிக்கில்லாமல், சீமையில் உள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக, அங்கிருந்து இயந்திரங்கள் தருவிக்கவும், வெள்ளைக்காரர்களுக்கும் அவர்கள் சார்பாருக்கும் வேலை கொடுப்பதற்கும் இம் மாதிரி சூழ்ச்சி செய்கின்றார்கள். தென்னிந்திய இரயில்வேக்காரர் மற்ற எல்லா இரயில்வேக்காரர்களைவிட அதிகக் கொள்ளை அடிக்கின்றார்கள். மற்ற இரயில்களில் மெயிலுக்குக்கூட மைலுக்கு இரண்டரைக் காசு சார்ஜ். ஆனால், இவர்கள் நான்கு காசு, நாலரைக் காசு வாங்குகிறார்கள். வண்டி சவுகரியம் மற்ற வண்டிகளைவிட எஸ். அய். ஆர். இரயிலில் மிகக் கொடுமையானது. சம்பளம், கூலி முதலியவைகளும் நம்மவர்களுக்கு மற்றவர்களைவிட மிகக் கொஞ்சமாகவே கொடுக்கின்றார்கள். இந்த நிலைமையில் இவர்கள் சிக்கனமென்பது இந்தியர்கள் வாயில் மண்ணைப்போட்டு வெள்ளைக்காரர்கள் வயிறுவெடிக்கச் செய்யும் கொடுமையேயாகும்.

நிற்க, இரயில்களில் நடந்த அபாயங்களுக்கெல்லாம் இரயில்வே அதிகாரிகளே காரணமாவார்கள். ஏனெனில், வேலைநிறுத்தம் செய்வதாக முன்னெச்சரிக்கை கொடுத்துத்தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இரயில்வேக்காரர்கள் எச்சரிக்கையாய் இருந்திருக்க வேண்டும். ஒரு வேலைநிறுத்தம் என்றால் என்னென்ன காரியங்கள் நேரும் என்பது அதிகாரிகள் அறிந்த விஷயம்தான். மேல்நாடுகளின் வேலை நிறுத்த அனுபவம் தெரிந்த வெள்ளைக்காரர்கள் அலட்சியமாய் இருந்தது மிகவும் கண்டிக்கத் தகுந்தது. கலகக்காரர்களும், காலிகளும் தொழிலாளர்களிடம் அனுதாபம் கொண்ட வாலிப இரத்த ஓட்டமுள்ளவர்களும் இன்னமும் என்னென்ன செய்வார்கள் என்பது நாம் சுலபத்தில் முடிவு கட்டக்கூடியதல்ல. இதற்காகத் தொழிலாளர்கள் மீது குற்றம் சொல்லுவது அறியாமையேயாகும்.



உதாரணமாக, திருச்சி பாலக்கரை ஸ்டேஷனுக்கு அருகில் லயனில் உள்ள கேட்டில் கதவில்லை என்றும், காவலில்லை என்றும் தெரிந்து வண்டியைவிட எப்படி இரயில்வே அதிகாரிகள் சம்மதித்தார்கள் என்று நான் கேட்கின்றேன். அப்படிக் கவலையின்றி இஞ்சின் விட்டதால் மோட்டார் பஸ் மீது ஏறி 10 பேர்கள் கச கசவென்று நசுங்க நேர்ந்தது. இதற்கு யாரைத் தண்டிக்கவேண்டும் என்று நீங்களே யோசியுங்கள். நல்ல அரசாங்கமாய் இருந்தால் இஞ்சின் ஓட்ட ஆதாரமாய் இருந்தவர்களில் 10 பேரைத் தூக்கில் போட்டு, இனி இம் மாதிரி நடக்காமல் பந்தோபஸ்து செய்திருக்கும். அப்படிக்கில்லாமல், மேல்கண்ட 10 பேர் நசுக்கப்பட்டுப் போனதற்காக விசனப்பட்ட ஜனங்களைச் சுட்டார்களாம். இது என்ன ஒழுங்கு! இது அதிகாரம் இருக்கின்றது என்கிறதும், துப்பாக்கியும் குண்டும் மருந்தும், சொன்னபடி கேட்கப் போலீஸ் படையும் இருக்கின்றது என்கிறதுமான ஆணவத்தைக் கொஞ்சமாவதும் காட்டுகின்றதா, இல்லையா என்று கேட்கிறேன். இம் மாதிரிக் கொடுமைகளும் ஆத்திரம் மூட்டத்தக்க காரியமும் செய்துவிட்டு, 'பொறுமையாய் இருங்கள்! சாந்தமாய் இருங்கள்!' என்று சொன்னால் அது வார்த்தை அளவில் இருக்குமேயல்லாது காரியத்தில் பயனளிக்குமா?

தவிர, 144 போடுவதாலும், ஜெயிலில் வைப்பதாலும் என்ன காரியத்தைச் சாதிக்க முடியும்? 144-யை மீறுவது வெகு கஷ்டமானகாரியமா என்று கேட்கின்றேன். பலாத்காரமான காரியங்கள் யாராலானாலும் சரி, நடந்ததாகக் காணப்படாதிருந்தால் 144-யை மீறும்படியே கட்டளை இட்டிருப்பேன். ஜெயிலில் போடுவதால் யாரும் பயந்து விடமாட்டார்கள். ஜெயில் அனுபவம் எனக்கு நன்றாய்த் தெரியும். மூன்று, நான்கு தடவை நான் அனுபவித்துப் பார்த்தவன். உள்ளேபோய் வெளியில் வரும்போது உடல் எடை 10 இராத்தல் அதிகமாகவே தான் வருவேன். ஆதலால், அந்தப் பூச்சாண்டிக்கு யாரும் பயப்படமுடியாது. மரியாதையாகத் தொழிலாளர் கோரிக்கைகளுக்கு இணங்கியோ, அல்லது அவர்களைச் சமாதானப்படுத்தியோ ஒரு முடிவுக்கு வருவதுதான் நலமாக முடியும்.

கடைசியாக, நான் பொதுமக்களையும், தொழிலாளர்களையும் கேட்டுக்கொள்வதாவது: எந்தக் காரணத்தை முன்னிட்டும் பலாத்காரமும், பொறுமை இழத்தலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், பலாத்காரம் ஏற்படுவது அதிகாரிகளுக்கு நன்மையாகவும் நமக்குக் கெடுதியாகவும் முடியும். ஒத்துழையாமையின்போதுகூட திடீரென்று திருவாளர். காந்தி இயக்கத்தை நிறுத்த நேர்ந்ததற்குக் காரணம் பலாத்காரம் ஏற்பட்டதுதான். அதனாலேயேதான் அவ்வியக்கம் தோல்வி அடைந்ததாகக் கருதநேரிட்டது. ஆதலால், பலாத்காரம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது நமது கடமையாகும். போலீசார் மீது குற்றம் சொல்லுவதில் யாதொரு பயனுமில்லை. அவர்கள் சம்பளத்திற்காக மேல் அதிகாரி சொன்னபடி கேட்கும் நிபந்தனை இல்லாத அடிமைகள். அவர்கள் எஜமான் சொன்னபடி நடக்காவிட்டால் வேலை போய்விடும். 144 போட்ட மாஜிஸ்டிரேட்டிடமும் நாம் குற்றம் கண்டு பிடிப்பது முட்டாள்தனம். வெள்ளை அதிகாரிகள் சொன்னபடி உத்தரவு போடாவிட்டால் வேலை போய்விடும். அப்புறம் உபாதானமெடுக்க வேண்டியதோ கருமாந்தர வீட்டில் தட்சணைக்குப் போகவேண்டியதோ அவர்கள் கடமை ஆகிவிடும். ஆதலால், பொறுமை இழக்காமல் பலாத்காரம் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எங்களாலான உதவி கடைசிவரை செய்யக் காத்திருக்கின்றோம். பலாத்காரம் ஏற்பட்டால், அதுவும் தொழிலாளர்களால் நடந்தது என்பதாகத் தெரிந்தால், நாங்களும் விலகிக் கொள்வோம்

படிப்பகம்

www.padippakam.com



என்பதைக் கண்டிப்பாய்ச் சொல்லுகின்றேன். மற்றபடி இங்கு நடத்தப்போவதாய் சொல்லப்படும் சத்தியாக்கிரகத்திற்கு என்னாலான பண உதவியும், ஆள் உதவியும் செய்யத் தயாராய் இருக்கின்றேன்.

[ஈரோட்டில், 27-7-1928-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 29-7-1928,
சென்னை 'திராவிடன்' தினசரி 30-7-1928]

## 4. தொழிலாளர் பிரச்சினை

தோழர்களே!

உங்களுடைய மாநாட்டில் தலைமை வகிக்கும் பேற்றை எனக்களித்து இந்தச் சந்தர்ப்பத்தில் எனது அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ள வசதி அளித்ததற்கு எனது நன்றியறிதலை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பற்றிப் பல தோழர்கள் கவிராயர்கள்போல் புகழ்ந்து கூறியதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாகிலும், அப் புகழ்ச்சி உரைகளுக்கு நான் தகுதியுடையவனல்ல வென்றும், அப் புகழ்ச்சிகளில் ஏதாவது ஒரு பாகத்துக்காவது தகுதியுடையவனாக என்னை ஆக்கிக்கொள்வதற்கு அவைகளை உபயோகப்படுத்திக் கொள்கிறேன் என்றும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பற்றிப் பேசிய பலர் வைக்கம் சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்து அதை நடத்துவித்ததும் அது வெற்றியாய் முடிவுபெறக் காரணமாய் இருந்ததும் நானேயாவேன் என்று பேசினார்கள். அதையும் ஒப்புக்கொள்ள முடியாமைக்கு நான் வருந்துகிறேன். வைக்கம் சத்தியாக்கிரகத்தில் பெயரளவுக்கு என் பெயர் அடிபட்டாலும் அதன் உற்சாகமான நடப்புக்கும், வெற்றிக்கும் வாலிபத் தோழர்களுடைய வீரம் பொருந்திய தியாகமும், சகிப்புத் தன்மையும் கட்டுப்பாடுமே காரணமாகுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நிற்க, தோழர்களே! தொழிலாளர் பிரச்சினை என்பது உலக மக்கள் சமூகத்தின் பிரச்சினையேயாகும்.

ஏனெனில், உலக மக்களில் 100-க்கு 90 பேருக்கு மேம்பட்டவர்கள் 'தொழிலாளிகள்' என்னும் தலைப்பின் கீழ்தான் வருவார்கள். எப்படியெனில், தொழிலாளிகள் என்றாலே மனித சமூகத்தில் சரீரத்தினால் பாடுபட்டு வேலை செய்து ஜீவனம் செய்யும் மக்களாவார்கள்.

இந்தப்படி ஜீவனம் செய்வதிலும் அன்னியருக்காக என்று பாடுபட்டு, அன்னியர் சுகமாய்ப் போக போக்கியத்துடன்—சரீரத்தினால் பாடுபடாமல் வாழக்கூடிய ஒரு கூட்டத்திற்காக என்று உழைத்துவிட்டு, மேலும் மேலும் உழைப்பதற்கும், தாங்கள் சீக்கிரம் இறந்துவிடாமல் இருப்பதற்கும், தங்கள் ஜீவதசைக்குப் பிறகும் அன்னியருக்கு உழைத்துப் போடுவதற்காகச் சந்ததிகளை ஏற்படுத்தி, அவர்களையும் அன்னியருக்கு உழைக்கவே தற்புத்தி செய்யவும், எவ்வளவு வேண்டும் அவ்வளவை மாத்திரமே அடைவதற்குத் தகுதியுடையவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டிருக்கின்றவர்களாவார்கள்.

ஆகவே, இப்படிப்பட்ட மக்கள் உலக மக்கள் சமூகத்தில் 100-க்கு 90 பேர்களுக்கு மேலானவர்களாய் இருப்பதால்தான், இப்படிப்பட்ட தொழிலாளர்களுடைய பிரச்சினையை உலக மக்கள் பிரச்சினை என்று சொல்லவந்தேன். ஆனால், இப்படிப்பட்ட பெரும் சமூகப் பிரச்சினையை ஒரு தனிப் பிரச்சினை என்பதாக (தொழிலாளர் பிரச்சினை என்று) ஒதுக்கி வைத்திருப்பதும் மிகச் சிறு தொகை கொண்ட தனிப்பட்ட வகுப்பார்களது பிரச்சினையை —அதாவது பாடுபடாமல் அன்னியர் உழைப்பால் வாழும் மக்களாகிய எஜமானத் தன்மை— முதலாளித் தன்மை கொண்ட 100-க்கு 10 பேர்களாய் உள்ள மக்களின் பிரச்சினையைப்



பொதுப் பிரச்சினையாக்கி, அதைப் பற்றியே எல்லா மக்களும் கவனிக்கும்படியானதாயிருந்துவரும் காரணம் என்ன என்று உங்களில் பலர் கருதலாம். அதற்குக் காரணமெல்லாம், உலகம் – பாடுபடாத சோம்பேறிக் கூட்டத்தார், சூழ்ச்சிக் கூட்டத்தார் ஆகிய முதலாளித் தன்மை, புரோகிதத் தன்மைக் கூட்டத்தார் என்பவர்களின் ஆதிக்கத்தில் இருப்பதால் அப்படிப்பட்ட அவர்களுடைய பிரச்சினையே உலகப் பொதுப் பிரச்சினையாக ஆகிவிட்டது. முன் குறிப்பிட்ட தொழிலாளிக் கூட்டத்தார், எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர்களாய் இருந்தும், ஆதிக்கமற்றவர்களாகவும் அடிமைத்தனத்தின் பேரிலேயே தங்களது வாழ்வை நிர்ணயித்துக் கொண்டவர்களாகவும் இருந்துகொண்டு இந்தத் தன்மையையே 'உலக இயற்கை' என்று கருதிக்கொண்டிருப்பதால் (தொழிலாளர் பிரச்சினை) 100-க்கு 90 மக்களது பிரச்சினை—பொதுப் பிரச்சினையாகக் கருதப்படுவதற்கில்லாமல் போய்விட்டது.

ஆகவே, தொழிலாளி மக்கள் பிரச்சினை உலக மக்கள் பிரச்சினை என்கின்ற கருத்தின்மீதே அது சம்பந்தமாக எனக்குப்பட்ட சில விஷயங்களை உங்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தோழர்களே! இன்றைய உலக நிலை அதாவது, மனித சமூகத்தின் வாழ்க்கைத் தன்மையானது துக்கம், கவலை, அதிருப்தி, சாந்தியற்றதன்மை, ஒருவருக்கொருவர் தாழ்ந்த தன்மை, ஒருவரை ஒருவர் அடக்கி ஆளுந்தன்மை ஆகியவைகளுக்கு ஆளாகி அவதிப்பட்டுக்கொண்டு இருக்கத் தக்கதாகவே இருந்துவருகிறது. இந்த நிலையானது இன்று, நேற்று ஏற்பட்டது என்று சொல்லிவிடுவதற்கு இல்லாமல் உலகம் தோன்றியதாகச் சொல்லப்படும் காலமுதல் நாளதுவரையிலும் எவ்விதமான மாறுதலும் இல்லாமலே இருந்து வருகிறது.

மனித சமூகத்தில் உள்ள இவ்விதமான கஷ்டங்களையும், கொடுமைகளையும், குறைகளையும் நிவர்த்திப்பதற்காகவென்று வெகுகாலமாகவே அதாவது நமக்குச் சரித்திரப் பூர்வமாய் விளங்கும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே அனேக மனிதர்கள், கடவுள், கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன், கடவுள்தன்மை பெற்றவர் என்னும் பெயர்களாலும்; ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், மகாத்மாக்கள், ஞானிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்ற பெயர்களாலும் தோன்றி எவ்வளவோ காரியங்கள், திருத்தப்பாடுகள் உண்டாக்கியதாக எழுதிவைக்கப்பட்டும் சொல்லப்பட்டும் வருகின்றது. மேற்கண்ட ஒவ்வொருவருடைய தோன்றுதலுக்கும் காரணமாக—பெரிதும் உலகத்தில் தர்மம் குன்றிவிட்டதாகவும், அதர்மம் அதிகரித்துவிட்டதாகவும், துஷ்டர்களால் சாதுக்கள் கஷ்டப்படுவதாகவும், வலியோரால் எளியோர்கள் துன்பப்படுவதாகவும், அவைகளை யெல்லாம் போக்குவதற்காகவென்றே தோன்றி அதர்மத்தை ஒழித்து, துஷ்டர்களைச் சிட்சித்து, சாதுக்களையும் ஏழைகளையும் கஷ்டப்படும் மக்களையும் இரட்சிப்பதற்காகவே தோன்றினார்களென்றும் சொல்லப்பட்டு வருகிறது.

மற்றும், இந்த 'தெய்வாம்சம் பெற்றவர்கள்' என்ற கூட்டத்தவர்களால் மனித சமூக வாழ்க்கையின் ஒழுங்குக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் வேதங்கள், நீதிசாஸ்திரங்கள், மற்றும் நீதியைப் போதிக்கும் சாதனங்கள் என்பவைகளும், எண்ணிக்கைக்கும் எல்லைக்கும் கட்டுப்படாத அளவுக்குக் குவிந்து கிடக்கின்றன.

இவைகளின் பயனாகவெல்லாம் அனேக காலமுதல் நாளதுவரையில் பெரும்பான்மையான மனித சமூகத்திற்குச் சிறிதாவது கஷ்டமோ, துன்பமோ, கவலையோ ஒழிந்திருப்பதாகச் சொல்லமுடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

எப்படிப்பட்ட கடவுளோ, அவதாரமோ, கடவுள்தன்மை பெற்றவர்களோ, ஞானிகளோ, மகான்களோ தோன்றிய காலங்களிலும் மற்றும் அவர்களது ஆதிக்கத்திலும்,



படிப்பகம்

www.padippakam.com



ஆட்சியிலும் உலகம் இருந்துவந்த காலங்களிலுங் கூட—ஜனசமூகத்திற்கு இன்று இருக்கிற கஷ்டமேதான் இருந்து வந்திருக்கிறதென்பதை எந்தச் சரித்திரத்திலும் காணலாம்.

'தர்ம ராஜ்யம்' 'ராம ராஜ்யம்' 'சத்தியகீர்த்தி ராஜ்யம்' என்று சொல்லும்படியான காலங்களில் எல்லாங்கூட இன்று காணப்படும் கொடுமையும், அதர்மமும், கஷ்டமும், தரித்திரமும், அடிமைத்தன்மையும் இருந்துகொண்டுதான் வந்திருக்கின்றன என்பது சரித்திரங்களிலும், சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் தாராளமாய்க் காணப்படுகின்றன.

எனவே, இவற்றிற்கெல்லாம் காரணமென்ன? இப்படிப்பட்ட பெரியார்கள் என்பவர்களால் மனித சமூகத்திற்குள்ள கஷ்டங்கள், துன்பங்கள் ஏன் ஒழிக்கப்படவில்லை? இவர்களால் எல்லாம் ஆகாத காரியம் நம்மால் ஆகிவிடுமா? என்பன போன்ற விஷயங்களை யோசித்து ஒரு முடிவுக்கு வந்த பிறகேதான், நாம் இனி என்ன செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதை யோசிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அப்படிக்கெல்லாம் இல்லாமல், கூடிக் கூடிப்பேசி பழைய பாடங்களையே படித்து, கஷ்டப்படுபவர்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, அவர்களது கஷ்டங்களை வர்ணித்துப் பேசிக் கண்ணீர்விட்டுப் போவதென்பது, 'அரைத்த மாவை அரைத்தது போலும், சிரைத்த தலையைச் சிரைத்தது போலும் ஆகுமே ஒழிய பலன்தரத்தக்க காரியம் எதுவுமே நம்மால் முடியப்போவதில்லை.

ஆகவே, ஏன் இந்தப் பழைய நிலை மாறவில்லை என்றும், மாற்றுவதற்காகத் தோன்றிய பெரியார்கள் எல்லாம் ஏன் தோல்வி அடைந்துவிட்டார்கள் என்றும் யோசித்துப் பார்ப்போமேயானால், முறையே அதன் காரணமும் அப்படிப்பட்டவர்களின் தவறுதலும் நமக்கு நன்றாய் விளங்கும்.

எனக்குத் தோன்றிய வரையிலும் 'பெரியார்'களுடைய முயற்சிகளெல்லாம் வெற்றி பெறாமல் போனதற்குக் காரணம், அப்பெரியார்கள் 'கஷ்டநிலை' என்பதற்குக் காரணம் என்ன என்பதையே சரியாய் உணரவில்லை என்றுதான் சொல்லுவேன். அஸ்திவாரத்தில் உள்ள கோளாறுகளை இலட்சியம் செய்யாமல் மேலும் மேலும் கட்டடங்கள் கட்டியதாலேயே, கட்டின கட்டடங்களெல்லாம் இடிந்து விழுந்துகொண்டே வந்துவிட்டன. இதனால் இன்று இடிந்து விழுந்த பழுதுபட்ட சாமான்களும், வாழ்வுக்குதவாக் குட்டிச் சுவர்களுமாகத்தான் அம் முயற்சியின் பலன்கள் காணப்படுகின்றன. ஆதலால்தான் பயன்படவில்லை.

ஒரு விவகாரத்தை ஒழிக்க (பைசல் செய்ய) முன்வந்த ஒருவன் 5-ம், 5-ம் பன்னிரண்டு என்று கருதிக்கொண்டு விவகாரத்தைத் தீர்க்க முற்படுவானேயானால், அப்படிப் பட்டவனால் விவகாரம் சரியான தீர்ப்பு அடைய முடியுமா? அதுபோலவே, உலகக் கஷ்டத்தைப் போக்குவதற்குத் தோன்றிய அவதாரங்கள் (பெரியார்கள்) எல்லாம், மனித சமூகத்தின் கஷ்டங்களுக்குக் காரணமாயிருப்பது மனித சமூகத்திலுள்ள சிலரின் சூழ்ச்சி என்றும் அக்கிரமமான நடத்தை என்றும் கருதாமல், தங்களால் நிரூபிக்கச் சாத்திய மற்றதும் தங்களுக்கே புரியாததுமான ஒரு வஸ்துவைக் கற்பனை செய்து கொண்டு, அதற்கே சகல சக்திகளையும் கொடுத்து, எல்லாவற்றிற்கும் அதையே பிணையாக்கி, அதன் பேரிலேயே எல்லாப் பழிகளையும் போட்டு, அதற்கும் தங்களுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் காட்டி, அதன் தயவினாலேயே உலகக் கஷ்டங்களைப் போக்க முயற்சிப்பதாகச் சொல்லி, அந்தப்படியே மக்களையும் நம்பச் செய்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இப்பொழுது தோன்றுகிறவர்களும் தங்களை 'மகான்கள்' என்றும், 'ஞானிகள்' என்றும், 'உலகக் கஷ்டத்தை ஒழிப்பதற்குக் கடவுள் அருளால் தோன்றி, கடவுள் அருளால் இருந்து, கடவுள் கட்டளைப்படி நடந்து வருவதாகவும்' சொல்லுகிறபடியால் அவர்கள் ஒரு காரியத்தையும் செய்ய முடியாமல் இருப்பதோடும், கஷ்டங்களையும், கஷ்டத்திற்கு ஆதாரமாக இருப்பவைகளையும் என்றும் நிலைத்திருக்கக்கூடியதாகவே செய்து வருகிறார்கள்.



இவ்வளவோடு மாத்திரமல்லாமல் இத்தனை பெரியார்கள் என்பவர்களும் தங்கள் முயற்சியால் வெற்றிபெறாமல் போனதற்குக் காரணம் என்னவென்பதைக் கண்டுபிடிக்கச் சக்தி இல்லாமல் போய்விட்டதால், அவர்கள் அச் சக்தியற்ற தன்மையைத் தைரியமாய் ஒப்புக்கொள்ள இஷ்டப்படாமல் 'இவ்விதக் கஷ்டங்களும் துன்பங்களும், கீழ்-மேல் நிலையும், அதிருப்தியும், சாந்தமற்ற நிலையும் மனித சமூகத்திற்குத் தவிர்க்கமுடியாதது' என்றும், 'இதுவே உலக இயற்கை' என்றும் சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார்கள். இதைத்தான் இன்று சகல துறைகளிலும் அடக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மனித சமூகம் ஒட்டும் நம்பிக்கைகொண்டு இயற்கையையோ, தெய்வத்தின் அருளையோ எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இதன்றி, இனி மற்றொரு காரணம் என்னவென்றால், அதாவது இன்றைய மேற்கண்ட நிலைகள் மனித சமூகத்திற்குப் பெருந் துன்பமாய் இருந்தும், மனிதனுக்குப் பகுத்தறிவு என்பதான ஒரு விசேஷ சிந்தனா சக்தி இருந்தும், அத் துன்பத்தை ஒழித்துக்கொள்ள அது பயன்படாமல் போனதற்கு மற்றொரு காரணம் என்னவென்றால், மனித வாழ்க்கையில் மனிதன் தான் இன்று உயிருடன் இருக்கும்போது அனுபவிக்கும் கஷ்டங்கள், துன்பங்கள் ஆகியவை எல்லாம் இலட்சியம் செய்யத் தக்கதல்லவென்றும் அதாவது, இந்த வாழ்வே நிலையற்றதென்றும், மனிதன் இறந்த பிறகு தீர்ப்பு நாளிலோ அல்லது மற்றொரு உலகமாகிய மேல் லோகத்திலோ அனுபவிக்கப்போகும் விஷயங்களே முக்கியமானதென்றும், அதைப்பற்றியே மனிதன் கவலை செலுத்தவேண்டும் என்றும் மதங்கள் மூலம் கற்பிக்கப்பட்டதும் ஒரு முக்கிய காரணமாகும். இத்தியாதி காரணங்களே—இந்தவிதமான கற்பனைகளே மனித சமூகத்தின் துக்கங்கள் ஒழிக்கப்படுவதற்கு இடையூறாய் இருந்து வந்திருக்கின்றன.

அப்படிக்கில்லாமல் இருக்குமானால், உலகிலுள்ள ஜீவராசிகளில் எல்லாம் விசேஷமானது என்றும் மனித ஜீவனுக்கு உயர்ந்த ஞானமும், அறிவும், சிந்தனாசக்தியும் இருந்து வருகின்றது என்றும் சொல்லப்பட்ட ஒரு சமூகம் இவ்விதக் கீழ்நிலையில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் இருந்து வந்திருக்க முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இது இப்படி இருக்க, தொழிலாளிகளுக்கு உள்ள கஷ்டங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

தோழர்களே! உலகமானது தொழிலாளர்களாலேயே நிர்மாணிக்கப்பட்டுத் தொழிலாளர்களாலேயே நடைபெற்று வருவதாய் இருந்தாலும், உலக வாழ்க்கையில் உள்ள சகல விதமான தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும், கவலைகளுக்கும், தொழிலாளிகளே ஆளாகி வருகின்றார்கள். சகல அய்ஸ்வர்யங்களும், சுகபோகத்துக்கு வேண்டிய சகல சாதனங்களும் தொழிலாளிகளாலேயே உண்டாக்கப்படுவதாய் இருந்தாலும்—தொழிலாளிகளுக்குத்தான் வயிறார உண்ண உணவில்லை என்கின்ற குறையும், இடுப்பாரக் கட்டத் துணி இல்லை என்கின்ற குறையும், இருக்க இடமில்லை என்கின்ற குறையும், நாளைக்கு என்ன செய்வது என்கின்ற கவலையும்; மற்றும் காயலா வந்தால் வைத்தியத்துக்கு என்ன செய்வது, பெண்சாதி பிரசவத்திற்கு என்ன செய்வது, பிள்ளை படிப்புக்கு என்ன செய்வது, சாவு, கல்யாணம் ஆகியவைகளுக்கு என்ன செய்வது என்பதுபோன்ற அனேகக் கவலைகள், குறைகள் இருந்து வருகின்றன. தொழிலாளிகள் அல்லாத மனிதருக்கோ இவ்வித கவலைகள் ஏதுமில்லை. இவர்களுக்கெல்லாம் தொழிலாளிகளின் உழைப்பால் சேமித்த பொருளை எப்படிப் பத்திரப்படுத்துவது, எப்படி மேலும் மேலும் பெருக்குவது, எப்படி அதிகமான சுகபோகங்களை அனுபவிப்பது என்பதுபோன்ற கவலைகளேயாகும். இன்னும் ஏதாவது கவலை இருக்குமானால், அது நாமே உலகில் பெரிய சீமானாக எப்படி ஆவது; நாம் செத்த பிறகும் நமது பெருமையும், புகழும், செல்வமும் நமது பிள்ளைகளுக்கும், நமது பேரன்களுக்கும் உலகமுள்ள அளவும் எப்படி நிலைத்திருப்பது என்பது போன்றவைகளுமேயாகும்.

படிப்பகம்

www.padippakam.com



இவைகள் தவிர, முதலாளிகள் என்பவர்கள் தங்கள் நிலை என்றும் நிலைத்திருக்கவும், தொழிலாளிகள் என்னும் பேரால் உலகப் பெரும்பான்மையுமான மனித சமூகம் தங்களை எதிர்க்காமலும், தாக்காமலும் இருப்பதற்காக வேண்டிய பந்தோபஸ்துக்காக ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியவர்களுமாகின்றார்கள். நாளாவட்டத்தில் அந்த ஆட்சியின் ஆதிக்கத்தையும் தங்கள் கைக்குள் கொண்டு வந்துவிடவே முயற்சிப்பவர்களாகவுமிருந்து வருகிறார்கள். இதனால் முதலாளிகளின் வாழ்வுக்கும், செல்வம் சேர்ப்பிப்பதற்கும் மாத்திரம் தொழிலாளிகள் பாடுபடுகிறார்கள் என்பதில்லாமல், இந்த முதலாளிகளைக் காப்பாற்றவும் தொழிலாளிகளை அடக்கவுமான காரியத்தின் செலவுக்கும் இந்தத் தொழிலாளிகளே பாடுபட்டு உழைக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் சரீரத்தால் பாடுபட்டு உழைக்கும் மக்களாகிய தொழிலாளிகளுடைய நிலைமை நாளுக்குநாள் அடிமைத்தனத்திலும் தரித்திரத்திலுமே அமிழ்த்தப்படுகின்றது.

ஆதலால், தொழிலாளிகளுடைய கஷ்டமும், துன்பமும், அடிமைத்தனமும், கவலையும் குறையும் நீங்கவேண்டுமானால் முதலாளித்தன்மை என்பது இல்லாமல் போயே ஆகவேண்டும். அப்படிக்கு இல்லாமல், வேறு எப்படிப்பட்ட காரியம் செய்தாலும், தொழிலாளி துன்பமும், இழிவும், தரித்திரமும் ஒருநாளும் ஒழியாது. மனிதனுக்கு இருக்கும் தரித்திரமும், துன்பமும், குறைவும் என்பதெல்லாம்—மற்றவனைவிட நாம் அதிகமாய்க் கஷ்டப்படுகின்றோமே, மற்றவனைவிட நாம் தாழ்மையாய் வாழ்கின்றோமே, மற்றவன் நம்மை அடக்கி ஆளுகின்றானே என்கின்ற மனப்பான்மைகளேயாகும். இந்த மனப்பான்மையை ஒழிக்க வேண்டுமானால், மற்றவனுக்கும் நமக்கும் வித்தியாசம் காணப்படாத ஒரு நிலையை உண்டாக்குவதேயாகும்.

உதாரணமாக, 100 வருஷத்திற்கு முன், 50 வருஷத்திற்கு முன் மனிதர்களின் சாதாரண வாழ்க்கை இருந்ததைவிட, இன்றைய வாழ்க்கைத் திட்டங்கள் அனேக வழிகளில் ஓரளவுக்கு உயர்ந்திருக்கின்றது என்பது பிரத்தியட்சம். அப்படியிருந்தும் அந்த அளவுக்கே மற்ற நிலையில் உள்ளவர்கள் திட்டமும் உயர்ந்துவிட்டதால், திட்டம் உயர்ந்தாலும் நிலைமையும் தன்மையும் முன்போலவேதான் இருக்கின்றது. தொழிலாளிகளின் கவலை எல்லாம் தங்களுக்கு எவ்வளவு வேண்டும் என்பதல்ல; தங்களுடைய நிலைமை மற்ற யாருடைய நிலைமைக்கும் தாழ்ந்ததாக இருக்கக்கூடாது என்பதேயாகும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டாவது பாடுபடும் மக்கள் நிலை தாழ்ந்திருக்கவும்; பாடுபடாத மக்கள் நிலை உயர்ந்திருக்கவும், ஆதிக்கம் செலுத்தவும் கூடாது என்பதுதான் தொழிலாளர்கள் கிளர்ச்சியின் முக்கியத்துவமாய் இருக்கவேண்டும்.

அப்படிக்கில்லாமல், ஏதோ 2 அணா, 4 அணா கூலி உயர்த்தப்படுவதற்காகப் போராடுவதென்பது பயனற்றதேயாகும். ஏனெனில், நமது கிளர்ச்சியில் 2 அணா கூலி உயர்த்தித் தருவானேயானால், தொழிலாளிகளால் செய்யப்படும் சாமான்களின் பேரில் முதலாளிகள் ஒன்று சேர்ந்து நாலணா விலை அதிகப்படுத்திவிடுவார்கள். அந்த உயர்ந்த விலையைக் கொடுத்துச் சாமான் வாங்கவேண்டியவர்கள் தொழிலாளிகளேயாவார்கள். ஆகவே, முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வலது கையில் கூலி அதிகம் கொடுத்து, இடது கையில் அதைத் தட்டிப் பிடுங்கிக் கொள்வார்கள். முதலாளிகளுடன் கூலித் தகராறு என்பது, முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் உள்ள புல்லுருவிக் கூட்டமான தரகர்களுடைய சூழ்ச்சியேயாகும். 4 அணா கூலிக்கு வேலை செய்த மக்கள் இன்று 14 அணா கூலி பெறுவது எனக்குத் தெரியும். இதன் பயனாய் அவனுடைய நிலை சிறிது கூட உயர்ந்ததாகச் சொல்லமுடியாது. அடிமைத் தன்மையும், தரித்திரமும் அவனைச் சூழ்ந்துகொண்டே இருக்கின்றது. 4 அணா கூலி கொடுத்த முதலாளி அப்போது இருந்ததைவிட இப்போது 14 அணா கொடுக்கும்போது எத்தனையோ பங்கு மேன்மையாய் மோட்டாரிலும், ஆகாய ரதத்திலும் செல்லுகிறான்; சந்திரகாந்த மண்டபத்தில் வசிக்கிறான். ஒருநாளைக்கு 4 அல்லது 5 கையெழுத்துப் போடுவதுடன் அவனது வேலை



முடிவடைந்து விடுகின்றது. இந்த நிலையை அவன் பிள்ளை பிள்ளை தலைமுறைக்குப் பத்திரப்படுத்திக் கொள்கிறான். தொழிலாளி நிலை இந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறதா பாருங்கள். அவன் பிள்ளைகள் 3-வது, 4-வது பாரம் வரையிலும்கூட படிக்கமுடியவில்லை; ஓதம் (ஈரம்) இல்லாத இடத்தில் படுக்கமுடியவில்லை; இடுப்புக்குத் தவிர மேலுக்குத் துணி இல்லை. இந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.

[5-9-1933-ல் கொச்சியிலும், 10-9-1933-ல் ஆலப்புழையிலும், 23-9-1933-ல் திருநெல்வேலியிலும் சொற்பொழிவு—'குடிஅரசு' 1-10-1933]

## 5. இரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம்

இந்தியாவிலுள்ள இரயில்வேக்களில் வேலை பார்க்கும் சிப்பந்திகள் யாவரும் இம் மாத இறுதியில் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக ஏற்பாடுகள் சில நாட்களாகவே நடந்துவருகின்றன. இன்றைய 'முதலாளித்தன்மை ஆட்சி'யில் தொழிலாளிகள், சிப்பந்திகள் தங்கள் மனிதத் தன்மையான வாழ்வுக்கு வேலைநிறுத்தம் செய்து, இடர்ப்பட்டு சமாளித்துத்தான் வெற்றிபெற முடியுமே அல்லாமல் மற்றபடி எந்தச் சமதர்ம 'தேவதையும்' வந்து இந்தக் காரியத்தைச் சாதித்துக்கொடுக்க முடியாது. இந்தப்படி ஒரு பெருங்கூட்ட மக்கள்—அதுவும், அல்லும் பகலும் உடலுழைத்துப் பாடுபட்டு, உணவுக்கும் உடைக்கும் கூடத் தொங்கலோடு அல்லல்பட்டுக் கஷ்டப்படுகிறார்களே, இதற்கு ஏதாவது வழிசெய்ய வேண்டுமே என்கின்ற கவலை எந்தக் கடவுளுக்குமே கிடையாது. மக்களாகவே பார்த்து ஏதோ கஷ்டப்பட்டுத் தங்கள் குறைகளை நீக்கிக்கொண்டால், அப்புறம் கடவுள்கள் வந்து விடுவார்கள்; தங்களால்தான் குறைகள் நீக்கப்பட்டனவென்றும் அதற்குக் கூலி வேண்டுமென்று கேட்டு வாங்கிக்கொண்டும் போய்விடுவார்கள். அவ்வளவுதான் இந்தப் பாட்டாளி மக்களின் விஷயத்தில் கடவுளின் கடமையாகும்.

ஆனதால், ஒவ்வொருவரும் கடவுள்மீது பாரம் போடுவதில் பயன் விளையாது. தங்களுக்குத் தாங்களேதான் பாடுபட்டாக வேண்டும். அந்த முறையில் தொழிலாளிகள், தங்களுடைய குறைந்த, மிக்க பலவீனமான ஆயுதமாகிய வேலைநிறுத்தத்தைப் பயன்படுத்துவதில் யாரும் குற்றம்சொல்ல முடியாது. நினைத்ததற்கெல்லாம்—வெகு சாதாரண காரியங்களுக்கெல்லாம் பள்ளிப் பிள்ளைகள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். தங்களோடு சேராத பிள்ளைகளை உதைத்து, அடித்துக் காலித்தனம் செய்கின்றனர். அவற்றையெல்லாம் தேசியத் தலைவர்களும், தேசியப் பத்திரிகைகளும், பள்ளி ஆசிரியர்களும் சில சமயங்களில் அதிகாரிகளுங்கூட ஆதரிக்கின்றனர். அப்படியிருக்கும்போது, தொழிலாளி மக்கள் செய்யும் வேலைநிறுத்தத்தைப் பொதுமக்களும், மற்ற தொழிலாளிகளும், அவர்கள் போன்ற—'வயிற்றுப் பிழைப்பு அளவுக்கு மாத்திரம்' என்று வேலை செய்யும் மற்ற இலாக்கா சிப்பந்திகளும் ஆதரிக்கவேண்டியது உடன்பிறந்த கடமையாகும்.

தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தால் முதலாளிகள்—முதலாளித் தன்மையிலிருப்பவர்கள், தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், கூலி முதலியவை தொழிலாளியின் வயிற்றுக்குப் போதுமானதாக இருக்கிறதா என்பதை மாத்திரம் பார்க்கக் கூடாது. இந்தக் காலம் முதலாளித் தன்மைக்குப் பெருமையிருக்கும் காலம்; ஏராளமான வருவாய் இருக்கும் காலம்; எவ்வளவு இலாபம் வேண்டுமானாலும் பெறக்கூடிய காலம். ஒவ்வொரு சிறு தொழிலில் வியாபாரம் செய்கிறவனும் அவனவன் எதிர்பார்ப்பதற்கு மேல் பலமடங்கு பணம் சம்பாதித்து மீத்துவைக்கும் காலம்; மீத்துவைத்த பணத்தை என்ன செய்வது, எப்படிச் செலவிடுவது என்பதற்கு வழிதேடியலையும் காலம். பொறுப்பும், கட்டுப்பாடும் இல்லாத தினக் கூலிகளுக்கு அவர்கள் தங்களிஷ்டப்படி கூலி கேட்டு வாங்கி, இஷ்டப்படி அனுபவிக்கும் காலம். எந்தக் காரியத்தை எவன் செய்தாலும் நஷ்டத்திற்கு இடமில்லாத காலம்.

படிப்பகம்

www.padippakam.com



இப்படிப்பட்ட இந்தக் காலத்தில் இரயில்வே தொழிலில் சம்பந்தப்பட்டு, இரயில் போக்குவரத்தைச் சரியானபடி நடத்திக்கொடுத்துக்கொண்டு, இரயில்வே முதலாளி ஏராளமாய்ப் பணம் சம்பாதிப்பதையும், மற்ற முதலாளி ஏராளமாய் மூட்டை கட்டுவதையும் அதில் பிரயாணம் செய்கிறவர்கள் ஆடம்பரங்களோடு ஆனந்தமாய்ப் பிரயாணம் செய்வதையும் பார்த்துக்கொண்டு இருக்கிறவன்—தனது வாழ்க்கையைப்பற்றிக் கவலைப்பட்டுத் தனக்கும் ஏதாவது உயர்ந்த கூலியோ சம்பளமோ வேண்டுமென்றால், அதற்கு, 'உணவுப் பொருள் எப்படி விற்கிறது? தொழிலாளிகளுக்குக் குடும்பச் செலவிற்கு மாதம் என்ன ஆகும்? இவ்வளவு போதாதா? அவ்வளவுக்குள் சரிப்படுத்திக்கொள்ளக் கூடாதா?' என்றெல்லாம் கணக்குப் பார்த்துச் சம்பளத் திட்டம் ஏற்படுத்துவது என்றால், இத் தொழிலாளிகள் சொன்னபடியெல்லாம் நடந்து, சோற்றுக்கு மாத்திரம் வகைசெய்துகொள்ளப் பாடுபடவேண்டிய அடிமைகளா என்று கேட்கிறோம். அவர்களது வாழ்வும் உழைப்பும் சோற்றுக்குத்தானா, வேறு மனமகிழ்ச்சிக்கு இடமில்லையா என்று கேட்கிறோம். தொழிலாளி என்றால் அவன் பணம் சேர்க்க வேண்டாமா? அவன் பெண்டு பிள்ளைகளுக்கு மற்றவர்களைப்போல—அதாவது அவனது ஊழியத்தில் வாழும் மற்றவர்களைப்போல் வாழ்க்கை நடத்த வசதிகள் வேண்டாமா? அவன் பெண்டு பிள்ளைகள் நல்ல நகை, துணிகளுடன் நல்வாழ்க்கை வாழ வேண்டாமா என்று கேட்கிறோம். இவைகளுக்கு இடம் வைத்துத்தானே இனித் தொழிலாளர்கள் சம்பளங்களை நிர்ணயிக்க வேண்டும்? காலம் மாறிவருகிறது; உணர்ச்சியும் உரிமை வேட்கையும் பெருகி வருகின்றன; வாழ்க்கையின் உயர்வும் ஆசாபாசமும் வளர்ந்து வருகின்றன என்பதை யார் மறுக்க முடியும்? ஆகவே, இப்படிப்பட்ட நிலையில், இந்தக் காலத்தில், இனித் தொழிலாளிகளை உண்டிக்கு மாத்திரம் உழைக்கும் பிராணிகள் என்று கருதாமல், அவர்கள் முதலாளிகளின் பங்காளிகள்; உண்மையுள்ள கூட்டாளிகள்; அவர்கள், தங்கள் வாழ்க்கைச் செலவு போக இலாபத்தில் சரி விகிதாசாரம் பெற உரிமையுடையவர்கள் என்கின்ற கருத்தில் நடத்தப்பட வேண்டியவர்களும்—கொடுக்கப்பட வேண்டியவர்களும் ஆவார்கள்.

முதலினாலும், தொழிலினாலும் ஏற்படும் வருவாயை முதலுக்கும் தொழிலுக்கும் சரியாய்ப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதுதான் தொழிற்சாலைகளைத் தேசியமயமாக்கவேண்டும் என்பதன் கருத்தாகும். முதலாளி—மனைவி; தொழிலாளி—கணவன்; இருவரும் சேர்ந்து பெற்ற பிள்ளைதான் உற்பத்தி என்பதாகும். மக்களுக்குச் சம சுதந்திரம் அளிப்பதாகச் சொல்லும் தேசிய சர்க்கார், மற்றெந்தக் காரியம் செய்வதற்கும் முன்பு இதை, இந்தத் தொழிலாளிகள் சம உரிமையைச் செய்துவிட வேண்டும். இதில் பேரம் பேசுவது அடிமைத் தன்மையை வலியுறுத்துவதேயாகும்; அதை அமுல் நடத்துவதேயாகும். ஆகையால், இந்தத் தொழிலாளிகள் கிளர்ச்சிப் போராட்டம் என்பதால் இரயில் நிர்வாகக் குழுவில் தொழிலாளர்களுக்குச் சம பிரதிநிதித்துவம் கொடுத்து வரவு-செலவுக் கணக்குகளை அவர்கள் முன்னால் வைத்து ஆளுக்கு எவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டும்; எவ்வளவு பாதுகாப்புக்குக் காப்பு நிதியாய் ஒதுக்கவேண்டும் என்பவைகளை முடிவுசெய்யவேண்டும். அப்படியில்லாமல், உணவுப் பொருள் விலைவாசி பார்த்துப் பேரம் பேசுவது, இக் காலத்தில் மனித சமுதாயத்திற்கு—சிறப்பாகத் தொழிலாளிகளுக்கு மிகமிக இழிவேயாகும்.

ஆகையால், தொழிலாளிகள் இந்த நிலையை மாற்றப் பாடுபடவேண்டியதும், அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கத் துணிவு கொள்ளவேண்டியதும் மிகவும் தேவையான காரியம் என்றே சொல்லுவோம். ஆதலால், இப்போது இரயில்வே தொழிலாளர்களுடைய உள்ளத்தில், சிந்தனையிலிருக்கும் வேலை நிறுத்த உணர்ச்சியை, முயற்சியை நாம் பாராட்டி வரவேற்கிறோம். அவர்கள் கிளர்ச்சிக்குக் காரணம் சொல்லும் போது விலைவாசிகளை, வாழ்க்கைச் செலவுகளைக் காரணமாய்க் காட்டக் கூடாது. முதலாளி வாழ்க்கைத் தன்மையையும், அனுபவ உரிமையையும்; தங்கள் வாழ்க்கைத் தன்மையையும், அனுபவ உரிமையையும் எடுத்துக்காட்டி—அந்தப் பேதத்தைச் சொல்லி,



அவை, எந்த அளவுக்குச் சமமாக்க முடியும் என்கின்ற பிரச்சினை (இஸ்ஸு)யின் மீது வாதம், போராட்டம் துவக்கப்பட வேண்டும். இம் மாதிரியான தன்மையில் நடக்கும் தொழிலாளி போராட்டம் தான் ஒரு சாந்தியான வெற்றியைக் கொடுக்குமேயல்லாமல், ஏதோ ஓரளவுக்குக் கூலி உயருவதால் மனச் சாந்தி ஏற்பட்டுவிடாது. ஆகவே, போராட்டம் முக்கியமானது என்பதையும், அவசியமானது என்பதையும், அவசரமானது என்பதையும் நாம் வலியுறுத்துக் கூறுவோம்.

போராட்டம் துவக்குமுன்பு விளைவை நன்றாய்ச் சிந்தித்து ஒருவாறு அதன் பலாபலனை ஏற்க நம்மைத் தகுதியாக்கிக்கொள்ள வேண்டும். தொழிலாளிகளுக்காகப் பரிந்து பேசுவதாக வேஷம் போட்டுக்கொண்டு, தொழிலாளிகளைச் சுற்றிக்கொண்டிருக்கிறவர்கள் நயவஞ்சகத் துரோகிகளாக இருக்கக்கூடாது. தொழிலாளர்களின் தலைவர்கள்—வழிகாட்டிகள் என்பவர்கள் முதலாளித்தன்மை கொண்டவர்களாகவோ, முதலாளிகளின் இரகசியக் கூலிகளாகவோ இருக்கக்கூடாது. இன்றைய அரசாங்கம் பொது ஜனங்கள் அரசாங்கம் என்று சொல்லப்பட்டாலும், அது முதலாளிகள் ஆட்சியென்பதும், முதலாளித் தன்மையும்—சோம்பேறி வாழ்க்கையில் கைகண்டதும்—ஊரார் உழைப்பில் சுகவாழ்க்கை நடத்தும் முதலாளிகளுக்கும் மேம்பட்ட வஞ்சக சுகவரசிகள் ஆதிக்கத்தில் இருப்பதுமான ஆட்சி என்பதையும் மறந்துவிடக்கூடாது. நாட்டிலுள்ள மற்ற சாதனங்கள், அதாவது பத்திரிகைகள், பிரச்சாரங்கள், வாயாடிகள், பொது மக்கள் கருத்தை உண்டாக்குகிறவர்கள்; அதை உருப்படுத்துகிறவர்கள், தங்கள் இஷ்டப்படி பயன்படுத்துகிறவர்கள் ஆகியவர்கள் தொழிலாளிகளுக்குப் பிறவி எதிரிகள் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இவர்களை முதலாளிகள் எந்த நிமிஷத்திலும் என்ன விலை கொடுத்தேனும் வாங்கித் தங்கள் கையாட்களாகத் தங்கள் நலனுக்கேற்ற தன்மையாக நடத்திக் கொள்வார்கள் என்பதை உறுதியாக்கிக்கொள்ள வேண்டும். பத்திரிகைக்காரர்கள் ஒரு பித்தலாட்டச் செய்தியைக் கற்பனை செய்துகொண்டு, பழி ஏற்படுத்தி ஒரு தலையங்கம் எழுதித் தொழிலாளர்களில் பலரையே சரணாகதியடையும்படி செய்துவிடுவார்கள். இந்தப்படி இதற்குமுன் பலதடவை சில பத்திரிகைக்காரர்கள் செய்து, தொழிலாளிகளின் முயற்சியை நாசமாக்கி, ஸ்தாபனங்களையே பாழாக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இவர்கள், இந்தப் பத்திரிகைக்காரர்கள் இப்பொழுதே தொழிலாளிகளைப் பயப்படுத்தியும், எச்சரிக்கை செய்தும், தங்கள் அதிருப்தியைக் காட்டியும், மக்கள் மனம் தளரும்படியும், தொழிலாளிகள் மீது குற்றங்காணும்படியும் செய்துவருகிறார்கள்.

இன்றைய இரயில்வேக்களில் பத்திரிகைக்காரர்கள் ஆதிக்கமும் பார்ப்பனர்கள் ஆதிக்கமும் ஏகபோகமாய் இருந்து வருவதை அசாதாரணமாகவோ சாதாரணமாகவோ கருதிவிடக்கூடாது. இந்தப் பத்திரிகைக்காரர்களும், கிளப்பி விடுகிறவர்களும் இதற்குமுன் நடந்த பல போராட்டங்களில் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள்? அதனால் எவ்வளவு இலாபம் அடைந்தார்கள்? என்கின்ற அனுபவத்தையும் கவனிக்கவேண்டும். ஏனெனில், எந்த முயற்சிகளுக்கும் பொதுஜன ஆதரவு எப்படியிருக்கும் என்று பார்த்துத்தான் எதிரிகள் வசமாவதும், நமக்கு வெற்றி ஏற்படுவதும் பெரிய அளவுக்கு இருந்து வருகிறது. முதலாளிகளும் அதற்குத்தான் இணங்கி இறங்கிவருவார்களேயொழிய மற்றபடி நியாயம், நீதி, கடமை, உரிமை ஆகியவைகளைப் பார்க்கமாட்டார்கள். இவைகளைப் பார்க்காத தன்மைதான் முதலாளித் தன்மையாகும்.

ஆகையால், இரயில்வேத் தொழிலாளர்களான நமது உண்மைத் தோழர்கள் இவைகளை எல்லாம் சிந்தனையில் வைத்துத் தங்கள் நிலைமையையும் பார்த்து, நல்லபடி சிந்தித்து, இவற்றைச் சமாளிக்கத் தகுந்த வகைகள் வகுத்துக்கொண்டு தங்கள் போராட்டத்தைத் தாமதமின்றித் துவக்க வேண்டுமென்றும் அவர்களுக்குப் பூரண வெற்றி கிடைக்கவேண்டுமென்றும் உள்ள நம் ஆசையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

['விடுதலை'-தலையங்கம்—10-6-1946]

படிப்பகம்

www.padippakam.com



## 6. திராவிடர் கழகம்—தொழிலாளர் நிறுவனமே!

தலைவரவர்களே! தோழர்களே! பெரியோர்களே!

இக் கூட்டம் தொழிலாளர்களின் தற்காலப் பிரச்சினையாகிய 'பக்கிங்ஹாம்-கர்நாடிக் மில் ஸ்ட்ரைக்' சம்பந்தமாக, திராவிடர் கழகத்தாரால் கூட்டப்பட்ட கூட்டம் என்று தோழர் என். வி. நடராசன் சொன்னார். 'தொழிலாளர்களுக்கும்—திராவிடர் கழகத்தாருக்கும் அதிக ஒற்றுமையில்லை; திராவிடர் கழகத்தார் தொழிலாளிகளை சரிவரக் கவனிப்பதில்லை' என்பது ஒரு புகார். இது தொழிலாளர்களின் தெரியாத்தனமேயாகும். தொழிலாளிகளும், தொழிலாளர் இயக்கங்களும்—பெருவாரியாய் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், 'புராண பிரசிங்கிஸ்ட்' ஆகிய ஸ்தாபனங்களோடுதான் அதிக சம்பந்தம் வைத்துக்கொண்டு அவைகளை ஆதரித்து வருகிறார்களே தவிர, திராவிடர் கழகத்தினிடம் தொழிலாளர்களுக்குப் பற்றில்லை. இது எனது 20-25 வருஷ அனுபவம். என்றாலும், நான், தொழிலாளர்கள் நம்மை ஆதரிக்கவில்லையே என்று ஒரு காலத்திலும் கவலைப்பட்டதில்லை. அதற்காக அவர்களைப் பிடிக்க நான் வலை வைத்ததுமில்லை. எங்கள் தொண்டு யாவும் தொழிலாளர்களுக்காகவேதான்; நாங்களும் தொழிலாளிகள்தாம். ஆகவே, வாய்ப்பினால் மாத்திரம் தொழிலாளிகளில்லாமல் பிறவியினால், சட்டத்தினால், சாஸ்திரங்களால், கடவுள்களால், கடவுள் சிருஷ்டியினால் நாங்கள் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள்தாம் திராவிடர்கள். இப்போது தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகளில் உண்மைத் தொழிலாளிகள் 1000-த்தில் ஒரு பாகமாகத்தான் இருப்பார்கள்.

தொழிலாளி என்கின்ற பதத்துக்கு அர்த்தம் என்ன? வேலை செய்கிறவன் என்று அர்த்தமாகும். 'யாவருந்தான் வேலை செய்கிறார்கள். அப்படியிருக்க ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் தொழிலாளி என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பானேன்?' என்றால், பிறருக்காகத் தொண்டுசெய்து மனுதர்ம சாஸ்திரப்படி தொழிலாளியாகவே வாழ்பவர்கள், தொழிலாளி என்று அழைக்கப்படுகிறார்கள். அந்தக் கருத்தில் பார்த்தால், திராவிடர்களாகிய நாம் யாவரும் தொழிலாளர்கள் அல்லவா என்று கேட்கிறேன். இயந்திரங்களின் முன்னால் நிற்பவர்கள் மாத்திரந்தானா தொழிலாளர்கள்? வண்டி ஓட்டுகிறவர்கள், வண்டி இழுக்கிறவர்கள், வீதி கூட்டுகிறவன், கக்கூசுக்காரன், வண்ணான், நாவிதன், குயவன், உழுபவன், விதைப்பவன், தச்சன், கொல்லன், சக்கிலி, பறையன், செக்கு ஓட்டுகிறவன், நெசவு நெய்பவன் முதலியவர்கள் சரீரத்தாலுழைத்து, வயிற்றுக்கு, வாழ்வுக்கு மாத்திரம் சம்பாதித்து அன்றாட வாழ்க்கைக்கு அன்றாட வரும்படி எதிர்பார்த்து நிற்கும் யாவரும் தொழிலாளி அல்லவா என்று கேட்கிறேன்.

இன்று, இம் மாதிரித் தொழிலாளர்கள் யார்? பிராமணர்களா? சத்திரியர்களா? அல்லவே! சூத்திரர்கள்தானே இந்த மாதிரித் தொழிலாளிகளாய் இருக்கிறார்கள்? அந்தச் சூத்திரர்கள் யார்? திராவிடர்களாகிய நாம்தானே—'சூத்திரர்' என்கின்ற பட்டியலில் சட்டப்படியும், சாஸ்திரப்படியும், கடவுள் சிருஷ்டிப்படியும் காரியத்தில் நடப்புப்படியும் இருந்துவருகிறோம்! இதை எந்தத் தொழிலாளியாவது மறுக்கமுடியுமா? நான் மேலே சொன்ன தொழில்களில் ஒரு 'பிராமணன்' இருக்கிறானா? ஆகவே, சரீரத்தினால் பாடுபடும் வேலை அவ்வளவும் சூத்திரர்கள் என்று அழைக்கப்படும்—ஆக்கப்பட்டிருக்கும் திராவிடர்களாகிய நம் கையிலேயே இருப்பதால், திராவிடர் இயக்கம் தொழிலாளர் இயக்கம் என்று சொல்லுகிறேன்.

எதற்காகத் திராவிடர் இயக்கம் வேலை செய்கிறது என்றால், திராவிடர் நாலாவது சாதியாக இருக்கக்கூடாது; தொழிலாளர் சாதியாக இருக்கக்கூடாது என்பதற்காகவேயாகும்.



சில தொழிலாளர் தலைவர்கள் என்பவர்கள் என்மீது குரோதம் கொண்டிருக்கிறார்கள். என்னைப்பற்றி விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். நீங்கள்—வாயில்லாப் பூச்சி, அறிவில்லா ஜந்து என்கின்ற மாதிரி, அந்த வஞ்சகப் பேச்சுக்குக் காது கொடுத்து பைத்தியக்காரர்களாக இருந்து வருகிறீர்கள். என்னவென்றால்,

'ராமசாமி நாயக்கர் மதத்தில், கடவுளில் பிரவேசிக்காவிட்டால் நான் அவருடன் நேசமாக இருப்பேன். ஆனால், அவர் நாத்திகம், மதத் துவேஷம் பேசுகிறார். ஆகையால் ஜாக்கிரதையாயிருங்கள்!' என்று உங்கள் தலைவர்களில் சிலர் சொல்லி, உங்களை என்னிடம் அணுகவிடாமல் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், உங்களை ஏய்க்க இப்படிப்பட்ட பேச்சுப்பேசும் உணர்ச்சி உள்ளவர்கள் தொழிலாளர்களுக்குத் தலைவர்களாக இருக்க யோக்கியதை உண்டா என்று கேட்கிறேன். இவர்களை நம்பினவர்கள் முன்னுக்கு வரமுடியுமா என்று கேட்கிறேன்.

எது மதம், எது கடவுள் என்பது இந்த அன்னக் காவடிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். நான் எந்த மதத்தை, எந்தக் கடவுளை ஒழிக்கவேண்டும் என்று சொல்லுகிறேன் என்பது இந்தத் தற்குறிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்.

எந்த ஒரு மதம்—ஒரு மனிதனைப் பிராமணனாகவும் ஒரு மனிதனைச் சூத்திரனாகவும் அதாவது தொழிலாளியாகவும், பாட்டாளியாகவும், பறையனாகவும் உண்டு பண்ணிற்றோ, அந்த மதம் ஒழியவேண்டும் என்று சொல்லுகிறேன். ஒழிய வேண்டுமா, வேண்டாமா? ('ஆம், ஒழிய வேண்டும்' என்ற பேரொலி) எந்தக் கடவுள் ஒருவனுக்கு நிறையப் பொருள் 'கொடுத்தும்', ஒருவனுக்குப் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழ உரிமை கொடுத்தும்; மற்றொருவனை உழைத்து உழைத்து ஊரானுக்குப் போட்டுவிட்டுச் சோற்றுக்குத் திண்டாடும்படியும், இரத்தத்தை வேர்வையாய்ச் சிந்தி உடலால்உழைத்த வண்ணமிருந்து கீழ்மகனாய் வாழும்படி செய்கிறதோ—அந்தக் கடவுள் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறேன். அந்தக் கடவுள் ஒழியவேண்டுமா, வேண்டாமா? ('ஆம்! ஆம்! ஒழிந்தேயாகவேண்டும்' என்கின்ற பேரொலி). ஆகவே, தோழர்களே! இது சொன்னால், நான் நாத்திகனும்—மதத் துவேஷியுமா? 'ஆம், ஒழிய வேண்டும்' என்று சொன்ன நீங்கள் மதத் துவேஷிகளா, நாத்திகர்களா? தோழர்களே, நம்மை நாத்திகர்கள் என்கின்ற இந்தப் பாஷாண்டங்கள்தாம் நாத்திகர்களாவார்கள்.

[சென்னையில், 30-6-1946-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-7-1946]

## 7. தி. வி. தொ. சங்கம் ஏன்?

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்கிறதான ஒரு அமைப்பு, திராவிடர் கழகத்தின் சார்பிலே இருக்கவேண்டும் என்று எனக்குத் திருச்சியிலே நினைப்புத் தோன்றியது. அந்தப்படிதான் இன்று திராவிடர் கழகத்தின் சார்பாக, திராவிட விவசாயத் தொழிலாளர் கழகங்களை நாடெங்கும் ஏற்படுத்தி வருகின்றோம்.

இந்தப்படியான ஒரு அமைப்பை, அதாவது திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தைத் துவக்க வேண்டுமென்பதாக ஏன் தோன்றியது என்றால், இன்றைய தினம் விவசாயம் செய்கிறவர்கள் நிலத்திலேயே இறங்கிப் பாடுபடுகிறார்கள். பண்ணையாள், கூலியாள் முதலியோரும்—அதே மாதிரி நாட்டின் எல்லாத் தொழில்களை—அதாவது மில்லில் வேலை செய்வது, மூட்டைதூக்குவது, கல்லுடைப்பது, வண்டி இழுப்பது இன்னும் இதுபோன்ற உடலுழைப்பு வேலை செய்கிறவர்கள் எல்லாம் திராவிட மக்கள்தாமே தவிர வேறு யாருமல்ல. பார்ப்பானுக்கும் உடலுழைப்புக்கும் வெகு தூரம். இந்தப்படி



படிப்பகம்

www.padippakam.com



இருக்கும்போது, இந்த நாட்டுத் திராவிட மக்களின் நலனுக்குமாகவே பாடுபட்டுவரும் திராவிடர் கழகம் இந்தத் துறையிலே வேலை செய்ய வேண்டியது; அந்தத் தொழிலாளி களுடைய வாழ்வை முற்போக்கு அடையச்செய்ய வேண்டியதில் முழுப்பங்கு எடுத்துத் தொண்டாற்ற வேண்டுவது அவசியமாகும்.

அதோடு, இன்றைய தினம் விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று பாடுபடுவதற் காகப் பல கட்சிகள் இருந்துவருகின்றன. கம்யூனிஸ்டுகள் விவசாய சங்கம் என்பதாக ஒரு அமைப்பு ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்து வருகிறார்கள். அதுபோலவே, சோஷிய லிஸ்டுகள் கிசான் சங்கம் என்பதாக ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே, காங்கிரசுக்காரர்களும் விவசாயிகள் சங்கம் வைத்துக்கொண்டிருக் கிறார்கள். மற்றும், பல தொழிலாளர் சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப்படி விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஆக வேலை செய்துவருகிற எந்தக் கட்சியாரும், திராவிடர் கழகத்தின் கொள்கைகளை ஒத்துக்கொள்ளாதவர்கள்.

இன்றையத் தொழிலாளர், விவசாய சங்கத்தை அமைத்துக் கொண்டிருப்பதைக் குறித்துப் பொதுவாக எனக்குத் தோன்றும் கருத்து என்னவென்றால், இந்தப்படியான ஸ்தாபனங்களை வைத்துக்கொண்டு—ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கட்சிக் காரியத்துக்கு இவைகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதுதான். மற்றபடி, இன்றையத் தொழி லாளிகளின் இழி வாழ்க்கைத் தன்மை ஒழியவோ, வேறு வசதியான நிலை அவர்களுக்கு ஏற்படவோ யாரும் பாடுபடுவது இல்லை.

இந்த நாட்டிலே இன்றைய தினம் இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் கூலிக்காரர் களாக இருப்பது இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. பாரம்பரியமாக, வழி வழியாக இவர்கள் தொழிலாளர்கள் தான்.

அன்றாடக் கஞ்சிக்காக—அன்றாடம் வேலை செய்து, கூலி பெற்று, அந்தப்படி பெற்ற கூலியை, அன்றையக் கஞ்சிக்கே செலவு செய்துவிட்டு, அடுத்த நாள் கஞ்சிக்கு யாரிட மாவது வேலைக்குப் போய்க் கூலி வாங்கித்தான் வழி செய்து கொள்ள வேண்டும் என்ற தன்மையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைய தினம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட கிளர்ச்சிகள் நடக்கின்றன என்றால் எதற்காக நடக்கின்றன? அவனுடைய தொழிலாளித் தன்மை ஒழிவதற்காகவா? இல்லவே இல்லை.

ஒரு மாதம், இரண்டு மாதம் 'ஸ்ட்ரைக்' செய்து, அடிதடிப்பட்டு, பல கஷ்ட நஷ்டங் களை யேற்று கிளர்ச்சி செய்தால் இரண்டணா கூலி உயர்வு தரப்படுகிறது. ஆனால், கூலி உயர்வு தரப்படுகிறதே தவிர, அவனுடைய தொழிலாளத் தன்மை அப்படியேதான் இருக் கிறது. அவ்வளவு கஷ்டப்பட்டுக் கூலி உயர்வு சம்பாதித்த தொழிலாளி, அந்தப் பணத் தினால் ஏதாவது இலாபம் பெறுகிறானா என்றால் அதுவும் இல்லை.

கூலி உயர்வு பெற்றவுடன்—தொழிலாளி, எங்கே தேர்த் திருவிழா நடக்கிறது? எந்தச் சாமிக்கு 'அர்ச்சனை' செய்யலாம், என்பதிலேதான் கவனத்தைச் செலுத்துகிறான். கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம், அவனிடத்திலே குவிந்திருக்கும் முட்டாள் தனத்தின் காரணமாகக் கல்லுச் சாமிக்கும், திருவிழாக் கூத்துக்கும் போய் விடுகிறது.

அதுமட்டுமல்ல; தொழிலாளிக்கு முதலாளி, இரண்டணா கூலி கூட்டிக்கொடுப் பதினால் முதலாளிக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்பட்டுவிடுவதில்லை; அவனுடைய தன்மைக்கும் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படுவதில்லை. அதற்குப் பதிலாக, கூலி உயர்வு கொடுத்து, தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற முற்போக்கு உணர்ச்சிகளை மழுங்கச் செய்து, அவனுடைய முதலாளித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்கிறான்.



அதோடு, முதலாளி என்ன செய்கிறான் என்பதை நீங்கள் கவனித்துப் பார்த்தால் தெரியும்.

தொழிலாளிக்குக் கூலியில் இரண்டணாவை அதிகப்படுத்தினவுடனேயே, முதலாளி தன் பண்டங்களின் விலையின்மீது இரண்டணாவைக் கூட்டி உயர்த்தி வைக்கிறான். இதனால் பொருள்களின் விலையேற்றத்தால் பொதுமக்கள் பாதிக்கப் படுகிறார்கள். அதோடு, தொழிலாளியும் தான் முதலில் ஓரணாவுக்கு வாங்கிக்கொண்டிருந்த அதே சாமானை, கூலி உயர்வு கிடைத்தபின் ஒன்றேகால், ஒன்றரை அணா கொடுத்து வாங்க வேண்டியவனாகிறான்.

எனவேதான், நான் சொல்லுகிறேன்: 'இந்தக் கூலி உயர்வுக் கிளர்ச்சியும், அதற்காகத் தொழிலாளர்களுக்கு அடி, உதை, துப்பாக்கிக் குண்டு சாவு வாங்கிக் கொடுப்பதும் வெறும் கேலிக் கூத்து ஆகும்' என்று.

தொழிலாளி உயரவேண்டுமென்றால் தொழிலின் இலாபத்தில் அவனுக்கும் பங்கு வேண்டும்; தொழிலின் நிர்வாகத்தில் அவனுக்கும் பங்கு இருக்கவேண்டும். இந்தப் படியாகக் காரியம் செய்தால்தான் தொழிலாளி நிலைமை ஒழிந்து மனித வாழ்க்கையில் சம நிலைப் பங்காளிநிலை ஏற்படுமே தவிர—கூலிக்குக் கிளர்ச்சி என்பது, தொழிலாளி தொழிலாளியாகவுமே, ஏழை ஏழையாகவுமே, பணக்காரன் மேலும் பணக்காரனாகவுமே இருப்பதற்கு—அதாவது முதலாளி, முதலாளியாகவுமே இருப்பதற்குத்தான் உதவுமே தவிர வேறு எதற்கும் இல்லை. அன்றியும், தொழிலாளிக்குப் பாடுபடுகிறவர்கள் சர்க்காரிடம் நேரிடை நடவடிக்கை எடுத்துச் சட்ட திட்டம் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒத்துக்கொண்டு அந்தப்படிக் காரியம் செய்தால்தான் 'தொழிலாள நிலை' ஒழிந்து சமநிலை காணமுடியும் என்பேன்.

உதாரணமாக, நான் ஒரு தொழிலாளியைப் பார்த்து, 'நீ ஏழையாய் மற்றவர் களுக்கு உழைத்துப் போட்டுவிட்டு, நீ ஏன் ஒன்றும் இல்லாமல் இருக்கிறாய்?' என்று கேட்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்தத் தொழிலாளி என்ன நினைப்பான்?

'அவன் (முதலாளி, பணக்காரன்) மகாராஜன்—போன ஜன்மத்திலே புண்ணியம் செய்திருப்பான்; நானென்ன பாவம் செய்தேனோ, இந்த ஜன்மத்தில் இவ்வளவு கஷ்டப் பட!' என்றுதான் சொல்லுவான். இது, இந்த நாட்டில் மற்றெல்லா நாட்டைவிட அதிக மாகும். ஆதலால், இந்த நாட்டுத் தொழிலாளர் நலம் பெற, தொழிலாளிகளைப் பார்ப்பா னிடமும் முட்டவிட வேண்டும்.

அன்றியும், இன்று தொழிலாளிகளுக்குப் பாடுபடுவதாகச் சொல்லுகிற ஸ்தாபனங்கள் எல்லாம் தொழிலாளிக்கு நாத்திகம் தேவையில்லை; அவன் சாமி கும்பிடுவதையோ, கோயில் குளங்களுக்கு, திருவிழாக்களுக்குப் போவதையோ தடுக்க வேண்டிய அவசிய மில்லை என்பதாகவெல்லாம் சொல்லுகிறார்கள். அந்தப்படி இருப்பதினால், நான் முன்னே சொன்ன மாதிரி தொழிலாளி தனக்குக் கிடைக்கும் பணத்தை இந்த மாதிரிக் கோவில், குளம், திருவிழாக்களிலே செலவிட்டு, மூடத்தனத்திற்கும், முட்டாள்தனத்திற்கும் பலியாவானே தவிர—சேர்த்த பொருளை மீத்தாமல் கண்டதுக்கு, கண்மூடித்தனத்துக்குச் செலவிடுவானே தவிர, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவோ, வாழ்க்கைத் தேவைகளைச் சரிக் கட்டிக் கொள்ளவோ முடியாதவனாக ஆகிவிடுகிறான்.

இந்தப்படி இருக்கிற யதார்த்தமான நிலைமையைப்பற்றி, யாரும் எடுத்துச் சொல்வ தில்லை. என்ன காரணத்தாலோ ஏதோ முதலாளிக்கும் தொழிலாளிக்கும் சண்டையை உண்டாக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, தொழிலாளிக்கு அடி, உதை பெறும் படியாகச் செய்வார்கள். பார்ப்பானிடமும் முட்டவிடத் தயங்குவார்கள்,

படிப்பகம்

www.padippakam.com



அதுமட்டுமல்லாமல் மற்றொரு சங்கதியையும் நீங்கள் கவனிக்க வேண்டும். தொழி லாளர்கள் சார்பாகப் பேசுபவர்கள் எல்லோரும் முதலாளியைத் திட்டியும் தொழிலாளிக்கும், முதலாளிக்கும் இருக்கிற பேதாபேதத்தையும் சுட்டிக் காட்டியும்தான் பேசுவார்களே தவிர, முதலாளி–தொழிலாளி தன்மைக்குப் பாதுகாப்புத் தருகிற சர்க்காரை—பார்ப்பானை ஒன்றும் செய்யமாட்டார்கள். அதாவது, முதலாளியின் முதலாளித் தன்மைக்கு ஆபத்து வராமல் தொழிலாளியைச் சுரண்டிப் பெறும் உடைமையை அனுபவிக்க அவனுக்கு உரிமை கொடுத்து, அந்தப்படி அவன் அனுபவிக்கிற பொருளுக்கு எந்த விதமான தீங்கும் நேராம லும் தனி உடைமை அனுபவிப்புக்குப் பாதுகாப்பு அளிக்கும் சர்க்காரை இவர்களிலே யாரும் ஒன்றும் செய்வதில்லை. அதை விட்டுவிட்டு, தொழிலாளிக்கு, முதலாளியிடம் வெறுப்பை யூட்டி, முதலாளியின் பொருளைப் பலாத்கார நடவடிக்கையின் மூலமாகக் கொள்ளை யடிப்பது, தீ வைப்பது, நாசமாக்குவது போன்ற காரியங்களைச் செய்ய ஏவிவிடுகிறார்கள். தொழிலாளி அந்தப்படி செய்கிறபோது, முதலாளி தன்னுடைய நிலைமைக்கு அனுமதி அளித்தும், பாதுகாப்பு அளித்தும் வரும் சர்க்காரிடம் உதவிக்குப் போகிறான். சர்க்காரும் உள்ளே புகுந்து தொழிலாளியை அடக்குகிறது. இதுதான் இன்றைய தினம் முதலாளி—தொழிலாளிப் போராட்டத்தின் பிரத்தியட்ச நிலைமையாய் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

எனவேதான் நான் சொல்லுகிறேன்: 'இன்றைய பேத நிலைமைக்குக் காரணமாக இருக்கிற அமைப்பும், அந்தப்படியான அமைப்புக்கு ஆதரவளித்துப் பாதுகாப்பாக இருக்கும் சர்க்காரும் ஒழிக்கப்படவேண்டும். தொழிலாளிகளிடையில் இந்தப் பிரச்சாரமே அதிகமாக இருக்கவேண்டும்.

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தை நான் துவக்குவதற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு.

இன்னொன்று சொல்லுகிறேன். உதாரணமாக, சோஷியலிஸ்டுகள் தொழிலாளர் சங்கம் என்பதாக வைத்துக்கொண்டு வேலை செய்து வருகிறார்கள். எலெக்ஷன் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்த எலெக்ஷனில் நாம் ஒரு ஆளை நிறுத்து கிறோம் அல்லது நிற்கிற யாரையாவது ஆதரிக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த எலெக்ஷனில் தொழிலாளர் சங்கம் வேறு ஆளை ஆதரிக்கிறது அல்லது நிறுத்துகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது திராவிடர் கழகத்தில் இருக்கும் தொழிலாளி யாருக்கு ஓட்டுப்போடுவான்?

திராவிடர் கழகத்திலிருந்தாலும் தொழிற் சங்கத்துக்காரன், தொழிலாளி என்கிறதால் தொழிற் சங்கம் ஆதரிக்கிற, நிறுத்துகிற ஆளுக்குத்தான் ஓட்டுப்போடுவான். அப்போது நாம் ஆதரிக்கிற ஆள் என்ன ஆவது? நமக்குச் சட்டசபை சம்பந்தமே வேண்டாமா?

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் நாம் ஏற்படுத்தி இருப்பதுபற்றிப் பலர் குற்றம் சொல்லலாம். கம்யூனிஸ்டுகளும் நம்மை, 'முதலாளிகளின் கையாட்களாகிய இவர்கள் இப்படிச் செய்கிறார்கள்' என்று சொல்லலாம்.

சோஷியலிஸ்டுகள், 'இதனால் எல்லாம் ஒன்றும் காரியம் நடக்காது' என்பதாகக் குற்றம் சொல்லலாம். மற்றவர்கள் நம்மைப்பற்றிச் சொல்லுகிற குறையைப்பற்றி நமக்குக் கவலையில்லை. திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தை நாம் ஆரம்பித்தது மற்றவர் களுக்குப் போட்டியாகவோ அல்லது மற்ற கட்சிக்காரர்கள் காட்டுகிற தப்புகளுக்கோ அல்ல என்பதை நம்முடைய பின் நடத்தையின் மூலம் அவர்களே தெரிந்துகொள்வார்கள்.

அதோடு மற்றொரு சங்கதியையும் நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது, கம்யூனிஸ்ட் கட்சியோ, சோஷியலிஸ்ட் கட்சியோ இந்த நாட்டுக் கட்சிகள் அல்ல. அவற்றுக்குத் தலைமை இங்கு இல்லை. மேலிருந்து—ஹைகமாண்டிலிருந்து என்ன உத்தரவு வருகிறதோ அதை நிறைவேற்ற வேண்டியதே இங்கு இருக்கிற ஆட்களுடைய கடமையாகும். அதுவும் கம்யூனிஸ்ட் கட்சி உலகம் பூராவுக்கும் சம்பந்தப்பட்ட கட்சியாகும்.



எனவே, அந்தக் கட்சிகளின் மேலிடத்திலிருந்து வரும் உத்தரவுகள் எல்லாம் நம்முடைய நல்லதுக்கு ஏற்றபடியே—நலத்துக்காகவே வரும் என்று எப்படிச் சொல்லமுடியும்?

அதோடுமட்டுமல்லாமல், திராவிடர் கழகம்தான் இந்த நாட்டினுடைய தேசிய ஸ்தாபனம் ஆகும். மதத்திலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் பார்ப்பனர்களுக்கும் வடநாட்டார்களுக்கும் அடிமைப்பட்டிருக்கும் இந்த நாட்டைப் பார்ப்பனர், பனியாக் கூட்டத்தினிடமிருந்து விடுவித்து, சுதந்திர நாடாக்கும் விடுதலைக் கிளர்ச்சி ஸ்தாபனம் தான் திராவிடர் கழகம். திராவிடர் கழகத்தினால்தான்—இந்த நாட்டை விடுதலை செய்து, இங்கு சுயமரியாதையுடன் கூடிய நல்ல நிலைமையை—உயர்ந்த பண்பை—சவுகரியமான வாழ்வை அமைக்கமுடியுமென்று நாம் கருதுகிறோம்.

அந்தப்படி கருதி நாம் ஆற்றிவரும் தொண்டில், நாம் நாலணா அளவுக்குத்தான் காரியம் சாதித்திருக்கிறோம். இதற்குள்ளேயே எத்தனையோ துரோகத்துக்கும், ஐந்தாம் படைக்காரர்களின் சதிக்கும் தப்பிக் காரியம் சாதித்திருக்கிறோம். பல பார்ப்பனர்கள், பல பணக்காரர்கள் கம்யூனிசத்தில் இருப்பதுபோல நடித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் பணக்காரர்கள் ஆதிக்கம் இல்லை என்றாலும் இவைகளுக்கெல்லாம் தலை கொடுத்துக்கொண்டுதான் இந்த நாட்டிலே காரியம் செய்ய வேண்டியிருக்கிறது.

இன்னமும் திராவிடர் கழகத்தின் இலட்சியங்கள் நிறைவேறவும், இந் நாட்டு மக்கள் உயரவும் பார்ப்பனர்கள் தவிர மற்ற மக்கள் அனைவரும் திராவிடர் கழகத்தில் பங்கு கொண்டு காரியம் ஆற்ற வேண்டியிருக்கிறது. எனவேதான், நாம் நம் இனத்தைச் சேர்ந்த அனைவரின் பிரச்சினையையும் கவனித்துக் காரிய மாற்றும் வேலையில் இறங்கி, திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் ஏற்படுத்தியிருக்கிறோமே தவிர, மற்ற கட்சிக்காரர்கள் நினைப்பதுபோல் போட்டிக்கு அல்ல; மற்றவர்களுடன் சண்டை போடுவதற்கு அல்ல.

தோழர்களே! இன்னமும் சொல்லுகிறேன்: திராவிட விவசாயத் தொழிலாளர் கழகத்தின் திட்டம் இத்தோடு முடிந்துவிடுவதல்ல. இந்த நாட்டின் சகல துறைகளிலேயும் விஞ்ஞான ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், தனி உடைமையை ஒழித்து அனை வருக்கும் அனைத்தும் என்கிறதான நிலையை ஏற்படுத்தவும், அப்படி ஏற்படுத்த இருக்கும் மற்ற கட்சிகளுடன் தாராளமாக—என் வலியவும் ஒத்துழைக்கவும் விரும்புகிறது என்றும் சொல்லுகிறேன்.

இந்த நாட்டு விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், 2000 வருடங்களுக்கு முன் வயல் வேலைகளில் எப்படிப்பட்ட முறைகள் இருந்துவந்தனவோ—எந்த விதமான ஏர், கலப்பை உபயோகப்படுத்தப்பட்டு வந்தனவோ—எப்படி உழுவது, விதைப்பது, வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதிலேயிருந்து அறுவடைக் காரியம் வரை செய்துவந்தார்களோ—அதே முறைகள்தாம் இன்றும் இருந்துவருகின்றன. போதுமான முற்போக்கும் காணப்பட வில்லை. இந்தத் துறைகளில் பாட்டாளி சிறிதும் நலம் பெறவில்லை.

மேல்நாடுகளைப் பார்த்தால் இங்கு 10 ஏகராவில் செய்கிற வெள்ளாமை, விளைச்சலை அங்கே 4 ஏக்கரிலேயே விளைக்கிறான். இங்கு 2 ஏகராவுக்குச் செலவழிக்கப்படும் உழைப்பை அங்கே 10 ஏகராவுக்குச் செலவழித்து நலம் காண முடிகிறது விஞ்ஞான முறையில். இங்கே காலங்காத்தாலே—கோழி கூவும்போது எழுந்துபோய் சூரியாஸ்தமனம் வரையிலும் கஷ்டப் பட்டு உழைத்துவிட்டு வந்தும் கஷ்டப்பட்டதற்கு ஏற்ற விளைச்சலைக் காணமுடிவதில்லை.

மேல்நாடுகளில் மற்ற துறைகளில் வளர்ச்சியடைந்தது போலவே இந்தத் துறை யிலேயும் வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைய விவசாய முறைகளிலேயும் விஞ்ஞானத்தின் அடிப்படைப்படி மாற்றம் காணவேண்டும்.

மேல்நாட்டில் நிலத்திலே வேலை செய்கிறவனுக்கு விளைச்சலில் பங்கு உண்டு, ஆனால், இங்கு அப்படியல்ல. நிலத்துச் சொந்தக்காரன் எங்கோ இருந்துகொண்டு

படிப்பகம்

www.padippakam.com



நிலத்தை வாரத்திற்கு விட்டுவிட்டு, அந்தப்படி வாரத்திற்கு நிலத்தைப் பெற்ற குத்தகைக் காரன் நிலத்தைப் பண்படுத்தி உழுது விளைச்சல் எடுத்துக்கொடுக்க, சும்மா உட்கார்ந் திருந்த நிலத்துச் சொந்தக்காரன் பெரும் பகுதியை எடுத்துக்கொள்வான். குத்தகைக் காரனுக்கு முட்டுவழிச்செலவு, ஆட்கள் கூலிச் செலவு போக, கடைசியில் ஒன்றும் இல்லாத வனாக—'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிச்சமில்லை' என்ற மாதிரியில், ஆற்றுப் பாசனமில்லாத மிராசுதாரன் நஷ்டப்படவேண்டியிருக்கிறது. இந்த முறையினா லேயே அவன் பாட்டாளிக்குச் சரிவரக் கொடுக்கமுடியாமலும், ஏதும் மீத்த முடியாமலும் போகிறது. பாட்டாளி அன்றாடக் கூலிக்காரனாகவே—ஒரு சில பெரு நிலப் பிரபுக்கள் தவிர, மற்றவர்கள் இருந்து வழிவழியான கூலிக்காரனாக வாழவேண்டியிருக்கிறது.

இந்த நிலைமையேற்படாமல் முதலாளி எப்படி மீத்து வைக்கிறானோ அப்படியே தொழிலாளியும் விவசாயியும் மீத்து வைக்கும்படியானபடி அனைவருக்கும் தொழிலின் இலாபத்தில் பங்கு இருக்க வேண்டுமானால் தொழில்முறையும் விஞ்ஞான ரீதியில் முன்னேற வேண்டும்.

சீக்கிரத்திலேயே ஒரு காலம்வரும். என் காலத்திலேயே வந்தாலும் வந்துவிடும் என்று தான் நான் கருதுகிறேன். அதாவது, பூமி பூராவும் ஏராளமாக ஒரு மனிதன் வசமே தேக்கப்பட்டிருக்கக் கூடாது. அனைவருக்கும் அவரவர்கள் அளவுக்குப் பிரித்துக் கொடுக்கும் காலம் வரும். அந்தப்படியான காலத்தை விரைவில் ஏற்படுத்த நாம் வழி காட்டிகளாயிருக்க வேண்டும். 20 ஆண்டுகளுக்கு முன்பே இந்தப்படியாக நான் சில திட்டங்கள் வகுத்து இருக்கிறேன். அவை இன்று செல்வாக்குப் பெற்று வருகின்றன.

இன்றைய விவசாயத் தொழிலாளர்களின் துயரைப் போக்கி தொழிலாளி—முதலாளி என்கிற, நிலத்துக்குச் சொந்தக்காரன்—நிலத்துக் கூலிக்காரன் என்பதான சொல்லே அகராதியில் இல்லாதபடி செய்ய வேண்டும் என்பதுதான் திராவிடர் கழகக் குறிக்கோள்.

இந்த நிலைமையெல்லாம் நாட்டிலே மலரவேண்டுமென்றால் நாடெங்கும் திராவிட விவசாயத் தொழிலாளர் கழகங்கள் ஏராளமாக ஏற்படுத்தப்பட வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் அதிலே ஏராளமாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[தாதம்பட்டி, சிவதாபுரம் சொற்பொழிவுகள்—'விடுதலை' 22-3-1952]

## 8. தொழிலாளர் கிளர்ச்சி

தோழர்களே !

தொழிலாளர் கிளர்ச்சியே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. மக்கள் உள்ளத்திலே முதலாளித்துவப் பாதுகாப்பு சர்க்கார்—பேத அமைப்புக்குப் பாதுகாப்புத் தேடுகிற சர்க்கார் எதற்காக என்கிறதைத் தெளிவாக்கவேண்டும். இந்தப்படி இருக்கிற இந்த சர்க்காரை ஒழித்தாகவேண்டும் என்கிற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டவேண்டும். அதற்காக என்று சர்க்கார் கொடுக்கும் தொல்லையைச் சகித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மாறுதல் ஏற்படும். இதைத்தான் நாங்கள் கூறுகிறோம்—எங்கள் கழகம் கூறுகிறது.

இப்போது தொழிலாளர் கிளர்ச்சி என்பது எப்படியாகிவிட்டதென்றால், முதலாளி யோடு சண்டை போடுவதுதான் என்பதாகிவிட்டது. நான் சொல்லுகிறேன் : முதலாளிக்கும், முதலாளித்துவ முறைக்கும் பாதுகாப்புத் தரும் சர்க்காருடன் நாம் போராடவேண்டும்.

இந்த நாடு திராவிடநாடு ; இந்த நாட்டுத் தொழிலாளர் இயக்கம் திராவிட நாட்டுத் தொழிலாளர் இயக்கமாகத்தான் இருக்கும். உலகத் தொழிலாளர் இயக்கம் என்பதாக இருக்கிறது. அதைப்போலவே அந்தந்த நாட்டுக்கு—அந்தந்த நாட்டின் பெயரால்



தொழிலாளர் இயக்கங்கள் இருக்கின்றன. அதாவது, இங்கிலாந்து தொழிலாளர் இயக்கம், அமெரிக்கத் தொழிலாளர் இயக்கம், இந்தியத் தொழிலாளர் இயக்கம் என்று இருப்பது போல, திராவிடநாட்டு விவசாய சங்கம், தொழிலாளர் இயக்கம்—திராவிட விவசாயத் தொழிலாளர் இயக்கமாக இருக்கிறது. அதோடு, மற்ற நாட்டுத் தொழிலாளர் இயக்கங் களுக்கும் இந்த நாட்டுத் தொழிலாளர் இயக்கத்துக்கும் ஒரு பெருத்த வேற்றுமை உண்டு. அதாவது, மற்ற நாடுகளில் பணக்காரன்—ஏழை என்கிற பேதத்தோடு நின்றுவிடும். ஆனால், இங்கோ பணக்காரன் – ஏழை என்கிற பேதத்தோடு மாத்திரமல்லாமல், அந்தப் பேதத்துக்குப் பாதுகாப்புத் தருகிற பார்ப்பான்—சூத்திரன், பறையன் என்கிற அதைவிடக் கொடுமையான பேதமும் உள்ளது. நாம் அந்தப் பேதத்தையும் களைந்தாக வேண்டும். எனவே, மற்ற நாட்டு முறைதான் இங்கும் சிலாக்கியமானது என்று விவாதிப்பது என்ப தானால், அது ஒன்று அறியாமையாய் இருக்கவேண்டும் ; அல்லது வடிகட்டின பித்தலாட்ட மாக இருக்கவேண்டும்.

திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்கிற ஸ்தாபனம் இப்போது சமீபத்தில் தான் திருச்சியில் ஆரம்பித்தோம். சாதாரணமாக இப்போது இந்தத் தமிழ்நாடு முழுவதும் திராவிடத் தொழிலாளர்கள் பலர் தங்கள் தங்கள் தொழிலின் பேரால் திராவிட விவசாயிகள் கழகம் என்றும், திராவிடத் தொழிலாளர்கள் கழகம் என்றும், திராவிட தையல் தொழிலாளர் கழகம் என்றும், திராவிட சலவைத் தொழிலாளர் கழகம் என்றும், திராவிட மருத்துவத் தொழிலாளர் கழகம் என்றும் இன்னும் இதுபோன்ற தொழிலாளர் கழகங்கள் பலவற்றை நாடு பூராவும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இத்தனை நாள் இல்லாமல், திராவிடர் கழகம் இன்று ஏன் இந்தத் துறையிலே தனியான ஸ்தாபனத்தின் பேரால் சேவை செய்ய ஆரம்பித்தது என்று நீங்கள் கேட்பீர் களானால், ஏறக்குறைய இந்த 25 ஆண்டுகளாக எங்களுடைய போராட்டங்கள், பிரச்சாரங்கள், சேவைகள் எல்லாம் தொழிலாளர்கள் சங்கதியையே—அதாவது கீழ்சாதி மக்களுடைய—பாடுபடுகிற பாட்டாளி மக்களுடைய—சூத்திர, பஞ்சம மக்களுடைய நல்வாழ்வுக்கு என்றே அமைக்கப்பட்டிருந்தாலும் ; சுயமரியாதை இயக்கம், சமதர்ம இயக்கம், ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் என்பன போன்ற பல ரகங்களால் வேலை செய்து வந்தாலும், தொழிலாளர்கள் மத்தியிலே தனி ஸ்தாபனமாக வேலை செய்யவில்லை' பொதுவில்தான் காரியங்களைக் கவனித்துவந்தோம். அவ்வப்போது வேண்டிய உதவி களைச் செய்துவந்தோம். பல நேரங்களில் நாங்களும் நேரடியாகக் கலந்துகொண்டோம்.

[பூந்துறையில், 13-9-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7-10-1952]

# 6. தொழிலாளரும் நாமும்

## 1. தொழிலாளரும் நாமும்

தலைவரவர்களே ! தோழர்களே ! தாய்மார்களே !

நம்முடைய முயற்சிகள், தொழிலாளி – முதலாளி ஆகியோர் கூட்டாளிகள் என்கிற தான தன்மை ஏற்பட வேண்டும் என்பதற்கே. அதற்குப் பலாத்காரம்தான் சாதனம் என்பது அல்ல ! அல்லது ஸ்ட்ரைக் செய்துதான் அந்தக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்ற தன்மை இருக்கக்கூடாது. வேறு முறைகளைக் கையாள வேண்டும். முதலாளிகளை மிரட்டுவது என்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கக் கூடாது. முதலாளி முறை ஆட்சியிலுள்ள வரையில் முதலா[illegible]மால் ஒன்றும் செய்துவிட முடியாது.

www.padippakam.com



சில ஆயிரம் ரூபாய்கள் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும்படி செய்வதால் அவர்கள் இணங்கிவிட மாட்டார்கள். கூட்டுக் கம்பெனிக்கு–'லிமிடெட் கம்பெனிக்கு' முதலாளியே கிடையாது. நிர்வாகிகளோடு செய்யும் போராட்டம் கல்லிலே முட்டிக்கொள்வது போன்றதே யாகும். அவர்களோடு போராடுவதால் அவர்களுக்கு நம்மீது பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றும்; நம் கஷ்டங்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டும் என்கிற புத்தி தோன்றாது; இது இயற்கை. இந்த இடத்தில் நமக்குத்தான் அதிகப் பொறுப்பும் சரியான வழியும் தேவையாக இருக்கின்றன.

அடிக்கடி சோஷலிஸ்டுகள் 'இரயில்வே பொது ஸ்ட்ரைக்' என்று சர்க்காரை மிரட்டு வதும், அதனால் தங்களுக்கு வசதியும் பெருமையும் சம்பாதித்துக் கொள்வதுமாய் இருக் கின்றனரே, இதை சர்க்கார்தான் மதிக்குமா? மற்ற கட்சிகள்தாம் மதிக்குமா? பொது மக்கள்தாம் மதிப்பார்களா? சில கட்சிகளுக்கு இது ஒரு பிஸினெஸ் (Business) வியாபார மாகப் போய்விட்டது என்பதாகத்தானே ஆகி விட்டது? 'ஸ்ட்ரைக்' முறை தொழிலாளி களுக்கு வெற்றி தரவில்லை என்பதை அனுபவ மூலமாக இந்த 25 ஆண்டுகளில் உணர்ந்து விட்டோம்.

மற்றும், அடுத்தபடியாக இன்று பார்த்தால் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் பரஸ் பரம் நல்லுறவு என்பதே கிடையாது; ஒருவருக்கொருவர் துவேஷமும் வெறுப்பும் இல்லாதபடி நடந்துகொள்ள முடியவில்லை. தொழிலாளியைக் கண்டால் முதலாளிகள், மேலதிகாரிகள் 'உர்' என்று இருப்பதும் மேலதிகாரிகளைக் கண்டால் தொழிலாளர்கள் கொடூரமாக இருப்பதுமாகவே எங்கும் இருந்துவருகிறது. இந்த நிலை யாருக்கும் நல்ல தல்ல; நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் செல்வ வளர்ச்சிக்கும் கேடானது. ஒருவருக் கொருவர் பரஸ்பரம் அன்பு, நல்லெண்ணம் இருக்கவேண்டும்; ஒருவருக்கொருவர் தனிப் பட்ட முறையில் தாக்கிக் கொள்ளக்கூடாது; கலவரத்தை உண்டாக்கிக் கொள்ளக்கூடாது. இரயிலில் இருப்பவர்கள் எங்கள் சிற்றப்பன், பெரியப்பனல்ல! எல்லாம் கடைந்தெடுத்த பார்ப்பனர்கள்தாம். பின், ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், கலவரத்தையும் பலாத் காரத்தையும் நாமே பழக்கித் தந்தால் மக்கள் கதியும், நாட்டின் பொது நிலையும் என்னாவது?

மற்றும் சொல்லுகிறேன். தொழிலாளர்களுக்குள் நல்ல ஒற்றுமையும், கட்டுப்பாடும் வேண்டும். குறிப்பாக எடுத்துக் கொண்டால், தொழிலாளிகள் அனைவரும் ஒரே சாதி மக்கள் என்ற உணர்ச்சிவேண்டும். தொழிலாளிகள் என்றால் யார்? எல்லோரும் திராவிட மக்கள்தாமே! திராவிட மக்கள்தாம் உழைக்கும் மக்களாய், பாடுபடும் பாட்டாளிகளாய் இருக்கிறார்களே தவிர எந்தப் பார்ப்பான் தொழிலாளியாய் இருக்கிறான்?

தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்லுகிறவர்களெல்லாம் இந்தச் சங்கதியை, பேதத்தை அதாவது 'திராவிட மக்கள்தாம் தொழிலாளிகள்'; திராவிட மக்களாய் இருப்பதாலேயே சமுதாயச் சூழ்நிலையும், விதி மத சாஸ்திர முறையும் அவர் களைத் தொழிலாளியாக்கி வைத்திருக்கிறது; அது போலவே, பார்ப்பானாய் இருப்ப தாலேயே முதலாளி சாதி மகனாய், உட்கார்ந்து சாப்பிடும் வசதி வாய்ப்பு உடையவனாய், மேல் சாதிக்காரனாய் இருக்கும்படியாகக் கடவுள், மத, சாஸ்திர அமைப்பும், சமுதாய நடப்பும், தன்மையும் இருக்கின்றன—என்கிறதை யாரும் எடுத்துச் சொல்லவில்லை; சொல்லாததோடு மட்டுமல்ல—இந்தச் சங்கதி தொழிலாளி மகனுக்குத் தெரியக்கூடாது என்றும் நினைக்கிறார்கள். இன்றைய தினம் இருக்கிற இந்தப் பேதத்தை மாற்றுவதற்கு முயலாமல், தொழிலாளிகளின் கவனத்தை அடிதடி, கலவரம், கூலி உயர்வு என்று சொல்லி சூழ்ச்சியாய் வேறு பக்கம் திருப்பிவிட்டு விடுகிறார்கள். ஜெயப்பிரகாச நாராயணன், எஸ். குருசாமி, பி. ராமமூர்த்தி, ஆர். வெங்கட்டராமன் முதலிய தொழிலாளர் தலைவர்கள் பார்ப்பனர் (பிறவி முதலாளிகள்) என்பதை மறந்துவிடாதீர்கள்! V. V. கிரியும், கிருஷ்ண



ராவுமான தொழிலாள மந்திரிகள் பார்ப்பனர்கள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்! சர்க்காருக்கு இந்தத் துறையில் இவர்கள் உள் ஆட்கள் ஆவார்கள்!

அதனாலேயே, சமுதாயத் துறையைப்பற்றி ஒரு தொழிற் சங்கம்கூட கவலை எடுத்துக்கொள்ளவில்லை. ஏன் ஒரு சாதி மக்கள் மட்டும் உடலுழைப்புக்காரர்களாகவே இருக்கவேண்டும்? ஏன் ஒரு சாதி மக்கள் அதற்கு மாத்திரம் தகுதியுடையவர்கள்; மற்ற காரியங்களுக்குத் தகுதி அற்றவர்கள் என்று யார் கேட்டார்கள், எங்களைத் தவிர? காங்கிரஸ் கேட்டதா? சோஷியலிஸ்ட் கேட்டதா? அல்லது இந்த கம்யூனிஸ்ட் வீரர்கள் தானாகட்டும் கேட்டார்களா? இல்லையே! கம்யூனிஸ்டுகள் இதைப்பற்றி நாம் சொல்லப் போனால், 'சே! சே! இது பிற்போக்கு சக்தி; நாங்கள் முற்போக்கு வீரர்களாக்கும்; எங்கள் கண்ணுக்கு இந்தச் சிறிய சங்கதியெல்லாம் தெரியாது' என்று போய்விடுவார்கள். அதேபோல் மற்றவர்கள் இதை வகுப்பு வாதம் என்று சொல்லிவிடுவார்கள்.

இதைப்பற்றி நாங்கள்தான் கவலை எடுத்துக்கொண்டு காரியம் செய்து வருகிறோம். ஏன்? இது எங்கள் நாடு; எங்கள் முதல்; தொழிலாளிகள் எங்கள் சாதி—இவை மூன்றும் பார்ப்பனருக்குக் கிடையாது; அறவே கிடையாது.

திராவிட மக்கள் அனைவரும் தொழிலாளிகள்; திராவிட மகனாய் இருக்கிறதாலே அவன் தொழிலாளியாகவும்; பார்ப்பானாய் இருக்கின்றதாலே இன்னொருவன் முதலாளி யாகவும், முதலாளி சாதியாகவும் இருக்கிறான் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள். இந்தப் பேதம் இருக்கக் கூடாது. தொழிலாளிகளின் கவனம் ஸ்ட்ரைக், சம்பள உயர்வு, அடிதடி என்கிற பக்கத்திலே செலுத்தப்பட்டதே தவிர, இந்தப் பேதத்தை ஒழிக்கும் முயற்சியிலே திருப்பி விடப்படவில்லை என்பதைத் திரும்பவும் கூறுகிறேன். உள்ளபடி சொல்லுகிறேன். இந்த இரயில்வே தொழிலாளர்கள் மட்டுமாவது இந்த இன உணர்ச்சி யோடு, பார்ப்பான்–திராவிடர் என்ற உணர்ச்சியோடு அதைப்பற்றிக் கவலை எடுத்துக் கொண்டு பாடுபட்டிருப்பார்களேயானால், இந்நேரம் இந்த இரயிலே நமக்கு ஆகி இருக்குமே!

நம்முடைய தொழிலாளி தன்னுடைய சம்பளத்தைப்பற்றிக் கவலைப்படுகிறானே தவிர, இந்த 2000, 3000 ஆண்டுகளாக நாம் ஏன் அடிமைகளாக, இழிந்த சாதி மக்களாக இருக்கிறோம்; பார்ப்பான் எப்படி 2000, 3000 வருடங்களாக உயர்ந்த சாதிக்காரனாக—முகத்திலே பிறந்த முதல் சாதிக்காரனாக—உழைக்காமல் சாப்பிடுகிற உயர்ந்த சாதிக் காரனாக இருக்கிறான் என்பதைப்பற்றிக் கவலையே படுவதில்லையே! ஏன்? நம்முடைய மக்கள் படிக்கவேண்டும் என்று சொன்னால் தகுதியில்லை, திறமையில்லை என்று சொல்லப் படுகிறதே! இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமா? 1000 வருடமாகவா ஒரு சமுதாயத்து மக்கள் 'தகுதி', 'திறமை' இல்லாதவர்களாக இருப்பார்கள்? இப்படியே இருந்து கொண்டிருந்தால் இவற்றையெல்லாம் யார் கவனிப்பார்கள்? மேல் படிப்பு என்பதெல்லாம் அவர்களுக்கே! அதே போல அந்தச் சாக்கில் உத்தியோகம், மேல் உத்தியோகம் எல்லாம் பார்ப்பனர்களுக்கேதான்.

இவற்றைப் பற்றி யார் கவனித்தார்கள்—எங்களைத் தவிர? தொழிலாளி மகன் எப்படி எஸ். எஸ். எல். சி., எஃப். ஏ., பி. ஏ. படிப்பது? படித்தால்தானே குமாஸ்தாவாக வாவது வரமுடியும்? இதை யார் கவனிக்கிறார்கள்?

நான் சொல்கிறேன், நம்முடைய தொழிலாளர்களுக்கு ஒன்றும் பெரிய வேலை கொடுக்கப்படாவிட்டாலும், கொடுக்கிற சம்பளமாவது அதிகமாகக் கொடுக்கக் கூடாதா? நல்ல வசதியான அறையிலே 'Fan'-னுக்குக் கீழே உட்கார்ந்து கொண்டு, மேஜை நாற்காலியோடு வேலை செய்கிற குமாஸ்தாவுக்கு 100 ரூ. சம்பளம்; நெருப்பிலே உழன்று சம்மட்டி அடிக்கிற தொழிலாளிக்கு 30, 50 ரூபாய்தானா?



படிப்பகம்

www.padippakam.com



கொடுக்கிற வேலைக்குத்தான் தகுதி, திறமை பார்க்கிறாய்! வாழ்க்கைக்குக் கூடவா தகுதி திறமை? சம்பளத்திலாவது சரி சமன் செய்யக் கூடாதா? தகுதி, திறமை உடையவன் அதிகமாகச் செலவழிக்கவும், தகுதி, திறமை இல்லாதவன் குறைவாகவுமா செலவழிக் கிறான்? எதற்குச் சொல்கிறேன் என்றால், ஒரு பெரிய சமுதாயத்தை நிரந்தரமாகத் தலை முறை, தலை முறையாக அடிமைகளாகவே வைத்திருப்பதற்கு எவை எவைகளின் பேரால் சூழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டத்தான். பள்ளிக் கூடத்துக்குப் போய் எம். ஏ. பட்டம் வாங்காததால், அவன் மனித சமுதாயத்திலே மதிக்கப் படத் தகாதவனாக ஆகி விடுவானா? வாழ்வில் சராசரித் தேவைகள் வசதிகள் கூட அற்ற வனாக வாழ வேண்டுமா? இப்படியெல்லாம் செய்து, அவன் மேலுக்கு வரமுடியாதபடி அழுத்தி அழுத்தி வைத்துக் கொண்டே 'நீ எம். ஏ. படி; உனக்குத் தகுதி திறமை இருக்கிறதா? அப்படியானால் தருகிறேன்'—என்கிறாய்! கொடுப்பதே சோற்றுக்குக் கணக்குப் பார்த்துத்தானே! அப்புறம் எப்படி அவர்கள் முன்னுக்கு வரமுடியும்? இரண்டரை அணாவுக்கு வேலை செய்த ஆள் இன்றைக்குக் கூலி ஒன்றரை ரூபாய் கேட் கிறான். ஏனென்று கேட்டால், 'சாமி! தவசம் என்ன விலை விற்கிறது என்று பாருங்கள்; சோற்றுக்குக் கணக்குப் பார்த்துக் கொடுங்கள்,' என்கிறான். 'பத்து அணாவுக்கு விற்ற புல்கட்டு என்னம்மா ஒரு ரூபாய் சொல்லுகிறாய்?' என்று கேட்டால், 'கம்பு, சோளம் என்ன விலை விற்கிறது என்று பார்த்துக் கொடுங்கள், சாமி!' என்று தானே பதில் வருகிறது. அந்தத் தன்மை மாறவேண்டும். சோற்றுக்குப் போய் கணக்குப் பார்த்து வரும்படி என்பது போய் வாழ்வுக்கு, வசதிக்குத் தேவையான வருமானம் என்கிற நிலைமை ஏற்படவேண்டும்.

அதை விட்டு விட்டு சும்மா ஜன்னல் வைப்பது, நாலாவது வரை சம்பளமில்லாமல் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லித் தருவது, ஆஸ்பத்திரி கட்டிவிடுவது—இது போன்ற சாதாரண வசதிகளைத் தொழிலாளிகளுக்குச் செய்து கொடுத்து விட்டு, பெரிய பிரச்சினை களிலே, உரிமைக் கிளர்ச்சியிலே, அவர்களின் கவனம் செல்ல வொட்டாமல் தடுக்கப் படுகிறது.

நம்முடைய தேவை அதுவல்ல; நம்மால் செய்யப்படுகிற கிளர்ச்சியும் அதற்காகவல்ல. நம்முடைய தேவையெல்லாம் அடிப்படையில் மாற்றம் ஏற்படவேண்டும். அதாவது, தொழி லாளிகளுக்கு இலவச (Free) காலேஜ் வேண்டும். அதில் தொழிலாளிகள் மக்கள் 2000 பேராவது எப்போதும் இலவசமாய்ப் படித்து, ஆண்டுக்கு 200 பேர் வெளியாக வேண்டும். அவர்கள் மேல் வேலைக்குத் தகுதி ஆக வேண்டும். இப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட வேண்டும்.

முக்கியமாக எந்தக் காரணம் கொண்டும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இன்றைக்கு இருக்கிற மாதிரி 'ஏழாம் பொருத்தம்' இருக்கக் கூடாது; இருவருக்குள்ளும் பரஸ்பரம் நல்லெண்ணமும், சுமுகமான உறவும் கூட்டுப் பொறுப்பும் ஏற்படவேண்டும். இந்தத் தன்மை ஏற்பட அடிப்படையில் மாறுதல் ஏற்பட வேண்டும். முதலாளியும் தொழிலாளியும் பங்காளிகள், கூட்டாளிகள் என்கிற நினைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

தொழிலாளி என்றால் யார்? முதலாளி என்றால் யார்? எவனொருவன் தன் வயிற்றுப் பிழைப்புக்காகத் தனது உழைப்பை மாற்றுப் பண்டமாகப் பிறருக்குக் கொடுக்கிறானோ அல்லது பிறர் இஷ்டப்படி நடக்க வேண்டியவனாகிறானோ அவன்தான் தொழிலாளி அல்லது வேலையாள் ஆவான். எவனொருவன் தன் உழைப்பைத் தன் இஷ்டமான விலைக்கு, பிரதிப் பிரயோசனத்திற்கு மாற்றுப் பண்டமாக விலை பேசுகிறானோ அவன் முதலாளி அல்லது எஜமான் ஆவான். இவைதாம் தொழிலாளி என்பதற்கும் முதலாளி என்பதற்கும் அடிப்படைக் கருத்துக்கள் ஆகும்.

ஒரு வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் முதலாளிதான்—எப்படி? அவன் சாமா னுக்குச் சொன்ன விலையைக் கொடுத்து நாம் வாங்குவோம். அது போலவே, தட்டுக்



கடைக்காரனும் இன்னும் செருப்புக் கடைக்காரனும் முதலாளிகளே யாவார்கள். இவர்களில் யாரும் தங்களுடைய உழைப்பைத் தங்கள் வயிற்றுக்குத் தேவையான அளவுக்குப் பிறர் இஷ்டத்திற்கு செலவழிப்பவர்களல்லர். அவர்கள் சொல்கிற விலைக்குச் சாமான்கள் வாங்கிக் கொள்ள வேண்டும். நாம் அவர்களிடத்தில் சேவிப்பதானால், சோற்றுக்குக் கணக்குப் பார்த்து அவர்கள் கொடுப்பதை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்று அவர்கள் வியாபாரம் செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம். அவர்களை ஏன் செய்ய வில்லை, ஏன் இவ்வளவு அதிக விலை சொல்கிறார்கள், குறைந்த கூலி கொடுக்கிறார்கள் என்று கேட்க முடியாது.

எவ்வளவு பெரிய சம்பளம் வாங்குகிறவனாக இருந்தாலும், மாதம் 100, 200 என்று சம்பாதித்தாலும்—சம்பளத்துக்காக அவன் தன் உழைப்பைப் பிறர் இஷ்டத்திற்குச் செலவழிக்கிறான். ஆகவே, அவன் தொழிலாளிதான். இதுதான் முதலாளி–தொழிலாளி நிலைமையே தவிர, பணக்காரனெல்லாம் முதலாளி; ஏழையெல்லாம் தொழிலாளி என்பதல்ல.

ஆதலால், நம் கிளர்ச்சி வெறும் கூலிக்காக மட்டுமல்லாமல் உரிமைக்காக இருக்க வேண்டும். இதுதான் இந்தச் சங்கத்தின் குறிக்கோள் ஆகும்.

பொதுவாக, தொழிலாளர்கள் உலகத்திலும், முதலாளிகள் உலகத்திலும் பொதுநலத் தன்மை பற்றிய பொறுப்பு இல்லை. முதலாளி நினைப்பதென்ன? 'சம்பளத்துக்குத்தானே தொழிலாளி வேலை செய்கிறான். அவன் எப்படி நடத்தப்படுவதும் சரிதான்' என்று நினைக்கிறான். அதுபோலவே தொழிலாளியும், 'சும்மாவா கூலி கொடுக்கிறான்—வேலை செய்கிறோம், கூலிகொடுக்கிறான், இவனென்ன பெரியவன்?' என்று முதலாளியைப் பற்றி நினைக்கிறான். இப்படி, இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் இந்த மாதிரிக் கணக்குப் போட்டுக் கொண்டிருப்பதால் தொழிலின்மீது பொறுப்பு இல்லாதவர்களாகவும், தொழிலுக்கு நல்ல பலன் கிடைக்க முடியாதபடி செய்துவிடுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

முதலாளி எந்நேரமும் எப்படி இந்தத் தொழிலாளர்களுக்குக் குறைவாகச் சம்பளம் கொடுத்து அவர்களை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பது என்று திட்டம் போட்டுக்கொண்டே இருக்கிறான். அதுபோலவே தொழிலாளியும், இவன் கொடுக்கிற சம்பளத்திற்கு இந்த வேலை போதும் என்று தன் வேலையைக் குறைத்துக்கொள்வதிலேயே கவனமாக இருக்கிறான். இப்படி ஒருவருக்கொருவர் ஏமாற்றிக் கொள்கிறதனால் நமக்கு என்ன என்றால், பொதுநிலையில் எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது? பொதுத்தன்மை கெட்டுப் போவதுமட்டுமல்லாமல், முதலாளியும் தொழிலாளியும் கீரியும் பாம்பும் போல எப்போதும் சண்டை போட்டுக்கொண்டிருப்பதால் உற்பத்திக் குறைச்சலும், விலைவாசி உயர்வும் ஏற்பட்டு மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கின்றன? முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருசாராருக்கும் பொறுப்பும் நாணயமும்—ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நல்லெண்ணம் நல்லுறவு இல்லாத வாழ்வுபெருகுவது, பொதுநலத்திற்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் கேடே யாகும். இருசாராருமே தாங்கள் பொதுமக்களின் தர்மகர்த்தாக்கள் என்பதாகக் கருதுவதோடு, தங்கள் தொழிலின் காரியத்தைத் தங்கள் தங்கள் சொந்தக் காரியம் போல் பொறுப்புடன் கருதும்படியான நிலை ஏற்படவேண்டும். அப்போதுதான், நாட்டில் செழிப்பும், மக்களுக்குத் திருப்தியான வாழ்வும் ஒழுக்க உயர்வும் ஏற்படமுடியும்.

சாதாரணமாக, இரயிலைக் கவிழ்க்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். இரயில் விழுவதால் யாருக்கு என்ன நஷ்டம்? இரயில்வே பெரிய உத்தியோகஸ்தர்களில் ஒரு பார்ப்பான் அதைப்பற்றிக் கவலைப்படுவானா? அல்லது வடநாட்டு ஆட்சி கவலைப்படுமா? அவனுக்கென்ன? இரயில் விழுந்தால் நம்முடைய பணத்திலிருந்து வேறு இரயில் வரவழைத்துக் கொள்கிறான்; அதில் தரகு பெறுகிறான். நட்டத்தைச் சரிக்கட்டிக் கொள்கிறான். நமக்கு அப்படியா? எவ்வளவு பொருள் நட்டம்! உயிர் நட்டம்! பார்ப் பனர்கள் நம் உயிரைப்பற்றிக் கவலைப் படுவார்களா? அவர்களுக்கென்ன கவலை?

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமானால் விழுந்திறந்து கிடக்கிறவர்கள் [illegible] னை பேர் திவசம் பண்ணுகிறவர்கள் என்று பார்ப்பான்; வண்டிவண்டியாகப் பிணம் போனாலும் பார்ப்பானுக்குத் திவசம் பண்ணுவதிலேதானே கண்!

அதோடு மட்டுமல்ல; இவ்வளவு விஞ்ஞான காலத்திலே—நாகரிக காலத்திலே சோற்றுக்காக – கூலியை உயர்த்திக் கொள்வதற்காக இரயிலைக் கவிழ்ப்பதா? 'இந்த டிபார்ட்மெண்ட்டிலே இந்த மேலதிகாரி உன்னை, வேலை சரியாகச் செய்யவில்லை என்று கூறித் திட்டினானா? சரி, இன்றைக்கு இராத்திரி ஒருவருக்கும் தெரியாமல் போய், அந்த மிஷினை உடைத்து விடு' என்று தொழிலாளியைத் தூண்டிவிடுவதா? இது பொறுப்புள்ள யோக்கியன் செயல் ஆகுமா? கொஞ்சமாவது நாட்டைப்பற்றியும், பண்டத்தைப் பற்றியும், மக்களைப் பற்றியும், தொழிலைப் பற்றியும், பொது நிலையைப் பற்றியும் கவலைப்படவேண்டாமா? இன்று ஒரு தொழிற்சங்கத்திற்கும் இந்தக் கவலை இல்லையே!

சாதாரணமாக, நெருப்புப் பிடித்துக்கொண்டால், 'நெருப்பு எவ்வளவு அழகாக எரிகிறது பார், பார்!—அடுத்த வீட்டுக்குத் தாவுகிறது! இன்னும் பிடிக்கிறது! அடடா—அதற்குள் அணைத்து விட்டார்களே!' என்று சத்தமிட்டு, சிறு பையன்கள் நெருப்புப் பிடித்து எரிவதைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டும், நெருப்பு பரவுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தும், நெருப்பு அணைக்கப் படுவதைப் பார்த்துத் துக்கப்படுவது போலவும் அல்லவா சில தொழிற்சங்கங்கள் நடந்துகொள்ளச் செய்யப்படுகின்றன? சிறு பையன்களுக்கு என்ன பொறுப்பா? கவலையா? அந்த மாதிரிச் சிறு பையன்கள் போல், பொறுப்பற்ற முறையிலா இவர்கள் நடந்து கொள்வது? நாட்டைப்பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும், மனித உயிரைப் பற்றியும் இப்படியா பொறுப்பற்ற முறையில் கவலையற்று நடந்து கொள்வது?

இந்த நாட்டில் பஞ்சம், பண நெருக்கடி இருக்கிறது என்றால் ஏன்? தோழர் ஆச்சாரியார் அவர்கள் சொல்கிற மாதிரியான மழையில்லாததாலா? அல்லவே அல்ல.

மற்றென்ன வென்றால், ஆச்சாரியார் அவர்கள் விவசாயச் சட்டம் செய்வதற்குக் காரணம் சொன்னாரே அதுதான். அதாவது, 'விவசாயி—பண்ணையார் தகராறில் உற்பத்தி சரிவர ஆவதில்லை' என்று சொன்னாரே அதேதான். உற்பத்திப் பெருக்கக் கவலை இருவருக்கும் கிடையாது. இருவரும் 'இலாபமும் கூலியும் அதிகமாக வேண்டும்' என்ற கருத்தில் ஒருவரையொருவர் ஏமாற்றுவதிலேயே கவலை செலுத்துகிறார்களே தவிர, காரியத்தில் கொஞ்சங்கூடக் கவலைப்படுவதில்லை. அடிக்கடி வேலை நிறுத்தம் செய்வது; இரண்டு மாதங்கள் மூன்று மாதங்கள் என்று தொழில் நிலையங்கள் வேலை செய்யப் படாமல் சும்மா பூட்டியே கிடப்பது! அப்புறம் எப்படித் தொழில் வளர்ச்சியும் உற்பத்திப் பெருக்கமும் ஏற்படும்?

இப்போது எடுத்ததற்கெல்லாம் 'ஸ்டிரைக்' ஆரம்பித்து விடுகிறார்கள். இதில் பெரும்பான்மை ஸ்டிரைக்குகள்—சங்கங்களை நடத்துகிற ஆட்களின், ஸ்தாபனங்களின் சொந்த நலனுக்கும், மற்றபடி தங்கள் சொந்தக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளவுமே செய்கிறார்கள்.

ஸ்டிரைக்கினால் ஏற்படுகிற விளைவுகள் என்ன? நான் முன் சொன்னது போல் தொழில் வளர்ச்சி கெட்டு, உற்பத்தி குறைவதோடு மட்டுமல்ல; பொது மக்களுக்கும் எவ்வளவு தொந்தரவு ஏற்படுகிறது?

இரயில்வேயில் 'அனைத்து இந்திய ஸ்டிரைக்' இரண்டு மாதம் செய்து சம்பளத்தில் 5–10 ரூபாய் உயர்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பண்டித நேருவோ தோழர் கிரியோ தங்கள் வீட்டுக் காசிலிருந்து கொடுக்கிறார்களா? இல்லை. 'சரி, இவர்களுக்குச் சம்பளம் 10 ரூபாய் உயர்த்திக் கொடுத்து விட்டு, 2-வது 'கிளாஸ்' மைலுக்கு 6 தம்பிடி 'சார்ஜ்' உயர்த்து; 3-வது 'கிளாஸ்' 2 தம்பிடி உயர்த்து' என்று சொல்லி



விடுகிறார்கள். இதனால் யாருக்கு நட்டம்! இரயிலில் ஏறுகிற மக்களுக்குத்தான். இந்த அதிகப்படியான பணத்தைப் பொதுமக்கள்தாம் கொடுக்கிறார்கள்.

அது போலவே, மில் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்தால் அவர்களுக்குக் கூலியை உயர்த்திக் கொடுத்துவிட்டு, அதைச் சரிக்கட்ட, துணியில் கெஜத்துக்கு இரண்டு அணா உயர்த்துகிறான். 10 ரூபாய் அதிகச் சம்பளம் பெற்ற இரயில்வே தொழிலாளி, மில் தொழிலாளர்கள் ஸ்டிரைக்கால் உயர்த்தப்பட்ட விலையைத் துணிக்குக் கொடுக்கிறான். அதே மாதிரி ஸ்டிரைக் செய்து அதிகச் சம்பளம் பெற்ற மில் தொழிலாளி, ஸ்டிரைக்கால் உயர்த்தப்பட்ட 'சார்ஜ்' கொடுத்து இரயிலில் போகிறான். அதுபோலவே 'ட்ராம்வே' தொழிலாளி ஸ்டிரைக் செய்தால் 'ட்ராம்' நிர்வாகம், சார்ஜில் 3 தம்பிடியை உயர்த்தி விட்டு, 'ட்ராம்' தொழிலாளிக்குச் சம்பளத்தை உயர்த்தி விடுகிறது. இந்த உயர்த்தப்பட்ட 'சார்ஜை' யார் கொடுப்பது? பொது மக்களும், இரயில்வேத் தொழிலாளியும், மில் தொழிலாளியும் போன்றவர்கள்தாமே! இப்படியாக ஸ்டிரைக் செய்வதன் மூலமாக வேலை மெனக்கெடுவதோடு இருசாராரும் தொல்லை, துயரத்துக்கு இலக்காகி விலைவாசிகளும் உயரும் தன்மை இருக்கிறது. இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? அதோடு இந்த மாதிரி 'ஸ்டிரைக்', பலாத்காரம், நாசவேலை முதலிய காரியங்களால்தானே போலீஸ் படையும், எம். எஸ். பி., எஸ். ஏ. பி. என்றும் ஏற்பட்டது! இப்படியா செய்வது! இவ்வளவு தொல்லை, துயரப்பட்டா பரிகாரம் காணுவது? மற்றும், இவ்வளவு கஷ்டத்திற்குக் காரணம் அரசாங்கம் என்பதைத் தெரிந்தும் தொழிலாளர் தலைவர்கள் என்பவர்கள் அரசாங்கத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல், வாயில்லாப் பூச்சிகளாகிய தொழிலாளர்களைக் கஷ்டத்திற்குள்ளாக்கிப் பெருமை, பயன் அடைகிறார்கள்.

இந்த நாட்டுக்கு ஏற்ற மாதிரியில்—இந்த நாட்டுத் தன்மைக்கு ஏற்ற மாதிரியில் தொழிலாளர் பிரச்சினைகளை அணுக வேண்டும். மற்ற நாடுகளில் நடந்ததுபோல் இங்கும் நடத்த வேண்டும் என்பதும் அந்த முறையிலேதான் போக வேண்டும் என்பதும் அவசியமற்றதாகும்.

மற்ற நாட்டிலே இருக்கிற நிலைமை வேறு; இந்த நாட்டு நிலைமை வேறு. அதாவது, இந்நாட்டில் தொழிலாளிகள் என்பவர் பிறவித் தொழிலாளிகள் ஆவார்கள். இப்படிப் பிறவித் தொழிலாளி யாக்கி வைத்து, அவர்களைத் தலையெடுக்க வொட்டாமல்—மாற்ற மடையச் செய்யாமல் பார்த்துக் கொள்கிறவர்கள் மற்றொரு சாதியார். அந்தச் சாதிதான் இன்று ஆட்சியிலும் தொழிலாளர் தலைமையிலும் இருந்துவருகிறது. இன்று தொழிலாளர் நலமாக இருவரின் 'சதிதான்' இருந்து வருகிறது.

இந்த நிலை மற்ற நாடுகளில் இல்லை. மார்க்ஸும், லெனினும் 'சதிக்கென்று' ஒரு சாதி இல்லாத நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆதலால் அவர்கள், சதிகாரர்களின் சதிச் செயலுக்கும், தொழிலாளர் சாதி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அழுத்தப்பட்டுக் கிடப்பதற்கும் பரிகாரம் சொல்லவேண்டிய அவசியமில்லாதவர்களாய் இருந்திருக்கிறார்கள்.

ஆதலால், தொழிலாளி பேதம் மட்டுமல்லாமல் முதலாளித் தன்மையில் சாதி உயர்வு–தாழ்வு பேதம் நடப்பு இருக்கிற போதும், அதைப் பாதுகாக்க ஒரு சாதி இருக்கிற போதும், அவர்கள் தொழிலாளர் கிளர்ச்சியை நடத்துகிற போதும்—'மார்க்ஸ் சொன்னபடிதான் செய்யவேண்டும்; லெனின் என்ன சொன்னாரோ அந்தப்படிதான் செய்யவேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இது சதிகார சாதிக்குத்தான் அனுகூலம், மார்க்ஸேதான் தொழிலாளர் பிரச்சினைக்கு முடிவானவரா? அல்லது லெனினே கடைசியானவரா? நாளுக்கு நாள் நடப்பும் கருத்தும் மாறிக் கொண்டே வருகின்றனவே! சாதியின் பேரால் தொழிலாளர் சமுதாயம் இருக்கக் கூடாது என்கின்ற கிளர்ச்சியே 1925-ல் தானே துவக்கப்பட்டது—கண்டு பிடிக்கப்பட்டது! இந்த நிலையில் மார்க்ஸும் லெனினும் முக்காலமுணர்ந்த தீர்க்க தரிசிகளா, அவர்களுடையதே முடிவு என்று சொல்ல? மதவாதிகள்—?

படிப்பகம்

பார்ப்பனர்கள் எப்படி மகாவிஷ்ணு, பரமசிவன் என்று சொல்கிறார்களோ அப்படியா பகுத் தறிவு வாதிகள், மார்க்சிஸ்டுகள் சொல்லுவது? காலம் வேறு; ஆட்சி வேறு. அங்கு முதலாளி ஆளுகிறான்; இங்கு பார்ப்பான் ஆளுகிறான். பண்டித நேருவும் இராஜாஜியும், இராம மூர்த்தியும் யார்? கிரியும், கிருஷ்ணராவும் ஜெயப் பிரகாசும், குருசாமியும் யார்? மற்றும் இரயில்வே மந்திரியும், தட்சிண இரயில்வேக்களின் ஏஜண்டும் யார்?

இதற்கும் தொழிலாளர் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை என்று யாராவது சொன் னால் அவர்களை யோக்கியர்கள் என்றோ அல்லது அறிவாளி என்றோ ஒரு நாளும் சொல்ல முடியாது. ஏன் இப்படிச் சொல்கிறேன்? இந்த மாதிரித் தொழிலாளிக்குச் சம்பந்தப்பட்ட எல்லா ஸ்தானங்களிலும்—ஆட்சிக்குச் சம்பந்தப்பட்ட எல்லாத் தலைமைகளிலும் பார்ப்பனனே இருக்கவேண்டிய அவசியமென்ன? இது அகஸ்மாத்தாக ஏற்பட்டதா?

அல்லது, பார்ப்பனர்தான் இருக்கவேண்டும் என்கின்ற அவசியத்தினால் ஏற்பட்டதா கம்யூனிஸ்டுகள்தாம் இதற்குப் பதில் சொல்லட்டுமே! 'சாதிபற்றி-வகுப்புபற்றி-பார்ப்பான் சதியைப்பற்றிப் பேசுவது பிற்போக்குச் சக்தி' என்று சொல்லி விடுவதே இவற்றிற்குப் பரிகாரமாகிவிடுமா? அல்லது மார்க்ஸ், லெனின் சொன்னபடிதான் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

மார்க்ஸ் நினைத்திருப்பாரா, இந்த நாட்டில் பார்ப்பனர்கள் என்கிற சதிகாரர்கள் செய்து வருகிற கொடுமைகளையும், புரிந்து வருகிற ஆதிக்கத்தையும், நடத்துகிற சதித் திட்டங்களையும்—மற்றும் இந் தநாட்டின் சொந்த மக்கள் பிறவிச் சூத்திரர்களாக்கப்பட்டு, வேசி மக்களாய்க் கருதப்படுகிற நிலைமையையும் பற்றி? அதற்கு ஏற்ற மதம், சாஸ்திரங்கள் கடவுள்கள் பற்றி? ஆதலாலேயே, அவர் அந்த நாட்டிற்குத் தகுந்த மாதிரி நிலவி வந்த முதலாளித்துவம், அதன் ஆதிக்க முறைகள், அவைகளுக்கு மதம் அளிக்கும் ஆதரவு பற்றிச் சொல்லிப்போனாரே தவிர, இந்த நாட்டைப்பற்றி—பாவம், அவர் என்ன கண்டார்?

ரஷ்யாவில் என்னை அதிசயமாகக் கேட்டார்களே! ரஷ்யாவிலே ஒரு மாணவன் என்னைப் பார்த்து, 'என்ன, உங்கள் நாட்டிலே மகாராஜாக்கள் இருக்கிறார்களாமே! அதுபோலவே; பறையர் இருக்கிறார்களாமே! அவர்களெல்லாம் எப்படி இருப்பார்கள்?' என்று அதிசயமாகக் கேட்டான். (அதாவது மகாராஜா, பறையர் இருக்கிறார்களாமே என்று) நான் சொன்னேன்—'அதோடு மட்டுமல்ல—பார்ப்பானும் அதாவது பிராமணன் என்பவனும் எங்கள் நாட்டில் இருக்கிறான்' என்றேன்.

அவனைப்பற்றியும் சொன்னேன். அதற்கு அவன் ஆச்சரியப்பட்டுப் போய் விட்டான். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், அந்த நாட்டிலே இதைப்பற்றித் தெரியாது. அப்படி இருக்கும்போது அதுதான் 'வேத வாக்கு' 'ஞான சூத்திரம்' என்று சொன்னால், என்ன அர்த்தம்?

இவ்வளவு பாடுபட்டும் இன்னும்—இந்தக் காலத்திலும் பார்ப்பான் இருக்கிறான்; சூத்திரன் இருக்கிறான்; பறையன் இருக்கிறானே! இந்தக் காலத்திலா இத்தகைய பேதங்கள் இருப்பது? அந்தச் சாதிகளில் ஒன்றுதானே தொழிலாள சாதி! பாழும் சுயராஜ்யம் வந்தும் ஒரு பார்ப்பான் குறையவில்லை; ஒரு பார்ப்பான் ஆதிக்கமும் குறைய வில்லை. சூத்திரன் குறையவில்லை; பறையனும் குறையவில்லை; அவர்களது இழி நிலை, பாட்டாளித் தன்மை குறையவில்லை. இவை குறையவில்லை என்பதோடு மட்டு மல்ல—இந்தப் பேதங்கள் இந்த சுயராஜ்யக் குடியரசிலே இன்னும் அதிகமாகப் பலப் படுத்தப் படுகின்றனவே!

இதைப்பற்றிக் கொஞ்சமாவது, தொழிலாளர்களுக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளும் இந்த வீரர்கள் கவலைப்பட வேண்டாமா? இந்த நாட்டுக்கு இது ஒரு முக்கிய மான சங்கதி. இத்தனை நாளும் யாரும் இதைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்ள



வில்லையே, எங்களைத் தவிர! வீராதி வீரர்கள் என்றெல்லாம் 'விருது' பெற்ற 'சூரர்கள்' இதைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லியிருக்கிறார்களா? சும்மா தொழிலாளர்களை உசுப்பிவிட்டு அடி உதை வாங்கி வைப்பதில்தானே அவர்கள் கவனம் செலுத்தினார்கள்? தொழிலாளிக்கு அடி உதை; அதோடு மட்டுமா? தொழிலாளர் குடும்பப் பெண்கள் எத்தனை பேர்கள் கற்பழிக்கப்பட்டார்கள்? எத்தனை பெண்களைக் குடுமியைப் பிடித்துக் கொண்டு தெருவிலே கொண்டு வந்து போட்டு அடித்தார்கள்? இவ்வளவு பாடுகள் பட்டச் செய்தா இரண்டணா கூலி உயர்த்தித் தருவது? குறைந்த கஷ்ட நஷ்டத்தில் அதிகப்படியான இலாபத்தை அல்லவா பெற வேண்டும்? இதை நினைத்தால் எனக்கு மனம் பதறுகிறது. நம் மக்கள் இப்படி ஏமாற்றப்படுகிறார்களே என்கின்ற ஆத்திரத்தில் சில சமயங்களில் இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. எத்தனை நாளைக்கு இப்படி நடந்தாலும் சூத்திரன் (தொழிலாளி) சூத்திரனாகவும் பார்ப்பான் (பிறவி -முதலாளி) பார்ப்பானாகவும்தானே இருப்பர்?

நியாயமாக—எந்தவிதமான ஒளிவு மறைவுகளன்னியில்—எந்தவிதமான கட்சி சுயநலமன்னியில்—வெளிப்படையாக—பலாத்காரம் இல்லாமல் காரியம் செய்தால், இந்தத் தொல்லைகள் படவேண்டிய அவசியமே இல்லை. இன்றைய தினம் தொழிலாளிகள் நாள் தவறாமல் சோறு தின்னாவிட்டாலுங்கூட, அடி, உதை தின்று கொண்டிருக்கிறார்களே, இந்த நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும். மாற்றியமைக்கிறேனா இல்லையா என்று பாருங்கள்.

நாங்கள் இந்த 25 ஆண்டுகளாக பார்ப்பன ஒழிப்புப் பிரச்சாரம் செய்து வருகிறோமே! எவ்வளவு பேசியிருக்கிறோம்? அதனால் இதுவரை ஏதாவது கலவரம் உண்டாயிற்றா? ஒரு பார்ப்பானுக்காவது ஒரு சிறு அடியாவது பட்டிருக்குமா? ஒரு பார்ப்பனப் பெண்ணின் உடம்பிலாவது, கை மேலே பட்டிருக்குமா? மற்றும் எந்தப் பார்ப்பான் வீட்டிலாவது நாங்கள் புகுந்து கலவரம் செய்தோமா? பார்ப்பனர்களுடைய கொள்கைகளை அவற்றின் சூதுகளைத் திராவிட மக்களுக்கு எடுத்துக் காட்டி, அவர்கள் விடுதலை பெற வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வந்தோமே தவிர, வேறு என்ன செய்தோம்?

சமுதாயத்தில் அவர்கள் வேறு; நாம் வேறு. நம் விடுதலைக்கு—முற்போக்குக்கு நம் மக்கள் நடந்து கொள்ள வேண்டியதை நாம் பேசுகிறோம்; விஷயங்களை எடுத்துச் சொல்கிறோம். கொள்கையின் அடிப்படையிலே பேதப்படுத்துகிறோம் என்ற—நாகரிகமான முறையில் இருக்கிறோமே தவிர, 'குத்து, வெட்டு, கொலை, பலாத்காரம், நாசம், ஒழுங்கு மீறிய காரியம் செய், கொள்ளையடி'! என்றா சொல்லிக்கொண்டு திரிந்தோம்? அப்படி யெல்லாம் செய்யாததால் எங்கள் கருத்து சிறிதும் வெற்றி பெறாமலா போய்விட்டது?

கம்யூனிஸ்டுகளுடைய கஷ்டமே தீர்ந்தது என்றால், எப்படித் தீர்ந்தது? 'புத்தி வந்தது, இனிமேல் நாங்கள் பலாத்காரத்தில் ஈடுபடமாட்டோம்; 'பார்லிமெண்டரி' முறை யிலேயே இருக்கிறோம்; 'அண்டர் கிரவுண்ட்' வேலையெல்லாம் வைத்துக் கொள்வதில்லை'—என்றெல்லாம் சர்க்காரிடத்தில் சொல்லிக்கொண்டதால்தானே, அவர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள்? அவர்கள் மீதிருந்த 'வாரண்ட்'களெல்லாம் ரத்து செய்யப்பட்டன? சிறையில் இருந்தவர்கள் விடுதலையடைந்தார்கள்; வழக்குகள் சில வாபஸ் வாங்கப்பட்டன. நான், அதை ஒன்றும் கேவலமாகச் சொல்லவில்லை. பலாத்காரத்தை விட்டுவிட்டு எந்தக் காரியத்தையும் நேரிடையாகச் செய்ய ஆரம்பிப்பது என்றாலே அதிலே நிச்சயம் ஜெயம் உண்டு. அதை யாரும் மறுக்க முடியாது.

[பொன்மலையில், 10-9-1952-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-9-1952]

www.padippakam.com



## 2. சாதித் தொழிலாளி—கூலித் தொழிலாளி

இந்த நாட்டில் விவசாயத் தொழிலாளி, உழவர், வேளாளர் ஆகிய சாதியைச் சேர்ந்தவர்; நெசவுத் தொழிலாளி, கைக்கோளர், தேவாங்கர், சாலியர், பட்டுநூல்காரர் முதலிய சாதிகளைச் சேர்ந்தவர்கள்; உலோக, மரத் தொழிலாளிகள், விஸ்வகர்ம ஆச்சாரி வகுப்பைச் சேர்ந்தவர்கள்; சிற்பத் தொழிலாளிகளில் உலோகம், மரம், கல், மண் கட்டடம் ஆகியவைகளுக்கு விஸ்வகர்மாக்களுடன் மற்றும் உப்பாரன் என்னும் உப்பிலியர், ஒட்டர், கொல்லத்துக்காரர் முதலிய சில சாதிகளைச் சேர்ந்தவர்கள்; இவர்களைத் தவிர்த்து மற்றும் குடிமக்கள் என்னும் பேரால் மனித சமூக வாழ்க்கைக்கு அவசியமான பல தொழில்களுக்கும் குடிமக்கள் என்னும் தலைப்பில் பலவகை வாணியர், வலையர் குயவர், வண்ணார், நாவிதர்; இன்னும் மக்களுக்குப் 'போக இன்பம்', நாட்டிய இன்பம் அளிக்கும் தொழில்களை மேற்கொண்ட தொழிலாளர் மக்கள்—எல்லோருமே நம் நாட்டில் 'இந்து சமயம்' காரணமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாதியின் பேராலேயே வகுக்கப் பட்டிருக்கிறார்கள்.

இந்துமத ஆதாரப்படி-இந்துமத தர்ம சாஸ்திரங்களின் விதிப்படி இத்தொழிலாளிகள் இவ்வளவுபேரையும் உழவர், நெசவர், வாணியர், பல தொழில் தச்சர்கள் உட்பட யாவரையும் வருணாசிரம சாதி முறையில் நாலாம்சாதி—சூத்திர சாதியாய் ஆக்கி; மற்றும் அதனுள்ளும் கீழ்-மேல் படி வைத்து, ஒருவருக்கொருவர் உண்பன, தின்பன, தொடுதல்-நெருங்குதல் கூட இல்லாமல் இருக்கும்படியான இழிவுகளை உண்டாக்கி—ஒருவரை ஒருவர் இழித்துக் கூறிக்கொள்ளும்படியாகச் செய்துவைத்து, இந்த முறையும்கூட நாட்டுக்கு ஒருவிதமாய் நடப்பிலிருக்கும்படியாக ஆக்கிக் கீழ்மைப்படுத்தி—அவர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் நல்லுக்கும், மேன்மைக்கும் முயற்சிசெய்ய வழி இல்லாமல் செய்துவைக்கப்பட்டிருக்கிறது.

இது ஒருபுறம் கல்லின்மேல் எழுத்துப்போல் ஆதாரத்திலும் அனுபவத்திலும் இருந்துவந்தாலும்—இந்தத் 'தொழிலாளர் சாதியார்கள்' ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தனி சாதியையும், வகுப்பையும் உயர்வாகப் பேசிக்கொள்வதிலும் வழிதேடிக்கொள்வதிலும் எவரும் இளைத்தவர்கள் அல்லர்!

உண்மையில், பகுத்தறிவுப்படி இந்தியனாகவோ, இந்து சமயத்தானாகவோ இல்லாமல் உலகப் பொதுமகனாக இருந்து ஒருவன் நோக்கினானேயானால், இவ்வளவு தொழிலாளர் சமூகமும், இன்னும் இதில் குறித்திராத பள்ளு, பறை, சக்கிலி, தோட்டி என்று சொல்லப்படும் சமூகங்களும் யாவரும் பிறவியில் பேதமில்லாத மனித சமூகம் ஆவார்கள்.

மொத்தத்தில் தொழில் என்பது மக்களின் சமுதாய வாழ்க்கைக்கு இன்றியமையாத தொன்றாகும். மனிதன் காட்டுமிராண்டி வயதில் தன்னந்தனியாய்—மிருகங்களைப்போல் காடுகளில் திரிந்த காலத்தில் இம் மாதிரித் தொழில்முறைகள் தேவை இருக்காது. ஆனால், சமுதாயமாகச் சேர்ந்து கூட்டு வாழ்க்கை வாழ ஆரம்பித்த பின்—காலம் செல்லச் செல்ல—அறிவு பெருகப் பெருக, தேவைகள் வலுக்க வலுக்க பல தொழில்கள் செய்யவேண்டியது மனிதனுக்கு அவசியமாயிற்று. அதிலிருந்து நிலைமைக்குத் தக்கபடி தொழில்களும், தொழில் செய்யவேண்டிய அவசியமும் மக்களுக்கு ஏற்பட்டன. அவற்றை ஒவ்வொரு மனிதனும் அவனவன் உடல் சக்தி, அறிவு சக்தி ஆகிய காரணங்களுக்குத் தக்கபடி செய்து வருகின்றான். இதற்குச் 'சாதியோ', 'வகுப்போ' இல்லாமல், அவரவர்கள் சவுகரியம் இச்சை ஆகியவைகளுக்குள்ளாகவே தொழில்கள் சார்ந்துவிட்டன. அந்த முறைதான் இன்றளவும் உலக முழுதும் நடந்துவருகின்றது. கஷ்டமானதாகவோ, அசவுகரியமான தாகவோ ஒரு தொழில் இருக்குமானால் அந்தத் தொழில் நாளாவட்டத்தில் கஷ்டக் குறை வாகியும், அசவுகரியக் குறைவாகவும் செய்யப்படவேண்டியதுதான் அறிவுடைமையே தவிர—தொழில்களில் உயர்வு தாழ்வு கற்பித்து நிலைநிறுத்துவதோ, தொழில்களுக்குத் தத்துவார்த் தங்கள் கண்டு பிடிப்பதோ, அவற்றை மற்றவர்கள் தலையில் போடப் பார்ப்பதோ,



தொழிலாள சாதியர்கள் தங்கள் தொழிலை மாற்றாமல் சாதியை உயர்த்திக்கொள்ள நினைப்பதோ எவ்வித பயனும் அளிக்காது.

உழவுத் தொழிலாளியும், விஸ்வகர்மத் தொழிலாளியும் ஒன்று என்பதுதான் நமது அபிப்பிராயம். சாதிப் பிரிவால் பேதப்படுத்தப்பட்டுவிட்டதல்லாமல் மனித சமூக வாழ்வுக்கு இவர்கள் யாவரும் சமுதாயத்திற்கு அஸ்திவாரம் போன்று இன்றியமையாதவர்கள்; ஒரே விதமாகத் தொண்டாற்றுகிறவர்கள். இவர்களில் எதற்காகப் பேதம் காணவேண்டும்? சமயத்தில், சாஸ்திரத்தில் சொல்லும் பேதங்கள் அல்லாமல் பிரத்தியட்சத்தில் என்ன பேதம் காணமுடியும்? ஆதலால், தொழில்களில் உயர்வு-தாழ்வுகளையும், தொழிலாளி சமூகங்களில் உயர்வு-தாழ்வுகளையாக்கும் சாதிபேதங்களையும் அழிப்பதற்கு முயற்சிப்பதுதான் தொழிலாளர் முன்னேற்றமாகும். ஒரு தொழிலாளிக்கு மற்றொரு தொழிலாளி எவ்வளவு உயர்ந்த சாதியானாலும், சாதி முறையில் அவன் மற்றொரு சாதிக்குக் கீழ்ப்பட்டவனாக ஆகித்தான் தீருவான். ஆதலால், அவைகளை வலியுறுத்தும் சமயமும், சாஸ்திரமும் முதலில் அழிக்கப்படவேண்டும். அப்படியில்லையானால், கல் தச்சனும், நெசவாளியும் பிராமணனாக முயற்சித்தால் மற்றொரு தொழிலாளி ரிஷியாக முயற்சிக்கிறான். இதன் பயனாய், பிராமணன் என்பவன் உயர்ந்தவன் என்பதும், ரிஷிகள் என்பவர்கள் உயர்ந் தவர்கள் என்பதும், தேவர்கள் என்பவர்கள் உயர்ந்தவர்கள் என்பதும்தான் நிலைநிறுத்தப் பாடுபட்டதாக ஆகுமேயல்லாமல்—தொழில் முறைக்கோ, தொழிலாளி சாதி இழிவு என்பதற்கோ யாதொரு பயனும் ஏற்படப்போவதில்லை.

நாட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டானாலும் சரி—பாடுபட்டு உண்கின்றவனும், பாடுபடாமல் உண்கின்றவனுமான இரண்டு பிரிவுகள் உள்ளவரை மனிதனில் மேல்-கீழ் நிலைமை இருந்துதான் வரும். இது உலகமெல்லாம் இருந்துதான் வருகிறது. பாட்டாளி, அன்னியன் கையை எதிர்பார்க்க வேண்டியவனாய் இருக்கிறான். இது மாறவேண்டு மானால், பாட்டாளிகளின் ஒற்றுமைப் பலத்தினால்தான் முடியும். பாட்டாளிகளுக்குள் முதலில் சாதிபேதம் இருக்கக்கூடாது; தொழில்களை உயர்வு தாழ்வாய்க் கருதக்கூடாது.

எல்லோரும் ஒன்றுசேர வேண்டும். பேதமும்-இழிவும் கற்பிக்கும் சமய சாத்திரங்களை அழிக்கவேண்டும்; அரசியலைக் கைப்பற்றவேண்டும். உயர்ந்த சாதியார் என்பவர்களையோ, சோம்பேறிகளாய் உடலுழைப்பு இல்லாமல் வாழ்கிறவர்களையோ, எதிரிகளாகக் கருதி—அக் கொள்கைகளை நிர்மூலமாக்கவேண்டும். ஒவ்வொரு தொழிலாளி வகுப்பும், 'தங்களால்தான் உலகம் இருக்கிறது; தங்களால்தான் மக்கள் வாழமுடிகிறது; மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்குத் தாங்களே அஸ்திவாரமானவர்கள்' என்பதை உணரவேண்டும். உணருவது மாத்திரமல்லாமல், 'அப்படிப்பட்ட தொழிலாளர் சமூகம் சமுதாயத்தில் கீழ்நிலையில் இருப்பானேன்? இது நம்முடைய அறிவீனமும் ஒற்றுமையற்ற தன்மையும் அல்லவா?' என்று சிந்திக்கவேண்டும். இந்த இரண்டும் இல்லாததனாலேயே தொழிலாளர்களுக்குப் பொதுத் தலைவர் இல்லை; பகுத்தறிவு இல்லை; முன்னேற்றத் திட்டம் இல்லை. சோம்பேறிகளுக்கு-ஊரார் உழைப்பில் வாழ்பவர்களுக்குக் கை ஆயுதமாய் அவர்கள் இருக்க நேரிட்டது.

இந்த நிலையை மாற்றுவதற்கே இன்று இந் நாட்டில் இருக்கும் பிராமணர்—பிராமணர் அல்லாதார் போராட்டம் என்பது ஏற்பட்டதே ஒழிய, வேறு எந்தக் காரியத்திற் காகவும் ஏற்பட்டதல்ல. இதைத் தொழிலாளி மக்கள் உணராமல் சோம்பேறி வாழ்க்கைப் பிரியர்களான பார்ப்பனர்களுக்குக் கையாட்களாக ஆனதின் பயனாலேயே—தொழிலாளிகளுக்கும், தொழில் முறைக்கும் நாளதுவரை எவ்வித முற்போக்கும் ஏற்படவில்லை. 'பார்ப்பனர் அல்லாதார் கட்சி' என்னும் 'ஜஸ்டிஸ் கட்சி' தனக்கு அரசியல் ஆதிக்கம் சிறிதளவும் கிடைத்த காலத்தி[illegible] இந்த சாதி உயர்வு-தாழ்வு பேதத்தை ஒழிக்க எவ்வளவோ வேலை செய்தது. [illegible] அதனுடைய வேலைப்பயன் தொழிலின்



படிப்பகம்

www.padippakam.com



காரணமாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில், பற்படுத்தி வைக்கப்பட்ட மக்கள் விஷயத்தில் எவ்வளவோ முன்னேற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. தொழிலாளிகள் என்பவர்கள் யாராய் இருந்தாலும், 'சாதித் தொழிலாளி'யானாலும், 'கூலித் தொழிலாளி'யானாலும் சரீரத்தால் பாடுபடுகிறவர்கள் என்றால் அவர்கள் அத்தனைபேரும் பார்ப்பனரல்லாதவர் களாகவே இருக்கிறார்கள். அவர்களைத் தவிர்த்த மற்றவர்கள் பெரிதும் சாதியால் பார்ப் பனர்களாகவும் சிலர் அவர்களைப்போல் பாடுபட இஷ்டப்படாத சோம்பேறிகளாகவும் இருப்பவர்கள். இவர்களும் தங்களை ஒரு வித மேல் (சாதியார்) வகுப்பார் என்று சொல்லிக் கொள்பவர்களாக இருப்பார்கள். ஆனாலும், பார்ப்பனர் தவிர மற்றவர்கள் சூத்திரர்களாக இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

['விடுதலை'-தலையங்கம்—16-2-1940]

## 3. 'குறிப்பிட்ட தொழில் ஏன்?'

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நான் 1927-லேயே சொன்னேன், கூலி உயர்ந்தால்—அதுவே தொழிலாளருக்குப் போதாது; அவன் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும் என்று. இதெல்லாம் தொழிலாளருக்குத் தெரியாது. தவறிக் காலின்மேல் கோடரியைப் போட்டுக் கொண்டால் கூட 'இது கடவுள்செயல்' என்று கூறிக்கொள்வான்; முதலாளி 40 இலட்சம் சம்பாதித்தால் 30 இலட்சம் வரியாகக் கொடுக்கவேண்டும். அரசாங்கம் 30 இலட்சம் வரியாக வாங்குவதை, 5500 தொழிலாளர்கள் வேலைசெய்தால் அவர்களின் பிள்ளைகள் 4500 பேர் படிக்க வசதி செய்ய 7, 8 இலட்சம் அதிலிருந்து செலவு செய்யவேண்டும். தொழிலாளியின் மகனைப் படிக்கவைத்தால் அவன் முன்னேற வழி உண்டு. படித்தபிறகு அவனும் கோடரி, மண்வெட்டி எடுக்கவேண்டிய நிலை ஏற்படாது; 'பிச்சை எடுத்தாகிலும் வயிற்றைப் பார்த்துக் கொள்வேன்' என்று கூறுவானே தவிர, பரம்பரைக் கூலியாகவே இருக்கமாட்டான். பரம்பரைத் தொழிலாளி நிலை மாறவேண்டும். மேலும், இந்த நாட்டில் நாற்று நடுதல், ஏர் உழுதல் போன்ற வேலைகள் குறிப்பிட்ட ஒரு சாதியாருக்கு, சூத்திரருக்கு என்று இருக்கிறது. மனிதன் செய்யும் தொழில் என்று இருக்குமானால் குறிப்பிட்ட ஒரு சாதியார் மட்டும் ஏன் செய்யாமல் இருக்கவேண்டும்? எந்தப் பார்ப்பான் ஏர் உழுகிறான்? எந்தப் பார்ப்பனத்தி நாற்று நடுகிறாள், புல் விற்கிறாள்? பார்ப்பனத்திகளுக்குச் சாமான் கழுவத் தெரியாதா? நம் பெண்கள் அந்த வேலையைச் செய்யவேண்டும் என்பது என்ன சம்பிரதாயம்? நம் பெண்கள் சாமான் கழுவ கல்லூரிபோய்ப் படித்துவிட்டு வந்திருக் கிறார்களா? பார்ப்பனத்தி, பார்ப்பான் என்றைக்கு அந்த வேலையைச் செய்கிறார்களோ அன்றுதான் அது தொழிலாளி செய்யும் வேலை ஆகும். சிறிது நாட்களுக்கு முன் பார்த்தோமே, நம் பெண்கள் சதிர் ஆடினார்கள்; அவர்களைத் தேவடியாள்கள் என்று கூறினார்கள் பார்ப்பனர். அவர்களே ஆட ஆரம்பித்தார்கள்; உடனே அது பரதநாட்டியம் என்று சொல்லிவிட்டார்கள். பார்ப்பனர்கள் துணி சலவைசெய்தல் முதலிய வேலைகளைக் கட்டாயம் செய்தே ஆகவேண்டும். இந்த மாதிரி அமைப்பு ஏற்பட்டால்தான் தொழிலாளி களுக்குள் இருக்கும் வேறுபாடுகள் மறையும்; இல்லாவிட்டால் மறையாது. பிராசுதார் களுக்கும் இன்று இல்லாவிட்டாலும் நாளைக்குச் சட்டம் வந்துவிடும். ஆகவே, அவர்களும் பரவாயில்லை என்று சொல்லத்தக்க அளவில் நடந்துகொள்ள வேண்டும். தொழிலாளர் களும் கட்டுப்பாட்டோடு இருக்கவேண்டும். மற்றவர் பேச்சைக் கேட்டுக் கலகத்தில் இறங்கக்கூடாது. கூடிய சீக்கிரத்தில் தொழிலாளருக்கு இலாபம் ஏற்படும்படியான நிலைமை வரும்.

[புகளூரில், 26-7-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை'-10-8-1956]



## 4. பிறவி முதலாளி

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

பெரியவன்-சின்னவன், பணக்காரன்-ஏழை, எஜமான்-அடிமை, நிலப்பிரபு-கூலி என்னும் வேறுபாடுகள் இருக்க வேண்டுமென்பது நீண்ட நாளாக உலகத்திலே இருந்துவருகிற சம்பிரதாயம்; விதி. ஆனால், இந்தப்படியான அமைப்புகள் எதற்காக இருக்க வேண்டும்?

மனித சமுதாயத்தில் இம் மாதிரியான பேதங்கள் இருந்துவர வேண்டியதன் அவசியம் என்ன? இந்த அமைப்புமுறை மாறிவிடுவதனால் சமுதாயப் பொதுநிலைமைக்கு என்ன நட்டம், பங்கம் வந்துவிடும்? இந்த மாதிரியான ஒரு அமைப்புமுறை இருந்து வருவதனால் ஒரு பெரும் ஜனக்கூட்டம் கஷ்டப்படவும், தங்களுடைய சராசரித் தேவைகளைக்கூடப் பெற முடியாமல் நசித்துக்கொண்டு போகவுமான நிலைமைதான் வளருமே தவிர, இன்னொரு கூட்டம் ஏழைகள்மீது குதிரையேறிக் கொண்டிருக்கத்தான் பயன்படும் என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டறிந்து, நிலைமையை மாற்றியமைக்கக் கிளர்ச்சி செய்யப்பட்டது.

இந்த மாதிரியான பணக்காரன்-ஏழை, முதலாளி-தொழிலாளி, நிலப்பிரபு-பண்ணையாள் என்பதான முறை ஆண்டவனாக, கடவுளாகப் பார்த்து மனித சமுதாய வாழ்வுக்காக வகுத்துவைத்தது என்கிற எண்ணமே—நம்பிக்கையே நீண்டநாளாக, பேதம் உள்ள அமைப்பை இருக்கும்படி செய்துவிட்டது. இது கடவுள் செயல் அல்ல; சில சுயநலக்காரர்கள் தங்களின் வாழ்வு ஆதிக்கத்துக்காக ஏற்படுத்திக்கொண்ட முறைதான் இது என்று மக்கள் தெளிந்த பிறகுதான்—கிளர்ச்சி ஏற்பட்டு, மேல் நாடுகளில் மாறுதல் ஏற்பட்டது. இந்த மாதிரியான கிளர்ச்சிகள் மற்ற நாடுகளிலேதான் வெற்றிபெற்றனவே தவிர, இன்னும் இந்த நாட்டில் பேதம் இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த நாட்டிலே பார்க்கிறோம் முதலாளி-தொழிலாளி மற்றும் இதுபோன்ற பேதங்கள் இருப்பதை. இந்தப் பேதங்கள் மாத்திரமல்லாமல், இன்னும் இதைவிடக் கொடுமையாய், இந்த நாட்டிலே, பார்ப்பான்-சூத்திரன்-பறையன் என்பதான பிரிவுகள் இருக்கின்றன. மற்ற நாடுகளில் ஏழை-பணக்காரன் என்ற பேதம் இருந்ததே தவிர, பார்ப்பான்-பறையன் என்ற பேதம் அங்கு எல்லாம் இல்லை. ஆனால், இங்கு பணக் காரன்-ஏழை என்கிற பேதத்தோடு மட்டும் இல்லாமல் பிறவியிலேயே உயர்சாதிக்காரப் பார்ப்பானும், இழி சாதிக்காரப் பறையனும் இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், ஏழை-பணக்காரன் என்பது, எப்படிக் கடவுள் அமைப்பு என்று சொல்லப்பட்டு வந்ததோ, அதைப்போலவே இந்தச் சாதி உயர்வு-தாழ்வுத் தன்மை கடவுளின் பேரால் நிலைநிறுத்தப் பட்டுள்ளது.

முதலாளி என்பவன் பரம்பரை பரம்பரையாக வருபவனல்லன். இன்றைக்கு ஒருவன் முதலாளியாக இருக்கலாம்; நாளைக்கே அவன் 'இன்ஸால்வென்ட்' கொடுத்து 'பாப்பர்' ஆகிவிடலாம். அதுபோலவே, இன்று கஞ்சிக்குத் திண்டாடியவன் அடுத்த நாள் பெருத்த முதலாளியாக வரலாம். ஆனால், பார்ப்பான் என்பது அவன் உயர் சாதிக்காரன், கடவுளுக்கு நேராகத் 'தந்தி' சொல்கிறவன் என்பது பரம்பரை பரம்பரையாக—வாழையடி வாழையாக வருவது ஆகும். அழுக்குப் பிடித்த பார்ப்பான் ஆனாலும், குஷ்டம் பிடித்து அழுகிய பார்ப்பான் ஆனாலும், அயோக்கியப் பார்ப்பான் ஆனாலும் பார்ப்பார சாதியிலே பிறந்து விட்டதால், அவன் உயர்ந்த சாதிக்காரன் ஆகிவிடுகிறான்; அவன் மற்றவர்களால் மரியாதை செய்யப்பட வேண்டியவனாகி விடுகிறான். அதேபோல, எவ்வளவு அறிவாளி யாய் இருந்தாலும், திறமைசாலியாய் இருந்தாலும், ஒரு சாதியில் பிறந்ததாலேயே அவன் பறையன், சூத்திரன், தேவடியாள் மகனாகக் கருதப்பட்டு, மேல்சாதிக்காரர்களுக்கு கை கட்டிச் சேவகம் செய்து வாழ வேண்டியவனாகக் கருதப்படுகிறான்,

படிப்பகம்

www.padippakam.com



முதலாளியாவது, நிலப் பிரபுவாவது அசையும் சொத்து, அசையாச் சொத்து என்பவைகளை வைத்துக்கொண்டு, முதல் வைத்துக்கொண்டு உயர்வுத் தன்மை படைத்த வனாக வாழ்கிறான்.

ஆனால், இந்தப் பார்ப்பானோ கை முதலே இல்லாமல் கடவுளைக் காட்டி, மதத்தைக் காட்டி, தர்ப்பைப் புல்லைக் காட்டி மேல்சாதிக்காரனாக உழைக்காமல் உண்டு கொழுப்ப வனாக வாழ்கிறான்.

இந்த விசித்திரமான நிலைமை பாழாய்ப்போன இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இல்லை. உள்ளபடியே சொல்லுகிறேன்,—இன்று ஏன் நாம் தொழிலாள மக்களாய் இருக்கிறோம்? சாதி அமைப்பின் காரணமாகத்தானே!

சூத்திர சாதி என்பதால் நாம் பார்ப்பானுக்கு உழைத்துப்போட வேண்டியவர்கள். பார்ப்பனர்கள் என்பதால், அவர்கள் எல்லாவற்றையும் தங்கள் வயிற்றுக்கே வாய்க்கால் வெட்டி விட்டு உயர் வாழ்வு வாழ்கிறவர்கள். இன்னும் சொல்லப்போனால், சாதி உட் பிரிவுகள் இருக்கின்றனவே, அவைகள் எதற்காக ஏற்படுத்தப்பட்டன? பார்ப்பன பாஷைப்படி எடுத்துக்கொண்டால்கூட, தொழிலுக்குத்தானே சாதிப் பிரிவு? பறையடிக் கிறவன்—பறையன்; வெளுப்பவன்—வண்ணான்; மண்பாண்டம் செய்கிறவன்—குயவன். ஆனால், வேதம் ஓதுகிறவர்—அய்யர், இப்படித்தானே! இதில் பார்ப்பனரைத் தவிர மற்றை யோரெல்லாம் உடலுழைப்புக்காரர்கள், சாதியின் முறைப்படியே—சமுதாயத்தின் அமைப்புப்படியே! எனவேதான் சொல்லுகிறேன்—இன்றைய அமைப்பு முறை, பேதத் தன்மை, ஏழ்மை-உயர்வு நீங்க வேண்டுமென்றால் இந்த நாட்டிலே முதலாளியை ஒழித்தால் மட்டும் போதாது; பார்ப்பன உயர்வுத் தன்மை, அதற்குக். கடவுள் மத சாஸ்திரத்தின்மீது கட்டப்பட்டுள்ள பலமான பாதுகாப்பு—இவைகளை ஒழித்தால்தான் முடியும்.

1000 முத்தையா செட்டியார்களும் சரி,—ஒரு சங்கராச்சாரிப் பார்ப்பானும் சரி. நாளை எல்லோருக்கும் நிலம் பொதுவானது என்று பிரித்துக் கொடுத்து விடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். வருஷம்தோறும் சிரார்த்தம், திவசம் என்பவைகளின் பேரால் பார்ப்பான் கறந்துகொண்டுதானே இருப்பான்! கடவுளின் பெயரால் அர்ச்சகப் பார்ப்பான் சுரண்டிக்கொண்டுதானே இருப்பான்! எனவே, இந்த நாட்டுப் பேதங்கள் நிலைநிறுத்தப் பட்டிருப்பதற்குக் காரணம் எல்லாம் கடவுள், மதம், சாஸ்திரம் என்பவைகளும், அவைகளின் பேரால் வாழுகிற கூட்டமும்தான் என்பதை உணர்ந்து இவைகளை ஒழித்தால்தான், 'எல்லார்க்கும் எல்லாமாய்' என்று சொல்லுவார்களே—அந்த நிலைமை இங்கு ஏற்படும்.

[குளித்தலை-வதியத்தில் சொற்பொழிவு—'விடுதலை' 2-7-1952]

## 5. திராவிடத் தொழிலாளர் என்பது ஏன்?

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்த மாநாடு திராவிடத் தொழிலாளர் மாநாடு. விவசாயத் தொழிலாளர் கழகங்கள் ஏராளமாக உண்டு. அவைகள் இருந்தும் ஏன் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்பட வில்லை? அவர்கள் விடுதலைக்கு வேண்டிய கொள்கைகளைச் சொல்லலாமென்றுதான் திராவிடத் தொழிலாளர் சங்கம் என்று வைத்தோம். இதன் பலன் தெரிந்துகொண்டு திராவிட கம்யூனிஸ்ட் கழகம் வைக்கலாம் என்று இருக்கிறோம். திராவிடம் என்ற சொல்லை ஏன் புகுத்துகிறோம்? பொதுவாக இருக்கவேண்டிய கழகத்திற்கு, ஏன் திராவிடர் கழகம் என்று வைத்தோம்? பொதுவுடைமை என்பதற்கு ஏன் திராவிடப் பொதுவுடைமை என்று வைக்க ஆசைப்படுகிறோம்?



இந்த நாட்டில் விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரும் திராவிடர்கள்தாம்; மங்கோலியரோ, நீக்ரோக்களோ, ஆரியரோ அல்லர். திராவிடர்தான் பாட்டாளிகளாய், விவசாயிகளாய் வாழ்கிறார்கள். சாதாரணமாக விவசாயி, தொழிலாளி என்பது ஒரு பொது நிலைமை. அதில் திராவிட சம்பந்தமில்லை. பொதுவான பெயரே போதுமென்று மற்ற கழகங்கள் கருதுகின்றன. ஆனால், திராவிடனாக இருப்பதால்தான் தொழிலாளியாக இருக்கிறான் என்று நாங்கள் கருதுகிறோம். சரீரத்தால் பாடுபடும் சமுதாயம் திராவிட சமுதாயந்தான். திராவிடரல்லாதவர்கள் யாரும் தொழிலாளியாக இல்லை. கடவுளால் தொழில் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்ட பிறவி திராவிடன் என்று சாத்திரத்தில் எழுதி வைத்துவிட்டார்கள். திராவிடர்களாய் இருப்பதால்தான் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்ற நிலைமையை உணர்த்துவதற்காகத்தான் திராவிட விவசாயத் தொழிலாளர் கழகம் என்று வைத்தோம்.

[கள்ளக்குரிச்சியில், 4-10-1953-ல் சொற்பொழிவு—'விடுதலை' 8-10-1953]

## 6. தொழிலாளர் நிலை

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

எனக்குத் தெரிந்து விக்டோரியா மகா ராணி, ஜார்ஜ் எட்வர்ட், அய்ந்தாம் ஜார்ஜ். ஆறாம் ஜார்ஜ், இப்பொழுது எலிஸபெத் ஆளுகிறார்கள். இவர்களின் அரசாட்சியே போய் விட்டது. நம் நாட்டில் உள்ள இராசாக்கள், ஜமீன்தார்கள் எல்லாம் சட்டத்தினால் அடிபட்டுப் போய்விட்டார்கள். ஏன், இவர்கள் நினைத்தால் வெற்றி அடைய முடியாதா? ஏன் போய்விட்டார்கள்? மக்களின் மனது மிகவும் மாறிக்கொண்டு வருகிறது. யாரை யார் ஆள்வது என்ற உணர்ச்சி! பணக்காரர் மட்டும் என்ன மிஞ்சப்போகிறார்கள்? பணக்காரன் இலாபத்துக்கும் அரசாங்கம் சட்டம் போட்டது. அவன் ஒரு ரூபாய் சம்பாதித்தால் 12 அணா வரியாகக் கொடுக்கவேண்டும். பூமியை வேறு பிடுங்கிக்கொள்ளப் போகிறோம் என்று அரசாங்கத்தார் கூறுகிறார்கள். இது தேர்தல் தந்திரப் பேச்சு. நேரு காலத்தில் சிறிது தாமதமானாலும் ஆகலாம்; நேருவிற்குப் பிறகு சீக்கிரம் பிடுங்கிக்கொள்வார்கள். அப்படி அரசாங்கத்தார் பிடுங்கிக்கொள்ளாமல் விட்டால் மக்களே பிடுங்கிக்கொள்வார்கள். அரசாங்கம் கொடுத்தது; கடவுள் கொடுத்தார்; பார்ப்பனர் செய்த மந்திரத்தால் வந்தது என்று சொன்னதெல்லாம் என்ன ஆச்சு? தொழிலாளர் சமபங்காளியாக வேண்டும். தொழிலாளரைப் பற்றிய என் கொள்கையை நீண்டநாட்களாகவே நான் சொல்லிவருகிறேன். 'தொழிலாளருக்குப் பாடுபட்டோம்' என்று சொல்லும் சிலர் தங்களால்தான் கூலி உயர்ந்து விட்டதென்று கூறலாம். ஆனால், கூலி வேலை செய்பவன், தோல் வேலை செய்பவன், வண்டியோட்டுபவன், புல் விற்பவன் இன்றைக்கு முன்பைவிட நான்கு மடங்கு அதிகமாகக் கூலி சொல்கிறானே! அவனுக்காக யார் பாடுபட்டார்கள்? எந்தக் கட்சி பாடுபட்டது? அரிசி மூட்டை ரூ. 10 விற்றது; இப்பொழுது (1956) 45 ரூபாய் விற்கிறதே; அவர்கள் எந்தச் சங்கம் வைத்து விலை ஏற்றினார்கள்? சில அரசியல் கட்சியினர் வேண்டுமென்றே ஒன்று மறியாத தொழிலாளரிடம், 'நாங்கள்தான் பாடுபட்டோம்' என்று சொல்லி ஏமாற்று கிறார்கள். காலம், சூழ்நிலை இவைகளால் தானாகவே பொருள்களின் விலை அதிக மாயிற்று; கூலியும் அதிகமாயிற்று. மில்லில் 100 ரூபாய் என்று ஒரு பங்கு இருந்தால் அதற்கு 120 ரூபாய் கொடுக்கிறான்; 20 ரூபாய் இலாபம். இது கம்யூனிஸ்டுகளுக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் முதலாளிகளிடத்தில் பிச்சைக் காசு வாங்கிக்கொண்டு தொழிலாளிக்கு இலாபத்தில் பங்கு கேட்பதில்லை. முதலாளி, தொழிலாளிக்கு உதை கொடுக்காமல் சும்மா நாலணா அதிகமாகக் கொடுக்கமாட்டான். நான் ஒருவன்தான் கேட்டேன்; 'முதலாளிக்கு ஏற்படும் இலாபத்தில் சரிபங்கு தொழிலாளிக்கும் கொடுக்க வேண்டும்; தொழிலாளர்களால்தானே இலாபம் ஏற்பட்டது? ஆகவே, தொழிலாளிக்கும் இலாபம் கொடுக்கவேண்டும்' என்று. மேலும், தொழிலாளியின் கூலி உயர்ந்தால் மட்டும்

படிப்பகம்

www.padippakam.com



போதாது. அவன் அந்தஸ்து உயரவேண்டும். இரண்டு ரூபாய் உயர்ந்தால் கோவிலுக்கும், சினிமாவிற்கும், குடிக்கும் பாழாக்கிவிடுகிறான். ஆறுமாத சம்பளம் போனசாகக் கொடுத்தால் காசி, இராமேஸ்வரம், தேர்திருவிழாவுக்குப் போகிறான். கேட்டால் சாமி கொடுத்தது என்கிறான்.

[புகளூரில், 26-7-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-8-1956]

தோழர்களே! தாய்மார்களே!

என்னுடைய அனுபவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்தத் தொழிலாளர் இயக்கங்கள் நாட்டில் ஏற்பட்ட பிறகுதான் தொழிலாளர்களின் ஒழுக்கமே கெட்டுப்போய் விட்டது. அவர்கள் ஒழுக்கம் மட்டும் அல்லாமல் முதலாளிகளின் ஒழுக்கமும் கெட்டு, அதனால் மக்களுக்குப் பெருந்தொல்லையும் ஏற்பட்டுவிட்டது. அப்படியானால், தொழி லாளர் சங்கமே கூடாது என்பதல்ல. இன்று தொழிலாளர்கள் இயக்கங்கள், தொழிலாளர்கள் கையில் இல்லை. தொழிலாளர்களாக இல்லாதவர்கள் கையில்—அதாவது அதைக்கொண்டு வயிறு வளர்ப்பவர்கள் கையில்தான் உள்ளது. தொழிலாளர் சங்கம் ஏற்பட்ட நாள் தொட்டு, அரசியல் கட்சிக்காரர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிற்சங்கம் என வைத்துப் பதவிப் பலன் பெற்றுப் பொறுக்கித் தின்கின்றார்கள்!

எனது 50 ஆண்டு அனுபவத்தின் பயனாகக் கூறுகின்றேன். அந்தக் காலத்தில் காங்கிரசுக்காரர்களே (பார்ப்பனர்கள்) தொழிலாளர்களைப் பயன்படுத்திப் பிழைக்கவும், பெருமையடையவும் தொழிலாளர்களை வேட்டையாட ஆரம்பித்தார்கள். இந்தநிலை அன்னி பெசன்ட் காலத்தில்தான் முதன்முதல் ஏற்பட்டது எனலாம். மற்றும் வாடியாவுக்கு (Wadia) என்று ஒரு தொழிற்சங்கம்; திரு.வி.கவுக்கு என்று ஒரு தொழிற்சங்கம்; பிறகு ரேங்கசாமி அய்யங்காருக்கு ஒன்று; சத்தியமூர்த்திக்கு ஒன்று, வரதராஜுலு (நாயுடு)வுக்கு ஒன்று என இப்படியாக ஏற்பட்டுவிட்டது.

இன்று தொழிற்சங்கம் என்றாலே, 'முதலாளிகளுடன் சண்டை பிடிக்கக்கூடிய ஸ்தாபனம்' என்றுதான் இயங்கிக்கொண்டு வருகின்றது. இதனால் உற்பத்தி குறை கின்றது; இந்தத் தகராறு முதலாளி–தொழிலாளி இருவர்களோடு மட்டும் போகாமல் பொதுமக்களுக்குப் பாதகமாகவும் முடிகின்றது.

நல்ல தொழிலாளர் சங்கம் என்ற ஒன்று இருக்கவேண்டுமென்றால், அது முதலாளி இடத்தில் விசுவாசம்—சொந்தப் பொறுப்புபோலக் கருதித் தொழில் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது, முதலியவற்றைக் கொள்கைகளாகக் கொண்டிருக்கவேண்டும்.

அதுபோலவே, சிறந்த முதலாளிகள் என்பவர்களும் தொழிலாளர்களைத் தங்கள் சொந்தப் பிள்ளைகள்போல் பாவித்து அவர்கள் நன்மையில், மேம்பாட்டில் நாட்டம் செலுத்த வேண்டும்.

நான் சிறிய முதலாளியாக இருந்தவன். எங்கள் அய்யா பெரிய முதலாளி, கணக்கப் பிள்ளைக்கு ரூ. 7 தான் அப்போது சம்பளம்; காரியஸ்தருக்கு 6 தான் மாதம் கொடுப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 4, 5 பிள்ளை குட்டிகள் இருக்கும். அவர்கள் வாங்கும் சம்பளம் சாப்பாட்டிற்குத்தான்; மற்றபடி பிள்ளைகள் படிக்க, புத்தகம், துணிமணிகள், கலியாணம் எல்லாவற்றிற்கும் முதலாளிகள் தனியாகப் பணம் கொடுத்துப் பெருமையாக நடத்துவார்கள். சண்முகம் பிள்ளை என்ற என் குமாஸ்தா கலியாணத்திற்கு, சதிர்க் கச்சேரியுடன், சாரட்டில் ஊர்வலம் வைத்தேன். அவர் என் 'குடி அரசு' ஆபீஸிலும் 1945 வரை இருந்து, 40 வருஷம் உழைத்துச் செத்தார். 'விடுதலை' ஆபீசு வாட்சுமேன் பழனி என்பவர் 35 வருஷமாக என்னிடம் இருக்கிறார்.

தொழிலாளர்களைக் கெடுத்தது தொழிலாளர்கள் சங்கங்கள்—தலைவர்கள் மட்டு மல்ல; அரசாங்கமும் கெடுக்கின்றது. அவர்கள் சட்டம் எந்த நல்ல தொழிலாளியையும் கெடுத்துவருகிறது.



தொழிலாளி மகன் தொழிலாளியாக இருக்கக்கூடாது என்பது எனது இலட்சியச் சொல். 'கம்பாசிட்டர்' மகன் கம்பாசிட்டராகவே இல்லாமல், சிறு அச்சு ஆபீஸ் வைத்து நடத்துபவராக ஆகவேண்டும்; அல்லது ஆபீஸ் மானேஜர் அல்லது குமாஸ்தாவாகவாவது ஆகவேண்டும்.

தொழிலாளி மகன் பரம்பரை பரம்பரையாகத் தொழிலாளி என்பது இல்லாமல் மறையவேண்டும். மேலும், இந்த நாட்டில் தொழிலாளியே இருக்கக்கூடாது. அப்படி யானால், தொழிலாளி இல்லாவிட்டால் தொழில் எப்படி நடக்கும் என்று கேட்கலாம். அது பற்றி உங்களுக்கு என்ன கவலை? எப்படியாவது போகிறது; அவசியம் உள்ளவன் செய்துகொள்கிறான். கக்கூஸ் எடுப்பவன் பரம்பரை பரம்பரையாகக் கக்கூஸ் எடுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டுமென்றால் என்ன நியாயம்? அவன் எடுக்கமாட்டேன் என்றால் கட்டாயப்படுத்த முடியுமா? இப்படி எடுப்பதற்கென்றே ஓர் சாதி இருப்பதுதான் ஜனநாயகமா? அதுபோல் தொழிலாளி என்ற ஓர் பரம்பரை இருக்கலாமா?

நான் தொழிலாளி கூடாது என்பதெல்லாம்—அவர்கள் பரம்பரையாகத் தொழிலாளி களாக இருக்கக் கூடாது என்பதற்காகவே! தொழிலாளர்கள் தொழிலில் பங்குதாரர்கள் ஆகவேண்டும்.

என் கருத்து என்னவென்றால், தொழிலாளிக்கு இலாபத்தில் பங்கு கிடைக்க வகை செய்யவேண்டும்; தொழிலாளி தொழிற்சாலையில் பங்குதாரர்போல என்பதேயாகும்.

[சென்னை, தினத்தந்தி அலுவலகத்தில், 14-4-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 18-4-1959]

தோழர்களே! தாய்மார்களே!

நான் ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், போர்ச்சுக்கல், ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக் கெல்லாம் சென்று அங்குள்ள தொழிலாளர் ஸ்தாபனங்களின் நடை முறையைப் பார்த்து வந்தேன். தொழிற் சங்கங்களின் சிபாரிசின்பேரில்தான் ஒரு நாடு விட்டு மற்றொரு நாட்டுத் தொழிற் சங்கங்களுக்குச் சென்றேன். நான் போய்ப் பார்த்த அத்தனை ஊர்களிலும் நான்கண்ட கருத்து, முதலாவதாக தொழிலாளர்கள் பெரிதும் நாத்திகர்கள். ரஷ்யாவில் அந்நாட்டு இயற்கையே நாத்திகம்; ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் தொழிலாளர்கள் நாத்திகர்கள்தாம்.

நாத்திகர்கள் என்றால் அறிவுவாதிகள்–பகுத்தறிவைப் பயன்படுத்துபவர்கள் என்று அர்த்தம். இரண்டு காரியங்கள்: முதலாவதாக, அந்தத் தொழிற் சங்கத்தின் மீது பாதிரி மார்கள் போராட்டம் செய்கிறார்கள். இரண்டாவதாக, அரசாங்கத்தினிடம் போராட்டம். அதனால் அரசாங்கம் எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் சி. அய். டி. போட்டிருக்கிறார்கள். சில ஊர்களில் தொழிற் சங்கங்களின் சார்பாக நான் இறங்கிய காரணத்தால் என்னுடைய 'பாஸ் போர்ட்டைப்'ப் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள்; பிறகு கஷ்டப்பட்டு வாங்கினேன்.

நம் நாட்டில் தொழிலாளர் ஸ்தாபனங்களை உருவாக்கி அதற்குத் தலைவராக இருப்ப வர்கள் கம்யூனிஸ்டுகள் என்றால், அந்தக் கம்யூனிஸ்டுகள் தங்களால் நடத்தப் படுகின்ற தொழிலாளர் இயக்கங்களில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது இல்லை. பகுத்தறிவுக்கு அவர்களைப் பக்குவப்படுத்தி, நாத்திகர்களாக ஆக்குவதில்லை.

தொழிலாளி நாத்திகனாக ஆனால்தான், தான் ஏன் தொழிலாளி ஆனான் என்பது தெரிய முடியும்.

அடுத்தபடியாக, வாழ்க்கையின் செலவைச் சிக்கனமாகச் செய்து பழக வேண்டும்; வரவுக்கு அடங்கிய முறையில் செலவு செய்து காசை மீதியாக்க வேண்டும். இந்தக் கடவுள், மதம், சாஸ்திரம், புராணம் சம்பந்தப்பட்ட மதச் சடங்குகள் போன்ற காரியங்களுக்கு— சம்பிரதாயங்களுக்குக் கண்டிப்பாய்ச் செலவு செய்யக் கூடாது என்ற அறிவைக் கற்றுத்தர

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். அவர்கள் கண்டபடி ஒன்று இரண்டுக்கு மேல் பிள்ளைகள் பெறக் கூடாது. ஆனால், இங்குள்ள தொழிலாளர் ஸ்தாபனத் தலைவர்களிடமும், தொழிலாளர்களிடமும் இந்தக் குணம், நடப்பு இல்லவே இல்லை. அதன் பலன் என்னவென்றால், எவ்வளவுதான் சம்பளவு உயர்வு வந்தாலும் அது போதாது என்ற நிலைதான் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களிடையேயும், தொழிலாளர்களிடையேயும் ஒழுக்க ஈனம் தான் வளரும். பேராசை ஒரு புறம் இருப்பினும் வரவுக்கு மீறிச் செலவு செய்வது என்பது, ஒழுக்கக் கேட்டைத் தான் வளர்க்கும்.

அதனால்தான் கண்டிப்பாக நாங்கள் அவர்களையும் நாத்திகர்களாக ஆக்க முயலு கிறோம். எங்களோடு சம்பந்தப்பட்ட வரையில் உள்ள தொழிற் சங்கங்களில் உள்ளவர்கள் அனைவரும் 100-க்கு 90 பேர் நாத்திகர்களே ஆவார்கள்.

கடவுள் கொடுக்கிறார் என்று கூறிக்கொண்டு கடவுளை வணங்குவது வெறும் வேஷம்; முட்டாள்தனம் ஆகும். முதலாளி என்பவன் மூட்டை அடிக்கிறான்—எனவே அவன் 'கடவுள் கொடுத்தார்' என்று கூறி மக்கள் தன்மேல் ஆத்திரப்படாமல் இருக்கக் 'கடவுளை' வணங்குகிறான். தொழிலாளியாக உனக்கு நாளைக்குச் சோற்றுக்கு வழியில்லை. கடவுள் நம்பிக்கை உனக்கு இருக்குமானால்—கடவுள் என்று ஒன்று இருக்கு மானால் அந்தக் கடவுள் உன்னைத் தொழிலாளியாக—மறுவேளைச் சோற்றுக்கு வழி இல்லாதவனாக உண்டாக்கியிருக்குமா? நிறையச் சோற்றுக்கு வகை இருப்பவனுக்கு மேலும் பணம் கொடுக்குமா? என்று சிந்திக்கவேண்டும். தொழிலாளர் நிலை வளராமல் இருப்பதற்கு இதுதான் காரணம்.

எப்பாடு பட்டாவது தன் மக்களைப் படிக்கவைத்து வசதிசெய்து கொடுத்து, தகப்பன் வேலையை விட்டு, சாதி வேலையை விட்டு, வேறு வேலைக்கு அனுப்ப வேண்டும். எந்தத் தலைமுறையும் தன் சாதி வேலைக்கே வராமல் செய்வதுதான் முக்கிய கடமை ஆகும் என்று கூறிப் பாடுபட்டு வருகிறோம்.

தொழிலாளி என்றால் என்ன? முதலாளி என்றால் என்ன? தொழிலாளி என்று கூறுபவன் தன்னுடைய அருமையான புத்தியை, தொழிலின் திறமையை வெறும் சோற்றுக்கு விற்பவன்; வயிறு வளர்ப்பதற்காகத் தன்னுடைய அறிவை—தொழிலை மாற்றுப் பண்டமாக விற்கிறவன். எவ்வளவுதான் புத்திசாலியாக—திறமையுடையவனாக இருந்தாலும், கூலி உயர்வு கேட்கும்போது தன் முதலாளியிடம் தன்னுடைய வேலைத் திறமையை எடுத்துக்கூறி—வயிற்றுக் கொடுமையை எடுத்துக்கூறி—'எனவே, சம்பளம், கூலி அதிகமாகவேண்டும்' என்றுதான் கேட்பான். அதாவது, 'தாங்கள் தரும் சம்பளம், என் குடும்பத்திற்குப் போதுமா? நான் பிள்ளை குட்டிக்காரன் ஆயிற்றே! சாமானின் விலை என்ன? அரிசி என்ன விலை விற்கிறது? வீட்டுவாடகை எவ்வளவு? பையன்கள் வேறு படிக்கவேண்டி இருக்கிறதே, ரூ. 50 போதாது; ரூ. 75 சம்பளம் தாருங்கள்' என்று கேட்பான். தனது சாமர்த்தியத்தைக் கூறி, இந்த வேலைத் திறமைக்குச் சம்பளம் போதாது அதிகமாகத் தரவேண்டும் என்று கேட்காமல், வயிற்றுச் சோற்றுக்குக் கணக்குப் பார்த்துக் கேட்பான்.

அதேபோல், ஒரு சக்கிலியிடம் செருப்பு விலை கேட்டால் ரூ 4-50, என்பான். உடனே நாம், 'என்னப்பா, ரூபாய் இரண்டுக்குத் தரக் கூடாதா?' என்றால், 'என்ன சாமி, அரிசி என்ன விலை விற்குது? கேழ்வரகின் விலை என்ன? இப்படிக் கேட்கிறாயே?' என்றுதான் கூறுவானே தவிர, செருப்பின் இன்றியமையாத தன்மையைக் கூறி விலை கேட்கமாட்டான். சிறு பெட்டிக்கடை முதலாளியிடம், 'ஒரு கட்டு பீடி என்ன விலை?' என்றால், 'மூன்றணா' என்பான். 'என்னப்பா, அதிகமாகக் கூறுகிறாயே?' என்றால், 'பேச நேரமில்லை; வாங்கினால் வாங்கு; வாங்கா விட்டால் போ' என்று தான் இஷ்டப்பட்ட விலையைக் கூறுவானே தவிர, அவன் வீட்டு வாடகை சாமான்களின் விலை உயர்வு பற்றிக் கணக்குப் போட்டுக் கூறமாட்டான்.



முதலாளி–தொழிலாளி இருவரும் ஒன்று சேர்ந்தால்தான் உற்பத்தி செய்யமுடியும். உற்பத்தி நடக்கவேண்டுமென்றால் பணம்—தொழில் இரண்டும் தேவை. உற்பத்தி, மக்கள் நலனுக்கு—உலக நலனுக்கு மிகமிக அவசியம் ஆகும் என்றாலும் முதல் (பணம்) இருந்தால்தான் உற்பத்தி தலை காட்டமுடியும்.

முதலாளி–தொழிலாளி இருவர்களும் கணவன்–மனைவி போன்றவர்கள் ஆவார்கள். கணவனும் மனைவியும் குடும்பம் நடத்திப் பிள்ளை பெறுவதுபோல்தான் முதலாளியும், தொழிலாளியும் சேர்ந்து தொழில் நடத்திப் பண்டங்களை உற்பத்தி செய்வதாகும். கணவன், மனைவி ஒற்றுமையாக இருக்கவேண்டும். நம் நாட்டில் முன்பு இருந்த முறை, கணவனுக்கு மனைவி அடிமையாகத்தான் இருக்கவேண்டும். கணவன் மனைவியை அடித்தால்கூட ஏன் என்று கேட்பதற்குக்கூட உரிமை கிடையாது. அதுதான் 'பிராமணன்–சூத்திரன்' தன்மை. அந்த முறையில்தான் தொழிலாளி–முதலாளிப் பிரச்சினையும் இருந்தது. ஆனால், இன்று என்ன ஆயிற்று? கணவன்–மனைவி சினேகிதர்கள் போன்ற வர்கள்; எஜமான்–அடிமை என்ற முறையில்லை; இருவருக்கும் சம உரிமை என்ற நிலைக்கு வந்துவிட்டது.

கணவன்–மனைவி நிலை மாறியதுபோல் எஜமான்–தொழிலாளி நிலை மாற வேண்டும்; இருவரும் சம உரிமை உள்ள கூட்டாளிகள் என்ற நிலை வந்தாகவேண்டும். அதற்கு இருவரும் விறைத்துக் கொண்டிருந்தால் முடியுமா? கணவன்–மனைவி நிலை மாறியதுபோல் எஜமான்–தொழிலாளி நிலை மாறி, சம உரிமை உள்ள கூட்டாளிகளாக ஆவதை நடக்காமல் தடுத்து வருகின்றனர், இந்தத் தொழிலாளி ஸ்தாபனங்களை நடத்திச் செல்லும் தலைவர்கள்.

தொழிலாளர்களிடையே நாணயம், ஒழுக்கம், பொறுப்பு, கடமை இவை ஏற்பட வேண்டும்; இவை ஏற்பட்டு வளரவேண்டுமென்றால் அதற்கு எஜமான்–அடிமை; முதலாளி–தொழிலாளி என்ற நிலை இருக்கக்கூடாது. இந்த நிலைமை இருக்குமளவுக்கு இவை வளராது. அதற்குக் காலம் வரவேண்டுமானால், தொழிலாளர்கள் தன்மை ஆள வேண்டும். நம்நாட்டிலே அந்தத் தன்மை வரத் தொழிலாளர் தலைவர்கள் முதலில் பாடுபட வேண்டும்.

நம்முடைய அரசாங்கம் தொழிலாளர்கள்மீது கவலை எடுத்துக் கொள்கிறதா என்றால், இல்லை. சும்மா அவர்களைத் திருப்திப்படுத்த ஏதோ மேலுக்குச் செய்கிறார்கள்.

உண்மையில், அரசாங்கம் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக் கருதினால் தொழிலாளர் ஸ்தாபனங்கள் நடத்துவதைத் தனிப்பட்டவர்களிடம் கொடுத்திருப்பதை மாற்றி, அரசாங்கமே தொழில் ஸ்தாபனத்தை நடத்தவேண்டும். அரசாங்கம் நடத்துகிறது என்றால், பொதுமக்கள் நடத்துவதாகத்தான் அர்த்தம். 10 மணி நேரத்தை 8 மணி வேலை நேரமாகக் குறைப்பதும், 8 மணி நேரத்தை ஏன் 6 மணி நேரமாக ஆக்கக்கூடாது என்று கேட்பதும்; மூன்று ரூபாய் சம்பளம் அய்ந்து ரூபாயாகக் கேட்பதும், பின்பு அய்ந்து ரூபாய் என்ன—அதை ஏன் ஆறு ரூபாயாகத் தரக்கூடாது என்பதிலும்தான் இன்று தொழிலாளிகளின் விருப்பம் போய் நிற்கிறது. அதாவது—'நீ எவ்வளவு எடுத்துக் கொண்டாலும்சரி, எனக்குக் கவலை இல்லை; எனக்கு இவ்வளவுதான் என்று ஒதுக்கி விடு' என்று கேட்கும் மனோபாவம்தான். முதலாளியும் எப்படியாவது இவனுக்குப் பங்காளி உணர்ச்சி வராமல் இருந்தால் போதும் என்று நினைத்துக் கூலி உயர்வு சிறிது ஏற்றித் தந்து ஏமாற்றிவிடுகிறான்.

தொழிலாளர்கள் பகுத்தறிவுவாதிகளாக ஆகவேண்டும். கடவுள், மதம், சாஸ்திரம், சம்பிரதாயம் முதலிய காரியங்களில் நம்பிக்கை இல்லாமல் இருக்கவேண்டும். மனிதத் தன்மையிலும், மானத்திலும், ஒழுக்கத்திலும் நம்பிக்கை இருக்கவேண்டும்.



படிப்பகம்

தொழிலாளி என்றால் கீழான சாதி என்றும்; முதலாளி என்றால் மேல்சாதி என்றும் தான் அர்த்தம். பாடுபடுகின்ற தொழிலாளி கீழ்ச்சாதி, பாடுபடாத முதலாளி மேல்சாதி. தொழிலாளியின் உழைப்பின் பயனாய்வரும் பணத்தைக்கொண்டு சுகபோகமாய் வாழும் முதலாளி, மேல்சாதி. அதாவது, சூத்திரன்–பிராமணன் என்பது மாதிரியான நிலைமை. சூத்திரன் எவ்வளவுதான் உயர்ந்தவனாகவும், திறமைசாலியாகவும் புத்திக் கூர்மை உள்ள வனாகவும் இருந்தாலும் சூத்திரன், சூத்திரன்தான். அவன் மேல்சாதியாக–பார்ப்பானாக ஆகமுடியாது. அதுபோல், எவ்வளவுதான் இழிகுணம்–இழிநிலை உடைய பார்ப்பானாக இருந்தாலும் அவன் மேல்சாதி–மேல்சாதிதான், பார்ப்பான்தான். அதுபோல, இதிலே அந்தமுறை இருக்கிறது. அதாவது, தொழிலாளி என்றுமே தொழிலாளிதான். அதை விட்டு, அவன் எவ்வளவு திறமையுடையவனாக இருப்பினும் மாறமுடியாது. தொழிலாளி என்ற முறை மாறவேண்டும்; சமுதாயத்தில் உள்ள சாதி முறையும் மாறவேண்டும்; நாலாவது சாதியான் சூத்திரன் தொழில்செய்து பிழைக்க வேண்டியவன் ஆகும். அன்றாடக் கூலிபெற்றுச் சாப்பிட்டுவரக்கூடிய தன்மை உடையவன்; அவன் கையில் காசு சேர்த்து வைத்துக்கொள்ளக்கூடாது; இப்படித்தான் இந்த நாட்டில் சாதியமைப்பு முறை இருக்கிறது. இதை மாற்றினால் தொழிலாளியின் நிலை இப்படியே இருக்காது; நிச்சய மாகத் தானாகவே மாறிவிடும்.

தொழிலாளி பகுத்தறிவு பெறக்கூடாது—பெற்றுவிட்டால், தான் அந்தத் தொழில் ஸ்தாபனத்தின் மூலம் சம்பாதிப்பது பாதிக்கப்படும் என்ற காரணத்தால் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்களை–சம்பளம் போதாது என்ற பிரச்சினையிலேயே தூண்டி விடுகிறார்களே தவிர, ஏன் இந்த இழிநிலை—அதாவது அவன் ஏன் முதலாளி, நான் ஏன் தொழிலாளி–என்று கேட்பது கிடையாது. அதற்கு மாறாக நம்மைப் பார்த்து மிகப் புத்தி சாலித்தனமாகக் கேட்கிறார்கள், ‘கக்கூஸ்காரன் மகன் படித்து வேறு வேலைக்குப் போய் விட்டால், பிறகு யார் மலம் எடுப்பது? அந்தத் தொழில்செய்ய ஆள் வேண்டாமா?’ என்று. மலம் எடுப்பதற்கு என்று ஏன் வேறு ஆள்? மலம் கழிக்கிறவனே எடுக்கட்டுமே! ஒரு மனி தனின் மலத்தை எடுப்பதோடு இழிமகனாகவும் இருக்கவேண்டுமா? தொழிலாளர் நலத்துக் காகப் பாடுபடுகிறவர்கள் இந்த மலமெடுப்பவர்கள் விஷயத்தில் என்ன செய்தார்கள்?

[பெங்களூரில், 1-5-1961-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 9-5-1961]

## 7. முதலாளி – தொழிலாளி தொல்லை

தோழர்களே! தாய்மார்களே!

இன்று பொதுவாகவே உலகம் முழுவதும் ஒரு தொல்லை இருக்கிறது. அந்தத் தொல்லை பல்வேறு உருவங்களில் காட்சியளிக்கின்றது. அந்தத் தொல்லை என்ன வென்றால், மனித சமுதாயத்தில் உடையவன்–இல்லாதவன் என்ற தொல்லை. இந்தத் தொல்லை உலகம் முழுவதும் நீக்கமற நிறைந்துள்ளது. மனிதன் இயற்கையாகவே ஆசை குடிகொண்டுள்ள ஜீவன். அதன் பயனாகத்தான் உலகில் உடையவன்–இல்லாதவன் என்கின்ற இரண்டுவித நிலைமைகள் உண்டாகிவிட்டன. இந்த நிலைமைகளை மதமும், கடவுளும் பாதுகாத்து வருகின்றன. அதற்கு ஏற்ப அரசாங்கமும் அமைந்துவிடுகிறது.

ஆனால், நம் நாட்டைப் பொறுத்தவரையில் உடையவன்–இல்லாதவன் என்கின்ற கவலையோடு மற்றொரு கவலையும் சேர்ந்துகொண்டது. அதுதான் சமுதாயத்தில் மேலான சாதி, கீழான சாதி என்று பாகுபடுத்தப்பட்டுள்ள தொல்லை. இந்தத் தொல்லை உலகில் வேறெங்கும் இல்லாத தொல்லை. இதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. நம் மக்களிடம் குடிகொண்டுள்ள முட்டாள் தனத்தினாலும் மானமற்ற தன்மையினாலும் இந்தத் தொல்லை நீண்டநாட்களாக நம்மிடையே இருந்துவருகிறது. உடையவன்–இல்லா தவன் என்ற தொல்லையை ஒழிக்க உலகில் போராட்டம் நடந்தபடியே உள்ளது. அதைக் காக்க சட்டம், வெடிகுண்டு, ஆகாயக் கப்பல், அணுகுண்டு ஆகிய அனைத்தும் உண்டு. ஆனால், மேல்சாதி–கீழ்சாதி என்ற குறை அஸ்திவாரம் இல்லாமலேயே வளர்ந்தது. நம் மக்களின் முட்டாள்தனமும், மானமற்ற தன்மையும் சேர்ந்துதான் அதை வளர்த்து நம் நாட்டில் நிலைநிறுத்தி வைத்துள்ளன. அதை நீக்க நாம் முயலவேண்டும். உடை யவன்–இல்லாதவன் என்ற தொல்லை நீங்க உலகில் கிளர்ச்சிகள் நடந்தபடியே உள்ளன. தொழிலாளர்கள் கிளர்ச்சி, விவசாயிகள் கிளர்ச்சி ஆகிய கிளர்ச்சிகளெல்லாம் முதலாளித் துவம் நிலைக்க உபயோகப்படுகின்றனவே ஒழிய அடிப்படையை மாற்றியமைக்கவில்லை. நம் நாட்டிலுள்ள மேல்சாதி–கீழ்சாதிக் கொடுமை அஸ்திவாரம் இல்லாததும் மூட நம்பிக் கைகளை அடிப்படையாகக் கொண்டதுமாக இருப்பதால் கிளர்ச்சிகள் செய்ய முடியாதபடி தந்திரமாக அமைந்துள்ளது. இங்கு சாதித் தொல்லைகளை ஒழிக்கப் பாடுபடவேண்டியது தான் முதல் தேவை என்பது என் கருத்து.



முதலாளி–தொழிலாளி என்கிற பிரச்சினை எங்கிருந்து வந்தது? மூடநம்பிக்கை யிலிருந்து வந்ததல்ல. அந்தப் பிரச்சினை ஆதாரத்தோடுதான் உள்ளது. எப்படி இருக் கிறான் முதலாளி? சட்டத்தின்படி இருக்கிறான். அரசாங்கத்தின் பாதுகாப்பின்படி இருக் கிறான். அரசாங்கத்தின் சலுகையால்தான் அவன் முதலாளியாக வாழமுடிகிறது. ஆகை யால், முதலாளி கூடாது என்றால் அவனைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் மீது திரும்ப வேண்டும். முதலாளிமீது பாய்வதால் பலன் ஏதுமில்லை. முதலாளிமீது போராட்டம் துவக்கி, தொழிற் சங்கங்கள் இந்த அம்பது வருட காலமாகச் சாதித்தது என்ன?

[பொன்மலையில், 27-9-1953-ல் சொற்பொழிவு—‘விடுதலை’ 3-10-1953]

## 8. பாராட்டு

சேரன் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர்களுக்கு முதலீட்டிலும், நிர்வாகத்திலும் பங்கு அளிக்க எடுத்திருக்கிற துணிச்சலான ஒரு திட்டத்தைப் பற்றி அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன், தி. மு. க. அரசாங்கம் சாதித்துவரும் பெரும் மவுனப் புரட்சிகளில் இது சரித்திர சாதனை என்பேன்.

நான் கடந்த நாற்பது ஆண்டு காலமாக இதை என்னுடைய கொள்கையாகக் கூறி வருகிறேன்.

1944-ல் சேலத்தில் நடத்திய மாநாட்டில், ‘இலாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு வேண்டும்; அவர்களுக்கு நிர்வாகத்திலும் உரிமை வேண்டும்’ என்னும்படியாக ஒரு தீர்மானமே நிறைவேற்றி இருக்கிறோம்.

இது ஒன்றுதான் வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்ற எல்லா வகையான கெடுதல் களுக்கும் முடிவான மருந்தாகும்; இது தொழிலாளிகள் நடுவில் கட்டுப்பாட்டு உணர்ச் சியையும் பொறுப்பையும் ஏற்படுத்தும்.

தொழிலாளி வர்க்கத்தை இனி யாரும் சுரண்ட முடியாது.

நம்முடைய சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கும், ஆற்றலும் சொல் திறனும் ஒருங்கே அமைந்த நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கும், என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதேபோல துடிப்பும், திறமையும் வாய்ந்த இளைஞர் நம்முடைய போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு எஸ். இராமச்சந்திரன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

இதுபோன்ற செயற்கரிய காரியத்தை மற்றவர்களும் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

[‘விடுதலை’–பாராட்டுச் செய்தி—5-5-1973]

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

பகுதி IV

# கிளர்ச்சிகள்

படிப்பகம்

www.padippakam.com

# 1. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

## 1. இந்திப் புரட்டு

முதலாவது, இந்தி மொழி என்றால் என்ன? அதற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் என்ன சம்பந்தம்? அதைப் படித்ததினால் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன? என்பவைகளை முதலில் கவனிப்போம்; இந்தி மொழி என்பதை அகில இந்திய மொழியாகக் கருதவேண்டும் என்பதுபற்றிப் பின்னால் யோசிப்போம்.

இந்தி மொழி படித்த மக்களுக்கு அதனால் ஏற்படும் பயன் என்ன? இதுவரை தமிழ் நாட்டில் காங்கிரஸ் பணத்திலிருந்தும், மற்றும் பொதுமக்களிடமிருந்தும் இந்திக்காக செலவு செய்யப்பட்ட பணத்தில் எவ்வளவு பார்ப்பனரல்லாதார்கள் படித்தார்கள்? அதை எதற்கு உபயோகப்படுத்துகின்றார்கள்? என்பவைகளும் கவனிக்கத் தக்கதாகும்.

இந்திமொழி என்பது தமிழ் மக்களுக்கு விரோதமான ஆரிய மொழியாகும். அதிலுள்ள வாசகங்கள் முழுவதும் ஆரியப் புராணங்களும் மூடப் பழக்க வழக்கங்களும் கொண்டனவும் பார்ப்பனர்களின் உயர்வுக்கு ஏற்பட்டனவுமாகும். இந்த நாட்டில் இப்போது சமஸ்கிருதம் இருப்பது போலவும் அது உபயோகப்படுவது போலவும்—இந்தி ஒரு சிறிதும் தேவையில்லாததாகும். அப்படியிருந்தாலும் அது ஏதாவது வடநாட்டுக்குப்போய் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்காவது உதவுமா என்று பார்ப்போமானால், அப்படியும் சொல்லுவதற்கில்லாமல், இதுவரை இந்தி படித்தவர்களில் 100-க்கு 95 பேர் பார்ப்பனர்களே படித்து அந்தப் படிப்பைக்கொண்டு வடநாட்டிற்கு உத்தியோகத்திற்கோ பிச்சைக்கோ சென்று, அதன்மூலம் பார்ப்பனரல்லாதார்களுக்குத் துரோகம் செய்யவே உதவப்பட்டு வருகின்றது. அதற்காகச் சம்பாதித்த பணங்கள் முழுவதும் பார்ப்பன ஆதிக்கத்திலேயே இருந்துவருகின்றது. ஒரு சமயம் பார்ப்பனரல்லாதவர்களும் இந்தி படித்திருப்பதாக வைத்துக்கொண்டாலும் இந்த நாட்டில் அவர்களுக்கு அது என்ன பயனைக் கொடுக்கும்? இதுவரை இந்தி படித்த பார்ப்பனரல்லாதாரில் எவராவது அதனால் இன்ன பிரயோஜனம் அடைந்தார்கள் என்று ஏதாவது ஒரு சின்ன உதாரணமாவது காட்டமுடியுமா?

இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி வேண்டுமானாலும், அல்லது வியாபாரத்திற்கு ஒரு பொதுமொழி வேண்டுமானாலும் ஆங்கில மொழியைத் தேர்ந்தெடுத்து அதை எல்லா மக்களிடையிலும் பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல், வேறுமொழியைப்பற்றி யோசிப்பது முட்டாள்தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும்.

ஆங்கிலம் உலக மொழி; உலக வர்த்தக-விஞ்ஞான மொழி; இந்திய அரசாங்க மொழி; அதுமாத்திரமல்லாமல் மூடப் பழக்க வழக்கமும், பார்ப்பனியமும் இல்லாமல் அவ்வளவும் அடிப்படையான கலைகளை வாசகமாகப் பெற்ற மொழியாகும்.

இவைகள் மாத்திரமல்லாமல், இந்தி, உருது முதலியவற்றுக்குத் தாய்மொழியாக உள்ள துருக்கி மொழிகூட, ஆங்கில மொழிக்கும் ஆங்கில எழுத்துக்கும் மதிப்புக்கொடுத்து தனது நாட்டுத் தாய்மொழியாகிய தன்னையே மாற்றிக்கொண்டது. அன்றியும், நமது பிரிட்டிஷ் அரசாங்கம் உள்ளவரை—மேல்நாடுகளின் வர்த்தக உடன்பாடோ, கலை சம்பந்தமோ, கல்வி சம்பந்தமோ உள்ளவரை—ஆங்கிலம் இல்லாமல் முடியவே முடியாது. இப்படி எல்லாம் இருக்க, இதைச் சற்றும் கவனியாமல் இப்போது தமிழ் நாட்டில் இந்தி மொழி பரப்ப வந்திருப்பதென்பது தற்காலம் தமிழ் நாட்டில் உள்ள உணர்ச்சியை ஒழிக்கச் செய்யும் சூழ்ச்சியேயாகும். ஆதலால், இதற்கு எந்தப் பார்ப்பனரல்லாதாராவது பணம் கொடுத்தோ அல்லது ஆதரித்தோ பேசினாலும் அது பெரிய சமூகத் துரோகமாகும்.

['குடி அரசு'-தலையங்கம்—20-1-1929]

படிப்பகம்

www.padippakam.com



இந்தி என்பது, பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட புரட்டு. இந்தியாவில்
35½ கோடி மக்கள் இருந்தாலும் பல மொழி, மதம், நாகரிகம், நடை, உடை, பாவனைகளாக
இருந்துவருவதை யாரும் மறுக்கமுடியாது. அப்படி இருந்தாலும் மக்களுக்குள் மதத்தின்
பேராலும், சாதியின் பேராலும், மொழியின் பேராலும் போட்டிகள் நடந்துவருவதும்
மறுக்கக் கூடியவை அல்லவென்றே சொல்வோம்.

இந்த நிலைமையிலுள்ள சமூகங்களை—பிரிவினைக்கு ஆதாரமாய் இருப்பன
வற்றைக் கண்டுபிடித்து, அவைகளை ஒழிக்க முயற்சிக்காமல், கண்மூடித்தனமாய்
எல்லோரையும் 'இந்தி' கற்றுக்கொள்ளவேண்டுமென்று அரசியலின் பேரால் நிர்ப்பந்திப்
பது எப்படி ஒழுங்காகும்? 'இந்தி' என்பது அனேகமாக வடமொழியின் சார்போ அல்லது
திரிபோ ஆகும். இந்த நாட்டில் ஆரியர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வடமொழிக்கு
உயர்வுகொடுக்கப் பலவழிகளிலும் சூழ்ச்சி செய்து, உலக வாழ்க்கையில் ஒரு ஒடிந்துபோன
குண்டூசிக்குப் பயன்படாத மொழியாகிய அவ் வடமொழிக்கு எவ்வளவு பணம்
செலவழிக்கப் பட்டுவருகின்றது என்பது வெகுநாட்களாகத் தமிழ்மக்கள் கவனித்துவரும்
சங்கதியாகும். இப்போது மறைமுகமாய் வடமொழியை ஆதரிக்கவும், ஆரிய நாகரிகம்,
சமயக் கொள்கை ஆகியவைகளை நிலை நிறுத்தவும், இந்தியை அரசியல் விஷயமாக ஆக்கி,
அதைக் கதரைப்போல்—ஏன், கதரைவிட அதிகமாக ஒவ்வொருவருக்குள்ளும் புகுத்தப்
பார்ப்பது, எவ்வளவு வஞ்சகமான காரியம் என்பதை நமது 'சோணகிரிகள்' அனேகர்
இன்னும் உணரவே இல்லை. தமிழ்ப் பண்டிதர்கள் சாம்பலையும் மண்ணையும் குழைத்துச்
சூடுபோட்டது போல் மேலெல்லாம் தீட்டிக்கொண்டு—'சிவ, சிவ, சிவ' என்பதற்கும், 'ராம,
ராம' என்பதற்கும் உதவுவார்களே தவிர, மற்றபடி நமது மக்கள்மீது, அனாவசியமான ஒரு
மொழி—சூழ்ச்சித் திறத்தால் சுமத்தப்படுகின்றதே என்கின்ற அறிவும் கவலையும்
அவர்கட்குச் சிறிதும் கிடையாது என்றே சொல்லவேண்டி யிருக்கின்றது. இன்றையத்
தினம் இந்திய மக்களுக்கு அவரவர்கள் சொந்தமொழி தவிர வேறுமொழி தெரியவேண்டு
மானால், அது ஆங்கிலமொழி என்றே நான் தைரியமாகச் சொல்லுவேன்.

'உலகமே தங்கள் கிராமந்தான்' என்று எண்ணிக்கொண்டிருந்த காலம் மலையேறி,
இப்போது நிலப் பரப்பு, நீர்ப் பரப்பு, முழுவதும் தெரிந்து—200 கோடி உலக மக்களையும்
சகோதரர்களாகப் பாவித்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்போது, உலகச்
செலாவணி மொழி எதோ, அதை மனிதன் அறியாமல், கபீர்தாஸ் இராமாயணத்தைப்
படிக்கவேண்டிய இந்தி மொழி எதற்குப் படிக்கவேண்டும் என்று கேட்கிறோம்.

தமிழ் மக்களுக்குச் சுயமரியாதை என்பது பல துறைகளிலும் வரவேண்டியிருப்பதை
இந்தியின் ஆதிக்கம் இனியும் அதிகமாய் வலியுறுத்துகின்றது.

தமிழ் மொழியின் பாண்டித்தியம் என்பது இப்போதே அனேகமாய்ப் பார்ப்பனர்
களிடமே இருக்கிறது. தமிழ் மொழியின் சங்கத் தலைவர்கள் பார்ப்பனர்களாய் இருக்
கின்றார்கள் என்பதோடு—இந்தப் பார்ப்பனர்கள் தமிழர்களை இந்தி படிக்கக் கட்டாயப்
படுத்துகின்றார்கள் என்றால், தமிழ் மொழிக்காரர்களின் சுயமரியாதை எவ்வளவு என்பதைத்
தமிழர்களே உணர்வார்களாக!

அரசியல் தத்துவத்தின் பலனாய், தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்
பணத்தில் இந்தி கற்று, இந்தியத் தலைவர்களாகி வடநாட்டுத் தலைவர்களிடமெல்லாம்
பார்ப்பனர்களே போய்க் காரியதரிசிகளாய் அமர்ந்து—அவர்களே தென்னாட்டுப் பிரதிநிதி
களாகி, அவர்களது ஆதிக்கத்திற்கே இந்திய அரசியலைத் திரும்பப் பயன்படுத்திக்கொண்டு
வருகின்றார்கள்.

ஆகவே, அரசியல் துறையிலிருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் அறிவு இருந்தாலும்—
அதைப் பார்ப்பனர்களுக்குத் தக்க விலைக்கு விற்றுவிட்டார்கள் என்றாலும்—அரசியலி



லில்லாத பார்ப்பனரல்லாதார்கள் அறிவையாவது தக்க வழியில் உபயோகித்துத் தகுந்த
ஏற்பாடு செய்யவேண்டாமா?

['குடி அரசு'-தலையங்கம்—10-5-1931]

இந்தி கட்டாயப் பாடமாக ஆகும்பட்சத்தில் கண்டிப்பாகப் பார்ப்பனரல்லாத
பிள்ளைகள் 100-க்கு 90-க்குமேல் தேர்ச்சியில் தவறி விடுவதோடு, பார்ப்பனப் பிள்ளைகள்
100-க்கு 100 தேர்ச்சி பெற உதவியாயிருக்கும். ஆகவே, பார்ப்பனரல்லாத பிள்ளைகளை
மேல் படிப்பில்லாமல் அழுத்தத்தான் இந்தி ஒரு நல்ல சாதனமாகுமே தவிர—மனித வாழ்க்
கைக்கோ அறிவுக்கோ தமிழர்களுக்கு எந்த விதத்திலும் இந்தி இன்றியமையாததாகாது.

கட்டாயப் படிப்பு என்பது நாட்டின், சமூகத்தின் பொதுக் காரியமாகும். அதற்
காகச் செலவு செய்யும் நேரம், பணம், ஊக்கம் ஆகியவைகள்—நாட்டின் பொதுச்
சொத்தாகும். அப்படிப்பட்டதைக் கொண்டுபோய்ப் பாழான—பார்ப்பனச் சூழ்ச்சியான—
முட்டாள் தனத்துக்கு வித்தான காரியத்துக்குப் பயன்படுத்துவது என்றால் யார்தான்
சம்மதிக்கமுடியும்?

'இந்தி படித்தால் துளசிதாஸ் இராமாயணம் படிக்கலாம்' என்கிறார், நமது அக்கிர
கார பிரதம மந்திரி. 'இந்தி படித்தால் வடநாட்டில் சுற்றுப்பயணம் செய்யலாம்' என்கிறார்
நமது விபீஷணாழ்வாரான கல்வி மந்திரி. துளசிதாஸ் இராமாயணம் நமக்கு எதற்கு?
சோற்றுக்கு வழி இல்லாத மக்களுக்கு வடநாட்டுச் சுற்றுப் பிரயாணம் எதற்கு?

கம்ப ராமாயணம் படித்து முட்டாளாகி, துரோகிகளாகி, சுயமரியாதை இழந்து, எதிரி
களின் கால் அலம்பிக் குடித்து வயிறு வளர்க்கும் ஈன மக்கள் போதாது என்று கருதியா—
நமது அக்கிரகார மந்திரி துளசிதாஸ் இராமாயணம் படிக்கச் சொல்கிறார் என்று யோசிக்க
வேண்டி இருக்கிறது! கம்ப ராமாயணத்தின் கருப்பொருள் கண்டுபிடித்துப் படித்த மக்களில்,
100-க்கு 5 பேருக்காவது சுயமரியாதையோ, சமூகப் பற்றோ, தாய்மொழிப் பற்றோ இருக்
கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? ஆரிய இராமாயணத்தை நெருப்பிலிட்டுக்
கொளுத்தவேண்டும் என்று ஆதியில் நாம் சொன்ன காலத்தில்—இராமாயணக் கதை ஆபாச
மானது, வெறுக்கத் தகுந்தது, கீழ் மக்களின் இயற்கையையும் கெட்ட குணங்களையும்
சித்திரிப்பது என்றும்; 'ஆனால், கம்பன் கவித் திறம், தமிழின் கலைத் திறம் முதலியவை,
கம்ப ராமாயணத்தில்—மலத்தில் கிடக்கும் முத்துப்போல் பொதிந்து கிடப்பதால் அதை
எரிக்கக் கூடாது' என்றும் சொன்ன கம்ப ராமாயணக் கருப்பொருள் பண்டிதர்கள்—இன்று
'பக்கா பட்டரான' ஆச்சாரியார் துளசிதாஸ் இராமாயணம் படிப்பதற்காக இந்தியைக்
குழந்தைகளுக்குக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கு வேண்டிய
காரியங்கள் செய்துவரும்போது—மனைவியை மற்றொருவன் சேலையை அவிழ்த்துப் பலாத்
காரம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த வீரர்கள் கதைபோல்—இன்று வாய்திறவாமல்
அடிமையாய், துரோகியாய், தமிழ்மாதுக்கு மாதுரு துரோகியாய் வீற்றிருக்கும் காரணம்
என்ன?

தமிழ் மொழியில் உள்ள புராணங்களின் ஆபாசங்களையும் சூழ்ச்சிகளையும் மக்கள்
சுலபமாய் அறிந்து, ஆரிய மதத்திலிருந்து மக்கள் விலகி அதை இழிவுபடுத்தி வருகிறார்கள்
என்பதை உணர்ந்தே தமிழை ஒழிக்கவும், இந்தியைப் பரப்பவும் பார்ப்பனர் ஆட்சி முயலு
கின்றது. அதை நம் மக்கள் சிறிதும் உணரவில்லை. ஆரிய புராணங்களை—கடவுளின்
தன்மைகளை மனிதன் படித்தால் அவன் மனிதன் என்று சொல்லக்கூடிய நிலையை
அடைய முடியுமா? சிறுவயதிலேயே குழந்தைகளின் பகுத்தறிவையும், ஆராய்ச்சி உணர்ச்சி
யையும் பாழ்படுத்த—அதன் எதிரியை இரத்தத்தில் செலுத்துவதுபோல் அல்லவா இந்தி
படிப்பதின் பலன் ஏற்படக்கூடும்? இன்று மனிதனுக்கு அறிவோ தொழில் திறமையோ
ஏற்பட வேண்டுமானால் ஆங்கில மொழி மூலந்தான் கற்க வசதி இருக்கிறது. நமது தமிழ்ப்
பண்டிதர்கள் இராமாயணத்தில் கருப்பொருள் தேடவும், திருவிளையாடல் புராணத்துக்கு



படிப்பகம்

www.padippakam.com



77-வது உரை எழுதவும், பெரிய புராணத்துக்கு 113-வது உரையும் தத்துவார்த்தமும் எழுதவுந்தான் தகுதியுடையவர்களாகவும்–கவலையுடையவர்களுமாகவே இருக்கின்றார்களே ஒழிய, பகுத்தறிவை அடையத்தக்கதாகவோ, மானத்துடன் பிழைக்க ஒரு தொழில் கற்றுக் கொள்ளத்தக்கதாகவோ இன்று ஒரு புத்தகமும் ஒருவராலும் எழுதப்பட்டதாக இல்லை. சாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகள் இந்தக் கருத்தை மனத்தில் கொண்ட 'பாவத்துக்காக' சற்றேறக்குறைய 100-க்கு 75 தமிழ்ப் பண்டிதர்கள் அடிகளைக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்க முற்பட்டார்கள் என்றால்–தமிழ் படிப்பதனாலாவது, தமிழ்த்தாய் பக்தியினாலாவது மனிதனுக்குச் சுயமரியாதை உணர்ச்சியும், பகுத்தறிவு உணர்ச்சியும் வருமா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இன்று தமிழ் நாட்டில் ஒரு ஆரியப் பார்ப்பனர்—நாட்டை மனு ஆட்சிக்குக்கீழ்க் கொண்டுவரும் முயற்சிக்குச் சூழ்ச்சி கர்த்தர்—தமிழ்மொழியை எப்படிப் பரப்புவது, எப்படி மேன்மைப் படுத்துவது என்பதை விட்டுவிட்டு, குழந்தைகளுக்குக் கட்டாயமாக இந்தி கற்பிக்கவேண்டும், துளசிதாஸ் இராமாயணம், மற்ற புராணம் ஆகியவைகள் மூலம் படிக்கவேண்டும் என்று சொல்லுவது என்றால், இந்த நாட்டில் உண்மைத் தமிழ் இரத்தம் ஓடும் மக்கள் ஒருவர் இருவராவது இருக்கிறார்களா?

['குடி அரசு'-தலையங்கம்—22-8-1937]

இந்தி எதிர்ப்பின் மூலம் தமிழ்மக்கள் வெற்றிபெற வேண்டுமானால், அவன் சரீரத்தில் ஓடும் பார்ப்பன மத உணர்ச்சி இரத்தம் அவ்வளவும் வெளியாக்கப்பட்டுப் புதிய–சுதந்திர அறிவு இரத்தம் பாய்ச்சப் பட்டாக வேண்டும்.

ஏனெனில், பார்ப்பனீயம் இன்று இந்தியைக் தமிழ் மக்களுக்குள் கட்டாயமாகப் புகுத்தவேண்டும் என்கின்ற மூர்க்கப் பிடிவாதத்தைக் கொண்டிருப்பதன் உண்மைக் கருத்து என்னவென்றால், அரசியலுக்கு அல்ல; பொருளியலுக்காக அல்ல; அல்லது பார்ப்பனர்களுக்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக அல்ல. உண்மையான காரணம் என்னவென்றால், இன்று தமிழ் மக்கள் பெரும்பாலோருக்குள் ஏற்பட்ட சுயமரியாதை உணர்ச்சியால் ஆட்டம் கொடுத்திருக்கும் பார்ப்பனீய மத உணர்ச்சியைத் தமிழ் மக்களுக்குள் மறுபடியும் சரியானபடி புகுத்தி—அதைக் கெட்டிப் படுத்தி—பார்ப்பனீயத்துக்குத் தமிழ் மக்களைப் புராணகாலம்போல நிரந்தரமாய் அடிமை யாக்குவதற்காகவேயாகும். அதனால்தான், சோழவந்தான் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அதன் தலைவர், 'இந்தியைக் கட்டாயப் பாடமாக ஆக்கப்படுவதை ஒழித்தால் போதாது. இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்பதற்கான உள் காரணங்களை ஒழிக்க வேண்டும்' என்று கூறி இருக்கிறார்.

ஆதலால், 'இந்திப் போர்' தமிழ் மக்களுக்கு ஒரு கிடைத்தற்கரிய 'பாக்கியம்' என்றே ஒவ்வொரு தமிழ் மகனும் கருதவேண்டும். அது போன்ற ஒரு பயனளிக்கத்தக்க போராட்டம் இனி சுலபத்தில் ஏற்படும் என்று எந்தத் தமிழ் மகனும் இலேசில் கருத முடியாது என்பதோடு, இது அவ்வளவு சுலபமானதும், அவ்வளவு பெரிய பயனை அளிக்கக் கூடியதுமான ஒரு அரும் பெரும் போராட்டமாகும்.

['குடி அரசு'-தலையங்கம்—15-5-1938]

நான் இந்தியை 1924, 1925 முதலே எதிர்த்து வருகிறேன். அதற்கு ஆதாரம் 'குடி அரசு' பத்திரிகையில் பார்க்கலாம். இன்றைய இந்தி எதிர்ப்புத் தோழர்களும் மற்றும் அனேகரும் வெகு நாட்களாகவே தமிழ்நாட்டிற்கு இந்தி ஏன் என்று எதிர்த்து வந்திருக் கிறார்கள்.

இந்தி என்றால் பார்ப்பன மொழி என்றுதான் அர்த்தம். 'டிக்ஷனரியை'ப் பாருங்கள்! பார்ப்பன மொழியை, பார்ப்பனரல்லாதாருக்குக் கட்டாயமாகப் புகுத்தினால் பார்ப்பனரல்லாதாருக்கு வீரமும், அறிவும், மானமும் இருந்தால் ஒப்புக்கொள்ள முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.



[சென்னையில், 25-6-1938-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 10-7-1938]

## 2. பொதுமொழி இருந்ததா?

தலைவரவர்களே! தோழர்களே!

இந்தி மொழி தமிழ் நாட்டில் எப்போது இருந்தது? பம்பாயில் எப்போது இருந்தது? வங்காளத்தில் எப்போது இருந்தது? இந்தியா 56 தேசமாய் இருந்தபோது 56 மொழிகளின் பேரால்தானே தேசமாய் இருந்தது? அப்போதும் மொத்தத்தில் 56 மொழிகள் இருந் திருக்கும். நாளாக நாளாக ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தின்மீது ஆதிக்கம் செலுத்தும் போதுதான் அன்னிய மொழி புகுத்தப்பட்டுவிடுகிறது. அந்த முறையிலேயே இன்று இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்தப் பார்ப்பது தமிழனல்லாத அன்னிய வகுப்பான் இன்று தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றுவிட்டதினாலேயே ஒழிய வேறில்லை.

ஒரு பொது மொழி தேர்ந்தெடுக்க மெஜாரிட்டி பலமே போதுமானதாகுமா? மொழி எதற்காக வேண்டும்? பேசுவதற்கு மாத்திரம்தானா? புதிதாக ஒரு மொழியைத் தேர்ந் தெடுப்பதினால் அந்த மொழி பழையது என்றோ, வெகுபேர் பேசுகிறார்கள் என்றோ காரணம் சொல்லித் தெரிந்தெடுப்பது அறிவுடைமையாகாது. அந்த மொழியால் தேச மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன என்று பார்க்கவேண்டும். புது அறிவு உண்டாகுமா? ஆராய்ச்சிக்குப் பயன்படுமா? முற்போக்கிற்கும் நாகரிகத்துக்கும் பயன்படுமா? சீர்திருத்தத் திற்கு ஏற்றதா, என்றெல்லாம் பார்க்கவேண்டாமா? இவர்கள் சொல்லும் 'இந்தி' எதற்காகப் பயன்படும்? தோழர் இராஜகோபாலாச்சாரியாரும்—அதாவது இந்தியைப் பொதுமொழி ஆக்கவேண்டும் என்று சொல்கிறவரும் அவரது சகாக்களும், 'இந்தியால் துளசிதாஸ் இராமா யணம் படிக்கலாம், சமஸ்கிருதம் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம், இந்துமத சாஸ்திரம் உணரலாம்' என்றெல்லாம் சொல்லுகின்றனர். ஆகவே, இந்தி மூலம் மோட்சத்திற்குப் போவதற்கு அனுகூலமாக—ஆத்மார்த்த விஷயங்கள் என்பதற்கு அனுகூலமாகக் காரணம் சொல்லுகிறார்களே ஒழிய, இந்த உலக வழிக்கான காரணம் எதுவும் இந்தியில் இருப்பதாகச் சொல்லவே இல்லை. இராமாயணத்திலும், பாரதத்திலும், 'ஆகாயன விமானம்' இருக் கிறது; ஆனால், அது மந்திர சக்தியில் ஓடி இருக்கிறது. இங்கிலீஷில் 'ஆகாய விமானம்' இருக்கிறது; அது இயந்திர சக்தியில் ஓடுகிறது. நமக்கு எதுவேண்டும்? மந்திர சக்தியா? இயந்திர சக்தியா?

[ஈரோட்டில், 19-9-1937-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 26-9-1937]

## 3. இந்தி–இந்தியப் பொதுமொழியா?

இம் மாகாணத்திலுள்ள 600 உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் இந்தியை இஷ்டப் பாடமாக வைப்பதாக, காங்கிரஸ் சர்க்கார் முடிவு செய்துவிட்டனர். தோழர் காந்தியார் தமது தினசரி வழிபாட்டுக் கூட்டங்களில் இந்தியிலேயே பேசுகிறார்! தோழர் நேரு மந்திரி பதவி ஏற்றவுடன், முதன்முதலில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இந்தியிலேயே பேசினாராம்!

இந்தியை இந்தியாவின் பொதுமொழியாக ஆக்குவதற்காகக் காங்கிரஸ் கட்சி முனைந்து நிற்கிறது. இதற்காகத் 'தேசபக்தி' உணர்ச்சியையும், 'மகாத்மா' தன்மை யையும் மூலதனமாக வைத்துப் பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது.

மாகாணங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு, மாகாண சுயாட்சி முறையும் ஏற்படுவது நிச்சயமாயிருக்கும்போது, 'இந்தியாவுக்குப் பொதுமொழி ஒன்று அவசியந்

படிப்பகம்

www.padippakam.com



தான்' என்பதே விவாதத்திற்குரிய விஷயம். தென்னிந்தியாவுக்கு வியாபாரத்திற்கும், வேறு வேலைகளுக்கும் வருகின்ற வடநாட்டார் எவ்வாறு தென்னிந்திய மொழிகளைக் கற்றுக்கொள்கிறார்களோ அதேபோல், வடநாட்டுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய திராவிடர்களும், அங்கே வேலைக்குச் செல்ல வேண்டியவர்களும் இந்தியைக் கற்றுக்கொண்டாலே போதும்.

இதைத்தவிர, உலக மொழியாகிய ஆங்கிலத்தை அறவே ஒழிப்பதென்பது முடியவே முடியாது. அப்படி ஒழித்தால், நாம் உலகிலேயே மிகப்.பிற்போக்கான மனித சமுதாயமாகி விடுவோம் என்பது முக்காலும் உறுதி.

ஏனெனில், உலகில் சுமார் 26 கோடி மக்கள், அதாவது உலக மக்களில் எட்டில் ஒரு பங்குப் பேர் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர்; உலகிலுள்ள பத்திரிகைகளில் சரிபாதிக்கு மேற்பட்டவை ஆங்கிலத்தில் வெளிவருகின்றன; உலகிலுள்ள ரேடியோ நிலையங்களில் 5-ல் 3 பங்குக்குமேல் ஆங்கிலத்தில் செய்திகள் ஒலிபரப்பப் படுகின்றன. இதைத்தவிர, ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிராத பல இலட்சக் கணக்கான மக்கள் அறிவு, ஆராய்ச்சி, இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் விரைவில் முன்னேறுவதற்காக ஆங்கிலத்தைப் பயின்றுவருகின்றனர்.

எனவே, ஆங்கிலத்தை அறவே புறக்கணிக்க முடியாதென்பது நிச்சயம். உலக மொழியாகிய ஆங்கிலத்துடன் இந்தியப் பொதுமொழி என்று கூறப்படும் இந்தியையும் கற்றுக்கொண்டு, அவர்கள் தாய்மொழியையும் கற்கவேண்டுமென்றால், மொழிகளைத் தவிர்த்த, இதர கலை நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்து வாழ்க்கைக்குப் பயன்படுத்துவது முடியக்கூடிய காரியமா? யோசித்துப் பாருங்கள்!

அதுமட்டுமல்ல; இந்தி இந்தியாவின் பொது மொழியென்பதை 10 கோடி முஸ்லிம்கள் ஒப்புக்கொள்வதில்லை. உருது மொழி இந் நாட்டில் ஏற்பட்டு 1000-ஆண்டுகள் ஆகி விட்டன. இதை ஒழிப்பதற்காகத் தோழர் காந்தியாரும், பிறரும் புகுத்த முயற்சிக்கும் இந்தி அல்லது இந்துஸ்தானி 19-வது நூற்றாண்டுக்கு முன்பு இந்தியாவில் இருந்ததே இல்லை. கல்கத்தாவிலுள்ள போர்ட் வில்லியம் கல்லூரியைத் தொடங்கியவர்கள்—உருது வுக்கு எதிராக உண்டாக்கிய மொழியே 'இந்தி' ஆகும்.

இந்தியாவின் ஒரு பகுதியில் பேசப்படும் இந்தி—மற்றொரு பகுதியிலுள்ள மக்களுக்குப் புரிவதில்லை. அய்க்கிய மாகாணத்தில் தவிர, வேறெந்த மாகாணத்திலும் பெரும்பான்மை மக்கள் இந்தி பேசுவதேயில்லை. அங்குங்கூட 70 இலட்சம் முஸ்லிம்கள் 'இந்துஸ்தானி' பேசுகிறார்களே தவிர, 'இந்தி' பேசுவதில்லை. 'மேற்கு இந்தி', 'கிழக்கு இந்தி', 'பிகாரி' ஆகிய மொழிகளையெல்லாம் இந்தி என்ற பிரிவில் சேர்த்தால் கூட பிகார், ஒரிஸ்ஸா, டில்லி, அய்க்கிய மாகாணம்—ஆகிய பகுதிகளைத்தவிர இதர மாகாணங்களில் இந்தி பேசுகிறவர்களின் தொகை மிகமிக அற்பமானது என்று ஜனகணித அறிக்கையில் கூறியிருப்பதை இந்துஸ்தானியர்கள் உணரவேண்டும்.

பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், வங்காளம் ஆகிய மாகாணங்களில் ஆயிரத்தில் ஒருவர்கூட இந்தி பேசுவதில்லை. அஸ்ஸாமில் 100-க்கு 3 பேரும், பம்பாயில் 100-க்கு 2 பேரும் மத்திய மாகாணத்தில் 100-க்கு 20 பேருமே இந்தி பேசுகின்றனர். இன்னும் கேளுங்கள். வங்காளத்தில் 92 சதவிகித மக்கள் வங்காள மொழியைப் பேசு கின்றனர்; பஞ்சாப்பில் 100-க்கு 77 பேர்கள் பஞ்சாபி மொழியைத் தாய் மொழியாகப் பேசு கின்றனர். நம் மாகாணத்திலோ 100-க்கு 40 பேர் தமிழையும், 100-க்கு 38 பேர் தெலுங் கையும் தாய் மொழிகளாகப் பேசுகின்றனர். பம்பாய் மாகாணத்தில் 42 சதவிகிதம் மக்கள் மராத்தி பேசுகின்றனர்; 19 சதவிகிதம் குஜராத்தி பேசுகின்றனர்; 13 சதவிகிதம் 'சிந்தி' மொழி பேசுகின்றனர்; 12 சதவிகிதம் கன்னடம் பேசுகின்றனர்.



ஆகவே, இலக்கியத் துறையில் இந்தியையோ, தோழர் காந்தியாரின் புதுப் பெயரைக் கொண்ட 'இந்துஸ்தானியையோ' தாய் மொழியாகக் கொள்ளக் கூடியவர்கள் இந்தியாவில் எத்தனை ஆயிரம் பேர் இருக்க முடியும் என்பதை வாசகர்களே முடிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

இந்த நிலைமையில் வங்காளிகளும், பஞ்சாபியரும், பம்பாய் மாகாணத்தாரும் 'இந்தி'யைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கும்போது, இந்த மாகாணத்தில்மட்டும் இந்தியின் மீது தனிக் காதல் பிறக்கக் காரணமென்ன? கவனியுங்கள்!

திராவிடர்களின் ஏமாந்த தனமும், இங்குள்ள காங்கிரஸ்காரரின் வடநாட்டு அடிமைப் புத்தியும் ஒரு காரணம். காங்கிரஸ் இயக்கத்தை இங்கு நடத்திவரும் ஆரியர், 'இந்தி'யை நுழைப்பதன்மூலம், அதன் மூலமொழியாகிய சமஸ்கிருதத்தைப் பிழைக்கவைக்கலாம் (அதாவது தமிழைக் கொல்லலாம்) என்று கொண்டிருக்கும் ஆசை மற்றொரு காரணம்.

ஆகவே, இந்தியின் பெயரால் என்னென்ன பொய்க் கணக்குகள் கூறப்படுகின்றன என்பதையும்; காங்கிரசிலுள்ள திராவிடத் தோழர்கள் தோழர் காந்தியின் ஏமாற்றுப் புள்ளிகளைக் கண்டு மயங்கி விடக்கூடாது என்பதையும் வற்புறுத்துவதற்காகவே இதை எழுதுகிறோம்.

['விடுதலை'–தலையங்கம்—20-9-1946]

## 4. வடவர் மொழி நமக்கு வேண்டாம்

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

முற்காலப் புலவர்களுக்கும், இக்காலப் புலவர்களுக்கும் இடையே கால மாறுதலால் எவ்வளவோ வேற்றுமைகளைக் காண்கிறோம். எங்களைப் பொறுத்தவரை அல்லது எங்களது இயக்கத்தைப் பொறுத்தவரை பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் புலவர்கள் என்ன கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் கூறத் தேவையில்லை. இங்கு நான் பேசும் இதே சமயத்தில் முற்காலப் புலவர்களா யிருப்பார்களேயானால் நேரடியாக எழுந்து நின்று சபிக்காவிட்டாலும் மனத்துக்குள்ளாகவாவது—'இவன் நாச மாகப் போகமாட்டானா!' என்றுதான் வைவார்கள். அது அவர்கள் குற்றமல்ல. அக்கால நிலையும், அவரவர்கள் மனத்திலும், புத்தியிலும் புகுத்தப்பட்ட பொது அறிவும்தான் காரணம்.

ஆனால், இக்காலத் தமிழ் ஆசிரியர்கள், பெரும்பாலும் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு ஒத்து நடப்பவர்கள். இன்னும் கூறவேண்டுமானால், இப் புலவர்கள் 100-க்கு 90 பேர்கள் சுயமரியாதை இயக்க உணர்ச்சி கொண்டவர்கள் என்றும் கூறுவேன். அந்த நிலைக்குத் தமிழாசிரியர்களின் தொண்டு மேலும் மேலும் வளர்ந்திருக்கிறது. இனி இவர்கள் ஆங்கிலப் புலவர்கள் ஷேக்ஸ்பியர், பெர்னாட் ஷா ஆகியோர் போல் புத்துலகைச் சிருஷ்டிப்பார்கள் என்பதில் எனக்கு அய்யமில்லை. என் வாழ்நாளில் இதுவும் ஒரு அற்புதமாகும்.

இந்தியால் தமிழ் கெட்டுவிடும் என்றே நான் வருத்தப்படவில்லை. இந்தியால் மட்டுமல்ல; மற்றும் வேறெந்த மொழியாலும் நமது மொழியைப் பொறுத்தவரை கெட்டு விடாது. ஆனால், இந்தியால் நமது கலாச்சாரம் அடியோடு அழிந்துவிடும். இப்போதே, வடமொழி நம்நாட்டில் புகுந்து, நமது கலாச்சாரம் எவ்வளவு கெட்டுவிட்டது! அதற்காகவே, நாம் இந்தியை எதிர்த்துப் போராடவேண்டி ஏற்பட்டது. ஒரு மொழி ஒரு மக்களிடையில் புகுந்தால், கண்டிப்பாய் அதற்கு நல்ல பலனோ, கெட்ட பலனோ உண்டு. தமிழ்ப் புலவர்கள் தமிழைச் சாகாமல் [illegible] இனி இருப்பதைவிட, தமிழை வளர்க்கும் தொண்டில் ஈடுபட [illegible] தமிழை வளர்ப்பதென்றால், புராணக் கதைகளைப் பிரச்சாரம் செய்வதல்ல; [illegible]வற்றை மக்களுக்குப் போதிப்பதல்ல, தமிழ்

படிப்பகம்

www.padippakam.com



மொழியை விஞ்ஞானத் துறையில் புகுத்தி, தமிழ்மொழி கற்பதின் மூலமாகப் புதிய உலகைக் காணும் வழிவகுத்தல் வேண்டும். இன்று உலகில் அவ்விதத் தன்மையுடைய மொழி நமக்கு ஆங்கிலம் ஒன்றைத் தவிர வேறில்லை என்றே கூறுவேன்.

காலையில் நான் இம் மாநாட்டுத் தலைவரை ஆதரித்துப் பேசுகையில், 'தமிழை விட ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கினால் அதற்கு ஓட்டுக் கொடுப்பேன்' என்று கூறினேன். சிலர் அதைப்பற்றித் தவறாகவும் எண்ணியிருப்பார்கள். குறிப்பாக ம. பொ. சிவஞானம் அவர்கள், 'பெரியார் மந்திரியானால் அவ்விதம் செய்யமாட்டார்; ஏதோ பேச்சுக்கு அவ்வாறு கூறினார்' என்று தனது அதிருப்தியைக் காட்டினார். நான் இன்னும் கூறுகிறேன்; ஆங்கிலத்தை நாம் வெறுக்கும் புத்தியை வளர்ப்போமேயானால் விரைவில் நாம் என்றுமே உண்மை விடுதலையடைய முடியாத அடிமைகளாகவே இருக்க நேரிடும்.

ஆங்கிலம், ஆங்கிலப் பண்பு இல்லாவிட்டால் அரசியல் விடுதலை ஏது? மந்திரிகள் ஏது? இன்றைய விஞ்ஞான வளர்ச்சி, ஞானம், அற்புத அதிசயங்கள், அனுபவங்கள் ஏது? இதை இன்று மந்திரிகள் உணர்ந்து ஆங்கிலத்தைத் திரும்பவும் சேர்த்துக்கொண்டார்கள். சென்னைக்குவந்து திரும்பிச் சென்ற பண்டித நேரு அவர்களும் ஆங்கிலத்தின் அவசியத்தையும் அதனால் பல நன்மைகளை எதிர்காலத்தில் அடைய இருப்பதால் அதை வெறுக்கும் மனப்பான்மை கூடாதென்பதையும் பம்பாய் மந்திரிகளுக்கே உபதேசம் செய்திருக்கிறார். வடநாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கு இந்தப் புத்தி. ஆனால் நம் நாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கோ எனின்—அதற்கு நேர்மாறான பழைய விரும்பிகளாயிருக்கின்றனர். இது ஒழுங்காகுமா என்று கேட்கிறேன். நாம் நம் நாட்டைவிட்டு வடக்கே போனால் மலைப் பிரதேசம்தான் காணவேண்டும்; காட்டுமிராண்டித்தனம்தான் கற்க வேண்டும். ஆனதால், நாம் கற்றுக்கொள்ள ஏதாவது உண்டு என்றால், அது நமது மேற்கிலும், கிழக்கிலும்தான் உண்டு. ஆங்கில மோகத்தால் நான் அதை ஆதரிக்கவில்லை. அவ்விதமானால், ஆங்கிலத்தையே வெறுக்கும் வீரர்களான பண்டிதர் போன்றோர் இன்றைய நிலையிலும் ஆங்கிலத்தின் மேன்மையை ஏன் எடுத்துக் கூறவேண்டும்? அதுமட்டுமல்ல, சென்னை அரசியலார்தான் ஆங்கிலத்திற்கு நான்கு பீரியட் (Period) என்று ஏன் ஒதுக்கவேண்டும்? இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தை வெறுத்த அவிநாசியார் இன்றும் ஏன் அதை ஆலிங்கனம் செய்யவேண்டும்? இது ஆங்கிலத்தின் மேன்மையை உணர்ந்ததாலல்லவா?

ஆங்கிலம் உலகமொழி என்பதை யாவரும் ஒப்புக்கொண்டாகிவிட்டது. 150 மைல் கடற்கரையுள்ள நாட்டினராகிய நாம்—உலக மொழியைக் கற்று ஏற்கவும் தகுதியும், அவசியமும் உடையவர்கள் அல்லவா? எனவே, நான் ஆங்கில மொழியின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்திக் கூறுவதைப் பழைமை விரும்பிகளான காங்கிரசார் தவறாகக் கருதுவதில் அதிசயமில்லை. அதனால் நான் தமிழ்மொழியை இகழ்வதாகவும் கருதக்கூடாது. ஆங்கிலத்தில் விஞ்ஞான அறிவு அறவே கலந்துவிட்டது; புதிய உலகுக்கான வழிவகைகள் அதில்தான் மலிந்து கிடக்கின்றன. இதை எவரும் மறுக்கமுடியாது. ஆங்கில ஏகாதிபத்திய முறையை நாம் வெறுக்கும் மனப்பான்மை கொண்டிருந்தோமேயன்றி, ஆங்கிலமொழியை வெறுப்பதென்பதல்ல. வடநாட்டு இந்திமொழியைக் கூட நாம் வெறுப்பது—வடநாட்டவர்களின் ஆதிக்கம் மீதுள்ள வெறுப்பால் என்று எவரும் கருதக்கூடாது. அம்மொழியிலிருந்து மக்களின் நல்வாழ்வுக்காகத் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு சிறு எடுத்துக்காட்டாகிலும்—தமிழில் இல்லாத எதையாகிலும் இந்தியில் காட்டமுடியுமா? கூறமுடியுமா? நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், காங்கிரஸ் ஏடுகள்—'இத்தனை காலம் ஆங்கில மொழிக்கு அடிமையாக இருந்து வந்த வீரர்கள், இன்று இந்தியை எதிர்க்கிறார்கள்—வெட்கமற்றவர்கள்' என்று எழுதி என்னைக் கேலி செய்தனர். அதற்காக இதைச் சொல்லுகிறேன். நாம் ஆங்கிலம் கற்காவிட்டால் உலக மக்களோடு கலந்து வாழ முடியுமா? ஏன்? அம்



மொழியின் ஆற்றல் அவ்வளவு! ஆங்கிலம் கற்றதினால்—பல நிபுணர்கள், அறிஞர்கள் புத்துலகச் சிற்பிகள் தோன்றினார்கள். நாம் சரித்திர வாயிலாக இன்றும் நேரடியாகக் காண்கிறோம். ஆனால், இந்தி மொழி கற்றவர்களில் எவர் அறிஞராய்-முற்போக்குடையோராய்த் திகழ்கின்றனர் என்று கேட்கிறேன். மத வெறி பிடித்த பழைமை விரும்பிகளாகத்தான் இருக்கிறார்களேயன்றி வேறில்லை. இன்னும் கூறவேண்டுமானால், அம்மொழி காந்தியாரைக் கொன்ற கோட்ஸேக்களைத்தான் உற்பத்தி செய்திருக்கிறது. நான் ஒரு மொழியை வெறுப்பதோ, வரவேற்பதோ, அந்தந்த நாட்டுக்காரன் என்ற உணர்ச்சியாலல்ல. அம் மொழியைக் கற்றால் மக்கள் சமுதாயத்திற்கு என்ன பலன் ஏற்படும்; என்ன இலாபம் கிடைக்கும் என்பதையே முக்கியமாகக் கருதுபவன். நான் ஒரு பகுத்தறிவு வாதி; நிபந்தனையற்ற முற்போக்கு வாதி. அந்த நிலையிலிருந்துதான் நான் ஆங்கிலத்தைப் பற்றி என் உள்ளக் கிடக்கையை ஒளிவு மறைவின்றிக் கூறினேன்; நீங்கள் ஏற்கவேண்டுமென்றல்ல; சிந்திக்க வேண்டும் என்பதற்காக. நம் நாட்டைப் பொறுத்த வரை நம் தமிழ் மொழியையும், இனிப் புலவர் பெருமக்கள், ஆங்கிலப் புலவர்கள்போல், முற்போக்குப் படைத்த அறிவுக்கண் கொண்டு வளர்க்கவேண்டும். மதம், சமுதாயம், நாடு என்பவைகள் பற்றிய பழைமையை மறக்கவேண்டும். பழைமையில் சிக்கிக் கிடக்கும் ஒரு சில பண்டிதர்களுக்கும் இதை நினைவூட்டுகிறேன். பழைமைக்காக நாம் வாழவில்லை. பழமையைத் தேடவோ இறுக்கிப் பிடிக்கவோ ஏற்பட்டதல்ல, நம் அறிவு.

நம் நாடு அமெரிக்கா போல், அய்ரோப்பா போல், ரஷ்யா போல், ஜப்பான் போல் ஆக வேண்டும். ஒருவருக்கு 18 மொழிகள் தெரியும் என்ற பெருமையைவிட, நம் நாட்டு மொழியும், உலக மொழியும் தெரிந்திருந்தாலே போதுமானது என்று நான் கூறுவேன். 18 மொழிகள் பயின்ற பெருமையினால் மக்களுக்கு லாபம் என்ன? அஷ்டாவதானம், சதாவதானம் போல்—படித்தவனுக்குப் பெருமையே தவிர, யாருக்கு லாபம்? சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் இலாபம் என்ன? அதைக் கவனித்தே நாம் மொழி விவகாரங்களில் கவலை செலுத்த வேண்டும். வடநாட்டு மொழியால்தான் இந்நாட்டில் வர்ணம், சாதி, சாதி உயர்வு-தாழ்வு, பெண் அடிமை, திதி, திவசம், கன்னியாதானம், கருமாதி, பூசுரர்-வான்சுரர், மோட்சலோகம்-நரகலோகம் முதலியன உண்டாயின; தமிழினால், ஆங்கிலத்தால் அல்ல. இன்னும் கூறுவேன்: ஆங்கிலத்தில்—வாடி, போடி, வாடா, போடா, டேய்—என்றிருக்கிறதா? நம் தமிழில் மட்டும் ஏன் அவ்வாறு இழித்துக்கூறும் பதங்கள் இருக்கவேண்டும்? ஆங்கிலத்தில் 'தேவடியாள்' என்ற சாதி இருக்கிறதா? பிராமணன்—சூத்திரன் என்ற வார்த்தைகள் இருக்கின்றனவா? 'விபசாரி' என்று ஒன்று இருக்கும். ஆனால், தமிழில் தேவடியாள் முதலிய வார்த்தைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் நாளடைவில் ஒழித்து, தமிழை மேலும் வளர்க்கும் வேலையையே புலவர்கள் செய்தல் வேண்டும். தமிழைக் காப்பாற்றும் வேலையிலேயே நாம் இன்னுமா இருப்பது? அதிலுள்ள பழைமைகளையும், புகுந்த இழிவு, பேதம் கற்பிக்கும் மொழிகளையும் நீக்கி வளர்த்தல் வேண்டாமா? இந்தக் காரியத்தைச் செய்வதைவிட, புலவர்களுக்கு வேறு முக்கிய காரியம் இருக்க முடியுமா? புலவர்கள் மக்களுக்கு வழிகாட்டிகளாக—புதிய உலகை உண்டாக்குபவர்களாக—விஞ்ஞானப் பொக்கிஷங்களாக ஆகவேண்டும். இன்றையப் புலவர்களைக் காணும்போது அவர்கள் இந்நாட்டு மாணிக்கங்களாகக் காணப்படுகிறார்கள். சீக்கிரத்தில் நாடு புலவர்களின் கைக்கு வரலாம் என்று தோன்றுகிறது. தமிழர், ஆந்திரர், கன்னடியர், மலையாளி என்று நமக்குள் பிரிந்து நிற்கும் வேலையைச் சிலர் மேற்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தனிப்பட்ட சுயநலம், பதவிப் பித்து தவிர வேறு எந்த ஆதாரத்தைக்கொண்டு ஆந்திரம், கேரளம், கன்னடத்தைத் தமிழ்நாடு அல்ல என்று கூறுகிறார்கள்? அவ்வாறு கூறுவதற்குச் சிறிதாவது ஆதாரமிருக்கிறதா? மொழித் தத்துவமோ, நாட்டுச் சரித்திரமோ தெரிந்தால்—ஒரு தலையற்ற முண்டம்கூடப் பேதம் காணவோ, கூறவோ முடியாது. இந் நான்கும் தனித் தனியாகப் பிரிந்து நின்றால் தமிழ் நாட்டின் நிலை என்னாகும் என்று சற்றாவது சிந்தித்தார்களா? தெலுங்கு, தமிழ் வெறி - பதவி

படிப்பகம்

www.padippakam.com



வெறியாகுமேயன்றி மக்களின் நன்மைக்காக இதன் மூலம் ஒரு சிறு காரியமும் செய்ய முடியாது. ஆந்திர–கேரள–கர்நாடகத்தை ஆரியம் உட்கொண்டது என்பதை வெளிப் படையாகத் தெரிந்திருந்தும், அதை அவர்களிடமிருந்து மீட்க வகையற்றவர்கள், தமிழர்—தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் என்ற வேற்றுமையை வளர்ப்பதா என்று கேட்கிறேன். 4 கோடி மக்களுக்கு மேற்பட்டவர்கள் பேசிவந்த தமிழ் மொழி, இன்று 2½ கோடிக்கும் கீழாகப் பேசப்பட்டுவருகிறது. இன்று நமக்குள் இவ்வாறே பிரிந்து, பிரிந்து நின்றால், தமிழ்மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கையும் தமிழ் நாட்டின் நிலப் பரப்பும் எங்குபோய் முடியும் என்பதையாவது சிந்தித்துப் பேசுகின்றனரா?

நாடு, மக்கள் குறைந்தால் கவலை இல்லை என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் நம்மைச் சுற்றிலும்—தமிழ்நாட்டைச் சுற்றிலும் நம் எதிரிகளை வைப்பதா? தெற்கும், மேற்கும், வடக்கும் நம் எதிரிகள் நாடு ஆகிவிட்டதா? இதைச் சம்மதிக்கலாமா? எனவே, ஆந்திரமும், கன்னடமும், மலையாளப் பகுதிகளும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவையே யாகும்; மொழிப்படி, சரித்திரப்படிச் சேர்ந்தவையேயாகும். அதாவது, திராவிடநாடு என்றோ, தென்னாடு (தக்ஷிணம்) என்றோ நாம் கூறிவருவதன் கருத்தும் அதுவேயாகும். வடமொழியால் பலவற்றாலும் பிரிந்து அடிமைப்பட்டுள்ள நாம்—தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளி என்ற வேறுபாட்டாலும்—இந்தி மொழி நுழைவாலும் காஷ்மீரப் பார்ப்பனர் ஆட்சிக்கு அடிமைப்படும் இழிந்த தன்மையை அடைதல் கூடாது.

சென்னை யாருடையது என்பதற்கு, பதில்—ஆந்திரம் யாருடையது? கர்நாடகம் யாருடையது? கேரளம் யாருடையது?–என்பதுதான் பதில். வடநாட்டான் ஆதிக்க ஒழிப்பே இந்தி எதிர்ப்புப் போராட்டமாகும். வட நாட்டான் ஆதிக்கத்தில் யார் மந்திரியானாலும், நமக்கும் நம் நாட்டுக்கும் நன்மை ஏற்படாது. சென்னை மந்திரிகள் மீது நமக்கு வெறுப் பில்லை. அம் மந்திரி பதவி மூலம் வட நாட்டுக்கு அடிமைப்பட்டு, நம்மை—நமது நாட்டைச் சீரழிக்கும், காட்டிக் கொடுக்கும் செய்கைமீதே நமக்குள்ள வெறுப்பு. அதுவே இன்றையப் போராட்டம். விளக்கமாகக் கூற வேண்டுமானால்—சென்னை மந்திரி சபையின் அடிமைத் தனத்தை ஒழிக்கவே—வட நாட்டான் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பதிலிருந்து விடுதலை பெறவே இன்று ஆரம்பித்துள்ள அறப் போரே யன்றி, மந்திரிகளை ஒழிப்ப தென்பதல்ல. 'வடநாட்டுச் சுரண்டல் ஒழிப்பு என்றும் சொல்லுவேன்.

[சென்னையில், 14-8-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 15-8-1948]

## 5. இந்தி–தேசிய மொழியா?

முதலாவது, இந்தி தேசிய மொழி என்பதைத் திராவிடர் கழகமும் நானும் அல்லாமல் வேறு யாரும் இதுவரை மறுக்கவே இல்லை என்பதைப் பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். நம்முடைய தேசம் (நாடு) எது? நம் தேச மொழி எது? இந்தி எப்படி நமக்குத் தேசிய மொழியாகும்?

எத்தனையோ மூடர்கள், 'இந்தியா' என்பதை நமது தேசம் என்று கருதிக் கொண் டிருக்கிறார்கள் என்பதோடு வாயாலும் சொல்லுகிறார்கள்.

இந்தியா என்பதையும், 'பல தேசங்கள் (நாடுகள்) சேர்ந்த ஒரு கூட்டு'—அதாவது 'பல தேசங்களை உடைய' என்பதாக இல்லாமல் 'பல தேசங்கள் சேர்ந்த' என்று தான் அரசியல் சட்டமும் கூறுகிறது.

அப்படி இருக்க, இந்த சென்னை தேசத்தை (திராவிட தேசத்தை) எந்த முறையில் இந்தியாவுக்கு உடைய தேசம் என்று சொல்ல முடியும்? சென்னை (திராவிட) தேசத்திற்குத் தனி எல்லை, தனி கலாச்சாரம், தனி மொழி, தனித்து இயங்கிய சரித்திரம் முதலியவைகள் இருக்கும் போது—சென்னை இராஜ்யத்திற்கு இந்தி மொழி எப்படித் தேசிய மொழியாக



இருக்கமுடியும்? எதற்காக சென்னை தேசத்தார் இந்தியைத் தேசிய மொழியாகக் கொள்ள வேண்டியதாகும்?

ஆகவே, யூனியன் ஆட்சியானது சென்னை இராஜ்யத்தைத் தனக்கு நிரந்தர அடிமை யாக்கி வைத்துக்கொண்டு இருப்பதற்காகவும், இந்த இராஜ்யத்தில் அன்னியனைக் கொண்டு வந்து ஏராளமாகக் குடியேற்றி—தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் குடியேறி சுதேசிகளை அடிமையாக நடத்துவதுபோல் நடத்திப் பயன்பெறுவதற்காகவும், செய்யப் படுகிற சூழ்ச்சியே இது. ஆனதினால், இந்தியை எதிர்த்து ஒழிக்கவேண்டியது, ஓட்ட வேண்டியது—சென்னை தேசத்தாருக்கு அவசியமாகிறது. அதற்காகவே முக்கியமாக ஆகஸ்ட் கிளர்ச்சி துவக்கப்படுகிறது.

['விடுதலை'–தலையங்கம்—23-7-1952]

திராவிட நாட்டில் சுமார் 200 ஆண்டுகளாக ஆங்கிலம் 'அரசியல் மொழியாக' இருந்ததே தவிர, ஆங்கிலம் 'தேசிய மொழியாக' ஒருநாளும் இருக்கவில்லை. ஆங்கிலம் அரசியல் மொழியாக இருந்ததற்குக்கூடக் காரணம் என்னவென்றால், ஆங்கில ஆட்சி அன்னிய ஆட்சியாக இருந்ததும், ஆங்கிலேயன் திராவிட நாட்டவன் அல்லாதவனாக இருந்ததுமேயாகும். அதாவது, அன்னியன் ஆட்சியில் அன்னியனுக்கு வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், மொழிச் சாக்கின் மூலம் தன் இஷ்டப்படி ஆட்களைப் பொறுக்கி எடுத்து, தன் இஷ்டப்படி அடிமையாக்கி, அவர்களைக்கொண்டு அன்னிய ஆட்சி நடத்திக்கொள்ளவும் செய்துகொண்ட காரியமாகும்.

இப்போது அன்னியன் 'ஒழிந்துவிட்டான்' என்று ஆகிவிட்டது. இந்த நிலையில் ஒரு நாட்டானுக்கு—ஒரு இராஜ்யத்தானுக்கு (நாடு என்பதையும் இராஜ்யம் என்பதையும் தான் வடமொழியில் தேசம் என்று சொல்லப்படுகிறதே ஒழிய, நாடு வேறு–தேசம் வேறு என்று சொல்லுவதற்குத் தனித் தனிப் பொருள்—அர்த்தம் இல்லை) திராவிட தேசத்தானுக்கு (திராவிட தேசம் என்ற சொல் இராமாயணம், பாரதம், பாகவதம், மனுநூல் முதலியவை களில் இன்றும் காணலாம்) எதற்காகக் கட்டாய மொழியாக—தேசிய மொழியாக இந்தி (அன்னிய மொழி) இருக்கவேண்டும்?

தேசிய மொழி என்றால், 'தேச மொழி' என்றுதானே அர்த்தம்? அன்றியும் திராவிட (சென்னை) தேசத்தானுக்கு அன்னிய தேச மொழியாகிய இந்தி எதற்காக அரசியல் மொழியாக இருக்கவேண்டும்? ஒரு நாடு சுதந்திரமடைந்துவிட்டது; பூரண சுயேச்சை அடைந்துவிட்டது என்றால் அந்த நாட்டில் அன்னிய மொழி தேசிய மொழியாகவும், அன்னிய மொழி அரசியல் மொழியாகவும் இருப்பதுதானா என்று சுயேச்சை சென்னை வாசிகளை, சுயேச்சை திராவிட மக்களைக் கேட்கிறேன்? 'எனது நாடு இந்தியா' என்றால், 'எனது நாட்டு மொழி இந்தி' என்றால்—எனது நாடு திராவிடம், எனது மொழி திராவிட மொழி என்பது என்ன ஆயிற்று? என்ன ஆவது? திராவிடன்–சென்னை இராஜ்யத்தான் நாடு, மொழி அற்ற அவ்வளவு மானங்கெட்டவனா? அவ்வளவு இழிமகனா?

திராவிடம் தனி தேசம். 'இந்திய' உபகண்டத்தின் 56 தேசங்களில் ஒரு தேசமாக 2000 ஆண்டுகளுக்கு முந்திய சரித்திரத்திலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று சொல்லப்படுகிற புரான இதிகாசங்களிலும், மததர்ம நூல்களிலும் சொல்லப்படுவதை இன்றும் காணலாம்.

அது போலவே, இன்றும் மற்றொன்றையும் காணலாம். அது என்னவென்றால், திராவிட மொழி தனிச் செம்மொழி என்பதையும், திராவிட மொழி எந்த மொழியிலும் ஒட்டிச் சார்ந்து இருக்காத ஒரு தனி, தனித்தியங்கும் மொழி என்பதையும் யாரும் மறுக்க முடியாது. அன்றியும், மற்ற தேசத்தார்—ஏன், உலகிலேயே பெரும் பாகத்தார் திராவிட மொழியை ஒட்டவைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது மாத்திரமல்லாமல் உலகிலுள்ள

1686—223

படிப்பகம்

www.padippakam.com



எல்லா மொழி ஆராய்ச்சி வல்லுநர்களும் திராவிட மொழி தனித்த மொழி என்றே முடிவு கட்டி இருக்கிறார்கள். 'பரத கண்டம்' என்பதையே எடுத்துக் கொண்டாலும் அதில் வட மொழியும், வடமொழிச் சார்பு மொழியும் ஒன்று; திராவிட (தென்) மொழியும் தென் மொழிச் சார்பு கொண்ட மொழியும் ஒன்று என்பதாக இரண்டே மொழிகள்தாம் இருந்துவருகின்றன.

ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்களை எடுத்துக்கொண்டாலும் உலகிலேயே இரண்டு தனிப் பிரிவும் சார்பும்தான் உண்டு. அதாவது, திராவிட மொழி எண் பெயர், வட மொழி எண் பெயர். இப்படியாகத் தனிப் பிரிவினையும், தனி வாழ்வும் தனி மூலத் தத்துவ மும் உள்ள திராவிட நாட்டில்—அன்னிய மொழி, ஆதாரமற்ற மொழி–யாருக்குப் பிறந்தது எப்போது பிறந்தது, எதிலிருந்து பிறந்தது, எப்படிப் பிறந்தது என்றுகூடச் சொல்ல முடியாத ஒரு மலைப் பிரதேச மொழியா ஆட்சி புரிவது? அரசியல் மொழி ஆவது? ஒரு லம்பாடி (ஜிப்சி) மொழியா திராவிட தேச (தேசிய) மொழி ஆவது? என்பதைச் சிந்தித்தால், மானமுள்ள, மனிதப் பிறவி என்று தன்னை எண்ணிக்கொண்டு இருக்கிற எவன்தான் ஆகஸ்ட் கிளர்ச்சியை—இந்திப் பெயர் அழிப்பதை அலட்சியமாகக் கருத முடியும்? எவன்தான் குறை சொல்ல முடியும்? எவன்தான் கலந்துகொள்ளாமல் வேடிக்கை பார்க்க முடியும்?

திராவிட நாட்டில் இருக்கும் பார்ப்பனர்கள் அத்தனை பேரும் பித்தலாட்டக் காரர்கள், வஞ்சனைக்காரர்கள்; தமிழுக்கு, தாய்நாட்டு மொழிக்குத் துரோகிகள் என்பதற்கு அவர்கள் 'சுதந்திரம்' வருமுன்பே இந்தியை ஆதரித்ததும், வரவேற்றதும், இந்த நாட்டில் பள்ளிகள் வைத்துப் பரப்பியதும்—அரசியலின் மூலம் இந்திக்கு ஆக்கமும் ஆதரிப்பும் செய்ததான காரியங்களின் மூலமே விளங்கவில்லையா?

ஆச்சாரியார் தன்னைத் தமிழர் 'லிஸ்டில்' சேர்த்துக்கொள்கிறார். அவர் கோஷ்டி பத்திரிகாசிரியர்கள் தங்களைத் தமிழர் கோஷ்டியில் சேர்த்துக்கொள்கிறார்கள். ஒரு காலத்தில், இப்போது அய்க்கோர்ட் ஜட்ஜுகளில் பச்சைப் பார்ப்பனராக இருக்கும் ஜஸ்டிஸ் ஏ. எஸ் பஞ்சாபகேச அய்யர் அவர்கள் என்னைப் பார்த்து, 'நாயக்கரே! நான் ஆரியனா? திராவிடனா? என்னைப் பார்த்துச் சொல்லுங்கள். நீர் என்னையும் ஆரியனில் சேர்த்துக் கொள்ளுகிறீரே!' என்று கேட்டார். காலஞ்சென்ற ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களும் அப்படியே கேட்டார். கல்கி கிருஷ்ணமூர்த்தி முதலிய பார்ப்பன ஆசிரியர்களும், 'தமிழ் பேசுபவர்கள் எல்லோரும் தமிழர்கள்' என்று கிளர்ச்சி துவக்கி, தமிழர் மாநாடு கூட்டினார்கள். இந்தக் கூட்டத்தார்தானே இன்று இந்தியைத் தேசிய (தேச) மொழியாக் கவும், இந்தியை அரசியல் (ஆட்சி) மொழி ஆக்கவும் பாடுபடுகின்றனர்; சூழ்ச்சிகள் பல புரிகின்றனர்; எதிர்ப்புக் கிளர்ச்சியை அடக்க 'அண்டர் கிரவுண்ட்' வேலை செய்கின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும், சோஷியலிஸ்ட் கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும், தமிழ் இலக்கியக் கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும் இன்னும் எந்தக் கட்சியில்—எந்தக் கூட்டத்தில்—எந்த வேஷத்தில் பார்ப்பனர் இருந்தாலும் எல்லோரும், இந்தியைத் தேசமொழியாக, ஆட்சி மொழியாக இருக்க வரவேற்பார்களே ஒழிய—வரவேற் கிறவர்களாக இருக்கிறார்களே ஒழிய எதிர்ப்பவர்களைக் காண்பது அரிது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானாலும், பார்ப்பானுக்கு சென்னை இராஜ்யம்—திராவிட தேசம் சொந்த நாடல்ல, தாய் நாடல்ல என்பதோடு—தமிழ் மொழி சொந்த மொழியல்ல, தாய் மொழியும் அல்ல. அது மாத்திரமல்ல; தமிழை 'நீச பாஷை' என்று சொல்லும் 'மகா பாவி'களும் பார்ப்பனர்களில் இன்றும் உண்டு; அதற்கேற்ற ஆதாரங்களும் உண்டு என்று சொல்லவும் கூசமாட்டேன்.

ஆகவே, இந்தி எதிர்ப்பு ஒரு தேசிய (தேச)ப் போராட்டம்; ஒரு தேசமொழி (தமிழர்)ப் போராட்டம் என்பதைச் சுத்த (கலப்படமற்ற) தமிழ் (திராவிட) மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து தனது கடமையைச் செய்வார்களாக!

['விடுதலை'-தலையங்கம்—24-7-1952]



மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு நாட்டு உணர்ச்சியோ, நாட்டு நினைவோ எப்படி வரும்? நம் பிற்காலச் சந்ததிக்காவது சிறிது நாட்டு உணர்ச்சி ஏற்படும்படி செய்ய வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி சிறிதாவது இருந்தால்தான் முடியும். அன்றியும், சமுதாய இன உணர்ச்சி சிறிதாவது இருக்கவேண்டுமானாலும் மொழி உணர்ச்சி இருந் தால்தான் முடியும்.

உதாரணமாக, இன்று பார்ப்பனர்களுக்கு அவர்கள் எந்த வகுப்பார்களானாலும், சமுதாயத் துறையில் எவ்வளவு பேதம் கொண்டவர்களானாலும் சமஸ்கிருதம் (வடமொழி) என்கின்ற ஒரு மொழி உணர்ச்சியாலேயே அவர்கள் பிரிக்க முடியாத—கட்டுப்பாடான இன உணர்ச்சி உள்ளவர்களாக இருக்கிறார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், ஆரியம் சமயத் துறையில் ஆதிக்கம் பெற்றதாலும் ஆங்கிலம் அரசியல் முதலிய பல துறைகளில் ஆதிக்கம் பெற்றதாலுமே தமிழர்களுக்குள் இன உணர்ச்சி பலப்படவில்லை; குறைந்து வந்துவிட்டது. இப்போது பாக்கி உள்ள துறைகளிலும் இந்தி ஆதிக்கம் பெற்று இந்தி மயமாகிவிட்டால், இந்தியும் ஆட்சிப் பீடம் ஏறிப் பெருமை பெற்றுவிட்டால்—தமிழன் நிலை என்ன ஆகும் என்பதைச் சிந்தியுங்கள்!

['விடுதலை' 25-7-1972]

# 2. இந்தி எதிர்ப்புப் போர்

## 1. இந்தி எதிர்ப்பு ஏன்?

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று இந்தச் சென்னைக் கடற்கரையில் இவ்வளவு பிரம்மாண்டமான கூட்டத்தில் நான் பேச நேர்ந்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தக் கூட்டமானது எனது நண்பர் கனம் ஆச்சாரியார் அவர்கள், தமிழ் மக்கள் மீது பலாத்காரமாய்ச் சுமத்தும் பார்ப்பனப் பாஷையாகிய இந்தியைத் தடுப்பதற்காகக் கூட்டப்பட்ட இந்தி எதிர்ப்புக் கூட்டமாகும் என்பது நீங்கள் அறிந்ததேயாகும். இது தோழர் ஆச்சாரியார் சென்ற வாரத்தில் இதே கடற்கரையில் இந்தியை ஆதரித்துப் பேசு வதற்காக என்று கூட்டப்பட்ட கூட்டத்தில், அதன் தலைவர் தோழர் முத்துரங்க முதலியார் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த மக்களை எழுந்து போகும்படி சொன்னதுபோல்—அதாவது 'இக் கூட்டம் இந்தியை ஆதரிக்கின்றவர்களுக்குமட்டுமே அன்றி ஆதரிக்காதவர் களுக்கு இங்கு வேலையில்லை' என்று சொல்லி, போலீஸ் குதிரைப் படையைவிட்டு கூட்டத் தைக் கலைத்தும் போலீஸ் தடியைக்கொண்டு கூட்டத்தை விரட்டியும் அடித்ததுபோல் இக் கூட்டம் ஒரு சாராருக்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல. இக் கூட்டம் இந்தியை எதிர்ப்பதற்கு உண்டான காரணங்களைச் சொல்லவே கூட்டப்பட்டதானாலும், அன்றையதினம் அந்த (ஆச்சாரியார்) கூட்டத்தில் பேசியவைகளுக்குப் பதில் சொல்லவும், இந்தியை எதிர்ப்பவர் களும், ஆதரிப்பவர்களும் நடுநிலைமைக்காரர்களும் யாவரும் வந்து கேட்கவும், தங்கள் அபிப்பிராயங்களைக் கொடுக்கவும் போடப்பட்ட கூட்டமாகும்.

நாங்கள் இக் கூட்டத்திற்கு உண்மையிலேயே போலீஸ் உதவியையோ, குதிரைப் படை உதவியையோ கோரவில்லை என்றாலும், இது மகா பிரமாண்டமான கூட்டமாயிருப்ப தால் போலீசார் தங்கள் கடமையைச் செய்ய ஒரு சிலர் இங்கு நிற்பதைப் பார்க்கிறேன். அதற்காக நான் நன்றி செலுத்துகிறேன் என்றாலும், சென்னை பார்ப்பனப் பத்திரிகை களும் அவர்களது கூலிப் பத்திரிகைகளும் முதல் மந்திரியார் (ஆச்சாரியார்) கூட்டம் போலீஸ் பந்தோபஸ்தில் நடக்கவேண்டி இருந்ததே என்கின்ற அவமானத்தையும் கேவல நிலைமையையும் போக்கிக்கொள்ள ஒரு நொண்டிச் சாக்கு தேடிக்கொள்வதற்காக நமது

படிப்பகம்

www.padippakam.com



(இந்த) கூட்டமும் ‘போலீஸ் பந்தோபஸ்தில் நடந்தது’ என்று எழுதுவதற்கு இதைப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. போலீஸ் பந்தோபஸ்து இருப்பதை நான் எப்போதும் குற்றங்கூறுவதில்லை. போலீஸ்காரர்கள் நம் உண்மையான காவல்காரர்கள். நம் பணத்தைக் கொண்டே அவர்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஆதலால், நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. ஆனால், கனம் ஆச்சாரி யாரின் வாழ்க்கைக்கு இன்று அவ்வளவு போலீஸ் காவல் தேவை இருப்பதானது, அவரது வாழ்க்கை மிகக் கொடியது என்பதையாவது அல்லது அவர் பொது மக்கள் வெறுப்புக்கும், ஆத்திரத்திற்கும் அதிருப்திக்கும் ஆளாகி வாழ்கிறார் என்பதையாவது காட்டுகிறது.

அன்றியும், தன்னைப் பொதுஜன சேவகன் என்றும் ஜனநாயக முறைப்படிதான் பதவி பெற்றவன் என்றும், தனது எல்லா அக்கிரமும் எதேச்சாதிகாரமும் கொண்ட காரியங் களுக்கு அடிக்கடி சமாதானம் சொல்லி ஏய்க்கப் பார்க்கும் அந்த ஒழுக்கம் கெட்ட காரியத்துக்கு இது ஒரு சரியான புத்தி கற்பிப்பும் ஆகும்.

தோழர்களே! இன்றையதினம் நமது மாகாணத்தில் உள்ள இந்தி எதிர்ப்புக்குக் காரணஸ்தர்களில் நானும், இன்று இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்திருக்கும் தோழர் கலிபுல்லா சாயபுவும் முக்கியஸ்தர்கள் என்றும், நாங்கள் ஏதோ வேறு காரணம் கொண்டு இந்த எதிர்ப் பிரச்சாரம் செய்கின்றோமென்றும் ஆச்சாரியாரும் அவரது சிஷ்யகோடிகளும் பத்திரிகைகளும் கூப்பாடுபோட்டு, மக்களை ஏய்க்கப் பார்க்கின்றார்கள். நான் இந்தியை 1924, 1925-ஆம் வருஷத்திலேயே எதிர்த்திருக்கிறேன். அதற்கு ஆதாரம் ‘குடி அரசு’ பத்திரிகையில் பார்க்கலாம். அப்போது ஆச்சாரியார் எனக்கு முக்கிய நண்பராகவும், தலைவராகவும் கூட இருந்தார் என்று சொல்லலாம். தோழர் கலிபுல்லா சாயபு அவர்கள் ஆச்சாரியார் மந்திரி ஆவதற்கு முன்பே, இந்தி கட்டாயம் ஆகும் முன்பே—‘இந்தி இஷ்டப் பாடமாகக் கூட இருக்கக் கூடாது’ என்று பிரச்சாரம் செய்து, பண்டித ஜவஹர்லாலுடன் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தவர். இன்றைய இந்தி எதிர்ப்புத் தோழர்களில் மற்றும் அனேகரும் வெகுநாளாகவே ‘தமிழ் நாட்டிற்கு இந்தி ஏன்?’ என்று கண்டித்து வந்திருக்கின்றார்கள்.

இந்தி பாஷையைப் பற்றியும், அதன் யோக்கியதையைப் பற்றிம், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் கெடுதியைப் பற்றியும் ஆச்சாரியார் இதைக் கட்டாயமாய்ப் புகுத்தும் சூழ்ச்சியைப் பற்றியும், இந்தி எதிர்ப்பு மேடைகளில் வண்டிவண்டியாய்ப் பேசப்பட் டிருக்கின்றன. இதற்கு ஆச்சாரியாரோ மற்ற அவரது கூலிகளோ, பத்திரிகைகளோ ஏதாவது சமாதானம் சொன்னார்களா, சொல்லுகிறார்களா என்று யோசித்துப் பாருங்கள். நாம் சொல்லும் காரணங்களைக் கூட சென்னைப் பத்திரிகைகள் பல வெளியிடும் கண்ணிய மான குணமில்லாமல் இழி தன்மையில் நடந்துகொள்கின்றன. ஆகவே, இந்த ஒரு காரணமே இந்தியை அயோக்கியத்தனமாகவும் அக்கிரமமாகவும் வஞ்சகப் புத்தியோடும் நம் குழந்தைகளுக்கு ஒரு கூட்டத்தார் புகுத்தப் பார்க்கிறார்கள் என்பதற்குப் போதாதா என்று கேட்கிறேன்.

தோழர்களே! இந்தி கெட்ட பாஷை, சூழ்ச்சி பாஷை என்பதையும்; இந்தியைப் புகுத்தப் பார்ப்பதும் அக்கிரமமென்றும் நாம் ருஜு செய்துவிட்டோம். அந்த ருஜுவை ஆச்சாரியாரும் ஏற்றுக்கொண்டதோடு இந்தியையும் கைவிட்டுவிட்டார் என்கின்ற அளவில் நாம் வெற்றியும் பெற்றுவிட்டோம். நமது கிளர்ச்சி வெற்றியளித்து விட்டதென்கின்ற நற்செய்தியை இன்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். எப்படியென்று கேட்பீர்கள்; கவனமாய்க் கேளுங்கள். ஆச்சாரியார் இந்தியைக் கைவிட்டு ஒரு மாத காலமாகிவிட்டது. அவர் இப்போது எங்கும் இந்தி என்று பேசுவதில்லை; பத்திரிகைகளும் இந்தி என்று எழுதக்கூடாதென்பதாகப் பத்திரிகைகளைக் கேட்டுக்கொண்டார். ஆனால், அதற்கு வேறு பெயர் கொடுத்து – ‘இந்துஸ்தானி’ என்று பேசுகிறார். அவரை ஆதரிக்கும் பத்திரிகை களும் அப்படியே எழுதுகின்றன.



ஆச்சாரியார் உண்மையில் நம் மக்களை சமஸ்கிருதம் படிப்பிக்கச் செய்யவேண்டும் என்றுதான் முதன்முதல் கருதினார். ஆனால், அதற்குத் தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள எதிர்ப்பைக் கண்டு பயந்து, அதற்கு மறுபெயர் கொடுத்து ‘இந்தி’ என்றார். அதை எதிர்த்து தமிழ்மக்கள் கிளர்ச்சி செய்தவுடன் அதை விட்டுவிட்டு, இப்போது ‘இந்துஸ்தானி’ என்கிறார். இதையும் அதே மூச்சில் எதிர்த்தோமானால் இதையும் கைவிட்டு விடுவார் என்பது உறுதி. சூழ்ச்சிக்காரர்களுக்கு மானமும் வீரமும் நேர்மையும் இருக்காது; அவை இருந்தால் சூழ்ச்சி செய்ய அவசியமும் இருக்காது. ஆகையால், நாம் இந்தி போய்விட்டதே என்று எதிர்ப்பைக் கைவிட்டு விடக்கூடாது. இந்துஸ்தானியை ஆச்சாரியார் கைவிட்டு விட்டதாகச் சொன்னாலும் நம்பிவிடக்கூடாது. நமது எதிர்ப்பு தொடர்ந்து இருக்க வேண்டும். நம்மை அறியாமல் நமக்கு எவ்வளவோ கேடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் மக்களுக்குச் சரியாய் விளங்க வேண்டுமானால் ஆச்சாரியார் இன்னும் ஒன்று இரண்டு வருஷத்துக்காவது பதவியில் இருந்து, இந்தியையும் அல்லது இந்துஸ்தானியையும் மாற்றாமல் பிடிவாதமாய் இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். ‘வந்தேமாதர’ப் பாட்டை நிறுத்தி விட்டதுடன் முஸ்லிம்களுக்கு காங்கிரசின் முழுசூழ்ச்சியும் தெரியும்படியான அளவுக்கு நடைபெறவேண்டிய பிரச்சாரம் நின்று விட்டது. முஸ்லிம்களின் கொதிப்பு ஓர் அளவுக்குக் குறைந்து விட்டது. ஆதலால், இந்திச் சூழச்சியை ஆச்சாரியார் நிறுத்தி விட்டால், நம் மக்கள் கிளர்ச்சி அடங்கிவிடுமே என்று உண்மையிலேயே நான் கவலைப்பட வேண்டியவனாக இருக்கிறேன்.

மற்றும், தோழர் ஜெகதீசனின் பட்டினியைப் பற்றிச் சிலர் பேசினார்கள். இம் மாதிரி பட்டினியைப் பற்றிய எனது அபிப்பிராயம் உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். பட்டினியில் எந்தவிதமான ஆத்மார்த்தம் என்பதோ, தெய்வீகம் என்பதோ ஆன தத்துவம் இருக்கிறது என்பதை நான் என்றும் நம்பினதில்லை.

காந்தியார், தான் பட்டினி இருந்த காலத்தில் அதற்கு அவர் சொல்லிக் கொண்ட காரணங்களும் அதற்காக மற்ற மக்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று கட்டாயப்படுத்திய செய்கைகளும் உலகம் அறிந்திருந்தும், தோழர் ஸ்டாலின் பட்டினியைப்பற்றி மிக்க விஷமத்தனமாகக் கொடுத்த அபிப்பிராயத்தைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. இதிலிருந்தாவது பொது ஜனங்களுக்குக் காந்தியாரின் உண்மையான நிலை தெரியச் சந்தர்ப்பம் ஏற்பட்டதே என்பதற்காகவும் இந்தப் பட்டினி வரவேற்கத் தக்கதாகின்றது என்கிறேன்.

மற்றும், உலகில் இறப்பது இயற்கையானாலும் ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் இறந்தே தீரவேண்டியது முடிவே ஆனாலும், தானாகவே பட்டினி கிடப்பதன் மூலம் சாகத் துணிவது என்பது பொதுமக்கள் கவனத்தை இழுக்க மிக்க பயன்படத்தக்கதாய் இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட நிலைமையில், இக் காரியத்துக்காக மனிதத் தன்மைப்படி பரிதாபப்படாவிட்டாலும், இதைக் குறை கூறுவதும், குற்றம் சொல்வதும் சிறிதும் யோக்கியமான காரியம் ஆகாது என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

இந்திக் கட்டாயத்திலிருந்து மக்களை மீள்விப்பதற்காக முயற்சித்த பலர் இதுவரை 100 பேர்கள் வரை சிறைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். பலர் 3 மாதம், 4 மாதம் கடினகாவல் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்; சிலர் மீது 2 வருஷம், 3 வருஷம் தண்டிக்கக் கூடிய சட்டப்படி குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இதுதானா இராம ராஜ்யம் அல்லது தர்ம ராஜ்யம் என்று கேட்கிறேன். இந்த அக்கிரமத்தைச் சகிக்காமல் பார்ப்பனர்களிலேயே பலர் வெளிப்படையாய் ஆச்சாரியார் மீதும் அவரது ஆட்சி மீதும் குறைகூற வந்து விட்டார்கள்.

பம்பாய் ‘சோஷியல் ரிபார்மர்’ பத்திரிகை பார்ப்பனர்களால் மிகவும் விளம்பரப்படுத்தப்பட்ட பத்திரிகையாகும். அதன் பத்திராதிபரும் இந்தியப் பிரதான புருஷர்களில்

படிப்பகம்

www.padippakam.com



ஒருவராய்க் கருதச்செய்யப்பட்டவருமான தோழர் நடராஜ அய்யர் அவர்கள் தனது பத்திரிகையில் 'ஆச்சாரியார் இந்திக் கிளர்ச்சியை நிறுத்த இவ்வளவு பெரிய அடக்கு முறையை ஆரம்பிக்கும்படியான அளவுக்கு ஆத்திரம்கொண்ட ஒரு காரணமே, இந்திக்குச் சரியான எதிர்ப்பு இருக்கிறது என்பதை ருஜூப்படுத்தி விட்டது. இதனால் பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார் துவேஷத்தைக் கிளப்புகிறார். ஆதலால், இனி இதைக் கைவிட்டுவிட வேண்டியதுதான்' என்பதாக எழுதி இருக்கிறார்.

நமது மாகாண அய்க்கோர்ட் ஜட்ஜாயிருந்த தோழர் விஸ்வநாத சாஸ்திரியார், இந்திக் கிளர்ச்சியை அடக்க ஆச்சாரியார் கையாண்டமுறை அக்கிரமமானதென்றும், ஒரு காலத்தில் பொதுஜனப் பிரதிநிதிகள் என்கின்ற முறையில் ஆச்சாரியாராலேயே கண்டிக்கப்பட்ட சட்டத்தைத் தாங்கள் பதவிக்கு வந்தவுடன் பொதுஜனங்கள் மீது பிரயோகிப்பது—மாமியார் உடைத்தால் மண்சட்டி மருமகள் உடைத்தால் பொன்சட்டி—என்று கூறுகிற ஆதிக்கத்தைப் போலிருக்கிறது என்றும் கண்டித்து 'மெயில்' பத்திரிகையில் எழுதி இருக்கிறார். மற்றும் ஆச்சாரியார் ஆட்சியில் ஜெயிலில் செய்யப்படுகிற கொடுமை காதில் கேட்கப் பிடிக்கவில்லை.

இவ்வளவோடு இல்லாமல், காங்கிரஸ்காரர்கள் கூலிக்குச் சில ஆட்களைப்பிடித்து அனுப்பி, இந்திக் கிளர்ச்சி பேரால் வேண்டுமென்றே சிறைபிடிக்கச்செய்து, ஜெயிலுக்கு அனுப்பி மன்னிப்பும், நல்ல நடவடிக்கை ஜாமீனும் எழுதிக்கொடுத்துவிட்டு வெளியில் அழைத்து வருவதன் மூலம், அந்த முயற்சியைக் கேவலமானதாகச் செய்யப் பார்க்கிறார்கள். இந்த வேலையில் காங்கிரசின் பேரால் வயிறு வளர்க்கும் ஆட்கள் மிகத் தீவிரமாய் ஈடுபட்டு இருக்கிறார்கள். இதுவரை சிறைசென்ற 100 பேர்களில் காங்கிரஸ்காரர்களால் அனுப்பப்பட்டவர்களும் 10 பேர்களுக்குமேல் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. மற்ற தொண்டர்களையும் பலவிதமாக நிர்ப்பந்தப்படுத்துவதாகவும் தெரியவருகிறது. எந்தக் காரியம் எப்படி இருந்தாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் பலாத்காரம் ஏற்படக்கூடாது என்பதும், செய்யக்கூடாது என்பதும் எனது கொள்கை. இதை இந்தி எதிர்ப்புத் தொண்டர்களுக்கு மிக வற்புறுத்திக் கூறுகிறேன். பலாத்காரம் ஏற்பட்டால் நான் பிரிந்துகொள்வேன் என்பதையும் கூறிவிடுகிறேன்.

ஆச்சாரியார் இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தி, ஆணவமாகப் பேசிக்கொண்டு வர ஆரம்பித்த பின்பு அவருக்குச் செல்லுமிடங்களில் எல்லாம் பகிஷ்காரம் இருந்து வருகிறதைப் பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே பார்க்கிறேன். இவற்றிற்குக் காரணம் தன்னுடைய அடாதசெய்கை என்பதை மறைத்துக்கொண்டு 'யாரோ சில துவேஷக்காரர்கள் இப்படிச் செய்கிறார்கள்' என்று சொல்லி மக்களை ஏமாற்றப் பார்ப்பது, அவர் தன்னையே ஏமாற்றிக்கொள்ளத்தான் பயன்படப்போகிறது. சிற்சில இடங்களில் கூட்டங்களில் ஏற்பட்ட கலவரங்களையும், செருப்பு முதலியன வீசி எறியப்பட்டன என்பதையும் நான் பலமாக வெறுக்கிறேன். அது கண்டிக்கப்படவேண்டியதேயாகும். ஆனால், 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதுபோல், காந்தியம் மக்களுக்குக் கற்றுக்கொடுத்த பாடமும், காங்கிரஸ்காரர்கள் மற்ற தலைவர்களுக்கும் மந்திரிகளுக்கும் நடத்தின மரியாதையும் இன்று காங்கிரஸ் மந்திரிகள் அடைகிறார்கள். விளைவின் பயன் மிக வலிமை உடையதல்லவா? இது இன்னும் எங்குகொண்டுபோய் விடுமோ என நான் பயப்படாமல் இருக்க முடியவில்லை.

நிற்க, தோழர்களே!

எனக்குப் பிறகு பலர் பேசவேண்டியவர்கள் இருப்பதால், நான் அன்றையக் கடற்கரைக் கூட்டத்தில் தோழர்கள் முத்துரங்க முதலியார், ஆச்சாரியார், சந்தானய்யங்கார் ஆகியவர்கள் பேசிய பேச்சுகளுக்கு மாத்திரம் பதில் சொல்லிவிட்டு நிறுத்திக்கொள்கிறேன்.



1. அன்று, தோழர் முத்துரங்க முதலியார் அக்கூட்டம் இந்தி ஆதரிப்பவர்களுக்கு மாத்திரம் கூட்டப்பட்டது என்று சொன்னார். ஆதரிப்பவர்களுக்கு மாத்திரம் என்றால் அவர்களுக்காக ஒரு கூட்டம் கூட்டுவானேன்? அதைக் கடற்கரையில் கூட்டி அவ்வளவு பந்தோபஸ்து வைப்பானேன்? பத்திரிகைகளில் அக் கூட்டத்தைப்பற்றி விளம்பரம் செய்து திரளான ஜனங்கள் வரும்படி வேண்டுகோள் விடுவானேன்? அவ் வேண்டுகோள்களையும் பதினாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களிலும், 'ஆதரிப்பவர்கள் மாத்திரம் வரலாம்' என்று ஏன் போடவில்லை? என்பவைகளைக் கவனித்தால், இந்தி எதிர்ப்புக்கு ஆச்சாரியாரிடம் சரியான சமாதானம் இல்லை என்பதும், பொதுஜனங்கள் இஷ்டத்திற்கு விரோதமாய்ச் சுயநலம் கொண்டோ எதேச்சாதிகாரம் கொண்டோ இந்தியைப் புகுத்துகிறார்கள் என்பதும் விளங்கவில்லையா என்று கேட்கின்றேன்.

2. சர். கே. வி. ரெட்டியாரும், சர். கிருஷ்ணன் நாயரும், தோழர் கலிபுல்லாவும் தங்கள் நாட்டில் இந்தி எதிர்ப்புச் செய்யாமல் தமிழ்நாட்டில் செய்கிறதால், அதற்கு ஏதோ உள் காரணம் இருப்பதாகத் தோழர் முதலியார் சொன்னாராம். சர். கே. வி. ரெட்டி நாயுடு பேசுவதும் எழுதுவதும் எல்லா நாட்டுக்கும் சேர்ந்துதானே ஒழிய, ஆந்திரர்களை விலக்கவில்லை. சென்னையே ஆந்திராவில் ஒரு பாகம் கொண்டதே என்பது முதலியாருக்குத் தெரியாதா? இதனால் ஆந்திராவில் இக் கிளர்ச்சி இல்லை என்று முதலியார் சொல்லுகிறாரா? ஆந்திராவுக்கு கனம் ரெட்டிநாயுடு போகவில்லை என்றதால் அவர் இந்தி கூடாது என்கின்றதற்குக் கூறும் காரணங்கள் செல்லுபடி அற்றதாகி விடுமா? இதிலிருந்தே தோழர் முத்துரங்க முதலியாருக்கு இந்தியை ஆதரிக்கத் தகுதியான காரணம் இல்லை என்பது விளங்குகிறது.

மற்றும், சர். கிருஷ்ணன் நாயர் அவர்கள் இந்தியை எதிர்த்து மலையாள நாட்டிலிருந்துதான் அறிக்கை விட்டார். அதை எந்த மலையாளியும் மறுக்கவில்லை. தோழர் கலிபுல்லா சாயபு 'தனது நாட்டுக்குப் போய் ஏன் பிரச்சாரம் செய்யவில்லை?' என்று முதலியார் சொல்லுவதிலிருந்து தோழர் முதலியாருக்கு தோழர் கலிபுல்லா சாயபு எந்த நாட்டுக்காரர்—எந்த நாட்டில் கிளர்ச்சி செய்கிறார் என்பதுகூடத் தெரியவில்லை என்று புலப்படுகிறது.

மறைமலை அடிகளும், தோழர் சோமசுந்தர பாரதியாரும் செய்யும் கிளர்ச்சிக்குக் காரணம் 'ஆரிய துவேஷம்' என்று சொன்னாராம். கனம் ஆச்சாரியாரும் இந்தியை எதிர்ப்பவர்களைப்பற்றி இப்படியே சொல்லுகிறார். தமிழரிடையே ஆரிய பாஷையைப் புகுத்துவதும், அது கூடாதென்றால் 'ஆரிய துவேஷம்' என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பதும் என்றால், இது மிக இழிவான சமாதானம் என்றுதான் சொல்வேன். தோழர் மறைமலை அடிகளும், பாரதியாரும் வெகுகாலமாய் ஆட்சேபித்து வந்திருக்கிறார்கள். இதைக் கண்டித்துப் பல புஸ்தகங்கள் போட்டு இருக்கிறார்கள். அன்றியும், இந்த நாட்டுத் தமிழ் மக்களுக்கு 'ஆரிய துவேஷம்' இருப்பது ஓர் அதிசயமா என்று கேட்கின்றேன். ஆரிய மதப்படி தமிழ் மக்கள் எவ்வளவு இழிவானவர்களாகக் கருதப்படக் கூடியவர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். ஒரு சமூகத்தை ஒரு சமூகம் கீழ்ச்சாதி என்றும், அடிமைச் சாதி என்றும் தங்களுக்கு (ஆரியர்களுக்கு) பாடுபட்டுப்போட்டு வாழ வேண்டியவர்கள் என்றும் சொல்லப்படுமானால்—கருதப்படுமானால், சமூகத்துக்குச் சமூகம் துவேஷமில்லாமல் இருக்கமுடியுமா என்று பாருங்கள். தமிழ் மக்களுக்கு ஆரியபாஷை கட்டாயமாய்க் கற்றுக்கொடுத்தால்கூட துவேஷப்படாமல் இருக்கமுடியுமா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். வெள்ளைக்காரர்மீது பார்ப்பனர்கள் குறைகூறி அவர்களை ஓட்ட வேண்டுமென்று கூறியது குற்றமில்லை; துவேஷமில்லை என்று கற்றுக்கொடுத்த இவர்கள் கொடுமையைப் பார்த்து—இவர்கள் செய்கையைக் கண்டிப்பது மட்டும் துவேஷமா என்று கேட்கிறேன். இன்று பார்ப்பன[illegible]த்தும் ராஜ்யபாரம் வெள்ளைக்காரர் ராஜ்ய பாரத்தைவிட ஆயிரம் மடங்கு கொடுமையானதாகவும் எதேச்சாதிகாரமாகவும் இருக்

படிப்பகம்

www.padippakam.com



கிறதே—இதை நாம் சகித்துக்கொண்டிருக்க வேண்டியதுதான் நம் கதியா என்று நான் கேட்கிறேன்.

மற்றும், ஆச்சாரியார், 'இந்தி புகுத்துவதால் தமிழ் கெடாது' என்று மனதறிந்த பித்தலாட்டம் பேசுகிறார். இன்று தமிழ் எங்கே இருக்கிறது? தமிழ்ப் பழக்கவழக்கம், சுதந்திரம், மானம் ஆகியவைகளை உணர்த்தும் தமிழ் வார்த்தைகள் எங்கே? ஒரு தமிழ் மகன் தன் மகளுக்கோ, மகனுக்கோ கலியாணம் செய்யவேண்டுமானால் தமிழ்ச்சொல் எங்கே? தமிழ்க் கருத்தினால்—'வாழ்க்கைத் துணை நலம்' என்பான். ஆனால், ஆரியக் கருத்தில் பேசும்போது 'கல்யாணம்' 'விவாகம்' 'கன்னிகாதானம்' என்கிறான். வார்த்தை வரும்போது கருத்தும் மாறிவிடுகிறது. இதற்குத் தகுந்தபடி புரோகிதம், சடங்கு, செலவு, பார்ப்பான் பிழைக்க வழி ஏற்படுவதல்லாமல்—வாழ்க்கைத்துணை என்பதில் சம உரிமையும், கன்னிகாதானம் என்பதில் ஆண்டான் அடிமைத்தன்மையும் புகுத்தப் பட்டுவிடுகிறது. இம் மாதிரியே ஆரியக் கலப்பால் தமிழின் தன்மை, உரிமை, நேர்மை எல்லாம் கெட்டு, ஆரியருக்குத் தமிழன் அடிமை என்பதுதான் மிஞ்சிவிடுகிறது. அப்படி இருக்கும்போது இனியும் ஆரியப் பாஷையைக் கட்டாயமாக்கினால் என்ன ஆகும்? ஆகையால், இந்தியை ஆச்சாரியார் புகுத்துவது மத உணர்ச்சியால் அல்ல என்பதை நீங்கள் உணரவேண்டும்.

[சென்னை கடற்கரையில், 26-6-1938-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-6-1938]

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகவேண்டி 'நமது' சுயராஜ்ய சர்க்கார் இதுவரை 120 பேர்களை அரஸ்ட் (கைது) செய்து, சுமார் 40 பேர்கள்வரை கிரிமினல் அமெண்ட்மெண்ட் ஆக்ட் 7-3-ஏ படி, 4 மாதம், 6 மாதம் கடினகாவல் சிட்சை கொடுத்துத் தண்டித்து—கேப்பைக் கூழும், களியும் போட்டு, மொட்டை அடித்து, ஜெயில் உடை கொடுத்து, குல்லாய்ப் போட்டு வேலை வாங்கி வருகிறார்கள்.

மற்றும் தோழர்கள் சி. டி. நாயகம் (மாஜி டிப்டி-ரிஜிஸ்ட்ரார்), ஈழத்து சிவானந்த அடிகள் பி. ஏ. (ஒரு சந்நியாசி), கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி.எல்., ஷண்முகா நந்த சுவாமி (ஒரு சந்நியாசி), சி. என். அண்ணாதுரை எம். ஏ. ('ரிவோல்ட்' பத்திராதிபர்), சுவாமி அருணகிரிநாதர் (ஒரு மடாதிபதி) முதலாகிய முக்கியஸ்தர்களை 3-வருஷம் வரை தண்டிக்கும்படியான இண்டியன் பினல்கோட் சட்டம் 117 பிரிவுப்படி கைது செய்து சிறைப் படுத்தி வைத்திருக்கிறார்கள். சிலர் ஜாமீனில் இருக்கிறார்கள் என்றாலும் இனியும் இந்த சட்டப்படியும் தினமும் 3 பேர், 4 பேர் வீதம் கைதுசெய்யப்பட்டுக்கொண்டும், தினமும் 10 பேர், 5 பேர் வீதம் தண்டிக்கப்பட்டுக்கொண்டும் வருகிறார்கள். 'இந்த சுயராஜ்ய சர்க்கார் இந்தக் காரியங்கள் மாத்திரம்தான் செய்துவருகிறார்கள். இதற்குமேல் என்ன செய்துவிடுவார்கள்?' என்று மக்கள் கருதி—மேலும் மேலும் கைதியாக ஆயிரக்கணக்கான பேர்கள் முன்வந்துவிடுவார்கள்போலிருக்கிறதே என்று கருதி, 'நமது' தோழர் சத்திய மூர்த்தியார் அவர்கள் தமது அருப்புக்கோட்டை அரசியல் மாநாடு தலைமைப் பிரசங்கத்தில், 'இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்பவர்கள் பெரிய இராஜத் துரோகிகளாவார்கள்' என்றும், 'அவர்கள் மீது ஆயுள்பரியந்தம் அல்லது தூக்குப் போடும்படியான குற்றப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் மிகத் 'தயாள' குணத்தோடு 'இளகிய' மனம் கொண்டு பேசியிருக்கிறார். இதை 'மெயில்' பத்திரிகை மாத்திரமே கண்டித்துத் தலையங்கம் எழுதி இருக்கிறது.

அதாவது, 'தோழர் சத்தியமூர்த்தியாரே! நீர், இந்தியை எதிர்க்கிறவர்களுடைய தலைகளையெல்லாம் வெட்டவேண்டும் என்று சொல்லுகிறீர்களே, அப்படியானால்—சென்னைக் கடற்கரையில் தோழர் ஈ. வெ. ராமசாமி பேசும்போது 50,000 (அய்ம்பதாயிரம்) ஜனங்கள் கேட்டுக்கொண்டிருந்ததோடு, தோழர் திருச்சி கே. ஏ. பி. விசுவநாதம் அவர்கள்



சர்க்காரைக் கண்டித்துத் தீர்மானம் பிரேரேபித்ததற்கு அந்த 50,000 பேர்களும் ஏகமனதாய் ஓட்டுக் கொடுத்திருக்கிறார்களே! ஆதலால் இந்த 50,000 பேர்களுடைய தலைகளையும்தானே வெட்டவேண்டும்! இதுதானா உமது சுயராஜ்யம்? இதுதானா காந்தியார் கூறும், அன்பினால் ஆளப்படும் இராஜ்யபாரம்?' என்று கேட்டிருக்கிறதே தவிர —மற்ற எந்தப் பார்ப்பனப் பத்திரிகையும்—எந்தக் காங்கிரஸ் பத்திரிகையும் அதைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை என்பது மாத்திரமல்லாமல், அதைப் பற்றி இதுவரை எந்தக் காங்கிரஸ் தலைவர் என்பவர்களும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை என்றால்—இன்றைய சுயராஜ்யத்தில் தமிழ் மக்களின் தலை—உயிர் எவ்வளவு அற்பமாய் மதிக்கப் படுகின்றது என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா என்று கேட்கின்றோம்.

உண்மையில் தோழர் சத்தியமூர்த்திக்கும், கனம் ஆச்சாரியாருக்கும் ஒருவருக் கொருவர் தனிமையில் கண்டால் வெட்டிக்கொள்ளும்படியான ஆத்திரமும் குரோதமும் இருந்து வருவது யாவரும் அறிந்ததாகும். அதாவது, சத்தியமூர்த்தியாருக்குக் கிடைக்க வேண்டிய மந்திரிப் பதவியை, தோழர் ஆச்சாரியார் திடீரென்று திருச்சி டாக்டர் இராஜனுக்குக் கொடுத்துவிட்டதால் அன்று முதல் இன்றுவரை ஆச்சாரியாரை வைத வண்ணமாகவும், அவர்மீது எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தவண்ணமாகவும் இருந்துவருகிறார். அப்படிப்பட்டவர், 'ஆச்சாரியாரின் இந்திக் கட்டாயநுழைப்பும் எதிர்ப்பும், பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்ற விஷயமாக இருந்துவருகிறது' என்று தெரிந்தவுடன்—இந்தியை எதிர்ப்பவர்களை 6 மாதமும், 3 வருஷமும் தண்டித்தால் போதும் என்று ஆச்சாரியார் சொன்னால், தோழர் சத்தியமூர்த்தியார், 'இந்தியை எதிர்ப்பவர்களை ஆயுள்பரியந்தம் தண்டிக்க வேண்டும், அல்லது தலையை வெட்டவேண்டும் (தூக்கில் போடவேண்டும்)' என்று பகிரங்கமாக ஒரு பொதுமேடையில் பேசி, ஆச்சாரியாருக்கு உதவி செய்கிறார்.

100-க்கு 3 பேராய் உள்ள பார்ப்பனர்கள் மற்ற 100-க்கு 97 பேர்களாக உள்ள மக்களை எப்படி அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதாதா என்று கேட்கிறோம். பார்ப்பனர்கள் தங்கள் சமூக நலனுக்காக என்றாலும்—தங்கள் சமூக நலனுக்குக் குறைவு வருகிறது என்றாலும் உடனே கன்னியாகுமரி முதல் இமயமலை வரை உள்ள சகல மாதிரியான பார்ப்பனரும் ஒன்று சேர்ந்து ஒரே அபிப்பிராயம் கொண்டு விடுகிறார்கள். அவர்களில் யார் எவ்வளவு கொடுமையும், குற்றமும் செய்தாலும் ஒருவரையொருவர் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் ஆதரிக்கிறார்கள்; எதிரிகள் மீது ஒரே மூச்சில் விஷமப் பிரச்சாரம் செய்து ஒழிக்க எக் கருமத்தையும் கையாளுகிறார்கள். ஆனால்—பார்ப்பனரல்லாதாராகிய, குறிப்பாகத் தமிழ் நாட்டுத் தமிழ் மக்களோ—இப்படிப்பட்ட சமயத்தில்தான் விபீஷணர்களாக மாறுகிறார்கள் என்பதற்கு—இப்படிப்பட்ட கட்டுப்பாடாக-வன்மனமாகத் தமிழ் மக்களை அடக்கி ஆதிக்கம் பெறுவதற்கென்றே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பார்ப்பன ஆட்சிக்கு, நமது தோழர் இராமநாதன் அவர்கள் மாட்டு வண்டி ஓட்டப்படவும், எதிரிகளை நல்லவர்களாகவும் நம் மக்களை அயோக்கியர்களாகவும் விளம்பரம் செய்யும் கேவலத் தொழிலுக்கு ஆளாகவும் துணிந்துவிட்டார் என்றால்—தமிழ் மக்கள் நிலைக்கு வேறு உதாரணம் வேண்டுமா என்று கேட்கின்றோம்.

இவைகளைப்பற்றியெல்லாம் உண்மையிலேயே நாம் சிறிதும் கவலைப்படவில்லை; மிக்க உற்சாகமே கொண்டிருக்கின்றோம். எப்படியெனில், 'வெந்ததைத் தின்று, வாயில் வந்ததைப் பேசிவிட்டு, வீணே முதுமைக்கும் நோய்க்கும் ஆளாகி நமக்கு இஷ்ட மில்லாமல் சாவதை விட—இப்படிப்பட்ட ஏதாவது ஒரு சிறு காரியத்திற்காகவாவது அல்லது இம் மாதிரியான ஒரு சிறிய நன்மை உடைய காரியத்துக்காகவாவது வாழ்ந்து மறைவது அறிவுடைய காரியம் என்பதாகக் கருதி இருப்பதால், அதை 'நாம் வெகு நாளாக எதிர்



படிப்பகம்

www.padippakam.com



பார்த்த காரியம் கைகூடிற்று' என்ற மகிழ்ச்சியிலேயே இருக்கிறோம். அவ்வளவு மாத்திரந்தானா? அல்ல, அல்ல! இந்நாட்டு உண்மைத் தமிழ் மக்களுக்கு அவர்களுடைய வீரத்தையும் தன்மானத்தையும் காட்டுவதற்கும், அவர்களது வாழ்வும் செல்வமும் உயிரும் நற்கருமத்துக்குப் பயன்படுத்துவதற்குமான ஒரு கிடைத்தற்கரிய அரும் சமயம் கிடைத்திருக்கிறதென்றும் மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழர்களே! நீங்கள் எத்தனை மேதாவிகளானாலும், அறிவாளிகளானாலும், செல்வவான்களானாலும்—மற்றும் யாராய் இருந்தாலும் நீங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நாளில் முடிவெய்தப் போவது திண்ணம். ஆனால் இந்த அறிவையும், மேதாவித் தன்மையையும், செல்வத்தையும் மற்றதையும் இப்பொழுது எதற்குச் செலவழிக்கிறீர்கள்? பொய்ப் புகழ் தேடுவதிலும், பின்னால் என்ன ஆகப் போகிறதோ என்றுகூட அறியமுடியாத காரியத்திற்காகப் பொருளைத் தேடிப் பெருக்கிவைப்பதிலும் பயன்படுத்துகிறீர்கள். இம் முயற்சியில் நீங்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைகிறீர்கள்? எவ்வளவு சங்கடம், கவலை, மனவேதனை, சரீரப் பிரயாசை அடைகிறீர்கள்? இவை மாத்திரமா? இந்தக் காரியங்களுக்கு நீங்களே உங்கள் வாழ்வில் மனமார எவ்வளவு பொய், வஞ்சகம், பித்தலாட்டம், பழிவாங்கும் உணர்ச்சி ஆகிய காரியங்களில் ஈடுபட வேண்டியவர்களாக ஆகின்றீர்கள் என்பவற்றையும் நினைத்துப் பாருங்கள்! ஆகவே, மானம், வீரம், அறிவு பெற்ற மனிதன்—தன் வகுப்பை, மற்றொரு வஞ்சக அறிவு பெற்ற வகுப்பு சூறையாட அனுமதித்துக்கொண்டிருந்து விட்டு மறைவது அறிவுடைமையா என்பதை யோசித்துப் பாருங்கள்!

தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இக் கொடிய நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இதை ஒழிக்க, அழிக்கத் தமிழ்மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டவையல்ல—ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருக்கலாம் என்று சொல்லலாம். ஆனாலும், இன்றுதான் எதிரிகளின் கொடுமைகள் பாமர மக்களுக்கும் விளங்கும்படி வெளிச்சம் ஏற்பட்டு வருகிறது. மனிதன் மானத்துக்கும் அறிவுக்கும் வாழவேண்டியவன் என்பது இன்றுதான் மக்களுக்கு விளக்கிவைக்க முடிகிறது. ஆதலால், இச் சமயம் செய்யப்படும் எவ்வித முயற்சியும் பயன்படக்கூடியதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று இக் கொடுமையில் இருந்து தப்புவதற்குத் தமிழ் மக்களுக்கு வேண்டியது—முதலாவது ஒற்றுமையாகும். நிலை குலைந்த தமிழ் மக்கள் முதலில் நிலைபெறவேண்டும்; ஒன்றுசேரவேண்டும்; சில்லரை அபிப்பிராய பேதங்களை, அசூயை, பொறாமையை விட்டு உடன் பிறப்பு (சகோதர) உணர்ச்சி கொள்ளவேண்டும். தங்கள் தங்கள் வாழ்க்கையில் எந்தப் பாகத்தை இந்த அருமையான—முக்கியமான காரியத்துக்கு உதவலாம் என்று கவலைகொள்ள வேண்டும். தங்களிடம் சவுகரியமாக உள்ள செல்வத்தில் சிக்கன உணர்ச்சி இல்லாமல் எவ்வளவு அளிக்கலாம் என்பதைத் தாராளத் தன்மையோடு யோசித்து உதவ முன் வரவேண்டும். எதிரிகள் கொடுங்கோன்மையை ஒழிக்க—தங்கள் தங்களைப் பொறுத்த வரை எவ்வளவு தூரம் தியாகத்தைச் செய்யலாம் என்று நன்றாய் யோசித்து முடிவுக்கு வந்து வெளியில் புறப்பட்டுவிட வேண்டும். இத்தியாதி காரியங்கள் செய்யாவிட்டால், இந்த 50 அல்லது 100 ஆண்டுகளுக்குள் தமிழ் மக்கள் அடைந்துள்ள சுதந்திரம், மானம், சமத்துவம் எல்லாம் நாசமாகி பழைய (வருணாசிரம தர்ம) நிலைக்குப் போய்ச் சேர்ந்து விடுவோம் என்பதை நன்றாக உணருங்கள்.

இது எவர்மீதும் கொண்ட விரோதமல்ல, குரோதமல்ல, ஹிம்சையல்ல, பலாத்காரமல்ல. நமது உரிமையை நாம் பெற—காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்கின்றோம். இம் முயற்சியிலும் யாரிடமும் துவேஷமும் காட்டுவதில்லை; யாரிடமும் பலாத்காரச் செய்கைக்கோ ஹிம்சையைத் தரும் செய்கைக்கோ நாம் செல்வதில்லை—செல்லும்படியாகவும் யாரையும் தூண்டவும் வரவில்லை. அன்றியும், அப்படிப்பட்ட காரியம் செய்யக் கூடாதென்றும் வன்மையாகக் கூறுகிறோம்.



தமிழர்களே! இப்போது இந்த முயற்சிக்கு அவசரமாக அவசியமாக வேண்டியது பணம்–பணம்—பணமேயாகும். பணம் இல்லாவிட்டால் இம்முயற்சி உடனே செத்து மடிந்து நசுக்கப்பட்டு மறைந்தே போகும். பிறகு என்ன ஆகும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. ஓர் இலட்ச ரூபாய் இருந்தால்தான் நாம் உண்மையில் ஓரளவு இக்கொடுமையில் இருந்து மீளலாம். கொடுமை என்றால் விளையாட்டுக் கொடுமையா? தமிழ்நாட்டில் உள்ள தமிழ் வீரர்கள், செல்வர்கள், மேதாவிகள் எல்லோரும் அடங்கி ஒடுங்கி நடைப் பிணங்களாக நடந்து திரியும்படி செய்யப்பட்டுவிட்ட கொடுமையாகும்.

உதாரணம் காட்டுகிறோம், பாருங்கள்! தென் கோடியில் இருந்து எடுத்துக் கொள்ளுங்கள். திருநெல்வேலி ஜில்லாவில் தோழர்கள் மேடை தளவாய் குடும்பம், ஈஸ்வரம் பிள்ளை குடும்பம், சிவசின்னக்கண்ணு பிள்ளை குடும்பம் முதலிய 20, 30, 50 இலட்சம் செல்வமும், பாரிஸ்டர் பி.ஏ.பி.எல். முதலிய கல்வியும், பரம்பரைப் பெருமையும், மிட்டாவும் உள்ள குடும்பத்தார்கள் இன்று எவ்வளவு அடிமை நிலையில்—அஞ்ஞாதவாசமாய் (தங்களைக் காட்டிக்கொள்ள முடியாத நிலையில்) இருக்கிறார்கள்? இராமநாதபுரம் ஜில்லாவில் இராமநாதபுரம் இராஜா எங்கே? சிவகங்கை ஜமீன் எங்கே? சேத்தூர் எங்கே? எட்டயபுரம் எங்கே? கோடீஸ்வரர்களான செட்டி மக்கள் எங்கே? பல இலட்சாதிகார வியாபாரிகளான நாடார்குலப் பெரியார்கள் எங்கே? இவர்கள் நிலை இன்று எவ்வளவு அடிமைத்தனமாகவும், பரிதாபகரமானதாகவும் இருக்கிறது, பாருங்கள். மற்றும் மதுரை ஜில்லாவில் உத்தமபாளையம் குடும்பம் எங்கே? போடி ஜமீன் எங்கே? பெரியகுளம் எங்கே? சுப்பஞ் செட்டியார் குடும்பம் எங்கே? மற்றும் பல மிராசுதார்களும் வியாபாரிகளும், பி.ஏ. பி.எல்., எம்.ஏ.க்களும் எங்கே? விலாசம்கூட அறியக்கூடாத அளவு மறைந்து கிடக்கிறார்கள்! அதுபோல், திருச்சி ஜில்லாவில் காட்டுப்புத்தூர், மீனாம்பள்ளி, உறையூர் ஜமீன்கள், கடலூர் சமஸ்தானங்கள் எங்கே? மற்ற பிரபல மிராசுகள் எங்கே? பத்து இலட்சக்கணக்கான செல்வம் படைத்த சவுகார்கள் எங்கே? தஞ்சை ஜில்லாவில் உடையார் எங்கே? வடபாதி மங்கலம் எங்கே? சீர்காழியார் எங்கே? இவர்கள் போன்ற மற்ற மேதாவிகளும் எங்கே?

அதுபோலவே, மற்ற சகல தமிழ் ஜில்லாக்களிலும் மற்றும் ஆந்திர, மலையாள ஜில்லாக்களில் உள்ள மேதாவிகளும் செல்வவான்களும், ஜமீன்களும், இராஜதந்திர நிபுணர்களும் அடக்கப்பட்டுவிட்டனரே! இவை எதனால்? இந்த நாடு ஏதாவது பொதுவுடைமை—அல்லது சமதர்ம நாடாக ஆகிவிட்டதா? சர்வாதிகாரக் கொடுங்கோன்மை நாடாகத் திகழ்கின்றதா?

அதாவது—'இந்தி படிக்கமாட்டேன்' என்றால், ஒருவர் 6-மாதம் கடின காவல் போடச் சொல்லுகிறார்; ஒருவர் 3-வருடம் போடச் சொல்லுகிறார்; ஒருவர் தலையை வெட்டு என்கிறார். தொழிலாளிகள் தெருவில் திண்டாடிச் சோற்றிற்கு இல்லாமல் சொத்துப் பொத்தென்று மடிந்து விழுகிறார்களே! 'பசிக்குதே' என்றால்—ஒருவர் ஜெயில் என்கிறார். தட்டிக் கேட்டால்—மற்றவர், சுடு என்கிறார். நாட்டு முன்னேற்றமோ—ஆகாயக் கப்பலில் இருந்து கட்டை வண்டிக்கு வந்துவிட்டது; 'பார்ச்மெண்ட் பேப்பரில்' இருந்து பனை ஓலைக்கு வந்துவிட்டது; சல்லா வேட்டியிலிருந்து கோணி ரெட்டுக்கு வந்துவிட்டது.

சாதி வித்தியாசமோ—கூட இருந்து சாப்பிட்டதற்குக் கட்டி வைத்து உதைத்து மொட்டை அடித்துச் சாணிப் பால் உற்சவம் நடந்ததாகக் கூப்பாடுகள் வானத்தைப் பிளக்கின்றன. உத்தியோகமும் அதிகாரமும்—ஒரு தனிச் சாதிக்குத்தான் உண்டே ஒழிய, மற்றவர்கள் நினைக்கவே தகுதியற்றவர்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

சமத்துவமோ,—'சர்வ குண்டித் தீர்த்தம்போல் வழங்கும் காப்பிக் கடையில்' கூடச் சமத்துவம் கிடையாது. அங்கும் 'பிராமணன்'–'சூத்திரன்' பலகை தொங்கிக்கொண்டு,

படிப்பகம்

www.padippakam.com



'பஞ்சமனும் பெரு வியாதிக்காரனும் நாயும் உள்ளே பிரவேசிக்கக் கூடாது' என்கின்ற அறிவிப்புப் பலகை வெளியில் வைக்கப்பட்டும் இருக்கிறது.

மற்றும், பணக்கார இராஜ்யம் ஒழிந்து ஏழைகள் இராஜ்யமாக ஆக்கப்பட்டு விட்டதோ என்று சொல்லப்படுமானால்—அப்படியும் இல்லாமல், காலிகள், குண்டர்கள், இழி குண, இழிபிறப்பு மக்கள் என்று 'கல்லுப்போல் ருஜு செய்ய'க்கூடிய மக்கள் பலரைச் சேர்த்துக்கொண்டு—அவர்களது ஆதரவில் யோக்கியர்கள், தகுதியுடைய மேதாவிகள், கண்ணியமுள்ள நாணயஸ்தர்கள் துரத்தியடிக்கப்பட்டு விட்டார்கள். இவைகளை ஏன் சொல்லுகிறோமென்றால்—இந்த நாட்டில் செல்வவான்கள், மேதாவிகள், அறிவாளிகள் ஒடுக்கப்பட்டார்கள், ஒழிக்கப்பட்டார்கள் என்று சொல்லுவதால் சிலர் 'சமதர்மம் ஏற்பட்டுவிட்டது' என்று சொல்லி ஏமாற்ற வருவார்களோ என்னவோ என்று கருதி, அந்த யோக்கியதையையும் மக்கள் உணரட்டும் என்பதற்கு எடுத்துக் காட்டுகிறோம்.

'இந்தக் காரியங்களைப்பற்றி எவ்வளவுதான் உணர்ந்தாலும்—நம் நாட்டுச் செல்வவான்களில் பலருக்குச் சுலபத்தில் மான உணர்ச்சி வராது என்பது நமக்குத் தெரியும். ஏன் என்றால், இவ்வளவு இழிநிலை தங்களுக்கு ஏற்பட்டும், இன்னமும் பல செல்வவான்கள் எதிரிகளின் காலை 'மோட்சத்திற்காகவும்', பதவி வாழ்க்கைக்காகவும் நக்கிக்கொண்டு திரிகிறார்கள்; நக்கத் தூது அனுப்புகிறார்கள்.

தமிழ் வக்கீல்களோ—அவர்கள் பலருடைய அகராதியில் மானம் மனிதத்தனம் என்கின்ற வார்த்தைகளே கிடையாது என்று சொல்லலாம்.

ஆதலால், சாதாரண நடுநிலையிலுள்ள தமிழ் மக்களே, தங்கள் சமூகத்துக்கு நேர்ந்த இந்த ஆபத்திலிருந்து தப்புவிக்க உதவிசெய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்நாட்டுத் தமிழ் வாலிபர்களே, அடக்குமுறை ஆயுதத்தை மழுங்கச்செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்நாட்டுத் தமிழ்ப் பெண்மணிகளே, இவ்விரு கூட்டத்திற்கும் உற்சாகமூட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

வெளிநாட்டில் உள்ள 'இந்து', முஸ்லிம் தமிழ் மக்களே, இம் முயற்சிக்கு உதவி அளித்து—இந்நாட்டுப் பணக்காரர்களுக்குப் புத்தியும் மானமும் ஏற்படுத்தித் தாராளமாய் உதவச் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

ஆதலால், மேற்கூறிய ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மக்களும் இதுசமயம் தைரியமாய் வெளிவந்து, தன் தன் கடமையைச் செய்து, தமிழ்நாட்டை—உலகத்தில் இல்லா விட்டாலும், பூகோளப் படத்திலாவது உருவிருக்கச் செய்வார்களாக!

['குடி அரசு'-தலையங்கம்—3-7-1938]

## 2. இந்தி எதிர்ப்புப் படை

தோழர்களே!

இன்றையக் கூட்டம் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்துக்காகச் செல்லும் படையை வழியனுப்புவதற்காக என்றே கூட்டப்பட்டது என்று அழைப்பு விளம்பரத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டத்தில் வந்து சிலர் குழப்பம் நினைத்தது சுத்த முட்டாள்தனமாகும். இந்தக் கூட்டத்தில் இரண்டொருவர் 'காந்திக்கு ஜே' போடுவதும் 'இந்தி வாழ்க' என்று கத்துவதும் மண்ணை வாரி இறைத்து, வேஷ்டியை வீசி, மக்களை எழுந்துபோகும்படிக் காலித்தனம் செய்வதும் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். கூட்டத்தை கலிபுல்லா சாயபு மிக்க வலுவுடன் அடக்கி இராவிட்டால் இன்று பலர் உதைபட்டுத் துன்பப்பட்டு இருப்பார்கள். போலீசும் இல்லாத இந்தச் சமயத்தில் காலிகளுக்கு இக் கூட்டத்தார் புத்தி



கற்பிக்க ஆரம்பித்து இருந்தால் என்ன நிலை ஏற்பட்டு இருக்கும்? கூட்டத்தில் இந்தியை ஆதரிக்கின்றவர்கள் எவ்வளவு பேர் என்று தோழர் கலிபுல்லா சாயபு கேட்டபோது கை தூக்கிய எண்ணிக்கையிலிருந்தே, இத் தொல்லைக்காரர்களின் யோக்கியதை நன்றாய் விளங்கி இருக்கும்; அவர்களும் பெரிதும் பார்ப்பனர்களாகத்தான் இருந்திருப்பதாய்த் தெரிகிறது. இம் மாதிரிக் காலித்தனத்தால் இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இப் பார்ப்பனர் வெற்றிபெற முடியும்?

நாங்கள் உண்மையிலேயே இந்தியை எதிர்ப்பவர்கள். 'இந்தியைப் பார்ப்பன ஆதிக்கத்துக்காகப் புகுத்தப்படுகிறது' என்பதை இக் கூட்டத்தில் உள்ள பார்ப்பனர்களே மெய்யாக்கி விட்டார்கள். தமிழ் மக்கள் வயிறு எரிந்து மனம் நொந்துகிடக்கும் காலத்தில்—அதுவும் பிரிந்து ஆதரவற்றுக் கிடக்கும் இந்நாளில் ஏதோ சில கூலிகள் தங்கள் வசத்தில் இருப்பதாகக் கருதி, எங்கள் முயற்சிகளை இப்படி அடக்கப் பார்ப்பது தர்மமா என்று கேட்கிறேன்.

எங்களுடைய சேதிகளைப் பொதுப் பத்திரிகை எனச் சொல்லும் பார்ப்பனப் பத்திரிகைகள் கேலி செய்து, கிண்டல் செய்து மறைத்துத் திரித்துக் கூறுகின்றன; சில அடியோடு அடக்கிவிடுகின்றன. எங்கள் ஒற்றுமையைக் கலைக்கச் சூழ்ச்சி செய்கின்றன. மக்கள் அநீதியாகச் சிறைப் பிடித்துக் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள்.

எங்களுக்குள்ளாகவே துரோகிகள் கற்பிக்கப்படுகிறார்கள்; கீழ்மக்களைச் சுவாதீனம் செய்து, அவர்கள் மூலமாக நம் இயக்கத்தை ஒழிக்க முயற்சி செய்யப்படுகின்றது. இந்தி எதிர்ப்பு-ஜஸ்டிஸ் கட்சியின் மற்றொரு அவதாரம் என்றும் பழி சுமத்தப்படுகிறது.

ஜஸ்டிஸ் கட்சிக்குச் சட்டசபையில் உள்ள இரண்டு தலைவர்களும் பார்ப்பனத் தாசர்களாய் இருக்கும்போது, இது எப்படி ஜஸ்டிஸ் கட்சிக் காரியமாக இருக்கமுடியும்? 'இந்தி எதிர்ப்பு-பார்ப்பன துவேஷத்துக்கு ஒரு கருவி' என்று சொல்லப்படுகிறது. தோழர்கள் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி, கே. நடராஜன், வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, சி. வி. விஸ்வநாத சாஸ்திரி, உ. வே. சாமிநாதய்யர், பரவஸ்து ஆச்சாரியார், கே. பாஷ்யம் அய்யங்கார், வி. பாஷ்யம் அய்யங்கார், வி. வி. சீனிவாசய்யங்கார், குன்ஸ்ரு, டில்லி நிர்வாக சபை வர்த்தக மெம்பர் சர். மகமத் யாகூப் இவர்கள் எல்லோரும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களா?

'செண்டினல்', 'அமிர்த பஜார்', 'மாடர்ன் ரிவ்யூ', 'சோஷியல் ரிபார்மர்', 'லீடர்', 'சர்வெண்ட் ஆப் இந்தியா' முதலாகிய பத்திரிகைகள் ஜஸ்டிஸ் பத்திரிகைகளா? அல்லது பம்பாயிலும் சென்னையிலும் உள்ள பிரஜா உரிமைச் சங்கங்கள் ஜஸ்டிஸ் கிளைச் சங்கங்களா? அடக்குமுறையை ஒன்று இரண்டுதடவையாவது கண்டித்து எழுதிய 'சுதேசமித்திரன்' ஜஸ்டிஸ் பத்திரிகையா? இப்படி எல்லாம் இருக்க, தமிழ்மக்கள் கண்களில் மண்ணைப் போட்டு அவர்களை அடிமைகொள்ளச் செய்யும் இம் மாதிரியான சூழ்ச்சியும் கொடுமையும் நியாயமா? என்று உங்களைக் கேட்கிறேன்.

நாங்கள் சொல்லுவதும் செய்வதும் தப்பானால் நாளை இங்குக் கூட்டம் போட்டுப் பாருங்கள்; உங்கள் பத்திரிகையில் எழுதுங்கள். மற்றபடி பொய்யாகவாவது கூட்டத்தில் கலகமும் குழப்பமும் ஏற்பட்டது என்று எழுதுவதற்காகவே—இங்கு விஜயம் செய்திருக்கும் சில அயோக்கிய நிருபர்களுக்குச் சேதி கொடுக்கவேண்டுமென்று கருதி, சில்லரை சேஷ்டைகள் செய்வது நியாயமா என்று கேட்கிறேன்.

இன்றைய ஆட்சியில் தங்கள் அபிப்பிராயம் சொல்லக்கூடவா இடமில்லை? இந்தக் கூட்டத்தில் 'காந்திக்கு ஜே' சத்தம் ஏன் போடவேண்டும்? இவர்கள் காந்தியை யோக்கியர் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களா? அல்லது தங்களையாவது காந்தி சிஷ்யர்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களா? நான் பார்த்தேன். ஒருவன் மண்ணை வாரி இறைத்துக்கொண்டு 'காந்திக்கு ஜே' போட்டான்; முதுகில் இரண்டு அப்பளம்

படிப்பகம்

www.padippakam.com



விழுந்தவுடன் அறுத்துவிட்ட கழுதைகள்போல் பலர் ஓட்டமெடுத்தார்கள். இந்தச் சமயம் நான் பயந்துவிட்டேன்; போலீசும் தென்படவில்லை. நமக்கோ, நம் ஆட்களுக்கோ பந்தோபஸ்தில்லை என்று நான் கவலைப்படவில்லை. ஆத்திரத்தோடு கை கலக்க ஏற்பட்டால் எதிரிகள் கதி என்னவாகும்? அப்புறம் ‘இந்தி எதிர்ப்புக்காரர்கள் பலாத்காரம் செய்கிறார்கள்’ என்று சொல்லுவதா? எவ்வளவு கஷ்டப்பட்டுப் பலாத்காரம் ஏற்பட இருந்ததை இப்போது அடக்கவேண்டியதாயிற்று! போலீசார், கூட்டத்திற்குக் காவல் அளிக்கவேண்டியதில்லை என்றாலும் காலிகளுக்காவது காவல் அளிக்கவேண்டாமா? இன்று இவ்வூர்ப் போலீசும் தண்டோரா அடிக்கக்கூட அனுமதி கொடுக்கவில்லை; நோட்டீசு அச்சடிக்க அச்சாபீசுகள் பயப்படுகின்றன.

இந்தக் கிளர்ச்சிக்குப் பணம் வசூல் செய்வதைத் தடுக்கப் பல போக்கிரித்தனமான—அற்பத்தனமான பிரச்சாரங்கள் செய்யப்படுகின்றன. இந்த நிலையில் நாங்கள் என்ன செய்வது?

தொண்டர்களைச் சிறை பிடிப்பதையும், தண்டிப்பதையும் அவர்களை நடத்துவதையும் சற்றுப் பாருங்கள்! 150 பேர்களைச் சிறைபிடித்துத் தண்டித்துவிட்டு, இப்போது அந்தக் காரியத்திற்குச் சிறைபிடிப்பது நிறுத்தப்பட்டுப் போய்விட்டது என்றால், இதுவரை பிடித்தது ஒழுங்கா, நியாயமா? நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைப் பற்றி காங்கிரஸ் காரிய கமிட்டி, ‘தப்பு அபிப்பிராயத்தின்மீது அக் கிளர்ச்சி நடப்பதால் அதை விளக்க காங்கிரஸ் தலைவருக்கு அதிகாரமளித்திருக்கிறது’ என்று தீர்மானித்திருக்கிறது.

அப்படியானால், அபிப்பிராய பேதத்தினால் நடத்தும் காரியத்துக்கு ஆறுமாதம் ஒரு வருஷம், இரண்டு வருஷம் கடின காவலா என்று கேட்கிறேன். இதுதான் ஜனநாயகமா? இதுதான் அபிப்பிராய சுதந்திரமுள்ள பிரஜா உரிமை ஆட்சியா? நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இந்த அரசாங்கம், இந்தி எதிர்ப்புக் கமிட்டியைச் சட்டம் மீறுவதற்கும், ஆயிரக் கணக்கான மக்களைச் சட்டம்மீறித் தீரவேண்டுமென்றா கட்டாயப்படுத்தவும் தூண்டச் செய்கிறது? இதில் சர்க்காருக்கு என்ன லாபம் கிடைக்கப்போகிறது என்று கேட்கிறேன். அரசாங்கத்திற்கும், சட்டத்திற்கும் பணிந்துபோவது அவமானம் என்று மக்கள் கருதும்படி செய்கின்றது.

நாம் என்ன செய்வது? கிளர்ச்சிகூடச் செய்யக்கூடாதா? தோழர் சத்தியமூர்த்தியார் ‘இந்தக் கிளர்ச்சிக்காரரை, ராஜத் துரோகச் சட்டப்படி வழக்குத்தொடுத்துத் தூக்கில் போடும்படி’ சர்க்காருக்கு யோசனை கூறுகிறார். இப்போது நடத்தும் சட்டமே கொடுங்கோலாட்சி என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே, காங்கிரஸ் ஆட்சியின் யோக்கியதையும், அதைக் கையாளும் பார்ப்பனர்கள் யோக்கியதையும் நீங்களே முடிவுசெய்து கொள்ளுங்கள் என்பதாகக் கூறிவிட்டு, படைத் தொண்டர்களுக்கு ஈ. வெ. ரா. செய்த உபதேசமாவது:

இப் படையை நடத்துகிறவர்கள் பொறுப்புள்ள பெரியார்கள். இவர்கள் நடத்தையில் படை வெற்றிகரமாய் முடிவுபெறும் என்றே கருதுகிறேன். ஒற்றுமை, சிக்கனம், சமரச எண்ணம் ஆகியவை படைத் தலைவர்களுக்கு வேண்டும். தொண்டர்களுக்குப் பொறுமை, சகிப்புத்தன்மை, கிடைத்ததைக்கொண்டு திருப்தி அடையும் தன்மை ஆகியவை வேண்டும்.

எதிரிகள் பல சூழ்ச்சி செய்வார்கள்; சிறியதைப் பெரியதாக்கிப் பழிகூறப் பல எதிரிகள் இருக்கிறார்கள். எதிரியிடம் கூலி வாங்கிக்கொண்டு நம்மைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கும் பல ஈனர்கள் நமக்குள்ளாகவே இருந்து குடிகெடுத்து வருகிறார்கள். இந் நிலையில் இயக்கத்துக்குக் கேடுவராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கிய



மாகும். எவ்வளவு பழிசுமத்தினாலும், எவ்வளவு இழிவுபடுத்தினாலும் இவற்றை எவ்வளவு பேர் நம்பினாலும்—நான் மாத்திரம் களைத்துப் பின்வாங்குகிறவனல்ல. எனக்கு எனது லட்சியம்தவிர வேறு ஒன்றுமே இல்லை. அதற்காகவே உயிர் உள்ள அளவும் பாடுபட்டுத்தான் சாவேன். யார் என்ன சொன்னாலும் வெட்கப்படப்போவதில்லை. யார் என்ன மோசம் செய்தாலும்சரி, துரோகம் செய்தாலும்சரி—வாழ்நாள் முடிகிறவரை கிடைத்த ஆயுதத்தைக்கொண்டு காரியம் செய்கிறதென்ற முடிவில்தான் இருக்கின்றேன்.

ஆகவே, தோழர்களே! இம் மாபெரும் லட்சியத்திற்குத் தொண்டாற்றும் வேலையை யாவரும் தங்கள் வாழ்வுக்குப் பயன்படுத்திக்கொண்டு, காரியத்தைக் கெடுக்காமல், லட்சியத்துக்குக் கூடுமானவரை தொண்டாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருச்சி டவுன்ஹாலில், 1-8-1938-ல் இந்தி எதிர்ப்புப் படை வழி அனுப்புவிழாக் கூட்டத்தில்,
சொற்பொழிவு—‘விடுதலை’ 2-8-1938]

## 3. கட்டாய இந்தி ஒழிந்தது!

‘இந்தி கட்டாயப் போதிப்பு உத்தரவு’ மாற்றப்பட்ட சர்க்கார் அறிக்கையைப் பார்த்தேன்.

இவ்வளவு நாள் பொறுத்தாவது, நமது கவர்னர், இந்தி எதிர்ப்பானது இந் நாட்டுப் பெரும் பகுதியான மக்களின் ஆத்திரத்துடன் கூடிய எதிர்ப்பு என்பதை உணர்ந்து கொண்டதற்கும், இப்போது போதித்துவரும் கட்டாய இந்திப்போதனைமுறை பயனற்றதும் கூடாததும் என்றுணர்ந்து, அந்த முறையையும் கட்டாயப் போதிப்பையும் ரத்து செய்ததற்கும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால், அந்த அறிக்கையின்படி இந்தி இனி இஷ்டபாடமாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டாலும், அதற்காகப் பொது மக்களின் வரிப் பணம் செலவழிக்கப்படுவதை நான் வீண்—அனாவசியமான செலவு என்று வருத்தத்துடன் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இம் மாதிரிச் செலவுக்கு சர்க்கார் அறிக்கை சொல்லும் காரணம், ‘மெயில்’ பத்திரிகை சொல்லுகிற பிரகாரம், பொருத்தமற்றதும்—நியாயமற்றது மாகும் என்பதுதான் எனது அபிப்பிராயமுமாகும். ஏனெனில், இந்தியா என்கின்ற பெயருள்ள பூபாகத்தில் பல பாஷைகள் பேசும் பல மாகாணங்கள் இருக்கும்போது, ‘தென்னிந்தியர் இந்தி படிப்பது, இந்தி பேசும் மாகாண மக்களுடன் பழகுவதற்கு அனுகூலமாயிருக்கும்’ என்று சொல்லுவது அசட்டுத்தனமேயாகும். ஒரே ஒரு பாஷை பேசும் மக்களுடன் பழகுவதற்கு மாத்திரம் அனுகூலமாயிருக்கும் மற்றொரு பாஷைக்கு—பொது மக்களின் வரிப் பணமும், பொதுப் பள்ளிக்கூட முயற்சியும் ஏன் செலவழிக்கப்படவேண்டும்? மற்றபாஷை மாகாணங்களுடன் தென்னிந்தியர் பழக வேண்டுமானால் அதற்கு என்ன செய்வது? மற்றும், இப்போதைய சர்க்கார் அறிக்கை முறைப்படி, ஒரு தமிழ் மாணவன் இந்தியை இஷ்டபாடமாக எடுக்க வேண்டுமானாலும் அவன் தனது தாய் மொழியை விட்டு விட்டுத்தான் இதையெடுக்க வேண்டியவனாக ஆவான்.

ஆகையால், இந்தப் பாகம் மாத்திரம், ஒன்று-யோசனை இல்லாமல் செய்த காரியமாய் இருக்க வேண்டும்; அல்லது மாஜி கனம் ஆச்சாரியாரைத் திருப்திப்படுத்த கவர்னர் பிரபு எடுத்துக்கொண்ட கோணல்வழி முயற்சியாய் இருக்கவேண்டும். எப்படியிருந்த போதிலும், தமிழர் விருப்பப்படி இந்தி கட்டாயப் போதிப்பு ஒழிந்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

நமது பிறவி எதிரிகளான பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும், பார்ப்பனப் பத்திரிகைகளும் நமது விஷயத்தை மறைத்தும், குறைத்தும், திரித்தும், விஷமத்தனமாகக்

www.padippakam.com



கூறியும், வெளியிட்டும், நம்மை எதிர்த்தும், நம் முயற்சியைக் கெடுத்து வந்தும் நாம் வெற்றி பெற்றோம். இதற்குத் தமிழர்களின் ஒற்றுமையும் தன்மான உணர்ச்சியுமே காரணமாகும்.

ஆரம்ப முதல் கட்டாய இந்திப் போதிப்பை எடுத்துவிடக் கிளர்ச்சி செய்யப் பெரிய தொரு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும்படி உதவி செய்து வந்த 'மெயில்' பத்திரிகைக்கு நான் தனியான நன்றி செலுத்துவதுடன், நம்முடன் ஒத்துழைத்துப் பல வகையில் ஆதர வளித்தவர்களுக்கும், பல கஷ்ட நஷ்டங்களை ஏற்றுத் தீவிரக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும், பொருளுதவி செய்தவர்களுக்கும் எனது மனப் பூர்த்தியான நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனி, அடுத்துத் தொடங்கப்போகும் கிளர்ச்சிகளிலும் தமிழர்கள் இதுபோலவே ஒத்துழைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

['குடி அரசு'—அறிக்கை—25-2-1940]

## 4. சோதனைக் காலம்

'விடுதலை' தினசரிப் பத்திரிகைக்கு சுயராஜ்ய சர்க்கார் என்னும் பார்ப்பன ஆதிக்க ஆட்சியால் 2000 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அக் கட்டளையின் தன்மையையும், அதன் காரணத்தையும் நான் படித்துப் பார்த்த வரையில், 'விடுதலை'ப் பத்திரிகையை எப்படியாவது அடக்கி, ஒடுக்கி நடைபெறாமல் செய்துவிட வேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்து, அதற்காகச் செய்யவேண்டிய முறையையே கிரமப்படிச் செய்து வருகிறது என்கின்ற முடிவுக்குத்தான் வரவேண்டியவ னாக இருக்கிறேன்.

இந்த ஜாமீன் கட்ட வேண்டும் என்கிற கட்டளையானது பத்திரிகைக்குத்தான் ஜாமீன் கேட்கப் பிறப்பிக்கப்படுகிறது என்பதாகக் காணப்பட்டாலும், ஜாமீன் கேட்கப் படுவதற்குச் சர்க்காரால் காட்டப்பட்டு இருக்கும் காரணங்கள்,—திராவிடர் கழகத்தை ஒழித்து, அதற்காக எனது பிரசாரத்தைத் தடுத்து, திராவிட மக்களுக்கு—மதம், சமுதாயம், அரசியல் முதலிய துறைகளில் இருந்துவரும் குறைபாடுகளையும், இழிவுகளையும் இனியும் செய்யப்பட்டு வரும் வஞ்சகங்களையும் முன்னேற்றத் தடைகளையும் எவரும் எந்த விதத் திலும் எடுத்துச் சொல்லாமல் இருக்கும்படி செய்யப் போகிறார்கள் என்பதைக் காட்டுவ தாகவும் இருக்கின்றன. இந்த நிலை நமக்கு (திராவிட மக்களுக்கு) ஒரு சோதனைக் காலமாகும். அதாவது, திராவிட மக்கள் திராவிட நாட்டில் மனிதர்களாக வாழ்வதா, அல்லது 'சூத்திரர்'களாக, பார்ப்பனர்களின் அடிமைகளாக என்றென்றும் மனு தர்மப் படியான ஒடுக்கப்பட்ட மக்களாக—இந்துவாக இருப்பதா என்கின்ற சோதனை.

நான் எனது வாழ்நாளின் முக்கிய காலத்தையும், எனது தொண்டின் முக்கியத் தையும், முடிவான இலட்சியத்தையும், திராவிட மக்கள், சமுதாயம், மதம், சமூகம், அரசியல் ஆகிய துறைகளில் கீழ்மைப் படுத்தப்பட்டு—தடைப் படுத்தப்பட்டு இருந்து வருவதை மாற்றியாக வேண்டும் என்பதற்கே பெரிதும் பயன்படுத்தி வருகிறேன். இனியும் இதற்கே பயன்படுத்துவது என்கின்ற முடிவிலேயே இருக்கிறேன். அதோடு, எந்தக் காரணத்தாலோ இன்றைய நிலை நமக்குச் சிறிது நம்பிக்கை கொடுப்பதாக இருக்கிறது. இந்த நம்பிக்கை வளர்ச்சியடைவதாகவும் இருக்கிறது. எனது முடிவும், தொண்டும்—இந்த நம்பிக்கைக்கும், வளர்ச்சிக்கும் இடம் ஏற்பட்டுவிட்டதான நிலையும்தான் பார்ப்பன ஆதிக்க ஆட்சியை இப்படிப்பட்ட அடக்குமுறைப் பாணங்களை எய்யச் செய்திருக்கின்றன.

பலாத்காரம், கலவரம், குழப்பம் முதலியவை சிறிதுகூட ஏற்படுவதற்கு இடமில் லாமல்—எந்தச் சங்கதியையும் சிறிதுகூட அதிகப்படுத்திப் பேசாமல், உண்மைகளையே



அமைதியான தன்மையில் குறிப்பிட்டு, எந்த மனிதனைப்பற்றியும் தனித்த குறை கூறாமல், இலட்சிய வெற்றியையே கவலையாய்க் கொண்டு செய்துவருகிற பிரசாரத்தை இந்தப்படித் தவறான முறையில் தடுத்துத் தொல்லை கொடுப்பது என்று முடிவு செய்தால், இனி நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிச் சிந்தித்து, ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண் டியது அவசரமான அவசியமாகிவிட்டது.

மதத்தில் திராவிடன் கீழ்சாதி; சமுதாயத்தில் கீழ்த்தர வேலை உழைப்பாளி; பொரு ளாதாரத்தில் ஏழை; கல்வியில் 100-க்கு 85 கை நாட்டுப் பேர்வழி; அரசியலில் பெரிதும் கீழ்த்தரச் சிப்பந்தி. இந்த நிலையில் இருப்பதோடு பெருவாரியான வரியும் கொடுத்துவருகிற வனாக இருக்கிறான். இப்படிப்பட்டவன் தனது குறைகளை எடுத்துச் சொல்லவும் தனது உரிமைகளைக் கேட்கவும் செய்வது தவறு என்று, இந்த ஜாமீன் உத்தரவால் ஆகிவிட்டது.

திராவிட நாட்டில் திராவிட மக்கள்—திராவிட மொழிக் கல்வியில் 100-க்கு 85 பேர் எழுத்து வாசனை அற்றவர்களாக இருக்கும்போது, ஆரிய நாட்டு ஆரிய மொழியைப் பள்ளியில் புகுத்தி இருப்பதோடு, அரசியல்—நிர்வாகம் முதலிய பதவிகளுக்கு, உத்தி யோகங்களுக்கு ஆரிய மொழி (இந்தி) கட்டாயமாக்கப்பட்டு இருக்கிறது. சட்டம், நீதி, வைத்தியம், இஞ்சினியரிங் முதலிய நிர்வாகத் துறைகள்—ஆங்கிலத்தில் நடத்தப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருகின்றன; இவைகள் கற்கப்பட ஆங்கிலப் புத்தகங்களையே பெரிதும் படிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக எப்படிப்பட்ட தாய்மொழிப் பேசாளராக இருந் தாலும் இரு மொழிக்காரர் பேசுவதாயிருந்தால்—தங்கள் இரு தாய் மொழிகளையும் விட்டு விட்டு ஆங்கிலத்தில் பேசிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சர்க்கார் ஆதாரங்கள், நடப்புகள் —உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆங்கிலத்திலும், மாகாணத்துக்கு மாகாணம் ஆங்கி லத்திலும், வெளிநாடுகள் சம்பந்தம் ஆங்கிலத்திலும் இருந்து வருகிறபோது—பள்ளியில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு 10, 12 வயதுவரை அதாவது (First Form) 6-வது வகுப்பு வரை ஆங்கிலம் கற்பிக்கக்கூடாது என்று சர்க்கார் இன்று ஏற்பாடு செய்திருப்பதானது—சிறிதாவது அறிவுடைமை என்றோ, அதனால் திராவிட மக்களுக்குக் கேடில்லையென்றோ, யாராவது சொல்லமுடியுமா? நாம் ஒரு பையனைப் படிக்க வைக்க—அவனது 6-வது ஆண்டிலே துவக்குகிறோம். அவன் 'செகன்ட் பாரம்' என்னும் 2-வது பாரத்திற்கு வர குறைந்தது ஆறுவருஷம்; சிலருக்கு 7 வருஷம் படிக்கவேண்டியிருக்கிறது. 12, 13-வது வயதில் ஆங்கிலம் துவக்கினால் மேற்கண்ட சட்டம், வைத்தியம், இஞ்சினியரிங் முதலிய வைகளை ஆங்கிலத்தில் படித்துத் தேறமுடியுமா? படிப்புக்கு உருப்போட்டு ஒப்புவிப் பதையே—பரீட்சைத் தேர்வுக்கும், கெட்டிக்காரத்தனத்துக்கும், தகுதிக்கும், யோக்யதா பட்சமாக வைத்திருக்கும்போது இதில் திராவிடப்பிள்ளை படித்துத்தேறி அதிக மார்க்கு வாங்கி மேல் வகுப்பில் சேருவதற்கும், உத்தியோகத்திற்கும் தகுதியாக முடியுமா? 'எந்த மாணவனும் தனக்குப் படிப்பில்—உத்தியோகத்தில் இருந்துவரும் தடைகளை, வசதிக் குறைவுகளைச் சொல்லிச் சலுகை அல்லது பரிகாரம் கேட்கக்கூடாது' என்று சட்டமும் செய்திருக்கும்போது—திராவிட மக்கள் கதி என்ன ஆவது? இந்த நிலையில் இதுவரை இருந்துவந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை (கம்யூனல் ஜி. ஓ.) என்று இருந்து வந்ததையும் எடுத்துவிட்டதாக, மேலிடத்தில் இருந்து அறிக்கை வந்துவிட்டதென்றால்—உத்தியோகத்தில் திராவிடமக்கள் நிலை என்ன ஆவது?

இப்படிப்பட்ட நிலையில் உள்ள மக்களின் ஒரே ஒரு சார்பு ஆயுதமான 'விடுதலை'யில் இவைகளை எழுதுவதும், எடுத்துச் சொல்வதும் குற்றம் என்று ஆகி விட்டால் திராவிடமக்களுக்கு இனிப் பரிகாரம்தான் எப்படிக் கிடைக்கமுடியும்? ஆகவே தான் சர்க்கார், 'விடுதலை'மீது எடுத்துக்கொ[illegible] நடவடிக்கைகள் பற்றி—நாம், இனிச் சிறிதும் அலட்சியமாக இருக்[illegible]மாய்க் கவனித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதற்கேதுவான கா[illegible]

[[illegible]டுதலை'-தலையங்கம்—16-6-1948]



படிப்பகம்

www.padippakam.com



## 6. ‘வாழ்ந்தால் மானத்தோடு வாழ்வோம்’

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இன்றைய நிலையில் திராவிட மக்கள் நாதியற்றவர்களாக ஆக்கப் படுகின்றனர்; நமது உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அரசாங்கத்தார் நமது குறைபாடுகளுக்குப் பரிகாரம் செய்யக் கவலை கொள்ளாமல், மேலும் மேலும் தொல்லை கொடுப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். எப்படியாவது நமது கழகத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதாகத்தான் எண்ணுவதாகத் தெரிகிறது.

நாம் அரசாங்கத்திற்கு ஒரு கெடுதியும் செய்யாதபோது—நமது தோழர்களுக்கும்—‘அமைதியாய் இருங்கள்—கட்டுப்பாடாய் நடவுங்கள், வீண் கிளர்ச்சிகள் செய்து நமது அரசாங்கத்தோடு மோதிக்கொள்ளாதீர்கள்; அவர்களும் திராவிடர்—நாமும் திராவிடர்; நம் தொண்டு அவர்களுக்கும் சேர்ந்ததுதான்; நீங்கள் அமைதியைக் கைக் கொள்ளுங்கள்; சர்க்காருக்குத் தொல்லை கொடுப்பதல்ல நம் வேலை; நம் மக்களுக்கு இருந்துவரும் இழிவைப் போக்க நாம் வாதாடுகிறோம்; நாம் சூத்திரராய் இருப்பதை வெறுக்கிறோம்; அதை ஒழிக்க முயலுகிறோம்; இன்றுள்ள அரசாங்கத்தாரைக் கொண்டே அதை ஒழிக்க நாம் முயற்சிப்போம்’ என்று, இவ்வாறாக நாம் எடுத்துக்கூறி வந்தும், இன்றைய சர்க்கார் பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டு நமக்குத் தொல்லைகளையும், கஷ்டங்களையும் கொடுக்க முன்வந்து விட்டார்கள். நாம் எவ்வளவோ இதுவரை அடக்கமாய் இருந்தும் அவர்களே நம்மை வம்புச் சண்டைக்கு இழுக்கிறார்கள்.

கடைசியாக, நமது கலாசாரத்திற்கும் மொழிக்கும் இடையூறு விளைவிக்க முன்வந்து விட்டார்கள். 10 ஆண்டுகளுக்கு முன்னே நம்மால் வெறுத்து முறியடிக்கப்பட்ட இந்தி மொழி இன்று நமது இளைஞர்கள், குழந்தைகள் தலையில் கட்டாயமாக்கப்பட்டு விட்டது. முதலில், ஒரு கூட்டத்தார் இஷ்டப்படாததால் இந்தி கட்டாயமில்லை என்று சொன்ன கல்வி மந்திரியார், பார்ப்பனர்களின் கண்டனத்திற்குப் பயந்து, அவர்கள் மூக்கு சொறிந்ததற்குப் பயந்து—‘இந்தி கட்டாயப் பாடம்’ என்று இடம் கொடுத்து, இன்று நமது மக்களுக்கு இந்தியைக் கட்டாயமாக்கி விட்டார்கள். இதுவரை அவர்கள் செய்துவந்த எல்லையில்லா அக்கிரமங்களுக்கு எல்லாம் பொறுத்துவந்த நாம், இனி ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்களாகி விட்டோம்.

மக்கள் சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு பதவிக்கு வந்தவர்கள், மக்களின் குறைபாடுகளுக்குக் காது கொடுக்காதவர்களாகி, பார்ப்பனரின் வாக்குக்கு மதிப்புக்கொடுத்து பார்ப்பன அடிமை சர்க்காராக ஆகிவிட்டனர். பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்றெல்லாம் மக்களை ஏய்த்து ஓட்டுப்பெற்று, இன்று பதவியில் அமர்ந்ததும்—பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் எல்லாம் பறிக்கப்படுகின்றன. திராவிடர்களின் நன்மைக்காக உழைக்கும் ஒரே தினசரியாகிய ‘விடுதலை’க்கு, இன்று ரூ. 2000/– ஜாமீன் கேட்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பொதுஜன சர்க்காராகுமா? நீங்களே யோசித்துப் பாருங்கள்! நம்மவர்களைக் கொண்டே நம் கண்களைக் குத்தும் வேலையில் பார்ப்பனர்கள் இறங்கி விட்டார்கள். கேள்வி கேட்பாரற்றுப் போய்விட்டது.

எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, லஞ்சம், பித்தலாட்டம், கள்ள மார்க்கட் முதலியவைகள் தாண்டவமாடுகின்றன. நீதி என்பது இல்லை. நம் கடமைகளைத் தடுப்பதும், கொடிகளைப் பறிப்பதுமாக—முரட்டுத்தனமாக சர்க்கார் நடக்கிறது. காலிகளின் தொல்லைகளை அடக்குவதில்லை.

ஏகாதிபத்திய சர்க்கார் என்று சொல்லி வெள்ளையரைக் குறைகூறி வந்த இந்த மகானுபாவர்கள் எந்த விதத்தில் அவர்களைவிடச் சிறந்தவர்களாவார்கள்? வெள்ளையர் ஆட்சியில் காணாத குறைபாடுகளும், பட்டினி, கொலை, கொள்ளைகளும், யுத்தங்களும் இன்று மலிந்துவிட்டனவே? ஆகவே, நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். 24-6-1948-ல்



திருச்சியில் கூடிய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், இன்றைய சர்க்காரின் அடக்குமுறைக் கொடுமையை ஒழிக்கக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. நிலைமையை உணர்ந்து இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப் பூரண அதிகாரத்தையும்—தலைவர் என்ற முறையில் என்னிடம் அளித்திருக்கிறார்கள். அதைக் கொண்டுதான் நான் ஜில்லாதோறும் சென்று நம் இயக்கத் தோழர்களை, இளைஞர்களை, பணியாளர்களைக் கண்டு, அவர்கள் நிலை எவ்வாறிருக்கிறது, ஆதரவு எப்படி இருக்கும் என்பதை அறியவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவாகப் போகப்போகிறேன்.

அதாவது போராட்டம் நடக்குமானால், அல்லது நம்மீது அடக்குமுறைப் பாய்ச்சல் பாய்வார்களானால் நம்மவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றும், அப்போராட்டத்தின்போது இன்றைய சர்க்கார் எப்படி எப்படி நடந்துகொள்ளும் என்பதைப் பற்றியும் எடுத்துக்கூறிப் பின்தான் உங்கள் உதவியை நாடுவேன். சென்ற போராட்டத்தின் போது, அன்றிருந்த சர்க்கார் காங்கிரஸ் சர்க்காராயிருந்தாலும் வெள்ளையனிடத்தில் மேல் அதிகாரம் இருந்துவந்ததினால் அவர்கள் காட்டுராஜா ஆட்சி நடத்த முடியவில்லை. இன்றைய சர்க்கார் ஒரு அநாகரிக சர்க்கார், காட்டுமிராண்டி சர்க்கார். காலித்தனத்தினாலும், கட்டுப்பாடான பித்தலாட்டத்தினாலும் மக்களை ஏய்த்து அரசாங்கத்தைக் கைப்பற்றினவர்களின் சர்க்கார். அதனால், அக் காரியத்தை இனி அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே, இப்போதும் முன்போலவே இவர்கள் நமக்கு மிகுந்த தொல்லைகள் கொடுப்பார்கள். கண்ணீர்ப் புகைவிட்டு மக்கள் கூட்டத்தைக் கலைக்க முன்வருவார்கள். முட்டிக்கு முட்டி அடிப்பார்கள்; சுடுவார்கள். நம் வீட்டுக்குள் புகுந்து நம் பெண்டு பிள்ளைகளை வதைப்பார்கள். தொழிலாளத் தோழர்களுக்குச் செய்த துன்பத்திற்குமேல் செய்வார்கள். எப்படியாவது நமது கிளர்ச்சியை அடக்க முன்வருவார்கள்.

பிரிட்டிஷார் நடந்துகொண்ட நாகரிக சர்க்கார்போல் இது நடக்காது. நம்மைச் சிறைப்பிடித்து ‘ஏ’ கிளாஸ், ‘பி’ கிளாஸ் கொடுத்துப் பச்சரிசிச் சோறும், தனியாகப் பாலிக் உறைக்கு ஊற்றிய தயிரும், வெண்ணெய் உருக்கின நெய்யும், உருளைக் கிழங்கும், பருப்பும், பழங்களும், மாமிசம் முட்டையும், பத்திரிகைகளும் கொடுத்து நம்மை உபசரிப்பார்கள் என்று கருதாதீர்கள்! இவைகளெல்லாம் இன்றைய சுயராஜ்யம் தேடிய தேசபக்தர்களுக்கு—வெள்ளையன் ஆட்சிக் காலத்தில்—அந்த சர்க்காரால் சிறைப்படுத்தப்பட்டபோது மாமியார் வீட்டுக்குப்போன புது மருமகன் போலக் கொடுக்கப்பட்டன. அந்தச் சுகத்தை அனுபவித்து, ‘தியாகிகள்’ பட்டம் பெற்றவர்கள்—இன்று பதவி மோகத்தில் மூழ்கி நாற்காலிச் சண்டை போட்டுக்கொண்டு இருப்பவர்கள். இவர்களால் நமக்கு இப்படிப் பட்டவைகளெல்லாம் கிடைக்கும் என்று நினைத்து யாரும் ஏமாறவேண்டாம். அப்படி அவர்கள் நடந்தால் ஒழிந்துபோக வேண்டியதுதான். இவை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், நாளைக்குப் போராட்டத்தில் இறங்கியபின், ‘இப்படியெல்லாம் வரும் என்று தெரியாது!’ என்று சொல்லி மனத் தளர்ச்சியடையக்கூடாது என்பதற்காகத்தான். இவர்களால் என்னென்ன தொல்லை கொடுக்கமுடியுமோ அவ்வளவையும் கொடுத்தபின்தான் திருப்தியடைவார்கள். இவைகள் எல்லாம் தெரிந்த பின்னர்தான் நீங்கள் கிளர்ச்சியில் இறங்கவேண்டும்; இறங்கியபின் உறுதியாகக் கடைசிவரை இருக்கவேண்டும். நம் பின் சந்ததிக்காவது மனிதத் தன்மையும், மானமும் தேடிவைத்துவிட்டு நாம் மறைவோம்; இதில் கண்டிப்பாக நாம் பல நூற்றுக்கணக்கில் மாளவேண்டிவரும். சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டிய நிகழ்ச்சியாக இருக்கும் இது. தமிழரின் பெருமை, திராவிட மக்களின் வீரம், அவர்களது அடிமை நீக்க உணர்ச்சி இவைகளுக்குக் காலம் வந்துவிட்டது. ஒன்று, ‘வாழ்ந்தால் மானத்தோடு—வீரத்தோடு வாழ்வோம்! அல்லது மடிவோம்!’ என்ற உறுதியுடன் ஒவ்வொருவரும் இறங்கவேண்டும். இதில் வருகிறவர்களுக்கு ஒரு இலாபமும் கிடைக்காது. இது பணக்காரன் இயக்கம் அல்ல. அல்லது, சிலர் கூடிப் பித்தலாட்டக் கூட்டமாகி, பதவி வேட்டைக்காக வியாபாரம் நடத்தும் அரசியல் தந்திர இயக்கமல்ல.

படிப்பகம்

www.padippakam.com



இதில் வருகிறவர்கள் தங்கள் கைப்பொருள்களை இழக்கவேண்டும்; உயிரைத் துறக்க வேண்டும். கஷ்டநஷ்டங்கள் அனுபவிக்கத் தங்கள் வாழ்வைப் பாழாக்கவேண்டும்.

எத்தனையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் இருந்துவந்த இழிவுகளை ஒழிக்கப் போகிறவர்கள் நாம். அதற்கேற்ற இந்த விலைகளைக் கொடுத்தால்தான் முடியும். எந்த இயக்கத்திற்கும் இது உண்டு. கஷ்டப்படாமல் சுகம் அனுபவித்த 'அரசியல் இயக்கம்' இதுவரையில் நாட்டில் ஏற்பட்டதில்லை. கடைசி மூச்சு இதுதான். துணிவு கொள்ளுங்கள்! துணிந்து காரியத்தில் இறங்குங்கள்! எனக்கு வெகு கூப்பாடுபோடும் 1000 வேஷக்காரர்கள் இருப்பதைவிட, உறுதியான மனம்படைத்த 100 பேர்கள் இருந்தாலே வெற்றிபெறுவேன். இந்தப் போராட்டத்தில் நாம் தோல்வி அடைந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், பரிகசிக்கத்தக்க முறையில் இழிவான தோல்வி இருக்கக்கூடாது என்பதுதான். நீங்கள் உரம் பெற்று உண்மையாய்த் துணிந்து காரியத்தில் இறங்க வேண்டுமென்பதுதான் எனது ஆசை. ஒன்று சொல்கிறேன்; இதுவரை என்னால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கிளர்ச்சியும் தோல்வியடைந்ததில்லை. எனக்கு நம்பிக்கை உண்டு, இதிலும் வெற்றிபெறுவோம் என்று. தோழர்களே! உங்களுக்குச் சொல்லவேண்டியவைகளை எல்லாம் சொல்லிவிட்டேன். அரசாங்கம் எப்படி நடந்துகொள்ளும் என்பதையும் முன் கூட்டியே சொல்லிவிட்டேன். உதாரணம் ஒன்று சொல்லுகிறேன்.

சென்ற சில மாதங்களுக்கு முன் சென்னையில் நடந்த 'பக்கிங்ஹாம் மில்' தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் (Strike) சர்க்கார் எப்படி நடந்துகொண்டது—அப்படித்தான் நம்மிடமும் நடக்கும். பெண்களென்றும், குழந்தைகள் என்றும், தாய்மார்கள் என்றும், கிழவிகள் என்றும் பார்க்க மாட்டார்கள். பெண்கள் கண்களிலும் கண்ணீர்ப் புகை விடுவார்கள். போலீசாரைக் கொண்டு சுடவைப்பார்கள்; அடிப்பார்கள். மேலும் சொல்லுகிறேன்: நம் நாட்டுப் போலீசாரைக்கூட சுடச்சொல்ல மாட்டார்கள்; ஏன்? அவர்கள்மீது நம்பிக்கை இல்லை; அவர்களுக்கும் திராவிட உணர்ச்சி வளர்ந்துவருவதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதனால், மலபார் போலீசோ வடநாட்டுப் போலீசோ கொண்டுதான் நம்மைச் சுடச் செய்வார்கள். இதற்கெல்லாம் துணிந்து மார்பைக் காட்டக்கூடிய தொண்டர்கள் தாம் எனக்குத் தேவை. திராவிடரின் மரபு மார்பைக் காட்டுவது என்பது தவிர, புறமுதுகு தருவதில்லை. இதை மறக்காமல் வைத்து—வைரம் பதித்த உள்ளம் படைத்த மக்கள்தாம் தேவை. நீங்கள் சிந்தித்து, எத்தனை பேர்கள் வருவீர்கள் என்பதை எனக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படி வருகிறவர் எவ்வித பலாத்காரத்திற்கும், சமாதான பங்கத்திற்கும், குழப்பத்திற்கும் இடம் இன்றி அமைதியாக நடந்துகொள்ள வேண்டும்.

உங்களுக்குத் தலைவர்களாக வருகிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் சர்வாதிகாரிகளாகத்தான் இருப்பார்கள். அவர்கள் சொல்லுகிற வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். ஒருவரும் தங்கள் இஷ்டம் போல் நடக்கக்கூடாது. நமக்குக் கட்டுப்பாடுதான் மிகவும் அவசியம். தலைவர்கள் சொல்லை மீறி நடக்கும் மனப்பான்மை கொண்டவர்கள் போராட்டத்தில் இறங்கக் கூடாது. மேலும், 'நம்மவர்களால்தான் இந்தத் தொல்லை ஏற்பட்டது; நாம்தான் தவறு செய்தோம்' என்று மக்கள் பழி கூறும்படியாக நாம் நடந்து கொள்ளக் கூடாது. நம் நடத்தையைப் பார்த்துப் பொது மக்கள் பரிதாபப் படக்கூடிய விதத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தார் செய்யும் கொடுமைகள் அக்கிரமங்கள் தாம் பொது மக்கள் கண்களுக்குத் தெரியவேண்டும். அவ்வளவு கட்டுப்பாட்டுடனும், அமைதியுடனும் நாம் நடந்துகொண்டு, மக்கள் ஆதரவைப் பெறவேண்டும். வெளியில் ஒதுங்கி இருப்பவர்கள்கூட நமக்கு உதவி செய்ய முன்வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

[சென்னையில், 2-7-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-7-1948]



தோழர்களே!

இந்தி நம் நாட்டுச் சீதோஷ்ணத்திற்குப் பொறுத்தமற்றது; நம் நாக்குக்கு ஏற்க முடியாதது; நமக்குத் தேவையற்றது. 'இந்தி, மனிதர்களை மந்திகளாக்கும்' என்று அன்பர் திரு. வி. க. அவர்கள் கூறினார்கள். அது உண்மையிலும் உண்மை. உண்மையிலேயே இந்தி இராமாயணத்தில்தான்—அதாவது வடமொழி இராமாயணத்தில்தான் நாம் முதலாவதாகக் குரங்குகளாக ஆக்கப்பட்டிருக்கிறோம். அதைப் புகுத்துவதுதான் இந்தியின் தத்துவம். எனவேதான், அதை இவ்வளவு கடுமையாக எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது.

மந்திரியார் நம்மவர் ஆயிற்றே என்று எவ்வளவு காலம் நாம் சகித்துக்கொண்டிருக்க முடியும்? அதிலும் கல்வி இலாக்கா முடிவுகள் வரவர மிகமிகக் கேவலமாக ஆகிக்கொண்டு வருகின்றன. தோழர் சர். இலட்சுமணசாமி முதலியார் போன்ற அறிஞர்கள் எவ்வளவு எடுத்துக்கூறியும் கல்வி மந்திரியார் அறிஞர்களைக் கொண்டு எதுவும் தீர்மானம் செய்வதில்லை. சில சமயம் தன் இலாக்கா அதிகாரிகளுக்குக்கூடத் தெரியாமல் எதேச்சையாக—ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கும், சில சமயம் கலாசாலை அதிகாரிகளுக்கும், மற்றும் கலாசாலை உபாத்தியாயர்களுக்கும்கூடக் கடிதம் எழுதிவிடுகிறாராம். இதன் பயனாய் ஊழல்கள் மிக மலிந்துவிட்டனவாம். ஆகவேதான், வாரத்துக்கொரு முறை 'பல்டி' அடிக்கவேண்டி இருக்கிறதாம்.

இந்த இந்தி போதனை விஷயத்தில், முதலில் நியமிக்கப்பட்ட கல்விமுறை நிர்மாணக் கமிட்டியார்—'தமிழ் நாட்டில், இந்தி விருப்பப் பாடமாக இருக்கட்டும்' என்று சிபாரிசு செய்தார்களாம். அதன்படிதான் முதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம். பிறகு சிலரின் தூண்டுதலின் பேரில் அதே கமிட்டியில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டுமென்பதற்கு ஆதரவாயிருந்த ஒரு சிலரை மட்டும் கொண்டு, மறுபடியும் தந்திரமாக ஒரு கிளைக் கமிட்டியை ஏற்படுத்தி, இந்தியைக் கட்டாயப் பாடமாக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாம். அதுவும், முன்னையக் கமிட்டியார்—எந்த ஒரு மாணவனோ, மாணவியோ இந்தியைப் படிக்க இஷ்டப்படாவிட்டால் அவர்கள்மீது ஆசிரியரோ, பெற்றோரோகூட வற்புறுத்தக்கூடாது என்று தெரிவித்திருந்தார்களாம். இரண்டாவதாக நியமிக்கப்பட்ட சப்-கமிட்டியாரால் அவ்வளவும் உதாசீனம் செய்யப்பட்டு விட்டது.

ஆகவே தோழர்களே! நாம் இவ்வளவு கேடு செய்யத் துணிந்தவர்களோடு ஒரு போராட்டம் நடத்துவதென்றால் அது வெறும் விளையாட்டுப் போராட்டமாக இருக்காது. பிறகு தீர்மானங்கள் வரும். முறைப்படி நிறைவேற்றப்படும். தீர்மானங்களை நிறைவேற்றுவது பெரிதல்ல. அவற்றை முறைப்படி நடத்திக் காட்டுவதுதான் பெரிது.

முன் இந்தி நம் மாகாணத்தில் நுழைக்கப் பட்டபோது ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தவர்கள் வெள்ளையர்கள். அவர்கள் ஒரு நாகரிகப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்; மனிதத் தன்மையை அறிந்தவர்கள்; மேலும், உலக வாக்குக்குப் பயந்தவர்கள். ஆனால், இன்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களோ நாகரிகம் தெரியாதவர்கள் மட்டுமல்லர்; தாமே நாகரிகத்தின் பிரதிபிம்பங்கள் என்றுகூடத் தம்பட்டம் அடித்துக் கொள்பவர்கள்.

காடுகளில் ஆடு மாடுகளைக் கொன்று தின்று வாழ்ந்துவந்த ஆரிய காட்டுமிராண்டிப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள், இன்று நம்மை ஆட்சி புரிபவர்கள்; தன்மான மற்றவர்கள். தந்திரத்தால்—கட்டுப்பாடான பலாத்காரத்தால் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள். ஆகவே, வெள்ளையன், 'ஆள் கீழே விழுகிறவரை அடியுங்கள்' என்று போலீசுக்கு உத்தரவு கொடுத்தால்—இவர்கள் 'செத்துப் பிணமாகும்வரை அடியுங்கள்' என்று உத்தரவிடுவார்கள். அவன், 'இவர், அவர் என்று பாரபட்சம் பாராமல் அடியுங்கள்' என்றால் – இவர்கள், 'இன்னார், இன்னாரைப் பார்த்துப் பார்த்து அடியுங்கள்' என்று உத்தரவு போடுவார்கள். அவன், 'கண்ணீர்ப் புகை மட்டும் உபயோகியுங்கள்' என்று கூறுவானானால், இவர்கள் 'கண்ணீர்ப் புகை ஏன் – விஷப் புகை விட்டே கொல்லுங்கள்' என்று உத்தரவு பிறப்பிப்

படிப்பகம்

www.padippakam.com



பார்கள். அந்தமாதிரிக் காட்டும்படியான செயலால்தான் மக்களை அடக்கமுடியும் என்பதில் நம்பிக்கை உடையவர்கள் இவர்கள். ஆகவே, எத்தகைய எதிர்ப்புக்கும் நாம் தயாராய் இருக்கவேண்டும். இங்குள்ள திராவிடப் போலீஸ்காரர்களைக்கூட நம்ப மாட்டார்கள். மலையாளத்திலிருந்தோ, கூர்ஜரத்திலிருந்தோ, பட்டாளத்தைத் தருவித்து வந்து நம்மீது ஏவிவிடுவார்கள். ஏற்கனவேகூட 2000 பேரை சென்னைக்குத் தருவித்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பயங்கர நிலையில்தான் இந்தி எதிர்ப்பு நடைபெற வேண்டும்.

சென்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இரண்டு பேர் ஜெயிலில் இறந்தார்கள் என்றால், இன்றையப் போராட்டத்தில் 200 பேருக்கு மேலாக வெளியிலேயே இறக்க நேரிடக்கூடும். இதை நீங்கள் நம்பவேண்டும். சற்றேனும் மனிதத் தன்மையோடு நீங்கள் வாழவேண்டுமென்று நினைப்பீர்களானால், இந்தியை ஒழிக்க நீங்கள் கட்டாயம் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும். தாய்மார்களும் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும். என்ன விலை கொடுத்தேனும் நாம் போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும். இது கடைசிப் போராட்டம்—வெற்றி அல்லது தோல்வி, இரண்டிலொன்று பார்த்துவிடத்தான் வேண்டும். பண்டைப் பெருமை பேசிப் பயனில்லை. அழகான மேடைப் பேச்சினாலோ, பண்டைச் சரித்திரப் பெருமையினாலோ பயனில்லை. தோழர் அண்ணாதுரை, 'நானும் வந்து விட்டேன், போராட்டத்தில் முன் நிற்க' என்று சற்றுமுன் கூறியதுபோல்—நீங்கள் எல்லோரும், இத் திராவிட நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், சிறுவனும் சிறுமியும் முன்வர வேண்டும். நான் ஒன்றும் உங்களுக்குப் பூச்சிகாட்டவில்லை. உண்மையைத் தான் கூறுகிறேன். நினைத்தால் இன்று இரவேகூட உத்தரவை மாற்றிவிடலாம் என்கிற நிலையில் இல்லை அது; அந்த உரிமை இவர்கள் கையிலில்லை. அவ்வுரிமை இவர்களின் சூத்திரதாரிகளான பார்ப்பனர்களிடம் இருக்கிறது. அவர்களுக்கு ஆதரவோ, வடநாட்டாரிடம் இருக்கிறது. அந்த இருவரும் சேர்ந்து நம் மந்திரிகளை ஒழிக்கும்வரை தூங்க மாட்டார்கள். ஆகவே, வடநாட்டவர்களின் ஆதிக்கம், பிணைப்பு நம் மாகாணத்தை விட்டு ஒழிந்தால்தான் இந்தியும் நம் மாகாணத்தை விட்டு ஒழியும் என்பதை மனத்தில் பதிய வைத்துக்கொள்ளுங்கள். பிறகு தெரியும் இந்தி ஒழிவதில் உள்ள சிரமம். நமது குழந்தைகளுக்கு 1-வது வகுப்பு, 2-வது வகுப்புப் படிக்கக்கூடப் பள்ளியில் இடமில்லை என்று நகர்ப்புறங்களில் கூறப்படுகிறது. அதாவது, போதிய பள்ளிக்கூடங்கள் இல்லை; வாத்தியார்கள் இல்லை. என்றாலும் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு இந்தி வகுப்பும், இந்தி வாத்தியாரும் வைத்துக்கொள்ள வேண்டுமாம். யார் அப்பன் வீட்டுப் பணம் கொள்ளை போவது இதற்கெல்லாம்? ஏற்கனவே பஞ்சத்தில் அடிபட்டுப் பஞ்சைகளாகக் கிடக்கிறோம். மேற்கொண்டு பள்ளிக்கூடப் பிள்ளைகள் சம்பள உயர்வு வேறு. ரூ. 2-12-0 கொடுத்தவர்கள் ரூ. 5-4-0 கொடுக்கவேண்டும். ரூ. 5-4-0 கொடுத்தவர்கள், ரூ. 7-8-0 கொடுக்கவேண்டும். முன்பு 8 மாதச் சம்பளம் கொடுத்தவர்கள் இப்போது இந்த உயர்ந்த தொகையை 10 மாதம் கொடுக்கவேண்டும். இந்தி நுழைவு கல்வித்துறையில் பெருத்த சங்கடமென்றால் கலைத் துறையிலும் அதைவிடச் சங்கடந்தான்.

இந்தியில் மெச்சத் தகுந்த கலைகளே கிடையாது. அதிலுள்ள கலைகள் யாவும் துளசிதாஸ் இராமாயணமும், கபீர்தாஸ் சரித்திரமுந்தாம்; மனுதர்மமும், பாகவதமும்தாம். போதுமா இவை? இவற்றின் தன்மைதான் தெரியுமே உங்களுக்கு? இந்தி மொழி தலைசிறந்த அறிஞர்களைப் பெற்றெடுக்கவில்லை என்று திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டார். இந்தி உற்பத்திசெய்த அறிவாளிகள் யார் என்றால் நோகாமல் பதவிக்கு வந்த நேருவையும், அவருடைய அய்யாவையுந்தான் குறிப்பிடவேண்டும். அவர்களது தியாகம்-இன்று அந்தக் கூட்டம் குடும்பத்தோடு கொள்ளையடிப்பது (உங்களுக்குத் தெரிந்ததுதான்); வேறு ஆட்களைக் குறிப்பிட முடியாது. தமிழ் மொழியோ எண்ணற்ற கலைகளையும், கலைஞர்களையும் அறிஞர்களையும் சித்தர்களையும் முத்தர்களையும் தோற்றுவித்திருக்கிறது.



இந்தியில் கலை இல்லை; காவியம் இல்லை; நீதிநூல் இல்லை. அம்மொழி மூலம் அறியக் கிடக்கும் விஞ்ஞானத் தத்துவங்களும் இல்லை. ஆகவே 100-க்கு 97 பேர் விரும்பாத அம்மொழி—ஏன் இங்குப் புகுத்தப்படவேண்டும்? காரணம் தெரியுமா? இங்குள்ள பார்ப்பன கோஷ்டியார் இத் திராவிட நாட்டின் கலைகளையும் கலாசாரத்தையும் அடியோடு அழித்து இந்நாட்டை வடநாட்டுக்கு வால்நாடாக்கப் பார்க்கிறார்கள். அதுதான் மர்மமே ஒழிய 'இந்தி தேசிய மொழி; ஆகவே, எல்லோரும் படிக்கவேண்டும்' என்று கூறுவதெல்லாம் பித்தலாட்ட வார்த்தைகள். இந்தி தேசிய மொழியாயின் எல்லோரும் கட்டாயமாக இந்தியைப் படித்துத்தான் ஆகவேண்டும் என்று வெளிப்படையாகக் கண்டிப்பாகக் கூறிவிடட்டுமே! இந்தி அல்லது சமஸ்கிருதம் படியுங்கள் என்கிறார்களே, அது ஏன்? இந்தி தேசியமொழியா? அல்லது சமஸ்கிருதம் தேசிய மொழியா? நீங்கள் சற்று அருள்கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள்!

தேசியம் என்பது பித்தலாட்டம்; வடமொழியை நுழைத்து, அதன்மூலம் வருணாசிரமத்தை நுழைத்து, பெருமை மிக்க திராவிடமக்களைச் சூத்திரர்களாக்கி என்றென்றும் அடிமைகளாக ஆக்கிவைத்துக் கொள்ளப் பார்ப்பனக் 'கூட்டம் செய்யும் பச்சைப் பித்தலாட்டம்தான் இது. நமது தாய்மார்களைச் சூத்திரச்சிகளாக—நமது ஆடவர்களைச் சூத்திரர்களாக—நமது பழங்குடி மக்களைப் பஞ்சமர்களாக, சண்டாளர்களாகவும்; நமது கிறிஸ்தவத் தோழர்களையும், முஸ்லிம் தோழர்களையும் மிலேச்சர்களாக வைத்திருக்கச் செய்யப்படும் சூழ்ச்சிதான் இது. இந்தச் சூழ்ச்சிகளுக்கு நமது அமைச்சர்கள் விபீஷணர்களாகிவிட்டார்களே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. இந்தி நுழைவால் உண்மைத் தமிழ்மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படாது. கடுகளவு பயன்கூட ஏற்படாது. அதற்கு மாறாக எவ்வளவோ கேடுகள் வந்து சூழும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் போற்றிக் காப்பாற்றிவந்து, கடைசி காலத்தில் கைவிட்டுத் தற்போது வெகு கஷ்டப்பட்டுப் பெற்று வளர்த்துவரும் தமிழ்ப் பண்பு—அடியோடு கெட்டுப் போகும்.

கன்னிகாதானம் என்பதை வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்று மாற்ற எவ்வளவு சிரமப்பட இருந்தது? மாங்கல்ய தாரணம் என்பதை ஒழிக்க எவ்வளவு இம்சைப்படவேண்டி இருந்தது? மற்றும், தேவை இல்லாத சடங்குகளை, புராண இதிகாசக் குப்பைகளின் மீதும், வெறும் கற் கடவுள், செம்புக் கடவுள் இவற்றின்மீதும் இருந்த மூடநம்பிக்கையையும், மூட பக்தியையும் மாற்ற எவ்வளவு காலம் ஆகியது? இவ்வளவு முற்போக்கும் மறுபடியும் அழிந்து போகவேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுவீர்களா?

சூத்திரன் என்ற வார்த்தையைக் கைவிட்டு 'திராவிடன்' என்று பெருமிதத்தோடு கூறிக்கொள்ளும் நீங்கள், மறுபடி சூத்திரனாக மாற விருப்பம் கொள்வீர்களா? இந்த முற்போக்கைக் கண்டு அஞ்சும் பார்ப்பனக் கூட்டம் வடநாட்டாரின் கூலிகளாகி, அவர்களுக்கு வால்பிடித்து நம்மவர் சிலரை விபீஷணர்களாக்கிக் கொண்டு, தேசியமொழி என்ற பேரால் நம்மீது வடமொழியைச் சுமத்துகிறது என்றால்—நம்மை, நம் நாட்டை வடநாட்டாருக்குக் காட்டிக்கொடுக்கிறதென்றால் நாம் அதற்கு இடங் கொடுக்கலாமா?

தோழர்களே! தாய்மார்களே! இந்தியோடு, வடநாட்டாரையும் சேர்த்து ஒழிக்க வேண்டியதுதான்; அதற்கான அவசியம் ஏற்பட்டுவிட்டது. திராவிடர்-ஆரியர் போராட்டம்—அதுவும் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இடையறாது இருந்துவரும் இப்போராட்டம், இன்று ஒரு முடிவான கட்டத்திற்கு வந்துவிட்டது. இதை முடித்து வைப்பது நமக்குப் பெருமையுங்கூட. நமது பின் சந்ததியார் போற்றிப் புகழக்கூடிய ஒரு அரிய சந்தர்ப்பத்தில் நாம் இன்று இருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாவிட்டால் நாம் எதிர்காலத்தில் பின்சந்ததியாரால் எள்ளி நகையாடப்படுவோம் என்பதோடு, அவர்களின் துன்பத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் நாமே காரணபூதர்களாகவும் ஆடுவிடுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



போராட்டத்தைத் துவக்குவோம்; மானமுள்ள மக்களாகப் போராடுவோம்; மானத்தோடு போராடி மடிந்தாலும் தவறில்லை. பின்சந்ததியார் மேலும் வீரத்தோடு போராடி நாம் விட்டுச்செல்லும் பணியைப் பூர்த்திக்குக் கொண்டுவருவார்கள். திராவிடர்கள் மானத்திற்கும், வீரத்திற்கும் பேர் பெற்றவர்கள். ஆகவே, இவற்றைக் கைவிடாதீர்கள். குண்டுபட்டு இறந்தீர்கள் என்றாலும், குண்டு மார்பில் பாய்ந்திருக்கட்டும்! முதுகில் பாயும்படி நடந்துகொள்ளாதீர்கள்! என்றாயினும் ஒருநாள் சாகப்போகிறவர்கள்தான் நாம். ஆகவே, நல்ல காரியத்திற்காக நம் உயிரை நல்ல முறையில் அர்ப்பணித்துச் சாவோம். மந்திரிகள் நம்மவராயிற்றே என்ற நினைப்பை மறந்துவிடுங்கள். நம்மவர்கள் மந்திரிப் பதவியை இழக்க நேரிடுமே என்ற பயத்தையும் விட்டொழியுங்கள். ஒரு ஓமாந்தூராரின் இடமோ, ஒரு அவிநாசியாரின் இடமோ காலியானால் அந்த இடத்தைப் பார்ப்பனர்களைக்கொண்டு அடைக்க முடியும் என்று நினைக்காதீர்கள். தமிழ்நாடு இன்றுள்ள நிலையில் அது சுலபத்தில் சாத்தியமானதல்ல. ஆகவே, இந்தியை ஒழித்துக் கட்டுவதில் நாம் யாவரும் ஒன்றுபடவேண்டும்.

இதில் நம் இளைஞர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பேத உணர்ச்சி ஏற்படக் கூடாது. இந்தி படித்தல் தம் மக்களுக்குக் கேடு என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து அதை ஒழிக்க முன்வரவேண்டும். நம்மிடையே உள்ள பேத உணர்ச்சிகளை விட்டொழிக்க வேண்டும். சின்னஞ்சிறு குற்றங்களை மறந்து நேரடியாகப் போராட்டத்தில் வந்து ஒவ்வொருவரும் கலந்துகொள்ள வேண்டும். இப்போது நடக்கப்போவதுதான் உண்மையான ஆரிய–திராவிடப் போராட்டம்; நம் மானத்தைப் பணயம் வைத்து நடத்தும் போராட்டம். இதில் ஏமாந்துபோனால் பிறகு திராவிடர்களாக இந்நாட்டில் வாழமுடியாது; கண்டிப்பாக, சூத்திரனாகத்தான் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

சர்க்காருக்கு நல்ல வீம்பு வந்திருக்கிறது. ஆகவே, எளிதில் நமக்கு விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆகவேதான், திரும்பத் திரும்பப் போராட்டத்தினிடையே அனுபவிக்க வேண்டியிருக்கக்கூடிய கஷ்டநஷ்டங்களைப்பற்றிக் கூறவேண்டி இருக்கிறது. நம்மை அடிப்பார்கள்; நம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள்; நமது தாய்மார்களை மான பங்கப் படுத்துவார்கள்; வடநாட்டுப் பட்டாளத்தைக் கொண்டுவந்து நமது பெண்கள்மீது ஏவி விடுவார்கள்; வீடு புகுந்து கொள்ளையடிக்கச் செய்வார்கள். அப்படிப்பட்ட நிலை கட்டாயம் வரும். அந் நிலையை எப்படியும் ஆட்சியாளர்கள் வரவழைத்துக் கொள்வார்கள். நமது நாட்டுச் சுதந்திரமும், தனிமையும் இந்தப் போராட்டத்தின் வெற்றியைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

நமது பிரிவினை உணர்ச்சியை அழிக்கத்தான் அவசர அவசரமாக இந்தியைக் கொண்டுவந்து புகுத்துகிறார்கள். இது எல்லோரும் ஒன்றுசேரக் கூடிய நல்வாய்ப்பாக இருக்கிறது. மற்ற காரியங்களில் நாமெல்லாம் சுலபத்தில் ஒன்றுசேர முடியாது. இது மொழிப் போராட்டம் மட்டும் இல்லை; கலைப் போராட்டம்; கலாசாரப் போராட்டம் என்று கூடச் சொல்வேன். இது உரிமை வேட்கைப் போராட்டம் ஆகும். இப் போராட்டத்தின் போது எந்த ஒரு திராவிடனாலும்–எந்த ஒரு உண்மைத் தமிழ் மகனாலும் தூங்கிக்கொண் டிருக்க முடியாது. இதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். சில நாட்களுக்கு— மாணவர்களுக்குப் படிப்பில்லாவிட்டாலும் பரவாயில்லை என்று, நம் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமல் இருக்கவேண்டியதுதான். மாணவர்களானால் மட்டு மென்ன? அவர்களுக்கும் மனிதத் தன்மை வேண்டாமா? தன்மானம் வேண்டாமா? ஏழை மக்களிடம் இருந்து வரிப் பணம் வாங்கி அதை இந்திச் சனியனுக்கா அழவேண்டும்? இந்த அமைச்சர்களுக்கு எந்த அளவுக்கு மூளை இருக்கிறதென்று பாருங்கள்! ஒரு குழந்தையை 6 வயதில் அல்லது 7 வயதில் பள்ளியில் சேர்க்கிறோம். 12 வயதில் 5 வகுப்பு முடிக்கிறது. 19 வயதில் 6-ம் பாரம் முடிகிறது. அப்புறம் கல்லூரிப் படிப்பு 4 வருடம்; ஆக, 23 அல்லது 24 வயதில்தான் அவன் பி.ஏ. பட்டம் பெற முடிகிறது. இதற்குள்ளாக

படிப்பகம்

www.padippakam.com

திராவிடத் தந்தை

# பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு

முதுபெரும் தமிழ்ப் புரவலர்,

## நாவலர் ச. சோ. பாரதியார் அவர்கள்

அனுப்பிய உறுதிமொழி.


Pasumalai
28-6-48

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் தலைமையில் 'இந்தி'யை எதிர்த்துப் போரிடுவதாக நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் உறுதி கூறி எழுதிய கடிதம்



எவ்வளவு பணம் வீணாக்கப்படுவது? இந்தப் படிப்பால் பெறக்கூடிய பயன்தான் என்ன? இவ்வளவு காலச் செலவையும் பொருட் செலவையும் குறைக்க மந்திரியார் ஏதாவது திட்டம் தீட்டினாரா? அதிகப்படியான ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்துதல், ஏழை எளியவர்கள் படிப்பதற்கான இலவசப் பள்ளிகள் ஏற்படுத்துதல், கிராமந்தோறும் பாடசாலை இருக்கும்படிச் செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதை விட்டு – ஒன்றுக்கும் உருப்படாத இந்த இந்தி மொழியை ஏன் கட்டியழத் துணிந்துவிட்டார்? காரணம் இதுதான்! பிரிவினை உணர்ச்சி தலை தூக்குமுன் அதை அடியோடு ஒழித்துக் கட்டவேண்டும். மக்களுக்கு ஏற்பட்டுள்ள தன்மான உணர்ச்சி தலை தூக்குமுன் அதை அடியோடு ஒழித்துக் கட்டவேண்டும்; அவர்களை அடிமைகளாக்க வேண்டும் என்ற வடநாட்டாரின் திட்டத்திற்கு அடிபணிந்துவிட்டதுதான்.

ஆகவே, நாமாக வம்புக்குப் போகவில்லை; வம்பை வரவழைத்துக்கொள்பவர் அரசியலார்தாம். மறுபடியும் கூறுகிறேன்: இது அரசியல் போராட்டமல்ல; இனப் போராட்டம்; மனிதத் தன்மைப் பாதுகாப்புப் போராட்டம் என்று. தென்னாட்டவரின் மனிதத் தன்மையை அழித்து இதையும் ஆரிய வர்க்கத்தோடு சேர்த்துக்கொள்ளச் செய்யப்படும் சூழ்ச்சியின் முதல்படிதான்—கட்டாய இந்தி நுழைப்பு. ஆகவே, நாம் இதை எதிர்த்துத்தான் ஆகவேண்டும். ஒருவேளை ஆந்திரர்கள் ஆரிய வர்க்கத்தில் சேர்ந்துவிடுவார்களோ என்றுகூட நினைக்கவேண்டியிருக்கிறது. எவ்வகையாயினும் இதை எதிர்த்துப் போராடியே தீருவோம். இப் போராட்டம், தென்னாட்டுச் சரித்திரத்தில், திராவிடநாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய மகோன்னதப் போராட்டமாக அமையும். இப் போராட்டத்தில் வெற்றியின்றேல் தமிழ்நாடு போம்; தமிழ்க்கொடி போம்; தமிழன் சிறப்பெல்லாம் தகர்ந்து போம். நியாயம் நமது பக்கத்தில்தான் இருக்கிறது. தமிழ் காக்க வாரீர்! எங்களுக்கும் வயதாகி விட்டது! நாங்களும் வெற்றி காண ஆசைப்படுகிறோம். ஆகவே, தன்மானத் திராவிடர்காள்! தமிழர்காள்! வெற்றி காணப் போராட்டத்தில் ஈடுபட முன்வாருங்கள். யார் எந்தக் கட்சியில் இருந்தாலும் தன்மானமிருந்தால், தமிழ் காக்க முன்வாருங்கள். 'சாவேன் அல்லது வெற்றியோடு மீள்வேன்' என்ற உறுதியோடு முன் வாருங்கள்! போராட்டத்தில் வெற்றிக்காக ஒழிந்துபடவும் தயாராக முடிவு செய்துகொண்டு முன் வாருங்கள். அப்போதுதான் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

[சென்னை செயின்ட் மேரிஸ் ஹாலில், 17-7-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 20-7-1948]

# 3. இரண்டாம் போர்

## 1. நமது போர் முறை

இந்தி எதிர்ப்பு என்பது ஒரு மாபெரும் போராட்டமாகும். அதுவும் சர்வ வல்லமையும், சர்வ வசதியும் உள்ள (அதாவது, ஒரு மாபெரும் கட்டுப்பாடான சுயநல பதவிப் பித்துக் கோஷ்டி) சர்க்காருடன் நிர்க்கதியான—மதம், சமுதாயம், சுதந்திரம், சுயராஜ்யம் என்னும் பேரால் ஏமாற்றப்பட்டு மான உணர்ச்சியையும், மனிதத் தன்மையையும் அடியோடு அற்றுப் போகும்படி செய்யப்பட்டு, தன் இனத்தைக் காட்டிக்கொடுத்து, எதிரிக்குத் தஞ்சமாவதின் மூலம்தான் மனிதனாக வாழமுடியுமே தவிர, மற்ற வழிகளில் வாழமுடியாத மாதிரி ஆக்கப்பட்டு, பலப்பல விபீஷணர்களைக் கொண்ட ஒரு நிர்க்கதியான மக்கள் நடத்தும் போராட்டமாகும்.

இதில் நாம் துன்பப்படுவது, நசுக்கப்படுவது, நட்டப்படுவது, உடல்–பொருள்–ஆவி இழக்கப்படுவது என்பதல்லாமல் '[illegible]றிதும், 'சரீரக் கஷ்டம், தொந்தரவு



படிப்பகம்

www.padippakam.com



தொல்லை' கொடுக்காத போர் ஆகும். மற்ற யுத்தங்களுக்குச் செல்பவர்களும் தங்கள் உயிரைக் கொடுக்கத் துணிந்துதான் செல்லுகிறார்கள் என்றாலும், அவர்களுக்கு எதிரியைக் கொல்லுவது என்கின்ற எண்ணமும், அதுவே, முக்கிய இலட்சியமும் ஆகும். ஆனால், நமது போராட்டம் அப்படியல்ல. 'எதிரி'க்குச் சிறிதும் தொந்தரவு கொடுக்காமல் நமது உயிரைக் கொடுக்கவே நாம் யுத்தத்திற்குச் செல்கிறோம். அதனால், இந்த யுத்தத்தில் ஈடுபடும் மக்கள் ஒரு நல்ல யுத்தவீரன் எப்படித் தன் உயிருக்குத் துணிந்து உற்சாகமாக இறங்குகிறானோ அதுபோலவும், யுத்தவீரன் எப்படி எதிரியைக் கொல்லலாம் என்று கருது கிறானோ அந்தப்படிச் சிறிதுகூடக் கருதாமலும் நாம் உயிர் விடுவதன்மூலமே எதிரியை வெற்றிகொள்ளலாம் என்ற கருத்துடன் வரவேண்டும். அதாவது, எல்லாத் தொண்டர்களும் திருப்பூர் குமரனைப்போல்—சர்க்காரால், போலீஸாரால் அடிபட்டுச் செத்தான் என்று ஆகவேண்டுமேயொழிய, ஆகஸ்ட் தனத்தாலோ—ஆகஸ்ட் தனத்தில் வெற்றிபெற்ற காசி ராஜன் – ராஜகோபாலன்கள் போலவோ ஆகக்கூடாது; கண்டிப்பாக ஆகக்கூடாது.

காங்கிரஸ்காரர்கள் செய்த போராட்டம் கொள்ளை அடிக்க, கொடுங்கோல்–ஒழுக்க மற்ற ஆட்சி நடத்தச் செய்யப்பட்டதாய் முடிந்தது; நாம் போராடுவது மனிதத் தன்மை பெற, மானம் பெற, நம் பல்லாயிரக்கணக்கான மக்களின் இழிவை நீக்கிக்கொள்ளவே ஆகும். காங்கிரஸ் போராட்டம், தனிப்பட்ட மனிதனின் பித்தலாட்ட வாழ்வுக்கு; ஆனால், நமது போராட்டம்—பல கோடி மக்களின் மனிதத்தன்மை வாழ்வுக்கு ஆகும். இதைத் தொண்டர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் போராட்டத்தில் ஒரு காரியத்தில்கூட, (ஆரியர்கள்) காங்கிரஸ்காரர்கள் நடத்திய தன்மையை எண்ணத்தில், மனத்தில் கொள்ளக்கூடாது. திராவிடர் கழகம் இந்தப் பத்து ஆண்டுகளாக நடந்து வந்த தன்மையை, போதித்து வந்த நடத்தையை மனத்தில், பேச்சில், செயலில் கொண்டு நடந்து கொள்ள வேண்டும். காங்கிரஸ்காரன் அல்லது காங்கிரஸ் சர்க்கார் அல்லது காங்கிரஸ் சர்க்கார் சிப்பந்தி நம்மைக் கொடுமைப்படுத்துவது தனது வாழ்வுக்கு அல்லது வயிற்றுப் பிழைப்புக்கு ஆதலால்—அவர்களுக்குப் பல அட்டூழியம் செய்ய உரிமை உண்டு; நாம், அட்டூழியத்தால்—யோக்கியக் குறைவால் வாழவேண்டுமென்று கருதினால் அந்தக் கோஷ்டியில் சேர்ந்து அவர்களைவிட உயர்ந்த அல்லது அவர்களைப்போன்ற வாழ்வு வாழலாம். ஆனால், நாம் உலகுக்கு உண்மை ஒழுக்கத்தை—ஒழுக்கப் போராட்டத்தின் மூலம் ஒரு மனிதன் வாழமுடியும், வெற்றிபெற முடியும் என்பதை எடுத்துக்காட்டப் போராட்டம் நடத்துகிறோம்; நாம் வெற்றி பெற்றே தீருவோம். 'காங்கிரஸ் தனம்' அல்லது 'ஆகஸ்ட் தனம்' என்பது தோல்வியடைந்தே தீரும்; அடைந்தே வருகிறது. எனக்குத் 'தெய்வீகம்' என்பதில் நம்பிக்கை கிடையாது; ஞானத்தில், அறிவில், சத்தியத்தில் நம்பிக்கை உண்டு. இது மூட நம்பிக்கை இல்லை; அல்லது நம்பித்தான் தீர வேண்டும் என்பதன்பாற்பட்டதல்ல. பிரத்யட்ச அனுபவத்தில் அனுபவித்து வருபவன்; பிறத்தியாருக்கும் மெய்ப்பித்துக் காட்டுகிறவன். ஆதலால், நான் மூடநம்பிக்கையில்—மகாத்மா தன்மையில் இதைப் பேசவில்லை; சத்திய நீதியில் பேசுகிறேன். எப்படி என்றால், இது நம்நாடு; இங்கு வடநாட்டான் ஆதிக்கம் செலுத்துகிறான்; சுரண்டுகிறான். நாம் இந்நாட்டு மக்கள்; நாம் இந் நாட்டு மன்னர் சந்ததிகள்; நம்மீது ஆரியன் ஆதிக்கங் கொண்டான். பிச்சைக்குப் புகுந்த ஆரியனுக்குப் பிறவியடிமையாயிருக்கிறோம், நாம். தமிழ், நம்நாட்டு மொழி; இன மொழி; இந் நாட்டுக் கலாசாரத்துக்கு ஏற்றமொழி. வட மொழி–அன்னிய மொழியின் ஆதிக்கத்தில் நம் மனிதத் தன்மானம், உரிமை பாழாக்கப் பட்டிருக்கின்றன. இதற்கு நம் உடன் பிறந்தவர்கள் விபீஷணர்களானது உண்மையில் மகா மகா இழிவு என்பது சத்தியம். இவைகள்தாம் சத்தியமும், நீதியும் ஆகும் என்கிறேன்.

இவை தோல்வியுறாது! தோல்வியுறாது! தோல்வியுற்றால்தான் நட்டம் என்ன? அந்தத் தோல்வியை நாம் கண்டிப்பாய் அனுபவிக்கமாட்டோம். நம்மைத் தோற்கடித்தவர்களும், தோல்வியைக் கண்டு சும்மா இருப்பவர்களும், தோல்வியைச் சகித்துக்கொண்டு உயிர்வாழ்பவர்களுமேயாவார்கள். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆதலால், தொண்டர்களே! போராட்டத்தில் சிறிதும் நிலை தவறி விடாதீர்கள்.



['விடுதலை'–அறிக்கை—8-8-1948]

## 2. வாழ்வு அல்லது சாவு

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

திராவிடர் கழகத்தைப் போன்ற அபூர்வமான இயக்கம் வேறெங்கும் இருக்க முடியாது.

அதாவது, பதவிக்கு வரவேண்டுமென்ற எண்ணமோ, தேர்தலுக்கு நிற்கவேண்டிய அவசியமோ, அதற்கான திட்டமோ சிறிதுமின்றி—யார், எந்த எதிர்க்கட்சி ஆட்சி புரிந்தாலும் அவர்களை நாணயமாகவும், மக்களின் நலனுக்காகவுமான வகையில் தொண்டாற்றச் செய்வதும்; அவர்களிடத்தில் நிபந்தனைப்படுத்தி அவ் வேலைகளை வாங்குவதும் திராவிடர் கழகத்தின் முக்கிய தொண்டாகும்.

எனவேதான், நாங்கள் கூட்டம் போடுவதோ அன்றிக் கிளர்ச்சி செய்வதோ, ஓட்டுப் பெறுவதற்காக அல்லது அதிகாரபீடத்தில் அமருவதற்காகச் செய்யப்படும் அரசியல் முன்னேற்பாடுகள் என்று எவரும் கருதக்கூடாது. இன்னும் கூறுவேன்—நாங்கள் எந்தக் குறிப்பிட்ட சாதியினருக்கோ, கட்சியினருக்கோ, விரோதிகளல்லர். 'எல்லோரையும்விட நாங்கள்தாம் உயர் பிறவி' என்னும் பார்ப்பனர்களுக்கும்கூட நாங்கள் எதிரிகளல்லர்; அவர்கள் பாடுபடாமல் உயர் வாழ்வு வாழ்கிறார்கள் என்று அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்பதும் எங்கள் கொள்கையல்ல; அல்லது அவர்களுக்கு மேலாக நாம் உயர்ந்து விடவேண்டும்—அவர்களை நமக்குக் கீழானவர்களாக ஆக்கிவிடவேண்டும் என்பதற் காகவும் நாம், நமது கழகம் எண்ணுவதில்லை.

ஆனால், பார்ப்பனர்கள் நமக்கு மேலானவர்கள் என்ற எண்ணம் நாட்டிலும், நடைமுறையிலும் இருத்தல் கூடாது; எல்லோரும் சரிநிகர் சமானமாயிருத்தல் வேண்டும் என்பதுதான் நமது சமுதாயத் தொண்டு. அதேபோல்தான், வடநாட்டவர்களும் நமக்கு எதிரி என்று எண்ணுவதில்லை. அவர்கள் நம் நாட்டைச் சுரண்டிக்கொண்டு போதல் கூடாது; நாமும் அவர்கள் நாட்டைச் சுரண்டிக்கொண்டுவர வேண்டுமென்று எண்ணப் போவதில்லை. அதுபோலவே, வடநாட்டான் இந்தியாவை ஆளக்கூடாது என்பது நம் கருத்தல்ல; வடநாட்டான் திராவிட நாட்டை ஆளக்கூடாது–எந்த நாட்டவருக்கும், இனத்த வருக்கும் நாம் அடிமையல்ல; நம்மை நாமே ஆள வேண்டும்; நம் செல்வம் நம்மிடமே இருக்கவேண்டும் என்பதைத் தவிர யாருக்கும் எவ்விதத்திலும் நாம் எதிரிகளல்லர் என்ப தோடு, அவர்களும் அதற்கேற்ப நடக்க வேண்டுமென்பதே நமது இயக்கக் கொள்கையாகும். இதையறிந்து கொள்ளச் சக்தியற்ற சிலரும், ஏன் ஆட்சியாளர்கள்கூட நம்மை வகுப்பு வாதிகள், பார்ப்பன–பனியா எதிரிகள் என்று கூறுகின்றனர்.

பார்ப்பனனுக்கும், பனியாவுக்கும் தனிப்பட்ட விரோதத்திற்காக நமது இயக்கம் நடத்தப்படுகிறதென்று இன்னும் எண்ணிக் கொண்டிருப்பவர்களைப் பைத்தியக்காரர்கள் என்றே கூறுவேன். ஆனால், பார்ப்பனீயமும், 'பனியாயிஸமும்' திராவிடத்தை எவ்விதத் திலும் தாழ்த்துவதை, வீழ்த்துவதை இனி ஒரு விநாடியும் அனுமதிக்க முடியாது. இவ் விரண்டு பிற்போக்குச் சக்திகளுக்கு அரசியலாரின் பாதுகாப்பு என்னதான் பலமாயிருந் தாலும், அதற்காக நானோ, நமது இயக்கமோ அஞ்சப் போவதில்லை.

நம் மாகாணத்தைப் பொறுத்தவரை கூற வேண்டுமானால், ஆட்சியாளருக்குத் திறமையே கிடையாது. அதற்காக நாமோ, நமது இயக்கமோ, அவர்களுக்குத் தொந்தரவு

படிப்பகம்

www.padippakam.com



கொடுத்தலும் கிடையாது. அவர்கள் தேர்தலுக்கு நின்றபோது நாம் போட்டியிடவில்லை. நம்மை ஜெயித்து விட்டு ஓட்டுப் பெற்றார்களென்றோ, அல்லது அவர்களை எதிர்த்து நாம் தோல்வியடைந்தோம் என்றோ கூறுவதற்கில்லாமல்—அவர்களுக்கு நமது இயக்கத்தால் சிறு தொல்லைகூட ஏற்படக் கூடாதென்று கருதியே நாம் தேர்தலில் தலைகாட்டவில்லை. அதற் கேற்றதைப் போல் அவர்கள் ஒழுங்காகக் காரியங்களைச் செய்ய வேண்டுவது முக்கிய கடமையல்லவா? அவ்விதம் செய்யாத போது அதை எடுத்துக் காட்டவும்—எடுத்துக் காட்டியும் அவர்கள் கேட்காவிடில் எதிர்க்கவும் இந் நாட்டுக்குரிய மக்களுக்கு—அவர்கள் ஓட்டர்களாயில்லாவிட்டாலும்-இவர்களுக்கு ஓட்டுப் போடாதவர்களானாலும் உரிமையுண்டு; இவர்களைக் கவிழ்ப்பது நோக்கமல்ல. எனவே, திராவிடர் கழகத்தார் அரசியலாரைத் தட்டிக் கேட்கிறார்களென்றால் ஆட்சிப் பீடத்தைக் கவிழ்ப்பதற்கோ, எதிர்த்துத் தொல்லை கொடுப்பதற்கோ அல்ல. அவர்கள் வரி கொடுப்பவர்கள்; இந்நாட்டுக் குடிகள் ஆனதால் ஆட்சியாளரைத் தவறுகளிலிருந்து திருத்த உரிமையுடையவர்கள் என்று மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

கடந்த 10 நாட்களாக சென்னையில் இந்தி எதிர்ப்பு மறியல் நடைபெற்று வருகிறது. இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லையென்றாலும் இந்நிலை இன்னும் நீடிக்காது; நாளையோ, அதற்கடுத்த நாளோ சிலர் கைது செய்யப்படலாம். கனம் ஆச்சரியார் நம் நாட்டில் பவனிவரப் போகிறார்; அவரின் வருகையை நாம் மனமார எதிர்க்கிறோம்; எதிர்க்க வேண்டியது நம் கடமை என்று கொண்டிருக்கிறோம் என்பதை 23-ம் தேதியன்று எடுத்துக் காட்ட முடிவு செய்துவிட்டோம். இதன் மூலம் கவர்னர்–ஜெனரலான கனம் ஆச்சாரியாரை வெறுப்பதென்பதல்ல. ஆனால், இன்று அவர் எந்தக் கோலத்துடன் நம் மாகாணத்தில் நுழைகிறாரோ, அதை அறவே வெறுக்கிறோம் என்பதை நிரூபிக்கவே ஆகும். திராவிடத்தை—தென்னாட்டைப் பல வகையாலும் அடிமைப் படுத்திவரும் வடநாட்டு ஏகாதிபத்திய சர்வாதிகார கோஷ்டியின் கண்காணியாய் ஆச்சாரியார் வருகிறார்; அதை நாம் எதிர்க்காவிடில் என்றைக்கு ஓய்வு எடுப்பது என்று கேட்கிறேன். இந்தியை எதிர்க்கும் இதுசமயம் அரசியலார் அய்தராபாத் சண்டையைக் காட்டித் தப்பித்துக் கொள்ளப்பார்க்கின்றனர்!

காஷ்மீர் போரில் 4½ கோடி ரூபாய் செலவு; அய்தராபாத்துக்கு 20 கோடி ரூபாய் செலவு. இது யார் வீட்டுப் பணம்? இந்தச் சண்டைக்கும், நம் மாகாணத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நம்மிடம் அய்தராபாத்துக்கோ, அல்லது காஷ்மீருக்கோ என்ன தகராறு இருக்கிறது? இந்த வடநாட்டான் ஆதிக்கத்தில் தென்னாட்டை முடிபோட்டு இழுத்துச்செல்வதால்தானே அவனுக்கு வரும் இழிவுக்கெல்லாம் நாம் மாரடித்துக் கொண்டிருப்பதுடன்—நம் மாகாணப் பணமும் பாழாக்கப்படுகிறது? இவைகளையெல்லாம் காங்கிரஸ் திராவிடர்களே! நீங்கள் எப்போதுதான் எண்ணி உண்மையை உணரப் போகிறீர்கள்?

1938-40-ல்—60, 70 வயது சென்ற தாய்மார்கள் முதல் சிறு குழந்தைகள் வரை ஆயிரக்கணக்கான மக்கள் சிறைசென்று ஒழித்த இந்தி—மீண்டுமா நம் நாட்டில் நுழைவது? அப்போது இந்தியைக் கொண்டு வந்து தொல்லை கொடுத்த ஆச்சாரியார் வைசிராய் பதவி அல்ல—அதற்கு மேலான பதவி பார்த்தாலும் இந்தச் சமயத்தில் சென்னைக்கு வரலாமா? வர மனத்தில் எண்ணலாமா? இதைக் கண்டு நாம் வெட்கப்படவேண்டாமா என்று கேட்கிறேன். வடநாட்டு ஆதிக்கத்துக்கு இவ்வளவு ஆணவமிருந்தால் இந்தச் சமயத்தில் ஆச்சாரியார் நம் மாகாணத்துக்கு வர முற்படுவார் என்பதை, திராவிடர்களே சற்று எண்ணிப் பாருங்கள்! எனவேதான், ஆச்சாரியாரின் வருகையை நாம் எதிர்ப்பதென்பது—வடநாட்டு ஆதிக்கத்துக்கும், ஹிட்லரிச, பாசிச வெறித் தன்மைக்கும்—தென்னாட்டை அடிமைப்படுத்தும் அரசியல் அநீதிக்கும் புத்தி புகட்டுவதாகும்.

வெள்ளைக்காரன் ஒழிந்தான் என்றால், அவன் மறைந்தவுடன் இந்த வடநாட்டுக் காரன் காலடியில் நாமும், நமது நாடும் வீழ்ந்துகிடக்க வேண்டுமா? இந்தச் சுதந்திரத்திற்



காகவா காங்கிரஸ் திராவிடர்களே—நீங்கள் பாடுபட்டீர்கள்? நாங்களும் அக்காலத்தில் பாடு பட்டது இதற்காகவா?

நான் காங்கிரஸ் தலைவனாயிருக்கும்போது தோழர் காமராஜர் அரசியலில் புகுந்து கூட இருக்க மாட்டாரே! நாங்களெல்லாம் அந்நாளில் உழைத்தது பதவி வகிக்கவா, பட்டம் பெறவா? ஆட்சியாளர்களாக நம்மவர்கள் வரவேண்டுமென்பதுடன், அவ்வாட்சி ஏழை எளிய மக்கள் இன்ப வாழ்வு காணக்கூடிய வகையில் இருக்க வேண்டுமென்பதற்குத் தானே! இன்று அவ்வித ஆட்சி இருக்கிறதென்று எவராவது கூற முடியுமா என்று கேட்கிறேன். மக்கள் வரிப் பணத்திலிருந்து 10½ கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதே, அதன் மூலம் சில பணக்காரப் பிள்ளைகள் படித்து ஆக்கம் பெறும் வகையில் கல்வி முறையும், கல்லூரிகளும் இருக்கின்றனவேயன்றி—வரி கொடுக்கும் கிராமங்களிலுள்ள வரி கொடுப்போரின் பிள்ளைகளும், பாட்டாளி மக்களின் பிள்ளைகளும் கல்வி பயிலும் தன்மையில் இருக்கிறதா? பகுதி கிராமங்களுக்காவது பள்ளிகள் இருக்கின்றனவா? இந்த இலட்சணத்தில் இந்தி வேறு ஒரு கேடா?

இவைகளையெல்லாம் நாங்கள்தான் கேட்கிறோம். மற்றவர்கள்—அதாவது காங்கிரசார் கேட்காவிட்டாலும், எங்களுக்கு ஆதரவாவது தர வேண்டாமா? 10 வயது குழந்தைக்கு மூன்று பாஷையா புகுத்துவது? இதுவரை, உத்தியோகங்களுக்கு என்றால்—சம்பந்தப்பட்ட எந்த மொழி அவசியமோ, அதை உத்தியோகம் ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு மட்டும் ஓராண்டுப் பாடமாக அரசியலார் வைப்பார்கள். இந்த இந்தித் திட்டத்தினால், 10-வது பையனுக்கல்லவோ மூன்று மொழிகள்! இந்நிலை இருந்தால் அவர்கள் நல்ல முறையில் கல்வி பயில முடியுமா?

இந்தி நுழைவு என்பது வடமொழி ஆதிக்கம் மட்டுமல்லாமல், சிறு பையன்களின் தூய மனத்தில்—பச்சை மரத்தில் ஆணி அடிப்பது போல, ஆரிய வருணாசிரமக் கலாசாரத்தைப் புகுத்துவதும் அநீதியேயாகும். எனவே நாம், மொழிப் பிரச்சினையோடு மாத்திரமின்றி நம் நாட்டுக் கலாசாரம், பண்பாடு ஆகியவைகளிலும் வடநாட்டு ஆதிக்கம் கை வைத்து அழிக்கும் சூழ்ச்சியென்பதை மறக்கக்கூடாது. நமது எதிர்ப்பு 'புஸ்' என்று போய்விடுமாம்! அதனால்தான் நம்மைக் கைது செய்யவில்லையாம்! இது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான எண்ணம்?

நாங்கள் சிறைக்குச் சென்று வீரப் பிரதாபப் பட்டமோ, தேச பக்தர்கள் என்ற பட்டமோ பெறுவதற்காகவா அறப் போர் துவங்கி இருக்கிறோம்? இதைக்கூட இந்த ஆட்சியாளர் உணரும் அறிவு பெறவில்லையென்றால், நாம் என்னதான் இவர்களைப் பற்றி நினைப்பதென்பதே புரியவில்லை. அப்படி வலியச் சிறை சென்று அதன் மூலம் நமக்கோ—நம் இயக்கத்துக்கோ பெருமை தேடிக்கொள்ள வேண்டுமென்ற நிலையும் இல்லை.

அந்த எண்ணம், இன்று மட்டுமல்ல—இதுவரை எந்தெந்தக் காரியங்களில் போராடி வெற்றி பெற்று வந்தேனோ அக்காலங்களிலும் கிடையாது. சிறை சென்றுதான் ஒரு இயக்கத்திற்குப் பலம் திரட்டமுடியும் என்று கருதுவதே பைத்தியக்காரத்தனமாகும்; இன்னும் கூறுவேன்—அது ஏமாற்றுத்தனமுமாகும். ஆகவே, நாம் துவக்கியுள்ள அறப் போரில் ஆட்சியாளர் நம்மைக் கைது செய்யவில்லையென்பதால், நமதுஇயக்கம் நசித்து விடும்என்று ஆட்சியாளர் நினைத்தால் அவர்கள் அந்தப் பிரச்சினையில் விரைவில் தோல்வியுற்றே தீருவார்கள். எத்தனை நாளைக்கு எங்களை இப்படியே விட்டுவைக்க முடியும்?

எங்களை சர்க்கார் இலட்சியம் செய்யவில்லையென்றால், மறியல் செய்யுமிடத்தில் அங்கிருந்து தொண்டர்கள் புறப்பட்டாலும், போலீஸ் கமிஷனர் முதல் மற்ற உத்தியோகஸ்தர்களும், படையும், பட்டாளமும் வருவதேன்? பேசாமல் இவர்கள் வீட்டிலேயே இருக்கலாமல்லவா? இப்போது நடைபெறுவதைப்போல் இன்னும் இரண்டு ஆண்டுகள் நடைபெற்றாலும் அதற்கான வசதியும் நமக்கிருக்கிறது. அந்த வசதிகளெல்லாம் ஏழை

படிப்பகம்

www.padippakam.com



மக்களாகிய நீங்கள் அளித்ததன்றி வேறில்லை. ஒரு பள்ளிக்கூடத்திற்கே, போலீஸ் பட்டாளத்திற்கு இவ்வளவு அவசியம் என்றால் இன்னும் 5, 6 இடங்களில் துவக்கிவிட்டால் ஊரில் திருட்டு முதலிய வழக்குகளைக் கண்டுபிடிக்கவே போலீஸ்படை இருக்கமுடியுமா? திருட்டு இருக்கட்டும்; மந்திரி ஆபீஸ்களிலே எவனாவது கொள்ளையடித்தால்கூட அதை அடக்கப் போலீஸ் இருக்க முடியாதே! இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல் நமது போராட்டம் 'புஸ்' என்று போய்விடுமென்று கூறுவது அறிவுக்கும், அனுபவத்திற்கும் பொருந்துமா? வேண்டுமானால் இவ்விதப் பேச்சுக்களை அரசியல் கெட்டிக்காரர்கள் பேசலாம்! ஆனால், மந்திரிகளே கூட்டங்களில் பேசுகிறார்களென்றால் இதிலிருந்து நமது மந்திரிகளின் பேச்சுக்கு எவ்வளவு மதிப்பிருக்க முடியும் என்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்!

மறியல் செய்யும் தொண்டர்களுக்குச் சலிப்பு இருக்கலாம்; அதுகூட எதற்காக? தங்களை இன்னும் கைதுசெய்யாமல் இருக்கின்றனரே என்று. அவ்விதச் சந்தர்ப்பங்களில் மற்றொரு தொண்டர் படையை மாற்றி, முன்னவர்களுக்குச் சற்று ஓய்வு கொடுக்கிறோம். இதற்காகவா நாம் ஓய்ந்துவிடுவோம்? அருமை நண்பர்களே! இப்படியே இன்னும் ஒரு மாதம் நடக்கட்டும். பிற்பாடு நீங்கள் காணப்போகிறீர்கள்—இந்த அரசியலார் சலிப்படையப்போகிறார்களா, நாம் சலித்துவிடுவோமா என்பதை.

நான் முதலில் குறிப்பிட்டது போல், 1938–40 போராட்டத்தைவிட இம்முறை மறியல் செய்வதற்காக ஆள் ஒன்றுக்கு தாங்களாகவே 25 ரூபாய் வீதம் கொடுத்து, போராட்டத்திற்கு வருகிறோம் என்று, துடிதுடிப்பவர்கள் எவ்வளவு பேர்? இந்த அரசாங்கத்திற்குக் கண் இருந்தாலல்லவோ இதெல்லாம் தெரியப்போகிறது! உத்தியோகஸ்தர்–ஆசிரியர்–மாணவர்–தொழிலாளர்–தாய்மார்கள் வரை தவறாமல் எங்களைத் தொந்தரவு செய்துவருகின்றனர். எல்லோருக்கும் 22-ந் தேதி கூடும் நிர்வாகக் கமிட்டியின் முடிவுப்படி வேண்டியன செய்வதாகச் சமாதானம் கூறி அடக்கிவருகின்றேன். இவ்வாறிருக்க, நாம் ஓய்ந்துவிடுவோமெனத் தப்புக் கணக்குப்போடும் சர்க்கார், விரைவில் இந்தி நுழைவு விஷயத்தில் தோல்வியுறப் போவது நிச்சயம் என்று கூறுவேன். நமது போராட்டம் தொடர்ந்து நடைபெறவேண்டுமென்பதே எனது ஆசையாகும். அதற்குள்ளாகத் தேர்தல் வரத்தான் போகிறது.

தேர்தலுக்கு நாம் நிற்கப் போவதில்லையென்றாலும் நம் போராட்டக் காலத்தில் இவர்கள் ஓட்டுப்பிச்சை கேட்க எந்த முகத்தைக் கொண்டுசெல்ல முடியும்? எனவே, நம்மைக் கைதுசெய்யாவிட்டாலும், அல்லது இலட்சியப் படுத்தாவிட்டாலும் அதனால் நமக்கு யாதொரு நஷ்டமுமில்லை; அரசியலாருக்குத்தான் அதனால் பெருந் தொல்லை ஏற்படும். அதுமட்டுமில்லை;

இதுவரை நானோ, சுயமரியாதை இயக்கமோ, திராவிடர் கழகமோ துவக்கிய எந்தப் போராட்டத்திலும் அல்லது கொள்கையிலும் தோல்வியுற்றதே கிடையாது என்பதைப் பல முறைகள் எடுத்துக்காட்டி இருக்கிறேன். கோவில் நுழைவு முதல், பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கும் உரிமைவரையிலும்; இரயில்வே சிற்றுண்டிவிடுதிகள் முதல் சாதாரண ஓட்டல்களிலும்—சாதி வித்தியாசம், உயர்வு தாழ்வு கூடாதென்பதிலும்; தாய்மார்களை ஆண்டவன் பேரால் பொட்டுக் கட்டும் அநாகரிகம் ஒழியவேண்டுமென்பது வரை—நாங்கள் கிளர்ச்சிசெய்து சிறைசென்று பல தொல்லைகளுக்கு உட்பட்டு வெற்றிபெற்று அது நடைமுறையிலும் இன்று இருந்துவருகிறதேயல்லாது, ஒன்றிலும் தோல்வி கிடையாது. இன்னும் விரைவில் கூறப்போகிறேன்—கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்களை விட்டதுமட்டும் போதாது; அவர்களே பூசை செய்யவேண்டும்; தட்சணைக் காசுகளை அவர்களே அடைய வேண்டும்; அப்படி அனுமதிக்காத சாமிகளை உடைத்து ரோட்டுக்கு ஜல்லி போடவேண்டுமென்று கிளர்ச்சி செய்யத்தான் போகிறேன்.

[சென்னை வண்ணையம்பதியில் சொற்பொழிவு—'விடுதலை' 22-8-1948]



## 3. இந்தி கட்டாயமா?

தலைவரவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

இந்தி வேண்டவே வேண்டாம் என்பதல்ல எங்கள் கொள்கை; அதைக் கட்டாயப் படுத்தக்கூடாது என்று நாங்கள் சொல்லுகிறோம். எந்த மொழியையும் யார் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளட்டும். ஆனால், எந்த மொழியையும் யார் மீதும் கட்டாயமாகத் திணிக்காதீர்கள் என்றுதான் நாம் கூறுகிறோம். சில காரியத்திற்காக இந்தியைக் கட்டாயமாக்க வேண்டுமானாலும் கட்டாயமாக்குங்கள்; ஆனால், குழந்தைகளுக்கு வேண்டாம்; பெரியவர்களுக்கு—கல்லூரி மாணவர்களுக்கு வேண்டுமானால் இருக்கட்டும் என்றுதான் நாங்கள் கூறுகிறோம். 12 வயது பையன்களுக்கு மூன்று மொழிகளைப் படித்தால் கஷ்டமாயிருக்கும். மூன்றையும் படித்துச் சரிவர 'மார்க்' வாங்கித் தேறுவது கஷ்டமாயிருக்கும். அதனால் அவர்கள் படிப்புக்கு—அறிவு வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படும்; திராவிட ஏழை மக்களில் ஒரு சிலராவது 10-வது வரை சரிவரப் படித்து வருவதும் தடைபட்டுப் போகும் என்றுதான் நாம் கூறிவருகிறோம்.

இன்று நம் பிரதம மந்திரியாரிடம் நான் தெரிவித்தபோது, 'உங்களுக்குத் தெரியாது நம் பிள்ளைகளின் புத்திசாலித்தனம்! இவர்கள் 3-அல்ல–4 பாஷைகள்கூடக் கற்பார்கள்' என்று தெரிவித்து விட்டார். தாம் ஒருவர் மந்திரியாக் வந்து விட்டதால் எல்லோருமே புத்திசாலிகளாகிவிடமுடியும் என்றும் நினைத்து விட்டார் போலும்! 2 வருடங்களுக்குமுன் கல்வி அமைச்சர் இங்கிலீஷை 3–வது பாரத்திலிருந்துதான் சொல்லிக் கொடுக்க முடியும் என்று தெரிவித்தார். நாங்கள் சற்றுச் சஞ்சலப்பட்டோம். 'இந்தக் காலத்தில் ரிக்ஷாக்காரனுக்குக் கூட ஒன்றிரண்டு வார்த்தை இங்கிலீஷ் தெரிந்திருக்க வேண்டியிருக்கிறதே! 'சார், ஹவ் மச்—Sir How much!' என்று கேட்கவாவது தெரிந்திருக்க வேண்டியிருக்கிறதே! அப்படியிருக்கும்போது, இங்கிலீஷை 3-வது பாரத்திலிருந்து சொல்லிக்கொடுப்பது நியாயமில்லை; முதல் பாரத்தில் இருந்தாவது சொல்லிக் கொடுத்தல் அவசியம்' என்று கூறினோம்.

'அதெல்லாம் முடியாது; இப்படியெல்லாம் எதிர்த்துப் பேசுவதாயிருந்தால் இங்கிலீஷையே இந் நாட்டைவிட்டு ஓட்டி விடுவேன்' என்று பயமுறுத்தினார். எப்படியோ நாசமாய்ப் போகட்டும் என்று பேசாமல் இருந்தோம். கல்வி அமைச்சருக்கு இப்போது புத்தி தெளிவடைந்தது. ஆகவே, முதல் பாரத்திலிருந்து இங்கிலீஷைக் கட்டாயப் பாடமாக்கியிருக்கிறார். அதுவரை மகிழ்ச்சிதான்.

மற்ற வடநாட்டினரைக் காட்டிலும் எங்களுக்கு இங்கிலீஷ் மிக அவசியமானதுதான். எங்களுக்கு 1,500 மைல் நீளம் கடற்கரை உண்டு. எனவே, எங்கள் சம்பந்தம் முக்கால் பாகம் வெளிநாடுகளோடுதான் இருக்கும். வெளிநாடுகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள இங்கிலீஷ்தான் அவசியமான மொழி. ஆகவே, எங்களால் இங்கிலீஷை எப்போதும் கைவிடமுடியாது. தமிழைப்பற்றி இப்போது தகராறில்லை. அதில்தான் எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படப் போகின்றன. இங்கிலீஷைப்பற்றியும் தகராறில்லை; அதுவும் 3-வது மொழியாகக் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டாய மொழியாக வைக்கப்பட்டிருக்கும் இந்தியைப் பற்றித்தான் இப்போது தகராறு. இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதுகூட இப்போது பிரச்சினையல்ல. இந்தியைக் கட்டாயமாகப் படிக்கவேண்டுமா, இஷ்டமிருந்தால் மட்டுமே படிக்க வேண்டுமா என்பதுதான் இப்போதையப் பிரச்சினை.

இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டியதில்லை என்று சர்க்கார் என்னிடத்தில் மட்டுமல்ல, சட்டசபை மெம்பர்களிடத்தில்கூடக் கூறியிருக்கிறார்கள். 'இந்தி கட்டாயமா, இஷ்ட பாடமா?' என்று சட்டசபையில் கேள்வி எழும்போது சர்க்கார், 'இந்தியைக் கட்டாயமாக்கி இருக்கவில்லை; இஷ்ட பாடமாகத்தான் வைத்திருக்கிறோம்' என்று தெளிவுபடக் கூறியிருக்கின்றனர். நாம் சொல்கிறோம்: 'மந்திரியார் கட்டாயமில்லை என்று வாயளவில் கூறுவது உண்மைதான்; ஆனால், நடைமுறையில் இந்தி கட்டாயமாக்கப்படுகிறதே'

படிப்பகம்

www.padippakam.com



என்று. மந்திரியார் சொல்லளவில் கட்டாயமில்லை என்கிறார். நாம் செயலளவில் கட்டாய மாக்கப்பட்டிருக்கிறது என்கிறோம். இதுதான் இன்றையப் பிரச்சினை.

இதற்கு முடிவு காண்பது எப்படி? நாலைந்து கல்வி அதிகாரிகள் அடங்கிய ஒரு கமிட்டியை நியமியுங்கள். அந்தக் கமிட்டியின் முன் சர்க்காரும் இந்தி கட்டாயமில்லை என்பதற்கு ஆதாரம் கொடுக்கட்டும்; நாமும் கட்டாயம்தான் என்பதற்கு ஆதாரம் காட்டு கிறோம். இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து அவர்களே முடிவு சொல்லட்டுமே! இந்தி நடைமுறையில் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். 1946ஆம் ஆண்டு கடைசியில் கல்விமுறையை மாற்றி அமைப்பதற்கான யோசனை கூற நமது மாகாணத்தில் ஒரு கல்வி புனர்நிர்மாணக் கமிட்டி நியமிக்கப்பட்டது. இந்தியை நம் மாகாணக் கல்விமுறையில் எப்படிப் புகுத்துவது என்பதும் அக்கமிட்டியாரால் பரிசீலனை செய்யப்பட்டது. அக் கமிட்டியார் 'இந்தி இம் மாகாணத்தில் இஷ்டபாடமாக வேண்டுமானால் இருக்கலாமே ஒழிய, கட்டாயப் பாடமாக இருக்கக்கூடாது; எந்த ஒரு ஆசிரியரும் எந்த ஒரு மாணவரையும் இந்தி படிக்குமாறு வற்புறுத்தக்கூடாது; குழந்தை களுக்கு எல்லாப் பாடங்களும் தாய்மொழியிலேயே போதிக்கப்படவேண்டும்' என்று ஆலோசனை கூறினர். அவ்வாலோசனையைக் கல்வி அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை; ஏற்காதது மட்டுமல்ல—அந்த ரிப்போர்ட்டை வெளியிடவுமில்லை; அப்படியே அதை மறைத்துவிட்டார். பிறகு தம் இஷ்டம்போல் வேறொரு கமிட்டியை நியமித்தார். அக் கமிட்டி யாரும் குழந்தைகளுக்கு இந்தியைக் கட்டாயமாக்க விரும்பவில்லை. சென்ற 10 ஆண்டு களுக்கு முன்பு ஒரு பெரிய கிளர்ச்சி இந்தத் தமிழ்நாட்டில் நடந்திருப்பதை ஒட்டி, என்ன செய்வதென்றே தெரியாமல் காலங்கடத்திக் கொண்டு வந்து கடைசியில் ஒரு தந்திரம் செய்தனர்.

இந்தியைத் தமிழ்நாட்டில் மட்டும் இஷ்டபாடமாகவும் மற்ற ஆந்திர, கேரள, கன்னட பிரதேசங்களில் கட்டாயப் பாடமாகவும் ஆக்கி—1948ஆம் வருடம் ஜூன் மாதம் 20-ந்தேதி 1643-ம் நம்பர் ஜீ. ஓ. படி ஒரு உத்தரவு பிறப்பித்தனர். மேற்படி உத்தரவு விளம்பரப் படுத்தப்பட்டதும், சில பார்ப்பனர்கள் இலேசாக அங்கும் இங்கும் குசும்பினர். பம்பாய் இங்கிலீஷ் பத்திரிகை ஒன்று, திராவிடர் கழகத்திற்குப் பயந்து இம் மாதிரி செய்வதுகூடா தென்று எழுதிற்று. பார்ப்பனர் அமைச்சர் மூக்கைச் சொறிந்தனர்! ஒன்றிரண்டு பார்ப் பனர்கள் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்ற பகுதியில் சர்க்காரின் உத்தரவைக் கண்டித்து எழுதித் தம் அதிருப்தியைக் காட்டிக்கொண்டனர்.

இடையில் பிரதம மந்திரியார் கோயம்புத்தூர் சென்றபோது, அங்கு இந்திப் பிரச்சினை பற்றிப் பேச நேர்ந்தது. அவருடைய பேச்சு 24-6-1946 'சுதேசமித்திரனில்' வெளியாகியிருக்கிறது. அதில், அவர், 'இந்துஸ்தானி சென்னை மாகாணத்தில் தமிழ்நாடு தவிர்த்த மற்ற ஆந்திர, கேரள, கன்னட நாடுகளில் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது; இது வேண்டுமென்றே யோசித்துத்தான் செய்யப்பட்டது. இதுவரை இதற்கு இரண்டொரு இடத்தைத் தவிர்த்து வேறு ஆட்சேபணையே வரவில்லை' என்று குறிப்பிட்டார். உடனே மறுநாள் பத்திரிகையில் 'சுதேசமித்திரன்', 'இதோ நான் ஆட்சேபிக்கிறேன்' என்று, 'கட்டாய இந்தியே தேவை' என்று தலையங்கம் தீட்டிற்று. 'மற்ற மூன்று பிரதேசங் களிலும் இந்தியைக் கட்டாயமாக்கிவிட்டு, தமிழ்நாட்டில் மட்டும் இந்தியை இஷ்டப் பாடமாக ஆக்கி இருப்பது நியாயமா?' என்று கேட்டுவிட்டு, 'இந்தியை எதிர்க்கும் கும்பல் ஒன்று இந்நாட்டில் இருப்பதால்தான் கட்டாயப் பாடமாக ஆக்க முடியவில்லை என்று மந்திரியாரால் கூறப்படும் வெறும் சமாதானம் ஏற்கக்கூடாதது. வெறும் பேச்சுக்காரர் களுக்குப் பயந்து சர்க்கார் இம் மாதிரியெல்லாம் விட்டுக்கொடுப்பதாயிருந்தால் நாட்டில் எந்த நல்ல காரியம் செய்வதும் கஷ்டமாகிவிடும். இந்தி கட்டாயமாக்கப்படுவதையே பெரும்பாலான தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்' என்று எழுதி, கல்வி மந்திரியார் மூக்கைச் சொறிந்து விட்டது. பார்ப்பான் அடிமையான கல்வி மந்திரியாரும் உடனே துணிந்து



அந்தப்படியே தமிழ் நாட்டிலும் இந்தி கட்டாயந்தான் என்று உத்தரவு பிறப்பித்து விட்டார்.

இந்தி கட்டாயமில்லை என்று அவர்கள் கூறுவதற்கு ஆதாரமாகக் காட்டுவது இந்தியோடு வேறு சில மொழிகளையும் சேர்த்து, அவற்றில் ஏதாவதொன்றைப் படிப்பது என்று உத்தரவு போட்டிருப்பதுதான். இதிலுள்ள பித்தலாட்டத்தைப் பாருங்கள்! ஏதாவ தொரு மொழியைப் படிக்கலாம் என்று உத்தரவு போட்டுவிட்டு, ஒவ்வொரு பள்ளியிலும் இந்தி மட்டுமே கற்பிக்க ஆசிரியர் இருக்க வேண்டியது அவசியம் என்றும், அப்படி இந்தி ஆசிரியரை வைத்துக் கொண்டிராத பள்ளிகளுக்கு சர்க்கார் 'கிராண்ட்' வழங்காதென்றும் உடன் உத்தரவு பிறப்பிப்பதன் அர்த்தமென்ன? ஒவ்வொரு பள்ளியிலும் இந்தியைக் கட்டாயமாக்கத்தானே இந்தச் சூழ்ச்சி? இல்லையென்றால், மற்ற மொழிகளுக்கும் ஆசிரியர் வைத்துக்கொள்வது கட்டாயப்படுத்த வேண்டாமா? இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

கனம் மந்திரியார் அவர்களே, 'சென்னைச் செய்தி' என்ற சர்க்கார் வெளியீட்டில் தம் பொம்மையோடு வெளியிட்டிருக்கும் கருத்தைப் படித்துப் பாருங்கள். 'இம் மாகாண மக்கள் ஒவ்வொருவருக்கும் இந்தி தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்று இங்கு வற்புறுத்திக்கூறுவது அனாவசியம் என்று கருதுகிறேன். இதற்காகத்தான் எல்லாப் பள்ளிகளிலும் இந்தி கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும் என்று நம் சர்க்கார் உத்தர விட்டிருக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவும் நாம் திருச்சியில் கூடி, கட்டாய இந்தியை எதிர்த்து நேரடி நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தீர்மானம் செய்த பிறகு வெளியான பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சேதியாகும் இது. எனவே அதில், 'கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டும்' என்று வரும் வார்த்தைகளுக்கு அர்த்தம் இல்லையென்று யாராகிலும் கருதிக்கொள்ள முடியாது. அவர் மேலும் குறிப்பிட்டிருக் கிறார்: 'இந்தி படிப்பதால் அறிவு ஒன்றும் அதிகமாகிவிடப்போவதில்லை; அதனால் அறிவு வளர்ச்சிக்குக் குந்தகமே விளையும்' என்று. அறிவில்லாத—வேறு எதற்காகவோ, அதைப் படிக்கவேண்டுமாம்? என்ன புத்தி தீட்சண்யம்? சிரிக்காதீர்கள்! சந்தேகமிருந் தால் நீங்களே வாங்கிப் படியுங்கள். இனி நீங்கள்தான் இந்தி கட்டாயமா, இல்லையா என்று முடிவு செய்யவேண்டும்.

இதையெல்லாம், நான் பிரதம மந்திரியாரைச் சந்திக்க நேர்ந்தபோது தெரிவித்து, இந்தியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யப்போவதாகவும் மறியல் செய்யப்போவதாகவும் தெரிவித்தேன். அய்தராபாத் பிரச்சினை காத்திருக்கும்போது இம் மாதிரி தொல்லை கொடுக்கலாமா என்று கேட்டார். அய்தராபாத்தில் போராட்டம் துவக்கப்பட்டால் உடனே எனது போராட்டத்தையும் நிறுத்திக்கொள்வேன் என்றும், சென்னை மாகாணத்தைக் காப்பாற்றுவதில் எனக்கும் கவலையும், பொறுப்பும் உண்டென்றும் தெரிவித்தேன். அப்படியானால், 'கலவரம் ஏதுமின்றி மறியல் செய்துகொள்ளுங்கள்; நான் அதைப் பாதுகாத்துக் கொள்கிறேன்' என்று உறுதி தந்த உடனேயே போலீஸ் கமிஷனரையும் கூப்பிட்டு அந்தப்படியே ஏற்பாடு செய்தார். மறியலும் மறுநாள் துவக்கப்பட்டு யாதொரு கலவரமும் இன்றிச் சில நாட்கள் நடைபெற்றது. நாளுக்கு நாள் இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு பெருகி வருவதைக் கண்ட பார்ப்பனர்கள், 'இந்த மாதிரி மறியலைப் பாதுகாத்துக் கோட்டையை விட்டு விட்டார்களே' என்று மந்திரியாரிடம் தெரிவித்தனர். மந்திரியா ருக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. ஆகவே, போலீஸ் புலிகளை இஷ்டம் போல் வேட்டையாடும்படி விட்டுவிட்டார். அவர்கள் இந்தி எதிர்ப்பாளர்களை லாரியில் ஏற்றிச் சென்று கண்காணாக் காட்டில் 31 மைலுக்கப்பால் விட்டுவிட்டு வந்துவிட்டனர். அங்கு ஒரு போலீஸ்காரனையும் காவல் வைத்து—எந்த வண்டிக்காரனும் தொண்டர்களை ஏற்றிக் கொள்ளக்கூடாது என்று தடுத்தனர். மாலையில் நமது வண்டி சென்றுதான் அவர்களை அழைத்து வர நேரிட்டது. இந்தி எதிர்ப்புத் தொண்டரில் ஒருவர் அம்மையார்; அவர் எட்டு மாதக் கர்ப்பிணி. இருந்தும் அவரைக்கூட விடவில்லை. எல்லோரையும் 'மிலிடெரி



படிப்பகம்

www.padippakam.com



லாரி'யில் ஏற்றிச் சென்றனர். சென்ற வழியில் லாரி ஆட்டம் அதிகமாய் இருந்ததின் காரணமாக, அந்த அம்மையாருக்குக் கர்ப்பக் கோளாறு ஏற்பட்டுக் கடைசியில் பிழைப்பதே கடினமாகி விட்டது. அவர் போராட்டத்திற்கு வரவேண்டாமென்றாலும் கேட்கவில்லை. அவர் புருஷனும்—நல்ல காரியத்திற்காக ஒருத்தியைக் கொடுத்தால்தான் என்ன முழுகிப் போகும் என்று கூறிவிட்டார். நல்ல வாய்ப்பாக அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உடல்நலம் பெற்றார்கள்.

அடுத்த நாள் வேறொரு பக்கம் தொண்டர்களை அழைத்துச் சென்றார்கள்; மறுநாள் இன்னொரு பக்கம்! இப்படி சடுகுடு விளையாடினர் போலீஸ்காரர்கள். 'ஏனய்யா இப்படி அக்கிரமம் செய்கிறீர்கள்?' என்று கண்டிக்க முற்பட்ட பிறகு—சர்க்காரின் இந்தப் போக்கு சந்து பொந்து தோறும் குறை கூறப்பட்ட பிறகு, ஜெயிலில் பிடித்துப் போட்டனர். ஒரு வாரம், இரண்டு வாரம், மூன்று வாரம் என்று கடுங்காவல் தண்டனை கொடுத்தனர்; நன்னடத்தை ஜாமீன் கேட்டனர். இவ்வளவுக்கும் தொண்டர்கள் விட்டுக்கொடுக்காமல் இருக்கவே, தடிகொண்டு தாக்க ஆரம்பித்தனர். ஒரு பையனை ஒரு சப்-இன்ஸ்பெக்டர், காலின்கீழ் மிதித்துக் கழுத்தை நெறிக்கவும் முற்பட்டார்—வாயிலிருந்து இரத்தம் கக்கும் அளவுக்கு; அவர் பேரையும் பத்திரிகையில் வெளியிட்ட உடனே, தானல்ல அதற்குக் காரணம்; வேறு யாரோதான் அப்படிச் செய்திருக்க வேண்டும் என்று எனக்குக் கடிதம் எழுதிவிட்டார்.

போலீஸ் மந்திரியாருக்கு என்ன உத்தரவிடுவதென்றே தெரியவில்லை. அங்கொரு மந்திரியும் இங்கு ஒரு மந்திரியுமாக, சர்க்காரின் அடக்குமுறைப் பேயாட்டம் நடக்கிறது. இவர்களைப் பிடித்தாலும் தொல்லை, பிடிக்காவிட்டாலும் தொல்லை! என் செய்வதென்று விழிக்கிறாராம் பிரதம மந்திரியார்! இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஆபீஸில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கும்போது 'அஸோஸியேடட் பிரஸ்' செய்தி வந்தது—அய்தராபாத்தில் இந்தியத் துருப்புகள் நுழைந்துவிட்டன என்று. இந்த ஊர் பிடிக்கப்பட்டது—இந்தப் பாலம் பிடிக்கப்பட்டுவிட்டது என்று சேதி வந்துகொண்டே இருந்தது. உடனே இந்தி எதிர்ப்பு மறியலைத் தற்காலிகமாக, நிர்வாகக் கமிட்டியின் உறுதியை எதிர்பார்த்து நிறுத்தி விட்டேன் என்றும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட அடையாள மறியல் மட்டும் ஆங்காங்கு நடத்தப்படலாம் என்றும், ஆனால் போலீஸ் உத்தரவிடுவதுபோல் கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டுமென்றும், பத்திரிகையில் போட்டுவிட்டு, நிர்வாகக் கமிட்டித் தலைவர் தோழர் வேதாசலம் அவர்களுக்கும் தந்தி கொடுத்துவிட்டேன். போராட்டம் நிறுத்தப்பட்டது சிலருக்குப் பிடிக்கவில்லை யென்றாலும், அது முறைப்படி நிறுத்தப்பட்டது.

எல்லா இடங்களிலும் அமைதியாகவே நடைபெற்றது என்றாலும்—7, 8 இடங்களில் போலீஸ் ஆடிய வேட்டைக்குக் கணக்கே இல்லை. கேள்வி கேட்பாரற்ற முறையில் அராஜகம் சில இடங்களில் நடைபெற்றது. சில இடங்களில் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது; சில இடங்களில் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது; சில இடங்களில் கைது செய்யவே இல்லை, சில இடங்களில் சில மணி நேரம் பூட்டி வைத்து வெளியே அனுப்பிவிட்டனர்; சில இடங்களில் அடித்து மிரட்டி உதைத்திருக்கின்றனர். சில இடங்களில் மிக மிகக் கொடுமைப்படுத்தி இருக்கின்றனர்.

இப்போது 'விடுதலை'ப் பத்திரிகை ஜாமீன் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறதாம்! அடுத்து நாலாயிரம் கேட்கப்படலாம் ஜாமீன் தொகையாக! அதற்கும் நீங்கள்தான் மனமுவந்தளித்திருக்கிறீர்களே—ரூ. 15 ஆயிரத்திற்கும் மேலாக! அது தீர்ந்து போகும் வரை கொடுத்துக்கொண்டே போவோமே! கொடுத்தால் எங்கே போய்விடும்? அதே இடத்திற்கு நாங்களே வரும்போது வட்டியோடு சேர்த்து எடுத்துக்கொள்ளமாட்டோமா?

இராஜகோபாலாச்சாரியாரை ஏழை பங்காளர் என்று விளம்பரப்படுத்த—அவர் துணி துவைப்பதையும், இலை எடுப்பதையும்கூடப் படமாகப் போட்டுக் காட்டவில்லையா?



இன்று அதே இராஜகோபாலாச்சாரியார் மாதம் 20,000 சம்பளம் பெற்றுவரவில்லையா? 'ஏனய்யா, இவ்வளவு சம்பளம்?' என்றால், 'அவர்தம் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? அவர் வக்கீல் தொழிலை விடாமல் இருந்திருப்பாரானால் அல்லாடியைக்கூட மிஞ்சிவிட்டிருப்பாரே!' என்று சமாதானம் கூறப்படவில்லையா இன்று? இது ஒரு பக்கம் கிடக்கட்டும்.

மறியலைப் பாதுகாத்துத் தருவதாகவும் நேர்மையான பிரச்சாரத்திற்குத் தடையில்லாமல் பார்த்துக்கொள்வதாகவும் உறுதிதந்த மந்திரியார் ஆட்சியில், எங்கு பார்த்தாலும், எங்கள் கூட்டத்திற்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது; ஊர்வலத்திற்கும் தடை விதிக்கப்படுகிறது.

வெள்ளையன் காலத்திலாவது எல்லா ஊரிலும் ஒரேமாதியான அடக்குமுறை கையாளப்படும்; எல்லா ஊருக்கும் ஒரே மாதிரியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும். ஆனால், இன்றைய ஆட்சி முறையிலோ ஊருக்கு ஒரு மாதிரி அடக்குமுறை 'தர்பார்' நடத்தப்படுகிறது. காரணமே தெரியவில்லை. நல்ல வாய்ப்பாக இந்த ஊரில் இவ்வளவு அமைதியாகக் கூட்டம் நடக்கிறது. நேற்று கடலூரில் கூட்டத் தலைவருக்குக் கல்லடி; சப்-இன்ஸ்பெக்டருக்குக் காயம். எங்கு பார்த்தாலும் காங்கிரஸ் தலைவர்களின் தலையீடு பொறுக்க முடியவில்லை. என்ன செய்வது? இப்படியான பல தொல்லைகளால் நாட்டின் முன்னேற்றமே வெகுவாகத் தடைப்பட்டு நிற்கின்றது.

வெள்ளைக்காரன் காலத்தில் அகிம்சையின் பேரால் பட்டாளத்திற்கு ஆள் சேர்த்துக் கொடுக்க மறுத்த அகிம்சா மூர்த்தியின் அடிச் சுவட்டைப் பின்பற்றும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இன்று நாட்டின் பாதுகாப்புக்காக மட்டும் 130 கோடி ரூபாய் ஒதுக்கிவைத்துள்ளார்கள், துப்பாக்கியும், வெடிமருந்தும் வாங்குவதற்காக. துப்பாக்கியும் வெடிமருந்தும் எதற்காக? கொஞ்சவா, குலாவவா, அல்லது கட்டியணைத்து முத்தமிடவா? மாற்றாரை மாய்க்கத்தானே! அகிம்சைவாதிகள்—பிறரை மாய்க்க நினைக்கலாமா? காஷ்மீரில் 6 மாதத்திற்குள் மட்டும் 35 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறதே; மக்களைக் கொன்று குவிக்கத்தானே! அகதிகளுக்கு மட்டும், தினம் 12 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறதே! அகிம்சாவாதிகளான இவர்கள் ஏன் தேர்ச்சி பெற்ற சோல்ஜர்களையும், மேஜர்களையும் கூவி அழைக்கிறார்கள்?

ஏழை பங்காளர்களான இவர்கள், ஏன் இன்று 8 ஆயிரமும், 10 ஆயிரமும் சம்பளம் வாங்கிவருகிறார்கள்? விஜயலட்சுமி அம்மையாருக்கு மாதம் 8000 ரூபாய்; அந்த அம்மாளுடைய கட்டிலுக்கும், கம்பளம், மேஜை வகையறாக்களுக்கும் செலவு 2½ இலட்ச ரூபாய்; அந்த அம்மையார் அமெரிக்காவில் விருந்தொன்று கொடுக்கச் செலவு செய்தது இலட்சக்கணக்கான ரூபாய்கள். இங்கிலாந்திலுள்ள ஸ்தானீகருக்கு மட்டும் 9 மோட்டார் கார்கள். அதில் ஒரு காரின் விலை 26,000 ரூபாய்! வெளி நாட்டிலாகும் செலவு மட்டும் 1 கோடி, 2 கோடி என்று ஏறி வருகிறது என்றாலும் இவர்கள் எல்லோரும் தரித்திர நாராயணனின் சிஷ்யர்களாம். என்னே வித்தை!

அகிம்சை என்பதும் ஏழ்மை என்பதும் வெறும் விளம்பரப் பேச்சுதானே? ஏழை மக்களின் வரிப் பணம் தானே, இப்படிச் சூறையாடப்படுகிறது? இவ்வளவு செலவாகியும் மக்களுக்கு ஏதாகிலும் சவுகரியமோ, பாதுகாப்போ உண்டா? வெள்ளையன் காலத்திலாவது நம் வீட்டில் திருட்டுப்போகும். இப்போதைய சுயராஜ்ய காலத்தில் போலீஸ்காரன் வீட்டிலேயே திருட்டுப் போகிறது! மந்திரிகளுக்குச் சம்பளம் போதவில்லையென்றால், ஏற்கனவே இருந்த சம்பளத்தோடு ஒரு 'சைபர்' சேர்த்துக் கொள்கிறார்கள். ஏனென்றால் தம் அந்தஸ்தை காப்பாற்றிக்கொள்ள என்பார்கள். போலீஸ்காரனுக்குத் தன் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பக்கூடக் காசு கிடைப்பதில்லை; அவன் சம்பளம் போதவில்லையென்றால்,

படிப்பகம்

www.padippakam.com



அது ராஜ துரோகமாகிவிடுகிறது; பேசாமல்—தெருவில் மலஜலம் கழிப்பவனைப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்கிற நிலையில் அவன் இருக்கிறான். அவனுடைய அந்தஸ்தைக் காப்பாற்றுவது பற்றிச் சர்க்காருக்குக் கவலையில்லை. சாதாரணமாகக் கல்லுடைப்பவன்கூட நாளொன்றுக்கு ரூ. 3 கூலி வாங்குகிறான்; அதுவும் 6 மணி நேரம் வேலை செய்துவிட்டு. ஆனால் நம் போலீஸ் தோழனுக்கோ, நாள்முழுதும் உழைத்தாக வேண்டுமென்றாலும் 30 ரூபாய்தான் சம்பளம். போலீஸ்காரர் நிலையே இப்படியென்றால் மற்ற கீழ்த்தர சிப்பந்திகளைப் பற்றிக் கேட்கவேண்டியதே இல்லை. கீழ்த்தர சிப்பந்திகள் யாவரும் திராவிடர்கள். ஆதலால் அவர்களுடைய அந்தஸ்தைப்பற்றிச் சர்க்கார் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

ஜமீன்தார்கள்—முக்கால்வாசிப்பேர் திராவிடர்கள். ஆதலால் அவர்கள் உடனடியாக ஒழிக்கப்பட வேண்டுமாம்! ஜமீன்தாரர்கள் சிலர் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவாக இருந்து வந்தார்கள் என்பதற்காக, 'நாங்கள் பதவிக்கு வந்தால் உங்கள் கையில் முதலில் ஓடு கொடுப்போம்' என்று இராஜகோபாலாச்சாரியார் அன்று சவால் விட்டதன் காரணமாக—அவரது ஆட்சியின்போது துவக்கப்பட்டதுதான், இந்த ஜமீன் ஒழிப்புப் படலம். ஜமீன்கள் ஒழிக்கப்படட்டும், நமக்குக் கவலை இல்லை. அவர்களிடமிருந்து அன்னக்காவடிப் பார்ப்பனர்கள் இனாமாகப் பெற்ற இனாம் சொத்துக்களும் அதோடு ஒழிக்கப்பட வேண்டாமா என்று கேட்டால்—'இனாம் கொடுத்ததற்குப் பதிலாக அப்போதே அவர்களுக்கு மோட்சத்தில் இடம் பிடித்துக் கொடுத்தாகிவிட்டது' என்றால் அது நியாயமா? திராவிடர்களுக்கொரு நீதி, பார்ப்பனருக்கொரு நீதியுமாக நடந்து கொள்வது என்றால் பொதுமக்கள் நியாயத்திற்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டாமா? இன்றைய சர்க்காரோடு போட்டி போட வேறு கட்சியே இல்லையே!

முஸ்லிம் லீக் இம் மாகாணத்தைப் பொறுத்தவரை மறைந்துவிட்டது. கம்யூனிஸ்ட் தலைவர்களை ஜெயிலில் அடைத்தாகிவிட்டது. நாங்களோ சட்டசபையின் எல்லைக்குள் காலெடுத்துவைப்பதில்லை. ஆகவே, காங்கிரஸ்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் என்ன வேண்டுமானாலும் செய்யவேண்டியதுதானா? தெரிந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர்களாயிருக்கும் அந்தக் காங்கிரஸ்காரர்களின் யோக்கியதையோ சொல்லத்தரமில்லை. இந்நாட்டில் 100-ல் 10 பேருக்குத்தான் ஓட்டுரிமை உண்டு; அதாவது படித்தவர்களுக்கும் சொத்துரிமை உடையவர்களுக்குந்தான் ஓட்டு. பார்ப்பனர்கள் அத்தனை பேரும் படித்தவர்கள்; எனவே, அத்தனை பேருக்கும் ஓட்டு உண்டு. அவர்கள் 100-க்கு 3 பேர்; மீதியுள்ள 7 பேரில் 5 பேர் பணக்காரர்களாவும், 2 பேர்—படித்த பார்ப்பனர் தயவால் உத்தியோகம் பார்த்துவரும் ஏழைத் திராவிடர்களாகவும் இருப்பார்கள். இந்தப் பத்துப் பேர்களுக்குந்தான் சட்டசபை மெம்பர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பும் உரிமை உண்டு. தேர்தல் என்றால் 10 ஆயிரம், 20 ஆயிரம் செலவாகும். எனவே, ஏழைமகன் எவனும் தேர்தலுக்கு நிற்கமுடியாது. நிற்பதாயிருந்தால், அவன் யாராவது ஒரு பணக்காரனுடைய அடிமையாகத்தான் நிற்கவேண்டியிருக்கும். எனவே, பார்ப்பன அடிமைகளும் பணக்காரர்களும்தான் இன்றைய சட்டசபை மெம்பர்கள்; அவர்கள்தான் நம்முடைய பிரதிநிதிகள். இப்படிப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து ஏழைகளுக்குச் சாதகமான சட்டதிட்டங்கள் எவற்றையாவது எதிர்பார்க்க முடியுமா? இவர்களுடைய யோக்கியதைதான் இப்படியென்றால், மத்திய சட்டசபை அங்கத்தினர்களின் யோக்கியதை இதைவிடக் கேவலமானது.

இந்த மாகாணத்திலிருந்து மத்திய சட்டசபைக்கு 45 பேர் அனுப்பப் படவேண்டுமென்று ஏற்பாடுசெய்தனர். அந்த 45 பேரில் ஒருவர்கூட இந்தச் சட்டசபை மெம்பர்களால் சுயமாகத் தெரிந்தெடுக்கப்படவில்லை. மத்திய பார்லிமெண்டரி போர்டு யாரைத் தெரிந்தெடுத்து அனுப்பவேண்டுமென்று மாகாண சட்டசபைக் கட்சித் தலைவருக்கு எழுதி அனுப்பினார்களோ—அதே ஆட்களை, இந்த மெம்பர்கள் தேர்ந்தெடுத்தனுப்பினர். சண்முகஞ் செட்டியாரைத் தேர்ந்தெடுத்தனுப்புங்கள் என்றால்—சண்முகஞ் செட்டியார்;



அல்லாடி அய்யரைத் தேர்ந்தெடுத்தனுப்புங்கள் என்றால்—அல்லாடி அய்யர்; இந்தப்படியே 45 பேரும் மத்திய பார்லிமெண்டிரி போர்டாரால் நாமினேஷன் செய்யப்பட்டு, இங்குள்ள அடிமைச் சட்டசபை அங்கத்தினர்களால் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இந்தப் படியாக ஜனநாயகத்திற்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத முறையில் தெரிந்தெடுத்தனுப்பிக்கப்பட்டுள்ள அடிமை வீரர்கள்தாம் நமது விதியை நிர்ணயிக்கும் வேலையில் டில்லியில் ஈடுபட்டுள்ளனர். இப்படிப்பட்ட இராஜ்யத்தை 'ஹம்பக் ராஜ்யம்' என்று கூறுவதா? சுயராஜ்யம் என்று கூறுவதா? ஒரு சட்டசபை மெம்பருக்குக்கூடச் சுயமாக ஓட்டுக்கொடுக்க உரிமை தரப்படாமல் இன்னாருக்குத்தான் ஓட்டுச் செய்ய வேண்டுமென்று ஒரு சீட்டில் எழுதித் தரப்பட்டதென்றால்—இவர்கள் அடங்கிய சர்க்காரை சுயராஜ்ய சர்க்கார் என்று கூறமுடியுமா?

வெள்ளையனாவது அன்னியன்; அவனுக்கு மக்களிடத்தில் பொறுப்பில்லை; நாட்டைப்பற்றியும் கவலையில்லை. 'ஜனநாயகம்' என்று மேடை மேடையாகக் கூறித் திரியும் காங்கிரஸ்காரர்களுக்காவது, கொஞ்சமேனும் ஜனநாயக முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறை வேண்டாமா? ஜனநாயகத்தில் கடுகளவேனும் காங்கிரஸ்காரர்களுக்குப் பற்றிருந்தால் இந் நாட்டிற்கு ஒரு இராஜகோபாலாச்சாரியார் கவர்னர் ஜெனரலாகி இருக்கமுடியுமா? இராஜகோபாலாச்சாரியாரைப்பற்றி சர்தார் பட்டேல், 'அவருக்கென்ன தெரியும்? கதைகூறி மக்களை ஏமாற்றத்தான் தெரியும்' என்று கூறியது இன்னமும் கவனத்திலிருக்குமே? ஒரு இராஜேந்திரப் பிரசாத்தும் ஒரு நேருவும் அவரைத் தூற்றுவதற்கு அளவு காட்டமுடியாதே! இங்கு அவரால் நாலணா மெம்பராகக்கூட ஆக முடியவில்லையே! அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சென்ற இடமெல்லாம் கல்லடியும் தாரடியும் கிடைத்ததே! போலீஸ் வளையத்திலேயே திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறதே! கல்கத்தா போய் ஆஜாத் தயவால்தானே மெம்பராக முடிந்தது? மறுபடியும் ஒரு அசப்அலி தயவால்தானே கமிட்டி மெம்பராக முடிந்தது? இம் மாகாணத்து மக்களால் இவ்வளவு வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒருவருக்கு, சுயராஜ்யம் வந்ததும் கவர்னர் ஜெனரல் வேலை கொடுக்கப்பட்டது என்றால்—இம் மாகாண மக்களின் ஜனநாயக உணர்ச்சிக்குச் சாவு மணி அடிக்கும் வேலைதானே? அவரை அங்குக் கவர்னர் ஜெனரல் ஆக்கிவிட்டு, அங்கிருந்து ஒரு மகாராஜாவை இம் மாகாணத்துக்கு கவர்னராக அனுப்பிவைக்கிறார்கள் என்றால்—இம் மாகாண மக்களின் சுதந்திர உணர்ச்சியை நையாண்டி செய்கிறார்கள் என்பதுதானே அர்த்தம்? வெள்ளையன் எப்படி இம் மாகாண மக்களின் விருப்பத்தைப்பற்றிக் கவலைப்படாது இங்கிலாந்திலிருந்து கவர்னரை அனுப்பி வந்தானோ அப்படித்தானே—இன்றும் வடநாட்டிலிருந்து ஒரு மார்வாரி மகாராஜா கவர்னராக அனுப்பப்படுகிறார்?

எவ்விதத்திலும் மாறுதலைக் காண முடியவில்லையே? எங்கே பேச்சுரிமை, எழுத்துரிமைக் கூச்சல்கள்? வெள்ளையனை ஓட்டிவிடுகிறோம் என்று நம்மிடமிருந்து ஓட்டு வாங்கிச் சென்று, இன்னும் வெள்ளையனையே நமக்கு இராஜாவாக வைத்துக்கொண்டு, அவனோடு ஏதோ ஒப்பந்தம் செய்துகொண்டதன்மூலம் பெறப்பட்ட குடியேற்ற நாட்டு அந்தஸ்தை சுயராஜ்யம் என்று விளம்பரப்படுத்திப் பித்தலாட்டம் செய்து ஆட்சி நடத்துவதென்றால், அதை நாம் அப்படியே ஒப்புக்கொள்ளுவதா? பூரண சுதந்திரம் வாங்கித் தருவோம் என்று சவாலிட்டு ஓட்டு வாங்கிச் சென்ற தோழர்கள்—குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைக்கும் போல் இருக்கிறதென்றால்—மறுபடியும் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கவேண்டாமா? கேட்டார்களா இவர்கள்? வெறும் கைதூக்கத்தானா இவர்கள் நம்மிடம் ஓட்டுப்பெற்றுச் சென்றனர்? சர்க்கார் கொண்டுவரும் சட்டத்தின் பேரில் காங்கிரஸ் சட்டசபை மெம்பர்கள் யாரும் திருத்தம் கொண்டுவரக்கூடாது என்று ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்களாமே! இது நியாயமா? பேச்சுரிமை, எழுத்துரிமை என்று கூறியதெல்லாம் இன்று எங்கேயோ மறைந்து விட்டனவே! சர்க்காரின் குற்றங் குறைகளை

படிப்பகம்

www.padippakam.com



எடுத்துக்கூறி வருபவர்கள் ஒன்று ஜெயிலில் அடைக்கப்படுகிறார்கள் அல்லது சுயராஜ்ய விரோதிகள் என்று தூற்றப்படுகிறார்கள்.

தோழர்களே! உங்களுக்கு எனது கருத்தைத் தெளிவாகத் தெரிவிக்கு முகத்தான் எந்த எந்த விதமாகவோ பேசி இருப்பேன். தவறுதலாக—ஏதாவது கடுமையான வார்த்தைகள் என்னையறியாமலே வெளியாகி இருந்தால் அதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள். இம் மாதக் கடைசியில் மறுபடியும் இந்தி எதிர்ப்பு மறியல் துவங்கும். சர்க்கார் அதை எப்படி ஒடுக்க முயற்சிப்பார்களோ தெரியாது. அவர்கள் தடியையே நம்பி இருக்கிறார்களோ அல்லது துப்பாக்கியையும், வெடிமருந்தையும் நம்பி இருக்கிறார்களோ அல்லது ஜெயிலைத்தான் நம்பியிருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. நாங்கள் வேண்டுவது இதுதான் : 11-வது வகுப்புக்கு மேல் (Sixth Form) கல்லூரி வகுப்புக்களில் இந்தியை எப்படி வேண்டுமானாலும் போதிக்கட்டும்; நாம் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை; ஆனால் உயர்தரப்பள்ளிகளில் மட்டும் இந்தி எந்த வகையிலும் தலைகாட்டக் கூடாது; அவ்வளவுதான் நாம் வேண்டுவது.

கடைசியாக, காங்கிரஸ் திராவிடத் தோழர்களே! ரேஷன் பெர்மிட்டுக்கோ, கள்ள மார்க்கெட் லைசென்ஸுக்கோ, மற்ற தரகுக்கோ, சர்க்கார் அதிகாரிகளை மிரட்டிப் பெறும் இலஞ்சக் காசுக்கோ, சர்க்கார் தயவை எதிர்பார்த்துத் திரியும் சுயநலமிகள் அல்லாத மற்ற காங்கிரஸ் திராவிடத் தோழர்களே! நாங்கள் உங்களுடைய உண்மைத் தொண்டர்கள். பொது வாழ்க்கையில் உங்களைப்போல் எவ்வித சுய நலத்தையும் கருதாது பணியாற்ற வேண்டுமென்று உண்மையிலேயே விருப்பப்படுபவர்கள். நீங்கள் செய்ய நினைக்கும் எந்த நல்ல காரியத்திற்கும் உங்களுக்குத் தோள் கொடுத்து உதவத் தயங்காதவர்கள். உத்தியோகத்திலிருப்பவர்களின் அக்கிரமச் செயல்களையும், வியாபாரிகளின் கொள்ளைகளையும், பார்ப்பனர்களின் புரட்டல்களையும் மக்களிடம் எடுத்துக்கூறி, அவர்களைச் சிந்திக்கச் செய்பவர்கள் நாங்கள். நாங்கள் யாருக்கும் விரோதிகளல்லர். எதையும் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதில்தான் எங்கள் கவலை பூராவும் அடங்கிக் கிடக்கிறது. நாட்டிலுள்ள வேறு எந்தக் கட்சியைக் காட்டிலும் மிக மிக முன்னேற்றமான கொள்கையுடையது எங்கள் கழகந்தான். இந்த மாதிரி நல்ல ஸ்தாபனம் கிடைத்தலரிது. இதை நானே சொல்லிக் கொள்வது கேவலம் என்றாலும்—உணராதவர்களுக்கு எடுத்துக் கூறத்தான் வேண்டியிருக்கிறது. எனவே, கூடுமானவரைக்கும் எங்களோடு ஒத்துழையுங்கள்; உண்மை வழி நிற்கும் எங்களுக்கு உதவி புரியுங்கள்.

மாணவத் தோழர்களே! எங்கள் அழைப்பு என்றைக்கு வருகிறதோ அன்று—பள்ளிகளை விட்டு, கல்லூரிகளை விட்டு வெளியேறிவரத் தயாராகுங்கள்! படிப்புக்கூட பிறகு பார்த்துக் கொள்ளலாம்; அல்லது ஜெயிலிலே பள்ளி நடத்தலாம், ஆசிரியர்களையும் உடன் சேர்த்து வாருங்கள்.

வாலிபத் தோழர்களே! தோழியர்களே! நீங்களும் தயாராய் இருங்கள். கலியாணம் செய்துகொள்வதும், பிள்ளைகள் உற்பத்தி பண்ணத் துவக்குவதும் அப்புறம் ஆகட்டும். தாய்மார்களே! உங்களுடைய இழிவைப் போக்குவதற்குத்தான், சட்டத்தாலும் சாஸ்திரத்தாலும் கடவுள் பேராலும் உங்களுக்கு இருந்துவரும் முன்னேற்றத் தடைகளைத் தகர்த்தொழிக்கத்தான் எங்கள் கழகம் ஆரம்ப முதற்கொண்டு தொண்டாற்றி வருகிறது. நீங்கள் சமூகத்தில் மிகமிகத் தாழ்ந்த ஜந்துக்களாக ஆக்கப்பட்டு, ஆண்களுக்கு நிரந்தர அடிமைகளாக—கட்டிலறைப் போகப் பொருள்களாக இருந்துவருகிறீர்கள். இன்று உங்களில் ஒரு சிலருக்காவது சற்று சுதந்திரத்தோடு வாழ முடிகிறதென்றால், அதுவும் எங்கள் கழகம் செய்த தொண்டின் பயனால்தான் என்பதை உணர்ந்து எங்கள் கழகத்தை ஆதரித்து உதவுங்கள்.

[சிதம்பரத்தில், 29-9-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 7-10-1948]



# 4. இந்தித் திணிப்பு

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்தி கட்டாயப்படுத்தப் படுவதற்குத்தான் நாம் எதிரிகளே ஒழிய, தனிப்பட்டவர்கள் செய்யும் இந்திப் பிரச்சாரத்திற்கு நாம் விரோதிகளல்லர். இந்திப் பிரச்சார சபைகளையே அழித்தொழிக்க வேண்டுமென்பதும் நம் நோக்கமல்ல. இதைப் பொதுமக்கள் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆட்சியாளர்களும் வெறும் பேருக்குத்தான் கட்டாயமில்லை என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். இந்தியைக் கட்டாயப்படுத்தவேண்டும் என்பதுதான் தங்கள் ஆசையென்றும், இந்தியை எல்லோரும் கற்கவேண்டுமென்றே தாங்கள் விரும்புவதாகவும்—இந்தி இந் நாட்டின் தேசிய மொழியாதலால் அதை எல்லோரும் கற்கவேண்டுவது அவசியமே என்றும் கூறிவருகிறார்கள்.

இந்தி இந் நாட்டின் தேசிய மொழி என்பதையே நாம் மறுக்கிறோம். இந் நாடு திராவிட நாடு. இந் நாட்டு மக்கள் திராவிடர்கள். இந் நாட்டு மொழி திராவிட மொழி. இந் நாட்டிற்குத் திராவிட மொழிதான் தேசிய மொழியாக இருக்க முடியுமே ஒழிய, இந்தி போன்ற வேறுநாட்டு மொழி ஒருக்காலும் இந் நாட்டிற்குத் தேசிய மொழியாக இருக்க முடியாது.

இந் நாட்டிற்குத் திராவிடத் தேசியம்தான் தேவையே ஒழிய, டெல்லித் தேசியமோ, அய்க்கிய மாகாணத் தேசியமோ, மற்ற வடநாட்டுத் தேசியமோ தேவையில்லை.

நாம் நிரந்தரமாக வடநாட்டுக்கு அடிமைப்பட்டுக்கிடக்கப் போகிறோமா? நாம் வடநாட்டான் ஆதிக்கத்திலிருந்து என்றைக்குமே விடுதலை அடையப்போவதில்லையா என்பதை நம் தேசியத் திராவிடத் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வந்த சுயராஜ்யத்தில் நமக்குப் பங்கில்லையா? அல்லது சுயராஜ்யம் நம்மை அடிமைகொள்ள வந்திருக்கிறதா என்பதையும் நம் தேசியத் திராவிடத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெள்ளையர் நாட்டில் ஜப்பான் மொழி தேசிய மொழி ஆடுவிடுமா? ஜெர்மன் நாட்டில் ரஷ்ய மொழி தேசிய மொழி ஆடுவிடுமா? அந்த சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்படுமா என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அதேபோல்—திராவிட நாட்டிலும் ஆரியத் தேசியம், ஆரிய மொழித் தேசியம் செல்லுபடியாகாது; ஒப்புக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

வெள்ளையர்கள் வடவரிடம் இலஞ்சம் வாங்கிக்கொண்டு நம்மை அக்கிரமமாக விற்றுவிட்டார்கள். அதனால்தான், அவர்கள் நம்நாட்டில் ஆரியமொழித் தேசியத்தை—மார்வாரி பொருளியல் தேசியத்தை—குஜராத்தி அரசியல் தேசியத்தைப் புகுத்துகிறார்கள். இது நீதியுமல்ல, நேர்மையுமல்ல என்பதைத் தேசியத் தோழர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தியை நம் நாட்டில் புகுத்துவது நம்மை நிரந்தரமான அடிமைகளாக ஆக்கிக்கொள்ளச் செய்யப்படும் சூழ்ச்சிதான். ஆரியர்கள் எப்படி நம்மை கீழ்சாதிக்காரர்களாக ஆக்கி அடிமைப்படுத்தினார்களோ—அதுபோல, இன்றைய வடநாட்டு ஆட்சியும் நம்மை அன்னக்காவடிப் 'பாப்பர்'களாக்கி அடிமைகொள்ளப் பார்க்கிறார்கள்.

ஆரியர்கள் நம்மை முதலில் எப்படி அடிமைகொண்டார்கள்? படை பலத்தில் யுத்தம் நடத்தி வெற்றிபெற்றதன் மூலம் அல்லவே! தந்திரமாக—தமது புராண இதிகாசங்களைக் கலைகளாக்கி, அவற்றை நம் மக்களிடையே புகுத்தினார்கள். அவற்றின் தத்துவத்தை—அத் தத்துவக் கடவுள், அவற்றின் தர்மங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒப்புக்கொள்ளும்படி செய்தனர். அதில் அவர்கள் வெற்றிபெற்று, அதற்கேற்ப மனுநீதிச் சட்டம் வகுத்து, நம்மைக் கீழ்மக்கள்—ஈனப் பிறவி ஆக்கினர். அதாவது, மதத்தை முதலில் நம்மை ஒப்புக்கொள்ளச் செய்த பிறகு நம்மைக் கீழ்மக்கள் என்று கூறும் சட்டம் செய்துகொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



இதை உணர்ந்து மதத்தைக் கண்டிக்க நாம் ஆரம்பித்ததும், வேறுவழியில்—அதாவது, தேசியத்தின் பேரால் இந்தியைப் புகுத்தி—அதன்மூலம் ஆரியர் கருத்துக்களைப்புகுத்தி— அதன் வழி நாம் அறிவைப் பாழாக்க நினைக்கின்றனர். நமது பிரச்சாரத்தின்மூலம் மக்கள் ஒரு அளவுக்கு ஆரிய கலாச்சாரத்திலிருந்து விடுதலை பெறவும், அதை வெறுக்கவும் முற்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால், குழந்தைப் பருவத்திலேயே ஆரியக் கலாச்சாரத்தைப் புகுத்தவேண்டி இந்தியை ஆரம்பப் படிப்பிலேயே புகுத்த முயற்சிக்கிறார்கள். மதத்தினால் புகுத்த முடியாமல்போன பித்தலாட்டக் கருத்துக்களை மொழியின் மூலம் புகுத்தச் சூழ்ச்சி செய்யப் படுகிறது. இந்திக்கும் சமஸ்கிருதத்திற்கும் அதிக பேதமில்லை என்பதை இந்தி ஆதரவாளர்களே ஒப்புக்கொள்கிறார்கள். மதம் செல்வாக்குடன் இருந்த சமயத்தில் நாம் சமஸ்கிருதம் படிக்கக்கூடாதென்றும் கூறிவந்தார்கள். திருப்பதி, இராமேஸ்வரம் முதலிய இடங்களிலுள்ள சமஸ்கிருதக் கல்லூரிகளில், அதுவும் சர்க்கார் மானியத்தைக்கொண்டு நடைபெற்று வரும் இக் கல்லூரிகளில்கூட சமீபகாலம் வரை நம் மக்களுக்கு சமஸ்கிருதம் படிக்க வசதியளிக்கவில்லை.

நம் மக்களைக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதேயில்லை. சர்க்கார் மானியம் அளிப்பதை நிறுத்திவிடுவதாகப் பயமுறுத்திய பிறகுதான் நம் பிள்ளைகளையும் அக் கல்லூரிகளில் சேர்க்க முற்பட்டார்கள். எல்லோருக்கும் சம உரிமை இருக்க வேண்டும் என்பதற்காக நாம் போராடினோமே ஒழிய, சமஸ்கிருதம் படிப்பதால் அறிவு விசாலம் அடையும் என்பதற்காக நாம் போராடவில்லை. நாம் இன்று சமஸ்கிருதம் ஆரிய மொழி என்றும், அது நம் திராவிட கலாச்சாரத்தை அடியோடு பாழ்படுத்தி நிற்கும் மொழி என்றும், அதைப் படிப்பதால் மூட நம்பிக்கைக் கருத்துக்கள்தாம் வளர்ச்சியடையுமேயொழிய—ஆபாச அறிவுதான் வளர்ச்சியடையுமேயொழிய—பகுத்தறிவு வளராது என்றும் பிரச்சாரம் செய்வதன் பயனாக, சமஸ்கிருதத்தைக் கட்டாயப்படுத்தும் வாய்ப்பற்றவர்களாய்ப் போய் விட்டார்கள். மேலும், அது பேசும் பழக்கத்தில்—உரையாடும் பழக்கத்தில் இல்லாது போய்விட்டதால் அதைக் கற்கும்படி வற்புறுத்த இயலாமல் போய்விட்டது.

எனவே, சமஸ்கிருதத்தின் மூலம் புகுத்த முடியாமற்போன பித்தலாட்டக் கருத்துக்களை அதன் வழிமொழியான இந்தியின் மூலம் புகுத்த முற்பட்டிருக்கிறார்கள். அரசியல் ஆதிக்கத்தின் உதவியால் இந்தியைப் புகுத்துவதில் வெற்றி காணலாம் என்று நினைத்திருக்கிறார்கள்.

இனி சர்க்கார் இந்தியால்தான் நடைப்பெறப்போகிறதாம். கோர்ட்டுகளும், சட்டசபை களும் இந்தியிலே நடைபெறலாம். தொழிற்படிப்பான வைத்தியப் படிப்பு, 'என்ஜினீயரிங்' முதலிய படிப்புகள் யாவுமே இந்தியில் நடைபெறலாம். இன்னும் 10 ஆண்டுத் தவணையில் இன்று ஆங்கிலத்தில் நடைபெற்று வரும் சகலமும் இந்தியில் நடைபெற வேண்டுமென்று மத்திய சட்டசபையில் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

[சென்னையில், 10-1-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-1-1950]

## 5. அரசியல் கிளர்ச்சி அல்ல

இந்தி எதிர்ப்புக்கு ஆதரவளிப்பதை அரசியல் பணியாகவே யாரும் கருதக்கூடாது என்றும் இதை மொழிப் பாதுகாப்புப் பணியாக ஒவ்வொரு தமிழரும் கருதவேண்டும் என்றும் தலை குனிந்து வேண்டிக்கொள்கிறேன்.

1948 ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்பு துவங்கிய காலத்தில்—அதாவது இரண்டாவது எதிர்ப்புக் கிளர்ச்சி காலத்தில் தோழர் ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதல் மந்திரியாக இருந்தார். நான் எதிர்ப்புக்குத் தேதி குறிப்பிட்டவுடன், 2 நாட்களுக்கு முந்தி



என்னை நேரில் அழைத்தார். நான் நேரில் சென்றேன். அன்பாய் வரவேற்று துவக்க வாக்கியமாகக் கலக்கத்துடன், 'நீ இருக்கவேண்டிய இடத்தில் நான் இருக்கிறேன்' என்றார். 'இந்த இடத்தில் நான் இருக்க நினைத்தால் இந்த இடம் எனக்கும் கிடைக்காது; உங்களுக்கும் கிடைத்திருக்காது' என்றேன்.

'என்ன இருந்தாலும் நீ காங்கிரசை விட்டுப்போனது தவறு' என்றார்.

'நான் காங்கிரசில் இருந்திருந்தால் இன்று நீங்கள் செய்கிற அளவு காரியம் கூட எனக்குச் செய்ய வாய்ப்புக் கிடைக்காது; அடிமையாகவேதான் இருந்திருக்க வேண்டும்' என்றேன்.

பிறகு சில வார்த்தைகள் பேசிய பின், 'என்ன இப்படி ஆரம்பித்து எனக்கு நீ வேறே தொல்லை கொடுக்கப் போகிறாயே?' என்றார்.

'என் நாட்டின் சுதந்திரத்தை முன்னிட்டுச் செய்கிறேன்' என்றேன்.

அதன் மீது அதுபற்றிச் சிறு விவாதம் நடந்தது. முடிவாக 'நான் எப்படியோ மாற்றிக்கொள்ள முடியாத நிலையில் இப்போது இருக்கிறேன். என்னைப்பற்றித் தவறாய்க் கருதக்கூடாது' என்றேன். அதையே அவரும் சொல்லிப் பேச்சு வார்த்தையை முடித்துக் கொண்டு என்னை வழியனுப்பினார்.

கிளர்ச்சி தொடங்கியதும் அவரும் அவரது கடமையைச் செய்தார்; எப்படியோ முடிந்தது. அதனால் எங்களுக்குள் ஒரு மனத்தாங்கலும் ஏற்படவில்லை என்பதோடு, பல காரியங்களில் அவர் ஆட்சியை நான் ஆதரித்தும் வந்திருக்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—25-7-1952]

## 6. இந்தி எதிர்ப்பின் பயன்கள்

இந்தி எதிர்ப்புக்கு இது (ஆகஸ்ட் கிளர்ச்சி) மூன்றாவது போராட்டமாகும். முதல் போராட்டம் 1938-ல் நடந்தது. அப் போராட்டம் 1500 பேர்களைச் சிறைக்கு அனுப்பி, 2 பேர்களின் உயிர்களை வாங்கி, பல குடும்பங்கள் பல இன்னலடைய நேரச்செய்து, முடிவில் கட்டாயம் (கம்பல்சரி) என்கின்ற சொல் மாத்திரம் நீக்கப்பட்டது. என்றாலும், கூரை வீட்டில் தீப்பற்றியதுபோல், அதுமுதல் பள்ளிகளில் எல்லாம் இந்தி வாழ்ந்தும், வளர்ந்துமே வந்தது. நாட்டிலும் வடவர்கள் பொருளுதவியாலும், பார்ப்பனர்கள் முயற்சியாலும், காங்கிரசினுடைய ஆதரவாலும் இந்தி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்க்கப்பட்டே வந்தது—வருகிறது.

இந்தி வளர்ச்சியின் தன்மை அந்தப்படியாக இருந்தபோதிலும், அந்த 1938 ஆம் வருஷத்திய ஆட்சியில் நுழைக்கப்பட்ட கட்டாய இந்தி பற்றிய கிளர்ச்சியானது, தமிழ் நாட்டிற்கே (திராவிடத்திற்கே) தமிழர்களுக்கே ஒரு திருப்பு முனையாகிப் (Turning Point) பெருவாரியான பாமரர்களுக்குப் பார்ப்பனர்களின் உண்மைத் தத்துவத்தை அறியச் செய்யவும், தமிழ் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் தமிழைப்பற்றிய கவலை ஏற்படவும், தமிழனின் தன்மை, தமிழனின்—தமிழ் நாட்டின் (திராவிடத்தின்) சரித்திரம் மக்கள் கவனத்திற்கு வரவும், தமிழ்நாடு சுதந்திரமாகத் தனித் தியங்க வேண்டும் என்கின்ற கொள்கையைக் காங்கிரசிலுள்ள தமிழர்கள் தவிர மற்ற பொதுமக்கள் உட்பட யாவரும் ஆதரிக்கவுமான ஒரு நிலை ஏற்பட்டது. நம் வாழ்நாளில் அதுவரை தமிழ் பற்றி, பார்ப்பனர்பற்றி ஏற்பட்டிராத ஒரு கிளர்ச்சி அச்சமயத்தில் ஏற்பட்டு, இலகுவில் மறைந்துவிட முடியாததான ஒரு உணர்ச்சியை நிலை நிறுத்தியது என்று சொல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com



மற்றும், அக் கிளர்ச்சியானது தமிழர்களின் அரசியல், உத்தியோக இயல், மத இயல், கடவுள் இயல், கலை இயல் முதலிய பல முக்கிய இயல்களிலும் ஒரு நல்ல உணர்ச்சியும் மாற்றமும் ஏற்படப் பெரும் காரணமாக இருந்தது என்றும் கூறலாம்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், அக் கிளர்ச்சிக்கு அப்புறமே திராவிட அதிகாரிகள், சிப்பந்திகள் முதலியவர்களும், மாணவர்கள் ஆசிரியர்கள் முதலியவர்களும்—ஏன், மந்திரிகள் முதலியவர்களுங்கூட தகுந்த அளவுக்கு ஆரியர்–திராவிடர் என்ற பேதமும், ஆரியக் கலை–திராவிடக் கலை என்ற பேதமும் உணர நேர்ந்ததோடு காரியத்திலும் நடைபெறச் சிறிது வாய்ப்பும் ஏற்பட முடிந்தது எனலாம்.

இவை மாத்திரமல்லாமல், அக் கிளர்ச்சிக்கு அப்புறமே பார்ப்பனர்களும் தங்கள் போக்கைச் சிறிதாவது மாற்றிக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை யாரும் மறைக்கமுடியாது. பார்ப்பனர்கள் தேவார, திருவாசக, பிரபந்த மாநாட்டைத் திறப்பது, பார்ப்பன குரு சங்கராச்சாரியார், திராவிட குரு பண்டார சந்நதி வீட்டிற்குச் சென்று கூட்டு முயற்சிக்கு ஒப்பந்தம் பேசுவதும் ஆன காரியங்களே பார்ப்பனர்களின் போக்கு மாற்றத்திற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

மற்றும் சரிபகுதி பார்ப்பனர்கள் இருந்துவந்த மந்திரி சபையானது 13, 15-க்கு 2 பேர், 3 பேர் என்ற அளவிற்குச் சுருங்க நேரிட்டதும் 1938ஆம் ஆண்டு இந்தி கிளர்ச்சிக்குப் பின்புதான். எனவே, 1938ஆம் ஆண்டைய முதலாவது இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி–கட்டாய இந்தியை எடுக்கச்செய்தது மாத்திரமல்லாமல், மேற்கண்ட மற்ற காரியங்களையும் செய்ய உதவியிருக்கிறது.

அடுத்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியானது, 1938-க்கு அப்புறம் காங்கிரஸ் இரண்டாம் தடவையாக மந்திரி சபைப் பீடம்ஏறி ஆட்சிசெலுத்திய காலமாகிய 1948 ஆம் ஆண்டில் ஆகும். அந்தச் சமயத்திலும் இந்தி கட்டாயமாக்கப்பட்ட ஒரு சாக்குக் கிடைத்தது. அதன் மீது ஓர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி துவக்கப்பட்டது. அந்தக் கிளர்ச்சியும் பெருத்த ஆடம்பரமாய் மக்கள் கவனத்தைக் கவரும்படியாய் நடக்காவிட்டாலும்—அப்படி நடைபெறாததற்குக் காரணம் நாமல்ல; சர்க்காரேயாகும். ஏனென்றால், கிளர்ச்சிக்காரரை, மறியல் செய்தவர்களை மற்றும் யாரையும் சிறை பிடிக்கவில்லை; நல்ல அடக்குமுறை எடுக்கவில்லை. அதனால், மக்களுக்கு உணர்ச்சியும் உற்சாகமும் ஏற்படவில்லை. ஆனால், கிளர்ச்சி துவக்கமானது மாபெரும் அஸ்திவாரத்தின்மீதே துவக்கப்பட்டது.

அதாவது, 1948ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு மாநாடானது சென்னையில் (செண்ட் மேரீஸ் ஹாலில்) மறைமலை அடிகள் தலைமையில், தெருக்கள் எல்லாம் அடைபடும்படி 25000 மக்கள் முன்னிலையில், அந்த ஹாலும் அந்தத் தெருவும் அதுவரை கண்டிராத அளவு கூட்டத்தில் மகா உற்சாகத்துடன் கூடியது.

அதில் மறைமலை அடிகள், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் முதல் தோழர்கள் கதர் பிரதிநிதி நாரண துரைக்கண்ணனார், காங்கிரஸ் பிரதிநிதி ம. பொ. சி., கிறிஸ்தவ பிரதிநிதி ரெவரெண்ட் அருள் தங்கையா, முஸ்லிம் லீக் பிரதிநிதி அப்துல் மஜீத், டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி, வி. வி. இராமசாமி, மாஜி மேயர் இராதாகிருஷ்ண பிள்ளை, கே. ஏ. பி. விஸ்வநாதன் முதலிய திராவிட கழகத்தினர் அல்லாதவர்களும், அதன் எதிரிகளும் ஏராளமாக வந்திருந்தார்கள். இம் மாநாடு தவிர மற்றும் பல மாநாடுகள்–புலவர் மாநாடு, மாணவர் மாநாடு, பெண்கள் மாநாடு முதலிய பல மாநாடுகள் கூடி இந்தியை எதிர்த்துத் தீர்மானங்கள் செய்ததோடு, நேரடிக் கிளர்ச்சியில் கலந்துகொள்ள ஏராளமான மக்கள் முன் வந்தார்கள். அடக்குமுறை இல்லாததால் கிளர்ச்சி சிலருக்குச் சப்பிட்டுப் போனாலும் அக் கிளர்ச்சியும் வெற்றிபெற்றது.

அதாவது, முன்னையக் கிளர்ச்சி வெற்றிபோலவே இதன் பயனாகவும் சர்க்கார் கொள்கையில் இந்தி கட்டாயம் இல்லை என்று சொல்லப்பட்டு, அந்தப்படியே கட்டாயம்



எடுக்கப்பட்டதாக மந்திரிகளாலேயே அறிவிக்கவும்பட்டது. இதனாலும் தமிழருக்குள்—தூண்டிவிடப்பட்ட விளக்குபோல் ஒரு அளவுக்கு விழிப்பு ஏற்பட்டது.

எனவே, இதற்கு முன் 1938-லும் 1948-லும் நடந்த இரண்டு கிளர்ச்சிகளும் அந்தக் காரியக் கொள்கையில் வெற்றி பெற்றன என்றாலும் அந்தக் காரியத்தில் முழு வெற்றி என்று சொல்ல முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்ளத் தயங்கவில்லை. ஆனால், வேறு பல காரியங்கள் அதுவும் சுலபத்தில் நீண்டநாள் முயற்சியாலும் பிரச்சாரத்தாலும் கூட நடைபெறச் செய்ய முடியாத காரியங்கள் நடந்திருப்பதை நான் பெருமையோடு, அகக் களிப்போடு சொல்லிக்கொள்கிறேன்.

இது, அதாவது, ஆகஸ்ட் ஒன்றாந்தேதி நடப்பது 3-வது இந்திக் கிளர்ச்சி என்பதோடு, அதுவும் காங்கிரசின் 3-வது மந்திரிசபை ஆட்சியின்போது நடைபெறுகிற 3-வது கிளர்ச்சி ஆகும்.

இக் கிளர்ச்சியானது முன்னையக் கிளர்ச்சிகள் போன்றதல்ல. அவை கட்டாய இந்தி கூடாது என்பதற்காக நடத்தப்பட்டவை. அவற்றில் பார்ப்பானது வேஷமே முக்கியமாய் இருந்தது. என்னைப் பொறுத்தவரை அக் குறிக்கோள் வைத்தும் அவை நடத்தப் பட்டவையாகும்.

ஆனால், இது அப்படியல்ல. கட்டாய இந்தி கூடாது என்பது மாத்திரமல்ல; அப்படியானால் குள்ளநரிக் கூட்டமெல்லாம் இதில் புகுந்து துரோகம் செய்துவிட முடியும். இதற்கு யாரும் ‘நானும் கூடத்தான்’ என்று சொல்லிவிட முடியும். ஆதலால், இந்தக் கிளர்ச்சி கட்டாய முறைக்கு மாத்திரமல்லாமல் அரசியலிலும், சமுதாய இயலிலும், கல்வி இயலிலும், அரசாங்க ஆதரவில், அரசாங்க நடப்பில் திராவிட நாட்டில் (தமிழ் நாட்டில்) இந்தி தலை காட்டக் கூடாது என்பதற்கு ஆகும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், இரயில் பலகைகளில் ‘போஸ்ட் ஆபீஸ்’களில், கார்டு கவர்களில், ‘போஸ்ட்’ முத்திரைகளில் ‘கட்டாயமாகவா’ இந்தியை சர்க்கார் புகுத்துகிறார்கள்? அவர்கள் ஆட்சி முறையில்—குழாயில் தண்ணீர் வருவதுபோல் வந்து, இந்தி புகுந்துகொண்டு இருக்கிறது. இதை எப்படிக்-கட்டாயமாகப் புகுத்துதல் என்று சொல்ல முடியும்?

முன்பு ஆங்கிலேயன் ஆட்சியினால்தான் சர்வம் ஆங்கில மயமாக்கப்பட்டது. இதில் கட்டாயம் எதுவும் இல்லையே! இந் நாட்டிலுள்ள எல்லாப் பார்ப்பனரும் ஆங்கிலத்தை வரவேற்றார்கள்; அதற்காக ஆங்கிலேயனுக்கு நன்றி செலுத்தினார்கள்; ஓடி, ஓடி, முக்கி முக்கிப் படித்தார்கள். அதைப்பற்றித் திராவிடன் கவலைப்படவே இல்லை. நல்ல திராவிடன், செல்வத் திராவிடன், ‘நமக்கு எதற்கு ஆங்கிலம்?’ என்று சொல்லிவிட்டான். ஆங்கிலத்தால் பதவி, உத்தியோகம், வருவாய் கிடைக்கின்றன என்று கண்டதும் சிறிது படிக்க ஆரம்பித்தான். அதற்கும் பார்ப்பான் முட்டுக்கட்டை போட்டு ஆங்கிலத்தைத் தனக்கே ஆக்கிக்கொண்டான்.

பிறகு திராவிடன் கிளர்ச்சி செய்தான். அக் கிளர்ச்சியைப் பார்ப்பானால் அடக்க முடியவில்லை. எப்படியோ, ஆங்கிலேயன் போய்விட்டான். அந்த இடத்தில் பார்ப்பான் உட்கார்ந்தான். அவன் உட்கார்ந்து, ஆங்கிலத்திற்குப் பதிலாக, அந்த இடத்தில் இந்தியை வைத்தான். இந்தியாவில் பதவி மாத்திரமல்லாமல் ஆட்சியையே தனக்கு நிரந்தரமாகத் தன்னுடையதாக ஆக்கிக்கொள்ளத் திட்டமிட்டுக்கொண்டான். இப்போது நாம் இந்தியை மொழி காரணமாகவே வெறுக்கவில்லை. இந்திமூலம் ஆட்சியையும், பதவியையும் நிரந்தரமாகத் தன்னுடையதாக ஆக்கிக்கொள்ளும் முயற்சியை எதிர்க்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாகச் சுருக்கை நகர்த்தி நம் கழுத்தை அறுக்கும் கொலை பாதகத்தை எதிர்க்கிறோம். இதற்குத் தமிழர்களை—திராவிடர்களைத் தவிர வேறு யாரும் சம்மதிக்கமாட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியக் காங்கிரஸ், இந்திய சோஷியலிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், இந்திய வெங்காய'இஸ்டு'யாரும்—இந்திய என்கின்ற பெயரைத் தலையில் கொண்ட எந்தக் கட்சியாரும், பார்ப்பனக் கூலிகள்; வடநாட்டான் கூலிகள்; இவர்களது மறுபதிப்புகள்—திராவிடர் உழைப்பில் உண்டுகளிக்க இருக்கும் காதக எதிரிகள். ஆதலால், இவர்கள் எல்லோருடையவும் ஆதிக்கத்தையும் சுரண்டலையும் சேர்த்து எதிர்க்கும் எதிர்ப்பே இந்த இந்தி எதிர்ப்பு ஆகும்.

உதாரணம் வேண்டுமானால், இவர்கள் எல்லோரும், 'கட்டாய இந்தியை நாங்களும் தான் எதிர்க்கிறோம்' என்பார்கள். 'கற்பு அழிப்பு' என்றால் பலாத்காரமாகச் செய்தல் என்பது மாத்திரம்தானா? மற்றவகைகளில் நெருக்கடி, தடுக்கமுடியாத தன்மை, திருட்டுத்தனமாக மயக்குதல், சிறிது சிறிதாக இணங்கவைக்கச் சந்தர்ப்பங்களை உண்டாக்குதல் முதலிய காரியங்களால் நடத்தினால் அது 'கற்பு அழிப்பு' ஆகாதா என்று கேட்கிறேன்.

ஆதலால், இந்த நாட்டில் இந்தி எதிர்ப்புக்கு இந்த நாட்டு ஸ்தாபனங்களும்—அதுவும் தமிழினத் திராவிடனைத் தவிர வேறு எந்த இனத்தானும், சாதியானும் அறவே கலந்தில்லாத ஸ்தாபனங்களும், வடநாட்டார் சம்பந்தமே இல்லாத ஸ்தாபனமும், அதுவும் அதில் கலந்துள்ள தமிழர் (திராவிடர்)களும்தான் சேரமுடியும், தொண்டாற்ற முடியும். மற்றவர்கள் இதை ஒழிக்க, எதிர்க்க, சூழ்ச்சிகளைத்தான் செய்வார்கள். அதுவும், 'சோறு இல்லை, துணி இல்லை, கூலி இல்லை, வரி அதிகம், ரோட்டில் புழுதி; இவைகளையெல்லாம் விட்டுவிட்டு—இதற்கு என்னடா அவசியம்?' என்று 'மொடா' வயிற்றில் அடித்துக்கொண்டு 'ரோலர்' கல்போல் 'ரோட்டில்' புரளுவார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து, 'இவைகள் எல்லாம் ஏன் இல்லாமல் போயின? யாரால், எதனால் இல்லாமல் போயின?' என்று ஒரு கேள்விகேட்டால், 'இது பிற்போக்கு சக்தி' என்று சொல்லிவிட்டு 'அண்டர் கிரவுண்ட்' ஆகிவிடுவார்கள்.

ஆனாலும், இப்போது நமக்கு வேறு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. யூனியன் ஆட்சியில் டெல்லிதவிர, அதிலுள்ள பார்ப்பன ஆதிக்கக்காரர்களும், சில யூனியன்களும்—அவர்கள் கூலிகளும் தவிர, மற்ற இராஜ்யக்காரர்கள் அனேகமாக எல்லோருமே இந்தியை எதிர்க்கிறார்கள்; எல்லா நாட்டிலும் எதிர்ப்பு உணர்ச்சி தோன்றிவிட்டது. இதையெல்லாம்விட நம் நாட்டுப் பார்ப்பனர்கள் பலரும் இந்தியை வெறுத்தவர்கள்போல், இந்தி புகுத்துவதை இஷ்டப்படாதவர்கள்போல் காட்டிக்கொள்கிறார்கள். போராட்டம் நீடித்து நடக்க நல்ல ஆதரவுகளும் வளர்கின்றன; நல்ல அறிகுறியும் கொண்ட நல்ல சமயமாக இருக்கிறது.

['விடுதலை'-தலையங்கம்—27-7-1952]

## 7. நம் போராட்ட நேர்மை

ஒரு நண்பர் என்னிடம் வந்து, 'என்ன இப்படி எழுதியிருக்கிறாயே? இந்தி எழுத்துப் பெயரை அழிக்கவேண்டும் என்கின்ற எண்ணம் உனக்கு இல்லைபோல் தெரிகிறதே! அழிக்கப் போகிறவரின் பெயர் விலாசம் கொடுத்தால், கொடுத்தவர்களை வீட்டில் இருக்கும்போதே, போலீசார் வந்து பிடித்துக்கொண்டு போய்விடுவார்களே; அப்புறம் யார் இந்தியை அழிப்பது? இது என்ன போராட்டம்?' என்று கேட்டார்.

அதற்கு நான் என்ன பதில் சொன்னேன் என்றால், 'நமது போராட்டம் காங்கிரஸ்காரர்களின் 'ஆகஸ்டுப் போராட்டம்' போன்ற நாசவேலைப் போராட்டம் அல்ல; திருட்டு வேலைப் போராட்டமும் அல்ல. இது ஆண்மைப் போராட்டம்; உண்மைப் போராட்டம்; அதுவும் நமது வெறுப்பையும், வேண்டாமையையும் காட்டும் வீரப் போராட்டம்; இதில் பயன் ஏற்படவில்லையென்றால் நான் விலகிக்கொள்கிறேன். மற்றதில் நம்பிக்கையுள்ள மற்றவர்கள் அவரவர் ஆசைப்படி நடந்துகொள்ளட்டும்' என்று சொன்னதோடு—



'எனது 30 வருஷ பொதுத் தொண்டில் ஒரு செயல்கூட, ஒரு போராட்டம்கூட நான் மறைவாய் நடத்தினது கிடையாது; நடத்த அனுமதித்ததும் கிடையாது.

என்மீது பொதுவாழ்வில் சுமார் 20 வழக்குகள் நடந்திருக்கும். என் சொந்த வாழ்விலும் சில வழக்குகள் நடந்திருக்கும். ஒன்றுக்குக்கூட நான் எதிர் வழக்காடி இருக்க மாட்டேன்; ஒப்புக்கொள்ளவும் தயங்கி இருக்கமாட்டேன்' என்று சொன்னேன்.

ஒரு சிறு எடுத்துக்காட்டு :—

1903-ல்—அப்போது எனக்கு சுமார் 24 வயது இருக்கும். அப்போதே வியாபாரத்தில் எனக்கு விளம்பரம் உண்டு; என் தகப்பனார் பெயரில் பெற்று இருந்த ஒரு ஆயிரம் ரூபாய் டிக்கிரியை திருச்சியில் நிறைவேற்ற 'டிக்கிரி' நகலை எடுத்துக்கொண்டுபோய் வக்கீலிடம் கொடுத்து, வக்காலத்து பாரத்தில் என் தகப்பனார் கையெழுத்தை நானே போட்டுக் கொடுத்து, அவசரப் படி கட்டி, ஆளைப்பிடித்துச் சேவகன் கையில் விட்டு உடனே ஈரோட்டிற்கு வந்துவிட்டேன்.

பிரதிவாதி டிக்கிரி பணத்தை வக்கீலிடம் கட்டி, வக்கீலை ரசீது கேட்டார்; அதோடு செலவைத் தள்ளிவிடுங்கள் என்றார். அதற்கு வக்கீல், 'இப்பொழுதுதானே வாதி ஊருக்குப் புறப்பட்டார்; சற்றுமுன் வந்திருந்தால் வாதி இடமே ரூபாயைக் கட்டி ரசீது வாங்கி இருக்கலாமே; அவர் ஏதாவது தொகையில் தள்ளிக்கொடுப்பாரே' என்றார். அந்தச் சந்தர்ப்பத்தில் பிரதிவாதி வக்கீலிடம், 'வந்திருந்தவர் வாதி அல்ல; வாதியின் மகன்; இவர் பெயர் இராமசாமி நாயக்கர்' என்றார். உடனே வக்கீல் ஆத்திரப்பட்டு 'அப்படியா!' என்று கேட்டு ரசீது கொடுத்து பிரதிவாதியை அனுப்பிவிட்டு, மறுநாள் முனுசிப் கோர்ட்டில் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்து பணத்தைக் கட்டிவிட்டார். அந்த விண்ணப்பத்தில் நான் ஆள் மாறாட்டம் செய்துவிட்டேன் என்றும், 'போர்ஜரி'—கள்ளக் கையெழுத்துச் செய்து தன்னை மோசம் செய்துவிட்டேன் என்றும் எழுதி இருந்தார்.

முனுசீப் எனக்கு நோட்டீஸ் அனுப்பிவிட்டார். அந்த நோட்டீஸில் 'உன்மீது (கேஸ்) வழக்கு நடத்த ஏன் சாங்கிஷன் கொடுக்கக்கூடாது?' என்று கண்டிருந்தது.

இந்த நோட்டீஸ் எனக்கு வந்ததும், தென் இந்திய வியாபார உலகமே ஆடிவிட்டது. காரணம், அப்போது என் தகப்பனாருக்கும், எனக்கும் வியாபார உலகில் இருந்த பிரபலப் பெயராகும்.

என் தகப்பனார் இந்த நோட்டீசை எடுத்துக்கொண்டு பி. டி. சுப்பிரமணிய அய்யர், C. விஜயராகவாச்சாரியார் என்ற இரண்டு பிரபல சேலம் வக்கீல்களிடம் சென்றார். அவர்கள் இருவரும் ஒரேமாதிரிச் சொன்னார்கள்; அதாவது, உங்கள் மகன், 'இந்தக் கையெழுத்து நான் போடவில்லை' என்று சொல்லிவிடவேண்டும் என்று சொன்னார்கள். என் தகப்பனார் நான் ஜெயிலுக்குப்போகாமல் இருப்பதற்கு எதுவும் செய்யத் துணிவு கொண்டவர்; ஆதலால், அவர் அதற்குச் சம்மதித்துக்கொண்டு வந்துவிட்டார். ஈரோட்டுக்கு வந்து என்னைக் கேட்டார். நான் அதற்கு இணங்கவில்லை. 'இதற்காக 2 பெரும் பொய்களைச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை; வருவது வரட்டும்' என்று சொல்லிவிட்டேன்.

என் மைத்துனன் நோட்டீசை எடுத்துக்கொண்டு நார்ட்டன் துரையிடம் சென்றார். அவரும், 'இதில் கையெழுத்து நான் போடவில்லை என்பது தவிர வேறு 'டிபன்ஸ்' இல்லை; இதற்காக எனக்கு ஏன் 2000, 3000 கொடுக்கவேண்டும்?' என்று சொல்லி, தனக்கு வர விருப்பமில்லை என்பதைக் காட்டிக்கொண்டார்.

கடைசியாக டி. டி. ரெங்காச்சாரியார் என்ற ஒரு முனுசீப்பை சிபார்சு பிடித்து டி. தேசிகாச்சாரியை வக்கீல் வைத்து முனுசீபிடம் என் தகப்பனார் எவ்வளவு கெஞ்சியும் அவர் 'சாங்கிஷன்' கொடுத்துவிட்டார். உடனே நான் காப்பு, கொலுசு, கடுக்கன் எல்லாவற்றையும் கழற்றி எறிந்துவிட்டு, தாடி வளர்த்துக்கொண்டு—கேப்பைக் களி (கேழ்வரகுக்

படிப்பகம்

www.padippakam.com



களி) சாப்பிட்டுப் பழகிக்கொண்டு—தலையணை இல்லாமல் பாயில் படுத்துப் பழக ஆரம்பித்துவிட்டேன். என் தாயாருக்கு அன்று முதல் ஒரே வேளை சாப்பாடு; பல கோயில்களுக்கு அர்ச்சனை செய்கிற வேலை. ஆனால் நான் மாத்திரம், 'நாம் ஜெயிலுக்குப் போவது என்னமோ உறுதி; 'கேஸ்' நடந்து தண்டனை கிடைக்கிறவரை அனுபவிக்காததை எல்லாம் அனுபவித்துவிடுவோம்' என்று நல்ல மைனர்போல் திரிந்துகொண்டு இருந்தேன். சாப்பாடு—களி; படுக்கை—பாயில்; அவ்வளவுதான்; மற்றவையெல்லாம் 'ஜமீன் மைனர்'தான்!

2 மாதம் பொறுத்து திருச்சியில் அசிஸ்டெண்ட் கலெக்டர் மெக்பர்லெண்டு (என்று ஞாபகம்) என்பவரிடம் கேஸ் வந்தது. கோர்ட்டுக்குப் போனோம்; அன்று 500 பேர்கள்—பெரிய வர்த்தகர்கள் உட்பட கோர்ட்டில் வேடிக்கை பார்க்க வந்த கூட்டம்.

கலெக்டர் ஆசனத்தில் அமர்ந்து 5, 6 வழக்குகளைக் கூப்பிட்டு விசாரித்து முடிவு சொல்லிவிட்டார். எல்லா 'கேஸ்'களையும் தண்டித்துவிட்டார். அவர் சிறு வயது—28 அல்லது 30 வயதுதான் இருக்கும். என் பெயரைக் கூப்பிட்டார்.

எனக்கு, வக்கீல் கணபதி அய்யர்—அப்போது அவர் பப்ளிக் பிராசிகியூட்டர். எனக்காக பெரிய கலெக்டரிடம் அனுமதிபெற்று, 'எதிரிக்கு' ஆஜராகிறார். அவரும் நானும் ஒன்றாய்க் கோர்ட்டுக்குள் போனோம். அவர் என் தோள்மேல் கையைப் போட்டுக்கொண்டு கோர்ட்டுக்குள் வந்து, என்னைக் கூண்டிற்குப் பக்கத்தில் விட்டுவிட்டு, அவர் தனது இடத்திற்குச் சென்று அமர்ந்தார். கலெக்டர் இதைப் பார்த்துவிட்டு அவரிடம், 'எங்கு வந்தீர்கள்? உங்களுக்கு இன்று இங்குக் கேஸ் இருக்கிறதா?' என்றார். கணபதி அய்யர், 'ஆம்! போர்ஜரி கேஸ் இருக்கிறது' என்று கேஸ் நம்பரைச்சொன்னார். அதற்கு, 'சர்க்கார் தரப்பில் உம்மை அழைக்கவில்லை போலிருக்கிறதே' என்றார், கலெக்டர். 'நான் எதிரிக்காக ஆஜராகிறேன்' என்றார் வக்கீல். 'சர்க்கார் வக்கீல், சர்க்கார் வழக்கில் எதிரிக்கு ஆஜராகலாமா? இதென்ன புது வழக்கமாக இருக்கிறதே!' என்றார். 'கலெக்டர் அனுமதிமீது ஆஜராகிறேன்' என்றார் வக்கீல். 'ஏன் அப்படி?' என்றார் கலெக்டர். 'கேஸ், சர்க்காருக்கு உபயோகமற்ற—பலமற்ற கேஸ். அதோடு இது 'சென்சேஷனல்' கேஸ் ஆனதால், அனுமதி கேட்டேன்; கொடுத்தார்' என்றார் வக்கீல்.

என்னைப் பார்த்துக்கொண்டே, 'சரி, சாட்சியைக் கூப்பிடு' என்றார் கலெக்டர். முதல் சாட்சி வக்கீல் ஜம்புநாதய்யர். அவர் கொஞ்சம் சரக்குச் சேர்த்து, 'இந்த ஆளை, நீ தான் வாதியா என்றேன், உன் பெயர் என்ன என்றேன். ஆம்; வெங்கிட்ட நாய்க்கர் என்றான்' என்றார். 'ஏன் அப்படிக் கேட்டீர்?' என்றார் கலெக்டர். 'யார் வந்தாலும் நான் அப்படித்தான் கேட்பது' என்றார் வக்கீல். வக்காலத்து பாரம் ரிஜிஸ்டர் செய்த கிராம முனுசீப் ஒரு சாயபு; அவர் கிழவனார். அவருக்குக் கண் பார்வை சரியாகத் தெரியாது. 'அவர் ஒரு வாலிபமான ஆள்—காப்பு, கொலுசு, கடுக்கன் போட்டுக்கொண்டு வந்து என் எதிரில் நான்தான் வெங்கிட்ட நாய்க்கன் என்று சொல்லிக் கையெழுத்துப் போட்டார். அந்த ஆள் இதோ காப்பு கொலுசு போட்டுக்கொண்டு நிற்கிறாரே இவர் தான்' என்று கையை நீட்டி என்னைக் காட்டினார். எல்லோரும் சிரித்தார்கள்.

கலெக்டர் என்னைப் பார்த்து ஆங்கிலத்தில், 'நீ என்ன சொல்லுகிறாய்?' என்று கேட்டார். என் வக்கீல் அதை மொழிபெயர்த்து என்னைக் கேட்டார். நான் தயங்கித் தத்தளித்துப் பேசுகிற தன்மையில், 'நான்தான் கையெழுத்துப் போட்டேன்' என்றேன். 'ஏன் போட்டாய்?' என்றார். 'அப்படித்தான் கோர்ட்டு, ரயில் நடவடிக்கைகளில் எப்போதும் நான் போடுவது வழக்கம்' என்றேன். 'ஏன் அந்த வழக்கம்?' என்றார். 'எங்கள் அப்பா கிழவனார்; நான்தான் வேலை பார்ப்பது; அந்த வியாபாரமும் பணமும் என்னுடையது. அவர் பெயர் பிரபலம்; ஆனதால் அந்தப் பெயர் வைத்து நான் வியாபாரம் செய்கிறேன்' என்றேன்.



'சரி; வெங்கிட நாயக்கரை கூப்பிடு!' என்றார் கலெக்டர். வெங்கிட நாயக்கர் அழுது கொண்டே பெட்டிமேலேறி, வக்கீல் கேட்டதற்கு நான் சொன்னதை ஆதரித்தே பதில் சொன்னார். ஜம்புநாதய்யரைப் பார்த்து, கலெக்டர், 'எனிதிங்?' என்றார். எல்லோரும் சிரித்தார்கள். ஜம்புநாதய்யர் ஒன்றும் பேசவில்லை.

உடனே கலெக்டர் 4 வரி எழுதிப் படித்துவிட்டு அடுத்த கேஸ் கூப்பிட்டார். அவர் படித்தது விளங்கவில்லை. மேஜிஸ்ட்ரேட் கிளார்க்கு ஒரு நாயுடு. அவர், 'கேஸ் தள்ளப்பட்டுவிட்டது; நீ போகலாம்' என்றார். என் தகப்பனார் என்னைக் கட்டிக்கொண்டு அழுதுவிட்டு, கணபதி அய்யர் காலில் விழப்போனார்; அவர் எட்டிப்போய்விட்டார். தீர்ப்பு என்னவென்றால், 'இந்த நடவடிக்கை இந்த செக்ஷனின் கருத்துக்குப் பொருந்தாது. எதிரி யாரையும் மோசம் செய்ய இந்தக் காரியம் செய்யவில்லை. வழக்குத் தள்ளப்பட்டது' என்று இருந்தது.

இப்படி இன்னும் சில உண்டு. இந்த எனது நடத்தை கடவுளுக்காக—மோட்சத்திற்காக—சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. நேர்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதுடன், நம்மை நாமே எண்ணிக் கொள்ளுவதில் ஒரு பெருமை, ஒரு அகம்பாவம், எங்கும் எப்போதும் யாரிடமும் பேசும்போது ஒரு துணிச்சல், தோல்வியிலும் ஒரு திருப்தி, மற்றவர்களுக்கும் நேர்மை ஒழுக்கம் பற்றிய வழிகாட்டி-பிரச்சாரம். ஆதலால் 'மறைவாக ஒன்றும் செய்யவேண்டாம்; எதையும் மறைக்காதே' என்றேன். மற்றும் பல எடுத்துக்காட்டுகள் காட்டலாம்; அது தற்பெருமையாக முடியும். சுருக்கமாகச் சொல்லுவேன். நேர்மையாக நடப்பது சுயநலமும்கூட ஆகும்.

எனது பலக் குறைவினால் எத்தனையோ தவறுகள் ஏற்பட்டும்—பொதுவாழ்வில் இந்த நாட்டில் நான் சாகாமல் இருப்பதற்கு இந்த நேர்மையில் நான் வைத்திருக்கும் ஜாக்கிரதைதான் காரணமாகும்.

['விடுதலை'–தலையங்கம்—26-7-1952]

## 8. இந்தி அழிப்புக் கிளர்ச்சி

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1-ந் தேதியில் நடந்துவரும் இரயில்வே நிலையப் பெயர்ப் பலகைகளிலுள்ள இந்திப் பெயர்களை அழிக்கும் கிளர்ச்சியை இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று வைத்துக்கொள்வது நலமென்று கருதுகிறேன். ஏனெனில், ஆகஸ்ட் 1-ந் தேதியன்று குடியாத்தத்தில் அசெம்பிளி உபதேர்தல் நடைபெறப் போகிறது. அதுமிகவும் முக்கியமானதும் நமது சில நலன்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டியதுமான தேர்தலாயிருப்பதால் இவ்வாண்டு 1-ந்தேதி இந்தி அழிப்பின் காரணமாக ஏதாவது காரியங்கள் அல்லது குழப்பங்கள் நடப்புக்கு விரோதமாக ஏற்பட நேருமேயானால் அது ஒருசமயம் தேர்தலை பாதித்துவிடுமோ என்கிற எண்ணத்தாலும் எதிரிகள் தேர்தல் பாதிக்கும்படியான அளவுக்குக் கலவரம் செய்யவேண்டுமென்று கருதி ஏதாவது தொல்லை விளைவிப்பார்களோ என்பதாகவும் கருதி எல்லாவற்றுக்கும் தயாராய் இருப்பதற்கான ஏற்ற நாளாக இருக்க ஆகஸ்ட்மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையை 1954-ம் ஆண்டின் இந்தி அழிப்பு நாளாக ஏற்பாடு செய்திருக்கிறேன்.

ஆதலால், கழகத் தோழர்களும், மற்றும் இந்தி எதிர்ப்பில் கவலையுள்ள மற்ற தோழர்களும் இந்தி அழிப்பை ஆகஸ்ட் 8-ந் தேதியன்று வழக்கம்போல் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடத்தவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இந்தி அழிப்புச் சுற்றுப் பிரயாணமாக ஆகஸ்ட் 4 அல்லது 5-ந் தேதியிலிருந்து தமிழ்நாடு முழுவதும் இரயில்வே பிரயாணமாக நானும் சில தோழர்களும் புறப்பட்டு ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வழக்கம்போல் நண்பர்களைக் காண இருக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



ஆகையால், இப்பொழுதிருந்தே இதற்கேற்ற கமிட்டி வகையறா ஏற்பாடுகளைச் செய்து பெயர் முதலியவற்றைத் தெரிவிக்க வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'-அறிக்கை—17-7-1954]

ஆகஸ்ட் கிளர்ச்சியில் உன் பங்கு என்ன?

ஏறக்குறைய தமிழ்நாட்டில் 500 இரயில்வே ஸ்டேஷன்கள் இருக்கின்றன.

இவற்றுள் நீ எந்த ஸ்டேஷனில் உள்ள இந்திப் பெயரை அழிக்கத் தெரிந்தெடுத்து இருக்கிறாய்?

நீ திராவிடன் அல்லது சென்னை ராஜ்யத்தான் அல்லது தமிழ்நாட்டான் என்பதை சந்தேகமற உணருகிறாயா?

உன் நாட்டு (தேச) மொழி தமிழ் என்பதையும் நீ தமிழன் என்பதையும் உணருகிறாயா?

அப்படியானால் உன் கடமை என்ன? இந்தி மெள்ள மெள்ள உன் நாட்டில் உன் படுக்கை அறையில் புகுந்துகொண்டது.

'இந்தி படிக்காதவனுக்கு பாஸ் இல்லை.'

'இந்தி படிக்காதவனுக்கு உத்தியோகம் இல்லை.'

'இந்தி தெரியாதவனுக்கு பார்லிமெண்டில் இடம் இல்லை., தெரியாவிட்டால் வெளியே போ' என்கிற நிலைமை வந்துவிட்டது

இந்த நிலையில் உன் கடமை என்ன?

உன் நாட்டிற்கு, உன் மொழிக்குத் துரோகம் செய்து வடவனுக்குக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்ப்பது திராவிடன் பண்பா?

ஆகஸ்ட் 8-ந் தேதி 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதில் சொல்லு.

'ஆம்' என்றால் 'ஜே இந்தி' என்று சொல்லு.

இல்லாவிட்டால் 'இந்தி ஒழிக' என்று தாரில் புருசை நனைத்து இந்திப் பெயரை அழி—அழி—அழி.

['விடுதலை'-அறிக்கை—5-8-1954]

ஆகஸ்ட் கிளர்ச்சியில் ஈடுபடுகின்ற தோழர்கள் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தின் முன்பு நிறுத்தப்பட்டால் கீழ்க்கண்ட அறிக்கையைமட்டும் எழுத்துமூலமோ வாக்குமூலமோ தெரிவித்துவிட்டால் போதும் என்று அறிவித்துக்கொள்கிறோம்.

'நான் குற்றவாளியல்ல; திராவிடநாட்டில் இந்தியை அரசியல் மொழியாகவோ, தேசிய மொழியாகவோ, உத்தியோக மொழியாகவோ, யூனியன் சர்க்கார் புகுத்துவதையும் நடைமுறையில் கொண்டுவருவதையும் திராவிட (தமிழ்) மக்களாகிய நாங்கள் விரும்பவில்லை என்பதையும், எங்கள் விருப்பத்துக்கு விரோதமாக சர்க்கார் தங்கள் ஆதிக்கத்தின் மூலம் இந்தியைப் புகுத்துகிறார்கள் என்பதையும், இந்தச் செய்கையை வெறுக்கிறோம் என்பதையும் சர்க்காருக்கும், வெளி ராஜ்யக்காரர்களுக்கும் தெரிவிப்பதற்கு அறிகுறியாகவே அமைதியான முறையில் சட்டவரம்புக்குட்பட்டு இந்தக் காரியத்தைச் செய்தேன்; நான் குற்றவாளியல்ல.'

['விடுதலை'-அறிக்கை—6-8-1954]



தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாம் ரயில் நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்து வந்ததற்கேற்ப இந்த ஆண்டும் இந்தி அழிப்புச் செயலைச் செய்திருக்கின்றோம். இந்த நிகழ்ச்சி ஆகஸ்ட் 1-ந் தேதியே நடந்திருக்க வேண்டியது. ஆனால் ஆகஸ்ட் 1-ந்தேதி குடியாத்தம் உபதேர்தல் நடக்கிற நாளானபடியால் இந்த நிகழ்ச்சியில் ஏதாவது ஏற்பட்டு அதன் காரணமாக தேர்தல் பாதிக்கப்படுமோ என்கிற காரணத்தினால் 8-ந்தேதிக்கு மாற்றிவைத்தோம்.

தோழர்களே! இந்த நம்முடைய இந்தி எதிர்ப்பு இன்று நேற்று நாம் செய்துவருகிற காரியமல்ல. பிரச்சார முறையில் 20, 25 ஆண்டு காலமாகவே நாம் இந்தியை எதிர்த்து வந்திருக்கிறோம்.

நான் காங்கிரசிலே இருந்த காலத்தில் காங்கிரசின் கொள்கைக்கேற்ப இந்தியை ஆதரித்துவந்தேன். மோதிலால் நேருவைக்கொண்டு ஈரோட்டில் ஒரு இந்திப் பிரச்சாரப் பள்ளியை என்னுடைய சொந்த இடத்தில் சொந்த செலவில் திறந்து 20, 30 மாணவர்களுக்கு இலவசமாகச் சாப்பாடு போட்டு, இந்தியைக் கற்றுக்கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்தேன்.

நான் காங்கிரஸ் ஸ்தாபனமானது பார்ப்பன ஆதிக்கத்துக்காகவே-பார்ப்பன நலத்துக்காகவே நடைபெற்றுவருகிற ஒரு ஸ்தாபனம் ஆகும் என்று கண்டு, அந்த ஸ்தாபனத்தில் இருக்கிற பெரும்பாலோர் சுயநலத்துக்காகவும் தங்கள் காரியானுகூலத்துக்காகவும் இருக்கிறார்கள்; இன்னும் சிலர் காங்கிரஸ் உள்ளபடியே சுயராஜ்யத்துக்காகப் பாடுபடுகிறது என்கிற கருத்துக்கொண்டு காங்கிரசை உண்மையிலேயே தேச ஸ்தாபனம் என்பதாக முட்டாள்தனமாகக் கருதிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதாகக் கண்டு, இத்தனை நாளாக அப்படிப்பட்ட ஒரு முட்டாளாக நாம் இருந்த தன்மைக்காக வருந்தி, நம்முடைய நாட்டுக்கு, நம்முடைய மக்கள் சமுதாயத்துக்கு என்று நாம் ஏதாவது பணிபுரியவேண்டும் என்கிற கருத்தில் காங்கிரசைவிட்டு வெளியேறிய காலம் முதற்கொண்டு, இந்த இந்தி எதிர்ப்பு என்பதை சுயமரியாதை இயக்கத்தின் ஒரு கொள்கையாகக் கொண்டு, பணியாற்றி வருகிறேன். அதுவும் இந்த இந்திமொழி என்பதன் மூலம் பார்ப்பனர்கள் நம்மை நிரந்தர அடிமைகளாக-பச்சைச் சூத்திரர்களாக ஆக்கவே கொண்டுவருகிறார்கள்; இந்திமொழியை இந்த நாட்டில் செயல்படுத்துகிறார்கள் என்று நன்றாக உணர்ந்து எதிர்த்து வந்திருக்கிறேன். எதற்குச் சொல்கிறேன் என்றால், காங்கிரஸ் ஆட்சியில் இருப்பதின் காரணமாக அத்தகைய ஆட்சிக்கு விரோதமாக இன்று திடீரென்று நினைத்துக் கொண்டு செய்கிற காரியம் அல்ல; 20, 25 ஆண்டு காலமாகவே பிரச்சார முறையில் செய்து வந்த காரியத்தையே இன்று செயல்முறையில் செய்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான். அதுவும் காங்கிரஸ்காரர்கள் சுயராஜ்யம் வரும் என்பதாகக் கனாக்கூடக் காணாத காலத்திலிருந்தே எதிர்த்தேன்.

1942-ம் வருட ஆகஸ்டுக்குப் பின்னர்தான் காங்கிரஸ்காரர்களுக்குச் சுயராஜ்யம் வரவேண்டும் என்கிற நினைப்புத் தோன்றியது; அதற்கு முன்பு அந்த நினைப்பே இல்லை. ஆகஸ்டு கிளர்ச்சிக்குக் கொஞ்ச நாள் முந்திகூட காந்தியார் கூறினார்: 'சுயராஜ்யத்தின் நிழலைத்தான் நாங்கள் கேட்கிறோம். அதாவது குடியேற்றநாட்டு அந்தஸ்தைத்தான் கேட்கிறோம்' என்பதாகச் சொன்னார். அதற்கு முன் காங்கிரஸ் எப்படி இருந்தது என்றால் ஏதோ வெள்ளைக்காரர்களுக்குக் கொடுக்கிற உத்தியோகம் எங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று உத்தியோகம் கேட்பதாகத்தான் இருந்தது. இன்னும் சொல்லப் போனால், அப்பொழுது காங்கிரசு மாநாட்டில் முதலாவதாக ராஜவிசுவாசத் தீர்மானம்தான் போடுவார்கள்; பிரிட்டிஷ் சக்கரவர்த்தி நன்றாக இருக்கவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கும் தீர்மானமும் போடுவார்கள்; அத்தோடு, என்றென்றைக்கும் நிரந்தரமாக பிரிட்டிஷ் ராஜாவே எங்களுக்கு ராஜாவாக இருக்கவேண்டும் என்பதாகக் கடவுளை

1686—229

படிப்பகம்

www.padippakam.com



வேண்டித் தீர்மானங்கள் போடுவார்கள்; இவ்வளவு தீர்மானங்களையும் போட்டுவிட்டு உத்தியோகத்தில் எங்களுக்கும் இடம்கொடுங்கள் என்று கேட்பார்கள்; இந்தப்படிதான் காங்கிரஸ் முன்னெல்லாம் நடைபெற்று வந்திருக்கிறது. அப்புறந்தான் படிப்படியாக வந்து, 42-லே காந்தியார் 'Quit India' என்று சொன்னார். நாம் இந்த இந்தியை 42-க்கு முன்பிருந்தே – 1926 முதற்கொண்டே எதிர்த்து வந்திருக்கிறோம். சென்றமுறை தோழர் ஆச்சாரியார் அவர்கள் பதவியில் இருந்தபோது இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு வந்தபோது நாங்கள் அதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தோம். அதற்காகப் பலபேர் சிறைக்குச் சென்றார்கள். எனக்கும் 2 வருடக் கடுங்காவல் தண்டனையும் 2000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு, என்னுடைய காரை ஏலத்தில் விட்டும் ஆன காரியங்கள் எல்லாம் நடந்தும் கடைசியில் கட்டாய இந்தி ஒழிந்தது.

தோழர்களே! இன்று இந்தி எந்த அளவுக்கு இந்த நாட்டில் வந்துவிட்டது என்றால் தபால் முத்திரைகளில் இங்கிலீஷில் ஒரு முத்திரையும் இந்தியில் ஒரு முத்திரையுமாகப் போடப்படுகிறது. இங்கிலீஷ் முத்திரை இருப்பதால் இப்போது ஏதோ ஊர் பெயரை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. இன்னும் கொஞ்சநாளில் இங்கிலீஷில் அடிப்பதை நிறுத்தி விட்டு இந்தியில் மாத்திரமே போட்டுவிடுவார்கள். அப்புறம் நம்முடைய நிலைமை என்ன ஆவது என்று யோசித்துப் பாருங்கள். இன்னும் இந்தி தெரிந்தால்தான் உத்தியோகம் என்கிறார்கள். வேலைக்குப் பொறுக்கும் பேட்டியின்போது கேள்வியோடு கேள்வியாக 'உனக்கு இந்தி தெரியுமா?' என்று கேட்கிறார்கள். இந்தி தெரியாது என்றால் வெளிப் படையாக இந்தி தெரியாததால் வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லாமல் இதை உள்காரணமாய் வைத்துக்கொண்டு, வேறு ஏதாவது காரணங்காட்டித் தள்ளிவிடு கிறார்கள்.

மற்றும், சமீபத்தில் கல்வி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் பரீட்சைக்கும் இந்தி பாடமாக இருக்கும் என்பதாக ஒரு உத்திரவு கொண்டுவந்தார். நாம் சத்தம் போட்டவுடன் இல்லை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். காமராஜர் எலக்ஷனைக் கருதி இந்தப்படி மாற்றிக்கொண்டார்களோ என்னவோ தெரியவில்லை. இந்திக்கு இந்த நாட்டில் இப்போது ஆதிக்கம் வரவர அதிகமாக வளர்ந்துகொண்டே வருகிறது. இன்னும் கொஞ்சநாளில் இந்தி தெரியாவிட்டால் உத்தியோகம் இல்லை என்கின்ற நிலைமை வந்துதான் தீரும் என்பதோடு நாளைக்கு வியாபாரிகள் எல்லாம் இந்தியிலேயே கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவேதான், நம்மைப் பேராபத்துக்கு ஆளாக்குகிற—நம் பின் சந்ததிகளை வாழாவெட்டிகளாக ஆக்குகிற இந்த இந்தியை நாம் இந்த நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டியாக வேண்டும் என்கிறோம். இந்தக் கருத்தில் மூன்றாவது முறையாக நாம் இந்தி எழுத்துக்களை அழித்திருக்கிறோம். இரண்டு வருஷ காலமாக ஆச்சாரியார் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் அவர் விட்டுவிட்டார். தோழர் காமராஜர் அவர்களும் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்குச் சம்பந்தப்பட்ட மத்திய சர்க்கார் அமைச்சர், ரயில்வே துணைமந்திரி அளகேசன் அவர்களும் 'இதனால் ஒன்றும் கஷ்டம் இல்லை; அவர்கள் அழித்தால் திரும்பி நாங்கள் எழுதிவிடுகிறோம்' என்பதாகச் சொல்லி இருக்கிறார். இப்படியே நாம் அழிப்பதும் திருப்பி அவர்கள் எழுதுவதுமாக விளையாட்டுப்போல நடந்துகொண்டிருக்க நாமும் விட்டுக்கொண்டிருக்க முடியாது. இந்தத் தடவையும் திருப்பி எழுதுவார்களேயானால் அடுத்த ஆண்டு நாம் வேறு ஏதாவது மாதிரியாக, அதாவது இன்னும் கொஞ்சம் முன்னாலே போவதான தன்மையிலே கிளர்ச்சியை நடத்தவேண்டி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[தஞ்சாவூரில், 8-3-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-8-1954]



## 9. இந்தியும்–நானும்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்தி விளைவிக்கும் கேட்டை முன்னரே அறிந்து சொல்லியுள்ளேன். நான் காங்கிரசை விட்டு விலகிய 1925ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டில் தமிழர்களின் இலட்சியங்களைப் பற்றிப் பிரச்சாரம் செய்தேன். அப்பொழுதிலிருந்தே இந்தி நமக்குக் கேட்டை விளைவிக்கும்பொருட்டே புகுத்தப்படுகிறது என்பதாகக் 'குடி அரசில்' எழுதி வந்திருக்கிறேன். அப்போது, இப்போது உள்ளதைப்போன்று சுயராஜ்ய அரசாங்கமில்லை. வெள்ளைக்கார அரசாங்கம் இருந்த அப்பொழுதே, இந்தியைக் காங்கிரஸ் திட்டத்தில் ஒன்றாகப் பிரச்சாரம் செய்தனர். அப்போது அதற்குப் பெயர் 'தேசிய மொழி' என்று சொல்லிவந்தனர்.

ஏனெனில், அப்பொழுது வடமொழியின்மீது பொது மக்களுக்கு வெறுப்புண்டாகும் நிலை ஏற்பட்டதேயாகும். ஜஸ்டிஸ் கட்சியினால் பார்ப்பன ஆதிக்கம் குன்றி வந்த காலம் அது. சமுதாயத் துறையில் பார்ப்பனர்களிடம் நம் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு எப்படியும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை அடக்க வேண்டும் என்று முயசித்த ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக் காலம் அது. சமஸ்கிருதத்தினிடம் மக்களுக்கு மனக் கசப்பு ஏற்பட்டு, அது 'பார்ப்பன மொழி', 'வடநாட்டவரின் மொழி' என்றெல்லாம் உணர்ச்சியோடு கூடி வெறுத்தனர். இதனால் பார்ப்பனர்கள் சமஸ்கிருதத்தைத் தங்களின் சூழ்ச்சியின்படி புகுத்துவதற்கு இல்லாமற் போய் விட்டது.

என்றாலும், அவர்கள் ஒரே கல்லில் இரண்டு பட்சிகளை அடித்ததுபோன்று, மக்களுக்கு சமஸ்கிருதத்தின் மீதுள்ள வெறுப்பு உணர்ச்சியை உணர்ந்து கொண்டு வெகு தந்திரமாக இந்தியைப் புகுத்த முற்பட்டனர். இந்தி, இந்தியாவில் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்றும்; எனவே இதையே மற்ற சிறுபான்மை மக்கள் கற்றுணர்ந்து கொள்வது சுலபமாகும் என்றெல்லாம் காரணம் கூறினர். இதனால் நம் பிள்ளைகளைக் கல்வியில் தேறாமல் செய்வதும் சுலபமாகும் என்று பார்ப்பனர் நினைத்துச் செய்தனர்.

இதற்குக் காந்தியாரும் உடன்பட வேண்டியதாயிற்று. அவர் எவ்வளவு பெரிய மனிதரானாலும், அறிவாளியானாலும், பொதுநலத் தொண்டரானாலும்–அவர் வட நாட்டவர் என்பது மட்டும் உறுதி. அவருக்குத் தன்னாட்டைத் தவிர, தென்னாட்டின் நிலைமையை எப்படி உணரமுடியும்? அப்படித் தென்னாட்டின் நிலைமையை உணர வேண்டுமானால் ஆச்சாரியார், சத்தியமூர்த்தி போன்றவர்களால்தான் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல் 'இந்து', 'சுதேசமித்திரன்', 'தினமணி', 'எக்ஸ்பிரஸ்' போன்ற பார்ப்பனரின், வடநாட்டவர்களின் பத்திரிகைகள் மூலம்தான் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் மூலமும் இப் பத்திரிகைகள் மூலமும் நம்முடைய கருத்துக்கள் வெளியாவதற்கில்லை என்பது தெரிந்ததே. எனவே, காந்தியாரும் தென்னாட்டவர்களின் கருத்தை உணர முடியாது போய்விட்டார்.

மேலும், பார்ப்பனர்கள் காந்தியாரைப் பிடித்ததற்குக் காரணமே தமிழர்களையும், தமிழ்நாட்டையும் பார்ப்பனர்களின் ஆட்சிக்கு உட்படுத்தவேண்டும் என்பதற்கேயாம்.

இது அவர்களின் இரகசியத் திட்டம் என்றாலும் எனக்குத் தெரியவேண்டிய காரணம் என்னவென்று கேட்கலாம். நான் அப்பொழுது பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளையாக இருந்தேன். அவர்களின் அந்தரங்க விஷயங்கள் அத்தனையும் தெரிந்துகொள்ளும்படியான முக்கியஸ்தனாகவும், காங்கிரஸில் தலைவனாகவும் இருந்தவன். காங்கிரஸின் அடிப்படைத் தந்திரங்கள் அனைத்தும் எனக்குத் தெரியாமல் இருக்க முடியாது. காங்கிரஸின் திட்டங்களை என்னால் நிறைவேற்றும்படியாகவும் இருந்தது. அத் திட்டங்களில் ஒன்றாக இந்தியைப் பரவச் செய்யும் விஷயத்தில் மிகவும் அக்கறையோடு முயற்சி எடுத்தவன் நான். அப்போது தனிப்பட்டவர்களால் பொருள் சேர்க்கப்பட்டு, அதன் மூலம் இந்திப் பிரச்சார

படிப்பகம்

www.padippakam.com



ஸ்தாபனங்களை உண்டாக்கி, இந்தி கற்றுக்கொடுக்கப்பட்டது. ஆனால், காங்கிரஸின் பேரால், காங்கிரஸின் செலவில் முதன் முதலில் இந்தியை இங்குக் கற்றுக்கொடுக்கும்படி செய்தவன் நான். மேலும், என்னுடைய சொந்தச் செலவில் இந்தியைப் பரவச் செய்தேன்.

1922-ஆம் ஆண்டு பிற்பகுதியில் எங்கள் ஊருக்கு வடநாட்டில் இருந்து டாக்டர் அன்சாரி, விட்டல்பாய் பட்டேல், பண்டித மோதிலால் நேரு முதலிய காங்கிரஸ் பிரமுகர்கள் விஜயம் செய்தார்கள். அப்போது இங்கிருந்த காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே சட்டசபை செல்ல விரும்புவோர்கள் என்றும் சட்டசபை செல்ல விரும்பாதவர்கள் என்றும் இரு பிரிவுகள் இருந்தன. இவற்றை ஒருவழிப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அதன் சம்பந்தமாக முடிவு செய்யும்பொருட்டு, மேற்கண்ட வடநாட்டவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் எங்கள் இல்லத்தில்தான் வந்து தங்கினர். நான் அதுசமயம் அவர்கள் என் வீட்டிற்கு வந்து சென்ற ஞாபகார்த்தமாக ஏதாவது புதிய காரியம் ஒன்றை ஆரம்பித்து வைக்கலாம் என்று ஆசைப்பட்டேன்.

அப்போது எனக்கு எல்லாவற்றையும்விட இந்தி சம்பந்தமாகத்தான் ஆவல் ஏற்பட்டு 'இந்தியை இன்று முதல் சில பிள்ளைகளுக்கு நம் செலவிலேயே கற்றுக்கொடுக்கலாம்' என்று தீர்மானித்தேன்.

அன்றுமுதல் 30 பேர்கள் கொண்ட ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியருக்கும் 15 பிள்ளைகளுக்கும் காங்கிரஸின் செலவும்; 15 பிள்ளைகளுக்கு, உணவு, தங்கும் வசதிகளெல்லாம் என்னுடைய செலவும் ஆகும். என் தகப்பனாரின் சமாதிக்குப் பக்கத்தில் உள்ள கட்டிடத்திலேயே அப் பள்ளி நிறுவப்பட்டதுடன், அந்தச் சமாதி டிரஸ்ட் செலவிலேயே 15 பேருக்குச் சாப்பாடு போட்டு வந்தேன். இப்படி 2 வருடங்கள்வரை அதை நடத்தினேன். இது மட்டுமின்றி போகிற இடங்கள்தோறும் இந்தியைப்பற்றிப் பெருமையாக ஏதேதோ பேசுவதுண்டு. இப்படி இந்தியைப்பற்றிக் கவலைகொண்டு அதை நம் நாட்டில் கொண்டு வந்து பரவச் செய்தவர்களில் நானும் ஒருவன்.

எனவேதான், நான் வெள்ளையன் இந்நாட்டை விட்டுப் போகுமுன்னமேயே—இந் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைக்கும் என்ற எண்ணம் கனவிலும் தோன்றாத காலத்திலேயே நான் இந்தியை ஒழிக்கவேண்டும் என்று கூறினேன்.

என் எண்ணத்திற்கு மாறாகவே, இந்தியை வட நாட்டார் இங்கு புகுத்தி, அவர்களின் நாகரிகங்களைப் புகுத்த முயற்சித்தனர். இந்தியை அரசியல் மொழியாகவும் கொண்டுவரச் சட்டமியற்றினர்.

[காஞ்சியில், 30-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 1-8-1955]

தோழர்களே!

இந்தி படித்தால் உத்தியோகம் என்றும், தொழில் துறைகளில் எல்லாம் இந்தியிலேயே சொல்லிக்கொடுப்பதுமாகச் செய்கின்றனர். இந்தியை இஷ்டமில்லாதவர்களிடம் புகுத்துவதில்லை என்றும் கூறிக்கொண்டே, செயலில் தங்கள் சூழ்ச்சியான காரியத்தைக் காட்டிக் கொண்டு வருகின்றனர்.

ஆச்சாரியார் முதன்மந்திரியாகி—ஒரு சர்வாதிகாரத் தலைவனுக்குள்ள வசதிகளை எல்லாம் அடைந்து—தன்னுடைய சுண்டுவிரல் ஆட்டத்திற்கு ஏற்றபடி ஆடும் அங்கத்தினர்களைக் கொண்ட சட்டசபையை அமைத்துக்கொண்டு, அதன் பிறகு துணிவாக யாரும், எதுவும் கூற, மறுக்க முடியாது என்ற அதிகார ஆணவத்தால் அவருடைய வாக்கிலிருந்து, 'இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும்' என்று கூறினார்.

அப்போது நாங்கள் செய்த கிளர்ச்சியில் 1700 பேர்கள் வரை சிறை சென்றோம். இரண்டு நண்பர்கள் தாளமுத்து–நடராசன் என்பவர்கள் சிறையிலேயே உயிரும் விட்டனர்.



எனக்குக் கடுமையான தண்டனையும் விதித்தார். குற்றத்தை இரண்டு செக்ஷன்களாகப் பிரித்து, ஒவ்வொரு செக்ஷனுக்கும் 1000 ரூபாய் அபராதத்துடன் ஒரு வருடம் கடின காவல்; ஆக இரண்டு செக்ஷன்களுக்கும் மூன்று வருடங்கள் சிறையிலிருக்க வேண்டும் என்பதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

என்னைப் பல்லாரியின் கடும் வெயில் உடைய உஷ்ணமான இடமாகப் பார்த்து அங்கே சிறை வைத்தார். அதை விட்டுப் பல இடங்களுக்கும் என்னைப் பந்தாடுவதுபோல் மாற்றி வைத்து, இறுதியில் எனக்கேற்பட்ட வயிற்றுக் கோளாறைக் கண்டு, காலராவோ என்று பயந்து வெளியில் விட்டு விட்டனர்.

அடுத்து நண்பர் ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆட்சி வரவும், அவர் எனக்கு உற்ற நண்பர் என்ற முறையில் என்னிடம் நேரிலேயே, 'இந்தக் கலவரம் எல்லாம் நமக்குள்ளேயே எதற்காக? இந்திதான் கட்டாயப் படுத்துவதாக இல்லையே' என்றெல்லாம் சமாதானம் சொன்னார்.

அப்போது அரசாங்கம் நடத்திய பத்திரிகை ஒன்றில், கல்வி மந்திரியாக இருந்த அவினாசிலிங்கம் செட்டியார், இந்தியைப்பற்றி எழுதியதில் அது கட்டாயப் பாடமாக்கப்படும் என்பதாக எழுதி இருந்த பத்திரிகையைக் கையில் எடுத்துக் காட்டினேன்: உடனே ரெட்டியார் அவர்கள், 'இதென்ன? இந்தச் செட்டியார் தொல்லை பெரும் வம்பாக இருக்கிறதே' என்று பேசிவிட்டு, என்னிடம், 'நீ இருக்கவேண்டிய இடத்தில் நான் இருக்கிறேன்; எனக்காகவாவது நீ பேசாதிருக்கக் கூடாதா? பிறகு ஏதாவது ஒரு முடிவுக்கு வருவோம்' என்றார்.

நான் அதற்கு, 'நானும் இப்படி இல்லாவிட்டால், உங்களைப் பார்ப்பான் இந்த இடத்திற்கு வரும் சந்தர்ப்பத்தையே ஒழித்திருப்பான்; நானும் இந்த இடத்திற்கு வரமுடியாது. எனவே, இப்போதே ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும்' என்றேன். 'இப்போது முடியாது' என்றார். நானும், 'இதைப்பற்றிச் சும்மா இருக்க முடியுமா? ஜனங்களுக்கு ஏதாவது சமாதானம் செய்யாவிட்டால் சும்மா இருக்கமாட்டார்கள்' என்றேன். 'அப்படியானால் சட்டப்படி கடமையைச் செய்வேன்; அதற்காகக் கவலை கொள்ளக் கூடாது' என்றார். நான் அதற்கு, 'எனக்குக் கவலை இல்லை; நான் என் கடமையைச் செய்வதில் தாங்கள் கவலை கொள்ளாதிருந்தால் போதும்' என்று கூறி வந்துவிட்டேன்.

அப்போது நடத்திய கிளர்ச்சியின்பொழுது ஜெயிலில் இடமில்லாமல் இருந்தது. எங்களைச் சிறையிலடைக்க முடியாமற் போகவே கிளர்ச்சி செய்த நம் தோழர்களையும், தாய்மார்களையும்—கர்ப்பவதிகள் முதற் கொண்டு, லாரிகளில் ஏற்றி 20–30 மைல்களுக்கப்பால் கொண்டுபோய் விட்டுவந்தனர்.

இப்படியெல்லாம் நடத்தி, ஆச்சாரியார் காலத்தில் புகை வண்டி நிலையங்களின் பெயர்ப் பலகையிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்தோம். இதைப்பற்றி இருவரும் நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை. ஏனெனில், டில்லி சட்டசபையில் இதற்குக் காரணங் கூறிய இரயில்வே மந்திரி, 'இதனால் உண்டாகும் செலவு 2200 ரூபாய்தான், மண்ணெண்ணெய் வாங்குவதற்குச் செலவாகிறது; நடவடிக்கை எடுத்தால் அதிகம் செலவாகும்' என்று கூறினாராம்.

எனவே, சென்ற ஆண்டிலேயே தஞ்சையில் இக்கிளர்ச்சியை நடத்தியவுடன் கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில், இனி வேறு முறையில் இக் கிளர்ச்சியைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்துக் கூறினேன்.

[காஞ்சியில், 30-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 2-8-1955]

படிப்பகம்

www.padippakam.com



# 4. பிற கிளர்ச்சிகள்

## 1. கணபதி உருவப் பொம்மை உடைப்பு

27–5–1953 புதன்கிழமை மாலை 6–30 மணிக்கு கணபதி உருவப் பொம்மையைத் தூள் தூளாக்கி மண்ணோடு மண்ணாய்க் கலக்கிவிடுங்கள்!

திராவிடத் தோழர்களே! இந்தியாவில் 'வெள்ளைக்காரச் சக்கரவர்த்தி' ஆட்சி ஒழிந்து, பார்ப்பன ஆதிக்க 'ஜனநாயக ஆட்சி' ஏற்பட்டதிலிருந்து—இன்று, இந்த நேரம் வரை ஒவ்வொரு மாத்திரை நேரமும் வருணாசிரம தர்ம ஆட்சி வளர்ந்து, வளம்பெற்று வருகிறது.

வருணாசிரம தர்மத்தைப் புகுத்த—பார்ப்பன ஆதிக்க ஏகபோக 'ஜனநாயக' ஆட்சியானது ஆட்சிமூலம் பல துறைகளில் பல கொடுமையான முறைகளைக் கையாண்டு வந்தாலும், திராவிடநாட்டில்–தமிழ்நாட்டில்–தென் இந்தியாவில்–சென்னை இராஜ்யத்தில் 'வெள்ளைச் சக்கரவர்த்தி' காலத்தில் ஒரு அளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கிற திராவிடர்களை மனுகாலச் சூத்திரர் ஆக்கத் திட்டம் கொண்டு உத்தியோகத் துறையிலும், கல்வித் துறையிலும் திட்டம் வகுத்துச் செயலில் இறங்கிவிட்டது.

1. 'சூத்திரர்'களுக்கு அரசாங்க உத்தியோகத்தில் இருந்த 'சூத்திரர்' வகுப்பு உரிமை அரசியல் சட்டத்தின் மூலம் உறுதியாகி அமுலுக்கு வந்துவிட்டது. இதிலிருந்து 'சூத்திரர்கள்' (தமிழர்கள்) உத்தியோக உரிமை அற்றவர்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

2. சூத்திரர்களுக்குக் கல்வித் துறையில் ஒரு அளவுக்கு பெரிய கிளர்ச்சி மீது சிறிய உரிமை இருந்தது; அதுவும் ஆச்சாரியார் ஆட்சியில் அழிக்கப்பட்டுவிட்டது.

3. கல்வித் துறையில், மேல் வகுப்பு—அதாவது உத்தியோகத்திற்குத் தகுதியாகும் படிப்புதான் 'சூத்திரர்'களுக்கு உரிமையில்லாமல் இருக்கும்படி செய்யப்பட்டுவிட்டது என்றாலும், பொதுக் கல்வி என்பதுகூடச் சரிவரப் பெறுவதற்கில்லாமல், அடிப்படைக் கல்வி என்னும் பேரால் தகப்பன் தொழிலை—பரம்பரைத் தொழிலைப் படிக்க வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், எந்த நாட்டிலும் இல்லாத இந்த அதிசய முறையானது, நாட்டு நலனுக்காகவோ, கல்வி நலனுக்காகவோ, ஆட்சி நலனுக்காகவோ அல்லது மக்கள் ஒழுக்க நலனுக்காகவோ அல்லாமல் பார்ப்பன நலனுக்கும், சர்வ ஆதிக்க நலனுக்கும் ஆகவுமே ஏற்படுத்தப்பட்டு, இருந்துவருகிற வருணாசிரம தர்ம புதுப்பிப்புக்காகவே (Reviving-க்காகவே) இந்த 'ஜனநாயக ஆட்சி' என்பதில் செய்யப்பட்டு வருகிறது என்பதைக் காட்டுவதற்கு ஆகவேயாகும்.

இன்று இந்தத் திராவிட (தமிழ்) நாட்டுத் திராவிட மக்கள் இன்று தங்கள் நாட்டிலேயே, தாங்கள் 100–க்கு 90–க்கு மேற்பட்டு ஓட்டுரிமை பெற்றிருந்தும், ஜனநாயக ஆட்சியிலேயே இந்த இழிநிலை; அதாவது சூத்திர, பஞ்சமநிலை அடைந்திருப்பதை ஒழித்துக் கொள்ள வேண்டுமானால், இதை மாற்றி—இந்து வருணாசிரம முறையை அழித்து ஒழித்தாலொழிய வேறு எந்தக் காரணத்தாலும், யாராலும் முடியாது என்று நான் மனப்பூர்வமாக—சித்த சுத்தியாக நம்புவதால், வருணாசிரம முறையை அழிக்க முற்படும் முறையில் முன்னுரையாக இதைக் கூறுகிறேன்.

சமீப காலமாகவே பொதுமக்கள் உணரலாம்: என்னவெனில், ஆட்சியின் வேலையும் அதிகாரிகளின் வேலையும், சவுண்டிப் பார்ப்பனர் முதல் சங்கராச்சாரியார் பார்ப்பனர் வரை சர்வ பார்ப்பனர்களும் வருணாசிரம வேத சாஸ்திர புராண இதிகாசங்களைப் பிரச்சாரம் செய்வதும், இந்தியப் பிரசிடெண்டு, இந்தியப் பிரதமர், மற்றும் இராஜ்ய



கவர்னர்கள், இராஜ்யப் பிரதமர்கள் முதல் யாரும் பார்ப்பனர்களாகவே ஆகிக்கொண்டு, மேற்கண்ட வேத, சாஸ்திர, புராண முதலிய பிரச்சாரங்களும் செய்துவருவது என்றால், இதில் ஏதாவது சூழ்ச்சி, உட்கருத்து இல்லாமல் இருக்க முடியுமா?

மற்றும் இவை மாத்திரமல்லாமல் நமது சூத்திர மக்களில் செல்வவான், கல்விமான், அரசியல் விளம்பரம், பதவி பெற்ற உலக விளம்பர சீமான்கள் முதல் எச்சிக்கலைச் செல்வவான்கள் வரையில்—100–க்கு ஒருவருக்குக்கூட கவலையோ, மான உணர்ச்சியோ இல்லையே என்று நாம் காணும்போது—75 ஆண்டுகள் வாழ்ந்து அண்மையில் சாகப் போகிற நான், 35 ஆண்டுகளாக வீடு, வாசல், செல்வம், தொழில், மனைவி, மக்களைத் துறந்து சந்நியாசியாக நம் திராவிட மக்களுக்கு இந்தச் சூத்திரப் பட்டம் ஒழிய வேண்டுமென்றே பாடுபட்டு வந்த—வருகிற நான், ஆண்டு ஒன்றுக்கு 30 ஆயிரம், 40 ஆயிரம், ஏன்–50 ஆயிரம் ரூபாய் கூட வரும்படி உள்ளதான எனது எஸ்டேட்டைப் பாழடைய விட்டுவிட்டு, பரதேசியாய்ப் பிரயாணங்களுக்கும், பிரச்சாரத்திற்கும் பொதுமக்களிடம் செலவு பெற்று வாழ்ந்துவரும் நான்—இதற்கு, இந்த வருணாசிரம தர்மமுறை ஒழிப்புக்கு ஏதாவதொரு காரியம் செய்யாமல் என் உயிர் போக, எப்படி என்னால் விட்டுக் கொண்டிருக்க முடியும்?

ஆச்சாரியார் முதல்மந்திரி பதவிக்கு வந்தது குறித்து உண்மையில் மகிழ்ச்சி அடைந்தவன் நான். காரணம், பிரகாசம்—கம்யூனிஸ்ட்—பொறுப்பற்ற 'உதிரிகள்' என்பவர்கள் ஆட்சியைவிட, நமக்கு நன்றாகக் கண்டித்து, எதிர்த்துப் போர் துவக்க வசதி இருக்கக்கூடிய ஒரு ஆட்சி, அதுவும் சொந்த வாழ்வில் கண்ணியமும் உலக அனுபவ அறிவும் உள்ளவர் ஆட்சிக்கு வருவது மேல் என்று கருதி ஆதரித்தேன்.

இதற்குக் காரணம், தனிப்பட்டவர்கள் சொந்த முறையில் நடந்து கொண்டிருக்கிற முறை பற்றிய அனுபவம் எனக்குச் சிறிது இருந்ததேயாகும். ஆச்சாரியாரும் அதுபோலவே ஆட்சிக்கு—கவர்மெண்டுக்குக் கவுரவம் இருக்கிற மாதிரியிலேயே பெரிதும் நடந்துவருகிறார் என்றாலும்,

தனது வகுப்புக்கு ஒரு வகுப்பின் உத்தமபுத்திரன் எப்படி நடந்து கொள்வானோ அதுபோல்—'தேவர்களுக்கு இராமன் நடந்துகொண்டது' போல்தான் நடந்துகொண்டிருக்கிறார்.

நம்மில் துரோகிகள், அனுமார்கள், விபீஷணர்கள் இருந்தால் அதற்கு நான் என்ன செய்யமுடியும்?

ஆனதால், நான் என் சொந்தப் பொறுப்பில் முன்பு பலதடவைகள் கூறி இருப்பது போல, வருணாசிரம வியாதியை ஒழிக்கக் கடைசிச் சிகிச்சையாக,

நாளது மாதம் 27-ந்தேதி புதன்கிழமை தமிழ்நாடெங்கும் புத்தர் விழா கொண்டாடி, மாலை 6 மணிக்குப் பொதுக்கூட்டத்தில் வருணாசிரம வாதிகள் பெரும்பாலோருக்கும் 'மூலதேவன்–தெய்வம்' என்று கருதப்படுகிறதற்கு என்று உருவாக்கி இருக்கும் 'செயற்கை உருவ கணபதி அறிகுறியை' மக்கள் உள்ளத்தில் அழித்துவிட வேண்டும் என்பதாகப் பொது மக்களை—அதாவது, மனு வருணாசிரம தர்மத்தை வெறுக்கிற பொது மக்களையும்—திராவிடர் கழகத் தோழர்களை, சிறப்பாக இளைஞர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

அன்று 'பிள்ளையார் அல்லது கணபதி உருவம்' என்பதை—மண்ணால் செய்த பொம்மை உருவத்தையே கொள்ளுங்கள். சர்க்கார் 144 போட்டால் உருவத்தை அழிப்பதை நிறுத்திவிடுங்கள். அவரவர்கள் கழகக் காரியாலயத்தில் அல்லது அவரவர்கள் வீட்டில் உடைத்து மகிழ்ச்சி கொண்டாடுங்கள்! நரகாசூரனைக் கொன்றதாகப் பார்ப்பனர்களும், பார்ப்பன அடிமைகளும் எப்படிக் கொண்டாடுகிறார்களோ அதுபோல், உருவத்தை உடைத்துக் கொண்டாடுங்கள்!

படிப்பகம்

www.padippakam.com



புத்தர் பிரான், வருணாசிரம தர்மத்தையோ இந்த வருணாசிரம தேவர்களையோ ஏற்றுக்கொண்டவர் அல்லர்; அவற்றை ஒழிப்பதே புத்தர் மதத்தின் உட்கருத்து; முதல் கருத்து!

இந்தத் தேவர்களை, தெய்வங்களை நாம் வணங்குவது—ஏற்பது—மிகுதியும் முட்டாள் தனமும் மானமற்ற தன்மையுமாகும்.

நமக்குக் கடவுள் என்பதெல்லாம், நம் நடத்தையில்—சத்தியம், நாணயம், தயவு, உபகாரஞ்செய்தல், துரோகம் செய்யாமலிருத்தல் ஆகியவைகளாகும்.

['விடுதலை'—தலையங்கம்— 7-5-1953]

## 2. ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்பு

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

ஆச்சாரியார் கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாடு என்பதாக இரண்டாவது நாள் (24-1-'54) மாநாடு கூட்டினோம்.

அம் மாநாட்டின் தீர்மானமாக ஒரே ஒரு தீர்மானம் மட்டுமே நிறைவேற்றியிருக் கிறோம். அதாவது,

'ஆச்சாரியார் கல்வித் திட்டமாகிய, புதிய 3 மணி நேரக் கல்வித் திட்டத்தை மாற்றி பழையபடியே செய்ய வேண்டும் என்று சென்னை அரசாங்க மந்திரி சபைக்கு 3 மாத வாய்தா கண்டு ஒரு வேண்டுகோள் விடுவது என்றும்; 3 மாத வாக்கில் அரசாங்கம் இதற்குத் தயவுகாட்டிக் கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்காதபட்சத்தில் ஒரு 'ஸ்பெஷல் மாநாடு' கூட்டி அதில் தீவிர நேரிடை எதிர்ப்பு நடவடிக்கை எடுத்து மந்திரி சபையைப் பணியச் செய்ய வேண்டும் என்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது'—என்று.

தோழர்களே! இந்தக் கல்வித் திட்டம் எவ்வளவு யோக்கியமற்றது! இந்தப் பார்ப்பனர்கள் நம்மை எவ்வளவு தூரம் கொடுமைப்படுத்துகிறார்கள்; அடக்கி மிதித்து நசுக்குகிறார்கள்' என்பதற்கு இந்தக் கல்வித் திட்டமே போதுமானது என்பது விளங்கும்; எவ்வளவு தைரியம்! இந்தக் காலத்தில் இவ்வளவு தைரியமாக நம்மைக் கொடுமைப்படுத்து கிறார்களே!

பண்ணாத கொடுமைகளை, அக்கிரமங்களையெல்லாம் செய்கிறார்கள். இவ்வளவும் போதாதென்று நமது மக்களின் கண்ணையும் சேர்த்துக் குத்துகிறதா? ஏன் இந்த அக்கிரமம்?' என்றால், 'பொறு, பொறு! இந்தத் திட்டத்தை 'டவுனு'க்கும் கொண்டு வருகிறேன்' என்று சொல்லுகிறார்கள்! இந்த நாட்டில் உழைக்கிறவர்கள் யார்? நம்ம வர்கள்தானே! பாடுபட்டு, கஷ்டப்பட்டு எல்லாவற்றையும் செய்கிறோம்; உடலால் பாடு படுகிற வேலைகள் அத்தனையும் செய்கிறவர்கள் திராவிட மக்கள்தானே! இன்னும் சர்க்காருக்கு வரி கொடுப்பது நம் மக்கள்—கிராமத்து மக்கள்தானே கொடுக்கிறார்கள்? இப்படியிருக்கும்போது 'உழைக்கிற நமது மக்கள் படிக்கக்கூடாது; பாடுபடாத சோம் பேறிக் கூட்டம்தான் படிக்க வேண்டும்; உத்தியோகம் பார்க்கவேண்டும்' என்று திட்டம் கொண்டுவருவது என்றால் என்ன நியாயம்? இதை எப்படிச் சகித்துக்கொண்டிருப்பது? இவர்களைச் சும்மா விட்டுவைத்திருப்பதால்தானே, இப்படியெல்லாம் தைரியமாகச் செய் கிறார்கள்? என்ன அநியாயம்! 'சாஸ்திரத்திலே, புராணத்திலே, இன்னும் மத, கடவுள் ஆதாரங்கள் எல்லாவற்றிலும் அக்கிரமமான முறையில் எங்களை அடக்கி ஒழிப்பதையே இலட்சியமாகக் கொண்டு வைத்து இருப்பது போதாமல் இன்று நடப்பிலும் அந்தப்படியே செய்யப்பட்டு வருகிறதே!



எங்கள் நாட்டிலே வந்து உட்கார்ந்து கொண்டு எப்படி எப்படியோ தந்திரமாய் அதிகாரத்தை—ஆதிக்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு தகுதியில்லாதவனுக்கு எல்லாம், அயோக்கியர்களுக்கெல்லாம், அவர்கள் பார்ப்பன அடிமைகள்—கூலிகள்—பிரச்சாரத்தால் பிழைக்க வேண்டிய கூலிகள் என்பதற்காகவும், அவர்களுக்குப் பதவியும், செல்வாக்கும், பெருமையும் கொடுத்துவருவது என்றால் என்ன நியாயம்? உள்ளபடி யோக்கியன்—திறமை சாலிகள்—நல்லவர்கள் வெளியே தலைகாட்ட முடியவில்லையே! நாம் கேட்டால்—'நீ சட்ட சபைக்கு வாயேன், வந்து உன் காரியத்தைச் செய்து கொள்ளேன்!' என்றா சொல்வது?

அந்தச் சட்டசபை யோக்கியதைதான் என்ன? சென்ற தடவை நடைபெற்ற தேர்தலிலே காங்கிரசின் கதி என்னவாயிற்று? காங்கிரஸ் தோற்றுப்போய் எதிர்க் கட்சிகள் தானே மெஜாரிட்டியாய் இருந்தன? உண்மையிலேயே யோக்கியமான ஆட்சியாய் இருந்தால், ஜனநாயகத்தை உள்ளபடியே கருதுபவர்களாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? மெஜாரிட்டியாய் இருந்த காங்கிரஸ்—எதிர்ப்பாளர்களைக் கூப்பிட்டல்லவா மந்திரிசபை அமைத்திருக்க வேண்டும்? அதை விட்டு, தேர்தலுக்கே நிற்காத ஒருவரை சட்டத்திற்கு – சட்டத் தத்துவத்திற்கு விரோதமாக – கவர்னர் நாமினேஷன் என்பதன் மூலமாகப் பதவிக்குக் கொண்டுவந்து மந்திரிசபை அமைக்கப்பட்டுவிட்டது! இதுதானே சட்டசபையின் யோக்கியதை!

இது மட்டுமா? அந்தச் சட்டசபையில் காரியந்தான் எப்படி நடைபெறுகிறது? இந்தக் கல்வித் திட்டத்தைப்பற்றியே எடுத்துக்கொண்டாலும்—'இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும்' என்று சட்டசபையில் மெஜாரிட்டியான உறுப்பினர்கள் தீர்மானம் செய்யவில்லையா? அந்தத் தீர்மானம் என்னவாயிற்று? வெகு சாதாரணமாக, 'இது வெறும் சிபாரிசுதானே தவிர, இந்த முடிவை அமுல் நடத்தவேண்டிய அவசியமில்லை' என்று தள்ளப்பட்டுக் குப்பைத் தொட்டியில் போடப்பட்டு விட்டதே!

இப்படியிருக்கும்போது, சட்டசபைக்கு நாம் போனால் அவர்களிடம் கூலி பெறுவதல் லாமல் வேறு என்ன செய்ய முடியும்? இன்னும் சொல்ல ஆசைப்படுகிறேன்—இன்றைக்கு இந்த இராஜ்யத்தின் முதல் மந்திரியாய் இருக்கிறாரே, தோழர் ஆச்சாரியார் அவர்கள் அவர் எந்த ஜனநாயகத்தின் மீது, எந்த ஓட்டின் மீது, எந்தச் சட்டசபைத் தன்மையின் மீது மந்திரியாக இருக்கிறார்? காரணம் வேண்டும்! எந்தத் தொகுதியிலும் நிற்காமல், யாரிடமும் ஓட்டு வாங்காமல் முன் சொன்னதுபோல் யார் தயவிலோ மந்திரியாக ஆனார்.

அந்தப்படி வந்த முதல் மந்திரி, தமக்கு உதவி மந்திரிகளாகத் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறாரே, அந்த மற்ற மந்திரிகளின் தகுதி—திறமைதான் என்ன? அவர் களுக்குள்ளேயே—இருப்பவர்களுக்குள், இந்த ஆட்கள்தாம் மந்திரி வேலைக்குத் தகுதி யானவர்களா? மந்திரி வேலைக்கு அனுபவஸ்தர்களா? அவர்களுக்கு, எந்த அர்த்தத்தில் மந்திரிகளாகப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது? தேர்தலில் நின்று மக்களால் கூடாது என்று துரத்தியடிக்கப்பட்ட ஒருவருக்கு மந்திரிப் பதவி! அதுபோலவே தேர்தலிலே நின்றறியாத, யாருக்குமே தெரியாத—இன்னும் சொல்லப்போனால் காங்கிரசிலேயேகூட இல்லாத ஒருவர் திடீரென்று மந்திரியாக ஆக்கப்பட்டிருக்கிறார்! இது வெல்லாம் என்ன நியாயம்? இப்படிப்பட்டவர்கள்தாம் நம்பிக்கையானவர்கள் என்றால், அதன் அர்த்தம் என்ன? சுத்தமான பார்ப்பன அடிமைகளாகவும் தலையாட்டிப் பொம்மைகளாகவும் இருக்க இவர்கள் ஒப்புக்கொண்டு அடிமை முறிச்சீட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்; ஆகவே அப்படிப்பட்டவர்கள்தாம் வேண்டும் என்பதுதானே அர்த்தம்! உள்ளபடி யோக்கியமான சர்க்கார் நடப்பாய் இருந்தால், இப்படி மக்களால் துரத்தப்பட்ட—மக்களுக்குத் தெரியாதவர் களுக்கா பதவியும், பெருமையும், ஆதிக்கமும் கொடுக்கும்? மக்கள் யாரிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, யாரை மக்கள் மதிக்கிறார்களோ அவர்களுக்கல்லவா கொடுக்க வேண்டும்?



படிப்பகம்

www.padippakam.com



இப்படி அக்கிரமம் செய்துகொண்டு, மேலும் செய்கிற மாதிரி—திராவிட மக்கள் படிக்கக்கூடாது என்பதாகக் கல்வித்திட்டம் கொண்டு வருவது என்றால், நமக்கு ஆத்திரம் வராதா? எந்தப் பார்ப்பனர் மீதும் கோபமோ, குரோதமோ இல்லை. ஆனால், அவர்களுடைய நடத்தையும், போக்கும் நம்மைப் பார்ப்பனர்கள்மீது கோபம் கொள்ளுகிற மாதிரி—அதைவிட 'இந்தப் பார்ப்பனர்களை இங்கே வைத்திருக்கிற வரையில் நம்முடைய இன மக்கள் தலையெடுக்கமுடியாது; ஆதலால் இந்தப் பார்ப்பனர்களைக் கண்டிப்பாக இந்த நாட்டை விட்டுத் துரத்தித்தான் ஆகவேண்டும்' என்று சொல்லத்தக்க மாதிரியான அந்த அளவுக்கு அல்லவா எண்ணம் போகிறது!

உள்ளபடி இந்தப் பார்ப்பனர்களைத் துரத்தாதபடிக்கு இந்த நாட்டில் திராவிடர்கள் எப்படி இன்னமும் சகித்துக்கொண்டிருப்பது? எனவேதான், இந்த முடிவுக்கு அதாவது, 'பார்ப்பானே வெளியேறு!' என்ற முடிவுக்கு வரவேண்டியதாய்ப் போய்விட்டது. பார்ப்பனர்களின் நடத்தையும், கொடுமையும், அக்கிரமுமேதான் இதற்குக் காரணம்! குத்துவெட்டு வேண்டாம்; கலவரம் வேண்டியதில்லை. அந்த நிலை ஏற்படுவதற்கு முன் 'பார்ப்பனர்களே பேசாமல் வெளியேறிவிடுங்கள்!' என்கிறோம். 'போகவும் முடியாது; இங்கேயேதான் இருப்போம், இப்படித்தான் செய்வோம், அதை நீங்கள் சகித்துக்கொண்டு தான் இருக்கவேண்டும்' என்றால், பலாத்காரமாய்த் துரத்துவதைத் தவிர வேறு வழிதான் என்ன என்று பார்ப்பனர்களே சொல்லட்டுமே!

இந்தக் கல்வித் திட்டம் கேடானது; எங்கள் மக்களை நசுக்குவது; நாங்கள் படிக்கக் கூடாது என்பதற்காகக் கொண்டுவரப்படும் அழிவுத் திட்டம் என்பதாகச் சொன்னால் இவர்கள், 'இல்லை இதுதான் நல்ல திட்டம்; இதன் மூலம்தான் படிக்கமுடியும்; மக்களைக் கெடுப்பதற்காக இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்' என்று நமக்குச் சொல்லுகிறார்கள். இது எந்த விதத்தில் பொருத்தமானது, யோக்கியமானது என்று கேட்கிறேன். நாங்கள் தான், ஆயிரம் காரணங்களை விளக்கி, இன்னின்ன காரியங்களால் இத் திட்டம் கேடானது என்று சொல்லுகிறோமே! நாங்கள் சொல்லுகிற காரணங்களை மறுத்தால் சரி; அல்லது நாங்கள் சொல்லுவது இன்ன விதத்தில் தவறானது என்று சொல்லுவதானால் நியாயம். அதை விட்டுவிட்டு, என்னமோ—இவர்கள் (பார்ப்பனர்கள்) தான் மக்களைப்பற்றிக் கவலை எடுத்துக்கொண்டு பாடுபடுகிற மாதிரியும்—எங்களுக்கெல்லாம் அதைப்பற்றிக் கவலையே இல்லை என்றும் பேசுவது என்பது எவ்வளவு தவறானது?

நான் கேட்க ஆசைப்படுகிறேன்—இந்தத் தோழர் ஆச்சாரியார் அவர்களுக்கோ, அல்லது அவருடைய இனத்து மக்களுக்கோ இந்த நாட்டைப்பற்றி, இந்த நாட்டு மக்களைப் பற்றி எதில் எங்களைவிட அதிகமான கவலை இருக்கமுடியும்? அவர்களுடைய கவலையெல்லாம் பார்ப்பன ஆதிக்கத்துக்கு—பாதுகாப்புக்கு என்பது தவிர, பொதுவுக்கென்று என்ன இருக்கிறது? எங்களைவிட என்ன இந்த நாட்டுக்கு அதிகமாகப் பாடுபட்டு விட்டார்கள்? இந்தப் பார்ப்பனர்களால் நாம் இந்த 2000, 3000 ஆண்டுகளாக எதில் முன்னேற்றம், மேன்மை அடைந்திருக்கிறோம்? வெள்ளையன் சிறிது முன்னேற்றமடையச் செய்தான். இந்தப் பார்ப்பனர் அவன் இடத்திற்கு வந்து நம்மைப் பழையபடி கீழே தள்ளப் பார்க்கிறார்கள்; சாண் ஏறினதற்கு முழம் இறக்கிவிட்டார்கள்.

இன்றைக்கு இருக்கிற எவர்தானாகட்டும்; ஆச்சாரியாரேதான் ஆகட்டும், என்னைவிட அதிகமாக என்ன இந்த நாட்டுக்குப் பாடுபட்டு விட்டார்கள்? அல்லது மற்றவர்களுடைய உழைப்புக்கு, நாணயத்திற்கு, தியாகத்திற்கு—என்னுடைய பொதுநல உழைப்பு என்பது என்ன, எவ்வளவு குறைந்தது என்று சொல்லமுடியும்? இவர்கூட அல்ல; இவருக்குப் பெரியவர்கள் என்று சொல்லப்படுகின்ற நேரு, இராஜேந்திர பிரசாத் போன்றவர்கள்தான் ஆகட்டும், என்ன, என்னைவிட அதிகமாகப் பாடுபட்டு விட்டார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.



இந்த ஆச்சாரியாரும், பிரசாதும், நேருவும் 4 முறை, 5 முறை ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள் என்றால், நான் 13 தடவை ஜெயிலுக்குப் போயிருக்கிறேன். அந்தஸ்தில், பணம் காசில் இவர்களில் யாருக்கு நான் குறைந்தவன் என்று சொல்லமுடியும்? இரண்டு தலைமுறையாக நாங்கள் பெரிய வியாபாரக் குடும்பம்; செல்வாக்கும் அந்தஸ்தும் உள்ள நல்ல பெரியதனக் குடும்பக்காரர்களாயிற்றே! மற்ற எந்தப் பார்ப்பனத் தலைவர்கள் என்பவர்களாகட்டும், அவர்களுடைய முன் தலைமுறையை எடுத்துப் பார்த்தால், அவர்கள் புரோகிதர்கள்தானே! அவர்கள் வீதி விளக்கு வெளிச்சத்திலே படித்துக் கொண்டிருக்கிற போதே அந்தஸ்துள்ளவனாக, பெருமைக்கு உரியவனாகத்தான் நானிருந்தேன்.

இன்னும், 'பாடுபட்டோம்' என்று சொல்லுகிற மற்றவர்கள்—நேரு, பிரசாத், ஆச்சாரியார் உட்பட அத்தனை பேரும், இன்று அந்தப் பாட்டுக்குப் பலனை அனுபவிக்கிறார்கள்; இராஜபோகம் அனுபவிக்கிறார்கள்; 10 இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் சேர்க்கிறார்கள். ஆனால், நான் இந்தப் பொதுவாழ்க்கை என்பதன் பேரால் இத்தனை ஆண்டு பாட்டுக்கும் இன்றுவரை நான் ஏதாவது பலன், பதவி, பணம் அடைந்திருக்கிறேனா? சொல்ல முடியுமா? வேண்டுமானால், இந்தக் காரியத்துக்கு வந்ததனால் எனக்கு என் சொந்தத்தில் ஏராளமான பொருள் நட்டத்தையும், எதிர்ப்பையும் அனுபவித்திருக்கிறேன் என்றுதான் சொல்ல முடியுமே தவிர, ஒரு செல்லாத காசு அளவாவது இலாபம் பெற்றிருப்பேனா? அப்படி இருக்கும்போது என்னைப் பார்த்து, 'எங்களுக்குத்தான் மக்கள்மீது கவலை, உனக்கு இல்லை' என்றால், என்ன யோக்கியதை என்றுதானே கேட்கவேண்டி வரும்? ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதம் இருக்கிறது என்றால் இந்த முறையிலா நடந்துகொள்வது? ஒரு முறை வேண்டாமா?

என்ன தைரியம்? எங்கள் நாட்டில் பார்ப்பானுக்குச் சமமாக வாழ எங்களுக்குத் தகுதி இல்லை; திறமையில்லை என்கிறார்கள்! படிக்கவும் வசதி தரமாட்டேன் என்கிறார்கள்! பெரிய படிப்பு படிக்க வசதியில்லை—விடமாட்டேன் என்கிறார்கள். கொஞ்சம் மனிதனாகலாம் என்றாலும் அதற்கும் விடாமல்—'கல்வித் திட்டம்' என்ற பேரால் அவனவன் சாதித் தொழிலுக்குப் போங்கள் என்று அதற்கும் வெடி வைக்கிறார்கள். அடக்குவது என்றால் இப்படியா? எதிரி என்றால் வாழவே கூடாது என்றா நினைப்பது? இதுதான் பெரிய பண்பு என்பதா?

உள்ளபடி இந்தக் கல்வித் திட்ட எதிர்ப்பு என்பதை ஒரு அரசியல் போராட்டமாகக் கருதி இதை நாங்கள் எதிர்க்கவில்லை. இதைச் சமுதாயப் போராட்டமாக, இனவாழ்வுப் போராட்டமாகக் கருதியே எதிர்க்கிறோம். எங்கள் இனத்துக்கு—திராவிட இனத்துக்கு இந்த இனத்தையே தீர்த்துக் கட்டுவதற்காக வைக்கப்படும் பெருத்த வெடிகுண்டு என்று கருதியே இக் கல்வித் திட்டத்தை எதிர்க்கிறோம். இந்த எதிர்ப்பை, போராட்டத்தை நாங்கள் எங்களுடைய ஜீவாதாரமான, உயிர்நிலைப் போராட்டமாகக் கருதுகிறோம்.

இப்போதே சொல்லுகிறேன்; இந்தக் கல்வித் திட்டம் எடுபட்டால் மட்டுமே போதாது; நம்முடைய மக்களுக்கு உத்தியோகம், கல்வி எல்லாவற்றிலும் சரியானபடியான விகிதாச்சாரம், பார்ப்பானுக்கு 100-க்கு 3, நம்மவர்களுக்கு 97 என்கிற மாதிரி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டாக வேண்டும். இந்த இரண்டும் திராவிட மக்களின் ஜீவாதாரமான—உரிமையான பிரச்சினைகள். இந்த இரண்டு காரியங்கள் நிறைவேறுவதற்காக இந்த இனம் கடைசிவரை உயிரைப் பணயம் வைத்துப் போராடியே தீரும்! இதில் சந்தேகமே இல்லை. உள்ளபடி சொல்லுகிறேன்—இந்தப் பார்ப்பனர்களை ஒழிக்கிறோமோ இல்லையோ—எங்களிலே 1000 பேர் இந்த முயற்சியில், பார்ப்பனர்களை வெளியேற்றுகிற இந்த நல்ல காரியத்திலே, சாவோம்! ஓர் ஆயிரம் பேர் செத்துவிட்டால்—என்ன இந்த இனத்துக்கு நட்டம் வந்துவிடப் போகிறது? நான் பலமுறை கூறியதுபோல் இந்த நாட்டுத் திராவிட மக்களின் எண்ணிக்கையில் இந்தச் சாவு என்பது—தலை வாருவதில்,

படிப்பகம்

www.padippakam.com



சிக்கெடுப்பதில் கழியும் ஒரு சில முடிகள் போன்றதுதானே தவிர, பெரிய நட்டம் ஒன்றுமில்லை. ஆனால், இந்த 1000 பேரில் பகுதி வீதம் பார்ப்பனர்கள் தீர்க்கப்படுகிறார்கள் என்ற நிலைமை ஏற்படுமானால் உள்ளபடி அந்தச் சமுதாயத்துக்கு அது எவ்வளவு கேடு, நட்டம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கட்டும்! 'நாங்களும் தயாராய் இருக்கிறோம்' என்று மடி கட்டுவதும், கசரத் பழகுவதும் பார்ப்பானுக்கு முட்டாள்தனமாக—போங்காலமாகவே முடியும்.

உள்ளபடி ஆச்சாரியாருக்குச் சொல்ல விரும்புகிறேன்; அவர் இந்தத் திட்டத்தை மாற்றவில்லையானால் நிச்சயமாக (அவர் பதவியை விட்டுப் போகிறாரோ, இல்லையோ அது வேறு விஷயம்) இது அவருடைய இனத்தின் அழிவுக்கே ஒரு காரணமாய் இருக்கப் போகிறது. சும்மா நான் 'டூப்' (Dupe) விடவில்லை. இதை நன்றாக உணர்ந்து கொள்ளட்டும். திராவிடமக்கள் இன்னும் இந்தக் கொடுமைகளையும் அக்கிரமத்தையும் நிச்சயமாகச் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். இனியும் அவர்களை அடக்கி வைத்திருப்பதும் தவறான காரியம்; தற்கொலைக்கு ஒப்பான காரியம் என்றே சொல்லுவேன்.

கடைசியாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தோழர்களே! இனி அகிம்சை, அமைதி என்று பேசிக்கொண்டிருப்பதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லை. ஏன் என்றால், அனுபவத்திற்கு அவை பயன்படவில்லை. எந்த முறையால் காரியம் கைகூடுமோ அந்த முறையைக் கையாளுவோம்; அதற்குப் பலாத்காரம், அராஜகம் என்ற பெயர் இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல்!

தோழர்களே! இப் பெருத்த போராட்டத்தில் கலந்துகொள்ள எல்லா மக்களும் தயாராய்ப் பயணம் சொல்லிக்கொண்டு புறப்பட்டு வாருங்கள்! கூடவே சொல்லிக்கொள்கிறேன்: இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதன்மூலம் பெருமையும் செல்வாக்கும் கிடைக்கும்; தேர்தலுக்கு நின்று மந்திரியாகலாம்—அதாவது ஜெயிலுக்குப் போய்வந்தவுடன் நாமினேஷன் பாரத்திற்கு ஓடுவது என்கின்ற எண்ணத்தின்மீது யாரும் வரவேண்டாம். எதற்குச் சொல்லுகிறேன்; இன்றைக்கும் பொதுவாழ்வு என்பது 100-க்கு 90 பாகம் சுயநலத்துக்கும், சொந்த இலாபத்துக்கும், வாழ்வுக்கும் ஆகவே பயன்படுத்தப் படுகிறது. இந்தப் பொதுவாழ்க்கை என்பதை ஒரு ஏணிப் படியாக வைத்துக்கொண்டு, தாங்கள் மேலே மேலே ஏறுவதற்கு இதை ஒரு வாய்ப்பாய்ப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். எல்லாப் பொதுநல வாழ்வுக்காரர்கள் என்பவர்களுமே அப்படித்தான் இருக்கிறார்கள். அதனாலேயே பொதுவாழ்வுக்கு மதிப்பு இல்லை; சுயநலம் தவிர பலனும் இல்லை.

நான் மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்—பொதுவாழ்வில் எந்தவிதமான இலாபத்தையும் கருதாமல், எந்தப் பெருமையும்—சட்டசபை, ஜில்லாபோர்டு என்பதாக எதையும் கருதாமல் கை நட்டப்பட்டுக்கொண்டு, தங்களுக்கு உள்ளதையும் விட்டுவிட்டு, உள்ளபடி, பொதுநன்மை என்கிறதையே இலட்சியமாகக்கொண்டு யாராவது பாடுபடுகிறார்கள் என்றால் அது திராவிட கழகத்தார் என்கிற இந்த ஒரு கழகத்தாரைத் தவிர வேறு யாருமேயில்லை. மற்றவர்கள் எல்லாம் பாடுபடுவார்கள் என்றால் அந்தப் பாட்டை எலெக்ஷனுக்கும் மற்ற வாழ்வுக்கும் கொண்டுபோய் விற்றுவிடுகிறார்கள்; பலர் அதனாலேயே வயிறு வளர்க்கிறார்கள். மற்றும் எடுத்துப் பாருங்கள், ஒவ்வொருவரும் பொதுவாழ்வுக்கு வந்தபோது அவர்களுக்கிருந்த யோக்கியதை, அந்தஸ்து, செல்வம் முதலியவைகளை—அவர்கள் இன்றைக்கு இந்தப் பொதுவாழ்வின் பேரால் எல்லாத் துறையிலும் எத்தகைய பெருமையான வாழ்வு நடத்துகிறார்கள் என்பவைகளை!

எனவே தோழர்களே! இதை ஒரு ஏணியாகக் கருதி மேலே போவது என்பதாகக் கருதாமல் தங்களைத் தாங்களே ஏணியாகக் கருதிக்கொண்டு, சமுதாய மக்கள் முன்னேறப் பயன்படுவதாய்ப் பாடுபட முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போராட்டத்திற்கு வரும்போது வீட்டில் பயணம் சொல்லிக்கொண்டு புறப்பட்டு வாருங்கள்.

[நூல்: 'புரட்சிக்கு அழைப்பு'; சென்னையில், 31-1-1954-ல் சொற்பொழிவு]



## 3. தேசியக் கொடி கொளுத்தும் தீர்மானம்

இந்திய அரசாங்கத் தேசியக் கொடியைக் கொளுத்துவது என்பது மிகக் கடினமான தீர்மானம் என்பதாகப் பலர் கருதக்கூடும். இது இந்திய அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ, ஒழித்துக் கட்டவோ கருத்துக்கொண்டு செய்யப்பட்ட—கொடி கொளுத்தும் தீர்மானமல்ல.

எங்களுக்கு—தமிழர்களுக்கு—தமிழ் நாட்டாருக்கு—இந்திய அரசாங்கம் வேண்டாம்; தமிழ்நாடு—தமிழர்கள் இந்திய அரசாங்கத்தின் கூட்டு ஆட்சியில்—இந்திய யூனியனில் இருக்க விரும்பவில்லை. நாங்கள் எங்களை, நாட்டை, தனிப்பட்ட பூர்ண சுயேச்சையுள்ள தனியரசு நாடாக ஆக்க விரும்புகிறோம்; எங்கள் நாட்டைத் தனி-பூரணசுயேச்சை நாடாக ஆட்சிசெய்ய எங்களுக்கு சக்தி உண்டு; சகலவிதத்திலும் எல்லாவிதமான வசதியும் உண்டு. மத்திய கூட்டாட்சியிலிருந்து பிரிந்துகொள்ள ஆசைப்படுகிறோம்.

இந்திய யூனியன் அரசியல் சட்டத்தில், சட்டப்படியான கிளர்ச்சியின்மூலம் பிரிந்து கொள்ளப் போதியபடி சட்டவசதி இல்லை; எங்களை—தமிழர்களைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கும்படியானதும்—தமிழ் நாட்டு மக்களில் 100-க்கு 3 வீத ஜனத்தொகை உள்ளதுமான பார்ப்பனர்கள் மத, சமுதாயத் துறையில் எங்களிடம் பெற்ற ஆதிக்கத்தை வட நாட்டாருக்குக் காட்டிக் கொடுத்துப் பிழைப்பதாலும், தமிழ்நாட்டு அரசியல் ஆதிக்கத்தில் பெரும் பங்கைக் கொண்டவர்களாக இருப்பதாலும், சட்டசம்பந்தமான வழிகளையெல்லாம் அடைத்துவிட்டார்கள். ஆனதால், நாங்கள் சட்டசம்பந்தமான வழி மாத்திரமல்லாமல் வேறு எந்தவிதமான வழிமூலமானாலும் பிரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாங்கள் பிரிந்துகொள்ளவேண்டும் என்கின்ற எண்ணம், எங்களுக்கு வடநாட்டாரால் நடத்தப்படும் இந்திய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு தோன்றிய எண்ணமல்ல.

வெள்ளையனால் நடத்தப்பட்ட இந்திய அரசாங்கம், சர்வ வல்லமையுடன் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த காலமான 1937–38-லேயே தோன்றி, திராவிடநாடு கிளர்ச்சியை நடத்தி வந்திருக்கிறோம்.

வெள்ளையர் இந்த நாட்டைவிட்டுப் போகும்போது நாங்கள் ஸ்தாபன பூர்வமாக சட்டமுறைப்படிக் கிளர்ச்சி செய்திருப்பதோடு, டெல்லிக்குத் தூதுசென்று, வெள்ளையர்களிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டும் இருக்கின்றோம்; இந்தச் சந்தர்ப்பத்தில் வடவர்கள் வெள்ளையர்களுக்கு இலஞ்சத்தைக்கொடுத்து எங்கள் விருப்பத்தை இலட்சியம் செய்யாமல் செய்துவிட்டார்கள். மற்றும், வடவர் ஆட்சி ஏற்பட்டு, அவர்கள் சுதந்திரதினம் கொண்டாடும்போதே அந்த நாளை நாங்கள் துக்க நாளாகக் கொண்டாடி இருக்கிறோம்.

ஆண்டுதோறும் நாங்கள் பிரிவினை நாளைக் கொண்டாடி வருகிறோம். மற்றும், 'அரசியல் சட்டம்—எங்களை நிரந்தர அடிமைப்படுத்தும் வடவரின் சர்வாதிகாரச் சட்டம்' என்றும், அதைத் தீயிட்டுக் கொளுத்தவேண்டுமென்றும் எங்கள் மாநாடுகளில் பலதடவை பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் வந்திருக்கிறோம்.

எங்களுடைய இந்த உணர்ச்சியையே அடியோடு அழிக்கும்படியான தன்மையில், அன்னிய மொழியாகிய இந்திமொழியை எங்கள் நாட்டிற்குள் அரசியலின்பேரால் பலாத்காரமாய்ப் புகுத்தி, மொழி, கலாச்சாரம், கல்வி முதலிய துறைகளிலும், அரசியலில் ஆட்சிமொழி என்கின்ற தன்மையிலும் புகுத்தி இருப்பதோடு, இந்தி படித்து பாஸ் செய்தவனுக்குத்தான் உத்தியோகம் என்கின்ற அளவுக்கு வடவராட்சி துணிந்துவிட்டதால், இந்திய ஆட்சி தமிழ் நாட்டில் கூடாதென்கின்ற எண்ணம் எங்களுக்கு வலுப்பட்டுவிட்டது.

இந்த வலுப்பட்ட எண்ணம் பெற்ற பின்னர்தான் நாங்கள் 17-ந்தேதி திருச்சியில் செய்த, வடவராட்சிச் சின்னமாகிய தேசியக்கொடி என்பதைக் கொளுத்தவேண்டும் என்ற தீர்மானமாகும். அந்தத் தேசியக்கொடி என்பது எங்களுக்கு, எங்கள் தேசத் தேசியக் கொடியல்ல.

படிப்பகம்

www.padippakam.com



'இந்தியா தேசம்' என்பதை எங்களுக்குச் சம்பந்தபட்ட தேசமாக நாங்கள் வெகு நாளாகக் கொண்டிருக்கவே இல்லை. நாட்டு இலட்சணப்படி, எங்கள் நாடு எந்தவிதத்திலும் இந்திய நாடு என்பதுடன் சேர்ந்ததாக இருக்க நியாயமே இல்லை. சரித்திர சம்பந்தபட்ட வரையில்—வெள்ளையர் காலத்தைத் தவிர, வேறு எந்தக் காலத்திலும் எங்கள்நாடு தனித்த சுதந்திரநாடாகவே இருந்துவந்திருக்கிறது.

மதசம்பந்தமான புராண இதிகாசங்கள் சம்பந்தப்பட்டவரை தமிழ்நாடு (திராவிட நாடு) தவிர்த்த இந்திய நாடு திராவிடநாட்டிற்கு எதிரி நாடாகவும், அந்த இந்திய மக்கள் (ஆரியாவர்த்தம் ஆரிய மக்கள்) திராவிட மக்களுக்கு எதிரிகளாகவும் இருந்துவந்ததாகவே அறியக்கிடக்கின்றது.

ஆகவே, 'இந்தியத் தேசியக் கொடியைக் கொளுத்துவது, இந்தியக் கூட்டாட்சி என்பதில் தமிழ் நாட்டுத் தமிழர்களாகிய நாங்கள் பிரஜைகளாக இருக்கச் சம்மதப்பட வில்லை' என்கின்ற எங்களுடைய இஷ்டமின்மையைக் காட்டுவதேயாகும்.

['விடுதலை'-தலையங்கம்—20-7-1955]

## 4. இந்திக் கிளர்ச்சி

கொடி கொளுத்திக் காட்டுவது என்று திராவிடர் கழகம் தீர்மானித்த பிறகு, அரசியல் உலகில் ஒரு பரபரப்பு—'சென்சேஷன்' ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றிப் பெரிதும் அரசியல் பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கிறவர்களே அதிகம் பேசுகிறார்கள்.

இதில் சிலருக்கு கொடியைப்பற்றிக் கவலையில்லாமல் வேறு விஷயமாய் மகிழ்ச்சியும் கவலையும் ஏற்பட்டிருக்கலாம். அதாவது, காமராசரின் எதிரிகளுக்கு ஒரு மகிழ்ச்சி என்ன வெனில், 'காமராசருக்குப் பொது மக்களிடம் பெரிய ஆதரவிருந்து வருகிறது. இப்போது இராமசாமி கொடி கொளுத்தப் போவதால் அவன்மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துதான் தீரவேண்டும்; விஷயம் இந்திப் பிரச்சினையானதால் இந்த இந்தி எதிர்ப்பு நாட்டுமக்கள் எல்லோரும் வரவேற்கும்படியான காரியமாகும்; இப்போது இராமசாமி மீது எடுக்கும் நடவடிக்கையில் காமராசர் பொதுமக்கள் ஆதரவை இழந்து விடுவார்; செல்லுமிடங்களில் கருப்புக்கொடி '(1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பில் இராஜாஜிக்குப் பிடித்ததுபோல்) பிடிக்கும் படியான நிலைமை வந்துவிடலாம். ஆனதால், இந்தக் கொடி கொளுத்துவது காமராசரைத் திண்டாட்டத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டது. இது ஒரு நல்ல சம்பவம்' என்று காமராசரின் எதிரிகள் மகிழ்ச்சிக் கூத்தடிப்பார்கள்.

அதுபோலவே காமராசரின் நண்பர்கள், 'இது ஒரு சங்கடமான நிலையாக இருக் கிறதே; இது எப்படி முடியுமோ?' என்று கவலைப்படுவார்கள். இதுதான் பரபரப்புக்கு முக்கியமான காரணம். மற்றபடி, இந்தக் கொடி கொளுத்துவது ஒரு சாதாரண விஷயம். பிள்ளையார் உடைக்கப்பட்டதைவிட இது ஒன்றும் முக்கியமான காரியமல்ல. அது கடவுள் சங்கதி; இது ஆட்சி சங்கதி. அது ஒரு மொத்தைக் களிமண்ணைப் பொறுத்தது—இது ஒரு முழம் அல்லது ஒருசாண் துணியைப் பொறுத்தது. இந்த இரண்டு காரியமும் யாரிடமும் எவ்வித பலாத்காரம் கொண்டதுமல்ல—நாசத்தைக் கொண்டதுமல்ல.

ஆனால், வெறும் மூடநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட அந்தக் களிமண் பொம்மை எப்படிக் 'கடவுள் சின்ன'மோ, அப்படியே, இந்த மேற்படி அளவு துண்டுத் துணி 'ஆட்சிச் சின்னம்' என்பதாகச் சொல்லிக் கொள்ளப்படுவதாகுமே ஒழிய, அறிவாளிகள் பிரமாதமாகக் கருதிக்கொள்ளப்பட இடமில்லை. கடவுள் சின்னம் என்பது 'ஒழுக்கத்தையும் எல்லா மக்களுடைய உள்ளத் திருப்தியையும்' பொறுத்தது; ஆட்சிச் சின்னம் என்பது நீதியையும் எல்லா மக்களுடைய திருப்தியையும் பொறுத்தது. அது மத சாஸ்திரத்தைப்



பொறுத்தது; இது அரசியல் சட்டத்தைப் பொறுத்தது. இவற்றில் ஒழுக்கம், நேர்மை இல்லாமல் சாஸ்திரத்தையும் சட்டத்தையும் கருதிக்கொண்டு இந்த இரண்டையும் காப்பாற்றப் புறப்படுவது கைபலமே அல்லாமல் நியாய பலத்தைப் பொறுத்ததல்ல.

ஆனால், பொதுமக்கள் இந்த இடத்தில் ஒரு விஷயத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். அதாவது, உடைப்பவர்களும் கொளுத்துபவர்களும் என்ன எண்ணத்தைக்கொண்டு அப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பற்றியதாகும்.

பக்தர்களுக்கோ, அரசாங்கத்திற்கோ எந்தவிதமான தொல்லையையும், அவர்களது காரியங்களுக்கு எந்தவிதமான தடையையும், ஏற்படுத்துவதற்காக அல்லவேயல்ல. மற் றெதற்கு என்றால், 'பிள்ளையார் என்பதை நாங்கள் எங்கள் கடவுளாகக் கருதவில்லை. அது போலவே, இந்திய யூனியன் ஆட்சி என்பதை நாங்கள் எங்கள் சர்க்காராக, ஆட்சியாகக் கருதவில்லை. இவை எங்களுக்கு இஷ்டமில்லாத காரியங்கள்; அதன் காரணங்கள் இன்ன இன்னவைகள் என்று விளக்கி வந்திருக்கிறோம்; விளக்கி வருகிறோம். அந்த எண்ணங் களைப் படிப்படியாக தீவிரப்படுத்திக் காட்டுவதற்காக இப்படிச் செய்கிறோம். இதனால் எங்களுக்கு வேறு எவ்வித கெட்ட எண்ணமுமில்லை.'

இந்திய யூனியன் ஆட்சியை ஒழித்து, கவிழ்த்து எங்கள் ஆட்சியை இந்தியாமீது சுமத்தவோ, இந்தியாவை நாங்கள் எங்களுக்கு அடிமைப் படுத்திக் கொள்ளவோ அல்ல; அல்லது இந்தியாவை மற்றொரு நாட்டானுக்குக் கைவசப்படுத்தவோ, காட்டிக்கொடுக்கவோ அல்ல; அதாவது நாங்கள் துரோகிகளுமல்லர்; எதிரிகளுமல்லர்; யுத்தம் தொடங்குகிறவர் களுமல்லர்.

எங்கள் நாட்டு ஆட்சி எங்களுக்கு வேண்டும். எங்கள் நாட்டுக்குள் எங்கள்மொழி அல்லாதது ஆட்சி மொழியாக, தேசிய மொழியாக, கல்வி மொழியாக இருக்கக்கூடாது. இந்தியை வலியுறுத்தும் ஆட்சி எங்கள் (தமிழ்) நாட்டிற்கு வேண்டாம் என்பதை ஆட்சி யாளருக்குக் காட்டுவதற்காக—ஒரு கிளர்ச்சி காரியமாக இதைச் செய்கிறோம். அதுவும் ஏன் செய்கிறோம் என்றால், மற்றவிதமாகச் செய்யப்பட்ட காரியங்கள் கவனிக்கப்பட வில்லை; கேலி செய்யப்பட்டுவிட்டன. இந்திய யூனியன் ஆட்சி ஜனநாயக ஆட்சி என்று சொல்லப்படுகிறது. அப்படியானால், தமிழ்நாட்டில் இந்தியைப் புகுத்துவது ஜனநாயகமா? இங்கு தமிழர்கள் 100-க்கு 90 பேர்கள் ஆவார்கள்; மீதி 100-க்கு 10 பேர். பாக்கியுள்ள மக்களிடம் இந்த ஜனநாயக ஆட்சி, இந்தியைப்பற்றி யோக்கியமான முறையில் ஓட்டுக் கேட்கட்டுமே! மெஜாரிட்டி மக்கள் இந்தியை விரும்பினால் வைத்துக்கொள்ளட்டும். அப்படியில்லாமல், 'இந்திய யூனியன் அரசாங்கத்திற்குள் தமிழ்நாடு ஒரு இராஜ்யமாக சேர்க்கப்பட்டு இருக்கிறது (அது என்றென்றைக்கும் விடுபடுவதற்கு இல்லாமல் சட்டம், ஆட்சி அமைத்துக்கொண்டு) ஆதலால் யூனியனிலுள்ள 20 நாடுகள் சொல்லுகிறபடிதான் தமிழ்நாடு கேட்டு ஆகவேண்டும்' என்றால் நாங்கள் பரிகாரம் தேடிக்கொள்வது எப்படி?

['விடுதலை'-தலையங்கம்—21-7-1955]

## 5. கொடி எரிப்பு ஒத்திவைப்பு

ஆகஸ்ட் 1ஆம் தேதி, 'இந்திய யூனியன் கொடி' கொளுத்தப்படும் என்கின்ற திராவிடர் கழகத் தீர்மானம் சம்பந்தமாக, சென்னை அரசாங்க முதன் மந்திரி திரு. காமராஜர் அவர்களது அறிக்கையைப் பார்த்தேன்.

அவ்வறிக்கையானது நான் விரும்பியபடி மத்திய அரசாங்கத்திற்காகவும், சென்னை அரசாங்கத்திற்காகவும் வெளியிடப்பட்ட அறிக்கை என்று பொருள் தரும்படியாக விடப் பட்டிருக்கிறது. அதிலிருந்து தமிழ்நாட்டவர்மீது இந்தி கட்டாயப் பாடமாகத் திணிக்கப் படமாட்டாது என்று அரசாங்கம் வாக்குறுதி கொடுத்து, கொடியைக் கொளுத்த வேண்டாம்

படிப்பகம்

www.padippakam.com



என்று விரும்புவதாக உணருகிறேன். ஆகவே, நான் எனது தீர்மானம் அமுல் செய்யப் படாமல் இருக்க வேண்டும் என்று சர்க்கார் விரும்பினால், எப்படிப்பட்ட வாக்குறுதி அளிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தேனோ அப்படிப்பட்ட வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், நடைமுறையில் இந்த வாக்குறுதியை அமுல் நடத்துவதில் அரசாங்கத் தாரால் இந்தி கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதாக மக்கள் தெளிவாகக் கருதும்படி நடந்துகொள்ளுமோ, அல்லது இவ்வளவு நான் நடந்துகொண்ட மாதிரி ஒன்றுக்கொன்று (அறிக்கைக்கும், செய்கைக்கும்) சம்பந்தமில்லாத மாதிரி நடந்துகொள்ளுமோ என்பதை நடைமுறையில் தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால்—முதல் மந்திரியாரின் விருப்பத்திற்கு ஏற்பக் 'கொடி கொளுத்துவதை'த் தற்காலிகமாகவே ஒத்திவைத்து, திராவிடர் கழகத் தாரையும் மற்றும் இதில் ஈடுபட இருக்கிற பொதுமக்களையும் ஆகஸ்டு 1ஆம் தேதி யன்றைக்குக் கொடியைக் கொளுத்தாமல் இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

மற்றபடி, அவ்வறிக்கையில் கொடி கொளுத்துவோர் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரியப்படுத்தி இருப்பது பற்றி நானோ, பொதுமக்களோ எவ்வித ஆச்சரியமும் படத் தேவையில்லை. மக்கள், 'அரசாங்கத்தினுடைய கொடி'யைக் கொளுத்தினால், அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் என்று எந்தப் பைத்தியக்காரனும் நினைத்துக் கொண்டிருக்க மாட்டான். அடக்குமுறையினுடையவும், தண்டனையினுடையவும் கடைசி எல்லையை எதிர்பார்த்துத்தான் திராவிடர் கழகம் கொடி கொளுத்தத் தீர்மானம் செய்திருக்கிறது. இதை உலகறியவும் செய்திருக்கிறது. ஆதலால், அந்தச் சொற்களுக்காக அறிவாளிகளுக்கு நான் ஏதும் சமாதானம் சொல்லத் தேவையில்லை.

என்னுடைய இந்தக் கொடி கொளுத்தும் தீர்மானத்திற்கு எதிர்ப்பாக வீணர்கள் செய்த ஆர்பாட்டம், பூச்சாண்டிகளைச் சிறிதும் மதிக்காமல் செயலில் இறங்க முன்வந்து மடிகட்டிப் பெயர் கொடுத்த—மொழிப் பற்றும், ஆண்மையும், மானமும், துணிவும் கொண்ட பத்தினாயிரக்கணக்கான வீர சிகாமணிகளுக்கு எனது பாராட்டுதலையும், உளம் நிறைந்த நன்றியையும் தெரிவித்துக் கொண்டு, கொடி கொளுத்தும்படி மறுபடியும் எனது வேண்டு கோள் வரும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கச் சிரம் வணங்கி வேண்டிக் கொள்கிறேன்.

வீண் பொய்க் கவுரவத்தைப் பார்க்காமல் மிகவும் அறிவுடைமையுடன் நடந்து கொண்ட சென்னை அரசாங்கத்தையும் மனமாரப் பாராட்டுவதுடன், உறுதி மொழிக்கேற்ப நடந்து கொள்ளுமென்றே நம்புகிறேன். வணக்கம்.

['விடுதலை'—அறிக்கை—31-7-1955]

## 6. தேசியக் கொடி எரிப்பு

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

இந்தப் பார்ப்பனர்கள்தாம் இப்படிக் காலிகளைக் கிளப்பிவிட்டனர் என்றால், மந்திரி கோவிந்த வல்லப பந்த் அவர்கள், 'கொடி கொளுத்துவது பெரிய இராஜத் துரோகக் குற்றத் திற்குச் சமமான குற்றமாகும்' என்று கூறுகிறாராம். அதன் பிறகுதான் கொடி கொளுத்துவோர் பட்டியலில் ஆயிரக் கணக்கில் பெயர் வந்தவண்ணமிருக்கின்றது. அன்றியும் எந்தச் சட்டப்படி, என்ன குற்றம் என்பதே இதுவரை யாருக்கும் புலப்பட வில்லை!

வக்கீல்கள் எல்லாம் சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தும், இப்பேர்ப் பட்ட முக்கிய விஷயத்தைப் பற்றிச் சட்டத்தில் ஒன்றுமே தென்படவில்லை. கொடியைக் கொளுத்தினால் என்ன தண்டனை விதிப்பது என்பதைப்பற்றி அரசாங்கமே இன்னமும் சட்டபூர்வமாக ஒன்றும் முடிவு செய்யவில்லை.



அப்படி இருக்க, தெருவில் திரியும் ஆண்டிகளெல்லாம், 'கொடியைக் கொளுத்தினால் உயிரைக்கொடுத்துக் காப்பேன்' என்று மிரட்டுகின்றனர்.

இவர்கள் மிரட்டலுக்கும், பூச்சாண்டிகளுக்கும் நான் பயந்தவனா? அப்படித்தான் என் உயிர் போனாலும் நஷ்டம் என்ன என்று நினைப்பவன். நானும், இந் நாட்டில் ஒரு மனிதனின் சராசரி வயதைப்போல் மூன்றுமடங்கு வயதுடையவன். இதுவரை இருந்தது போதாமல் இன்னமும் உயிருடன் இருக்க ஆசைப்படுபவன் அல்லன். போகிற நேரத்தில் ஏதாவது நல்ல காரியத்தைச் செய்துவிட்டுப் போகலாம் என்பதுதான் பெரிய கவலையே தவிர, என் உயிர் போய்விடுமே என்ற கவலை இல்லை.

நானும் இப் போராட்டம் நடந்தே தீரும்—அதன் மூலமாவது பெரிய குற்றமென்று சொல்கிறார்களே அதற்காகவாவது சில வருடங்கள் சிறைவாசம் செய்ய வாய்ப்புக் கிடைக்கும் என்று ஆவலோடு இருந்தேன். என் உடல் நிலையைப்பற்றிக்கூடக் கவனிக்காது உடல் நிலையில் பலவிதமான குறைகளிலிருந்தும் டாக்டரிடம் காட்டிச் சரிசெய்து கொள்ளாமல் இருந்துவிட்டேன். ஏன்? சொந்தச் செலவில் ஏன் காசை வீணாக்கவேண்டும்; சிறைக்குச் சென்றவுடன் அரசாங்கச் செலவிலாவது பார்த்துக்கொள்ளலாம் என்றெல்லாம் ஆசையுடன் இருந்தேன். ஆனால், தற்சமயம் அவ்வித வாய்ப்புக்கு இடமின்றிப் போய்விட்டது.

நான் விரும்பியபடியே சர்க்கார் உறுதிமொழி தீட்டியது. என்னுடைய விருப்பப்படி சர்க்கார் எப்படிப்பட்ட வாக்குறுதி கொடுத்தால் போதும் என்றேனோ, அதன்படி வாக் குறுதி தந்துவிட்டது. இந்தி மொழி தமிழ்நாட்டார்மீது கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது என்ற ஒரே உறுதிமொழி கொடுத்தால்போதும் என்றேன்.

இவ்வாக்குறுதியை அடைந்த பிறகு, நான்—இக் கிளர்ச்சியை நடத்துவதென்பது சரியல்ல; ஆனால், அரசாங்கமும் இதுவரை அப்படித்தான் கூறிவந்திருக்கிறது. பெரிய தலைவர்களும், மந்திரிகளும்கூட இந்தியை விரும்பாதவர்களிடத்தில் கட்டாயப்படுத்துவ தில்லை என்று கூறிவந்துள்ளார்கள். இன்றைக்கு நடைமுறையில் அப்படிக் காணவில்லை. பிரதமர் நேருவிடம் நிலைமையைத் தெளிவுபடுத்தினார்—முதலமைச்சர் காமராசர்.

நேரு அவர்கள்கூட காமராசரிடம் அப்படித்தான் கூறினாராம். 'நாங்கள் எத்தனையோ முறை இந்தியைக் கட்டாயப்படுத்துவதில்லை என்று கூறியுள்ளோமே' என்றாராம். முதலில் காமராசரைக் கண்டவுடனேயே நேரு புன்முறுவல் கொண்டு, கிண்டல் செய்தாராம். 'நாயக்கரும், தாங்களும் கட்டிப் புரளுகிறீர்கள் என்று கூறுகிறார்கள். அவ்விதமிருக்க, உங்கள் ஆட்சியிலேயே நாயக்கர் ஏதேதோ செய்யப்போகிறாராமே?' என்று கேட்டாராம். அதற்கு முதன் மந்திரி அவர்கள், 'எல்லாம் உங்களால் வருவதுதான்' என்றாராம். என்ன என்று கேட்டவுடன், 'இந்தியைக் கட்டாயப்படுத்துவதில்லை என்று பேசிவிட்டு, நடைமுறையில் கட்டாயப்படுத்துவதைப் பார்த்து ஆத்திரம் பொறுக்காமல் இது போன்ற கிளர்ச்சி எல்லாம் செய்கிறார்கள்' என்றாராம். பிறகுதான், 'நம்மிடமா குற்றம் உள்ளது? அப்படியானால் உடனே சென்று இனி கட்டாயப்படுத்தப்படாது என்பதாக அறிக்கை வெளியிடுங்கள்' என்றாராம். அதன்படிதான் காமராசர் அவர்களும் அறிக்கை வெளியிடும்படியாகியது.

அந்த அறிக்கையை வெளியிடுமுன் ஒரு சிலர் என்னிடம் கொண்டுவந்து காட்டி, இப்படி வெளியிட்டால் போதுமா என்று என் சம்மதம் கேட்டனர். நானும் அதைப் பார்த்து ஒருசில திருத்தங்களைச் சொல்லி, அதன்படி இருந்தால் போதுமென்றேன். அப்படியே திருத்தங்கள் செய்து அறிக்கையும் வெளி[illegible]

நானும், வெளியிட்ட [illegible]ம் காட்டவும், அவர்கள் போராட்டத்தை விட்டுவிட்டதாக[illegible]கள். ஆனால், நான் அவ்வளவு ஏமாந்தவனல்லன்! எனவே, நா[illegible] நடைமுறையில் பார்க்கவேண்டும்;



படிப்பகம்

www.padippakam.com



அதுவரை போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை; ஆனால், அதுவரை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளேன் என்பதாகத்தான் வெளியிடுவேன் என்பதாகக்கூறி, அதன்படியே போராட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக இன்றைய அறிக்கையில் வெளியிட்டுள்ளேன்.

இவ்வுண்மைகளை நம் நாட்டுப் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்கின்றன. 'காமராசர் எச்சரிக்கை' என்றும், 'நாயக்கரின் போராட்டம் வாபஸ்' என்றும் எழுதுகின்றன. நாட்டின் நலனுக்கென்று உண்மைச் செய்திகளை வெளியிடவேண்டும் என்ற அறிவாளிகளைக் கொண்ட பத்திரிகைகள் ஒன்றாவது கிடையாது. எல்லாம் பார்ப்பான் நலனுக்கே–பார்ப்பானுடைய ஆதரவிலேயே–பார்ப்பனர்களாலேயே நடத்தப்படுவதால் பித்தலாட்டமும், பொய்யும், புளுகும், லம்பாடித்தனமுமாகவே நடந்துகொள்கின்றன.

இதனால் நம் நாட்டின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வழியின்றிப் போய் விடுகின்றது. இப் பத்திரிகைகள் அத்தனையும், நம் நாட்டை வடநாட்டவர்களுக்குக் காட்டிக்கொடுப்பவைகளாகத்தாம் உள்ளன.

[காஞ்சியில், 30-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-8-1955]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

தமிழ்நாட்டில், வடநாட்டு மொழி எப்படித் தேசியமொழி ஆகும்? அதைப்போல், தமிழ்நாட்டில் வடவரின் ஆட்சிக் கொடி எப்படி ஆட்சிக் கொடி ஆகும்? தமிழ்நாட்டின் ஆட்சிக் கொடி வேறு; இன்றுள்ள வடவரின் ஆட்சிக் கொடி வேறு.

அது வடநாட்டுக்கு ஆட்சிக் கொடியாகலாம்; எங்களுக்கு அக்கொடி ஒரு கையகலத் துணிதானே? கை அகலக் கந்தல் துணிக்குள்ள மதிப்பைத்தானே நாங்கள் கொடுப்போம்!

பாரத மாதா கொடி, பாரத நாட்டின் கொடி என்றால் அது வடநாட்டைப் பொறுத்த மட்டும்தான். நாங்கள் அதற்கு மதிப்புக் கொடுக்கத் தேவையில்லை; அதனிடத்தில் நாணயமிருந்தால், உண்மையான நேர்மை இருந்தால் மதிப்புக்கொடுக்கத்தான் வேண்டும். அதன் அந்தஸ்து அதனிடத்து உள்ள உயரிய குணத்தைப் பொறுத்துத்தான் உள்ளது. ஏன்? மனிதனுக்கு அந்தஸ்து எப்படி உயருகிறது? அவனிடம் உள்ள நேர்மை, உயரிய குணம், அறிவு ஆண்மையைப் பொறுத்துத்தானே உள்ளது? இவைகள் இல்லையேல் அவன் வெறும் அடிமுட்டாள், மடையன் என்றுதானே பொருள்? இப்படித்தானே இன்றைய அரசாங்கக் கொடி? ஏன், இன்றைய ஆட்சியாளர்களே அப்படி உள்ளதைப் பார்க்கின்றோம்.

காங்கிரஸ்காரர்கள் என்றால் தாய்நாட்டுப் பற்று, தாய்மொழிப் பற்று, தன்மான உணர்ச்சி, சுயஅறிவு இவைகளை எல்லாம் தத்தம் செய்தாகவேண்டும்! நாம் கேட்பது நம்முடைய நாட்டை. நம் நாட்டில் அன்னிய மொழி கூடாது என்று நான் மறுக்கிறேன்.

[திருவல்லிக்கேணியில், 31-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-8-1955

## 7. கம்யூனிஸ்டுகளும், கொடி எரிப்பும்

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

கம்யூனிஸ்டுகளை எடுத்துக்கொள்வோம். உலகத்தில் அறிவு பிறக்குமிடம் அங்கே தான் உள்ள தென்பார்கள்; அறிவாளிகளை உற்பத்தி செய்யுமிடம் அதுவே என்பார்கள்.

ஆனால், நம் நாட்டுக் கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தமட்டிலும் அத்தனையும் பொய் யாகிவிட்டது. பெரும் அயோக்கியர்களையும், பித்தலாட்டக்காரர்களையும், கலகக்காரர் களையும், கொள்ளை, கொலையைத் தூண்டிவிடும் அராஜகச் செயல் கொண்டவர்களையும் கொண்டுள்ளது, இந் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி என்று மெய்ப்பிக்கிறார்கள். அப் பேர்ப் பட்டவர்களிடமிருந்து வரும் பதில், 'குமரன் காப்பாற்றிய கொடி அல்லவா? அதை எப்படி எரிப்பது?' என்கிறார்கள்.



குமரனுக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை. குமரன் இந்தக் கொடியினையா காப்பாற்றினார்? குமரன் காலத்தில் எந்த மூலையில் இவர்கள் கிடந்தார் களோ, தேடிப் பிடிக்கவும் முடியாதே? குமரன் காலத்தில் இந்தக் கொடி கர்ப்பத்தில் கூட இருந்திருக்காதே? சுதந்திரம் வரும் என்று நினைத்தது யார்? இந்தக் கொடி ஆட்சிக் கொடியாக வரும் என்று கனவிலும் நினைத்தவர் உண்டா? அப்படி இருக்க குமரனுக்கும், இந்தக் கொடிக்கும் என்ன சம்பந்தம்?

குமரன் ஒருவன் உயிர்விட்டுக் காப்பாற்றிய கொடி இதுவானால், தாளமுத்து—நடராசன் என்ற இருவர் உயிர் விட்டது, இந்திக் கிளர்ச்சிக்காக வல்லவா? குமரன் ஒரு ஆள்; எங்களில் இருவர்கள் பலியானோம்! இதை யார் இன்றைக்குக் கூறுகிறார்கள்?

குமரன் காப்பாற்றியதால் அந்தக் கொடியை எரிக்க முடியாதா? அந்தத் துணியென்ன அவ்வளவு அழுக்குப் படிந்த கந்தல் துணியா? மண்ணெண்ணெய் ஊற்றினால் இன்னும் சிறிது நேரம் கொழுந்து விட்டு எரிகிறது! அல்லது அந்தக் கொடி வாட்டர் புரூஃப் துணியைப் போல் ஃபயர் புரூஃப் துணியால் செய்யப்பட்டதா?

ஒரு உருண்டைக் களிமண் பிள்ளையார் ஆன சங்கதி தானே–முழத் துணி அரசியல் கொடி ஆனது? மண்ணுக்குள்ள மதிப்புத்தானே, பிள்ளையாருக்கு என்பதை நிரூபித்தோம். அதைப்போல், முழக் கந்தல் துணிக்குள்ள மதிப்புத்தான், உன் கொடிக்கு என்பதையும் நிரூபிக்கிறோம்.

ஆனால், பிள்ளையார் பெயரைக் கூறிச் சுரண்டி வாழும் உனக்கு பிள்ளையார் தெய்வமாகத் தோன்றலாம். அதைப்போல், இக் கொடியால் உனக்குச் சவுகரியம் அடைய வசதி இருப்பதனால் உனக்குப் பெரிதாகத் தோன்றலாம். குமரன் காத்து வளர்த்த பாரத மாதா கொடி என்று எது வேண்டுமானாலும் கூறலாம். அதைப்போலத்தானே, இராமா யணமும், இராமனும், சீதையும் மற்றும் பதிவிரதைகளும் கூறப்பட்டனர்? அவர்கள் வண்டவாளங்களே வெளிப்படுகையில் இக் கொடியைக் கொளுத்துவது பெரிய காரியமில்லை.

[திருவல்லிக்கேணியில், 31-7-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 5-8-1955]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

நேரு அவர்கள், கடைசிக் கூட்டத்தில், கொடி கொளுத்துவதாகச் சொன்னவர்களைப் பற்றி மிகவும் துடுக்காகப் பேசி இருக்கிறார். அவருடைய பைத்தியக்காரத்தனமான காரியங்களில் இதுவும் ஒன்றாகும். கொடி எரிப்பதைப்பற்றிப் பேசினதின் கருத்தெல்லாம்—திராவிடக் கழகத்தாரை வையவேண்டும், மிரட்டவேண்டும் என்பதைத் தவிர, அதில் அவசியமோ, அறிவுடைமையோ என்ன இருக்கிறது?

கொடி கொளுத்துவதாகச் சொல்லப்பட்டவுடன் குறிப்பிட்ட தேதிக்குள்ளாகவே இவ் விஷயம் ஏதோ ஒரு அளவுக்குச் சமரசமாக முடிந்துபோன பிறகு—அதை மறுபடியும் சர்க்கார் தரப்பிலேயே ஏன் கிளப்பவேண்டும்? கிளப்புவது மாத்திரமல்லாமல் ஏன் பேச வேண்டும்? இது, கொளுத்துகிறதாகச் சொன்னவர்களைத் தூண்டிவிடுகிறதுபோலும், அவர்களுக்கு ஆத்திரமூட்டுவதுபோலும் நினைக்கிறது என்பதே தவிர, வேறு என்ன சொல்ல முடியும்? இதிலிருந்தே இந்த அரசாங்கத்தை ஏதாவது மிரட்டவேண்டுமானால் கொடி கொளுத்துகிறோம் என்று சொல்லுவதே போதுமானது என்று தெரிகிறதா, இல்லையா?

கொடியைப்பற்றிப் பிரமாதப்படுத்தியதும், அதை எரித்தால் உலகத்தையே சுட்டெரித்துவிடுவதாக வீரப் பிரதாபம் பேசுவதும் வெறும் வீண்பேச்சே தவிர, மற்றபடி கொடியை எரித்தால் இவர்களால் என்ன செய்துவிடமுடியும்? செய்வதற்கு இவர்கள் கையில் என்ன சரக்கு இருக்கிறது? அரசியல் சட்டத்திலாகட்டும், கிரிமினல் பீனல்கோடி

படிப்பகம்

www.padippakam.com



லாகட்டும்—கொடிக்கு என்ன மரியாதை இருக்கிறது? அதை எரிப்பதற்கு என்ன தண்டனை இருக்கிறது? அதைச் சொல்லாமல் சும்மா வீரப் பிரதாபம் பேசுவதில் பலன் என்ன? இன்ன காரியம் செய்தால் இன்ன குற்றமாகும் என்பது ஒருவனுக்குத் தெரிந்தால் தானே, அந்தக் காரியத்தை ஒருவன் செய்யாமல் இருக்கமுடியும்? வீண் பூச்சாண்டி காட்டுவதைக் கொண்டு யார் பயப்படுவார்கள்? அதிகாரம் தங்கள் கையில் இருக்கிறது; ஆதிக்கம் தங்கள் கையில் இருக்கிறது; ஆதலால் எதையும் பேசலாம் என்பதே தவிர, மற்றபடி இதில் என்ன நியாயமோ நேர்மையோ இருக்கிறது?

கொஞ்சநாளைக்கு முன்பு சட்டசபையில் பண்டித நேருவைப் போலவே ஒரு வீரர் பேசினார். அதாவது. 'வேறு எது செய்தாலும் நான் சும்மா இருப்பேன்; இராமனையோ, சீதையையோ குறைசொன்னால் கொன்றுபோடுவேன்' என்பதாகப் பேசினார். அதற்கும் பண்டித நேரு அவர்கள் பேச்சுக்கும் என்ன வித்தியாசம்?

உலகத்தையே படைத்ததாகக் கூறப்படும் கடவுள்களே எங்களிடம் அகப்பட்டுத் திண்டாடும் நேரத்தில் உன் அரசாங்கக் கந்தல் துணியாகிய கொடி எம் மாத்திரம்? அதன் யோக்கியதை தெரியாதவர்கள் அதைத் தலையில் தூக்கிக்கொண்டு ஆடலாம். அதன் பித்தலாட்டம் தெரியாத மூடர்கள் அதைத் தாயின் மணிக்கொடி—புனிதத் தன்மை கொண்ட பாரத மாதாவின் கொடி என்றெல்லாம் புகழலாம். அக் கொடியின் பெயரைக் கூறி வயிறு வளர்க்கும் சோம்பேறிகளும் எல்லா அயோக்கியத்தனங்களும் துணிந்து செய்ய முற்படுப வர்களும் அதை வானளாவப் புகழ்ந்து பேசலாம்.

ஆனால், அதன் யோக்கியதை என்ன என்று தெரிந்த நாங்கள், மற்றவர்களுக்கும் அதன் யோக்கியதையை வெளிப்படுத்த முற்படுகிறோம்; தாயின் மணிக்கொடியின் அந்தஸ்து-கந்தல் துணிக்குள்ள அந்தஸ்துகூடக் கிடையாது என்ற உண்மையை வெளிப் படுத்துகிறோம். ஒளிவு மறைவாகச் செய்வதாகக் கூறவில்லை; யாருக்கும் தெரியாமல் வீட்டுக்குள் கொளுத்துவதாக 'அண்டர் கிரவுண்ட்' வேலை செய்யவில்லை; பகிரங்கமாக முச் சந்திகளில் கொளுத்துகிறோம்; தெருக்களில் கொளுத்துகிறோம்; அவரவர் வீட்டின் முன் பலபேர் அறியக் கொளுத்துகிறோம் என்று அரசாங்கத்துக்குத் தெரிவித்தோம். தெரிந்தவுடன் உன்னால் என்ன செய்ய முடிந்தது?

கொடியைக் கொளுத்தினால், நாடே அழிந்தாலும்—கொடியைக் கொளுத்தவிட மாட்டேன் என்றாயே! பாட்னாவில் மாணவர்கள் எரித்தார்கள்; என்ன செய்தாய்? உன் வீரப் பிரதாபம் அப்போது எங்கே போனது? அப்படி இருக்க, நாங்கள் எரித்தவுடன் என்ன செய்துவிடுவாய்? உன்னையே எவனோ ஒருவன் அடிக்க வந்தான் என்று பத்திரிகையில் எல்லாம் செய்தி பறந்ததே! அவனை உன்னால் என்னசெய்ய முடிந்தது?

[திருச்சியில், 8-10-1955-ல் சொற்பொழிவு—'விடுதலை' 12-10-1955]

# 5. இராமன் பட எரிப்பு

## 1. நமது போராட்டம்

ஆத்திகப் பிரச்சாரமும், பக்திப் பிரச்சாரமும் செய்யும் பார்ப்பனத் தலைவர் திரு. இராஜாஜி அவர்கள் 'இராமன் கடவுள் அல்லன்; அவன் ஒரு வீரன்' என்று 'சக்ரவர்த்தித் திருமகனார்' என்ற தமது கட்டுரையில் தெளிவாக எழுதி இருக்கிறார்.

சங்கராச்சாரியாரும், 'இராமன் கடவுள் அல்லன்; ஓர் ஆதர்சன புருஷன்; மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்தவன்' என்று கூறி இருக்கிறார்.



காலஞ்சென்ற மறைமலை அடிகள், டி. கே. சி, திரு. வி. க, வி. பி. சுப்பிரமணிய பிள்ளை, பி. சிதம்பரம் பிள்ளை முதலிய புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள் 'இராமன் கடவுள் அல்லன்; இராமாயணம் கடவுள் கதை அல்ல' என்று கூறி இருக்கிறார்கள்.

வால்மீகியும் தனது இராமாயண இலக்கியத்தில்: 'இராமன் பெண்ணைக் கொன்ற வன்; பெண்ணை மானபங்கப்படுத்தியவன்; மறைந்திருந்து எதிரிகளைக் கொன்றவன்; துரோக காரியங்களுக்கு உடந்தையாக இருந்தவன்' என்றெல்லாம் கூறி இருக்கிறார். இவ்வளவுதானா?

காந்தியாரே, 'நான் போற்றும் இராமன், இராமாயண இராமன் அல்ல, அல்ல' என்றும், 'காட்' (God), என்று சொல்லும்படியான உருவமற்ற, பெயர்ச்சொல் அல்லாத—அதாவது, ஒரு வஸ்து அல்லாத சர்வ சக்தியான இராமன்' என்றும் கூறி இருக்கிறார்.

ஆகவே, நானும், இராமாயணப் பாத்திரங்களில் ஒன்றான இராமாயண இராமனிடம், கடவுள் இலட்சணப்படி ஏதாவது கடவுள் தன்மையோ, ஒழுக்கமோ, நாணயமோ, சாதாரண அறிவோ இருக்கின்றதா என்றும்; இல்லாவிட்டாலும் துரோகம், வஞ்சகம், பேடித்தனம், பேராசை, மதுவருந்தல், புலால் உண்ணல், உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசுதல் முதலிய கூடாஒழுக்கக் குணங்கள் என்பவைகளாவது இல்லாமல் இருக் கிறதா என்றும் துருவித்துருவிப் பார்த்து, இல்லை என்ற முடிவுக்கே வந்திருக்கிறேன்.

ஆகவே, அப்படிப்பட்ட ஒருவனை மக்கள் கடவுளாக, வழிகாட்டியாக, பிரார்த்தனை, பக்தி செலுத்தத் தக்கவனாகக் கருதக்கூடாது என்பதற்காகவே—'இராமாயண இராமனைக் கொளுத்துங்கள்' என்கிறேன்.

'இம் மாதிரிக் குணங்கள்' இல்லாத இராவணன் கொளுத்தப்பட்டான்; ஆண்டு தோறும் கொளுத்தப்படுகிறான்!

இந்த இராவணன்மீது சுமத்தப்படுகிற ஒருதலைப் பட்சமான—மறைமுகமான குற்றங்களைவிடப் பன்மடங்கு தெளிவான, பிரத்தியட்சமான குற்றங்கள் புரிந்த இராமனைப் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்காக ஏன் கொளுத்தக்கூடாது?

['விடுதலை'-தலையங்கம்—27-7-1956]

## 2. நேர்மையான எதிர்ப்பு இல்லை

திராவிடர் கழகம் இராமன் உருவத்தை எரிப்பது பற்றி இன்றுவரை நேர்மையான—வாத முறைக்கு ஏற்ற எதிர்ப்பு ஒன்றுகூடக் காணப்படவில்லை.

நான் மதிக்கத்தக்க இரண்டு நபர்களிடமிருந்து இராமன் உருவம் கொளுத்தப்படக் கூடாது என்று ஒரு வேண்டுகோள்—அதாவது, ஒருவகை 'எதிர்ப்பும்'; கொடி கொளுத்து வதைத் தடை செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் மற்றொரு வகை 'எதிர்ப்பு' ஒன்றும்—ஆக இரண்டு எதிர்ப்புகளைப் பத்திரிகையில் பார்த்தேன்.

இந்தக் கனவான்கள் எனது மரியாதைக்கு உரியவர்கள் ஆவார்கள். இவர்களில் எம்.எல்.ஏ. ஒருவர். இவர் மக்கள் பிரதிநிதி உரிமை கொண்டவர். மற்றொருவர் ஒரு மடாதிபதி ஆவார்கள். இவர்கள் இருவரும் யார் என்றால் வரதராஜுலு நாயுடு அவர்களும், குன்றக்குடி மடாதிபதிகளுமாவார்கள்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களைப்போல் சட்டசபையில் இரு நூற்றுக்கு மேற்பட்ட பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் டாக்டர் நாயுடுவைத் தவிர, மற்றவர்கள் யாரும் எந்தவித மறுப்பையும் முணுமுணுப்பையும் கூடக் காட்டவில்லை என்பது மாத்திர மல்லாமல், பல சட்டசபை மெம்பர்கள், பார்லிமெண்ட் மெம்பர்கள் ஆகியவர்கள் கமிட்டிக்

படிப்பகம்

www.padippakam.com



கூட்டத்திலிருந்து படம் கொளுத்துவதை ஆதரித்து இருக்கிறார்கள். மதப் பிரதிநிதிகளில் குன்றக்குடி சுவாமிகள் ஒருவர்தான் தனது எதிர்ப்பைக் காட்டி இருக்கிறாரே தவிர, மற்றபடி எந்த மடாதிபதியும் எரிப்பைப்பற்றி ஓர் ஆட்சேபணையோ, அதிருப்தியோகூடக் காட்டவில்லை.

பிள்ளையார் உடைப்புக்கு வெளிப்படையாகக் காட்டப்பட்ட எதிர்ப்புகளில் 100-ல் ஒரு பங்குகூட இதில் காணப்படவில்லை. இராமன் என்கிற 'கடவுளால்' சொந்தத்தில் பயன்பெறும் பார்ப்பனர்களில் எவரும்கூட வாய்திறக்கவில்லை.

டாக்டர் நாயுடுவின் எதிர்ப்புக் காரணங்கள் எவராலும் மதிக்கத் தகுதியற்றதாகும். மற்றும், அந்த எதிர்ப்பில் அரசியல் வாசனைதான் காணப்படுகிறதேயன்றி, சீர்திருத்த இயல் உணர்ச்சி காணப்படவில்லை.

மடாதிபதி அடிகளாரும் ஒரு மடத்தின் அல்லது மதத்தின் அதிபதியாக, பிரதிநிதியாக இருப்பவர். இப்படிப்பட்ட சீர்திருத்தக் காரியத்திற்கு அரசாங்கத்தை நாடினால் மதம், கடவுள் காப்பாற்றப்பட்டுவிடுமா என்பதும் எனக்கு விளங்கவில்லை. அவரது எதிர்ப்பில் தைரியமோ, உண்மையோ இருந்தால் மக்களை அணுகவேண்டியது பயனளிக்கும் காரியமாகும்.

நான், இராமன் படத்தை எரிக்க ஆசைப்படுவதானது—இராமன் கடவுள் என்று கருதப்படுவது ஒழியவேண்டும் என்கின்ற கருத்தின்மீது அல்லாமல், வேறு ஒரு உள் கருத்தும் கொண்டு அல்ல. அப்படி ஏதாவது இருப்பதாக எதிர்ப்பவர், மற்றும் யாரும் இதுவரை சொல்லவில்லை.

நான் ஒரு 'புரட்சிகரமான' சமுதாய சீர்திருத்தவாதி. அதற்கே என் உடல், பொருளை ஒப்படைத்துவிட்டு, ஆவியையும் ஒப்படைக்க வாய்ப்புக்காகக் காத்திருக்கிறேன். அதோடு கூடவே, என் தொண்டுக்கு அறிவையும் ஆராய்ச்சியையுமே அடிப்படையாய்க் கொண்டு இருக்கிறேனே அல்லாமல், மதவாதிகள், மதத் தலைவர்கள்போல் வெறும் நம்பிக்கையையும், மூட மக்கள் மரியாதையையும், சர்க்காரிடம் தஞ்சமடைவதையும் அல்ல.

என்னோடு போராட்டத்திற்கோ, எதிர்ப்புக்கோ வருபவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி விஷயங்களில் எப்படி நடந்துகொண்டாலும்—அறிவு ஆராய்ச்சித் தன்மையைச் சிறிதளவாவது ஆதாரமாய்க்கொண்டு பிரவேசிக்க வேண்டியது நேர்மையான எதிர்ப்புக்கும் பண்புக்கும் ஏற்ற காரியமாகும்.

நான் இராமன் படத்தை (உருவத்தை)க் கொளுத்த வேண்டுமென்பதற்கு ஏராளமான இராமன் சம்பந்தப்பட்ட நூல்களை ஒரு தடவைக்கு 100 தடவை படித்து ஆராய்ந்து பார்த்ததோடு, சுமார் 30, 40 ஆண்டு ஆராய்ச்சியில் கழித்துவிட்டு, ஆயிரக்கணக்கான கூட்டங்களில்—கோடிக்கணக்கான மக்களிடம் பேசி மெய்ப்பித்துவிட்டு, பல புலவர்களையும், கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் என்பவர்களையும் ஏற்கச் செய்துவிட்ட பிறகு தான் கொளுத்தச் செய்கிறேன்.

மற்றும், 1922-ல் காங்கிரஸ் மாநாட்டில் இராமாயணத்தைக் கொளுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு, 1925 ஆம் ஆண்டு முதல் இராமாயண் ஆராய்ச்சி என்னும் பேரால் அனேகக் கட்டுரைகளை எனது 'குடிஅரசு' 'பகுத்தறிவு', 'திராவிடன்', 'விடுதலை' ஆகிய வார, மாத, தினசரி பத்திரிகைகளில் வெளியாக்கி, கோடிக்கணக்கான மக்களைப் படிக்கச் செய்து, 4-அணா, 2-அணா, 1-அணா, ½-அணா விலையுள்ள புத்தகங்களாக 10 ஆயிரம், 20 ஆயிரம் கணக்கில் வெளியிட்டு, மக்களிடம் விற்றுவிட்டுக் கொளுத்த வந்திருக்கிறேன்.

மற்றும், எரிப்பது பற்றி 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே சேதி வெளியிட்டும், பல இடங்களில் எரிக்கப்பட்டும் இருக்கின்றன.



இவ்வளவு ஆதாரத்தின் மீதும், பலத்தின் மீதும், ஆமோதிப்பின் மீதும் நடத்தப்படுகிற ஒரு காரியத்தை ஒரே வார்த்தையில் 'வேண்டாம்' என்றும், 'தடை செய்' என்றும் பொறுப்புள்ள மரியாதையுள்ள இரு பெரியார்கள் சொல்லிவிடுவது என்றால், இதில் எப்படி நம் கருத்தைக் கூறாமல் இருக்க முடியும்? மற்று வேறு யாராவது இருந்தால் நான் இவ்வளவு இலட்சியம் செய்யமாட்டேன்.

நான் இராமனைக் கொளுத்த, பல காரணங்கள் ஆதாரத்துடன் சொல்லிவிட்டுக் கொளுத்துகிறேன். அந்த ஆதாரங்களை இதுவரை யாரும் மறுத்துக் கூறவில்லை.

டாக்டர் நாயுடு அவர்களும், 'சுவாமி'களும் கொளுத்துவதில் தங்களுக்குச் சிறிதாவது அதிருப்தி இருக்குமானால், அதை அவர்கள் 'வேண்டாம்' என்றும், 'தடை செய்' என்றும் எழுதுவதன் மூலம் நீதியாக நடந்துகொண்டவர்களாக ஆகிவிடமாட்டார்கள்.

என் உள்கருத்தையறிந்து நான் சொல்லுங் காரணங்களை,—காட்டும் ஆதாரங்களை எடுத்துத் தலைப்பில் காட்டி, அதை மறுத்து அல்லது சமாதானம் சொல்லி—'கொளுத்த வேண்டாம்; கொளுத்துவது தப்பு' என்று சொல்லுவது எதிர்ப்புப் பண்பாகும்; நமக்கும் உதவி செய்ததாகும். அப்படியில்லாமல் 'மக்கள் மனம் புண்படும்' என்பது, மக்கள் பிரதிநிதியாக வேண்டும் என்பவருக்குத்தான் கவலைப்படத் தக்கதாகுமே தவிர, மக்களை மூடத்தனத்தில் இருந்து—அதனால் ஏற்பட்ட இழிவிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்பவனுக்கு 'மக்கள் மனம் புண்படுவது' என்பது மதிக்கத் தக்கதாகுமா?

போகட்டும்; டாக்டர் நாயுடு அவர்களுக்காவது என்னளவு ஆராய்ச்சி இருக்க அவசியமிருக்காது. அவர் முதலாவதாக ஓர் அரசியல்வாதி; இரண்டாவதுதான் அவருக்குச் சமுதாயம். ஆனால், 'சுவாமி'கள் அப்படியல்லர்; அவர்கள் எவ்வளவோ நூல்கள், மத சம்பந்தமான புராண இதிகாசங்கள், மக்கள் வரலாறுகள் ஆகியவைகளைப் படித்து ஆராய்ச்சி செய்து, உண்மை கண்டிருக்கவேண்டியவராவார்கள். அவர்கள் உண்மையில் சமய மக்களால் அந்தப்படி கருதப்படத் தக்கவர் ஆவார். அப்படிப்பட்ட அவர்கள் நான் கூறிவருகிற காரணங்கள் ஒன்றுக்குக் கூடச் சிறிதளவு சமாதானமும் கூறாமல், 'கொளுத்துவது தவறு' என்று கூறினால் அது எப்படி மதிக்கத் தக்கதாகும்? இப்போதும் சொல்லுகிறேன்:

'இராமன் கதை நடந்ததல்ல; சரித்திர சம்பந்தமானதல்ல; நீதிக்கோ படிப்பினைக்கோ ஏற்றதல்ல. ஆரியர்களுக்கு—பார்ப்பனர்களுக்குத் திராவிடர்கள் மீது (தென் இந்திய மக்கள்மீது) ஏற்பட்ட துவேஷம், பொறாமை, வஞ்சக எண்ணம் ஆகியவை பெற்ற பிள்ளைதான் இராமாயணக் கதை' என்று சொல்லுகிறேன். இராமாயணம் முதலிய ஆதாரங்களும், இராமன் முதலிய கடவுள்களுமேதான் டாக்டர் நாயுடுகாரு, 'சுவாமி'கள், நான் உட்பட அனேக கோடித் தென் இந்தியப் பழங்குடி மக்கள்—கீழ்சாதியாய், இழிபிறப்பாய் ஆக்கப்பட்டதோடு, 3000 ஆண்டுகளாக இன்னும் இருக்கச் செய்து வருவதற்குக் காரணமாகும்.

இதை ஒழிக்க டாக்டர் நாயுடு அவர்களும், 'சுவாமி'களும் செய்த, செய்துவருகிற, செய்யப்போகிற காரியங்கள் யாவை?

பார்ப்பான் அயோக்கியன் என்று சொல்லுவது மாத்திரம் போதுமா? ரோஷம், மானம் இல்லாதவனை வைவதற்கும், செத்த பாம்பை அடிப்பதற்கும் என்ன பிரமாதமான பேதம் இருக்க முடியும்?

இப்பவும் காலம் தாண்டிவிடவில்லை. இராமன் சங்கதி எப்படியோ போகட்டும். இதுபோன்ற மற்ற 'கடவுள்'களுக்காவது இந்தக் கதி வராமல் இருக்க விரும்புகிறவர்களானால் அவற்றின் ஆதாரங்களில் இருந்து—அதுவும் இப்பெரியார்கள் மதிக்கும் ஆதாரங்

படிப்பகம்

www.padippakam.com



# 9. 'தமிழ் நாடு' பெயர் மாற்றப் போர்

## 1. அபாயச் சங்கு

சாதாரணமாக இன்று நம் நாட்டில் நடந்துவரும் பார்ப்பன (ஆரிய ஆதிக்க) பாதுகாப்புத் தீவிர முயற்சியானது நாமறிய சுமார் 60, 70 ஆண்டுகளாக நடந்திருக்காத அளவில் வெகு வேகமாகவும் வெகு தீவிரமாகவும், மிக்க பரவலாகவும் நடந்து வருகிறது. இம் முயற்சிக்குத் தமிழ் நாட்டில் உள்ள எல்லாப் பார்ப்பனர்களும் கட்டுப்பாடாக ஒற்றுமையாக ஒரே மூச்சாக முனைந்து நின்று பாடுபடுகிறார்கள்.

அரசியல் வேஷம் போட்டுக்கொண்டு இராஜாஜி 'தர்மங்களைக் காக்கப்போகிறேன்; தனி மனிதனின் உரிமையைக் காப்பாற்றப் போகிறேன். இத் துறைகளில் மக்களுக்கு முழுச் சுதந்திரமும் தேடித் தருவதே எனது ('சுதந்திரா') கட்சியின் நோக்கம்' என்று வெளிப்படையாகவே சொல்லிக்கொண்டு ஆகா வழிகளையும், வாழாவெட்டிகளையும், வாழ்வில் வழுக்கி விழுந்தவர்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு பெரும்போராட்டம் நடத்தத் துணிந்துவிட்டார். அவருக்கு காந்தியாரால் ஏற்பட்ட செல்வாக்கு இதற்குப் பெரும் ஆதரவளிக்கிறது என்பதுடன் பார்ப்பனர்—அவர்களது பத்திரிகைகள் பெரும் ஆதரவு தருகின்றன.

அடுத்தாற்போல், வைதீக முறையில் அடியோடு எல்லாப் பார்ப்பனர்களும் சேர்ந்து அரசாங்க அலுவலகங்களில்-பெரிய பதவிகளில் மாதம் ரூ. 3000, 4000 சம்பளம் வாங்கிக் கொண்டு உத்தியோகம் பார்த்து ஓய்வெடுத்து பென்ஷன் வாங்கிக்கொண்டு இருக்கும் பார்ப்பனர்களின் தலைமையில் ஊர்தோறும் வைதீக ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொண்டும் மாநாடு நடத்திக்கொண்டும் பெரும் பிரச்சாரங்கள் செய்து வருகிறார்கள்.

இவைதவிர, பார்ப்பன மடாதிபதிகள், சங்கராச்சாரி, மத்துவாச்சாரி, வைணவாச்சாரி ஸ்மார்த்தாச்சாரி முதலான எல்லா மடாதிபதிப் பார்ப்பனர்களும் தினமும்—நாள்தோறும் ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து, ஆங்காங்குள்ள பார்ப்பன அதிகாரிகளைக் கண்டு ஆள் சேர்க்கச் செய்தும் பணம் சேர்த்துக் கொடுக்கச் செய்தும் இமாலயப் பிரச்சாரம் செய்து, ஆரிய வைதீகக் கருத்துக்களைப் புகுத்திப் பார்ப்பனருக்குப் பொருளாதார உதவி, கல்வி உதவி ஆகியவைகளை அளித்தும் வருகிறார்கள்.

இவையெல்லாம் தவிர வெள்ளையன் போனபின்பு வியாபாரத் துறையிலும், தொழில் துறையிலும், பஸ் நடத்தும் துறையிலும் பிரவேசித்துக் கோடீஸ்வரர்களான பார்ப்பனப் பிரபுக்கள், ஆச்சாரியார் முயற்சி முதல் மற்ற எல்லாப் பார்ப்பனர் முயற்சிகளுக்கும் ஏராள மான பொருள் உதவி, வேலை உதவி, மற்றும் ஆள் மாகாண உதவி முதலியவைகள் செய்து, ஆதரித்து, உற்சாகப்படுத்தி, ஊக்குவித்து, பிரச்சார காரியங்கள் நல்லபடி நடக்கச்செய்து வருகிறார்கள்.

மற்றும் மத்திய, மாகாண ஆகிய இரு சர்க்கார் அலுவலகங்களிலும் குறிப்பாகத் தபால், ரயில், சுங்கம், வருமான வரி, அக்கவுண்டஸ், அய்க்கோர்ட் இலாக்கா அலுவலகங் களிலும் பொறுப்பான பெரிய பதவிகளிலும் பார்ப்பனர்கள்—அதிலும் வைதீக வெறிப் பார்ப்பனர்களே குவிந்து கிடப்பதால், அவர்களும் கட்டுப்பாடாகத் தங்கள் இன உயர்வுக்குப் பாடுபடுவதிலும் இத் துறைகளில் நம்மவர்கள் தலையெடுக்கமுடியாதபடி அழுத்திவைத்தும் ஒழித்துக்கட்டுவதற்கு ஏற்ற கொடுமைகளைத் துணிந்து செய்வதுமான காரியங்களிலும் முனைந்து நிற்கின்றார்கள்.

மற்றும், பொதுவாழ்வில், அரசியலில் பிழைப்பை ஏற்படுத்திக்கொண்டு, யார் எந்தக் கட்சி தோன்றினாலும் அவர்களுக்கு விளம்பரமும் தேர்தலில் வெற்றியும் கொடுக்கக்கூடிய அளவுக்குப் பார்ப்பனர்கள் ஆதரவு தேவை இருக்கின்றபடியால், எல்லாக் கட்சிக்காரர்களும்



—காங்கிரசுக்காரர்களில் பெரும்பாலோர் உள்பட—பார்ப்பனர்கள் காலடியில் கிடந்து உழல வேண்டியவர்களாக இருப்பதால் சர்வ கட்சிகளும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவே இருந்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாகப் பார்ப்பனப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

பத்திரிகைகள் எல்லாம் பார்ப்பனர்களிடத்தில் இருப்பதாலும் திராவிடர்கள் நடத்தும் பத்திரிகைகளும் பார்ப்பனர்களுக்குப் பயந்து நடத்தப்படவேண்டி இருப்பதாலும் மேற்கண்ட பார்ப்பன ஆதிக்க வைதீக முயற்சிக் காரியங்கள் எதற்கும் எதிர்ப்பு நடத்த எந்தத் திராவிடனுக்கும் எந்த 'எதிர்க்கட்சி'க்கும் வசதியோ வாய்ப்போ இல்லாமல் போய் விடுவதோடு, வாழ வேண்டியவன்-வளர வேண்டியவன் ஆன மந்திரிகள் உட்பட எந்தத் திராவிடனும் வைதீகப் பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்க வேண்டியவனாகவே ஆகிவிடுகிறான்.

திராவிட நாட்டில் திராவிடர்களுக்குச் செல்வாக்கு இருக்கும்படியான தன்மையில் திருந்திய திராவிட அரசர்களைக்கொண்ட அரசுகள் பல அண்மையில் இருந்தன. வெள்ளையன் போன உடனே 'அந்தப் பிராந்தியங்கள் அந்தந்த அரசுடனேயே சேர்க்கப் பட்டிருக்க வேண்டும். அந்தந்தப் பிராந்திய அரசுக்குப் பூரண சுய ஆட்சி உரிமைகள் வழங் கப்பட்டிருக்க வேண்டும்' என்று சுதந்திரம்—சுய ஆட்சி என்னும் பேரால்—அதிலும் ஒரு பெரும் மோசடியாக ஜனநாயகம் என்னும் பேரால் ஜனங்களோடு சம்பந்தமே இல்லாத ஒரு சாதி பிரிவுப் பார்ப்பனரே ஜனநாயகத்திற்கு மனுதர்மம் போல் சட்டம் செய்துகொண்டு, அச் சட்டப்படியான ஜனநாயக முறையில் சாதாரணத் தன்மையில் பார்ப்பானே—ஆரியனே ஆட்சித் தலைவனாக ஆகும்படியான நிலையில் ஆட்சி நடக்க வகை செய்துகொண்டதோடு, அக் கால முடி அரசர்கள் எல்லாம் பார்ப்பன அடி அரசுக்குச் சிப்பந்திகளாக ஆக்கப்பட்டு விட்டார்கள். இதனால் திராவிடர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமைக் குடிகளாகத்தான் என்றும் இருக்க வேண்டியதைத் தவிர ஆட்சியாளராக இருக்க முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

மற்றபடி, திராவிடர்களே பெருநிலக்கிழார்களாக இருந்த ஜமீன் மிட்டாதாரர்கள் எல்லோரும் ஒழிக்கப்பட்டு, அவர்கள் ஒரு சாதாரணக் குடியானவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள்.

இவர்கள் இரு கூட்டத்தினருக்கும் இருந்த பரம்பரைப் பெருமை பாத்தியதை—அதாவது தனிப்பட்டவர்களுக்கு இருந்த உரிமை அடியோடு—ஒருநாள் அய்ந்து பார்ப்பனர் கூடி 'சட்டம்' செய்து ஒரு வரி உத்தரவினால் பறிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், பார்ப்பனர்களையே பெரிதும் கொண்ட மடாதிபதிகள், அவர்களது உரிமைகள், செல்வங்கள், பெருமைகள் முதலியவை ஒரு சிறிதும் ஒரு துரும்பும் அசைக்கப் படவில்லை. அரசர்கள் ஒழிக்கப்பட்டதன் பயனாகத்தான், உஞ்சவிருத்திப் பார்ப்பனர்கள் ஒரே அடியாக சக்கரவர்த்தி—ஏகபோக சர்வாதிகார ஆட்சிக்குத் திடீரென்று எட்டிக் குதித்து சர்வ பவுமன் என்று சொல்லத்தக்க ஏக சக்ராதிபதிகளாக ஆகிவிட்டார்கள். இன்றைய ஆட்சிக்கு ஜனநாயகம் என்று பெயர் சொல்லப்பட்டாலும், வேசிக்குத் தேவதாசி என்று பெயர் வைக்கப்பட்டிருப்பதுபோல், என்றும் சர்வாதிகாரியாக ஒரு பார்ப்பானே இருந்து வரும்படியான ஆட்சித் தன்மைக்கு 'ஜனநாயகம்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விளக்கிச் சொல்லவேண்டுமானால், இன்றைய ஜனநாயகத்தில் ஒரு பார்ப்பான்தான் பிரதம (மந்திரி) ஆட்சி ஆளனாகவும் ஒரு பார்ப்பான்தான் பிரஸிடெண்டாக—ஆட்சி யாளனாக வரமுடியுமே அல்லாமல் இந்த இந்தியக் கூட்டாட்சி என்பது உள்ளவரையில் ஒரு தமிழனும் ஒருநாளும் ஆட்சிக்கு வரமுடியாது. தமிழன் சுதந்திர ஆட்சிக்கு வரும்வரை தமிழன், தமிழ்நாடு ஒருநாளும் சூத்திரத்தன்மையிலிருந்து, அடிமைக் குடியாய் இருப்பதி லிருந்து கடுகளவும் மாற்றமடைய முடியாது.



படிப்பகம்

www.padippakam.com



ஆகவே, இந்தப் பெருங்கேட்டிலிருந்து தமிழ்நாடும், தமிழனும் தப்பிப் பிழைத்து விடுதலை பெறவேண்டுமானால் இந்தியக் கூட்டாட்சி என்கின்ற பார்ப்பன ஏகபோக சர்வாதிகார ஆட்சியிலிருந்து விலகி, தமிழ்நாட்டைச் சுதந்திரத் தமிழ்நாடு ஆக ஆக்கிக் கொண்டாலன்றி, வேறு எக் காரணத்தாலும் எக் கிளர்ச்சியாலும் முடியவே முடியாது என்பதைத் தமிழ்மக்கள் உணரவேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன். தியாகம் என்பது சிறைத் தண்டனை அனுபவிப்பதுதான் என்று பலர் கருதிக்கொண்டு இருக்கிறார்கள். தியாகம் என்பது தன்னலமறுப்பு என்ற பொருளைக் கொண்டதாகும்.

தன்னலமறுப்பு என்பது தனது உயிரைப் பலிகொடுப்பது என்பதை இறுதியாகக் கொண்டதாகும்.

இப்படிப்பட்ட தன்னலமறுப்பு கொண்ட ஒரு ஆயிரம் வீரர்கள் முன்வந்தால்தான் தமிழ்நாடு சுதந்திரத் தமிழ்நாடாக ஆகமுடியும்.

இளைஞர்கள் இதை நல்லபடி சிந்தித்து முடிவுசெய்து கொண்டு செயலில் ஈடுபட வேண்டிக்கொள்கிறேன். சிந்திக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்பதற்கத்தான் இந்த அபாயச் சங்கை ஊதுகிறேன்.

['விடுதலை'–தலையங்கம்—13-5-1960]

## 2. தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கு வழி

சுமார் 3 கோடித் தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டிற்கு அதிகாரபூர்வமாக 'தமிழ் நாடு' என்ற பெயரில்லை.

ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் (States Re-organisation Commission) அறிக்கை வெளிவந்தவுடன் நான் பதறிப்போய், பெயரிடுவது பற்றி 12-10-1955-ல் 'விடுதலை'யில் அறிக்கை வெளியிட்டேன். (இது பின்னால் வெளியிடப்படும்.)

மக்களிடையே இக் கருத்துக்கு இருக்கும் செல்வாக்கைக் கண்டும், ஆட்சியாளர்கள் இதை நிறைவேற்றத் தவறியதையும் இந்த நாட்டு எதிர்க் கட்சிகள் என்பவைகள்–அதாவது தேர்தல் ஜனநாயகப் படுத்திக்கொண்டு, இன்றும் 'ஓட்டுப் பிழைப்பு'க்குப் பயன்படுத்தத் தங்களுக்குக் கிடைத்த நல்ல கருவி–சாதனம் என்பதாகக் கருதிக்கொண்டு பிரச்சாரம் புரிந்து வருகின்றனர். 'தமிழ்நாடு' என்று பெயர் வரவேண்டும் என்ற ஆசையைவிட, அப்படி மாறி விடக்கூடாது; மாறிவிட்டால் அந்த ஆயுதமும் பிடுங்கப்பட்டுவிடும் என்ற பயத்தால் அவதிப் படுகின்றனர். அந்த எண்ணமே அவர்களுக்கு அதிகம். மனதில் நினைப்பதை அப்படியே காட்டுவதற்கு, உடல் உஷ்ணத்தைக் காட்ட தெர்மா மீட்டர் கொண்டு அறிவதுபோல், கருவி ஒன்று இருக்குமானால், அதைவைத்து நான் கூறிடும் இந்த உண்மையை அறியலாம்.

அதிலும் இங்குள்ள 'காமராஜர் அரசாங்க எதிர்ப்புக் கட்சி'களைப் பொறுத்து இது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

காமராஜர் அரசாங்கம் இதை ஏன் செய்யவில்லை என்று கேட்பதைவிட காமராஜரோ அல்லது அவரது சக மந்திரிகளோ தாங்களே பார்த்து உடனே உத்தரவு போட்டு மாற்றும் சக்தி சட்டப்படி, அதாவது அரசியலமைப்புப்படி உண்டா? என்று கேட்பதுதான் நாணயமான காரியமாகும். ஆனால், அரசியல்தான் 'அயோக்கியர்களுடைய கடைசிப் புகலிடம்' ஆயிற்றே! அதிலும் இந்த அரசியல்வாதிகளிடம் நேர்மை நாணயத்தை எதிர்பார்ப்பது நமது தவறல்லவா?

இதோ இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது: ஷரத்து (Article 3)

பார்லிமெண்டு சட்டத்தினால், (அ) எந்த இராஜ்யத்திலிருந்தாவது ஒரு பிரதேசத்தைப் பிரித்தேனும், அல்லது இரண்டோ அதற்கு மேற்பட்ட இராஜ்யங்களையோ இணைத்தேனும் அல்லது எப் பிரதேசத்தையாவது ஒரு இராஜ்யத்தின் பாகத்தோடு இணைத்தேனும் புதிய இராஜ்யம் ஒன்றை அமைக்கலாம்.

(ஆ) எந்த இராஜ்யத்தின் பரப்பையும் பெருக்கலாம்;

(இ) எந்த இராஜ்யத்தின் பரப்பையும் குறைக்கலாம்;

(ஈ) எந்த இராஜ்யத்தின் எல்லைகளையும் மாற்றலாம்;

(உ) எந்த இராஜ்யத்தின் பெயரையும் மாற்றலாம்.

எனினும், இவற்றிற்கான எந்த மசோதாவும் இராஷ்டிரபதியின் சிபாரிசின் பேரில் அன்றியும் மசோதாவில் அடங்கிய பிரேரணை முதலாவது 'அ' பாகம் அல்லது 'ஆ' பாகத்தில் குறிப்பிட்ட எந்த இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் எல்லைகளையாவது அத்தகைய இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் பெயர் அல்லது பெயர்களையாவது பொறுத்திருக்குமாயின் அம் மசோதாவைக்கொண்டு வருவதற்கான பிரேரணையைப் பற்றியும், அதன் ஷரத்துக்களைப்பற்றியும் அந்த இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் ஒவ்வொன்றின் சட்ட மன்றத்தினுடைய கருத்துக்களை இராஷ்டிரபதி கேட்டறிந்துகொண்டால் அன்றியும் பார்லிமெண்ட் சபை எதிலும் கொண்டுவரப்படலாகாது.

எனவே, பெயர் மாற்ற அதிகாரமும், சக்தியும் டெல்லி ஆட்சிக்கே உண்டு; அதிலும் இந்நாட்டு அரசாங்க சட்டசபைகள் கருத்துத் தெரிவித்தாலும் 'இராஷ்டிரபதியோ' அல்லது பார்லிமெண்டு சபைகளோ அதற்குக் கட்டுப்படவேண்டும் என்ற நியதி அரசியலமைப்பில் இல்லையே!

ஆகவே, இதற்காகத் தமிழ்நாட்டு அரசாங்கத்தோடு முட்டிக்கொள்ளுவதைவிட இந்த அநீதிக்குக் காரணமான ஆதிபத்திய டெல்லி ஆட்சியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதுதானே அறிவுடைமை!

எனவே, தாய்த் திருநாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரில்லையே என்று கொதிக்கும் உள்ளங்கொண்ட இளைஞர்களே! தோழர்களே! புலவர்களே! பெருமக்களே! எழுத்தாளர்களே! பேச்சாளர்களே!

நாடு பிரிவினையைத் தவிர வேறு வழி உண்டா? என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். நேர்மை விடை காணுங்கள். உண்மையில் நாட்டின் பெயர் மாற்றத்தில் யாருக்காவது நாணயமான கவலை இருக்குமானால் ஜூன் 5-ல் இந்திய யூனியன் படத்தை ஒரு கையிலும், தீப்பந்தத்தை மறு கையிலும் தூக்கி ஊர்வலம் வந்து டெல்லி ஆதிக்க ஆட்சிக்குத் தீ மூட்டுங்கள்! தீ மூட்டுங்கள்! தீ மூட்டுங்கள்!

ஊர்வலம் வருவதில் யாருக்காவது வெட்கம், பயம் இருக்குமானால் அவரவர்கள் வீட்டின் முன் வாசலில் கொளுத்திவிட்டுப் பெயர்களைக் கொடுங்கள்.

['விடுதலை'–அறிக்கை—18-5-1960]

## 3. தேச படத்தைக் கொளுத்துங்கள்

அருமைத் தமிழ்ப் பெருமக்களே!

இந்திய யூனியன் ஆட்சி (டெல்லி ஆட்சி) இந்தி மொழியைத் தீவிரமாகப் பரப்ப 'கச்சையை' வரிந்து கட்டிக்கொண்டு தீவிரமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகிறது.

இந்திய அரசியல் சட்டத்தின் 343-வது ஷரத்து சொல்கிறது: 'யூனியனின் ராஜாங்க பாஷை தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட இந்தியாக இருக்க வேண்டும்' என்று.



படிப்பகம்

www.padippakam.com



களிலிருந்து 'இக் கடவுள்கள்' ஒழிக்கப்படவேண்டும் என்பதற்கு நான் எடுத்துக்காட்டுவதை ஆதாரக் காரணங்களோடு மறுத்துவிட்டு, 'உடைக்கவேண்டாம்; கொளுத்தவேண்டாம்' என்று கட்டளை இடட்டும் என்று பணிவாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி இல்லாவிட்டால், நண்பர் ஆச்சாரியாருக்கும், அனுகுண்டு 'சாமி'களுக்கும் 'மித்திரன்' 'இந்து' 'தினமணி' 'கல்கி' 'ஆனந்தவிகடன்', மகாலிங்கய்யர்களுக்கும், இப் பெரியார்களுக்கும் என்ன பேதம் என்று கேட்கிறேன்.

நான் தவறு செய்யலாம்; என் ஆராய்ச்சியும் 'குருடன் யானை கண்ட காட்சிபோல்' என்னைத் தவறான வழியில் இழுத்துவிட்டிருக்கலாம். அப்படி இருந்தாலும் அதில் அதிசய மிருக்காது. ஆனால், அதைத் திருத்துவது எப்படி? என்னைக் குறைகூறுவதும், என்னைத் தண்டிக்கச் செய்வதும் திருத்துவதாகிவிடுமா? காரியத்தை நிறுத்திவிடுமா? 1956 ஆம் ஆண்டில் இவை எளிதில் நடக்கக்கூடிய காரியமாகிவிடுமா? உண்மையில் பெருமையும், போற்றுதல் மரியாதையுமுள்ள இவர்கள் இப்படி நடந்துகொண்டால், அரசியல் பிரதிநிதித்து வத்திற்கும், சமயத் தலைமைக்கும் அறிஞர்களிடம் எப்படிப் பாராட்டுதலும் போற்றுதலும் கிடைக்கமுடியும்?

எனக்குக் கெட்டபெயர் வருவது பற்றியோ, எனக்குத் தண்டனை கிடைப்பது பற்றியோ, என் ஆவி பிரிவது பற்றியோ நான் சிறிதாவது இலட்சியம் செய்வதாயிருந் திருந்தால் நான் இந்தக் காரியத்தில் பிரவேசித்து இருக்கமாட்டேன். இப்படி நடந்து கொண்டவர்கள் கதியும், சரித்திரமும் பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்திருக்கிறேன் என்பதோடு, என்னைத் 'திருத்த' அறிவும், ஆராய்ச்சியும், அன்பும்தான் நல்ல வழியே யொழிய, இவை பயன்படாதது என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என் வாழ்நாளில் தமிழர்களுக்கு நீண்டநாளாக இருந்து வருகிற காட்டுமிராண்டித் தன்மையான 'கடவுள்–சமய'ப்பற்றும், பெரும்அளவுக்கு இருந்துவரும் 'இழிநிலை'யும் ஆகியவைகளில் கடுகளவாவது குறைந்தாலும் நான் வெற்றி பெற்றவனாவேன்.

மன்னித்தருள்க!

['விடுதலை'–தலையங்கம்—30-7-1956]

## 3. 'இராமனை'க் கொளுத்தியது குற்றமல்ல

'இராமன் கடவுள் அல்லன், இராமாயணக் கதையின் பாத்திரமான இராமன் ஒழுக்க முள்ள ஒரு யோக்கியனல்லன்' எனக் கருதுபவர்கள் யாரும், நாட்டு நன்மையை, சமுதாய சுயமரியாதையைக் கருதுபவர்கள் யாரும் இராமன் படத்தைக் கொளுத்தலாம்.

இந்த உரிமையை மக்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் ஆகஸ்ட் 1-ந்தேதி இராமன் படம் கொளுத்தும் கிளர்ச்சி நாளாகக் கொண்டாடத் தமிழ்நாட்டு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

அரசாங்கமும் நல்ல வாய்ப்பாக மக்கள் உரிமையில் பிரவேசிக்காமல் இராமன் படம் கொளுத்துவதன் பயனாய்க் குழப்பம், கலவரம், பலாத்காரம் ஏற்படக்கூடாது என்று கருதி, பொதுக் கூட்டத்தில் கொளுத்த விடக்கூடாது என்று கருதி, பொதுக் கூட்டத்திற்கும் அது சம்பந்தமான ஊர்வலத்திற்கும் தடை விதித்தது.

என்றாலும், உரிமையுள்ள காரியம் நடைபெற்றால் கலவரம் உண்டாகும் என்று கருதினால், அதற்கு அரசாங்கம் பாதுகாப்புச் செய்யவேண்டுமே ஒழிய, காரியத்தைத் தடை செய்ய அல்ல என்பது என் கருத்து. இன்றும், மதுரை முதலிய இடங்களில் சமணர் கழுவேற்றப்பட்ட உற்சவம் ஆண்டுக்கு ஒரு முறை நடக்கின்றது. மற்றும், தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான சைவக் கோயில்கள் உள்ள இடங்களில் சூரசம்மார உற்சவங்கள் நடை



பெறுகின்றன. இராவணனை இழிவுபடுத்தி, இராவண பக்தர்கள் மனம் புண்படும்படி தினமும் பல காலட்சேபங்களும், பல பாட்டுக் கச்சேரிகளும், பல தெருக்கூத்துகளும், 'டிராமா'க்களும் நடைபெறுகின்றன.

இவை குறித்து அனேகருக்கு வெகு நாட்களாகவே மனவேதனை இருந்துவந்தும், அவற்றைச் சரியானபடி வெளியாக்கித் தடுக்க இதுவரை மக்களுக்கு வாய்ப்பு இல்லாமல் இருந்துவந்தது. காரணம் என்னவென்றால், வெள்ளை ஆட்சி இருந்ததாலும், அந்த ஆட்சியில் பார்ப்பனர்களே ஆதிக்கக்காரர்களாக இருந்ததாலும் இது விஷயத்தில் எளிதில் நியாயம் பெறமுடியாமல் 'மாமூல்' என்ற சாக்கில் தடைப்படுத்தப்பட்டு இருந்தது. இப்போது சுயராச்சியம், மக்கள் ஆட்சி என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இந்தப் பெயரை வைத்துக்கொண்டு கோவில் நுழைவு, சமபந்தி ஏற்பட்டு, மற்றும் அரசர்கள், ஜமீன்தார்கள் ஒழிக்கப்பட்டவை முதலிய—அனேக ஆயிரக்கணக்கான, பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இருந்துவந்த 'மாமூல்' காரியங்களும், 'மாமூல்' கருத்துக்களும், நடப்புகளும் மாற்றமடைந்துவிட்டன.

அப்படி இருக்க, இந்த நாட்டைத் தவிர, உலகில் வேறு எங்குமே நடப்பில், கருத்தில் இல்லாத காட்டுமிராண்டித் தன்மை கொண்ட புராணக் கதைகளை ஆதாரமாய்க் கொண்டு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்த காரியங்கள் நீக்கமுடியாத மாமூலாகிவிடுமா? தீண்டாமையை ஒழித்ததும், 'தீண்டப்படாதவன் சமைக்கும் சாப்பாட்டைப் பார்ப்பான் சாப்பிட்டுத்தான் தீரவேண்டும்—இல்லாவிட்டால் வெளியே போ' என்பதும் ஒருவர் மனத்தையும் புண்படுத்தவில்லை என்றும், புண்படுத்தினாலும் கவலை இல்லை என்றும் கூறும்போது—கடவுள் தன்மை ஏற்படாத காகிதத்தை, பொம்மையைக் கொளுத்தினால் யாரோ ஒருசிலர் மனம் புண்படும் என்று தடங்கல் காரியம் செய்வதை அனுமதிக்கக்கூடாது என்பதுதான் எனது கருத்தே ஒழிய வேறில்லை. அதனால்தான், சர்க்கார் உத்தரவு மீற நேரிட்டது. காரியம் வெற்றிகரமாய் முடிந்துவிட்டது. தமிழ்நாடு முழுவதும் 1-ந்தேதி மாத்திரம் 4000, 5000 பேர்கள் தடையை மீறி, இராமன் படக் காகிதத்தைக் கொளுத்த முன்வந்து இருக்கிறார்கள். இதில் போலீசார் தங்களால் ஆனவரை கழித்து, ஒரு 1000, 1500 பேர்களை மட்டும் கைது செய்து, அதிலும் பலரை 'ஸ்டேஷனு'க்கு அழைத்துப்போய் ரிக்கார்டு செய்யாமல் பலரை விரட்டிவிட்டு, ஒரு சிலரை மாத்திரம் 'லாக்கப்'பில் வைத் திருப்பதுமான திருவிளையாடல்கள் செய்திருக்கிறார்கள்.

31-ந்தேதி அன்று, நான்,—போலீசார் யாரையும் பிடிக்காமல் பலாத்காரம் உபயோகித்து அடித்து விரட்டி, 'ஒருவரும் கொளுத்த முன்வரவில்லை; சட்டம் மீறவில்லை' என்று கணக்குக் காட்டிவிடுவார்கள் என்று கருதியே (அந்தப்படி சர்க்கார் உத்தரவு செய்திருப்பதாகச் சேதி வந்ததாலேயே)—'உங்களுக்கு விருப்பமானால் உத்தரவு அமுலில் இருக்கும் நான்வரை கொளுத்தலாம்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

நான் எண்ணியதற்கு விரோதமாக நாடு முழுவதும்—சிறப்பாகச் சென்னையிலும், போலீசார் சிலரை விட்டுவிட்ட போதிலும் மிகவும் நேர்மையாக நடந்து 1000 பேர்கள் போல—நகரில் 100 பேர்கள்போலப் பிடித்து 'ரிக்கார்டு' செய்துவிட்டார்கள். பல இடங்களில் படம் கொளுத்தப்பட்டுவிட்டதாகவும், அதற்கு அதிக போலீஸ் ஒன்றும் தடபுடல் செய்யாமல் பெருந்தன்மையாக நடந்துகொண்டதாகவும் சேதி வந்தது; இதை ஒருவாறு அறிந்த உடனே எனக்கு இனியும் மற்ற நாட்களுக்குத் தொடரவேண்டிய அவசியமில்லை என்று கருதி, திடீர் 'பிரேக்' போட்ட மாதிரி, நான் கைதான உடனே அறிக்கை எழுதி, மணியம்மையிடம் கொடுத்துவிட்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டேன். 31-ந்தேதி அறிக்கையினால், பல தோழர்கள் நாளை மறுநாள் கொளுத்தலாம் என்று கருதி இருப்பார்கள். உதாரணமாக, சென்னையில் இருந்து பெருங்கூட்டம் வந்து, 'இன்றைக்கு மாத்திரம் அனுமதியுங்கள்' என்று பெருந்தொல்லை கொடுக்கிறார்கள் என்றாலும் அவர்களது ஏமாற்றத்திற்கு வருந்தி சமாதானம் சொல்லிச் சரிப்படுத்தினேன்.



படிப்பகம்

www.padippakam.com



7, 8, 10 நாட்களுக்கு இயக்கம் நடக்கும் என்றும் தினம் 500, 1000 பேராவது பிடிபட வேண்டும் என்றும் கருதிப் பலர் ஏமாந்து விட்டார்கள் என்பது உண்மைதான்.

இதுமாத்திரமல்ல; என்னையும் நண்பர் குருசாமியையும் கைது செய்து அழைத்துப் போய் வைத்து, நாங்களும் புத்தகம், படுக்கை முதலியவைகளுடன் தயாராய் இருந்தும், திடீரென்று, ‘இருட்டாய் விட்டது; நீங்கள் வீட்டிற்குப் போகலாம்’ என்று கமிஷனர் அவர்கள் எங்களுக்குச் சொன்னபோது நாங்கள் எவ்வளவு ஏமாற்ற மடைந்து இருப்போம்? இந்தப் பேச்சைக் கேட்டவுடன், ஏதோ ‘கிரிமினல்’ குற்றத்திற்குத் திடீரென்று எனக்கு ஓர் ‘அரஸ்ட்’ வந்ததைப் பார்த்தால் எப்படி என் மனம் பக்கென்று திகைப்பும், பய உணர்ச்சியும் ஏற்படுமோ அதுபோலத் திடீரென்று ஆய்விட்டது.

‘என்ன அய்யா! இப்படி வீட்டிற்குப்போ என்கிறீர்களே; எனக்குப் புரியவில்லை; இப்படிக் கேட்பதற்கு மன்னிக்கவேண்டும்’ என்று கமிஷனர் அவர்களைக் கேட்டேன். அவர், ‘பெரியவாளை எல்லாம் இவ்வளவுதான் செய்ய முடியும்’ என்றார்; எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. இந்த என் ஏமாற்றம் எப்படியோ இருக்கட்டும்; நாளையதினம் போலீஸ் அதிகாரிகள், பிடித்தவர்களையெல்லாம் திடீரென்று விடுதலை செய்து விட்டார் களானால் பிடிபட்டவர்கள் அத்தனைபேரும், ‘ஏதோ ஒரு மாதம் அல்லது 15 நாட்கள் குறைந்தது இந்த உத்தரவு அமுலில் இருக்கும் வரையிலாவது ஜெயிலில் இருக்கலாம் என்று வந்தோமே; இப்படி நம்மை அவமானப்படுத்துவதுபோல் விரட்டி விட்டார்களே; இனி எப்படி வெளியில் தலைகாட்டுவது?’ என்று எவ்வளவோ ஏமாற்றமும் வேதனையும் அடை வார்கள். பொதுக் கிளர்ச்சி விழாவில் இது சகஜம். எனக்கு எத்தனையோ தடவை மக்கள் பரிகாசம் செய்யும்படியான அவமானமே ஏற்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம் நான் பயப் பட்டால் மேலே கிளர்ச்சி நடக்கவே நடக்காது. ஆதலால், யாரும் ஏமாற்ற மடைந்ததாகக் கருதக்கூடாது என்று வேண்டிக் கொள்கிறேன்.

என் ‘பொதுநலக் கிளர்ச்சி வியாபாரம்’ எல்லாம், ‘குறைந்த செலவில் (தியாகத்தில்) பெரிய இலாபம் (வெற்றி)’ என்ற கொள்கையைக் கொண்டது. ஆதலால், பொதுமக்கள், போலீஸ், அரசாங்கங்கள், நாம் ஆகிய எல்லோரும்–இந் நிகழ்ச்சி அதிகச் செலவு, தொல்லை இல்லாமல் வெற்றிகரமாய் முடிந்திருப்பது பாராட்டத்தக்கதேயாகும்.

எதிரிகள் வேதனைப்படுவார்கள். அது இயற்கைதானே! அவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டுமானால் நான் சாகவேண்டும் அல்லது எதிலாவது நான் தோல்வி அடைய வேண்டும். அது அவர்கள் அவசரத்துக்கு ஏற்றபடியோ, எளிதிலோ நடக்கமாட்டேன் என் கிறது; அதற்கு நாம் என்ன செய்யலாம்!

கடைசியாக, இன்றுமுதல் இனி யாரும் இந்தக் கிளர்ச்சி விஷயமாய் ‘தடை உத்தரவு நான் வரையில்’ என்ற எனது வேண்டுகோள்படி யாதொரு நடவடிக்கையும் செய்யாமல் இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மறு கிளர்ச்சியை எதிர் பாருங்கள்.

இந்த நல்ல முடிவுக்கு உதவி செய்த எல்லோருக்கும் எனது நன்றி. வணக்கம்.

[‘விடுதலை’–அறிக்கை—2-8-1956]

## 4. இராமன் பட எரிப்பு ஏன்?

நான் ஏன் இராமனை எரிக்கச் சொன்னேன்? நான் ஏன் பிள்ளையாரை உடைக்கச் சொன்னேன்? இதன் காரணம் 100-க்கு 90, பிள்ளையார் கடவுள் அல்ல என்பதாக இருந் தாலும், அதன் பிறவிக் கதைகள் கடவுள் தன்மைக்கு ஏற்றதல்ல என்பதோடு, அந்தக் கதைகள் காட்டுமிராண்டிகள் கற்பனை போன்றதாகும் என்பது விளக்கப்படவேயாகும்.



பொதுவாக, பிள்ளையாரை, நம் நாட்டில் இராமனை வணங்குபவர்களைவிட அதிகமான மக்கள் வணங்குகிறார்கள் என்றாலும், பிள்ளையாரிடம் பொய், வஞ்சகம், சாதி ஆணவம், ஒரு சாதியைக் கெடுத்து அழித்து மற்றொரு சாதியைக் காப்பாற்றவேண்டும் என்கின்ற தான வகுப்புணர்ச்சி முதலியவை மிகமிகக் குறைவு; அருமையுமாகும். ஆனால், இராமன் அப்படி அல்லன்; அவனைப்பற்றிய கதைகள் பல என்றாலும் அத்தனையின்படியும் இராமன் பிறவியில் இருந்து இறப்புவரை நேர்மைக்கும், ஒழுக்கத்திற்கும், உண்மைக்கும் நல்ல மனிதன் தன்மைக்கும் மாறான—கூடாத தன்மையைக் கொண்டவனாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறான்.

இன்றைய தினம் எனது சமுதாயத் தொண்டின் முதலானதும்—முக்கியமானதுமான சாதி ஒழிப்பை எடுத்துக்கொண்டால் இராமனின் முதல் செய்கையும் கடைசிச் செய்கையும் சாதியைக் காப்பாற்றப் பிறந்து, சாதியைக் காப்பாற்றிவிட்டுச் செத்ததேயாகும். நம்நாட்டில் சமுதாயத் திருத்த வேலையோ, பகுத்தறிவுப் பிரச்சார வேலையோ எந்த ஒரு சிறிய அளவுக்கு நடக்கவேண்டுமானாலும் முதல் இலட்சியச் செய்கையாக, ஸ்லோகச் சொல் காரியமாக, துவக்கக் குறியாக இராமாயணம்—இராமன் அழிந்து ஒழிக்கப்பட்டு ஆக வேண்டும். இராமாயணப் பிரச்சாரம் ஒழுக்கக் கேட்டுப் (Criminal and Immoral) பிரச்சாரம் ஆகும். எவ்வளவுதான் மத மவுடீகம் மக்களுக்கு இருந்தாலும், ஒரு மனிதன் தன்னைப் பெற்ற தாய் இரண்டணா ரேட்டுக் குச்சுக்காரியாக இருந்து, தெருவில் போகிற சின்னப் பையன்களையெல்லாம் கையைப் பிடித்து இழுத்தால், மகன்காரனாகிய மனிதன் இழுக்கப்பட்ட பையனைப் பார்த்து, ‘ஏண்டா, எங்கம்மா இழுத்தால் திமிரிகிட்டு ஓடப் பார்க்கிறாய்?’ என்று பையனை அடித்தால் அவன் தாய்ப் பற்று, தாய் அன்பு, தாய் அபிமானம், தாய் பக்தி கொண்டவனாக ஆகிவிடுவானா?

உலகின் சாதாரண மக்களும் அந்த மகனைப்பற்றி என்ன கருதுவார்கள் என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால், இராம பக்தர்களான தமிழர்களுக்கு நான் இராமனை எரிக்கும் தன்மையின் உண்மை விளங்காமல் போகாது. இந்த மாதிரி ‘தியாகிகள்’–அதாவது உயிருக்குத் துணிந்து உயிரினும் சிறந்ததான ‘மானத்தை’த் துறந்து (மற்றவற்றைத் துறந்தது என்பது மிக மிக அற்பமேயாகும்) மக்கள் பழியை ஏற்று, இக் காரியத்தைச் செய்யக்கூடியவர்கள் எளிதில் ஏற்படமாட்டார்கள்; ஏற்பட்டாலும் முன்வரமாட்டார்கள்; முன்வந்தாலும் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்; அனுமதித்தால் மாற்றார்கள் வாழ விட மாட்டார்கள். தமிழனுக்கு இன்று தன்மானம்தான் தேவை. இது தாயினும் (மதத்தினும்) உயிரினும் (கடவுளினும்) சிறந்ததாகும். தாயை வெறுத்தாவது உயிரைவிட்டாவது மானத்தை, மனிதத் தன்மையை, ஒழுக்கத்தைக் காப்பாற்றவே இராமனைக் கொளுத்தச் சொன்னேன், சொல்கிறேன்.

[‘விடுதலை’—தலையங்கம்-4-8-1956]

# 6. இழிவு நீக்க அறிப்பு

## 1. பிராமணாள் அழிப்பு

சென்னை ‘இராஜ்ய ஆட்சியாளருக்கும்’, கவர்னர் பெருமான் அவர்களுக்கும், சென்னை மாநிலத் திராவிடர் கழகத் தலைவர் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்வதாவது:

நம் நாட்டில் இருந்துவரும் சாதிப் பிரிவுகள் ஒழிந்து, மக்கள் யாவரும் சாதிப் பிரிவற்ற ஒரே சமுதாயமாக இருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தார் இலட்சியமாகவும், முயற்சி யாகவும் இருந்துவரும் என்கின்ற எண்ணத்தின்மீதே, இந்த வேண்டுகோளைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



நம் நாட்டில் இந்தியப் பிரதமரும், தமிழ்நாடு முதலமைச்சரும் ஆகிய இரு கனவான்களும் சாதிப் பிரிவு ஒழிக்கப்பட வேண்டுமென்று பல சந்தர்ப்பங்களில் சொல்லி வந்திருக்கிறார்கள். உத்தியோகங்களில் 'குவார்ட்டர்லி சிவில் லிஸ்ட்' என்பதாக நீண்டகாலமாய்ப் பதிப்பித்துவந்த புத்தகத்தில், ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களுடைய சாதியைக் காட்டும் குறிப்பை இப்போது எடுத்துவிட்டார்கள்.

பல ஆதாரங்களிலும் சாதிகளைக் காட்டக்கூடாது என்று அரசாங்கத்தால் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது.

சாதியின் பெயரால் பள்ளிக்கூடங்கள் இருக்கக்கூடாது என்றும், அப்படி ஏற்படுமானால் அதற்கு அனுமதியும் உவித்தொகையும் கொடுக்கப்படமாட்டாது என்றும் அரசாங்கத்தாரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில விஷயங்களில் சாதிமட்டுமல்ல—இனத்தின் பெயரைக்கூடக் குறிப்பிடக்கூடாதென்று—சில விளம்பரப் பலகைகளில் இனப் பெயரை அரசாங்கம் மாற்றிவிட்டது. உதாரணமாக, திராவிடன் என்று காணப்பட்டதையெல்லாம் அழித்துவிட்டுத் தமிழன், தமிழ்நாடு என்று போடப்பட்டுள்ளது.

பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் சேர்ந்துகொள்ள விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களில் சாதிப்பெயர் காட்டக்கூடாதென்றும், மாணவர்களைத் தெரிந்தெடுத்துச் சேர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்படும் கமிட்டியார்—செலக்ஷனில் நேரில்வரும் மாணவர்களை 'நீ என்ன சாதி?' என்று கேட்கக்கூடாதென்றும் ஆணை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவைகளெல்லாம் சாதிப் பிரிவை உத்தேசித்துச் செய்யப்பட்ட ஏற்பாடுகளே தவிர, சாதிக்குள்ளிருக்கும் உட்பிரிவையோ, பேதத்தையோ பொறுத்ததல்ல. சாதிப்பிரிவு விஷயங்களில், நம் நாட்டில் முக்கியமாக அனுபவபூர்வமாகக் காணப்படுவதெல்லாம் இரண்டே சாதிகள் என்கின்ற பிரிவுதான். அதாவது, ஒன்று 'பிராமணன்'; மற்றொன்று 'சூத்திரன்'. அந்த 'சூத்திரன்' என்கிற வார்த்தை இழிவாயிருக்கிறது என்கிற காரணத்தால், எதிர்ப்பு ஏற்பட்டதன் பலனாக, பிராமணனை மட்டும் பிராமணன் என்றே சொல்லிக்கொண்டும் எழுதிக்கொண்டும் வருவது பழக்கத்தில் வருவதோடு, சூத்திரர்களைப் பொறுத்த வரையில் 'பார்ப்பனரல்லாதார்' (Non-brahmin) என்றும், 'திராவிடன்' என்றும், சில சந்தர்ப்பங்களில் 'தமிழன்' என்றும் இப்படிப் பலவாறாகச் சொல்லப்படுகிறது. எப்படியிருந்தாலும், பிராமணன் ஒரு சாதி. அவன் நீங்கிய மற்ற எல்லா இந்து மக்களையும்—அதாவது சத்திரியன், வைசியன், சூத்திரன் முதலிய எந்தச் சாதிக்காரர்களையும் இந்தச் சூத்திர சாதிக்குள்ளாகவே அடக்கினர். தங்களைப் பிராமணன், சத்திரியன், வைசியன் என்று சொல்லிக்கொள்ளுகின்ற பொற்கொல்லர் (ஆசாரி), படையாச்சி (வன்னியர்), நாடார்கள், நாயுடுமார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், வாணியச் செட்டியார்கள் முதலிய பலரைச் சூத்திரர்களுக்கு உண்டான அந்தஸ்தில் வைத்துத்தான் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லப்படுவதோடு, அவர்கள் 'சூத்திரர்'களாகவே பாவிக்கப்பட்டும் வருகிறார்கள்.

மற்றும் குறிப்பிடத் தகுந்தது என்னவென்றால், தங்களை வைசியர்கள் என்றே சொல்லிக்கொண்டு மற்ற பெருவாரியான மக்களிடம் உண்பன, தின்பன வைத்துக்கொள்ளாமல் தனித்து விலகி நிற்கும் 'ஆரிய வைசியர்' என்று சொல்லிக்கொள்ளும் கோமுட்டிச் செட்டியார்களையும், நகரத்தார் என்று சொல்லிக்கொள்ளும் நகரத்துச் செட்டியார்களையும் சூத்திரர் வகுப்பிலேயே சேர்த்து—சூத்திரர்களாகவே (Non-brahmin) பாவிக்கப்பட்டும் வருகிறார்கள். எதற்காக இவைகளைக் குறிப்பிடுகிறேன் என்றால், சாதி முறையில் அரசாங்கத்தாராலும், பார்ப்பனர்களாலும், அனுபவத்தினாலும்—இரண்டே சாதிப் பிரிவுகள்தான் பழக்கத்திலிருந்து வருகின்றன என்பதைக் காட்டுவதற்காகத்தான்.



இந்த இரண்டு பிரிவுகளில், 'பிராமணர்கள்' தவிர மற்ற பிரிவு மறைக்கப்பட்டுவிடுவதில் யாருக்கும் கவலையில்லை. பிராமணர்கள் என்பவர்கள் மாத்திரம்தான் தங்கள் சாதியை நிலைநிறுத்திக்கொள்ளப் பாடுபடுகிறார்கள். காரணம், அவர்கள் மேல்சாதி உரிமை பெற்றிருப்பதனால். அதன் பயனாக மற்ற சாதிகளுக்குப் பெரிய தொல்லை இருப்பதனால், சாதிகள் ஒழிக்கப்படவேண்டும் என்கிற கிளர்ச்சி அவசியம் தோன்றலாயிற்று. அது எப்படியோ, அரசாங்கக் கொள்கையிலும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது; நடைமுறையிலும் சில காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், எப்படியோ—தெரிந்தோ, தெரியாமலோ, அல்லது வேண்டுமென்றோ அல்லது அலட்சியமாகவோ பார்ப்பனருக்கு மத்திய அரசாங்கம் ஒரு உரிமை (அனுமதி) கொடுத்து வருகிறது. அதாவது, அரசாங்கம் அனுமதி (லைசென்ஸ்) கொடுத்து நடைபெறும், நடக்கச் செய்யும் பார்ப்பனர்களின் உணவு விடுதிகளில், 'பிராமணர் விடுதி' என்று போட்டுக்கொள்ள அனுமதிக்கிறது.

சாதியின் அனுபவ ஆதிக்கமெல்லாம் பெரிதும் உணவினாலேதான் வரையறுக்கப்படுகிறது; சாதியை ஒழிக்க வேண்டுமென்கிறவர்கள், அந்த உணவுத் தன்மையில்தான் ஒழிக்கப் பாடுபட வேண்டும். அப்படியிருக்க, எதற்காக உணவு விடுதியில் சாதிப்பெயர் போட அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்? இப்படி அனுமதிப்பது அரசாங்கத்தின் கொள்கைக்கும் நடப்பிற்கும் முரண்பட்டதாகும். இதை அரசாங்கம் சீர்திருத்தவில்லையானால் மக்கள் முயற்சித்துச் செய்யவேண்டியது அவசியமாகிறது.

பார்ப்பனர்கள் தங்களை மேலான சாதியென்று—மேலே குறிப்பிட்ட மற்றவர்களைப் போல, அவர்கள் வீட்டிலிருந்து சொல்லிக்கொள்ளட்டும். 'பிராமணாள் வீடு' என்று அவர்கள் வீட்டில் வேண்டுமானால் போர்டு போட்டுக்கொள்ளட்டும்; பூணூல் போட்டுக்கொள்ளட்டும்; நமது மேல் படுவதில்லையென்று எட்டி ஓரமாக நடந்து கொண்டு போகட்டும்; இவைகளைப் பற்றிப் பொதுமக்கள் பார்த்துக்கொள்ளட்டும். அரசாங்கத்தார்—ஏன், 'பிராமணன்' என்று போட்டுக் கொண்டு வியாபாரம் நடத்திப் பணம் சம்பாதிக்கவும், மற்றவர்களை இழிவுபடுத்தும் குறியைக் காட்டவும் இடங்கொடுக்கவேண்டும்? அந்த மாதிரி விளம்பரப் பலகை இருக்க இடங்கொடுப்பதிலிருந்து சாதி உணர்ச்சி தோன்றுகிறதா, இல்லையா என்பதைத்தான் அரசாங்கம் இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

ஆதலால், நான் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்வதெல்லாம்—உணவு, சிற்றுண்டிச் சாலைகளுக்கு அரசாங்கம் அனுமதி கொடுப்பதில் அந்த அனுமதிச் சீட்டு நிபந்தனைகளில், 'லைசென்ஸ்தாரர்—சாதிப் பெயர் போடக்கூடாது' என்று குறிப்பிட வேண்டும் என்பதுதான்.

இதைச் செய்ய, சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பாக சில நகரசபைத் தலைவர்களைக் கொண்டு நகரசபை 'லைசென்சு'களில் குறிப்பிடுவதற்கு ஏற்பாடு செய்தேன். அப்பொழுது முனிசிபல் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டிராத காரியங்களை முனிசிபாலிட்டியார் செய்தால், அது சட்ட விரோதம் என்று சொல்லி அபிப்பிராயம் கொடுக்கப்பட்டுவிட்டது; அதனால் அது நடைபெறவில்லை. அதற்குப் பிறகுதான், பல இடங்களில் கிளர்ச்சிகளால் மறைக்கப்பட்டன; இரயில்வே பிளாட்பாரங்களில்கூட 'பிராமணாள் ஓட்டல்', 'பிராமணாள் சாப்பிடுமிடம்' என்பவைகள் மறைக்கப்பட்டன.

ஆதலால், அரசாங்கத்தாராவது, கவர்னர் பெருமானாவது அருள் கூர்ந்து 5-5-1957-ஆம் தேதிக்குமுன் அமுலுக்கு வரும்படியாக—ஓர் அவசர அறிக்கை வெளியிட்டுவிட்டால் இதற்காக நேரடி நடவடிக்கை—கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியமிருக்காது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

['விடுதலை'—அறிக்கை—27-4-1957]

படிப்பகம்

www.padippakam.com



## 2. நமது இழிநிலை

தமிழ் மக்கள் என்று சொல்லவேண்டுமானால் நாம் உலகத்திலில்லாத காட்டுமிராண்டித்தன்மையில் வாழ்கிறோம். உலகத்திலுள்ள எந்தச் சமூகத்திலும், பார்ப்பானும் பறையனும் சூத்திரனும் இல்லை. இப்படிப்பட்ட நிலை, நீக்ரோக்களிடம்கூட இல்லை. மோசமான காட்டுமிராண்டிகளாக இருந்தவர்களெல்லாம் இன்று பெரிய விஞ்ஞானிகளாக இருக்கிறார்கள்.

நாம் எப்படி இருந்தோம் என்பதற்குச் சரித்திரமும் இலக்கியமும் இல்லை; நிசமாக நாம் எப்படி இருந்தோம் என்பதற்கு ஆதாரம் இல்லை- ஆனால், கண்டுபிடிக்க ஒரு வாய்ப்பு உண்டு. அது என்ன வாய்ப்பு? அதுதான் நம் எதிரிகளால் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள். நம்மை ஒழிக்கவேண்டுமென்று இருப்பவன்—நம்மைக் குறைகூறவேண்டும் என்றே எழுதியவைகளில் இருந்தே நாம் காண்கின்ற அளவில், நாம் நல்ல நிலையில் இருந்திருக்கிறோம் என்பதைக் காணலாம்.

ஆணும் ஆணும் சேர்ந்து பிள்ளை பெற்றார்கள்; மீனுக்குப் பிறந்தான்; சாமியும் சாமியும் கலியாணம் செய்து கொண்டன என்றெல்லாம்—காட்டுமிராண்டித்தனமாக இருந்தவன், அந்தக் காட்டுமிராண்டி உணர்ச்சியிலிருந்து எழுதியவன்—இராவணனைப் படு அயோக்கியன் என்று எழுதவேண்டும் என்று கருதி எழுதியுங்கூட, என்ன எழுதியிருக்கிறான்? 'அவன் மதிற்சுவர் அப்படி இருந்தது; ஆட்சி இப்படி இருந்தது; இப்படிப் படித்தவன்' என்று புகழ்ந்துதான் எழுதியிருக்கிறான்! காலத்தைப்பற்றிச் சந்தேகம் வந்தாலும், கற்பனையாக எழுதியிருந்தாலும், அதில் பகுதி இருந்தாலும்—நாம் அவர்களைப்போல் காட்டுமிராண்டிகளாய் வாழவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

அப்படியிருந்த நம்மை, இன்று சூத்திரன், பஞ்சமன் என்கிறானே! இன்று ஐய்க்கோர்ட் தீர்ப்பில், 'இவன் சூத்திரன்; அவன் பிராமணன்; இவன் சாதியில்லாத இந்து (Non-caste Hindu)' என்று எழுதுகிறானே! இன்னும் எத்தனை காரியங்களில் இழிவாக நடத்தப்படுகிறோம்! இதற்கெல்லாம் சமாதானமாக 'பார்ப்பான் செய்துவிட்டான்!' என்று கூறிவிட்டால் போதுமா? அவர்கள் மூன்று பேர்தான்; நாம்—மூன்று பேருக்கு முப்பது மடங்கு பேர் இருக்கிறோமே! மான உணர்ச்சி இருந்தால் அவன் புகுத்தினான் என்று சொல்ல வாய்ப்பிருக்குமா?

இராமாயணத்தில், பாகவதத்தில் என்ன இருக்கிறது? அவன் காட்டுமிராண்டியாக இருந்தாலும் நாம் மேலான வாழ்க்கை உடையவர்களாக இருந்தபோதிலும் நம்மை ஒழிப்பதானால்—இராவணனை ஒழிக்க அவன் தம்பியையும்; இரணியனை ஒழிக்க அவன் மகனையும் சரிசெய்து கொண்டதுபோல்—நம்மை ஒழிக்க நம்மில் சில பைத்தியக்காரனையே பிடித்துக்கொள் என்ற தத்துவந்தானே அந்தக் கதைகளிலிருந்து தெரியவருகிறது?

புத்தனை ஒழிக்க என்ன செய்தான்? அவனா பிரச்சாரம் செய்து, அதற்கு மறுப்புச் சொல்லியா ஒழித்தான்? நமது ஆட்களைப் பிடித்து, 'நீ ஆழ்வார், நீ நாயன்மார்!' என்று சொல்லித் தூக்கிவிட்டுத்தானே புத்தனை ஒழித்திருக்கிறான்? இன்றுதான் என்ன? பார்ப்பான் இன்று ஆள்கிறான். அவன் வைத்ததுதான் சட்டம் என்கிறான்; அவனேயா ஆள்கிறான்? சட்டசபையில் அவனேயா உட்கார்ந்திருக்கிறான்? இது இன்று மாத்திரமல்ல. இராவணன் காலந்தொட்டு இப்படியே இருக்கிறதென்றால்—இந் நிலை மாறாதிருந்தால் என்னாவது? இந்தக் கொள்ளைக்கார ஆட்சி ஒழிந்து நமது நிலை மாறவேண்டாமா?

நானும் இருபது வருடமாகச் சொல்லுகிறேன்: பார்ப்பானை 'பிராமணாள்' என்று சொல்லாதே; அவனைப் பிராமணன் என்று கூறினால், நீ யார்? ஒருத்தி, உன்தெருவில், தன் வீட்டில் 'இது பதிவிரதைவீடு' என்று 'போர்டு' போட்டுக்கொண்டால்—மற்றவர்கள் வீடு என்ன என்று அர்த்தம்?—என்று கத்திக் கத்தி என் தொண்டையில் இரத்தம் வரச் சொல்கிறேன். இந்தச் சின்னக் காரியம் செய்யவும் எவன் கேட்கிறான்?



என்னைப் பார்க்கும்போது, 'ஆகா இந்தப் பார்ப்பானை ஒழிக்க, நீதான் சரியான ஆள்' என்கிறான். அந்தப் பக்கம்போய், 'பிராமணாள்' என்கிறான். எந்தக் கேவலமான பார்ப்பான் தன் இனத்தைக் காட்டிக் கொடுக்க முன்வருகிறான்? மாணிக்க நாயக்கர்தான் சொன்னார்: 'நாய் நன்றியுள்ள பிராணி. ஆனால், யாருக்கு நன்றியாக இருக்கும்? எலும்பு போடுகிறவனுக்குத்தான். ஆனால், தன் இனத்தைக் கண்டால் முன்பின் விரோதமே வேண்டியதில்லை—கண்டாலே 'உர்' என்னும். அதுபோல்தான் தமிழன் தன் இனத் துரோகியாக இருந்து பார்ப்பானுக்கு நல்ல பிள்ளையாக நடக்க விரும்புகிறான்' என்று.

ஒரு நண்பர் சொன்னார் வேடிக்கையாக! 'நீ இப்படிக் கத்துவதால் பயனில்லை. பேசாமல் வெளிநாட்டுக்குப் போய்க் கொஞ்சம் துலுக்கன் இரத்தமும், வெள்ளைக்காரன் இரத்தமும் வாங்கிக்கொண்டு வா! தமிழன் உடம்பிலுள்ள தமிழ் இரத்தத்தை ஒரு சொட்டு விடாமல் எடுத்துவிட்டுப் புதுஇரத்தம் பாய்ச்சினால்தான் பயன்படும்' என்றார். 2000 ஆண்டுகளாக இழிநிலையிலிருந்தே பழகிவிட்டதால் இது தோன்றுவதில்லை. ஒரு துலுக்கனிடம்—'பன்றி' என்று சொல்லுங்கள். அந்தப் பேச்சே பிடிக்காது. ஏன்? அப்படியே பழகியாய் விட்டது.

நமது பிள்ளைகள் பார்ப்பான் உயர்ந்தவன் என்ற பேச்சைக் கேட்டாலே முகத்தைச் சுளிக்கவேண்டும். எதற்குப் பார்ப்பான் வேண்டும்? பார்ப்பான் இல்லாவிட்டால் என்ன காரியம் நடக்காது? எனக்காக—நான் சாப்பிட—பலகாரம் செய்து வைத்துக்கொண்டு, உன் கடையில் 'பிராமணாள்' என்று போர்டு போட்டுக்கொண்டால் 'சூத்திரப் பயலே, வாடா' என்றுதானே கூப்பிடுகிறாய்? அதை எடுத்துவிடு என்றால், இந்த 1958 ல் கூட மாட்டேன் என்கிறானே?

[விழுப்புரத்தில், 27-8-1958-ல் சொற்பொழிவு—'விடுதலை' 30-8-1958]

# 7. காந்தி சின்னம் அழிப்பு

## 1. காந்தி பட எரிப்பு ஏன்?

காந்தி பட எரிப்பு, காந்தி சிலை அகற்றல் என்பதான காரியங்கள் தமிழ்நாட்டில் நடைபெறவேண்டும் என்கின்ற எண்ணம் எனக்குப் பல ஆண்டுகளாகவே உண்டு. அதைப் பொதுமக்களிடையில் இந்த 3, 4, ஆண்டுகளாக எனது பொதுக்கூட்டப் பேச்சுகளில் காட்டிகொண்டே வந்திருக்கிறேன். அந்த எண்ணமும் பேச்சும் நாளுக்குநாள் முதிர்ச்சி பெற்று இந்தச் சந்தர்ப்பத்தில் உருவகமாக வெளியாக்கப்பட வேண்டிய அவசியத்திற்குள்ளாகிவிட்டது.

காந்தியைப் பற்றிய நீண்டநாளான எனது கருத்தை அறியவேண்டும் என்கின்ற ஆசையுள்ளவர்கள்–1927 முதல் 1931 வரை உள்ள 'குடி அரசு' பத்திரிகையைப் பார்ப்பவர்களுக்கு (அதை முறையாய் வெளியிடப் போகிறேன்) நன்றாக விளங்கும்.

நான் 1924-ல் தமிழ்நாடு காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தலைவனாகவும், பிரமுகனாகவும் இருந்த காலத்தில்—காங்கிரசைவிட்டு வெளியேறிய காரணம் காந்தியின் செய்கையாலேயே ஆகும்.

1928-ல் என்பது எனது ஞாபகம், காந்தியின் உள்கருத்திலேயே எனக்கு ஏற்பட்ட உறுதியான எண்ணத்திலே—'இனி, காந்தியை மகாத்மா என்று அழைப்பதில்லை' என்று நான் முடிவுசெய்து—'திரு. காந்தியார்; தோழர் காந்தியார்' என்றே எழுதியும் பேசியும் வந்திருக்கிறேன். 'குடி அரசு', 'திராவிடன்', இன்றைக்கும் 'விடுதலை' பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியும்.

படிப்பகம்

www.padippakam.com



'பல கூட்டங்களிலும்—'காந்தியை, மகாத்மா காந்தி என்று சொல்' என்று பலர் குழப்பங்களும் காலித் தனங்களும் செய்த காலத்திலும்—காந்தியாரின் நடத்தையை, அவர் நமக்குச் செய்த கெடுதியை, துரோகத்தை விளக்கி ஒப்பசெய்திருக்கிறேன் என்றாலும், இந்தப் பார்ப்பனர்கள் தங்கள் வாயால் ஒரு பார்ப்பனரல்லாத மனிதரை 'மகாத்மா' என்று அழைத்துத் தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே என்பதுபற்றி மகிழ்ச்சி அடைந்து இருக்கிறேன். ஆனாலும், அதற்கு ஏற்ற கருத்துக்களை நான் ஆதரித்ததே கிடையாது.

சில கூட்டங்களில் நான் தாட்சண்யப்படவேண்டிய சில தோழர்கள்கூட சினேகித முறையில், 'காந்தியை—மகாத்மா என்று சொல்லு' என்று கேட்டுக்கொண்ட காலத்திலும் அவர்களுடன் தர்க்கம் செய்யாமல், 'அய்யா, எனக்கு வெறும் ஆத்மா என்பதிலேயே நம்பிக்கை கிடையாது; அப்படி இருக்க, மகாத்மா என்று சொல்லச்சொன்னால் என் நா எப்படி உச்சரிக்கும்?' என்று சமாதானம் சொல்லி இருக்கிறேன். ஆதலால், நான் ஒன்றும் இன்று எனது கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை என்பதற்கு ஆகவே இதைக் குறிப்பிட்டேன். தவிர, நானும் தோழர் இராமநாதன் எம். ஏ. அவர்களும், எங்களது சுயமரியாதைப் பிரச்சாரம் மும்முரமான காலத்தில் காந்தியாரது வருணாசிரமப் பிரச்சாரம் எங்களுக்கு மூட்டிய ஆத்திரத்தால்—எங்கள் தனிப்பட்டமுறைப் பேச்சில், 'இந்த காந்தியைச் சுட்டுத்தள்ள வேண்டும்' என்று நண்பர்களிடையில் பேசிக்கொண்டு இருந்திருக்க வேண்டும்.

நண்பர் ஆச்சாரியார் அவர்களும் நானும் காந்தியாரைப்பற்றித் தனிப்பட்ட முறையில் பேசிக்கொண்டிருந்தபோது பல விஷயங்கள் பேசினோம் என்றாலும் 'காந்திக்குத் தெளிவான புத்தி (Clear Thinking) கிடையாது, மிகவும் (Confused mind) எல்லாம் குழப்பமான எண்ணம்தான்; அதோடுகூடத் தனக்கு எல்லாம் தெரியும் என்கின்ற எண்ணம் உள்ளவர்' என்பதாகப் பேசிக்கொண்டு இருந்திருக்கின்றோம்.

வேறு பல விஷயங்களும் உண்டு; அவை பின்னால் வெளிவரும். இவை ஒருபுற மிருக்க, காந்தியால் நமது தமிழ்நாட்டுக்கு—தமிழ்நாட்டு மக்களுக்கு அரசியல்–பொருளியல்–சமுதாய இயல் ஆகியவைகளில் ஏற்பட்ட கேடுகள் அளவிலடங்காதவை என்றாலும், இன்று அது வளர்ந்து விரிந்து மாபெரும் கேடு ஏற்படும் அளவுக்கு—அதாவது, இனிப் பரிகாரம் செய்யமுடியாத அளவுக்குப் பரவி, பலம்பெற ஆரம்பித்துவிட்டதால் ஒரு இரண்டு மூன்றாண்டுகளாக எனது உள்ளத்தில் துடித்துக்கொண்டிருந்த எண்ணம் வெளியாக்கப்பட வேண்டியதாக ஆகிவிட்டது. இனி அது எந்தவிதத்திலும் தங்காது; வெளியிட,–பிரச்சாரம் செய்யத் தயங்காது.

'உலகம் போற்றும் உத்தமர்' என்று சிலர், மதசம்பந்தமான முறையில் பேசுவது போல், காந்தியைப்பற்றிக் கூறுவதுண்டு. இது பார்ப்பனரில் ஒரு சிறு கூட்டத்திற்குச் சாமியாரான சங்கராச்சாரியை, அவர் 'தானேதான் கடவுள்' என்ற தன்மையை 100-க்கு 90 ஆத்திகர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், எல்லாப் பார்ப்பனரும் அவரை லோககுரு, ஜகத்குரு என்று எப்படிச் சொல்லுகிறார்களோ அதுபோலும், நாமும் எப்படி அவரை லோககுரு என்று பேசுகிறோமோ அதுபோலும்—காந்தியை காங்கிரஸ்காரர்கள், 'உலகம் போற்றும் உத்தமர் காந்தி, மகான் காந்தி, காந்தி மகான்' என்று அவசியத்தை முன்னிட்டு—மற்ற மக்களை ஏய்ப்பதை முன்னிட்டுப் பேசுவதாலும்; பத்திரிகைக்காரர்கள் பார்ப்பனருக்கு அடிமையாகி வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதால் அவர்களும் அப்படி எழுதுகிறார்கள். நான் அப்படிப் பேசியதும் இல்லை; எழுதியதும் இல்லை. எனக்குக் காந்தியை நன்றாகத் தெரியும். ஜின்னாவுக்கும், அம்பேத்காருக்கும் காந்தியை எவ்வளவு தெரியுமோ—அதற்குச் சற்று மேலாகவே எனக்குத் தெரியும்.

இது ஒருபக்கம் இருக்கட்டும். காந்தியை வெளியாக்கவேண்டிய முக்கியமான அவசியம்—காங்கிரஸ்காரர்களையோ, சட்டசபை மெம்பர்களையோ, பத்திரிகைக்காரர்



களையோ, பாமர மக்களையோ திருத்திவிடலாம் என்கின்ற எண்ணத்தால் அல்ல. மற்றென்னவென்றால், நமது பின் சந்ததிக்கு—'விஷயத்தைச் சொல்லி விளக்கிவிட்டுப் போனால், பயன்படுகிறபோது பயன்படட்டும்' என்கின்ற எண்ணமும்; மோசடிக்கார நம் எதிரிகளின் கூலிகள் தங்கள் வாழ்வுக்கு இனிமேலாவது—'காந்திமகான் சொன்ன வழி' என்று சொல்லி மக்களை ஏய்க்காதிருக்கட்டும் என்பதுமாகும்.

காந்தியால் நம் சமுதாயத்திற்கு—நம் நாட்டிற்கு ஏற்பட்ட நன்மை என்ன? காந்தியால் நாம் ஏமாற்றப்பட்டோம்; காந்தியால் நம் நாடு வடவனுக்கும் பார்ப்பானுக்கும் அடிமைப்படுத்தப்பட்டது. காந்தியால் மக்களிடம் இருந்த ஒழுக்கங்கள் அடியோடு நாசமாகி எல்லாத் துறைகளிலும் ஒழுக்கக் கேடும் நாணயக் கேடும் வளர்ந்து, இன்று ஒரு துறையிலாவது—ஒரு மனிதனிடத்திலாவது—ஒழுக்கம், நாணயம் என்பது இல்லாமல் போனதோடு அயோக்கியத்தனம், பித்தலாட்டம், வஞ்சகம், துரோகம் இல்லாமல்—அப்படி நடக்காமல் எவரும் வாழமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

அரசியல் துறை ஆபாசக் களஞ்சியம், பித்தலாட்ட ஊற்றாக ஆகிவிட்டது.

மனிதனுக்கு மான ஈன உணர்ச்சி சிறிதுகூட நினைக்கவே முடியாமல் போய் விட்டது.

ஜனநாயகம் என்றால், ஓட்டர்கள்தாம் முட்டாள்கள் என்றால், பிரதிநிதிகள் 100-க்கு 99 அயோக்கியர்கள், வஞ்சகர்களாக இருக்கிறார்கள்.

ஜனநாயகம் என்றால்—10 ஆயிரம் முதல் 100 ஆயிரம் வரை செலவு செய்தால்தான் ஒருவன் பிரதிநிதி ஆகமுடிகிறது.

இதற்குப் பெயர், 'காந்தி மகான் காட்டியவழி; காந்தியார் தேடித் தந்த சுதந்திரம்—சுயராஜ்யம்' என்றால், மக்கள்மீது தவறா? காந்திமீது தவறா? என்பதை யோசித்துப் பாருங்கள்! மற்றவர்கள் இதை மறைக்கவேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், அவர்களது பிழைப்பு இந்தப் பித்தலாட்டத்தின்மீது அமைந்துவிட்டது. எனக்கு அந்த நிலைமை இல்லை. நான் மக்களுக்காக வாழ்கிறேன்; மக்களுக்காக எனது பொருளை ஒப்படைத்து இருக்கிறேன்; மற்றும் மக்களுக்காகச் சாகப்போகிறேன் (என் உயிரைக் கொடுக்கப்போகிறேன்) அப்படிப்பட்ட நான், ஏன் இந்த மோசடியை மூடிவைக்க வேண்டும்?

காந்திபெற்ற சுயராஜ்யத்தில் நாட்டு மக்களுக்கு ஏதாவது பங்கு உண்டா? யாராவது எந்தப் பத்திரிகைக்கார யோக்கியனாவது எடுத்துக்காட்டட்டுமே, பார்க்கலாம்! மந்திரிக்கு சம்பளப் பெருமை, சட்டசபை மெம்பருக்கு படிப் பெருமை தவிர, சொந்த வாழ்வுக்கு வசதி—இதைத்தவிர, அவர்கள் தங்களால் ஆகக்கூடியது இன்னது என்று சொல்லட்டும்; அல்லது தங்களால் ஆனது இன்னது என்று சொல்லட்டும்.

தமிழ்நாட்டில் பார்ப்பானுக்கும் வடநாட்டானுக்கும் ஆதிக்கமும் சுரண்டலும் எதற்காக இருக்கவேண்டும்? இருக்கவேண்டும் என்று வைத்துக்கொண்டாலும், அவனவன் பங்குக்குமேல் ஏன் இருக்கவேண்டும்? 'காந்திமகான், இருக்கவேண்டும் என்று சொன்னார்' என்றால் அந்த காந்தி முதலில் ஒழியவேண்டுமா, வேண்டாமா?

சாதிகளைக் கடவுள் உற்பத்திசெய்தார் என்பதால்தானே—அந்தக் கடவுள் முதலில் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கூறி, எரிக்கவும் உடைக்கவும் செய்கிறோம்!

சுயராஜ்யம், சுதந்திரம், ஜனநாயகம் வந்து 10 ஆண்டுகள் ஆகப்போகிறது; ஜனநாயக—பொதுஜன 'ஓட்டு'த் தேர்தல்கள் இரண்டு நடந்துவிட்டன. இன்றும் இந்த நாட்டில் பிராமணன், சூத்திரன், பறையன், (அரிஜன்) இருக்கிறான் என்றால்—'இது காந்தி மகான் தேடிய சுயராஜ்யம்; இதில் அப்படித்தான் இருக்கும்' என்றால்—அந்த



படிப்பகம்

www.padippakam.com



காந்திமகான் உருவம் இந்த நாட்டில் இருப்பது இந்த நாட்டு மக்களுக்கு மானக்கேடா, இல்லையா? யோக்கியமான பத்திரிகைக்காரர்கள், அரசியல் வாழ்வுக்காரர்கள் பதில் சொல்லட்டுமே, பார்க்கலாம்!

வாழ்வுக்கு—ஒருவன் மானத்தை விற்கிறான்; ஒருவன் நாணயத்தை, ஒழுக்கத்தை விற்கிறான்; ஒருவன் மனைவியை, மகளை விற்கிறான். ஆகவே, இவர்கள் ஒரு டிகிரி இரண்டு டிகிரி, 5 டிகிரி, 10 டிகிரி வித்தியாசக்காரர்களே தவிர, பொதுவில்—விற்கக் கூடாததை விற்கிறவர்கள்தாமே?

நாளைக்குக் கொண்டாடப்போகும் சுதந்திரவிழா—பிராமணன், சூத்திரன், பறையன் இல்லாத நாட்டுச் சுதந்திர விழாவா, மக்களை ஏமாற்றி மோசம் செய்த, யோக்கியப் பொறுப்பற்ற சுயநல வஞ்சகர்கள் சுகவாழ்வுக்கு நடத்தும் நாட்டுச் சுதந்திர விழாவா என்று கேட்கிறேன்.

யோக்கியமான, மானமுள்ள பத்திரிகைக்காரர்கள் சொல்லட்டும், பார்க்கலாம்! திருடனைத் திருடன் மிரட்டலாம்; திருடாதவனைத் திருடன் எப்படி மிரட்டமுடியும்? மந்திரிசபை காங்கிரஸ்காரர்களே! சட்டசபை மெம்பர்களே! யோக்கியப் பொறுப்பு கடுகளவு மில்லாத பத்திரிகைக்காரர்களே!

நாளைக்கே காந்தி படத்தைக் கொளுத்தப் போவதில்லை.

நாளன்றைக்கே காந்தி சிலையை அப்புறப்படுத்து என்று கேட்கப்போவதில்லை! நல்லபடி நாடுமுழுதும் பிரச்சாரம் செய்து—நான் சொல்லாமலே பொதுமக்கள் அந்த வேலைகளைச் செய்ய முன்வரும்படி, அல்லது நானே செய்யச்சொல்லும்படி சொல்லப் போகிறேன்! கண்டிப்பாய்ச் சொல்லப்போகிறேன்! அதற்குள் உங்கள் துரோகத்தையும் விஷமத்தையும் செய்துபாருங்கள்.

மற்றவை பின்னால்,

['விடுதலை—தலையங்கம்—13-8-1957]

## 2. காந்தி பொம்மை உடைப்பு

'காந்தி பொம்மையை உடையுங்கள்.'

ஆளுக்கொரு காந்தி பொம்மையை உடையுங்கள்; வீட்டில் மாட்டியுள்ள படத்தை ரோட்டில் வீசி எறியுங்கள். இப்படிச் செய்தால் நம் உணர்ச்சியைக் கண்டு துரோகம் செய்யப் பயப்படுவார்களே! மந்திரிகள் 'நாடு பிரியக்கூடாது' என்று சொல்ல மாட்டார்களே!

'காந்தி இன்னின்ன துரோகம் செய்து எங்களை அடிமையாக்கிவிட்டார்' என்று விவரம் சொல்லிக் கொளுத்து என்கிறேன். நீங்கள் வேண்டுமானால், 'காந்தி ஒன்றும் செய்யவில்லை; நான்தான் செய்தேன்' என்று தைரியமாய்ச் சொல்லுங்கள்! முடியுமா?

காந்தி ஒன்றும் அபூர்வ புருஷர் அல்லர். பார்ப்பான், அப்படிப் பாமர மக்கள் நம்பும்படி—மகாத்மா ஆக்கினான். இப்போதல்ல; அப்போதே, நான் 'குடி அரசி'ல் இதை எழுதி இருக்கிறேன். 'ரிஷிகளுக்கு எவ்வளவு அறிவோ அவ்வளவுதான் காந்திக்கும். அவரைப் பார்ப்பனர்கள் மகாத்மா ஆக்கிவிட்டார்கள்! மகாத்மா வேஷத்தைக் காப்பாற்றிக் கொள்ளவே அவருக்கு வேலை சரியாய்ப்போகிறது' என்று எழுதியிருக்கிறேன்.

1930-க்கு முன்னமேயே, காந்தி ஒரு காங்கிரஸ் மாநாட்டுக்குப் போகும்போது வழியில் அவரை மடக்கி, 'துரோகி ஒழிக' என்று கூவி, அவர் காரில் கண்டதைப் போட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கூட்டத்தில் காந்தி, 'என்னை ஒழிக என்கிறார்கள்; இவர்களா



என்னை ஒழிப்பார்கள்? அது பகவான் கையில் இருக்கிறது' என்று பேசியிருக்கிறார். சுபாஷ் சந்திர போஸ் கோஷ்டியினர்தாம் அப்படி வழியில் மடக்கிக் கண்டதைப் போட்டு, 'காந்தி ஒழிக!' என்றவர்கள்.

தாகூர் சொல்லியிருக்கிறார்: 'காந்தி காட்டு மனிதன்; இவருக்கு என்ன அனுபவம்? இவரது கொள்கை மோசமான கொள்கை' என்று. அதற்கு காந்தி தாகூரைப்பற்றி, 'இந்த தாகூருக்கு என்ன தெரியும்? கவி என்றால் கவிதை பாடி, பணக்காரர்களிடம் கூலி வாங்கிச் சுகபோகமாக இருப்பார்கள்; விடுதலையைப்பற்றி இவர்கள் பேசுவது தப்பு' என்று பேசினார். மக்களை உசுப்பிவிட்டு அவர்கள் தாகூர் வீட்டில் கல் போட ஓடினார்கள்; அவர் பயந்து, மறுநாளே காந்தியை 'மகாத்மா' என்று சொல்லிவிட்டார்.

இப்போது மராட்டி, குஜராத்தி சண்டை வந்தபோது காந்தி படத்திற்குச் செருப்பு மாலை போட்டார்கள்! குஜராத்தி–ஆரியன்; மராட்டி–திராவிடன். இப்போதும் மராட்டியனிடம் திராவிட உணர்ச்சி ஊட்டினால் வரும். அங்கு அந்த இராஜ்யங்களின் அமைப்பை ஒரு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தான். அந்தக் காலத்தில் காந்திக்குச் செருப்பு மாலை போட்டார்கள். நேரு, அங்கு எப்படிப் போவதென்று யோசனை செய்தார். அவருக்கும் செருப்பு மாலை போட்டான். இதெல்லாம் விளம்பரமாகவில்லை; சுபாஷ் சந்திர போஸ் ஓடியது யாரால்?

ஆந்திரர், மலையாளி இவர்கள் நாடாளப் பணமின்றித் தவிக்கிறார்கள்! பெட்டி வெறும் பெட்டியாக இருக்கிறது என்று முணுமுணுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ தாண்ட ஆரம்பித்தாகி விட்டது; அரைக் கிணறு தாண்டியதும், போதும் இவ்வளவு என்றால், கீழே பாதாளத்திற்குப் போகவேண்டியது தான். ஆகவே, வேகமாகத் தாண்டியாக வேண்டும்.

நான், 'தேசியக் கொடியை எரிக்கப் போகிறேன்' என்றதும் வழக்கு வந்தார்களா, இல்லையா? அதுபோல் வந்து கேட்கட்டுமே! 'ஏன் ரகளை செய்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்?' என்று. இனிமேல் சட்டம் போடவேண்டும்: 'திட்டினால் இன்னது கொளுத்தினால் இன்னது' என்று.

காந்திக்கும் எங்களுக்கும் சொந்தத் தகராறு ஒன்றுமில்லை. அவர் இடத்தைப் பிடிக்கப் போட்டி போடவில்லை; எங்களுக்கும் சொந்தத்திற்கும் எதுவும் வேண்டுமென்று செய்ய வில்லை. இதற்கு ஒரு மாநாடு கூட்டி விஷயத்தை விளக்கிக் கேட்கப் போகிறேன்; சம்மதம் கொடுக்க வில்லை யென்றாலும், நானாவது செய்து விட்டுப்போய் உட்கார்ந்து விடுவேன்.

'காந்தி நாடு என்று பெயர் வை, காந்தி சகாப்தம் என்று பெயர் வை என்று நீ சொன்னாயே?' என்று என்னைக் கேட்கிறார்கள். அவர்களால், கொளுத்துவதற்கு நான் சொல்லும் காரணங்களை மறுக்கமுடியவில்லை.

நான் சமயம்போல் பேசுகிறேன் என்று மக்களுக்குத் தோன்றச்செய்ய வேண்டும் என்றே இப்படிக் கேட்கிறார்கள். குறும்பாகச் சொல்வதென்றால், 'நான் அன்று சொன்னேன், கேட்டாய்; இப்போதும் நான் சொல்கிறேன்—கேளேன்!' என்று நான் சொல்லிவிடலாம்.

'காந்தி நாடு' என்று வைக்கலாம் என்று சொன்னேன். முதலில் இந்தியா என்பதே கற்பனைச் சொல்; இப்படிக் கற்பனைச் சொல்லை வைத்துக்கொண்டு உயிரை வாங்குவதைவிட உனக்குத்தான் காந்தியிடம் அதிக மரியாதை இருக்கிறது என்றாயே—அவர் பெயரை வைத்துவிட்டுப்போயேன் என்று யோசனை சொன்னேன். சுயநலக்காரர்கள் அதை வைக்கவில்லை; என்ன செய்வது என்று யோசனை கேட்டார்கள், சொன்னேன். அது போலவேதான், 'காந்தி சகாப்தம்' என்று வைக்கச் சொன்னேன். நமக்கென்று வருடமே இல்லை. வெள்ளைக்காரன் கிறிஸ்து பிறந்து 1957 வருடம் என்று வைத்திருக்கிறான். நமக்கு இருப்பது பிரபவ, விபவ என்ற ஆரிய கதைப்படி உள்ள 60 வருடங்கள்தாம். இதைக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டு, காலத்தைக் கண்டுபிடிக்கமுடியாது. நான் பிரமாதி ஆண்டில் பிறந்தேன். இப்பொழுது கணக்குப் பார்த்தால் 19 வயதுதானே ஆகவேண்டும்! எனக்கு எழுபத்தொன்பது என்று கண்டுபிடிக்கவேண்டுமானால் என் தாடியைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும். சரித்திரத்திலேயே புரட்டு ஏற்பட இது ஒரு காரணம். கல்வெட்டில்—'கலியுகாதி, பிரபவ வருடம்' என்று போட்டிருப்பான். 'கலியுகாதி' என்பது பித்தலாட்டம்; அறிவுக்குப் பொருத்தமும் ஆதாரமும் அற்றது. பிரபவ என்று சொன்னால்—'எந்த பிரபவ' என்று சொல்லமுடியாது. 'இப்படி நமக்கென்று ஒரு சகாப்தம் இல்லாமல் அழிப்பதைவிட, காந்தி பெயரைத்தான் வையேன்!' என்று யோசனை சொன்னேன். அவ்வளவுதான்.

காந்தி துரோகம் செய்தாரா, இல்லையா என்று உங்கள் அறிவைக்கொண்டு யோசியுங்கள்.

[சேலத்தில், 18-8-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 23-8-1957]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

'காந்தி சிலையைத் தொட்டால் சும்மா விடுவோமா?' என்கிறார்கள். என்ன செய்வார்கள்? காந்தியார் படத்தைக் கொளுத்துவதற்குக் காரணம், காந்தி நம்மைச் சூத்திரர்களாக இருக்க உதவியதுதானே! மந்திரிகள் சூத்திரர்களாக இருக்க விரும்புகிறார்களா? மந்திரிப் பதவி என்பது எல்லா உணர்வையும் விட்டுக்கொடுத்து விடுவதுதானே! தீண்டாமை விலக்கு மாநாட்டிலே சாதி ஒழியக்கூடாது என்ற தீர்மானமே போட்டார் காந்தியார்! சமபந்தி போஜனத்தையும், சாதி ஒழிப்பு என்ற விஷயத்தையும் தீண்டாமை 'லீக்'கில் இருந்து எடுத்துவிட வேண்டுமென்று பிர்லா சொன்னார். அவருடைய பணத்திற்காக ஆதரித்தார் காந்தியார்.

காந்தியார் படத்தை எரிப்பதையும், சிலையை உடைப்பதையும் இந்தியாவில் எந்தப் பத்திரிகையாலும் செய்தி ஸ்தாபனங்களாலும் உலகத்தின் பார்வையிலிருந்து மறைக்க முடியாது.

'சாதி இந்தியாவிலிருக்கிறது. பார்ப்பான் சாதித் தலைவனாக இந்தியாவிலிருக்கிறான். அவனே அரசியல், பொருளியல், சமூக இயல் இவைகளுக்கும் தலைவனாக இருக்கிறான். காந்தியார் பார்ப்பன சமூகத்தைக் காப்பாற்றி இருக்கிறார்; மற்ற இனங்களை அவர்களுக்கு அடிமைகளாக ஆக்கி இருக்கிறார். அந்தக் கொடுமை தாங்க முடியாத தென்னாட்டு மக்கள், காந்தியின் சிலையை உடைக்கிறார்கள். இதனை நேருவால் நிவர்த்திக்க முடியவில்லை' என்று உலகம் தெரிந்துகொள்ளும். உலக அரசியலில் 'சமாதான தூதுவராக' நேரு பறக்க முடியாது. இந்த நிலையை உண்டாக்கியே தீருவேன்.

[நாகப்பட்டினத்தில், 12-9-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-10-1957]

தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

சட்டத்திலே சாதியைக் காப்பாற்ற ஏற்பாடு செய்திருக்கிறார்கள்; அந்தப்படி செய்ததற்கு அடிப்படைக் காரணம் காந்தி.

காந்தி பெயரைச் சொல்லித்தான் சாதிக்குப் பாதுகாப்பான ஏற்பாடு செய்ய முடிந்தது; எனவே, இந்த நாட்டில் காந்தி சிலை இருப்பது அவமானம் என்கிறேன்.

இன்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்களே, 'வெலிங்க்டன் சிலை இருக்கக் கூடாது; விக்டோரியா ராணி சிலைகூடாது; நீலன் சிலை கூடாது' என்று; அதுபோல காந்தி சிலை எங்கள் நாட்டில் இருக்கக்கூடாது என்று சொல்ல எனக்கும் உரிமையுண்டு.

ஒரு வெலிங்க்டனும், நீலனும் செய்யாத அக்கிரமத்தை—எங்களுக்கு காந்தி செய்துள்ளார்.



காந்தி மனதார ஏமாற்றி, சாதியைக் காப்பாற்றப் பலமான சட்டம் செய்துகொண்டு, பார்ப்பானுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, நம்மை என்றும் அடிமையாக இருக்க ஏற்பாடு செய்துவிட்டுப் போய்விட்டார்.

நம்மவனோ—நான் நாயக்கனாயிற்றே, நான் கவுண்டனாயிற்றே என்று நினைத்துக் கொண்டு—சூத்திரன் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறானே தவிர, வேறு என்ன? தெரியாமல் தொட்டால் நெருப்பு சுடாமல்விடுமா? தெரியாததுபோலவே இருந்து விட்டால் சூத்திரப் பட்டம் இல்லாதுபோய்விடுமா?

இந்தியா பூராவிலும் அகில இந்திய காங்கிரஸ் 70 வருடமாக இருக்கிறது; இந்த காங்கிரஸ் வந்தபின் நமக்கு ஏற்பட்ட இலாபமென்ன? பார்ப்பானுக்கு ஏற்பட்ட இலாபமென்ன? என்று கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டாமா?

காங்கிரஸ் வந்த 50 வருடத்தில் பார்ப்பான் 100-க்கு 100 பேர் படித்தவன்; பார்ப்பாத்தியும் படித்தவள் ஆகிவிட்டனர். 70 வருட காங்கிரஸ் அவர்களை அந்த அந்தஸ்தில் வைத்துவிட்டது. அதே காங்கிரசுக்கு ஆதரவு கொடுத்துத் தீர்மானங்களுக்குக் கைதூக்கிப் பலப்படுத்திய நம் கதி என்ன? 100-க்கு 18 பேர் படித்திருக்கிறார்கள். இந்தப் 18 பேரும் எப்படிப் படித்தவர்கள்? பார்ப்பனனைப்போலவா படித்தவர்கள்? அதில் 10 பேர் சும்மா கையெழுத்துப் போடத் தெரிந்தவர்கள்; அவ்வளவுதான். வெள்ளைக்காரன் போகிறபோது 12 பேர்தான் படித்தவர்கள்; சுதந்திரம் வந்த 10 ஆண்டு ஆகியும், அதுவும் காமராசர் வந்ததால் இன்று 100-க்கு 18 பேர் படித்தவர்கள். காமராசர் வராவிட்டால் இன்னும் குறைந்திருக்கும்.

இராசகோபாலாச்சாரியார் மதுரையில் பேசும்போது, 'சிலர் தீண்டாமை ஒழிய வேண்டுமென்றதைத் தப்பாகப் புரிந்துகொண்டு, சாதியே ஒழியவேண்டுமென்கிறார்கள். காந்தி ஒருக்காலும் சாதி ஒழியவேண்டும் என்று சொல்லவில்லை; சாதி காப்பாற்றப்பட வேண்டுமென்றார்' என்று பேசினார். சாதி ஒழியக்கூடாது என்று சொல்லத் தைரியம் வந்துவிட்டதே, என்ன சங்கதி?—என்று பார்த்தால் ஒவ்வொன்றாகத் தெரிகிறது. காந்தி வருணாசிரம தர்மத்தை (சாதியை)க் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னதை ஆதாரமாக வைத்துக்கொண்டு—அதன்படியே சாதியை அசைக்க முடியாதபடி சட்டம் செய்து விட்டார்கள். இது காந்தி மனதாரச் செய்த துரோகம். இந்தப் பித்தலாட்டம் உங்களுக்குத் தெரியாது.

டாக்டர் அம்பேத்கார் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். இதில் காந்தி செய்த பித்தலாட்டங்களை நல்லபடி எடுத்துப் போட்டுள்ளார். 'தீண்டாமை ஒழிப்புக்குக் காங்கிரசும் காந்தியும் செய்தது என்ன?' என்பது அந்தப் புத்தகம்.

தீண்டாமை ஒழிப்பிற்காக 'அன்டச்சபிள்ஸ் லீக்' (Untouchables League) என்ற அமைப்பு வைத்திருக்கிறார்கள்; நிறைய ஃபண்டும் கொடுத்திருக்கிறார்கள் அதற்கு. அத் தீண்டாமை ஒழிப்புச் சங்கத்திற்கு ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டி மெம்பர்களில் ஒருவர் பேசும்போது, 'சமபந்தி போஜனம் செய்யவேண்டும்; சாதி ஒழியவேண்டும்; அப்போதுதான் தீண்டாமை போகும்' என்று பேசினார். அது மற்ற மெம்பர்களுக்குப் பிடிக்கவில்லை; அவர்கள் காந்தியிடம் புகார் சொன்னார்கள்.

அதன் பேரில் காந்தி ஒரு 'ஸ்டேட்மெண்ட்' கொடுத்திருக்கிறார். என்ன ஸ்டேட்மெண்ட்? 'தீண்டாமை ஒழிப்பிற்கும் சாதிக்கும் சம்பந்தம் இல்லை; சமபந்தி போஜனம் செய்யவேண்டுமென்பது வேறு—தீண்டாமை ஒழியவேண்டுமென்பது வேறு' என்று ஒரு ஸ்டேட்மெண்ட் காந்தி கொடுத்தார். இதைத் தெரிந்ததும் அந்தக் கமிட்டி மெம்பர் ராஜினாமா கொடுத்துவிட்டுப் போய்விட்டார். பிறகு 'யங் இந்தியா' என்ற பத்திரிகையில் காந்தி, 'சாதிமுறை என்பது நல்ல அமைப்பு; அது இருக்கவேண்டும்; அதாவது வருணாசிரம தர்மம் பாதுகாக்கப்படவேண்டும்' என்று எழுதிவந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



நான் காங்கிரசில் இருந்தபோதே சமுதாயத் துறையில் சமத்துவம் ஏற்படுத்த வேண்டும் என்று நிறையப் பேசியிருக்கிறேன்.

அப்போது காந்தி, 'தீண்டப்படாதவர்களைக் கிணற்றில் தண்ணீர் எடுக்க விடா விட்டால் வேறு தனிக் கிணறு கட்டிக் கொடு. கோவிலுக்குள் விடாவிட்டால் வேறு தனிக் கோவில் கட்டிக் கொடு' என்றார்; பணமும் அனுப்புகிறேன் என்றார். அப்போது நாங்கள் தான் அந்த ஏற்பாட்டை எதிர்த்தோம். 'கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாதென்று இழிவு படுத்தும் இழிவுக்குப் பரிகாரமில்லாவிட்டால்—அவன் தண்ணீரில்லாமலே சாகட்டும்' என்றேன். 'அவனுக்கு இழிவு நீங்க வேண்டும் என்பது முக்கியமே தவிர, தண்ணீரல்ல' என்றேன். கோயில் பிரவேசம் வேண்டுமென்று கூப்பாடுபோட்டோம். என் கூக்குரலுக்குக் கொஞ்சம் மரியாதை உண்டு என்பது இராஜாஜிக்குத் தெரியும். கோயில்களுக்குள் தீண்டப் படாதவர்கள் என்பவர்களை அழைத்துக் கொண்டு நுழைந்தோம்.

கேரளத்தில் பெரிய ரகளையாகிக் கொலையும் நடந்துவிட்டது, இராஜாஜி, காந்தி யிடம், 'ராமசாமி பேச்சுக்கு மரியாதை உண்டு; ரகளை ஆகும். ஆதலால் கோவிலில் நுழைய விட்டுவிடவேண்டியதுதான்' என்றார். அதற்குப் பிறகும், 'சூத்திரன் போகின்ற அளவுக்குப் பஞ்சமன் போகலாம்' என்றார்கள்.

நான், 'சூத்திரனும் பஞ்சமனும் ஒன்றாகி, நாங்கள் இன்னும் கொஞ்சம் மட்ட மானோமே தவிர, பார்ப்பான் அப்படியேதானே இருக்கிறான். சாதி ஒழிய வேண்டுமா, வேண்டாமா?' என்றேன்.

அப்போதிருந்தே காந்தி, சாதி காப்பாற்றப்பட வேண்டும் என்ற முயற்சியில் பார்ப்பனருக்கு உடந்தையாகவே இருந்து பல மோசடிகள் செய்து, நம்மை ஏமாற்றி விட்டார். காந்திக்கு இருந்த செல்வாக்கு, நம்மைப் பார்ப்பானுக்கு அடிமையாக்கவும்—பார்ப்பான் பார்ப்பனனாகவே இருக்கவுந்தான் பயன்பட்டது. இன்னும் சாதி ஒழிப்புக்கு விரோதமாக—'காந்தி சொன்னது; காந்தி மகான் காட்டிய வழி' என்று கூறிச் சட்டத்திலும் பாதுகாப்புச் செய்துகொண்டார்கள்.

காந்தி செய்த மோசடி மக்களுக்குத் தெரியவேண்டும். அதனால்தான், 'காந்தியின் படத்தை எரிப்போம்; எங்கள் நாட்டில் காந்தி சிலையிருப்பது கூடாது—அகற்ற வேண்டும்' என்று சொல்லுகிறோம். காந்தியின் பெயரைச் சொல்லித்தானே பிழைக்கிறோம்; காந்திக்கு மரியாதை கெட்டுவிடும் போலிருக்கிறதே என்று நினைத்து அரசாங்கத்திற்கு—சாதியை ஒழிக்க உணர்ச்சி வரலாம். 'ஆகா! காந்தி படத்தை எரித்தால் இரத்தக் களறி ஆகும்!' என்கிறார்கள். ஆகட்டுமே—என்ன நஷ்டம்?

பொறுப்புள்ளவர்கள் பதில் சொல்லவில்லை. மந்திரிகள் சொன்னார்கள் என்றால்—'காந்தி படத்தை எரிப்பது தவறு என்று சொல்லவில்லை. எரித்தால் மக்கள் மனம் புண் படும்; மக்கள் மனம் புண் படாமலிருக்க நடவடிக்கை எடுப்போம்' என்றார்களே தவிர, காந்தி படம் எரித்தால் தவறு என்று கூறவில்லை. காந்தி பேரில், அவர் இன்னின்ன தவறு செய்தார் என்று நான் கூறுகிறேனே; எரிக்கக் கூடாது என்பவர்கள் அவர் தவறு செய்ய வில்லை என்று சொல்லவேண்டாமா? வேறு என்ன செய்தால் சாதி ஒழியும் என்றாவது சொல்லட்டுமே! இல்லை, சாதி ஒழியக்கூடாது என்றாவது சொல்லட்டுமே!

காந்திதான் வருணாசிரம தர்மம் காப்பாற்றப்படவேண்டும் என்றார். 1927-லேயே 'காந்தி, மகாத்மா பட்டத்தைக் காப்பாற்றிக்கொள்ள பார்ப்பன அடிமையாகிவிட்டார்' என்று எழுதினேன். அது முதலே தோழர் காந்தி என்றுதான் நான் போடுவேன்; மகாத்மா என்று போடுவதில்லை. பிறகு காந்தியார் என்று போட்டோமே தவிர—மகாத்மா என்று போடவில்லை. காந்தி சமுதாயத் துறையில் பெரிய கேடு செய்து விட்டார்.



அவர் செய்த அடுத்த துரோகம், நம்மை வடநாட்டானுக்கு அடிமையாக்கிவிட்டுப் போனது. சுயராஜ்யம் பேசி, வெள்ளைக்காரன் வெளியே போனதும் நம்மை வடநாட்டுக்கு அடிமைகளாக்கிவிட்டார்.

பெயர் தமிழ்நாடு; தமிழ்நாடு என்பது போலவே ஒவ்வொரு நாடும் தனி; எல்லாம் சேர்ந்து ஒரு யூனியன்—கூட்டாட்சி என்று சொல்லிப் பிரிக்கவே முடியாது என்று எழுதி வைத்து விட்டான்.

வடநாட்டான் காங்கிரசுக்கு நிறையப் பணம் கொடுத்தான்; எங்களுக்கெல்லாம் தெரியும். நாங்கள் தேசாபிமானத்தால் அவன் கொடுக்கிறான் என்று நினைத்தோம். நம்மை வடநாட்டுக்கு விற்கும் வினை என்று தெரியாது. மாகாண அரசுக்கு எந்த உரிமையுமில்லை.

[தர்மபுரியில், 19-9-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-10-1957]

# 8. சாதி ஒழிப்புப் போர்

## 1. அரசியல் சட்ட எரிப்பு ஏன்?

தோழர்களே!

'பிராமணன் என்று ஒரு சாதி சட்டத்தில் இருக்க அனுமதிக்க மாட்டோம். அப்படி இருந்தாலும், அவன் பிராமணனாக வாழ அனுமதிக்க மாட்டோம்' என்று அரசாங்கம் சொல்லட்டும்.

இந்த மாதம் 26-ந் தேதிக்குள், 'பிராமணன் என்ற ஒரு சாதி கிடையாது. சட்டத்தில் அந்த மாதிரிக் கருதமாட்டோம்' என்று அறிக்கை வராவிட்டால் அரசாங்கச் சட்டப் புத்தகத்தை நாங்கள் கொளுத்தப் போகிறோம். இதை நாங்கள் வருத்தத்துடனேயே சொல்கிறோம்; வெறும் குறும்புக்காகவோ, விளம்பரத்திற்காகவோ, ஜெயிலுக்குப் போய் வந்ததைக் காட்டி ஓட்டு வேட்டையாடவோ நாங்கள் அந்தக் காரியம் செய்யவில்லை.

எனக்கு 79 வயதாகிவிட்டது; நம் மக்களுக்கு ஏதாவது காரியம் செய்துவிட்டு நான் சாகவேண்டும். இல்லையென்றால், நம் மக்களுக்கு உணர்ச்சியூட்டிவிட்டுச் சாகவேண்டும்.

இன்றைய தினம் எல்லாப் பார்ப்பனப் பத்திரிகைகளும் கட்டுப்பாடாக—நான் பார்ப்பனரை வெட்டச் சொன்னேன், குத்தச் சொன்னேன் என்று கூப்பாடு போடுகின்றன! எந்தப் பார்ப்பானிடம் எனக்கு விரோதம்? யார்மீது துவேஷம்? நேற்று எனக்கு நடைபெற்ற விழாவுக்குப் பார்ப்பனர் பணம் கொடுத்திருக்கிறார்கள்; அவர்கள் கொடுத்த 'செக்' என்னிடம் இருக்கிறது; ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், எனக்குத் தனிப்பட்ட முறையில் யார்மீதும் துவேஷம் இல்லை என்பதைக் காட்டவே!

நான் ஏன் ஒரு கூட்டமே ஒழிய வேண்டுமென்று சொல்லுகிறேன்? நம் சமுதாயத் திற்கே களை மாதிரி இருந்துகொண்டு வளரவொட்டாமல் செய்கிறது—அந்தக் கூட்டம். வெட்டுகிறேன் என்று சொன்னேன், குத்துகிறேன் என்று சொன்னேன் என்று பூச்சாண்டி காட்டுகின்றனர். அப்படிச் சொல்லுவதன் மூலம் அந்த நாளையே அவர்கள் விரைவுபடுத்து கின்றனர்.

'காந்தியார் படத்தை எரித்தால் தலைகள் உருளும்; இரத்த ஆறு ஓடும்; அதற்கு 20,000 பேர் தயார்' என்று சொன்னார்களே, அவர்களை நீ என்ன செய்தாய்? நான் சொல்லுகிறேன்—'சாதி ஒழியாவிட்டால் இரத்த ஆறு ஓடும்' என்று. 'சாதி இருக்கத்தான் வேண்டும்' என்று நீ சொல்லேன்!

படிப்பகம்

www.padippakam.com



இந்த மாதிரிக் கூப்பாடு போட்டால் அரசாங்கம் பிடித்து எங்களை ஜெயிலில் போடும்; நாங்கள் பயந்துகொள்வோம் என்பது பார்ப்பனர்கள் நினைப்பு. இது யாரிடம் பலிக்கும்? நான்தான் உயிரைவிடத் தயாராயிருக்கிறேனே! என்னுடைய தொண்டர்களும் தயாரா யிருக்கிறார்களே!

வேண்டுமானால், இந்தப் பார்ப்பன சமுதாயத்திற்கு நான் வாய்தா கொடுக்கிறேன்; தன்னை அது மாற்றிக் கொள்ளட்டும்!

இன்றைய தினம் அரசாங்கத்திற்கு வாய்தா கொடுத்திருக்கிறேனே! சாதி ஒழிப்புக்குப் பரிகாரம் கிடைக்காவிட்டால் அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போகிறோம். அதிலும் முடியாவிட்டால் காந்தியார் சிலையை உடைக்கப் போகிறோம். வேண்டுமானால் என்னை ஜெயிலில் போடட்டும்; வெளியே இருந்துகொண்டு கொடுமையைச் சகித்துக்கொண்டிருக்க எங்களால் முடியாது.

இதற்கு முன்பே-1950-லேயே நான் சொன்னேன், 'இது மனுதர்ம சாஸ்திரத்தின் மறுபதிப்பு; ஆகவே, இதைக் கொளுத்தவேண்டும்' என்று!

இந்தச் சட்டம் எழுதியவர்கள் ஆறு பேர்கள். அதில் நாலு பேர் பார்ப்பனர்கள். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், முன்ஷி, டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கோபால்சாமி அய்யங் கார் ஆகிய பார்ப்பனர்கள் எழுதினார்கள். மற்றவர்கள் இரண்டு பேரில் ஒருவர் அம்பேத் கார், மற்றவர் ஒரு சாயபு.

அம்பேத்கார் கொஞ்சம் நம் உணர்ச்சியுள்ளவர். அவர் என்னைக் கேட்டார், 'உன் னுடைய மக்களுக்கு என்ன செய்யவேண்டும்?' என்று. நிறைய விவரங்களையெல்லாம் அவரிடம் கொடுத்தேன்; அதையெல்லாம் அவர் பேச ஆரம்பித்தார். உடனே பார்ப் பனர்கள் அவருக்கு விலை கொடுத்துவிட்டார்கள். அது என்ன விலையென்றால், அவர் தன்னுடைய மக்களுக்கு 100-க்கு 10 இடம் கல்வி வசதியில், உத்தியோக வசதியில் கேட்டார். அவன், '15-ஆகவே எடுத்துக்கொள்' என்று சொல்லிவிட்டான்! அவனுக்குத் தெரியும், 25 இடம் கொடுத்தால்கூட அவர்களில் மூன்று அல்லது நான்கு பேர்கூட வரமாட்டார்கள் என்பது. பார்ப்பான் எழுதிக்கொடுத்த சட்டத்தில் அவர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டார். மற்றவர்களுடைய சங்கதியைப்பற்றி அவர் சிந்திக்கவில்லை.

ஒரு சட்டம் எல்லோருக்கும் சமம், சமவாய்ப்பு என்று சொல்லிக்கொண்டு—பார்ப்பன ருடைய உயர்வைக் காப்பாற்றி—அவர்களுடைய ஏகபோக அனுபவத்திற்குக் கல்வியையும், உத்தியோகத்தையும் தருகிறதென்றால், அது எந்த வகையில் நீதியான, நேர்மையான சட்டம்?

இத்தகைய மோசடிச் சட்டம் ஒழிக்கப்பட்டே ஆகவேண்டும். அந்த முயற்சியாக, 26-ஆம் தேதியன்று இந்தச் சட்டத்தைத் தீயிலிட்டுப் போசுக்கப் போகிறோம்.

[சுவாமிமலையில், 4-11-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-11-1957

தோழர்களே!

சட்டத்தைக் கொளுத்துவதென்பது சாதிப் பிரச்சினையை மட்டும் வைத்துத்தான் என்பதல்ல; உத்தியோகம், மற்றும் மத்திய அரசாங்கம் எந்தத் தகுதியும் நியாயமு மில்லாமல் அரசியல் சட்டத்தின் பெயரால் நடத்தும் கொடுமையான அநீதிகள், அத் தனையும் வைத்தே அதைக் கொளுத்தவேண்டும் என்கிறோம்.

மத்திய சர்க்கார் பெயரால்—அரசியல் சட்டத்தின் பெயரைச் சொல்லி எவ்வளவு கொள்ளைகள்? தபால், சுங்கம் முதலியன வருமானமுள்ள சங்கதிகள் பூராவும் அங்கு! இந்த ஆதிக்கத்திற்கு அரசியல் சட்டம்தானே இடம் தருகிறது? நீங்கள் சரியாகப் படித்துப் பார்த்தால் ஏன் கொளுத்த வேண்டுமென்பது விளங்கும்.



நாம் எவ்வளவு கீழ்மக்களாக ஆக்கப்பட்டிருந்தாலும் அதுபற்றி யாருக்கும் கவலை இல்லை; எதிர்த்துப் பேசி மத்திய சர்க்காரின் கொடுமைகளைக் கூறவும் ஆளில்லை. கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் எவராக இருந்தாலும் அரசியல் சட்டத்தைப்பற்றிப் பேசவே கூடாது என்பார்கள். எல்லோரும் இந்தக் கொடுமையான சட்டத்தை ஒப்புக்கொண்டு அதன்படி சட்டசபையில் போய் உட்காருகிறவர்கள். நாம்தாம் இதைச் செய்யமுடியும்.

ஆகவே, காலணாவுக்கு அரசியல் சட்டத்தின் சுருக்கத் தொகுப்பு கிடைக்கும். அதை வாங்கி வைத்து, நெருப்புக் குச்சியைக் கிழித்து வைத்துக் கொளுத்தவேண்டும். தண்டனை 3 வருடமோ, 6 வருடமோ—நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இது கடமை, செய்யவேண்டியது அவ்வளவுதான்! தாய்மார்களும் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டும். ஜோடி ஜோடியாகக் கொளுத்துங்கள்; அங்கேயே போய்க் குடும்பம் நடத் தினால் போகிறது? 26-ந்தேதி வரை வெளியில் இருந்தால் என் பங்குக்கு நானும் கொளுத்துவேன்.

ஆனால், போராட்டத்தில் கலந்துகொள்பவர்கள் போலீஸ்காரர்களிடமோ அதிகாரிக ளிடமோ முரண்பட்டு நடந்துகொள்ளாமல் காரியம் செய்யவேண்டும்; கட்டுப்பாடாக நடந்துகொள்ள வேண்டும். அதுதான் நமக்குப் பெருமை.

குத்துவதாக இருந்தால்கூட எப்படிக் குத்துவோம்—எங்கு குத்துவோம் என்று சொல்லிவிட்டுத்தான் செய்வோமே தவிர, திடீரெனச் செய்துவிட மாட்டோம்.

ஆகவே, கலவரமில்லாமல் இராமன் படம் எரித்த மாதிரி, அவ்வளவு கட்டுப்பாடாக நடந்துகொள்ள வேண்டும்.

ஆண் பெண் எல்லோரும் கொளுத்த வேண்டும். போலீஸ்காரர்கள் முன்கூட்டியே மிரட்டுவார்கள்; நடக்காமல் செய்யத் தந்திரம் செய்வார்கள். ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். தப்பித்துக்கொள்வோம் என்று எதிர்பார்த்து எதையும் செய்யக் கூடாது. வீட்டிலிருந்து கொளுத்தினாலும் போதும். கொளுத்திக் கையில் பிடித்துக் கொண்டு போலீஸின் எதிரில் நில்லுங்கள். 'கைது செய்கிறேன்' என்றதும்—பேசாமல் போலீஸ் பின்னால் போய்விடுங்கள். முன்கூட்டியே கைது செய்தாலும் செய்வார்கள்; கூப்பிட்டால் போய்விடுங்கள். அரசியல் சட்டம் கொளுத்தும் காரியத்திற்கு இத்தனை பேர் கைதாகி இருக்கிறார்கள் என்ற கணக்குப் போதும். மூன்று வருடம் போடட்டும்; குடும்பத்தோடு சிறையில் இருக்கலாம்.

'சட்டத்தைக் கொளுத்தவேண்டாம்' என்பவர்கள் இன்னவழி, இன்ன பரிகாரம் என்று சொல்லட்டுமே—கேட்டுக்கொள்கிறேன்! 'இதற்குப் பரிகாரம் சொன்னால்—மரியாதை குறைந்துவிடும்; சட்டம் செய்கிறோம்; செக்ஷன் இருக்கிறது' என்று கருதி அடக்கப் பார்க்கிறார்களே தவிர, எங்களுக்கும் உரிமை இருக்கிறது என்பதைக்கூட யோசிப்பதில்லை. நான் ஏன் தாழ்ந்த சாதி என்று கேட்க உரிமையில்லை என்றால்—இது என்ன சுயராஜ்யம்?

இந்த உணர்ச்சியை—உரிமையை மதிக்க வேண்டும் என்ற எண்ணமே வர வில்லையே? நாங்களும் மனிதர்கள்—இந்த நாட்டு மக்கள்—எங்களுக்கும் உரிமை உண்டு என்பதைக்கூடக் கருதாமல் அடக்குமுறைதான் பதில் என்றால், என்ன நியாயம்? உள்ள படியே ஆத்திரப்பட்டே கேட்கிறோம்—நாங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு, விளம்பரத்திற் காகவா இந்தக் காரியம் செய்கிறோம்? இல்லை—தொல்லை கொடுப்பதற்காக ரகளை செய்கிறோமா? ஆட்சியிலிருப்பவர்களுக்குக் கஷ்டம் தரக்கூடாது என்பதுதானே எங்கள் கவலை!

[எழும்பூரில், 10-11-1957-ல் சொற்பொழிவு—'விடுதலை' 13-11-1957]



படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் அரசியல் சட்டம் முதலியன கொளுத்துவது பற்றிச் சென்னை அரசாங்கம் செய்திருக்கும் புதிய சட்டம் விஷயமாய்ப் பொது மக்கள் சிறிதும் கவலைப்பட வேண்டிய தில்லை. மற்றும், என்மீது கடுந்தண்டனைக்கு ஏற்ற வழக்குத் தொடர்ந்திருப்பதுபற்றியும் பொதுமக்கள் கவலைப்படவேண்டியதில்லை.

இவைகளெல்லாம் பார்ப்பனர்களால் எய்யப்படும் அம்புகளே தவிர, சென்னை அரசாங்க மந்திரிகளாகிய அம்புகளுக்குச் சிறிதும் சம்பந்தப்படாததேயாகும். அன்றியும், பார்ப்பான் வெளியேற்றப்படவேண்டும் என்பதற்கும், வடநாட்டான் ஆதிக்க ஆட்சியி லிருந்து (இந்திய யூனியனிலிருந்து) பிரிந்து முழு சுதந்திரத் தமிழ்நாடு ஆட்சிபெற்று ஆக வேண்டும் என்பதற்கும் இவை (பார்ப்பனர் நடத்தைகளும், அவர்களுக்கு வடநாட்டான் ஆதரவுகளும்) சரியான காரணங்களாகும். அற்காகத் துரிதமாகவும், தீவிரமாகவும் கிளர்ச்சி செய்யவும், இது வலிமைமிக்க மக்களின் தூண்டலாகும்.

சென்னை அரசாங்க மந்திரிகள் நம் மக்களின் கல்வி சம்பந்தமாக எடுத்துக்கொண் டிருக்கிற முயற்சிகள் நாம் பாராட்டத்தக்கதும், நன்றி செலுத்தத் தக்கதுமாகும்–இம் முயற்சி பார்ப்பனர்களுக்குப் பெரும் கேடானதால், இந்தப் பார்ப்பனர்கள் என்மீது கொண்டிருக்கிற ஆத்திரத்தையும் பழிவாங்கும் எண்ணத்தையும்விட, இன்றைய மந்திரி சபை மீது கொண்டுள்ள ஆத்திரமும், பழிவாங்கும் எண்ணமும்தான் பேயாட்டமாக ஆடி, இப்படிப் பட்ட கொலைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், பொது மக்கள் இச் சம்பவங்களுக்காக இன்றைய மந்திரி சபையிடமோ, குறிப்பாக—திரு. காமராசரிடமோ எந்தவிதமாக அதிருப்தியும் காட்டவோ, கொள்ளவோ வேண்டியதில்லை.

புதிய சட்டம் செய்ததன் பயனாகவும், என்மீது வழக்குத் தொடர்ந்திருப்பதன் பயனாகவும், எனக்கு என்ன சம்பவிக்கும் என்பதைவிட—மந்திரிகள்மீது பொதுமக்களுக்கு ஆத்திரமும் துவேஷமும் ஏற்பட வேண்டுமென்ற கருத்துதான் பார்ப்பனர்களுக்கு முக்கியமானது.

ஆதலால், அக் கருத்து வெற்றியடையும்படியாக நடந்து கொள்ளக்கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். புதிய சட்டத்துக்குப் பொதுமக்கள் காண வேண்டிய எதிர்ப்பு என்னவென்றால், பதினாயிரக்கணக்கான மக்கள் அரசியல் சட்டத்தைக்கொளுத்தி, அத்தாட்சி காட்டுவதுதான்!

இதுவரையில் திராவிடர் கழகத் தோழர்களுக்கு இம் மாதிரியான நல்ல வாய்ப்புக் கிடைக்கவேயில்லை; இனியும் கிடைக்குமா என்பதும் சந்தேகந்தான்.

ஆகவே, கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் இதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

['விடுதலை'–அறிக்கை—16-11-1957]

சட்டக்குழு உறுப்பினர்கள் :

1. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் (பார்ப்பனர்)
2. டி. டி. கிருஷ்ணமாச்சாரி (பார்ப்பனர்)
3. என். கோபால்சாமி அய்யங்கார் (பார்ப்பனர்)
4. கே. எம். முன்ஷி (வடநாட்டுப் பார்ப்பனர்)
5. டாக்டர் B. R. அம்பேத்கார் (ஆதித் திராவிடர்)
6. முகமது சாதுல்லா (முஸ்லிம்)

1. 1077 நாள் செலவு செய்து உருவாக்கிய இந்தச் சட்டத்தில் வெகு ஜாக்கிரதையாக பார்ப்பனர் (ஆரிய பிராமணர்) உயர்வும், பார்ப்பனரல்லாத மக்கள் (திராவிடர்–'சூத்திரர்') இழிவும் சாஸ்திரப் படிக்குக் கொண்ட இந்துமதத்தைக் காப்பது, மத உரிமை அளிப்பது என்கிற தன்மையில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தத் தகுந்தபடி பாதுகாப்புச் செய்து கொண்டார்கள்.



2. மேலும், 'சூத்திரர்' என்று கூறப்படுகின்ற மக்களின் பிரதிநிதிகள் அறவே இல்லாமல், 6 பேர்களில் 4 பேர் பார்ப்பனர்களாகவே கொண்டு—மற்றும் இரு இனத்தின் பிரதிநிதிகளுக்கும்கூட விலை கொடுத்து விட்டுச் செய்துகொண்டதுதான் இந்திய அரசியல் சட்டம் என்ற இந்த அரசியலமைப்பாகும்.

3. இந்த நாட்டு வாக்காளர்களின் உண்மையான பிரதிநிதிகளைக் கொண்டல்ல, இத்தச் சட்டம் செய்யப்பட்டது. எவ்வாறெனில், 1946-ல் நடைபெற்ற தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்டசபை அங்கத்தினர்களால் ஓட் செய்யப்பெற்று, அரசியல் நிர்ணயசபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிரிட்டிஷார் அளித்த இந்திய சுதந்திரச் சட்டமே (Indian Independence Act) 1947-ல் தான் நமக்குக் கிடைத்தது! நாடு இரண்டாகப் பிரிந்த பிற்பாடு எஞ்சியிருந்த உறுப்பினர்களால், மாகாணங்களிலிருந்து 235 பேர்களும், சமஸ்தானங்களிலிருந்து 72 பேர்களுமாக—மொத்தம் 307 பேர்கள்தான் அப்போது இருந்தார்கள். அப்போது ஓட்டு உரிமை பெற்றிருந்த வாக்காளர் எண்ணிக்கை இன்றைய வாக்காளர்களின் எண்ணிக்கையில் பன்னிரண்டு சத விகிதத்தினரேயாவர். எனவே, இது எப்படி மக்கள் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்டதாகும்? நாடு 'சுதந்திர' மடையாத காலத்தில் நடந்த எலக்ஷன் பிரதிநிதிகளால்—காங்கிரஸ் பார்ப்பனப் பிரதிநிதி களால் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் நம்மை—அதாவது பார்ப்பன ஆதிக்கத்தினின்று விடுதலை பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிற நம்மை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

4. மற்றும், மொழி சம்பந்தமாகவும், வரி சம்பந்தமாகவும் பொருளாதார உரிமை சம்பந்தமாகவும், வெளி நாட்டார் சுரண்டுதல் சம்பந்தமாகவும் அதிகாரங்களைத் தங்களுக்கே வைத்துக்கொண்டு—எந்த வகையிலும் மாற்ற முடியாத அளவுக்கு இரும்புக் கூட்டுப் பாதுகாப்பை இந்தச் சட்டத்தின் மூலம் பார்ப்பனர்களும் வடநாட்டார்களும் ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள். அதிலிருந்து விடுபட ஆசைப்படுகிறோம் என்பதைக் காட்டுவதற்காகத்தான் 'அரசியல் சட்ட எரிப்பு' என்பதாகும்.

இந்திய அரசியலமைப்புப் பீடிகை :

இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு சம்பூரண அதிகார ஜனநாயகக் குடியரசாக அமைத்து அதன் குடிகள் அனைவருக்கும் —

சமூகம், பொருளாதாரம், ராஜீயம்—இவற்றில் நீதியும் ;

எண்ணம், வெளியீடு கோட்பாடு, மதம், வழிபாடு—இவற்றில் சுதந்திரமும் ;

அந்தஸ்து, வாய்ப்பு—இவற்றில் சமத்துவமும் கிடைக்குமாறு செய்யவும் தனியொரு வரின் கண்ணியமும், தேச சமுதாயத்தின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடமும் சகோதரத்துவம் ஓங்குமாறு செய்யவும் மனப்பூர்வமாகச் சங்கற்பம் செய்துகொண்டமையால், நமது அரசியல் நிர்ணய சபையிலே 1949–ஆம் வருஷம் நவம்பர் மாதம் இருபத்தாறாம் தேதியாகிய இன்று, இதனால் இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு, சட்டம் இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

அடிப்படை உரிமைகள் :

13. (2) இப் பாகத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளைப் பறிக்கும் அல்லது சுருக்கும் சட்டம் எதையும் ஒரு இராஜ்யம் இயற்றலாகாது. இப் பகுதியை மீறி இயற்றப்படும் சட்டம் எதுவும் அப்படி மீறிய அளவிற்குப் பயனற்றதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



மத சுதந்திர உரிமை:

25. (1) அமைதி, நல்லொழுக்கம், ஆரோக்கியம், இவற்றிற்கும்—இந்தப் பாகத்தி லுள்ள மற்றைய ஷரத்துக்களுக்கும் உட்பட்டு, மக்கள் அனைவரும், மனச்சாட்சி சுதந்திரத் திற்கும் தடையின்றி எம் மதத்தையும் தழுவுதல், அனுஷ்டித்தல், பரவச் செய்தல் இவை பற்றிய உரிமைக்கும் சமமான பாத்தியதை உடையவராவர்.

பண்பாடு, கல்வி இவைபற்றிய உரிமைகள்:

29. (1) தனிப்பட்ட மொழி, லிபி, அல்லது பண்பாடு இவற்றை ஏற்கனவே உடைய வராய், இந்தியாவின் ஆட்சிப் பரப்பின் அல்லது அதன் ஒரு பாகத்தில் வசிக்கும் குடிகளின் எப் பிரிவினரும் அவற்றைச் சிதையாமல் காக்க உரிமை உள்ளவர் ஆவார்.

(2) மதம், இனம், சாதி, மொழி, இவை காரணமாக அல்லது இவற்றுள் எவையேனும் காரணமாக இராஜ்யத்தினால் பராமரிக்கப்பட்ட அல்லது இராஜ்ய நிதிகளிலிருந்து உதவி பெறுகின்ற எந்தக் கல்வி ஸ்தாபனங்களிலும் சேருவதற்கு எக் குடியும் மறுக்கப்படலாகாது.

அரசியலமைப்பின் திருத்தம்:

368. இந்த அரசியலமைப்பின் திருத்தம் அதற்கென பார்லிமெண்ட் சபை ஒன்றில் ஒரு மசோதாவைக் கொண்டுவருவதால் மட்டுமே ஆரம்பிக்கப்படலாம். அச் சபை ஒவ் வொன்றிலும்—அம் மசோதா அச் சபையின் மொத்த அங்கத்தினர்களில் பெரும்பான்மையோ ராலும், வந்திருந்து ஓட்டுச் செய்யும் அச் சபையின் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையோராலும், நிறைவேற்றப்பட்டால், அது ராஷ்டிரபதி யிடம் அவர் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; அம் மசோதாவிற்கு அனுமதி அளிக்கப்பட்டதும் இந்த அரசியலமைப்பு அம் மசோதாவின் ஷரத்துக்களின்படி திருத்தம் பெற்றதாகும்.

இவைபோன்றே இன்னும் பல அனுமதிகள் உள்ளன.

குறிப்பு: இந்த அரசியல் சட்டத்தை உருவாக்கின ஆறுபேர்களில் நான்கு பேர் பார்ப்பனர்; இதை நிறைவேற்றிய அரசியல் நிர்ணய சபை என்பது வயது வந்தோரின் வாக்குரிமை பெறாதவர்களை—பெரும்பாலும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களையே கொண்டதாகும்.

இந்தச் சட்டத்தில் இந்துமதத்துக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது; இந்து மதத்தில் சாதிக்குப் பாதுகாப்பு இருக்கிறது; சாதியைக் காப்பாற்றத்தான் இடமிருக்கிறது. இதை எளிதில் திருத்தியமைப்பதற்கும் சாதி ஒழிப்புக்காரருக்கு வசதியில்லை; வாய்ப்பும் இல்லை. (368-வது பிரிவைப் படியுங்கள்.)

ஆதலால், சாதியை ஒழிக்க விரும்புகிறவர்கள், தனித் திராவிட நாடு பெற விரும்புகிறவர்கள், தமிழ்நாடு சுரண்டப்படுவதைத் தடுக்க விரும்புபவர்கள்—என்ன செய்வது?

இதை எரிப்பதன் மூலம் நம் எதிர்ப்பைக் காட்டிக்கொள்வதைத் தவிர, வேறு வழி என்ன?

['விடுதலை'—அறிக்கை—17-11-1957]

26-ந்தேதி கிளர்ச்சியில் நீதிமன்றத்தில் கூறவேண்டியது:

நான் சாதி ஒழிப்புக் கிளர்ச்சிக்காரன். இந்திய அரசியல் சட்டத்தில் சாதிக்கும், அதை உண்டாக்கிய மதத்துக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் தமிழர் நலனுக்காக வகுக்கப் படவுமில்லை; அச் சட்டத்தைத் திருத்தக்கூடிய வசதி தமிழர் களுக்கு இல்லை.



ஆதலால், என் எதிர்ப்பைக் காட்டிக்கொள்ளும் அறிகுறியாக இச் சட்டத்தைக் கொளுத்தினேன். இப்படிக் கொளுத்துவதற்கு எனக்கு உரிமை உண்டு. இதனால் எந்த உயிருக்கும், எந்தப் பொருளுக்கும் சேதமில்லை. ஆதலால், நான் குற்றவாளி அல்ல. இந்த நீதிமன்ற நடவடிக்கையில் நான் கலந்துகொள்ள விரும்பவில்லை. நான் எதிர் வழக்காட விரும்பவில்லை. நான் குற்றவாளி என்று கருதப்பட்டால், அதற்குரிய தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

['விடுதலை'—அறிக்கை—21-11-1957]

## 2. சட்டத்தைக் கொளுத்துங்கள்

நான்—மூன்று ஆண்டுக்கோ, பத்து ஆண்டுக்கோ, நாடு கடத்தலுக்கோ, தூக்குத் தண்டனைக்கோ, ஆளாக்கப்பட்டாலும்;

மற்றும், பிரிட்டிஷ்காரன் காங்கிரஸ் கிளர்ச்சியின்மீது கையாண்ட எந்த விதமான கொடிய, தீவிரமான அடக்கு முறைகளை நம்மீதும், கழகத்தின் மீதும் பிரயோகித்தாலுங் கூட, அவைகளுக்குப் பயப்பட்டு என் இலட்சியத்தையோ, திட்டத்தையோ, மாற்றிக் கொள்ளப்போவதில்லை.

கழகத் தோழர்களே! தீவிர இலட்சியவாதிகளே!

நீங்கள் மூன்று ஆண்டு தண்டனைக்குப் பயந்துவிட வேண்டியதில்லை; பயந்துவிட மாட்டீர்கள்! சட்டத்தைப் பார்த்துப் பயந்து விட்டதாகப் பெயர் வாங்காதீர்கள்!

ஆகவே, இஷ்டப்பட்டவர்கள் தஞ்சை மாநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்ற—பெயர் கொடுங்கள்!

['விடுதலை'—அறிக்கை—11-11-1957]

சட்டத்தைக் கொளுத்துங்கள்!

சாம்பலை மந்திரிக்கு அனுப்புங்கள்!

சட்டத்தை நிறைவேற்றிவிட்டதன் மூலம், அரசாங்கத்தினர் 'சாதியைக் காப்பாற்றித் தான் தீரவேண்டும்' என நமக்குச் சவால்விட்டு இருக்கின்றனர். இந்தச் சவாலுக்கு, நீங்கள் சட்டம் கொளுத்தாவிட்டால் மனிதர்கள்தானா?

சட்டம் கொளுத்திச் சாம்பலைச் சட்டம் செய்த மந்திரிக்கு அனுப்பிக்கொடுங்கள்!

சட்டம் கொளுத்தின மக்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்பதை அதன் மூலம் கொஞ்சமாவது தெரிந்துகொள்ளட்டும்!

['விடுதலை'—அறிக்கை—15-11-1957]

சிறை செல்லுமுன் பெரியார் வேண்டுகோள்:

நவம்பர் 25-ந்தேதி நடக்கும் விசாரணையில் எனது 'முச்சலிக்கா பாண்டு' கேன்சல் ஆகி என்னைச் சிறைப்படுத்தும்படியான நிலைமை பெரும்பாலும் ஏற்படலாம். இந்தச் சமயத்தில் பொதுமக்களுக்கு ஏதாவது சொல்லவேண்டியது அவசியமாகும்.

நான் சிறைப்படுத்தப்பட்டு விட்டேன் என்பதாலேயோ, அல்லது பொதுமக்கள் கொளுத்துவார்கள் என்கிற எண்ணத்தால் அதைத் தடுக்க அரசாங்கத்தார் ஏராளமான மக்களைக் கைதுசெய்து விட்டார்கள் என்ற எண்ணத்தாலேயோ, புதிய சட்டத்தின்படி நீண்டநாள் தண்டிக்கப்பட நேரிடும் என்ற அச்சத்தினாலேயோ—யாரும் அதாவது கொளுத்தவேண்டியது அவசியந்தான் என்று கருதுகிறவர்கள், எந்தவிதமான தயக்கமும் இல்லாமல், அரசியல் சட்டத்திலிருந்து பொறுக்கி எடுத்துப் போட்டிருக்கிற, நமக்குக் கேடான நாலைந்து பிரிவுகளைக்கொண்ட பிரசுரத் தொகுப்பைக் கொளுத்தியே தீர வேண்டியது முக்கியமான காரியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



இதைவிட முக்கியமான காரியம் ஒன்றை வணக்கமான வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதை அவசியம் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியது.

'ரிமாண்டு' செய்வதனாலேயோ மற்றும் இப்பொழுது 'செஷன்சில்' என்னை, நடைபெறும் வழக்கின் பெயரால் என்னை நீண்டநாள் அரசாங்கத்தார் தண்டனைக் குள்ளாக்கி விடுவதாலேயோ பொதுமக்கள் யாரும் ஆத்திரப்படுவதற்கோ, நிலை குலைந்து விடுவதற்கோ ஆளாகாமல் மிக்க மகிழ்ச்சியோடு அச் செய்தியை வரவேற்கவேண்டும். எந்தவிதமான கலவரமோ, பலாத்காரமோ—பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்த ஆண் களுக்கோ, பெண்களுக்கோ, குழந்தைகளுக்கோ துன்பம், வேதனை உண்டாக்கக் கூடியதான எப்படிப்பட்ட பலாத்காரமான செய்கையையும்; நஷ்டம் உண்டாக்கக்கூடிய தான செய்கையையும்—அதாவது ஆயுதப் பிரயோகமோ, அடிதடியோ, நெருப்புக் கொளுத்துதலோ முதலிய ஒரு சிறு காரியம்கூட நடத்தாமலும், நடைபெறாமலும் இருக்கும் படியும் ஒவ்வொருவரும் நடந்துகொள்ளவேண்டும். நான் ஆயுதப் பிரயோகம் செய்ய வேண்டும் என்றும், அக்கிரகாரங்கள் கொளுத்தப்பட வேண்டுமென்றும் சொன்னதும், சொல்லிவருவதும் உண்மை. ஆனால், அவை இப்பொழுது அல்ல. அதற்கான காலம் இன்னும் வரவில்லை—வரக்கூடாதென்றே ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட காரியங் களில் ஈடுபடுவதற்குக் காலம் எப்போதுவரும் என்றால், அரசியல் சட்டத்தைக் கொளுத்து வது முதலிய இன்னும் நான்கைந்து கட்டங்கள் நடத்தி, அவைகளில் ஒன்றும் பயனில்லை; வெற்றிக்கு அவை பயன்படவில்லை என்று கண்டு, பலாத்காரத்தைத் தவிர வேறு வகை யில்லை என்ற முடிவுக்கு வந்த பிறகுதான் நாம் அவற்றில் இறங்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆனால், இந்த என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை ஒவ்வொருவரும் கருத்தில் வைக்கவேண்டும்.

இப்பொழுது எனக்கு ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் தண்டனையானது நம்முடைய அடுத்த திட்டங்களுக்கு வலுவான ஆதரவுகளையும், உணர்ச்சியையும், ஊக்கத்தையும்—துணிச்சலோடும் வேகத்தோடும் ஈடுபடுத்துவதற்கு வலுமையான சாதன மாக அமையும். பொதுமக்கள்மீது எனக்குப் பலமான ஆதிக்கம் இருக்கிறது என்று அரசாங்கமும், இந்தியாவிலுள்ள மற்ற மக்களும் எண்ணியிருக்கிற ஒரு எண்ணத்திற்குப் பாதகம் ஏற்படாமல் பொதுமக்கள் நடந்துகொள்ள வேண்டுமென்றால்—நான் மேலே வேண்டியிருக்கிறபடி எந்தவிதமான தண்டனைக்குப் (ஏற்பட்டால்) பிறகு பொதுமக்க ளிடையில் மேற்சொன்னபடி—எந்தவிதமான கலவரமும், செய்கையும் ஏற்படாமல் இருக்க வேண்டிக்கொள்கிறேன். அதிகாரிகளிடத்தில், போலீஸ்காரர்களிடத்தில் மரியாதையாகவும், கட்டுப்பாடாகவும் நடந்துகொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—25-11-1957]

## 3. நேருவின் முட்டாள்தனம்

'இந்த அரசியல் சட்டம் பிடிக்க வில்லையானால் நாட்டைவிட்டு வெளியேறிவிடு'—பண்டிதநேரு.

இன்றைய ஆட்சி முட்டாள்தனமான, காட்டுமிராண்டி ஆட்சி என்றும், இது பார்ப்பன ஆட்சி என்றும், இது சர்வாதிகாரக் கொடுங்கோன்மை ஆட்சியென்றும், இது திராவிட மக்களை ஆரியர் (பார்ப்பனனும், வடநாட்டானும்) அடிமை கொண்ட ஆட்சியென்றும், இந்த வடநாட்டாராலும் பார்ப்பனராலும் அவர்களது நலனுக்கும் உயர்வுக்கும் ஆகவே செய்யப்பட்டிருக்கும் அரசியல் சட்டமானது மனுதர்ம சட்டத்தின் மறுபதிப்பே என்றும்—1949-லேயே நான் சொன்ன கருத்துக்கு இது எடுத்துக்காட்டாக இல்லையா என்பதைத் தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.



தவிரவும், 'இந்த அரசியல் கொடி உனக்குப் பிடிக்கவில்லையானால் நாட்டை விட்டு வெளியேறிவிடு' என்றும் பேசியிருக்கிறார். யார் என்றால்—பண்டித ஜவகர்லால் நேரு!

அவர் என்ன சாதி என்றால், பார்ப்பன புரோகித சாதி; எந்த நிலையில் என்றால், இந்தியா முதல் மந்திரி (ஆட்சித் தலைவர்) என்ற நிலையில்.

'தோலைக் கடித்துத் துருத்தியைக் கடித்து மனிதனையே கடிக்க வந்து விட்டது' என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கேற்ப, இந்தப் பார்ப்பனர்கள் சாதி காரணமாகத் தாங்கள் சம்பாதித்துக் கொண்ட உயர் பதவிகளையும் ஆதிக்கங்களையும் ஆதரவாகக் கொண்டு சட்டம் செய்து கொண்டு, 'இந்தச் சட்டம் பிடிக்க வில்லையானால்—அதாவது, சாதி முறைக்குப் பாதுகாப்பளிக்கும் இந்தச் சட்டம் உனக்குப் பிடிக்க வில்லையானால்—இந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டு, நீ சூத்திரனாய்–பார்ப்பானின் வைப்பாட்டி மகனாய் வாழ உனக்கு இஷ்டமில்லையானால் இந்தத் திராவிட நாட்டை, தமிழ் நாட்டை விட்டு வெளியேறி விடு; இல்லாவிட்டால் ஜெயிலில் வைப்பேன்; இல்லாவிட்டால் பைத்தியக்கார ஆஸ் பத்திரியில் வைப்பேன்' என்பதாகப் பேசியிருக்கிறார். (பார்ப்பன மொழியில் 'முழக்கி' இருக்கிறார்.)

எங்கு முழக்கியிருக்கிறார் என்றால், தமிழ்நாட்டின் மார்பு, (இதயம்–மத்திய ஸ்தானம்) போன்ற திருச்சி நகரில், தமிழர் உணர்ச்சிக்குத் தாயகமான சுமார் 20-30 ஆயிரம் பேர் நகர மக்கள் கொண்ட மாபெரும் தமிழர் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்.

சொன்னது மட்டுமல்லாமல் இப்படிச் சொல்லிவிட்டுத் திரும்பித் தனது ஊருக்கும் பறந்து சென்றிருக்கிறார்! எப்படியென்றால்–8,000 பேர் கொண்ட போலீஸ் பாதுகாவலில்.

உண்மையாக, உள்ளது உள்ளபடி சொல்லவேண்டுமானால், இந்தப் 'பனியா'–'பார்ப்பன' ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ்நாட்டில் தமிழர், சிறையில் இருக்கும் கைதிகள் போலவே நடத்தப்பட்டு வருகிறார்கள்; 'கான்விக்ட் வார்டர்'களாகத் தமிழர் சேவகர்கள், தமிழர் அதிகாரிகள் ஆகியவர்கள் இருந்துவருகிறார்கள்.

தமிழர்கள் மந்திரிகளாக இருந்தாலும் சரி, உயர்ந்த தலைமை மாவட்ட நீதிபதி களாக இருந்தாலும் சரி, நிர்வாக அதிகாரிகளாக இருந்தாலும் சரி, போலீஸ் அதிகாரி களாக இருந்தாலும் சரி, இவர்கள் யாவருமே கான்விக்ட் வார்டர்களைப் போலவேதான் இருந்து வரவேண்டியதாக இருக்கின்றனர்.

(கான்விக்ட் வார்டர் என்றால், நல்ல அடிமையாக இருந்து விடுதலை பெறக் கருதி சிறையில் தொண்டுசெய்யும் நீண்ட நாட்கள் தண்டனை பெற்ற கைதி.)

இந்தப் பாதுகாப்பான நிலையில்தான் நேரு பார்ப்பனர் திருச்சி நகரத்தில், திருச்சி மக்கள் முன்னிலையில், 'எங்களுக்கு அடங்கிக் கீழ்ப்பட்டு சூத்திரனாக இருந்தால் இரு; இல்லாவிட்டால் நாட்டைவிட்டு வெளியே போ; போகாவிட்டால் ஜெயிலில் போடுவேன்' என்று எக்காளமிட்டுச் சென்றுவிட்டார்.

இந்தச் சமயத்தில் மந்திரிகளைப்பற்றி, போலீசாரைப்பற்றி, சிறிதும் சிந்திக்காமல் அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட வாழ்விற்கேற்ப அதைப் பார்த்துக்கொள்ள அப்படி (அதாவது கான்விக்ட் வார்டர்களாக) நடந்துகொள்ள வேண்டியவர்கள் ஆனார்கள். அவர்களை மறந்துவிடுங்கள்! அப்படி மறக்கும்போது அந்த இடங்களில் பார்ப்பனர்கள் இருந்தால் எப்படி இருக்கும் என்பதை நினைவில் வைத்து, மறந்துவிடுங்கள்.

ஆனால், தமிழ் மக்களே! இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன செய்யப்போகி றீர்கள்? உங்களுடைய கடமை என்ன என்பதுதான் இப்போதைய பிரச்சினை.

அரசியல் சட்டம் எதற்காகக் கொளுத்தப்பட்டது? யாருக்காகக் கொளுத்தப்பட்டது? 3000 பேர் எதற்காகச் சிறைபிடிக்கப்பட்டார்கள்? நான் எதற்காகச் சிறைத் தண்டனை இடப்படுகிறேன்?

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனர்களைக் குத்தியதற்கா, கொன்றதற்கா, பார்ப்பனச் சேரியில் நெருப்பு வைத்துக் கொளுத்தினதற்கா, அல்லது பார்ப்பனப் பெண்களை இம்சித்ததற்கா? இல்லவே இல்லை. இதற்காக இன்று யாரும் சிறையிலில்லை.

குத்தச் சொன்னதற்காகவோ, கொல்லச் சொன்னதற்காகவோ, கொளுத்தச் சொன்னதற்காகவோ கூட இன்று யாரும் சிறையிலில்லை; என்றாலும், என் ஒருவன் பேரில் மட்டுந்தான் அப்படிப்பட்ட குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறது. அதுவும், 'வெள்ளரிப் பழத்திற்குப் பூண் போட்டுக் கெட்டிப் படுத்துவது' போன்ற குற்றந்தான் சாட்டப்பட்டிருக்கிறது. இது எப்படியோ போகட்டும், அதைப்பற்றித் தமிழர்களாகிய உங்களுக்குக் கவலை வேண்டாம்.

'சாதி காப்பாற்றப்படும் சட்டம் எங்களுக்கு வேண்டாம்; சாதியை ஒழிக்க இயலாத சட்டம் எங்களுக்கு வேண்டாம்; அதைத் திருத்து; சாதி ஒழிக்கப்பட வசதி செய்து கொடு,' என்பதற்கு அறிகுறியாக, சாதியைப் பாதுகாக்க வசதியுள்ள பாகத்தைக் குறித்த ஒரு துண்டுக் காகிதத்தை, அறிக்கை கொடுத்துக் கொளுத்துவதன் மூலம் வலியுறுத்திக் காட்டியதற்காகக் குழந்தைகள், குஞ்சுகள், வயோதிகர்கள், பெண்கள், கர்ப்பப் பெண்கள், இளைஞர்கள் உட்பட 3,000 மக்களை—அதுவும் கொளுத்தின மக்கள் 10,000 பேர்களில் பலவிதமாக 7,000 பேர்களை விட்டுவிட்டு, 3,000 பேர்களைச் சிறையில் அடைத்து, ஊசிப்போன சோளக் கஞ்சியையும், கேப்பைக் கூழையும், மக்கிப்போன அரிசிச் சாத உருண்டையையும், களி மொத்தையையும் கொடுத்துக் கொடுமைப் படுத்துகிற இந்த அட்டூழியத்திற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள்?

சிறையில் கொடுமைப் படுகிறவர்களில் 1, 2, 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்காரர்களும், ஆண்டொன்றுக்கு 1000, 5,000, 10,000 ரூபாய்க்குமேல் வரும்படி உள்ளவர்களுமான பல செல்வவான்களும், உயர் வாழ்வு வாழுகின்ற சுக புருடர்களும்—அது போன்றே தாய்மார்களும் தகுதிக்கு மேம்பட்ட மக்களாக இருந்துவருவது அரசாங்கத்திற்கே தெரியும்.

அப்படிப்பட்ட மக்களையும் இப்படிக் கொடுமைப் படுத்துவதற்கு, நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

வெள்ளையனான அன்னியனாட்சிக் காலத்தில், 'வெள்ளையனே வெளியேறு' என்ற கூட்டத்தையும், வெடிகுண்டு ஏந்திய கூட்டத்தையும், தண்டவாளங்களைப் பெயர்த்து, இரயிலைக் கவிழ்த்து, தபாலாபீசுகளுக்கும், நீதி ஸ்தலங்களுக்கும், இரயில்வே ஸ்டேஷன் கட்டடங்களுக்கும் நெருப்பு வைத்துக் கொளுத்திக் கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்களை, ஆயிரக்கணக்கான உயிர்களை நாசப்படுத்தியவர்களையும் மனிதத் தன்மைக்கு மேலாகவே நடத்தினான்.

'உங்கள் நாட்டை நீங்கள் ஆண்டு கொள்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை' என்று சொன்னான்.

'எங்களை, உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் நாங்கள் மனப்பூர்வமாய்ப் போய் விடுகிறோம்; உங்கள் நாட்டை நீங்களே ஒப்புக்கொள்ளுங்கள்' என்று சொல்லி ஒப்பு வித்தானேதவிர, இப்படி வடகோடியிலிருந்து தென்கோடிக்கு வந்து, தென்கோடி மக்களை 'என்னுடைய ஆட்சி, என்னுடைய சட்ட திட்டம் உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் நீங்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறிவிடுங்கள்' என்று சொல்லவில்லை.

இந்தப் பேச்சு நேருவின் கெட்டிக்காரத் தனத்தையும் வீரத்தையும் காட்டுகிறதா? அல்லது தமிழர்களின் மானங்கெட்ட தன்மையையும், மடமையையும், கோழை (சோதா)த் தனத்தையும் காட்டுகிறதா என்பதுதான் இங்கு சிந்தித்துப் பார்க்கத் தக்கதாகும்.



நேரு சாதியார் இந்த நாட்டில் எவ்வளவு கட்டுப்பாடு, ஒற்றுமை, தங்கள் இன நலத்தில் கவலை, முயற்சி முதலியவைகளோடு இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும்; நம் சாதியார் என்பவர்கள் எவ்வளவு ஈனமாய், ஒற்றுமை இன்றி, இனத்தைப்பற்றிய உணர்ச்சியே இல்லாமல் சுயநல வாழ்வு வாழ்கிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழனைப் பார்த்து, 'ஓ தமிழர்களே! நீங்கள், எங்களுக்கு வைப்பாட்டி மக்களாய், இழி மக்களாய், சூத்திரர்களாய், கீழ்மக்களாய் இருந்தால் இந் நாட்டில் இருங்கள்; இல்லாவிட்டால் இந் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்' என்று சொல்ல—இந்த நேருகூட வேண்டியதில்லையே; இன்னமும் பரம முட்டாளும், படுகோழையும், பிழைக்க வழியற்ற—தெருவில் பிச்சையெடுத்து வயிறு பிழைக்கும் ஒரு பார்ப்பன விதவைகூடப் போதுமானதாகுமே!

இதில் நேருவுக்கொன்றும் கெட்டிக்காரத் தனத்தையோ, துணிவையோ, வீரத்தையோ பொருத்தவேண்டியதில்லை; தமிழனின் மானமற்ற சுயநல ஈனப் பிழைப்பும், கோழைத் தனமும், நாட்டைக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் தன்மையும்தான் காரணமாகும்.

கொலைக் குற்றப் பிரிவின்படி குற்றம் சாட்டப்பட்டு முச்சலிக்கா பாண்டுமீது நான் வெளியில் இருக்கிறேன்; வழக்கு விசாரணை 12ஆம் தேதி நடக்க இருக்கிறது; நான் இந்த நாட்டுக்கு 100-க்கு 90 பேர்களைக் கொண்ட திராவிடர் கழகத்திற்குத் தலைவன்; இந்த நிலையிலும் சட்டம் எரித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, இனியும் விசாரணை செய்துத் தீர்ப்புச் சொல்லவேண்டிய 2,000-க்கு மேற்பட்ட கழகத் தோழர்கள்—அதாவது, என்னைப் பின்பற்றுகிறவர்கள் சிறையிலும் விசாரணையிலும் இருக்கிறார்கள்; இந்த நிலையிலும் ஆட்சித் தலைவன் என்னும் பேரால் ஒரு நபர் இங்கு வந்து—அதாவது, எங்கு விசாரணை நடக்கிறதோ அந்த ஊருக்குவந்து, எந்த நீதிபதியும், மாஜிஸ்ட்ரேட்டும் விசாரிக்கவேண்டியவர்களோ—விசாரிக்கிறார்களோ, அந்த மாஜிஸ்ட்ரேட்டையும் நீதிபதியையும் அழைப்பனுப்பி வரவழைத்து எதிரில் உட்கார வைத்துக்கொண்டு, அவர்களைப் பார்த்து, 'இவர்கள் (இந்தக் குற்றவாளிகள்) சிறையில் இருக்க வேண்டியவர்களாவார்கள்; இவர்கள் மன்னிக்கப்படக் கூடாதவர்கள்; மன்னிக்கத் தக்கவர்களல்லர்' என்று இடிமுழக்கம் செய்கிறாரென்றால்—இந்த ஆட்சி எவ்வளவு நீதியும் நேர்மையும் நாணயமுமான ஆட்சி என்பதைத் தமிழர்கள்—மானம், ஈனம் இவற்றைப் பற்றிக் கவலைப்படாத தமிழர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக!

இதில் ஒரு குறிப்பிற்கிடமான விஷயம் என்னவென்றால், இந்த நேரு 9ஆம் தேதிக்கு முதல் நாள் 8ஆம் தேதி-கொலை, கொள்ளை, கொளுத்தல், நாசவேலை, உயிருடன் தூக்கி நெருப்பில் போட்டுப் பொசுக்குதல், சுமார் 100, 200 பேர்களுக்குமேல் உயிரிழக்கச் செய்திருத்தல் ஆகிய காரியங்களைப் பற்றிப் பேசும்போது, 'விவகாரம் விசாரணையிலிருப்பதால், அதைப் பற்றிப் பேசுவது நீதியாகாது; நேர்மையாகாது' என்று சொல்லிப் பேசாமல் வாயை மூடிக்கொண்டு வந்து, மறுநாள் காலையில் விசாரணை நடக்கும் இடத்திற்கே வந்து நீதிபதி அவர்களிடத்திலேயே நேரில், 'இவர்கள் ஜெயிலில் இருக்க வேண்டியவர்கள். நல்லபடி கடினமாகத் தண்டிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால், உங்களுக்கு உத்தியோகம் நிலைக்காது; பிரமோஷன் இருக்காது' என்று சொல்லுவதுபோல்—அதுவும் பெரிதும் பார்ப்பன 'நீதிபதிகள்' இடமே எக்காளமிட்டுச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாரென்றால்—இந்த ஆட்சி, சட்டம், ஆட்சிக்கொடி மாத்திரமல்லாமல், ஆட்சிமுறை, ஆட்சிநீதி, ஆட்சிப் பீடம் ஆகியவையும் சுட்டுப் பொசுக்க வேண்டியதாகுமா, ஆகாதா? இதில் நமக்கு நலமான வாழ்வோ, நீதியோ கிடைக்குமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்—தமிழர்களே! சிந்தித்துப் பாருங்கள்!

['விடுதலை'-தலையங்கம்—11-12-1957]



படிப்பகம்

www.padippakam.com



# 4. பெரியார் கோர்ட்டு வாக்குமூலம்

*திருச்சி செஷன்ஸ் கோர்ட்டார் அவர்கள் முன்பாக*

S.C. 93/1957

*திருச்சி விசேஷ போலீஸ் இன்ஸ்பெக்டர்—கம்பளைனெண்ட்*

VS

பெரியார் ஈ. வெ. ராமசாமி—எதிரி

எதிரி தாக்கல் செய்த ஸ்டேட்மென்ட் :—

'இந்த ஆட்சி கொடுமையான காட்டுமிராண்டி ஆட்சி. அதாவது, பச்சைப் பார்ப்பான் நீதி, நேர்மை, அன்பு, அறிவு அற்ற கொடுங் காட்டுமிராண்டிப் பார்ப்பனப் பாதகர்கள் ஆட்சி.

இந்த ஆட்சியில் இப்போது இயற்கையாகவே நீதி கிடைக்கமாட்டாது. அதிலும், பார்ப்பனத் தலைவனும் பார்ப்பன ஆட்சித் தலைவனுமான முதல் மந்திரி வேஷத்தைக் கொண்ட பண்டிட் நேரு ஆகிய பார்ப்பனர், வழக்கு நடக்கும் இந்த ஊருக்கு வந்து, வழக்கு நீதிபதியாகிய தங்களை அழைத்து வைத்துக்கொண்டு, தங்கள் முன்னிலையிலேயே 9-12-1957-ல் 'பார்ப்பனர்களைக் கொல்லவேண்டும் என்று சொன்னவர்களை விடக்கூடாது; ஜெயிலில் தள்ளவேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்.

நூற்றுக்கணக்கான பேர்கள் கொல்லப்பட்டு ஆயிரக்கணக்கான வீடுகள் கொளுத்தப் பட்ட வழக்கு பற்றி மதுரை ஜில்லாவில் திண்டுக்கல்லில் பேசும்பொழுது, 'வழக்கு விசார ணையிலிருக்கும்பொழுது நான் அதைப்பற்றி இங்கு பேசக்கூடாது' என்று சொல்லிவிட்டு, மேலும் அங்கு அந்தக் கொலை, கொள்ளை, எரிப்பு ஏற்படக் காரணமான சாதியை, சாதி உணர்ச்சியை ஒழிக்கப்பட வேண்டியது அவசியம் என்று பேசி வழக்கு இணக்கம் காட்டிவிட்டு, யாரும் கொல்லப்படாத, எங்கும் கொளுத்தப்படாத இந்த வழக்குபற்றி—அதுவும் சாதி ஒழியாவிட்டால் முதுகுளத்தூர் போன்ற கொலை, கொள்ளை ஏற்படும்—என்பதாக எச்சரிக்கை செய்யப்பட்ட பேச்சைப்பற்றிப் போடப்பட்டிருக்கும் தப்பு வழக்குப் பற்றி இப்படிப் பேசிப் போயிருக்கும்போது, அந்தப் பார்ப்பன ஆட்சியின் ஆதிக்கத்தின்கீழ் இரண்டாந்தர சிப்பந்தியாக இருக்கும் தங்களிடம் நான் என்ன நீதி காணமுடியும்?

இந்த வழக்குக்குச் சாட்சியாக, ஆதரவாகக் கோர்ட்டில் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்ற ஆதாரங்களை நான் பார்த்த அளவில் என் பேச்சு என்ற தலைப்பில் எழுதப்பட்ட சொற்கள் பெரிதும் கற்பனைச் சொற்களைக் கொண்ட ஆதாரங்களாகும். எப்படியெனில், கம்பன் பாட்டையும், ஒட்டக்கூத்தன் பாட்டையும் படிக்கும் மாத்திரத்தில், இது கம்பன் கவி அல்ல என்பது எப்படிக் கவிஞர்களுக்குச் சொல்லமுடியுமோ அதுபோல், என் பேச்சு என்ற ஆதாரங்களை ஒரு சாதாரண மனிதன் பார்த்தாலும் அதில் உள்ள மாறுதலும் கோர்வை இல்லாமல் விடப்பட்ட பொருத்தமில்லாத சேர்க்கையும் பிற தவறுகளும் நன்றாய்த் தெரியும். மிகமிக அலட்சியமாய் எழுதப்பட்ட குறிப்புகளாகப் பெரிதும் அவை காணப்படு கின்றன. அதாவது, நான் பேசிய பேச்சு அப்படியே வார்த்தை வார்த்தையாக எழுதப்பட வில்லை! வேறு வார்த்தைகளால் எழுதப்பட்டவைகளும் வழக்குக்கு [செக்ஷன்களுக்கு] பொருந்தக்கூடியதாக இல்லை. செக்ஷன்களின் கருத்துக்கேற்ற தொடர் வாக்கியங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சொற்களையும் வாக்கியங்களையும் கொண்டு சேர்த்துத் தொகுத்து எழுதி செக்ஷன்களுக்கு ஏற்ப என்று காணும்படியாக, பேசும்போது பேசிய சந்தர்ப்பங்களைக் காட்டும் வாக்கியங்களை மறைத்து விட்டுப் பொருத்தப்பட்டிருக்கிறது. 'கொலை செய்வது' என்றாலும் ஏன்? எதற்காக? எப்படி? எப்போது? என்பதையும் குறிப்புக் காட்டவில்லை. நான் கட்டளை கொடுத்த பின்புதான் சாதி ஒழிக்க இது ஒரு கடைசி வழி, அதாவது இந்த நிலைதான் வந்து சேரும் என்ற உத்தேசக் கருத்தில் அச



சொற்கள் உச்சரிக்கப்பட்டதாகவே காணப்படுகின்றதா? உடனடியாகச் செய்யும்படி கட்டளை யிடப்பட்டிருக்கிறதா? என்பவைகளை எல்லாம் கவனித்தால் செக்ஷன் கருத்துக்கு 'கொலை' என்ற சொல் ஏற்றது என்பது விளங்காது; ஒரு புண்ணுக்கு இந்த மருந்துதான் பொருந்தும் என்கின்ற தன்மையில் கடைசி வைத்தியமாகச் சொல்லப்பட்டதா? அல்லது இந்த மருந்தை உடனே போடு என்று யாருக்காவது கட்டளையிட்டதாகச் சொல்லப்படு கிறதா என்பதும் நடுநிலையில் இருந்து சிந்தித்துச் சிறிதும் சந்தேகத்திற்கிடமில்லாமல் தெளிவாகிறதா என்று கனம் நீதிபதி அவர்கள் பார்த்து, தங்களுக்குத் தோன்றும் முடிவின்படி முடிவு செய்ய வேண்டிக்கொள்ளுகிறேன்.

கனம் கோர்ட்டார் அவர்கள் தீர்ப்பில் எனக்குக் கடினமான நீண்டகால தண்டனை கிடைப்பதாக இருந்தாலும் அதை எனது இலட்சியம் நிறைவேறுவதற்காக நான் கண்டிப் பாகக் கொடுக்கவேண்டிய விலையைக் கருதி ஏற்றுக்கொள்ளுவேனே தவிர சிறிதும் அதிருப்தியடையமாட்டேன்.

['விடுதலை'—10-12-1957]

# 5. சிறை புகுமுன் அறிக்கை

நான் இன்று தண்டனை அடையப்போவது உறுதி. ஏன்என்றால், இந்தியப் பிரதமர் என்னும் பதவியிலுள்ள பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், எனது வழக்குநடக்கிற ஊராகிய திருச்சிக்கே வந்து எனது வழக்குநடைபெறும் நியாயஸ்தல நீதிபதியாகிய செஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் முன்னிலையிலிருந்து, 'பார்ப்பனர்களைக் கொல்லு என்று சொல்லியிருக்கிறவர்களைக் கண்டிப்பாகத் தண்டிக்கவேண்டும்; அது மாபெரும் தேசத் துரோகக் குற்றமாகப் பாவிக்கப்பட வேண்டும். அந்தக் கருத்துடையவன் ஜெயிலில் இருக்கவேண்டியவன்!' என்பதாகச் சொல்லித் தூண்டிவிடும்படியான அளவுக்குப் பேசிவிட்டுப் போயிருக்கும்போது, எந்த நீதிபதிதான் என்னைத் தண்டிக்காமல் விட்டுவிட முடியும்?

அதுபோலவே, சட்டம் எரித்ததாகக் குற்றம்சாட்டி ஜெயிலில்பிடித்து அடைத்து வழக்குத் தொடரப்பட்டிருக்கும் 4000 குற்றவாளிகள் பற்றியும், 'அதன் குற்றம் தேசத் துரோகக் குற்றமாகும்; அவர்கள் கடினமாகத் தண்டிக்கப்படவேண்டியவர்கள்; ஜெயிலில் இருக்கவேண்டியவர்கள்!' என்பதாகவும் விசாரணை செய்து தீர்ப்புக் கூறவேண்டிய மாஜிஸ்திரேட் நீதிபதி முன்னிலையிலும் சொல்லிவிட்டுப் போயிருக்கும்போது எந்த ஜட்ஜ்தான்—எந்த மாஜிஸ்திரேட்தான் குற்றம் சாட்டப்பட்டவர்களைத் தண்டியாமல்—கடின மாகத் தண்டியாமல் விடமுடியும்?

உதாரணமாக, பண்டித நேரு அவர்கள் திருச்சிக்கும், தமிழ்நாட்டில் மற்ற ஊர்களுக்கும் வந்து இப்படியாகப் பேசுவதற்குமுன் 3 மாதம், 6 மாதம், 9 மாதம் போட்ட வழக்குகள்—இவர்வந்து, இந்தப்படிப் பேசியபின் 9 மாதம், 1 வருடம், 1½ வருடம், 2 வருடம் விதம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், என்னை, 'ஜட்ஜ்' தண்டிக்கப்போவது உறுதி.

நான் தண்டிக்கப்பட்டால் பொதுமக்களும், குறிப்பாகக் கழகத் தோழர்களும், 'இந்தத் தண்டனையும் நம் கழக முயற்சிகளும் வெற்றிபெறும் நாள், பயனளிக்கும் காலம் நெருங்கிவிட்டது—பூக்க, காய்க்க ஆரம்பித்துவிட்டது' என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு கழகப் பணியாற்ற ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்; பங்குகொள்ள வேண்டும்; ஆதரவளிக்கவேண்டும். எப்படியோ இது ஒரு இனப் போராட்டமாகப் பார்ப்பனர்கள் செய்துவிட்டார்கள்.

ஆதலால், கழகத் தோழர்களும், மற்றவர்களும் எவ்விதமான பலாத்காரமான, இம்சையான, தொல்லுவதான, நாசகரமான காரியம் எதையும் செய்ய முன்னடையாமல்—

படிப்பகம்

www.padippakam.com



மனத்திலும் செய்ய நினைக்காமல்—பிறர் சொல்லும்படியும் நடவாமல், சாந்தத்தோடும் சமாதானத்தோடும் கழகப் பணியில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

மற்றும், இன்று நமது தோழர்கள் 3000 பேருக்கு மேல் சிறைப்படுத்தப்பட்டுக் கடினமான தண்டனைக் கொடுமை வழங்கப்பட்டிருப்பதற்கு முக்கிய காரணம்—நாம் செய்த எந்தவிதமான குற்றங்களுக்காகவும் அல்ல. அதாவது, நாம் நம் உரிமைக்கு விரோதமாய், நீதிக்கு விரோதமாய் எந்தவிதக் காரியமும் செய்துவிடவில்லை. யாருக்கும் எந்தவிதமான கேடும் செய்துவிடவில்லை; ஏற்பட்டுவிடவுமில்லை.

இதை இன்றைய நம் மந்திரிமார்களே சொல்லிவிட்டார்கள்; சொல்லியும் வருகிறார்கள். அப்படியிருந்தும், இந்த நாட்டுப் பார்ப்பனர்களின் கட்டுப்பாடான கூப்பாட்டிற்காகவும், மாய்மால நடிப்பிற்காகவும், பார்ப்பனப் பத்திரிகைகளின் கட்டுப்பாடான பொய் விஷமப் பிரச்சாரத்தின் காரணமாகவும் மத்திய அரசாங்க அதிபர்கள்—ஆதிக்கக்காரர்களின் சர்வாதிகாரக் கட்டளைக்காகவும் வேறு மார்க்கமில்லாமல் இணங்கித் தீரவேண்டிய அவசியத்தின் காரணமாக ஏற்பட்டவைகளாகும்.

ஆதலால், நமது மக்கள் இந்த நடவடிக்கைகளுக்கும் சென்னை அரசாங்க மந்திரிகளுக்கும், பார்ப்பனரல்லாத போலீஸ் நீதி நிர்வாக அதிகாரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதாகக் கருதி, அவர்களிடம் எவ்வித வெறுப்பும் அதிருப்தியும் கொள்ளாமல் அடங்கி நடப்பதாய் இருக்கவேண்டும்.

இதை நல்ல வாய்ப்பாகக்கொண்டு தங்கள் சுயநலத்திற்காக வெறுப்பு அதிருப்தி ஏற்படுத்த முயற்சிக்கும் எந்தக் கோஷ்டியாருடனும் சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டுமென்பதாகவும்; அப்படிப்பட்டவர்களுடைய முயற்சி வெற்றி பெறாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியதும் பொதுமக்களுடையவும் கழகத் தோழர்களுடையவும் இன்றியமையாததுமான கடமையாகும். கழகத் தோழர்களும் பொதுமக்களும் பார்ப்பனர்களின் இப்படிப்பட்ட பாதகமான செயலுக்கு நாம் பரிகாரம் தேடுவது என்பதற்காக நான் மேலே வேண்டிக்கொண்டிருக்கிறபடி எந்தவிதமான பலாத்கார, இம்சையான, நாசமான செயலிலும் ஈடுபடாமல், பார்ப்பனர்கள் தங்கள் கொடுமைச் செயலின் பயனை அனுபவிக்கும் வண்ணம்—அதாவது தாங்கள் செய்தது தப்பு என்று உணரும் வண்ணம் அவர்களை நாம் வெறுப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும்.

அவர்கள் உறவை நீக்கவேண்டும், அவர்கள் சம்பந்தத்தை வெறுக்கவேண்டும்;
அவர்களுடன் எவ்வித உறவாடலும் சம்பந்தமும்கூடாது;
கூடுமானவரை அவர்களுடன் பேசுவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்;
அவர்களை நாம் வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாது;
அவர்களிடமும் நாம் எந்த வேலைக்கும் இருக்கக்கூடாது;
பார்ப்பன வக்கீல்களைப் பகிஷ்கரிக்கவேண்டும்;
அவர்களிடம் எந்தவிதமான வியாபார சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது;
அவர்கள் உண்டி நிலையங்களுக்கு அறவே நாம் செல்லக்கூடாது;

அவர்களைக் கண்டிப்பாக—நமது நன்மை தீமை காரியங்களுக்கு அழைக்கவோ, சம்பந்தப்படுத்தவோகூடாது; எல்லாவற்றையும்விட, அவர்கள் பூசை செய்யும்—தொண்டு செய்யும் எந்தக் கோவிலுக்கும், தொழுகை இடத்திற்கும் நாம் செல்லவேகூடாது.

அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் விற்பதோ, கொடுப்பதோ கூடாது.

நமது வண்டி வாகனக்காரர்கள் அவர்களை (பார்ப்பனர்களை) ஏற்றக் கூடாது. இன்னும் உள்ள எவ்வித சம்பந்தங்களிலிருந்தும் நாம் விலகி நிற்க வேண்டும்.



எல்லாவற்றையும்விட, பார்ப்பனப் பத்திரிகைகளைப் பகிஷ்காரம் செய்யும்படி பிரச்சாரம் செய்யவேண்டும்.

மற்றும், இந்தப் பார்ப்பனர்களைப் போலவே வடநாட்டார்களையும் கருதவேண்டும். பார்ப்பனர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை என்று மேலே எடுத்துக் காட்டிய அவ்வளவையும்—வடநாட்டாருடனும் வைத்துக் கொள்ள வேண்டும்; நடந்துகொள்ள வேண்டும்.

உடனடியாக நிர்மாணத்திட்டமாக, வடநாட்டான் கடைகளை வியாபாரத் துறைகளில் பகிஷ்கரிக்க ஏற்பாடு செய்ய—கழகக் கமிட்டி கூட்டி யோசித்து நடத்தவேண்டும். வடநாட்டான் கடைகளில் நம்மவர் வியாபாரம் செய்யக்கூடாது என்று, நம்மவர்களை வடநாட்டார்களின் வியாபார ஸ்தலங்களில் நின்று பணிவாக, சமாதான முறையில், சாந்தமான தன்மையில் வேண்டிக்கொள்ள வேண்டும்.

இவ்விதக் காரியங்களை அரசாங்கத்தார் தடுத்தால் அதற்கு மாத்திரம் நாம் இணங்காமல் இருக்கலாம் என்பது எனது கருத்து.

தமிழ் நாடு முழுவதிலும்—கன்னியாகுமரி மாவட்டம் முதல் எல்லா மாவட்டங்களிலும் கழகங்களை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு இலட்சம் அங்கத்தினர்களையாவது சேர்க்கவேண்டும்.

அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்கு, நல்லபடி படித்த பெண்களை மாவட்டத்திற்கு இருவர் அல்லது மூவர் வீதம் தேவையான அளவுக்கு அலவன்ஸ் கொடுத்து மெம்பர் சேர்க்கும் பாரங்கள் இலட்சக்கணக்கில் அச்சடித்துக் கொடுத்துச் சேர்க்கவேண்டும்.

அவர்கள் மூலமே இயக்கப் புத்தகங்களையும் இந்த அறிக்கை முதலியவைகளையும் குறைந்த விலைக்கு விற்கச்சொல்ல வேண்டும். இந்தப் பெண்களுக்கு சிவப்புக் கரை போட்ட கறுப்புச் சேலை, சிவப்பு ரவிக்கை சப்ளை செய்யவேண்டும். திருமதி. நாகரசம்பட்டி விசாலாட்சி அம்மையார், ஆனைமலை ராமகிருட்டின அம்மாள் முதலியவர்கள் இந்த நிர்வாகத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டிக்கொள்ளச் செய்ய வேண்டும். மாவட்டத்திற்கு ஒருவர் அல்லது இருவர் ஆண் தோழர்களை இந்தக் காரியத்திற்கு ஏற்படுத்தி, அவர்களுக்கும் தேவையான அலவன்ஸ் கொடுத்து இந்த வேலைகளைச் செய்யவேண்டும். முழுநேரத் தொண்டர்களாக வரும் ஆண்களையும் பெண்களையும் ஏற்று, அவர்களுக்கு உணவு, போக்குவரத்துச் செலவு அளித்து மேற்படி வேலைசெய்யச் செய்யலாம். ஒவ்வொருவரின் வேலையையும், செய்த அளவையும் அறிந்து வேலைக்குத் தக்கபடி உற்சாகப்படுத்தி அலவன்ஸ் கொடுத்து வேலைசெய்யச் செய்யவேண்டும்.

மற்றக் கட்சிக்காரர்களைப் பற்றியோ, கோஷ்டிகளைப் பற்றியோ, காங்கிரசைப் பற்றியோ, மந்திரிகளைப் பற்றியோ எவ்விதக் குற்றம் குறைகளும் நம் பேச்சாளர்கள் யாரும் பேசக்கூடாது. அவர்கள் நம்மீது சுமத்தும் விஷமப் பிரச்சாரக் குற்றங்களுக்குக் கண்ணியமான முறையில் சமாதானம் சொல்லலாம். நமது இயக்கத்தின் தலைவர்கள் பொறுப்பானவர்கள் என்கிற முறையில் உயர்திரு. வேதாசலம் அவர்களும் திருமதி. மணியம்மை அவர்களும் மற்றும் பல நண்பர்களும் வெளியிலிருக்கிறார்கள். திரு. வேதாசலம் அவர்கட்கு உடல்நலம் சரியாக இல்லாததால் முழுப் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது எனக்குக் கலக்கமாக இருக்கிறது. என்றாலும் தோழர்கள் அவர்களது கட்டளையை மதிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

திருமதி. மணியம்மையார் கூடுமான அளவு தக்க பேச்சாளர்களுடன் நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். [illegible] குள்ள—நமது கழகம் அமைத்தல், மெம்பர் சேர்த்தல், புத்தகம் அறிக்கை விற்றல் ஆகிய காரியங்களைக் கவனிப்பார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



நான் இரண்டாண்டுக்கும் குறையாமல் தண்டிக்கப்பட்டுச் சிறைவாசம் செய்து, திரும்பி வரும் வாய்ப்பு இருந்து வந்து சேருவேனேயானால் ஒரு இலட்சம் அங்கத்தினர், மூவாயிரம் கழகங்கள், 1500 ரூபாய்க்குக் குறையாத அறிக்கை புத்தக விற்பனைக் கணக்கு-காண்பேனேயானால் நானும் மற்றும் அன்பான தோழர்கள் 4000 பேரும் சிறை சென்றது நல்ல பயனை அளித்தது என்றே கொள்ளுவோம்.

பல நண்பர்கள் நமக்குக் கூடுமான அளவு பொருளுதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள். முக்கியமாக ஒரு நண்பர் பெரும் அளவுக்கு, அதாவது 50 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக வாக்களித்துள்ளார்.

இந்தச் சிறைப் பிடிப்பில் போகமுடியாமல் வெளியிலிருப்பவர்களும், சிறைப் பிடித்து நாள் கணக்கில் வைத்திருந்து விடுதலையானவர்களும் மேற்குறித்த எனது வேண்டுகோள் பணிக்கு நல்ல ஆதரவு தரவும், எங்கள் தண்டனைக் கால அளவுக்கு முழுநேரத் தொண்டு செய்யவும் பலர் தாங்களாகவே முன் வந்திருக்கிறார்கள்; தயாராய் இருக்கிறார்கள். அவர்கள் பெயரை நான் இதில் குறிப்பிடவில்லை—என்றாலும் அவர்களது முழுச் சம்மதத்துடன் பெயர்களை மணியம்மையார், திருவாளர்கள் வேதாசலனார், சுப்பிரமணியம் திருநாவுக்கரசு ஆகியவர்களுடன் யோசித்து வெளியிடுவார்கள். அவர்களைக் கழகத் தோழர்கள், அபிமானிகள் ஆதரவாளர்கள் நல்லபடி பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கடைசியாக பலாத்காரம், இம்சை, நாசவேலை, கலவரம், சாந்த சமாதான பங்கம், தனிப்பட்டவர்களிடம் நேரிடையான வாக்குவாதம், கலவரம் ஆகிய காரியம் எதுவும் சிறிதும் தலைகாட்ட இடமில்லாமல் எனது தோழர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

அப்படி ஏதாவது தாறுமாறாக நடந்துகொண்டால் அவர்கள் எனக்கு எதிரிகளும் கழகத்திற்குக் கேடு செய்பவர்களுமாவார்கள்.

என் பிறவி காரணமாக என் இன இழிவுக்குக் காரணமாக இருக்கும் சாதியை ஒழிப்பதும் என் இன மக்களாகிய தமிழர்களுடையவும், என்னுடையவும் தாய்நாடான தமிழ் நாட்டைப் பனியா-பார்ப்பனர்களின் அடிமைத் தளையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் மீட்டுச் சுதந்திரமாக வாழவைக்க வழி செய்வதுமான தனித் தமிழ் நாடு பெறுவதும் என் உயிரினும் இனிய கொள்கைகளாகும்.

அந்த இலட்சியங்களை அடையத் தகுந்த விலையாக என் உடல், பொருள், ஆவி ஆகிய எதையும் கொடுப்பதற்கு உடன்பட்டே நான் இப்போது சிறை செல்லுகிறேன், சென்று வருகிறேன்.

வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

['விடுதலை'-தலையங்கம்—15-12-1957]

## 6. எங்கள் போராட்டம்

இந்தத் தமிழ்நாட்டுச் சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி—இந்திய சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, சமுதாயப் பிரச்சினைக்காக—சாதி ஒழிப்பிற்காக ஒரே நாளில் 3500-4000 பேர்கள் சிறை சென்றது நமது கழகம் ஒன்றில்தான்.

தேசியப் போராட்டம் என்ற பெயரால் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தியதில் கூட, தினம் 4 பேர், 8 பேர்கள்தாம் சிறை செல்வார்கள். முன்கூட்டியே போலீசுக்குச் சொல்லியனுப்பிப் பிடித்துச் செல்லச் சொல்லி—சிறையிலே இராஜ போகங்கள் அனுபவித்தார்கள்!

இன்றுள்ள அத்தனை அரசியல் கட்சிக்காரர்களும் எங்களை ஒழிக்கப் பாடுபடுவார்களே தவிர, சாதி ஒழிய வேண்டியதற்கான பரிகாரம் என்ன என்பது பற்றி ஒருவனும் கவலைப்படுவது கிடையாது.

[திருச்சியில், 27-3-1959-ல் சொற்பொழிவு—'விடுதலை' 6-4-1959]



## 7. இராமாயணத்தை எரியுங்கள்

கழகத் தோழர்களே! பார்ப்பனர்கள் வரப்போகின்ற தேர்தலிலே நம் மக்களை கடவுள், மத, சாஸ்திர, புராண இதிகாசங்களின் பெயரால் ஏமாற்றி, மயக்கி வெற்றி பெறலாம் என்கின்ற எண்ணத்தின்மீது, இப்போது எங்கு பார்த்தாலும் எந்த ஊரிலும் இராமாயணம், பாரதம், கந்தபுராணம் முதலிய புராண இதிகாசங்கள் மூலம் பிரச்சாரம் செய்தும், செய்வித்தும் வருகிறார்கள்.

ஏற்கனவே, நம் நாட்டில் நம் மக்கள் இந்தப் பார்ப்பன, கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், மனுதர்மம், புராணம், இதிகாசங்கள், கோயில், உற்சவம் முதலியவைகளினாலேயே நாம் முட்டாள்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும், மூடநம்பிக்கைக்காரர்களாகவும் ஆகி, பல்லாயிர வருஷ காலமாக, நமது நாட்டில் நாம் கீழ்சாதி மக்கள், ஈனப் பிறவிகள் என்பதை ஏற்று, பார்ப்பனருக்கு அடிமையாய் இருந்து வாழ்ந்துவந்தாலும் இன்று சிறிது காங்கிரஸ் ஆட்சியின் பயனாய், கண்திறந்து அறிவுபெற்று வருவதை ஒழிப்பதற்கு வேறுவகை இல்லை என்று கண்ட பார்ப்பனர், மறுபடியும் மேற்கண்ட இந்தப் பிரச்சாரத்தைத் துவக்கி இருக்கிறார்கள்.

இதன் காரணமாகவே நாம் இப்பொழுது சற்றுவேகமாக கடவுள், மத, சாஸ்திர, புராண இதிகாச ஆதிக்கங்களையும் புரட்டுகளையும், ஆபாசங்களையும் மக்களுக்கு விளக்கி ஏமாறாமல் இருப்பதற்காகப் பிரச்சாரம் செய்துவருகிறோம்.

பார்ப்பனர்கள் பிரச்சாரத்தைப்பற்றி எண்ணும்போது அதில் 8-ல் ஒரு பங்கு, 10-ல் ஒரு பங்கு நமது பிரச்சாரம் இல்லை என்றாலும், தயங்காமல் நம்மால் ஏதோ கூடியதைச் செய்து தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம். இதற்காக இப்போது நாம் செய்துவரும் பிரச்சாரம் நீங்கள் எல்லோரும் அறிந்ததேயாகும். இனியும் தேர்தல் வரையிலும் நமது கழகத் தோழர்கள் எல்லோருமே நம் இயக்கப் புத்தகங்களைத் தருவித்து, விஷயங்களை உணர்ந்து, ஆங்காங்கு அந்தந்த ஊரில் மறுப்புப் பிரச்சாரம் செய்து வரவேண்டியது மிக்க அவசியமாகும்.

இதை அனுசரித்தும் நான் கீழே சொல்லும் விஷயங்களைச் சற்றுக் கவனமாகத் தெரிந்து, அதன்படி கூடுமானவரை நடந்துகொள்ள வேண்டுமெனக் கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தோழர்களே! மார்ச்சு மாதம் 31ஆம் தேதி 'ஸ்ரீராமநவமி' என்னும் ஒரு பண்டிகை நாள் வரப்போகிறது. அந்த நாளைப் பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளும் நல்ல வண்ணம் பிரச்சாரம் செய்ய முற்படுவார்கள். அதனால் நம் மக்களை ஏமாறாமல் இருக்கச் செய்வதற்காக நம் கழகத் தோழர்கள் ஒவ்வொரு ஊரிலும் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்து, மேற்சொன்ன பாமர மக்களுக்கு விளங்கும்படி எடுத்துச் சொல்வதோடு,

இராமாயணம், வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம் ஆகியவை தமிழர்களை இழிவுபடுத்துவதற்கென்றே ஆக்கப்பட்ட, பொய்யும், கற்பனையும் ஆபாசமும் நிறைந்த நூல்கள் ஆகும். ஆகவே இந்த மூன்று சொற்களையும் ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் கையில் வைத்துக்கொண்டு, சொற்பொழிவின் முடிவில் கூட்டத்தில் மக்களுக்குத் தெரியும்படியாக நெருப்பினால் கொளுத்தி, சாம்பலாகும்படி செய்துகாட்டவும்.

இந்தப்படி ஒவ்வொரு கூட்டத்திலும் எத்தனை பேர்கள் செய்துகாட்டக் கூடுமோ அத்தனை பேர்களும் அந்தப்படி எழுதப்பட்ட துண்டுக் காகிதத்தை மக்கள் அறியும்படி கொளுத்தி எரித்துச் சாம்பலாக்கிக் காட்டவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

['விடுதலை'—அறிக்கை—30-3-1966]

படிப்பகம்

www.padippakam.com



# 9. 'தமிழ் நாடு' பெயர் மாற்றப் போர்

## 1. அபாயச் சங்கு

சாதாரணமாக இன்று நம் நாட்டில் நடந்துவரும் பார்ப்பன (ஆரிய ஆதிக்க) பாதுகாப்புத் தீவிர முயற்சியானது நாமறிய சுமார் 60, 70 ஆண்டுகளாக நடந்திருக்காத அளவில் வெகு வேகமாகவும் வெகு தீவிரமாகவும், மிக்க பரவலாகவும் நடந்து வருகிறது. இம் முயற்சிக்குத் தமிழ் நாட்டில் உள்ள எல்லாப் பார்ப்பனர்களும் கட்டுப்பாடாக ஒற்றுமையாக ஒரே மூச்சாக முனைந்து நின்று பாடுபடுகிறார்கள்.

அரசியல் வேஷம் போட்டுக்கொண்டு இராஜாஜி 'தர்மங்களைக் காக்கப்போகிறேன்; தனி மனிதனின் உரிமையைக் காப்பாற்றப் போகிறேன். இத் துறைகளில் மக்களுக்கு முழுச் சுதந்திரமும் தேடித் தருவதே எனது ('சுதந்திரா') கட்சியின் நோக்கம்' என்று வெளிப்படையாகவே சொல்லிக்கொண்டு ஆகா வழிகளையும், வாழாவெட்டிகளையும், வாழ்வில் வழுக்கி விழுந்தவர்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு பெரும்போராட்டம் நடத்தத் துணிந்துவிட்டார். அவருக்கு காந்தியாரால் ஏற்பட்ட செல்வாக்கு இதற்குப் பெரும் ஆதரவளிக்கிறது என்பதுடன் பார்ப்பனர்—அவர்களது பத்திரிகைகள் பெரும் ஆதரவு தருகின்றன.

அடுத்தாற்போல், வைதீக முறையில் அடியோடு எல்லாப் பார்ப்பனர்களும் சேர்ந்து அரசாங்க அலுவலகங்களில்-பெரிய பதவிகளில் மாதம் ரூ. 3000, 4000 சம்பளம் வாங்கிக் கொண்டு உத்தியோகம் பார்த்து ஓய்வெடுத்து பென்ஷன் வாங்கிக்கொண்டு இருக்கும் பார்ப்பனர்களின் தலைமையில் ஊர்தோறும் வைதீக ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொண்டும் மாநாடு நடத்திக்கொண்டும் பெரும் பிரச்சாரங்கள் செய்து வருகிறார்கள்.

இவைதவிர, பார்ப்பன மடாதிபதிகள், சங்கராச்சாரி, மத்துவாச்சாரி, வைணவாச்சாரி ஸ்மார்த்தாச்சாரி முதலான எல்லா மடாதிபதிப் பார்ப்பனர்களும் தினமும்—நாள்தோறும் ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து, ஆங்காங்குள்ள பார்ப்பன அதிகாரிகளைக் கண்டு ஆள் சேர்க்கச் செய்தும் பணம் சேர்த்துக் கொடுக்கச் செய்தும் இமாலயப் பிரச்சாரம் செய்து, ஆரிய வைதீகக் கருத்துக்களைப் புகுத்திப் பார்ப்பனருக்குப் பொருளாதார உதவி, கல்வி உதவி ஆகியவைகளை அளித்தும் வருகிறார்கள்.

இவையெல்லாம் தவிர வெள்ளையன் போனபின்பு வியாபாரத் துறையிலும், தொழில் துறையிலும், பஸ் நடத்தும் துறையிலும் பிரவேசித்துக் கோடீஸ்வரர்களான பார்ப்பனப் பிரபுக்கள், ஆச்சாரியார் முயற்சி முதல் மற்ற எல்லாப் பார்ப்பனர் முயற்சிகளுக்கும் ஏராள மான பொருள் உதவி, வேலை உதவி, மற்றும் ஆள் மாகாண உதவி முதலியவைகள் செய்து, ஆதரித்து, உற்சாகப்படுத்தி, ஊக்குவித்து, பிரச்சார காரியங்கள் நல்லபடி நடக்கச்செய்து வருகிறார்கள்.

மற்றும் மத்திய, மாகாண ஆகிய இரு சர்க்கார் அலுவலகங்களிலும் குறிப்பாகத் தபால், ரயில், சுங்கம், வருமான வரி, அக்கவுண்டஸ், அய்க்கோர்ட் இலாக்கா அலுவலகங் களிலும் பொறுப்பான பெரிய பதவிகளிலும் பார்ப்பனர்கள்—அதிலும் வைதீக வெறிப் பார்ப்பனர்களே குவிந்து கிடப்பதால், அவர்களும் கட்டுப்பாடாகத் தங்கள் இன உயர்வுக்குப் பாடுபடுவதிலும் இத் துறைகளில் நம்மவர்கள் தலையெடுக்கமுடியாதபடி அழுத்திவைத்தும் ஒழித்துக்கட்டுவதற்கு ஏற்ற கொடுமைகளைத் துணிந்து செய்வதுமான காரியங்களிலும் முனைந்து நிற்கின்றார்கள்.

மற்றும், பொதுவாழ்வில், அரசியலில் பிழைப்பை ஏற்படுத்திக்கொண்டு, யார் எந்தக் கட்சி தோன்றினாலும் அவர்களுக்கு விளம்பரமும் தேர்தலில் வெற்றியும் கொடுக்கக்கூடிய அளவுக்குப் பார்ப்பனர்கள் ஆதரவு தேவை இருக்கின்றபடியால், எல்லாக் கட்சிக்காரர்களும்



—காங்கிரசுக்காரர்களில் பெரும்பாலோர் உள்பட—பார்ப்பனர்கள் காலடியில் கிடந்து உழல வேண்டியவர்களாக இருப்பதால் சர்வ கட்சிகளும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவே இருந்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாகப் பார்ப்பனப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

பத்திரிகைகள் எல்லாம் பார்ப்பனர்களிடத்தில் இருப்பதாலும் திராவிடர்கள் நடத்தும் பத்திரிகைகளும் பார்ப்பனர்களுக்குப் பயந்து நடத்தப்படவேண்டி இருப்பதாலும் மேற்கண்ட பார்ப்பன ஆதிக்க வைதீக முயற்சிக் காரியங்கள் எதற்கும் எதிர்ப்பு நடத்த எந்தத் திராவிடனுக்கும் எந்த 'எதிர்க்கட்சி'க்கும் வசதியோ வாய்ப்போ இல்லாமல் போய் விடுவதோடு, வாழ வேண்டியவன்—வளர வேண்டியவன் ஆன மந்திரிகள் உட்பட எந்தத் திராவிடனும் வைதீகப் பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்க வேண்டியவனாகவே ஆகிவிடுகிறான்.

திராவிட நாட்டில் திராவிடர்களுக்குச் செல்வாக்கு இருக்கும்படியான தன்மையில் திருந்திய திராவிட அரசர்களைக்கொண்ட அரசுகள் பல அண்மையில் இருந்தன. வெள்ளையன் போன உடனே 'அந்தப் பிராந்தியங்கள் அந்தந்த அரசுடனேயே சேர்க்கப் பட்டிருக்க வேண்டும். அந்தந்தப் பிராந்திய அரசுக்குப் பூரண சுய ஆட்சி உரிமைகள் வழங் கப்பட்டிருக்க வேண்டும்' என்று சுதந்திரம்—சுய ஆட்சி என்னும் பேரால்—அதிலும் ஒரு பெரும் மோசடியாக ஜனநாயகம் என்னும் பேரால் ஜனங்களோடு சம்பந்தமே இல்லாத ஒரு சாதி பிரிவுப் பார்ப்பனரே ஜனநாயகத்திற்கு மனுதர்மம் போல் சட்டம் செய்துகொண்டு, அச் சட்டப்படியான ஜனநாயக முறையில் சாதாரணத் தன்மையில் பார்ப்பானே—ஆரியனே ஆட்சித் தலைவனாக ஆகும்படியான நிலையில் ஆட்சி நடக்க வகை செய்துகொண்டதோடு, அக் கால முடி அரசர்கள் எல்லாம் பார்ப்பன அடி அரசுக்குச் சிப்பந்திகளாக ஆக்கப்பட்டு விட்டார்கள். இதனால் திராவிடர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமைக் குடிகளாகத்தான் என்றும் இருக்க வேண்டியதைத் தவிர ஆட்சியாளராக இருக்க முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

மற்றபடி, திராவிடர்களே பெருநிலக்கிழார்களாக இருந்த ஜமீன் மிட்டாதாரர்கள் எல்லோரும் ஒழிக்கப்பட்டு, அவர்கள் ஒரு சாதாரணக் குடியானவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள்.

இவர்கள் இரு கூட்டத்தினருக்கும் இருந்த பரம்பரைப் பெருமை பாத்தியதை—அதாவது தனிப்பட்டவர்களுக்கு இருந்த உரிமை அடியோடு—ஒருநாள் அய்ந்து பார்ப்பனர் கூடி 'சட்டம்' செய்து ஒரு வரி உத்தரவினால் பறிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், பார்ப்பனர்களையே பெரிதும் கொண்ட மடாதிபதிகள், அவர்களது உரிமைகள், செல்வங்கள், பெருமைகள் முதலியவை ஒரு சிறிதும் ஒரு துரும்பும் அசைக்கப் படவில்லை. அரசர்கள் ஒழிக்கப்பட்டதன் பயனாகத்தான், உஞ்சவிருத்திப் பார்ப்பனர்கள் ஒரே அடியாக சக்கரவர்த்தி—ஏகபோக சர்வாதிகார ஆட்சிக்குத் திடீரென்று எட்டிக் குதித்து சர்வ பவுமன் என்று சொல்லத்தக்க ஏக சக்ராதிபதிகளாக ஆகிவிட்டார்கள். இன்றைய ஆட்சிக்கு ஜனநாயகம் என்று பெயர் சொல்லப்பட்டாலும், வேசிக்குத் தேவதாசி என்று பெயர் வைக்கப்பட்டிருப்பதுபோல், என்றும் சர்வாதிகாரியாக ஒரு பார்ப்பானே இருந்து வரும்படியான ஆட்சித் தன்மைக்கு 'ஜனநாயகம்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விளக்கிச் சொல்லவேண்டுமானால், இன்றைய ஜனநாயகத்தில் ஒரு பார்ப்பான்தான் பிரதம (மந்திரி) ஆட்சி ஆளனாகவும் ஒரு பார்ப்பான்தான் பிரஸிடெண்டாக—ஆட்சி யாளனாக வரமுடியுமே அல்லாமல் இந்த இந்தியக் கூட்டாட்சி என்பது உள்ளவரையில் ஒரு தமிழனும் ஒருநாளும் ஆட்சிக்கு வரமுடியாது. தமிழன் சுதந்திர ஆட்சிக்கு வரும்வரை தமிழன், தமிழ்நாடு ஒருநாளும் சூத்திரத்தன்மையிலிருந்து, அடிமைக் குடியாய் இருப்பதி லிருந்து கடுகளவும் மாற்றமடையமுடியாது.



படிப்பகம்

www.padippakam.com



ஆகவே, இந்தப் பெருங்கேட்டிலிருந்து தமிழ்நாடும், தமிழனும் தப்பிப் பிழைத்து விடுதலை பெறவேண்டுமானால் இந்தியக் கூட்டாட்சி என்கின்ற பார்ப்பன ஏகபோக சர்வாதிகார ஆட்சியிலிருந்து விலகி, தமிழ்நாட்டைச் சுதந்திரத் தமிழ்நாடு ஆக ஆக்கிக் கொண்டாலன்றி, வேறு எக் காரணத்தாலும் எக் கிளர்ச்சியாலும் முடியவே முடியாது என்பதைத் தமிழ்மக்கள் உணரவேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன். தியாகம் என்பது சிறைத் தண்டனை அனுபவிப்பதுதான் என்று பலர் கருதிக்கொண்டு இருக்கிறார்கள். தியாகம் என்பது தன்னலமறுப்பு என்ற பொருளைக் கொண்டதாகும்.

தன்னலமறுப்பு என்பது தனது உயிரைப் பலிகொடுப்பது என்பதை இறுதியாகக் கொண்டதாகும்.

இப்படிப்பட்ட தன்னலமறுப்பு கொண்ட ஒரு ஆயிரம் வீரர்கள் முன்வந்தால்தான் தமிழ்நாடு சுதந்திரத் தமிழ்நாடாக ஆகமுடியும்.

இளைஞர்கள் இதை நல்லபடி சிந்தித்து முடிவுசெய்து கொண்டு செயலில் ஈடுபட வேண்டிக்கொள்கிறேன். சிந்திக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்பதற்கத்தான் இந்த அபாயச் சங்கை ஊதுகிறேன்.

['விடுதலை'—தலையங்கம்—13-5-1960]

## 2. தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கு வழி

சுமார் 3 கோடித் தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டிற்கு அதிகாரபூர்வமாக 'தமிழ் நாடு' என்ற பெயரில்லை.

ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் (States Re-organisation Commission) அறிக்கை வெளிவந்தவுடன் நான் பதறிப்போய், பெயரிடுவது பற்றி 12-10-1955-ல் 'விடுதலை'யில் அறிக்கை வெளியிட்டேன். (இது பின்னால் வெளியிடப்படும்.)

மக்களிடையே இக் கருத்துக்கு இருக்கும் செல்வாக்கைக் கண்டும், ஆட்சியாளர்கள் இதை நிறைவேற்றத் தவறியதையும் இந்த நாட்டு எதிர்க் கட்சிகள் என்பவைகள்—அதாவது தேர்தல் ஜனநாயகப் படுத்திக்கொண்டு, இன்றும் 'ஓட்டுப் பிழைப்பு'க்குப் பயன்படுத்தத் தங்களுக்குக் கிடைத்த நல்ல கருவி—சாதனம் என்பதாகக் கருதிக்கொண்டு பிரச்சாரம் புரிந்து வருகின்றனர். 'தமிழ்நாடு' என்று பெயர் வரவேண்டும் என்ற ஆசையைவிட, அப்படி மாறி விடக்கூடாது; மாறிவிட்டால் அந்த ஆயுதமும் பிடுங்கப்பட்டுவிடும் என்ற பயத்தால் அவதிப் படுகின்றனர். அந்த எண்ணமே அவர்களுக்கு அதிகம். மனதில் நினைப்பதை அப்படியே காட்டுவதற்கு, உடல் உஷ்ணத்தைக் காட்ட தெர்மா மீட்டர் கொண்டு அறிவதுபோல், கருவி ஒன்று இருக்குமானால், அதைவைத்து நான் கூறிடும் இந்த உண்மையை அறியலாம்.

அதிலும் இங்குள்ள 'காமராஜர் அரசாங்க எதிர்ப்புக் கட்சி'களைப் பொறுத்து இது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

காமராஜர் அரசாங்கம் இதை ஏன் செய்யவில்லை என்று கேட்பதைவிட காமராஜரோ அல்லது அவரது சக மந்திரிகளோ தாங்களே பார்த்து உடனே உத்தரவு போட்டு மாற்றும் சக்தி சட்டப்படி, அதாவது அரசியலமைப்புப்படி உண்டா? என்று கேட்பதுதான் நாணயமான காரியமாகும். ஆனால், அரசியல்தான் 'அயோக்கியர்களுடைய கடைசிப் புகலிடம்' ஆயிற்றே! அதிலும் இந்த அரசியல்வாதிகளிடம் நேர்மை நாணயத்தை எதிர்பார்ப்பது நமது தவறல்லவா?

இதோ இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது: ஷரத்து (Article 3)

பார்லிமெண்டு சட்டத்தினால், (அ) எந்த இராஜ்யத்திலிருந்தாவது ஒரு பிரதேசத்தைப் பிரித்தேனும், அல்லது இரண்டோ அதற்கு மேற்பட்ட இராஜ்யங்களையோ இணைத்தேனும் அல்லது எப் பிரதேசத்தையாவது ஒரு இராஜ்யத்தின் பாகத்தோடு இணைத்தேனும் புதிய இராஜ்யம் ஒன்றை அமைக்கலாம்.



(ஆ) எந்த இராஜ்யத்தின் பரப்பையும் பெருக்கலாம்;
(இ) எந்த இராஜ்யத்தின் பரப்பையும் குறைக்கலாம்;
(ஈ) எந்த இராஜ்யத்தின் எல்லைகளையும் மாற்றலாம்;
(உ) எந்த இராஜ்யத்தின் பெயரையும் மாற்றலாம்.

எனினும், இவற்றிற்கான எந்த மசோதாவும் இராஷ்டிரபதியின் சிபாரிசின் பேரில் அன்றியும் மசோதாவில் அடங்கிய பிரேரணை முதலாவது 'அ' பாகம் அல்லது 'ஆ' பாகத்தில் குறிப்பிட்ட எந்த இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் எல்லைகளையாவது அத்தகைய இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் பெயர் அல்லது பெயர்களையாவது பொறுத்திருக்குமாயின் அம் மசோதாவைக்கொண்டு வருவதற்கான பிரேரணையைப் பற்றியும், அதன் ஷரத்துக்களைப்பற்றியும் அந்த இராஜ்யம் அல்லது இராஜ்யங்களின் ஒவ்வொன்றின் சட்ட மன்றத்தினுடைய கருத்துக்களை இராஷ்டிரபதி கேட்டறிந்துகொண்டால் அன்றியும் பார்லிமெண்ட் சபை எதிலும் கொண்டுவரப்படலாகாது.

எனவே, பெயர் மாற்ற அதிகாரமும், சக்தியும் டெல்லி ஆட்சிக்கே உண்டு; அதிலும் இந்நாட்டு அரசாங்க சட்டசபைகள் கருத்துத் தெரிவித்தாலும் 'இராஷ்டிரபதியோ' அல்லது பார்லிமெண்டு சபைகளோ அதற்குக் கட்டுப்படவேண்டும் என்ற நியதி அரசியலமைப்பில் இல்லையே!

ஆகவே, இதற்காகத் தமிழ்நாட்டு அரசாங்கத்தோடு முட்டிக்கொள்ளுவதைவிட இந்த அநீதிக்குக் காரணமான ஆதிபத்திய டெல்லி ஆட்சியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதுதானே அறிவுடைமை!

எனவே, தாய்த் திருநாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரில்லையே என்று கொதிக்கும் உள்ளங்கொண்ட இளைஞர்களே! தோழர்களே! புலவர்களே! பெருமக்களே! எழுத்தாளர்களே! பேச்சாளர்களே!

நாடு பிரிவினையைத் தவிர வேறு வழி உண்டா? என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். நேர்மை விடை காணுங்கள். உண்மையில் நாட்டின் பெயர் மாற்றத்தில் யாருக்காவது நாணயமான கவலை இருக்குமானால் ஜூன் 5-ல் இந்திய யூனியன் படத்தை ஒரு கையிலும், தீப்பந்தத்தை மறு கையிலும் தூக்கி ஊர்வலம் வந்து டெல்லி ஆதிக்க ஆட்சிக்குத் தீ மூட்டுங்கள்! தீ மூட்டுங்கள்! தீ மூட்டுங்கள்!

ஊர்வலம் வருவதில் யாருக்காவது வெட்கம், பயம் இருக்குமானால் அவரவர்கள் வீட்டின் முன் வாசலில் கொளுத்திவிட்டுப் பெயர்களைக் கொடுங்கள்.

['விடுதலை'—அறிக்கை—18-5-1960]

## 3. தேச படத்தைக் கொளுத்துங்கள்

அருமைத் தமிழ்ப் பெருமக்களே!

இந்திய யூனியன் ஆட்சி (டெல்லி ஆட்சி) இந்தி மொழியைத் தீவிரமாகப் பரப்ப 'கச்சையை' வரிந்து கட்டிக்கொண்டு தீவிரமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகிறது.

இந்திய அரசியல் சட்டத்தின் 343-வது ஷரத்து சொல்கிறது: 'யூனியனின் ராஜாங்க பாஷை தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட இந்தியாக இருக்க வேண்டும்' என்று.

படிப்பகம்

www.padippakam.com



அதில் குறிப்பிடப்பட்டபடி ஏற்படுத்தப்பட்ட அரசாங்க மொழிக் கமிஷன்—திரு. பி. ஜி. கெர் என்பவர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது—நாம் முன்கூட்டியே சொன்னபடி 'இந்தி மொழிக் கமிஷன்' என்று கூறும் அளவு இந்திதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதையும் இங்கிலீஷிலிருந்து இந்திக்கு மாற்றங்கள் விரைவில் ஏற்படுத்தப் படவேண்டும் என்றும் எழுதிவிட்டது. பார்லிமெண்டும் அதன் சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டது. நமது நாட்டைச் சார்ந்த திரு. டாக்டர் சுப்பராயன் அவர்கள் அக் கமிஷனில் ஒரு மெம்பராக இருந்து ஆட்சேபக் குறிப்பு (dissent) தெரிவித்தபோதிலும் அவர்கள் காரியம் இதனால் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை.

ஆறு பேர் கொண்ட கமிட்டி அமைத்து அதில் டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் ஒரு அநாமதேய முஸ்லிமையும் போட்டு 4 பார்ப்பனர்கள் கூடி, கல்லுப் பிள்ளையார் மாதிரி அமர்ந்து, அசைக்க முடியாதபடி பார்ப்பன நலச்சட்டம் ஒன்றை—நவீன மனுதர்மத்தை—எழுதி அதற்கு 'இந்திய அரசியல் சட்டம்' என்று பெயரிட்டுக் கொண்டது போல், இந்திக் காரர்களையே போட்டு, பெயருக்கு ஒரு தமிழரைப் போட்டு அவரது ஆட்சேபக் குறிப்புக்கு எந்த மரியாதையும் கொடுக்காமல், இந்தி நுழைப்புக்குச் சரியானபடி அடிகோலி ஆணி அடித்துவிட்டார்கள்.

முன்பு ஒரு தடவை திருப்பதியில் இந்திய யூனியன் ஆட்சியின் தலைவரான ஜனாதிபதி திரு. ராஜேந்திர பிரசாத் அவர்கள் இந்தித் திணிப்பிற்கு முழு ஆதரவு கொடுத்துப் பேசியதைத் தமது அடுக்கடுக்கான உத்தரவுகள் மூலம் செயல்படுத்திக் காட்டுகிறார்.

முன்பு நாம் இந்தியைப் புகுத்துவதை எதிர்த்து இந்திய யூனியன் கொடியைக் கொளுத்துவது எனப் பிரகடனம் செய்தோம்; 'இல்லை, இல்லை; இந்தி பேசாத மக்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தியைத் திணிப்பதில்லை' என்று அரசாங்கத்தினர் உறுதிமொழி கொடுத்து, நம்மைக் கொடிகொளுத்தும் போராட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டனர்.

நான் அப்போதே இவர்களது நாணயத்தையும் வாக்குறுதியையும் எடை போட்டுப் பார்த்துத்தான் கைவிட வில்லை. தற்போதைக்கு நிறுத்தி வைக்கிறேன்—அதாவது ஒத்தி வைத்திருக்கிறேன் என்று அறிக்கை விட்டேன்.

பிறகு சாமர்த்தியமாக, கொடியைக் கொளுத்தினால் மூன்று வருஷ தண்டனை என்பதாக ஒரு சட்டத்தை (இந்நாட்டுச் சட்டசபைக்கு உத்திரவிட்டு)ச் செய்து வைத்துக் கொண்டு, இந்தியைத் தீவிரமாகப் புகுத்தும் 'கைங்கர்யத்தில்' டெல்லி ஆட்சியினர் இறங்கியுள்ளனர்.

மைல் கற்களில் எல்லாம் இந்தி எழுதப்படுகிறது. தமிழ்நாட்டு மந்திரிகள் ஆட்சே பித்தாலும்கூட அதற்கு டெல்லிக்காரர்கள் செவி சாய்ப்பதில்லை.

மணியார்டர், கார்டு மற்ற தபால் தந்தி ரசீதுகளில் இந்தி மயம்!

(வெளிநாடான இலங்கையில் சிங்களவர் அரசாங்கத்தால்கூட தமிழில் இவைகள் எல்லாம்—அதாவது கார்டு, ஸ்டாம்பு முதலியன இருக்கின்றன என்பது இங்கு நாம் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும்.)

வானொலிப் பெட்டியைத் திருப்பினால் அங்கு 'ஆகாஷ்வாணி' என அலறுவதைக் காணுகிறோம்.

மத்திய இலாக்காக்களான தபால், ரயில்வே, சுங்கம் போன்ற பல துறைகளில் வேலையில் உள்ளவர்களை எல்லாம் இந்திபடித்து பாஸ் செய்யும்படி சுற்றறிக்கைகளும், தாக்கீதுகளும் தூண்டுதல்களும் இடைவிடாமல் நடந்தவண்ணமே இருக்கின்றன.



இலாக்காவினரோ இந்தி வாத்தியார் போட்டு வேலை நேரத்தில் ஒரு பகுதியை அதற்கும் தந்து இந்தி படிக்கும்படி செய்துகொண்டு இருக்கிறார்கள்.

பள்ளிக்கூடங்களில் எல்லாம் இந்தி கட்டாயமாகவே மாணவர்களுக்குப் புகுத்தப் படுவதுடன், இந்தியில் மார்க் வாங்காத மாணவர்கள் ஃபெயிலாக்கப்படுகின்றார்கள்.

இந்தி பேசாத ராஜ்யங்களிலிருந்து பிரதிநிதிகள் டெல்லி சட்டசபையில் மந்திரி களைக் கேள்விகேட்டால் அவர்களுக்குப் புரியாதவகையில் இந்தியிலேயே பதில்கள் தரப்படு கின்றன. இதைத் தட்டிக்கேட்டுப் பரிகாரம் தேட அவர்களுக்கு வசதி ஏதும் இல்லை.

இந்தியைப் பிரதான மொழியாகக்கொண்ட உத்திரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான் போன்ற ராஜ்யப் பிரதிநிதிகள் கணிசமான அளவு அங்கு இருப்பதால் இந்தி ஆதிக்கத்தை—ஆதிபத்தியத்தை எதிர்ப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்று பல பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கே தெரியும்.

மற்றும், அகில இந்தியக் கட்சிகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் எந்தக் கட்சியும் இந்தித் திணிப்பை எதிர்ப்பது—பேசுவது என்பது இயலாத காரியமாகும்.

சென்ற இரண்டு வாரங்களுக்குமுன் ஜனாதிபதி போட்டுள்ள உத்திரவு—இந்தியை எப்படியேனும் சீக்கிரம் திணித்து இங்கிலீஷைப் புதைகுழிக்கு அனுப்பியாகவேண்டும் என்கிறது.

இந்தி எதிர்ப்பாளர்கள் கருத்துக்கு மதிப்புத் தருவதுபோல், பிரதம மந்திரி நேரு சிற்சில நேரங்களில் பார்லிமெண்டிலும் வெளியிலும் வாய்ப்பேச்சு—உறுதிமொழிகள் தருகிறார். அந்தப் பேச்சு அச்சுப் போட்டு வெளியே வருவதற்குள்–அச்சு மை உலருவதற்கு முன்பே உள்நாட்டு மந்திரி இலாக்காவிலிருந்தோ அல்லது 'இராஷ்டிரபவன'த்திலிருந்தோ இந்தி நுழைப்புத் திட்டம் வந்துவிடுகிறது.

ஆகவே, இந்தியைத் தீவிரமாக எதிர்க்கிறோம் என்கிற தோழர்களே! கட்சிக் காரர்களே!

இந்தியாளர்களை ஆட்சிப் பீடத்தில் கொண்ட இந்திய யூனியன் ஆட்சி இருக்கும்வரை இந்தி நுழைக்கப்படாமல் இருக்கமுடியுமா? என்று தீவிரமாக நாணயமாக யோசியுங்கள்!

நண்பர் ஆச்சாரியார் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக 'இந்தி நுழைப்பு தேச அய்க்கியத்தைக் குலைக்கும்' என்று சொல்லி வருகிறார். அதன் அர்த்தம், கருத்து எல்லாம்—இந்தியை ஒழிக்க முடியாவிட்டால் நாம் இந்தி ஆட்சியாகிய இந்திய ஆட்சியி லிருந்து பிரிந்துகொள்வது என்பதுதானே?

இந்தியை எதிர்க்க, அதன் ஆதிக்கத்தை ஒழித்துக்கட்ட ஆட்சியின் பிணைப்பி லிருந்து நாம் விடுபடுவதைத் தவிர வேறு வழி உண்டா? சொன்னால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

மைல் கற்களில் இந்தி எழுதப்படுவதை எதிர்த்து ஒரு போராட்டம், உண்ணாவிரதம்!

'ஆகாசவாணி'யை எதிர்த்து ஒரு போராட்டம்! உண்ணாவிரதம்! மறியல்!

தபால், கார்டு, கவர்கள், மணியார்டர் கூப்பன்களில் இந்தி இருப்பதை எதிர்த்து ஒரு போராட்டம்! மறியல்! கிளர்ச்சி!

இப்படித் தனித் தனியாகக் கிளர்ச்சிகள் நடத்துவதனால் இலட்சியம் எந்த அளவுக்குக் கைகூடும்? எந்த அளவு இந்திக் கேடு நம்மைவிட்டு நீங்கும்? என்று யோசியுங்கள்! தனிப்பட்டவர்களுக்கும், கட்சிக்காரர்களுக்கும், விளம்பரம், வோட்டு, 'தியாக முத்திரை' இவை கிடைக்குமே தவிர, காரியத்தில் அது இந்தி ஒழிப்புக்கு எந்த அளவு பயன்படும்?

படிப்பகம்

www.padippakam.com



எனவே, இந்தி விஷவிருட்சத்தின் ஆணிவேரைக் கெல்லி எறிய ஒரேவழிதான் உண்டு. அதுதான் நாடு பிரிவினை.

ஆகவே, அருமை இந்தி எதிர்ப்பாளர்களே! நீங்கள் வேறு எதற்காகவும் இந்திய தேசப் படத்தை எரிக்கவில்லை என்றாலும் இதற்காகவாவது கொளுத்துங்களேன்!

ஜூன் 5-ந்தேதி மாலை தயார்தானா? பல நாட்கள் அவகாசம் இருக்கிறது! நிதானமாகச் சிந்தியுங்கள்! இலட்சியத்தில் கவலை இருந்தால் தீவையுங்கள், இந்தியத் தேசப் படத்திற்கு!

['விடுதலை'—அறிக்கை—21-5-1960]

தமிழ்நாடு எதற்காக யூனியன் (டெல்லி) ஆட்சியின்கீழ் அடிமையாக இருக்க வேண்டும்? இல்லாவிட்டால் என்ன ஆகிவிடும்?

டெல்லி ஆட்சி அப்படி என்ன நீதிக்கும், நிர்வாகத் திறமைக்கும், நேர்மைக்கும், ஜனநாயகத்திற்கும், பாதுகாப்பிற்கும், பலத்திற்கும் சிறப்பான பேர்போன ஆட்சி?

1. வரலாற்றுப்படி நாம், டெல்லியுடன் இணைந்து கூட்டாக இருக்கவேண்டும் என்பதற்கு ஏதாவது ஆதாரங்கள் உண்டா? 56 நாடுகளில் நாம் ஒருநாட்டாராய் இருந்து வந்தவர்கள்!

வெள்ளைக்காரன் வியாபாரம் நிமித்தம் இங்குவந்து பல பகுதிகளில் இருந்த நாடுகளையும் பிடித்துத் தனது சவுகரியத்தை முன்னிட்டு இதை 'ஒரு குடைக்கீழ்' கொண்டு வந்தானே தவிர அதற்குமுன்பு எப்போதாவது டெல்லியை எஜமானனாகக்கொண்டு தமிழ்நாடு இருந்தது என்று சரித்திரத்தைப் புரட்டிக் காரணம் காட்டமுடியுமா? 'காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை' என்ற சொற்றொடருக்கு அக்கியப்பட்ட ஒரே நாடு இந்தியா என்ற பொருள் இதற்குமுன் எப்போதாவது இருந்திருக்கிறதா? அல்லது,

2. புராணப்படியோ, இதிகாசப்படியோ ஒரே நாடாக இருந்திருக்கிறதா? 'சுயம்வரத்திற்குக்கூட 56 தேசத்து ராஜாக்கள் வந்திருந்தார்கள்' என்றுதான் அவைகள் கூறுகின்றன. இராமாயணத்தில் வில் உடைப்பதற்குக்கூட பலதேச ராஜாக்கள் வந்தார்கள் என்று இல்லையா?

ஆகவே, அப்போதும்கூட பற்பல ராஜ்யங்கள், அவைகளுக்குத் தனித்தனி எல்லைகள், ராஜாக்கள் இருந்திருக்கின்றனர் என்றுதானே அறிகிறோம்?

3. பூகோளப்படி எந்த நாடாவது 2000 மைல்களுக்கு அப்பால் எஜமான் ஆட்சியை வைத்திருப்பதும், எதற்கெடுத்தாலும் அங்கு ஓடி ஓடி கருத்தும் உத்தரவும் என்ன என்று தெரிந்து, பிறகு செயலாற்றும் தன்மையைக் கொண்டுள்ளதா? எந்தவகையில் இது சரியானதாகும்?

4. கலாசாரப்படியாவது டெல்லி எஜமான ஆட்சிப் பீடர்களாகிய அவர்களுக்கும் நமக்கும் சம்பந்தம் ஏதாவது உண்டா?

உணவில், உடையில், மொழியில் எல்லாவற்றிலுமே ஒன்றுக்கு மற்றொன்று ஏறுமாறான நிலை!

ஆகவே, வரலாற்றுப்படியும் காரணமில்லை;

பூகோளப்படியும் காரணமில்லை;

புராணப்படியும் காரணமில்லை;

கலாசாரப்படியும் காரணமில்லை.

இந்தப்படியான எத்தன்மையாலும் நாம் டெல்லி ஆதிக்கத்திற்கு அடிமையாவதால் நமக்கு ஏதாவது சமுதாயம், பொருளாதாரம், ஆட்சிமுறை ஆகிய ஏதாவது ஒருதுறையி



லாவது பலன் ஏற்படுகிறதா? ஏற்படுகிறது என்ற நிலையிலிருந்தாலாவது யூனியன் ஆட்சியின்கீழ் நாம் இருப்பதில் அர்த்தம் உண்டு.

இந்த ஆட்சியில் நீதி இல்லை என்பதைச் சில ஆண்டுகளுக்கு முன்பே சென்னை அய்க்கோர்ட்டில் என்மீது போடப்பட்ட ஒரு வழக்கின்போது தெளிவாக எடுத்து விளக்கி 'பார்ப்பான் நீதிபதியாய்—ஆட்சியாளனாய் உள்ளநாடு கடும்புலி வாழும் காடேயாகும்' என்று குறிப்பிட்டுள்ளேன்.

நிர்வாகத் திறமையோ நேர்மையோ இல்லை. ஒவ்வொரு வருஷமும் ஆடிட்டர் ஜெனரல் தரும் ரிப்போர்ட் ஒன்றே அதற்கு நல்ல 'சர்ட்டிபிகேட்'டாக இருக்கிறது. பலகோடி நம்மிடம் சுரண்டும் வரிப் பணம் நாசத்திற்கும் மோசத்திற்கும் ஈடாக்கப்படுகிறது.

நம்மிடமிருந்து நம்மைக் கசக்கிப் பிழிந்து வாங்கி அதை அவர்கள் டாட்டா, பிர்லா, முந்திராக்கள் இடம் கோடி கோடியாகத் தந்து, அதற்குக் கைமாறாக (காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு) இலட்சம் இலட்சமாகப் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

சென்ற ஆண்டு பிரதம மந்திரி திரு. நேருவின் காரியதரிசியாக இருந்த திரு. மத்தாய் என்பவர் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு அதிபராகவும், அதைக்கொண்டு அவர் தாயார் பெயரில் 'ஜக்கம்மா டிரஸ்ட்' என ஏற்படுத்தியும், செய்த ஜகஜாலப் புரட்டுகளையும், அதைப் பூசி மெழுகி மூடி மறைக்க நேரு பட்டபாட்டினையும், கடைசியில் முந்திரா விவகாரம் போலவே அது அமிழ்த்தப்பட்டதும் நாம் அவ்வளவு சுலபமாக மறந்துவிடுவதற் குரியவைகளா?

பிர்லா, டாட்டா, டால்மியா போன்றவர்களிடம் வாங்கும் தேர்தல் நன்கொடையும் அதற்குப் பிரதி உபகாரம் என்ற முறையில் சர்க்கார் அவர்களுக்கு வழிதிறந்து வகுப்பதும் நாம் எடுத்துக்காட்டி வராதவைகள் அல்லவே? இந்திய யூனியன் ஆட்சியின் நிர்வாகத் திறமைக்கும் நீதிக்கும் இன்னும் வேறு எடுத்துக்காட்டுகள் வேண்டுமா?

ஜனநாயகத்திற்கும், இந்த ஆட்சிக்குந்தான் ஏதாவது சம்பந்தமுண்டா?

'எனது கொடி, அரசியல் சட்டம், ஆட்சி பிடிக்காதவர்கள் இந் நாட்டை விட்டு வெளியேறி விடவேண்டும்' என்று பார்ப்பன சர்வாதிகாரத் திமிருடன் பேசும் ஒரு பிரதம மந்திரியைக் கொண்ட இந்த ஆட்சிக்கு ஜனநாயக ஆட்சி என்று பெயரிட்டு அழைப்பதை விட வடிகட்டிய முட்டாள்தனம் வேறு உண்டா?

அதிலும், கேரளத்தில் முறைப்படி நடந்த கம்யூனிஸ்ட் ஆட்சியைக் காலித்தனம் மூலம் கவிழ்க்க ஏற்பாடுகள் செய்து, பிறகு அதைக் காட்டி, ஒரு வரி உத்தரவின் மூலம் ஒழித்துக்கட்டினார்களே, அந்தப் பிரத்யட்ச நிலையைவிட வேறு உதாரணம் வேண்டுமா?

யூனியன் ஆட்சியின்கீழ் இருப்பதால் மற்ற எவையும் இல்லாவிட்டால்கூட நமக்கு பாதுகாப்பாவது இருக்கிறதா?

வருஷம் ஒன்றுக்கு சுமார் 250 கோடி ரூபாய்க்குமேல் இராணுவத்திற்குச் செலவழிக்கப்படுகிறது. அதாவது 55% இதற்குச் செலவழிக்கப்படுகிறது. ஆனாலும் பலன் உண்டா?

ஒரு பக்கத்தில் சீனாக்காரன் ஆக்கிரமிப்பு; இன்னொரு பக்கத்தில் பாகிஸ்தான் காரனிடம் தினம் தினம் உதைபடும் நிலை.

'சுண்டைக்காய்' கோவாவை [illegible] செய்தும் இவர்களால் எடுத்துக் கொள்ள முடியாத நிலை; வீணாகப் [illegible] தான் மிச்சம். உலகமெல்லாம் சென்று 'தோட்டாக்கள்' பெற்று [illegible] அளவுக்கு அடுகளவு உள்ள இதற்குப் பரிகாரம் காண இந்தப் பன்னிரண்டு [illegible] முடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



கடன், கடன் என்று வெளி நாட்டாரிடம் பல்லைக் காட்டிக் கெஞ்சி பல கோடிகள் படிப் பிச்சை வாங்கி, காஷ்மீர் முனையிலும், இதுபோன்ற மற்ற காரியங்களிலும் அவை பாழடிக்கப்பட்டு வருகின்றன.

காஷ்மீர் பிரச்சினைக்கு மாத்திரம் இதுவரை சுமார் ரூ. 300 கோடிக்குமேல் செலவழித்தனர். 'காதொடிந்த ஊசி'யளவும் பயன் விளையவில்லை.

இந்த நிலையில் எதற்காக நாம் டெல்லி ஆட்சியின்கீழ் இருக்கவேண்டும்? ஆண்டு ஒன்றுக்கு 66 கோடி ரூபாய் எதற்காகக் 'கப்பம்' கட்டவேண்டும்?

சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! ஏக இந்தியத் தோழர்களே, நன்றாகச் சிந்தியுங்கள்!

தெளிவடைவீர்களானால், ஜூன் 5-ந்தேதி மாலை இந்தியத் தேசப் படத்தில் தீவையுங்கள்! நாடு பிரிக்க, மேற்கூறிய அநியாய அக்கிரமங்களைக் கண்டிக்க, அடக்கி ஒழிக்க இது ஒன்றுதான் வழி! வேறு மார்க்கம் இருந்தால் காட்டுங்கள்; வேறு வழி இருந்தால் சொல்லுங்கள். இல்லை என்றால் நீங்கள் எங்கள் வழிக்கு வாருங்கள்! நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்! பந்தத்தை ஏந்துங்கள்! படத்தைப் பொசுக்குங்கள்!

['விடுதலை'—அறிக்கை—22-5-1960]

# 10. இழிவு நீக்கக் கிளர்ச்சி

## 1. இழிவு நீக்கக் கிளர்ச்சி

சூத்திரர் என்கின்ற இழிவை நீக்கக் கிளர்ச்சி செய்வது என்பது சமுதாய சம்பந்தமான (சோஷியலிச) காரியமே தவிர, இதில் அரசியல் ஏதுமில்லை; மற்றும் இதில் பலாத்காரம் என்பதுமில்லை.

அதிலும், இந்த இழிவு நீக்கக் கிளர்ச்சி என்பது, உலகில் எங்குமே இல்லாத அக்கிரமக் கொடுமையிலிருந்து மனிதன் விடுதலை, மானம் பெறவேண்டும் என்பதற்காக நடத்தப்படும் கிளர்ச்சியேயாகும். இதில் எந்தவித வகுப்புத் துவேஷமோ, வகுப்பு வெறுப்போ இல்லை. நம் நாட்டில் (இந்துக்கள் என்னும்) சமுதாயத்தில் 100-க்கு 97 பேர்களாக உள்ள மக்கள்—அதிலும், படித்தவர்கள், செல்வவான்கள், உயர்தர அய்க்கோர்ட் நீதிபதிகள், கலெக்டர்கள், உப அத்தியட்சகர்கள், மடாதிபதிகள், சமீப காலம்வரை மகாராஜாக்கள், அரசர்கள், ஜமீன்தார்கள், பலகோடி ரூபாய்க்குச் சொந்தக்காரர்கள், பிரபுக்களுட்பட இவர்கள்—சமுதாயத்தில் கீழ்ப் பிறவியாக, கீழ்மக்களாக, கடவுள் என்கிற (அதுவும் அவர்களுடைய கடவுள்) சிலையிடம் நெருங்கக் கூடாதவர்களாக, அறைக்கு வெளியே நிற்க வேண்டியவர்களாகத் தலைமுறை தலைமுறையாகத் தடுக்கப்பட்டு, நிரந்தரக் கீழ்மக்களாக ஆக்கப்பட்டிருக்கும் கொடுமைக்கு, இழிவுக்கு உள்ளாக்கப் பட்டிருப்பதிலிருந்து விலக்கி, மானமுள்ள மக்களாக—ஆக்கப்பட வேண்டுமென்பதற்குக் கிளர்ச்சி செய்வதென்றால்—இது, இதுவரை செய்யாமலிருந்ததுதான் மானங்கெட்ட தன்மையும், இமாலயத் தவறுமாகுமேயொழிய, இப்போது கிளர்ச்சி செய்வதென்பது ஒரு நாளும், ஒரு விதத்திலும் தவறாகவோ கூடாததாகவோ ஆகாது; ஆகவே ஆகாது.

நீக்ரோக்களுக்கும், வெள்ளையருக்கும் உள்ள அளவு பிறவி பேதம், நிற பேதம், நாகரிக பேதம் நமக்கும் பார்ப்பனருக்கும், பூசாரிகளுக்கும் கிடையாது. அவ்வளவு பேதமுள்ள (மைனாரிட்டி) நீக்ரோக்கள் மெஜாரிட்டியான, ஆளும்சாதியாரான, பிரபுக்களான வெள்ளையர்களோடு எல்லாத் துறைகளிலும் சரிசமமாகக் கலந்து, உண்பன, உறங்குவன, பெண் கொடுக்கல்-வாங்கல், உட்படக் கலந்து புழங்குகிறார்கள். ஆனால், நம் நாட்டில் 100-க்கு மூன்றுபேரே உள்ள கூட்டம் பிச்சை எடுப்பதையும், உழைக்காததையும்,



கூலிக்குப் புரோகிதம் செய்வதையும் உரிமையாய்க் கொண்ட—பிழைப்பாய்க் கொண்ட கூட்டம், மற்றும் வாழ்வில் யோக்கியமாக, நேர்மையாக, நாணயமாக இருக்கவேண்டும் என்கின்ற தர்மம் இல்லாததும், தாங்கள் எது வேண்டுமானாலும் செய்து பிழைக்கலாம், எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்கின்ற அனுபவத்தில் இருக்கிற கூட்டம்—தங்களை 'மேல் பிறவி' என்றும், நம்மைக் 'கீழ்ப் பிறவி-இழி பிறவி'—பொது இடமாகிய கடவுள் என்கின்ற கல் சிலையிருக்கும் இடத்தில் பிரவேசிக்கக் கூடாத மிக மிக இழிதன்மையானவர்கள் என்பதான நிபந்தனையை நம் பேரில் ஏற்றிக் கொண்டு—கட்டிடத்திற்கு, அறைக்கு வெளியில் நின்று வணங்கவேண்டும் என்பதை—நிலைக்க விடலாமா என்பது தான் கிளர்ச்சியின் 'தத்துவமாகும்'.

வேறு நாடுகளில் இப்படிப்பட்ட கொடுமையான, இழிவான தன்மை எந்தச் சமுதாயத்திற்கும் இருக்குமானால் எவ்வளவோ கொலை, பலாத்காரம், நாசவேலை நடத்தி ஒழிக்கப்பட்டிருக்கும். அப்படிக் கொடுமை இந்த நாட்டில் இருந்து வருகிறதென்றால் இது யாருடைய தவறு? யாருடைய மானங்கெட்ட ஈனத்தனம் என்று ஒவ்வொரு தமிழனையும் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறேன். மற்றும், இது விஷயத்தில் நாம் கிளர்ச்சி செய்து வெற்றிபெற்றால் அதனால் யாருக்கும், எந்த நபருக்கும் ஒரு தூசி அளவு நட்டமும், கேடும் இல்லாத ஒரு காரியமாகும். கடவுள்களைப் பூசை செய்கிற பூசாரி வேலை பார்ப்பனருக்குத் தான்—மேல் சாதிக்காரருக்குத்தான் உண்டு என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லையென்றாலும் கோயில் பூசை செய்பவன் பார்ப்பானல்லன்; மேல் சாதிக்காரனுமல்லன்; குருக்கள் என்கின்ற ஒரு சாதியானாவன் என்றும் சொல்லப்படுகிறது; ஆதாரங்களுமிருக்கின்றன.

அந்தக் குருக்கள் என்பவர்கள் பார்ப்பனரல்லாத சைவர்களே ஆவார்கள் என்று சில ஆதாரங்களில் இருக்கின்றன. மற்றும், 'ஒரு குறிப்பிட்ட சாதியார்'தான் பூசாரியாக இருக்க வேண்டுமென்கின்ற நிபந்தனை எந்த ஆதாரத்திலுமில்லை.

குருக்கள், அர்ச்சகர்கள் என்பவர்கள் வீட்டில் பார்ப்பனர்கள் சாப்பிடவே மாட்டார்கள்; பெண் கொடுக்கல், வாங்கலும் செய்ய மாட்டார்களாம். இந்த நிலையிலிருப்பவர்கள் பூசை செய்யும் இடத்திற்கு, மற்ற இந்து மக்கள்—பார்ப்பனரல்லாதார் மட்டும் நுழையக் கூடாது என்றால் அது எப்படி நியாயமாகும்?

தமிழ் நாட்டிலேயே பல கோயில்களில் சாத்தாணி என்கின்ற பார்ப்பனரல்லாதவர்கள் பூசை செய்கிறார்கள்; பல கோயில்களில் ஆண்டிகள், பண்டாரங்கள் என்கின்ற பார்ப்பனரல்லாதவர்கள் பூசை செய்கிறார்கள். மற்றும், நாம் மூலஸ்தானம் என்பதற்குள் செல்வதால் அந்த இடத்திற்கோ—சாமிக்கோ எந்தவிதப் புனிதமும் கெட்டுப்போவதில்லை; சிலையைத் தொடவேண்டாமென்று வேண்டுமானாலும் திட்டம் வைத்துக்கொள்ளலாம். ஆனால், நெருங்கக் கூடாது; அந்த அறையின் படியைத் தாண்டக்கூடாது என்பது என்ன நியாயம்? உற்சவக் கடவுள்கள், சிலைகள் என்பவைகளிடமெல்லாம் எல்லாச் சாதியாரும், எல்லா மக்களும் நெருங்குகிறார்கள்.

மூலஸ்தானத்திற்கு வெளியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நவக் கிரகங்கள் என்கின்ற கடவுள்கள்—மற்ற சிலைகளிடம் எல்லோரும் நெருங்குகிறார்கள்.

எனவே, இந்தக் 'கர்ப்பக் கிரகம்' என்கின்ற பூச்சாண்டிகள் பார்ப்பனரல்லாத மக்களை, இழி மக்கள்—இழி பிறப்பாளர்கள் என்றாக்கப்படுவதற்காகத்தான் இருந்து வருகிறதேயல்லாமல், மற்றபடி வேறு எந்தப் புனிதத் தன்மையையும் பாதுகாக்கவல்ல என்பதே நமது கருத்து. அன்றியும், நாம் உள்ளே சென்று வணங்குவதால் எந்தப் புனிதத் தன்மையும் கெட்டுவிடுவதில்லை என்பதும், 'உள்ளே செல்லவேண்டும்' என்கிற நமக்கும், நம் உறுதிக்கும், உண்மையில் எந்தப் புனிதத் தன்மையையும் கெடுக்கவேண்டும் என்கின்ற எண்ணம் இல்லவே இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



நமது இழிவு நீக்கப்படவேண்டும் என்கின்ற காரியத்திற்காகத்தான் இதைச் சொல்லுகிறோம்.

ஆகவே, தோழர்களே, இந்தக் கிளர்ச்சி அவசியமா, இல்லையா?

என்ன சொல்கிறீர்கள்?

அவசியம் என்றால் வாருங்கள், போகலாம்.

உடனே பெயர் கொடுங்கள்!

['விடுதலை'-தலையங்கம்—19-10-1969]

## 2. மூலஸ்தானப் பிரவேசம்

'மூலஸ்தானத்தில் எல்லா மக்களும் பிரவேசிக்கக் கூடாது' என்பது கோயில் சம்பந்தமாக அல்லது ஒரு பொது இடம் சம்பந்தமாக அரசாங்கத்தார் செய்துகொண்ட ஏற்பாடுதானேயொழிய, அது எந்த விதத்திலும் ஒரு மத சம்பந்தமான தத்துவமாகாது; எந்த விதத்திலும் ஒரு புனிதமான காரியமோ, யாருக்காவது மனம் புண்படுவதைத் தடுக்கும்படியான காரியமோ என்று சொல்ல முடியாது; 'கோயில் பிரகாரத்திற்குள் தாழ்த்தப்பட்ட இனமக்கள் செல்வது' எவ்வளவு சாதாரண காரியமோ, அதைவிடச் சாதாரணமான காரியமேயாகும்.

'கோயிலுக்குள்ளாகவோ, மூலஸ்தானத்திற்குள்ளாகவோ இன்ன மதத்தார்தான், இன்ன சாதியார்தான் செல்லலாம்; இவரிவர் செல்லக்கூடாது' என்பதற்கு எந்தச் சட்டமும், மத ஆதாரமும், சரித்திர நியமனமுமில்லை.

இன்ன மொழியில்தான் பூசைக்குச் சொற்கள் சொல்லவேண்டும் என்கிற கட்டாயமும் இல்லை. கோயில் நிர்வாகத்திற்கு, டிரஸ்டி பதவிக்கு இன்ன சாதியாகத்தானிருக்கவேண்டும் என்பதற்கு ஒரு நிர்ப்பந்தமுமில்லை; மத விரோதமும், சாஸ்திர விரோதமும், சட்ட விரோதமுமில்லை.

நான் சுமார் 20 ஆண்டு ஈரோடு தாலுக்கா தேவஸ்தானக் கமிட்டிச் செயலாளனாகவும் தலைவனாகவும் இருந்திருக்கிறேன்; 'சாத்தாணி' இனத்தாரை அர்ச்சகராக நியமித்து இருக்கிறேன்; நான் கடவுள் நம்பிக்கையில்லாதவனாக (நாத்திகனாக) இருந்து கொண்டேதான் இந்தத் தாலுக்கா தேவஸ்தானக் கமிட்டித் தலைவனாக, செயலாளனாக இருந்திருக்கிறேன்; மற்றும் ஈரோடு, பவானி, திருப்பூர், கோபி தாலுக்கா கமிட்டித் தலைவனாகவும் இருந்திருக்கிறேன். இதுபற்றிக் கலெக்டருக்கு, சிலர், நான் நாத்திகன் என்று புகார் எழுதி, அவர் என்னை அதிசயமாக, 'நாயக்கரே! நீர் நாத்திகரா?' என்று கேட்டார். 'ஆம்' என்று சொன்னேன்; அவர் சிரித்துக்கொண்டே, 'இந்துதானே!' என்று, தானே கேட்டுக்கொண்டு சும்மா இருந்துவிட்டார்.

இதை நான் 20, 30 ஆண்டுகளுக்கு முன் 'குடி அரசி'லும், 'விடுதலை'யிலும் எழுதியிருக்கிறேன்.

இன்றும் விஷ்ணு கோயில்கள் பலவற்றில் மூலஸ்தானத்திற்கும், மற்றவர்கள் நிற்குமிடத்திற்கும் இடையில் கதவு நிலைதான்—வாயிற்படிதான்—அதாவது, சுமார் ஒரு அடி அளவு இடம் தூரம்தானிருக்கிறது. 'பிரசாதம்' வாங்கக் கையை, கதவைத் தாண்டி உள்ளே நீட்டலாம். படுத்திருக்கும் 10, 12 அடி நீளமுள்ள சிலையின் தலையையும் காலையும் பார்க்க—'பக்தர்கள்' தலையையும் கழுத்தையும் கதவு நிலையைத் தாண்டி உள்ளே நீட்டலாம். பூசாரிக்குக்கூட நெற்றியில் நாமம், விபூதிதான் இருக்க வேண்டுமேயொழிய, அவன் ஸ்நானம் செய்துவிட்டு வரவேண்டுமென்றோ, சுத்தமான வேட்டி கட்டிக் கொண்டு வரவேண்டுமென்றோ திட்டம்கூடக் கிடையாது.



அவர்களில் அனேகர் 'மாமா'வாக இருப்பார்கள் என்பதோடு, தாசிகளிடம் சங்கமம் 'இதழ் அமுதம்' பருகுபவர்களாகவும் இருப்பார்கள். மாலையில் நாம் கோயிலுக்கு அனுப்புகிற சண்பகப் பூ, மனோரஞ்சிதப் பூ உள்ள பூமாலையில் உள்ள பூ—இரவு 10 மணிக்குத் தாசி வீட்டிற்குப் போனால், அந்தத் தாசியின் தலையில் பார்க்கலாம். (அந்தக் காலத்தில் இந்தப் பூக்கள் எங்கள் நந்தவனத்தில் மாத்திரம்தான் உண்டு.) ஆக, மூலஸ்தானப் பிரவேசத்திற்கும், கர்ப்பக் கிரகப் பிரவேசத்திற்கும் சட்டம், சாஸ்திரம் ஒன்றும் கிடையாது. ஆச்சாரம், அனுஷ்டானம் என்பதற்கும் எந்தத் திட்டமும் கிடையாது—இந்து மதம் என்பதற்கே கிடையாது.

நெற்றிக் குறி என்பதும் அதிகாரத்தாலும், செல்வாக்காலும் ஏற்பட்டதேயொழிய, அதற்குச் சட்டமோ, சாஸ்திரமோ, நிர்ப்பந்தமோ கிடையாது.

ஆகவே சாதிபேதம், மதபேதம் என்பவை அனுஷ்டானத்திலும் இல்லை; சட்டத்திலும் இல்லை; சாஸ்திரத்திலும் இல்லை.

உண்பன, தின்பன வகையிலும்; பெண் கொடுப்பன, கொள்வன என்பவைகளிலும் சட்டப்படியே தடை நீக்கப்பட்ட பிறகு—'ஒரு நிலக் குறிப்பான இடத்திற்கு—மூலஸ்தானத்திற்கு' மட்டும் உண்டு என்றால், இது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்பதோடு, இதனால் சமுதாய இழிவும் அமுல் படுத்தப்படுவதென்றால் எவ்வளவு மானக் கேடான காரியம் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எனவே, ஆட்சியாளர் இதைப் பகுத்தறிவோடு கவனிக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—18-10-1969]

## 3. இழிநிலை நீக்க மாநாடு

நண்பர்களே! நாம் நமது நாட்டில் நாலாம் சாதியார்—சூத்திரர்—பார்ப்பனரின் தாசி புத்திரர்கள் என்றும், சில அனுபவங்களில் தீண்டப்படாத, நெருங்கப்படாத இழிபிறவி மக்கள் என்றும் 'இந்து' மத சாஸ்திரங்களில் தர்மமாகவும், 'இந்து லா' என்னும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டும், அதை அனுசரித்தே கோர்ட் தீர்ப்புகளும் இருந்துவருகின்றன. அந்தப் படி அமுல் நடத்தப்பட்டும் வருகின்றன.

இந்த நிலை, இந்த அமைப்பு, இந்த அனுபவம் மாற்றப்படவேண்டும் என்பது இன்றையத் தமிழர்களின் பெரும்பான்மையோரின் ஆவல்.

இந்த நிலை அரசியல் நிர்வாக சட்டத்திலும், நீதி சட்டத்திலும் இடம் பெற்று இருக்கின்றபடியால், அரசாங்கத்துடன் போராடித்தான் நீக்கிக் கொள்ளத் தக்கதாக இருக்கிறது.

நம்நாடு, முஸ்லிம் ஆட்சியிலோ, (ஐரோப்பிய) கிறிஸ்தவருடைய ஆட்சியிலோ இருக்குமானால் இந்த நிலை வெகுநாளைக்கு முன்னதாகவே ஒழிக்கப்பட்டிருக்கும். அப்படிக்கில்லாமல், (பார்ப்பனருடைய) 'இந்து'க்களுடைய ஆட்சியில் இருப்பதால், இதை ஒழிக்கப்படும் வரையில் மாற்ற முடியாததாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இதற்குக் காரணம், இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள்—கிறிஸ்தவர்கள் தவிர்த்து, மற்ற எல்லா மக்களும் அதாவது, பவுத்தர், சீக்கியர், சமணர், பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள் மற்றும் பிள்ளையார் சிலையை உடைத்தவர்கள், இராமாயணம் கொளுத்தியவர்கள், இராமனை, முருகனை, வெங்கிடாசலபதியை (கடவுள்களை)ச் செருப்பால் அடித்தவர்கள் முதலிய எல்லோருமே 'இந்து'க்கள்தான் என்று சட்டமும், சட்ட நிபுணர்களால் கோர்ட் தீர்ப்புகளும் இருக்கின்றன. இந்து என்கின்ற பெயரிலிருந்து விலகிக்கொள்ள நமக்கு உரிமையில்லை; இடமும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



அதனால், உலகம் உள்ளவரை, இந்திய ஆட்சியில் தமிழ்நாடு ஆட்சியின் கீழ் குடிமகனாய் இருப்பவர்கள், முஸ்லிம்-கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் யாவருமே சூத்திரர், நாலாம் சாதியார், பார்ப்பனரின் தாசி புத்திரர்கள் என்னும் தன்மையில் இருக்கிறோம்.

இதோடு கூடவே, நம் கோவில்களுக்குப் போகிற எவரும் எந்தக் கோவிலுக்குப் போவதானாலும், சாமி இருக்கிற அறைக்கு (கர்ப்ப கிரகத்திற்கு) வெளியில் நின்றுதான் சாமி தரிசனமோ, மற்றதோ செய்யவேண்டியிருக்கிறது. காரணம், நாம் கீழ்சாதிக்காரர்கள். நாம் தொட்டால், நெருங்கினால் சாமி தீட்டாகிவிடும். ஆதலால் எட்டி நிற்கவேண்டும்; வெளியில் நிற்கிறோம். எனவே, நமக்கு இந்த இழிநிலை போக்கப்பட வேண்டாமா என்பதுதான் நான் நமது மக்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளும் விண்ணப்பம்.

இன்றைய நமது இந்திய ஆட்சிக்கு உட்பட்ட தமிழக அரசுக்கு இது விஷயத்தில் உள்ள சட்டத் தடைகளை நீக்க சக்தி போதாது. இந்தியாவில் தமிழ்நாடு தவிர்த்து, மற்ற நாட்டு மக்கள் அனேகமாக இசைய மாட்டார்கள். என்றாலும், நாம் இந்த இழிவுகளை இனி பொறுத்துக்கொண்டு இருக்கமாட்டோம். எப்படியாவது, என்ன செய்தாவது, என்ன கஷ்ட நஷ்டங்களை ஏற்றாவது, அனுபவித்தாவது இந்த இழிநிலையை ஒழித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதற்காக, இதுவரை செய்துவந்த பிரச்சாரம் எதுவும் நமக்குப் பயன் அளிக்கவில்லை. ஆதலால், இப்போது நாம் இதற்காக என்றே ஒரு மகாநாடு 'சூத்திரன்—தாசிமகன் என்கின்ற இழிநிலை நீக்க மாநாடு' என்னும் பெயரால் சென்னையிலோ, திருச்சியிலோ ஒரு மாநாடு கூட்டி, அதில் நமது இந்திய அரசாங்கத்திற்கு எதிராக நமது வேண்டுகோள் என்பதாக விளக்கி, ஒரு தீர்மானமும், அந்த வேண்டுகோளை நிறைவேற்றப்படவில்லையானால், நமது முயற்சி என்னவென்பது பற்றி ஒரு தீர்மானம் செய்ய உத்தேசித்தும் இருக்கின்றோம்.

இந்த மாநாடு டிசம்பரில் கூடுவதாக என்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் துவக்கி இருக்கிறேன். மாநாடு நடத்தவும், கிளர்ச்சி நடத்தவும் பெருந்தொகை தேவைப்படும். அது நன்கொடை மூலமும், டிக்கெட் விற்பனை மூலமும் மற்றும் பலவழிகளில் சேகரிக்கவும் முயற்சிக்கிறேன்.

தமிழ் நாட்டில் ஆளுங்கட்சியில் உள்ள இயக்கத் தோழர்களும், மற்றும் இந்தக் கொள்கையை ஏற்கும் மற்ற எல்லாக் கட்சித் தோழர்களும் வேண்டிய முயற்சி செய்து உதவ வேண்டுகிறேன்.

['விடுதலை'-தலையங்கம்—14-10-1973]

# பகுதி V

# செய்திகள்

படிப்பகம்

www.padippakam.com

Price One Anna.

Reg. No. M. 2426.

Annual Subscription:—
Inland: Rs. 4.
Foreign: Rs. 5, 8 sh., $ 2.

Edited by
E. V. Ramasami.
S. Ramanathan.

# revolt

PUBLISHED EVERY WEDNESDAY.

VOL. I. 12th DECEMBER 1928. NO. 6

## The Call of Science.

What is the difference between the wise man and the fool? The wise man is not infallible, nor is the fool necessarily a blunderer. Both are liable to err. Both commit mistakes. But the wise man learns from his mistakes. The fool does not. Science is an attempt to draw the attention of man to the mistakes he has committed. Science is a call to mankind to learn by past failures. He who heeds the call of science is wise. He who does not is otherwise.

Elsewhere we publish an article by "Simha" setting forth the changes in our method of living necessitated by recent advances in science. The positive measures advocated by Eugenics may not win immediate approbation in the circumstances prevailing in our country, however desirable they may appear from a theoretic point of view. But there is negative warning conveyed by Eugenics which we desire our readers to clearly understand. Investigations relating to laws of heredity have not only indicated the directions in which humanity should advance if it would improve its breed but they have also brought into clear relief one false step we took in the past. One of the most serious of blunders that we have been guilty of is an inculcation of belief in the heritability of acquired characters. No other idea has created such bad blood between friends and neighbours or has produced so much unnecessary suffering and misery. Wars have been fought to enlist its application to one set of facts rather than to another, causing tremendous loss of lives and untold sufferings to the nations.

Pride of descent is born of our vanity. We like to think of ourselves as superior beings. We delight in imagining that others are our inferiors. The sense of our own supreme worth is so pleasing to us that we desire to display it to the public gaze. But no human failing can find vent in public unless it is reduced to a dogma and sanctified as a creed. We have therefore exalted our prejudice into a doctrine. We have postulated that our own superiority is such a magnificent affair that we could not have acquired it in a single birth. Our forefathers through the generations accumulated the treasure for us; our descendants will continue to add to the store. Heredity is made to pile up human qualities even as the miser who adds up one hard earned coin to another, never losing a farthing, ever on the look-out to increase the hoard.

But science has stepped in and has expropriated our superiors from this ill gotten wealth. It has been established that acquired characters are not inherited. A genius may be born of humble parents. The shastri, learned in the scriptures, may beget a son with an antipathy to the sacred lore. The Devadasi may give birth to a Savithri. A Gandhi may rise from among the Banias. It is no longer possible to construct intellectual dreadnaughts. The child at the Agraharam is not the superior of his contemporary in the Cheri, either in intellectual ability or in moral worth. Both are liable to error as both are liable to catch measles. The mighty edifice of Varnashrama has crumbled like a house of cards. The orthodox ostritches will not face facts. But let the intelligent reader learn wisdom from the conclusions of science.

## Racy.

This week 'G. R.' is giving our readers a treat. 'G. R.' is a blue blooded Gandhiite. But he is in a fighting mood, and active Khadi service is keeping him in good form. His attempt to give us "a hard hit" has fallen wide of the mark. But he has deigned to praise us and has mad us blush. 'G. R.' has fallen in love with 'Sak'. He is right. For 'Sak' is a fine swordsman. But his sally on Communal representation has not done him or his keen sword full justice.

Our contention is that *separate* electorates have an equal claim to be considered along with *joint* electorates in any scheme of organising constituencies in our country. We did not maintain, as 'G. R.' wrongly supposes we did, that *communal* electorates are the best method of electing representatives. *Joint* electorates are synonimous with *territorial* electorates. But *separate* electorates are not indentical with *communal* electorates. A communal electorate is a separate electorate. But a separate electorate need not be a communal one. We

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 7-11-1923-ல் துவக்கப்பெற்ற, Revolt-ரிவோல்ட் ஆங்கில வார ஏட்டின் 6-ம் இதழின் முகப்பு அட்டை

Price One Anna.

Reg. No. M. 2426.

Annual Subscription:—
Inland: Rs. 4.
Foreign: Rs. 5, 8 sh., $ 2.

Edited by
E. V. Ramasami.

# revolt

Published Every Sunday.

VOL. 2. ERODE, 19th JANUARY 1930. NO. 3.

## NOTES AND NEWS.

### An Inter-Caste Self-respect Marriage

At Erode.

Mr. E. V. Ramasami's mansion at Erode witnessed the celebration of the self-respect inter-caste marriage between Mr. S. Guruswami, Sub-editor, "Revolt" and Srimati T. S. Kunjitham, Student, B. A. Senior, Queen Mary's College. There was a very large gathering of ladies and gentlemen, besides the members, workers, leaders and other followers and admirers of the self-respect movement. The marriage was conducted wholly under self-respect methods, there being neither the usual ceremonies, nor the intermediary. This is the first instance of a member of the "Mudaliar" community which in South Indin is next to the Brahmins in orthodoxy and privilege of birth, entering into an inter-caste marriage.

Among those who sent messages of congratulations are, Hon. Mirza S. Ismail Sahib Bahadur, Dewan of Mysore, Hon. Dr. P. Subbarayan, Chief Minister, Hon. Sir Muhamad Usman Sahib Bahadur, Home Member, Hon. S. Muthia Mudaliar, Health Minister, Dr. P. Varadarajalu Naidu, Editor, "Tamil Nadu", Miss De La Hey, Principal Queen Mary's College, Mr. R. K. Shanmugham Chettiar, M.L.A., Janab. M. Jamal Muhammad Sahib, Sir A. P. Patro, Mr. K. Chidambaranatha Mudaliar, Shiyali, Mr. K. Aiyappan, Editor "Sahodaran", Mr. W. P. A. Soundrapandya Nadar, Mr. T. K. Chidambaranatha Mudaliar, M.L.C., and Mr. P. T. Rajan, M. L. C.,

In the evening there was held a public meeting under the presidency of Mr. S. Ramanathan M.A. B.L., when the married couple besides others addressed the gathering on "Social Reform".

### NEVER-NEVER GIRLS.

Twenty young women who have sworn never to wed have formed themselves into the "Never, Never Club," the one and only rule of which is that they shall remain spinsters till the end of their days!

"You may think we are joking," said Miss May Gridley, the founder and Secectary, in an interview, "but we are in deadly earnest." "Don't think that we are man-haters, or soared spinsters, or have been crossed in love. Not a bit of it." Miss Gridley explained that all the members were in good positions, self-supporting and likely to continue so and they were of the opinion that by marrying they would be robbing domestically inclined girls of their chance of happiness. "After all," she said, "there are something like two million surplus women. It is the duty of those of us who can find for ourselves not to marry.

"Our membership includes confidential Secretaries and clerks, buyers, a traveller, typists and so on. All are earning good money, and are competent enough to be almost certain of regular jobs with the opportunity of putting away for a rainy day."

"And if a member falls in love?,"

Miss Gridley smiled. "That will be our business," she said.

### THE CHIVALROUS HUSBAND.

The world has become accustomed to reading of men who, in their wills, insert clauses penalising their widows should they re-marry. But Mr. Edward E. Mengens, of 81, Harborne Road, Eggbaston, a business man who died three months ago, leaving £32,264, was a refreshing exception. Instead of enjoining his widow to refrain from taking another partner, he urged her, in his will, to get married again and as quickly as possible! A note written at the bottom of Mr. Mengen's will, reads as follows:—

"In the event of my wife marrying again, I wish it to be known to all my friends and

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை ஆசிரியராகக் கொண்ட Revolt-ரிவோல்ட் ஆங்கில வார ஏட்டின் தொ [illegible] முகப்பு அட்டை

படிப்பகம்

www.padippakam.com

# 1. அறிமுகச் செய்திகள்

## 1. 'ரிவோல்ட்' (Revolt)

'ரிவோல்ட்' என்னும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றைச் சென்ற ஆறாம் தேதி செவ்வாய்க்கிழமை பட்டிவீரன்பட்டி திரு. சவுந்தரபாண்டிய நாடார் அவர்களைக்கொண்டு திறப்புவிழா நடத்தி, 7ஆம் தேதி புதன்கிழமை, 'முதல் இதழ்' வெளிப்படுத்திவிட்டோம். இனி அதை ஆதரித்து அதன் கொள்கைகளை வெற்றிபெறச்செய்து வைக்கவேண்டியது பொதுமக்களின் கடமையாகும்.

'ரிவோல்ட்' பத்திரிகையின் ஆரம்பத்தின் உத்தேசமெல்லாம் நமது நிலைமையை யும் கொள்கையையும் தமிழ்மக்கள் தவிர மற்ற மக்களுக்கும் தெரிவிக்கவேண்டும் என்கிற ஆவலேயாகும். நமது நிலைமை சென்னை மாகாணத்திலேயே தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளை நாட்டு பாஷையாகக்கொண்ட பல ஜில்லாக்களுக்கே தெரியவில்லை என்றால்—வெளி மாகாணங்களுக்கும், வெளி தேசங்களுக்கும் எப்படித் தெரிந்திருக்கமுடியும்? உதாரணமாக, ஒரு சமயத்தில் இந்தியா மந்திரியுடன் திரு. டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, 'சென்னை பார்ப்பனரல்லாதார் களுக்காகப் பெரிய உத்தியோகங்கள் அளிக்கப்படவில்லை' என்று சொன்னபோது, 'திரு. B. N. சர்மா என்பவர், இந்திய அரசாங்கத்தில் நிர்வாகசபை மெம்பராயிருந்து 6,500 ரூபாய் சம்பளம் வாங்குகிறாரே, அது போதாதா?' என்று இந்தியா மந்திரி சொன்னாராம். அதற்கு திரு. டாக்டர் நாயர் அவர்கள், 'நான் இந்தியாவைவிட்டுப் புறப்படும்வரை திரு. B. N. சர்மா அவர்கள் பார்ப்பனராயிருந்தார்; நான் புறப்பட்டபிறகு அவர் ஏதாவது, பார்ப்பனரல்லாதாராய்விட்டாரோ என்னவோ எனக்குத் தெரியவில்லை; ஆதலால், தயவுசெய்து அவர் பார்ப்பனரல்லாதாராக ஆகிஇருப்பதாய்த் தங்களுக்கு வந்த செய்தியைக் காட்டுகிறீர்களா?' என்று கேட்டாராம். அதன்பிறகு அந்த இந்தியா மந்திரி திடுக்கிட்டு, 'நான் இத்தனை நாளாக, அவரைப் பார்ப்பனரல்லாதார் என்றுதான் நினைத் துக்கொண்டிருந்தேன்; இப்போது தாங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாய் இருக் கின்றது' என்று சொன்னாராம்.

அதுபோலவே, சென்னையில் சென்ற வருடம் நடந்த காங்கிரசுக்கு, கல்கத்தாவி லிருந்து வந்த முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. கோஸ்வாமி என்கிறவரோடு நாம் பேசிக் கொண்டிருந்தபோது, 'சென்னை மாகாணத்தில் தெருவில் நடக்கக்கூடாதவர்களும், கோயிலுக்குள் போகக்கூடாதவர்களும், தொடக்கூடாதவர்களும், நிழல் மேல்படக்கூடா தவர்களும் இருக்கின்றார்களே, அவர்களைப்பற்றித் தங்கள் அரசியல் திட்டத்தில் என்ன கவலை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டபோது, அவர் ஆச்சரியப் பட்டு, 'அப்படி ஒன்றும் இருப்பதாக எனக்கு இதுவரை தெரியவே தெரியாது; இது உண்மையா?' என்று, பக்கத்தில் இருந்த திரு. ஆர். கே. சண்முகம் செட்டியாரைக் கேட்டார். அதற்கு திரு. சண்முகம் செட்டியாரவர்கள் சிரித்துக்கொண்டே, 'இதற்குச் சாட்சிக்காக அதிக தூரம் போகாதீர்கள். நானே சில கோயிலுக்குள் போகக்கூடாத சாதி என்பதைச் சேர்ந்தவன். அய்க்கோர்ட்டு வரையில் விவகாரம் செய்து பார்த்தும் எங்களை அந்தக் கோயிலுக்குள் போகக்கூடாத சாதியிலேயே சேர்த்துத் தீர்ப்புப்பெற்றுவிட்டார்கள். எனவே, இனி உங்களுக்கு ஏதாவது சந்தேகமுண்டா?' என்று கேட்டார். பிறகு திரு. கோஸ்வாமி பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லை.

இதுபோலவே, பல உதாரணங்கள் எடுத்துக்காட்டலாம். எனவே, நம் நிலையையும், தேவையையும் வெளிநாட்டார்களுக்கு, உள்ளங் கை நெல்லிக் கனிபோல தெரியப்படுத்த வேண்டுமானால் தாட்சண்யமும், பயமும், சுயநலமும் அற்ற தன்மையில் தைரியமாய்

www.padippakam.com



வெளிப்படுத்தக்கூடிய ஒரு சாதனம் இருந்தாகவேண்டும் என்ற கருத்தைக் கொண்டே, 'ரிவோல்ட்'டை ஆரம்பித்துவிட்டோம். அதன் கொள்கையைப்பற்றி நாம் அதிகமாகச் சொல்லிக்கொள்ள வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

முக்கியமாக அரசியல் துறையில் உழைக்கவேண்டும் என்பது அதன் கவலையல்ல. ஆனால், அரசியல் அயோக்கியத் தனங்களைத் தைரியமாயும், தாராளமாயும் வெளியாக்கி விட வேண்டுமென்பதே, 'ரிவோல்ட்'டின் பெருங் கவலைகளில் ஒன்றாகும். அதுபோலவே, சாமியைப்பற்றியும் சமயத்தைப்பற்றியும் அதற்குச் சிறிதும் கவலையில்லை. ஆனால், அவற்றின் பேரால் நடைபெறும் அயோக்கியத்தனங்களையும் கொடுமைகளையும் அடிமைத் தன்மைகளையும் அறியாமையையும் வெளியாக்குவது எல்லாவற்றையும்விட முக்கியமான தாகும். சுருக்கமாகவும், மொத்தமாகவும் கூறுமிடத்து, இதற்கு முன் ஒரு தடவை—அதாவது 'ரிவோல்ட்' பத்திரிகையை அரசாங்கத்தாரிடம் பதிவு செய்துகொண்ட சமயத்தில், அதன் கொள்கை என்பதாக அரசாங்கத்தார் அறிய விரும்பியபோது தெரிவிக்கப்பட்டதையே மறுமுறையும் தெரிவித்து இதை முடித்துவிடுகின்றோம்.

அதாவது—

'ரிவோல்ட்' என்ற ஆங்கில வாரப் பத்திரிகை நடத்துவதின் கருத்து, இப்போது நாம் பதிப்பாசிரியராயிருந்து நடத்தும் 'குடிஅரசு' என்னும் தமிழ் வாரப் பத்திரிகையின் கொள்கைகளையே முக்கியமாய்க்கொண்டு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 'ரிவோல்ட்' என்கின்ற வார்த்தைக்கு நாம் எடுத்துக்கொண்ட அர்த்தம் 'கட்டுப்பாட்டை உடைத்தல்' என்பது. அதாவது, மனித தர்மத்துக்கும், மனித இயற்கைக்கும் விரோதமாக அரசியலிலானாலும் சரி, மத இயலிலானாலும் சரி, அதிகார இயலிலானாலும் சரி, முதலாளி இயலிலானாலும் சரி, ஆண் இயலிலானாலும் சரி, மற்றும் எவைகளிலானாலும் சரி; அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுப்பாடுகளை உடைத்து, உலகமும் அதன் இன்பமும் எல்லோருக்கும் பொது என்பதும், மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனசாட்சிப்படி சாத்தியமான வழிகளில் பிரச்சாரம் செய்வதே அதன் நோக்கம்' என்பதாகும்.

இதற்கு முக்கிய பத்திராதிபராக திரு. எஸ். இராமநாதன் எம்.ஏ., பி.எல். அவர்கள் இருந்து வருவார். நாமும் அதில் பங்கு எடுத்து வருவோம். எனவே, இதை வாலிப உலகம் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். எம் வாலிப நண்பர்கள் ஆங்காங்குள்ளவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சந்தாதாரராய்ச் சேருவதுடன், ஒவ்வொருவரும் இது சமயம் மூன்று சந்தாதாரர்களுக்குக் குறையாமல் சேர்த்துவிட்டு மறுகாரியம் பார்ப்பது என்கின்ற உறுதியைக்கொள்ள வேண்டுகின்றோம்.

['குடிஅரசு'—அறிக்கை—11-11-1928]

## 2. 'முன்னேற்றம்'

'முன்னேற்றம்' என்னும் பத்திரிகை திரு. வெ. சி. நாராயணசாமி அவர்களை ஆசிரியராகவும், திரு. ஜி. எஸ். சாரங்கபாணியவர்களை வெளியிடுவோராகவும் கொண்டு மலாய் நாட்டில் சிங்கப்பூரிலிருந்து வெளிவருவதாகும். இப் பத்திரிகையின் அய்ந்து மலர்களைப் பார்த்ததில் இதன் கொள்கைகள் முற்றிலும், மக்களைத் தொன்றுதொட்டுள்ள மூடப் பழக்க வழக்கங்களாகிற படுகுழியினின்றும், சாதி மதங்கள் என்கின்ற கொடிய விலங்குகளினின்றும், பார்ப்பனீயக் கொள்ளைக்காரர்களின் பெருந் துன்பங்களினின்றும் மீட்டு வாழ்விக்கும்படியானதும், ஒப்பற்ற சுயமரியாதைத் தத்துவங்களையும் கொண்டதாகவே இருக்கின்றன. இப் பத்திரிகையானது தன் பெயருக்கேற்ப மக்களின் முன்னேற்றத்திற்கான விஷயங்களையே கொண்டு விளங்குவதால், இப் பத்திரிகையானது நம் மக்களுக்கு இன்றியமையாததோர் நற்றுணையாகும் என்பது எமது அபிப்பிராயம்.



ஆனால், தற்காலத்தில் நாட்டில் எங்கு பார்த்தாலும் ஜனங்களெல்லாம் 'பத்திரிகை', 'பத்திரிகை' என்பதாக ஏற்படுத்திக்கொண்டு மக்களை உபத்திரவிக்கிறார்கள் என்று சிலர் எண்ணவோ, சொல்லவோ செய்யலாம். ஆனால், நாம் அதைப் புத்திசாலித்தனமானவைகளென்று மதிக்கமாட்டோம். ஏனெனில், ஒரு நாடோ, ஒரு சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால், அதன் பரப்பெங்கும் பத்திரிகைகளும், பாடசாலைகளுமாகவே மிளிர வேண்டும். இதை உத்தேசித்தேதான், சில அறிவிற்சிறந்த பெரியார்கள் எந்தச் சமூகத்தையேனும், எந்த நாட்டையேனும் முன்னேற்றமடைந்திருக்கிறதா, இல்லையா?—எனத் தெரிந்துகொள்ள வேண்டுமானால்—அவர்கள் அந்த நாட்டினரையோ சமூகத்தினரையோ கண்டால், 'உங்களுக்கென எத்தனை பத்திரிகைகள்? எத்தனை பாடசாலைகள்? எத்தனை கலாசாலைகள் இருக்கின்றன?' என்னும் கேள்வி கிளத்துகின்றனர். ஆகவே, பத்திரிகைகளின் எண்கள் மிகுவதைத் தாழ்வாக நினைக்கவோ, சொல்லவோ சற்றும் இடமில்லை.

ஏனெனில், பத்திரிகைதான் முன்னேற்றமடையக் கருதும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஆசான்; பத்திரிகைதான் மக்களுக்கு அறிவையூட்டி வளர்க்கும் தாயினுமினியது; பத்திரிகைதான் புத்தி புகட்டும் நற்றந்தை; பத்திரிகைதான் ஆபத்துக்கு உதவும் நற்புதல்வன்; பத்திரிகைதான் உண்மைத் தோழன்; அதுவே அய்ம்புலன்களையும் ஒருமித்து இன்பம் நுகரச் செய்யும் உத்தம மனைவி; அதுவே பெருஞ் செல்வம்; அதுவே நெருங்கிய சுற்றம்; அதுவே இன்பந் தரும் பெருவீடு; அதுவே நோயகற்றும் சஞ்சீவி; அதுவே இன்னமுது; அதுவே உண்மைச் சேவகன். அது மக்கள் வசிக்கும் ஒவ்வொரு இல்லந்தோறும் வந்து, சுயேச்சையும், சுவாதீனமுமற்று அஞ்ஞானத்திலும் சோம்பலிலும், பசியிலும், தரித்திரத்திலும் உறங்கிக் கிடக்கும் மக்களை எழுப்பி உய்விக்கும் நற்றுணைவன்.

வெறும் நாட்டுச் செய்திகளையே தமக்கு அணியாகத் தாங்கியும், ஒரு சில தொகையினரான கூட்டத்திற்கு மட்டில் நலத்தைத் தருவதாகவும், ஆசிரியர்களின் கியாதி, இலாப பூஜைகளுக்காகவும், மக்களின் பொருட்களையும் அவர்களின் அருமையான பொழுதுகளையும் கொள்ளைகொண்டு தமது ஒருசாணை நிரப்பிப் பெருமைச் சின்னங்களைப் பரிமாறிக் காலத்தைக் கழித்துவரும் சில போலிப் பத்திரிகைகள் போன்றல்லாமல், ராயல் 1-க்கு 16-ல் 20 பக்கங்கள் கொண்டு, மலர்கள் தோறும் கண்கவரும் தலைவர்களின் சித்திரப் படங்களாலும், நல்ல பதிப்புள்ள நல்ல தமிழில் பண்டித பாமர ரஞ்சனமான முறைகளில் உயர்ந்த அனுபவமும் பரோபகாரமுமுள்ள அறிவாளிகளால் எழுதப்பெற்ற கட்டுரைகளைக் கொண்டதோடு, ஒவ்வொரு மலர்களிலும் ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு வாக்கியத்திலும்—சுயமரியாதைத் தத்துவத்தின் தேன் துளிகள் கசிந்து ஒழுகும் மாதிரியிலமைந்து ஒளிர்வதால் இக் காலத்துக்கேற்ற ஓர் நற்பயனென மக்கள் யாவருமிதை ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

['குடி அரசு'-மதிப்புரை—3-3-1929]

## 3. 'சுயமரியாதைத் தொண்டன்'

தோழர்களே!

சுயமரியாதைப் பத்திரிகைகள் ஒவ்வொரு கிராமத்திலும் பரவவேண்டும்; இல்லாவிடில் நாடு முன்னேற்றமடையாது. பத்திரிகை படிப்பதற்குக் கல்வி அவசியம்; அக்கல்வியை மக்களுக்குப் பரப்பும்படியான பொறுப்பும் சவுகரியமும் ஜில்லாபோர்டு தலைவர்களுக்கு உண்டு. எல்லோரும் 'சுயமரியாதைத் தொண்டனை' ஆதரிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிப்பாளையத்தில், 9-4-1929-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 14-4-1929]



படிப்பகம்

www.padippakam.com



## 4. நூல் முன்னுரை

நான் திராவிடர் கழகத்தை அது 'ஜஸ்டிஸ்' என்ற கட்சிப் பெயரோடு இருந்த காலத்தில் இருந்தது போல் இது ஒரு கட்சியல்லவென்றும், திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் என்றும் 10 ஆண்டுகளாகச் சொல்லிவருகிறேன். அதனாலேயே திராவிடர் கழகத்தை மக்கள் ஒரு கட்சி என்று கருதாமல் இயக்கம் என்றே கருதவேண்டும் என்பதற்காக, அதற்கு ஏற்றபடி கழகத்தை ஒரு பிரச்சார ஸ்தாபனமாகச் செய்துவருகிறேன். ஏன் என்றால், 1925-ல் நாம் ஆரம்பித்து நடத்திவந்த சுயமரியாதை இயக்கம்தான் ஜஸ்டிஸ் கட்சியைக் கைப்பற்றி இயக்கப் பிரச்சாரம் செய்து வருகிறதே ஒழிய, இது ஒரு தனிக் கட்சியாளர் கையில் இல்லை. சுயமரியாதை இயக்கத்தின் திட்டங்களில் ஏதாவது ஒரு சிறுமாறுதல் காணப்பட்டால்—காணப்படலாமே ஒழிய சுயமரியாதை இயக்க அடிப்படையிலும் அதன் தலையாய கொள்கைகளிலும் திராவிடர்கழகத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. இதைச் சேலம் மாநாட்டிலேயே அண்ணாதுரை தீர்மானம் மூலம் தெளிவுபடுத்தி ஆய்விட்டது. ஆகவே, ஜஸ்டிஸ் கட்சி எந்த மக்களுக்காக என்று தோற்றுவித்து நடத்தி வரப்பட்டதோ, அந்த மக்கள் (திராவிட மக்கள்) சுயமரியாதை இயக்கத்தை அப்படியே ஒப்புக்கொண்டு பெரிதும் சுயமரியாதைக் காரர்களாக ஆகிவிட்டார்கள் என்பதும், சுயமரியாதைக்காரர்கள் அல்லாதவர்களாய் இருந்தவர்கள் மெல்ல நழுவிவிட்டார்கள் என்பதும்தான் கருத்தாகும். எனவே, சுயமரியாதை இயக்கம் திராவிடர் கழகம் என்னும் பேரால் பெரிதும் தன் இயக்கப் பிரச்சார வேலையே செய்து வருகிறது என்று சொல்லலாம். அதனால்தான் நான் அடிக்கடி திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் என்றும், இது காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், இந்துமகா சபை, வருணாசிரம சுயராஜ்ய சங்கம், பிராமண பாதுகாப்பு சங்கம், மிதவாத சங்கம், முஸ்லிம் லீக், கிறிஸ்தவர் சங்கம், தாழ்த்தப்பட்டவர்கள், ஷெடியூல் லீக் முதலாகியவை போலும் ஒரு கட்சி ஸ்தாபனமல்ல என்றும் சொல்லுகிறேன். எப்படி எனில், இக் கழகம் மக்களின் அறிவுத் துறையிலும், சமுதாயத்திலும், மதத் துறையிலும், கடவுள் துறையிலும் நீண்டநாட்களாக இருந்துவரும் மடமைகளையும், முன்னேற்றத் தடைகளையும், குறைபாடுகளை நீக்கவும் மக்கள் யாவரையும் ஒன்றுபடுத்தி ஒரு சமுதாயமாக ஆக்கவும் சிறப்பாக, நமக்கு—திராவிட மக்களுக்கு இருந்துவரும் சமுதாய இழிவு, மத மூடநம்பிக்கை, சாதிப் பிரிவு. வேறுபாடு அடியோடு அழிக்கப்பட்டு, ஆரியக் கொடுமையிலிருந்து மீளவுமே பாடுபட்டு வரும்படியான, அதாவது மக்களுக்கு வலியுறுத்தி வரும்படியான, ஒரு ஸ்தாபனமாகும்.

திராவிடர் கழகத்திற்கு சுயராஜ்யம் பெறவேண்டுமென்கிற ஒரு கற்பனைத் தத்துவமோ, தேர்தலுக்கு நின்று மெஜாரிட்டியாகி அரசியலைக் கைப்பற்றவேண்டும் என்கிற தப்புப் பாவனையோ இல்லை. ஏனென்றால், இன்று நடப்பது சுயராஜ்யம் என்றுதான் சொல்லப்படுகிறது. அன்னியனான வெள்ளையன் (பிரிட்டிஷார்) ஆதிக்கம் போய்விட்டது. திராவிடநாட்டுக்குத் திராவிடமக்களே முதல் மந்திரி, இரண்டாம் மந்திரி; மொத்தத்தில் 13-ல் 10 மந்திரிகள் திராவிட மந்திரிகள் என்று சொல்லும்படியான திராவிட மெஜாரிட்டி மந்திரிசபையாக இருக்கும்போது இனிச் சுயராஜ்யம் பெறுவது என்பதற்கு, வேறுகருத்து என்ன இருக்கமுடியும்? யார் பெறுவது? அரசியலைக் கைப்பற்றுவது, யாரிடமிருந்து யார் கைப்பற்றுவது? திராவிட மக்கள் அல்லாதவர்கள் கைக்கு இனி அரசியல் எப்படிப் போகும்? ஆகவே, சுயராஜ்யம் பெறுவது என்பதோ, அரசியலைக் கைப்பற்றுவது என்பதோ இனி அர்த்தமற்ற பேச்சுக்களாகும், அர்த்தமற்ற காரியங்களுமாகும்.

இந்த மாகாணத்தில் இனி நாம்தான் 100-க்கு 90-க்கு மேற்பட்ட ஓட்டர்களாவும் ஆக்கப்படப் போகிறோம். பெரும்பாலான மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள் திராவிடர்களாகத்தான் இருக்கப்போகிறார்கள். அதில் சந்தேகம் இருக்க நியாயமில்லை. ஆனால் இதில் என்ன குறைசொல்லலாம் என்றால், இதனால் திராவிடநாடு பிரிந்து கிடைக்குமா? திராவிடர் கழகக் கொள்கைகள், திட்டங்கள் நடைமுறைக்கு வருமா? என்பதுவே யாகும்; சுலபத்தில் வராது என்று வைத்துக்கொள்ளலாம். நாம்—திராவிடர்கழகத்தார் சட்டசபைக்குப் போய் விடுவதாலோ, அரசியலைக் கைப்பற்றுவதாலோ, மந்திரிகளாய் விடுவதாலோ, திராவிடநாடு வந்துவிடுமோ, திராவிடர் கழகக் கொள்கைகளும் திட்டங்களும் அரசியல் மூலம் நடத்தப்பட்டுவிடுமோ? என்று பார்த்தால் இன்றைய நிலைமையில் அவை சுலபத்தில் ஆகக்கூடிய காரியங்கள் அல்ல என்பதே நமது கருத்து.



நாம் இழிவு நீக்கம், நம் முன்னேற்றத்திற்குத் தடை நீக்கம், ஆரியத்தில் – மூடநம்பிக்கையில் இருந்து விடுபடுதல், 'பகுத்தறிவாளர்களாக–மானமுள்ள சமுதாயமாக ஆவது, இப்படிப்பட்ட நம்வேலை, நெருப்போடு பழகுவதுபோல், பாமர மக்களிடம் பழகுவதாகும். அவர்கள் நம்பிக்கையைப் பெறவேண்டும். அவர்களைத் திருத்தியே ஆகவேண்டும். இதற்கு நல்ல பிரச்சாரம் வேண்டும், ஒத்துழைப்பு வேண்டும், ஒன்றுபடவேண்டும். நிலைகுலைந்து சின்னாபின்னப்பட்டுக் கிடக்கும் மக்களை ஒன்றுசேர்த்து, யாவர் பலத்தையும் ஒன்றாய்த் திரட்டி ஒருமூச்சுப் பார்த்தாக வேண்டியவர்களாக இருக்கிறோம். இனி நாம் சூத்திரர்களாக வாழமாட்டோம் என்பதே நமது இலட்சியச் சொல்; நமது மூச்சு.

வெற்றி கண்ணுக்குத் தெரிகிறது. அது கானல் நீரல்ல. கருத்தும் கவலையும் இருந்தால் கண்டிப்பாக அடைந்தே தீருவோம் என்கிற உறுதி எனக்கு உண்டு.

[திரு. C. N. அண்ணாதுரையின் 'இலட்சிய வரலாறு' நூலுக்கு முன்னுரை]

## 5. ஓர் வேண்டுகோள்

50 வருஷத்திற்குமுன் சுயமரியாதை இயக்கம் :

சுமார் 40, 50 வருஷத்திற்கு முன் பதிப்பித்ததும், 'இந்து மத ஆச்சார ஆபாச தரிசினி' என்ற பெயர் கொண்டதும், 762 பாடல்களை உடையதும், கிரவுன் ஒன்றுக்கு எட்டு சைசில் 120 பக்கங்களை உடையதுமான ஒரு தமிழ்ப் புத்தகம் எங்கேயாவதும், யாரிடத்திலாவதும் கிடைக்குமானால் தயவு செய்து வாங்கி உடனே நமக்கு அனுப்பிக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

ஏனெனில், அப் புத்தகம் ஒன்று நமக்கு ஒரு மாதத்திற்குமுன் ஒரு நண்பரால் அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆனால், அது மிக்க பழையதாகவும் முதலிலேயே சில பக்கங்கள் இல்லாமலும், சில பக்கங்கள் கிழிந்து சரிவரத் தெரியாமலும் இருப்பதால் கிழியாத புத்தகம் ஒன்று வேண்டி இருக்கின்றது. அப் புத்தகம் நமது இயக்கக் கொள்கைகளையே முக்கியமாய் வைத்துப் பாடின பாட்டுகள் அனேகம் அதில் இருக்கின்றன.

['குடி அரசு' 23-2-1930]

## 6. 'வெடி குண்டு'

சுயமரியாதை இயக்கக் கொள்கையை ஆதரித்து மதுரையில் 'வெடிகுண்டு' என்னும் பத்திரிகை தோன்றி, தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததேயாகும். வியாபார முறையை விட்டும், சமயத்திற்குத் தகுந்தபடி மாறிக்கொள்வதை விட்டும், தனக்கு என்று ஏதாவது ஒரு கொள்கையும் இல்லாமல் 'பரிசுத்தமாய்' இருக்கும் நிலையைவிட்டும் நடைபெறும் பத்திரிகைகள் நமது நாட்டில் அதாவது, பகுத்தறிவற்று பாமரத்தன்மை பூண்டு இருக்கும் ஜனங்கள் மலிந்த நாட்டில், கவலையற்று நடைபெறுவது என்பது மிகமிகக் கஷ்டமான காரியமாகும். இந்தக் காரணத்தால் இதுசமயம் 'வெடிகுண்டு' பத்திரிகை மிக்க நெருக்கடியில் நடைபெறுகிறது என்றும் நாம் கேள்விப்படுவதில் அதிசயமொன்றுமில்லை. இருந்தபோதிலும், மதுரை சுயமரியாதை சங்கத்துக்கு மிகுதியும்

படிப்பகம்

ஆதரவளித்து வருபவரும், முனிசிபல் கவுன்சிலரும், செல்வாக்கும், செல்வமும் பொருந்திய வருமான தோழர் ஆ. அ. ஆறுமுகம் அவர்களது உதவியாலும், ஆதரவாலும் ஒருவாறு நடத்தப்பட்டு வருகிறது என்றாலும், சதா சர்வகாலமும் ஒரு பத்திரிகை ஒருவரின் ஆதரவையும் உதவியையும் கோரி நிற்காமல், தன் காலிலே தைரியமாய் நிற்கவேண்டு மாதலால், சுயமரியாதை இயக்க அன்பர்களும், அபிமானிகளும் அதை ஆதரிப்பது மாத்திரமல்லாமல், அது கிராமங்கள் மூலை முடுக்குகள் தோறும் செல்லும்படியான அளவுக்கு உதவிசெய்யவேண்டுமாய் வேண்டுகிறோம்.

['குடி அரசு'-வேண்டுகோள்—27-8-1933]

## 7. 'புரட்சி'

'குடி அரசை' ஒழிக்கச் செய்த முயற்சியால் 'புரட்சி' தோன்ற வேண்டியதாயிற்று. உண்மையிலேயே பாமர மக்களின், அதாவது பெரும்பான்மையான மக்களின் ஆட்சியாகிய குடி அரசுக்கு உலகில் இடமில்லையானால் கண்டிப்பாகப் புரட்சி தோன்றியேதான் ஆகவேண்டும்.

அந்த அய்தீகப்படியே 'புரட்சி' தோன்றி இருப்பதால், புரட்சியில் பற்றுள்ள மக்கள் யாவரும் 'புரட்சி'யை வரவேற்பார்கள் என்பதில் நமக்குச் சிறிதும் அய்யமில்லை.

நமது முதலாளிவர்க்க ஆட்சியானது தனது காவலாளியாகிய பாதிரி வர்க்கத்திற்கு அடிமையாக இருக்க வேண்டியிருப்பதால் 'குடி அரசை' அதன் முதுகுப் புறத்தில் குத்தி விட்டது. இந்தக் குத்தானது, 'பாதிரி வர்க்கத்தை ஒழித்தால்தான், முதலாளி வர்க்கத்தை அழிக்கமுடியும்' என்ற ஞானபோதத்தை உறுதிப்படுத்திவிட்டது.

ஆதலால், நமது 'புரட்சி'யானது 'குடி அரசை'க் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாய் பாதிரி வர்க்கத்தை—அதாவது மதப் பிரச்சார வர்க்கத்தை அடியோடு அழிப்பதையே கங்கணமாய்க்கொண்டு வெளிவர வேண்டியதாகிவிட்டது.

இதன் காரணமாய் 'புரட்சி' எந்த நிமிஷத்தில் குத்துப்பட்டாலும் படலாம்; எந்த வினாடியில் கொலையுண்டாலும் உண்டாகலாம். ஆனால், 'சுயமரியாதைப் புரட்சி'யானது இனி ஒருநாளும் மறையாது; அது வெற்றிபெறும்வரை ஒரு க்ஷணமும் ஓய்வு கொள்ளாது என்பது மாத்திரம் உறுதி.

காங்கிரஸ் காரியதரிசியான தோழர் ஜவகர்லால் அவர்கள் தான் இதுவரை மத விஷயமாய்ப் புரட்சி செய்யாமல் ஏமாந்து விட்டதைப்பற்றி மனமார வருந்தியும், மத விஷயத்தில் தான் அலட்சியமாய் இருந்த ஒவ்வொரு நிமிஷமும் முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கம் பலப்பட்டு வருவதற்கு இடம் கொடுத்தாகிவிட்டது என்று வியக்தமாக எடுத்துச் சொல்லியும் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டார்.

மதமே மனிதனுடைய சுயமரியாதைக்கு விரோதி ;
மதமே மனிதனுடைய சுதந்திரத்திற்கு விரோதி ;
மதமே மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு விரோதி ;
மதமே மனித சமூக சமதர்மத்துக்கு விரோதி ;
மதமே கொடுங்கோலாட்சிக்கு உற்ற துணை ;
மதமே முதலாளி வர்க்கத்துக்குக் காவல் ;
மதமே சோம்பேறி வாழ்க்கைக்கு ஆதரவு ;

மதமே உழைப்பவனைத் தரித்திரத்தில் ஆழ்த்தி, உழைக்காதவனை உச்சத்தில் வைப்பதற்கு உதவி—என்கின்ற முடிவின் பேரிலேயே 'புரட்சி' தோன்றியிருக்கிறது என்பதில் யாருக்கும் அய்யம் வேண்டாம்.




பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 26-11-1933-ல் துவக்கப்பட்ட 'புரட்சி' வார ஏட்டின் முதல் இதழின் முகப்பு அட்டை

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


R. No.
"PAHUTHARIVU"
பகுத்தறிவு
(2—9—1934)
இனம்! சந்தாதாரர்களுக்கு இனம்!
அருமையான புத்தகங்கள் இனம்!

| | | |
|---|---|---|
| கைவல்யம் | | 0-8-0 |
| இந்தியாவின் குறைபாடு | | 0-8-0 |
| இராமாயண ஆராய்ச்சி | | 0-8-0 |
| மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை | | 0-8-0 |
| லெனினும், மதமும் | அணா 4 | |
| பொதுவுடைமைத் தத்துவம் | ,, 3 | 0-8-0 |
| போல்ஷ்விக் முறை | ,, 1 | |
| கடவுளும் பிரபஞ்சமும் | அணா 4 | |
| சோஷியலிசம் | ,, 3 | 0-8-0 |
| இலங்கை உபந்யாசம் | | |
| சமதர்ம உபந்யாசம் | | |

மானேஜர், "பகுத்தறிவு", ஈரோடு.

ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களை ஆசிரியராகக்கொண்டு
பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் 26-8-1934-ல் துவக்கப்பட்ட
'பகுத்தறிவு' வார ஏட்டின் இதழ் 2-ன் முகப்பு அட்டை



ஆதலால், மனித சமூகத்தில் சமதர்ம வாழ்க்கையை ஏற்படுத்த மதங்களை முதலில் அழித்தாகவேண்டும் என்று காங்கிரஸ் காரியதரிசி தோழர் ஜவகர்லால் அவர்கள் இப்போதாவது கண்டு பிடித்ததற்கோ அல்லது தைரியமாய் வெளியிட்டதற்கோ நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றோம்.

சோம்பேறித்தனமாய் வாழ நினைத்து சுயமரியாதை இயக்க நிழலில் திரிந்தவர்களுடையவும் பட்டம், பதவி, அதிகாரம், செல்வம் ஆகியவைகள் அடையக் கருதி சுயமரியாதை இயக்கப் போர்வை போட்டுக் கொண்டிருந்தவர்களுடையவும் ஆதரவு நம் 'புரட்சி'க்கு இனி சிறிதும் எதிர்பார்க்க முடியாது என்பதை நன்றாய் உணர்ந்தே 'புரட்சி' தோன்றியிருக்கிறது.

ஆதலால், பாடுபட்டு உழைத்து ஊராறுக்குப் போட்டுவிட்டு பட்டினியாயும் சமூக வாழ்வில் தாழ்மையாயும் வாழும் மக்களின் ஆதரவையே 'புரட்சி' எதிர்பார்த்து நிற்கிறது.

வெள்ளை முதலாளிகளை ஒழித்துக் கறுப்பு முதலாளிகளைக் காக்கும் வேலைக்கு இன்று 'புரட்சி' வெளிவரவில்லை. அல்லது, வெள்ளை ஆட்சியை ஒழித்து கறுப்பு ஆட்சியை ஏற்படுத்த 'புரட்சி' தோன்றவில்லை. அதுபோலவே, இந்து மதத்தை ஒழித்து, இஸ்லாம், கிறிஸ்து மதத்தைப் பரப்ப 'புரட்சி' தோன்றியதல்ல.

அதுபோலவே, இஸ்லாம், கிறிஸ்து மதத்தை ஒழித்து, இந்து மதத்தை நிலைநிறுத்த 'புரட்சி' வெளிவரவில்லை.

சகல முதலாளி வர்க்கமும், சர்வ சமயங்களும் அடியோடு அழிந்து, மக்கள் யாவரும் சுயமரியாதையுடன் ஆண் பெண் அடங்கலும் சர்வ சமத்துவமாய் வாழச் செய்யவேண்டும் என்பதற்காகப் புரட்சி செய்யவே 'புரட்சி' தோன்றியிருக்கிறது.

அது உயிருள்ள வரையும் அதன் கடமையைச் செய்து கொண்டு இருக்கும்.

ஆதலால், புரட்சியில் ஆர்வமுள்ள மக்கள் 'புரட்சி'யை ஆதரிக்க வேண்டுகிறோம்.

['புரட்சி'-தலையங்கம்—26-11-1933]

## 8. 'பகுத்தறிவு'

'பகுத்தறிவு' வாரப் பத்திரிகையின் முதல் மாலை–முதல் மலர் 26-8-1934 ஞாயிறு வெளியாகின்றது என்றாலும், அதன் கொள்கைகளைப்பற்றி 'குடி அரசு', 'ரிவோல்ட்', 'புரட்சி', 'பகுத்தறிவு' (தினசரி) ஆகிய பத்திரிகைகளின் அபிமானிகளுக்கும், வாசகர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டியதில்லை.

சுருக்கமாக, ஒரு வாக்கியத்தில் சொல்லித்தீர வேண்டுமானால், 'பகுத்தறிவு' தோன்றலானது, இன்றைய உலக வழக்கில் இருந்துவரும் காரியங்களில் பெரும்பான்மை மக்களால் முதன்மையானதாகவும், இன்றியமையாதனவாகவும் கருதப்படும்

'எங்கும் நிறைந்த இறைவனை' வழுத்தவோ,

'எல்லாம் வல்ல மன்னனை' வாழ்த்தவோ,

'யாதினும் மேம்பட்ட வேதியனை' வணங்கவோ,

'ஏதும் செய்யவல்ல செல்வரனை' வாழிய செப்பவோ கருதி அல்ல என்பதேயாகும்.

மேலும், மனித சமூகத்தில் மவுட்யத்தால் ஏற்பட்ட துரபிமானங்களாய கடவுள், சாதி, மதம், தேசம், நான், எனது என்பன போன்ற அபிமானங்களை அறவே ஒழித்து, மனித சமூக ஜீவாபிமானத்தையும், ஒற்றுமையையும் பிரதானமாய்க் கருதி உழைத்துவரும் என்றும் சொல்லுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



இத் தொண்டாற்றுவதில் 'பகுத்தறிவு' வேதத்திற்கோ, விமலத்திற்கோ, சரித்திரத்திற்கோ, சாத்திரத்திற்கோ, பழக்கத்திற்கோ, வழக்கத்திற்கோ, பழமைக்கோ புதுமைக்கோ அடிமையாகாமல், கொள்வனகொண்டு தள்வன தள்ளி, தானே சுதந்திரமாய் தன்னையே நம்பி, தனது அறிவையும் ஆற்றலையுமே துணையாகக்கொண்டு தன்னாலான தொண்டாற்றிவரும்.

முடிவாய்க் கூறுமிடத்து, 'பகுத்தறிவு' மனித ஜீவாபிமானத்துக்கு மக்களை நடத்திச் செல்லுமே ஒழிய, எக் காரணம் கொண்டும் மக்கள் பின் நடந்து செல்லும்படியான அடிமை வாழ்வில் உயிர் வாழாது என்பதேயாகும்.

['பகுத்தறிவு'—தலையங்கம்—26-8-1934]

## 9. 'விடுதலை'

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து, தமிழ் பத்திரிகை ஒன்று, 'விடுதலை' என்னும் பேரால், வாரம் இரு முறையாக சென்னையிலிருந்து வெளியாகி இரண்டு இதழ்கள் நமது பார்வைக்கு வந்தன. அதைப்பற்றி ஒரு மதிப்புரை எழுதவேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

ஏனெனில், 2, 3 வருடங்களாகவே பரிசுத்த வீர இரத்த ஓட்டமுள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் இரவும் பகலுமாய், 'தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை!' என்கின்ற தாகத்துடன் அலைந்துகொண்டிருந்ததும், அதை எந்தத் தலைவர்களும் கவனியாமல் அலட்சியமாய் இருந்ததும், அதன் பயன்களைச் சமீப காலத்தில் ஏற்பட்ட பல தேர்தல்களின் மூலம் அனுபவித்ததும், மறுபடியும் புதிய முறையில் முன்னிலும் அதிகமாக இரண்டு பங்கு சப்தத்துடன், 'தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை! தமிழ்ப் பத்திரிகை!' என்று மக்கள் கூப்பாடு போட்டதுமான விஷயம் யாரும் அறியாததல்ல. அப்படிப்பட்ட நிலையில் 'விடுதலை' என்னும் பேரால் ஒரு பத்திரிகை வெளியாகி இருப்பதைப் பார்த்து எந்தப் பார்ப்பனரல்லாதாரும் தங்களுக்கு ஏதோ ஒரு 'பாக்கியம்' கிடைத்ததாக மகிழ்ச்சியடைவார்களே ஒழிய, 'இதற்கு மதிப்புரை வருகின்றதா? அது எப்படி வருகின்றது?' என்று யாரும் கவனிக்க மாட்டார்கள்.

ஆதலால், நாம் மதிப்புரை எழுதும் வீண் வேலையில் பிரவேசிக்காமல், 'வந்து விட்டது, தமிழ்ப் பத்திரிகை!' என்று விளம்பரம் செய்யவே ஆசைப்படுகின்றோம்.

'விடுதலை' பத்திரிகை இன்று வாரம் இருமுறையாக வெளிவந்தாலும், கூடிய சீக்கிரம் தமிழ் மக்கள் ஆதரவுக்கு ஏற்பத் தினசரி ஆகும் என்பதில் நமக்கு அய்யமில்லை.

பத்திரிகையானது நல்ல மாதிரியில்—பார்ப்பன விஷமப் பிரச்சாரங்களுக்கு மார்பைக் காட்டும் முறையில் சரியான விஷயங்களைக் கொண்டு வெளியாகி வருவதால், அதை ஆதரிக்க வேண்டிய அவசியம் எந்த விதத்திலும் குறைவாகக் காணப்படவில்லை என்றே சொல்லுவோம்.

இப் பத்திரிகைக்கு உள்ள கஷ்டம், எதிர்ப்பு, சூழ்ச்சி, தொல்லை ஆகிய விஷயங்களைப்பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை. இப்படிப்பட்ட தொல்லைகளுக்கிடையே ஒரு பத்திரிகை வாழ்வதென்றால் மிகவும் ஆச்சரியமான காரியமாகும். இதுவரை பார்ப்பனர்களுக்கு விரோதமானது என்று காணப்பட்ட பத்திரிகைகள் எதுவும் நமது நாட்டில் வாழவே இல்லை.

எவ்வளவோ வீரமாக ஆரம்பித்த பத்திரிகைள் எல்லாம் வருடாந்தரம் ஆவதற்குள்— ஒன்று பார்ப்பனர்களுக்கு அடிமையாகவேண்டியது; அல்லது, மறைந்துபோக வேண்டியது என்கின்ற நிலையில்தான் இருந்துவந்திருக்கின்றன.



இப்படிப்பட்ட நிலையில் 'குடிஅரசு' ஏதோ 'பாஷாணத்தில் புழுத்த புழு'ப்போல் உயிர் வைத்துக்கொண்டு வருகின்றது என்றாலும், அதுவும் இதுவரை அடையாத கஷ்டமோ, தொல்லையோ இனி புதிதாக ஒன்று இருப்பதாகத் தோன்றவில்லை. இப்படிப்பட்ட நிலையில் 'விடுதலை' தோன்றி இருக்கின்றது என்பது ஒருவிதத்தில் சந்தோஷம் என்றாலும், மற்றொரு விஷயத்தில் எந்த நிமிடத்தில் அதற்கு ஆபத்து வரப்போகின்றதோ என்று பயப்படவேண்டியதாகவே இருக்கிறது.

எப்படியோ ஒருவிதத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்த்தபடி 'தமிழ்ப் பத்திரிகை' ஒன்று வந்துவிட்டது. அதை ஆதரித்து, தினசரியாக்கி நிலை நிறுத்த வேண்டியது தமிழ் மக்கள் கடமையே ஒழிய, இனித் தலைவர்களைக் குற்றம் சொல்லவேண்டிய அவசியமே இல்லை.

அதன் நோக்கம், அதன் தொண்டு ஆகியவைகளைப்பற்றி சந்தேகப்படவேண்டிய காரணமே யாருக்கும் கிடையாது. ஆகையால், அதைப்பற்றிக் கவலைப்படாமலும், அதற்கு யாரும் புத்தி புகட்டும் வேலையில் இறங்காமலும் ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாக வேண்டும். சந்தாத் தொகை வாரம் இரு முறைக்கு வருஷம் ரூ. 3-10-0 ஆகும். இதை விடக் குறைந்த தொகைக்குத் தமிழ் நாட்டிலோ, இந்தியாவிலோ ஒரு 'வாரம் ஒரு முறை'— 10 பக்கம் விஷயம் கொண்ட பத்திரிகை ஒன்று இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. ஆகையால், ஒவ்வொருவரும் ரூ. 3-10-0 நாளையே மணியார்டர் அனுப்பிவிடவேண்டியது அவசியமான காரியமாகும். 3 மாதத்திற்குள் 2000 சந்தாவாவது சேர்ந்தால் 'விடுதலை' தினசரி ஆகிவிடலாம் என்பதில் சந்தேகமில்லை. அதன் பத்திராதிபர் தோழர். டி. ஏ. வி. நாதன் அவர்கள்; ஜஸ்டிஸ் பத்திரிகையை நடத்திவந்தவர். ஆனதால், அப்பேர்ப்பட்ட அறிவாளியால் நடக்கும் பத்திரிகை நீடூழி வாழ்ந்து பாமர மக்களுக்கும், பண்டிதர்களுக்கும் பயன்பட்டு, உலக மக்களுக்கு உண்மை விடுதலையைக் கொடுக்கவேண்டும் என்று ஆசைப் படுகிறோம்.

['குடிஅரசு'—9-6-1935]

## 10. நம் ஆயுதம்–'விடுதலை'

திராவிட மக்கள் உள்ளத்தில் பெருங் குறையாய் இருந்ததும், திராவிட மக்கள் முற்போக்குக்கே பெருந் தடையாய் இருந்ததுமான குறை நீங்கும்படியாக—இன்று, 'விடுதலை' வெளியாகிவிட்டது. இனி இதை ஆதரித்து வளர்த்து நலனடைய வேண்டியது திராவிட மக்களின் கடமையாகும்.

திராவிட நாட்டிற்கும், திராவிட மக்களுக்கும் இன்றுள்ள இழிநிலைகளுக்குத் தலையாய காரணங்களுக்குள் முக்கிய காரணம் என்னவெனில்—திராவிடர்களுக்கு என்று, திராவிடரிடத்தில் தினசரிப் பத்திரிகை ஒன்றாவது இல்லாததேயாகும்.

திராவிட நாட்டில் உள்ள தினசரிப் பத்திரிகைகள் யாவும் திராவிடர் அல்லாதவர்களிடமும், திராவிடர்களின் மாற்றார்களான பிறவி எதிரிகளிடமும், அவர்களின் அடிமைகளிடமுமே இருந்துவருகின்றன. குறிப்பாக, ஆரியர்கள் வெகு தந்திரமாக, வெகு முன்னெச்சரிக்கையுடன் பத்திரிகை உலகைத் தங்கள் கைவசத்தில் ஏகபோகமாக ஆக்கிக் கொண்டதோடு, வேறு ஒருவரும் அத் துறையில் தலை எடுக்காதபடியும், வேறு ஒருவரும் தினசரிப் பத்திரிகைகள் நடத்திச் சமாளிக்கமுடியாதபடியும் செய்துவந்திருக்கிறார்கள்; செய்தும் வருகிறார்கள். யாராவது, எந்தத் திராவிடராவது துணிந்து பத்திரிகை நடத்து வாரேயானால்—அவர் நிபந்தனையற்ற ஆரிய அடிமையாய்—ஆரியர் நலனுக்கே அதை நடத்துபவராய் இருந்தாலொழிய, வெளியில் தலைகாட்ட முடியாதபடி அமுத்தப்பட்டு விடுகிறார். அப்படி நடத்தினாலும் வெகு நாளைக்கு வாழமுடியாமல் சில நாட்களில் அழிக்கப்பட்டுவிடுகிறார். இந்த நிலையில் பத்திரிகை உலகம் சிக்கிக்கொண்டதால் திராவிடர் எத் துறையிலும் தலையெடுக்கமுடியாமல் தாழ்த்தப்பட்டு வருகிறார்களென்பது

படிப்பகம்

www.padippakam.com



மாத்திரமல்லாமல், திராவிடர் ஆரியருக்கு மனுதர்ம நீதிப்படி அடிமைகளாயிருக்க வேண்டியவர்களாகிறார்கள்.

மற்றும் சொல்லுவோமானால், ஆரியர்கள் திராவிட நாட்டில் மாத்திரமல்லாமல் இந்தியா என்னும் உபகண்டத்திலும் மற்ற நாடுகளிலும் உள்ள பத்திரிகைகளையும் தங்கள் ஆதிக்கத்திலேயே வைத்து, இந்தியாவில் எங்கணுமே திராவிட மக்களை இழிமக்களாகக் கருதும்படியும், மானம்-மரியாதை அற்ற மக்களாக இருக்கும்படியும் செய்துவருகிறார்கள். பொதுவாகச் சுருங்கச் சொல்லவேண்டுமானால், பத்திரிகை உலகம் முழுவதும் ஆரிய ஆதிக்கத்தில் இருப்பதாலேயே இந்த ஆயுதத்தைக்கொண்டு ஆரியர் திராவிடர்களை அவர்களது வாழ்வில் இவ்வளவு கொடுங்கோன்மையான அடக்குமுறையில்—இராணுவ ஆட்சி போல் ஆதிக்கம் செலுத்தி அடக்கி ஆண்டு நசுக்கிவருகிறார்கள். இந்தக் காரியத்தில் ஆரியர்கள் இவ்வளவு வெற்றிபெற்று இருப்பதாலேயே, ஆங்கில அய்ரோப்பிய ஆரியர்களும் கூட, இந்த இந்திய ஆரியர்களுக்கு இணங்கி, அவர்களது நலனுக்கு ஏற்ற வண்ணம் நடந்து, இந் நாட்டில் ஆட்சி செலுத்த வேண்டியவர்களாகவும் வாழ வேண்டியவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

இதற்குமுன் எப்படி இருந்தாலும், இப்போது சிறிது காலமாய்த் திராவிட மக்களுக்குள் நல்ல உணர்ச்சியும் எழுச்சியும் முயற்சியும் இருந்து வந்தும், தொடர்ந்து கிளர்ச்சியும் தொண்டும் நடந்துவந்தும், குறைந்த பட்சம் ஒரு 50 வருஷ காலத்தில் இல்லாத அளவுக்குத் திராவிடர்களிடமும் சிறப்பாகத் திராவிட இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் ஆகியவர்கள் உள்ளத்திலும் தீப்பொறி பறக்கத் தகுந்த அளவு தீவிர உணர்ச்சி கொண்ட பிரச்சாரத் தொண்டாற்றி வந்தும், வேறு எக் கூட்டத்தாரையும்விடக் குறைந்ததாயில்லாத அளவுக்கு உண்மை அங்கத்தினர்களும் அமைப்புகளும் ஸ்தாபனங்களும் ஏற்பட்டு— கூட்டங்கள், மாநாடுகள், விழாக்கள் நடந்துவந்தும் அவைகளுக்குச் சிறிதும் பயனில்லாமல் போய்விடுவதும், மதிப்பில்லாமல் போய்விடுவதுமான தன்மைகள் ஏன் ஏற்படுகின்றனவென்றால், பத்திரிகைகள் ஆரியர்களுடையதாகவும் அதன் நிருபர்கள் ஆரியர்களாகவும், அவற்றைக்கொண்டு அவர்கள் செய்யும் வன்னெஞ்சமான நீதியும்-ஒழுக்கமுமற்ற அட்டூழியமும்தான் என்பதல்லாமல் வேறு என்ன காரணம் சொல்லமுடியும் என்று கேட்கிறோம்.

வேறு எந்தக் காரியத்தில் ஆரியர்களுக்குள் சிறு அபிப்பிராய பேதம் இருந்த போதிலும், இந்தப் பத்திரிகைக் கொடுங்கோன்மை அட்டூழியக் காரியங்களில்—அவர்களுக்குள் பேத உணர்ச்சியே கிடையாது என்பது மாத்திரமல்லாமல், கட்டுப்பாடாய் ஒன்று சேர்ந்து ஒரே மூச்சில் அவ்வப்போதைக்கு ஏற்ற ஒவ்வொரு காரியத்தையும் செய்து திராவிடர்களை ஒழிப்பதில், தலையெடுக்க ஒட்டாமல் அழுத்துவதில் சிறிதும் பேதமில்லாமல் நடந்து வருகின்றனர். இந்தப் பத்திரிகை ஆயுதம் இந்தத் தன்மையில் அவர்களிடம் இருந்துவரும் வரையில் திராவிட மக்களின் அடிமைத் தன்மையும் சூத்திரத் தன்மையும் அதாவது, சமுதாயத்தில் இழிமக்களாகவும், சமயத்தில் நான்காம் அய்ந்தாம் மக்களாகவும், கல்வியில் 100-க்கு 90 பேர் தற்குறி(கைநாட்டு)களாகவும், பொருளாதாரத்தில் தினக்கூலித் தொழிலாளிகளாகவும், அரசியலில் அடக்குமுறை ஆட்சிக்குட்பட்டுத் தவிக்கும் மானமற்ற ஒற்றுமையற்ற ஈன இன மக்களாகவும் ஆக்கப்பட்டிருக்கும் தன்மையிலிருந்து மீள முடியவே முடியாது என்பது கல்லுப்போன்ற உறுதியாகும். உண்மையாகவே திராவிடருக்குள் இன்று ஒற்றுமை எங்கே? இன உணர்ச்சி எங்கே? கட்டுப்பாடு எங்கே? ஒன்றுபட்ட இலட்சியம் எங்கே? ஆனால், திராவிடர்களுக்கு அவர்களது வாழ்வில், முற்போக்கில் எதில் குறையில்லாமல்-தடைகளில்லாமல் இருக்கின்றது? அதே தன்மையில் ஆரியர்களைப் பார்த்தோமானால், அவர்களுக்கு எவ்விதக் குறை இல்லாவிட்டாலும்-எவ்வளவு கட்டுப்பாடு! எவ்வளவு இன உணர்ச்சி! எவ்வளவு ஒன்றுபட்ட இலட்சியம்! எவ்வளவு ‘கூட்டுத் தொண்டு’ இருந்து வருகின்றன!



இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதற்கு முதற்காரணம், நாம் மேலே காட்டியதுபோல், அவர்கள் கைவசம் பத்திரிகை உலகம் இருந்து வருவதும், நமக்கு அது இல்லாததுமே முக்கியமென்பதல்லாமல், வேறு என்ன சொல்லமுடியும்? குறைந்த அளவு நாம் (திராவிடர்கள்) ஆரியர்களின் பத்திரிகை அட்டூழியங்களையாவது சமாளிக்கத்தக்க ஒரு தன்மையை அடையாவிட்டால், மற்றபடி அவர்களுடைய வலிமை பொருந்திய ஆயுதங்களான—மதம், கடவுள்கள், ஆத்மார்த்தம், தெய்வீகம், கலை, தேசியம், சுதந்திரம், சுயேச்சை என்னும் ‘இருபுறமும் பதமுள்ள வஜ்ஜிராயுதங்களால்’ நடத்தும் சித்திரவதைகளில் இருந்து எப்படி மீள முடியும்?

அப்பப்பா! அய்யய்யோ! சகிக்க முடியாத-பொறுக்க முடியாத துன்பங்கள், தொல்லைகள், கொடுமைகள்! இவைகள் பரிகாரமற்றவைகளாக இருப்பதுடன் இந்த வாழ்வு வாழ்வதைவிடத் தற்கொலை செய்துகொள்வது மேல் என்று சிறிதாவது மான உணர்ச்சியுள்ள திராவிடனைத் தூண்டுகின்ற தன்மையில் இருந்துவருகின்றன.

திராவிட மக்கள் சற்றேறக்குறைய தெளிவான இரு பிரிவுகளாகக் காணப்பட்டுவிட்டார்கள். ஒன்று, திராவிடர்களின் இழி நிலையைப் பற்றி—அவர்களது முன்னேற்றத்திற்கும் மனிதத் தன்மைக்கும் கேடாக இருக்கும் தன்மைகளைப் பற்றிக் கவலையற்று, தங்கள் நலனையே பார்த்துக் கொண்டு வாழ்வை நடத்துவது என்பது. மற்றொன்று, தங்களைப் பற்றிக் கவலையில்லாமல் இன்றைய இந்த இழி நிலையைப் போக்கத் தம்மாலானதைச் செய்வது; செய்யும் முயற்சியில் முடிவெய்துவது; அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை ஏற்பது என்பதாகும். இவற்றுள் முன்னையவர்களில் இரண்டு பிரிவினர்கள் இருந்து வருகின்றனர். இவர்களுள் ஒரு சாரார், எதிரிகளுடன் சேர்ந்து திராவிடர்களுக்கு இடரையும் தடையையும் செய்யத் துணிந்து, ஆரியர்களுக்கு உடந்தையாயும் அடிமையாயும் இருந்துவரும் வழுக்கி விழுந்த திராவிட சகோதரர்கள்; மற்றொரு சாரார், அவர்களுடனும் சேராமல், நம்மோடும் சேராமல் நடுநிலைமை காட்டிக்கொண்டு, சமயம்போல் நடந்து, மற்ற இரு கூட்டத்தாரின் தொண்டிலும் பங்கு பெற்றுத் தங்கள் சொந்த வாழ்வை மாத்திரம் கவனித்து, அதற்காக எதுவும் செய்யத் துணிவு கொண்ட திராவிடர்கள். இவர்கள் தங்களை, மற்ற யாரையும் விட மேதாவிகள்-மேன்மக்கள் என்று சொல்லிக் கொள்ளும் சுயநல வேட்டை ஆடுகிறவர்கள் ஆவார்கள். இத்தகைய எந்தப் பிரிவும் ஆரியர்களுக்குள் இல்லை என்பது யாவரும் அறிந்ததாகும்.

எனவே, திராவிடமக்கள் மேற் குறிப்பிட்ட தன்மைகளில் இருந்து மாறி—மற்ற இனத்தவர், மற்ற நாட்டவர் போல் ஆகி, ஒரு மனிதத் தன்மை கொண்ட சமுதாயமாக ஆவதற்கு மிக்க எதிர்நீச்சல் போன்ற கஷ்டமானதும்-தன்னலத்தை வெறுத்ததுமான தொண்டு செய்ய வேண்டியது மிக அவசியமாகுமென்பதல்லாமல், இந்தச் சமயம் மிகவும் அவசரமானது என்போம். அதற்கு முக்கியமான-இன்றியமையாத ஆயுதம் பத்திரிகையாகும். அதை உத்தேசித்தே இந்தக் காரியத்திற்கும்கூட நமக்குள் இருக்கும் பல வித வேற்றுமை, உதவியற்ற தன்மை, நிதியற்ற நிலை, வேறு பல தடைகள், கஷ்ட நஷ்டங்கள் ஆகியவைகளைக் கூட இலட்சியம் செய்யாமல்—‘விடுதலை’யைத் துவக்கி விட்டோம். பெரிதும் பாமர, பொதுமக்களையும் இளைஞர்களையும் நம்பியே இதில் இறங்கி இருக்கின்றோம். இது நீடித்து நடந்தாலும் சரி, அல்லது முன்போல் சில நாட்களில் ஒழிந்தாலும் சரி; நம் கடமையைக் கருதியும் இச் சில செல்வர், அறிஞர்கள் ஆதரவு கிடைக்கலாம் என்கின்ற நம்பிக்கையுடனும் இறங்கிவிட்டோம். இச் சமயம் நம் எதிரிகளின் ஏகபோக ஆதிக்கத்தில் அரசியலும் இருக்கும்படியான சமயமாகும். அதனால், அவர்கள் ‘விடுதலை’யை எப்போது வேண்டுமானாலும்—என்ன வேண்டுமானாலும் செய்துவிடக் கூடும் என்றாலும் நமக்குள்ள ஆசை-நமது முக்கிய கடமை-நம் மக்களிடத்தில் உள்ள நம்பிக்கை-நம் இளைஞர்கள் நம் மாணவர்கள், நம் தாய்மார்கள், நமக்கு ஊட்டிவரும் ஊக்கம், உள் நம்பிக்கை ஒத்துழைப்பைத் தருவதாய்க் காட்டும் அறிகுறி, அவர்களது



படிப்பகம்

www.padippakam.com



வாக்குத்தத்தம் ஆகியவைகளைக் கொண்டும் தொடங்கிவிட்டோம்! இதே தொண்டில் இதற்குமுன் இரண்டு மூன்று தடவை வரை முயன்று தோல்வியுற்றாலும் அதைப்பற்றிச் சிந்தியாமல், மறுமுறையும் துணிந்து இறங்கி விட்டோம். ஆகவே தோழர்களே! தாய்மார்களே! செல்வர்களே! அறிஞர்களே! இளைஞர்களே! மாணவர்களே! இனி உங்கள் கடமை என்ன?

['விடுதலை'—தலையங்கம்—6-6-1946

## 11. 'திராவிட நாடு'

E. V. RAMASAMI,
Erode.

Date 1-4-1943

பத்திரிகைக்கு உதவி வேண்டுகோள்

காஞ்சிபுரத்தில் தோழர் C. N. அண்ணாதுரை M.A., அவர்களால் நடத்தப்பட்டு வரும் 'திராவிட நாடு' பத்திரிகை தமிழர்களின் விடுதலைக்கு உண்மையுடனும் உறுதியுடனும் உழைத்து வருவது தமிழர்கள் அறிந்ததேயாகும்.

அப் பத்திரிகை தவக்கமின்றியும் நிலையாகவும் நடந்து வருவதற்கு அதற்குச் சொந்தத்தில் ஒரு அச்சு இயந்திரம் வேண்டியிருக்கிறது. அதை உத்தேசித்தே ரூபாய் 1200-0-0-ல் ஒரு டபுள் கிரவுன் சிலிண்டர் மிஷின் பேசி இருக்கிறது.

ஆதலால், தமிழ் மக்கள் இந்தத் தொகையைக் கொடுத்து உதவ வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

—ஈ. வெ. ராமசாமி

| உதவியோர்: | தொகை: |
|---|---|
| ஈ. வெ. ராமசாமி | 100-00 |
| கோபி. தோழர்கள் | 63-00 |

['திராவிட நாடு'—அறிக்கை—18-4-1943]

## 12. 'தோழனு'க்கு வாழ்த்து

'தோழன்' என்கின்ற பெயரில் தோழர் ஜனார்த்தனம் அவர்களால் ஒரு மாதப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அனேகமாக நம் நாட்டில் பார்ப்பனரல்லாதார் (திராவிடர்கள்) கொள்கைக்காகப் பொதுத் தொண்டுக்காக என்று பத்திரிகைகள் துவக்கி, திராவிடர்கள் ஆதரவு சரிவரக் கிடைக்காததால், அது கடைசியில் வயிற்றுப் பிழைப்புக்காக என்று மாறி, துவக்கிய கருத்து மறைந்து, கொள்கையும், வாழ்வும் நாணயமற்றதாக ஆகிவிடுவதை மலிந்து கிடக்கப் பார்க்கிறோம். இப்படிப் பட்ட திராவிடநாட்டு மக்களிடையில் தோழர். ஜனார்த்தனம் அவர்கள் பத்திரிகை நடத்துகிறார் என்றால், மற்றபடி மேற்கண்ட மலிவுத் தன்மையை இதுவும் அடைந்துவிடுமோ என்று எந்தத் திராவிட மகனும் அஞ்சவேண்டியதில்லை; அய்யுற வேண்டியதில்லை என்று நாம் உறுதி கூறி சிபாரிசு கூடச் செய்வோம்.

ஏன் என்றால், தோழர் ஜனார்த்தனம் அவர்கள் 'தோழனை' ஆயுதமாகக்கொண்டு மக்களை நடத்துவாரே தவிர, மக்கள் பின் செல்லமாட்டார் என்கின்ற நமது உறுதியால் தான்.


E. V. Ramasami,
ERODE.

Date 1-4-1943.

"திராவிடநாடு"

உதவியோர் | தொகை
ஈ. வெ. ராமசாமி — 100-0-0
கோபி தோழர்கள் — 63-0-0

www.padippakam.com



ஆகவே, திராவிட மக்கள் 'தோழனை' ஆதரிக்கவேண்டியது நீங்காக் கடன் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

'தோழன்' நீண்ட நாள் தோழர்களுக்குத் தொண்டாற்றி, திராவிடர்களுக்கு இருந்துவரும் குறைகளையும் கேடுகளையும் நீக்கி, உண்மை ஆருயிர்த் தோழனாக மிளிர விழைகிறேன்.

['தோழன்'—1-11-1947]

## 13. 'உண்மை'

'உண்மை' என்னும் பெயரால் ஒரு மாதப் பத்திரிகையை 1970-ஆம் ஆண்டு முதல் துவக்குகிறேன். அதற்குக் கொள்கை—மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக ஆக்கவேண்டும் என்பதாகும்.

இன்று நம் நாட்டிலுள்ள நம் மக்களில் 100-க்கு 85 மக்கள் சுத்தக் காட்டுமிராண்டி—மூடநம்பிக்கைக் கருத்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். மற்றும், இந்த 100-க்கு 85 வீதம் கொண்ட மக்களும் சமுதாயத்தில் இழிபிறவிகளாக, கீழ்ச் சாதியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி ஆக்கப்பட்டிருப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆதாரம் என்னவென்றால் கடவுள், மதம், வேத சாஸ்திரங்கள், மத தர்மங்கள், அரசியல், ஆட்சிச் சட்டம் என்பவைகளாக இருந்துவருதல் ஆகும்.

இந்த நிலை இன்று நேற்று என்றில்லாமல், சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலம் முதலே இருந்துவருகின்றது. ஒரு நாட்டின் நிலை இந்தப்படியாகவும், மக்கள்நிலை அதற்கேற்ற தன்மையுடைய அறிவைக்கொண்டதாகவும் இருந்துவந்தால் இதற்குப் பரிகாரம் என்பதே இல்லையா? மனிதன் என்றாலே உலகிலுள்ள மற்ற ஜீவப் பிராணிகள் எல்லாவற்றையும்விட அதிகமான அறிவுகொண்டவன் என்பதே பொருளாகும். மனிதனுடைய இந்த உயர்ந்த அறிவின்தன்மை அவனை இழிமகனாக, கீழ்மகனாக, மூடநம்பிக்கைக்கு ஆட்பட்டவனாக இருக்கத்தான் பயன்பட்டு வருகிறதென்றால் அறிவுள்ள மனிதன் என்பவனெல்லாம் வெட்கப்படவேண்டிய விஷயமல்லவா இது! எனவேதான், இந்த நிலையை மாற்றவே — மக்களைப் பகுத்தறிவாளிகளாக, மானமுடையவர்களாக ஆக்குவதற்காகவே—'உண்மை' என்னும் பெயரால் இப் பத்திரிகை துவக்கப்படுகிறது என்று திரும்பவும் கூறுகிறேன்.

மக்களை அறிவாளிகளாக்கும் துறையில், மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் துறையில் யார் பாடுபட்டாலும் அவர்கள் பொதுமக்களால் வெறுக்கப்படவும், நாத்திகர்கள் என்று கூறப்படவும், தொல்லைக்கு ஆளாக்கப்படவும், கொல்லப்படவுமான தன்மை உலகிலேயே இயற்கையாக இருந்துவருகிறபோது, அந்த நிலை நம் நாட்டில், நம் மக்கள் இருக்கும் யோக்கியதையில் ஏற்படாமல் இருக்கமுடியுமா? ஆதலால், அந்த நிலைக்கு ஆளாகும் தன்மையை எதிர்பார்த்தே நான் இந்தக் காரியத்தில் பிரவேசித்துத் தொண்டாற்றி வருகிறேன்.

இதன் பயனாக நான் பலமுறை சிறை சென்றிருக்கிறேன்; வாழ்க்கையில் பல இன்னல்களை அடைந்திருக்கிறேன்; அரசாங்கத்தால் வெறுக்கப்பட்டிருக்கிறேன். இதற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கத்திற்கு என் பெயராலும், இயக்கத்தின் பெயராலும் அரசாங்கத்தாலோ, அரசாங்கத்திலுள்ள 'மேல் சாதி' மக்களாலோ அல்லது இந்தக் கருத்துக்கு மாறுபட்டவர்கள் என்பவர்களாலோ எனது முயற்சியைத் தடுக்கவும் ஸ்தாபனத்தை ஒழிக்கவுமான தன்மையாக ரூ. 15,00,000 (பதினைந்து இலட்ச ரூபாய்)க்கு மேல் கடந்த காலத்துக்கு என்று 'இன்கம்டாக்ஸ் (வருமான வரி)' போடப்பட்டிருக்கிறது

படிப்பகம்

www.padippakam.com



என்பதுடன், நிகழ்காலத்திற்கும் ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய்போல் இன்கம்டாக்சும் போடப்பட்டுவருகிறது.

இவை தவிர, நம் நாட்டில் உள்ள எல்லாப் பார்ப்பனராலும் வெறுக்கப்பட்டிருக்கிறேன்; மேல் சாதியார் என்று பார்ப்பனரைப் போல் தங்களைக் கருதிக்கொண்டிருக்கும் எல்லாச் சைவர்கள்-என்பவர்களாலும் பெரிதும் வெறுக்கப் படுகிறேன். இவை மாத்திரமா! 100-க்கு 90 கிறிஸ்தவர்களாலும் வெறுக்கப்படுகிறேன். இஸ்லாமியர்களால் வெளிப்படையாய் வெறுக்கப்படவில்லை என்றுதான் நினைக்கிறேன்.

இவற்றுள் ஒரு அதிசயமென்னவென்றால், ஆதித் திராவிட மக்களுக்குள் பதவியில் உள்ள சிலர் தவிர ஒருவர்கூட எனக்கு ஆதரவாளர் கிடையாது. யாராவது சிலர் அவர்கள் சொந்த—சுயநல காரியங்களுக்கு வருவார்கள்; அவ்வளவுதான். சிலர் எதிரிகளாகவே, அலட்சியப்படுத்துபவர்களாகவே ஆகிவிட்டார்கள். எதற்கு இவற்றைச் சொல்கிறேன் என்றால், 'என் இந்தத் தொண்டுக்கு ஆதரவாளர்களாக, பாராட்டுபவர்களாக பெரும்பாலான மக்கள் இல்லை' என்பதைக் காட்டுவதற்காகவேயாகும்.

இதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடையத் தக்கதும், குறிப்பிடத் தக்கதுமான காரியம் என்ன வென்றால், என் இயக்கத்தில் (இந்தத் தொண்டுக்கு ஏற்பட்ட இந்த இயக்கத்தில்) வேறு எந்த இயக்கத்தையும் விடக் கட்டுப்பாடும் அதற்கேற்ற கடமைப்பாடும் நல்ல அளவுக்கு இருந்துவருகின்றன. இயக்கத் தோழர்கள் யாராயிருந்தாலும், பிடிக்கா விட்டால் அவர்கள் வெளியே போய்விடுகிறார்கள் என்பதுதான்.

ஆகவே, 'உண்மை'யின் தொண்டு எதிர் நீச்சல் தொண்டேயாகும். 'குடி அரசு'த் துவக்க காலம் இதைவிட மோசமாக இருந்தது.

'குடி அரசை' ஒழிப்பதற்கு இந்த நாட்டுக் கிறிஸ்தவர்கள் அமெரிக்காவிற்கு எழுதி, அழுது பணம் தருவித்துப் பிரமாத வேலை செய்தார்கள். பார்ப்பனர் பணம் கொடுத்து எதிர்ப்புப் பத்திரிகைகள் ஆரம்பிக்கச் செய்து காலிகளை ஏவிவிட்டு எதிர்ப்புக் காட்டினார்கள். ஆனால், 'குடி அரசு' என்னும் வாரப் பத்திரிகை 'விடுதலை' பேரால் தினப் பத்திரிகையாக ஆகி, அதே தொண்டுடன் வேறு பல தொண்டுகளும் செய்து வருகிறதே ஒழிய, ஒழிந்துவிடவில்லை. இப்போது அதே தொண்டுக்காக, பகுத்தறிவுத் தொண்டுக்காக, சமுதாய இழிவு மடமை நீக்கும் தொண்டுக்காக என்றே பாடுபட இந்த 'உண்மை' பிறந்திருக்கிறது.

'உண்மை' நாத்திகப் பத்திரிகைதான்; முக்காலும் நாத்திகப் பத்திரிகைதான். அதற்காக யாரும் பயப்படாதீர்கள். சாக்ரட்டீஸ் நாத்திகர்; பெர்ட்ராண்ட் ரஸல் நாத்திகர்; பெர்னாட் ஷா நாத்திகர்; மற்றும் இயேசுநாதரும் 'நாத்திகர்' என்றே சொல்லப்பட்டுக் கொலையுண்டார். முகமது நபியும் 'நாத்திகர்' என்றே சொல்லப்பட்டு அடித்து விரட்டப் பட்டார். பவுத்தர்களும், சமணர்களும் நாத்திகர்கள் என்றே சொல்லப்பட்டு அவர்கள் வீடுகள், மடங்கள், கொளுத்தப்பட்டு வெகுபேர் கொல்லப்பட்டு, கழுவேற்றப்பட்டு, அவர்களது பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டு அல்லலுற்றனர். இவர்கள் தவிர, அமெரிக்காவில் பல நாத்திகச் சங்கங்களில் மூன்று கோடிக்குமேல் வெளிப்படையான நாத்திகர்கள். இங்கிலாந்திலும் அதுபோலவே அரைக் கோடிக்கு மேலும், ஜெர்மனியில் ஒரு கோடியும், சைனாவில் 60 கோடியும் ரஷ்யாவில் 40 கோடியும், ஸ்பெயினில் முக்கால் கோடியும், பிரான்சில் முக்கால் கோடியும், பர்மாவில் அரைக் கோடியும் சயாமில் ஒரு கோடியும் இருக்கிறார்கள்.

இப்படியாக, நூற்றுக்கணக்கான கோடி மக்கள் உலகில் நாத்திகர்களாக இருக்கிறார்கள். பல தேசங்கள் நாத்திக தேசங்களாகவே இருந்து வருகின்றன. இத்தனைக்கும் அவர்கள் எல்லோரும் பகுத்தறிவு கொண்ட தேச மக்கள் ஆவார்கள்.



இந்தியாவில் தமிழ் நாட்டில் இன்றைய அரசாங்கமே 'நாத்திக' அரசாங்கமாக இருந்துவருகிறது. கேரளாவில் நாத்திக அரசாங்கம் என்பதோடு—மூன்றில் ஒரு பங்குக்கு மேற்கொண்ட மக்கள் நாத்திகர்கள். இவர்கள் இன்று கோயிலை இடிக்கிறார்கள், சாமி சிலையை உடைக்கிறார்கள். மற்றும் பல நாடுகளில் நாத்திகர்கள் தாராளமாக இருக்கிறார்கள். நமது பார்லிமெண்டில் கடவுள் இல்லை என்று தீர்மானம் கொண்டுவருகிறார்கள். இவர்களால், இவற்றால் உலகம் முழுகிப்போய் விட்டதா? ஆகவே, நாத்திகம் கூடாததல்ல; இல்லாததல்ல; நடக்க வேண்டாததுமல்ல.

மற்றும் நமது 'கடவுள்'களில் ஒன்றான—2½ இலட்சம் மைல் உயரத்தில் இருக்கும் சந்திரன், இன்று வெள்ளையர் காலடியில் உதைபடுகிறான்—உடைக்கப்படுகிறான்.

இந்த நிலையில் 'உண்மை' நாத்திகத்தைப் பரப்புகிறது என்றால் எதற்காகப் பரப்புகிறது? உன்னைப் பார்ப்பான்—'சூத்திரன்' என்று சொல்லுவதையும், உனது மனைவி மக்களை 'வைப்பாட்டி' என்றும், 'தனது வைப்பாட்டி மக்கள்' என்றும் சொல்லுவதையும், நீ இவைகளுக்குச் சம்மதித்துக் கொண்டு அதற்கேற்ப நடந்து கொண்டிருப்பதையும் ஒழிப்பதற்காகவே பரப்புகிறது. ஆதலால், 'உண்மை'யை வர வழைத்துப் படியுங்கள். பத்தாயிரம் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுங்கள்! 'உண்மை' ஆறு மாதத்தில் வாரப் பத்திரிகையாக ஆகும்படி ஆக்கிக் கொடுங்கள்.

['உண்மை' முதல் இதழில் தலையங்கம்—14-1-1970]

## 14. இந்துமத ஆசார ஆபாச தரிசனி—மதிப்புரை

இன்றைக்கு அறுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் சென்னையம்பதிக்கு அடுத்த அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயக்கர் என்னும் ஒரு பேரறிஞரால் செய்யுளாகச் செய்யப் பட்ட 'இந்துமத ஆசார ஆபாச தரிசனி' என்னும் இந்த அருமையான நூல் ஒன்று எனது நண்பர் தோழர் குரு. இராமலிங்கம் அவர்களது முயற்சியால் வெளியிட்ட பிரதியொன்று எனது மதிப்புரைக்காக அனுப்பப்பட்டதை நன்றியறிதலோடு பெற்றுப் பெரிதும் படித்துப் பார்த்தேன். அவையாவும் இந்துமத ஆசாரம்பற்றி எனது வெகுநாளைய கருத்துக்களை அடிப்படையாகக்கொண்ட நோக்கத்தை அணியாகக்கொண்டு துலங்குவனவாகக் காணப் படுகின்றன.

நான் பெரிதும் தொண்டாற்றிவரும் பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்ட சுயமரியாதை இயக்கத்தின் கருத்துக்கள் இன்றைக்கு 60, 70 ஆண்டுகளுக்கு முன்பாகவே மிகத் துணிவோடு தெளிவாக செய்யுள் உருவாய்ப் பாடப்பட்டிருப்பதைக் கூர்ந்து நோக்கினால் சுயமரியாதை இயக்கத்தின் கருத்துக்கள் புதியனவல்ல என்பதோடு, வெகுகாலத்திற்கு முன்னதாகவே, அதாவது நான் பிறப்பதற்கு முன்னதாகவே, பல அறிஞர்களால் வெளியிடப்பட்ட பழங் கருத்துக்கள் என்பதற்கு ஓர் தக்க சான்றாகும்.

இந்துமதம் என்னும் பேரால் நம் நாட்டில் இருந்துவரும் மூடத்தனமானதும் ஆபாசமானதுமான ஆசார அனுஷ்டானக் கருத்துக்களும் நடத்தைகளும் இந்த நாட்டிலல்லாமல், அதுவும் இந்து மதத்திலல்லாமல் வேறு எங்கும் எந்த நாட்டிலும், எம்மதத்திலும் காணவும், கருதவும் முடியாதவைகளாகும். நம் நாட்டைவிட எவ்வளவோ மோசமான காட்டுமிராண்டித்தனமான, மத ஆச்சாரக் கொள்கைகள், நடத்தைகள் கொண்ட மற்ற எந்த நாட்டினரும் நல்ல திருத்தப் பாடடைந்து, பகுத்தறிவுக்கு ஏற்றமுறையில் முன்னேற்றமடைந்து, முழுவிடுதலையும் பெற்று வாழ்கின்ற இந்த விஞ்ஞான வளர்ச்சிக் காலத்தில் நம் நாடும் நம் சமுதாயமும் மாத்திரம் இந்து மதம் என்னும் பேரால், இந்த நூலில் காணப் படும்படியான, இன்னும் அதிகமான ஆபாசத்தன்மையில் இருக்கிறது என்றால், இதற்கு ஏதாவது ஒரு காரணம் இருந்தாக வேண்டுமென்றே சொல்லுவேன்.

படிப்பகம்

www.padippakam.com



அந்தக் காரணம் என்னவென்றால், மேற்கண்ட தன்மையதான ஆபாச அனாச்சார காட்டுமிராண்டித் தன்மைகளைக் காப்பாற்றி, நாட்டில் பாமர மக்களிடையே பரப்பி, மூடநம்பிக்கைகளைப் புகுத்தி அதனாலேயே மேம்பாடுபெற்று வாழ்க்கை நடத்தும்படியான ஒரு சுயநல இனம்–பிறப்பினாலேயே தன்னை வேறுபடுத்திக்கொண்டு, அதனாலேயே தனது வாழ்வை அமைத்துக்கொண்டு இருப்பதேயாகும். அந்த இனம்தான் ஆரியப் பார்ப்பனர் இனம் என்று சொல்லப்படுவதாகும்.

இப் பார்ப்பனர் என்பவர்கள் இன்று இந்நாட்டின் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெற்று மிக்க சக்திவாய்ந்த செல்வாக்குடன் இருந்துவரும் இந்நாளில், பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்டதும், அவற்றால் அவர்கள் மாத்திரமே பயன் அனுபவிப்பதற்கு வசதியாய் இருப்பதுமான இந்துமத ஆசார ஆபாசக் களஞ்சியங்கள் ஒழிவதற்கு இக் காலத்தில் யாராவது ஒருவர் தொண்டாற்றுவதென்றால், அப்படிப்பட்டவர் சர்வத்தையும் துறந்த துறவியாயிருந்து உயிருக்குத் துணிந்த ஒரு வீரராயிருந்தாலொழிய முடியாத காரியமாயிருந்து வருகிறது.

இப்படிப்பட்ட ஒரு அருஞ்செயலை நமது நண்பர் தோழர் குரு. இராமலிங்கனார் அவர்கள் மேற்கொண்டு ஊக்கத்தோடு ஆற்றிவரும் அரும்பணிகளில் இந்த 'இந்துமத ஆசார ஆபாச தரிசினி' என்னும் வெகுநாளாக மறைந்துகிடந்த இந் நூலை நல்லமுறையில் தொகுத்துப் புதுப்பித்து வெளியிட முன்வந்ததானது தமிழ்மக்களால் பெரிதும் பாராட்டிப் போற்றக்கூடிய செயலாகும்.

அவர் இதுபோல் இன்னும் பல நூல்களை வெளியிட்டு, நம் திராவிட மக்களிடையே இரத்தத்தில் ஊறி நிலவிவரும் இந்து (ஆரிய) மத ஆசார ஆபாசங்கள் அடியோடு நீக்கப்பட உறுதிகொண்டிருப்பதாகவும் அறிகிறேன். ஆதலால், அவரது இந்த நன்முயற்சியில் அவர் முழுவெற்றி பெறவேண்டுமென்று நான் விரும்புவதோடு, இவ்வரும்பணிக்காக அவருக்கு நன்றி செலுத்தி, மேலும் ஊக்கமளிக்க வேண்டியது திராவிட மக்களின் கடமையாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, இந் நூல்போலவே மற்றுமுள்ள நூல்கள் யாவும் விரைவில் வெளியாக்கப்பட வேண்டுமென்றும், அவைகள் ஒவ்வொன்றையும் திராவிட மக்கள் வாங்கிப்படித்து, அறிவு பெற்றுத் தன்மானவாதிகளாக, மனிதத் தன்மையுடையவர்களாகத் திகழவேண்டும் என்றும் முறையே குரு. இராமலிங்கனாரையும் தமிழ்மக்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

[சென்னை அறிவியக்க நூற் பதிப்பகம் 1948-ல் வெளியிட்ட 'இந்துமத ஆசார ஆபாச தரிசனி' என்னும் நூலின் மதிப்புரை]

# 2. இரங்கற் செய்திகள்

## 1. தங்கப் பெருமாள்

தமிழ் நாட்டின் அருந் தவப் பயன், நமது ஆருயிர் நண்பர் ஸ்ரீமான் வா. மு. தங்கப் பெருமாள் பிள்ளை இம் மாதம் 6-ந் தேதி காலை 4 மணிக்கு உயிர் நீத்தார் என்னும் செய்தியை எழுதவே மெய் நடுங்குகிறது. அவருக்கு இன்னமும் ஆண்டு முப்பதுகூட ஆகவில்லை. அவர் ஈரோடு முனிசிபல் எல்லைக்குள் கருங்கல்பாளையம் என்னும் கிராமத்தில் வாத்தியார் வீடு என்று சொல்லும்படியான புராதனமும் கண்ணியமும் வாய்ந்த ஒரு சைவ வேளாள செல்வக் குடும்பத்திற்குச் செல்வமாய்ப் பிறந்தவர். அவரது இளம் வயதிலேயே, அதாவது, 12-வது வயதிலேயே தந்தை இறந்துபோனார். ஆயினும், சிறிய தந்தையார் ஆதரவினால் கல்வி கற்பிக்கப்பட்டு, தனது 21-வது வயதில் B. A. பட்டம் பெற்று, 24-வது வயதில் B. L. பட்டமும் பெற்று, ஈரோடு ஜில்லா முன்சீப் கோர்ட்டில்



1921-ஆம் வருஷத்தில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். ஆரம்பித்த மாதமே 200 ரூபாய் வரும்படி கிடைத்தது. அடுத்த மாதம் 250 ரூபாய் வரும்படி கிடைத்தது. மற்றும் இரண்டொரு மாதங்களிலேயே மாதம் 300 ரூபாய்க்கு மேல் வரும்படி வந்துகொண்டிருக்கும் படியான நிலைமை ஏற்பட்டதோடு, ஊருக்குள் பிரபலமும், செல்வாக்கும் ஏற்பட்டு, தான் படித்து வந்த மகாஜன ஹைஸ்கூல் என்னும் பள்ளிக்கூடத்திற்கு ஓர் நிர்வாக அங்கத்தினராயும், ஈரோடு நகர பரிபாலன சபைக்கு நிருவாக அங்கத்தினராகவும் தெரிந்து எடுக்கும் படியான பொதுஜன அபிப்பிராயத்தைப் பெற்றார். அவர் தனக்கு விவரம் தெரிந்த காலம் முதலே பொது விஷயங்களில் ஊக்கமும்—தன்னைப்போன்ற இளம் வாலிபர்களின் மிகுதியான கூட்டுறவும், தமிழ் மொழியினிடத்து ஒருவிதத் தனிப் பற்றுதலும் உடையவராயிருந்ததோடு, தனது ஊராகிய கருங்கல்பாளையத்தில் ஒரு சிறு வாசகசாலை என்பதாக ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் பொதுநல விஷயங்களையும், தமிழர் பெருமையையும் பற்றி அடிக்கடி தமது நண்பர்களிடம் பேசுவதும், அவ் வாசகசாலைக்கு வருடா வருடம் ஆண்டுவிழா என்னும் பேரால் தமிழ்நாட்டுப் பெரியோர்களை, அதாவது ஸ்ரீமான்கள் பாரதியார், வரதராஜுலு நாயுடு, வ. வெ. சு. அய்யர், திரு. வி. க. முதலியார், மு. வே. நாட்டார் முதலியவர்களை அழைத்து, கொண்டாட்டங்கள் நடத்துவதுமான விஷயங்களில் பெரிதும் தனது சகாக்களோடு ஊக்கங்காட்டி வந்தவர்.

இந்நிலையில் 4, 5 மாதங்கள்கூட தனது வக்கீல் தொழிலை நடத்தியிருக்கமாட்டார். இதற்குள்ளாக காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கம் ஆரம்பமாயிற்று. தனது வக்கீல் தொழிலோடு ஒத்துழையா இயக்கம் சம்பந்தமான பொதுக்கூட்டங்கள் ஈரோட்டில் நடைபெற்று வந்த சமயங்களில், நமது பிள்ளை அவர்களே அனேகமாய் அக்கிராசனம் வகிக்கக் கேட்டுக்கொள்ளப்படுவதும், இவரது அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியோர் பேசுவதும் வழக்கமாயிருந்தது. இப்படியிருக்க, ஒருநாள் கூட்டத்தில் நமது பிள்ளையவர்கள் தனது முடிவுரையில், தான் நாளை முதற்கொண்டு வக்கீல் தொழிலுக்குப் போவதில்லை என்ற செய்தியை அறிவித்துவிட்டார். இவ்வறிவிப்பானது அக்கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் அவரிடம் அளவு கடந்த பக்தியையும், அன்பையும் ஏற்படுத்திவிட்டது. பிறகு காங்கிரஸ் நிருவாகத்திலும் அவர் இழுக்கப்பட்டார். உடனே, ஜில்லா காரியதரிசியானார். அடுத்தாற்போல் மாகாண நிர்வாகசபை அங்கத்தினரானார். பெயர்பெற்ற ஈரோடு கள்ளுக்கடை மறியலில் இவர் குற்றம் சாட்டப் பட்டு, நாயக்கர் உட்பட 40 தொண்டர்களோடு மேஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டுச் சிறைவாசமிருந்தார். சிறையினின்று வெளிவந்ததும் அதி மும்முரமாக ஜில்லா முழுவதும் சுற்றும்படியான வேலையில் தனது மெல்லிய சரீரத்தின் சவுகரியங்களையும், தனது வாழ்க்கை போகத்தின் பழக்கங்களையும் கொஞ்சமும் கவனியாமல் கிராமம், கிராமமாய்த் திரிந்து வேலை செய்து வந்தார். இந் நிலையில் ஜில்லா தலைவராகவும், மாகாண காரியதரிசியுமானார். இதன் பலனாய் மாகாணமெல்லாம் சுற்றவும் திருச்சியில் மாகாண கமிட்டிக் காரியாலயத்திற்குத் தன் மனைவி சகிதமாய்ப் போய் மாதக் கணக்காய் குடியிருக்கவும் செய்துவந்தார். இராஜீய நிலைமாறி நிலைகுலைந்ததின் பலனாய் காங்கிரஸ் நிருவாகத்தில் கலந்துகொள்ள இஷ்டமற்றவராகி சகலவித நிருவாகத்தினின்றும் விலகிக்கொண்டு, 'குடி அரசு' என்னும் பத்திரிகையை ஆரம்பித்து நடத்த முற்பட்டார். இதுசமயம் கதர் போர்டு காரியதரிசி பதவியையும் ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப்பட்டதாலும், உடல்நலிவு ஏற்பட்டு படுக்கையில் கிடக்கத்தக்க அச்வுகரியத்தோடு இருந்ததாலும், 'குடி அரசு' நிருவாகத்தை நாயக்கரிடம் ஒப்புவித்துவிட்டு விலகினார். அடுத்தாற்போல், உடல்நலம் செய்துகொள்ள சென்னைக்குப் போகவேண்டியிருந்ததால், கதர் போர்டு காரியதரிசி பதவியையும் ஸ்ரீமான் நாயக்கரிடம் ஒப்புவித்துவிட்டுச் சென்னைக்குப் போனார். அங்கும் ஒன்றிரண்டு மாதம் இருந்து சிகிச்சை செய்துகொண்டார். பின் வைத்தியர்கள் அனுமதியின் பேரில் ஊருக்கு வந்து 3, 4 மாத காலம் படுக்கையிலேயே இருந்து சிகிச்சைசெய்து வந்தார். என்ன செய்தும்

படிப்பகம்

www.padippakam.com



அதிசாரக் கழிச்சல் என்னும் அவருக்கு ஏற்பட்ட வியாதி குணப்படாமல், அவரது முடிவுக்கே கூற்றுவனாயிருந்து கொள்ளைகொண்டுவிட்டது. படுக்கையில் இருக்கும்போதும் எழுதுவதும், படிப்பதும், சவுக்கியமான பிறகு தேசத்திற்கு என்னசெய்வது என்று வேலைத் திட்டம் போடுவதிலும் காலத்தைக் கழிப்பார். யாரிடமும் கடினமாகப் பேசமாட்டார். ஒருவருக்கும் மனவருத்தம் ஏற்படும்படி நடக்கமாட்டார். தான் சொல்லுவது உண்மை யானாலும் அதனால் யாருக்காவது சலிப்பு ஏற்படும் என்று பட்டால் பயந்து நிறுத்திக் கொள்ளுவார். தாராளக் கையர், தமிழ்நாட்டுத் தொண்டர்கள் என்போர் அனேகர் அவரிடம் வந்து அடிக்கடி ஏதாவது பெற்றுப்போவார்கள். நண்பர்களுக்குச் சமயங்களில் அவரைப்போல் உதவி செய்பவர்கள் மிகச் சிலர்தானிருப்பார்கள். இல்லை என்று சொல்லுவதானால் தனக்குள் ஒரு பெரிய பாவத்தைச் செய்கிறோமே என்று நடுங்குவார். தமிழிலும், ஆங்கிலத்திலும் அனேக புத்தகங்கள் வாசித்தவர். தமிழ்நாட்டிலுள்ள தமிழாராய்ச்சிக்காரர்களில் நமது பிள்ளையும் ஒரு முக்கியமானவர் என்று சொல்லவேண்டும். அவர் காரியாலயம் ஒரு புத்தகாலயம்போல இருக்கும். ஆராய்ச்சி, ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்று எப்போது பார்த்தாலும் இதே வேலைதான். நமது நாட்டில் மக்கள் உயர்வு–தாழ்வு என்பது எப்படி ஒழியும் என்ற கவலை அவருக்குள்ள மற்ற எல்லாக் கவலைகளையும்விட முன்னின்று கொண்டேயிருந்தது.

முடிவாய்க் கூறுமிடத்து, தன்னலத் தியாகத்தில் ஒரு ஈடற்ற தேசபக்தர்; உண்மைத் தொண்டர்; அஞ்சா நெஞ்சர்; ஆருயிர்த் தோழர்; தமிழ்நாட்டின் ஒரு முக்கிய உருப்பு; கோவை ஜில்லாவின் வலக் கண்; ஈரோட்டின் முடி மறைந்ததென்றுதான் சொல்ல வேண்டும்.

['குடிஅரசு' தலையங்கம்—7-3-1926]

## 2. பாஞ்சால சிங்கம்

நமது பத்திரிகை முடிந்து கடைசித் தாள் அச்சுக்குப் போகுந் தறுவாயில், பாஞ்சால சிங்கம்—முடிசூடா மன்னர்—உண்மைத் தலைவர் லாலா லஜபதிராய் அவர்கள் திடீரென்று மாரடைப்பு வியாதியால் மரணமடைந்தாரென்று தந்தி கிடைத்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனோம்.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால், இந்தியாவில் இருந்த—இருக்கிற தலைவர்களில் லஜபதியவர்கள் சொல்லும் வார்த்தைக்குத் தப்புஎண்ணம் அவரது எதிரியாலும் கற்பிக்க முடியாத உத்தம வீரர் இவர் ஒருவர்தான் என்றே சொல்லவேண்டும். இவரது மரணத்தால், தனது மனதிற்குப் பட்டதைத் தைரியமாயும் ஒளிக்காமலும் வெளியிடக்கூடிய ஒரு ஒப்பற்ற தலைவர் இந்தியாவில் இல்லை என்று சொல்லும்படியான நிலைமை உண்டாகிவிட்டது. சுயராஜ்யக் கட்சியாரைப் பார்த்து, 'பஞ்சாப் மாகாணத்தில் உள்ள எல்லாத் தொகுதிகளில் வேண்டுமானாலும் நான் ஒருவனே தேர்தலுக்கு நிற்கின்றேன்; யாராவது வந்து என்னுடன் போட்டி போடுவதாயிருந்தால் வாருங்கள், ஒருகை பார்க்கலாம்' என்று சொன்ன தீரர். திரு மோதிலால் நேருவின் வாடையே பஞ்சாப் நாட்டிற்குள் அடிக்கவிடாமல் செய்த தனி வீரர்.

சமீபத்தில் தமிழ் நாட்டையும் மலையாளத்தையும் பார்த்துவிட்டுப் போன பிறகு தமிழ்நாட்டின் நிலையைப் பயப்படாமல்—சிறிதும் ஒளிக்காமல் வெளியிட்டவர். தமது ஆயுட் காலமெல்லாம் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் மக்களுக்கு என ஒதுக்கி வைத்து விட்ட உண்மைத் தியாகி. தேசத்துக்காக 'முதல் சீர்திருத்தத்'தின்போது 20 வருஷத் திற்கு முன் நாடு கடத்தப்பட்டவர். 'இரண்டாவது சீர்திருத்தத்'தின்போது 15 வருஷத் திற்கு முன் அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு வரவிடாமல் தடை செய்யப்பட்டவர்; ஒத்துழையாமையின்போது 2 வருடம் சிறை சென்றவர்; '3-வது சீர்திருத்தம்' வரப்போவ தற்கு முன் சர்க்காரால் அடியும் பட்டவர்; அதாவது அதனாலேயே உயிர்விட நேர்ந்ததோ



என்று எண்ணத்தக்க அளவு அடியும்பட்டவர். இப்பேர்ப்பட்ட ஒப்பற்ற ஒரு மகான்—உண்மைத் தியாகி இறந்தது ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்.

['குடிஅரசு'–தலையங்கம்—18-11-1928]

## 3. நமதருமைத் தலைவர்!

தேடற்கரிய, ஒப்புயர்வு அற்ற நமதருமைத் தலைவர் கனம் பனகால் இராஜா சர். இராமராய நிங்கவாரு திடீரென்று நம்மைவிட்டு சனிக்கிழமை இரவு 1 மணிக்குப் பிரிந்துவிட்டார் என்கின்ற சங்கதியைக் கேட்டவுடன் பொதுவாக இந்திய மக்களுக்கும்—சிறப்பாகத் தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கும் ஏற்பட்ட அதிர்ச்சிக்கும் துக்கத் திற்கும் அளவே இருக்காது. ஒரு நல்ல நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தலைவரின் காலம் முடிவுபெற்றதால், பெரியதும் திறமையானதுமான ஒரு யுத்தம்—முனைந்து வெற்றிக் குறியோடு நடந்துகொண்டிருக்கும் சமயத்தில், போர்வீரர்கள் சேனாதிபதியின் ஆக்ஞையை எதிர்பார்த்துத் திரும்பியபோது சேனாதிபதி இறந்துபோய்விட்டார் என்கின்ற சேதி கிடைக்குமானால், அந்தச் சமயத்தில், அப் போர்வீரர்களின் மனம் எப்படித் துடிக்குமோ அதுபோல்,—நமது தமிழ் மக்கள் துடித்திருப்பார்கள் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.

திரு. இராஜா சாஹேப் அவர்கள் நம் தேசத்தில் உள்ள மற்ற பெரும்பான்மையான தலைவர்கள் என்பவர்களைப்போல் கவலையும் பொறுப்பும் இல்லாமல் கூட்டத்தில் கோவிந்தா போட்டுக்கொண்டு, பாமர மக்களின் அறியாமையை ஆதரவாய்க்கொண்டு, வெறும் வார்த்தைகளை மாத்திரம் அடுக்காகவும் அழகாகவும் பேசுவதும் எழுதுவதும், சமயம் சந்தர்ப்பம் அவசியம் ஒன்றையும் கவனியாமல் சர்க்காரை எதிர்த்தும் கண்டித்தும் பேசுவதுபோல் காட்டுவதும் ஆகிய காரியங்களாலேயே பெரிய தலைவர் பட்டமும் கீர்த்தியும் பெருமையும் பெற்று வாழக்கூடியதான ஒரு சுலபமான முறையைக் கைக் கொண்டு தலைவரானார் என்று யாரும் சொல்லிவிடமுடியாது.

அன்றியும், மற்றொரு விதமாகவும்—அதாவது, பத்திரிகைக்காரர்கள் தயவால் அதாவது, பத்திரிகைக்காரர்களைத் திருப்திசெய்து அவர்களது இலட்சியங்களுக்கு ஆயுத மாய் இருந்து, அவர்களால் கைதூக்கிவிடப்பட்டுத் தலைவரானவரும் அன்று. அன்றியும் மற்றொரு விதமாகவும், அதாவது, ஆங்காங்கு கூலி ஆட்கள் பிடித்துக் கூலிகொடுத்து அவர்களைக்கொண்டு நாடு முழுவதும் தங்களைத் தலைவர்கள் எனக் கூச்சலிடச்செய்து, அதனாலேயே தலைவரானவரும் அன்று. அன்றியும், பார்ப்பனர்களின் அடிமையாய் இருந்து, உலக நலத்தின்பேரால்—கலை நலத்தின்பேரால்—மோட்ச நலத்தின்பேரால்—சுயராஜ்யத்தின்பேரால் என்று பார்ப்பன ஆதிக்கத்திற்கும் நலத்திற்கும் ஆளாயிருந்து அவர்களால் தலைவர்பட்டம் பெற்றவரும் அன்று.

மற்றென்னையோவெனில், தாழ்த்தப்பட்ட—ஒடுக்கப்பட்ட—இழிவாய்க் கருதப்பட்ட மக்கள், அதாவது தீண்டாதார்–கீழ் சாதியார்–ஈன சாதியார்–சூத்திரர் என்பவனாகிய 'பிறவி இழிவும்', 'பிறவி அடிமைத்தனமும்' சுமத்தப்பட்ட சுமார் 20 கோடி இந்திய மக்களின் சுயமரியாதைக்கும் விடுதலைக்கும், சமத்துவத்திற்கும், மனிதத் தன்மைக்குமாகவேண்டி பிரவாகமும் வேகமும் கொண்ட வெள்ளத்தில் எதிர்நீச்சு செய்வதுபோன்ற கஷ்டமான காரியத்தைக் கைக்கொண்டு, அதில் இறங்கி வேலை செய்தவர். அவ் வேலையில் அவர் பட்ட கஷ்டத்தை யார் அறிவார் என்பது எமக்கே சொல்ல முடியாததாய் இருக்கின்றது. இந்தியாவில் ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற அரசியல் இயக்கத்திற்கு விரோதி; ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற சமூகத்திற்கு விரோதி; ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற பத்திரிகைகளுக்கு விரோதி; ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற பிரச்சாரக் கூலிகளுக்கு விரோதி! இவ்வளவு மல்லாமல் மதிக்கத் தக்க பிரதிநிதித்துவம் என்று சொல்லும்படியான



படிப்பகம்

www.padippakam.com



நிலையில், நெருப்பின்மேல் நின்றுகொண்டு வேலை செய்வதுபோல் வெகு கஷ்டமான துறையில் வேலை செய்தவர். இந்த வேலையில் ஈடுபடுபவர்களுக்கு என்ன குணங்கள் வேண்டும் என்பதற்கு ஒரு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்கினார், நமது தலைவர் பனகால் அரசர் என்று சொல்லுவது ஒரு சிறிதும் மிகையாகாது என்றே எண்ணுகின்றோம்.

அது மாத்திரமல்ல; நமது தலைவரின் தொண்டில் அவருக்கு உற்ற துணையாக வாவது, உதவியாகவாவது யாராவது இருந்தார்களா என்று பார்ப்போமானால், ஒருவரைக் கூட உறுதியாய்ச் சொல்லமுடியாது. இவருக்கு முன்னைய தலைவர்களான டாக்டர் நாயர், சர். தியாகராயர் ஆகியவர்களுக்கு நமது இராஜா போன்ற உள்ளன்போடு மனப் பூர்வமாய்ப் பின்பற்றுகின்றவர்கள் அனேகர் இருந்தார்கள். ஆனால், நமது இராஜாவுக்கு யார் இருந்தார்கள்? ஒருவரும் இல்லை என்று சொல்லுவதுடன் மாத்திரம் நில்லாமல், உள்ளுக் குள்ளாகவே எதிரிகள் சதா குற்றம் சொல்லிக்கொண்டும், பழி சுமத்திக் கொண்டும், அவரது தலைமையைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்துகொண்டும் அவரைச் சுற்றிலும், அவரது சொக்காய்ப் பையிலும் இருந்தார்கள். பின்னை எப்படி இராஜாவுக்குக் கட்சியும் ஆள் பலமும் இருந்தது என்று யாராவது கேட்பீர்களானால், அதற்குப் பதில்—அவருடைய தனி சாமர்த்தியத்தால், புத்திசாலித்தனத்தால், இராஜதந்திரத்தால், சிலரைத் தான் சொல்லு கின்றபடி கேட்டுத் தீரவேண்டிய நிலையில் வைத்துக்கொண்டிருந்ததால் என்றுதான் சொல்லவேண்டும். அன்றியும், பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்னும் கூட்டத்தாரில் பனகால் அரசரால் அதிருப்தி அடையாதவர்களோ—ஏமாற்றமடையாதவர்களோ அவர்மீது வெறுப்புக் கொள்ளாதவர்களோ ஒருவர் இருவராவது உண்டு என்று சுலபத்தில் சொல்லிவிட முடியாது. ஏனெனில், அவர் ஒரு அருமையான சாதனத்துக்குப் பாடுபட்டதினால் அது ஏதாவது கடுகளாவது பயன் அளிப்பதானாலும் அந்தப் பலன் அனுபவிப்பதில் ஏற்படும் சண்டைகளும் போட்டிகளும் அபிப்பிராய பேதங்களும் ராஜா சாஹேபை அனேகருக்கு விரோதியாகவும் அதிருப்தி கொள்ளவேண்டியவராகவும் செய்துவிடுகின்றன. இந்த நிலையில் அவர் மேற்கண்ட தொண்டில் ஒரு தனி வீரராய் நின்று போர்புரிந்தார் என்று தான் சொல்லியாக வேண்டும்.

அப்படியிருந்தாலும், எதிரிகளால் அடிக்கடி அவருக்கு ஏற்பட்ட இடையூறுகளைச் சமாளிப்பதில் வழிதவறிப் போயாவது—மனிதத் தன்மைக்கு விரோதமாகவாவது ஒரு சிறு காரியத்தையும் செய்யாமல் ஒரு சுத்த வீரனைப்போலவே நின்று கருமம் ஆற்றியவர். எந்தச் சமயத்திலும் மனம் கலங்கியோ அல்லது யாருக்காவது பணிந்தோ அல்லது தலை குனிந்தோ நின்றவரல்லர்.

உதாரணமாக, அவரது தலைமை வாழ்வு இந்த 10 வருஷத்திற்கு உள்ளாக மூன்று விதப் பரீட்சைக்கும் ஆளாயிற்று. அதாவது, ஒரு சமயத்தில் முதல்மூன்று வருஷத்தில் அவருக்கு அதிகாரமும் செல்வாக்கும், அதாவது மந்திரி அதிகாரமும் கட்சிச் செல்வாக்கும் இருந்தது. இரண்டாவது மூன்று வருஷத்தில் உள்ளுக்குள்ளாகவே கட்சி ஏற்பட்டதால் செல்வாக்கு இல்லாத மந்திரி அதிகாரம் மாத்திரம் இருந்தது. மற்றொரு சமயத்தில் மூன்றாவது மூன்று வருஷத்தில், உள் கலகத்தை எதிரிகள் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக்கொண்டதால் அதிகாரம், செல்வாக்கு இரண்டும்—அதாவது கட்சிச் செல்வாக்கும் மந்திரி அதிகாரமும் இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. ஆனாலும், முக் காலத் திலும் அவர் செய்யவேண்டியதைத் தைரியமாகவும், ஒரே மாதிரியாகவுமே செய்துவந்தார் என்று சொல்லியாக வேண்டுமே ஒழிய, எப்போதாவது களைத்துப்போயோ மனமுடைந்து போயோ விட்டார் என்று சொல்லமுடியாது. மேலும், அதிகாரமும் செல்வாக்கும் இல்லை என்று சொல்லும்படியான மூன்றாவது மூன்று வருஷமான நிகழ்காலத்தில், மந்திரி வேலை யுமில்லாமல் கட்சிச் செல்வாக்கு மில்லாமல், முன் ஆறு வருஷத்தில் செய்ய முடியாத காரியங்கள் அனேகம் செய்து முடித்திருப்பதை யாரும் மறுக்கமுடியாது. அதனாலேயே



நமது பனகால் அரசரின் பெருமையும் சாமர்த்தியமும் விளங்கும்படியான சம்பவங்கள் நடந்துகொண்டே வந்தன.

திரு. பனகால் அரசருக்கு மந்திரி அதிகாரமும் கட்சிச் செல்வாக்கும் இருந்த காலத்தில் நம் நாட்டில் பார்ப்பன ஆயுதமான காங்கிரசுக்கு இருந்த செல்வாக்கும் மதிப்பும் இப்போது பூதக் கண்ணாடி வைத்துத் தேடினாலும் கிடைக்கமுடியாத மாதிரி—வக்கீல் குமாஸ்தாக் களின் தோட்டங்களிலும் வக்கீலுக்குக் கட்சிக்காரர்களைக் கூட்டிக்கொண்டு வந்துவிடும் தரகர்களின் புழக்கடைகளிலும் புகுந்து மறைந்து கொண்டன.

இந்த இரண்டு வருஷகாலத்தில் நமது தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஒரு மாகாண மாநாடு கூட கூட்டமுடியாத அளவு முறியடிக்கப்பட்டதற்கு முக்கிய காரணம் நமது தலைவருக்கு 'அதிகாரமும் செல்வாக்கும் என்பவைகள் போய்விட்டதின்' பலன்தான் என்று உறுதி யாய்ச் சொல்லுவோம். இவ்வளவிலும் பொறுக்கியெடுத்த மணிபோன்ற அதிசயம் என்ன வென்றால், அவர் எந்தக் காலத்திலும் சர்க்காரிடத்திலோ மற்றும் யாரிடத்திலோ தனது கொள்கையைச் சிறிதாவது விட்டுக்கொடுக்கச் சம்மதிக்காததும், யாருக்கும் தலை வணங்கா ததுமேயாகும்.

முக் காலத்திலும் சர்க்காரை நடத்தக்கூடிய ஒற்றைத் தலைவராகவே (டிக்டேட்ட ராகவே) இருந்தார். அதிகாரமும் செல்வாக்கும் இல்லாத காலத்தில்தான் நமது தலைவ ரானவர் பெருமை தங்கிய கவர்னர் பிரபுவான லார்டு கோஷன் அவர்களை—சென்னை அரசாங்கத் தலைவரை—அரசரின் பிரதிகாவலரை—மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறும் படி உத்தரவிட்டார். 'பெரிய தலைவர்கள்—33 கோடி மக்களின் பிரதிநிதிகளான' காங்கிரஸ்காரர்களும் அவர்கள் முன்னோர்களும், முன்பு இதைவிட அதிகமாகச் சொன்ன போதெல்லாம் சிறிதும் இலட்சியம் செய்யாத அரசாங்கம்—அரசாங்கத் தலைவர்கள் நமது அரசர், பனகால் வீரர்—'உம்மீது நம்பிக்கையில்லை; கட்டும் மூட்டையை!' என்று சொன்னவுடன், லார்ட் கோஷன் மாத்திரமல்லர்—சென்னை அரசாங்கம் மாத்திரம் அல்ல, இந்திய அரசாங்க மாத்திரமல்ல—பார்லிமெண்டுகூட நடுங்கின நடுக்கம் யாரே அறிவார்! சர்க்கஸ்காரன் குதிரைகளையும், யானைகளையும், சிங்கங்களையும் ஆட்டுவதுபோல் இந்த அதிகாரமும் செல்வாக்கும் இல்லாத காலத்தில் அவர் அரசாங்கத்தை ஆட்டிவைத்த ஆட்டம் அறிஞர்களுக்கு மாத்திரமல்லாமல், அறியாதவர்கள் என்பவர்களையும் அதே மந்திரமாகச் சொல்லிக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டது. இது ஒன்றே—அவர் அரசாங்கத்திற்கு அடிமையாய் இருந்தாரா, அரசாங்கத்தை ஆட்டி வைத்தாரா என்பதை விளக்கிவைக்கும்.

அவர் சென்னை அரசாங்கத்தை மாத்திரமல்லாமல் அவசியமானபோது இந்திய அரசாங்கத்தையும் பார்லிமெண்டையும்கூட மிரட்டி நடுங்கவைத்து வந்திருக்கிறார்—மற்றும் அவர் அதிகார ஆட்சியான ஆறு வருஷ மந்திரி காலத்தில்—தனது மந்திரி வேலையை இராஜிநாமா கொடுத்தது குறைந்தது மூன்று நான்கு தரம் இருக்கும் என்றே சொல்லலாம். 1921-ல் தொழிலாளருக்காக ஒரு தடவையும், 1924-ல் வெளியில் சொல்லக்கூடாத விஷயத் திற்காக ஒரு தடவையும், 1926-ல் தேவஸ்தான ஆக்ட்டுக்காகவும், சர். சி. பி. அவர்கள் அக்கிரமத்திற்காகவும் ஒரு தடவையும்—மற்று சில சமயத்திலும் அவர் இராஜிநாமா கொடுக்கத் துணிந்ததும் இராஜினாமா கடிதம் எழுதி கவர்னர் பிரபுவுக்கு அனுப்பிவிட்டு வீட்டில் உட்கார்ந்துகொண்டதும், கவர்மெண்ட் மெம்பர்கள் ஜாமீனாக இருந்து இராஜி னாமாவை வாபீசு பெற்றுக்கொள்ளச் செய்ததும் அவரது உத்தியோக அலட்சியத்தைக் காட்டப் போதுமானவை.

மற்றும், அரசியல் சுதந்திரம் என்பதின்பேரால் தேசத்திற்காக பனகால் வீரர் போட்ட திட்டங்கள்—இப்போது உள்ள எந்தப் பெரிய மகாத்மாக்களோ, சிங்கங்களோ, லோகமான்யர்களோ, தேசபந்துகளோ, நேருக்களோ, தேசிய வீரர்களோ, அம்மைகளோ, மகான்களோ ஆகியவர்கள் கேட்டவைகளுக்கு ஒரு பிடியாவது அதிகமானதாயிருக்குமே

படிப்பகம்

www.padippakam.com



ஒழிய ஒரு நெல்லிடை அளவாவது குறைந்ததா யிருக்காது என்று கல்லின்மேலும் எழுதுவோம். வெள்ளைக்காரர்களிடமிருந்து அதிகாரங்களைப் பறிப்பதில் நமது இராஜா அவர்கள் காங்கிரசுக்காரர்களைவிடச் சிறிதும் பின்வாங்கியவரல்லர் என்றே சொல்லுவோம். அனேக இடங்களில் இதுவரை வெள்ளைக்காரர்கள் பார்த்துவந்த உத்தியோகங்களைக் கையைத் திருகிப் பிடுங்கிக் கொள்வதுபோல் வாதாடிப் பிடுங்கிக்கொண்டார். அப்பேர்ப் பட்ட நிலையில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற வித்தியாசத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தவரே அல்லர். ஆனால், நமது பார்ப்பனக் காங்கிரசுக்காரர்கள்—நேரே, தங்கள் கைக்கு ஏதாவது உத்தியோகங்கள் வராது என்று நினைத்தால், உடனே அவற்றை வெள்ளைக்காரர்கள்தாம் பார்க்கவேண்டும் என்று சொல்லிவந்திருக்கின்றார்கள்.

இதற்கு ஆதாரம், எவ்விதமான சீர்திருத்தம் வேண்டும் என்று பார்லிமெண்டாரால் சென்னை அரசாங்க மெம்பர்கள் என்கின்ற முறையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நமது பனகால் அரசர் கொடுத்த விடையும் வெகுநாளைய காங்கிரஸ்காரர் சர். சி. பி. ராமசாமி அய்யரவர்கள் கொடுத்த விடையும் போதுமானவை. அவ் விடைகளைப் பார்த்தவர் களுக்கு—எந்த இயக்கம், எந்தக் கூட்டம் தேசத் துரோகி என்பதும், யார் தேசபக்தர்கள் என்பதும் ஒரு மூடனுக்கும் விளங்கச் செய்யும்.

அவரது தலைமை வாழ்நாளில், அவர் எந்தக் காரியம் செய்தாலும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஒரேவித நன்மையைக் கருதித் திட்டம் போடுவாரே ஒழிய, ஒன்றுக்கொன்று விரோதமாகவோ—தனது சுயநலத்திற்காகவோ ஒரு சிறு காரியத்தையும் செய்ததாக அவர் இறந்தபிறகுகூட, இழி முறையில் அவரைத் தூற்ற முற்பட்டவருங்கூட—ஒரு சந்தர்ப் பத்திலாவது சொல்ல வரவில்லை என்பதாலேயே விளங்கும். பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும், பார்ப்பனக் கூலிகளும் அவர்களது பத்திரிகைகளும் நமது இராஜாவின் மீது சுமத்திய பழிகளும், செய்த சூழ்ச்சிகளும், விஷமப் பிரச்சாரங்களும் கொஞ்சநஞ்ச மல்லவானாலும் ஒன்றையாவது இலட்சியம்செய்து பதில் சொல்லவோ அல்லது அந்த நபர்களை இலட்சியம் செய்து திருப்பிச் சொல்லவோ சற்றாவது தனது காலத்தைச் செல வழித்தார் என்று அவரது எதிரிகள்கூட இதுவரை சொல்ல வரவில்லை.

இந்தத் தலைமை ஸ்தானத்தால் மற்றவர்களைப்போல் பணம் சம்பாதிக்காமல் இருந்ததோடு மாத்திரம் அல்லாமல், குறைந்தது மாதம் 1-க்கு 2000 ரூ. வரை இயக்கத்திற் காகச் செலவு செய்துகொண்டு முழு நேரத்தையும் அதற்கே ஒப்புவித்துவிட்டவர், கடைசியாக உயிரையும் கொடுத்துவிட்டார்! இதனால் உண்மைத் தியாகி—ஒப்பற்ற தலைவர் மறைந்தார்.

இந்நிலையில் இப்பேர்ப்பட்ட தலைவரை இழந்து பரிதவிக்கும் தமிழ் மக்களுக்கு நாம் என்ன ஆறுதல் சொல்ல முடியும் என்பது நமக்கே விளங்காமல் துடிக்கின்றோம்.

மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் தடைசெய்ய முடியாத தத்துவம். தலைவர்கள் போவதும் வருவதும் முரண்பாடில்லாத வழக்கம். இதற்குமுன் எத்தனையோ தலைவர்கள் மறைந்துபோனார்கள்; எத்தனையோ தலைவர்கள் தோன்றினார்கள். நமது தலைவரும் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் பிறந்த அன்றே அதே நேரத்தில பிறந்து சாகும்வரை நமக்காகவே உழைத்து 62 வயதான பிறகே உயிர்நீத்தார். இந்திய மக்களின் சராசரி வயது 24 என்றால்—சராசரிக்கு மேல் 39 வருஷம் வாழ்ந்திருந்து நமக்கு அவர் செய்திருக்கும் நன்மைகளை உணர்ந்து திருப்தி அடையாமல் இன்னும் கவலைப்பட்டுக்கொண்டு மனதுடைந்து போவதானது—நமது மயக்கத்தையும் பேராசையையுமே காட்டும். எந்தத் தலைவர் அல்லது எந்தப் பெரியார் சாகாமல் 'சிரஞ்சீவியாய்' வாழ்வதை நாம் பார்க் கிறோம்? இப்படி இருக்க, உலகில் மக்களில் ஒருவர் இறந்ததற்காக ஒருவர் ஏன் துக்கப்படு கின்றார்கள் என்று கேட்போமானால், அது இறந்தவரின் அருமை பெருமையைப்பற்றிப் பேசவும், அதனால் மற்றவர்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளை உணர்ந்து அதன்படி



நடக்கவும், அவர்களது உயர்ந்த குணத்தைப் பின்பற்றவும் சித்தாந்தப்படுத்திக்கொள்ள இந்தச் சமயத்தை உபயோகித்துக்கொள்வதற்காகத்தான் என்பதே எமது அபிப்பிராயம். அன்றியும், நாயர் பெருமான் அவர்களும் இதேமாதிரி நெருக்கடியான சமயத்தில் தேசம் விட்டு தேசம்போய் உயிர்துறந்தார். தியாகராய வள்ளலும் இதேபோல் இறந்தார். பனகால் வீரரும் அவர்களைப் பின்பற்றி நடந்தார். ஆனால், நாயர்பெருமான் காலமான வுடன் மக்கள் கண்ணிலும் மனத்திலும் தியாகராய வள்ளல் தோன்றினார். அதுபோலவே தியாகராய வள்ளல் மறைந்தவுடன் நமது பனகால் வீரர் தோன்றினார். பனகால் வீரர் மறைந்தபிறகு யாரும் தோன்றக் காணோம்! அவர் மறைந்தபிறகு சற்றேறக்குறைய இரவும்பகலுமாக 192 மணி நேரம்—இலட்சக் கணக்கானவர்கள் காலம் சென்ற தலைவரைப் போல் ஒரு தலைவரைத் தேடித்தேடிக் களைத்தாய்விட்டது. இன்னமும் ஒருவரும் புலப்பட வில்லை! இது ஒன்றே நமது பனகால் வீரர், ஒப்பாரும் மிக்காருமற்ற தலைவர் என்பதைக் காட்டுகின்றது.

ஆனாலும், இதற்காக மனமுடைந்து போகாமல், இந்த நிவர்த்தி இல்லாததும்—பெரிய துக்ககரமானதுமான சந்தர்ப்பத்தையும், 'இதுவும் ஒரு நன்மைக்காக' என்பது போல் கருதி, அதை அந்தப்படி உபயோகித்துக்கொள்வதுதான் அறிவுடைமையாகும். அன்றியும், அதுதான் அறிவும் வீரமும் தியாகமும் உறுதியும் கொண்ட தலைவரால் நடத்தப் பட்ட மக்கள் என்பவர்களுக்கு ஏற்ற குணமுமாகும்.

இனிமேல் நமக்கு எதற்காகத் தலைவர்கள் வேண்டும்? இனியும் எத்தனை நாளைக் குத் தலைவர்களாலேயே நடத்தப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும்? இவ்வளவு அருமை பெருமை சாமர்த்தியம் வீரம் வாய்ந்த தலைவர்களால் இத்தனைக் காலம் நடத்தப்பட்டும் இனியும், நாம் நமது காலிலேயே நிற்கமுடியாத பலவீனர்களாக இருப்போமானால் அல்லது இருக்கின்றோம் என்று நினைத்துக்கொண்டிருப்போமானால், என்றைக்குத்தான் நாம் மனிதர்களாவது—என்பது போன்ற ஞானங்கள் உதயமாவதற்கு இதுவே தக்க சமயம் என்று கூசாமல் சொல்லுவோம். ஏனெனில், இந்தச் சமயத்தில் நாம் நிலைகொள்ளவில்லை யானால் இனி நமக்கு வெகு காலத்திற்கு விமோசனம் இல்லை என்றுதான் முடிவு கட்டிக் கொள்ள வேண்டும்.

தந்தையை இழந்த மக்கள் தங்களது வாழ்க்கையை இனி தந்தை இல்லாமல் எந்த விதமாய் நடத்துவது என்கின்ற யோசனை கொண்டு, மார்க்கம் கண்டு நடக்க முயற்சிப்பார் களே ஒழிய, 'வேறு தந்தை யார்'? என்று நினைத்துக்கொண்டு தேடித் திரியமாட்டார்கள். அதுபோலவே, நாமும் இனித் தலைவரைத் தேடிக்கொண்டு திரிவதைப்போன்ற பைத்தியக் காரத்தனம் வேறில்லை என்று நினைக்கவேண்டும்.

உண்மையில், நமக்கு இப்போது என்ன குறை? தலைவர் இல்லாத குறையா, நமக்குப் போதிய கவலையும் உணர்ச்சியும் பொறுப்பும் இல்லாத குறையா? என்பதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்கவேண்டும். உண்மையைப் பேசவேண்டுமானால், நமது மக்களுக்கு இனியும் போதிய உணர்ச்சி ஏற்படவில்லை; பொறுப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. சுயநலம் அளவுக்குமேல் தாண்டவமாட விட்டுவிடுகின்றோம். இத்தியாதி குணங்கள் உள்ள சமூகம் ஆயிரம் ஆயிரம் நாயர்களையும்—தியாகராயர்களையும்—பனகால் வீரர் களையும் 'சிரஞ்சீவி'களாக வைத்துக்கொண்டிருந்தாலும் முற்போக்கடைய முடியவே முடியாது என்று சொல்லுவதற்காக மன்னிக்கவேண்டுகிறோம். நமது ஈனநிலைக்கு நமது மக்களில்—பாமர மக்களைவிடப் படித்தவர்கள் என்பவர்களும் பணக்காரர்கள் என்பவர் களுமே மிகுதியும் காரணஸ்தர்களாய் இருந்து வந்திருக்கின்றார்கள் என்று சொல்லு வதற்குப் படித்தவர்கள் என்பவர்கள் நம்மை மன்னிக்கவேண்டும்.

நமது மேற்கண்ட தலைவர்களால் இதுவரையில் பாமர மக்களைவிட முக்கியமாய்ப் படித்தவர்கள் என்பவர்களும் சிறிது பணக்காரர்கள் என்பவர்களுமே பயன்பெற்றுவந்திருக்

படிப்பகம்

கின்றார்கள். அதற்கு உதாரணமாக, அனேக படித்தவர்கள் பெற்றிருக்கும் உத்தியோகங்களையும் பணக்காரர்கள் பெற்றிருக்கும் பதவிகளையும் கவனித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. ஆனால், இப் படித்தவர்களினுடையவும்—பணக்காரர்களினுடையவும் உணர்ச்சி எப்படி இருக்கின்றது என்று பார்ப்போமானால், வெளியில் சொல்ல வெட்கப்பட வேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

உதாரணம் வேண்டுமானாலும் சொல்லுகின்றோம்—ஆனால், கோபிப்பதில் பயன் இல்லை. ஒரு சாதாரணமான—2½ அடி உயரமுள்ள பையன், அதுவும்—அரைடிக்கட்டுக்கு அருகதையில்லாதவன் என்று சொல்லக்கூடியன் முதற்கொண்டு, பெரிய ஆசாமி என்கிறவர்கள் வரையில் இரண்டு கோணல் எழுத்து அறியவோ அல்லது ஏதாவது ஒரு சர்வகலாசாலைப் பட்டமோ பெற்றுவிட்டால்—உடனே, தன்னை ஒரு பெரிய முக்கியமான பார்ப்பனரல்லாதாரர் என்று நினைத்துக்கொள்வதும், 'பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்ன செய்துவிட்டது; யாருக்குச் சாதித்துவிட்டது; எனக்கு இன்னமும் யாதொரு உத்தியோகமும் கொடுக்கவில்லை; அவனுக்குக் கொடுத்தார்கள், இவனுக்குக் கொடுத்தார்கள்; எல்லாம் அவரவர்கள் சுயநலத்திற்காகப் போடும் வேஷமே ஒழிய—இது பார்ப்பனரல்லாதார் இயக்கமல்ல' எனக் கூறி சவடால் அடிப்பதும், 'பனகாலைத் தெரியாதா? நாயரைத் தெரியாதா? செட்டியாரைத் தெரியாதா? எல்லாம் கூட்டுக்கொள்ளை' என்று சொல்லுவதும்; 'பார்க்கப் போனால் பார்ப்பனர்களே நல்லவர்கள்' என்று சொல்லுவதும்; 'என்ன இருந்தாலும் காங்கிரசைக் குற்றம் சொல்லலாமா? ஆதலால்தான் இவர்களோடு இருக்கமுடியவில்லை' என்பதும்—'எல்லாம் சரி; எனக்கு அந்தப் பெயர் தான் பிடிக்கவில்லை' என்பதுமானதும், ஆயிரத்தெட்டு அசந்தர்ப்பமும் அசம்பாவிதமான வார்த்தைகளை உளறிக்கொண்டு திரிவதும்—இவ்வளவையும் சகித்துக்கொண்டும் தலைவர்கள் ஏதாவது உத்தியோகமோ, பதவியோ கொடுத்தாலும் அதைப் பெற்றுக்கொண்டவுடன் நேர் விரோதிகளாகவும் அலட்சிய புத்தியுடையவர்களாகவும் இருந்துகொண்டு, 'பனகால் இப்படி நடக்கவேண்டும்; அப்படி நடக்கவேண்டும்' என்று அவருக்கே புத்தி சொல்லுவதும் பார்ப்பனர்களுக்கு உள் ஆளாயிருப்பதும், இயக்கத்தைக் குறை கூறுவதுமான வேலையிலேயே காலங் கழிப்பதுமாய் இருக்கின்றார்கள். பணக்காரர்களும் தங்களுக்குப் பதவி கேட்பதும், கிடைத்துவிட்டால் இயக்கத்தை மறந்துவிடுவதும், கிடைக்காவிட்டால் இயக்கத்தையும் தலைவர்களையும் குற்றம் சொல்லிக்கொண்டு எப்படியாவது இந்த இயக்கத்தை ஒழித்தாலொழிய நாட்டுக்கு மோட்சமில்லை என்று பிதற்றித் திரிவதுமான வேலையில் ஈடுபடுவதைத் தவிர வேறு ஒரு நன்மையுமே செய்யாமல் இருந்துவருகின்றார்கள்.

இதற்கு வெளிப்படையான சாட்சி பார்ப்பனரல்லாதார் பெயர் சொல்லிக்கொண்டு பெரிய பெரிய உத்தியோகம் பெற்றவர்கள்—ஜில்லா ஜட்ஜு, கலெக்டர் முதல் சாதாரண பெரிய உத்தியோகம் வரை பெற்றவர்கள்—இயக்கப் பத்திரிகை வாங்க மாட்டார்கள்; வாங்கச் சொன்னால் அதில் குற்றம் சொல்லுவார்கள்; மீறி வாங்கினாலும், பணம் கொடுக்க மாட்டார்கள். கேட்கப் போனால் 'அந்தப் பணம் என்ன ஆச்சுது, இந்தப் பணம் என்ன ஆச்சுது?' என்று கேட்பதன் மூலம் பழிசுமத்த வருவார்கள். அதோடு எதிரிகளின் பத்திரிகைகளை முன்பணம் கொடுத்து வாங்கிப் படிப்பார்கள். அன்றியும், இவர்கள் தங்களைப் பார்ப்பனரல்லாத இயக்கத் தலைவர்கள் என்றும், அவ் வியக்கத்திற்குள்ளாகவே எதிர்க்கட்சித் தலைவர்கள் என்றும் சொல்லிக்கொள்வார்கள்.

சாதாரணமாக, அவ்வியக்கம் அதிகாரத்திலும் செல்வாக்கிலும் இருந்ததான 1927ஆம் வருஷம் வரையில் 'ஜஸ்டிஸ்' பத்திரிகை—1200-ம் 'திராவிடன்' பத்திரிகை—700-ம் தான் அச்சாகிக்கொண்டு வந்தன. இதற்கும் மந்திரிகள் மாதம் 2000 ரூபாய்போல் கொடுத்து வந்தார்கள்; மற்றபடி, சில ஜமீன்தார்களும் பெரிய பணக்காரர்களும் உதவிவந்தார்கள். ஆனால், இயக்கத்தால் உத்தியோகம் பெற்றவர்களில் பணங் கொடுப்பதையோ, பத்திரிகை படிப்பதையோ தங்கள் கடமை என்று நினைத்தவர்கள் யார் என்று சொல்ல முடியாமலே



இருந்தது. இன்றையத் தினமும் 3000-க்கு மேற்பட்ட 'ஜஸ்டிஸு'ம் 6000-க்கு மேற்பட்ட 'திராவிட'னும் வெளியாகின்றதானாலும் 'ஜஸ்டிஸு'க்கு மாதம் 1-க்கு 1500 ரூபாய் நஷ்டமும், 'திராவிட'னுக்கு மாதம் 1-க்கு 500 ரூபாய் நஷ்டமும் ஏற்பட்டு வருவதன் மூலம் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகள் 25000 ரூபாய் கடனிலும் அது இன்னமும் பெருகும்படியான நிலையிலும் இருக்கின்றன. தியாகராயர் மெமோரியல் கட்டிடத்திற்கு 40000 ரூபாய் கடனும் வட்டியும் ஏறிக்கொண்டு வருகின்றது.

எனவே, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் நன்மை அடைந்தவர்களின் யோக்கியதைக்கும், ஒப்பற்ற அருமையான மூன்று தலைவர்களால் அவ்வளவு தியாக புத்தியுடனும் சமர்த்துடனும் நடத்தப்பட்ட மக்களின் நன்றியறிதலற்ற தன்மைக்கும் வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

மற்றும், இவ்வியக்கமானது, தன்னிடமிருந்து வெறும் உத்தியோகத்தையும் பதவியையும் மாத்திரம் எதிர்பார்க்கும் மக்களைக் கொண்டிருக்கின்ற வரையிலும்—இயக்கத்தின் இலட்சியமே வெறும் உத்தியோகங்களை சர்க்காரிடமிருந்தும் பார்ப்பனர்களிடமிருந்தும் பிடுங்கிக்கொள்வதுதான் என்று கருதும் மக்களைக் கொண்டிருக்கும் வரையிலும்—இனியும் எத்தனை தலைவர்கள் தோன்றினாலும் உண்மை இலட்சியம் கைகூடும் என்று நம்மால் சொல்லமுடியாது. பதவிப் போட்டியாலும் அதிகாரப் போட்டியாலும் உத்தியோகப் போட்டியாலும் மக்களுக்குள் கட்சிப் பிரதி கட்சியும், விரோதமும், வெறுப்பும் ஏற்படும் நிலைமை மாறும்படி செய்யவேண்டும். உத்தியோகம், பதவி, அதிகாரம் முதலியவைகள் எல்லாம் சமூக முன்னேற்றத்திற்காகப் பயன்படத்தக்க வழியில் கைப்பற்றவும் உபயோகப்படுத்தவுமான மாதிரியில் நிர்வகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். பெரிய சம்பளமுள்ள மந்திரி போன்ற பொறுப்புள்ள அதிகாரப் பதவிகள் இயக்கத்தின் பிரதிநிதித்துவமாக அனுபவிக்கவேண்டும். அதன் வருமானம் முழுவதும் இயக்கத்திற்குச் சேரவேண்டும். வேலை பார்ப்பவரின் செலவுக்காக இயக்கத்திலிருந்து ஏதாவது கொடுபடவேண்டும். கவுரவ உத்தியோகங்களும், பொது நன்மையைக் கருதுபவர்களுக்கே—ஒரு குறிப்பிட்ட நிபந்தனைப்படி நடப்பவர்களுக்கே கொடுக்கப்படவேண்டும்.

அன்றியும், சாதாரணமாக இதுசமயம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் உண்மையிலேயே கொள்கைகளுக்காக அபிப்பிராயபேதம் இருப்பதாக யாரும் சொல்லமுடியாது. சுயநலத்தை முன்னிட்டு ஏற்பட்ட விரோதத்தினால் விலகி நிற்கவும், எதிர்த்து நிற்கவும் வேண்டி—வேண்டுமென்றே சில மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கற்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறதே ஒழிய வேறில்லை.

இந்த நிலைமை அடியோடு ஒழிய வேண்டும். இன்னும் இன்னோரன்ன பல விஷயங்களைக் கவனித்து மக்கள் தங்களைத் திருத்திக் கொள்ளச் சம்மதிப்பார்களானால் தலைவர் மறைந்த நஷ்டம் நம்மை ஒன்றும் செய்துவிடாது. மற்றும், அவர்களின் உயிர் தத்தத்தால் நாட்டுக்கு நன்மை ஏற்பட்டது என்றுகூடச் சொல்லத்தக்க ஒரு பெருமையும் மறைந்த தலைவர்களுக்கு ஏற்படும். இந்தச் சமயத்தில் முடிவாகவும் சுருக்கமாகவும் நாம் இவற்றைச் சொல்லி, இந்த நமது துயரத்தையும் ஆசையையும் படித்த மக்களைவிட சாதாரணப் பொது மக்களிடமே தெரிவித்துக்கொண்டும்—அவர்களையே நம்பிக்கொண்டும் இருக்கின்றோம். ஆதலால், இந்தச் சகித்தற்கரிய துக்கத்தால் யாரும் தங்கள் பிற்கால கதியைப்பற்றி உடைந்து போகாமல், நம்பிக்கையோடு ஒற்றுமைப்பட்டு—கட்டுப்பாடாக முனைந்து வேலை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மக்கள் எல்லோரும் நாயராக!
எல்லோரும் தியாகராயராக!
எல்லோரும் பனகால் வீரராக!

['குடி அரசு'-தலையங்கம்—12-12-1928]

www.padippakam.com



## 4. உண்மைத் தோழர்

சுயமரியாதை இயக்கத்தின் உண்மைத் தோழர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் 26-2-1933-ந் தேதி மறைந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் நாம் திடுக்கிட்டுப் போய்விட்டோம். நாம் மட்டுமல்ல, சுயமரியாதை இயக்கத்தில் கடுகளவு ஆர்வமுள்ளவரும் இச் சேதி கேட்டவுடன் திடுக்கிட்டிருப்பர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தோழர் இராமச்சந்திரனை இழந்தது சுயமரியாதை இயக்கத்திற்கு ஈடு செய்யமுடியாத ஒரு பெரு நஷ்டமேயாகும். தோழர் இராமச்சந்திரனைப் போன்ற உறுதியான உள்ளமும், எதற்கும் துணிந்த தீரமும், மனதில் உள்ளதைச் சிறிதும் எவ்வித தாட்சண்யத்திற்கும் பின் வாங்காமல் வெளியிடும் துணிவும் சாதாரணமாக வெகு மக்களிடம் காண்பது என்பது மிக மிக அரிதேயாகும். பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்காக என்ற கிளர்ச்சி சுயமரியாதை இயக்கத்தில் வீறுகொண்டிருந்த காலத்தில் தோழர் இராமச்சந்திரன் அவர்கள் தாலூக்கா போர்டு முதலிய பல ஸ்தாபனங்களில் தலைவராய் இருந்த சமயம் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, 'இனி இந்தக் கையால் ஒரு பார்ப்பனருக்காவது உத்தியோகம் கொடுப்பதில்லை' என்று ஒரு உறுதிமொழி கூறி, அதை ஒரு விரதமாய்க் கொண்டிருப்பதாக விளம்பரப்படுத்தினார். மற்றும், அவரது திருநெல்வேலி சுயமரியாதை மகாநாட்டின் தலைமை உரையில் (1929-ஆம் வருஷத்தில்) வருங் காலத்தில் சுயமரியாதை இயக்கத்தால் ஏற்படும் பலன் இன்னின்னவை என்று குறிப்பிட்ட சமயத்தில்,

'உலகம் எல்லாம் வழங்கப்படும் ஒரு பாஷை ஏற்படும் ;

உலகம் எல்லாம் ஒரு அய்க்கிய ஆட்சி நாடாகும் ;

உலகத்திலுள்ள சொத்துக்கள், பூமிகள் எல்லாம் உலகத்திலுள்ள மக்களுக்குச் சொந்தமாகும்.

வேலை செய்யாத சோம்பேறிகள் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள் ; குற்றங்கள் குறைந்துவிடும்; நோய்கள் அகன்றுவிடும்; மனித ஆயுள் இரட்டித்துவிடும். மக்கள் வாழ்வில் உள்ள கவலைகள், பொறாமைகள் நீங்கி, ஒருவருக்கொருவர் அன்பும் நட்பும் கூட்டுறவு முயற்சிகளும் தாண்டவமாடுவதுடன், மக்கள் சதா சந்தோஷத்துடன் இருப்பார்கள்' என்று கர்ஜித்ததுடன், தீண்டாமை என்பது மதக் கொள்கையைச் சேர்ந்தது என்பது முழுப் புரட்டென்றும் அது முழுதும் பொருளாதார சூழ்ச்சியின் அடிப்படையைக் கொண்டது என்றும் பேசி இருக்கிறார்.

இந்தத் தத்துவங்களில் ஒரு சிறிதும் மாற்றமில்லாமல் இன்று சுயமரியாதை இயக்கம் வேலைசெய்து வருவதைப் பார்ப்பவர்கள் இவ்வியக்கம் யாதொரு புதிய வழிகளிலும் செல்லவில்லை என்பதை உணர்வார்கள். தோழர் இராமச்சந்திரன் நல்ல வாக்கு விசால முள்ள வக்கீலாகவும், தகுந்த வரும்படியும் மேலும் மேலும் பெரிய நிலைக்கு வரக்கூடிய நிலையும் சவுகரியமும் இருந்தும் அவைகளை இலட்சியம் செய்யாமல், இயக்கத்திலேயே கவலைகொண்டு மற்றவைகளை அலட்சியம் செய்துவந்த உண்மைச் சுயமரியாதை வீரரே யாவர். இவரது வயது 48 ; அதாவது 1884-ல் பிறந்தவர். இவ்விளம் வயதில் இப்படிப்பட்ட உற்ற தோழரை இழக்க நேர்ந்தமைக்கு யாரே வருந்தாமல் இருக்கமுடியும்! இவருக்கு 4 ஆண் மக்களும், 3 பெண் மக்களும் உண்டு. இவரது வாழ்க்கைத் துணைவியார் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு அங்கத்தவராகவும், சிவகெங்கை தாலூகா போர்டு அங்கத்தவராகவும் தகுந்த கல்வி ஞானமுமுள்ளவராகவும் இருக்கின்றார்கள்.

எனவே, இவ்வம்மையார் இயற்கையை மதித்து, துணைவரின் பிரிவைச் சடுதியில் மறந்து, அவரது சுயமரியாதை இயக்கத்தில் அவரது கொள்கைகளையே கொண்டு, உலக விடுதலைக்கும் உலக இன்பத்துக்கும் உழைக்க முன்வருவார்கள் என்றே ஆசைப் படுகின்றோம்.

['குடி அரசு'—5-3-1933]



## 5. நாகம்மாள் மறைவு

எனதருமைத் துணைவி, ஆருயிர்க் காதலி நாகம்மாள் 11-5-1933-ந் தேதி மாலை 7-45 மணிக்கு ஆவி நீத்தார். இதற்காக நான் துக்கப்படுவதா? மகிழ்ச்சியடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது எனக்கு இலாபமா, நஷ்டமா என்பது இதுசமயம் முடிவு கட்ட முடியாத காரியமாய் இருக்கிறது.

எப்படியிருந்தாலும், நாகம்மாளை 'மணந்து' வாழ்க்கைத் துணையாகக் கொண்டு 35 வருட காலம் வாழ்ந்துவிட்டேன். நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல் நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் 'மைனராய்,' 'காலியாய்,' 'சீமானாய்' இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறுக்கமுடியாத காரியம். பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ—போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான் நடந்துகொண்டிருந்தேன் என்று சொல்லிக்கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

ஆனால், நாகம்மாளோ பெண் அடிமை விஷயமாகவும் ஆண் உயர்வு விஷயமாகவும், சாஸ்திர புராணங்களில் எவ்வளவு கொடுமையாகவும் மூர்க்கமாகவும் குறிப்பிட்டிருந்ததோ அவற்றுள் ஒன்றுக்குப் பத்தாக நடந்துகொண்டிருந்தார் என்பதையும் அதை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் என்பதையும் மிகுந்த வெட்கத்துடன் வெளியிடுகிறேன்.

நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன். இவைகளுக் கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவதொரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.

அதென்னவென்றால், நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் நான் பொதுநல சேவையில் ஈடுபட்டபிறகு பொதுநலக் காரியங்களுக்கும், சிறப்பாகச் சுயமரியாதை இயக்கத் திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான். நாகம்மாள் நான் காங்கிரசிலிருக்கும் போது மறியல் விஷயங்களிலும், வைக்கம் சத்தியாக்கிரக விஷயத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்.

ஆகவே, நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா? எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே!

எது எப்படியிருந்த போதிலும், நாகம்மாள் மறைவு ஒரு அதிசய காரியமல்ல. நாகம்மாள் இயற்கையை எய்தினார். இதிலொன்றும் அதிசயமில்லை.

நாகம்மாளை அற்ப ஆயுள்காரியென்று யாரும் சொல்லிவிட முடியாது. நாகம்மாளுக்கு 48 வயது ஆனபோதிலும், அது மனித ஆயுளில் பகுதிக்கே சிறிது குறையான போதிலும் இந்திய மக்களில் சராசரி வாழ்நாளாகிய $23\frac{1}{2}$ (இருபத்திமூன்றரை) வயதுக்கு இரட்டிப்பென்றே சொல்லவேண்டும். 'செத்தால் சிரிக்கவேண்டும்; பிறந்தால் அழவேண்டும்' என்ற ஞானமொழிப்படி நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும் ஒரு நஷ்ட சம்பவமாகவும் கருதாமல், அதை ஒரு மகிழ்ச்சியாகவும், இலாபமாகவும் கருதவேண்டும் என்றே நான் ஆசைப்படுகின்றேன். ஆசைப்படுவது மாத்திரமல்லாமல் அதை உண்மை யென்றும் கருதுகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



எப்படியெனில், எனது வாழ்நாள் சரித்திரத்தில் இனி நிகழப்போகும் அத்தியாயங்களோ சிறிது விசேஷ சம்பவங்களாக இருந்தாலும் இருக்கலாம். அதை நாகம்மாள் இருந்து பார்க்க நேரிட்டால் அந்த அம்மாளுக்கு அவை மிகுந்த துக்கமாகவும் துயரமாகவும் காணக்கூடியதாய் இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமிருக்காது. அத்துடன் அதைக் கண்டு சகியாத முறையில் யானும் சிறிது கலங்கக்கூடும்.

ஆதலால், நாகம்மாள் மறைவால் எனக்கு அதிக சுதந்திரம் ஏற்பட்டதுடன் ‘குடும்பத் தொல்லை’ ஒழிந்தது என்கின்ற ஓர் உயர் பதவியையும் அடைய இடமேற்பட்டது.

இது நிற்க, நாகம்மாள் மறைவை நான் எவ்வளவு மகிழ்ச்சியான காரியத்திற்கும் இலாபமான காரியத்திற்கும் பயன்படுத்திக் கொள்கின்றேனோ அந்த மாதிரி எனது மறைவையோ எனது நலிவையோ நாகம்மாள் உபயோகப்படுத்திக் கொள்ளமாட்டார். அதற்கு நேரெதிரிடையாக்குவதற்கே உபயோகித்துக் கொள்வார். ஆதலால், நாகம்மாள் நலத்தைக் கோரியும், நாகம்மாள் எனக்குமுன் மறைந்தது எவ்வளவோ நன்மை.

என்னருமைத் தோழர்கள் பலருக்கு நாகம்மாள் மறைவு ஈடுபடுத்தமுடியாத நஷ்டம் என்று தோன்றலாம். அது சரியான அபிப்பிராயமல்ல. அவர்கள் சற்றுப் பொறுமையாய் இருந்து, இனி நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளைக் காண்பார்களேயானால் அவர்களும் என்னைப் போலவே நாகம்மாள் மறைவு நலமென்றே கருதுவார்கள். நாகம்மாளுக்கு காயலா ஏற்பட்ட காரணமே, எனது மேல்நாட்டுச் சுற்றுப் பிரயாணம் காரணமாய் ஒருவருட காலம் பிரிந்து இருந்திருக்க நேர்ந்த பிரிவாற்றாமையே முக்கிய காரணம். இரண்டாவது, ரஷ்ய யாத்திரையினால் எனக்கு ஏதோ பெரிய ஆபத்துவரும் என்று கருதியது.

மூன்றாவதாக, நமது ‘புதிய வேலைத் திட்டங்களை’ உணர்ந்தபின் ஒவ்வொரு நிமிஷமும் தனக்குள் ஏற்பட்ட பயம். ஆகிய இப்படிப்பட்ட ‘அற்ப’ காரணங்களே அவ்வம்மைக்கு ‘கூற்றா’க நின்றது என்றால், இனி இவற்றைவிட மேலானதான பிரிவு, ஆபத்து, பெருளாதாரக் கஷ்டம் முதலியவை உண்மையாய் ஏற்பட இருக்கும் நிலை அவ்வம்மைக்கு எவ்வளவு கஷ்டமாய்இருக்கும் என்று நினைத்துப் பார்க்கும் தோழர்கள் நாகம்மாள் மறைவுக்கு வருந்தமாட்டார்கள் என்றே கருதுகிறேன். 2, 3 வருடங்களுக்கு முன்பிருந்தே நான் இனி இருக்கும் வாழ்நாள் முழுவதையும் சங்கராச்சாரிகள் போல—(அவ்வளவு ஆடம்பரத்துடனல்ல-பண வசூலுக்காக அல்ல) சஞ்சாரத்திலேயே, சுற்றுப் பிரயாணத்திலேயே இருக்கவேண்டும் என்றும் நமக்கென்று ஒரு தனி வீடோ அல்லது குறிப்பிட்ட இடத்தில் நிரந்தர வாசமோ என்பது கூடாதென்றும் கருதி இருந்தது உண்டு. ஆனால், அதற்கு வேறு எவ்விதத் தடையும் இருந்திருக்கவில்லையென்றாலும் நாகம்மாள் பெரிய தடையாய் இருந்தார். இப்போது அந்தத் தடை இல்லாமல் போனது ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். ஆதலால், நாகம்மாள் முடிவு நமக்கு நன்மையைத் தருவதாகுக!

[‘குடி அரசு’-தலையங்கம்—14-5-1933]

## 6. சின்னத் தாயம்மாள் முடிவு

95 வயது காலம் சுகமே வாழ்ந்து, சுகமே இருந்துவந்த எனதருமைத் தாயார் சின்னத் தாயம்மாள் 28-7-1936 ஆம் தேதி செவ்வாய் நள்ளிரவு 12 மணிக்கு முடிவெய்தினார்.

அம்மையார் இந்திய மக்களின் சராசரி வயதுக்கு 4 பங்கு காலம் அதிகமாகவே வாழ்ந்துவிட்டார். தானாக நடக்க, இருக்க, மலஜலம் கழிக்க சவுகரியமுள்ள காலம் அவ்வளவும் வாழ்க்கை நடத்திவிட்டு, சவுகரியம் குறைந்த 2 மணி நேரத்தில் முடிவெய்தி விட்டார். 28-ந்தேதி இரவு 9-30 மணிக்கு அம்மையிடம் அனுமதிபெற்றே ஜோலார்பேட்டை பிரச்சாரத்துக்குச் சென்றேன். 12 மணிக்கு ஆவி போக்கு வரத்து நின்றுவிட்டது. காலை 9 மணிக்கு வந்துசேர்ந்தேன்.



என் தாயார் சின்னத் தாயம்மாள் சேலம் டவுனுக்கு 3 மைலிலுள்ள தாதம்பட்டி என்கிற கிராமத்தில் ஒரு பிரபல செல்வக் குடும்பத்தில் பிறந்தவர்; மிக்க செல்வமாய் வளர்க்கப்பட்டவர். உதாரணமாக, தமது கிராமத்தில் புஷ்பவதி ஆனதற்கு சேலம்டவுனில் ஊர்வலம் விடத் தக்க தடபுடல் வாழ்க்கையில் இருந்தவர்.

ஈரோட்டில் ஏழைக் குடும்பத்தில் குழந்தைப் பருவத்திலேயே தகப்பனார் காணாமற் போனபிறகு ஒரு மிக ஏழ்மை வாழ்க்கை நடத்திய தாயாரால் காப்பாற்றப்பட்டவரும், பள்ளிக்கூடமே இன்னதென்று அறியாதவரும், 6 வயதிலேயே கூலிவேலை செய்யவும், 18 வயதில் கல்லுடைப்பு வேலை செய்யவுமாய் இருந்துவந்தவரும், 25 வயதில் வண்டி வைத்து வாடகைக்கு ஓட்டிப்போகிறவருமான வெங்கட்ட நாயக்கருக்கு—நெருங்கிய பந்து உறவு காரணமாக வாழ்க்கைப்படுத்தப்பட்டவர்.

அம்மை செல்வக் குடும்பத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்து வந்தவராயிருந்தாலும், வெங்கட்ட நாயக்கரை மணந்தபிறகு, வெங்கட்ட நாயக்கரின் தரித்திரவாழ்வு அம்மையாரையும் பீடித்து, அம்மையார் செங்கல்—ஓடு முதலியவைகளைக் காளவாயிலிருந்து ஊருக்குள் கட்டடம் கட்டுபவர்களுக்குக் கூலிக்குக் கூடையில் சுமந்துபோட்டு, தினம் 8 பைசாக்கள் கூலிவாங்கிப் பிழைத்துவந்தவர். புருஷனுக்குத் தினம் 2 அணாக்கள் கூலியும், பெண்சாதிக்கு 8 பைசாக்கள் கூலியுமாகச் சம்பாதித்து வந்தனர்.

பிறகு, புருஷனுக்குக் கல் சித்திரவேலையில் தினம் பகலில் 8 அணாக்களும், இரவில் 12 அணாக்களும் பெறக்கூடிய யோக்கியதையும், வேலைத் திறமையும் ஏற்பட்டபோது—அம்மையார் வெளிவேலைக்குப் போகாமல் இருக்க நேர்ந்தது. ஆனபோதிலும், பின்னால், புருஷன் வண்டி ஓட்டிக்கொண்டு அடிக்கடி வெளியூர்களுக்குப் போவதைச் சகிக்காத அம்மையாரின் தகப்பனார் ஒரு சிறு தட்டுக்கடை வைத்துக்கொடுத்தார். அந்தக்கடை ஒரு வண்டிப்பேட்டையில் வைத்தால் தன்னுடன் தோழர்களாயிருந்த வண்டிக்காரர்கள் தன்னிடம் சாமான்களை வாங்குவார்கள் என்று கருதி, சட்டிபானை, அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய்ப்பொடி, விறகு முதலிய சாமக் கிரியை சாமான்களும் ஒருங்கேவைத்து வியாபாரம் செய்தார்கள். இந்தக் கடைக்கு வேண்டிய சகல சாமான்களும் அம்மையாரும், அம்மையாரின் மாமியாரான கெம்பு அம்மாளும் வீட்டில் தயார்செய்து கொடுத்து வருவார்கள்.

இந்தச்சமயம் 2, 3 குழந்தைகள் பிறந்து, இறந்துவிட்டன. இந்த நிலையில், அந்தக் கடையில் நல்ல இலாபம் கிடைத்தாலும் பிறகு போட்டி ஏற்பட்டதால் அதை விடுத்து, அந்தக் கடையை அப்படியே மற்றொருவருக்கு விற்றுவிட்டு இலாபப் பணத்தையும், கைமுதல் பணத்தையும் சேர்த்து ஈரோடு ‘பஜார் ரோட்டி’ல் ஒரு மளிகைக்கடை வைத்தார். அம்மையைக் கைப்பிடித்த சம்பவத்தால் ‘கல்தச்சு வெங்கட்டன்’ என்ற பெயர் மாறி, ‘வண்டிக்கார வெங்கட்ட நாயக்க’னாகி, பிறகு அதுவும் மாறி, ‘தட்டுக்கடை வெங்கட்ட’னாகி, பிறகு அதுவும் மாறி ‘மளிகைக் கடை வெங்கட்ட நாயக்கரா’னார். அதில் மூன்று வருடத்திலேயே மற்றவர்கள் பொறாமைப்படும்படியான இலாபம் அடைந்தார். ஒரு சிறு குச்சு—அதாவது, கதவு இல்லாமல் தட்டி வைத்து, இரவு முழுவதும் நாயை விரட்டிக்கொண்டிருக்க வேண்டிய குடிசை மாறி, ஓட்டு வில்லை கட்டட வீடும், இரண்டு ஏக்கரா விஸ்தீரணமுள்ள நல்ல வயல் நிலமும் உடையவரானார்.

இது சமயம்தான், அம்மையாருக்கு முன்பிறந்த மூன்று குழந்தைகளும் இறந்துபோய் ‘ஸ்தல யாத்திரைகள்’, ‘தவங்கள்’ செய்து, ‘வறட்டிக் கல்’ சுற்றி, ‘நிலத்தை வழித்து அதில் சாப்பாடு போட்டுப் பிசைந்து சாப்பிட்டு, சன்னியாசிகளின் எச்சிலைச் சாப்பிட்டு, ‘வரன்’ பெற்று ஈ. வெ. கிருஷ்ணசாமியையும், ஈ. வெ. இராமசாமியையும் பெற்று எடுத்த காலம் என்றாலும், அம்மையாருக்குள்ள பிள்ளை ஆசையால், மூத்த பிள்ளை ஒன்றே தனக்குப் போதும் என்று கருதி, அதற்கே தனது முலைப்பால் முழுவதும் கொடுக்க ஆசைப்பட்டு, இளைய பிள்ளையாகிய இராமனை மற்றொரு-குழந்தை இல்லாத

படிப்பகம்

www.padippakam.com



அம்மையாருக்கு—அதாவது, தன் புருஷனின் சிறிய தகப்பனார் மனைவியாகிய ஒரு விதவைக்கு ஒரு சிறு வீடும், சிறிது நிலமும் இருந்த காரணத்துக்காக அவர்களையே வளர்த்துக்கொள்ளும்படி இனாமாய்க் கொடுத்துவிட்டார்கள்.

அந்தக் காரணத்தாலேயே இராமன் (ஈ. வெ. இராமசாமி) பள்ளிக்கு அனுப்பப் படாமல், தெருத் தெருவாகச் சுற்றவும், கேள்வி கேட்பார் இல்லாமல் அலையவும் 'கைம் பெண் வளர்ப்பது கழுதைக் குட்டிதான்' என்ற பழமொழிக்கு ஏற்ப, ஒரு உதாரணமாக இருந்து வரவும், மூத்த பிள்ளை கிருஷ்ணசாமியை மிக அருமையாய்ச் செல்வமாய் வளர்க் கவுமான நிலை ஏற்பட்டது. ஆனால், அந்தச் சமயந்தான்—அதாவது, அந்த இரு குழந்தைகளும் பிறந்த சமயந்தான் வெங்கட்ட நாயக்கருக்குப் பெரிய செல்வம் பெருகச் சந்தர்ப்பமும் பெருகிவந்த காலமாகும். அதாவது, கடைசியில் சொன்ன மளிகைக் கடை வியாபாரமானது வலுத்துவிட்டது. வீடு, வயல், தங்க நகைகள், கேட்போர் மனமும் பார்ப்போர் கண்களும் திடுக்கிடும்படியான தோற்றமாய் இருந்ததால், எப்படியாவது அந்த மளிகைக்கடை நடக்கும் கட்டடத்தைப் பிடுங்கிக்கொண்டால் தங்களுக்கு அந்த இலாபம் கிடைக்கும் என்று கருதிச் சிலர் அந்தக் கடையைக் கட்டடக்காரனிடம் அதிக வாடகை வைத்துக் கேட்க ஆரம்பித்தார்கள். அம்மையாரும், புருஷனும் யோசித்து, கடையைச் சகல சாமானுடனும் பாக்கியுடனும் ஒப்புக்கொள்ளுபவர்களுக்குக் கொடுத்துவிடுவதாய் விலை கூறினார்கள். அதற்கு ஏற்பட்ட போட்டியில் நல்ல விலை கிடைத்தது. அந்தப் பணத்தைக் கொண்டு உடனே ஒரு மண்டிக்கடை அதாவது, மொத்த வியாபாரக் கடை (மூட்டைக் கணக்காய் விற்பது) வைக்க யோசித்தார்கள். உடனே நல்லதொரு கடை அமைந்தது. அங்கு மண்டிக்கடை வைத்தார். புருஷன் உடனே மண்டி வெங்கட்ட நாயக்கர் ஆனார்.

சின்னத் தாயம்மையாருக்கும், மண்டி வெங்கட்ட நாயக்கருக்கும் ஊரில் பணக்காரர் கூட்டத்தில் சேர்க்கத்தக்க பெயர் ஏற்பட்டதோடு, எப்படியோ நாணயமும் ஏற்பட்டு விட்டது. தான் மிகவும் நாணயசாலி என்று காட்டிக்கொள்வதில் இருவரும் சமர்த்தர்கள். அந்தக் காலங்களில் பணம் படைத்தவர்களுக்குப் பணம் போட்டுவைக்க பாங்கி (Bank) இல்லாததால் நாணயத்தில் பேர்பெற்ற சின்னத் தாயம்மாளும், வெங்கட்ட நாயக்கரும் ஒரு 'சேவிங்ஸ் பேங்க்' ஆகிவிட்டார்கள். பணம் ஏராளமாய்த் தங்களிடம் டிபாசிட் வர ஆரம்பித்ததும் தங்கள் வியாபாரத்தை மிகவும் பெருக்கிவிட்டார்கள்.

மண்டி வெங்கட்ட நாயக்கர் தன் கடையில் வியாபாரம் செய்தால், சின்னத் தாயம்மாள் வீட்டில் நெல்குற்றும் கொட்டணம், துவரை, உளுந்து உடைக்கும் வேலை, விளக் கெண்ணெய் காய்ச்சி ஊற்றும் வேலை முதலியவைகளில் எப்பொழுதும் 20, 30 பேர் வேலை செய்யும்படியான தொழில்செய்து, புருஷனைப் போலவே தானும் வருஷம் முழுவதும் சிறிதாவது பணம் சம்பாதித்துப் புருஷனுக்குக் கொடுத்தே வருவார்கள். பணம் சேர்ந்த வுடன் மதபக்தி, மதச் சின்னம், விரதம், நோன்பு, திதி முதலியவைகள் தாமாகவே தேடி வருவது வழக்கம் அல்லவா? அதுபோல் அம்மையார் மிகவும் பக்தியுடையவரானார்; விரதங்களை அதிகமாய் அனுஷ்டிக்கத் தொடங்கினார்.

மண்டி வெங்கட்ட நாயக்கருக்கும் நாமம் பலமாக-பட்டை பட்டையாய்த் திகழ்ந்தது. இதன் மத்தியில் வீட்டில் செல்வமாய் வளர்க்கப்பட்ட மூத்த பிள்ளை கிருஷ்ணசாமியும் பாகவதராக ஆகிவிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில், அதாவது மண்டி வைத்து மண்டிக் கடை நன்றாய் நடக்க ஆரம்பித்து சிறிது எதிர்பார்த்ததற்குமேல் இலாபம் வர ஆரம்பித்த வுடன், சின்னத் தாயம்மாள் சின்னப்பிள்ளை இராமனை (ஈ. வெ. இராமசாமியை) ஒரு சிறு சண்டை காரணமாக, இனாமாக (தத்து)க் கொடுத்துவிட்ட அம்மாளிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். இராமனை வளர்த்த அம்மாள் ஊர்ப் பஞ்சாயத்துக் கூட்டினார்; மண்டி வெங்கட்ட நாயக்கருக்கு ஒன்றும் தட்டிச் சொல்லமுடியவில்லை. சின்னத் தாயம்மாள் 'இரண்டு கண்கள்தான் எனக்கு இருக்கின்றன. இதில் ஒன்றைக் கொடுக்க முடியுமா? முடியாது போ' என்று சொல்லிவிட்டார்கள். முடிவில் இராமனை சுமார் 9 வயதில் கைப்பற்றினாலும், அவன் 'விதவை வளர்த்த பிள்ளையாய்' 'ஊர்சுற்றியாய்', 'லோலனாய்' திரிந்ததால் படிப்பு இல்லை. அது மாத்திரமா? இனிமேல் படிக்கவும் இலாயக்கில்லாத சோதாவாய் ஆகிவிட்டான். இருந்தபோதிலும், பள்ளியில் வைத்துவிட்டு, வாத்தியார் வைத்துப் பார்த்தார்கள். வாத்தியாருடன் சண்டை; பிள்ளைகளுடன் பலாத்காரம்; அடிதடி. கடைசியாய் 'வாத்தியாரை வைவதில்லை'; 'பிள்ளைகளை அடிப்பதில்லை' என்கிற வாசகம், ஆயிரம் தடவை-அய்யாயிரம் தடவை 'தண்டக் காப்பி' எழுதுவதே வேலையாய் இருந்ததால், இராமனைப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திக்கொண்டு, மண்டிக்கடையில் அதாவது—தரகு வியாபார இலாக்காவில் மஞ்சள், மிளகாய் ஏலம் கூறும் வேலையில் போட்டார்கள். இருந்தாலும், இராமன் எங்கு, வளர்த்த தாயாரிடம் போய் விடுவானோ என்று சின்னத் தாயம்மாள் சின்ன மகனுக்குச் சிறிது சலுகை காட்டி, பொய் அன்பாவது காட்டியே வருவார்கள்.



எப்படியோ பணம் சேர்ந்துகொண்டேவரும். இந்தச் சந்தர்ப்பந்தான்—வெங்கட்ட நாயக்கர் என்கிற பெயர் மாறி நாயக்கர் ஆனதும், சின்னத் தாயம்மாள் என்கிற பெயர் மாறி நாயக்கம்மாள் என்கிற பெயர் ஏற்பட்டதுமாகும். அம்மையாருக்குத் தெய்வபக்தி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிவிட்டது. நாயக்கரும் அம்மாள் சொன்னபடி ஆடியாக வேண்டும்.

பணத்தை அள்ளி இறைக்க ஆரம்பித்துவிட்டார்கள்; கண்டவிடமெல்லாம்—காடுமேடெல்லாங் கோவில், சத்திரம், சாவடி கட்ட ஆரம்பித்தார்கள்; பார்ப்பனர்களின் புகழுரைகளுக்கு அடிமைப்பட்டு பல குருமார்களை ஏற்படுத்திக்கொண்டார்கள்; ஒவ்வொரு கலியாணத்தின்போதும், தருமக் கலியாணங்கள் செய்வார்கள்; நன்றாய் இருக்கும் கோவிலுக்கும் கும்பாபிஷேகம் செய்வார்கள்; நாயக்கர் (புருஷன்) ஏதாவது தட்டிச் சொன்னால், 'நீங்கள் பணம் கொடுக்கவேண்டியதில்லை; என் பணத்தில் செய்யுங்கள்' என்று எடுத்தெறிந்தாற்போல் பேசிவிடுவார்கள்; வீட்டில் ஒருவாரம் காலட்சேபம், இராமாயண, பாரத வாசகம், எங்கெங்கோ திரியும் சன்னியாசிகளுக்கும், பாகவதர்களுக்கும் சதாசர்வகாலம் உலையில் நீர் கொதித்தவண்ணமாய் இருக்கும்படியான தண்டச் சோற்றுச் சத்திரம்போல் வீட்டை நடத்திவந்தார்கள்.

இந்த நிலையில் ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. இளைய மகன் இராமனிடம் எவ்வளவு அன்பு காட்டினாலும், அம்மையார் இராமன் தொட்ட சொம்பு-டம்ளர் ஆகிய வைகளைக் கழுவியே வைப்பார்கள்; இராமனைச் சமையல் வீட்டிற்குள் விடமாட்டார்கள்; அப்பொழுதே அவன் 'சாதிகெட்ட' பயலாய் விளங்கினான்.

இராமனுக்காகவே சமையல் வீட்டுக்குள் வேறு யாரும் நுழையக்கூடாது என்பார்கள். இந்த இலட்சணத்தில் அம்மையார் மாமிசம் சாப்பிடமாட்டார். இராமனுக்குத் தினமும் மாமிசம் வேண்டும்; ஆதலால், இராமனுக்குக் கலியாணம் ஆனவுடன் அவனுடைய 'அனாச்சாரத்துக்கு' ஆகவே அம்மையார் இராமனை 'வேறு குடும்பம்' வைத்து விட்டார்கள்.

சதாசர்வகாலம், தன் வயிற்றில் இப்படிப்பட்ட பிள்ளை—இராமன் பிறந்ததற்குத் துக்கப்பட்டுக்கொண்டே இருப்பார்கள்.

பொதுவில் சொல்லவேண்டுமானால், அம்மையார் பணத்தாசை இல்லாதவர்கள்; நன்றாய்ச் சம்பாதித்து, நன்றாய்ச் செலவு செய்தவர்கள்; பார்ப்பனர்களுக்கு ஏராளமாய் அழுதவர்கள்; அளவுக்கு மீறிய ஆசாரங்களை அர்த்தமில்லாமல் பின்பற்றி வந்தவர்கள். எத்தனையோ பேரைத் திருத்திய இராமனால், அம்மையாரிடம் தன் கொள்கையைச் சொல்லுவதற்குக்கூட தைரியம் ஏற்படும்படியாக அம்மையார் இடங்கொடுக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



கடைசி வயதில்கூட அம்மையாரைப் பார்க்க வந்தவர்களிடம், 'என்மகன் இராமனைச் சிறிது பார்த்துக் கொள்ளுங்கள். இவன்கன்று பயமறியாது என்பதுபோல் கண்டபடி திரிகிறான்' என்று ஆவலாகச் சொல்லியே வருவார்கள்.

ஒரு காலத்தில் மவுலானாக்கள் ஷவ்கத் அலி, மகமது அலி ஆகிய இருவரும் அம்மையாரின் கையில் தங்கள் தலையை ஒட்டவைத்து வாழ்த்தும்படி கேட்டபோது—தன்னை அவர்கள் தொட்டுவிட்டதற்காக முகத்தைச் சுளித்துக்கொண்டார். இதை நான் வெளிப்படையாய் எடுத்துக்காட்டிக் கேலிசெய்து அம்மையாரை மன்னிப்புச் சொல்லும்படி செய்தேன். அதனால் அரசியல் தலைவர்கள்—காந்தி முதல் யார் வீட்டுக்கு வந்தாலும் அவர்கள் எங்கு தன்னைத் தொட்டு விடுவார்களோ என்று பயந்து, ஒடுங்கி, ஒரு மூலையிலேயே நின்றுதான் அவர்களுடன் பேசுவார். மூடநம்பிக்கைகளுக்கும், குருட்டு அனாசாரங்களுக்கும் தாயகமாய் இருந்தாலும் 95 வயது வாழ்ந்து முடிவெய்தி விட்டார்.

எனக்கு அவர் முடிவெய்தியதுபற்றி உண்மையிலேயே மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது. அந்தம்மாளுடைய கோரிக்கை எனக்கு ஒரு கலியாணம் செய்து வைத்துவிட்டுச் சாக வேண்டுமென்பதே. எனது கோரிக்கை—எனக்கு முன்னதாகவே அம்மையார் முடிவெய்தி விடவேண்டுமென்பதே!

என் இஷ்டம் நிறைவேறியது.

மகிழ்ச்சி! மகிழ்ச்சி! பூரண மகிழ்ச்சி!

['குடி அரசு'—2-8-1936]

## 7. சர். ஏ. டி. பன்னீர்செல்வம்

நமது உண்மைத் தோழரும், உற்ற துணைவரும், உள்ளும் புறமும் ஒன்றாய் உள்ளவரும், தமிழர் இயக்கத்தில் உறுதியான பற்றுக்கொண்டு அல்லும் பகலும் உழைத்து வந்தவரும், நம்மிடத்தில் களங்கமற்ற அன்பும் பற்றுதலும் விசுவாசமும் கொண்டிருந்தவரும், நினைத்தால் திடுக்கிடும்படி எதிரிகள் நெஞ்சில் எப்பொழுதும் திகிலை உண்டாக்கிக் கொண்டிருந்தவருமான அருமை பன்னீர்செல்வம் அவர்களை, இன்று, காலம் சென்ற பன்னீர்செல்வம் என்று எழுத நேரிட்டதற்கு மனம் பதைக்கிறது! நெஞ்சு திக்கு திக்கென்று அடித்துக்கொள்ளுகிறது! மெய் நடுங்குகிறது! எழுதக் கையோடவில்லை; கண் கலங்கி மறைக்கிறது; கண்ணீர் எழுத்துக்களை அழிக்கிறது!

பன்னீர்செல்வத்திற்குப் பாழும் உத்தியோகம் வந்ததும்போதும்; அது அவரது உயிருக்கே உலையாய் இருந்ததும்போதும்! தமிழர்களைப் பரிதவிக்கவிட்டுவிட்டு மறைந்துவிட்டார். இந்த உத்தியோகம் ஏன் வந்ததென்றே ஒவ்வொரு வினாடியும் தோன்றுகிறது. அவருக்கடுத்தாற்போல்—யார், யார் என்று மனம் ஏங்குகிறது; தேடுகிறது; தேடித்தேடி ஏமாற்றமடைகிறது!

என். மனைவி முடிவெய்தியபோதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை; ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை.

என் தாயார் இறந்தபோதும்—இயற்கைதானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா? இது பேராசை அல்லவா என்று கருதினேன்!

10 வயதிலேயே லண்டனுக்கு அனுப்பிப் படிக்கவைத்த ஒரே அண்ணன் மகன், படித்துவிட்டு இந்தியா வந்துசேர்ந்து சரியாக 20 வயதில் இறந்துபோனதற்காகவும் பதறவில்லை; சிதறவில்லை!

பன்னீர்செல்வத்தின் மறைவு மனத்தை வாட்டுகிறது.

தமிழர்களைக் காணுந்தோறும் காணுந்தோறும்—தமிழர் நிலையை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் நெஞ்சம் பகீரென்கிறது!



காரணம், முன் சொல்லப்பட்ட மனைவி, தாயார், குழந்தை ஆகியவர்கள் மறைவு என் தனிப்பட்ட சுக துக்கத்தைப் பொறுத்தது; தன்னலம் மறையும்போது அவர்களது மறைவின் நினைவும் மறந்துபோகும். பன்னீர்செல்வத்தின் மறைவு பொதுநலத்தைப் பொறுத்தது; தமிழர்களின் நிலையைப் பொறுத்தது. எனவே தமிழர்களைக் காணுந்தோறும்—நினைக்குந்தோறும் பன்னீர்செல்வம் ஞாபகத்துக்கு வருகிறார்! இது என்று மறைவது? இவருக்குப் பிறகு யார் என்றே திகைக்கிறது! பாழாய்ப்போன உத்தியோகம்—சர்க்கரை பூசின நஞ்சுருண்டை குத்திய தூண்டில் முள்ளாக இருந்துவிட்டது! அம் முள்ளில் பட்ட மீனாக ஆகிவிட்டார் செல்வம்!

இனி என் செய்வது? தமிழர் இயக்கமானது தோன்றிய நாள் முதல் இப்படியே பல 'ததிதுக்களுக்கு' ஆளாகி வந்திருக்கிறது என்றாலும்—நாளுக்கு நாள் முன்னேறியே வந்திருக்கிற அனுபவந்தான் நமக்கும் தமிழ் மக்களுக்கும் சிறிது ஆறுதலளிக்கும் என்று கருதுகிறேன்.

காலம் சென்ற பன்னீர்செல்வமே! காலம் சென்றுவிட்டாயா? நிஜமாகவா? கனவா? தமிழர் சாந்தி பெறுவாராக!

['குடி அரசு'—17-3-1940]

## 8. நம் சி. டி. நாயகம்

நம் அன்பர், ஆருயிர்த் தோழர் சி. டி. நாயகம் 13-12-1944-ல் முடிவெய்தி விட்டார். இனி அவரது இடத்தைப் பூர்த்தி செய்ய ஆள் இல்லை என்கின்ற நிலையில், உண்மையாய் உழைத்து வந்த உத்தமர் மறைந்தார்.

எளிய வாழ்க்கை உள்ளவர்; அதனால் மீதப் பணத்தையெல்லாம் கல்விக்குச் செலவு செய்தவர்; நினைப்பது போல் பேசுபவர்; பேசுவது போல் நடப்பவர்.

ஆவலோடு கண்ணை மூடிக்கொண்டு பெரியாரைப் பின்பற்றி வந்தவர். ஆனால், பெரியாருக்கும் அவருக்கும் எந்த விஷயத்திலும் ஒன்றுபோலவே கருத்து உதிக்கும். பெரியார் கருத்தைச் சொல்லி விட்டால் நாயகம் பெரியாருக்கு மேலாக அதை விளக்கிச் சொல்லுவார். அதற்கு ஆதாரங்கள் விநாடியில் சேகரித்து விடுவார்.

எந்தப் பதவியும், உத்தியோகமும், செய்யுந் தொண்டும் தமிழ் மக்களுக்குப் பயன்படுத்த முடியாவிட்டால் அது எவ்வளவு பெரியதாயினும் திரும்பியும் பாரார். உண்மையில் கண்ணியமானவர். வேஷத்திற்கு என்று நடக்கும் காரியம் அவரிடம் எதுவும் இருந்ததில்லை. அப்படிப்பட்ட பெரியார் முடிவெய்தினது நமக்கு மாபெரும் நட்டமென்றே சொல்லுவோம்; அதுவும் பரிகரிக்க முடியாத நட்டமென்றே சொல்லுவோம்.

அவரது குடும்பத்தார் பகுத்தறிவுவாதிகளானதால் அவர்களுக்கு எவருடைய ஆறுதலும் தேவை இருக்காதென்றே கருதுகிறோம்.

தமிழ் மக்கள் ஆங்காங்கு கூட்டங்கூட்டி, அவர்களது அனுதாபத்தை அக் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

நாயகம் அய்யா அவர்களைப் போலவே இருந்து உழைத்துவந்த அவரது வாழ்க்கைத் துணைவியார், தோழர் சிதம்பரம் அவர்கள் அய்யா அவர்கள் விட்டுப்போன காரியங்களைப் பின்தொடர்வார்கள் என்ற உறுதி நமக்கு உண்டு.

['குடி அரசு'—16-12-1944]

படிப்பகம்

www.padippakam.com



# 9. காந்தியார் மறைவு

காந்தியார் சுட்டுக்கொல்லப்பட்டார் என்கின்ற சேதியானது எனக்குக் கேட்டதும் சிறிதுகூட நம்ப முடியாததாகவேயிருந்தது. இது உண்மைதான் என்ற நிலை ஏற்பட்டதும் மனம் பதறிவிட்டது. இந்தியாவும் பதறியிருக்கும். மதமும் வைதிகமும்தான் இக் கொலை பாதகத்துக்குத் தூண்டுகோலாய் இருந்திருக்கலாம் என்பது என் கருத்து. இக் கொலைக்குத் திரைமறைவில் பலமான சதிமுயற்சி இருந்தே இருக்கவேண்டும். அதுவும், காந்தியார் எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ—உயிர்வாழ்ந்து வந்தாரோ அவர்களாலேயேதான் இச் சதிச்செயல் ஏற்பட்டிருக்க வேண்டும். இது மிகமிக வெறுக்கத்தக்க காரியமாகும். இவரது காலிஸ்தானம் எப்படிப் பூர்த்திசெய்யப்படும் என்பது ஒரு மாபெரும் பிரச்சினையே ஆகும். இப் பெரியாரின் பரிதாபகரமான முடிவின் காரணமாகவாவது நாட்டில் இனி அரசியல்—மதயியல் கருத்துவேற்றுமையும், கலவரங்களும் இல்லாமல் இருக்கும்படி மக்கள் நடந்துகொள்வதே அவரை நாம் மரியாதை செய்வதாகும்.

['விடுதலை'—31-1-1948]

பெரியார் காந்தியவர்களின் விசனிக்கத்தக்க திடீர் மறைவு என்னைத் திடுக்கிட வைத்தது. இந்திய மக்களனைவரையுமே இந் நிகழ்ச்சி திடுக்கிடவைத்திருக்குமென உறுதியாக நம்புகிறேன். கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகவே தோழர் காந்தியார் இப் பரந்த உபகண்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியாயிருந்து வந்தார்; மக்களுக்கு அவரது தொண்டு மகத்தானது. அவரது இலட்சியக் கோட்பாடுகள் உலக மரியாதையினை ஏற்றுவிட்டன.

காந்தியார்மீது நடத்தியிருக்கும் மோசமான தாக்குதல் கண்டனத்துக்குரியதாகும். பல திறப்பட்ட எல்லா வகுப்பு மக்களுக்கும் நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் நடந்துகொண்ட காந்தியார் இக் கொடுந் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்களென்றால், இது மிகவும் வெறுக்கத் தக்கதாகும்.

இக் கொலையாளியை ஆட்டிப் படைக்கும் சதிகாரக் கூட்டமொன்று திரை மறைவில் வேலைசெய்து வரவேண்டும். வடஇந்தியாவில் நடைபெற்றுவரும் கலவரங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாயிருப்பது மதவெறியேயாகும்.

காந்தியாரின் இடத்தை நிறைவு செய்பவர் இந் நாட்டில் எவருமே இல்லை. மக்கள் தங்களது அரசியல், மதவேறுபாடுகளை மறந்து, சகோதர பாவத்துடன் நடந்துகொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும். தென்னாட்டுத் திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவவைப்பர்.

['குடிஅரசு'-அறிக்கை—7-2-1948]

'உலக மக்களுக்குத் தொண்டாற்றுவதற்காக 125 வயது வரை நான் உயிருடன் வாழ்ந்துவருவேன்' என்று கூறிக்கொண்டே, அதற்கு ஏற்றவண்ணம் உடலையும் பாதுகாத்துக்கொண்டே, பெருவாரியான மக்களின் போற்றுதலையும், பாராட்டுதலையும் பெற்று, அதற்காக உண்மையாய் உழைத்துவந்த மகான் காந்தியார், தனது 79-ஆம் ஆண்டில் அகால மரணத்தால் முடிவெய்தி விட்டார்.

இவரது முடிவைக் கேட்டதும் மக்களுக்குத் திடுக்கிடும் தன்மையும், அலறிப் பதறித் துடிதுடித்துத் துக்கப்படும் தன்மையும் இதுவரை நம் நாட்டிற்கு வேறு எவருடைய முடிவும் தந்ததில்லை என்பதோடு, இப்படிப்பட்ட இவரே இக் கதிக்கு ஆளான பின்பு, இனி எவர் எக் கதியானால்தான் என்ன என்று கூறலாம்.

காந்தியார் கொள்கையில் அதிருப்தி கொண்டவர் சிலர், ஏன்—பலர் இருக்கலாம் என்றாலும், அப்படிப்பட்டவர்களும் காந்தியாரிடத்தில் மரியாதையும் அன்பும் வைத்தவர்களாகவே இருந்தார்கள்.



கம்யூனிஸ்ட்டுகளும், சமதர்மவாதிகளும் காந்தியார் கொள்கையில் எவ்வளவு குறை கண்டாலும், அவரிடத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்தவர்களாகவே இருந்துவந்தார்கள். வெள்ளையர்கள் மீதில் இந்தியர்களுக்கு எப்படிப்பட்ட குரோத மனப்பான்மை ஏற்பட்ட காலத்திலும், வெள்ளையர் அரசாங்கம் காந்தியாரை மதிப்பதிலோ அவரைப் பாதுகாப்பதிலோ சிறிதுகூடச் சிறிதும் தவறியதில்லை. அனுபவத்திற்கு ஏற்றதோ ஏற்காததோ என்ற கவலையற்று காந்தியார் தனது வாழ்நாள் முழுவதும் ஒரு இலட்சியவாதியாகவே இருந்த பெரியாராவார். ஆதலால், அவரிடத்தில் சொந்த விருப்பு வெறுப்புக் கொண்டு எவரும் அவரை வெறுத்ததில்லை.

திராவிடர் கழகத்தாருக்கு, காந்தியாரிடம், அவர் வருணாசிரம தர்மத்தைக் காப்பதில் பிடிவாதமான கவலை கொண்டிருக்கிறாரே என்பது தவிர—மற்றக் காரியங்களில் அவருடன் பிரமாதமான முரண்பட்ட கருத்துக் கொண்டிருக்கவில்லை என்பதோடு அவர்கள், 'காந்தியார் கூடிய சீக்கிரத்தில் இந்த விஷயத்திலும் சரிப்பட்டு விடுவார்கள்' என்றே கருதி, அதை மாத்திரமே முக்கியமாக காந்தியாருக்கு எடுத்துக் கூறிக் குறிப்பிட்டு வந்தார்கள். இந்துஸ்தானிலிருந்து திராவிட நாடு தனி நாடாகப் பிரியவேண்டும் என்பதிலும் காந்தியாருக்குப் பிடிவாதமில்லாமலேயே இருந்துவந்தது. என்றாலும், அவர்களது நண்பர்களான மார்வாடிகள், குஜராத்திகளின் தாட்சணியம் காரணமாக மாத்திரமே அது விஷயத்தில் தனது அதிருப்தியைக் காட்டி வந்தார். எப்படி இருந்தபோதிலும், திராவிடர் கழகத்தாருக்குள் ஒரு சிலருக்கு காந்தியார் நட்புப் பெறவும், அவரிடம் தங்கள் கொள்கைக்கு ஆதரவு தேடவும் ஆசை துடித்துக்கொண்டிருந்தது. 1948ஆம் ஆண்டு முடிவதற்குள் இது விஷயத்தில் ஒரு குறிப்பிடத் தகுந்த மாறுதல்கூட திராவிடர் கழகத்தில் ஏற்படலாம் போல் நிலைமை இருந்தது.

இப்படிப்பட்ட சமயத்தில் ஒரு பார்ப்பனப் பாதகன், மதவெறி காரணமாகக் கொடுஞ் செயல் செய்து, தனது சாதிக்கே நீங்காப் பழியையும் மாசையும் உண்டாக்கிக்கொண்டான். காந்தியார் எப்படி இருந்தாலும் ஒரு நாளைக்குச் சாகக்கூடியவர் என்பதில் யாருக்கும் அய்யமில்லை; அவர் இளம் வயது உடையவருமல்லர். 80 வயதுடையவராய்—உலகப் பெரியாராய்—உத்தமராய் வாழ்ந்துவிட்டார். அவர் அடைந்த சுகபோகம், இராஜ உபசாரம் என்பவைகள் 'போதுமானதற்குமேல்' என்றே சொல்லலாம்; மற்ற எவருக்கும் இதுபோல் சுலபத்தில் கிடைக்கக்கூடியதல்ல என்றும் சொல்லலாம். அவர் மக்களுக்குச் சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொல்லிவிட்டு அதுபோல் நடந்து காட்டவும் செய்தார். அவர் சாகும்போது அவருக்கு நினைவு உணர்வு இருந்து இருக்குமானால், 'கடவுள் என்னை அழைக்கிறார்' என்று கருதித் திருப்தியுடன்தான் உயிர்விட்டிருப்பாரே ஒழிய, சிறிதும் அதிருப்தியாய் உயிர்விட்டிருக்கமாட்டார்.

என்றாலும், நடந்தது என்ன என்று பார்ப்போமேயானால் அவர் குறிப்பாக எந்தச் சாதி மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்துவந்து, எந்தச் சாதி மக்களை—'பிக்ஷாந்தேஹி' என்கின்ற உஞ்சவிருத்திக் கூட்டமாக இருந்துவந்தவர்களை—இன்று உயர்வாழ்வில் இருத்தி நாட்டை அவர்களது ஆட்சிக்கும், ஆக்கினைக்கும் உள்ளாக்கிக் கொடுத்தாரோ, அந்தச் சாதியே இன்று அவரை அழித்துவிட்டதே என்பதுதான் இதில் ஆத்திரம் கொண்ட பரிதாபத்தோடு சிந்திக்க வேண்டியதாயிற்று.

உண்மையில் 'பிராமண' (பார்ப்பன) சாதி என்பதாக ஒரு சாதி—அந்தச் சாதியின் நலனுக்காக—அதுவும், மற்ற சாதிகளை இழித்து அழுத்திக் கசக்கிப் பிழிந்து, தாங்கள் மாத்திரம் நல்வாழ்வு வாழ்ந்தால் போதும் என்கின்ற கருத்துக்காக மாத்திரம் அல்லாமல், மற்றபடி வேறு எந்தக் காரியத்திற்கும் அந்தச் சாதி உலகத்துக்குத் தேவையே இல்லாத சாதியாகும். அப்படிப்பட்ட சாதியை அது ஒழியப்போகும் தருணத்தில் காப்பாற்றி அந்தச் சாதியாருக்குப் பொருந்தாத ஏற்றத்தைத் தந்து, நிரந்தரமாய் நல்வாழ்வு வாழ வகையளித்



படிப்பகம்

www.padippakam.com



தார். அப்படிப்பட்ட அந்தச் சாதிப் பாதகரே, அதற்குப் பிரதி உபகாரமாக இப்படிப்பட்ட பழிபாவத்திற்கு அஞ்சாத மகா பாதகமான காரியம் செய்தார் என்பது—இது, அவருடைய—அவ்வொருவருடைய செய்கையாக மாத்திரம் ஆகிவிட முடியுமா? ஒரு நாளும் முடியவே முடியாது. இதைச் 'சாதி தர்மம்' என்றுதான் சொல்லவேண்டும்.

புத்த தர்மம் கெட்டது யாரால்? சமண தர்மம் கெடுக்கப்பட்டுச் சமணர்கள் கழுவேற்றப்பட்டது யாரால்? மற்றும் பாதகமானதும் வஞ்சனையானதுமாகிய பல கொடுஞ்செயல்கள் புராண காலத்திலும் சரித்திர காலத்திலும் நடந்ததாகக் காணப்படுபவை யாரால் நடந்தவைகள்?

இவைபோன்றவைகளைக் கூர்ந்து கவனிப்போமேயானால், காந்தியார் போன்ற பெரியார்கள் பார்ப்பனரால் படுகொலை செய்யப்பட்டது என்பது அதிசயமோ—சிறிதும் ஆச்சரியமோ அல்ல என்பதை உணருவோம். இதற்காகப் பார்ப்பனச் சாதியைக் குறை கூறுவது முற்றும் சரியானதாகிவிடாது. அவர்கள் தங்கள் சுயநல வாழ்வுக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மதக் கற்பனைகளே இப்படிப்பட்ட பார்ப்பனர்களை உற்பத்தி செய்யும் விளை நிலமாக இருந்து வருகிறது.

உண்மையிலேயே மத மாற்சரியம், வகுப்பு மாற்சரியம், இன மாற்சரியம் முதலிய துவேஷங்களுக்குப் பார்ப்பன மதம் தவிர—மற்றபடி, இந்த நாட்டில் வேறு காரணம் யாராவது சொல்லமுடியுமா? தனிப்பட்ட எந்தப் பார்ப்பனரை நாம் குற்றம் கூறக்கூடும் என்று கேட்கிறோம்.

நன்றாக ஆழ்ந்து நிதான புத்தியுடன் கூர்ந்து சிந்திப்போமானால், 'வெள்ளையன் ஆட்சி கூடாது', 'முஸ்லிம் ஆட்சி கூடாது' என்ற உணர்ச்சியை இந்திய மக்களுக்கு ஊட்டவும், அதனால் குரோதம், துவேஷம் ஏற்படவும், அதனால் வெட்டு, குத்து, கொலை, கொள்ளை, நாசம் ஏற்படவும் பார்ப்பன மதம் காரணமல்லாமல் வேறு ஏதாவது கொள்கைகள், திட்டங்கள், ஆட்சி தர்மங்கள் காரணம் என்று யாராலாவது சொல்ல முடியுமா? சொல்லக் கூடுமானால், வெள்ளையன் ஆட்சியும் முஸ்லிம் ஆட்சியும் ஒழிந்தன; இந்துஸ்தான் சுய ஆட்சி பெற்றது என்று சொல்லப்பட்ட பின்பும் இந்து - முஸ்லிம் போராட்டம் என்னும் பேரால்—இந்த ஒரு ஆண்டு காலமாக நடந்துவரும் அட்டூழியமான நடத்தைகள் நடப்பதற்குப் பார்ப்பன மதம் காரணமல்லாமல் வேறு காரணம் என்று யாராவது, எதையாவது சொல்ல முடியுமா?

திராவிட நாட்டில் இதுபோது நடந்துவரும் திராவிட—ஆரியர் நாடு பிரிவினைப் போராட்டங்களுக்கும் பார்ப்பன மதம் காரணம் என்பதல்லாமல் வேறு காரணம் ஏதாவது சொல்ல முடியுமா? இப்படிப்பட்ட ஒரு மத தர்மம் காந்தியாரைக் கொன்றதில் அதிசயமென்ன என்று திரும்பவும் கேட்கிறோம்.

பார்ப்பனீய மதக் கொடுமைக்குத் திராவிட நாட்டில் எப்படியோ ஒரு விதத்தில் இதுவரை இப்படிப்பட்ட பாதகங்களுக்கு இடமில்லாமல் பலரால் பல காரியங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன என்றாலும், பார்ப்பனர்கள் இனிச் சும்மா இருக்கமாட்டார்கள் என்றே தெரிகிறது.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பார்ப்பனரும் தமது பார்ப்பன மதத்தைக் காப்பாற்றத்தான் அரசியலில் கலந்துகொண்டும், பத்திரிகைகள் நடத்திக்கொண்டும், காந்தியார் முன் ஆஷாடபூதி வேஷம் போட்டுக்கொண்டு 'தக்ளி' சுற்றுவதும், கதர் கட்டிக் கொள்வதும், கோணல் குல்லாயைப் போட்டுக்கொள்வதும், தேசியக் கொடி பிடித்துக் கொண்டு காங்கிரஸ் பித்தர்கள்போல் நடிப்பதுமாய் இருந்துவந்தார்களே ஒழிய—நாட்டுப் பற்றால் என்றோ, மக்களுக்கு விடுதலை ஏற்படவேண்டும் என்ற விடுதலை வேட்கையால் என்றோ, எந்தப் பார்ப்பனரையாவது அவர்களது எந்த நடவடிக்கைகளையாவது சுட்டிக் காட்ட முடியுமா என்று கேட்கிறோம்.



வடநாட்டில் காந்தியாரை வீழ்த்தியதன் பயனாய்ப் பார்ப்பனர்களின் செல்வாக்கு ஒரு அளவுக்கு இந்த நாட்டிலும் இனிக் குறைந்துதான் தீரும் என்பதோடு, இந்து—முஸ்லிம் போராட்டமும் பெரும் அளவுக்கு அடங்கித்தான் தீரும் என்பதை உணர்ந்த தென்னாட்டுப் பார்ப்பனர்கள், இங்கு திராவிட மக்கள்மீது அவ் வஞ்சகத் தன்மையைத் திருப்ப இப்போதே துவங்கிவிட்டார்கள் என்றே சொல்லலாம்.

முதலாவதாக, தென்னாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகள் காந்தியாரைச் சுட்டவன் பார்ப்பனன் என்பதை வேண்டுமென்றே மறைத்து—மக்கள் முஸ்லிம்கள் மீதும், காங்கிரசுக்கு மாறுபட்ட கருத்துக் கொண்டவர்கள் மீதும் பாயும்படியான மாதிரியில் அயோக்கியத்தனமாக மறைத்தும் திருத்தியும் பிரசுரித்தார்கள். அது மாத்திரமா என்று பார்த்தால், திராவிடர் கழகத்தார் மீதும் துவேஷம் ஏற்படும்படி இரட்டை அயோக்கியத் தனமாக, 'கருப்புச் சட்டைக்காரர்களின் கலாட்டா' என்ற தலைப்புக் கொடுத்து மக்களை அவர்கள்மீது கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இந்தக் காரியத்தைச் 'சுதேசமித்திரன்' பத்திரிகையே முதன்முதலாகத் தைரியமாய்க் கையாண்டிருக்கிறது. உண்மையாக இந்த நாட்டில், 'இந்து', 'சுதேசமித்திரன்' என்ற இந்த இரண்டு பேயாட்ட, வெறி கிளப்பும் விஷமப் பத்திரிகைகள் இல்லாமல் இருந்திருக்குமானால்—இந்த நாடு எவ்வளவோ முன்னேற்றமடைந்து, இந்த நாட்டு மக்கள் எவ்வளவோ அன்னியோன்னிய பாவமடைந்து ஞானமும், செல்வமும் ஆறாகப் பெருகும் நன்னாடாக ஆகிப் பல்லாண்டுகள் ஆகியிருக்கும். இன்றையக் கலவரங்களிலும், கேடுகளிலும், நாசங்களிலும் 1000-ல் 999 பாகமும் இல்லாமல் இருந்திருக்கும்.

இப் பத்திரிகைகள் தங்கள் சாதியார் செய்யும் அயோக்கியத்தனங்களையெல்லாம் 'பொது மக்கள் ஆத்திரம்' என்று போட்டுவிட்டு, (கருப்புச் சட்டைக்காரர்கள் செய்தார்களோ இல்லையோ) கருப்புச் சட்டைக்காரர்கள் நடத்தையைக் குறிப்பிடும்போது, 'கருப்புச் சட்டைக்காரர்கள் கலாட்டா' என்று போடுவதன் காரணம், அதுவும் இந்தச் சமயத்தில் போடுவதன் காரணம் வேறு என்னவாய் இருக்கமுடியும்? இந்த நாட்டுக்கு எப்படிப்பட்ட ஆட்சி ஏற்பட்டாலும், 'இந்து', 'சுதேசமித்திரன்' என்னும் இந்த இரண்டு விஷ ஊற்றுக்களும் ஒழிக்கப்பட்டால் ஒழிய மக்களுக்குத் துவேஷம், குரோதம், வஞ்சகம் என்னும் விஷநோய்கள் நீங்கப்போவதில்லை என்று உறுதியாய்க் கூறுவோம். இந்தச் சமயத்தில் பார்ப்பனர் செய்யும் அயோக்கியத் தனங்கள் ஏராளமாக இருக்கும்போது, அவைகளை மறைத்து—சுட்டவன் சாதியைக்கூட மறைத்துவிட்டு, 'கருப்புச் சட்டைக் காரர்கள் கலாட்டா' என்று எழுதுவதானது சர்க்கார் அடக்குமுறையைப் பார்ப்பனர் பக்கம் திருப்புவதை விட்டு—கருப்புச் சட்டைக்காரர் பக்கம் திருப்புவதற்கல்லாமல் வேறு எதற்காக இருக்கமுடியும்? இந்தப்படி செய்த மற்றக் கூட்டத்தினருக்குப் பெயரைக் கொடுத்து அது பிரசுரித்ததா?

இப்படிப்பட்ட யோக்கியர்கள் உள்ள நாட்டில்—எப்படி சாதி, வகுப்பு ஒற்றுமை இருக்கமுடியும்? மேலும் மேலும் துவேஷம், பிரிவு ஏற்படாமல் எப்படி இருக்கமுடியும்? மக்களுக்கு வெறி ஏற்பட்டிருக்கும் சமயத்தில் 'கருப்புச் சட்டைக்காரர் கலாட்டா' என்று எழுதினால் அதன் உள் மர்மம் என்னவாய் இருக்கமுடியும்?

எனவே, பார்ப்பனீய விஷம மதம் அழிக்கப்பட்டால் ஒழியச் சாந்தியும், சமாதானமும் இந்த நாட்டுக்கு ஏற்படுவது அருமையிலும் அருமையாகத்தான் இருக்கும். வருணாசிரம தர்மப் பிரிவு கொண்ட பார்ப்பன மதம் வேண்டவே வேண்டாம் என்றுதான் சொல்லுகிறோம். அது உள்ளவரை நாட்டில் இன்றுள்ள கேடுகள் எல்லாம் இருந்துதான் தீரும்.

பண்டித நேருவும், இராஜகோபாலாச்சாரியாரும் எவ்வளவு தியாகிகளாகவும், யோக்கியர்களாகவும், புத்திசாலிகளாகவும் இருந்தாலும் அவர்கள் இந்த வருண தர்மத்தை வைத்துக்கொண்டு எப்படிப்பட்ட நல்லாட்சியைக் கொண்டு வந்தாலும், அதில் காந்தி

படிப்பகம்

www.padippakam.com



யாருக்கு ஏற்பட்ட கதிதான் இவர்களுக்கும்—ஏன் நமக்கும் கூட ஏற்பட்டுத்தான் தீரும். பார்ப்பன மதம் அவ்வளவு விஷத்தன்மை கொண்ட மதமாகும்!

ஏன் இப்படிச் சொல்கிறோமென்றால், பர்மாவில் சுயராஜ்யம் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்து விட்டது. எப்படிச் செய்ய முடிந்ததென்றால்—அங்கு வருணாசிரம சாதி முறை இல்லை; பார்ப்பான் இல்லை. இந்துக்கள் நாட்டில்—இந்துஸ்தானில் சுயராஜ்யம் வந்து என்ன செய்தது? காந்தியார் உயிரைப் பலி வாங்கிவிட்டது. ஏன் என்றால், இங்கு வருண சாதியும், பார்ப்பானும் உண்டு. இனியும் என்ன என்ன செய்யப்போகின்றனவோ இவை? இன்றைய சுயராஜ்ய ஆட்சி மந்திரிகளில்—ஒருவர் மீது மற்றொரு மந்திரி சந்தேகப்பட்டுக் குற்றப் பத்திரிகை வாசிக்கிறார்; அதாவது, போதுமான பாதுகாப்பு முயற்சி எடுத்துக் கொள்ளாததாலேயே உள் நாட்டுக் கலகமும் காந்தியார் கொலை பாதகமும் ஏற்பட்டது என்று-பாதுகாப்பு மந்திரிமீது பண்டிதநேரு, குற்றமேற்படும்படிச் சொல்கிறார். நேருவின் நண்பரும் சமதர்மக் கட்சித் தலைவருமான ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் வெட்ட வெளிச்சமாகவே, இதை—அதாவது 'பாதுகாப்பு மந்திரி (சர்தார் பட்டேல் அவர்கள்) அந்தப் பாதுகாப்பு இலாக்காவுக்குத் தகுதி அற்றவர்' என்று சொல்லுகிறார். பொது மக்களும் இந்தக் கொலைக்குச் சர்தார் மீதும் பழிபோட இட மிருக்கிறது என்றே கருதுகிறார்கள். காந்தியாரும் உயிருடன் இருக்கும்போது, 'எனக்கும் பட்டேலுக்கும் விரோதம் இருப்பதாகக் கருதாதீர்கள்' என்று சொல்லி, அவர்மீது மக்களுக்கு உள்ள தப்பபிப்பிராயத்தை மாற்ற முயன்று இருக்கிறார். சர்தார் பட்டேல் அவர்களும், 'காந்தியார் பட்டினியின்போதே செத்து இருந்தால் நன்மையாக இருந்திருக்கும்' என்று தனது துக்கச் சேதியில் நுழைத்துச் சொல்லியிருக்கிறார். இதன் காரணமாய் மந்திரிகளுக்குள்ளும் அபிப்பிராய பேதம் வலுத்து, மந்திரி சபையில் மாற்றமோ, கோளாறோ ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

ஆகவே, பண்டித நேரு அவர்களும், இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் அவர்கள் விலகுவதற்கு முன்போ, ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்கு முன்போ, இல்லையானால் இனி இப்படி நேராமல் இருக்கப் பாதுகாப்பு முறைகள் கையாளுவதற்கு முன்போ, 'காந்தியார் பலியாக்கப்பட்டதன் காரணமாய்', இந்து மக்கள் சமுதாயத்தில் வருணாசிரம தர்ம முறை—அதாவது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்பதான பிரிவு (பிறவி உரிமை) முறை இனி கிடையாது; வருண முறையைக் குறிக்கும் சட்டம், சாஸ்திரம், சம்பிரதாயங்களும் இந்தச் சுயராஜ்யத்தில் இனி அனுஷ்டிக்கப்படமாட்டாது; இவை ஒழியும்படியாக அவசியமான எல்லா ஏற்பாடுகளும் கையாளப்படும்' என்று சுயராஜ்ய சர்க்கார் பேரால் ஏற்பாடு செய்துவிடுவார்களேயானால்—இந்த நாட்டைப் பிடித்த எந்த விதமான கேடும், ஒரே அடியாய்த் தீர்ந்துவிடும். இதைச் செய்த உடனே அப்புறம் ஒரு உத்தரவு போட்டுவிடலாம். அதாவது, 'பிறவி சாதி முறை எடுபட்டுவிட்டதால் இனி இந்த நாட்டில் பிராமணர் பாதுகாப்புச் சங்கமோ, பிராமணர் சேவா சங்கமோ, வன்னியகுல க்ஷத்திரியர் மகாஜன சங்கமோ, நாடார் மகாஜன சங்கமோ, வாணிய வைசியர் சங்கமோ, மருத்துவர் சங்கமோ, அருந்ததியார் சங்கமோ, மற்றும் இப்படிப்பட்ட பல பல சாதி-வகுப்புச் சங்கமோ எதுவும் இனிச் சட்ட விரோதமாகக் கருதப்படும்; அதனதன் தலைவர்களும் பிரமுகர்களும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டு அவர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்யப்படும்' என்று உத்தரவு போட்டுவிடலாம்.

பிறகு நமக்கு என்னதான் வேண்டும்? தானாகவே சமதர்மமும், பொதுவுடைமையும், தனித்தனி நாடு சுதந்திரமும் தாண்டவமாடும்.

இந்தப்படி சர்க்கார் செய்யாமல், வேறு எவ்வித முயற்சி செய்தாலும் அடுத்த பலிக்கு மந்திரிமார் உள்பட நாம் யாவரும் தயாராய் இருக்கவேண்டியதுதான். இந்த நல்ல சமயத்தில் இதைச் செய்யாமல் இந்து மகாசபை ஒழிக்கப்பட்டாலும் சரி; ராஷ்ட்ரீய சுய



சேவக் சபை ஒழிக்கப்பட்டாலும் சரி—மாறுதல் ஒன்றும் ஏற்படப் போவதில்லை என்பது நமது கல்லுப்போன்ற உறுதியாகும்.

திராவிடர் கழகத்தார் முக்கியமாக இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள்மீது எவ்விதமான குற்றமும் குறையும் எவரும் கூறுவதற்கு இடமில்லாமல்—அடக்கமாய், அமைதியாய் உண்மையாய், நிரபராதியாய் நடந்துகொண்டு, தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

['குடிஅரசு'-தலையங்கம்—7-2-1948]

## 10. ஜின்னா இழப்பு

தோழர்களே!

காந்தியாரின் மறைவைப்போன்றே துக்கம் தரக்கூடிய வேறொரு மறைவு சில நாட்களுக்கு முன் நம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது. அதாவது, நமக்காக சுமார் 40 ஆண்டுகளுக்குமேல் உழைத்தவரும், முஸ்லிம்களின் இன்றைய ஏகதலைவரும் ஆன தோழர் ஜின்னா அவர்கள் சில நாட்களுக்குமுன் இயற்கை எய்தினார். அவர் முஸ்லிம்களின் நல்லெண்ணத்திற்கும், நம்பிக்கைக்கும் மட்டுமேயன்றி, இந்நாட்டு மக்கள் பெரும்பான்மையோரின் நம்பிக்கைக்கும், நல்லெண்ணத்திற்கும் பாத்திரமாகி, இந்தியாவின் மாபெருந் தலைவராக இருந்து வந்தார். தான் விரும்பிய முடிவை-தன் போராட்டத்தின் வெற்றியைத் தன் ஆயுட்காலத்திலேயே பெற்று, அப் பேற்றில் இன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கும் தறுவாயில் அவர் காலமாக நேர்ந்தது மிக வருந்தத் தக்கதுதான். தோழர் ஜின்னாவும் என்னைப் போல், ஏன்—எனக்கும் மேலாகக்கூடக் காங்கிரஸ் பணியில் ஈடுபட்டவர்தான். நான் எப்படித் தேசியப் பற்றின் காரணமாக, காங்கிரஸ் பக்தியின் காரணமாக—காங்கிரசில் இருந்துகொண்டு ஜஸ்டிஸ் கட்சிக்கு இடையூறாக இருந்தேனோ அதேபோல், காங்கிரஸ் பக்தியின் காரணமாக ஆரம்பத்தில் அவர், முஸ்லிம் லீக்கைக்கூட எதிர்த்தவராவார். நான் காங்கிரசைவிட்டு வெளியேறி எப்படி ஜஸ்டிஸ் கட்சித் தலைவனானேனோ, அது போலத்தான், 'காங்கிரஸ் தன் வகுப்பு மக்களுக்கு எவ்விதத்திலும் நன்மை செய்யாது; கேடே செய்யும்' என்று உணர்ந்த பிறகுதான் அவரும் வெளியேறினார்; லீக்குக்குத் தலைவரானார். எனவேதான், காங்கிரஸ்காரர்களால் பலவாறு தூற்றப்பட்டார். எவ்வளவோ செல்வாக்குப் பெற்ற காந்தியாருக்கு நல்ல எதிரி உண்டென்றால், அவர் தோழர் ஜின்னா என்றுதான் எல்லோரும் புகழ்ந்து கூறுவார்கள். அந்த அளவுக்கு நாட்டில் மனத் துணிவு பெற்றிருந்தார் என்பதோடு, அவர் தனது கொள்கையின் நேர்மையை உணர்ந்து, அவர் காங்கிரஸ்காரர்களின் எவ்விதத் தூற்றலுக்கும் அஞ்சாமலிருந்து, சலியாமல் உழைத்து, பிறர் காட்டும் ஆசைகளுக்கு மயங்காமல், தயங்காமல் உறுதியுடன் இருந்து, முடிவில் வெற்றி மாலை சூடினார். இப்படிப்பட்ட ஒரு மாவீரர் மறைவுக்காக நாம் உண்மையிலேயே துக்கப்படுகிறோம். இப்படி இன்னும் பல துக்ககரமான சம்பவங்கள் அன்றாடம் ஏற்பட்டுக்கொண்டுதானிருக்கின்றன. இவை தவிர்க்கமுடியாதவை.

[சிதம்பரத்தில், 29-9-1948-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-10-1948]

## 11. அழகிரிசாமி

நண்பர் அழகிரிசாமி முடிவு எய்தியதுபற்றி நான் மிகவும் துக்கப்படுகிறேன். அழகிரிசாமி எனக்கு 30 ஆண்டு நண்பரும் என்னை மனப்பூர்வமாய் நிபந்தனை இல்லாமல் பின்பற்றி வருகிற ஒரு கூட்டுப் பணியாளருமாவார். இந்த 30 ஆண்டுகாலத்தில் எனது கொள்கையிலும் திட்டத்திலும் எவ்வித ஆலோசனையும் தயக்கமும் கொள்ளாமல் நம்பிக்கை வைத்து அவைகளுக்காகத் தொண்டாற்றி வந்தவர். என் விஷயத்தில் மறந்தும் புறங்

படிப்பகம்

www.padippakam.com



கூறாமல் இருந்தது மாத்திரமல்லாமல், புறங்கூறுகிறவர்கள் யாராயிருந்தாலும் ஒளிவு மறைவில்லாமல் கண்டித்துவிடுவார்.

திடீர் என்று நான் புகுத்தும் கொள்கையையும், போடும் திட்டங்களையும் சிறிதும் யோசனை இன்றி ஒப்புக்கொண்டு, அவைகளை எப்படிப்பட்ட அறிவாளிகள், குயுக்திக் காரர்கள் வாதக் கூட்டத்திலும், எதிர்ப்பிலும் மெய்ப்பித்து வெற்றி காணுவார்.

கொள்கை வேற்றுமை, திட்ட வேற்றுமை என்பது எனக்கும் அவருக்கும் ஒருநாளும் காண முடிந்ததில்லை.

அவருடைய முழுவாழ்க்கையிலும் அவர், இயக்கத் தொண்டைத் தவிர, வேறு எவ்விதத் தொண்டிலும் ஈடுபட்டதில்லை. அவருக்குப் போதிய பணம் இல்லை. பல காரணங்களால் பொருளாதார நெருக்கடி அடிக்கடி அவருக்கு ஏற்படுவது இயற்கையாக இருந்துவந்தாலும், ஒரு சமயத்திலும் விளையாட்டுக்குக்கூடக் கொள்கையை எந்த விலைக்கும் விலைகூறி இருக்கமாட்டார். சமீபகாலமாக அவருக்கு உடல்வசதி இல்லாததால் அவருடைய தொண்டு சரிவர நடைபெறாமல் பல தடைகளுக்கும், பல அசவுகரியங்களுக்கும் ஆளாகிவிட்டது என்றாலும், அழகிரிசாமியைப் போல் இயக்கத்தில் படித்த, பாமர மக்களுடையவும், இளைஞர்களுடையவும் மனத்தைக் கவர்ந்து பறி கொண்டவர்கள் அரிது என்றே சொல்லுவேன்.

அப்படிப்பட்ட ஒருவர், உண்மையான வீரமும், தீரமும் உள்ளவர் இச்சமயத்தில் முடிவெய்திவிட்டது என்பது எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது என்பதோடு, இயக்கத்துக்கும் பதில் காணமுடியாத பெருங்குறை என்றே சொல்லுவேன்.

['விடுதலை'-அறிக்கை—30-3-1949]

## 12. ஈ. வெ. கிருஷ்ணசாமி

நீங்கள் இவ்வளவு பெருந் திரளாகக்கூடி எங்கள் குடும்பத் தலைவர் பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுக்காக அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றிய தற்காக நாங்கள் உள்ளபடியே நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சாதாரணமாக கவனிக்கப்போனால், இதற்காக நாம் துக்கப்படவேண்டிய அவசிய மில்லை என்பதோடு, இம் மறைவில் அதிசயப்படத்தக்கதும் ஏதும் இல்லை. ஏனெனில், அவர் இளம்வயதில் மறையவில்லை. 73 வயது தாண்டி 74ஆம் வயதில்தான் மறைந் துள்ளார். இது இந் நாட்டினரின் சராசரி வயதுக்கு மூன்று மடங்காகும். பெரும்பாலான மக்கள் 30 வயதிற்குள்ளாகவே இந் நாட்டில் இறந்துவிடுதல் மிகச் சாதாரணமாகும். எனவே, இந்தவகையில் நாம் அதிகம் வருந்துவதற்கில்லை. காலமாறுதல்களும், பஞ்சமும் மற்றும் பல கொடிய நோய்களும் மக்களை வாட்டி வதைத்துவரும் இக் காலத்தில் 74 வயது வரை உயிர் பிழைத்திருந்ததுதான் அதிசயமே ஒழிய மாய்வதொன்றும் அதிசயமே இல்லை. எனவே நாம் ஏன் என்னுடைய தமையனாரின் மறைவுக்காக இவ்வளவு வருந்துகிறோம் என்பதை நீங்கள் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றாடம் பல லட்சாதிபதிகள், ராஜாக்கள், மகாராஜாக்கள் இவர்களெல்லாம் மறைந்துகொண்டுதான் இருக்கிறார்கள். என்றாலும், மறைந்துபோகும் ஒவ்வொருவருக்கும் நாம் இம் மாதிரிக் கூட்டமாகக் கூடி அனுதாபம் தெரிவித்துக்கொண்டிருப்பதில்லை. 'இறந்துவிட்டாரா அவர்—சரி இது இயற்கைதான்; விதி முடிந்துவிட்டது. இறந்துவிட்டார், இதற்கென்ன செய்யலாம்' என்பதோடு பெரும்பாலோருடைய முடிவைப்பற்றி நாம் கவலைப்படாமல் இருந்து விடுவோம்.வேறு சிலருடைய மறைவுக்காகத்தான் நாம் பொதுக்கூட்டம் கூட்டி அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறோம். ஏன் அப்படி? என் தமையனார்போன்ற ஒருசிலர் மறைவுக்கு மட்டுமே நாம் அனுதாபம் தெரிவித்துக்கொண்டுவரும் இப் பழக்கத்திற்குக் காரணமென்ன?



இப்படி எல்லோரும் சேர்ந்து வருத்தம் தெரிவித்துக்கொள்ளும்படி என் தமையனார் என்ன பெரிய காரியம் சாதித்துவிட்டார்? இதையெல்லாம் நீங்கள் உய்த்துணரவேண்டும்.

என் தமையனார் தனக்காக மட்டுமே வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. தன்னால் இயன்ற அளவுக்குப் பொதுமக்களுக்காகவும் சிறிது தொண்டாற்றியிருக்கிறார். தன் வாழ்வையே முதன்மையாகக் கருதி அவர் பாடுபடவில்லை. மற்ற மக்களுக்காகவும் தன் னால் இயன்ற அளவுக்குப் பாடுபட்டிருக்கிறார். இதுதான் முக்கிய காரணமாகும்.

சுமார் 25 வருட காலமாகவே அவர் வைத்தியத்தில் மிகுந்த பற்றுக்கொண்டவராய் இருந்து வந்திருக்கிறார். வெறும் பற்றுதல் கொண்டவராக மட்டும் இருக்காமல், அதில் மிகுந்த ஆராய்ச்சி உடையவராகவும் இருந்திருக்கிறார். அதை யொட்டி வெகு தாராள மாகச் செலவு செய்யக் கூடியவராகவும் இருந்திருக்கிறார். தங்கபஸ்பம், வெள்ளிபஸ்பம், பவழபஸ்பம், முத்துபஸ்பம் முதலியவை செய்வதில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்ததோடு, தான் செய்யும் ஒவ்வொன்றையும் மிகக் கவலையோடும் கருத்தோடும் செய்து வந்திருக்கிறார். எதையும் மிக்க நல்லமுறையில் மிக நல்லதாகவே செய்ய வேண்டுமென்ற ஆர்வம் படைத் திருந்தார். மேலும், அதை எல்லோருக்கும் வழங்கவேண்டும், எல்லோருடைய நோயையும் போக்கவேண்டும் என்ற பேரார்வமும் பெற்றிருந்தார். அவரிடம் யாரேனும் தனக்கு ஒரு நோய் என்று சொல்லிவிட்டு, பிறகு தப்பித்துக்கொண்டு போய்விட முடியாது; எப்படியும் தன் மருந்தைக் கொடுத்தே அனுப்புவார். அதை உண்டு சுகமடையவேண்டும் என்பதில் அவருக்கு அவ்வளவு பிரீதியுண்டு.

வைத்தியம் தெரிந்த டாக்டர்கள் பலர் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். என்றாலும் அவர்களிடம் உதவிபெறுதல் எல்லோருக்கும் சுலபமாயில்லை. ஆங்கில வைத்தியம் மிக நல்ல வைத்தியம்தான் என்றாலும் அது ஏழை எளியவர்களுக்குப் பயன் படாததாக இருக்கிறது. ஆங்கில மருந்துகளைச் செய்வதற்கு அதிகப் பணம் செலவாகிறது. ஆனதால், அவற்றின் விலை அதிகமாயிருக்கிறது. நாட்டு வைத்தியமுறை சற்று மலிவான தாகும். மேலும், மலிவான பொருள்களைக்கொண்ட அம் மருந்துகளைச் செய்யமுடிகிறது. எனவே, அவர் நாட்டு வைத்திய முறையை வளர்ப்பதில் ஊக்கம் காட்டி வந்ததும், இலவச மாகவே தான் செய்த நன் மருந்துகளை மக்களுக்கு உதவிவந்ததும் மிகவும் பாராட்டத்தக்க செயலேயாகும். இப்படிப் பாராட்டுவதன் மூலம் மற்றவர்களுக்கும் பொதுத் தொண்டில் ஆர்வம் ஏற்படச் செய்யலாம்.

ஒருவன் தனக்காக என்று ஏதேனும் காரியம் செய்து கொள்வதென்றால் அக் காரியம் பொதுமக்களுக்கான நற்காரியத்தைச் செய்து, அவர்களுடைய அன்புக்கும் பாராட்டு தலுக்கும் பாத்திரமாவதுதான்; இம் மாதிரிப் பலர்கூடி தன் மறைவுக்காக வருத்தப்படும் அளவுக்குப் பொதுத்தொண்டு ஆற்றுவதுதான். இதுவே ஒருவன் தனக்கெனச் செய்து கொள்ளும் காரியமாகும். மற்ற காரியமெல்லாம் தன் மனைவி மக்களுக்காகச் செய்யப் பட்டதாகக் கொள்ளப்பட்ட போதிலும் அவை ஊருக்குச் செய்ததாகத்தான்—கண்டவர் களுக்குச் செய்ததாகத்தான் போய்விடும். ஒருவன் எவ்வளவுதான் சொத்துச் சேர்த்து வைத்துவிட்டுப் போனாலும் அது அவனுக்குப் பெருமை அளிக்காது; அதற்காக அவனுக்கு யாரும் மரியாதை செய்யவும்மாட்டார்கள். அச் சொத்து, மறைவின்போது அவனுடன் செல்வது இல்லை.

ஒவ்வொருவரும் எந்த வேலையில் இருந்தாலும் தங்கள் நேரத்தின் ஒரு பகுதியை, உழைப்பின் ஒரு பகுதியை, ஊதியத்தின் ஒரு பகுதியை, பொதுத்தொண்டிற்காக, ஏனைய மக்களுக்காகச் செலவிடவேண்டும். அதுதான் தனக்கென்று செய்துகொள்வதாகும்; மறைந்த பிறகும் தன் பெயர் நிலைத்து நிற்கச்செய்து கொள்வதாகும். என் தமையனார் இந்த வகையில் தொண்டாற்றி உங்களுடைய பற்றுதலைப் பெற்றிருக்கிறார். எனவேதான் அவருடைய மறைவுக்காக நீங்கள் வருந்துகிறீர்கள். ஒரு நாளைக்குத் தம் ஆஸ்பத்திரிக்கு

படிப்பகம்

www.padippakam.com



ஒரு 150 பேர் வந்துவிட்டார்கள் என்றால் 'அவ்வளவு பேருக்கு உதவ வாய்ப்புக் கிடைத்ததே' என்று அவர் அவ்வளவு பூரிப்படைவார். அவர் அரிய பெரிய காரியம் ஏதும் செய்துவிடவில்லை என்றாலும் அவருடைய எண்ணம் கருத்து அதுவாகவே—பொதுநலத் தொண்டு செய்ய வேண்டுமென்ற ஆர்வமாகவே இருந்தது. நீங்களும் அம் மாதிரியான ஆர்வம்பெற்று எல்லோருடைய வாழ்வும் சிறக்கப் பாடுபடவேண்டும். உங்களுடைய அனுதாபமும் புகழுரைகளும் எங்களுக்கு மிக ஆறுதலைத் தந்திருக்கின்றன. இதற்காகவும் நாங்கள் நன்றி செலுத்திக் கொள்ளுகிறோம்.

['விடுதலை'—7-2-1950]

## 13. ஸ்டாலின் மறைவு

ஸ்டாலின் முடிவெய்திய செய்தி கேட்டுத் திடுக்கிடாத—துக்கப்படாத ஏழை மக்கள் உலகத்திலேயே இருக்கமாட்டார்கள்.

ஸ்டாலின், உலகத்தில் ஒரு கொள்கையாகக் காட்சியளித்து வந்தார். ஸ்டாலின் உலகப் பெரியார்களில் கடைசிப் பெரியாராக இருந்தவர்.

இனி உலகில் கொள்கைக்காக வாழும், கொள்கைக்காக இருக்கவேண்டிய பெரியார்கள் இல்லை.

அது மாத்திரமல்லாமல், 'உலக இரத்னார்த்தமாய்த் தோன்றவேண்டிய' பெரியார்களும் இனித் தோன்றப்போவதில்லை.

நாம் பெரியார் என்று சொல்வதன் கருத்து 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற கருத்திலேயேயாகும்.

நாம், ஸ்டாலின் கடைசிப் பெரியார் என்று ஏன் சொல்லுகிறோம் என்றால்,

இன்று மதத் துறையில் பெரியார் யாருமிலர்; பொருள் துறையில் பெரியார் யாருமிலர்; கல்வித் துறையில் பெரியார் யாருமிலர்; அறிவுத் துறையில் பெரியார் யாருமிலர்; கொள்கைத் துறையில் பெரியார் யாருமிலர்.

ஸ்டாலின் கொள்கைத் துறையில் பெரியாராக இருந்தவர். மற்ற துறைப் பெரியார்கள் முடிவெய்தியதின் பலனாய், அத் துறையில் ஒன்றும் மோசமாய்ப் போய்விடவில்லை. அவர்களது கொள்கைகளால் மக்கள் ஏமாந்துவந்தது நின்றுபோய் விட்டது என்றுதான் சொல்லலாம்.

ஆனால், ஸ்டாலின் முடிவு மக்கள் விளக்கம் பெற்று, பயனடைந்து வந்த—வருகிற கொள்கைகள் வலுக் குறையக் கூடுமென்று பயப்படக்கூடிய, கவலைப்படக்கூடியதாய் ஏற்பட்டது.

அமுல் நடத்தப்பட்டு வந்த ஸ்டாலின் கொள்கையைச் சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு (Exploit செய்து) வருகிறவர்கள்—இனி யோக்கியமாய், நாணயமாய் நடந்து மக்களிடம் அனுதாபத்தையும் அன்பையும் பெறும் மாதிரியில் உழைத்துவந்தால், அல்லது அப்படிப்பட்டவர்கள் விலகிக்கொண்டால், அல்லது விலக்கப்பட்டால்தான் உலகில் ஸ்டாலின் கொள்கைக்கு இடமுண்டு.

ஸ்டாலின் முடிவானது—உலக ஏழைப் பாட்டாளி மக்களின் ஒரே இரட்சகர் முடிவு எய்தினார் என்பதேயாகும்.

இது போன்ற நஷ்டம் உலகிற்கு ஏற்பட்டதில்லை.

நஷ்டம்! நஷ்டம்! ஏழைப் பாட்டாளி மக்களுக்கு மாபெரும் நஷ்டம்!

['விடுதலை'-அறிக்கை—7-3-1953]



## 14. திரு. வி. க.

திரு. வி. க. அவர்கள் தமது 70-வது வயதில் முடிவெய்தினார். இதில் ஒன்றும் அதிசயமில்லை. ஆனால், 75 வயதானவர்களாகிய நானும், என்னைப்போன்ற பலரும் சாகாமல் (கெட்டியாக) இருக்கும்போது 70 வயதுக்காரர் முடிவெய்தியது அதிசயம்தான்.

வயது சிறிது குறைவாய் இருந்தாலும், அவரது உணர்ச்சிப் புலன் தவிர்த்து மற்ற புலன்கள் பெரிதும் அதனதன் கடமையைச் (கர்மத்தை) செய்யமுடியாமல் போனபின்பு, உணர்ச்சிப் புலன் மாத்திரம் எவ்வளவு நன்றாக இருந்தாலும் அதனால் அவருக்கு ஒவ்வொரு வினாடியும் துக்கமும் அதிருப்தியும்தாம் தாண்டவமாட முடியுமே தவிர, மகிழ்ச்சிக்கு, திருப்திக்குச் சிறிதும் இடம் இருப்பது என்பது முடியாத செயலாகும்.

ஆனதால், கடமையைச் செய்ய வசதியும், வாய்ப்பும் இல்லாதவர்கள் முடிவெய்துவது அவரவர்களைப் பொறுத்தவரை வரவேற்கத்தக்கது; மற்றவர்களுக்கும் ஏமாற்றமோ, சங்கடமோ அடையவேண்டியதல்லாததுமேயாகும்.

திரு. வி. க. அவர்கள் தம் சொந்தத்திற்குப் பெறவேண்டிய பேற்றைப்பெற்ற ஒரு வாழ்க்கை வெற்றிவீரர் ஆவார்.

எப்படியென்றால், திரு. வி. க. முடிவானது அவரைத் தவிர்த்து, அவரை அறிந்த, அவருக்கு அறிமுகமான அவரைத் தவிர்த்த மற்ற எல்லா மக்களுக்கும் குறைபாடாகவும், கவலை தருவதாகவும், ஏன், துக்கம்கூடத் தரத் தக்கவுமான பலனைக் கொடுத்து இருக்கிறதுடன், ஒருவருக்காவது மகிழ்ச்சியையோ திருப்தியையோ கொடுக்கக்கூடாததுமாகும்.

மனிதன் தனது வாழ்வில் பெறவேண்டியதில் உயர்ந்த இலட்சியமாய் இருக்கத்தக்கது இதுதான்.

இதைத்தான் வள்ளுவர், 'அறத்தான் (கடமையால்) வருவதே இன்பம் (வெற்றி) மற்றெல்லாம் புறத்த (1. இன்பமல்லாதவை, 2. தனக்குப் பயன்படாதவை, 3. கூடாதவை) புகழுமில,' வெற்றி இல்லை. (1. மனிதனுக்கும், மிருகத்திற்கும் பேதமில்லாத தன்மையது, 2. தோன்றாதிருத்தலே நன்று என்று சொல்லத்தக்கது) என்பதாகக் கூறியுள்ளார்.

இதிலிருந்து நாம் என்ன காண்கிறோம் என்றால், ஏராளமான செல்வத்தையும், எவராலும் தட்டிப் பேசமுடியாத சர்வாதிகாரத்தையும், எப்பேற்பட்டவனும் ஏமாந்து போகும்படியான தந்திரத்தையும், கெட்டிக்காரத்தனத்தையும், எவ்வளவோ சாமர்த்தியமான விளம்பரத்தையும் பெற்று இருந்தாலும் அவை புறத்தது (அவனுக்குப் பயன்படாததே) என்று காணக்கிடைக்கிறது.

நல்லோர் எனப்படுபவரது முடிவிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினை இதுதான்.

பணமும், ஆணவமும், சர்வாதிகாரமும், மற்றவர்களை ஏமாற்றிச் செல்வம் குவித்தலும், விளம்பரம் பெறுவதுமே மனிதன் கடமை என்று கருதிக்கொண்டிருப்பவர்களுக்கு—கலியாணசுந்தரனார் முடிவு கண்களைத் திறக்கச்செய்யத் தக்கதாகுக!

இத் துறையில் நாமறிந்தவரை, இன்றைவரை இவருக்கு மிக்கார் இல்லை என்பது மாத்திரமல்லாமல் ஒப்பாரும் இல்லை என்று கூறுவதில் நான் மிகுதியும் உவப்படைகிறேன்.

['விடுதலை'-அறிக்கை—20-9-1953]



படிப்பகம்

www.padippakam.com



## 15. டாக்டர் அம்பேத்கார் மறைவு

இந்தியாவின் சிறந்த அறிஞர்களில் முன்னணியிலுள்ள அறிஞரும், ஏராளமான விஷயங்களைக் கற்றுத் தேர்ந்த கலாநிதியுமான அம்பேத்கார் அவர்கள் முடிவெய்திவிட்டார் என்று செய்தி கேட்டவுடன் திடுக்கிட்டுப் பதறிவிட்டேன். உண்மையில் சொல்லவேண்டு மானால், டாக்டர் அம்பேத்காருடைய மறைவு என்னும் ஒரு குறைபாடானது எந்த விதத்திலும் சரிசெய்யமுடியாத ஒரு மாபெரும் நஷ்டமேயாகும். அவர் சிறப்பாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாகவுள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச் சொல்லப் பயப்படும்படியான புரட்சிகரமான விஷயங்களை எல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச்சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

உலகத்தாரால் மதிக்கப்படும் மாபெரும் தலைவரான காந்தியாரை, வெகு சாதாரண மாக மதித்ததோடு, அவருடைய பல கருத்துக்களைச் சின்னாபின்னமாகும்படி மக்களிடையில் விளக்கும் மேதாவியாக இருந்தார். இந்துமதம் என்பதான ஆரிய—ஆத்திக மதக்கோட்பாடுகளை வெகு அலட்சியமாகவும், ஆபாசமாகவும், அர்த்தமற்றதாகவும் மக்கள் கருதும்படியாகப் பேசியும், எழுதியும் வந்தார். உதாரணம் சொல்லவேண்டுமென்றால், காந்தியாரையே ஒரு பத்தாம் பசலி, பிற்போக்குவாதி என்றும், அவரால் பிரமாதமாகப் படிக்கப்பட்டுவந்த கீதையை, 'முட்டாள்களின் உளறல்கள்' என்றும் சொன்னதோடு, காந்தியாரின் கடவுளான இராமனை மகாக் கொடியவன் என்றும், இராமாயணக் காவியம் எரிக்கத் தகுந்தது என்றும் சொல்லி, பல்லாயிரக் கணக்கான மக்களிடையில் இராமாயணத்தைச் சுட்டு எரித்துச் சாம்பலாக்கிக் காட்டினார்.

இந்துமதம் உள்ளவரையிலும் தீண்டாமையும் சாதிப் பிரிவும், அவற்றால் ஏற்பட்ட கொடுமையும் ஒழியவே ஒழியாது என்றும் ஓங்கி அரைந்தார். மேற்கண்ட இந்தக் கருத்துக்கள் தவழும்படியாக ஏராளமான புத்தகங்களை எழுதி வெளியிட்டார். இப்படியாக அனேக அரிய காரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்தப் புரட்சிவீரருமான டாக்டர் அம்பேத்கார் முடிவு எய்தினது இந்தியாவுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் எளிதில் பரிகரிக்க முடியாத பெரியதொரு குறைவேயாகும்.

அம்பேத்காரின் மறைவு என்னும் செய்தி திடீரென்று மொட்டையாக வெளியானதி லிருந்து அவருடைய மரணத்துக்குப் பின்னால் சில இரகசியங்கள் இருக்கலாமென்று கருதுகிறேன். அதாவது, காந்தியார் மரணத்துக்கு உண்டான காரணங்களும், அதற்கு ஆதாரமான பல சங்கதிகளும் டாக்டர் அம்பேத்கார் மரணத்துக்கும் இருக்கக் கூடும் என்பதே ஆகும்.

['விடுதலை'—அறிக்கை—8-12-1956]

## 16. டாக்டர் வரதராஜுலு

இன்று (23-7-1957) காலை 1-40-க்கு டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் காலமாகி விட்டார்கள் என்ற செய்தி கேட்டு, மிகவும் துக்கத்தில் ஆழ்ந்தேன். அவர் எனக்குச் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாகவே நன்றாய்த் தெரிந்து, நெருங்கிப் பழகிக்கொண்டுவந்த அருமையான நண்பர் ஆவார்.

நாங்கள் காங்கிரசில் தோளோடு தோள் பிணைந்து, அதை எங்கள் சொந்த ஸ்தாபனம்போல் கருதிப் பல ஆண்டுகள் தொண்டாற்றினோம்.

நான் காங்கிரசைவிட்டுப் பிரிந்து காங்கிரஸ் கொள்கைகளுக்கு மாறாகத் தொண் டாற்றி வருகிற சமயத்திலும், டாக்டர் நாயுடுவும், நானும், திரு. வி. க. அவர்களும் நண்பர்



களாகவே இருந்து வந்தோம். ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து அதைத் தலையெடுக்காமல் செய்து, இந்நாட்டின் அரசியலில் பார்ப்பனர்களுக்குப் பூரண ஆதிக்கம் ஏற்படுத்திக் கொடுத்த 'பாபமான' காரியத்தில் மற்றெல்லோரையும்விட எங்களுக்கு அதிகப் பங்குண்டு. அதில் என்னைவிட அதிகப் பங்கு டாக்டர் நாயுடு அவர்களுக்கு உண்டு. ஏனெனில், ஒரு வியாபாரியாய் இருந்து சமுதாயத் தொண்டைப் பொதுத் தொண்டாகக் கருதி ஆற்றி வந்த என்னை, அரசியல் முழுநேரப் பொதுத்தொண்டனாக, பார்ப்பன தாசனாக 1920ஆம் ஆண்டிலேயே ஆக்கியவர் டாக்டர் நாயுடு அவர்கள்தான். நண்பர் இராஜாஜி அவர் களுக்கும் இதில் பங்கு உண்டு என்றாலும் டாக்டருக்கு அதிகப் பங்குண்டு.

பொது வாழ்வில் நாயுடு அவர்கள் அடையவேண்டிய நிலையை அடையமுடியாமல் போய்விட்டது. அவருக்கு அடுத்தவர்களாகவும், ஜூனியர்களாகவும் உள்ளவர்கள் பெரிய பெரிய நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இவர்கள் வந்ததற்குப் பல காரணங்கள் சொல்லப் பட்டாலும், உண்மையான காரணம் அவர் ஒரு பார்ப்பனரல்லாதவராக இருந்ததும், அடிக்கடி பார்ப்பனரை எதிர்த்ததுந்தான்.

எப்படியிருந்தாலும், நான் காங்கிரஸில் தொடர்ந்து இருந்திருந்தால் டாக்டர் நாயுடுவைக் கண்டிப்பாக மந்திரியாகப் பார்த்து இருப்பேன்.

சராசரி மனிதத் தன்மையை எடுத்துக்கொண்டால், பொதுவாழ்விலுள்ள எத்தனையோ பேரைவிட டாக்டர் மேலானவர் என்றே சொல்லுவேன். டாக்டர் நாயுடுவுக்கு தேசப் பற்று அதிகம். அவர் 1920, 1921, 1922ஆம் ஆண்டுகளில் மாதம் 2000, 3000 ரூபாய் வரும்படி உள்ளவராக இருக்கக் கண்டேன். பணத்தையெல்லாம் தேசத்தின் பெயரால் கண்டபடி செலவழித்து விட்டார் என்றாலும் அதைப்பற்றிக் கவலையில்லாமல் திருப்தி யாகவே வாழ்ந்துவந்தார். சில நாட்கள் தவிர, கடைசிவரை காங்கிரஸ்காரராகவே இருந்து வந்தார்.

பழைய காங்கிரஸ்காரர் என்கின்ற தன்மையிலும், காங்கிரஸ் தன்மையில் முதலாவது தலைவர் என்கின்ற தன்மையிலும் இருந்தவர்களில் இன்றுவரை உயிரோடு இருந்தவர் டாக்டர் நாயுடு அவர்கள்தான். இப்போது இருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் எல்லோருமே டாக்டருக்கு அடுத்தவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். காங்கிரசினால் பலனடைந்த வராக இல்லாதிருந்தவரும் அவர்தான்.

அவருக்கும் எனக்கும் சிநேகமான காங்கிரஸ் நண்பர்கள், தலைவர்கள் பலர் இன்றும் இருக்கிறார்களென்றாலும், அவர்களில் பார்ப்பனரல்லாத தலைவர் டாக்டர்தான். அவரும் காலமாகிவிட்டார். இனித் தலைவர் கிடையாது.

டாக்டர் நாயுடு அவர்களது அருமை மனைவியார் திருமதி ருக்மணியம்மாள் அவர் களுக்கும் அவர்களது மக்களுக்கும் மற்றும் எங்கள் பொது நண்பர்களுக்கும் எனது மனப் பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['விடுதலை'—அறிக்கை—23-7-1957]

## 17. நேரு மறைவு

தாய்மார்களே! தோழர்களே!

இன்றையதினம் நாட்டுக்கு இதுவரை ஏற்பட்டிருக்காத மாபெரும் கேடு ஏற்பட்டு விட்டது என்று சொல்லும் வண்ணம் நமது நேரு அவர்கள் முடிவு செய்தி அமைந்துள்ளது. பூகம்பம், இடி, புயல் முதலியன ஒரே சமயத்தில் வருவதைவிடக் கொடுமையானது. அவை வந்தால், வந்த பகுதிக்குத்தான் கேடு விளையும். ஆனால், நேரு அவர்களின் முடிவானது இவைகளை எல்லாம்விட மாபெரும் கேடாக இந்த நாட்டின் 45 கோடி மக்களையும் நாட்டையும் பெரும் துக்கத்தில் ஆழ்த்தக்கூடியதாக உள்ளது. நேரு முடிவு எய்திய செய்தி யினைக்கேட்ட உடனே பெரும் அதிர்ச்சியும் தாளமுடியாத துக்கமும் அடைந்தேன். இப்போது என்ன பேசுவது என்றே எனக்குத் தோன்றவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பிரதமர் நேரு அவர்களை இழந்ததன்[illegible]து நாட்டிற்குப் பரிகரிக்கமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. நேரு அவர்களின் இடத்தைப் பூர்த்திப் பண்ணக்கூடிய வர்கள் வருவார்களா என்பதே சந்தேகம்! அவர் விட்டுச் சென்றதை எடுத்துச் செய்யக் கூடியவர்கள் தோன்றுவார்களா என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. நேரு அவர்கள் எடுத்துக்கொண்ட காரியமானது மாபெரும் காரியமாகும்.

இதனை நிறைவேற்ற, அவரால்தான் முடியும். மீண்டும் கூறுகிறேன், அவர் விட்டுச்சென்ற காரியம் இனி நிறைவேறுமா என்று எண்ணிப் பார்க்கவே வேதனையாக உள்ளது. நாட்டில் பெரியவர்கள் என்று யாரைக் கூறுவார்கள் என்றால், மக்கள் சமுதாயத்தில் செயற்கரிய காரியத்தைச் செய்தவர்களைத்தான் கூறுவார்கள். அதன்படி நேரு அவர்கள் மிகப் பெரியவர் ஆவார்.

நேரு அவர்களைக் 'கொஞ்ச காலமாகவே தங்களுக்குப் பிறகு வாரிசு யார்?' என்று கேட்டுத் தொல்லை கொடுத்து வந்தார்கள். அதுகண்டு அவர், தனக்குப் பிறகு யாரும் தோன்றமாட்டார்கள்; தோன்றவும் முடியாது என்று சொன்னால் மக்கள் எங்கு தப்பாக நினைப்பார்களோ என்று நினைத்துத்தான் 'நான் இப்போது சாகமாட்டேன்' என்று கூறினார் என்று நினைக்கிறேன். எப்போதும் செயற்கரிய காரியங்களைச் செய்தவர்களுக்கு வாரிசு ஏற்படுவதில்லை. அவர் விட்டுச்சென்ற காரியத்தைப் பெரியவர்கள் தோன்றிச் செய்வார்கள் என்று கருதிக்கொண்டு இராமல், அவர் அடிச் சுவட்டைப் பின்பற்ற எல்லோரும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நேரு அவர்கள் அருமையான திட்டத்தை நிறைவேற்ற முற்பட்டது அவருடைய திறமை என்றோ அல்லது அவருக்கிருந்த செல்வாக்கு வசதி, வாய்ப்பு காரணமாக என்றோ மாத்திரம் கூறமாட்டேன்.

இவை எல்லாவற்றையும்விட அவர் ஒரு சிறந்த தியாகி. தனக்கென்று எதையும் செய்து கொள்ளாதவர். 'தியாகம்' என்று சொல்வதற்கே பொருள் தனக்கென்று எதையும் செய்து கொள்ளாமல் தொண்டாற்றுவதுதான்.

தியாகத்தைக் கூறிப் பலன்பெறப் பார்ப்பது வெறும் கூலித் தொண்டாகும்.

நேரு அவர்கள் விட்டுச்சென்ற காரியத்தை, காமராசர் அவர்கள் எடுத்துச் செய்வார். அவரும் நேருவைப்போலவே தனக்கென்று எதையும் சேர்த்துக்கொள்ளாத தியாகியாவார். நேருவைப் போல காமராசர் அவ்வளவு விளம்பரமான தியாகியாக இல்லாவிட்டாலும், நமது நாட்டைப் பொறுத்தவரையில் அவர் ஒரு பெரிய தியாகி ஆவார்.

நேரு அவர்களின் முடிவின் காரணமாக எனது தொண்டும்கூட தடைப்பட்டுவிடக் கூடும் என்று கருதுகிறேன்.

'இனி நான் என்ன தொண்டு செய்வது? நமது தொண்டுதான் அவரும் செய்கிறார்' என்று கருதியே கண்ணை மூடிக்கொண்டு அவரது கட்சியை ஆதரித்தேன். உங்களையும் ஆதரிக்கும்படி வேண்டிக்கொண்டேன். நேரு அவர்கள்விட்டுச் சென்ற காரியம் வெற்றி பெற, பொதுமக்களாகிய நீங்களும் கண்ணை மூடிக்கொண்டு காங்கிரஸ் கொள்கையை ஆதரிக்கவேண்டும். காங்கிரசுக்கு நாட்டில் இருக்கும் எதிர்ப்புச் சக்திக்கு ஆதரவு தரக் கூடாது.

[சேலத்தில், 27-5-1964-ல் சொற்பொழிவு—'விடுதலை' 28-5-1964]

## 18. சாஸ்திரி மறைவு

சாஸ்திரி மரணத்தைக் கேட்டவுடனேயே, நேரு மரணத்தைக் கேட்டதைவிட அதிகமான அதிர்ச்சி அடைந்தேன். எதிர்காலத்தைப்பற்றி நினைக்க எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. காமராசர்தான் இதற்கு ஒரு பரிகாரம் ஏற்படுத்தவேண்டும்.



காங்கிரஸ்காரர்களும், மற்றும் நம் கழகத் தோழர்களும் அதிகமான கட்டுப்பாட்டுடன் இருந்து, காமராசர் கையை வலுப்படுத்தவேண்டியது நாட்டின் நன்மைக்கு முக்கியமான காரியமாகும்.

பாகிஸ்தான், இந்தியா ராஜி ஏற்பட்டது மிகவும் பாராட்டத் தகுந்ததும் அமைதி ஏற்படுத்தத் தகுந்ததுமான ஒரு காரியமாய் இருந்தாலும், சாஸ்திரியின் மரணமானது அவர்கள் அமைத்த கட்டடத்தையே ஆட்டி அசைத்ததுபோல் ஆகிவிட்டது.

சாஸ்திரி மறைவு பூகம்பம் போன்றது. இடிவிழுந்தால் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குத்தான் சேதம். பூகம்பம் வந்தால் ஒரு பிரதேசம் முழுவதும் சேதம் அடையும். ஆகவே சாஸ்திரி மறைவு இந்தியப் பிரதேசத்திற்கே பெரிய துக்கத்தை உண்டாக்கிவிட்டது.

['விடுதலை'-செய்தி—11-1-1966]

## 19. அண்ணா

இன்று அண்ணா அவர்கள் முடிவு எய்தி விட்டார். இந்த முடிவு தமிழ்நாட்டின் நான்கு கோடி மக்களை மாத்திரமல்லாமல் இந்தியா முழுவதிலுள்ள மக்களையும், இந்தியா மாத்திரமல்லாமல் உலகில் பல பாகத்திலுள்ள மக்களையும் பெரும் துக்கத்தில் மூழ்கடித்திருக்கும் முடிவாகும்.

அண்ணாவுக்குச் செய்த வைத்திய சிகிச்சை உலகத்திலுள்ள வேறெவருக்கும் செய்திருக்க முடியாத அரும்பெரும் சிகிச்சை என்றே சொல்ல வேண்டும். அண்ணாவுக்காகப் பயன்படுத்திய மருந்து உலகிலுள்ள பல பாகங்களிலிருந்தும் உடனடியாக டெலிபோனில் கேட்டு, ஏரோப்பிளேனில் வரச்செய்து, உடனுக்குடன் பிரயோகித்து, அவ்வப்போது அது குணமளித்தது என்று சொல்லும்படியான தன்மையில் பயன்படுத்தப் பட்டதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்க விஷயம் டாக்டர்களைப் பற்றிய விஷயங்களேயாகும். அதாவது, டாக்டர் சதாசிவம் அவர்கள் தலைமையில் டாக்டர்கள் குழுவினர் மிக மிக அதிசயமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான உணவு இல்லை; உறக்கமில்லை; இயந்திரங்கள் போல் வேலை செய்திருக்கிறார்கள். டாக்டர் சதாசிவம் அவர்கள் திறமையை அமெரிக்க டாக்டர்கள் பாராட்டினார்கள். மற்றும் புற்றுநோய் மருத்துவ மனையிலுள்ள வசதிகள்—கருவிகள்—இயந்திரங்கள் இந்தியாவிலேயே குறிப்பிடத்தக்கது என்று சொல்லலாம். இவ்வளவுடன் வேலூர் ஆஸ்பத்திரி டாக்டர்களும் சேர்ந்து பல புதிய முறைகளைக் கையாண்டார்கள். இவ்வளவும் செய்து வந்ததானது அண்ணாவின் உயிர் ஊசலாடி நம்பிக்கை அளித்துக்கொண்டே வந்தது.

அதாவது, இந்த நிலையில் படுக்கையிலிருந்த அண்ணாவுக்கு ஜனவரி 29-ம் தேதி முதல் நினைவு இழந்தது மாத்திரமல்லாமல் 'உயிருக்கு நெருக்கடி' என்பதாகத் தொடங்கி தினமும் 'நெருக்கடி' ஏற்படுவதும், பிறகு அது மாறி தெளிவர்வதுமாகி 29, 30, 31, 1, 2-ம் தேதி இரவுவரை நிலைமை இருந்துகொண்டே வந்தது. இதன் பயனாக மக்களுக்கு, 'அண்ணாதுரை நெருக்கடியான நிலையில் இருந்தாலும் சாகமாட்டார். எப்படியும் பிழைத்துக் கொள்ளுவார்' என்கின்ற எண்ணம் ஏற்பட்டுச் சிறிது சிறிதாகக் கவலை குறைந்து வந்தது என்றே சொல்லலாம். இந்த நிலையில் 2-ம் தேதி மாலைக்குப் பிறகு திடீரென்று அபாய நிலை வளர்ச்சியடைய நேரிட்டு, நடு ஜாமத்தில் அண்ணாவின் உயிர் பிரிந்து விட்டது. சுமார் இரவு 12-30 மணிக்கு எனக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது. உடனே நானும் எனது துணைவியாரும் ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்று, துக்கத்தோடு அண்ணாவின் சடலத்தைக் கண்டுவிட்டு, ஜாகைக்கு வந்து சேர்ந்தோம்.

அண்ணாவின் ம[illegible]ற்கு மாபெரும் நஷ்டம் என்றே சொல்ல வேண்டும். தமிழ் நாடும் தமி[illegible] அண்ணா ஆட்சியில் எவ்வளவோ அதிசய

படிப்பகம்

www.padippakam.com



மான முன்னேற்றமடையக் காத்திருந்தது. அவரும் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி அதை உருவாக்குவதே தனது கடமை என்று கருதியிருந்தார். அதற்கு எடுத்துக் காட்டாக, 'நான் இந்த (என்னுடைய) மந்திரி சபையையே பெரியாருக்குக் காணிக்கையாக வைத்து விட்டேன்' என்று கூறி இருக்கிறார். அப்படி என்றால், 'பெரியார் கொள்கைப்படி நான் நடப்பேன்' என்று சொன்னதாக நான் கருதினேன்.

அதற்கேற்ப, அவர் செய்த அரும் பெரும் காரியங்களில் முக்கியமானது 'சுயமரியாதைத் திருமண செல்லுபடிச் சட்டம்' ஆகும். அதில், கடவுளுக்கோ, மதத்திற்கோ, சாஸ்திரத்திற்கோ இடமில்லை என்பதாகும். இது தமிழ்நாட்டிற்கு மாத்திரமல்லாமல், உலகத்திற்கே மாபெரும் துணிச்சலான காரியம் என்று கருதப்பட்டது. மற்றும், 'பொதுப் பணி இடங்களிலுள்ள கடவுள் படங்களை அப்புறப்படுத்தப்பட வேண்டியது' என்கின்ற அரசு கட்டளையானது மிக மிகத் துணிச்சலான சீர்திருத்தமாகும்.

மற்றும், 'இந்தி மொழி தமிழ் நாட்டுக்குக் கட்டாயம் என்பது ஒப்புக்கொள்ள முடியாது' என்று சட்டசபை மூலமே தீர்மானம் செய்ததானது, தனது பதவி போனாலும் சரியென்று துணிவு கொண்ட காரியமாகும். இவை தவிர, உத்தியோகங்களில், பதவிகளில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாத்ததாகும்.

இதிலுள்ள ஒரு குறிப்பிடத்தக்க அதிசயம் என்னவென்றால், இவைகள் செய்யப்பட்ட பிறகும் நாட்டில் எல்லாக் கட்சியாருடனும் எல்லா மக்களுடனும் மிக்க நேசமாகவும், அன்புக்குரியவராகவும் இருந்து வந்ததாகும்.

அண்ணாவின் குணம் மிக மிகத் தாட்சண்ய சுபாவமுடையது என்றுதான் சொல்ல வேண்டும். யாரையும் கடிந்து பேசமாட்டார். தன்னால் முடியாத காரியமாய் இருந்தாலும் முடியாது என்று சொல்ல மிகவும் தயங்குவார். நல்ல ஆராய்ச்சி நிபுணர் என்றுதான் சொல்லவேண்டும்.

காங்கிரஸ் ஸ்தாபனம் என்பது அதிகார சக்தி கொண்ட ஸ்தாபனமாகும். அண்ணாவின் முன்னேற்றக் கழக ஸ்தாபனமானது அதிகார சக்தி இல்லாதது என்பதோடு, அன்பினாலேயே கட்டுப்படுத்தப்பட்ட ஒரு நட்பு நிலை ஸ்தாபனமாகும். இதற்கு உதாரணம் என்னவென்றால், தி. மு. க.-வில் ஏமாற்றமடைந்த எத்தனையோ பேர் இருந்தாலும் கழகத்திற்குள் ஒரு பூசலோ, தனிப் பிரிவோ, கருத்து வேற்றுமைக் கோஷ்டியோ இல்லாமல் ஒரு குடும்பம் போலவே வாழ்ந்து வருகின்றார்கள் என்றால், இதற்கு அண்ணா நடந்துகொள்ளும் தன்மையேதான் காரணமாகும். இவைகளையெல்லாம் விட, என்னைப் பற்றியும் சில இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

அதாவது, நான் தி. மு. க.-வுக்கு—அது தேர்தலில் வெற்றி பெறும் வரை நான் அக் கழகத்திற்குப் படு எதிரியாக இருந்தவன். தேர்தலுக்குப் பிறகு அண்ணா என் எதிர்ப்பை மறந்து, அடியோடு மறந்து மிக்கப் பெருந் தன்மையோடு நட்புகொள்ள ஆசைப்பட்டு—என்னை அவர் பிரிவதற்கு முன் இருந்த மரியாதையுடன் நண்பராகவே நடத்தினார். அதன் பயனாக எனக்கும் மக்களிடையே அதிக மதிப்பு ஏற்பட்டதுடன் என் அந்தஸ்தும் அதிகமாயிற்று என்றுகூடச் சொல்லலாம். அதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்க வேண்டியதும் என் கடமையாகிவிட்டது.

இதன் பயன் தி.மு.க.-வை என்றென்றும் பகுத்தறிவுக் கழகமாகவே இருக்க உதவும் என்று நினைப்பதோடு, அண்ணா என்னிடம் காட்டிய அன்பும், ஆதரவும், அளித்த பெருமையும் தி.மு.க.-வுக்குள் எந்தவிதக் கருத்து வேற்றுமையையோ, கட்சி மனப்பான்மையையோ கழகத்திற்குள் புகுத்தவிடாமல் கழகம் பெருமையோடு விளங்கவும், மக்களுக்குத் தொண்டாற்றவும் பயன்படும் என்று உறுதி கொண்டிருக்கின்றேன். அதற்கேற்ற தன்மைகளை அண்ணா தம்பிமார்களுக்கு ஊட்டியும் இருக்கிறார் என்பதில் ஐயமில்லை.



இப்படிப்பட்ட ஒரு அற்புத குணம் படைத்த அண்ணா முடிவானது தமிழருக்கும் தமிழ் நாட்டிற்கும் பரிகாரம் செய்ய முடியாத நட்டமேயாகும்.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் ஏற்பட்ட அண்ணாவின் இந்த முடிவு இந்த நாட்டில் மற்ற எவருக்கும் எளிதில் கிடைக்க முடியாத உயர்தர முடிவேயாகும்.

அண்ணா நல்ல பதவியில், நல் வாழ்வில் எல்லா மக்களாலும் கொண்டாடி, புகழ்ந்து, பாராட்டி, முடிவைப்பற்றித் துக்கம் கொண்டாடும்படியான அரிய வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காத வாய்ப்பு என்றுதான் சொல்லவேண்டும்.

மனிதன் தன் வாழ்நாளில் அடைந்த வெற்றிக்கு, மேன்மைக்கு அறிகுறி, முடிவின் போது அடையும் புகழ்தான் என்பது எனது கருத்து. அதுபோலவே, அண்ணா அடைந்த புகழ் மிகமிகப் பாராட்டுதற்குரியதாகும்.

மற்றும், இனியும் அவர் புகழ் ஓங்க வேண்டுமானால், 'அண்ணாவுக்குப் பிறகும் அண்ணா இருப்பதுபோலவே காரியங்கள் நடைபெற்று வருகின்றன' என்று சொல்லப்படும் நிலையால்தான் முடியும். தி.மு.கழகத் தோழர்கள் யாவரும் எனது நண்பர்களும் அரும் பெரும் கூட்டுப் பணிக்காரர்களுமாக இருப்பதால் நான் அவர்களை எனது சொந்த தி. க. தோழர்களைப் போல, கூட்டுப் பணியாளர்களைப் போலவே கருதுகின்றேன்.

கடைசி நேரத்தில் அண்ணா உடல் நிலை தேறி அவர் பிழைத்துக் கொள்வார் என்கின்ற நம்பிக்கை ஏற்பட்டவுடன் கடவுள் பிரார்த்தனைகளும், பூசைகளும் வளர்ந்ததுடன் ஜோசியர்கள் எல்லாம் ஜோசியம் நல்ல நம்பிக்கையுடன் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். அவர்களும் ஏமாற்றம் அடையும்படி முடிவு ஏற்பட்டு விட்டதானது மிக்க பரிதாபத்திற்குரியதாகும்.

பொதுமக்கள் எல்லோரும் மாற்றுக் கட்சியாளர்கள் உட்பட இந்த மாபெரும் நட்டத்திற்குப் பரிகாரமாக அந்தத் (தி. மு. க.) தலைவர்களுடன் ஒத்துழைத்து, அதனால் மக்களுக்கு வேண்டிய எல்லா நலன்களையும் பெறப் பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

['விடுதலை'–தலையங்கம்—3-2-1969]

அண்ணா முடிவெய்திவிட்டார். அண்ணா வாழ்க! அதாவது அண்ணா கொள்கை வாழ்க! நோய் வருவதும், முடிவெய்துவதும் மனித ஜீவனுக்கு இயற்கையேயாகும். ஆனால், அதற்காக மக்கள் வருந்துவதும், துக்கம் கொண்டாடுவதும் மக்களுக்கு ஒரு சம்பிரதாயமேயாகும். என்றாலும், இவ் விஷயத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் சம்பிரதாயத்தையெல்லாம் தாண்டி, மக்களின் உச்சநிலைத் துக்கக் கொண்டாட்டத்தைப் பெற்று விட்டார்.

யானறிந்தவரை, சரித்திரம் கண்டவரை அண்ணா முடிவுக்குப் பொதுமக்கள் காட்டிய துக்கக் கொண்டாட்டத்தில் 4-ல், 8-ல் ஒரு பங்கு அளவுகூட வேறு எவருடைய முடிவுக்கும் காட்டியதான நிகழ்ச்சி கிடையவே கிடையாது.

அந்த அளவுக்கு அண்ணா தமிழ்மக்கள் உள்ளத்தில் இடம்பெற்று விட்டார்கள். இது அண்ணாவின் இரண்டாண்டு ஆட்சியால் தமிழர்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சி என்பதோடு, இவ் விஷயத்தில் மனித வாழ்வில் வேறு யாருக்கும் கிடைக்கமுடியாத பெருமையை அண்ணா அடைந்துவிட்டார். எனவே, அண்ணாவின் நற்குண நற்செய்கை, பெருமைக்கு இதற்குமேல் எடுத்துக்காட்டு காட்டமுடியாது.

இன்றும் மக்களுக்கு உள்ள கவலையெல்லாம்—நானறிந்தவரை அண்ணா முடிவடைந்துவிட்டாரே, இனி ஆட்சி எப்படி இருக்குமோ என்பதுதான். நான் சொல்லுவேன், 'அண்ணா இறந்துவிட்டார்; அண்ணா வாழ்க!' என்பதற்கிணங்க, இனி நடை

படிப்பகம்

www.padippakam.com



பெறும் ஆட்சியில் எவ்வித மாறுதலும் திருப்பமும் இல்லாமல் அவரது கொள்கை வளர்ந்து ஆட்சியாளர்கள் தாங்கள் தமிழர்கள், தமிழர்களுக்காகத் தமிழர்களாக ஆட்சி செய்கிறோம் என்கின்ற உணர்ச்சியோடு, மற்ற இனத்தார் காட்டும் இன உணர்ச்சியைத் தங்களுக்கு வழிகாட்டியாக வைத்துக்கொண்டு, அதன்படி நடந்துகொள்வார்கள் என்றே கருது கின்றேன். இயற்கையும் அவர்களை அந்தப்படி நடக்கச்செய்யும் என்பது உறுதி. அதற்காக யாரும் கவலைப்படவேண்டாம் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

அண்ணா நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் மேன்மைதங்கிய கவர்னர் பெருமானும். மாண்புமிகு மந்திரிமார்களும் பட்ட கவலையும் காட்டிய ஆறுதல் ஆதரவுகளும், சிகிச்சை செய்வதில் டாக்டர் சதாசிவம், கிருஷ்ணமூர்த்தி முதலிய வேலூர் டாக்டர்களும் எடுத்துக் கொண்ட மனிதத் தன்மைக்கு மேற்பட்ட முயற்சியும், 15 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி ஒழுங்காக நடத்தியதில் போலீஸ் அதிகாரிகளும், சிப்பந்தி களும் நடந்துகொண்ட பாதுகாப்புத் தன்மைகளும், ரேடியோ நிலையத்தாரும் பத்திரிகைக் காரர்களும் விஷயங்களை அவ்வப்போது மக்களுக்குக் கூடியவரை தெரிவித்துவந்த நேர்மையும் மிகமிகப் பாராட்டத்தக்கதும் நன்றி செலுத்துவதற்கு உரியதுமாகும்.

தமிழ்மக்கள் அண்ணாவிடம் காட்டிய அன்பு போலவே, இன்றைய நமது மந்திரிகள் எல்லோரிடமும் காட்டி பரிவாய் நடந்துகொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

[4-2-1969 வானொலி உரை—'விடுதலை' 5-2-1969]

## 20. ரஸ்ஸல் மறைவு

'பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் மறைவு, நாத்திக உலகத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.'

—தந்தை பெரியார்

['விடுதலை' 4-2-1970]

## 21. தி. பொ. வேதாசலனார்

வக்கீல் அய்யா என்று பலராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்த நண்பர் தி. பொ. வேதாசலம் அவர்கள் காலமானார் என்ற செய்தி நமக்கெல்லாம் அதிர்ச்சியையும் தீராத துக்கத்தினையும் தரக்கூடிய செய்தியாகும்.

இந்தத் திருச்சி நகரத்தில் நமது இயக்கத்திற்குத் தூண் போன்றவர் அவர். நான் இந்தத் திருச்சி நகரத்தில் வந்து இதையே என் சொந்த ஊராகக் கொள்வதற்கு முழுமுதற் காரணம் நண்பர் திரு. வேதாசலம் அவர்கள் ஆவார்கள்! நமது இயக்கத்தின் பேரிலும் என் பேரிலும் மிகுந்த பற்றுக்கொண்டு உழைத்தவர்.

இடையிலே ஏற்பட்ட கோளாறு காரணமாக அவர் என்னிடம் கருத்து வேறுபாடு கொண்டு ஒதுங்க நேரிட்டபோதிலும் இயக்கத்திற்கும் நம் கொள்கைக்கும் அவர் ஆற்றிய பணியும் தொண்டும் அளவிடற்கரியது.

['விடுதலை'—11-10-1971]

தோழர்களே!

நமது அருமை நண்பர் திரு. வேதாசலம் அவர்கள் இயற்கை எய்திவிட்டார். அவர் நமது சமுதாயப் பணியில் பங்குகொண்டு சிறப்பாகப் பணியாற்றியவர். எனக்கு 35 ஆண்டு களுக்குமேல் தெரியும். நமது திராவிடர் கழகத்திற்குத் தலைவராக இருந்தவர்.



நான் முதலில் திருச்சிக்கு வந்தால் கலியபெருமாள் அவர்கள் வீட்டில் தங்குவேன். பின் நண்பர் விசுவநாதன் அவர்கள் வீட்டில் தங்குவேன். பிறகு நீண்ட நாட்கள் நண்பர் வேதாசலம் அவர்கள் வீட்டில்தான் இங்கு வந்தால் தங்கி, இயக்கக் காரியங்களைக் கவனிப்பேன். அவருடைய வீட்டிலுள்ளவர்கள் மிக அன்போடு நடந்துகொள்வார்கள். நமது இயக்கம் வளர்ச்சியடைய மிகவும் பாடுபட்டார். நமது இயக்கத் தூண்களில் ஒருவர் என்று சொல்லக்கூடியவர்; மிக நேர்மையானவர்; சாந்தமான குணமுடையவர். 35 ஆண்டுகளுக்குமேல் அவருடன் பழகியிருக்கிறேன் என்றாலும் அவர் ஒரு முறைகூட கோபமடைந்து நான் பார்த்ததில்லை. திருச்சி மாவட்டம் மட்டுமின்றி தமிழகம் முழுமைக்கும் பணியாற்றியவர். நேற்றுப் பொதுக்கூட்டத்தில்தான் அவர் காலமான செய்தி கிடைத்தது. மிகவும் அதிர்ச்சியுற்றேன். நான்கு, அய்ந்து ஆண்டுகளுக்கு மேலாக உடல் நலமற்றிருந்தார் என்றாலும், இயற்கை எய்தும்படியான அளவிற்கு உடல் கோளாறு இல்லை என்றாலும், இருதய நோயால் திடீரென்று இயற்கை எய்திவிட்டார்.

இயற்கை எய்துவது என்பது எல்லோருக்கும் நேரக்கூடியதேயாகும். அதற்கு நம்மால் என்ன செய்யமுடியும்? நாம் மூடநம்பிக்கைக்காரரல்லர், அவர் ஆத்மா சாந்தி யடைய வேண்டுமென்று சொல்வதற்கு.

இயற்கை எய்துவது என்பது எல்லோருக்கும் நேரக்கூடியதேயாகும். நண்பர் வேதாசலம் அவர்கள் இயற்கை எய்தியதானது நம் சமுதாயத்திற்குப் பெருநஷ்டம். அதனை நாம் உணருகின்றோம்; அதற்காக வேதனைப்படுகின்றோம். நமது மனம் நிறைந்த அனுதாபத்தை அவர்கள் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருமைக்குரிய மாண்புமிகு வேதாசலம் அவர்கள் நமது இயக்க வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர்; அவர் மறைந்துவிட்டார். அவர் மறைவின் பயனாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும்—பின்பற்ற வேண்டும் என்பதெல்லாம், அவரைப் போல நாமும் பொதுத் தொண்டிற்காக ஏதாவது செய்யவேண்டும்—பொதுத்தொண்டு செய்வதுதான் கடமை எனக் கருத வேண்டும் என்பதே. மேல்நாட்டில் பதவியைவிடப் பொதுத் தொண்டைத்தான் மதிக்கின்றார்கள். மனிதன் தனக்காக வாழ்வது என்றில்லாமல் மனித சமுதாயத்திற்கு என்று வாழ வேண்டும்.

[தென்னூர் இடுகாட்டில், 11-10-1971-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-10-1971]

## 22. இராஜாஜி

நண்பர் இராஜாஜி அவர்கள் முடிவெய்திய நிகழ்ச்சி எல்லையற்ற துக்கத்துக்குரிய நிகழ்ச்சியாகும். சம்பிரதாயத்திற்கல்ல; உண்மையாகவே சொல்லுகிறேன், இராஜாஜி அவர்கள் ஒப்பற்றவர்; இணையற்றவருமாவார். கொள்கைக்காகவே வாழ்ந்து, கொள்கைக் காகவே தொண்டாற்றி முடிவெய்திய பெரியார் ஆவார். அவரது இழப்பு பரிகாரம் செய்ய முடியாத இழப்பாகும்.

தமிழ் நாட்டில் ஒப்பிலா மணியாய் வாழ்ந்து அரும்பெரும் காரியங்களைச் சாதித்த பெரியார் இராஜாஜி 95ஆம் வயதில் முடிவெய்தி மறைந்துவிட்டார்.

அவரது பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு தெரிவிக்கவேண்டுமானால், இராஜாஜி இல்லாது இருந்தால் 'மகாத்மா காந்தி'யே இருந்திருக்கமாட்டார். அதுமாத்திரமல்ல; இந்திய தேசிய காங்கிரசே இருந்திருக்க மாட்டாது.

தமிழ் நாட்டில் பார்ப்பனருக்கு எதிராகத் தோன்றிய ஓர் எரிமலையை, மகாத்மா காந்தி என்னும் ஒரு புயல் மழையைக்கொண்டு தான்அவித்து, பார்ப்பனரை இருக்கச் செய்தார். இவை இன்றைக்கு அதாவது, சுமார் 40 ஆண்டுகளுக்கு உட்பட்ட மக்களுக்குத் தெரியாத சேதியாகும். இராஜாஜி அவர்களால்தான் திராவிட நாட்டில் சமபந்தி போஜனம்



படிப்பகம்

www.padippakam.com



என்பதும், அதைவிடத் தீவிரமான சாதிபேதம் என்பதே இல்லாமல் யார் வீட்டிலும் யாரும் உணவு அருந்தலாம் என்கிற தன்மையும் ஏற்பட்டது. நான் அறிய இராஜாஜி அவர்கள் 1910-லேயே பார்ப்பனரல்லாத மக்களுடன் சமபந்தி போஜனம் செய்வார்; 1915-ல் பார்ப்பனரல்லாத மக்கள் வீட்டில் உணவு அருந்துவார். இது அவருக்கு மாத்திரம் ஏற்படுத்திக் கொண்ட சாதனை என்றாலும், காங்கிரசிலேயே எல்லாப் பார்ப்பனர்களும் சமபந்தி போஜனம் அருந்தும்படி செய்தவர் இராஜாஜி அவர்களே ஆவார்.

காந்தியாருக்கும்கூட சமபந்தி போஜனத்தில் நம்பிக்கை இல்லாத காலத்திலேயே, யார் வீட்டிலும் யாருடனும் இருந்து உணவு கொள்ளும் தன்மையை ஏற்படுத்தினார்.

காங்கிரசில் பெரிய தீவிர தேசபக்தர், மகா தியாகி என்று சொல்லப்பட்ட வ. வே. சுப்ரமணிய அய்யர் என்கிற (போலி) தேசபக்தர் வருணாசிரமப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்த காலத்தில், காங்கிரசில் தான் மாத்திரம் அல்லாமல் அனேக பார்ப்பனரையும், பார்ப்பன இளைஞரையும் யாருடனும் யார் வீட்டிலும் உணவு அருந்தச் செய்தார், இராஜாஜி. எது எப்படி இருந்தாலும், சமுதாயத் துறையில், இம் மாபெரும் சீர்திருத்தம் செய்த பெருமை இராஜாஜிக்குத்தான் உண்டு.

அதுமாத்திரம் அல்ல. கலப்புத் திருமணம் என்னும் தன்மையைத் துணிந்து ஆதரித்தவர் இராஜாஜி அவர்களே ஆவார். 1920-ல் என்று கருதுகிறேன்; அருண்டேல்—ருக்குமணி அம்மையார் விவாகத்தைப் பார்ப்பனச் சமுதாயமே கட்டுப்பாடாக எதிர்த்த காலத்தில் இராஜாஜி அவர்கள் அதை ஆதரித்தார்; மற்றும், தனது பெண்ணையே பார்ப்பனரல்லாதவருக்கு மணம் செய்து கொடுத்தார். ஆகவே, சமுதாயத் துறையில் மாபெரும் சீர்திருத்தம் செய்தவர் இராஜாஜியே ஆவார்.

இந்தக் காரணங்களால் இராஜாஜி அவர்கள் சென்னைப் பார்ப்பனர்களான கஸ்தூரி ரங்க அய்யங்கார், சீனிவாச அய்யங்கார், ரெங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி அய்யர் முதலிய—பார்ப்பன ஆதிக்கப் பணிக்காகவே வாழ்ந்த பார்ப்பனக் கும்பலுக்கு எதிரியாக இருந்தார்.

இவ்வளவு என்ன; உற்சாகக் காரணமாகத் தனிப்பட்ட முறையில் சமுதாயத் தொண்டில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த என்னை, முழுக்க முழுக்கச் சமுதாயத் தொண்டனாக ஆக்கிய பெருமை இராஜாஜி அவர்களுக்கே உரியதாகும்.

என்னை இராஜாஜி அவர்கள்தான் முதலாவதாக கோயமுத்தூர் ஜில்லா காங்கிரஸ் செகரட்டரி ஆக்கினார்; பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செகரட்டரி ஆக்கினார்; பிறகு அவர்தான் என்னை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக ஆக்கினார். என்னிடம் அவர் முழு நம்பிக்கை வைத்து, என்னையே அவர், 'நமது தலைவர் நாயக்கர்' என்று அழைத்ததோடு, பார்ப்பனரில் வெகுபேரை என்னை 'தலைவர்' என்று அழைக்கும்படி செய்தார்.

நாங்கள் நாலைந்து ஆண்டுகள் இரண்டறக் கலந்த நண்பர்களாக இருந்தோம்; சகல ரகசியமான காரியங்கள் பற்றிப்பேசி ஒரு கருத்துடையவராக இருந்தோம்.

என்னைப் பல விஷயங்களில் என் தகுதிக்குமேல் கருதி வந்ததோடு, பிரச்சாரமும் செய்து வந்தார். உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன். இன்றைய மாஜிகவர்னர் திரு. கே. சந்தானம் அவர்களிடத்தில் என்னைப்பற்றிப் பேசும்போது, 'Mr. Santhanam! Don't think that Naickers life is an ordinary life' என்று சொல்லுவார்.

இன்னும் மற்ற பல பார்ப்பன நண்பர்களுக்கு என்னைப்பற்றிச் சொல்லுவார்.

இவ்வளவும் ஏன் சொல்லுகிறேன் என்றால்—என் கொள்கை, கருத்து, செய்கை முதலியவைகளைக் கூடவே இருந்து அறிந்தவர்; அவ்வளவையும் ஏற்றுப் பாராட்டிப் பேசியவர் என்பதைத் தெரிவிப்பதற்காகவே ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com



3-1-1962-ல், சென்னை பெரியார் திடலில்

படிப்பகம்

www.padippakam.com



பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் பின்புறத் தோற்றம் (1962)



இராஜாஜி என்னோடு உள்ளவரை அவர் ஒரு பகுத்தறிவுவாதியாகவே இருந்தார். மற்றும், அவர் பொதுவுடைமைக் கருத்தையும் ஆதரித்தவர். வக்கீல் தொழிலிலும், அதிகாரிகளிடம் விளக்குகையில், 'கோர்ட்டார் அவர்களே! எனது கட்சிக்காரரை நிரபராதி என்று சொல்ல நான் இங்கு வரவில்லை; இவரைக் குற்றவாளி என்று முடிவு செய்ய வேண்டிய அளவுக்குச் சட்டப்படியான ஆதாரம் இல்லை' என்றுதான் சொல்லுவார். காந்தியை அடிக்கடி திணறவைத்து விடுவார். இதனாலேயே காந்தியாரும் இராஜாஜி அவர்களின் ஆமோதிப்பைப் பெற்றே எந்தக் கருத்தையும் வெளியிடுவார்.

'இந்தி' விஷயத்தில் பிற்காலத்தில் அவருக்கு அது கட்டாயப்படுத்தத் தக்கதல்ல என்கின்ற கருத்து பலமாக இருந்தது. மற்றும் இராஜாஜி அவர்களுக்கு 'ஸ்தலசுய ஆட்சி' என்பது மக்களைக் கெடுத்து விடுகிறது; ஆதலால் தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி முதலிய ஸ்தாபனங்கள் தேவை இல்லை என்ற கருத்தைக் கொண்டவர்.

நம் நாட்டு அரசியல், வகுப்பு உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அரசியலாக ஆகிவிட்டதால் அரசியல் காரணமாக வகுப்புக்களுக்குக் கேடு வரக்கூடாது என்ற கருத்தால்—நம்முடைய சில கருத்துக்கள், காரியங்கள் இராஜாஜி அவர்களது ஆதரவுக்கு உரியதல்லதாக இருக்கலாம் என்றாலும், பொதுவில் இராஜாஜி அவர்களை நாம் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது, நமக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் பரிகாரம் செய்ய முடியாத இழப்பே ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

['விடுதலை'—26-12-1972]

# 3. பிறந்தநாள் செய்திகள்

## 1. பொதுத் தொண்டு

பொதுத் தொண்டு, அதாவது உண்மையான பொதுத் தொண்டு தன்னை, தன்னலத்தை அடியோடு மறந்து, தன்னைத் தவிர்த்த மற்ற மனித சமுதாய நலத்திற்கென்றே மனிதன் பொதுத் தொண்டு செய்வது என்பது இயற்கைக்கு மாறுபட்ட காரியமேயாகும்.

ஜீவன் என்பதே சுயநலம் என்ற தத்துவத்தைக் கொண்டதேயாகும்.

எந்த ஜீவனும் எப்படியாவது தான் வாழவேண்டும் என்ற அடிப்படையில்தான் வாழ்கிறது—ஜீவிக்கிறது என்கின்ற தன்மையில்தான் வாழ்கிறது; அதற்கேற்றபடிதான் நடக்கிறது; இதற்கு மாறான ஜீவனைக் காண முடியாது.

மனித ஜீவனும் இதே தத்துவத்திற்கு, நியதிக்கு ஆட்பட்ட ஜீவனேயாகும்.

மனிதனுக்குப் பொதுத் தொண்டு செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு அவசியம் வேண்டுமே! அப்படி என்ன அவசியமிருக்கிறது?

பிறந்த மனிதன் வாழவேண்டும். முதலாவதாக உயிர் வாழவேண்டும். இது குழந்தைப் பருவத்திலேயே ஏற்பட்டு விடுகிறது. உயிர் வாழவேண்டுமென்றால் ஜீவிக்க வேண்டும். ஜீவிக்க வேண்டுமென்றால், உணவு கொள்ளவேண்டும். இந்த விளக்கம் குழந்தைகளுக்கு ஏற்படாதுதான். ஆனால், அதற்கு ஆகவே பசி என்கிற உபாதை—நோய் (பசி நோய்) இயற்கையாகவே ஏற்பட்டு, அழுவது, அலைவது என்கின்ற தன்மை இருந்து வருகின்றது. அறிவு வந்த மனித ஜீவனும் எப்படியாவது உணவு கொள்ள வேண்டும் என்கின்ற ஆசைக்காக, அவசியத்துக்காகவே வாழ வேண்டியவனாகி விடுகிறான்.

படிப்பகம்

www.padippakam.com



பிறகு, உணவு பெற்று திருப்தியடைந்த பிறகு உறக்கத்திற்குப் பாடுபடுகிறான். பிறகு படிப்படியாக உடை, தங்குமிடம், அதற்குப் பிறகு காம உணர்ச்சிக்குப் பரிகாரம். இவ்வய்ந்தோடு மனிதனின் இயற்கைத் தேவை முடிந்துவிடுகிறது.

பிறகு சுற்றுச் சார்பு—'சார்ந்ததன் வண்ணம்' (சவகாசம்) ஊர் நடப்பு முதலியவைகளால் படிப்படியாய் ஆசை, இயற்கையான ஆசை ஏற்படுகிறது. இது கைகூடுவதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்யத் துணிந்துவிடுகிறான். இதுவும் மனித இயற்கையாகிவிடுகிறது.

இந்த இயற்கை மனிதனுக்குப் பிள்ளை, குட்டி, உடைமைகளை உண்டாக்கிவிடுகிறது. இவைகளைக் காப்பாற்றுவதும் இயற்கையேயாகிவிடுகிறது. இவற்றிற்கும் மேலாக மனிதனுக்குக் கவுரவம், பெருமை, புகழ் வேண்டியதாக ஆகிவிடுகிறது. பிறகு அதுவும் இயற்கையாகிவிடுகிறது.

இவ்வளவு இயற்கைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய மனிதன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; செய்தாக வேண்டும் என்கின்ற தத்துவம் மனிதனுக்குச் சட்டமாய் விளங்குகின்றது.

இவற்றிலிருந்து, இந்தச் சட்டத்திற்குப் புறம்பான சமுதாய மனிதன் உலகத்திலேயே கிடையாது என்பது எனது தாழ்மையான கருத்து. அப்படி யாராவது இருந்தால் அது இயற்கைக்கு விரோதமான தோற்றம் என்றுதான் சொல்லவேண்டும். ஏன் சொல்ல வேண்டுமென்றால், அப்படி இயற்கைக்கு விரோதமாய் இருக்க என்ன அவசியம் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், அந்தப்படி இருக்கச் சாதாரண நிலையில் யாரும் இருப்பதாய்க் காணப்படமாட்டார்கள்.

மேற்கண்ட மனிதனின் இயற்கைத் தன்மைகளான தேவைகள் பூர்த்தியாக மனிதன் எது வேண்டுமானாலும் செய்து பூர்த்தி செய்துகொள்வது மனித இயற்கை என்று சொல்லப்பட்ட எது வேண்டுமானாலும் என்பதில் அடங்கிய பல காரியங்களில் பொதுத்தொண்டு என்பதும் ஒன்றாகும்.

அதாவது, கக்கூசு எடுப்பதும் பொதுத்தொண்டேயாகும். ஆனால், எதற்காக அந்தப் பொதுத்தொண்டு செய்யப்படுகிறது என்றால், மேற்கண்ட இயற்கைத் தேவைகள் பூர்த்தியாவதற்கேதான் என்பது போலவே மனிதன் பொதுத்தொண்டையும் ஒரு சாதனமாகக் கைக்கொள்ளுகிறான். இந்தப் பொதுத்தொண்டுகளில் தாசிப் பிழைப்பும் ஒரு பொதுத்தொண்டுக் காரியம்தான். வக்கீலும் ஒரு பொதுத்தொண்டுக்காரன்தான். வியாபாரியும் ஒரு பொதுத்தொண்டுக்காரன்தான். அதுபோலவே, அரசியல், சமுதாய இயல், தெய்வீக இயல், பத்திரிகை இயல், நடிப்பு இயல் முதலிய காரியங்களில் ஈடுபடுபவர்களும் பொதுத்தொண்டுக்காரர்கள்தாம். இவர்கள் எப்படிப்பட்ட பொதுத்தொண்டுக்காரர்கள் என்றால், மேலே காட்டப்பட்ட மனித வாழ்வுக்காகச் செய்யப்படும் இயற்கைக் காரியங்கள் என்பவைகளில், இந்த இயற்கைக் காரியங்களை, தேவைகளைப் பூர்த்தி செய்ய எதுவேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற சட்டப்படி ஏற்பட்ட பொதுத் தொண்டர்களேயாவார்கள்.

இந்த, மேலே காட்டிய தாசி, வக்கீல், வியாபாரி, அரசியல், சமுதாய இயல், தெய்வீக இயல், பத்திரிகை இயல் முதலிய துறைகளில் ஜீவனம் வைத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு ஏற்பட்ட இயற்கையான குணம் என்ன வென்றால், இவர்கள் இத்தனை பேர்களுக்கும், இத்தனை பேர்களிடத்திலும் உண்மை, ஒழுக்கம், நாணயம், நேர்மை, நன்றி, மானம், ஈனம், தயவுதாட்சண்யம் முதலிய 'நற்குணங்கள்' என்று சொல்லப்படுகிற எந்தக் குணமுமே இருக்காது; இருக்கமுடியாது; இருந்தால் அது இயற்கைக்கு விரோதமேயாகும்.

இது எப்படிப் பார்த்தால் விளங்கும் என்றால், இதில் ஈடுபட்டவர்கள் யார்? இவர்களுக்கு ஜீவனம் என்ன? இவர்கள் இதற்குமுன் எந்த நிலைமையில் இருந்தவர்கள்? என்ன பரம்பரை? வாழ்க்கையில் முதல் முதல் புகும்போது என்ன தொண்டில் இறங்கி



னார்கள்? பிறகு இதற்கு ஏன் வந்தார்கள். இவர்கள் பொதுத்தொண்டில் புகும்போது என்ன அந்தஸ்து? என்ன தகுதி? எவ்வளவு செல்வம்? அப்போதைய கொள்கை என்ன? எத்தனை மாற்றம் அடைந்தார்கள்? அதனால் என்ன அடைந்தார்கள்? 'பொதுத்தொண்டின்' உண்மையான லட்சியம் ஏதாவது உண்டா? அப்படியானால், அந்த லட்சியம் என்ன? அந்த லட்சியம் யாருக்காக? எந்த மக்களுக்காக? அதில் உண்மை நேர்மை உண்டா? இப்படிப்பட்ட தொண்டுகளால் இவர்கள் அடைந்த நட்டம் என்ன? இலாபம் என்ன? இவைகளில் எது பெரிது? இவர்களுக்குப் பெண்டுபிள்ளைகள் இருக்கின்றனவா? அவர்கள் படிப்பு, வாழ்வு ஆகியவைகளுக்கு இவர்களுக்கு உள்ள சொந்த வசதிவாய்ப்பு என்ன? இவர்களது இன்றைய வாழ்வுக்கு எந்த வழியில் தேடிய, அடைந்த பொருளைக் கொண்டு என்ன செய்யப்பட்டது?—என்பது போன்ற பரீட்சைகளை வைத்துப் பார்த்தால் எந்தப் பொதுத்தொண்டனும் மிஞ்சவேமாட்டான்.

அனேகமாய் எல்லாப் பொதுத்தொண்டனும் கன்னக்கோல், கத்தரிக்கோல் பொதுத் தொண்டர்களைவிடக் கீழ்ப்பட்ட தொண்டர்களேயாவார்கள்.

பொதுவாகச் சொல்லப்படவேண்டுமானால், நாட்டில் மனித சமுதாயத்தில் இன்று நிலவி வாழ்ந்து வளர்ந்து பெருகிவரும் எல்லாக் கூடா ஒழுக்கங்களுக்கும், பொய், பித்தலாட்டம், நாணயக் குறைவு, துரோகம், சதி, நன்றிகெட்டதனம் முதலான ஈனக் காரியங்களுக்கும் இந்தவகைப் பொதுத்தொண்டே காரணம் என்பேன்.

பொதுத்தொண்டின் இலட்சணம் இந்த மாதிரியாக அடைந்துவிட்டதாலேயே பொதுவாக மனித சமுதாய ஒழுக்கம், நேர்மை, நாணயம் முதலிய தன்மைகள் ஒழிந்து நேர் மாறான தன்மைகள் வளர்ந்துகொண்டே வருகிறது.

உதாரணமாக, கடவுள் தன்மை என்பது பொது அயோக்கியத் தன்மைகள் தஞ்சமடையப் பாதுகாப்பு ஸ்தலமாகிவிட்டது.

தண்டனை (ஜெயில்) தன்மை—அயோக்கியர்கள், காலிகள் இளைப்பாறி உடலைத் தேற்றிக்கொண்டு திரும்பும் சுகவாச ஸ்தலமாகி, சுகாதார ஸ்தாபனமாக ஆகிவிட்டது.

கோர்ட்டு, நீதிஸ்தலத்தன்மை—மனிதனை எப்படி எப்படி நேர்மைக்கேடான காரியம் செய்யலாம்; செய்துவிட்டு எப்படித் தப்பித்துக்கொள்ளலாம் என்பதைக் கற்றுக்கொடுக்கும் கல்லூரியாக ஆகிவிட்டது.

பத்திரிகைகள் தன்மை—காலிப் பயல்களையும், அயோக்கியர்களையும், மக்கள் துரோகிகளையும் மடையர்களையும் பெரிய மனிதர்கள், மகான்கள், தேச பக்தர்கள், மேதாவிகள் ஆக்கும் சலவைச் சாலைகளாக ஆகிவிட்டது.

ஜனநாயகம் என்பது காலிகள், அயோக்கியர்கள் எப்படியாவது பணம், பதவி சம்பாதிக்கும் ஒழுக்கமற்ற செல்வர்கள், பதவியாளர்கள் ஸ்தாபனமாக ஆகிவிட்டது.

பொதுத்தொண்டு போனபோக்கானது இன்று நாட்டுக்கு ஒரு சம்பிரதாயமான தலைவனில்லாமல் போய்விட்டது. முன்பு தலைவர், தலைவர்கள் என்றால் அது தானாகவே மக்கள் உள்ளத்தில் புகுந்து யாரையாவது தலைவர் என்று கருதச் செய்யும். அந்தப் பதவியையும் யாரோ சிலர்—வெகு சிலர்தான் விரும்புவார்கள். அவர்களும் நாடொப்பிய தலைவர்களில் ஒருவராக இருப்பார். மக்களும் தலைவராகக் கருதுவார்கள்; மதிப்பார்கள். இப்போது ஒவ்வொருவனும் தனது வாழ்க்கைப் பிழைப்பை மாத்திரம் முன்னிட்டே கவுரவத்தைக்கூடக் கருதாமல் தலைவனாக முயற்சித்து, கூலி ஆட்களைப் பிடித்து தன்னைத் தலைவனாக ஆக்கச் சொல்லுகிறான்; செய்துகொள்ளுகிறான். அதற்கேற்ற கீழ் மக்களும் எவ்வளவு கீழானவனையும் சுயநல, பதவி, பணத்தாசைக்காரனையும் தலைவனாகக் கூப்பாடு போடுகிறார்கள். பத்திரிகைக்காரர்களும் இந்த இழிதன்மைக்கு முழு முயற்சியோடு ஒத்துழைக்கிறார்கள். ஆனதினாலேயே, நாட்டில் உண்மைத் தலைவர்களே இல்லாமல் போய்விட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



நாட்டில் யோக்கியமான, உண்மையான பொதுத்தொண்டு ஸ்தாபனமே இல்லாமற் போய்விட்டது. எந்த ஸ்தாபனமும் யாரோ குறிப்பிட்ட ஒரு சிலர் பிழைக்கவேண்டும் என்பதல்லாமல் நாட்டுப் பொதுமக்கள் நலனுக்கு என்று ஒன்றுகூட ஏற்படவில்லை; இந் நாட்டில் ஏற்பட்டதில்லை.

இன்றுள்ள பொது ஸ்தாபனங்கள் என்பவைகள் சூதாடுமிடமாகவே 'மேஜைக் காசு' வாங்க ஏற்பாடு செய்யப்பட்ட சூதாடுமிடங்கள் போலவே இருந்துவர வேண்டியவைகளாக அமைக்கப்பட்டுவிட்டன. இவை மாத்திரமல்லாமல், இந்நாட்டு மக்கள் நலத்துக்கு முன்னேற்றத்திற்குமான வாழ்வுக்கு—அறிவு வாழ்வுக்கு ஏற்ற கொள்கைகளோ, லட்சியங்களோ இந்நாட்டில் யாராலும் கையாளப்படுவதில்லை. எவரும் அந்தத் துறையை அணுக பயப்படக்கூடியவர்களாகவே, அதாவது 'அதனிடம் அக்கொள்கைகளிடம் சென்றால், அணுகினால் நமது வாழ்வே போய்விடுமே, பிழைக்கவே முடியாதே' என்று பொதுத் தொண்டு செய்பவர்கள் எல்லாம் பயப்படவேண்டியவர்களாகிவிட்டார்கள்.

ஆகவே, இதுவரை பொதுத்தொண்டு என்பது மக்கள் சுயநல வாழ்வுக்காக இந் நாட்டில் இருந்துவரும் பல தொழில்கள், மார்க்கங்கள் என்பவைபோலவே பிழைப்பு மார்க்கம்தான் என்றும் இதற்கு எந்தப் பொதுத்தொண்டரும் விலக்கு இல்லை என்றும் ஏதோ ஒரு அளவுக்கு என் 83 ஆண்டு அனுபவத்தைக்கொண்டு விளக்கினேன். அதோடு கூடவே, இதற்கு மாறாக பொதுத்தொண்டு இருக்குமானால் அது இயற்கைக்கு மாறுபட்டது என்றும் கூறினேன்.

இந்தக் கருத்து நான் வெகுநாளாகச் சொல்லிக்கொண்டு வரப்பட்ட கருத்தே ஒழிய இன்று புதிதாகச் சொல்லப்படுவதல்ல.

மற்றும், உண்மையான பொதுத்தொண்டு செய்ய மக்களில் ஆள் கிடைப்பதும் மிகக் கஷ்டம்; மிகமிகக் கஷ்டம் என்றே சொல்லுவேன். யாராவது இருப்பார்களேயானால், அப்படிப்பட்டவர் மனிதனின் இயற்கை அமைப்புக்கு மாறுபட்டவர்களாகத்தான் இருக்க முடியும். அவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்றால்,

முதலாவது, பொதுத்தொண்டனுக்குச் சோற்றுக்கு, குடும்ப வாழ்க்கைக்கு வகைதேட வேண்டிய அவசியமில்லாத வசதி இருக்கவேண்டும்.

வசதி இல்லாவிட்டாலும், பொதுத்தொண்டையே கொண்டு பிழைக்கவேண்டிய அவசியமில்லாத ஒரு மார்க்கமாவது இருக்கவேண்டும். தனக்கு மாத்திரமல்லாமல் தன்னால் போஷணை செய்யவேண்டிய, பாதுகாக்கவேண்டிய நபர்கள் பளுவுகள் இருக்கவேகூடாது.

தன்னால் பாதுகாக்க, பெருக்கவேண்டிய பெரிய தொழிலில் பெரிய சொந்த சொத்தும் இருக்கக்கூடாது. இருந்தால், எதிரிகளுக்குப் பயந்து இலட்சியத்தை விட்டுக்கொடுக்க நேரும். மனைவி, பிள்ளைகுட்டிகள் இருக்கக்கூடாது; இருக்கவே கூடாது.

'காணப்படும் பொருள்களில் உயிர் பிரியமாம். உயிரினும் மக்கள் பிரியமாம். இவற்றைப் பாதுகாக்க எதுவும் செய்யலாம்'—ஆய்ந்த பழமொழி.

ஏனெனில், அவற்றைப் பாதுகாக்க வேண்டுமே, வளர்க்கவேண்டுமே, படிக்க வைக்க வேண்டுமே, உத்தியோகம் தேடிக்கொடுக்க வேண்டுமே என்கிற எண்ணத்தினால் எப்படிப் பட்டவனும் பொதுத்தொண்டுக்கு அயோக்கியனாகியேவிடுவான். பொதுத்தொண்டன் அல்லாத, சுயநலத் தொண்டனான மனிதன் எவனும் பிள்ளைகுட்டிகள் இருந்தால் சுயநல வாழ்விலேயே, அவனுக்கு எவ்வளவு வசதி இருந்தாலும் அயோக்கியனாகிவிடுகிறான். அப்படி இருக்கும்போது, வசதி இல்லாதவன் அவற்றின் (பிள்ளைகுட்டிகள்) வாழ்வுக்கு, வளர்ச்சிக்கு அயோக்கியத்தனம் செய்யமுடியாமல் எவனாலும் இருக்கவே முடியாது.



பொதுத் தொண்டுப் பணியில் இருந்து தன் வயிற்றுக்கு—வாழ்வுக்கு மாத்திரம் வகை செய்து கொள்பவனையே கூட இரண்டாந்தரம், விலக்கு அளிக்கப்படவேண்டிய தொண்டன் என்று தான் சொல்லுவேன்.

எந்தப் பொதுத் தொண்டனுக்காவது மனைவி இருக்கிறது; மக்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கும் குடும்பத்தில் வசதி இருக்கவேண்டும். அல்லது, அவர்களும் உணவு உடைதவிர மற்றெதையும் கருதாதப் பொதுத்தொண்டர்களாக இருக்கவேண்டும். பொதுத் தொண்டு ஊதியத்தால் வாழ்கிறவர்கள், அவர்கள் குடும்பங்கள், மக்கள் சராசரி வாழ்க்கைத் தரத்துக்குமேல் வாழக்கூடாது; வாழவே கூடாது.

வாழவேண்டிவந்தால், வாழ்ந்துகொள். ஆனால் 'நான் பொதுத்தொண்டன்' 'தியாகி' 'கஷ்ட நஷ்டப்பட்டவன்' என்று சொல்லாதே. சொல்லுவதற்கு வெட்கப்படு. உன் மனதிலும் நீ நினைத்துக்கொள்ளாதே. அப்படி நினைப்பாயேயானால், சொல்லு வாயேயானால்—நீ மக்களை ஏமாற்றி வெற்றிபெற்றுவிட்டதாகக் கருதிக்கொண்டிருப்பவன் என்றுதான் சொல்லவேண்டும்.

மற்றும், இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், நீ பொதுத்தொண்டன் ஆகாமல் சுயநலத்தொண்டனாக ஆகி, உனக்கென்றே நீ பாடுபடுபவனாக ஆகி இருந்தால், இன்று உன் நிலை எப்படியாகி இருக்கும்? உன் தரம், அந்தஸ்து என்ன ஆகியிருக்கும் என்பதை உன் தரத்தைக்கொண்டு உண்மையாய் நினைத்துப் பார்த்து, உன் பொதுத்தொண்டு (வேஷம்) ஆனது உன்னைத் தியாகம் செய்யச் செய்ததா, அல்லது உன் தகுதிக்கு மேற்பட்ட செல்வத்தையும் வாழ்க்கை வசதியையும் அந்தஸ்தையும் தேடிக்கொள்ளச் செய்ததா? என்று எண்ணிப் பார்.

இந்த முறையில் எண்ணிப் பார்த்தால், நாட்டில் எவனாவது பொதுத்தொண்டன், தன்னலத்தை வெறுத்தவன், தியாகி என்பதாக எங்காவது இருக்கின்றானா என்பது தெரியும்.

நான் வெகு பொதுத் தொண்டர்களோடு பழகியிருந்த பழக்கத்தையும், வெகு பேருக்குத் தலைவனாக இருந்து அவர்கள் நடத்தையையும் அவர்களால் அடைந்த பலனையும் அவர்களது போக்கையும், அவர்கள் எதிர்ப்பையும், அவர்கள் இன்று எதிர் பார்ப்பதையும் இலட்சியத்தையும் உணர்ந்தே இதைச் சொல்லுகிறேன்.

எனது பொதுத் தொண்டு வாழ்விலே நான் நெருங்கி உண்மையாகப் பழகிய தோழர்கள் இராஜாஜி, கண்ணப்பர், இராமநாதன், கே. ஏ. பி. விஸ்வநாதன், பொன்னம்பலம், அண்ணாதுரை, சவுந்தரபாண்டியன், பி. பாலசுப்பிரமணியம், எஸ். குருசாமி—முதலியவர்களுடைய பொதுத்தொண்டு தன்மையை அனுபவித்தும், உணர்ந்துமே எழுதுகிறேன். மற்றும், இவர்கள் எல்லாம் எனக்கு ஆதரவாக, நண்பர்களாக இருந்த தாலேயும், இவர்களுக்கு நான் 'தலைவனாக' அவர்களாலேயே கருதப்பட்டதினாலேயும் நானும் இவர்களைக் குறிப்பிடுகிறேன்.

இதிலிருந்து பொதுமக்கள் என்ன தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப் படுகிறேன் என்றால், பொதுத் தொண்டு என்பதாக ஒன்று, ஒரு தொண்டு இல்லை; பொதுவாக இல்லவே இல்லை.

எவன் அந்தப் பெயரால் தொண்டு செய்வதாகக் காணப்பட்டாலும் சுயநலத்துக் காகத் தெரிந்தெடுக்கும் தொண்டுகளில் (பொதுத் தொண்டு என்பது) அது ஒன்று என்றுதான் கொள்ளவேண்டும். சிலருக்குத் துவக்கத்தில் சுயநலம் கருதாமல் பொதுத் தொண்டுக்கு வர எண்ணமேற்பட்டிருக்கலாம். பெண்டு பிள்ளை ஏற்பட்டால் எவனும் சுயநலப் புலிதான்.

என்னைப் பற்றி நீங்கள் 'நீயும் அப்படித்தானே?' என்று கேட்கலாம். ஆம்; நானும் அப்படித்தான். என் தொண்டும் உண்மையில் சுயநலத் தொண்டுதான். என்ன சுயநலம்?

படிப்பகம்

www.padippakam.com



அவரவர் சொந்தப் பிள்ளைகுட்டி, மனைவி வாழ்க்கை சுயநலம் அல்லாமல், எனக்கு ஒரு திருப்தியையும் இன்பத்தையும் கொடுக்கத் தக்கதும், கம்பீரத்தோடு நானே பெருமைப் படத்தக்கதுமான நலத்தை அளிக்கிறது. அவற்றை நானும் அனுபவிக்கிறேன். இதுதான் என் சுயநலம்.

செல்வத்தைப் பற்றியும், மற்றவர்களையெல்லாம் விட எனக்குப் பேராசையுண்டு. மற்ற—மேற்கண்ட தோழர்களைவிடச் செல்வத்தில் நான் பொதுத் தொண்டின் பேரால் அதிகமான பணம், சொத்து சம்பாதித்தவன் ஆவேன். எனது முயற்சியில், தொண்டின் சரிபகுதிப் பாகம் பணம் சேர்ப்பதிலே செலவழிக்கிறேன். சிறு வயதுமுதலே வாழ்க்கையின் இலட்சணம் பணம் என்றே பழக்கப்பட்டவன் நான்.

இப்படிப்பட்ட நான், 'பொதுத் தொண்டனாக ஆனபின்பு உண்மையான பொதுத் தொண்டுக்கு என்றே சற்றேறக்குறைய 15 இலட்ச ரூபாய் மதிப்பிடத்தக்க பொதுச் செல்வம் சேமித்து இருக்கிறேன். எல்லோருக்கும் தெரியும்படியாகவே சம்பாதித்தே சேர்த்திருக்கிறேன். இதில் என்னுடைய சொந்தச் சொத்து, அதாவது எனக்கு உரிமையான என் சொத்துக்களை விற்று பொதுநலனுக்கு உதவியவகையில் பெரும்பாகம் கூடச் சேர்க்கப் பட்டதால் இந்த மதிப்பு ஏற்பட்டதென்றே சொல்லுவேன். (எனதல்லாத) மற்றதெல்லாம் பொதுமக்களிடம் இருந்து மாநாடு, கூட்டத்துக்கு–அழைப்புக்குச் செல்லுதல், கொள்கைப் புத்தகம் விற்றல், கழகத்திற்கு நன்கொடை என்னும் பேரால் பெற்ற, அளிக்கப்பட்ட–வசூல் செய்யப்பட்ட வகையிலும் அவற்றை நானும் பெருக்கியவகையிலும் சொத்துக்களுக்குப் போதுமதிப்பு ஏறியவகையிலும் சேர்க்கப்பட்ட செல்வம், சொத்துக்களெல்லாம் இந்த சுமார் பதினைந்து இலட்சரூபாய் மதிக்கக்கூடிய சொத்தாகும்.

இந்தச் சொத்திலும் என் இஷ்டப்படி–வேறுயாரும் கேள்வி கேட்கமுடியாதபடி, யாருக்கும் கணக்குக் காட்டவேண்டிய அவசியமில்லாத சொத்தாக, ஒரு நல்லபாகம் பொதுத் தொண்டுக்கு இருக்கிறது என்னலாம்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், எனக்கு இவ்வளவு செல்வ வசதி இருந்தும் எனது வாழ்வானது மக்களின் சராசரி வாழ்வுதான். எனக்கு உணவுச் செலவு மாதம் ரூ. 50-க்குள் தான் ஆகும். எனது துணிமணி செலவு ஆண்டுக்கு ரூ. 50-க்குள்தான் ஆகும். அதிலும் பெரும்பகுதி ஓசியில் நடக்கும். இதற்குச் செலவு செய்யவேண்டிய அவசியமும் எனக்குக் கிடையாது. (எதனால்) பிள்ளைகுட்டி கிடையாது. மனைவி உண்டு என்றாலும் அவர்கள் மாதம் ரூ. 200 போல் சம்பளம் கொடுத்து வாங்கக்கூடிய வேலையை இயக்கத்திற்காக இந்த 5 ஆண்டுகளாகச் செய்துவந்ததோடு, அதற்கு முன்பாகப் பதினைந்து ஆண்டாக பல ஆயிரக்கணக்கில் புத்தக விற்பனை மூலம் கழகத்துக்குப் பணவருவாயும் அவர்களால் ஏற்பட்டது என்று சொல்லுவேன். அந்த அம்மையாருக்கும் உணவுச் செலவு மாதம் 50 ரூ. உடை செலவு வருஷம் 150 ரூபாய்க்கு உள்ளாகத்தான் செலவாகும்.

எனது பிரயாணம் சிம்ப்சன் கம்பெனியின் பங்காளித் தோழர் ஆரோக்கியசாமி அவர்கள் சொன்னதுபோல், ஒரு லாரிக்குச் சமமான—சாமான் ஏற்றத்தக்க மோட்டார் வண்டியில்தான்! பிரயாணம் முக்கால் பாகம் இரவில்.

மாதத்தில் 20 நாள்போல சராசரி சுற்றுப் பிரயாணம். சதா கழகத்துக்குக் கட்டட வேலை. கழகச் செல்வத்தைப் பெருக்கும் கணக்கு வேலை. இது அதிசயமான வேலை. எந்தவிதக் கணக்கும் வைக்காமல் சதா கணக்குப் போட்டுப் பார்க்கும் வேலை! எல்லாம் பெரிதும் டைரி குறிப்புத்தான்.

சில பொறாமைக்காரர்கள், ஏமாற்றமடைந்து வெந்து புழுங்கிக்கொண்டிருப்பவர்கள் ஆகிய கூட்டத்தார் தவிர 'எதிரிகள்' என்று கருதப்பட்டவர்கள் முதல் எந்த மனிதரும் நம்மைக் கண்டவுடன் நான் வெட்கப்படத்தக்கபடி என்னைப் 'புகழ்வதும்' 'போற்றுவதும்' 'அன்பு காட்டுவது'மான தன்மையை இடைவிடாமல் அனுபவிக்கிறேன்.



இவை எல்லாம் எனக்குச் சுயநலமில்லாமல் வேறு என்ன பொதுநலம் என்று சொல்ல முடியும்?

எனக்கு ஏதாவது கவலை உண்டு என்றால் அது கழகச் சொத்துக்களையும், மற்றும் பொதுநலத்துக்காகவே அளிக்கப்பட்ட பொருள்கள், சொத்துக்கள் ஆகியவை களைப் பாதுகாத்து, அதன் வருவாய்களைக் கழக லட்சியங்களுக்கும் அனாதியாய்ப் பராமரிப்பு இல்லாத மக்களுக்கும், அவர்கள் நல்வாழ்வுக்கும் வகைதரப் பயன்படும்படியாய்ச் செலவு செய்யச் செய்வது எப்படி என்கிற கவலைதான்.

மற்றொரு கவலை என்னவென்றால், இனியும் ஒரு பத்து ஆண்டுகளுக்காவது காமராசர் ஆட்சி நீடித்து நிலைத்து இருக்குமானால் சுயமரியாதை இயக்கவேலை பூர்த்தி யாகாவிட்டாலும் திராவிடர் கழக இலட்சிய வேலை பெரும் அளவுக்குப் பூர்த்தியாகுமே என்கின்ற கவலைதான்.

மேலால், ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு இதை முடிக்கிறேன். அதாவது,

எனது ஒவ்வொரு பிறந்தநாள் விழாவிலும் அடுத்த ஆண்டு முடிவுக்குள் நம் கழகம் செய்யவேண்டிய காரியம் என்ன என்று வேலைத் திட்டம் தெரிவிப்பது வழக்கம்.

சென்றசில பிறந்தநாள் விழாக்களில் 'அடுத்த ஆண்டு' வேலைத் திட்டம் தெரிவித்தேன் என்றாலும் அந்த ஆண்டுகளின் வேலைத் திட்டங்களை காமராசர் ஆட்சி எதிர்ப்புக்களை முறியடிக்கின்ற வேலைகளுக்கே பெரும்பகுதி முயற்சியும் நேரமும் செலவழிக்கப்பட்டுச் சரியாக வேலைத் திட்டங்கள் கவனிக்கப்படவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்குச் சமாதானம் என்னவென்றால், காமராசர் ஆட்சி எதிர்ப்புகளை முறியடித்து, மறுபடியும் அவர் ஆட்சி வரும்படி செய்வதும் வேலைத் திட்ட நிறைவேற்றுவேலை என்று கருதவேண்டியதாயிற்று. இதில் ஓரளவு வெற்றி பெற்றோம் என்றாலும் முழுவெற்றி பெறவில்லை.

ஓர் அளவு வெற்றி என்னவென்றால், எலக்ஷனில் ஜெயித்த ஒருவன் 'நான் ஒரு அளவுக்குத்தான் வெற்றிபெற்றேனேயொழிய முழுவெற்றி பெறவில்லை. முழுவெற்றி பெற்றேன் என்று எப்போது சொல்லலாம் என்றால், எதிரியை டெபாசிட் கிடைக்காமல் செய்திருந்தால்தான் முழுவெற்றி. இது சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய வெற்றிதான்' என்று ஒருவன் சொல்லுவது போன்றே, நானும் முழுவெற்றி கிடைக்கவில்லை என்கின்றேன். அதுபோகட்டும்; வரப்போகிற ஆண்டுக்கு வேலைத் திட்டமாக:—

(1) பார்ப்பனப் பத்திரிகைகளின் ஆணவமும் ஆதிக்கமும் ஒழிக்கப்படவேண்டும்; குறைக்கப்படவாவது வேண்டும்.

(2) சினிமா மோகம், வளர்ச்சி ஒழிக்கப்படவேண்டும்.

(3) கோயில்களில் சாதி ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும்.

கழகத்திற்கு 25,000 மெம்பர்களுக்குக் குறையாமல் சேர்க்கப்படவேண்டும். கழகத் திற்குக் குறைந்தது 500-க்குக் குறையாமல் கிளைக் கழகங்கள் இருக்கச் செய்யவேண்டும். கமிட்டிகள், மத்தியக் கமிட்டி, மாவட்டக் கமிட்டிகள் அமைக்கப்பட்டு மற்ற கமிட்டிகள் புதுப்பிக்கப்படவேண்டும். கழகப் புத்தகங்கள் ரூ. 25,000-க்குக் குறையாமல் விற்கப்பட வேண்டும். பிரச்சாரங்களுக்கு ஒழுங்குமுறை, கட்டுப்பாடு ஏற்படுத்தவேண்டும்.

கமிட்டிக்கு மேலும் கட்டுத் திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இவைகளை இந்த ஆண்டு வேலைத் திட்டங்களாகக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[பிறந்த நாள் விழா மலர் 84—17-9-1962]



படிப்பகம்

www.padippakam.com



## 2. சதியை முறியடிப்போம்

சுமார் 10, 15 ஆண்டுகளாக எனது பிறந்தநாள் பாராட்டுக்கூட்டம் (விழா) என்பதில் நான் பாராட்டுதலுக்கு நன்றி செலுத்தும்போது, அடுத்த ஆண்டு வேலைத் திட்டம் என்பதாக ஏதாவது ஒரு திட்டத்தை வெளியிடுவது வழக்கமாக இருந்துவருகிறது.

அப்படி வெளியிடுவதில் நான் பெரிதும் சமுதாய சம்பந்தமான குறைபாடுகளை, மதசம்பந்தமான மூட, காட்டுமிராண்டித்தனமான கருத்து, செய்கை ஆகியவைகளைப் போக்குவதற்கு ஏற்றதான திட்டங்களையே வேலைத் திட்டமாகச் சொல்லி (வெளியிட்டு) வந்திருக்கிறேன். அப்படிச் சொல்லிவருவதில் சொல்லுவதற்கேற்ப ஒரு அளவுக்கு அது நிறைவேறும்வண்ணம் கிளர்ச்சியோ, முயற்சியோ கழகத்தின்மூலம் செய்தும் வந்திருக்கிறேன். ஆனால் அவை எல்லாம் நிறைவேற்றம் அடைந்தது என்று சொல்லுவதற்கு இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு சிறு அளவுக்காவது வெற்றியும் வெற்றிமுகம் ஏற்பட்டு வருவதுடன், மக்களிடையில் அத் திட்டத்தின் அவசியம்பற்றிய உணர்ச்சி வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறதை நான் உண்மையாகவே உணருகிறேன்.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், அத் திட்டங்கள் எவ்வளவு புரட்சிகரமானதாக இருந்தாலும் அவற்றில் எதையும் வாயளவில்கூட மறுக்கும்படியான எதிர்ப்புக் காரியங்களை இதுவரை நான் எந்தக் கூட்டத்தாராலும் எந்தத் துறையிலாவதும் காணவே இல்லை.

பொதுவாக, பார்ப்பனர்களுடையவும் மதஉணர்ச்சியாளருடையவும் வெறுப்பைப் பெற்று வந்திருக்கிறேன் என்பதை நான் மறுக்கவில்லை. இந்த வெறுப்புத்தன்மை எனது திட்டங்களுக்குப் பாமர மக்களாலும்கூட ஏற்படுவது என்பது அதிசயமாகாது. ஏனெனில், நம் மக்கள் 100-க்கு 90 பேர் எழுத்து வாசனை அற்றவர்கள். படித்த மக்களில் 100-க்கு 99 பேர் மூடநம்பிக்கையில் மூழ்கிப் பேராசை கொண்டவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நமது திட்டங்கள் அவர்களுடைய சுயநலத்திற்குக் கேடு ஏற்பட்டதாகவே கருதி, நம்மீது வெறுப்புக்கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

இந்த வெறுப்புக்களை நான் குழந்தைகள் மருந்து சாப்பிட, தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதுபோன்றது என்று கருதி 'எதிர்ப்பை'—வெறுப்பை இலட்சியம் செய்யாமல் தொண்டாற்றியே வந்திருக்கிறேன்.

அத் தொண்டுகள் அடியோடு வீணாகிவிட்டன என்று சொல்லமுடியாமல் நாடும், கொடுமைக்கும் மடமைக்கும் ஆளான சமுதாயமும், நல்ல அளவுக்கு முன்னேறியே வருகிறதைப் பார்க்கின்றேன்.

இதற்கு எடுத்துக்காட்டு என்னவென்றால், நாடு, சமுதாயம், முன்னேற்றத்தினால் இன்று எந்தச் சமுதாயத்திற்கு 'கேடு' நெருங்கி வருகிறதோ அந்தச் சமுதாயம் தங்களது கடைசி ஆயுதத்தை இன்று பயன்படுத்த முன்வந்து இருப்பதே போதுமானதாகும்.

சாதாரணமாகச் சொல்லுவதானாலும் கடவுள், மதம், சாதி என்கின்றதான மாயப் பேய்கள் இன்று செத்துப் பிணங்களாகிவிட்டன என்றே சொல்லலாம். இவற்றில் ஈடுபட்டவர்கள், இவற்றால் பயனடைந்தவர்கள் இப் பிணங்களுக்குச் சமாதி கட்டும் வேலையில்தான் இன்று ஈடுபட்டிருக்கிறார்களே ஒழிய, கொஞ்சமாவது உயிர் இருக்கிறதென்று கருதி, யாரும் பிழைக்கவைக்க முயற்சிக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. என்றாலும் கூட, இந்தச் சுயநல—மவுடீகக் கும்பல்கள் மக்களை, சமாதியைக் காட்டி ஏமாற்றிப் பிழைப்பதற்கில்லாமல், மேலும் சில வேலைசெய்யவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை நான் மறைக்கவில்லை.

ஏனென்றால், மக்களின் மடமை அவ்வளவு முதிர்ந்ததாக இருக்கிறபடியாலும் எதிரிகள் கடைசி முயற்சி செய்கிறபடியாலும் நமக்கு இப்போது வேலை இல்லை என்று சொல்லு



வதற்கு இல்லை. மற்றும் நமக்கு இன்று மற்றொரு புதிய தொல்லை ஏற்பட்டிருக்கிறது. அது என்ன தொல்லை என்றால், இதுவரை நாம் பார்ப்பனர் தொல்லைக்குப் பரிகாரம் தேடும் பணியில் முனைந்து இருந்தோம். இப்போது நாம் பார்ப்பனர் மாத்திரமல்லாமல் முஸ்லிம்களுடையவும், கிறிஸ்தவர்களுடையவும் தொல்லையைச் சமாளிக்கப் பரிகாரம் தேட வேண்டியவர்களாக இருக்கிறோம். இத் தொல்லையைச் சுலபமான தொல்லை என்று கருதிவிட முடியாது. கஷ்டமான தொல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

நான் இந்த 85-வது ஆண்டுக்கு வேலைத் திட்டமாக நமது சமுதாயம், நமது பார்ப்பனர் அல்லாத சமுதாயமாகிய '4-ம் சாதி' 'சூத்திரர்' என்று பார்ப்பனரால் ஆக்கப்பட்டு அதற்கு ஏற்ப இழி மக்களாகவும் கல்வி அறிவற்ற காட்டுமிராண்டி மக்களாகவும் இருக்கச் செய்யப்பட்ட நாம், கல்வி, நல்வாழ்வு, ஆட்சி உரிமை முதலாகியவற்றில் நம் சமுதாயம் (எண்ணிக்கைக்கு ஏற்ப) விகிதாசாரம் அடையவேண்டும் என்கின்ற சில இலட்சியத்தைப் பெறும்படியான பணியை வேலைத் திட்டமாகக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன்.

இதை மிகக் கடினமான வேலைத்திட்டம் என்றுதான் கொள்ளவேண்டும். ஏனெனில், இந்த நாட்டில் பார்ப்பன சமுதாயத்தின் உயிர்—ஜீவநாடியே இதுதான். அதாவது, நம்மை மேற்கண்ட இழிவான அடிமை நிலையில் வைத்து இருப்பதுதான். எப்படி என்றால், ஆட்சியில் நமக்கும் அவர்களுக்கும் சமுதாய எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதாசாரம் ஏற்பட்டுவிட்டது என்றால், அந்த நிமிடமே '(பார்ப்பான்) பிராமணன் செத்தான்' என்று ஆகிவிடும். அதுமாத்திரமல்லாமல், சூத்திரன், இழிமகன், மூடக் காட்டுமிராண்டி மகன் என்பவனும் ஒழிந்தான். சரிநிகர் மனித சமுதாயம்தான் நம் நாட்டில் இருக்கிறது என்பதாக ஆகிவிடும். ஆதலால், இந்த நம் இலட்சியம் நிறைவேற பார்ப்பான் தன்னுடைய எல்லாவற்றையுமே செலவழித்துப் பார்ப்பான். ஆனதினாலே, இந்த நமது இலட்சியம் மிகக் கஷ்டமானது என்று கருதினேன்.

உதாரணமாக, நம்மில் கீழ்த்தரமான மக்களையெல்லாம் பார்ப்பான் இன்று தன்னோடு இணைத்துக் கொண்டு, அவர்களையும் நம் சமுதாய நலத்துக்கு எதிரிகளாக ஆக்கி, தொல்லை கொடுத்துக் கொண்டு இருந்த பார்ப்பனர், இன்றைய நிலைக்குத் தனக்கு அந்தப் பலம் போதாது என்று கண்டு கொண்டவுடன் புதிய பலத்தை உண்டாக்கிக்கொள்ள முயற்சித்து அதில் வெற்றி பெற்றுவிட்டனர்.

அந்தப் புதிய பலம் என்னவென்றால், நம் நாட்டில் பார்ப்பனர்களைப் போலவே உள்ள மற்றும் சிறுசிறு (மைனாரிட்டி) வகுப்புகளான முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் தன்னோடு சேர்த்துக் கொண்டனர்.

ஆதலால், நாம் இன்று 1. பார்ப்பனர், 2. நம்மில் கீழ்த்தர மக்கள், 3. முஸ்லிம்கள் 4. கிறிஸ்தவர்கள் ஆக இன்று நமக்குச் சமுதாய எதிரிகளாக இந்த நான்கு கூட்டங்கள் (குழுக்கள்) இருக்கின்றன. இந் நால்வரும் ஏற்கெனவே நம் சமுதாயத்தைப்பற்றிக் கவலை இல்லாதவர்கள். மற்றும், இந் நான்கில் மூவர், தம்தம் சமுதாயத் துறையில் நம்மைவிட மேலான நிலைமையில் அரசியல், பொருளாதார இயல், கல்வி இயல், பதவி இயல், மத இயல் முதலியவற்றில் சராசரித் தன்மைக்கு மிகமிக மேலான நிலைமையில் இருப்பவர்கள், வாழ்பவர்கள் என்று சொல்லத் தக்கவர்கள் ஆவார்கள். ஒரு கூட்டத்தினர் நம்முடைய இழிநிலை பற்றியும் ஏன்—தங்களுடைய இழிநிலை பற்றியுங்கூடக் கவலை இல்லாமல் 'சோறு—சீலை—காசு' ஆகிய மூன்றையே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டவர்கள் ஆவார்கள். ஆதலால், ஒரு சிறு நலத்திற்கும் தங்களுடைய எதையும் தியாகம் பண்ணவும் துணிவு கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால், நமது இலட்சியம் நிறைவேறுவதற்கு இவர்கள்—இந் நான்கு குழுவினர்களும் பெரும் கேடர்களாக இருக்கும் நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



இந் நிலை நம் வளர்ச்சியையும் நம் இன்றைய நல்வாழ்வையும் சிதைத்துவிடும் என்றே கருதவேண்டி இருக்கிறது.

இந் நிலை இன்று ஏற்படக் காரணம், இதுவரை இல்லாத அளவுக்கு காமராசர் ஆட்சி காரணமாகத் தமிழ் மக்களாகிய நாம் பெரும் அளவுக்கு முன்னேறி வருகிறோம். இதைச் சிதைக்கவேண்டிய அவசியம் பார்ப்பனருக்கு ஏற்பட்டுவிட்டது. அவர்கள் (பார்ப்பனர்கள்) தனித்து நின்று நம்மை எதிர்த்து அழிக்க முடியாது. ஆதலால், துணைதேட முயன் றார்கள். அம் முயற்சியில் ஏனைய முக் குழுவினர் அவர்களுக்குக் கிடைத்துவிட்டார்கள். ஏனெனில், இவர்களுக்கு எவ்விதக் கொள்கையும் கிடையாது. யாரை அண்டியாவது எப்படி நடந்தாவது தங்கள் நலன் ஒன்றே இலட்சியமாகும். நாம் வகுப்புவாரி உரிமை கேட்கும் போது அந்தப்படி நாம் அடைந்துவிட்டால் இவர்கள் நலம் கெடும் என்கின்ற குறை, அச்சம் ஏற்பட்டுவிட்டது. ஆதலால், இவர்கள் எளிதில் பார்ப்பனர் வலையில் பட்டுவிட்டனர்.

மற்றும், ஆச்சாரியார் முஸ்லிம்களை மயக்க காஷ்மீரை முஸ்லிம்களுக்கு (பாகிஸ்தா னுக்கு) கொடுத்துவிட வேண்டியது நியாயம் என்று சொல்லிவிட்டார். இதற்கு முஸ்லிம்கள் நன்றி காட்டும் முகத்தான் இராஜாஜிக்கு இந்தியப் பிரதமர் பதவி கொடுக்க வேண்டும். அவர்தான் அதற்குத் தகுதி உடையவர் என்று பாகிஸ்தான் தலைவர் அயூப்கான் சொல்லி, இந்நாட்டு முஸ்லிம்களை ஆச்சாரியாரை ஆதரிக்கச் செய்துவிட்டார்.

மற்றும், நமது பகுத்தறிவுக் கிளர்ச்சியும், நேருவின் சோஷ்யலிசக் கொள்கையும் இஸ்லாம், கிறிஸ்தவ சமுதாயத்திற்கு—அவர்கள் மதத்திற்குக் கேடுவரும் என்ற புரளியைப் பார்ப்பனர் கிளப்பிவிட்டு விட்டார்கள். இதனாலேயே முஸ்லிம்–கிறிஸ்தவ சமூகத் தலைவர் களான திரு. இஸ்மாயில் அவர்களும் திரு. ரத்தினசாமி அவர்களும் இவ்விரு சமுதாயமும் இராஜாஜியை ஆதரிக்கவேண்டும் என்று கட்டளை இட்டுவிட்டார்கள்.

ஆகவே, இனிவரும் தேர்தல்களில் இம்மூன்று குழுவினரும் தங்களுக்கு வெற்றி கிடைக்க வகை இல்லை என்று தெரிந்தாலும், நம்மில் இருந்து கொண்டே தங்கள் சுய நலத்துக்கு, நம் இனத்துக்குக் கேடு செய்து வாழ்வது, என்ற முடிவில் ஆச்சாரியாரை அண்டி இருக்கும் ‘கண்ணீர்த் துளிகளை’த்தான் ஆதரிக்க வேண்டும்; எப்படியாவது காமராசரைத் தோல்வி அடையச்செய்ய வேண்டும் என்ற சதித் திட்டம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதன்பயன் என்ன ஆகும் என்றால், இனித் தேர்தல்களில் இரண்டு கட்சிதான் போட்டி! அப் போட்டியில் காமராசர் (காங்கிரஸ்) கட்சி, தமிழர்களின் ஓட்டுகளை அதிக மாய் (மெஜாரிட்டியாய்) பெற்றாலும்கூட இந்த பார்ப்பனர், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் ஆகிய முக் குழுவும் எந்தக் கட்சிக்கு ஓட்டு செய்வார்களோ அந்தக் கட்சிதான் ஜெயிக்க முடியும். திருவண்ணாமலைத் தேர்தல் முடிவு அப்படித்தான் ஏற்பட்டது. நம் தமிழ் மக்களின் ஓட்டு நமக்கு அதிகமாய் கிடைத்திருந்தும் இந்த முக் குழுவினர் ஓட்டுகளாலேயே காமராசர் (தமிழர் கட்சி) தோல்வி அடைய வேண்டியதாயிற்று. அதுபோலத்தான் இனியும் அவர்கள் 3 பேர்கள் நமக்கு எதிரிகளாகி, நம் எதிர்கட்சிக்கு ஓட்டுச் செய்தால் அது நமக்கு பெருங்கேடாகவே முடியும்.

இதற்காகத்தான் இராஜாஜி காங்கிரஸ் மெஜாரிட்டி சமுதாயக்கட்சி ஆனதால் அதனால், மைனாரிட்டி சமுதாயத்திற்குக் கேடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள, மைனாரிட்டி சமுதாயம் ஒன்றாகச் சேர்ந்து கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்று கூறி, கூட்டுச் சேர்த்துக்கொண்டு துணிந்து எதிர்க்கிறார்.

இதற்குப் பரிகாரம் தேடவில்லையானால், நாம் என்னதான் பிரச்சாரம் செய்தாலும், கட்சியைப் பலப்படுத்தினாலும், வெற்றி கிடைப்பது முடியாத காரியமாக ஆனாலும் ஆகி விடலாம். ஆனதால், மைனாரிட்டி முழுவோட்டினால் மெஜாரிட்டி கெடாமல் இருக்க, அவர்களைத் தேர்தலில் ஒதுக்கி விடுவதேதான் நாம் இத்தொல்லையில் இருந்து விலகத்தக்க



மார்க்கமாகும். குறைந்தது, அவ்விரு சமுதாயத்திற்குமாவது தனித் தொகுதி கொடுத்து ஒதுக்கி விட்டுவிட்டால் பெரும் அளவிற்குத் தொல்லை ஒழியும் என்பது எனது கருத்து. அதோடுகூடவே, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்னும் பேரால் தமிழர், பார்ப்பனர், முஸ்லிம், கிறிஸ்தவர் என்கின்ற தலைப்பில் அவரவர் சமுதாய எண்ணிக்கைப்படி அரசாங் கத்திற்குள்ள எல்லாத் துறையிலும் இவ்வாறு பிரித்துவிட்டால், தமிழ் நாட்டை, தமிழ் மக்களைப் பிடித்த எல்லாக் கேடுகளும் ஒழிந்தே போகும்.

ஆகவே, இதைத்தான் எனது 85-வது ஆண்டுத் திட்டமாக நான் கொண்டிருக் கிறேன்.

இவற்றிலும் முதலாவது, நம்நாட்டு ஆட்சியில் நாம் அடையவேண்டிய வகுப்பு உரிமைக்குக் கிளர்ச்சி செய்வதை உடனடித் திட்டமாய்க் கொண்டிருக்கிறேன்.

நம் இயக்கத் தோழர்கள் ஆயத்தமாய் இருக்கவேண்டிக் கொள்ளுகிறேன்.

[பிறந்த நாள் விழா மலர் 85—17-9-1963]

## 3. சமதர்மம் தழைக்க உதவுக

நான் இப் புவியில் 85 ஆண்டுகள் வாழ்ந்து 86-வது ஆண்டில் புகுகிறேன்.

இந்த நாட்டில் மக்கள் வாழும் சராசரி வயது 10 ஆண்டுகளுக்குமுன் 32 வயதாக இருந்து இன்று 48 வயதாக மாறியுள்ள இக் காலத்தில் ஒரு மனிதன் 85 ஆண்டுகள் வாழ்ந்து, அதுவும் ஓய்வு என்பதை அறியாத தொண்டும், சுகம் என்பதை அறியாத வாழ்வும், கிடைத்ததைத் தின்றுகொண்டு, வாய்த்த இடத்தில் தூங்கிக்கொண்டு திரிந்த நான் 85 ஆண்டுகள் வாழ்ந்துவிட்டேன் என்றால் என் ஆயுளைப்பற்றி நான் பாராட்டிக் கொள்ள வேண்டாமா?

என்ன செய்து சாதித்துவிட்டாய்? என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதில் நீங்களே (வாசகர்கள்) தான் தேடிப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஓய்வு ஒழிச்சல் இன்றி, சோம்பல் கழிப்பிணித்தனமின்றி உழைத்தேன். திருட்டு, புரட்டு, மோசடி இன்றி வெள்ளையாய் நடந்துகொண்டேன். என் நடத்தையில் பல தவறுதல்கள், தகாத காரியங்கள் ஏற்பட்டு இருக்கலாம். என்னையே நீதிபதியாகக்கொண்டு எனக்குச் சரி என்று பட்டதையும், தேவை என்று பட்டதையும் செய்தேன். அதுவும் ஒளிவுமறைவு இல்லாமல் செய்துவந்தேன்.

வாழ்வில், செயலில் பல ஏமாற்றம் அடைந்து இருக்கலாம். ஆனாலும், அதையே ஒரு படிப்பினையாகக்கொண்டு முயற்சியில் சளைக்காமல் நடந்துகொண்டுதான்வருகிறேன்.

நான் ஒரு அநாமதேய வாழ்வு வாழவில்லை என்பதும், அநாவசியமான மனிதனாய் இருந்துவரவில்லை என்பதும் எனக்கு ஒரு ஆறுதல் தரத்தக்க விஷயமாக இருந்துவந்தது.

இப்படிப்பட்ட எனது வாழ்நாள்பற்றிய விளக்கம் என்னவென்றால், 1964 செப்டம்பர் 17-ந்தேதி வியாழக்கிழமை சரியான குரோதி வருஷம் புரட்டாசி மாதம் 1-ந் தேதிக்கு எனக்கு 85 வயது முடிகிறதென்றால் அது நான் பிறந்து ஓராயிரத்து இருபது (1020) மாதங்கள் ஆகிறதுடன், நான் பிறந்து இன்றைக்கு (17-9-1964-க்கு) முப்பத்தி மூவாயிரத்து நாற்பத் தேழு நாட்கள் வாழ்ந்துவிட்டேன் என்று ஆகிறது.

மற்றும், நான் 1034 ஓராயிரத்து முப்பத்தி நான்கு அமாவாசையையும் 1034 பவுர்ணமியையும், 1034 பிறையையும் கண்டுவிட்டேன் என்று ஆகிறது.

‘ஆயிரம் பிறை கண்டவன் [illegible] வாழ்ந்தவனாவன்’ என்று சொல்லுவார்கள். அதுபோல் முழு வாழ்நாள் வாழ்ந்[illegible].

www.padippakam.com



எனவே கிரமப்படி பார்த்தால், உங்களிடம் நான் பயணம் சொல்லிக்கொள்ள வேண்டியதுதான் எனது நேர்மையான கடன்.

அதற்கேற்ப எனக்குப் புத்திக் கோளாறு ஒன்றும் இல்லை என்று நான் கருதினாலும், ஞாபகக் கோளாறு அதிகமாகிவிட்டது. பேசப்பேச பேச்சுத்தொடர் மறந்துபோகிறது. வெகு கெட்டிக்காரத்தனமாய்ச் சமாளித்துக் கொள்கிறேன். காது 100-க்கு 40 சதவிகிதம் (செவிடு) சப்தம் கேட்பதில்லை. கண்கள் கண்ணாடி போட்டாலும் 10 அல்லது 20 வரி (அதுவும் பைக்கா 12 பாயிண்ட் எழுத்து)க்கு மேல் படிக்க முடிவதில்லை. கண்களில் கண்ணீர் வந்து மறைத்துவிடுகிறது. நடை 10 எட்டு, அதாவது 15 அடி தூரத்துக்குமேல் நடந்தால் நெஞ்சுத் துடிப்பு அதிகமாகிக் களைப்பு வந்துவிடுகிறது. அதுவும் துணைப் பிடிப்பு இல்லாமல் நடக்கமுடிவதில்லை. ஹெர்ணியா என்னும் நோய் (குடல் வாதம்) இருப்பதில் உட்கார்ந்திருக்கும்போது ஒரு இளநீர் அளவு பரிமாணம் குடல் இறங்கி சிறுவலி கொடுத்துக்கொண்டே இருக்கிறது. நின்றால் ஃபுட்பால் (உதைபந்து) அளவுக்குப் பெருகி பெருவலி கொடுக்கிறது.

இந்தக் காரணங்களால் நானே என்னை 'கண்டெம்டு மேன்'—வேலைக்குப் பயன்பட முடியாத தள்ளப்பட்ட மனிதன்—என்றே கருதி வாழ்ந்து வருகிறேன். இவ்வளவு குறைபாடுகளும் இயலாமையும் இருந்தும் மக்கள் என்னிடம் வைத்து இருக்கும் அன்பும், மரியாதையும் ஜன்னிவந்தவனுக்கு ஏற்படும் பலம், சகிப்புத் தன்மைபோல் என் நிலை அறியாத அளவுக்கு வேலைகளையும், பொறுப்புகளையும் நானாக மேற்போட்டுக்கொண்டு தொந்தரவடைந்து வருகிறேன். இந்த, இப்படிப்பட்ட தொந்தரவுகளால் நான் அவஸ்தைப் படாமல் இருக்கத்தக்க வண்ணம், நோய் தெரியாமல் இருப்பதற்கு டாக்டர்கள் குளோரஃபாரம் (மயக்க மருந்து) கொடுப்பதுபோல், பணம், பண்டம் தாராளமாய்க் கொடுத்து உற்சாகப்படுத்தி விடுகிறார்கள்.

ஆதலாலேயே, உடல் நிலையைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் தொண்டாற்றிவர முடிகிறது என்று சொல்லுவேன். நல்ல அளவுக்கு என் தகுதிக்கு ஏற்பப் பணம் தேடிவிட்டேன். அதுவும் யாரையும் ஒரு காசு அளவுகூட தயவாய்க் கேட்காமல் வேண்டுகோள் விடுவதும், கட்டளை இடுவதும், ரேட் (விகிதம்) ஏற்படுத்துவதும் மக்கள் தாங்களாகவே மேல்விழுந்து கொடுக்க வருவதுமான தன்மையிலேயே இயக்கத்திற்குச் பணம் சேர முடிந்தது. அதைக்கொண்டு இயக்க நடப்புக்கும், பிரச்சாரத்திற்கும், காரியாலயக் கட்டடங்களும், இடமும், வயலும், தோப்பும், காலி மனைகளும், வீடுகளும், மண்டபங்களும், பள்ளிகளும், பள்ளிப் பிள்ளைகளுக்குப் பயன்படும் தங்குமிடங்களும், செலவுக்கு வருவாய் வரத்தக்க வீடுகளும் ஒரு அளவு ஏற்பாடு செய்துமிருக்கிறேன்.

இவைகளையெல்லாம்விட குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்று என்னவென்றால், திருச்சியில் ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று இரண்டு ஆண்டுகட்கு முன் முயற்சித்து, சென்ற ஆண்டில் பெண்கள் கல்லூரியாக ஏற்படுத்த அரசாங்கத்தில், யுனிவர்சிட்டியில் அனுமதி பெற்றுச் செயலில் இறங்கும்போது அதற்கு மேலும் கட்டடம், நில ஆர்ச்சிதம் முதலிய காரியங்களும், துவக்கியதில் அதிகச் செலவு மாத்திரமல்லாமல் பல தொந்தரவுகளும் ஏற்படுவதாயிருந்தது பற்றிச் சிந்தித்து, செயல்பட இருக்கும்போது இதை அறிந்த திருச்சித் தோழர்கள் பலர் திருச்சிக்கு இப்போது அவசரமாய் வேண்டியிருப்பது ஆண்கள் கல்லூரி என்று பல காரணங்களைச் சொல்லி முறையிட்டார்கள். எனது 10, 15 வருஷ திருச்சி வாசத்தில் நான் கண்ட அனுபவம் அம் முறையீடுகளை உண்மைப்படுத்தியதால், பெண்கள் கல்லூரி விஷயம் பின்னால் கவனிக்கலாம்; இப்போது அவசரமாக ஆண்கள் கல்லூரி விஷயம் கவனிக்க வேண்டியதாகும் என்பதாக எனக்குத் தோன்றியதால் அரசாங்கக் கல்வி அதிகாரியை அணுகி இதற்கு யோசனை கேட்டதில் அவர்கள் 'அங்கு ஏற்கனவே மூன்று காலேஜ்கள் ஆண்களுக்காக இருக்கின்றன. இரண்டு காலேஜ்கள் பெண்களுக்காக இருக்கின்றன. மேற்கொண்டு இப்போது அவசரமில்லை என்று சர்க்கார் நினைக்கிறது' என்று சொல்லிவிட்டார்கள்.



பிறகு மேலும் அவர்களை வேண்டிக்கொண்டதன்மீது 5 இலட்சம் ரூபாய் பொருளுதவி செய்தால், அரசாங்கம் கவனிக்கும் என்று சொல்லிவிட்டார்கள். நாம் சொந்தத்தில் வைப்பதானால், 50 ஏக்கர் இடமும், 4, 5 இலட்ச ரூபாய் செலவிட வேண்டியதான கட்டடமும், 2, 3 இலட்ச ரூபாய்க்கு மேலாக தளவாடச் சாமான்கள், இவை தவிர காலேஜ் ஏற்பட்ட பிறகு, 2, 3 ஆண்டுகளுக்கு மாதத்துக்கு ரூ. 2000, 3000 சிப்பந்திகள் செலவும் செய்ய வேண்டிவரும் என்று தெரிய வந்ததால், அரசாங்க விருப்பப்படி அவர்கள் கேட்கும் தொகையைத் தருவதாக ஒப்புக்கொண்டு தொகையும் செலுத்தப்பட்டாய் விட்டது. அனேகமாக அடுத்த ஆண்டில் காலேஜ் துவக்கப்படலாம்.

மற்றபடி, நமது இயக்கப் பிரச்சார வேலைகள் எப்போதும்போல் நடந்து வந்தாலும், சில விஷயங்களில், அதாவது நம் மக்கள் எண்ணிக்கைப்படி அரசாங்கப் பள்ளிகளிலும், உத்தியோகங்களிலும், பதவிகளிலும் விகிதாசார உரிமை பெற சில கிளர்ச்சிகள் நடத்தப்படவேண்டியது நமது சென்ற ஆண்டினுடையவும், வரும் ஆண்டினுடையவும் திட்டமாக இருந்தாலும், அரசாங்கத்தால் மற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு நாம் ஒரு அளவுக்கு அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டியது அவசியமாகத் தோன்றுகிறபடியால், மற்ற கிளர்ச்சிகளைச் சிறிது தள்ளிப் போடவேண்டியதாகிவிட்டதால், இப்போது அது விஷயமாய் (வகுப்புவாரி உரிமை விஷயமாய்) பிரச்சார அளவில் இருக்கவேண்டியதாகிவிட்டது.

நமது அரசாங்கத்தின் சமதர்ம (சோஷ்யலிச) திட்டம் எளிதான திட்டம் அல்ல. அரசாங்கத்திற்கு மிகவும் சிரமமும், தொல்லை தரத்தக்கதுமான திட்டமாகும். நம் நாட்டில் பாமரர்கள் பகுத்தறிவற்றவர்களாக இருப்பதாலும், ஆதிக்கத்தில் இருந்துவரும் பார்ப்பனரும், செல்வவான்களும் எந்தக் கேடான காரியமும் செய்யத்தக்க அளவுக்குத் துணிவும், வசதியும் உடையவர்களாக இருப்பதாலும் இவர்கள் ஆதரவால் காலிகளும், முஸ்லிம்களும் பொறுப்பற்ற தன்மையில் அரசாங்கத்திற்கு எதிரிகளாய் இருப்பதாலும், அரசாங்கத்திற்குப் பொதுமக்கள் ஆதரவு மிகமிகத் தேவைப்படுகிறது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், அரசாங்கத்தின் சோஷ்யலிசத் திட்டம் நல்ல அளவுக்கு நிறைவேறும்படி செய்வோமானால், நமது திட்டங்கள் ஒரு நல்ல அளவுக்கு நிறைவேற வாய்ப்பு இருக்கிறது என்பது என் கருத்தாகும்.

இப்போது அரசாங்கக் கல்வித் திட்டத்தினால் மக்களின் பாமரத்தன்மை ஒழிந்து வரும் என்பதில் ஆட்சேபணை இல்லை. இந்த நிலை சாதி ஒழிப்புக்கு நல்ல ஆதரவான நிலையாகிவிடும்.

பொருளாதார பேதம் ஒழியவேண்டியது அவசியமேயானாலும், முதலில் கவனம் செலுத்தவேண்டியது சாதி ஒழிப்பு வேலையே ஆனதனால் அந்தக் காரியத்திற்கு அரசாங்கத்திற்கு நிபந்தனை அற்ற ஆதரவளிக்க வேண்டியவர்களாகிறோம்.

பொருளாதார பேதம் பெரிதும் உலகமெங்கிலும் இருந்துவரும் பேதம் என்பதோடு அதை அவ்வளவு எளிதில் ஒழித்துவிடுவது என்பது மிக்க சிரமத்தைத் தரத் தக்கதாகும். ஏனெனில், ஆட்சி ஜனநாயகமானாலும், ஆட்சியாளர்கள் சாதி ஆணவக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதோடு, பொருளாதார உணர்ச்சி கொண்டவர்களாகவும் இருந்து வருகிறார்கள். பொதுவாகச் சொல்லுவதானால், நமது நாட்டு ஆட்சியாளர் கட்சியான காங்கிரசில் பார்ப்பனர் ஆதிக்கத்தை விடப் பணக்காரர்கள் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. மந்திரிமார்கள் பெரிதும் செல்வவான்களும், செல்வத்தைச் சேர்க்கவேண்டும் என்ற பேராசை உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். அதோடு, செல்வவான்கள் ஆட்சியில் நல்ல அளவுக்குச் செல்வாக்குப் பெற்றவர்களாகவும், தங்கள் செல்வ விருத்தியை முன்னிட்டே காங்கிரசை ஆதரிப்பவர்களாகவும் இருப்பதால், ஒரேசமயத்தில் இருவர் எதிர்ப்பையும் சமாளிப்பது அரசாங்கத்திற்குப் பெருந் தொல்லையாக இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



ஆதலால், நமது மேற்கண்ட இரு திட்டங்களும் இன்று அரசியல் திட்டங்களாக இருக்கும் நேரத்தில், நாம் மற்ற நமது திட்டங்கள் விஷயமாய்ப் பிரச்சாரத்திலும், மாநாடு கூட்டுவதிலும் லட்சியமாக இருக்கவேண்டியதுடன், கிளர்ச்சிக்காரர்களாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படக்கூடாது என்பது எனது கருத்து.

நமது இயக்கத் தோழர்கள் இன்று எந்தக் கிளர்ச்சிக்கும் தயாராயிருக்கிறார்கள் என்பதும், கிளர்ச்சி துவக்காத காரணத்தாலேயே என்மீது பலருக்குச் சலிப்பு என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும், நமக்கு அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுப்பதும், ஆட்சியின் சோஷ்யலிச திட்டநடப்புக்கு எதிராக ஏற்படும் சமுதாய விரோதிகளின் கிளர்ச்சிகளையும் தொல்லைகளையும் முறியடிப்பதுதான் இன்று முக்கியமான காரியமாக இருக்கவேண்டும். காங்கிரசுக்கு நம்மால் கூடியவரை பலம் ஏற்படும்படி செய்யவேண்டும்.

தமிழர்களாகிய நமக்குப் பெரிதும் அவரவர் சுயநலம்தான் முக்கியமே தவிர இனநலம் அலட்சியமாய்க் கருதக்கூடியதாக இருந்து வருகிறது. ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், தமிழன் என்ற உரிமையால் பதவிக்கு வந்து, ஓட்டுக் கொடுக்கும் தமிழர்களில் 100-க்கு 90 பேர் அரசாங்க எதிரிகளாகவும், எதிரிகளின் கையாட்களாகவும் இருக்கிறார்கள். இன்று அரசாங்கத்துக்குத் தமிழர்களில் படித்தவன் ஆதரவும் இல்லை; பணக்காரன் ஆதரவும் இல்லை; பதவிபெற்று ஓய்வெடுத்தவர்கள் ஆதரவுமில்லை. இதுமாத்திரமல்லாமல், அரசாங்கப் பெரும்பதவி, சிறுபதவியில் இருப்பவர்கள் ஆதரவும் இல்லை. நாம் அப்படிப் பிறவியாளர்களாக ஆகிவிட்டோம்.

ஆனதனால், நம் தலையில் விழுந்திருக்கும் பொறுப்பு மகத்தானது. இன்னும் சொல்லவேண்டுமானால், அரசாங்கம் நம்மை ஒரு நல்ல அளவுக்கு நம்பித்தான் இவ்வளவு தீவிர திட்டத்தில் இறங்கி இருப்பதாக உணருகிறேன். இப்போது நாம் மேற்சொன்னபடி நிபந்தனை அற்ற ஆதரவாளர்களாக இல்லையானால், நாமும் மேற்கண்ட தமிழர் துரோகிகள் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் ஆகிவிடுவோம்.

இன்று தமிழர் சமுதாயத்திற்கு மாத்திரமல்லாமல், ஏழைஎளியவர்கள் சமுதாயத்திற்கும் இரட்சகர் என்கின்ற முறையில் காமராசர் இருந்து வருகிறார். அவர் இல்லாவிட்டால், உள்ளது ஒன்றுமே இல்லை. இருக்கவேண்டியது ஒன்றுமே இல்லை என்பது மாத்திர மல்லாமல், எல்லாக் கேடுகளும் நம்மைச் சுற்றிக்கொண்டு இருக்கும்.

எனவே, காமராசரை உற்சாகப்படுத்தும் அளவுக்கு நமது ஆதரிப்பு ஆட்சிக்கும் காங்கிரசுக்கும் இருக்கவேண்டியது அவசியமாகும்; இன்றியமையாத அவசியமாகும்.

இதுவரை நாம் ஒன்றும் செய்யவில்லை என்று கருதிவிடாதீர்கள். அரசியல் ரீதியில் இன்று காங்கிரசுக்கு, காமராசருக்கு எதிர்ப்பு இல்லாமல் ஆக்கியது, நமது இயக்கம்தான். பார்ப்பான் குள்ளநரி ஆகிவிட்டான். முஸ்லிம் லீக் இன்று செல்லாக் காசு ஆகிவிட்டது. 'கண்ணீர்த் துளி' நாட்டுக்கு நியூசென்சாகி விட்டது. இது யாரால்? இதற்குக் காங்கிரஸ் என்ன பாடுபட்டது? ஆதலால், நாம் ஒன்றும் செய்யவில்லை என்று கருதிவிடக்கூடாது.

ஆகவே, நாம் ஒன்றும் செய்யவில்லை என்றோ, நமக்குத் திட்டமில்லை என்றோ, கருதாமல், சலிப்படையாமல் நமது தோழர்கள் கடவுள், மத, சாஸ்திர, சம்பிரதாய ஒழிப்புக் காரியங்களைத் திட்டமாகக் கொண்டு பிரச்சாரம் செய்வது, மாநாடு கூட்டுவது ஆகிய காரியங்களில் ஈடுபட்டுத் தீவிரமாகக் காரியங்கள் செய்யவேண்டிக்கொள்ளுகின்றேன்.

கழக ஸ்தாபனங்கள், மாநாடுகள் கூட்டவேண்டும். காங்கிரஸ்காரர்களை அவர்கள் கலந்துகொள்ள ஆசைப்படும் அளவுக்கு அழைக்கலாம். நாமும் அவர்கள் விரும்பும் அளவுக்குக் கலந்துகொள்ளலாம். நம் தனிமையை எப்போதும் மறந்துவிடாமல் தொண்டாற்றலாம். இதுதான் என் 86-ம் ஆண்டு வேண்டுகோள் செய்தியாகும்.

[பிறந்த நாள் விழா மலர் 86—17-9-1964]



# 4. எனது தொண்டு

நான் 1925-ஆம் ஆண்டில் காங்கிரசிலிருந்து விலகியபின், அரசியல் என்பது நமது நாட்டைப் பொறுத்தவரையில் பார்ப்பன ஆதிக்கத்திற்குப் பார்ப்பனரால் நடத்தப்படும் போராட்டமேயொழிய, பொதுஜன நன்மைக்கேற்ற ஆட்சிமுறை வகுப்பதற்கோ அல்லது வேறு எந்தவிதமான பொதுநல நன்மைக்கேற்ற லட்சியத்தைக் கொண்டதோ அல்ல என்பதைத் தெளிவாக உணர்ந்து, அப்படிப்பட்ட பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதையும், எந்தக் காரணம் கொண்டும் நமது நாட்டில் இனியும் பார்ப்பன ஆதிக்கம் ஏற்பட இடம் கொடுக்கக்கூடாது என்பதையும் கருதி, பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஊற்றாக இருந்துவரும் கடவுள், மதம், சாதித் தத்துவங்களையும், இந்தத் தத்துவத்திற்கு இடமாகவிருக்கிற மூடநம்பிக்கையையும், மூடநம்பிக்கையை அரசியல், கடவுள், மதம், சாத்திரம், தர்மம் ஆகியவற்றின் பேரால் வளர்க்கும் பார்ப்பன சமுதாயத்தையும் ஒழிப்பது என்ற கொள்கை மீது 'சுயமரியாதை இயக்கம்' என்பதாக ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்து, நானே தோற்றுவித்தவனாகவும், தொண்டாற்றுபவனாகவுமிருந்து பல தோழர்களின் ஆதரவுபெற்று அதை நடத்திவந்தேன். இந்த நிலையில் காங்கிரசானது, அரசியல் ஆதிக்கத்தில் பிரவேசிப்பதில்லை என்றும், சமுதாயத் தொண்டேதான் காங்கிரசின் பிரதான கொள்கையென்றும் சொல்லி, நிர்மாணத் திட்டம் என்னும் பேரால் பொய் நடிப்பு நடித்து மக்களை ஏமாற்றிவந்த (காங்கிரஸ்) தனது வேடத்தை மாற்றிக்கொண்டு, அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றத் துணிந்து, வெளிப்படையாகவே அரசியலில் புகுந்து ஆட்சியைக் கைப்பற்ற முன்வந்து விட்டதையும் உணர்ந்தேன்.

பிறகு எனதுநிலை மேலே குறிப்பிட்டபடி கடவுள், மதம், சாதி, தர்ம, சாத்திர சம்பிரதாய, பார்ப்பன சமுதாய ஒழிப்பு வேலைகளுடன், அரசியலில் பார்ப்பனர் நுழையாதபடியும், ஆதிக்கம் பெறாமல் இருக்கும்படியும் தொண்டாற்றவேண்டிய அவசியத்திற்கு ஆளாக நேரிட்டுவிட்டது. அதாவது, இவ்வளவு துறையிலும் பாடுபடவேண்டியதே எனக்குச் சமுதாயத்தொண்டாக ஆகிவிட்டது. இதன் பயனாய் எனது வேலை இரட்டித்து விட்டதுடன், எதிர்நீச்சல்போல் மிகமிகக் கஷ்டமான காரியமுமாகிவிட்டது. எப்படி எனில், நான் கடவுள், மத, சாஸ்திர, சம்பிரதாய, சாதித் துறையில் பாடுபட்டால் எதிரிகள் (பார்ப்பனர்) அரசியல் துறையில் முன்னேறிவிடுகிறார்கள். அரசியல் துறையில் பாடுபட்டால் எதிரிகள் கடவுள், மத, சாஸ்திர, சம்பிரதாய, சாதித் துறையில் முன்னேறி விடுகிறார்கள். ஆதலால், இரு துறைகளில் மூடநம்பிக்கையுள்ள பாமர மக்கள் இடையில் வேலை செய்வதென்பது எனக்கு மேற் சொன்னபடி மிகமிகக் கஷ்டமாகவும், காட்டு வெள்ளத்தில் எதிர்நீச்சல் போடும் வேலைபோலும் திணற வேண்டியதாகிவிட்டது.

இதற்கிடையில் எனக்கேற்பட்ட மற்றொரு மாபெரும் தொல்லையென்னவென்றால், என் தொண்டுக்கு ஆதரவாகச் சேர்த்து எடுத்து அணைத்துப் பக்குவப் படுத்திவந்த தோழர்கள் எல்லாம் 100-க்கு 100 பேரும் பக்குவம் அடைந்தவுடன், விளம்பரம் பெற்றுப் பொதுமக்கள் மதிப்புக்கு ஆளானவுடன் அத்தனைபேரும் எதிரிக்குக் கையாள்களாகவே (எதிரிகளால் சுவாதீனம் செய்யப்பட்டு) எதிரிகளுக்குப் பலவழிகளிலும் பயன்படுபவர்களாகி விட்டதோடு, எனக்கும் எனது தொண்டிற்கும் எதிரிகளாக, முட்டுக்கட்டைகளாகப் பலர் விளங்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். இதற்குக் காரணம் (பிரகலாதன், விபீஷணன் போல்) நமது 'சாதிப் பிறவி'த் தன்மைதான் என்று சொல்ல வேண்டியதைத் தவிர, எனது 40 வருட பொதுத்தொண்டின் அனுபவத்தில் வேறொன்றும் சொல்லமுடியவில்லை.

இந்த நிலையில், நான் 40 ஆண்டுகளாகத் தொண்டாற்றிவந்து இன்றுள்ள நிலையில் எனது தொண்டின் பயனும், நிலையும் இருக்கிறதென்றால் என்னைப்பற்றி அறிஞர்கள்தான் விலைமதிக்க வேண்டும்.

என்னைவிட்டு விலகி எதிரிகளானவர்கள், எதிரிகளின் கையாள்களானவர்கள்—ஒழுக்கத்தில் என்மீது குற்றமிருந்து என் நடத்தையில் கோளாறு இருந்து விலகி இருப்பார்களே



படிப்பகம்

www.padippakam.com



யானால் அதற்காக நான் வெட்கப்படவேண்டியதுதான் நியாயமாகும். ஆனால், விலகியவர்கள் அத்தனைபேரும் எதிரிகளோடு சேர்ந்தார்கள் என்பது மாத்திரமல்லாமல், எந்தக் கொள்கைக்காக என்னுடன் இருப்பதாக நடித்தார்களோ அதை அடியோடு விட்டுவிட்டு, நேர் எதிரிடையான கொள்கையை மேற்கொண்டும், அதற்கு ஆக்கமளித்தும் எனக்கு முட்டுக்கட்டை போட்டு வருவதுதான் நமது சமுதாயத்திற்கென்றே ஏற்பட்ட கெட்ட வாய்ப்பாகும் என்று மறுபடியும் சொல்லவேண்டி இருக்கிறது. இந்த நிலை ஒரு புறமிருக்க,

இந்தியாவிற்குச் சமீபத்தில் வந்துபோன ஒரு ரஷ்யப் பிரமுகரை ஒரு பார்ப்பனர் 'இந்தியாவிற்கு யார் வந்தாலும் சங்கராச்சாரியாரைப் பார்த்துவிட்டுப் போவதுதான் முக்கிய காரியம்' என்று சொல்லி, சங்கராச்சாரியாரிடம் அழைத்துப் போனாராம்! அந்த ரஷ்யர் சங்கராச்சாரியாரிடம் பல விஷயங்களைப்பற்றிப் பேசிவிட்டுக் கடைசியாக, 'உங்கள் நாட்டில் உங்கள் மத சம்பிரதாயத்திற்கும் உங்கள் சம்பிரதாயத்திற்கும் விரோதமாக பெரியார் ஒரு இயக்கம் நடத்துகிறாரே, அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டாராம். அதற்குச் சங்கராச்சாரியார் 'ஆமாம். அப்படி ஒரு இயக்கம் நீண்ட நாட்களாக நடந்து வருகிறது என்றாலும் அது இன்றைக்குப் பதினேழு வருடங்களுக்கு முன் வரையில் நாங்கள் மிகக் கவலை கொள்ளவேண்டிய அளவுக்கு நடந்தது. ஆனால், இந்தப் பதினேழு வருடமாக (1948-ல் இருந்து) எங்களுக்கு அதைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லாதநிலை ஏற்பட்டுவிட்டது. அதன் பாட்டுக்கு அது நடைபெறுகிறது என்றாலும் இன்று அதனால் எங்களுக்கு எந்தவிதத் தொந்தரவும் இல்லை' என்று சொன்னாராம்.

'இப்படி அவர் சொல்லக் காரணம் என்ன?' என்று அந்த ரஷ்யர் என்னிடம் வந்து கேட்டார். அவர் இப்படி என்னைக் கேட்கும்போது ஒரு பார்ப்பனரும் கூட இருந்தார். அதற்கு நான் சொன்ன பதில்: 'அது ஒரு நல்ல அளவுக்கு உண்மைதான். எப்படியென்றால், நம் நாட்டிற்குச் 'சுதந்திரம்' வந்து 17 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அது பார்ப்பனருக்கு வந்த சுதந்திரமேயாகும் என்பதோடு, அதன் பயனாய் நம்மிலிருந்து விளம்பரம் பெற்ற, மக்களிடம் செல்வாக்குப்பெற்ற ஒரு கூட்டம் பார்ப்பனருக்கு (நல்ல நிபந்தனையற்ற) அடிமைகளாகக் கிடைத்துவிட்டது. இந்த இரண்டின் ஆதரவில், பார்ப்பனர்கள் இழந்ததையெல்லாம் பெற்றுக்கொண்டதோடு மேலேறவும் அவர்களுக்கு நல்லவசதி ஏற்பட்டுவிட்டது.

இதுமாத்திரமல்லாமல், நானும் இப்படிப்பட்ட பார்ப்பன சுதந்திரத்தை எதிர்க்கும் வேலையை விட்டு விட்டு, இராஜாஜியை ஆட்சியை விட்டு வெளியேற்றி விட்டோம் என்ற ஆணவத்தாலும், காமராசரிடத்தில் வைத்த அளவுக்கு மீறிய நம்பிக்கையாலும் 'சுதந்திரத்தை', காங்கிரசை, அரசாங்கத்தை ஆதரிக்கும் பணியில் தீவிரமாக நிபந்தனையற்றுப் பாடுபட்டு வந்ததாலும், காமராசர் ஆட்சியை விட்டுப்போய் விட்டதாலும், அதற்குப் பிறகு 'அசல் பார்ப்பனிய' ஆட்சியே தங்குதடையின்றி நடந்து வருவதாலும் இதன் பயனாய்ச் சமுதாயத் துறையிலும், மதத் துறையிலும், உத்தியோகத் துறையிலும், கல்வித் துறையிலும் யாதொரு குறைவு மில்லாமல் மேலே போகும்படியான நிலையில் அவர்கள் (பார்ப்பனர்கள்) நிலை இருப்பதாலும் சங்கராச்சாரியார் அவ்விதம் கூறி இருக்கிறார். மற்றும், இன்றைய ஆட்சியின் பயனாய் நம் சமுதாயத்திற்கு எவ்வளவு கேடும் இழிவும் ஏற்பட்டாலும் அதை மனதார வெளியில் சொல்லி அழுது திருப்தி அடையக்கூட வாய்ப்பில்லாத நிலையில், நான் காங்கிரசை ஆதரித்துத் தீரவேண்டியவனாய் இருக்கிறேன். இது பார்ப்பனர்களுக்கு இலாபகரமான விஷயமாகி விட்டது' என்று பதில் சொன்னேன். ரஷ்யப் பிரமுகர் இதுகேட்டுப் புன்சிரிப்புடன் பரிதாபப்பட்டார்.

நிற்க, இன்றைய 'சுதந்திர' ஆட்சி ஒரு மதப் பாதுகாப்பு ஆட்சியாகவே ஆட்சி நடத்துகிறது. இதைப் பயனளிக்கும்படியான அளவுக்குக் கிளர்ச்சி செய்யவோ, கண்டிக்கவோ, தக்கபடி எதிர்ப் பிரச்சாரம் செய்யவோகூட தொண்டாற்ற முடியவில்லை. பத்திரிகைகள் யாவும் கூண்டோடு பார்ப்பன ஆதிக்கப் பிரச்சாரத்தில் இறங்கிவிட்டன. ரேடியோ, சினிமா, ஜோசியம், புராணம், உற்சவம், காலட்சேபம் ஆகியவைகளையே



விளம்பரம் செய்யும் சாதனங்களாக, ஒன்றுகூட விலக்கில்லாமல், எல்லாப் பத்திரிகைகளும் விளங்குகின்றன. இராஷ்டிரபதி, கவர்னர் உட்பட எல்லா மந்திரிகளும் கோவில், பக்தி பிரச்சாரம் செய்துவருகின்றார்கள்! அதிகாரிகள் நியமனம் பெறவும், தங்கள் குற்றங்களை மறைத்துக்கொள்ளவும், பிரமோஷன்கள் பெறவும் மந்திரிகளையேதான் பின்பற்றுகிறார்கள். காங்கிரசிலுள்ள மெம்பர்கள், காங்கிரஸ்காரர்கள் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்கள் தங்களின் உண்மை நிலையையும், நிறத்தையும் மறைத்துக்கொள்ள மந்திரிகளைப் பின்பற்றுவதுடன் பக்தகோடிகளாக விளங்குகிறார்கள். சமுதாய நலம் காரணமாகவே பார்ப்பனர்கள் கூண்டோடு காங்கிரசை ஒழித்துக்கட்ட, தோல்வியடையச்செய்யப் பாடுபட்டாலும், அப் பார்ப்பன சமுதாய நலத்திற்கேற்ப எல்லாக் காரியங்களையும் நமது ஆட்சி மூலம் நிறைவேற்றிக்கொள்ள மந்திரிகளும், அதிகாரிகளும், காங்கிரஸ்காரர்களும் தெரிந்தோ, தெரியாமலோ அவர்களுக்கு எல்லாவித உதவியான காரியங்களையும் செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் எனது தொண்டு இப்படிப்பட்ட காங்கிரசை—மந்திரிகளை—அதிகாரிகளை 'பாதுகாப்பதற்கு' என்பதல்லாமல் வேறு எதற்குப் பயன்படக்கூடுமென்பது எனக்கு விளங்கவில்லை. இந்த நிலையில் எனக்குள்ள ஆறுதல் என்னவென்றால், இவ்வளவு எதிர்ப்பிலும், ஏமாற்றத்திலும் எனது தொண்டுக்குச் சாதனமாகவிருக்கும் சுயமரியாதை இயக்கத்திலும், திராவிடர்கழகத்திலும் சுயநலமற்று தன்னலத் தியாகத்துடன் எவ்விதப் பிரதிபிரயோஜனத்தையும் எதிர்பாராமல், ஒழுக்கம், நாணயம் என்பதில் இருந்து ஒருசிறிதும் வழுவாமல், தமிழ்நாட்டில் சென்னை முதல் குமரிவரை ஒவ்வொரு குறிப்பிட்ட இடங்களிலும் ஆர்வமும் முயற்சியும் உள்ள தோழர்கள் நல்ல அளவுக்கு இருந்து எனக்கு ஆதரவளித்து உற்சாகமூட்டுவதுடன், நெறி தவறாமல், படிந்து தொண்டாற்றுவதுதான் எனக்கு உயிரூட்டி, சலிப்படையாமல் உழைக்கச் செய்து வருகிறது. மேலும், நமது இயக்கத்தால், உழைப்பால் மனித சமுதாயத்தின் நடத்தையில் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிடவில்லை என்றாலும் பெருவாரியான மக்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டிருப்பதை உணருகிறேன். மற்றும், நம் எதிரிகளான பார்ப்பனர் 'எங்கள் நிலைமை இப்போது சீரடைந்துவிட்டது. இனிப் பயப்படத் தேவை இல்லை' என்று சொன்னாலும் அது வாயளவில் கொள்ளும் ஜம்பமே அல்லாமல் மன அளவில் அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை அவர்களது நடத்தையில், முயற்சியிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இன்று என்றுமில்லாத அளவுக்குக் கோவில் திருப்பணி, கோவில் உற்சவம், கோவில் கும்பாபிஷேகம், புதுக்கோவில் உண்டாக்குதல், புராணப் பிரச்சாரம் செய்தல்; கவர்னர், மந்திரி முதலியவர்களை ஸ்தலயாத்திரை செய்யச் செய்தல்; இவைகளைப் பற்றிய விளம்பரங்களைப் பெரிய அளவில் செய்தல்; பத்திரிகைகளில் எல்லாம் கடவுள் பிரச்சாரம், கடவுள் கதைப் பிரச்சாரம், மதப் பிரச்சாரம், சாஸ்திர தர்மப் பிரச்சாரம், பஜனை, காலட்சேபம் செய்தல் முதலிய காரியங்களில் எப்போதையும்விட அதிகமாக—மிகமிக அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அரசாங்கத்திலும், இன்று மக்களின் மூடநம்பிக்கையால், முட்டாள்தனத்தால் சமுதாயத்தில் மிகமிகச் சிறுபான்மையராகிய 'பெரிய சாதியாரும்' பணக்காரர்களும் 'பெரிய படிப்புக்காரர்' என்பவர்களுமே சூழ்ச்சியால் பெரிதும் மந்திரிகளாக இருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு ஓட்டுச் செய்பவர்கள் இவர்களைப்போல் 30 பங்கு அதிகமான சமுதாயத்தில் கீழ்நிலையிலிருக்கும் மக்களாக இருக்கிறார்கள். ஆனதால், மக்களை மூடநம்பிக்கையிலிருந்து ஈடேறாமல் செய்து, மேலும் மேலும் மடையர்களாக ஆக்கி, இன்றுள்ள நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்பதற்காகவே செய்கிறார்கள் என்றால், மேல் நிலையிலுள்ள சிறுபான்மையோருக்குப் பயம் வந்து விட்டது; பயத்தால் துடிக்கிறார்கள் என்றுதானே ஏற்படுகிறது.

நாட்டில் படிக்காத—நல்ல படிப்பு வாசனை அற்ற மக்கள் 100-க்கு 80 பேர் இருக்கிறார்கள். அதுபோலவே உழைப்பாளி, ஏழை மக்கள் 100-க்கு 80 பேர் இருக்கிறார்கள்.

படிப்பகம்

சமுதாயத்தில் கீழ்சாதி மக்கள் எனப்படுவோர் 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் மேல்சாதிக்காரர்களும், பணக்காரர்களும், படித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களும் ஆட்சியிலும், ஆதிக்கத்திலும் இருக்கிறார்கள் என்றால் இந்த நிலையை ஜனநாயக சுதந்திரமென்றால், மேலே குறிப்பிட்டபடி இதற்கு மக்களின் முட்டாள் தனமும் மூடநம்பிக்கையுமல்லாமல் வேறு என்ன காரணம் சொல்லமுடியும்? ஆதலால்தான், மக்கள் அறிவு பெற்றுச் சுயமரியாதைக்காரர்களாகி விட்டால் தங்களின் இன்றைய நிலை என்ன ஆவது என்கின்ற பயம் ஆதிக்கக்காரர்களுக்கு ஏற்படும் அளவுக்காவது நமது தொண்டு பயன்பட்டிருக்கிறது என்று சொல்லித்தானாக வேண்டும். என்றாலும், செய்ய வேண்டிய அளவுக்கு நாம் செய்யவேண்டியதைச் செய்யவில்லை. இமயமலை பனிக்கட்டியால் குளிரில் அவஸ்தைப்படுகிறது என்று கருதி சால்வையை மலைக்குப் போர்த்திறவனைப்போல், நாம் காங்கிரசைக் 'காப்பாற்றுகிற' வேலையில் ஈடுபட்டு, சமயத் துறையில் பெரிய அளவுக்கு ஏற்பட்டிருக்கவேண்டிய நன்மையை—மாறுதலை இழந்து விட்டோம் என்பதை நாம் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

நாம் காங்கிரசைக் 'காப்பாற்றும்' தொண்டில் இறங்காமலிருந்து, இந்த 10, 12 வருடத்தில் காங்கிரசை எதிர்த்து இரண்டு மூன்று முறை பதினாயிரக் கணக்கில் சிறை சென்றிருந்தால் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ' முறையில் கண்டிப்பாய் நல்ல அளவிற்கு வெற்றி பெற்றிருப்போம். கல்வித் துறையில் மேலும் முன்னேறி இருப்போம். சமுதாயத் துறையில் சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும்படியாகவும், முழு ஆலயப் பிரவேசம் முதலிய உரிமை பெறவுமான பல உரிமைகள் பெற்றிருப்போம். நீதித் துறையில் வக்கீல்களின் தொல்லையை நல்ல அளவுக்குக் குறைத்துக் கொண்டிருப்போம். இந்தக் காரியங்கள் ஈடேறாமல் இருப்பதற்குக் காரணம், நமது கவனத்தை வேறு வழியில் திருப்பிக்கொண்டது பெரும் காரணமாகும். இப்போதும் நாம் இனியும் ஒன்றரையாண்டு காலத்திற்கு—18 மாதங்களுக்கு இந்தப் போக்கிலேயே இருக்கவேண்டியவர்களாய் இருப்பதால் அதற்குள் நமது நலம் வெகுதூரம் பாதிக்கப்பட்டு, எதிரிகள் மிகவும் வளர்ந்து விடுவார்களே என்று அச்சப்படவேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். நமது தொண்டுக்காக நமக்கு—நமது இலட்சியத்திற்குச் செய்யாவிட்டாலும், நன்றி காட்டாவிட்டாலும் நமது இலட்சியத்திற்குக் கேடுபயக்கும் பணியையாவது காங்கிரஸ் ஆட்சி செய்யாமல் இருக்கலாம். ஆனால், அப்படிக்கல்லாமல் நம்மால் காங்கிரசுக்கு—ஆட்சிக்கு 'ஒரு பயனுமே ஏற்படவில்லை; தொல்லைகள்தாம் ஏற்படுகிறது' என்று காங்கிரஸ் கட்சி கருதுகிறபோது, நமது நிவர்த்தி இல்லாத முட்டாள்தனத்தைப் பற்றி வெட்கப்பட வேண்டியதைத் தவிர, வேறு என்ன செய்யமுடியும்?

இன்று காங்கிரசுக்கு எதிராக, எப்படியாவது காங்கிரசை—காங்கிரஸ் ஆட்சியை ஒழித்துக் கட்டுவது என்கின்ற இலட்சியத்தில் பொதுமக்களுக்கும் ஆட்சிக்கும் எவ்வளவோ கொடுமைகளையும், துரோகங்களையும், நாசங்களையும், நட்டத்தையும் கொடுத்துவரும் எதிர்க்கட்சிக்காரர்கள் இந்த ஆட்சியினால் மரியாதையும் பெருமையும் பெற்றுவருகிறார்கள். பல வசதிகளையும் நடப்புரிமைகளையும் பெற்றுவருகிறார்கள். எனவே, நமது தொண்டு—எனது தொண்டு எதிரிகள் நகைக்கும்படிதான் பலனளித்தது என்று சொல்லி வெட்கப் படுகிறேன்.

ஆகவே, இனி நமது தொண்டு அடுத்துவரும் தேர்தலில் காங்கிரசுக்கு நல்ல வெற்றி கிடைக்கும்படி செய்யவேண்டியது பெருங் கடமையானாலும் அதோடு அதைவிடப் பெருங் கடமையாகக்கொண்டும் தொண்டாற்ற வேண்டியவனாக இருக்கிறேன்—இருக்கிறோம் என்பதைக் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[பிறந்த நாள் விழா மலர் 87—17-9-1965]



# 5. எனது விருப்பம்

எனக்கு இன்று (17-9-1966) பராபவ புரட்டாசி 2-ம் தேதி முதல் 88 ஆம் ஆண்டு பிறக்கிறது. நான் பேராசைக்காரனாக இல்லாமல், இயற்கையை ஓரளவுக்காவது உணர்ந்தவனாக இருப்பவனானால் உங்கள் எல்லோரிடமும் முடிவுப் பயணம் சொல்லிக் கொள்ள வேண்டியவனேயாவேன்.

அது மாத்திரமல்லாமல், நான் சிறிதாவது பகுத்தறிவு உடையவனாக இருந்தால் என் வாழ்வில், எனது இலட்சியத்தில் முழுத் திருப்தியடைந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியவனாவேன்.

என் உடலைப் பற்றிய எவ்வித கவலையும் இன்றி, நேர்ந்தபடி நடந்து, கிடைத்ததை எல்லாம் நேர் கூறு இன்றி உண்டு அனுபவித்து வந்த நான் 87 ஆண்டு முடிந்து 88-ம் வயதில் புகுகின்றேன் என்ற அதிசயத்தை நினைத்துத்தான் இனிமேலும் வாழ ஆசைப் படுவது பேராசை என்று குறிப்பிட்டேன்.

அதுபோலவேதான், ஒரு சார்பும் இல்லாதவனாகத் தனித்து எந்த ஒரு ஆதரவும் அற்றவனாகி, என்னையே எண்ணி நின்று, பாமர மக்களுடையவும், படித்தவர்களுடையவும், பிறவி ஆதிக்கக்காரர்களாகிய பார்ப்பனருடையவும், சர்வ சக்தியுள்ள பத்திரிகைக்காரர்களுடையவும் போதாக் குறைக்கு அரசாங்கத்தாருடையவும் வெறுப்புக்கும், அதிருப்திக்கும், எதிர்ப்புக்கும், விஷமப் பிரச்சாரத்திற்கும், தண்டனை கண்டனைகளுக்கும் ஆளாக இருந்து, எதிர்ப்பையும் போராட்டங்களையும் சூழ்ச்சிகளையும் சமாளித்து, பொது மக்களால் கனவு என்று கருதப்பட்ட எனது இலட்சியங்களை 'இவை கனவு அல்ல, உண்மை நினைவே, காரிய சாத்தியமே' என்று கூறிவந்து, அவை (எனது இலட்சியங்)களின் நடப்புகளையும் நடப்புக்கு ஏற்ற முயற்சிகளையும் நேரில் கண்டு களிக்கிறேன் என்ற கருத்தில்தான் எனது இலட்சியத்தில் என் தகுதிக்கு ஏற்ற அளவில் முழுத் திருப்தி அடைகிறேன் என்று குறிப்பிட்டேன்.

நான் காங்கிரசிலிருந்து விலகிய 1925 ஆம் ஆண்டிலேயே அன்றைய நிலைமையைக் கருதி 'இனி இந்தியாவின் ஆட்சி ஜனநாயகமாகத்தான் இருக்கவேண்டும்' என்று இந்த நாட்டில் முதல் முதல் கருதியவன் நான்தான். அதற்கு ஆதாரம், 1925-ல் நான் துவக்கிய பத்திரிகைக்கு 'குடி அரசு' என்று பெயர் வைத்து காங்கிரசை, காந்தியை, மதத்தை, கடவுளை, சாதியை, பார்ப்பனரை எதிர்ப்பதையே கொள்கையாகக் கொண்டு நடத்தி வந்தேன்.

'ஜனநாயகம்' என்பது வடமொழி. அதற்கு நேரான தமிழ் மொழிதான் 'குடி அரசு' என்பது.

காங்கிரசின் கொள்கையெல்லாம் 1885 முதல் 1945 வரை—பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் குடியேற்ற நாட்டு அந்தஸ்து. இதற்கு காந்தியார் விளக்கம் சொன்னபோது 'மக்கள் இஷ்டப்படி பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சி நடைபெறவேண்டும்' என்று கூறினார்.

காங்கிரசில் ஒரு சிறு சாரார் தங்களைத் தீவிரவாதிகளாக மக்கள் கருதவேண்டும் என்கிற கருத்தில் 'இந்தியாவுக்கு வேண்டியது பூரண சுயராஜ்யம்' என்று சிலர் கூறி வந்தார்கள். இவையெல்லாம்கூட 'குடி அரசு' பத்திரிகைப் பிரச்சாரம் ஆரம்பித்த 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகுதான்.

இந்தப் பிரச்சினை அமுலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுபோல் 1950 வாக்கில் 'இந்திய ஆட்சி ஜனநாயக ஆட்சியாக இருக்க வேண்டும்' என்று பிரகடனப்படுத்தப் பட்டுவிட்டது.

குடி அரசு ஆட்சியின் கொள்கை சமதர்மமாக இருக்கவேண்டுமென்று 1927, 1928 ஆம் ஆண்டிலேயே சுயமரியாதை இயக்க மாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றி 1930 ஆம் ஆண்டு ஈரோடு மாநாட்டில் சமதர்மத்திற்கு விளக்கத் தீர்மானங்களாக:

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



ஒரு நபர் ஒன்றுக்கு 5 ஏக்கர் நிலத்திற்குமேல் இருக்கக்கூடாது என்றும், அதுவும் உழுகிறவனுக்குத்தான் நிலம் இருக்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. 1934ஆம் ஆண்டு சென்னை விக்டோரியா மண்டபத்தில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் சுயமரியாதை இயக்கத் தீர்மானமாக சமதர்மத் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன.

அதோடு மாத்திரமல்லாமல், பொது உடைமைக் கொள்கைகளும் பிரச்சாரம் செய்யப் பட்டு வந்திருக்கிறது.

இவற்றை ஏன் இப்போது குறிப்பிடுகிறேன் என்றால், மேலே குறிப்பிட்ட எனது 'கனவு'களை நினைவாக, நேரிடையாகச் செயல்படவிருக்கும் நிலையை மக்களுக்குத் தெரிவிக்கவும், இவைகள் எனக்கு எதிர்காலத்தைப்பற்றித் திருப்தி அளிக்கக்கூடியவை அல்லவா என்பதை விளக்குவதற்குமேயாகும்.

மற்றும், பண்டங்கள் உற்பத்தி செய்பவர்களுக்கும், உபயோகிப்போருக்கும் இடையில் எந்த உருவத் தரகர்களும் இருக்கக்கூடாது என்பதும் ஈரோட்டுத் தீர்மான மாகும். அதுவும் நல்ல அளவுக்கு அமுலில் வர இருக்கிறது.

கல்வி விஷயம் எனது இலட்சியத்திற்கு மேலாகக்கூடப் போகும்போல் இருக்கிறது.

அதாவது, S. S. L. C. அன்றைய பத்தாவது வகுப்பு-இன்றைய 'பதினொன்றாவது வகுப்பு வரைதான் சர்க்கார் அளிக்கும் இலவசக் கல்வியாக இருக்கவேண்டும். மற்ற உயர் தரக் கல்வி I. C. S., I. A. S. போல் தேவை உள்ள ஆண்களுக்கு மாத்திரம் சர்க்கார் கல்வி அளித்துவிட்டு, பொது மக்களை (எல்லாச் செலவும்) தங்கள், தங்கள் செலவிலேயே கற்று வரும்படி செய்யவேண்டும். உயர்தரக் கல்விக்கு (காலேஜ் கல்விக்கு) சர்க்கார் ஒரு காசும் செலவு செய்யக்கூடாது' என்று சுயமரியாதை இயக்க மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறேன். ஆனால், அது இன்று எல்லா மக்களுக்கும் எல்லாச் செலவு களும் சர்க்காரே ஏற்று இலவசக் கல்வியாக ஆக்கப்போவதாகத் தெரிகிறது.

எனவே, நான் எனது இலட்சியத்தில் மனக் குறையடைய வேண்டிய நிலையில்லா தவனாக இருக்கிறேன். இதை 4, 5 மாதங்களுக்கு முன் காமராசர் மகிழ்ச்சியோடு வெளி யிட்டார். அதாவது :—

'பெரியாருக்கு இன்று என்ன குறை? அவர் போட்ட பாதையில்தான் இன்று காங்கிரஸ் போய்க்கொண்டிருக்கிறது; அவர் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை' என்பதாகப் பேசினார்.

இனி, எனக்கேதாவது குறை, கவலை இருக்குமானால், அது மக்கள் இடையில் காணப்படும் கவலையற்ற தன்மையும், எதிரிகளின் சூழ்ச்சிக்கு ஆளாகும் தன்மையும் பற்றித்தான். இந்த நிலைமை, காரியத்தைக் கெடுக்கும்படியான அவ்வளவு பலம் அடைய என்றுமே முடியாது என்பதோடு, அதிக காலம் நிலைக்கவும் முடியாது. ஆகையால், அதை ஒரு குறையாகக் கருத வேண்டியதில்லை. ஆனால், சண்டித் தொல்லையாகக் கருதுகிறேன். மனிதன் துன்பத்திற்கு ஆளாகாவிட்டாலும் தொல்லைக்கு ஆளாவது சகஜம்தான்.

எனது அருமைத் தோழர்களுக்கு, தேர்தல் முடியும் வரை காங்கிரசை நிபந்தனை யின்றி ஆதரித்து, காங்கிரஸ் முழு வெற்றியடையப் பாடுபட வேண்டுமென்பதுதான் எனது கட்டளை போன்ற விருப்பமாகும். தேர்தலுக்குப் பிறகு பெரிய புரட்சிப் பணி நமக்கு இருக்கிறது. அதற்குள் தோழர்கள் தங்கள் குடும்பப் பணிகளையும் முடித்துக்கொண்டு போர்முனைக்குச் செல்லும் போர்வீரன் போல் தாய், தந்தை, மனைவி, மக்களிடம் பயணம் சொல்லிக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

[பிறந்த நாள் விழா மலர் 88—17-9-1966]



## 6. எனது விண்ணப்பம்

எனக்கு இன்று முதல் 89-வது வயது தொடங்குகிறது. என் வாழ்வு எவ்வளவோ கவலை, தொல்லை துன்பங்களுக்கு ஆட்பட்டதாய் இருந்தாலும், சராசரி மக்கள் வாழ்க்கைக்குக் குறைந்ததாய் இல்லாமல் மேம்பட்ட வாழ்வாகவே நடந்திருக்கிறது.

நான் சிறுவயது முதற்கொண்டே சுதந்திர எண்ணமுடையவனாகவும், நான் சொல்கிறபடி மக்கள் நடக்கவேண்டுமென்கின்ற உணர்ச்சியுள்ளவனாகவுமிருந்தே வாழ்ந்திருக்கிறேனே ஒழிய, மற்றொருவர் சொல்கிறபடி நடக்கவேண்டுமென்கிற எண்ண மற்றவனாகவே இருந்திருக்கிறேன். இன்றைக்கும் அப்படியே இருக்கிறேன்.

எனது சரித்திரத்தில் எனக்குத் தலைவனே இருந்ததில்லை.

எனது பத்தாவது வயதில் பிரைமரி நான்காவது வகுப்பு பாஸ் செய்துவிட்டு வியாபாரத் துறையில் எனது தகப்பனார் மண்டிக் கடையில் கையாளாக ஆகிவிட்டேன்.

என் குழந்தைப் பருவத்தில் என் தாயாருக்கு உள்ள இரண்டு குழந்தைகளில் நான் இரண்டாவது குழந்தையாக இருக்கும்போது என்னை என் தகப்பனாருடைய சிறிய தாயாருக்கு வளர்த்துக்கொள்ளும்படி 'தத்து' போல் கொடுத்துவிட்டார்கள். அதனால் நான் ஒரு அடங்காப் பிடாரியாகவும், தறுதலை என்று சொல்லும்படியாகவும் சில சமயங்களில் ஒருநாள் இரண்டு நாள்கூட வீட்டுக்கு வராமல் ஊர் சுற்றிக்கொண்டு திரிபவனாகவும் இருந்திருக்கிறேன். அப்போது என் வளர்ப்புத் தாய் நான் என்னைப் பெற்ற தாய் வீட்டிற்குப் போயிருப்பேனோ என்று தேடாமலும் கவலைப்படாமலும் இருந்துவிடுவார்கள்.

இப்படிப்பட்ட என் சிறுவயதில் இதுபோன்ற சில பையன்கள் சேர்க்கை எனக்குண்டு. அந்தச் சேர்க்கைக் கூட்டத்திற்கு நான்தான் மேலாளாக (தலைவனாக) இருப்பேன். தெரு சுற்றிக்கொண்டு இருப்பதில் சாதி பார்ப்பதோ, எச்சில், சுத்தம், அசுத்தம் பார்ப்பதோ கிடையாது. எச்சில் பீடியைப் பொறுக்கிவந்து பீடி புகைப்போம். அப்பொழுது குழந்தை களுக்குச் சாந்தி கழிப்பது என்ற வழக்கம் அதிகம். அமாவாசை, ஞாயிற்றுக்கிழமை வரும் அமாவாசை மற்றும் சில 'விசேஷ' நாட்களில் சாந்தி கழித்து அந்தச் சாந்திப் பண்டங்களை முச்சந்தியில் கொண்டுவந்து கொட்டிவிட்டுப் போய்விடுவார்கள். நாங்கள் அவைகளில் உள்ள பண்டங்களைப் பொறுக்கி எடுத்துவந்து பங்கு போட்டுக்கொண்டு சாப்பிடுவோம். பத்து வயதாகி கடைக்குக் கையாளாக ஆனவுடன் இந்த நேசமும் பழக்கமும் மறைந்துவிட்டது. என்றாலும், கடைக்கு வருகிறவர்களுடன் பெரிய வாயாடிபோல் பேசி அரட்டை அடிப்பதில் பழக்கம் அதிகமாகி, யாரும் என்னை விரும்பும்படி ஆகிவிட்டேன். கடை, வியாபாரம் என்றால் அது தரகுமண்டி வியாபாரம். அதாவது, கிராமத்து மக்கள், மிளகாய், மஞ்சள், மற்றும் விளைந்த தானியங்கள் முதலியவைகளைக் கொண்டுவந்து எங்கள் கடையில் போட்டு விற்றுக்கொடுக்கச் சொல்லுவார்கள். இதுபோலவே, சில கிராம வியாபாரிகளும், கிராமங்களிலும், கிராமச் சந்தைகளிலும் வாங்கிய சரக்குகளை எங்கள் கடையில் போட்டு விற்றுக்கொடுக்கச் சொல்லுவார்கள். இப்படியாக ஒருநாளைக்குச் சராசரி இருபது பேர், முப்பது பேர் வருவார்கள். (சிலநாளைக்கு அம்பது பேர்கூட வருவார்கள். இவர்களிடம் அரட்டை அடிப்பதுதான் என் ஒழிந்தநேர வேலை. இந்த அரட்டை எங்கள் கடைக்கும், வீட்டிற்கும் காசுபெற வரும் பக்தர்கள், புலவர்கள், பாகவதர்கள், சன்னியாசிகள் இவர்களிடமும் அவர்கள் வேஷத்தையும், அவர்கள் பேசும் விஷயங்களையும் 'பற்றிக் கேலி செய்யும்படியும் வளர்ந்துவிட்டது.

இப்படிப்பட்ட அரட்டையும், வாதமும்தான் 1900-லேயே அதற்கு முன்பே என்னைப் பகுத்தறிவுவாதியாக (நாத்திகனாக) ஆக்கிவிட்டது. அப்படியிருந்தாலும், ஆத்திகமான காரியங்களில் கலந்துகொள்வதில் நான் பின்வாங்குவதில்லை. அதில் ஏற்படும், அதனால் வரும் பெருமைகளை அடைவதில் நான் தவறுவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



காரணம், அக் காலத்தில் ஈரோட்டில் எங்கள் கடைதான் பெரிய கடை. எங்கள் வீடு தான் பெரியவீடு. எங்கள் தகப்பனார்தான் ஊருக்குப் பெரிய மனிதர். ஒரு அளவுக்குப் பணக்காரருங்கூட.

இந்த நிலையில் எல்லாக் காரியங்களிலும் கலந்துகொள்வதுபோல் ஆத்திகக் காரியங் களிலும் கலந்து கொள்வேன்.

நான் தேவஸ்தான கமிட்டி செகரட்டரியாக, தலைவனாக 15 ஆண்டு போல் இருந் திருக்கிறேன். அந்தக் கடமைகளிலும் நான் தவறவில்லை. ஆனாலும், மக்கள் மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டுமென்பதிலும் மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக ஆக்க வேண்டுமென்பதிலும் எனக்கு 1925ஆம் ஆண்டு முதல் உறுதியான எண்ணமும் ஆசையும் உண்டு. இதற்குக் காரணம், ஆத்திகத்தினால் (கடவுள், மதநம்பிக்கை ஆதிக்கத்தால்) தான் இந்த நாட்டில் சாதி (பார்ப்பான் 'பிராமணனாய்' வாழ்வதும்) அரசியல், மத ஆதிக்கத்தில் பார்ப்பான் இருந்துகொண்டு சமுதாய வளர்ச்சியையும், அறிவு (விஞ்ஞான) வளர்ச்சியையும் தடைசெய்துகொண்டு இருக்கிறான் என்பதும் எனது உறுதியான எண்ணம் என்பதோடு, நான் எந்த ஸ்தாபனம் வைத்திருந்தாலும், எந்தக் கட்சியை ஆதரித்தாலும், யாரோடு சேர்ந்தாலும், யாரை விரோதித்தாலும் அவற்றிற்கெல்லாம் இதுவே காரணம்.

இப்போதும் காங்கிரஸ்காரர் பலரை வெறுக்கிறேன் என்றாலும் தி. மு. க.காரர் பலரை நேசிக்கிறேன் என்றாலும் இதுவேதான் காரணம்.

இந்திய சரித்திரத்திலேயே புத்தன், அசோகன் ஆட்சிக்குப் பிறகு நமது நாட்டுக்கு இன்றுதானே பகுத்தறிவாளர் (நாத்திகர்) ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. இதை ஆத்திகர் எதிர்க்கலாம். ஆனால், பகுத்தறிவாளர் (நாத்திகர்) என்பவர்களின் கடமை என்ன?

அரசியல் 'குற்றம் குறை' என்பது யாருடைய ஆட்சியிலும் எந்த அளவுக்காவது நடந்துதான் தீரும்.

அக் காலத்தில் ஜஸ்டிஸ் (திராவிடர் கழக) ஆட்சியைக் காங்கிரஸ்காரர்கள் எப்படி யெப்படி எல்லாம் எதிர்த்தார்களோ ('தாலியறுத்தார் இராமசாமி முதலியார்' என்று சொல்லி) அப்படி எல்லாம் இப்போதுஞ் சொல்லுவார்கள்; எதிர்ப்பார்கள்; தப்புப் பிரச்சாரம் செய்வார்கள்; நல்ல காரியம் எதையும் செய்துவிடாமல் தடுப்பார்கள்; கலகம், குழப்பம் செய்வார்கள். நமது மக்களுக்கு அவற்றை உணரும் சக்தியில்லை; இருக்காது. என்றாலும் இதில் சுயமரியாதை இயக்கத்தார்—திராவிடர் கழகத்தார் கடமை என்ன என்பதை நல்ல வண்ணம் சிந்தித்து நடந்துகொள்ளவேண்டும்.

இந்தியாவில் சரிபகுதி காங்கிரசிற்கு எதிர்ப்பாகிவிட்டது. என்றாலும், காங்கிரசார் மக்களைத் தங்கள் பக்கம் திருப்ப மக்களிடம் பிரச்சாரம் செய்வதை விட்டுவிட்டு, எதிர்ப்பு ஸ்தாபனங்களை அழிக்கப் பாடுபடுகிறார்கள். இது 'தும்பை விட்டுவிட்டு, வாலைப் பிடிக்கிற கதை'யாகத்தான் முடியும். காங்கிரசார் தங்களைப் பகுத்தறிவுவாதிகள் என்று காட்டிக்கொள்ளாதவரை நாம் எப்படி இன்று காங்கிரசை ஆதரிக்க முடியும்?

தி. மு. க.காரரும் என்ன செய்தாவது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டு மென்கின்ற ஆர்வத்தில், தாங்கள் இருக்கும் படகில் ஓட்டை ஏற்படும்படி செய்துகொள் வதும் ஒரு வழியென்று நினைப்பார்களானால் அது தங்களைக் காப்பாற்றிக் கொள்வ தாகாது; மூழ்கடித்துக் கொள்வதுதானாகும். அவர்கள் முயற்சியில் கூடியவரை சுயமரி யாதைக்காரரையும் திராவிடர் கழகத்தாரையும் விரோதித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்; தங்கள் மக்களுக்கு அடக்கத்தைப் போதிக்கவேண்டும்; சிறு தகராறு, கோளாறுகளைச் சிறிது விட்டுக்கொடுத்தாவது பொறுமை காட்டி சரிப்படுத்திக்கொள்ள



வேண்டும். இன்னும் இக்கூட்டத்திலும் தங்களை ஒருவருக்கொருவர் விரோதிகள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள்; அது தவறு.

இன்று பார்ப்பனரும் காங்கிரசாரும் ஒன்றாகிவிடவில்லையா? ஒருவருக்கொருவர் எவ்வளவு சிபாரிசு! எவ்வளவு ஆதரவு! அந்தப் புத்தி நமக்கு வரவேண்டாமா?

தலைவர்களுக்கு மிக்க பொறுப்பு வேண்டும். என்னைப் பொறுத்தவரை நான் அடக்கிக்கொண்டுதான் வருகிறேன். ஒருநாள், இரண்டு நாள் அல்ல. இன்னும் நாலரை வருடம் இருக்கிறது. அடுத்த எலக்ஷன் எப்படி ஆனாலும் எனக்குக் கவலையில்லை. அதுவரை தி. மு. க. ஆட்சி நல்லபடி நடக்கவேண்டும். பல அரிய காரியங்களைச் செய்ய வேண்டும். கட்டுப்பாடு, ஒற்றுமை, எதிர்க் கட்சியாரிடம் பொறுமை, அடக்கம் வேண்டும். நமது தோழர்கள் இனி பகுத்தறிவுப் பிரச்சாரத்தில்தான் கவலை கொள்ளவேண்டும். மக்களிடம் இலட்சக்கணக்கில் அவர்கள் பகுத்தறிவுவாதிகள் என்று கையொப்பம் வாங்க வேண்டும். கையொப்பம் வாங்க அலவன்ஸ் கொடுத்துத் தொண்டர்களை நியமிக்க வேண்டும். தங்களுக்கு வேலை இல்லை என்று யாரும் நினைக்கக்கூடாது. இதுதான் நமது நிர்மாணத் திட்டம்.

எனது காயலா சற்றுக் கடினமானதுதான். எளிதில் குணமாகாது. மூத்திர வழியில் கற்கள் இருக்கின்றன. அவை கரைய மாதக் கணக்கில் காலமாகும். ஒரு சமயம் ஆபரேஷன் (அறுவை சிகிச்சை) தேவை இருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் நான் பயப்படவில்லை. எதற்கும் தயாராக இருக்கிறேன். மணியம்மையார் கவனிப்பும் உதவியும் அளவிடற்கரியது. உங்கள் கடமையிலிருந்து தவறாதீர்கள்!

[பிறந்த நாள் விழா மலர் 89—17-9-1967]

## 7. கழகத் தோழர்களுக்கு

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், திராவிடர் கழத்தைச் சேர்ந்தவர் களும், தி.மு.கவிலும், காங்கிரசில் உள்ளவர்களும் பகுத்தறிவு, தமிழர் இன உணர்ச்சி உள்ளவர்களும், அரசியல் அதிகாரிகளாய், குமஸ்தாக்களாய், பணியாளர்களாய் உள்ளவர் களில் தமிழர் உணர்ச்சியாளர்களாய் இருப்பவர்களும், தங்கள் தங்கள் வீட்டில், தொழில் மனைகளில், வாகனங்களில் உள்ள கடவுள் மத, புராண, இதிகாசக் கதைகள் முதலியவை சம்பந்தமான உருவப் படங்கள் எதுவானாலும், அவைகளை அப்புறப்படுத்திவிட வேண்டும். கண்டிப்பாய் அப்புறப்படுத்தி விடவேண்டும் என்று மிக்க மரியாதையாய், வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அரசாங்கப் பணிமனையில் தொங்கும் படங்களை எடுத்து விடுங்கள் என்று சொன்ன வுடன் எல்லாப் பார்ப்பனர்களுக்கும் எவ்வளவு ஆத்திரம் வந்தது? நீங்கள்தான் பார்த்தீர் களே, இராஜாஜி மிரட்டுகிறார். 'மித்திரன்', 'தினமணி', 'இந்து', 'மெயில்', 'எக்ஸ் பிரஸ்' முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் மிரட்டுகின்றன; விஷமப் பிரச்சாரங்கள் செய் கின்றன. இந்த ஒரு பிரச்சினையைக் கொண்டே தி. மு. க. ஆட்சியையே கவிழ்க்கப் பார்க்கின்றனர். ஏன்?

தங்கள் சாதி உயர்வும், நம் சாதி இழிவும் அந்தப் படங்கள் தொங்குவதில் உயிர் வாழ்கின்றன. அவை (படங்கள்) போய்விட்டால் உயர்வு-தாழ்வு போய்விடுமே என்கின்ற கவலைதானே? மற்றபடி அப் படங்களில் என்ன இருக்கின்றது? அவர்கள் சமுதாய உயர்வுக்கு அவர்கள் (பார்ப்பனர்கள்) அவ்வளவு பாடுபடுகின்றார்கள்.

நமக்கு புத்தி-மான ஈன உணர்ச்சி இருக்கவேண்டாமா? அந்தப் படங்களில் கடவுள் இல்லை என்பதற்காக அவற்றை எடுத்து எறியாவிட்டாலும் நமது ஈனநிலை, இழிவு நிலை பார்ப்பான் உயர்வுநிலை அதில் இருக்கிறது என்பதற்காகவாவது அவற்றை நமது



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் பணிமனைகளிலிருந்தும், அதைவிட நமது வீடுகளிலிருந்தும், தொழில் ஸ்தாபனங்களிலிருந்தும் எடுத்து எறிய வேண்டாமா என்று கேட்கிறேன்.

தோழர்களே! இனியாவது செய்து நீங்கள் இழி சாதி மக்கள் அல்ல என்பதைக் காட்டிக்கொள்ள வேண்டாமா?

உங்கள் தாயார், சகோதரி, மனைவி, மகள்கள் பார்ப்பானுக்கு வைப்பாட்டி, காமக் கிழத்தி ஆனவர்கள் அல்ல, ஆகவேண்டியவர்கள் அல்ல என்பதைக் காட்டிக்கொள்ள வேண்டாமா?

இதற்காக நான் 45 ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறேன். அதன் பலன் இது வரகவாவது (இந்தப் படங்களை அப்புறப்படுத்தவாவது) பயன்பட்டது என்று இருக்க வேண்டாமா?

நம் நல்வாய்ப்பாக தி. மு. க. ஆட்சி ஏற்பட்டது. அதை ஒழியும்படி செய்தீர்கள் ஆனால் பிறகு உங்கள் கதி என்ன ஆவது? நானும் இனியும் (90-க்கு மேல்) வாழமுடியுமா? எனக்கு அப்புறம் உங்களுக்கு இதை யார் சொல்லுவார்கள்? தி.மு.க. ஆட்சிக்கு அப்புறம் யார் இந்த உத்தரவு போடுவார்கள்? எல்லோரும் மாறான காரியத்தை அல்லவா செய் வார்கள்! நீங்கள் பழைய நிலைக்குத்தான் போகவேண்டி இருக்கும். ஆகவே எனக்கு 90-வது ஆண்டு பிறந்தநாள் பரிசாக இதையாவது செய்யுங்கள்; செய்து காட்டுங்கள் என்று வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது கிடைக்கப்பெற்ற ஒவ்வொருவரும் இதை மற்றவருக்குப் படித்துக் காட்டுங்கள்.

[பிறந்த நாள் விழா மலர் 90—17-9-1968]

## 8. எனது நிலை

எனது 90-வது ஆண்டு 'பிறந்த நாள் விழா' மலரில் 'எனது நிலை' என்கின்ற கட்டுரை எழுதும்போது, 91-வது ஆண்டு 'பிறந்த நாள் விழா' மலருக்கு 'எனது நிலை' என்பதுபற்றி எழுதவேண்டிய வாய்ப்பு இருக்குமா என்ற சந்தேகத்தில் எழுதினேன். என்றாலும் எப்படியோ 91-வது ஆண்டு 'பிறந்த நாள் விழா' மலருக்கு 'எனது நிலை' என்பதுபற்றி எழுதும்படியான வாய்ப்பு எனக்கு ஏற்பட்டுவிட்டது. அதாவது 90-வது ஆண்டு 'பிறந்த நாள் விழா' மலரில் 'எனது நிலை' என்ற கட்டுரையில் 'எனக்கு வயது 90; உடல் நிலை மிகவும் மோசம்; கைகால் நடுக்கம் அதிகம்; சிறுநீர் கழிக்கும்போது சப்தம் போட்டுக்கொண்டுதான் கழிக்கிறேன். அதாவது, அவ்வளவு வலி; தூக்கம் சரியாய் வருவது இல்லை.

நினைத்தபோது உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் வலியேற்பட்டு சில ஏப்பமோ, காற்றுப் பிரிவோ ஏற்பட்ட பிறகு நோய் விலகுகிறது; உண்ட உணவு சரியானபடி ஜீரண மாவதில்லை; முன்போல் உணவும் சரியாய் உட்கொள்ள முடியவில்லை; எந்தக் காரியம் பற்றியும், மனத்திற்கு உற்சாகம் ஏற்படுவதில்லை; களைப்பு அடிக்கடி ஏற்படுகிறது; நெஞ்சில் வலி திடீரென்று ஏற்படுவதும் ஏப்பம் வந்த பிறகு குறைவதுமாக இருக்கிறது; எதைப்பற்றியும் சலிப்பும், வெறுப்பும் ஏற்பட்டு விடுகிறது.

சுருக்கமாகச் சொல்லுவதானால், வாழ்வே வெறுப்பாக இருக்கிறது. என்றாலும் தற்கொலை செய்துகொள்ளமாட்டேன். நினைத்தபடி நினைத்த ஊருக்கெல்லாம் என்னை அழைக்காதீர்கள். அந்தப்படி என்னை மக்கள் அழைக்காமல் இருப்பதற்காகவே எனது வழிச்செலவுத் தொகையை ரூ. 100-இல் இருந்து 150 ஆக ஏற்படுத்திவிட்டேன்.

ரூ. 100 எனக்கு வண்டிச்செலவு, ரிப்பேர் செலவு, வைத்தியச் செலவு முதலியவை களுக்கு அனேமாகச் சரியாய்ப் போய்விடும். சில சமயங்களில் போதாமல் போகும். ஒரு தடவையில் 2, 3 பயணம் ஏற்பட்டால் ஒரு அளவு மீதியாகி, பிரச்சாரத்திற்குப் பயன்படும்.



எனக்கு இனிப் பிரச்சாரத்தில் ஆசை இல்லை.

ஒரு வாரப் பத்திரிகை துவக்கி, அதற்கு ஆசிரியனாக இருந்து எழுதிக்கொண்டு இருக்கவேண்டும் என்பதில்தான் ஆசை அதிகமாக இருக்கிறது. மற்றும் வெளியாக்கப்பட வேண்டிய விஷயம் அதிகம் இருக்கிறது.

இதற்காக எளிதில் காணமுடியாத ஒரு தனி இடத்திற்குப் போகலாமா அல்லது ஈரோட்டிற்கே போய்விடலாமா என்றுகூட எண்ணுகிறேன்.

இனி என் ஆயுள் எவ்வளவு இருக்கமுடியும் என்பதில் எனக்குக் கவலை இல்லை.

இருந்தவரை தொண்டு செய்யலாம் என்றுதான் திட்டம் போடுகிறேன். ஆனால், எதிர்பாராத சம்பவங்கள் நடப்பதும், ஏற்படுவதும் இயற்கையேயாகும். அதுபோல் என் முடிவும் இருக்கலாம்.

பொதுவாக என் மனம் குழப்பமாக இருக்கிறது. துறவி ஆகிவிடுவேனோ என்னமோ!'

இந்தப்படி எழுதி இருக்கிறேன். அதை ஊன்றிப் படித்தாலே நான் எழுதியதின் தன்மை விளங்கும்.

இப்போது எனக்கு 90 ஆண்டு முடிந்து 91-வது ஆண்டு நடக்கிறது என்றாலும், 90-வது ஆண்டுக்கும் 91-வது ஆண்டுக்கும் இடையில் ஏற்பட்ட எனது உடல்நிலையின் தன்மை 91-வது ஆண்டுபோல் இல்லாமல் 94, 95-வது ஆண்டு என்று கருதும்படி அவ்வளவு கிழத்தன்மை ஏற்பட்டுவிட்டது என்று ஆகிவிட்டது.

இது உடல்நிலை மாத்திரமல்லாமல், பஞ்சேந்திரியங்களோடு புத்தி, மனது, சிந்தனா சக்தி முதலிய தன்மைகளும் மிக்கக் குறைந்து பலவீனப்பட்டு விட்டன.

என்றாலும், இவ்வோராண்டு நாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்தால் எனக்கு மற்ற கருவி காரணாதிகளின் பலக் குறைவு எப்படி இருந்தாலும் மனம் உற்சாகம் அடையும்படியான பல நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.

முதலாவது நிகழ்ச்சி நமது தி. மு. க. ஆட்சியில் 13 மந்திரிகளில் 13 பேரும் தமிழர்கள் என்பதோடு, 18 அய்க்கோர்ட் ஜட்ஜுகளில் 14 பேர்கள் தமிழர்கள் (பார்ப்பன ரல்லாதவர்கள்). டெல்லி ஆதிக்கமில்லாத அதிகாரங்களில் 100-க்கு 50-க்கு மேல் 75 வரை பார்ப்பனரல்லாதவர் இருக்கும்படி ஆகிவிட்டது.

அரசியலில் ஆளும் கட்சியிலும், எதிர்க் கட்சியிலும் தலைவர்கள், பணியாளர்கள் யாவருமே 100-க்கு 100-ம் தமிழர்களேயாவார்கள். இதை அனுசரித்தே மற்ற நிலைகளும் மாற்றமடைந்து வருகின்றன. இவ்வளவுக்கும் காரணம் தி. மு. க. ஆட்சி என்றே சொல்லுவேன்.

காங்கிரஸ் மத்திய ஆட்சி ஆதிக்கத்திலும், பச்சையாகப் பார்ப்பனர்—பார்ப்பனரல்லா தார் பிளவும், வடநாடு—தென்னாடு என்கின்ற உணர்ச்சியும் காணப்படும் தன்மை உருவாகிவிட்டது. இவையெல்லாம் நம் தமிழர் சமுதாய விடுதலைக்கும், சுயமரி யாதைக்கும் நல்ல வெற்றிவாய்ப்பு என்றே சொல்லத் தக்கவையாகும்.

மற்றும், 90-வது 'பிறந்த நாள் விழா' மலரில் 'எனது நிலை' கட்டுரையில் நான் குறிப்பிட்ட சலிப்புகள் இப்போது எனக்குக் குறைவென்றே சொல்லலாம்.

உதாரணமாக, 90-வது 'பிறந்த நாள் விழா' மலரில் 'எனது நிலை' என்ற கட்டுரை முடிவில் 'துறவியாய்ப் போய்விடலாமா' என்று எழுதி இருக்கிறேன்.

இன்று எனக்கு அப்படி இல்லை. அந்த எழுத்தைப் பார்த்து உயர் காமராசரும், அறிஞர் அண்ணாவும் எனக்குத் தெரிவித்ததுபோல், அதாவது 'இப்போது உங்களுக்கு

www.padippakam.com



எதற்காகக் கவலை? நீங்கள் நினைத்த காரியம் எது நடவாமல் இருக்கிறது? கவலையை விட்டுவிடுங்கள்' என்று சொன்ன சொற்கள் எனக்கு உற்சாகத்தைக் கொடுக்கின்றன.

இன்று எனக்குள்ள குறையெல்லாம் தமிழர் சமுதாயத்தில் 'விபீஷணப் பரம்பரை' வளர்ந்து வருவதுதான். இது தமிழரில் சில 'சாதிக்கு' (வகுப்புக்கு) இயற்கை என்றாலும் இது வருந்தத் தக்கதேயாகும்.

ஆகவே, எனது 90-வது வயதைவிட 91-வது வயது திருப்தியையும், மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது என்பது கருத்து.

விபீஷணர்கள் திருந்துவார்களாக.

தி. மு. க. ஆட்சி இனியும் குறைந்தது 10 ஆண்டுகளுக்காவது இருக்கும்படி மக்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். எனக்கு இதற்குமேல் கருத்தும் ஓடவில்லை; எழுதவும் முடியவில்லை.

[பிறந்த நாள் விழா மலர் 91—17-9-1969]

## 9. பிறந்தநாள் செய்தி

எனக்கு வயது 91. ஆண்டுகள் 91 முடிந்துவிட்டன. 17-9-1970-வது நாள் முதல் 92-வது ஆண்டு துவங்குகிறது.

91-வது ஆண்டு எனக்கு உற்சாகமாகவே கழிந்ததுடன், மனச் சலிப்பு அடைய வேண்டிய அவசியமில்லாமல் இருப்பது மாத்திரமல்லாமல் இருப்பதுடன், வாழ்நாள் நீண்டால் மேலும் பல முன்னேற்றகரமான காரியம் செய்ய வாய்ப்பு ஏற்படலாம் போல் எனக்குத் தோன்றுகிறது.

மக்களிடையில் ஒரு மாறுதலைக் காண்கிறேன். அதுவும் தீவிரமான மாறுதல்களுக்கு இணங்குபவர்கள்போல் மக்களைக் காண்கிறேன்.

அதாவது, கடவுள், மதம், சாதி முதலிய விஷயத்தில் மக்கள் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் மாறுதலடையப் பக்குவமாய் இருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். இந்த நிலைதான் எனது உற்சாகத்திற்கும், மேலும் இருந்து தொண்டு செய்வோம் என்ற நம்பிக்கைக்கும், அவாவுக்கும் காரணமாகும்.

இந்த நிலையில், நான் எனது 92-வது பிறந்தநாள் சார்பாக மக்களுக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், மனம் துணிந்து மேலும் மாறுதலடையுங்கள் என்பதேயாகும்.

நான் இந்த நிலை அடைந்ததற்கும், மக்களை இந்த அளவுக்கு நான் வேண்டுவதற்கும் முக்கியமான காரணம், இந்த இரண்டு மூன்றாண்டுகளாக நமது நாட்டில் நடந்து வந்த ஆட்சியேயாகும்.

நமது நாட்டு ஆட்சியானது பகுத்தறிவு ஆட்சி என்பதோடு, எத்தவித மாறுதலுக்கும், எவ்வளவு தூரம் துணிந்து செயலாற்றுவதற்கும் துணிவுள்ள ஆட்சியேயாகும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பொதுவாகவே மக்கள் வாழ்வில் சுபிட்சம் ஏற்பட்டிருக்கிறது. இது இயற்கையின் காரணம் என்றாலும் மக்கள் இன்பவாழ்வு வாழ்கிறார்கள் என்று திருப்தியடையத் தக்கதாகவே இருந்து வருகிறது. எண்ணத்தில் பெருத்த முன்னேற்றத்தையும் அடைந்து வருகிறார்கள்.

இவற்றை ஏன் பெருமையாகக் குறிப்பிடுகிறேனென்றால், பதவி வெறியால் தூண்டப்பட்ட எதிரிகள், எதிர்க் கட்சிகள், 'தங்கள் சமுதாயத்திற்கு ஆபத்து வந்து விட்டது' என்று கருதிப் பயந்து கிடக்கும் நம் பிறவி எதிரிகளாகிய பார்ப்பனர்கள் இந்த ஆட்சியை அழிக்கச் செய்த, செய்து வருகிற இமாலயப் பிரயத்தனங்கள் தவிடுபொடியாகி வருவதுடன், எவ்விதத் தடையுமின்றி ஆட்சியின் காரியம் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருப்பதுதான்.



இந்த நிலையில் நான் எனது 92-வது ஆண்டு செய்தியாக மக்களுக்குத் தெரிவித்துக் கொள்வது என்ன வென்றால், இந்த ஆட்சியை இன்னும் ஒரு பத்தாண்டுக்குப் பாதுகாத்து வரவேண்டுமென்பதே ஆகும்.

தேசம் மிருகப் பிராயத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது. யாரும், எப்படிப்பட்டவரும் எந்த இழிவான காரியத்தைச் செய்யவும் பயப்படுவதில்லை. ஒழுக்கம், நேர்மை, நாணயம், அமைதி என்பது பெரும்பாலோரிடம் காணமுடிவதில்லை. பொதுவில் பார்த்தால் நமது நாடுதான் இந்தியாவிலேயே பாதுகாப்பான நாடு என்று கருதத் தக்கதாய் இருந்து வருகிறது.

இதற்குக் காரணம், தி.மு.க. ஆட்சிதான் என்று உறுதியாய்க் கூறுகிறேன். எனவே இதற்கு ஏதாவது மாற்றம் ஏற்படுமானால் அதை வேறு எந்த ஆட்சிவந்து மக்களை இன்றைய நிலைக்குக் கேடில்லாமல் ஆள முடியும்?

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இந்த ஆட்சிக்கு மாற்றம் ஏற்படுமானால் அடுத்துவர இருப்பது பார்ப்பன ஆட்சிதான்–அதாவது, வருணாசிரமத்தை நிலைநிறுத்தும் ஆட்சிதான். இது உறுதி; உறுதியேயாகும். ஏனிப்படிச் சொல்லுகிறேன் என்றால், இந்தியா முழுவதற்குமே இன்று வருணாசிரமப் பாதுகாப்பு ஆட்சி, கட்சி, மக்கள் என்பவர்கள் அல்லாமல் வேறு கட்சியும் இல்லை, மக்களும் இல்லை, கொள்கையும் இல்லை. காமராசர் பலமற்றுப் போய்விட்டார். அவரது எண்ணங்களும் மாற்றமடைந்து வருகிறது; பார்ப்பனரைத் தஞ்சமடைய வேண்டிய நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறார். அவரது கட்சியும் (காங்கிரசும்) உருக் குலைந்துவிட்டது. அவருக்கு உதவியாளரும் யாரும் தகுதியானவரில்லை. இவை மாத்திரமா? நமது பொது எதிரியான பார்ப்பனத் தலைவர்–நம் சமுதாயத்தை அழித்து, ஒழித்துக்கட்டக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இராஜாஜி பலம் பெற்று வருகிறார். இதற்குக் காரணம் காங்கிரஸ் பிளவுபட்டதேயாகும்.

இந்த நிலையில் இன்றைய நமது நாட்டு ஆட்சிக்கு ஏதாவது மாறுதல் ஏற்படுமானால் காமராசர் ஆட்சி ஒருநாளும் அந்த இடத்திற்கு வராது; மற்றெது வருமென்றால், பார்ப்பனர் கட்சி–இராஜாஜி ஆதிக்க ஆட்சிதான் வரும். அதுவோ வேறு எதுவோ வந்தாலும் பழிவாங்கும் ஆட்சியாய்த்தானிருக்கும். அல்லது அசல் காலித்தன, பலாத்காரத் தாண்டவ ஆட்சியாகத்தானிருக்கும். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

ஆகவே, எனது 92ஆம் ஆண்டுச் செய்தி என்பதாக எனது 91 ஆண்டு அனுபவ அறிவைக்கொண்டு சொல்லுகிறேன்.

மக்கள் எல்லோரும் பகுத்தறிவுவாதிகளாக மாறுங்கள்!

எப்பாடு பட்டாவது இன்றைய நம் தி. மு. க. ஆட்சியை இனியும் ஒரு பத்தாண்டுக்கு நல்ல பலம் பொருந்திய ஆட்சியாக இருக்கப் பாடுபடுங்கள் என்பதுதான்.

[பிறந்த நாள் விழா மலர் 92—17-9-1970]

## 10. தமிழர்களின் தலையாய கடமை

இன்றைய நிலையில் தமிழர்கள் (திராவிடர்கள்) ஒரு அளவு முன்னேற்றப் பாதையில் செல்லுகிறார்கள். அவர்கள் அடைய உரிமையுள்ள இடத்திற்குச் சென்றுவிட்டதாகக் கூறமுடியாது. சமுதாயத் துறையில் ஒரு அளவுக்குப் பார்ப்பனரைப் பகிஷ்கரித்திருக்கிறார்கள். என்றாலும், அந்த அளவு பகுதிக்கும் குறைவான அளவு என்றுதான் சொல்ல வேண்டும். கல்வித் துறையில் பார்ப்பனர்களுக்கு ஏகபோகம் இல்லையென்றுதான் சொல்லலாமே தவிர அவர்கள் தங்கள் விகிதாசார அளவுக்கு 100-க்கு 500 பங்கு முதல்

படிப்பகம்

www.padippakam.com



1000 பங்குவரை அதிகமாக அனுபவித்து வருகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அந்த விகிதம் ஒழிந்து அவர்கள் தங்களுக்குள்ள உரிமையுடன் இருக்கவேண்டுமானால் டில்லி ஆதிக்கம் ஒழிந்தே ஆகவேண்டும். டில்லி ஆதிக்கம் ஒழியும்வரை திராவிடர்கள் 4-ம் சாதி—இழிசாதி என்கிற இழிவும் நீங்காது என்பது உறுதி. அரசியல் தலைமைத் துறை, அமைச்சர்துறை ஆகியவற்றில் அவர்களுக்கு இடமில்லாமல் ஆகிவிட்டது என்றாலும் அவர்கள் அவற்றில் இல்லாமலே அவர்களுக்கு வேண்டிய காரியங்களும், நாம் வளர்ச்சி அடைய முடியாமல் இருக்கும்படியான காரியங்களும் தாராளமாய் அவர்களால் செய்யமுடிந்துதான் வருகிறது.

இவற்றிற்கெல்லாம் அவர்களுக்கு ஆதாரமாக 'சஞ்சீவி' மருந்தாக இருந்துவரும் சாதனம் பத்திரிகை உலகம் 100-க்கு 100 அவர்களுடையதாகவும், அவர்களுடைய அடிமைகளுடையதாகவும் இருந்துவருவதேதான். இந்தத் துறையில் தமிழர் சிறிதுகூட சிந்தனை செய்ததாகவே காணமுடியவில்லை. அந்த ஒரு காரியத்தில் நாம் முயற்சி எடுத்து நமது மானாபிமானத்தைக் காட்டாதவரையில் வேறு எந்தக் காரியத்தில் நாம் வெற்றிபெற்ற போதிலும் அதன் பயனை நாம் அனுபவிக்கவே முடியாது என்பது மாத்திரமல்லாமல் நம்முடைய நாட்டிலே, அதிலும் மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்களாக இருக்கும் நமது நாட்டிலே 100-க்கு 3 பேராய் இருப்பவரும், நமது பிறவி எதிரியும், நமது கேட்டிற்கும், அழிவிற்கும், இழிவிற்குமாகவே உழைத்துவரும் வெகு வெகு சிறு சாதியாரான இனத்தாரிடம் நமதுநாட்டுப் பத்திரிகைகளும் பத்திரிகைகளின் ஆதிக்கமும் இருந்துவருவது என்றால், இது நமது சமுதாயத்திற்கு எவ்வளவு இழிவானநிலை என்பதும் யோசிக்கத் தக்கதாகும்—என்பதோடு இது (நம்) போன்ற இழிவான, மானங்கெட்ட சமுதாயம்போன்ற வேறு ஒரு சமுதாயம் நானறிந்தவரை உலகத்தில் வேறு எங்குமே இருப்பதாகத் தெரியவே இல்லை!

அது மாத்திரமா? நமது பத்திரிகை என்பவைகளை நமது மக்கள் ஆயிரக்கணக்கில் வாங்கிப் படிக்கிறார்கள் என்றால் நமது எதிரிகளான பார்ப்பனருடையவும், அவர்கள் அடிமைகளுடையவும், அவர்கள் ஆதரவால்தான்—அவர்களுக்கு நல்லபிள்ளையாய் இருந்தால்தான் வாழமுடியும் என்று கருதுபவர்களுடையவுமான பத்திரிகைகளை லட்சக் (1,00,000) கணக்கில் நமது மக்கள் வாங்கிப் படித்து ஈனமக்களாக ஆகிவருகிறார்கள்.

சாதாரணமாகச் சொல்லுவோமானால் தமிழர் நல்வாழ்வுக்காகவே, மான வாழ்வுக்காகவே, வளர்ச்சிக்காகவேயென்று 45 ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் சுயமரியாதை (சமூக முன்னேற்ற) இயக்கம் என்பது ஆரம்பிக்கப்பட்டு, மூலை முடுக்குகளெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தும், நம் எதிரிகளை 'பிராமணாள்' 'சாமி' என்றழைப்பது 1000-க்கு பத்துவீதமான மக்களால்கூட நிறுத்தப்படவில்லை என்பதோடு, பத்திரிகை படிப்பவர்களில் 1000-க்கு ஒருவரால்கூட நம் எதிரிகளது பத்திரிகைகளை வாங்கிப் படிப்பது நிறுத்தப்படவில்லையென்றால் நம் மக்கள் தன்மைக்கு எந்தக் குணத்தை உதாரணமாகக் கூறுவது என்பது நமக்குப் புரியவில்லை.

அது மாத்திரமா? நமது கேட்டிற்கும் இழிவிற்கும், வளர்ச்சித் தடைக்கும் என்பதற்காகவே நடத்தப்படும் நம் எதிரிகளுடைய பத்திரிகைகளால் எதிரிகள் ஆண்டு ஒன்றுக்கு ஒன்று, இரண்டு, மூன்று—ஏன், அய்ந்து இலட்ச ரூபாய்கள் வரை இலாப வருவாய் சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

ஆகவே, நமது இழி நிலையானது நமது எதிரிகள்—மேல் சாதியார், பிராமணாள், சாமி என்று நம்மாலேயே அழைப்பவர்களாகவும், நமது செல்வத்தையே ஆண்டு ஒன்றுக்கு ஒன்று முதல் அய்ந்து இலட்ச ரூபாய் வரை இலாப வருவாய் உள்ளவர்களாக இருப்பதற்கு நாம் இடம் கொடுத்து வருகிறோம்; நாம் ஆளாக இருந்து வருகிறோம் என்றால் மறுபடியும் நமது நிலை எவ்வளவு இழிவானது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறேன்.



எனவே, நான் எனது 92-வது ஆண்டின் வேலைத் திட்டமாக இந்தப் பார்ப்பனப் பத்திரிகைகளை நம் மக்கள் பகிஷ்கரிக்கும்படி செய்யும்படியான ஒரு இயக்கத்தைத் துவக்கி நடத்தலாமென்று ஆசைப்படுகிறேன்; ஆத்திரப்படுகிறேன்.

இதற்காக மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் நடத்திப் பிரச்சாரம் செய்யச் செய்வது, கூடுமானவரை ஒவ்வொரு கிராமங்களிலும் 'நம் எதிரிகளின் பத்திரிகை பகிஷ்கார சங்கம்' என்பதாக ஸ்தாபனம் ஏற்பாடு செய்வதும், இந்தக் காரியத்திற்காக ஒரு இலட்ச ரூபாய் நிதி திரட்டி, பல தொண்டர்களை முழுநேர வேலைக்காரர்களாக ஏற்படுத்தி, நாடெல்லாம் தொண்டாற்றச் செய்யவும் செய்யவேண்டும் என்று திட்டமிட முடிவு செய்திருக்கிறேன்.

நன்கொடையாளர்கள் பெயர்கள் தெரிவிக்கப்படமாட்டாது. கண்டிப்பாய் ஒவ்வொருவரும் இதற்கு நன்கொடை அளித்தாகவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அதிகாரிகளும், அமைச்சர்களும் உதவவேண்டும். அவர்களுக்கு இதனால் ஏராளமான பலனுண்டு. மற்ற தலைவர்களும், வியாபாரிகளும் அவசியம் உதவவேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன். பொது மக்களும் இதற்கு நல்லவண்ணம் ஆதரவளிக்க வேண்டும்.

இந்தப் பணியானது கடவுளை, மதத்தை ஒழிக்கும் பணியைவிட, கோவில்களை இடிக்கும் பணியைவிட முக்கியமானதும், பயன் அளிக்கத் தக்கதுமான பணி என்பது எனது உறுதியான எண்ணமாகும்.

எனவே, மளமளவென்று நன்கொடை வரவேண்டுமென்றும்—என்றும் உறுதியும் தகுதியும் உள்ளவர்கள் முன்வரவேண்டுமென்றும் வேண்டிக்கொள்வதோடு, நன்கொடை அளிப்பவர்களை நண்பர் வீரமணி அவர்களிடம் கொடுத்தருளவேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறேன். விஷயம் மிக முக்கியமானதும், செய்து தரப்படவேண்டியதுமான இன்றியமையாத பணி என்றும் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

இந்தக் காரியத்தை நான் செய்வதால் எனது வாழ்நாளில் ஒருபயனுள்ள காரியத்தைச் செய்ததாக நான் கருதிக்கொண்டு முடிவடைவேன்.

[பிறந்த நாள் விழா மலர் 92 — 17-9-1970]

## 11. எனது வேண்டுகோள்

சென்ற ஆண்டுக்கு முன் வரையில் எனது நிலை எனக்கே பெரும் வெறுப்புக் கொடுப்பதாகவே இருந்துவந்தது. உலகத்தை வெறுத்துத் துறவியாய் விடுவேனோ என்றுகூட, எனது வாழ்வு நாட்டுக்கு மனித சமுதாயத்திற்குப் பயன்படவில்லையே என்ற கவலையுடன்—மக்களிடம் வெறுப்பு இருப்பதுபோலவே எனக்குக் காணப்பட்டது. எனது வாழ்க்கைச் சலிப்பைப்பற்றி என்னிடம் அன்புகொண்ட உயர்திரு. காமராசர் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும், குன்றக்குடி அடிகளாரும் நான் சலிப்படையவேண்டியதில்லை என்றும், என் உழைப்பு வீணாகவில்லை என்றும், நல்ல அளவுக்குச் சமுதாயம் திருந்தி வருகிறதென்றும் கூறி, எனக்கு உற்சாகமளித்தார்கள். என்றாலும், நான் ஒரு நல்ல அளவுக்குச் சலிப்படைந்துதான் இருந்தேன்.

அறிஞர் அண்ணா மறைந்தவுடன் தி. மு. க. ஆட்சி என்ன ஆகுமோ என்று பயந்து, கோபுரம் தாங்கும் பொம்மை போல்—எல்லாப் பொறுப்பும் என் மேலேயே இருப்பதுபோல் நானே நினைத்துக்கொண்டு, எப்படியோ என்று நாம் போய்விடக்கூடாதே; இந்த ஆட்சி நிலைக்கவேண்டுமே என்று கவலைப்பட்டுக்கொண்டு, துறவற ஆசையை மறந்து, பெரிய குடும்பஸ்தனைப்போல் கவலை கொண்டு வாழ ஆசைப்பட்டுவிட்டேன்; ஆசைப்பட்டாலும் முடிவு சமீபித்துக்கொண்டு வருகிறது. அதற்குள் ஏதாவது செய்தாக வேண்டுமே என்ற

படிப்பகம்

www.padippakam.com



பேராசையோடு சற்றுத் தீவிரமான சொற்களை, கருத்துக்களை துணிவாகப் பேசவும், எழுதவும் துவக்கினேன்.

அப்போதுதான் பொதுமக்கள் நிலையும், நமது கழகத் தோழர்கள் நிலையும் எனக்கு நல்ல வண்ணம் துலங்கியது. அதாவது, தீவிரமான கருத்து வெளியீட்டிற்கு நல்ல வரவேற்பு இருந்ததோடு, மாறுபாடு கருத்துக்கொண்டவர்களாக இருந்த பொதுமக்கள் இடையிலும் எளிதில் மாற்றம் ஏற்பட்டு வருவதையும் அறிய முடிந்தது.

அது மாத்திரமல்லாமல், பல காரணங்களால் விரிந்து கிடந்த தமிழ் மக்கள் தங்களது பிரிவை உணர்ந்து ஒன்றுசேர வேண்டுமே என்ற உணர்ச்சி கொண்டு, ஊடலில் வேறுபட்டவர்கள் உணர்ச்சி வசத்தால் 'யார் முதலில் நெருங்குவது' என்ற 'மானத் தன்மை' பாராமல் ஆளுக்கு ஆள் முந்தி ஒருவரை ஒருவர் அணைத்துக்கொள்ள முயற்சிப்பவர் போல் நம் மக்கள் ஒன்றுசேர ஆர்வம் கொள்வது எனக்கு நன்றாய்த் தெரிந்தது.

இதிலிருந்து நம் மக்களில் ஒன்றுசேர, ஒற்றுமைப்பட ஆசைப்பட்ட மக்கள் அத்தனைபேருக்கும் என்றில்லாவிட்டாலும் பெரும்பாலோருக்கு 'பகுத்தறிவு உணர்ச்சியும் தாராள நோக்கமும் இல்லாததால்தான் நாம் இன உணர்ச்சி அற்றுப் பிரிந்து இருக்க நேர்ந்தது' என்று கருதவும் முடிந்தது. இந்த முடிவை நான் கலந்துகொண்ட அதிகாரிகள் கூட்டம், படித்தவர்கள் கூட்டம், பெரிய செல்வவான்கள் கூட்டம், பலப் பல பாமர மக்கள் கூட்டம் முதலியவைகளில் பல பெண்களிடத்தில் உள்பட அறிந்தேன்.

இந்த நிலை எனக்குப் பெரிய தெம்பையும் ஊக்கத்தையும் கொடுத்ததோடு, இன்னும் கொஞ்ச காலத்திற்கு நாம் வாழ்ந்திருக்க வேண்டும். இது 'வெண்ணெய் திரளுகின்ற' பருவமாயிருக்கிறது என்று பேராசை ஏற்பட ஏதுவாயிருக்கிறது.

அய்க்கோர்ட் நீதிபதிகள் பலர் உட்பட, பெரிய அய். ஏ. எஸ். அதிகாரிகள் உட்பட, மற்ற பெரிய அதிகாரிகள் என்பவர்களும், என். ஜி. ஓ.-க்கள் என்பவர்களும் 100-க்கு 75 பேர்களுக்கு மேல் பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லத்தக்க நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பெரிய நகரங்களிலும், பொது மக்களும், மாணவர்களும், அதிகாரிகளும், பெரிய பண்டிதர்கள் என்பவர்களும் முன்வந்து 'பகுத்தறிவு சங்கம்' என்றும், 'சிந்தனையாளர் கழகம்' என்றும், மற்றும் பல பெயர்களால் அரசியல் சம்பந்தமற்ற சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு, மாதந்தோறும் கூடுவதும், சிலர் வாரந்தோறும் சொற்பயிற்சி நடத்துவதுமாய் இருப்பதோடு, இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவரும் குடும்பத்தோடு ஒரு குறிப்பிட்ட இடத்திற்குவந்து 'சுயமரியாதை குடும்ப விருந்து' என்னும் பேரால் விருந்து நடத்தி, விருந்துண்டு, பகுத்தறிவுச் சொற்பொழிவு நடத்தி மகிழ்வதுமாக இருக்கிறார்கள். இவை எல்லாம் எனது சலிப்பு, வெறுப்பு உணர்ச்சியைப் பெரும் அளவுக்கு மாற்றிவிட்டதோடு, மேலும் மேலும் உழைக்கவேண்டுமென்கிற உற்சாகத்தை உண்டாக்கிவிட்டது என்று திரும்பத் திரும்பக் கூறுகிறேன்.

மேலும், இந்த நிலையில் நான் நமது தமிழர் சமுதாய மக்களிடம் காணுவது என்னவென்றால், அரசியலில் போதிய அளவு இல்லாவிட்டாலும் நல்ல அளவுக்கு நம் மக்கள் அதிகாரிகளாகவும் நல்ல பதவிகளில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நம் பிள்ளைகள் தாராளமான அளவுக்குப் படிக்கிறார்கள்; படித்தவர்களாகவும் இருக்கிறார்கள். பெண்களும் ஒரு அளவுக்கு மனித உணர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கமும் துணிந்து பல முற்போக்கான காரியங்களைச் செய்பவர்களாக இருக்கிறார்கள்.

எனவே, மேலும் நமக்கு வேண்டியதெல்லாம் மேலும் பகுத்தறிவும் ஒற்றுமையும், இன உணர்ச்சியும் என்பதோடு அதிகாரிகளும், ஆட்சிச் சிப்பந்திகளும் பொதுமக்களும் தங்கள் சுயநலங்களில் சிறிதுவிட்டுக்கொடுத்தாவது ஆட்சிக்கு நிர்வாகிகளாக இருந்து



தமிழர்க்கான பொதுவான நல்வாழ்வுக்காக ஆட்சியை ஆதரிக்கவேண்டியது என்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

நாடுமுற்றும் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் தமிழர்களில் ஒற்றுமை ஏற்படுத்துவது என்பதாகப் பகுத்தறிவு சங்கம் ஏற்படுத்தி, மூடக் கொள்கைகளை ஒழிக்கவும் இன உணர்ச்சி ஏற்படவும் பாடுபடவேண்டும்.

இயக்கத்தோழர்கள் இவை ஏற்பட முயற்சி செய்யவேண்டும்.

[பிறந்த நாள் விழா மலர் 92—17-9-1970]

## 12. எனது சிந்தனை

எனது 93-வது ஆண்டு பிறந்தநாள் மலருக்கு ஒரு செய்தி வேண்டும் என்று நண்பர் திரு. வீரமணி அவர்கள் கேட்டார். சற்றேறக்குறைய 10 ஆண்டுகளாகவே எனது பிறந்த நாள் மலருக்குச் சேதி கொடுத்துக்கொண்டுதான் வருகிறேன். முதலாவதாக எனது பிறந்த நாள் என்பது எனது பிரச்சாரத்திற்கு ஒரு சாதனமாக—ஒரு ஆதாரமாக விளங்குகிறது என்பது ஒரு கல்லுப் போன்ற செய்தியாகும்.

நான் சமுதாய சமத்துவத்திற்குப் பாடுபடுகின்ற ஒரு தொண்டனாவேன். அதாவது, சாதி அமைப்பை அடியோடு ஒழிக்கப் பாடுபடுபவன். சாதி அமைப்பு என்பது 'கடவுள், மதம்' மற்றும் அவைகள் சம்பந்தமான எதையும் ஒழித்தாக வேண்டும் என்று கருதி அவைகளை ஒழிக்கப் பாடுபடுகிறவன். அதில் எந்த அளவும் மக்களுக்குச் சந்தேகமில்லாமல் நடந்தும் வருகிறேன். மக்களோ பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் ஆவார்கள். கடவுள் ஒழிப்பு என்பது மக்களுக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கக் கூடியதாகும். இது மாத்திரமல்ல; நம்மைச் சபிக்கவும் கூடியதாகும். ஆகையால், சபிக்கப்பட்டும் வருகின்றேன். சபிக்கும் மக்களோ கடவுளைச் சர்வசக்தி உடையவர் என்று பலமாக நம்புகின்றவர்கள். அவர்கள் சாபம் பலிக்காவிட்டாலும் கடவுள் என்னைச் சும்மா விட்டுக்கொண்டு இருக்கமாட்டார் என்றும் நம்புகிறவர்கள் ஆவார்கள்.

நானோ எனது பிரச்சாரத்தில் கடவுளே இல்லை என்று சொல்லுவதற்காகவே சிறுமைப் படுத்தி, இழிவு படுத்தி—செய்கையாலும் காட்டிக்கொண்டே, நடந்துகொண்டே வருபவன். இந்த நிலையில் எனது 92-வது வயதில் கடவுள் நம்பிக்கை ஒரு மூட நம்பிக்கையில் பட்டதென்பதை நல்லவண்ணம் மக்களுக்கு விளங்கும்படி, 'கடவுளைச் செருப்பால் அடிக்கும்படி' நான் சொல்லும் அளவுக்கு ஆளாகி இருக்கின்றேன்.

இந்த நிலையில், எனது 92-வது வாழ்நாள் முடிந்து 93-வது வாழ்நாள் தோன்றிவிட்டது என்றால், கடவுள் இருந்தால் இப்படி நடக்குமா? விட்டுக்கொண்டு இருப்பானா?—என்று எந்த, எப்படிப்பட்ட கடவுள் நம்பிக்கை பக்தனும் நினைத்து—அவனுக்கு ஒரு சிறு அறிவிருந்தாலும், 'கடவுளாவது வெங்காயமாவது' என்று கருதி, ஓரளவுக்காவது தெளிவு பெற முடியும் என்பது எனது கருத்து. அதனாலேயே, எனது 93-வது வருஷப் பிறப்பு என்பது எனது பிரச்சாரத்திற்கு ஆதாரம் என்று கருதுகிறேன்.

சென்ற எனது 92-ம் ஆண்டு மலருக்கு நான் எழுதிய எனது பிறந்தநாள் செய்தியில் 'எனது 91-வது ஆண்டு எனக்கு உற்சாகமாகவே கழிந்தது. மனச் சலிப்பு அடைய வேண்டிய அவசியம் இல்லாமல் இருப்பது மாத்திரம் அல்லாமல், இதுபோல் வாழ்நாள் நீண்டால் மேலும் பல முன்னேற்றகரமான காரியம் செய்ய வாய்ப்பு ஏற்படலாம் என்று தோன்றுகிறது. மற்றும், மக்களிடையில் ஒரு மாறுதலைக் காண்கின்றேன். அதுவும் தீவிரமான மாறுதலுக்கு இணங்குபவர்கள்போல மக்களைக் காண்கின்றேன்.

1686—248

படிப்பகம்

www.padippakam.com



கடவுள், மதம், சாதி முதலிய விஷயங்களால், மக்கள் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் மாறுதல் அடையப் பக்குவமாய் இருக்கிறார்கள் என்றே காண்கின்றேன். இந்த நிலைதான் எனது உற்சாகத்திற்கும், மேலும் இருந்து தொண்டு செய்யலாம் என்ற நம்பிக்கைக்கும் அவாவிற்கும் காரணமாகும்.'

இந்தப்படி எழுதிய நான், முந்திய ஒரு ஆண்டில் எனக்கு மனச் சலிப்பு ஏற்பட்டு 'நான் ஏன் இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று' என்று எழுதிச் சலிப்படைந்து இருக்கின்றேன். இந்தச் சலிப்பைக் கண்டு காலஞ்சென்ற மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களும் திரு. காமராசர் அவர்களும் எனக்கு ஆறுதல் எழுதி உற்சாகமூட்டினார்கள்.

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியவர்களது ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான் நான் உண்மையிலேயே நம்பிக்கையும் உற்சாகமும் அடைந்தேன்.

உண்மையில் எனது தொண்டு சாதி ஒழிப்புத் தொண்டுதான் என்றாலும், அது நமது நாட்டைப் பொறுத்தவரையில் கடவுள், மதம், சாஸ்திரம், பார்ப்பனர் ஒழிப்புப் பிரச்சாரமாகத்தான் முடியும். இந்த நான்கும் ஒழிந்த இடம்தான் சாதி ஒழிந்த இடமாகும். இவற்றில் எது மீதி இருந்தாலும் சாதி உண்மையிலேயே ஒழிந்ததாக ஆகாது.

ஏன் எனில், சாதி என்பது இந்த நான்கில் இருந்தும் ஆக்கப்பட்டதே ஆகும்.

இப்போதும் சொல்லுவேன்: நாகரிகத்திற்காகச் சிலர் சாதி ஒழியவேண்டும் என்று கூறுகின்றார்கள். ஆனால், அவர்கள் மேற்கண்ட நான்கையும் ஒழிக்கத் துணிவு கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களால் நமக்கு ஒரு பயனும் ஏற்படாது. சில சமயங்களில் அவர்கள் நமக்கு எதிரிகளாகவும் ஆகக்கூடும். மனிதனை மடையனாக, அடிமையாக ஆக்கப்பட்ட பின்புதான் சாதி புகுத்தப்பட்டதாகும். சுதந்திர உணர்ச்சியும், அறிவும் ஏற்படாமல் சாதியை ஒழிக்கமுடியாது. மடமைக்கும் அடிமைத் தன்மைக்கும் ஆக்கம் அளித்துச் சாதியை நிலை நிறுத்துவதுதான், சாதியை ஒழியாமல் பாதுகாப்பதுதான் கடவுள், மதம், சாஸ்திரம் பார்ப்பனர் என்பவைகளாகும்.

உண்மையில் சாதி ஒழியவேண்டும் என்று கருதுபவர்கள், இந்த நான்கு ஒழிப்புக்கும் சம்மதித்தவர்களாகவேதான் இருப்பார்கள். நமது மக்களில் பெரும்பாலோர் இன்று அப்படி ஆகிவிட்டார்கள் என்பதுதான் எனது உற்சாகத்திற்கும் காரணமாகும். அதனால் இப்படிச் சொல்கிறேன் என்றால், சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டையும், அதனை அடுத்து நடந்த நமது தி. மு. க. தேர்தலையும் (பொதுத் தேர்தலையும்) கொண்டுதான் இப்படிச் சொல்லுகின்றேன்.

அதாவது, 'கடவுளைச் செருப்பால் அடித்ததாக' 10 இலட்சக் கணக்கான பத்திரிகைகள், 10 இலட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள், மாணவர்கள், வக்கீல்கள், அதிகாரிகள், சில பெண்கள், மற்றும் காங்கிரஸ் இயக்கம், சுதந்திரா இயக்கம், ஜனசங்க இயக்கம் முதலிய–சாதித் துவேஷமற்ற தமிழ் உணர்ச்சிக்கு மாறான பல இயக்கங்களும் எதிராகப் பாடுபட்டு—230 இடங்களில் சுமார் 200 இடங்களுக்கு மேல் (தி. மு. க) வெற்றி பெறநேர்ந்தது என்றால், சென்ற ஆண்டு பிறந்தநாள் செய்திக்கு நான் கொண்ட கருத்து—அதன் அளவுக்குமேல் மெய்யாகி வெற்றிபெற்றது என்பது யாருக்கும் விளங்கும்.

இனி, நமது சாதி ஒழிப்புக்கு மக்களில் யாரும் எதிர்ப்பு இல்லை என்பது உறுதியான செய்தியாகிவிட்டது.

இந்த நிலையில், நான் நமது மக்களை அடிபணிந்து வேண்டிக்கொள்வதெல்லாம்—கோயில்களுக்குப் போகாமல் இருக்கவேண்டும்; உற்சவங்களில் கலவாமல், மதப் பண்டிகைகள் கொண்டாடாமல், நெற்றிக் குறி அணியாமலும் இருக்கவேண்டும் என்பதேயாகும்.



மற்றும் நான் நினைக்கின்றேன்; அண்மையில் ஓர் மாநாடு கூட்டி, கோயில்களுக்குப் போகிறவர்களை அடிபணிந்து வேண்டிக்கொள்வது மூலம் போகாமல் இருக்கச் செய்யலாமா என்று, யோசனை கேட்டுக் காரியத்தில் தொடரலாமா என்று சிந்திக்கிறேன்.

இதுதான் எனது 93-வது பிறந்த நாள் விண்ணப்பம்.

[பிறந்த நாள் விழா மலர் 93—17-9-1971]

## 13. எனது அச்சம்

எனக்கு (நான் பிறந்து) நானது செப்டம்பர் மாதம் 17ஆம் தேதியோடு 93 ஆண்டு முடிவடைந்து 94-ம் ஆண்டு முதல் நாள் தோன்றிவிட்டது.

93 ஆண்டு என்றால், நான் பிறந்து, மாதங்களில் 1116 மாதங்கள், நாட்களில் 34045 நாட்கள், பிறைகளில் (அமாவாசைகளும்) 1635 ஏற்பட்டு மறைந்துவிட்டன. இனிமேலும் எத்தனை காலத்துக்கு வாழ்ந்தாலும், வாழ்வில் தேய்மானம்தான் காணமுடியுமே ஒழிய வளர்ச்சி காண்பது என்பது (இயற்கையில்) முடியாத காரியமேயாகும்.

என் வாழ்நாளில் நான், மற்றவர் (அனேகர்) கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர்கள் கருத்து என்பவைகளில், யாரும் நினைக்காததும், நினைத்தாலும் வெளியில் சொல்லப் பயப்படுவதும், துணிந்து சொன்னாலும் செய்கையில் நடவாததும் நடத்திக்காட்ட முடியாததுமான காரியத்தை, எளிதாய் நினைத்து, வெளியில் எடுத்துச் சொல்லி (பிரச்சாரம் செய்து) காரியத்திலும் நடந்து வந்ததோடு, ஓரளவுக்கு மற்றவர்களுக்கும் தெரியும்படி—விளங்கும்படி, ஓரளவுக்கு நடத்திக்காட்டியும் வந்திருக்கிறேன்.

இந்த நிலை உலகெல்லாம் பரவவேண்டும் என்ற எண்ணங்கொண்டு அதற்காக வாழ்கிறேன்—என்ற எண்ணத்தில் இருந்து வருகிறேன். அப்படிப்பட்ட காரியம் (எண்ணம்) என்னவென்றால், தெய்வம் இல்லை, தெய்வ சக்தி என்பதாக எதுவும் இல்லை, மனிதத் தன்மைக்கு மேற்பட்ட தெய்வ சக்தி—தெய்வீகத் தன்மை என்பதாக எதுவுமில்லை; அப்படிப்பட்ட தெய்வீகத்தனம் கொண்டவர்கள் என்பதாக யாருமே இல்லை; அப்படிப்பட்ட காரியம் என்பதாகவும் எதுவுமே இல்லை என்றும் திண்ணமாய்க் கருதி, உறுதியான பணியாற்றியும் வந்திருக்கிறேன்—வருகிறேன்.

இந்த எனது நிலையில், எனது 93 ஆண்டு வாழ்நாளில் எனக்கு யாதொரு குறைவும் சங்கடமும், மனக் குறைவோ, அதிருப்தியோகூட ஏற்பட்டதேயில்லை. மேற்கண்ட எல்லாக் காரியங்களிலும் மற்றவர்கள் எளிதில் பெறமுடியாத அனேக ஏற்றங்களைச் சாதாரணமாகப் பெற்றிருக்கிறேன்; மக்களால் நல்ல அளவுக்கு மதிக்கப்பட்டும், பாராட்டப்பட்டும், விரும்பப்பட்டும் போற்றப்பட்டும் வந்திருக்கிறேன்.

இதனால் உலகுக்கு—மக்களுக்கு யாதொரு கெடுதியும் ஏற்பட்டதில்லை என்பதோடு நாட்டுக்கும், மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட–தாழ்த்தப்பட்ட மக்கள் யாவருக்குமே நல்ல வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டு வருகின்றன என்றே சொல்லலாம்.

நமது கருத்து வெளியிடும் பிரச்சாரமும் துவக்கப்பட்ட காலத்தில், நமது மக்களின் சராசரி ஆயுள் (வாழ்நாள்) பத்து ஆண்டேயாகும். கல்வியில் நமது மக்கள் 100-க்கு 8 பேர் 10 பேர் என எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஆவார்கள். ஏராளமான நோய் நலிவுகள்; அவற்றுள் பரிகாரம், சவுக்கியம் செய்ய முடியாத நோய்கள் அதிகம். காலரா (வாந்திபேதி) வந்தால் 100-க்கு 90 பேர் சாவார்கள்; பிளேக் வந்தால் 100-க்கு 100-ம் சாவார்கள்; இருமல் (க்ஷயம்) வந்தால் 100-க்கு 80 பேர் சாவார்கள்; அம்மை (வைசூரி) வந்தால் 100-க்கு 50 பேர்களுக்கு மேல் சாவார்கள். தொத்து நோய்களும் பல; குழந்தைச் சாவுகளும் ஏராளம். கர்ப்ப ஸ்திரீகள் சாவுகளும் ஏராளம் இருந்தன. இதற்கு ஏற்ப ஏழ்மையும் கீழ்த்தரமான வாழ்க்கை நிலையும் இருந்து வந்தன.

படிப்பகம்

www.padippakam.com



அரசியலில் அன்னிய ஆதிக்கம், பார்ப்பன ஆதிக்கம் தலைவிரித்தாடின. அது போலவே உத்தியோகத் துறையிலும் பார்ப்பன மயமும் முன்னேற்ற வகுப்பார் ஆதிக்கமும் இருந்துவந்தன. முதலாளிகள் ஆதிக்கமும், எஜமான்–அடிமைத் தன்மையும் இயற்கை என்று சொல்லும் தன்மையில் தாண்டவமாடின. செல்வ நிலையோ, ஒரு லட்சம் என்பது தான் உயர்ந்தநிலை. 10 லட்சம் என்பது மிகமிக உயர்ந்த நிலையாய் இருந்தது. மற்றும் எவ்வளவோ கீழ்நிலைக்கு ஆளாகி இருந்தது மாத்திரமல்லாமல் அந் நிலைபற்றி வெட்கப் படாமலும் கவலைப்படாமலும் வாழ்ந்து வந்தோம்.

இப்படிப்பட்ட நிலையில், இந்த நிலைபற்றி யாருமே கவலைப்படாமல்—இவற்றின் விளைவுபற்றி யாருமே கவலைப்படாமல், 'எல்லாம் கடவுள் செயல், நம்மாலாவது ஒன்றுமே இல்லை'—என்று கருதி, நிம்மதியுடன் மக்கள் இருந்த காலத்தில் நான் ஒருவன் மாத்திரமே தீவிரமாய்ச் சிந்தித்து, இந்த நிலைக்குக் காரணம் நமது முட்டாள்தனமும், இதுவரை சிந்திக்காததுமேதான் என்று கருதி, துணிந்து கடவுளையும், மதத்தையும் சாஸ்திரங்களையும் முன்னோர் கூற்றையும் அழித்து, ஒழித்துக்கட்டி, மக்களுக்குப் புது எண்ணங்களை—அறிவை உண்டாக்கவேண்டும் என்று பாடுபட்டு வந்ததே இம் மாற்றங்களுக்கு வழியேற்படக் காரணமாயிற்று.

கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர்கூற்று ஆகியவைகளை எதிர்க்கவும், அழிக்கவும் துணிவு எனக்கு எப்போது, ஏன் வந்தது, எப்படி வந்தது என்றால், மேற்கண்ட அவை எல்லாம் மனித சமுதாயத்தின் காட்டுமிராண்டிக் காலமான சுமார் 2000, 3000 ஆண்டுகளுக்கு முந்தின மிருகப் பிராயத்தில் ஏற்பட்டவைகளே. அக் காலம் அறிவில்லாத காலம் என்பது மாத்திரம் அல்லாமல், தாய்–மகன், தந்தை–மகள், அண்ணன்–தங்கை என்பவைகளான முறைபேதங்கள் இல்லாத காலம்; அவை மாத்திரமா? பகுத்தறிவு, சிந்தனை அற்றகாலம்; வளர்ச்சி என்பதாக ஒரு தன்மை இருக்கிறது என்பதே தெரியாத காலம்.

சாதாரணமாக, கந்த புராணம், வாயு புராணம், பாரத புராணம், இராமாயண புராணம் முதலிய கடவுள் சம்பந்தமான, மத சம்பந்தமான, சாஸ்திர புராண இதிகாசங்களையும், சிவ புராணம், விஷ்ணு புராணம், பாகவதம், வெகு சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட பக்த விஜயம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் முதலிய ஆதாரங்களையும், இலக்கியங்களையும் பார்த்தாலே நல்லவண்ணம் உண்மை விளங்கும்.

மற்றும், இந்த மடமைக் கூளங்களை இன்றைய தினத்திலேயே நம்மில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்கள், அதிகம் புலவர், பண்டிதர், வித்வான், மகாமகோபாத்தியாய, பி. ஏ., எம். ஏ., டாக்டர் பட்டம் பெற்ற பெரிய படிப்பாளி, அறிவாளிகள் என்பவர்களெல்லாம்கூட நம்பி, அதன்படி நடக்கத் துணிந்தவர்களும் இருக்கிறார்கள் என்றால், பக்தி என்றாலே, இந்த காட்டுமிராண்டிக் காலத்தியக் கற்பனையை நம்புவதும், நடிப்பதும், அதற்கேற்ற கோயில், குளம், உற்சவம், பண்டிகைகள் ஆகியவைகளை ஏற்படுத்தி, பரப்பி, கொண்டாடி வந்தனர் என்றால், அறிவிலிகள் எவ்வளவு மோசமாக ஏற்பட்டவர்களாக—காட்டுமிராண்டிகளாக இருந்திருக்கமாட்டார்கள்?

அவ்வளவு ஏன், கிரணங்களை நம்புகிறவர்கள் எத்தனை பேர்? இன்றுகூட சாதாரணமாகச் சொல்லவேண்டுமானால் இந்தியாவுக்கு அப்பால் உலகம் இருப்பதாகவே தெரியாதோர் எத்தனை? இன்றைக்கு 150, 200, 300 ஆண்டுகளுக்கு முன் நம் நிலை என்ன என்று பார்ப்போமானால்—நெருப்புக் குச்சி ஏது? இரயில், கார், கப்பல், ஆகாயக் கப்பல் ஏது? நடக்க நல்ல பாதை ஏது? இந்த நிலையில் உள்ள மக்களின் மூட–காட்டுமிராண்டி நம்பிக்கையான—அதன் தோற்றங்களான கடவுள், மதம், சாஸ்திரம், பெரியோர் கருத்து என்பவைகளை ஒழிக்க ஒரு மனிதன் துணிவு கொள்வானானால், அத் துணிவில் அதிசயம் ஏது? எப்படி இருக்கமுடியும்?



பகுத்தறிவுள்ள மனிதனாக இருந்து கொண்டு, கடவுள், மதம், சாஸ்திரம், பெரியோர் கருத்து என்பனவாகியவைகளை நம்புவதும்; அழிக்காமல் ஒழிக்காமல் இருப்பதும், பின் பற்றுவதும்தான் முட்டாள்தனமான–காட்டுமிராண்டித்தனமான துணிவுகொண்ட தன்மையாகும் என்று சொல்லலாம்.

நிற்க, மேலேகண்ட எனது துணிவான கருத்துக்களால், பிரச்சாரத்தால் இவ்வைம்பது ஆண்டுகளுக்கப்பால் நம் நாட்டாருக்கு, மனித சமுதாயத்துக்கு ஏற்பட்ட தீமை என்ன, கேடு என்ன என்று பார்த்தால்; ஒரு சாதாரண மனிதனுக்கும், அவன் கடுகளவு சிந்தனையாளனாக இருந்தால் ஒன்றும் ஏற்படவில்லை என்பதோடு, மேலே காட்டப்பட்ட அனேக நன்மைகள் ஏற்பட்டிருப்பது தெரியாமல் போகாதே!

அது மாத்திரமா? இந்தக் கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர் கருத்து என்பவைகளால் நாட்டுக்கு—மனித சமுதாயத்துக்கு ஏற்பட்ட கேடுகளும், வளர்ச்சித் தடைகளும் எப்படிப்பட்ட மூடனுக்கும் புரியாமல் போகாது. எனவே, நான் 93 ஆண்டுகள் வாழ்ந்ததை வீண்வாழ்வு என்று கருதவில்லை. என் பணிகளை வீண்பணி என்றும் கருதவில்லை.

இனிமேலும் வாழ்வதைத்தான் கஷ்டமாகக் கருதுகிறேன். என் உடல் நிலைமை மிக மோசமாகிவிட்டது. நினைவு சரியாக இல்லை. மறதி அதிகம். கண், காது சரியாக இல்லை. கால்கள், நடக்கவே முடிவதில்லை. அசதி அதிகம்.

இப்படிப்பட்ட நிலையிலும் சற்று மகிழ்ச்சி, உற்சாகம் கொள்ளுகிறேன் என்றால், இன்று நமக்கு வாய்த்திருக்கும் தி. மு. க. ஆட்சிப் பணிகளால்தான்.

காரணம் என்னவென்றால், இதன் முன்னர் இருந்த ஆட்சியின் யோக்கியதைகளை அவைகளால் நாட்டுக்கு—சமுதாயத்திற்கு ஏற்பட்ட கேடுகளை ஒழித்துக்கட்டாததால் சமுதாய விஷயத்தில், சாதி அமைப்பு விஷயத்தில், கல்வி விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள்; என்ன கொள்கை மேற்கொண்டார்கள் என்பவைகளைச் சிந்தித்தால் தெரியவரும்.

ஏதாவது பொல்லாத வாய்ப்பால் இப்போதைய இந்த தி. மு. க. ஆட்சிக்கு ஏதாவது மாறுதல் காலம் ஏற்பட்டால், வேறு எந்த ஆட்சி வரும், அதன் பலன் என்ன ஆகும் என்பவைகளைச் சிந்தித்தால் பெரும் பயம் ஏற்படுகிறது. மற்றபடி மகிழ்ச்சியோடு இதை முடிக்கிறேன்.

[பிறந்த நாள் விழா மலர் 94—17-9-1972]

## 14. சுதந்திரமும் சமுதாயமும்

நம் தேசம்–நாடு சுதந்திரம்பெற்று இன்றைக்கு இருபத்தைந்து (25) ஆண்டுகள் ஆகின்றன என்றாலும், இந்தக் கால்நூற்றாண்டில் அரசியலில்தான் மாறுதல்பெற்று வருகிறோமேயொழிய, சமுதாய அமைப்பில், கல்வியில், கீழ்நிலையில்—மிகமிகக் கீழ் நிலையில் இருந்துவருகிறோம்.

அரசியலில் நாம்பெற்ற மாறுதல் என்பது கெட்டதிலிருந்து கழிசடைக்கு (From bad to the worse) சென்று கொண்டிருக்கிறோம். ஒரு எடுத்துக்காட்டு வாக்கியம் சொல்ல வேண்டுமானால், 'அவன் போனால் கலகமாகிவிடும்; நான் போய்ச் செருப்பாலடித்துவிட்டு வந்துவிடுகிறேன்' என்று, ஒரு சமாதானம் செய்யவருகிறவன் சொன்னானாம். அதுபோல் இருக்கிறது நமது அரசியல் வளர்ச்சி.

நம்நாட்டு அரசியலில் வளர்ந்துவரும் மானங்கெட்ட, அயோக்கிய காலித்தனங்களும், கூலித்தன்மைகளும் யோக்கியப் பொறுப்பற்ற தன்மைகளும் வேறு எங்கும், எந்த நாட்டிலும் இல்லை என்கின்ற தன்மையில்தான் இருந்தும், வளர்ந்தும் வருகிறது. நமது

படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரமானது ஒரு யோக்கியன், ஒரு பெரிய மனிதன் என்று சொல்லுவதற்கு ஒரு ஆண் கூட நமது தேசத்தில், நாட்டில் இல்லாமல் செய்துவிட்டது. அது மாத்திரமா?

நம் நாட்டில் காலித்தனம், அயோக்கியத்தனம், கயவாளித்தனம், புரட்டு, பித்தலாட்டம், மோசடி, துரோகம், வஞ்சனை முதலிய குணங்கள், தன்மைகள் இல்லாத மக்களையோ, அரசியல் கட்சிகளையோ, தலைவர்களையோ, அரசியல்வாதிகளையோ காண முடியவே முடியாதபடி செய்துவிட்டது. பெரிய பித்தலாட்டம், துரோகம், வஞ்சனை இவைகளில் தேர்ச்சிபெற்றவர்கள்தான் தலைவர்களாகிறார்கள்; தேசியவாதிகளாகிறார்கள்; தேசபக்தர்களாகிறார்கள்.

இவை வரவர நம் நாட்டுப் பெண்களையும் தழுவிக்கொள்ளும் நிலை வளர்கிறது. அவ்வளவு மாத்திரமா? மாணவர்களையும் இழுத்துக்கொள்ளும் என்பதோடு அதிகாரிகளையும், அரசியல் சிப்பந்திகளையும் சூழ்ந்துகொள்ளும் என்று உறுதிகொள்ள வேண்டிய அளவுக்கு வளர்ந்துவருகிறது.

பொதுவாகச் சொல்லவேண்டுமானால், மக்களுக்கு இருக்கவேண்டிய மானம், அவமானமற்ற தன்மை, கண்ணியம், நேர்மை முதலிய சாதாரண குணங்களை நமது சுதந்திரம் எரித்துச் சாம்பலாக்கி வருகிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்தச் சுதந்திரம் உள்ளவரை மக்களில் நேர்மையுள்ள யோக்கியன் இருக்கமாட்டான் என்பதோடு, தோன்றவேமாட்டான் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், இந்தச் சுதந்திரம் ஏற்பட்டதே பித்தலாட்டக்காரர்கள், நாணயமற்றவர்கள், மக்களை ஏமாற்றி, வஞ்சித்துப் பழக்கப்பட்டுத் தேறினவர்கள், பொறுப்பற்ற காலிகள் முதலியவர்களது முயற்சியினால், தந்திரத்தினால் என்றால் இதில் யோக்கியம், நேர்மை, உண்மை எப்படி இருக்கமுடியும்?

ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன். ஒரு கல்லுருவத்திற்கும் அயோக்கியத்தனங்களைப் பரப்பும் ஸ்தாபனமான ஒரு கோவிலுக்கும், ஒரு மடத்திற்கும், ஒரு சபையாருக்கும், ஒரு சாமியாருக்கும், சங்கராச்சாரியாருக்கும் ஒரு கோடி ரூபாய் வருமானமிருந்தாலும், சொத்து இருந்தாலும், வரவு-செலவு இருந்தாலும் அனுமதிக்க வேண்டியது; கணக்கு, வரி கேட்கக்கூடாது.

ஆனால், உழைத்துப் பாடுபட்டு, திருடாமல்-ஏமாற்றாமல் தேடிய சொத்துக்களுக்கு அளவு-அதாவது ஒருவனுக்கு இவ்வளவுதான் உரிமை என்பது ஆட்சிக் கொள்கைத் திட்டம் என்றால் இந்த ஆட்சியின் தன்மை எப்படிப்பட்டது? முன்னவன் செல்வம் எப்படி நாசமாகிறது? யாருக்குப் பயன்படுகிறது? பின்னவன் செல்வம் யாருக்குப் பயன்படுகிறது?

கார்த்திகை என்கிறான்; குடம்குடமாய், பீப்பாய் பீப்பாயாக நெய், வெண்ணெய், எண்ணெய் பாழாகிறது. இலட்சதீபம் என்கிறான்; டின் டின்னாக எண்ணெய் பாழாகிறது. அபிஷேகம் என்கிறான்; நெய், எண்ணெய், பால், தயிர் படிபடியாக ஜலதாரைக்குப் போகிறது. மற்றும் இவை போன்றவைகளுக்கெல்லாம் கேள்வி கேட்பாரே கிடையாது.

இந்தப் பார்ப்பனர் வாழும் நாட்டைவிட வேறு எந்த நாட்டிலும் இப்படிப்பட்ட பழக்கமோ, வழக்கமோ, சர்க்கார் அனுமதியோ கிடையாதே! இங்கு சுதந்திரத்தில் கேள்வி கேட்பாரும் கிடையாது. ஆனால், மனித சமுதாயத்தில் உலகத்திற்கே மாறுதலாக நம்நாடு, தேசம் தவிர வேறு எந்த நாட்டிலும் தேசத்திலுமில்லாத மாதிரி மனிதனில் முதல்வன் (பார்ப்பான்), நாலாதவன் (சூத்திரன்), அய்ந்தாமவன் (பஞ்சமன்) என்கின்ற பிரிவு கடவுளின் மதத்தில் உள்ள ஆதாரங்களின் பெயரால், அதாவது சமுதாயத்தில் 100-க்கு 97 பேர் 4ஆம் 5ஆம் சாதி, 100-க்கு மூன்றேபேர் ஒன்னாம் சாதின்று பிரிக்கப்பட்டு, அதைக் காப்பாற்றுவதே சுதந்திரத்தின் சட்டம் என்றும் ஏற்பாடு செய்து, சுதந்திர ஆட்சியும் சட்டமும் அமுல் செய்து ஆதரித்து வருகிறது. இதற்குப் பெயர் சுதந்திர ஆட்சியா, கொடுங்கோன்மை ஆட்சியா என்று கேட்கிறேன்.



அது மாத்திரமா? கீழ்மக்கள் என்று சொல்லப்படுகிற, சமுதாயத்தில் 100-க்கு 97 பேர் இருக்கும் நாட்டில் மேன் மக்கள் என்று சொல்லப்படுகிற, 100-க்கு 3 பேரையே கொண்ட 'முதலாவது' சமுதாயமாகிய ஒரு பார்ப்பனப் பெண்ணின் ஆட்சியில் சமுதாய அமைப்பைக் காப்பாற்றுகிற சட்டத்தை வைத்து ஆளுகிற ஆட்சியில் குடிகளாயிருப்பது என்பது சுதந்திர ஆட்சியா? கொடுங்கோன்மை ஆட்சியில் மானங்கெட்டு, ஈனத்தனமாகக் குடிகளாக இருக்கிறோம்; இருக்கவேண்டும் என்பதும் ஈன அடிமைத்தன்மை ஆட்சியா, இல்லையா என்று கேட்கிறேன்.

சுதந்திரம் கிடைத்தவுடனே பார்ப்பான் சட்டம் செய்தான். அந்தச் சட்டப்படியே தேர்தல் வைத்தான். யார் வெற்றி பெற்றாலும் அந்தச் சட்டப்படியே ஆளவேண்டும் என்று அமுல்படுத்தி விட்டான். பரம்பரையாய்ப் பார்ப்பானே ஆட்சித் தலைவராய் வரும்படி ஆட்சி அமைப்பைச் செய்து கொண்டான்.

தேசத்தில் உள்ள மற்ற மக்கள் ஒன்றுசேர முடியாத நிபந்தனைகளைக் கட்டாயச் சட்டமாக ஆக்கிக் கொண்டான். 50 கோடி மக்கள் உள்ள தேசம் ஒன்று சேராதபடி 16 பிரிவுகளாகப் பிரித்து, இது உலகம் உள்ளவரை நிரந்தரமாகப் பிரிந்திருக்கவேண்டும் என்று நிர்ப்பந்தமும், பிரிந்துகொள்ள விரும்புகிறவனுக்குப் பிரதிநிதித்துவ உரிமை இல்லை என்றும் கிரிமினல் தண்டனை என்றும் ஆக்கிக் கொண்டு, 'மேல் சாதியானுடைய சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டு, பரம்பரை உரிமைபோல் நடத்தப்பட்டுவரும் ஆட்சியில் இருக்கிறோம். இதை அடிமை ஆட்சி என்றோ, அன்னிய ஆட்சி என்றோ சொல்லக்கூடாத நிலையில் இருக்கிறோம்.

மற்றும், இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டு ஆன பின்பும் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள், வெறும் கையெழுத்து மாத்திரம் போடத்தக்க மக்களையும் சேர்த்து எண்ணிப் பார்த்தால் 100-க்கு 39 மக்களே இருக்கிறார்கள். அதாவது, இன்னும் 100-க்கு 61 மக்களுக்கு எழுத்து வாசனையே இல்லை. அதாவது, இந்த 39 பேர் பெரிதும் நகரவாசிகளேதான். அதிலும், பெண்கள் சமுதாயத்தில் 100-க்கு 27 பெண்கள்தான் படிக்கத்தெரிந்தவர்கள். அப்படியானால், இனியும் நமதுநாட்டில் பெண்கள் 100-க்கு 73 பேர் படிக்கத் தெரிய வேண்டியவர்கள் ஆவார்கள். இவர்களும் கிராமங்களில் 100-க்கு 90-க்கு மேற்பட்ட பெண்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் என்றே சொல்லலாம்.

இந்த இலட்சணத்தில், இந்த நாட்டு மக்களாகிய நாம், நமக்கு வேண்டிய ஒரு நீதிபதியை நியமித்துக்கொள்ள உரிமை இல்லை. பார்ப்பானாகவும், பார்ப்பானுக்கு வேண்டியவனாகவும் மூடநம்பிக்கையில் ஈடுபட்டுப் பார்ப்பானுக்கு அடிமையாய் இருப்பவனாகவும்தான் நியமிக்கப்பட முடியும்.

உதாரணம் வேண்டுமானால், இந்தநாட்டு நீதிபதிகளிடம் பார்ப்பனருக்கு நம்பிக்கை இல்லாமலே போய்விட்டது. தொட்டதற்கெல்லாம் சுப்ரீம் கோர்ட்டுக்கே போய் பிராது கொடுக்கிறார்கள். வேறு மாகாணத்துக்கு மாற்றுதல் கேட்கிறார்கள். யார் என்றால் சாதி, மதம் முதலிய மூடநம்பிக்கைச் சலுகையால் வாழ்பவர்கள்.

எனவே, நம் நாட்டின் சுதந்திரத்தின் யோக்கியதை இந்த நிலையில் இருக்கிறது என்பதுடன் நமக்கு உண்மையான சுதந்திரம் வேண்டுமானால், பார்ப்பனர் கருதுவது போலவே, தமிழ்நாடு தனித்த ஏகபோக ஆட்சியாய் இருக்கவேண்டும். அப்படிக்கு இல்லையானால், அதுமுடியாது என்பதானால் அன்னிய தேசத்தான் ஆட்சிதான் வேண்டும் என்று நினைக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறோம். இதுதான் நமது இன்றைய சுதந்திரம்.

[பிறந்த நாள் விழா மலர் 94—17-9-1972]

படிப்பகம்

www.padippakam.com



# 15. நமது இலட்சியம்

எனது 95ஆம் ஆண்டு பிறந்த நாள் துவக்கத்துக்கு வழமைபோல் ஆண்டு மலரில் ஒரு கட்டுரை எழுதவேண்டி இருக்கிறது. அதை முன்னிட்டு இக் கட்டுரை எழுதுகிறேன். அப்படி எழுதப்படும் இக் கட்டுரை என்னால் ஆண்டு மலர்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் இதுவே கடைசியான கட்டுரையாக இருந்தாலும் இருக்கலாம். ஏன் இப்படி எழுதுகிறேன் என்றால், அடுத்த ஆண்டு மலர் எழுதப்படவேண்டிய காலத்தில் நான் இருப்பேனோ, இல்லையோ என்கிற பிரச்சினை மாத்திரமல்லாமல், எழுதும்படியான வாய்ப்பு இருக்குமோ இருக்காதோ என்பதே முக்கிய காரியமாகும்.

ஏனெனில், இன்னும் நாம் இருப்பதுபோலவே அதாவது, இந்திய ஆட்சி என்பதற்குள் பிரஜையாகவும், சமுதாயத்தில் நாலாஞ்சாதி (சூத்திர மகனாகவும்) சட்டப்படி, சாஸ்திரப்படி பார்ப்பானின் தாசிமகன் என்னும் பெயருடன், நமது தாய்மார்கள் பார்ப்பானின் தாசிகளாகவும் இருக்கும் தன்மையாலேயே இருப்போமோ என்கின்ற கருத்தைக்கொண்டே இப்படி எழுதுகிறேன்.

இந்திய அரசியல் சட்டப்படி நாம் இந்திய ஆட்சியில் பிரஜையாய் இருக்கும்வரை இந்துவாய், அதாவது, கிறிஸ்தவனாகவோ, முஸ்லிமாகவோ நாம் மதம்மாற்றிக்கொள்ளாத வரை, நாம் நமது பண்டார சன்னதிகள் உட்பட பவுத்தனுக்கும்–ஜெயினனுக்கும் சமானமாக இருக்கும்படியாக இருந்தாலும், பகுத்தறிவுவாதியாக இருந்தாலும், வேறு எந்தப் பெயரில் வாழ்ந்துவருபவனாக இருந்தாலும் சூத்திரனாகத்தான்—பார்ப்பானின் தாசிமகனாகத்தான் இருந்தாகவேண்டும்.

இதுதான் இன்றைய இந்திய அரசியல் சட்டமாகும். இந்தச் சட்டத்தைத் திருத்தவோ, மாற்றவோ நம் மக்களுக்கு ஒருநாளும் சக்தியோ, உரிமையோ ஏற்படும் என்று கருதவே முடியாத நிலையில் இருக்கிறோம். அது மாத்திரமல்லாமல், இந்திய ஆட்சியில் இருந்து தமிழ்நாட்டை விலக்கிக்கொள்ள முயற்சிசெய்தே ஆகவேண்டிய ஒரு கட்டாயமான—நிர்ப்பந்தமான நிலையில் இருக்கிறோம். இந்த முயற்சியில் நாம் இந்திய ஆட்சியிலிருந்து விலகிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமா என்பதுபற்றி நமக்கு முடிவு செய்துகொள்ள முடியாமல் இருந்தாலும், இம் முயற்சியில் நாம் பலர் சிறையில் இருக்க நேரிடலாம் என்கிறதாலேயேதான் இந்தப்படி எழுதுகிறேன்.

நமக்கு இன்றைய இந்திய ஆட்சியில் அரசியல் பிரச்சினை எப்படி இருந்தாலும், சமுதாயப் பிரச்சினையில் நாம் இன்று இருக்கும் இழிதன்மையில் இருந்து, அதாவது சூத்திரனாக, தாசிமகனாக நம் தாய்மார்கள் தாசிகளாக சட்டப்படி, சாஸ்திரப்படி இருக்கும் நிலைமையை மாற்றிக்கொள்ள முயற்சிக்காமல் நாம் இருக்கமுடியுமா?

இந்தியாவில் நாம் இருக்கும்வரை இந்துவாகத்தானே இருந்து ஆகவேண்டும். இந்து என்றாலே முஸ்லிம், கிறிஸ்தவம் தவிர மற்ற யாவருமே சூத்திரர், தாசிமக்கள்தான் என்று இருப்பதால் ஏதாவது முயற்சி செய்துதான் ஆகவேண்டும்.

நம் மக்கள் எளிதில் மதம் மாறமாட்டார்கள். மதம் மாறுவதை இழிவாய்க் கருதுபவர்களாவார்கள்.

ஆதலால், நாம் உடனடியாக விடுதலை, அதாவது இந்தியக் கூட்டாட்சியிலிருந்து விலகி, சுதந்திரத் தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாகவேண்டியவர்களாக இருக்கிறோம். இம் முயற்சிக்கு இன்றைய தி. மு. க. ஆட்சி இணங்கும் என்று கருத முடியாது. ஏனெனில், தி. மு. க. ஆட்சி விரும்புவதெல்லாம் இந்தியக் கூட்டாட்சி ஆதிக்கத்திற்கு உள்பட்ட மாகாண சுயாட்சிதான் அது விரும்புகிறது.

மாகாண சுயாட்சி என்றால், அரசியலில்தான் ஏதோ சில மாறுதல்களைச் செய்துகொள்ள முடியுமே தவிர, சமுதாயத் துறையில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்ய முடியாது.



இந்திய அரசியல் சட்டத்தில் சமுதாய (மத) சம்பந்தமான காரியங்களைப்பற்றி பழைய மனுதர்ம நிலையை மிகமிகப் பலப்படுத்திக்கொண்டபடி இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், கர்ப்பக் கிரகத்திற்குள் சூத்திரன், அதாவது பண்டார சன்னதி உட்பட இந்து என்ற தலைப்பில் வரும் எவருமே, பார்ப்பான் தவிர்த்து எவருமே செல்ல முடியாதென்று உயர்நீதி (சுப்ரீம்) மன்றத் தீர்ப்பு இருப்பதினாலும், இன்னும் கோவிலுக்கு சாமி தரிசனத்திற்கென்று போகும் யாருமே தீண்டத் தகாதவர்கள்போல் வாயில்படிக்கு வெளியில்தான் எட்டி நிற்க வேண்டும் என்றால், மற்றபடி எதில் நாம் மாறுதலைக் காண முடியும்?

இன்று அமுலில் இருக்கும் ‘இந்து லா’ என்னும் சட்டத்திலும், பல உயர்நீதி மன்றங்களின் தீர்ப்பிலும், பார்ப்பனரல்லாத இந்து மக்கள் என்பவர்களை மிக மிக இழிவாகக் கூறி நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்து என்னும் சொல்லுக்கு சட்டத்தில் கொடுத்திருக்கும் விளக்கம் என்னவென்றால், ‘கிறிஸ்தவர்கள்–முஸ்லிம்கள் தவிர்த்த இந்தியாவில் உள்ள மக்கள் அனைவருமே இந்துக்கள் ஆவார்கள்’. இதன்படி நாத்திகன், பகுத்தறிவுவாதி, பரதேசி முதலிய சகலரும் இந்துக்கள் ஆகி சூத்திரர், பார்ப்பானின் தாசி மகன் என்று ஆகிவிடுகிறார்கள்.

நான் முதலில், நான் இந்து அல்ல என்று சொல்லிவிட்டால் இழிவு நீங்கிவிடும் என்றுதான் கருதினேன். பிறகு சட்டங்களைப் பார்க்க ஆரம்பித்த பிறகு கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் தவிர்த்த, இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் இந்துக்கள்—இந்துக்கள் என்றால் சூத்திரர்கள், வேசி மக்கள் என்று பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதலாலேயே தீவிர முயற்சி எடுக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

இன்று நம் நாட்டில் இந்துக்கள் எல்லோருக்குமே அரசியலில்தான் முக்கிய கவனம் இருக்கிறது. அன்றியும், நாட்டுப் பிரிவினை என்றால், எல்லா மக்களுமே பயப்படுகிறார்கள். காரணம், பதவி கிடைக்காதே என்கின்ற காரணம் மாத்திரமல்லாமல், சிறைக்குச் செல்ல வேண்டுமே என்றும் பயப்படுகிறார்கள். 50 வருஷ காலமாகச் சுயமரியாதை இயக்கம் சாதித்தது என்ன என்று பார்த்தால், சிறிது படிப்பு—பல பதவி உத்தியோகம் பெற நேர்ந்ததோடு, அரசியலில் பார்ப்பனர் கொட்டத்தை நல்ல அளவுக்கு அடக்கிற்று என்பதல்லாமல் சமுதாயத் துறையில் உள்ள அடிப்படை இழிவு நல்ல அளவுக்குப் பலம் பெற்றுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

எனவே, நாம் சட்டத்தைப்பற்றிப் பயப்படாமலும், பதவி கிடைக்காதே என்று கவலைப்படாமலும் சுதந்திரத் தமிழ்நாடு பெற ஒவ்வொருவரும் முடிவு செய்துகொண்டு முன் வரவேண்டியது ஒவ்வொரு தமிழனுக்கும் அவசியமான காரியம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

‘சுதந்திரத் தமிழ்நாடு—எனது இலட்சியம்’ என்ற சொற்களை ஒவ்வொருவரும் இலட்சியச் சொல்லாகக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். பதினாயிரக் கணக்கில் பாட்ஜுக்கு ஆர்டர் கொடுத்துத் தயார்செய்து மக்களுக்கு வினியோகிக்க ஆசைப்படுகிறேன். பொது மக்களுக்கும் இதுவே இலட்சியச் சொல்லாக (கூப்பாடாக) இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். பொது மக்களே! இளைஞர்களே! பள்ளி, கல்லூரி மாணவர்களே! மாணவிகளே! உறுதி கொள்ளுங்கள்! உறுதி கொள்ளுங்கள்! உறுதி கொள்ளுங்கள்!

[பிறந்த நாள் விழா மலர் 95—17-9-1973]



படிப்பகம்

www.padippakam.com

# பகுதி VI

# உலகம்

படிப்பகம்

www.padippakam.com

# 1. இனிவரும் உலகம்

## 1. இலங்கை உபந்யாசம்

அன்புள்ள தலைவர் அவர்களே! வீரமும், எழுச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் உள்ள வாலிபர்களே!

தலைவரின் முன்னுரையிலும் உபசாரப் பத்திரங்களிலும், மற்றும் பேசியவர்களும் அளவுக்கு மீறி என்னைப்பற்றியும், எனது சிறு தொண்டைப்பற்றியும் புகழ்ந்து கூறியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட புகழ்ச்சிகளுக்கு நான் சிறிதும் தகுதியுடையேன் அல்லன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதோடு கூடவே, இதன்மூலம் நீங்கள் எனது கொள்கைகளையும், தொண்டையும் ஆதரிக்கிறீர்கள் என்பதை உணர்ந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

தோழர்களே! எனது அபிப்பிராயத்திற்கும், முயற்சிக்கும் குறிப்பிடத் தகுந்த அளவு எதிர்ப்பு இருக்கின்றது என்பதை நான் அறியாமலோ, அல்லது அறிந்தும் அவைகளை மறைக்க முயலவோ இல்லை. யார் எவ்வளவு எதிர்த்த போதிலும், யார் எவ்வளவுக்கு தூஷித்து விஷமப் பிரச்சாரம் செய்த போதிலும், யார் எவ்வளவு எனது அபிப்பிராயம் வெளியில் பரவாமல் இருக்கும்படி சூழ்ச்சிகள் செய்து மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பிய போதிலும், உலகத்தில் எல்லாப் பக்கங்களிலும் வேத புராண சரித்திர காலம் முதல் இன்றைய வரையிலும் மனித சமூகமானது கடவுள், சாதி, மதம், தேசம் என்னும் பேர்களால் பிரிவுபட்டு, உயர்ந்தவன்–தாழ்ந்தவன், ஏழை–பணக்காரன், முதலாளி–தொழிலாளி, அரசன்–பிரஜைகள், குரு–சிஷ்யன் என்பனவாகிய பல தன்மையில் வகுப்பு வித்தியாசங்களுக்காளாகி மேல்கீழ்தரத்தோடு கட்டுப்பாடான சமுதாயக் கொடுமைகளாலும், அரசாங்கச் சட்டங்களாலும், கொடுமைக்குள்ளாகி வந்திருக்கின்றது–வருகின்றது என்பதை மாத்திரம் யாராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இவ் வகுப்புப் பேதங்களால் மக்கள்படும் துன்பத்தையும், அனுபவிக்கும் இழிவையும் அல்லும் பகலும் காடுகளிலும், மேடுகளிலும், தொழிற்சாலைகளிலும் கஷ்டமான வேலைகளைச் செய்தும், வயிறாரக் கஞ்சி இல்லாமலும் எத்தனை பேர் அவதிப்படுகின்றார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அவர்களது நிலைமையை உங்கள் மனத்தில் உருவகப்படுத்திப் பாருங்கள். இந்தக் கொடுமைகள் எத்தனை காலமாக இருந்து வருகின்றன? இன்றா, நேற்றா? இது அன்னிய அரச ஆட்சியாலா? குடியாட்சி இல்லாததாலா? தர்ம தேவதை ஆட்சி, அவதார ஆட்சி, தெய்வாம்ச ஆட்சி இல்லாததாலா என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்! உலக சரித்திரம் கிடைத்தது முதல், உலகத்தில் எந்தப் பாகத்தில் எந்த ஆட்சியால் என்றைய தினம் இந்தக் கொடுமைகள் இல்லாதிருந்தன என்பதைச் சற்று நினைவுக்குக் கொண்டுவந்து பாருங்கள்!

தோழர்களே! இனி இதற்கு அடிப்படையாகவும், அரணாகவும் இருந்துவரும் காரணங்கள் எவை என்பதை நீங்கள் சற்று நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தீர்களானால், இக் கொடுமைகளுக்கு முக்கிய காரணம் முற்கூறிய கடவுள், மதம், சாதியம், தேசியம் என்பவையாகிய மயக்க உணர்வை மக்களுக்கு ஏற்றி—அதன் பயனாகப் பெரும் பான்மையான மனித சமூகத்தை மடமையாக்கி—ஏய்த்து, அடிமைப்படுத்தித் தங்கள் சுய நலமே பிரதானமெனக் கருதிச் சோம்பேறிகளாய் இருந்துகொண்டு சுகம் அனுபவித்து வரும் ஒரு சிறு கூட்ட மக்களின் சூழ்ச்சியே யொழிய வேறில்லை என்பதைத் தெள்ளத் தெளிய உணர்வீர்கள்!

படிப்பகம்

www.padippakam.com



இந்தச் சூழ்ச்சிகளை யாராவது வெளிப்படுத்தக் கிளம்பி விட்டாலோ, உடனே அப்படிப்பட்ட காரியத்தை—நாத்திகம் என்றும், மதத் துரோகம் என்றும், தேசத் துரோகம் என்றும், தேசியத்திற்கு விரோதமென்றும் சிலர் சொல்லி அடக்கிவிடப் பார்க்கிறார்கள். இப்படிச் சொல்லி அடக்குகின்றவர்கள் யார் என்று பார்த்தாலோ அவர்கள் பெரிதும் மேல் நிலையிலிருந்து கொண்டும், சரீரத்தினால் சிறிதும் பாடுபடாமல் சோம்பேறி வாழ்க்கையில் இருந்து கொண்டும் அன்னியன் உழைப்பில் சுகமனுபவிக்கும் ஒரு சிறு கூட்டத்தாரும், மற்றும் அவர்களால் தங்கள் நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக என்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் அவர்களது கூலிப் பிரச்சாரகர்களுமேயாவார்கள். அதோடு, ஈன சாதியராயும், ஏழைகளாயும், தொழிலாளர்களாயும், கூலிகளாயும் கருதப்பட்டும், கீழ் நிலையிலிருந்து வெகுகாலமாய்த் தலைமுறை தலைமுறையாக இழிவு படுத்தப்பட்டும் அரைப் பட்டினி கிடந்து உழலும் மக்களிலும் சிலர் அவர்களுடன் சேர்ந்துகொண்டு மேற்கண்டபடி கூப்பாடு போடுவதையும் பார்க்கலாம். இதற்குச் சமாதானம் சொல்லுவதென்பது சிலருக்குச் சற்று கஷ்டமானதாகக் காணப்பட்டாலும், கூர்ந்து கவனித்தால் மேற்கண்ட உயர்நிலையை நிரந்தரமாய்க் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்கின்ற கருத்தின்மீது செய்துகொண்டிருக்கும் ஏற்பாடுகளான கடவுள், மதம், தேசியம், தேசம் ஆகியவற்றின் ஸ்தாபனங்களும், அவற்றுக்குள்ள கவசமும், காப்பும் அவை சம்பந்தமான பிரச்சாரங்களுமேதான் காரணம் என்பது தெளிவாய் விளங்காமல் போகாது.

ஆகையால், மேற்கண்ட கஷ்டப்படும் மக்களுக்கு விடுதலையும் சமத்துவமும் வேண்டுமானால் முதலில் அக் கவசங்களையும், காப்புகளையும் உடைத்தெறியவேண்டும். அவற்றின் பிரச்சாரங்களையும் முறியடித்துத் துரத்தவேண்டும். அதில்லாமல் வேறு எவ்வளவு பாடுபட்டபோதிலும், கஷ்டப்படும் மக்கள் ஒரு நாளும் விடுதலை அடைய முடியாது. இக் காரியம் செய்வதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. செய்பவர்களுக்கு மகத்தான உறுதியும், தன்னல மறுப்பும் வேண்டும். அனேக துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும், பழிப்புகளுக்கும், நஷ்டங்களுக்கும் ஆளாகத் தயாராயிருக்கவேண்டும். 'ஊரார் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள்—சொல்லுவார்கள்' என்பதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்கக்கூடாது. போலி மானாபிமானங்களையும், கவுரவங்களையும், வசவுகளையும் துச்சமாய்க் கருதவேண்டும். பாமர மக்களால், சுயநல சூழ்ச்சிக்காரர்களால் வசவு கேட்கவும், உயிர் விடவுங்கூடத் தயாராயும் இருக்கவேண்டும். இந்த நிலையில் உள்ளவர்களால் அல்லாமல் வேறு யாராலும் இக் காரியங்கள் ஒரு சிறிதும் செய்ய முடியாது என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

தோழர்களே! கடவுள், மதம், சாதியம், தேசியம், தேசாபிமானம் என்பவைகள் எல்லாம் மக்களுக்கு இயற்கையாக—தானாக ஏற்பட்ட உணர்ச்சிகள் அல்ல; சகல துறைகளிலும் மேல்படியிலுள்ளவர்கள் தங்கள் நிலை நிரந்தரமாயிருக்க ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கட்டுப்பாடான ஸ்தாபனங்களின் மூலம் பாமர மக்களுக்குள் புகுத்தப்பட்ட உணர்ச்சிகளே யாகும். இவ்வாறு புகுத்தப்படவேண்டிய அவசியமும், காரணமும் என்னவென்று பார்த்தால் அவை முற்றும் பொருளாதார உள் எண்ணத்தையும், அன்னியர் உழைப்பாலேயே வாழவேண்டும் என்கின்ற உள் எண்ணத்தையும் கொண்ட பேராசையும், சோம்பேறி வாழ்க்கைப் பிரியமுமேயாகும்.

ஆதியில், மனிதர்கள் காடுகளில் தனிமையாய், சுயேச்சையாய்த் திரிந்த—இயற்கை வாழ்விலிருந்து சமூகக் கூட்டு வாழ்க்கைக்கு வரும்போது, அவனவன் தனக்கு வேண்டிய சகல காரியங்களையும் தானே செய்துகொண்டும், அவசியமான பரஸ்பர உதவிகளை வாங்கிக்கொண்டும் ஒரே சமூகமாய், சமத்துவமாய் வாழலாம் என்று எண்ணியே நடந்தானே ஒழிய—மற்றபடி மற்றொருவனை அடிமைப்படுத்தி அவனிடம் தனக்கு வேண்டிய எல்லா வேலையையும் வாங்கிக்கொண்டு ஏய்த்து, அவனை உலக சுகபோகங்களில் பட்டினி போட்டு, தான் மாத்திரம் சோம்பேறியாய் இருந்து வாழ்ந்துகொண்டு எல்லா



சுகபோகங்களையும் தானே அனுபவித்துக்கொண்டு இருப்பதற்கோ, அல்லது மற்றவனுக்கு அடிமையாய் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து அவ்வுழைப்பின் பெரும் பயனை மற்றவன் அனுபவிக்க விட்டுவிட்டு, தான் பட்டினி கிடப்பதற்கோ அல்ல என்பது நேர்மையுள்ள மனிதர் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமாகும்.

ஆனால், நாள் ஏற ஏற மக்களுக்குள் சிலருக்குப் பேராசையும், பொறாமையும், சோம்பேறித்தனமும் வலுக்க வலுக்க—இவற்றிலிருந்து செல்வனும், அரசனும், குருவும் ஏற்பட்டுப் பிறகு அவற்றை நிலைநிறுத்த ஆத்மா, கடவுள், வேதம், ரிஷிகள், மகாத்மாக்கள் ஆகியவைகளைக் கற்பித்து—பிறகு அவைகள் மூலம் கடவுள் செயல், முன் ஜென்மம், பின் ஜென்மம், கர்மம், பாவம், புண்ணியம், மேல் உலகம், கீழ் உலகம், தீர்ப்பு நாள், மோட்சம், நரகம் ஆகியவைகளும் கற்பிக்கப்படவேண்டியதாய்விட்டது.

இந்தக் கற்பனைகளின் பயன்தான் பெரும்பான்மையான மக்கள் பாமரர்களாகவும், ஏமாற்றப்படவும், கொடுமைக்குள்ளாகவும்-மற்றவர்களுக்கு அடிமையாகி உழைக்கவும்—உழைத்தும் சரியான கூலி கிடைக்காமல் பட்டினி கிடந்து உழல்வதைப் பொறுமையுடன் பொறுத்துக்கொள்ளவுமான காரியங்கள் நடந்துவருவதுடன் அவை எங்கும், என்றும் நிலைத்தும் நிற்கின்றன. எப்படியாயினும் இந்த நிலை அடியோடு அழிபட வேண்டும்; அதற்காக அதன் காப்புகளான மேற்குறிப்பிட்ட கடவுள், மதம், தேசியம், சாதியம் என்பவைகளும் அவற்றின் பேறுகளான ஆத்மா, முன் ஜென்மம், கர்மம், தீர்ப்பு, மோட்ச நரகம், பாவ புண்ணியம் ஆகியவைகளாகிய போலி உணர்ச்சிகளும், அவற்றின் ஸ்தாபனங்களும் உடைத்தெறியப்பட வேண்டும்.

கஷ்டப்படுகிற மனிதர்கள் தாங்கள் பாடுபட்டும் பட்டினி இருக்க நேருவதையும், 'யோக்கியமாய்', 'நாணயமாய்' நடந்தும் 'இழிவாய்', 'கீழ் மக்களாய்'க் கருதப்படுவதுமான தங்களது கொடுமையின் நிலைமைக்கு மற்றவர்களால் தாங்கள் ஏமாற்றப்படுவதுதான் காரணம் என்பதை உணராமல் தங்களுடைய முன்ஜென்ம கர்ம பலன்—தலைவிதி—கடவுள் செயல் என்பதாகக் கருதிக்கொண்டு சிறிதும் முன்னேறுவதற்கு முயற்சி செய்யாமலும் சூழ்ச்சியின் தன்மையை உணராமலும் இருப்பதோடு, தங்கள் நிலைமையைப்பற்றிச் சிறிதும் அதிருப்திகூட அடையக் கூடாதென்று கருதி தங்கள் நிலையைப் பற்றித் தாங்களே சமாதானமும் சாந்தமும் அடைந்துகொள்ளுகிறார்கள்; வெளியில் சொல்லிக்கொள்ளக்கூட வெட்கப்படுகிறார்கள். ஏனெனில், கஷ்டப்படுகின்ற மக்களுக்குக் கடவுள் உணர்ச்சியும் மதமும் இதைத்தான் போதிக்கின்றது. எப்படியென்றால்,

'ஓ கஷ்டப்படுகின்ற மனிதனே! கஷ்டப்பட்டும் பட்டினி கிடக்கின்ற, இளைத்த ஏழை மனிதனே! நீ உனது முன் ஜென்ம பாப கர்ம பலத்தினால்—தலை விதியால்—கடவுள் சித்தத்தால், இம் மாதிரித் துன்பத்தை அனுபவிக்கின்றாய். இந்த ஜென்மத்தில் நீ உனக்கேற்பட்ட இந்த நிலைமையைப் பொறுமையுடன் ஏற்றுச் சமாதானமும் சாந்தமும் அடைந்திருப்பாயாகில், அடுத்த ஜென்மத்தில் சுகப்படுவாய்; மேலான பிறவி பெறுவாய்; அல்லது மேல் உலகில் மோட்சம் என்னும் மேன்மையை அடைவாய்—கடவுள் சன்மானம் அருளுவார்' என்கின்ற உபதேசமேயாகும்.

இந்தப் 'பொறுமை உபதேசமும்', 'சாந்த உபதேசமும்', 'சமாதான உபதேசமும்'—மக்களைக் கோழைகளாகவும், முற்போக்கற்றவர்களாகவும் செய்து, அவர்கள் கஷ்டத்திலிருந்தும் இழிவிலிருந்தும் முன்னேற முடியாமலும், விடுபட முடியாமலும், 'சுயமரிதை உணர்ச்சி பெறாமலும் இருந்து உயிர் வாழும்படி செய்து வந்திருக்கின்றன.

இவ்வளவு மாத்திரந்தானா? இந்தக் கடவுள் உணர்ச்சியும் மதமும்—செல்வந்தர்களுக்கும், மிராசுதார்களுக்கும், மற்றும் உத்தியோகம், வியாபாரம், லேவாதேவி என்ற பேர்களால் ஏழைகளிடமிருந்து பெரும் பணம் கொள்ளைகொண்டு மற்றவர்களைப் பட்டினி

படிப்பகம்

www.padippakam.com



போட்டுப் பெரும் பணம் சேர்க்கும் பணக்காரர்களுக்கும் போதிப்பது என்ன என்பதைப் பார்த்தாலோ—அது,

'ஓ, பிரபுக்களே! செல்வவான்களே! ஏராளமாக மேலும் மேலும் பணம் சேர்க்கும் பணக்காரர்களே! இலட்சுமி புத்திரர்களே! நீங்கள் முன் ஜென்மத்தில் செய்த புண்ணிய கர்மங்களால்—கடவுள் உங்கள்மீது வைத்த கருணையினால் இவ்வுயர் நிலையை அடைந்திருக்கிறீர்கள்! இவ்வேராளமான பணவருவாய்கள், உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இச் சுக போகம் உங்களுக்குக் கிடைத்ததற்குக் காரணம் கடவுள் சித்தமேயாகும். ஆதலால், நீங்கள் கடவுள் பக்தி உள்ளவர்களாக இருந்து கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதன் மூலமும், கடவுளுக்குக் கோயில் கட்டுவதன் மூலமும் கடவுள் பக்தர்களான பாதிரி, குரு, பிராமணர் முதலியவர்களுக்கு மரியாதைசெய்து சத்திரம், மடம் முதலிய உதவி அளிப்பதன் மூலமும் நன்றி செலுத்தி, இந் நிலையை நிலை நிறுத்திக்கொள்வதுடன்—மோட்ச லோகத்திலும் சுலபமாக இடம் சம்பாதித்துக் கொள்ளுங்கள்!' என்பதேயாகும்.

ஆகவே, தோழர்களே! இந்தக் காரணங்களாலேயே மக்களில் உயர்வு-தாழ்வும், எஜமான்-அடிமையும், முதலாளி-தொழிலாளியும், அரசன்-குடிகளும், குரு-சிஷ்யனும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

உலகிற்கு அரசன் அரசாட்சி என்பதாக ஒருவகை இருந்துவருவதின் காரணமெல்லாம்கூட, செல்வவான்களின் செல்வங்களைக் காப்பாற்றவும், சோம்பேறி வாழ்க்கைகளையும், அவர்களது தத்துவங்களையும் பிறர் இகழாமல் இருக்கவுமே ஒழிய—மற்றபடி மக்கள் சமூகம் துன்பப்படாமலோ, மற்றவர்களால் கொடுமைப்படுத்தப்படாமலோ, சகல துறைகளிலும் உயர்வு தாழ்வு கொடுமை இல்லாமலோ, இருப்பதற்காக அல்லவே அல்ல என்பதை நீங்கள் உறுதியாய் நம்புங்கள்.

இதுபோலவேதான், முன் குறிப்பிட்ட கடவுள் மத உணர்ச்சி கற்பிக்கப்படுவதும்—ஏழைகள் தாங்கள்படும் கஷ்டங்களுக்குக் காரணம் முதலாளிகளின் சூழ்ச்சியும், சோம்பேறிகளின் தத்துவங்களும் என்பதை உணராமல் இருப்பதற்காகவே ஒழிய வேறில்லை.

உதாரணம் வேண்டுமானால், இன்றைய தினம் கஷ்டப்படுபவர்களாகவும், இழிவுபடுத்தப்பட்டவராக்வும், பட்டினிகிடந்து துன்பப்படுபவர்களாகவும், ஏழைகளாகவும், காணப்படும் மக்களில் அனேகரை அணுகி, அவர்களது இவ்விதக் கஷ்டநிலைக்குக் காரணம் என்ன என்று கேட்டுப் பாருங்கள்! உடனே, அவர்கள் சற்றும் தயக்கமின்றி, தங்களின் கஷ்ட நிலைக்குக் காரணம் தங்கள் 'தலைவிதி' என்றும், 'முன்ஜன்ம கர்மபலன்' என்றும், 'கடவுள் சித்தம்' என்றும், 'ஆண்டவன் கட்டளை' என்றுந்தான் பதில் சொல்லுவார்களேயொழிய, பிற மனிதர்களால்—அரசாங்கச் சட்டத்தால்—செல்வவான்களின் சூழ்ச்சியால், சோம்பேறிகளின் தந்திரத்தால், தாங்கள் ஏமாற்றப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, அவதிப்படுவதாக ஒரு நாளும் சொல்லமாட்டார்கள். அதனால்தான், ஏழைகளின் கஷ்டங்களை விலக்க வேண்டுமென்பவர்கள் முதலில் அதற்கு அஸ்திவாரமான காரணகாரியங்களைக் கண்டுபிடித்து அழித்தெறிய வேண்டும் என்று சொல்லவேண்டி இருக்கின்றது.

கடவுள் என்பது அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தையாய் இருந்து வந்த போதிலும், அது, மனித சமூகத்தில் 100-க்கு 99 மக்களைப் பிடித்துத் தன்வயப்படுத்தி, மடமையாக்கி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. கடவுள் என்ற வார்த்தை கற்பிக்கப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகியிருந்த போதிலுங்கூட, 'கடவுள் என்பது இன்னது' என்று குறிப்பாக, குளறுபடி இல்லாமல்—தெளிவுபட உணர்த்தியவர்களோ, உணர்ந்தவர்களோ, இதுவரையில் காணக் கிடைக்கவில்லை. பொதுவாக அந்தப்படி ஒரு உணர்ச்சியை மக்களுக்குள் எப்படியாவது புகுத்தி, அவர்களைப் பயப்படுத்தி வைக்க வேண்டும் என்கின்ற அவசியத்தினால் அதற்கு என்று வேறொரு (மானச) உலகத்தையும், பாவ புண்ணியத்தின் பயனையும், மோட்ச நரகத்தையும், கற்பித்து அதைப் பரப்பப்



பலவித ஸ்தாபனங்களையும் உண்டாக்கி—அதன் பிரச்சாரத்தின் பேரால் பிழைக்க ஒரு கூட்டத்தையும் ஏற்பாடு செய்து, அக்கூட்டத்திற்கு அதிலேயே பிழைத்துத் தீர வேண்டியதான நிலைமையையும் ஏற்படுத்திவிட்டதால் வெகு சுலபமாகவும் செல்வாக்காகவும், அதன் பிரச்சாரம் நடக்கவும் மக்களைத் தன்வயப்படுத்தவும் ஆன காரியங்கள் நடந்துகொண்டே வருகின்றன. 'கடவுள் என்றால் என்ன?' என்பதை உணருவதற்கில்லாமல்—உணர வேண்டும் என்று நினைப்பதற்கில்லாமலும் இருந்துவருகிறது.

யாராவது, கடவுளைப்பற்றி நெருக்கிப் பிடித்துக் கேட்டால் அது முழுவதும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையும் செய்கைகளையும் கொண்டிருப்பதும், ஆளுக்கொருவித வியாக்கியானம் கூறுவதுமாய் இருப்பதோடல்லாமல் வேறுவிதமாய், குறிப்பான பதில் கிடைப்பது என்பது அரிதாகவே இருக்கிறது.

கடவுள் என்பது சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், சர்வ சக்தியும் கொண்ட ஒரு ஒப்பற்ற தனிப்பொருளென்று சொல்லப்பட்டுவிட்டு—உடனேயே, 'அது கண்ணுக்குத் தெரியாதது' என்றும், 'மனத்திற்குத் தோன்றாதது' என்றும் சொல்லப்படுவதோடல்லாமல்—அதற்கு உருவம் இல்லையென்றும், குணம் இல்லையென்றும், இன்ன தன்மையது என்று விளக்கமுடியாதது என்றும் சொல்லப்பட்டுவிடுகின்றது.

இவற்றுள் மற்றொரு வேடிக்கை என்னவென்றால், இப்படிப்பட்ட ஒரு கடவுள் தன்மையை—அதாவது, 'சர்வ சக்தியும், சர்வ வியாபகமும் உடையதும், கண்ணுக்கும் மனத்திற்கும் தென்படாததும், குணமும், உருவமும் இன்ன தன்மையென்று குறிப்பிடக்கூடிய தன்மையும் இல்லாதது'மான ஒரு கடவுளை நிலை நிறுத்தவும்—அதைப்பற்றி மக்கள் நம்பிக்கை கொள்ளவும், 'கடவுளால் உண்டாக்கப்பட்ட' மக்களிலேயே பலர் வக்காலத்து பெற்றுக் கடவுளை நிரூபிக்க, ஒழுங்கற்ற முறையிலும் ஒழுக்க ஈனமான முறையிலும் எவ்வளவோ பாடுபட வேண்டியிருப்பதுமேயாகும்.

மற்றும், அப்படிப்பட்ட வக்காலத்துக்காரர்கள்—தங்கள் சொந்த நிலையில், தங்களால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்தையும் தாங்களே செய்வதாகவும்—தங்களால் சொல்லப்படும் ஒவ்வொரு விஷயமும் தாங்களே அறிந்து சொல்லுவதாகவும் நினைத்தே, பேசியும் நடந்தும் வருகிறார்கள். அதுமாத்திரமல்லாமல், மற்றவர்களால் செய்யப்படும்—சொல்லப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் மற்றவர்கள் தங்களுக்குச் செய்வதாகவும், சொல்லுவதாகவும், எழுதுவதாகவும் கருதுவதுடன், மற்றவர்கள் மீது துவேஷமும் வெறுப்பும், விருப்பும் கொண்டு அவர்களை இன்ன இன்னபடி நடவுங்கள் என்றும், தங்களுக்கு இன்ன இன்ன காரியங்களைச் செய்து கொடுங்கள் என்றும் கோருகிறார்களே யல்லாமல், 'இவையெல்லாம் சர்வ வல்லமை உள்ள கடவுள் செயலால்தான் நடக்கின்றன—நடந்துவிடும்' என்ற நம்பிக்கையும் உறுதியும் தைரியமும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

மற்றொரு சாரார் 'கடவுளைப் பார்க்காவிட்டாலும், உணராவிட்டாலும் உலகப் படைப்புக்கும் நடப்புக்கும் ஏதாவதொரு கர்த்தாவோ காரணமோ இருக்க வேண்டாமா? அப்படிப்பட்ட கர்த்தாவோ, காரணமோதான் கடவுள்' என்று சொல்லுகிறார்கள்.

மற்றொரு சாரார், 'உலகத் தோற்றத்திற்கும், நடப்புக்கும் ஏதாவது ஒரு சக்தி (Force) ஆவது இருக்குமல்லவா? அதுதான் கடவுள்' என்கிறார்கள்.

மற்றொரு சாரார், 'இயற்கையே—அழகே—அன்பே—சத்தியமே கடவுள்' என்றும், இன்னும் பலவாறாகச் சொல்லுகிறார்கள். ஆனால், நமது நாட்டைப் பொறுத்த மக்கள், கடவுளுக்கு மனித உருவம் கற்பித்து, சாதாரண மனித வாழ்க்கையிலுள்ள பெண்டுபிள்ளை முதலியவைகளைக் கற்பித்து, செல்வவானுக்குள்ள குணங்களையும் சுகபோகங்களையும் கற்பித்து அதற்குக் கோயில், பூசை, உற்சவம், கலியாணம், சாந்தி முகூர்த்தம் முதலியவைகளைக் கற்பித்து, வணக்கத்திற்காக வென்று கோடானகோடி ரூபாய்களைச் செலவுசெய்யச்



படிப்பகம்

www.padippakam.com



செய்து—அதுவும் ஏழை மக்களை வாட்டி வளைவெடுத்து தொல்லைப்படுத்தியும் வருகிறார்கள். இப்படியாகக் கடவுளைப்பற்றி இன்னும் பலவிதமாய் அபிப்பிராயங்கள் சொல்லப்படும் காரியத்திலும், பல செய்யப்பட்டும் வருகின்றன. இந்த விதமான கடவுளைப் பற்றி அர்த்தமற்ற, குறிப்பற்ற, பரிகாசத்திற்கும் முட்டாள்தனத்திற்கும் இடமான அபிப் பிராயங்களும் மற்றும் பாமர மக்களைத் தந்திரக்காரர்கள் ஏமாற்றுவதற்கான முறைகள் கொண்ட கருத்துக்களும் விவகாரங்களும் இன்றோ, நேற்றோ அல்லாமல், வெகு காலமாகவே இருந்துவருகின்றன. அன்றியும், இக் கருத்துக்கள் மதக்கொள்கைகள் என்பவற்றின் மூல மாகவும், அரசாங்கச் சட்டங்களின் மூலமாகவும் வெறுத்துப்பேச இடங்கொடுக்கப்படாமலும்—மீறிப் பேசினால் தண்டித்தும் மதவெறியால் என்றும் கொடுமைப் படுத்தியுந்தான் காப் பாற்றப்பட்டும் நிலைநிறுத்தப்பட்டும் வந்திருக்கின்றன.

இன்றும்கூட, நமது இயக்கப் பிரச்சாரங்களினால் அவற்றின் கொள்கைகளைப்பற்றி ஆட்சேபிக்கக்கூடிய வகை சுலபத்தில் இல்லாமலிருப்பதால் வேறு வழியில்—தந்திரமாய், அதாவது, 'சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் எல்லாம் சரி; அது ஏழை மக்களுக்குத் தான் பாடுபடுகின்றது; ஏழை-பணக்காரன் என்ற வித்தியாசம் கூடாதென்கிறது; ஆனால், அது கடவுள் இல்லை என்று சொல்லுகின்றது; மதத்தை அழிக்கின்றது; மக்களை நாத்திகமாக்குகின்றது; அதுதான் எமக்குப் பிடிக்கவில்லை; ஆதலால் அதை வளரவிடக்கூடாது' என்று சொல்லுவதன் மூலம் நமக்கு எதிர்ப் பிரச்சாரம் செய்கின்றார்கள். மற்றும் பல இடங்களில் நாம் போகு முன்பே, 'நாத்திகன் வந்துவிட்டான்; மதத் துரோகி வந்துவிட்டான்' என்று விஷமப் பிரச்சாரம் செய்து மக்களை—நமது பிரசங்கத்தை—நான் என்ன சொல்லுகிறேன் என்பதைக் கேட்க அனுமதிக்கக்கூட மறுக்கின்றார்கள். மற்றும் சில இடங்களில் பலாத்கார முறையில், காலித்தனமான முறையில் பிரசங்கத்தைக் கலைக்க முயற்சிக்கிறார்கள்.

இதன் காரணம் என்னவென்று பார்க்கப்போனால், கண்டுபிடிப்பது மிகவும் சாதாரணமான விஷயமேயாகும். அதாவது அவர்களது, 'எங்கும் நிறைந்த', 'எல்லாம் வல்ல', 'அவனன்றி ஓரணுவும் அசையாததான' கடவுள் நம்பிக்கையும், அப்படிப்பட்ட கடவுளின் அவதாரங்களாலும், கடவுள் அம்சம் பெற்றவர்களாலும் கடவுள் குமாரராலும் உண்டாக்கப்பட்ட மத நம்பிக்கையுமேயொழிய வேறில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதன் கருத்து என்னவென்றால், எல்லாம் வல்ல–எங்கும் நிறைந்த கடவுள் உணர்ச்சியும், தத்துவமும் ஒரு சாதாரண மனிதனால் அழிக்கப்பட்டுவிடும் என்றும்; கடவுள் அவதாரம், அம்சம், குமாரன், தூதன் ஆகியவர்கள் மூலம் உபதேசிக்கப்பட்ட மத மானது ஒரு சாதாரண மனிதன் முயற்சியால் அழிக்கப்பட்டு விடுமென்றும்; இதனால் மனித சமூகத்தின் மேன்மை போய்விடுமென்றும் பயந்தே இம் மாதிரி விஷமப் பிரச்சாரம் செய்வ தாயும், பலாத்காரச் செயல்கள்கூடச் செய்யவேண்டியிருப்பதாயும் தீர்மானிக்கவேண்டி யிருக்கிறது. இவ்விதமாக, கடவுள் நம்பிக்கையின் பேரால், மத நம்பிக்கையின் பேரால் பலாத்காரச் செயல், எதிர்ப் பிரச்சாரம், விஷமப் பிரச்சாரம் ஆகியவைகள் செயல்படுவது பெரிதும் அறியாமையால் என்றோ, மதத்தையும் கடவுள் தன்மையையும் சரவர உணராத தினால் என்றோ, அல்லது மதவெறி கடவுள்வெறி என்றோ சொல்லிவிட முடியாது. ஏனெனில், கடவுளும் மதமும் உலகில் மக்கள் தோன்றிய காலம் முதலே—அவற்றிற்கு எதிரிடையான கருத்துடையவர்களையும், அவற்றை ஒப்புக்கொள்ளாதவர்களையும் அரசாங்கமும், மத ஸ்தாபனக்காரர்களும் கொன்றும், சித்திரவதை செய்தும், தண்டித்தும், கொடுமை செய்தும் வந்திருப்பதானது கடவுள் மதம் சம்பந்தமான சரித்திரங்களாலும், பிரச்சார முறைகளாலும் நன்றாய் உணரலாம். இக் கொள்கையை—முறையை இன்றும் சில சமயக்காரர்கள் கையாண்டு வருவதையும் நம் போன்றவர்கள் கடவுள், மத நம்பிக்கைக் காரர்கள் என்பவர்களால் நடத்தப்படுவதையும் கொண்டு உணரலாம். ஆகவே, இதன் கருத்து சுயநலமும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியமுமே ஒழிய வேறில்லை.



மதம் என்பதும்—'சர்வ வல்லமையும்,'. 'சர்வ வியாபகமும்' உள்ளதாகச் சொல்லப் படும் கடவுள் உணர்ச்சியை மக்களிடம் பெருக்கவும், அதை நிலை நிறுத்தவும் ஏற்பட்ட ஸ்தாபனங்களாய் இருந்து வருகின்றனவேயொழிய—மற்றபடி எந்த மதத்தாலாவது, அதைச் சேர்ந்த உலக மக்கள் வாழ்க்கையிலோ பொருளாதாரத்திலோ சுதந்திரமோ, சமத்துவமோ பெற்று, கேவலம் ஜீவனத்திற்காக மற்ற மனிதனுக்கு அடிமையாகாமல் வாழ்வதற்கு இடமளித்திருப்பதாய்க் காணமுடியவில்லை. ஒரு மதக்காரனே தன் மதத்தைச் சேர்ந்த மற்றொருவனை அடிமை கொண்டிருக்கிறான். ஆனால், அவன் மத நம்பிக்கை என்பது, 'மக்கள் யாவரும் கடவுள் பிள்ளைகள்,' 'எல்லோரும் சமமானவர்கள்' என்று போதிப்ப தாகத்தான் சொல்லுகிறான். ஆனால் ஏழை–பணக்காரன், கூலிக்காரன்–எஜமான் என்கின்ற வித்தியாசம் எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி மாத்திரம் உணரும்போது—எல்லாம்வல்ல கடவுள் சக்தியையும், சமத்துவ மதபோதனையையும் மறந்துவிடுகிறான்.

மதம் என்பது ஒரு போதை தரும் (வெறி உண்டாக்கும்) வஸ்து என்று பல அறிஞர்கள் கூறியிருப்பதுபோல், மதத்தின் ஆதிக்கத்தில் கட்டுண்டு இருப்பவர்களுக்கு ஆவேசமும் வெறியும் உண்டாவதுதான் முக்கிய பலனாக இருக்கிறதேயொழிய—அது கஷ்டப்படுகின்ற, ஒரு பாவமுமறியாத பாமர மக்களுக்குக் காரியத்தில் இன்று என்ன நன்மை செய்திருக்கிறது? செய்கிறது? மதத்தால் மக்களுக்கு என்ன ஒழுக்கம் ஏற்பட் டிருக்கிறது? என்ற கேள்விகளுக்கு 'இது மதத் துரோகமான கேள்வி' என்று சொல்லுவ தல்லாமல் வேறு எவ்விதமான பதிலும் சொல்லுவதற்கு இடம் காணவில்லை.

எல்லா மதங்களும் கடவுள் அருளால், கடவுள் அம்சம் பெற்றவர்களால், அவரால் அனுப்பப்பட்டவர்களால் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் ஒரு மதத்திற்கும், மற்றொரு மதத்திற்கும் நடப்பு, வேஷங்கள், சடங்குகள் ஆகியவைகளுடன் மற்றும் பல முக்கிய விஷயங்களில் பெருத்த மாறுபாடும், துவேஷமும், வெறுப்பும் சிறிதாவது காணப்படு வானேன் என்பதைப் பார்த்தால், மதங்களைத் தோற்றுவித்த கடவுள் ஒன்றா? பத்து மதங்கள் இருந்தால்—அவற்றுள் ஒன்று உண்மைபோக—பாக்கி ஒன்பது மதங்கள் பொய் யாகத்தான் இருக்கவேண்டும்; அல்லது ஒவ்வொரு மதமும் வெவ்வேறு கடவுள் அருளால் ஏற்பட்டதாக இருக்கவேண்டுமே ஒழிய—ஒரே கடவுள் அருளால் ஏற்பட்டதாயிருக்காது. எப்படியிருந்தாலும், சர்வ சக்தி, சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ள ஒரு கடவுள் அருளால் எந்த மதமாவது ஏற்பட்டது என்று சொல்வது பகுத்தறிவுக்கும், விவகாரத்திற்கும் நிற்காத காரியமேயாகும். அன்றியும், ஒரே மதத்தை அனுசரிக்கிற மக்கள் எல்லோரும் ஒரே மாதிரி நடக்கிறார்கள் என்று சொல்வதற்கோ, அல்லது மத சக்தியானது மக்கள் யாவரும் ஒரே மாதிரி நடத்தப்படப் பயன்படுகின்றது என்று சொல்லுவதற்கோ இடமில்லா மல்தான் எல்லா மதங்களும் இருந்து வருகின்றன. ஏனெனில், ஊருக்கு ஒருவிதம், வகுப்புக்கு ஒருவிதம் நடப்பதுடன் வெளிப்படையாகவே—ஒரே ஊரில் ஒரே மதக்கொள் கைக்குப் பலவித வியாக்கியானங்களும் ஏற்பட்டு இருப்பதுடன் நடப்புகளும், எண்ணங் களும் வேறுபட்டிருக்கின்றன.

ஒருசமயம் இப்படி மாறுபட்டு நடப்பவர்கள் எல்லோரும் மூடமக்கள் என்றும், மதத்தைச் சரிவர உணராதவர்கள் என்றும் சுலபமாய்ச் சொல்லிவிடலாம். ஆனாலும் அந்த மதத்தை நம்பி, அதைத் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றி வந்த மக்களின் கதி அதுதானா என்பதும், அம் மதத்திற்கு உள்ள சக்தி அவ்வளவுதானா என்பதுமாவது யோசிக்கவேண்டிய முக்கிய விஷயமல்லவா என்று கேட்கிறேன்.

எது எப்படியிருந்த போதிலும், முன் குறிப்பிட்ட—அதாவது, 'சர்வசக்தி-சர்வ வியாபகம்–சர்வ தயாளத்துவம் கொண்ட கடவுளால்' சிருஷ்டிக்கப்பட்டவர்களாகவும் 'சர்வ சமரசம் கொண்ட மதத்தை'ப் பின்பற்றியவர்களாகவும் உள்ள மக்களுக்குள் ஒருவன் ... மேல் சுகமாய் உட்கார்ந்து சவாரி ரிக்ஷா வண்டி இழுத்துக் கஷ்டப்படவும், ...

படிப்பகம்

www.padippakam.com



செய்யவும்; ஒருவன் கிரீடத்தை அணிந்து பல்லக்கில் சவாரி செய்யவும், 16 பேர்கள் முக்கி முக்கி அதனைச் சுமந்து செல்லவும் அக் கடவுளும் மதமும் எப்படி அனுமதித்தன என்ற கேள்விக்கு—'அது நமக்குத் தெரியாது; சர்வசக்தி உள்ள கடவுள் செயல்' என்பதைத் தவிர, இதுவரை எந்தக் கடவுள் நம்பிக்கைக்காரரும், மத நம்பிக்கைக்காரரும் வேறு பதில் சொன்னதாகத் தெரியவில்லை. ஒரு சமயம் இச் செய்கைக்கு முறையே, ஒருவனின்—அதாவது, ரிக்ஷா வண்டியிழுப்பவனின் முட்டாள்தனமும், சவாரி செய்பவனின் அயோக்கியத்தனமும் காரணமாகும் என்று பதில் சொல்லக் கூடுமானாலும், சர்வ சக்தியும் சர்வ வியாபகமும் சர்வ தயாபரத்துவமும் உள்ள கடவுளுக்கும்—சர்வ மனித சமூக சமத்துவமாகிய மதத்திற்கும் தம்மை ஏற்றித் துதித்துப் பின்பற்றும் மக்களின் இம் மடமையையும், அயோக்கியத்தனத்தையும் நிறுத்த முடியவில்லை என்பதாவது விளங்குகின்றதா, இல்லையா என்பதைப் பொறுமையோடு—பகுத்தறிவுடன் நடுநிலைமையில் இருந்து யோசித்துப் பாருங்கள்.

தோழர்களே! இங்குச் சற்றுக் கவனியுங்கள். மேற்சொன்ன கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும்—மேற்சொன்ன மடமையையும், அக்கிரமத்தையும் ஒழிப்பதற்குச் சிறிதும் பயன்படாமலிருப்பதோடு, அம் மடமையையும், கொடுமையையும் நிலைநிறுத்துவதற்கும், அமுல் நடத்துவதற்கும் பயன்பட்டு வருகின்றனவா, இல்லையா என்பதைப் பரிசுத்த நிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

கடவுள், மத உணர்ச்சியானது மக்களின் சுதந்திரத்திற்கும், சமத்துவ வாழ்விற்கும், இவ்வளவு இடையூறுகளுக்கும், தாரதம்மியங்களுக்கும் இடந்தராதிருக்குமானால்—நான் அவைகளைப்பற்றி இவ்வளவு கவலை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. கடவுள், மதப் பிரச்சாரத்தின் பேரால் வயிற்றுப் பிழைப்பு நடத்துபவர்களின் பரிதாபத்திற்காகவாவது நான் சும்மா விட்டுவிடுவேன் என்பதை நம்புங்கள். ஏனெனில், ஒரு மனிதன் அனாவசியமாய்—அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தைக்காக, பைத்தியம் பிடித்திருந்தாலொழிய போராடிக்கொண்டிருக்க முடியாது. ஆனால், அதனால் பாமர மக்கள் சமூகத்திற்கு விளையும் கெடுதியைப் பார்க்கும்போது, உண்மையான உணர்ச்சியுள்ளவன் அதை ஒழிக்கப் போராடாமல் இருக்க முடியாது.

கடைசியாக, 'உலக உற்பத்திக்கும், இயற்கைத் தோற்றங்களுக்கும் நடப்புக்கும் ஏதாவது ஒரு காரணப் பொருள் இருக்கவேண்டாமா?' என்று கேட்பதின் மூலம்—எப்படியாவது, 'ஒரு சக்தி உண்டு' என்பதை ஒப்புக்கொள்ளச் செய்து, அதிலிருந்தே ஒரு கடவுளைக் கற்பிக்க முயற்சிகள் செய்யப்படுவதையும் அத்தோடேயே சர்வ சக்தி–சர்வ வியாபகக் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் திருப்தி அடைந்து விடுவதையும் பிறகு அதை அஸ்திவாரமாக வைத்துப் பெரிய ஆகாயக் கோட்டைகள் கட்டுவதையும் பார்த்திருக்கிறேன். உலக உற்பத்திக்கும், அதில் காணப்படும் தோற்றங்களுக்கும் நடப்புகளுக்கும் விஞ்ஞானம் என்னும் 'சயின்சை' தொடர்ந்துகொண்டே போனால், சமாதானம் கிடைக்கலாமானாலும் பிறகு, 'சயின்ஸ்சுக்கு யார் கர்த்தா?' என்கின்ற கேள்வியும் பிறக்கும். அதை இதுவரை எந்த அறிவாளியும் கண்டுபிடிக்கவில்லை என்று பதில் சொன்னால், 'அதுதான் கடவுள்' என்று சொல்லித் திருப்தி அடைவார்கள்.

அப்படியானால், 'அந்தக் கடவுளுக்கு யார் கர்த்தா? அவர் எப்படி உண்டானார்? அவரின் நடவடிக்கைக்கு என்ன காரணம்?' என்பதான கேள்விகளை, முன்னைய விஷயங்களுக்குப் போடப்பட்ட கேள்விகளைப்போலவே போட்டோமானால், அப்படிப்பட்ட கேள்வி கேட்கக் கூடாது என்றும், கடவுளும் சக்தியும் தானாக உண்டானவையென்றும், அதற்குக் காலவரை இல்லையென்றும் சொல்லுவார்கள். அச் சமாதானத்தால் நாம் திருப்தியடையாவிட்டால் அல்லது, 'இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?' என்று கேட்டால் அல்லது, 'கடவுள் தானாக உண்டாகும்போது இயற்கை தானாக உண்டாகாதா?' என்று கேட்டால்—உடனே, நம்மை, 'நாத்திகன்' என்று சொல்லிவிடுவார்கள்.



இந்த மாதிரி நிலையில்தான், ஏதோ யூகத்தின்மீது, அதுவும் 'ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டாமா?' என்கின்ற யூகத்தின்மீதே 'இதுவாயிருக்கலாம் அல்லது அதுவாயிருக்கலாம்' என்கின்ற பொறுப்பற்ற நிலையில் கற்பிக்கப்பட்ட ஒரு கடவுள் என்பதைப் பற்றி நாம் சிறிதும் கவலைப்படுவதில்லை.

ஆனால், அப்படிப்பட்டதன்மீது, மனித வாழ்க்கையின் பொறுப்புக்களைச் சுமத்துவதும், அதை வணங்குவது, தொழுவது, பிரார்த்தனை செய்வது என்பதும்; அதை வணங்கினால், பிரார்த்தித்தால், தொழுதால் அதற்காக நேரத்தையும் அறிவையும் பணத்தையும் செலவு செய்தால் பயன் பெறலாம் என்பதும், பிரதி பலன் உண்டென்பதும், பாவங்கள் மன்னிக்கப்படுமென்பதும், மற்றும் மனிதனால் தன் சுயநலத்திற்காகவும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியத்திற்காகவும் பிறருக்குச் செய்யப்படும் சூழ்ச்சிக்கும் அக்கிரமத்திற்கும் கடவுள் செயலே காரணம் எனச் சொல்லி ஏமாற்றுவதைப் பார்த்தால்—பிறகு எப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியானாலும் அது எங்கிருந்தபோதிலும் அதை அழித்தே தீரவேண்டியிருக்கிறது.

அன்றியும், திருடப் போகிற ஒரு திருடன், தான் திருடப் புறப்படுமுன் தனக்கு, நல்ல திருட்டு கிடைக்கவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்துவிட்டுப் புறப்படுகிறான். நல்ல திருட்டு கிடைத்தவுடன், அதில் ஒரு பாகத்தைக் கடவுளுக்கும், அதன் திருப்பணிகளுக்கும் செலவுசெய்து, கடவுள் உணர்ச்சியை அனுபவிக்கிறான். இதுபோலவே, ஒரு கொலைகாரனும் தான் விடுதலை அடையக் கடவுளைத் துதித்து, விடுதலையடைந்தவுடன் கடவுளுக்குப் பூசை, அபிஷேகம் முதலியவை செய்து நன்றி செலுத்துகிறான். இதுபோலவே, சொத்துக்களை வைத்திருக்கும் உடைமைக்காரனும் தனது சொத்துக்களைத் திருடர்கள் கொள்ளை கொள்ளக்கூடாது என்று கடவுளைப் பிரார்த்தித்து நன்றி செலுத்துகிறான். இதுபோலவே, கடவுள் நம்பிக்கை உள்ள சகல சோம்பேறிகளும், செல்வவான்களும் கடவுள் பிரார்த்தனையின் மீதே தங்கள் வியாபாரத்தை நடத்துகின்றார்கள்.

ஆகவே, கடவுள் செயலும் கடவுள் கருணையும் எவ்வளவு ஒழுக்கக் குறைவுக்கும், அநீதிக்கும் இடம் தருகின்றன என்று பாருங்கள்! அவை, இதைத் தவிர வேறு எதற்காவது பயன்படுகின்றனவா என்றும் பாருங்கள்!

'மதம் என்றால் என்ன?' என்கிற விவகார காலத்தில் மதவாதிகள், மனித சமூக வாழ்க்கை ஒழுங்காகவும், ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்டும் நடைபெறுவதற்காக—அனுபவஸ்தர்களால் வகுக்கப்பட்ட திட்டங்களே மதம் என்றும், மதக் கொள்கைகள் என்றும், அவை, காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு திருத்திக்கொள்ளக்கூடியவை என்றும் சொல்லுவதுடன், அதற்கு உதாரணமாக அவ்வப்போது பல சீர்திருத்தவாதிகள் தோன்றிப் புதிய திட்டங்கள் ஏற்படுத்தி சீர்திருத்தி இருக்கிறார்கள் என்றும் ஒரு சிலரால் சொல்லப்பட்டு—இதுதான் மதம் என்பதின் அர்த்தம் என்று சொல்லி—அதனிடம் நமக்குத் தகராறு இருக்கக்கூடாது என்கிறார்கள். அப்படியானால், அக் கொள்கைகளின் குணதோஷங்களைப் பொறுத்தும், அதனால் ஏற்படும் பயன்களைக் குறித்தும் யோசிக்கவும் திருத்தவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

அப்படிக்கில்லாமல், மதம் என்பது மனித சக்திக்கு மீறிய ஒரு சக்தியையுடைய மக்களால் ஏற்படுத்தப்பட்டது என்றும்; அதன் கொள்கைகள் எல்லாம் எங்கும் எக் காலத்திற்கும் ஒரே மாதிரியாய் இருக்கத்தக்கவை என்றும்; அவைகளில் எக் காலத்திலும் எவ்வித மாற்றமும் ஏற்படுத்த எவருக்கும் உரிமை இல்லை என்றும்; அதனால் யாருக்கு–எவ்வளவு கெடுதி இருந்தபோதிலும், பயனில்லாத போதிலும் பின்பற்றித் தானாக வேண்டுமென்றும் சொல்லப்படுமானால்—அப்படிப்பட்ட மதத்தை நாம் சிறிதும் ஒப்புக்கொள்ள முடியாது

படிப்பகம்

www.padippakam.com



என்பதுடன், அவ்வித மூட-அடக்குமுறை உணர்ச்சியைக் கொண்ட மதத்தை என்ன விலை கொடுத்தாவது அழித்தாக வேண்டும். ஏனெனில், அவை மனித சமூக முற்போக்கைத் தடைசெய்வதுடன், மனித சமூக ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் சம உரிமைக்கும் இடையூறாய் இருக்கின்றன.

மற்றும், மதத்தின் பேரால் அனேக அற்புதங்களும், இயற்கைக்கும், மனித சக்திக்கும் மீறிய காரியங்களும் பலர் செய்ததாகவும் கதைகள் கட்டி மக்கள் மூடர்களாகவும், மூட நம்பிக்கைக்காரர்களாகவும் ஆக்கப்பட்டு வருகின்றதுடன், ஏராளமான பொருளும் முயற்சியும் நேரமும் மனித சமூக நன்மைக்கும் சமத்துவத்துக்கும் உபயோகப்படாமல் பாழாக்கப்படுகின்றன. அன்றியும், அறிவும் ஆராய்ச்சியும் கட்டுப்படுத்தப்பட்டு அடிமையாக்கப்படுகின்றன. இவ்வளவு கேட்டை எப்படிச் சகித்துக்கொண்டிருக்க முடியும், ஏன் சகிக்கவேண்டும் என்று யோசித்துப் பாருங்கள் !

தேசியம், தேசியம் என்பதும் முற்கூறியவைகளைப் போன்ற ஒரு போலி உணர்ச்சிதான். ஏனெனில், தேசிய உணர்ச்சி என்பதானது இன்று உலகப் பொதுமக்கள்—அதாவது உலகில் எங்கும் பெரும்பான்மையாய் இருந்துவரும் மக்கள் தொழில் இன்றியும்; தொழில் செய்தாலும் ஜீவனத்திற்கும் வாழ்விற்கும் போதிய வசதிகள் இன்றியும் கஷ்டப்படும் ஒரு உண்மையை மறைப்பதற்கும், மற்றும் அப்படிப்பட்ட கஷ்டப்படும் மக்கள் ஒன்றுசேர்ந்து தங்களுடைய நிலைமைக்குப் பரிகாரம் தேடுவதைத் தடைப்படுத்தவும் ஆங்காங்குள்ள செல்வந்தர்களால்—அதிகாரப் பிரியர்களால்—சோம்பேறி வாழ்க்கைச் சுபாவிகளால் கற்பிக்கப்பட்ட சூழ்ச்சியாகும். தேசியம் என்பதும் மனிதனுக்கு ஒரு மயக்கமும், வெறியும் உண்டாக்கும் வார்த்தையாக ஆகிவிட்டது.

தேசம் என்றால் எது? உலகப் பரப்பு அய்ந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு கண்டத்திற்கும் பல தேசங்கள் இருக்கின்றன; ஒவ்வொரு தேசத்திற்கும் பல மாகாணங்கள் இருக்கின்றன; ஒவ்வொரு மாகாணத்திற்கும் பல ஜில்லாக்களும், மற்றும் பல உட்பிரிவுகளும் இருக்கின்றன. இவை தவிர, ஒவ்வொரு கண்டத்திலும், தேசத்திலும், மாகாணத்திலும் பலமாதிரியான பிறவிகளும், பல சாதிகளும் பல பாஷைகளும், பல மதங்களும், பல உட்பிரிவுகளும், பழக்க வழக்கங்களும் இருக்கின்றன. இவை அவரவர்களுக்கு—'தெய்வக் கட்டளை' என்றும், 'மதக் கட்டளை' என்றும், 'தேசியக் கொள்கை' என்றும், 'தங்கள் வாழ்நாளில் எப்பொழுதும் மாற்றமுடியாதவை' என்றும்—இவைகளில் எதையும் காப்பாற்ற உயிர் விட்டாவது முயற்சிக்க வேண்டுமென்றும் கருதிக் கொண்டிருப்பதாகும். இவற்றின் பயனாய், மக்கள் ஒருவருக்கொருவர் வேற்றுமை உணர்ச்சி கொண்டிருப்பதை நன்றாய்ப் பார்க்கின்றோம். அன்றியும், உலகத்திலுள்ள தேசம் முழுவதிலும் உயர்ந்த சாதி-தாழ்ந்த சாதி, ஏழை-பணக்காரன், கீழ்நிலை,-மேல் நிலை கஷ்டப்படுகின்றவன்-கஷ்டப்படுத்துகிறவன் முதலிய கொடுமைகள் இருந்தும் வருகின்றன.

இவற்றுள் என்ன கொள்கைமீது—எப்படிப்பட்ட மக்கள்-எவ்வளவு விஸ்தீரணத்தைப் பிரித்துக்கொண்டு தங்களுக்கென, தனித்த தேசம், தேசியம் என்ற ஒன்றைச் சொல்லிக் கொள்ளுவது என்பது எனக்குப் புரியவில்லை. நமது தேசம் என்று எந்த விஸ்தீரணத்தையும் தன்மையையும் தனிப்படுத்திக்கொண்டு பேசினாலும், அதிலுள்ள தன்மைகள் என்னென்னவோ, அதிலுள்ள மனிதர்களின் நிலை என்னென்னவோ, அவைதான் மற்ற எந்த 'தேசம்' என்பதிலும், 'நாடு' என்பதிலும் இருந்துவருகின்றன. நாம் குறிப்பிடும் தேசத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றவர்களாகவும்—தாழ்மைப்படுத்தப்பட்டவர்களாவும் இருந்துவருகின்றார்களோ அவ்வளவு நிலையில்தான், மற்ற தேசத்தார் என்கின்ற மக்களும் இருந்துவருகிறார்கள். நம்முடைய தேசம் என்பதிலுள்ள—எந்தவிதமான மக்களின் துயரம் நீக்கப் பாடுபடுகின்றோம் என்கின்றோமோ அவ்விதமான துயரம்கொண்ட மக்கள், அன்னிய தேசம் என்பதிலும் இருந்துதான் வருகின்றார்கள். நம்முடைய தேசியம் என்பதிலேயே எந்தவிதமான மக்கள் சோம்பேறிகளாகவும், சூழ்ச்சிக்காரர்களாகவும், செல்வவான்களாகவும், அரசாங்க ஆதிக்கக்காரர்களாகவும், குருமார்களாகவும் இருந்து—பெரும்பான்மையான பொதுஜனங்களைப் பல சூழ்ச்சிகளால் அடக்கி ஆண்டு அடிமைகளாக்கிப் பட்டினிபோட்டு வதைத்துத் தாங்கள் பெரும்செல்வம் சேர்த்து வாழ்ந்து சுகபோகம் அனுபவித்து வருகின்றார்களோ அதுபோலத்தான், அன்னிய தேசம் என்பதிலும் சிலர் இருந்து அந் நாட்டுப் பெரும்பான்மையான மக்களைக் கொடுமைப்படுத்தி வருகின்றார்கள். இந்த நிலைமையில் என்ன கொள்கையைக் கொண்டு, எந்த இலட்சியத்தைக் கொண்டு உலகப் பரப்பில் ஒரு அளவை மாத்திரம் பிரித்துத் தேசாபிமானம் காட்டுவது என்று கேட்கின்றேன்.



துருக்கி தேசத்திற்கும், இந்திய தேசத்திற்கும் சண்டை வந்தால்—இந்திய இஸ்லாமியர்களுக்குத் தேசாபிமானம் இந்தியாவுக்கா? துருக்கிக்கா? அய்தராபாத்துக்கும், மைசூருக்கும் யுத்தம் தொடங்கினால்—அய்தராபாத் இந்தியர்கள் தேசாபிமானம் மைசூருக்கா? அய்தராபாத்துக்கா? ஆகவே தேசம், தேசாபிமானம் என்கின்ற வார்த்தைகளும்—கடவுள், மதம் என்பது போன்றே—ஒரு வகுப்பாருடைய சுயநலத்திற்கேற்ற ஒரு சூழ்ச்சி வார்த்தை என்று சொல்லவேண்டியிருப்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

முடிவாகக்கூறும் பட்சத்தில், தேசாபிமானம் என்பது ஒவ்வொரு தேச முதலாளியும் மற்ற தேச முதலாளிகளுடன் சண்டைபோட்டுத் தங்கள் தங்கள் முதலைப் பெருக்கிக் கொள்ள, ஏழை மக்களை—பாமர மக்களைப் பலிகொடுப்பதற்காகக் கற்பித்துக்கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக, இங்கிலாந்து தேச முதலாளிகள், அமெரிக்கா நியூயார்க் தேச முதலாளிகளுடன் சண்டை போட்டு வெற்றி பெற்றுத் தங்கள் செல்வத்தை மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை ஏற்பட்டால்—அல்லது நியூயார்க் முதலாளிகள் வேறு தந்திரத்தின்மூலம் இங்கிலாந்து தேசத்து முதலாளிகளின் செல்வத்தைக் கொள்ளைகொள்ள முயற்சிப்பதாய் இருந்தால்—இங்கிலாந்து தேசத்து முதலாளிகள் இங்கிலாந்து தேசத்து ஏழை மக்களையும் பாமர மக்களையும் பார்த்து, 'ஓ இங்கிலாந்து தேசிய வீரர்களே! தேசாபிமானிகளே! தேசத்துக்கு நெருக்கடி வந்துவிட்டது! இங்கிலாந்து மாதா உங்கள் கடமைகளைச் செய்ய அழைக்கிறாள்; ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள் !' என்று கூப்பாடு போடுவார்கள்; கூலிகளை அமர்த்தியும் வயிற்றுப் பிழைப்புப் பத்திரிகைக்காரர்களுக்கு எலும்பு போட்டும் பிரச்சாரம் செய்விப்பார்கள். இது போலவே, அமெரிக்க முதலாளியும் தன் தேசம் நெருக்கடி நிலையில் இருப்பதாகவும், அமெரிக்கா மாதா அங்குள்ள பாமர மக்களையும், வேலையில்லாமல் வயிற்றுக் கஞ்சிக்கு வகையில்லாமல் பட்டினிகிடக்கும் ஏழை மக்களையும் தங்கள் கடமையைச் செய்ய அழைப்பதாகவும் கூவிக்கொண்டு, கூலி கொடுத்துப் பிரச்சாரம் செய்வார்கள். இரண்டு தேச ஏழை மக்களும், மற்றும் சாப்பாட்டிற்கு அறவே வேறு வழியில்லாத மக்களும் கிளர்ச்சியில் சேர்ந்தும், பட்டாளத்தில் சேர்ந்தும் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு சண்டைக்குப் போய், ஒருவரை ஒருவர் சுட்டுக் கொன்றுகொள்வார்கள்; சிறை பிடிப்பதன் மூலம் இருதேசச் சிறைகளையும் நிரப்பி விடுவார்கள். கணக்குப் பார்த்தாலும் இரு கட்சியிலும் பத்து லட்சக் கணக்கான மக்கள் உயிர் விட்டிருப்பார்கள். பிறகு இருவரும் ராஜியாகப் போயோ, அல்லது யாராவது ஒருவர் ஜெயித்தோ இருப்பார்கள்.

ஜெயம்பெற்றவர்களுக்கு முதலோடு முதல் சேரும்; அல்லது தங்கள் முதல் என்றும் குறையாத மாதிரியில் பத்திர மேற்பட்டிருக்கும். ஆனால், சுட்டுக் கொண்டு செத்தவர்களுக்குச் சுடுகாடும் அவர்கள் பெண்சாதிகளுக்குச் சிறு பிச்சையும் அல்லாமல் மற்ற ஏழை மக்களுக்கு என்ன பயன் என்பதை யோசித்துப் பாருங்கள்! அமெரிக்கா குடிஅரசு

படிப்பகம்

www.padippakam.com



நாடாவதற்கும், அன்னிய ஆட்சியைத் துரத்துவதற்கும் அமெரிக்க ஏழை மக்கள்—தொழிலாளி மக்கள் எவ்வளவு பாடுபட்டிருப்பார்கள்! எவ்வளவு உயிர்ப் பலி கொடுத்திருப்பார்கள்! என்பதைப் பற்றி அமெரிக்க விடுதலை சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். இன்று அதன் பயனாக உலகில் அமெரிக்காவிலேயே அதிகமான செல்வவான்களும், வியாபாரிகளும், விவசாயப் பெருக்கும் இருந்துவருகின்றன. ஆனால், ஏழைகள் படும் கஷ்டமும் வேலையில்லாத பட்டினியும் தொழிலாளிகள் அனுபவிக்கும் கொடுமையும் அமெரிக்காவில் இன்றைய தினம் இருந்துவருவது வேறு எந்த நாட்டிலும் இருப்பதை விடக் குறைந்ததல்ல.

தோழர்களே! அமெரிக்கத் தேசாபிமானத்தின் தன்மையையும் அதன் பயனையும் சிந்தித்துப் பாருங்கள். அமெரிக்கா அன்னிய ஆட்சியை ஒழித்தாலும், ஒரு அரசனையே விரட்டிவிட்டுக் 'குடிகளின் ஆட்சி' ஏற்படுத்திக்கொண்டாலும் ஏழை மக்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது என்பதை மற்றொரு தரம் யோசித்துப் பாருங்கள்.

இந்த இலங்கையிலிருந்துகொண்டு இந்தியத் தேசாபிமானம் பேசும் தேசிய வீரர்களைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் ஏறக்குறைய அத்தனை பேருக்கும்–100–க்கு 90 பேர், இந்தியா முதலிய தேசத்திலிருந்து வந்து இலங்கை தேசத்தைச் சுரண்டிக்கொண்டு போக இருக்கிறவர்களும் அவர்களுக்கு உதவியாளர்களாய், அடிமைகளாய் இருப்பவர்களுமாவார்கள்.

லேவாதேவிக்காரர்கள் பெரிதும் மாதம் 100–க்கு 12 வரை வட்டி வாங்கி, ஏழை மக்களையும் இலங்கைவாசிகளையும் 'பாப்பராக்கி'க் கொள்ளை கொண்டுபோக வந்தவர்களும், விவசாயக்காரர் பெரிதும் இலங்கைப் பூமிகளை ஏராளமாய்க் கைப்பற்றி விவசாயம் செய்து கூலிகள் வயிற்றில் அடித்துப் பொருள் சேர்த்துக் கொள்ளைகொண்டுபோக வந்தவர்களும், வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடித்து இலங்கைச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போக வந்தவர்களும், உத்தியோகஸ்தர்கள் இலங்கை ஆட்சியில் வந்து புகுந்து இலங்கையர்களின் அனுபவத்தில் மண்ணைப் போட்டுப் பணம் சுரண்டிக்கொண்டிருக்கும் படித்த கூட்டத்தாரும் ஆணவம் பிடித்த வன்னெஞ்சப் பார்ப்பனர்களுமாகக் கூடிக்கொண்டு இந்தியத் தேசாபிமானக் கூப்பாடு போடுகின்றார்கள்.

வெள்ளைக்காரனான அன்னியன் 100–க்கு வருஷம் 6 வட்டிக்குக் கொடுத்தால் கறுப்பனான அன்னியன் 100–க்கு மாதம் 6 வட்டிக்குக் கொடுக்கிறான். வெள்ளையன் பணக்காரர்களிடம் வட்டி வாங்கினால், கறுப்பன் ஏழைகளிடம், கூலிகளிடம் வட்டி வாங்கிக் கொடுமைப்படுத்துகிறான்.

இந்தப்படி மக்களை வஞ்சித்துக் கொள்ளை அடிப்பவர்களே (வெள்ளையரிலும், கறுப்பர்களிலும்) எங்கும் கடவுளபிமானம், மதாபிமானம், தேசாபிமானம் பேசுகிறார்கள்.

ஆகவே, இவ்விஷயங்களை—அதாவது கடவுள், மதம், தேசம் என்கின்ற விஷயங்களை இனி அறவே மறந்துவிடுங்கள். அவை ஒருநாளும், கஷ்டப்படும் மக்களுக்குப் பயனளிக்காது. உலகில் ஏழை, பணக்காரன் என்று இரண்டு வகுப்புகள் இருக்கவும், ஏழைகளை–தொழிலாளிகளைப் பணக்காரரும், சோம்பேறிகளும் வஞ்சித்து நிரந்தரமாய் வாழவும்தான் அவை பயன்படும்.

தோழர்களே! முடிவாக ஒன்று கூறுகிறேன். சரீரத்தினால் நெற்றி வியர்வை சொட்டக் கஷ்டப்படும் மக்களைப் பாருங்கள். வேலையில்லாமல் திண்டாடும் மக்களையும், அவர்களது பெண்டு பிள்ளைகளின் பட்டினியையும், கொடுமையையும் பாருங்கள். வீடு வாசல் இல்லாமல் மூட்டை முடிச்சுகளைத் தலையில் சுமந்துகொண்டு கஞ்சிக்கு ஊர் ஊராய்த் திரியும் கூலி மக்களைப் பாருங்கள். இவ்வித மக்கள் உலகில் எங்கெங்கு யார் யாரால் கஷ்டப்படுத்தப் படுகிறார்கள் என்பதையும் பாருங்கள். உயர்ந்தவன்—தாழ்ந்தவன், பார்ப்பான்—பறையன், முதலாளி—தொழிலாளி, குரு—சிஷ்யன், மகாத்மா—சாதாரண ஆத்மா, அரசன்—குடிகள், அதிகாரி—பிரஜை என்பவை முதலாகிய பாகுபாடுகளை இடித்துத் தள்ளித் தரைமட்டமாக்குங்கள். அவற்றின்மீது தேசம், மதம், சாதி என்கின்ற பாகுபாடு இல்லாததும், மனித சமூகம் சம உரிமை—சமநிலை என்கின்ற கட்டடத்தைக் கட்டுங்கள். இதைச் செய்ய, நீங்கள் உலகிலுள்ள கஷ்டப்படும் எல்லா மக்களுடனும் சாதி, மதம், தேசம் என்கின்ற வித்தியாசம் இல்லாமல், பிரிவினைக்கு ஆளாகாமல் ஒன்று சேருங்கள். அப்போது நீங்கள் கண்டிப்பாய் வெற்றி அடைவீர்கள்!



தேசபக்தி, தேசியம் என்னும் சூழ்ச்சியானது, பல வருஷங்களாக மக்களை—அன்னியநாட்டு நடப்புகளையும் அன்னியநாட்டு மக்கள் நிலைமையையும் உணரமுடியாமல் செய்துவந்த காரணமே ஒற்றுமை ஏற்படமுடியாமல் இருந்துவருகின்றது.

'அன்னிய ஆட்சி,' 'சுயாட்சி' என்பதெல்லாம் அறவே ஏழை மக்களுக்குப் பயனற்றதும் சூழ்ச்சி நிறைந்ததுமேயாகும். சுயாட்சி உள்ள நாட்டிலும், சுயராஜ்யம் உள்ள ஊரிலும் இராஜாவே இல்லாத குடிஅரசு தேசத்திலும் பணக்காரன் கொடுமையும், பாதிரியின் சூழ்ச்சியும், ஏழைகளின் கஷ்டமும், பாமர மக்களின் மடமையும் இருந்துதான் வருகின்றன. கடவுள் பக்தியும் மத பக்தியும் தேசாபிமானமும் நிறைந்து ததும்பும் நாடுகளிலும் இக் கொடுமைகள் இருந்துதான் வருகின்றன. கடவுளுக்காகவும், மதத்துக்காகவும் கோடானகோடி ரூபாய் செலவழித்துப் பலிகொடுத்து பக்தி செலுத்திவரும் நாட்டிலும் இக் கொடுமைகள் இருந்துதான் வருகின்றன.

ஆனால், கடவுள், மதம், தேசியம் ஆகியவைகள் அழிக்கப்பட்டு, அடியோடு இல்லாத இடங்களில் மாத்திரம் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினிக் கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை.

அவ்வூராருக்குக் கடவுள்–மத–தேச அபிமானம் இல்லை. மனித சமூக சமத்துவ அபிமானம் மாத்திரமே பிரதானமாய்க் காணப்பட்டது. அங்கு பணக்காரன்–ஏழை, முதலாளி–தொழிலாளி, அதிகாரி–குடிஜனங்கள் என்கின்ற வித்தியாசமே காணப்படவில்லை.

அங்குள்ள சகல சொத்திற்கும் அங்குள்ள சகல மக்களும் சம சுதந்திரம் உள்ளவர்களாய் இருந்துவருகிறார்கள். எல்லா மக்களுக்கும் சரிஅளவு வேலையும், போதுமான ஆகாரமும் சுக சவுகரியமும் இருந்து சமமாய் அனுபவிக்கப்பட்டு வருகின்றன. 'நாளைக்கு என்செய்வது!' என்ற கவலையே இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். கடவுளும், மதமும் இல்லாததால் அந் நாடு பூமிக்குள் அமிழ்ந்துபோகவில்லை.

அந் நாட்டு மக்கள் ஆண் பெண் அடங்கலுக்கும் ஏற்பட்ட தைரியமும் உயிருக்குத் துணிந்த வீரமும், சமத்துவ உணர்ச்சியும் கடவுளையும் மதத்தையும் நம்பிய தேசாபிமானமுள்ள எந்த நாட்டாரிடமும் காணமுடியாததாயிருக்கிறது. நமது நாட்டிலோ சகல பொறுப்பையும் கடவுள்மீது போட்டுவிட்டுச் சோம்பேறி ஞானம் பேசுபவர்களே மலிந்து இருக்கிறார்கள். நமது தலைவர்கள் என்பவர்களோ–'அதைச் சாதிக்கிறேன், இதைச் செய்கிறேன்' என்று பேசி மக்களை ஏய்த்துப் பயனடைவதும், முடியாவிட்டால் கடவுள்மீது பழியைப் போட்டு நழுவிக் கொள்வதுமானவர்கள். கடவுள் மீது நம்பிக்கை உள்ள நமது மக்கள் வீரமோ–ஒரு சிறு உண்மைத் தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டாலும்—'நான் எதற்கும் தயார்தான். ஆனால், எனக்கு ஏதாவது கஷ்டம் வந்து விட்டால் என் பெண்டு பிள்ளைகளுக்கென்ன கதி என்றுதான் யோசிக்க வேண்டியிருக்கிறது' என்ற அளவோடு நிற்கக் கூடியதாகும். கடவுளை நம்பாதவர்களும் கடவுள்மீது எவ்விதப் பொறுப்பும் போடாதவர்களுமாயிருக்கிறவர்களும் கடவுள் உணர்ச்சியை அடியோடு ஒழித்துக் கொண்டவர்களுமான மக்கள் உள்ள நாட்டில்—'நாளைக்கு என்ன கதி' என்கின்ற பேச்சே கிடையாது. ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை உடையவர்களாகவேதான் காணப்படுகின்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



அந்த நிலைமைதான் நம் நாட்டுக்கும் மற்றும் உலகமெங்கும் வேண்டும். அதற்காகவே வாலிபர்கள் எல்லோரும் உழைக்க வேண்டும். அதுவே இப்போது நமது முன்னிலையில் இருக்கும் வேலையாகும்.

[அய்ரோப்பா, ஆப்பிரிக்கா தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இலங்கைக்கு 17-10-1932-ல் திரும்பிவந்த தோழர் ஈ. வெ. இராமசாமிக்கு இலங்கையில் பல இடங்களில்—அதாவது கொழும்பு, கண்டி, நாவல்பிட்டிய, ஹட்டன், யாழ்ப்பாணம், பருத்தித் துறை ஆகிய இடங்களிலும் இந்தியாவில் தூத்துக்குடி, மதுரை முதலாகிய இடங்களிலும், பல ஸ்தாபனங்களின் பேரால் அளித்த சுமார் 20 வரவேற்பு விழாக்களிலும், பொதுக் கூட்டங்களிலும் செய்துள்ள உபந்நியாசங்களைத் திரட்டி எழுதப்பட்டது.—'குடி அரசு' 20-11-1932]

## 2. நாகரிகம்

உலகில் மக்கள் அடைந்துவரும் நிலைமையைக் காட்டுமிராண்டித் தன்மையென்றும், அநாகரிக வாழ்வென்றும், அரை நாகரிக நிலைமையென்றும், நாகரிக நிலைமையென்றும் வகுத்து வருகின்றார்கள்.

காட்டுமிராண்டித்தன்மையில் மக்கள் விலங்கினங்களைப்போல் வீடு, வாசல் இன்றி, நாளைக்கு வேண்டுமென்ற பகுத்தறிவின்றி மிருகாதிகளைப்போல் அங்குமிங்கும் இரை தேடி வாழ்ந்துவந்த வாழ்க்கையாகும். இவ் வாழ்க்கையில் இன்றைக்கும் சில மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். இலங்கையிலிருக்கும் வேடர்களும், ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வரும் காட்டுமனிதர்களும், 'பிஜி' தீவில் சில காலத்திற்குமுன் வாழ்ந்துவந்த மக்களும் இன்றைக்கும் காட்டுமிராண்டித் தன்மையிலேயே இருந்துவருகின்றனர். இந் நிலைமையிலுள்ள மக்களுக்குக் கல்யாணமென்ற கூட்டுறவு கிடையாது; பெண்களைச் சட்டிபானைகளைப்போல் ஆண்டனுபவித்து வருகின்றார்கள்.

இதற்கு மேற்பட்ட மக்கள் நிலைமையில் மனிதசமூகம், சிறுசிறு கிராமங்களில் வசித்துவரத் தலைப்பட்டது. கிராமத் தலைவர்களென்றும் கிராமச் சங்கங்களென்றும் சமூக வாழ்க்கையை உண்டாக்கிக்கொண்டு தத்தம் கிராமங்களில் சிலகாலம் தங்கியிருந்து, வேறு பிரதேசக் கிராமங்களைக் கைக்கொண்டு, ஏகதேசமாக நிலங்களையும் பயிர்செய்து வந்த காலம் அநாகரிக காலமென்று சொல்லப்படும். ஆண்களையும், பெண்களையும் அடிமைப் படுத்திவந்த காலமிதுவே. அடுத்தடுத்து ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரோடு போர்புரிந்துவந்த காலமிதுவே. இந்த அநாகரிகக் காலத்தில் அம்பு, வில் ஆயுதங்களும், எலும்பு, தோல், சக்கிமுக்கிக் கற்களை ஆயுதங்களாகவும், ஆபரணங்களாகவும் தரித்து வந்திருக்கின்றார்கள். மனிதர் இறந்தால் அவருடைய ஆன்மா உலகில் திரும்ப உலவுமென்ற எண்ணமும் இக் காலத்தில் தோன்றியதாக ஊகிக்கலாம். அந்த வாழ்க்கையில் பொருளை வாங்குவதும் விற்பதும் கிடையாது. இவ்வித வாழ்க்கையில் அரேபியர், நமது நாட்டில் குறவர், மறவர் இன்னும் அனேக ஆப்பிரிக்க மக்களும் வாழ்ந்துவருகின்றனர்.

அரை நாகரிக வாழ்க்கையில் மக்கள் நகரங்களிலும், பட்டணங்களிலும் சில ஆயிரம் பேர்கள் தங்கிவாழ ஆரம்பித்தனர். பயிர்த்தொழில் முக்கியமாக உயிர் வாழ்விற்கு அத்தியாவசியமாக ஏற்பட்டது. தலைவனை அரசன் என்றும் பாதுகாப்பிற்கு வீரர்களென்றும் மந்திரி பிரதானியென்றும் இந்த அரை நாகரிக காலத்தில் ஏற்பட்டன. சொத்துரிமையும் இந்தக் காலத்தில் உண்டாகியது. போக்குவரத்திற்கு வண்டிகளும் இரதங்களும் ஏற்பட்டன. பண்டைக் காலத்துப் பண்டமாற்றுக்குப் பதிலாக, நாணயச் செலாவணி ஏற்பட்டது. பண்டைக் கால அடிமைகளும் இந்த வாழ்க்கையிலிருந்து வந்தனர். பெண்களுக்குச் சுதந்திரம் ஒன்றுமில்லாமலே புருஷனுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்ற மனப்பான்மையும் இந்த யுகத்தில் ஏற்பட்டது. கல்விக்கும் கேள்விக்கும் சிற்சில ஸ்தாபனங்களும் உண்டாயின. காட்டுமிராண்டித் தன்மையில் வீட்டிற்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம் சண்டைபோட்டுக் கொண்டு வந்ததுபோய் தேசத்திற்காகச் சண்டைபோடும் நிலைமை உதித்தது. சிற்சில பண்டங்களில் வர்த்தகமும் செய்துவந்தார்கள். நாடு நகரங்களில், ஆயிரம் பதினாயிரக் கணக்காக வாழ ஆரம்பித்தனர். மதங்களும், புராணங்களும் உற்பத்தியாயின. குற்றவாளிகள் கொடூரமாக நடத்தப்பட்டு வந்தனர். ஆடு, மாடு, குதிரை முதலிய மிருகங்கள் மனிதனுக்கு உபயோகப்படும்படியாகப் பழக்கப்பட்டும் வந்தன. சிற்சில நீதி ஸ்தலங்களும் ஏற்படுத்தப்பட்டன. அநாகரிக காலத்திலுண்டான தலைவன் இந்த (செமி) அரை நாகரிகத்தில் அரசனாக மாறினான். அவனுக்குத் தெய்வத் தன்மையும் ஏற்பட்டது. மக்கள் ஒரிடத்தில் நிலைத்து வாழ்ந்துவர ஆரம்பித்த காலமிது.



இந்தக் காலம், பாரத–இராமாயண வாழ்க்கை நடந்துவந்ததாகச் சொல்லும் காலமாகும். தற்போது இந்த அரைநாகரிகத்தில் அபிசீனியர்களும், தென் அமெரிக்க வாசிகளும் சில பஸிபிக் தீவிலுள்ள மக்களும் பெரும்பான்மை இந்தியமக்களும் வாழ்ந்துவருகின்றனர். பூர்வ காலத்தில் தமிழர்கள் அடைந்த நாகரிகமும் இந்த அரைநாகரிகமென்றே கருதப்படும். பண்டைக் கால ஈஜிப்ட் தேச நாகரிகமும், அபிசீனியன், கார்டியன், பாபிலோனிய நாகரிகங்களும் இந்த அரை நாகரிகத்தைச் சேர்ந்தவை. மத்திய கால அய்ரோப்பிய நாகரிகமும் இந்த அரை நாகரிகத்திலே மூழ்கிக் கிடந்தது. கிரீஸ், ரோமாபுரி நாகரிகமும் இந்த நாகரிக காலத்தைச் சேர்ந்தவை.

இந்த அரை நாகரிகத்திலிருந்து பெறப்பட்ட நாகரிகமே தற்கால நாகரிகமாகும். இதன் முக்கிய இலக்கணமென்னவெனில், இலட்சக் கணக்கான மக்கள் நாடு, நகரங்களில் வாழ்ந்துவர ஆரம்பித்தனர். ஒருவருக்கொருவர் சண்டைசெய்து கொள்ளாமல், நியாய ஸ்தலங்களை ஏற்படுத்திக்கொண்டு தங்கள் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள ஆரம்பித்தனர். அவரவர்களின் அபிப்பிராயங்களை முரட்டுத்தனத்தில் அடக்கி ஆள்வதை விட்டுவிட்டு, விவாத மூலமாகப் பகுத்தறிவைக்கொண்டு மாற்றிக்கொள்ள ஏற்பட்ட காலமிதுவே. பொதுஜன வாக்கு, ஓட்டுரிமை ஏற்பட்ட காலமிதுவே. அரசுகள் செய்வதெல்லாம் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயத் திட்டத்தை மாற்ற ஏற்பட்ட காலமிதுவே. உலகிலுள்ள பொருள்கள், சரிசமத்துவமாக உலகில் உழைப்பவர்களுக்கும் உரியது என்ற எண்ணம் முளைத்ததும் இந்தக் காலமாகும். கொடூரத் தண்டனைகளால் அடக்குவது மிருகத் தன்மை என்ற மனப்பான்மை ஏற்பட்டதும் இக் காலத்தில்தான். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் உலக மக்கள் யாவருக்கும் உரியது என்ற பேரிரைச்சல் எழுந்ததும் இக் காலமே. பெண்கள், ஆண்களுடன் உலக வாழ்க்கையில் சரிசமத்துவ உரிமையுடையவர்கள் என்ற மனப்பான்மை உண்டான காலமும் இந்த நாகரிக காலமே. ஏகதேசமாக சிற்சிலரே சர்வஞானத்தைப் பெற்றுவந்த காலம்போய், சர்வ மக்களும் பெற வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுவரும் காலம் இந்த நாகரிகக் காலமே! எவ்வித அடிமைத்தனமும் மக்கள் வாழ்க்கையினின்றும் நீக்கப்பட வேண்டுமெனக் கட்டாயப் படுத்தப் படுவதும் இந்தத் தற்கால நாகரிகக் காலத்தில்தான்.

தற்கால நாகரிகம் பண்டைக்காலக் காட்டுமிராண்டி, அநாகரிகக் காலங்களிலிருந்து பெறப்பட்டு வந்தமையால் அந்தந்தக் காலத்துப் வாழ்க்கை—தற்கால நாகரிகத்திலும் அங்கு மிங்கும் நிறைந்து கிடக்கின்றது. அந்தந்தக் காலத்துப் பழக்க வழக்கங்களும், நீதி நெறிகளும், நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் மாறி வருகின்றன. கால தேச வர்த்தமானப்படி மேற்கண்ட சட்டதிட்டங்களும் விலக்கு விதிகளும் மாறுகின்றன. ஆனால், அப்படி மாறி வந்தும் கால தேசவர்த்தமானங்களுக்கு உதவாத உபயோகமற்ற பலவித கொள்கைகளும், கோட்பாடுகளும் சிதறுண்டுவந்தபோதிலும், முழுமையும் நாசமடையவில்லை. அவைகள் நாசமடைய வேண்டின் அவைகள் எவை எவை என்று பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவது, அரசுகளின் ஏகாதிபத்தியமும் காட்டுமிராண்டியின் வாழ்க்கையினின்றே தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறது. ஆதிகாலக் காட்டு மிராண்டியின் தலைவர்

படிப்பகம்

www.padippakam.com



தன்னைச் சேர்ந்த குடும்பத்தவர்களையும், சுற்றியுள்ள மக்களையும் அடக்கி ஆண்டு வந்தான். அதைப்போலவே, இன்றைக்கும் ஏகாதிபத்திய அரசுகளும் எல்லா உலக சுக போகங்களையும் தங்களுடையதென்று கோடானு கோடி மக்களை அடக்கி ஆண்டு கொண்டு வருகின்றனர்.

காட்டுமிராண்டி புலித் தோலையும், கோரப் பற்களையும், எலும்புகளையும், மண்டை ஓடுகளையும், அம்பு வில்களையும் கொண்டு, தன்னை அலங்கரித்துக்கொண்டு கிராம மக்களைப் பயப்படுத்தி வந்ததைப்போல், தற்கால அரசுகளும் சேவகர்களையும், சிப்பந்திகளையும், இராணுவத்தையும் இராணுவத் தலைவர்களையும் கொண்டு பல கோடி மக்களை அடக்கி ஆண்டு வருகின்றனர். மந்திரங்களையும், தந்திரங்களையும் கொண்டு காட்டுமிராண்டித் தலைவன் தனது குடிமக்களைப் பயமுறுத்தி வந்ததைப்போல—இக் காலத்து ஆட்சியாளர்களும், மூட மதங்களையும் புராண இதிகாசங்களையும் கொண்டு, பல கோடி மக்களைப் பயமுறுத்தி வருகின்றனர். பண்டைக் காலத்துக் காட்டுமிராண்டிகள் பெண்களையும் பிள்ளைகளையும் கொடூரமாய் நடத்தி வந்ததைப்போல, இன்றைக்கும் கோடானு கோடிப் பெண்களும் சிறுவர்களும் கொடூரமாக நடத்தப்படுகின்றனர். அந்தக் காலத்தில் உழைப்பவனுடைய உழைப்பையும், அதன் பயன்களையும் ஆதிகால அநாகரிகத் தலைவன் தனது சுகபோகத்திற்கு விரயமிட்டு வந்ததைப்போல்—இன்றைக்கும் முதலாளிகளென்றும் நிலச்சுவான்தார்கள் என்றும் பெயர் படைத்த பல்லாயிரம் பேர் பல கோடி பல்லாயிரம் மக்களின் உழைப்பையும் அதனால் பெறும் பயனையும் அபகரித்துக்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் அந்தக் காலத் தந்திரத்தையும் சூழ்ச்சியையும் தெரிந்துகொண்டால், தனது ஆதிக்கத்திற்கு அபாயம் வருமென்று அநாகரிகத் தலைவன் எண்ணிவந்ததைப்போல்—இன்றைக்கும் நாகரிகமடைந்தவனென்று சொல்லும் அரசனும் பொதுமக்கள் விஞ்ஞானமடைந்தால் தனது ஆதிக்கத்திற்கே அபாயம் வருமென எண்ணி வருகிறான். ஆதிகால அடிமைத்தனம் தற்காலத்தில் பல்வேறு ரூபமாகச் சமூக வாழ்க்கையில் நிறைந்துள்ளது. முக்கியமாக, மந்திர தந்திரங்களால் கட்டுண்டு கிடக்கும் மக்களின் அடிமைத்தனம் அறவே ஒழியவேண்டும். மதங்களும் இதிகாச புராணங்களும் மக்களின் அடிமைத்தனத்தை நீடிக்கச் செய்து வருவது தடைப்படவேண்டும். ஏகாதிபத்திய அரசர்களால், அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் கோடானு கோடி மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டும். பண்டைக்காலத் துர்ப்பழக்க வழக்கங்களால் தாழ்த்தப்பட்ட பல கோடிப் பெண் மக்கள் சரி சமத்துவ சுதந்திரத்தைப் பெறவேண்டும். சொந்தக்காரர்களாலும், நிலச்சுவான்தாரர்களாலும் அடிமைப்படுத்தப்பட்ட கோடானு கோடிக் குடிமக்கள், நிலத்திலும் நீரிலும் சரி சமத்துவம் பெறவேண்டும். உழைப்பவனுக்கே—தனது உழைப்பின் முழுப் பயனும் சேர வேண்டும். இதுதான் தற்கால நாகரிகத்தின் சரி சமத்துவ வாழ்க்கை. உலக மக்களில் எவனுக்காகிலும் இந்தச் சரி சமத்துவ–சமதர்மம் குறைவுபடுமேயானால் அது காட்டுமிராண்டி அநாகரிக வாழ்க்கையேயொழிய நமது நாகரிகமாகாது.

['புரட்சி'-தலையங்கம்—1-4-1934]

## 3. இனிவரும் உலகம்

இன்றைய உலகமானது பழங்கால உலகம் என்பதிலிருந்து நாளுக்கு நாள் எப்படி மாறுதலடைந்து வந்திருக்கிறது; இனிச் சில நூற்றாண்டுகளில் எப்படிப்பட்ட மாறுதலை அடையும்–என்பனவாகிய விஷயங்கள் பகுத்தறிவுவாதிகளுக்குத்தான் ஏதாவது தெரியக்கூடுமே தவிர, புராண இதிகாசப் பண்டிதர் என்பவர்களுக்கு–அதுவும் நம் 'கலை, காவிய'ப் பண்டிதர்களுக்குத் தெரிவது சுலபமான காரியமல்ல.

ஏனெனில், நமது பண்டிதர்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத புராணங்களையும், ஆராய்ச்சிக்குப் பொருந்தாத இலக்கியங்களையும், பிரத்தியட்ச அனுபவத்திற்குச் சம்பந்தப்படுத்தமுடியாத கலை, காவியங்களையும் படித்து, உருப்போட்டு, அவைகளிலிருப்பவைகளை அப்படியே மனத்தில் பதியவைத்துக் கொண்டிருப்பதோடல்லாமல், அவைகளில் சம்பந்தப்பட்ட கதை கற்பனைகளை உண்மையாக நடந்தவைகள் என்றும் நம்பிக் கொண்டிருப்பவர்களாவார்கள்.



பகுத்தறிவுவாதிகள் அந்தப்படிக்கில்லாமல் அனுபவத்தையும், தங்கள் கண்களில் தென்படும் காட்சிகளையும், வஸ்துக்களின் குணங்களையும், அவற்றின் மாறுதல்களையும், இயற்கையின் வழிவழித் தன்மைகளையும் அவற்றால் கண்டுபிடிக்கப்பட்டுவரும் புதுமை அதிசயங்களையும், மனிதனுக்கு முன்காலத்தில் இருந்துவந்த அறிவாற்றலையும் சிந்தித்து—இன்று உள்ள அறிவையும், ஆற்றலையும், இனி ஏற்படும் அறிவாற்றலையும், சாதனங்களையும், மற்றும் இவை போன்றவைகளையும் ஆராய்ச்சிக் கண்களோடு நடுநிலையில் இருந்து பார்ப்பவர்களாவார்கள்.

பண்டிதர்கள்—பழங்காலத்தையே சரியென்று கருதிக்கொண்டு அதற்கே, 'புது உலகம்' என்று பெயர் கொடுத்து, அங்கே செல்லவேண்டுமென்ற அவாவுடையவர்கள். பகுத்தறிவுவாதிகள்—வரும் ஒரொரு விநாடியும் புதிய காலமாகக் கருதிப் புதிய உலகத்திற்குப் போவதில் ஆர்வமுள்ளவர்கள். பண்டிதர்கள் என்பவர்கள், எந்த நாட்டிலும் இப்படித்தான் இருப்பார்கள் என்று நாம் சொல்ல வரவில்லை. நம் நாட்டுப் பண்டிதர்கள் என்பவர்களில் பெரும்பாலோர்களைக் கருதித்தான் நாம் இப்படிச் சொல்கிறோம். ஏனெனில், நம் நாட்டுப் பண்டிதரென்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படவோ, அது வளர்ச்சியடையவோ முடியாமல் தடைசெய்யத் தகுதியான மாதிரியிலேயே அவர்களது படிப்பும் பரீட்சையும் இருக்கின்றன. ஆதலால், நம் பண்டிதர்கள் என்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது அவர்களது படிப்பே ஒழிய, அவர்களது அறிவுக் குறைவல்ல. தவறிக் கீழே விழுந்த பிள்ளைக்கு அரிவாள் எதிரில் இருந்தால் எப்படி அதிகக் காயம் ஏற்படுமோ—அதுபோல், புராண இதிகாசக் கலைச் சேற்றில் விழுந்த நமது பண்டிதர்களுக்கு, இயற்கை வாசனை அறிவால் ஏற்படக்கூடிய பகுத்தறிவையும் பாழ்படுத்தத்தக்க வண்ணம், மூடநம்பிக்கைச் சமய (மத)ங்கள் என்னும் விஷப் பாம்புகள் அவர்களைக் கரையேறவிடாதபடி சுற்றிக்கொண்டிருக்கின்றன.

நம் மதவாதிகள்—சிறப்பாக 'இந்து' மதவாதிகள் என்பவர்கள் பண்டித மதவாதிகளைவிட மோசமானவர்கள். பண்டிதர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் இருந்த உலகத்துக்குப் போகவேண்டுமென்றால், மதவாதிகள் பதினாயிரக்கணக்கான வருஷங்களுக்கும், பல 'யுகங்'களுக்கும் முன்னால் இருந்த உலகங்களுக்குச் செல்லவேண்டுமென்பவர்கள். இவர்கள் இருவருக்கும் பகுத்தறிவுக்குப் பொருத்தமல்லாததும், மனித சக்திக்கு மீறினதுமான காரியங்களிலும் அசாத்தியமான கற்பனைகளிலும்தான் நம்பிக்கையும் பிரியமும் இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட இவர்களால் கண்டறியப்படும் புது உலகம் காட்டுமிராண்டிகள் வசிக்கும் உலகமாக இருக்கும் என்பதையும், இவர்களை மதிக்கும் மக்கள் பெரும்பாலும் மூடநம்பிக்கையில் மூழ்கிய காட்டுமிராண்டிகளாய் இருப்பார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆதலால்தான், பழையவைகளுக்கே மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பவர்களால் மாறுதலின் சக்தியும், அம் மாற்றத்தின் தன்மையும், அதனால் ஏற்படும் பயனும் உணர்ந்துகொள்ளவோ, எதிர்பார்க்கவோகூட முடியாது என்று சொல்லவேண்டியதாயிற்று.

பழையவைகளை—ஏற்ற அளவுக்கும் நற்பயன் தரவேண்டிய அளவுக்கும், உபயோகித்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்பதை நாம் வலியுறுத்துவதில் பின்வாங்க மாட்டோம். ஆனால், புதியவற்றிலேயே முயற்சியும் ஆராய்வதில் ஆர்வமும் இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், அவற்றினால்தான் இயற்கையைப் படிப்பது என்பதோடு, புதியவற்றைக் கண்டுபிடிப்பதும் முற்போக்கு அடைவதும் ('இன்வென்ஷன்', 'ப்ராக்ரஸ்') சுலபத்தில் சாத்தியமாகலாம்.

www.padippakam.com



இன்று உலகத்தின் வேறு பல பாகங்களில் உள்ளவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல அற்புதங்களும், அப் பாகங்கள் அடைந்துள்ள முற்போக்குகளும் முதலாகியவை எல்லாம்—அந் நாட்டவர்கள் பழையவற்றோடு திருப்தி அடைந்து, அதுவே முடிவான பூரண உலகம் என்று கருதி அப் பழையவற்றையே தேடிக்கொண்டு திரியாமல், புதியவற்றில் ஆர்வங் கொண்டு, நடுநிலைமை அறிவோடு முயற்சித்ததன் பலனாலேயே ஏற்பட்டவைகளாகும். அவை இன்று எல்லா மக்களாலும் ஆதரவோடு அனுபவிக்கப்படுகின்றன.

ஆகவே, இதை உணர்ந்தவர்கள்தாம் இனிச் சில நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் எப்படிப்பட்ட உலகத்தைக் காணலாம், அதற்கு என்ன முயற்சி செய்யலாம் என்பதை ஒருவாறு கற்பனைச் சித்திரமாகவாவது தீட்டமுடியும்.

உலகத்தை ஒருவாறு படித்தறிந்த பல பெரியார்களின் அபிப்பிராயங்களையும், உலகின் பல பாகங்களில் இதுவரை ஏற்பட்டு வந்திருக்கும் காரியங்களையும் ஊன்றிப் பார்ப்போமானால்—இனி வரும் உலகமானது அரசனது ஆட்சி அற்றதாகவே இருக்கும். ஏனெனில், இனிவரும் உலகத்தில் தங்கம், வெள்ளி முதலிய (உலோக) நாணயங்களும் தனிப்பட்டவர்களுக்கென்று உடைமையும், உரிமையும் உள்ளதாக இருக்காது. ஆதலால், அப்படிப்பட்ட உலகத்துக்கு, அரசனோ, இன்றுள்ளது போன்ற ஆட்சியோ எதற்காக வேண்டியிருக்கும்? மக்கள் உயிர் வாழ்க்கைக்கும், ஓய்வுக்கும் அனுபவிப்புக்கும் இன்றுள்ள உழைப்புகள், கஷ்டங்கள் கட்டுக்காவல்கள் இருக்காது. இன்றுள்ள பெருவாரியான மக்கள் கஷ்டப்பட்டு உழைத்து வேலை செய்யும் நேரம் அதிகம்; பயன் அனுபவிக்கும் நேரமும் சுகப்படும் ஓய்வு நேரமும் குறைவு.

உண்ணும் உணவுப் பொருள்களுக்கும் அனுபவிக்கும் போகப்பொருள்களுக்கும் வசதி அதிகம். போதிய உணவில்லாமலும், குறைந்தபட்ச சுகபோக அனுபவமில்லாமலும் பட்டினிகிடக்கும் மக்களும் வறுமையை அனுபவிக்கும் மக்களும் அனேகர்.

சுயேச்சைக்கு வசதியும், சுயநிர்ணயத்துக்கு மார்க்கமும் தாராளமாய் இருக்கின்றன. சுயேச்சையோடு இருப்பவர்களோ, தன்னம்பிக்கையோடு இருப்பவர்களோ மிகக் குறைவு.

பொருள் செய்வகைகளும் அவற்றிற்கு வேண்டிய மூலப்பொருளும் ஏராளமாயிருக்கின்றன. குறைந்த அளவு—அதாவது, இன்றியமையாத, தேவையான பொருள்கூட இல்லாமல் கஷ்டப்பட்டும், வேதனையும் படுகிற மக்கள் அனேகர்.

நிலப்பரப்பு ஏராளம்; நிலமில்லாதவர்கள் என்பவர்கள் அனேகர். இப்படிப்பட்ட சர்வ செல்வமும் நிறைந்து உள்ள உலகில் பட்டினி, வறுமை, மனக் குறை, வாழ்வுக்கே போராட்டம் ஏன் உண்டாக வேண்டும்?

இவைகளுக்கும், கடவுளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? இவைகளுக்கும், மதங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

அல்லது, இவைகளைக் கடவுள்களுக்கும் மதங்களுக்கும் சம்பந்தப்படுத்திக் கொண்டிருக்கும் மக்களில், எந்தக் கடவுளையாவது, எந்த மதத்தையாவது நம்பிப் பின்பற்றி வழிபடுகிற மக்களில் யாருக்காவது மேலேகண்ட குறைபாட்டுணர்ச்சி இல்லை என்று கூறமுடியுமா?

அல்லது, கடவுள், மதம் முதலியவைகளைப் பற்றி இலட்சியப் படாவிட்டாலும், மனிதனுக்கு மேற்கண்ட குறைகளை நீக்கிக்கொள்ள அறிவு இல்லை என்றாவது சொல்ல முடியுமா?

உலக சீவராசிகளுக்குள்ளே மனிதனே அதிக அறிவு பெற்றவன். ‘கடவுள்களையும், மதங்களையும், ஞான மார்க்கங்களையும், ஆத்மார்த்த ஆரியத் தத்துவங்களையும்’ மனிதன் தான் கண்டுபிடித்திருக்கிறான். எத்தனையோ மனிதர்கள் ‘தெய்வீக சக்தி பெற்று, தெய்வத்தோடு கலந்தும், தெய்வமாகியும்’ இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களாலும்



மேற்கண்ட குறைபாடு, பட்டினி, அவரவர் உணவுக்கே கஷ்டப்படுவது முதலாகிய சாதாரணத் தன்மைகள்கூட நீக்கப்படவில்லை என்றால், இவற்றிற்கு முக்கிய காரணம்—மேலே குறிப்பிட்ட கடவுள், மதம், ஞானமார்க்கம், நீதி, ஒழுக்கம், அரசாட்சி என்பவைகளும் மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட அதிக அறிவை மேற்கண்டவற்றின் கட்டுப்பாடுகளிலிருந்து வேறுபடுத்தித் தனித்திருந்து சிந்தித்துப் பார்க்காததும்தாம் காரணங்களாகும் என்பது விளங்கவில்லையா?

இப்போது மக்களில் ஒரு சிலர் மேற்கண்ட ‘ஆத்மார்த்தம்’ முதலிய ‘சூட்சுமங்களில்’ உள்ள கவலையையும் மூடநம்பிக்கையையும் விட்டுத் தம் அறிவையும் அனுபவத்தையுமே நம்பிச் சிந்தித்ததின் காரணமாகவே பல அற்புதங்களும் அதிசயங்களும் காண முடிந்தபின், மேல்நாடுகளிலே அதிகம் பேர் அந்தப்படி சிந்திக்க முன்வந்துவிட்டார்கள்; பழைய உலகம் இனி நிலைக்காது என்று முடிவுகட்டுகிறார்கள். புதிய உலகத்தைப்பற்றியே சிந்திப்பதும் சித்திரிப்பதும், எதிர்பார்ப்பதுங்கூட இன்று பல அறிஞரின் கவலையாகப் போய்விட்டது.

ஏன் பிறக்கவேண்டும்? சகல சவுகரியங்களுமுள்ள இப் பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபட வேண்டும்? ஏன் சாகவேண்டும்? என்கின்ற பிரச்சினைகள் சிந்தனைக்கு மயக்கமளித்து வந்து சிக்கலான பிரச்சினைகளாக இருந்தவை. இன்று அவை தெளிவாக்கப்பட்டுப் பரிகாரம் தேடப்பட்டும் வருகிறகாலம் நடக்கிறது.

இந்தப் போக்கு சீக்கிரத்தில் மக்களின் பொதுவாழ்விலேயே பெரியதொரு புரட்சியை உண்டாக்கும்படியான புதிய உலகத்தை உண்டாக்கித்தான் தீரும். அப்போதுதான்—நான் முன்சொன்ன பணம், காசு என்ற உலோக நாணயமே இருக்காது; அரச ஆட்சி இருக்காது; கடினமான உழைப்பு என்பது இருக்காது; இழிவான வேலை என்பது இருக்காது; அடிமைத் தன்மை இருக்காது; ஒருவரை ஒருவர் நம்பிக்கொண்டு வாழவேண்டிய அவசியம் இருக்காது. பெண்களுக்குக் காவல், கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது.

காந்தியாரைப் போலவும், மடாதிபதிகளைப் போலவும், அரசர்கள், ஜமீன்தார்கள் முதலிய பெரும்பெரும் செல்வவான்கள், போகபோக்கியம் அனுபவிப்போர்கள் போலவும், பார்ப்பனர்கள் போலவும், உலக மக்கள் யாவரும் உயர்வாழ்வு வாழவேண்டுமானாலும் அவ்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சவுகரியங்கள் ஏற்படவும், நிலைக்கவுமான காரியங்கள் ஏற்பட ஒரு மனிதனுக்கு ஒருநாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரத்துக்கு மேல் வேலைசெய்ய வேண்டிய அவசியமே இருக்காது.

ஒரு மனிதன் தனது காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ வலி இருந்தாலும் அவன், ‘எனக்கு வலிக்கிறது’ என்று சொல்லுவதுபோல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும் குறைபாடுகளையும், ஒவ்வொருவரும் (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டதுபோல் நினைக்கும் படியும் அனுபவிப்பதுபோல் துடிக்கும்படியும், அவ்வளவு கூட்டுவாழ்க்கையும் ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

உலகில் எந்தப் பாகத்திலும் இன்றைய மாதிரியான போர் நடக்காது; மக்கள், மக்களால்—யுத்தம், கொள்ளை, கொலை முதலியவற்றின் பேரால் மடியமாட்டார்கள். உணவுக்காக வேலைசெய்ய வேண்டிய வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. மக்கள் ‘உடற் பயிற்சிக்காக வேலைசெய்ய வேண்டுமே’ என்கின்ற கவலைகொண்டு உடலுழைப்பு வேலைக்காக அலைவார்கள்.

அதிசயப் பொருள்களும், அற்புதக் காட்சிகளும், அவற்றின் அனுபவங்களும் மக்கள் எல்லோரும் ஒன்றுபோல் அனுபவிப்பார்கள். லேவாதேவிக்காரர்கள், தனிப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



வியாபாரிகள், தொழிற்சாலை, இயந்திரசாலை முதலாளிகள், கப்பல்–இரயில்–பஸ் சொந்தக்காரர்கள், கமிஷன் ஏஜெண்டுகள், இன்சூரன்ஸ் ஏஜெண்டுகள், தரகர்கள், விளம்பரங்கள், மற்றும் வேறு எவ்விதமான தனிப்பட்ட இலாபடையும் மக்களும் தொழில்களும் எவையுமே இருக்காது. சண்டைக் கப்பல், யுத்தப் படை, யுத்த தளவாடங்கள் வேண்டி இருக்காது என்பதோடு, மக்களைக் கொன்று குவிக்கும் சாதனமோ, அவசியமோ, எதுவுமே இருக்காது.

வாழ்வுக்காக எப்படி எப்படி உழைப்பது என்கின்ற கவலையும், முயற்சியும் மிகச் சிறிய அளவுக்கு வந்துவிடும். சுகம் பெறுவதிலும் போகபோக்கியமடைவதிலும், நீண்ட நாள் வாழ்வதிலும், ஆராய்ச்சியும் முயற்சியும் வளர்ந்துகொண்டே போகும். மக்களின் தேவைகள் எவ்வளவு வளர்ந்தாலும், அவற்றை உற்பத்திசெய்வதற்காக மனிதன் செலவழிக்க வேண்டிய நேரம், மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

உதாரணமாக, மக்கள் முன்பு கொஞ்சமான உடை அணிந்துகொண்டிருந்தார்கள். அக் காலத்தில் துணி நெய்பவர்கள், ஒரு நிமிடத்திற்குச் சுமார் 150 இழைகள்தான் கோத்து வாங்கி (நெய்ய) முடிந்தது. இன்று மக்கள் முன்னைவிடப் பலமடங்கு அதிகமாகத் துணியை அணிகிறார்கள் என்றாலும் அவ்வளவும் கிடைக்கும்படியான அளவுக்குமேலே நெசவுத் துறையில் விஞ்ஞானம் அபிவிருத்தி அடைந்து, ஒரு நிமிஷத்திற்கு 45,000 இழைகள் கோத்து வாங்கும்படியான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

சிகரெட்டுகளைப் பற்றிச் சிந்திப்போமானால் அக் காலத்தில் ஒரு நிமிடத்துக்கு இரண்டு மூன்று சிகரெட்டுகள்தான் சுற்ற முடிந்திருக்கும். ஆனால், இன்று ஒரு நிமிடத்துக்கு 2,500 சிகரெட்டுகள் ஒரு இயந்திரத்தினால் உற்பத்திசெய்யப்படுகின்றன. அதுவும் ஒரு பக்கம் புகையிலையைப் போட்டால் மறுபக்கம் இரயிலில் ஏற்றும்படியான மாதிரியில் சிகரெட்டுப் 'பேக்கு'கள் கொண்ட பெட்டிகள் கட்டாகக் கட்டப்பட்டு விழுகின்றன என்பதோடு, அந்தச் சிகரெட்டுக் 'கம்பெனி'யின் பெயர் அந்த ஒவ்வொரு சிகரெட்டின்மீதும் சரியாய்ப் பதியவில்லையானால், பதியாத சிகரெட்டை இயந்திரம் கீழே தள்ளிவிடுகிறது. இப்படிப்பட்ட நுட்பமான இயந்திரங்கள் இப்போதே கண்டுபிடிக்கப் பட்டிருக்கும்போது, இனி வருங்கால இயந்திர உலகம் எப்படி இருக்கும் என்பதை விளக்கவும் வேண்டுமா! இம் மாதிரியாகவே வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தேவைத் துறைகளிலும் இயந்திர சாதனங்கள் பெருகும்போது, நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு இரண்டு வாரம் வேலை செய்வதினாலேயே மக்களுக்கு அவசியமான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகி விடலாம்.

ஆகவே, ஒரு ஆண்டில் மீதி உள்ள 50 வாரங்களும் மக்களைச் சும்மா, சோம்பேறிகளாய் இருக்கச் செய்யுமே என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை.

வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும் யோசனையும் கண்டுபிடிப்புகளும் தேவையாக இருக்கின்றனவோ, அதுபோலவே—மக்களின் ஓய்வுக்கும், உடற்பயிற்சிக்கும் மகிழ்ச்சிக்கும், போகபோக்கியத்துக்கும்—யோசனைகளும், ஆராய்ச்சிகளும், சாதனங்களும், அவைகளைச் சுலபமாகச் செய்ய வசதிகளும் கண்டுபிடிப்பதும் அவை நாளுக்குநாள் மாற்றமடைவதும் ஆகிய காரியங்களில் மீதி நாட்கள் செலவழிக்கப்பட வேண்டியிருக்கும்.

அக் கால நிலை நாம் வரையறுக்க முடியாத அற்புதங்களையும், அதிசயங்களையும் கொண்டிருக்குமென்று சொல்லுவது மிகைபடச் சொன்னதாக ஆகாது. ஆதலால், மக்கள் குறிப்பாக அறிவாளிகள்–சிந்தனையாளர்கள்–முற்போக்கில் கவலை உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு இவற்றின்மூலம் சதா வேலை இருந்துகொண்டே இருக்கும். அப்படிப்பட்ட வேலைகள் இன்று உள்ளதுபோல் கூலிக்கு வேலை செய்வதுபோலவோ, இலாபத்துக்கு வேலைசெய்வது போலவோ இல்லாமல் உற்சாகத்துக்காகவும், போட்டிப் பந்தய உணர்ச்சி போன்ற தூண்டுதலுக்காகவும் ஊக்கத்துடன் வேலை செய்வதாக இருக்கும்.



இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனது வாழ்நாளில் தன்னை என்ன காரியத்தைச் செய்துமுடித்து உலகுக்குப் பயன்படச் செய்துகொள்ளுவது என்ற கருத்தே வளரும்.

'இப்படியானால், சோம்பேறிகள் வளர்ந்துவிடமாட்டார்களா?' என்று கேட்கலாம். இப்படிப்பட்ட காலத்தில் சோம்பேறிகள் இருக்கமுடியாது. இருப்பார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், இவர்களால் சமூகத்துக்குத் தேவையான எந்த வேலையும் குறைந்து போகாது; அதனால் ஒரு கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆதலால், அப்படிப்பட்ட அவர்கள் வேலையில் ஈடுபடுவதைவிடச் சும்மா இருந்து சாப்பிடுவது அவர்களுக்கே கஷ்டமாயிருக்கும்.

பொதுவாகவே அந்தக் காலத்தில் மனிதர்கள் உண்மையிலேயே—'தங்களுக்கு வேலை செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே; வீணாக நேரம் கழிகிறதே!' என்று கருதி வேலைக்குப் போராடிக்கொண்டு இருப்பார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இச் சோம்பேறிகளால் அனுகூலம் ஏற்படுமே தவிர, யாருக்கும் கவலை இருக்காது. எல்லா மக்களுக்கும் அவர்கள் ஆசை தீர வேலை கொடுக்கமுடியாத காலமாக இருக்குமே ஒழிய, அந்தக் காலம் வேலைக்கு ஆள்தேட வேண்டியதாகவோ, 'அவன் வேலை செய்யவில்லை, இவன் வேலை செய்யவில்லை' என்று கருதுவதாகவோ, குறை கூறுவதாகவோ இருக்காது.

'இழிவான' வேலைகளுக்கு ஆள் கிடைக்குமா?' என்று கேள்வி பிறக்கலாம். இழிவான வேலையென்று வருங் காலத்தில் இருக்க முடியாது. சரீரத்தால் செய்யப்பட வேண்டிய எல்லாக் காரியங்களும் அனேகமாக இயந்திரங்களாலேயே செய்யும்படியாக ஏற்பட்டுவிடும். கக்கூசு எடுக்கவேண்டியதும், துலக்கவேண்டியதும், வீதி கூட்டவேண்டியதும் கூட இயந்திரத்தினாலேயே செய்து முடிந்துவிடும். மனிதன் பாரம் எடுக்கவேண்டியதோ, இழுக்க வேண்டியதோ ஆன காரியங்கள் இருக்கவே இருக்காது. அக் காலத்தில் கவுரவம் வேண்டும் என்பவர்கள் பொதுஜன நன்மை, சவுகரியம் ஆகியவைகளைச் செய்யவேண்டி இருக்கும் என்பதோடு, அதில் ஏற்படும் போட்டியினால் 'இழிவான' வேலைக்கும் எப்போதும் கிராக்கி இருந்துகொண்டே இருக்கும்.

கவிகளும், இதர சித்திரக்காரர்களும், நாவலர்களும், சிற்பிகளும் போட்டி போட்டுக் கொண்டு புதிய உலகை (தோற்றத்தை) உண்டாக்குபவர்களாகவே இருப்பார்கள். திறமையானவர்களுக்குத்தான் வேலையும் மதிப்பும் கிடைக்கும்; மற்றவர்கள் அலட்சியப்படுத்தப் படுவார்கள்.

அக் காலத்தில் 'ஒழுக்கக் குறை' என்பதற்கு இடமே இருக்காது. ஒழுக்கக் குறைவாய் ஒருவன் நடக்க வேண்டுமானால், அதனால் அவனுக்கு ஒழுக்கமாய் நடப்பதன் மூலம் கிடைக்கப்படாத ஏதாவது இலாபமோ, திருப்தியோ, ஆசைப் பூர்த்தியோ ஏற்பட வேண்டும். புதிய உலகில் தனிப்பட்டவர் தேவைக்கும் தனிப்பட்டவர் மனக் குறைக்கும், ஏங்கித் திரியும் ஆசைக்கும் இடமே இருக்காது. தன்னிலும் மேலாகவோ தன்னிடமிருப்பதைவிட அதிகமாகக் கொண்டோ, வேறொருவன் இருக்கிறான்—அனுபவிக்கிறான் என்கின்ற உணர்ச்சி ஏற்படும்போதுதான், அதிருப்தியும் மனக்குறையும் ஏற்படும். அதை நிவர்த்தித்துக் கொள்வதற்குத்தான் எந்த மனிதனும் ஒழுக்கக் குறைவாய், நியாய விரோதமாய், கட்டுத் திட்டத்துக்கு மீறி நடக்கவேண்டியவனாகலாம். பொதுவாக, இன்று ஒழுக்கம், நியாயம், கட்டுத்திட்டம் என்பவைகளே—பெரிதும் உயர்வு, தாழ்வுகளையும் தனிப்பட்டவர்கள் உரிமைகளையும் சவுகரியங்களையும் நிலைநிறுத்த ஏற்படுத்தப்பட்டவைகளேயாகும். ஆகையால், இவை இரண்டும் இல்லாத இடத்தில் அவை இரண்டுக்கும் இடமிருக்காது. அதுபோலவே திருட்டுக்கும் இடமிருக்காது.

கங்கைக் கரை ஓரத்தில் குடியிருப்பவர்கள் கங்கை நீரைத் திருடவேண்டிய அவசியம் ஏற்படுமா? அல்லது அவர்களது தேவைக்கு மேல் அதிகமாக எடுப்பார்களா? அல்லது,



படிப்பகம்

www.padippakam.com



'நாளைக்கு வேண்டுமே', என்று சேகரித்து வைக்க முயற்சிப்பார்களா? ஆதலால், தேவை உள்ள சாமான்கள் தாராளமாய் வழிந்தோடும்போது, திருட்டுக்கு இடமே இருக்காது; அதிகமாய் எடுத்துக்கொள்ள அவசியமும் இருக்காது; பொய் பேசவேண்டிய அவசியமும் இருக்காது. அதற்கும் ஏதாவது இலாபம் இருந்தால்தானே பொய் பேச நேரிடும்! குடியினால் மக்களுக்கு எவ்விதக் கெடுதியும் ஏற்பட இடமிருக்காது. கொலை செய்யும்படித் தூண்டதத் தக்க காரியமும் இல்லாமல் போய்விடும்; சூது ஆடுவது என்பதும், பந்தயப் போட்டியாய் இருக்கலாமே தவிர, பண நஷ்டமாக இருக்காது.

விபசாரம் என்பதும் இருக்க நியாயமில்லை. ஏனெனில், பணத்துக்காகவும், பண்டத்துக்காகவும் விபசாரம் என்பது அடியோடு மறைந்தே போகும். மக்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்பட்ட காலத்தில் ஒருவரை ஒருவர் அடக்கி ஆள முடியாது. ஒருவர் தயவைக் கோரி ஒருவர் இணங்கிவிட முடியாது. ஒருவரை ஒருவர்—அதாவது, ஆணும் பெண்ணும் மனப்பூர்வமான சமவிருப்பமின்றிக் காதல் அனுபவிக்கமாட்டார்கள். கல்வி விஷயத்தில் யாவருக்கும் தேர்ந்த அறிவும், கல்வியும் ஏற்படும். ஆனதால், மனமொத்த உண்மைக் காதல் வாழ்க்கை என்பதைத் தவிர, புதுமைக்காக, மாறுதலுக்காக, அடிக்கடி மாறும் தன்மை சுலபத்தில் ஏற்பட்டுவிடாது. அன்றியும், உடல் நலம் பற்றிய அறிவும் கவலையும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும். தன்மான உணர்ச்சியும் இருக்கும். 'விருப்பமில்லாத இடத்தில், சம்பந்தமில்லாத இடத்தில் இச்சை வைப்பது தனது சுயமரியாதைக்குக் குறைவு' என்றே ஆண் பெண் இருபாலரும் கருதுவார்கள். பெண் அடிமையோ ஆண் ஆதிக்கமோ இல்லாமலும், பலாத்காரமோ வற்புறுத்தலோ, உடல் நலத்திற்குக் கேடோ இல்லாமலும், ஒத்த காதல், ஒத்த இன்பம், ஒன்றுபட்ட உள்ளம் கொண்ட கலவியால் சமுதாயத்துக்கோ தனிப்பட்ட நபர்களுக்கோ எவ்விதக் கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆதலால் விபசாரம் என்பதற்கு இடமில்லாது போகும்.

மூளைக் கோளாறான குணங்கள் என்பவைகளை இயற்கையாக உடையவர்கள் யாராவது இருந்தால், அதற்கு மாத்திரம் பரிகாரம் தேடவேண்டிய அவசியமிருக்கலாம். அதுவும் அப்படிப்பட்டவர்களால் பிறருக்கோ தங்களுக்கோ கேடு ஏற்படுவதாய் இருந்தால் மாத்திரம்தானே? ஆதலால், பஞ்சேந்திரியங்களும் ஒரே துறையில் ஒரே சமயத்தில் இன்பந் தரக்கூடிய இவ் வின்பத்துறையில் இயற்கைக் கேடு, சமுதாயக்கேடு இல்லாமல் வேறு காரியத்திற்குக் கட்டுப்பாடு இருக்காது.

போக்குவரவு—எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

கம்பியில்லாத் தந்திச்சாதனம்—ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

ரேடியோ—ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட்டிருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம்—எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.

மேற்கண்ட சாதனங்களால் ஒரு இடத்தில் இருந்துகொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன்படும்படியாக உணவுச் சத்துப் பொருள்கள் சுருக்கப்பட்டு, ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியில் அடக்கக் கூடிய உணவு ஏற்பட்டுவிடும்.

மனிதனுடைய நூறு வருஷம் என்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம்; இன்னும் மேலே போனாலும் போகலாம்.

பிள்ளைப்பேறுக்கு ஆண்–பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புத்தி நுட்பமும், அழகும் திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும் படியாக, பொலிகாளைகள்போல் தெரிந்தெடுத்த மணிபோன்ற பொலிமக்கள் வளர்க்கப்பட்டு அவர்களது வீரியத்தை 'இன்செக்ஷன்' மூலம் பெண்கள் கருப் பைகளுக்குள் செலுத்தி



நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.

மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஒரு அளவுக்குள் கொண்டு வந்துவிடக்கூடும். உல்லாச வாழ்வு என்பது தவிர, உலக 'குடித்தன வாழ்வு' என்ற தன்மையே இருக்காது.

போகப் பொருள்களும் வெகுதூரம் மாற்றமடைந்துவிடும். அதற்காக ஏற்படும் செலவும் அதை அனுபவிக்கும் முறையும் வெகு சுருக்கமாக மாற்றமடைந்துவிடும்.

ஒரு 'டன்'னுள்ள மோட்டார் கார் ஒரு 'அந்தர் வெயிட்'டுக்கு வரலாம்; பெட்ரோல் செலவு குறையலாம்; பெட்ரோலுக்குப் பதில் மின்சாரத்தையே உபயோகப்படுத்தலாம், அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய விதமாகவும், மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணைசெய்யும் விதமாகவும் விரியும்—பெருகும். விஞ்ஞானம், வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன்படும்படியான அதிசயப் பொருள்களும், கண்டுபிடிப்புகளும், தனிப்பட்டவர்களின் இலாபத்துக்காக என்று முடங்கிக் கிடக்காமல், சகல மக்களுக்கும் சவுகரியம் தருகிற பொதுச் சாதனங்களாக அமையும்.

இவ்வளவு மாறுதல்களோடு இனி வருங்காலம் இருக்குமாகையால், இன்றைய உலக அமைப்பிலே உள்ள, அரசுடைமை, நீதி, நிர்வாகம், கல்வி முதலிய பலதுறைகளிலும், இப்போது எவை எவை பாதுகாக்கப்பட என்னென்ன முறைகள் கையாளப்பட்டு வருகின்றனவோ, அம் முறைகளுக்கெல்லாம் அவசியமில்லாமற் போய்விடும் என்பதோடு, அவை சம்பந்தமாக இன்று நிலவும் பல கருத்துக்கள் அர்த்தமற்றவையாகவும் போய்விடும்.

இனிவரும் உலகத்தில் கடவுள் தன்மை எப்படி இருக்கும் என்று அறிய மக்கள் கண்டிப்பாக ஆசைப்படாமல் இருக்கமாட்டார்கள்.

கடவுள் தானாக யாருக்கும் தோன்றுவதில்லை. பெரியோர்களால் சிறியோர்களுக்குப் போதிக்கப்பட்டும் காட்டப்பட்டுமே தோற்றமான—எண்ணமும் உருவமுமாகும். ஆனதால், இனிவரும் உலகத்தில் கடவுளைப்பற்றிப் போதிக்கிறவர்களும், காட்டிக் கொடுப்பவர்களும் மறைந்துவிடுவார்கள். யாராவது இருந்தாலும் அவர்களுக்கும் கடவுள் மறக்கப்பட்டுப் போகும். ஏனெனில், கடவுளை நினைக்க ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒரு அவசியம் இருந்தால்தான் நினைப்பான். சகல காரண காரியங்களுக்கும் மனிதனுக்கு விவரம் தெரிந்துவிடுவதாகவும், சகல தேவைகளும் மனிதனுக்குக் கஷ்டப்படாமல் பூர்த்தியாவதாகவும் இருந்தால்—ஒரு மனிதனுக்குக் கடவுளை கற்பித்துக் கொள்ளவோ, நினைத்துக் கொள்ளவோ அவசியம் ஏன் ஏற்படும்? மனிதன் உயிரோடு இருக்கும் இடமே அவனுக்கு 'மோட்சமாய்'க் காணப்படுமானால் விஞ்ஞானத்துக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத மோட்சம் ஒன்றை ஏன் கருதுவான்? அதற்கு ஏன் ஆசைப்படுவான்? 'தேவை அற்றுப் போன இடமே, கடவுள் செத்துப்போன இடமாகும்' என்பது அறிவின் எல்லையாகும். விஞ்ஞானப் பெருக்கம் ஏற்பட்ட இடத்தில் கடவுள் சிந்தனைக்கு இடம் இருக்காது.

சாதாரணமாக, மனிதனுக்கு இன்று கடவுள் நிச்சயத்திற்கு ஒரே ஒரு காரணம்தானே இருந்து வருகிறது! அக் காரணம் என்ன வென்றால், 'இந்த உலகத் தோற்றத்திற்குக் காரணம் என்ன? காரண பூதமாய் இருப்பது எது? அதுதான் கடவுள்' என்று சொல்லப்படுகிறது. இது விஞ்ஞானிக்குச் சுலபத்தில் அற்றுப்போன விஷயம். நம்முடைய வாழ்வில் நாம் எதைக் கடவுள் செயல் என்று உண்மையாய்க் கருதுகிறோம்? நம் அனுபவத்திற்கு வந்த ஒவ்வொன்றுக்கும் நாம் சமாதானம் தெரிந்து கொள்ளுகிறோம்; தெரியாதவற்றைத் தெரியாது என்று ஒப்புக் கொள்ளுகிறோம்; தெரிந்ததைத் தெரிந்தது என்று சொல்லுகிறோம். இதுவேதான் உலகத் தோற்றத்துக்கும் உலக நடப்புக்கும் கொள்ள வேண்டிய

படிப்பகம்

www.padippakam.com



முறையாகும். ஒரு சமயம் உலக நடப்புக்குக் காரணம் தெரியா விட்டாலும் அதற்காக ஒரு காரியத்திற்கும் தேவையில்லாத கடவுளை எவனும் வணங்கமாட்டான்.

புதிய உலகத்தில் மோட்ச—நரகத்துக்கு இடம் இருக்காது. நன்மை, தீமை செய்ய இடமிருந்தால்தானே மோட்சமும்—நரகமும் வேண்டும்? எவருக்கும் யாருடைய நன்மையும் தேவை இருக்காது. புத்திக் கோளாறு இருந்தால் ஒழிய ஒருவனுக்கு மற்றொருவன் தீமை செய்யமாட்டான். ஒழுக்கக் கேட்டுக்கும் இடமிருக்காது. இப்படிப்பட்ட நிலையில் மோட்ச—நரகத்துக்கு வேலை ஏது? ஆள் ஏது?

எனவே, இப்படிப்பட்ட நிலை புதிய உலகத்தில் தோன்றியே தீரும். தோன்றா விட்டாலும் இனிவரும் சந்ததிகள் இந்த மாறுதல்களைக் காணவேண்டுமென்றும், இவைகளால் உலகில் மக்களை இப்போது வாட்டிவரும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, 'வாழ்க்கை என்றால் பெருஞ் சுமை' என்று சலித்துக் கொண்டும், 'வாழ்க்கை என்றால் போராட்டம்' என்று திகைத்துக் கொண்டும் இருக்கிற நிலைமை போய்—'வாழ்க்கை என்றால், மக்களின் இன்ப உரிமை' என்ற நிலைமை உண்டாக வேண்டுமென்றும், ஆவலுடன் பணியாற்றி வருவார்கள்.

'நம்மால் என்ன ஆகும், அவனன்றி ஓரணுவும் அசையாதே!' என்று வாய் வேதாந்தம் பேசமாட்டார்கள். நம் கண்முன் காணப்படும் குறைபாடுகளைப் போக்க நாம் எப்படி உழைக்க வேண்டும் என்பதே அவர்களின் கவலையாகவும் அவர்களின் எண்ணமாகவும் இருக்கும்; என்றோ, யாரோ, எதற்காகவோ, எழுதி வைத்த ஏட்டின் அளவோடு நிற்கமாட்டார்கள்; சுய சிந்தனையோடு கூடியதாகவே அவர்களின் செயல்கள் இருக்கும். மனித அறிவீனத்தால் விளைந்த வேதனைகளை, மனித அறிவினாலேயே நீக்கிவிடமுடியும் என்ற ஆசையும் நம்பிக்கையும் கொண்டு உழைப்பார்கள். அவர்களின் தொண்டு, மனித சமுதாயத்தை நாளுக்குநாள் முன்னுக்குக் கொண்டு வந்த வண்ணமாகவே இருக்கும். சுய சிந்தனைக்கு இலாயக்கற்றவர்களே இந்த மாறுதல்களைக் கண்டு மிரள்வதும், 'காலம் வரவரக் கெட்டுப் போச்சு' என்று கதறுவதுமாக இருப்பார்கள். இன்றைய மக்களிலே பலருக்கு, பழைமையிலே இருக்கும் மோகம், அறிவையே பாழ்செய்து விடுகிறது; புதிய உலகத் தோற்ற வேகத்தைத் தடைசெய்து விடுகிறது.

பழைய முறைப்படி உள்ள அமைப்புக்களால் இலாபமடையும் கூட்டம், புதிய அமைப்பு ஏற்படுவதைத் தடுக்க முயற்சிப்பது இயற்கை. ஆனாலும், பாமரரின் ஞான சூன்யம், சுயநலக்காரரின் எதிர்ப்பு என்னும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல், வேலைசெய்வோரே இனிவரும் உலகத்தின் சிற்பிகளாக முடியும். அந்தச் சிற்பிகளின் கூட்டத்திலே நாமும் சேர்ந்து நம்மாலான காரியத்தைச் செய்யவேண்டுமென்று, வாலிபர்கள் பகுத்தறிவாளர்கள் ஆசைப்பட்டு உழைக்க முன்வர வேண்டி இதை முடிக்கிறேன்.

['திராவிட நாடு' வார இதழ், காஞ்சிபுரம்—21, 28-3-1943; நூல்: 'இனிவரும் உலகம்' இரண்டாம் பதிப்பு 1944]

## 4. கால வேகம்

பெரியோர்களே! தோழர்களே!

நம் கடவுள், மதம், ஒழுக்கம் இவைகளைப்பற்றிய நூல், ஆகியவைகள்கூட மாற்றக் கூடியவையாகத்தானே இருக்கமுடியும்? மற்ற துறைகளில் அக் கால மக்களுக்கு என்ன அறிவு, அனுபவம் இருந்ததோ அதுதானே இந்தத் துறைகளிலும் இருந்திருக்கும்?

உதாரணமாக, அந்தக் காலத்தில் பொய் பேசுகிற மனிதன் இருப்பது அதிசயிக்கத் தக்கதாக இருந்திருக்கும்; ஆனால், இந்தக் காலத்தில் பொய் பேசாத மனிதன் இருப்பது அதிசயமாக இருக்கிறது. ஏன் என்றால், காலம் மக்களை அப்படித் தள்ளிக்கொண்டு



போகிறது. காலப் போக்குக்கு மனிதன் கட்டுப்பட்டே ஆகவேண்டும்; இல்லாவிட்டால் காட்டுக்குப் போய்விடவேண்டும்; அங்குங்கூட காலம் அவனைத் தொடர்ந்து கொண்டுதான் போகும். பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடுவதுபோல, காலத்தை நோக்கி மனிதன் போய்த்தான் தீருவான். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை.

என் பேச்சும் இந்தக் கூட்டமும், உங்கள் இருக்கையும் காலப்போக்கைப் பொறுத்தவையே தவிர என்னையோ, உங்களையோ, பொறுத்தவையல்ல. காலப்போக்கை அறியாத பட்டிக்காட்டார், பாமரத் தனம் கொண்டவர்கள் ஆகியவர்கள்தான்—மாறுதல் என்னாலும் உங்களாலும் ஆனதாகக் கருதுவார்கள். ஆனால், அவர்களும் அறிவு, அனுபவம் பெற்றவுடன் காலப்போக்குத்தான் காரணம் என்பதை உணர்ந்துகொள்ளுவார்கள். ஆனால், அதற்குக் கொஞ்சநாள் பிடிக்கும். உதாரணமாக, அந்தக் கொஞ்சநாள் பிடிக்கும் என்பதுதான் புரட்சிக்காரர்கள் என்பவர்களுக்கும்; வைதீகர்கள், மாறுதல் வேண்டாதவர்கள், பழைமை விரும்பிகள் என்பவர்களுக்கும் உள்ள பேதமாகும். அதுவேதான் வாலிபர்கள் என்பவர்களுக்கும் வயோதிகர்கள் என்பவர்களுக்கும் உள்ள பேதமாகும். அதாவது, வாலிபர்களுக்குப் புதுமை சீக்கிரம் தோன்றும்; சீக்கிரம் பிடிக்கும். காரணம், அவர்கள் உள்ளம் எழுதாத வெறும் சிலேட்டுப் போன்றது. வயதானவர்கள் உள்ளம் பல சங்கதிகள் எழுதப்பெற்றது. புதிய தன்மைகள் பதியப்பட வேண்டுமானால்—முன்னால் பதிந்தவைகள் அழிக்கப்படவேண்டும்; அவைகள் சுலபத்தில் அழிக்கமுடியாத மாதிரி ஆழப் பதிந்துபோயிருக்கும்.

இதைத்தான் வைதீகம் என்றும், பிடிவாதம் என்றும், காலத்திற்குத் தகுந்தபடி மாற்றிக்கொள்ள முடியாமை என்றும் பெரிதும் சொல்லுகிறோம்.

[இராஜபாளையத்தில், 6-12-1944-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 16-12-1944]

## 5. நான் நோக்கும் முறை

பேராசிரியர்களே! மாணவர்களே!

நான் மற்றவர்களைவிட விஷயங்களை முதலில் நன்கு உணர்ந்து, அதன் பிறகு எடுத்துச் சொல்லுவன்; எந்த விஷயத்தையும் நிர்வாணமாகப் பார்த்துத்தான் பின் விளக்குவேன்; இப்படி நிர்வாணமாக உணர்ந்து விளக்குவது நாகரிகக் குறைவு என்று சிலர் எண்ணுவார்கள்!

ஒரு மனிதனை வருணிப்பது என்றால், சொக்காய், நாமம், பட்டை, உருமாலை, தலைப் பாகை இவைகளை வருணித்தால் போதாது. அவனுடைய உடலமைப்பு, உடல் அங்க அவயவங்கள் ஆகியவைகளைப் பற்றியும் உணர்ந்து வருணிக்கவேண்டும். அப்போதுதான் வருணனை பூரணத்துவமானது என்று கூறமுடியும்.

நாடகத்தில் வருகின்ற நடிகையைப் பார்த்து அவளுடைய முகத்தில் பூசிய சாயம், அணிந்துள்ள கில்டு—கண்ணாடி நகைகள், சடை இவைகளைப் பார்த்து அழகாக இருக்கிறாள் என்று கூறிவிட முடியுமா? அந்தச் சாயத்தைக் கலைத்து, கில்டு நகை, கூந்தலில் ஒட்ட வைத்துள்ள ஒட்டு மயிர் முதலியவைகளை எடுத்துவிட்டுப் பார்த்தால்தான் அவள் அழகியா இல்லையா என்பது விளங்கும்.

இந்த முறை எல்லா இடங்களிலும், எல்லோருக்கும் பிடிக்கும் என்று நான் கருதுவதில்லை என்றாலும், உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும்! இந்த வேலையைச் செய்ய வேறு ஆளே இல்லையே!

[மதுரை தியாகராசர் கல்லூரியில், 13-3-1961-ல் சொற்பொழிவு—'விடுதலை' 4-4-1961]

படிப்பகம்

www.padippakam.com



# 6. பகுத்தறிவாளர்க்கு

தோழர்களே!

உயிரினங்களில் மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. மற்றவைகளுக்குக் கிடையாது.

எனவே, பகுத்தறிவாளர் கழகம் என்றால் 'மனிதர்கள் கழகம்' என்பதுதான் பொருள். இத்தனை நாட்களாக மனிதனுக்குப் பகுத்தறிவு இல்லையா? இப்போதுமட்டும் தானா இருக்கின்றது? என்று கேட்கலாம்.

மனிதனுக்குப் பகுத்தறிவு இருந்தும், அதுபற்றிய சிந்தனா சக்தி இல்லாமல், பயன் படுத்தாமல் இருந்து வந்துள்ளோம்; அந்த நிலையை மாற்றி, மக்களைப் பகுத்தறிவு கொண்டு எதையும் சிந்திக்கத் தூண்டவே நாம் முற்படுகின்றோம். பகுத்தறிவு கொண்டு சகல துறைகளிலும் சிந்தனையைச் செலுத்தி நமது இழிவு, மடமை, உணர்ச்சி இன்மை இவைகளை ஒழிக்கப் பாடுபடுகின்றோம்.

நாம் 1000, 2000 ஆண்டுகளாக அறிவைப் பயன்படுத்தாமல், மான அவமானத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்து வந்துவிட்டோம். இனி, பகுத்தறிவைப் பயன்படுத்தி இதிலிருந்து விலகவேண்டும் என்கின்றோம்.

நாம் எதனாலே இழி மக்களாக, மான அவமானமற்ற மக்களாக ஆக்கப்பட்டோமோ அவைகளையெல்லாம் ஒழித்தாகவேண்டும். நம்மைக் கீழான நிலைக்கு, இழி நிலைக்கு ஆளாக்கியது கடவுளும், மதமும், சாஸ்திரமும் முன்னோர்கள் நடப்பும் என்று காண் கின்றோம். இவைகளையெல்லாம் ஒழித்தாகவேண்டும் என்று கூறுகின்றோம்.

இன்றைக்கு அடித் தளத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தானாகட்டும் மான உணர்ச்சி இல்லை என்று கூறமுடியுமா? இருக்கின்றது; அதனைத் தூண்ட எவரும் முற்படவில்லையே; அவனை அடக்கிவைக்க வேண்டுமானால் பலர் தோன்றினார்கள். நாங்கள்தானே, நீ ஏன் இழிமகன், தாழ்த்தப்பட்டவன், பஞ்சமன், பறையன் என்று கேட்டு உணர்வுபெறச் செய்தோம்!

சமுதாயத்தில் ஒவ்வொரு சாதிக்காரனும் தமக்குள்ள சாதி இழிதன்மையினைப் பற்றிச் சிந்திக்காமல், ஒழிக்கப் பரிகாரம் காணாமல் அவனவன் தாங்கள் மற்றவனைவிட உயர்ந்த சாதி, மேலான சாதி என்று கூறிக்கொள்ள முற்படுகின்றானே ஒழிய, சாதி இழிவை ஒழிக்க, சாதி முறையையே ஒழிக்க எண்ணமாட்டேன் என்கின்றார்களே!

ஆதித் திராவிடர்களை எடுத்துக்கொண்டால் பள்ளர்கள் தாங்கள் தேவேந்திர குலம் என்கின்றார்கள்; சக்கிலியர்கள் அருந்ததியார் குலம் என்கின்றார்கள். கம்மாளர் தாங்கள் விஸ்வப் பிராமணர் என்கிறார்கள்; சிலர் தேவாங்கப் பிராமணர் என்கின்றார்கள்; கோமுட்டிகள் தங்களை ஆரிய வைசியர்கள் என்கின்றார்கள். நாட்டுக்கோட்டைச் செட்டிகள் தனவைசியர் என்று கூறிக்கொள்ளுகிறார்கள்; படையாட்சிகள் தங்களை வன்னிய குல சத்திரியார் என்று கூறிப் பூணூலை உருவுகிறார்கள். நாடார்கள் தங்களை சத்திரியர் என்று கூறிக்கொண்டு பூணூலும் போட்டுக்கொண்டு, சில இடங்களில், சந்தியா வந்தனமும் கூடச் செய்கின்றார்கள். இராஜுக்கள் என்ற கூட்டம் தாங்கள்தாம் அசல் சத்திரியர் என்று கூறிப் பூணூல் போட்டுக்கொண்டு திரிகின்றனர்.

இப்படியாக, ஒவ்வொருவனும் தங்கள் தங்கள் சாதிதான் உயர்வு என்று கூறிக் கொள்ளப் போலியான கட்டுக்களை ஏற்படுத்திக்கொண்டு, பெருமை பாராட்டுகின்றார்கள். பொதுவாக எல்லோரையும் பார்ப்பான் இழிமகன், சூத்திரன், பஞ்சமன், பறையன் என்று தானே கூறுகின்றான்; சாத்திரத்தில், ஆதாரங்களில் எழுதிவைத்து இருக்கின்றானே— என்பதுபற்றி எவனுக்காவது எண்ணமே இல்லையே!



மனித சமுத்தாயம் மடமையானது கடவுளினால்தான். மனித சமுதாயம் இழிதன்மை அடைந்ததும் கடவுளினால்தான். இந்தக் கடவுளும் மதமும் சாஸ்திரங்களும் 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பாக மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் ஏற்பட்டவை யாகும்.

மனிதன் இன்றைக்கு இந்தக் கடவுள் மதம், சாஸ்திரங்களைத் தவிர மற்ற சங்கதி எல்லாவற்றிலும் எவ்வளவோ மாற்றிக்கொண்டு இருக்கின்றான். உணவிலே, உடையிலே, நடை உடை பாவனைகளிலே நாகரிகத்திலே எவ்வளவோ மாறுதல்கள் எல்லாம் செய்து கொண்டு இருக்கின்றான். ஆனால், கடவுள், மதம், சாஸ்திரங்களில் மட்டும் மாற்றிக்கொள்ள மறுக்கின்றானே!

பகுத்தறிவைப்பற்றி நாம் சிந்திக்காததன் காரணமாக என்ன என்ன கேடுகள் ஏற்பட்டனவோ, என்னென்ன இன்னல்கள் ஏற்பட்டனவோ அவற்றை நிவர்த்திக்கப் பகுத்தறிவு இயக்கம் தோற்றுவித்து இருக்கின்றோம்.

நாம் குழந்தைகளிடம் பேசுவதில் பகுத்தறிவை உபயோகிப்பது தேவை இல்லை. அது காரணமாக நமக்கோ, மற்றவர்களுக்கோ கேடு ஏற்படாது. ஆனால், மற்ற விஷயங் களில் பகுத்தறிவைப் பயன்படுத்தாவிட்டால் பல கேடுகள் ஏற்பட்டே தீரும். இத்தனை நாள் 'சிந்திக்கக்கூடாது' என்ற தலைப்பில் வந்த காரியங்களை இப்போது மாற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கின்றோம்.

பகுத்தறிவு என்றால் இன்று நாம் முதலில் இப்போது கடவுள், மதம், சாஸ்திரம், முன்னோர்கள் நடப்பு இவைகளின் கேடுகள் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றோம். இதற்கு முன்பு இந்தக் காரியங்களில் யாரும் ஈடுபடவே இல்லை.

பகுத்தறிவிற்கு இந்த நாட்டில் ஏற்பட்ட தடை காரணமாகவே நமது வளர்ச்சியில் தடை ஏற்பட்டுவிட்டது. மற்றைய நாட்டுக்காரர்களுடன் போட்டிபோட முடியாதவர்களாக ஆகிவிட்டோம்.

இனி, நாம் வளர்ச்சிக்கும், நமது கேடுகள் ஒழிவதற்கும் மேல் நாட்டார்கள் போல முன்னேறுவதற்கும் இந்தப் பகுத்தறிவை, சிந்தனையைப் பயன்படுத்தவேண்டும்.

நாம் முதலாவதாக சமுதாயத் துறையில் பகுத்தறிவைச் செலுத்தி இப்போது சிந்திக்க வேண்டும். பிறகு விஞ்ஞான வளர்ச்சிக்கும், அதிசய அற்புதங்களைக் கண்டு பிடிக்கவும் பயன்படுத்திக்கொள்ளலாம்; பயன்படுத்தவும் வேண்டும்.

முதலில் சமுதாய மாற்றம் ஏற்பட்டால்தான், நாம் மனிதர்களாக ஆவோம். நாம் உண்மையான பகுத்தறிவுவாதிகளாக ஆகிவிடுவோமேயானால், நம் மனிதத் தன்மை வளர்ச்சி மட்டுமல்ல சமுதாய வளர்ச்சியும் ஏற்பட்டுவிடும்; மனித சமுதாயத்திலும் ஒழுக்கம் நாணயம் ஏற்படும். மனிதனுடைய கடமை சமுதாயத் தொண்டுதான். ஒருவருக்கு உதவி செய்வது என்பதான உயரிய நிலை ஏற்படும்; மனித சமுதாயமே பரிசுத்தமாகும்.

மேல் நாடுகளில் சமுதாய பேதங்கள், மேல், கீழ் என்ற வேற்றுமைகள் இல்லை. பிறருக்குத் தொண்டு செய்வதைத் தங்கள் கடமையாகவும் கொள்வார்கள்.

சாதாரணமாக, நமக்கு ஒருவன் ஒரு பொருளைக் கொடுத்தால் பேசாமல் வாங்கிக் கொள்ளுகிறோம். ஆனால், மேல்நாட்டுக்காரன் அப்படி அல்ல. ஒருவன் ஒருவனுக்கு ஒன்று கொடுத்தாலோ, சிறு உதவி பண்ணினாலோ, 'நன்றி' என்று சொல்லுவான். இப்போதுதான் நாம் வெள்ளைக்காரனைப் பார்த்துப் பழகி இருக்கின்றோம். சமுதாயத் தொண்டு, 'சோஷியல் சர்வீஸ்' என்பது மேல்நாட்டில்தான் உண்மையாகவே நடக்கின்றது.

மனித சமுதாய வளர்ச்சிக்கும், மரியாதைக்கும் பகுத்தறிவு உதவி செய்யும். பகுத்தறிவுவாதிகளிடம் குறைபாடுகள் பேதங்கள் இருக்கக்கூடாது; மற்றவர்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



உதவும் மனப்பான்மை ஏற்படவேண்டும். நாம் இன்று நமது நிலையில் இருந்து மாறப் பகுத்தறிவு ஒன்றைத் தவிர வேறு எதையுமே சொல்லமுடியாது.

எது எது நமது பகுத்தறிவுக்குக் கேடான காரியம், மாறான காரியம் என்று கருது கின்றோமோ அவைகள் எல்லாம் மனிதன் மடையனாக-காட்டுமிராண்டிகளாக இருந்த காலத்தில் 1000, 2000 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்டதாகும்.

'1000, 2000 ஆண்டுகளுக்கு முன்பாக மனிதனுக்கு எந்த அளவு அறிவு இருந் திருக்க முடியும்! அதிசய அற்புதங்களைச் சிந்திக்க அவனுக்கு எப்படி வாய்ப்பு ஏற்பட்டு இருக்கும்?' என்று கேட்டால் எவனும் பதில் சொல்லமுடியாது. நமது பாட்டன் கட்டை வண்டியில் போனான்; குச்சுவீட்டில் இருந்தான். ஆகவே, நானும் கட்டைவண்டியில் தான் போவேன்; குச்சு வீட்டில்தான் இருப்பேன்; மோட்டாரோ, இரயிலோ, மச்சுவீடோ மாடிவீடோ வேண்டாம் என்று எவன் சொல்லுகின்றான்? தோழர்களே! மேல்நாடுகளில் 50, 60 ஆண்டுகட்கு முன்பே—நாத்திகர்கள் சங்கம், சிந்தனையாளர்கள் சங்கம், தாராள நோக்காளர்கள் சங்கம், கடவுள் மறுப்பாளர் சங்கம் என்று பல பெயர்களில் பல சங்கங்கள் தோன்றி வேலைசெய்துகொண்டு வருகின்றன.

நான் பாரிசில் ஒரு பகுத்தறிவுப் பத்திரிகையைப் பார்த்தேன். அதில் சிலுவையை ஒரு காலில் மிதித்துக்கொண்டு இரண்டாகப் பிளப்பதாகப் போடப்பட்டு இருந்ததைக் கண்டேன்.

தோழர்களே! இந்தப் பகுத்தறிவு, சிந்தனை வளர்ச்சி எங்கு கொண்டு விடுமோ சொல்லவே முடியாது. 20 ஆண்டுகட்கு முன்பு நான் விளையாட்டுப் போலச் சொல்லி உள்ளேன். அதை 'இனி வரும் உலகம்' என்ற புத்தகத்தைப் பார்த்தால் தெரியும். அதிலே பலவற்றைச் சொல்லி இருக்கின்றேன். அவைகளில் பாதிக்குமேல் இன்று நடை முறைக்கு வந்துவிட்டன.

'மனிதன் இப்போது சாப்பிடுவதுபோல நிறையச் சாப்பிடத் தேவையில்லை. துவரை பெரிதோ, மொச்சைக்கொட்டைப் பெரிதோ ஒரு மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டால் போதும். இரண்டு நாளைக்குப் பசிக்காது' என்று எழுதியிருக்கின்றேன். இது இன்றைக்கு நடைமுறைக்குச் சாத்தியம் என்று கண்டுள்ளார்கள்.

இன்னும் 10, 15 ஆண்டுகள் போனால், மனிதன் சாப்பாடே நிறைந்து குளிகை முறைக்கு வந்துவிடும். நான் அப் புத்தகத்தில் மற்றும் ஒன்று கூறியுள்ளேன். அதில் 'குழந்தை உற்பத்திக்கு ஆண்-பெண் சேர்க்கை தேவையில்லை. இருவர் இந்திரியத் தையும் எடுத்து ஒரு குழாயில் போட்டு அதிலேயே குழந்தையை உற்பத்தி பண்ணும்படி யான நிலை வரும்' என்று கூறியுள்ளேன்.

அந்தப் புத்தகத்தின் அட்டையிலேயே ஒருவர் ஒரு சோதனைக் குழாயில் குழந் தையை உற்பத்தி பண்ணுவது போன்ற படமும் வெளியிட்டுள்ளேன்.

இப்பொழுது ஒரு வாரத்திற்கு முன்பு வந்த பத்திரிகைச் செய்தியில் 'டெஸ்ட் டியூப் பேபி' (சோதனைக் குழாயில் குழந்தை) என்பதாக ஆண்-பெண் சேர்க்கை இன்றிக் குழந்தையை உற்பத்தி செய்யமுடியும் என்பதைச் செய்து காட்டிவிட்டார்களே!

இந்த முறை, கொஞ்ச காலமாகக் கால்நடைக்குச் செய்யப்பட்டுதான் வந்தது. பசு, எருமை இவைகளுக்குக் காளை சேர்க்காமல் கருத் தரிக்கச் செய்யப்பட்டு வருகின்றது. மாடும் செயற்கைக் கரு தரித்துக் கன்று போடுவதைப் பார்த்து இருக்கின்றோம்.

அடுத்து, கோழிப் பண்ணைகளில் கோழி அடை காக்காமலே, பெட்டிகளில் முட்டைகளை அடுக்கிச் செயற்கை உஷ்ணத்தின்மூலம் குஞ்சு பொரிக்கச் செய்கின்றார்களே! கால் நடைகளுக்கும், பறவைகளுக்கும் இருந்து வந்தது இன்று மனிதருக்கும் பொருந்தும் என்று செய்து காட்டிவிட்டார்கள்.



எனவே, பகுத்தறிவு—மனிதனை உன்னத அறிவினைப் பெறச் செய்யும் அதிசய அற்புதங்களை எல்லாம் கண்டுபிடிக்கச் செய்து, மனித சமுதாயத்தின் தொல்லைகளை, குறைபாடுகளைப் போக்க உதவும்.

[மானா மதுரை, சிவகெங்கை, தேவகோட்டையில், 9, 10, 11-11-1971-ல் சொற்பொழிவு—'விடுதலை' 16-11-1971]

## 7. உலகம் வளர்ச்சி அடையாததற்குக் காரணம்

உலக மாறுதலை வளர்ச்சிக்குப் பயன்படாமல் செய்வதும்—மனிதனுக்கு உள்ள அறிவின் சக்தியை மனித வளர்ச்சிக்கு, கவலையற்ற வாழ்வுக்கு உதவாமல் செய்வதும் பெரிதும் கடவுள், கடவுள் சக்தி, கடவுள் செயல் என்பவை போன்ற முட்டாள்தனமான கருத்துக்களும், நம்பிக்கையுமேயாகும்.

கடவுள் எண்ணமோ, மனித சக்திக்கு மேம்பட்ட தெய்வீக சக்தி என்கின்ற எண்ணமோ மனிதனுக்கு இல்லாமல் இருந்திருக்குமானால்—இன்று மனிதன் குறைந்தது இந்த 3000–4000 ஆண்டுகளில், அவனது அறிவின் பயனாய், சிந்தனா சக்தியின் பயனாய், 500 ஆண்டுகளாவது உயிர் வாழத் தக்க தன்மையை அடைந்திருப்பான்; இறக்கை இல்லா மலேயே ஆகாயத்தில் பறக்கும் சக்தியை அடைந்திருப்பான் என்பதோடு, கவலையில்லா மலேயே வாழும் தன்மையையும் அடைந்திருப்பான்.

சர்வ சக்தியுள்ள கடவுள் ஒன்று இருக்கிறது; 'எல்லாம் கடவுள் செயல்' எனக் கருதும் மக்களில் யாருக்குத் துக்கமும் ஏமாற்றமும் கவலையுமில்லாமல் இருக்க முடிகிறது?

எனவே, மனித சமுதாய வளர்ச்சிக்கும், மனித ஜீவனுக்குத் துக்கமும் கவலையு மில்லாமல் இருப்பதற்கும், 'சர்வ சக்தியுள்ள கடவுள்' ஒருவர் இருக்கின்றார் என்கின்ற எண்ணம் அடியோடு ஒழிந்தாக வேண்டும்.

'கடவுள் இல்லை; இல்லவே இல்லை' என்கின்ற கருத்தை மக்களிடையே உண்டாக்கி, அவர்களுக்கு அறிவுத் தெளிவை உண்டாக்குவதைவிட, உலகில் ஜீவகாருண்யத் தன்மை வேறில்லை என்றே சொல்லுவேன்.

மோட்சம் என்ற சொல்லுக்குப் பொருள் என்னவென்றால், 'துக்க நாசம், சுகப் பிராப்தி' என்றுதான் சொல்லப்படுகிறது.

இச் சொல்லுக்கு ஆதார பூர்வமான பொருளும் (அர்த்தமும்) இதுவாகத்தான் இருந்து வருகிறது. இந்த நிலைக்கு அறிவுதான்—அதாவது, ஞானம்தான் காரணம் என்றும் காணப்படுகிறது. இதனாலேயேதான், 'ஞானிக்குத் துக்கமில்லை; கவலையில்லை' என்று சொல்லப்படுவதோடு, 'ஞானிக்குக் கடவுளுமில்லை; கல்லெடுப்புமில்லை' என்று சொல்லப் படுகிறது.

ஞானி என்றால் என்ன பொருள்? அவன் யார்? என்று பார்த்தால், ஞானமுடையவன் 'ஞானி', புத்தியுடையவன் 'புத்தன்', அறிவை உடையவன் 'அறிவன்' என்பதாகும். இவர்களுக்கெல்லாம் கடவுள் இல்லாமல் போனதற்குக் காரணமென்ன?

அறிவையோ, புத்தியையோ, ஞானத்தையோ, கொண்டு சிந்திப்பதாலேயே கடவுள் என்ற சொல்லே தென்படுவதற்கில்லாமல் போய்விடுகிறது. ஞானிக்குக் கடவுள் இல்லை என்பது மாத்திரமல்லாமல், 'துறவிக்குக் கடவுள் இல்லை' என்று சொல்லப்படுகிறதல்லவா? அதன் பொருள் என்ன? துறவி என்றால்—ஆசையற்றவன், பற்று அற்றவன் என்பதுதான் பொருள். துறவிக்கு ஆக ... லை; அவனுக்கு எதைப்பற்றியும் ஆசையில்லை. ஆனதால், ... ிய கவலை இல்லை என்பதோடு, அவனுக்குக் கடவுள் தேவையுமில்லை; ... யத்துகொள்ளுகிறான்.

1686—253

படிப்பகம்

www.padippakam.com



எனவே, இயற்கையை நல்லவண்ணம் உணர்ந்துகொள்வதும், அதற்கேற்பதான வாழ்வை அமைத்துக்கொள்ளுவதுமான அறிவுதான் முன் குறிப்பிட்ட ஞானமாகும்.

எனவே, பகுத்தறிவு பெற்ற மனித சமுதாயம் 'மனிதத் தன்மை' அடைவதற்குப் பகுத்தறிவுவாதியாக—அதாவது, பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படாத, தெரிந்துகொள்ள முடியாத விஷயங்களை, அவை எவையானாலும் சிந்திக்காமலும் அவற்றைப்பற்றிக் கவலைப்படாமலும் இருப்பதுதான் மனிதத் தன்மையாகும் என்று குறிப்பிட்டு, இதை முடிக்கிறேன்.

[நூல் : 'கடவுள் ஒரு கற்பனையே'-முதற் பதிப்பு : 1971]

## 8. உலகம் ஒன்றாகவேண்டும்

தலைவரவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

நாம் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்காக—மூடநம்பிக்கையினை ஒழிக்கப் பகுத்தறிவு முறையில் இந்தப் 'பன்றிக் கறி, மாட்டுக் கறி விருந்தினை ஏற்பாடு செய்து இருக்கின்றோம். இது ஒன்றும் அதிசயமானது அல்ல. பன்றி, மாடு சாப்பிடக்கூடாது என்று எந்த ஆதாரத்தில் உள்ளது? பழக்க வழக்கத்தின் காரணமாக, சுற்றுச் சார்பு காரணமாகவே சாப்பிடக்கூடாது என்று உள்ளதே ஒழிய வேறு ஒன்றுமில்லை.

உலகிலேயே ஒரு முறைதான் கூடாது என்று இருக்கிறது; எல்லா நாட்டிலும் இருக்கிறது. அதுதான் மகன், தாய்—தங்கை—தமக்கை முதலியவர்களை மணக்கக்கூடாது; தந்தை மகளை மணக்கக்கூடாது என்பது. மற்றபடி ஒரு மாதிரியான முறை எதிலுமே இல்லை—திருமணத்தில்கூட.

மற்றும், இதுவரை உலகில் சாப்பிடக்கூடாதது இன்ன ஜீவன் என்று கண்டுபிடிக்கப் படவே இல்லையே! பாம்பு, காக்கை, மீன், தவளை போன்றவைகளை எல்லாம் மக்கள் சாப்பிடுகின்றார்களே, மலாயாவுக்குப் போனவர்களுக்குத் தெரியும். அங்கு பாம்பு, ஓனான், பல்லி முதற்கொண்டு எல்லா ஜீவன்களையும் நெய்யில் பொரித்துக் கடையில் தொங்கவிட்டு இருப்பார்கள்; மக்களனைவரும் வாங்கிக்கொண்டுபோய்ச் சாப்பிடுகின் றார்கள்; கடையில் மிக்சர், பகோடா முதலிய பலகாரம் வாங்குவதுபோல் வாங்கிக்கொண்டு போகிறார்கள். பாம்பைக்கூடத் தலையை வெட்டிப்போட்டுவிட்டுச் சமைத்துச் சாப்பிடு கின்றார்களே! எனவே, சாப்பிடக்கூடாத பண்டம் என்று ஒன்றுமேயில்லை. பழக்கம் வழக்கம் காரணமாகத்தான்—சாப்பிடுவதும், சாப்பிட மறுப்பதும் ஆகும். இந்த சம்பிரதாயம்கூட எல்லோருக்கும் ஒரு மாதிரி இல்லையே! நாம் மாடு சாப்பிடக்கூடாது; பன்றி சாப்பிடக்கூடாது என்பதற்கு ஒரு நிபந்தனைகூட இல்லையே! எங்கள் சாதி நாயுடு சாதி; சுமார் 60, 70 வருடங்களுக்கு முன்பு எங்கள் சாதியார்கள் எல்லாம் பன்றி சாப்பிட்டுக் கொண்டுதான் இருந்தார்கள்; வீட்டுக்கு வீடு பன்றி வளர்ப்பார்கள்; குழந்தை வெளிக்குப் போனால் அதுதான் சாப்பிட்டுச் சுத்தம் செய்யும்.

அன்று, பன்றியைக் கிராமத்தில் அடித்து எல்லாச் சாதிக்காரர்களும் விலைவைத்து பங்கு போட்டுக்கொள்வார்கள். நாயுடு, உடையார், படையாட்சி, கவுண்டர் எல்லோரும் வாங்கிக் கொண்டுபோய்ச் சாப்பிடுவார்கள். அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர் களைச் சொல்லவேண்டியதே இல்லை; இன்றும் சாப்பிட்டுக்கொண்டே இருக்கின்றார்கள்.

மாடு சாப்பிடுவதை மதத்தின் பெயரால் தடுத்து விட்டார்கள். கிறிஸ்தவன் சாப்பிடலாம்; முஸ்லிம் சாப்பிடலாம்; தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்கள் சாப்பிடு கின்றார்கள். இவர்கள் இந்துக்கள் என்பவர்களில் சுமார் 20, 25 சதம் அல்லவா? மற்றவர்கள் சாப்பிட்டால் என்ன கெட்டுப்போகும்? இன்றைக்குச் சீமைக்குப் போய்வந்த முஸ்லிம்களில் பலர் பன்றி சாப்பிடுகின்றார்கள். முஸ்லிம்—வேதம் சொல்லி அறுக்காத மாமிசத்தைச் சாப்பிடமாட்டான்; ஆனால், இன்று முஸ்லிம்களில் பலர், நம்மவர்களின் இல்லங்களில் கோழி முதலியவைகள் சாப்பிடுகின்றார்களே—இவைகள் வேதம் சொல்லி அறுக்கப் பட்டவைகள் அல்லவே!



தொட்டதற்கெல்லாம் இப்படியிருக்கின்ற அமைப்பு முறைகள் நாளாவட்டத்தில் மதிப் பிழந்து மறைந்துகொண்டே வருகின்றன. நான் முன்பே திருமண முறைபற்றிக் குறிப் பிட்டேன். இந்துக்கள் சிற்றப்பா முறையில் உள்ளவர்களின் பெண்களை மணப்பதில்லை என்று. இதுகூட மலையாளத்தில் கடைப் பிடிக்கப் படுவதில்லை. சில மலையாளிகள் சிற்றப்பா மகளைக் கட்டிக்கொள்கின்றார்கள். உதாரணத்துக்குச் சொல்லுகின்றேன். கிருஷ்ணன் நாயர் என்ற ஒரு பிரபலமானவர் இருந்தார். அவர், தம் மகனுக்குத் தமது தம்பி கோவிந்தன் நாயர் என்பவரின் பெண்ணைத்தான் கட்டிவைத்தார். என்ன என்று கேட்டால், தாய், தந்தையர் வித்தியாசத்தை மட்டும் தான் பார்க்கிறார்கள். 'தாய்—தந்தையர், மண மக்களுக்கு ஒருவராக இருக்கக்கூடாது' என்று மட்டுந்தான் நினைக்கின்றார்கள்.

இப்படியாக, ஒன்றில்கூட ஒரு மாதிரியான பழக்கம் எல்லோருக்கும் இல்லை. பழக்க வழக்க அடிப்படையில்தான் ஒவ்வொன்றும் இருக்கின்றது. அதில் ஒன்றுதான், இப்படி மாட்டுக் கறி, பன்றிக் கறி பற்றியதும். இதில் ஒன்றும் பிரமாதமான சங்கதி இல்லை. மாடு சாப்பிடக்கூடாது என்று நமக்கும், பார்ப்பனருக்கும்தான் தடுக்கப்பட்டு இருக்கின்றதே ஒழிய—தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்கு இல்லையே! நாங்கள் எல்லாம் சிறுவயதில் பன்றிக் கறி சாப்பிட்டவர்கள்தான். எங்கள் தாயாருக்கு மாமிசம் என்றாலே, கண்டாலே வாந்தி வரும். எப்போது இந்த நிலை? பணக்காரியாகி அந்தஸ்து உயர்ந்த பிற்பாடுதான்; அவர்கள் தகப்பனார் குடும்பம் மாமிசம் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள்தான்.

தோழர்களே! நாம் உலகம் ஒன்றாகவேண்டும் என்று நினைக்கின்றோம். நம் இயக்கம் உலக இயக்கம். உலக இயக்கம் என்றதும் மனிதன் மலைப்பான்; இவர்கள் இங்கிருந்துகொண்டுதானே பேசுகின்றார்கள் என்று. முற்காலத்தில் மனிதனுக்கு 25 மைலுக்கு அப்பால் உள்ளதே மலைப்பாக இருக்கும்; அன்றைக்கு உலகத்தினை உணர அவனுக்குச் சாதனங்கள் இல்லை. அது மட்டுமல்ல; தமது நாட்டைப் பற்றிக் கூட உணர வசதி இல்லை. நல்ல ரோடு கிடையாது, போக்குவரத்து, வாகன வசதி கிடையாது. எனவே, அவனுக்கு அண்டை அயல் நாடுகள் தெரியாது.

தமிழ் என்றும், தெலுங்கு என்றும், மலையாளம் என்றும், கன்னடம் என்றும், மராட்டி, குஜராத்தி என்றும் பற்பல மொழிகள் ஏற்பட்டதற்குக் காரணமே—ஒரு பகுதிக்கு ஒரு பகுதி தொடர்பில்லாத காரணத்தினால் ஆங்காங்குள்ளவர்கள் ஆங்காங்கு பேசியது ஒவ்வொரு மொழியாக ஆகிவிட்டது. நமது நாட்டில் மட்டும் இப்படியல்ல. மேல்நாடுகளில் இப்படித்தான். ஸ்பெயின், போர்த்துகீஸ், பிரெஞ்சு என்றும்; ஸ்வீடிஷ், ஜெர்மன், இத்தாலி, கிரீஸ் என்றும் ஏராளமான மொழிகள் இருக்கின்றன என்றால்—முற்காலத்தில் ஒரு பகுதி மக்களுக்கும், மற்றொரு பகுதி மக்களுக்கும் தொடர்பில்லாத காரணத்தினால்தான் ஆகும்.

இன்று அப்படியல்லவே! அமெரிக்காவானது 10,000 மைல்கள் என்றால் $1\frac{1}{2}$ நாளில் அங்கு போய்விடலாமே! நமக்கும் ரஷ்யாவுக்கும் 8 மணி நேரப் பயணம்தானே! போக 8 மணி; அங்கு காரியம் பார்க்க 8 மணி; திரும்பி வர 8 மணி நேரம் என்று வைத்துக் கொண்டால்—24 மணி நேரத்தில் ரஷ்யாவுக்குப் போய் வந்துவிடலாமே! இப்படியாக உலகம் விஞ்ஞான வளர்ச்சி காரணமாகப் பக்கத்தில் வந்துகொண்டு இருக்கின்றது.

இந்த அதிசய காலத்தில் எனது தாய்மொழி; எனது தாய்நாடு; இதற்காக எனது உயிரை விடுவேன் என்று முட்டாள்தனமாகப் பிடிவாதம் பிடித்தால் நாம் எப்போது முன்னேறுவது? உலகம் நாளுக்குநாள் நமக்கு நெருக்கமாக வந்துகொண்டிருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? மனிதன் முன்பு கஞ்சிதான் குடிப்பான். எனது 25-வது வயது வரைக்கும் நான் கஞ்சிதான் குடித்தேன்; என் கடைக்குக் கஞ்சி செம்பிலே வரும்.

படிப்பகம்

www.padippakam.com



எனக்கே இந்தக் கதி என்றால் மற்றவர்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? இன்று காபி சாப்பிடாதவர்கள் யார் இருக்கின்றார்கள்? பொருளாதாரக் குறைவு காரணமாக யாரும் காபி குடிக்காமல் இல்லையே!

அதுபோல, எல்லா மக்களுக்கும் எல்லா விதமான சவுகரியமும் ஏற்படத்தான் போகின்றது; ஏற்பட்டே ஆகவேண்டும். நாம் நமது சில்லரை எண்ணங்களை மாற்றிக் கொண்டு, உலகம் எல்லாம் ஒன்றாக வேண்டும் என்பதற்கும் ஏற்ப நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். மக்கள் எல்லாம் ஒன்றாக ஆக, பேதங்களை ஒழிக்கவேண்டும்; பேதம் இனி நிலைக்கவும் முடியாது. பொருளாதார பேதமும், சாதி பேதத் தன்மையும் ஒழிக்கப்பட்டு விடுமானால், மற்றுள்ள பேதங்கள் எல்லாம் நிலைக்கமாட்டா; உலகம் ஒன்று என்ற தன்மைக்குத்தான் கொண்டு வந்துவிடும்.

ரஷ்யாவில் பொருளாதார பேதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. அதன் காரணமாக அந்த நாடு என்ன கெட்டுப்போய்விட்டது? பதவி காரணமாகக்கூட அங்கு உயர்வு, தாழ்வு பாராட்டுவது இல்லையே! நமது நாட்டில் பேதங்களை வளர்க்க—கோயில், மதம், மத குருக்கள், மற்றும் ஏராளமான சாதனங்கள் இருக்கின்றன. நாம் எண்ணத்தில் மாற்றம் அடைந்திருக்கிறோமே ஒழிய, காரியத்தில் மாற்றம் அடையவே இல்லை. மாட்டுக் கறி, பன்றிக் கறி சாப்பிடக்கூடாது என்ற மூடநம்பிக்கை ஒழியவேண்டும் என்று இப்படி விருந்து ஏற்பாடு செய்கின்றோமே–இதுபோல, மற்ற மூடநம்பிக்கைகள் ஒழியவும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். தோழர்களே! நம் முயற்சி ஒன்றும் வீண்போகவில்லையே! பல மாறுதல்களை அடையச்செய்துள்ளதே!

இன்றைக்குத் தமிழ் நாட்டில் யார் பெரிய மனிதர்கள் இருக்கின்றார்கள்? விரல் விட்டுக் கூறுங்களேன், பார்ப்போம்! முன்பு எதற்கெடுத்தாலும் பெரியவர்கள், பெரிய வீட்டுக்காரர்கள் என்று பெருமையாகக் கூறுவார்கள்; மதிப்பார்கள். இன்று அது அடியோடு போய்விட்டதே! முன்பு பணக்காரர் என்பதற்காகச் சமுதாயத்தில் உயர்வும் மதிப்பும் இருந்தது. இன்றைக்குக் கோடிக்கணக்கில் பணம் வைத்திருப்பவர் ஆனாலும், யார் அவரை உயர்வாக மதித்து மரியாதை பண்ணுகின்றார்கள்? அவன், ரோட்டில் போனால்—'கொள்ளைக்காரன்—திருட்டுப் பயல், போகின்றான்' என்கிறார்கள்.

அடுத்து, இன்று படித்தவன், மேதை என்று யாரை மதிக்கின்றார்கள்? பி.ஏ., எம்.ஏ., பி. எச்டி., டாக்டர் போன்ற படிப்புப் படித்துப் பட்டம் பெற்றவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். இவர்களை எல்லாம் அறிவாளிகள் என்று யார் ஒத்துக்கொள்கிறார்கள்? இப்படியாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இனி எதை வளர ஒட்டாமல் மூடிவைத்தாலும் அறிவை மூடிவைத்து வளர்ச்சியைத் தடுக்க முடியாது.

50 வருஷத்துக்கு முன்பு வைணவன்—வீர வைணவன் என்று கூறிக்கொண்டு சைவனைக் கண்ணால்கூடப் பார்க்கக் கூசுவார்கள். சைவனும்—வீர சைவன் என்று கூறிக்கொண்டு, வைணவனைப் பார்க்கமாட்டான்; பேசமாட்டான். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்று நமது இயக்கத்தின் காரணமாக ஏற்படும் மாறுதலைக் கண்டு பயந்து ஒன்று சேர்ந்து விட்டார்களே! இன்று போராட்டம் என்பது மாறுதல்காரர்களுக்கும், மாறுதல் வேண்டாதவர்களுக்கும்தான் ஆகும்.

[கோவையில், 4-11-1972-ல் சொற்பொழிவு—'விடுதலை' 14-11-1972]

தோழர்களே!

இந்தத் திருமண முறையானது காட்டுமிராண்டி காலத்தில், அதாவது 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டதாகும். அதை இன்றைக்கும் மனிதன் எதற்காகக் கடைப்பிடிக்க வேண்டும்? ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணை அடிமைப்படுத்தவே திருமணம் நடைபெறுகிறது. கோயிலுக்கு எப்படி மிருகங்களைப் பலி கொடுக்கிறார்களோ அது போலவே, ஆணுக்குப் பெண்ணைப் பலி கொடுக்கிற விழாத்தானே திருமணம்!



இந்த நாட்டில் மக்கள் தொகையில் சரிபாதியான பெண்கள் இனத்தை எதற்காக இப்படிக் கொடுமைப்படுத்த வேண்டும்? இந்தத் திருமண முறை பெரிதும் சுயநலத்துக்காகவே ஒழியப் பொது நலத்துக்கு அல்லவே! புருஷனுடைய வேலை பெண்டாட்டியைப் பாதுகாப்பதும், பெண்டாட்டி புருஷனைப் பாதுகாப்பதும் இருவருக்கும் குட்டிகள் ஏற்பட்டால் அதனை இரண்டு பேருமே சேர்ந்து காப்பாற்றவும்தான் பயன்படுகிறதே ஒழிய சமுதாயத்துக்குப் பயன்படுவதே இல்லையே!

அடுத்த வீடு நெருப்புப் பிடித்தாலும் அதுபற்றிக் கவலைப்படமாட்டான். ஒரு வாளி தண்ணீர் கொடுப்பான். ஆனால், அது தன் வீட்டுக்குத் தீ பரவாது இருக்கட்டும் என்பதற்காகவேயாகும்!

ஆண்களும் பெண்களும் இத்தகைய தொல்லைகளில் மாட்டிக்கொள்ளாமல், படித்து ஆராய்ந்து விஞ்ஞான அதிசய அற்புதங்களை எல்லாம் கண்டுபிடித்து மேன்மை அடைய வேண்டாமா?

அதனைவிடுத்து, புருஷன் பெண்டாட்டியாகி, தனிக் குடித்தனம், தனிச் சமையல் என்று ஆக்கிக்கொண்டு பொதுநல உணர்ச்சியற்றவர்களாகவே ஆகின்றார்கள்.

உலகம் வளர்ச்சி அடைய வேண்டுமானால், உலகம் தொல்லை இல்லாமல் சுபிட்சம் அடைய வேண்டுமானால் திருமணம் என்பதை கிரிமினல் குற்றமாக்கிவிட வேண்டும். இன்று இல்லாவிட்டாலும் பிறகு வந்தே தீரும். நான் சொன்னது நடக்காமல் இருக்கவில்லையே!

எனவே, திருமணத் துறையில் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். சம எண்ணிக்கை உடையதும், சம உரிமைகளைப் பெறவேண்டியதுமான ஜீவன்களை இப்படிக் கொடுமைப்படுத்துவது மிகவும் அக்கிரமமாகும்.

பெற்றோர்கள் தங்கள் பெண்களை 22 வயது வரைக்கும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். பிறகு ஒரு தொழிலும் கிடைக்கச் செய்த பிறகே திருமணத்தைப்பற்றிப் பேச வேண்டும். அதுவும் அந்தப் பெண்ணாகப் பார்த்து ஓர் ஆணைத் தெரிந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே ஒழிய பெற்றோர்கள் குறுக்கே நிற்கக்கூடாது.

[சென்னை எழும்பூர் பெரியார் திடலில், 27-8-1973-ல் சொற்பொழிவு—'விடுதலை' 3-9-1973]

மனித சமுதாயத்தில் நாம் சூத்திரர்—நாலாம் சாதி—இழிமக்கள் என்கின்ற பட்டியலில் இருக்கின்றோம். இவை மாத்திரமா? பார்ப்பனனின் தாசி மகனாகவும், இது இந்து மத சாஸ்திரங்களின்படி மாத்திரமல்லாமல், 'இந்து லா' என்கின்ற சட்டத்தின்படியும் நமக்கு இருந்து வருகிறது.

இது மாத்திரமா? வாழ்நாள் நடப்பிலும் நாம் அயோக்கியர்களாகவே இருக்கிறோம். அக்கிரமங்கள் செய்வதிலும் நாம் பயப்படுவதில்லை. நாம் ஏன் பாவிகளாக இருக்க வேண்டும்?

இவற்றிற்குக் காரணம் நமது மதமும், கடவுள்களுமேயாகும். நம்மை நாம் சிறிது கூட அறிவு மானம், வெட்கம் இல்லாமல் இந்துக்கள் ('இந்து') என்று சொல்லிக் கொள்ளுகிறோம். இந்து என்கின்ற மதத் தலைப்பில்தான் நாம் இருந்து வருகிறோம். இந்து என்றால் பார்ப்பனர் தவிர, மற்ற நாம் யாவரும் சூத்திரர்கள் என்று தானே ஆகிறோம்?

சூத்திரன் என்றால் இந்து, இந்து என்றால் சூத்திரன். இது சாஸ்திரப்படி என்பது மாத்திரமல்லாமல், 'இந்து லா' என்னும் சட்டப்படியும்தானே ஆக்கப்பட்டிருக்கிறது!

படிப்பகம்

www.padippakam.com



சூத்திரன் என்றால், சாஸ்திரப்படியும், 'இந்து லா' சட்டப்படியும் தாசிபுத்திரன் என்றுதானே இருந்து வருகிறது! ஆகவே, நம்மை நாமே இந்து என்று சொல்லிக்கொண்டால் அல்லது நாம் இந்துவாக இருக்கும்வரை நாம் நாலாம் சாதி என்பது மாத்திரமல்லாமல், தாசி புத்திரன் என்பதையும் சொல்லிக் கொள்ளுகிறவர்கள் ஆகிறோம். இது மாத்திரமா? நடவடிக்கைகளிலும் நாமாகவே சூத்திரனாகத்தானே நடந்து கொள்ளுகிறோம்! அதாவது நாம் கர்ப்பக் கிரகம் செல்லக்கூடாத, நாம் தொடக்கூடாத, எந்தக் கோவிலுக்குப் போனாலும், எந்தச் சாமியைக் கும்பிட்டாலும், நாலாம் சாதி, தீண்டப்படாத ஈன சாதி, சூத்திரன், தாசிமகன் என்பதை நேரடியாகக் கொண்டு நடத்தையில் நடந்து வருகிறோம் என்பதில் சந்தேகமென்ன? ஆட்சேபணை என்ன? ஆகவே, இந்து மக்கள் என்பவர்கள் இடையில் சாதி ஒழிப்புப் பிரச்சாரம் நாம் எவ்வளவு செய்தாலும் அது எப்படி நமக்குப் பயன் படக்கூடும்?

நம்மை நாம் இந்து என்று சொல்லிக் கொள்ளும் வரையிலும், கோவிலுக்குச் செல்லும் வரையிலும், அங்குள்ள கடவுள் என்பவைகளை வணங்கும் வரையிலும் நாம் சூத்திரனாக–பார்ப்பானின் தாசிமகனாக, நாலாம் அய்ந்தாம் சாதியானாக இருந்துதான் தீருவோம்.

மற்றும், இந்து என்றால், கருப்பு என்பது பொருளாகும் என்பதோடு, இந்து என்றால், திருடன் என்பது (பார்சி மொழியில்) பொருளாகும். இதை உணராத மக்கள் யாரானாலும் அவர்கள் மானமும், அறிவும் அற்றவர்களே ஆவார்கள்.

மற்றும், கடவுள் நம்பிக்கை உள்ள எவருமே யோக்கியராய் இருக்க வேண்டிய அவசியமே இல்லாமல் போய்விட்டதற்குக் காரணம், மனிதன் வணங்கும் கடவுள்கள் யாவுமே யாம்! எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும், எந்த மதத்தைச் சேர்ந்த கடவுள்களா னாலும் ஜபம் செய்தால், தொழுகை செய்தால், வணங்கினால், ஸ்தல யாத்திரை, தீர்த்த யாத்திரை செய்தால் மன்னித்து விடும்படியானவைகளாய் இருப்பதால், அப்படிப்பட்டவை இருக்கும்வரை மனிதன் யோக்கியனாகவோ அயோக்கியனாகவோ இருக்கமுடியாது. கிறிஸ்தவ மத தர்மப்படி, 'மனிதர்கள் எல்லோரும் பாவிகளே ஆவார்கள்; ஏசு மூலம் ஜபம், பிரார்த்தனை செய்தால் மன்னிக்கப்பட்டுவிடுவார்கள்' என்பது கட்டளையாகும். இதனால்தான் மற்ற மதங்களை விட, கிறிஸ்தவ மதத்தில் நேர்மையற்றவர்கள் அதிகமான பேர்கள் இருக்க வேண்டியதாகிவிட்டது. இஸ்லாமியர்களும் தொழுகையினால், வேண்டு கோளால் பாவம் மன்னிக்கப்பட்டு விடுகிறது என்ற கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். இந்துக்கள் என்பவர்களோ எல்லாவிதமான பாவத்திற்கும், அவை ஒழிய கோயில், குளம், ஸ்தலம் யாத்திரையே போதுமானவையாகும் என்பது உறுதியான கொள்கையாகும்.

இந்த நிலையில் எந்த மனிதன்தான் யோக்கியனாக இருக்க முடியும்? மனிதன் எதற்காக யோக்கியனாக இருக்க வேண்டும்?

ஆகவேதான், மனிதன் என்றால் அயோக்கியன், சுயநலத்துக்காக எதையும் செய்ய வசதி உள்ளவன் என்பதாக ஏற்பட்டுவிட்டது. ஆகவே, மனிதன் இழிமகனாகவும், அயோக்கியனாகவும் நேர்மை அற்றவனாகவும் இருப்பதற்குக் கடவுள், மதம் ஆகிய வைகளே காரணமாகும்.

கடவுள், மதம், வேதம், சாஸ்திரம் ஆகியவைகள் உள்ளவரை, இவற்றின் மீது மக்களுக்கு நம்பிக்கை உள்ளவரை மக்களுக்கு மான உணர்ச்சி வராது என்பதோடு, மனிதர்கள் நேர்மையானவர்களாக, யோக்கியர்களாக இருக்கமுடியாது என்பது உறுதி! உறுதி! உறுதியாகும்!

['விடுதலை'–தலையங்கம்—3-9-1973]

# பகுதி VII

# தன்னைப் பற்றி

படிப்பகம்

www.padippakam.com

# 1. தன் விளக்கம்

## 1. நான் இந்துவல்ல

தோழர்களே!

எனக்கு மோட்சத்திலோ, பாவ மன்னிப்பிலோ, கடவுள் ஆட்சியிலோ சிறிதும் நம்பிக்கை கிடையாது. ஆத்மா என்பதோ, ஜீவன் என்பதோ ஒன்று இருப்பதாக நான் நம்புபவனே அல்லன். அது விஷயத்தில் எல்லா மதங்களும் ஒன்றுபோல்தான் இருக்கின்றன. உலகிலுள்ள சகல மதங்களுக்கும், ஒரு சர்வசக்தியுள்ள கடவுளும், மோட்சமும், நரகமும், ஆத்மாவும், ஜீவனும் உண்டு. பிரார்த்திப்பதன் மூலம் எல்லா மதங்களிலும் பாவ மன்னிப்பு உண்டு. அவற்றில் ஒன்று பெரிது; மற்றது சிறிது என்று சொல்வதற்கில்லை.

பாவ மன்னிப்பில் இந்துமதமே அதிக மேலான மதமாகும். எவ்வளவு அயோக்கியனானாலும், கொடுமைக்காரனானாலும் ஒருதடவை 'ராமா!' என்றோ 'சிவா!' என்றோ சொல்லிவிட்டால் சகல பாபங்களும் போய்விடும் என்று சொல்லப்படுகிறது. அதுகூட வேண்டாம், ஒரு சிட்டிகை சாம்பல் நம்மை அறியாது நம்மீது பட்டிருந்தாலும் போதும்! அதைவிடச் சீக்கிரமாகவும், சுலபமாகவும் மற்ற மதத்தில் பாவ மன்னிப்பு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆதலால், ஆத்மார்த்தம், பாவ மன்னிப்பு என்பதற்காக நமக்கு இப்போது மதவிசாரணை தேவையில்லை.

பொதுவாக, மதங்கள் யாரால் சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும், அதனால் என்ன பயன் இருந்துவந்தாலும் இனி நாம் அவற்றை ஆதரிக்கமுடியாது. அதை உண்டாக்கினவர்கள் பெரியவர்களாய், விவேகிகளாய், பரோபகாரிகளாய் இருந்திருக்கலாம். அவர்களிடத்திலும் எனக்குச் சண்டையில்லை. அவரவர்கள் அந்தந்தக் கால நிலைமைக்கு ஏற்றபடி அனுகூலித்தவர்களாய் இருந்திருக்கலாம். ஆனால், இன்றைக்கு அவை ஒரு விதத்திலும் பயன்படா.

உலகப் பிரயாணத்தில் அந்தந்தக் காலத்துக்கு ஏற்ற கால அட்டவணையைப் (டைம் டேபிள்) பார்க்கவேண்டும். போன மாதத்து இரயில்வே கால அட்டவணையைக் கொண்டு மணிபார்த்து இரயிலுக்குப் போனால் இரயில் தவறிவிடும். இப்போது மாதத்துக்கு ஒரு 'கைடு' ஏற்படுகிறது.

கிறிஸ்துநாதர்தான் ஆகட்டும், முகமது நபிதான் ஆகட்டும், ஸ்ரீநாராயண குருஸ்வாமிதான் ஆகட்டும்—அந்தக் காலத்துக்கு அவரவர்கள் சரியானவர்களா யிருக்கலாம். எப்போதைக்கும் எந்தெந்தக் காலத்துக்கும் அவர்கள்தாம் வழிகாட்டிகள்; அவர்கள் சொன்னதுதான் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்றால் அதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. காலம் மாறிவருகிறது; அறிவும் ஞானமும் பெருகிவருகிறது; இனியும் அபாரமாய் மாறிவரும். இந்தச் சமயத்தில் 5000 வருடம், 2500 வருடம், 2000 வருடம், 1500 வருடங்கட்கு முந்திய விஷயங்களைப் பார்த்துக்கொண்டு, அப்போது இருந்தவர்கள் சொன்னதைக் கேட்டுக்கொண்டு, அவைகளில் எதுமேல், எதுகீழ், யார் பெரியவர் என்று பார்ப்பது பயனற்ற செயல்.

இந்து மதம் என்பது ஒன்று இல்லையானாலும், அதற்காகச் சொல்லப்படும் கொள்கைகள் மகா புராதனமானவை. அதைவிட புத்தர் உபதேசம் சிறந்ததாக இருக்க நியாயம் உண்டு. அய்யாயிர வருடத்து நிலையைவிட 2500 வருடத்து நிலை மேலானது தானே! அதைவிட கிறிஸ்து மதம்–2000 வருடத்திற்கு முன் ஏற்பட்டது—மேலானதாய் இருக்க நியாயம் உண்டு. புத்தரை அனுசரித்தே சில கற்பனைகளை கிறிஸ்து அப்போ



படிப்பகம்

www.padippakam.com



தைக்கு அனுபவ சாத்தியமாய்ச் சொல்லிப் போனார். அதைவிட முகமது மதம்—1500 வருடங்கட்கு முன் ஏற்பட்டது—மேலானதாக இருக்கக் கூடுமல்லவா? முகமது நபி பாலைவன அக்கிரமங்கள் சகிக்கமாட்டாமல் புத்தர் சொன்னதையும் கிறிஸ்து சொன்னதையும் அலசிப் பார்த்து, கால தேசத்துக்கு ஏற்றமாதிரி திருத்தினார். இவர் அவர்கள் இருவரையும்விட மேலானவராய் இருக்கலாம். அந்தக் காலத்தில் அவர்கள் மேதாவிகளாய் இருந்திருக்கலாம். அந்தக் காலப் புத்திக்கும் மேதாவித் தனத்துக்கும் தக்கபடி வாழ்க்கைத் திட்டங்கள் ஏற்படுத்தி யிருக்கலாம். அவ்வளவோடு அம் மதங்களுக்கும், அம் மதத் தலைவர்களுக்கும் மதிப்புக்கொடுப்பதுதான் சரி.

ஒரு மதமும் வேண்டாம் என்பதுதான் சரியான பேச்சும் திட்டமும் ஆகும். எனக்கு மதத்திலும், தெய்வ பக்தியிலும், தியானத்திலும் நம்பிக்கையில்லை.

சாதி, மதம், தெய்வம், தியானம் என்கின்ற நான்கு தத்துவங்களும் அழிந்தாக வேண்டும். அவை அழியாமல் மனித சமூகத்துக்குச் சாந்தியும், திருப்தியும், சுகமும் கிடையா. அதே நிலை அடைந்துதான் ஆகவேண்டும். அதுவே எனது கொள்கை.

மதம் மக்களுக்கு அபினி (மது) என்றார் ஒரு பெரியார். ஆனால், நான் மதம் மக்களுக்கு விஷம் என்கிறேன். மதக்காரனுக்குச் சுயமரியாதையும் சுய அறிவும் இல்லை. மனிதன் முற்போக்கையும் ஒற்றுமையையும் தடுப்பது மதம். மனிதனுக்கு மற்ற ஜீவன்களைவிட அதிக புத்தி இருந்தும், மனிதன் அடிமையாய் இருப்பதற்குக் காரணம் மதம்.

ஆகையால், நான் எந்த மதத்திற்கும் விரோதிதான். மதங்கள் இந்த நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும். அவைகள் ஒழிய, ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்துடையவன் நான்.

இதை நான் 1926-ல் சொல்லியிருக்கிறேன். 'குடி அரசில்' எழுதியிருக்கிறேன். 1926-ல், 'நான் இந்துவாய் இறக்கப் போவதில்லை' என்று கூட்டத்தில் சபதம் செய்திருக்கிறேன். 1922-ல் நான் இந்துமத சாஸ்திரங்களைக் கொளுத்தவேண்டும் என்று காங்கிரஸ் மேடையிலேயே பேசினேன்.

1927-ல் மனுதர்மம் முதலிய சாஸ்திரங்களைக் கொளுத்தினேன். அவைகளையெல்லாம் இப்போது 10 வருடம் பொறுத்து இந்தியத் தீண்டாத சமூகத் தலைவர்களும், தீண்டாமைக்கு ஆட்பட்ட சமூகமும் சொல்லி, அவற்றைத் தீர்மானம் மூலமாகச் செய்யும் காலம் வந்துவிட்டது.

அதே மாதிரியாக, கடவுள் நம்பிக்கையும் சமீப காலத்தில் ஆட்டம் கொடுக்கப் போகின்றது என்கின்ற விஷயத்தில் எனக்கு நம்பிக்கையிருக்கின்றது. பிறகு பணம், தனி உடைமை விஷயத்திலும் இந்தக் கதியே ஏற்படும்.

ஆதலால், பிற்கால வாழ்வில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால், புத்திசாலித்தனமாய், காலதேச சூழ்நிலைகளுக்குத் தகுந்தமாதிரி படிப் படியாய், அனுபவ சாத்தியமாய் நடந்துகொள்ள வேண்டும்.

[கொச்சி, மட்டாஞ்சேரியில் சொற்பொழிவு—'குடி அரசு' 31-5-1936]

## 2. என் அனுபவம்

சாதாரணமாக, சிந்திக்கத் துவங்கிவிட்டோமானால், எந்தச் சங்கதியையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்கிற பழக்கத்துக்கு வந்துவிட்டோமானால்—அப்புறம் தானாக எல்லாச் சங்கதிகளின் குறைகளையும் போக்கிக்கொள்ள முடியும். என்னைப்பற்றியே எடுத்துக்கொண்டால்—நான் சிறு வயதிலேயே 10, 11 வயதிலேயே வியாபாரத்துக்கு வந்துவிட்டேன். இயற்கையிலேயே, சிறு வயதிலிருந்து நான் கொஞ்சம் துடுக்காயும், எந்தச்



சங்கதியையும்—ஏன், எப்படி என்று கேட்டுக்கொண்டே இருப்பவனுமாய் இருந்ததோடு, வியாபாரத் துறையில் வேறு இருந்ததால் பலரிடம் பழகும் வாய்ப்புக் கிடைத்தது; அதன் மூலம் பல அனுபவங்களும், உண்மைகளும் தெரியவந்தன. சாதாரணமாகச் சொல்லுவார்கள், 'பையன் மந்தமாய் இருந்தால், அவனை வியாபாரத்தில் போட்டால் புத்திசாலியாகிவிடுவான்; இல்லாவிட்டால் சுங்கக் 'கேட்'டில் போட்டால் திருந்திவிடுவான்' என்று. ஏன் என்றால், இவைகளில் பலதரப்பட்ட மனிதர்களுடன் அவன் பழகவும், அவர்களிடம், அவரவர்களுக்குத் தகுந்த மாதிரியான காரியம் செய்துகொள்ளவும், சமாளித்துக் கொள்ளவும் வேண்டும்.

அப்படியிருக்கிறபோது, அவனுக்குத் தானாக அறிவு வந்துவிடும் என்கிற கருத்தில் சொல்லுவார்கள். இன்னும் தேவடியாள் வீட்டுப் பிள்ளைகள் புத்திசாலிகளாக இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், அவர்களும் பல ரகமான மனிதர்களிடம் பழகவும், காரியம் சாதித்துக்கொள்ளவும் வேண்டியிருப்பதனால் இயற்கையாகவே அறிவு வந்துவிடுகிறது.

எதற்குச் சொல்லுகிறேன்—'இதைச் சிந்தித்தால் பாவம், இந்தக் காரியத்தை ஆராய்ந்தால் பாவம்' என்று சொல்லிச் சொல்லி நம்மைப் பயமுறுத்திவிட்ட காரணத்தினால் இப்போது எந்தச் சங்கதியையும் நம்மால் ஆராயமுடியாமல் போய்விட்டது. கொஞ்சம் துணிச்சலாக இந்தப் பக்கம் திரும்பிவிட்டோமானால் அப்புறம் வேகமாக வளர்ச்சி காணமுடியும்.

இப்போது நாம் வாழ்கிற இந்தக் காலம் மிகவும் புரட்சிகரமான காலமாகும். கடந்த 50 வருட காலத்துக்குள் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

[மாயவரத்தில், 6-6-1954-ல் சொற்பொழிவு—'விடுதலை' 11-6-1954]

## 3. எதிர்ப்பும் இன்னலும்

தோழர்களே!

இங்கு எதிரிகள் கல் போட்டார்கள் என்று கூறினார்கள். இப்படிக் கல் போட்டது காலிகளின்—கூலிகளின் செயல் என்றும், எதிர்க் கட்சிக்காரர்கள் தூண்டிவிட்டுப் போடச் சொன்னது என்றும் மட்டும் எண்ணி விடாதீர்கள். பத்திரிகைக்காரர்கள் ஆட்களைக் கூடவே கூட்டிக் கொண்டு வந்து கல்போடச் செய்துவிட்டு, நாளைக்குப் பத்திரிகையில் 'பெரியார் கூட்டத்தில் இன்ன ஊரில் கல் விழுந்தது; கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது' என்று பத்திரிகையில் பெரிதாக எழுதவே இப்படிச் செய்கின்றார்கள். ஒரு ஊரில் கல் போட்டதாகச் செய்தி வெளியே வந்தால், எல்லா ஊர்களிலும் கல்போட்டுக் கலவரம் செய்ய ஏதுவாக இருக்கும் என்றே செய்கின்றார்கள்.

அடுத்து, கொஞ்ச நாளைக்கு முன்பாக சேலம் கல்லூரியில் பேசுவதற்கு அழைக்கப்பட்டுச் சென்று இருந்தேன். யானையை விட்டு மாலை போடச்செய்து, சிறந்த முறையில் வரவேற்று, ஊர்வலமாக மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். 3500-க்கு மேற்பட்ட மாணவர்கள் மற்றும் நகரப் பொது மக்கள் முதலானவர்களும் குழுமி இருந்தார்கள்.

நான் பேசிக்கொண்டு வரும்போது இரண்டொரு ஜனசங்க மாணவர்கள் 'கடவுளை, மதத்தை, சாதியைப்பற்றிப் பேசக்கூடாது' என்று எங்கோ ஒதுக்கில் இருந்து சத்தம் போட்டு இருக்கின்றார்கள். அதனைக் கண்ட மாணவர்களில் பலர் 'சாதியை, மதத்தை, கடவுளைப் பற்றிப் பேசுங்கள்' என்று சத்தம் போட்டார்கள். இப்படித் திடீர் என்று சத்தம் கேட்டதும் மற்றவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். 'கடவுளை, மதத்தை, சாதியைக் கண்டித்துப் பேசாதே' என்று சத்தம் [illegible] விட்டார்கள். அவ்வளவுதான்!

படிப்பகம்

www.padippakam.com



ஒருசமயம் கடலூரில் கூட்டத்தை முடித்துக்கொண்டு வீட்டுக்கு ரிக்ஷாவில் திரும்பிக் கொண்டிருந்தேன். இன்றுபோல கார்வைத்துக் கொள்ளாத காலம் அது. இருட்டு அதிகம் இருந்த ஓர் இடத்தில் இருந்து ஒருவன் என்மீது செருப்பினை வீசினான்; அது எனது ரிக்ஷாவின் முன் விழுந்தது. அதனை எடுக்கச் சொல்லிக் கொஞ்சம் தூரம் போனேன். பிறகு யோசனை வந்தது— செருப்பு நல்லதாக இருக்கின்றது; ஒற்றையாக இருந்தால் என்ன பிரயோசனம்! 'திருப்பி ரிக்ஷாவை விடு அந்த இடத்திற்கு; இன்னொன்றையும் வீசுவான், அதையும் எடுத்துக் கொள்ளலாம்' என்று ரிக்ஷாக்காரனிடம் கூறினேன். அவனும் ரிக்ஷாவைத் திருப்பிவிட்டான். குறிப்பிட்ட அந்த இடம் போனதும் இன்னொரு செருப்பையும் வீசினான். 'மிக்க நன்றி! இரண்டு செருப்பையும் வீசியமைக்கு' என்று சொல்லிவிட்டு ஜாகைக்குத் திரும்பினேன்.

தோழர்களே! எந்தக் கடலூரில் என்மீது எந்த இடத்தில் செருப்பு வீசப்பட்டதோ, அதே கடலூரில் அந்த இடத்திலேயே இன்று எனது சிலை அங்கு எழுப்பப்பட்டு உள்ளது. அதற்குப் பக்கத்தில் 'இந்த இடத்தில்தான் இந்த வருஷம், மாதம், தேதியில் பெரியார் மீது செருப்பு வீசப்பட்டது' என்று குறித்துள்ளார்கள்.

சிவகங்கையில் ஓர் ஊர்வலம் நடந்தது. அந்த ஊர்வலம் வரும் வழியில் காங்கிரஸ் காரர்கள் என்னை அவமானப் படுத்தச் செருப்புக்களால் தோரணம் கட்டி இருந்தார்கள்; அதுவும் மிகத் தாழ்வாகக் கட்டி இருந்தார்கள். சாரட்டில் ஊர்வலம் வரும் எனது தலையில் அது தட்டவேண்டும் என்று எண்ணியே செய்தார்கள். பிறகு கூட்டத்தினர் ஆத்திரங் கொண்டு தோரணத்தை அறுத் தெறிந்தார்கள்.

இப்படிப் பார்ப்பனர்களும், பார்ப்பனர்களின் கூலிகளும், காலிகளும் கல்லெறிவதோ காலித்தனம் செய்வதோ எனது பொது வாழ்வில் புதிதல்லவே! இங்கு கூட்டத்தில் ஓர் மூலையில் கல்போட்டான். தோழர்களே! நான் கல்லடியே வாங்கி இருக்கிறேனே! அழுகிய முட்டையால் அடிப்பார்கள்; மலத்தைவாரி அடிப்பார்கள்; இதுகள் என்ன செருப்படியே வாங்கி இருக்கிறேனே!

அடுத்து ஒரு சம்பவம். மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டி என்ற பெரிய ஊருக்குக் கூட்டத்திற்குப் போய் இருந்தேன். காங்கிரஸ்காரர்கள் கல்லெறிந்து கலாட்டாசெய்து கூட்டம் நடத்த முடியாத மாதிரியில் காலித்தனம் செய்தார்கள். பாதுகாப்புக்கும் போதிய அளவுக்குப் போலீஸ் இல்லை. இந்த நிலையில் போலீஸ் இன்ஸ்பெக்டர், 'கலவரம் அதிகரிக்கும்போல உள்ளது; கூட்டத்தைக் கலைத்துப் போடுங்கள்' என்று கேட்டார்கள். நான் அதற்கு, 'நானாக ஒன்றும் கலைக்கமாட்டேன். நீங்கள் வேண்டுமானால் உங்களால் சமாளிக்க முடியவில்லை என்று கலைத்துப்போடுங்கள்' என்று கூறிவிட்டுப் பேசத் தொடங்கினேன். கல்வீச்சு குறைந்த பாடில்லை; கல்வீச்சினால் மின்சார விளக்குகள் உடைந்து நொறுங்கின. ஒரு கல் வந்து எனது கையில் பலமாகப்பட்டது. அந்த அடியின் காரணமாக எனது கை இன்று சற்று வளைந்தும் பலகீனம் உள்ளதாகவும் இருக்கின்றது.

நிலைமை மோசமானதைக் கண்ட போலீஸ் அதிகாரி மேடை ஏறி, 'கூட்டம் கலைக்கப்பட்டது' என்று கூறி, என்னைப் பத்திரமாக ஊருக்கு அனுப்பிவைக்க ஓர் மாட்டு வண்டியில் ஏற்றி, அம்பாத்துறை என்ற இரயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துப்போனார்கள். எதிரிகள் கல்லெறிவதை அப்பொழுதும் நிறுத்தவில்லை. ஸ்டேஷனுக்குப் போனோம். வண்டி வர நேரமாகும்போல் இருந்தது. எங்கு இங்கும் வந்து கலவரம் செய்யப் போகின்றார்களோ என்று எண்ணி, போலீஸார் ரோட்டில் சென்ற லாரியினை நிறுத்தி அதில் ஏற்றிக் கொண்டு போய் திண்டுக்கல் ஸ்டேஷனில் இரயில் ஏற்றிவிட்டார்கள்.

தோழர்களே! அப்படிப்பட்ட ஊர் இன்று எப்படி மாறி உள்ளது! கல்லெறிந்த கையாலே மாலை போட்டல்லவா வரவேற்றார்கள்! இன்றைக்கு வருடத்திற்கு இரண்டு தடவைக்குக் கம்மி இல்லாமல் அல்லவா அழைத்து எனது பேச்சைக் கேட்கின்றார்கள்!



இத்தகைய அவமானம் அவமதிப்புக்கள் எல்லாம் பொதுவாழ்வில் ஈடுபட்டு இருக்கின்ற எனக்குப் புதிதல்ல. இது காரணமாக எனது பெருமையோ, மதிப்போ இழந்துபோய் விடவில்லையே! வேண்டுமானால் அதிகரிக்கத்தான் செய்தது என்றுதான் கூறவேண்டும்.

பொதுத்தொண்டில் ஈடுபடுகின்றவர்கள், அந்தத் தொண்டில் ஈடுபட்டுச் செயல் புரிவது காரணமாக மான அவமானம் ஏற்பட்டால் அதுபற்றிக் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கக்கூடாது. தனிமனித வாழ்வுக்குத்தான் மானம் முக்கியமே யொழிய, பொதுவாழ்வில் மானம் பார்த்தால் பொதுத்தொண்டில் விளையக்கூடிய பலன் பிரயோசனம் அற்றதாக ஆகிவிடும்.

எனவே, எனது பொது வாழ்வில் பலவித எதிர்ப்புக்களுக்கும் இன்னல்களுக்கும் இடையேதான் வளர்ந்து வருகின்றேன்.

[நெல்லையில், 1-2-1973-ல் சொற்பொழிவு—'விடுதலை'-24-3-1973]

## 4. நான் யார்?

எனது குடும்பம் ஒரு வைதீகக் குடும்பமாகும்; குடும்பத்தில் எவ்வளவோ கோயில் கட்டுதல், சத்திரம் கட்டுதல், அன்னதானம் செய்தல் முதலிய பல காரியங்கள் செய்திருப்ப தோடு, இந்தத் தர்மங்களுக்குச் சொத்துக்களும் எழுதி வைத்திருக்கிறார்கள். என்ற போதிலும், அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த நான் இன்று பல மக்களால் ஒரு புரட்சிக் காரனென்றும், தீவிரக் கிளர்ச்சி செய்கிறவன் என்றும் சொல்லப்படுகிறேன். காரணம் என்னவென்றால், நம்முடைய கீழ்மை நிலைமைக்குக் காரணமாய் இருக்கும் அடிப்படையில் நான் கை வைப்பதால்தான். அது என்னவெனில், எவ்வளவு காலத்திற்கு நாம் இந்து மதத்தையும், இந்துக் கடவுள்களையும், இந்து சாஸ்திரம், புராணம் வேதம், இதிகாசம் முதலியவைகளையும் நம்பிப் பின்பற்றிக் கொண்டு இருக்கிறோமோ, அதுவரையில்—நாம் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும், சம உரிமைக்கு அருகதை அற்றவர்களாகவும் இருப்பதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவே முடியாது. அம் மாதிரி, அவைகளில் இருந்து வெளியேறாமல், அவைகளை நம்பிப் பின்பற்றி நடந்து வந்தவர்களில் ஒருவராவது—அவர்கள் வேறுவழிகளில் எவ்வளவு முயற்சித்தவர்களாய் இருந்தாலும், எவ்வளவு பெரியவர்களாகி இருந்தாலும்—அவர்களுக்கு ஏற்பட்ட இழிவிலிருந்து தப்பித்துக் கொண்டவர்கள் எவருமே இலர் என்பதை ஒவ்வொரு சீர்திருத்தவாதி என்பவனும் நன்றாக உணரவேண்டும் என்று சொல்லி வருகிறேன்.

[கான்பூரில், 29, 30, 31-12-1944-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 13-1-1945]

ஈ. வே. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற் போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்கு 'யோக்கியதை' இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.

இதைத் தவிர வேறுபற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும் பகுத்தறிவையே அடிப் படையாய்க் கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும் நான் அத் தொண்டுக்குத் தகுதியுடையவன் என்றே கருதுகிறேன். சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன்.

[கையெழுத்துப் படி : ஆதாரம்]

படிப்பகம்

www.padippakam.com



## 5. நான் எப்படி?

தலைவரவர்களே! தோழர்களே!

நான் ஒரு சுதந்திர மனிதன்; எனக்குச் சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, அனுபவம் உணர்ச்சி ஆகியவைகளால் பரிசீலனை செய்து, ஒப்பக்கூடியவைகளை ஒப்பி, தள்ளக் கூடியவைகளைத் தள்ளிவிடுங்கள் என்கின்ற நிபந்தனையின்பேரிலேதான் எதையும் தெரிவிக்கிறேன். எப்படிப்பட்ட பழமைவிரும்பிகளானாலும் இதற்கு இடம் கொடுக்கவில்லையானால் அது நியாயமும் ஒழுங்குமாகாது.

[திருப்பூரில் சொற்பொழிவு–'புரட்சி' 17-12-1933]

## 6. நான் சொல்லுவது கட்டளையா?

சகோதரர்களே! நான் சொல்வன எல்லாம் எனது சொந்த அபிப்பிராயங்கள்தாம் என்று சொல்வதோடு, நான் ஒரு சாதாரண மனிதன்தான். நான் எவ்விதத் தன்மையும் பொருந்திய ஒரு தீர்க்கதரிசியல்லன். ஆகையால், தனி மனிதன் என்கின்ற முறையில்தான் என்னுடைய அபிப்பிராயங்களையும்—நான் பார்த்தும் ஆராய்ச்சி செய்தும் அனுபவத்தில் அறிந்ததுமானவைகளைத்தான்—அதிலும் எனக்குச் சரி என்று பட்டதைத்தான் உரைக்கின்றேன். 'ஒரு பெரியார் உரைத்துவிட்டார்' என நீங்கள் கருதி அப்படியே அவைகளைக் கேட்டு நம்பிவிடுவீர்களானால், அப்பொழுது—நீங்கள் யாவரும் அடிமைகளே! 'நான் உரைப்பதை நீங்கள் நம்பாவிட்டால், 'பாவம்' என்றாவது, 'தோஷம்' என்றாவது அல்லது 'நரகத்துக்குத்தான் போவீர்கள்' என்றாவது சொல்லிப் பயமுறுத்தவில்லை. யார் உரைப்பதையும் நாம் கேட்டு, 'வேத வாக்கு' என அப்படியே நம்பிவிட்டதனால்தான் நாம் இன்று அடிமைகளாக இருக்கின்றோம்.

ஆகவே, நான் உரைப்பவைகளை ஆராய்ந்து பாருங்கள்! உங்களுக்கு அவைகள் உண்மையென்று தோன்றினால் அவைகளை ஒப்புக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் தள்ளிவிடுங்கள். உண்மையெனப் புலப்படுமாகில், அவைகளை உண்மையென ஒப்புக்கொள்வதில் மட்டும் பிரயோசனம் இல்லை; அவைகளை அனுஷ்டானத்தில் கொண்டு வந்து அதன்படி நடக்க முயற்சியுங்கள். எனது சொந்த அனுபவங்களை நானறிந்து உங்களுக்கு உரைப்பதுதான் என்னுடைய விடுதலை. அவைகளை ஆராய்ந்து அறிவது, அதன்படி நடப்பதுதான் உங்கள் விடுதலை.

['விடுதலை'–கட்டுரை—8-10-1951

## 7. என் துணிவு

தோழர்களே!

'நான் ஒரு அதிசயமான மனிதன்; மகான்! அப்படி, இப்படி!' என்றெல்லாம் கூறுபவன் அல்லன்; ஆனால், துணிவு உடையவன்; கண்டதை ஆராய்ந்து, அறிந்ததைத் துணிந்து அப்படியே கூறுபவன். மற்றவர்கள்—சுயநலத்துக்காக, சுயநலத்துடன் பாடுபடுகின்றார்கள்; அந்தச் சுயநல உணர்ச்சியுள்ளவர்கள் மக்கள் வெறுப்புக்கு ஆளாக மாட்டார்கள்; அப்படிப் பக்குவமாக நடந்து கொள்ளுவார்கள்.

நான் கண்டதை—அறிந்ததை மக்கள் எதிர்ப்புக்கு அஞ்சாது கூறுபவன்; மக்கள் எதிர்ப்புக்கு அஞ்சாது கூறினால் வெறுப்புத்தான் கிடைக்கும்; சுயநலம் கெட்டுப்போகும்.

[சாமிமலையில், 24-1-1960-ல் சொற்பொழிவு–'விடுதலை' 31-1-1960]



## 8. நான் ஒரு தொண்டன்

தோழர்களே!

நான் ஒரு பிறவித் தொண்டன்; தொண்டிலேயேதான் எனது உற்சாகமும் ஆசையும் இருந்து வருகிறது. தலைமைத் தன்மை எனக்குத் தெரியாது. தலைவனாக இருப்பது என்பது, எனக்கு இஷ்டமில்லாததும் எனக்குத் தொல்லையானதுமான காரியம். ஏதோ சில நெருக்கடியை உத்தேசித்தும், எனது உண்மைத் தோழரும் கூட்டுப் பொறுப்பாளருமான சிலரின் அபிப்பிராயத்தையும் வேண்டுகோளையும் மறுக்க முடியாமலும் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறேனே யொழிய, இதில் எனக்கு மனச் சாந்தியோ, உற்சாகமோ இல்லை. இருந்தாலும் என் இயற்கைக்கும், சக்திக்கும் தக்கபடி நான் நடந்து வருகிறேன் என்றாலும் அதன் மூலம் எல்லோரையும் திருப்தி செய்ய முடியவில்லை.

[சென்னை கன்னிமரா ஒட்டலில், 6-10-1940-ல் சொற்பொழிவு—'குடிஅரசு' 13-10-1940]

## 9. நான் மாறுவது ஏன்?

அக்கிராசனரவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

நான் அடிக்கடி கொள்கையில் மாற்றமடைபவன் என்று சொல்லப்படுகிறது. உண்மையாக இருக்கலாம். நீங்கள் அதை ஏன் கவனிக்கிறீர்கள்? ஒரு மனிதன், அவன் பிறந்தது முதல் இன்றுவரை திருடிக்கொண்டே இருக்கின்ற ஒரே நிலைக்காரன் என்று சொல்லப்பட்டால், அவன் மகா யோக்கியனா? எந்த மனிதனும் ஒரே நிலையில் இருக்க வேண்டும் என்று நீங்கள் ஏன் ஆசைப்படுகிறீர்கள்? அதனால் உங்களுக்கு என்ன இலாபம்? மாறுதல் முற்போக்குள்ளதா, பிற்போக்குள்ளதா? அதனால் மக்களுக்கு நன்மையா, தீமையா? என்பன போன்றவைகளைக் கவனிக்கவேண்டியதுதான் அறிவாளிகளின் கடமையாகும்.

மற்றும் பொது நன்மையை உத்தேசித்து—கஷ்டப்படுகிற மக்கள் நன்மையை உத்தேசித்து மாறினானா? அல்லது, சுயநலத்திற்கு—அக்கிரமமான இலாப மடைவதற்கு மாறினானா என்று பார்க்கவேண்டும். யோக்கியன், அறிவாளி, ஆராய்ச்சியாளி, பொறுப்பாளி, கவலையாளர் ஆகியவர் மாறவேண்டியது அவசியமாகலாம். அதைப்பற்றிய கவலை ஏன்? யார் எப்படி மாறினாலும் பார்க்கின்றவர்களுக்குப் புத்தியும் கண்ணும் சரியாய் இருந்தால், மாற்றத்தைப்பற்றி ஒன்றும் ஆபத்து வந்துவிடாது.

நான் பலதடவை மாறி இருக்கலாம்; பல குட்டிக் கரணங்கள் போட்டிருக்கலாம்; சுயநலத்திற்காகவும் போட்டிருக்கலாம்; பச்சோந்தியாயும் இருக்கலாம். அதனால் உங்களுக்கென்ன கெடுதி? நாடகக் கொட்டகையில் நாடகம் பார்க்கின்றபோது ஒரு மனிதன் எத்தனை வேடம் மாறிமாறிப் போட்டு நடிப்பதை நீங்கள் காசு கொடுத்துப் பார்த்துவிட்டு, நடித்தவனையும் புகழ்ந்துகொண்டு போகின்றீர்களா, இல்லையா?

கோயில் கட்டிய மக்கள், கோயிலை இடிக்கவேண்டியவர்களாகி விடுவார்கள். அகிம்சை பேசுபவர்கள் பலாத்காரத்தைப் பேசவேண்டியவர்களாகி விடுவார்கள். இராஜ விசுவாசிகள் இராஜத் துரோகிகள் ஆகிவிடுவார்கள். திருடக்கூடாது என்பவர்கள் கொள்ளையடிக்கச் சொல்வார்கள். இப்படியாக, அபிப்பிராயங்கள் மாறிக்கொண்டு போகலாம். இவற்றையெல்லாம், அபிப்பிராயங்கள் மாறியதாலேயே குற்றம் என்று சொல்லிவிட முடியாது. தங்களை 'நல்ல சூத்திரர்கள்' என்று சொல்லிக்கொண்டு, பார்ப்பனர்கள் கால்களைக் கழுவிய தண்ணீருக்குப் பவுன் கொடுத்துச் சாப்பிட்டவர்கள் இன்று 'சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி' என்றும், 'பார்ப்பனர்கள் ஜாக்கிரதை' என்றும் ஏன் சொல்லுகிறார்கள்? இந்த மாற்றத்தால் இப்படிச் சொன்னவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



அயோக்கியர்கள் ஆகமுடியுமா? தவிர, 'சூத்திரன் பணம் வைத்திருந்தால், பிராமணர்கள் பலாத்காரத்தால் அதைப் பறித்துக்கொள்ளலாம்' என்று மனு தர்ம சாஸ்திரத்தில் இருந்தது மாறி இப்பொழுது வெள்ளையர் தர்மத்தில், 'தந்திரங்களினாலும் சூழ்ச்சியினாலும் மாத்திரந்தான் பறித்துக்கொள்ளலாம்' என்கின்றதான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. நாளை, ஒரு சமயம் சமதர்ம காலத்தில், 'பிராமணர்கள் (சரீரத்தால் பாடுபடாதவன்) சொத்து வைத்திருந்தால், மற்றவர்கள் பலாத்காரத்தில் பிடுங்கிக்கொள்ளலாம்' என்று ஏற்பட்டாலும் ஏற்படலாம். இந்தமாதிரி மாறுதல்கள் காலத்திற்கும், பகுத்தறிவிற்கும், நாட்டின் முற்போக்கிற்கும் ஏற்றாற்போல நடந்துதான் தீரும். எனவே, நான் மாறுதலடைந்துவிட்டேன் என்று சொல்லப்படுவதில் வெட்கப்படுவதில்லை. நாளை நான் எப்படி மாறப்போகின்றேன் என்பது எனக்கே தெரியாது. ஆகையால், நான் சொல்வதைக் கண்மூடித்தனமாய் நம்பாதீர்கள்.

[நாகையில், 3-10-1931-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 11-10-1931]

சுயமரியாதை இயக்கத்திற்கு அரசியல் பிரதானமல்ல. ஆனால், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை நலத்துக்கும், திட்டங்களின் வெற்றிக்கும் கேடு செய்யவே காங்கிரஸ் மூலம் பார்ப்பனர்கள் தேசியப் போர்வையைப் போட்டுக்கொண்டு சூழ்ச்சி செய்கிறார்கள் என்று நாங்கள் கருதுகிறவரை—அக் காங்கிரசை ஒழிக்கும் அளவுக்குச் சுயமரியாதை இயக்கம் அரசியலைப்பற்றிப் பேசவும், அரசியலைப் பிரதானமாய்க்கொண்ட ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவளிக்கவும் கடமைப்பட்டிருக்கிறது. ஆதலால்தான், இன்று நாங்கள் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் கவலையற்றோ தைரியமற்றோ, எதிரிக்கு ஆளாகியோ, அயர்ந்து போயோ, கட்சிக்குத் துரோகம் செய்துகொண்டோ இருக்கிறார்கள் என்றாலும்—நாங்கள் அதை இலட்சியம் செய்யாமல் அக் கட்சிக்கு உழைக்கின்றோம். அக் கட்சி மறுபடியும் வெகு சீக்கிரத்தில் தனது உச்சஸ்தான நிலைக்கு வரப்போகிறது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டே உழைத்துக்கொண்டிருக்கிறோம்.

[சேலம், ராசிபுரம், நாமக்கல் ஆகிய இடங்களில் 7, 8, 9-11-1937-ல் சொற்பொழிவு—'குடி அரசு' 14-11-1937]

## 10. என் திருமணம்

பெரியோர்களே! தோழர்களே!

எனது சொற்பொழிவை முடிக்கும் முன்பு எனது திருமணம் பற்றிச் சில வார்த்தைகள் கூற நான் ஆசைப்படுகிறேன். என்—இத் திருமணத்தால் இயக்கத்திற்கு ஏதோ பெரிய குறைபாடு ஏற்பட்டுவிட்டதாகச் சிலர் தவறான பிரச்சாரம் செய்துவருகிறார்கள்; சிலர் இதே காரணத்தால் இயக்கத்தைக் கைப்பற்றித் தங்கள் இஷ்டப்படி திருப்பிப் பயன் பெறலாம் என்று கருதி விஷமம் செய்து வருகிறார்கள். இதுபற்றி நான் ஏதாவது பேசுவேன் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். ஆதலால், அதுபற்றிப் பேசுவதும் சற்று அவசியமாக இருக்கிறது.

நான் எந்தக் காரியத்தையும் இரகசியமாகச் செய்வதில்லை. ஒரு ஆண்டாகச் சொல்லிக்கொண்டு வந்த காரியத்தைத்தான், திருமணம் என்பதாக—என் கருத்துக்குப் பொருந்த, சட்டப்படி—அதாவது பதிவுச் சட்டப்படி வாரிசு உரிமை பதிவு செய்துகொண்டிருக்கிறேன். அதோடு, அப்படிச் செய்துகொள்ள நேர்ந்த அவசியத்தையும், முன்கூட்டியே விளக்கிச் சொல்லியிருக்கிறேன்; பல அறிக்கைகள் மூலம் விளக்கி இருக்கிறேன். மனைவி வேண்டும் என்பதற்காக நான் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும் தெளிவாய் விளக்கியிருக்கிறேன். ஏனெனில், மனைவி வேண்டுமென்றிருந்தால் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு, எனது மனைவி இறந்த தருவாயிலேயே—என் பெற்றோரும், சுற்றத்தாரும் என்னை மறுமணம் புரிந்துகொள்ளும்படி வற்புறுத்தியபோதே திருமணம் செய்துகொண்டிருப்பேன்; அப்போது பிடிவாதமாக மறுத்துவிட்டவன் என்பதோடு, மனைவி இறந்து போனபோது நான் மகிழ்ச்சியும் தெரிவித்து இருக்கிறேன். ஆனால், தற்போது பதிவு செய்து கொண்டதானது எனது தொண்டிற்கு வசதியும், நல்ல நம்பிக்கையான பாதுகாப்பும், வாழ்க்கைக்கு ஆதரவும், மற்றும் பல வசதிகளையும்; எனது வயது முதிர்ந்த தள்ளாத நிலையையும் உத்தேசித்து இந்தப்படிச் செய்துகொள்ளவேண்டி ஏற்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தேன்.



எனக்கு நம் மக்களிடத்துச் சுமார் 60 வருட காலம் அனுபவம் உண்டு. இந்த 60 வருட காலத்தில் மக்களின் யோக்கியதை, நாணயம், ஒழுக்கம் அப்போது இருந்ததை விடக் கொஞ்சம்கூட மேம்பாடடையவில்லை. மக்களுடைய யோக்கியதை மேம்பாட்டையாதது மட்டுமல்ல; கொஞ்சம் கொஞ்சமாக ஒழுக்கம், நாணயம் குறைந்து கொண்டேதான் வந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரை எனது பொதுநல வாழ்வில்—தொண்டில் நான் எடுத்துக்கொண்ட வேலையைத் தொடர்ந்து நடத்திவர எவ்வளவோ தேடியும் எனக்கு ஒரு உற்ற தோழர்—கூட்டு வேலைக்குத் தகுதியான, நம்பிக்கையான தோழர் இன்று வரை கிடைக்கவே இல்லை. நான் யார் யாரை ஏற்றவர் என்று கருதினேனோ அவர்கள் மீதெல்லாம் சந்தேகம் கொள்ளும்படி ஏற்பட்டது. சந்தேகம் கொள்ளும்படி ஏற்பட்ட சில நாட்களுக்குள்ளாக—அதை அவர்கள் தெரிந்துகொண்டவுடன் அவர்களாலேயே நான் வஞ்சிக்கப்படவும், அவர்களுடைய ஏமாற்றத்திற்கும் நயவஞ்சகத்திற்கும் ஆளாகவும் ஏற்பட்டது. யாரையும் நம்பமுடியவில்லை; உயிருக்குக் கூடப் பாதுகாப்பு இல்லை என்பதோடு, நான் சாப்பிடும் சாப்பாட்டில்கூட எங்கு விஷம் கலந்திருக்கக் கூடுமோ என்று சந்தேகப்படக் கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலையில் இயக்கத்தின் கவலை இவைகளைப் பற்றி அலட்சியமாக இருக்கவும் என் மனம் விருப்பப் படவில்லை; ஒரு வேளை வயதாகிவிட்டதாலோ என்னவோ தெரியவில்லை. இவ்வளவு நான் வாழ்ந்ததே போதும் என்று இதுவரை திருப்தி அடைந்திருந்தாலும், இயக்க நிலையை உத்தேசித்து இயற்கை சாவு வரும்வரையில் கொஞ்ச காலம் உயிருடனிருந்தால் தேவலைபோல் தோன்றுகிறது. மேலும், நமது தொண்டின் பயனை மக்கள் இப்போதுதான் உணர்ந்து, போற்ற ஆரம்பித்திருக்கிறார்களாதலால், இந்தச் சமயத்தில் நாம் தற்கொலை செய்துகொள்வதுபோல் அலட்சியமாக இருந்து, இயற்கைக்கு முரணான முடிவுக்கு ஆளாகாமல்—வாய்ந்த காலம் இருந்து பணிசெய்தால் நமது இலட்சியம் சீக்கிரம் கைகூட வசதியாயிருக்குமே என்று தோன்றுகிறது. இதோடு இத்தொண்டு, மக்களின் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத தொண்டாதலால், இது நமக்குப் பின் என்ன ஆகுமோ என்ற அச்சத்தால், நமக்குப் பின்னும் தொடர்ந்து நடைபெற்றுவர ஏதேனும் ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டும் என்ற ஆசையும் கலந்துகொண்டு விட்டது.

இதற்காக நான் நம்பின ஆண்கள், எதிர்பார்த்த ஆண்கள் என்னை வஞ்சித்து மோசம் செய்ததைக் கண்டும், நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குப் பெரிதும் முட்டுக்கட்டை போடும் சதிவேலைகளால் தோல்வியுற்றேன். யாரையாவது தத்து எடுத்துக்கொண்டு அந்த வாரிசின் மூலம் எனது தொண்டு தொடர்ந்து நடைபெற்றுவர ஏற்பாடு செய்யலாம் என்றும் நினைத்தேன். அந்தத் தத்துக்கும் ஏற்பாடுசெய்து, நாள் குறிப்பிட்டு, பத்திரமும் வாங்கி நகலும் எழுதிச் சம்பந்தப்பட்டவர்கள் அனுமதியும் பெற்றேன். அந்த 'சாபா' (chappa) காகிதம்—அந்த நகல் இன்னமும் என்னிடம்தான் இருக்கிறது. கடைசியாக இன்றைய எனது எதிரிகளான துரோகிகள் சிலர், அதை நடைபெற ஒட்டாமல் செய்து அச் சிறுவனின் புத்தியைக் கெடுத்து, சதிக் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டு என் கருத்தை நிறைவேற்றவொட்டாமல் செய்து, என்னை ஏமாற்றமடையச் செய்துவிட்டார்கள். ஆகவே, மறு ஏற்பாடு செய்யவேண்டியதாகிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com



பிறகு நட்பின் முறையில் யாராவது கிடைப்பார்களா என்று தேடினேன். அதிலும் ஏற்ற ஆள் கிடைக்கவில்லை. சிலர் நம்பக்கூடியவர்கள் ஆனாலும், நான் நம்பிய ஆட்கள் அவ்வளவு பொறுப்புடையவர்களாகவோ, செய்கை உறுதி சம்பந்தமாகப் பகுத்தறிவுடையவர்களாகவோ, பொறுப்புடைய முழு நேரத் தொண்டாற்ற வசதியுடையவர்களாகவோ இருப்பவர்களாகக் கருதமுடியவில்லை. அதனாலேயே நான் இந்த இரண்டு ஆண்டுகளாக 'எனக்கு நம்பிக்கையான ஆள் யாரும், இயக்கத் தொண்டுக்குக் கிடைக்கவில்லையே' என்கின்ற என் கவலையைத் தெரிவித்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

இதெல்லாம் இன்றைய என் எதிரிகளுக்கு—எதிர்க் கிளர்ச்சிக்காரர்களுக்கு நன்கு தெரியுமென்றாலும், அவற்றைத் தங்கள் விஷம, துரோகப் பிரச்சாரத்திற்குத் திரித்துக் கூறிப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். நான் யாரையும் நம்பவில்லையென்று—பொறுப்பும் அறிவுமற்ற மக்களிடம் சொல்லி, என் மீது கெட்ட எண்ணம் ஏற்படச் செய்துவிட்டனர். உங்களில் யாரேனும் ஒருவருக்கு ஒரு பொறுப்புள்ள ஆள் வேண்டுமென்றால், ஒரு நம்பிக்கையுள்ள ஆள் வேண்டுமென்றால் உங்களிடம் பழகிக்கொண்டிருப்பவர்களில் மிக முக்கியமானவர்கள் யாரோ, அவர்களைப் பற்றித்தானே நீங்கள் நினைப்பீர்கள்! அப்படி நினைக்கப்பட்டவர்மீது உங்களுக்குப் பூரண நம்பிக்கை ஏற்படவில்லையானால் நம்பிக்கையான ஆள் கிடைக்கவில்லை என்றுதானே நீங்களும் குறிப்பிடுவீர்கள் ! அப்படி நம்பிக்கையான ஆள் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டால் உலகத்திலுள்ள யார்மீதுமே நம்பிக்கையில்லை என்றா அர்த்தப்படும்? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! நான் அப்படிக் கூறியதன் உண்மை அர்த்தத்தைக் கண்டு தெளியுங்கள்.

நான் எனக்கு நம்பிக்கையான ஆள் கிடைக்கவில்லை என்பதைத் திருமணத்தின் போது மட்டுமே சொல்லவில்லை; அதற்கு முன்பே இரண்டாண்டுக்கு மேலாகவே பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். சுற்றியுள்ள ஆட்கள்மீது நம்பிக்கையில்லை என்று வெளிப்படையாக நான் தெரிவித்துவிடவே, சுற்றியிருந்த நபர்களும் வெளிப்படையாகவே தம் கிளர்ச்சியைத் துவங்கினர். கடைசியாக திருவண்ணாமலையில் நான் தோழர் இராசகோபாலாச்சாரியாரைச் சந்தித்ததையொட்டி, கோவை மாநாட்டிலேயே தவறான பிரச்சாரம் செய்ய ஆரம்பித்த விஷமப் பிரச்சாரம்—தஞ்சை மாணவர் மாநாட்டில் வளர்ந்து காட்டியது. தஞ்சையில் அவர்கள் செய்த விஷமப் பிரச்சாரம் எனது பத்திரிகையிலும் நான் இல்லாதபோது தைரியமான வஞ்சக புத்தியுடன் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. நான் அதைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனேன். அந்தச் சமயத்தில் நான் மாவூரில் 'மாணவர் பிரச்சார வகுப்பு' நடத்திக்கொண்டிருந்தேன். அங்கு நான் சர். சர்மா அவர்கள் வீட்டில் தங்கி இருந்து பிரச்சார வகுப்பு நடத்தியதையும், தங்கள் விஷமப் பிரச்சாரத்துக்கு ஒரு சாதனமாக்கிக்கொண்டு, குற்றம் கூறினார்கள். கோவை குறள் மாநாட்டில், திரு. இரத்தினசபாபதி முதலியார் அவர்களைக் கலந்து கொள்ளச் செய்ததைப்பற்றியும், நான் அவர்கள் வீட்டில் தங்கியதைப்பற்றியும் குற்றம் கூறினார்கள். மற்றும், 'என்னைப் பார்ப்பனத் தலைவர்கள் சிலர் காண ஆசைப்படுகிறார்கள். அவர்களுடன் கலந்து பேசப் போகிறேன்' என்று வெளியிட்டதையும்—தங்களுக்கு அனுகூலமான சாதனமாக ஆக்கிக்கொண்டு, நான் பார்ப்பனர்களுடனும், பணக்காரர்களுடனும் கூடிக் குலாவ ஆரம்பித்துவிட்டேன் என்று குற்றம் கூறினார்கள். இவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டே என்னை ஒழித்துவிடலாம் என்று பெரிய கோட்டை கட்டி, அதன்படிக்கேதான் பிரச்சாரத்தையும் துவங்கினர்.

இதை அறிந்த நான் உடனே சதிவேலை துவங்கிவிட்டதென்றும், சதிவேலை துவக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இன்னின்னார் என்றும், அவர்களுடைய யோக்கியதை இன்னதென்றும் விளக்கி—இனி, மக்கள் ஜாக்கிரதையாக இவர்களிடம் நடந்துகொள்ள வேண்டுமென்றும்; இவர்களை நம்ப வேண்டாமென்றும்; இனி இவர்கள் பெயர் நம் பத்திரிகையில் வராது என்றும்—ஒரு குறிப்பு எழுதி நம் பத்திரிகைக்கு அனுப்பினேன். அதை எனது பத்திரிகையில் போடாமல் அந்தச் சேதியை உடனே அந்த நபர்களுக்குத்



தெரிவிக்கப்பட்டதுடன், எதிரிகளுக்கு வேண்டிய உளவுகள், ஆதாரங்கள் எனது பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து தாராளமாகக் கிடைத்தும் வர ஆரம்பித்துக் கிட்டிவிட்டது. அது என் பத்திரிகையில் போடப்படவில்லை என்றும், அது எப்படி எதிரிக்கு உடனே தெரிவிக்கப்பட்டது என்றும், காரியாலயத்தில் பொறுப்புள்ளவர்களைக் கேட்டதில் யோக்கியமற்ற பதிலும், பொய்யான பதிலும் கிடைத்தது. வேறு சில சங்கதிகளும் நடந்தன. அதாவது, ஆசிரியர் பொறுப்பிலிருப்பவர் தான் மட்டுமே அதற்குப் பொறுப்பாளியல்ல என்றும், அதைப் போடவேண்டாமென்று கூறியதாகவும்; மானேஜர்தான், உடனே டெலிபோனில் எதிரிக்குச் சேதி தெரிவித்ததாகவும் சொன்னார். நான் சங்கடத்தோடு மானேஜர் பொறுப்பிலிருந்தவரைக் கேட்க, அவர் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று ஒரேஅடியாய் மறைத்துவிட்டார். உடனே, நான் ஸ்தம்பித்துப் போனேன். இப்படி முழுப் பொய் கூறும் ஒருவரை எப்படி இனியும் நம்புவது?

'எதிரிகள்—இவ்வளவுக்கும் வந்துவிட்டார்களே!' என்று பெரிதும் மன வேதனைப்பட்டேன். நான் சிறிதாவது நம்பலாமே என்று கருதிப் பொறுப்பை ஒப்புவித்த நபர்கள், இப்படிச் செய்துவிட்டதால் மனமொடிந்து அவசரமாக வேறு ஏற்பாடு செய்யத் துணிந்து, உடனே பதிவுத் திருமண முறைப்படி வாரிசுஏற்படுத்த முடிவு செய்துகொண்டு, பதிவு ஆபீசுக்குச் சென்று, பதிவுப் பாரம் வாங்கிவந்து, பாரத்தைப் பூர்த்திசெய்து அனுப்பினேன். அது சரியாகப் பூர்த்திசெய்யப்படவில்லை என்று திருப்பி அனுப்பப்பட்டது. அதைப் பூர்த்திசெய்து என்னுடன் கூடவே இருந்த மிக நம்பிக்கை வைத்திருந்த ஒருவர் மூலம்—'இரகசியக் கடிதம்' என்று கூறி ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்பினேன். இரகசியக் கடிதம் என்றால் யாருக்கும் பிரித்துப் பார்க்கவே தோன்றும்; அவரும் அப்படியே பிரித்துப் பார்த்தார்போல் இருக்கிறது. அவர் இன்றைய எதிரிகளில் ஒருவராக இருந்திருந்தவர், ஆனதால், உடனே மற்ற எதிரிகளுக்கும் அச் சங்கதியைத் தெரிவித்துவிட்டார். என் காரியாலயத்தில் என் சொந்தக் காரியஸ்தர்களாக இருந்தும்—எனக்கு நண்பர்கள்போல் இருந்தும் வந்த 100 ரூபாய் சம்பளத்துக்கு மேற்பட்டவர்கள் 5, 6 பேர்கள் உட்பட, பலர் தைரியமாக என் மவுண்ட் ரோடு வீட்டிலேயே கூடிக் கண்டித்து, மற்றும் பல ஆட்களைச் சேர்த்து என்னைக் கண்டபடி வைது, இழித்துக் கூறிக் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றினர். [illegible]த்துப் பேசினவர்களை மிரட்டி அந்தச் சமயத்தில்தான் சம்பந்தமான மற்ற சில ரிக்கார்டுகளையும் கடிதங்களையும் அவர்கள் எடுத்துச் சென்று தங்கள் எதிர்ப்பு வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டனர். பத்திரிகைகளிலும் கண்டித்துப் பல பொய்ச் சங்கதிகளை 'ஜோடித்து' அறிக்கை விட்டனர்; கட்டுப்பாடான எதிர்ப்புப் பிரச்சாரமும் செய்ய முற்பட்டனர்.

என் வீடு தேடி பலாத்காரம் வருமளவுக்கு—நான் கவலையும் பயமும் அடையும் அளவுக்கு எதிர்ப் பிரச்சாரம் உச்சநிலை அடைந்துவிட்டது. ஊருக்கு ஊர் அறிக்கை—ஆட்கள் பறந்தனர். இவைகள் என் கருத்துக்களில் பூரண உறுதியும் நினைத்த காரியத்தை உடனே முடிக்காவிட்டால் உயிர்ச்சேதம் ஏற்படலாமோ என்ற அபாயமும் தோன்றச் செய்தன. என் சொந்தக் காரியத்தில் பிரவேசித்து இவ்வளவு மோசமாக நடந்து கொள்ளுபவர்கள் என்ன செய்யத் துணியமாட்டார்கள்? ஆதலால், முடித்துவிடுவோம் காரியத்தை என்று முடித்துவிட்டேன்; பயமற்று உலவுகிறேன்.

எதிர்ப்புக்கு ஏமாந்த பொது மக்கள் 100-க்கு 75 பேர்—இப்போது அறிவு பெற்றுவிட்டதைக் காணுகிறேன். சிலர் வெட்கப்படுவதையும், வேதனைப்படுவதையும் காணுகிறேன்; அறிகிறேன். தினமும் பல கடிதங்களில் படிக்கிறேன். நான் வாரிசாகச் செய்துகொண்ட மணியம்மை 31 வயதினரும், படித்தவரும், என்னுடன் கூடவே ஆறு ஆண்டுகள் இயக்கப் பணி புரிபவரும், என் நம்பிக்கைக்கு ஆளாகப் பத்திரிகை உரிமை, நிர்வாக உரிமை ஏற்று நடத்துபவரும், பணம் காசு விஷயத்தில் நம்பிக்கையாகப் பொறுப்பாக நடப்பவருமான அப்பேர்ப்பட்டவரை, நான் சட்டப்படியான வாரிசாக—வாழ்க்கைத் துணையாக

படிப்பகம்

www.padippakam.com



ஆக்கினால் இதில் யாருக்கு, என்ன குறைவு, கெடுதி, நட்டம், ஒழுக்கக்கேடு என்று யோசித்துப் பாருங்கள்!

இந்தக் காரியத்தால் ஏற்பட்டது இன்ன தவறென்று கூற, குற்றமென்று கூற ஏதேனும் காரணம் காட்டவேண்டுமே, இந்தப் பகுத்தறிவுவாதிகள்! இயக்க நலனை—பொதுத் தொண்டைக் கருதி எனக்கொரு துணை வேண்டுமென்று, என்னுடைய பாதுகாப்புக்காக, என்னுடைய வசதியை உத்தேசித்து, ஒரு ஸ்திரீயை சட்டப்படி எனக்கு உதவியாளராக—உற்ற நண்பராக இருக்க வசதி செய்துகொள்ளுகிறேன். இதில் யாருக்குத் தான் தலையிட உரிமையிருக்க முடியும்? யாருக்குத்தான் தகராறு இருக்கமுடியும்? அப்படி நான் மணந்துகொண்டபெண் 14 வயதுச் சிறுமியா, அல்லது 15 வயதுச் சிறுமியா? ஏதுமறியாத பெண்ணை ஏமாற்றிச் செய்த காரியமா? வேறு யாருக்காவது உரிமையா? யாருடைய பாதுகாப்பிலாவது இருந்தவரா? தனது நலத்தை, தனது வாழ்வைத் தெரிந்து கொள்ள முடியாத, தகுதியில்லாத சிறு பெண்ணா? அல்லது, காசு பணம் காட்டி ஏமாற்றப் பட்டதா? என்னை அறியாததா? அல்லவே.

தம் வீட்டாராலேயே ஆறு ஆண்டுக்கு முன் கொண்டுவந்து ஒப்புவிக்கப்பட்ட பெண் ஆயிற்றே! சொந்த வீட்டிலேயே பூப்படைந்து சுமார் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, திருமணம் செய்துகொள்ளாமல், திருமணம் செய்துகொள்வதில்லை என்று பிடிவாதம் செய்துகொண்டிருந்த பெண்; தன் இளமையிலேயே தன் தகப்பனாரோடு இயக்க மாநாடுகளுக்கெல்லாம் வந்து, இயக்கம்—கொள்கைகளில் பற்றுதல் ஏற்படுத்திக் கொண்டு தனது வீட்டிலும் இயக்கப் பணி செய்துகொண்டிருந்த பெண்; வேலூருக்கு நானும், மற்றும் இயக்கத் தோழர்களும் அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்த போதெல்லாம்—இயக்கப் பற்றுதலால் யாவருக்கும் ஏற்ற பணிவிடை செய்து வந்த பெண்; 1938ஆம் ஆண்டு 'இந்தி எதிர்ப்பில்' வேலூர் சிறை சென்றவர்களுக்கெல்லாம் பணிவிடை செய்த பெண். தன் தகப்பனார் இறந்த பிறகு இறந்த மூன்றாவது மாதமே (1943-ல்) இருந்து, என்னோடு ஆறு வருட காலமாகப் பழகிச் சுற்றுப் பிரயாணத்தில் கூடவே இருந்து பிரச்சாரம், காரியதரிசி வேலை, ரிப்போர்ட்டர் வேலை செய்து வரும் பெண்; என்னால் பல தடவை வற்புறுத்தப் பட்டும், அவர் பெற்றோரால் வற்புறுத்தப்பட்டும்—திருமணம் வேண்டாம் என்று மறுத்து, தனது இயக்கத் தொண்டே பிரதானம் என்று கருதித் தொண்டாற்றி வந்த பெண்.

அப்படிப்பட்ட ஒரு பெண்ணை—ஆறு வருடம் பழகி எனது முழு நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரு பெண்ணை—நான் துணைவியாக, நட்பாக, நம்பிக்கைக்கு ஏற்ற வாரிசாக ஏற்றுக்கொள்ளுகிறேன் என்றால், ஒரு கூட்டம் ஏன் ஆத்திரப்பட வேண்டும்? அதில் மற்றவர் பிரவேசிக்க உரிமைதான் ஏது? கூட இருந்து ஒத்து ஊத ஒரு பத்துப் பேர்கள் கிடைத்து விட்டார்கள் என்பதற்காகவே, எனக்குத் தொல்லை கொடுக்கவேண்டுமா? தொல்லை கொடுக்க ஏதேனும் நியாயமான காரணம் காட்டவேண்டுமே? திருமண சேதி விளம்பரமாவதற்கு முன் தேதிவரை—என்மீது துதிபாடிக் கொண்டிருந்துவிட்டுத் தமக்கு வசதி கிடைத்தவுடனே, இவர்கள் என்னை ஒழிக்க முற்படுகிறார்கள் என்றால்—இவர்கள் நாணயத்தில், நல்லெண்ணத்தில் எவருக்கும் சந்தேகம் ஏற்படத்தானே செய்யும்? எவ்வளவு கீழ்நிலைக்கு இவர்கள் வந்துவிட்டார்கள்? எவ்வளவு துரோகம் செய்ய இவர்கள் துணிந்து விட்டார்கள் என்பதைத்தானே இச்செயல் காட்டுகின்றது?

இப்படிப்பட்ட சதிகாரக் கூட்டத்தை மூன்றாண்டாகவே உள்ளத்தில் நம்பிக்கை வைக்காமல் இருந்துகொண்டு, எனக்கு நம்பிக்கையான ஆள்கிடைக்கவில்லை—எனக்குப் பின்னாலே சதிகாரர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிவந்தது எப்படித் தவறாகும்?

நம் இயக்கத்தின் இன்றைய நிலை என்னவென்று உணர்ந்து பார்த்தாலன்றோ தெரியும்? மேல்சாதி, கீழ்சாதி என்கின்ற பேதாபேதம் ஒரு அளவுக்காவது குறைந்திருக்கிறது. பார்ப்பானும் சூத்திரனும் இன்னும் இருக்கிறார்கள் என்றாலும்—'சூத்திரன்'



என்று நம் காதில் படும்படிப் பேச, இன்று ஒரு மேல்சாதிப் பார்ப்பான் அஞ்சவே செய்கிறான். நாடு அந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பதவிகள் பல கைப்பற்றப்பட்டுவிட்டன. என்றாலும், இதோடு திருப்தியடைந்துவிட முடியுமா? இன்னும் எவ்வளவோ காரியம் நம்மால் சாதிக்கப்படவேண்டியிருக்கின்றனவே! இன்னும் சூத்திரன் என்பதற்கான ஆதாரங்கள் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும், சட்டத்திலும் இருந்து கொண்டுதானே இருக்கின்றன! இன்னும் உத்தியோகங்களில் நமக்குச் சரியான விகிதாச்சாரம் கிடைக்காமல்தானே இருந்துவருகிறது? சாமி, மதம், புராணம் பற்றிய முட்டாள்தனம் இன்னும் ஒழியவில்லை.

இப்போதுதான் காங்கிரஸ்காரர்கள் நம் தொண்டின் பயனைச் சிறிது உணர ஆரம்பித்திருக்கிறார்கள்; இப்போதுதான் காங்கிரஸ் தலைவர்கள் பெரும்பாலோர் உள்ளங்களில் சற்று மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்திலா நம் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நம்மீது கல்லெடுத்துப் போட முன்வருவது? நம் இயக்கம் நல்ல நிலைக்கு வந்துகொண்டிருக்கும் இந்த நேரத்திலா, நம்மவரே நமக்கு நேர் எதிரிகளாவது? கழகத்தை ஒழிக்கத் துரோகம் செய்வது? நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நமக்கு இதுவரை எதிரிகளாக இருந்துவந்த பார்ப்பனர்களே, 'இன்னும் இந்தப் பார்ப்பனர்—திராவிடர் போராட்டத்தை வளரவிட்டுக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமாகாது. இருசாராரும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவதே நல்லது' என்று ஆலோசித்துவரும் இந்த நேரத்திலா, இத்தகைய சதி—வேலைகள் நமக்குள்ளாக நடப்பது? நம் மக்களும் அதை அனுமதித்துக் கொண்டிருப்பது!

திருவண்ணாமலைக்குப் பாதாளலிங்கக் கோயிலைத் திறக்க வரும் கவர்னர் ஜெனரல், என்னை அங்குவந்து சந்திக்கும்படி தந்தி கொடுக்கிறார் என்றால், அதற்குக் காரணம் என்னவாக இருக்கமுடியும்? தனிப்பட்ட காரணம் எவ்வளவு இருந்தாலும், 'தென்னாட்டில் விரைவாகச் செல்வாக்குப் பெற்றுவரும் நம் கழகத்திற்குத் தான் எதிரி அல்லர்' என்று காட்டிக்கொள்ளும் எண்ணமும் இருந்துதானே இருக்கும்! சர். சர்மா அவர்கள் தன் பங்களாவுக்கு வரும்படி என்னை அழைக்கிறார் என்றால் அவருக்கென்ன உள் காரணம் இருக்கமுடியும்? என்னால் அவருக்கு ஆகக்கூடிய காரியம்தான் என்ன இருக்கிறது? நம் இயக்கம் பற்றி அவருக்குள்ள மதிப்புதானே! நான் பார்ப்பனியம் ஒழியவேண்டும் என்று தினந்தோறும் பேசிவருகிறேன். என்றாலும், பார்ப்பனர்களின் திருமண அழைப்புகள் இன்னும் வந்துகொண்டுதானே இருக்கின்றன? இதற்கெல்லாம் நம் இயக்கத்தின் வளர்ச்சியும் நேர்மையும்தானே காரணம்? பார்ப்பனர்களின் உள்ளங்களில் ஏற்பட்டுவரும் மாறுதல்தானே காரணம்? இவ்வளவு வசதியும் ஏற்பட்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வளவு வசதி ஏற்படவும் முக்கிய தொண்டனாக இருந்த என்னை ஒழித்துத்தான் ஆகவேண்டுமென்றால், அதற்குக் காரணம் என்னவாக இருக்கமுடியும்? ஒழிந்தேயாக வேண்டும் என்று கூறப்பட்ட நான், என்ன அப்படிப்பட்ட துரோகம்-இயக்கத்துக்கு, பொது நலனுக்குச் செய்துவிட்டேன்? எனக்குத் தெரியும்படியாகவே துரோகம் செய்தவர்களையெல்லாம் நான் கழகத்தில் சேர்த்துக்கொண்டிருக்க, என்னையேவா இந்தத் துரோகிகள் ஒழிக்கப் பார்ப்பது? இந்தத் துரோகிகளே இன்னும் சொல்கிறார்களே, 'அய்யாவை ஏமாற்றவா எங்களுக்குத் தெரியாது? நினைத்தால் ஒரு நிமிஷத்தில் எங்களால் ஏமாற்ற முடியும்' என்று. இவ்விதமே கூறிப் பெருமையும் அடித்துக் கொள்ளுகிறார்கள். யாருக்கு என்ன கெடுதி செய்துவிட்டேன், நான், இத்தகைய துரோகத்திற்கு ஆளாக்கப்பட? கெடுதி செய்கிறார்கள்—செய்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும், என்னுடன் இருக்க இவர்களை அனுமதித்துக் கொண்டிருந்தேனே! பலதடவை இவர்களை மன்னித்து இவர்களது சரணாகதியை ஒத்துக்கொண்டிருக்கிறேன். நான் இவர்களை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமாமே! எதற்கு? இவர்களை மன்னித்ததற்காகவா? அதுகூடப் போதாதாமே, திருமணத்தை ரத்து செய்ய வேண்டுமாமே? இதில் எவ்வளவு பெரிய கொலை பாதகக் கருத்து அடங்கியிருக்கிறது, பாருங்கள். இதில் விளங்கவில்லையா இவர்

படிப்பகம்

www.padippakam.com



களது துரோகத்திற்கு—சதிக்குக் காரணம்? இதை அனுமதித்துக் கொண்டிருக்கலாமா—பொதுமக்களாகிய நீங்கள்? துளியேனும் ஆதரவு இருக்கலாமா—இத் தகைய சதிகாரர்களுக்கு?

தோழர்களே! நான் உண்மையில் எனது பொதுப்பணி தொடர்ந்து நடைபெற்றுவர வேண்டும் என்றுதான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன்; இன்னும் சில ஏற்பாடுகளும் செய்ய உத்தேசித்திருக்கிறேன். யார் என்ன நினைத்துக்கொண்டாலும் சரி; யார் என்ன சொல்லிக் கொண்டிருந்தாலும் சரி; நான் கடமையிலிருந்து அணுவளவும் தவறமாட்டேன். என் தொண்டுதான் எனக்குப் பெரிது; மற்றவர்கள் அதைப்பற்றி என்ன கூறுகிறார்கள்—என்ன நினைக்கிறார்கள் என்பது எனக்குப் பெரிதல்ல.

எனவே, அது தொடர்ந்து நடைபெற்று வரும் வண்ணம் மற்றவரின் விருப்பு, வெறுப்புப் பாராமல் எனக்குச் சரியென்று படும் எதையும் செய்து கொண்டுதான் வருவேன். எனது 30 ஆண்டு பொது வாழ்வில் ஒருபோதும் எதிர்ப்புக்கு அஞ்சி எனது கொள்கையை மாற்றிக்கொண்டதில்லை; எத்தகைய ஒழுக்கக்கேடான காரியத்தையும் நான் செய்ததில்லை. ஏதேனும் அப்படிச் செய்ததாக என்னுடைய எதிரிகளான பார்ப்பனர்களே கூடக் கூறவில்லை. காங்கிரஸ்காரர்கள்தாம் என்மீது வெறுப்பேற்பட, காங்கிரசிலிருந்து நான் ஏதோ பணம் திருடிக்கொண்டு போய்விட்டதாகக் கூறினார்கள். ஆனால், அவர்களே பிறகு நான் செய்த தொண்டுக்காக என்னைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றித் தாம் செய்த தவறுக்காகப் பிராயச்சித்தம் செய்துகொண்டு விட்டார்கள். அதாவது, கோயமுத்தூரில் நடந்த மாகாண காங்கிரஸ் கான்பரன்சில், எனது காங்கிரஸ் தொண்டைப் பாராட்டித் தீர்மானம் போட்டார்கள். அவ்வளவு ஒழுக்க மேம்பாட்டுடன் வாழ்ந்து வந்த எனக்கு இப்போதொன்றும் ஒழுக்கக் கேடாக நடந்து கொள்ளவோ, பொதுமக்களை மோசம் செய்துவிட்டுப் பணத்தை மற்றொருவருக்குக் கொடுத்துவிடவோ, கொள்கைகளில் இருந்து நழுவவோ எவ்வித அவசியமும் ஏற்பட்டு விடவில்லை.

யாரேனும் இவ்வேற்பாட்டிற்காக உள்ளத் தூய்மையுடனேயே வருத்தப்படுவதென்றால் எனக்குப் பின் இந்தப் பெண் தனிவாழ்க்கை நடத்தவேண்டி ஏற்பட்டுவிடுமே என்று வேண்டுமானால் வருத்தப்படலாம்; கொஞ்சம் பரிதாபப்படலாம். ஆனால், அதற்குக் கூட அவசியமில்லை. ஏனென்றால், நான் இறந்த மறுநாளேகூட, இந்த அம்மையார் தனக்கு இஷ்டப்பட்ட வேறு ஒருவனை மணந்துகொண்டு விடலாம். இந்துமத தர்மப்படி செய்யப்பட்ட—ரத்து செய்து கொள்ள முடியாத—ஜென்மத் தீர்ப்பான திருமணம் அல்ல; பதிவு முறைப்படி செய்துகொள்ளப்பட்ட திருமணம்; எந்த நேரத்திலும் ரத்து செய்து கொண்டு வேறு மணம் செய்து கொள்ளலாம். நான் இன்றும் இந்தப் பெண்ணை அனாதையாக வைத்திருக்கவில்லை; நான் திடீரென்று இறந்துவிட்டாலும் சுகமாக வாழக் கூடிய அளவுக்குச் சிறிது பொருளாதார வசதியும் உண்டு. 'டிரஸ்டு' காரியத்தில் துரோகம் செய்யாது என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அன்றியும், அந்த அம்மையார் சில டிரஸ்டிகளுடன் ஒருவராகத்தான் இருப்பார். என்ன கேடு செய்யமுடியும்? ஆகவே, இந்தப் பெண்ணுக்காகப் பரிதாபப்படவோ, அவநம்பிக்கைப்படவோ இடமோ, அவசியமோ இல்லை!

தோழர்களே! இந்தச் சதிகாரர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இவர்கள் செய்துவரும் தவறான பிரச்சாரத்திற்காகவும் நான் கவலைப்படவில்லை. இத் தவறான பிரச்சாரத்தால் பாமர மக்கள் ஏமாந்து போய்விடுகிறார்களே என்பதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது; சதிகாரர்களின் நியாயமற்ற அநாகரிகப் பிரச்சாரத்திற்குப் பாமர மக்கள் ஆளாகிவிடுகிறார்களே என்பதுதான் கவலையாக இருக்கிறது. இவர்கள் செய்த பிரச்சாரத்தால், பலருக்குக் கழகம் நிலைத்திருக்குமோ என்ற சந்தேகம்கூட வந்துவிட்டது. பெரிய அதிகாரிகள்கூட வருத்தப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். தங்களுக்குப் பெரிய பாதுகாப்பாக இருந்துவரும் கழகம், தாங்கள் மேல் உத்தியோகத்துக்கு வரவும், தங்களைப் பார்ப்பனர்கள் மதித்து நடக்கவும் பெரும் காரணமாய் இருந்துவரும் கழகம்—எங்கு இந்தக் கிளர்ச்சியால் செல்வாக்கு இழந்துவிடுமோ என்று ரொம்பவும் கவலைப்பட்டார்களாம். இவர்களின் எதிர்ப் பிரச்சாரம் அவ்வளவு கீழான நிலைக்குப் போய்விட்டது. 'கழகமே, இந்த ஏற்பாட்டால் மாய்ந்துவிடும்' என்று பிரச்சாரம் செய்துவிட்டனர். அதிகாரிகள் கவலைப்படக் காரணம் இருந்தது; நமது கழகம் சர்க்காரால் எவ்வளவு மதிக்கப்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியும். நாம் ஒரு குறைபாட்டை எங்காவது ஒரு பொதுக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னால், அது உடனே கவனிக்கப்படுவது அவர்களுக்குத் தெரியும். ஜில்லா கலெக்டர்மீது ஒரு குறைபாடு நம்மால் எடுத்துச் சொல்லப்பட்டால், உடனே போர்டு மெம்பர் அதுபற்றி நமக்குத் தெரியாமலே விசாரணை நடத்தி ஆவன செய்வது அவர்களுக்குத் தெரியும். ஏன் நாம் எடுத்துக்காட்டும் குறைபாடுகளை உடனே சர்க்கார் கவனிக்கின்றது? நம்மிடம் சர்க்காருக்கு நம்பிக்கையுண்டு. நாம் உண்மையிருந்தாலொழிய வெளியில் எடுத்துச் சொல்லமாட்டோம் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான், பயந்து உடனே இவ்வளவு கவனிக்கிறார்கள். நல்ல நிலைக்கு நம் இயக்கம் வந்துவிட்டது. இனி இதை யாராலும் ஒழிக்க முடியாது. நாம் இன்னும் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகவே, சூத்திரர்களாகவே இருந்து வருகிறோம். நம் நாடு மேலும் மேலும் வடநாட்டவரால் சுரண்டப்பட்டே வருகிறது. வடநாட்டு ஆதிக்கம் வரவர வளர்ந்து கொண்டேதான் போகிறது.



எனவே, நாம் நம் வேலையைக் கைவிடுவதற்கில்லை. எத்தகைய எதிர்ப்பு வந்த போதிலும் சமாளித்துத் தொடர்ந்து பாடுபட்டு வர வேண்டியதுதான். எவ்வளவு துரோகிகள் தோன்றினாலும் பொதுமக்கள், அறிஞர்கள், நடுநிலைமையாளர்கள் ஆதரவு நமக்குத்தான் இருக்கும். இது என் சொந்த அனுபவம். நாம் சூத்திரத் தன்மையிலிருந்து விடுதலை பெற, வடநாட்டார் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற, திராவிடத் தனி நாடடைய முயற்சி செய்தல் வேண்டும். அதற்குப் போதிய சக்தி, வசதி, வாய்ப்பு மக்கள் ஆதரவு எனக்கு உண்டு.

என்றாலும், இதற்குக் காங்கிரஸ் திராவிடர்கள் உட்பட, பார்ப்பனத் தோழர்கள் உட்பட மற்றும் எல்லோருடைய ஆதரவும் பெறவே நாம் முயற்சிக்க வேண்டும்; அயராது தொண்டாற்ற வேண்டும்.

[திருவாரூர் மாநாட்டில், 2-10-1949-ல் சொற்பொழிவு—'விடுதலை' 10-10-1949]

## 11. தன்னைப்பற்றி

வெகு வீராவேசத்துடன் கண்டனநாள் கொண்டாட தேதி குறிப்பிட்ட நான், அரசாங்கத்தில் தடை உத்தரவு கொடுக்கப்பட்டால் அவ்வுத்திரவுக்குக் கீழ்படியுங்கள் என்று கழகத் தோழர்களை நான் வேண்டிக்கொண்டதுபற்றி, என்னைப்பற்றியும், கழகத்தைப் பற்றியும், கழகத் தோழர்களைப்பற்றியும் பொதுமக்கள் பரிகாசம் செய்வார்களே என்று கருதலாம்.

ஆம்; பரிகாசம் செய்வார்கள்; நமக்கும் அது கொஞ்சம் மானக்கேடாகத்தான் தோன்றும். உண்மையாகவே அது மானக்கேடாகவும் இருக்கலாம். அந்த மானக்கேடு நடத்தை நானோ, நீங்களோ நமது தனிப்பட்ட சுயநலத்துக்காக அல்ல; சமுதாயப் பொது நலத்துக்காகவே அடைகிறோம். நாம் நமது சமுதாய நலத்துக்காக உயிரைத் தியாகம் செய்வது என்பது எப்படியோ, அப்படித்தான் உயிரிலும் சிறந்தது என்று சொல்லும் படியான மானத்தைத் தியாகம் செய்வது ஆகும்.

உண்மையான சமுதாயத் தொண்டன் என்பவன் சமுதாய நலனுக்குச் செய்யும் காரியங்களில் மானக்கேடு ஏற்பட நேர்ந்தால் அதைத் துணிவுடன் ஏற்க முன்வரவேண்டும். குடிநலத் தொண்டர்கள் 'மானம் பார்க்கில் கெடும்'—என்ன கெடும்? லட்சியம் கெடும்

படிப்பகம்

www.padippakam.com



என்பது நமக்கு முன்னாலும் சொல்லப்பட்ட அறிவுரையாகும். அப்படி மானத்தைக் கருதாதவன்தான் இலட்சியவாதியாவான்; மற்றவன் சுயநலவாதியேயாவான்.

ஆதலால், நான் பயந்துவிட்டதாகக் கருதாதீர்கள்; நீங்களும் உங்களுக்கு அந்தப் பேர் வருமே என்று கருதாதீர்கள்.

இப்போது தோழர்களே! உங்களைப் பல ஆயிரக்கணக்கில் ஜெயிலுக்கு அனுப்ப என்னால் முடியும். அதனால் நான் பெரிய தலைவனாக ஆகிவிட்டால் போதுமா? சங்கராச்சாரிகள் விஷயம் அற்ப விஷயம். அவர்களை நாம் பெரிதாகக் கருதுவதில்லை.

'பார்ப்பனீயம்' என்னும் நாடகத்தில் அவர் ஒரு முக்கிய ராஜபார்ட்காரர்; பார்ப்பனீய நாடகம் முடிந்தால் அவர் சாதாரண மனிதர்தான்!

அவர் உங்களுக்கோ, மற்ற மக்களுக்கோ, உலகத்திற்கோ எதில் சிறந்தவர்? என்ன பயன் அளிப்பவர்? அவர் பேச்சை எவன் மதிக்கிறான்? எவன் ஒப்புக்கொள்ளுகிறான்? அவர் காலில் விழுந்து பிரசாதம் பெற்ற மந்திரிமார்களாவது சங்கராச்சாரி சொல்லுவது போல் தங்களைச் சூத்திரர் என்றும், சூத்திர தர்மத்திற்கு ஏற்றவர்கள் என்றும் ஒப்புக் கொள்ளுகிறார்களா? சூத்திரத் தர்மப்படி நடந்து கொள்கிறார்களா? எல்லாம் பிஸினஸ் (Business) வியாபாரமுறை; ஒட்டுக்காகத்தான்! ஆனதால், சங்கராச்சாரியை ஒரு மதிக்கத் தக்க மனிதன்தான் என்று கருதி பெரிய காரியத்தில் இறங்காதீர்கள்!

நான் கண்டனநாள் குறிப்பிட்டது மக்களுக்கு ஓர் உணர்ச்சியை ஊட்டத்தான்; இதை வேறுவழியாலும் செய்யலாம். இதற்காக 1000, 2000, 10,000 பேர் சிறைக்குப்போக வேண்டாம்; போகவேண்டிய காரியம் பல இருக்கின்றன. எலெக்ஷன் சமயத்தில் இவை எதிரிகளுக்குப் பலமாகி விடுமே! தேர்தல் பிரச்சாரத்திற்கு இதைப் பயன்படுத்துங்கள். தேர்தலுக்குப்பின் நமக்கு அதிக வேலை இருக்கிறது! ஆகையால், உங்களுக்கு இந்த யோசனை தவறு என்று தோன்றினாலும் என்னை மன்னித்து அடுத்த காரியத்தை எதிர் பாருங்கள்.

['விடுதலை'—அறிக்கை—20-11-1966]

பெரியோர்களே! நண்பர்களே! தோழர்களே! சில தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் செய்துவந்த தொண்டும் செய்துவருகின்ற தொண்டும் நீங்கள் அறிந்ததேயாகும்.

அத்தொண்டு யாருக்காக என்பதும், அதனால் நான் ஏதாவது நன்மை, சுயநலம் அடைந்தேனா என்பதும் உங்களுக்குத் தெரியும். எனது நலத்தை, செல்வத்தை, செல்வாக்கை—பொதுநலத்தொண்டுக்குக் கொடுத்தேனா அல்லது எனது பொதுத் தொண்டால் எனது நலத்தை, செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டேனா என்பது உங்களுக்குத் தெரியும்!

இராஜாஜி அவர்களும், இரு கவர்னர்களும், இரு கவர்னர் ஜெனரல்களும் வேண்டியும், கேட்டுக்கொண்டும் மந்திரிப் பதவியை வெறுத்தவன் நான். தவிர, எந்தப் பதவியையும் நான் விரும்பியவன் அல்லன்.

இன்னும் இனியும் நண்பர்களால், பெரியோர்களால் புகழுரை பெற்றதைத் தவிர—யாராலும் ஒரு நலனும் பெற்றதில்லை; விரும்பியதுமில்லை.

எனக்குப் பொதுத்தொண்டு வரும்படி என்பது—என் சொந்தக் காசில் பிரயாணம் செய்து 1930-ல் கூட்டமொன்றுக்கு 50 ரூபாய் வாங்கி, 1950-ல் 100 ரூபாய் வாங்கி, 1960-ல் 150 ரூபாய் வாங்கி, 1970-ல் 200 ரூபாய் வாங்கினதுதான். மற்றும், மாநாடுகள் நடத்தியதில் சுமார் 1,00,000 ரூபாய் மீதமிருக்கும். மற்றபடி, எனக்கு இன்றுள்ள அவ்வளவும், மற்றும் இயக்கத்தின் பேரில் உள்ள சொத்துக்கள், செல்வங்கள் அவ்வளவும் என்னால்—என்



தகப்பனாரைக்கொண்டு செய்யப்பட்ட 'டிரஸ்ட் தர்ம சாசனம்' ஆக்கப்பட்ட எங்கள் குடும்பச் சொத்தே அல்லாமல் பிறர் சொத்து, ஒரு காசளவும் இல்லை.

அப்படி இருந்தாலும் நான் அவைகளில் இருந்து பொதுநலத்திற்கு என்று—திருச்சியில் காலேஜுக்கு 5 இலட்சமும், திருச்சி குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு ஒரு இலட்சமும்; ஈரோடு பொது ஆஸ்பத்திரிக்கு—குழந்தைகள் வார்டுக்கு ஒரு இலட்சமும், மற்றும் இந்த 50, 60 வருஷகாலமாக 1000 ரூபாய், 2000 ரூபாய், 3000 ரூபாய், 10,000 ரூபாய் என்கிற கணக்கில் பொதுநலத்திற்கு (தர்மத்துக்கு) என்று கொடுத்துவந்தது 2, 3 இலட்ச ரூபாய்க்கும் குறையாது.

இயக்கத்திற்கு நான் வாங்கி இருக்கின்ற சொத்துக்கள் இன்று, 30,00,000 (முப்பது இலட்சம்) ரூபாய்க்கும் குறையாமல் பெறும். எங்கள் டிரஸ்ட் சொத்துக்கள் சுமார் 20,00,000 ரூபாய், 30,00,000 ரூபாய் பெறும். இவ்வளவும் இயக்கத்தின் பெயராலேயே இருக்கின்றன. இருந்தாலும், தலைவன் என்கிற முறையில் 'என்' ஆதிக்கத்தில்தான் இருக்கின்றன. இதனால் இயக்கத்திற்கு இலாபம் என்னவென்றால்—வருமானம் பெருகுகின்றது; [illegible] வளருகின்றது; அவ்வளவுதான்.

எனக்கென்ன பயன் என்றால் கவலை, தொல்லை அதிகமாக இருப்பதுதான். [illegible] பல இலட்சம் இருக்கின்றது.

சர்க்கார் [illegible]த்தால், 'இன்கம்டாக்ஸ்' கொடுமையால் இவற்றில் எவ்வளவு குறைந்தாலும் குறையலாம்.

இனி எனது தொண்டினால் ஏற்பட்ட பலன் என்ன என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்!

மற்றும் எனது தொண்டில் எனக்கு உதவியாய் இருந்தவர்கள் பலர்—அவர்களால் கனவில்கூட நினைத்திருக்க முடியாத பதவியையும், அந்தஸ்தையும் செல்வாக்கையும் அடைந்தார்கள்; அடைந்தும் வருகிறார்கள். இந்த நிலையில்கூட நான் யாரையும் ஒரு காசு அளவுகூடக் கேட்காமலும், எவரிடத்திலும் நானாகக் கை நீட்டாமலும் இயக்கத்துக்காக வருவாய் சம்பாதித்துக் கொண்டுதான் வருகிறேன். எந்த நிலையிலும் எனது நிலை ஒரு சிறிதுகூடத் தாழாமல் ஏதோ சிறிதாவது வளர்ந்துகொண்டேதான் வருகிறது,

நண்பர்களே! இவற்றையெல்லாம் ஏன் சொல்லுகின்றேன்? யாரிடத்திலும்—எவ்வித உதவியையும் கேட்பதற்கல்ல. மற்று எதற்கு? மன்னிப்புக் கேட்பதற்கு—என்ன மன்னிப்பு என்றால், நான் இனிச் சுற்றுப் பிரயாணப் பிரச்சாரத்திலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவுசெய்திருக்கிறேன்.

சென்னையிலோ, திருச்சியிலோ வேறு தொல்லையற்ற இடத்திலோ இருந்துகொண்டு துண்டுப் பிரசுரம், 'வால் போஸ்டர்', சிறு சித்திரப் புத்தகம் முதலியவை பிரசுரித்துக் கொண்டு இருக்கலாம்; அலையவேண்டாம் என்று கருதுகிறேன்.

ஆகஸ்ட் முடிந்தால் 93 வயது முடிந்துவிட்டது; செப்டம்பர் பிறந்தால் 94-வது ஆண்டு பிறக்கின்றது. யார் தயவையும் விரும்பாமல், யார் விஷயத்திலும் தயவு தாட்சண்யம் காட்டாமல் சுதந்திரமாய் இருந்து பார்க்கலாம் என்று கருதுகின்றேன்.

நான் சென்னைக்கு வந்தால் 'உண்மை' மாத இதழையும் சென்னைக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று கருதுகின்றேன்.

சென்னைக்கு வருவதில் வேறு பல சங்கடங்களும் இருக்கின்றன. திருச்சியில் பயிற்சிப் பள்ளிகள் இரண்டு இருக்கின்றன; பிரைமரிப் பள்ளி ஒன்று இருக்கின்றது; அநாதைப் பிள்ளைகள் விடுதி ஒன்று இருக்கின்றது; வரும் ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளி ஒன்று ஏற்படுத்த அனுமதி பெற்று நடத்தப்படப்போகின்றது. ஈரோட்டில் ஒன்று



படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுத்த உத்தேசம். இவையெல்லாம் திருமதி மணியம்மையார் முயற்சியில்தான் நடைபெறுகின்றன. 10, 12 ஏக்கர் தோட்டப் பண்ணை ஒன்றும் நடைபெறுகின்றது. பல ஆயிரக்கணக்கில் வாடகை வரும் பல கட்டிடங்களும் திருச்சியில் இருக்கின்றன. ஆகவே, மணியம்மை அவர்கள் திருச்சியில் இருக்கவேண்டி இருக்கிறது.

நான் சென்னைக்கு வந்தால் மணியம்மையார் என்னைத் தனியாய் இருக்கச் சம்மதிக்கமாட்டார்கள்; அவர்கள் சென்னைக்கு வந்துவிட்டால், திருச்சி நடப்புக்கள் பாதிக்கப்பட்டுவிடும்.

இது ஒரு சங்கடமான நிலைமை என்றாலும் ஏதாவது செய்தாகவேண்டியிருக்கிறது.

எனது உடல் நிலை, மன நிலையைப் பொறுத்துத்தான் இந்தச் சிந்தனைகள் ஏற்பட்டன. தமிழ்ப் படிப்புள்ள புலவர் ஒருவர் எனக்கு உதவிக்கு வேண்டியிருக்கிறது. பேச்சில் இருக்கின்றவைகளை எழுத்தில்—புத்தகத்தில் ஏற்படுத்திவிட்டுப் போகவேண்டும் என்று கருதுகின்றேன். ஆகவே, தோழர்களே! என்னைக் கூப்பிடாதீர்கள்! கூப்பிட்டால் அது மாநாடாக இருக்கவேண்டும், பணம் ரூ. 500 கொடுக்கவேண்டும் என்று நிபந்தனை வைக்கின்றேன்.

மன்னியுங்கள்! நாடு பூராவும் நல்ல பேச்சாளர்கள் இருக்கின்றார்கள். நான் எதையும் குறைவில் விட்டுவிட்டுப் போகவில்லை. மக்கள் நல்ல உணர்ச்சி பெற்று இருக்கிறார்கள். ஆனால் காரியத்தில் இறங்கவில்லை. அதற்குத் துண்டுப் பிரசுரம் செய்யலாம் என்று இருக்கின்றேன்.

மற்றொரு முக்கிய விஷயம்; நமக்கு இப்போது சினிமா ஒரு தொல்லையாக ஆகிவிட்டது. அதற்காக ஒரு சினிமா பகிஷ்கார மாநாடு போட்டு, சினிமா பார்க்காதே என்று வேண்டுகோள் பிரச்சாரம் ஆரம்பிக்கவேண்டும்.

'கோவில் பகிஷ்காரம் சாதித்துவிட்டாயா?' என்று கேட்பார்கள். அது எனக்கு அவமானம்தான். ஆனாலும், நான் கலைஞர் அவர்களுக்கு ஆட்பட்டதால் ஏற்பட்ட நிலை என்றாலும், கலைஞர் தடையை நீக்கும்போது ஆரம்பிப்பேன். ஆனால், சினிமா பகிஷ்காரத்திற்கு யாருக்கும் ஆட்படமாட்டேன். அது அண்மையில் துவக்கப்படும். இவை பற்றிய திட்டங்களை அடுத்து வெளியிட இருக்கிறேன். வணக்கம்.

['விடுதலை'-தலையங்கம்—19-7-1972]

பகுதி VIII

# இறுதிச் சொற்பொழிவுகள்

படிப்பகம்



30–9–1973-ல் மதுரையில் நடைபெற்ற கருஞ்சட்டைப் படை மாநாட்டில் (ஒரு பகுதி)—தந்தை பெரியார் நாட்டுப் பிரிவினை கோரி முழங்கிய காட்சி.

www.padippakam.com

படிப்பகம்



திருச்சி மாவட்டம் கிருஷ்ணராயபுரத்தில் 18-7-1973-ல், தந்தை பெரியார் அவர்களுடன்
சிந்தனையாளர் கழகப் புரவலர் அமைச்சர் அன்பில் பெ. தருமலிங்கம்.

www.padippakam.com

படிப்பகம்

# 1. சிந்தனையாளர் கழகத்தில்

பெருமைக்குரிய தலைவர் அவர்களே! மாண்புமிகு அய்யா அமைச்சர்பெருமான் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! சட்டசபை அங்கத்தினர்களே!

இன்றைய தினம் என்னுடைய தொண்ணுற்றைந்தாவது பிறந்த நாள் விழா என்னும் பேரால் இம் மாபெரும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் அனேக நண்பர்கள் (என்னைப் பற்றிச்) சொன்னார்கள். நான் அவைகளைக் கேட்டுத்தான் ஆகவேண்டும்; வேறுவழி இல்லை. அவர்களுக்கு நான் என்னுடைய மனப் பூர்த்தியான நன்றியறிதலை உள்ளன்போடு—மனதோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தோழர்களே! எனக்கு உடல்நலமில்லை; மூன்று நாளாய் விடாமல் வயிற்றுப்போக்கு. இரண்டுநாளாய்ச் சாப்பாடு இல்லை; இன்றைக்குத்தான் ஒரு இட்டிலி சாப்பிட்டேன்; ஆனாலும் கலந்துகொள்கிறேன். இம் மாதிரியான மகிழ்ச்சியைப் பார்க்கிறபோது அடிக்கடி வந்தால் தேவலாம் என்கிறமாதிரி—ஆண்டுவிழா வரணும் என்று தோன்றுகிறது. ஆனால், உடல்நிலையைப் பார்க்கிறபோது இது எனக்குப் பெரிய தொந்தரவு மாதிரித்தான் காணப்படுகிறது. எப்படி இருந்தாலும் சரி.

அடுத்த வருஷத்து விழாவுக்கு நான் இருப்பேனோ, இல்லையோ! இருந்தாலும் விழா இருக்கும்படியான வாய்ப்பு—நடைபெறும்படியான வாய்ப்பு இருக்குமோ இல்லையோ; உண்மையைச் சொல்லுகிறேன். இதிலே ஒன்றும் பெருமைக்காகச் சொல்லவில்லை.

ஏன் அப்படிச் சொல்லுகிறேன் என்றால், ஏதோ வாழ்ந்த நாளெல்லாம், ஏதோ ஓர் அளவுக்கு மக்களுக்காகத்தான் தொண்டு செய்தேன் என்று இருந்தாலும் மன திருப்தியோடு காலம் முடிவுபெறுவதற்கு வாய்ப்பு இல்லாத நிலையிலே இருக்கிறேன். ஏன் என்றால், ஏறக்குறைய ஐம்பது வருஷகாலம் பொதுத்தொண்டு என்று நான் செய்தாலும், அதன் பயனாக ஏறக்குறைய பெரும்பாலான மக்களுடைய அன்பும், அவர்களுடைய பாராட்டுதலும் பெறும்படியான வாய்ப்புப் பெற்றிருந்தாலும் பெரிய மனக் குறையோடுதான் வாழ வேண்டியவனாக இருக்கிறேன்.

என்னுடைய தொண்டின் காரணமாக ஏற்பட்ட பல காரியங்கள் பாராட்டுதலுக்குரியவை என்றே வைத்துக்கொள்ளலாம். நம் மக்கள் எல்லாம் ஏதோ நல்ல அந்தஸ்திலே இருக்கிறார்கள். பெரும்பாலோருக்கு வெளிப்படையாய் இருந்த இழிவுகள் எல்லாம் நீங்கியும், நீங்கிக்கொண்டும் இருக்கிற ஒரு நல்ல வாய்ப்பிலேதான் இருக்கிறோம். அது யாராலே ஏற்பட்டிருந்தாலும் சரி—நல்ல வாய்ப்பிலே இருக்கிறோம்.

ஆனால், ஒன்று சொல்லுகிறேன். நம்முடைய சமுதாயம் ஏறக்குறைய இந்த நாட்டிலே—பார்ப்பனர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் நீங்கிய மற்ற மக்கள், தாய்மார்கள் எல்லோரும் பார்ப்பனனுடைய வைப்பாட்டி மக்களாக—தாசி மக்களாக—சூத்திரர்களாக இருக்கிறோம். நம் தாய்மார்கள் எல்லாம் பார்ப்பனனுடைய தாசிகளாக இருக்கிறார்கள்.

எதிலே இருக்கிறார்கள்? எவனோ கண்டவன் பேசிக்கொண்டு போகிறான் என்று நான் சொல்லவில்லை; ஏதோ சாஸ்திரத்திலே இருக்கிறது, சம்பிரதாயத்திலே இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. பின்னே எதிலே இருக்கிறது என்றால், சட்டத்திலே இருக்கிறது.

பொறுமையாகக் கேளுங்கள்! நமக்கு இருக்கிற சட்டம் 'இந்து லா' என்பதிலே—இந்துக்கள் என்ற சமுதாயத்திலே—பார்ப்பானைத் தவிர்த்த மற்ற மக்கள் சூத்திரர்கள்:

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



அவர்களுடைய தாய்மார்கள், மனைவிமார்கள், சகோதரிகள், மக்கள் ஆகிய பெண்கள் எல்லாம் பார்ப்பானுக்குத் தாசிகள் என்று சட்டத்திலே இருக்கிறது; தப்புவதற்கே வழி இல்லை.

நான் இருக்கிறேன்; என்னுடைய நண்பர்கள் இருக்கிறார்கள்; நான் தொண்டாற்றிய காலத்திலே அனேக தோழர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு இந்துமதம் இல்லை; அவர்களுக்கு இந்துமத சம்பந்தமான கடவுள், புராணம், சாஸ்திரம் ஒன்றும் சம்பந்த மில்லை. பின்னே அவர்கள் யார் என்றால்—பகுத்தறிவாளர்கள்; கடவுள்கூடக் கிடையாது. அப்படிப்பட்டவர்களும் சூத்திரர்கள், பார்ப்பானைத் தவிர்த்து என்று சொல்லிவிட்டார்கள் என்பது அந்த சாஸ்திரம்—அந்தச் சட்டம், தப்பவே முடியாது.

தோழர்களே! சாதாரணமாகச் சொல்லுகிறேன். ஒன்றும் வீம்புக்காகவோ, உங்களுக்கு ஒரு எழுச்சி உண்டாக்குகிறதற்காகவோ நான் சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள். நம்முடைய நாட்டிலே, நம் மக்கள் நூற்றுக்கு 97 பேராய் இருக்கிற நிலையிலே,—இந்த நாட்டு வாழ்வுக்கெல்லாம் காரணஸ்தர்களாக—அடிப்படை மக்களாக இருக்கிற நிலையிலே உள்ள இவ்வளவு பெரிய சமுதாயம்—ஈன சாதி மாத்திரம் அல்ல—மக்களாலே இழிவான கருத்தாகப் பேசிக்கொள்ளப்படுகிறதான விபச்சாரி மக்கள்; தாசி மக்கள். ஏன் இப்படி இருக்கவேண்டும்? நானும் ஏதோ தொண்டாற்றினேன்; இதில் இருந்து மக்களை விலக்குவதற்காக, எல்லாரையும் பகுத்தறிவாளர்களாக ஆகிவிடுங்கள் என்று சொன்னேன். என் பேச்சைக் கேட்டு வெகுபேர் பகுத்தறிவாளராகிவிட்டார்கள்; ஆகியும்—பகுத்தறிவாளர் ஆனாலும், நாத்திகர் ஆனாலும், மதமே இல்லாதவன் ஆனாலும்—'இந்து' என்கிற பட்டியலிலே வந்தால் அவன் சூத்திரன்; பார்ப்பானுக்குத் தாசி மகன். எவன்? ஒரேயடியாகச் சொல்லிப்போட்டான்—முஸ்லிம், கிறிஸ்தவன் தவிர்த்த எல்லாரும் இந்து; இந்துவிலே, பார்ப்பனரல்லாதவன் சூத்திரன்–தாசிமகன். என்றைக்கு? எதுவரைக்கும்? இந்த நாட்டுக்கு என்றைக்குப் பார்ப்பான் வந்தானோ—அவன் என்றைக்கு இந்த நாட்டில் வெற்றிபெற்றானோ அன்றைய முதற்கொண்டு—இந்த இந்துக்களாக இருக்கிறவரைக்கும், இந்துமதப் பாதுகாப்பு இருக்கிறவரைக்கும், அல்லது இந்த ஆட்சி இருக்கிறவரைக்கும்—இன்றையதினம் இருக்கிற ஆட்சி இருக்கிறதே, அரசாங்கம் சம்பந்த மான ஆட்சி, காங்கிரஸ் ஆட்சியாக இருக்கலாம், வேறு எந்த ஆட்சியாக இருக்கலாம்—இந்த ஆட்சி இருக்கிறவரைக்கும் நாம் எல்லாம் சூத்திரர்கள்—தாசிமக்கள்.

இது சம்மதம்தானா? இப்படியே இருக்கவேண்டியதுதானா? மந்திரியாக ஆனால் போய்விடுகிறதா? இல்லை, கோடீஸ்வரன் ஆனால் போய்விடுகிறதா? இல்லை, பண்டார சன்னதி—வெங்காயம் ஆனால் போய்விடுகிறதா? என்ன ஆனால் போகிறது? இந்த ஆட்சி ஒழிகிறவரைக்கும் போகாது. அல்லது, 'இந்து என்கிற மதம் ஒழிக்கப்பட்டது; இந்து மதம் என்பதாக ஒன்று இல்லை' என்று சொல்கிறவரைக்கும் போகாது. அப்புறம், என்ன, உங்களுக்கு நான் தொண்டு செய்தேன்—வெங்காயம் செய்தேன்!

நான் பிறக்கிறதற்கு முன்னேயே தேவடியாள் மக்கள் நீங்கள்; நான் பிறக்கிறதற்கு முன்னேயே சூத்திரர்கள் நீங்கள்—நான்காவது சாதி நீங்கள்; இப்போது நாளைக்குச் சாகப் போகிறேன்—சூத்திரனாய் விட்டுவிட்டுத்தானே சாகிறேன்? அப்புறம் என்ன என்னுடைய தொண்டு? சிந்திக்கணும் நீங்கள்! கொஞ்சம் கவலையோடு சிந்திக்கணும்! நானும் போய்விட்டேன் (என்றால்)—அப்புறம் இதைப்பற்றிப் பேசுவதற்கு ஆள் எங்கே? யார் வருவார்? வந்தால் இவ்வளவுக்குக்கூட விட்டுக்கொண்டிருக்க மாட்டானே, அரசாங்கம்—இவ்வளவு பேசவிட மாட்டானே! நானாக இருக்கிறதினாலே கொஞ்சம் சும்மா இருக்கிறான்; இன்னொருவன் பேச ஆரம்பித்தால் ஒழித்துப் போடுகிறான். இப்போதே நம் அரசாங்கத்து மேலே கண் வைத்திருக்கிறான். அது தெரிந்துவிட்டது நம் தலைவருக்கு—முதல்வருக்கு. அவர் என்கிட்டே வந்தார், 'இப்படி இருக்கிறது நிலைமை; வேலையை ஒழித்துப் போடுவான் போலத்தான் இருக்கிறது—எந்தச் சாக்காவது சொல்லி. இல்லை,



நானே விலகிக்கொள்ளட்டுமா? என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டார். நான் சொன்னேன், 'விலக வேண்டாம்—அவனாக விலக்குகிற வரைக்கும். அவனாக விலக்கினால், இன்னும் கொஞ்சம் ஆள் சேருவார்கள் நமக்கு. விலகாதீர்கள், இருங்கள்' என்று சொன்னேன். அது இன்னும் கொஞ்ச நாளிலே நடக்கும்; சீக்கிரத்திலே. இப்போதே சி. ஐ. டி. ஆங்காங்கே வந்து ரிப்போர்ட் பண்ணுகிறான். இப்போது அய்யா அமைச்சர் அன்பில் இங்கே வந்தது எல்லாம் உடனே இப்போது போயிருக்கும் டில்லிக்கு—'இவர் இங்கே இந்தக் கூட்டத்திலே இருந்தார்; இவரை வைத்துக்கொண்டுதான் இராமசாமி பேசினான்' என்று. எனக்கும் இவருக்கும் இந்தப் பேச்சிலே ஒன்றும் சம்பந்தமில்லை. மற்றப் பேச்செல்லாம் இருக்கலாம். அதே மாதிரியே ஒப்பந்தம் எங்களுக்குள்ளே—'நீங்கள் இதிலே கலந்துகொள்ளக் கூடாது. நானும் உங்களை எதிர்பார்க்கவில்லை' என்று. ஆனாலும், அவன் புள்ளி போட்டுக்கொண்டிருக்கிறான். இந்த மாதிரியான ஒரு நிலை இருக்கிறது.

சரி; அப்படி வந்தாலும் நான் அதற்காக ஒன்றும் கவலைப்படவில்லை. நம்மாலே வரக்கூடாது என்கிற எண்ணம்; வந்துவிட்டது, வேறே அவர்களுக்கு நாதி இல்லை; என் கிட்டேதான் வந்தாகணும். மந்திரி சபையை ஒழித்துவிட்டார்கள் என்றால் அவர்கள் எங்கே போவார்கள்? வந்தாகணும்; அப்புறம் இன்னும் நன்றாக நடக்கவேண்டும். இப்போது அவர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை; இந்த நிலையிலே இருக்கிறோம்.

நாம் என்ன பண்ணுவது இப்போது? அவரவர்களுக்கு வேலை இருக்கிறது; இல்லை என்று நான் சொல்லவில்லை; ஒவ்வொருவருக்கும் பெண்டாட்டி, பிள்ளை, குடும்பம், வேலை, வர்த்தகம், விவசாயம், உத்தியோகம், பெரிய வேலை எல்லாம் இருக்கின்றன. எல்லாரும் வெறும் காலி ஆட்கள் அல்ல—என்னைப்போல. அவர்கள் எல்லாம் என்ன பண்ணுகிறது? இலேசிலே விட்டுவிட்டு வர முடியுமா? பெண்டு, பிள்ளை, குடும்பம்—அதை வைத்துத் திட்டப்படி ஏற்பாடெல்லாம் இருக்கிறபோது, என்னமாக, நான் சொன்னேன் என்றால்—ஆத்திரப்பட்டு வந்திட முடியுமா? வரவில்லை. ஆள் ஒருவரும் வரவில்லை என்று நான் சும்மா இருக்கமுடியுமா?

உள்ளபடி ஒரு அளவிலே நான் திருப்தியாக இருந்தது—'நாம் அதிலே இல்லை; மற்றவர்களுக்குச் சொல்லலாம் என்று நினைத்தேன். பகுத்தறிவாளர்கள், நாத்திகர்கள், மதமற்றவர்கள், இந்துக்கள் அல்ல என்று சொல்லிக்கொள்பவர்கள் இருக்கலாம். இந்த இழிவிலே சம்பந்தமில்லை' என்று அப்படி நினைத்தேன் நான். ஆனால், சட்டம்—நண்பர் ஆனைமுத்து வந்து படித்துக் காண்பித்தார்—இந்தியாவிலே இருக்கிற கிறிஸ்தவன் தவிர, முஸ்லிம் தவிர மற்றவன் எல்லாம் இந்து; அவன் யாராயிருந்தாலும்—என்று.

என்னை இல்லை என்றாலும், எனக்கு அந்தப் பொறுப்பு போகவில்லை. அப்படி நினைத்தேன்; அப்படி இல்லை என்று நினைத்தேன். ஆனால் இப்போது நாம் தாசி மக்கள். இதை நீக்குவதற்காக நாம் பாடுபடவேண்டாமோ? சும்மா நாம் உத்தியோகத்துக் காகச் சண்டை பிடித்தோம்; உத்தியோகம் வந்துவிட்டது; பார்ப்பான் கிட்டே இருந்த தெல்லாம் இப்போது நம்கிட்டே வந்துகொண்டே இருக்கிறது. பார்ப்பானே சம்பந்தப்படாத மந்திரிசபை இருக்கிறது; வேறு என்னவேண்டும் நமக்கு? அரசியலிலே போராடினதிலே எல்லையைக் கண்டுபிடித்துவிட்டோம்; நாமேதான் இருக்கிறோம் இப்போது. போகிற வரைக்குமோ, இல்லை அதை விட்டுவிட்டு வருகிறவரைக்குமோ, வேறே ஒருவன் நம்மை ஒழிக்கிற வரைக்குமோ நாம்தான் அந்த ஆட்சியிலே. (இவ்வளவு) இருந்தும் சூத்திரனாக–பார்ப்பானின் தாசி மகனாக இருக்கவேணும் என்று இருந்தால், பதவி வந்து—பட்டம் வந்து—பார்ப்பானை ஒழித்துப் பலன் என்ன?

நம்முடைய உணர்ச்சி இருக்கிறது, இப்போது நான் இருக்கிறதினாலே—நான் ஒழிந்தேன் என்றால் இந்த உணர்ச்சி—முக்கால்வாசி போய்விடும். இந்தப் போட்டி

படிப்பகம்

www.padippakam.com



வனுக்கும்; ஆளுக்குஆள் போட்டிபோட்டுப் பதவியைக் கைப்பற்றுகிறதிலேதான் வரும். முன்னே, கொஞ்சம் பணக்காரன் பெரிய மனுஷன் என்கிறவன் எல்லாம் ஒழிந்துபோய் விட்டார்கள்; அவனாகக் கொஞ்சம் ஒழிந்தான்; பொதுஜனங்களாலேயும் கொஞ்சம் ஒழிக்கப் பட்டார்கள். இப்போது இருக்கிறதெல்லாம், சாதாரண மக்களாலே. இவர்களுக்கு எவ்வளவு தூரம் இருக்கப்போகிறது அந்த உணர்ச்சி. அப்புறம், இப்போது எவ்வளவு மறைத் தோமோ அதை எல்லாம் இனிமேல் வருகிறவன் திருப்புவான்.

இப்போது நாம் சமுதாயத்துப் பேரைச் சொல்லி மாற்றி—பார்ப்பானை ஒழித்து நாம் பதவிக்கு வந்துவிட்டோம். நமக்கு அப்புறம் வருகிற வாழ்வு—மாற்றிக்கொள்வான்; பழையபடி பார்ப்பான் ஆதிக்கம் வருவதற்கு என்னென்ன வேணுமோ அதுதான். நம்மிலே இருக்கிறார்கள் அனேகம் பேர்—காட்டிக்கொடுக்கவும், மற்ற காரியம் செய்யவும், என்ன அவமானம் வந்தாலும் லட்சியம் இல்லாமல் பதவிதான் பெரிது என்பதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் மெஜாரிட்டி. ஆனதினாலே மறுபடியும் அவர்கள் கிட்டே போய்ச் சேருவான். அவன்கிட்டே சேர்ந்தால் என்ன? பழையபடி ஆக்குகிறது (என்பது தான்); அப்புறம் நம் கதி என்ன ஆகும்? இப்போது எவ்வளவு கைப்பற்றினோமோ—இப்போது எவ்வளவு பெருமைக்கு, நன்மைக்கு ஆளானோமோ இதையெல்லாம் மாற்றுவதற்குத்தான் இடமாகுமே தவிர, இதோடு இன்னும் நன்மை தேடுவதற்கு இடமாகாது. டார் இருக்கிறார்? சொல்லுங்கள்; நாம் தானே இருக்கிறோம்! முன்னேற்றக் கழகம் ஒன்று—3½ பேர்; எல்லாரும் இருக்கிறார்கள்; அவர்கள் வந்துவிடுவார்கள்.

கம்யூனிஸ்ட்—எவன் காலை நக்கியாவது வயிறு வளர்க்கிறதுதான் அவன் வேலை; இன்னானோடுதான் இருக்கணும் என்கிற எண்ணம் இல்லை; நாம் வலுத்தால் நம்கிட்டே; பார்ப்பான் வலுத்தால் அவன் கிட்டே; இன்னொருவன் வலுத்தால் அவன் கிட்டே; உலகத்திலே கொள்கையே இல்லாத ஒரு கூட்டம் என்றால் நம் கம்யூனிஸ்டுதான்.

அதற்கு அடுத்தாற்போல காங்கிரசு—என்ன பண்ணியாவது பதவிக்கு வரணும் என்கிறவன். அவனோடு போட்டிபோடுகிற இன்னொரு காங்கிரசு; இந்த இரண்டிலேயும் வசதிபோலப் பண்ணிக்கொள்ளப் பார்ப்பனர்கள்! நமக்கு யார் இருக்கிறார்கள்? இப்போது துவக்கின ஒரு கட்சி இருக்கிறது. நம்மை ஒழிக்கிறதுக்குத்தான் அந்தக் கட்சி வேலை செய்கிறது—அண்ணா முன்னேற்றக் கழகம் என்று இருக்கிறது. அவர்களுக்கு என்ன வேலை? அவர்களுக்குச் சொந்தத்திலே ஏதாவது வேலை இருக்கிறதா? அவர்கள் எதிரிகிட்டே பேசிக்கொண்டு, 'காலிகளை ஒழித்துவிட்டு வருகிறேன், எனக்கு ஏதாவது எச்சலகலை போடுகிறாயா?' என்று கேட்கிறார்கள்.

அதாவது, ஒன்றாக, ஒரு கட்டுப்பாடாக ஒரு காரியம் செய்கிறதா என்றால் இல்லை. அது என்னமாக முடியும்? அதனாலே, அது ஒன்றும் பிரயோசனமாக இல்லை; பேசுகிறதற்கே தகுந்ததல்ல. அப்புறம் நம் கதி என்ன? அதைத்தான் கேட்கிறேன். இப்படியே சாகவேண்டியதுதானா? உலகம் உள்ளவரைக்கும் நாம் நாலாவது சாதியாகவே இருக்க வேண்டியதுதானா? உலகம் உள்ளவரைக்கும் நம் பெண்டுகள் எல்லாம் பார்ப்பானுடைய வைப்பாட்டிகள் என்றுதான் இருக்கணுமா? இப்போது நமக்குப் பயந்துகொண்டு சூத்திரன்' என்று சொல்லாமல் இருக்கிறான்; நம் பெண்டுகளை 'சூத்திரச்சி', 'அடி' என்று கூப்பிடாமல் இருக்கிறான்—அவனுக்குப் புத்திவந்தல்ல (பயத்தினால்). இந்தப் பயம் போய்விட்டால்?

அருமைத் தோழர்களே! இது நமக்கு ஒரு கடைசி முயற்சி என்று நினைக்கணும்; நினைக்கணும். இப்படியே சாகிறதைவிட ஈனத்தனம் வேறே இல்லை. ஆனதினாலே, ஏதோ ஒரு கிளர்ச்சி செய்கிறேன் இப்போது, நான். உங்களுக்கெல்லாம் தெரியும்—சமுதாய இழிவுநீக்க மாநாடு என்று, சென்னையிலே, அடுத்த மாதம் (கூட்டுகிறேன்); ஒன்றும் ஆட்சியைக் கைப்பற்றுகிறதல்ல; பெரிய இலாபம் அடைகிறதற்கு அல்ல—நமக்கு இருக்கிற



அவமானம் போகணும், இழிவு போகணும். சுதந்தரமோ, சுயராஜ்யமோ, வெங்காயமோ—நம் நாட்டை நாமே ஆள்கிறது என்றால் அந்த மாதிரியான முட்டாள்தனமான கருத்தே அதிலே இல்லை. நம் நாட்டை நாம் ஆள்வது என்கிறது முட்டாள்தனந்தான். இப்போது யார் ஆள்கிறார்கள்? நாம் தான் ஆள்கிறோம். என்ன செய்ய முடிந்தது? (எனக்கு) எவன் ஆண்டாலும் சரி; எவனைக் கூப்பிடுவது என்று இன்னும் யோசனை பண்ணுகிறேன்; எவனுக்கு வாய்ப்பு இருக்கும் என்று யோசனை பண்ணுகிறேன்.

நம்முடைய இயக்கத்தினுடைய லட்சியம் இந்த (டில்லி) ஆட்சியை ஒழிக்கவேண்டியது; எவன் வந்தாலும் சரி. ஏன்? வேறு எவன் வந்தாலும் இந்த இந்துவைக் காப்பாற்ற வேணும்—இந்து மதத்தைக் காப்பாற்றவேணும்—இந்த மக்களை எல்லாம் தேவடியாள் மகன் என்கிற தலைப்பிலே வைத்திருக்கவேணும் என்கிற எண்ணம் எவனுக்கும் இருக்காது—நீக்ரோ வந்தால் கூட இருக்காது.

இந்த ஆட்சி உள்ளவரைக்கும், அதுதான் கடைசி. அவன் பச்சையாக எழுதிக்கிட்டானே :—'இந்த ஆட்சியைப்பற்றி—இதிலிருந்து விலகணும் என்று எவனாவது நினைத்தால்—இது ஒழியணும் என்று எவனாவது நினைத்தால் ஏழு வருடம் தண்டிப்பேன்' என்று போட்டுவிட்டான், (சட்டம்). யாருக்காக? நமக்குப் பயந்துதான்; அண்ணாதுரைக்கும், எனக்கும் பயந்து அந்தமாதிரி போட்டான்.

நான், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று சத்தம் போட ஆரம்பித்த பிறகுதான் அவன் சட்டம் போட்டான்—இந்திய ஆட்சியிலிருந்து விலகவேணும் என்றால் ஏழு வருஷம் என்று. அண்ணாதுரை அப்போதே சொல்லி இருக்கிறார்—நீங்கள் இந்த மாதிரிச் சட்டம் போடுவீர்கள் என்று. சட்டம் போட்டதற்கு அப்புறம், 'அவர் சொன்னதற்காகத்தான் போட்டு இருக்கிறீர்கள்' என்று அவர் சொல்லிவிட்டார். அதுதான் அவன் செய்வான். இந்த இழிவுக்கு ஏதாவது பரிகாரம் பண்ணுகிறேன் என்கிற வார்த்தை அவன்கிட்டே (இருந்து) வராது. எப்படி வரும்? இழிவுக்கு ஏதாவது பரிகாரம் பண்ணுகிறேன் என்றால்—'இந்து மதம் என்கிறது ஒரு மதம் அல்ல; மக்கள் எல்லாம் இந்துக்கள் அல்ல—மனிதர்கள்' என்று சொல்லவேணும். (இப்படிச்) சொல்லிவிட்டால் அவனுக்கு ஏது இடம்? 'இந்து' என்கிறதினாலேதானே அவர்கள் வாழ்கிறார்கள். இந்த நாட்டிலே இந்துக்களாய் இருக்கிறதினாலே அவன் வாழ்கிறான். எப்படி வாழ்கிறான்? பிராமணனாக வாழ்கிறான். இந்துவாய் இருக்கிறதினாலே, நம்மைத் தேவடியாள் மகன் என்று சொல்லுகிறான்.

'இந்து' போய்விட்டால் அவன் சாதாரண மனிதன்; நாமும் சாதாரண மனிதன். ஆனதினாலே இந்த ஆட்சி உள்ளவரைக்கும் நாம் தேவடியாள் மகனாகத்தான் இருக்கணும்—சூத்திரனாகத்தான் இருக்கணும். ஆனதினாலேதான் கேட்கவேண்டியதாய் இருக்கிறது—'என்னடா, அப்பா! இதை மாற்றுகிறாயா, இல்லை உன்னை ஒழிக்கிறதா?' என்று. அதுதான் நாளைக்கு நடக்கப்போகிற மாநாட்டிலே பிரச்சினை. நியாயமா, அல்லவா? நீங்களே சொல்லுங்கள். இல்லை ஓட்டுக்காகக் கேட்கிறேனா? நான் ஓட்டுக்கு நிற்கிறவன் அல்ல; எங்கள் கட்சியும் ஓட்டுக்கு நிற்கிற கட்சி அல்ல; எங்களுக்கும் ஓட்டு பெரிதல்ல. நான்தான் எப்போதே சொன்னேனே—'எவன் ஆண்டாலும் சரி; எங்களை மனிதனாக மதிக்கணும்' என்று.

ஆனதினாலே இன்றைய தினம் நாம் பெரிய முயற்சியிலே இருக்கிறோம்—ஈடுபட்டு ஆகணும்; தமிழனாய் இருக்கிறவன் எல்லாம் உயிருக்கும், மானத்துக்கும் போட்டு இழுக்கணும், உயிர் பெரிதா, மானம் பெரிதா? என்று.

அவனவனுக்கு இருக்கும் வேலை—கண்டபடி (பிள்ளைகளைப்) பெற்றுக்கொண்டான்; என்ன பண்ணியாவது பிழைக்கணும் என்கிறான்; தப்பு என்று சொல்ல முடியாது. நூற்றுக்குத் தொண்ணூறு மக்களுக்கு அதே கருத்தாய் இருக்கிறபோது எவனைப் போய்க் குறிப்பிட்டு தப்பு என்கிறது? அவனவன் மாட்டிக்கிட்டான், வாழ்விலே.



படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பானா? அவனுக்கு இன உணர்ச்சி உண்டு. ஒருவன் ஒன்று சொன்னான் என்றால் அந்தப்படிக்குக் கேட்பான்—எப்படியாவது நம் பெருமை நமக்கு நிலைத்தால் போதும் என்று. நமக்கு என்ன இருக்கிறது? அவனவன் ஒவ்வொரு சாதியை வைத்துக் கொண்டான்; அவன் சாதியே பெரிய சாதியாக வைத்துக் கதை கட்டிக்கிட்டான்; அவனவன் இன்னொருவனுக்கு மேலே இருக்கணும் என்று போட்டியிட்டுக்கிட்டான். (இந்த) அடிப்படைக் கேட்டைப் போக்குகிறதற்கு ஆள் யார்? எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கிறது? நம் பிள்ளைகள், நம் குழந்தைகள், நம் தாய்மார்கள், இன்னும் பின்னாலே தோன்றக்கூடிய சந்ததிகள் எல்லாரையுமே தேவடியாள் மக்கள் என்றால்—உலகத்திலே எங்கே இப்படி இருக்கிறார்கள்? இங்கே, நம் இந்தியாவை விட்டுவிட்டால்—உலகம் பூராவும் சுற்றினால், இந்த மாதிரி 'இழிமக்கள்' எங்கே இருக்கிறார்கள்?

நீக்ரோக்கள்கூட இழிமக்கள் அல்லவே! நீக்ரோக்களைத் தொடக் கூடாது என்கிறதற்கு ஆள் இல்லை. நீக்ரோ வெள்ளைக்காரனுக்கோ, வேறு ஒருவனுக்கோ பிறந்தவன் என்று சொல்வதற்கு ஆள் இல்லை. என்னமோ கறுப்பாக இருக்கிறது—அவர்கள் பெண்களை அனுபவித்தால், அப் பெண்களுக்குக் கருத்தரித்தால் பிள்ளைகள் கறுப்பாய்ப் பிறக்கின்றன. இதுதான் அவனுக்கு வேதனையே தவிர, நீக்ரோக்களிடத்திலே வேறு ஒன்றுமே இல்லை.

ஆனதினாலே, உலகத்திலே எங்கேயும் இப்படிப்பட்ட ஒரு இழிவுக்கு ஆளான மக்கள் இல்லவே இல்லை. தமிழர்கள் நாம். இந்தியாவிலேயே நமக்குத்தான் கொஞ்சம் சுயமரியாதை உணர்ச்சி இருக்கிறது என்று பெயர். இந்தப் பக்கம் இருந்து அந்தப் பக்கம் வரை பாருங்கள்! மலையாளத்தை எடுத்துக்கிட்டீர்களானால் அங்கே பார்ப்பானுக்குப் பிறந்தவனுக்குத்தான் மரியாதை ஜாஸ்தி; சில பெண்டுகள்—போனால், பார்ப்பான்கிட்டே போகலாம், இல்லை என்றால் சும்மா இருக்கலாம் என்று இருக்கிறார்கள். அப்புறம் அதுக்கு இந்தப் பக்கம் என்ன; ஒன்றுமே இல்லை. மைசூரோ, ஆந்திராவோ—இந்த உணர்ச்சி அவர்களுக்கு இல்லை. நாம் ஏன் சூத்திரன் என்கிற உணர்ச்சி ஆந்திராவிலே எவனுக்கும் இல்லை; மைசூரிலேயும் அப்படித்தான்—ஏதோ சிலபேருக்கு இருக்கும். இந்த இரண்டையும் தாண்டிவிட்டால், பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகனாய் இருப்பது ஒரு பெருமை. பம்பாய் ஆகட்டும், பஞ்சாப் ஆகட்டும்—இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் ஒருவன்கூட சூத்திரன் என்கிறதற்கு வெட்கப்படுகிறவனே இல்லை. ஆனதினாலேதான் நம் அரசாங்கத்துக்குத் தைரியம்—'இவன் ஒருவன்தானே கத்துகிறான். அடக்கலாம்' என்று. நாம் என்ன பண்ணணும் இப்போது? நம் ஆயுளிலே நாம் இந்த இழிவை ஒழிக்கவேணும் என்று விரும்பினோம் என்றாவது இருக்கவேண்டாமோ?

எனவே, இந்த மாநாடு தீர்மானமான மாநாடுதான்; இரண்டிலே ஒன்று பார்க்கிற மாநாடுதான். அதை முன்னிட்டுத்தான், அதை வைத்துத்தான் சொன்னேன்—அடுத்த வருஷம் நான் இருப்பேனோ, இருக்கமாட்டேனோ என்று. உலகத்திலே இருப்பேனா என்கிறது வேறே; உங்களோடு இருக்கமுடியுமா என்பது வேறே—முடியாது. நாம் அதை மாற்றியே ஆகணும். மாற்றவில்லை என்றால் நம்மை எல்லாம் ஒழித்தே தீருவான்; ஜெயிலிலே வைத்தாகணும்—எல்லோரையும் இல்லாவிட்டாலும், சில பேரையாவது.

என்னுடைய ஆசையெல்லாம் ஜெயிலிலே செத்தால் மோட்சம் அடைவேன்—மோட்சம் என்றால் இன்பம் அடைவது. பின்னே எனக்கு ஒன்றும் இல்லை, வெளியிலே இருக்கிறதினாலே. நாம் செய்யவேண்டிய வேலை எல்லாம் செய்தாகிப்போச்சே! இனி அவன்கிட்டேதானே இருக்கிறது—சட்டத்தை மாற்றணும்; மதத்தை ஒழிக்கணும்—இல்லை அவன் ஒழிக்கப்படணும். முடியாது—சண்டை போடலாம். நாம் கொஞ்சம் வெற்றி பெற்றோமோ, நம்கூட இரண்டொரு நாடுகள் சேரும்—கொஞ்சம் கொஞ்சமாக; இப்போது சேராது. எல்லாம் பயந்துக்கிட்டு இருக்கிறது—என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று.



ஆகவே அருமைத் தோழர்களே! இது நமக்கு ஒரு பரீட்சைக் காலம். இப்படியே நாம் இருப்பது ரொம்ப அவமானம்; ஏதாவது செய்யணும். இரண்டாவது, இப்போது நம்முடைய சமுதாயத்திலே, நம்மிடத்திலே எல்லாம் ஒரு மாறுதல் ஏற்படவேண்டும். சமுதாய இழிவு நீங்கவேணும் என்கிற எண்ணம் நம் ஒவ்வொருவரிடத்திலேயும் இருக்கிறது என்கிற அடையாளம் காட்டிக் கொள்ளவேணும். வேறு ஒன்றும் நமக்கு இல்லை.

மற்றவனுக்கு எல்லாம் லட்சியம் இருக்கிறது—பதவிக்கு வரணும் என்று; அவ்வளவுதான். முன்னேயே சொன்னேன். பழைய காங்கிரசுக்கு என்ன? பழையபடி காமராஜர் எப்படியாவது மந்திரியாகணும்—எவன் காலிலே விழுந்தாவது மந்திரியாகணும்; காட்டிவிட்டாரே! தோற்றார் என்று தெரிந்தவுடனே, வேறு வழி இல்லை என்று சொன்னவுடனே, பார்ப்பான் வீட்டுக்கே போய்விட்டாரே, ராஜாஜிகிட்டே! இப்போது எனக்குப் பயந்துகொண்டு பார்ப்பானுக்கு விளம்பரம் கொடுக்காமல் இருக்கிறார். நான் செத்துப்போய் விட்டேன் என்றால்—நான் மறைந்தேன் என்றால்—என் செல்வாக்குக் குறைந்தது என்றால் காமராஜுக்கே தலைவன் பார்ப்பான்தான்! எவனாவது ஒரு காலிப் பயலைப் போட்டுக் கொண்டு பார்ப்பான் தயவை எதிர்பார்க்கிறார். ஏன் என்றால், அவன்கிட்டே பத்திரிகை இருக்கிறது; ஆட்கள் இருக்கிறார்கள்; விளம்பரம் இருக்கிறது. சரி; அந்த அம்மான் இந்திரா காந்திக்கு என்ன வேலை? அவருக்கும் பார்ப்பான் ஆதிக்கம் இருக்கிறது; என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்; யாருக்கு என்ன வேண்டுமானாலும் கொடுப்பார்கள். அவர்கள் இரண்டு பேரையும் விட்டால் பேருக்கு கம்யூனிஸ்டுகள்—மக்களிடத்திலே ஒரு செல்வாக்கும் கிடையாது; அவர்கள் தனித்து நின்றால் 5 ஓட்டுகூட வாங்கமுடியாது; அவர்கள் ஒரு கட்சி மாதிரி அவர்களுக்கும் விளம்பரம் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அப்புறம் பார்ப்பான் கட்சி—சுதந்தராக் கட்சி. ஜனசங்கக் கட்சி, வெங்காயக் கட்சி. வேறே யார் வருவார்? தமிழரசுக் கட்சி—எவன் ஜெயிக்கிறானோ அவனோடு சேர்ந்து கொள்கிறது; முன்னேற்றக் கழகம் ஜெயித்தால் இவர்களோடே; வேறு ஒன்று என்றால் அவர்களோடே.

அதனாலே இந்த ஒன்றைத் தவிர வேறு இல்லை—இந்த உணர்ச்சியோடு, இந்த உணர்ச்சிக்கணும் துணிந்து காட்டிக்கொள்ளவேணும். முன்னேற்றக் கழகத்துக்காரரோடு ஏதோ மக்கள் இருந்தாலும் முக்கியமானவர்களெல்லாம் ஜாக்கிரதையாக இருந்துகொண்டு கூடுமானவரைக்கும் மற்றவர்களுக்கு உதவி பண்ணவேணும். சர்க்கார் அதிகாரிகள் இதிலே ஒன்றும் கலந்துகொள்ளவேண்டியதில்லை; இதைப் பற்றியே அவர்கள் சம்பந்தம் வைத்துக்கொள்ளக்கூடாது; ஏனென்றால் மேலே இருந்து ஏதாவது வரும்.

எனவே, தோழர்களே! இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியிலே இருக்கிறோம்; கடைசி முயற்சியாக ஆரம்பித்து இருக்கிறேன்; முடியுதோ இல்லையோ என்கிறதைப்பற்றி லட்சியம் இல்லை; நம் கடமையைச் செய்தோமா இல்லையா என்கிறதுதான். சும்மாவே இருந்தால் என்ன ஆகிறது? நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன்—நமக்கு அப்புறம் ஏதோ இந்த ஆட்சி இருக்கிறது; இந்த ஆட்சிக்குப் பலம் வேணுமே! இதையும் எப்படியாவது ஒழித்து விடுவார்கள். அப்புறம் வருகிறவன் எல்லாம் 'காந்தி வாழ்க' என்று ஆரம்பிப்பான். இப்போதே எந்தெந்த மடையன் 'காந்தி வாழ்க', 'காங்கிரசுக்கு ஜே' என்கிறானோ அவன் எல்லாம் 'பார்ப்பானுக்குப் பிறந்தேன்' என்கிறதை ஒத்துக்கொள்கிறவன்தானே; தான் 'ஈனசாதி' என்கிறதை ஏற்றுக்கொள்கிறவன்தானே! பார்ப்பானுக்கு அதுதானே மந்திரம்—'எவனெவன் நமக்குப் பிறந்தவன்' என்கிறதைப் பார்ப்பதற்கு; எவனெவன் 'காந்திக்கு ஜே' என்கிறானோ அவனை எல்லாம் பார்ப்பான் புள்ளி போட்டுக்கொள்வான்; அது வளர்ந்துகொள்ளும். அப்புறம்? ஓட்டு என்றால் எல்லாரும் அதைச் சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள். நாம் [illegible] வெட்கத்தோடு நினைக்கணும்—நம் நாடு, நம் ஆதிக்கம், எல்லா வசதியும் நம் [illegible] றது, 100-க்கு 97 பேர்—என்னத்துக்காக அய்யா இப்படிப்பட்ட கதி, என்று.

படிப்பகம்

www.padippakam.com



தோழர்களே! மற்றும் என்னை எல்லாரும் வா[illegible]னீர்கள்; ரொம்பப் பாராட்டினீர்கள். நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் [illegible]டிலே வேறுவிதத் தடை இல்லாதவர்கள் எல்லாம் கலந்துகொள்ளுங்கள்; பெயரைக் கொடுங்கள்; விளம்பரம் பண்ணிக் கொள்ளுங்கள். ஏன் என்றால், அதெல்லாம் சேர்ந்துதான் வெற்றிக்கு வழி. எத்தனைப்பேர் இருக்கிறார்கள்; எவ்வளவு பேர் விரும்புகிறார்கள் என்றால், எதிரிக்குக் கொஞ்சம் புரியும். இது எளிதிலே ஆகுமா? முடியுமா? என்பீர்கள். இந்த டில்லி ஆட்சி ஒழியும்படியான வாய்ப்பு இருக்கிறது; இந்த ஆட்சிக்கு ஒரு நாட்டிலேயும் செல்வாக்கு இல்லை. உண்மையாகச் சொல்லுகிறேன்—தெலுங்கு நாட்டிலே செல்வாக்கு இல்லை; மலையாள நாட்டிலே செல்வாக்கு இல்லை; தமிழ்நாட்டிலே செல்வாக்கு இல்லை; வங்காளத்திலே செல்வாக்கு இல்லை. டில்லிக்கு அதிகாரம் இருக்கிறது என்று அவனவன் அடங்கிக் கிடக்கிறான்; நேரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அதனாலே சீக்கிரம் கவிழும். எலக்ஷனிலே நாம் வழிகாட்ட வேண்டியவர்கள். ஏனென்றால், அந்த அம்மாள் நடத்துகொள்ளுகிற மாதிரி—ஜனங்களுக்குள்ளே ஒரு உணர்ச்சியை ஊட்டிவிட்டு, பார்ப்பானைப் பாதுகாக்கிறார்; பார்ப்பானுக்கே எல்லாப் பதவியும் கொடுக்கிறார்; லட்சம் லட்சமாக—கோடிகோடியாகத் திருடி மகனுக்குக் கொடுக்கிறார் என்கிற பேரெல்லாம் வந்துவிட்டது—இது பொய்யோ, நிஜமோ! அப்புறம் பார்ப்பானாகப் பார்த்து சுப்ரீம் கோர்ட்டிலே ஜட்ஜாகப் போட்டுக்கொண்டார். பின்னே முதன் மந்திரிகளை நியமிக்கிறபோதெல்லாம் பார்ப்பானாகப் பார்த்தே நியமிக்கிறார். சுத்த அடிமையாய் இருக்கிற நம்மவர்களைத்தான் சேர்த்துக்கொள்கிறார்—சுப்ரமணியத்தைப்போல—மற்ற ஆட்களைப்போல. ஆனதினாலே, உலகத்துக்கு இது எல்லாம் தெரிந்துபோயிற்று. சமயம் வந்தால் கவிழ்க்கிறதற்குத்தான் தயாராய் இருக்கிறார்கள்; ரொம்ப நாளைக்கு வாழ்வார் என்று சொல்வதற்கு இல்லை. அடுத்தாற்போல எலக்ஷன் வந்தால் பகுதியாய்ப் போய்விடும்; அடுத்த எலக்ஷன் வந்தால் ஒழிந்தே போய்விடும்.

நாம் என்ன செய்யவேணும் என்கிறதற்கு நான் சொல்லணும். நமக்கு ரொம்பக் கவலை இருக்கணும்; நம் இளைஞர்கள் எல்லாம் துணியணும்; கல்யாணம் பண்ணினவன், பெண்டு பிள்ளையோடு இருக்கிறவன், மற்ற வசதியும் இருக்கிறவன் ஒரு பக்கம் இருந்தாலும்—இளைஞனாக, வாழ்க்கையிலே மாட்டிக்கொள்ளாமல் தண்டுமுண்டு இல்லாத மாதிரியாக இருக்கிற ஆட்கள் எல்லாரும் இதிலே புகுந்துகொள்ளணும். அப்போது தான் பயப்படுவான்—ஆதரவு இல்லை என்றால் யார் பயப்படுவார்கள்? நான் ஒருவன் கத்தினால் எல்லாரும் பயந்துகொள்வார்களா? நான் சொன்னால் சிலபேர் கேட்கிறார்கள் அல்லவா? செய்யணும். மாநாடு நடந்தால் சும்மாவா இருப்போம்? நடத்தினால் வேலை ஆரம்பிக்கணும்; வட நாட்டானை எல்லாம் இந்த நாட்டைவிட்டு விரட்டணும்; 'உனக்கு என்னடா இங்கே வேலை?' என்று ஆரம்பிக்கணும். அதிலே இருந்து வடநாட்டு அதிகாரமுள்ள ஆபீசு எங்கெங்கே இருக்கிறதோ அங்கெல்லாம் போய்க் கலவரம் பண்ணவேணும்.

வேலை இல்லை என்று சொல்லாதீர்கள்; இருக்கிறது நமக்கு. வேலை செய்யவில்லையா நாம்—சட்ட எரிப்பிலே, இந்தி எதிர்ப்பிலே, வடநாட்டான் மறியல் கிளர்ச்சியிலே எல்லாம், பண்ணினோமே! அந்த மாதிரியான கிளர்ச்சிகளைத் தொடர்ந்து இங்கே செய்யணும். இல்லாவிட்டால், அவன் வழிக்கு வரட்டுமே? 'என்னப்பா வேணும், என்னப்பா சங்கதி?' என்று வரட்டுமே! இலேசிலே அவன் இணங்குகிற மாதிரியான கொள்கை இல்லை நம் கையிலே.

இந்து மதத்தை ஒழிக்கணும் என்றால், அரசியல் சட்டத்தை ஒழித்தாகணும். அரசியல் சட்டத்துக்கு மாநாடு கூட்டி, சட்டத்தை, பார்லிமெண்டிலே—'மதத்தைக் காப்பாற்றுகிறது என்கிறது இல்லை, கொள்கை. ஆனால் அவர்கள் இஷ்டம்போல் செய்து கொள்ளலாம்; அவனவன் என்ன சொல்லுகிறானோ அதுதான் மதம். பிறந்திட்டது என்கிறதினாலே இந்து மதம் என்று இல்லை' என்று அரசியல் சட்டத்தைத் திருத்தட்டுமே!



'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' கையெழுத்துப் படியினைப் படித்துக் காண்பித்து நோபிள் கு. கோவிந்தராசலு, வே. ஆனைமுத்து, ச. சோமு ஆகியோர், தந்தை பெரியார் அவர்களிடம் 3–9–1973-ல் கையொப்பமும், பதிப்புரிமையும் பெற்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



'பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்' கையெழுத்துப்படியில்
நோபின் கு. கோவிந்தராசலு, கு. ம. சுப்பிரமணியன், பி. இ. ஆகியோர்,
தந்தை பெரியார் அவர்களிடம் கையொப்பம் பெறுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



சட்டத்திலே எல்லாவற்றையும் கட்டிப் போட்டுவிட்டு, 'அது சொன்னால் தப்பு; இது சொன்னால் தப்பு; அதைச் சொன்னால் ஏழு வருஷம்' என்று சொல்லிவிட்டால்—நிபந்தனையும், நினைக்க முடியாத அளவுக்குப் போட்டு, உலகம் உள்ளவரைக்கும் நீ தேவடியாள் மகன்தான் என்றால், அப்புறம் என்ன இருக்கிறது மனுஷனுக்கு? எப்படி இது ஒரு நாடாகும்? எப்படி மனித சமுதாயமாகும்? எப்படி மக்கள் எல்லாம் மான உணர்ச்சி உள்ளவர்கள் ஆவார்கள்?

எனவே, அவரவர் வீட்டிலே இருக்கிற இளைஞர்களை எல்லாம் விரட்டுங்கள்; கல்யாணம் பண்ணாத பசங்களை எல்லாம் 'போ' என்று அனுப்புங்கள்; பெண்டுகளையும் கூடுமான வரைக்கும் அனுப்பிவிடுங்கள்!

பெரிய கிளர்ச்சி நடந்தால்தான் விஷயங்களைச் சரிப் பண்ணிக்கொள்ள முடியும். வேறொருவன் நினைக்கமாட்டான்—இவ்வளவு கடினமான சங்கதியை! எப்படி நினைப்பான்? நினைத்தானானால் அவன் பிழைக்கிறதற்கு வழி ஏது? இவ்வளவையும் சொன்னேன்; தெளிவாகவே சொல்லுகிறேன்—முன்னேற்றக் கழகத்துக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை; இந்த நிகழ்ச்சிக்கும், இந்தக் கிளர்ச்சிக்கும் சம்பந்தம் இல்லை; எப்போது சம்பந்தம் என்றால் அவர்களாக (டெல்லியாக)ப் பார்த்து விரட்டி அடித்துவிட்டால் சம்பந்தம்; அதுவரைக்கும் நாம்தான். இந்தக் கிளர்ச்சி நடக்கிறபோது ஆட்சி மாறியது என்றால் தொந்தரவு இன்னும் ரொம்ப ஆகும்; அவர்கள் நமக்கு உதவி செய்கிறதற்காகப் பதவியிலே இருக்கவேணும்; இல்லாவிட்டால் கண்டவன் வருவான்—கண்ட மாதிரி நடத்துவான். இந்தி ஒழியணும் என்று சொல்கிறபோது, இந்தி இருக்கவேணும் என்று மந்திரிகள் சண்டை போடவில்லையா? அவினாசிலிங்கம் செட்டியார், மற்றும் இப்படிச் சில மந்திரிகள் எல்லாம் இந்தி இருக்கணும் என்று சண்டைபோடவில்லையா? அப்படி எத்தனையோ இருக்கிறது தமிழர் சாதியிலே!

அதனாலே, இப்போது தமிழர் என்கிற அடிப்படையிலே இருக்கிற நிலையைக் காப்பாற்றிக்கொள்ளவேணும்; அவரவர்கள் வந்திடவேணும். அவசியம் இருக்கிறபோது நம் இயக்கத்திலே உள்ளவர்களும் ஒவ்வொருவரும் ஆதரவுகொடுக்கணும்; கூடுமானவரை வெளியே வந்திடவேணும்.

இந்தக் கிளர்ச்சி, நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை—இந்தக் கிளர்ச்சியை ஆரம்பிக்கிற இடந்தான் தமிழ்நாடே தவிர, ஏறக்குறைய இந்தியாவிலே பகுதி நாட்டுக்கு மேலே ஒரு வருஷத்துக்குள்ளே நெருப்புப் பிடித்துக்கொள்ளும்—ஒரு வருஷத்துக்குள்ளே!

அலகாபாத்திலே, கான்பூரிலே, இன்னும் லக்னோவிலே நம் உணர்ச்சி உள்ளவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் ஆதரவு அளிப்பார்கள்; அப்புறம், அப்படியே பெருகும். ஏனென்றால், அங்கே உள்ள ஜனங்களுக்கு 'சூத்திரன் என்றால் அவமானம்' என்று தெரியாது; அது ஒரு பெருமை என்று நினைக்கிறார்கள். என்னிடமே அங்கே ரகளை பண்ணினானே—இராமாயணத்தைப் பார்த்துவிட்டு. அப்புறம் அதே ஊரிலே இராமாயணம் இங்கிலீஷிலே போட்டு இரண்டாயிரம் பிரதிகள் செலவாயிற்று; விஷயம் தெரிந்தால் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அங்கங்கே இந்தப் பார்ப்பனர்கள் கொஞ்சம் பேர்—நம் நாட்டுப் பார்ப்பனர்கள் அங்கே போய் உட்கார்ந்துகொண்டு, அங்கே கூட்டம் சேர்க்கிறார்கள். நம் ஆட்கள் எல்லாம் சொல்லிக்கொடுக்கிறார்கள். அதெல்லாம் நிலைத்து இருக்காது. இங்கே ஒரு ஆயிரம், அய்யாயிரம் பேர் ஜெயிலுக்குப் போனோமானால் மற்ற நாடெல்லாம் (நெருப்பு) பிடித்துக்கொள்ளும். அய்யாயிரம் பேர் கூடவா போகமாட்டார்கள் ஜெயிலுக்கு—இவ்வளவு பெரிய கிளர்ச்சிக்கு? ஒன்றும் இல்லாத கிளர்ச்சிக்கு எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு போனார்கள் என்றால்—சாதியை மாற்றுகிறது, நம்முடைய பெண்களுடைய நிலைமையை மாற்றுகிறது என்கிற கிளர்ச்சிக்கு அய்யாயிரம் பேர்கூடவா போகமாட்டார்கள்?

படிப்பகம்

www.padippakam.com



ஆனதினாலே, அருமைத் தோழர்களே! நீங்கள் எல்லாம் நன்றாக நினையுங்கள். உங்கள் குடும்பமோ, உங்கள் பிழைப்போ, கலந்துகொள்ள இடம்கொடுக்கவில்லை என்றாலும்—நம்மாலான உதவி என்ன செய்யலாம் என்று சிந்தியுங்கள்; அதைச் செய்யுங்கள். நீங்கள் ஆட்களைச் சேர்க்கலாம்; நிகழ்ச்சி நடந்த உடனே—மாநாடு நடந்த உடனே ஒரு லட்ச ரூபாய் சேர்த்தாகவேணும்; மாண்புமிகு அன்பில் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கனும், கொடுக்கனும். எல்லாம் சேர்த்து ஆரம்பிக்கனும்.

எல்லாம் பெண்களே ஜெயிலுக்குப் போகனும்—ஏனென்றால், இது சமுதாய சம்பந்தமானது. பார்ப்பானாக இருந்தால் அவன் எவ்வளவு செய்கிறான்—எத்தனைப் பார்ப்பனத்திகள், எவ்வளவு கூட்டம்! இது நம்முடைய மானத்தைப் பாதிக்கிற காரியம் ஆனதினாலே நாம் கலந்துகொண்டால் தப்பென்ன? தோற்றுப் போனால்தான் தப்பென்ன? இதற்குத் தோல்வியே இருக்காதே! அதை மாற்றுகிற வரைக்கும்—அந்த நிலைமையை மாற்றுகிற வரைக்கும் பணி இருக்குமே தவிர தோல்வியே இருக்காது. நான் சொல்லு கிறேன், நீங்கள் விளையாட்டாக நினைக்காதீர்கள்—இது மாறினால்தான் நாம் மனுஷன் ஆவோம்; நம்நாட்டு மனிதத் தன்மை நமக்கு வரும். இது முடியவே இல்லையே—என்ன தான் சுதந்தரம் என்று இருந்தாலும்.

நான் சொல்லுகிறேன், இந்தியாவில் 56 கோடி ஜனங்கள்; இதிலே 100-க்கு 3 பேர் பார்ப்பான்; அவனே இந்தியாவை ஆளுகிறது என்றால்—நினைத்துப் பாருங்கள், எவ்வளவு அவமானம்! ஜவகர்லால் நேருவாவது கொஞ்சம் வேஷம் போட்டுக்கொண்டிருந் தார், எல்லாப் பித்தலாட்டமும் பண்ணுவார்; பார்வைக்குச் சமதர்மம் என்பார். எனக்குத் தெரியும்—நான் அப்போதே சொல்லி இருக்கிறேன்.

இந்த இந்திரா காந்தி அம்மாளாலே வேஷம் போடக்கூடத் தெரியவில்லை. பார்ப் பனனையே கொண்டுவந்து வைத்துக்கொண்டார் அந்த அம்மாள். முதலாவது, இன்றைக்கு அந்த அம்மாள் பதவியிலே இருக்கிறது நமக்கெல்லாம் அவமானம் இல்லையா—பெண் என்பதற்காகச் சொல்லவில்லை—ஒரு பார்ப்பனத்தி என்பதால்தான். என்ன, அப்புறம், நாம் என்ன மானத்தோடு வாழ்கிறோம்? இந்திய மக்களுக்கு என்ன தொல்லை இருக்கிறது? இந்தியாவில் 56 கோடி ஜனங்களில் 50 கோடிப்பேர் பார்ப்பான் அல்லாதவர்கள்—ஆனால் பார்ப்பனத்தி ஆளுகிறாள் என்றால்? இதை எல்லாம் நீங்கள் நினைக்கனும்.

எனக்கு இன்று புத்தி சுவாதீனம் இல்லை என்றுகூடச் சொல்லுவேன்; எல்லாம் மறந்துபோயிற்று; என்ன பேசவேணும் என்று இருந்தேனோ ஒன்றும் ஞாபகத்துக்கு வரமாட்டேன் என்கிறது. ஏனென்றால் இரண்டு நாளாய்ப் பட்டினி கிடந்தேன்; நேற்றுத் தான் காலையிலே ஒரு கப் கஞ்சி, இராத்திரி 9 மணிக்கு ஒரு தடவை கஞ்சி, முந்தாநாள் பூராவும் ஒன்றும் இல்லை; தண்ணீர்கூட குடிக்கவே இல்லை. இன்றைக்குக் காலையில் வந்தேன்; ஒரு இட்லி கொடுத்தார்கள்; இன்னொரு இட்லி கொடு என்றேன், முடியாது என்று சொல்லிவிட்டார்கள்—நாசமாகப் போகட்டும் என்று வந்துவிட்டேன். இருந்தாலும் உங்களைப் பார்க்கிறபோது—மறுபடியும் இன்னும் 8 நாட்களுக்குப் பேசுவதற்கு இல்லையே என்று, மனதிலே இருக்கிறதைச் சொல்லுகிறேன்.

இப்போது நீங்கள் எல்லாம் பொறுப்போடு வெளியே போகனும்; நீங்கள் வந்து அந்த மாநாட்டிலே கொடுக்கிற உற்சாகம்தான், மக்களுக்கெல்லாம் நல்லது ஆகும். சும்மா மாநாடு நடத்திவிட்டுப் போகிறதில்லை. நடந்த உடனே கிளர்ச்சி ஆரம்பிப்போம். நாம் அவர்களுக்கு நோட்டீஸ் விடனும்—'என்ன, இதை மாற்றுகிறதற்கு வழி பண்ணுகிறாயா? இல்லை உன்னை ஒழிக்கிறதா?'—என்று. மாநாட்டுத் தீர்மானம் அதுதான் வரும்; அதிலே டைம் போடுவோம்; அது ஆன உடனே ஆரம்பித்துவிடுவோம்.

அதற்குள்ளே ஆங்காங்கே கமிட்டி கூட்டவேண்டும். மறுபடியும் சொல்லுகிறேன்—வடநாட்டான் எங்கெங்கு இருக்கின்றானோ அங்கெல்லாம் மறியல், 'இங்கே என்ன வேலை உனக்கு?' என்று. அப்புறம் வடநாட்டுக் கச்சேரி, போஸ்டாபீஸ், அதிகாரி அங்கே எல்லாம் மறியல். அவனுக்குத் தெரியணுமே, அதற்காக.



இங்கே, இருக்கிற இடத்திலே (மறியல்) செய்தால் இவர்களுக்குத் தொந்தரவு; இவர் களாலே ஏதாவது தப்பு இருந்தால் அல்லவா இவர்கள் இடத்திலே செய்யலாம்? இன்னும் உங்களுக்குத் தோன்றுகிறதெல்லாம் சொல்லுங்கள்—என்னென்ன காரியம் செய்யலாம் என்று; அதைச் செய்வது. நான் ஒன்றும் சும்மா இருந்துகொண்டு அதிகாரம் பண்ணு கிறாற்போல இல்லை—முதல் பலி நான்; என்னைக் கொடுத்துவிட்டுத்தான் அப்புறம் உங்களைக் கூப்பிடுவேன். சும்மா நாங்கள் உபதேசம் பண்ணிக்கொண்டு இருக்கிறதில்லை.

அருமைத் தோழர்களே! கொஞ்சம் சீரியஸாக, கொஞ்சம் தீவிரமாகச் சிந்தியுங்கள். தமிழர்களுக்கே இது ஒரு பரீட்சை; தமிழருக்கு மானம் இருக்கிறதா இல்லையா என்கிற தைப் பார்க்கிற ஒரு பரீட்சை என்றெல்லாம் வேண்டிக்கொண்டு என்னுடைய இஷ்டத்தை எடுத்துச் சொன்னேன் நான்.

நான் இப்போதும், கடைசியாகவும் வேண்டிக்கொள்கிறேன்—மந்திரிகளோ, முன் னேற்றக் கழகக்காரரோ இதிலே கலந்துகொள்ளாமல் இருக்கனும்; மற்ற உதவிக்கு இருப்பது, அதுவேறு விஷயம்; காரிய சம்பந்தமாக இதிலே கலந்துகொள்ளாமல் இருக்க வேண்டியது. நல்ல உத்தியோகம், பதவியிலே இருக்கிறவர்கள் கண்டிப்பாகக் கிட்டேயே வரக்கூடாது; ஏதோ அவர்களாலே ஆன உதவியைச் செய்யட்டும்.

ஏன் என்றால், நான் முன்னமேயே சொன்னேன்; கடைசியாகவும் சொல்லுகிறேன்—இது கடைசி முயற்சி, கடைசி முயற்சி, கடைசி முயற்சி! வணக்கம்.

(திருச்சியில், 4-11-1973 ஞாயிறு அன்று, சிந்தனையாளர் கழகச் சார்பில் நடந்த பிறந்தநாள் விழாவில் பெரியார் ஆற்றிய நன்றி உரை. பெரியார் அவர்கள் சிந்தனை யாளர் கழகத்தில் இறுதியாக உரையாற்றிய நிகழ்ச்சியாக, இது அமைந்துவிட்டது.)

[ஆதாரம்: Tape Recorder—Akai, Track No. 4, 15/16 Speed, 179 feet]

## 2. மாநாட்டில்

பேரன்புமிக்க தாய்மார்களே! பெரியோர்களே! தமிழ்நாடு முழுவதிலும் இருந்து இங்கு எழுந்தருளியிருக்கும் பிரதிநிதிகளே! சொற்பொழிவாற்றிய பேரறிஞர்களே!

இப்பொழுது நல்ல சொற்பொழிவுகளைக்கேட்டு ரொம்ப உணர்ச்சியோடு பக்குவ மான நிலையிலே இருக்கிறீர்கள். நான் பேசுவதன்மூலம் எங்கே இது கலைந்துபோய் விடுமோ என்று பயப்படுகிறேன். அவ்வளவு நல்ல தெளிவாக யாருக்கும் விளங்கும்படியும், ஒவ்வொருவர் மனமும் உடனே காரியத்தில் இறங்கும்படியான உணர்ச்சி ஏற்படும்படியும் நல்லவண்ணம் அவர்கள் பேசினார்கள். எனக்கும் தெரியாத, இதுவரையிலும் நான் தெரிந்திருக்காத அனேக அருமையான விஷயங்களை எல்லாம் பேசினார்கள்; நாம் செய்வது ரொம்ப அவசியமான காரியம்—ஞாயமான காரியம் என்று கருதும்படி நல்ல வண்ணம் விளக்கினார்கள். இனி நான் சம்பிரதாயத்துக்குத்தான் இரண்டொரு வார்த்தைகள் பேச வேண்டி இருக்கிறது.

தோழர்களே! நான் இந்த மாநாடு கூட்டி இருப்பதன் நோக்கம் போராட்டத்தை உத்தேசித்து அல்ல; அல்லது இந்த ஆட்சியிலே இருந்து விலகவேண்டும் என்கிற எண்ணத்தை உத்தேசித்து அல்ல. மனித சமுதாயமாகிய நாம், சமுதாயத்திலே ஈனப் பிறவிகளாக—அசிங்கப்படும்படியாக வரும்படியான கருத்திலே, இன்னொரு சாதியானுக்கு,

படிப்பகம்

www.padippakam.com



அதுவும் நம் நாட்டிலே பிழைக்க வந்த ஒரு சிறு கூட்டத்தானுக்குக் கீழ்மக்களாக—அடிமைகளாக—அவனுடைய தாசி மக்களாக இருக்கவேண்டும், இருக்கிறோம், இருந்துவருவதுதான் ஆட்சியினுடைய தன்மை என்று கருதும்படியாக—இழிவான நிலைமையிலே இருக்கிறோம். அதிலிருந்து மாறவேண்டும் என்று கேட்கிறோம். இது இயற்கை.

எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் இவைகளை எல்லாம் சொல்கிறபோது வெட்கப் படத்தான் செய்வான்; இதிலேயிருந்து கொஞ்சம் மாறினால் தேவலாம் என்றுதான் இருப்பான். நாம் தாசி மக்கள் இல்லை—நிஜமாகத் தாசி மக்களாக இருக்கிறவர்கள்கூட, ஏதோ அமைப்பினாலே—காரியத்தினாலே இருக்கவேண்டி ஏற்பட்டது என்று இருந்தாலும், 'என்னடா, இப்படி ஒரு பழிப்புக்கு ஆளானோமே!' என்று வருத்தப்படுவான். அப்படிப் பட்ட ஒரு நிலையிலே நம் நாட்டை, நம் சமுதாயத்தை, நம் மக்களை, நம் தாய்மார்களை எல்லாரையும் உட்படுத்தி அமுல் நடத்தி ஆட்சி வகிக்கிறார்கள் என்றால்—உண்மையிலேயே சொல்லுகிறேன்—இத்தனை நாள் நாம் பொறுத்துக் கொண்டிருந்ததே நமக்குப் பெரிய அவமானந்தான்.

முதலிலேயே இதற்கெல்லாம் பக்குவம் பண்ணி ஆகி இருக்கணும்; முடியவில்லை. ஆனால் இதைப்பற்றி வருத்தப்பட்டு இருக்கிறோம். செய்கிறமுறை சரியாக வரவில்லை; உணர்ச்சியும் நிலைமையும் வாய்ப்பாக இல்லை; இப்பொழுது ஏதோ ஒரு வாய்ப்பாக வந்தது. அதுவும் இப்போது வந்த வாய்ப்பு, இந்தத் தீண்டாமை ஒழிப்பு என்கிற விஷயத்திலே, தீண்டாமை ஒழிந்ததாகச் சொல்லியும், இன்னமும் நம்மைத் தீண்டப்படாதவன் என்று கருதும்படி கடவுளிலே, கோயிலிலே இந்த மாதிரிச் சில இடங்களிலே வைத்துக் கொண்டிருக்கிறார்களே என்ற எண்ணம் வந்ததினாலேதான்—இதை மாற்றவேண்டும் என்கிற ஒரு உணர்ச்சி வந்தது.

இப்போது, நண்பர் நமது கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 'இந்தக் கோயில் அர்ச்சகர் வேலை யாரும் செய்யலாம்' என்று தீர்மானம் பண்ணி, அதை இந்த அரசாங்கம் சட்டம் செய்ததானது செல்லாது என்று பண்ணி, நம் இழிநிலைமையைச் சட்டத்தின்மூலம் உறுதிப்படுத்திவிட்டதினாலே, கொஞ்சம் ஆத்திரம் அதிகமாய்ப் போயிற்று. இதை இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் என்ன ஆகிறது? இல்லாவிட்டால் நமக்கு இவ்வளவு ஆத்திரம்கூட வந்திருக்காது; நமக்கு ஆத்திரம் வந்தது, வந்ததினாலே நல்லவிதத்திலே வந்திருக்கிறோம்.' உணர்ச்சி வந்தது; அதற்குவேண்டிய காரியமெல்லாம் பண்ணினோம்; மாநாடு போட்டோம்.

இது ஒரு திருப்திகரமான மாநாடு; ஒன்றும் குறைசொல்லுகிறதற்கு இல்லை; எவ்வளவுபேரை எதிர்பார்த்தோமோ அதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை; எவ்வளவு ஆதரவு எதிர்பார்த்தோமோ அதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. பொருளாதார விஷயத்திலே நம் இயக்கம் நடக்கிறதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்று நினைத்தோமோ அதிலேயும் ஒன்றும் குறைச்சல் இல்லை. ஒருவிதத்திலேயும் நம் மாநாட்டைக் குறை சொல்லுகிறதற்கு இல்லாமல் இருக்கிறது; நம்முடைய ஆசைப்படி நல்ல வண்ணம் நடந்து இருக்கிறது.

இப்போது நல்ல தீர்மானங்களைப் போட்டுவிட்டோம்; அழகுக்காகத் தீர்மானம் போடவில்லை. கண்டிப்பாக இழிவு தீரவேணும்; இது போகாவிட்டால் நம் கதி என்ன ஆகும் என்கிற நிலைமையிலே இந்தத் தீர்மானங்களைச் செய்து இருக்கிறோம். இப்போது இந்தத் தீர்மானங்களிலே எனக்கு ஒரு பொறுப்புக் கொடுத்திருக்கிறார்கள், 'எப்போது செய்கிறது என்கிறதைப்பற்றித் தலைவர் சொல்லுவார்; அவர் சொற்படி கேட்கவேண்டும்' என்று. என்னென்ன செய்யவேண்டும் என்கிறதைப்பற்றிப் பொறுப்பாகக் கேட்டிருக் கிறது; அதற்குப் பரிகாரம் சொல்லணும்; உண்மைதான். எனக்கும், 'ஒரு பெரிய காரியத்தை ஆரம்பிக்கிறோம்—சும்மா அலட்சியப் புத்தியோடு ஆரம்பித்து அல்ல, மென்ன



உறுதியான எண்ணத்தோடு கண்டிப்பாகக் காரியம் நடக்கும்படியான தன்மையிலே செய்யவேணும்' என்கிற எண்ணந்தான் இருக்கிறது.

முதலாவதாக, நான் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். இந்தக் கிளர்ச்சியை எப்போது ஆரம்பிக்கலாம் என்றால், இந்த மாநாடு முடிந்த உடனே, மாநாட்டுத் தீர்மானங்களை மந்திரிகள், குடியரசுத் தலைவர், இந்தியப் பிரதம மந்திரி இந்திரா அம்மாள் அவர்களுக்கும்; மற்றும் பார்லிமெண்ட் மெம்பர்களுக்கோ, நம் அரசாங்கத்துக்கோ, யார் யாருக்கோ—முக்கியமாக இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பி அவர்கள் நம் சேதிகளைப் பற்றி என்ன முடிவு கூறுகிறார்கள் என்பதையும்; அவர்கள் ஆதரவான பதிலை எங்களுக்கு அனுப்பிவைக்கவேணும் என்றும் கேட்கப்போகிறோம். அது வந்தபிறகு நம் மக்களுக்கு, நமக்கு அனுகூலமாக இல்லாவிட்டால் கிளர்ச்சியிலே இறங்குகிறோம் என்று திட்டம்போட்டு இருக்கிறோம். அது பெரிய காரியந்தான்.

கிளர்ச்சி ஆரம்பிக்கிறபோது, அரசாங்கத்துக்கு, அது விரோதமாகத்தான் இருக்கும். அரசாங்கம், எப்படியாவது அடக்கவேண்டும் என்று அவர்களால் கூடுமான அளவுக்கு வேலை எல்லாம் செய்துதான் தீருவார்கள். கிளர்ச்சியும், அதைச் சமாளித்தால்தான் முடியும்; முடியாதுபோயிற்று என்றால் தோல்விதான். ஆனதினாலே, ரொம்பப் பொறுப்பான வேலையாய் இருக்கிறது; செய்யவேண்டும். இப்போது எனக்கு இங்கே உள்ள கூட்டத்தையும், மக்களையும், உங்களுடைய பேச்சையும் இதனுடைய அவசியத்தையும் எல்லாம் கேட்கிறபோது—இதற்கு ஆட்சியினுடைய எதிர்ப்பைவிட, இதற்கு ஆதரவு அதிகமாக இருக்கும்; நினைக்கிறபடி காரியங்கள் முடியும்; முடியாவிட்டாலும் நம்முடைய கடமையைச் செய்தோம் என்கிற நிலைமையாவது குற்றமற, யாரும் பழித்துச் சொல்லுகிறதற்கு இடமில்லாத தன்மையிலே அதற்கு வாய்ப்பு ஏற்படும்; இதுதான்.

தோழர்களே! நான் நினைக்கிறேன்—இவ்வளவு பெரிய காரியத்திற்கு நிபந்தனை போட, நாம் எழுதி அதற்குள்ளாக எங்களுக்குப் பதில் எழுதவேண்டும் என்று கேட்பதற்குக் கொஞ்ச நாள் வாய்தா கொடுத்துத்தான் ஆகணும்; பத்துநாள், 15 நாள் என்றால் பற்றாது; அவர்களும் யோசிக்கணும். அதுமாத்திரம் அல்ல, நாமும் நல்லவண்ணம் பிரசாரம் செய்து மக்களை எல்லாம் பக்குவப்படுத்தணும். அதனாலே அவர்களுக்கு நாம் ஞாயமான வாய்தா கொடுத்தோம் என்றும், நாமும் கிரமமாகச் செய்யவேண்டிய கடமைக்கு ஏற்பாடெல்லாம் செய்தோம் என்றும் ஆகும். ஆகையினாலே, நான் யோசித்தவரையிலும் என்ன தேதி, எப்போது வாய்தா கொடுக்கலாம் என்றால்—வருகிற ஜனவரி மாதம் 26-ம் தேதி—குடியரசு நாளாகிய 26-ம் தேதி வரைக்கும் வாய்தா தரலாம். அடுத்த மாதம் ஒரு 26 நாள் இருக்கிறது; இந்த மாதம் ஒரு 20 நாள் இருக்கிறது; 10 நாட்களாகும் (நாம்) தயார்பண்ணி அனுப்ப. கிட்டத்தட்ட ஒரு மாதம் தாராளமாய் இருக்கிறது; அது கிரமமாகக் கொடுக்கவேண்டிய வாய்தா என்கிறதல்லாமல், நாமும் கொஞ்சம் நல்ல பிரசாரம் எல்லாம் செய்யணும். இன்னும் ஒருமாதம் 10 நாளைக்குள்ளாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும், வட்டத்திலேயும் நம்முடைய இயக்கத் தோழர்கள் ஆங்காங்கே கூட்டம்கூட்டி கமிட்டிபோட்டு மக்களுடைய ஆதரவு பெற்று நல்லவண்ணம் பிரசாரம் செய்து, எல்லா மக்களுக்கும் நல்ல தெளிவான உணர்ச்சியும், முயற்சியும் ஏற்படும்படிச் செய்யவேணும். அதற்கு நாள் வேண்டியதுதான். ஜனவரி மாதம் 26-ம் தேதி என்கிறது ரொம்ப அதிக நாளல்ல; அதற்குள்ளே நம்'மக்களுக்கு உணர்ச்சி ரொம்ப மறந்துபோகாது. அதற்குள்ளே அவரவர்கள் தங்களைத் தயார் படுத்திக்கொள்ளப் பிரயத்தனப்படுவார்கள். அதைத்தான் நான் சொல்லுகிறேன்.

அத்தோடு, நம்முடைய கடமையைச் செலுத்துகிறதிலே, இதனுடைய அவசியத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை—முதலிலேயே ஆரம்பித்தோம். எல்லாருக்கும் துடித்துக் கொண்டிருக்கிறது, காரணகாரியத்தை எடுத்துச் சொல்லுகிறபோது.



படிப்பகம்

www.padippakam.com



சுருக்கமாய்ச் சொல்லுகிறேன், இந்த மாதிரியான ஒரு நிலைமை நமக்கு ஏற்பட்டது ஒரு மோசடிதான்; இயற்கையாய் ஏற்பட்டதல்ல. எல்லாம் முன்னேற்பாடு செய்துகொண்டு, நிறைய நம்மையெல்லாம் அடக்கி இழிவுபடுத்தி ஆள்வதற்கு வேண்டிய வசதிக்குத் திட்டம் இட்டு ஏற்பாடுசெய்த காரியம். அதனாலே இது சரியான வாய்ப்பாக வந்துவிட்டது என்று யாரும் சொல்லமுடியாது. ஏதோ, நாம் அதற்கு முன்னே இருந்தே நம் குறையையெல்லாம் சொல்லிக்கொண்டுதான் வருகிறோம்—சாதியைப்பற்றி, மதத்தைப்பற்றி இன்னும் மற்ற மற்றக் காரியத்தைப்பற்றி. அதை ஒன்றும் லட்சியப்படுத்தவில்லை. லட்சியப்படுத்த வில்லையென்றால் அவர்கள் செய்த காரியம் எவ்வளவு மோசடி என்கிறதை நல்லவண்ணம் எடுத்துச் சொன்னார்கள்; நம் நண்பர் ஆனைமுத்து அவர்கள் நன்றாகவும் சொன்னரர்கள். நானும் ஆரம்பகாலந்தொட்டு, 'இது ஒரு மோசடி, மோசடி' என்று—'ஏமாற்றுதல்தான்' என்று சொல்லிக்கொண்டேதான் வந்திருக்கிறேன். சுதந்தரம் வந்தது—'சுதந்தர நாள்' என்றபோதே, நான் சொன்னேன்—'இது சுதந்தரநாள் அல்ல; துக்கநாள், மோசடி, நம்மை ஏமாற்றத் துரோகம் செய்கிற நாள்' என்று நான் அன்றைக்கே சொன்னவன்தான். அதை நாளுக்குநாள் அதற்குண்டான காரணங்களை விளக்கியும் அந்த அபிப்பிராயத்தைப் பலப் படுத்திக்கொண்டுந்தான் வந்திருக்கிறேன்.

ஆனால் அவர்கள்—அவர்கள் என்றால் யார்? பார்ப்பனர்கள்! அவர்கள் கையாளாய்ப் போனவர்களே அவர்களுக்கு நம் எல்லாருடைய கருத்தோ—அதைச் சரி என்றோ, அதனாலே என்னென்ன ஏற்படுகிறது என்கிறதையோ கருதினவர்களே இல்லை. ஆகையினால், அவர்கள் தக்க ஏற்பாட்டோடு மோசடியாய்த்தான் செய்தார்கள். அதற்குண்டான காரணம், நல்ல காரணமாகச் சொன்னார்களே! நம்ஆள் ஒருவரைக்கூட கமிட்டியிலே போடவில்லை; எலக்ஷனிலே வந்தவன் எவனையும்கூட லட்சியம் பண்ணவில்லை; யாரோ சிலபேரை, எப்படியோ வாய்ப்பு வந்தவர்கள் என்று வைத்து, அவர்கள் இஷ்டம் போல் பொறுக்கி எடுத்தவர்களைப்போட்டார்கள். அதை விளக்குவதற்காக—தயார் செய்வதற்காகப்போட்ட கமிட்டியில்கூட 6 பேர் என்றால்—நாலுபேர் பார்ப்பனர், ஒருவர் அம்பேத்கார், இன்னொருவர் சாயபு. இந்த இரண்டுபேருக்கும் கவலை இல்லாத நிலைமையாய்ப் போயிற்று. முதலிலே அவர்களுக்குத் தேவை வசதியாய் இருந்தபாது பொதுவான கவலை அவர்களுக்கும் இருந்தது. ஏற்பாடுபண்ணுகிறதிலே நல்ல வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது—அம்பேத்காருக்கு அவர் நினைக்காத அளவுக்கு வசதிகொடுத்து விட்டார்கள். 'நீ ஏனய்யா சத்தம் போடுகிறாய்? உங்களிலே எத்தனைப் பேர் உண்டோ அத்தனைப்பேருக்கு உத்தியோகம் எடுத்துக்கொள்!' என்றார்கள்—தீர்ந்தது அவருக்கு; வேறே உணர்ச்சி வருவதற்கு அவசியம் இல்லை; கேட்டால், 'நீங்களும் முயற்சி பண்ணுங்களேன், அது மாதிரிதான்' என்று கூறிவிட்டார். நானும் நேரிலேகூடக் கேட்டேன்—'ஏனய்யா, எங்களுக்கு நாதி இல்லையா?' என்று. 'யார் சொன்னார்; நீங்களும் முயற்சி பண்ணுங்களேன். நாங்கள் என்ன பண்ணமுடியும்?' என்கிற மாதிரி அவர் சொன்னார். 'முதலிலே நாம் அப்படி எல்லாம் பேசவில்லையே! நாமெல்லாம் ஒன்றாகத்தானே கலந்தோம்' என்றேன். 'நிலைமை அப்படி ஆகிப்போயிற்று. நான் என்ன பண்ணுகிறது?' என்று அவர் கூறிவிட்டார். சாயபுமாரும் அப்படித்தான்; அவர்களுக்கு நம்மைப்பற்றிக் கவலை இல்லை. அவரவர்கள் காரியத்திற்குத் திருப்தி ஆகிப் போயிற்று. நமக்கு நாதி இல்லாது போய்விட்டது; உண்மையாகவே சொல்லுகிறேன், நமக்கு நாதி இல்லை. ஒரு ஆளாவது நாதியோடு கவலை எடுத்திருந்தால் ஏதோ சில மாறுதல்களாவது வந்திருக்கும்; ஒன்றுகூட இல்லை.

அதனாலே, அவர்கள் இஷ்டம்போல எழுதிவிட்டார்கள். இருந்தாலும் அதற்காக ரொம்ப வருத்தப்பட்டிருக்கிறார் டாக்டர் அம்பேத்கார்; ஆனால், காரியம் ஒன்றும் செய்ய முடியவில்லை. அன்றைய முதற்கொண்டே சொல்லிக்கொண்டேதான் வருகிறோம்—அது ஒரு மோசடி, மோசடி; அது ஒரு மனுதர்ம சாஸ்திரம்; அது பார்ப்பன ஆதிக்கத்திற்கு



ஏற்ற காரியம் என்றெல்லாம் ரொம்பச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். யார் கவனிக்கிறார்கள்? அரசியல் வந்துவிட்டது என்றாலே, அவனவன் ஓட்டுக்கும்—பதவிக்கும் மந்திரி வேலைக்கும் கவலையோடு இருந்தானே தவிர, சமுதாயத் துறையிலே நமக்கு இந்தக் கேடு இருக்கிறது என்று இன்றைக்கு யாருக்குக் கவலை இருக்கிறது?

இன்றைக்கு நான் சொல்லுவேன்—நம் முன்னேற்றக் கழகத்துக்காரர் சரியாக இருக்கிறார் என்று சொல்லமாட்டேன்; ஏதோ சிலபேருக்கு இருக்கலாம்; மற்றவர்களுக்கு ஏதோ அவர்கள் பதவி, பட்டம் அது, இது அந்தமாதிரி ஆகிப்போயிற்று நிலைமை. இந்த அரசியல் அவ்வளவு கீழ்த்தரமாய்ப் போனதினாலே அதிலே பிரவேசிக்கிறவர்கள் யாரும் வெட்கப்படுவதற்கு இல்லாமல்—அது மூலமாக ஒரு பரிகாரமும் செய்கிறதற்கு இல்லை. இப்போது நாங்கள்தான் ஏதோ கத்திக்கொண்டிருக்கிறோம். நமக்கும் அவ்வப்போது சரி பண்ணிக்கொள்ளத்தான் முடிகிறதே தவிர நிரந்தரமாய் இல்லை.

என்னமோ, முன்னே சொன்னாற் போல இந்தக் காலம் வந்ததினாலே ஆரம்பித்தோம்; கொஞ்சம் வசதியாய் இருக்கிறோம். மந்திரிமார்களிலேயும் சிலபேருக்கெல்லாம் கொஞ்சம் உணர்ச்சி இருக்கிறது; உண்மையைக் கூடச் சொல்லுகிறேன்—சாதாரணமாக சிலபேர், 'பதவியைவிட்டு வந்துவிடுகிறேன்' என்றுகூடச் சொன்னார்கள்; பொய்யல்ல. எல்லாரும் சொன்னார்கள் என்று நான் சொல்லவில்லை—சில பேர்தான். நண்பர்கள் போகட்டும்—மந்திரிபதவி பார்த்துவந்தது; இனி ஆகப்போகிறது ஒன்றும் இல்லை. உள்ளபடியே நமக்கு வேண்டிய ஆதரவெல்லாம் வந்திருக்கிறது கொஞ்ச நாளாய்.

இப்பொழுது நாம் செய்யவேண்டிய வேலையை ரொம்பத் தெளிவாய் ஏற்பாடு பண்ணிக்கொண்டோம்; தீர்மானம் பண்ணி எல்லா விஷயத்தையும் விளக்கிவிட்டோம். ஜனங்களுக்குள்ளேயும் நல்ல உணர்ச்சி இருக்கிறது. இதுவரைக்கும் நமக்குப் பெயர் கொடுத்திருக்கிறவர்கள் ஒரு இரண்டாயிரம் பேருக்குமேலே இருக்கும்; இன்னும் கேட்டால் தினம் வரும் கற்றை கற்றையாக; அது பற்றாது. நாம் வேறுவிதத்திலே இன்னும் மக்களிடத்திலே உறுதிவாங்கப் போகிறோம்.

காரியத்தை ஆரம்பிக்கப் போகிறோம். போராட்டம் ஒன்றும் தகராறுக்காக அல்ல; வேறே எந்தவிதமான சுயநல லாபத்திற்காகவும் அல்ல; அரசியல் உணர்ச்சியைக் கொண்டல்ல. 'இழிவு ஒழியவேணும்' என்கிற மான உணர்ச்சிக்காகப் போராடுகிறோம். இதற்கு எதிர்ப்பு இருக்காது. ஏதோ சட்டசபையிலே, அங்கே, இங்கே இருக்கிறது என்றால்—அவர்களுக்கு வேறே வேலை என்ன? ஏதாவது பண்ணித் தீரவேணும். அவர்களுக்கே வெட்கமாகத்தான் இருக்கும்—இதெல்லாம் நாம் இப்படிச் செய்கிறோமே என்று. அவர்கள் நிலைமை அப்படி. ஆனால் நமக்குப் போதிய ஆதரவு இருக்கிறது; ஆட்கள் இருக்கிறார்கள்; வசதி எல்லாம் இருக்கின்றது; பொருளாதார வசதி இருக்கிறது; உதவிபண்ணுகிறதற்கு வேண்டிய உணர்ச்சியுள்ள இளைஞர்கள், அறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஒன்றும் குறைச்சல் இல்லை. நல்லமுறையிலே நாம் கண்டிப்பாக வெற்றி பெறுவோம்; வெற்றிபெறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இரண்டாவது, இந்தக் காரியத்திலே, ஒரு காரியம் என்று அல்ல—நம் இழிவு நீங்குகிறது என்கிறது மாத்திரம் இதிலே இல்லை. நாம் வெற்றிபெற்றோமானால் மற்ற நம் காரியங்களும், பகுத்தறிவு சம்பந்தமான காரியங்களும், சாதியைப் பொறுத்து இல்லாவிட்டாலும்—கடவுள், மதம், சாஸ்திரம் என்ற முட்டாள்தனமான சில கருத்துகளும் ரொம்பத் தெளிவாகும். இந்தியாவிலே மாத்திரம் அல்ல; உலகத்திலேயே—நாம் ஒரு பகுத்தறிவு உள்ள சமுதாயம், பகுத்தறிவு உள்ள ஆட்சி என்கிற மாதிரியில் நல்ல வாய்ப்புக் கிடைக்கும். நமக்கு மாத்திரம் தைரியம் வேணும், உணர்ச்சி வேணும், முடிவு பண்ணிக்கணும். நம் பங்கு இதிலே இன்னது; [illegible] நம் பங்கு இன்னது என்கிற உணர்ச்சி வந்து இதைப் பொறுத்து உற்[illegible]ம்படியாக நடந்துகொள்வதன் மூலம்

படிப்பகம்

www.padippakam.com



கிளர்ச்சியைப் பலப்படுத்த வேணும்; பயன்படுத்த வேணும். இப்போது நான் சொல்லு கிறதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் 'பார்ப்பானோடு போராடுகிற கடைசிப் போராட்டம் என்று இதை வைத்துக்கொள்ளணும்'; நம் ஆட்களோடு போராடுகிறதில்லை; யாரும் நினைக்கமாட்டான். வெளியூர்க்காரன் மற்ற என்னமாகவாவது நினைப்பானோ என்னவோ—மற்ற மாகாணக்காரன்; கொஞ்சநாள் ஆனால் அவனும் ஒத்துக்கொள்வான். இந்தக் கிளர்ச்சி ஏற்பட்டு ஒரு ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர், மூவாயிரம் பேர் ஜெயிலுக்குப் போனார்கள்; இன்னின்ன விதமான தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்ற நிலைமை வருகிறபோது அனேகமாக இது மற்ற மாகாணத்துக்கும் பரவும்; ஏனென்றால், இது சமுதாயத்தைப் பொறுத்தது—எல்லா மக்களையும் பொறுத்தது. அவ்வளவு துணிவாக அலட்சியமாக இருக்கமாட்டார்கள். நமக்குப் பின்பலம் அதிகம் ஏற்படுமே தவிரக் குறையாது.

முன்னமேயும் சொன்னேன்—பொது அறிவு, இந்தக் கடவுள், மதம் முதலியவை பற்றிய எண்ணம் எல்லாம் கொஞ்சம் மாறும். இதில் எவ்வளவு வெறுக்க வேணுமோ, எவ்வளவு ஒழிக்க வேணுமோ அதிலேயிருந்து ஒதுங்கும்படியான ஒரு நல்ல வாய்ப்பு நமக்கு ஏற்படும்.

அனேகமாக, நான் சொல்லுகிறேன், இது ஒரு கடைசிப் போராட்டம் என்றுதான் நினைக்கிறேன். இதிலே வெற்றிபெறவில்லையானால் அப்புறம் நமக்கு வாய்ப்பே இல்லை; ஆட்களும் கஷ்டமாகத்தான் தெரியும்.

இப்போது அவர்கள் ரொம்பத் திட்டம் போடுவார்கள். எப்படி இதை அழிக்கிறது? எப்படி இதை அடக்குகிறது? என்பதைப்பற்றி எல்லாம் பலமான் திட்டம்தான் போடு வார்கள். நாம் எவ்வளவு உறைப்பாக—துணிச்சலாக—கஷ்டத்தை ஏற்றுக்கொள்கிற தியாக உணர்ச்சியோடு இருக்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் இதற்கு ஏற்படுகிற மதிப்பு இருக்குமே தவிர, சும்மா வேஷத்தினாலே மதிப்பு ஏற்படும் என்று நினைக்க முடியாது. அந்த மாதிரி உணர்ச்சியோடு நமக்கு இதிலே வாய்ப்பு வந்து, சாதாரணமான முறையிலே அவர்கள் அடக்குமுறை வருகிறது என்றால்—நமக்கு வெற்றியைத் தவிர வேறு வாய்ப்பு இல்லை. வேறு என்ன காரணம் சொல்லி நம்மை அடக்குவார்கள்?

நாளைக்கு நாம் ஆரம்பிக்கிறோம்; ஏதோ ஒன்று சொல்லுவோம்; திட்டம் போட்டு இருக்கிறோம், என்னென்ன திட்டம் என்று. பகிஷ்காரமோ அல்லது தடை வேலையோ அல்லது எரிக்கிற வேலையோ அல்லது ஏதோ ஒன்று செய்தோமானால்—சட்டத்தைச் சொல்லுவார்களே தவிர காரியத்தை என்ன சொல்லுவார்கள்? 'என்ன அக்கிரமம் பண்ணு கிறார்கள்; எதற்காகப் பண்ணுகிறார்கள்?' என்று யாராவது பேச முடியுமா? சட்ட விரோதம், பிடித்துப் போடுவான் என்று தெரிந்துதானே பண்ணுகிறான்; அப்புறம் நாம் ஏன் வேதனைப்படப் போகிறோம்? நமக்கு அனுகூலம் ஆகிற சங்கதிதான் இரண்டு பேரும் சொல்லுவார்கள்.

இரண்டாவது: நாம் கூடுமான வரைக்கும் பெண்களை இதிலே பூதவைக்கணும்; ஆண்கள் ரொம்பப் பேர் வரமுடியும்; இருந்தாலும் 100-க்கு 10 வீதமாவது பெண்கள் வரணும்; ஆயிரம் பேர் போனார்கள் என்றால் அதிலே 100 பெண்கள் இருக்கணும். கிளர்ச்சிக்கு அது ரொம்பத் தூண்டுகோலாய் இருக்கும்.

இயக்கத்துக்கு இறங்குகிறவர்கள், மன்னிக்கவேணும், ரொம்ப ஒழுக்கமாக இருக்க வேணும். சும்மா வேடிக்கையாய் உற்சாகத்திலே பேசிக்கொண்டு ஏதோ தந்திரமாக வரலாம் என்று இல்லை. அந்த மாதிரி இருக்கிறவர்கள் வெளியே இருக்கட்டும்; அதனாலே ஒன்றும் குற்றம் இல்லை. சும்மா வம்புக்கு, மற்றவன் பரிகாசம் பண்ணுவானே என்று—தான் கெடுகிறதும் இல்லாமல் காரியத்தையும் கெடுக்கிறதற்கு ஏதாவது உள்ளே புகுந்து கொண்டு கலகம் பண்ணச் சொல்லும், சிலபேரை! ஏனென்றால், வேறே விதி இல்லை;



தாங்களும் தோற்றுப்போய் விட்டார்கள்; தங்களை மரியாதை பண்ணமாட்டார்கள் என்று எண்ணம் வருகிறபோது ஏதாவது கலாட்டா பண்ணலாமா என்று தோணும். அந்த மாதிரி வரக்கூடாது. அதனாலே அவர்களைப்பற்றி ஒரு குறையும் சொல்லமாட்டோம். கலக்க வேணும் என்று நாம் விரும்புகிறதெல்லாம், மனதார அவர்களுக்காக உணர்ச்சி வந்து செய்யவேணும். 'சகலவிதமான வசதியும் இருக்கிறது, அதனாலே அவர்களுக்கு ஒன்றும் கெடுதி இல்லை' என்கிறவர்களைத்தான் நாம் விரும்புகிறோம். பல பேர் இருப்பார்கள்—முக்கியமானவர்களெல்லாம் இருப்பார்கள்—ரொம்ப நமக்கு வேண்டியவர்களாகவும் இருப் பார்கள்; வாய்ப்பு இல்லாவிட்டால் அதற்காக ஏதாவது குறை சொல்ல ஆரம்பித்தால் அப்புறம் ஏதாவது தந்திரம் பண்ண ஆரம்பிப்பார்கள். அதை எல்லாம் பெரிதுபண்ணிச் சொல்லவேண்டியதில்லை. காரியம் பண்ணுகிறேன், அவர்களாக வந்தவர்களைப் பார்த்துத்தான் நாம் அழைப்போமே தவிர, நாங்களாக ஒருவரை அழைக்கமாட்டோம். 'நீ இதைச் செய் அப்பா; நீ இதைச் செய் அப்பா' என்று எதற்காகச் சொல்லுகிறேன்? அந்தக் கிளர்ச்சிக்கு ஒரு கவுரவம் இருக்கவேணும்; நாணயம் இருக்கவேணும்; பார்க் கிறவன் எல்லாம்கூட அதை மதிக்கணும்; அதிலே ஒவ்வொருவரும் முயற்சி எடுத்துக் கொள்ளவேணும்—அதற்குத் தகுந்தபடிதான் சொல்லுகிறேன்.

இதை எந்தவிதமாக, எப்படி எப்படி என்கிறதை, அந்தந்த மாவட்டங்களிலே, அந்தந்த வட்டங்களிலே உள்ள நிலைமையைப் பார்த்து, அந்தத் தலைவர்கள் எப்படிக் கருத்துத் தெரிவிக்கிறார்களோ அதை அனுசரித்து ஒரு இடத்திலா, இரண்டு இடங் களிலா, பல இடங்களிலா என்று நாம் தீர்மானமாக ஒரு முடிவு பண்ணமுடியும்.

முக்கியமாக இதிலே இழிவு நீங்குகிறது ஒன்று; மடமை ஒழிகிறது என்கிறது ஒன்று; இது இரண்டையும்விட, விடுதலைக்கு நமக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுமே என்கிறது ஒன்று. ஏன் அப்படிச் சொல்லுகிறோம்—விடுதலைக்கு வாய்ப்பு ஏற்படும், பிரிவினைக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று? அதற்கு நாம் ஆசைப்பட்டால், அவன் இணங்கமாட்டான் இலேசிலே; யாரோடு போராடுகிறோமோ, யாரை மாற்றிக் கொள்ளச் சொல்லுகிறோமோ அவர்கள் இலேசிலே இணங்கமாட்டார்கள். அவர்கள் இணங்கினார்கள் என்றால், செத்துப் போனார்கள் என்றுதானே அர்த்தம்!

'சாதி இல்லை' என்று சொன்னால், பார்ப்பான் எவனையும் கொல்லவேண்டியது இல்லையே; பார்ப்பான் எல்லாம் செத்தான் என்றுதானே அர்த்தமாகிவிடும்? அந்த அளவுக்கு அவர்கள் சுலபமாக ஒத்துக்கொள்ளமாட்டார்கள்; ரகளைதான் பண்ணு வார்கள். அதனாலே நமக்கு அந்தப் 'பிரிவினை' என்கிற உணர்ச்சி வலுக்கும்; வலுத்தால் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு ஏற்படும். நம் நாட்டைப் பொறுத்தவரைக்கும் பிரிவினைக்கு விரோதிகள் இருக்கவே மாட்டார்கள்—இருக்கவே மாட்டார்கள்! ஏதோ காரியத்துக்குச் சில பேர், வரமுடியாதவர்கள், வாயை மூடிக்கொண்டாவது இருப்பார்களே தவிர, எதிலே இருந்து வந்துகொண்டு, 'இந்தக் காரியம் செய் அப்பா', 'அந்தக் காரியம் செய், அப்பா' என்று வரமாட்டார்கள். வந்தான்—அவனுக்கு எவ்வளவு மதிப்பு இருக்குமோ அவ்வளவு மதிப்புத்தான்! அப்புறம் அவன் தலையெடுக்க முடியாது, எவ்வளவு கெட்டிக் காரனாக இருந்தாலும். அதனாலே அவன் தன்னுடைய சுயநலத்தை முன்னிட்டே இதற்கு வராமல் ஜாக்கிரதையாய் இருந்துகொண்டிருப்பான்.

நாம் வெற்றிக்கு, நம் லட்சியத்துக்கு வந்துவிட்டோமானால், கூட அவனும் சேர்ந்து கொண்டாலும் சேர்ந்து கொள்வான்.

அடுத்து நம் மக்கள் எடுத்துக் கொள்கிற முயற்சி—எந்த விதமான விரோத உணர்ச்சி அல்ல, குரோத உணர்ச்சி அல்ல, யார் பேரிலேயும் வருத்தம் இல்லை; நம் காரியத்துக் காகத்தான் நாம் செய்கிறோம் என்கிற மாதிரியாகவே இருக்கவேணும்—நடத்தை, காரியம் எல்லாம். அந்தரங்கம், இயற்கைக்குச் சிலபேருக்கு விரோதம் இருக்கும்; அது ஏற்படுமே

படிப்பகம்

www.padippakam.com



தவிர, அதை ஏற்படுத்தவேணும் என்கிறதற்காக நாம் அதை ஆரம்பிக்கவில்லை. எல்லாப் பார்ப்பானுக்கும் விரோதமாகச் செய்யவேண்டும் என்று இல்லை; அவனுக்கு இது விரோத மாக இருக்கும். ஆனதினாலே அவன் கூடுமான அளவுக்குக் கேடுபண்ணத்தான் வருவான். அவ்வளவே தவிர நாம் ஒன்றும் அந்த விரோத உணர்ச்சியோடு காரியம் ஆரம்பிக்கனும் என்று இல்லை. மக்களுக்கு, இந்தக் காரியத்திலே இறங்குகிறபோது அந்தவிதமான உணர்ச்சி இருக்கக்கூடாது.

நமக்கு ஞாயம் இருக்கிறது, இந்த டில்லி அரசாங்கத்தை மாற்ற; நமக்கு ஞாயம் இருக்கிறது, நம் அரசாங்கத்தை அமைக்க; அடியோடு இந்தியா பூராவுக்கும் மாற்றா விட்டாலும், நம் நாட்டைப் பொறுத்தவரைக்கும் நாம் தனிச் சுதந்தர ஆட்சி என்று செய்து கொள்ள நமக்கு உரிமை இருக்கிறது. அந்த விஷயத்தை எடுத்து நண்பர் ஆனைமுத்து அவர்கள் நல்லவண்ணம் உங்களிடத்திலே சொன்னார். உலகத்திலே எந்த நாடும், எங்கேயுமே இப்படி இல்லை; அதனாலே இது ஒரு அக்கிரமம்தான் என்கிறது யாருக்கும் படும். அந்தக் காரியத்தைத்தான் செய்கிறோம். ஆனதனால் நாம் பிரித்துகொள்ளு கிறோம் என்கிறதனாலேயே—பிரிவினை ஏற்படுத்துகிறதினாலேயே நமக்கு ஒன்றும் தவறு அல்ல; நாம் செய்த காரியமும் தவறான காரியம் அல்ல.

இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு வந்ததே—முன்னே நான் சொன்னாற்போலே, ஒரு பித்தலாட்டத்தினாலே வந்ததே தவிர நமக்கெல்லாம் ஆசை இருந்து வரவில்லையே! 'இந்தியா என்கிற ஒரு தேசம் ஆகனும்; அதிலே நாம் ஒரு நாட்டானாக இருக்கனும்—இதற்கு ஒரே தேசம்' அப்படி என்று நாம் ஆரம்பிக்கவில்லையே! ஆரம்பிக்கிறபோதே ஒவ்வொரு நாட்டுக்கும் கடைசியாக எண்ணுகிறபோதுகூட ஒரு இரண்டு மாகாணம், ஒரு மூன்று மாகாணம் என்று இந்தியாவை அய்ந்தாறு மாகாணம் பண்ணி, நம் மாகாணம் தமிழ்நாடு, ஆந்திரநாடு கேரளநாடு, கன்னடநாடு இந்த மாகாணங்களும், இதோடு இன்னும் ஒன்றோ, இரண்டோ சேர்த்து இது ஒரு யூனியனாக இருக்கனும் என்று அப்படி எல்லாம் திட்டம் இருந்தது. அம்பேத்கார் போட்ட திட்டமே இருக்கிறது—இன்னின்னது இன்னின்னது என்று. 'கூட்டு' என்று எப்படியோ இந்தமுறை வந்து சேர்ந்ததேதவிர, (வேறல்ல.)

ஆதலினாலே இது ஒரு மோசடியான காரியந்தான்; உள்ளபடியே ஒரு மோசடியான காரியந்தான்; இப்போது நடக்கிறதும் அப்படித்தான். மற்ற நாட்டோடு நாம் கூடி இருக்கிறதனாலே என்ன ஆகுது? மற்ற நாட்டினாலே நாம் என்ன பலன் அனுபவிக் கிறோம்? நம் நாட்டினாலேயாவது அவனவன் பலன் அனுபவித்துக்கொள்ள உபயோகப் படுத்திக்கொள்கிறானே தவிர, நாம் 100-க்கு 90 பாகம் மற்ற நாட்டோடு நாம் இருக்கிற தினாலே நமக்கு என்ன சவுகரியம் சொல்லுங்கள்! இல்லை—நாளைக்குப் பணம் காசு என்றால் என்ன? எங்கிருந்து வந்தது? நம்கிட்டே வாங்குகிறதைத்தான் நம்மிடத்திலே கொடுக்கிறானே தவிர, எங்காவது சம்பாதித்து நமக்காக ஒன்றும் நஷ்டப்படுகிறாற்போல நமக்கு ஒன்றும் கொடுக்கிறதில்லை; இதற்கு ஒரு அவசியமும் இல்லை. ஒன்றாகத்தான் இருக்கனும்; அதனாலே இன்னின்ன இலாபம் அடையலாம் என்று சொல்லுகிறதற்கு ஒரு காரியமுமே இல்லை. சுயநலமில்லாத எவனும்-உணர்ச்சி உள்ள எவனும் நம் காரியம் ஞாயம் என்றுதான் சொல்லுவான். அதனாலே நாம் செய்கிற காரியம் ஞாயமான காரியம்; முன்னமேயே செய்திருக்க வேண்டியது; நமக்குள்ள பல காரணங்களாலே, என்னமோ நாம் அலட்சியமாக இருந்துவிட்டோம். இதை நாம் கண்டிப்பாகச் செய்வோம். மனதிலே வெற்றி பெறுகிறோமா, தோல்வி அடைகிறோமா என்கிற எண்ணமே இருக்கக்கூடாது.

நம் கடமையைச் செய்கிறோமா? அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது அந்த எண்ணம். சும்மா, அனாவசியமாக, தோற்றால் என்ன பண்ணுகிறது? வெற்றியானால் என்ன ஆகிறது? என்றெல்லாம் நினைக்கக்கூடாது. 'அடிமையாய் இருக்கிறோம்; இழி



வுக்கு ஆளாகி இருக்கிறோம்; இது மாறுவதற்கு நாம் ஏதாவது செய்யனும்—செய்யலாம்' என்று நினைக்கனும். முன்னமேயே சொன்னேன்—இழிவு நீங்குகிறது ஒன்று; மடமை நீங்குகிறது ஒன்று, ஆக இரண்டு வரும். அது உலகத்துக்கு ரொம்பப் பயன்படக்கூடிய காரியம். ஆனதினாலே, எல்லா மக்களும் அருள்கூர்ந்து முடிவு பண்ணிக்கொண்டு, தம்மால் ஆன உதவியைச் செய்யனும்; தம்மாலான அளவுக்குப் பங்கு எடுத்துக் கொள்ளனும். எல்லாரும் ஜெயிலுக்குப் போகனும் என்றே இல்லை; நிர்வாகம் பண்ணுகிறதற்கும் நிறைய ஆட்கள் வேணும்; பல இடங்களிலே ஆரம்பித்தோமானால் ரொம்பப் பெரிய நிர்வாகிகள் எல்லாம் வேணும்; அப்புறம் பணம் வேணும்; பணம் இருக்கிறது; பணம் இல்லை என்று நம் இயக்கம் நின்றுபோகாது—இல்லை, கேட்டாலும் வராமல் போகாது; கூடுமான வரைக்கும் நமக்கு வரும்.

இன்றைய தினம்கூடச் சொல்லுவேன், கிட்டத்தட்ட நான் ஆரம்பிக்கிறபோது, ஒரு இருபதாயிரம் ரூபாய் வந்தால் பரவாயில்லை—பத்து மாவட்டத்துக்காரர்கள் 1000 ரூபாய் வீதம் கொடுத்துவிட்டு, வசூலிலே ஒரு பத்தாயிரம் பண்ணிவிட்டால் பரவாயில்லை என்று நான் நினைத்தேன்; யார் கிட்டேயும் சொல்லவில்லையானாலும் திட்டம் அவ்வளவுதான் போட்டேன்; அதிகமாக ஒன்றும் பிரயத்தனப்படவில்லை—நிறையப் பணம் வந்துவிட்டது; ஒரு முப்பது, நாற்பதாயிரம் ரூபாய் போல நம்பிக்கையாய் இருக்கிறது. அரிசி வேணும் என்று கேட்டேன். ஒருவர் 10 மூட்டை கொடுத்தார்; இன்னொருவர் 5 மூட்டை கொடுத் தார்; இன்னொருவர் நான் 3 மூட்டை அனுப்புகிறேன், 5 மூட்டை அனுப்புகிறேன் என்று அய்யா வீரமணியிடம் வாக்குக் கொடுத்து இருக்கிறார்கள். ஏறக்குறைய 30, 40, 50 மூட்டை அரிசி வரும்; மக்களுக்குப் பயன்படுத்தனும். ஏன்? எதற்கு இதைச் சொல்லு கிறேன்? மக்கள் தாராளமான மனப் பான்மையோடு, வேண்டிய உதவி செய்யவேண்டும் என்று இருக்கிறார்களே தவிர, இதை ஒரு தொந்தரவாக நினைக்கிறவர்கள் ஒருவர்கூட இல்லை; ஒருவர்கூட இல்லை.

ஆனதினாலே, அருமைத் தோழர்களே! வீட்டுக்குப் போனதினாலே விஷயம் முடிந்துவிடாது, செய்யனும், தம்மாலான உதவி எல்லாம். இந்த நிர்வாகிகளுக்கு எப்படி உற்சாகம் ஊட்டவேணும்; நீங்கள் ரொம்பப் பாடுபட்டு விஷயங்களைத் தெரிந்து ஆதர வாகக் கொடுக்கவேணும். வேறே நான் ஒன்றும் சொல்லவில்லை. மனதிலே நினைத்துக் கொள்ளுங்கள்—நாம் ஒன்றும் தப்புப் பண்ணவில்லை; செய்யவேண்டிய காரியத்தைச் செய்கிறோம்; முன்னாடியே செய்திருக்கவேண்டியதை இப்போது செய்கிறோம். இதைச் செய்யாததினாலே நாம் இன்ன இழி நிலையிலே இருக்கிறோம்; இது நம் வாழ்வுக்குக்கேடு—என்கிற தலைப்பை வைத்துக்கொண்டு மற்றக் காரியங்களைச் சிந்திக்கவேண்டும் என்பது தான். ஆகவே, நான் அனேகமாக ஒன்றும் சொல்லவில்லை; எல்லாம் அவர்கள் சொன்ன தைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன்.

அருமைத் தோழர்களே! நான் உண்மையாகவே கேட்கிறேன். உங்களுக்குத் தோன்றுகிற யோசனையைச் சொல்லுங்கள்; இங்கே சொல்லவேணும் என்றில்லை. நாளை முதற்கொண்டே வேலை ஆரம்பிக்கிறோம். என்னென்ன காரியம் செய்தால் தேவலை; நாம் எப்படி எப்படி நடக்கனும் என்கிற வேலையை எங்களுக்கே விட்டுவிடாதீர்கள். நீங்களும் கவலை எடுத்துக்கொண்டு எப்படி எப்படி நடக்கனும் என்கிறதைப்பற்றி நல்ல விளக்கம் கொடுங்கள். ஏனென்றால், இது பொதுக் காரியம்; நல்ல எண்ணத்தோடே செய்கிறது; அவசியம் செய்து தீரவேண்டியது. ஆனதால், இது ஒருவருக்குச் சம்பந்தப் பட்டது அல்ல; திருப்பித்திருப்பி—இதைச் செய்யாததினாலே முட்டாள்தனம் என்று சொல்லலாமே தவிர, வேறே ஒரு தத்துவமும் இல்லை. எல்லாருக்கும் பங்கு இருக்கனும்; எல்லாரும் இதற்கு உதவிசெய்யனும்; எல்லாருடைய ஒத்துழைப்பும், யோசனையும் வேணும். ஜனங்கள்—பாமர மக்கள் இருக்கிறார்கள்; எல்லாருமே தயாராய் இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. சிலபேர் இருக்கிறார்கள்—'என்னடா, இப்படி?' என்று நினைக்

படிப்பகம்

www.padippakam.com



கிறவர்கள். அவர்களெல்லாம் திருந்தும்படியாக நாம் ஒற்றுமையாக, நல்ல எண்ணத்தோடு, நம்மை நாமே ஆளாக்கிக்கொண்டு, கஷ்டநஷ்டங்களுக்கு ஆட்பட்டுப் பாடுபடத் தயாராய் இருக்கிறோம் என்று ஆரம்பித்தால், கொஞ்சம் மாறுபட்டவர்களுக்குக்கூடக் கொஞ்சம் புத்தி மாறிவிடும்; காரியம் நமக்கு அனுகூலமாகத்தான் இருக்கும்; நம் நாட்டுக்கே இது ஒரு பெரிய காரியம்; நம் சமுதாயத்திற்கே இது ஒரு பெரிய திருப்பம்;—ஒரு திருப்பந்தான்.

சாதி இல்லை என்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டால், எவ்வளவு பெரிய காரியம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஆனதனாலே ஒன்றும் வேஷமான காரியமாக முடியாது. மற்றும் நாம் செய்யவேண்டிய வேலை ரொம்ப இருக்கிறது. அவைகளை நாளாவட்டத்திலே நாம் கலந்துகொள்கிறோம்; சொல்கிறோம். நமக்கு ஒரு பத்திரிகை இருக்கிறது. இன்னும் ஏதாவது பத்திரிகை அனுகூலமாக இருக்கலாம். பத்திரிகை நடத்துகிறதென்றால் ரொம்பக் கஷ்டம்; பேப்பர் கிடைக்கிறதில்லை; விலை ரொம்ப ஆகிறது; கட்டுகிறதில்லை. ஆனாலும் என்ன நஷ்டம் வந்தாலும் இயக்கம் நடத்துகிறபோது, ரொம்பத் தெளிவாக, பத்திரிகை நடத்துகிறோம். பிரசாரமும், தினமும் ஒவ்வொரு இடத்திலேயும் பண்ணிக்கொண்டு, ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டு வரணும்; இன்றைக்கு அங்கே, நாளைக்கு இன்னொரு இடத்திலே என்று விஷயங்களைப் போட்டுக்கொண்டு வரணும் என்றால் ரொம்பப் பொறுப்பு இருக்கணும். ஆகையினாலே—மன்னிக்கவேணும் நீங்கள்—என் மனதிலே இருக்கிறதைச் சொன்னேன்; எல்லா விஷயத்தையும் எல்லாரும் சொன்னார்கள்; உங்களுடைய ஆதரவெல்லாம் நிறைய இருக்கிறது என்று நான் உண்மையாகவே நினைக்கிறேன். ஆதலினாலே, நமக்கு யோசனை சொல்லவும் உற்சாகம் ஊட்டவும், இன்னும் என்ன தேவையோ அதற்கு உதவி பண்ணவும் நாமெல்லாம் இருக்கவேணும்.

நம்முடைய சமுதாயத்திற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு; தமிழர் சமுதாயத்திற்கு இது ஒரு திருப்புமுனை. ஏனென்றால், எவ்வளவு இழிவாக இருக்கிறோம், பாருங்கள்! 100-க்கு 90 பேராய் இருந்துகொண்டு—நாம் இழிவான மக்கள் என்று நெடுநாளாய் இருந்துகொண்டு வருகிறோம் என்று சொன்னால், எவ்வளவு கீழ்நிலையிலே நாம் இருக்கிறோம் என்று பேர்! இது மாறும்படியான வாய்ப்புவருகிறது—நாம் புதியதொரு சமுதாயத்தை உண்டாக்கினாற் போலத்தான் ஆகும். அதிலே நமக்கு நல்ல பெருமை எல்லாம் இருக்கிறது. மனதிலே வைத்துக்கொள்ளுங்கள்—அனேகமாக நாம் பிரிந்துகொள்வோம்; நாம் பிரிந்துகொள்வோம்! ஏனென்றால், அவன் நம்வசதிக்கு வரமாட்டான். பிரியா விட்டாலும் ரொம்ப உணர்ச்சி நம் மக்களுக்கு உண்டாகும். எல்லாரைப் போல நாம் பயப்படவேண்டிய அவசியம் இல்லை.—அப்படி, நம் ஆட்களுக்குள்ளே எதிரிகள் அதிகமாக வரமாட்டார்கள். ஏதோ அரசியலில் இருக்கிறவன் கத்துவானே தவிர, நம் முயற்சியைக் குறைசொல்லி நம் காரியத்தைச் சறுக்கி விடும்படியாக யாரும் இருக்கமாட்டார்கள். இந்தப் பார்ப்பனப் பத்திரிகைக்காரர்களும், அவர்களும் தங்களின் சுயநலத்தை உத்தேசித்தாவது யோக்கியமாய் நடந்துகொள்ள வேண்டியது. இன்னமும் இப்படியே இருக்கவேணும் என்று அவர்கள் நினைத்தார்களானால் அது அவர்கள் தப்புத்தான்; நாளாவட்டத்திலே அப்படியே போய்விடும் என்று கருதவேண்டாம் என்று விஷயங்களை எல்லாம் உங்களுக்கு எடுத்துச் சொல்லி, நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். இப்போது நேரம் இரவு 8 மணி ஆகிறது; முடிக்கிறேன் நான். தயவுசெய்து நீங்கள் எல்லாம் நன்றாக மனதிலே உற்சாகமாக, எங்களுக்கு உற்சாகம் ஏற்படும்படியான மாதிரியிலே, நீங்கள் மற்றும் தினம் அங்கங்கே நடைபெறும் காரியங்களிலிருந்து, இதற்கு ஒரு நல்லநேரம் என்று கருதிச் செய்யணும்; வேறே ஒன்றும் நான் அதிகமாகச் சொல்லவில்லை.

நாம் உண்மைக்குத்தான் போராடுகிறோம்—பொய்க்குப் போராடவில்லை; பொது நலத்துக்குத்தான் போராடுகிறோம்; 4 கோடி மக்களுடைய நன்மைக்காகத்தான் போராடுகிறோமே தவிர, எங்களுக்காக ஆகவேண்டிய காரியம் ஒன்று இல்லை. அதனாலே இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம்—மக்களுக்கெல்லாம் உணர்ச்சி ஏற்படும்படியான நிலையிலே



—சமுதாயத்திற்கே ஒரு நல்ல வாழ்வு மாதிரி ஏற்படுகிறது என்பது ரொம்பக் கஷ்டம். இந்தச் சமயத்தை நாம் நல்லவண்ணம் உபயோகப்படுத்திக்கொள்ளவேணும்.

நான் சொல்ல வருவது, நாம் ஜெயித்தோமா, தோற்றோமா என்கிற எண்ணம் உங்களுக்கு இருக்கக்கூடாது; எனக்குத் தைரியம் இருக்கிறது; ஆனால் அதை மனதிலே வைக்கக்கூடாது. நம் கடமையைச் செய்கிறோமா இல்லையா என்கிறதைத்தான் மனதிலே வைத்துக்கொண்டு துணிந்து தொண்டாற்ற வேணும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றபடி நீங்கள் இவ்வளவு நேரம் காதுகொடுத்ததற்கும், இரண்டு நாளாக நீங்கள் உங்களுடைய வேலைவெட்டி எல்லாம் விட்டுவிட்டு வந்து நீங்கள் உற்சாகமூட்டி இந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு கொடுத்ததற்கும், மற்றும் பொதுமக்கள் இதற்கு ஆதரவாய் என்னென்ன உதவி பண்ணவேணுமோ அவைகள் எல்லாம் செய்ததற்கும், தோழர்கள் சிலர் நம் இயக்கத்திற்காக ஒவ்வொரு காரியத்திற்கும் தங்கள் பணியை ஏற்றுக்கொண்டு ரொம்ப உற்சாகமாக அவர்கள் உதவி செய்ததற்கும் நான் அவர்களுக்கெல்லாம் நன்றிசெலுத்துகிறேன் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். அதிகமாகச்சொல்லவில்லை. வணக்கம்.

(சென்னையில், பெரியார் திடலில் 1973 டிசம்பர் 8, 9 தேதிகளில் நடைபெற்ற, 'தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு'களில் 9-ந் தேதி, தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய தலைமை முடிவுரை. இது அவர்தம் வாழ்நாளில் கடைசி மாநாட்டு நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.)

[ஆதாரம்: Tape Recorder—Akai, Track No. 3, Speed 15/16, 146 feet]

## 3. இறுதிச் சொற்பொழிவு

### (மரண சாசனம்)

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

இன்றைய தினம் இந்த இடத்திலே, சமுதாய இழிவு ஒழிப்பு சம்பந்தமாக சென்னையில் 15 நாட்களுக்கு முன்னால் நடந்த மாநாட்டுத் தீர்மானத்தை விளக்கவும், மற்றும் நம்முடைய கடமைகளை எடுத்து விளக்கவும் இக் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டது. அதன்படி பேரறிஞர்கள் பலர் அத் தீர்மானத்தை விளக்கியும், மற்றும் பல அரிய விஷயங்களையும் நல்லவண்ணம் எடுத்து விளக்கினார்கள்; எல்லா விஷயங்களையும் நல்ல வண்ணம் விளக்கினார்கள். என்னையும் ஒரு முக்கியப் பேச்சாளனாக இதிலே குறிப்பிட்டு இருக்கிறபடியினாலே நானும் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தோழர்களே! இந்தத் தியாகராயநகர் என்னும் மாபெரும்—பிரபலமான இந்த நகருக்கு இதற்கு முன்னால் நான் வந்து—நண்பர்கள் சொன்னார்கள், 10 ஆண்டுக்கு மேலாகும் என்று. இருக்கலாம்—எனக்கு ஞாபகம் வரவில்லை, பக்கத்திலே இப்போது நான் வந்ததாக. சென்னையில் அடிக்கடி—அடிக்கடி பேசுகிறேன். என்ன காரணமோ இங்கே வரும்படியான வாய்ப்பு இப்போதுதான்; வந்திருக்கிறேன். வரும்படியான வாய்ப்பு ஏற்பட வில்லை என்றால், அதனாலே சில காரியங்களும் குறைவாய் இருக்கும் என்றுதான் நினைக்கிறேன்.

என்னுடைய கருத்துகள் இவ்வளவு தூரம் எட்டுவதற்கு இல்லாததினாலே, மக்கள் பலருக்குத் தெளிவுபட்டு இருக்காது—என்ன விஷயம்; நம் கழகம் என்ன; காரியம் என்ன என்று. ஆனாலும் பலருக்குத் தெரிந்து இருக்கலாம். என்றாலும், அண்மையிலே நடக்கப் போகிற கிளர்ச்சியை முன்னிட்டு, சென்னையில் பல பாகங்களிலேயும், அது விஷயமாகத் தெளிவுபடுத்த பல கூட்டங்கள் போடவேண்டும் என்று தீர்மானித்ததன்படி பல கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. என்னமோ, இது ஒன்று இரண்டுதான் நடந்தது; இன்னமும்



படிப்பகம்

www.padippakam.com



நடக்கலாம்; ஜனவரி 26-ம் தேதிக்குள்ளே மற்ற பாகங்களிலும் நடக்கலாம்; நடக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

தோழர்களே! நான் பேச்சுத் துவக்குவதற்கு முன்பாக நமது நண்பர் உயர்திரு வீரமணி அவர்கள் நம்முடைய கழக லட்சியச் சொல்லை விளக்கினார்கள்; நானும் விளக்கும்படிக் கேட்டுக்கொண்டேன். அதிலே, நம் கழகத் தோழர்களுக்கு ஒன்றும் கஷ்டம் இருக்காது. புதிதாக வருபவர்களுக்கும், பகுத்தறிவைப்பற்றிக் கவலைப்படாமல் மூட நம்பிக்கையில் மூழ்கிக்கிடக்கிறவர்களுக்கும் கொஞ்சம் சங்கடம் ஏற்பட்டு இருந்தாலும் இருக்கலாம், 'என்னடா, கடவுளை இப்படி எல்லாம் சொல்லுகிறான்' என்று. கடவுளைச் சொல்லுகிறதோடு இருக்காமல் கடவுளை நம்புகிறவர்களைக்கூட முட்டாள் பயல் என்று சொல்லுகிறானே—இது என்னடா என்று சில பேருக்குக் கோபம் வரலாம்.

கடவுள் சங்கதியை எடுத்தால் ஒருவனுக்கு ஒருவன்—நம்பிக்கைக்காரனும், நம்பிக்கை இல்லாதவனும்—அவனை இவன் முட்டாள் என்றுதான் சொல்லியாகணும்; இவனை அவன் முட்டாள் என்று சொல்லித்தான் ஆகணும். ஆனாலும், நாங்கள் பகுத்தறிவை அடிப்படையாக வைத்துக் கடவுள் சங்கதி பேசுகிறதினாலே கொஞ்சம் மரியாதையாகப் பேசுவோம்; மானத்தோடு பேசுவோம். பகுத்தறிவு இல்லாதவர்கள் கொஞ்சம் கடுமையாய்த்தான் பேசுவார்கள்—நம்மைவிட மோசமாக.

உதாரணமாகச் சொல்லுவேன்; நாலாயிரப் பிரபந்தம் பாடின ஆழ்வார்கள்—தேவாரம், திருவாசகம் எல்லாம் பாடின நாயன்மார்கள்—இந்தப் பயல்கள் சொன்னதைவிட நாங்கள் அதிகமாய்ச் சொல்லுகிறதில்லை. அதை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள். நாம், இவனைத் தான் திட்டுகிறோமே தவிர—இவனுடைய புத்தியைத்தான் திட்டுகிறோமே தவிர, அந்தப் பயல்கள் சொன்னாற்போல, அவர்கள் பெண்டாட்டி, பிள்ளைகளை நாம் ஒன்றும் குறை சொல்லவில்லை. நீங்கள் நினைக்கணும்! என்னடா, இப்படிச் சொல்லுகிறானே என்று சில பேருக்குக் கோபம் இருக்கும்.

ஆனால், நாலாயிரப் பிரபந்தம் பாடியிருக்கிறவன், 'கடவுள் இல்லை என்கிறவனை எல்லாம் கொல்ல வேணும்; அதுதான் கடவுள் பக்தனுக்கு அடையாளம்' அப்படியென்று பாடி இருக்கிறான். தேவாரம் பாடினவன், 'கடவுள் இல்லை என்கிறவன் பெண்டாட்டி கிட்டேயெல்லாம் நான் படுக்கணும்; கடவுளே, எனக்கு அந்த வசதி பண்ணிக்கொடு!' என்று கேட்டு இருக்கிறான். யார் என்று கேட்பீர்கள்; பேர்கூடச் சொல்லுவேன்-சம்பந்தர் என்கிற ஒரு பக்தன்—பக்தனாம் அந்த அயோக்கியப் பயல்! அவன் சொல்லி இருக்கிறான், 'கடவுள் இல்லை என்கிறவன் பெண்டாட்டிக்கிட்டேயெல்லாம் நான் படுக்கணும்' என்று கடவுளைக் கேட்கிறான்; 'இசைத்து வை' என்று (கேட்கிறான்).

நாலாயிரப் பிரபந்தத்திலே ஓர் ஆழ்வார்—தொண்டரடிப்பொடி என்கிறவன்—'கடவுள் இல்லை என்கிறவனை எல்லாம் வெட்டு, வெட்டு, வெட்டு!' என்கிறான். இது பாட்டிலே நடந்தது. காரியத்திலே எவ்வளவு நடந்திருக்கிறது தெரியுமா?

'கடவுளைப்பற்றி அறிவைக்கொண்டு ஆராய்ந்து பாருங்கள்; சிந்தியுங்கள்' என்று சொன்னான்—அவ்வளவு பச்சையாகக்கூடச் சொல்லவில்லை, புத்தன். 'நம்பி விடாதீர்கள், சிந்தியுங்கள்' என்றான். கடவுள் நம்பிக்கைக்காரப் பயல்கள் அவர்களை என்ன பண்ணினார்கள்? வெட்டினார்கள்! வெட்டி, வெட்டி தலை ஒரு பக்கம், முண்டம் ஒரு பக்கம் குவித்தார்கள். இந்த வெட்டினதும், குவித்ததும் கோயிலிலே எல்லாம் இன்னும் சித்திரமாக இருக்கிறது; கல்லிலே அடித்து வைத்திருக்கிறான்—ஒருவன் காலைப் பிடித்து இருக்கிறான், ஒருவன் தலையைப் பிடிக்கிறான், ஒருவன் வெட்டுகிறான்.

இன்னொரு கூட்டம், சைவக் கூட்டம்—அயோக்கியப் பயல்கள் கூட்டம். அவர்கள், கடவுள் இல்லை என்று சொன்னவனையெல்லாம் கழுவேற்றினார்கள். கழுவு நிறுத்தி—நிர்வாணமாக ஆக்கி—ஆசனத்திலே இட்டு, மூலை (முனை) தலைக்கு மேலே வருகிறாற் போலக் கழுவேற்றினார்கள். எத்தனைப் பேரை? 8000 பேரை. இன்றைக்கு அது உற்சவமாக நடக்கிறது—தினமும்; (இதற்கு) புராணம் இருக்கிறது; சரித்திரம் இருக்கிறது. ஆனதினாலே, கடவுள் இருக்கிறது என்று சொல்லுகிற அயோக்கியப் பயல்களைப்போல, நாங்கள், அவ்வளவு அசிங்கமாகப் பேசவில்லை. 'முட்டாள்; மடையன்' என்று சொல்லுகிறோம். அதை நாங்கள் ருசுப் பண்ணுவோம். நம் ஜனங்களுக்குப் புரியாததினாலே, 'என்ன, இந்தப் பயல்கள் இப்படிப் பேசுகிறார்கள்!' என்று நினைப்பீர்கள். அது, புரியாதது என்று சொல்லமாட்டேன்—மானமில்லாத தன்மை (என்றே சொல்வேன்).



மற்றும் நண்பர்கள்—முன்னே பேசியவர்கள், மற்ற தோழர்கள், நம் தங்கராஜ் அவர்கள், வீரமணி அவர்கள் ஆகியோர் ஆதாரங்களையெல்லாம் எடுத்துக்காட்டினார்கள். நாம் வாயிலே சொல்லிவிட்டுப் போகிறோம்.

இன்றைய தினம், அரசியலிலே இருக்கிற அயோக்கியர்கள், அரசியல் சட்டம் செய்த காலத்திலே, நம்மையெல்லாம் தாசிமக்கள் என்று அதில் எழுதினார்கள். இதற்குமேலே என்னவேணும்—கடவுள் நம்பிக்கைக்காரர்கள் அயோக்கியப் பயல்கள் என்று சொல்லுகிறதற்கு? சட்டம் எழுதி இருக்கிறார்கள்—தமிழ்நாட்டில் உள்ள மக்கள், நண்பர் வீரமணி சொன்னாற்போல, கிறிஸ்தவன், முஸ்லிம், பார்சி தவிர மற்றவன் எல்லாம் இந்து; இந்துவிலே 100-க்கு 2½ பயல்களாய் இருக்கிற பார்ப்பான் தவிர பாக்கி 97 சில்லரைப் பேர் தேவடியாள் மக்கள்—பார்ப்பானுக்கு வைப்பாட்டி மக்கள் (என்று) சட்டத்திலே எழுதி வைத்திருக்கிறான். இதற்கெல்லாம் காரணம் என்ன? திருப்பிச் சொல்லாத காரணம்; அவர்களைக் கண்டிக்காத காரணம். பார்ப்பானைக் கண்டால், 'வாப்பா, தேவடியாள் மகனே! எப்போது வந்தாய்?' என்று கேட்கணும். 'ஏண்டா அப்படிக் கேட்கிறாய்?' என்றால்—'நீ எழுதி வைத்தாயடா, என்னைத் தேவடியாள் மகன் என்று! நான் நிஜமாகவே சொல்லுகிறேன், நீ தேவடியாள் மகன் என்று! (என்று கூறணும்). இதில் என்ன தப்பு?

நம் பெண்டுகளிடத்திலே போய்ச் சொல்லணும்—'அம்மா, விளக்குமாறு எடுத்துக்கொள், இந்த அரசியல் சட்டத்தை எடுத்துக்கொள், தெருவிலே வை; போடு சீவுகட்டையாலே—அழுந்தக் குத்திக் குத்தி' என்று. 'ஏனம்மா, அரசியல் சட்டத்தை விளக்குமாற்றாலே போடுகிறாய்?' என்று கேட்டால்—'அதை எழுதின அயோக்கியப் பயல்கள், என்னைப் பார்ப்பானுக்குத் தேவடியாள் என்று எழுதி இருக்கிறான்; பின்னே என்ன, அதனைக் கொஞ்சட்டுமா?' என்று கேட்கச் சொல்லுகிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்த மாதிரியான—பதிலுக்குப் பதிலான முறையை நாம் எடுக்காததனாலே, நாதி இல்லை நம்மைப்பற்றிப் பேசுகிறதற்கு; கேள்வி இல்லை நம்மைப்பற்றிப் பேசுகிறதற்கு. நாளைக்குக்கூட நம் ஆள் சிரித்துக்கிட்டுப் போவான்—'நேற்று வந்தான்; நாலு அடி அடித்தான்; நன்றாகப் பேசினான்' என்று அவ்வளவோடுதான் நின்று கொள்வான். பார்ப்பான் சொல்லுவான், 'நேற்று வந்தான் பார்த்தாயா, நாய்க்கன், அவன் என்னென்ன சொன்னான்; நான், என்ன பண்ணுவேன்?' என்று கவலைப்படுவான்; பெண்டாட்டிக்கிட்டே சொல்லிக்கிட்டு அழுவான். நமக்கு மான ஈனம் ஒன்றும் இல்லை; நாம் சிரித்துக்கிட்டுப் போய்விடுவோம்.

ஏன் சொல்கிறேன் என்றால், பழக்கத்திலே நம்மை ஈனசாதி என்கிறான்; 'ஏனடா' என்றால், 'நீ கோயிலுக்குள்ளே வரவேண்டாம்; நீ வந்தால் சாமி தீட்டாய்ப் போய்விடும்' என்கிறான். என்ன அர்த்தம்? 'கல்லைத் தொட்டால் தீட்டாகிவிடும்' என்றால், நம்மை எவ்வளவு கீழ்ச்சாதி என்கிறான்! சாஸ்திரத்திலே, தேவடியாள் மகன் என்கிறான்; பார்ப்பானுக்குப் பிறந்தவன் என்கிறான்; சூத்திரனுக்குப் பெண்டாட்டியே கிடையாது என்கிறான்; சூத்திரச்சி பார்ப்பானுடைய வைப்பாட்டி என்று எழுதி இருக்கிறான். (இதை எல்லாம்) யார் கவனிக்கிறார்கள்? இன்னும் அதேமாதிரிப் பல ஆதாரங்கள்.

எத்தனை வருஷமாக இது இருக்கிறது? 2000 வருஷமாக இருக்கிறது—மேலேயே சொல்லலாம்; நாசமாய்ப் போகட்டும். சுயராஜ்யம் என்கிறார்களே, இதிலே சட்டத்திலே

படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறது—அரசியல் சட்டத்திலே இருக்கிறது, நம்மைத் தேவடியாள் மகன் என்கிறது. அப்புறம், நமக்கு என்னதான் கதி? நாம் எப்போதுதான் மனுஷராகிறது? நாடு நம் நாடு; பார்ப்பான் எல்லாம் பிழைக்க வந்தவன் இங்கே! இந்த இழிவிலே இருக்கிற இவ்வளவு பெரிய சமுதாயம், இந்த 1973-லே, சட்டப்படி தேவடியாள் மகன் என்று இருந்தால்—சாஸ்திரப்படி தேவடியாள் மகன் என்று இருந்தால்—அனுபவத்திலே ஈனசாதி, நாலாஞ்சாதி, தீண்டாத சாதி என்று இருந்தால்—யார்தான் இதற்குப் பரிகாரம் (தேடுவது)? வேறே நாட்டான் நம்மைப்பற்றி என்ன சொல்லுவான்—நம் சங்கதியைச் சொன்னால்?

உலகத்திலே, தமிழர் இருக்கிறதைப்போல எத்தனையோ பங்கு முஸ்லிம் இருக்கிறான்; அவர்களுக்குள்ளே தேவடியாள் மகனே கிடையாது, ஈனசாதியே கிடையாது, எல்லோரும் சகோதரர்கள், ஒருவனுக்கொருவன் தொட்டுக்கொள்ளுவான், ஒருவன் சாப்பிட்டதை இன்னொருவன் சாப்பிடுவான், ஒருவன் இலையிலே இன்னொருவன் சாப்பிடுவான்—எச்சில்கூடப் பார்க்கமாட்டான். அதாவது, என்ன? அவ்வளவு சகோதரத்துவம் அந்த மதத்தின் தன்மை! அதேமாதிரி, பார்ப்பான். கிறிஸ்தவன், கவலைப்படமாட்டான்; சாதி என்று ஒருவனைக் குறை சொல்லமாட்டான். பார்ப்பானும் அதேமாதிரி தங்களுக்குள்ளே மேல், கீழ்ச்சாதி கிடையாது; எல்லாரும் ஒஸ்தி—நாம் எல்லாம் அவனுக்குத் தேவடியாள் மக்கள். இப்படி இருக்கக் காரணம் என்ன?

நண்பர்கள் சொன்னார்களே, அதுபோல, 50 வருஷமாய் உழைத்ததிலே ஏதோ கொஞ்சம் மாறுதல். அதுவும், எதிரிலே நம்மைப் பார்த்து, சூத்திரன் என்று சொல்லமாட்டான்; வீட்டிலே எல்லாம் பேசுவான்—'இந்தச் சூத்திரப் பயல்கள்' என்றுதான் பேசுவான். இந்த இழிவிலே இருந்து நீங்கணும்.

ஏதோ சட்டம், சமத்துவம், கடவுள் என்று சொன்னால் ஏதோ அதை உதைக்கிறோம்; கடவுளை நாளைக்குச் செருப்பாலே அடிக்கச் சொல்கிறோம், பலதடவை நன்றாக அடித்தாயிற்று, நாளைக்கும் அடிக்கச் சொல்கிறோம், நம் தாய்மார்களையும் விளக்குமாற்றாலே போடச் சொல்கிறோம். சட்டத்திலே இருக்கிறதை என்ன பண்ணுகிறது? ஏதோ நாங்கள் கொஞ்சம் உணர்ச்சியோடு இருக்கிறோம்; இன்றைக்கு அவன் வாயை மூடிக்கிட்டு இருக்கிறான். நாளைக்குக் காங்கிரஸ்காரன் வந்துவிட்டான் என்றால்? நாளை அன்றைக்குப் பார்ப்பான் வந்துவிட்டான் என்றால்? இல்லை, இந்தக் கம்யூனிஸ்டே வந்துவிட்டான் என்றால்—அவன் காசுக்கு என்றால் என்னவேணுமானாலும் பண்ணுவானே—அவனல்லவா சத்தம்போடணும் எனக்குப் பதிலாக? எங்களைத் தவிர, நாதிஇல்லையே இந்த நாட்டிலே! எத்தனை நாளைக்கு, நாம் இப்படியே கட்டிக் காத்துக்கிட்டு இருப்போம்?

எல்லாக் கட்சிக்காரனும் ஒன்றாய்ச் சேர்ந்து இன்றைக்கு இங்கு இருக்கிற ஆட்சியை ஒழிக்கணும் என்கிறான். ஒழித்தால் ஒழித்துவிட்டுப்போ, எனக்கு ஒன்றும் கவலை இல்லை. அப்புறம் என்ன? இன்றைக்குத் திருட்டுத்தனமாக—மறைவாகப் பேசுகிறபேச்சை, நாளைக்கு வெளிப்படையாகப் பேசுகிறான்; பேசுகிறவனைப் பார்ப்பான் மாலைபோட்டு வரவேற்கிறான், அவனுக்கு விளம்பரம் கொடுக்கிறான். எனவே, தோழர்களே! நம்முடைய நிலைமை உலகத்திலேயே பெரிய மானக்கேடான நிலைமை; இரண்டாயிரம் வருஷமாக இருக்கிற முட்டாள்தனத்தைவிட, இந்தச் சட்டத்திலே இருக்கிறதே—'இந்து லா'விலேயும், மற்ற அரசியல் சட்டத்திலேயும்—அது பெரிய முட்டாள்தனம். அதைவிட, இதைச்சொல்லி மாற்றச் செய்யாமல் இந்த ஆட்சியிலேயே நாம் குடிமகனாக இருக்கிறோமே, அது மகாமகா மானங்கெட்டத்தனம். பொறுக்கித் தின்கிறவனுக்கு இந்த ஆட்சி வேணும்—வேண்டாம் என்று சொல்லவில்லை. மானத்தோடு பிழைக்கிறவனுக்கு இந்த ஆட்சியை ஒழித்துத்தானே ஆகணும்! 'என்னடா?' என்றால், 'உன்னாட்டம் நான், என்னாட்டம் நீ; என்னை நீ தேவடியாள் மகன் என்று சொல்கிறாய்; இதை மாற்றுகிறாயா? (அல்லது) மூட்டை கட்டுகிறாயா?' என்று கேட்டுத்தானே ஆகணும். இல்லாவிட்டால், விதி! இன்னும்



எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கிறது? இப்படியே இருப்போம் என்றுதான், என்ன நிச்சயம்? நாம் ஒழிந்தால் நாளைக்கு மாற்றிவிடுகிறான்—மாற்றினானே!

நம்முடைய கலைஞர் கருணாநிதி அவர்கள், 'கல்தான்; யார்வேண்டுமானாலும் பூசைபண்ணலாம்; ஆனால் முறைப்படி செய்யணும்' என்று யாவருக்குமே அனுமதி கொடுத்தார். பார்ப்பான் கோர்ட்—சுப்ரீம் கோர்ட் என்றால் பார்ப்பான் கோர்ட் என்றுபேர், சிரிக்காதீர்கள், அதிலே தமிழனுக்கு இடமே இல்லை; (அப்படிப்) போனாலும் அவனுடைய அடிமைதான் பேரவான்; அவன் சாஸ்திரத்தைப் பார்த்துத்தான் தீர்ப்புப் பண்ணுவான். சொல்லிப்போட்டானே—'கோயிலுக்குள்ளே போகிறது தப்பு—சாஸ்திரவிரோதம்' என்று! அட முட்டாள்களா! சாஸ்திரம் என்றால் எது? எப்போது எழுதினது? எவன் எழுதினான்? எவனாவது சொல்லட்டும்! 'ஆகமத்தின்படி' என்று எழுதினான், ஒரு அய்க்கோர்ட் ஜட்ஜ்—ஒருவனோ, இரண்டு மூன்று பேரோ அவர்கள், பார்ப்பான் ஆதிக்கம் உள்ளது, பார்ப்பனத்தியாலே நியமிக்கப்பட்டவர்கள். என்றைக்கு எழுதினான், ஆகமம்? ஒரு அக்கிரமம், ஒரு அயோக்கியத்தனம் இதற்குமேலே உலகத்திலே உண்டா? என்றைக்கோ, எவனோ பேர்தெரியாத அனாமதேயம்—எவனாலேயும் சொல்லமுடியாது. ஆகமத்தை எழுதினவன் எவனடா என்றால், அவன் சொல்லுவான், 'வசிஷ்டன் எழுதினான், நாரதன் எழுதினான், யக்ஞவல்கியர் எழுதினான், மனு எழுதினான், வெங்காயம் எழுதினான்' என்று. இந்தப் பயல்களுக்கு வயது என்ன?

கவனிக்கணும் தோழர்களே! நாரதன் 5 கோடி வருஷத்துக்கு முன்னே பிடித்து இருக்கிறான். 5 கோடி வருஷம்—ஒவ்வொரு கற்பத்திலேயும்! ஒரு கற்பம் என்றால் 3 கோடி, 4 கோடி, 5 கோடி வயதாம். அப்படி 10 கற்பம்—அப்போதெல்லாம் இருக்கிறான் நாரதன்! அப்படி என்று ஒருவன் இருந்தானா? இருக்கமுடியுமா? அதை வைத்துத் தீர்ப்புப் பண்ணுகிறானே, கோர்ட்டிலே, அதனுடைய அர்த்தம் என்ன? 'ஆளுகிறவர்கள் எத்தனை அயோக்கியர்கள்; ஆளப்படுகிறவர்கள் எத்தனை மானங்கெட்ட பதர்கள்' (என்பதுதானே)? இதைத் தவிர வேறு என்ன சொல்லமுடியும்? இதை எல்லாம்விட அக்கிரமம், அய்யா வீரமணி இப்போது சொன்னாரே, 'இந்து' என்கிறானே, அது.

யார் இந்து? 'இந்து' என்கிற வார்த்தைக்கு என்ன அர்த்தம்? என்றைக்கு முதற்கொண்டு, 'இந்து' வந்தான்? நம்முடைய தமிழர்க்கு இலக்கியம் என்னென்னமோ இருக்கிறதே; எவ்வளவோ இலக்கியம் இருக்கிறது? பார்ப்பானுடைய இலக்கியங்களே ஏராளமாக இருக்கின்றன—இராமாயணம், பாரதம், விஷ்ணுபுராணம், கந்தபுராணம், அந்த புராணம், இந்த புராணம் என்று. நம் புலவர்களுக்கும் ஏராளமாய் இருக்கிறது—பஞ்சகாவியம், அய்ந்து இலக்கணம், அது, இது என்று. எதிலேயாவது 'இந்து' என்கிற வார்த்தை இருக்கிறதா? நம் நாட்டிலே எந்தப் புத்தகத்திலேயாவது உண்டா? 'இந்து' என்கிறவன் எப்படி வந்தான் என்கிறதற்கு அவன் சொல்லுகிற கதையே, அசிங்கமாய் இருக்கிறதே—சிந்து நதியின் காரணமாக 'இந்து' ஆகி—'இந்து' என அழைக்கப்படான் என்று.

சிந்து நதிக்கும் நமக்கும் எப்போது சம்பந்தம்? ஆரியன் வந்தபோதுதானே, சிந்துநதி என்கிறது. அதை, இந்த நாட்டுப் பழங்குடி மக்களுக்கு, 'இந்து' என்று பேர் என்றால், சொல்லிவிட்டு மரியாதையாகவாவது போகலையே! 'இந்து என்றால் இரண்டு சாதி; அதிலே ஒருவன் பார்ப்பான், ஒருவன் சூத்திரன்; பார்ப்பான் எல்லாம் மேல்சாதி, சூத்திரன் என்றால் கீழ்ச்சாதி; சூத்திரன் பெண்டாட்டி என்றால் பார்ப்பானுக்கு வைப்பாட்டி. இது சட்டத்திலே—சாஸ்திரத்திலே—பழக்கத்திலே' என்று சொன்னால்—நமக்கு விடிகிறதுதான் எப்போது? ஒரு மனுஷனை, 'என்னடா, அடே உன் பெண்டாட்டியை...' அப்படி என்று சொன்னால், கத்தியை எடுத்துக்கொள்கிறானே! தனிப்பட்ட மனுஷனே, 'உன் பெண்டாட்டியை...' என்று சொன்னால், கத்தியை எடுத்துக்கொள்கிறான்—இத்தனை பேரையும் தேவடியாள் மகன் என்கிறான்—ஒரு பயலுக்கும் மானம் இல்லை என்றால்?

படிப்பகம்

www.padippakam.com



மானம் இருந்தால் இந்த நாட்டில் பார்ப்பாரக் குஞ்சு இருக்குமா? இருக்கமுடியுமா? ஒரு பயல் பூணூல் போட்டுக்கிட்டு நம் எதிரிலே வருவானா? 'என்னடா அர்த்தம், இந்தப் பயலுக்குப் பூணூல் இருக்கிறது; ஏ அயோக்கியப் பயலே என்ன அர்த்தம்? நீ பிராமணன், நான் சூத்திரன் என்று அர்த்தம்; அப்படி என்றால் என்ன? உன்னுடைய வைப்பாட்டி மகன் என்று அர்த்தம். போடு உன்னைச் செருப்பாலே'—அப்படி என்று ஆத்திரமல்லவா வரும்—நமக்கு மானம் இருந்தால்? இன்னொருவன், 'பெண்டாட்டியை...' என்றால் என்ன ஆத்திரம் வருமோ அதற்குமேலே அல்லவா ஆத்திரம் வரணும், உன்னைச் சூத்திரன் என்று இன்னொருவன் சொன்னால்?

நாதி இல்லையே; சொல்கிறதற்கு ஆள் இல்லையே; சிந்திக்க ஆள் இல்லையே! ஒரு ஓட்டுக்கு என்னென்ன கொடுக்கிறான்? பெண்டாட்டியைத்தவிர மற்றதை எல்லாம் கொடுக்கிறானே—ஓட்டு வாங்குகிறதற்கு. இதற்குக் கவலையே படமாட்டேன் என்கிறானே! முன்னேற்றக் கழகத்துக்காரன் மற்றவனை எல்லாம்—என்னை எல்லாம் வைவான்—'இவனுக்கு ஏன் இதுவெல்லாம் கேடு; இந்த வேலையை ஏன் பண்ணிக்கிட்டு இருக்கிறான்?' என்று. அவனுக்கு ஓட்டுதான் பெரிது; அவன் பெண்டாட்டி, பிள்ளையைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை. இன்னும் கொஞ்சநாள் போனால், வழக்கத்திலேயே வந்துவிடும்—பெண்டாட்டியைக்கூடக் கொடுத்து ஓட்டு வாங்குகிறாற்போல. ஏனென்றால் அந்த உத்தியோகமும், அந்தப் பதவியும் அவ்வளவு உயர்வாய்ப் போய்விட்டன.

நாம் மிகப்பெரிய சமுதாயம், நாம் எவ்வளவு முன்னுக்கு வரவேண்டியவர்கள்? நாதியற்றுப்போய்க் காட்டுமிராண்டியாக அல்லவா இருக்கிறோம்? சொல்லுங்கள்! வெளி நாட்டுக்காரனைப் பார்—வெள்ளைக்காரனைப் பாரய்யா! நீ வேட்டி கட்டிக்கிட்டு இருந்த போது, அவர்கள் ஆண் பிள்ளையும், பெண் பிள்ளையும் அம்மணமாக இருந்தவர்கள்; நீ உன் பெண்டாட்டி, மகன், அக்காள், தங்கை என்று முறை வைத்திருந்தபோது, அவர்களுக்கு அக்காள் தங்கை முறை கிடையாது—அவ்வளவு காட்டுமிராண்டியாய் இருந்தவர்கள். இன்றையதினம், அவர்கள் ஆகாயத்துக்கல்லவா பறக்கிறார்கள்—ஆகாயத்துக்கு மேலேயல்லவா போய்விட்டு வருகிறார்கள்—சந்திரன் இருக்கிற இடத்திலே அல்லவா போய் உட்கார்ந்துவிட்டு வருகிறார்கள்; அது 2 இலட்சத்து 30 ஆயிரம் மைல்; 1 மணிக்கு 5000 மைல் வீதம் அல்லவா பறக்கிறார்கள்; இன்னும் அவர்கள் செய்கிற அதிசய அற்புதங்களைப் பார்த்தீர்கள் என்றால் உங்களுக்குப் புரியாதே!

அமெரிக்காவிற்குப்போய் ஆண் பிள்ளையுடைய இந்திரியம் கொண்டுவருகிறான், இங்கே சைனாவிலே, ஜப்பானிலே போய் பெண் பிள்ளையினுடைய இந்திரியம் கொண்டு வருகிறான்—இரண்டையும் இங்கே கலக்கி, பிள்ளை ஆக்குகிறானே! இப்போது நேற்று, முந்தாநாள் வந்த விஷயத்திலே, அவசரப்பட வேண்டியதில்லை—இரண்டு பேருடைய இந்திரியத்தையும் டப்பியிலே வாங்கி வைத்துக்கொள்ளலாம்; நமக்கு வேண்டியபோது பிள்ளை உண்டாக்கிக் கொள்ளலாம், 10 வருஷத்துக்கு அப்புறம்—இன்றைக்கே பண்ணிக் கொள்ளவேண்டியதில்லை. இப்படியாக அவன் பண்ணுகிற அதிசயம் (ஏராளம்). அமெரிக்காவிலே இருக்கிறான், அது 10 ஆயிரம் மைல்; நாம் இங்கே இருக்கிறோம்; போனை எடுத்து இப்படி, காதிலே வைத்தான் என்றால் 'ஹலோ' என்றால், அப்போதே நமக்கு இங்கே காதில் கேட்கிறதே—அந்த உதடு ஒட்டுகிறதற்குள்ளே காதில் கேட்குதய்யா, 10 ஆயிரம் மைலிலிருந்து! அவர்களிலே அரைவாசிப் பேருக்குத்தான் கடவுள்; அரைவாசிப்பேருக்கு ஒரு கடவுள், அதுவும் சந்தேகம்! ஆனால், நம்பணும் என்கிறவன். (இங்கு) இந்த முட்டாள் பயல்களுக்கு 1000, 2000, 5000 கடவுள்கள்—ஒரு காரியமும் பண்ணமுடியவில்லை இந்தக் கடவுளாலே. காரியம் பண்ணமுடியவில்லை என்றால் சும்மாவா இருக்கிறோம்? அவைகளுக்கு எவ்வளவு கோயில்? எத்தனைப் பெண்டாட்டி, வைப்பாட்டி; கல்யாணம், கருமாதிச் செலவு? எத்தனைப் பேருக்குச் சோறு? எவ்வளவு உற்சவம்?

'அரசாங்கம் வரி வாங்குகிறது' என்று சொல்கிறானே தவிர, மடப் பயல், இது குட்டிச் சுவராகப் போகிறதே இந்தப் பணம் என்று ஒரு பயல்கூட நினைக்கிறதில்லையே!



கோயிலுக்குப் போகாது எவன் இருக்கிறான்? கோயிலுக்குப் போகணும், என்கிறான்; குளிக்கிறான், முழுகுகிறான், பட்டு கட்டிக்கிறான்; எட்டிக் குதித்துக்கிட்டுப்போகிறான்—'ஏனடா' என்றால், 'நீட்டாகிறது' என்கிறான். (ஆனால்) கோயில் கிட்டேபோனதும், 'டக்'கென்று வெளியே நின்று கொள்கிறானே, வாசற்படிக்கிட்டே! 'ஏனடா, மடையா அங்கே நிற்கிறாய்?' என்றால், 'நான் சூத்திரன்; உள்ளே போகலாமா?' என்கிறான். எப்போது? 1973-லே! நாம் ஒருநாடு—நாம் ஒரு சமுதாயம்—நமக்கு மானம், அவமானம் என்கிறது ஒன்று இருக்கிறது என்று சொல்லமுடியுமா? அது பெரிதில்லையே—யார் பாடுபடுகிறார்கள், நாங்கள் தானே, 3½ பேர்! மற்றவன் எல்லாம் வேறுவேறு கட்சி.

ஒரு கட்சிக்காரன்கூட கடவுளைப்பற்றிப் பேசவேமாட்டான். ரஷ்யாவிலே கம்யூனிஸ்ட் இருக்கிறான்; அவனுக்கு முதல் வேலை, கடவுளை ஒழித்தான்; கோவிலை இடித்தான்; பாதிரியை எல்லாம் வெட்டினான். இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் என்ன பண்ணுகிறான்? பொறுக்கித்தின்கிறான்; மற்ற நாட்டுக்காரன் எல்லாம் என்ன பண்ணுகிறான்!

(இங்கு) மனுஷனைப்பற்றி எவனுமே பேசுகிறதில்லையே! 'சொன்னால் வரும்படியா?'—அதைத்தானே கேட்கிறான்; அதைத்தானே பண்ணுகிறான், நாங்கள் இவ்வளவு பண்ணினோம்; இவ்வளவு பிரச்சாரம் பண்ணினோம்; இவ்வளவு மாநாடு எல்லாம் நடத்தினோம்—எவன் எங்களை ஆதரித்தான்? பயப்படுகிறானே—ஆதரித்தால் ஓட்டுப் போய் விடுமே, ஆதரித்தால் அரசாங்கம் என்ன பண்ணுமோ என்று.

அருமைத் தோழர்களே! இப்போது நமக்கு வேண்டியதெல்லாம் மான உணர்ச்சி வேணும்; நமக்கு இருக்கிற இழிவு நீங்கணும்; அப்புறம் மேலே போகலாம், போகணும். மனிதனுக்கு இருக்கிற உரிமை என்ன தெரியுமா? மனிதனுக்கு இருக்கிற சக்தி—உரிமை ஒவ்வொரு மனிதனும் குறைந்தது 500 வருஷம் இருக்கலாம், 500 வருஷம் இருக்கலாம்; இப்போது இல்லையே, 52 வயதுதான் இருக்கிறோம், சராசரி. எனக்கு இப்போது 95; இன்னும் எவனாவது ஒரு பத்துப் பேர் இருப்பான் 100 வயது ஆனவன், இருக்க முடியவில்லையே! வெள்ளைக்காரன் வந்ததனாலே இந்த அளவாவது இருக்கிறோம். வெள்ளைக்காரன் வருகிறதற்கு முன்னே, அவன் வந்த அன்றைக்குக்கூட நமக்கு 10 வயது, இல்லை—7 வயது இந்த நாட்டுக்குச் சராசரி. அவன் வந்ததற்கப்புறம், அவன் வைத்தியம், ஆஸ்பத்திரி, அவனுடைய முயற்சி, சுகாதாரம் இவையெல்லாம் நமக்கு ஏற்றதற்கு அப்புறம் இப்போது நாம் சராசரி 50 வருஷம் இருக்கிறோம். மேல்நாட்டிலே 97 வயது இருக்கிறான். ரஷ்யாவிலே கிட்டத்தட்ட 100 வயது இருக்கிறான். நாமும் இன்னும் 10, 20 வருஷத்திலே 75 வருஷத்துக்கு வந்துவிடுவோம்; வெள்ளைக்காரன் 120 வருஷத்துக்குப் போய்விடுவான். இப்படியே நாளாக நாளாக 500 வருஷம் வரைக்கும் இருப்போம். அதற்கு மேலே வேறே என்ன வரணும்? இருக்கிறது ஒன்றும் கஷ்டமல்ல—சாகிறதுதான் கஷ்டம்; அவ்வளவு வசதி எல்லாம் பண்ணியிருக்கிறான் நம் நாட்டுக்கு. அவ்வளவு அதிசய அற்புதங்களை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறான். நமக்கு ஒன்றும் இல்லாததற்குக் காரணம், நாம் தேவடியாள் மக்களாய் இருந்ததனாலே.

நாங்கள் வராதிருந்தால் படிப்பு ஏது? சொல்லுங்கள்! சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கிறபோது நாம் 100-க்கு 10 பேர்கூடப் படிக்கவில்லையே! அது வந்ததற்கு அப்புறம் ஆரம்பித்தோம், அறிவைப்பற்றி. சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தபோது அதற்கு என்ன கொள்கை தெரியுமா? அய்ந்து கொள்கைகள்; என்ன கொள்கைகள்? 1. கடவுள் ஒழியணும். 2. மதம் ஒழியணும். 3. காந்தி ஒழியணும். 4. காங்கிரசு ஒழியணும். 5. பார்ப்பான் ஒழியணும். அன்றைய முதற்கொண்டு இன்றைய வரைக்கும் இந்த அய்ந்து கொள்கைகள்தான் நடக்கின்றன. காந்தியை ஒழித்தான், ஒழித்துவிட்டான், நாம் ஒழிக்கிறதற்கு முன்னே பார்ப்பானே ஒழித்துப்போட்டான். 'காந்தி' நம் பேச்சைக் கேட்டு நம் பக்கம் திரும்பினார். ஆனால், 'இன்னமும் கடவுள் என்று சொல்கிறாயே, முட்டாள்' என்றோம். உடனே காந்தி, 'கடவுளுக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தம் இல்லை; காங்கிரஸ்

படிப்பகம்

www.padippakam.com



காரன் கடவுளை இப்போது சேர்க்க வேண்டியதில்லை' என்று சொல்லிவிட்டார். சொன்ன 30 நாளிலே, கொன்று போட்டானய்யா அவரை! 'இவன் ராமசாமி ஆகிவிட்டான்; அவனுக்காவது நாதி இல்லை; இவன்—காந்தி என்றால் இந்தியாவுக்கே பெரியவன்; எல்லாரும் நம்பிவிடுவார்கள்' என்று சட்டென்று கொன்று போட்டான், அவரை.

அடுத்தாற்போல, ஒழியவேண்டியது காங்கிரஸ். காங்கிரஸ் ஒழிந்தது; இனிமேல் அது ஒன்றும் உருப்படியாகாது—உருப்படியாகாது; இப்போதே இரண்டு பேரும் தொங்குகிறார்களே! இரண்டாகப் பிரிந்து, ஒன்றுக்கொன்று மானங்கெட்டுத் திரிகிறது; இப்போது ஒருவருக்கொருவர் சேர்ந்து பார்க்கலாம் என்று (நினைக்கிறது). சேர்ந்தால்—இனி என்ன மரியாதை இருக்கப்போகிறது? என்ன ஆகப்போகிறது; இனி எவன் காங்கிரசை ஆதரிப்பான், பொறுக்கித் தின்கிறவனைத் தவிர? காங்கிரசுக்கு என்ன கொள்கை இருக்கிறதென்று, ஒருவன் சேருவான்? இன்றைக்கு இருக்கிற நம்முடைய காமராசர் வாயிலே 'சாதியை ஒழிக்கணும்' என்று ஒரு வார்த்தை வருமா? சொல்ல முடியுமா? சொன்னால், அவர் காங்கிரசிலே இருக்கக்கூடாதே! காங்கிரஸ் வேலையே, சாதியைக் காப்பாற்றுகிறது தானே, முதலிலே எடுத்ததும்; பார்ப்பானாலே உண்டாயிற்று—அவன் நன்மைக்கு அதை அவன் பண்ணிக்கொண்டான்; போகிறவன் அதை ஒத்துக்கிட்டுத்தானே ஆகணும்? காமராசர் நம்மோடு சேர்ந்தார்; கொஞ்சம் காரியம் செய்தார். 'சாதி ஒழியணும்' என்று பக்தவத்சலம் வாயிலே வருமா? இல்லை, சி. சுப்ரமணியம் வாயிலே வருமா? சொன்னால், அவர் காங்கிரஸிலே இருக்க முடியாதே! அந்த மாதிரித் திட்டத்தோடு இருக்கிறார்கள்; அது இனிமேல் உருப்படியாகுமா?

முன்னேற்றக் கழகம் ஒழிந்தாலும், 'காங்கிரஸ் ஒழிக; சாதி ஒழிக' என்கிற ஓர் சீர்திருத்த உணர்ச்சி உள்ளவர்கள்தாம் இனி வருவார்கள். ஆனதினாலே இனி (அவை) வளம்பெற முடியாது—காந்தியும் போய்விட்டார்; காங்கிரசும் ஒழிந்து போயிற்று; கடவுளும் தெருவிலே சிரிப்பாய்ச் சிரிக்கிறது. அதுதான் வீரமணி சொன்னாரே, செருப்பாலே அடித்தார்கள் கடவுளை என்று. என்ன ஆயிப்போயிற்று? 'கடவுளை செருப்பாலே அடித்தான்; அதனாலே ஓட்டுப் பண்ணவேண்டாம்' என்று காமராசர் முதற்கொண்டு தப்பட்டை அடித்தார்கள்; (ஆனால்) என்றைக்கும் வராத அளவுக்கு 200 பேருக்கு மேலே வந்துவிட்டார்களே! முன்னேற்றக் கழகத்துக்காரர் 185 பேர்; அவர்களை ஆதரிக்கிறவர்கள் 20 பேர்; காங்கிரஸ், காந்தி, கடவுள், வெங்காயம் எல்லாம் சேர்ந்து 20 பேர்கூட வரவில்லையே? சாமியைத் திட்டுகிறான் என்று சொல்லுகிறீர்களே—புத்தி இல்லாமல் சொல்லுகிறோமே தவிர, சாமியைச் செருப்பாலே அடித்த பிரச்சினை மேலே 200 பேர் வந்துவிட்டார்களே! ஆனதினாலே மக்கள் அறிவு பெற்றுக்கிட்டு வருகிறார்கள்; பயன்படுத்திக்கொள்ள வேணும்; அவர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லணும்—தெரியாது வெகுபேருக்கு.

எனவேதான் இப்போது நாம் முன்னேற்றம் அடையணும்; மேலே வருகிறதற்குள்ளே பள்ளத்திலே இருந்து நிலத்து மட்டத்துக்கு வரணும்; அப்புறம் மேலே ஏறணும். இப்போது நாம் பள்ளத்திலே கிடக்கிறோம். என்ன? நாலாவது சாதி, அய்ந்தாவது சாதி, தீண்டப்படாத சாதி, பார்ப்பானுடைய வைப்பாட்டி மக்கள்—இப்படியல்லவா இருக்கிறோம் நாம். இது மாறவேணும், அப்புறம் மேலே போகணும்; மாறாது மேலே போக முடியுமோ? (இதை) யாரும் கவனிக்கவில்லை. கவனிக்காமல் போனால், நாங்கள் ஒன்று போனால் ஒன்று செய்துகிட்டே இருக்கிறோம்; நாளுக்கு நாள் கொஞ்சம் மாறிக்கிட்டேதான் வந்தது; இன்னும் மாறணும். எங்களால்தான் முடியும் என்று இருக்கிறது நிலைமை. வேறு எந்தக் கட்சிக்காரனுக்கும் இதிலே கவலை இல்லை; இவர்களோடு சேர்ந்தால் ஓட்டுப் போய்விடுமே என்று பார்க்கிறான்—மானம் போகிறதைப்பற்றி அவனுக்கு வெட்கமில்லை. ஆகவே நாம் மாநாடு போட்டோம். இந்த மாநாடு போட்டதற்குக்கூடக் காரணம் சொன்னாரே!

'தீண்டாமை இல்லை என்று சட்டத்திலே எழுதிப்போட்டான்; எந்தவிதத்திலேயும் தீண்டாமை இல்லை' என்று சொல்லிவிட்டான். 'ஆனால் மதத்திற்கு மாத்திரம் உண்டு'



என்று அதில் ஓர் அடையாளம் வைத்துவிட்டான்—நிபந்தனை. இல்லாதிருந்தால் நாம் அந்தத் தீர்மானத்தின்மீதே எல்லாக் காரியத்தையும் நடத்தி இருப்போம். அதுதான் சொன்னேனே—'(எல்லாரும்) கோவிலுக்குப் போகலாம்' என்று சட்டமே பண்ணினால்—அந்தச் சட்டம் செல்லாது என்று ஆயிப்போயிற்றே! அதே மாதிரிதானே சாஸ்திரத்திற்கு விரோதமாய் இருக்கிற எந்தக் காரியமும் இனிமேல் செல்லாது (என்று வரும்). இனிமேல் நாம் இழிமகன். எனவேதான் மாற்றிக்கொள்ளவேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டோம்; அவைகளையெல்லாம் பார்த்தோம்; மாற்றி ஆகணும். சட்டத்திலேயும், சாஸ்திரத்திலேயும் இருக்கிறதினாலே முதலிலே அதைக் கேட்கிறோம். சட்டத்திலே இருக்கிறது ஒழியவேணும் என்றால், சட்டம் ஒழிந்தால் உண்டு. சட்டத்திலே ஒழிக்கவில்லையென்றால் ஆட்சியை ஒழித்தால்தான் உண்டு—அவ்வளவுக்கு நாம் இப்போது பக்குவமாகணும். ஆட்சியை, ஒழியும்படியாக இல்லாமல் பாதுகாத்துக் கொண்டான்; தனியாக இருந்தால் எவனும் ஒன்றும் பண்ணமாட்டான்—கூட்டாக இருந்தால் எல்லாம் ஒன்று சேர்ந்துகொள்வார்கள் என்று 15, 16 நாடுகளாகப் பிரித்தான். அந்தந்த நாட்டை, மற்ற நாட்டோடு, அந்தந்த நாட்டோடு சம்பந்தமில்லை என்று சொல்லிவிட்டான்; அவனைப்பற்றி இவன் கவனிக்கக்கூடாது; இவனைப்பற்றி அவன் கவனிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டான். 16 மாகாணங்களிலே ஜனங்கள் இருக்கிறார்கள்—ஒருவருக்கு ஒருவர் சம்பந்தம் இல்லையே! அவனும் நானும் தாராளமாகப் பேசிக்கொள்ள முடியாதே! அவன் மொழி வேறே—இந்தப் பக்கம் இருக்கிறவன் வந்தால் மலையாளம் பேசுவான்; இந்தப் பக்கம் இருந்து வந்தால் தெலுங்கு பேசுவான்; இந்தப் பக்கம் இருந்து வந்தால் கன்னடம் பேசுவான். இன்னும் கொஞ்சம் தாண்டினால் மராட்டி; இன்னும் கொஞ்சம் தாண்டினால் குஜராத்தி; இன்னும் கொஞ்சம் தாண்டினால் இந்தி; அப்புறம் வங்காளி. அந்தந்த பாஷை ஒன்று சேராமல் இருக்கிறதற்கு என்னென்ன பண்ணணுமோ அதை எல்லாம் பண்ணிவிட்டான். தனித்தனியாக இருந்தால் ஒன்று சேர்ந்துவிடுவான் என்று 15-ம் 1-ம் 16 என்று சொல்லிவிட்டான்—நாதி இல்லையே! இப்போது நாம் ஏற்பாடு பண்ணினோம்—சூத்திரன் என்கிறதை ஒழிக்கணும் என்று. நாம் மாத்திரமா சூத்திரன்? இந்தியாவிலே உள்ள 56 கோடி மக்களிலே, தமிழ்நாட்டிலே உள்ள $4\frac{1}{2}$ கோடி மக்களில் ஏறக்குறைய 3 கோடி மக்கள் சூத்திரர்கள்தானே—முஸ்லிம், கிறிஸ்தவன் தவிர; அவர்கள் இரண்டுபேரும் சேர்ந்தால் இன்று ஒரு 50 இலட்சம்கூட இருக்காதே; கிறிஸ்தவர் ஒரு 8 இலட்சம் இருக்கலாம், முஸ்லிம் ஒரு 20, 22 இலட்சம் இருக்கலாம், இரண்டும் சேர்ந்தால் 30 இலட்சமாகும், மற்றவன் எல்லாம் சூத்திரன். பார்ப்பான் ஒரு 3 இலட்சம்தான் இருப்பான். அவ்வளவு பெரிய நம் சமுதாயம் இந்த மாதிரி இருக்கிறதே என்று சிந்திக்கமுடியவில்லை.

ஆகவே, இதை மாற்றியாகணும். பெரிய விஷயம்தான்; பெரிய முயற்சி பண்ணணும்—பெரிய முயற்சி பண்ணணும், என்ன அவசியம்? அரசியல் சட்டம் அரசாங்கம் நடத்துகிறதற்கு வேணும்; ஓர் அரசாங்கம் நடக்கவேணும் என்றால் ஒரு சட்டம் இருக்கணும், ஒத்துக்கொள்கிறேன்-அரசாங்கம் நடக்கிறதற்கு சூத்திரன் இருக்கவேணுமோ? அரசாங்கம் நடக்கிறதற்குப் பார்ப்பான் இருக்கணுமோ—மனுஷன்தானே இருக்கணும்? அமெரிக்காவிலேயும் அரசாங்கம் நடக்கிறது. அங்கே மனுஷன் தவிர வேறே எவன் இருக்கிறான்? பார்ப்பான் இருக்கிறானா? சூத்திரன் இருக்கிறானா? பறையன் இருக்கிறானா? யார் இருக்கிறான் அங்கே?

ஆனதினாலே, அவன் வைத்திருக்கிற பாதுகாப்பெல்லாம்—ஒன்று சேரக்கூடாது—அவர்களை உள்ளே கட்டிப்போட்டு வைத்திருக்கிற கயிற்றை அறுத்துப்போடக்கூடாது; அடிமையாகவே இருக்கணும், அப்படி அடிமையாய் இருந்தால் 100-க்கு 90 பேரை 3 பேர் ஆளலாம். அதற்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்துகொண்டான். இப்போது நாங்கள்தான் அதைப்பற்றிக் கவலைப்படுகிறோம்; மாற்றியாகணும் என்கிறோம்.

நேற்று நடந்த மாநாட்டுக்கு வேறே கட்சிக்காரர்களுடைய ஆதரவு ஒன்றும் வரவில்லையே, வரலாம் அல்லவா? அவனவன் சக்தி அனுசாரம், எங்களுக்கு வந்து, உதவி



படிப்பகம்

www.padippakam.com



பண்ணலாம் அல்லவா? ஒருவரும் வரவே இல்லை—எங்கள் ஆட்கள்தான். அவன்—டெல்லிக்காரன் ஸி. அய். டி.யைப்போட்டுவிட்டான்—வேறே கட்சிக்காரன் எவனாவது உள்ளே வருகிறானா பார் என்று. அதைப் பார்த்து ஒருவனுமே வரவில்லை—மந்திரிகளா, அவனா, மற்றக் கட்சிக்காரனா, மற்றவனா—உம், வரவில்லை. இழிவு ஒழிய வேணும் என்றால் இழிவுக்கு ஆளானவன் எல்லாம் வரணுமே, வந்து உதவி செய்யணுமே—(இல்லை) நாங்கள் தான்! ஆனதினாலே, விஷயம் ரொம்ப முக்கியமானது—மாறியே ஆகணும், மாறாவிட்டால் சாகணும்; அந்த உணர்ச்சி உள்ளவன்தான் மிஞ்சுவான். மாறியாகவில்லை என்றாலும் சோறு தின்கணும், என்ன செய்தாவது வயிற்றை ரொப்பணும் அப்படி என்றால்—அவனோடே என்ன ஆகும்? நினையுங்கள் நீங்கள்! நம்மை அப்படிப் பண்ணிவிட்டான்.

நமக்கு, 'மதம்' என்றான்; 'மதம்' என்றால் என்னவென்று தெரியாது. நமக்குக் 'கடவுள்' என்றான்; 'கடவுள்' என்றால் என்ன என்று தெரியாது. நமக்குச் 'சாஸ்திரம்' என்றான்; 'சாஸ்திரம்' என்றால் என்ன என்று தெரியாது. நமக்கு 'மனுதர்மப்படி' என்றான்; 'மனுதர்மம்' என்றால் ரூபாய்க்கு எத்தனைப்படி என்றுதான் தெரியும். ஒன்றுமே தெரியாது—ஆனால் அதற்கெல்லாம் நாம் அடிமை.

நான் கேட்கிறேன், பெரிய மதக்காரனையே கேட்கிறேன்—'இந்து மதம்' என்றால் என்ன அர்த்தம்? எப்போது வந்தது? எவன் அதற்குத் தலைவன்? என்ன அதற்குக் கொள்கை? அதற்கென்று இருக்கிற சாஸ்திரம் என்ன?

கிறிஸ்துமதம் என்றால், அதற்கு கிறிஸ்து தலைவன், 2000 வருஷம் ஆயிற்று ஏற்பட்டு, பைபிள் வேதம். இஸ்லாம் மதம் என்றால், முகமது நபி தலைவர், ஆயிரத்து நானூற்றுச் சில்லரை வருஷமாயிற்று, குரான் இருக்கிறது, சட்டம்—வேதம். உனக்கு என்ன இருக்கிறது? யார் தலைவன்? யார்? எவனோ ஒரு காலிப் பயலைப் பிடித்துக் கொள்கிறாய், அவனை ரிஷி என்கிறாய், அவனை முனி என்கிறாய், அவனை மகாத்மா என்கிறாய், அவனை வெங்காயம் என்கிறாய். உனக்கு யார் இருக்கிறான்? 'யார் உன் மதத் தலைவன்?' என்றால் வசிஷ்டன் என்கிறாய், நாரதன் என்கிறாய், விசுவாமித்திரன் என்கிறாய், இன்னும் எவன் எவனையோ சொல்லுகிறாய். 'அவனுக்கு வயது என்னடா?' என்றால், 3 கோடி வருஷம், 5 கோடி வருஷம் என்கிறாய். 'உன் சாஸ்திரம் எப்படிடா எழுதினது?' என்றால், 'அது மனுஷனாலே எழுதப்படவில்லை—கடவுளாலே எழுதப் பட்டது' என்கிறாய். எது நமக்கு என்று இருக்கிறது?—ஒரு ஆதாரம் சொல்லுங்களேன்.

'கடவுள்' என்று சொன்னான். நாம் சொல்கிறோம், இப்போது, 'கடவுளை உண்டாக்கின பயல் முட்டாள் பயல்' என்கிறோம்; மடப்பயல் என்று சொல்கிறோம். மற்றவனைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்—துலுக்கனைப்பற்றி, கிறிஸ்தவனைப்பற்றி அப்புறம் பேசலாம்.

உன் கடவுளை உண்டாக்கினவன் யார்? உனக்கு எங்கே கடவுள் இருக்கிறான்? கடவுள் தன்மை என்று ஒன்றைச் சொன்னாயானால்—கடவுளுடைய யோக்கியதை என்று ஒன்றைச் சொல்லிவிட்டாயானால்—அந்தக் கடவுள் தன்மைப்படி, கடவுளுடைய யோக்கியதைப்படி எந்தக் கடவுள் இருக்கிறான் உனக்கு? கடவுளுக்கு உருவமில்லை என்றான், எல்லாக் கடவுளுக்கும் உருவம். கடவுளுக்கு ஒன்றும் வேண்டாம் என்றாய், உன் கடவுளுக்குப் பெண்டாட்டி, பிள்ளை, வைப்பாட்டி, சோறு, கலியாணம், கருமாதி எல்லாம் வேணும்—மனுஷன்தானே அவன்! மனுஷனுக்குப் பிறக்காத கடவுள் எது அய்யா உன் கிட்டே இருக்கிறது? மனுஷனுக்குக்கூடப் பிறக்கவில்லை என்று சொல்லவில்லை—எருமைக்குப் பிறக்காதவன், கழுதைக்குப் பிறக்காதவன், ஆனைக்குப் பிறக்காதவன், குதிரைக்குப் பிறக்காதவன், கண்டவனுக்குப் பிறக்காதவன் எவன் உன் கடவுள்?

சிவனும் கடவுள் என்றால், கந்தன் எப்படிடா வந்தான் என்றால், 'சிவனும் அவன் பெண்டாட்டியும் லட்சம் வருஷம் 'வேலை' பண்ணினார்கள்; 'சினை' ஆகவில்லை,



பிடுங்கிக்கொண்டார்கள், இந்திரியம் ஒழுகிற்று, அதிலேயிருந்து வந்தான்' என்கிறான். என்ன தைரியமாக, அவன் கடவுளைச் சொல்லுகிறான்—நம்மையெல்லாம் மனிதன் என்றா நினைத்துச் சொல்லுகிறான்? சிவன் என்றால், அப்புறம் அவனுக்குப் பெண்டாட்டி என்னத்துக்கு, கடவுளுக்கு? பெண்டாட்டி, கலவி, படுத்துக்கிட்டான்! படுத்தால், சாதாரணமாக, மனுஷன் ஒரு நாள் பூராவுமா போவான்? ஏதோ ஒரு மணி நேரம் போவான், இரண்டு மணி நேரம் போவான். அதற்கே ரொம்பக் குளிகை சாப்பிடவேணும்! இவன் என்னடா என்றால், 10000 வருஷம்—20 ஆயிரம் வருஷம், தேவ வருஷம் 'வேலை' விட்டான், சினையாகவில்லை அவள். தேவர்கள் எல்லாம் வந்து பிடுங்கி விட்டுவிட்டார்கள், அது கீழே சொட்டி விழுந்தது—அப்படி என்று ஒரு புராணம், இராமாயணம். அப்புறம் இன்னொரு புராணம்: தேவர்கள் எல்லாம் வந்தார்கள், 'சும்மா இப்படியே பண்ணுகிறாயே அய்யா! இன்னும் இதிலே ஒரு பிள்ளை வந்தால் உலகமே கெட்டுப் போகும், வேலையை நிறுத்து' என்று சொன்னார்கள். 'நடுவிலே எப்படியடா வேலையை நிறுத்துவேன்' என்றான், சிவன். 'நாங்கள் எல்லாம் பிழைக்கவேண்டாமா?' என்று தேவர்கள் எல்லாம் அழுதார்கள். 'அப்படியானால், அது போகுமடா வாய்க்காலாட்டம், எவனடா பிடிக்கிறது?' என்றான். 'நாங்கள் பிடித்துக்கொள்கிறோம்' என்றார்கள். பிடுங்கினான்; எல்லாருக்கும் கையிலே ஊற்றினான் சிவன்—விஷ்ணு தேவர்கள் எல்லாம் குடித்தார்கள். இந்தமாதிரிக் கதை எழுதி அல்லவா கடவுளை உண்டாக்குகிறான்! சிரித்தோம் நாம்—இப்படி உண்டாக்கித்தானே, கடவுளை உண்டாக்கினான்; அதிலே உண்டானவன்தானே கந்தன்.

நமக்குக் கடவுள் ஏதுங்க? கடவுள் என்றால் அப்பா இல்லை, அம்மா இல்லை, உருவமில்லை; கண்ணுக்குத் தெரியாது; கைக்குச் சிக்காது—அப்படியெல்லாம் சொல்லிவிட்டான்; சொல்லுகிறான். அப்படி ஒரு கடவுள் கூட இல்லையே! ஒன்றும் வேண்டாம் என்கிறான்—ஆறு வேளை சோறு என்கிறான், கல்யாணம் என்கிறான், வருஷா வருஷம் கல்யாணமடா—என்கிறான். கலியாணமிருந்தும் அதற்கு ஒரு வைப்பாட்டி என்கிறான்—நம்மை ஏதாவது மனுஷன் என்று நினைத்து அவன் சொன்னானோ? 'சொன்னதைக் கேட்டுக்கோடா மடப் பயலே' என்றான்; சும்மா ஊட்டிவிட்டான்.

கடவுள் ரொம்ப அன்பானவர், கருணையே வடிவானவர்—அப்படி என்கிறான். கடவுளைப் போய்ப் பார்த்தால் அந்தக் கடவுள் கையிலே அரிவாள், கொடுவாள், வேலாயுதம், சூலாயுதம், ஈட்டி—கொலைகாரப் பயல்களுக்கு என்ன வேணுமோ அதுவெல்லாம் கடவுள் கையிலே இருக்கிறது! கடவுள் கருணையே உடையவர் என்கிறான். எந்தக் கடவுள் மனுஷனைக் கொல்லாதவர்? (கடவுள்) அசுரனைக் கொன்றார், ராட்சசனைக் கொன்றார், மனிதனைக் கொன்றார், 3 கோடிப் பேரைக் கொன்றார், 5 கோடிப் பேரைக் கொன்றார் என்று கசாப்புக்கடைக்காரன் மாதிரிப் பண்ணிப்போட்டு, அவரைக் கருணை உள்ளவர் என்றால் எப்படி? இப்படி எல்லாம் சொல்லி நம்மைக் கழுதையாக்கிப் போட்டான்; ஒரு உணர்ச்சியும் இல்லாதவனாக்கிப் போட்டான். கடவுள் என்றால் கல்லைக் கும்பிட வேண்டியது, பார்ப்பான் காலிலே விழவேண்டியது, அவனுக்குக் காசு கொடுக்கவேண்டியது.

இப்போது நாங்கள் வந்து, இந்தப் பிரச்சினையிலே, கடவுளைக் கும்பிடாதீர்கள் என்று சொல்லவில்லை; நன்றாக நினைத்துக்கொள்ளுங்கள்—இந்தப் பிரச்சினையிலே, நாங்கள், கடவுளைக் கும்பிடாதீர்கள் என்று சொல்லவில்லை; கடவுள் இருக்கிறது என்று நினைக்காதீர்கள் என்று சொல்லவில்லை. 'கடவுள் என்றால் என்ன என்று சொல்லுங்கள்'—அவ்வளவுதான் நாங்கள் சொல்லுகிறோம். ஒன்றுமே இல்லாமல், எந்த முட்டாளாவது சொன்னான் என்றால், நினைத்ததெல்லாம்—அரசமரம் கடவுள், வேப்பமரம் கடவுள், பல்லி கடவுள், முடக்கான் கடவுள், பாம்பு கடவுள், அப்புறம் நினைத்ததெல்லாம் கடவுள். அது கடவுள் சங்கதியா? அது முட்டாள்தனம். பைத்தியக்காரச் சங்கதியா? இந்தப் பைத்தியக்காரத்தனத்துக்கு நம் வேதம், நம் பணம், நம் அறிவு எவ்வளவு நாசமாகிறது. இவ்வளவும் பண்ணியும், 'தேவடியாள் மகன்' என்கிற பட்டமல்லவா நம் தலைமேலே இருக்கிறது?

படிப்பகம்

www.padippakam.com



ஆகவேதான், எந்தச் சங்கதி எப்படி ஆனாலும் இப்போது நாம் ஆரம்பித்துள்ள இழிவு ஒழிப்புக் கிளர்ச்சிக் காரியம் மிகவும் ஞாயமானது என்கிறதற்கு ஒரு உதாரணம் உங்களுக்கு வேண்டுமானால், என்ன இன்றைக்கு எத்தனை நாளாகிறது? 8ந்தேதி மாநாடு. இன்றைக்கு எத்தனை நாளாகிறது? 10 நாளாகிறது; கவனிக்கனும். இரகசியமாக இல்லை—பத்தாயிரம் பேருக்குமேலே வந்தார்கள்; 30 பத்திரிகைக்காரர்கள் வந்தார்கள்; எல்லாத் தீர்மானத்தையும் அவரவர் பத்திரிகையிலே போட்டார்கள்; இந்தியா பூராவும் பரவி விட்டது, அடுத்தநாளே பரவி விட்டது. நான் சொல்லுகிறேன், கவனியுங்கள்! இந்த 10 நாளாக ஒருவனாவது இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினானா? எந்தப் பத்திரிகையிலேயாவது சேதி வந்ததா? ஏன் சொல்லுகிறேன்—நாம் பண்ணினது அவ்வளவு நேர்மையான காரியம்; எவனாலேயும் ஆட்சேபிக்க முடியவில்லை. எவன் சொல்லுவான்—'நீ தேவடியாள் மகனாகத்தான் இருக்கனும்' என்று? அவ்வளவு நேர்மையான காரியத்தை நாம் செய்திருக்கிறோம், பண்ணிப் போட்டோம். இதிலேயே நாம் வீரனாக மாட்டோம்; நாளைக்கு இதற்குப் பரிகாரம் பண்ணுகிறதற்குக் கிளர்ச்சி பண்ணுகிறோமே—அதிலேதான். நாம் யார் என்று காட்டிக்கொள்ள வேனும்; பண்ணனும். நாளைக்குக் கிளர்ச்சி பண்ணினால் அவன் பிடிப்பான்; பிடிக்கவில்லையானால் பண்ணிக்கொண்டு இருப்போம்; பிடிக்க ஆரம்பித்தானானால் நாம் 5000, 10000 என்று ஜெயிலுக்குப் போகனும்; நாம் தயாராய் இருக்கிறோம்-காரியம் முடிகிறவரைக்கும் ஜெயிலிலே வேனுமானாலும் இருக்கத் தயாராய் இருக்கிறோம் என்று நாம் காட்டனும். அப்புறம் அவன் பரிகாரத்துக்கு வரனும்; வரவில்லை என்றால் இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு, 'நீ போப்பா வெளியே, உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நீ 2000 மைல், 1500 மைல் தூரத்திலே இருக்கிறாய்; உன்பேச்சு எனக்குப் புரியாது, என் பேச்சு உனக்குப் புரியாது; உன் பழக்கம் வேறே, உன் வழக்கம் வேறே, உன் நடப்பு வேறே (உம்—அம்மா, அம்மா...உம்...உம்...ஆம்...அம்மா...அம்மா...அம்மா... ஆ...ஆ...ஆ...ஆஹா—நோய்க் கொடுமையால் துடிக்கிறார்; பின், தொடர்ந்து பேசுகிறார்) எனக்குப் புரியாது; மரியாதையாகப் போ, ரகளை வேணாம். என்னத்துக்காக இவ்வளவு தூரத்திலே இருக்கிறவன் எங்களுக்கு இராஜாவாகனும்? நீ இல்லா விட்டால் எங்களுக்கு என்ன நஷ்டம்? எங்களுக்கு என்ன உப்பு இல்லையா, தண்ணீர் இல்லையா, மலை இல்லையா, காடு இல்லையா, சமுத்திரம் இல்லையா? இல்லை—நெல் விளையவில்லையா, கம்பு விளையவில்லையா—என்ன இல்லை எங்களுக்கு? உன்னாலே எனக்கு என்ன ஆகிறது? தேவடியாள் மகன் என்னும் பட்டத்தைத் தவிர, நீ எங்களுக்குப் பண்ணின் நன்மை என்ன? மரியாதையாகப் போ! அவ்வளவுதானய்யா நாம் கேட்கிறோம்! இது எப்படி அய்யா தப்பாகும்; இதனாலே நாம் எப்படிக் கெட்டவனாவோம்; இதனாலே நாம் எப்படி அரசுக்கு விரோதமாவோம்? கவனியுங்கள், தாய்மார்களே! தோழர்களே! இப்போது விஷயங்களை எல்லாம் முதலிலேயே சொன்னோம். இது நம் கடமை; 25ந்தேதி ஆரம்பிப்போம்; மளமளவென்று வரனும்; என்ன சொல்கிறோமோ அதைச் செய்யனும். சட்டங்களை எரிக்கிறது முதற்கொண்டு, மறியல் பண்ணுகிறது முதற்கொண்டு இன்னமும் பல காரியங்கள் திட்டம்போட்டுச் செய்கிறோம்.

நாம் கலகத்துக்குப் போகமாட்டோம், எவனையும் கையாலே தொடமாட்டோம், எவனாவது அடித்தாலும் பட்டுக்கொள்வோம்—திருப்பி அடிக்கமாட்டோம். ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள்! நான், நீ என்று மீசையை முறுக்கக் கூடாது. அடித்தான் என்றால் பட்டுக்கனும்—போலீஸ்காரன் இருப்பான், அதிகமாக அடிக்காமல் பார்த்துக் கொள்வான். அப்புறம் என்னத்துக்கு நாம் ஒருவனை அடிக்கப்போகனும், நாம் யாரோடு சண்டைப் பிடிக்கிறோம்?

நான் தேவடியாள் மகனாய் இருக்கக்கூடாது, உன் ஆட்சியிலே—உன் சட்டத்திலே. அப்படித்தான் இருக்கனும் என்றால் உன் ஆட்சியை மாற்ற உன் சட்டத்தை நெருப்பு வைத்துக் கொளுத்துகிறேன்—முன்னையே நான் கொளுத்தினவன்தான். ஆனதினாலே, அருமைத் தோழர்களே, பக்குவம் அடையனும் நாம். எதற்காக? இங்கே நான் நாத்திகப் பிரசாரம் பண்ண வரவில்லை; கடவுள் இல்லை என்று உங்களுக்குச் சொல்கிறதற்காக நான் வரவில்லை—அது வேறே, நாங்கள் பண்ணிக்கிறோம்; அவனவன் நம்பட்டும், ஆராயட்டும், இருக்கட்டும்—முட்டாள்தனமான காரியங்கள், பகுத்தறிவுக்கு ஒவ்வாத காரியங்கள், மானத்துக்குக் கேடான காரியங்கள் செய்கிறதற்கு நாம் இடம் கொடுத்துக் கிட்டு, நாம் மனுஷனாக வாழனுமா?



மந்திரி ஆகனும் என்றால் வாழமுடியாது—ஆகிறவன் ஆகிவிட்டுப்போகிறான். சட்டசபை மெம்பர் ஆகனும் என்றால் முடியாது—ஆகிப் பொறுக்கித் தின்கிறவன் தின்று விட்டுப்போகிறான். இது இரண்டும் வேணாம் என்கிறவன் நான்—உறைத்து இருக்கலாமா? இல்லையா? இத்தனைப் பேருக்குமா மானம் இருக்காது? ஆனதினாலே, தயவு செய்து நீங்கள் விஷயங்களைத் தீவிரமாகக் கவனிக்கனும், ரொம்பத் தீவிரமாய்க் கவனிக்கனும், ஜெயித்தே ஆகனும்! நான் சொல்கிறேன் என்று கேலி பண்ணாதீர்கள்—'நீ என்ன, நாளைக்குச் சாகப் போகிறவன்தானே, துணிந்து வந்திருப்பாய்!' என்று. நானே பண்ண வேனும் என்று இல்லை; நீங்கள் பண்ணவேண்டிய காரியத்தைத்தானே நான் செய்கிறேன்? ஆனதினாலே எல்லோரும் துணியனும்; மளமளவென்று வரனும், ஆண் பிள்ளைகள் வர முடியலை என்றால் அவர்கள் வீட்டுப் பெண் பிள்ளைகளை அனுப்புங்கள்; அனுப்ப முடியவில்லை என்றால் வேலைக்கு இரண்டு ஆளைப் பிடித்து அனுப்புங்கள்—'நீ போ எனக்காக' என்று. நாம் எல்லாருமாகப் பாடுபட்டோம் என்று தெரியனும்.

நான் என்ன செய்கிறேன்? 'இந்தச் சாக்கிலேயே நம் நாடு நம்முடையதாக ஆகி விடாதா? அவ்வளவுதான்' நாம் விட்டது தப்பு. அயோக்கியப் பயல்களுக்கு—காங்கிரஸ்காரப் பயல்களுக்கு இடம் கொடுத்தோம், அவன் பார்ப்பான். அதிலே பொறுக்கித் தின்னப் போனவன், நம் ஆள், அதிலே முக்கால்வாசிப் பேர் பார்ப்பானுடைய வைப்பாட்டி மகன் என்று ஒத்துக்கொள்கிறவன்; அவர்களாலே கோளாறாய்ப் போயிற்று—கலகம் பண்ண முடியவில்லை அப்போது.

நானும் என்னாலானவரைக்குந்தான் கலகம் பண்ணினேன், ஒரு நாட்டுக்காரனாகப் போய்விட்டேன் நான். 16 நாடுகளிலே தமிழ்நாடு ஒரு நாடு, அதிலே பத்துக் கட்சிகளிலே திராவிடர் கழகம் ஒரு கட்சி. என்ன ஆகும் எங்களாலே? மற்ற நாட்டுக்காரன் எல்லாம்—புரியவே இல்லை அவனுக்கு—சூத்திரன் என்றால் என்ன தப்பு என்கிறான்? சூத்திரன் இல்லாமல், பின்னே நாம் யார் என்கிறான். பிராமணன் என்றால் 'மகராஜ்' என்கிறான், 'தேவர்' என்கிறான், அதிலே ஊறி இருக்கிறான். இப்போது அவன் எல்லாம் மாறி விட்டான் என்று சொல்லமுடியாது.

நாம் செய்கிற தியாகத்தினாலே, நாம் எடுத்துக் கொள்கிற முயற்சியினாலே—மற்றவன் வருவான் நம்கூட. 5000 பேர் ஜெயிலிலே இருக்கிறார்கள், 10 ஆயிரம் பேர் ஜெயிலிலே இருக்கிறார்கள் என்றால் 'ஏனடா இருக்கிறார்கள்?' என்று கேட்பான் அல்லவா? 'பார்ப்பானுடைய தேவடியாள் மகன் என்று இருக்கிறதற்கு இஷ்டமில்லை என்று, ஜெயிலில் இருக்கிறார்கள்' என்றால்—'அடே, அப்போது நாமும் என்ன சங்கதி?' என்று (நினைத்துக்) கவனிப்பானல்லவா? அதனாலே கட்டாயம் கவனிப்பான். ஒருவனும் கவனிக்காவிட்டாலும் தெலுங்கனும், கன்னடியனும், மலையாளியும் கவனிப்பான். மலையாளிகளிலே பெரும்பாலும் பார்ப்பானுடைய தேவடியாள் மகன்தான், அதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை, திருட்டுத்தனமல்ல. அவனே பெருமை பேசிக் கொள்வான்—'நான் யார் தெரியுமா? நான் இந்த நாயர் பசங்களுக்கா பிறந்தேன்? நான் அந்தப் பிராமணனுக்குப் பிறந்தேன்!' என்பான்; காசுகொடுத்துப் போவான். இப்போது அவனுக்கும் உணர்ச்சி வந்துவி[illegible] சேர்ந்து பேசுகிறான், நானும் சேர்ந்து கொள்கிறேன் என்று எழுதி இரு[illegible]போது, மானம் என்றால், ரொம்ப ஒவ்வொருவனுக்கும் உணர்ச்சி வந்துதா[illegible]; தெலுங்கனும் இருக்கிறான்; நாளைக்குக் கன்னடியனும் வருவான், அப்புறம் அடுத்தவன், அடுத்தவன், அடுத்தவன் வரமுடியும்.

www.padippakam.com



சங்கதி தெரியாது அவர்களுக்கு—எவ்வளவு இழிவு என்பது புரியாது; நம் இயக்கத்தினாலே புரியும். எல்லாரும் இருட்டடிக்கமாட்டான். இத்தனாயிரம் பேர் ஜெயிலுக்குப் போனார்கள், அடி தின்றார்கள், இதைப் பண்ணினார்கள் என்று அதை எழுதுகிறபோது—'அடே, நான் என்றால் என்ன' என்று கவனிப்பானல்லவா? எல்லாரும் ஏககாலத்திலே வருவார்கள் என்று சொல்லமுடியாது; கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வருவார்கள்; கவனித்தாகணும்.

'தமிழ்நாடு' தனியாகப் பிரிந்தாலும் 10 வருஷத்துக்குள்ளாக நாம் எல்லாம் 100 வருஷம் இருப்போம்; ஆகாயத்திலே ஒவ்வொருவரும் பறப்போம். எப்படிப் பறப்போம் என்று உங்களுக்குத் தெரியாது; இப்போது 400 பேரை, 500 பேரைத் தூக்கிக்கொண்டு பறக்கிறதல்லவா ஆகாயக் கப்பல்—ஒரு மனுஷனை ஏன் தூக்கிக்கொண்டு பறக்காது? தனித்தனியாக வாங்கி முதுகிலே கட்டிக்கொண்டால்—ஏறுகிறது மேலே, 'விர்' என்று; இறங்கு என்கிற பக்கம் இறங்குகிறது.

இப்போதே—10 வருஷத்துக்குள்ளேயே நமக்கு 10 வருஷம் உயர்ந்து போயிற்றே. அருமைத் தோழர்களே! 1952-லே நம் சராசரி வயசு 25, இன்றைக்கு 52 சராசரி வயது. 1952-க்கும் 1972க்கும் 20 வருஷந்தான்; இந்த 20 வருஷத்திலே 20 வருஷம் உயர்ந்து விட்டது நம் ஆயுள். (கி. பி.) 2000 வயது வருகிறபோது, நாம் 75 வயது இருப்போம்; வெள்ளைக்காரன் 100 வருஷத்துக்கு மேலே இருப்பான்; மனிதன் சாகமாட்டான்; சாகிறதற்கு அவசியம் இல்லை; எல்லா நோய்க்கும் மருந்து வந்துவிட்டது, ஏதோ 2, 3 நோய்க்கு இல்லை; அதுவும் பார்த்துக்கொண்டு இருக்கிறான்.

ஆனதினாலே, நல்ல வளர்ச்சியான காலத்திலே இருக்கிறோம் நாம்; உலகம் வளர்ந்து கொண்டே போகிறது. கொஞ்சநேரத்துக்கு முன்னே சொன்னேன் பாருங்கள்—நேற்று, முந்தாநாள் வந்த பத்திரிகையிலே, குழந்தைகளை உண்டாக்குகிறான்; முட்டையை எடுத்து வைத்தால்கூட 10, 20 நாளிலே அது குஞ்சு பொரித்துவிடும்; மனுஷனின் முட்டையை எடுத்துவைக்கிறான்—10 வருஷத்துக்கு அப்புறம் குஞ்சு பொரிக்கணும் என்றால் பொரிக்கிறது அது; இன்றைக்கே பொரித்து ஆகணும் என்று இல்லை; பெண்கள் இந்திரியம் கொஞ்சம், அதை ஒரு டப்பியிலே—ஆண்கள் இந்திரியம், அதை ஒரு டப்பியிலே பாதுகாக்கிறான்; 'பேங்க்' என்று பேர் அதற்கு; அந்த 'பேங்கி'லே வைத்துப் பாதுகாக்கிறான்; என்றைக்குப் பிள்ளைவேணுமோ அன்றைக்கு இரண்டையும் எடுத்து வைத்துக் கொள்கிறான்—'கியா, கியா' என்று கத்துகிறது (பிள்ளை)! இதெல்லாம் பொய் என்று சொல்லமுடியாது; பெரிய பிரசித்தியான பத்திரிகையிலே போட்டோவோடு வருகிறது. அப்புறம் 5000 மைல் பறக்கிறான், 10000 மைல் வீதம் பறக்கிறான்; சந்திர மண்டலத்துக்கெல்லாம் போய்விட்டுவந்தான். இதெல்லாமா பொய்?

ஆனதினாலே, நாம் முதலாவது இப்போது மானத்துக்காகப் போராடுகிறோம், வேறே எதற்காகவும் இல்லை. இழிவு—தேவடியாள் மகன், பார்ப்பானுடைய வைப்பாட்டி மகன், தாசி புத்திரன் என்று சட்டத்திலே இருக்கிறது—இது ஒழிந்து ஆகணும் என்று போராடுகிறோம். இது ஒருவனுடைய மானமே அல்ல, பார்த்தாலும், எல்லோருக்கும் இதிலே உணர்ச்சி வரணும்; வரணும் அவனவன் தேடிக்கொண்டு! என்ன? ஜெயிலுக்குப் போனால் பட்டினியாகவா போடுவான்? இல்லை இந்தக் கிளர்ச்சி நடந்தால் கிளர்ச்சிக்கு வருகிறவர்களைப் பட்டினியாகவா போடுவோம்—ஜெயிலுக்குப் போகிறவரைக்கும் சோறு போடுவோமே; நிறைய அரிசி 10 மூட்டை, 5 மூட்டை இப்படி அனுப்பியிருக்கிறார்கள்; பணம் கொடுத்திருக்கிறார்கள்—40, 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும். லட்சம் பேரை ஜெயிலுக்கு அனுப்பலாம்—அவ்வளவு வசதி இருக்கிறது; இன்னும் கொடுப்பார்கள், யார் மாட்டோம் என்பார்கள். யார் ஜெயிலுக்குப் போகப் பயப்படுகிறானோ, போக முடியவில்லையோ—'வை'! என்றால் சொன்னதை வைத்துவிடுவார்கள்; ஜனங்களுக்கும் பயன்படும். உலகத்துக்கே ஒரு வழிகாட்டியாவோம் நாம். நம் சமுதாயமே புது உலகமாகும்.



தமிழன் இந்தியாவிலேயே முதல் நம்பராக இருப்பான்; இந்தியாவுக்கே வழிகாட்டக் கூடிய சக்தி உடையவனாகி விடுவான். அனேகக் கோளாறுகள் இருக்கின்றன; அதெல்லாம் சுலபமாய் மாறிவிடும். அது—செய்கிறவனுடைய லட்சியத்தைப் பொறுத்து இருக்கிறது; செய்கிறவனுடைய துணிவைப் பொறுத்து இருக்கிறது. தாய்மார்கள் ரொம்ப நமக்கு உதவி பண்ணுவார்கள், 'அம்மா இப்போது இந்தச் சண்டை உங்களுக்காகத்தான், உங்களைத் தான் பார்ப்பானுடைய வைப்பாட்டி என்று சொல்லிவிட்டான்; ஆனதினாலே, நீங்கள் ஏதோ உங்களால் ஆனதை இந்தக் காரியத்திலே செய்யுங்கள்' என்று நாம் சொன்னால்.

எனவே, தோழர்களே! நாம் இப்போது அதிசயமாக ஒன்றும் போராடவில்லை. மதம் என்கிறது இல்லை; யாராலேயும் இப்போது எடுத்துச் சொல்ல முடியவில்லை. கடவுள் என்கிறதும் தப்பு; எவனும் கடவுளுக்கு அர்த்தம் சொல்லுகிறவனும் இல்லை. இன்றைக்கு நாம் கும்பிடுகிற ராமன், கிருஷ்ணன், சிவன், பிரம்மா, மற்றக் கடவுள் அது, இது இந்தக் குப்பைக் கூளமெல்லாம் கடவுளே அல்ல—பார்ப்பானாலே உண்டாக்கப்பட்டவையே. அவைகளை, அவன் முட்டாளாயிருக்கிறபோது உண்டாக்கினதினாலே, அதற்கு மனுஷத் தன்மை கொடுக்கிறதற்கே இல்லை—சும்மா குடிகாரன் எப்படி எழுதுவானோ அப்படித் தான் எழுதினான்.

சாதாரணமாக இப்போது இராமனைப்பற்றி—இராமாயணத்தைப்பற்றி மனுஷனிலே சிந்திக்காதவன் எவனும் இல்லை; வெகுபேர் கடவுள் என்றுதான் நினைக்கிறான். அந்த இராமாயணத்திலே எழுதி இருக்கிறான்—இராமன் யாருக்குப் பிறந்தான் என்றால், அவனுடைய அப்பனுக்குப் பிள்ளை இல்லாமல் போய், அவன் பெண்டாட்டிகளைப் பார்ப்பானுக்கு விட்டுக்கொடுத்து, அந்தப் பார்ப்பானே 'வேலை' பண்ணினான் என்று சொல்லவில்லை—முதலிலே குதிரை 'வேலை' பண்ணி அவளுக்கு உணர்ச்சி ஊட்டி, அப்புறம் இவன் 'வேலை' பண்ணினான். பாலகாண்டத்திலே பாருங்கள்—யாகம் பண்ணினவுடனே அந்தப் பெண்டுகளைக் குதிரையோடு விட்டான்; உயிரான குதிரையாக இருந்தால் ஏதாவது உதைத்துப்போடும் என்று, சாகடித்து, அதனுடைய ஆண் குறியை எடுத்து இராமனின் அம்மாளுடைய பெண் குறிக்குள்ளே விட்டு ஆட்டி, அவளுக்கு உணர்ச்சியை ஊட்டினான்; அப்புறம் பார்ப்பானை விட்டான், அவன் சினை பண்ணினான், பணம் வாங்கிக்கொண்டு போனான் என்று இருக்கிறது. 'ஞான சூரியன்' என்கிற ஒரு புத்தகம் இருக்கிறது, அதை வாங்கிப் படியுங்கள், தெரியும்.

ஆகவே, கடவுளை மனுஷன் என்று அவன் எழுதவில்லை—தேவடியாள் மகனாக—விபசாரி மகனாக உண்டாக்கினான். இதாவது பின்னிப் பின்னிச் சொல்ல வேண்டியதாய் இருக்கிறது—இராமன் பெண்டாட்டியை என்ன பண்ணினான்? இராவணன் 'சினை' பண்ணி, 4 மாத சினையோடு புருஷன் வீட்டுக்கு அனுப்பித்தான், புருஷனும் ஒத்துக் கிட்டான்; அவளும் ஒத்துக்கிட்டாள்—'அங்கே போனேன், அவன் பண்ணிவிட்டான், நான் என்ன பண்ணுகிறது?' என்று சொல்லிவிட்டாள். 'நீ அந்த மாதிரிப் போனவள், போடி காட்டுக்கு!' என்று அனுப்பிவிட்டான். இரகசியமாய் ஒன்றும் இல்லையே—சாமி பெண்டாட்டியைப் பற்றித்தானே அப்படி எழுதி இருக்கிறான்! மற்றக் கடவுள்களைப் பற்றிச் சொல்லணுமா! நிறைய இருக்கிறது.

ஆகவே, நாங்கள் சொல்வது சுயநலத்துக்காகச் சொல்லவில்லை; உங்களை ஏய்க்கிறதற்காகப் பொய்யையும், பித்தலாட்டத்தையும் இட்டுக்கட்டிப் பேசவில்லை; எல்லா ஆதாரங்களையும் கையிலே வைத்துக்கிட்டுத்தான் பேசுகிறோம். உள்ளபடியே, அவர்களுக்கு வாய்ப்பு இல்லை—மடையனாய் இருந்தான் 2000, 3000 வருஷத்துக்கு முன்னே; அன்றைக்கு உண்டாக்கினான் இந்தக் கதைகளை. அன்றைக்கு அவனுக்கு அக்காள், தங்கை என்று இல்லை; அம்மாள், மகள் என்று இல்லை—சரிசமமாகப் புழங்கினான்—அதற்கேற்றாற் போலே கடவுளையும் உண்டாக்கிவிட்டான்.

படிப்பகம்